# குருமார்களின் சரித்திரங்கள்



முதல் அமெரிக்க சத்குருவின் உருவாக்கம்


Page 0: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/

Page 1: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/01_fm_01.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## குருமார்களின்

முதல் அமெரிக்க சற்குரு உருவான கதை



Page 2: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/02_fm_02.html

# குருமார்களின் சரித்திரங்கள்

முதல் பதிவு §

**பதிப்புரிமை © 2011**

**இமாலயன் அகாடமி** §

*குருமார்களின் சரித்திரங்கள், முதல் அமெரிக்க சற்குரு உருவான கதையின்* இந்த முதல் பதிவு, சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமியின் (1927–2001), இறுதி மகாபயணத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு நாளை ஒட்டி, அக்டோபர் 25, 2011 அன்று நடைப்பெற்ற சித்தரை பூஜையின்போது, இமாலயன் அகாடமி மூலம் வெளியிடப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த புத்தகத்தை ஆன்மீக பாதையில் இருக்கும் மற்றவர்களுடன் இந்து தர்மத்தை பகிர்வதற்காக பயன்படுத்தப்படலாம், ஆனால் நகல் செய்வதற்கு பதிப்பாளரிடம் முன்கூட்டியே எழுத்து வடிவில் ஒப்புதலை பெறவேண்டும். 107 கஹோலலேலே ரோடு, காப்பா, ஹவாய் 96746-9304 USA வில் இருக்கும் சைவ சித்தாந்த யோகா சமூகத்தில் உள்ள *ஸ்வாமிகள்* மூலம் மிகவும் கவனமாக எழுதப்பட்டு, வடிவமைக்கப்பட்டு டைப்செட் செய்யப்பட்டது. §

Published by
Himalayan Academy
India • USA

§

குவாட் கிராபிக்ஸ் மூலம் அமெரிக்காவில் (USA) அச்சிடப்பட்டது §

லைப்ரரி ஆப் காங்கிரஸ் காட்டலாக் கார்டு நம்பர் (Library of Congress Catalog Card Number) 2011933013§

ISBN: 978-1-934145-39-5 (தடித்த உறை)

978-1-934145-40-1 (மின் நூல்)§

Page 4: URL

https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/03_fm_03.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## முதல் அமெரிக்க சற்குரு உருவான கதை

கவாய் ஹிந்து மடாலய சுவாமிகள் எழுதியது

Page 5: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/05_fm_05.html

# குருமார்களின் சரித்திரங்கள்

உ

# சமர்ப்பணம்

மனித இனம், ஆண்கள் மற்றும் பெண்களை ஊக்குவித்து வழிநடத்துவதற்காக பிறவி எடுத்த உன்னதமான, தைரியமான மற்றும் உயர்ந்த ஆன்மாக்கள் பற்றிய கதைகள், இந்து வரலாற்றில் நிறைந்து இருக்கின்றன. மனித நேயத்தின் தேவைகள் மிகவும் தீவிரமாக இருக்கும் போது, அவற்றை எதிர்கொள்ள மிகவும் உயர்ந்த ஆன்மாக்கள் "சொர்க்கத்தில் இருந்து பூமியில்" அவதரிக்கிறார்கள். குருதேவா என்று அதிக பாசத்துடன் அழைக்கப்பட்ட சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி, அத்தகைய ஒரு ஆன்மாவாக விளங்கினார். அவர் நவீன யுகத்தின் நவீன சவால்களை எதிர்கொள்ள பிறவி எடுத்தார், மேலும் "சைவ தர்மத்தை பாதுகாக்க, காப்பாற்ற மற்றும் மேம்படுத்த," மற்றும் 21 ஆம் நூற்றாண்டில் சிவபெருமான் பற்றிய புரிதல், வழிபாடு மற்றும் உணர்தலை தூண்டி விடுவதற்காக தான் பிறவி எடுத்ததாக அவர் கூறுவார். அவர் அதை எவ்வாறு செய்து காட்டினார், என்பதை நீங்கள் படித்து தெரிந்துகொள்ளப் போகிறீர்கள். ஆனால் அந்த கதை தன்னை பற்றியது இல்லை என்று எச்சரிப்பதில் அவர் முதலாவதாக நிற்பார். வரலாற்றின் தொடக்கத்தில் இருந்து, ஆத்ம ஞானம் பற்றிய தகவலை காப்பாற்றி வந்துள்ள ஒரு பரம்பரையில், அவர் ஒரு சமீபகால குருவாக இருந்துள்ளார். ஆனால் அந்த பரம்பரை அவருக்கு முன்பாக இருந்துள்ளது, அவரது வாழ்நாளில் செழித்து, தற்போதும் செயல்பாட்டில் இருக்கிறது. ¶குருதேவாவிற்கு நெருக்கமாக இருந்தவர்கள், இந்த புத்தகத்தில் வரும் கடந்தகால நிகழ்வுகளில் வாழ்ந்து, அந்தர்லோகங்களுடன் அவரது இணக்கத்தை

கவனித்து இருக்கிறார்கள். மேலும் வெளிப்பாடு மற்றும் உணர்தல் நிறைந்த அவரது வாழ்க்கையை அனுபவித்தும் இருக்கிறார்கள். அவர் நல்ல உயரமாக, ஆற்றல்மிக்கவராக, இரக்க குணம் நிறைந்தவராக, செயல்களில் தீவிரமாக சிவபெருமானை போலவே காட்சி அளித்தார். ஒரு புதிய மொழியை உருவாக்குதல், ஒளி-உடலுடன் இருந்த தேவர்களுடன் உரையாடுதல், அமெரிக்காவில் முதல் தென்னிந்திய மடத்தை ஸ்தாபித்தல், இந்து சமயத்தின் முதல் சர்வதேச பத்திரிகையை தொடங்குதல், எதிர்காலத்தை கண்டறிந்த பிறகு அதை புதிதாக உருவாக்குதல் என்று மக்கள் செய்யாத பல அரிய செயல்களை, அவர் செய்துக்காட்டினார். நந்திநாத கைலாச பரம்பரையை நிலைநிறுத்தும் பணிக்காக, யோக சுவாமி முனிவர் இவரை தேர்ந்தெடுத்ததில் எந்த அதிசயமும் இல்லை. இவரை மேற்கத்திய நாடுகளின் முதல் அதிகாரப்பூர்வமான சற்குருவாக கிழக்கத்திய நாடுகள் ஏற்றுக்கொண்டதில் எந்த அதிசயமும் இல்லை. அவரது செயல்கள் அனைத்தும் ஒரு தேவையை பூர்த்தி செய்ய, விழிப்புணர்வை மேம்படுத்த மற்றும் எதிர்காலத்திற்கு இந்து தர்மத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன் இருந்தன. அந்த நோக்கம் சமீபத்திய எதிர்காலத்திற்காக அல்லாமல், பல்லாயிரம் ஆண்டுகள் கடந்த எதிர்காலமாக இருந்தது, மற்றும் இதை அவர் விருப்பத்துடன் "எதிர்காலங்களின் எதிர்காலம்" என்று அழைத்தார். ஆயிரம் ஆண்டுகள் நிலைத்து இருக்கும் உறுதியுடன் அவரது கோயில் நிர்மாணிக்கப்பட்டது. அவரது மடாலயம் மற்றும் யோக சமூகம், ஆயிரம் ஆண்டுகளையும் கடந்து நிலைத்து இருக்கும் உறுதியுடன் வடிவமைக்கப்பட்டன. அவரது பத்திரிகை தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களை மட்டுமல்லாது, பல நாடுகளை முழுமையாக தொடர்ந்து ஊக்குவித்து உருமாற்றி வருகிறது. ஆனால் அவர் முழுமையான முதற்பொருள் மீது பெற்ற உணர்தல், இவை அனைத்தையும் கடந்து முதன்மையானதாக விளங்குகிறது. இருந்தாலும் கர்மவினையை பற்றி, ஒரு குழந்தைக்கும் எளிய முறையில் பாடம் கற்பிக்கும் திறனுடன் இருந்தார். ¶அவரது இறுதி மகாபயணத்தின் பத்தாம் ஆண்டு நிறைவை ஒட்டி, ஒரு மேற்கத்திய உடலில் ஒரு கிழக்கத்திய ஆன்மாவாக, நவீன யுகம் வழங்கிய அனைத்தையும் விரும்பி, அவற்றை பழங்காலம் சார்ந்த அனைத்தையும் பாதுகாக்க பயன்படுத்திய குருதேவாவிற்கு, இந்த புத்தகத்தை சமர்பிக்கிறோம். அவரையும் அவரது குருக்களையும் பற்றிய முழுமையாக அறிவது எங்களது புரிந்துணர்வுக்கு அப்பாற்பட்டது என்ற மன உறுதியுடன், அவரது திருவடிகளில் பணிவுடன் விழுந்து வணங்குகிறோம். அவரது மற்றும் அவரது குரு மற்றும் அவரது குருவின் குரு பற்றிய கதையை மகிழ்ச்சியாக படித்துக்கொண்டே வரலாற்றில் பின்னோக்கி செல்லுங்கள், மற்றும் என்றாவது ஒரு நாள் அவரைப்போன்ற ஒருவரை சந்திப்போம் என்ற மனஉறுதியுடன் இருங்கள். வாழ்க! சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி! வாழ்க!§

Page 7: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/07_fm_07.html

# குருமார்களின் சரித்திரங்கள்

# பொருளடக்கம்

அத்தியாயம் §


அர்ப்பணிப்பு

முன்னுரை

முகவுரை

1 இலங்கையில் ஒரு குருவை தேடுதல்

2 மகரிஷி நந்திநாதா

3 திருமூலர் சமயப்பணியில் அனுப்பப்படுகிறார்

4 இமயமலையில் இருந்து வந்த ரிஷி

5 “நான் அவனுக்கு மரணதண்டனை வழங்கமாட்டேன்”

6 முக்தியானந்தா இலங்கையை நோக்கி கடலில் பயணம்

7 நல்லூரை சேர்ந்த சித்தர் செல்லப்பசுவாமி

8 யோக சுவாமியின் இளமைபப்பருவம்

9 யோகநாதன் நிலை மாற்றம் பெறுகிறார்

10 “நீ இன்னும் என்னை எட்டிப்பிடிக்கவில்லை”

11 “யோகநாதன் செத்துவிட்டான்”

12 யோக சுவாமி என்கிற இளைய குரு

13 செல்லாச்சி அம்மையார்

14 யோக சுவாமி என்கிற ஈடு இணையற்ற குரு

15 “யாம் அறியோம்”

16 அற்புத செயல்கள்

17 சாதனா செய்ய பரிந்துரைகள்

18 யோக சுவாமியின் கடைசி காலம்

19 சுப்பிரமுனியசுவாமியின் இளமைப்பருவம்

20 ஒரு குகையில் இறைவனை கண்டறிதல்

21 அமெரிக்காவில் சாதனா மேற்கொண்ட வருடங்கள்

22 நெவாடாவில் குடியெறுதல்

23 ஐரோப்பாவிற்கு பயணம் மேற்கொள்ளுதல்

24 கவாயில் தனது வீட்டில்

25 ஒரு சைவ சமயக்கோட்டையை நிறுவுதல்

26 இந்து சமயத்தை வலுவாக ஆதரித்தல்

27 சமயப்பணி உலகமயமாகிறது

28 காலத்தைக் கடந்த மரபுரிமைச் செல்வம்

29 குருவின் ஊக்கமளிக்கும் பண்பு

30 ஒரு சூறாவளியின் பாதிப்பை
ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துதல்

31 உயர்ந்த நிலையை அடைதல்

முடிவுரை

புகைப்படங்களின் தொகுப்பு

சொற்களஞ்சியம்

நூற்பட்டியல்

நூல் வெளியீட்டாளர் குறிப்பு

Page 9: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/09_fm_09.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## முன்னுரை

1972 வருடம் சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி (குருதேவா) உலகெங்கும் மேற்கொண்ட பயணத்தின் அங்கமாக இந்தியாவிற்கு சுற்றுலா சென்ற போது, இலங்கையில் தன்னிடம் சீடர்களாக இருந்த பலருக்கு ஒரு சுப முகூர்த்தத்தில் தீட்சையை வழங்கினார். அந்த தீட்சை பெற்றவர்களில் ஆசிரியராக இருந்த ஒருவருக்கு, சுப்பிரமுனிய ஆசிரமத்திற்கு அருகில் உள்ள அளவெட்டி கிராமத்தில் தனது மனைவி மற்றும் சிறிய வயது மகனுடன் வசித்துக்கொண்டு, யோக சுவாமியின் பரம்பரையின் குருமார்களைப் பற்றி பேச்சு வழக்கில் மற்றும் எழுத்து வடிவில் இருந்த வரலாறுகளை சேகரிக்கும் பணி வழங்கப்பட்டது. அந்த பணி மேற்கொள்ளப்பட்ட காலம் முக்கியமானதாக இருந்தது. யோக சுவாமியின் இறுதி மகாபயணம் 1964 ஆம் ஆண்டு நடந்தது, மற்றும் அவருக்கு நெருக்கமாக இருந்தவர்களின் மனதில் நினைவுகள் பசுமையாக இருந்தன. அவர்கள் தங்களது குருவின் வாழ்க்கை வரலாற்றை பதிவு செய்யவேண்டிய தேவையை உணர்ந்ததால், பரிச்சயமில்லாத புதியவர்கள் மீது தங்களுக்கு இருந்த அவநம்பிக்கையை தவிர்த்து, தங்களது அனுபவங்களை பகிர்ந்துக்கொண்டார்கள். இந்த தருணத்தில் அவர்களின் நினைவுகளை சேகரிப்பது முக்கிய பணியாக இருந்தது, ஏனென்றால் அது யோக சுவாமியின் வாழ்க்கை மற்றும் போதனைகள் பற்றிய நம்பத்தகுந்த தகவலை உறுதி செய்தது. அதற்கு மாறாக பல வருடங்கள் காத்திருந்தால், ஒரு முழுமையற்ற வரலாறு மற்றும் மறக்கப்பட்ட கதைகளுக்கு  வழி வகுக்கும். §

பல வருடங்களுக்கு முன்பாகவே யோக சுவாமி தனது சீடர்களிடம், “எனது வாழ்க்கை வரலாற்றை எழுதுபவர் வந்துக்கொண்டு இருக்கிறார். அவர் வெள்ளை நிற உடலுடன் இருக்கிறார், மற்றும் அவர் எனது கதையை சொல்ல இங்கே வந்துக்கொண்டு இருக்கிறார்,” என்று கூறியதாக ஒரு வருடம் அங்கே தங்கியிருந்த போது தெரிய வந்தது. ஒரு சமயம் யாழ்ப்பாணத்திற்கு, ஒரு ஆங்கிலேயர் வந்த போது, சீடர்கள் சுவாமியிடம் விரைந்து சென்று, “இதோ உங்கள் வாழ்க்கை வரலாற்றை எழுதுபவர் வந்து விட்டார்,” என்று கூறினர்.

“இல்லை, அவர் சிறிது காலம் கழித்து வருவார்,” என்று யோக சுவாமி சுருக்கமாக பதில் அளித்தார். அந்த பக்தன் அளவெட்டியில் தங்கியிருந்த போது, அந்த ஊரில் வாழும் ஒரு அமெரிக்க பள்ளி ஆசிரியர் தான் யோக சுவாமி கூறிய நபர், என்று குறிப்பிடும் கனவுகளை பல கிராமவாசிகள் கண்டனர். இந்த செய்தி யாழ்ப்பாணம் தீபகற்பம் முழுவதும் பரவியது. சுவாமியின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் ஆசிரியரின் எளிமையான வீட்டிற்கு, பார்வையாளர்கள் ஒவ்வொருவராக வந்து, இலங்கையில் தர்மத்தின் தலைவனாக இருந்த அவர்களது குரு, மற்றும் அவரது குருவான, செல்லபசுவாமி மற்றும் அவரது குருவின் குருவான கடையிற்சுவாமி ஆகியோரின் கதைகளை பகிர்ந்துக்கொண்டனர். அந்த ஆசிரியர் ஒரு பாயில் அமர்ந்துக்கொண்டு, நூற்றுக்கணக்கான கதைகளை கவனமாக எழுதிக்கொண்டார். பின்னர் அவர் அதனை *உள்ளிருக்கும் சிப்பாய்கள்* (Soldiers within) என்ற தலைப்பில், அதனை 120 பக்கங்களைக் கொண்ட ஒரு கையெழுத்துப் பிரதியாக வடிவமைத்து, அமெரிக்காவிற்கு திரும்பி குருதேவாவிடம் சமர்ப்பித்தார். §

இந்த புத்தகம் அந்த கையெழுத்துப் பிரதியின் பக்கங்களுடன் தொடங்குகிறது. உண்மையில் *உள்ளிருக்கும் சிப்பாய்கள்*, பல வருடங்களுக்கு மடத்திற்குள் வாசிக்கப்பட்டு, குறிப்பிட்ட சில பக்தர்களுடன் மட்டுமே பகிரப்பட்டது. இது வரையில் அந்த பிரதி அச்சிடப்படாமல் இருந்தது. இதற்கு இடைப்பட்ட காலத்தில், மேலும் ஆராய்ச்சி மேற்கொள்ளுமாறு குருதேவா தனது மடத்துறவிகளிடம் கேட்டுக்கொண்டார். நாங்கள் பேச்சு வழக்கில் இருந்த வரலாறுகள் மற்றும் எழுத்து வடிவில் இருந்த வாழ்க்கை வரலாற்று விவரங்களை சேகரித்து, தேவைப்படும்போது தமிழ் சான்றோர்களுடன் ஆலோசித்து, அதனை தமிழ் மொழியில் இருந்து மொழிபெயர்க்கவும் செய்தோம். இறுதியாக நாங்கள் அந்த தகவல்களை, இந்த பெரிய புத்தகத்தில் ஒன்று திரட்டினோம். 1998 ஆம் ஆண்டு, குருதேவா அதனை ஒவ்வொரு வரியாக மறு ஆய்வு செய்ய, மடத்துறவிகளை உள்ளடக்கிய தனது தொகுத்து அமைக்கும் குழுவுடன் அமர்வுகளை நடத்தினார். அது 400 பக்கங்களைக் கொண்ட ஒரு பூர்வாங்க பதிவாக இருந்தது, மற்றும் அதில் அவரது சொந்த வாழ்க்கை வரலாறு சேர்க்கப்படவில்லை. §

ஒரு அறையில் அமர்ந்திருக்கும் மக்கள் வழியாக, ஒரு செய்தியை அனுப்பிப்பாருங்கள். முதலாவதாக சொல்லப்பட்ட செய்திக்கும், இறுதியாக வெளிவந்த செய்திக்கும் இடையே இருக்கும் மாற்றத்தைக் கண்டு வியப்பீர்கள். அதைப்போலவே, நிஜவாழ்கையில் இருக்கும் சம்பவங்களை மீண்டும் மீண்டும் சொல்லப்படுவதால், அது இயல்பாக மாற்றமடைந்து, இறுதியாக உருகுலைகிறது. ஆனால் பெரும்பாலான வரலாறு, இந்த முறையில் தான் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. இதை நம்மால் முழுமையாக நம்பமுடியாது என்றாலும், அது தான் பெரும்பாலும் நம்மிடம் இருக்கிறது. ஏழு சூட்சும ஞானிகளின் இந்த வாழ்க்கை வரலாறு, இந்த

புத்தகத்தின் அடித்தளமான அவர்களது நூல்களை கொண்டுள்ளது. அதனுடன் அவர்களது சமகாலத்தவர்கள் எழுதிய கதைகளும் இருக்கின்றன, மற்றும் அவற்றில் சில கதைகள்  முழுமையாக இல்லை. ஆனால் அவை பேச்சு வழக்கில் இருந்த கதைகள். இது இந்த புத்தகத்தின் பதிப்பாளர்கள் சந்தித்த, ஒரு முக்கியமான மற்றும் நிரந்தர பிரச்சனையாக இருந்தது. §

நாங்கள் நூற்றுக்கணக்கான மூலங்களை பல வருடங்களுக்கு ஒப்பீடு செய்து, வரலாற்று சிறப்புமிக்க தகவல்களுடன் பொருத்தத்தை உறுதி செய்ய கடுமையாக உழைத்தோம். அதிலும் குறிப்பாக, புத்தகத்தில் இருக்கும் முந்தைய காலத்து குருமார்களான மகரிஷி நந்திநாதா, ரிஷி திருமூலர் மற்றும் இமயமலையில் இருந்து வந்த பெயர் தெரியாத ரிஷி பற்றி பதிவு செய்யப்பட்ட தகவல்கள் கிடைப்பது மிகவும் அரிது. உதாரணத்திற்கு திருமூலரின் வரலாறு பற்றி மேலோட்டமாக, பழங்கால *பெரியபுராணம்* மற்றும் அவரது *திருமந்திரத்தில்* இருக்கும் திருமூலரின் சில மறைபுதிரான சுயசரிதை குறிப்புக்களில் இருந்து மட்டுமே பெரும்பாலும் பெறப்பட்ட தகவலின் மூலம் நமக்கு தெரிய வருகிறது. §

அந்த பிரிவுகளில் இருக்கும் வரலாற்று இடைவெளிகளை நிரப்புவதற்காக, வரலாற்றில் இல்லாமல் புறக்கணிக்கப்பட்டு மறைந்து இருக்கும் உயிர்களுக்கு, வெளிச்சம் மற்றும் மதிப்பை வழங்குவதற்கு, நாங்கள் ஒரு அலங்கார பாணியை கையாண்டு இருக்கிறோம். இந்த புத்தகத்தில் எடுத்துரைக்கபட்டுள்ள, அந்த பழங்காலத்து குருமார்களின் கதைகள், அந்த காலத்தில் அந்த பகுதியில் இருந்த வாழ்க்கை பற்றி ஒரு நவீன வரலாற்றாசிரியரின் புரிதலின் துணையுடன், அடிப்படை வரலாற்று உண்மைகளின் அடிப்படையில், ஓரளவு கற்பனை நிறைந்த சம்பவங்களின் மறு உருவாக்கமாக விளங்குகின்றன. நமது கதை நிகழ்காலத்தை நெருங்கும் போது, அது அதிக யதார்த்தத்தை பெறுகிறது. §

குருதேவாவின் வாழ்க்கை தொடர்பான அத்தியாயங்களுக்கு, எங்களிடம் அதிகமான வளங்கள் இருந்ததால், நிலைமை முற்றிலும் மாறுபட்டு இருந்தது. அவருடைய வாழ்க்கை வரலாற்றில் எங்களுக்கு சவாலாக விளங்கிய ஐந்து சதவீதத்தை, நாங்கள் ஏற்றுக்கொள்ளும் படியாக இருந்தது. அவர் தனது கதையை, தனது சொந்த வார்த்தைகளால் எடுத்துரைக்கவும் வாய்ப்பு இருந்தது. 1970 ஆம் ஆண்டில் “குரு உருவான கதை” (Making of a Master) என்ற தலைப்பில், அவர் வழங்கிய உரையின் ஒரு பகுதியை நாங்கள் குறிப்பிட்டு இருந்தோம். அதில் அவர் தனது இளமைபருவத்து சூட்சும ஞான அனுபவத்தைப் பற்றி விளக்கி இருந்தார். 1999 ஆம் ஆண்டு, அலாஸ்கா உட்புறதேடல் பயணம்-ஆய்வு திட்டத்தின் (Innersearch Travel-Study Program) போது, அவர் வழங்கிய ஏழு பாடங்களின் காணொளியையும் நாங்கள் எழுத்து வடிவில் பதிவு செய்துள்ளோம். அவர் இந்த திட்டத்தை தனது வாழ்நாளில் ஒவ்வொரு பத்து வருடத்திற்கு ஒரு முறை நடத்தினார். மடத்தில் இருந்த பெட்டகங்களில், அவரது சிறு வயது தகவல்கள் கண்டெடுக்கப்பட்டன. அவரது பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ், பழைய கடவுச்சீட்டுக்கள்,

பத்திரிகைத் துணுக்குகள் மற்றும் மற்ற ஆவணங்கள், குழந்தை பருவத்து புகைப்படங்கள், 1940 களின் இறுதியில் இலங்கையில் இருந்து அவர் எழுதிய கடிதங்கள், மற்றும் அந்த நாட்டில் அவரது சுற்றுப்பயணம் தொடர்பான நிகழ்வுகள் பற்றி, ஒரு கண்காணிப்பாளரின் கண்ணோட்டத்தில் அவருக்கும் அவரது மடத்துறவிகளுக்கும் எழுதப்பட்ட கடிதங்களை நாங்கள் ஆய்வு செய்தோம். அந்த காலத்தில் குருதேவா தனது கைப்பட எழுதிய குறிப்புகள் மிகவும் முக்கியமானதாக இருந்தன. §

அவர் போதனைகளை வழங்கத் தொடங்கிய காலத்தில் ஆரம்பித்து, அவரது வாழ்க்கையின் கதை அமைப்பை வடிவமைக்க, அவரது மடத்துறவிகள் பல வருடங்களாக மாத வாரியாக பாதுகாத்து வந்த, ஒரு விரிவான சம்பவப்பட்டியல், மற்றும் அவருடன் வாழ்ந்த மற்றும் கல்விகற்றவர்களின் தனிப்பட்ட சான்றுரைகளை ஆலோசித்தோம். உட்புறதேடல் திட்டத்தின் ஆரம்பக் காலத்தில் குறிப்பிடும்படியாக இருந்த பல சம்பவங்கள் பற்றிய தகவல்கள், அதில் பங்குபெற்றவர்களின் நாட்குறிப்பில் இருந்து பெறப்பட்டன. எங்களது இந்துயிசம் டுடே பத்திரிகையின் ஏப்ரல்/மே/ஜூன் 2002 நினைவக பதிவில் இருந்து, குருதேவாவின் வாழ்க்கை பற்றிய மற்ற பாகங்கள் பெறப்பட்டன. ஆனால் சம்பவப்பட்டியலில் இருந்த சுருக்கமான தகவல்கள் மற்றும் குருதேவாவின் மடத்துறவிகள் அரைகுறையாக வெளிப்படுத்திய நினைவுகள் காரணமாக வரலாற்றில் இருந்த இடைவெளிகள், பல கதைகள் சொல்லப்படவேண்டி இருப்பதை தெரிவித்தன. அதனால் இந்த புத்தகம் நிறைவு பெறும் வரை, குருதேவாவின் தொகுத்து அமைக்கும் குழுவில் இருந்த மடத்துறவிகள், 2007 வருடத்தின் தொடக்கத்தில் இருந்து ஐந்து வருடங்களுக்கு, தங்களது மற்ற வேலைகளை தவிர்த்து, அந்த கதைகளை எழுதுவதில் மற்றும் இந்த நவீன யுகத்தின் ரிஷியின் வாழ்க்கை பற்றிய முதன்மையான முழு விவரத்தையும் வடிவமைப்பதில் ஈடுபட்டனர். §

போதனைகள் மற்றும் கதைகளை தெரியப்படுத்தும் திறமை கலைப்படைப்பிற்கு இருப்பதால், குருதேவா அதன் பயன்பாட்டிற்கு அதிக மதிப்பு அளித்தார். அதை கருத்தில் கொண்டு கதைகளுக்கு உணர்ச்சியூட்டுவதற்கும், வெகு சிலரால் மட்டுமே பார்க்கப்பட்ட இடங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை தத்ரூபமாக காண்பிப்பதற்கும், இந்த புத்தகத்தில் பரவலாக ஓவியங்கள் பயன்படுத்தப்பட்டன. அந்த ஓவியங்கள் தமிழ்நாட்டில் இருக்கும் திருமயிலையைச் சேர்ந்த திரு. எஸ். ராஜம் (1919-2009) அவர்களின், அற்புதமான படைப்புக்கள் ஆகும். அவருக்கு இயற்கை தந்த வரமாக இசை விளங்கினாலும், அவரது கலையுணர்வும் சிறப்பாக இருந்ததது, மற்றும் அது சுத்தமான தென்னிந்திய பாணியை அடிப்படையாகக் கொண்டு ஒரு பிரத்யேக பாங்கில் உருவாக்கப்பட்டு இருந்தது. அவர் அதை தனது வழிபாடாகவும், தன்னை ஒரு அழகுணர்வுள்ள துறவியாகவும் கருதினார். அதனால் இந்த பக்கங்கள் வெளிப்படுத்துவதைப் போல, துறவிகளான எங்களுடன் சிறப்பாக பணிபுரிய வழிவகுத்தது. மற்றவர்கள் வழக்கமாக கோயிலுக்கு செல்லும் போது, அவர் ஓவியம் தீட்ட பயன்படும் தனது கித்தான்

துணியில், ஆன்மீகம் தொடர்பாக ஏதாவது வரையவேண்டும் என்பதற்காக, கோயிலுக்கு சிறிது நேரம் கழித்து செல்வார். இந்த புத்தகத்திற்காக ஓவியர் ராஜம், ஐம்பத்தி ஆறு கித்தான் துணிகளை உருவாக்க, சற்றே இருள் சூழ்ந்த இரண்டு அடுக்கு கலைக்கூடத்தில் 2002 முதல் 2003 வரை தினமும் பதினான்கு மணி நேரம் வரை தனது சித்திரம் தாங்கும் பலகையில் வேலை செய்து வந்தார். அந்த கித்தான் துணி ஒவ்வொன்றும் பல்வேறு கதைகளை சித்தரித்தன. அவரது தூரிகைக்கு ஹவாயில் இருக்கும் கவாய் இந்து மடத்தில் இருந்து சந்நியாசி தொகுப்பாளர்களான நாங்கள் வழங்கிய விளக்கங்கள், புகைப்படங்கள் மற்றும் விளக்கப்படங்கள் வழிகாட்டியாக விளங்கின. அந்த சித்திரத்தில் வெளிப்பட்ட படைப்பாற்றல் மற்றும் கலாச்சார நுணுக்கங்கள் அனைத்தும் அவருக்கு சொந்தமானவை §

நீங்கள் வாசிக்கும் இந்த புத்தகத்தை நிறைவு செய்ய சுமார் முப்பத்தி எட்டு வருடங்கள் எடுத்துக்கொண்டாலும், அது ஒரு முதல் பதிப்பாக இருந்தது. மற்றும் முதல் பதிப்பு என்றுமே முழுமையாக இருப்பதில்லை. எதிர்கால பதிப்புகள் முழுமையாக மற்றும் குறையின்றி இருக்க கூடுதல் கதைகள், புகைப்படங்கள், திருத்தங்கள் மற்றும் யோசனைகள் வரவேற்கப்படுகின்றன. உங்களது கதைகள் மற்றும் திருத்தங்களை sadasivanatha@hindu.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம். www.himalayanacademy.com என்கிற எங்கள் இணையத்தில், இந்த புத்தகம் PDF மற்றும் மின்-புத்தக வடிவில் கிடைக்கிறது. §

Page 10: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/10_fm_10.html

# குருமார்களின் சரித்திரங்கள்


## முகவுரை

இவை அறியமுடியாததை அறிந்து இருந்து, உள்ளங்கையில் முடிவான புரிதலை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த விசேஷமான ஆன்மாக்களின் கதைகள் ஆகும். அவர்கள் தங்கள் சகாக்களை வியக்க வைத்து, வாழ்க்கையின் குறிக்கோள் மற்றும் பாதையை வெளிப்படுத்தி, விசித்திரமான வகையில் எதிர்காலம் பற்றிய விழிப்புணர்வை பெற்றனர். கடவுள் சர்வவல்லமை படைத்தவராக எங்கும் எதிலும் இருக்கிறார் என்பதையும், அந்த கடவுள் ஒவ்வொரு மதம் மற்றும் பாதையில் வெவ்வேறு பெயர்களுடைய கடவுளாக இருக்கிறார் என்பதையும் அவர்கள் அறிந்திருந்து, கடவுளை சிவபெருமனாக வழிபடுகிறார்கள். அதில் பலர் குருமார்களாக இருக்கிறார்கள்; ஆனால் மனதின் ஆழ்நிலைக்கு சென்று, யோகத்தின் முடிவான இலக்கை அடைந்து, கடவுளை அறிந்த இவர்கள் சற்குருக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களது வாரிசுகள் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள், அவர்களது சக்திகள் இடம் மாற்றப்பட்டு, ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு செல்லும்போது முதிர்ச்சியை பெற்று, 21ஆம் நூற்றாண்டில் தற்போது செழிப்பாக இருக்கின்றன. ஆனால் அவர்களின் கதைகள் பெரும்பாலும் சொல்லப்படாமல், ஒரு வகையில் பொதுவான ஆன்மீக இரகசியமாக இருக்கின்றன. இந்த புத்தகத்தில் முதல் முறையாக, அவர்கள் வெளிப்படுத்த விரும்பிய வரை, அவர்களை இயக்க மற்றும் ஊக்குவிக்க எது காரணமாக இருந்துள்ளது என்பது வெளியிடப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தில் முதல் முறையாக, அவர்கள் என்ன சொன்னார்கள் மற்றும் செய்தார்கள் என்பது தீட்சை பெற்ற குழுவிற்கு வெளியே பகிரப்பட்டுள்ளது. §

தற்கால அறிஞர்களும் விஞ்ஞானிகளும் மனிதனின் கடந்தகால வரலாற்றை பற்றி தேடத்தொடங்கி, தங்களுக்கு மிகவும் சிறிதளவே தெரியும் என்பதை தெரிந்துக்கொண்டார்கள். நமது இனம் பூமியில், இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வந்துள்ளது, ஆனால் இன்று அந்த வரலாற்றில் ஒரு சுவடை மட்டுமே நம்மால் மதிப்பிட முடிகிறது. கடந்த காலத்தில் எத்தனை நாகரிகங்கள் இருந்துள்ளன? அவர்கள் நமக்கு எந்த

தகவலையும் விட்டு வைக்காததால், அவர்கள் இந்த பூமியில் வாழ்ந்ததாக நாம் கருதுவதில்லை. மனிதன் சம்பந்தப்பட்ட வெறும் ஐம்பது நூற்றாண்டுகளின் சம்பவங்களை ஒன்று சேர்த்து பார்க்கும் போது, பல டஜன் கணக்கில் கலாச்சாரங்கள் பல யுகங்களுக்கு செழிப்பாக இருந்து, பெரும்பாலும் முழுமையாக அழிந்துள்ளன என்பது தெரிய வருகிறது. §

எகிப்து, சுமேரியா, கிரேக்க நாடு அல்லது பெரு, இத்தாலி, பிரிட்டன் அல்லது பெர்சியாவின் பழங்கால சமயங்கள் எங்கே? இவற்றின் வரலாறு மற்றும் நவீன யுகத்தில் அவை ஏற்படுத்திய தாக்கத்தை பற்றிய, துல்லியமாக வரலாற்று ஆசிரியர்கள் கண்டுபிடித்தாலும், அது கல்வி சார்ந்த ஆய்வாகவே இருக்கிறது. புதைந்த நகரங்கள், உடைந்த சுவர்கள், மர்மமாக காட்சி அளிக்கும் உடைந்த துண்டுகள், பயன்பாட்டில் இருந்த சட்டத்தின் பகுதிகள் மற்றும் அவர்களது ஓவியத்தின் மிச்ச மீதிகள், அவை சிறந்து விளங்கிய காலத்து பாரம்பரியங்களை சித்தரிக்கவில்லை. ஆங்காங்கே தப்பித்த சில குழுக்களை தவிர்த்து, கடந்த ஆயிரம் ஆண்டுகளில் சமயம் சார்ந்த போர்கள் காரணமாகவும், புவியியல் மாற்றங்களை நீண்டகால அளவில் பார்க்கும் போது, தொடர்ந்து வரும் பனி யுகத்தின் மர்மமான சக்தியின் காரணமாகவும், பூமியில் இருக்கும் பெரும்பாலான பழங்கால சமயங்களின் தொடர்ச்சியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.§



இதில் குறிப்பிடும்படியான விதிவிலக்காக இருப்பது பாரதம் என்கிற நவீன இந்தியா. இது உலகின் மிகவும் பழமையான மற்றும் துடிப்புணர்வுள்ள சமயமான, இந்து சமயத்தின் தாயகமாக விளங்குகிறது. இந்துக்களின் மத்தியில் தங்கள் சமயத்தின் பழமை பற்றி புரிந்துணர்வு இருப்பதை, நவீன ஆராய்ச்சி பெரும்பாலும் நிரூபித்துள்ளது. “நிலையான பாதையாக” விளங்கும் சனாதன தர்மம், இயல்பாகவே உலகம் முழுவதற்கும் சொந்தமானதாக இருக்கிறது மற்றும் வரலாறு முழுவதிலும் பல ரூபங்கள் மற்றும் மொழிகளில் தூரத்து கண்டங்களுக்கு பரவி இருக்கிறது, மட்டும் அது இந்தியாவில் மட்டுமே கடந்த ஆயிரம் ஆண்டுகாலமாக நிலைத்து இருந்து, இடைவிடாத தொடர்ச்சியுடன் வளர்ச்சி பெற்று, இன்று ஒரு பில்லியன் மக்களுடன் வலுவாக, ஒரு உலகளாவிய இந்து சமயமாக செழிப்பாக இருக்கிறது. §

இந்தியா ஆன்மீகத்திற்கு என்றுமே குழந்தைகளின் தொட்டிலைப் போல இருந்துள்ளது. மார்க் ட்வைன் இந்தியாவில் உரைகளை நிகழ்த்துவதற்காக 1895 ஆண்டில் பயணம் மேற்கொண்ட போது, “இந்தியா மனிதநேயத்திற்கு தொட்டிலாக, மனித உரையாடலின் பிறப்பு இடமாக, வரலாற்றின் அன்னையாக, புராணக்கதையின் பாட்டியாக, மற்றும் பாரம்பரியத்தின் முப்பாட்டியாக விளங்குகிறது. மனித வரலாற்றில் நம்மிடம் இருக்கும் அதிக மதிப்புமிக்க மற்றும் அதிக அறிவுறுத்தல் நிறைந்த தகவல்கள், இந்தியாவில் மட்டுமே பேணி பாதுகாக்கப்பட்டு வருகின்றன!” என்று குறிப்பிட்டிருந்தார். §

பழங்காலத்தில் இருந்த மற்ற நம்பிக்கைகள் அனைத்தையும் அழித்த அறியாமை, இந்து சமயத்தை எதனால் விட்டு வைத்தது? அதற்கு அதிஷ்டம் தான் காரணம் என்று சொல்ல முடியாது. இந்திய நாடு பல கடினமான சூழ்நிலைகளை சந்தித்துள்ளது, மற்றும் அயல் நாட்டவர்கள் மூலமாக தொடர்ந்து இனங்கள் மற்றும் சமயங்கள் முழுவதுமாக ஈர்க்கப்பட்ட சமபவங்கள், அதன் வரலாற்றில் நிறைந்துள்ளன. அது மட்டுமல்லாமல், வெளிநாட்டில் இருந்து படையெடுத்தவர்கள், இயற்கை பேரழிவுகள் மற்றும் உள்நாட்டு போர்கள் என்று இந்தியா தனது பங்கிற்கு சவால்களை சந்திக்க வேண்டியிருந்தது. இருந்தாலும், இந்து சமயம் என்றுமே ஊக்குவிக்க தவறாமல், என்றும் மங்காமல், எப்போதும் புத்துயிருடனும் உள்ளத்தில் வலிமையுடனும், ஒரு இரகசிய ஊட்டச்சத்தின் உதவியுடன், உறுதியான துடிப்புணர்வுடன் செழித்து, இந்தியாவின் ஆன்மா மீது தனது பிடியை தக்கவைத்துக் கொண்டுள்ளது. இதற்கு யார் பொறுப்பு என்று நாம் கேட்கலாம். இந்த சமயத்தை ஆயிரம் ஆண்டுகளுக்கு இயக்கிக்கொண்டு இருந்தது யார்? இன்று அதை துடிப்புணர்வுடனும் உட்புற வலிமையுடனும் வைத்திருப்பது யார்? அவர்கள் எத்தனை பேர்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? அது எவ்வாறு சாதிக்கப்பட்டது? இதற்கான பதில்களில் ஒரு பகுதியை, இந்த புத்தகத்தின் பக்கங்களில் காணலாம். இந்த சுயசரிதையை சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமியின் வாழ்க்கை வரலாறு நிறைவு செய்கிறது. அவர் இவ்வாறு அதற்கு விளக்கம் அளிக்கிறார்:§

[பக்தியுடன் இருக்கும்] ஆயிரம் இந்துக்களில், ஒன்று அல்லது வெகு சிலர் மட்டுமே ஆச்சாரமான பாதையில் செல்ல உலகை துறந்து, ஒரு நதிக்கு அருகில், குன்றுகளில் இருக்கும் ஒரு குகையில் தனிமையில் வாழ்ந்துக்கொண்டு அல்லது அலைந்து திரிந்துக்கொண்டு இருப்பார்கள். அவர்களுக்கு வானம் கூரையாகவும், இறைவன் எசமானாகவும் இருக்கிறார். ஒவ்வொரு இந்துவும் சுவாமி அல்லது சாது தற்போது இருக்கும் நிலையை தாங்களும் எதிர்காலத்தில் அடைவார்கள் என்பதை அறிந்து, அவருக்கு மரியாதை செலுத்துகிறார்கள். இவ்வாறு இறைவனை நாடும் பல்லாயிரக்கணக்கான *தபஸ்விக்களில்,* சிகரம் மிகவும் உயர்வாகவும், ஏற்றம் செங்குத்தாகவும் இருப்பதால், எல்லா ஆன்மாக்களும் நாடும் அந்த பரமாத்துமாவை, ஒன்று அல்லது பத்து நபர்கள் தேடிப்பிடிப்பார்கள். உணர்தலை பெற்ற துறவிகள் மற்றும் முனிவர்கள் அபூர்வம் என்றாலும், இந்தியாவில் அத்தகைய நபர்கள் இல்லை என்று சொல்லி விடமுடியாது. அவர்கள் இருப்பதால் நாடு புனிதமடைகிறது. §

ஒவ்வொரு இந்து தலைமுறையிலும் விவசாயிகள், வழக்கறிஞர்கள், தாய்மார்கள், அரசர்கள், பிச்சைக்காரர்கள், அறிஞர்கள், பூசாரிகள், சுவாமிகள் மற்றும் தெய்வீக புருஷர்கள் பிறந்து இருக்கிறார்கள். ஆனால் இந்த ஆன்மாக்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து, சனாதன தர்மத்தின் முழு சக்தியையும் சுமந்து செல்வது அல்லது தாக்கு பிடிப்பது என்பது முடியாத காரியம். அவர்கள் தங்களது சொந்த ஆசைகள், தங்களது சொந்த அனுபவங்கள் அல்லது தங்களது சொந்த வேட்கையில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அவர்களது தேடல் தொடர்கிறது. அவர்கள் இன்னும் முழுமையான புரிந்துணர்வை பெறவில்லை; அவர்கள் தங்களது ஆன்மாவின் முழுமையான பக்குவத்தை இன்னும் அடையவில்லை. இறைவனை உணர்ந்த பிறகும், ஆன்மா தொடர்ந்து பரிணாம வளர்ச்சி பெறுகிறது. அது திடீரென்று மறைவதும் இல்லை, உலகம் காணாமல் போவதும் இல்லை. ஒரு ஞானோதயம் பெற்ற மனிதன், தனது ஆன்மாவின் முதிர்ச்சிக்கு ஏற்ப பலரை ஆன்மீக பாதையில் முன்னேற்றி செல்லமுடியும். தலைமுறைகள் முழுவதையும் வழிகாட்டும் குறிக்கோள் பணி யாருடையது? தங்களது தேடலை கைவிட்டு, பல லட்சக்கணக்கான மக்களை தான் கடந்து வந்த பாதையில் வழிகாட்ட யார் முன்வருவார்கள்? யாருடைய தேடல் முழுமையாக முடிந்துள்ளதோ, யார் குறிக்கோளாக மாறிவிட்டார்களோ அவர்களால் மட்டுமே இதை செய்ய முடியும். §

அத்தகைய மனிதர்கள் வாழ்கிறார்கள்; அத்தகைய மனிதர்கள் எப்போதும் வாழ்ந்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் சித்தர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள், அதாவது “சாதித்தவர்கள்” அல்லது “முழு நிறைவானவர்கள்.” இந்திய மக்கள் சனாதன தர்மத்தின் வெளிப்புற கோட்பாடுகள் மற்றும் அனுஷ்டானத்தை பின்பற்றுகிறார்கள், ஆனால் இந்த விசேஷ வகையான யோகிகள் ஒவ்வொருவரும் அந்த தர்மத்தின்

உட்புற சக்தி மற்றும் நுணுக்கமான தகவலை பின்பற்றுகிறார்கள். அவர்கள் அதன் சக்தியை தக்க வைத்துக்கொண்டு, அதன் விதியை பாதுகாக்கிறார்கள். அவர்கள் சிவபெருமானுடன் ஐக்கியமாகி, இறைவனின் சித்தத்திற்கு இணங்கி பேசவும் செயல்படவும் செய்கிறார்கள். §

ஒவ்வொரு குருவும் மற்ற குருக்களிடம் இருந்து தங்களது பரம்பரை, மற்றும் தங்களது இயல்பான குணம், விழிப்புணர்வு மற்றும் ஸித்திகளை பொறுத்து மாறுபடுகிறார்கள். உங்களை உங்களிடம் அறிமுகப்படுத்தும் பணியை மட்டுமே, ஒரு குருவால் செய்ய முடியும். அவர் அந்த பணியை மட்டுமே செய்வார், மற்றும் அது பல வழிகளில் மேற்கொள்ளப்படுகிறது. ஒரு குருவின் முடிவான ஸித்தியை குறிப்பிடும் அவரது தத்துவதம் மற்றும் அவரது சொந்த அனுபவத்தின் மூலமாக மட்டுமே அவர் கட்டுப்படுத்தப்படுகிறார். அவர் தான் செல்லாத இடத்திற்கு, உங்களை அழைத்து செல்ல முடியாது. ஊக்கம் அளிப்பது, உதவி செய்வது, வழிகாட்டுவது மற்றும் சிலசமயங்களில் குரு பரமாத்துமாவை நோக்கி தான் சென்றதை காட்டிலும், அதிகமாக முன்னேறி செல்ல சீடனுக்கு உத்வேகம் அளிப்பதும் குருவின் பணியாக இருக்கிறது. §

மனம் கபடம் நிறைந்து இருப்பதாலும், ஆணவம் என்பது சுயமாக-நிலைத்து இருந்து, தன்னை தன்னால் கடக்க முடியாமல் மற்றும் விருப்பம் இல்லாமல் இருக்கும் செயல்முறை என்பதாலும் சற்குரு தேவைப்படுகிறார். அதனால் ஒருவருக்கு, அந்த செயல்முறையை அனுபவித்த, பாதையின் இயல்பான முடிவு வரை நம்பிக்கையுடன் பின்தொடர்ந்து சென்ற, மற்றும் நமக்குள் இருக்கும் இறைவனை நோக்கி நம்மை வழிநடத்தி செல்ல முடிந்த, இன்னொருவரின் வழிகாட்டல் தேவைப்படுகிறது. சற்குரு உங்களை பாதையில் நிலைத்திருக்க செய்வார், ஆனால் பாதையில் முன்னேறி செல்வது உங்கள் பொறுப்பு என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். §

சிலசமயங்களில் குரு தரும் நுணுக்கமான வழிகாட்டலை புரிந்துகொண்டு, பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, வழங்கப்பட்ட சாதனாக்களை பூர்த்தி செய்ய அவற்றை பயன்படுத்துவதும் சீடனின் கடமையாக விளங்குகிறது. உள்ளுணர்வு மனதிற்கு வளர்ச்சி ஒரு சவாலாக இருப்பதால், எப்போதும் சவாலாக இருக்கும் ஞானோதய பாதையில் ஒரு சற்குருவுடன் இருப்பது, ஒரு வலுப்படுத்தும் செயலாக விளங்குகிறது. ஒரு குரு இந்த தீவிரத்தை வழங்கவில்லை என்றால், நாம் அவரை தத்துவத்தை போதிக்கும் ஒரு ஆசிரியராக மட்டுமே கருதுவோம். எல்லா குருக்களும் சற்குருக்களாக இருப்பதில்லை. எல்லா குருக்களும் இறைவனை உணர்ந்திருப்பதில்லை. வாழ்க்கையின் மாதிரிகளில் நிலைத்து இருக்காமல், அவற்றை மாற்றி அமைப்பதே குறிக்கோள் ஆகும். ஒரு சற்குருவை தேடுவதற்கு, அது மட்டுமே காரணமாக இருக்கக்கூடும். §

> சில ஆசிரியர்கள் ஒழுக்கங்களை கற்றுத்தருவார்கள். மற்றவர்கள் தத்துவம், மொழி, வழிபாடு மற்றும் சாஸ்திரங்களை கற்றுத்தருவார்கள். சிலர் முன் உதாரணமாக திகழ்ந்து, ஒரு உட்புற வழிகாட்டலின் மூலம் கற்றுத்தருவார்கள். சிலர் அமைதியாக இருப்பார்கள், அதே சமயத்தில் மற்றவர்கள் விரிவுரைகளை வழங்கி பாடம் நடத்துவார்கள். சிலர் ஆச்சாரமாக இருப்பார்கள், மற்றும் சிலர் அவ்வாறு இருப்பதில்லை. எந்த உருவத்தில் பாடம் நடத்தப்படுகிறது என்பது முக்கியமில்லை. ஒரு உண்மையான மற்றும் முழுமையான உணர்தலை பெற்ற சற்குரு மற்றும் ஒரு உண்மையான மற்றும் முழுமையான அர்பணிப்புள்ள சீடன் இருப்பது தான் முக்கியம். இத்தகைய சூழலில், ஆன்மீக முன்னேற்றம் சுலபமாக இல்லாவிட்டாலும், விரைவாகவும் உறுதியாகவும் இருக்கும். சித்தர்கள் எங்களது பாரம்பரியத்தில் சிவனைப் பற்றி மட்டுமே எப்போதும் கற்றுத்தந்துள்ளார்கள். அவர்கள் சைவ தர்மத்தை கற்றுத்தந்து இருக்கிறார்கள், மற்றும் அந்த தர்மம் சிவபெருமானை தனிப்பட்ட கடவுளாக மற்றும் உயிர்சக்திகள் அனைத்தையும் படைத்தவராக; உள்பொருளாக, புரிதலாக மற்றும் எல்லா உருவம் வழியாக பாய்ந்து செல்லும் அன்பாக இருக்கும் பேரின்பமாக மற்றும் இறுதியில் காலம், உருவம், காரணத்தை கடந்து அனைத்திற்கும் பரமாத்துமாவாக மூன்று வழிகளில் சேவை செய்து அறிய முற்படுகிறது. §

பல லட்சக்கணக்கான மக்கள் இந்தியா முழுவதும் வாழ்ந்துக்கொண்டு இருக்கும் போது, தங்களது ஆன்மாக்களில் இருக்கும் அநாதி உண்மையை வெளிப்படுத்தும் யோகிகள் மற்றும் சாதுக்கள், தங்களது கடமைகள் மற்றும் மனிதனுக்குள் இருக்கும் முடிவான புரிதலின் காவலர்களாக இருக்கும் தங்களது குறிக்கோள் பணியை பூர்த்தி செய்வதற்கு, மிகவும் உயர்ந்த மலைகளில் அமைதியாக பல வருடங்களுக்கு உட்கார்ந்து இருக்கிறார்கள் அல்லது தனிப்பட்ட குழுவாக ஒன்றுகூடி இருக்கிறார்கள். ஒரு அறியாமையின் யுகம் வழியாக இந்து சமயத்தின் தகவல் மற்றும் சக்தியை சுமந்து செல்லும் இமயமலை தீர்க்கதரிசிகள், ஒவ்வொரு தலைமுறைக்கும் சனாதன தர்மத்தை வெளிப்படுத்துவதோடு அவர்களுடன் பகிர்ந்துக்கொண்டு, கடினமான காலங்களில் மக்களின் மனதில் அதன் புரிதலை மீண்டும் விழிப்படைய செய்து, பக்தி வலுவிழக்கும் போது நம்பிக்கையை மீண்டும் தூண்டிவிட்டு, சிவபெருமான் உங்களுக்குள்ளும், எல்லா பொருளின் உள்ளும் இருக்கிறார், மற்றும் சிவபெருமான் எல்லாமாக இருக்கிறார் என்ற தகவலை, ஒவ்வொரு வருடமும் இந்தியாவின் எல்லா பகுதிகளுக்கும் எடுத்துச் சென்றுள்ளனர். இந்த உலகில் இருக்கும் எல்லா சூழ்நிலைகளையும் கவனத்தில் கொண்ட பிறகு, உட்புறமாக இருக்கும் எல்லையற்ற தன்மையை சிறிதளவு நெருங்குவதைத் தவிர வேறு எதுவும் முக்கியமானதாக இருப்பதில்லை. §

இது ஆசியாவில் நன்றாக புரிந்துக்கொள்ளப்பட்டுள்ளதால், முக்தியை நோக்கி வழிநடத்தி செல்லும் தர்மத்தின் பாதையை காண்பித்து மற்றும் வழிகாட்டி, நமக்குள் ஒருவராக இருக்கும் குருமார்களை, பக்தி

நிறைந்தவர்கள் அதிக மரியாதை செலுத்துகிறார்கள். இந்து பாரம்பரியத்தில் குருவின் பங்கு பற்றி குருதேவா மேலும்:§

> ஒரு பாரம்பரிய சைவ குடும்பத்தில், தங்களது குழந்தைகளுக்கு பெற்றோர்கள் முதல் ஆசிரியர்கள் அல்லது குருக்களாக விளங்கி கலை, அறிவியல், மருத்துவம் மற்றும் பொதுக்கல்வியை புகட்டும் அடுத்த குருவிடம் அனுப்ப தங்களது குழந்தைகள் போதுமான முதிர்ச்சி பெறும் வரை உதாரணம், விளக்கம் மற்றும் அறிவுரை மூலமாக பாடம் புகட்டுகிறார்கள். ஒரு சற்குருவை தங்களுக்கு வழிகாட்டியாக கொண்டுள்ள குடும்பங்கள், அதிக திறமை மற்றும் சமய ஈடுபாட்டுடன் இருக்கும் இளைய மகனின் வாழ்க்கை எவ்வாறு முதிர்ச்சி பெறுகிறது என்பதை பொறுத்து, அந்த சற்குருவின் ஆசிரமத்திற்கு செல்ல, சமயம் பற்றி ஆய்வு செய்து கற்றுக்கொள்ள மற்றும் எதிர்காலத்தில் ஒரு சந்நியாசி அல்லது குடும்ப பண்டிதராக தகுதி பெறுவதற்காக தேர்ந்தெடுப்பார்கள். இந்த விவகாரத்தில், முதல் குருமார்களாக இருக்கும் பெற்றோர்கள் தங்களது மகனின் கவனத்தை முழுவதுமாக இரண்டாவது குருவாக இருக்கும் சற்குருவை நோக்கித் திருப்புகிறார்கள், மற்றும் அப்போதிலிருந்து அந்த சற்குரு அந்த மகன் மற்றும் அவனின் பெற்றோர்களின் கண்களுக்கும் தாய் தந்தையராக காட்சி அளிக்கிறார். §
>
> ஒரு சற்குரு தனது சிந்தனையை இன்னொரு நபருக்கு வழங்க, நிறைய வார்த்தைகளை பயன்படுத்த வேண்டியது இல்லை; ஆனால் சிஷ்யர்கள் திறந்த மனதுடன் இருக்கவேண்டும் மற்றும் அவர்களை திறந்த மனதுடன் வைத்திருக்க வேண்டும். சிந்தனையின் சிறிய பகுதி ஒரு நுண்ணிய இழை, ஒரு மெல்லிய நூலை போன்று, சற்குருவிடம் இருந்து சீடனை நோக்கி, எளிதில் உடையும் படியாக நீட்டிக்கொண்டு இருக்கும். அந்த கூட்டணி சிறிது வலுவடையும் போது, இன்னொரு இழையை சேர்க்கிறது, மற்றும் இதனால் இரண்டு, மூன்று மற்றும் இறுதியாக நான்கு நூல்கள் கிடைக்கின்றன. அவை சேவை மூலமாக மெதுவாக பின்னிப்பினைகிறது, மற்றும் குரு மற்றும் சீடனுக்கு இடையே ஒரு வலுவான இழை உருவாகிறது. மேலும் பல இழைகள் உருவாகி, இறுதியாக அவை அனைத்தும் ஒன்றாக பின்னிப் பிணைந்து, ஒரு வண்டியை இழுக்கும் அளவிற்கு ஒரு வலுவான கயிறாக மாறுகிறது. இந்தியாவில் ஒரு கோயிலுக்கு சொந்தமான ரதத்தை தடித்த கயிறுகளை கொண்டு இழுக்கப்படுவதை பார்த்து இருப்பீர்கள். அதுவே குரு-சீடன் உறவின் முடிவான குறிக்கோளாக விளங்குகிறது. §
>
> குரு மற்றும் சீடனுக்கு இடையே ஏற்படும் தொடர்பு வாயிலாக, பரம்பரை உணர்வு மற்றும் சம்பிரதாய உணர்வு பயணிக்கிறது. அது மிகவும் ஆழமாக செல்லும் தகவல்களை உருவாக்கவல்லது. அவை அறிவுணர்வில் இருந்து திசை திரும்பாமல், அந்த தகவல் மனிதனின் உள்ளத்தில் ஆழமாக பதிகிறது. குருவிற்கும் சீடனுக்கும் இடையில் பல இழைகள் ஒன்றாக பிணைக்கப்படுகின்றன, மற்றும் இறுதியில் நமக்கு

கிடைக்கும் ஒரு உறுதியான கயிற்றை, இரண்டு நபர்கள் எதிருக்கு எதிராக இருந்து இழுத்தாலும் அறுக்கவோ அழிக்கவோ முடியாது. அது தான் சம்பிரதாயம். அது தான் பாரம்பரியம். அது நாதர்களின் அற்புதமான சக்தியாக விளங்குகிறது. §

சிவபெருமானிடம் இருந்து தொடங்கி, நந்திநாதா மற்றும் நந்திநாதாவிற்கு முன்பாக எண்ணற்ற சற்குருக்கள் வாயிலாக, ரிஷி திருமூலருக்கு மற்றும் அவருக்கு பிந்தைய எண்ணற்ற ரிஷிகளிடம் இருந்து பெங்களூரில் இருந்த ரிஷிக்கு, மற்றும் கடைட்சாமி, செல்லப்பகுரு மற்றும் யோக சுவாமி என்று சற்குருக்களின் சிறப்பான வரிசையை பார்க்கும் போது, ஒரே ஆன்மீக சக்தி பாய்ந்து செல்வதை நாம் காண்கிறோம். அபூர்வ பரம்பரையை சேர்ந்த இந்த தனிநபர்கள் மனதில் உறுதி தளராமல் இருந்து, இறைவன் தங்களுக்கு தந்த வரமாக இன்னல்களை கருதினார்கள். மற்றும் இந்த இன்னல்கள், கரைக்க வேண்டிய சேகரித்த கர்மவினைகள் அனைத்தும், ஒரே சமயத்தில் கவனம் செலுத்துவதற்காக ஒன்று சேரும் இடமாக விளங்குகிறது. §

இலங்கை மற்றும் இந்தியாவில், மக்கள் பொதுவாக ஒரு தெய்வீக புருஷரை சந்திக்கும் போது, அது எந்த இடம் அல்லது எந்த நேரமாக இருந்தாலும், நிலத்தில் தங்கள் முகம் முழுமையாக பதியும் படியாக நமஸ்காரம் செய்வார்கள். அவர்கள் இவ்வாறு, அவரிடம் உணரும் தெய்வீகத்தன்மை அல்லது மெய்ஞ்ஞான நிலைக்கு தங்களது பக்தியை தெரிவிப்பார்கள். அவரது ஆசிரமத்தில் வழிபடுவதற்கு வரும் போது, தங்களது மரியாதையை காண்பிக்க பழங்கள் அல்லது பூக்கள் அல்லது மற்ற படையல்களை கொண்டு வருவார்கள். இந்த வழிபடும் பாரம்பரியத்தை, சமஸ்கிருதத்தில் குருபக்தி என்பார்கள். சில சாஸ்திரங்கள் முழுமையாக குருவையும் ஆன்மீகப் பாதையில் அவரது முக்கியத்துவத்தையும் போற்றி, ஒருவர் குருவின் பீடத்திற்குள் நுழையும் போது பாடவேண்டிய பாடல்களையும் கொண்டுள்ளன. அத்தகைய பக்தியை மக்கள் வெளிப்படுத்தும் போது, தாங்கள் இந்த பூமியில் பிறவி எடுத்ததற்கான காரணம் புலன்களை மகிழ்விக்க இல்லை, செல்வத்தை சேகரிக்க இல்லை, அறிவை சேமித்து வளர்ப்பதற்கு இல்லை, வலுவான ஆணவத்தை வளர்த்துக்கொள்ள இல்லை, ஆனால் இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சூட்சும ஞானிகள், தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த அந்த விவரிக்க முடியாத முழுமையான உண்மையாக தங்களுக்குள் இருக்கும் இறைவனை உணர்வதற்காக பிறவி எடுத்தோம் என்பதை தங்களுக்கு வலுவாக நினைவூட்டிக்கொள்கிறார்கள். §

Page 12: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/12_na01_02.html

ஒரு சற்குரு இல்லையென்றால் அனைத்து தத்துவங்களும், அறிவும் மந்திரங்களும் பயனற்றது. பாரம்பரியம் தனக்கு வழங்கியதை துடிப்புணர்வுடன் வைத்திருக்கும் சற்குருவை மட்டுமே தெய்வங்கள் போற்றும். அதனால் பரமாத்துமாவான சிவபெருமானை மூலமாக கொண்டு, தடைப்படாத பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு சற்குருவை ஒருவர் நாடவேண்டும். §

குலார்ணவ தந்திரா 10.1§

Page 13: URL

https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/13_na01_03.html

# குருமார்களின் சரித்திரங்கள்


முதல் அத்தியாயம்

## இலங்கையில் ஒரு குருவை தேடுதல்

ராபர்ட் ஹான்சென், வயது 20, கிட்டத்தட்ட சந்நியாச வாழ்க்கையை போன்ற ஒரு எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து, தான் சேமித்த பணத்தை பயன்படுத்தி, ஐந்து பேரைக்கொண்ட அமெரிக்க-ஆசிய கலாச்சாரக் குழுவின் தலைவராக, சான்பிரான்சிஸ்கோவில் இருக்கும் கோல்டன் கேட் பிரிட்ஜில் இருந்து இலங்கைக்கு (அப்போது சிலோன் என்று அழைக்கப்பட்டது) பயணம் செய்ய, 1947 பிப்ரவரி மாதத்தில் ஒரு நீராவிக்கப்பலில் ஏறினார். சில மாதங்கள் முன்பாக, அவர் சான் பிரான்சிஸ்கோ பாலே நிறுவனத்தின் அரங்கில், அதன் முக்கிய பாலே டான்சராக மகிழ்ச்சியுடன் நடனமாடிக்கொண்டு இருந்தார். ஆனால் அவருக்குள் வாழ்நாள் முழுவதும் இருந்த ஆன்மீக உத்வேகத்தை, லௌகீக வெற்றியால் தணிக்க முடியவில்லை, மற்றும் அவர் கிழக்கத்திய நாடுகளுக்கு செல்ல வேண்டும் என்பதில் உறுதியாகவும், உள்ளத்தில் இருக்கும் பரமாத்துமாவை நோக்கி தன்னை வழிநடத்தி செல்ல ஒரு உண்மையான மற்றும் நம்பத்தகுந்த குருவை தேடிப்பிடிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் இருந்தார். §

ஒரு மேகமூட்டமான நாளில், ஒரு ஆங்கிலேய கப்பல் குழுவால் இயக்கப்பட்ட, MS மாபியா என்ற நெதர்லாந்து நாட்டை சேர்ந்த சரக்குக் கப்பலில் அந்த பயணத்தை மேற்கொண்டதாக 25 வருடங்கள் கழித்து, அவர் தனது யோக சமூகத்தின் துறவிகளிடம் தெரிவித்தார். அவர் பல வருடங்களுக்கு பிறகு முதல் முறையாக பொறுப்புக்களில் இருந்து விடுதலை பெற்று நிம்மதியாக இருந்தார், மற்றும் இந்த நிம்மதி அவருக்கு முழுமையாக பிடித்து இருந்தது. கடினமான குடியிருப்பு வசதியுடன் இருந்த கப்பலில், அந்த கடற்பயணம் ஒரு மாதம் நீடித்தது. அதில் ராபர்ட்டிற்கு கிடைத்த உறங்கும் இடம் மிகவும் மலிவானதாக, சிறியதாக ஒரு நபர் மட்டுமே இருக்கக்கூடிய அறையாக இருந்தது. அதற்கு மேலே கப்பல் தளமும், கீழே இயந்திர அறையும் இருந்தன. இந்த இடத்தில் எதிர்பாராத விதமாக வழக்கத்திற்கு மாறான ஒரு சம்பவம் நடந்தது, மற்றும் இதை அவர் தனது 45 சீடர்களிடம் 1999 அலாஸ்கா பயணம்-பயிற்சி கடல் பயணத்தின் போது இன்னொரு கப்பலில் தெரிவித்தார். §

போருக்கு பிறகு துறைமுகத்தில் இருந்து இலங்கையை நோக்கி கிளம்பிய முதல் கப்பலில் நான் பிரயாணம் செய்தேன். அது ஒரு சரக்குக் கப்பலாக இருந்தது. நான் தங்கிய சிறிய அறை இயந்திர அறைக்கு மேலாக இருந்ததால், அந்த இடம் இரைச்சல்கள் நிறைந்து இருந்தது. நான் ஒரு முறை அதிக ஆழமான தியானத்தில் இருந்தபோது, எனக்கு எந்த சத்தமும் கேட்கவில்லை. சிறிது நேரம் கழித்து நான் அந்த நிசப்தத்தில் இருந்து வெளியே வந்தபோது, எனக்கு இயந்திரத்தின் ரர்ர்ரர்ர் சத்தம் கேட்டது. “இந்த சத்தம் நின்றால் நன்றாக இருக்கும்,” என்று நான் மனதிற்குள் நினைத்தேன் மற்றும் அடுத்த வினாடி அந்த சத்தம் நின்றுவிட்டது. உடனடியாக, கப்பலும் இருந்த இடத்தில் நின்றுவிட்டது. நாங்கள் மூன்று நாட்கள் மிதந்துக்கொண்டு, எங்கள் பாதையில் இருந்து சிறிது விலகிச்சென்று இருந்தோம். கப்பல் குழுவினரால் பழுதை கண்டுபிடிக்க முடியவில்லை. இறுதியில் இயந்திரத்தில் இரண்டு மறையாணிகள் தளர்வாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் பிரச்சனையை சரி செய்தத்தும், நாங்கள் மீண்டும் பயணிக்க ஆரம்பித்தோம். அப்போது தான் போர் முடிந்து இருந்தது மற்றும் நாங்கள் கண்ணிவெடிகள் வழியாக சென்றுக்கொண்டு இருந்ததால், அது ஒரு பாக்கியம் என்றே சொல்ல வேண்டும். அந்த கப்பல் மிகவும் சுலபமாக வெடித்து இருக்கக்கூடும், மற்றும் பயணம் முடிந்த பிறகு தான் அந்த சரக்குக்கப்பலில் வெடிமருந்துகள் இருந்தது தெரியவந்தது. அது எங்களுக்கு ஒரு பெரிய அழிவை ஏற்படுத்தியிருக்கக்கூடும்.§



*ராபர்ட் இயந்திர அறைக்கு மேல் இருக்கும் தனது சிறிய அறையில் தியானம் செய்ய தொடங்கினார். ஒரு நாள் அவரது தியானம் தடைப்பட்ட போது, பெரிய இயந்திரங்கள் உருவாக்கிய காதை துளைக்கும் சத்தங்கள், அவருக்கு தொந்தரவு அளிப்பதாக இருந்தன. அந்த சத்தம் நிற்கவேண்டும் என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டார், மற்றும் அந்த இயந்திரங்கள் பல நாட்களுக்கு செயல்படாமல் இருந்தன.*

........................§

அவர் இதைப்பற்றி பின்னர் விவரிக்கும் போது, அன்றைய தினம் கப்பலில் இயல்பாக வெளிவந்த தியானம் செய்யும் மனதின் சக்தி, தன் மீது விளைவித்த பாதிப்பைப் பற்றி நினைவுக் கூர்ந்தார். §

நகர்ந்துக்கொண்டு இருந்த கப்பலில், கலாச்சாரக் குழு மரப்பலகையிலான தளத்தில் பயிற்சி செய்தனர் மற்றும் வெப்பம் அதிகமாக இருக்கும் நாட்களில் அவர்கள் நீச்சல் அடிக்க ஒரு சிறிய நீச்சல் குளத்தை அமைத்துக்கொண்டனர். அவர்கள் கப்பல் குழு மற்றும் கேப்டனுடன் உணவை பகிர்ந்துக்கொண்டனர். அந்த கேப்டன் ஒரு நாள் தனது கப்பலில் இருந்த தைரியமான இளவயது பயணி ராபர்ட்டை, கப்பலை இயக்கும் அறைக்கு அழைத்து சென்று, “அந்த மேஜையின் மீது இருக்கும் பேனாவை பார்த்தாயா? நான் அதை எடுக்கவேண்டிய தருணம் வந்தால், எனது கேப்டன் பதவியை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன்,” என்று அந்த இளைஞனிடம் கூறினார்.

ராபர்ட் ஒரு குருவாக தனது கடமைகளை பிற்காலத்தில் விவரிக்கும் போது, இந்த சம்பவத்தை நினைவுக்கூர்ந்தார். §

மார்ச் 8 ஆம் தேதி குழுவினர் பம்பாயில் கரை இறங்கினர், ஆனால் இந்திய விசா அவர்களை “(நடுவில் கரை இறங்காமல்) முழுமையாக பயணம் செய்பவராக" குறிப்பிட்டு இருந்ததால், அவர்கள் அங்கே சில நாட்கள் தங்கியிருந்து, தென்னிந்தியா நோக்கி ஒரு இரயிலில் பயணம் செய்தனர். அதன் பிறகு மெட்ராஸில் இருந்து, இலங்கையின் மேற்கு கரையோரம் இருக்கும் தலைமன்னாருக்கு செல்ல, ஒரு பயணிகள் படகில் ஏறி குறுகலான பால்க் ஜலசந்தியை கடந்தனர். இன்னொரு இரயிலில் ஏறி, 1947 மார்ச் மாத மத்தியில் கொழும்பு சென்றடைந்தனர். மார்ச் 23 ஆம் தேதி, காலே ரோட்டில் இருந்த தனது புதிய வீட்டில் இருந்து எழுதிய குறிப்பின் ஒரு பகுதி:§

> இலங்கைக்கு வருவதற்கு முன்பாக அதைப்பற்றி கேள்விப்பட்டதைக் காட்டிலும், அது மிகவும் சிறப்பாக இருந்தது; நீங்கள் இந்த நாட்டைப் பற்றி நல்லவிதமாக ஏதாவது கேட்டிருந்தால், அதை இருமடங்காக கற்பனை செய்துக் கொள்ளுங்கள். அது தான் இந்த நாடு பற்றிய உண்மையான நிலையாக இருக்கும். இது உண்மையில் உலகின் செழிப்பான இடமாக விளங்குகிறது. இங்கிருக்கும் மக்கள் கவனமாக, வலுவாக, அதிக விழிப்புடன், ஆரோக்கியமாக மற்றும் தங்கள் நாட்டை முழுமையாக நவீனமயமாக்கும் ஆசையுடன் இருந்தார்கள். §
>
> இந்தியாவில் இருந்த விசா கட்டுப்பாடுகள் இலங்கையில் இல்லை. நான் இங்கே வந்து இறங்கிய அடுத்த நாள் சில நண்பர்கள், ஒரு வாகன ஒட்டி மற்றும் ஒரு சிங்கள ஆணும் அவரது மனைவியும் என்னை கண்டி வரை அழைத்து சென்றனர். நீங்களும் அந்த அழகை ரசித்து இருப்பீர்கள். நாங்கள் புத்தரின் புனிதப்பல் இருக்கும் தலதா மாளிகை மற்றும் இன்று இடிபாடுகளில் சிக்கி இருக்கும் பழைய கண்டி அரண்மனையையும் சென்று பார்த்தோம். இந்த தீவில் வருடம் முழுவதும், எங்கே சுற்றிப் பார்த்தாலும், பச்சைப்பசேல் என்ற மரங்களைத் தான் காண்பீர்கள். மக்கள் வயல்களை யானைகளையும், தங்கள் கைகளை பயன்படுத்தியும் உழுகிறார்கள். ஆண்கள் சாரோங் அல்லது காற்சட்டையையும் மற்றும் பெண்கள் புடவையும் அணிவார்கள். கண்டியில் உடையை வேறுவிதமாக அணிவார்கள். ஒருவர் தனது தலையில் ஒரு பெட்டியை நிலைப்படுத்திக் கொண்டு என்னை கடந்து

செல்கிறார். இங்கிருக்கும் மக்கள் இப்படித்தான் பொருட்களை சுமந்து செல்கிறார்கள்.§

வீட்டு வேலைகளை கவனிக்க பல சிறுவர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். நீங்கள் அவர்களை கடந்து செல்லும் ஒவ்வொரு முறையும் அவர்கள், “ஹலோ, சார்" என்பார்கள். ஆங்கிலத்தில் அவர்களுக்கு தெரிந்தது அவ்வளவு தான். அவர்கள் மிகவும் கண்ணியமாக இருப்பார்கள், மற்றும் நாம் எதை சொன்னாலும், அது அவர்களுக்கு புரிகிறதா என்பது தெரியாது, ஆனால் உடனே சரி என்று சொல்லிவிடுவார்கள். §

அந்த நாட்டில் வெப்பம் அதிகமாக இருக்கும் என்று நாங்கள் நினைத்தோம், ஆனால் அது அவ்வாறு துளியும் இல்லை; மற்றும் அது அவர்களது கோடை காலமாக இருந்தாலும், இரவில் குளுமையாக இருந்தது. நான் ஒரு வூல் ஸ்போர்ட் கோட்டை அணிந்து இருந்தாலும், எனக்கு அதிகமாக வியர்க்கவில்லை. இலங்கை மற்றும் இந்தியா அதிக ஆன்மீக நாட்டமுள்ள நாடாக இருந்தாலும், நாம் மகான்களின் யுகத்தில் வாழவில்லை என்பதால், நமது பொருட்கள் அனைத்தையும் பாதுகாப்பாக பூட்டி வைத்திருக்க வேண்டும். அவர்கள் மாமிசம் சாப்பிடாத, காபி அல்லது தேனீர் பருகாத, குடிப்பழக்கம் அல்லது புகைப்பழக்கம் இல்லாதவர்களை அதிகம் மதிப்பார்கள் என்பதால், எனக்கு நிறைய நல்ல நண்பர்கள் கிடைத்துவிட்டார்கள், மற்றும் அவர்கள் திறந்த மனதுடன் இருந்து, எல்லா இனம் மற்றும் சமயத்தை சேர்ந்தவர்களுடன் எளிதில் ஒன்று  சேர்வதால், அது அவர்களுக்குக் கிடைத்த பெரிய வரமாக விளங்குகிறது. §




*ராபர்ட் பம்பாயில் இருந்து தமிழ்நாட்டிற்கு, தெற்கு திசையில் இரயில் மூலம் பயணம் மேற்கொண்டார், மற்றும் அதன் பிறகு பால்க் ஜலசந்தியை கடக்க ஒரு பயணிகள் படகில் ஏறி, தனது இறுதி இலக்கான, இலங்கையில் இருக்கும் கொழும்புவிற்கு வந்தடைந்தார்.*

........................§

ஞாயிற்றுக்கிழமை காலையில் சூரிய உதயத்தை காண, சனிக்கிழமை (மார்ச் 29) அன்று எனது நண்பர்களும் நானும், கடல்மட்டத்தில் இருந்து 6,000 அடிகள் உயரத்தில் (அங்கே கடுங்குளிர் நிலவியது) இருந்த பாதமலை என்கிற ஆடம்ஸ் பீக்கிற்கு சென்றோம். ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் பௌத்த, இந்து, இசுலாமிய மற்றும் கிறுத்துவ மதத்தை சார்ந்தவர்கள், பணக்காரர் அல்லது ஏழை என்ற பாரபட்சமின்றி, இந்த மலைக்கு வந்து, “எல்லோருக்கும் எனது அன்பை தெரிவிக்கிறேன்! எல்லோருக்கும் எனது அன்பை தெரிவிக்கிறேன்!” என்று கோஷமிடுவார்கள். §

நீங்கள் அந்த மலையில் பாம்பாட்டிகள் மற்றும் ஜோதிடர்களைப் போன்ற பல விசித்திரமான மற்றும் அற்புதமான மனிதர்களை சந்திப்பீர்கள். அந்த ஜோதிடர்கள் பழைய சமஸ்கிருத சுவடிகளில் இருந்து உங்களது குடும்பத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை குறிப்பிட்டு, அவர்களைப்பற்றியும் உங்களது கடந்தகாலம் மற்றும் எதிர்காலத்தைப் பற்றியும் துல்லியமான விளக்கத்தை தருவார்கள். இந்த சுவடிகள் பல்லாயிரம் வருடங்கள் பழமையானவை மற்றும் அவற்றை

நீண்டநேரம் படிக்கவேண்டி இருக்கும். அதில்லாமல் தெருவில் நடந்து செல்லும் யானைகள், வியாபாரத்தில் நடைபெறும் பேரம், புதிய வகை உரையாடல்கள் மற்றும் அழகாக கதிரவன் மறைவதையும் காணலாம். மதியம் 3:30 மணிக்கு தேனீர். சாலையின் மறுபுறத்தில் வாகனத்தை ஓட்டுவது அமெரிக்க பாதசாரிகளுக்கு கடினமாக இருக்கும். எல்லோருக்கும் எனது அன்பை தெரிவிக்கவும்—விரைவில் பதில் அனுப்பவும். பாப்§

ராபர்ட்டின் இலங்கை பயணம், அவரது ஆரம்பகால தூண்டுகோல்ளால் வடிவமைக்கப்பட்டது. அவர் கொழும்பு வந்தடைந்த போது, அவரது முதல் ஆசிரியையான கிரேஸ் பர்ரோஸ், அவரை வரவேற்று தனது நாட்டியக் கூடத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்தார் மற்றும் ராபர்ட் இலங்கைக்கு வந்து இறங்கிய புதிதில், ஒரு வருடத்திற்கு ராபர்ட்டின் நலனில் அக்கறையுடன் இருந்தார்.§

**தனது வழிகாட்டி வழங்கிய சவால்களை சந்தித்தல்**

அவர் தனது வாழ்க்கைப் பாதையில் நான்காவது  தூண்டுகோலாக விளங்கிய தயானந்த பிரியதாசியுடன் (டார்ரெல் பெய்ரிஸ்) இலங்கையில் படித்தார். சிங்களத்தை தாய்மொழியாகக் கொண்டு பௌத்த சமயத்தை சேர்ந்த தயானந்த பிரியதாசி, 1934 ஆம் ஆண்டு முதல் முறையாக அமெரிக்கா பயணம் செய்த போது, ராபர்ட்டின் இரண்டாவது தூண்டுகோலாக விளங்கிய, அன்னை கிறிஸ்தினியின் ஓக்லாண்ட் ஹோமில் ஒரு ஆசிரமத்தை அமைத்தார். தயானந்தா தியானம் மற்றும் மறைபொருள் ஆய்வை பற்றி உற்சாகமாக பாடம் நடத்தும் ஆசிரியராகவும், தனது நாட்டின் மீது அதிக தேசபக்தியுடனும் இருந்தார்.§

அந்த சமயத்தில் இலங்கை கிரேட் பிரிட்டனிடம் இருந்து விடுதலை பெறுவதற்காக, 21 ஆண்டுகாலமாக மேற்கொண்ட போராட்டத்தின் இறுதி கட்டத்தில் இருந்தது. அதற்கு விடுதலை 1948 ஆம் ஆண்டு கிடைத்தது. அப்போது இலங்கையில் சூழ்நிலை சுமுகமாக இல்லை; மற்றும் ஐம்பது வயது நிரம்பி ஒரு சூட்சும ஞானியாகவும் மக்களின் கவனத்தை கவர்ந்திழுக்கும் அரசியல்வாதியாகவும் இருந்த தயானந்தா, சூழ்நிலையை பயன்படுத்திக்கொண்டு, உலகில் நேர்மறையான செயல்களை செய்து முடிப்புதற்கு தனது புதிய மாணவனை தனிப்பட்ட முறையில் பயிற்சி அளிக்கத் தொடங்கினார். ராபர்ட் வந்து இறங்கிய இரண்டு மாதத்திற்குள்,

கிராமத்து சிறுவர்களுக்கு இரண்டு பள்ளிகளை தொடங்குவதற்கு உதவினார், மந்தமாக இருந்த கண்டிய நடனத்திற்கு புத்துயிர் அளித்து உதவினார் மற்றும் தச்சர்களுக்கு முதல் முறையாக மின்சாரத்தால் இயங்கும் இரம்பத்தை அறிமுகப்படுத்தினார். அவர்கள் அதற்கு முன்னர் அதைப்போன்ற விசித்திரமான கருவிகளை பார்த்திருக்கவில்லை. அவரது பயிற்சியில் இந்த யதார்த்தமான திட்டங்கள் அங்கம் வகித்தன. §


இலங்கைத் தீவில் எனது நான்காவது தூண்டுகோலை சந்தித்ததும் மகிழ்ச்சியுடன் பிரமித்து நின்றேன். அவர் பௌத்த மதத்தை சேர்ந்தவர். சிங்கள மொழியை தனது தாய்மொழியாகக் கொண்டு வலுவாகவும், சுறுசுறுப்பாகவும் இருந்த அவர், தனது வாழ்க்கையை ஆன்மீக விழிப்புணர்வுக்கு அர்ப்பணித்துக் கொண்டு, இந்த விழிப்புணர்வை மனிதநேயம் முழுவதற்கும், மிகவும் உற்சாகமாக பயனுள்ள வகையில் வழங்கினார். அவர் இலங்கை அரசில் மிகவும் உயர்ந்த பதவியில் இருந்தார் மற்றும் அவர் ஒரு ஆசிரியராக யதார்த்தமாகவும் உறுதியாகவும் இருந்தார். நான் அவருடன் ஒன்றரை வருடம் படித்தேன்.§

சில வருடங்கள் முன்பு, தயானந்தா தாய்லாந்தில் ஒரு குகையில் உட்கார்ந்து, சூரியனின் மீது தனது கண்களை நிலைப்படுத்தி, இரவில் சூரியன் மறையும் வரை, நாள் முழுவதும் வானத்தில் அதன் பயணத்தை பின்தொடர்ந்து ஞானோதயம் பெற்றார். அவர் இந்த கடினமான சாதனாவில், தனது குரு வழங்கிய அறிவுறுத்தலின் கீழ் பயிற்சி மேற்கொண்டார். அதன் பிறகு அவர் குகையில் இரவு நேரத்தில் தியானம் செய்துக்கொண்டு இருக்கும் போது, அந்த குகை பிரகாசிக்கத் தொடங்கி, அவருக்கு முன்பாக ஒரு பெரிய சக்தி தோன்றி, உலகிற்கு சேவை செய்யும் குறிக்கோள் பணி மற்றும் அறிவுறுத்தல்களை அவருக்கு வழங்கியது. §

மனஉறுதியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும், லௌகீக உலகில் எவ்வாறு வெற்றி பெறவேண்டும் என்று எனது நான்காவது தூண்டுகோல் எனக்கு கற்றுத்தந்தார். அவர் எனக்கு உண்மையான தந்தையைப் போன்று விளங்கினார். இது எனது இருபத்தி ஒன்றாம் வயதில் தேவைப்பட்டது. நான் தியானம் செய்ய விரும்பினேன், ஆனால் கிராமத்தை மறுசீரமைப்பு செய்வதில் கிராமப்புற மக்களுக்கு நான் உதவவேண்டும் என்று அவர் விரும்பினார். அவர் எனக்கு பல்வேறு பொறுப்புக்களை வழங்கினார், அதிலும் குறிப்பாக நான் ஒரே சமயத்தில் நிறைய பணிகளை செய்ய வேண்டி இருந்ததால், அதற்கான திட்டத்தை

நானே வகுத்துக்கொண்டேன். நான் ஒரே சமயத்தில் ஒரு கிராமத்தில் வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் அமைக்கும் பணியை கண்காணிப்பத்திலும், அறைகலன்களை உருவாக்க பயன்படும் பழைய கருவிகளுக்கு பதிலாக நவீன இரம்பங்கள் மற்றும் மரவேலை உபகரணங்களை இன்னொரு கிராமத்திற்கு கொண்டு வரும் பணியிலும் ஈடுபட்டு இருந்தேன். §

இலங்கையின் மேற்கு கரையோரம் கைப்பிடியுள்ள சிறிய இரம்பத்தை பயன்படுத்தும் தச்சர்களிடம் இருந்து விவரம் சேகரிக்க வேண்டியிருந்தது. எல்லோரும் மின்சக்தியால் இயங்கும் இரம்பங்களை பயன்படுத்த வேண்டும் என்று எனக்கு கொடுக்கப்பட்ட குறிக்கோள் பணி தொடர்பாக, கையில் ஒரு குறிப்பேட்டுடன், அவர்களது பெயர்கள் மற்றும் விலாசம் மற்றும் அவர்கள் பயன்படுத்திய இரம்பங்களின் வகையை பட்டியலிட்டுக் கொண்டேன். நவீன கருவிகளை மொறட்டுவை பகுதிக்கு கொண்டு வருவது மிகப்பெரிய சவாலாக இருந்தது, மற்றும் அதைப்போன்ற பணியை நான் அதுவரை வாழ்க்கையில் செய்யாததால், அதை எப்படி தொடங்குவது என்று எனக்கு தெரியவில்லை. எனது தூண்டுகோல் எப்போதாவது என்னிடம், “சரி, அவர்களுக்கு இரம்பங்களை கொடுத்துவிட்டாயா?” என்று கேட்பார். “வேலை நடந்துக்கொண்டு இருக்கிறது,” என்று மட்டுமே என்னால் சொல்ல முடியும். §




*பௌத்த மதத்தை சேர்ந்த சூட்சும ஞானியாக, அரசியல்வாதியாக மற்றும் சமூக ஆர்வலராக இருந்த, அவரது ஆலோசகர் தயானந்தா, கைப்பிடியுடன் இருக்கும் எளிமையான இரம்பங்களை பயன்படுத்தும் இலங்கையின் கிராமத்து தச்சர்களுக்கு, மின்சாரத்தால் இயங்கும் வட்டவடிவ இரம்பத்தை வழங்கும் கடினமான பொறுப்பில், ராபர்ட்டை ஈடுபடுத்தினார்.*

.........................§

அரசுத்துறை பரிந்துரைத்த மாற்றங்களை செயல்படுத்துவது எனக்கு புதிதாக இருந்தது. அதற்கு முன்பு, எனது வாழ்க்கை வியாபாரத்தின் செயல்முறைகளில் இருந்து விலகி அமைதியாக இருந்தது. மாறுபட்ட பழக்கங்களுடன், விளக்குவதிலும் பரிந்துரைப்பதிலும் நுணுக்கமான வழிகளை பயன்படுத்தும் ஒரு அயல்நாட்டில் நான் இருந்ததால், நிலைமை இன்னும் மோசமாக இருந்தது. பெரும்பாலும் கல்வி கற்றவர்கள் ஆங்கிலத்தை அழகாக பேசுவார்கள். ஆனால் கிராமங்களில்,

கிராம மக்களின் தாய்மொழிகளாக விளங்கும் சிங்களம் மற்றும் தமிழ் மட்டுமே பேசப்பட்டு புரிந்துக்கொள்ளப்பட்டது. அறைகலன் உருவாக்கும் தச்சர்கள் பழங்கால மற்றும் தங்கள் முன்னோர்கள் பயன்படுத்திய முறைகளுக்கு பழக்கப்பட்டு இருந்தனர், மற்றும் அவர்களது வேலையை மேம்படுத்த மின்சார இரம்பங்களை பயன்படுத்த, அவர்களிடம் இருந்து சம்மதம் பெறுவது சுலபமான காரியம் இல்லை. சிலர் மின்சார வசதி, தண்ணீர் குழாய் வசதிகள் இல்லாத ஒதுக்குப்புறமான பகுதிகளில் வளர்ந்து இருக்கலாம். அதனால் அவர்கள் இயல்பாக ஒரு மிகப்பெரிய மாற்றத்தை எதிர்த்தனர். அவர்கள் முன்பே நல்ல, உறுதியான அறைகலனை உருவாக்கிக்கொண்டு இருந்தனர். வாழ்க்கையில் ஏன் வம்பை விலைக்கொடுத்து வாங்கவேண்டும் என்று அவர்கள் நினைத்து இருக்கலாம். §

எனக்கு இயல்பாகவே இருந்த கூச்ச சுபாவம், ஒரு மிகப்பெரிய தடையாக இருந்தது. நான் மக்களிடம் நேர்காணல் நடத்தி, ஆய்வு மேற்கொண்டு மின்சார கருவியில் இருக்கும் பயனை மக்களுக்கு விளக்கி அவர்களது சம்மதத்தை பெறவேண்டும். இறுதியில், இதனை செய்து முடிக்கும் வழி எனது உள்ளிருந்து உதயமானது. அதிகமான தகவல்கள், வரைப்படங்கள், பெயர்கள் மற்றும் விலாசங்களுடன், நீளமாக பல வார்த்தைகள் நிரம்பிய ஒரு முன்மொழிவை தயார் செய்து, அவரிடம் சமர்ப்பித்தேன். அவர் அதை பார்த்ததும் திருப்தி அடைந்து, “நீ இந்த அருமையான திட்டத்தை கிராமப்புற மறுசீரமைப்புத் துறையின் தலைவரிடம் எடுத்துச்சென்று, அவரிடம் கொடு, மற்றதை நான் பார்த்துக்கொள்கிறேன். ஆனால் நீ அவரது அலுவலகத்தில் இருக்கும் போது, உனது நாட்டில் நவீன கருவியை பயன்படுத்தி அறைகலனை எவ்வளவு விரைவாக உருவாக்க முடிகிறது என்பதை அவருக்கு எடுத்து விளக்கு,” என்றார். §



*பௌத்த கோயில்கள் மற்றும் மடங்களில் ராபர்ட் ஒரு விருந்தாளியாக தங்கி, துறவிகளுடன் உரையாடினார் மற்றும் பிற்காலத்தில் தனது சொந்த மடங்களில் செயல்படுத்த, அந்த துறவிகளின் ஆச்சாரமான வாழ்முறை, பழக்கங்களை கண்காணிப்பதோடு தன்னை அவற்றில் ஈடுபடுத்திக் கொள்ளவும் செய்தார்.*

........................§

இறுதியில், இந்த திட்டத்தை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வருவதற்கு, எனக்கு ஒரு திட்டவட்டமான வேலை கிடைத்தது என்று சந்தோஷமாக இருந்தேன். நான் கொழும்பில் இருக்கும் கிராமப்புற மறுசீரமைப்புத் துறையின் அலுவலுக்கு சென்று திட்டத்தை விளக்கினேன். அரசு அதை ஏற்றுக்கொண்டது, மற்றும் சில மாதங்கள் கழித்து மின்சாரத்தால் இயங்கும் நவீன இரம்பம், மொறட்டுவை கிராமங்களில் தேவை இருக்கும் எந்த ஒரு தச்சருக்கும் கிடைக்கப்பெற்று


மக்களிடையே பிரபலமானது. அந்த வருடம் தான், இலங்கைக்கு கிரேட் பிரிட்டன் அரசிடமிருந்து தன்னாட்சி உரிமை அந்தஸ்து கிடைத்து இருந்தது மற்றும் கிராமப்புறப் பகுதிகளை ஒரு சிறந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு, இன்னும் நிறைய வேலைகள் செய்யவேண்டி இருந்தன. நான் எனது பங்கை எனக்கு தெரிந்தவரையில் சிறப்பாக செய்து முடித்த திருப்தியுடன் இருந்தேன். §

இதைப்போன்று எனக்கு இன்னொரு பணியும் வழங்கப்பட்டது. உனக்கு கொடுக்கப்பட்டுள்ள பணியை நிறைவாக செய் என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, எனது நான்காவது தூண்டுகோல் செயல்பட்டார். உனக்கு ஒரு பணி வழங்கப்பட்டால், அதை முழுமையாக செய்து முடிக்கவேண்டும். ஆனால் செய்து முடிக்காமல் விளக்கங்களுடன் வரக்கூடாது. அவர் உங்களை ஒரு பணியில் அனுப்பினால், உங்களது திருப்திக்கு முக்கியத்துவம் தராமல், அவருக்கு திருப்தி ஏற்படும் வரை, அந்த பணியில் இருந்து திரும்புவதைப் பற்றி சிந்திக்கக்கூடாது. அவர் எனக்கு கொடுத்த பணியை முடிக்கவில்லை என்றால், எனக்கு மேலும் பணிகளை தரமாட்டார் என்பது எனக்கு தெரியும். அதனால் நான் மிகவும் கவனமாக இருந்தேன். இயலாததாக தோன்றும் பணிகளை செய்ய, நான் மனதுக்குள் போராடிக்கொண்டு இருந்தாலும், “மனம் தளராதே, பணியை பாதியில் நிறுத்தாதே. நீ தான் உனக்கு தடைகளை உருவாக்கிக் கொள்கிறாய். உன்னால் எதையும் வெற்றிக்கொள்ள முடியும், எதையும் செய்ய முடியும், எந்த உயரத்தையும் எட்டமுடியும்,” என்று அவர் சொல்வதை நான் கேட்டுக்கொண்டு இருந்தேன். எனக்கு குறைவான அறிவுரைகளை வழங்குவது மற்றும் ஒரு பணியை எனக்கு ஒதுக்கியதும் பெரும்பாலும் உடனே அந்த இடத்தை விட்டு விலகி, பணியில் இருக்கும் சிக்கல்களை எனது உள்ளத்தில் இருந்து சரி செய்துக்கொள்ள வேண்டும் என்று சவால் விடுவார். §

நான் அதிகம் உணர்ச்சிவசப்படுபவன் என்றும் மற்றவர்கள் திட்டுவதை என்னால் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது என்றும் அவருக்கு தெரிந்து இருந்தும், எனது தவறுகளை விரைவில் சுட்டிக்காட்டுவார். அவரது பழிப்பும் விமர்சனமும் கடுமையாக இருக்கும். இவை எனக்கு பயன் தருவதாக இருந்தன, மற்றும் நான் இன்றும் அவரது நேரடியான மற்றும் வலுவான அணுகுமுறைகளுக்கு கடன்பட்டு இருக்கிறேன். ஒவ்வொரு பணியையும் நிறைவு செய்ய எனது சொந்த உட்புற அறிவாற்றலை பயன்படுத்த கட்டாயப்படுத்தினார், மற்றும் அந்த

பணிகளில் பெரும்பாலானவை லௌகீகம் சார்ந்ததாக இருந்தன. எனது வாழ்க்கையின் இந்த கட்டத்தில், எனது வெளிப்புற உறையை வலுப்படுத்திக் கொண்டு, உலகில் எனது கடமைகளை நிறைவு செய்ய கற்றுக்கொள்வதே எனக்கு அத்தியாவசியமாக இருந்தது. அந்த அனுபவம் பிற்காலத்தில் மிகவும் பயனுள்ளதாக இருந்தது.§

தயானந்தா என்னை கிராமங்களில் தியானம் செய்யச்சொல்லுவார். அவர் கிராமப்புற மக்களிடம் தியானம் என்கிற *பாவனாவைப்* பேசும் போது, நான் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் பத்மாசனத்தில் அமர்ந்து இருப்பேன். அவர்கள் எல்லோரும் பௌத்த மதத்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் புத்தரின் தத்துவத்தை விரும்பினாலும், ஒருபோதும் தியானம் செய்யவில்லை. இவ்வாறு மக்களை தியானம் செய்ய ஊக்கம் அளிக்கவும், ஞானோதயம் பெற்ற போதனைகளை பழக்கத்தில் கொண்டு வரவும் பல கிராமங்களுக்கு ஒன்றாக சென்றோம். இறுதியில் அவர் கிராமவாசிகளுக்கும் பௌத்த மத பூசாரிகளுக்கும் தியானம் செய்யக் கற்றுத்தரும் போது, நானும் தியானம் செய்து முடித்திருப்பேன். §



தயானந்தா தொடர்ந்து கிராமங்களில் பிரச்சாரம் செய்து வந்தார். ஒரு நாள் அவர் அமெரிக்க பார்வையாளருக்கு தனது சக்திகளை நிரூபணம் செய்துக்

*காட்டினார். அவர் தன் கண்களை மூடிக்கொண்டு, அரங்கில் இருந்த ஒரு பேச்சாளரின் மனதில் புகுந்தார். இதனால் அந்த பேச்சாளர் திடீரென்று, தயானந்தா மற்றும் ராபர்ட் அன்றைய தினம் பேசிய விஷயத்தை பற்றி பேசத் தொடங்கினார்.*

........................§

நான் இலங்கைக்கு வருவதற்கு முன்பாக, தாய்நாட்டு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கத்துடன் சிறப்பான முறையில் தியானம் கற்பிக்கும் பள்ளியை உருவாக்க தாய்லாந்தில் இருந்த பௌத்த பூசாரிகளுடன் இணைந்து செயல்பட்டிருந்தார். அவர் அன்று மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, தாய்லாந்தில் இருக்கும் சாதாரண மக்களைப் போன்று, இன்று அந்நாட்டில் உள்ள பல பூசாரிகளும் தியானம் செய்கிறார்கள். §


நான் அவரிடம், “நான் ஒரு குகைக்கு சென்று தியானம் செய்யவேண்டும். நான் ஆத்ம ஞானத்தை பெறவேண்டும்,” என்று அடிக்கடி கூறுவேன். அதற்கு அவர், “அதற்கு இன்னும் நிறைய நாட்கள் இருக்கிறது. நீ இன்னும் இரண்டு அல்லது மூன்று பணிகளை முடித்ததும் ஒரு குகைக்கு சென்று தியானம் செய்யலாம். இருந்தாலும், குகை உனது உள்ளத்தில் இருக்கிறது, “ என்று பதில் சொல்வார். அதனால் எனது பணிகளை பல மாதங்களுக்கு தொடர்ந்து செய்துக்கொண்டு இருந்தேன். §

“நான் எனது குருவை காண்பதற்காக இலங்கைக்கு வந்தேன்,” என்று நான் அவ்வப்போது அவருக்கு ஞாபகப்படுத்துவேன். எனது குரு இலங்கையில் கிடைப்பார் என்றும், அதற்கு நான் முதலில் முழுமையான ஆத்ம ஞானத்தை பெறவேண்டும் என்றும் அதன் முக்கியத்துவத்தை கலிபோர்னியாவில் ஆசிரியர் எனக்கு புரிய வைத்து இருந்தார். அதனால் நான் தியானம் செய்து ஆத்ம ஞானத்தை பெற்று, எனது குருவை கண்டுபிடிப்பதற்காக இலங்கை வந்து இருந்தேன். ஆனால், நான் இங்கே அரசு நிறுவனங்களில் இருந்துக்கொண்டு கிராமங்களில் சுற்றிக்கொண்டு இருந்தேன். நான் இந்த வெளிப்புற வாழ்க்கையில் இருந்து விலகி, வழக்கமாக தியானம் செய்வதற்கு சிறந்த இடமாக விளங்கும் குகைக்கு சென்று தியானம் செய்தால் என்னால் ஆத்ம ஞானத்தை பெறமுடியும் என்று வலுவாக தோன்றியது. அதில் நான் உறுதியாகவும் இருந்தேன். அவர் எனக்கு சிறிது நேரம் ஓய்வு தந்தால்

அதற்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் வாய்ப்பு தருவாரா? அவர் கண்டிப்பாக தரமாட்டார்.§

நான் கிளர்ச்சியில் இருந்தேன் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். வணிகம் மற்றும் சமூக மாற்றத்தை பற்றி இருந்த தொடர் கவலையை நினைத்து, நான் என்னை கடிந்து கொண்டேன். முக்கியமாக அவர் எனது குரு இல்லை, மற்றும் நான் இங்கே உலகை மாற்றுவதற்காக வரவில்லை. நான் இங்கே தியானம் செய்ய வந்திருக்கிறேன். நான் அவரிடம் சொல்லாமல் குகைக்கு செல்வது சரியாக இருக்கும் என்று எனக்கு தோன்றுகிறது. இந்த போராட்டம் எனது சாட்சியை வெளிப்புறமாக்கியது. எனது பணிகளை சரிவர செய்வது கடினமாகியது. நான் தனிப்பட்ட முறையில் எதை செய்ய விரும்பினேன் என்பதற்கும், எனது ஆசிரியர் நான் எந்த பணியை செய்ய விரும்பினார் என்பதற்கும் இடையே இணக்கம் இல்லாமல், ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி இருந்தேன். நான் இதனால் சிறிது காலம் போராடினாலும், ஒரு வாரத்தில் இந்த கிளர்ச்சியை வெற்றிக்கொண்டேன் மற்றும் மீண்டும் அந்த எண்ணம் தோன்ற அனுமதிக்கவில்லை. நமது சொந்த பாணியில் செயல்களை செய்ய விரும்பி, பிடிவாதமாக இருந்து ஒரு மிகப்பெரிய குறிக்கோளுக்காக நமது சொந்த விருப்பத்தை கைவிடாமல் இருக்கும் கீழ்படியாத குணமே, இந்த பாதையில் இருக்கும் மிகப்பெரிய எதிரியாக விளங்குகிறது. நான் அவருக்கு முழுமையாக மற்றும் திறந்த மனதுடன் கீழ்ப்படிய முடிவு செய்து, அதிக நேர்மறையான நபராக மாறினேன். நான் அந்த சமயத்தில் அதிக நேர்மறையான மனிதனாக மாறி, இன்றும் அதில் நிலைத்து இருக்கிறேன். §

நான் இலங்கையின் பௌத்த சமய கோயில்களுக்கு சென்று அங்கே வாழத் தொடங்கினேன். எனக்கு அங்கே இருந்த துறவிகளிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்தது. அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள், எப்படி ஆடை அணிந்தார்கள் என்பதை கவனித்தேன், மற்றும் அது எங்களது சொந்த சந்நியாச சமூகத்தில் செயல்படுத்திய சந்நியாச நெறிமுறைகளில் மிகவும் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தின.§



நடனம் மற்றும் இசை மூலம் கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் குறிக்கோளுடன், ராபர்ட் ஹான்சென் என்கிற இளைஞனை தலைவனாக

*கொண்டிருந்த அமெரிக்க-ஆசிய கலாச்சாரக் குழு, பல மாதங்களுக்கு இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, ஒவ்வொரு முக்கிய இடங்களிலும் நடனமாடியது.*

.........................§

தயானந்தா தொடர்ந்து சாலைகளில் பிரச்சாரம் மேற்கொண்டு, தனது மாணவனை பல கிராமங்களுக்கு அழைத்துச் சென்றார். அவர் அந்த நாட்டின் தலைவனாக விரும்பினார், மக்களில் பலர் அவ்வாறு நினைத்தாலும், இறுதியில் அவ்வாறு நடக்கவில்லை. அவர் ராபர்ட்டை ஒரு பௌத்த சமய வீட்டிற்கு அழைத்து சென்றார், மற்றும் அவர்கள் அங்கே மூன்று நாட்கள் தங்கினர். ஆசிரியர் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு இளவயது அமெரிக்கரின் ஒழுக்கத்தை சோதனை செய்ய நினைத்து, ராபர்ட் இடைவெளி இல்லாமல் இரவு முழுவதும் தியானம் செய்ய வேண்டும் என்று உரிமையுடன் கேட்டுக்கொண்டார்.§

தயானந்தா ஒரு திறமையான பேச்சாளராக இருந்தார், மற்றும் அவர் அருகே அமெரிக்க நிர்வாக செயலாளர் நின்றுக்கொண்டு இருக்க, பெரும்பாலும் ஒரு தற்காலிக மேடை அல்லது ஒரு மரத்தடியில் இருந்து நீளமான மற்றும் உறுதியான உரையை வழங்குவார். ஒரு நாள் தொலைதூர கிராமத்தில், அந்த கிராமத்து தலைவர் தயானந்தா பற்றிய அறிமுகம் வழங்கி, அவருடைய உரைக்கு கூட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டு இருக்க, இவர்கள் இருவரும் ஒன்றாக நின்றுக்கொண்டு இருந்தார்கள். அப்போது தயானந்தா விளையாட்டுத்தனமாக ராபர்ட்டிடம் திரும்பி, “இப்போது நடப்பதை வேடிக்கை பார்,” என்றார். தயானந்தா தனது கண்களை மூடிக்கொண்டு, தனது கவனத்தை தனது புருவத்தின் மீது ஒருமுகப்படுத்திக் கொண்டார். அடுத்த வினாடி, பேச்சாளர் தான் பேசிய தலைப்பில் இருந்து முழுமையாக விலகி, அதற்கு முன்னர் தயானந்தா மற்றும் ராபர்ட் பேசிய விஷயங்களைப் பற்றி பேசலானார். தயானந்தா தனக்குள் சென்று, அந்த பேச்சாளரின் மனத்திற்குள் நுழைந்து, அவர் வழியாக பேசத் தொடங்கி இருக்கிறார் என்பதை ராபர்ட் விரைவில் புரிந்துக்கொண்டார். சுயநலமற்ற நல்ல காரணங்களுக்காக பயன்படுத்தப்படும் மாயவித்தைகளின் அந்த செயல்முறை விளக்கத்தை, ராபர்ட் என்றுமே மறக்கவில்லை. அந்த சம்பவம் அற்புதமாக இருந்தாலும் அவ்வளவு பயனுள்ளதாக இல்லை என்று பின்னர் குறிப்பிட்டார். தயானந்தாவிடம் இதைப்போன்ற மாயவித்தைகள் பல

இருந்தன, மற்றும் இது ஆன்மீக விரிவாக்கத்தின் செயல்விளக்கமாக இல்லாமல் ஒரு தடையாக விளங்குவதாக ராபர்ட் பிற்காலத்தில் கருதினார். §

ஒரு நாள் தயானந்தா தனது மாணவனுக்கு சாவிகளால் இயங்கும் ஒரு கடிகாரத்தை தந்து, பௌத்த சமயத்தின் தியான பயிற்சியை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். இரண்டு மணிநேரம் கழித்து விழித்துக்கொள்ள, அந்த கடிகாரத்தை ராபர்ட் தயார் செய்துக்கொள்ள வேண்டும். அலாரம் நின்றவுடன், அவர் பத்மாசனத்தில் அமர்ந்து முடிந்தவரை ஆழமாக தியானம் செய்யவேண்டும். அதன் பிறகு அவர் கடிகாரத்தை மீண்டும் தயார்செய்து, இரண்டு மணிநேரம் கழித்து மீண்டும் விழிக்க, தரையில் படுத்து உறங்கிவிடுவார். தியானத்தின் உணர்வு மற்ற மனநிலைகளுக்குள் கொண்டுவருவதற்காக, இந்த பயிற்சியை தொடர்ந்து பல நாட்களுக்கு, இரவு முழுவதும் மேற்கொண்டார். §

தயானந்தாவிடம் பணி புரியும் போது, கலாச்சார குழுவின் பயணங்களில் ராபர்ட் மும்முரமாக இருந்தார். அவர்கள் வடக்கில் இருந்து தெற்கு வரை பயணம் செய்து, அந்த நாட்டின் முறைப்படுத்தப்பட்ட இசை மற்றும் நாட்டிய மன்றங்களில், சிறிய ஊர்கள் மற்றும் கல்லூரி அரங்குகளில் நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். அவர்கள் கொழும்பில் இருக்கும் ராயல் காலேஜ் ஹாலில் உள்ள குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பிற்கு நிதி திரட்டினார்கள். மற்றும் அவர்கள் ஜூலை 23, 1947 அன்று, தங்கள் திறமையால் பிஷப்ஸ் காலேஜில் கூடியிருந்த பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தனர். அதில் ஒரு விமர்சகர், “தான் பாலே மற்றும் குணச்சித்திர நடனத்தில் திறமையானவர் என்பதை ராபர்ட் மீண்டும் நிரூபித்துள்ளார்,” என்று குறிப்பிட்டு இருந்தார். அவர் கடுமையாக உடற்பயிற்சி மேற்கொண்டார், மற்றும் தன்னை சுத்தப்படுத்திக்கொள்ள சூடான தண்ணீர் அதிகம் குடித்ததால், சிங்களர்கள் அவரை உனு வாதுரா என்று அழைத்தார்கள். அதற்கு சிங்களத்தில் “சூடான தண்ணீர்" என்று பொருள்.§



*இளவயது அமெரிக்கருக்கு கொடுக்கப்பட்ட ஆன்மீக பயிற்சிகளில் ஒன்றாக உறங்கும் சாதனா இருந்தது. அவர் தியானம் செய்வதற்காக இரவு முழுவதும், இரண்டு மணிநேரத்திற்கு ஒரு முறை விழிக்க வேண்டியிருந்தது.*

……………………….§

சில்வர் பான் கிளப்பில் லத்தின் அமெரிக்க இரவின் போது அரங்கேறிய மாட்ச்லெஸ் முச்சாசோஸ் மற்றும் அக்ரோபாடிக் டாங்கோவை தவிர, களுத்துறையில் இருக்கும் டவுன் ஹாலில் இருந்து மொறட்டுவையில் இருக்கும் வேல்ஸ் காலேஜ் ஹால் மற்றும் பௌத்த மதத்தின் இளைஞர்கள் அமைப்பு வரை, அவர்கள் வழங்கிய கிழக்கு மற்றும் மேற்கின் ஆடல் மற்றும் பாடல்களின் வலுவான கலவை போன்ற நிகழ்ச்சிகளை பார்வையாளர்கள், அதற்கு முன்பு பார்த்திருக்கவில்லை. §

நடனத்திற்கு அதிகமான பயணமும் கடின முயற்சியும் தேவைப்பட்டது, இருந்தாலும் ராபர்ட்டிற்கு பிடித்த இன்னொரு விஷயமான ஒருங்கிணைக்கும் பணிக்கும் இடையிடையே நேரத்தை ஒதுக்க முடிந்தது. நல்ல காரணங்களுக்காக இலங்கையின் மக்களை, ஒன்று சேர்க்கும் அவரது முயற்சிகளைப் பற்றி செய்தித்தாள்களில் தொடர்ந்து செய்திகள் வந்துக்கொண்டு இருந்தன. அவர் மார்ச் 20, 1948 அன்று இளைஞர்களின் உலக கூட்டமைப்பை உருவாக்கினார். மற்றும் அதன் பிறகு விரைவில் கலைஞர்களின் உலக கூட்டமைப்பை உருவாக்கினார், அது ஜூலை 23 அன்று தொடங்கப்பட்டு ஓபரா அண்ட் பாலே கில்டு ஆப் சிலோன் என்று வளர்ச்சி பெற்றது. §

எல்லோருக்குள்ளும் இருக்கும் பரமாத்துமாவான, பரசிவத்தை உணரும் போராட்டம் மற்றும் அவரது மிகப்பெரிய சவாலுக்குள் ராபர்ட் அடியெடுத்து

வைக்கவிருந்தார். அவரது வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு அனுபவமும், அவரை இந்த தருணத்தை நோக்கி அழைத்து சென்று இருந்தது. அந்த தருணம் ஒரு இளவயது அமெரிக்கரை ஒரு ஞானோதயம் பெற்ற உயிர்சக்தியாக மாற்றியது, மற்றும் அவர் எதிர்காலத்தில் அமெரிக்கா மற்றும் மற்ற நாடுகளில், ஹிந்து சமயத்தை உருமாற்றி வழிநடத்தினார். அவர் விரைவில் இலங்கையின் தென் முனையில் இருந்த காடுகளில் பெறவிருந்த அனுபவம் மற்றும் அவர் கண்டுபிடித்த ஆன்மீக பாரம்பரியத்தை புரிந்துக்கொள்ள, இமயமலை மற்றும் தற்போது ராபர்ட் இருக்கும் பாதையை முதலில் வடிவமைத்த சூட்சும ஞான முனிவர்களின் காலத்திற்கு, நாம் பின் நோக்கி செல்லவேண்டியிருக்கிறது. §

Page 14: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/14_na01_05.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## இரண்டாவது அத்தியாயம்


## மகரிஷி நந்திநாதா

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு இருந்த இமயமலை ஹிந்துக்கள், வாழ்வாதாரத்திற்காக நம்பி இருக்கும் மற்ற மனிதர்களுக்கு நெருக்கமாக, தங்கள் ஆன்மீக மூலங்கள் மற்றும் நிலத்திற்கு அருகாமையில் இருந்துக்கொண்டு ஒரு கிராமப்புற வாழ்க்கையை வாழ்ந்தனர். வாழ்க்கைக்கு சுத்தமான தண்ணீர் முக்கியம் என்பதால், எப்போதும் ஒரு நதிக்கு அருகே சிறிய கிராமங்கள் மற்றும் ஆசிரமங்கள் கட்டப்பட்டன. பல வடிவங்களில் இருந்த அவர்களது கூரை வீடுகள் பெரும்பாலும் வட்டம் அல்லது செவ்வக வடிவில், உட்புறமாக நான்கு அல்லது ஆறு கம்பங்களுடன் கட்டப்பட்டு, அதன் மீது கையால் நெய்யப்பட்ட கிளைகள், புற்கள் மற்றும் இலைகள் அடுக்கப்பட்டு இருந்தன. தடித்த கீற்றால் உருவாக்கப்பட்ட இந்த கூரையை சரியாக கட்டப்படும் போது, இந்த பகுதியில் நிலவும் கொடிய பருவநிலையில் இருந்து பாதுகாப்பு அளித்தது. பருவநிலையில் இருந்து மேலும் பாதுகாப்பு அளிக்க, பெரிய மரங்களின் மத்தியிலும் அடியிலும் சாதாரண குடியிருப்புக்கள் நன்றாக திட்டமிட்டு பாதுகாப்புடன் கட்டப்பட்டன. இயற்கை பொருட்களால் தயாரிக்கப்பட்ட குடிசைகள், குளிர்காலத்தில் வெதுவெதப்பாக இருந்ததுடன், அதிக வெப்பத்துடன் சூரியன் பிரகாசமாக இருக்கும் கோடைக்காலங்களிலும் குளுமையாக இருந்தன. ஈரமான மண்ணுடன் மாட்டு சாணம் மற்றும் வைக்கோல் கலந்து உருவாக்கப்பட்ட தரைகள் கிருமநாசினியாக செயல்பட்டு, பூச்சிகளில் இருந்து விடுதலை அளிக்கும் முக்கிய பணியையும் செய்தன. ஒவ்வொரு நாளும் மாட்டு சாணத்தால் உருவாக்கிய தரையில் சுத்தமான தண்ணீர் தெளிக்கப்பட்டு, அந்த தரைக்கு புதுப்பொலிவை தருவதற்கு மொழுகப்பட்டது. §

பல மலைகளுடன் இருந்த நிலங்கள் அதிக செங்குத்தாக இருந்ததால், இமயமலையில் இருந்த விவசாயிகள் குன்றுகளில் படிகளை

அமைத்துக்கொண்டனர். இது கடினமாக இருந்தாலும் அத்தியாவசிய வேலையாக இருந்தது. அவர்கள் அரிசி, தானியங்கள் மற்றும் கார்பான்சோ பீன்ஸ், பருப்பு வகைகள் மற்றும் கிழங்கு வகைகளை வளர்த்தனர். (கிழங்கு வகைகள் உணவுப்பஞ்சம் போன்ற மிகவும் கடினமான சூழ்நிலைகளுக்கு பாதுகாத்து வைக்கப்பட்டன). பழங்கள் மிகுதியாக இருந்தன, மற்றும் ஒவ்வொரு வீட்டிலும் வாதுமை பழங்கள் மற்றும் ஆப்பிள்கள் பயிரிடப்பட்டன. அங்கிருந்த குடும்பங்கள் தேன் மற்றும் மெழுகிற்கு தேனீக்களையும், பாலுக்கு மாடுகளையும், இறைச்சிக்கு ஆடுகளையும் வைத்திருந்தார்கள் (பெரும்பாலானோர் சைவமாக இருந்தாலும், எல்லோரும் அப்படி இருக்கவில்லை), மற்றும் ஆடுகள் பாறைகளில் ஏறுவதில் சிறந்து விளங்கியதால், அவை சுமை தூக்கிச் செல்லவும் பயன்படுத்தப்பட்டன. கால்நடை மேய்ச்சலுக்கு புல்வெளிகளை வளர்க்கக் கற்றுக்கொண்டனர். அவர்கள் தங்கள் சாப்பாடு, சமையல் தேவைகள் மற்றும் விளக்குகளை ஏற்றுவதற்கு, கடுகு விதைகளில் இருக்கும் எண்ணெய்யை தயார் செய்தனர். அவர்களது வாழ்க்கையில் கடுகு மிகவும் முக்கியமாக இருந்ததால், வீட்டிற்கு முக்கிய விருந்தாளிகள் வந்ததும், அந்த எண்ணெய் வீட்டின் இருபுறமும் ஊற்றப்பட்டுவிடும். §

மலைகள் குறுக்கு நெடுக்கான பாதைகளுடன் இருந்தன மற்றும் வெகுதூரத்தில் இருக்கும் சந்தைகளில் வணிகம் செய்ய வாழ்க்கையை நிலைநிறுத்தும் விளைபொருட்கள் கொண்டு செல்லப்பட்டன. பாதைகள் மிகவும் குறுகலாக இருந்ததால், ஒரு மனிதன் அல்லது ஒரு ஆடு மட்டுமே அதன் வழியாக செல்லமுடியும். இந்த பாதை *அஜ-பாத* என்று அழைக்கப்பட்டன, மற்றும் அதற்கு சமஸ்கருதத்தில் “ஆடு செல்லும் வழி” என்று பொருள். ஆடுகளால் சிறிதளவு சுமையை மட்டுமே சுமக்க முடியும் என்பதால், சரக்குகள் மிகவும் கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டன. தினமும் காலையில் பயன்படுத்தப்பட்ட இரண்டு முக்கிய பாதைகள் ஜோஷிமட் (ஒரு சைவ மையம்), பத்ரி நாத் (ஒரு வைணவ மையம்) மற்றும் கேதார்நாத் (சைவ சமயத்தின் கோட்டை) வழியாக சென்றன. §




*பதஞ்சலி,  வியாகிறபாத மற்றும் திருமூலரின் புகழ்பெற்ற குருவாக விளங்கிய மகரிஷி நந்திநாதா, இமயமலையில் வசிக்கும் சித்த யோகியாகவும் நந்திநாத*

*சம்பிரதாயத்தின் முன்னோடியாகவும் விளங்கினார். இந்த பரம்பரை சைவ சமயத்தின் அத்வைத (ஒருமை வாதம்) போதனைகளை வழங்குகிறது, மற்றும் அவர் இந்த பரம்பரையில் நன்கு பரிச்சயமான முதல் சற்குருவாக இருந்தார்.*

……………………§

இந்த இடையர்கள் வாழ்க்கை, குறிப்பாக ஆசிரமங்களில் கூட்டம் கூடுவதற்கு பல வாய்ப்புக்களை வழங்கியது, மற்றும் இமயமலையின் இந்த தெய்வீக புருஷர்கள் தத்துவ உரையாடல்கள் மற்றும் விவாதங்களைத் தவிர வேறு எதையும் விரும்புவதில்லை, மற்றும் அது பெரும்பாலும் ஒரு ஆலமரத்தின் விசாலமான நிழலில் நடைபெறும். இந்த கூட்டங்களில் பங்குபெற எல்லோரும் தரையில் உட்காருவார்கள். அப்போது புத்தகங்கள் எதுவும் இல்லை. அந்த காலத்தில் கல்வி வாய்மொழியாக வழங்கப்பட்டது மற்றும் அதற்கு மாணவர்கள்  நினைவாற்றலை பயன்படுத்தினார்கள். ஆன்மீக சான்றோர்கள் வெவ்வேறு வயதுடன் இருக்கும் மாணவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்க மற்றும் பிறருக்கு வழிகாட்ட, ஆறு அங்குல உயரத்துடன், *பீடம்* என்று அழைக்கப்படும் பாய்கள் அல்லது மரப்பலகைகளில் உட்காருவார்கள். இந்த ரிஷிகள் பெரும்பாலும் சந்நியாசிகளாக இல்லாமல் திருமணமானவர்களாக இருந்தார்கள். சில சந்நியாசிகளுடன் சீடர்களும் வாழ்ந்து வந்தனர், மற்றும் வேறு சிலர் தங்களது ஆன்மீக தியானம் மற்றும் ஆச்சாரமாக தனிமையில் மேற்கொள்ளும் மற்ற பயிற்சிகளில் ஈடுபட்டு  இருந்தனர். §

பல்வேறு வயது மாணவர்கள் பழங்கால கலைகள் மற்றும் அறிவியல் பாடம் படிக்க, சமஸ்கிருத மொழியை கற்றுக்கொள்ள மற்றும் யதார்த்தமான வாழ்க்கைக்கு தேவைப்படும் பல்வேறு திறன்களில் தேர்ச்சி பெற, தூரத்தில் இருக்கும் பள்ளிகள் அல்லது வாழ்க்கை மையங்களில் தங்கள் பாதையை தேடிக்கொண்டனர். ஒவ்வொரு குடும்பமும் விவசாய திறன்கள் மற்றும் மற்ற கலைகளில் பயிற்சிகள் வழங்கும் ஒரு பயிற்சி மையமாக விளங்கியது. இமயமலையில் இருந்த மேட்டுப் பகுதிகளில் வாழ்க்கை கடினமாக, சோதிப்பதாக  மற்றும் சமயம் மற்றும் ஆன்மீக வேட்கைக்கு மிகவும் அனுகூலமாக இருந்தது. இது தெய்வீக புருஷனுடன் தெய்வங்களை உரையாடும் இடமாகவும், சாதாரண மக்கள் சொர்க்கத்திற்கு செல்ல பயணம் மேற்கொள்ளும் ஒரு புனிதமான இடமாக கருதப்பட்டது. ஜோஷிமட்-பத்ரிநாத் பாதை *மகாபாரத* காலத்தில் இருந்து, அதன் புண்ணிய தலங்களுக்கு பிரபலமாக இருந்து, “சொர்க்கத்திற்கு செல்லும் பாதை" (*ஸ்வர்க - அரோஹன*) என்ற அங்கீகாரத்தை பெற்றது. §



*சிவபெருமான் பிரபஞ்சத்தை உருவாக்க, பதினான்கு முறை தனது உடுக்கையை ஒலித்து, பதினான்கு அடிப்படை ஒலிகளை*

*வெளிப்படுத்துகிறார். சைவ சித்தாந்த அத்வைத பாரம்பரியத்தின் வெளிப்படுத்தும் உண்மைகளை, மனித வரலாற்றில் முதல் முறையாக, தனது எட்டு யோகம் கற்கும் சீடர்களுக்கு கற்பிக்க, சித்தர் நந்திநாதா இமயமலையின் உச்சியில் அமர்ந்து இருக்கிறார்.*

........................§


### குருமார்களின் பரம்பரை

இந்த இமயமலையின் தொலைதூரப் பகுதியில் மகரிஷி நந்திநாதா என்ற பெயரில் ஒரு மிகப்பெரிய யோகி வாழ்ந்து வந்தார். ஞானோதயம் பெற்ற அபூர்வ ஆன்மாவாக இருந்த அவரின் அகக்கண்கள் பிரபஞ்ச முழுமைக்கு தயாராக இருந்தது, மற்றும் அவர் சிவபெருமானையும், உட்புறமாக இருக்கும் பரமாத்துமாவையும் அறிந்தவராக இருந்தார். அவரே சற்குருமார்களின் ஒரு நீளமான வரிசையில் வந்தவர், ஆனால் அந்த சற்குருமார்களின் பெயர்கள் மற்றும் வாழ்க்கை வரலாறுகள் தொலைந்து விட்டதால், இலங்கையில் ராபர்ட் ஹான்சென் கண்டுபிடித்த ஆகம பாரம்பரியமாக, இன்று நந்திநாதா சம்பிரதாயம் என்று அறியப்படும் பரம்பரையில், நன்கு பரிச்சயமான முதல் சற்குருவாக அவர் கருதப்படுகிறார். §

நந்தினாதா தன்னிடம் நேரடி சீடர்களாக இருந்தவர்களுக்கு சனக, சனந்தன, சனாதன மற்றும் சாந்தகுமார என்று நான்கு முனிவர்களை நியமித்து இருந்தார், மற்றும் அவர்கள் எல்லோரும் நந்தி என்கிற பட்டதுடன் இருந்தனர். இவர்களுடன் சிவயோக முனி, பதஞ்சலி, வியாகிறபாத மற்றும் திருமூலரும் (சுந்தரநாதா என்றும் அழைக்கப்பட்டார்) இருந்தனர். அவர்கள் எட்டு பேரும், ஆரம்பகால ஆகம பள்ளிகளில் ஏதாவது ஒன்றில் ஆன்மீக தலைவர்களாக இருந்தார்கள் மற்றும் அவர்கள் நாதர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்களில் முதலில் குறிப்பிடப்பட்ட நால்வரும் சிவபெருமானின் விசேஷ அருளைப் பெற்றார்கள், மற்றும் அவர்கள் *ஆகமங்கள்* வழங்கும் தகவல்களை நான்கு திசைகளில் எடுத்துச் செல்ல சிவபெருமான் மூலமாக உத்தரவிடப்பட்டார்கள். தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இலக்குகளை வந்து அடைந்ததும் வெயில், மழை, ஆலங்கட்டி மழை மற்றும் புயல் என்று பாராமல் தீவிரமாக யோகத்தில் பயிற்சி மேற்கொண்டனர் மற்றும் காலப்போக்கில் சொர்கலோக பதவிக்கு உயர்ந்தனர். §

மகரிஷி நந்தினாதாவை சுற்றி இருந்த யோகிகள் சிவ சூத்திரங்களில் நன்றாகத் தேர்ச்சி பெற்று இருந்தார்கள். சிவபெருமானின் குரலாக கருதப்படும் இந்த சூத்திரங்கள் ஒரு புதிராக, மேம்பட்ட கணிதத்தின் தொகுப்பாக இருக்கும் பதினான்கு ஈரடி செய்யுள்களின் தொகுப்பாக, சமஸ்கிருத எழுத்துக்கள் பற்றியதாக தோன்றினாலும், ஆழமாக சிந்திக்கும் போது பிரபஞ்ச அமைப்பை புரிந்துகொள்ள பயன்படும் வழியாக விளங்கி, இந்த மொழி எவ்வாறு தனது மூலத்தில் இருந்து தெய்வீகத் தன்மையுடன் ஒரு சூட்சும ஞான தொடர்பை உருவாக்குகிறது என்பதை காண்பிக்கிறது. பருமனான மற்றும் நுணுக்கமான பிரபஞ்சகளின் சூட்சும ஞான அச்சத்தை

ஆய்வு செய்ய, 21 ஆம் நூற்றாண்டிலும் யோகிகள் படிக்கும் தெளிவற்ற, இரகசியமான மற்றும் மர்மமான செய்யுள்களாக விளங்கும் *சிவ சூத்திரங்கள்* மீது காஷ்மீரின் சைவ சமயத்தில் இருந்து சைவ சித்தாந்தம் வரையிலான ஆரம்பகால தாந்த்ரீக பாரம்பரியங்கள் வலுவான நம்பிக்கையுடன் இருந்துள்ளன. §



*மகரிஷி நந்திநாதா ஒரு புலித்தோல் மீது உட்கார்ந்துகொண்டு சுந்தரநாதாவிற்கு ஒரு சாஸ்திர செய்யுளை விளக்கிக்கொண்டு இருக்கிறார். மற்றும் சீடர்கள் புனிதமான உரைகளை பற்றி ஆலோசித்து ஆய்வு செய்து சிவபெருமானின் துதிப் பாடுகின்றனர்.*

……………………….§

உயர்ந்து இருக்கும் சிவ நடராஜரின் வலது கையில் உள்ள உடுக்கையில் இருந்து வெளிவந்த பதினான்கு சூத்திரங்கள் பணினிக்கு தெரிவிக்கப்பட்டன, மற்றும் அவற்றை ஒரு வகையில் அந்த காலத்து யோக அறிவியல் குறிப்பேடாக அவர் எழுதிக்கொண்டார். இந்த ஒலி மற்றும் சொற்களின் அறிவியல் பேச்சு வழக்கு இல்லாமல் பரமேஸ்வரனிடம் இருந்து நேரடியாக வந்த தகவலாக, சாதாரண மனதை கடந்து, ஞானோதயம் பெற்றவர்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடிந்ததாக இருந்ததால், அது பெரும்பாலானோருக்கு ஒரு இரகசயமாகவே இருந்திருந்தது. §

சனக, சனாதன, சனதகுமார, பதஞ்சலி மற்றும் மற்றவர்களைப் போன்ற முனிவர்களால் சிவபெருமானின் உடுக்கையில் இருந்து வந்த ஆழ்நிலை ஒலிகளை கேட்கமுடிந்தாலும், அந்த சூத்திரங்களின் உட்புறமாக இருந்த மைய கருத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் விளக்கத்தை பெறுவதற்காக மகரிஷி நந்திநாதாவிடம் சென்றதாக புராணங்கள் தெரிவிக்கின்றன. இந்த அபூர்வமான தகவலை தேடுவதில் அவர்களது ஆர்வத்தை பார்த்து மெய்மறந்துப் போன சற்குரு**,** அந்த சூத்திரங்களின் சாரத்தை பற்றி விளக்கத் தொடங்கினார். அவர் வழங்கிய 27 செய்யுள்களை வழங்கினார், மற்றும் அவை மட்டுமே இந்த முதல் சற்குருவால் எழுத்து வடிவில் வழங்கப்பட்டு, காலத்தால் அழியாத போதனைகளாக விளங்குவதால், இது இந்த சைவ சித்தாந்த பரம்பரையின் மிகவும் பழமையான சாஸ்திர உரையாக விளங்குகிறது. இது *நந்திகேஷ்வர காஷிகா* என்று அழைக்கப்பட்டு, சுருக்கமாகவும் விவேகமாகவும் இருக்கிறது. *காஷிகா* என்றால் “ஞானோதயம் வழங்கும் ஒன்று" என்று பொருள். §

சிவபெருமானுடன் ஒரு ஒருமையை அவருக்குள் வழங்கிய, அவரது வலுவான இறைவனின் உணர்தல்கள் மற்றும் நீளமான ஸ்தோத்திரமான ஸ்ரீ ருத்திரத்தை ஒரு கோடி முறை பாராயணம் செய்வது கடினம் மற்றும் சாத்தியமில்லாத விரதம் என்று சிலர் கருதுவதை நிறைவு செய்த காரணத்தால், ஸ்ரீ நந்திகேஷ்வர என்று அழைக்கப்படும் மகரிஷி நந்திநாதா, விளக்கமுடியாததை விளக்கும் சாதனையை நிறைவு செய்தார். §

நந்திநாதாவின் *காஷிகா* ஒரு விளக்கமாக இல்லாமல் ஒரு தியானமாக, சமஸ்கிருத மொழியின் சொற்களில் எப்பொழுதும் பதிந்து இருக்கும் குறிப்பிட்ட ஒலிகள் மூலமாக பிரபஞ்சத்தில் நடைபெறும் சிவபெருமானின் விரிவாக்கமாக, மிகவும் நுணுக்கமான வஸ்துவில் இருந்து நாம் இருக்கும் பூமி வரை பிரபஞ்சத்தில் உள்ள முப்பத்தி ஆறு பாகங்கள் மீது ஒரு ஆழ்ந்த தியானமாக இருக்கிறது. இந்த பாகங்கள் அல்லது *தத்துவங்களில்*, யதார்த்தமாக இருக்கும் சுயநினைவில் இருக்கும் ஒவ்வொரு நிலை, ஒவ்வொரு பிரிவு, ஒவ்வொரு உணர்வு மற்றும் நிறம், ஒவ்வொரு சக்தி, அதிர்வு மற்றும் ஒலியை தேடிப்பிடிக்கலாம் என்பதால், இவை சைவ சித்தாந்த அண்டத்தின் மையமாக விளங்குகிறது. சைவ சித்தாந்தம் மொத்தத்தில் 36 *தத்துவங்களைப்* பற்றி எடுத்துரைக்கிறது. *தத்துவங்களை* அறிவதால், ஒருவர் அனைத்தையும் அறிந்துக்கொள்கிறார். §

அந்த காலத்தில் யோகம் மற்றும் உட்புற உணர்வின் இரகசியங்களை வெளிப்படையாக விளக்குவதற்கு, அவை அதிக மதிப்புமிக்கதாக கருதப்பட்டதால், பழங்கால உரைகள் சிக்கலான கருத்துக்களாக, பின்பற்ற கடினமாக தெளிவில்லாமல் இருக்கின்றன. அவற்றை தகுதி பெற்றவர் மட்டுமே அணுகவேண்டும், மற்றவர்கள் பிரமிக்க வேண்டும் என்பதை உறுதி செய்ய, அவை ஒரு மறைகுறியீட்டு தகவலைப் போன்று, ஒரு விசேஷமான மொழியில் மறைக்கப்பட்டு இருக்கும். பண்டைய காலத்திற்கு சென்று, யோகத்தின் முன்னோடிகளான இமயமலையின் குருமார்களின் இதயத்தில் காணும் காட்சி நிரூபிப்பதைப் போல, இன்று இந்த உரைகளை படிக்கும் போது உண்மையில் பிரமிக்க வைக்கிறது. பின்வரும் பக்கங்களில், மகரிஷி நந்திநாதாவின் 2,200 வருட பழமையான தத்துவ உரையில் இருந்து சூத்திரங்களின் ஒரு பகுதியை வழங்கியுள்ளோம். §

இறைவனை அறிந்தவர்கள் மற்றும் மிகவும் உயர்ந்த சமூகத்தை சேர்ந்த சம்ஸ்கிருத பண்டிதர்களின் நுண்ணறிவு மற்றும் வர்ணனைகள் இல்லாமல், அதிக மர்மமான பதினான்கு சிவ சூத்திரங்களை விளக்குவதற்காக இயற்றப்பட்ட இந்த சூத்திரங்களை புரிந்துகொள்வதும் கடினமாக இருக்கும். நீங்கள் இங்கே நந்திநாதரின் பத்தாவது செய்யுள் மற்றும் அதன் பின்னர் சபாரத்தினம் சிவாச்சாரியார் தந்த வர்ணனையும் காணலாம்:§

*ரீ* (ऋ) என்ற எழுத்தின் மூலம் குறிப்பிடப்பட்டு, புனிதமான உணர்வின் பண்புடைய வடிவமாக, அனைத்திற்கும் பரமேஸ்வரனாக இருப்பவர், *ல்ரி* (ऌ) என்ற எழுத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள, சிவசக்தியுடன் ஐக்கியத்தில் இருந்துகொண்டு, மாயையில் நுழைந்து, அதை சிறிதளவு தூண்டிவிட்டு, அசைபவை மற்றும் அசையாதவற்றின் உலகை உருவாக்கி, அவற்றை விரிவாக்கம் செய்கிறார். இவை அனைத்தையும் அவர் ஒருவராக இருந்துக்கொண்டு, தனியாகவும் முழுமையாகவும் செய்கிறார். §

வர்ணனை: பரமேஸ்வரன் முழுமையாக ஒருவராக மட்டுமே இருக்கிறார், மற்றும் சக்தியுடன் ஐக்கியத்தில் இருந்துக்கொண்டு மாயையில் நுழையும் போது அவர் உலகை உருவாக்குகிறார் என்று சொல்லும் போது, அத்வைத இறைவனின் கோட்பாடு பாதிக்கப்படுவதை காணலாம். ஒரு இறைவன் மட்டுமல்லாது, சிவசக்தி மற்றும் மாயையின் பாத்திரமும் இருப்பதை காணும் போது, அத்வைத கோட்பாட்டில் ஒரு குறை காணப்படுகிறது. இந்த செய்யுள் மற்றும் இதைத் தொடரும் மூன்று செய்யுள்களிலும், அத்வைத இறைவனின் கோட்பாட்டில் அத்தகைய குறை எதுவும் இல்லை என்று விளக்கப்பட்டுள்ளது. பரமேஸ்வரனை *ரீ* (ऋ) என்ற எழுத்து குறிப்பிடுகிறது மற்றும் *ல்ரி* (ऌ) என்ற எழுத்து சக்தி மற்றும் மாயையை குறிப்பிடுகிறது. *ஶ்ரீ தந்திரத்தில்* குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல, சிவபெருமானின் மனவடிவமாக இருக்கும் சக்தி, *ல்ரி* (ऋ) என்ற எழுத்தால்

குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதி எழுத்தாக, வேர்ச் சொல்லாக இருக்கும் *க* (क), “தெளிவாக வெளிப்படாத ஒன்றில் இருந்து வெளிக்கொண்டு வருவதை" குறிப்பிடுகிறது. இறைவனின் உருவம் சக்தியை உள்ளடக்கியுள்ளது, மற்றும் அவரது உருவத்தில் ஒரு அங்கமாக மாயை விளங்குகிறது. தனது உடலை இயக்க, ஒரு மனிதனுக்கு மற்றவர்களின் உதவி தேவைப்படுவது இல்லை. அதைப்போலவே, தனது உருவத்தை இயக்க மற்றும் செயல்படுத்த பரமேஸ்வரனிற்கு மற்றவர்களின் உதவி தேவைப்படுவது இல்லை. இது *கேவல* என்ற சொல்லின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சக்தி மற்றும் மாயைக்கு, சிவபெருமானை தவிர வேறு எந்த ஒரு தனிப்பட்ட உள்பொருளும் நீடித்து இருப்பதில்லை.§

**போதனையின் இரு கிளைகள்**

*நாதா* என்றால் உட்புற உடல்கள் மற்றும் தனது மனநிலைகளின் நுணுக்கங்களில் தேர்ச்சி பெற்ற “தலைவன்" அல்லது “குரு" என்று பொருள். பல்லாயிரம் ஆண்டுகளாக, நாதர்கள் மறைபொருள் தகவல்களை வழங்குபவர்களாக ஸித்திகளை பயன்படுத்துபவர்களாக, ஆன்மாவின் சக்திகளாக இருந்துள்ளார்கள். நாத சித்தர்கள் சிவபெருமானின் அருளை வேண்டிக்கொண்டு, குண்டலினி சக்தியை கட்டுப்படுத்தி, மனதின் அழத்திற்குள் தேடலை மேற்கொள்கிறார்கள். அவர்கள் முழு மனதுடன் தலைவர்களின் தலைவனாக இருக்கும் சிவபெருமானை வழிபட்டு, யோகத்தின் மூலம் ஆழ்ந்த தியானத்தை மேற்கொண்டு, அவரது தெய்வீக தன்மையில் ஒருமையை அனுபவிக்கிறார்கள். §

நிலையான உண்மைகளின் தெய்வீக தகவல்கள் மற்றும் ஞானோதய பாதையில் வெற்றிகொள்ளும் செய்முறை ஆகியவை நாத பரம்பரையில் பாதுகாப்பாக இணைக்கப்பட்டுள்ளது. ஆகம கோயில் வழிபாடு, *ஹோமம்*, சந்நியாசம், சாதனா, *தபஸ்*, யோகம், தாந்தரீகம் மற்றும் அத்வைத சாஸ்திரம் என்று சைவ சமயமாக இன்று நாம் அறியும் அனைத்தும், நாத சம்பிரதாயத்தின் இமாலய சமூகங்களால் வழிநடத்தப்பட்டுள்ளது. *சம்பிரதாயம்* என்பது பாரம்பரியம் அல்லது சாஸ்திரத்தின் ஒரு துடிப்புணர்வுள்ள பிரிவாக விளங்குகிறது. நாதர்கள் ஹட மற்றும் ராஜ யோகத்தின் மூலமாக கருதப்படுகிறார்கள். §

நந்திநாத சம்பிரதாயம் மற்றும் ஆதிநாத சம்பிரதாயம் என்று இன்று இருக்கும் மிகவும் பழமையான சைவ சம்பிரதாயங்கள், இரு முக்கிய பிரிவுகளை கொண்டுள்ளன. மகரிஷி ஆதிநாதா, மத்ஸ்யேந்திரநாதா மற்றும் சித்த சித்தாந்த சைவ சமயத்தை விவரமாக விளக்கியதோடு அதற்கு முக்கிய குருவாகவும் இருந்து, மிகவும் பிரபலமான கன்பட யோகிகள் சமூகத்தை நிருவியவருமான கோரக்ஷநாதர் ( சுமார் கி.பி. 950) ஆகியோர் முந்தைய காலத்தில் ஆதிநாத சம்பிரதாயத்தில், நன்கு பரிச்சயமான முன்மாதிரிகளாக விளங்கினர். §

இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில், ஆதிநாத மற்றும் நந்திநாத சம்பிரதாயங்கள் துடிப்புணர்வுடன் வலுவாக இருக்கின்றன. கடந்த 1,000 வருடங்களில் வரலாற்று, சமூக மற்றும் பூகோள சக்திகள், அவற்றிற்கு இடையே வேறுபாடுகளை உருவாக்கி இருந்தாலும் வேதங்கள், *ஆகமங்கள்* மற்றும் பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் உட்பட இறையியல், கோட்பாடுகள், சாதனாக்கள் மற்றும் சாஸ்திரங்களில் அவை உடன்பட்டு இருக்கின்றன. நாதர்கள் பற்றி எழுதப்பட்டுள்ள பெரும்பாலான குறிப்புகள், திருமூலரின் பிரிவை காட்டிலும், வடக்கு கோரக்ஷநாதர் பிரிவு மற்றும் வாழ்முறையை குறிப்பிடுகிறது. §

இரு பிரிவுகளும் முக்கியமான வழிகளில் பிரிகின்றன. நந்திநாத சம்பிரதாயத்தின் முதன்மை விரிவுரையாக திருமூலரின் *திருமந்திரம்* (சுமார் கி.மு. 200) விளங்குகிறது, மற்றும் ஆதிநாத சம்பிரதாயத்தின் முதன்மை விரிவுரையாக கோரக்ஷநாதரின் *சித்த சித்தாந்த பத்ததி* (சுமார் கி.பி. 950) விளங்குகிறது. நந்திநாத சம்பிரதாயத்தின் பெரும்பாலான உரைகள் தமிழ் மொழியில் இருக்கின்றனர், மற்றும் ஆதிநாத சம்பிரதாயத்தின் உரைகள் சம்ஸ்கிருத மொழியிலும் இருக்கின்றன. இலங்கை மற்றும் தென்னிந்தியாவில் நந்திநாத சம்பிரதாயம் அதிக வலுவாகவும், வட இந்தியாவில் ஆதிநாத சம்பிரதாயம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கிறது. நந்திநாத சம்பிரதாயத்தின் தத்துவம் சைவ சித்தாந்தம் என்றும், ஆதிநாத சம்பிரதாயத்தின் தத்துவம் சித்த சித்தாந்தம் என்று அறியப்படுகிறது. இரு பிரிவுகளும் இடையே தத்துவத்தில் இருக்கும் அடிப்படை வேறுபாடு முக்தி சார்ந்ததாக இருக்கிறது. நமக்கு முக்தி சொந்த சிந்தனைகள் மற்றும் செயல்களால் கிடைக்கிறது என்று ஆதிநாத பிரிவு நம்புகிறது, ஆனால் சிவபெருமானின் சித்தம் இல்லாமல் அதை அடையமுடியாது என்று நந்திநாத பிரிவு நம்புகிறது. §

நந்திநாத சம்பிரதாயம் வாழ்ந்துகொண்டு இருக்கும் ஒரு சற்குருவின் தேவைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. அவர் இந்த பரம்பரையின் முதல் சந்நியாசியாகவும் பரம்பரை முன்னோடியாகவும் விளங்கும் முருகப்பெருமானுக்கு பாதைகளை திறந்து வைக்கிறார். இதைப்பற்றி திருமூலர் தனது திருமந்திரத்தில்: §

தெளிவு குருவின் திருமேனி காண்டல்;


தெளிவு குருவின் திருநாமம் செப்பல்;

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்;

தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே. 139§

நந்திநாத சம்பிரதாயம் என்பது ஒரு சித்த யோக பாரம்பரியம் ஆகும் ( சித்த என்றால் “முயற்சியால் அடைதல்"), மற்றும் அதன் குருமார்கள் பெரும்பாலும் மிகப்பெரிய சூட்சும ஞான திறமைகள் மற்றும் ஞானத்தை

வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இந்த ஆசிரியர்கள் பரமேஸ்வரனாக இருக்கும் சிவபெருமானுடன் தங்களது ஒருமையை உணர்ந்து, அனைத்திற்கும் தெய்வீக மூலமாக விளங்கும் இதனுடன் முடிந்தவரையில் மனித உணர்வுடன் முழுமையாக ஐக்கியமாகி இருக்கிறார்கள். இத்தகைய உணர்தலுடன் எல்லையற்ற பேரின்பம் மற்றும் பிரபஞ்சத்தில் இருக்கும் ஒவ்வொரு சக்தியின் மீதும் நேரடி பொறுப்பும் தோன்றுகிறது. இந்த பரம்பரையை சேர்ந்த குருமார்கள் வெளிப்படுத்திய அபூர்வமான சக்திகளை பற்றி பல கதைகள் உள்ளன. அத்தகைய ஒரு உயர்ந்த உணர்தலை பெற்ற ஸித்தியால் கிடைக்கும் உதவி அல்லது அதன் மீது விழும் பார்வை மட்டுமே, ஆன்மீக பயிற்சியை விரைவுப்படுத்தக்கூடும். அத்தகைய ஆசிரியர்களின் தீட்சை இல்லாமல், மனித தூண்டுதல்கள் மிகவும் உயர்வான இந்த உணர்தலை நோக்கி வழிநடத்தி செல்வதில் எப்போதும் தோல்வி அடையும். §



பழங்காலத்து யோகிகள் வனங்களிலும் காடுகளிலும் பெரும்பாலும் நதிக்கரைகளிலும் வாழ்ந்தார்கள். அங்கே அவர்கள் புலன்களை அடக்கி, மெய்யுணர்வை ஆழமாக உள்ளே இயக்கி, ஆன்மீக பயிற்சிகளை மேற்கொண்டார்கள். அந்த உட்புற வழிபாட்டை, ஹோமம் என்று அழைக்கப்படும் வெளிப்புற வழிபாடு மூலமாக சமன் செய்யப்பட்டது. ஹோமம் என்கிற வழிபாட்டு முறையில், அக்னியை வளர்த்து தேவர்கள் மற்றும் அந்தர்லோகங்களை ஆவாகனம்\ செய்து, அவர்களுக்கு ஆகுதி

*வழங்கப்படுகிறது. இந்த வழிபாட்டு முறையை உலகெங்கும் இருக்கும் ஹிந்துக்கள் இன்றும் செய்து வருகிறார்கள்.*

........................§

நாத சம்பிரதாயம் ஒரு ஸித்த குரு-சிஷ்ய சம்பிரதாயம் ஆகும். இந்த சம்பிரதாயத்தில் எப்போதும், உறுப்பினர் தகுதி ஒரு *தீட்சை* குருவால் வழங்கப்படுகிறது, மற்றும் அந்த *தீட்சை*-குரு அந்த பரம்பரையையின் தலைமை பொறுப்பில் இருக்கலாம் அல்லது தனது *தீட்சை*-குருவிடம் இருந்து தீட்சை வழங்க அங்கீகாரம் பெற்ற, அந்த சம்பிரதாயத்தின் இன்னொரு உறுப்பினராகவும் இருக்கலாம். §

நாத தீட்சை ஒரு முறையான சடங்காக நடைபெறுகிறது மற்றும் அந்த சடங்கின் போது குருவின் சாட்சி மற்றும் ஆன்மீக சக்தியில் ஒரு பகுதி, சிஷ்யனுக்கு (மாணவன்) அளிக்கப்படுகிறது. தற்போது ஒரு நாதராக இருக்கும் அந்த புதிய உறுப்பினரின் புதிய அடையாளத்திற்கு ஆதரவு அளிக்கும் வண்ணம் அவருக்கு ஒரு புதிய பெயர் வழங்கப்படுகிறது. குருவின் இந்த அளித்தல் அல்லது “தொடுதலுக்கு" அடையாளமாக, உடம்பின் பல்வேறு பகுதிகளில் விபூதி பூசப்படுகிறது. ஆதிநாத சம்பிரதாயத்தில் ஒரு சற்குருவாக இருந்த, ஸ்ரீ குருதேவ் மகேந்திரநாத் எழுதிய *தி பாண்டஸ்டிகோஸில்* இருந்து ஒரு தொகுப்பு:§

> ஞானம் மற்றும் தகவல் பல தலைமுறைகளை கடந்து செல்ல, தீட்சையின் சூட்சுமமாக மந்திரம் போதிக்கும் நிகழ்வு தேவைப்பட்டது, மற்றும் தொடுதல், அறிகுறி மற்றும் மந்திரம் மூலம், உடலில் உடுப்பு இல்லாத ஒரு குரு உடுப்பு இல்லாத ஒரு சீடனுக்கு அளிக்கும் தீட்சை இன்றும் பயன்பாட்டில் இருக்கிறது. இந்த சாதாரண சடங்கில், தீட்சை வழங்குபவர் தீட்சை பெறுபவருக்கு தன்னுள்ளிருந்து ஏதாவது ஒன்றை வழங்குகிறார். இந்த தீட்சை புதிய நாதருக்குள் நடைபெறும் மாற்றத்தின் தொடக்கமாக விளங்குகிறது. இந்த தீட்சை ஆயிரம் வருடங்களாக தடையில்லாமல் தொடர்ந்துள்ளதால், இதை அலட்சியம் செய்யக்கூடாது. நீங்கள் ஒரு முறை தீட்சை பெற்றுவிட்டால், அது வாழ்க்கை முழுவதும் உங்களுடையதாக இருக்கும். அதை உங்களிடம் இருந்து யாராலும் அபகரிக்க முடியாது, மற்றும் அதை உங்களாலும் துறக்க முடியாது. இது நிரந்தரமில்லாத ஒரு வாழ்க்கையில் மிகவும் நிரந்தரமான ஒன்றாக விளங்குகிறது. §

பாதரசம், இங்குலிகம் (cinnabar) மற்றும் மற்ற கனிமப்பொருட்கள், ஸ்படிக தயாரிப்புகள் மற்றும் காயகல்பத்தின் சடங்கு, ஆன்மீக மற்றும் மருத்துவ பயன்பாடுகளை உள்ளடக்கிய இந்திய இரசவாதம் அல்லது *இரசாயன* என்கிற செய்முறையில் நாத சித்தர்கள் பயிற்சி மேற்கொள்கிறார்கள். இந்த ஜென்மத்தில் முக்தி அல்லது மோக்ஷத்தை பெறுவதே நாத சித்தர்களின் முக்கிய குறிக்கோள் ஆகும்.§

புனர்ஜென்மம் தவிர்ப்பதை இன்னொரு குறிக்கோளாக குருதேவ் மகேந்திரநாத் குறிப்பிடுகிறார்: “இந்த வாழ்க்கையில் அமைதி, சுதந்திரம் மற்றும் சந்தோஷத்தை அனுபவிப்பது மட்டுமல்லாமல், இந்த பூமியில் புனர் ஜென்மம் எடுப்பதை தவிர்ப்பதும் நமது வாழ்க்கையின் குறிக்கோள்களாக விளங்குகின்றன. இவை அனைத்தும் தெய்வீக கருணையை சார்ந்து இல்லாமல், நமது சிந்தனை மற்றும் செயல்களை சார்ந்து இருக்கிறது.” ஆனால் நந்திநாத சம்பிரதாயத்தை பின்பற்றுவோர், இந்த இறுதி அறிக்கையை சம்மதிக்கமட்டார்கள். சைவ சித்தாந்தத்தில் திருமூலர் தாமே குறிப்பிட்டுள்ளதைப் போல, சிவபெருமானின் அருளினால் மட்டுமே, மோக்ஷத்தின் தலைசிறந்த பரிசை வழங்கமுடியும். §

தானே படைத்திடும் தானே அளித்திடும்

தானே துடைத்திடும் தானே மறைத்திடும்

தானே இவை செய்து தான்முத்தி தந்திடும்

தானே வியாபித் தலைவனும் ஆமே. 1809§

Page 16: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/15_na01_06.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## மகரிஷி நந்திநாதாவின் தத்துவ உரையில் இருந்து ஒரு சூத்திரங்களின் தொகுப்பு

1. பிரபஞ்ச நடத்தின் ஈடு இணையற்ற மற்றும் முழுமையான கடவுளான நடராஜர், பரிவுடன் சனகா மற்றும் மற்ற சித்தர்களை உயர்த்த மற்றும் அவர்களை ஆழ்நிலை ஒலியுடன் தொடர்புடைய மெய்யுணர்வின் மிகவும் உயர்ந்த நிலையில் அமர்த்த, திருநடனம் முடியும் கட்டத்தில் பதினான்கு முறை உடுக்கையை (அவர் தனது வலது கையில் பிடித்து இருந்தார்) ஒலித்தார். உடுக்கையில் இருந்து வெளிவந்த ஆழ்நிலை ஒலிகள், பதினான்கு சூத்திரங்களின் வடிவத்தை எடுத்துக்கொண்டு, *சிவ சூத்திரங்கள்* என்ற பெயரை பெற்றது. இனி அந்த பதினான்கு சூத்திரங்களின் மையக்கருத்தை வழங்கத்தொடங்குகிறேன். §

3. மூன்று பண்புகளின் தொடர்பில் இருந்து நிரந்தரமாக விடுவிக்கப்பட்டு இருக்கும் பரமேஸ்வரன், மாயை எனப்படும் பிரபஞ்சத்தின் தொடர் மாற்றத்தில் நுழைந்து, தனது உணர்வுள்ள சக்தியின் மூலம் எங்கும் எதிலும்

வியாபிக்கும் தன்மையை பெற்று, உலகங்களின் உருவத்தை பெற்று அவற்றை நிர்வாகம் செய்கிறார். §

4. 51 எழுத்துக்களின் முதலாவதாக இருக்கும் *அ* எழுத்து (अ) சுயமாக பிரகாசிக்கும் பண்புடன் இருக்கிறது. அது பரமேஸ்வரனுடன் முழுமையான ஒற்றுமையுடன இருப்பதால், அது பரமேஸ்வரனை போலவே பிரகாசிக்கிறது. முதல் எழுத்தான *அ* (अ) எழுத்துடன், இறுதி எழுத்தான *ஹ* (ह), *அஹம்* என்ற சொல் உருவாகிறது. §

9. *அ* (अ) எழுத்து உணரமுடியாமல் இருப்பதால், அதை மனதால் கிரகிக்க மட்டுமே முடிகிறது. *இ* (इ) எழுத்து *சித்கலாவை* குறிக்கிறது. *உ* (उ) எழுத்தில் இருக்கும் வியாபிக்கும் தன்மையால், அது விஷ்ணுவை குறிப்பிடுகிறது. மனத்தால் மட்டுமே கிரகிக்ககூடிய நிலையில் இருக்கும் ஒன்று, *சித்கலாவுடன்* தொடர்பை பெற்று, பிரபஞ்ச செயல்பாட்டிற்கு ஒரு உருவத்தை ஏற்றுக்கொண்டு, உலகங்களை உருவாக்கி வியாபிக்கும் பண்பின் மூலமாக அந்த உலகங்களுக்குள் நுழைந்து, மகேஸ்வரனாக மனத்தால் கிரகிக்ககூடியத் தன்மையை பெறுகிறது. §

10. *ரீ* (ऋ) என்ற எழுத்தின் மூலம் குறிப்பிடப்பட்டு, புனிதமான உணர்வின் பண்புடைய வடிவமாக, அனைத்திற்கும் பரமேஸ்வரனாக இருப்பவர், *ல்ரி* (ऌ) என்ற எழுத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள, சிவசக்தியுடன் ஐக்கியத்தில் இருந்துக்கொண்டு, மாயையில் நுழைந்து, அதை சிறிதளவு தூண்டிவிட்டு, அசைபவை மற்றும் அசையாதவற்றின் உலகை உருவாக்கி, அவற்றை விரிவாக்கம் செய்கிறார். இவை அனைத்தையும் அவர் ஒருவராக இருந்துக்கொண்டு, தனியாகவும் முழுமையாகவும் செய்கிறார். §

11. நிலவுக்கும் நிலவு ஒளிக்கும் மற்றும் சொல்லுக்கும் அதன் பொருளுக்கும் இடையே ஒரு சிறிய வித்தியாசத்தையும் காணமுடியாது. அதைப்போலவே, மாற்றங்களுக்கும் அந்த மாற்றங்களை தாங்கிக்கொள்ளும் பொருளுக்கும் அல்லது உயிர்சக்திக்கும் இடையே சிறிதளவு மாற்றத்தையும் காணமுடியாது. §

12. பரமேஸ்வரன் *சித்-சக்தி* எனப்படும் தனது சொந்த சக்தி மற்றும் தனது சொந்த விருப்பத்தின் மூலமாக, மாயை எனப்படும் காரண மூலத்தில் இருந்து அனைத்து உலகங்களையும் விரிவாக்கம் செய்கிறார். பரமேஸ்வரனை குறிக்கும் *ரீ* என்ற எழுத்தும், சக்தியை குறிக்கும் *ல்ரி* (ऌ) என்ற எழுத்தும், ஆண்பால் அல்லது பெண்பால் சாராமல் இருக்கும் விசேஷ எழுத்துக்கள் என்பது சாஸ்திரங்களை அறிந்தவர்களுக்கு தெரியும். §

13. எ (ए), *ஓ* (ओ) மற்றும் *ங* (ङ) சொற்கள் மாயை மற்றும் ஈஸ்வரனின் ஒருங்கிணைந்த நிலையை குறிப்பிடுகின்றன. இத்தகைய ஒருங்கிணைப்பு தற்போது துடிப்புடன் இருக்கும் அனைத்து உள்பொருள்களிலும் காணப்படுகிறது. உணரக்கூடியதாக இருக்கும் அனைத்திற்கும் அவர் சாட்சி-மெய்யுணர்வாக இருப்பதால், மகேஸ்வரன் தனது தனிப்பட்ட உள்பொருளைத் தவிர வேறு எதையும் கொண்டிருக்காமல், அவர் மட்டுமே தனியாக இருக்கிறார் என்பது உறுதியாகிறது. §

16. எது பரவெளியாக அறியப்படுகிறதோ, அது *ஹ* (ह) என்ற சொல்லில் இருந்து வளர்ச்சி அடைகிறது. காற்று *ய* (य) என்ற சொல்லில் இருந்து வளர்ச்சி அடைகிறது. நெருப்பு *ர* (र) என்ற சொல்லில் இருந்து வளர்ச்சி அடைகிறது. நீர் *வ* (व) என்ற சொல்லில் இருந்து வளர்ச்சி அடைகிறது. இவ்வாறு உயர்வாக பேசப்படும் சிவயோகத்தின் அரசர், தனது *ஆகமங்களின்* மூலம் அறிவிக்கிறார். §

18. ஒலி, தொட்டுணர்வு, உருவம், ருசி மற்றும் வாசனை என்ற பருமனான ஐந்து பண்புகள் தோன்றுவதற்கு மூலமாக இருக்கும் நுணுக்கமான பஞ்ச பூதங்கள், *ஞ* (ञ), *ம* (म), *ங* (ङ), *ண* (ण) மற்றும் *ன* (न) என்ற ஐந்து எழுத்துக்களில் இருந்து வளர்ச்சி பெறுகின்றன. பரவெளி, காற்று, நெருப்பு, நீர் மற்றும் நிலத்தின் பண்புகளாக முறையே ஒலி, தொட்டுணர்வு, உருவம், ருசி மற்றும் வாசனை விளங்குகின்றன. இந்த ஐந்து பண்புகளை துடிப்புடன் இருக்கும் அனைத்து உள்பொருள்களிலும் உணரலாம்.§

21. உடலோடு இருக்கும் உயிர்சக்திகள் அனைத்திற்கும் ஐந்து ஞானேந்திரியங்களாக இருக்கும் காது, சருமம், கண், மூக்கு மற்றும் நாக்கு ஆகியவை முறையே *ஜ* (ज), *ப* (ब), *க* (ग), *ட* (ड) and *த* (द) என்ற ஐந்து எழுத்துக்களில் இருந்து வளர்ச்சி பெறுகின்றன என்பது அறிவிக்கப்பபடடுள்ளது. §

25. உலகங்களை படைப்பதற்கு முன்பு வளர்ச்சி பெற்ற சத்வ, ரஜஸ் மற்றும் தமஸ் என்ற மூன்று பண்புகளுடன் தன்னை நன்றாக தொடர்புப்படுத்திக்கொண்டு, பிரபஞ்சத்தின் முழுமையான கடவுளாக இருக்கும் மகேஸ்வரன், உடலோடு இருக்கும் ஒவ்வொரு உயிர்சக்தியிலும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு, தொடர்ந்து விளையாடுகிறார். ஶ (श), *ஷ* (ष) மற்றும் *ச* (स) என்ற மூன்று எழுத்துக்களில் இருந்து சத்வ, ரஜஸ் மற்றும் தமஸ் என்ற மூன்று பண்புகள் வளர்ச்சி பெறுகின்றன. §

27. இது வரை விளக்கப்பட்ட வளர்ச்சியுடன் தொடர்புடைய தத்துவங்கள் அனைத்தையும் சிவபெருமான் கடந்து இருக்கிறார். அவர் பரமனாக இருக்கிறார். அவர் எல்லா உயிர்சக்திகள் மற்றும் அதன் செயல்களுக்கு ஒரே

சாட்சியாக இருக்கிறார். எல்லா உயிர்சக்திகளுக்கும், தன்னிடம் இருக்கும் மிகுதியான அருளை வழங்க ஒரு பொருத்தமான உருவத்தை எடுத்துக்கொள்கிறார். “நான் எல்லோருக்கும் பரமாத்துமாவாக இருக்கிறேன், மற்றும் நான் மிகவும் உயர்வான எழுத்தாக விளங்கும் *ஹ* (ह) எழுத்துடன் இணங்கி இருக்கிறேன்.” இந்த இறுதி தகவலை நடராஜர் வழங்கிய பிறகு, தன்னை முனிவர்களின் பார்வைக்குள் மறைத்துக் கொள்கிறார். இவ்வாறு *நந்திகேஷ்வர காஷிகா* முடிவடைகிறது. §

Page 16: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/16_na01_08.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## மூன்றாவது அத்தியாயம்

# திருமூலர் சமயப்பணியில் அனுப்பப்படுகிறார்

இமயமலையில் நாத குரு மகரிஷி நந்திநாதாவின் ஆசியுடன் எட்டு ஸித்திகள் மற்றும் முழுமையான ஞானோதயத்தைப் பெற்ற ரிஷி சுந்தரநாதர், பிற்காலத்தில் ரிஷி திருமூலர் என்ற பெயர் பெற்று, மரியாதைக்குரிய நாத பரம்பரையில் சேர்ந்து, பிற்காலத்தில் அந்த பரம்பரையில் மிகவும் பிரபலமான யோகிகளில் ஒருவரானார். அவர் தனது குருவை மையமாகக் கொண்டு *திருமந்திரத்தை* எழுதினார்: §

நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்

நந்தி அருளாலே மூலனை நாடினோம்

நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்

நந்தி வழிகாட்ட நானிருந் தேனே. 68§

நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்


நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்

நந்தி அருளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்

நந்தி அருளாலே நானிருந் தேனே. 92§

**ஒருமை பற்றிய ஒரு கருத்து**

சுந்தரநாதர் தீட்சை பெற்ற பிறகு, பாரத நாட்டு தென்பகுதியில் சைவ சித்தாந்தத்திற்கு புத்துயிர் அளிக்க, அவரது சற்குருவால் அனுப்பப்பட்டார். நந்திநாதா மற்றும் தனது சந்நியாச சகோதரர்களிடம் இருந்து விடைபெற்ற சுந்தரநாதர், இந்தியாவின் தென் பகுதிகளில், தமிழ் மொழியில் *ஆகமங்கள்* மற்றும் *வேதங்களின்* உண்மையான தகவலை கொண்டு வருவதற்காக, தனது வாழ்க்கையின் சமயப்பணியை தொடங்கினார். பழங்காலத்தில் சுமார் ஆயிரம் கிலோமீட்டர் தூரத்தை கால்நடையாக சாதாரண சாலைகள் மற்றும் பாதைகளில் செல்வது ஒரு நீளமான மற்றும் கடினமான பயணமாக இருந்தது. திபெத்திய எல்லைக்கு அருகில், கங்கை நதியின் பிறப்பிடத்தில், இமயமலையின் பனிமுகடுகளில் கல்லால் உருவான கோயிலாக, வடக்கு திசையில் இருக்கும் கேதார்நாத்தில் தொடங்கி, தான் செல்லும் பாதையில் இருந்த புனிதமான சைவ மையங்களை காண்பதற்காக, சுந்தரநாதர் கடுமையான முயற்சி மேற்கொள்ள வேண்டியிருந்தது என்று சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன. தனது சற்குருவை பிரிந்த இத்தருணத்தில், அவர் கங்கை நதியின் முகட்டில் அமர்ந்துகொண்டார். அவர் பலவருடகாலம் பயின்ற கல்வி நிறைவுப்பெற்று, அவரது சூட்சும ஞான அனுபவங்கள் எங்கும் பரவிக்கொண்டு இருக்க, அவரது வாழ்க்கையின் சமயப்பணி அவருக்காக காத்து இருந்தது. சைவ சமயத்தில் நான்கு வடிவங்கள், நான்கு நிலைகள், இறைவனுடன் ஆன்மாவிற்கு இருக்கும் நான்கு உறவுகள், அடையக்கூடிய நான்கு உணர்தல்கள், ஆன்மாவின் மேம்பட்ட நிலையில் நடைபெறும் அருளின் இறக்கம் மற்றும் உலகை உண்மையாக துறக்கும் சக்தியில் இருக்கும் நான்கு அம்சங்களை பற்றி அவர் பிற்காலத்தில் இவ்வாறு எழுதினார்:§



*தலைசிறந்த சித்தரான நந்திநாதா தன்னிடம் சீடனாக இருந்த சுந்தரநாதருக்கு  ஆசிகளை வழங்கி, இறைவனும் ஆன்மாவும் ஒன்றாக*

*இருக்கும் பரசிவத்தின் முடிவான அனுபவத்தினால், மனிதநேயம் தன்முனைப்பின் மாயை மீது வெற்றிகொள்ள, அத்வைத சைவ சித்தாந்தத்தை தென்னிந்தியாவில் பிரகடனம் செய்யவேண்டும் என்று அந்த திசையை நோக்கி கடினமான பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.*

........................§

குறிப்பறிந் தேன்உட லோடுயிர் கூடிச்

செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை

மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்

கறிப்பறி யாமிகும் கல்விகற் றேனே. 290§

சரியாதி நான்குந் தருஞான நான்கும்

விரிவான வேதாந்த சித்தாந்த மாறும்


பொருளா னதுநந்தி பொன்னகர் போந்து

மருளாகு மாந்தர் வணங்கவைத் தானே.1449§

திருமூலர் எங்கே வாழ்ந்தார் என்று வரலாற்று ஆசிரியர்களிடம் கேட்டால், உங்களுக்கு ஆறு வித்தியாசமான பதில்கள் வரக்கூடும். திருமூலரின் *திருமந்திரத்தின்* அடிப்படையில், கி.மு. 200 யில் வாழ்ந்து, *யோக சூத்திரங்களின்* ஆசிரியராக இருந்த, யோகி பதஞ்சலியின் சமகாலத்தவராக, இந்த வாழ்க்கை வரலாறு, திருமூலரை குறிப்பிடுகிறது. இன்னொரு பகுப்பாய்வில், சுந்தரமூர்த்தி நாயனார் தனது நாயன்மார்களின் பட்டியலில் திருமூலரை குறிப்பிடுகிறார். சுந்தரமூர்த்தி நாயனார் கி.பி. 840 மற்றும் 864 வருடத்திற்கு இடையே வாழ்ந்தார் என்ற பொதுவான கருத்து, திருமூலர் அந்த காலத்தில் வாழ்ந்து இருக்கவேண்டும் என்பதை தெரிவிக்கிறது. மேலும் திருமூலர் தனது *திருமந்திரத்தில்* சிதம்பரத்தில் இருக்கும் பொன்னம்பலம் பற்றி குறிப்பிட்டுள்ளார். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டை சேர்ந்த சிம்மவர்மன் என்கிற பல்லவ அரசனால், முதல் முறையாக பொற்கூரை வேயப்பட்டது என்பதால், திருமூலர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு அல்லது ஆறாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்து இருக்கவேண்டும் என்று பல வரலாற்று ஆசிரியர்கள் முடிவுக்கு வருகிறார்கள். ஆனால் இந்த முடிவு, திருமூலர் தனது *திருமந்திரத்தில்*, சிதம்பரத்தை தனது தூல கண்களால் அல்லாமல் சூட்சும பார்வையால் விவரிக்கிறார் என்ற கூற்றை நிராகரிக்கிறது. ராஜா ராஜ சோழனின் தோழமையை பெற்று, கி.பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த போகர் ரிஷிக்கு காலாங்கி (திருமூலரிடம் சீடனாக இருந்தவரின் பெயர்) என்ற முனிவர் குருவாக இருந்தார் என்பதை கருத்தில்

கொண்டு, அந்த காலத்தில் திருமூலர் இருந்ததாக சிலர் கருதுகிறார்கள். மேலும் சிலர் அவரது எழுத்து நடையை சுட்டிக்காட்டி, அவர் பதினோராம் நூற்றாண்டு அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கலாம் என்று கருத்து தெரிவிக்கிறார்கள். இந்தியாவின் வரலாறு சர்ச்சைக்குரியது என்பது ஒருபுறம் இருக்க, இந்த தலைசிறந்த குருமார்கள் எந்த காலத்தில் வாழ்ந்தார்கள் என்பது தொடர்ந்து புதிராக இருக்கக்கூடும். §

பன்னிரண்டாம் நூற்றாண்டில் சேக்கிழார் தான் இயற்றிய *பெரியப்புராணத்தில்* தெளிவாக பதிவு செய்துள்ள திருமூலரின் பயணங்கள், கீழிருக்கும் கதையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக சுந்தரநாதர் மட்டும் தனியாக, நேபாளத்தின் காத்மாண்டுவில் இருக்கும் பசுபதீஸ்வரர் கோயிலுக்கு சென்றார். இவருக்கு 300 அல்லது 400 வருடங்கள் முன்பாக, கௌதம புத்தர் தனது தத்துவங்களுடன், நேபாளத்தில் இருந்து தென்னிந்தியா வந்தார் மற்றும் அதன் பிறகு இலங்கைக்கு பயணம் மேற்கொண்டார். அந்த சிவன் கோயிலில், சுந்தரநாதர் புத்தரின் வாழ்க்கை மற்றும் போதனைகள் மற்றும் தனது சொந்த எதிர்காலம் பற்றி அழமாக சிந்தித்தார். கௌதமரின் வாழ்க்கையைப் பற்றி ஆழ்ந்த சிந்தனை மேற்கொண்டு, ஊக்கத்துடன் தனது புனித யாத்திரைக்கு தயாரானார். ஆனால் அதில் ஒரு வித்தியாசம் இருந்தது. சிவபெருமான் மீது மிகவும் வலுவாக, முழுமையாக மற்றும் தீவிரமான அன்புடன் இருந்த திருமூலரின் ஈடுபாடு, பௌத்த சமயத்தில் காண முடியவில்லை. இறையன்பு ஆன்மாவில் இருக்கும் மாசுகளை அழித்து அதனை சுத்தப்படுத்துகிறது என்பதை அவர் அனுபவப்பூர்வமாக தெரிந்துகொண்டார். §



சுந்தரனாதர் இமயமலையில் இருந்து கால்நடையாக, பலவருடங்களுக்கு மேற்கொண்ட கடுமையான பயணம் பனைமரங்கள் நிறைந்த தமிழ்நாட்டில்

*முடிவடைந்தது. இந்த படத்தில் திருமூலர் நடந்து செல்லும் பாதையில், பனைமரம் ஏறுபவன்  மரத்தில் ஏறி நுங்கு பறிப்பதாக சித்தரிக்கப்பட்டுள்ளது.*

........................§

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்

பொன்போற் கனவில் பொரிய வறுப்பினும்

அன்போ டுருகி அகங்கழை வார்க்கன்றி

என்பொலோ மணியினை எய்தஓண் ணாதே. 272§

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை

அவனொடொப் பார்இங்கும் யாவரும் இல்லை

புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்

தவனச் சடைமுடித் தாமரையானே. 5§


காத்மாண்டுவின் உயரமான பள்ளத்தாக்குகளை கடந்து, தென்கிழக்கு திசையில் முன்னேறி, இன்று வாரணாசி என்று அழைக்கப்பட்டு, சிவபெருமானின் திருத்தலமாக, ஒளியின் நகரமான காசிக்கு முன்னேறினார். அங்கே அவர் விஸ்வநாதர் கோயிலில் சிவபெருமானை தரிசித்தார். அந்த வடநாட்டு கோயிலுக்கு வரும் பக்தர்களின் வழக்கத்தைப் போல, அவர் தனது மகாதேவனுக்கு அருகில் சென்று, தனது சொந்த கைகளால் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தார். இந்த வழிபாட்டின் போது, தான் நன்றாக கற்ற *வேத-ஆகமங்களின்* உண்மையை, தனது குருவான மகரிஷி நந்திநாதா விளக்கச்சொல்லி கேட்க, மீண்டும் இமயமலைக்கு சென்று, அவருக்கு அருகில் இருக்கவேண்டும் என்ற ஏக்கம் ஏற்பட்டது. அப்போது அந்த சிவலிங்கம் அவரது உள்ளத்தில் இருந்து அவரிடம் பேசத்தொடங்கி, குரு உண்மையில் அவருடன் இருந்து, அவருடன் பயணித்துக்கொண்டு இருப்பதாகவும், இந்த ஒருமையை என்றும் மாற்றமுடியாது என்றும் நினைவூட்டியது. §

கோயிலில் நமஸ்காரம் செய்துவிட்டு, பின்னோக்கி நடந்துவந்து, நுழைவாயிலில் வலது பக்கமாக திரும்பி, நம்பிக்கை மற்றும் மனஉறுதியுடன் கிளம்பினார். சுந்தரநாதர் வடஇந்தியாவின் சமவெளிகளில் இருந்து வெளிவந்து, பல மாதங்களுக்கு கிராமத்து பாதைகள், சாலைகள் மற்றும் பலவண்ணங்களில் இருந்த நெல் வயல்களுக்கு அருகில் இருந்த பாதைகள் வழியாக தனது புனித யாத்திரையை தொடர்ந்தார். §

**தென் இந்தியாவிற்குள் நுழைதல்**

விந்தியா, ஸ்ரீ பட்வர்தன் மற்றும் காளஹஸ்தியில் சிவபெருமானை தரிசித்ததாக  அவரது வரலாற்று பதிவுகள் தெரிவிக்கின்றன. அவர் ஸ்ரீ காளஹஸ்தி கோயிலில் சிறிது காலம் தங்கினார். இந்த கோயில் பஞ்ச பூதங்களில் காற்றுடனும், நிழல் கிரகங்களான ராகு மற்றும் கேதுவுடன் சம்பந்தப்பட்டும்  இருக்கிறது. இங்கே அவர் பன்மைவாத  சைவ சித்தாந்தத்திற்கு கிடைத்த அங்கீகாரம் மற்றும் அதன் பிரபலத்தை பார்த்து, தென்னிந்திய மக்களின் மனதில் அத்வைத சைவ சித்தாந்ததின் உண்மைகளுக்கு சம்மதத்தை பெறும் தனது பணியின் அவசியத்தை உணர்ந்து இருக்கவேண்டும். அவர் சிவபெருமானின் யாவும் கடந்தத் தன்மையை உணர்ந்து இருந்தாலும், சிவபெருமானை எங்கும் மற்றும் தான் சந்திக்கும் ஒவ்வொருவரின உள்ளும் கண்டார். §

அங்கிருந்து பூமியில் இருக்கும் மிகவும் பழமையான காக்கேசிய இனத்தவர்களான, திராவிட நாட்டு மக்களின் தமிழ்நாட்டில் உள்ள திருவிலங்காட்டிற்கு சுந்தரநாதர் சென்று, பின்னர் காஞ்சிபுரத்திற்கு புறப்பட்டார்.  காஞ்சிபுரத்தில் அவர் முதலில் பஞ்சபூங்களில் நிலத்துடன் தொடர்புடைய கோயிலுக்கு சென்றார், இங்கே சிவபெருமானின் குணப்படுத்தும் சக்திகள் உறுதியாக, மிகவும் சிறப்பானதாக மற்றும் பிரபலமாக இருக்கின்றன. ஒவ்வொரு கோயிலிலும் திருமூலரின் இறையன்பு அதிக வலுவடைந்து, சிவபெருமானின் மீது அவரது ஈடுபாடு அதிக முழுமை பெற்றது. இதைப்பற்றி அவர்:§



*சுந்தரநாதர் தென் இந்தியாவில் தொலைதூரத்தில் இருந்த சிதம்பரத்தை வந்தடைந்தார். அவருக்கு நகரமும் அதன் செயல்பாடுகளும் பிடிக்காமல் காடுகளில் வசித்து வந்தார். அவர் ஓடைகளில் குளித்து, தரையிலும் விலங்குகள் மற்றும் பூச்சிகளை தவிர்க்க சிலசமயங்களில் மரக்கிளைகளிலும் உறங்கினார்.*

........................§

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்

தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை


ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்

ஆத்தம்செய் தீசன் அருள்பெற லாமே. 39§

குறைந்தடைந் தீசன் குரைகழல் நாடும்

நிறைந்தடை செம்பொனின் நேரோளி ஒக்கும்
மறைஞ்சடம் செய்யாது வாழ்த்தவல் லார்க்குப்
புறஞ்சடம் செய்வான் புகுந்துநின் றானே. 40§

சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான்என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்
றாடுவன் ஆடி அமரர்பி ரான்என்று
நாடுவன் நானின் றறிவது தானே. 50§



*சுந்தரநாதர் தனது சூட்சும உடலுடன் இறந்த இடையனின் உடலை நெருங்கி, அந்த பிரேதத்திற்குள் மனோஉணர்வுடன் நுழைந்து, அதற்கு மீண்டும் உயிரளித்தார். அவர் ஒரு தமிழனின் உடலில் நுழைந்து முதல்முறையாக விழித்ததும், தங்களை மேய்க்கும் இடையன் மீண்டும் உயிர்பெற்று நலமாக இருப்பதை கண்ட பசுக்களின் கூட்டம் மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்டார்.*

……………………….§

இங்கிருந்து சுந்தரநாதர் மலையேற்றம் மூலம் சிதம்பரத்திற்கு சென்று, அங்கே நீண்டநாட்கள் தங்கியிருந்து, சிவபெருமானின் ஆனந்த *தாண்டவ* தரிசனத்தை பெற்றார். திருமூலர் ஆழ்ந்த தியானம் நிறைந்த வாழ்க்கையை

வாழ்ந்து, உட்புறமாக தனது கவனத்தை திருப்பி, சிறந்த விரதங்களை மேற்கொண்டு, தனக்குள் நடைபெறும் நடனமாக மெய்யுணர்வை அனுபவித்தார். அவர் நுழைந்த யோக நிலைகள் காலத்தை கடந்து இருந்ததால், தில்லையில் (சிதம்பரத்திற்கு இன்னொரு பெயர்) பல்லாயிரக்கணக்கான வருடங்கள் கழித்ததாக உருவக வடிவில் எழுதியுள்ளார். §

செப்பும் சிவாகமம் என்னும்அப் பேர்பெற்றும்

அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்

தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்

ஒப்பிலி கோடி யுகம்இருந் தேனே. 74§

ஒரு நாள் அவர் வழக்கமாக நடந்து செல்லும் போது, ஒரு அடர்த்தியான காட்டை அடைந்தார். அங்கே சுந்தரநாதரின் கால் ஒரு சிவலிங்கத்தின் மீது தடுக்கியது. அதனால் அவர் உடனடியாக தரையில் விழுந்ததுவிட்டார். அது தனது கருங்கல் அடித்தளத்துடன் ஒரு வலுவான லிங்கமாக, சுமார் ஐம்பது சென்டிமீட்டர் உயரத்துடன் இருந்தது. சுந்தரநாதரின் வழிபாடு அதிக முழுமையாக, வலுவான ஒருமுகச்சிந்தனையுடன் தன்னையே மறந்தநிலையில் இருந்ததால், ஒற்றுமையின் ஒரு ஆற்றல்மிக்க அனுபவத்தில், லிங்கத்துடன் ஒன்றி இருக்கும் உணர்வை பெற்றார். இந்த நான்-கடவுள் அனுபவம் அந்த லிங்கத்திற்கு மேலும் சக்தியை வழங்கியது. இன்று முப்பத்தி ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் சிதம்பரம் கோயில் வளாகத்தில், தனது சொந்த கர்ப்பக்கிரகத்தில் அமைந்துள்ள அந்த லிங்கத்தின் மீது வழிபாடு நடத்தப்படுகிறது. §

ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்

ஆய பசுவும் அடலே றெனநிற்கும்

ஆய பலிபீடம் ஆகுநற் பாசமாம்

ஆய அரனிலை ஆய்ந்துகொள் வார்கட்கே. 2411§

மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்

மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்

மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்

மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே. 1726§

சுந்தரநாதருடன் சக-மாணவராக இருந்த வியாகிறபாத முனிவர், அந்த சுயம்பு லிங்கத்தை திருடர்களிடம் இருந்து காப்பாற்ற, முட்களுடன் சதுப்புநிலத்தில் செழிப்பாக வளரும் *தில்லை* மரங்களின் *(Excoecaria agallocha)* புதர்களால் உருவாக்கப்பட்ட ஒரு கூடாரத்தில், அதனை ஸ்தாபனம் செய்து, ஒரு சிறிய குளத்திற்கு அருகே தனது *சாதனா* மற்றும் வழிபாட்டை நடத்தினார் என்றும் அந்த குளம் பிற்காலத்தில், கோயிலில் நுழைவதற்கு முன்பாக பக்தர்கள் தங்கள் கை கால்களை கழுவிக்கொள்ளும் கோயில் குளமாக மாறியது என்றும் சிதம்பரம் கோயில் தல புராணம் குறிப்பிடுகிறது. §


### இறக்காமல் மறுபிறவி எடுத்தல்

அதிக செயல்பாடுகள் இல்லாமல் மந்தமாக இருந்த சிதம்பரம் கிராமத்தில் இருந்து கிளம்பி, காவேரி ஆற்றை கடந்து, திருவாவடுதுறை வந்து அடைந்தார். இந்த சிவதலத்தில் திருமூலரின் ஜீவ சமாதி அமைந்து இருக்கிறது. ஆனால் இன்று அந்த ஆதினத்தில் இருக்கும் நிர்வாகிகள், அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டதைப் பற்றிய உண்மை யாருக்கும் தெரியாது என்று கூறுகிறார்கள். இந்த தலத்தில் சிவபெருமான் அவரை தன்னுடன் வரும்படி அழைத்து இருக்கிறார், ஆனால் அவருக்கு அந்த இடத்தை விட்டு செல்ல மனமில்லை. §

காவேரி நதிக்கரையில் ஒரு நாள் நடந்து சென்றுகொண்டு இருக்கும் போது, இறந்து இருந்த ஒரு இடையனுக்கு அருகில் ஒரு பசுக்களின் கூட்டம் அழுதுக்கொண்டு  இருப்பதைக் கண்டு மனம் பதறினார். பசுக்களின் துயரம் கண்டு மனம் இரங்கிய சுந்தரநாதர், அவற்றின் துயர்துடைக்க நினைத்தார். சித்த யோகத்தில ஒரு சிறந்த வல்லுனராக இருந்ததால், அவர் அந்த இடையனின்  உடலுக்குள் செல்ல ஒரு திட்டம் தீட்டினார். §

அவர் தனது தூல உடலை மறைக்க இடம் தேடிய போது, அவருக்கு உட்புறமாக காலியாக இருக்கும் ஒரு மரக்கட்டை கிடைத்தது. அவரது உடல் பாதுகாப்பாக இருக்க, அந்த மரக்கட்டைக்குள் தவழ்ந்து சென்று, மனதை வசியம் செய்து உடலை செயலற்று வைத்திருக்கும் மெய்மறதி நிலைக்கு சென்று, தனது சூட்சும உடலுடன் வெளியே வந்து, இறந்திருந்த இடையன் மூலனின் உடலுக்கு அருகில் சென்று, அந்த பிணத்தின் மீது சாய்ந்து, அதனுள் நுழைந்து அதற்கு மீண்டும் உயிர் வழங்கினார். அவர் மூலனின் உடலில் நுழைந்து விழித்ததும் முதலில், அந்த கூட்டத்தில் இருந்த ஒரு பசு தனது முகத்தை பார்த்துக்கொண்டு இருப்பதையும், அது தன் பெரிய கண்களிலிருந்து ஆனந்த கண்ணீர் வடிப்பதையும் கண்டார். இதைக்கண்ட மற்ற பசுக்கள் அனைத்தும் தங்களுக்கு பிரியமான மூலனை சுற்றி நின்று, தங்களது கூர்மையான நாக்குகளை கொண்டு மூலனின் முகம் மற்றும் உடலை நக்கி சந்தோஷத்தில் பலமாக உக்காரமிட்டன. சிறிது நேரம் கழித்து, அவை வழக்கம் போல புல்லை மேயத் தொடங்கின. இதை கண்ட சுந்தரநாதரின் இதயம் கனிந்தது. §

மாலை பொழுது சாய்ந்ததும், பசுக்கள் தங்களது வீடுகளுக்கு திரும்பத் தொடங்கின. அந்த பசுக்கள் புதிய மூலனை வழிநடத்தி சென்றன. மூலனின் மனைவி வாசலில் காத்து இருந்தாள். அவள் தனது கணவனின் நடவடிக்கைகள் வித்தியாசமாக இருப்பதைக் கண்டு அழத்தொடங்கினாள். தான் அவளது கணவன் இல்லை என்றும், அவளது கணவன் இறந்துவிட்டான் என்றும் சுந்தரநாதர் அவளிடம் கூறி, வீட்டில் நுழையாமல் வழியில் தான் கண்ட ஒரு மடத்திற்கு சென்றுவிட்டார். §



திருமூலர் ஒரு குகையில் தனியாக, பலவருடங்களுக்கு சமாதிநிலையில் இருந்ததாக புராணக்கதைகள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு வருடத்தின்

*முடிவிலும், அந்த வருடம் முழுவதும் செய்த தியானத்தின் விளைவாக ஒரு பாடலை, ஒரு பனை ஓலைச் சுவடியில் ஒரு எழுத்தாணியின் மூலம் எழுதுவார். இவ்வாறு அவர் மிகவும் பொறுமையாக சூட்சும ஞான உரையாக விளங்கும் திருமந்திரத்தை இயற்றினார்.*

……………………§

தனது கணவனின் விசித்திரமான நடவடிக்கையைப் பற்றி, மூலனின் மனைவி ஊர் பெரியவர்களிடம் தெரிவித்தாள். அவர்கள் மடத்தில் மூலனின் உருவில் இருந்த சுந்தரநாதரிடம் விசாரிக்க தொடங்கினார்கள். ஆனால் சுந்தரநாதரின் புலமை மற்றும் சமயோசித புத்தியை பார்த்து வியந்தனர். மூலனின் மனைவி குறிப்பிட்டதைப் போல, அவரது மனநலம் பாதிக்கப்படவில்லை என்றும், அவர் சிவயோகியை போல காட்சி அளிக்கிறார் என்றும், அவரது சிறப்பை தங்களால் மதிப்பிட முடியவில்லை என்றும் ஊர் பெரியவர்கள் மூலனின் மனைவிடம் கூறி, அந்த மடத்தை விட்டுக் கிளம்பினர். மூலனின் மனைவி குழம்பி நின்றாள், ஆனால் தனது கணவனிடம் மாற்றம் இருக்கிறது என்பதை விரைவில் அவளும் புரிந்துகொண்டாள். கிராமவாசிகள் இடையனாக இருந்த அந்த திருமூலரை, "புனிதமான மூலன்" என்று அழைக்க ஆரம்பித்தனர். திருமூலருக்கு வாழ்க்கை மற்றும் மரணத்தில் இருந்த மர்மங்கள் விசித்திரமாக தோன்றவில்லை, மற்றும் அவர் வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை பற்றியும், வாழ்க்கையின் இந்த அடிப்படை உண்மைக்கு மக்கள் உரிய மதிப்பு அளிக்காதது பற்றியும் எழுதினார்:§

வாசந்தி பேசி மணம்புணர்ந்து அப்பதி

நேசந் தெவிட்டி நினைப்பொழி வார்பின்னை

ஆசந்தி மேல்வைத்து அமைய அழுதிட்டுப்

பாசந்தீச் சுட்டுப் பலியட்டி னார்களே. 150§

வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்கள்

அச்சக லாதென நாடும் அரும்பொருள்

பிச்சது வாய்ப்பின் தொடர்வுறு மற்றவர்

எச்சக லாநின் றிளைக்கின்ற வாறே. 156§

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே

விழக்கண்டும் தேறார் வழியிலா மாந்தர்

குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்

விழக்கண்டும் தேறார் வியனுல கோரே. 177§


பாலன் இளையன் விருத்தன் எனநின்ற

காலங் கழிவன கண்டும் அறிகிலார்

ஞாலம்கடந்து அண்டம் ஊடறுத் தான்அடி

மேலுங் கிடந்து விரும்புவன் நானே. 181§

திருமூலர் தான் புல்வெளிக்கு அருகில் விட்டுச்சென்ற உடலை தேடினார். உட்புறமாக காலியாக இருந்த மரக்கட்டையை தேடிப்பிடித்து, அதனுள் பார்த்த போது அவரது உடலை காணவில்லை. அங்கே அதைப்பொன்ற மரக்கட்டைகளில் பல நாட்களுக்கு தேடினார். இறுதியாக விரக்தி அடைந்து, தனது வடநாட்டு உடலை விட்டுச்சென்ற அந்த மரக்கட்டை மீது *பத்மாசனத்தில்* உட்கார்ந்துக்கொண்டார். யோக சமாதியின் ஆழ்த்திற்கு சென்று, அவர் தனது குருவான மகரிஷி நந்திநாதாவை தொடர்புக்கொண்ட போது, தமிழ் பேசும் இடையனின் உடலுடன் தன்னை நன்றாக பொருத்திக்கொண்டு, தமிழையும் சரளமாக பேசத்தொடங்கியதை கண்ட சிவபெருமான், தனது அழிக்கும் சக்தியை பயன்படுத்தி அந்த வடநாட்டு உடலின் அணு அமைப்பை அழித்துவிட்டார் என்பதை அறிந்துகொண்டார். சித்தாந்தம் மற்றும் வேதாந்தத்தை நிரந்தரமாக இணைத்து, தமிழ் பேசும் மக்களுக்கு *சைவ ஆகமங்கள்* மற்றும் புனிதமான *வேதங்களின்* உண்மைகளை, தன்னால் இனி சிறந்த முறையில் தரமுடியும் என்பதை உணர்ந்துக்கொண்டார். தனக்கு சிவபெருமான் தந்த குறிக்கோள் பணியை பற்றி, அவர் இவ்வாறு குறிப்பிட்டு இருக்கிறார்:§



*காலத்தால் ஏற்பட்ட மாற்றங்களினால், நாம் திருமூலரின் நூற்றுக்கணக்கான சீடர்களின் வழித்தடங்களை இழந்து இருக்கிறோம். இமயமலையில் இருந்து வந்த ரிஷி பெங்களூரில் தோன்றும் வரை, கி.மு. 200 முதல் கி.பி. 1700 வரை, வாழ்ந்த குருமார்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கை வரலாறு நம்மிடம் இல்லை.*

……………………§

பின்னைநின்று என்னே பிறவி பெறுவது

முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்

என்னைநன் றாக இறைவன் படைத்தனன்

தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே. 81§

**3,000 வருடங்கள் மேற்கொண்ட யோகம்**

ரிஷி திருமூலர் திருவாவடுதுறைக்கு திரும்பி, கோயிலின் மேற்கே இருந்த புனிதமான அரசமரம் அல்லது போதி மரத்து அடையில், *பத்மாசனத்தில்* அமர்ந்து சிவபெருமானை வழிபடத் தொடங்கினார். இந்த 3,000 வருடங்களும், இறுதி முக்தியான மோக்ஷத்தை பெறுவதற்காகவும், காத்திருக்கும் சிவபெருமானின் அருளை தேடிப்பிடிக்கவும், உச்சந்தலை வரை குண்டலினி எழுச்சி பெற்ற காரணத்தால், சாட்சி சக்கரங்களை உடைத்துக்கொண்டு வந்த போது *நாடிகள்*, பிராண சக்திகள், ஞான ஒளிகள், மந்திரங்கள் மற்றும்

யந்திரங்களின் பல விரிவாக்கங்களை வெளிக்கொண்டு வந்த ஒரு ஆழமான யோகம் மற்றும் உட்புற பாதையாக விளங்கியது. இந்த உட்புற தேடல்களைப் பற்றி, இந்த மிகப்பெரிய யோகி *திருமந்திரத்தில்* இருக்கும் நூற்றுக்கணக்கான மறைஞான பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். §

நயனம் இரண்டும் நாசிமேல் வைத்திட்

டுயர்வெழா வாயுவை உள்ளே அடக்கித்

துயரற நாடியே தூங்கவல் லார்க்குப்

பயனிது காயம் பயமில்லை தானே. 605§

மூலத்து மேலது முற்சது ரத்தது

காலத் திசையிற் கலக்கின்ற சந்தினில்

மேலைப் பிறையினில் நெற்றிநேர் நின்ற

கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே. 627§

வட்டங்க ளேழு மலர்ந்திடும் உம்முளே

சிட்டன் இருப்பிடஞ் சேர அறிகிலீர்

ஒட்டி யிருந்துள் உபாயம் உணர்ந்திடக்

கட்டி இருப்பிடங் காணலு மாகுமே. 768§

மேலெறிந் துள்ளே வெளிசெய்த வப்பொருள்

கால்அறிந் துள்ளே கருத்துற்ற செஞ்சுடர்

பார்றிந் தண்டஞ் சிறகற நின்றது

நானறிந்து உள்ளேழ நாடிக்கொண் டேனே. 1017§

அவர் வருடத்திற்கு ஒரு முறை தனது சமாதியில் இருந்து வெளிவந்து, தனது தியானங்களில்  இருந்து ஒரு பாடலை வழங்கி, அதன் அர்த்தத்தைப் பற்றி ஒரு சிறிய விளக்கம் வழங்கியதாக புராணக்கதைகள் கூறுகின்றன. அவர் மூவாயிரத்திற்கும் மேலான பாடல்களை எழுதியதால், அவர் மூவாயிரத்திற்கும் மேலான வருடங்கள் வாழ்ந்து, இரண்டு ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக பிறந்து இருக்கவேண்டும். வேறு சிலர் நாளுக்கு ஒன்று என்று 3,000 நாட்களுக்கு பாடல்களை வழங்கியதாகவும், இந்த 3,000 பாடல்களில் அதிக அளவிலான ஞானம் அடங்கி இருப்பதால், 3,000 வருடங்கள் என்று பாடல் வடிவில் புராணக்கதை தோன்றியதாகும் கூறுகின்றனர்.

ஒவ்வொரு பாடலில்  இருக்கும் நான்கு வரிகளையும் முழுமையாக புரிந்துகொள்ள ஒரு வருடத்தின் ஆழமான தியானம் தேவைப்படும். §

வரலாறு என்னவாக இருந்தாலும் திருமூலரின் புனிதமான உரை நிலைத்து இருந்து, சுமார் 2,200 ஆண்டுகளுக்கு வளர்ச்சி பெற்று இருக்கிறது. இன்றும் பல புதிய மொழிபெயர்ப்புக்கள் மற்றும் பதிவுகள வெளியிடப்படுகின்றன, மற்றும் ஆயிறக்கணகான அமைப்புக்கள் அவற்றை தனது  தத்துவ மற்றும் மொழியியல் பொக்கிஷங்களில் ஒன்றாக கருதுகின்றன. அதில் இறுதியாக இருக்கும் பாடல்கள் எங்கும் இருந்து எதிலும் வியாபித்து இருந்து, சொற்களால் விளக்கமுடியாதவராக இருக்கும் சிவபெருமானைப் பற்றி எடுத்துரைக்கிறது. §

செழுஞ்சடை யன் செம்பொ னேயொக்கும் மேனி

ஒழிந்தன னாயும் ஒருங்குடன் கூடும்

கழிந்திலன் எங்கும் பிறப்பிலன் ஈசன்

ஒழிந்திலகு ஏழுலகு ஒத்துநின் றானே. 3034§

விண்ணவ னாய்உலகு ஏழுக்கு மேலுளன்

மண்ணவ னாய்வலம் சூழ்கடல் ஏழுக்கும்

தண்ணவன் ஆயது தன்மையின் நிற்பதோர்

கண்ணவ னாகிக் கலந்துநின் றானே. 3037§

புவனா பதிமிகு புண்ணியன் எந்தை

அவனே உலகில் அடர்பெரும் பாகன்

அவனே அரும்பல சீவனும் ஆகும்

அவனே இறையென மாலுற்ற வாறே. 3039§

உண்ணின்று ஒளிரும் உலவாப் பிராணனும்

விண்ணின்று இயங்கும் விரிகதிர்ச் செல்வனும்

மண்ணின்று இயங்கும் வாயுவு மாய் நிற்கும்

கண்ணின்று இயங்கும் கருத்தவன் தானே. 3040§

நீரும் நிலனும் விசும்புஅங்கி மாருதம்

தூரும் உடம்புறு சோதியு மாய் உளன்

பேரும் பராபரன் பிஞ்ஞகன் எம்இறை

ஊரும் சகலன் உலப்பிலி தானே. 3045§

சைவ சித்தாந்த தத்துவத்தில் *திருமந்திரத்தின்* முக்கியத்துவத்தை மிகைப்படுத்தப்படுத்துவது கடினமாக இருக்கும். இது “முடிவுகளின் முடிவாக விளங்கும்,” சித்தாந்தம் பற்றி முதலில் வந்த, முழுமையான அறிக்கையாக விளங்குகிறது. இது சைவ சித்தாந்தத்தின் நுணுக்கமான இறையியல் பற்றி இதுவரை எழுதப்பட்ட, அதிக முழுமையான மற்றும் ஆழமான விளக்கமாக இருக்கவேண்டும், மற்றும் இது நந்திநாத சம்பிரதாயத்தின் தொடக்கத்தில் இருந்த குருமார்களின் மிகவும் விரிவான உரைகளாக விளங்குகின்றன. தென்னிந்தியாவின் மற்ற சைவ சாஸ்திரங்களுடன் சேர்த்து பார்க்கும் போது, பன்னிரண்டு *திருமுறைகளில்* அல்லது தெய்வீக புத்தகங்களில் *திருமந்திரம்* பத்தாவதாக இடம் பெற்று இருக்கிறது. §

தமிழ் மொழியில் இருக்கும் இலக்கியங்களின் தொகுப்பாக *திருமுறை* விளங்குகிறது. இந்த இலக்கியங்கள் பெரும்பாலும், பல்வேறு சைவத் துறவிகளால் பத்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டு, பதினோராம் மற்றும் பன்னிரெண்டாம் நூற்றாண்டுகளில் ஒன்று சேர்க்கப்பட்டன. அவை அத்வைத கோட்பாடுகள் மற்றும் ஆத்ம ஞானத்தில் தொடங்கி நெஞ்சை உருக்கும் சிவபெருமானின் துதிப்பாடல்கள் வரை, ஆன்மீக வெளிப்பாடுகளின் அனைத்து வடிவங்களிலும் காணப்படும் ஒரு சைவ கோட்பாடு மற்றும் பாடல்களை உள்ளடக்கியுள்ளது. *திருமுறை* சைவ சமயத்தின் பக்திப்பிரிவின் உயிர் மூச்சாகக் கருதப்படுகிறது. இது தென்னிந்திய கோயில்கள் மற்றும் உலகெங்கும் சைவ வழிபாடு இருக்கும் மற்ற தலங்களில் தினமும் பாடப்பட்டு *வேதங்கள், உபநிடதங்கள்* மற்றும் *ஆகமங்களுக்கு* அடுத்தபடியாக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. *திருமுறையில் திருமந்திரத்தைத்* தவிர அப்பர், சுந்தரர், சம்பந்தர் மற்றும் மாணிக்கவாகர் போன்ற சமய ஆச்சாரியார்களின் தேவாரப்பாடல்கள், சேக்கிழார் எழுதிய பெரியபுராணம் மற்றும் மற்ற படைப்புக்கள் அடங்கியுள்ளன. §

ரிஷி திருமூலர் தனது வாழ்க்கை மற்றும் படைப்புக்களில் தத்துவப் பிரிவுகளை அழித்து, இராஜ்ஜியங்கள் மற்றும் அதன் மக்களிடையே அதிகம் தேவைப்பட்ட ஒற்றுமையை கொண்டு வந்தார். இந்த ஒற்றுமை உருவாக்கிய ஒரு ஒருங்கிணைந்த கலாச்சாரம், தென்னிந்தியா முழுவதும் எண்ணற்ற சிவன் கோயில்கள் மற்றும் இலங்கையில் 1,008 சிவன் கோயில்கள் உருவாக வழிவகுத்தது. *பிரபத்தி* என்கிற முழுமையான அர்ப்பணிப்புடன் ஐக்கியத்தில் இருக்கும் சூட்சும ஞான யோகமான அத்வைத சைவ சித்தாந்தத்தின் தொடர்ந்து நிலைத்து இருக்கும் தத்துவம், மக்களை திருப்திப்படுத்தி செல்வம், ஸ்திரமான அரசாங்கம் மற்றும் கலாச்சார செழிப்பை கொண்டு வந்தது. அந்த காலத்தில் எங்கும் அமைதி நிலவியது. ஒவ்வொரு சிவலிங்கத்திற்கும் தினமும் அபிஷேகம் நடத்தப்பட்டது. பொதுவாக

கடவுளுக்கு வழங்கப்பட்ட மரியாதை ஒவ்வொரு யோகி மற்றும் ரிஷிக்கு வழங்கப்பட்டது. §

ரிஷி திருமூலரிடம் மலங்கன், இந்திரன், சோமன், பிராமன், ருத்திரன், காலாங்கி மற்றும் கஞ்சமலையான் என்று ஏழு சீடர்கள் இருந்தார்கள். அதில் ஒவ்வொருவரும் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மடங்களை தோற்றுவித்து ஆகம பாரம்பரியங்களை பரப்பினார். காலாங்கியின் வரிசையில் ரிகாமா, மலிகைதேவா, நாதந்தார், போகதேவா (இவரை சிலர் பழனியின் போகரிஷி என்று குறிப்பிடுகிறார்கள்) மற்றும் பரமானந்தா ஆகிய முனிவர்கள் வந்தார்கள். இவை அனைத்தும் நமக்கு *திருமந்திரத்தில்* இருந்து தெரிய வருகிறது. ஆனால் இது மிகவும் சிறிய தகவலாக இருக்கிறது, மற்றும் அதன்பிறகு அவர்கள் மேற்கொண்ட அதிகார மாற்றம் மற்றும் கி.மு. 2,200 மற்றும் கி.பி. 1710க்கு இடையே வாழ்ந்த குருமார்களின் முந்தைய தலைமுறைகள், மற்றும் அவர்கள் செய்த சாதனா மற்றும் மிகப்பெரிய *தபஸ்* பற்றிய எந்த தகவலையும் வரலாறு வழங்கவில்லை. கைலாச பரம்பரை அந்த மறைவான வருடங்களில் நிலைத்து இருந்து, தற்போதும் செயல்பட்டு வருகிறது என்பது மட்டுமே நமக்கு தெரியவருகிறது. குருமார்கள் தங்களது குருமார்களைப் பற்றி மற்றும் அவர்களது குருமார்களின் குருமார்களைப் பற்றிக் கூறியவை, நம்மை நவீன யுகத்தின் முதல் தெளிவான கதைக்கு கொண்டு வருகிறது. அந்த கதையில் வரும் சித்தரின் பெயர் நமக்கு தெரியவில்லை மற்றும் அவரை  இமயமலையில் இருந்து வந்த ரிஷியாக நாம் அறிகிறோம். §

Page 18: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/18_na01_11.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## நான்காவது அத்தியாயம்

# இமயமலையில் இருந்து வந்த ரிஷி

கைலாச பரம்பரையில் வந்த அடுத்த சற்குரு பற்றி எங்களுக்கு தெரிந்த தகவலை இங்கே பகிர்கிறோம். அவர் ஒரு நாத சித்தர், அவருக்கு முன்பாக இருந்த சுமார் 157 சற்குருமார்கள் இருந்தார்கள், மற்றும் அதில் 155 சற்குருமார்களின் பெயர் தெரியாது. ஆனால் இந்த தகவல்கள் அனைத்தும் மக்களிடம் பேச்சு வழக்கில் இருந்தவை. பெயர் தெரியாததால், அவர் இமயமலையில இருந்து வந்த ரிஷி என்று அழைக்கப்படுகிறார், மற்றும் அவரது வாழ்க்கை பற்றிய தகவல்கள் மிகவும் குறைவாக இருக்கின்றது. அவரது வாழ்க்கை மற்றும் அவர் வாழ்ந்த காலகட்டம் பற்றி கிடைத்த சில சூட்சும ஞான தகவல்களின் சிறிய விரிவாக்கமாக, பின்வரும் கற்பனை கதை தெளிவான விவரம் மற்றும் சூழ்நிலையை கிரகித்து, இந்தியாவின் துறவறம், தன் உள ஆய்வு, குருமார்களின் முன்பாக அமர்ந்து அவர்களது போதனைகளை கேட்டறிதல் மற்றும் கடவுளை உணர்தல் பற்றிய பழமையான பாரம்பரியம் பற்றி கூறுகிறது. §


### ஒரு சிறுவன் சாதுவாகிறான்

ஒரு நாள் வட இந்தியாவின் ஒரு கிராமத்தில், சூரியன் தொலைவில் இருந்த தொடு வானத்தில் உதயமாகிக்கொண்டு இருந்தது. அந்த கிராமத்தில் இருந்த மக்கள், தங்கள் ஓலை குடிசைகளில், சூரியன் உதித்ததை கவனிக்காமல், கூடுதலாக சில நிமிடங்கள் தூங்குவதில் கவனமாக இருந்தார்கள். இன்று இந்த கிராமத்தை சேர்ந்த ஒரு இளைஞனுக்கு மட்டும் விஷேசமாக இருக்கவிருக்கிறது. இன்று அந்த இளைஞன் காலையில் வழக்கம் போல் எழுந்து தனது வியாபாரத்திற்கு செல்லாமல், விழிப்புணர்வை பெறவிருக்கிறான். §

அந்த இளைஞன் மெதுவாக தனது கட்டிலில் இருந்து எழுந்து, தனது குடிசையை சுற்றிப்பார்த்தான். அவன் நீண்டகாலமாக, இந்த நாளுக்காக

தன்னை தயார்செய்து கொண்டு இருந்தான். அவனது வீட்டில் விலை மதிப்புள்ள பொருட்கள் எதுவும் இல்லாமல் காலியாக இருந்தது, மற்றும் மேலோட்டமான நினைவுகள் மட்டுமே இருந்தன. ஆனாலும், அவன் அந்த அறையை நோட்டமிடும் போது, வாழ்க்கையில் வேதனை அளித்த சம்பவங்கள் அவனது நெஞ்சை உருத்திக்கொண்டு இருந்தன. அதனால் அவன் தன் கவனத்தை இழந்து, தனது தாய் தினமும் தனது முதல் வேலையாக, தந்தைக்கும் தனக்கும் சூடாக காலைச் சிற்றுண்டியை தயார் செய்தது நினைவுக்கு வந்தது. பழைய நினைவில் மூழ்கியதால், சூடான சப்பாத்திகள் மற்றும் சுத்தமான நெய்யின் வாசனை அவனது மூக்கை துளைத்தன. அவனது தந்தை குடுவையில் இருந்த சப்பாத்திகளை திருட முயற்சிக்கும் போது, அவனது தாய் புன்னகைப்பதும் அவனது நினைவில் தோன்றியது. §

இப்போது அவனுடன் குடும்பத்தினர் யாரும் இல்லை. அவன் யாரிடமும் சொல்லாமல் கிளம்பி இருக்கலாம், ஆனால் அவ்வாறு சிந்திக்கும் முன்னர், அவனுக்கு சிறு வயதில் இருந்தே பரிச்சயமான அவனது மாமாக்கள், அத்தைகள் மற்றும் அவர்களது குழந்தைகள் மற்றும் நண்பர்கள் என்று கிராமம் முழுவதும் அவனது வீட்டில் கூடி இருந்தனர். அங்கே ஒரு குழப்பமான அமைதி நிலவியது. அவர்களது குழந்தைகளில் ஒருவன், ஒரு சாதுவாக மாற துறவறம் செல்லவிருக்கிறான். அவன் தனது தந்தைக்கு செய்ய வேண்டிய கடமைகள் காரணமாக, கடந்த ஆண்டு கிராமத்தில் இருக்கவேண்டி இருந்தது. அந்த சமயத்தில், கிராமத்தில் இருந்து சான்றோர்களுக்கு அவனது ஈடுபாடுகளைப் பற்றி தெரிந்து இருந்ததால், அவனை லௌகீக வாழ்க்கையை நோக்கி இழுக்க முயற்சி மேற்கொண்டனர். இந்த முயற்சிகளில் தவறான நோக்கங்கள் எதுவும் இல்லை. இந்த முரண்பாட்டை இந்தியா பல யுகங்களாக எதிர்கொண்டு வருகிறது. ஒரு புறத்தில் தங்களது உண்மையான மற்றும் இயல்பான வேட்கையை தேடிக்கொண்ட சாதுக்கள், சுவாமிகள், யோகிகள், ஆண்டிகள், ரிஷிகள் மற்றும் சித்தர்களுக்கு மிகப்பெரிய மரியாதையை வழங்குவார்கள். ஆனால் விசித்திரமாக (இது மனிதநேய பற்றுகளை பொறுத்தது, சிலசமயம் இல்லாமலும் இருக்கலாம்), ஒருவர் இந்த பாதையை தேர்ந்தெடுக்கும் போது, வழக்கமாக அவன் அல்லது அவளது குடும்பம் மற்றும் சமூகத்தில் இருந்து மிகப்பெரிய தடை மற்றும் மனச்சோர்வை சந்திக்க நேரிடலாம். இந்த பாதை அதிக சோதனைகள் நிறைந்ததாக இருக்கும்; ஆனால் இதில் முயற்சி மேற்கொள்ளும் சிலருக்கு, மற்றும் உணரவேண்டியதை உணர்ந்த வெகு சிலருக்கு, அது அளிக்கும் பலன்களை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. §



*ஒரு நதியின் மூலம் மர்மமாக இருப்பதைப் போல, ஒரு சந்நியாசியின் கடந்தகாலம் மற்றும் அவரது தனிப்பட்ட வரலாறு அறியப்படாமல் இருப்பது*

*வழக்கமான ஒன்றுதான். இதை நிரூபிக்கும் வண்ணம், இந்தியாவின் தெற்குப்பகுதியில் இருக்கும் பெங்களூர் மக்களின் மனதை கவர்ந்த, அந்த தனியான நாடோடியைப் பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை.*

.........................§


அவனது மனம் நிலையில்லாமல் இருந்தாலும், அவனது ஆன்மா உறுதியாக இருந்தது. அவன் பிரியமான பற்றின்மையுடன் சிரித்துக்கொண்டு, தனது இரு கைகளையும் ஒன்று சேர்த்து தனக்கு முன்பாக இருந்த அனைவருக்கும் கனிவாக வணக்கம் செலுத்தினான். எல்லோரும் உடனடியாக, தங்கள் கைகளை உயர்த்தி ஆசி வழங்கினார் கள். இறுதியாக இளைஞன், தனது பாதையை மாற்றிக்கொண்டு, புதிய பாதையில் தனது முதல் அடியை எடுத்து வைத்தான். அவன் தனது பழைய பாதையை மீண்டும் திரும்பிப் பார்க்கவும் இல்லை, அவன் மீண்டும் அந்த கிராமத்தில் தென்படவும் இல்லை.§

**பயணம் மேற்கொள்ளுதல்**

அவன் தனது பாதையில் தனியாக முன்னேற தொடங்கியதும், ஒரு உறுதியான தீர்மானத்துடன் நடந்து, ஓய்வு எடுக்க மட்டும் தனது முன்னேற்றத்தை நிறுத்திக்கொண்டான். அவன் பல நாட்களுக்கு இமயமலையின் நதிகள் ஓரமாக நடந்து சென்று, அவ்வப்போது கிராமத்தில் இருக்கும் கோயில்களை தரிசித்து, சாலைகளில் சென்றால் மக்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதற்காக, வயல்களின் குறுக்காக சென்றுக்கொண்டு இருந்தான். அந்த சமயத்தில், ஒவ்வொரு நாளும் புதிதாக ஒன்றை கற்றுக்கொள்ளும் சந்தோஷமான நாட்களாக இருந்தன. ஒரு நாள் காலை தாமதமாக தூக்கத்தில் இருந்து எழுந்து, பாதி தூக்கத்தில் இருந்த அந்த நாடோடி குளிக்கவும், சூரிய பகவானை வழிபடவும், ஒரு நதியை நோக்கி சென்றான். அந்த நதியில் குளித்து விட்டு, தனது காலை நேர சாதனாக்களை செய்தான் மற்றும் அதன் பிறகு தெற்கு திசையில் நடக்கத் தொடங்கினான். இவ்வாறு பல நாட்கள், வாரங்கள் மற்றும் மாதங்கள் என்று நகர்ந்துக்கொண்டே சென்றன. §

ஒரு டஜனுக்கும் குறைவான நபர்கள் இருந்த ஒரு சாதுக்களின் குழுவுடன் அவனுக்கு நட்புறவு ஏற்பட்டது. அந்த குழுவினர் தங்களிடம் இருந்த சாதாரண உடையை அவனுக்கு வழங்கி, கோயில் குளமாக சென்றுக்கொண்டு இருந்த தங்களது குழுவில் அவனை சேர்த்துக்கொண்டனர். அவர்கள் அப்போது பழனிமலை நோக்கி பிரயாணம் செய்துக்கொண்டு இருந்தனர். பழங்காலத்து முனிவர்கள் வழிபாடு நடத்திய இந்த தென்னிந்திய புண்ணிய தளம், சக்தி வாய்ந்த முருகப்பெருமானின் (வட இந்தியாவில் கார்த்திகேயா என்று அழைக்கப்படுகிறார்) *அறுபடை* வீடுகளில் ஒன்றாக விளங்கியது. பூமியில் இருப்பவர்களுக்கு சிவபெருமானை உணரும் பாதையை தயார்நிலையில் வைத்திருப்பதே முருகப்பெருமானின் குறிக்கோள் பணியாக விளங்குகிறது. அவன் துறவிகளின் கடவுளை தரிசிக்க, அந்த குழு

மேற்கொண்ட நீண்ட பாதயாத்திரையில் முழு மனதுடன் பங்கு பெற்றான் மற்றும் அந்த தரிசனம் அவனது துறவற இலட்சியமாகவும் இருந்தது. §



*இமயமலையில் இருந்து வந்த அந்த சாது, தென்னிந்தியா நோக்கி மேற்கொண்ட நீண்டப் பயணம், அவனை மிகப்பெரிய நதிகள் மற்றும் பாதைகள் இல்லாத காடுகள் மற்றும் கிராமங்கள் வழியாக அழைத்து சென்றது. அவன் சிவபெருமானை வழிபட்டு தனது தினசரி சாதனாக்களை செய்துக்கொண்டு இருக்க, ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சிகரமாக இருந்தது.*

……………………§

அவனுடன் பயணம் மேற்கொண்ட சகோதரர்களுடன் அவன் நெருக்கமானதும், அவர்களது பழக்கங்கள், இரகசியங்கள், வாழ்க்கை மற்றும் வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் மீது அவர்களது கண்ணோட்டம் என்று பல தகவல்களை தெரிந்துகொண்டான். அவர்களிடம் இருந்து ஜலநேத்தி கருவியை பயன்படுத்த, காட்டில் இருக்கும் மூலிகைகளை பயன்படுத்தி தனக்கு வைத்தியம் செய்து கொள்ள, மண்ணை பயன்படுத்தி குளிக்க, மண் சோறு சாப்பிட, நூறு வகை பிராணயாமம் செய்ய மற்றும் சாதாரண மக்கள் தவிர்க்கும் அல்லது நிராகரிக்கும் உலகின் முழுமையை பார்க்க கற்றுக்கொண்டான். தான் சந்திக்கும் ஒவ்வொரு மனிதன் உள்ளும், அவனால் எளிதில் இறைவனை காணமுடிந்தது, மற்றும் அவர்களுடன் இருக்கும் ஒவ்வொரு நாளும் சிவபெருமான் மீதான அன்பு அதிகரித்தது. அவர்கள் அவனுக்குள் தங்களது இளவயது பண்புகளைக் கண்டார்கள்,

மற்றும் அவனிடம் இருந்த ஆவல், சாந்த குணம், ஆர்வம் மற்றும் அமைதியான ஞானத்தை பாராட்டினார்கள். அவர்கள் இரவு நேரங்களில் மேற்கொண்ட நீண்டநேர தியானங்களின் போது, அவனிடம் இருந்த ஒரு விசித்திரமான அமைதி மீது, அவர்களுக்கு மௌனமான பொறாமை இருந்தது. அவன் பழங்கால தத்துவங்களை நன்றாக கற்று, பேச்சிலும் தெளிவாக இருந்து, இரவு நேரங்களில் கேம்ப்ஃபயரை சுற்றி நடந்த விவாதங்களில் தனது கருத்தை நிலைநாட்டும் திறனுடன் பெற்று இருந்ததால், அவர்கள் இந்த புதிய இளைஞனிடம் இருந்து நிறைய கற்றுக்கொண்டார்கள். அவன் அந்த குழுவினருக்கு ஒரு அதிமேதாவியாக தோன்றினான், மற்றும் குழுவினர் அவனுடன் சேர்ந்து இருப்பதில் அதிக ஆர்வம் காட்டினர். அந்த குழுவினரின் ஒட்டுமொத்த திறமை மற்றும் புலமைக்கு நிகராக அவனது தனிப்பட்ட திறமை மற்றும் புலமை இருந்தது. அவன் குழுவில் இருந்த ஆன்மீக சந்தோஷத்தில் மூழ்கி இருந்ததால், குழுவில் எதிர்மறையாக எதுவும் தோன்றவில்லை. அவன் தனது இலட்சிய வாழ்க்கையை வாழ்ந்துகொண்டு இருந்தான். அவன் சாதுக்களில் ஒரு சாதுவாக இருந்தான், மற்றும் இதை காட்டிலும் பெரிய அதிசயம் வேறு எதுவாக இருக்க முடியும்? §


சாதுவின்  கிராமத்தில் இருந்து சுமார் 2,500 கிலோமீட்டர் தொலைவில் இருந்த, பிரபலமான பழனிமலை கோயிலை நோக்கி, சூழ்நிலையை பொறுத்து தினமும் பத்து முதல் பதினைந்து கிலோமீட்டர் என்று, கந்தலான துணிகளை உடுத்திய குழுவினர் நடக்கத்தொடங்கி வாரங்கள் மாதங்கள் ஆனது. இன்றும் இந்தியாவில் பழனிமலை கோயில் மிகவும் பிரபலமாக விளங்குகிறது, மற்றும் பல்லாயிரக்கணக்கான கோயில்களை கொண்டுள்ள இந்தியாவில் அதிக வருமானம் ஈட்டும் பட்டியலில், இந்த கோயில் இரண்டாவது இடத்தில் உள்ளது. §

அந்த குழு கோயிலை நெருங்கத் தொடங்கியதும், தனது வேகத்தை அதிகப்படுத்திக் கொண்டது. யாத்ரீகர்கள் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள சாலையில் ஒன்று சேர்ந்து, இறைவனை நோக்கி தங்கள் பயணம் தீவிரமாக இருக்க வேண்டும் என்பதற்காக, பலர் காலணிகள் ஏதும் இல்லாமல், இரு புறத்திலும் பரவி இருந்த கேழ்வரகு, சிவப்பு மிளகாய் மற்றும் பருத்தி நிலங்களை கடந்து, வாத்துக்களின் கூட்டம் மற்றும் ஆடுகளின் மந்தை ஒன்றாக சென்ற பாதையில் மிகவும் கவனமாக பல்வேறு குழுக்களாக சென்றுக்கொண்டு இருந்தனர். யாத்ரீகர்களில் இருந்த பல குழுக்கள், ஒரே மாதிரியான உடைகளுடன், ஒன்று சேர்ந்து பாடிக்கொண்டு இருந்தனர். இது அவர்களுக்கு ஒரு தனிப்பட்ட பயணமாக இல்லாமல், ஒரே புனித பயணத்தில் ஒரு பரஸ்பர ஆதரவு மற்றும் ஒரு பகிர்வுடன், இணைந்து இருக்கும் ஒரு ஆன்மீக குடும்பமாக இருந்தார்கள். §

எல்லோரும் திறமையான இசைக் கலைஞர்களாக இல்லாவிட்டாலும், எல்லோரும் உற்சாகத்துடன் தாங்கள் நாடும் தெய்வமாக, சிவபெருமானின் இரண்டாவது மகனாக, தமிழ்நாட்டை காக்கும் தெய்வமாக, பிரகாசமாக மற்றும் நிரந்தர பிரம்மச்சாரியாக, கையில் சந்நியாச தண்டத்துடன், வெறும் ஒரு கோவணத்துடன் அழகான இளைஞனாக இருந்த தண்டாயுதபாணியை

போற்றும் பாடல்களை (தங்கள் வேண்டுதலையும் சேர்த்து) ஆர்வத்துடன் பாடினார்கள். அந்த இசைக்குழுவில் இருந்த ஒரு பக்தன், வெறும் இரண்டு வார்த்தைகளை கொண்ட ஒரு மணிநேர பஜனையை வழி நடத்திச்சென்றான். அவன் உரக்கமாக “ஹரோ! ஹரா!” என்று கோஷமிட, மற்றவர்களும் “ஹரோ! ஹரா!” என்று பதிலுக்கு கோஷமிடுவார்கள். தங்கள் நடைப்பயணத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் சிலர், மெதுவாக கோஷமிடுவார்கள். அவர்களை சாதுக்கள் கடந்து சென்று, தாங்கள் அரை மைல் தூரம் முன் இருந்தபோது கேட்ட அதே மந்திரங்களை காதால் கேட்டுக்கொண்டே, அந்த இசைக்குழுவில் இணைந்தனர். §

நடந்துகொண்டு இருக்கும் யாத்ரீகர்களின் கூட்டம் அதிகரிக்கும் போது, அவர்களது நடையில் இருந்த உற்சாகமும் அதிகரித்தது. இறுதியாக 500 அடி உயரத்தில் அமைந்து இருக்கும் கோயிலின் கோபுரங்கள் காட்சி அளித்தன. அவற்றை காண்பதற்கு, முருகப்பெருமான் கோபுரங்களிடம் தனது பாதம் பணியுமாறு அழைப்பது போலவும், அவை அவரது அழைப்பிற்கு இணங்குவது போலவும் இருந்தது. அவர்கள் இரு மலைகளுக்கும் அடிவாரத்தில் அமைந்து இருக்கும் பழனி நகரத்தை நுழையும் போது, சூரியன் அஸ்தமனமாகிக்கொண்டு இருந்தது. நகரம் முழுவதும் பரவி இருந்த பல சாதுக்கள் ஆசிரமங்களில், பயணக் களைப்பினால் சோர்வுற்ற ஆண்டிகள் உடனே தஞ்சம் புகுந்தனர். அவர்கள் அடுத்த நாள் மலை ஏறுவதாக முடிவு செய்து, மகிழ்ச்சியுடன் ஓய்வெடுக்க முடிவு செய்தனர். §



ரிஷி தனது பயணப்பாதையில் எதிர்கொண்ட வித்தியாசமான அனுபவங்களில் பல கிராமப்புற சம்பவங்களும் அடங்கும். ஒரு சமயத்தில்,

*ஒரு உணவகத்தில் அவர் ஒரு தோசையை திருடியதாக ஒரு பெண் அவர் மீது குற்றம் சுமத்த, அவர் அந்த பெண்ணிற்கு உதவ வந்த கூட்டத்திடம் இருந்து தப்பி ஓடவேண்டி இருந்தது.*

........................§

**உட்புற ஒளியில் மூழ்குதல்**

சூரியன் உதயமாகி மலை ஏறுவதை கடினமாக்குவதற்கு முன்பாக, காலையில் வெப்பம் குறைவாக இருக்கும் நேரங்களில், மலை ஏறும் முக்கியத்துவத்தை யாத்ரீகர்கள் அறிந்து இருந்ததால், தொடுவானில் சூரியனின் முதல் கிரணம்  வெளிவருவதற்கு முன்பே, நமது இளவயது சாது விரைவாக கண் விழித்துவிட்டான். காற்று இதமாக வீசும் போது, ஏறுவதும் கடினமாகத தான் இருக்கும். அவன் விழிக்காமல் உறங்கிக்கொண்டு இருக்கும் யாத்ரீகர்களை நோட்டமிட்டான். §

தனக்கு புத்துணர்ச்சியை வழங்கிக்கொண்டு ஒரு புதிய வேஷ்டியை உடுத்தி,  தனது உடலில் ஊற்றிக்கொள்ளவும் தூக்கத்தை களைப்பதற்காகவும், அதிக குளிர்ச்சியான தண்ணீரை பல வாளிகளில் கொண்டு வந்து, திறந்த வெளியில் இருந்த ஒரு கிணற்றில் குளித்தான். அவனுடன் வேறு சிலரும் கண் விழித்து  மலைக்குச் செல்ல தயாராக இருந்ததால், அந்த சிறிய ஊர் வழியாக மலை அடிவாரத்தில் இருந்த நுழைவாயில் வரை மற்றவர்களை பின்தொடர்ந்து சென்று, நீண்டகாலமாக தான் ஏங்கி இருந்த மலையேற்றம் தொடங்கவிருப்பதை மனதிற்குள் குறிப்பிட்டுக் கொண்டான். இந்த புனித தலத்திற்கு பாதுகாப்பாக மற்றும் ஆரோக்கியமாக வந்து சேர்ந்ததற்கு மற்றும் இந்த மலையேற்றத்தை மேற்கொள்வதற்கு நன்றி செலுத்தும் விதமாக அமைதியாக நின்றான். ஒரு சவாலான மலையேற்றத்திற்கு, வழியில் எங்கும் நிற்காமல் செல்வது ஒரு ஒரு முறையான அணுகுமுறையாக இருக்கும் கேள்விப்பட்டு இருந்ததால், இறைவனை வேண்டிக்கொண்டதும் மனதில் உறுதியுடன் கிளம்பினான். §

மலைப் பாறையில் கரடுமுரடாக செதுக்கப்பட்டு, அவனுக்கு முன்பு மலையேறி இருந்த பல இலட்சக்கணக்கான பக்தர்களின் வெறும் கால்களால் தேய்ந்து இருந்த, 659 படிகளில் ஏறி சென்று, இறுதியில் மலை உச்சியை அடைந்தான். அவனுக்கு மூச்சுத் திணறியது, நடப்பதை நிறுத்தி கீழே திரும்பிப் பார்த்தான்.  அவனால்  எல்லா திசையிலும் பார்க்க முடிந்தது மற்றும் தான் நேற்று இரவு வந்து சேர்ந்ததைப் போல, ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் வந்துக்கொண்டு இருந்த காட்சி மற்றும் காலையில் தென்பட்ட ஆயிரக்கணக்கான அடுப்புக்களின் நெருப்பு காலை சிற்றுண்டியை உறுதி செய்த காட்சி, மற்றும் பழனி முருகன் கோயிலை சுற்றி இருந்த வயல்கள் மற்றும் சாலைகள் மற்றும் கிராமங்கள் மற்றும் வீடுகளின் காட்சியைப் போன்று அவன் முன்பு எப்போதும் பார்த்ததில்லை. அவன் மூன்று முறை கோயிலை வலம் வந்து, அன்று நடைபெறவிருந்த முதல் பூஜைக்கு கோயிலுக்குள் நுழைந்தான். §

அவன் கோயிலில் வழிபாடு நடத்திய பிறகு, திருமூலரின் சீடனான காலாங்கியிடம் சீடனாக இருந்து, கோயிலை ஸ்தாபனம் செய்தவரான போகர் ரிஷியின் குகைக்கு  சென்றான். சீன நாட்டை சேர்ந்தவர் என்று சிலரால் கருதப்பட்டு மிகப்பெரிய சித்தராக, பொன்மாற்று சித்தராக, மருத்துவராக இருந்த போகர், கி.மு. சுமார் இரண்டாம் நூற்றாண்டில், இந்த இடத்தில் முதன்முதலில் ஒரு வருடம் முழுவதும் முருகப்பெருமானை வழிபட்டு, இன்றும் கோயிலின் கர்ப்பக்கிரகத்தில் நின்றுக்கொண்டு இருக்கும் 43 அங்குல உயர மூலவரை தனது சொந்த கரங்களால் மந்திரங்களைக் கொண்டு வடிவமைத்து  இருக்கிறார். அவர் அந்த மூலவரை கல் அல்லது உலோகத்தால் உருவாக்காமல், *நவபாஷணம்* என்கிற ஒன்பது நச்சுப்பொருட்களுடன் பல்வேறு மூலிகைகளை கலந்து, கல்லைப் போன்ற ஒரு கலவையை உருவாக்கினார். 2006 ஆம் ஆண்டு தலைசிறந்த கைவினைஞர்கள் தோராயமான சூத்திரங்களைக் கொண்டு, பலவருடங்கள் பழமையான இந்த மூர்த்தியில் சீர்மைப்புக்களை மேற்கொண்டு இருந்தாலும், இன்றும் இந்த மூர்த்தியின் நகலை துல்லியமாக உருவாக்க முடியவில்லை. §

போகர் இன்றும் மலையில் இருக்கும் ஒரு குகையில், அதிக வயதானவராக உயிருடன் இருக்கிறார் என்று உள்ளூர் மக்களிடம் நிலவும் கதைக்கு நம்பிக்கை அளிக்கும் விதமாக, போகரின் புண்ணியதலம் ஒரு சக்தியை கொண்டு இருக்கிறது. அந்த கதை உண்மையா அல்லது பொய்யா என்பது ஒரு புறம் இருக்க, அந்த இளைஞனால் அந்த இடத்தில் இருக்கும் துடிப்புணர்வை உணர முடிந்தது மற்றும் அவன் தலத்தில் இருந்த ஒரு அமைதியான மூலையில் உட்கார்ந்துக் கொண்டான். §

அவன் தனது மனதில் எந்தவித சந்தேகம் அல்லது எதிர்பார்ப்பும் இல்லாமல், கடந்தகாலம் அல்லது எதிர்காலம் பற்றிய  சிந்தனை இல்லாமல், நிகழ்காலத்தில் முற்றிலும் வெறுமையாக இருந்தான். அவனால் சுலபமாக ஆழ்ந்த தியானத்திற்குள் செல்ல முடிந்தது. அவன் சுவாசத்தின் வேகம் குறைந்து, பெரும்பாலும் நின்றுவிட்டது; அவனது சாட்சி தன் மீதே கவனத்தை திருப்பிக்கொண்டது, மற்றும் அது விரைவில் புனிதமான ஞானஒளி, புனிதமான சக்தி மற்றும் அண்டத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு அமைதியால் சுத்திகரிக்கப்பட்டது. அவன் எல்லை இல்லாமல் விரிவாக்கம் பெற்று, வரையறை அல்லது உடல் இல்லாமல், எங்கும் எதிலும் இருந்தான்.  அவன் அந்த நிலையில் இருக்கும் போது, கார்த்திகை (நாள்மீன் கூட்டம்) நட்சத்திர குழுமத்தின் அதிபதியாக இருக்கும் முருகப்பெருமான், ஒரு பிரகாசமான ஒளி வடிவில் காட்சி அளித்தார். அந்த ஒளி மிகவும் பிரகாசமாக இருந்ததால், அவனால் அதனை ஒரு காட்சியாக தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை மற்றும் அந்த ஒளி தன்னை கிரகித்துக்கொள்ள அனுமதித்தான். அவனும் முருகப்பெருமானும் ஒன்றகிவிட்டார்கள். அவன் அங்கே அசையாது உட்கார்ந்து இருக்கும் போது, குண்டலினி மேல்நோக்கி எழுச்சி பெற்று, ஒளியை கடந்த நிலைக்கு அவனை அழைத்து சென்றது. §

அவன் அந்த சமாதி நிலையில் சிறிது நேரம் அமர்ந்து இருந்தான். இறுதியில் அவனுக்கு மீண்டும் அந்த ஒளியின் மீது விழிப்புணர்வு தோன்றியது, மற்றும்

அதன் பிறகு அவன் கண்ட இன்னொரு காட்சியில், முருகப்பெருமான அவனது வாழ்க்கையின் முழுமையான விரிவாக்கத்தை அவனிடம் வெளிப்படுத்தினார். பூர்வஜென்மங்களில் தொடங்கி அந்த சாதுவின் எதிர்காலம் வரை, அனைத்தையும் அவன் தற்செயலாக அறிந்துக்கொண்டான். அந்த வெளிப்பாடு மங்கியதும், அவன் ஒரு பஞ்சைப் போல உட்கார்ந்து, அதன் சக்தியின் ஒவ்வொரு துளியையும் கிரகிக்கத் தொடங்கினான். முழுமையாக திருப்தி அடைந்ததும், எழுந்து நின்றான் மற்றும் சுற்றும்முற்றும் பார்க்காமல், மலையில் இருந்து கீழே இறங்கி தனது பாதையில் செல்லத் தொடங்கினான். §

தனக்கு ஒரு புதிய வாழ்வு கிடைத்ததைப் போல, தான் மீண்டும் உருவாக்கப்பட்டு இருப்பதை நடுங்கிகொண்டு இருந்த அந்த யோகி உணர்ந்தான். ஒரு நாட்டிய கலைஞன் ஒரு அனுபவத்தில் இருந்து இன்னொரு அனுபவத்திற்கு மாறிச் செல்வதைப் போல, அவன் இந்த பேரானந்த அனுபவத்திற்கு பிறகு ஒரு அனுபவத்தில் இருந்து இன்னொரு அனுப்பதிற்கு மாறிச் சென்றான். அவன் வழியாக உயிர் சக்திகள் சீராக பாய்ந்து சென்றன. அவனுக்கு நேரப்பொருத்தம் சரியாக இருந்தது. அவனுக்கு தேவையானது அனைத்தும் எந்தவித முயற்சியும் இல்லாமல் வந்து சேர்ந்தன. அவனுக்கு பசி இருக்கும் போது, யாராவது உணவுடன் வந்து நிற்பார்கள் அல்லது விருந்திற்கு அழைப்பு விடுப்பார்கள். இரவு நேரங்களில் தங்குவதற்கு இடம் தேவைப்படும் போது, அவனைப்போன்று தெய்வீக நாட்டம் உள்ள ஒருவரின் குடிசை அல்லது கோயில் தேவஸ்தானத்தில் தங்குவதற்கு ஒரு இடம் எப்போதும் அவனுக்காக காத்துக்கொண்டு இருக்கும். “இந்த வழியில் செல்லவேண்டுமா அல்லது அந்த வழியில் போகவெண்டுமா?” என்று அவன் என்றுமே சிந்தித்தது இல்லை. அவன் தனது உள்ளத்தில் இருந்து  ஆணையின் படி சென்றுகொண்டு இருந்தான். அவனுக்குக் கிடைத்த இறைவனின் தரிசனமும் குண்டலினி அனுபவமும் மிகவும் தெளிவாக இருந்ததால், அதைப்பற்றி அவன் நினைக்கவேண்டிய அவசியமே இல்லாமல், அவனுடன் தொடர்ந்து வாழ்ந்து வந்தன. §

பாரதநாட்டில் இருக்கும் மக்கள், ஒரு ஆன்மா ஆன்மீக பக்குவத்தை அடைந்து, உலக வாழ்க்கையை கைவிடுவதை உணர்தால், தாங்கள் முக்தி பெறுவதற்காக, அந்த ஆன்மாவிடம் இருந்து சில ஆசிகளை பகிர்ந்துக்கொள்ள விரும்புவார்கள். அவன் ஒரு குறிக்கோள் பணியில் இருப்பதை இயலுணர்வால் உணர்ந்து, அவனது தனிப்பட்ட வழியில் செயல்பட அனுமதித்து, மீண்டும் அவனை லௌகீக வாழ்கையில் ஈடுப்படுத்தாமல் இருப்பதில் கவனமாக இருப்பார்கள். அவனுடன் தேவையில்லாத உரையாடலில் ஈடுபடாமல், அவனுக்கு தேவையானதை வழங்கி, அவன் மீது அக்கறை செலுத்தினார்கள். அவர்கள் அவனுக்காக உணவை தயார் செய்து, அவன் அதை விரும்பிய வேளையில் தனிமையில் சாப்பிட மதிப்பு அளிப்பார்கள். இந்த இளம்வயது சாதுவின் வாழ்க்கையும் இவ்வாறே அமைந்து இருந்தது. அவன் தங்குவதற்கு கிராமவாசிகள் இடம் அளித்தார்கள் மற்றும் தங்களது சம்சார வாழ்க்கை  அவனுக்கு இடையூறு

விளைவிக்காமல் இருப்பதில் கவனமாக இருந்தார்கள். ஒரு கத்தி நீரை சீராக கிழித்துக்கொண்டு செல்வதைப் போல, இத்தகைய கலாச்சாரத்தில், பெயரில்லாத சாது எந்தவித தடையுமின்றி தனியாக தனது பாதையில் முன்னேறி சென்றான். §

**சாது தனது குருவை சந்திக்கிறான்**

அவன் முதல் சமாதி அனுபவத்தைப் பெற்று ஒரு வருடம் கழித்து, பழனி மலையில் இருந்து வடக்கு நோக்கி நடக்கத்தொடங்கி, இமயமலையில் இருந்த ஒரு சிறிய கோயிலை வந்தடைந்தான். அவன் கோயிலின் பிரகாரத்தில் ஓய்வெடுக்க அமர்ந்துகொண்டான். தான் பயணத்தின் முடிவில் இருப்பதை உணர்ந்து, யாவும் கடந்த ஆழ்நிலை தியானத்தினுள் சென்றான். முருகப்பெருமானின் தரிசனத்திற்கு பிறகு அவன் உணர்த்த அந்த தீவிரமான அதிர்வு, சரவணபவவின் பேரின்பத்தில் தணிந்தது. அவன் தனது பணிகளை முடித்துவிட்டதை போலவும், தான் இப்போது இல்லாததைப் போலவும், ஆனால்  அவன் தெய்வீக தன்மையின் மையமாக இருப்பதைப் போல தோன்றியது. அவனை ஆட்க்கொண்டு இருந்த அமைதிக்கடலில் அவன் ஓய்வெடுத்துக்கொண்டு இருந்தான். §

அவன் தன் கண்களை திறந்த போது, தனக்கு முன்பாக ஒரு முதியவர் உட்கார்ந்து இருப்பது தெரிந்தது மற்றும் அவரும் அதே பேரின்ப நிலையில் அமர்ந்து இருப்பதைப் போல தோன்றியது. இளவயது சாது அவருடன் தங்கியிருந்து, அவர் கண்விழிப்பதற்காக காத்து இருந்தான். அந்த முதியவர் கண்திறப்பார் அல்லது பேசுவார் என்று அவன் மூன்று அல்லது நான்கு நாட்கள் காத்து இருந்தான். சில நாட்களுக்குப் பிறகு, அவருக்காக காத்து இருப்பதையும், அவரை வியந்து பார்ப்பதையும் நிறுத்திக்கொண்டான். விரைவில் அவனுக்கு ஒருமையின் மீது மிகப்பெரிய ஆர்வம் ஏற்பட்டது மற்றும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் உணர்வை இழந்தான். அந்த அமைதியான ஒற்றுமையில், இந்த வாழ்க்கையில் மோக்ஷம் தொடர்பாக அவன் கற்கவேண்டிய அனைத்தையும் கற்றுக்கொண்டான். அந்த போதனைகள் அனைத்தும் அவனுக்கு ஒரு சீரான முறையில் வந்தன. முதியவரிடம் இருந்து வெளிவந்த அந்த அமைதியான மற்றும் வலுவான சக்தியை கிரகித்துக்கொண்டும், அதனுடன் தன்னை ஈடுபடுத்திக்கொண்டும், பல நாட்களுக்கு அதே இடத்தில் அமர்ந்து இருந்தான். §

அந்த முதியவருக்கு, அருகில் இருந்த கிராமத்தைச் சேர்ந்த அவரது சீடர்கள் மற்றும் இந்த சிறிய கோயிலில் வழிபடுவதற்காக வந்த யாத்ரீகர்கள் தேவையான பணிவிடைகளை செய்தார்கள். தனது சிஷ்யன் அனுபவித்துக்கொண்டு இருக்கும் வலுவான அனுபவங்களுக்கு குருவின் பாதுகாப்பு இருப்பதை தொலைவில் இருந்து அறிந்திருந்த அவர்கள், அந்த இளைஞனின் தேவைகளுக்கும் உரிய கவனம் செலுத்தினார்கள். அவர்கள் இந்த மலைப்பகுதிகளில் பல வருடங்களுக்கு ஒன்றாக இருந்தார்கள். பெரும்பாலான நாட்கள் முழுமுதற்பொருளின் மிகப்பெரிய

அனுபவமின்மையின் பின்விளைவாக விளங்கும் பேரின்பத்தில் மூழ்கி, ஈடுபட்டு, எதையும் செய்யாமல், எதுவும் பேசாமல் தியானம் செய்வதில் கழிந்தன. §

இளவயது சாது தனது அமைதியான குருவிடம் இருந்து எந்த பதிலையும் எதிர்பார்க்கவில்லை என்றாலும், அவரிடம் தனக்கு இருந்த சில கவலைகளை பற்றி இறுதியாக பேசினான். தான் தென்னிந்தியாவில் இருந்த ஆரம்பகாலத்தில், தான் உணர்ந்த ஒரு ஆன்மீக தேவையைப் பற்றி எடுத்துக்கூறினான். ஒரு நாள் அதிகாலையில் சாது தனது குருவின் அருளை வேண்டிக்கொண்டு, இந்தியாவின் தென்பகுதியில் சூழ்நிலை சரியாக இல்லையென்றும், சைவ சித்தாந்த போதனைகள் சரியாக புரிந்துகொள்ளப்படவில்லை என்றும், வழிபாட்டை வலியுறுத்தி, இறைவனும் மனிதனும் ஒன்று என்பதையும் உண்மையில் ஒவ்வொரு ஜீவனாக சிவபெருமான் இருக்கிறார் என்பதை உறுதி செய்யும், புனிதமான அத்வைத சைவ சித்தாந்த தத்துவத்தை மீண்டும் நிறுவுவதற்கு ஒருவரின் தேவை இருப்பதையும் விளக்கினான். §

ஒரு நாள் நீண்ட தியானத்திற்கு பிறகு, பல வருடங்களுக்கு தனது சீடனை பார்த்திராத குரு, தனது கண்களை திறந்து புன்னகைத்தார். அவை சுத்தமாகவும் தெளிவாகவும், விளக்க முடியாத பிரகாசத்துடனும் இருந்தன. பல வருடங்களுக்கு முன்பு, பழனிமலை கோயிலில் முருகப்பெருமானின் கண்களில் கண்ட அதே பிரகாசத்தை அந்த கண்களில் கண்டார். அப்போது அவனுக்கு குரு மறைமுகமாக வழங்கிய உத்தரவு புரிந்தது மற்றும் அது அவனுக்கு வழங்கப்பட்ட உத்தரவாக இருந்தது. அவன் அதற்கு மேல் நேரம் தாழ்த்தவில்லை. அவனது வாழ்க்கையின் அடுத்த கட்டம் தொடங்கியிருந்தது. §

அவன் தென்னிந்திய மண்ணில் மீண்டும் அடியெடுத்து வைத்த போது, இமயமலையில் இருந்து வந்த சாது, ஒரு முதியவராக, நரைத்த முடியுடைய ரிஷியாக மாறி இருந்தார். யாருக்கும் அவரது பெயர் தெரியவில்லை, அல்லது அவரது பெயர் தெரிந்து இருந்தாலும், மக்கள் அவரை ரிஷி என்றே அழைத்தனர். அவர் இமயமலையில இருந்து வந்த ஒரு சந்நியாசி மற்றும் சுமார் 1790 ஆண்டில் பிறந்து இருக்கவேண்டும் என்று அவரைப்பற்றி வெகுசில தகவல்கள் மட்டுமே தெரிய வந்துள்ளன. அவர் ஒரு முறை தனது பிரபல சீடரான கடைட்சாமியிடம், தான் பல வருடங்கள் இமயமலையில் வாழ்ந்ததாகவும், ஒரு சமயப்பணி மேற்கொள்ள தென்னிந்தியா செல்லுமாறு, அவரை அவரது குரு உத்தரவிட்டதாகவும் கூறினார். தென்னிந்தியா வந்து சேர்ந்ததும், அவர் சுமார் பத்து வருடங்களுக்கு ஒரு பெயர் இல்லாமல் வீடு இல்லாமல், மறைவாக யார் கண்ணிலும் படாமல் கிராமம் கிராமமாக சுற்றிக்கொண்டு இருந்தார். §

### பெங்களூரில் இருந்த ஒரு டீக்கடை

1850 ஆம் ஆண்டுவாக்கில், அந்த ரிஷி பெங்களூருக்கு அருகில் இருந்த ஒரு சிறிய கிராமத்து மக்களிடம் பரிச்சயம் ஏற்படவேண்டும் என்பதற்காக அங்குள்ள வீடுகளில் அடிக்கடி பிச்சைக்காரனாக வந்து சென்றார். அந்த காலகட்டத்தில், அவருக்கு கர்நாடக மாநிலத்தில் வாழ்ந்த நாத பரம்பரையின் சூட்சும ஞானிகள் மீது ஈர்ப்பு ஏற்பட்டு இருக்கவேண்டும். அவர்களது வழிமுறைகள் இவரை மிகவும் கவர்ந்தன. அவர்களைப் போல, அவர் நாம் அன்றாடம் காணும் யோகியாக இல்லை. எப்போதும் காலணி ஏதும் அணியாமல், கையில் பாத்திரம், தண்டம், தண்ணீர் குடம் அல்லது தோளில் துண்டு என்று எதுவும் இருக்காது. அவர் தினமும் ஒரு முறை மட்டுமே சாப்பிடுவார். அதுவும் அந்த உணவு ஒரு வீட்டில் இருந்து பெறப்பட்டு, அவரது இரு கரங்களால் பிடித்துக்கொள்ளும் அளவிற்கு மட்டுமே இருக்கும். அவரைப்பற்றி தெரிந்துகொள்ளவும் அவரது ஆசிகளைப் பெறவும் பலர் நெருங்க முயற்சித்தார்கள், ஆனால் ரிஷி ஒரு இடத்தில் இருந்து விரைவில் சென்றுவிடுவார் மற்றும் அவர் தலையீடுகள் அல்லது ஆர்வத்துடன் தம்மை விசாரிக்க வந்தவர்களை அவர் அனுமதிக்கவில்லை. அவர் ஏதாவது ஒரு வீட்டு வாசலில் திடீரென்று தோன்றுவார் மற்றும் அதே வேகத்துடன் மறைந்தும் விடுவார். அவர் சந்தையில் இருந்த கூட்டத்தில் இருந்து விலகிவிடுவார். அவரை ஒருவர் நெருங்குவதற்கு முன்பாக, அவர் தெரு மூலைக்கு சென்று இருப்பார் அல்லது ஒரு கடைக்குள் புகுந்து வெளியேறி இருப்பார். ரிஷி எங்கிருந்து வந்தார், எங்கே தங்குகிறார் போன்ற விவரங்கள், அந்த கிராமத்தில் இருந்த யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. அவரிடம் இதைப்போன்ற விவரங்களை கேட்க யாருக்கும் வாய்ப்பும் கிடைக்கவில்லை.
§

அவர் சராசரி உயரத்துடன், ஒல்லியாக, சுறுசுறுப்பாக எப்போதும் நடந்துகொண்டு இருப்பார் என்று அவரைப் பார்த்தவர்கள் விவரித்தார்கள். அவர் சாலைகளில் சாவதானமாக அல்லது நிதானமாக நடக்கமாட்டார். அவர் முதியவராக இருந்தாலும், எங்கே நடந்து சென்றாலும் தலை நிமிர்ந்து, உறுதியாக வெற்றிநடை போட்டு செல்வார். அவர் ஒரு *காவி* வேட்டி (இந்து சந்நியாசிகள் அணியும் காவி நிறத்தில் கையால் நூற்க்கப்பட்டு, கையால் நெய்யப்பட்ட ஒரு பருத்தி உடை) மற்றும் கழுத்தில் இரண்டு ருத்திராட்சங்களுடன் இருப்பார். அவரது தாடி வெள்ளை நிறத்திலும், அவரது தலைமுடி முதுமையிலும் கருப்பாகவும் இருந்தன, மற்றும் அது அவரது தலையின் உச்சியில் முடிந்து வைக்கப்பட்டு இருந்தது. கருப்பு நிறத்தில் இரண்டு குளங்களைப் போல, பெரியதாக உருண்டையாக, நிலக்கரிகளைப் போல கருப்பாக மற்றும் அதிக தீவிரமாக இருந்த அவரது கண்கள் மட்டுமே பெரும்பாலானோருக்கு நினைவில் இருந்தன. அவர் அடக்கி வைக்கப்படாத சக்தியை கொண்டிருக்கும் ஒரு ஒளி உடலாக, தனது முகத்துவாரத்தில் இருக்கும் ஒரு நதியைப் போல, ஒரு புயலுக்கு முன்பாக இருக்கும் காற்றைப் போல மிகவும் அமைதியாக இருந்ததாக, அவரைப் பார்த்த மக்கள் தெரிவித்தனர். அவரிடம் இருந்து வெளிவந்த வெப்பம் மற்றும் ஒளி உடல்

மிகவும் வலுவாக இருந்ததால், அவருக்கு அருகில் அதிக நேரம் இருப்பது கடினமாக இருந்தது. §

அந்த கிராமத்தில் இருந்த திறந்தவெளி சந்தைக்கு அருகில், பிரசாத் என்பவன் தனது சொந்த டீக்கடை வைத்திருந்தான். அந்த கடை கற்காரை சுவர்களுடன் உத்தரத்தால் உருவாக்கப்பட்ட கூறையுடன் ஒரு வலுவான கட்டிடமாக இருந்தது. மேலும் அவன் அந்த கடையில் டீ, இனிப்புக்கள் மற்றும் நீர்மோரை விற்று ஒரு எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து வந்தான். பெரும்பாலான இந்திய டீக்கடைகளைப் போல வியாபாரம் சுறுசுறுப்பாக இருந்தது. ஒரு நாள் காலையில் அந்த ரிஷி அவனது கடைக்குள் நுழைந்து, சுவரை ஒட்டி இருந்த ஒரு விசுப்பலகை மீது அமர்ந்துகொண்டார். வயதான சாது வெளியில் இருக்கும் வெப்பத்தின் காரணமாக, குளுமையான சுவரில் சாய்வதை பிரசாத் பார்த்துவிட்டான். அவன் பார்த்துக்கொண்டு இருக்கும் போது, ரிஷி அந்த அறையை சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, பத்மாசனத்தில் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு தியானம் செய்ய தொடங்கிவிட்டார். பிரசாத்திற்கு ஒன்றும் புரியவில்லை, அதனால் சாதுவை அவர் போக்கிற்கு விட்டுவிட்டான். அந்த காலகட்டத்தில் தெய்வீக புருஷர்களுக்கு அதிக மதிப்பு அளிக்கப்பட்டது, அந்த சாதுக்களில் மிகவும் விசித்தரமானவர்களும் பயபக்தி வணங்கப்பட்டார்கள், மற்றும் அவர்களது நடவடிக்கைகள் சராசரி மக்கள் சமூகத்தால் கட்டுப்படுத்தப்படவில்லை. §

கடை மூடவேண்டிய நேரமும் வந்துவிட்டது, ஆனால் ரிஷி அதே இடத்தில் அமர்ந்து இருந்தார். அவர் இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. உண்மையை சொல்ல வேண்டும் என்றால், அவர் சுவாசிப்பதும் நின்று இருந்தது. பிரசாத் அவர் அருகில் வந்து, “அவர் இறந்துவிட்டாரா?” என்ற வியப்பில் சோதித்துப் பார்த்தான். இல்லை, அவர் உடல் வெதுவெதுப்பாக இருந்தது. அவன் ரிஷி அருகே ஒரு மணி நேரம் உட்கார்ந்துகொண்டு, என்ன செய்வது என்று யோசித்தான். இறுதியில், ரிஷியை கடைக்குள் விட்டுவிட்டு, விருப்பமின்றி கடையை பூட்டிவிட்டு வீட்டிற்கு சென்றான். §

அடுத்த நாள் காலையில் பிரசாத் கடையை திறந்து பார்த்தபோது, ரிஷியை நேற்று இருந்த அதே சமாதிநிலையில் நிலைத்து இருந்தார். அவர் துளியும் அசையவில்லை. இந்த செய்தி கிராமம் முழுவதும் பரவியது, மற்றும் கிரமாவாசிகள் அவரை காண சுற்றி நின்றுக்கொண்டு, அவரை உற்று கவனித்துக்கொண்டு, அவரைப்பற்றி விவாதித்துக்கொண்டு இருந்தார்கள். தன்னை சுற்றி ஒரு பரபரப்பு இருந்தாலும், ரிஷி அசையாமல் இருந்தார். அவரது முகம் பிரகாசமாக இருந்தது, ஆனால் அது நகராமல் ஒரு முகமடியை போன்று இருந்தது. §

அன்று இரவும் பிரசாத் ரிஷியை உள்வைத்து பூட்டிச் சென்றான், மற்றும் அடுத்த நாள் காலையில் ரிஷி அதே இடத்தில், நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு அசையாமல், எல்லோர் கவனத்தையும் ஈர்த்த வண்ணம் அமர்ந்து இருந்தார். இது பல நாட்களுக்கு, பிறகு பல வாரங்களுக்கு, பிறகு பல மாதங்களுக்கு தொடர்ந்தது. செய்தி மக்களிடையே பரவ ஆரம்பித்தது. இந்த மௌன

துறவியை காண நூறு கிலோமீட்டர் தூரத்தில் இருந்து மக்கள் வரத் தொடங்கினார்கள். இந்த கதை ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு பரவிய போது, பூதாகரமாக பெரிதாகிக் கொண்டே போனது. இவ்வாறு புராணக்கதைகளில் நடந்துள்ளது மற்றும் நாட்டுப்புறக்கதைகளில் நடந்து இருக்கலாம். ஆனால் இந்த புதிய யுகத்தில், மலைகளில் இருக்கும் ஒரு சிறிய கிராமத்தில் அதுவரை நடக்கவில்லை. இருந்தாலும், ரிஷி அந்த கடையில் பல மாதங்களாக தனது தியானத்தை தொடர்ந்துக்கொண்டு இருந்தார். §

அங்கிருந்த மக்களுக்கு தெரிந்தவரையில் ரிஷி எதையும் சாப்பிடவில்லை, குடிக்கவில்லை மற்றும் சுவாசிக்கவும் இல்லை. அவர் ஒரு மரக்கட்டையைப் போன்று, ஒரு சடலத்தைப் போன்று இருந்தார், ஆனால் அவர் இறக்கவில்லை என்பது அவர்களுக்கு தெரியும். அவர் சமாதி நிலையில், தூல உலகின் மீது ஒரு ஒரு நுண்ணிய பிடியை மட்டும் வைத்துக்கொண்டு, இறைவனிடத்தில் மூழ்கி இருந்தார். §

இறுதியில் பிரசாத் தனது டீக்கடையை மூடி, கடையில் இருந்த சொரசொரப்பான மேஜைகள் மற்றும் இருக்கைகளை நீக்கிவிட்டான். அவன் அதன் விளைவுகளைப் பற்றி கவலைப்படவில்லை. அவனது பக்தி குடும்ப தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் என்ற நம்பிக்கையை வழங்கியது. ரிஷியின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து, அவரை தரிசிக்க வரும் மக்கள் கூட்டத்தை நிர்வகிப்பதற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்த பிறகு, அவனது வாழ்க்கையில் அனைத்தும் தொடர்ந்து சீராக இயங்கத் தொடங்கின. §



இமயமலையில் இருந்து பெங்களூருக்கு மேற்கொள்ளும் 2,200 கிலோமீட்டர் நடைப்பயணம் கடினமாக மட்டும் இல்லாமல், உயிருக்கும் ஆபத்தாக இருக்கக்கூடும். அதுக்கு அதிக அளவிலான உடலுறுதி தேவைப்பட்டது, மற்றும்


*அதற்கு தேவைப்பட்ட ஒரு எளிமையை வெகுசிலரால் மட்டுமே கடைப்பிடிக்க முடியும். இந்த படத்தில் இமயமலையில் இருந்து வந்த ரிஷி தனது கையில் ஒரு கமண்டலம் மற்றும் தியானம் செய்ய ஒரு யோக தண்டத்தை மட்டுமே சுமந்து செல்கிறார்.*

……………………§

அவர்கள் விடியலுக்கு முன்பாக வந்து, பொழுது சாயும் வரை இருந்து சென்றனர். சிலர் அங்கிருந்த மர்மத்திற்காக இருந்தார்கள், மற்றும் சிலர் தத்துவப்புலமை பெற்ற நண்பர்களுடன் சேர்ந்து இருப்பதற்காக வந்து இருந்தார்கள். சிலர் மூடநம்பிக்கையுடன் இருந்தார்கள், மற்றும் சிலர் அதை பொய்யென்று நிரூபிக்க வந்து இருந்தார்கள். தினமும் குருவை தரிசிக்காத கிராமவாசிகள், வெகுசிலரே இருந்ததால் மாலை நேரங்கள் எப்போதும் சுறுசுறுப்பாக இருந்தன. இறுதியாக இந்தியாவின் அனைத்து மூலைகளில் இருந்தும் வந்த யாத்ரீகர்கள், நடைப்பெற்ற வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சியில் பங்குபெறுவதற்கு மற்றும் விசேஷமான நிகழ்ச்சியை காண்பதற்கு பெங்களூரில் ஒன்று கூடினர். §

மக்கள் வெள்ளம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே சென்றது. மக்கள் ரிஷியின் புனிதமான உடலை தொட்டு, அவரது ஆசிகளை பெற விரும்பியதால், அவரை சுற்றி இருக்கும் மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாக இருந்தது. அவர்களை சற்று தொலைவில் வைத்திருக்க, பிரசாத் ரிஷியை சுற்றி ஒரு பித்தளை வேலியை அமைத்து வைத்தான். அது எதிர்பார்த்த பலனை வழங்கியது. அவன் அல்லது அவனது மகன்களால் மட்டுமே அந்த வேலியை கடந்து செல்ல முடிந்தது, மற்றும் அந்த இடம் திறந்து இருக்கும் போது அவர்களில் யாராவது ஒருவர் மட்டும் இருப்பதை உறுதி செய்துக்கொண்டார்கள். §

மக்கள் கொண்டு வந்த படையல்கள் அனைத்தும் அப்போது பணியில் இருந்த “பூசாரியிடம்" வேலிக்கு முன்னிருந்து வழங்கப்பட்டன, மற்றும் அவர் அந்த பொருட்களை ரிஷி அமர்ந்திருந்த இருக்கைக்கு முன்பாக, செப்பு முலாம் பூசப்பட்ட ஒரு தாழ்வான மேஜையில் பரப்பி வைப்பார். மேலும் அந்த வேலிக்குள் சுமார் பன்னிரண்டு பித்தளை எண்ணெய் விளக்குகள், ஒரு வரிசையில் அடுக்கப்பட்டு இருக்கும். மேலும் பெரியது சிறியது என்று வெவ்வேறு வடிவங்களில் இருந்த அந்த விளக்குகள், யாத்ரீகர்கள் நன்கொடையாக வழங்கிய பொருட்கள். அந்த விளக்குகள் நாள் முழுவதும் தொடர்ந்து எரிந்துக்கொண்டு இருந்தன. சில நாட்கள் கழிந்து, அதிகமான பக்தர்கள் கற்பூரம் ஏற்றும் வண்ணம், வேலிக்கு முன்பாக அதிக ஆழமில்லாத ஒரு வெண்கல பாத்திரம் வைக்கப்பட்டது. பிரசாத் பாதுகாப்பு காரணத்தினால் எல்லா ஜன்னல்களையும் செங்கல் வைத்து மூடியதால், நெருப்பில் இருந்து வெளிவந்த புகைக்கரி விரைவில் அந்த அறையில் கருப்பு நிறத்தை படியவைத்துவிட்டது. அவன் மீதம் இருந்த கதவை மிகப்பெரிய கதவுக்கீல்கள் மற்றும் தாழ்ப்பால் கட்டைகள் மூலம் வலுப்படுத்தினான், மற்றும் அதன் சாவியை எப்போதும் தன்னுடன் வைத்து இருந்தான். §



*இன்று ஸ்டார்பக்ஸ் இருப்பதைப் போல, 18 ஆம் நூற்றாண்டில் டீக்கடைகள் மக்கள் ஒன்றுகூடும் இடமாக, பயணிகள் ஓய்வெடுத்து புத்துணரச்சி பெறும் இடமாக விளங்கியது. இந்த சித்திரத்தில் ஒரு கடைக்காரன், ஒரு மீட்டர் இடைவெளியில் வைத்திருக்கும் இரு கிண்ணங்களுக்கு இடையே, கொதிக்கும் தேயிலையை (tea) ஒரு சரியான வெப்பதிற்கு கொண்டு வருவதற்கு, அதை மேலும் கீழுமாக சாமர்த்தியமாக ஊற்றி, சூடான தேநீரை தயார் செய்கிறான்.*

……………………..§

அவனது வியாபாரம் நின்றுவிட்டது, பக்தர்கள் படையல்களாக கொண்டு வந்த சமைத்த உணவு, பழங்கள், பூக்கள், ஊதுபத்திகள் மற்றும் பணத்தில் இருந்து பிரசாத் தனது குடும்பத்தின் தினசரி தேவைகளை பூர்த்தி செய்துக்கொண்டான். கோயில்களில் செய்வதைப் போல மீதம் இருப்பதை, பக்தர்களுக்கே பிரசாதமாக திருப்பி தந்துவிடுவதால், இரவு நேரத்தில் அதிகமாக எதுவும் மீதம் இருக்கவில்லை. அந்த ரிஷி வியக்க வைக்கும் விதத்தில் அதிகமான செல்வத்தை ஈர்த்தார். அவர்களை நாடி வந்தவர்கள் யாரும் வெருங்கையுடன் திரும்பவில்லை. §

அந்த இடத்தில் செய்வதற்கும் சுற்றிப்பார்ப்பதற்கும் அதிகம் ஏதும் இல்லை என்பதால், ஒரு நடைமுறை ஒழுங்கு விரைவில் ஏற்பட்டது. மக்கள் ரிஷியை காண்பதற்கு சில மணிநேரம் அல்லது சில நாட்கள் வந்திருந்து, அவரது ஆசிகளை பெற்று சென்றார்கள். அங்கே எந்த பூஜையும் நடக்கவில்லை; யாரும் மந்திரங்கள் சொல்லவில்லை, பாடல்கள் பாடவில்லை மற்றும் யாரும் எதைப்பற்றியும் பேசவில்லை. அந்த அறை எப்போதும் அமைதியாக இருந்தது, விளக்கு எரிந்துக்கொண்டு இருந்தது, ரிஷி எப்போதும் அதே இடத்தில் அமர்ந்து இருந்தார், மற்றும் பல வருடங்களுக்கு தொடர்ந்துக்கொண்டு இருந்தது. §

**தியானத்தில் ஏழு வருடங்கள்**

அந்த பழைய டீக்கடைக்கு செல்வது ஒரு வாழ்நாள் அனுபவமாக இருந்தது என்று பலர் பலமுறை கூறியிருக்கிறார்கள். இந்தியாவின் கண்ணைக் கூசும் வெய்யிலில் இருந்து தப்பி, அந்த இரும்பு வாசலுக்குள் நுழைந்து, அந்த குளுமையான குகைக்குள் செல்லும் போது, இன்னொரு உலகிற்கு செல்வதைப் போன்று இருந்தது. திறந்த கதவில் இருந்து வந்த சூரிய வெளிச்சம், அறையின் ஒரு புறத்தில் வெளிச்சம் அளித்தது. ரிஷி அமர்ந்திருந்த மறுபுறத்தில் எண்ணெய் விளக்குகள் மட்டுமே வெளிச்சம் அளித்தன. §

நீங்கள் முதலில் ரிஷியை காணும் போது, அவர் ஒரு மாயத்தோற்றமாக, தூரத்தில் இருக்கும் சுவரில் சாய்ந்து இருக்கும் ஒரு ஆவியைப் போன்று காட்சி அளிப்பார். அவரது உருவத்தை கல்லில் செதுக்கினாலும், இந்த நிஜ உருவத்தைப் போலவே இருக்கும். அவர் எண்ணெய் விளக்குகளின் வட்டத்தில் அமர்ந்து இருந்ததால், அவரை எந்த நிழலும் நெருங்கவில்லை. அதனால் அவரது முகம் நெருப்பின் சிவந்த நிறத்தை பிரதிபலித்தன. அவர் முதியவராக மெலிந்து, விலா எலும்புகள் தெரியுமாறு காட்சி அளித்தார், மற்றும் அவரது தலையில் இருந்து பாதம் வரை, பல இடங்களில் விபூதி பூசப்பட்டு இருந்தது. அதை யாரும் பூசுவது இல்லை, ஆனால் அது எப்போதும் அவர் மீது பூசிய நிலையில், அவரது இருக்கை மற்றும் தரையில் கொட்டிக்கொண்டு இருந்தது. அது மட்டுமே அவரிடத்தில் நடந்த தினசரி மாற்றமாக இருந்தது. அவரை பார்க்கும் போது, அவரது அங்கங்களில் ஒரு உற்சாக உணர்வு தெளிவாக காட்சியளிக்கும். அவரது முகம் உள் இழுக்கப்பட்ட ஆனந்தத்தின் ஒரு வெளிப்படையான உணர்வு வெளிப்பாடாக விளங்கி, நெருப்பின் ஒளியுடன் கலந்து பிரகாசமாக பளபளத்தது. §

முன்னிருந்த மேஜையில் பகட்டாக காட்சி அளித்த சிவப்பு மற்றும் பச்சை நிறத்துணியில் தாராளமாக பரப்பி வைக்கப்பட்டிருந்த வாழைப்பழங்கள் மற்றும் மாம்பழங்கள், அரிசி மற்றும் மாதுளங்கள், மண்பாண்டங்கள், பித்தளை ஜாடிகள், தூபம் மற்றும் நாணயங்களின் குவியல்கள் இருந்தன. அறை முழுவதும் மலர்கள் தூவப்பட்டு இருந்தன. ரிஷியை சுற்றி இருந்த வேலி, விளக்குகள், மேஜை என்று அனைத்தும் பளபளப்பாக புதிதாக


இருந்தன, ஆனால் கற்பூரத்தட்டு மட்டும் கருப்பாக வளைந்து இருந்தது. ஒரு விறுவிறுப்பான நாளில், அது செம்பிழம்பாக எரிந்துக்கொண்டு இருக்கும். மண் தரையை, கோரைப்புற்களால் நெயப்பட்ட பாய் மறைந்து இருக்கும், மற்றும் அதன் மீது பக்தர்கள் அமர்ந்து இருப்பார்கள். பருமனாக வெள்ளை உடையில் இருந்த பிரசாத், ஒரு காவலாளியாக நிழலில் நின்று கொண்டு இருந்தான். §

எல்லாம் மிகவும் அமைதியாக, முற்றிலும் அசையாமல் இருந்தன. அந்த அறை முழுவதிலும் நிரம்பி இருந்த அமைதியின் ஒலியை, வெகுதூரத்தில் ஆயிரம் வீனைகள் வாசிக்கப்படுவதைப் போன்று, ஒரு தெய்வீக ஒலியைப் போன்று, உட்புறமாக விழிப்புடன் இருப்பவர்களால் மட்டுமே கேட்க முடியும். இந்த ஒலியை நுணுக்கமான நரம்பியல் அமைப்பின் செயல்பாடுகளாக சிலர் கருதுகிறர்கள், மற்றும் சிலர் இதை, மனம் வழியாக பயணம் செய்யும் மெய்யுணர்வின் ஒலியாக, பல யுகங்களுக்கு குருவையும் சிஷ்யனையும் இணைக்கும் ஒலியாக கருதுகிறார்கள். இந்த ஒரு ஒலியை அதுவரையில் பல யாத்ரீகர்கள் அதுவரை கேட்டிருக்கவில்லை, மற்றும் அது அவர்களுக்குள் விளக்கமுடியாத மற்றும் பரிச்சயமான ஆனந்தத்தால் நிரப்பியது. §

ஒளி குறைவாக இருந்த அந்த அறையில், கற்பூரம் மற்றும் மண்ணின் வாசனை மற்றும் மேஜையில் குவித்து வைக்கப்பட்டு இருந்த பழுத்த மாம்பழங்களின் நறுமணம் வீசின. அந்த அறை காலியாக இருந்தாலும், துடிப்புணர்வுடன் இருந்தது. மற்ற பக்தர்களுடன் பாயில் உட்காரும் போது, ரிஷி அந்த அறையில் இருக்கும் தாக்கத்தை திடீரென்று உணரமுடிகிறது. சந்தேகிக்கும் மனது அதிர்ச்சி அடைந்து, “அந்த முதியவர் தூங்கிக்கொண்டு இருக்கிறார். அவ்வளவு தான். அவர் உறக்கத்தில் இருக்கிறார் அல்லது ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறார். வேறு எதுவும் விசேஷமாக இல்லை,” என்று ஒரு யதார்த்தமான விளக்கத்தை நாடுகிறது. ஆனால் ஏழு வருடங்களாக ஒருவர் உறங்கிக்கொண்டு இருப்பாரா? அவர் இந்த இடத்தில் ஏழு வருடங்களாக, தனது ஆன்மாவில் பரவசநிலையில் இருந்துக்கொண்டு, இறைவனின் சிந்தனையில் மூழ்கி இருக்கிறார் என்று மக்கள் கூறுகிறார்கள். இதை நம்ப முடிகிறதா? இது கற்பனையை திடுக்கிடச்செய்கிறது. மனம் போராட்டத்தை மேற்கொண்டு குழம்பி இருந்தாலும், ரிஷியின் பிரகாசமான சன்னிதானத்தில் இருந்ததால் மாற்றத்துடன் வெளிவருகிறது. §

3,000 அடி உயரத்தில் இருந்த மைசூரின் மேட்டுநிலத்தில் அமைந்து இருந்த, இந்த பெங்களூரின் பழைய டீக்கடைக்கு, இந்தியா முழுவதிலும் இருந்து பல யாத்ரீகர்கள் வந்து சேர்ந்தார்கள். அந்த பக்தர்களில் பலர், தங்களுக்கு அழைப்பு வந்ததாகவும், தங்களது கனவில் ரிஷி தோன்றியதாகவும் அல்லது அவர் தங்களுக்கு காட்சி அளித்ததாகவும் கூறினார்கள். இதைப்போன்று பிராசத்திற்கு ஆயிரம் கதைகள் தெரியும், மற்றும் அவற்றை யார் கேட்க விருப்பபட்டாலும் மகிழ்ச்சியுடன தெரிவிப்பார். அங்கே யாத்ரீகர்கள் பெரும்பாலும் தங்களது பிரச்சனைகளுடன் வந்தனர், மற்றும் அவர்களின் வேண்டுதல்கள் நிராகரிக்கப்படாமல், எப்போதும் தேவையான உதவி

வழங்கப்பட்டு வந்தது. யாராலும் தனக்குள் ரிஷியை போன்ற ஒரு ஆளுமையை உணர முடியாது என்பதால், வெகு சிலரே ரிஷி தங்களது வேண்டுதல்களுக்கு தீர்வு அளித்தார் என்று கூறினார்கள். அவர் நேரே வந்து தீர்வு காணவில்லை என்றாலும், அந்த இடத்தில் அவரை மையமாகக் கொண்டு நடந்த சம்பவங்கள் வேறு எங்கும் நடைபெறவில்லை. §



இமயமலையில் இருந்து வந்த ரிஷி, ஒரு டீக்கடையில் அசையாமல் தியானம் செய்ததால், அவர் மிகவும் பிரபலமாகிவிட்டார். இந்த அதிசயத்தை காண வெகு தொலைவில் இருந்து மக்கள் வரத்தொடங்கியதால், மக்கள் கூட்டம்

*அவரை தொட்டு அவரை தியானத்தை சீர்குலைக்காமல் இருக்க, அவரை சுற்றி ஒரு பித்தளை வேலி அமைக்கப்பட்டது.*

……………………§


ரிஷிக்கு அருகாமையில் இருக்கும் போது சில யாத்ரீகர்களின் மனம் மிகவும் தெளிவாக, மிகவும் அமைதியாகவும் இருந்ததால், பெரும்பாலான தீர்வுகள் தானாக வெளிப்படத்தொடங்குகிறது. பல வருடங்களுக்கு தீர்வு காணப்படாத சிக்கல்கள், அவருக்கு முன்பாக சில நிமிடங்களில் முடிவுக்கு வந்தன. அந்த பதில்கள் யாத்ரீகர்கள் உள்ளத்தில் இருந்து வந்தன. ஆனால் சிலருக்கு தீர்வுகள் உடனே வராமல், ரிஷியின் சன்னிதானத்தில் இருந்து கிளம்பிய பிறகு வரக்கூடும். சிலருக்கு பல நாட்கள் கழித்து வரக்கூடும். ஒரு யாத்ரீகன் குருவின் முன்பாக உட்கார்ந்து பிரார்த்தனை செய்வான் அல்லது தனது வாழ்க்கையை பற்றி நினைப்பான் மற்றும் அதன் பிறகு கிளம்பிவிடுவான். சந்தேகம் அல்லது பிரச்சனை அல்லது தேவை எதுவாக இருந்தாலும், தெருவில் நடைபெற்ற உரையாடலின் ஒரு பகுதியை தற்செயலாக கேட்டதன் மூலமாக, பள்ளிக்கு செல்லாத சிறுவன் சந்தோஷமாக பாடும் பாட்டின் மூலமாக, அல்லது உட்புற ஆகாசத்தில் இருந்து தோன்றும் இயலுணர்வின் மூலமாக என்று தீர்வு மிகவும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதாக விரைவில் வந்துசேர்ந்தது. ரிஷிக்கு அருகாமையில் உட்காருவதால் மனம் அதிக ஆழமாக திறக்கப்பட்டு, எல்லாம் தானாகவே தன்னை சரி செய்துக்கொண்டன. அது ஒரு தீர்வாக மட்டும் இல்லாமல், ரிஷியை போன்று, தென்பட்டு ஆனால் தென்படாமல், பேசப்பட்டு ஆனால் பேசப்படாமல், சுற்றிவளைந்து நேரடியாக மனதை வந்தடைந்து, தாக்கம் ஏற்படுத்திய விதம், அது எங்கிருந்து வந்தது என்பதை தெரிவித்தது. எப்போதும் தீர்வு எந்த சந்தேகத்திற்கும் இடம் அளிக்காமல், வியக்கவைக்கும் ஆற்றலுடன், தெளிவாகவும் உறுதியாகவும் இருந்தன. அன்றாட வாழ்க்கையில் இருக்கும் சிந்தனை சக்திகள் காலப்போக்கில் மங்கிவிடுவதைப் போல, அந்த சக்தி மங்காமல், உறுதியாகவும் தெளிவாகவும் வளர்ச்சி பெற்றன. §

இதில்லாமல், ஒரு யாத்ரீகர் மௌனமாக ரிஷியின் முன்பாக வைத்த பிரச்சனைகளுக்கான தீர்வு, சில சமயங்களில் மெல்லிய காற்று வழியாக, ஒரு குறிப்பு வடிவில் வந்தது. அந்த குறிப்புக்கள் ஒரு சிறிய காகிதத்தில் எழுதப்பட்டு, அதே அறையில் தோன்றின. அந்த குறிப்பு எங்கிருந்து தோன்றியது என்று தேடும் போது, அது தரையில் வந்து விழும் போது ஏற்படும் ஒரு சலசலப்பை மட்டுமே கேட்கமுடிந்தது. இந்த குறிப்புக்கள் எப்போதும் தனிப்பட்ட முறையில், ஒரு தனிநபரை குறிப்பிடும் வண்ணம் இருந்ததில்லை, மற்றும் அவை கேள்விகளுக்கு நேரடியாக பதிலும் அளிக்கவில்லை. ஆனால் அவை அந்த பிரச்சனையைப் பற்றி பொதுவாக பேசி, அந்த பிரச்சனையை பழங்காலத்தில் எப்படி எதிர்கொண்டார்கள் என்பதையும் வழக்கமாக விளக்கியது. §

ஒரு தாய் தனது மகளின் திருமணத்தைப் பற்றி கவலைப்படுகிறாள் என்றால், திருமணங்கள் பற்றி வேதங்களின் கண்ணோட்டம் என்ன,

பழங்காலத்து மக்கள் ஒரு குடும்பத்தில் எதை எதிர்பார்த்தார்கள், ஒரு ஆண் எதற்கு திருமணம் செய்து கொள்கிறான், ஒரு பெண் எதற்கு திருமணம் செய்து கொள்கிறாள், அந்த தேர்வு சரியானதா என்று எப்படி முடிவு செய்வது போன்ற தகவல்களை அந்த குறிப்பு விளக்கக்கூடும். அந்த குறிப்பு சுருக்கமாக இருந்தாலும், என்ன தேவைப்பட்டது மற்றும் எதற்காக தேவைப்பட்டது என்பதை தெரிவிக்க, அந்த குறிப்பு போதுமானதாக இருந்தது. அவை அன்றாட பிரச்சனைகளை பற்றி பேசியதால், அதன் தகவல் எப்போதும் குறிப்பிடும் படியாக இருந்ததில்லை. இதைப்போன்ற விளக்கங்களை எந்த ஒரு இந்து சாஸ்திரத்திலும் பார்க்க முடியும். அந்த குறிப்புகள் எப்போதாவது *உபநிடதங்கள்* போன்ற சாஸ்திரங்களின் குறிப்புடன் இருக்கும். ஆனால் அவை எழுதப்பட்டு இருந்த விதம், அந்த தகவலில் பயன்படுத்தப்பட்டு இருக்கும் முறை, அதை பெற்றவர் மனதில் ஒரு குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தியது. அந்த குறிப்புகள் பெரும்பாலும் கன்னட மொழியில் இருந்தாலும் தமிழ், ஹிந்தி, சமஸ்கிருதம் மற்றும் ஒரு சமயம் ஜெர்மன் மொழியும் பயன்படுத்தப்பட்டது.§

தென்னிந்தியாவின் தமிழ்நாட்டில் அமைந்து இருக்கும் தூத்துக்குடியை சேர்ந்த, ஒரு வியாபாரி தனது மனைவியின் மரணத்திற்கு பிறகு, தனது தொழில் வாழ்க்கையை முடித்துக்கொண்டு, சொத்துக்களை தனது மகனிடம் ஒப்படைத்துவிட்டு, எந்த திட்டமும் இல்லாமல், எந்த பிரச்சனையும் இல்லாமல், ரிஷியை தரிசிக்கும் நோக்கத்துடன் வந்து இருந்தார். அவர் அங்கிருக்கும் போது, ஆன்மாவின் லௌகீக உயிர்சக்தி மற்றும் கர்மவினையின் இயல்பான மாதிரிகளாக இருக்கும் பிரம்மச்சரியம், *கிரிஹஸ்தம், வானப்பிரஸ்தம்* மற்றும் சந்நியாசம் (மாணவன், சம்சாரி, மூத்த ஆலோசகர் மற்றும் துறவி) என்று வாழ்க்கையின் நான்கு நிலைகளை குறிப்பிடும் ஒரு குறிப்பு அவருக்கு கிடைத்தது. அந்த குறிப்பு வழங்கிய நுணுக்கமான வழிகாட்டலை வியாபாரி புரிந்துக்கொண்டு, அருகில் இருக்கும் ஒரு ஆசிரமத்தில் சேவை செய்யும் வாழ்க்கையை தொடங்கி, ரிஷியை அடிக்கடி தரிசித்து வந்தார். §



சிறப்பான யோக சக்திகளை கொண்ட ஒரு ஆன்மீக மாமனிதரை மக்கள் தரிசிக்க வந்ததால், ஒரு டீக்கடை இறுதியில் ஒரு கோயிலாக மாறியது. அவரது

*சன்னிதானத்தில், பிரார்த்தனைகளுக்கு அபூர்வமான முறையில் தீர்வு கிடைத்தன. அதில் இருந்து அந்த சக்திகளின் மகிமை தெளிவாக தெரிந்தது. சில சமயங்களில் தீர்வுகள், மேலிருந்து சிறிய காகிதங்களாக கொட்டின.*

……………………..§

ரிஷி அந்த டீக்கடைக்கு வந்து ஐந்து வருடங்கள் கழித்து, பெர்லின் பல்கலக்கழக மாணவர்களாக இருந்த நான்கு இளைஞர்கள், அவரை காண கிராமத்திற்கு வந்தனர். அவர்கள் எல்லோரும் சுமார் இருபது வயது நிரம்பியவர்களாக, சம்ஸ்கிருத மாணவர்களாக இருந்தனர். அதில் மூன்று பேர் சம்ஸ்கிருதத்தில், நல்ல தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருந்தனர். அந்த தலைமுறையை சேர்ந்த பெரும்பாலானோரை போல, அவர்கள் *வேதங்கள்* மற்றும் *உபநிடதங்களால்* ஈர்க்கப்பட்டு இருந்தனர். அவர்கள் அதிக மதிப்பளித்த அத்தகைய உயர்வான போதனைகளை பரப்புவதற்காக, ஜெர்மனியில் ஒரு ஆசிரமத்தையும் நிறுவி இருந்தனர். §

இந்த நால்வரும் ரிஷியை பற்றி தூரத்தில் இருக்கும் பெர்லினுக்கு வந்த பயணிகளிடம் இருந்து தெரிந்துக்கொண்டு, இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டு, அவரை கண்கூடாக காணவேண்டும் என்று முடிவு செய்தனர். அவர்களுக்கு கிடைத்த தகவல்கள் உண்மையாக இருந்தால், *உபநிடதங்களில்* உள்ள உயர்வான குறிக்கோள்களை, அவர்களுக்கு உணர்த்தி அதில் பயிற்சி வழங்க, அவர்கள் தேடும் வழிகாட்டி இவராகத் தான் இருக்கவேண்டும். அந்த மாணவர்களில் இருவர், நான்கு நபர்களின் பயணச்செலவை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு செல்வந்தர்களாக இருந்ததால், ரிஷியை தங்கள் நாட்டிற்கு அழைத்து சென்று, தங்கள் ஆசிரமத்திற்கு குருவாக்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன், அவர்கள் இந்தியா புறப்பட்டார்கள். §

பம்பாயில் தரை இறங்கிய பிறகு, அவர்கள் தெற்கு நோக்கி பெங்களூர் சென்று, ரிஷி இருந்த கிராமத்திற்கு சென்றார்கள். அவர்களுக்கு இந்திய மொழிகளில் சம்ஸ்கிருதம் மட்டுமே தெரியும் என்பதால், அவர்களுக்கு வழிகாட்டவும் மொழிபெயர்க்கவும், அவர்களுடன் ஒரு பிராமணன் சென்றான். மாணவர்களின் நேர்மை கிராமவாசிகளின் மனதை கவர்ந்தது மற்றும் இந்து சமயம் பற்றி அவர்களுக்கு இருந்த அறிவு எல்லோரையும் வியக்க வைத்தது. அந்த மாணவர்களை உயர்குடிமக்கள் வரவேற்று நல்ல உபசரிப்பை வழங்கி, ராஜ மரியாதை வழங்கி, நால்வரையும் தத்தெடுத்துக்கொண்டார்கள் என்றே சொல்லலாம். பெர்லினில் அவர்களுக்கு இருந்த தோழர்கள் மற்றும் நிறைவேற்றுவதற்காக கிழக்கு நோக்கி பயணம் செய்த குறிக்கோள் பணி மட்டும் இல்லையென்றால், அவர்கள் அதே இடத்தில் தங்கள் வாழ்நாள் முழுவதும் இருந்திருப்பார்கள். §

அவர்கள் ரிஷியை சந்தித்ததும், அவர்கள் கவனம் முழுவதும் அவர் மீது மட்டுமே இருந்தது. அவர்கள் இரண்டு நாட்களுக்கு அந்த கடையில் அமர்ந்து இருந்தார்கள், மற்றும் பிரசாத்திடம் கதைகளை கேட்க மட்டுமே வெளியே வந்தார்கள். இரண்டு வாரங்கள் கழித்து, தங்களுக்கு ஏற்பட்ட அற்புதமான அனுபவங்கள் பற்றி, அவர்கள் ஒவ்வொருவரும் தங்களது சொந்த கதைகளை

சொல்ல ஆரம்பித்து விட்டனர். ரிஷி அவர்களது கற்பனையை கடந்தவராக இருந்தார். அவர்கள் தங்கள் ஆசிரியரை கண்டுபிடித்து விட்டோம் என்று மனநிறைவுடன் இருந்தார்கள். ஜெர்மனியில் இந்து சமயத்தின் எதிர்காலம் பிரகாசமாக தெரிந்தது. ரிஷியை தியானத்தில் இருந்து எழுப்ப முடியுமா? அவர் ஏதாவது பேசுவாரா? இந்த நிலையில் அவரால் பிரயாணம் செய்ய முடியுமா? நாம் அவரது தியானத்தில் குறிக்கிடலாமா? அடுத்தது முக்கியமான கேள்வி, அவர் பெர்லின் செல்ல சம்மதிப்பாரா? அவர் மறுத்தால் என்னவாகும்? அதன் பிறகு என்ன நடக்கும்? போன்ற கேள்விகளை பற்றி அவர்கள் உற்சாகத்துடன் விவாதிக்கத் தொடங்கினார்கள். §

பிரசாத் சொன்னதைப் போல, அவர்களுக்காக பிரத்யேகமாக ஜெர்மன் மொழியில் எழுதப்பட்ட ஒரு குறிப்பு கிடைத்தது. அந்த குறிப்பு அவர்களை முழுமையாக திருப்திப்படுத்தியது. அதை ஒரு மந்திரமாக, ஒரு பாடலாக தங்களுக்குள் உச்சரித்துக்கொண்டு, பல நாட்களுக்கு உற்சாகத்தில் மிதந்துக்கொண்டு இருந்தனர். அந்த குறிப்பு ரிஷியின் வழக்கமான பாணியில், மறைமுகமாக, கேள்விக்கு சுற்றி வளைத்து பதில் அளித்தாலும், நல்ல தெளிவுடன் இருந்தது: §

“எல்லா சம்பவங்களும் கர்மவினை மற்றும் வாய்ப்பை பொறுத்து அமையக்கூடும். எதிர்காலத்திற்காக காத்திருக்கும் கர்மவினை, ஒரு வாய்ப்புக்காக காத்திருக்கும் கர்மவினை மற்றும் தற்போது இயக்கத்தில் இருக்கும் கர்மவினை என்று ஒரு மனிதனின் கர்மவினை மூன்று வகைப்படும். சாதனா மிகவும் குறைவான மனிதர்களை, ஆயிரம் புனர்ஜெமங்களில் இருந்து விடுதலை அளிக்கிறது.” §

அத்தகைய வலுவான சிந்தனைகள் தங்கள் தாய்நாட்டில் கேட்கவேண்டும் என்று அவர்கள் விரும்பினர். அவர்கள் அடுத்த ஒரு வாரத்திற்கு, ரிஷி எப்படி உணவு அருந்தாமல் உயிர் வாழ்ந்தார் என்பதைப் பற்றி பேசிக்கொண்டு இருந்தனர். அவர்கள் விசாரிக்க முடிவு செய்து, ஒரு நாள் மாலையில் பிரசாத் வீட்டிற்கு சென்றனர். அங்கே அவர்கள் முதல் முறையாக, தங்கள் பிராமண மொழிபெயர்ப்பாளரின் துணையுடன், பிராசத்திடம் தங்கள் கேள்விகளை கேட்டனர். §

அவர்கள் பிரசாத்திடம், “அவர் எப்போதாவது உணவு சாப்பிடுவாரா? அவரால் உணவு சாப்பிடாமல் எத்தனை நாட்கள் இருக்க முடியும்? ரிஷி என்றாவது ஒரு நாள் ஒரு பெரிய மாளிகைக்கு செல்ல வேண்டும் என்றால், அது சாத்தியமாகுமா?” என்று கேள்வி கேட்டனர். அவர்களின கேள்விகளுக்கு, பிரசாத் முடிந்தவரை சிரித்துக்கொண்டே பதில் அளித்தான். அவர்களது நோக்கம் அவனுக்கு புரியவில்லை. ஆனால் வேலியை கடந்து செல்லலாமா என்று கேட்டபோது தான், அவனுக்கு புரிய வந்தது. அப்போது அவன், “அப்படி செய்ய வேண்டாம். அது ரிஷிக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடும்.” அவர்கள் மீண்டும் கேட்டனர். வேலியை கடந்து யாரையும் அனுமதிப்பது இல்லை என்று தெளிவாக பதில் அளித்தான். மாணவர்கள் இன்னொரு உத்தியை கையாள முயன்றனர். அந்த மாணவர்களில் ஒருவன் ஜெர்மனியில்

தங்களுக்கு இருக்கும் ஆசிரமம் பற்றியும், அங்கே ரிஷியை போன்று ஒரு உண்மையான ஆசிரியரின் தேவையை பற்றியும் விவரமாக விளக்கத் தொடங்கினான். §

அவன் பேசுவதை கேட்ட பிரசாத்திற்கு அச்சம் அதிகரித்துக்கொண்டு இருந்தது. இறுதியாக அந்த மாணவன் திடீரென்று எழுந்து நின்று மரக்கூடைகள், கட்டை வண்டிகள் மற்றும் நீராவிக்கப்பல்களின் துணையுடன் தான் உருவாக்கி இருந்த இரகசிய திட்டத்தை பற்றி உரக்க உரை வழங்கத்தொடங்கியதும், பிரசாத்தின் கண்களில் இருந்து கண்ணீர் வர ஆரம்பித்து விட்டது. அவன் ஐந்து நிமிடங்களுக்கு கராரான குரலில் தனக்குத்தானே பேசிய வார்த்தைகளில் எதுவும் புரியும் படியாக இல்லை. பிராமணன் மொழிப்பெயர்ப்பதை நிறுத்து விட்டு, அத்தகைய விஷயங்களை பற்றி சிந்திப்பதால் ஏற்படும் விளைவுகளை பற்றி விளக்கிக்கொண்டு இருந்தான், மற்றும் மாணவர்கள் அவனுடன் தர்க்கத்தில் ஈடுபட்டு  இருந்தனர். பிரசாத் அறைக்குள் சென்று, கதவை கோபத்துடன் மூடிக்கொண்டான். §

அதன் பின்னர் மாணவர்கள் அவனை மீண்டும் பார்க்கவில்லை. அடுத்த நாள் மாணவர்கள் தங்களது தியான வகுப்பிற்காக டீக்கடைக்கு சென்ற போது,  பிரசாத் அதிக வேதனையுடன், *வேஷ்டி* அவிழ்ந்து, தலை கலைந்து, சுவரில் சாய்ந்து, கடையின் முன்பக்கத்தில் இருந்த குப்பைக்கு அருகில் அமர்ந்து இருந்தான். கடை இன்னும் பூட்டப்பட்டு இருந்தது. §

அவர்கள் பிரசாத்திடம் “பிரசாத், என்ன பிரச்சனை? ஏன் இப்படி இருக்கிறாய்?” என்று கேட்டார்கள். பிரசாத் பிராமணனிடம் துக்ககரமான செய்தியை சொன்னான். பிராமணனும் தான் கேட்கும் செய்தியை நம்பமுடியாமல், துக்கத்துடன்  தன் தலையை ஆட்டினான்.  அதன் பிறகு அவன், அந்த செய்தியை ஜெர்மன் நாட்டவர்களுக்கு மொழிப்பெயர்த்தான். “நண்பர்களே, ஒரு துக்ககரமான சம்பவம் நடந்துள்ளது. ஒரு மணி நேரம் முன்பாக, பிரசாத் தனது கடையை திறந்து பார்த்த போது, அங்கே அவன் கண்ட காட்சி அவனை திடுக்கிட வைத்தது! அறை காலியாக இருந்தது, ரிஷி இரவோடு இரவாக மறைந்துவிட்டார். ரிஷியை ஊரெங்கும் தேடி இருக்கிறார்கள், ஆனால் அவரை கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் சென்றுவிட்டார். ஆமாம்! நாம் இதற்கு என்ன பாவம் செய்தோம் என்று தெரியவில்லை. இது மிகவும் துக்ககரமான சம்பவம். ” §

அதன் பிறகு அவன் வருத்தத்துடன் பிரசாத்திற்கு அருகில் தன் தலையில் கைகளை வைத்து உட்கார்ந்தான். மாணவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அவர்கள் உண்மையில் என்ன நடந்தது என்று தெரிந்துகொள்ள விரும்பினார்கள். “ரிஷி உள்ளே இல்லை என்றால், இந்த கதவு எதற்காக பூட்டி இருக்கிறது?” என்று கேட்டார்கள். பிரசாத்திற்கு இந்த கேள்வி காதில் விழவில்லை. அவர்களில் ஒருவன் எழுந்து நின்று, கதவை வேகமாக அசைத்து, “சாவி எங்கே?” என்று விசாரித்தான். கண் சிமிட்டும் நேரத்தில், அந்த கடையின் திண்ணையில் பத்து பன்னிரண்டு  நண்பர்கள் கூடிவிட்டார்கள்.

அப்போது திறந்தவெளி சந்தை வழியாக சென்றுக்கொண்டு இருந்த ஊர் தலைவர்,"என்ன கூச்சல்? நான்  உதவலாமா?" என்று விசாரித்தார். §




*டீக்கடைக்கு வந்தவர்கள் ரிஷியை யோகி, மந்திரவாதி, மதகுரு மற்றும் தெய்வம் என்று பல்வேறு ரூபங்களில் பார்த்தனர். யாத்ரீகர்கள் அவரை எந்த ரூபத்தில் உணர்ந்தாலும், அவர் சாதாரண மெய்யுணர்வை கடந்த பிரசித்தமான மனிதராக இருந்ததால், அவரை பயபக்தி மற்றும் மரியாதையுடன் அணுகினார்கள்.*

........................§

ஜெர்மன் நாட்டவர்கள் பிரசாத் பயன்படுத்திய தந்திரங்களை பற்றி விளக்கினார்கள். இதை கேட்டு ஊர் தலைவர் ஆச்சரியம் அடைந்தார். "நீங்கள் அவனை தவறாக புரிந்துக்கொண்டு இருக்கிறீர்கள். நான் உங்களுக்கு விளக்கம் அளிக்கிறேன். எனது நண்பன் பிரசாத், ஒரு நேர்மையான மனிதன். எனக்கு அவனை பல வருடங்களாக தெரியும். இங்கிருக்கும் அனைவரும் அவனது நேர்மைக்கு உத்தரவாதம் அளிப்பார்கள். அவன் ரிஷி இங்கில்லை சென்றுவிட்டார் என்று சொன்னால், அதில்

சந்தேகப்படுவதற்கு ஒன்றும் இல்லை. உங்களால் இனிமேல் ரிஷியை மீண்டும் பார்க்க முடியாது என்று தோன்றுகிறது." §

ஊர் தலைவர் அளித்த விளக்கம் மாணவர்களுக்கு புரிந்தது மற்றும் அவர்கள் பின்வாங்கினார்கள். தங்களுக்கு கிடைத்த வாய்ப்பு நழுவியதை பற்றி அவர்களுக்கு தாமதமாகத் தான் புரிந்தது. அவர்கள் மூன்று நாட்கள் அந்த கிராமத்தில் சுற்றித்திரிந்தனர், ஆனால் எந்த பயனும் இல்லை. ரிஷி "சென்றுவிட்டார்" மற்றும் அவர்களுக்கு கிடைத்த வரவேற்பும் நின்றுவிட்டது. அவர்கள் இந்தியா வந்ததில் இருந்து, முதல்முறையாக தனியாக உணவு அருந்தினார்கள். அவர்களை யாரும் அழைக்கவில்லை, அவர்களது பிரயாணம் பற்றி விசாரிப்பதைத் தவிர, தெருக்களிலும் அவர்களுடன் யாரும் பேசவில்லை. அவர்கள் நான்காவது நாள் பம்பாய்க்கு புறப்பட்டனர், மற்றும் அவர்கள் அதன் பின்னர் இந்தியாவிற்கு திரும்பி வரவில்லை. §

மேலும் இரண்டு வெளிநாட்டு பயணிகள் இரண்டு வருடங்கள் கழித்து டீக்கடைக்கு வந்தாலும், யாரும் ரிஷியின் தியானத்தை மீண்டும் குலைக்க முயற்சிக்கவில்லை. இவ்வாறு நாட்கள் நகர்ந்தன, மற்றும் ஒரு நாள் ரிஷி தனது கண்களை திறந்து, தன்னை சுற்றி இருப்பவர்களை ஒருமுறை பார்வையிட்டார். சில நிமிடங்கள் கழித்து, அவர் எழுந்து நின்று, கடையில் இருந்து வெளியேறி சாலையில் நடந்து செல்ல ஆரம்பித்து விட்டார். அவர் தனது உடலில் பிராணசக்தியின் ஓட்டத்தை பராமரிக்க, இத்தனை ஆண்டுகள் மேற்கொண்ட பிராணாயாம பயிற்சியின் மீது அதிக கவனம் செலுத்தி இருந்தார். அதனால் தனது இடத்தில் இருந்து எழுந்து, ஒரே இடத்தில் பலமணி நேரங்கள் உட்கார்ந்து இருந்தவரை போல, மிகவும் குறைவான தடுமாற்றத்துடன் எழுந்து நடக்க முடிந்தது. §

சிறிய கிராமங்களில் பரவுவதை போல, செய்தி விரைவாக பரவத் தொடங்கியது. எல்லோரும் தங்கள் வயல்கள், கடைகள் மற்றும் வீடுகளில் இருந்து ஓடி வந்தனர். எல்லோரும் அவரைக் காண அங்கே திரண்டுவிட்டனர். ரிஷி ஏழு வருடங்களுக்கு தியானம் செய்த பிறகு எழுந்து நடப்பதை பார்த்து கிராமமக்கள் வியந்தனர். அவர்கள் யாரும் தங்கள் மௌன சாதுவை இழக்க விரும்பவில்லை. ரிஷியின் உயிர்சக்தி அவர்களது வாழ்க்கைகளை மாற்றி இருந்தது, அதனால் அவர் தங்களுடன் இருக்க விரும்பினார்கள். அவர் இல்லாத வாழ்க்கையை அவர்களால் கற்பனை செய்ய முடியவில்லை என்பதால், அவர்கள் விரைவாக செயல்பட்டார்கள். §

அன்று மதியம் கிராமத்து மக்களிடம் இருந்த பொருட்களை ஒன்று சேர்த்து, ஒரு சிறிய குன்றில் இருந்து கிராமத்தை பார்த்த வண்ணம், ஒரு ஓடைக்கு அருகில் இருந்த பச்சை மண்ணில், இரண்டு அறைகளுடன் ஒரு பனை ஓலை ஆசிரமம் உருவாக்கப்பட்டது. அவர்கள் அந்த அறையில் பாத்திரங்கள் மற்றும் உணவு, படுக்கை மற்றும் மேலும் பல பொருட்களை சேமித்து வைத்தனர். இனி ரிஷி விருப்பப்பட்டால், அவர் மீது அன்பும் மரியாதையும் செலுத்துவதால் வளர்ச்சி பெற்ற கிராமத்து மக்களுக்கு அருகாமையில், தனியாக தங்குவதற்கு ஒரு ஆசிரமம் தயாராக இருந்தது. §

ரிஷி யாருக்கும் தென்படவில்லை, அதனால் அடுத்த நாள் காலையில் ஆண்களும் சிறுவர்களும், கிராமத்தில் பல மைல் தூரத்திற்கு தனித்தனியாக பிரிந்து சென்று தேடத்தொடங்கினர். அந்த தேடலின் போது, மதிய நேரத்தில் அவர் ஒரு மரத்தடியில் உறங்கிக்கொண்டு இருப்பதை கண்டனர். அந்த இடத்திற்கு கிராமத்து பெரியோர்கள் பரிசு பொருட்களுடன் விரைந்து சென்றனர். அவர்கள் அங்கே வந்து, தங்கள் வணக்கத்தை தெரிவிக்க தொடங்கும் போது, அவர் எழுந்து அமர்ந்துகொண்டு, மக்களை வியப்புடன் பார்த்துக்கொண்டு இருந்தார். அவர்கள் தங்களது படையல்களை அவரது பாதங்களில் வைத்துவிட்டு, தங்களுடன் இருந்து தங்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று எல்லோரும் சேர்ந்தும், தனித்தனியாகவும் கேட்டுக்கொண்டனர். அவரது தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்றும், அவரது ஆசிரமம் தயாராக இருப்பதாகவும், அது சிறியதாக தோன்றினால், பெரியதாக ஒன்று கட்டித்தருவதற்கு தாங்கள் தயாராக இருப்பதாகவும் கூறினார்கள். தங்களது குழந்தைகள் தங்களுக்கு அடிபணிந்து சேவை செய்வதை போல, தாங்களும் அவரிடம் நடந்துக்கொள்ள தயாராக இருப்பதாக உறுதி அளித்தார்கள். "நீங்கள் எங்கள் கிராமத்தில் தங்கவேண்டும். தயவு செய்து போகவேண்டாம்," என்று அவரிடம் கெஞ்சினார்கள். அவர் அசையாமல் அமர்ந்து இருந்தார் மற்றும் தாங்கள் கிளம்பவேண்டிய நேரம் வந்துவிட்டதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். §

அடுத்த நாள் விடிவதற்கு முன்பாக, ஊர் தலைவரின் வீட்டு வாசலில், "சீக்கிரமாக வாங்க! அங்கே மேலே பாருங்க!" என்று அந்த சிறிய மலையை சுட்டிக்காட்டி சிறுவர்கள் ஏற்படுத்திய கூச்சலால், ஊர் தலைவர் உறக்கத்தில் இருந்து எழுப்பப்பட்டார். கிராமத்து மக்கள் விரும்பியதை போல, ரிஷி தனக்கு முன்பாக இருந்த கிராமத்தை பார்த்துக்கொண்டு, கடல் மட்டத்தில் இருந்து 1,000 மீட்டர்கள் உயரத்தில் இருந்ததால், பல நாட்களுக்கு நீடிக்கும் குளிரை தணிக்க ஒரு சிறிய நெருப்பை உருவாக்கி, அது அணையாமல் கவனித்துக் கொண்டு, தனது ஆசிரமத்தின் வாசலில் அமர்ந்து இருந்தார். ஊர் தலைவரும் மற்றவர்களும் கையில் பழங்கள் மற்றும் பூக்களுடன், ரிஷியை நெருங்கும் போது, ரிஷி சிறிய நெருப்பில் விறகுகளை வைத்துக்கொண்டே, வந்தவர்கள் மீது பார்வையை திருப்பினார். தங்களது படையல்களை அவரது பாதத்தில் வைத்து நமஸ்காரம் செய்தனர். அதன் பிறகு அவர்கள் கைகளை கூப்பிக்கொண்டு, இத்தனை வருடங்கள் சமாதி நிலையில் இருந்துக்கொண்டு, தற்போது நடக்கத்தொடங்கி இருக்கும் இந்த மாமனிதரை, நேற்றைய சம்பவத்திற்கு பிறகு எப்படி அணுகுவது என்று பதட்டத்துடன் நின்று இருந்தனர். ரிஷி எந்த பதிலும் அளிக்கவில்லை, மற்றும் சில தர்ம சங்கடமான தருணங்களுக்கு பிறகு, சூழ்நிலை சாதகமாக இல்லை என்பதை புரிந்துகொண்ட கிராமவாசிகள், தங்கள் வீடுகளுக்கு மௌனமாக திரும்பத் தொடங்கினர். §

அடுத்த நாள் தைரியமான கிராமவாசிகள் அவரது தரிசனத்தை பெறுவதற்காக விரைவாக வந்துவிட்டனர். ஆனால் அவரது நடவடிக்கைகள் வித்தியாசமாக இருந்தன. ரிஷி கிராமவாசிகள் தயாரித்த உணவை

முற்றிலுமாக மறுத்துவிட்டார். ஆனால் தான் சமைத்த உணவில் ஒரு கைப்பிடி அளவு மட்டும் சாப்பிட்டு, மீதி இருந்ததை காகங்களுக்கு வழங்கி, வெறும் தரையில் அமர்ந்துகொண்டார். அவரது நடவடிக்கை கிராமவாசிகள் நினைத்ததை போல இல்லாமல், முற்றிலும் விசித்திரமாக இருந்தது. §

அவரது கண்கள் சிவப்பாக தீவிரமாக இருந்ததால், அவர் சமாதி நிலையில் அமர்ந்து இருந்த போது, அவரை பக்தியுடன் வழிபட்ட கிராமவாசிகளுக்கு, பழைய இணக்கம் ஏற்படவில்லை. இத்தகைய ஒரு வலுவான ஆன்மீக நெருக்கத்தை, அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை என்பதால் அச்சத்துடன் இருந்தனர். அதில் சிலர் ரிஷி தங்கள் வாழ்க்கையை விட்டு போனால் போதும் என்றும், அவரிடம் இருந்து எப்படி விடுதலை பெறுவது என்றும் சிந்தித்துக்கொண்டு இருந்தனர். அவர்களது அச்சங்களும் குழப்பங்களும் ரிஷிக்கு தெரியாமல் இல்லை. ஒரு நாள் மதியம், கவலையுடன் இருந்த கிராமவாசிகள் சிலர் அவருடன் பேசக்கிளம்பினர். ஆனால் கூரை வேய்த குடிசை நெருப்பில் சாம்பலாகி தரை மட்டமாகி இருந்து. ரிஷி அந்த இடத்தை விட்டு கிளம்பி இருந்தார். §



*டீக்கடையில் இருந்த அமைதியான காலங்களில், அவரிடம் இருந்த சாந்தத்தில் அவரது உக்கிரமான குணம் தென்படவில்லை, ஆனால் அது பின்னர் வெளிப்பட்டது. அவர் கிராமத்தை விட்டு செல்லவேண்டும் என்று மக்கள் விரும்பினர், ஆனால் அவரை வெளியேற்ற திட்டமிடுவதற்கு முன்பாகவே, அவர் தனது எளிமையான கூரை வேய்த ஆசிரமத்தை எரித்து, அந்த கிராமத்தில் இருந்து நிரந்தரமாக கிளம்பிவிட்டார்.*

……………………..§

கிராமத்திற்கு வரும் யாத்ரீகர்களின் வழக்கமான வருகை குறையத் தொடங்குவதற்கு ஒரு மாதம் ஆனது. தொடர்ந்து ரிஷியை காண மக்கள் வந்துக்கொண்டு இருந்தார்கள், யாரையும் குறை கூறாமல் ரிஷி எதற்காக கிளம்பி சென்றார் என்று அவர்களிடம் விளக்குவது, கிராமவாசிகளுக்கு மிகவும் கடினமாக இருந்தது. ஆனால் அதைப்பற்றி யாரும் பேசவேண்டாம் என்பதில் அவர்களுக்குள் ஒரு நம்பிக்கை அளவிலான உடன்பாட்டுடன் இருந்தனர். ரிஷி அங்கே இருந்தார் என்பதை சந்தேகப்பேர்வழிகள் நம்பவேண்டும் என்பதற்காக, அந்த டீக்கடை எப்போதும் திறந்து வைக்கப்பட்டு இருந்தது. ஆனால் அவர் சென்றதை பற்றி யாரும் பேசவில்லை. அது ஒரு இந்து கிராமத்தின் விவேகமான வழக்கத்தில், என்றுமே நடக்காத, பேசப்படாத அல்லது சிந்திக்கப்படாத பின்னடைவுகளில் ஒன்றாக விளங்கியது. அதன் பிறகு இயல்பு வாழ்க்கை தொடர்ந்தது. ஆனால் ரிஷியின் கம்பீரம், ஒரே இடத்தில் ஏழு வருடங்களுக்கு அமர்ந்து இருந்து விநோதமான வழிகளில் பிரார்த்தனைகளுக்கு தீர்வு வழங்கியது மற்றும் ஒரு நாள் சமாதியில் இருந்து எழுந்து கிராமத்தை விட்டு செல்லும் வரை அசையாமல் இருந்ததைப் பற்றி யாத்ரீகர்கள் தெரிந்துகொண்டார்கள். அவர் எங்கே சென்றார் என்று யாருக்கும் தெரியவில்லை. அவர் திரும்புவார் என்று யாரும் நினைக்கவில்லை. அதற்கு வாய்ப்பும் குறைவாகவே இருந்தது. §

ரிஷி கிளம்பி சில மாதங்கள் கழித்து, மிகப்பெரிய உருவத்துடன், இரண்டு மீட்டர் உயரத்தில் ஒரு சாது, கிராமத்திற்கு வந்தடைந்தார். அவர் எல்லோரைக் காட்டிலும் மிகவும் உயரமாக இருந்தார். அவர் கிராமத்திற்கு வந்ததும், முன்பு தனக்கு பரிச்சயமான இடம் போல, நேராக டீக்கடைக்கு சென்று தியானம் செய்ய அமர்ந்துவிட்டார். அதன் பிறகு அவர் பல மணி நேரங்களுக்கு வெளியே வரவில்லை. அதன் பிறகு அவர் ரிஷியை பற்றி விசாரிக்கத் தொடங்கினார். பிரசாத் தனக்கு தெரிந்த விஷயங்களை தெரிவித்தான். §

அன்று மாலை அவர் பிரசாத்தின் வீட்டில் உணவு அருந்தினார் மற்றும் அதன் பிறகு அவர்கள் இருவரும், இரவு நேரத்தில் நீண்டநேரம் தனியாக பேசியதாக மக்களிடம் ஒரு வதந்தியும் நிலவியது. வழக்கமாக பரிச்சயமில்லாதவர்களிடம் பகிரக்கூடாத விவரங்களை, பிரசாத் பகிர்ந்து இருக்கலாம் என்று ஊர்மக்கள் நம்பினார்கள். §

அந்த உயரமான சாது ஒரு வாரத்திற்கு கிராமத்தில் தங்கி இருந்து, எல்லோரிடமும் ரிஷியை பற்றி பேசினார். அவர் வயல்களுக்கு சென்று விவசாயிகளிடமும் விசாரித்தார். அவர் குன்றின் மீது ரிஷியின் இடம் வரை நடந்து சென்று, அங்கே எதுவும் இல்லை என்று சொல்லிக்கொண்டு திரும்பிவிட்டார். அவருக்கு ஒரு நாளில் பெரும்பாலான பகுதி இவ்வாறு மக்களுடன் பேசுவதில் கழிந்தது, மற்றும் மீதமிருக்கும் நேரத்தில் அவர் தியானம் செய்துக்கொண்டு இருந்தார். அவர் கிராமத்தில் தங்கியிருந்த பெரும்பாலான நாட்களில், டீக்கடையின் தரையில் உறங்குவார் அல்லது அவர் பிரசாத்தின் வீட்டில் தென்படுவார். அவரது பெயரை விசாரித்தால், தான் ரிஷிகேஷில் இருந்து வந்ததாக கூறுவார். உச்சரிப்பில் இருந்து அவரது தாய்மொழி தெலுங்காக இருக்கவேண்டும் என்று மக்கள் நம்பினார்கள்,

ஆனால் அவர் கிராமத்தில் கன்னடம், தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும் உரையாடிக்கொண்டு இருந்தார். §

ரிஷி மீண்டும் வடக்கு நோக்கி சென்று இருக்கவேண்டும் என்று பெரும்பாலான கிராமவாசிகள் கருதினாலும், யாருக்கும் உறுதியாக தெரியவில்லை; அதனால் இந்தியாவில் ரிஷி இருக்கும் இடம் தெரியாமல், கிராமத்தை விட்டு சாது கிளம்பிவிட்டார். அதன் பின்னர் ரிஷி இலங்கையில் இருந்ததாக கதைகள் தெரிவிக்கின்றன. மேலும் அங்கே பல அதிசயங்கள் நடந்ததாகவும், திடீரென்று மர்மமான முறையில் குறிப்புக்கள் தோன்றி தரையில் விழுந்ததாகவும் கதைகள் குறிப்பிடுகின்றன. அவருக்கு இந்தியாவை காட்டிலும் இலங்கையில் நல்ல வரவேற்பு கிடைத்ததாக கருதப்படுகிறது. §

Page 19: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/19_ka02_01.html

# குருமார்களின் சரித்திரங்கள்


## அத்தியாயம் ஐந்து

# “நான் அவனுக்கு மரணதண்டனை வழங்கமாட்டேன்”

ஒரு நாள், ஒரு நீதிபதி கர்நாடகாவின் பெங்களூரில் இருந்த உயர்நீதமன்றத்தில், ஒரு கொலை வழக்கிற்காக தலைமை தாங்கினார். தீர்ப்பில் எந்த சந்தேகமும் இல்லை, நடுவர் குழுவும் ஒருமனதாக இருந்தது. சட்டப்பூர்வமாக தீர்ப்பு வழங்கும் நேரம் வந்த போது, நீதிமன்றத்தில் உரை நிகழ்த்த நீதிபதி எழுந்து நின்றார். அவரது உயரமான உருவம் நீதிமன்றத்தில் அமைதியை ஏற்படுத்தியது. அவர் பேசுவதற்கு முன்பாக, தான் போர்த்திய சால்வை, தனது அங்கிகள் மற்றும் ஆபரணங்களை கழட்டிவிட்டார். இறுதியாக நீதிமன்றத்தை பார்த்து, “இறைவன் இந்த மனிதனை படைத்து இருக்கிறார். இவனுக்கு மரண தண்டனை வழங்குவதற்கு நான் யார்?” என்று தெரிவித்து, மரண தண்டனை வழங்க மறுத்துவிட்டு, நீதிமன்ற இருக்கையில் இருந்து எழுந்து, தனியாக வெளியே சென்று விட்டார். அவர் அந்த பகுதியில் மீண்டும் யார் கண்ணிலும் தென்படவில்லை. §

பல வருடங்களுக்கு கழித்து, அவர் வட இலங்கையில் தென்பட்டார். அவர் ஒரு சுவாமியாக மற்றும் ஒரு ஆன்மீக சக்தியாக விளங்கி, நந்திநாத சம்பிரதாயத்தின் வருங்கால சற்குருமார்கள் மற்றும் தனிப்பட்ட மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், ஒரு நாட்டின் வரலாற்றையும் மாற்றி அமைத்தார். இந்த இரண்டு சம்பவங்களுக்கும் இடையே என்ன நடந்தது என்பது தெளிவாக இல்லை, மற்றும் அனைத்து கதைகளும் ஒன்றுக்கொன்று முரணாகவே இருக்கின்றன. இந்த பாடத்தில் பேச்சு வழக்கில் இருந்த வரலாறுகள் மற்றும் அந்த சமயத்தில் இருந்த கலாச்சார மாதிரிகளின் அடிப்படையில், அதிக வாய்ப்புள்ள சம்பவங்களை இயல்நுணர்வுடன் புரிந்துகொள்ள பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. §

நீதிமன்ற பணியைத் தவிர வேறெந்த முக்கிய கடமைகளும் இல்லாத அந்த முப்பது வயது இளைஞனுக்கு, அந்த கொலை வழக்கு வாழ்க்கை மற்றும் மரணம் பற்றி தூண்டிய ஆழமான சிந்தனைகள், இயல்பான ஆன்மீக மனமாற்றத்தை தீவிரப்படுத்தியிருக்க வாய்ப்புள்ளது. இறுதியில் அவர் ஒரு சற்குருவை நாடி, தனது மீதமுள்ள வாழ்க்கையை இறைவனை உணர்வதற்கும், தனது இந்து சமயத்திற்கு சேவை செய்வதற்கும் அர்ப்பணிக்க வேண்டும் என்ற ஒரு தீர்க்கமான முடிவை எடுத்தார். §



ஒரு கொலை செய்த குற்றவாளிக்கு ஒரு இந்திய நீதிபதி மரண தண்டனை வழங்கவேண்டும் என்று கடமை கோரியது, ஆனால் அவரால் அந்த

*கர்மவினையை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஆனால் அவர் தனது பொய் முடி மற்றும் நீதிபதி அங்கிகளை அகற்றிவிட்டு, தனது இருக்கையில் இருந்து எழுந்து நீதிமன்றத்தை விட்டு வெளியேறினார். அதன் பின்னர் அவர் நீதிமன்றம் திரும்பவும் இல்லை, மீண்டும் நீதிமன்ற பணியை தொடரவும் இல்லை.*

……………………§

அவர் துறவறத்தின் மீது தனக்கு இருந்த ஈடுபாட்டைப் பற்றி மற்றவர்களிடம் பேசும்போது, டீக்கடையில் இருந்த ரிஷியை பற்றி தெரிந்துகொண்டார். அந்த பிரசித்தமான முனிவரின் கதைகளால் ஈர்க்கப்பட்டு, அது அவர் மீது ஏற்படுத்திய வலுவான தாக்கம், விழிப்புணர்வு பெற்ற அந்த உயிர்சக்தியை நேரில் சென்று சந்திக்க தூண்டுதலாக இருந்தது. முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி, ரிஷியை தேடும் வேட்கையில், இந்திய சாலைகளில் நடைப்பயணம் செய்யும், ஒரு  நாடோடி சாதுவாக மாறிவிட்டார். அந்த ரிஷி தான் தனது குரு என்பதில் திட்டவட்டமாக இருந்தார், மற்றும் அவரை தேடும் வேட்கையில் அவர் கிராமம் கிராமமாக மூலை முடுக்கெல்லாம் தேடினார். அவர்கள் அதற்கு முன்பு சந்தித்திருக்கவில்லை என்பதால், அந்த தேடுதலுக்கு  அறிவுப்பூர்வமான  உத்தரவாதம் எதுவும் அளிக்க முடியாது. ஆனால் அது ஒரு உண்மையாக, ஒரு துணை மெய்ஞ்ஞான அறிதலாக, அவரது உள்ளத்தின் ஆழத்தில் இருந்து நிரம்பி இருந்தது. §

அவர் செல்லும் இடமெல்லாம், அவரது அசாதாரண உயரமும் பிச்சைக்காரனைப் போன்ற தோற்றமும் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தன. மக்களுடன் மக்களாக இணைந்து இருப்பதால் எந்த பயனும் இல்லை, மற்றும் அவர் அதை முயற்சிக்கவும் இல்லை. அவர் வழக்கமாக ஒரு கிராமத்தை வந்தடைந்ததும், யாரோ ஒருவருக்காக காத்துக்கொண்டு இருப்பதை போல, திறந்தவெளி சந்தையின் மத்தியில் நின்று இருப்பார். அவர் மத்தியில் நின்று இருப்பதை பார்த்த மக்கள், தங்கள் வேலைகளில் இருந்து விலகி, அவருக்கு என்ன தேவை என்று விசாரிக்க வருவார்கள். அவர் அந்த மக்களிடம் பேசி அவர்களை மகிழ்வித்து சிரிக்க வைப்பார். இதனால் அவரை சுற்றி ஒரு கூட்டம் சேர்ந்துவிடும். அதன் பின்னர் அந்த கூடியிருந்த சிறுவர்களிடம் தான் தேடி வந்த சுவாமியை பற்றி தெரிவித்து, தங்களது பெற்றோர்கள் மற்றும் சொந்தங்கள், அத்தைகள் மற்றும் தாய்மாமன்கள், மற்றும் அவர்களுக்கு தெரிந்த ஒவ்வொருவரிடமும், தான் தேடி வந்த சந்நியாசி தங்கள் கிராமத்தில் இருக்கிறாரா என்று விசாரிக்க அனுப்பி வைப்பார்.§

அந்த சிறுவர்கள் சென்ற பிறகு, அவர் திறந்தவெளி சந்தை வழியாக நடந்து சென்று, வாடிக்கையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுடன் பேசுவார் மற்றும் கடைக்காரர்கள் வழங்கிய யாசகங்களை ஏற்றுக்கொள்வார். அவர்களும் தங்களால் இயன்ற உதவியை வழங்குவார்கள். மக்களின் மீது அவருக்கு ஒரு இயல்பான ஈர்ப்பு சக்தி மற்றும் தடுக்க முடியாத வசீகரமும் இருந்தது.  இது மட்டுமல்லாமல், அவர் மக்களிடம் இயல்பாக பழகினார்

மற்றும் சிறந்த பேச்சாற்றலையும் பெற்று இருந்தார். அவரால் தயக்கமின்றி சரளமாக தொடர்புகொள்ள முடிந்தது மற்றும் அவரது பேச்சில் என்றுமே தடுமாற்றம் இருந்ததில்லை. அவர் மீது மக்கள் நம்பிக்கை வைத்து, தயக்கமின்றி நண்பர்களானார்கள். பெரும்பாலானோர் அவரை தயக்கம் இன்றி அப்பர் என்று அழைத்தார்கள். குழந்தைகள் தங்களது தூது பணியில் இருந்து திரும்பும் போது, கடந்த பத்து ஆண்டுகளில் கிராமத்திற்கு வந்திருந்த ஒவ்வொரு சுவாமி, சாது அல்லது யாத்திரிகர் பற்றிய தகவலை கொண்டு வந்தார்கள். ஆனால், அதில் வழக்கமாக ரிஷியை பற்றிய எந்த தகவலும் இருக்கவில்லை. §

சிலசமங்களில், ரிஷியின் இருப்பிடம் பற்றிய துப்பு திடீரென்று தோன்றியது. ஒரு சமயம் அவருக்கு கிடைத்த துப்பு, அவரை பெங்களூரின் டீக்கடைக்கு அழைத்து சென்றது. அங்கே அவரால் ரிஷியின் தரிசனத்தின் பின்விளைவை உணர முடிந்ததால், அந்த இடத்தில் சிறிது காலம் தங்கி இருந்தார். ஆனால் ரிஷி எங்கே சென்றார் என்று யாருக்கும் தெரியவில்லை, அதனால் தேடும் வேட்கை தொடர்ந்தது. §

ஒரு நாள் சாது மைசூருக்கு தென்பகுதியில் இருந்த ஒரு சிறிய ஊருக்கு வந்தடைந்தார் மற்றும் சந்தைக்கு செல்ல வழியை கேட்டுக்கொண்டு இருக்கும் போது, திடீரென்று வணிகர்கள் குடியிருப்பில் இருந்த ஒரு பெரிய வீட்டிற்கு முன்பாக வந்து நின்றார். சில மணிநேரம் கழித்து, ஒரு இளைஞன் அந்த வீட்டில் இருந்து வெளிவந்து, அவருக்கு என்ன வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் தான் ஒரு சாது என்றும், தான் ஒரு சுவாமி, ஒரு வயதான சந்நியாசியை தேடுவதாகவும், அவன் அந்த சந்நியாசியை பார்த்து இருக்கிறானா என்றும் கேட்டார். இளைஞன் பதில் ஏதும் சொல்லாமல், அவரை சிறிது நேரம் உற்றுப்பார்த்தான், அதன் பிறகு அவன் மீண்டும் வீட்டுக்குள் சென்று விட்டான். §

சிறிது நேரம் கழித்து, அந்த இளைஞனின் தந்தை வீட்டிற்கு வெளியே வந்து, சாதுவை தங்கள் வீட்டிற்கு வந்து தங்களுடன் உணவு அருந்துமாறு கேட்டுக்கொண்டார். அவர் தானும் தனது இளைய மகனும் பழனிமலையின் ஒரு நீண்ட பாத யாத்திரையில் இருந்து சற்று முன் திரும்பி இருப்பதாகவும், வீட்டில் வரவேற்பு நிகழ்ச்சிகள் நடந்துகொண்டு இருப்பதாகவும் விளக்கினார். உணவை காட்டிலும் அவர்களது உரையாடல் மீது இருவருக்கும் ஆர்வம் இருந்ததால், அவர்கள் இருவரும் உணவில் கவனமின்றி சாப்பிட்டார்கள். §

அந்த வணிகர் தனது விருந்தாளி விளக்கியதை போன்று ஒரு சுவாமியை, பழனியில் கண்டதாக விளக்கினார். அதிக வயதானவராக இருந்த அந்த ரிஷி கரு விழிகளுடன், சடைமுடி உச்சந்தலையில் மடிக்கப்பட்டு, மிகவும் ஒல்லியான உருவத்துடன், ஆனால் ஆறு வயது சிறுவனின் உற்சாகத்துடன் இருந்ததாக குறிப்பிட்டார். அவர் எங்கே சென்று இருப்பார் என்பது தனக்கு தெரியவில்லை என்றும், ஆனால் அவரை பழனியில் ஒரு நாள் பார்த்ததாகவும் கூறினார். அந்த ரிஷியின் முகம் தனது வாழ்நாள் முழுவதும் நினைவில் இருக்கும் என்றும் கூறினார். “நீங்கள் நாடுபவர் அவராகத் தான் இருக்க

வேண்டும்," என்று உறுதியாக கூறினார். "அவரைப் போன்ற ஒரு மாமனிதரை வாழ்நாளில் யாராலும் இருமுறை பார்க்க முடியாது," என்றும் கூறினார். சாது உணவு அருந்திய பிறகு, தன்னை உபசரித்தவருக்கு  நன்றி தெரிவித்துவிட்டு, தமிழ்நாட்டின் தென்கிழக்கு திசையில் 300 கிலோமீட்டர் தொலைவில் இருந்த பழனிக்கு, ஒரு நீண்ட பாத யாத்திரையை தொடங்கினார். §

## ரிஷியை சந்தித்தல்

ஒரு யோகியாக கோவணத்துடன் முருகப்பெருமான் எழுந்தருளி, அறுபடை வீடுகளில் ஒன்றான பிரசத்தி பெற்று இருக்கும், பழனிமலை கோயிலில் அவர்கள் இறுதியாக சந்தித்தார்கள். இது முருகப்பெருமான் முதல் முறையாக ரிஷிக்கு காட்சி அளித்த புனித இடமாகும். இந்த அனுபவம் ரிஷியை வடக்கு நோக்கி இமயமலைக்கு, வாழ்நாள் சாதனாவிற்கு மற்றும் தெய்வீக உணர்தல்களை பெறுவதற்கு வழிவகுத்தது. அவர் தனது ஆன்மீக விழிப்புணர்வு தொடங்கிய இடத்திற்கு திரும்பியிருந்தார். §

அவர்களது சந்திப்பு, இருவர் சந்திக்கும் சாதாரண சந்திப்பாக இருக்கவில்லை. சாது வழிபாட்டில் ஈடுபட்டு இருந்த போது, ரிஷி பின்பக்கமாக வந்து தன்னை பின்தொடருமாறு கையை அசைத்தார். அவர்கள் சுமார் ஓராண்டிற்கு ஒன்றாக இருந்து சிதம்பரத்தில் சில நாட்கள், அதன் பிறகு திருவண்ணாமலை, மற்றும் வடக்கே மதராஸ் மற்றும் நெல்லூர் என்று தமிழ்நாட்டில் இருந்த கோயில் குளங்களுக்கு ஒன்றாக சென்றனர். §

ரிஷி மற்றும் அவரது சீடனை ஒன்றாக பார்ப்பது, ஒரு அபூர்வமான காட்சியாக இருந்ததால், அந்த நினைவு மக்கள் மனதில் நீங்காமல் இருந்தது. அவர்கள் எங்கே சென்றாலும், மக்கள் அவர்களை கவனமாக பார்த்தார்கள் அல்லது தங்கள் வேலைகளை நிறுத்திவிட்டு அவர்களை நோட்டமிட்டார்கள். ரிஷி அகல காலடியுடன் நேராக பார்த்து நடந்தார். மக்கள் அவரை நோட்டமிட்டால், அவர் தன்னைப்பற்றி  பொருட்படுத்தாமல், வேறு எங்காவது பார்த்துக்கொண்டு இருப்பார். ஆனால் உயரமாக இருந்த அவரது சீடன், ரிஷியின் இரண்டு காலடிகளுக்கு ஒரு காலடி வைத்து, தனது பார்வையை மேகங்கள் மற்றும் மரங்களின் மேற்பகுதியில் பொருத்திக்கொண்டு, மெதுவாக நடந்துகொண்டு இருந்தார். §

அவர்கள் நீண்டநாள் நண்பர்களைப் போல தோளோடு தோள் கொடுத்து நடந்து சென்றனர். ஒரு கிராமம், வழியில் ஒருவரது  வீடு, ஒரு கோயில் அல்லது சாலைக்கு அருகில் இருக்கும் ஒரு மரத்தடி என்று  பொழுது சாயும் போது எங்கே இருந்தார்களோ, அங்கே அன்றைய இரவை கழித்தார்கள். இரவின் பெரும்பாலான பொழுதை உட்கார்ந்தே கழித்த பிறகு, விடியலுக்கு முந்தைய இருட்டில் அவர்கள் வழக்கமாக ஒன்றாக தியானம் செய்துக்கொண்டு இருப்பதை காணலாம். அவர்கள் சூரிய உதயத்திற்கு முன்பாக, ஒரு கிணறு அல்லது நதியில் குளித்து, சிறிது உடற்பயிற்சி செய்த பிறகு, தனது சிஷ்யனை அருகில் அமர்த்தி, கிழக்கு நோக்கி உட்கார்ந்து இருப்பார். ரிஷி தினமும் காலையில் பல மணி நேரங்களுக்கு, தனது சீடனுடன் பேசிக்கொண்டு

இருப்பார் மற்றும் அதன் பிறகு காலை உணவிற்கு யாசகம் செய்ய அனுப்பிவிடுவார். அவர்கள் வெப்பம் அதிகமாக இருக்கும் நேரம் முழுவதும் தூங்கி, மதியத்தில் நடக்கத் தொடங்குவார்கள். இவ்வாறு அவர்கள் ஒவ்வொரு நாளும் நிதானமாக ஒரு சில கிலோமீட்டர்கள் நடந்து சென்றனர். §

அவர்கள் தங்கும் இடம் ஒரு காடாக இருக்கட்டும், அல்லது ஒரு வனப்பகுதி ஒரு காலி இடமாக இருக்கட்டும், மக்கள் உடனே அவர்களை சுற்றி கூடிவிடுவார்கள். அதனால் அவர்கள் ஒரே இடத்தில் மூன்றாவது நாள் என்றுமே தங்கியது இல்லை. இரண்டாம் நாள், அவர்களை தரிசித்து ஆசிகளை பெற அதிக மக்கள் வருவார்கள். கையில் உணவுடன் வரும் மக்கள் தங்களை பிடிக்க வருவதாக ரிஷி கூறுவார். அவர்கள் ஒரு முறையான கிராமத்தில் தங்காத போது, சாது தங்களுக்கு தேவையான உணவை யாசிக்க அருகில் இருந்த குக்கிராமத்திற்கு நடந்து செல்வார், மற்றும் பெரும்பாலும் கிராமத்தில் இருந்து திரும்பும் போது, அவரை பின்தொடர்ந்து ஐந்து அல்லது பத்து சிறுவர்கள் வருவார்கள். சாதுவைப் போன்ற ஒரு உயர்ந்த மனிதரை அவர்கள் பார்க்காததால், சிறுவர்கள் அவருடன் இருக்க விரும்பி, அவர் யாசித்த பொருட்கள் மற்றும் குடையை சுமந்து வந்தார்கள், மற்றும் தங்கள் தாயின் சமையலறையில் இருந்து பால், மாம்பழங்கள் மற்றும் இனிப்புக்களை கொண்டு வந்தார்கள். இத்தகைய ஒரு அணிவகுப்பு நெருங்குவதை பார்க்கும் போது, ரிஷிக்கு தானாகவே சிரிப்பு வந்துவிடும். அவரது சீடரால் இந்த அணிவகுப்பை நிறுத்த முடியவில்லை; இதில் அவர் செய்வதற்கும் எதுவும் இல்லை. அவர் சிறுவர்களை கடிந்து கொண்டாலும், அவர்கள் விளையாட்டுத்தனமாக சற்று விலகி பின்தொடர்ந்து வருவார்கள். §

### புனிதமான அறிவுறுத்தல்கள்


சுமார் 1860 ஆம் ஆண்டிற்கு அருகில், சிவபெருமானின் புண்ணியத்தலமான தஞ்சாவூரில், ரிஷியும் சீடனும் ஒன்றாக காணப்பட்டதாகவும், அங்கே அவர்கள் ஒரு பண்ணையாருக்கு சொந்தமான கோயிலில் பல வாரங்கள் தங்கி இருந்ததாகவும் கூறப்படுகிறது. நமது ஆக்கப்பூர்வ வர்ணனையாளர் பின்வரும் கதையை எழுதுவதற்காக, அந்த காலத்தில் நிலவிய கலாச்சாரத்தின் அடிப்படையில், மக்கள் நினைவில் இருந்து நீங்கிய பழங்கால நிகழ்வுகளை, கவனமாக ஆய்வு செய்திருக்கிறார். §

தலைநகரமான மதராஸின் தென்திசையில் அமைந்துள்ள இந்த புண்ணிய தலத்தில் இருந்து கிளம்பி, அவர்கள் ஒரு பெரிய பண்ணையை கடந்து சென்றுக்கொண்டு இருந்தனர். நேர்த்தியாக உடை அணிந்திருந்த ஒருவர், தனது வீட்டில் இருந்து விரைந்து வந்து அவர்களை சந்தித்தார். அவர்களை பக்தியுடன் வணங்கிவிட்டு, தான் இதன் பண்ணையார் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். நேற்று இரவு தனது கனவில், இரண்டு விருந்தாளிகள் தோன்றியதாகவும், அவர்கள் இருவரும் தனது குடும்ப கோயிலில் அமர்ந்து இருப்பதாக கண்டதாகவும், அவர்கள் வருவார்கள் என்று காலையில் இருந்து தான் காத்து இருப்பதாகவும் உற்சாகத்துடன் கூறினார்.

அவர்கள் தனக்கு விருந்தாளியாக, அவர்களின் விருப்பத்திற்கேற்ப பல நாட்கள் இருக்கலாம் என்றும் கெஞ்சினார். அவர்கள் இருவரும் அந்த மாளிகைக்குள் நுழைந்த போது, நுழைவாயிலில் பணியாளர்கள் உற்சாக வரவேற்பு அளித்தார்கள். §

பண்ணையார் அவர்களது பாதங்களை கழுவினார், மற்றும் தான் கண்டது தீர்க்கதரிசன கனவாக இருக்கலாம் என்று நினைத்து தான் வாங்கியிருந்த பூக்களால் அவர்களது பாதங்களை பூசை செய்தார். அவர் தனது விருந்தாளிகளை வீட்டினுள் அழைத்து சென்று, தனது குடும்பத்தாரிடம் அறிமுகம் செய்து வைத்தார். அதன் பிறகு தனது வீட்டின் பின்புறத்தில் விசாலமான முற்றத்தின் குறுக்காக அமைந்து இருந்த, தங்கள் குடும்ப கோயிலுக்கு செல்லும் வழியை காண்பித்தார். அது பல தூண்களுடன் ஒரு உயரமான கூரையுடைய மண்டபமாக இருந்தது. அதன் சுவர்களில் பாரம்பரிய முறைப்படி சிவப்பு மற்றும் வெள்ளை வண்ணக்கோடுகள் பூசப்பட்டு இருந்தது. அதன் வளாகத்தை சுற்றி வில்வம் மற்றும் மாமரங்கள் நிரம்பி இருந்தன. அந்த மண்டபத்தில் ஒரு சிறிய விக்ரகத்துடன் ஒரு சிறிய கோயில் அமைந்து இருந்தது. அவர் கைகளால் சைகை காண்பித்துக் கொண்டு, “இந்த கோயிலுக்கும் எனக்கும் ஒரே வயது,” என்று உற்சாகமாக கூறினார். “நான் பிறந்த போது என் பாட்டனார் இதை கட்டினார். இந்த கோயிலுக்காக எனது தந்தையும் கடினமாக உழைத்து இருக்கிறார்.” முகப்பு மண்டப்பத்தின் நிழலில் கல்லில் செதுக்கப்பட்ட சிறிய நந்தி அமைந்து இருந்தது, மற்றும் அதனை பண்ணையார் கடந்து செல்லும் போது அன்புடன் வணக்கம் செலுத்தினார். §

அந்த சிறிய கோயில் எந்த வித குறையும் இன்றி மிகவும் தூய்மையாக இருந்தது. சந்தன மரக்கதவுகளை திறந்தபோது, அது பளபளக்கும் கருங்கல் தரையை வெளிப்படுத்தின மற்றும் சுவர்களின் பெரும்பாலான பகுதி பிரத்யேகமாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர மரம் மற்றும் சுண்ணாம்புக்கலவையினால் செய்த சிற்பவேலைகளால் நிரம்பி இருந்தன. அந்த சிறிய கோயிலில் இருந்த சிவலிங்கம் மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, நகைகளை கிரிடமாக கொண்டு இருந்தது. அங்கே சாம்பிராணி வாசனை நிரம்பி இருந்ததால், அப்போது தான் *பூசாரி* கோயிலை விட்டு கிளம்பி இருக்கவேண்டும். பண்ணையாரிடம் அதிகம் செல்வம் இருப்பது தெளிவாக தெரிந்தது. மணி, தட்டுகள் மற்றும் லிங்கத்திற்கு மேலே தொங்கிக்கொண்டு இருக்கும் பானை என்று பூசை பொருட்கள் அனைத்தும் தங்கம் அல்லது வெள்ளியால் உருவாக்கப்பட்டு இருந்தன. அங்கே ஒரு அமைதியான மற்றும் உன்னதமான சூழ்நிலை நிலவி, அதுவே ஒரு உலகமாக இருந்தது. §



*இளம் வயது சாது தனது குருவான, இமயமலையில் இருந்து வந்த ரிஷியை பழனிமலையில் சந்தித்தார். இருவரும் இணைபிரியாது சாலையில் ஒன்றாக,*

*ஒரு இடத்தில் இரண்டு இரவுக்கு மேல் தங்காமல், உண்மையான ஆண்டிகளாக, தங்களது உணவிற்கு யாசகம் செய்து திறந்தவெளியில் வாழ்ந்துகொண்டு இருந்தனர்.*

……………………..§

அந்த கோயிலில் இருந்த இன்னொரு கதவு வழியாக ஒரு ஒல்லியான பிராமண இளைஞன் நுழைந்தான். இவர்களை பார்த்ததும் அவன் ஒதுங்கிக்கொண்டான், ஆனால் பண்ணையார் அவனை திரும்ப அழைத்து, “இவன் பெயர் ரமேஷ். இவன் தந்தை பல வருடங்களாக நம்மிடம் பூசாரியாக இருக்கிறார். எதிர்காலத்தில் ரமேஷ் தனது தந்தையின் பணியை தொடரவிருக்கிறான்,” என்று தனது இரு விருந்தாளிகளிடம் தெரிவித்தார். §

யாத்ரீகர்களுக்காக தான் பராமரித்த ஓய்வு விடுதி மற்றும் அவர்களின் தேவையை பூர்த்தி செய்ய, பொருட்களால் நிரப்பி வைத்திருந்த சேமிப்பு கிடங்கையும் காண்பித்தார். தண்ணீர் குடங்கள், வேட்டிகள், சால்வைகள், குடைகள், பாய்கள், கைத்தடிகள், விசிறிகள், சந்தனக்கட்டைகள், தட்டுகள் மட்டுமில்லாமல் சிறிய ஊசிகளில் இருந்து போர்வைகள் வரை, மற்றும் நிறைய நாணயங்கள் நிரம்பிய ஒரு சிறிய குடை என்று யாத்திரைக்கு தேவைப்படும் ஒவ்வொரு பொருளும் அங்கே இருந்தன. §


“இந்த வழியாக மழைக்காலங்களில் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கும்,” என்று அவர் விளக்கினார். “அவர்கள் தஞ்சாவூர் மற்றும் சிதம்பரம் வரை சென்று, மீண்டும் இதே இடத்திற்கு திரும்பி வருவார்கள். எங்கள் குடும்பம் அவர்களை தொடர்ந்து சிறந்த முறையில் உபசரித்து வந்துள்ளது,” என்று கூறி சிறிய இடைவெளிக்குப் பிறகு, “ஆனால் இந்த மாதம் யாத்ரீகர்கள் வருவது குறைவாக இருக்கும். அதனால் நீங்கள் தனியாக இருப்பீர்கள். யாரும் உங்களுக்கு இடைஞ்சலாக இருக்கமாட்டார்கள்.” §

பிறகு வெளியே சென்று, மண்ணில் 12 அடி அகலத்துடன் உட்புறத்தில் கற்களால் வட்டவடிவில் உள்வரிப்பூச்சு செய்யப்பட்ட குடும்பக் கிணற்றை காண்பித்தார். மீண்டும் தனது விருந்தாளிகளை பார்த்து கைக்கூப்பி, “ உங்களுக்கு சேவை செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் இங்கே சிறிது காலம் தங்க வேண்டும். உங்களின் வசதிக்கேற்ப இங்கே தங்கலாம். இது எனக்கு சிவபெருமான் அளித்த கடமை; இதை உங்களால் நிராகரிக்க முடியாது,” என்றார். அவரிடம் இருந்த குழந்தையின் நேர்மையும், கெஞ்சிக்கேட்கும் பார்வை வேண்டிக்கொண்டதையும் அவர்களால் நிராகரிக்க முடியவில்லை, மற்றும் அவர் பெருமகிழ்ச்சி அடைந்தார். அவர் மீண்டும் வணக்கத்தை தெரிவித்து, அவர்களுக்கான உணவு விரைவில் வந்துவிடும் என்று கூறி, நேராக தனது வீட்டை நோக்கி சென்றார். §

அவர்கள் இந்த சிறிய கோயிலில் ஒரு வாரம் தங்கி இருந்தார்கள். வேறு யாரும் அங்கே தங்கவில்லை, யாரும் அவர்களது அமைதியை குளைக்கவில்லை. வந்த விருந்தாளிகள் கனிவாக திருப்பி அனுப்பப்பட்டதாக

அவர்களுக்கு தோன்றியது. அந்த சிறிய கோயிலின் வலுவான கல் சுவர் வழியாக வெளியுலகின் எந்த சிந்தனையும், சிவபெருமானைத் தவிர எந்த நினைவும் உள்ளே நுழைய வாய்ப்பில்லை; மற்றும் இந்த பேரின்பம் நிறைந்த சூழலில் அன்றாட நிகழ்வுகளின் கவலை இல்லாமல், தங்களது யாத்திரையை அவர்களால் மெய்யுணர்வின் உச்சத்திற்கு எளிதில் எடுத்துச்செல்ல முடிந்தது. §

அவர்கள் இரவு பகல் என்று பார்க்காமல், ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்து இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு நாள் காலையிலும், கிணற்றில் இருக்கும் குளிர்ச்சியான மற்றும் சுத்தமான நீரை வாளியில் இறைத்து, தலையில் இருந்து கால் வரை ஊற்றி குளித்துவிட்டு, சிறிது தூரம் நடந்து செல்வார்கள். அதன் பின்னர் குரு தனது சீடனிடம், வாழ்நாள் முழுவதும் துணைபுரியும் வலுவான அறிவுறுத்தல்கள் மற்றும் உட்பார்வைகளை வழங்குவார். மதிய உணவிற்கு பிறகு, அவர்கள் நீண்டநேரம் தூங்குவார்கள் மற்றும் சூரிய மறைவுக்குப் பிறகு, அவர்கள் மீண்டும் தியானம் செய்ய தொடங்குவார்கள். அவர்கள் இருவரும் பலமணி நேரங்களுக்கு ஆழமான, ஆன்மீக ஒற்றுமை மற்றும் ஒரு முழுமையான இணக்கத்தில் அமர்ந்து இருப்பார்கள். அவர்களுக்கு இடையே நடைபெறும் உரையாடலில் ரிஷி மட்டுமே உரை வழங்குவார், மற்றும் அதுவும் தொடர்ச்சியில்லாமல் இருக்கும். §



*அவர்கள் ஒன்றாக சேர்ந்து இருந்த இறுதி நாளன்று, எளிமையாக இருந்தாலும் வலுவாக சீடனின் முழங்காலை தொட்டு, அதன் மூலம் சிவபெருமானின் ஒளி*

*மற்றும் அன்பை சிஷ்யன் என்கிற இந்த புதிய பாத்திரத்தில் ஊற்றி, ரிஷி தனது சீடனுக்கு தீட்சையை வழங்கினார்.*

........................§

அவர் தனது சீடனிடம், அவன் இலங்கையின் வடக்கு தீபகற்பத்தில் இருக்கும் யாழ்ப்பாணத்திற்கு செல்லுவான் என்றும், ஆனால் அதற்கு தனது உட்புறத்தில் இருந்து ஆணைகள் வரும்வரை காத்திருக்க வேண்டும் என்றும் கூறினார். "சைவ சமயம் உலகின் இந்த பகுதியில் மட்டுமே வலுவாக பின்பற்றப்படுகிறது. சமீபகாலத்தில் மேற்கத்திய தாக்கத்தால், ஒரு பின்னடைவு ஏற்பட்டு இருந்தாலும், அது அழியவில்லை. கடுமையான முயற்சியின் மூலம், அதை புனர்நிர்மாணம் செய்ய முடியும். அங்கிருக்கும் மக்கள் தூய்மையானவர்கள்; அவர்கள் தங்கள் பாரம்பரியத்தை பேணி காக்கிறார்கள்; ஆனால் அவர்களுக்கு சிவபெருமானின் ஆன்மாவைப் பற்றி தெரியவில்லை. அவருடைய சக்தியும் அருகாமையும், அவர்களுக்குள் உறங்கிக்கொண்டு இருக்கிறது. அவர்கள் ஆச்சார வழிகளை பின்பற்றினாலும், தங்களது ஆச்சாரத்தின் ஆழங்கள் அவர்களுக்கு தெரியவில்லை. ஆன்மீக விரிவாக்கத்தின் வாகனமாக, ஆச்சாரமான சைவ கலாச்சாரம் விளங்குவதை அவர்கள் மறந்து இருக்கிறார்கள். §

"அங்கே சென்று அந்த உணர்விற்கு புத்துணர்ச்சியை வழங்கி, அதை காண்பித்து, அதைப்பற்றிய விளக்கமும் வழங்கு. அதிசயங்கள் செய்பவனாக இரு. நீ அறிந்திருப்பதைக் காட்டிலும் உன்னிடம் அதிகமான ஸித்திகள் இருக்கும். நீ பல அற்புதங்கள் நிகழ்த்துவாய். நீண்டகாலம் வாழ்ந்து நிறைய சீடர்களுக்கு வழிகாட்டு. அங்கிருக்கும் மக்கள் உன்னை சிறை பிடித்து, தக்க வைத்துக்கொள்ள முயற்சி செய்வார்கள், ஆனால் நீ அதற்கு அனுமதி வழங்காதே. நீ உனது பணியை முடித்த பிறகு, அவர்கள் நலனை கருதி, அவர்களை விட்டு விலகிவிடு. உன்னை பயன்படுத்திக் கொள்ள பலர் இருப்பார்கள், ஆனால் புரிந்துகொள்ள அல்ல பாராட்ட சிலர் மட்டுமே இருப்பார்கள் மற்றும் நீ தருவதை கேட்பதற்கு வெகு சிலரே இருப்பார்கள். மற்றவர்கள் எல்லா விவகாரங்களுக்கும் உன்னிடம் வருவார்கள். அவர்களுக்கு தேவையானது அனைத்தும் வழங்கிவிடு. இப்படி செய்வதால், நீ பணிகள் அனைத்தையும் முடித்து விடுவாய்." §

தனது சீடனின் ஆன்மீக பொறுப்பை மரபுரிமையாக இறுதியில் பெறவிருக்கும் உயிர்சக்தியை பற்றி ரிஷி விளக்கம் அளித்தார். அவன் அமைதியாக, மிகவும் புனிதமாக இருப்பான். ஆனால் அவன் பித்து பிடித்தது போல நடந்துக்கொள்வான். "நீ பெற்ற ஸித்திகளை மற்றவர்களுக்கு கற்றுக்கொடு. ஆனால் ஞானத்தின் முத்துக்களை இவனுக்கு மட்டும் வழங்கு. அவன் வெளிநாட்டவர்கள் ஆட்சியின் போது, முட்டாள்தனத்தின் போர்வையில், தனது குரு பரம்பரையின் சக்தியை காப்பாற்றி, தனது சீடர்களுக்கு வழங்குவான்," என்று அறிவுறுத்தினார். இவ்வாறு ரிஷி, தினமும் தனது சீடனுக்கு விரிவான அறிவுறுத்தல்களை வழங்குவார். §

இருவரும் இணைந்து இருந்த இறுதி நாளன்று, விடியற்காலையில் அவர்கள் அக்னிக்கு முன்பாக அமர்ந்து, சைவ சமய ஈமச்சடங்குகளில் செய்வதைப் போல, ரிஷி தனது சீடனின் நெற்றியில் விபூதியை பூசி, அவனுக்கு சந்நியாசம் என்கிற துறவற தீட்சையை வழங்கினார். புதிதாக அரைத்த சந்தனத்தை சீடனின் மார்பில் பூசி, தீட்சை பெற்றவருக்கு முக்தியானந்தா என்று துறவற வாழ்க்கைக்கான பெயரை வழங்கினார். “முக்தியில் இருக்கும் பேரின்பத்தை அனுபவிப்பவன்” என்பது அதன் பொருள். §

ரிஷி கைகளை நீட்டி, தனது நோக்கத்தில் கவனத்துடன், முக்தியானந்தாவின் முழங்காலை தொட்டு, திடீரென்று தனது சீடனை உலகில் சமயப்பணியை மேற்கொள்ள அனுப்பி வைத்தார். அந்த தொட்டுணர்வை சீடன் தனது வாழ்நாள் முழுவதும் மறக்கவில்லை. முக்தியானந்தா எழுந்து நின்று, தனது சற்குருவை தரையில் விழுந்து வணங்கினார் மற்றும் குரு அறிவுறுத்தியவாறு, உடனே அந்த இடத்தை விட்டு கிளம்பினார். ரிஷி அந்த கோயிலில் தொடர்ந்து வசித்து வந்தார். §

ரிஷி தனிநபருக்கு கோயிலில் சில நாட்கள் தங்கி இருந்தார். அதன் பிறகு அவர் தெற்கு திசையில் சென்று, திருச்செந்தூர் சுப்ரமணிய சுவாமி கோயிலில் சிறிது காலம் தங்கி இருந்து, இந்தியாவின் தென் முனையில் இருக்கும் அம்மன் கோயிலான கன்னியாகுமரிக்கு சென்றார். அந்த கடற்கரையில் அவர் தனக்கு உகந்த இடத்தை தேடிக்கொண்டு, தனது உடலில் இருந்து உயிர் பிரியும் வரை, சமாதி நிலையில் தொடர்ந்து வளர்ச்சி அடையும் அனுபவங்களை எதிர்கொண்டு வந்தார். §

Page 20: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/20_ka02_02.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் ஆறு


# முக்தியானந்தா இலங்கையை நோக்கி கடலில் பயணம்

ஒருகாலத்தில், தனக்கென்று ஒரு அரசருடன் இருந்த யாழ்ப்பாணம், கலாச்சாரம் மற்றும் ஆன்மீக ரீதியாக தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தது. கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் போர்த்துகீசியர்கள், நெதர்லாந்து நாட்டவர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் என்று தொடர்ச்சியாக ஒரு முப்பெரும் இராச்சியத்தின் கீழ் சிக்கிக்கொண்டது. இந்த குடியேற்ற குழுக்கள் அரசியல், வணிகம் மற்றும் மதத்தில் தங்களது மேலாதிக்கத்தை விரிவுப்படுத்த, இந்த அமைதியான தீவிற்கு வந்தடைந்தனர். யாழ்ப்பாணத்திலும் அதை சுற்றியும் பல இந்து கோயில்கள் அழிக்கப்பட்டு, பல கிறுத்துவ தேவாலயங்கள் கட்டப்பட்டன. அப்போது ஒரு ஆன்மீக தலைவரின் தேவை மிகவும் அதிகமாக இருந்தது. §

தனக்கு கிடைத்த அறிவுறுத்தலின் படி முக்தியானந்தா, தென்னிந்தியாவில் இருந்து இலங்கை நோக்கி புறப்பட்டார். அந்த பயணம் நடைமுறையில் கடினமாகதாக இருந்திருக்கவேண்டும். அவர் கால்நடையாக நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் தூரத்தை கடந்து, சுமார் 1860 வருடத்தில் இந்தியாவின் தெற்கு கரையை அடைந்தார். அவர் பால்க் நீர்சந்தியை மந்திர சக்தியால் பறந்து கடந்ததாக தமிழ் புராணக்கதை கூறினாலும், அவர் மிகவும் சாதாரண வழிகள் மூலமாக வந்ததாக வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் நமக்கு தெரிவிக்கிறார்கள். *ஈழத்து சித்தர்கள்* என்ற இலக்கியத்தில், முத்தையா இவ்வாறு வர்ணிக்கிறார்: §

> அந்த நாட்களில், வட இலங்கையில் ஊர்காவல்துறை ஒரு முக்கிய துறைமுகமாக இருந்தது. இந்தியாவில் இருந்து இலங்கை நோக்கி பெரிய கப்பல்கள் வந்துக்கொண்டு இருந்தன. இந்தியாவின் நாகப்பட்டினத்தில்

இருந்து இலங்கைக்கு செல்லும் கப்பல்கள், முதலாவதாக எழுவைதீவை கடந்து செல்லும். இதைப்போன்ற ஒரு கப்பலில் முக்தியானந்தா ஊர்காவல்துறை வந்து சேர்ந்தார். அதன் பிறகு அவர் ஊர்காவல்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நடந்து சென்றார். அவர் முதன்முதலில் மண்டைதீவு என்ற இடத்தில் தங்கினார். §



முக்தியானந்தா 1860 களில் வட இலங்கை வந்து சேர்ந்தார். அவர் இந்த தீவிற்கு ஒரு அந்நியராக வந்து இருந்தாலும், எதிர்காலத்தில் இந்த ஆன்மா தனிப்பட்ட முறையில், ஆங்கிலேய ஆட்சியில் உறக்கத்தில் இருந்த தமிழர்களை விழிக்க


*வைத்து, சிவபெருமான் மற்றும் அவர்களது முன்னோர்கள் சமயமான இந்து சமயத்தின் மீது, அவர்களது நம்பிக்கைக்கு மீண்டும் புத்துணர்ச்சி வழங்கவிருந்தார்.*

........................§

யாழ்ப்பாணம் தீபகற்பத்தில் ஒரு தீவாக இருக்கும், மண்டைதீவின் நீளம் 800 மீட்டர் மற்றும் அகலம் 3.2 கிலோமீட்டர்கள். இந்த இடத்தில் சுவாமி வாசம் செய்ததால், இது ஒரு ஆன்மீக விழிப்புணர்வு பெற்ற இடமாக மாறியது. இன்றும் இந்த தீவு, ஆன்மீக சக்தி மற்றும் சிவன் கோயில்களுக்கு பிரசித்தமாக இருக்கிறது. §

இந்த ஊருக்கு சுவாமி வந்தபோது, அவர் நன்னியர் என்று ஒரு நபரை சந்தித்தார். அவர் தனது வீட்டிற்கு அருகில், ஒரு சிறிய குடிசையில் சுவாமி தங்க அனுமதி வழங்கினார். அது சுவாமியின் இருப்பிடமாக மாறியது. அந்த ஆசிரமம், மாட்டு சாணத்தால் மொழுகிய தரை மற்றும் சுண்ணச்சாந்து சுவர்கள், பனை ஓலையால் மூடப்பட்ட தென்னைமர கூரையுடன் இருந்தது. அவருக்கு கட்டிலாக இருந்த ஒரு சிறிய மரப்பலகையின் நீளம் 4 அடி தான். இன்றும் அவர் பயன்படுத்திய கட்டில் உட்பட பல பொருட்கள் இருக்கின்றன; மற்றும் அங்கிருக்கும் மக்கள் இன்றும் சுவாமியுடன் தொடர்புடைய தங்களது முப்பாட்டனார் காலத்து கதைகளை மகிழ்ச்சியுடன் நினைவுகூர்கிறார்கள். §

முக்தியானந்தா இலங்கைக்கு செல்வதற்கு முன், ஒரு தென்னிந்திய கோயிலில் வைரமுத்து என்ற ஒரு செட்டியாரை சந்தித்து இருந்தார். அப்போது வைரமுத்து சுவாமியை தன்னுடன் இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்த போது, "நீ போ; நான் வருவேன்," என்று முக்தியானந்தா பதில் அளித்து இருந்தார். ஒரு நாள் சுவாமி இலங்கையில் இருக்கும் வைரமுத்துவின் வீட்டிற்கு சென்றார். தனது கணவர் கோயிலுக்கு சென்றுள்ளதாக மனைவி கூறிய போது, அவளிடம் சுவாமி உணவு சமைக்க சொல்லி, தனக்கும் அவளது கணவனுக்கும் சாப்பிட வாழை இலை தயார் செய்யுமாறு அறிவுறுத்தினார். மனைவி விருந்தாளிக்கு உணவு பரிமாறி முடித்ததும், அவளது கணவன் வீட்டினுள் நுழைந்தார் மற்றும் சுவாமி அவரிடம், "வாங்க. உட்கார்ந்து சாப்பிடுங்க," என்றார். §



*முக்தியானந்தாவின் படகு இலங்கையின் வடமேற்கு பகுதியில் கரை சேர்ந்தது. அங்கே அவர் ஒரு சிறிய குடிசையில் குடி புகுந்தார். திறந்தவெளி சந்தையில் தனது சமயப்பணியை மேற்கொள்ள, அவர் விரைவில் யாழ்ப்பாணம் நோக்கி தினமும் குறுகலான குறுநிலம் வழியாக நடந்து செல்லத் தொடங்கினார்.*

……………………..§

இறுதியில், வைரமுத்து தனது வீடு மற்றும் சொத்துக்களை சுவாமிக்கு வழங்கி, தானும் சின்னசுவாமி என்ற சாதுவாக மாறினார். சுவாமி வீட்டை கந்தர்மடம் அன்னதானசதரன் என்ற பெயரில் நல்லூருக்கு அருகில் ஒரு ஆசிரமமாக மாற்றினார்; மற்றும் பணத்தை வைத்து தினமும் பக்தர்களுக்கு உணவு வழங்க ஒரு நன்கொடை நிறுவலை உருவாக்கினார். §

தினமும் மண்டைதீவில் இருந்து மணல் நிரம்பிய குறுநிலம் வழியாக யாழ்ப்பாணத்திற்கு ஆறு கிலோமீட்டர் நடந்து சென்று, சந்தையில் நுழைந்து ஆன்மீக ஞானத்தை பகிர்வது கடையிற்சுவாமிக்கு பழக்கமாகிவிட்டது. அவர் மாலையில் மண்டைதீவு திரும்பி விடுவார் அல்லது யாழ்ப்பாணத்தில் தங்கி வண்ணார்பண்ணை சிவன் கோயிலின் படிகளை தனது கூடாரமாக மாற்றிக்கொள்வார் அல்லது அருகில் இருந்த தனியார் விடுதியில் தங்குவார். பிற்காலத்தில், யாத்ரீகர்களுக்கு படுக்கை மற்றும் உணவு வழங்குவதற்காக தனது சீடர்களான உஸ்ஸான், கந்தர்மடம் மற்றும் ஏற்லலை கட்டியிருந்த மையங்களை பயன்படுத்திக் கொண்டார். §


ஒரு வினோதமான சாதுவாக விளங்கிய முக்தியானந்தாவிற்கு, எழுத்து வடிவில் பதிவு அல்லது புகைப்படம் என்று எதுவும் இல்லை, தெளிவில்லாத சில ஓவியங்கள் மட்டுமே இருக்கின்றன. ஆனால் அவர் கர்நாடகாவில் ஒரு

உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தது, மற்றும் ஆங்கிலம், சமஸ்கிருதம், கன்னடம் மற்றும் தமிழ் மொழிகளில் அவருக்கு இருந்த புலமையில் எந்த சந்தேகமும் இல்லை. தனது உள்ளத்தில் ஏற்பட்ட ஆழமான மாற்றம் காரணமாக, அவர் துறவறம் மேற்கொண்டார் என்பது அவருக்கு நெருக்கமான சீடர்களுக்கு தெரிந்து இருந்தது. §

மைசூர் சிருங்கேரி மடத்தின் சங்கராச்சாரிய பீடத்தின் 32 ஆவது தலைவராக இருந்த, ஸ்ரீ நரசிம்ம பாரதியின் மூலம் முக்தியானந்தாவிற்கு தீட்சை வழங்கப்பட்டது என்று உறுதிப்படுத்தப்படாத ஊகத்தை, *ஈழத்து சித்தர்களில்* என். முத்தையா குறிப்பிட்டுள்ளார்: §

> ஸ்ரீ நரசிம்ம பாரதி 1817 மற்றும் 1879 வருடத்திற்கு இடையில், மைசூர் சிருங்கேரி மடத்தின் சங்கராச்சாரிய பீடத்தின் 32 ஆவது தலைவராக இருந்தார். ஒரு மிகப்பெரிய சித்தராக இருந்த இவர் பல ஞானிகள், யோகிகள், சித்தர்கள் மற்றும் *ஜீவன்முக்தாக்களை* உருவாக்கி இருக்கிறார். அவர் பீடாதிபதியாக விளங்கிய 62 வருட காலத்தில், 40 வருடங்கள் பயணத்தில் கழிந்தன. அவரது இறுதி பன்னிரண்டு வருடங்கள் தமிழ்நாட்டில் ஆன்மீக சேவை செய்வதில் கழிந்தன. தனது முக்கிய சீடன் மற்றும் சக சித்தராக இருந்த ஸ்ரீ சச்சிதானந்த சிவாவுடன் சேர்ந்து, மக்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்த பல கிராமங்களுக்கு பயணம் மேற்கொண்ட போது, ஒரு சந்தர்ப்பத்தில் நீதிபதி சுவாமி முக்தியானந்தாவாக மாறினார். §

பல வருடங்களுக்கு முன்பு வாழ்க்கை வரலாற்று ஆசிரியராக இருந்த, பிரமாஸ்ரீ அ. சுப்ரமணிய ஐயர் (1857-1912), முதியானந்தா 1810 ஆம் ஆண்டு பிறந்ததாக குறிப்பிட்டு இருக்கிறார். சுவாமி யாழ்ப்பாண மக்களிடம், தன்னைப்பற்றி மிகவும் குறைவான தகவல்களை மட்டுமே பகிர்ந்துள்ளார். இமயமலையில் இருந்து வந்து, காகங்களுடன் உணவை பகிர்ந்து சாப்பிடும் பழக்கமிருந்த ரிஷி, தன்னை யாழ்ப்பாணம் செல்லவேண்டும் என்று அறிவுறுத்தியதாக சுவாமி மக்களிடம் கூறினார். முக்தியானந்தா காகங்களுடன் உணவை பகிர்ந்து சாப்பிட்டார். அவர் ஒரு மரத்தடியில் தனியாக உட்காரும் போது, உணவில் ஏதாவது மீதம் இருக்குமா என்று பார்த்துக்கொண்டு, காகங்கள் அவருக்கு அருகில் உட்கார்ந்து இருக்கும். அவருக்கு வழங்கப்பட்ட பொருள் எதுவாக இருந்தாலும், அதை அவர் பெரும்பாலும் ஏற்றுக்கொண்டதாக கூறப்படுகிறது. §



*கடையிற்சுவாமி யாழ்ப்பாணம் சந்தைகள் வழியாக செல்லும் போது, தான் மக்கள் மத்தியில் இருக்கிறார் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக்கொண்டு அகலக்கால் வைத்து மின்னல் வேகத்தில் நடந்து சென்றார். அவர் பொருட்களை வாங்க வந்தவர்களுக்கு மகிழ்ச்சியையும், கடைக்காரர்களுக்கு செழிப்பையும் அளித்த அன்புள்ளம் படைத்த முனிவராக, எல்லோருக்கும் ஒரு மர்மமாக விளங்கினார்.*

........................§

### திறந்தவெளி சந்தையின் அரசன்

முக்தியானந்தா யாழ்ப்பாணத்தின் பெரிய கடையில் தனது நாட்களை, சந்தையில் உலாவிக்கொண்டு அல்லது ஒரு பெரிய ஆலமர நிழலில் அமர்ந்துக்கொண்டு கழித்தார். இந்த சந்தையின் வடக்கு மற்றும் மேற்கில் இருந்த தெருக்களில் பெரும்பாலான கடைகள் வணிக சமூகமான செட்டியார்களுக்கு சொந்தமாக இருந்தது. முக்தியானந்தா தனது பெயரை குறிப்பிடாததால், மக்கள் அவரை கடையிற்சுவாமி (தமிழ் மொழியில் கடைக்கு அடிக்கடி வரும் சுவாமி என்ற பொருளில்) என்று அழைத்தார்கள். மக்களுக்கு தெய்வீக புருஷர்களின் பெயர்கள் பெரும்பாலும் தெரியாததால், தமிழ் கலாச்சாரத்தில் அவர்கள் வசிக்கும் இடங்களை பயன்படுத்தி

அழைப்பது வழக்கம். வரலாறு அவரை அடிகடைநாதன் அல்லது "திறந்தவெளி சந்தையின் தலைவன்" என்றும் குறிப்பிடுகிறது. §

கடையிற்சுவாமி ஏதாவது ஒரு கடைக்கு சென்று, அங்கிருந்து ஒரு ரொட்டியை எடுத்து சாப்பிடுவார். ஒரு சாதாரண வாடிக்கையாளர் இவ்வாறு கேட்காமல் எடுத்தால் கடைக்காரரர் கடிந்து கொள்வார், ஆனால் சுவாமி தங்கள் கடைக்கு வந்தால், வியாபாரம் செழிக்கும் என்பதை அறிந்து இருந்த கடைக்காரர்கள், அவருக்கு தங்களிடம் இருக்கும் பொருட்களில் சிலவற்றை தருவதற்கு ஆர்வத்துடன் இருப்பார்கள். அவர்கள் உயரமான சாது தங்கள் கடைக்கு வந்து தங்களுக்கு ஏதாவது உதவி செய்யவேண்டும் என்று பிரார்த்தனையும் செய்வார்கள். இவற்றை எல்லாம் மக்கள் கவனித்துக்கொண்டு இருந்தார்கள் மற்றும் இந்த சிறிய அறிகுறிகள் சுவாமி மீது நம்பிக்கையை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், சுவாமி ஆசீர்வதித்து மந்திர சக்தியால் தன்னை சுற்றியிருக்கும் உலகை மாற்றும் அவரது ஆற்றலின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தியது. அவரது எதிர்கால சீடரான செல்லப்பசுவாமி, இத்தகைய அதிசயங்களை செய்யாததால், அவர் யாழ்ப்பாண மக்களிடம் அவ்வளவு பிரபலமாக விளங்கவில்லை. இது தொடர்பாக முத்தையா இவ்வாறு குறிப்பிடுகிறார்:§

> சுவாமி சிலசமயங்களில், சந்தையில் நடனமாடுவார் மற்றும் வேறு சில சமயங்களில் அவர் ஒரு கடையில் நுழைந்து அங்கிருக்கும் நாணயங்களை தனது கரங்களால் தொடுவார். இது அந்த கடை முதலாளியின் வியாபார வளர்ச்சிக்கு வழி வகுத்தது என்பதை எல்லோரும் புரிந்துகொண்டார்கள், மற்றும் ஒவ்வொரு கடைக்காரரும் சுவாமி தன் கடைக்கு வந்து தனக்கு அருள் புரியவேண்டும் என்று காத்து இருந்தார்கள். ஆனால் எல்லோருக்கும் அந்த பாக்கியம் கிடைக்கவில்லை. §
>
> சிலசமங்களில் சுவாமி பித்து பிடித்தவர் போல, கைநிறைய நாணயங்களை கொண்டு ஒடுவார். இதைப்பார்த்த பல சிறுவர்கள் அவரை பின்தொடர்ந்து ஓடுவார்கள். அவர் திடீரென்று திரும்பி நாணயங்களை காற்றில் வீசிவார், உடனே சிறுவர்கள் ஆனந்தமாக குதித்துக்கொண்டு அந்த நாணயங்களை எடுக்க செல்வார்கள். §

கடையிற்சுவாமியின் வாழ்க்கைக் கதைகள் முழுவதும் அதிசயமான மற்றும் உடல் வேதனையை தணிக்கும் நிகழ்வுகள் நிறைந்துள்ளன. அவர் தேனை சாரயமாகவும், சாராயத்தை தேனாகவும் மாற்றியதாக வரலாற்று ஆசிரியர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். மேலும் அவர் என்றுமே கழிவறையை பயன்படுத்தவில்லை என்றும் அல்லது அதன் தேவையும் தோன்றவில்லை என்றும் குறிப்பிடப்பட்டது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை செய்ததாக குறிப்பிப்படப்படும் அற்புதங்களைக் காட்டிலும் கடையிற்சுவாமி பல அற்புதங்களை செய்ததாக, அவரது சீடரின் சீடரான யோகசுவாமி, பல வருடங்களுக்கு பிறகு தனது சீடர்களிடம் தெரிவித்தார். ஒரு நாள் இறந்து

அழுகிக்கொண்டு இருக்கும் பூனையை பார்த்த கடையிற்சுவாமி, அதை தனது கால்களால் தள்ளியதாகவும், உடனே பூனை உயிர் பெற்று, எழுந்து நடக்கத்தொடங்கியதாகவும் யோகமசுவாமி வர்ணித்தார். §

முத்தையா இன்னொரு கதையில் இவ்வாறு வர்ணிக்கிறார்:§

> வல்வெட்டித்துறையை சேர்ந்த தாண்டெல் என்பவன் சுவாமியின் சீடனாக இருந்தான். அவன் சுவாமியை வண்ணார்பண்ணையில் தரிசிக்க சென்றான். சுவாமி முண்டைதீவுக்கு சென்று இருக்கிறார் என்பது தெரிந்ததும், அவன் அந்த திசையில் நடக்கத்தொடங்கினான். அது மதிய நேரமாக இருந்ததால், வெப்பம் அதிகமாக இருந்தது, மற்றும் அவன் நடந்து சென்ற மணல் பாதை அதிக சூடாக இருந்தது. அதனால் அவனது கால்களும் உடலும் எரியத்தொடங்கின. அதை பொறுக்கமுடியாமல், அவன், “என்னால் நிற்க முடியவில்லை குருநாதா!” என்று கூச்சலிடத் தொடங்கினான். அந்த நேரத்தில் மண்டைதீவில் தனது படுக்கையில் படுத்து இருந்த சுவாமி, எழுந்து உட்கார்ந்து, “வெயில் கொடுமையாக இருக்கிறது. என்னால் இந்த வெயிலில் நிற்க முடியவில்லை!” என்ற அலறத்தொடங்கினார். அவர் தனது சீடர்களில் ஒருவனிடம் தனது கால்களுக்கு குடை பிடிக்குமாறு கூறினார். அந்த சீடனுக்கு சுவாமி கூறியது புரியவில்லை என்றாலும், அவர் உத்தரவுப்படியே செய்தான். சுவாமி சிறிது நேரம் கழித்து, தனக்கு குடை பிடித்தது போதும் என்று சீடனிடம் கூறிய போது, தாண்டெல் உள்ளே நுழைந்தான். அவன் சுவாமியின் பாதங்களை தொட்டு வணங்கிவிட்டு, கண்ணீர் மல்க சுவாமியின் அருளுக்கு நன்றி உணர்வுடன் எழுந்து நின்றான். §

முக்தியானந்தா ஒல்லியாக உயரமாக, கருப்பு வேட்டி அணிந்து, கையில் ஒரு குடையை பிடித்துக்கொண்டு இருப்பார் என்று அவரைப்பற்றி மக்கள் விவரித்துள்ளனர். அவர் ஆறு அடி நான்கு அங்குல உயரம், சுருள் முடி, கூர்மையான கண்கள் மற்றும் நீளமான மற்றும் கூரான மூக்குடன் இருந்ததாகவும்; அவர் நெட்டையாக இருந்தாலும், நல்ல உடலமைப்புடன் வசீகர தோற்றத்துடன் இருந்ததாகவும் கூறினார்கள். 20 ஆம் நூற்றாண்டின் மத்தியில், இலங்கை வானொலியில் திரு. கே. ராமச்சநதிரன் வழங்கிய உரையில் இவ்வாறு விவரித்துள்ளார். §



கடையிற்சுவாமிக்கு வாழ்க்கை மற்றும் மரணம் ஒரு மர்மமாக இருந்ததில்லை. ஒருநாள் கிராமத்து சாலைகள் வழியாக நடந்து செல்லும்

*போது, அவர் ஒரு இறந்த பூனையை குறுக்கிட்டார். அவர் அந்த பிணத்தை விழிக்க வைப்பதைப் போல, தனது காலால் தள்ளினார். சிறிது நேரம் கழித்து, அந்த பூனை உயிர் பெற்று, எழுந்து நின்று நடக்கத்தொடங்கியது.*

........................§

> கடையிற்சுவாமியின் புகைப்படம் எதுவும் நம்மிடம் இல்லை. இப்போது நம்மிடம் இருக்கும் அவரது உருவப்படங்கள், அவரது சீடனாக இருந்த ஒரு ஓவியரால் வரையப்பட்டவை. இந்த ஓவியங்களில் அவர் பரந்த தோள்கள், நீளமான கைகள் மற்றும் முகத்தில் தொடர்ந்து பிரகாசிக்கும் ஒரு புன்னகையுடன் சித்தரிக்கப்பட்டு இருக்கிறார். சிறிது வளைந்திருக்கும் அவரது முக்கின் நுனி, அவரது முகத்திற்கு அழகு சேர்ப்பதாக இருக்கிறது. அவரது விறுவிறுப்பான, கம்பீரமான நடையில் ஒரு துள்ளலும், அவரது பேச்சில் இருந்த நகைச்சுவையும் அவரது ஆளுமைக்கு வசீகரத்தை வழங்கியது என்று அவரை பார்த்தவர்கள் கூறுகிறார்கள். §

அவர் பெரும்பாலும் சுருட்டு புகைத்துக்கொண்டு இருப்பார். அவர் சுருட்டு புகைப்பதால் தோன்றும் எச்சில் தங்களது முதுகில் ஒரு நல்லாசியாக விழவேண்டும் என்பதற்காக மக்கள் போட்டி போட்டுக்கொண்டு முன்வருவார்கள். இதை திரு. கே. ராமச்சந்திரன் தனது வானொலி உரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:§


> அவரது எச்சிலை விழுங்கிய சிலர் நோய்களில் இருந்து குணமடைந்து இருக்கிறார்கள், மற்றும் சிலர் ஸித்திகளை பெற்று இருக்கிறார்கள். சுடுமலையை சேர்ந்த ஒருவர் சோதிட வல்லுனர் ஆனார். இன்னொருவர் ஒரு பிரபல மருத்துவர் ஆனார். கடையிற்சுவாமியின் மகிமையை யோக சுவாமி விளக்கும் போது: “கடையிற்சுவாமி உடலில் உடுப்பற்ற இளம்பெண்களுடன் கைகோர்த்து நடனம் ஆடினாலும், அவர் தனது கட்டுப்பாட்டை இழக்கமாட்டார். அவர் உண்மையில் புத்தர், இயேசு மற்றும் மற்றவர்களை காட்டிலும் பன்மடங்கு சிறந்தவர்.”§

கடையிற்சுவாமி மற்றும் அவர்களது சீடர்களின் புரட்சிகரமான நடத்தை காரணமாக, மிகவும் ஆச்சாரமான சைவர்கள் அவருடன் சேராமல் இருந்திருக்கலாம், மற்றும் அது அவருக்கு பிடித்து இருந்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அவர்கள் சைவ உணவை மட்டும் சாப்பிட்டு, தினமும் சிவபூசை செய்து, ஒரு ஆச்சாரமான பாதையை பின்பற்றினார்கள், ஆனால் கடையிற்சுவாமி தனக்கு அதைப்பொன்ற விதிகள் அல்லது கட்டுப்பாடுகளை விதித்துக்கொள்ளவில்லை. §

ஒரு சீடனுக்கு சீர்திருத்த பாடத்தை நடத்த ஒரு சுடுகாட்டிற்கு சென்று, ஒரு சடலத்தின் கருகிய சதையை பற்களால் கடித்த  சம்பவம், ஆச்சாரத்தை மீறிய அவரது செயல்களின் உச்சமாக இருந்தது. மூர்க்கத்தனமான நடத்தையைக் கொண்ட அத்தகைய சம்பவங்கள், நாதர்களின் பெருமைக்குரிய சின்னமாக விளங்கியது. யாழ்ப்பாணத்தை சுற்றி இருந்த பல சாதுக்கள்,

கடையிற்சுவாமியை தனது சற்குருவாக ஏற்றுக்கொண்டு இருந்தார்கள். அவர்களது உலகில், அத்தகைய வழக்கத்திற்கு மாறான நடவடிக்கைகள், சமூக விதிமுறைகளை  கடந்து இருக்கும் அறிகுறியாக, அசாதாரண பண்பின் சான்றிதழாக  விளங்கியது. §

கடையிற்சுவாமிக்கு செல்லப்பசுவாமி இல்லாமல் அருளம்பலசுவாமி, குழந்தைவேல்சாமி மற்றும் சடைவரதசுவாமி என்று பல நெருக்கமான பிரம்மச்சாரி சீடர்கள் இருந்தார்கள். அருள்பலசுவாமி தனது குருவான கடையிற்சுவாமியை, இரு வயது சிறுவனாக முதலில் சந்தித்தார் மற்றும் இளமை பருவத்தில் இருந்து அவரது சீடனாக விளங்கினார். கடையிற்சுவாமி சில காலம் கழித்து, கந்தர்மடம் அன்னதானசதரன் ஆசிரமத்தை நிர்வகிக்க அருளம்பலசுவாமியை அனுப்பி வைத்தார். மாவட்ட நீதிமன்றத்தில் செயலாளராக இருந்த குழந்தைவேல்சுவாமி, கடையிற்சுவாமியை பின்பற்ற தனது வேலையை துறந்தார். அருளம்பலசுவாமி மற்றும் குழந்தைவேல்சுவாமியின் சமாதி பீடங்கள் கீரிமலையில் உள்ளன, மற்றும் அவர்களை கௌரவிக்கும் வகையில் நகுலேஸ்வரம் சிவன் கோயிலுக்கு அருகே ஒரு மண்டபம் கட்டப்பபடடுள்ளது. §



அந்த நாட்டின் குருவாக கௌரவிக்கப்பட்ட கடையிற்சுவாமி பலரது பாராட்டுக்கள் அல்லது சிலரது விரோதத்தால் அசராது இருந்தார். அவர் எல்லாம் அறிந்து இருந்து, யாருக்கும் பதில் சொல்லவேண்டிய அவசியம்

*இல்லாமல், தனக்கென்று ஒரு வழியை வகுத்துக்கொண்டு, எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். அவர் தனியாக, காகங்களுடன் சேர்ந்து தானும் சாப்பிட்டு அதற்கும் பகிர்ந்து அளித்தார். இந்த உயிரினங்கள் தான் உணவு சாப்பிடும் போது, தனது இனத்தையும் அழைத்து சாப்பிடும் என்று கூறப்படுகிறது.*

……………………§

சடைவரதசுவாமிக்கு எட்டு வயது நிரம்பியிருந்த போது, மற்ற சிறுவர்களுடன் கடையிற்சுவாமியை சென்று பார்த்தார். அந்த சிறுவனை பார்த்ததும் கடையிற்சுவாமி பெருமகிழ்ச்சி அடைந்தார், அவனை தனியாக அழைத்து கட்டி அணைத்துக் கொண்டார், மற்றும் தான் அணிந்திருந்த ஒரு தொப்பியை அவனுக்கு அணிவித்து, “இது தான் நான் உனக்கு வழங்கும் தீட்சை. ஒரு நாள் நீ ஒரு தலைசிறநத சுவாமியாக வருவாய்,” என்றார். அதன் பின்னர் கடையிற்சுவாமி தந்த தொப்பி, ஒரு சிறிய கோயிலில் வைக்கப்பட்டு தினமும் பூசை செய்யப்பட்டது. §

காவல் துறையில் தனது வேலையை கைவிட்ட படைத்தலைவர் சுவாமி என்று அழைக்கப்பட்ட சின்னதம்பிசுவாமியும், இந்தியாவில் கடையிற்சுவாமியை முதல் முறையாக சந்திந்து, இறுதியில் லௌகீகத்தை துறந்து, பின்னர் அவரது முதல் இலங்கை சீடரான வைரமுத்து செட்டியார் என்று அழைக்கப்பட்ட சின்னசுவாமியும் தங்களது லௌகீக வாழ்க்கையை துறந்தவர்களில் அடங்குவர். §

**இரும்புத்துண்டில் நடந்த அற்புதம்**

கடையிற்சுவாமி தனது வாழ்க்கையை, கிராமப்புறங்கள் மற்றும் பல்வேறு நகர்புறங்கள் வழியாக அகலக்கால் வைத்து நடந்து சென்றும், யாருக்கும் புலப்படாத வகையில் அங்கே ஓய்வெடுத்து தங்கியும் வந்தார். அவரது புகழ் பரவத்தொடங்கியதும், எல்லோரும் அவரிடம் இருந்து ஆசிகளை பெற விரும்பினர். காலப்போக்கில் அவரிடம் பலர் சீடர்களாக சேர்ந்தனர், மற்றும் அவர் செய்த அற்புதங்களின் கதைகள், அந்த ராச்சியத்தின் பிரபல பக்தி இயக்கமாக விளங்கின. பின்வரும் உண்மையான தகவல்களின் அடிப்படையில், அப்படியொரு ஒரு ஆசியை நம்மால் நினைத்துப் பார்க்க முடிகிறது. §

ஒரு நாள் சந்தையில் பொருள் வாங்க வந்தவர்கள் மாவில் இருந்து மீன் வரை, ஒவ்வொரு பொருளுக்கும் விறுவிறுப்பாக பேரம் பேசிக்கொண்டு இருந்த ஒரு பரபரப்பான சந்தையின் வாசல் வழியாக, கடையிற்சுவாமி திடீரென்று நுழைந்தார். அந்த சாலையின் முன்புறத்தில் அவருக்கு வலதுபுறமாக, திறந்த கடைகளில் அழகாக கோபுர வடிவில் அடுக்கப்பட்டு இருந்த, விலையுயர்ந்த பச்சை காய்கறிகள் மற்றும் பழங்களின் ஒவ்வொரு வகையும் விவசாய குடும்பத்தால் பராமரிக்கப்பட்டு வந்தன. காலை மகசூலை சுமந்து கொண்டு, மாட்டு வண்டிகள் தூரத்து வயல்களில் இருந்து

உள்ளே நுழைந்துக்கொண்டு இருந்தன. ஒவ்வொரு பகுதியிலும் சந்தை இருந்தது. அந்த சந்தை மகசூல் செய்தவர்களுடன், பொருட்களை வாங்குபவர்கள் ஒரு வெறித்தனமான போராட்டத்தில் நேராக ஈடுபடும், நவீன விவசாயிகளின் சந்தையின் ஒரு மிகப்பெரிய வடிவமாக விளங்கியது. அந்த காலத்தில், ஒவ்வொருவரும் உள்ளூரில் விளையும் பொருட்களை சாப்பிட்டு வந்தனர். கிராம மக்களிடம் குளிர்சாதனப்பெட்டி இல்லை, பனிக்கட்டியும் இருந்ததில்லை, அதனால் பெரும்பாலும் தினமும் சந்தை செல்வது ஒவ்வொரு குடும்பத்திலும் அன்றாட வேலையாக இருந்தது, மற்றும் உணவும் எப்போதும் சுத்தமாக மற்றும் புதியதாக இருந்தது. ஒரு புறம் வியாபாரிகள் தங்கள் வரவை அதிகரிக்க நினைப்பதும், இன்னொரு புறம் கிராமமக்கள் தங்கள் செலவை குறைக்க நினைப்பதும் என்று காலங்காலமாக நடைபெறும் நாடகம் அங்கே அரங்கேறிக்கொண்டு இருந்தது. §

ஒரு தனியான பகுதியில், முன்பே தயாரிக்கப்பட்ட உணவுகளின் ஒரு கலவை மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டு இருந்தன. அந்த கண்காட்சியில், அந்த காலத்தில் துரிதமாக மற்றும் அதிக ஆரோக்கிய உணவாக விளங்கிய *பிட்டு* இருந்தது. அரிசி மாவு மற்றும் தேங்காய் துருவலின் கலவையை ஒரு உருளை வடிவ மூங்கில் குழாய்களில் ஒன்று சேர்த்து, அதை கொதிக்கும் குடத்தின் மீது வைத்து வேக வைத்து *பிட்டுவை* தயார் செய்துக்கொண்டு இருந்தார்கள். அது சுத்தமாகவும் சாப்பிடுவதற்கு தயாரான உணவாகவும் இருந்தது. தட்டையாக சுபாகெட்டியை போன்று விசித்திரமாகவும் அற்புதமாகவும் காட்சி அளித்த *இடியாப்பம்,* பிசைந்த அரிசி மாவில் தயார் செய்யப்பட்டு, ஒரு புறத்தில் வேக வைக்கப்பட்டு இருந்தது. அரிசி மற்றும் பருப்பு கலந்த புளித்த மாவில் இருந்து தயாராகும் *தோசை* மற்றும் *ஆப்பத்தை*, விறகு அடுப்பைக்கொண்டு சுடப்படும் இரும்பு தோசைக்கல்லில் நேர்த்தியாக தயார்செய்துக்கொண்டு இருந்தார்கள். அங்கே *இட்லி, வடை, பிரியாணி, ஊத்தப்பம்* மற்றும் *உப்புமாவும் இருந்தன.* §

உணவுடன் சேர்த்து சாப்பிடுவதற்கு, மூலிகைகள் மற்றும் சிவப்பு, பச்சை மற்றும் வெள்ளை என்று முவர்ணத்தில் புதிதாக கல்லில் அரைக்கப்பட்ட அத்தியாவசிய சட்னிக்களுடன், ஒவ்வொரு கடையும் நிறைய காய்கறிகளையும் வழங்கின. இதனை ஒரு முறை பார்க்கும் போது, 8,000 ஆண்டுகளாக ஏற்பட்ட சமையல் வளர்ச்சியின் காரணமாக, பூமியில் உருவான அதிக விரிவான மற்றும் ஆரோக்கியமான சைவ உணவின் பல வண்ணங்களை பார்த்து ரசிக்க முடிகிறது. அந்த காலத்தில் சைவர்கள் எல்லோரும் சைவ உணவை சாப்பிட்டதால், புலால் உணவை தவிர்க்கும் பழக்கத்திற்கும், தமிழில் *சைவம்* என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இதனால் அவர்கள் மாமிச உணவுகளில் கவனத்தை சிதறவிடாமல், சைவ உணவில் தேர்ச்சி பெற்றதில் எந்த அதிசயமும் இல்லை. §

கந்தையா என்பவர் கடையிற்சுவாமியின் பக்தர்கள் குழுவில் உறுப்பினராக இருந்தார், ஆனால் அவர்கள் இருவரும் பேசிக்கொண்டது இல்லை. திடீரென்று குரு கந்தையாவிற்கு அருகில் நின்றுக்கொண்டு

இருந்தார். அவர் நல்ல உயரமாக இருந்ததால், மக்கள் கூட்டத்தில் தனியாக காட்சி அளித்தார். அவர் கந்தையாவை குனிந்து பார்த்து, ஒரு வலுவான எதிரொலிக்கும் குரலில், “நான் நாளை மதிய உணவிற்கு உன் வீட்டிற்கு வரப்போகிறேன். என்னுடன் நிறைய விருந்தாளிகளையும் அழைத்து வரப்போகிறேன்!” அது ஒரு வேண்டுகோளாக அல்லது ஒரு பேச்சுவார்த்தையாக இருக்கவில்லை. §

கந்தையா தனது கைகளை கூப்பிக்கொண்டு, மிகவும் உயரமான சுவாமியை பார்த்து, அவரை வீட்டிற்கு வரவழைக்கும் படியாக, நன்றி தெரிவிக்கும் வண்ணம் மரியாதையுடன் வலுவாக ஏதாவது சொல்லவேண்டும் என்ற நம்பிக்கையில் ஒரு நொடி யோசித்தார். ஆனால் அவரால் சிறிய புன்னகையுடன் மெல்லிய குரலில், “சரி, சுவாமி” என்று மட்டுமே சொல்ல முடிந்தது. சுவாமி எதையும் பேசாமல் திரும்பி சென்றுவிட்டார். இந்த தகவல் ஊர் முழுவதும் காட்டுத்தீ போல பரவியது. சுவாமி கந்தையாவை தேர்ந்தெடுத்து இருந்தார். அதன் பிறகு இந்த தகவலை, கடைகளில் இருந்த மக்கள் ஆனந்தமாக, ஆர்வத்துடன் மற்றும் வெளிப்படையான பொறாமையுடன் வரவேற்றனர். §

கந்தையா அலைந்து திரிந்து தன் வீட்டிற்கு திரும்பிய போது, பசி வயிற்றை கிள்ளியது. அவன் கடந்த ஐந்து நாட்களில் என்றுமே வயிறார சாப்பிட்டதில்லை. அவர்களது குடும்பம் தங்களிடம் இருந்த சிறிய பருப்பு, வீட்டில் இருந்த பசுமாட்டின் பால் மற்றும் பக்கத்து வீட்டில் வசித்த பாசமிகு நண்பர் அவ்வப்போது வழங்கும் பிரசாதங்களின் மூலம் எளிமையாக வாழ்ந்துகொண்டு இருந்தார்கள். கந்தையாவின் பட்டனார் மூலம் தொடங்கப்பட்ட, பிரபலமான சி.ச.கே. தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலையை அவர்கள் நிர்வகித்து வந்தார்கள். ஆனால் அந்த வியாபாரம் முடங்கிப்போனது. அவர்கள் தங்கள் நிலத்தை இழந்தார்கள் மற்றும் தங்கள் குடும்ப நகைகளை விற்றார்கள், மற்றும் அவரிடம் மனைவியின் *தாலி* மட்டுமே மிஞ்சி இருந்தது. மற்றவர்களிடம் உதவி கேட்டுசெல்லும் மனம் கந்தையாவிற்கு துளியுமில்லை. அப்படியென்றால், அவரால் சுவாமிக்கு எப்படி விருந்தளிக்க முடியும்? §

அவர் வீட்டிற்கு வந்து சேர்ந்ததும், கடந்த காலத்தில் தன்னை சுற்றியிருந்த குடிசைகளில் மாட்டு சாணம் மொழுகிய தரையிருக்க, தன்வீட்டில் இருந்த ஆடம்பரமான வில்லைகள் பதிந்த தரை, சிறிய பட்டு மெத்தையுடன் அழகாக செதுக்கப்பட்ட நாற்காலி, செதுக்கிய கலைநயத்துடன் இருந்த வெள்ளி முலாம் பூசிய பெட்டி என்று தனது கடந்தகால நினைவுகளில் சிக்கிக்கொண்டார். அவருடைய சிந்தனை சிறிது நேரத்திற்கு, தற்போதைய வீட்டை காட்டிலும், ஐந்து மடங்கு பெரிய வீட்டில் பணியாளர்களுடன் வாழ்ந்த ஆடம்பர வாழ்க்கையில் மூழ்கியது. §

கந்தையா தன் மனைவி பொன்னம்மாவிடம், “நாளை மதியம் கடையிற்சுவாமி நம் வீட்டிற்கு சாப்பிட வருகிறார்?” என்று அறிவித்தார். ஒரு ஆன்மீக குரு தன் வீட்டிற்கு வருகை தரவிருப்பதால், அவளது முகத்தில்

முதலில் உற்சாகம் காட்சி அளித்தது. ஆனால் அவரை எப்படி உபசரிப்பது என்ற சிந்தனை தோன்றியதும், புன்னகை வந்த வேகத்திலேயே மறைந்துவிட்டது. அவள் தன் கணவனிடம் பணிவுடன், "நீங்கள் சுவாமியை எவ்வாறு உபசரிக்க விரும்புகிறீர்கள்?" என்று பணிவுடன் கேட்டாள். §

கணவன் எதையும் பேசாமல், அவளிடம் சிறிதளவு பணத்தை கொடுத்தார். அன்புள்ளம் கொண்ட மனைவி தனது கணவனை நேசத்துடனும் மரியாதையுடனும் பார்த்து, கையில் இருந்த பணத்தை கண்ணக்கிடாமல், அதை மகிழ்ச்சியுடன் மேலோட்டமாக பார்த்து, "நான் சந்தைக்கு சென்று, நாளைக்கு தேவையான உணவு பொருட்களை வாங்கி வருகிறேன்," என்று தன்னம்பிக்கையுடன் தெரிவித்தாள். சந்தைக்கு செல்லும் அனுபவம் அவளுக்கு இருந்ததால், தனது கையில் இருக்கும் பணம் போதாது என்பது அவளுக்கு தெரியும். §


பொன்னம்மா வீட்டை விட்டு கிளம்பும் முன்பாக, தனது *தாலியை* ஒரு முறை தொட்டுப் பார்த்தாள். இதை இந்து சமயத்தை சேர்ந்த மனைவிகள் அனைவரும், தங்கள் கழுத்தில் மஞ்சள் சரட்டில் அல்லது தங்கச்சரடில் அணிந்து இருப்பார்கள். திருமணத்தின் புனிதமான சின்னமாக விளங்கும் இந்த தாலியை மனைவிமார்கள் எப்போதும் அணிந்து இருந்து, அதை தினமும் காலையில் வழிபடுவார்கள். அதை இழப்பது அல்லது தொலைப்பது கெட்ட சகுணமாக கருதப்படுகிறது. இருந்தாலும், சந்தைக்கு கிளம்பிய பொன்னம்மா, நாளைய தேவைக்காக தங்கச்சரட்டினால் தயாரிக்கப்பட்ட தனது *தாலியை* அடகு வைக்க பொற்கொல்லர் கடையில், யாருக்கும் தெரியாதவாறு மறைமுகமாக நின்றாள். §

அடுத்த நாள் மிகவும் விரைவாக வந்துவிட்டது, அல்லது செய்வதற்கு அதிக வேலைகள் இருந்ததால், அப்படி தோன்றி இருக்கலாம். அந்த தம்பதியர் தங்களது இரண்டு மகன்களையும் உதவி செய்ய வற்புறுத்தினார்கள், மற்றும் எல்லோரும் சேர்ந்து தடுமாறிக்கொண்டு இருந்தனர். மதியம் பன்னிரண்டு மணிக்கு பதினைந்து நிமிடங்கள் முன்பாக, உணவுகள் அனைத்தும் தயாராகி, உணவு அறையாக விளங்கிய, பனை ஓலையால் பின்னப்பட்ட பாயில் சுவாமி உட்கார்ந்ததும் சுடச்சுட பரிமாறப்படுவதற்காக காத்து இருந்தன. "கந்தையா, நான் வந்துவிட்டேன்!" என்று சொல்லிக்கொண்டே கதவை பலமாக தட்டும் சத்தம் கேட்டதும், அவர்கள் ஓட்டம் தடைப்பட்டது. சுவாமியுடன் சேர்ந்து ஒரு விருந்தாளிகள் பட்டாளமே உள்ளே நுழைந்தது. அன்று நூற்றுக்கணக்கில் விருந்தாளிகள் வந்ததாக, ஒரு வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்!§

பொன்னம்மா கற்பூரத்தையும், கந்தையா விளக்கையும், இரண்டு மகன்கள் தட்டையும் தங்கள் கையில் எடுத்துக்கொண்டனர். பெற்றோர்கள் கற்பூரத்தை ஏற்றினார்கள். கந்தையா கதவை திறந்தார். கைகளை அஞ்சலி முத்திரையில் வைத்துக்கொண்டு, "வணக்கம், சுவாமி," என்று மரியாதை செலுத்தினார். ஆனால் கற்பூரத்தை ஏற்றி, அவர்கள் பாரம்பரிய முறைப்பட்டி தெய்வீக புருஷர்களுக்கு வணக்கம் செலுத்த முற்படும் போதே, சுவாமி வீட்டிற்குள்

நுழைந்து விட்டார். அவர் ஆனந்தமாக கந்தையாவின் முதுகில் தட்டிக்கொடுத்து, “தம்பி, இன்று வெயில் அதிகமாக இல்லை. இன்று வானிலை நன்றாக இருக்கிறது!” என்றார். சுவாமி தனக்காக விரித்திருந்த பாயில் அமர்ந்துகொண்டார். பரிமாறப்பட்டிருந்த ஏராளமான பலகாரங்களை பற்றி நுணுக்கமாக எதையும் குறிப்பிடாமல், நேராக சாப்பிடுவதற்கு தயாராகிவிட்டார்.§

பொன்னம்மா தனது ஒரு கையில் ஒரு எளிமையான களிமண் பாத்திரமும், இன்னொன்றில் ஒரு கூஜாவையும் எடுத்துக்கொண்டு, தமிழ் விருந்துகளில் தொடக்கத்தில் நடைபெறுவதை போல, சுவாமியின் வலது கையில் தண்ணீர் ஊற்றினாள். அவர் அந்த தண்ணீரால் தனது கைகளை சுத்தம் செய்துகொண்டார். கந்தையா சமையலறைக்கு சென்றார். அங்கே அவரது மனைவி, ஒரு சரியான முறையில் வாழை இலையில் பரிமாறுவதற்காக, ஒவ்வொரு உணவுப்பொருளாக வழங்கிக்கொண்டு இருந்தாள். அந்த காலத்தில், ஒரு சுவாமிக்கு ஆண்கள் மட்டுமே பரிமாறுவார்கள், மற்றும் விருந்தாளிகள் சாப்பிட்ட பிறகே குடும்பத்தினர் சாப்பிடுவார்கள். §



ஒரு காலத்தில் செல்வந்தர்களாக இருந்த ஒரு குடும்பம், தங்கள் வீட்டில் கடையிற்சுவாமிக்கு விருந்தளிக்க வேண்டும் என்பதற்காக பல தியாகங்களை

*செய்து, விருந்தில் எந்த குறையும் இருக்கக்கூடாது என்பதில் கவனமாக இருந்தனர். அந்த குடும்பத்தினரின் வேதனையை பார்த்து, சுவாமிக்கு அவர் மீது இரக்கம் ஏற்பட்டது. சுவாமி அவர்களிடம் இருந்து ஒரு இரும்புத்துண்டை வாங்கி, அதை தனது கரங்களால் தொட்டு, தங்கமாக மாற்றினார். அதன் பிறகு, அந்த குடும்பம் அந்த தங்கத்துண்டை விற்று வந்த செல்வத்தின் மூலம் செழிப்பாக வாழ்ந்தனர்.*

……………………§

பொன்னம்மா ஒரு பெரிய விருந்தினர் குழுவிற்கு அறுசுவை உணவை வழங்க, உணவு மற்றும் பலகாரங்களை தாராளமாக வாங்கி இருந்தாள். ஆனால் கடையிற்சுவாமி உருவத்தில் பெரிய மற்றும் சுறுசுறுப்பான மனிதராக இருந்ததால், அவருக்கு அதற்கு ஏற்ற பசியும் இருந்தது. விருந்தாளிகளுக்கு உணவு தீரவில்லை என்ற உணர்வை வழங்குவதற்காக, இலையில் காலியாகும் உணவுப்பொருட்களை உபசரிப்பவர் நிரப்பிக்கொண்டே இருந்தார். இந்த பழக்கம் இன்றும் தமிழர்கள் வீட்டில் பின்பற்றப்படுகிறது. கடையிற்சுவாமி தான் சாப்பிட்டு முடித்ததை குறிப்பிடும் விதமாக, தனக்கு தட்டாக விளங்கிய இலையை பாதி மடித்து, இறுதியாக “சமையல்  நன்றாக இருந்ததும்மா!” என்று தெரிவித்தார். பொன்னம்மா நிம்மதி அடைந்தாள், ஏனென்றால் அவளிடம் வழங்குவதற்கு வேறு எதுவும் இல்லை. §

அடுத்த நாள் சுவாமி மீண்டும் வருகை புரிந்தார். ஆனால் இந்த முறை தனியாக வந்து, பொன்னம்மாவிடம் ஒரு சிறிய இரும்பை கொண்டு வருமாறு கூறினார். தங்கள் வளாகம் முழுவதும் தேடி, மண்ணில் பாதி புதைந்து கிடந்த துருப்பிடித்த இருண்புத்துண்டை தேடிப்பிடித்து, சுவாமியிடம் கொண்டு வந்து கொடுத்தாள். அவர் அந்த துண்டை தனது கைகளில் பிடித்து, “ஓம் நமச்சிவாய, ஓம் நமச்சிவாய….” என்று மெதுவாக உச்சரித்து, அதை மீண்டும் அவளிடம் வழங்கி, அதில் இருக்கும் துருவை சுத்தம் செய்து, ஒரு துணியில் சுற்றி ஒரு பாதுகாப்பான இடத்தில் வைக்குமாறு அறிவுறுத்திய பிறகு, திடீரென்று எழுந்து கிளம்பிவிட்டார். அவர் கிளம்பியது முறையில்லாமல் இருந்தாலும்,  கடையிற்சுவாமியின் நடவடிக்கைகள் விசித்திரமானவை என்பதில் யாருக்கும் சந்தேகம் இருந்ததில்லை. நடைபெற்ற  விருந்தினால் சிறிது சோர்வாக இருந்த அந்த குடும்பத்தினர், மிகவும் புனிதமாக, மிகவும் உன்னதமாக மற்றும் மர்மமாக இருந்த, சுவாமியின் நெருக்கத்தின் பயனால் நிம்மதியாக இருந்தார்கள். §


நான்கு நாட்கள் கழித்து பொன்னம்மா வீட்டு அலமாரியை திறந்த போது, அந்த இரும்புத்துண்டை பார்க்கவேண்டும் என்ற ஆசை அவளை தூண்டியது. என்ன அதிசயம்! அது வியக்கும் வண்ணம் தங்கமாக மாறியிருந்தது! அவள் கணவன், அதை பொற்கொல்லனிடம் சென்று சோதித்தார். அது உண்மையில் உறுதியான தங்கமாக மாறியிருந்தது. அவர்கள் கண்களில் ஆனந்த கண்ணீர் வடிந்தது. அதன் பின்னர் கந்தையா மற்றும் பொன்னம்மா, சுவாமியின் அருளுக்கு நன்றி தெரிவித்தனர். அவர்கள் அந்த தங்கத்துண்டை விற்று

பணமாக்கி மறுபடியும் தொடங்கிய குடும்ப வியாபாரம், மீண்டும் செழிக்க தொடங்கியது. §

**ஒரு மீனவனை காப்பாற்றுதல்**

ஒரு நாள் மாலை நேரத்தில் கடலில் புயல் உருவாகியிருந்தது. அப்போது கடையிற்சுவாமி பொழுது சாய்வதற்கு முன்பாக, மீன்பிடி படகு வைத்திருந்த ஒருவரது வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அப்போது அந்த மீனவன் வீட்டில் இல்லை, மற்றும் சுவாமியின் நடவடிக்கை விசித்திரமாக இருந்ததால், அவரை மீனவனின் மனைவி உள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டாள். அவர் பிடிவாதமாக இருந்ததால், அவள் இறுதியில் சுவாமி உள்ளே அனுமதித்தாள். §

அவர் வீட்டின் முன்பாக இருந்த முற்றத்தில் நுழைந்து, அங்கிருந்த ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டார். இரண்டு மணி நேரம் கழித்து, மனைவி தன் கணவனுக்காக காத்துக்கொண்டு இருக்கும் போது, கடையிற்சுவாமியின் விசித்திரமான நடவடிக்கையை கவனித்தாள். அவர் தன் கையில் ஒரு பருமனான கோலை கையில் பிடித்துக்கொண்டு, தரையில் உட்கார்ந்து, அந்த தற்காலிக துடுப்பினால் எதையோ தள்ளுவதை போல, தன்னை சுற்றி இருக்கும் குப்பையை தோண்டும் பொழுது, மீனவர்கள் தங்கள் வலைகளை இழுப்பதற்காக பாடும், “ஏலேலோ ஐலசா” பாட்டை சுவாமி பாடிக்கொண்டு இருப்பதை கவனித்தாள். அவர் இரவு நேரத்தில் மண்ணில் உட்கார்ந்துகொண்டு, ஒரு படகை இயக்குவதை போல பாசாங்கு செய்வதாக அவளுக்கு தோன்றியது. கடையிற்சுவாமி தங்கள் தோட்டத்தில் விசித்திரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்ததாலும், கணவர் வந்தால் முற்றத்தில் தோண்டியிருக்கும் பள்ளத்திற்கு தன்னை கடிந்துக்கொள்வார் என்று பயத்திலும், அவள் கனத்த மழையில் வெளியே சென்று, தனது நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்று கெஞ்சினாள். ஆனால் கடையிற்சுவாமி தனது பணியை கைவிடுவதாக இல்லை. ஆனால் புயலும் அவரது பணியும் தீவிரமாக இருந்ததால், அவள் கெஞ்சுவது அவருக்கு கேட்கவில்லை. §



ஒரு நாள் கடலில் உருவான பெரிய புயலால், தனது சீடனின் மீன்பிடி படகு கவிழ்ந்து அவன் ஆபத்தில் இருப்பதை, கடையிற்சுவாமி தொலைவில் இருந்து

*உணர்ந்துக்கொண்டார். அவர் விரைவாக அந்த மீனவனின் வீட்டிற்கு சென்று, சேறாக இருந்த முற்றத்தில் அமர்ந்துகொண்டு, படகை ஓட்டுவது போல பள்ளம் தொண்ட தொடங்கினார். இதை மீனவனின் மனைவி அச்சத்துடன் பார்த்துக்கொண்டு இருந்தாள். அந்த சமயத்தில் தனது கணவரின் உயிரை மர்மமான முறையில், காப்பாற்ற சுவாமி முயற்சி மேற்கொண்டு இருந்தார் என்பதை அவள் பின்னர் தெரிந்துகொண்டாள்.*

........................§

இந்த விநோதமான மற்றும் கடுமையான நடவடிக்கையை உயரமான சாது தொடங்கி மூன்று மணி நேரத்தை கடந்து இருந்தது. மீனவனின் மனைவி அவரை வீட்டில் இருந்து வெளியேற்ற முடியாமல், தனது வீட்டின் பாதுகாப்பை கவனத்தில் கொண்டு, அவரது நடவடிக்கையை கவனித்துக்கொண்டு இருந்தாள். இறுதியாக சுவாமி தனது வேலையை நிறுத்திக்கொண்டு, எழுந்து நின்று உடனே வீட்டை விட்டு வெளியேறி, அமாவாசை இரவில் மறைந்துவிட்டார்.§

கணவன் விடியும் வரை திரும்பவில்லை. இதைப்போன்று முன்பு எப்போதும் நடந்திருக்கவில்லை. முந்தைய இரவு கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பு காரணமாக, அந்த கிராமத்தில் இருந்த பல மீனவ மனைவிகள் தங்கள் கணவன்மார்களை இழந்து இருந்தார்கள். மனைவி பதட்டத்துடன் காத்துக்கொண்டு இருக்கும் போது, கணவன் வீடு திரும்பினான். கணவனை பார்த்ததும் அவளுக்கு ஒரு புறம் நிம்மதி ஏற்பட்டாலும், முற்றத்தில் இருந்த பள்ளத்தை பார்த்து தன்னை கடிந்து கணவன் கொள்வான் என்று பயந்து இருந்தாள். மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, நேற்று இரவு சுவாமி வீட்டிற்கு வந்தது மற்றும் வீட்டின் தோட்டத்தில் விசித்திரமாக படகு ஓட்டுவதை போன்ற நடவடிக்கையை மேற்கொண்டது பற்றியும் விளக்கினாள். இதைக்கேட்ட கணவன், தான் சோர்வாக கலைந்த உடையுடன் இருந்தாலும், சுவாமி அமர்ந்து இருந்த இடத்தை முதலில் வணங்கிவிட்டு, பிறகு முற்றத்தில் இருந்த கிணற்றில் குளிக்க சென்றான். §

அவள் சமையல் அறையில் காபியை தயார் செய்துக்கொண்டு இருக்க, கணவன் நேற்று அந்தி மாலை நேரத்தில் கடலில் தோன்றிய வலுவான புயலில் தனது படகு கவிழ்ந்த சம்பவத்தைப் பற்றி விவரிக்கத் தொடங்கினான். அவன் நேற்று புயல் காரணமாக கொந்தளித்த கடல் நீரில் போராடியதால், சோர்வடைந்து தனக்கு மரணம் நெருங்குவதை உணர்ந்தான், ஆனாலும் அவன் தனது முழு வலிமையையும் பயன்படுத்தி படகை திருப்ப முயன்றான். ஆனால் அவனால் முடியவில்லை. ஒவ்வொரு முயற்சியும் அவனை சோர்வடைய செய்தது. திடீரென்று ஒரு துடுப்பு அவனது தலையில் பலமாக அடித்து, அவனை நினைவிழக்க செய்தது. அவனுக்கு மீண்டும் நினைவு திரும்பிய போது, தான் ஒரு ஒரு அமைதியான கடலில் நிமிர்ந்து இருந்த படகில், ஒரு பலகையை பிடித்துக்கொண்டு இருப்பதை கண்டான். §

வியப்பில் ஆழ்ந்திருந்த தன் மனைவியிடம் மரணத்தருவாயில் தனக்கு தோன்றிய காட்சியை பற்றி கூறினான். அந்த காட்சியில் கடையிற்சுவாமி,

தன்னை நோக்கி ஒரு படகை ஓட்டி  வந்து, கடல் கொந்தளிப்பில் இருந்து தன்னை காப்பற்றியதாகக் கூறினான். தான் குருவின் அருளால் காப்பாற்றப்பட்டதாகக் கூறினான். நேற்று இரவு தாங்கள் இருவரும் எதிர்கொண்ட அனுபங்களில் இருந்த தொடர்புகளை பற்றி வியப்புடன் பேசிக்கொண்டு இருந்தார்கள். தங்கள் புரிதலை கடந்த அபூர்வமான சக்தி, தங்கள் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியதை அவர்கள் உணர்ந்தார்கள். அவர்கள் தங்கள் சந்ததிகளிடம், கடலில் மூழ்கிக்கொண்டு இருந்த ஒரு மீனவனை கடையிற்சுவாமியின் தெய்வீக முயற்சிகள் காப்பாற்றியதைப் பற்றி பெருமையுடன் கூறிக்கொண்டு இருந்தனர். §

**குழப்பமான நடத்தை**

ஒரு நாள் யாழ்ப்பாண சந்தையின் திறந்த கடைகளில், கடையிற்சுவாமி யாசகம் செய்துக்கொண்டு இருந்த போது, கடைகளில் இரண்டு மூதாட்டிகள் திருடுவதை கண்டார். அவர்கள் தாங்கள் திருடிய பொருட்களை சந்தையில் விலகி தூரமாக இருந்த பகுதிக்கு எடுத்து சென்று, ஒரு சாக்குத்துணியில் அடுக்கி வைத்து, சந்தை விலையை காட்டிலும் குறைவான விலையில் விரைவில் விற்றுவிடுவார்கள். அவர்கள் கடுகடுப்பாக தொல்லை கொடுப்பவர்கள், தங்களுக்கு பணம் வேண்டும் என்று தொடர்ந்து நச்சரித்து வந்ததால், கடைக்காரர்கள் யாரும் அந்த இருவரை பற்றி காவல்துறையிடம் புகார் கொடுக்க தயாராக இல்லை. அவர்களது திருட்டை நிறுத்த வேண்டும் என்று முடிவு செய்த கடையிற்சுவாமி, அவர்களை பின்தொடர்ந்து சென்று, சரியாக அவர்கள் திருடும் போது, வாழ்க்கையில் என்றுமே மறக்காத அளவிற்கு ஓங்கி அறைந்தார். சுவாமி அந்த இருவரை அறைந்துக்கொண்டு இருக்கும் போது, ஒரு காவலர் அந்த வழியாக சென்றுக்கொண்டு இருந்தார். இரண்டு மூதாட்டிகளை ஒரு உயரமான மனிதன் தாக்கிக்கொண்டு இருப்பதை பார்த்த காவலர் அதிர்ச்சி அடைந்தார். அவர் கடையிற்சுவாமியை கைது செய்து, சிறையில் அடைத்தார். §

நள்ளிரவில் சிறையில் ஒரு பெரிய குழப்பம் ஏற்பட்டது. கடையிற்சுவாமி சிறைக்கம்பிகளை உள்பக்கமாக இழுத்துக்கொண்டு, “கவலைப்படாதே! நான் உன்னை விடுவிப்பதற்காக இங்கே இருக்கிறேன்!” என்று உரக்க கத்திக்கொண்டு இருந்தார். சிறை அலுவலர் தன் இருக்கையில் இருந்து கிளம்பும் வரை, அவர் நீண்டநேரம் அவ்வாறு கத்திக்கொண்டு இருந்தார். அலுவலர் சுவாமியின் சிறையறை வந்து அடைந்த போது, கைதி அங்கே இல்லை. அவர் சிறைச்சாலை முழுவதும் தேடினார், ஆனால் எந்த பயனும் இல்லை. அலுவலர் தனது மேலதிகாரியை எழுப்பி, நடந்த சம்பவத்தை பற்றி விவரித்தார். அவர்கள் இருவரும் சிறையறையை வந்தடைந்த போது, கடையிற்சுவாமி சிறையில் உறக்கத்தில் இருந்தார். தனது அலுவலர் உறக்கத்தில் கனவு கண்டிருப்பார்  என்று நினைத்துக்கொண்டு, மேலதிகாரி உறங்க சென்றுவிட்டார். §

ஆனால் சில நிமிடங்களில், “கவலைப்படாதே! நான் உன்னை விடுவிப்பதற்காக இங்கே இருக்கிறேன்!”  என்று கரகரப்பான குரலில் கைதியின் பரிகாசம் தொடங்கியது. அவர்கள் மீண்டும் சிறையறைக்கு ஓடிச்சென்று பார்த்தனர், ஆனால் சுவாமி அங்கே இல்லை. அவர்கள் சில நிமிடங்களுக்கு பிறகு, சுவாமி சிறைச்சாலை மரத்தடியில் உறங்குவதை கண்டனர். அவர்கள் விரைவாக ஓடிச்சென்று பிடிக்க சுவாமியை முயன்ற போது, மர்மமான முறையில் மீண்டும் மறைந்து விட்டார். மீண்டும் அவர் சிறையறையில் இருந்து அலறுவது அவர்கள் காதில் விழுந்தது. சிறை கம்பிகளை பிடித்துக்கொண்டு, “நான் முயற்சி செய்துக்கொண்டு இருக்கிறேன். நீ விரைவில் விடுதலை பெற்று விடுவாய்!” என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தார். தங்களால் சுவாமியை கட்டுப்படுத்த முடியாது என்பதை உணர்ந்த காவலர்கள் அவரை விடுவித்தனர். அந்த காவலர்களில் சார்ஜண்ட்டாக இருந்த ஒருவரின் பெயர் சின்னதம்பி. அவர் பிற்காலத்தில், லௌகீக வாழ்க்கையை துறந்து சார்ஜண்ட் சுவாமி என்று புகழ்பெற்றார். §


ஒரு நாள் கடையிற்சுவாமி யாசகம் செய்ய ஒரு கடைக்கு சென்றார். அந்த கடையின் காசாளர் அவரை சிறிது நேரத்திற்கு பொருட்படுத்தவில்லை. அதன் பிறகு இந்த வயதான பிச்சைக்காரரிடம் சிறிது விளையாட முற்பட்டு, “என்னிடம் ஒரு வைர மோதிரம் இருக்கிறது. அது எந்த கையில் இருக்கிறது என்று நீ சரியாக சொன்னால், நீ கேட்பதை நான் தருகிறேன்,” என்று கூறினான். அந்த காசாளர் மோதிரத்தை முதலில் தன் உள்ளங்கையில் வைத்துக்கொண்டு, தனது கைகளையும் முதுகுக்கு பின்னால் எடுத்துச்சென்று, அதை தனது இரு கைகளுக்கு இடையே மாற்றிக்கொண்டான். பிறகு கடையிற்சுவாமியிடம் மோதிரம் எந்த கையில் இருக்கிறது என்று யூகிக்கச்  சொன்னான். அந்த மோதிரம் எந்த கையிலும் என்று சுவாமி தெரிவித்தார். தான் சுவாமியை முட்டாளாக்கியதை நினைத்து, அந்த காசாளருக்கு  குபீரென்று சிரிப்பு வந்தது. பிறகு மோதிரத்தை காட்டுவதற்காக கைகளை முன்பக்கமாக கொண்டு வந்த போது, மோதிரத்தை  உண்மையில் காணவில்லை! சுவாமி சரியாக சொல்லி இருந்தார். கடையிற்சுவாமி கடையில்  இருந்து கிளம்ப, கலங்கிய காசாளர் அவரை பின்தொடர்ந்தார். சிறிது தூரம் சென்ற பிறகு, கடையிற்சுவாமி தனது வாயில் இருந்து அந்த மோதிரத்தை துப்பினார். அவன் திக்குமுக்காடி போனான். கடையிற்சுவாமி முதலில் சிரித்தார், பிறகு, “இப்போது நீ பிடிபட்டு விட்டாய்,” என்று முகத்தில் எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல் கூறினார். §

கடையிற்சுவாமி சிலசமங்களில் சாராயம் (இது பனைமர சாற்றில் இருந்து தயாரிக்கப்படுகிற இந்த வலுவான மதுபானம், கள் என்றும் அழைக்கப்படுகிறது) அருந்துவார் என்பதை ஒரு சிறுவர்கள் குழு அறிந்திருந்தது. அதை பயன்படுத்தி தங்களை மகிழ்வித்துக்கொள்ள விரும்பி, அவர்கள் ஒருநாள் சுவாமியை பின்தொடர்ந்து சென்றனர். ஆனால் உண்மையில் கடையிற்சுவாமி, அந்த சிறுவர்களுடன் விளையாட

தொடங்கிவிட்டார். அந்த உற்சாகமான சிறுவர்கள் தன்னை நோட்டமிடுவதை உணர்ந்து, அவர் பல கள்ளு கடைகளுக்கு சென்று, அந்த வலுவான மதுபானத்தை பலமுறை அருந்தினார். இந்த விளையாட்டின் தொடர்ச்சியாக, கடையிற்சுவாமி ஒரு இரும்பு உருக்கும் கடைக்கு சென்றார். அங்கே ஒரு இரும்பு உருக்கும் தொழிலாளி, ஒரு பாத்திரம் நிறைய மெழுகை கொதிக்க வைத்துக்கொண்டு இருந்தார். அவர் அந்த பாத்திரத்தை எடுத்து, சிறிதளவு மெழுகை குடித்து விட்டு, மீதம் இருந்ததை அந்த  சிறுவர்களுக்கு வழங்க முன்வந்தார். ஆனால் மதுபானமாக  மெழுகை வழங்குவார் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த விசித்திரமான சம்பவத்திற்கு பிறகு, அவர்கள் மீண்டும் சுவாமியை சீண்டவில்லை. §

அவர் பெரும்பாலும் தெருக்களில் நடனமாடிக்கொண்டு, காற்றில் பணத்தை வீசி எறிந்ததால், பலர் கடையிற்சுவாமியை ஒரு பைத்தியம் என்று கருதினார்கள். ஒரு வருடம் அக்டோபர் மாதத்தில், மக்கள் எல்லோரும் தீபாவளி பண்டிகையை கொண்டாட புத்தாடைகளை வாங்கிக்கொண்டு இருந்தனர். ஒரு வியாபாரி தனது கடையில் இருந்த ஒரு விலையுயர்ந்த சால்வையை கடையிற்சுவாமிக்கு வழங்கினார். அவர் அதை உடனே தன்னை கடந்து சென்று கொண்டிருந்த ஒரு பிச்சைக்காரனின் தோளில் போர்த்தி, சில நாணயங்களையும் வழங்கினார். இந்த விசித்திரமான நடவடிக்கையை பற்றி அவரிடம் விளக்கம் கேட்ட போது, “அந்த பிச்சைக்காரன், போன பிறவியில் நேபால் நாட்டு அரசராக இருந்தார்,  என்று விளக்கினார். பழங்காலத்து சித்தர்களை போல, அவரது தொலைநோக்கு பார்வை நிகழ்காலம் மற்றும் வாழும்  இடத்தை மட்டும் சார்ந்து இருக்கவில்லை. ஆனால் ஒரு ஆழமான யதார்த்தத்தை காணும் திறமை, ஒரு எதிர்மறை பின்விளைவையும் கொண்டு இருந்தது. அந்த திறமையை சாதாரண மக்கள் தவறாக புரிந்துகொண்டனர். §

காவல்துறையினர் அவரை பலமுறை கைது செய்தனர். அவர்கள் அவரை கைது செய்து அழைத்து செல்லும் போது, சுவாமி தலை குனிந்து கண்ணியமாக நடந்து செல்வார். அவர் ஒரு பைத்தியம் என்றும் அவருக்கு தண்டனை வழங்கி சிறையில் அடைக்கவேண்டும் என்ற கோரிக்கையுடன், ஒரு முறை இரண்டு காவலர்கள் அவரை ஒரு நீதிபதி முன்பாக அழைத்து சென்றனர். குற்றவாளி நீதிபதியின் முன்பாக விசாரணைக்கு நிற்கும் போது, அலுவலர்களும் வெளியே காத்திருப்பது அன்றைய வழக்கமாக இருந்தது. நீதிபதி சுவாமியிடம் சில கேள்விகளை கேட்டார், அதற்கு அவர் தெளிவான ஆங்கிலத்தில் பதில் அளித்தார். சுவாமி முன்பு நீதிபதியாக பணியாற்றி இருந்ததால், நல்ல நண்பர்களாகி, ஆனந்தமாக உரையடினார்கள். நீதிபதி காவல்துறையை வரவழைத்து, “இந்த கண்ணியமான மனிதரை முதலில் விடுதலை செய்யுங்கள். இவரிடம் நீங்கள் கூறுவது போல் எந்த குறையும் இல்லை, மிகவும் இயல்பாக இருக்கிறார்,” என்று கடிந்துக்கொண்டார். §




*ஆசிய நாடுகளின் பெரும்பாலான ஆசிரியர்களை போல கடையிற்சுவாமி, அறிவுப்பூர்வமாக அல்லாமல் மறைமுகமாக கற்றுத்தந்தார். பள்ளிக்கு*

*செல்லாத சிறுவர்கள் தன்னை பின்தொடர்ந்து வந்து தன்னை சீண்டிக்கொண்டு இருந்தாலும், சுவாமி அவர்களை திருப்பி அனுப்பவில்லை. அதற்கு பதிலாக, அவர்கள் இவரை நோட்டமிடும் போது, ஒரு பொற்கொல்லரின் கடைக்கு சென்று, ஒரு பாத்திரத்தில் இருந்த உருகிய மெழுகை குடித்துவிட்டார். இதைக்கண்ட சிறுவர்கள் அச்சம் ஏற்பட்டது, மற்றும் அவர்கள் மீண்டும் சுவாமியை சீண்டவில்லை.*

……………………….§

### கிறுத்துவ மதத்துடன் போராட்டம்

அந்த காலத்தில், யாழ்ப்பாணத்தில் இருந்த பள்ளிகளில் பெரும்பாலானவை ஆங்கிலேய ஆட்சியின் கீழ் இருந்த கிறித்துவ சமயப்பணியாளர்கள் கட்டுப்பாட்டில் இருந்தன. அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்த அதிநவீன பள்ளிகள் ஆங்கிலத்தை அடிப்படையாக கொண்டிருந்தன; மற்றும் இந்துக்கள் தங்கள் குழந்தைகளை இந்த பள்ளிகளுக்கு அனுப்பி சிறந்த கல்வியை பெறவேண்டும் என்றால், குழந்தைகள் தங்கள் பாரம்பரிய உடைகள், விபூதி மற்றும் *பொட்டை* கைவிட்டு, கிறுத்துவ மதம் தொடர்பான வகுப்புக்களில் பங்குபெற்று தினமும் கிறுத்துவ வழிபாட்டுக் கூட்டங்களிலும் பங்குபெற வேண்டியிருந்தது. குழந்தைகளை கிறுத்துவ மதத்திற்கு மாற்றும் இந்த நயவஞ்சக முயற்சி, பெரிதும் பலன் அளிப்பதாக இருந்தது. பெரும்பாலும் பெற்றோர்களுக்கு தெரியாமல், சிறுவர்கள் கிறுத்துவ சமய போதனைகளை ஏற்றுக்கொண்டார்கள். கிறுத்துவர்கள் நினைத்ததை போல, இந்த திட்டங்கள் இந்து குடும்பத்தின் ஒற்றுமையை சீர்குலைத்தது.§



*எப்போதும் ஒரு குடையுடன் காணப்பட்ட கடையிற்சுவாமி, ஒரு நீதிபதியாக இருந்து ஆண்டியாக மாறியவர். அவர் இந்தியாவில் பிறந்து இலங்கையில் ஆன்மீக வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்கினார், மற்றும் சந்தைக்கு வரும் சாதாரண மக்களுக்கு போதனைகளை வழங்கும் பன்மொழி வல்லுனராக இருந்து, யாழ்ப்பாணத்தில் இருந்த தமிழ் மக்களிடையே சைவ சமய மறுமலர்ச்சிக்கு தலைமை தாங்கினார்.*

........................§

ஆங்கிலேய ஆட்சியில் ஒரு நல்ல வேலை கிடைப்பதற்கு அவர்கள் மேற்கத்திய கல்வியை படிக்க வேண்டி இருந்தது. அதனால் பல சிறுவர்கள் சமயபரப்பாளர் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டார்கள், மற்றும் அவர்களில் பலர் கிறுத்துவ மதத்திற்கு மாறி, தங்கள் குடும்பத்தினர் மனதில் அதிருப்தியை ஏற்படுத்தினார்கள். இந்த அப்பாவி சிறுவர்கள் தங்கள் பள்ளிகளில் காலைநேர பிரார்த்தனைகளிலும் பங்குபெற்று, வீடுகளில் சைவ சமயத்தை உறுதியாக பின்பற்றும் தங்கள் குடும்ப வாழ்க்கையில் நடைபெறும் பூசைகளிலும் பங்குபெற்றனர். இந்த சமரசம் அவர்களது ஆன்மீக வாழ்க்கைகளை சீரழித்தது, மற்றும் அதுவே சமயப்பணியாளர்களின்

நோக்கமாகவும் இருந்தது. வீட்டில் தனது தாயின் பாதை மற்றும் வகுப்பறையில் கன்னித்துறவிகளின் பாதை என்று சிறுவர்கள் ஒரே சமயத்தில் இரண்டு வெவ்வேறு பாதைகளில் இருந்தார்கள். அவர்கள் பங்குபெற்ற சைவ சமய சடங்கை புரிந்து கொள்ளவில்லை, மற்றும் அவர்கள் பள்ளி விதிகளின் அங்கமாக தினமும் பங்குபெற்ற கிறித்துவ சமய சேவைகளும் மேலோட்டமாக செயல்படுத்தப்பட்டன. §

பிடிவாதம் நிறைந்த இந்த தாக்கத்திற்கு கடையிற்சுவாமி ஒரு எதிரியாக விளங்கினார். அவர் ஒரு வழக்கறிஞராகவும் நீதிபதியாகவும் இருந்ததால், இவருக்கு முன்பு இலங்கையில் இருந்த மற்ற தெய்வீக நாட்டமுள்ள நபர்களை காட்டிலும் அதிக தெளிவாக பேசினார். அவர் சந்தையில் இருந்து இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் இருந்த, வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்கு அடிக்கடி சென்று, பார்வதி தேவியின் துதிப்பாடல்களை பாடுவார். அவர் தனது  வழிபாட்டிற்கு பிறகு, உள எழுச்சியை ஏற்படுத்தும் ஆன்மீக சொற்பொழிவுகளை வழங்குவார். கடையிற்சுவாமி யாழ்ப்பாணத்தில் இருந்த போது, சிவன் கோயில் முன்பாக பலமுறை சொற்பொழிவு வழங்கியதால், அங்கே அவருக்காக கூறை வேய்த கூடாரம் ஒன்று அமைக்கப்பட்டது. அவர் அந்த கூடாரத்தின் மேடையில் நின்றுக்கொண்டு, அந்த கோயிலில் வழிபட வந்தவர்கள் மற்றும் அருகில் இருந்த சந்தைக்கு சென்று கொண்டிருந்தவர்கள் என்று நூற்றுக்கண்கான மக்களுக்கு சொற்பொழிவு நிகழ்த்தினார். அவர் ஒரு சிறந்த பேச்சாளராக, சமய பணியாளரின் உற்சாகத்துடன பேசினார். சுவாமியின் தாய்மொழி தெலுங்காக இருந்தாலும் கன்னடம், மலையாளம் மற்றும் ஆங்கிலத்துடன் நன்றாக தமிழிலும் (அவர் பேசிய கிளைமொழியை இலங்கை மக்கள் புரிந்துகொள்வது கடினமாக இருந்தது) பேசினார். §

அது வரை மதமாற்றம் செய்யும் நோக்கத்துடன் கிறித்துவ பாதிரியார்கள் வழங்கிய மத போதனைகளை மட்டுமே கேட்டு பழகியிருந்த மக்களுக்கு, அவர் வழங்கிய சைவ சமயத்தின் சிறப்பை பற்றிய *உபதேசங்கள்,* புத்துயிர் பெற்ற பக்தியை ஊக்குவித்தது. ஒருவர் மக்கள் மத்தியில் நின்றுக்கொண்டு, தனது வலுவான நம்பிக்கைகளை பற்றி தைரியமாக பேசி பலநாட்கள் ஆகியிருந்தது. அந்த மக்களின் மூதாதையர்கள் சமயத்தின் அருமைகள் மற்றும் வலிமைகளைப் பற்றி, அவர்களுக்கு கடையிற்சுவாமி தைரியமாக நினைவூட்டியதால், அவர் சைவ தர்மத்தின் காப்பாளராக, அவர்களது பாரம்பரியத்தின் குரலாக விளங்கினார். அவர் வண்ணார்பண்ணை மேடையில் நடத்தும் சொற்பொழிவை கேட்ட பல்லாயிரக்கணக்கான மக்களில் பெரும்பாலானோர், காலப்போக்கில் சைவ இந்து வாழ்க்கையின் பழங்கால நெறிமுறைகளை உறுதியாக பின்பற்றுவதற்கு ஊக்குவிக்கப்பட்டனர். §


அந்த காலகட்டத்தில், கடையிற்சுவாமியை காட்டிலும் பன்னிரண்டு வயது இளையவராக, இலங்கை தமிழின் உரைநடை தந்தையாக, யாழ்ப்பாணத்தில் நன்கு கற்றறிந்த மேதையாக ஆறுமுக நாவலர் விளங்கினார். அவருக்கு

முன்பாக தமிழ் மொழியில் எழுத்து வடிவில் இருந்த அனைத்தும் செய்யுள் வடிவில் இருந்தன. அவர் ஒரு சமயத்தில், கிறுத்துவ விவிலியத்தில் இருப்பதை தமிழ் மக்களுக்கு காண்பிப்பதற்காக, அதை தமிழில் மொழிபெயர்த்தார். அவர் அதை இந்து சமய புனித நூல்களை காட்டிலும் தரம் குறைவானதாக கருதினார். §

இந்த இரண்டு புரட்சியாளர்களும், தங்கள் மக்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களை தெளிவாக புரிந்துக்கொண்டு, இலங்கையில் சைவ சமய கலாச்சாரத்தை பாதுகாக்க தங்களை அர்ப்பணித்துக்கொண்டு இருந்தனர். தமிழ் மாணவர்களின் சமய நம்பிக்கை மற்றும் எதிர்காலத்தை மிகவும் தீவிரமாக அச்சுறுத்திய கிறுத்துவ கல்வியை ஈடு செய்ய, அவர்கள் இருவரும் ஒன்றாக சேர்ந்து பல இந்து பள்ளிகளை திறந்தனர். இதில் முதல் பள்ளி, கடையிற்சுவாமி மக்களுக்கு போதனைகளை வழங்கிய சிவன் கோயிலுக்கு அருகில், இந்து உயர்நிலைப்பள்ளி என்ற பெயரில், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் தொடங்கப்பட்டது. இது பிற்காலத்தில், இலங்கையின் வடக்கு பகுதியின் முன்னணி கல்வி நிறுவனமான, யாழ்ப்பாணம் இந்து கல்லூரியாக மாறியது. §

**மண்டைதீவில் நடந்த அதிசய சம்பவங்கள்**

ஒரு நாள் மண்டைதீவில் தனது இருப்பிடத்தில், கடையிற்சுவாமி தனது சீடர்களான நிரஞ்சனாநந்தசுவாமி மற்றும் சின்மயானந்தசுவாமியின் துணையுடன் மதிய உணவை தயார் செய்துக்கொண்டு இருந்தார். இதை நண்ணியாரின் மனைவி கண்காணித்து கொண்டு இருந்தாள். திடீரென்று கடையிற்சுவாமி, “ஒரு கருமி வருகிறான்! விரைவாக எங்காவது சென்று மறைய வேண்டும்,” என்று அலறினார். மீதம் இருக்கும் உணவுகளை சேமிக்க பயன்படும் ஒரு கட்டைபெட்டியில் பானைகளை வைத்துவிட்டு, அவர்கள் ஓடிச்சென்று ஒளிந்துக் கொண்டார்கள். அங்கே விரைவில் ஆத்ம திருப்தியில்லாத ஒருவர் வந்து, சுவாமியை பற்றி அந்த பெண்ணிடம் விசாரித்தார். சுவாமி சற்று முன் அந்த இடத்தில் இருந்து கிளம்பியதாக கூறினாள். அவர் நாள் முழுவதும் சுவாமிக்காக காத்து இருந்தார், ஆனால் சுவாமி திரும்பவில்லை. அவர் மூன்று நாட்களுக்கு அதே இடத்தில் தங்கி இருந்தார், மற்றும் நண்ணியாரின் மனைவி அவருக்கு மூன்று நாட்களும் உணவு அளித்தாள். அந்த மனிதன் கிளம்பியதும், சுவாமி தனது இரு சீடர்களுடன் வெளிவந்து, “வாங்க, இனி நாம் சாப்பிடலாம்,” என்று கூறினார். அவர்கள் உணவை சேமித்து வைத்திருந்த பெட்டியை திறந்தனர். “அவர்கள் மூன்று நாட்கள் பழைய உணவை சாப்பிடப்போகிறார்கள்!” என்று அந்த பெண் மனதில் நினைத்துக்கொண்டு இருந்தாள். அவர்கள் அந்த பெட்டியை திறந்த போது, சற்று முன் சமைத்ததை போல ஒவ்வொரு பானையில் இருந்தும் ஆவி பறந்துக்கொண்டு இருந்தது. அந்த பெண் நடப்பதை ஆச்சர்யத்துடன் பார்த்துக்கொண்டு இருக்க, அவர்கள் ஒரு சூடான மதிய உணவை ருசித்துக்கொண்டு இருந்தார்கள். §



தனது குரு ஆதிக்கம் செலுத்திய சந்தையில் செல்லப்பசுவாமி தீட்சையை
பெற்றார். மற்றவர்களிடம் இல்லாத ஒரு உண்மையான ஆன்மீக வாழ்க்கை

*மற்றும் விழிப்புணர்வின் உறுதியை, அந்த விநோதமான இளைஞனிடம் கடையிற்சுவாமி கண்டார். சுவாமி தனது சீடனின் உள்ளங்கையில் ஒரு பெரிய நாணயத்தை வைத்து, முதுகில் தனது குடையால் தட்டிக்கொடுத்து, அந்த இடத்தை விட்டு கிளம்புமாறு கூறினார். அதுவே அந்த இளைஞனுக்கு வழங்கப்பட்ட தீட்சையாக விளங்கியது.*

……………………..§

அந்த தீவிற்கு ஒருமுறை சென்றிருந்த போது, சுவாமி நன்னியர் குடும்பத்தை ஒன்றாக அழைத்து, அவர்கள் வீட்டின் கொல்லைப்புறத்தில் ஈமச்சடங்கை போல (*அந்த்யேஷ்டி*) ஒரு *ஹோமத்தை* நடத்தினார். இதை கவனித்த குடும்பத்தினர், விரைவில் தனது உயிர் பிரிவதை குறிப்பிடும் வண்ணம், சுவாமி தனது ஈமச்சடங்கை தானே செய்கிறார் என்று நினைத்துக்கொண்டு இருந்தனர். அவர் *ஹோமத்தை* முடித்து, 31 நாட்களுக்கு அந்த குடும்பத்தினர் கோயிலுக்கு செல்லக்கூடாது என்று தெரிவித்தார். “சுவாமி உயிருடன் இருக்கும் போது, இதை எதற்கு செய்யவேண்டும்?” என்று அவர்கள் யோசித்தனர். சில நாட்களுக்கு பிறகு, இந்தியாவில் இருக்கும் சிதம்பரத்திற்கு பாத யாத்திரை சென்றிருந்த, அந்த குடும்பத்தாரின் மகன் இறந்துவிட்டதாக செய்தி வந்தது. அப்போது தான் குடும்பத்தினருக்கு சுவாமி செய்த விசித்திரமான சடங்கின் அர்த்தம் புரிய வந்தது. §

கடையிற்சுவாமி செய்த அற்புதங்களில் ஒரு விதமான சூட்சும மரபணு கலந்து இருந்தது. அவர் மக்களின் வாழ்க்கையில் நடைபெறவிருந்த சம்பவங்கள், கண்ணருகே இருந்த மக்களை கடந்து நடைபெற்ற சம்பவங்கள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை பாதித்த சம்பவங்கள், ஒரே சமயத்தில் பரவெளியை கடந்து நடைபெற்ற சம்பவங்களை பலமுறை அறிந்து இருந்தார். மேலும் எல்லாம் அறிந்தவராக இருந்த அவர், தொடர்பில்லாத இரண்டு சம்பவங்களுக்கும் ஒரு நடுவராக இருந்து, ஏற்படுத்திய மாற்றம் காரணத்தை கடந்து இருந்தது. §

### செல்லப்பா கடையிற்சுவாமியை சந்திக்கிறார்

ஒரு நாள் கடையிற்சுவாமியின் கூடாரத்திற்கு ஒரு இளவயது சாது வந்தான். அவனது கண்கள் ஆழ்ந்த ஞானத்தை வெளிப்படுத்தின, மற்றும் அவனுக்குள் ஒரு அசாதாரண சக்தி ஒளிந்திருப்பதை சுவாமி உணர்ந்துக்கொண்டார். சுவாமி அவனுடன் நீண்டநேரம் உரையாடிய பிறகு, தனக்கு சந்தையில் பிரதான சீடன் கிடைத்துவிட்ட ஆனந்தத்தில் இருந்தார். அருகில் வேர்கடலை விற்றுக்கொண்டு இருந்த பெண்ணிடம் இருந்து ஒரு ரூபாய் வாங்கி, அதை ஒரு வெற்றிலையில் சுருட்டி, தனது இளைய சீடனிடம் வழங்கினார். அந்த காலத்தில் பணம் பெரிய நாணயங்களாக இருந்தன. அந்த சுருள் சாதுவின் உள்ளங்கையில் பாதி இடத்தை உள்ளடக்கி இருந்தது. அந்த சாது பிற்காலத்தில் செல்லப்பசுவாமி என்று அழைக்கப்பட்டார். அதன் பிறகு

கடையிற்சுவாமி தனது குடையால் அவனது முதுகில் தாக்கி வழி அனுப்பி வைத்தார். §

ஒரு நாணயத்தை வழங்கி, துறவற வாழ்க்கையான சந்நியாச வாழ்க்கைக்கு கடையிற்சுவாமி தீட்சை வழங்கிய முறை, நாத பரம்பரையின் வழக்கத்திற்கு மாறானது என்று எதிர்கால சீடர்கள் கூறினார்கள். பல வருடங்களுக்கு பிறகு, செல்லப்பசுவாமியின் சீடனான யோகசுவாமி, தனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், இந்த மிகப்பெரிய ஆன்மீக அனுபவம் பற்றி இவ்வாறு விவரித்தார்:§

> ஒரு வெள்ளி ரூபாய் நாணயத்தின் மூலமாக, கடையிற்சுவாமி செல்லப்பருக்கு தனது அருளை வழங்கினார்! உலகம் அவரை ஒரு பைத்தியமாக பார்த்தது. வெறித்தனமான மக்கள் கூட்டத்தின் இழிவான சச்சரவில் இருந்து விலகி, தனது உயர்வான தெய்வீக பண்புடன், தனியாக இருந்தார்.§

அடுத்த நான்கு வருடங்களில் இருவரும் பலமுறை சந்தித்து நீண்டதூரம் நடந்து சென்றனர். கடையிற்சுவாமியுடன் தான் இருந்த காலத்தை பற்றி செல்லப்பசுவாமி எதையும் கூறவில்லை, அதனால் வரலாற்றில் அதைப்பற்றிய எந்த சுவடும் இல்லை. அந்த இருவர் தொடர்பாக அம்பிகைபாகன் குறிப்பிட்டுள்ள, ஒரு சிறு கதையை இங்கே காணலாம். §

> இனம் அல்லது மதம், உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர், பணக்காரர் அல்லது ஏழை என்ற பாகுபாடு இல்லாமல், எல்லா பக்தர்களும் கடையிற்சுவாமியின் முன்பாக சமமாக இருந்தனர். அவர் எல்லோர் மீதும் சமமாக கவனம் செலுத்தினார் மற்றும் அவர்களது உடல் மற்றும் மனம் சார்ந்த நோய்கள் மற்றும் அவர்களது வறுமையையும் சீர் செய்தார். இதை அறிந்ததும், அதிக அளவில் மக்கள் அவரை நாடி வந்தனர். தங்கள் வீட்டிற்கு வரவேண்டும் என்று ஏழை எளிய மக்களிடம் இருந்தும் பல கோரிக்கைகள் வந்தன. அவர் வந்த போது, அவர்கள் தங்களது வழக்கமான அசைவ உணவு மற்றும் மதுபானத்தை வழங்கினர். அவர் எந்த கட்டுப்பாட்டையும் விதித்துக்கொள்ளாமல், அவர் வழங்குவதை ஏற்றுக்கொண்டார்.§
>
> இது ஆச்சாரமான இந்து சைவர்களுக்கு தெரிந்ததும், அவர்களுக்கு சுவாமி மீது கோபமும் ஆத்திரமும் தோன்றியது. தனது குருவாக மதித்த கடையிற்சுவாமி மது அருந்தும் பழக்கமுடையவர் என்று மற்ற சீடர்கள் சொல்வதை, சிவயோக சுவாமியின் குருவான செல்லப்பசுவாமியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதை அவரால் நம்பவும் முடியவில்லை. அதை சோதிக்க நினைத்து, கையில் ஒரு மதுபானத்தை தனது சால்வையில் மறைவாக மூடிக்கொண்டு கடையிற்சுவாமியை தேடி, பெரிய கடைக்கு சென்றார். §

செல்லப்பர் அவருக்கு அருகில் சென்று அமர்ந்தார். “அடடா, நீ எனக்கு மதுபானத்துடன் விருந்தளிக்க முடிவு செய்து இருக்கிறாய்! சரி, சால்வைக்கு அடியில் மறைத்து வைத்திருக்கும் மதுபானத்தை திறந்து கொடு. நான் அதை உன்னுடனும் மற்ற சீடர்களுடனும் பகிர்ந்து கொள்கிறேன்!” என்று கடையிற்சுவாமி உற்சாகமாக கூறினார். செல்லப்பசுவாமி நடுங்கிக்கொண்டு அந்த மதுபானத்தை வெளியே எடுத்தார். ஆனால் அது காலியாக இருந்தது. ஏமாற்றம் அடைந்த சீடன், தனது குருவிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு, நல்லூர் *தேரடிக்கு* திரும்பினார். §

கடையிற்சுவாமி இன்னொரு முறை, செல்லப்பசுவாமியிடம் ஒரு போத்தல் சாராயத்தை வழங்கி, சீடன் தான் முதலில் குடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். அவர் தன்னை குருவை விட சிறந்தவராக கருதினாரா என்ன? குரு வழங்கியதை மறுக்க முடியாமல், போத்தலை கையில் எடுத்து சிறிது ருசித்துப் பார்த்தார். அது அவரது மூக்கிற்கு சாராய வாசனையை வழங்கினாலும், அவரது நாவிற்கு தேனைப் போல இருந்தது. §

தென்னிந்தியாவில் இருந்து வந்த ஒரு ஆற்றல்மிக்க சித்தர் மற்றும் ஆன்மீக ஈடுபாட்டுடன் இருந்த அவரது சீடரும் ஒன்றாக சேர்ந்து இருந்த காலங்களில், இருவருக்கும் பிடித்தமான, மெய்யுணர்வின் ஆழங்களை, சைவ சமயத்தின் ஆழ்ந்த நுண்ணறிவுகளை பற்றி ஆய்வு செய்து இருப்பார்களா? இதைப்பற்றி நம்மால் கற்பனை மட்டுமே செய்ய முடியும். §

### இறுதி மகாபயணம்


இறுதியில் சில வருடங்களுக்கு, கடையிற்சுவாமி மண்டைதீவு செல்வதை நிறுத்திவிட்டு, யாழ்ப்பாணம் பகுதியில் தங்கிவிட்டார். அவருக்கு சந்தையில் இருந்து சில கிலோமீட்டர் தொலைவில் இருந்த நீராவியடியில், தனியாருக்கு சொந்தமான ஒரு சிறிய நடராசர் கோயில் பிடித்து இருந்தது. அந்த கோயிலுக்கு பின்புறத்தில் இருந்த வளாகத்தில், அவருக்கென்று ஒரு குடிசை கட்டப்பட்டது. அதில் அவர் குழந்தைவேல்சுவாமியுடன் தங்கி இருந்தார். இது அவரது இராச்சியமாக, தனிமை மற்றும் ஆன்மீக கூட்டுறவின் இடமாக மாறியது. பிரபஞ்சத்தின் மையமாக சூட்சும ரீதியாக கருதப்பட்டு, தென்னிந்தியாவின் பிரபலமான தில்லை நடராசர் கோயிலை குறிப்பிடும் விதமாக, “இது தான் சிதம்பரம்,” என்று தனது சீடர்களுக்கு அறிவித்தார். §

இந்த இடத்தில், அக்டோபர் 13, 1891 அன்று, கடையிற்சுவாமி இந்த உலகில் இருந்து தனது இறுதி மகாபயணத்தை மேற்கொண்டார். அந்த இறுதி தருணங்களின் போது, அவருக்கு அருகில் குழந்தைவேல்சுவாமி இருந்தார். ஞானோதயம் பெற்ற ஆன்மாக்களை ஒரு நிலவறையில் வைத்து அடக்கம் செய்வதை போல, தன்னையும் அடக்கம் செய்யவேண்டும் என்று தனது சீடர்களிடம் அறிவுறுத்தி இருந்தார். அவரது சமாதி சடங்கு மற்றும் அவரது குடிசை இருந்த இடத்தில் கல்லறை அமைப்பதை குழந்தைவேல்சுவாமி

கவனித்துக்கொண்டார். அதன் பிறகு, அந்த இடத்தில் விரைவில் ஒரு பெரிய கல் வைக்கப்பட்டு, பக்தர்கள் மூலம் தொடர்ந்து பூசைகள் நடத்தப்பட்டு வந்தன. ஒரு வருடம் கழித்து, 1892 ஆம் ஆண்டு, சுவாமியின் உத்தரவுப்படி, அந்த பெரிய கல் வைக்கப்பட்ட இடத்தில், இந்தியாவின் வாரணாசியில் இருந்து கொண்டு வரப்பட்ட சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து ஒரு பெரிய கோயில் கட்டப்பட்டது.§

பல நூற்றாண்டுகளுக்கு பிறகு, அந்த சமாதி அழிவை சந்தித்துக்கொண்டு இருந்தது. அந்த இடத்தில் கிரிக்கெட் ஆடிய சிறுவர்களின் கனவுகளில் உயரமான மற்றும் ஒல்லியான ஒரு மனிதர் தோன்றி, அந்த சமாதியை புதுப்பிக்க வேண்டும் என்று கூறினார். பெற்றோர்களுக்கு அந்த கனவை பற்றி தெரிய வந்த போது, சிறுவர்களின் கனவில் வந்தவர் கடையிற்சுவாமி என்பதை உணர்ந்து, இனி அந்த இடத்தில் விளையாட வேண்டாம் என்று உத்தரவிட்டனர். சிறுவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, செட்டியார் சமூகத்தையும் சேர்த்துக்கொண்டு 1980 களின் தொடக்கத்தில் கோயிலை புனர்நிர்மாணம் செய்ய தொடங்கினர். §

1983 ஆம் ஆண்டு, சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி (கடையிற்சுவாமியின் பிரதான சீடனாக இருந்த செல்லப்பசுவாமியின் சீடனின் சீடன்) இறுதியாக யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொண்ட போது, பெரும்பாலும் இளைஞர்களால் நிர்வகிக்கப்பட்ட கடையிற்சுவாமி கோயிலின் நிர்வாகிகள், கருவறை மீது ஒரு புதிய கோபுரத்திற்கு அடிக்கல் நாட்டுவதற்காக அவரை வரவழைத்து இருந்தனர். அவர் பலவீனமான மூங்கில் ஏணி மீது ஏறி அடிக்கல் நாட்டினார் மற்றும் ஒரு சிறிய பூசையும் நடந்தது. புதுப்பிக்கும் பணிகள் தொடர்ந்தன மற்றும் இறுதியாக குடமுழுக்கு விழா 1985 ஆம் ஆண்டு நடைபெற்றது. §



கடையிற்சுவாமி நடராசர் கோயிலுக்கு அருகில் அமைந்து இருந்த ஒரு சிறிய குடிசையில் தனது இறுதி மகாபயணத்தை மேற்கொண்ட போது, அவரது

*சீடர்கள் அவரது உடலை ஒரு நிலவறையில் வைத்து அடக்கம் செய்து, அந்த புனிதமான இடத்தில் ஒரு சிவன் கோயிலை கட்டினார்கள். அந்த கோயிலில் இன்றும் பூசைகள் நடைபெற்று வருகின்றன.*

.........................§

Page 21: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/21_ka02_03.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் ஏழு


# நல்லூரை சேர்ந்த சித்தர் செல்லப்பசுவாமி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில், நல்லூரை சேர்ந்த

பொன்னம்மாவை, வட்டுக்கோட்டையை சேர்ந்த வல்லிபுரம் என்ற விவசாயி மணந்தார். அவர்கள் நல்லூர் கோயிலுக்கு அருகே தங்கள் வீட்டை கட்டி, வயல்களில் பயிர் சாகுபடி செய்து வந்தனர். அவர்களுக்கு இரண்டு மகன்களும் இரண்டு மகள்களும் இருந்தனர், அவர்களில் ஒருவன் செல்லப்பா. அவன் சிறு வயதில் இருந்தே, தனக்குள் இருந்த தெய்வீகத்தன்மையை நாடுவதில் ஒருமுக கவனத்துடன் இருந்தான். அவன் அதிகம் பேசாமல் இருந்ததால், அவன் குழப்பத்தில் இருந்ததாக அவனது பெற்றோர்கள் நினைத்தார்கள். செல்லப்பா விசித்திரமாக இருந்தாலும், உள்ளத்தில் தூய்மையானவராக, தன்னிடத்திலும் மற்றவர்களிடத்திலும் கண்டிப்பாக நடந்துகொண்டார். அவன் பிறந்ததில் இருந்தே ஒரு யோகியின் பண்புகளுடன் இருந்ததால், இளைஞனாக இருக்கும் போதே அவனுக்கு சந்நியாசம் பொருத்தமாக இருக்கும் என்று மக்கள் கணித்தார்கள். அவன் உணவு அல்லது உடை உட்பட எந்த பொருளையும் விரும்பியது இல்லை. அவனுக்கு வேண்டியது கிடைக்கவில்லை என்றால், அவன் அதில்லாமல் சென்றுவிடுவான். அவனுக்கு நண்பர்கள் என்று யாரும் இல்லை. அவன் மனிதர்களிடம் இருந்து மறைந்து இருக்க தன்னால் ஆன முயற்சிகளை செய்து, ஒவ்வொரு நிமிடமும் தனிமையில் கழித்தான். அவனுக்கு யாரும் நெருக்கமாக இல்லை. அவன் எதைப்பற்றி நினைக்கிறான் என்று அவனது குடும்பத்தினருக்கு தெரியவில்லை, மற்றும் அவனை அவனது கூண்டில் இருந்து வெளியேற்றவும் அவர்களால் முடியவில்லை. அவர்களது முயற்சிகள் அதிகரிக்கும் போது, அவன் அதிகமாக விலகி சென்றான். §

சிறு வயதில் அவனை பள்ளிக்கு அழைத்து செல்லவேண்டி இருந்தது, இல்லையென்றால் அவன் பள்ளிக்கு செல்லமாட்டான். பள்ளிக்கு சென்றதும், அவன் நாள் முழுவதும் எதையும் கேட்காமலும் பேசாமலும் அமர்ந்து இருப்பான். இந்த நடத்தை எல்லோருக்கும் பெரிய வேதனையாக இருந்தது. அவனை சக மாணவர்கள் கிண்டல் செய்தனர். அவன் தங்கள் வகுப்புக்களில் எப்போதும் “பகல் கனவு" காண்கிறான் என்று ஆசிரியர்கள் அவனை தண்டித்தார்கள். ஆனால் அவனது மனதை லௌகீகத்தில் ஈடுபடுத்த, மற்றவர்களது எந்த செயலாலும் முடியவில்லை. அவன் வீட்டில் இருக்கும் போது, பெற்றோர்கள் இவனைப் பற்றிய கவலையில் மூழ்கி இருக்க, அவன் வழக்கமாக தனியாக உட்கார்ந்து, ஏதாவது சிந்தனையில் மூழ்கி இருப்பான் அல்லது தியானம் செய்துக்கொண்டு இருப்பான். தங்கள் மகன் அதிகம் கவலைப்படுவதாக அவர்களுக்கு தோன்றியது மற்றும் மற்ற குழந்தைகளைப் போல ஓடி ஆடி விளையாட வேண்டும் என்று அவனை அறிவுறுத்தினார்கள். அவன் நல்லூர் கோயிலில் இருந்து ஒரு மைல் தூரத்தில், கந்தர்மடத்தில் அமைந்து இருந்த சைவ பிரகாச வித்யா சாலை என்ற ஒரு ஆரம்பப்பள்ளிக்கு சென்றான். §

செல்லப்பாவிற்கு பதினாறு வயதாக இருந்த போது, அவன் மக்களிடம் இருந்து விலகி இருக்கும் பழக்கம் தீவிரம் அடைந்து, பல நாட்களுக்கு தொடர்ந்து யாருடனும் பேசாமல் இருந்தான். தங்கள் மகனிடம் ஏதோ ஒரு பெரிய குறை இருக்கிறது என்று நினைத்த பெற்றோர்கள், அவனை பல்வேறு மருத்துவர்கள், சோதிடர்கள் மற்றும் மற்ற வல்லுனர்களிடம் அழைத்து சென்றனர். ஆனால் யாராலும் அவர்கள் மகனைப் பற்றி அவர்களுக்கு புரியவைக்க முடியவில்லை. அவன் மிகவும் மெலிந்து இருந்தாலும், உடல்நலம் சீராக இருந்தது, ஆனால் யாராலும் அவனது தனித்த மனதை புரிந்துகொள்ள முடியவில்லை. இது ஒரு புறம் இருக்க, அவன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என்ற ஒரு உயர்நிலை பள்ளிக்கு சென்றான். அங்கே ஆங்கில மொழியில் கல்வி கற்றுத்தரப்பட்டது. §



செல்லப்பசுவாமி கோபத்துடன் வெளிப்படையாக பேசி, தைரியமாக தவறுகளை சுட்டிக்காட்டியதால், அவருடன் இருக்க யாரும் விரும்பவில்லை.

*அவர் தனிமை விரும்பியாக, பெரும்பாலும் எதையாவது புலம்பிக்கொண்டு இருப்பார். அவரது கிழிந்த வேஷ்டி மற்றும் கண்டிப்பான நடவடிக்கைகள் காரணமாக, உறுதியான சீடர்கள் சிலர் மட்டுமே அவருக்கு நெருக்கமாக இருந்தார்கள்.*


........................§

அதன் பிறகு செல்லப்பா, தூரத்தில் இருக்கும் கோயில் அல்லது கிராமம் என்று கிராமப்புறங்களில் சுற்றித்திரிந்து, ஒரு மரத்தடியில் தியானம் செய்துக்கொண்டு இருப்பான் அல்லது தெருக்களில் குறிக்கோள் இல்லாமல் நடந்துக்கொண்டு இருப்பான். அவனது குடும்பம் தீவிர தேடலை மேற்கொண்டு, எப்படியும் கண்டுபிடித்து விடும். அவன் அவர்களது வேண்டுகோள்கள் மற்றும் தண்டனைகளை பொறுத்துக்கொண்டான், ஆனால் விரைவில் மீண்டும் சுற்றித்திரியத் தொடங்கினான். அவனை அவன் வழியில் விட்டுவிட வேண்டும் என்று அவர்கள் இறுதியில் புரிந்துக்கொண்டார்கள். அவன் ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் கழித்து மீண்டும் பசியுடன் சோர்வாக வீடு திரும்புவான். இதை பார்த்ததும் அவன் தாயின் கண்ணில் கண்ணீர் வந்து விடும். அவள் தன் வாழ்நாள் முழுவதும் அவன் நலனுக்காக வேண்டிக்கொண்டு இருந்தாள். §

**தனிமையில் இருந்த ஒரு நாட்டம்**

பள்ளி படிப்பை முடித்த பிறகு, சுடுகாட்டிற்கு அருகில் இருந்த ஒரு கட்டிடத்தில் இரவு காவலனாக காவல் காக்கும் வேலையை செய்தான். அவன் இரவு முழுவதும் வானிலையில் வெளியே இருந்துக்கொண்டு, அவ்வபோது அந்த கட்டிடத்தை சுற்றி வந்தான். அவன் அப்போது தனது பதின்ம வயதின் முடிவில் இருந்தான். பெற்றோர்கள் அவனது எளிய வாழ்க்கைக்கு முன்னுரிமை வழங்கி இருந்தாலும், அவன் அவர்களுக்கு மேலும் ஏமாற்றத்தை வழங்கினான். அவன் தினமும் பணியை தொடங்கும் போது, கண்காணிக்கும் கட்டிடத்தை மேலோட்டமாக சோதனை செய்த பிறகு, சுடுகாட்டிற்குள் புகுந்து, பெரும்பாலும் எரிந்துக்கொண்டு இருந்த ஈமவிறகுக்கு அருகில் அமர்ந்து, இரவு முழுவதும் தியானம் செய்ததாக தோன்றுகிறது. அவன் அதன் பிறகு ஒரு சிறிய அரசு அலுவலகத்தில் வேலை செய்தான், ஆனால் அவனுக்கு ஊதியத்தின் தேவையை காட்டிலும், தனது தனிமை மீது அதிக விருப்பம் இருந்தது. §

இந்த காலத்தில் நடந்த தகவல்களை *யாழ்ப்பாண நல்லூர் தேரடி செல்லப்பா சுவாமிகள்* என்ற புத்தகத்தில் கே. சி. குலரத்தினம் வழங்கியுள்ளார். (இதை *செல்லப்ப சுவாமி ஆஃப் நல்லூர்* என்ற பெயரில் முனைவர் திருமதி. விமலா கிருஷ்ணபிள்ளை மொழிபெயர்த்தார்)§




*செல்லப்பசுவாமி வழக்கமாக, நல்லூர் கோயிலில் தேரடியை தனது புகலிடமாக கொண்டிருந்தார். அது 12 மீட்டர் உயரத்தில் கூரையால் வெய்த*

*கோபுரமாக இருந்தது. அதில் முருகப்பெருமானின் உற்சவ மூர்த்திகள் மற்றும் நுணுக்கமாக அலங்கரிக்கப்பட்ட வண்டிகள் பாதுகாக்கப்பட்டு வந்தன. இது ஒரு இருட்டு அறையாக இருந்ததால், எந்த விதமான கவனச்சிதறலும் இல்லாமல் பல மணி நேரங்களுக்கு தியானம் செய்யவேண்டும் என்ற சாதுவின் தூண்டுதலுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது.*

........................§

செல்லப்பா சில வருடங்களுக்கு பிறகு தனது படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு, யாழ்ப்பாணம் கச்சேரியில் [மாவட்ட செயலகம்] *ஆராச்சி [மக்கள் தொடர்பு அதிகாரி]* பணியை தொடங்கினார். அவர் சிறப்பாக வேலை செய்ததால், மேலதிகாரிகளின் பாராட்டையும் நம்பிக்கையையும் பெற்றார் மற்றும் பலசமயங்களில் அவருக்கு கருவூலப்பொறுப்பும் வழங்கப்பட்டது. செல்லப்பாவிற்கு சலுகைகள் நிறைந்த பதவி வழங்கிய உயர்ந்த கௌரவத்தை வழங்கினாலும், அதன் மீது அவருக்கு மோகம் ஏற்படவில்லை. அவர் எப்போதும் தனது உயிர்சக்தியின் உட்புற தூண்டுதலில் வாழ்ந்துக்கொண்டு இருந்தார். ஞானம், ஆன்மீகத்தில் ஈர்க்கப்பட்டதால் அவரது பழக்கங்கள், உடை மற்றும் நடவடிக்கைகளில் மாற்றங்கள் தோன்றின. இது பலரது ஆர்வத்தை தூண்டியது. மற்றவர்கள் தனது வேலையை பற்றி குறை கூறாமல் இருக்க, அதை முழுமையாக செய்து வந்தார். இரவு நேரங்களில் மற்றவர்கள் உறக்கத்தில் இருந்த போது, அவர் நல்லூர் முருகப்பெருமானுடன் மறைஞான முறையில் தொடர்பு கொண்டு, “தந்தையே! தந்தையே!” என்று பிதற்ற ஆரம்பித்தார். §

உள்ளிருந்து வெளிவந்த இந்த ஞானப்பெருக்கு, வெளியே வழிய தொடங்கியதால், அவர் தமக்குள் பேசிக்கொள்ளுதல், “ஓம் ஓம்” என்று சொல்லிக்கொண்டு தலையசைத்தல், வலக்கையை உயர்வாக உயர்த்தி மற்றும் நன்றாக அசைத்து உரக்க கத்துதல் என்று அவரின் போக்கு பித்து பிடித்தவர் போலவும், பிசாசு பிடியில் சிக்கியவர் போலவும், ஒரு குழந்தை போலவும் காட்சி அளித்தது. தன்னை நெருங்கி வந்தவரை அவர் துரத்தி அனுப்பினார். இறுதியில் அவர் தனது கச்சேரி பணியை கைவிட்டு, தனது குடிசையின் மூலையில் நாள் முழுவதும் அமர்ந்துகொண்டார்.§



*தனது சீடனான செல்லப்பசுவாமி தியானம் செய்துக்கொண்டு இருக்கும் போது, கடையிற்சுவாமி அவ்வப்போது வந்து கவனிப்பார். யாழ்ப்பாணம் தீபகற்பத்தில் அங்கம் வகித்த கிராமங்கள் வழியாக, எந்த இலக்கும் இல்லாமல், இருவரும் அடிக்கடி நடந்து செல்வதை மக்கள் பார்த்து இருந்தனர்.*

........................§

அவர் மீண்டும், மீண்டும் பின்வாங்கி ஒழுக்கம் தவறியதாக தோன்றிய நிலைகளில் அதிகமாக ஈடுபடுவதை பார்த்ததும், அவரது சொந்தங்கள் சிறப்பு பூசைகளுக்கு ஏற்பாடு செய்தனர். அந்த பூசைகளில் அவரிடம் இருந்ததாக கருதப்பட்ட பிசாசுகளை விரட்டி அடிக்க பூசாரி முயற்சி மேற்கொண்டார். ஆனால் எந்த பலனும் கிடைக்கவில்லை. இந்த பரபரப்பால் செல்லப்பா கலங்காமலும், தன்னை யாரும் புரிந்துகொள்ளவில்லை என்று பதட்டம் அடையாமலும் இருந்தார். மக்கள்தன்னை பைத்தியமாக நினைத்ததை, அவர் சிலசமயம் தனக்கு சாதகமாகவும் பயன்படுத்திக்கொண்டார். இதனால் அவர் தன் விருப்பப்படி சுற்றித்திரிய அல்லது மற்றவர்கள் அவரை துறவியாக நினைத்த போது ஒரு துறவியாகவும் இருக்க முடிந்தது. அவர் இலங்கையில் இருந்த சாதுக்களுடன் சேர்ந்து,

அவர்கள் கதைகளை கேட்பார் மற்றும் அவர்கள் தத்துவ நுணுக்கங்களை பற்றி விவாதிப்பதை கவனமாக பார்த்துக்கொண்டு இருப்பார். இந்த நடவடிக்கைகள் அவரது கவனத்தை முழுமையாக ஈர்த்தன.§

இதன் காரணமாக, செல்லப்பாவின் திருமணம் பற்றிய பேச்சை யாரும் எழுப்பவில்லை மற்றும் தனது சற்குருவான கடையிற்சுவாமியை சந்தித்த போது, அவரை தங்கு தடையின்றி பின்பற்றவும் முடிந்தது. அவரை சிறிது தயக்கத்துடன் குடும்பமும் சமூகமும் விடுவித்ததால், தனது இருபது வயதின் தொடக்கத்தில் இருந்து ஒரு சந்நியாசியாக வாழ்ந்தார். முன்பே தீவிரமாக இருந்த அவரது ஆன்மீக வாழ்க்கை, குரு அவருக்குள் உருவாக்கிய ஆன்மீக உருமாற்றம் மிகவும் வலுவாக இருந்ததால், அவரது சொந்தங்களுக்கு அவரை அடையாளம் காண முடியவில்லை மற்றும் அவராலும் மற்றவர்கள் மத்தியில் தனது சொந்தங்களை அடையாளம் காணமுடியவில்லை. அவரோடு தொடர்புடைய அனைத்தும் தொடர்ந்து மாறிக்கொண்டு இருந்தன. §

கடையிற்சுவாமி மிகவும் குறுகிய காலத்தில், இறைவனை உணர்தலின் உச்சங்களுக்கு அவரை அழைத்து சென்றார், ஆனால் இந்த வலுவான அனுபவமில்லாத நிலையின் பின்விளைவுடன் தன்னை பொருத்திக்கொள்ள செல்லப்பாவிற்கு போதிய அவகாசம் தேவைப்பட்டது. அவர் திருவிழாக்களில் முருகப்பெருமானுக்காக பயன்படும் அலங்கார தேர்களை பாதுகாப்பாக வைக்க, கோயில் நுழைவாயிலில் இருந்து நாற்பத்தி ஐந்து மீட்டர் தூரத்தில் அமைந்து இருந்த, நல்லூர் கோயிலின் *தேரடிக்கு* அருகில் இருந்த திண்ணையில் நீண்ட நேரம் அமர்ந்து தியானம் செய்வார். அந்த காலத்தில், தேரடி என்பது சுமார் பன்னிரண்டு மீட்டர் உயரம் மற்றும் ஒரு புறத்தில் ஆறு மீட்டர் இடைவெளியுடன், இரண்டு மீட்டர் உயர சக்கரங்களுடன் மரத்தால் உருவாக்கப்பட்ட உற்சவத் தேர் மற்றும் முக்கிய திருவிழாக்களில் மட்டும் திருவீதியில் கொண்டு வரப்படும் மற்ற உற்சவ உபகரணங்களை கொண்ட ஒரு கூரை வேய்த அறையாக இருக்கும். அதற்கு முன்பாக ஒரு தேனிரும்பு வேலியால் சூழப்பட்ட, ஒரு மூன்று பக்க திறந்தவெளி கூடாரம் அமைந்து இருந்தது. §

இலங்கையின் யாழ்ப்பாணத்தில் இருக்கும் நல்லூரின் பிரசித்திபெற்ற வரலாறு மற்றும் பேரழகை, *செல்லப்ப சுவாமி ஆஃப் நல்லூர்* என்ற புத்தகத்தில் இருந்து நம்மால் தெரிந்துக்கொள்ள முடிகிறது. அதில் இருந்து ஒரு தொகுப்பு*:* §

> ஒரு சிவபூமியாக விளங்கும் நமது இலங்கை நாடு, இந்திய பெருங்கடலில் ஒரு தங்கம் போல மின்னுகிறது. தமிழில் ஈழம் என்றால் “தங்கம்" என்று பொருள். இந்த இலங்கையை ரிஷி திருமூலர் தனது *திருமந்திரத்தில்,* சிவபெருமானின் இருப்பிடமாக குறிப்பிடுகிறார். இந்த பூமியில் பல ஈஸ்வரன் கோயில்கள் உள்ளன மற்றும் இந்த பூமியில் பல சித்தர்கள் வாழ்ந்து வசித்து உள்ளார்கள். சித்த பரம்பரையின் பாரம்பரியம் இங்கே வேரூன்றி இருக்கிறது. சிவபெருமானின் திருவடியில் தங்களது மனதை

பறிகொடுத்த இந்த சாதுக்களின் மகத்துவம் கற்பனா சக்திக்கு அப்பாற்பட்டது. §

தலைசிறந்த இந்த சித்தர்களின் சமாதி கோயில்கள் வடக்கு மாகாணம் மற்றும் யாழ்ப்பாணம் தீபகற்பத்தில் நிறைந்து இருக்கின்றன. கடையிற்சுவாமியில் இருந்து யோக சுவாமி வரை, பல ஞானிகள் மற்றும் சித்தர்கள், யாழ்ப்பாணத்தை சுற்றி தங்கள் புனிதமான அடிசுவடுகளை விட்டு சென்றுள்ளனர். அத்தகைய கோயில்களுக்கு அருகில் கட்டப்பட்ட குரு பூசை *மண்டபங்கள்*, அன்னதான மையங்களாக மட்டுமில்லாமல் கலாச்சார மற்றும் சமயம் சார்ந்த நடவடிக்கைகளின் இருப்பிடமாகவும் விளங்கின. §

யாழ்ப்பாணத்தின் பழங்கால நகரமாக நல்லூர் [“நல்ல இடம்" என்று பொருள்] விளங்குகிறது. இது பேரரசராக விளங்கிய ஆரிய சக்கரவர்த்தியின்  (1215-1240) தலைநகரமாக விளங்கியது. பரந்து விரிந்த அவரது சாம்ராச்சியத்தில் இராமேஸ்வரமும் இருந்தது, மற்றும் அவர் சேதுவை (தமிழ்நாடு மற்றும் யாழ்ப்பாணத்திற்கு மத்தியில் இருக்கும் குறுநிலம்) பாதுகாத்ததால் சேதுகாவலர் என்ற பட்டத்தை பெற்றார். இந்த நல்லூரில் தூய்மையான, புனிதமான தமிழ் மற்றும் சிவநெறி வளர்ச்சி பெற்றது. இந்த அரசரின் பழங்கால அரண்மனைக்கு அருகில் முருகப்பெருமானின் நல்லூர் கந்தக்கோயில் (சம்ஸ்கிருதம்: ஸ்கந்தஸ்வாமி) அமைந்து இருந்தது. இந்த கோயிலை சுற்றி கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார், மேற்கில் கைலாசநாத சிவன் கோயில், வடக்கில் வீரகாளி அம்மன் கோயில் மற்றும் தெற்கில் சட்டநாதர் கோயில் என்று நான்கு திசைகளிலும், காவலுக்காக கோயில்கள் அமைக்கப்பட்டன. இராச்சியத்தின் சின்னாமாக கொடி மற்றும் முத்திரையில் நந்தி அமைந்து இருந்தது. இந்த சின்னத்தை அவருக்கு அடுத்ததாக வந்த அரசர்களும் தொடர்ந்தார்கள்.§

போர்த்தகீசியர்கள் நல்லூர் கந்தசவாமி கோயிலையும் அதன் அடித்தளத்தையும் அழித்து இருந்தாலும், சுமார் 1734 வருடத்தில் டச்சு நாட்டவர்களின் ஆட்சியின் போது ஒரு சைவ சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. இந்த காலத்தில் வாழ்ந்த பல்வேறு பாணர்கள் மற்றும் கவிஞர்கள்,  தலைசிறந்த சமய பாடல்களை இயற்றினார்கள். இதனால் மீண்டும் நல்லூரில் சமய ஞானம் நிரம்பி வழிந்தது. அப்போது யாழ்ப்பாணம் கச்சேரியில் உயர் பதவியில் இருந்த, ஸ்ரீமத் ரகுநாத மாப்பாண முதலியார் அவர்கள், முருகப்பெருமானின் ஆயுதமான *வேலை* வழிபடுவதற்கு, ஒரு வேல் கோட்டம் அமைக்க டச்சு அரசிடம் வேண்டுகோள் விடுத்து, அவர்களிடம் இருந்து அனுமதி பெற்றார். §

நல்லூர் கோயில் செல்லப்பசுவாமி வாழ்க்கையின் மையமாக இருந்தது. இந்த பழங்கால முருகன் கோயிலின் கருவறையில், ஒரு சக்தி வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கிறது, மற்றும் அது இன்றும் யாழ்ப்பாணம் தீபகற்பத்தில்

ஒரு மிகவும் முக்கியமான இந்து கோயிலாக விளங்குகிறது. இதற்கு இதன் வலுவான பரம்பரை தான் காரணம் என்று பலர் கூறுகின்றனர். §

அந்த இடத்தில் கடையிற்சுவாமி அடிக்கடி செல்லப்பசுவாமியை வந்து சந்திப்பார். அவர்கள் இருவரும் நீண்டதூரம் ஒன்றாக நடந்து சென்று தனிமையான இடங்களில் தியானம் செய்தார்கள். ஒரு நாள் கோடைகால மதிய நேரத்தில், செல்லப்பசுவாமி நல்லூர் கோயில் வளாக மரத்தடியில் அமர்ந்து இருந்தார். அவர் திடீரென்று தான் வெய்யிலில் இருப்பதை போல, தனது குடையை விரித்துக்கொண்டார். பத்து நிமிடங்கள பிறகு கடையிற்சுவாமி வந்ததும், தனது குடையை மடக்கிக்கொண்டார். தனது குரு வருகிறார் என்பதை செல்லப்பசுவாமி தெரிந்துகொண்டு, அவர் நடந்து வரும் போது அவருக்கு சூட்சும ரீதியாக நிழல் வழங்க, தனது குடையை செல்லப்பசுவாமி விரித்திரிக்க வேண்டும் என்று சம்பவத்தை பார்த்த சாட்சிகள் கருதினார்கள். §

### பைத்தியக்காரன் என்ற வெளி வேடம்

கடையிற்சுவாமி உயிர் நீத்த சில வாரங்களில், செல்லப்பசுவாமி வெளியுலக தொடர்புகளை இழந்து, ஒரு பைத்தியக்காரனாக, கட்டுப்பாடு இல்லாமலும் ஒழுங்கில்லாமலும் நடந்துகொண்டார். அவர் நல்லூர் தேரடியின் திண்ணையில் இரவு பகலாக நகராமல், சுவாசிக்காமல், பசி மற்றும் தாகம் இல்லாமல் அமர்ந்து இருந்தார். அவர் வேறு உலகில் வாழும் ஒரு அற்புதமான மனிதராக இருந்தார். ஆனால் வெளியே நீட்டிக்கொண்டு இருக்கும் பற்களுடன் மெலிந்து, வெள்ளை நிற முடியுடன் பார்ப்பதற்கு விகாரமாக இருந்தார். மக்கள் படையல்களாக கற்பூரம், பழங்கள் மற்றும் பூக்களை கொண்டு வந்து, அவரது திருவடிகளில் பேரானந்தத்துடன் அமர்ந்துக்கொண்டனர். அவர் அந்த இடத்தில் அதிக நேரம் இருந்ததால் மக்கள் அவரை நல்லூர் சித்தர் அல்லது தேரடி சித்தர் என்று அழைத்தார்கள். §

அவர் நுழைவாயிலுக்கு அருகில் இருந்த வில்வ மரத்தடியில் அமர்ந்து சாப்பிடுவார் மற்றும் அதே இடத்தில் தியானமும் செய்வார். சில நாட்களுக்கு பிறகு, *தேரடிக்கு* எதிர்புறத்தில் இருந்த சாலையில், தனது சகோதரி செல்லாச்சிக்கு சொந்தமான நிலத்தில் ஒரு மூலையில், களிமண் சுவர்களுடன் கூடிய ஒரு ஓலை குடிசையை பயன்படுத்த தொடங்கினார். சில நாட்களுக்கு அவள் தனது சகோதரனுக்கு உணவை கொண்டு வருவாள், ஆனால் அவர், “இங்கிருந்து போ! அதை எடுத்து சென்றுவிடு! நீ எனக்காக நச்சு கலந்த உணவை கொண்டு வந்திருக்கிறாய்,” என்று அலறுவார். அவர் அந்த குடிசையில் தனக்கு உணவை தானே சமைத்துக்கொள்வார். அவர் அந்த *தேரடியின்* கற்காரை படிகளில் ஒரு மெல்லிய கோரைப்பாயில் உறங்கி, வாழ்ந்த ஒரு எளிமையான வாழ்க்கை மற்றவர்கள் மீது பெரிய பாதிப்பை ஏற்படுத்தியதோடு, இலங்கையில் சைவ சமய எதிர்காலத்தையே மாற்றி அமைத்தது. §

அவர் சமாதியில் இல்லாத போது, அவரது நடவடிக்கைகள் தீவிரமாக இருந்தன. தன்னிடம் ஆசிகளை பெற வந்தவர்கள் மீது பொருட்களை வீசி எறிவார். தன்னை இருமுறை பார்த்த நபர்களை துரத்திக்கொண்டு கூச்சலிட்டுக்கொண்டு ஓடுவார். இவர் அசாதாரணமானவர் என்பதை மக்கள் உறுதியாக அறிந்து இருந்தாலும், இந்த விசித்திரமான மனிதரை பற்றி புரிந்துகொள்ள முடியாமல் விலகியே இருந்தார்கள். செல்லபசுவாமியின் சீடரான சிவயோக சுவாமி, அந்த மர்மமான சாதுவை பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்:§

சின்னத் தனமாய்த் தெருவாலே போவாரை

என்னப்பன் பேசிடுவான் - சின்னத்தங்கம்

இவன்விசரன் என்பாரடி.

உல்லாச நடையனடி ஊரூராய்த் திரிவானடி

எல்லோரு மிவனைக்கண்டு - சின்னத்தங்கம்


ஏளனஞ் செய்வாரடி. §

அப்போது ஆங்கிலேயர்களின் கிறித்துவ ஆதிக்கம் அதிகமாக இருந்தது. அந்த காலகட்டத்தில், காவி உடை அணிந்த சந்நியாசிகள் துன்புறுத்தப்பட்டார்கள் அல்லது சிறையில் அடைக்கப்பட்டார்கள். இதற்கு பயந்து இந்து துறவி அல்லது சுவாமி தனது ஆன்மீக வேலையை தொடர வெள்ளை உடை அணிந்துகொண்டார்கள். உண்மையில் செல்லப்பசுவாமிக்கு ஒரு பைத்தியம் இல்லை, தொல்லைகளை தவிர்க்க அவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று அவரது குரு அவருக்கு அறிவுறுத்தி இருந்தார். செல்லப்பசுவாமி *உன்மத அவஸ்தா என்கிற* பைத்தியக்கார வெளிவேடத்தில், தனது பெருமையை மறைத்து வைத்திருந்த ஞானியாக விளங்கினார். அவரை “விசரன் (பைத்தியம்) செல்லப்பசுவாமி" என்று உள்ளூர் மக்கள் அழைத்தனர். அவரது குடும்பம் அவரது நடத்தையை உண்மை என்று நம்பி, அவரது பாதுகாப்பிற்காக சங்கலியில் கட்டி வைத்தது. §

அவர் ஆன்மீக தலைவர் என்றும் அதனால் தங்களுக்கும் தாங்கள் மேற்கொள்ளும் சமயபரப்பு முயற்சிகளுக்கும் அச்சுறுத்தலாக இருக்கக்கூடும் என்றும் ஆங்கிலேயர்கள் நிர்வகித்த அரசாங்கம் தன்னை சந்தேகிக்காமல் இருக்கவும், தகுதியில்லாத பக்தர்களை தவிர்க்கவும், செல்லப்பசுவாமி யாழ்ப்பாணம் சாலைகள் வழியாக, எல்லோருக்கும் கேட்கும்படியாக ஆனால் அதே சமயத்தில் யாருக்கும் புறியாதவாறு

சிக்கலான மற்றும் குழப்பமான, மறைபுதிரான சொற்றொடர்களை உரக்க தனக்குத்தானே பேசிக்கொண்டு, யாழ்ப்பாணத்தின் சாலைகள் வழியாக பேரானந்தத்தில் தள்ளாடி செல்வார். அந்த சமயத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த பாதிக்கு மேலான ஆச்சாரமான சைவ குடும்பங்கள், மதம் மாற்றுவதில் தீவிரமாக இருந்த கத்தோலிக்க, ஆங்கிலிக்க மற்றும் மற்ற சீர்திருத்த திருச்சபை சமயப்பற்றுகளின், தற்காலிக தாக்கத்திற்கு ஆளாகினார்கள். §

பல வருடங்களுக்கு பிறகு, யோக சுவாமியும் இதைப்போன்ற தொல்லைகளை எதிர்கொண்டார் மற்றும் அவரையும் உள்ளூர் மக்கள் பைத்தியம் என்று நினைத்தனர். ஆனால் நன்றாக தீர்மானிக்கும் திறனுடைய கிராம மக்களுக்கு, இவர்கள் உண்மையில் திடமான சிந்தனையாற்றலை உடையவர்கள் என்றும், அறிவுக்கு எட்டாமல் மறைந்து இருப்பதாக *வேதங்கள்* குறிப்பிடுவதை இவர்கள் அறிந்து இருந்தார்கள் என்றும் தெரிந்து இருந்தது. இவர்கள் முந்தைய பிறவியில் சாதுக்களாக இருந்தவர்கள் என்பதால், அவர்களால் மெய்யுணர்வின் ஆழங்களை முழுமையாக புரிந்துகொண்டு, தியானத்தில் இயல்பான ஈடுபாட்டுடன் பல மணிநேரங்கள் அல்லது பல நாட்களுக்கு தொடர்ந்து உட்கார்ந்து இருக்க முடிந்தது. ஆனால் சமூகத்திற்கு இதில் ஈடுபாடு இல்லை என்பதால், அவர்களால் இதை புரிந்துகொள்ள முடியவில்லை. பின்வரும் நுண்ணறிவை *நல்லூரின் செல்லப்ப சுவாமி* புத்தகம் வழங்குகிறது: §



யோக சுவாமி தான் செல்லப்பசுவாமியும் சேர்ந்து மேற்கொண்ட பயணத்தை பற்றி விவரிக்கும் போது, செல்லப்பசுவாமி எவ்வாறு வானத்தை

*பார்த்துக்கொண்டே தரையில் சிதறி இருந்த எறும்பு புற்றுக்களை மிதிக்காமல் சென்றார் என்றும், ஆனால் அவர் அவற்றின் மீது கவனமாக இருந்துக்கொண்டு எறும்புகளின சீற்றத்திற்கு ஆளானார் என்பதையும் ஆச்சர்யத்துடன் பகிர்ந்துக்கொள்வார்.*

……………………….§

"செல்லப்பா தனது உண்மை நிலையை வெளிப்படுத்த போவதில்லை," என்று செல்லப்ப சுவாமி தெளிவாக அறிவித்து இருந்தாலும், "செல்லப்பா எங்கள் தந்தை, உண்மையான தந்தையாக எங்கள் மீது கருணையை பொழிந்து, நல்லூரின் தங்க தந்தையாக விளங்குகிறார்," என்பதை உறுதி செய்யும் வண்ணம், ஏராளமான பக்தர்கள் அவரை நாடி வந்தனர். அவர் மீது வலுவான நம்பிக்கையுடன் வெகு தொலைவில் இருந்து அவரை நாடி வந்தவர்களில் திரு ஞானசம்பந்தர், ராமலிங்கம், கொழும்புத்துறையை சேர்ந்த துரையப்பா மற்றும் பொன்னையா, ஆறுமுகம், இளையதம்பி, கந்தர்மடத்தை சேர்ந்த தாமோதரம்பிள்ளை மற்றும் கம்பன்தரையை சேர்ந்த முருகேசு ஆகியோர் அடங்குவர். §

அவர்களிடம் சுவாமி மிகவும் பரிவுடன் நடந்துகொண்டார். தாங்கள் துறவறம் மேற்கொள்ள விரும்புவதாக சில சீடர்கள் குறிப்பிடும் போது, அவர், "உனது வாழ்க்கை முறையும் துறவறமும் இரு துருவங்களாக இருக்கின்றன. உனக்கு திருமண வாழ்க்கை சிறப்பாக இருக்கும்," என்று குறிப்பிடுவார். சொந்தங்கள் தங்களை திருமணம் செய்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதாகவும், இது தொடர்பாக அவரது அனுமதி நாடி வந்து இருப்பதாகவும் சிலர் குறிப்பிடும் போது, "நீ திருமணம் செய்துகொள்ள என்னிடம் எதற்கு அனுமதி கேட்கவேண்டும். இங்கிருந்து முதலில் கிளம்பு," என்று சுவாமி கூறுவார். யாராவது திருமணத்தை பற்றி பேசினால், அவர் அவமானப்படுத்தும் குரலுடன் கண்டித்து, "செய்தி கேட்டாயா? அரசாங்க அதிகாரி தனது மகளை எனக்கு மணம்முடிக்க விரும்புகிறார். நான் திருமணம் செய்துக்கொள்ள வேண்டுமாம். செய்துக்கொள்ளவா?" என்று நேரடியாக பேசுவார். §

நீ ஒரு உணர்தலை பெற்ற குரு என்று மற்றவர்களுக்கு தெரிய வைப்பது, முட்டாளாக இருப்பதை காட்டிலும் பெரிய முட்டாள்தனம் என்று செல்லப்பசுவாமி யோக சுவாமியிடம் தெரிவித்தார். சாதாரண மக்கள் உனது நிம்மதியை கெடுப்பார்கள். அருளை பெறுவதற்கு தேவையான தகுதிகள் எதுவும் இல்லாமல், பெரும்பாலும் வலுக்கட்டாயமாக ஆசிகளை பெறுவதற்காக, அவர்கள் உன்னை இரவு பகலாக துரத்திக்கொண்டு இருப்பார்கள். அவர்கள் லௌகீக ஆசிகளை பெறுவதற்காக, தங்களது எதிர்காலத்தை பற்றி தெரிந்துக்கொள்ள அல்லது ஏதாவது வியக்கத்தக்க வகையில் நடைபெறும் என்ற நம்பிக்கையில் அருகில் நிற்பதற்காக வருவார்கள். §

செல்லப்பசுவாமி பற்றிய தனது அபிப்ராயம் மற்றும் அவரது பைத்தியக்கார வெளிவேடம் பற்றிய தனது ஆழமான நுண்ணறிவுகளை *யோக சுவாமி, லைஃப் அண்ட் டிசிங்ஸ்* (யோக சுவாமி, வாழ்க்கை மற்றும் போதனைகள்) என்ற தனது எழுத்துப்பிரதியில் திருமதி இந்துமதி (அம்மா) நவரத்னராஜா வழங்கியுள்ளார். §

மிகவும் பிரபலமான மனிதரான செல்லப்பர் தேரடியின் படிக்கட்டில் ஒவ்வொரு நாளும் அமர்ந்து இருப்பார். ஆனால் ஒரு வெற்று பார்வையுடன் அமர்ந்து இருந்த, அந்த கருப்பு நிற சாதுவின் முகத்தில் தெய்வீகத்தன்மை எதுவும் தென்படவில்லை என்றாலும், முரட்டுத்தனம் மட்டும் தெளிவாக தெரிந்தது. ஒளிக்கூட புகமுடியாமல் மக்கள் கூட்டம் அலைமோதும் பண்டிகை காலங்களிலும், அவர் படிக்கட்டில் பிரகாசமான முகத்துடன் உட்கார்ந்து, தன்னை நினைத்து சிரித்துக்கொண்டு இருப்பார். சிலசமங்களில் படியில் படுத்துக்கொண்டு, நிந்திப்பவர்களை பார்த்துக்கொண்டு இருப்பார். சிலசமயங்களில் அவர் குறிக்கோள் இல்லாமல் அலைந்து கொண்டு இருப்பவர்களை பார்த்து, இழிவான வார்த்தைகளால் திட்டுவார். அவர்கள் பதிலுக்கு அவரை நிந்தித்து, அவரை ஒரு முட்டாள் என்று கூறி கிளம்பி விடுவார்கள். அவர்கள் இந்த நிந்தனை பற்றி கவலைப்படாமல், அவர் தொடர்ந்து வசைப்பாடிக்கொண்டு இருந்தார்.§

சிலசமயம் அவர் முருகப்பெருமானின் சன்னிதானத்தில் கருவறை முன்பாக கந்தல் துணியுடன் நின்றுக்கொண்டு, போவோர் வருவோரை கடுஞ்சொற்களால் திட்டுவார். அவர் சிலசமங்களில் திருநெல்வேலி, கொழும்புத்துறை மற்றும் மற்ற இடங்களில் சுற்றிக்கொண்டு இருப்பார். அவர் சுற்றித்திரிவதை பார்த்து, மக்கள் அவரை பைத்தியம் என்று கிண்டல் செய்வார்கள். அவர் வீடுகள் முன்பாக நின்றுக்கொண்டு யாசகம் செய்துக்கொண்டு இருப்பார். மற்றும் யாசகமாக எது கிடைத்தாலும், அதை ஏற்றுக்கொள்வார். சில சமயம், அவர் அரிசியுடன் ஏதாவது ஒரு காய்கறியை சமைத்து சாப்பிடுவார். அவர் அதிகநேரம் தூங்குவில்லை. அவர் நள்ளிரவிற்கு பிறகு, தனது கைகளை தலையணையாக பயன்படுத்தி, தரையில் உறங்கிக்கொண்டு இருப்பார். §

பனை மற்றும் தென்னை ஓலைகளை பயன்படுத்தி, பல கலை வடிவங்களை பின்னுவதில் தென்பட்ட அவரது கைவண்ணம் மட்டுமே, அவர் ஒரு பைத்தியம் இல்லை என்பதை தெரிவித்தது. ஆனால் இந்த விசித்திரமான உலகம் அவரது இந்த ஆரோக்கியமான மனநிலையை புரிந்துகொள் இந்த ஒரு காரணம் மட்டும் போதுமா என்ன? §

செல்லப்பசுவாமி ஒரு பைத்தியத்தின் பண்புகளையும், ஆன்மீக தியானத்தில் மூழ்கி இருக்கும் ஒரு மிகப்பெரிய சாதுவின் பண்புகளையும் கொண்டு இருந்தார். அவரால் முட்டாளாக்கப்பட்டவர்கள், அவரை ஒரு முட்டாளாக கருதினார்கள். ஆன்மீக புரிதலுக்காக ஏங்கிக்கொண்டு

இருப்பவர்களுக்கு, அவர் ஆழமான ஞானத்தை உடையவர் என்ற அவரது உண்மையான நிலை தெரிந்தது. சிவயோக சுவாமி அவரை ஒரு உன்னதமான முனிவராக கண்டார், மற்றும் அவர் ஒரு குருவின் வடிவத்தில் யோக சுவாமிக்கு தகுதியை வழங்கி, தீய சக்திகளிடம் இருந்து காப்பாற்றினார். "*தேரடியில்*, பிறை வடிவில் பிரகாசமான அருளாக அவரை கண்டேன். அவர் என்னை தனக்கு சொந்தமாக்கிக்கொண்டு, எனக்கு பேரானந்த வழியை காண்பித்தார்." §

செல்லப்பா இந்த அச்சுறுத்தும் மாறுவேடத்துடன் தனியாக அலைந்துக்கொண்டு, தனது உண்மையான இயல்பை யாரும் அறியவேண்டாம் என்பதில் உறுதியாக இருந்தார். அவரது உள்ளத்தின் உண்மையான இயல்பை பற்றி வேதாந்தம் மற்றும் சித்தாந்தத்தை கற்றறிந்த பண்டிதர்களுக்கும், அவருக்கு நீண்ட நாட்கள் நண்பர்களாக இருந்தவர்களுக்கும் தெரியவில்லை. செல்லப்பா தான் ஏற்ற பைத்தியக்கார வேடத்தில் யாருக்கும் சந்தேகம் வராமல் சிறப்பாக நடித்தார். "நாற்பது வருட காலமாக தாம் எடுத்த கோலத்தை எவரும் சந்தேகப்படாமல் நடித்துவிட்டு போனார்," என்று ஒருமுறை யோக சுவாமி குறிப்பிட்டார். §

செல்லப்பசுவாமி மறைபுதிராக பேசிய மொழியை குறிவிலக்கம் செய்து புரிந்துகொள்ள வேண்டியிருந்தது. அவரது "தேன் துளிகளை" யோக சுவாமி பதிவு செய்ததில் இருந்து ஒரு தொகுப்பு:§

"இயல்பாக எதுவும் தீய பண்புடன் இருப்பதில்லை," மற்றும் " முழுமையான உண்மையை யாராலும் புரிந்துகொள்ள முடியாது" என்று சொல்லி, அமைதியாக இருப்பார். "இது இப்படித்தான் இருக்கிறது, மற்றும் இது பாசாங்குத்தனத்தில் மறைந்து இருப்பதால், இதை முழுமையாக அறிந்தவர் என்று யாரும் இல்லை" என்று கந்தனின் முன்பக்க வாசலில், கந்தலான துணிகளுடன் இருந்த உயர்ந்த செல்லப்பன் கூறினார். அந்த இடத்திற்கு அடிக்கடி வந்தவர்களை, அவர் அவதூறாக பேசுவார்.§

"அது முடிவில்லாத தொடக்கத்தில் இருந்து அப்படித்தான் இருக்கிறது," என்று சொல்லி அங்கும் இங்கும் சுற்றிக்கொண்டு இருப்பார். "இவை அனைத்தும் மாய நிகழ்வுகள்," என்று முணுமுணுப்பார், "யார் அறிவார்?" மற்றும் "எப்போவோ முடிந்த காரியம்" என்று சொல்லி நல்லூர் கோயிலின் வெளிபுறத்தில் இருந்த பிரகாரத்திற்கு சென்று புழுதி படிந்த இடத்தில் அமர்ந்து, தன்னை வணங்கவரும் மக்களைப் பார்த்த அச்சத்தில் புழுதி எல்லாம் பறந்து விடும் என்பார். யாரும் அவரிடம் இருந்து தனது கேள்விக்கான பதிலை பெற்றதில்லை என்று நினைக்கிறேன். அவரது முட்டாள்தனமான பேச்சில் இருந்து அவ்வப்போது வெளிவரும் தேன் துளிகளுக்காக, நான் அவர் அருகே காத்து இருந்தேன்.§

ஒரு உணர்தலை பெற்ற நபரின் சக்திகள் பற்றிய எண்ணற்ற அற்புதமான கதைகள் மற்றும் தன்னை குருவாக அறிவித்தவரை நோக்கி ஆர்வத்தை நாடுபவர்கள் ஈர்க்கப்பட்ட கதைகள், இலங்கை இந்துக்கள் மத்தியில் பிரபலமாக இருக்கின்றன. சற்குருவின் உண்மையான இயல்பை புரிந்துகொண்டு தயார் நிலையில் இருந்த சில சீடர்கள், அவருடன் இருப்பதற்காக  எந்த தடையையும் கடந்து செல்வார்கள் என்று செல்லப்பசுவாமி கூறினார். சற்குரு எந்த ஒரு மாறு வேடத்தில் இருந்தாலும், அத்தகைய ஒரு விழைபவர் அவரை  உணர்ந்துக்கொள்வார். சற்குரு வீடு வாசல் இல்லாத ஆண்டியாக, கிராமத்தில் ஒரு பறையனாக இருந்தால், சமூக ரீதியாக தகுதியற்றவராக இருக்கும் ஒருவரை பின்பற்றும் போது சமூகம் வெளிப்படுத்தும் அதிருப்தியை தாங்குவதற்காக, விழைபவர் அதிக வலிமையை பெறுவார். §


உணர்தலை நாடும் சீடன், எந்த தடையாலும் துவண்டு விடமாட்டார். குரு அவரை திருப்பி அனுப்பி விட்டால், அவர் தனது பாதையில் இருந்து விலகமாட்டார். குரு செய்வது எதுவானாலும், அதை தனக்கு கிடைக்கும் ஆசியாக ஏற்றுக்கொள்வார். குருவுடன் இணக்கத்தை பெறுவதற்கு தனது உருவம், தனது கருத்துக்கள், தனது அறிவாற்றல், தனது இயல்பை மாற்றிக்கொள்வார். ஒரு குருவால் திருப்பி அனுப்பப்பட்ட சீடர்கள், அதே குருவிடம் மாறு வேடத்தில் திரும்பியதாக எண்ணற்ற கதைகள் குறிப்பிடுகின்றன. இந்த உத்தி பலனளிக்கவில்லை என்றால், அந்த சீடன் அந்த இடத்தில் இருந்து கிளம்பி, தனது குணத்தை மாற்றிக்கொண்டு நல்ல நிலையில் திரும்பும் வரை, தனது வாழ்க்கையை உருமாற்றும் *தவத்தை* மேற்கொள்வார். §

செல்லப்பாவின் சகோதரியின் மகன், அவர்களது வீட்டில் தங்கி இருந்தான். அந்த இளைஞன் முன்கோபியாக இருந்தான். அவன் செல்லப்பசுவாமியை ஒரு சாதுவாக ஏற்றுக்கொண்டு இருந்தாலும், செல்லப்பசுவாமி தன்னை, தனது தாயை மற்றும் தனது குடும்பத்தை மட்டும் அல்லாமல் தங்கள் நண்பர்கள் மற்றும் விருந்தினர்களையும் தரக்குறைவான வார்த்தைகளால் தாக்கியதால், அவன் பெரும்பாலான சமயங்களில் சுவாமியை கடிந்து கொண்டான். §

ஒரு நாள் செல்லப்பசுவாமி தங்கள் குடும்ப வளாகத்தில் இருந்த திறந்தவெளி கிணற்றிற்கு அருகில் நின்றுக்கொண்டு, தனது சகோதரியை உரத்த குரலில் திட்டிக்கொண்டு இருந்தார். உடனே அந்த இளைஞன் தனது தாயை காப்பாற்றுவதற்காக வீட்டிற்கு வெளியே ஓடி வந்து, செல்லப்பசுவாமி திட்டுவதை நிறுத்தவேண்டும் என்று அலறினான். செல்லப்பசுவாமி அவன் சொன்ன வார்த்தைகளை கிண்டல் செய்யும் வண்ணம், அவரும் பதிலுக்கு கத்தத் தொடங்கினார். அந்த இளைஞன் சுவாமியை நெருங்கி அவரை குத்துவதற்காக இரண்டு கைகளையும் மடக்கிக்கொண்டு, திடீரென்று இரண்டு மீட்டர் அகல கிணற்றைத் தாவி மறுபுறம் வந்து விழுந்தான். செல்லப்பசுவாமி அவனது நெஞ்சில் லேசாக கை வைத்தார். உடனே அவனது

கோபம் முழுமையாக தணிந்தது. அந்த இளைஞன் என்ன செய்கிறோம், எங்கே இருக்கிறோம் என்று தெரியாமல், பேச்சு மூச்சு இல்லாமல் அதிர்ந்து நின்றுக்கொண்டு இருந்தான். §

அந்த குடும்பம் காலப்போக்கில், செல்லப்பசுவாமியின் வார்த்தைக்கு மதிப்பு அளிக்க கற்றுக்கொண்டது. ஒரு முறை அந்த குடும்பம் தங்களுக்கு நெருக்கமான நண்பர்களுடன், தென்கிழக்கு பிராந்தியத்தில் இருக்கும் மலைகளில் காடுகளால் சூழப்பட்டு, புலிகள் நடமாட்டம் அதிகமிருக்கும் இடத்தில் அமைந்துள்ள, இலங்கையின் மிகவும் பிரபலமான கந்தக் கடவுளின் கோயிலான கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை செல்ல திட்டமிட்டனர். அவர்கள் அதற்காக பணத்தை சேமித்து, பல மாதங்கள் முன்பே பயணத்தை பற்றி பேசத்தொடங்கினர். அவர்கள் பயணத்தை பற்றி செல்லப்பசுவாமிக்கு தெரிய வந்தது. இறுதியாக அவர்கள் கிளம்பும் நாள் வந்த போது அவர், “எதற்காக தேடி செல்கிறீர்கள்? கடவுள் இங்கேயே இருக்கிறார்,” என்று கூறினார். உடனே அவர்கள் தங்கள் பயணத்தை ரத்து செய்தனர். ஆனால் அந்த குழுவில் இருந்த ஒருவர் மட்டும், தனியாக தனது பயணத்தை தொடங்கினார். ஆனால் அவர் கதிர்காமம் சென்றடையவில்லை. அவருக்கு நடுவழியில் தீவிர மலேரியா தொற்றிக்கொண்டது மற்றும் மருத்துவமனையில் ஆறு மாதங்கள் இருந்து, மருத்துவ கட்டணமாக ஆயிரம் ரூபாய் செலுத்திய பிறகே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். §



செல்லப்பசுவாமி தனது ஆசைகள் மற்றும் உணவுப்பழக்கங்கள் மீது ஒரு தீவிரமான கட்டுப்பாட்டை கடைப்பிடித்தார். அவர் வழக்கமாக தனியாக

*உட்கார்ந்து சாப்பிடுவார். அந்த உணவு நல்லூர் கோயிலின் வில்வ மரத்தடியில் ஒரு எளிமையான விறகு அடுப்பில் தயார் செய்யப்பட்டு இருக்கும்.*

……………………§

**அற்புதமான வேலைப்பாடுகள்**

பெரும்பாலான சமயங்களில் செல்லப்பசுவாமி முட்கள் நிறைந்த வில்வ (*Aegle marmelos)* மரத்து அடியில் காணப்படுவார். இதன் இலைகள் *திரிசூலம்* போன்ற வடிவத்தை கொண்டு இருப்பதால், இது சிவபெருமானுக்கு உகந்ததாக கருதப்படுகிறது. அந்த மரம் வழங்கிய மிகப்பெரிய நிழலின் கீழ் சூரிய வெப்பத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டு, அவர் தனக்குத்தானே பேசிக்கொள்வார், தியானம் செய்தார், உணவு அருந்துவார் மற்றும் அங்கே அமர்ந்துகொண்டு பனை மற்றும் தென்னை ஓலைகளை பயன்படுத்தி பல்வேறு வடிவங்களில் விசிறிகள் மற்றும் கொள்கலன்களை உருவாக்குவார். அவர் பொதுவாக நாள் முழுவதும், சுட்டெரிக்கும் வெய்யிலில் ஓலைகள் மூலம் விசிறிகளை பின்னிக்கொண்டு இருப்பார். அந்த கலையில் தேர்ச்சி பெறுவதற்கு பொறுமை மற்றும் திறமை தேவைப்பட்டது, மற்றும் அதில் மிகவும் சிறந்தவராக விளங்கினார். அவர் தயாரித்த ஒவ்வொரு விசிறியும் ஒரு பிரத்யேக வடிவத்தில் இருந்தன. அவர் அந்த விசிறிகளை சீடர்கள் மற்றும் வழிப்போக்கர்களுக்கு வழங்கினார். அந்த விசிறி வேதனையில் இருந்து பாதுகாப்பு, குளிர்ச்சி மற்றும் நிம்மதியின் மறைமுக அர்த்தத்தால் ஊக்குவிக்கப்பட்டு, ஒரு பிரார்த்தனை மற்றும் ஆசியாக விளங்கியது. கூரைகள், சுவர்கள் மற்றும் வேலிகளுக்கு பயன்படுத்தப்படும் தென்னை ஓலையில் இருந்து காட்சன் என்ற ஒரு வகை பாயையும் தயார் செய்தார். §

இந்த மர்மமான சித்தர் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினார். இலங்கை கலாச்சாரத்தில் அதிகம் கௌரவிக்கப்பட்டவர்களில் ஒருவரான சர் பொன்னம்பலம் ராமநாதன், செல்லப்பசுவாமி இருந்த காலத்தில், யாழ்ப்பாணம் நகரத்தின் எல்லையில் இருந்த மருதனார்மடத்தில் இளம்பெண்களுக்காக இராமநாதன் கல்லூரியை துவக்கினார். விமர்சியாக நடந்த அதன் திறப்பு விழாவில், சுவாமி முதலாவதாக வந்து இருந்தார். திறந்து இருந்த கதவுகள் வழியாக அவர் நடந்து சென்று, இராமநாதனிடம் தான் செய்த சிறந்த மின்விசிறிகளில் ஒன்றை பரிசாக வழங்கி, “இயல்பாக எதுவும் தீய பண்புடன் இருப்பதில்லை; எப்போவோ முடிந்த காரியம்; முழுதும் உண்மை; நாம் அறியோம்,” என்று கூறினார். §

பள்ளியின் வெற்றிக்கு, அன்றைய தினம் செல்லப்பசுவாமி வருகை தந்து ஆசி வழங்கியது முக்கிய காரணம் என்று அந்த சமூகம் கருதுகிறது. மிகவும் முக்கியமான நாளில் அதிலும் குறிப்பாக மங்களகரமான தருணத்தில், இந்த தெய்வீக புருஷர் தங்கள் பள்ளிக்கு வந்தது தனிச்சிறப்பு வாய்ந்ததாக பள்ளியில் இருந்த அனைவரும் கருதினார்கள். §

தனது சொந்த செலவில், முழுமையாக கருங்கல்லில் செதுக்கவேண்டும் என்று உத்தரவிட்டு, கொழும்பின் கொச்சிகடேயில் புணர்நிர்மாணம் செய்த சிவன் கோயில் உட்பட, இராமநாதன் சைவ சமயத்திற்கு பல முக்கிய தொண்டுகளை செய்துள்ளார். அந்த கோயிலை முதலில் அவரது தந்தை முதலியார் பொன்னம்பலம் 1856 ஆம் ஆண்டில் கட்டியிருந்தார். புனர்நிர்மாணம் 1910 ஆம் ஆண்டு நிறைவு பெற்றது. §



*செல்லப்பசுவாமி பாரம்பரிய விசிறிகளை தயாரிக்க, பனைமரத்தின் உறுதியான ஓலைகளை பல மணிநேரங்கள் அறுத்துக்கொண்டும் பின்னிக்கொண்டும் இருப்பார். மக்கள் அந்த விசிறிகளை கொண்டு வெப்பத்தை தணித்துக்கொள்வார்கள். அவரது விசிறிகளை பெற்றவர்கள், தங்களுக்கு வலுவான ஆசிகள் கிடைத்ததாக கருதுவார்கள்.*

........................§

செல்லப்பசுவாமி தனிமையை விரும்புவார். அவரது சொந்த சீடர்கள் அழைப்பு வந்தால் மட்டுமே அவரை சென்று சந்திப்பார்கள். அந்த அழைப்பில் சுவாமியின் முயற்சியே அதிகமாக இருக்கும். அவர்களுக்கு ஏதாவது தேவைப்படுகிறது என்றால், அது அவர்களுக்கு முன்பே கிடைத்து இருக்கும். சுவாமி அவர்களின் மனதை அறிந்து இருந்தார். பக்தர்கள் பெரும்பாலும் தங்களது இக்கட்டான தருணங்களில் உதவியை நாடுவார்கள். இதோ *செல்லப்பசுவாமி ஆஃப் நல்லூரில்* இருந்து ஒரு எடுத்துக்காட்டு: §

கொழும்புத்துறையை சேர்ந்த இராமலிங்கத்தின் குழந்தை தீராத நோயால் வாடியது. பெற்றோர்கள் குழந்தையை சுவாமியிடம் அழைத்து செல்ல விரும்பினர், ஆனால் அவரது மாமியார், “அந்த பைத்தியம் எந்த சாதியை சேர்ந்தவர் என்று நமக்கு தெரியாது. குழந்தையை அவரிடம் அழைத்து செல்லவேண்டாம்,” என்று எச்சரித்தார். அந்த மூதாட்டியின் அறிவுரையை கேட்காமல், இராமலிங்கமும் அவரது மனைவியும் குழந்தையை சுவாமியிடம் அழைத்து சென்றனர். சுவாமி அவர்களை பார்த்ததும் “கனகம்மா, குழந்தையை இங்கே கொண்டு வா!” என்று ஆணையிட்டார். ஒரு உள்ளூர் மருத்துவரிடம் சென்று ஒரு குறிப்பிட்ட மருந்தை வாங்க வேண்டும் என்று அறிவுறுத்தலை வழங்கிக்கொண்டே, “உன் தாய்க்கு சாதியை பற்றிய சந்தேகம் இருந்தது. நான் வட்டுக்கோட்டை வெள்ளாள சமூகத்தை சேர்ந்தவன் என்று சூரியன் மற்றும் சந்திரனை சாட்சியாக வைத்து உறுதி செய்கிறேன்,” என்று அறிவித்தார். சுவாமி குழந்தையை தொட்டதும், அதன் வெப்பம் குறைந்தது, மற்றும் அவர் பரிந்துரைத்த மருந்தை தந்ததும், குழந்தை பூரண குணமடைந்தது. §



*செல்லப்பசுவாமியின் விசேடமான சுயகட்டுப்பாட்டை, அவர் தனது பசியை அடக்கிக்கொள்ளும் முறையில் இருந்து தெரிந்துக்கொள்ளலாம். அவர் உணவு தயாரிக்கும் போது, சாப்பிடவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் நாவில் நீர் ஊருகிறது என்றால், அவர் சமையலுக்கு வைத்திருந்த மண் பாண்டங்களை உடைத்து, சாப்பிடாமல் விரதம் இருப்பார். இது அவ்வப்போது நடந்துகொண்டு இருந்ததால், யோக சுவாமி அவரை "உடைந்த மண் பாண்டங்களால் சூழப்பட்டவர்," என்று அவரை வர்ணிப்பார்.*

........................§

புதியவர்கள் சுவாமி என்ன செய்கிறார் என்று பார்ப்பதற்கு ஆர்வத்துடன் அருகில் நெருங்கி வந்தால், அவர் அவர்களை திட்டி, பொருட்களை அவர்கள் மீது எறிந்து திருப்பி அனுப்பிவிடுவார். அவர் தூசி, சேர், மாட்டுச்சாணம், குப்பை என்று கையில் கிடைப்பதை எடுத்து வீசியதால், அவர் தனது வேலையை தொடரட்டும் என்று மக்கள் கிளம்பிவிடுவார்கள். §

இவ்வாறு செல்லப்பசுவாமி திட்டும் ஒவ்வொரு முறையும், அவர் சீடர்களின் தவறுகளை திருத்தி அவர்களது உட்புற மனதில் அதிக நலிவுற்ற மற்றும் அதிக ஆத்திரத்துடன் இருக்கும் பகுதியுடன் தொடர்பு கொண்டார். அவர்கள் எங்கே தவறு செய்கிறோம் என்பதை தெரிந்துகொள்ள, ஆன்மீக மாற்றம் பெறுவதற்கு எதை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதை தெரிந்துகொள்ள சுவாமி மீது நம்பிக்கை வைத்து இருந்தார்கள். §

வெளியுலகிற்கு தெரிய வேண்டாம் என்று தாங்கள் விரும்பிய தகவல்களை இவை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல், ஒரு ஆழமான மனோஉணர்வு சிகிச்சை ஏற்படுத்தும் உணர்வை போன்று அதிகமாக ஊடுருவும் ஒரு ஆன்மீக சக்தியின் துணையுடன் வழங்கப்பட்டதால், அவர்களுக்கு இந்த கண்டிப்பு பிடிக்கவில்லை. இருந்தாலும் அவர்கள் மேலும் பெறுவதற்காக திரும்பத்திரும்ப சென்று, தெய்வீக ஆசிகளாக இந்த விவேகமான திருத்தங்களை பெற்றனர். அவரது வலுவான அருள் தனது தீவிரமான சீற்றத்துடன் அவர்களுக்குள் மூழ்கியதும், காலப்போக்கில் அவர்கள் எல்லா நிலைகளிலும் மேன்மையை அடைந்தனர். அவரது அருகில் இருந்து, எல்லையற்ற சக்திபாதத்தில் சிறிதளவை பெற்றதால், அது அவர்களை உருமாற்றி, வேறுபடுத்தி மேன்மை அடைய செய்தது. §

இவ்வாறு ஒரு ஆன்மீக காதுடன் இருந்தவர்களுக்கு, அவர் ஒரு ஆன்மீக அரசராக பேசினார். ஒரு நுணுக்கமான மனதுடன் இருந்த சில வழக்கறிஞர்கள் மற்றும் நீதிபதிகள், செல்லப்பசுவாமி மீது பயபக்தியுடன் இருந்தனர். அவர் அவர்களை சபிப்பார், திட்டுவார் மற்றும் சில சமயம் அடிக்கவும் செய்வார். அவர் மனித ஆய்வில் மிகவும் உயர்வாக கருதப்பட்டு, வடக்கு இலங்கையில் பொதுவாக எல்லோராலும் புரிந்துகொள்ளப்பட்ட ஆன்மீக வாழ்க்கையை முழுமையாக வாழ ஊக்குவிக்கும் ஆன்மீக குருவாக, அவர்களின் ஆன்மீக வழிகாட்டியாக விளங்கினார். §

செல்லப்பசுவாமி பசுமையாக மண்வளம் நிறைந்த இந்த தீவு எங்கும் பரவியிருக்கும் தமிழ் மக்களின் இதயங்கள் மற்றும் ஆன்மாக்களில் சைவ

சமயம் தொடர்பான விழிப்புணர்வை படிப்படியாக, ஆனால் உறுதியாக மற்றும் மெதுவாக உருவாக்கும் தனது பரம்பரையின் மிகப்பெரிய சமயப்பணியை தொடர்ந்தார். அவர் மட்டும் இல்லை என்றால், சைவ சமயம் 21 ஆம் நூற்றாண்டில் நிலைத்து இருந்திருக்குமா என்பது சந்தேகம் தான். §

ஆனால் சிலசமங்களில், தனக்கு பரிச்சயம் இல்லாத நபர்கள் தனக்கு பூக்களை கொண்டு வந்தாலோ அல்லது தனது காலடிகளில் விழுந்து வணங்கினாலோ, அவர்கள் மீது சுவாமி துளியும் கவனம் செலுத்தவில்லை. அவர்கள் தங்கள் வணக்கத்தை தெரிவிக்கும் போது, இவர் அசையாமல் உட்கார்ந்து இருப்பார். தாங்கள் வந்ததை சுவாமி அறிந்துகொண்டாரா என்பதை அவர்கள் உணர்வது மிகவும் கடினமாக இருந்தது. புதிராக இருந்த இந்த ஆன்மீக மாமனிதரிடம் இருந்து எதை எதிர்பார்ப்பது என்று யாருக்கும் தெரியவில்லை. ஆனால் எல்லோருக்கும் தேவையானவை கிடைத்தன. §

செல்லப்பா என்றும் ஒரு முனிவராக இருந்தார், ஆனால் எப்போதும் துறவியாக இருந்ததில்லை. அவர் பல சமயங்களில், தனக்கு பரிச்சயம் இல்லாதது போல் யோக சுவாமியை துரத்தி அனுப்பி, ஆன்மீக சிந்தனைகளில் அதிக நாட்டம் இல்லாமல் தெருவில் நடந்து செல்பவர்களை அழைத்து பேசிக்கொண்டு இருப்பார்.சுவாமி அவர்களிடம் இனிமையாக பேசி அருகில் வரவழைத்து, அவர்கள் கடவுள் அல்லது தங்களது சொந்த ஆன்மாக்களை பற்றிய சிந்தனை இல்லாமல், தினமும் பன்றிகளை போல தங்கள் வயிற்றை நிரப்பிக்கொண்டு, இரவில் நாய்களை போல தூங்கிக்கொண்டு, எண்ணற்ற ஆசைகளில் ஈடுபட்டு விலங்குகளை போல வாழ்ந்துகொண்டு, நரகத்தை நோக்கி விரைந்து செல்வது மட்டுமல்லாமல் மேலும் பல வழிகளில் ஒரு கசடை போன்ற வாழ்க்கையை வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள் என்று முதலில் விரிவுரை வழங்கி, பின்னர் மிகவும் மோசமான வார்த்தைகளால் திட்டி அனுப்புவார். அவர் குழுவில் இருந்த ஒவ்வொருவராக ஆய்வு செய்து, அவர்களது இரகசியமான தவறான நடத்தைகளை குறிப்பிட்டு, அவர்கள் செய்த பாவங்களை வெளிப்படுத்தி, பொதுமக்கள் முன்பாக அவர்களை நிந்திப்பார். அவர்கள் அந்த இடத்தில் இருந்து கிளம்ப முற்பட்டால், அவர் தனது கோபம் தீரும் வரை அவர்களை பின்தொடர்ந்து செல்வார். அவமானம் எவ்வளவு பெரியதாக இருந்தாலும், அவர்  தனது ஆசிகளை வழங்குவதில், உண்மையை வெளிப்படுத்துவதில் அசராது உறுதியுடன் இருந்தார். §

மக்களுக்குள் இருக்கும் உயிர்சக்தியை மாற்றி, அவர்களது வாழ்க்கையை மாற்றுவது அவரது மிகப்பெரிய ஸித்தியாக விளங்கியது. இந்த மனோஉணர்வு சக்திகளை செல்லப்பசுவாமி கடையிற்சுவாமியிடம் இருந்து பெற்று,  யோக சுவாமிக்கு வழங்கினார். நமது முனிவர்களின் நியாயமான கோபத்தை இன்றும் தமிழ் மக்கள் “வெள்ளை கோபம்" அழைக்கிறார்கள். இதற்கு எதிர்பதமாக *மூலாதார சக்கரத்திற்கு* கீழே, *விதள சக்கரத்தின்* தீங்கிழைக்கும் கருப்பு கோபம் இருக்கிறது. §

வாழ்க்கையில் குருவின் தீவிரமான வசவு பற்றிய பேச்சு எழும் போது, “குப்பையை எரிப்பதற்கு ஒரு பெரிய தீ தேவைப்படுவது இல்லையா?’ என்று

யோக சுவாமி சவால் விடுவார். பிற்காலத்தில், யோக சுவாமியும் தீவிரமாக திட்ட ஆரம்பித்தார், மற்றும் இதனால் பலர் அவரை நெருங்க அஞ்சினார்கள். ஆனால் தான் கடுமையாக நடந்துகொள்வதாக யாருக்காவது தோன்றினால், அவர்களால் தனது குருவின் கடுமையான பேச்சை ஒரு நொடி கூட தாக்குப்பிடித்து இருக்க முடியாது என்று கூறுவார். §

உங்களது கவனம் தங்கள் மீது இருக்கவேண்டும் என்பதற்காக, பெரும்பாலான மக்கள் உங்களுக்கு பிடித்தமான ஒன்றை உங்களுக்கு வழங்கி உங்களது அன்பை பெற விரும்புவார்கள்; உங்களுக்கு பிடித்தமான ஒன்றில் மீது இருந்த பற்றில் சிறிதளவை, அதை வழங்கிய நபருக்கு மாற்றுவீர்கள் என்று யோக சுவாமி விளக்கம் அளித்தார். “செல்லப்பகுரு, தனது நுணுக்கமான திட்டங்கள் மூலமாக, அனைத்தையும் என்னிடம் இருந்து விலக்கி, என்னை தன் பக்கம் இழுத்துக்கொண்டார். நான் எதையாவது வெளிப்படுத்துவதற்கு, ஏதாவது சேவை செய்வதற்கு, எதிர்காலத்தை பற்றி தெரிந்துகொள்வதற்கு, ஏதாவது ஸித்திகளை பெறுவதற்கு, மற்ற துறவிகள் அல்லது ஞானிகளுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள அனுமதிக்கவில்லை. நான் ஆர்வத்துடன் கற்றுக்கொள்ளவும் எனக்கு அனுமதிக்கவில்லை,” என்று தனது சீடர்களிடம் கூறினார். §

URL Page: 22
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/22_yo03_01.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## எட்டாம் அத்தியாயம்

# யோக சுவாமியின் இளமைப்பருவம்


யாழ்ப்பாணத்தில் இருந்து வடக்கே ஐந்து கிலோ தொலைவில் இருக்கும் அமைதியான கிராமமான மாவிட்டபுரம், அதன் பழங்கால கந்தசுவாமி கோயிலுக்கு புகழ் பெற்றது. தென்னிந்திய சோழ சாம்ராச்சியத்தின் அரசரான திசை உக்கிர சோழன், தனது மகளின் வேண்டுகோளுக்கு இணங்கி, இந்த கிராமத்தை ஏழாம் நூற்றாண்டில் கட்டினார். அதற்கு முன்பாக இந்த கிராமம் மற்றும் கீரிமலை மற்றும் காங்கேசன்துறைக்கு இடையே இருந்த பகுதி கோவில் கடவை, “கடவுளின் வீடு" என்று அழைக்கப்பட்டது. இது அதே பெயரில் *மகாபாரதம்* மற்றும் *கந்தபுராணத்தில்* ஒரு புண்ணிய தீர்த்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான யோகிகள் மற்றும் முனிவர்கள் செய்த தவம், கோவில் கடவையின் புனிதத்திற்கு முக்கிய காரணமாக விளங்குகிறது. §

சோழ அரசரின் மகளான மாருதப்புரவல்லி, தனது சிறு வயதில் இருந்து ஒரு குணப்படுத்த முடியாத நோயினால் வாடியதால் அவளது காதுகள் வீங்கி, தாடைகள் பெரிதாகி முகம் உருக்குலைந்து இருந்ததால், அவளது முகம் ஒரு குதிரை போல காட்சி அளித்தது என்று தல வரலாறு கூறுகிறது. எந்த சிகிச்சையும் பலன் அளிக்கவில்லை. அவள் வயதுக்கு வந்ததும், தனக்கு ஏற்பட்டுள்ள நோய் நீங்கவேண்டும் என்று தெய்வங்களின் அருளை வேண்டி, சோழ சாம்ராச்சியத்தில் இருந்த எல்லா கோயில்களுக்கும் சென்று, ஒரு முடிவில்லாத தொடர் யாத்திரையை மேற்கொண்டாள். அவளது நற்குணத்தின் காரணமாக மக்களுக்கு, அவளது அவலநிலை மீது மேலும் அனுதாபத்தை ஏற்படுத்தியது.§

அவளது அவலநிலை பற்றி, ஊர் ஊராக சுற்றிக்கொண்டு இருந்த சாந்தி லிங்க முனிவருக்கு தெரியவந்தது. இலங்கையின் வடக்கு கரையில் இருந்த

கீரிமலையின் புகழ்பெற்ற கடலோர கோயிலுக்கு சென்று, தினமும் அந்த கோயில் குளத்தின் மருத்துவ குணமுள்ள நீரில் குளிக்க வேண்டும் என்று அவர் அவளுக்கு அறிவுறுத்தினார். அந்த இடத்திற்கு மாருதப்புரவல்லி தனது பணிப்பெண்கள் மற்றும்  ஊழியர்களுடன் 785 ஆம் ஆண்டு வந்து அடைந்து, முனிவர் அறிவுறுத்தியதை போல, காலையில் விரதம் இருந்து நீண்டநேரம் கோயில் நீருற்றில் குளித்து, விரதத்துவம் மற்றும் பிரார்த்தனைகளின் ஒரு தீவிரமான மருத்துவ சிகிச்சையை சிரத்தையுடன் நிறைவேற்றினாள். அவளது உடல்நிலையில் தொடக்கத்தில் இருந்தே முன்னேற்றம் தென்பட்டது மற்றும் அவளது நோய் முழுமையாக குணமடைந்த போது, அவள் தனக்கு முன்னெப்போதும் இல்லாத இயல்பான அழகை பெற்றாள். §

தனக்கு புத்துயிர் கிடைத்ததில் அதிக ஆனந்தம் அடைந்து, இறைவனுக்கு தனது நன்றிக்கடனை செலுத்த விரும்பி, மாருதப்புரவல்லி கோவில் கடவையின் மூலை முடுக்கெல்லாம் சுற்றிக்கொண்டு இருந்தாள். அவள் அடிக்கடி கீரிமலை சிவன் கோயிலுக்கு வந்து சென்ற போது, சடையனார் என்ற முதியவர் தினமும் ஒரு ஆலமரத்தின் மூலையில் செப்பில் செய்த ஒரு சிறிய *வேலை* வைத்து, தீவிரமான பயபக்தியுடன் வழிபடுவதை கவனித்தாள். §



சதாசிவன் வடக்கு இலங்கையில் ஒரு சிறுவனாக இருந்த போது,
வெளிநாட்டவர்கள் ஆட்சியிலும் வலுவாக நிலைத்து இருந்த, தனது

*ஆச்சாரமான சைவ சமய சமூகத்தின் அரவணைப்பில் இருந்தான். அவன் தனது சிறு வயதில் இருந்து, சிவபெருமானை மையமாக கொண்டு, சிவபெருமானின் மெய்யுணர்வு மற்றும் அருளின் மீது தேடலை மேற்கொண்டு, ஒரு எளிமையான வாழ்க்கையை வாழ்ந்த சாதுக்கள், புனிதமான யாசகர்கள் மற்றும் நாடோடிகளை பார்த்து வளர்ந்து இருந்தான்.*

•••••••••••••• §

ஒரு நாள் காலையில் இந்த எளிமையான கோயிலை பார்க்கும் போது, ஒரு முறையான கந்தன் கோயிலை அந்த இடத்தில் அமைக்கவேண்டும் என்ற தூண்டுதல் மாருதப்புரவல்லிக்கு தோன்றியது. நடந்தது அனைத்தையும் தனது தந்தைக்கு தெரிவித்து, அவரது உதவி வேண்டும் என்று ஒரு வேண்டுகோளை அனுப்பினாள். வெகு தொலைவில் இருந்த இலங்கையில் தனது மகள் குணமடைந்து விட்டாள் என்ற செய்தியை கேட்ட கடமையுணர்ச்சி நிறைந்த தகப்பன் மனமகிழ்ந்து, உடனே கோயில் சிற்பிகள், கல் செதுக்குபவர்கள் மற்றும் பணியாளர்கள் என்று ஏற்பாடு செய்திருந்த ஒரு திறமையான குழு, சில வாரங்களுக்குள் அங்கே வந்து சேர்ந்து தங்களது பணியையும் துவக்கினார்கள். §

அது ஒரு மிகப்பெரிய பணியாக இருந்தாலும், ஒவ்வொரு நிலையிலும் செல்வம் அதை தேடி வந்தது. யாழ்ப்பாணத்தின் கலிங்க அரசனான உக்கிர சிங்கன், அந்த திட்டப்பணியை நேரடியாக ஆய்வு செய்து, உடனடியாக அந்த பணிக்காக தனது செல்வம் மற்றும் வளங்களை வழங்கினான். சில காலம் கழித்து, அவன் மாருதப்புரவல்லியை திருமணம் செய்துகொண்டான். அந்த கோயிலின் தெய்வமாக, காங்கேயன் என்ற பெயரில் இருந்த முருகப்பெருமானின் அழகான மூர்த்தி, இந்தியாவில் இருந்து பூசாரிகள் மற்றும் கோயில் நிர்வாகிகளை கொண்ட ஒரு பெரிய குழுவுடன் வந்து சேர்ந்தது. அவர்கள் குடமுழுக்கு விழாவை சீரும் சிறப்புமாக செய்து முடித்தனர். அதன் பிறகு அந்த கோயிலின் புகழ் அந்த தீவு, இந்தியா மற்றும் மலேசியாவிற்கும் பரவியது. அன்றில் இருந்து கோயில் கடவை “குதிரை முகமுடைய கிராமம்" என்ற பொருள்படும் மாவிட்டபுரம் என்ற பெயரை பெற்றது. §

1619 ஆம் ஆண்டில், யாழ்ப்பாணம் தீபகற்பத்தின் மீது நடைபெற்ற மூன்றாவது முற்றுகையின் போது, 900 ஆண்டுகள் பழமையான கோயிலை போர்த்துகீசிய வீரர்கள் மற்றும் பூசாரிகள் அழித்து தரைமட்டமாக்கினார்கள். அதிலிருந்து பெரும்பாலான கட்டிடத் துண்டுகள், பால்க் நீர்சந்தியில் ஒரு தீவாக இருந்த ஊர்காவற்துறையில் ஒரு கடல் கோட்டையை கட்டுவதற்காக பல கிலோமீட்டர் தூரம் இழுத்து செல்லப்பட்டன. போர்த்துகீசிய குடியேற்றத்தின் போது, தீபகற்பத்தில் எதையும் விட்டு வைக்காமல், ஒவ்வொரு பெரிய கோயிலும் இதைப்போன்று அழிக்கப்பட்டது. அவர்கள் இலங்கையின் வடக்கு பகுதியில் 41 வருடங்களுக்கு, இரக்கமற்ற சமயப்பரப்பு பணியாளரின் உற்சாகத்துடன் ஆண்டு வந்தனர். அவர்கள் அழித்த சைவ

சமய கோயில்களின் இடிபாடுகளில் இருந்து கத்தோலிக்க தேவாலயங்களை கட்டுவது, அவர்களது வழக்கமாகி இருந்தது. §

1658 ஆம் ஆண்டில் டச்சு கடற்படை போர்த்துகீசியர்களை துரத்தி அடித்ததும், இலங்கையில் டச்சு நாட்டின் ஆட்சி தொடங்கியது. 1798 ஆம் ஆண்டில் டச்சு நாட்டவர்களை ஆங்கியலர்கள் தகர்த்து எரியும் வரை, 140 ஆண்டுகளுக்கு டச்சு பாதிரியார்களின் கீழ், கத்தோலிக்க தேவாலயங்கள் திடீரென்று சீர்திருத்த திருச்சபையை சேர்ந்த தேவாலயங்களாக மாறின. டச்சு ஆட்சியில் சமயம் சார்ந்த சுதந்திரம் சிறிதளவு இருந்தது. ஆனாலும், மாவிட்டபுரம் கோயிலின் புனர்நிர்மாணம் தொடங்குவதற்கு ஒன்றரை நூற்றாண்டுகள் ஆகின. அந்த பணி 1782 ஆம் ஆண்டில் மீண்டும் உற்சாகத்துடன் தொடங்கியது. கோயிலில் இருந்த தெய்வங்கள் அனைத்தும் மீட்கப்பட்டன. அவை பெரும்பாலான சமயம், ஒரு கிணற்றில் மறைத்து வைக்கப்பட்டு இருந்தன. இந்த யுகத்தை பற்றியும், 1948 ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சி முடிவுக்கு வரும் வரையில், இந்த தீவை அடிமைப்படுத்திய குடியேற்ற சக்திகளை இலங்கை சைவர்கள் எதிர்கொண்டது பற்றியும் ஒரு சிறிய காட்சியாக *என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா* நமக்கு வழங்குகிறது: §

> நெதர்லாந்து நாட்டவர்கள் சீர்திருத்த திருச்சபையில் அதிலும் குறிப்பாக கால்வினின் இறையியலில் தீவிர ஆர்வத்துடன் இருந்தனர். மேலும் டச்சு ஆட்சியின் ஆரம்ப காலத்தில் ரோமன் கத்தோலிக்க மதகுருமார்களின் சமயப்பரப்பு நடவடிக்கைகளை தடுக்கவும், இலங்கையில் சீர்திருத்தப்பட்ட தேவாலயத்தை பரப்பவும் ஒரு வலுவான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ரோமன் கத்தோலிக்க சமயம் சட்டவிரோதமாக அறிவிக்கப்பட்டு, அதன் பாதிரியார்களுக்கு நாட்டில் தடை விதிக்கப்பட்டது; கத்தோலிக்க தேவாலயங்கள் சீர்திருத்த திருச்சபைக்கு வழங்கப்பட்டு, கால்வினின் இறையியலில் சார்ந்த பாதிரியார்கள் பிரார்த்தனை கூட்டங்களின் தலைவர்களாக நியமிக்கப்பட்டார்கள். இன்னல்கள் இருந்தாலும், பல கத்தோலிக்கர்கள் தங்கள் சமயத்தில் முழு ஈடுபாட்டுடன் இருந்தனர்; சிலர் சீர்திருத்த திருச்சபையை ஓரளவிற்கு ஏற்றுக்கொண்டனர், அதே சமயத்தில் மற்றவர்கள் சுதந்திர கண்டி இராச்சியத்தில குடிபுகுந்தனர். சீர்திருத்த திருச்சபையை சேர்ந்த குருமார்கள் கத்தோலிக்க குருமார்களைக் காட்டிலும் தங்கள் சமயப்பரப்பு நடவடிக்கைகளில் சிறப்பாக செயல்பட்டனர், மற்றும் அதிலும் குறிப்பாக தங்கள் நம்பிக்கையை பரப்ப பள்ளிகளை பயன்படுத்தினார்கள். §
>
> டச்சு ஆட்சியின போது, கடலோரப்பகுதிகளில் கண்டி இராச்சியத்தில் மற்றும் இலங்கை தீவின் தெற்கு பகுதியில் பௌத்த சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. கத்தோலிக்க சமயம் மீது டச்சு நாட்டவர்களுக்கு இருந்த மிகப்பெரிய விரோதம் காரணமாக இலங்கை, தாய்லாந்து மற்றும் தென்மேற்கு மியான்மரில் (பர்மா) இருந்த அரகன் (ராகைன்) பகுதிக்கு இடையே பௌத்த துறவிகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கி

பௌத்த சமய மறுமலர்ச்சிக்கு மறைமுகமாக உதவி செய்தனர். டச்சு அரசு மேற்கொண்ட இத்தகைய சேவைகள், கண்டி அரசருடன் நல்ல உறவுகளை பேணி காக்க துணை புரிந்தன. §

சிங்களம் மற்றும் தமிழ் இலக்கிய மரபுகளில் ஒரு புதிய தொடக்கத்தை குறிப்பிடும் வகையில், டச்சு ஆட்சியில் கிறுத்துவ படைப்புக்கள் வெளிவர தொடங்கின. இந்த புதிய படைப்புக்களில் பெரும்பாலானவை, அடிப்படை நெறிமுறைகளின் மொழிப்பெயர்ப்புக்களாக இருந்தாலும், அதில் சில பௌத்த மற்றும் இந்து சமயத்தை எதிர்த்த தர்க்கங்களாகவும் இருந்தன. இலங்கை கிறுத்துவ இலக்கியத்தில், மிகவும் பிரபலமானவர்களில் ஒருவராக 18 ஆம் நூற்றாண்டை சேர்ந்த ஜாகோமே கொன்சால்வேஸ் திகழ்ந்தார். சமயப்பணியாளர்கள் மற்றும் நிர்வாகிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, 1734 ஆம் ஆண்டு டச்சு மேற்கிந்த கம்பனி [வெரினிக்டே வூஸ்ட்-இந்திஸ்சே கொம்பானி] இலங்கையில் தொடங்கிய முதல் அச்சகம், கிறுத்துவ நூல்களின் விரிவாக்கத்திற்கு உதவி செய்தன.§

இன்று மாவிட்டபுரம் கோயிலின் சன்னிதிகள் மற்றும் திருவிழாக்கள் நிறைவான சிரத்தையுடன் ஆதிசைவர்களால் நிர்வகிக்கப்பட்டு, ஒரு செழிப்பான மற்றும் பிரபலமான கோயிலாக விளங்குகிறது. கோயிலில் சண்முகநாதன் (முருகன்), சிவலிங்கம், செப்பில் உருவாக்கப்பட்ட உண்மையான *வேல்* மற்றும் விக்னேஸ்வரன் (விநாயகர்) போன்ற விக்கிரகங்கள் உள்ளன. தினமும் அவை அனைத்திற்கும் பூசைகள் நடத்தப்பட்டு, கோயில் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருகிறது. இது ஒரு உயரமான *இராசகோபுரம்*, வெளியே மூன்று விசாலமான வாசல்கள் மற்றும் ஐந்து ரதங்களை கொண்டிருக்கிறது. §

### இந்த உலகிற்குள் சதாசிவன் பிறக்கிறான்

வைகாசி மாதம் (மே-ஜூன்), *தனிஷ்டா* நட்சத்திரம் மே 29, 1872 அன்று அந்த கோயில் வளாகத்திற்கு அருகில் இருந்த ஒரு எளிமையான வீட்டில் கொழும்புத்துறையை சேர்ந்த அம்பலவாணர் மற்றும் சின்னாச்சி அம்மாவிற்கு ஒரு சிறுவன் பிறந்த போது, இன்றைய சீரும் சிறப்பும் அப்போது இருக்கவில்லை. அந்த சிறுவன் மிகவும் ஆச்சாரமான சைவ கலாச்சார சூழலில் வளர்ந்தான். அவனது தந்தை, கிழக்கு கரையோரம் நுவரெலியாவிற்கு அருகில் ஒரு வணிகராக வேலை செய்து வந்தார் மற்றும் அவர் பெரும்பாலும் வீட்டிற்கு வெளியே தனது வேலையில் மும்முரமாக இருந்தார். சின்னாச்சி சைவ சமயத்தில் பற்றுடன் இருந்தாள். அந்த சிறுவனுக்கு சுமார் பத்து வயது நிரம்பியிருந்த போது அவளது உயிர் பிரிந்தது. அதுவரை அவனை யாழ்ப்பாணம் தீபகற்பத்தில் தென்மேற்கு கரையில் இருந்த கொழும்புத்துறையில் தங்களது வீட்டில் வளர்த்து வந்தாள். §

அவன் தெய்வங்களின் கதைகள், முனிவர்களின் வாழ்க்கைகள், கோயில் மரபுகள் மற்றும் தமிழ் சாத்திரம் பற்றி தன் தாயிடம் இருந்து முதலில் கற்றுக்கொண்டான். “ஒரு தாய் தனது குழந்தையின் முதல் குருவாக விளங்குகிறாள்,” என்று சைவ சமயத்தில ஒரு பழமொழி இருக்கிறது. ஒரு வேளை அவளுக்கு தனது மகனின் ஆன்மீக எதிர்காலம் பற்றி முன்பே தெரிந்து இருந்தாலும், சைவ கலாச்சாரத்தின் பழங்கால நெறிமுறைகளை கற்றுத்தருவதன் மூலம், இதை விட சிறப்பாக அவனை தயார் செய்து இருக்கமுடியாது. அவனுக்கு சதாசிவன் என்று பெயரிட்டாள். §


ஒரு சந்நியாசியிடம் அவரது கடந்தகாலத்தைப் பற்றி கேட்கக்கூடாது என்று சைவ சமயத்தில் ஒரு வழக்கம் இருக்கிறது. அதனால் யாரும் அவரது குழந்தைப்பருவம் அல்லது குடும்பத்தைப் பற்றி விசாரிக்கவில்லை. அவ்வாறு விசாரித்த சிலருக்கு, “நான் இப்போது போல எப்போதும் இருக்கிறேன்! எப்போதும் இருந்துள்ளேன்!” என்ற ஒரே பதில் தான் கிடைத்தது. தான் புதன்கிழமையில் பிறந்ததாக ஒரு முறை குறிப்பிட்டார், ஆனால் அதைப்பொன்ற ஒரு திட்டவட்டமான பதில் எப்போதும் கிடைத்ததில்லை. காலப்போக்கில், அவர் தனது சீடர்களிடம் ஒரு விவரத்தை பற்றி விளக்கம் அளிக்க சில கதைகளை விவரித்து இருந்தார் மற்றும் அவர்கள் அந்த குறிப்புக்களை பின்னர் ஒப்பிட்டு பார்த்து, அவரது இளவயது பற்றி தோராயமான சுருக்கத்தை ஒன்று சேர்க்க முடிந்தது. இந்துமதி அம்மா பின்வரும் தகவலை வழங்குகிறார்: §

அவர் குழந்தைப்பருவத்தில் தனது தாயின் கரங்களை பிடித்து நல்லூர் சென்றதில் இருந்து, நல்லூர் தெய்வம் அவரது இதயத்தில் நிறைந்து இருந்தார். கோயில் பிரகாரத்தை சுற்றி வந்து, தெய்வத்தின் பாதங்களில் விழுந்து வணங்குவது, அவரது இதயத்தை தொட்ட அனுபவமாக இருந்தது. செண்பக மரத்தை சுற்றியிருந்த துறவிகளை சந்தோசமாக கவனிப்பார். பல்வேறுவிதான பச்சை அரிசி, சீப்பு சீப்பாய் வாழைப்பழங்கள், தேங்காய்கள் மற்றும் மற்ற வழிபாட்டு சாதனங்களை பக்தர்கள் கொண்டு வருவதை பார்த்ததும், அவர் முழுமையான புலன் அடக்கத்தை அனுபவித்தார். பிரகாசமாக இருந்த முருகப்பெருமானுக்கு பிராமண பூசாரி விளக்குகள் மற்றும் கற்பூற தட்டுகளை காண்பிக்கும் போது, தனது கண்ணில் இருந்து கண்ணீர் வடிய நின்று கொண்டு இருப்பார். §

இவரது சிறிய வயதிலேயே அவரது தாய் மரணமடைந்தாள். எங்களுக்கும் ஒரு சில சீடர்களுக்கும் சுவாமி சொன்ன தகவலில் இருந்து, அவரது பத்தாவது வயது வரை அவரது தாய் வாழ்ந்திருக்க வேண்டும் என்று அனுமானிக்க முடிகிறது. சுவாமி தனது குழந்தைப்பருவம் பற்றி ஒரு சில தகவல்களை மட்டும் வழங்கி இருந்தாலும், ஒரு நாள் தனக்கு வழங்கப்பட்ட உணவை முழுமையாக சாப்பிடாமல், வாழை இலையில் உணவை மீதம் வைத்து குப்பையில் எரிந்த சம்பவத்தை பற்றி விவரித்தார். அன்று அவரது தாய், உணவை விரயம் செய்யக்கூடாது என்று தனது மகனுக்கு பாடம் கற்பிக்க முற்பட்டு, “நீ யாசகம் செய்து

வாழப் போகிறாய்," என்று கடிந்துகொண்டாள். அவள் சொன்னதை போலவே, அவர் ஒரு ஆண்டியைப் போல வாழ்ந்தார். "தாய் சொல்லை தட்டாதே" என்ற ஔவையாரின் பொன்மொழியை விளக்குவதற்கு, இந்த சம்பவத்தை ஆனந்தமாக எடுத்துரைப்பார். §

தனது தாய் இறப்பதற்கு முன்பாக, மாவிட்டபுரம் கோயிலில் நடந்த ஒரு திருவிழாவிற்கு தன்னை இறுதியாக அழைத்து சென்ற சம்பவத்தை பற்றி யோக சுவாமி ஒருமுறை விவரித்தார். அப்போது அந்த கோயிலை ஒரு பெரிய கூட்டம் சுற்றிக்கொண்டு இருந்ததாகவும், அவர்கள் அந்த கூட்டத்தை பின்தொடர்ந்து செல்லும் போது தான் தனது தாயின் கையை இறுக்கமாக பிடித்துக்கொண்டு இருந்ததாகவும் கூறினார். அப்போது அவர் இடுப்பில் ஒரு வேட்டியையும், அதன் மீது ஒரு புதிய பட்டு சால்வையும் அணிந்து இருந்தார். ஆனால் அந்த சால்வை கீழே விழுந்து தொலைந்து விட்டது. ஒரு தமிழ் சிறுவன் முதலில் ஒரு வேட்டியை அணிவது, முதலில் ஒரு பட்டு சால்வையை போர்த்திக்கொள்வது மற்றும் தனது தாயின் கையை பிடித்து செல்வதும் அவனது வயதை மறைமுகமாக குறிப்பிடுகிறது. இந்த குறிப்புகளில் இருந்து, அவரது தாய் இறக்கும் போது, அவருக்கு சுமார் பத்து வயது இருக்கவேண்டும் என்று யூகிக்க முடிகிறது. §



*நல்லூர் கோயிலை சுற்றி இருந்த விவசாய நிலங்கள், அவரது குருவின் இருப்பிடமாக, அவர் தூய வெள்ளை ஒளியில் முதலில் மூழ்கிய இடமாக, அவர் ஆரம்பகாலத்தில் தவம் செய்த இடமாக மற்றும் அவர் சீடர்களை சந்தித்த*

*ஆன்மீக அரங்கமாக யோக சுவாமியின் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தன. இந்த சித்திரத்தில் சிவபெருமான் “நல்ல இடமாக" இருக்கும் நல்லூரை ஆசீர்வதிக்கிறார்.*

• • • • • • • • • • • • • • • §

**பள்ளி நாட்கள்**

தாயின் மரணத்திற்கு பிறகு சுமார் ஆறு ஆண்டுகளுக்கு, சதாசிவனை அவனது அத்தை முத்துப்பிள்ளை மற்றும் மாமன் சின்னையாவும் (அம்பலவாணரின் தங்கை மற்றும் தம்பி) வளர்த்தனர். சைவ சமயத்தில் ஈடுபாட்டுடன் இருந்த அத்தை முத்துப்பிள்ளை, சதாசிவனுக்கு உணவு, உடை மற்றும் பாதுகாப்பை வழங்கியதோடு, சைவ கலாச்சாரத்தில் அவனுக்கு மேலும் பயிற்சி வழங்கவும் பொறுப்பு வகித்தாள். சதாசிவன் யாழ்ப்பாணம் நகரத்தில் ஆறு கிலோமீட்டர் தொலைவில் இருந்த யாழ்ப்பாணம் கடல் நீரேரிக்கு அருகில் இருந்த கொழும்புத்துறையில் தன் அத்தையின் வீட்டில் வாழ்ந்தான். *கெர்னியாடி* என்ற கிராமத்திற்கு அருகில் செவ்வக வடிவில் இருந்த ஒரு பெரிய கிணற்றின் அருகே இருந்த ஒரு சிறிய பைரவ கோயிலில், அந்த குடும்பம் தங்கள் வழிபாடுகளை நடத்தினர். அந்த வயல் வெளிகளில் வேலை செய்த விவசாயிகள் பாதுகாப்பு மற்றும் தற்காப்பை கருதி, நாயை தனது வாகனமாக கொண்டிருந்த பைரவரை வழிபட்டனர். சின்னையாவின் வீடு அங்கிருந்து 200 மீட்டர் தூரத்தில் இருந்தது. அம்பலவாணர் வெகு தொலைவில் வேலை செய்ததாலும், அந்த காலத்தில் போதுமான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவது கடினமாக இருந்ததாலும், சதாசிவனின் பள்ளிப்படிப்பை சின்னையா கவனித்துக்கொண்டார். §

அண்ணன் மகனை வளர்ப்பதில் முத்துப்பிள்ளை எந்த குறையும் வைக்கவில்லை. சின்னையா ரோமன் கத்தோலிக்க மதத்திற்கு மாறி இருந்தார் மற்றும் அவரது மனைவி கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்து இருந்தார். இந்த விவரங்கள் இளம் சதாசிவத்தின் மீது எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. முத்துப்பிள்ளையின் மாமனார், நல்லார் கணபதி, கொழும்புத்துறையில் ஒரு பிரபல சைவ சமய சோதிடராக இருந்தார். அவரும் இந்த சிறுவனை வளர்ப்பதில் அக்கறையுடன் இருந்தார். §

சதாசிவன் ஒரு தமிழ் பள்ளியில் தனது முறையான கல்வியை தொடங்கி இருந்தாலும், அவனது பத்தாவது வயதில், மாமா சின்னையா அவனை யாழ்ப்பாணம் புனித பேட்ரிக் கல்லூரியில் சேர்த்தார். சமயப்பிரச்சாரம் செய்யும் பள்ளிகளில் மட்டுமே ஆங்கிலம் படிக்கமுடியும் என்பதால், அந்த நாட்களில் கத்தோலிக்க பள்ளிக்கு செல்வது ஒரு வழக்கமாக இருந்தது. இந்துக்களின் சமய நம்பிக்கையை வலுவிழக்க வைக்கும் முயற்சிகளில் இந்த பள்ளிகள் ஈடுபட்டு இருந்தாலும், ஆங்கிலம் பேசுபவர்களுக்கு மட்டுமே அரசுப்பணிகள் வழங்கப்பட்டதால், இந்த பள்ளிகளுக்கு இந்துக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது. §

தங்களுக்கு முன்பு ஆட்சி செய்த போர்த்துகீசியர்கள் மற்றும் டச்சு நாட்டவர்களை போல, ஆங்கிலேயர்களும் உலகெங்கும் பரவியிருந்த தங்கள் சாம்ராச்சியத்திற்கு நிதி திரட்டும் பொருட்டு, அந்த தீவில் இருந்த வளங்கள் மற்றும் பொருளாதாரத்தின் மீது வரி விதித்தனர். இலங்கையில் மதசார்பற்ற கல்விக்கு நிதி ஒதுக்கீடு செய்வது அவர்களுக்கு கடினமாக இருந்தாலும், ஆங்கிலத்தை கற்றுத்தந்த மதசார்பற்ற பள்ளிகளுக்கு சிறிய உதவியை வழங்கினார்கள். வெளிநாட்டவர்கள் ஆட்சியில், இலங்கை மக்களின் வாழ்க்கை நிலையற்று இருந்தது; அரசுப்பணி அல்லது சொந்த வியாபாரம் என்றாலும் ஒரு நிலையான தொழிலுக்கு மற்றும் வருமானத்திற்கு சரளமாக ஆங்கிலம் பேசுவது அத்தியாவசியமாக இருந்தது. §

ஃபோர்டு துரைசாமி அல்லது மார்க் செல்லையா என்று மாணவர்களை பதிவு செய்யும் போது, கிறுத்துவ பெயர்களை வழங்குவது வழக்கமாக இருந்தது. தூய திரு பிரான்சிஸின் துறவிகள் சதாசிவனுக்கு ஜான் பிள்ளை என்று பெயரிட்டார்கள், ஆனால் அந்த பெயர் என்றுமே பயன்படுத்தப்படவில்லை. சதாசிவன் புனித பேட்ரிக்கில் முதல் வருடம் படித்துக்கொண்டு இருக்கும் போது, ஊர் தலைவராக மண்ணியக்காரன் முத்துக்குமாரு என்ற உறுதியான முதியவர் இருந்தார். அவருக்கு தனது கலாச்சாரத்தில் கிறுத்துவ மதமாற்றம் நடைபெறுவது பிடிக்கவில்லை. அவர் பள்ளியில் இருந்து திரும்பும் இளைஞனை மறித்து, அவன் பெயரை கேட்டார். அவன் “ஜான்,” என்று கூறினான். தலைவர் “இல்லை! உன் பெயர் யோகநாதன்,” என்று கூறினார். அதற்கு “யோகத்தின் தலைவன்” என்று பொருள் என்பதால், அது சிறுவனின் எதிர்காலத்தை கணித்து வழங்கப்பட்ட, ஒரு பொருத்தமான பெயராக தோன்றியது. *யோக சுவாமி* என்ற தலைப்பில் அம்பிகைபாகன் தனது சுயசரிதையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்: §

> முத்துப்பிள்ளை ஒரு தீவிர சைவ பக்தையாக இருந்தாள். அவளுக்கு தனது சதோகரன் சின்னையா கத்தோலிக்க மதம் மாறியது மற்றும் தனது மருமகன் யோகநாதன் ஒரு கத்தோலிக்க கல்லூரியில் ஜான் என்ற பெயரில் படிப்பதும் பிடிக்கவில்லை. அவள் யோகநாதன் படிப்பதற்காக, சைவ புத்தகங்கள் மற்றும் *உபநிடதங்களை* வழங்கினாள். சுவாமிகள் மீது கத்தோலிக்க மதம் தாக்கம் ஏற்படுத்தாமல் இருப்பதற்கும், அவனுக்குள் சைவ சமயத்தின் மீது பக்தியை விதைப்பதிலும் முத்துப்பிள்ளை பெரும்பங்கு வகித்தாள். §

யோகநாதன் பதினாறு வயது வரை பள்ளியில் படித்தான். அவனுக்கு பள்ளியில் மொழி பிடித்தமான பாடமாக இருந்தது, மற்றும் தனது இளம்வயதில் தனக்கு பிடித்தமான பாடங்களை ஆர்வத்துடன் படித்து, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உயர்ந்த புலமையை பெற்றான். உலகெங்கும் தங்கள் வயதுக்கு மிஞ்சிய புத்தியுடன் இருக்கும் சிறுவர்கள் செய்வதை போல, சிலசமயங்களில் அவன் தனது வகுப்பில் ஆசிரியராக நடித்து, மற்ற சக மாணவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவான். அவன் பாடங்களை

நன்றாக படித்தாலும், அவனுக்கு பள்ளியின் மீது அதிக ஆர்வம் இல்லாமல் இருந்தது. §

யோகநாதன் ஒரு அமைதியான இளைஞனாக இருந்தான். அவனுக்கு பள்ளியில் பல நண்பர்கள் இருந்தார்கள் மற்றும் அவன் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்தாலும், பெரும்பாலான சமயங்களில் அவன் தீவிரமான ஆழ்ந்த சிந்தனையுடன் காட்சி அளித்தான். அவன் தாயை சிறுவயதில் இழந்ததால், சமயப்பற்றுடன் தன் உளஆய்வு மேற்கொள்வதாகவும், காலப்போக்கில் அவன் அதை மறந்துவிடுவான் என்றும் மக்கள் நம்பினார்கள். அவன் பள்ளியில் படித்த வருடங்கள் முழுவதும், அவன் வழக்கமாக தனியாக ஏதாவது ஒரு சிந்தனையில் மூழ்கி இருப்பான் அல்லது கோயிலில் இருப்பான். அவன் தினமும் தமிழ் சாத்திரங்களை படித்து, சைவத்துறவிகள் எழுதிய எண்ணற்ற பாடல்களை கற்றுக்கொண்டு, அவற்றை அவ்வபோது பாடிக்கொண்டு இருந்தான். அவன் *திருக்குறள், திருமுறை,* ஔவையாரின் கவிதைகள், தாயுமானவர் பாடல்கள், *நமச்சிவாய மாலை* மற்றும் மேலும் பல புனிதமான நூல்களை மனப்பாடம் செய்தான். §

பின்வரும் சம்பவத்தை ஒரு சீடன் பதிவு செய்து இருக்கிறார். “ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காண்பிக்க வேண்டும் என்ற விவிலிய போதனையை கிறுத்துவ சகோதரர்களில் ஒருவர், வகுப்பில் ஒரு நாள் விளக்கிக்கொண்டு இருந்தார். திடீரென்று, மேடைக்கு எழுந்து சென்ற யோகநாதன் ஆசிரியரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். கோபமுற்ற ஆசிரியர் அவரை திரும்பிப் பார்த்ததும், மாணவன் வகுப்பில் இருந்து கிளம்பினான். இதுவே அவரது முறையான கல்வியின் முடிவாகும் ஆன்மீக வேட்கையின் தொடக்கமாகவும் அமைந்தது.”§

Page 23: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/23_yo03_02.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## ஒன்பதாவது அத்தியாயம்

# யோகநாதன் நிலைமாற்றம் பெறுகிறார்

யோகநாதன் 1888 ஆம் ஆண்டு பள்ளியை விட்டு வெளியேறிய பிறகு, அவரது தந்தை அம்பலவாணர் கொழும்பில் இருந்து கிழக்கே, தெற்கு மலைநாட்டில், யாழ்ப்பாணத்தில் இருந்து 350 கிலோமீட்டர் தூரத்தில் இருந்த மசுகேலியாவிற்கு அவரை அழைத்து சென்றுவிட்டார். அங்கே அவர் ஒரு புகையிலை வியாபாரியாக பணிபுரிந்தார். தனது மகன் அதே இடத்தில் நிலைத்து இருந்து வணிக வர்த்தகத்தை கற்றுக்கொள்வான் என்ற நம்பிக்கையில் இருந்தார். ஆனால் அந்த இளைஞன் வீட்டிற்கு வெளியே, தனியாக உடலில் சட்டை இல்லாமல், ஒரு பெரிய பாறை மீது உட்கார்ந்து, தியானம் செய்வதில் மற்றும் அந்த பகுதியின் வெப்பமண்டல மலை அழகை பார்த்து ரசிப்பதில் அதிக ஆர்வத்துடன் இருந்ததால், இறுதியில் அவருக்கு ஏமாற்றம் மட்டுமே மிஞ்சியது. சுமார் 1890 ஆண்டு, தனது மகனுக்கு குடும்ப வியாபாரத்தில் அக்கறை இல்லை என்பதை உணர்ந்த தந்தை, அவனை கொழும்புத்துறைக்கு திருப்பி அனுப்பிவிட்டார். அம்பலவாணர் 1892 ஆம் ஆண்டு மசுகெலியாவில் காலமானார். §

யாழ்ப்பாணம் திரும்பிய சில மாதங்களில், யோகநாதன் யாழ்ப்பாணத்தில் இருந்து தெற்கே எழுபத்தி இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இருந்த கிளிநொச்சி என்ற ஒரு விவசாய சமூகத்தில், பொதுப்பணித்துறையின் நீர்ப்பாசன பிரிவில் ஒரு வேலையை தொடங்கினார். இது தொடர்பாக *சைன்ட் யோக சுவாமி* மற்றும் *டெஸ்ட்டமெண்ட் ஆஃப் ட்ருத்தில்* ரத்னா மா நவரத்தினம் அளித்துள்ள விளக்கத்தை இங்கே காணலாம்:§


> வறட்சி மண்டலப் பகுதிகளில் நெல் சாகுபடி செய்வதற்கு அனுமதிக்கும் குடியேற்ற நாட்டின் கொள்கையின் தொடர்ச்சியாகவும், குடியேற்ற

ஆட்சியில்  இலங்கை சட்டமன்றத்தில் தமிழ் சமூகத்தின் பிரதிநிதியாக இருந்த சர் பொன்னம்பலம் இராமநாதன் மேற்கொண்ட தொடர் முயற்சிகளாலும்,  பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கிளிநொச்சி பகுதியில் இரணைமடு குளம் கட்டும் திட்டம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. §

**பொறியாளர் திரு. பிரவுனின் கீழ் வேலை செய்தல்**

சிறிய நீர்நிலைகளை ஒன்று சேர்த்து, ஒரு பெரிய நீர் தேக்கம் அமைக்கப்படவிருந்தது. இலங்கை ஆளுநராக இருந்த மாண்புமிகு சர் ஹென்றி  வார்டு யாழ்ப்பாணத்திற்கு 1856 ஆம் ஆண்டு வந்திருந்த போது, திரு. டியுக் என்ற அரசாங்க பிரதிநிதி மூலம், இரணைமடு திட்டம் முதல் முறையாக முன்மொழியப்பட்டது. நீர்பாசன பொறியாளராக இருந்த திரு. பார்கர், 1866 ஆம் ஆண்டில் இறுதி பரிந்துரையை வழங்கினார். இது 1920 ஆம் ஆண்டு நிறைவடைந்து பின்பு  விரிவாக்கம் செய்யப்பட்டு, இன்று வடக்கில் இருந்து தெற்கு வரை  9½ கிலோமீட்டர் நீளம் மற்றும் கிழக்கில் இருந்து மேற்கு வரை இரண்டு கிலோமீட்டர் நீளத்துடன் ஒரு மிகப்பெரிய நீர் தேக்கமாக இருக்கிறது. வறண்ட வடக்கு பகுதியை சேர்ந்த தமிழர்கள் நீர்குலங்களை நிர்மாணம் மற்றும் புனர்நிர்மாணம் செய்வதில் தொடர்ந்து ஆர்வம் காட்டி வந்துள்ளனர், மற்றும் இந்த பகுதியில் பல நூற்றாண்டுகளாக நீர்பாசன பணிகள் நடைபெற்று வருகின்றன. §

யோகநாதன் திட்டபணி மேற்பார்வையாளராக இருந்த திரு. பிரவுன் என்ற ஒரு ஆங்கிலேய பொறியாளரின் கீழ் பணிபுரிந்தார். முரட்டுத்தனமாக இருந்த அந்த மேற்பார்வையாளர், தமிழர்களை வெறுத்தார். மேலும் அவர் தங்கள் சகாக்களைப் போல, ஆங்கிலேயர்களை போன்ற மேம்பட்ட மக்களுக்கு அடிபணிந்து செல்லும் நாகரிகமற்ற உயிரினமாக தமிழர்களை கருதினார்.  அவர் பணியிடத்திற்கு அருகில் தனது வீட்டை தேடிக்கொண்டார். அவரது மனைவி மற்றும் குழந்தைகள் லிவர்பூலில் இருந்து கப்பலில் வந்து சேர்ந்தனர். §



மிகப்பெரிய ஆன்மாக்கள் தாங்கள் மகான்களாக மற்றும் முனிவர்களாக மாற்றம் பெற்று, சீடர்களுக்கு அறிமுகமாகும் முன்னர் சுயசரிதைகள், நெறிமுறைகளை பின்பற்றினர். யோகநாதனின் இளவயது காலம்

*கிளிநொச்சியில் கழிந்தன. அங்கே எதிர்கால சற்குரு ஒரு வரலாற்று சிறப்புமிக்க நீர்பாசன திட்டத்தில் ஒரு குறைவான ஊதியத்தில் பணிபுரிந்தார் மற்றும் தனக்கு கிடைத்த ஓய்வு நேரத்தில் ஆன்மீக வேட்கையில் ஈடுபட்டார்.*

•••••••••••••• §

யோகநாதனின் தூய்மையாக நடத்தைகள் மற்றும் ஒழுக்கத்தினால் ஈர்க்கப்பட்ட பிரவுன், தனது குழுவில் பண்டகசாலையை காக்கும் பணியை வழங்கினார். நம்பிக்கைக்கு பாத்திரமான அந்த பணியில், போதுமான ஓய்வு நேரம் கிடைத்தது. அவரது புதிய பொறுப்பில், தினமும் காலையில் பணியாளர்களுக்கு நிறுவனத்தின் பண்டகசாலையில் இருந்து கருவிகளை வழங்கி, நாள் முடிவில் அவற்றை அவர்களிடம் இருந்து கவனமாக திரும்பப்பெற  வேண்டும். அவர் இந்த பணியை மிகவும் கவனமாக கையாண்டார். அவருக்கு கிடைத்த விடுப்பு நேரத்தை, பல்வேறு பழச்செடிகளை நடுவதிலும், அவற்றை கவனிப்பதிலும் பயன்படுத்தினார். அவர் அந்த காலத்தில் நட்ட ஒரு மாமரம், இன்று சாமியார் மரமாக அழைக்கப்பட்டு, செழிப்பாக நிறைய பழங்களை வழங்கிக்கொண்டு இருக்கிறது. இதை பக்தர்கள் ஆர்வத்துடன் வந்து பார்த்துவிட்டு செல்கின்றனர். அந்த மரம் இருக்கும் நிலத்தை சிவதொண்டன் நிலையம் தனக்கு சொந்தமாக்கிக் கொண்டது. §

யோகநாதன் தன்னை பாக்கியசாலியாக கருதினார். பணி கடினமாக இருக்கவில்லை. அவருக்கு ஒரு தனி குடியிருப்பும், தனது விருப்பத்திற்கேற்ப பயன்படுத்திக்கொள்ள ஓய்வு நேரமும் கிடைத்தது. அது காடுகள் நிரம்பிய இடமாக, யாழ்ப்பாணத்தை காட்டிலும் குளிர்ச்சியாக, ஒரு சில வீடுகள் மற்றும் நிறைய மயில்களுடன் இருந்தது. அவர் தனது தினசரி வாழ்க்கையில் நன்றாக பொருந்திக்கொண்டு, எல்லோருடனும் நல்ல உறவை வளர்த்துக்கொண்டார். §

யோகநாதனுக்கு வழங்கப்பட்ட  பயிற்சியின் போது, அவரது முதலாளியின் கொடூரமான கோபத்தைப் பற்றி பலமுறை எச்சரிக்கப்பட்டு இருந்தார். விரைவில் அவர் கண்முன்னே, அத்தகைய சம்பவங்கள் நடந்தேறின. ஒரு சிறிய  தவறும் பிரவுனின் கோபத்தை தூண்டிவிடும், மற்றும் தனது ஊழியர்களின் வேலை தன்னை திருப்திப்படுத்தவில்லை என்றால் அவர்களை அடிக்கவும் தயங்கமாட்டார். யோகநாதன் எப்போதும் இந்த பிரச்சனையில் சிக்காமல், எரிமலை போல வெடிக்கும் அந்த பொறியாளரை சந்திக்கும் போது கூடுதல் கவனத்துடன் இருந்தார். அவர் பிரவுனின் மனதை புரிந்துகொள்ள அவரை கண்காணித்தார் மற்றும் அவரது மனநிலைகள் மீது கவனமாக இருக்க கற்றுக்கொண்டார். அவர் விரைவில் தன்னை காப்பாற்றிக்கொள்ள நுணுக்கமான வழிகளை தெரிந்துகொண்டார். பிரவுன் பதட்டத்துடன் இருக்கும் போதும், அவர் கோபங்கொள்ள வாய்ப்புக்கள் இருக்கும் போதும், அவர் தன் கையில் ஏதாவது ஒரு கருவியுடன் அவர் முன்பாக சென்று நிற்பார். இதனால்  வரவிருந்த கோபம் தவிர்க்கப்படும். §

காலப்போக்கில் அவருடன் யோகநாதனின் உறவு மேலும் வலுவடைந்தது. பிரவுன் தன்னுடைய குழந்தைகளுடன் யோகநாதனை விளையாட அனுமதித்ததால், அவர் தனது பணியில் திருப்தியுடன் இருந்தார் என்பதை யோகநாதன் அறிந்து இருந்தார். “தனது பணியை முடித்ததும், விரைந்து சென்று தியானம் செய்ய துவங்கும் ஒரு நேர்மையான பணியாளர்,” என்று அவரைப்பற்றி பிரவுன் ஒருமுறை விவரித்து இருந்தார். திரு. பிரவுன் பேசும் போது “தெய்வீக புருஷன்" என்று  குறிப்பிட்டு, “உனக்கு மதத்தின் மீது அதிக ஈடுபாடு  இருக்கிறது,” என்று அடிக்கடி கூறுவார். இறுதியில் அவர்கள் நட்புறவு வலுவடைந்து, யோகநாதன் திரு. பிரவுனுக்கு தமிழ் கற்றுக்கொடுக்க தொடங்கிவிட்டார். §

திரு. பிரவுனிடம் இருந்த சில பண்புகள் யோகநாதனுக்கும் பிடித்து இருந்தது. அவருக்கு கடமையுணர்ச்சி தீவிரமாக இருந்தது மற்றும் விவரங்கள் சிறியதாக இருந்தாலும் அவர் அவற்றை புறக்கணிக்கவும் இல்லை தாமதிக்கவும் இல்லை. அவர் இரணைமடுவில் நடந்த ஒவ்வொரு நடவடிக்கையிலும் தனிப்பட்ட பொறுப்புடன் செயல்பட்டதால், அந்த திட்டம் ஒவ்வொரு தடையையும் கடந்து செல்வதற்கு வழிவகுத்தது. காலப்போக்கில், யோகநாதன் நூற்றுக்கணக்கான ஊழியர்கள், விநியோகங்கள், கால்நடைகள், நிதிக்கணக்கீடுகள், பொறியியல்  என்று திட்டப்பணியில் இருந்த அனைத்து துறையையும் கண்காணித்து, கடமையை புனிதமாக கருதிய தனது முதலாளியின் தலைமையில், அவற்றை  திட்டமிட்டபடி செயல்படுத்தினார். இது முதலாளியின் கவனத்தை கவர்ந்தது. §

வண்டிகளை இழுப்பதற்கும், பளுவான பொருட்களை சுமந்து செல்வதற்கும் சுமார் ஐம்பது காளைமாடுகள் திட்டப்பணியில் சேர்க்கப்பட்டு இருந்தன. அவற்றை சிறந்த முறையில் கவனிக்கவேண்டும் என்று திரு. பிரவுன் வலியுறுத்தினார் மற்றும் அவற்றை துன்புறுத்துவதை அவர் எப்போதும் அனுமதித்தது இல்லை. ஒவ்வோரு நாளும் தங்கள் வேலையை முடிந்ததும், வாகன ஓட்டிகள் அந்த கால்நடைகளை நதிக்கு அழைத்து சென்று, குளிக்க வைத்து உணவு அளிப்பார்கள். இது சரியாக தினமும் நடக்கிறதா என்பதை கண்காணிக்க திரு. பிரவுன்  தினமும் கால்நடைகளுடன் நடந்து செல்வார். இது யோகநாதனுக்கு  வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு பாடமாக இருந்தது. §

கிளிநொச்சியில் இருந்த அந்த நீர்பாசன நிறுவனத்தில் சில எதிர்மறை இரகசியங்கள் மற்றும் துன்பங்கள் இருந்தன. தனியாக இருக்கும் போது, யோகநாதனை பணியாளர்களில் ஒருவன் துன்புறுத்தி வந்தான். அவன் பிறருக்கு தொல்லை தருவதையே தனது வழக்கமாக கொண்டிருந்தான், மற்றும் அவன் பழுப்பு நிற இளம் பணியாளரை வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இகழ்ந்து பேசி வந்தான். இது பல மாதங்களுக்கு தொடர்ந்தது. மற்றும் அவன் ஒரு நாள், இளம் பணியாளருக்குள் கோபம் எரிமலையாய் கனன்று கொண்டிருக்கிறது என்பதை அறியாமல், யோகநாதனை அச்சுறுத்தினான். அதன் விளைவாக ஒரு சண்டை தொடங்கியது மற்றும்

யோகநாதன் வம்புக்கு இழுத்தவனை குத்தினார். அந்த சம்பவம் பார்ப்போரை அச்சுறுத்தியது, மற்றும் திரு. பிரவுன் அதற்கு கடுமையான தண்டனை வழங்க முடிவு செய்தார். யோகநாதனுக்கு அருகில் இருந்த மண்குலம் குவாரியில், ஆறு வார காலத்திற்கு கடுமையான வேலையை வழங்க உத்தரவிடப்பட்டது. §

அதே சமயத்தில், அவரது மாமன் சின்னையா யோகநாதனுக்கு ஒரு நல்ல வரனை பார்க்க தொடர்ந்து முயற்சி செய்து வந்தார், ஆனால் யோகநாதன் அதில் அக்கறை செலுத்தவில்லை. அவருக்கு தனது பாதை வேறு இடத்தில் இருப்பதாக தோன்றியது. அவர் தனது பணத்தை சாத்திரங்கள் மற்றும் பாடல்கள் சம்பந்தமான புத்தகங்கள் மற்றும் சைவத்துறவிகள் தொடர்பான கதைகளை படிக்க செலவழித்தார். அவர் தான் படித்த சொற்களின் உண்மை தனக்கு புலப்படும் வரை, திருப்தி அடையாமல் தொடர்ந்து படித்துக்கொண்டு இருந்தார். அத்தகைய ஒரு புனிதத்தன்மை மற்றும் பக்தியின் மூலம் இந்த உலகில் வாழலாம் என்ற சிந்தனை அவரை பிரமிக்க வைத்தது. அவருக்கு துறவிகளின் கதைகள் மனப்பாடமாக தெரிந்து இருந்தது மற்றும் அவர்கள் எழுதிய *தேவாரப் பாடல்களை* எப்போதும் பாடிக்கொண்டு இருந்தார். §

இந்த காலகட்டத்தில் சம்ஸ்கிருத சாத்திரங்களை படிக்க, சமஸ்கிருத மொழியிலும் தேர்ச்சி பெற்றார். அவர் அதிக முக்கியத்துவம் அளித்த படிப்பு மற்றும் வழிபாட்டிற்கு கிளிநொச்சி நல்ல ஒரு அமைதியான சூழ்நிலையை வழங்கியது. இந்த காலக்கட்டதை யோகநாதன் நன்றாக பயன்படுத்திக் கொண்டார். அவர் தனக்கு விடுப்பு இருந்த நாட்களில் தனியாக ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்து இருந்தார் மற்றும் அருகில் இருந்த அனைத்து கோயில்களுக்கும் செல்வதை தனது வழக்கமாக கொண்டிருந்தார். இந்து சமயத்தின், பல சாத்திரங்களில் அவருக்கு இருந்த ஆழமான அறிவைக் கண்டு மக்கள் வியந்தனர். அவரால் அந்த சாத்திரங்களை பக்கம் பக்கமாக ஒப்பிக்க முடிந்தது. §

அவர் தான் படித்த சாத்திரங்களை தினமும் காலை மற்றும் மாலையில் தியானம் செய்து, மெதுவாக தான் தினமும் மேற்கொள்ளும் சாதனாக்களில் ஒரு ஒழுங்குமுறையை உருவாக்கிக்கொண்டார். அவர் இந்த பயிற்சிகளுடன் புதிதாக பலவற்றை சேர்த்துக்கொண்டார், மற்றும் அவரது தியானங்கள் ஆழ்நிலையை அடைந்ததும், பல்வேறு வகை தவங்களை மேற்கொள்ள தொடங்கினார். அவர் கிளிநொச்சியில் இருந்த போது, தனது குடும்பத்தினரின் விருப்பத்திற்கு எதிராக, ஆன்மீக பாதையில் தனது வாழ்க்கையை அர்ப்பணிப்பதை உறுதி செய்யும் வண்ணம், திருமணம் செய்துகொள்ளாமல் மனத்துறவுடன் இருக்கவேண்டும் என்று ஒரு முறையான உறுதிமொழியை எடுத்துக்கொண்டார். §

இந்துமதி அம்மாவின் குறிப்புகளில் இருந்து ஒரு பகுதி:§

> தேவைப்படும் போது செலவழிக்கலாம் என்று பணத்தை சேமித்து வைக்காமல், ஒரு மாதத்தில் தான் சம்பாதித்த பணத்தை அந்த மாதமே செலவழிக்கும் பழக்கத்தை கடைப்பிடித்ததாக, அவர் தன் சீடர்களிடம்

பல வருடங்கள் கழித்து கூறினார். தனக்கு இருந்த குறைவான செலவுகளுக்கு பிறகு மீதம் இருந்த பணத்தை கோயில்கள், நண்பர்கள், உறவுகள் மற்றும்  ஏழை எளிய மக்களுக்கு செலவு செய்தார். §

யோகநாதன் இரணைமடுவில் பணியில் இருந்த போது, உலக வாழ்க்கையை துறப்பதற்கு அவரது தூண்டுதல்களை ஊக்குவிக்கும் முக்கிய சம்பவம் ஒன்று நடைபெற்றது.  அதைப்பற்றி ரத்னா  மா நவரத்தினம் குறிப்பிடுகிறார்: §

இந்த காலகட்டத்தில், சிகாகோவில் நடைபெற்ற உலக சமயங்களின் மாநாட்டில் இருந்து சுவாமி விவேகானந்தர் வெற்றிகரமாக திரும்பியிருந்தார். அந்த வெற்றிவாகை அந்நிய கலாச்சாரத்தால் கவர்ந்திழுக்கப்பட்ட மக்களின் மனதில் உற்சாகத்தை ஏற்படுத்தியது, மற்றும் மக்கள் மத்தியில் இந்து சமயத்தின் மீது மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்த, அவரது இலங்கை பயணம் ஒரு நல்ல அறிகுறியாக கருதப்பட்டது. 1897 ஆம் ஆண்டில் புதிய யுகத்தின் தேவதூதர் யாழ்ப்பாணம் வந்திருந்தார். இந்து கல்லூரி, கோட்டை மைதானம் மற்றும் கொழும்புத்துறையில் விவேகானந்தர் வழங்கிய உற்சாகமூட்டும் உரைகள், சுவாமியின் மனதில்  நீங்காத இடம்பிடித்தன. §

கொழும்புத்துறையின் இந்து மகாவித்தியாலயத்தில் கூடியிருந்த மக்கள் கூட்டத்தில் பேசுவதற்காக, முன்னணி இந்து குடிமக்களால் சுமந்து வரப்பட்ட பல்லக்கில் சுவாமி விவேகானந்தர் வெகுவிமரிசையாக அழைத்து வரப்பட்டதாகவும்,  அவர் இலுப்பை மரம் இருக்கும் சந்திப்பில் பல்லக்கில் இருந்து இறங்கி பள்ளி வரை நடந்து சென்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தான் ஒரு புனிதமான பூமியில் சென்றுகொண்டு இருப்பதை உணர்ந்ததால் பல்லக்கில் இருந்து இறங்க தூண்டப்பட்டதாகவும், அதனால் இந்த பூமியை தொலைநோக்கு பார்வையுடன் பாலைவனச்சோலை என்று அழைத்ததாகவும், அவர் தனது உரையில் குறிப்பிட்டார். பிற்காலத்தில் சுவாமி சாதனா செய்த காலத்தில், வெயில் மழை என்று பார்க்காமல் இந்த *இலுப்பை* மரத்தடியில் அமர்ந்து இருப்பார். பிற்காலத்தில் சுவாமி இந்த இடத்தை தனது சமய மையமாகவும்  ஆசிரமமாகவும் கௌரவித்த போதும், கொழும்புதுறை ஒரு அழகான பாலைவனச்சோலையாக தேர்ந்தெடுக்கப்பட்டது. §

இது தொடர்பாக இந்துமதி அம்மாவின் கருத்து:§

சுவாமி கிளிநொச்சியில் வேலை செய்தபோது, சுவாமி விவகானந்தரின் இலங்கை பயணம் (1897) நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் சுவாமி அதிக உற்சாகத்துடன் கலந்துகொண்டார். கோட்டையில் இருந்து இந்து கல்லூரி வரை நடைபெற்ற ஊர்வலம், மற்றும் பின்னர் இந்து கல்லூரியில் நடைபெற்ற பொதுக்கூடடத்திலும் சுவாமி பங்குபெற்றார். §

அதன் பின்னர் யோக சுவாமி பேசியபோது, விவேகானந்தர் ஆரம்பக்காலத்தில் விவாதித்த தகவல்களை ஆர்வத்துடன் குறிப்பிட்டதில் இருந்து, துறவிகளின் தோழமையில் அவருக்குள் மறைந்து இருந்த மிகப்பெரிய ஆர்வம் வெளிப்பட்டது. §

யோகநாதன் கிளிநொச்சியில் வாழ்ந்த போது, தனியாக தியானம் செய்துக்கொண்டு ஒரு யோகியை போன்று வாழ்ந்தார். அவருக்கு சுற்றியிருந்த மக்களின் மீது ஆர்வம் இல்லாததால், குறைவாக பேசினார். அவர் தனது ஆன்மீக அனுபவங்களை தனக்குள் கவனமாக பாதுகாத்து வந்தார். பணி நிமித்தமாக கிளிநொச்சிக்கு வந்த மூன்று வருடத்திற்குள், அவர் தனது பணியில் சீராக செயல்படத் துவங்கி, பொறுப்புக்களை நன்றாக நிறைவேற்றி, தனது ஆன்மீக பணியில் எதுவும் தடை ஏற்படுத்தாமல் இருப்பதில் கவனமாக இருந்தார். அவர் அடிக்கடி இரவில் நீண்டநேரம் வரை சாத்திரங்களை படிப்பார், பாடல்களை பாடுவார் அல்லது ஒரு விளக்கிற்கு அருகில் அமர்ந்து தியானம் செய்துக்கொண்டு இருப்பார். அவர் உலகில் வாழ்ந்தாலும், அதில் அவரது ஈடுபாடு மிகவும் குறைவாக இருந்தது. §

உலக வாழ்க்கையை துறந்து, கவனச்சிதறல் இல்லாமல் ஆத்ம ஞானத்தை நாடவேண்டும் என்ற ஆசை சிறிய வயதில் இருந்தே வேரூன்றி இருந்ததால், அது மற்ற திட்டங்களை முடிவு கட்டியது. அது அவரால் நன்றாக புரிந்துகொள்ள முடிந்தது. அதுவரை அவர் செய்த நடவடிக்கைகள் மற்றும் அவரிடம் ஏற்பட்ட மாற்றங்கள் அனைத்தும், அந்த திசையை நோக்கி வழிநடத்தி சென்றன. அது மட்டுமே அவரது ஆர்வத்தை தூண்டவும் ஊக்குவிக்கவும் செய்தது. ஆனால் தன்னை வழிகாட்டுவதற்கு தனக்கு ஒரு சற்குரு, ஒரு ஞானி தேவை என்பதை அவர் உணர்ந்து இருந்தார். சாத்திரங்கள் உறுதியாக இருப்பதால், உணர்தலை பெற்ற ஒரு மனிதராக, வாழ்ந்துக்கொண்டு இருக்கும் ஒரு சற்குருவின் அருள் இல்லையென்றால், பரமாத்துமாவை நோக்கி செல்லும் பாதை தென்படாது. யோகநாதனுக்கு அதைப்போன்று யாரும் தெரியாததால், அவர் தயக்கத்துடன் கவனமாக காத்துக்கொண்டு இருந்தார். ஒரு சீடன் “அருள் பெறுவதற்கு தேவையான முதிர்ச்சியை பெற்று" தயாராக இருக்கும் போது, குரு கண்டிப்பாக தோன்றுவார் என்று சைவ சமயத்தில் பாரம்பரிய புரிந்துணர்வு இருக்கிறது. §

இதை யோகநாதன் நன்றாக புரிந்து வைத்து இருந்தார். மாணிக்கவாசகரின் பாடல்கள் மற்றும் வாழ்க்கையில் இருந்த செயல்முறைகளை கற்று இருந்தார். மாணிக்கவாகர் தனது பதினெட்டாவது வயதில் பாண்டிய நாட்டின் பிரதம மந்திரியாக, புத்திசாலி இளைஞராக செல்வந்தராக இருந்தார். அவரிடம் எல்லாம் இருந்தாலும், அறியாமையில் இருந்து வெளிச்சத்தை நோக்கி தன்னை அழைத்து செல்ல ஒரு குருவிற்காக ஏங்கிக்கொண்டு இருந்தார். அவர் தனது ஆசிரியரை முதலில் பார்த்த போது, தனது ஆன்மா தேடிக்கொண்டு இருந்த இலக்கை உணர்ந்து கொண்டதால், தனது வலிமையை இழந்து அந்த ஆசிரியரின் அறிவுறுத்தலுக்கு அடிபணிந்து நடந்தார். அதன் பிறகு அவர் தனது குடும்பம், நண்பர்கள், செல்வம் மற்றும்

புகழை  கைவிட்டார். அதைப்போன்ற பல துறவிகளின் வாழ்க்கையை பற்றி, யோகநாதனுக்கு தெரிந்து இருந்ததால்,  ஒரு குருவை தேடிப்பிடிப்பது  தன்னை மட்டும் நம்பியில்லை என்றும், அவர் தயாராக இருக்கும் போது, குரு தோன்றுவார் என்பதையும் அவர் அறிந்து இருந்தார். அவர் தனது சாதனாவை தொடர்ந்தார். அவர் தனது பணியை  தொடர்ந்து செய்து, ஒரு குருவிற்காக விடாமல் பிரார்த்தித்து வந்தார். §

யோகநாதனிடம் அவரது திருமணத்தை பற்றி பேசுவது மிகவும் முக்கியமானதாக சின்னையாவிற்கு தோன்றியது. தன் மீது இருந்த கலாச்சார ஈர்ப்புக்களை பற்றி யோகநாதனுக்கு  தெரிந்து இருந்ததால், அவர் தன் மாமனை  சந்திப்பதை தவிர்த்தார். என்றாவது சின்னையாவை சந்திக்கவெண்டிய சந்தர்ப்பம் இருந்தால், அவர் அதை தவிர்த்து வேறு எங்காவது சென்றுவிடுவார்.  அவர் துறவறத்தை மேற்கொண்டு, தனக்கு மிகவும் பிடித்தமான ஆன்மீக, துறவற வாழ்க்கையில் முழுமையாக ஈடுபடவேண்டும் என்பதை முன்பே முடிவு செய்து இருந்தாலும், அதை தனது சொந்தங்களிடம் தெரிவிக்கவில்லை. அவர் ஏதாவது ஒரு விதமான தவத்தை தினமும்செய்துக்கொண்டு இருந்தாலும்,  அவர்களுக்கு முன்பாக அவர் எப்போதும் போல இனிமையான ஆன்மாவாக இருந்தார். §

அவர் தனியாக சேமிப்பு கிடங்கில் அமர்ந்திருக்கும் போது, சிலசமயங்களில் அந்த தற்பொழுதில் நிலைத்து இருப்பதா அல்லது அதில் இருந்து வெளியேறி இந்த உலகம், திரு. பிரவுன், கிளிநொச்சி மற்றும் அனைத்தில் இருந்தும் விலகி செல்வதா என்று இரண்டு மாறுபட்ட விருப்பங்களுடன் திறந்த கதவுகள் வழியாக தீவிர சிந்தனையுடன் வெளியே பார்த்துக்கொண்டு இருப்பார். அவர் தனது தனிப்பட்ட பாதையில் செல்ல ஏக்கத்துடன் இருந்தாலும், ஏதோ ஒன்று அதை தடுத்து நிறுத்தியது. அது சிவனின் சித்தம் என்பதை அவரது இதயத்திற்கு தெரிந்து இருந்தது. அவர் ஆன்மீகரீதியாக அதிக முயற்சி மேற்கொண்டு நிலைத்து இருந்தார், மற்றும் அவரது சாதனா தனித்த முறையில் ஒரு முக்கிய வடிவத்தை பெற்றுக்கொண்டு இருந்தது. அவர் ஓய்வு நேரத்தில் தனது அறையில் அல்லது ஒரு கோயிலில் அமைதியாக உட்கார்ந்து இருப்பார். தான் செய்யவேண்டியது அனைத்தையும் செய்து விட்டதாக, தனக்கு அனைத்தும் முடிவுக்கு வந்துவிட்டதாக அவருக்கு தோன்றியது. அவர் சிலசமயம் இரவு முழுவதும், நிலையாக ஒரு முறைக்கூட அசராமல் தியானம் செய்துக்கொண்டு இருப்பார். அவருக்கு விடுப்பு இருக்கும் நாட்களில், தூரத்தில் இருக்கும் ஒரு கோயிலை தேர்ந்தெடுத்து, கிளிநொச்சியில் இருந்து அந்த கோயில் வரை எங்கும் நிற்காமல் பாதயாத்திரை மேற்கொண்டு, அந்த கோயிலில் வழிபாடு நடத்தி திரும்பும் போது பாடல்களை பாடிக்கொண்டே வருவார். யாழ்ப்பாணம் நல்லூர் கோயிலில், அவர் முதல் சந்நியாசியான முருகப்பெருமானை வழிபட்டார். §

**நல்லூர் முனிவரை சந்தித்தல்**


ஒரு நாள் விதானையார் தனது சகோதரர்களான இராமலிங்கம் மற்றும் துரையப்பாவுடன் யோகநாதனை சந்திக்க வந்து இருந்தார், மற்றும் அவர்கள் எல்லோரும் ஒன்றாக நல்லூர் நோக்கி நடக்க தொடங்கினார்கள். விதானையாரும் யோகநாதனை போல ஆன்மீக ஈடுபாட்டுடன் சாதனா செய்தார். மேலும் விதானையார் இருவரில் மூத்தவராக இருந்ததால், தன்னால் இயலும் போது, யோகநாதனை பாதையில் முன்னேற்றி செல்வதை தனது கடமையாகவும் கருதினார். அன்று ஆகஸ்ட் மாதத்தில் தேர் திருவிழா நடைபெறும் நாளாக இருந்தது. அந்த திருவிழாவில் முருகப்பெருமான் நன்றாக அலங்கரிக்கப்பட்ட தனது தேரில் கோயிலை சுற்றி பவனி வருவார். அது வழிபடுவதற்கு உகந்த சமயமாக இருக்கும். அவர்கள் ஒரு கிணற்றில் குளித்து, நெற்றியில் விபூதியை பூசிக்கொண்டு நல்லூருக்கு புறப்பட்டனர். விதானையார் செல்லப்பாசுவாமியையும் சந்திக்கலாம் என்ற நம்பிக்கையில் இருந்தார். §

நல்லூருக்கு செல்லும் வழியில், யோகநாதன் தான் பல வருடங்களுக்கு முன்பாக செல்லப்பசுவாமியை சந்தித்தது பற்றி விதானையாரிடம் கூறினார். அவருக்கு அப்போது பன்னிரண்டு வயதாக இருந்திருக்கும். தனது காலில் ஒரு நோய்க்கிருமி பாதித்த வேதனையில் இருந்த அவர், யாழ்ப்பாணம் நகரத்தில் இருந்த மருத்துவரின் குடிசைக்கு சென்றுகொண்டு இருந்தார். நல்லூர் கோயிலின் தேரடியை கடந்து செல்லும் போது, “இங்கே வா! உனக்கு எதற்காக மருந்து வேண்டும்?” என்று ஒருவர் உரத்த குரலில் கேட்டார். திரும்பிப் பார்த்தால், அந்த கேள்வியை கேட்டது செல்லப்பசுவாமி. அவர் யோகநாதனை அருகில் அழைத்து உட்கார வைத்து, காயத்தை கூர்ந்து நோக்கி ஒரு மருத்துவரை போல தலையை அசைத்தார். அந்த காயத்திற்கு ஆயுர்வேத மருத்துவரிடம் செல்ல வேண்டாம் என்றும், தான் குறிப்பிட்ட மூலிகையை மசியலாக்கி காயத்தின் மீது ஒரு ஒத்தடம் போல வைத்துக்கொள்ள வேண்டும் என்று செல்லப்பசுவாமி கூறினார். சில நாட்களில் காலில் இருந்த காயம் குணமடைந்தது. அவரை யோகநாதன் நல்லூர் கோயிலுக்கு அருகில் பல வருடங்களாக பார்த்து இருந்தாலும், ஒரு சிறுவனாக அந்த ஞானிக்கு அருகில் அமர்த்தது, அதுவே முதல் முறையாக இருந்தது. §

யோகநாதனுக்கு பத்து அல்லது பன்னிரண்டு வயதாக இருந்த போது, யாழ்ப்பாண நகரத்திற்கு அருகில் கடைவீதியில் கடையிற்சுவாமியையும் சந்தித்து இருந்தார். அந்த சிறுவனுக்கு காய்ச்சல் அதிகமாக இருந்தது மற்றும் கடையிற்சுவாமி அவனை தொட்டவுடன், காய்ச்சல் படிப்படியாக குறைந்தது. §

மதியவேளைக்கு சிறிது முன்பு, யோகநாதன் மற்றும் அவரது நண்பர்கள் நல்லூர் வந்து அடைந்து, திருவிழாவிற்காக கூடியிருந்த மக்கள் வெள்ளத்தில் ஐக்கியமானார்கள். அன்று வெப்பம் அதிகமாக இருந்தாலும், கோயில் வளாகம் நிரம்பி இருந்தது. கோயிலுக்குள் நுழையும் வாய்ப்பை தேடிக்கொண்டு இருந்த நூற்றுக்கண்கான மக்கள், கோயிலின் வாசலில் சுற்றிக்கொண்டு இருந்தனர். உடலில் சட்டை இல்லாமல் ஆண்களும்

சிறுவர்களும் கோயில் பிரகாரங்களில் இருந்த சூடான மணலின் மீது ஒரு விரதமாக அல்லது சாதனாவாக, அங்கப்பிரத்சணம் செய்துக்கொண்டு இருக்க, பாடிக்கொண்டு இருந்த பக்தர்கள் அவர்களை பின்தொடர்ந்தனர். §



*பக்தியுடன், புனிதமாக மற்றும் ஒரு மகானின் நடத்தையுடன் இருப்பவர்கள் என்றும் முனிவராக, வீடு வாசல் இல்லாமல் விசித்திரமான நடவடிக்கைகளுடன் இருப்பவர்கள் என்றும் இந்து சமயத்தில் தெய்வீக புருஷர்களை இரு முக்கிய பிரிவுகளாக குறிப்பிடப்படுகிறது. அழுக்கு படிந்த வேட்டி, சுத்தமற்ற உடல் மற்றும் விசித்திரமான நடத்தையை கொண்ட செல்லப்பசுவாமியிடம் மகானை காட்டிலும் ஞானியின் பண்புகள் அதிகமாக இருந்தன. இருந்தாலும் மிகவும் உயரிய சமூகத்தின் குருவாக அவர் கருதப்பட்டார்.*

• • • • • • • • • • • • • • §

சாம்பிராணி மற்றும் பூக்களின் ஒரு வாசனைக் கலவை காற்றில் நறுமணத்தை வீச, *தேரடி* மற்றும் கோயிலுக்கு நடுவில் இருந்த தூசிப்படிந்த திறந்தவெளி முழுவதும் பரவியிருந்த குடைகளின் கடலில் இருந்து இசைக்கலைஞர்களின் குரல்கள் ஒலித்துக்கொண்டு இருந்தன. குடைகள் வெப்பமண்டல பகுதிகளில், மழைக்காக மட்டும் பயன்படுத்தப்படாமல், சுட்டெரிக்கும் சூரியகிரணங்களில் இருந்து காப்பாற்றிக்கொள்ளவும் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. திறந்து இருந்த கருவறையின் கதவுகளில் இருந்து மெதுவாக அதிகரித்த நாதஸ்வரம், மேளங்கள் மற்றும் மணிகளின் ஒலிகளை, பிராமணர்களின் மந்திர முழக்கங்கள் வழிநடத்தி சென்றன. அதிகாலையில் இருந்து பூஜைகள் நடைபெற்று வந்தன, மற்றும் அந்த இடம் முழுவதும் முருகப்பெருமானின் அருள் வலுவாக வியாபித்து இருந்தது. §

பூஜைக்கு அருகில் செல்லவேண்டும் என்று மண்டபம் முழுவதும் அயிரக்கணகான பக்தர்கள் ஒருவருக்கொருவர் தள்ளிக்கொண்டும் இடித்துக்கொண்டும் நின்று இருந்தார்கள். யோகநாதனும் அவரது மூன்று நண்பர்களும் செல்லப்பசுவாமியை பார்க்கலாம் என்ற நம்பிக்கையில் *தேரடியை* நோக்கி சென்றுக்கொண்டு இருந்தனர். அவர்கள் உணரும் முன்னர், கூட்டம் விலகியதும், அதோ அங்கே அவர் சுமார் மூன்று மீட்டர் தூரத்தில், தைரியமாக கம்பீரமாக நின்றுக்கொண்டு இருந்தார். மக்கள் கூட்டத்தின் மத்தியில் தெளிவாக தெரிந்த அவரது மெலிந்த உருவம், அவரது இயல்பான ஐந்து அடி ஒன்பது அங்குல உயரத்தை காட்டிலும் உயர்வாக தென்படச்செய்தது.§

அவரது வன்மையான தோற்றத்தினால் பயந்து, மக்கள் எல்லோரும் அவரை நெருங்காமல் சற்று விலகி நடந்து சென்றனர். அவர் வெருங்கால்களுடன், மெல்லிய தாடி மற்றும் சூரிய வெப்பத்தால் கருகிய மேனியுடன், தனது இடுப்பில் ஒரு முறை மட்டும் சுற்றப்பட்ட ஒரு வெள்ளை துணியை மட்டும் அணிந்து இருந்தார். அவர் தெளிவான புன்னகையுடன் மக்கள் வெள்ளத்தை பார்த்துக்கொண்டும், யாரையும் குறிப்பிடாமல் உரக்க பேசிக்கொண்டும், தன்னை கவனிக்கும் மக்களின் பார்வைகளை பொருட்படுத்தாமலும் இருந்தார். அவரிடம் ஒரு சிங்கத்தின் ஆதிக்கம் மற்றும் சக்தி இயல்பாக அமைந்து இருந்தது. ஒரு ஆண்டியாக இருந்த அந்த சாது, தனது நடத்தை

மற்றும் உடைக்கு முரணான தோரணையில் ஒரு அரசரை போன்று நின்று இருந்தார். §

தன்னை காணவந்த நால்வர் தன்னை காணும் முன்பே, சுவாமி அவர்களை கண்டுகொண்டு *தேரடி* நோக்கி நடந்து சென்றார். அவர்கள் அவரை பணிவுடன் வணங்கினார்கள். செல்லப்பசுவாமியை யோகநாதனின் நண்பர்கள் பலமுறை சந்தித்து இருந்தார்கள் மற்றும் அந்த கம்பீரமான உயிர்சக்தியை மிகுந்த விழிப்புடன் இருப்பதை தவிர வேறு எந்த வழியும் யோகநாதனுக்கு தென்படவில்லை; ஆனால் தற்போது அவர் ஒரு மிகப்பெரிய ஞானியின் முன்பாக நின்றுக்கொண்டு இருந்தார். §

செல்லப்பசுவாமி சில நொடிகளுக்கு பிறகு, மூன்று சம்சாரிகளை பார்த்து, “நீங்கள் இங்கிருந்து முதலில் கிளம்புங்கள். உங்கள் குடும்பங்கள் மீது கவனம் செலுத்துங்கள். உங்களுக்கு சாதுவாக இருக்கும் தகுதியில்லை,” என்று கூச்சலிட்டார். ஆனால் யோகநாதனை காத்திருக்குமாறு கூறி, “நான் உனது வரவிற்காக காத்து இருந்தேன். நான் உனக்கு விரைவில் முடிசூட்டு விழா நடத்தப்போகிறேன். ” அவர் யோகநாதனை அருகில் அழைத்துக்கொண்டு, ஆன்மீக பண்புகளை பற்றி அறிவுறுத்தல்களை வழங்கினார். பின்பு திடீரென்று தனது வலது கையால் யோகநாதனின் தலையில் அறைந்து, “இது தான் உனது முடிசூட்டு விழா!” என்று கூக்குரலிட்டு ஐந்து முக்கிய போதனைகளை வழங்கினார்: §

> *சும்மா இரு.*
>
> *எப்போவோ முடிந்த காரியம்.*
>
> *நாம் அறியோம்.*
>
> *முழுதும் உண்மை.*
>
> *ஒரு பொல்லாப்பும் இல்லை.* §

இதைப்பற்றி யோக சுவாமி இவ்வாறு குறிப்பிட்டார்:§

> எனக்கு அவ்வபோது தெய்வீக அருள் கிடைத்துக் கொண்டு இருந்தது. இந்த ஐந்து பொன்மொழிகள் ஒரு சீடனின் மனதில் பதிந்ததும், செல்லப்பசுவாமி  கருணையால் பூத்த திருமுகத்துடன் அந்த சீடனை நோக்கி, “நல்லதப்பா வா, உன்னைப் போன்ற ஆளைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்,” என்று கூறுவார். §

அன்று பொழுது சாய்ந்ததும், அந்த சந்திப்பின் தாக்கத்தில் இருந்து மீளாத யோகநாதன், தனியாக தன் அத்தையின் வீட்டிற்கு திரும்பினார். அந்த சந்திப்பிற்கு பிறகு, அந்த இளைஞன் கிளிநொச்சியில் இருந்து வாரக்கடைசியில் பயணம் மேற்கொண்டு, செல்லப்பசுவாமியை அடிக்கடி

சந்தித்ததாக, அந்த கால சம்பவங்களை நினைவுகூர்ந்தவர்கள் கூறினார்கள். §

### உண்மை புரியும் நேரம்

அதன் பின்னர் நடந்த ஒரு சந்திப்பு, முதல் சந்திப்பை போலவே குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துவதாக இருந்தது என்று யோக சுவாமி சில வருடங்கள் கழித்து, நற்சிந்தனை என்ற தனது புத்தகத்தில் விளக்கி இருந்தார். நல்லூர் கோயிலுக்கு வெளியே ஒரு சாலையில் யோகநாதன் நடந்து சென்றுக்கொண்டு இருந்தார். செல்லப்பசுவாமி தான் குடிக்கொண்டு இருந்த தேரடியின் கம்பிகளை அசைத்துக்கொண்டு, "*யாரடா நீ*?" என்று அதட்டினார். §

எளிமையான மற்றும் நுணுக்கமான கேள்வியால், யோகநாதன் மெய்மறந்து நின்றார். அவர்களின் கண்கள் சந்தித்தன மற்றும் யோகநாதன் உறைந்து நின்றார். செல்லப்பசுவாமியின் பார்வை அவரது ஆன்மா வரை ஊடுருவி சென்றது. அவரது கண்கள் வைரத்தை போல, கோபத்துடன் கூர்மையாக இருந்தன, மற்றும் அவை அவரின் கண்களை மிகவும் வலுவாக கட்டுப்படுத்தியதால் யோகநாதன் தனது மூச்சு நின்றதை, வயிறு இறுகியதை, காதுகளில் இதயத்துடிப்பு கேட்பதை உணர்ந்தார். அவர் செல்லப்பசுவாமியை திரும்பிப் பார்த்தார். கண்ணை கூசும் சூரிய ஒளியில் அவர் கண்களை சிமிட்டியதும், ஒரு பிரகாசமான உட்புற ஒளி அவரது கண்களுக்கு பின்னால் தோன்றியது. §

> அவர் முடிவும் இல்லாமல் தொடக்கமும் இல்லாமல் இருக்கும் பரம்பொருளை எனக்கு வெளிப்படுத்தி, *சும்மா* என்கிற நிலையின் நுணுக்கத்தில் என்னை சுற்றி வளைத்துக் கொண்டார். வேதனைகள் அனைத்தும் மறைந்தன; மகிழ்ச்சிகள் அனைத்தும் மறைந்தன! ஒளி! ஒளி! ஒளி!§

தலை முதல் கால் வரை, அவரது அங்கங்கள் முழுவதும் பேரானந்த அலைகள் பரவி, அவருக்குள் கவனத்தை கட்டுப்படுத்தின. அவர் இத்தகைய ஒரு அழகு அல்லது ஆற்றலை, இதற்கு முன்பு அறிந்திருக்கவில்லை. அது பேரொலியை எழுப்பி அவரை குலுக்கிய போது, அவர் அசையாமல் நீண்டநேரம் மெய்மறந்த நிலையில் நின்றது போல இருந்தது. அவர் இதை பிற்காலத்தில் நினைவு இழந்த நிலை என்று குறிப்பிட்டார். §

> துயரம் நிறைந்த பிறவி சக்கரத்தின் சுழற்சியை முடிவுக்கு கொண்டு வரும் பொருட்டு, அவர் என்னை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, பேரின்பத்தில் மூழ்கடித்தார். நான்கு வழிகள் மூலம் கொடை மற்றும் தவம், சரியை மற்றும் கிரியை ஆகியவற்றை நிலைக்கச்செய்து, அவர் தன்னை போல என்னை மாற்றிவிட்டார். §


அவரது தலையில் நித்தியத்தின் சூட்சுமமாக, உயர் சுருதியில் இருக்கும் உட்புற ஒலியான *நாத நாடி சக்தி* ஏற்படுத்திய உறுமல், மற்ற அனைத்தையும் மூழ்க செய்தது. எல்லா திசைகளில் இருந்தும் விரைந்து வந்த ஒளிக்கடல், அவர் தலை மீது பெருக்கெடுத்து கீழே உருண்டு ஓடியதால், கோயில் மணியோசை வட்டமிடும் தூரத்தில் மங்கின. அவரால் அதை ஒரு நொடிக்கூட கட்டுப்படுத்த முடியவில்லை. தன்னை தெய்வீகத்தன்மை ஈர்த்துக்கொள்ள அனுமதித்தார். உடல் ரீதியாக அவராக காட்சி அளித்தாலும், உளரீதியாக அவராக இல்லை. §

> குருவின் அருளால், நான் வெற்றிகொண்ட பேரானந்தத்தில் எனக்கு வேறு எதுவும் தெரியவில்லை. எனக்கு கிடைத்த அமைதியில் அறியாமை தெரியவில்லை. நான் புரிந்துகொண்ட பரமாத்துமா, செயலற்று இருந்தார். நான் அட்டாங்க யோகத்தின் மூலம் விடுதலை பெற்றேன்.§

யோகநாதன் பல நிமிடங்களுக்கு, ஒரு சிலையை போல மெய்மறந்த நிலையில் நின்றுக்கொண்டு இருந்தார். அவருக்கு இயல்பான சுயநினைவு திரும்பி கண்களை விழித்து பார்த்த போது, செல்லப்பசுவாமி அவரையே தொடர்ந்து பார்த்துக்கொண்டு காத்து  இருந்தார். “ஆசையை விட்டுவிடு!” என்று அவர் கத்தினார். அருகில் சென்றுக்கொண்டு இருந்த மக்களுக்கு என்ன நடக்கிறது என்று புரியவில்லை. “ஆசையில்லாமல் இருப்பதற்கும் ஆசையை வளர்த்துக் கொள்ளாதே!” §

அந்த கூர்மையான கண்களில் இருந்து வெளிவந்த குருவின் அருள் தனக்குள் முழுவதுமாக பாய்ந்து செல்வதை யோகநாதன் உணர்ந்தார். அவருக்கு அதற்கு முன்பு, அத்தகைய எழுச்சியை பற்றி தெரியாது. வியப்பில் இருந்த அவருக்கு, “இயல்பாக எதுவும் தீய பண்புடன் இருப்பதில்லை. ஒரு பொல்லாப்பும்  இல்லை!” என்று போதித்த வார்த்தைகளின் பொருள் அப்போது புரியவில்லை என்றாலும், அவற்றை அறியாமை மற்றும் மாயையை அகற்றும் நோக்கத்துடன் குரு வழங்குகிறார் என்பதை அவர் உணர்ந்துகொண்டார். §

பிற்காலத்தில் யோக சுவாமி, இந்த முக்கியமான சந்திப்பை குறிப்பிட்டு “நான் எனது குருவை நல்லூரில் பார்த்தேன்,” என்ற ஒரு பாடலை எழுதினார்:§



*யோக சுவாமி தன் வாழ்க்கையில் நிலைமாற்றம் பெற்ற நாளை பலமுறை குறிப்பிட்டு இருந்தார். அன்று அவர் நல்லூர் தேரடி வழியாக சென்றுக்கொண்டு இருந்த போது, அவர் செல்லப்பசுவாமியின் தெய்வீக அருளால் மெய்மறந்த நிலையை அடைந்தார். "யாரடா நீ?" என்று குரு சவால் விட்டபோது, சீடன் ஒரு எல்லையற்ற ஒளியில் மூழ்கினார். அந்த ஒளி அவரை நிரந்தரமாக மாற்றிவிட்டது.*

……………………….§

மிகப்பெரிய *தபஸ்விக்கள்* வாழும் இடமான நல்லூரில் எனது குருவை சந்தித்தேன். அவர் பல கடுமையான வார்த்தைகளை சொல்லிக்கொண்டு இருந்தார், ஆனால் நான் அசையாது நின்றேன். "யாரடா நீ?" என்று என்னை சவால்விட்டார். அன்றே அவரது அருளை பெறுவதில் நான் வெற்றி அடைந்தேன். §

நான் மகிமையாக இருந்த, அவரது அருளில் நுழைந்தேன். அங்கே எங்கும் இருள் பரவி இருந்தது. என்னால் அதன் பொருளை புரிந்துகொள்ள முடியவில்லை. §

"ஒரு பொல்லாப்பும் இல்லை," என்று அவர் கூறியது எனக்கு கேட்டது. அந்த இரகசியத்தின் ஆழம் புரியாமல், திகைத்து நின்றேன். §

நான் குழப்பத்தில் நின்றுக்கொண்டு இருந்த போது, அவர் என்னை அன்புடன் பார்த்தார், உடனே எனக்கு வேதனையை வழங்கிய மாயை என்னை விட்டு விலகி மறைந்துவிட்டது. §

அவர் கந்தன் கோயிலின் நுழைவாயிலுக்கு முன்பாக நின்றுக்கொண்டு, எனது தலைக்கு மேல் சுட்டிக்காட்டி பேசினார். எனக்கு உடல் இருக்கும் உணர்வை மறந்து, திகைத்து நின்றேன். §

நான் வியப்பில் நிலைத்து இருந்த போது, எனது அச்சம் மறையவேண்டும் என்று அவர் வேதாந்தத்தின் சாரத்தை பணிவுடன் விளக்கினார். மிகபெரிய தவத்தை சாதித்துள்ள, ஈடு இணையற்ற மகான் "இது அப்படியே உள்ளது. ஆரறிவார்? இந்த வார்த்தைகளின் பொருளை புரிந்துகொள்," என்று கூறி எனது முகத்தை உற்று நோக்கினார். §

இந்த உலகில் எனது சொந்தங்கள், எனது சகோதரர்கள் மற்றும் எனது பெற்றோர்கள் கண்ணுக்கு தெரியாமல் மறைந்தனர். மேலும் ஈடு இணையற்ற எனது குருவின் அருளால், நான் ஈடு இணையற்றவனாக நிலைத்து இருந்தேன்.§

இந்த அனுபவத்தை யோகநாதன் புரிந்துகொள்ள முயலும் போது, குரு அவர் இருப்பதையே மறந்து, தூரத்தில் இருந்த கூரைகளை பார்த்து தனக்குள் முணங்கிக்கொண்டு, தான் சொல்லியதற்கு தானே தலையை அசைத்த பின்னர், நடந்து செல்லத் தொடங்கினார். அவரை யோகநாதன் பின்தொடர ஆரம்பித்தார். உடனே அந்த முனிவர் திருப்பிப் பார்த்து, "நான் திரும்பும் வரை காத்திரு!" என்றார். §

குரு மூன்று நாட்கள் கழித்து வந்தார். அதுவரை மனதில் உறுதியுடன் இருந்த யோகநாதன், குரு விட்டுச்சென்ற அதே இடத்தில் அவருக்காக காத்து இருந்தார். செல்லப்பசுவாமி எதையும் பேசவும் இல்லை, தனது நடையை நிறுத்தவும் இல்லை. அவர் யோகநாதனிடம் தனக்கு பின்னால் நடந்து வருமாறு சைகை காண்பித்து, தனக்கு உணவை தயார் செய்ய பயன்படுத்திய, திறந்தவெளி நெருப்பு குழிக்கு அழைத்து சென்றார். அங்கே அவர் யோகநாதனுக்கு தேநீர் மற்றும் காரமான காய்கறி கூட்டு பரிமாறி, வழியனுப்பி வைத்தார். §

அவர் தனது புதிய சீடனை வரவேற்கவும் இல்லை அல்லது போற்றவும் இல்லை; சீடனிடம் திரும்பி வா அல்லது திரும்பி வரவேண்டாம் என்று சொல்லவும் இல்லை. அவர் அப்படி சொல்லவேண்டிய அவசியம் இல்லை. குரு தன்னை ஏற்றுக்கொண்டது, யோகநாதனுக்கு புரிந்து இருந்தது. அதன் பிறகு அவரது பயிற்சி தொடங்கியது. யோகநாதனுக்கு வாய்ப்பு கிடைத்த போது, குனிந்து செல்லப்பசுவாமியின் காலை தொட்டு வணங்க முயன்றார், ஆனால் அவரது குரு கதற உக்காரமிட ஆரம்பித்துவிட்டார். முனிவர் சற்று பின்வாங்கி, "அதைப்பற்றி கனவிலும் நினைக்காதே!" என்று அவரை அதட்டினார். யோகநாதன் குழப்பம் அடைந்தாலும் அடிபணிந்து நடந்ததால், குரு அமைதி

அடைந்து, “நீயும் நானும் ஒன்று,” என்று கூறினார். “உன்னை என்னிடம் இருந்து தனியாக பார்த்தால், நீ பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.”§

செல்லப்பசுவாமி வலியுறுத்திய குரு மற்றும் சீடனின் ஒருமை மட்டுமல்லாமல், ஒவ்வொன்றிலும் இருக்கும் ஒருமை, சாதாரண மனிதனுக்கு விசித்திரமாக இருந்தாலும், அது பழங்கால *ஆகம* உரைகளின் உண்மையான வெளிப்பாடாக விளங்குகின்றன. அவற்றில் இருந்து ஒரு பகுதி: §

> “சிவபெருமான் என்னை போன்று இல்லை. உண்மையில், நான் சிவபெருமானை போன்று இல்லை.” அத்தகைய தவறான வேறுபாட்டு எண்ணங்களை, மிகவும் புனிதமான சாதகர் தவிர்க்க வேண்டும். “சிவபெருமானாக இருப்பது உண்மையில் நான் தான்.” அவர் சிவபெருமானுக்கும் தனக்கும் இடையில் இருக்கும் இந்த அத்வைத சங்கமத்தை பற்றி எப்போதும் ஆழமாக சிந்தித்துக்கொண்டு இருக்கட்டும்.§
>
> ஒருவர் அத்தகைய அத்வைத சங்கமத்தின் மீது ஒருமுக சிந்தனையுடன் இருப்பதால், அவர் தனது சொந்த பரமாத்துமாவிற்குள், நிரந்தரமாக எல்லா இடத்திலும் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறார். அவர் தனக்குள் தன்னை நிலைநிறத்திக் கொண்டுள்ளதால், ஒவ்வொரு ஆன்மாவின் உள்ளும், ஒவ்வொரு பொருளின் உள்ளும் மற்றும் வெளிப்பட்டு இருக்கும் எல்லா உடல்களிலும், தன்னை வெளிப்படுத்தி இருக்கும் இறைவனை நேரடியாக காண்கிறார். அத்தகைய ஒரு அனுபவம் நடைபெறுவதில் எந்த சந்தேகமும் இல்லை.§
>
> பிறப்பு இல்லாதவராக அதிகாரப்பர்வமான எல்லா சாத்திரங்களாலும் அறிவிக்கப்பட்டு, படைப்பாளராக பிரபஞ்சத்தை கட்டுப்படுத்துபவராக, மாயையில் இருந்து பிறந்த உடலுடன் தொடர்பு இல்லாதவராக, மாயையில் இருந்து வளர்ச்சி பெற்ற பண்புகள் இல்லாதவராக மற்றும் அனைத்திற்கும் பரமாத்துமாவாக இருப்பது, உண்மையில் நான் தான். இந்த அத்வைத சங்கமத்தில் எந்த சந்தேகமும் இல்லை.§
>
> *சர்வஞானோத்தர ஆகமம்* 2.13-16§

செல்லபசுவாமி மீது யோகநாதன் அதிகமான மரியாதையை செலுத்தினார். அவர் பிற்காலத்தில், தனது ஆழமான மரியாதையை, *நற்சிந்தனை* என்ற தலைப்பில் எழுதிய பாடல்கள் மற்றும் கட்டுரைகளில் வெளிப்படுத்தினார். அதில் இருந்து ஒரு தொகுப்பு:§

> “ஒரு பொல்லாப்பும் இல்லை,” என்று எனது இதயத்தை உருக வைத்த, குருநாதரின் திருவடிகளை வணங்குவதற்கு வா மனமே. “முழுதும் உண்மை" என்று சொல்லி எனக்கு உறுதியை வழங்கிய, தலைவனை நான் வணங்கப்பொகிறேன் என்பதால், விரைந்து வா மனமே. அன்று நல்லூரில் “நாமறியோம்” என்று அறிவித்தவரை, விரைந்து சென்று சந்திக்க எங்களுக்கு அனுமதி வழங்கிட வா மனமே. §

"அப்படியே யுள்ளது" என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருக்கும் செல்லப்பனை காண விரைந்து வா மனமே. உலகமக்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக, மகிழ்ச்சி மற்றும் உற்சாகம் கலந்த இதயத்துடன் தேரடிக்கு அருகே "ஆரறிவார்?" என்று அறிவித்தவரை, போற்றி பாட வா மனமே. *தவத்தின்* பாதையில் யாராலும் அளக்க முடியாத ஆழத்திற்கு சென்று, சிங்கங்களின் தலைவனாக இருக்கும் சற்குருவை புகழ்வதற்கு, இப்போதே நல்லூருக்கு வா மனமே. ஆசையும் கோபமும் இல்லாமல், கந்தலான துணியுடன் இருக்கும், நமது தந்தையை காண, ஆனந்தமாய் வா மனமே. §

மந்திரங்களும் தந்திரங்களும், கௌரவம் அல்லது அகௌரவம் அறியாத அந்த அழகானவரை காண, என்னை பின்தொடர்ந்து வா மனமே. மத்தனை போல சுற்றித்திரிந்து, யாசகத்தை மட்டும் நம்பி இருந்த, குரு மீது உனது அன்பை பொழிய, அஞ்சாமல் வா மனமே. மாறாத அருளை வழங்கி, முப்பத்தி ஆறு தத்துவங்களை கடந்து இருக்கும் தலைவனுடன் சேர்வதற்கு வா மனமே.§

**கிளிநொச்சியில் ஆன்மீக பணி**

வாழ்க்கையை மாற்றி அமைத்த அனுபவத்திற்கு பிறகு, யோகநாதன் தனது வேலையை தொடர கிளிநொச்சிக்கு திரும்பினார். அவர் ஒவ்வொரு வாரக்கடைசியிலும், தனது சற்குருவுடன் இருக்க நல்லூருக்கு அறுபத்தி ஐந்து கிலோமீட்டர் தூரம் யாத்திரை மேற்கொண்டு, திங்கள் காலை தனது கடமைகளை நிறைவேற்ற மீண்டும் நடைப்பயணம் மேற்கொள்வார். ஆனாலும் வேலையை கைவிட்டு, குருவுடன் நல்லூரில் இருக்கவேண்டும் என்று அவர் மனம் ஏங்கியது. இரணைமடுவில் அவரது தினசரி வேலைகளை தொடர்ந்து செய்ய, அவர் சாதனாவில் மேற்கொண்ட தீவிர முயற்சி மட்டுமே துணை புரிந்தது. §

எந்த *தவமும்* கடினமாக இருக்கவில்லை. பல வருடங்கள் கழித்து, ஒரு நாள் யோக சுவாமி என்று அழைக்கப்பட்ட ஒரு முனிவரை காண ஒரு இளைஞர் வந்தான். அவர்கள் ஒரு சில நிமிடங்கள் உரையடினார்கள். அப்போது அந்த இளைஞன் தன்னை சுத்தப்படுத்திக்கொள்ள, தனது உடலில் மிளகாய் தூளை தடவிக்கொண்டு, உச்சி வெயிலில் அமர்ந்து இருப்பதை வழக்கமாக கொண்டு இருந்ததாக குறிப்பிட்டான். யோக சுவாமி கண்களில் உற்சாகத்துடன், "ஒரு அருமையான தபஸ்! நானும் அதை செய்து இருக்கிறேன்!" *செயின்ட் யோக சுவாமி* மற்றும் *டெஸ்ட்டமெண்ட் ஆஃப் ட்ருத்தில்* ரத்னா மா நவரத்தினம், இவ்வாறு விவரிக்கிறார்: §

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சுவாமி, பல ஆன்மீக நுண்ணுணர்வுகளை அனுபவித்து, தனது குருவின் மீது வலுவாக ஈர்க்கப்பட்டதாகவும் நம்பப்படுகிறது. இந்த காலகட்டத்தில் கொழும்புத்துறையில் இருந்து விதானே திருஞானசம்பந்தர், கதிரிதம்பி

> வெட்டிவேலு, பொன்னையா உபாத்தியாயர், சிவகுருநாதர் துரையப்பா மற்றும் தியாகர் பொன்னையாவை உள்ளடக்கிய ஒரு பிரத்யேக குழு நல்லூரில் செல்லப்பரை அடிக்கடி சந்தித்து கொண்டிருந்தது. தனக்கு பணிச்சுமை குறைவாக இருக்கும் போது, அவர்களுடன் சுவாமி இணைந்து கொள்வார். தனது குருவிற்கு அருகில் இருக்கவேண்டும் என்ற தூண்டுதல் அவருக்கு மிகவும் வலுவாக இருந்ததால், செல்லப்பரை சந்திக்க கிளிநொச்சியில் இருந்து நல்லூர் வரை நாற்பத்தைந்து கிலோமீட்டர் தூரம் உற்சாகத்துடன் நடந்து சென்றதைப் பற்றி, அவர் சிலசமயங்களில் நினைவு கூர்வார். §

பணியிடத்தில் தனக்கு விடுப்பு நேரம் கிடைக்கும் போது, யோகநாதன் தனது குருவின் அறிவுறுத்தல்கள் மற்றும் தனது சாதனாவில் ஆழமாக மூழ்கி இருப்பார். இந்துமதி அம்மா அந்த நாட்களைப் பற்றி இவ்வாறு விவரிக்கிறார்: §

> சுவாமி அமைதியாக அமர்ந்து இருக்கவும், தான் செல்லப்பசுவாமியிடம் இருந்து கற்றது அனைத்தையும் பயிற்சி செய்யவும், அதைப்பற்றி ஆழமாக சிந்திக்கவும், கிளிநொச்சி காடு ஒரு பொருத்தமான ஆசிரமமாக அமைந்தது. நீண்டநேரத்திற்கு ஆழமாக சிந்தித்தல், ஆழமான *நித்தைக்குள்* [தெய்வீக தன்மையில் மூழ்கி இருக்கும் நிலை] நுழைதல் மற்றும் தியானத்தில் அமர்ந்து யோக பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம், அவர் தனது குருவிடம் இருந்து கற்றது அனைத்திலும் பயிற்சி பெற்றார். "தன்னை புரிந்துகொள்வதே", அவரது பிரதான குறிக்கோளாக விளங்கியது. அவர் தனக்குள் இருந்த புத்தகத்தை மிகவும் கவனமாக, மிகவும் எச்சரிக்கையாக ஆய்வு மேற்கொண்டார். அவர் மதம் தொடர்பான புத்தகங்களை எப்போதாவது புரட்டிப் பார்ப்பார். அப்படி பார்த்தாலும், அதை ஒரு பொழுதுபோக்கு சாதனமாகவே பயன்படுத்துவார். அவர் தனது சாதனாவில் முதிர்ச்சி பெறத்தொடங்கியதும், யோகத்தில அமர்ந்து இருக்கும் போது, தியானத்தின் பேரானந்த புதையலை அனுபவிக்க தொடங்கினார். §
>
> இறைவனுடன் கலந்த ஒரு ஆனந்தமான வாழ்க்கையை வாழ்வதற்கு, கிளிநொச்சி தனக்கு ஒரு பயிற்சி கூடமாக விளங்கியது என்பதை சுவாமி என்றும் மறவாமல் இருந்தார். பிற்காலத்தில், அந்த பகுதி வழியாக தனது சீடர்களுடன் பயணம் செல்லும் போது, "இந்த இடம் தியானம் செய்வதற்கு மிகவும் உகந்தது," என்று தான் யோகப்பயிற்சி மேற்கொண்ட இடத்தை சுட்டிக்காட்டி கூறுவார். §

1897 ஆம் ஆண்டின் முடிவில், யோகநாதன் தனது குருவின் அருகாமையில் இருக்க முடிவு செய்து, தனது பணியை கைவிட முடிவு செய்தார். இதைப்பற்றி எஸ். அம்பிகைபாகனின் குறிப்பு: §

> சுவாமிகள் வாழ்க்கையில் 1897 வருடம் மிகவும் முக்கியமானதாக அமைந்தது. அந்த வருடத்தில், சுவாமி தனது பணியில் இருந்து விலகி யாழ்ப்பாணம் திரும்பி இருக்கவேண்டும். அப்போது சுவாமிகளுக்கு சுமார் இருபத்தி ஐந்து வயதாக இருந்திருக்கும். அந்த சமயத்தில் சுவாமிகள் தனது சமய வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறினார். §

இந்துமதி அம்மா இந்த நிலைமாற்ற காலத்தை பற்றி விவரிக்கிறார்: §

> கண்ணுக்கு தென்படாத காட்சிகளை காண்பிக்க காத்து இருந்த, அருள் மற்றும் இரக்க குணம் நிறைந்த குருவான, செல்லப்ப தேசிகரின் மீது இருந்த தணியாத அன்பு, யோகமுனியிடம் [அமைதியான முனிவர் என்று பொருள்படும் யோக சுவாமியின் இன்னொரு பெயர்] வளர்ச்சி பெற தொடங்கி இருந்தது. தனக்கு அறிவு மற்றும் ஞானத்தின் பாதையை விளக்கி, “வேதங்களை ஆய்வு செய்யாது, அதை அறிந்துக்கொண்டு உணரவும் செய்த” பேரறிவாளன், செல்லப்பாவை பார்த்து அவர் திகைத்து நின்றார். அவர் நாமம் சொல்ல சொல்ல, அதன் இனிமை அதிகரித்துக்கொண்டு சென்றது. செல்லப்பாவின் உருவமே தியான மூலமாக விளங்கியது. அவரது பாதங்களையே பூஜை மூலமாயின. அவரது அமுதமொழிகளே மந்திர மூலமாய் விளங்கின. ஒரு திசைகாட்டி எப்போதும் வடக்கு திசையை காண்பிப்பதை போல, அவர் எந்த பணியில் இருந்தாலும், எந்த வேதனை சகித்துக்கொண்டு இருந்தாலும், அவரது மனம் எப்போதும் தேரடியின் மீதே இருந்தது. ஒளியும் அறியாமையும் ஒன்றாக இருக்க முடியாது என்பதை உணர்ந்த யோகமுனி, தனது வேலை மற்றும் மற்ற லௌகீக சங்கதிகளில் இருந்து விலக முடிவு செய்தார். அவர் சொந்தங்கள், பெற்றோர்கள் மற்றும் உடன்பிறப்புக்களை காட்டிலும் நல்ல முனிவர்களின் சகவாசம் சிறந்தது என்பதை உணர்ந்து, தனது உறவுகளை துறந்தார். இதைப்போல அவர் தனது வேலை, உற்றார் உறவினர்களை துறந்து, தன்னை முழுமையாக அர்பணித்துக்கொள்ள முடிவு செய்து, தேரடி வந்தடைந்தார். அங்கே அவர் செல்லப்பாவின் காலடிகளில் அவரது நல்ல சீடனாக நிலைத்து இருந்தார். §

திரு. பிரவுன் நல்ல மனநிலைக்கு வரும் வரை காத்திருந்த பிறகு, யோகநாதன் தான் வேலையை விட்டு விலகுவதை பற்றி தெரிவித்தார். கண்டிப்பான குணமுடைய ஆங்கிலேயருக்கு இயல்பான சோகம் ஏற்பட்டது மற்றும் அவர் யோகநாதனின் மனதை மாற்ற முற்பட்டார். ஆனால் தான் எடுத்த முடிவில் யோகநாதன் உறுதியாக இருந்தார். அந்த முடிவை ஒரு வருடம் ஒத்தி வைக்க பிரவுன் முயன்றார். ஆனால் இறுதியில், “நீ பணியை விட்டு விலகுவதாக இருந்தால், உன்னைப் போன்ற ஒருவனை பொறுப்பில் நியமிக்கும் பொறுப்பையாவது ஏற்றுக்கொள்,” என்ற நிபந்தனையுடன் ஏற்றுக்கொண்டார். §

அதை யோகநாதன் ஏற்றுக்கொண்டார். அவர் தன் வேலையில் இருந்து மட்டும் விலகாமல், உலக வாழ்க்கையையும் துறக்கவிருந்தார். இது பிரவுனுக்கு தெரியாது, அப்படி தெரிந்து இருந்தாலும் அவரால் புரிந்துக்கொண்டிருக்க முடியாது. யோகநாதன் தான் சென்ற பிறகு குழப்பம் அல்லது பதட்டநிலை ஏற்படக்கூடாது என்று நினைத்ததால், தனக்கு பிறகு பணியில் சேர்பவருக்கு போதுமான பயிற்சி அளிக்கும் வரை பணிக்கு வருவதாக வாக்கு அளித்தார். அவர் அந்த பணிக்கு, 19 வயது நிரம்பிய தனது தம்பி வைத்தியலிங்கத்தை பரிந்துரைத்தார். எப்போதும் ஒரு நிர்வாகியாக செயல்படும் பிரவுன், அந்த இளைஞன் யோகநாதனை போல பணியாற்றினால் மட்டுமே பணியில் சேர்த்துக்கொள்வேன் என்று திட்டவட்டமாகக் கூறினார். தனக்கு வேலை கிடைத்ததில் வைத்தியலிங்கம் மகிழ்ச்சி அடைந்தார். அவர் யோகநாதனின் எளிய குடியிருப்பை பகிர்ந்துகொண்டு, இருவரும் ஒன்றாக இருந்த ஒரு சில வாரங்களில், அவரது அனுபவத்தை கிரகித்துக்கொண்டார். §

நிறுவனத்தின் சேமிப்புக்கிடங்கில் யோகநாதனுடன் இணைந்து இருந்த காலத்தை வைத்தியலிங்கம் நன்றாக நினைவில் வைத்து இருந்தார். அந்த காலகட்டத்தில் சுவாமியின் வாழ்க்கை பற்றிய தகவலுக்கு, அவரது நினைவுகள் ஒரு முக்கிய மூலமாக விளங்கியது. அண்ணனின் உறுதியான பழக்கங்கள் மற்றும் ஆச்சாரமான வாழ்முறை அவரை வியப்பூட்டியது. அவருக்கு சமயத்தில் அதிக ஈடுபாடு இருப்பதை குடும்பத்தினர் எல்லோருக்கும் தெரிந்து இருந்தாலும், அவர் அதிக தொலைவில் கிளிநொச்சியில் வாழ்ந்து வந்ததால், அவரது நாட்டத்தின் ஆழத்தை யாராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. §

யோகநாதன் யோகாசனத்தில் அமர்ந்துகொண்டு, சிவபெருமானின் அருளுக்காக உரத்த குரலில் வேண்டியதால், பல இரவுகள் தான் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து விழித்துக்கொண்டதாக வைத்தியலிங்கம் கூறினார். அவர் தான் இருக்கும் அறையைப் பற்றிய கவனமில்லாமல், தனக்குள் எழுச்சி பெற்று உணர்தலை வழங்கவேண்டும் என்று சிவபெருமானின் ஆற்றலின் அம்சமான சக்தியிடம் பிரார்த்தனை செய்வார். “எனது அன்னையே! எனது ஐயனே!” என்று அவர் கண்ணீர் மல்க இறைவனின் அருளை வேண்டிக்கொண்டு இருக்கும் போது, விழித்திருந்த வைத்தியலிங்கம், இதனை பல மணி நேரங்களுக்கு கேட்டுக்கொண்டு இருப்பார். யோகநாதனுக்கு ஒரு சாதாரண லௌகீக வாழ்க்கை என்றுமே திருப்தியை அளித்து இருக்க முடியாது என்று குடும்பத்தில் மற்றவர்கள் அறியாததை தான் அறிந்துக்கொண்டதாக அவர் கூறினார். அவர் மற்றவர்களின் சாதிக்க நினைக்கும் கற்பனையை கடந்த, பரசிவத்தை உணரவேண்டும் என்ற ஒரு உறுதியான முடிவுடன் இருந்தார். இதைப்பற்றி அவர் பிற்காலத்தில், இந்த பூமியில் பிறவி எடுத்ததே அதற்காகத் தான் என்று குறிப்பிட்டார். §

**துறவறம் மேற்கொள்ளுதல்**

வைத்தியலிங்கத்தின் பணியில் பிரவுனுக்கு திருப்தி ஏற்பட்டு, யோகநாதன் போகலாம் என்று சொல்லும் வரை, சகோதரர்கள் இருவரும் ஒன்றாக பணிபுரிந்து வந்தனர். தான் முழுநேரமும் சாதனாவை மேற்கொள்ளவும், லௌகீக வாழ்க்கையை துறக்கவும் மற்றும் தனது குருவுடன் இருக்கவும் இரணைமடுவில் இருந்து புறப்பட்டார். அவர் அதற்கு தயாராக இருந்ததற்கு, பல பிறவிகளாக மேற்கொண்ட முன்னேற்பாடுகள் காரணமாக இருந்தன. அவர் மேற்கொண்ட தவம் மற்றும் தியானங்கள், முன்பே தனது லௌகீக தளைகளை அறுத்துக்கொண்டு இருந்தன. அத்தை முத்துப்பிள்ளை வீட்டிற்கு யோகநாதன் திரும்பினார். அங்கே அவளுக்கு சொந்தமான நிலத்தில் ஒரு சிறிய குடிசையில் வாழ அனுமதி பெற்றுக்கொண்டார். அவர் துறவறம் மேற்கொள்ளப் போவதாக சொன்னதும் அத்தை ஆச்சரியம் அடைந்தாள், ஆனால் அவரிடம் தென்பட்ட மனஉறுதியை பார்த்ததும் அந்த யோசனையை ஏற்றுக்கொண்டாள். §

இந்த காலகட்டத்தைப் பற்றி, சிவயோக சுவாமியார்: வரலாறும் சாதனைகளும் என்ற தனது புத்தகத்தில் மு. அருணாசலம் நமக்கு விளக்குகிறார்: §

> 1897 மற்றும் 1900 வருடம் வரை, கொழும்புத்துறை பகுதியில் இருந்த அத்தை முத்துப்பிள்ளையின் வீடு, யோகநாதனின் நிரந்தர வீடாக இருந்தது. யோகநாதன் அவள் வீட்டில் இருந்து, சில நாட்கள் நல்லூர் கிளம்பி சென்று, அங்கே பகல் பொழுது முழுவதும் தனது குரு செல்லப்பருடன் கழிப்பார். யோகநாதன் சிலசமயங்களில், தனது நண்பர்களுடன் (விதனையார், துரையப்பா போன்றவர்கள்) நல்லூர் கோயில் சென்று வருவார். மேலும் இந்த காலகட்டத்தில், யோகநாதன் கிளிநொச்சி வரை நடந்து சென்று, அமைதியான மரத்தடியில் தியானப்பயிற்சி மேற்கொள்வார். அதன் பிறகு அவர் மீண்டும் கொழும்புத்துறை வரை நடந்து வந்து, அங்கே சில நாட்கள் தங்கி நல்லூர் கோயிலில் தனது குருவை சந்திப்பார். இது 1900 வருடம் வரை தொடர்ந்தது. 1901 முதல் 1910 வரை, அவர் தனது குரு வழங்கிய தீவிரமான பயிற்சி மற்றும் சாதனாக்களை மேற்கொண்டார். §

யோகநாதன் தனது தம்பியுடன் கிளிநொச்சி மலைகளுக்கு சிறிய பயணம் மேற்கொண்டு, அங்கே வாரக்கடைசிகளில் தங்கியிருந்ததைத் தவிர, அவரது வாழ்க்கையின் மையமாக யாழ்ப்பாணம் விளங்கியது. அவர் தினமும் அதிகாலையில், தனது குருவுடன் இருக்க தனது அத்தையின் வீட்டில் இருந்து நல்லூர் வரை நடந்து செல்வார். அவரை செல்லப்பசுவாமி சிலசமயம் திருப்பி அனுப்பிவிடுவார். யோக சுவாமி தனது குருவுடன் தேரடியில் தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டாரா? இதைப்பற்றி சுவாமி எதையும் பேசவில்லை. ஆனால் 1906 முதல் 1910 வரையிலான காலகட்டத்தில், தனது குருவுடன் அதிகாலையில் நடந்து செல்வதற்கு தயாராக இருப்பதற்காக, அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, முருகன் கோயிலின் தேரடியில் தங்கி இருந்ததாக

தகவல்கள் குறிப்பிடுகின்றன. அவர்கள் இருவரும் சேர்ந்து தினமும் பயணம் செய்து, உணவிற்காக யாசகம் செய்ததாக கண்கூடாக பார்த்த சாட்சியங்கள் தெரிவிக்கின்றன. அந்த காலகட்டத்தில், யோக சுவாமியின் பழக்கங்களாக தான் கேள்விப்பட்டதை, அ. தில்லையம்பலத்தின் மகன் தி. சிவயோகபதி இவ்வாறு விரிவரிக்கிறார்:§

> அவர் காலையில் இருந்து பொழுது சாயும் வரை, தொடர்ந்து தன் குருவுடன், நல்லூர் *தேரடி* மற்றும் நல்லூரை சுற்றியுள்ள பகுதிகள் அல்லது அவரது குடிசையில் இருப்பார். அவர் மெதுவாக மிகவும் உயரிய சாதனாக்களில் ஈடுபட்ட காலத்தில், தன் குருவுடன் தொலைதூர இடங்களுக்கு கால்நடையாக சென்று மீண்டும் *தேரடிக்கு* கால்நடையாக திரும்புவார். அவரது குருவிற்கு ஒரு குறிப்பிட்ட திட்டம் இல்லை என்பதாலும், குரு திடீரென்று விடியற்காலையில் எழுந்து ஏதாவது ஒரு தொலைதூர இடத்திற்கு கிளம்பிவிடுவார் என்பதாலும், யோக சுவாமி எப்போதும் தன் குருவின் காலடிகளில் இருக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தார். அதனால் யோக சுவாமி பெரும்பாலும் இரவுப்பொழுதை *தேரடியின்* படிகளில் கழித்து, தன் அத்தையின் வீட்டிற்கு எப்போதாவது செல்வார். §

யோக சுவாமி தன் குருவுடன் இருக்கும் போது, ஒரு அமைதியான சாட்சி போல நின்று இருப்பார். அவரது மனம் வேறு ஏதாவது ஒன்றின் மீது கவனம் செலுத்தினால் அல்லது “குரு நம்மிடம் எதையும் பேசவில்லை,” என்று நினைத்தால், திடீரென்று செல்லப்பசுவாமி அவரிடம் எதையாவது கொண்டு வருமாறு சொல்லி, குரு செய்யும் எல்லா செயலும் சீடனின் முழுமையான கவனத்திற்கு தகுதியானவை என்பதை நினைவூட்டுவார். நேரம் அல்லது இடம் அல்லது சுற்றுப்புறம் எதுவாக இருந்தாலும், தனது சீடன் எதைப்பற்றி நினைக்கிறான் என்பது செல்லப்பசுவாமிக்கு தெரிந்து இருந்தது. செல்லப்பசுவாமி விரும்பாத ஒன்றை யோக சுவாமி நினைத்தால், அல்லது தன்னையும் தனது குருவையும் ஒன்றாக கருதவில்லை என்றால், செல்லப்பசுவாமி அவரை தீவிரமாக கடிந்துக்கொள்வார். அந்த கடிந்துரையை மற்றவர்களால் தாக்கப்பிடிக்க முடியாது. இந்துமதி அம்மா இந்த கடினமான சாதனாவை விளக்குகிறார்:§

> செல்லப்பா மர்மங்களில் மர்மமாக விளங்கினார். அவர் கும்பிட்டு நிற்கும் அன்பரை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். அதிக அன்புடன் தன்னை வணங்க வரும் அன்பர் மீது சீற்றம் கொள்வார். இந்த சீற்றத்திற்கு ஆளாகிய அன்பர், செல்லப்பசுவாமி தன்னை கவனிக்கவில்லை என்று சற்று விலகி சென்று யோசனையில் ஆழ்ந்து இருக்கும் போது, அவர் வீதியில் செல்லும் மற்றவர்களுடன் சிரித்து பேசிக்கொண்டு இருப்பார். “அவர் வேடிக்கையாக எதையோ பேசுகிறார்,” என்று அன்பர் எண்ணும் போது அரிய மந்திர வாசகங்கள் வெளிவரும். அன்பர் அருகில் சென்றால் காரணமின்றி தாக்குவார். அந்த அன்பர்

விலகி சென்றால், அவரை ஈர்த்துவிடுவார். அதனால் அவருடன் “அகலாது அணுகாது தீக்காய்வார் போல" பழகவேண்டியதாயிற்று. §

சாதுவின் வாழ்க்கை, சாதாரண மக்கள் தங்களுக்கு ஆறுதல் வழங்க ஈடுபடுத்திக்கொள்ளும் இன்பங்களினால் தடைபடாமல் கடினமானதாக இருக்கும். இது கவனத்தை திசை திருப்பும் இன்பங்கள் என்று யோக சுவாமி குறிப்பிட்டார். ஆனால் அவர்களது கிராமப்புற தெருக்களில் நடந்து செல்லும் சலுகையை மட்டும் செல்லப்பசுவாமி வழங்கி இருந்தார். எந்த ஒரு இலக்கும் இல்லாமல், காலத்திற்கு உரிய மதிப்பு அளிக்காமல் தங்களது நிலத்தை பார்த்துக்கொண்டு, அதன் அரசர்களை போல, நிதானமாகவும் அகலக்கால் வைத்தும் விசாலமான பகுதியில் சுற்றித்திரிவார்கள். அது அவர்களுக்கு வாழ்க்கையின் சிறிய கொண்டாட்டங்களில் ஒன்றாக விளங்கியது. §

அவர்கள் பெரும்பாலும் எல்லா நாட்களும், கிராமத்து வீதிகளில் யாசகம் செய்துக்கொண்டு இருப்பார்கள் அல்லது செல்லப்பசுவாமிக்கு மட்டுமே தெரிந்த விசித்திரமான இடங்களில் தியானம் செய்துக்கொண்டு இருப்பார்கள். அவர்கள் சுற்றியிருந்த கிராமங்களில் இருந்த கிராமப்புற சந்நிதிகள் அல்லது கோயில்களை வலம் வந்தார்கள். சிலசமயங்களில், அன்றைய தினம் செல்லப்பசுவாமி மனதில் நினைத்து இருந்த கோயில் அல்லது சந்நிதிக்கு பல மணிநேரம் நடந்து செல்வார்கள். அங்கே அவர்கள் நிழலில் அமர்ந்து தியானம் செய்வார்கள். ஆனால் அவர்கள் வந்து சேர்ந்ததும் ஏதாவது சரியாக இல்லையென்றால் அல்லது தவறாக தோன்றினால், செல்லப்பசுவாமி வேறொரு கோயிலுக்கு நடந்துகொண்டு இருப்பார். நாள்முழுவதும் இடைவிடாது, சிலசமயங்களில் ஐம்பது கிலோமீட்டர் வரை நடந்து செல்வது அவர்களுக்கு பழக்கமாகி இருந்தது. அவர்கள் நல்லூருக்கு விரைவாக அல்லது தாமதமாக திரும்பும் போது, இருவருக்காக செல்லப்பசுவாமி உணவு சமைக்கத் துவங்குவார். §

யோக சுவாமியிடம் இருந்து எந்த ஒரு மரியாதை அல்லது பக்தியையும் தன்னால் அனுமதிக்க முடியாது என்பதை செல்லப்பசுவாமி மீண்டும் தெளிவுப்படுத்தினார். தனது சீடன் தனக்கு சேவை செய்வது, சமைப்பது அல்லது சுத்தம் செய்வது அல்லது பராமரிப்பு வேலைகளில் ஈடுபடுவதை அவர் என்றுமே அனுமதிக்கவில்லை. யோக சுவாமி தன்னை தரையில் விழுந்து வணங்க முயன்றால் அல்லது தான் திரும்பி இருக்கும் போது கையை உயர்த்தி *நமஸ்காரம்* செய்ய முயன்றாலும், அவர் உரத்த குரலில் அதட்டுவார். அவருக்கு இவரது செயல்கள் தெரிந்ததும், தீவிரமாக நிந்திப்பார் மற்றும் அதை அவர் விரைவில் நிறுத்தவில்லை என்றால் ஒரு சமயத்தில் காலால் உதைக்கவும் செய்திருக்கிறார். இதைப்பற்றி யோக சுவாமி வழங்கும் குறிப்பு:§

என்னைநீ வேறாயெண்ணி இடர்ப்பட வேண்டாமென்று

தன்னைத்தந் தாண்டுகொண்ட சற்குரு தாள்கள் வாழ்க.§

ஒரு சீடன் தனது குருவை சிவபெருமானின் உருவமாக பாவித்து, இரவு பகல் பாராமல் அவரது உடைகளை துவைப்பது, உணவு கொண்டு வருவது, தூது செல்வது மற்றும் மற்ற பணிவிடைகளை செய்ய வேண்டும் என்று இந்து கலாச்சாரம் வற்புறுத்துகிறது. இதை யோக சுவாமி அறிந்து இருந்தார் மற்றும் தனது இதயத்தில் நிரம்பி இருந்த, நன்றி கலந்த அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்ற ஏக்கத்துடன் இருந்தார், ஆனால் செல்லப்பசுவாமி குரு மற்றும் சீடனுக்கு இடையே, அவர் மேற்கொள்ளும் எந்த ஒரு இருமைவாத பக்தியின் வெளிப்பாட்டையும் நிரகரிப்பதில் தீவிரமாக இருந்தார். யோக சுவாமியின் பயிற்சி அவரிடம் இருந்து அதிகமாக எதிர்பார்த்தது. அவர் தன் குருவை அதிகமாக விரும்பினார், ஆனால் செல்லப்பசுவாமி தன் இளவயது சீடனிடம் கண்டிப்பாக இருந்து, மெதுவாக அவருக்கு பொறுமை, அமைதி, சேவை மற்றும் ஆன்மீக பக்குவத்தை வழங்கினார். §

எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதை பொருட்படுத்தாமல், செல்லப்பசுவாமி தான் மட்டும் தான் உலகில் இருப்பதை போல, தொடர்ந்து பேசிக்கொண்டு இருப்பார். அவர் *அவன், அவள்* அல்லது *அது* என்ற சொல்லை அபூர்வமாக பயன்படுத்தி, முன்னிலையை என்றுமே பயன்படுத்தாமல், தான் சொன்ன தெளிவற்ற சொற்றொடர்களை பல மாதங்களுக்கு மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டு இருந்தார். தன்னுடன் யோக சுவாமி இருந்த போது, செல்லப்பசுவாமி ஒரு வருடம் முழுவதும், “இந்த உலகில் இயல்பாக தீய பண்புடன் எதுவும் இல்லை. எந்த பொல்லாப்பும் இல்லை,” என்று சொல்லிக்கொண்டு இருந்தார். குரு முணுமுணுத்தது அனைத்தும் மிகவும் உயர்வான கருத்துக்களை தெரிவிக்கவில்லை. செல்லப்பசுவாமியின் வாசகங்கள், புரிதலை கடந்த சிந்தனையின் தொடர்ச்சி என்றும், அவருடைய உதட்டில் இருந்து உதிரும் முத்துக்களை சேகரிக்க அவற்றை கவனமாக கேட்கவேண்டியிருந்தது என்றும் பிற்காலத்தில் யோக சுவாமி குறிப்பிட்டார். §

இருவரையும் ஒன்றாக பார்த்த மக்கள், குரு சொல்வதை எவ்வாறு அந்த சீடனால் புரிந்துகொள்ள முடிகிறது என்று வியந்தனர். இருவருக்கும் இடையே வெளிப்படையான கருத்து பரிமாற்றங்கள் எதுவும் மக்களுக்கு தென்படவில்லை. ஆனால் செல்லப்பசுவாமியின் பித்து பிடித்த நிலையில் மறைந்து இருந்த ஒவ்வொரு சைகை, ஒவ்வொரு சொல், ஒவ்வொரு பார்வையையும், யோக சுவாமி தனது சொந்த இயல்பை சுத்தப்படுத்த மற்றும் தனது சாதனாவை முழுமையாக்க பயன்படுத்திக் கொண்டார். தனது வாழ்க்கை முழுவதும், செல்லப்பசுவாமியின் முழுமையான தூய்மைக்கு யோக சுவாமி மதிப்பு அளித்தார். அவர் மிகவும் தூய்மையாக இருந்ததால், அவருக்கு அருகில் தூய்மையற்ற எதுவும் தாக்கு பிடிக்காது. பின்வரும் *நற்சிந்தனையில்,* யோக சுவாமி ஒரு தெளிவான விளக்கத்தை வழங்குகிறார்: §

> விருப்பு வெறுப்பை வேரோடு அழித்து, திருவடியை மறவாத சீருடையாளர், “ஒரு பொல்லாப்பும் இல்லை” என்று தெளிவாக அறிவித்தவர், குருவின் அற்புத உருவாய் இருக்கிறார்! முழுதும் உண்மை

என்று இடைவிடாது அறிவித்து, நல்ல மற்றும் தீய சிந்தனைகளை கடந்து, தன்னையும் என்னையும் ஒன்றாக உணர்ந்து, அவ்வாறு தனது சிந்தையிலும் வைத்திருந்த எனது ஆசான், அன்பின் வாயிலாக, எனது தலையில் அவரது பொற்பாதத்தை வைத்தார். §

இந்த உலகத்தால் என்றுமே அறியப்படாமல், விசரனாக "ஆரறிவார்? ஆரறிவார்?" என்று தொடர்ந்து சொல்லும் செல்லப்பன் என்ற பெயருடைய உயர்வான தீர்க்கதரிசி, தினமும் தேரடி படிகளில் அமர்ந்து இருப்பார். கருமேகத்தை போன்ற மேனியுடன், எப்போதும் தனது கையை தலையணையாக வைத்து தரையில் உறங்குவார். அவர் சுத்தமான தண்ணீரும் செழிப்பான நிலங்களும் மிகுதியாக இருந்த நல்லூரில், அருள் மற்றும் கௌரவத்துடன் குருவின் வடிவில் வாழ்ந்தார். "யாம் அறியோம்" என்ற மிகவும் சிறந்த மற்றும் புனிதமான மந்திரத்தை அனைவருக்கும் அறிவித்து, தனது இதயத்தில் இருந்து மாயை, காமம் மற்றும் கோபத்தை அழித்த வல்லவர், செல்லப்பர் என்ற பெயருடன், நல்லூரில் வாசம் செய்கிறார். §

ஒரு ஈடு இணையற்ற புதையலாக, பல யுகங்களாக அப்படியே உள்ளது என்று மீண்டும் மீண்டும் சொல்லும், யாராலும் விளக்க முடியாத விசரன், நிரந்தரமாக முருகப்பெருமானுக்கு அருகில் வாழ்கிறார். பேச்சாளர்கள் மற்றும் கவிஞர்கள் தலை வணங்கும் நல்லூரில், எனது பாதுகாவலர், என்னை தன்னுடையதாக்கி பிறப்பு மற்றும் இறப்பில் இருந்து விடுதலை அளித்து, புனிதமான செல்லப்பனின் தெய்வீக மற்றும் தூய்மையான உருவத்தில், கந்தசுவாமியின் சந்நிதியில் தனது சேவையை நிறைவேற்றுகிறார். §

பின்வரும் சுருக்கத்தில், செல்லப்பசுவாமியின் உருவமில்லாமல் போதிக்கும் பாணிக்கு இந்துமதி அம்மா  உருவத்தை வழங்குகிறார்:§

செல்லப்பர் என்ற இனிமையான நறுமணமுள்ள மலரின் தித்திக்கும் தேன் துளிகளை, அவரை சுற்றி வந்த யோக சுவாமி சேகரித்ததை இவ்வாறு குறிப்பிடலாம். முதலில், செல்லப்பர் அறிவின் பாதையை "*ஆரடாநீ?*" ( யார் நீ?) என்ற அரிய மந்திர வார்த்தைகளால் கற்றுத்தந்தார். பிறகு ஒருவர் தனக்குள் ஆழமாக ஆய்வு மேற்கொள்வதன் மூலம், இதை புரிந்துகொள்ளும் பாதையை "*தேரடாவுள்*" (உனக்குள் தேடு) என்ற வார்த்தைகளால் கற்றுத்தந்து அவருக்கு வழிகாட்டினார். §

உள்ளக்குள் ஆய்வு மேற்கொள்வதற்கு தடையாக லௌகீக பற்று இருந்ததால்; "*தீரடாபற்று*" (பற்றை கைவிடு) என்று கூறினார். தனக்குள் ஆய்வு மேற்கொள்ளும் போது, முழுமையாக இருள் சூழ்ந்து  இருப்பதை கண்ட சீடன், "*ஒரு பொல்லாப்பும் இல்லை*" (தவறாக எதுவும் இல்லை) என்ற  வாசகத்தால் பதட்டம் அடைந்ததும், அந்த சீடனை அவர் அமைதிப்படுத்தினார். §

"ஒரு பொல்லாப்பும் இல்லை," என்ற வாசகத்தின் பொருளை புரிந்துகொள்ள முடியாமல், யோக சுவாமி மனம் குழம்பி நின்ற போது, குரு அவரை கந்தன் கோயிலின் முன்பக்கம் அழைத்து சென்றார். கோயிலில் திரை மூடப்பட்டதும், அறிவின் வேலை காண்பித்து, மாயையை திரையால் மூடிய பிறகு பிரம்மம் மட்டுமே நிலைத்து இருக்கும் என்ற வேதாந்த உண்மையை விளக்கினார். சீடன் மாயையில் இருக்கும் மர்மத்தை பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் போது, "அது அப்படியே உள்ளதை காண்" என்ற மகாவாக்கியத்தை வழங்கினார். மற்றும் அந்த மர்மத்தை விளக்க, "ஆரறிவார்?" (யார் அறிவார்?) என்று கூறினார். §

அறிவின் பாதையை கற்றுத்தந்த பிறகு, அவர் யோகத்தின் பாதையை கற்றுத்தந்தார். *வாசி யோகம் தேர்* [பிராணயாமம்: சுவாசக் கட்டுப்பாடு] *(வாசி யோகத்தில் தேர்ச்சி பெறு). இரு வழிகளை அடக்கு*—[*இடா* மற்றும் *பிங்களா* அந்த இரண்டு பாதைகள் ஆகும்]; *கரு வழியை கட; நாசி நுனியை நோக்கு;* உனது சிந்தனையில் கவனம் சிதறாமல் இரு; காசிதேசம் செல்; *பச்சை புரவியிலே பாங்காக ஏறு* (பச்சை குதிரை மீது பாங்காக ஏறு) [சுவாசக்கட்டுப்பாட்டை குறிப்பிடுகிறது]. *தச்சன் கட்டா வீட்டிலே தாவு பரி கட்டு* (தச்சன் [உடல்] காட்டாத வீட்டில், தாவும் குதிரையை கட்டு) [மீண்டும் சுவசக்கட்டுப்பாட்டை குறிப்பிடுகிறது]. யோகத்தை பற்றி எதுவும் படிக்காமல், அதில் பயன்படுத்தப்படும் நுட்பமான சொற்கள் அனைத்தையும் அறிந்து இருந்த செல்லப்பசுவாமி, யோக பாதையின் நுணுக்கங்கள் மற்றும் விவரங்களை கற்றுத்தந்தார். அவர் சீடான விளங்கிய யோகருக்கு, யோக பயிற்சியில் முன்னேறும் போது தோன்றும் பல்வேறு அறிகுறிகள் மற்றும் விழிப்புணர்வுகளைப் பற்றி விளக்கினார். §

பிறவியின் பாதையை கடந்ததும், மனம் கட்டுப்பாட்டை பெறும் என்றும், ஒருவர் தனது முக்கின் நுனி மீது கவனம் செய்துக்கொண்டு கண் விழித்தால், அவருக்கு பிரபஞ்ச நடனம் தெரியும் என்றும், இன்னொரு நிலையில் அவருக்கு இனிமையான சங்கீத இசை கேட்கும் என்றும் மிகவும் தெளிவாக விளக்கினார். யோக சுவாமி முன்பு பயிற்சி மேற்கொண்ட பக்தி பாதையை கைவிடாமல் இருக்க, அவர் "அக்குமணி அணி" (ருத்தராட்ச மாலையை அணி); "அஞ்செழுத்து ஓது" (ஐந்து எழுத்துக்களை மீண்டும் மீண்டும் சொல்); *நெக்கு நெக்கு உருகு* (இதயம் மெல்ல மெல்ல உருகட்டும்) போன்ற வாசகங்களின் மூலம் அவரை ஊக்குவிக்கவும் செய்தார். §

ஒரு நாள் குருவும் சீடனும் தெருவில் நடந்து சென்றுகொண்டு இருந்தார்கள். பெரும்பாலான மக்கள் கீழே நிலத்தை பார்த்து நடப்பார்கள். ஆனால் செல்லப்பசுவாமி எப்போதும் போல், நேராக தலைநிமிர்ந்து தைரியமாக நடந்து சென்றார். அவர்கள் இருவரும் சேர்ந்து நடந்த ஐந்து வருடத்தில், தெருவில் பல எரும்புப்புற்றுக்கள் இருந்தாலும், தனது குரு அதில் ஒன்றையும்

மிதிக்காமல் சென்றது யோக சுவாமியை வியக்க வைத்தது. ஆனால் யோக சுவாமி தங்கள் பயணத்தின் போது அவற்றை மிதிக்காமல் கவனமாக செல்லவேண்டி இருந்தது.§

இந்த முறை வெளியே சென்ற போது, குரு அவ்வபோது தன்னை நோட்டமிடுவதை யோக சுவாமி கவனித்தார். அவர் ஏதாவது தவறு செய்து இருந்தாரா? அப்படி எதுவும் இல்லை. ஒரு கிராமத்தை நெருங்கும் போது, செல்லப்பசுவாமி தனது நடை வேகத்தை அதிகப்படுத்தி, நேராக சந்தையை நோக்கி நடந்தார். அவர் ஏதோ வாங்க வந்ததைப் போல, ஒரு மணி நேரத்திற்கு கடை கடையாக ஏறி இறங்கினார் மற்றும் அவ்வபோது யோக சுவாமியையும் நோட்டமிட்டார். அவரது சீடன் அமைதி காத்து இருந்தார். §

அவர்கள் நீண்டநேரம் கிராமத்தை சுற்றிவிட்டு, வயல்களில் இருந்த கால்நடை தடங்கள் வழியாக நடந்து சென்றனர். செல்லப்பசுவாமி சாலையை சென்றடையும் வரை விரைந்து சென்றார், பின்னர் தனக்குத்தானே பேசிக்கொண்டு மற்றும் தனது சீடனை கண்காணித்துக்கொண்டு மெதுவாக நடந்து சென்றார். அவர்கள் ஒரு சாலை சந்திப்பில் இடது பக்கமாக திரும்பி ஆறு மீட்டர் தூரம் சென்றிருக்கையில், முனிவர் திடீரென்று யோக சுவாமி பக்கம் திரும்பி, அவரை சந்தேக கண்ணுடன் பார்த்தார்.  அந்த பார்வை “நீ எதற்காக என்னை பின்தொடர்ந்து வருகிறாய்?” என்று கேட்பது போல இருந்தது. தங்களது உறவின் ஆழமான நோக்கத்தை ஆய்வு செய்ய, செல்லப்பசுவாமி தனது சீடனிடம் சவால் விடுகிறாரா?§

செல்லப்பசுவாமி தனது உணவில் மிகவும் கவனமாக இருந்தார். அவரது உணவு பெரும்பாலும் அவரால் தயாரித்ததாக இருக்கும், மற்றும் அதில் பயன்படுத்தப்படும் பொருட்கள் சுத்தமாகவும் புதிதாகவும் இருப்பதை உறுதி செய்து கொள்வார். அவர் சமைக்கும் உணவை யாராவது பார்த்து விட்டால் அல்லது அவர் சமைக்கிறார் அல்லது சாப்பிடுகிறார் என்று யாராவது அவரைப்பற்றி நினைத்துவிட்டாலும், உடனே தான் செய்வதை நிறுத்திவிட்டு விரதம் இருப்பார். பெரும்பாலான சீடர்கள் அவருக்கு அன்பளிப்பாக கிழங்குகளை கொண்டு வருவார்கள், ஆனால் அவர் அதை சாப்பிடாமல், தோட்டத்தில் குழி தோண்டி அதில் புதைத்து வைப்பார். அதில் இலைகள் தோன்ற தொடங்கியதும், அவர் தனது சகோதரியிடம் அதை பறித்து  தனக்கு சமைத்து தரும்படி கூறுவார். அதைப்போலவே, மக்கள் தனக்கு வழங்கும் படையல்களில் பயன்படுத்தும் அதிர்வுகள் மீது மிகவும் கவனமாக இருப்பார். §

அவரது சீடர்களில் ஒருவர், நல்லூர் கைலாசநாதர் சிவன் கோயிலின் பிரதான பூசாரியாக இருந்தார். அவர் தனது சாதியின் விதிமுறைகளை தீவிரமாக பின்பற்றும் ஒரு ஆச்சாரமான பிராமணராக இருந்தார். அவரது வீடு கோயிலுக்கு அருகாமையில் இருந்தது. ஒரு நாள், தன் வீடு வழியாக செல்லப்பசுவாமி நடந்து செல்வதை அவர் கவனித்தார். அவர் சுவாமியை அழைத்து, பூஜையில் இருந்து சற்றுமுன் கொண்டு வரப்பட்ட பொங்கலை தன்னுடன் சேர்ந்து சாப்பிடுமாறு வேண்டிக்கொண்டார். அவருக்கு

செல்லப்பசுவாமியின் பழக்கங்கள் தெரியும் என்பதால், அவர் சாப்பிட மறுப்பார் என்று நினைத்தார். ஆனால் என்ன ஆச்சரியம், குரு சேர்ந்து சாப்பிட வீட்டிற்குள் நுழைந்துவிட்டார். §

அவருக்கு பொங்கல் வழங்கப்பட்டது, வாடிய முகத்துடன் செல்லப்பசுவாமி தான் மிச்சம் மீதியை சாப்பிடுவதில்லை என்று கூறினார். “இதை யாரோ சாப்பிட்டு இருக்கிறார்கள், ” என்று கூற, உடனே பூசாரி, “இல்லை, இல்லை. இதை யாரும் பார்க்கவே இல்லை,” என்று கூறினார். அவர் கருவறையில் இருந்து அதை நேராக கொண்டு வந்ததாக கூறினார். ஆனால் செல்லப்பசுவாமி உறுதியாக இருந்தார். பூசாரி அந்த பொங்கலை தயார் செய்த தன் மனைவியை அழைத்து, அதை யாராவது தொட்டார்களா என்று கேட்டார். அதை யாரும் தொடவில்லை என்பதில் அவள் உறுதியாக இருந்தாலும், கோயிலுக்குள் எடுத்து செல்லும் முன், தங்கள் இளைய மகன் அதை சாப்பிட்டானா என்று விசாரிக்கலாம் என்றாள். அவர்கள் விசாரித்த போது, தனது தந்தை அதை பூஜையில் நெய்வேத்தியம் செய்வதற்கு முன்பாக, அதில் இருந்து ஒரு கவளம் எடுத்து சாப்பிட்டதாக ஒப்புக்கொண்டான். §

யாழ்ப்பாணத்தில் இருந்த பெரும்பாலான மக்கள், செல்லப்பசுவாமி ஒரு முழுமையான விசரன் என்பதில் அல்லது ஒரு சாதுவாக ஆசிகளை பெறுவதற்கு தகுதியற்றவர் என்பதில் உறுதியாக இருந்தனர். அவரது போலி வேடம், அவரை நல்லூரில் பார்த்த முதல் நாளே யோக சுவாமிக்கு புரிந்துவிட்டது. இந்த இளைஞனை உணர்தலின் உச்சத்திற்கு எடுத்து செல்லவேண்டும் என்று குறிக்கோளுடன் உறுதியாக இருந்த, செல்லப்பசுவாமியின் கண்களை உணர்ந்த தருணம், யோக சுவாமி உள்ளத்தில் நிலைத்து இருந்து, அவருக்கு தேவையான உறுதியை வழங்கியது. யோக சுவாமியை பொறுத்தவரை, தான் சாதிக்க நினைத்த அனைத்தையும், அப்போது சாதித்து இருந்தார். அதைத்தொடர்ந்த மாதங்களில், அது விரிவாக்கம் மட்டுமே பெற்று வந்தது. அவர் செல்லப்பசுவாமியுடன் இணைந்து இருந்த முதல் வருடம், அந்த தருணத்தின் இயல்பான விரிவாக்கமாக இருந்தது. அவர் குரு அனுமதி வழங்கும் இடமெல்லாம் அவரை பின்தொடர்ந்து சென்று, என்ன தேவைப்பட்டது என்பதை தெரிந்துகொள்ள காதால் கேட்டு, கண்களால் பார்த்து, பொறுமையான வார்த்தை அல்லது பார்வைக்காக காத்து இருந்தார். யோக சுவாமி விழித்து இருந்தாலும் அல்லது உறக்கத்தில் இருந்தாலும், அவரது சிந்தனைகள் குருவையும் மந்திரசக்தி நிறைந்த அவரது அருளையும் சுற்றியே அமைந்து இருந்தன. §

Page 24 URL:
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/24_yo03_03.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## பத்தாவது அத்தியாயம்

# “நீ என்னை இன்னும் எட்டிப்பிடிக்க வில்லை”

செல்லப்பா மற்றவர்களிடம் நேரடியாக பேசியது மிகவும் குறைவு.

அவர் யோக சுவாமியிடம், தான் அவரது குரு என்று எப்போதும் சொல்லியது இல்லை; அவ்வாறு அவரிடம் பேசியதும் இல்லை. ஆனால் அவருக்கு பயிற்சி அளித்தார். யோக சுவாமி தனது மனதை குருவின் மனதுடன் முழுமையாக ஒருங்கிணைத்து, அவரது மறைமுக அறிவுறுத்தல்களை கிரகித்துக்கொள்வதற்காக, தனது சிந்தனைகள் மற்றும் உணர்ச்சிகள், திட்டங்கள், பேச்சு மற்றும் உடை என்று தனது பண்புகள் அனைத்தையும் மாற்றிக்கொண்டார். §

செல்லப்பசுவாமி தனது பணியை சர்வசாதரணமாக செய்தார். அவர் யோக சுவாமிக்கு எப்போதும் ஒருமுகச்சிந்தனையுடன் இருக்க பயிற்சி அளித்தார் மற்றும் அவரது மிகவும் நுணுக்கமான பழக்கங்கள் மற்றும் பற்றுகளை தகர்த்து எரிவதில் எந்த வாய்ப்பையும் நழுவவிடாமல், நடவடிக்கை ஏதும் இல்லை என்றாலும், இருவரும் சேர்ந்து இருந்த ஒவ்வொரு தருணமும், தனது சீடனிடம் கவனசிதறல் இல்லாத முழுமையான கவனத்தை வலியுறுத்தினார். செல்லப்பசுவாமியுடன் இருக்கும் போது ஒரு நடைமுறை ஒழுங்கு, ஒரு ஓய்வு, ஒரு தளர்வு என்று எதுவும் இருக்காது. அவருடன் சேர்ந்து இருக்கும் ஒரு நாள், ஒரு வருடத்திற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்க்கைக்கு சமமாக இருக்கும். §

அவரது தொடர்ச்சியான உளறல் குழம்பிய பேச்சாக இல்லாமல், தன்னை குறிப்பிடும் அக்கறையுள்ள, கவனமான அறிக்கைகளாக இருந்தன. அவர் ஒரு தெளிவான முடிவு அல்லது நோக்கம் இல்லாமல் தொடர்ந்து தனக்குத்தானே தொடர்ந்து பேசிக்கொண்டு இருந்தாலும், ஒவ்வொரு சொல்லுக்கும் பின்னால் இருந்த அவரது குரல் மற்றும் உணர்ச்சி வெளிப்பாடு, அவர் மனதின் முழுமையான சக்தியை வெளிப்படுத்தின. அது யோக சுவாமியை வெகுவாக

கவர்ந்தது. முடிந்தவரை முயற்சி செய்தாலும், ஆழமாக ஒரு லயத்துடன் இருந்த செல்லப்பசுவாமியின் குரல் நயம் மற்றும் அபத்தம் போல அவரது உதடுகளில் இருந்து வெளிவந்த வாசகங்களுடன் இணைந்த பிரகாசமான பார்வைக்கு, அவரால் ஈடு கொடுக்க முடியவில்லை. §

மிகவும் மோசமான பிதற்றலுக்கு மத்தியில் வழக்கமாக ஒரு முத்து போன்ற மிகவும் சுத்தமான ஞானம் இருக்கும் என்பதாலும், செல்லப்பருக்கு நெருக்கமாக இருந்தவர்களால் மட்டுமே உயரிய ஞானத்தின் மதிப்புமிக்க அறிக்கைகளை கேட்கமுடிந்தது என்பதாலும், யோக சுவாமிக்கு கேட்பதில் சலிப்பு ஏற்படவில்லை.  அவர் தனது குரு அர்த்தத்துடன் மற்றும் அர்த்தமில்லாமல் பேசிய, ஒவ்வொரு வார்த்தை மீதும் கவனம் செலுத்தியதால், இந்த முத்துக்களை யோக சுவாமி  கிரகித்துக்கொண்டு தனது சொந்த ஆன்மீக மனதை திறக்கும் நோக்கத்துடன் பயன்படுத்திக் கொண்டார். இந்த முத்துக்களை மட்டும் செல்லப்பசுவாமி போதனைகளாக வழங்கி இருந்தால், அவை சீடனுக்கு ஞானத்தை வழங்க போதுமானதாக இருக்கும். யோக சுவாமி பிற்காலத்தில், தனது சற்குருவின் *மகாவாக்கியம்* என்ற பெயரில் தலைசிறந்த அறிக்கைகளாக, இந்த சூத்திரங்களை தனது சீடர்களுக்கு வழங்கினார். §

தனது கவிதை தொகுப்பான, நற்சிந்தனையில் யோக சுவாமி இந்த நான்கு பொருத்தமான அறிக்கைகளை, “முழுதும் உண்மை. ஒரு பொல்லாப்பும் இல்லை. எப்போவோ முடிந்தது. நாம் அறியோம்.” என்று தொகுத்து வழங்கினார். இந்த வாசகங்களைப் பற்றி கவனமாக சிந்தித்து பார்க்கும் போது, அது மனதிற்குள் ஆழமான உட்பார்வையை வழங்கும் அளவிற்கு மனதில் ஊடுருவும் என்று யோக சுவாமி விளக்கம் அளித்தார். இயல்பான இருமை பண்பு மற்றும் சுயமாக-உருவாக்கப்பட்ட கோட்பாடுகளாக இருக்கும் மனதின் உணர்தல்,  சாதனாவின் மூலம் மனதை கடந்து இருக்கும் பரசிவம், அத்வைத பரமாத்துமா, முழுமுதற்பொருளின் உணர்தலை நோக்கி வழிநடத்தி செல்கிறது. அவர் தனக்கு நெருக்கமான சீடர்களிடம், இந்த வாசகங்களை ஆழமான தியானம் செய்யும் விசைகளாக பயன்படுத்துமாறு குறிப்பிட்டார். அவை ஒரு மொழி வழங்கக்கூடிய ஆழமான போதனைகளாக விளங்குகின்றன. §



செல்லப்பசுவாமி ஒரு கந்தலான வேட்டி உடுத்திய ஒரு புதிராக விளங்கினார். தனக்குத்தானே தத்துவ பழமொழிகளை முணுமுணுத்துக்கொண்டு,

*புதியவர்களை நிந்தனை செய்த இந்த தனிமையான சாது, அந்த காலத்தில் அதிக ஞானோதயம் பெற்ற ஆன்மாக்களில் ஒருவராக விளங்கினார் என்பது வெகு சிலருக்கே தெரிந்து இருந்தது.*

........................§

செல்லப்பசுவாமியை தூரத்தில் இருந்து பார்க்கும் போது, கோயிலை சுற்றி வரும் ஒரு சாதாரண சாதுவாகவே காட்சி அளித்தார். வெகு சிலரே அவரது ஆன்மீக சக்தி மற்றும் ஆன்மாவின் பக்குவத்தை அறிந்து இருந்தார்கள். அந்த வெகு சிலர் இவரது விசுவாசமான சீடர்களாக மாறி, அதட்டல்கள் மற்றும் முட்டாள்தனமான பேச்சுக்கள் குறைவாக இருந்தாலும் அல்லது அதிகமாக இருந்தாலும், உற்சாகமாக தாங்கிக்கொண்டு இருந்தார்கள். இது அவர்களை குறிவைக்கவில்லை என்றும், அவர் வழங்கும் போதனைகளை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லாதவர்கள் மற்றும் கோழைகளை துரத்தி அனுப்புவதற்காக, அவர் பயன்படுத்திய உத்தி என்பதை அவர்கள் அறிந்து இருந்தார்கள். மக்கள் தன்னை தவறாக புரிந்துக்கொண்டு இருக்கிறார்கள் என்று செல்லப்பசுவாமி வருந்தவில்லை. இதனை யோக சுவாமி “விசரன்" என்ற பாட்டில் குறிப்பிடுகிறார்: §

கந்தை துணியணிவான் கந்தன்திரு முன்றில்நிற்பான்

வந்தாரைப்போ வாரைவாயில் - சின்னதங்கம்

வந்தபடி ஏசிடுவான்.

அப்படியே உள்ளதென்பான் அங்குமிங்கு மாயலைவான்

செப்படி வித்தையென்பான் - சின்னதங்கம்

தேரடியில் இருப்பானடி.

சாதி சமயமென் னுஞ் சங்கடத்துக் குள்ளாகான்

சேதியொன் றுஞ் சொல்லகில்லான் - சின்னதங்கம்

சித்த பிரமையென்பார்.

நீதி அநீதிஎன்னும் நிலைமையொன்றும் இல்லா தான்

மாதிரிகள் ஒன்றுஞ்செய்யான் - சின்னதங்கம்

மத்தன்னைப்போல் திரிவானடி.

நீறு மணியான் நெற்றியிலே பொட்டுமிடான்

கூறிய தைக்கூறான் - சின்னதங்கம்

குணமொன்று  மில்லானடி.

ஆறுதலா யிருமென்னான் ஆணவத்தை நீக்குமென்னான்

மாறுபாடாய்ப் பேசிடுவான் - சின்னதங்கம்

மதியிழந்தான் என்பராடி.

சின்னத் தனமாய்த் தெருவாலே போவாரை

என்னப்பன் பேசிடுவான் - சின்னதங்கம்

இவன் விசரன் என்பாரடி.

உல்லாச நடையனடி ஊரூராய்த்  திரிவானடி

எல்லோரு மிவனைக்கண்டு - சின்னத்தங்கம்

ஏளனஞ் செய்வாராடி. §

“உலகில் இருக்கும் அனைத்து வங்கிகளின் பணமும் என்னுடையது,” என்று அவர் மீண்டும் மீண்டும் சொன்னதாக ஒரு குறிப்பு கூறுகிறது. ஒருமுறை அவருக்கு கட்டுமஸ்தான உடலுடைய ஒருவரின் அறிமுகம் கிடைத்தது. அந்த நபர் தன் உடலமைப்பின் மீது பெருமையுடன் இருந்தார். அவர் தன் தசைகளை வளைத்து தன் நெஞ்சை புடைக்க செய்தார். இதைப்பார்த்த செல்லப்பசுவாமி, அந்த நபரை சுட்டிக்காட்டி, “அந்த உடல் என்னுடையது!” என்று கத்தினார். தனது உடலைமைப்பை வளர்க்க பல வருடங்கள் உழைத்து இருந்த அந்த நபர், அந்த அத்வைத கோரிக்கையை கேட்டு அதிர்ச்சி அடைந்தார் மற்றும் அவர் மனம் தளர்வடைந்தது. §

அவரை சந்தித்தவர்களில் பெரும்பாலானோருக்கு அவரது முரடுத்தனம் மட்டுமே நினைவில் இருந்தாலும், செல்லப்பசுவாமி ஒரு சுதந்திர ஆன்மாவாக இருந்தார். அவர் பூமியும் அதன் மீது இருக்கும் அனைத்தும் தனக்கு சொந்தம் என்பதைப் போல, கருணை மற்றும் கவலையற்ற பண்பை வெளிப்படுத்தி, தனது நடத்தை மற்றும் தனது நிற்கும் தோரணையில் ஒரு அரசரின் நேர்த்தியுடன் பவனி வந்தார். அவர் அதிகமான சீடர்களை ஈர்த்துக்கொள்வதில் கவனம் செலுத்தவில்லை. அவர் தனக்கு பலனாக எதையும் எதிர்பார்க்காமல், தயாராக இருந்தவர்களுக்கு போதனைகளை வழங்கினார். அவர் இரகசியமாக வேலை செய்தாரா அல்லது எப்போதும் வெளிப்படையாக இருந்தாரா? அவர் நம்பியிருந்த தனது பைத்தியத்தின் போர்வையால் அதிசயத்தில் ஆர்வமுள்ளவர்கள், அதிசயத்தின் வியாபாரிகள் மற்றும் கோழைகளை தவிர்த்தார். §

அவரது பெரும்பாலான சீடர்கள் சம்சாரிகளாக இருந்தார்கள். அவர் தனது வாழ்நாளில் யோக சுவாமி மற்றும் கதிர்வேலுசுவாமி என்ற இரண்டு சீடர்களுக்கு மட்டுமே தீட்சை வழங்கினார். செல்லப்பசுவாமியை தனது குருவாக பாவித்து அவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சீடர்கள் இருந்தார்கள், ஆனால் அவர்கள் எல்லோரும் யோக சுவாமி மற்றும் அவரது சகோதர சுவாமியை போன்ற நன்மதிப்பை பெறவில்லை. அவரது செயல்முறை உறுதியாக இருந்தது, ஆனால் அவர்கள் என்றுமே விவாதிக்கப்படாத அவரது அடிப்படை அக்கறையை உணர்ந்தார்கள். அவர்கள் தங்கள் குரு வழங்கும் அருளின் ஆதரவில் வாழ்வதை உணர்ந்து இருந்தார்கள். §

செல்லப்பசுவாமி ஒவ்வொரு அனுபவம் மற்றும் பாடத்தில் யோக சுவாமியை அதிக அமைதியாகவும் அதிக விழிப்புடனும் வைத்து இருந்ததால், அவர் மெதுவாக உள்ளத்தின் ஆழத்திற்கு அழைத்து செல்லப்பட்டு, தனது குருவுடன் ஒரே நேரத்தில் ஒரு முழுமையான இணக்கத்தில் பல மாதங்களுக்கு வாழ்ந்தார்.  அவரது மனம் மற்றும் இதயம் ஒளி  நிரம்பி இருந்தது; அவர் தெய்வங்கள் அதிகம் விரும்பிய உலகங்களில் வாழ்ந்தார். அவர் அதிகமாக உறங்கவில்லை.  அவர் செல்லப்பசுவாமியுடன் இல்லையென்றால், அவர் தனியாக உட்கார்ந்து, அவரது குருவின் அருள் வழங்கிய விசாலமான ஆன்மீக வாழ்க்கையில் பேரானந்தத்துடன் மூழ்கி இருப்பார். இருந்தாலும், சுத்தப்படுத்தும் வசவுகள்  நின்றபாடில்லை. §

அவரை செல்லப்பசுவாமி மிகவும் குறைவான தவறுகளுக்கும், தவறே இல்லை என்றாலும், செல்லப்பசுவாமி அறிந்து இருந்த ஒரு தெய்வீக இயல்பு மட்டும் மீதம் இருக்கும் வரை அனைத்தையும் அபகரித்து, இழிவுபடுத்தி நீண்டநேரம் ஆவேசத்துடன் உரை வழங்குவார். பரசிவம் அல்லாமல் கொடுக்கல் அல்லது வாங்கல், இலாபம் அல்லது இழப்பு போன்றவற்றின் மீது யோக சுவாமிக்கு மிகவும் குறைவான உணர்வு இருக்கும் வரை, செல்லப்பசுவாமி கோபத்துடன் முறைத்துக்கொண்டு இருப்பார். யோக சுவாமியின் பார்வையே குருவின் கோபத்தை அதிகரித்துவிடும். அவர் தான் செய்தது அனைத்தையும் குருவிடம் தெரிவிப்பார், ஆனால் அவை என்றுமே போதுமானதாக இருக்காது. யோக சுவாமி “எனது ஆசான்”  என்ற தலைப்பில், இந்த தலைசிறந்த முனிவரைப் பற்றியும் அவருடன் தனது உறவை பற்றியும் பாடியுள்ளார்: §

> இந்த ஆசான் அடிப்படை மந்திரத்தின் மறைபொருளை வழங்கினார். அவர் அன்புள்ள இதயங்களில் வாசம் செய்கிறார். அவர் சிரித்துக்கொண்டு, நல்லூரின் பிரகாரங்களில் சுற்றித்திரிகிறார். அவர் ஆற்றல் படைத்தவராக காட்சி அளிக்கிறார்; வெளிப்புற பாசாங்கு அனைத்தையும் வெறுக்கிறார். அவரது கருத்த மேனியில் கந்தல்துணியை மட்டுமே அணிந்து இருக்கிறார். §
>
> அவர் எரித்துவிட்டதால், இப்போது எனது பாவங்கள் அனைத்தும் தொலைந்துவிட்டன! கடந்தகாலத்தில் தூண்டப்பட்ட வலுவான கர்மவினைகள் அனைத்தும் நீக்கப்பட்டன. அவரது இதயம்

இறையன்பால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. ஒளியால் அலங்கரிக்கப்பட்ட குடிசைகள் மின்னுவதை போல, அவர் புனிதத்தன்மையுடன் பிரகாசிக்கிறார். நல்லூரில் அன்றைய தினம் அவர் என்னை தனக்கு சொந்தமாக்கிக் கொண்டார். சோதனைகளுக்கு பிறகு அவர் என்னை *சும்மா* இருக்கச் சொன்னார். §

தனக்குத்தானே ஓசைப்படாமல் தொடர்ந்து முணங்கிக்கொண்டு இருக்கும் அவர், தன்னை துணிந்து நெருங்கி வருபவருக்கு உண்மையான வாழ்க்கையின் ஆசியை வழங்குவார். அவர் எனது மனதைக் கொண்டு ஒரு கோயிலை உருவாக்கி இருக்கிறார். அவர் புறத்தோற்றம் மற்றும் பழக்கத்தின் வெளிவேடத்தை வெறுக்கிறார். §

அதிக அன்புடன் பக்தர்கள் தன்னை வழிபடுவதற்கு வரும் போது, அவர்கள் மீது வெறுப்பை வெளிப்படுத்தி எமனை போல கோபத்துடன் திருப்பி அனுப்புவார். இருந்தாலும், அவர் என்னை கலைநயத்துடன் தனது கட்டுப்பாட்டிற்குள் இழுத்துக்கொண்டார். அவர் தான் என்னை உருவாக்கியவர், ஆனால் நான் அவரை அணுகினால் கருணையில்லாமல் என்னை தாக்குவார். அவர் என்னை பார்த்து, பல வார்த்தைகளை பேசுவார். அந்த பார்வை நோக்கங்கள் மற்றும் கருத்துக்கள் அனைத்தையும் வெளிப்படுத்துவதாக இருக்கும்! §

அவர் மனதில் எந்த உருவத்தையும் கற்பனை செய்ய எனக்கு அனுமதி வழங்கவில்லை. எந்த சேவை செய்யவும் என்னை அனுமதிக்கவில்லை. என்ன நடக்கப்போகிறது என்பதை அறியவும் எனக்கு அனுமதி வழங்கவில்லை. இருந்தாலும் இந்த தெய்வம் என் இதயத்தில் இருந்த ஆசையை பூர்த்தி செய்தது. அவருக்கு சேவை செய்வது மனதிற்கு மகிழ்ச்சி தருவதாக இருந்தது, ஆனால் அவர் அதை அனுமதிக்கமாட்டார். அவரது விருப்பம் எதில் இருக்கிறது என்பதை நான் அறிந்துக்கொள்ள அனுமதிக்கமாட்டார். §

நான் இன்பத்தை தரும் ஸித்திகளை அடைய எனக்கு அனுமதி வழங்கமாட்டார். இருந்தாலும், இப்படித்தான் அவர் எனக்கு நண்பரானார். என்ன ஓர் அதிசயம்! " அதிசயம் ஒன்றும் இல்லை!" என்று அவர் கூறுவார். வியப்பு மற்றும் ஆச்சரியத்துடன் வந்தவர்கள் அவரை நெருங்க தயங்குவார்கள்; அவர் அவர்களை குழப்பத்தில் ஆழ்த்தினார். ஆனால் உண்மையான ஞானத்தை வழங்கிய அந்த ஆசான், தனது சீடர்கள் வணங்குவதற்கு அனுமதி வழங்கினார். §


### புதிர் நிறைந்த பாடங்கள்

காலையில் தாங்கள் மேற்கொண்ட பெரும்பாலான நடைப் பயணங்களின் போது, மதிய உணவிற்கு கத்திரிக்காய் வாங்க, யாழ்ப்பாணத்தில் இருந்து சுமார் பதினைந்து கிலோமீட்டர் தொலைவில் இருந்த ஒரு கிராமப்புற சந்தைக்கு செல்லப்பசுவாமி வழிநடத்தி சென்றார். அந்த கிராமத்தை சேர்ந்த விவசாயிகள், அந்த தீவில் மிகவும் சுவையான கத்திரிக்காய்களை வளர்த்து,

அவற்றை சந்தையில் விற்று வந்தனர். தனது இருப்பிடத்திற்கு யோக சுவாமி வந்ததும், செல்லப்பசுவாமி தனது உடையின் ஓரத்தில் சில சில்லறைகளை கட்டிக்கொண்டு, நல்ல கத்திரிக்காய்கள் தீரும் முன்பாக, அங்கே விரைந்து சென்று வாங்க அவசரத்தில் இருப்பார். செல்லப்பசுவாமி விரைவாக நடப்பவர் என்றாலும், இரண்டு மணிநேரம் நடக்க வேண்டியிருக்கும். அங்கே சென்றதும், தனது சற்குரு சந்தையில் இருந்த ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கி, டஜன் கணக்கான கத்திரிக்காய்களை நிதானமாக சோதித்து பார்த்து, இறுதியில் சென்ற கடைக்கே சென்று மீண்டும் சென்று ஒன்று அல்லது இரண்டு காய்கறியை மட்டும் வாங்கும் வரை, யோக சுவாமி காத்து இருப்பார். அதன் பிறகு அவர்கள் நல்லூர் திரும்புவார்கள். §

அவர் இரு கைகளிலும் கத்திரிக்காய்களை சுமந்து கொண்டு தனது குடிசைக்கு திரும்பி, இளைப்பாற உட்காராமல், நேராக மூன்று கற்களின் மீது வைக்கப்பட்டு இருந்த ஒரு மட்கலத்தில் தண்ணீரை கொதிக்க வைக்க, தரையில் விரகை  பற்ற வைத்து சமைக்க உட்கார்ந்து விடுவார். செல்லப்பசுவாமி ஒரே மட்கலத்தில் அரிசி, நருமணப்பொருட்கள் மற்றும் காய்கறிகளை ஒன்றாக கொதிக்க வைத்தாலும், அவர் ஒரு திறமையான சமையல்காரராக இருந்தார். செல்லப்பசுவாமி பெரும்பாலும் தான் சமைத்த உணவை மட்டுமே சாப்பிட்டதால், தனது குரு மதிய உணவை தயார் செய்து தனக்கு பரிமாறும் வரை, வழக்கமாக யோக சுவாமி அருகில் அமர்ந்து பார்த்துக்கொண்டு இருப்பார். §

மட்கலம் கொதிக்க ஆரம்பித்ததும், அதனுடன் நறுக்கிய நருமணப்பொருட்களை சேர்ப்பார், பிறகு அடுப்பின் முன்பாக உட்கார்ந்துகொண்டு பனையோலையால் மட்கலத்தின் மீது விசிறிக்கொண்டு இருப்பார். யோக சுவாமியின் மனம் அலைபாய்வதாக தோன்றினால், அவரை கடிந்துக்கொள்ள பேசுவாரேத் தவிர, மற்ற நேரங்களில் மௌனமாக தனது சமையலில் கவனமாக இருப்பார். அது அவர்களது அன்றைய உணவாக இருந்ததால், அவரது முழு கவனமும் தேவைப்பட்டது. ஆனால்  செல்லப்பசுவாமிக்கு உணவின் மீது சிறிதளவு ஆசை அல்லது பற்று ஏற்பட்டாலும், அல்லது அவரது வாயில் இருந்து எச்சில் ஊறினாலும், அவர் தனது சமையலை அப்படியே நிறுத்திவிட்டு அந்த மட்கலத்தை தரையில் வீசி உடைத்து விடுவார். அன்று மதியம் விரதம் இருந்து, அடுத்த வேலையை தொடர்வார்கள். §



பிரம்மச்சாரிகளின் கடமைகளை போல, செல்லப்பசுவாமி கடைக்கு செல்வது மற்றும் தனக்கு தேவையான உணவை சமைப்பது போன்றவற்றை தானே கவனித்துக்கொண்டார். வழக்கமாக அவரும் யோக சுவாமியும் சந்தை வரை

*நடந்து சென்று, நல்ல பச்சை கத்திரிக்காய்களை பேரம் பேசி வாங்கி, நல்லூருக்கு  திரும்பி வந்து, ஒரே மட்கலத்தில் எல்லா பொருட்களையும் ஒன்று சேர சமைத்து, தனது புகழ்பெற்ற செல்லப்பன் குழம்பை தயார் செய்வார்.*

……………………..§

அது குரு தனது உள்ளுணர்வு இயல்பை ஒழுங்குப்படுத்தி கட்டுப்படுத்த பயன்படுத்தும் செயல்முறையாக விளங்கியது. அவர் இவ்வாறு அடிக்கடி செய்ததால், அவரது குடிசையை சுற்றி இருந்த வளாகத்தில் உடைந்த துண்டுகள் சிதறி கிடந்தன. பிற்காலத்தில் யோக சுவாமி தனது குருவை, “உடைந்த மட்கலங்களால் சூழப்பட்டு இருந்தவர்,” என்று குறிப்பிட்டார். யோக சுவாமி தன் வாழ்வில் வருவதற்கு முன்பாகவே செல்லப்பசுவாமி இதை செய்து வந்தார் மற்றும், “உனக்கு சாதம் சாப்பிட ஆசையா!” என்று சொல்லி தனக்குத்தானே வழங்கும் தண்டனையாக, சற்று முன் தயாரித்த உணவு நிரம்பிய கொதிக்கும் பானையை  உடைப்பதை, யோக சுவாமி தன்னிடம் வந்து சேர்வதற்கு முன்பாகவே செய்து வந்தார். அவரது துறவறம் அவ்வளவு தீவிரமாக இருந்தது. §

இந்த முனிவரை பார்க்கும் போது ஒரு சாதாரண மனிதனுக்கு ஒரு வழக்கமான பிச்சைக்காரனாக தென்பட்டார், ஆனால் செல்லப்பசுவாமி செய்தது அனைத்தும், அவரது எல்லையற்ற அருளாக யோக சுவாமிக்கு காட்சி அளித்தது.  அவரது வாழ்க்கையின் ஒரே குறிக்கோளாக ஆத்ம ஞானத்தை பெறுவது அமைந்து இருந்தது, அதனால் குறைவாக இருந்தால் போதுமானது என்ற சிந்தனையை அனுமதிப்பதற்கு வாய்ப்பே இல்லை. யோக சுவாமி தனது குருவின் தகவலை, சீற்றம் குறையாது “சிங்கத்தில்” பதிவு செய்துள்ளார்:§



*ஒரு நாள் செல்லப்பசுவாமியும் யோக சுவாமியும் கடற்கரை ஓரமாக நடந்துகொண்டு இருக்கும் போது, கத்திரிக்காய்களை விற்பனை செய்த ஒரு பெண்ணின் கடையை வந்து அடைந்தனர். யோக சுவாமிக்கு அந்த காய்கறி மிகவும் பிடிக்கும். தனது சீடனுக்கு கத்திரிக்காய் மீது இருந்த விருப்பத்தை அறிந்து இருந்த செல்லப்பா, சீடனின் ஆசையை பூர்த்தி செய்யாமல், கடையில் இருந்து கிளம்பி நடக்கதொடங்கினார்.*

……………………..§

தன்னை த்தன்னால் அறிந்திட வேண்டுமே

தானா யேங்குஞ் செறிந்திட வேண்டுமே

பொன்னை மாதரைப் போக்கிட வேண்டுமே

புவியி னாசையை நீக்கிடா வேண்டுமே

கண்ணைப் போலறங் காத்திட வேண்டுமே

கமல பாதந் தொழுதிட வேண்டுமே

எண்ணம் யாவு மிறத்திட வேண்டுமே

என் குருபர! புங்கவ சிங்கமே!§

இருளை நீக்கி இருந்திட வேண்டுமே

எங்குந் தெய்வத்தைக் கண்டிட வேண்டுமே

பொருளை யறிந்தினிப் போற்றிட வேண்டுமே

பொய்ய முக்கா றகற்றிட வேண்டுமே

மருளைத் தந்து மயக்கும் பொருள்களை

மாற்றி யேயரு ளாக்கிட வேண்டுமே

பெருமையிற் பிறர் பேசுங் குருபர!

பெத்த னேன்னையும் பேணிய சிங்கமே. §

பிற்காலத்தில் யோக சுவாமியின் கவிதைகள் சிறகடித்து பறந்ததற்கு, நன்றியுணர்வு மற்றும் மிகமிஞ்சிய பாராட்டு போன்றவற்றை செல்லப்பசுவாமி தீவிரமாக தடை செய்ததே காரணமாக இருந்திருக்க வேண்டும். அவரது குருவை போற்றுவதாக அமைந்துள்ள அந்த பாடல்கள், அவரது மனதில் தோன்றி செல்லப்பர் முன்னிலையில் உரைக்க தடை விதிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். “மறுபிறவிக்கு நிவாரணம்" என்ற இன்னொரு பாட்டில், தனக்கு பிறப்பு மற்றும் இறப்பின் சுழற்சியில் இருந்து விடுதலை வழங்கிய செல்லப்பசுவாமியை மிகப்பெரிய ஆன்மாவாக சுவாமி புகழ்ந்து பாடுகிறார்: §

அருமையான நறுமணம் நிறைந்த மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, பெருந்தன்மையின் மையமாக, முக்தியின் சுடராக, உருவம் மற்றும் உருவமில்லாமல் எங்கும்-வியாபித்து இருக்கும் மெய்யுணர்வாக நின்று, இங்கும் அங்கும் இருந்து மற்றும் அரசர் மற்றும் குருவாக மாறி இருக்கும் தேவர்களின் தலைவனை பார்த்ததும் என் மனம் அமைதி அடைகிறது. §

அவர் எனது இந்த பிறவியை நிறைவு செய்வார்; அவர் என்னுடன் அனைத்து பிறவிகளிலும் இணைந்து இருந்தார்; எனது எதிர்கால பிறவிகளில் இருந்து முக்தி அளிக்க, அவர் தனது கருணையை எனக்குத் வழங்கியுள்ளார். அவருக்கு சமமானவர் அவர் மட்டும் தான். அவர் நித்தியம் முழுவதும் நிலைத்து இருக்கிறார். அவரை போற்றி பாடுவோருக்கு, எதிர்கால பிறப்பு அல்லது இறப்பு இருக்காது. §

இந்த தீபகற்பம் முழுவதும் நல்லூர் கந்தசுவாமி கோயில் மிகவும் பிரபலமாக இருக்கிறது. மேலும் இன்றும் தூரத்து கிராம மக்கள், தங்கள் வாழ்நாளில்

பலமுறை இந்த தலத்திற்கு வந்தவண்ணம் இருக்கிறார்கள். சிலசமயங்களில், ஏன் என்று காரணம் தெரியாமல், தெருவில் நடந்து செல்லும் அத்தகைய பக்தர்கள் இந்த விசித்திரமான ரிஷியின் மூலம் அழைக்கப்பட்டு, தங்களுக்கு தெரியாமல் தங்களுக்குள் இருந்த சிந்தனைகள் மற்றும் செயல்களுக்காக கண்டிக்க மற்றும் நிந்திக்கப்படுவார்கள். §

அந்த நிந்தனை அவர்களுக்கு புரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் அது தங்களுடன் தொடர்புடையதா என்ற யோசனையில் அவர்கள் இருக்க, அவர் ஒரு முக்கியமான வேறுபாட்டை விளக்கிக்  கொண்டு, அந்த பக்தர்களை அசராமல் உட்கார வைத்து இருந்தார்; அவர்கள் கண்ணியமாக கேட்டுக்கொண்டு, அங்கிருந்து கிளம்புவதற்காக காத்து இருந்தார்கள். அவர் அவர்களை திருப்பி அனுப்பியதும், அப்போது தங்களுக்குள் நடந்த சுத்திகரிப்பைப் பற்றிய எதுவும் தெரியாமல், அந்த அனுபவத்தின் மூலம் குழம்பி இருந்தார்கள். பலர் இந்த சோதனைக்கு தங்களை ஆளாக்கிய நபரின் பெயரை அறியாமல் இருந்தார்கள். ஆனால் அதன் பிறகு பல வருடங்கள் கழித்து, அவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒரு அனுபவத்தை எதிர்கொள்ளும் போது, அசம்பாவிதம் நடக்கவிருந்ததில் இருந்து தங்களுக்கு கிடைத்த ஒரு விடுதலையை உணர்ந்தார்கள். நல்லூர் முனிவரிடம் இருந்து தாங்கள் பெற்ற வசவின் காரணமாக, இந்த விடுதலை தங்களுக்கு கிடைத்தது என்று சிலர் தெரிந்துகொண்டு, அந்த சம்பவத்தை நினைவுக்கூர்வார்கள். தங்களது வணக்கத்தை தெரிவிக்க, கைகளில் பூக்கள் அல்லது பழங்களை சுமந்துகொண்டு, அவரைக் காண வருவார்கள். தன்னை வழிபட வந்ததற்காக சுவாமி அவர்களை திட்டி, துரத்தி அனுப்பி விடுவார். §

குருவின் அருளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள தயாராக இருந்து, ஆனால் அவரது தீவிரத்தை எதிர்கொள்ள தயாராக இல்லாதவர்களை தவிர்ப்பதில் அல்லது அவர்களை நீக்குவதில் அவர் விவேகத்துடன் நடந்துகொண்டார். அவர் தனது கோபத்தை முழுமையாக திட்டி தீர்க்கும் வரை துரத்திக்கொண்டு இருப்பார். அந்த முயற்சி தவறினால், அவர் அவர்களிடம் இருந்து மறைந்து இருப்பார். அவர் பார்க்க விரும்பாத நபரை, தனது குடிசையில் தனக்கு இடையூறு விளைவிக்கும் நோக்கத்துடன் வரும் நபரை, தங்கள் வீட்டு மதில் சுவருக்குள் சகோதரி அனுமதித்தால், அவர் பல நாட்களுக்கு வீடு திரும்பமாட்டார். §

செல்லப்பசுவாமி இதைப்போன்ற சம்பவங்களில், ஏதாவது ஒரு முறையில் சமாளித்து விடுவார். முயற்சியில் பக்தி அல்லது வேண்டுதல் அல்லது பிடிவாதம் எவ்வளவு அதிகமாக இருந்தாலும், அவை பலன் அளிக்காது. யோக சுவாமி அவரிடம் வந்து சேர்வதற்கு முன்பாக, செல்லப்பசுவாமியுடன் ஒரு சிறுவன்  காணப்பட்டான். செல்லப்பசுவாமிக்கு அந்த சிறுவனை பிடித்து இருந்தது என்றும், அவர் தனது சீடனுக்கு குரு பயிற்சி அளிக்கிறார் என்று கிராமவாசிகள் கருதினார்கள். அவன் தினமும் *தேரடிக்கு* அருகில் இருக்க அனுமதி அளிக்கப்பட்டாலும்,  இரவில் தங்க அனுமதிக்கப்படவில்லை. அந்த சிறுவனுக்கு யாழ்ப்பாணத்தில் சொந்தங்கள் யாரும் இல்லாவிட்டாலும்,

அவன் எவ்வளவு மன்றாடினாலும், அவனை மாலை நேரத்தில் செல்லப்பசுவாமி துரத்திவிடுவார். §

இது பல மாதங்களுக்கு தொடர்ந்துக்கொண்டு இருந்தது. இறுதியில் மனைவியை இழந்த ஒரு வணிகருடன் தங்க, செல்லப்பசுவாமி அவனுக்கு அனுமதி வழங்கினார். அவரது சீடனாக இருந்த அந்த வணிகர், கோயிலுக்கு அருகில் ஒரு கடையை திறந்து இருந்தார். அவரும் அவரது இரு குழந்தைகளும் கோயிலுக்கு பின்னால் இருந்த வீட்டில் வாழ்ந்து வந்தனர். அங்கே சிறுவன் உறங்குவதற்கு தாராளமாக இடம் இருந்தது என்று செல்லப்பசுவாமி கருதினார். அது ஒரு நல்ல ஏற்பாடாக இருந்தது. ஆனால் சில வாரங்கள் கழித்து, ஒரு நாள் காலையில் அவரை சந்திக்க வந்த அந்த சாதகன், அவரது குடிசையின் முன்பாக நின்றுக்கொண்டு, அந்த வணிகர் வீட்டில் வாழ்வதில் பல பிரச்சனைகள் இருப்பதாக புகார் கூறி, அவருடன் தங்க அனுமதிக்க முடியுமா என்று கேட்டான். செல்லப்பசுவாமி அவனது பிரச்சனைகளை பற்றி விசாரித்தார். §

தாய் இல்லாத காரணத்தால், வீட்டு வேலைகளை வணிகரின் மகள் கவனித்துக்கொள்வதாகவும், இப்போது தான் அந்த வீட்டில் இருப்பதால், தான் அவளது வீட்டில் வாழ்வதை பற்றி மக்கள் தவறாக பேசுகிறார்கள் என்றும் கூறினான். இந்த வதந்தி பரவி வருவதால், அவனை முதலில் அந்த வீட்டிற்கு அனுப்பாமல் இருந்திருந்தால், இதை தவிர்த்து இருக்கலாம் என்றும் கூறினான். இந்த வேண்டுகோள் காரணமாக, செல்லப்பசுவாமி தம்மிடம் மன்னிப்பு கேட்டு தான் செய்த தவறை ஏற்றுக்கொள்வார் என்று அந்த சிறுவன் நினைத்தான். ஆனால் அவர் ஒரு நொடியும் தாமதிக்காமல், அந்த சிறுமியை திருமணம் செய்து கொள்வதைத் தவிர வேறு எதுவும் முக்கியமில்லை என்று அறிவித்து, தானே திருமண ஏற்பாடுகளை செய்யத் தொடங்கிவிட்டார். ஒரு வாரத்திற்கு பிறகு, புதுமண தம்பதிகள் கொழும்புத்துறையில் தங்களது சொந்த வீட்டில் குடியேறி இருந்தார்கள். அதன் பிறகு அவர்களது வாழ்க்கை சீராக இயங்குவதற்கு செல்லப்பசுவாமி தேவையானவற்றை கவனித்துக்கொண்டார், மற்றும் அவர்கள் அவரது விசுவாசமான சீடர்களாக இருந்தார்கள். §

### செல்லப்பசுவாமியின் உலகில்

கோடைகாலத்தில் ஒரு நாள் காலையில், ஒரு தொலைதூர கிராமத்து பாதையில் யோக சுவாமி தனது குருவை பின்தொடர்ந்து செல்லும் போது, கீரிமலை சென்று புனித நீராடி வரலாம் என்று செல்லப்பசுவாமி முடிவு செய்தார். அந்த இடத்தில், கடற்கரைக்கு அருகே பல கோயில்களைக் கொண்ட ஒரு வளாகத்தில் இருந்த, ஒரு பெரிய சிவன் கோயிலில், ஒரு வற்றாத நன்னீர் ஊற்றாக சுவர்களால் சூழப்பட்ட இரண்டு தீர்த்தக் கேணிகளில் மக்கள் புனித நீராடுவார்கள். மக்கள் பிரசித்தி பெற்ற இந்த குளங்களில் புனித நீராடுவதற்காக நீண்டதூரம் நடந்து வருவார்கள். இந்த சுத்தமான நீரில் பெயவர்களும் சிறியவர்களும் சந்தோசமாக குதித்துக்கொண்டு

நீராடுவார்கள். பெரியவர்கள் குறுக்காகவும் நெடுக்காகவும் நீந்துவார்கள். குழந்தைகள் அங்கும் இங்குமாக நீந்தி தண்ணீரை தெறித்துக்கொண்டு நீச்சல் கற்றுக்கொண்டு இருப்பார்கள். §

அவர்கள் கீரிமலையை நோக்கி நடந்தனர். இரு வழிகளிலும் இருபத்தி ஒரு கிலோமீட்டர் தூரத்தை கடக்க நாள் முழுவதும் நடக்கவேண்டி இருந்ததால், இரவு உணவு சாப்பிடுவதற்கு தாமதம் ஏற்படும், மற்றும் கடற்கரையோர குளத்தின் குளிர்ந்த நீரில் நீந்திக்குளிக்கும் ஆர்வத்தை யோக சுவாமியால் கட்டுப்படுத்த முடியவில்லை. அத்தகைய ஆசைகள், அவரது குருவுடன் இருக்கும் போது நிறைவேறுவது சற்று கடினமாக இருந்தது. சுட்டெரிக்கும் வெய்யிலில் குடைகளை உயர பிடித்துக்கொண்டு, பல மணிநேரங்களுக்கு நடந்து சென்றனர். §

இறுதியாக, அவர்கள் புகழ்பெற்ற குளங்களை சென்றடைந்தனர். அவர்களுக்கு முன்பாக சில யாத்ரீகர்கள் மட்டுமே வரிசையில் நின்று இருந்தனர். உச்சியில் இருந்த சூரியன் குளிர்ச்சியான நீல நிற தண்ணீரில் பிரகாசித்துக் கொண்டு இருந்தது, மற்றும் அவர்களை நோக்கி நடுக்கடலில் இருந்து லேசான காற்று வீசிக்கொண்டு இருந்தது. யோக சுவாமி சந்தோச பெருமூச்சுடன், உப்புக்கலந்த காற்றை நுகர்ந்தார். செல்லப்பசுவாமி தன்னை சுற்றி ஒரு முறை பார்த்துவிட்டு, “சரி, நாம் புனித நீராடிவிட்டோம்,” என்று அறிவித்து கிளம்ப ஆரம்பித்தார். யோக சுவாமி குளத்தில் இருந்த குளிர்ச்சியான நீரை தன்னால் தொட்டுணர முடியவில்லை என்பதால் சிறிது அதிர்ச்சியுடன் பின்தொடர ஆரம்பித்தார்.§

நல்லூருக்கு திரும்பிச் செல்லும் வழியில், அவர்கள் மருதடி விநாயகர் கோயிலில் தேர் திருவிழா நடைபெறுவதை பார்த்தனர். செல்லப்பசுவாமி பாதியில் நின்று, “உனக்கு பசித்துக்கொண்டு இருக்கும்” என்று கூறி, *புட்டு* வாங்கி சாப்பிடுவதற்காக யோக சுவாமியிடம் இரண்டு காசுகளை தந்தார். யோக சுவாமி வேகவைத்த அரிசி மாவு மற்றும் தேங்காயில் செய்த அந்த இனிமையான உணவையும், தண்ணீர் பந்தலில் எலும்பிச்சை மற்றும் சர்க்கரை நீரையும் வாங்கிக்கொண்டார். செல்லப்பசுவாமி தனக்கென்று எதையும் வாங்கிக்கொள்ளவில்லை. தனது சீடனின் பசியாறும் வரை காத்து இருந்தார். யோக சுவாமி உணவை முழுமையாக சாப்பிட்டு முடித்தவுடன், செல்லப்பசுவாமி வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தார். §

குருவுடன் சேர்ந்து நடக்க, யோக சுவாமி விரைவாக நடந்தார். அதனால் வயிற்றில் இருந்து பிட்டும் உணவும் குலுங்கத் தொடங்கின. “இனி என்னால் நடக்க முடியாது,” என்று சீடன் நினைத்துக்கொண்டு ஓரமாக ஒதுங்க நினைத்தார். செல்லப்பசுவாமி பின்னால் திரும்பிப் பார்க்காமலேயே, “சரி, வா வா” என்று சத்தமிட்டார். யோக சுவாமிக்கு நடப்பது கடினமாக இருந்தது. நல்லூருக்கு வந்து *தேரடிக்கு* திரும்பியதும், செல்லப்பசுவாமி சீடனிடம் தேநீர் குடிப்பதற்கு சில காசுகளை வழங்கினார். அவரும் ஒரு குவளை தேநீர் அருந்தினார். அது வரை அவர் தனது வயிற்றுக்கு உணவு ஏதும்

அளிக்கவில்லை. யோக சுவாமி தனது பாடல்களில் ஒன்றில், உடல் பற்றிய பாடங்களை குறிப்பிடுகிறார்:§

தேகமே மெய்யென்று சிதடனாய்த் திரிவேனை

மோக மறுத்தாண்ட முழுமுதலை மொய்குழலாள்

பாகம் மறைத்துப் பரிந்துவந்த பாக்கியத்தை

நாகமலர் சொரியும் நல்லைநகர் கண்டேனே.

இருவினையால் மதிமயங்கி இடர்பட்டுக் கிடப்பேனைக்

கருவினையால் ஆண்டு கொள்ளக் கடவுள் திருவுளங் கொண்டு

அருள்மேனி தாங்கி அவனியிலே வந்தானைத்

திருவாரும் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே. §


ஒரு நாள் அதிகாலையில் செல்லப்பசுவாமி தன் முதல் வேலையாக, யோக சுவாமியை யாசகத்திற்கு அழைத்து சென்றார். அவர்கள் யாழ்ப்பாணத்தின் முக்கிய வணிக மாவட்டமான கிராண்ட் பஜார் சென்று, அங்கு கடை வைத்திருந்த ஒரு பணக்கார வணிகரிடம் இருந்து, யாசகமாக எதையாவது வாங்கலாம் என்று செல்லப்பசுவாமி கூறினார். வெளியே பனி பொழிந்துக்கொண்டு இருக்கும் போதே, அவர்கள் கடைக்கு வெளியே நிற்கத்தொடங்கி, காணிக்கை கிடைக்கும் என்று காத்து இருந்தனர். இந்த வணிகரிடம் காணிக்கை கிடைப்பதற்கு வாய்ப்பு மிகவும் குறைவு. தன்னிடம் யாசகம் கேட்டு வரும் சாதுக்களை “அற்பமான பிச்சைக்காரர்கள்" என்று அழைத்து, காணிக்கையாக எதையும் வழங்காத கருமி என்று செல்லப்பசுவாமி அறிந்து இருந்தார் என்பது யோக சுவாமிக்கு தெரியும். §

இவர்கள் இருவரும் வந்து ஒரு மணி நேரம் கழித்து, வணிகர் கடைக்கு வந்தார். சுவாமிகள் நின்றுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை அறிந்து இருந்தாலும், அவர் நேராக கடைக்குள் சென்று, தனது கணக்குப்பிள்ளைகளுக்கு வணக்கம் செலுத்தி, அவர்களை பார்க்காததைப் போல, திண்ணையில் இருந்த மேசையில் நன்றாக தெரியும் படி உட்கார்ந்து கொண்டார். வியாபாரம் வழக்கம் போல இயங்கிக்கொண்டு இருந்தது. அவர் காலையில் தனது கணக்குப் புத்தகங்களை சரிபார்த்த பிறகு கடையை மூடி, குளித்துவிட்டு மதிய உணவு சாப்பிடுவதற்காக வீடு திரும்பினார். §

இரண்டு சாதுக்களும் வெயில் கொளுத்திய பிற்பகல் முழுவதும் வெளியே அமர்ந்து இருந்தார்கள். செல்லப்பசுவாமி பேரானந்தத்தில் தனக்குத்தானே பேசிக்கொண்டு இருந்தார். யோக சுவாமி ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். பிற்பகல் வணிகர் மீண்டும் தனது கடைக்கு திரும்பினார். பல மணிநேரங்களுக்கு, அவர்கள் யாசகம் வேண்டி வெளியே காத்து இருந்தனர்.

அன்றைய தினம், கடை மூடுவதற்கான நெருங்கிய போது, யோக சுவாமிக்கு பதட்டம் அதிகரித்துக்கொண்டு இருந்தது. செல்லப்பசுவாமி பொறுமையாக இருந்தார். இறுதியாக, வணிகர் தனது கணக்குப் புத்தகத்தை மூடிவிட்டு எழுந்து நிற்கும் போது, யாசகர்களின் பார்வை அவர் மீது விழுந்தது. அவர் தனது கணக்குப்பிள்ளையை அழைத்து, சுவாமிகளுக்கு ஒரு பைசா வழங்குமாறு உத்தரவிட்டார். ஒரு பைசா! செல்லப்பசுவாமி அந்த ஒற்றை காசை ஒரு புதையலைப் போல பெருமையுடன் உயர்ந்திக்கொண்டு, “ஒரு நாள் வேலைக்கு கிடைத்த அருமையான கூலி!” என்று அறிவித்தார். யோக சுவாமி தனது மனதில் இருப்பதை கொட்டித்தீர்க்க நினைத்தார், ஆனால் செல்லப்பசுவாமி அவரை வழி மறித்து, அந்த தெருவில் இருந்த ஒரு தேநீர் கடைக்கு அழைத்து சென்றார். அவர் அந்த ஒற்றைக் காசை தனது சீடனிடம் கொடுத்து ஒரு குவளை தேநீர் குடிக்க சொன்னார். §

யோக சுவாமி அந்த கடை முதலாளியின் கருமித்தனத்தால் போராட்டத்தில் இருந்ததாலும், தனது குரு பகிர்ந்துக்கொள்ளாத எந்த ஒரு சிற்றுண்டியை உட்கொள்ள விரும்பாததாலும், முதலில் தேநீர் குடிக்க மறுத்தார். ஆனால் செல்லப்பசுவாமி வற்புறுத்தினார். யோக சுவாமி பால் கலக்காத தேநீர் குடித்துக்கொண்டு இருக்கும் போது, செல்லப்பசுவாமி தனது சீடனின் நலனுக்காக, அந்த சீடனிடம் இருந்த எல்லையற்ற பொறுமையை வெளிப்படுத்தவே நாள் முழுவதும் யாசகம் செய்தார் என்பதை அவர் புரிந்துகொண்டார். அந்த வணிகர் ஒற்றை காசுடன் தனது வெறுப்பையும் வெளிப்படுத்தினார், ஆனால் குரு இரண்டையும் வாங்கிக்கொண்டார். ஆனால் செல்லப்பசுவாமி கிளம்ப தயாராகிவிட்டதால், அவர் மீதம் இருந்த தேநீரை குடித்து விட்டு, குருவை பின்தொடர்ந்து நல்லூருக்கு மகிழ்ச்சியுடன் திரும்பினார். §



அந்த கோடைக்கால வெய்யிலில், நல்லூரில் இருந்து கீரிமலைக்கு அருகில் இருந்த கடலுக்கு 21 கிலோமீட்டர் தூரம் நடந்து சென்ற சம்பவத்தை பற்றி

*யோக சுவாமி அடிக்கடி எடுத்துரைப்பார். யோக சுவாமி குளிர்ச்சியான அந்த குளத்தில் குளிக்க தயாராகிக்கொண்டு இருந்த போது, அவரது குரு "நாம் புனித நீராடிவிட்டோம்" என்று கூறி அந்த இடத்தில் இருந்து கிளம்பினார். இதன் மூலம் அவர் தனது சீடனுக்கு பற்றின்மை பற்றி ஒரு பாடம் புகட்டினார்.*

.........................§

அவர்களுக்கு இடையே நடந்த கருத்து பரிமாற்றங்கள் அவர்களுக்கு மட்டுமே தெரிந்து இருந்தன. செல்லப்பசுவாமி தனது சீடனிடம் நேரடியாக அபூர்வமாக பேசினார்; அவரது செயல்முறை மறைமுகமாக இருந்தாலும், யோக சுவாமி அவரை முழுமையாக புரிந்துக்கொண்டு இருந்தார். அவர் ஆன்மீக பாதையை பற்றி, சிவபெருமானை பற்றி, சைவ சித்தாந்த தத்துவதைப் பற்றி அல்லது வேறு எதையாவது பற்றி எந்த கேள்வியையும் கேட்காமல், செல்லப்பசுவாமி தனக்கு வழங்குவது அனைத்தையும் ஏற்றுக்கொள்ள தயாராக இருந்தார். §

செல்லப்பசுவாமி எதையாவது வழங்குவாரா என்று கேள்விக்கு வாய்ப்பே இருந்தது இல்லை. அவர் பெறுவதற்கு தயாராக இருந்த எல்லோருக்கும் வழங்கிக்கொண்டு இருந்தார். செல்லப்பசுவாமி தன்னை பார்த்த முதல் பார்வையில், தனது முற்பிறவி கர்மவினைகளின் தாக்கங்கள், தனது ஆசைகள் அனைத்தும் மற்றும் தனது லௌகீக பற்றுகள் அனைத்தும் அழிந்தன என்று யோக சுவாமி தனது வாழ்க்கை முழுவதும் வியப்புடன் அறிவித்து வந்தார். அவர் இதையும் இதற்கு மேற்பட்ட தகவல்கள் பலவற்றையும் "சற்குரு தாள்கள் வாழ்க" என்ற பாடலில் தெளிவாக விளக்கி, செல்லப்பசுவாமி தனக்கு வழங்கிய புதையல்களையும் குறிப்பிடுகிறார்:§

ஆக்கைநீ யல்லைநீயோ ஆன்மாவென் றெனக்குச்சொல்லித்
தீக்கைவைத் தாண்டுகொண்ட தேசிகன் றிருத்தாள் வாழ்க! வாழ்க!

இருந்துபா ரென்றெனக்கோர் இனியநல் வாக்குத்தந்த
அருந்தவன் என்னும்வல்ல ஆசான்றன் தாள்கள் வாழ்க! வாழ்க!

ஈயாத புல்லர் தங்கள் இல்லத்திற் கேகாவண்ணம்
தாயாரைப் போல்வந்தாண்ட சற்குரு தாள்கள் வாழ்க! வாழ்க!

உன்மத்தன் போலேவந்தென் னுடல்பொரு ளாவிமூன்றும்
தன்னத்தம் வாங்கிக்கொண்ட சற்குரு தாள்கள் வாழ்க! வாழ்க!

ஊனுமாய் உயிருமாகி உள்ளுமாய்ப் புறம்புமாகி
நானுமாய் நீயுமாகி நடஞ்செயுந் திருத்தாள் வாழ்க! வாழ்க!

எண்ணிய வண்ணம்வாழ எனக்குநல் லருளைத்தந்த

கண்ணிய முடையசெல்வன் கழலடி யென்றும் வாழ்க! வாழ்க!

ஏடவிழ் கோதைமாதர் எழில்கண்டு மயங்காவண்ணம்
தாடலை தன்னில்வைத்த சற்குரு தாள்கள் வாழ்க! வாழ்க!

ஐயமேன் காணுமென்றே அடியனேன் தன்னைநோக்கி
உய்யநல் லருளைத்தந்த உத்தமன் பாதம் வாழ்க! வாழ்க!

ஒருமொழி யதனாலென்னை ஓவியம் போலவாக்கி
வருபயம் நீக்கியாண்ட வள்ளல்தம் திருத்தாள் வாழ்க! வாழ்க!

ஓமெனும் எழுத்தினுள்ளே உலகெலாம் விளங்கக்காட்டி
நாமென்று சொல்லுகின்ற நற்றவன் றிருத்தாள் வாழ்க! வாழ்க!

ஔவன நல்லைதன்னில் அழகிய ஆடல்காட்டிச்
செவ்விதி னாண்டுகொண்ட செல்வன்றன் தாள்கள் வாழ்க! வாழ்க!

அஃகமுங் காசுந்தேடி அலைந்துநான் திரியாவண்ணம்
நஃகுதல் செய்தநல்ல நாதன்றாள் வாழ்க! வாழ்க! §


செயல்களின் தாக்கங்களை ஈடு செய்வதற்கு மற்றும் சீடனிடம் இருந்த ஆன்மீக பண்புகளை அதிகப்படுத்துவதற்கு, குருவின் சக்தி பயன்படுவதை யோக சுவாமி பலமுறை பார்த்து இருந்தார். இருந்தாலும், செல்லப்பசுவாமி தங்களுக்கு செய்ததை என்றுமே சந்தேகிக்காத, சில அபூர்வமான மக்களை அவர் கவனித்தார். குரு நிகழ்த்தும் அதிசயம் எப்போதும் செல்லப்பசுவாமியை சுற்றி நிகழ்ந்துந்தாலும், அவை எப்போதும் குருவின் வெளிப்புற ஆளுமையை தழுவாமல் நடைபெற்றுக்கொண்டு இருந்தன. யோக சுவாமி மற்றும் கதிர்வேலுசுவாமி மற்றும் வெகு சிலருக்கு மட்டுமே, நல்லூரின் முனிவர் தனது ஆழமான ஆத்மாவை காண்பித்தார். இந்த இரண்டு சீடர்கள் தன்னுடன் இருக்கும் போது, அவர் பெரும்பாலும் சிரித்துக்கொண்டே நடனமாடிக்கொண்டு, “ இல்லை, நீங்கள் என்னை இன்னும் எட்டிப்பிடிக்க வில்லை! என்னை இன்னும் எட்டிப்பிடிக்க வில்லை!” என்று அவர்களை கேலி செய்வார். §

சிலசமயம் செல்லப்பசுவாமி யாழ்ப்பாணம் நகரத்தில் இருந்த ஒரு கடைக்கு சென்று சில காசுகள், ஒரு தேங்காய் அல்லது சில வாழைப்பழங்கள் என்று தனது தேவையை கேட்டுக்கொண்டு இருப்பார், மற்றும் அது தனக்கு கிடைக்கும் வரை தனது முயற்சியை கைவிடாமல் இருப்பார். ஒருமுறை செல்லப்பசுவாமி, அத்தகைய ஒரு கோரிக்கையை விடுத்துக்கொண்டு இருக்கும் போது, ஒரு அன்பர் அருகில் நின்றுக்கொண்டு இருந்தார். எதையும் தரமுடியாது என்று மறுத்து, தனது கடையில் இருந்து கிளம்பும் கடைக்காரர்

குருவை திட்டிக்கொண்டு இருந்தார். செல்லப்பசுவாமி தனது வற்புறுத்தலை வலுப்படுத்தி முயற்சியை தொடர்ந்தார். இந்த வாக்குவாதத்தால் அந்த அன்பர் அவமானமடைந்து, குருவிற்கு தேவையானது எதுவாக இருந்தாலும், அதைத்தான் கடையில் இருந்து வாங்கித் தருவதாக அவருக்கு வாக்கு அளித்தார். ஆனால் அந்த அன்பர் பேசத்தொடங்கியதும், செல்லப்பசுவாமி அவர் அந்த அன்பரை திட்டத்தொடங்கி, அவரை கடையில் இருந்து விரட்டி அனுப்பினார். அதன் பிறகு கடைக்காரரைப் பார்த்து, "நான் உங்களுக்காக சேவை செய்துக்கொண்டு இருக்கிறேன், அதற்காக நீங்கள் எனக்கு கூலி தரவேண்டும்,"என்று கூச்சலிட ஆரம்பித்தார். §

ஒரு திருவிழா தினத்தன்று யோக சுவாமி, எல்லாம் தனது கட்டுப்பாட்டில் இருக்கிறது என்ற திருப்தியுடன் நிரந்தர பேரானந்தத்தில் மூழ்கி, நல்லூர் வீதியில் நின்றுக்கொண்டு இருந்தார். கோயிலில் ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியிருக்க, உற்சவமூர்த்தி கோயிலை சுற்றி அழைத்து வரப்பட்டார். இதைப்பார்த்த யோக சுவாமி, "கோயில் சிப்பந்திகள் குடைகளை கொண்டு வரவில்லை. இன்று சுவாமி (உற்சவமூர்த்தி) மழையில் முழுமையாக நனையப்போகிறார்," என்று கூறினார். §

யோக சுவாமி பேசி முடிப்பதற்குள், அவரது குரு, "இந்த நல்லூர்வீதியில் பலர் இப்படி சொல்லி இருக்கிறார்கள்," என்று தூரத்தில் இருந்து உறுமினார். அது அவரது குரு அவமதிக்கும் குரலில் வழங்கிய, ஒரு அதிக நுணுக்கமற்ற திருத்தமாக இருந்தது. யோக சுவாமி அமைதி அடைந்தார். தெளிவான வானத்தை மேகங்கள் மூடியது, மற்றும் சில நிமிடங்களில் மழை பெய்ய ஆரம்பித்தது. தான் செய்த அற்பமான கணிப்பு பலித்ததில், யோக சுவாமி அவமானம் அடைந்தார். தனது சீடனிடம் துளிர்விட்ட மாயவித்தை காட்டும் மயக்கத்தை, செல்லப்பசுவாமி அவ்வபோது கிள்ளிக்கொண்டு இருந்தார். §



*யோக சுவாமியை தீட்சைக்கு தயார் செய்யும் பொருட்டு, அவரை இன்னொரு சீடருடன் ஒரு பெரிய கற்பலகையில் உட்காருமாறு செல்லப்பசுவாமி கூறினார். அவர்கள் இருவரும் 40 நாட்களுக்கு கடுமையாக தியானம் செய்தார்கள். அந்த விரதத்தை நிறைவு செய்யும் பொருட்டு, குரு உணவை தயார் செய்து, அதை ஒவ்வொருவருக்கும் ஒரு பாத்திரத்தில் கொடுத்தார். அதன் பிறகு அந்த பாத்திரங்களை அவர்களது கைகளில் இருந்து எட்டி உதைத்து, "என்னிடம் உங்களுக்கு தருவதற்கு இது மட்டுமே இருக்கிறது!" என்று அறிவித்தார்.*

……………………..§

**"சிவகுருவை கண்டேன்"**

1906 வருடத்து இலையுதிர் காலத்தின் போது, யோக சுவாமியின் ஆன்மீக தேடல் முழுமை அடைந்து இருந்தது. அவர் தனது குருவுடன் பல வருடங்கள் இணைந்து இருந்தார். கிளிநொச்சியில் இருந்து நல்லூர் வரை பயணம் செய்த இளைஞன் இப்போது இல்லை. அவனுக்கு பதிலாக கம்பீரமாக மேலங்கி இல்லாமல், கந்தலான வெள்ளை நிற பருத்தி *வேஷ்டி*, தலைக்கு பின்னால் ஆங்காங்கே நரைத்த முடியுடன் ஒரு கொண்டையாக பின்னப்பட்ட அடர்த்தியான தலைமுடி, நெற்றியில் பிரகாசமான *விபூதி* மற்றும் வலுவான

மற்றும் உறுதியான நடையுடன் ஒரு அனுபவமிக்க சுவாமி நின்றுக்கொண்டு இருந்தார். §

அவரது உயர்ந்த கன்னங்கள் மற்றும் மென்மையான பழுப்பு கண்களை அடர்த்தியான, கருப்பு நிற தாடி சூழ்ந்து இருந்தது. கீழ்படிதலால் பக்குவமடைந்து, உள்ளத்தின் விசாலமான ஆழத்தின் அமைதி மீது கவனமாக இருக்கும் ஒருவரின் மேலோட்ட தோற்றத்தை, அந்த கண்களில் காட்சி அளித்த வலுவான அமைதி காண்பித்தது. அவரது கண்கள் மிகவும் ஆழமாகவும் சாந்தமாகவும் இருந்ததால், அதை பார்ப்பவர்களுக்கு பிரபஞ்சம் முழுவதும் தென்பட்டது. யோக சுவாமி ஒரு இளைய சிங்கம் போல இருந்தார். அவரது கண்கள் இரும்பைப் போல கூர்மையாக இருந்தன. அவரது 34 வயது உடல் ஒல்லியாக உறுதியாக இருந்தது. அவர் புதையல்களில் சிறந்த புதையலான தனது குருவை தேடிக்கொண்டதும், அதிக தேவைகள் நிரம்பிய ஆன்மீக பாதையில் முன்னேறி செல்ல அதிக ஆவலுடன் இருந்தார். §

யோக சுவாமி தனது சற்குருவின் வழிகாட்டுதலின் கீழ், சாதனா மற்றும் தவத்தின் ஒரு கடுமையான பயிற்சியை மேற்கொண்டார். அதில் ஒரு தவமாக, யாழ்ப்பாணத்தின் கடுமையான வெயிலில், தனது உடலில் சிவப்பு மிளகாய் பசையை தடவிக்கொண்டு, பிற்பகல் வெயிலில் மேலங்கி இல்லாமல் தியானம் செய்வார் அல்லது இன்றும் பக்தியுடன் நோன்பு மேற்கொள்பவர்களைப் போல, பொசுக்கும் மணலில் அங்கப்பிரதட்சணம் செய்வார். கொழும்புத்துறையில் இருந்து நல்லூர் வரை இருந்த மூன்று கிலோமீட்டர் தூரம் முழுவதையும், யோக சுவாமி இரண்டு அல்லது மூன்று முறை அங்கப்பிரதட்சணம் செய்ததாக வைத்தியலிங்கம் தெரிவித்தார். §

கொழும்புத்துறை மற்றும் நல்லூருக்கு இடையே இருந்த அழகான கைலாச பிள்ளையார் கோயிலில், குருவும் சீடனும் சந்தித்து பல மணிநேரங்கள் அமர்ந்து இருப்பார்கள். அந்த விசித்திரமான சோடி பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கும் சென்று, சர்க்கரை பொங்கலை சமைத்து, அதை அம்மனுக்கு படைத்து, பிரார்த்தனை மற்றும் தியானம் செய்த பிறகு, அந்த பொங்கலை தங்களது மதிய உணவாக எடுத்துக்கொண்டு நல்லூர் கோயிலுக்கு கால்நடையாக திரும்புவார்கள். இதுவே அவர்களது வழக்கமாக 1910 வருடத்தின் தொடக்கம் வரை இருந்தது. இறுதியில், அவர்கள் குரு மற்றும் சீடனாக இல்லாமல், ஒரு உயிர்சக்தியாக இருந்தார்கள். செல்லப்பசுவாமியின் வன்மை குறைந்து இருந்தது. அவர் தொடர்ந்து கண்டிப்பாக இருந்தார், மற்றும் அவரிடம் இருந்த ஏராளமான விசித்திர குணங்கள் அவரை விட்டு என்றுமே விலகவில்லை, ஆனால் அவர் தனது எழுபதாவது வயதை நெருங்கும் போது, அவரது தீவிரம் குறைந்தது மற்றும் அதன் பிறகு அவர் யோக சுவாமியிடம் கடுமையாக நடந்துகொள்ளவில்லை. இந்த முக்கியமான நாட்கள் பற்றிய கண்ணோட்டங்களை, நம்முடன் சுவாமி “குருவின் தரிசனத்தில்” பகிர்ந்துள்ளார்:§

மனதில் இரண்டாவது எண்ணம் இல்லாத மிகப்பெரிய முனிவர்கள் வாழும் உன்னதமான நல்லூரில், நான் கண்ட சிவகுரு, செல்லப்பன் என்று

அழைக்கப்பட்டு, பெண்களின் மினுமினுக்கும் கண்கள் பாய்ச்சும் காம வலையில் சிக்காத நிலையில் இருந்தார். அவர் “எல்லாம் நன்றாக இருக்கிறது, மகனே,” என்று அன்புடன் அறிவித்தார்.§

காலத்தின் தொடக்கத்தில் இருந்து இன்று வரை, அது ஒன்றா அல்லது இரண்டா அல்லது மூன்றா என்று எல்லோரும் விசாரித்து வந்துள்ளனர். எல்லா தத்துவங்களையும் கடந்து நிலைத்து இருப்பவர், நல்லூரின் புகழ்பெற்ற குருவாக வந்து, எனக்கு உயர்வான கௌரவத்தை வழங்கினார்.§

களங்கம் இல்லாமல் இருந்து காற்று, நெருப்பு, நீர் மற்றும் மிகப்பெரிய பூமியாக மாறி, யாராலும் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கும் சற்குரு, என் கண் எதிரே தோன்றி எனது சந்தேகங்கள் அனைத்தையும் அழித்து, என்னை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சென்றார். அதன் பிறகு நான் *நிற்குண* நிலையை அடைந்தேன்.§

நீர்விழ்ச்சி சத்தத்தில் இருந்து பறவைகள் வெளிவரும், தங்க பூமியான இலங்கையின் நல்லூர் நகரத்தில், பரமாத்துமாவின் புதல்வன் தனது முடிவை வெளியிடாமல், தெய்வீக குருவாக திருப்தியுடன் வாசம் செய்து, எனக்கு உண்மையான உயிரை வழங்குவதற்காக தோன்றி, தனது திருவடிகளை காண்பித்து என்னை தனக்கு சொந்தமாக்கிக் கொண்டார்.
§

சிலசமயங்களில் எதையோ தேடிய செல்லப்பசுவாமியின் பார்வை மற்றும் அவரது கண்டிப்பில் ஏற்பட்ட தளர்வின் மூலம், விரைவில் மாற்றம் நிகழவிருந்தததை யோக சுவாமி உணர்ந்தார். இவை என்ன வரவிருக்கிறது என்பதை, வார்த்தைகளை காட்டிலும் மிகவும் தெளிவாக எடுத்துரைத்தன. §

**“உங்களுக்கு தருவதற்கு என்னிடம் இது மட்டுமே இருக்கிறது”**

இந்த காலகட்டத்தில், செல்லப்பசுவாமியின் இரண்டாவது சீடன் கதிர்வேலுசுவாமி அவர்களுடன் இருந்தார். யோக சுவாமி அவரை எப்போதாவது சந்திப்பார். அவர்கள் இருவரும் ஒரே குருவின் சீடர்களாக இருந்தாலும், அவர்கள் இருவரும் ஒன்றாக ஒரே இடத்தில் தென்படுவது அபூர்வம், மற்றும் ஒருவர் மற்றொருவரின் பெயரை தவிர வேறு எதையும் அறிந்திருக்கவில்லை. ஆனாலும் ஒருவர் இன்னொருவரை தனக்குள் கண்டார்கள். அவர்கள் இருவரும் சந்திக்கும் போது, ஒருவர் மற்றொருவரை அடையாளம் கண்டுகொண்டு தலை அசைப்பார்கள். செல்லப்பசுவாமி அவர்களை பிரித்து, மக்களின் பார்வையில் இருந்து மறைத்து மற்றும் விலக்கி வைப்பதில் மிகவும் கவனமாக இருந்தார். §


கந்த சஷ்டி திருவிழா நடைபெற்ற வாரத்தில், செல்லப்பசுவாமி தனது இரு சீடர்களையும் அழைத்து, “தியானம்" செய்வதற்கு ஒரு அமைதியான இடத்திற்கு அழைத்து சென்றார். நல்லூர் கோயிலுக்கு மிகவும் அருகாமையில், ஒரு பாலை மரத்தின் நிழலில், சமமாக செதுக்கப்பட்ட நீண்ட

கருங்கல் பலகை ஒன்று, பல வருடங்களாக கேட்பாரற்று இருந்தது. செல்லப்பசுவாமி தனது சீடர்களை அந்த கல்லின் மீது உட்கார சொல்லி, தான் அழைக்கும் வரை தியானம் செய்யுமாறு உத்தரவிட்டார். அவர்கள் வெறும் கல்லில் உட்கார்ந்துகொண்டு தங்களது கண்களை மூடிக்கொண்டனர். நல்லூர் முனிவர் மெதுவாக அந்த இடத்தில் இருந்து நகர்ந்தார். §

அவர் சிறிது நேரம் கழித்து, ஒவ்வொருவருக்கும் ஒரு பானையில் தண்ணீர் கொண்டு வந்தார். அவர் பல நாட்கள் கழித்து மீண்டும் வந்த போது தேநீர் கொண்டு வந்து, அதை ஓசைப்படாமல் அவர்களுக்கு அருகில் வைத்துவிட்டு கிளம்பினார். அவர் இவ்வாறு பல வாரங்களுக்கு, அவர்களது தியானத்தை சிதற அடிக்காமல், அவர்களை பாதுகாத்தும் கண்காணித்தும் வந்தார். இரண்டு தபஸ்விகளை கண்காணிக்க ஒரு மூத்த சீடரையும் நியமித்து இருந்தார். அவர்கள் விரதம் காரணமாக மெலிந்து, சோர்வாகவும் வெயிலால் உடல் சிவந்தும் இருந்தாலும், இருவரும் இயற்கையின் அழைப்பிற்கு மட்டுமே தங்கள் இருப்பிடத்தை விட்டு அசைந்தார்கள். ஒரு மாதம் கழித்து, அவர்களுக்கு தண்ணீர் மட்டுமே வழங்கப்பட்டது. §

செல்லப்பசுவாமி அவர்கள் தியானம் செய்யும் இடத்திற்கு வந்து, பல மணி நேரங்களுக்கு ஒருவர் மாற்றி ஒருவரை பார்த்துக்கொண்டு இருப்பார். இறுதியாக நாற்பதாவது நாளன்று (சிலர் அதை விட குறைவான நாட்கள் என்று குறிப்பிடுகின்றனர்), ஒரு திறந்தவெளி விறகு அடுப்பில் முறையாக தயார் செய்த தேநீர் கொண்டு வந்து, அவர்களது உலோக குவளையில் ஊற்றினார். அவர்கள் அவற்றை குடிக்க மெதுவாக உயர்த்தியதும், அவர் திடீரென்று திரும்பி அவர்கள் கைகளில் இருந்த குவளைகளை தட்டிவிட்டார். அவர்கள் உலர்ந்த தரையில் தேநீர் சிந்துவதை பார்த்து அதிர்ச்சி அடைந்தாலும், குருவின் நடவடிக்கையை கலங்காமல் ஏற்றுக்கொண்டனர். §

அவர் அவர்களை சிறிது நேரம் நோட்டமிட்டு பின்னர் உணவு சமைக்க தொடங்கினார். அவர்கள் பலமுறை பார்த்திருந்த அந்த காட்சியை ஆர்வத்துடன் கவனித்தனர். பானையில் செல்லப்பாவின் குழம்பு என்று அழைக்கப்பட்ட, அரிசி மற்றும் காய்கறியின் ஒரு பிரத்யேக கலவை கொதித்துக்கொண்டு இருக்க, அவர் பனைமர இலைகளைக் கொண்டு சாப்பிடும் தொண்ணைகளை தயார் செய்தார். உணவு தயாரானதும், கரண்டியால் ஒரு சிறிய பகுதி எடுத்து, ஒவ்வொருவருக்கும் ஆவி பறக்கும் தொண்ணைகளில் அதை வழங்கினார். அவர்கள் உணவு உண்ண ஆரம்பித்ததும், அவர்கள் கைகளில் இருந்த உணவை கால்களால் தட்டிவிட்டு, “உங்களுக்கு தருவதற்கு என்னிடம் இது மட்டுமே இருக்கிறது! நீங்கள் வெளியே சென்று யாசகம் செய்து சாப்பிடுங்கள்!” என்று கத்தினார். அந்த சம்பவம் அவர்கள் இருவருக்கும் அதிக அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும், அது ஒரு அபூர்வமான தீட்சை என்றும், அது தங்களது பயிற்சி முடிந்ததற்கான அறிகுறி என்றும் அவர்கள் அறிந்து இருந்தார்கள். “இரு யானைகளை ஒரு கம்பத்தில் கட்டி வைத்திருக்க முடியாது,” என்று அவர் அறிவித்து, அவர்களது கடினமான தியானத்தில் இருந்து அவர்களுக்கு விடுதலை அளித்தார். §



*செல்லப்பசுவாமி தனது இரண்டு சீடர்களுக்கும் தீட்சையை வழங்கிய பின்னர், இரண்டு யானைகளை ஒரே கம்பத்தில் கட்டி வைக்க முடியாது என்று அறிவித்து, இருவரையும் வெவ்வேறு திசைகளில் அனுப்பி வைத்தார்.*

……………………§

கதிர்வேலுசுவாமி மறைவாக சென்று சில நாட்கள் ஆகியிருந்தன. அவர் இந்தியா சென்றதாக கூறப்படுகிறது. யோக சுவாமியும் மறைவாக சென்றுவிட்டார். தான் மேற்கொண்ட கடினமான நோன்பில் இருந்து மீள்வதற்கும் ஓய்வு எடுப்பதற்கும், அவர் கொழும்புத்துறை திரும்பி இருந்தார். ஒரு வாரத்திற்கு பிறகு, செல்லப்பசுவாமியுடன் இருப்பதற்கு அவர் நல்லூர் வரை நடந்து சென்றார். தனது குருவை காணப்போகிறோம் என்ற பேரானந்தம் மற்றும் ஆர்வத்தில், சுவாமியின் இருப்பிடத்திற்குள் நுழைந்தார். §

அவர்கள் ஒன்றாக அமர்ந்து இருந்த சில நிமிடங்களின் போது, செல்லப்பசுவாமி, “இங்கே கவனி! இங்கே கவனி! உலகம் இருக்கும் வரை, கடல்கள் இருக்கும் வரை, நான் இலங்கை நகரத்தை வழங்கிவிட்டேன். அரசரின் கீரிடத்தை வழங்கிவிட்டேன்.” 1910 வருடத்து பங்குனி மாதத்தின் இரண்டாவது திங்களன்று, இரண்டாவது தீட்சை வழங்கப்பட்டது. அதில் யோக சுவாமியின் அண்டை வீட்டுக்காரராகவும், செல்லப்பசுவாமியின் சீடனாகவும் இருந்த தியாகர் பொன்னையா கலந்து கொண்டார். சுவாமி அன்றில் இருந்து, அந்த நாளை தனது *தீட்சை* நாளாக கடைப்பிடித்து, அந்த நாளை ஒரு அரசரின் முடிசூட்டு விழாவை போன்றதாக விவரித்தார். §

Page 25: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/25_yo03_04.html

# குருவின் சரித்திரங்கள்

## அத்தியாயம் பதினொன்று

## “யோகநாதன் செத்துவிட்டான்”

யோக சுவாமி தனது *தீட்சையை* பெற்றவுடன் தெற்கு திசையில் யாத்திரை மேற்கொள்ள ஆரம்பித்தார். தன்னை தன்னுடைய குருவுடன் மிகவும் நெருக்கமாக சேர்த்து இருந்த இணக்கத்தை, தனது குருவே பிரிக்க நினைப்பதாக அவருக்கு தோன்றி இருக்கலாம். சுவாமி விவேகானந்தர், தனது குருவான ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் மரணத்திற்கு பிறகு இந்தியா முழுவதும் மேற்கொண்ட பயணத்தை நினைவுகூர்ந்து இருக்கலாம். அல்லது செல்லப்பசுவாமி சொன்ன சொல்லின் அடிப்படை அர்த்தத்தை புரிந்துக்கொண்டு இருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும், அவர் அங்கிருந்து கிளம்பி நடக்க ஆரம்பித்தார். தனது துணிகளை மட்டும் சுமந்து கொண்டு, *பரிவ்ராஜக* என்று அழைக்கப்படும் “நாடோடி துறவிகளை" போல, அந்த தீவில் தெற்கு முனையில் இருந்த முருகன் கோயிலான கதிர்காமத்திற்கு யாத்திரை மேற்கொண்டார். அவர் அங்கே செல்வதாக யாரிடமும் சொல்லவில்லை. §

**நடைப்பயணமாக இலங்கையை சுற்றி வருதல்**

அவர் சிறிய பாதைகள் மற்றும் கிராமப்புற சாலைகள் வழியாக நடந்து, கிழக்கு கரையோரம் நோக்கி முன்னேறினார். அவர் அதன் பிறகு தெற்கு திசையில் முல்லைத்தீவு மற்றும் அதைக்கடந்து தனது விருப்பப்படி நடந்து செல்வார், மற்றும் சில மணிநேரங்கள் அல்லது சில நாட்களுக்கு தியானம் செய்ய, சந்நிதிகள் அல்லது கோயில்களில் வழக்கமாக தங்கியிருப்பார். அவர் திருகோணமலை, சித்தண்டி, மட்டக்களப்பு, திருக்கோவில் மற்றும் பொத்துவில் வழியாக கிழக்கு பகுதியை சுற்றியிருக்கும் கரையோரத்தில் நடந்து சென்றார். அடுத்து செல்வதற்கு இடமும் இல்லாமல், செய்வதற்கு வேறு எதுவும் இல்லாமல், அவர் நகரங்கள் மற்றும் பள்ளத்தாக்குகள் வழியாக,


ஒரு அரசர் தனது சொந்த தோட்டத்தில் உலாவுவதைப் போல, சாலைகளில் சிறிய உலா சென்றார். §

தன்னை அனைத்துமாக மற்றும் அனைத்திலும் தன்னை காண்பதே, அவரது வழக்கமாக இருந்தது. அவர் வழியாகவும் அவரை சுற்றியும் உயிர் அழகாக பாய்ந்து சென்றது மற்றும் அவரது திட்டம் அல்லது மதிப்பீட்டின் அவசியம் இல்லாமல், எல்லாம் தனிச்சையாக வந்து சேர்ந்தன. பொழுது சாயும் போது, அவருக்காக ஒரு குடிசை அல்லது கோயில் தேவஸ்தானம் எப்போதும் காத்துக்கொண்டு இருந்தது. அவருக்கு பசிக்கும் போது யாராவது உணவு வழங்க தயாராக இருப்பார்கள், அல்லது தங்கள் வீட்டில் உணவு அருந்த வருமாறு அழைப்பு விடுப்பார்கள். அவர் செய்வதற்கு அவரது ஆன்மீக வேலை மட்டுமே இருந்தது, மற்றும் அவர் தனது ஆன்மாவை எங்கே கண்டுகொண்டாலும், தொடர்ந்து உள்ளே சென்றுகொண்டு இருந்தார். §

அந்த காலத்தில் பெரும்பாலான இலங்கை மக்களின் வாழ்வாதாரமாக விளங்கிய விவசாயத்திற்கு, சுவாமி ஒரு அமைதியான சாட்சியாக இருந்தார். கொண்டாட்டங்கள், திருவிழாக்கள், கடினமான பிரச்சனைகளுடன் விவசாயமும் மீன் பிடிக்கும் தொழிலும் முக்கிய அடிப்படைகளாக விளங்கின. அவர் கண்ட சிவபெருமான் நிரம்பிய அழகான உலகில், எல்லோரும் தங்கள் வேலைகளை செய்துக்கொண்டு, எல்லாம் எப்போதும் முறையாக இருந்தன. மேலும் அவர் தான் பார்த்தது அனைத்தையும் தனதாக ஏற்றுக்கொண்டார். அவருக்கு முன்பாக இருந்த வாழ்க்கையின் இயக்கம், அவரது துறவறத்திற்கு புறம்பாக அறிவுறுத்தலுடன் இருந்தது. §

மேலும் செல்லப்பசுவாமி எந்த உத்தரவையும் வழங்கவில்லை. தங்களது அன்றாட நட்புறவில் இருந்து, செல்பபசுவாமி எதிர்பாராத விதமாக பிரிந்த பிறகு, இது ஒரு ஆழமான ஆன்மீக யாத்திரையாக, மறுசீரமைத்துக்கொள்ளும் நேரமாக இருந்தது. தனது குருவின் உத்தரவை முன்னிட்டு, யோக சுவாமி தனது வாழ்க்கையை மாற்றியமைக்க வேண்டி இருந்தது. இதற்கிடையில், அவர் தனது உருவமற்ற வீடான முழுமுதற்பொருள் என்கிற பரமாத்துமாவிற்குள் தன்னை மீண்டும் மீண்டும் ஈடுபடுத்தி, இயலுணர்வு சக்திகளை வளர்த்து, தனது வாழ்நாள் பணிக்கான அடிப்படையை தயார் செய்துக்கொண்டு இருந்தார்.§

இன்றைய சூழ்நிலையை போல, தீவில் பெரும்பாலானோர் பௌத்த மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர் தனது பயணத்தின் போது பௌத்த மதத்தவரை அவ்வபோது சந்தித்துக்கொண்டு இருந்தார். இந்து பெரும்பான்மையைக் கொண்ட வடக்கு பகுதியில் தனது வாழ்நாள் முழுவதையும் கழித்து இருந்ததால், இது ஒரு விசித்திரமான அனுபவமாக இருந்தது. பிற்காலத்தில், பௌத்த மதத்தவர்கள் அவரைக் காண வந்த போது, அவர் ஒரு *பிக்குவை* போல, பௌத்த சமய போதனைகளை வார்த்தை பிறழாமல் மேற்கோள் காட்டிப் பேசினார். §



கண்டியில் இருந்து 140 கிலோமீட்டர் வடக்கே, புகழ்பெற்ற 46-அடி-நீள சாய்ந்திருக்கும் புத்தர் இருக்கும் பொலன்னறுவைக்கு யோக சுவாமி பயணம்

*மேற்கொண்டார். இந்த சிலை புத்தர் நிர்வாணாவிற்குள் நுழையும் தருணத்தை சித்தரிப்பதாக கூறப்படுகிறது.*

........................§

யோக சுவாமி தனது யாத்திரையில், இலங்கையை முழுமையாக வலம் வந்தார். அதன் வெப்பமண்டல செழுமை, அதன் பூகோள அழகு மற்றும் அதன் மனித வேற்றுமையினால் ஈர்க்கப்பட்டார். அவர் தன்னை சுற்றியிருந்த இடத்தில் மக்கள் செய்வது அனைத்தையும் கவனித்தார் மற்றும் அதன் பிறகு எப்போதும் “எனது தீவு", “எனது மக்கள்,” “எனது துறவிகள் மற்றும் சந்நியாசிகள்" என்று சொல்லிக்கொண்டு இருப்பார். §

பிற்காலத்தில், அவரது சீடர்களில் ஒருவர் அரசாங்கத்தை தொடர்புகொள்ள வேண்டி இருந்தால், “கவலை வேண்டாம்—எனது அரசு, எனது பிரதமர், எனது நிதி அமைச்சர்,” என்று கூறி அவருக்கு உத்திரவாதம் அளிப்பார். அவர் ஒரு பாட்டில்: §

> இலங்கை நமது பூமி! ஆண் அல்லது பெண், ஒருமை அல்லது வேற்றுமை என்று எதுவும் இல்லை. சொர்க்கமும் பூமியும் ஒன்றே. இது சான்றோர்கள் பேசும் மொழியாகும்! நாம் ஒன்றாக சேர்ந்து உலகை ஆள்வதற்கு, இப்போதே மகிழ்ச்சியுடன் எழுந்து வாருங்கள்! §

தூரத்து பிரதேசத்தில் இருந்து பணிமாற்றம் பெற்ற ஒருவர், யோக சுவாமியிடம் ஆசிகளை பெறுவதற்காக வந்தால், அவரிடம் சுவாமி அந்த பகுதியில் இருந்த கோயில்கள் மற்றும் சந்நிதிகளை பற்றி தெரிவிப்பார். அவர் தனது சொந்த கிராமத்தை அறிந்து இருந்ததை போல அந்த பிரதேசம், புராணக்கதைகள் மற்றும் உள்ளூர் மக்களைப் பற்றி அறிந்து இருந்தார். போக வேண்டிய கோயில்கள், அதற்கு போகவேண்டிய நேரங்கள் மற்றும் செய்யவேண்டிய பிரார்த்தனைகளைப் பற்றி விளக்கம் அளிப்பார். “நான் அங்கே பல நாட்களுக்கு தியானம் செய்தேன், நீங்கள் அங்கே அடிக்கடி செல்லவேண்டும்” என்று அவர் கூறுவார். அவரது யாத்திரை அவருக்கு வழங்கிய அனுபவங்களின் ஆழம் மற்றும் குறிப்பிடத்தக்க வகைகள், பல வருடங்களுக்கு பிறகு அவரை பிரபலப்படுத்தின. §

அவர் கொக்கிளாய் வந்தடைந்து இரண்டு மாதங்கள் நிறைவடைந்து இருந்தன. அவர் அங்கிருந்து கிளம்பும் அவசரத்தில இல்லை. இரண்டு வாரங்கள் கழித்து அவர் திருகோணமலையில் இருந்தார். அதன் பிறகு அவர் உள்நாட்டு பகுதிக்குள் நுழைந்து, மலைப் பிரதேசமான பொலன்னறுவை மற்றும் சிகிரியா சென்று, அங்கிருந்து மீண்டும் மட்டகளப்பு சென்றார். அவர் வழியில் பல மகான்கள், முனிவர்கள், ஆண்டிகள் என்று பல தெய்வீக புருஷர்களை சந்தித்தார். அவர் பெரிய காடுகளின் மத்தியில் அல்லது குன்றுகளில் இருந்த குகைகளில் வாழ்ந்த யோகிகளுடன் சேர்ந்து அமர்ந்துகொண்டார். அவர் பௌத்த சமய மடங்களுக்கு சென்றார் மற்றும் இசுலாமிய மறைமெய்ஞ்ஞானிகள் மற்றும் கிறித்துவ மதகுருமார்களை

சந்தித்தார். அவர் எங்கே சென்றாலும் நல்ல வரவேற்புடன் வசதியாக இருந்தார். §

ஒரு நாள் சாலையில் நடந்து செல்லும் போது, அவர் ஒரு இசுலாமிய தெய்வீக புருஷர் ஒருவரை சந்தித்தார். அவர்கள் மதியம் முழுவதும் ஒன்றாக நடந்து சென்றனர், மற்றும் அவர்கள் பிரியும் முன் அந்த மகான், யோக சுவாமிக்காக தெய்வத்தை புகழ்ந்து பக்தியுடன் அழகாக பாடிய பாடலை, யோக சுவாமி என்றுமே மறக்கவில்லை. அவர் அந்த பாடலை தனது வாழ்நாள் முழுவதும் பாடிக்கொண்டு இருந்தார். அவர் அந்த பாட்டை பாடும் போது, அந்த மகானைப் பற்றி தனது சீடர்களிடம் விளக்குவார். §

அவர் கல்லோயா நதியை கடக்கும் போது, காடுகளில் குடிசைகளில் வாழ்ந்து கொண்டு, யோக சக்திகளை பெறுவதற்காக தவத்தை செய்த ஏழு ஆண்டிகளை சந்தித்தார். அவர்கள் தங்கள் மனோஉணர்வு நாட்டங்களில் இணைந்துகொள்ள  அவருக்கு அழைப்பு விடுத்தனர், மற்றும் அவரது ஆர்வத்தை தூண்டவும் பல வித்தைகளை செய்தனர், ஆனால் அவர் அதற்கு வளைந்துக்கொடுக்கவில்லை.  அவர்கள் சிறிது நேரம் கழித்து தங்கள் முன்பாக ஒரு காட்டு பன்றியை கண்டனர். அதன் தாடையில் இருந்து இரத்தம் சொட்டிக்கொண்டு இருக்க, அது அவரை நோக்கி நேராக வெறியுடன் அலறிக்கொண்டு வந்தது. தன்னை தற்காத்துக்கொள்ள அவருக்கு போதுமான நேரம் கிடைக்கவில்லை. அவர் பதட்டமும் அடையவில்லை, தன்னை மனரீதியாக தயார்படுத்திக்கொள்ளவும் இல்லை. அவர் பார்த்துக்கொண்டு இருந்தார்; அந்த விலங்கு அவரை தாக்குவதற்கு நெருங்கியதும், அவரது அமைதியை பார்த்து வந்த வேகத்திலேயே மறைந்துவிட்டது. அவர் அவர்கள் அளித்த வேடிக்கைக்கு நன்றி செலுத்திவிட்டு, நதியை கடந்து சென்றார். §

மட்டககளப்பு மாகாணத்தில் இருந்த ஒரு இசுலாமிய கிராமம் வழியாக சென்றுகொண்டு இருக்கும் போது, தகரர் என்ற இசுலாமிய  சூட்சும ஞானியை சந்தித்தார். அவர் சுவாமியின் ஆன்மீக சிந்தனைகளை இயலுணர்வுடன் புரிந்துக்கொண்டு, தெய்வீக புருஷரை கௌரவிக்க விரும்பி, அவரிடம் ஒரு விருந்திற்கு வருமாறு அழைப்பு விடுத்தார். இந்து துறவி யோசிப்பதை பார்த்து, அவருக்கு இசுலாம் என்ற வேறுபாடு இருக்கிறதா என்று கேட்டார். தனது குருவான செல்லப்பசுவாமி சாதி மற்றும் மதத்தில் இருந்து விலகி இருந்ததை யோக சுவாமி நினைவுகூர்ந்து விருந்தில் கலந்து கொண்டார். இசுலாமிய  மரபிற்கு மாறாக, ஆண்களுடன் சேர்ந்து பெண்களும் தன்னை விருந்தில் உபசரித்ததாக, சுவாமி பின்னர் தெரிவித்து இருந்தார். அவரிடம் தகரர் ஒரு காப்பினை வழங்கி, “இதை அணிந்துகொண்டு செல்லுங்கள். எந்த துன்பங்களும் உங்களை நெருங்காது,” என்று கூறினார். “அந்த காப்பு  என் கையில் இருந்த வரை இசுலாமியர்கள் எனக்கு அதிக மரியாதை செலுத்தினர். ஆனால் ஒரு நாள் இரவு நான் இருந்த மடத்தில் ‘இது எனக்கு எதற்கு?’என்று நினைத்து அதை கழட்டிவிட்டு சென்றேன், ” என்று இந்த சம்பவத்தை பற்றி பல வருடங்கள் கழித்து சுவாமி குறிப்பிட்டார். §

அவர் திருக்கோயிலுக்கு அருகே ஒரு குகையில் தனியாக வாழ்ந்த ஒரு ஆண்டியை சந்தித்தார். அவர்கள் மழையில் இருந்து ஒதுங்கி, ஓரிடத்தில் உட்கார்ந்து பல மணிநேரம் பேசிக்கொண்டு இருந்தனர். சுவாமி கிளம்ப தயாராகும் போது, அந்த ஆண்டி அந்த குகையில் பதினொரு வருடகாலம் தங்கியிருந்ததற்கு அடையாளமாக விளங்கிய, மந்திர சக்தி கொண்ட ஒரு தகரக் குவளையை பரிசாக அளித்தார். அவர் தனது விருந்தாளியிடம், “அந்த குவளையை உன்னிடம் வைத்துக்கொள். உனக்கு தேவையானது அனைத்தும் உன்னை தேடி வந்து சேரும்,” என்று கூறினார். அந்த பரிசை யோக சுவாமி கண்ணியமாக வாங்கிக்கொண்டு, அங்கிருந்து கிளம்பினார். சுவாமி கண்ணுக்கு எட்டாத  தூரம் சென்று அடைந்ததும், அவர் அந்த குவளையை வீசி எறிந்துவிட்டார். §

யோக சுவாமி தனது பயணத்தை தொடங்கி சுமார் ஆறு மாதங்கள் முடிந்த நிலையில், ஜூலை மாத மத்தியில் தெற்கு கரையோரம் வந்தடைந்து, அங்கிருந்து வெத்தா பழங்குடியினரின் இருப்பிடமான, மொனராகலை மற்றும் பிபிலை பகுதியின் அடர்த்தியான காடுகள் வழியாக, நிலப்பகுதிக்குள் 120 கிலோமீட்டர் உட்புறமாக, கதிர்காமம் நோக்கி, கரடுமுரடான கடுமையான பாதைகள் வழியாக நடக்க ஆரம்பித்தார். §

பிற்காலத்தில் யோக சுவாமி, தான் சந்தித்த சில சோதனைகள் பற்றி வல்லிபுரம் என்கிற ஒரு யாழ்ப்பாண பள்ளி ஆசிரியரிடம் எடுத்துரைத்ததை ச. அம்பிகைபாகன் அவரது சுயசரிதையில் விளக்கியுள்ளார்:§

> மட்டக்களப்பிற்கு சமீபமாகச் செல்லும் வழியில், எனக்கு திடீரென்று காய்ச்சல் தொற்றிக்கொண்டது. வலி பொறுக்க முடியவில்லை, அதனால் கல்  ஒன்றை தலைகீழாக வைத்து ஒரு மரத்தடியில் படுத்து உறங்கினேன். விடியற்காலையில் எழுந்த போது காய்ச்சல் குணமாகி இருந்தது, மற்றும் நான் பயன்படுத்திய கல்லின் மேல் 25 சதம் (சென்ட்) இருந்தது. அதை எடுத்துச் சென்று கடை ஒன்றில் தோசை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு நடந்து செல்லும் போது, ஆனைக்குட்டி சுவாமி (சிற்றானைக்குட்டிச் சுவாமியாக இருக்கவேண்டும்) என்னை கண்டார். அவர் என்னை கண்டதும் ஓடிவந்து என்னை கட்டித் தழுவிக் கொண்டு, “உன்னைக் கண்டதால் மழை பெய்ய வேண்டும்,” என்றார். “இன்னும் ஒரு மணி நேரம் கழித்து பெய்யட்டும்,” என்று நான் பதில் அளித்தேன். ஒரு மணி நேரம் கழித்து மழை பெய்தது. §
>
> அதன் பின்னர் நடந்து செல்லும் போது, ஒரு ஆறு பெருக்கெடுத்து பாய்ந்து கொண்டிருந்தது. அதற்கு மேல் செல்ல முடியாமல் கரையில் ஓரிடத்தில் மணலை தோண்டி, ஒரு ஆழம் குறைவான பள்ளத்தை உருவாக்கி, அதில் மூன்று நாட்கள் படுத்துக்கொண்டேன். மூன்றாவது நாளன்று, சில பழங்குடியின வேடர்கள் மூங்கில் மரங்களால் கட்டுமரம் கட்டி இக்கரைக்கு வந்து சேர்ந்தனர். வந்தவர்கள், சமையல் செய்து முடித்ததும், என்னருகே வந்து, “உபாசக்கார மாத்தயா” (உபவாசம் இருக்கும் சான்றோரே)  என்று கூறி, என்னை விழிக்க  வைத்து உணவு

அளித்தார்கள். உண்ட பின்னர், அவர்கள் வந்த கட்டு மரத்தில் ஏற்றி என்னை அக்கறை கொண்டு சேர்த்தார்கள். §

விரைவில் அந்த பாதையில், வருடந்தோறும் ஜூலை-ஆகஸ்ட் மாத பௌர்ணமி அன்று நிறைவடையும் பதினான்கு நாள் எசலா பெரஹெரா திருவிழாவிற்காக, முருகன் சந்நிதியை நோக்கி சென்றுகொண்டு இருந்த ஆயிரக்கணக்கான பக்தர்களின் வெள்ளம் அலைமோதியது. ஒவ்வொரு பக்தனும் தன்னுடன் உணவு, கற்பூரம் மற்றும் எளிமையான படுக்கையின் ஒரு மூட்டையை சுமந்து சென்றார்கள். வழக்கமாக ஒவ்வொரு யாத்திரியும் கொண்டு வரும், ஒரு தேங்காயை மட்டுமே யோக சுவாமி சுமந்து சென்றார். அந்த தொலைதூர சந்நிதிக்கு சென்றடைய தேவைப்பட்ட மூன்று நாட்களும், அவர் திறந்தவெளியில் உறங்கி உண்ணாமல் விரதம் இருந்தார். அங்கே அவர் இரவு நேரங்களில் பெரும்பாலும், அந்த புனிதமான மலை உச்சியில் தியானம் செய்துக்கொண்டும், முருகப்பெருமானை பிரார்த்தித்துக் கொண்டும் இருந்தார், மற்றும் காலைப்பொழுதில் அவர் காட்டில் இருந்த கோயில் மற்றும் ஆசிரமங்களை சுற்றிப் பார்த்தார். §

அதே சமயம், யாழ்ப்பாணத்தில் இருந்த யோகநாதனின் சொந்தங்கள், வெகுநாட்களாக அவரை காணாமல் பதட்டமடைந்து, அவரை தேடுவதற்கு தீவிர முயற்சி செய்து வந்தனர். அவர் ஒரு சந்நியாசியாக இருந்ததால், சில வாரங்களுக்கு அவரை பார்க்காமல் இருக்க அவர்கள் பழகியிருந்தாலும், அவர் நீண்டநாட்கள் அவர்களை விட்டு பிரிந்து இருந்ததில்லை. யாழ்ப்பாணத்தில் குடும்ப உறவுகள் வலுவாக இருந்தன, மற்றும் தங்கள் வாழ்க்கையில் ஒருவர் எந்த பாதையை தேர்ந்தெடுத்து இருந்தாலும், மக்கள் ஒருவரை ஒருவர் தொடர்ந்து கண்காணித்து வருவார்கள். பல நாட்கள் பொறுத்த பிறகு இறுதியாக சின்னையா, நல்லூர் வரை தன்னுடன் துணையாக வருவதற்கு, செல்லப்பசுவாமியின் மிகவும் பழைய சீடர்களில் ஒருவரை ஏற்பாடு செய்தார். தனது மருமகன் இருக்கும் இடத்தைப் பற்றி "அந்த விசரன்" அறிந்து இருப்பார் என்று சின்னையா நினைத்தார். §

அவர்கள் சென்றடைந்த போது, செல்லப்பசுவாமி *தேரடியின்* படிகளில் தனியாக உட்கார்ந்து, விசிறிகளை பின்னிக்கொண்டு தனக்குத்தானே பேசிக்கொண்டு இருந்ததை கண்டார்கள். அவர்கள் தெருவில் நடந்து வருவதை பார்த்ததும், அவர் தனது பின்னும் வேலையை நிறுத்திக்கொண்டார். அவர்கள் அவரை தொந்தரவு செய்ததற்காக மன்னிப்பு கேட்டு, அவரது விசிறிகளின் அழகை பாராட்டி, வானிலையை பற்றி குறிப்பிட்டு, தயக்கத்துடனும் பிறகு பதட்டத்துடனும், "யோகநாதன் எங்கே? நாங்கள் அவனை பார்த்து பல மாதங்கள் ஆகிறது." என்று விசாரித்தார்கள். செல்லப்பசுவாமி மெத்தனமாக தனது பின்னும் பணியை தொடர்ந்துக்கொண்டு: "ஓ யோகநாதன். அவன் செத்துவிட்டான்," என்றார். அவரிடம் இதற்கு மேல் பேசுவதற்கு எதுவுமில்லை என்று புரிந்துகொண்ட குடும்பம், ஏமாற்றத்துடன் திரும்பியது. மரண செய்தியால் நிலை குலைந்து இருந்த அவர்கள், அதை பல நாட்களுக்கு நம்பாமல் இருந்தார்கள். குறிப்பாக

அத்தை முத்துபிள்ளை அதிக வேதனையில் இருந்தார். அவர்கள் சுவாமி திரும்பி வருவார் என்று பல மாதங்கள் காத்து இருந்து, இறுதியில் தனது மருமகன் இறந்துவிட்டான் என்ற முடிவுக்கு வந்தனர். அவர்கள் உடல் இல்லாமல் செய்யக்கூடிய ஈமச்சடங்கை செய்து முடித்து, சுவாமியின் உடைமைகளை அழித்தனர். §



செல்லப்பசுவாமி யோகநாதனின் குடும்பத்தாரிடம் அவர் இறந்துவிட்டதாக தெரிவித்ததும், அவரது அத்தகைய முத்துப்பிள்ளை அதிர்ச்சி அடைந்தாள்.

*அவர்கள் அவருக்கு ஈமச்சடங்கை நடத்திய பின்னர், அவர் உயிரோடு இருப்பதை தெரிந்துகொண்டார்கள்.*

……………………..§

இதற்கிடையில் யோக சுவாமி இலங்கை தீவு முழுவதையும் முதல்முறையாக சுற்றி பார்த்துக்கொண்டு இருந்தார். அவர் இதை மிகவும் சிறப்பான யாத்திரையாக தனது வாழ்நாள் முழுவதும் சொல்லிக்கொண்டு இருந்தார். அவர் கேள்விப்பட்டதைப் போலவே கதிர்காமம் இருந்தது. திருவிழாக் காலங்களில், அந்த இடத்தில் நிலவிய உற்சாகமளிக்கும் சக்தியும் ஆற்றலும் மனதை மயக்குவதாக இருந்தன. இந்த கோயில் மிகவும் அடர்த்தியான வனாந்தரத்தில் அமைந்து இருந்தாலும், அது இதன் அழகிற்கு மெருகேற்றுவதாக இருந்தது. ஏழு புனிதமான மலைகளால் சூழப்பட்ட இந்த பள்ளத்தாக்கின் மீது ஒரு உன்னதமான, கம்பீரமான சூழல் நிலைத்து இருந்தது. கதிர்காமம் என்கிற பெயரை இந்துக்கள், பௌத்த சமயத்தை சேர்ந்தவர்கள் மற்றும் இசுலாமியர்கள் ஒரே மாதிரியான மரியாதையுடன் உச்சரிக்கிறார்கள். §

வருடம் முழுவதும் காலியாகவும் அமைதியாகவும் இருக்கும் கதிர்காமம், திருவிழாக் காலங்களில் மிகவும் தீவிரமான நடவடிக்கையாக திடீரென்று சுறுசுறுப்படைந்து, தொடங்கிய வேகத்தில் நிறைவடைகிறது. தெய்வத்தின் சக்தி மற்றும் கருணையின் சிந்தனைகள் நிரம்பி இருக்கும் பக்தர்கள், தொடர்ந்து விசேட தவங்களை செய்து, ஆசிகளை பெற்று, உறுதிமொழிகளை மேற்கொண்டு, விரதங்களை செய்து ஆன்மீக உயரத்தை எட்டுவது போல, வேறு எங்கும் நடைபெறுவதாக தோன்றவில்லை. §

காட்டில் இருக்கும் இந்த கோயிலில் சுவாமி சில நாட்கள் தங்கியதாக சிலரும், சில மாதங்கள் தங்கியதாக வேறு சிலரும் குறிப்பிடுகிறார்கள். இந்த முருகன் கோயிலில், அவர் தியானம் செய்து “*சும்மா இருப்பதில்*" பயிற்சி மேற்கொண்டார். அவர் பிற்காலத்தில், இந்த சிறிய துதிப்பாடலை பாடினார்:§

வேலைத் தூக்கிவிளை யாடுந் தெய்வமே - யென்

வினைப்பகைதீர் தெய்வமே!

காலைத்தூக்கி யாடும் கண்ணுதல் தந்த

கதிர்காமத் தையனே கழலடி நம்பிவந்தேன்.


எங்கெங்குந் திருமுகம் எங்கெங்குந் திருவிழி

எங்கெங்குந் திருச்செவி எங்கெங்குந் திருக்கரம்

எங்கெங்குந் திருவடி எங்கேநீ அங்கே நான்

ஈசனே கதிர்காம வாசனே முருகேசா. §

கதிர்காமத்தில் இருந்து யோக சுவாமி கடற்கரையை பின்தொடர்ந்து மாகமா, அம்பாந்தோட்டை, மதாரா, தேவேந்திரமுனை, காலி மற்றும் களுத்துறை வழியாக மேற்கில் கொழும்பு நோக்கி சென்றார். அவர் நூற்றுக்கண்கான கிராமங்கள் வழியாக நடந்து சென்று, மக்களிடம் பேசிக்கொண்டு, தன்னை சுற்றி இயங்கும் வாழ்க்கையை கண்காணித்துக்கொண்டு மிகவும் நிதானமாக பயணம் மேற்கொண்டார். இலங்கையின் தெற்குப்பகுதி சிங்களர்களின் பிரதேசமாகவும், குறைவான இந்து கோயில்கள் இருந்ததாலும், அவர் இந்த இடத்தில் குறைவாகவே தங்கினார். §



*சுவாமி விவேகானந்தர் தனக்கு பிடித்தமான இந்தியாவை ஆய்வு செய்ததை போல, யோக சுவாமி 1910 ஆம் ஆண்டு இலங்கை தீவை சுற்றி வந்தார். அப்போது அவர் மக்களிடம் இருந்த உற்சாகம், புண்ணிய தலங்கள் மற்றும் இலங்கையின் கிராமங்கள் மற்றும் வயல்களின் தினசரி வாழ்க்கை ஓட்டங்களை பார்த்து ரசிக்கச் செய்தார்.*

……………………..§




அவர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிராமத்தில், ஏதாவது ஒரு தமிழரின் வீட்டில் தவறாமல் தங்குவார். அவர் எதிர்திசையில் பயணம் மேற்கொண்ட ஆறு வாரங்களும், யாசகத்தால் உயிர் வாழ்ந்து, வனங்கள் வழியாக சென்று காட்டு விலங்குகளை எதிர்கொண்டு பல இன்னல்களை சந்திக்க வேண்டியிருந்தது. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதாலும், நதிகள் சேறாக இருந்ததாலும், அவருக்கு சரியான குடிநீர் கிடைக்காமல் மலேரியா நோய் தொற்றிக்கொண்டது. உடல் வழங்கிய புகார்களை பொருட்படுத்தாமல், தினசரி கடமைகளை செய்ய அதை கட்டாயப்படுத்தி, இருபது அல்லது முப்பது கிலோமீட்டர் நடந்து செல்ல, தினமும் காலையில் சிரமப்பட்டு எழுந்திருக்க வேண்டியிருந்தது. §

இறுதியாக, முருகப்பெருமானின் அருளால், அவர் இலங்கையின் பரபரப்பான துறைமுக தலைநகரமான கொழும்பு மாவட்டத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் சாலையில் சென்றுகொண்டு இருக்கும் போது, இலங்கையின் மிகவும் பிரபலமான சித்தர்களில் ஒருவரான, பருமனான

உடலைக்கொண்ட, ஆனைக்குட்டி சுவாமியின் ஆசிகளை பெற்றார். அந்த சித்தர் சோர்வாக இருந்த வழிப்போக்கனுக்கு ஐந்து சத நாணயத்தை வழங்கி, “தும்பிக்கை இது நம்பிக்கை!” என்று ஆசிர்வதித்தார். §

அவர் கொச்சைக்கடையில் சில நாட்கள் தங்கி இருந்த போது, தினசரி உணவிற்காக யாசகம் செய்தார் மற்றும் இரவு நேரங்களில் நிலக்கரியை கையாளும் இரயில் ஊழியர்களுடன் தங்கி இருந்தார். அவர் ஒரு பிச்சைக்காரனாக, மிகவும் பிரபலமான சர் பொன்னம்பலம் அருணாசலத்திடம் சென்ற போது, அவர் இவருக்கு பத்து சதங்களை வழங்கினார். §

அவர் இலங்கை தீவின் மிகப்பெரிய நகரமான கொழும்பின் சுற்றுப்புறத்தில், ஒரு மாதம் இருந்த பிறகு, கோட்டை மற்றும் ரத்னபுராவிற்கு இடையே உள்நாட்டில் பல வாரங்கள் தங்கியிருந்தார். அவர் அங்கிருந்து செங்குத்தான சாலைகள் வழியாக மலைப்பிரதேசமான கண்டி மற்றும் தெற்கே மலைநாடாகவும் தேயிலை தோட்டங்களின் மையமாகவும் விளங்கும் நுவரெலியாவிற்கு சென்றார். அவர் கிராமப்புற பாதைகள் மற்றும் சாலைகள் வழியாக நடந்து குருணாகல் மற்றும் மீண்டும் கடற்கரை ஓரமாக புத்தளம் வரை சென்றார். அவர் அனுராதபுரத்தில் பல வாரங்கள் தங்கி, தனது யாத்திரையில் இருந்த தொடர்புகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, மாத்தளை நோக்கி தனது பயணத்தை தொடர்ந்தார். §

சுவாமி மாத்தளை வந்து சேர்வதற்கு முந்தைய இரவு, அந்த ஊரின் பொதுப்பணித்துறையில் மேற்பார்வையாளராக இருந்த திரு. சரவணமுத்துவின் புனிதமான கனவில், முருகப்பெருமான் தோன்றி, “அடியான் ஒருவன் கதிர்காமத்தில் இருந்து கால்நடையாக பசியோடும், கந்தைத் துணியோடும் வருகிறான். அவனுக்கு தேவையானவற்றை வழங்கு. அவனை நன்றாக உபசரி. நானும் அவரும் ஒன்று. அவன் யாழ்ப்பாணத்திற்கு திரும்புவது, மக்களுக்கு ஒரு பெரிய வரமாக இருக்கும்,” என்றார். §

அடுத்த நாள் காலையில், சரவணமுத்து தனது கனவில் வழங்கப்பட்ட விளக்கத்திற்கு பொருத்தமாக ஒரு ஆண்டியை சந்தித்தார். அவரை யாரென்று விசாரித்த பிறகு, தனது வீட்டிற்கு பெருமகிழ்ச்சியுடன் வரவேற்றார். அவர் சுவாமியை தனது கரங்களால் உள்ளே அழைத்து செல்லும் போது, தான் கண்ட காட்சியை பற்றி உற்சாகமாக பேசினார். யோக சுவாமி முகத்தில் புன்னகையுடன், அவர் பேசுவதை கேட்டுக்கொண்டே உபசரிப்பை ஏற்றுக்கொண்டார். சரவணமுத்து ஒரு புதிய வேட்டி மற்றும் சால்வையை வழங்கி நீராடி வருமாறு கூறினார். ஒரு சிறப்பான விருந்திற்கு பிறகு, சுவாமி தங்குவதற்கு காண்பிக்கப்பட்ட விருந்தினர் இல்லத்தில், அவர் இரண்டு நாட்கள் ஓய்வெடுத்து தனக்கு புத்துணர்ச்சி வழங்கிக்கொண்டார். §

சுவாமியின் தரிசனத்தால் ஈர்க்கப்பட்டு, தனது வாழ்நாள் முழுவதும் அதீத பக்தியுடன் அவருக்கு சேவை செய்த, சரவணமுத்துவின் மருமகன், இதையெல்லாம் ஒரு சிறுவனாக, அந்த முக்கியமான நாளன்று, தனக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பின்னால் இருந்துக்கொண்டு,

சுவாமியை கூர்ந்து கவனித்துக்கொண்டு இருந்தான். நாற்பது வருடங்கள் கழித்து, சுவாமி அந்த சிறுவனை, யாழ்ப்பாணம் மற்றும் செங்கலடியில் இருந்த தனது சிவதொண்டன் நிலையங்களுக்கு கட்டிடக்கலைஞராக நியமித்தார். அவனது பெயர் அ. தில்லையம்பலம். §

மூன்றாம் நாளன்று அதிகாலையில், யாழ்ப்பாணம் நோக்கி மீதம் இருந்த தூரத்தை இரயிலில் கடக்க சுவாமி முடிவு செய்தார். சரவணமுத்து தனக்கு வழங்க விரும்பிய ஒரு அடர்த்தியான ரூபாய் கட்டை வாங்க மறுத்து, யோக சுவாமி தனது இரயில் பயணச்சீட்டுக்கு தேவையான பணத்தை மட்டும் எடுத்துக்கொண்டார். "சரவணமுத்து கவலை வேண்டாம். முருகப்பெருமான் என்னை நன்றாக கவனித்து வருகிறார்," என்று யோக சுவாமி பின்னர் தெரிவித்தார். சுவாமி நன்றி தெரிவிக்கும் விதமாக, பின்வரும் பாடலை பாடினார்:§

*அப்பனும் அம்மையும் நீயே! அரிய சகோதரரும் நீயே!*

*ஒப்பில் மனைவியும் நீயே! ஓதரும் மைந்தரும் நீயே!*

*செப்பில் அரசரும் நீயே! தேவாதி தேவரும் நீயே!*

*இப்புவியெல்லாம் நீயே! என்னை ஆண்டதும் நீயே!* §

தந்தையும் தாயும் நீ. அன்புள்ள சகோதரர்கள் மற்றும் சகோதரிகளும் நீ. ஒப்பிடமுடியாத மனைவி நீ. மதிப்புமிக்க மகன்கள் நீ. வல்லமைமிக்க அரசரும் நீ. தேவாதி தேவரும் நீ. இந்த மாபெரும் பூமியும் நீ; மற்றும் என்னை பாதுகாத்து நிர்வகிப்பவனும் நீ. §

### இலுப்பை மரத்திற்கு அடியில்

அவர் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்ட இரயில் பயணம் இரண்டு நாட்கள் நீடித்தது. அந்த பயணம் மீண்டும் அனுராதபுரம் வழியாக சென்று, பின்பு வடக்கே யாழ்ப்பாணம் இரயில் நிலையம் செல்ல 190 கிலோமீட்டர் இருந்தது. யோக சுவாமி சுமார் ஒரு வருடம் முன்பாக தோலில் ஆடைகளை மட்டும் சுமந்துகொண்டு கிளம்பியதை போலவே திரும்பியும் வந்தார். அவர் நேராக நல்லூர் கோயிலுக்கு சென்று, செல்லப்பசுவாமியின் காலடியில் விழுந்து வணங்கினார். தனது பயணங்களை நிறைவு செய்திருந்த யோக சுவாமி மனதில் திருப்தி மற்றும் உற்சாகத்துடன் இருந்தார் மற்றும் குருவிற்காக அவரது இதயத்தில் இருந்து அன்பு பெருக்கெடுத்து ஓடியது. §

அந்த தருணத்தில் செல்லப்பசுவாமி தனது சீடனிடம், "*நீ போய் இலுப்பை வேரைப் பிடி,*" என்ற ஒரு புதிய சாதனாவை வழங்கினார். யோக சுவாமி தனது குருவை விட்டு விலகி செல்ல விருப்பில்லாமல் அதே இடத்தில் சுற்றிக்கொண்டு இருந்தார். அவர் செல்லப்பசுவாமிக்கு அருகில் இருந்த மட்கலத்தைப் பார்த்து, "இதை ஒரு புனிதமான கலைப்பொருளாக

வைத்திருப்பது, நமக்கு கிடைத்த வரமாக இருக்கும்," என்று நினைத்தார். திடீரென்று செல்லப்பசுவாமி இடியை போல உறுமிக்கொண்டு, "இதன் மீது உனக்கு பந்தமோ டா" என்று பரிகாசத்துடன் கேட்டார். அவர் அந்த மட்கலத்தை தரையில் வீசி சிதறடித்தார். அது செல்லப்பசுவாமி தனது சீடனுக்கு, குரு-சீடன் இருமைவாதத்தின் முடிவான துண்டிப்பை தெரியப்படுத்தும் சைகையாக இருந்தது. §

யோக சுவாமி தனது குருவின் உத்தரவுப் படி, கொழும்புத்துறை திரும்பி, சாலை சந்திப்பில் இருந்து மூன்று அடி தூரத்தில், மருத்துவ குணங்கள் மற்றும் எரிபொருள் எண்ணெய்க்கு புகழ்பெற்ற வன்மர வகையை சார்ந்து, நன்றாக வளர்ந்த ஒரு இலுப்பை மரத்திற்கு அடியில் அமர்ந்துகொண்டார். அந்த மரம் பிற்காலத்தில் வழங்கிய நிழல் மற்றும் வானிலை பாதுகாப்பு, அவரது வாழ்க்கையில் முக்கிய அங்கம் வகித்தன. கொட்டும் மழை அல்லது சுட்டெரிக்கும் வெயிலிலும் அவர் அசராது, வெளியுலகை மறந்து, தனது உட்புற சக்தியில் மூழ்கி இருந்தார். ஒரு பிள்ளையார் கோயில் இதற்கு நேர் எதிரே சாலையின் மறுபுறத்தில் அமைந்து இருந்தது. அப்போதில் இருந்து, 1911 முதல் 1915 வரை, தன்னுடன் யோக சுவாமி இருப்பதை யோக சுவாமி அனுமதிக்கவில்லை. §

யோக சுவாமி ஒரு முறை, செல்லப்பசுவாமியின் குடிசைக்கு சென்றார். திடீரென்று முனிவர் கூச்சலுடன் வெளிவந்து, அங்கிருந்து கிளம்புமாறு தரக்குறைவாக பேச ஆரம்பித்தார். தனது குரு கையில் கிடைத்ததை எடுத்து வீசப்போகிறார் என்பதை உணர்ந்த யோக சுவாமி, வந்த வழியில் விரைந்து ஓட ஆரம்பித்தார். முனிவர் அவரைப் பார்த்து " உனது சொந்த கால்களில் நில்!" என்று கூறினார். §


செல்லப்பசுவாமி எப்போதாவது அந்த இலுப்பை மரத்திற்கு வந்து, தனது சீடனை பார்த்து சென்றுவிடுவார். யோக சுவாமி தனது குரு வருவதை பார்த்ததும், எழுந்து நின்று வணங்குவார். செல்லப்பசுவாமி முறைத்து பார்த்து, "நீ இருமையை பார்க்கிறாயா? ஒருமையை பார்க்க முயற்சி செய்," என்று அதட்டுவார். இந்த வார்த்தைகளால் அடக்கப்பட்ட சுவாமி, அதே இடத்தில் நிலையாக நின்று இருப்பார். §

இந்த செய்தி யாழ்ப்பாணத்தில் காட்டுத்தீ போல பரவியது. சுவாமி மீண்டும் தோற்றமளித்த தகவல், அவரது மாமன் சின்னையா மற்றும் அத்தை முத்துப்பிள்ளைக்கு, டஜன் கணக்கான மக்களிடம் இருந்து, அவர் நல்லூர் கோயிலில் இருந்து கிளம்பும் முன்னர் வந்து சேர்ந்தது. அவர்களுக்கு ஒரே சமயத்தில், ஆச்சரியமும் குழப்பமும் ஏற்பட்டது. அவர்கள் அந்த காட்சியை காண, *இலுப்பை* மரத்திற்கு விரைந்து சென்றார்கள். அங்கே அவர் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார். அவரிடம் அதிக மாற்றம் ஏற்பட்டு இருந்ததால், அவர்களால் அவரை முதலில் அடையாளம் காணமுடியவில்லை. அவர்கள் அவரை "யோகநாதன்!" என்று அழைத்தார்கள். அவர் பதிலும் அளிக்கவில்லை, கண்களையும் திறக்கவில்லை. ஆனால் அது அவர் தான் என்பதில் எந்த சத்கேகமும் இல்லை. அவர் நலமாக உயிருடன் இருந்தார். §

அவர்கள் இந்த தகவலை நள்ளிரவில், தங்கள் நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டுக்காரர்களிடம் பேசி, பொழுது விடிந்ததும் சின்னையா, முத்துப்பிள்ளை மற்றும் அவளது மகன் வைத்தியலிங்கம், அந்த மரத்திற்கு மீண்டும் சென்று யோகநாதனிடம் பேசவேண்டும் என்று முடிவு செய்தனர். அவர்கள் அதிகாலையில் வந்த போது, அவர் சமாதியில் ஆழ்ந்து இருந்தார். அவர்கள் அவருக்கு முன்பாக ஒரு தட்டில் பழங்களை வைத்து விட்டு, செல்லப்பசுவாமியை மீண்டும் சந்திக்க மாட்டு வண்டி மூலம் நல்லூர் புறப்பட்டனர். §

தங்கள் மருமகன் இறந்துவிட்டான் என்று செல்லப்பசுவாமி கூறியது தவறானது மற்றும் குழப்பத்தை ஏற்படுத்துவதாக இருந்தது என்று சின்னையா ஆத்திரத்துடன் பேசி முடித்தார். அவர் இந்த முறை முனிவரிடம் தைரியமாக பேசினார். அவர்கள் யோகநாதனுக்கு ஈமச்சடங்கு மற்றும் துக்கம் அனுசரித்த பிறகு, தங்கள் மருமகன் இறக்கவில்லை என்ற உண்மை தங்களுக்கு தெரிய வந்தது என்று அவர் புகார் கூறினார். “எவ்வாறு உங்களால் அந்த பொய்யை சொல்ல முடிந்தது?” என்று அவர்கள் ஆத்திரம் அடைந்தனர். செல்லப்பசுவாமி அவர்களது கோபத்தால் பாதிக்கப்படாமல் உறுதியாக இருந்து, “நாங்கள் பொய் சொல்வது இல்லை. யோகநாதன் செத்துவிட்டான்,” என்று அடக்கத்துடன் பதில் அளித்தார். §

அமைதியான உறுதியுடன் வழங்கப்பட்ட அந்த மர்மமான பதில், அவர்களை பிரமிக்க வைத்தது. மேலும் அவரிடம் பேசுவது பயனற்றது என்பதை புரிந்துக்கொண்டு, அவர் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாமல் ஏமாற்றத்துடன் அந்த இடத்தை விட்டு கிளம்பினார்கள். அவர்கள் முனிவர் சொன்ன வார்த்தைகளை நீண்ட நேரம் யோசித்த பிறகு, அவர் உடல் ரீதியான மாற்றத்தை அல்லாமல் ஆன்மீக மாற்றத்தை குறிப்பிடுகிறார் என்பதை மெதுவாக புரிந்துகொண்டார்கள். செல்லப்பசுவாமியின் உட்பார்வை தங்களுக்குள் விரிவாக்கம் பெறத்தொடங்கியதும், தங்கள் மருமகன் மாற்றம் அடைந்துள்ளான் என்ற உண்மையை பல வாரங்கள் மற்றும் மாதங்கள் கழித்து, தங்களுக்குள் உணர்ந்து கொண்டார்கள். செல்லப்பசுவாமி தனது மர்மமான தந்திரத்தின் மூலம், யோகநாதன் மீது அவர்களுக்கு இருந்த பற்றுக்கள் அனைத்தையும், தனது மந்திர சக்தியால் துண்டித்தார். அவர் குடும்ப வாழ்க்கையை துறந்து இருந்தார், மற்றும் அவர்கள் அவரை துறக்க நிர்பந்திக்கப்பட்டார்கள். §



*கொழும்புத்துறையில் இருந்த ஒரு இலுப்பை மரத்தடியில் மூன்று நாட்களுக்கு தியானம் செய்யும் கடினமான சாதனாவை, யோக சுவாமி பல வருடங்களுக்கு தொடர்ந்து செய்து வந்தார். நான்காவது நாள் சற்று ஓய்வெடுத்து மற்றும்*

*சுற்றித்திரிந்த பிறகு மீண்டும் இன்னொரு சுற்றுக்கு தயராவார். 1921 ஆம் ஆண்டில் அவரது சீடர்கள் அருகில் இருந்த ஒரு கூரை வெய்த குடிசையில் தங்குவதற்கு, அவரை சம்மதிக்க வைத்தனர்.*

........................§

**ஒரு சாதாரண குடிசையை இருப்பிடமாக ஏற்றுக்கொள்ளுதல்**

யோக சுவாமி சில வருடங்களுக்கு அந்த *இலுப்பை* மரத்தை, சாதனா செய்ய தனக்கு பிடித்தமான இடமாக, கூரையில்லாத ஒரு சாலையோர ஆசிரமமாக பயன்படுத்தினார். அவர் தன்னை நெருங்க முயல்பவர்களை, ஒரு கைத்தடியை எடுத்து துரத்திவிடுவார். அதனால் அருகில் வர முயன்ற சிலரும், அதிக அச்சத்துடன் நெருங்கினார்கள். அவர் தனது ஆன்மீக பயிற்சியில் ஈடுபடாத போது, யாழ்ப்பாணம் சுற்றியுள்ள பகுதியில் சுற்றித்திரிந்து தனக்கு பிடித்தமான இடங்களுக்கு செல்வார். இது தொடர்பாக ச. அம்பிகைபாகன் வழங்கும் குறிப்பு: §

> சுவாமிகள் பாத யாத்திரையாக கதிர்காமம் சென்று திரும்பிய பின்பு, நீண்ட நாட்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து தொலை தூரம் செல்லவில்லை. “யாழ்ப்பாணம் விரிகுடாவை விட்டு வெளியே செல்ல எனக்கு அனுமதியில்லை,” என்று சுவாமிகள் சொல்லிக்கொண்டு இருப்பார். நமக்கு கிடைத்த தகவல்களின் படி, சுவாமிகள் 1928 வருடத்திற்கு பிறகே, கண்டி மற்றும் கொழும்பு வரை சென்று வந்தார். அவர் அந்த பயணத்தை, அங்கிருந்த சீடர்களின் நலனுக்காக மேற்கொண்டார். சுவாமிகள் தனக்கு பொருத்தமானவராக கருதிய, வழக்கறிஞர் ம. ச. இளையதம்பி அவருடன் செல்வார். §

செல்லப்பசுவாமி மகாசமாதி அடைந்து ஒரு வருடம் கழித்து, *இலுப்பை* மரத்திற்கு அருகில் இருந்த ஒரு வீட்டு தோட்டத்தின் குடிசைக்கு இடம் பெயர்ந்தார். அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கு அவரது எளிமையான ஆசிரமமாக இருந்த இந்த குடிசை, கடையிற்சுவாமி முதன்முதலில் இலங்கை வந்த போது, மண்டைத்தீவில் அவரை வரவேற்ற நன்னியருடன் தொடர்புடையதாக இருந்தது. நன்னியர் கடையிற்சுவாமியை இந்த குடிசைக்கு அழைத்து வந்து, அவரது தீவிர பக்தனாகி, குருவிற்கு ஒரு சிறிய கோயிலை பராமரித்து வந்தார். §

செல்லப்பசுவாமியின் காலத்தில், தசைகள் பொருந்திய பருமனான உடலுடன், மந்தமாக இருந்த நன்னியர், அந்த குடிசையை ஒரு டீக்கடையாக பயன்படுத்தினார். அது அரியாலையில் இருந்த அவரது இன்னொரு வீட்டிற்கு அருகாமையில் இருந்தது. அவர் செல்லப்பசுவாமி மீது பக்தியுடன் இருந்தார், ஆனால் அந்த கடைக்காரரர் அவரிடம் ஆசிகளை பெற வரும்போதெல்லாம், சாது எல்லோரையும் புறக்கணிப்பதைப் போல அவரையும் புறக்கணித்தார். நன்னியர் தான் வேண்டியதைப் பெறுவதில் உறுதியாக நிலைத்து இருந்தார். §

ஒரு நாள் செல்லப்பசுவாமி தனது கடை வழியாக சென்றுகொண்டு இருந்த போது, போதையில் இருந்த நன்னியர், தனது கடைக்கு வெளியே விரைந்து வந்து, குருவை பிடித்து, கால்களால் உதைத்துக்கொண்டும் அலறிக்கொண்டும், கடைக்கு பின்னால் இருந்த வளாகத்திற்கு இழுத்து சென்று, ஒரு கம்பத்தில் கட்டி, தனக்கு அவர் ஆசியை வழங்கும் வரை, அவரை விடுவிக்க போவதில்லை என்று கத்தியை காண்பித்து மிரட்டினார். ஆனால் செல்லப்பசுவாமி திகிலடையும் வகையில், நன்னியர் அவருக்கு நீராட்டி, அவரது தலைக்கு சவரம் செய்து, வெறித்தனமான உற்சாகத்துடன் தனது குருவிற்கு பூஜை செய்து, குருவின் அருளை வேண்டி தனது கைதிக்கு கற்பூரம் காண்பித்தார். §

இவற்றையெல்லாம் பொருத்தக்கொள்ள முடியாத செல்லப்பசுவாமி, அலறிக்கொண்டு திட்டிக்கொண்டு நன்னியரை தீவிரமாக எதிர்த்து, உதவியை நாடி கூச்சலிட்டார். நன்னியர் கடை வைத்திருந்த வளாகத்தில் அந்த நில உரிமையாளர் குடும்பமும் வசித்தது. தங்கள் வளாகத்தில் கூச்சலை கேட்டு நில உரிமையாளரின் மனைவி, திருமதி. தங்கம்மா தனது வீட்டிற்கு வெளியே விரைந்து வந்த போது, அவள் கண்ட காட்சி விநோதமாகவும் கேலிக்குரியதாகவும் இருந்தது. நடப்பதை பார்வையிட மக்கள் கூட்டம் சேர்ந்துகொண்டு இருக்கும் போது, யோக சுவாமி தனது குருவின் கட்டை அவிழ்த்துவிட்டார். செல்லப்பசுவாமி கோபத்துடன் திட்டிக்கொண்டே, அந்த இடத்தை விட்டு வெளியேறினார். இதனால் திருப்தி அடைந்த நன்னியர், செல்லப்பசுவாமியை மீண்டும் சீண்டவில்லை. செல்லப்பசுவாமி இதன் மூலம், நண்ணியாரின் வடிவில் தனக்கு நிகரான ஒருவரை எதிர்கொண்டு இருந்தார். தன்னை யாரும் வழிபடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த குரு, அன்று மட்டும் தோற்றுப்போனார். §

1914 ஆம் ஆண்டில் அந்த டீக்கடை காலியாக இருந்தது. அதற்கு அருகில் இருந்த *இலுப்பை* மரத்தில், யோக சுவாமி தினமும் அமர்ந்து இருப்பதை, தங்கம்மாவும் அவளது குடும்பத்தாரும் கவனித்தனர். அந்த குடிசை மண்ணால் எழுப்பப்பட்ட சுவர்கள், மாட்டு சாணத்தால் மொழுகிய தரை மற்றும் ஓலை கூரையுடன் மிகவும் எளிமையாக இருந்தது. வெயில் கொளுத்தினாலும்  அல்லது மழை  பெய்தாலும், சுவாமி அங்கே தினமும் காணப்பட்டார். அவரை தங்கள் குடிசையில் தங்க சொல்லலாம் என்று அந்த குடும்பத்தினருக்கு தோன்றியது. அந்த வல்லமைமிக்க சாதுவை சந்தித்துப் பேச ஒரு நேர நல்ல நேரத்தை தேடிக்கொண்டு இருந்தனர். தங்களது யோசனையை அவரிடம் தெரிவிக்க சரியான தருணத்தை தெரிந்துக்கொள்ள, அவர்கள் நுணுக்கமான அறிகுறிகள் மற்றும் அவரது முகத்தில் தோன்றிய உணர்ச்சிகளை, பல நாட்களாக ஆய்வு செய்து, அதில் இறுதியில் வெற்றியும் பெற்றனர். §

யோக சுவாமியை சந்திக்க தங்கம்மா, அவளது கணவன் திருஞானசம்பந்தர், தங்கம்மாவின் மாமன் வல்லிபுரம் மற்றும் அவரது மனைவி நாகவல்லி ஒன்றாக  சேர்ந்து சென்றனர். “சுவாமிகள், நீங்கள்

இன்னும் எத்தனை காலம் இந்த சந்திப்பில் அமர்ந்து இருப்பீர்கள்?” என்று தங்கம்மா கேட்டாள். அவள் அந்த குடிசையை காண்பித்துக்கொண்டு, “அந்த குடிசை காலியாக இருக்கிறது. இங்கே உங்களுக்கு தேவைப்படும் வரை அமைதியாக இருந்து கொள்ளலாம்,” என்று தைரியமாக பரிந்துரைத்தாள். அவள் அவரிடம் ஒரு புனிதமான மற்றும் வஞ்சகமற்ற இதயத்துடன் கேட்டுக்கொண்டு, இதே இடத்தில் நன்னியர் செல்லப்பசுவாமியை பிடித்து வைத்து வழிபட்டதைப் பற்றி யோக சுவாமியிடம் விவரித்து, அவர் இங்கே தங்கினால் தங்கள் குடும்பத்திற்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருக்கும் என்றும், அவர் இதை தனது ஆசிரமமாக பயன்படுத்தலாம் என்றும், அவருக்கு தேவையானது வழங்கப்படும் என்றும் பரிந்துரைத்தாள். மேலும் தனது குடும்பத்தினர் அவரது தேவைகளை கவனித்து கொள்வார்கள் என்றும், அவருக்கு தனிமை தேவைப்படும் போது அவர்கள் விலகிக்கொள்வார்கள் என்றும் கூறினாள். நன்னியர் செல்லப்பசுவாமிக்கு செய்ததையே, அந்த குடும்பம் அவருக்கு செய்ய விரும்பியதால், அவர்கள் நன்னியரைப் பற்றி மிகவும் கவனமாக குறிப்பிட்டார்கள். §

யோக சுவாமி இந்த பரிந்துரையை தொடக்கத்தில் மறுத்தார், ஆனால் கொழும்புத்துறையில் இருக்கும் போது, அந்த குடிசையை பயன்படுத்தலாம் என்பதால் இறுதியில் சம்மதித்தார். அன்றிலிருந்து, தங்கம்மா, அவள் மகன் திருநாவுக்கரசு, திருமதி. திருநாவுக்கரசு மற்றும் அவர்கள் குழந்தைகள், யோக சுவாமி மற்றும் அவரது ஆசிரமம் வந்த அன்பர்களுக்கு சுயநலமற்ற சேவையை செய்தனர். அவர் *மகாசமாதி* அடையும் வரை, இந்த எளிமையான ஆசிரமம் அவரது இருப்பிடமாக மாறியது. §

“நான் கிளம்புகிறேன். நான் மீண்டும் இங்கே திரும்பி வரப்போவது இல்லை,” என்று சுவாமி பலமுறை அறிவித்து இருந்தார். ஆனால் மூன்று அல்லது நான்கு நாட்கள் கழித்து, அவர் திரும்பி வந்துவிடுவார். “நான் இங்கிருந்து வெளியேறுவதை செல்லப்பசுவாமி அனுமதிக்கவில்லை. அவர் என்னை திருப்பி அனுப்பிவிட்டார்,” என்று அவர் ஒருமுறை குறிப்பிட்டார். “குருவின் மீது நன்னியரின் பக்தி, நம்மை இங்கே சிறைப்பிடித்து வைத்திருக்கிறது,” என்று சிரித்துக்கொண்டே கூறினார். அவர் பெரும்பாலும் அதை “செல்லப்பசுவாமியின் குடிசை" என்று குறிப்பிட்டார். §

**“இன்று இரவு இங்கு பெரும் புனிதம் நடக்கும்”**


1915 ஆம் ஆண்டு, தனது 75 ஆம் வயதில், செல்லப்பசுவாமிக்கு உடல்நல குறைவு ஏற்பட்டது. அவருக்கு சளி மற்றும் மூட்டுக்களில் வீக்கம் ஏற்பட்ட போது, அவரது சொந்தங்கள் அவருக்கு மூலிகை மருந்துகளால் குளியல் வழங்கினார்கள். அவர் சுமார் இரண்டு வாரங்களுக்கு நோய்வாய்ப்பட்டு இருந்தார். அந்த சமயத்தில், யோக சுவாமி அவரை காண செல்லவில்லை. இது செல்லப்பசுவாமியை கவனித்த சீடர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. அவர்களை பொருத்தவரை, செல்லப்பசுவாமியை சுற்றி இருந்த மக்கள் கூட்டத்திற்கு வெளியே சுவாமி விலக்கி வைக்கப்பட்டு

இருந்தார். அவர் மறைந்து இருக்க வேண்டும் என்பது அவரது குருவின் ஆணையாக இருந்தாலும், எல்லோரும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. செல்லப்பசுவாமியின் வாழ்க்கை நிறைவு பெறப்போகிறது என்பதை அவர்கள் உணர்ந்து, செல்லப்பசுவாமிக்கு பிறகு அவர் அவரால் தீட்சை பெற குரு யோக சுவாமி என்பதை சந்தேகம் இல்லாமல் தெரிவிக்கும் வண்ணம், ஏதாவது ஒரு முக்கிய கருத்து பரிமாற்றம் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பில், அவர்கள் யோக சுவாமியை தொந்தரவு செய்து வந்தனர். §

ஒரு நாள் யோக சுவாமிக்கு, தனது குருவின் உடல்நிலை குறித்து கவலை அதிகமாகி, செல்லப்பசுவாமியின் குடிசைக்கு சென்றார். அவர் குருவின் வீட்டை நெருங்கியதும், "*யாரடா படலையில்?*" (யாரடா கதவில்?) என்று உறுமினார். அது முதன்முதலில் தேரடையில் கேட்ட "யாரடா நீ" போன்ற ஞான வாசகமாக இருந்தது. அதன் பிறகு அவர், "பாரடா நீ வெளியில் நின்று," ("ஒரு சாட்சியாக வெளியே நில்") என்று கத்தினார். §

அந்த வளாகத்தை விட்டு, சுவாமி பணிவாக கிளம்பி தனது குடிசைக்கு திரும்பினார். முதலாம் உலகப்போரின் கொடுமையான யுத்தங்களில் உலக நாடுகள் மூழ்கியுள்ளன என்பதை அறிந்திருந்த யோக சுவாமி, "இங்கு எத்தனையோ ராசாக்கள் மாண்டு போகிறார்கள்," என்று தெரிவித்ததில், மரண வாயிலில் இருந்த அவரது ஆன்மீக அரசரும் அடங்குவார். இரண்டு நாட்கள் கழித்து, பங்குனி மாதத்தில் (மார்ச்-ஏப்ரல்), அஸ்வினி நட்சத்திரத்தில், ஞானோதயம் பெற்ற துறவியாகவும் ஆன்மீக மகானாகவும் இருந்த செல்லப்பசுவாமி மகாசமாதி அடைந்தார். §

அன்றைய தினம் காலையில், தனக்கு பணிவிடைகள் செய்து வந்த அண்டை வீட்டுக்காரனிடம், "இன்று இரவு இங்கு பெரும் புனிதம் நடக்கவிருக்கிறது. நீ வருவாயா?" என்று கேட்டார். ஆனால் அந்த நபரால் அன்று இரவு செல்ல முடியவில்லை. அவர் அடுத்த நாள் காலையில் சென்ற போது, செல்லப்பசுவாமி தனது குடிசையின் வாசலுக்கு அருகில் தரையில் மடிந்து கிடந்தார், அவரது விரல் ஒன்று வாயில் இருந்தது மற்றும் கால் ஒன்றை மடித்து நடராஜரின் *ஆனந்த தாண்டவ* பாவனையில் உறைந்து இருந்தது. அவர் ஒரு விசித்திரமான தோரணையில் தனது உயிரை நீத்து இருந்தார். அவரது வாழ்க்கையை போலவே, அவரது இறுதி மகாபயணமும் விசித்திரமாகவும் அற்புதமாகவும் இருந்தது. §



*1915 ஆம் ஆண்டு, செல்லப்பசுவாமி "இன்று இரவு ஒரு பெரும் புனிதம் நடக்கவிருக்கிறது," என்று சொல்லி, அதை பார்க்க வருமாறு மக்களுக்கு*

*அழைப்பு விடுத்தார். அந்த புனிதமான சம்பவம், அவரது மகாசமாதியாக அமைந்தது. அவரது உடல் அடுத்த நாள் தகனம் செய்யப்பட்டது.*

……………………..§

ஞானோதயம் பெற்ற மகான்கள் மற்றும் முனிவர்களின் உடலை பெரும்பாலும் ஒரு சமாதி அறையில் வைப்பது வழக்கம். இதைப் போல தனது உடலையும் வைக்க சிலர் வற்புறுத்துவார்கள் என்று அறிந்த செல்லப்பசுவாமி, தனது உடலை தகனம் செய்யவேண்டும் என்று முன்பே உத்தரவிட்டு இருந்தார். அவரது சீடர்கள் அவரது அறிவுறுத்தல்களை கடைப்பிடித்து, தங்கள் குருவின் அஸ்தியை கீரிமலையில் கரைத்தனர். §

செல்லப்பசுவாமியை இழந்த சீடர்கள், தங்களை வலிமை இழந்து தன்னிலை இழந்தவர்களாக கருதினார்கள். பலர் விரக்தி அடைந்து, ஊக்கமிழந்து  தவித்தனர். யோக சுவாமி ஈமச்சடங்கில் கலந்து கொள்ளாததை, எல்லோரும் கவனித்தனர். தகனம் செய்ய உதவியவர்களில் இருவர், சடங்கு முடிந்ததும் வேதனை தாங்காமல் மது அருந்தினர். அந்த போதை சுவாமி மீது கோபத்தை அதிகப்படுத்தி, அவருடன் எதிர்ப்பதற்கு தேவையான தைரியத்தையும் தந்தது. அவர்கள் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, அவரது இருப்பிடத்திற்குள் நுழைந்து, “நமது குருவின் உயிர் பிரிந்துவிட்டது. எங்களுடன் சேர்ந்து அவருக்கு  இறுதி அஞ்சலி செலுத்துவது கூட உங்களுக்கு சரியென்று தோன்றவில்லை,” என்று ஒருவன் கத்தினான். §

திடீரென்று தனது குடிசை வாசலில் தோன்றிய யோக சுவாமி, கையில் தடியை எடுத்து, தனது குடிசையின் கதவில் இருந்து சாலை செல்லும் வரை அவர் அவர்களை துரத்திக்கொண்டு சென்றார். இருவரும் மிகவும் வேகமாக ஓடி, கிராமத்து தலைவர் வீட்டின் தோட்டத்தில் நுழைந்து, அங்கே குவிந்து இருந்த வைக்கோலுக்குள் சென்று மறைந்து கொண்டனர். யோக சுவாமி தனது அன்றாட மாலை நேர வேலைகளை தொடர்ந்தார். ஆனால் அவர்களுக்கு சோதனை அப்போது தான் தொடங்கவிருந்தது. §

தங்களை சுற்றியிருந்த மக்கள் கூட்டம் குறையட்டும் என்று அவர்கள் காத்து இருந்த போது, அந்த வைக்கோல் திடீரென்று தீப்பிடித்து எரிந்தது. அவர்கள் இருவரும் சுருட்டு புகைத்துக்கொண்டு இருந்தனர்! அவர்கள் தீயை அணைக்க துள்ளிக் குத்தித்து அங்கும் இங்குமாக அலைந்தனர். அருகில் இருந்தவர்கள் வாளிகளில் தண்ணீரை கொண்டு வந்து, தீயை அணைத்தனர். இரண்டு குற்றவாளிகளையும் கிராமத் தலைவர் காவலரிடம் அழைத்து சென்றார், மற்றும் அவர்கள் இரவை சிறையில் கழித்தனர். §

சுவாமி பயன்படுத்திய அணுகுமுறை புரிந்துகொள்ள முடியாததாக இருந்தது. ஒரு செயலை செய்த பின் யோசிக்கும் வகையை சார்ந்த இவர்களுக்கு, சுவாமியின் மனதில் என்ன இருக்கிறது என்பதைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவர் பண்டிதர்கள் மட்டுமே பேசும் ஆன்மீக வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்துகொண்டு இருந்தார். அவருக்கு

வாழ்க்கை மற்றும் மரணம் பற்றிய இரகசியங்கள் தெரிந்து இருந்தது. செல்லப்பசுவாமி ஒளியின் நுணுக்கமான உலகமான, தனது அந்தர்லோகத்தில் வாழ்கிறார் என்பதை அவர் நன்றாக அறிந்து இருந்தார். அனைத்திற்கும் மரணம் முடிவாக இருப்பதில்லை. அவர் தனது பழைய பயன்படுத்தப்பட்ட உடலை விட்டு வெளியேறி இருந்தார். §

முன்பு நல்லூர் வில்வ மரத்தடியில் சுவாமியும் அவரது குருவும் ஆழமான ஆன்மீக கூட்டுறவில் இருந்ததை போல, அன்றைய மாலைப் பொழுதிலும் அவரது குருவுடன் அமர்ந்து இருந்தார். அதனால் ஈமச்சடங்கிற்கு ஏன் செல்லவேண்டும்? அவருக்கு ஆன்மீக உத்தரவு எதுவும் வரவில்லை, மற்றும் தன்னிடம் இருந்து விலகி இருக்க சொன்னதே செல்லப்பசுவாமி தான். அவர் சமூக ஒழுங்குமுறை வற்புறுத்தலுக்காக மட்டும் எதையும் செய்ததில்லை. த. சிவயோகபதி இதைப்பற்றி குறிப்பிடுகிறார்: §

> யோக சுவாமி அதே உணர்வுடன், தனது குருவின் நினைவாக ஒரு ஆசிரமம் கட்டுவதை எப்போதும் ஆதரிக்கவில்லை. அதற்கு பதிலாக, சிவதொண்டன் நிலையத்தில் இருக்கும் தியான மண்டபத்திற்கு சென்று, பக்தியுடன் தியானம் செய்து அந்த பரம்பரையின் அனைத்து குருமார்களின் தரிசனத்தை ரசிக்குமாறு தனது சீடர்களிடம் கூறுவார். "*ஒன்றை பற்றி ஓர் அகத்தே இரு*" (ஓரிடத்தில் பக்தியுடன் இரு) என்று யோக சுவாமி தன் சீடர்களிடம் எடுத்துரைத்தார். அதனால் யோசுவாமியின் வாழ்நாளில், செல்லப்பசுவாமிக்கு கோயில் எதுவும் கட்டப்படவில்லை. அதன் பிறகு, நல்லூர் பகுதியில் இருந்த அன்பர்கள், அந்த முனிவர் வாழந்து *மகாசமாதி* அடைந்த குடிசையில், அவரை கௌரவிக்கும் வண்ணம் ஒரு சிறிய கோயிலை கட்டினார்கள். அந்த குடிசையை கற்காரை சுவர்கள் மற்றும் உலோக கூரையுடன் கூடிய, ஒரு சிறிய கோயிலைப் போன்ற கட்டிடமாக சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி, 1982 ஆம் ஆண்டில் புனர்நிர்மாணம் செய்தார். அதன் பிறகு, கைலாச பரம்பரையின் பெருமைகளை பாடுவதற்காக, நல்லூர் கோயிலுக்கு அருகில் இருக்கும் அந்த இடத்தில், விசேடமான நாட்களில் நூற்றுக்கணகான பக்தர்கள் கூடினார்கள். §

**இறைவனை உணர்தல்**

செல்லப்பசுவாமியின் இறுதி மகாபயணத்தை முன்னிட்டு, 1915 ஆண்டின் பிற்பகுதியில், யோக சுவாமி தன்னை தீவிரமான சாதனாக்களின் பழக்கங்களில் ஈடுபடுத்திக்கொண்டார். அவர் தனது பின்புறம் மிகப்பெரிய *இலுப்பை* மரத்தை நோக்கி இருக்குமாறு அமர்ந்துகொண்டு, ஒரே சமயத்தில் பல நாட்களுக்கு விரதத்துடன் சமாதியில் அமர்ந்து இருப்பார். அவர் உறங்குவதாக காட்சி அளிக்காமல் உறங்குவார், மற்றும் ஒருமுறை கொழும்புத்துறை கல்லறையில் பல இரவுகள் தொடர்ந்து தியானம் செய்ததாக கூறப்படுகிறது. அவ்வாறு தியானம் செய்வது சித்தர்கள் மற்றும்

நாதர்களின் பழக்கம் ஆகும். அவர் பிற்காலத்தில் துறவற சக்தியை பற்றி குறிப்பிடும் போது: “தளைகளை கைவிடு! சுதந்திரமாக சுற்றித் திரி. அனைத்தையும் கவனி. ஒரு சாட்சியாக இரு. இறப்பதற்கு முன்பாக இறந்து விடு!” §

ஒரு தீவிர சைவராகவும் ஒரு நெருக்கமான சீடனாகவும் இருந்த முனைவர் த. நல்லநாதன், அந்த காலகட்டத்தில் சுவாமி தன்னுடன் பகிர்ந்த கருத்துக்களை நினைவுக்கூர்கிறார்: §

> 1922 ஆம் ஆண்டு, இறைவனின் மெய்யுணர்வு தனக்கு முதல் முறையாக கிடைத்ததைப் பற்றி சுவாமி எனக்கு விளக்கினார். அவரது சாதனா மிகவும் கடினமானதாக இருந்தது. அவர் சாதனா மேற்கொள்ளும் ஒரு வாரத்தில், முதல் மூன்று நாட்கள் முழுவதும் நிர்விகல்ப சமாதியில் கழிந்தன; மற்றும் அந்த வாரத்தில் நான்காவது நாள் மட்டும் சிறிது உணவு உண்பதற்கும் நண்பர்களுடன் பேசுவதற்கும் பயன்படுத்திக் கொள்வார். அவர் அடுத்த மூன்று நாட்களில் மீண்டும் நிர்விகல்ப சமாதியில் மூழ்கி இருப்பார். இந்த கடுமையான மற்றும் தீவிரமான சாதனாவின் முடிவாக, விழித்து இருக்கும் நிலையிலும், நிரந்தர இறைவனின் மெய்யுணர்வான, *சாயுஜ்ய* சமாதி இருக்கும். ஆறு மாதங்களுக்கு பிறகு அந்த தெய்வீக ஆனந்தம் தற்காலிகமாக மறைந்ததும் தோன்றிய சாதாரண மெய்யுணர்வு, உண்மையில் ஒரு படி கீழே இருந்தது. அவர் தனது வழக்கமான சாதனாவை கைவிட்டு, இறைவனின் மெய்யுணர்வு இயல்பாக தனது தூல மூளைக்குள் இறங்க அனுமதித்தார். §

ஒவ்வொரு வரலாற்று சிறப்புமிக்க சகாப்தத்திலும் பரசிவம், முழுமுதற்பொருள் மற்றும் பரமாத்துமாவை உணர்ந்த வெகுசில ஆன்மாக்களின்  தலைசிறந்த குழுவில் யோக சுவாமி இணைந்து கொண்டார். ஆத்ம ஞான அனுபவம் பெற்றவர்கள் மற்றும் தொடர்ந்து பெறுபவர்களால், அந்த அனுபவத்தை விளக்க முடியாது. அவர்கள் பரமாத்துமாவை பற்றி விளக்கும் எதுவும், அவர்களுக்கு திருப்தி அளிப்பதாக இருக்காது. பரமாத்துமா மனதை கடந்து, மெய்யுணர்வின் மிகவும் தூய்மையான மற்றும் புனிதமான நிலையை கடந்து இருப்பதால், அதை விளக்குவதற்கு மொழியை பயன்படுத்துவது கடினமாக இருக்கும். உணர்தலை பெற்ற பலர், ஒரு அனுபவமாக இல்லாத அந்த அனுபவத்தை பற்றி மிகவும் குறைவாக பேசுவார்கள். அவர்கள் மாறுபட்டு இருப்பதையும், அவர்களை சுற்றி இருக்கும் பகுதி உற்சாகம் நிறைந்து இருப்பதையும் ஒருவரால் உணர முடியும். ஏதோ ஒரு காரணத்தினால், அவர்கள் மற்றவர்களைப் போன்று இந்த உலகில் இருப்பது இல்லை. சைவ சமயத்தை பின்பற்றுபவர்கள், அவர்களிடம் இருந்து வெளிப்படும் தரிசனத்தை, குறிக்கோள் பாதையின் மிகவும் உண்மையான வழிகாட்டியாக கருதுகிறார்கள். ஒரு மிகப்பெரிய ஆன்மாவின் தரிசனத்திற்கு சீடன் தன்னை அதிகமாக தயார்படுத்திக் கொள்கிறான், மற்றும் அவன்

பாதையில் எந்த நிலையில் இருந்தாலும், அது அவனை உள்நோக்கி அழைத்து செல்கிறது. §

அந்த காலகட்டத்தில் பிறந்திருக்காத யோக சுவாமியின் சீடன், சிவாய சுப்பிரமுனியசுவாமி, பிற்காலத்தில் அந்த விளக்கமுடியாத யதார்த்தம் பற்றி ஒரு விளக்கத்தை தருவதற்கு முயற்சி செய்துள்ளார்:§

> பரமாத்துமா காலமற்ற, காரணமற்ற மற்றும் உருவமற்ற நிலையில் இருக்கிறது. அது அந்த பரமாத்துமாவாக இருப்பதால், அதற்கும் காலம், பரவெளி மற்றும் உருவத்திற்கும் எந்த தொடர்பும் இருப்பதில்லை. பரவெளியில் ஆக்கல், காத்தல் மற்றும் அழித்தலின் ஒரு தொடர் நிலையில் உருவம் இருந்து, சுயநினைவு என்ற காலத்தை உருவாக்கி காலமற்ற, காரணமற்ற ஒரு உருவமற்றதன்மைக்கு தொடர்பில்லாமல் இருக்கிறது. தனிப்பட்ட ஆன்மா பக்குவம் அடையும் போது, பரவெளி-காலம்-காரணத்தின் சுயநினைவில் இருந்து காலமற்ற, காரணமற்ற, உருவமற்ற பரமாத்துமாவிற்குள் தாவுகிறது. இதுவே இந்த பூமியில் ஆன்மாவின் முடிவான பக்குவமாக விளங்குகிறது. §
>
> உருவத்தின் கோட்பாடுகள் மற்றும் உணர்வுடன் இருக்கும் உணர்வையும் கதிரியக்க சக்திகள் கைவிடும் போது இருக்கும் சுயநினைவின் உட்புற மையம், ஆற்றலை உருவாக்கும் விசைப்பகுதியின் மையமாக விளங்குகிறது. இந்த மையம் தனது உள்பொருளில் தீவிரமாக இருப்பதுடன், இந்த விசைப்பகுதியின் உட்புற மையத்தின் சுற்றளவில் மட்டும் உணர்வுடன் இருந்து, அனைத்து வெளிப்புற உருவத்திற்கும் வலிமையை வழங்குகிறது.§
>
> இந்த விசைப்பகுதியின் மையத்தில் சுயநினைவை இழக்கும் போது, அது ஒருவரை உருவம், காலம், பரவெளியை கடந்து துரிதப்படுத்துகிறது. கதிரியக்க சக்தியின் சுழலும் மையம், உருவத்தை மீண்டும் படைத்து, பாதுகாத்து மற்றும் அழித்து விரைவில் மீண்டும் சுயநினைவை உருவாக்குகிறது. ஆனால் இது ஒரு புதிய சுயநினைவாக விளங்குகிறது, ஏனென்றால் நிர்விகல்ப சமாதியின் அனுபவத்தில், சுயநினைவின் தொடர்ச்சி உடைக்கப்படுகிறது. மனிதனின் பரிணாம வளர்ச்சியில், முதல் நிர்விகல்ப சமாதி அனுபவம், அடிப்படையில் முதல் முழுமையான உணர்வுள்ள இடை முறிவாக விளங்குகிறது. அதனால், அத்தகைய அனுபவத்திற்கு பிறகு ஒரு புதிய பரிணாம வளர்ச்சி புதிதாக தொடங்குகிறது. பரிணாம வளர்ச்சியின் மாதிரிகள் ஒன்றுக்கு மேல் இன்னொன்று குவிந்து, அடுக்கு அடுக்கான ஒளி வட்டங்களாக நிலை கொண்டு, அனுபவிப்பவரின் இயல்பு முழுவதிலும் அனுபவ மாதிரியிலும் உள்ளார்ந்த மாற்றங்களை ஏற்படுத்துகிறது.”§

யோக சுவாமி முதல் முறையாக பரமாத்துமாவை உணர்ந்ததும், தனக்கு கிடைத்த வெற்றியின் உற்சாக கொண்டாட்டத்தில், துள்ளி குதித்து நாற்பது கிலோமீட்டர் தூரம் ஓடியதாக கதைகள் உள்ளன. அவர் அந்த முடிவான

யதார்த்தத்திற்கு தினமும் திரும்ப தொடங்கி, அவரது உடலின் ஒவ்வொரு அணு மற்றும் அவரது மனதின் ஒவ்வொரு பகுதியிலும், அந்த உணர்தல் ஊடுருவ அனுமதித்ததும், பரசிவம் அவரது அடிப்படையாக மெதுவாக மாறியது. அவர் பரமாத்துமாவிற்குள் செல்லும் போது ஒரு வெளிப்புற நபராக இல்லாமல்; அவர் பரமாத்துமாவில் இருந்து ஒரு உட்புற நபராக வெளிவந்து மீண்டும் அதனுள் சென்றார். தாங்கள் அதைப்பற்றி அறியாவிட்டாலும், அவரும் மற்ற அனைவரும், அந்த பரமாத்துமாவாக முழுமையாக இருந்தார்கள். §

அவர் இந்த ஆன்மீக ஈடுபாடுகளில் இருந்து வெளிவந்து, தனக்குள் இருந்த அந்த மிகவும் தீவிரமான ஒளியை வெளிப்படுத்தி நடந்து சென்றார், மற்றும் தனது வெளிப்பாடு மற்றும் உணர்தலின் உலகிற்கு ஒரு தோற்றத்தை வழங்க, அவற்றை அவ்வபோது உட்கார்ந்து தமிழ் பாடல்களாக எழுதுவார். பிற்காலத்தில், அவர் இந்த ஆழமான பாடல்களை கோயில்கள் மற்றும் வீடுகள் மற்றும் தனது இலுப்பை மரத்திற்கு எதிரே இருந்த கொழும்புத்துறை விநாயகர் கோயிலில் இயற்றினார். அவர் தனது அனுபவங்களை பற்றி இந்த நற்சிந்தனையில் பாடியுள்ளார்:§

ஓங்கார மேடையில் மேலேறி நின்றேன்

ஒன்றையுங் காணேனடி – குதம்பாய்

ஒன்றையுங் காணேனடி.

தூங்காமல் தூங்கும் சுகம் வந்து வாய்த்தது

சும்மா இருந்தேனடி – குதம்பாய்

சும்மா இருந்தேனடி.

ஆங்காரம் போச்சுது ஆனந்தம் போச்சுது

அவனே நானானேனடி – குதம்பாய்

அவனே நானானேனடி.

நீங்காத நின்மல நிட்டை பலித்தது

நீநா னில்லையடி – குதம்பாய்

நீநா னில்லையடி.

ஒன்றென இரண்டென ஓத முடியாமல்

ஓவிய மானேனடி – குதம்பாய்

ஓவிய மானேனடி.

நன்றென தீதென நவில முடியாத

நாதன்தாள் சேர்ந்தேனடி – குதம்பாய்

நாதன்தாள் சேர்ந்தேனடி.

கண்ணுக்கு கண்ணாய் இருக்கின்ற கர்த்தனை

கண்டு களித்தேனடி – குதம்பாய்

கண்டு களித்தேனடி.

அண்டமும் பிண்டமும் ஒன்றா இரண்டா என்று

அறியா திருந்தேனடி – குதம்பாய்

அறியா திருந்தேனடி.

ஆதாரம் ஆறும் அவத்தை  உறைந்தும்

அடியோடு போச்சுதடி– குதம்பாய்

அடியோடு போச்சுதடி.

பாதார விந்தத்தை காணாமல் கண்டு

பணியாமல் பணிந்தேனடி – குதம்பாய்

பணியாமல் பணிந்தேனடி. §

Page 26: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/26_yo03_05.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## பன்னிரண்டாவது அத்தியாயம்

# யோக சுவாமி, இளவயது குரு

இந்த காலகட்டத்தில் பலர் யோக சுவாமியை கவனித்து இருந்தாலும், அவரிடம் இருந்த ஆன்மீக சக்தியை வெகு சிலரால் மட்டுமே உணர முடிந்தது. தான் யோக சுவாமிக்கு தீட்சை வழங்கியதை பற்றி, செல்லப்பசுவாமி யாருக்கும் தெரியப்படுத்தவில்லை. அவர் அதை பெரிதுபடுத்தாமல், சுவாமிக்கு தெளிவின்மையின் சலுகையை வழங்கி, அந்த தீட்சையின் சக்தியை தனக்குள் விரிவாக்கம் செய்து கொள்ள அனுமதித்தார். ஆனால் இந்த இரகசியம், பெரும்பாலான இரகசியங்களை போல, மறைப்பது கடினமாக இருந்தது. இது தொடர்பாக இந்துமதி அம்மா வழங்கும் குறிப்பு:§


> அந்த ஆரம்பகாலத்தில், செல்லப்பசுவாமியை தரிசிக்க கொழும்புத்துறையில் இருந்து வந்த அன்பர்கள் மிகவும் குறைவு. செல்லப்பசுவாமி தனது சொத்து மற்றும் ஆசிகளை சிவயோகருக்கு வழங்கி இருந்தார் என்பதை அவர்கள் தெளிவான குறிப்புகள் மூலமாக அறிந்து இருந்தார்கள். அதனால் அவர்கள் சிவயோகரை தனது சகாவாக கருதினாலும், தங்கள் இதயங்களில், அவர் மீது வலுவான பக்தியை கொண்டு இருந்தார்கள். செல்லப்பர் மீது தங்களுக்கு இருந்த பக்தியை போல, சிவயோகர் மீது தங்களுக்கு இருந்த பக்தியை தங்கள் இதயங்களில் மறைத்து வைத்து, வெளியில் நண்பர்களைப் போல பழகினார்கள். இவர்களுள் ஒருவராக இருந்த துரையப்பா என்ற பக்தரால், தனது ஆர்வத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. நல்லூர் கோயில் மற்றும் அதன் தேரடி படிக்கட்டில் *தேவாரப்* பாடல்களை பாடுவது, அவரது வழக்கமாக இருந்தது. அவர் குடிசைக்கு வந்து, சிவயோகர் முன்னிலையில் *தேவாரப்* பாடல்களை பாடுவார். அந்த குடிசை ஒரு வாழ்ந்துகொண்டிருக்கும் கடவுளின் கோயிலாக விளங்கியது என்பதற்கு,

> இது ஆரம்பக்காலத்தில் நடைபெற்ற முதல் குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக விளங்கியது. §

இந்த காலகட்டத்தில் சுவாமியின் வாழ்க்கை பற்றி, ரத்னா மா நவரத்தினம் விளக்குகிறார்:§

> சுவாமி 1915 ஆண்டில் இருந்து, ஒரு துறவியின் வாழ்க்கையை வாழ்ந்தார்; அவர் கொழும்புத்துறையின் பள்ளி சந்திப்பில் இருந்த *இலுப்பை* மரம், நல்லூர் தேரடி, அரியாலை ஆசிரமம், துண்டி சுடுகாடு, கோட்டை மைதானம் மற்றும் கிராண்ட் பஜாரின் பாதைகளில் அடிக்கடி தென்பட்டார். அவை சமாதி அனுபவங்கள் மற்றும் முதிர்ச்சி அடையும் வருடங்களாக இருந்தன. §

யோக சுவாமி *இலுப்பை* மரம் அல்லது அதற்கு அருகில் இருந்த தனது குடிசையில், எம். எஸ். இளையதம்பி, அ. அம்பலவாணர், முதலியார் சு. திருச்சிற்றம்பலம், ம. சபாரத்னசிங்கி, வி. முத்துக்குமாரு, கலைப்புலவர் க. நவரத்தினம், த. ந. சுப்பையா, சி. மயில்வாகனம் மற்றும் புலவர் அ. பெரியதம்பிப்பிள்ளை போன்ற தனது நெருக்கமான சீடர்களுடன் விவாதங்கள் நடத்தியதாக, அ. தில்லையம்பலத்தின் மகன் தி. சிவயோகபதி குறிப்பிடுகிறார். இது 1916 ஆம் ஆண்டில் தொடங்கியது.§



*தனது சற்குருவின் சமாதிக்கு பிறகு, பல வருடங்கள் பிரபலமாக இல்லாமல் முக்கிய இடங்களில் தென்பட்ட வருடங்களில், யோக சுவாமி சாதனா மற்றும் சமாதியின் ஒரு அமைதியான வாழ்க்கையை வாழ்ந்தார்.*

• • • • • • • • • • • • • • • §

யாழ்ப்பாணம் தத்துவம் மற்றும் பக்தி தொடர்பான சாதனைகளுக்கு பிரபலமான இடமாக விளங்கியுள்ளது மற்றும் அந்த சமூகத்தில் இருந்த சாதகர்களும் ஆன்மீக இலக்கியத்தில் நாட்டம் இருந்தவர்களும், ஒருமைவாத சைவ சித்தாந்தத்தில் புலமை பெற்று இருந்த யோக சுவாமி மீது ஈர்க்கப்பட்டனர். அவர் அவர்களுக்கு அறிவு மற்றும் உணர்தலின் ஒரு அரிய கலவையாக காட்சி அளித்தார், மற்றும் அவர் தங்களது அறிவுணர்வு மற்றும் அறிவுறுத்தும் நாட்டங்களை ஊக்குவித்ததால், அவர்கள் உற்சாகம் அடைந்தனர். அவர்களில் ஒருவராக, சைவ சித்தாந்தத்தில் புலமை பெற்ற, திருவிளங்கம் என்ற யாழ்ப்பாண வழக்கறிஞர் யோக சுவாமியை 1920 ஆம் ஆண்டு சந்தித்தார். அவர் *சிவஞானசித்தியார், சிவபிரகாசம், திருப்புகழ்* மற்றும் *கந்தர் அலங்காரம்* தொடர்பாக பல புத்தகங்களை எழுதியுள்ளார். அவர் கொழும்பில் உயிர் நீத்த போது, யோக சுவாமி தனது ஆசிரமத்தில் இருந்து வெளியேறி, “இன்று திருவிளங்கம் சிவசோதியுடன் கலந்துவிட்டான்! (‘சிவனின் ஒளி’)” என்று வானத்தைப் பார்த்து கோஷமிட்டார். §

சைவ தத்துவத்தில் புலமைபெற்ற, கொக்குவில் நகரத்தின் ஸ்ரீ தி. குமாரசுவாமி, கோயில்களில் சொற்பொழிவுகள் மற்றும் சத்சங்கங்களை நடத்தினார் மற்றும் பின்னர் யோக சுவாமியின் அறிவுறுத்தலின் கீழ் சில புத்தகங்களை எழுதினார். இந்து சமயம் மற்றும் தமிழ் இலக்கியத்தில் புலமை பெற்று இருந்த, நவாலியின் ஸ்ரீ சோமசுந்தர புலவரும் சைவ சமயத்திற்கு சேவை செய்தார். §

யோக சுவாமிக்கு தமிழ் இலக்கியத்தின் அழகு மற்றும் ஆழம் பிடித்து இருந்தது மற்றும் அவர் இந்த அன்பர்களின் மூலம் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் ஒரு சிறிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். அவர் சொந்தமாக எழுதிய பாடல்களில் பழங்கால சாத்திரங்களை வலுவாக பயன்படுத்தியதோடு, அவர் அதனோடு சேர்க்கும் ஒரு நேரடியான விளக்கம், இன்றைய தமிழ் அறிஞர்கள் மத்தியிலும் நல்ல வலுவான வரவேற்பை பெற்றுள்ளது. §

### கொழும்புத்துறை ஆசிரமத்தின் ஆரம்பக்காலக் கோலம்

சுவாமி தனது ஆசிரமத்தில் கழித்த ஆரம்பக்காலத்தைப் பற்றி ஒரு சீடன் அன்புடன் நினைவுக்கூர்கிறார்: §

பெரிய அளவில் சீடர்கள் அவரை நாடி வந்து இருந்தாலும், அவர்கள் அங்கே இல்லாததை போல, சுவாமி தான் விரும்பும் போது தியானத்தில் ஆழ்நிலையை அடைந்தார். ஒவ்வொரு சிவராத்திரியும் இரவு முழுவதும்

> தியானம் செய்வது அவரது வழக்கமாக இருந்தது. அந்த சமயத்தில் சுவாமியுடன் இருந்த சில பாக்கியசாலி அன்பர்களுக்கு, அவர் இருந்த இடத்தில் ஒரு பிரகாசமான ஒளி தென்பட்டது. அவர்கள் அதை அவரது உண்மையான மற்றும் மாசற்ற உருவமாக கருதினார்கள். அவரை சுற்றி இருந்த பிரகாசமான ஒளியை காணமுடியாத அன்பர்களும், ஒரு சிலையை போல அசையாமல் நிமிர்ந்து உட்கார்ந்து இருக்கும் சுவாமியின் உருவத்தை கண்டு வியந்தனர். அவரது பொன்னிற உடல், அந்த குடிசையின் மூலையில் இருந்த குடையை போல நிலையாக இருந்தது. ஒரு சமயத்தில் சுவாமி அசையாமல் தியானம் செய்துகொண்டு இருந்த போது, ஒரு காகம் அவரது தலை மீது சிறிது நேரம் அமர்ந்து பிறகு கிளம்பிவிட்டது. §

ஒரு மணல் நிரம்பிய வளாகத்தில் மண் சுவர்கள், ஓலை கூரை மற்றும் மாட்டு சாணத்தால் மொழுகிய களிமண் தரையுடன் அமைந்த ஒரு சாதாரண குடியிருப்பாக அந்த குடிசை இருந்தது. அந்த தனி அறையின் உட்புறத்தில், வலது புறமாக இருந்த இடத்தின் கால் பாகத்தை ஒரு சிறிய சுவர் பிரித்து இருந்தது. இந்த இடத்தில் சுவாமி தன்னிடம் இருந்த சொற்பமான உடைமைகள் மற்றும் உணவுப்பொருட்களை வைத்து இருந்தார். அந்த அறையின் தென்புறத்தில், அறையில் நுழைந்ததும் வலது புறமாக, ஊர்ந்து செல்லும் விலங்குகளில் இருந்து விலகி இருக்க, சிறிய கால்களுடன் தரையில் இருந்து பதினைந்து சென்டிமீட்டர் உயரத்தில், ஐந்து சென்டிமீட்டர் கனத்துடன் இருந்த வேப்பமர (பூச்சிகளை துரத்தி அடிக்கும் வேம்பு மரம்) பலகையின் மீது சுவாமி உறங்குவார், தியானம் செய்வார் மற்றும் தன்னை நாடி வந்தவர்களை உபசரிப்பார். §

சுவாமி உறங்கிய அறையின் மூலையில் ஒரு பாம்பு புற்று ஒரு சில வருடங்களுக்கு இருந்தது. உலர்ந்த பகுதியில் வழக்கமாக இருப்பதைப் போல, அந்த குடிசை முற்றத்திலும் ஆங்காங்கே புற்றுகள் இருந்தன. யோக சுவாமி ஆரம்பக்காலத்தில், இடைத்தடுப்புடன் சாணத்தால் மொழுகிய ஒரு சிறிய பகுதியில் உறங்கினார். இரவில் ஒரு நாள் விழிக்கும் போது, தன்னருகில் பாம்பு ஒன்று இருப்பதை கண்டார். ஒரு கொடிய பாம்பை எதிர்கொண்டதும், “நீ இங்கே நன்றாக உறங்குகிறாய் என்று தோன்றுகிறது. நான் இந்த அறையின் மறுபுறத்தில் இனிமேல் உறங்குகிறேன்,” என்று உடனே அதனிடம் வாக்குறுதி அளித்து, அன்றிலிருந்து அறையின் பிரதான பகுதியில் உறங்கினார். §

சுவாமி தனது குடிசையில் நிலவிய இருட்டிற்கு சிறிய நிவாரணமாக கற்பூரம் ஏற்ற அனுமதித்தாலும், ஒரு விளக்கை ஏறுவதற்கு யாருக்கும் அனுமதி வழங்கவில்லை. மேலும் அவர் தனது ஆசிரமத்தை புதுமைப்படுத்த அனுமதிக்காமல், எளிமையாக இருப்பதையே விரும்பினார். ஆனால் ஒவ்வொரு வருடமும் தனக்கு விசுவாசமான சீடர்களை புதிதாக கூரையை வேய்வதற்கு அனுமதிப்பார், அவர்களும் அந்த வேலையை ஒரு நாளுக்குள் முடித்து விடுவார்கள். அவர் அவருக்கு விருப்பமான இடத்திற்கு ஒரு


வாகனத்தில் அழைத்து செல்லப்படுவார். அந்த சமயத்தில் அவர்கள் பழைய ஓலைகளுக்கு பதிலாக புதிய ஓலைகளை பொருத்தி, உட்புறத்தை முழுமையாக சுத்தம் செய்து, சுவாமி பயன்படுத்தும் பொருட்களை மீண்டும் அதே இடத்தில் முறையாக அடுக்கிவிடுவார்கள். அவர் மாலை 6 மணிக்கு திரும்பும் போது, அவர்களது வேலை முழுமையாக முடிந்து இருக்கும். தரை வழியாக நிறைய பாம்புகள் வரத்தொடங்கியதால், அவர் 1920 களின் ஆரம்பத்தில் குடிசையின் தரையில் காரை பூசுவதற்கு ஒப்புதல் தெரிவித்தார். §

அவர் குடிசையில் இருந்து 40 மீட்டர் கிழக்கே இலுப்பை மரம் இருந்தது, மற்றும் இன்னொரு புறம் சுவாமியார் சாலை என்ற ஒரு சிறிய பாதை இருந்தது. குடிசையின் வடக்கு எல்லையாக பிரதான சாலை இருந்தது, மற்றும் மறுபுறம் கொழும்புத்துறை மகா வித்தியாலயம் மற்றும் ஒரு பிள்ளையார் கோயில் இருந்தது. §

செல்லப்பசுவாமியின் தெய்வீக பாதுகைகளை, கோயில் தோட்டத்தின் பிரகார சுவரில் ஒரு மூலையில் வைத்து யோக சுவாமி வழிபட்டு வந்தார். அதன் பின்னர் அவர் தனது குருவின் திருவடிகளை தனது குடிசையின் வடமேற்கு மூலையில் வைத்தார். அவர் அதை வைத்த மேடையில், எப்போதும் ஏற்றி வைத்திருந்த ஒரு சிறிய எண்ணெய் விளக்கும் இருந்தது. அவர் தினமும் காலையில் குளித்த பிறகு, அந்த பாதுகைகளை மலர்களால் அலங்கரித்து, அனைத்தையும் அப்படியே–தன்னைப் போலவே, பார்க்க கற்றுத்தந்த முனிவரான, தனது சற்குருவிற்கு அமைதியாக கற்பூர ஆரத்தி காண்பித்தார். §

அவர் தரிசனம் தருவதற்காக, தனது மர இருக்கை மற்றும் படுக்கைக்கு முன்பாக, எப்போதும் வடக்கு திசையை நோக்கி அமர்ந்து இருப்பார். அவர் எப்போதும் தனக்கு முன்பாக, ஒரு சிறிய ஆரத்தித் தட்டு மற்றும் சில கற்பூர வில்லைகள், தனக்கென்று ஒரு பிரத்யேமான பித்தளை பாத்திரத்தில் சுத்தமான தண்ணீர், மற்றும் அந்த பாத்திரத்தை பயன்படுத்தாத போது, அதன் மூடியாக விளங்கிய ஒரு தண்ணீர் குடிக்கும் குவளை என்று குறிப்பிட்ட சில பொருட்களை எப்போதும் வைத்து இருந்தார். அந்த குவளை துருவுறா எஃகில் தயாரிக்கப்பட்டு இருந்தது. இந்த இடத்தில் அன்பர்கள் வழங்கிய பூக்களும் வைக்கப்பட்டன. §

ஆசிரம நடவடிக்கைகளை இந்துமதி அம்மா விவரிக்கிறார்: §



*1914 ஆம் ஆண்டில் இருந்து 1964 ஆம் ஆண்டில் யோக சுவாமியின் மகாசமாதி வரை, கொழும்புத்துறையில் இருந்த இந்த சிறிய குடிசை அவரது இருப்பிடம் மற்றும் ஆசிரமமாக விளங்கியது. அங்கே அன்பர்கள் தினமும் பாடுவதற்கு, ஆன்மீக பாதையில் அவரது வழிகாட்டலை பெறுவதற்கு மற்றும் அவருடைய உபதேசங்கள் மற்றும் பிரகாசமான ஆன்மீக அருளை பெறுவதற்கு கூடுவார்கள்.*

........................§

யோக சுவாமி அமர்ந்து இருந்த இறையருள் நிரம்பிய அந்த ஆசிரமத்தில், *சாத்திரங்களில்* புலமை பெற்று சைவ சமய கோட்பாடுகளை பின்பற்றிய மு. திருவிளங்கம் என்ற சைவ சமய முக்கியஸ்தர் மற்றும் மற்ற பிரமுகர்கள் வருகைதந்து அமைதியாக அமர்ந்து இருப்பார்கள். ஆசிரம வளாகத்தில் கதவுகள் திறப்பதற்காக, தங்கள் இதயங்களில் உற்சாகம் கலந்த பதட்டத்துடன், சார் பொன்னம்பலம் ராமநாதன் மற்றும் மற்ற அரசியல் தலைவர்கள் அமைதியாக, வெளியே காத்து இருப்பார்கள். யோக சுவாமியை கலைப்புலவர் மற்றும் மற்ற கல்வியாளர்கள் சுற்றி வர ஆரம்பித்தனர். சுவாமிக்கு முன்பாக தமிழ் இலக்கிய மேதைகளான சோமசுந்தர புலவர் மற்றும் கணேஷ ஐயர், பக்தியுடன் வணக்கம் தெரிவித்த வண்ணம் நின்று இருந்தார்கள். அந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பலர், நன்றாக கல்வி கற்றவர்கள், படிப்பறிவு இல்லாமல் வயலில் வேலை செய்த பெண்கள், மாட்டு வண்டியை

ஓட்டியவர்கள் என்று அந்த ஊரில் இருந்த ஒவ்வொருவரும் சுவாமியை சுற்றி வர ஆரம்பித்தனர். §

அவரை நாத்தீகர்கள், குடிப்பழக்கம் மற்றும் புகைக்கும் பழக்கத்தை விட முடியாதவர்களும் தரையில் விழுந்து வணங்கினார்கள். அவரது அருளை கிறுத்துவர்கள், பௌத்த சமயத்தை சேர்ந்தவர்கள் மற்றும் இசுலாமியர்களும் நாடினார்கள். அந்த புனிதமான குடிசையில், அதிகாலையில் இருந்து நள்ளிரவு வரை கூட்டம் கூட்டமாக அன்பர்கள் வந்து, குருவை தரிசித்து திரும்பிக்கொண்டு இருந்தனர். விடியற்காலையில் இருந்து பொழுது சாயும் வரை, அந்த ஆசிரமத்திற்கு முன்பாக இருந்த சாலையில் வாகனங்கள், மாட்டு வண்டிகள், கையால் இழுக்கப்படும் வண்டிகள் நிறுத்தப்பட்டு இருக்கும். §


ஆரம்பக்காலத்தில் துரையப்பாவின் *தேவாரம்* மட்டுமே அதிகாலையிலும் அந்தி வேளையிலும் ஒலிக்கும். அந்த சமயத்தில் கதிர்காமத்திற்கு பாதயாத்திரையாக சென்று வந்திருந்த திருமதி. அருணாச்சலம், தொடர்ந்து விளக்கேற்றும் பொறுப்பை ஏற்றுக்கொணடார். இன்னொரு அன்பர் தைரியமாக முன்வந்து கற்பூரம் ஏற்றி வழிபாடு நடத்தி வந்தார். ஆசிரமத்தில் இருந்து தேவாரம் மற்றும் *கீர்த்தனங்களின்* [பாடல்கள்] இனிமையான ஒலி எதிரொலிக்க தொடங்கின. வழிபாட்டு பொருட்களின் அருமையான நறுமணம் காற்றில் வியாபித்து இருந்தது.§

சுவாமி தனக்கு முன்பாக இருப்பவர்களிடம் மிகவும் இயல்பாக பேசினார். ஆனால் அந்த எளிமையான வார்த்தைகளிலும் உயர்ந்த தத்துவம் எதிரொலித்தது. ஒரு முறை சுவாமி ஒரு சீடனிடம், “என்ன செய்தி?” என்று கேட்டார். அந்த சீடன் வழக்கம் போல, அந்த சமூகத்தில் சமீபமாக நடந்த சம்பவத்தை விவரிக்க ஆரம்பித்தார். உடனே சுவாமி, “இதில் புதிய செய்தி எதுவும் இல்லை. அனைத்தும் அப்படியே இருக்கிறது,” என்று பதில் அளித்தார். §

தன்னை நாடி வந்திருந்த சீடர்களின் தேவைகளுக்கு ஏற்ப சில சமயங்களில் *விவேகசூடாமணி, பகவத் கீதை* மற்றும் மற்ற தத்துவ படைப்புக்கள் வாசிக்கப்படும். இதன் உண்மையான பொருளை வழங்கும் பொருட்டு, சுவாமி இடையிடையே அதன் மீது தனது கருத்துக்களை கூறி, சீடர்களின் அறியாமையை நீக்குவார். தினமும் மாலையில் *சிவபுராணம்* வாசிக்கப்படும். *சிவபுராணத்தின்* பொருளாக விளங்கும் சிவபெருமானாக, அவர் அமர்ந்து இருந்ததால், அவருக்கு முன்பாக வாசிப்பதால் கிடைக்கும் பலனுக்காக சீடர்கள் பெருமளவில் கூடியிருப்பார்கள். §

பாடல்கள் முடிந்ததும், கிளம்ப தயாராக இருந்தது சீடர்களுக்கு சுவாமி பிரசாதம் வழங்கிக்கொண்டு, “போய் திரும்பி வாருங்கள். ஆனால் நாம் போவதும் இல்லை வருவதும் இல்லை,” என்று கூறுவார். சீடர்கள் சாலையில், “இவர் போவதும் வருவதும் இல்லாத ஒரு புண்ணிய ஆன்மா,”

என்று பெருமையுடன் உற்சாகமாக பேசிக்கொண்டு சென்றார்கள். இவ்வாறு அந்த ஆசிரமம், ஒரு இறைவன் வாழும் ஆசிரமமாக மாறியது. §



*யோக சுவாமி பெரும்பாலும் யாழ்ப்பாணத்தின் வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் காணப்பட்டார். அவர் அம்மனின் அமைதியான சந்நிதி முன்பாக அமர்ந்துகொண்டு தனது ஆன்மீக பாடல்களை இயற்றுவார். ஒரு நாள் தியானம் செய்த போது, அந்த அம்மன் ஒளியின் உலகில் நடனமாட, அவளது கால் சலங்கை ஒலி தனக்கு கேட்டதாகவும் தனது சீடர்களிடம் கூறினார். தையல்நாயகி என்றால் "அழகான அம்மன்" என்று பொருள்.*

• • • • • • • • • • • • • • • §

இது தொடர்பாக தி. சிவயோகபதி வழங்கும் குறிப்பு:§


தினமும் மாலை 6:30 மணிக்கு துரையப்பா யோக சுவாமியின் ஆசிரமம் வந்து கிளியே நற்சிந்தனை பாடலை பாடுவார். துரையப்பாவின் வீடு சுவாமியின் குடிசையில் இருந்து சுமார் 100 கஜ தூரத்தில் இருந்தது. விடியற்காலைகளில் பலமுறை, அவர்கள் கொழும்புத்துறை

> கடற்கரையில் சாவகாசமாக நடந்து செல்வார்கள். தமிழ் மாதத்தில் வரும் ஒவ்வொரு முதல் திங்கள் அன்று திருஞானசம்பந்தர், துரையப்பா மற்றும் யோக சுவாமி, பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு சென்று, அங்கே அம்மனுக்கு பொங்கல் படைத்து, வழிபட்டு, மதிய உணவாக அந்த பொங்கலை ருசித்து, மாலையில் கொழும்புத்துறை ஆசிரமம் திரும்புவார்கள் என்று எனதருமை தந்தை என்னிடம் கூறினார். அவர்கள் இந்த பயணத்தை மாட்டு வண்டியில் மேற்கொண்டார்கள். §

மெதுவாக அந்த குடிசைக்கு, அக்கம் பக்கம் மற்றும் வெகு தொலைவில் இருந்தும் மக்கள் தொடர்ந்து யாத்திரை மேற்கொள்ள ஆரம்பித்தார்கள். வா. முத்துகுமாரசுவாமி, *தமிழ் சேஜஸ் அண்ட் சீர்ஸ் ஆஃப் சிலோன்* என்ற தனது புத்தகத்தில், சுவாமியின் *குதிர்* எவ்வாறு இருந்தது என்று விளக்கம் அளித்துள்ளார்*:*§

> எனது பதின்ம வயதில், யோக சுவாமியை அவரது கொழும்புத்துறை ஆசிரமத்தில் சந்தித்தது நினைவில் இருக்கிறது. அங்கே சாம்பிராணி மற்றும் கற்பூரத்தின் நறுமணம் பரவி இருந்தது. அங்கே செம்பருத்தி, முல்லை, சிகப்பு தாமரை, செண்பகம் மற்றும் பல்வேறு நிறங்களில் வேறுசில பூக்களும் இருந்தன. அங்கே யோக சுவாமி அமரும் மான் தோலும் இருந்தது. அந்த காட்சி இராமாயணத்தில் *விஸ்வாமித்திரர்* அல்லது *வசிஷ்டரை* நினைவுறுத்துவதாக இருந்தது. யோக சுவாமி நீண்ட தாடி மற்றும் நரைத்த முடியுடன் இருந்தார். அவரது கண்கள் காந்தத்தன்மையுடன் இருந்தது. அவர்களை தரிசிக்க வந்தவர்கள் வெற்றிலை, பாக்கு, மாம்பழங்கள், மாதுளை பழங்கள், அன்னாசிப் பழங்கள், அரிசி மற்றும் காய்கறிகள் என்று பல்வேறு காணிக்கைகளுடன் வந்தனர். வேறு சிலர் *பிட்டு*, இடியாப்பம், தோசை, வடை, மோதகம் போன்ற தயார் செய்த உணவுடன் வந்தார்கள். யோக சுவாமி அன்பர்களை அமைதியாக உட்கார்ந்திருக்க சொல்வார், மற்றும் சில அன்பர்கள் எழுந்து மீதம் இருக்கும் அன்பர்களுக்கு காணிக்கைகளை பகிர்ந்து அளிப்பார்கள். §

ச. அம்பிகைபாகன் எழுதிய யோக சுவாமியின் சுயசரிதையில், மத்திய கல்லூரியின் முதல்வர் திரு. தாம்பர், இந்த விளக்கத்தை அளிக்கிறார்: §



*யோக சுவாமியின் ஆசிரமம் ஒரு துறவியின் இருப்பிடத்தில் இருக்கும் எளிமையான துறவற வாழ்க்கையை கொண்டிருந்தது. பிரதான அறையில் ஒரு வேப்பமர பலகை இருந்தது. அது இரவில் படுக்கையாகவும் பகலில் இருக்கையாகவும் விளங்கியது. அவர் ஒரு திரைக்கு பின்னால் வைத்திருந்த தனது குருவின் பாதுகைகளை, தினமும் கற்பூரம் ஏற்றி வழிபட்டு வந்தார்.*

• • • • • • • • • • • • • • • §

நாங்கள் கொழும்புத்துறை மற்றும் சுவாமியார் தெருக்களின் சந்திப்பை அடைந்த போது, இருட்டத் தொடங்கியிருந்தது மற்றும் தெருவின் மண் எண்ணெய் விளக்கின் நிழலில் ஒரு தெய்வீக சக்தி உட்கார்ந்து இருப்பதை கண்டோம். அவர் வெள்ளை நிறத்தில் வேட்டி அணிந்து *பத்மாசனத்தில்* அமர்ந்து இருந்தார். சுவாமிகள் சிங்கம் போன்ற தோற்றம், மென்மையான சருமம், வெள்ளை தாடி மற்றும் நரைத்த முடியுடன், பழங்கால ரிஷிகளைப் போன்று உண்மையில் அற்புதமாக காட்சி அளித்தார். அவர் தனது தியானநிலையில் இருந்து வெளிவந்த போது, இரவு நேரத்தில் புலியின் கண்கள் பிரதிபலிப்பதை போல அவரது கண்கள் பிரகாசமாக இருந்தன. அதன் பிறகு ஒரு அணையில் இருந்த தண்ணீரை கடலுக்குள் திறந்து விட்டதைப் போல, அவர் தெய்வீக பாடல்களை பாட தொடங்கிவிட்டார். அது இரண்டு மணி நேரத்திற்கு ஒரு சூறாவளி வீசியது போன்று இருந்தது. அந்த பாடல்கள் அவரது நுரையீரலின் ஆழத்தில் இருந்து வந்தன. நாங்களும் மற்றவர்களும் அவரது இசையில்

மகிழ்ச்சியடைந்து மெய்மறந்து நின்றோம். அவர் பாடி முடித்ததும் அங்கே முழுமையான மௌனமும் அமைதியும் நிலவியது. §

**சந்தைக்கடை கோயிலில்**

1920 களின் ஆரம்பத்தில், கடையிற்சுவாமி அடிக்கடி வந்துக்கொண்டு இருந்த யாழ்ப்பாணத்தின் வண்ணார்பண்ணை மாவட்டத்தில் இருக்கும் சிவன் கோயிலின் முன்பாக, யோக சுவாமி நேரத்தை கழிக்க ஆரம்பித்தார். வரங்கள் மற்றும் ஆசிகள் நிரம்பி வழியும் இந்த கோயில் கிராண்ட் பசாருக்கு மத்தியில் அமைந்து இருக்கிறது மற்றும் சீடர்கள் பெருமளவில் வழங்கிய நிலம், அணிகலன்கள் மற்றும் தங்கத்தின் காரணத்தால், இது இலங்கை முழுவதிலும் அதிக செல்வ வளம் நிறைந்த கோயிலாக மாறியது. இந்த இடத்தை சுற்றியுள்ள யாழ்ப்பாணத்து பொற்கொல்லர் கடைகள், கோயிலின் அற்புதமான சக்திக்கு வலிமை சேர்க்கிறது. அந்த காலத்தில் இந்தியாவும் இலங்கையும் ஒன்றாகவே செயல்பட்டதால், இந்தியாவில் வாழ்ந்த இந்த கோயிலின் பக்தர்கள் அனுப்பிய, பூக்களின் வண்டிகள் தினமும் வந்துக்கொண்டு இருந்தன. §

இந்த இடத்தில் சிவனின் சக்தியாக, பிரபஞ்சத்தின் அன்னையாக விளங்கிய தையல்நாயகியின் தரிசனத்தில், சுவாமி தன்னை முழுமையாக ஈடுபடுத்தி இருந்தார். அவளது சந்நிதி சிவபெருமானின் சந்நிதிக்கு அருகில் இருந்தாலும், அது அதிக ஒதுக்குபுறமாக இருந்து, அவருக்கு விருப்பமான ஒரு பாதுகாப்பையும் வழங்கியது. இந்த கோயிலின் அமைதியான, வெளிச்சம் இல்லாத மூலையை அவர் தியானம் செய்ய, ஆன்மீக பாடல்களை இயற்ற மற்றும் செல்லப்பசுவாமியுடன் சூட்சும ரீதியாக தொடர்பு கொள்ள ஒரு விசேட புகலிடமாக பயன்படுத்திக் கொண்டார். §

“தையல்நாயகி கோயிலை வலம் வரும் போது, அவளது சலங்கை ஒலியை கேட்டால் போதும்,” என்று அவர் தனது ஆழ்ந்த சிந்தனை நிலையில் தெரிவித்தார். அம்மனின் சலங்கை ஒலியை அவரே கேட்டு இருந்தார் மற்றும் அவர் சீடர்களுடன் இந்த பாடலை பகிர்ந்துகொண்டார்:§

தையல் நாயகித் தாயே

இதுநல்ல தருணம் அம்மா

வையம் புகழும் வண்ணைமா நகரில்

வந்த வாணி யேசிவ காமியே

கந்த சாமி யைப்பெற்ற தையல்

நாயகித் தாயே - தையல்

நாயகித் தாயே. §

கோயிலில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தாலும், அவரை யாரும் சீண்டவில்லை. கோயிலில் வழிபட வந்தவர்கள், அவரது தோற்றத்திற்கு மரியாதை அளித்தனர். ஆனாலும் யோக சுவாமி ஈடுபடுத்தியிருந்த ஆன்மீக பணியின் மீது ஒரு அன்பருக்கு அதிக ஆர்வம் இருந்தது. அவர் சுவாமியை ச. ர. கந்தையா என்பவர் பல வாரங்களாக அமைதியாக கண்காணித்தார். அதன் பின்னர் ஒரு நாள் சுவாமி தனது நீண்ட தியானத்தை  முடித்து நடந்துகொண்டு இருந்த போது, அவரிடம் சென்று, “வணக்கம். சுவாமிகள். தங்களை தொந்தரவு செய்ததற்கு மன்னிக்கவும். எனது கடையில் ஒரு பகுதி காலியாக இருக்கிறது. அது இங்கிருந்து சிறிது தூரத்தில் இருக்கிறது. அதை நீங்கள் தங்குவதற்கு பயன்படுத்திக் கொண்டால், அது எனக்கு கிடைத்த பெரிய பாக்கியமாக கருதுவேன்.” §

யோக சுவாமி ஏற்றுக்கொண்டார் மற்றும் அவர் அங்கே அடிக்கடி காணப்பட்டார். அவர் சிறிய போதனைகளையும் வழங்கவும் ஆரம்பித்தார். அவர் ஒரு எளிமையான மரப்பலகையின் மீது அமர்ந்துகொண்டு, அம்மனின் அன்பு மிகவும் வலிமையானது என்றும், அதை ஒருவர் தனது உள்ளத்தில் தக்க வைத்துக்கொண்டால், அது அவரை கரைத்துவிடும் என்றும் அங்கே வருகை தந்தவர்களிடம் கூறினார். வழக்கமாக யோக சுவாமி அருகில் இருந்த கோயிலில், சிவபெருமான் மற்றும் தையல்நாயகி அம்மனை வணங்கிக்கொண்டு இருப்பார்.§

## முரடர்களின் குழு

1920 மற்றும் 1930 களில் பல்வேறு துறையை சேர்ந்தவர்கள் சுவாமிக்கு நெருக்கமாகினார்கள். அவர்களை சுவாமி “அதிக மதிப்புமிக்க மற்றும் கற்றறிந்த முரடர்களின் குழு" என்று அன்புடனே அழைத்தார். அவர் வண்ணார்பண்ணை சிவன் கோயில் கட்டப்பட்ட சமயத்தில் கட்டப்பட்டு, அதற்கு அருகாமையில் இருந்த ஒரு அங்கத்தினரின் பெரிய வீட்டில் ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் மற்றும் வணிகர்கள் அடங்கிய இந்த பக்தியுள்ள கல்விமான்களின் குழுவை வாரம் ஒரு முறை சந்தித்தார். அவர்கள் எதிர்காலத்தில் உருவான, சிவதொண்டன் நிலையத்தின் மிகவும் முக்கிய குழுவாக விளங்கினார்கள். §

சுவாமி தனது முரடர்களின் குழுவிடம் இயல்பாக பழகினார். அவர்களது சகவாசத்தில் அவரும் அவர்களும் தங்களை தளர்த்திக்கொள்ள முடிந்தது. அவர்கள் ஒன்றாக கூடும் போது, ஒருவர் மாற்றி ஒருவர் இந்து சாத்திரங்களை வாசிப்பதை வழக்கமாக கொண்டிருந்தனர். அவர்கள் வாசிக்கும் போது, இடையிடையே யோக சுவாமி தனது முக்கிய கருத்துக்களை வழங்குவார். இந்த தருணங்களுக்கு அவர்கள் அதிக மதிப்பு அளித்தனர். ஆனால் அவர்கள் வாசிக்கும் படைப்பை வழங்கிய துறவி அல்லது தன்னை, அவர்களுக்கு மேலாக கருதுவதை சுவாமி அனுமதிக்கவில்லை. “நீங்கள் வாசிக்கும் அல்லது கேட்கும் சொற்களின் பேச்சாளராக மாறவேண்டும். உங்கள் எண்ணத்தில்

இருப்பதைப் போன்று நீங்கள் இல்லை. நீங்கள் ஒன்றாக இருக்கிறீர்கள். அதைத்தான் நீங்கள் பயிற்சி செய்ய வேண்டும்.” §

இந்த கூட்டங்களில் யோக சுவாமி சிலசமயம், சுவாமி விவேகானந்தரைப் பற்றி பேசுவார். அவர் ஜனவரி 1897 இலங்கையில் நடைபெற்ற சுவாமி விவகானந்தரின் உரைகளில் கலந்துகொண்டார். தனது உள்ளத்தில் இருந்து வரும் சக்திகள் அனைத்தையும் கட்டுப்படுத்தி, தனது கருத்துக்கள் அனைத்தையும் முழுமையாக வெளிப்படுத்த முடியாமல், மேடையின் மேலும் கீழுமாக கர்ஜித்துக்கொண்டே நடைப்போடும் சிங்கத்தை போல விவேகானந்தரின் உரைகள் இருந்ததாக அவர் குறிப்பிட்டார். வேதாந்த புலமை பெற்ற 34 வயது துறவி, “காலம் சிறியதாக இருக்கிறது, ஆனால் பாடம் பெரியதாக இருக்கிறது,” என்று தனது உரையை துவக்குவார். இந்த வாசகத்தை சுவாமி தனது வாழ்நாள் முழுவதும் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டு இருந்தார். §

பல பிரபலங்கள் அடங்கிய இந்த குழுவில் சார் வைத்தியலிங்கம் துரைசாமி, Dr. சி. குருசாமி, திரு. அ. தில்லையம்பலம், திரு. வி. காராளசிங்கம், Dr. வி. தி. பசுபதி, பண்டிதர் த. மயில்வாகனம் (பிற்காலத்தில் சுவாமி விபுலாநந்தர்), கலைப்புலவர் க. நவரத்தினம், திரு. செ. மயில்வாகனம், திரு. வி. முத்துக்குமாரு, திரு. வை.சி.சி. குமாரசாமி, திரு. ரி.என். சுப்பையா, புலவர்மணி ஏ. பெரியத்தம்பிப்பிள்ளை, திரு. ஆர். என். சிவபிரகாசம், திரு. எம். எஸ். இளையதம்பி, திரு. எம். சபாரத்னசிங்கி, திரு. திருவிளங்கம், உச்சநீதிமன்ற நீதிபதி ஹே. வி. தம்பையா, திரு. ம. ஸ்ரீகாந்தா, திரு. காசிப்பிள்ளை நவரத்தினம், திரு. த. சின்னதம்பி, திரு. கே.கே. நடராஜன், பண்டிதர் ஏ. வி. மயில்வாகனம், அமைதி நடுவர் திரு. எஸ். சுப்ரமணியம் ஆகியோர் அடங்குவர். அதில் பெரும்பாலனோர் தங்கள் வாழ்நாள் முழுவதும் சுவாமியின் சீடர்களாக இருந்தனர். §

**நடை பயணங்கள்**

சுவாமி தனது வாழ்நாள் முழுவதும், செல்லப்பசுவாமி தனக்கு முன்பாக இருப்பதைப் போன்று வெளிப்படை பேசிக்கொண்டு இருந்தார். செல்லப்பசுவாமி *மகாசமாதி* அடைந்த பிறகு, சுவாமி அவருடன் தொடர்புகொள்ளும் ஸித்தியில் பக்குவம் அடைந்து இருக்கிறார் என்பது சீடர்களுக்கு பின்னர் தெரிய வந்தது. அப்போதில் இருந்து, செல்லப்பசுவாமி ஆன்மீக ரீதியாக வழிகாட்டி வந்தார். அவர் பிரபஞ்சத்தின் சூட்சும சக்திகள், கடவுள்கள், தேவர்கள் மற்றும் சைவத்துறவிகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டதும், அவர்களும் அதைப்போன்று வழிகாட்டியதாக சுவாமி குறிப்பிட்டார். §

ஒரு இளம்வயது குருவாக இருந்த சுவாமி, யாழ்ப்பாணத்திற்கு வெளியே நீண்டகாலம் தங்குவதை தனது வழக்கமாக கொண்டிருந்தார். அவர் கொழும்பு செல்வார், அல்லது உள் நாட்டிற்குள், அல்லது கொழும்புத்துறையில் இருந்து நாற்பது கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும்

பூநகரி கிராமத்தில், பிள்ளையார் கோயில் மற்றும் அதற்கு அருகில தாமரை மலர்கள் நிறைந்த குளம் இருக்கும் நெல் வயல்களின் மத்தியில் இருந்த தனது ஒதுக்குபுறமான இடத்திற்கு செல்வார். கோயிலின் மறுபுறத்தில் நிழல் தரும் ஒரு *குருந்தை* மரம் இருந்தது. இதைப்போன்ற ஒரு மரத்திற்கு அடியில் மணிக்கவாசகர் சிவனை குருவாக கண்டார் என்பதால், இதை சைவர்கள் புனிதமாக கருதி வழிபாடு நடத்துகிறார்கள். யாருக்கும் இந்த இடத்தைப் பற்றி தெரியாது என்பதால், அங்கே சுவாமிக்கு யாரும் தொந்தரவு கொடுக்கவில்லை மற்றும் அவர் அங்கே பல நாட்களுக்கு தொடர்ந்து தங்கி இருப்பார். அதனை சுற்றி சுறுசுறுப்பாக விவசாயிகள் வேலைசெய்துக்கொண்டு இருக்க, அந்த இடம் வயல்களுக்கு மத்தியில் அமைதியாக இருந்தது. §

சுவாமிக்கு நடந்து செல்வது பிடிக்கும் மற்றும் அவர் யாழ்ப்பாணம் தீபகற்பம் முழுவதும் நீண்டதூரம் நடந்து செல்வார். பிற்காலத்தில், அவரை நாடி எண்ணற்ற சீடர்கள் வந்த போது, அவர் சீடர்கள் வருவதற்கு முன்பாக விரைவாக எழுந்து, கையில் குடையை பிடித்துக்கொண்டு, மேடு பள்ளம் நிறைந்த சாலைகள் வழியாக, ஓய்வு இல்லாமல் நடந்து, வழியில் இருந்த புனித தலங்களுக்கு சென்று, முன்னறிவப்பின்றி ஒரு சீடனின் வீட்டில் மதிய உணவு சாப்பிட்டு, தனது ஆசிரமத்தில் யாரும் இல்லாத போது அல்லது அதிக பக்தியுள்ள சீடர்கள் மட்டும் இருக்கும் போது, அவர் தனது குடிசைக்கு திரும்புவார். §

அவருக்கு ஒவ்வொரு சாலை, ஒவ்வொரு சந்து, ஒவ்வொரு பாதை பரிச்சயமாக இருந்தது. 1940 களில் அல்லது 1950 களில், யாழ்ப்பாணத்தில் ஒரு பெரிய புயல் உருவானது. அதிவேக காற்றின் காரணமாக, பல நாட்களுக்கு இடைவிடாமல் பலத்த மழை பெய்து, அது மரங்களை சாய்த்து சாலைகளில் வெள்ளத்தை ஏற்படுத்தியது. அந்த புயல் ஓய்ந்த பிறகு அது விளைவித்த சேதத்தை பார்வையிட, யாழ்ப்பாணத்தை சுற்றி காண்பிக்குமாறு தனது நெருக்கமான சீடர்களில் ஒருவரிடம் கேட்டுக்கொண்டார். அவர்களது பயணத்தில் முன்னேறி செல்லமுடியாத சாலை வரும் போதெல்லாம், சுவாமி அந்த உள்ளூர் மக்களுக்கு மட்டுமே தெரிந்து இருந்த குறுகலான சந்துகள் வழியாக செல்லும் இன்னொரு பாதையில் வழிநடத்தி செல்வார். அவரது பூகோள புலமையை பார்த்து அந்த சீடன் தனது வியப்பை வெளிப்படுத்தியதும், “இது எனக்கு சொந்தமான நிலம். எனக்கு இதில் இருக்கும் ஒவ்வொரு அங்குலமும் தெரியும்,” என்று சுவாமி அறிவிப்பார். யோக சுவாமி எந்த இடத்திற்கு சென்றாலும், அது எவ்வளவு தூரமாக இருந்தாலும், அவர் இறுதியில் *இலுப்பை* மரம் வந்து சேர்ந்துவிடுவார். §

சுவாமி பருத்த உடல் மற்றும் ஐந்து அடி ஏழு அங்குல உயரத்துடன் இருந்தார். அது அந்த காலத்தில் யாழ்ப்பாண ஆண்களின் சராசரி உயரமாக இருந்தது. கம்பீரமாகவும் வலுவாகவும் இருந்த அவர், தனது எழுபது வயதிலும், தினமும் அறுபது கிலோமீட்டர் தூரம் நடந்து செல்வதை தனது வழக்கமாக கொண்டிருந்தார். அவர் தவிர்க்க விரும்பிய நபர்களை மிரட்டுவதற்காக,

தனது அச்சுறுத்தும் தோற்றம் மற்றும் உடல் வலிமையையும் பயன்படுத்த தயங்கியது இல்லை. Dr. எஸ். ராமநாதன், என்ற சீடர் மறக்கமுடியாத இந்த அனுபவத்தை இங்கே பகிர்ந்து கொள்கிறார்: §

> நான் 1920 ஆம் ஆண்டில், நல்லூரை சேர்ந்த வழக்கறிஞர் சோமசுந்தரத்துடன் சுவாமியை சந்திக்க சென்றேன். நான் இளைஞனாக இருந்த போது, கத்திச்சண்டை மற்றும் அதைப்போன்ற மற்ற வித்தைகளில் தேர்ச்சி பெற்று இருந்தேன். இந்த திறமைகளின் காரணமாக, நான் சற்று ஆணவத்துடன் இருந்தேன். நான் ஆசிரமத்திற்கு சென்று கொண்டிருக்கும் போது, சுவாமி நடுத்தெருவில் என்னுடன் போட்டியிட்டு என்னை வீழ்த்தினார். என்னால் அந்த சம்பவத்தை என்றுமே மறக்க முடியாது. அவர் அன்று காண்பித்த திறமையை, தங்கள் கைகள் மற்றும் கால்களை கொண்டு, தற்காப்பு கலைகளை கற்பிக்கும் ஆசிரியர்களாலும் காண்பித்து இருக்கமுடியாது. எனக்கு பெருமையை வழங்கிய ஒரே திறமை, அன்று நான் தரையில் வீழ்வதற்கு காரணமாக இருந்தது. அதன் பிறகு சுவாமி என்னை ஆசிரமத்திற்கு அழைத்து சென்று என் மீது அன்பையும் பாசத்தையும் பொழிந்தார். அன்று என்னை மண்ணை கவ்வ வைத்த தெய்வீக விளையாட்டைப் பற்றி, என்னால் பல வருடங்கள் கழித்தே கற்றுக்கொள்ள முடிந்தது. அதன் பிறகு நான் எப்போது யாழ்ப்பாணம் பயணம் மேற்கொண்டாலும், ஆசிரமத்திற்கு சென்று அவரது தரிசனத்தை பெற்றேன். சில சமயம் அவர் என்னை திட்டி அனுப்பி விடுவார். ஆனால் அவரை காணும் ஒரே நோக்கத்துடன் செல்லும் போது, அவர் என்னை அன்புடன் வரவேற்று என் மீது பாசத்தை பொழிவார். §

பலர் அவரிடம் இருந்து விலகியே இருந்தனர். அவர்கள் சுவாமி தெருவில் நடந்து வருவதை கண்டால், அவர்கள் ஒளிந்துக்கொள்வார்கள் அல்லது வேறு வழியில் சென்று விடுவார்கள். மக்கள் *இலுப்பை மரம்* வழியாக செல்லாமல், நீளமான மாற்றுப்பாதை வழியாக செல்வார்கள். ஆனால் சிலசமயம், அதிக ஆர்வத்துடன் கவனம் குறைவான நபர் ஒருவர் அவரை நெருங்கி வரும் போது, யோக சுவாமி அவரை உரத்த குரலில் திட்டி அனுப்புவார். ஆனால் அது அந்த அழையாத விருந்தினரை தடுக்கவில்லை என்றால், மீண்டும் அவரிடம் அந்த ஆர்வம் ஆதிக்கம் செலுத்தாதவாறு அவரை அடித்து அனுப்புவார். பல வருடங்கள் கழித்து, சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி அத்தகைய கோபத்தின் வெளிப்பாடுகள் பற்றி தனது உட்பார்வையை வழங்கினார்: §

> மக்களிடம் யோக சுவாமி கோபித்து கொள்வார் என்ற கருத்து நிலவுகிறது. மக்களால் அவரது கோபத்தை பொறுத்துக் கொள்ளமுடியாது, ஆனால் பின்னர் அந்த கோபத்தால் தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டதாக அவர்கள் கூறுவார்கள். அது கட்டுப்படுத்தப்படாமல் மற்றும் கட்டுப்படுத்தமுடியாமல் நெருப்பை கக்கும் சாதாரண மனிதனின் கருப்பு மற்றும் சிவப்பு நிறங்களின்

தீவிரமான கோபத்தில் இருந்து எவ்வாறு மாறுபடுகிறது? யோக சுவாமி தனது நியாயமான கோபத்தில் வெள்ளை நிற சுடர்கள், இளம் சிவப்பு நீல வண்ணத்தை வெளியிடுவார். “நான் உனக்குள் இருக்கும் இந்த கொடிய பண்புகளை அழிக்கப்போகிறேன்,” என்று அன்பரின் நலனுக்காக குறிப்பிடுவார். அவரை பார்க்கும் போது  கோபத்தின மீது தனது கட்டுப்பாட்டை இழந்தது போல காட்சி அளிக்கலாம், ஆனால் அது உள்ளுணர்வு மனிதனின் கோபமாக இருக்காது. ரிஷிகள் அதிக கோபத்துடன் அதிகமாக அடக்கி ஆளும் பண்பையும் பெறுவதாக மக்களிடம் ஒரு கருத்து நிலவுகிறது. அவர்கள் கோபத்தை பயன்படுத்தினாலும், அதை ஒரு வெள்ளை நிற சுடருடன் கூடிய நியாயமான கோபம் என்று சொல்வதே மிகவும் சரியாக இருக்கும். அதன் பின்னர், அவர்களுக்கு முன்பு எது வருத்தத்தை ஏற்படுத்தியதோ, அதில் இருந்து முழுமையாக விடுதலையை பெறுவதால், அந்த ரிஷியின் கோபம் தங்களுக்கு கிடைத்த பாக்கியமாக மக்கள் கருதுகிறார்கள். அது அவர்களிடம் இருந்து முழுமையாக எரிக்கப்பட்ட ஒரு ஆசியாக விளங்குகிறது. §

கொழும்புத்துறையில் இருந்த அவரது குடிசையை பிற்காலத்துடன் ஒப்பிடும் போது, ஆரம்ப காலத்தில் வெகு தொலைவில் அணுக முடியாமல் இருந்தது. யாழ்ப்பாணம் நகரம் மற்றும் சுவாமியின் கிராமத்திற்கு இடையிலான பகுதி, உயரமான புதர்கள் வழியாக செல்லும் ஒரு அகலமான வழித்தடமாகத்தான் இருந்தது. மற்றும் அங்கே மூன்று-நான்கு கிலோமீட்டர் தூரத்திற்கு வீடு எதுவும் இருந்ததில்லை. மக்கள் அந்த வழியாக இரவில் வரும் போது வழிப்பறி கொள்ளையர்களை கண்டு பயந்ததால், சுவாமி தைரியம் இல்லாதவர்களை சந்திக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. மிகவும் தீவிரமான, அச்சம் இல்லாத அன்பர்கள் மட்டுமே மாலை நேரத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து பயணம் மேற்கொள்வார்கள். §

ஒரு நாள் இரவு சுவாமியை தேடி சில சிறுவர்கள் வந்தார்கள். சுவாமி யாழ்ப்பாணத்தை சுற்றி நடந்துகொண்டு இருந்த போது, அந்த சிறுவர்கள் அவரை சந்திக்க நினைத்தார்கள், ஆனால் அவர்களால் அவரது வேகமாக நடைக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அவர்கள் ஆசிரமத்திற்கு மாலை நேரத்தில் வந்து சேர்ந்தனர். அப்போது யோக சுவாமி எண்ணெய் விளக்குகளை ஏற்றிக்கொண்டு  இருந்தார். அவர்கள் வந்ததை பொருட்படுத்தாமல், வழக்கம்  போல் தனது  மாலை நேர பாடல்களை பாட ஆரம்பித்தார். அதன் பிறகு அவர் அவர்களை தனது குடிசைக்குள் வரவழைத்து, அவர்கள் வந்த காரணத்தை விசாரித்தார். தாங்கள் சமீபத்தில் பட்டபடிப்பு தேர்வை எழுதியதாகவும், அதில் தாங்கள் வெற்றி பெற்றால், இலங்கையில் இருக்கும் பல்கலைகழகம் அல்லது வெளிநாட்டிற்கு செல்ல வாய்ப்பு இருக்கிறது என்றும் அவர்கள் விளக்கினார்கள். §

தேர்தலின் முடிவு வெளியாகவில்லை என்பதால் அவர்கள் கவலையில் இருந்தார்கள். பெரியவர்களாக தாங்கள் விரைவில் ஏற்கவிருக்கும்

பொறுப்புக்களை அவர்கள் உணரவும் தொடங்கியிருந்தார்கள், மற்றும் இன்று இரவு யாத்திரை மேற்கொண்டு, கொழும்புத்துறையின் முனிவரை தரிசித்து அவரது ஆலோசனையை பெறுவது அவர்களுக்கு சரியென்று தோன்றியது. அவர்கள் அத்தகைய ஒரு உயர்ந்த ஆன்மாவிடம் இருந்து வரும் ஆசிகளின் சக்தியை பற்றி அறிந்து இருந்தார்கள். சுவாமி விரைவில், “நீங்கள் நல்ல புத்திசாலி மாணவர்களாக இருக்கிறீர்கள். பிறகு ஏன் கவலைப்படுகிறீர்கள்? நீங்கள் மனதில் அச்சத்துடன் எந்த முடிவையும் எடுக்கக்கூடாது,” என்று கூறி அவர்களது மனதில் இருந்து தேர்வு முடிவுகள் பற்றிய சந்தேகத்தை நிவர்த்தி செய்தார். §

அந்த வயதில் பலர் செய்வதைப் போல, அவர்களும் வழித்தவறி செல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதை சுவாமி அறிந்து இருந்தார். ஆனால் முறையான வழிகாட்டலின் மூலம், அவர்கள் தங்களது வாழ்க்கையின் குறிக்கோளைப் பற்றி ஒரு வலுவான புரிதலை உருவாக்கிக்கொள்ள முடியும். அவர்கள் தங்கள் பெற்றோர்களுக்கு தொடர்ந்து அனுசரித்து நடந்து, நிலையற்ற லௌகீக ஆசைகளில் ஈடுபடாமல் கற்புடன் நிலைத்து இருக்கவேண்டும் என்று அவர்களது வாழ்க்கைக்கு, அவர் வலுவான கட்டுப்பாட்டை அறிவித்தார். அவர் வாழ்க்கை முழுவதும் கடைப்பிடிக்க முழுமையான கண்ணோட்டத்தை விவரித்தார்: §

> நமக்கு மேல் அல்லது நமக்கு மேலதிகாரியாக யாரும் இல்லை. நன்மையும் தீமையும் நம்மை சீண்ட முடியாது. நமக்கு தொடக்கமும் இல்லை முடிவும் இல்லை. நமக்கு விருப்பும் இல்லை வெறுப்பும் இல்லை. நமக்கு லௌகீக பொருட்களின் மீது ஆசை கிடையாது. நமக்கு மனதின் கவலைகள் வேதனை வழங்குவதும் இல்லை இடம், காலம் அல்லது கர்மவினையால் நாம் கட்டுப்படுவதும் இல்லை. §

### இராஜயோகி தரையில் விழுந்து வணங்குதல்

அந்த காலத்தில் சங்கரசுப்பையர் என்ற ஒரு பிராமணர் வாழ்ந்து வந்தார். அவரை எல்லோரும் மரியாதையுடன் இராஜயோகி என்று அழைத்தனர். அவர் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். அவர் ஒரு இளைஞனாக இருந்த போது, ஒரு ஆன்மீக வேட்கையுடன் வீட்டில் இருந்து வெளியேறி தென்னிந்தியா சென்றார். அவர் பல வருடங்களுக்கு சாதனா செய்ததுடன், தத்துவம் மற்றும் சொற்பொழிவு வழங்குவதில் பயிற்சியும் பெற்றார். அவர் சைவ சித்தாந்தத்தில் தேர்ச்சி பெற்று, அதிக மதிக்கப்பட்ட சொற்பொழிவாளராக முதிர்ச்சி பெற்றார். இந்து கோயில்களில் விசேஷமான நாட்களில் பூஜைகள் முடிந்த பிறகு, அங்கே அமைக்கப்பட்டிருக்கும் மேடையில் பேச்சாளர்கள் மற்றும் இசைக்கலைஞர்களின் நிகழ்ச்சி நடைபெறும். இராஜயோகி அத்தகைய விசேஷங்களின் போது, தென்னிந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டு, சைவ சமயத்தின் முக்கிய கருத்துக்களை தெளிவுபடுத்தி, கதைகளை சொல்லி மற்றும் அதன் பொருள்களை விளக்குவார். அவரது

சொற்பொழிவை கேட்க மக்கள் வெகுதூரத்தில் இருந்து வந்தனர். அவர் சடங்குகளை முழுமையாக புரிந்துகொள்ளாமல் பின்பற்றியவர்களுக்கு, குறிப்பிடும் படியாகவும் ஒரு எளிமையான பாணியிலும், சைவ வழிபாட்டின் ஆன்மீக முக்கியத்துவத்தை வழங்கினார். §

1920 களின் ஆரம்பத்தில், யாழ்ப்பாணத்தை சேர்ந்த அந்த மேதாவி மகன் சொந்த மண்ணிற்கு திரும்பினார். அவர் பல வருடங்களாக தனது சொந்த மண்ணில் இல்லையென்றாலும், அவர் பிரபலமாகவும் நல்ல மதிப்புடனும் இருந்தார். அவர் கல்லால் உருவாக்கப்பட்ட பழங்கால கோயில்களில் பேசுவதை, தென்னிந்தியாவிற்கு யாத்திரை மேற்கொண்ட பல இலங்கைவாசிகள் பார்த்து இருந்தனர். இறுதியில் ஒரு வெற்றி வீரனை போன்று, அவர் சமய சொற்பொழிவுகளை வழங்க சொந்த மண்ணிற்கு திரும்பிக் கொண்டிருந்தார். இராஜயோகி படகு மூலம் கொழும்பு வந்தடைந்து, தலைநகரத்து மக்களின் கவனத்தை பல வாரங்கள் கவர்ந்திருந்து, யாழ்ப்பாணத்திற்கு இரயில் மூலம் பயணம் மேற்கொண்டார். §

அந்த சமூகம் முழுவதும் உற்சாகத்தில் இருந்தது. அமைதியான வட இலங்கையில், அத்தகைய சம்பவங்கள் அபூர்வமாக நடந்தன. தாங்கள் வரவேற்கும் முக்கியஸ்தரை சொந்த மண்ணிற்கு அழைத்து வர, வரவேற்பு குழுவின் பிரதிநிதிகள் கொழும்பில் இருந்து எட்டு மணிநேரம் பயணம் மேற்கொண்டனர். பிரபலத்தை வரவேற்கும் பெண்கள், ஆயிரக்கணக்கான மலர்கள் மற்றும் பனை ஒலைகளின் துணையுடன் இரயில் நிலையத்தை சிறப்பாக அலங்கரித்து இருந்தார்கள். விழாவிற்கு வருகை தரும் பிரமுகர்கள் வரவேற்புரை வழங்கவும், பண்டிதர் யாழ்ப்பாண மக்களுக்கு தனது முதல் உரையை வழங்கவும், ஒரு புதிய மேடை அமைக்கப்பட்டது. அந்த பகுதியில் பல முக்கியமான சமய மற்றும் சமூக குழுக்கள் இருந்தன. அவற்றில் ஒவ்வொன்றும் தங்கள் கைகளில் ஆடம்பரமான மலர் மாலைகளுடன், அவரை கௌரவிக்க அங்கே குழுமியிருந்தனர். காற்றில் சாம்பிராணி மற்றும் ரோசாப்பூ மற்றும் மல்லிகையின் நறுமணம் நிரம்பி இருந்தது. அவர் வந்து சேரும் நேரம் நெருங்கியதும், அதிகமான மக்கள் மேடைக்கு அருகில் குழும ஆரம்பித்தனர். §

இதற்கிடையில், தன்னை உபசரிக்கும் குழுவினரிடம் உரையாடிக்கொண்டு இருந்த இராஜயோகி, சொந்த மண்ணிற்கு திரும்புவது ஆனந்தம் தருவதாக இருக்கிறது என்று கூறினார். ஆனால் இரயில் பளை இரயில் நிலையத்தில் இரயில் நின்றதும், அவர் பேசுவதை நிறுத்தி, கண்களை மூடிக்கொண்டு ஒரு ஆழமான பேரானந்த நிலையில் நுழைந்தார். மன நிறைவால் அவரது முகம் பிரகாசித்தது. அவர் சிறிது நேரம் கழித்து, தனக்கு கிடைத்த அனுபவத்தில் முழுமையாக மூழ்கிய நிலையில் தனது கண்களை திறந்தார். §

உபசரிக்கும் குழுவின் தலைவர், “என்ன பிரச்சனை சுவாமி? பயணம் காரணமாக சோர்வாக இருக்கிறதா?” என்று கேட்டார். இராஜயோகி பெருமூச்சு விட்டுக்கொண்டு, “சென்ற இரயில் நிலையத்தில், ஒரு சிறந்த

சோதி இரயிலில் ஏறுவதை உணர்ந்தேன். அந்த ஒளி இரயில் முழுவதும் பரவிக்கொண்டு இருக்கிறது," என்றார். அவர் மீண்டும் உட்புறமாக கவனம் செலுத்தி, மீதம் இருந்த பயணம் முழுவதும் அந்த தரிசனத்தில் மூழ்கி இருந்தார். §

அந்த சோதி யாழ்ப்பாணம் பணிமனைக்கு முன்பாக புங்கன்குளம் நிலையத்தில், இரயிலில் இருந்து இறங்கி செல்வதை உணர்ந்தார். அவர் யார் என்று உபசரிக்கும் குழுவினரிடம் விசாரித்தார். ஒருவர் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தார், அவர் யோக சுவாமி நடந்து செல்வதை பார்த்ததும், சுவாமியை இராஜயோகிக்கு காண்பித்துக்கொண்டு, "அவர் ஒரு துறவி. அவர் அருகில் இருக்கும் கிராமத்தில் வாழ்கிறார்," என்றார். §


இரயில் கிளம்ப தயாராக இருந்தது. அந்த இரயில் நிலையத்தில் உடனே இறங்கவேண்டும் என்று இராஜயோகி வற்புறுத்தினார். வரவேற்பு குழுவில் யாராலும் அவரை கட்டுப்படுத்த முடியவில்லை. அவர் அந்த உயிர்சக்தியின் ஆன்மீக வெளிச்சத்தை தெளிவாக உணர்ந்து இருந்தார். அந்த தருணத்தில், அந்த உயிர்சக்தியை சந்திப்பதே அவரது வாழ்க்கையில் முக்கியமான பணியாக இருந்தது. §

வரவேற்கும் குழு குழப்பத்தில் இருந்தது. அந்த இரயில் நிலையத்தில் இருந்து சில கிலோமீட்டர் தூரத்தில் அமைந்திருந்த விழா மேடையில், இராஜயோகிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பதே, அவர்களது பொறுப்பாக இருந்தது. அங்கே நூற்றுக்கண்கான மக்கள் காத்து இருந்தனர். அவர் தாமதமாக வந்தால் அல்லது ஏதாவது தவறாக நடந்தால், அவர்கள் மீது பழி சுமத்தப்படும். அவருக்கு அவர்களது இக்கட்டான சூழ்நிலை புரிந்து இருந்தாலும், தான் யோக சுவாமியை பார்க்க வேண்டும் என்று வற்புறுத்தினார். "இரயிலில் இருந்து இறங்க எனக்கு அனுமதி அளியுங்கள். வரவேற்பு நிகழ்ச்சியை நான் உரையாற்றும் நேரம் வரை ஒத்தி வையுங்கள். பழியை என் மீது சுமத்துங்கள்," என்று அவர் வேண்டிக்கொண்டார். வரவேற்பு குழுவும் விட்டுக்கொடுப்பதாக இல்லை. அவர்கள் வரவேற்பு நிகழ்ச்சியை சுருக்கி, நிகழ்ச்சி முடிந்தவுடன் அவரை தாங்களே யோக சுவாமியிடம் அழைத்து செல்வதாக வாக்குறுதி அளித்தனர். இதற்கு இராஜயோகி சம்மதம் தெரிவிக்க, இரயில் ஒரு ஆட்டத்துடன் யாழ்ப்பாணம் நோக்கி மெதுவாக முன்னேறியது. §

அப்போது அந்த குழுவினர், பிரபலமான இராஜயோகி யோக சுவாமியை சந்திக்க ஏன் ஆர்வத்துடன் இருக்கிறார் என்று யோசிக்க ஆரம்பித்தனர். அவர்கள் சுவாமியை பல வருடங்களாக பார்த்து இருந்தனர், மற்றும் அவரிடம் விசேட சக்தி இருப்பதாக அவர்களுக்கு தோன்றியது இல்லை. அவர்களைப் பொறுத்தவரை, அவர் அச்சத்துடன் தவிர்க்க வேண்டிய ஒரு மர்மமான சாதுவாக இருந்தார். இராஜயோகி ஒரு பரிச்சயம் இல்லாத நபருடன் ஒருசில தருணங்கள் இருப்பதற்காக, நீண்ட நேரமாக காத்திருந்த நண்பர்களின் கௌரவத்தை துறக்க தயாராக இருந்தார். அவருக்கு வழங்கப்படவிருந்த வரவேற்பு நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் பல வருடங்களில் நடந்த சிறப்பான

ஒன்றாக இருந்திருக்கும், மற்றும் யோக சுவாமியை தரிசிக்க அவர் அதை தவிர்க்க விரும்பினார்! §

அவர்கள் யாழ்ப்பாண இரயில் நிலையத்தில் நுழைந்த போது, உள்ளூர் மக்கள் நடைமேடையில் நிரம்பி இருந்தனர். இசைக்கலைஞர்கள் தவில் மற்றும் நாதசுவரத்தில் பண்டிகைக் கால மெட்டுக்களை இசைத்துக்கொண்டு இருந்தார்கள். இராஜயோகி சிறப்பான முறையில் வரவேற்கப்பட்டார். அவருக்கு தொடர்ந்து மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டதால், மாலைகள் தன் முகத்தை மறைக்காமல் இருக்க அவற்றை உடனே அகற்ற வேண்டி இருந்தது. §



*ஒரு முறை இராஜயோகி என்ற அதிக மரியாதைக்குரிய பண்டிதர், கொழும்புவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இரயிலில் பயணம் செய்த போது, அருகில் ஒரு தலைசிறந்த சோதி இருப்பதை உணர்ந்தார். அவர் அந்த ஆன்மீக சக்தியின் மூலத்தை பற்றி விசாரித்த போது, யாழ்ப்பாணத்திற்கு முந்தைய இரயில் நிலையத்தில் யோக சுவாமி, இரயிலில் இருந்து இறங்கி செல்வதை பார்த்ததாக, அவருடைய குழுவில் ஒருவர் தெரிவித்தார். தான் உணர்ந்த சக்தியால் ஆச்சரியம் அடைந்த பண்டிதர், அந்த சக்தியை பின்தொடர்ந்தார்.*

• • • • • • • • • • • • • • • §

அவரது நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர்கள், தீவிர எதிர்ப்பை கடந்து, தாங்கள் வழங்கிய வாக்குறுதிக்கு ஏற்ப, வரவேற்பு நிகழ்ச்சியின் முக்கிய

பகுதியை மாலை வரை ஒத்திவைக்க ஏற்பாடு செய்தனர். இராஜயோகி முடிந்தவரை விரைவாக கிளம்ப வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர் வழங்கிய சிறிய, சரளமான மற்றும் நகைச்சுவை நிறைந்த உரை வந்திருந்த மக்கள் கூட்டத்தை திருப்திப்படுத்தியது. அவர் நிகழ்ச்சியை சுருக்கியதற்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டு, தனது நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களுடன் சுவாமியை காண வாகனத்தில் கிளம்பினார். §

இலங்கையில் எங்கும் காணப்படும் கருப்பு நிற அம்பாஸடர் செடன்களில், அவர்கள் எல்லோரும் ஏறிக்கொண்டு கொழும்புத்துறை நோக்கி புறப்பட்டனர். இராஜயோகி சுவாமியின் குடிசையை அடைந்ததும், மிகவும் உயர்வான நமஸ்கார வடிவில், தனது தலைக்கு மேல் கைகளை உயர்த்திக்கொண்டு, முனிவருக்கு அருகில் சென்று, தரையில் விழுந்து வணங்கினார். அவர் அஷ்டாங்க நமஸ்கார நிலையில் நீண்டநேரம் இருந்தார், பின்னர் பேசமுடியாமல் பிரமிப்பில் எழுந்து நின்றார். யோக சுவாமி அவரை அன்புடன் அழைத்து, அருகில் அமர்த்திக்கொண்டார். §

சிறிது நேரத்திற்கு தீவிரமான அமைதி நிலவியது, அதன் பிறகே இராஜயோகி, “எனக்கு இந்த தருணத்தில் கிடைத்துள்ள அமைதியை போன்று முன்னெப்போதும் உணர்ந்தது இல்லை,” என்று கூறினார். “நீங்கள் உணர்வது உங்களுக்குள் இருக்கிறது. நான் உங்களுக்குள் இருக்கிறேன்,” என்று யோக சுவாமி பதில் அளித்தார். அவர்கள் இருவரும் கலந்து உரையாடினார்கள் மற்றும் தனிப்பட்ட அமைதியில் சிறிது நேரம் அமர்ந்து இருந்தார்கள். அதன் பிறகு இராஜயோகி கிளம்புவதற்கான நேரம் வந்துவிட்டது என்று சுவாமி அறிவித்தார். மக்கள் ஆர்வத்துடன் இருப்பார்கள் என்பதை அறிந்திருந்த சுவாமி, தங்களது சந்திப்பைப் பற்றி மௌனம் சாதிக்கவேண்டும் என்று அறிவுறுத்தினார். “இரகசியம் புனிதமானது, புனிதம் இரகசியமானது. நீ மட்டும் தான் இருக்கிறாய். ஒரு இரகசியத்தை காப்பாற்றுவதன் மூலம் அதை அறிந்துக்கொள்.” §

அன்று இரவு, தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் யாழ்ப்பாண குடிமக்களை சந்தித்த போது, சுவாமியுடன் தான் மேற்கொண்ட சந்திப்பைப் பற்றி எதுவும் பேசவில்லை. ஆனால் எல்லோரும் அறிந்து இருந்தார்கள். அதுவே யாழ்ப்பாண மக்களின் வழக்கமாகவும் இருக்கிறது. அவரது குழுவை சேர்ந்தவர்களால் தங்களது உற்சாகத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்கள் பிரபலமான தங்களது பண்டிதர் யோக சுவாமியை தனது குருவாக ஏற்றுக்கொண்டது பற்றி பேச ஆரம்பித்தனர். §

இது ஒரு திருப்புமுனையாக அமைந்தது; சுவாமியின் அபூர்வமான ஆன்மீகத்தை பற்றி மற்றவர்களுக்கு தெரிய தொடங்கி, அவர்களும் நாடி வந்தனர். அவர் மிகவும் தனியாக, பற்றின்றி இருந்ததுடன், அவரை அணுகுவதும் கடினமாக இருந்ததால், மக்கள் பெருமளவில் அவரை நாடி வரவில்லை. அவர் எளிமையான, தனிமையான வாழ்வை வாழ்ந்து, தொடர்ந்து தவத்தில் ஈடுபட்டு காலம், உருவம், பரவெளி மற்றும் மனதின்

இயக்கங்களை கடந்து, உள்பொருளின் உச்சத்திற்கு அவர் உயர்ந்து செல்ல, பற்றின் ஒவ்வொரு இழையையும் உணர்வுடன் நீக்கிக்கொண்டு வந்தார். §


**சாதகர்களுடன் இணைந்து செயல்படுதல்**

செல்லப்பசுவாமி தான் ஒரு குருவாக அறியப்படுவதற்கு எப்போதும் அனுமதி வழங்கவில்லை. யோக சுவாமி அந்த நிலையின் மெய்யறிவை அறிந்து இருந்தார். மிகவும் உயர்ந்த சக்கரங்களில் தேவையான பக்குவம் மற்றும் திடநிலையை அடையும் முன்னர், ஒருவர் சீடர்களை ஏற்றுக்கொள்ள தன்னை தயார்படுத்திக்கொண்டால், அவர் செருக்குள்ள சுயநலவாதியாக மாற வாய்ப்புள்ளது என்பதை சுவாமி அறிந்து இருந்தார். அவர்கள் தங்களது விரிவாக்கத்தில் ஒரு மாற்றமில்லாத இடைநிலையை அடைந்து, தங்களை முன்கூட்டியே வெளிப்படுத்தி, தங்களது தவத்தை நிறுத்தி, மற்றவர்களை பாதையில் கொண்டு வருவதற்கு தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வார்கள். §

இந்த சுவாமிகளின் நோக்கங்கள் உன்னதமாக இருந்தாலும், அவர்களை சுற்றியிருக்கும் கும்பலால் எதிர்பாராத வேதனைகளுக்கு ஆளாகிறார்கள். இதனுடன் வரும் வழிபாடு மற்றும் பாராட்டு மழையை எதிர்கொள்ளவும், அவற்றை உள்ளுக்குள் இருக்கும் பரம்பொருளின் பலி பீடத்திற்கு சுமந்து செல்லவும் தேவைப்படும் பணிவும் பக்குவமும் அவர்களிடம் இருப்பதில்லை. அதற்கு பதிலாக, அவர்கள் ஆன்மீக செருக்கால் பாதிக்கப்பட்டு, அவர்கள் உருவாக்கும் ஒரு புதிய, லௌகீக ஆணவம், குறிக்கோள் பாதையில் அவர்களது சொந்த முன்னேற்றத்தை தடுப்பதோடு, மற்றவர்களுக்கு அவர்கள் வழிகாட்ட மேற்கொள்ளும் முயற்சியையும் பயனற்றதாக்குகிறது. §

இந்த காலக்கட்டத்தில் சுவாமி அந்த படுகுழியில் சிக்கிக் கொள்ளாமல், பூமியில் வாழும் ஒரு சற்குருவிற்கு உதவி செய்யும் அல்லது அவர்கள் வாயிலாக தனது பணிகளை செய்யும் சிவபெருமான் மற்றும் அந்தர்லோகத்தில் வாழும் தெய்வங்கள், தேவர்கள் மற்றும் குருக்களுக்கு, ஒரு மதிக்கத்தக்க பாதையாக சேவை செய்வதற்காக, தனது நிலைமாற்றத்தை நிறைவு செய்து தன்னை பரமாத்துமாவிற்குள் உறுதியாக நிலைநிறுத்திக்கொள்ள, தன்னை சுத்தப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு இருந்தார். அவர் மீண்டும் மீண்டும் முழுமுதற்பொருளான பரமாத்துமாவை உணர்ந்து, சமாதி நிலையில் வலுவாக அமர்ந்து இருந்தார். அவர் புனித தலங்களுக்கு செல்வது, ஆன்மீக சக்திகளுடன் தொடர்பு கொள்வது மற்றும் ஆன்மீக ஆணைகளுக்கு கட்டுப்பட்டு ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு யாத்திரை செல்வதில் தனது நேரத்தை கழித்தார். §

அவரை சுற்றி அதிகமான அன்பர்கள் சேர ஆரம்பித்த இந்த காலகட்டத்தைப் பற்றி இந்துமதி அம்மா எழுதியுள்ளார்: §



*இராஜயோகி யோக சுவாமியை அவரது குடிசையில் சந்தித்து, அந்த பரிச்சயமில்லாத நபரின் கால்களில் விழுந்து வணங்கி, அவரது சிறப்பை அங்கீகரித்து, உலகிற்கு அவரது மேன்மையைப் பற்றி தெரிவித்தார். சுவாமியை மேன்மை பொருந்திய பண்டிதர் தரையில் விழுந்தது வணங்கியதால், தங்களுக்கு மத்தியில் வாழும் ஒரு மிகப்பெரிய ஆன்மாவை பற்றி அந்த சமூகம் முழுவதும் தெரிந்துகொண்டது.*

• • • • • • • • • • • • • • • §

சிறிய காலத்தில் சிவயோகரின் போக்கில் ஒரு பெரிய மாற்றம் தெரிந்தது. விடியற்காலையில் குடிசையின் முற்றத்தில் கூட்டிப்பெருக்கும் ஓசை கேட்டது. அந்த குடிசையின் தரை மாட்டு சாணத்தால் பூசி மொழுகி சுத்தமாக இருந்தது. பாம்பு குடியிருக்கும் ஒரு பாழ்மனையின் அடையாளம் எதுவும் இல்லாமல் இருந்தது. குடிசையின் வடக்கில் இருந்த அறையில், திருவடிகள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. §

சிவயோகர் தெருவில் காணப்படும் போது, அவரது வெண்மையான நரைத்த முடி நேர்த்தியாக முடிக்கப்பட்டு இருந்தது. அவரது நெற்றியில் தாராளமாக பூசப்பட்ட திருநீறு, சூரிய ஒளியில் பிரகாசமாக ஒளிர்ந்தது. தோளில் போர்த்திய சால்வை, அழகான கோலத்தில் இருந்தது. அவர்

எல்லோருக்கும் பாதுகாவலன் என்பதை குறிப்பிடும் வண்ணம், அவரது கையில் ஒரு கூடை இருந்தது. §

அவர் அந்த காலத்தில் பிரபலமாக இருந்த சண்முகநாதன் புத்தகக்கடையில் அடிக்கடி தென்பட்டார். அங்கே அறிவுப்பசியுடன் வருபவர்கள், ஞானத்தின் சொரூபமாக வீற்றிருந்த சுவாமியால் ஈர்க்கப்பட்டனர். அந்த பக்குவமடைந்த ஆன்மாக்களை பார்த்து, “அறிவியல் மற்றும் கலைகளில் ஆழமாக செல்லாமல், உங்கள் மனதை திறந்து இதய புத்தகத்தை படியுங்கள்,” என்று கூறினார். சுவாமிக்கு பிடித்தமான மற்ற இடங்களில் வண்ணார்பண்ணையில் இருந்த விவேகானந்தர் அச்சகம் மற்றும் நாவலர் அச்சகம் மற்றும் புத்தகக் கடையும் அடங்கும்.§

சிவயோக சுவாமி சில சமயங்களில், உள்ளூர் மருத்துவர் கஸ்தூரி முத்துக்குமாரு வீட்டிற்கு சென்று வந்தார். அந்த ஆயுர்வேத மருத்துவர் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக சிகிச்சை அளித்தது மட்டுமல்லாமல், அவர்கள் தொலைதூரத்தில் இருந்து வந்திருந்தால் அவர்களுக்கு பயண செலவையும் வழங்கி அனுப்பி வைத்தார். அங்கே சென்றவர்கள் ஒரு பிரபலமான மருத்துவர் வழங்கிய மருந்துகளை மட்டும் பெறாமல், இரக்கத்தின் உருவமாக இருந்த சிவயோக சுவாமியின் அருளையும் பெறும் பாக்கியசாலிகளாக இருந்தார்கள். §

நாற்பது ஆண்டுகால ஆன்மீக மேன்மையின் ஆரம்ப காலத்தில், யோக சுவாமியின் புகழ் எவ்வாறு பரவியது என்பதைப் பற்றி திரு. வி. ராஜசேகரம் நினைவுக்கூர்கிறார்:§

சுமார் 1925 ஆண்டில், யாழ்ப்பாணத்தில் இருந்த பலர் யோக சுவாமியின் பெயரை அதிக பக்தி மற்றும் சிரத்தையுடன் உச்சரிக்க ஆரம்பித்தனர். “அவர் கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை அறிந்த முனிவர்" என்று மக்கள் அவரைப்பற்றி பேச ஆரம்பித்தனர். மலைகள் எதுவும் இல்லாத அந்த தீபகற்பத்தில், அவர் அருள் மற்றும் இரக்கத்தின் மலையாக பிரகாசித்தார். இந்த வார்த்தைகளை கேட்டதும், அவரை தரிசிக்க வேண்டும் என்ற எனது ஆசை அதிக வலுவடைந்தது. §

சுவாமியின் யோகசக்தியை பற்றி மக்கள் அறியத்தொடங்கியதும், மக்கள் அவரை ஒரு குறி சொல்பவர், சோதிடர் அல்லது கைரேகை சோதிடரைப் போல நினைத்துக்கொண்டு, “சுவாமி, நான் கொழும்பு செல்ல இருக்கிறேன். அங்குள்ள ஒரு பல்கலைகழகத்தில் எனக்கு ஒரு வேலை கிடைத்துள்ளது. எனது எதிர்காலம் எப்படி இருக்கும்? அந்த வேலை எனக்கு நல்ல பலன் தருவதாக இருக்குமா?” போன்ற கேள்விகளை கேட்டனர். தங்களிடம் இருந்து ஏதாவது அபகரிக்கப்படும் அல்லது ஏதாவது மோசமான அனுபவம் நடக்கக்கூடும் என்ற எண்ணத்தில் கேட்கப்படும் அத்தகைய கேள்விகள், வலுவான கண்டனத்துடன் நிராகரிக்கப்பட்டது. “உங்களது வாழ்நாளில் எப்போதும்


உங்களுக்கு தேவையானது கிடைக்காமல் இருந்ததில்லை. நமக்கு தேவையானது அனைத்தும் நமக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. நமக்கு தேவையானது நமக்கு கிடைத்துவிட்டது என்பதை நாம் அறியாததால் அவதிப்படுகிறோம்," என்று அவர்களது வெளிப்படையான தப்பெண்ணத்தை அவர் தொடர்ந்து குறிப்பிட்டு வந்தார். §

வாழ்கையில் வருத்தம் தரும் அல்லது மகிழ்ச்சியை தரும் அனுபவங்களை, ஆன்மீக பாதையில் நமது நிறைவான அடுத்த கட்டமாக ஏற்றுக்கொள்வதில் இருக்கும் முக்கியத்துவத்தை சுவாமி சுட்டிக்காட்டினார். அத்தகைய வலுவான கண்டனத்தை பெற்று இருந்த, சுவாமியின் கடிந்துரைகளை தாங்கிக்கொண்ட பலர், அதன் பிறகு தனது வாழ்நாளில் வேறு எதையும் நினைத்து பயப்படவில்லை என்பதை தெரியப்படுத்தினர். அவர்களுக்கு சுவாமி தீவிரமான அதிர்ச்சியை வழங்கி இருந்தார். அந்த அதிர்ச்சியை வெறும் விதியின் மாற்றத்தினால் என்றுமே வழங்கமுடியாது. அவருக்கு நெருக்கமான அன்பர்களில் ஒருவரான, சுன்னாகத்தை சேர்ந்த Dr. ச. ராமநாதன், ஒரு சம்பவத்தை விவரிக்கிறார்:§

> சுவாமி நட்சத்திர இயக்கங்கள் மற்றும் ராசிகளில் இருக்கும் அறிவியலை பற்றி விளக்குவார். அவர்களது மாணவர்களில் ஒருவரான, நீதிபதி அக்பர் என்பர், இந்த அறிவியலை மிகவும் நன்றாக அறிந்து இருந்ததாக அவர் குறிப்பிடுவார். அவரிடம் சோதிடம் பற்றி யாராவது விசாரித்தால், தான் ஒரு சோதிடர் இல்லை என்று அவர் குறிப்பிடுவார். நான் சுவாமியின் கைகளில் இருந்த ரேகைகளை ஆய்வு செய்தேன்; அவை தெள்ளந்தெளிவாக இருந்தன. நான் அவரிடம் அவரது கைரேகையை ஆய்வு செய்த கேட்டுக்கொண்ட போது, அவர் அதற்கு மறுப்பு தெரிவித்து "இங்கே நடக்கும் அனைத்தும் சிவபெருமானின் திருநடனம் என்று நம்பி, நாளைய கவலை இல்லாமல், நடக்கும் அனைத்திற்கும் சாட்சியாக மட்டும் இருக்கும் ஒருவனுக்கு, எதிர்காலம் பற்றி கணிக்கும் சோதிடம் அல்லது அறிவியலின் தேவை எதற்கு?" என்று கேட்டார். §

தத்துவத்தில் நிலைகொண்டு, பக்தியுடன் இருக்கும் நேர்மையான அன்பர்கள் தன்னை நாடி வந்த போது, அவர் அவர்களது வாழ்வில் ஒரு முக்கிய பங்கை ஏற்றுக்கொண்டார். அவர் அவர்களுடைய இருப்பிடத்திற்கு சென்று, அவர்களுக்கு தொல்லைகளையும் வழங்கினார். ஒரு முறை ஒரு அன்பரின் வீட்டிற்கு விடியற்காலையில் சென்று, வீட்டிற்குள் நுழைந்து, அவர் படுக்கையில் இருந்து எழுந்திருக்கும் வரை அருகில் அமர்ந்து இருந்தார். அந்த அன்பர் கண்களை திறந்ததும், யோக சுவாமி அவரிடம், "நீ கனவுகளில் இங்கே சென்று இருந்தாய்? நீ எங்கே சென்றாய் என்பது எனக்கு தெரியும், ஆனால் நீ அங்கே செல்லக்கூடாது. இனிமேல் நீ என்னை மட்டும் நாடி வரவேண்டும்," என்று கட்டளையிட ஆரம்பித்தார். அந்த அன்பர் விழித்திருக்கும் நேரத்தில் புனிதமாக இருப்பதைப் போல கனவிலும் இருக்கவேண்டும என்பதை சுவாமி குறிப்பிட்டார். அதன் பிறகு சுவாமி அந்த அன்பர் பூஜை செய்வதை கவனித்து,

அந்த பூஜையில்  கவனக்குறைவாக அல்லது பக்தி இல்லாமல் இருந்த செயலை நேரடியாக திருத்தம் செய்தார். இந்த பூஜையின் மூலம் தெய்வங்களை வணங்கிய பிறகே, தன்னை ஒரு குருவாக வணங்க அனுமதித்தார். §



யோக சுவாமி தனது குடிசையில் இருந்த ஒரு சிறிய பூஜை மாடத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது குருவின் பாதுகைகளில் தஞ்சம் புகுந்து இருக்க,

*தினமும் அவரது திருவடிகளை சீடர்கள் வணங்கி வந்தனர். அவர் தியானத்தில் இருந்த போது, சிலசமயம் சிவலோகத்தில் நடனமாடும் அம்மனின் வெள்ளி சலங்கை ஒளியை தனது காதால் கேட்டார்.*

• • • • • • • • • • • • • • • §

செல்லப்பசுவாமி தனக்கு செய்ததை போல, சுவாமி தனது சீடனுக்கு தனிப்பட்ட மற்றும் வாழ்க்கையை திசை திருப்பும் பாடங்களை புகட்டுவதற்காக, அவர் அந்த சீடன் மீது பல நாட்களுக்கு கவனம் செலுத்துவதை தனது வழக்கமாக கொண்டிருந்தார். “நீ உனது உடல் இல்லை. நீ உனது மனம் இல்லை. நீ உனது உணர்ச்சிகள் இல்லை. நீ தான் ஆன்மா. நீ அதுவாக மட்டும் இரு. நீ அதுவாக இருந்து ஒரு சாட்சியாக இரு!” என்று நாள் முழுவதும் அடிக்கடி, சுவாமி தனது சீடனை சாட்சியாக இருக்கும் படி நினைவுறுத்துவார். அத்தகைய ஒரு பற்றில்லாத வாழ்க்கையை சீடர்கள் வாழ்வதற்கு எடுத்துக்காட்டாக, ஒரு புளியம் பழத்தை போல இருக்கவேண்டும் என்று அவர் வற்புறுத்துவார். இந்த பழம் பக்குவமடைந்ததும், உலர்ந்து சுருங்கி, அது வளர்ந்த வித்தைப்பையில் இருந்து தன்னை விலக்கிக்கொள்கிறது. அது பழுத்ததும், அது விதைப்பையில் இருந்து முழுமையாக விலகி, விதைப்பை மரத்துடன் சேர்ந்து இருக்கும் இடத்தில் மட்டும் அதை தொட்டுக்கொண்டு இருக்கிறது. §

பண்டிதர் கே. நவரத்தினத்தின் மீது யோக சுவாமிக்கு ஒரு விசேடமான அன்பு இருந்தது. ஆர்வம் மிகவும் குறைவாக இருந்த மாணவர்கள் எச்சரிக்கையாக இருந்து தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ள மற்றும் விபரமறிந்த, வளமான வாழ்க்கையை வாழ, இந்த பள்ளி ஆசிரியர் தேவையான உத்வேகத்தை வழங்கினார். சுவாமி இந்த ஆசிரியரின வீட்டிற்க்கு வழக்கமாக காலையில் வந்து விடுவார். அவர்கள் அமைதியாக சிறிது நேரம் அமர்ந்து இருந்து, பள்ளி திறப்பதற்கு முன்பாக நீண்ட தூரம் நடந்து வருவார்கள். ஒரு சில சமயம் ஆசிரியருக்கு பள்ளியில் விடுப்பு நேரம் இருந்தால், அந்த பள்ளியின் விளையாட்டு திடலில் சுவாமி அவர் வரும்வரை காத்து இருப்பார். அவர் அங்கே அமர்ந்து இருந்த போது, மக்கள் அவரை சூழ்ந்துகொண்டு பக்தி பாடல்களை பாடுவார்கள். இந்த பாடல்கள் காற்று வழியே வகுப்பறைகள் வரை செல்லும். சிலசமயம் இருவரும் சீடர்களுடன் முத்தவல்லியில் அமர்ந்து, சுவாமி விவேகானந்தர் மற்றும் ஸ்ரீ அரவிந்தரின் புத்தகங்களை வாசிப்பார்கள். §

நவரத்தினத்திடம் இருந்த கல்விமானின் திறமைகளை ஊக்குவிக்கும் வண்ணம், அவர் வாசிக்க சுவாமி புத்தகங்களை கொண்டு வந்து தருவார். ஒருநாள் சுவாமி அவரிடம், இந்து சமயத்திற்கு வரும் மேற்கத்திய நாட்டு அன்பர்கள் படிப்பதற்காக, அவரே இந்து சமயம் பற்றி ஒரு புத்தகத்தை எழுதவேண்டும் என்று கூறினார். அதனால் பண்டிதர் தனது வாழ்நாளில் இந்து சமயத்தின் பல அற்புத அம்சங்களை பற்றி சிறப்பான புத்தகங்களை எழுதினார், அதில் குறிப்பிடும் படியாக *ஸ்டடீஸ் இன் இந்துயிசம்* அமைந்து இருந்தது. சுவாமி தனது பெயரை குறிப்பிடுவதற்கு தடை விதித்தார், அதனால்

அந்த புத்தகங்கள் பல மகான்கள்  மற்றும் முனிவர்களை குறிப்பிட்டு இருந்தாலும், யோக சுவாமியை குறிப்பிடவில்லை. §

பண்டிதர் யாழ்ப்பாணத்தில் இருந்த பெரும்பாலான பள்ளிகளின் முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒரு பிரபல வழிகாட்டியாக இருந்தார். அவர் இந்து சமூகத்தில் அதிக மதிப்பை பெற்றதால், அவருக்கு கலைப்புலவர் என்ற பட்டம் வழங்கப்பட்டது. தமிழ் இலக்கியம் மற்றும் இந்து தத்துவங்கள் தொடர்பான செய்யுள்கள் மற்றும் பாடல்களில் தேர்ச்சி பெற்றவர் என்பது அதன் பொருள். 1927 ஆம் ஆண்டு மகாசிவராத்திரி இரவன்று, அவரும் யோக சுவாமியும் ஒன்றாக அமர்ந்து மாலை 6 மணி முதல் அதிகாலை 5 மணி வரை தியானம் செய்தனர். §

Page 27: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/27_yo03_06.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் பதிமூன்று

# செல்லாச்சி அம்மையார்

யோக சுவாமி வாழ்ந்த காலத்தில் செல்லாச்சி அம்மையார் என்ற ஒரு பெண் துறவி இருந்தார். அவரது வீடே ஆசிரமமாக மாறி இருந்தது. சுவாமி விவேகானந்தர் இந்த பூமியில் அவதரித்த வருடமான 1863 ஆம் ஆண்டில், அவரும் பிறந்தார். சிறு வயது முதல் பக்தியுடன் இருந்த அம்மையார், அவரது பெற்றோர்கள் கோயிலுக்கு அழைத்து செல்லும் போதெல்லாம் அங்கே வழிபாடு நடத்தி, புராண கதைகள் மற்றும் தமிழ் துறவிகளின் பாடல்களை கற்றுக்கொண்டார். அவர் யாழ்ப்பாண நகரத்திற்கு வெளியே, சுமார் பன்னிரண்டு கிலோமீட்டர் தொலைவில் இருந்த, விவசாயம் மற்றும் வணிகத்தை அடிப்படையாக கொண்ட சுன்னாகம் என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்தார். §


செல்லாச்சி தனது திருமண வாழ்க்கையில், தனது கணவனுக்கு ஒரு நல்ல இல்லத்தை அமைத்து, தங்களது இரு குழந்தைகளுக்கும் ஒரு அருமையான சமய பயிற்சியையும் வழங்கினார். அவர்களது குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆனதும், அவரது கணவருக்கு வெளியூரில் ஒரு வேலை கிடைத்தது. அவர் தனது மனைவியும் தன்னுடன் வருவார் என்று நம்பி இருந்தார், ஆனால் வீட்டை விட்டு செல்ல செல்லாச்சி மறுத்து விட்டார். அந்த காலத்தில் பயணம் மேற்கொள்வது இந்து சமய பெண்களின் வழக்கமாக இல்லாததால், அவர் அதை ஏற்றுக்கொண்டார். செல்லாச்சி தனது வீட்டிலேயே இருந்தார், மற்றும் கணவருக்கு விடுப்பு கிடைக்கும் போதெல்லாம் வீட்டிற்கு வந்தார். §

தனது கணவர் புதிய வேலைக்கு சென்றதும், செல்லாச்சி தன்னை முழுமையாக கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்திக் கொண்டார். அவருக்கு தனது லௌகீக பொறுப்புக்கள் அனைத்தும் நிறைவுபெற்றதாக தோன்றியது. அவரால் தனது கணவரை கவனிக்க முடியவில்லை, மற்றும் அவரது குழந்தைகள் பெரியவர்களாகி தனியாக வாழ்ந்து வந்தார்கள். அவரது

வளர்ப்பு முறையில் வழக்கமாக இருந்ததைப் போல, தங்களது கடைசி குழந்தை பிறந்ததும், அவரும் அவரது கணவரும் மனத்துறவுடன் வாழ்ந்தனர். அதனால் அவர் இயல்பாக தனது ஆன்மீக வாழ்க்கையை வலுப்படுத்திக் கொண்டார். அவர் கோயிலுக்கு அதிகம் செல்ல ஆரம்பித்தார். §

சிறிது காலத்திற்கு பிறகு, அவர் தனது வீட்டிலேயே ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட ஆரம்பித்தார். மேலும் அவர் தனது வீட்டை விட்டு மீண்டும் வெளியே செல்லவில்லை என்று கூறப்படுகிறது. அவரது கணவர் ஒரு முறை வீட்டிற்கு வந்த போது, அம்மையார் ஆன்மீக வேட்கையில் முழுமையாக ஈடுபட்டு இருப்பதை அவர் கவனித்தார். அவர் இந்த ஈடுபாட்டை மதித்தார், மற்றும் அதன் பிறகு அவரிடம் இருந்து திருமண பொறுப்புகள் எதையும் எதிர்பார்க்கவில்லை. அவர் சிறிது காலம் கழித்து பணியில் இருந்து ஓய்வு பெற்றார் மற்றும் அதன் பிறகு மரணமும் அடைந்தார். மரண அனுபவத்திற்கு தனது கணவரை தயார்படுத்த வேண்டும் என்று தனது உட்புற குரல் கூறியதாக சொல்லி, அம்மையார் தன் கணவரின் மரண தேதியை ஏழு வருடங்களுக்கு முன்பே கணித்து, தனது கணவரை அந்த அனுபவத்திற்கு தயார்படுத்தவும் செய்தார். §

இந்து சமயத்தை சேர்ந்த விதவை குறைந்தது ஒரு வருடத்திற்கு சமூக வாழ்கையில் இருந்து விலகி, துக்கம் அனுசரித்து விசேட சாதனாக்கள் செய்ய வேண்டும். அவர்கள் கணவன் இறந்த தினத்தில் இருந்து வெள்ளை நிற ஆடை உடுத்தி ஒழுக்கத்துடன், தன்னை அலங்கரிக்காமல், மனத்துறவுடன் சமூகத்தில் இருந்து விலகி வாழ்ந்து வருவார்கள். அவர்கள் சிறிது காலத்திற்கு தங்களுக்கென்று சமைத்துக்கொள்ளவும் கூடாது. ஈமச்சடங்கு நடந்த தினத்தன்று, மரபிற்கு எதிராக, தான் இனி கடவுளுக்கு சொந்தம் என்றும், தான் தனது கணவனுக்கு செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் செய்து முடித்து விட்டதாகவும் அறிவித்து, தனது உணவை தானே சமைத்துக் கொண்டார். §



*20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், யாழ்ப்பாணத்தில் இருந்த ஆன்மீக சோதிகளில், செல்லாச்சி அம்மையாரும் ஒருவர். அவர் ஒரு சூட்சும*

*ஞானியாகவும் ஆன்மீக ஆசிரியராகவும் இருந்தார். அவர் யோக சுவாமியை காட்டிலும் ஒன்பது வயது மூத்தவர். அம்மையார் தனது இறுதி காலத்தில், அதிக வலுவிழந்து இருந்ததால், சுவாமி சமைத்த உணவு மட்டுமே அவரால் சாப்பிட முடிந்தது. சுவாமி தினமும் உணவை சமைத்து, பதினாறு கிலோமீட்டர் தூரத்தில் இருந்த அம்மையாரின் ஆசிரமத்திற்கு எடுத்து செல்வார். சிலசமயம் அம்மையார் சோர்வாக இருந்தால், அவரே அம்மையாருக்கு உணவை ஊட்டியும் விடுவார்.*

……………………§

அன்றில் இருந்து, அவரது வாழ்க்கை முழுமையான ஆன்மீக வாழ்க்கையாக மாறியது. அவர் வாழ்ந்த கிராமத்து கோயிலில், பூஜை நேரத்தில் மணி அடிக்கும் ஒவ்வொரு முறையும் தியானத்தில் அமர்ந்து இருந்து, சிவபெருமானின் சுயநினைவின் ஆழத்திற்கு அவரை அழைத்து செல்லும் சக்தியில் பேரானந்தத்தில் இருக்கும், ஒரு கடுமையான பயிற்சியை அம்மையார் பல வருடங்களுக்கு பின்பற்றினார். இவ்வாறு செய்வதை நிறுத்தி, சில விநாயகரின் பாடல்களை பாடவேண்டும் என்று அவரது மனசாட்சி ஒரு நாள் கூறியது. இந்த பாடல்களை பல மாதங்களுக்கு பாடிய பிறகு, பரம்பொருளை குறிப்பிடும் விதமாக ஒரு லிங்கத்தை வைத்து, சிவபெருமானுக்கு தினமும் பூஜை செய்யவேண்டும் என்ற உத்தரவு வந்தது. அவரது பூஜை அறையில் ஒரு லிங்கம் இல்லாததாலும், எதையும் தேடி தனது வீட்டு வாசலை தாண்டியது இல்லை என்பதாலும், அவருக்கு கவலை ஏற்பட்டது. ஆனால் அன்று மாலை அவர் தனது தோட்டத்தில் நடந்துகொண்டு இருந்த போது, ஒரு புதரில் லிங்கம் போன்ற வடிவில் ஒரு கல்லை கண்டார். அவர் அதை சுத்தம் செய்து, அதற்கு தினமும் செய்யும் பூஜையை செய்தார். §

அவரது உடல் தன்னைத்தானே சுத்தப்படுத்திக் கொள்ளும் என்றும், அவர் இனி குளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், அவரது உள்ளத்தில் இருந்து இறுதியாக இன்னொரு தகவல் வந்தது. அவர் இது வரை தனது வாழ்நாளில் செய்து வந்ததை போல, கிணற்றுக்கு சென்று தலைக்கு தண்ணீர் ஊற்றிக்கொள்ள வேண்டாம் என்று அந்த தகவல் குறிப்பிட்டது. அவர் அதற்கு கீழ்படிந்தார். அவர் மீண்டும் குளிக்கவில்லை. அன்றில் இருந்து அவரது நரைத்த முடிக்கு சீப்பை பயன்படுத்தாததால், அது நீளமாக வளர்ந்து சிக்கல்கள் நிறைந்து இருந்தது. அவரை காண  வந்தவர்கள் மனதில், அவரது தலையில் இருந்த சடைமுடி நீங்காது இடம்பெற்று இருக்கிறது. மற்றபடி, அவர் முழுமையான சுத்தத்துடன், ஒரு அற்புதமான, பிரகாசமான தோற்றத்தை கொண்டிருந்தார். §

ஒரு நாள் அவரது அகத்தில் இருந்து, அவர் செய்யும் பூஜையை நிறுத்தி, பரமாத்துமாவாக சிவபெருமானை நினைத்து தியானம் செய்யும் சிவதியானத்தை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தல்கள் வந்தன. இந்த காலகட்டத்தில் அவர் செய்த சிவபூஜை, அவருக்குள் பேரானந்தத்தை நிரப்பி இருந்தது, மற்றும் சிவலிங்கத்தை இன்னொரு முறை வழிபடலாம் என்று அவருக்கு தோன்றியது. பூஜை தொடங்கியது, செல்லாச்சியால் தொடர

முடியவில்லை. அவர் அபிஷேகம் செய்த தீர்த்தம் லிங்கத்தை தொட்டதும், அவர் அதில் இருந்து ஆறு மீட்டர் தூரம் தூக்கி எரியப்பட்டதாக, அதை கண்களால் பார்த்த சீடர்கள் பின்னர் தெரிவித்தார்கள். §

அந்த அனுபவத்திற்கு பிறகு, செல்லாச்சி அம்மையார் தனது அகத்தில் இருந்து வரும் ஆணைகளை, புதுப்பிக்கப்பட்ட சிரத்தையுடன் பின்பற்றி வந்தார். ஒரு சமயத்தில், தெய்வத்துடன் நடைபெறும் முதல் சந்திப்பான, கடவுளை உணர்தல் என்ற அதிக ஆழமான சமாதிக்குள் செல்ல, அவர் தயாராக இருக்கவேண்டும் என்று உத்தரவுகள் வந்தன. அவர் பூஜை அறையில் தியான நிலையில் நீண்டநேரம் உட்கார்ந்து இருப்பார் என்றும், அவரை யாரும் எக்காரணத்திற்கும் தொந்தரவு செய்யக்கூடாது என்றும் குடும்பத்தினர்கள் அனைவருக்கும் அறிவுறுத்தல்கள் வந்தன. இதனை அவர் ஒவ்வொருவருக்கும் கவனமாக விளக்கினார். அதன் பிறகு செல்லாச்சி பூஜை அறைக்குள் நுழைந்து, பல நாட்களுக்கு தனது சுவாசத்தை கட்டுப்படுத்திக்கொண்டு, முழுமையான அமைதியில் அமர்ந்து இருந்தார். அவர் சில சமயங்களில் மிகவும் மெதுவாக மற்றும் அமைதியாக சவாசிப்பார்; சில நேரங்களில் சுவாசிப்பது முழுமையாக நின்றுவிடும். அவர் அந்த ஆழமான நிலையில் பல நாட்களுக்கு அமர்ந்து இருந்தார். §

செல்லாச்சி தொடர்ந்து மூன்று நாட்களுக்கு சுவாசிக்காமல் இருப்பதை கவனித்த, அவரது உறவுக்கார பெண்ணுக்கு செல்லாச்சி இறந்துவிட்டதாக தோன்றியது. அந்த உடல் ஒரு வேளை இறந்து இருந்தால், அதனை ஆவி உருவம் ஆட்கொள்ளாமல் இருக்க வேண்டுமே என்ற கவலையில் இருந்த அந்த பெண், உயிரின் அறிகுறி ஏதாவது தெரிகிறதா என்று நீண்டநேரம் கவனித்துக்கொண்டு இருந்தாள். அவள் இறுதியில் செல்லாச்சி அம்மையாரை கவனமாக நெருங்கி, அவரது வாயை திறந்து, நாக்கில் மரணத்தின் ஏதாவது அறிகுறி தெரிகிறதா என்று பார்க்க, அதனை வெளியே இழுத்தாள். அது ஒரு மிகப்பெரிய தவறாகவும், சிவபெருமானின் சுயநினைவில் மூழ்கி இருந்த துறவிக்கு, அது ஒரு திடுக்கிடும் தலையீடாகவும் இருந்தது. எந்த ஒரு எச்சரிக்கையும் இல்லாமல், அவரது சமாதிநிலை சீர்குலைந்தது மற்றும் சாட்சி தூல உடல் உணர்வுக்குள் திரும்பியது. அவரது நரம்பியல் அமைப்பு இந்த பயங்கரமான அதிர்ச்சியில் பல நாட்களுக்கு தடுமாறியது. §

அந்த அபூர்வமான ஆழ்நிலையை சீண்டியதால் ஏற்பட்ட ஒரு தீவிர விளைவு, அவரது வாழ்நாள் முழுவதும் நீடித்து இருந்தது. அவர் வெளிச்சத்தின் மீது கூர் உணர்வுடன் இருந்ததால், நேரடியாக நிலவு வெளிச்சத்திற்கு முன்பாக நிற்பதும் அவருக்கு கடினமாக இருந்தது. இருண்ட தாழ்வாரம் அவருக்கு பிடித்த இடமாக மாறியது. சுத்தமான மனதுடன் இல்லாமல், சுயநல எண்ணத்துடன் யாராவது அவரை அணுகினால், அவருக்கு வலி ஏற்படும் அளவிற்கு அவரது உடலின் வெப்பம் அதிகரிக்கும். நெருக்கமான சீடர்கள் அவருக்கு அருகில் யாரை அனுப்புகிறோம் என்பதில் மிகவும் கவனமாக இருந்தார்கள்.§

நல்ல நோக்கத்துடன் செயல்பட்ட உறவுக்கார பெண்ணை, செல்லாச்சி தானும் குற்றம் சுமத்தவில்லை, மற்றவர்கள் குற்றம் சுமத்துவதையும் அனுமதிக்கவில்லை. அவர் தனது நிலையை, பூமியில் தனது சமயப்பணியின் அங்கமாக தெய்வங்கள் ஏற்பாடு செய்ததாக கருதினார். §

**ஒரு ஆன்மீக பாலைவனச்சோலை**

ஆசிரமம் போன்ற அவரது வீடு அமைதி மற்றும் உறுதிநிலையை வெளிப்படுத்தியது. அந்த இடத்திற்கு யோக சுவாமி 1914 ஆம் ஆண்டில் இருந்து அடிக்கடி வந்துக்கொண்டு இருந்தார். செல்லாச்சி  சுவாமியை காட்டிலும் ஒன்பது வயது மூத்தவராக இருந்தார், மற்றும் சுவாமி அம்மையாரை தனது ஆன்மீக வழிகாட்டியாக கருதினார். செல்லாச்சி சுவாமியை தம்பி என்று அழைத்தார். தனது சமாதிநிலை தடைப்பட்டதால் தோன்றிய அதிர்ச்சி அனுபவம் காரணமாக, யோக சுவாமி தோற்றமளித்து தன்னை ஆன்மீக ஆழத்திற்கு அழைத்து சென்றார் என்றும், அவரது அருள் இல்லாமல் தன்னால் அந்த ஆழத்தை அடைந்திருக்க முடியாது என்றும், அவர் தனது ஒரு சீடரிடம்  ஒருமுறை கூறினார். §

ஒருவர் இன்னொருவரின் ஆன்மீக பணியில் எவ்வாறு  தாக்கம் ஏற்படுத்தினார்கள் என்று யாருக்கும் தெரியாது, ஆனால் அவர்களுக்குள் இருந்த பரஸ்பர மரியாதை மற்றும் பயபக்தியை யாராலும் மறுக்க முடியாது. மாதத்திற்கு ஒருமுறை, ஒரு வரிசைமுறையின்றி நடந்த இயல்பான தியான மற்றும் சத்சங்க கூட்டங்களில், யோக சுவாமி மற்றும் சில நெருக்கமான சீடர்களான கலைப்புலவர் க. நவரத்தினம், சார் வைத்தியலிங்கம் துரைசாமி, மற்றும் Dr. ச. இராமநாதன் கலந்து கொண்டனர். §

சமூகத்தில் செல்லாச்சி பிரபலம் அடைந்ததற்கு, பெண் விடுதலைக்கு ஆதரவாக அவர் வழங்கிய புரட்சிகரமான கருத்தை ஒரு காரணமாக குறிப்பிட்டாலும், அவர் இந்து சமயத்தில் சூட்சும பயிற்சிகளை பின்பற்றியதே மிகவும் முக்கியமான காரணமாகும். அந்த காலகட்டத்தில், ஆன்மீகம் பிரத்யேகமாக ஆண்களுக்கு என்று கருதப்பட்டாலும், அவருக்கு அந்த தடையேதும் தெரியவில்லை மற்றும் அவர் அந்த காலத்தின் குருக்களில் ஒருவராக மதிக்கப்பட்டார். §

மெதுவாக மக்கள் செல்லாச்சி அம்மையாரிடம் அறிவுரை பெறுவதற்கு, அமைதிக்கு மற்றும் அவரது தரிசனத்தில் மூழ்கி இருக்க வந்தனர். அப்படி வருகை தந்தவர்கள், அங்கே வரும் முன்பாக தங்களை ஆன்மீக ரீதியாக தயார்படுத்திக் கொள்வதில் மிகவும் கவனமாக இருந்தார்கள். அவர்கள் அம்மையாரின் குடிசையை அடைந்ததும், அவரது அதிர்வுடன் இணக்கம் ஏற்படும் வரை வெளியில் அமர்ந்து இருப்பார்கள். இல்லையென்றால் வருகை தருபவர்களிடம் மீதம் இருக்கும் லௌகீகதன்மையால் அம்மையார் பாதிக்கப்படுவார். §

அனைவரும் அவர் வெளியிட்ட ஆறுதலான, தாயின் சக்தி நிறைந்த புனிதத்தன்மையை குறிப்பிட்டார்கள். விசித்திரமாக, அவரை சுற்றி இருந்த

பகுதி குளுமையாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் அதிக வெப்பம் நிலவிய பகல்களிலும், வெதுவெதுப்பான இரவுகளிலும், அவரது ஆசிரமம் வசதியாக இருந்தது. அவர் பெரும்பாலும் விநாயகரின் துதிப்பாடல்களை பாடிக்கொண்டு இருப்பார். அவர் பாடிய போது அமைதி நிலவி; உலகம் மறைந்து, பழங்கால தமிழ் பாடல்களை இராகத்துடன் பாடும் மென்மையான குரல் மட்டுமே நிலைத்து இருந்தது.§

செல்லாச்சி ஆழ்ந்த உள்முக சிந்தனையால் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில், இயல்பாக குறிப்பிட்ட சில ஸித்திகள் உருவாக்கிக்கொண்டார். ஒரு நாள் அங்கே வருகை தந்த ஒரு வியாபாரி, தனது வாகன ஓட்டியை வாகனத்தில் இருக்கச் சொல்லி, ஆசிரமத்திற்குள் நுழைந்தார். அவர் அங்கே முதல் முறையாக வந்து இருந்தார், மற்றும் அந்த வியாபாரி செல்லாச்சிக்கு அருகில் அமர்ந்து, அவரது சக்திகளை உண்மையில் சோதித்துக்கொண்டு இருந்தார். அவர் அதிக பதட்டத்துடன் ஏதோ ஒரு எண்ணத்தில் மூழ்கி இருந்தார், மற்றும் அவர் எதற்காக வந்தாரோ அதை பெற்றுவிட்டார் என்று செல்லாச்சி திருப்தி அடையும் முன்பாக கிளம்பிவிட்டார். அவர் தனது வாகனத்திற்கு திரும்பி, கிளம்புமாறு வாகன ஓட்டியிடம் உத்தரவிட்டார். ஆனால் வாகனத்தின் விசைப்பொறி சரியாக வேலை செய்யவில்லை. வாகன ஓட்டி தொடர்ந்து முயற்சி செய்துக்கொண்டு இருக்க, வியாபாரிக்கு எரிச்சலும் கோபமும் வந்தது. ஏனென்றால் அந்த வாகனம் புதியது என்பதால் அது நல்ல செயல்பாட்டு நிலையில் இருந்திருக்க வேண்டும். இறுதியாக அவர் தனது வாகன ஓட்டியிடம், “வாகனம் பழுது பார்ப்பவரை எங்கிருந்தாவது தேடிப்பிடித்து வா,” என்று திட்டி அனுப்பி, தாழ்வாரத்திற்கு மீண்டும் திரும்பி துறவிக்கு அருகில் அமர்ந்து கொண்டார். §

இனி அவர் செல்வதற்கு வேறு இடம் இல்லாததாலும், செய்வதற்கும் ஒன்றும் இல்லை என்பதாலும், அவர் காதால் கேட்டிருந்த புனிதமான அமைதி, அவரது உயிர்சக்திக்குள் நிரம்பி, ஒரு மென்மையான அலையை போல அவரை திடீரென்று வலுவாக தாக்கியது. நீண்டநேரம் கழித்து, “நீங்கள் இனி போகலாம்,” என்று அவருக்கு செல்லாச்சியின் இனிமையான குரல் கேட்டது. அவர் புத்துணர்வு மற்றும் உற்சாகத்துடன் எழுந்து நின்று, கைகளை *அஞ்சலி முத்திரையில்* வைத்துக்கொண்டு, செல்லாச்சியை வணங்கினார். அவர் தாழ்வார படிக்கட்டில் இருந்து இறங்கினார். அப்போது வெளியே சென்ற வாகன ஓட்டி திரும்பாததால், அவர் வாகன ஓட்டியின் இருக்கையில் அமர்ந்து, விசையை திருப்பினார். முதல் முயற்சியிலேயே வெற்றி கிடைத்து இயந்திரம் இயங்கத்தொடங்கியது. §

பலர் தங்களுக்கு இருந்த வேதனைகள் குணமடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் செல்லாச்சியை நாடி வந்தனர். தன்னை நாடி வந்த அத்தகைய நபர்களுக்கு, செல்லாச்சி ஒரு பிரத்யேகமான வழக்கத்தை பயன்படுத்தினார். அவர் அந்த நபருக்கு இருந்த வேதனையை உணர்வது போல், சிறிது நேரம் அமைதியாக கவனித்துக்கொண்டு இருப்பார், பின்பு அந்த நபரிடம் “அந்த கிணற்றிற்கு சென்று, அதன் நீரை சிறிது அருந்துங்கள்”

அல்லது “கிணற்றிற்கு சென்று, அதன் சுத்தமான நீரில் குளிக்கவும்,” என்று அறிவுறுத்துவார். அவர் வழங்கும் பரிந்துரைகள் பெரும்பாலும், வாழ்முறை மாற்றம் அல்லது பத்திய உணவு சார்ந்ததாக இருக்கும். மிகவும் தீவிரமாக இருந்த சில வியாதிகள், சில வாரங்களில் குணமடைந்து விடும். அவரது வீட்டிற்கு வெளியே எட்டு அடி விட்ட வடிவில் கற்களால் சுற்றுச்சுவருடன் இருந்த பழங்கால ஆழ்துளை கிணறுகளில், ஒரு எளிமையான தென்னை மரக்கட்டை பிடித்திருந்த ஒரு மர வாளியின் மூலம், பூமியில் இருந்து மூன்று மீட்டர் அல்லது அதற்கு அதிகமான ஆழத்தில் இருந்து தண்ணீர் இறைக்கப்படும். §

ஒரு சமயத்தில் கிராமத்து சிறுவனுக்கு தீவிர காய்ச்சல் இருந்தது. சிறுவனின் காய்ச்சலை குணப்படுத்துவதில் நம்பிக்கை இழந்த மருத்துவர்கள், “இந்த சிறுவன் இன்னும் ஒரு நாள் பிழைத்து இருப்பதே அதிசயம் தான்,” என்று அவனது தாயிடம் உண்மை நிலையை தெரிவித்தனர். அப்போது வேதனையில் இருந்த அந்த தாயின் அகக்காட்சியில் செல்லாச்சி அம்மையாரின் முகம் தோன்றியது. துறவியிடம் செல்வதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை என்பதை அந்த தாய் புரிந்துக்கொண்டு, ஆசிரமத்திற்கு தனது குழந்தையை அழைத்து செல்லவேண்டும் என்று தனது குடும்பத்தாரை விரைவுபடுத்தினாள். “எனது ஆசிரம கிணற்றில் இருந்து மூன்று வாளிகள் தண்ணீரை சிறுவன் மீது ஊற்றி, அவனை வீட்டிற்கு அழைத்து செல்லுங்கள்,” என்று செல்லாச்சி பரிந்துரைத்தார்.§

அந்த பரிந்துரை மிகவும் சாதாரணமாக தோன்றியதால், குடும்பத்தினர் முதலில் தயங்கினாலும், பின்னர் செல்லாச்சி சொன்னதை போல, மூன்று வாளிகள் தண்ணீரால் தங்கள் சிறுவனை முழுமையாக குளிக்க வைத்தனர். தீவிர காய்ச்சலால் வாடிய அந்த சிறுவன், மேலங்கி இல்லாமல் தனது நனைந்த சரோங்குடன், மாலை பொழுதில் வீசிய குளிர்ந்த காற்றில் நடுக்கத்துடன் நின்று இருந்தான். உடனே குடும்பத்தினர் அவன் உடலில் இருந்த ஈரத்தை துடைத்து, ஒரு மாட்டு வண்டியில் ஏற்றி, அவன் இரவு நன்றாக உறங்குவான் என்ற நம்பிக்கையுடன வீட்டிற்கு அழைத்து சென்றனர். அடுத்த நாள் காலை, குடும்பத்தினர் வியக்கும் வண்ணம், காய்ச்சல் தணிந்து இருந்தது, மற்றும் அந்த சிறுவன் சோர்வாக தனக்கு காலை சிற்றுண்டி வேண்டும் என்று கேட்டான்! அவன் சில நாட்களில் தனது இயல்பு நிலைக்கு திரும்பி, தனது நண்பர்களுடன் ஓடி விளையாட தொடங்கிவிட்டான். §

யோக சுவாமி இந்த அருமையான பெண் துறவியை, இன்னல்களில் இருந்து எவ்வாறு கப்பாற்றினார் என்பதை இன்னொரு சம்பவம் தெரிவிக்கிறது. ஒரு நாள் அவர் தாழ்வாரத்தில் செல்லாச்சி அம்மையாருடன் இருந்த போது, செல்லாச்சியை சந்திக்க ஒரு குழு வந்தது. அவர்கள் ஒரு தொடங்கியிருந்த ஆசிரமத்தில் சாதனா செய்ய விரும்பினார்கள், ஆனால் அவர்களுக்கு வழிகாட்ட ஒரு சுவாமி இல்லை. செல்லாச்சி அங்கே வந்து, தங்களுக்கு ஒரு ஆன்மீக குருவாக இருந்து வழிநடத்துவார் என்ற நம்பிக்கையில் அவர்கள் வந்து இருந்தனர். நலிவுற்ற நிலையில் இருந்த செல்லாச்சிக்கு இது

பொருத்தமாக இருக்காது என்பதை அறிந்த சுவாமி, திடீரென்று ஒரு பெட்டி நிறைய தீக்குச்சிகளை எரித்துவிட்டார். ஆனால் வெளிச்சம் செல்லாச்சிக்கு முற்றிலும் ஆகாது என்பதால், செல்லாச்சி உடனே நினைவு இழந்த நிலைக்கு சென்று, அந்த நிலையில் சில மணிநேரங்கள் நிலைத்து இருந்தார். அந்த குழுவினர் நீண்டநேரம் காத்து இருந்து, ஏமாற்றத்துடன் கிளம்பினர். அவர்கள் சென்றதும் செல்லாச்சி நினைவு இழந்த நிலையில் இருந்து வெளிவந்தார். §

செல்லாச்சியின் நோய் முற்றிய நிலையை அடைவதற்கு முன்பாக, அவரை பலர் சந்திக்க வந்தனர். சிலர் தங்களுக்கு உதவி தேவைப்படும் போது மட்டும் வந்தனர். சிலர் ஞானோதயம் பெறும் நாட்டத்துடன் வந்தனர். இந்த வெகுசிலருடன், செல்லாச்சி அதிகமான நேரத்தை கழித்தார். அவர் அவர்கள் பின்பற்ற சில பயிற்சிகளை வழங்கி, அவர்களுடன் ஆழமான தலைப்புக்களில் விவாதித்தார். §

அவரது சீடர்களில் ஒருவரான சி. கந்தையா செட்டியார் முடிவான குறிக்கோள் மீது நாட்டத்துடன் இருந்தார். ஆலவெட்டி கிராமத்தை சேர்ந்த, அந்த 30 வயது ஆங்கில ஆசிரியர், வலுவான ஆன்மீக நாட்டத்துடன் இருந்தார். இவர் பிற்காலத்தில் சிவயோக சுவாமியிடம் சிவாய சுப்பிரமுனியசுவாமியை அறிமுகப்படுத்தி, பரம்பரையின் தொடர்ச்சிக்கு ஒரு முக்கிய தொடர்பை வழங்கினார். அவருக்கு அம்மையார் நேர்மறையான உறுதிப்பாட்டில் பயிற்சி அளித்தார். §

அவர் பல வருடங்களுக்கு தொடர்ந்து செய்வதற்காக, செல்லாச்சி வழங்கிய பல குறிப்பிடத்தக்க சாதனாக்களில், ஒரு குறுகலான மரப்பலகையில் உறங்கும்  சாதனாவும் அடங்கும். அவர் அந்த பலகையில் இடது அல்லது வலது புறம் சிறிது புரண்டாலும், கீழே விழுந்தது விடுவார் என்பதால், அவர் இரவு முழுவதும் அசையாமல் படுத்து இருக்கக் கற்றுக்கொண்டார். அவர் பலகையில் படுத்து, கைகளை தனது மார்பை சுற்றி மடக்கிக்கொண்டு, உடனே உறங்கிவிடுவார். அவர் காலையில் அதே நிலையில் உறங்கிக்கொண்டு இருப்பார். §

ஒரு நாள் செட்டியார் கோயிலுக்கு அருகில் இருந்த ஒரு சிறிய பனைமரத்தை இடமாற்றிக்கொண்டு இருந்தார். அவர் அந்த மரத்தை சுற்றி ஆழமாக குழி தோண்டி இருந்தாலும், அவரால் அதை வேரோடு பிடுங்க முடியவில்லை. அவருக்கு சரியான பிடிமானம் கிடைக்கவில்லை. அப்போது நண்பகல் நேரம் நெருங்கிக்கொண்டு இருந்தது, மற்றும் உச்சி வெயில் கடுமையாக இருந்தது. அவர் சோர்வடைந்தார், மற்றும் அவருக்கு வியர்க்கவும் பசிக்கவும் ஆரம்பித்தது.§

அந்த மரத்திற்கு இரு புறமும் ஒரு தடித்த கம்பத்தை மட்டமாக கட்டி, ஒரு புறத்தில் அந்த கம்பங்களை ஒன்றாக இணைத்து, மறுபுறத்தில் அந்த மரத்தை பூமியில் இருந்து வேரோடு எடுக்க அருகில் இருக்கும் ஒரு சிறிய மரக்கட்டையுடன் கட்டவேண்டும் என்று அவருக்கு திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. அவர் பொருட்கள் வைக்கப்பட்டு இருக்கும் கோயிலின் பின்புறத்திற்கு விரைந்து சென்றார். அங்கே திருவிழா காலங்களில் உற்சவ

மூர்த்திகளை சுமந்து செல்லும் இரண்டு வழுவழுப்பான இலுப்பை மர கம்பங்கள் இருந்தன. “பொருத்தமாக இருக்கும்" என்று நினைத்த அவர், அங்கிருந்து அந்த கம்பங்களையும் சிறிது சணல் கயிறையும் எடுத்துக்கொண்டார். §

அவர் தான் கற்பனை செய்ததை போல கம்பங்களை தயார்படுத்திக்கொண்டு, கம்பங்களின் ஒரு புறத்தில் சிறிய மரக்கட்டையை நிமிர்த்தி வைத்து, அதன் மறுபுறத்தை கையில் பிடித்துக்கொண்டு, தனது முழு பலத்தையும் பயன்படுத்தி மேலே உயர்த்தினார். அவருக்கு முயற்சியில் வெற்றியும் கிடைத்தது. கூடுதல் பிடிமானத்துடன், அவர் பூமியில் இருந்து அந்த மரத்தை வேரோடு பிடுங்கினார். அதன் பிறகு கம்பங்களை மரத்தில் இருந்து பிரித்து, அதை புதிய இடத்திற்கு மாற்றினார். “நன்றாக திட்டமிட்டு செய்தாய்,” என்று தன்னை பாராட்டிக்கொண்டு, நன்றாக குளிப்பதற்காகவும், மதிய உணவிற்கு மனைவி தனக்காக தயார் செய்திருந்த சாதம் மற்றும் காய்கறியை சாப்பிடுவதற்காகவும், வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தார். §

அடுத்த நாள் அவர் செல்லாச்சியை சென்று பார்த்த போது, அவர் திட்டிக்கொண்டே கந்தையாவை வரவழைத்தார். நூறு வருடங்களாக புனிதமாக வைக்கப்பட்டு, சிறந்த கலைப்பொருட்களாக இருக்கும், அந்த விசேட கம்பங்களை நிலத்தை சீர் செய்யும் பணிக்கு எதற்கு பயன்படுத்தினார்? அவர் எந்த எண்ணத்தில் இதை செய்தார்? அவர் செய்தது முற்றிலும் சரியில்லை. “அந்த கம்பங்கள் பிரத்யேகமானவை, அவற்றை அந்த கோயில் பணிக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்,” என்று அவர் கண்டித்தார். “அவ்வாறு தவறாக பயன்படுத்தியதால், நீங்கள் அதன் புனிதத்தன்மையை அவமதித்து இருக்கிறீர்கள். அவற்றை மீண்டும் சுத்தப்படுத்தி பிரதிஷ்டை செய்தால் தான், கோயிலில் பயன்படுத்த முடியும்,” என்று சொல்லி அந்த பணியை உடனே செய்து முடிக்குமாறு அவரை திருப்பி அனுப்பினார்.§

**“இறைவனை உங்கள் வாழ்க்கையின் மையமாக மாற்றிக்கொள்ளுங்கள்”**

செல்லாச்சி அம்மையார் ஒரு திறமையான ஆசிரியராக இருந்தார். ஒருவர் தனது உள்ளத்தில் இருந்து வரும் தெய்வீக குரல் அறிவுறுத்துவதை மற்றும் ரிஷிகள் உணர்ந்த தெய்வீக விதிகளை பின்பற்றி நடப்பது எவ்வளவு முக்கியம் என்பதை பற்றி, அவர் தனது சொந்த அனுபவத்தில் இருந்து பேசினார். மக்கள் தன்னிடம் பிரச்சனைகளுடன் வரும் போது, செல்லாச்சி அந்த மக்களின் வாழ்க்கை ஓட்டம் சாத்திரங்களை விட்டு விலகி செல்கிறதா என்பதை கவனிப்பார். இதைப்பற்றி செல்லாச்சியின் குறிப்பு:§

> இப்படித்தான தன்முனைப்பு பிறந்து வலுவடைகிறது. நீங்கள் உணர்வதை, உங்கள் உள்ளத்தில் சரியென்று தோன்றுவதை சீர் குலைக்க தொடங்கி, ஒழுக்கத்தின் பாதையில் இருந்து விலகி செல்லும் போது, “நான்" என்பதை உருவாக்கிக் கொள்கிறீர்கள், அந்த “நான்" உங்களை

> வாழ்க்கை முழுவதில் இருந்தும், வாழ்க்கையின் உண்மையான வசந்தகாலத்தில் இருந்தும் விலக்கி வைக்கிறது. §

அவர் தான் பேசுவதை கேட்பதற்கு அதிக கூச்சப்படுவதை போல, ஒரு அமைதியான மெல்லிய குரலில் பேசினார். ஆனால் அது ஒரு ஊடுருவி செல்லும் அதிர்வுடன் இருந்தது, மற்றும் அவர் சொன்னது அனைத்தையும் எல்லோரும் உணர்ந்து கொண்டனர். §

> நீங்கள் வாழ்க்கையில் இருக்கும் மகிழ்ச்சிக்காக மட்டும் வாழ்ந்தால், நீங்கள் வாழ்க்கையின் நோக்கத்தை தவற விடுகிறீர்கள், ஏனென்றால் வாழ்கையை இறைவனின் புகழ் பாடுவதற்காக வாழவேண்டும், மற்றும் இறைவன் மட்டுமே வாழ்க்கையின் மையமாக இருக்கவேண்டும். உங்களுக்குள் இருக்கும் குருவின் குரலுக்கு அடிபணிந்து நடப்பது, வாழ்க்கையை காட்டிலும் மிகவும் முக்கியமானது ஆகும். §

“ஆன்மீக பாதை என்பது அனல் கக்கும் நதியின் மீதிருக்கும் மயிர் இழைப்போன்ற ஒரு மெல்லிய பாலம் ஆகும்!” என்பது அவர் கூறிய பிரபலமான பழமொழிகளில் ஒன்று. யோக சுவாமி ஆழமான ஞானம் நிறைந்த அந்த வார்த்தைகளை அவ்வபோது சொல்லிக்கொண்டு இருப்பார். இந்த பழமொழி, இந்த பாதையின் கடுமையான இயல்பு மற்றும் சாதகர்களுக்கு பின்னடைவை ஏற்படுத்தும் எண்ணற்ற கவனச்திறதல்களைப் பற்றி எச்சரிக்கிறது. இறைவன் பல உருவங்களில் வருவதாகவும், நீங்கள் அவரை புரிந்துக்கொண்டு, அன்பு செலுத்தி, அவரது அறிவுறுத்தல்களை பின்பற்றும் போது, அந்த உருவங்கள் மாறுவதாகவும் அவர் கற்றுத்தந்தார். “நீங்கள் அதிக தெளிவாக காணத்தொடங்கி, இறுதியில் நீங்கள் அதிகமாக புனிதமாகிவிடுவதால், நீங்கள் அந்த பரமாத்துமாவாக மட்டுமே இருப்பீர்கள்.” §

யோக சுவாமி மற்றும் செல்லாச்சி அம்மையாரின் தோழமை தொடங்கி பத்து வருடங்கள் நிறைவடைந்த நிலையிலும், யோக சுவாமி மக்களின் கண்பார்வையில் இருந்து மறைந்தே இருந்தார். செல்லாச்சியுடன் இருந்த தோழமை மற்றும் செல்லப்பசுவாமியுடன் ஆன்மீக தொடர்பின் மூலம், அவர் தனது போதனைகளுக்கு தெளிவான சொல் வடிவங்களை வழங்கினார். பக்குவம் அடைந்து, கிரகித்து கொண்டு, ஆழ்ந்த சிந்தனை மேற்கொள்ளும் மிகவும் முக்கியமான அக்காலத்தின் வெளிப்பாடாக “சிவனின் சேவையை" குறிப்பிடும், சிவத்தொண்டுக்கு அவர் அளித்த முக்கியத்துவம் அமைந்தது. அந்த வலுவான வாசகம், “சிவபெருமானுக்கு சேவை செய்யும் புனிதமான செயலுக்கு முழுமையாக அர்பணித்து கொள்ளுங்கள். சும்மா இருங்கள். உங்கள் பரமாத்துமாவை அறிந்து, சர்வ வல்லமை படைத்தவராக இருக்கும் இறைவனுக்கு சேவை செய்யுங்கள்,” என்று அனைவரின் கவனத்தை கவரும் வண்ணம், யாழ்ப்பாண சமூகம் மற்றும் மனித நேயம் முழுவதற்கும் அவர் வழங்கிய தகவலை உள்ளடக்கியுள்ளது. சிவத்தொண்டு மற்றும் சிவ தியானம்

என்ற இரண்டு வார்த்தைகள், மக்களுக்கு அவர் வழங்கும் உன்னதமான தகவலை விளக்குகின்றன. §

சமூக அங்கத்தினர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு, செல்லாச்சி அம்மையாரும் யோக சுவாமியும் எவ்வாறு செயலாற்றினார்கள் என்பதை செல்லதுரை சுவாமியின் பின்வரும் விவரணம் குறிப்பிடுகிறது:§

> ஒரு அன்பர் யோக சுவாமியின் குடிசைக்கு சென்று தன் மனைவிக்கு உடல்நலம் சரியில்லை என்று கூறினார். இன்னொரு அன்பர் செல்லாச்சி அம்மையாரின் ஆசிரமத்திற்கு சென்றுள்ளார். அவர் அங்கிருந்து கிளம்பும் போது, செல்லாச்சி அவரிடம் சில வாழைப்பழங்களை கொடுத்து, அவற்றை யோக சுவாமியிடம் கொடுக்குமாறு கூறினார். அவர் சுவாமியிடம் சென்று கொடுத்த போது, "இந்த வாழைப்பழங்களை என்னிடம் யார் கொடுக்க சொன்னது?" என்று கேட்டு திட்ட ஆரம்பித்தார். அதனால் அவர் வெளியே சென்று, அந்த வாழைப்பழங்களை தரையில் வைத்தார். சுவாமி அவரை மீண்டும் உள்ளே அழைத்தார். அவரிடம் சிறிது நேரம் பேசிய பின்னர், தன் மனைவிக்கு உடல்நலம் சரியில்லை என்று சொன்ன நபரிடம், அந்த வாழைப்பழங்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று, அவரது மனைவிக்கு வழங்குமாறு அறிவுறுத்தினார். அவர் அவற்றை வீட்டிற்கு எடுத்துச் சென்று, தினமும் தன் மனைவிக்கு வழங்கி வந்தார். வாழைப்பழங்கள் தீர்ந்ததும், அவர் மனைவியும் குணமடைந்தாள். §

செல்லாச்சி தனது இறுதி காலத்தில், அதிக வலுவிழந்து இருந்ததால், அவரால் யோக சுவாமி சமைத்த உணவை மட்டுமே சாப்பிடமுடிந்தது. காலையில் சுவாமி தனது வீட்டில் உணவை சமைத்து, அதை தினமும் செல்லாச்சியின் வீட்டிற்கு பதினாறு கிலோமீட்டர் எடுத்து செல்வார். செல்லாச்சி மிகவும் சோர்வுற்று இருந்தால், அவருக்கு சுவாமியே உணவை ஊட்டிவிடுவார். செல்லாச்சியை காண ஒரு சுத்தமில்லாத அன்பர் வருகை தந்தால், அவர் உடல் வீக்கம் அடைந்து சுவாசிப்பதே கடினமடையும் அளவிற்கு, அவரது எதிர்வினைகள் அதிக தீவிரமடைந்து இருந்தன. வருகை தரும் அன்பர்களை கவனமாக ஆய்வு செய்வது, முன்பு ஒரு எச்சரிக்கை விதியாக இருந்தது, ஆனால் செல்லாச்சியின் உடல்நலம் காரணமாக அவசரத் தேவையாக மாறிவிட்டது. §

ஜனவரி 27, 1929 அன்று செல்லாச்சி அம்மையார் மகாசமாதி அடைந்தார். ஞானோதயம் பெற்ற உயிர்சக்திகளுக்கு வழக்கமாக செய்வதை போல, செல்லாச்சியின் உடலை அங்கேயே புதைத்து, ஒரு சிறிய மாடம் அமைக்கவேண்டும் என்று அவரது குடும்பத்தினர் மற்றும் சில அன்பர்கள் விரும்பினார்கள். யோக சுவாமி இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அங்கே நடக்கும் சடங்கிற்கும் தான் விலகிக்கொள்வதாக பகிரங்கமாக தெரிவித்தார். செல்லாச்சியின் மகன் யோக சுவாமியிடம் சென்று, அவரது விருப்பப்படி தனது தாயின் உடலை தகனம் செய்ய சம்மதித்த போது, பிரச்சனைக்கு தீர்வு வந்தது. §

அவரது உடல் ஒரு சந்தனக்கட்டை ஈமவிறகில் தகனம் செய்யப்பட்டது. யோக சுவாமி, சார் வைத்தியலிங்கம் துரைசாமி மற்றும் மருத்துவர் இராமநாதன் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்தனர். அம்மையார் உயிர் நீத்த போது, 57 வயது நிரம்பிய சுவாமி மட்டுமே, யாழ்ப்பாண மக்களுக்கு ஒரே ஆன்மீக அடைக்கலம் மற்றும் வழிகாட்டியாக விளங்கினார். அவர் அடுத்த 35 வருடங்களுக்கு, அந்த சமூகத்தில் முக்கிய ஆன்மீக ஒளியாக விளங்கினார். §



*யாழ்ப்பாண சூட்சும ஞானிகளான செல்லாச்சி அம்மையார், யோக சுவாமி மற்றும் மற்றவர்கள் திடமான சைவர்களாக, அத்வைத கடவுள் நம்பிக்கையுடன், இறைவன் உள்ளர்ந்து மற்றும் யாவும் கடந்து, உருவத்துடன்*

*மற்றும் உருவமில்லாமல் இருப்பதாக அறிந்து இருந்தார்கள். மற்றவர்கள் சிவபெருமானை அழிக்கும் கடவுளாக அழைத்தார்கள், ஆனால் அவர்கள் சிவபெருமானை சுத்தமான ஒளி மற்றும் அன்பாக அறிந்து இருந்தார்கள்.*

........................§

URL Page 28:
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/28_yoga04_01.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் பதினான்கு

# யோக சுவாமி என்கிற ஈடுஇணையற்ற குரு

அறிந்தவராகவும் அந்த பரமாத்துமாவாகவும் இருக்கும் சற்குருவின் தரிசனம் மட்டுமே முக்கியமானது என்று சிவயோக சுவாமி தனது சீடர்களிடம் காலங்காலமாக தெரிவித்து வந்தார். “செல்லப்பசுவாமி தனக்கு ஒரு தாயாக மற்றும் தந்தையாக மற்றும் குருவாக, எல்லாமாக இருக்கிறார்,” என்று யோக சுவாமி பல பாடல்களில் பாடியுள்ளார். இந்து சமயத்தில் குரு வழிபாடு தொன்றுதொட்டு நடைபெற்று வருகிறது. தமிழில் *திருவடி* என்றும், சமஸ்கிருதத்தில் ஸ்ரீ *பாதுகா* என்றும் அழைக்கப்படும் அவரது புனிதமான மிதியடிகள் வழிபாட்டு சின்னமாக விளங்குகின்றன. ஏன்? குருவின் நரம்பியல் அமைப்பில் இருக்கும் சக்தி அவரது கைகள் மற்றும் கால்கள் வழியாக பாய்ந்து செல்வதால், அந்த புனிதமான சக்தியுடன் தொடர்புகொள்ளும் வழியாக அந்த பாதங்கள் விளங்குகின்றன என்று சிலர் கூறுகின்றனர். குருவின் உடலில் மிகவும் தாழ்வான நிலையில் இருக்கும் பாகமாக பாதங்களை எண்ணி, தெய்வீகத்தன்மையின் அந்த அதிக பணிவான பகுதியை தொடுவதற்கு தான் தகுதி பெறவேண்டும் என்பதை மறைமுகமாக குறிப்பிடுவதாக சிலர் கருதுகிறார்கள். இவ்வாறு, தாங்கள் ஒரு நாள் அடைய விரும்பும் தெய்வீகத்தன்மையிடம், அவர்கள் சரணடைவதை இது குறிப்பிடுகிறது. §

ஒரு அறை மட்டுமே இருந்த யோக சுவாமியின் ஆசிரமத்தில், ஒரு திரைக்கு பின்னால் இருந்த மாடத்தில் அவர் தனது குருவின் மரப்பாதுகைகளை வைத்து இருந்தார். அவர் இந்த மிகவும் புனிதமான தனது உடைமைக்கு, தினமும் காலையில் வழிபாடு நடத்தினார். தினமும் அதிகாலையில் எழுந்து, குளித்து விட்டு, சில பூக்களை பறித்து, ஒரு உயர்ந்த பீடத்தில் இருந்த அந்த

திருவடிகளுக்கு கற்பூரம் காண்பித்து ஆரத்தி எடுப்பதே அவரது தினசரி வழக்கமாக இருந்தது. இவை இன்றும் நடைப்பெற்று வருகின்றன. சில குறிப்பிட்ட கோயில்களுக்கு செல்வது இல்லாமல், இது மட்டுமே அவரது தனிப்பட்ட வழிபாடாக இருந்தது. யோக சுவாமியை சந்திக்க வந்தவர்கள், அவருக்கு ஒரு குரு இருந்தார் என்றும் குறிக்கோளை நோக்கி அந்த குரு சுவாமியை வழிநடத்தி சென்றார் என்பதையும், அந்த திருவடிகள் நினைவுறுத்தின. §

அவர் எப்போதும் ஒரு வெள்ளை நிற வேட்டியை அணிந்து இருந்தார். யாழ்ப்பாணத்தில் புழுதி படிந்த` சாலைகள் இருந்தாலும், அந்த வேட்டி வியக்கும் வகையில் எப்போதும் தூய்மையாக இருந்தது. அவர் தனது தோளில் வெள்ளை நிற கைத்தறி துணியை போர்த்தி இருப்பார், அவரது கால்களில் இருந்த எளிமையான பழுப்பு நிற காலணிகள், இவர் இடைவிடாது நடந்ததால் தேய்ந்து இருந்தாலும் நன்றாக பராமரிக்கப்பட்டு இருந்தது. அவர் பயன்படுத்திய சில பொருட்கள் இன்றும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கவாய் இந்து மடத்தில்  இருக்கும் அவரது பூஜை மாடத்தில், துருவுறா எஃகினால் தயாரித்த ஒரு தண்ணீர் குவளை மற்றும் பல வண்ணக்கோடுகளுடன் கூடிய குளியல் துண்டு  வைக்கப்பட்டுள்ளது மற்றும் அவருக்கு நெருக்கமான சீடராக இருந்த ரத்னா மா நவரத்தினத்தின் குடும்பம், அவர் பயன்படுத்திய கருப்பு குடையை பாதுகாத்து வருகின்றனர். சுவாமியின் தினசரி பழக்கங்கள் பற்றி Dr. எஸ். இராமநாதன் பின்வரும் உட்பார்வைகளை வழங்கியுள்ளார்.§



தனது திருவடிகளில் மக்கள் கூட்டங்களை ஈர்த்த ஒரு தனித்த சூட்சும ஞானியாக, கடுமையாக பேசிய அன்புள்ளம் கொண்ட குருவாக, தான்

*குறைவாக படித்து இருந்தாலும் மிகவும் உயர்வான தத்துவத்தை பற்றி இலக்கிய அறிவுடன் எழுதும் எழுத்தாளராக, கிராமங்கள் வழியாக வாகனம் ஓட்டி செல்வதை விரும்பிய யோகியாக, தன்னை சந்தித்த ஒவ்வொரு நபரையும் பிரமிக்க வைத்த ஒரு எளிமையான மனிதராக, மொத்தத்தில் யோக சுவாமி ஒரு மர்மமான கலவையாக இருந்தார்.*

........................§

சுவாமி தனது உடலை சுத்தமாக வைத்து இருந்தார். அவர் அதிகநேரம் குளிக்காமல், தனது உடலை எப்போதும் கழுவிக்கொள்வார். அவரது உடலில் இருந்து எப்போதும் ஒரு மென்மையான, இனிமையான வாசம் வெளிவந்தது. அவர் தினமும் காலையில் பால் கலந்த தேநீரை பருகுவார். அவர் மதியம் சாதம் சாப்பிடுவார். அவர் தயாரித்த உணவு எப்போதும் சுத்தமாக இருக்கும், ஆனால் அவர் எப்போதும் ருசியை பற்றி கவலைப்பட்டது இல்லை. அவர் சாதம் சாப்பிடுவதை பல நாட்கள் பார்த்ததன் மூலம், அது அவரது பழக்கமாக இருந்தது என்றும், சாப்பிடுவது அவருக்கு முக்கியமாக இருந்ததில்லை என்பதையும் நான் தெரிந்துகொண்டேன். அவர் சாப்பிடும் போது, “எப்போதும் சாப்பிடாமல் எப்போதும் உறங்காமல் இருப்பவருக்கு எனது வணக்கம்,” என்று எப்போதும் நான் நினைத்துக் கொள்வேன். §

அவர் மாலை நேரங்களில் தேநீர் அருந்துவார். அவருக்கு இரவு நேரங்களில் பசி இருந்தால் இடியாப்பம் அல்லது ரொட்டி சாப்பிடுவார். மற்றவர்கள் தனது கால்களை கழுவுவதற்கு அனுமதிக்க மாட்டார், மற்றும் அவற்றின் மீது தண்ணீர் ஊற்றுவதை கண்டிப்பாக அனுமதிக்க மாட்டார். அவர் தான் சாப்பிட்ட இலையை மற்றவர்கள் எடுக்க அனுமதிக்காமல், தானே அதை அப்புறப்படுத்துவார். அவர் எப்போதும் தனது படுக்கையில் மெத்தையை விரும்பியது இல்லை. மற்றவர்கள் தன்னை சுவாமி என்று கௌரவிப்பதை அவர் எப்போதும் விரும்பியது இல்லை. “என்னை ஒரு சுவாமியாக மாற்றாதீர்கள்,” என்று அவர் அடிக்கடி சொல்வார். §

பின்வரும் தகவல்களை ச. அம்பிகைபாகன் வழங்குகிறார்.§

சுவாமிகள் தனது உடலை கவனித்துக்கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். தனக்கு வியாதி வந்து மற்றவர்களுக்கு வேதனை கொடுக்க அவர் விரும்பவில்லை. அவர் தான் உண்ணும் உணவில் கவனமாக இருந்தார். “இறைவன் நமக்கு உணவை வழங்கினாலும், உங்களுக்கு பசிக்காத போது சாப்பிடாதீர்கள்,”என்று அவர் போதித்த படியே, மிதமாக சாப்பிடவும் செய்தார். சில நாட்களில் அவர் நாள் முழுவதும் சாப்பிடாமல் இருந்தார், மற்றும் சில நாட்களில் அவர் வெறும் ஒரு பொங்கியப்பத்தை (bun) மட்டும் சாப்பிட்டார். அவர் சாப்பிடுவதற்கு முன்பாக, கை கால்கள்

மற்றும் முகத்தை கழுவிக்கொண்டு, தனது நெற்றி மற்றும் உடலில் விபூதியை பூசிக்கொள்வார். §

ஒரு நாள் ஒரு உணவகத்தில், ஒரு ஆசிரியராக இருந்த பிராமணர் வெறும் தனது கை விரல்களை மட்டும் கழுவிக்கொண்டு சாப்பிட அமர்ந்தார். “நீங்கள் ஒரு பிராமணர்; ஒருவன் சாப்பிடுவதற்கு முன்பாக தனது முகம், கால்களை கழுவி, விபூதி பூசிக்கொண்டு சாப்பிட அமரவேண்டும். நீங்கள் ஒரு ஆசிரியராக இருப்பதால், நீங்கள் உங்கள் மாணவர்களுக்கு ஒரு உதாரணமாக விளங்கவேண்டும்,” என்று அவரை கடிந்துக்கொண்டார். §

**நல்ல எண்ணங்கள்; உள்ளத்து உத்தரவுகள்**

சிவயோக சுவாமி ஒவ்வொரு சீடருக்கும் முறையாக வழிபடும் முறையை கற்றுத்தந்தார். அது முடிவில் ஒருவருக்குள் இருக்கும் தெய்வீக சக்தியை காண்பதற்கு அனுமதி வழங்குகிறது. செல்லப்பசுவாமி தனது குருவை நினைத்து பேசுவது அல்லது பாடுவதன் மூலம், குரு வழிபாட்டையும் கற்றுத்தந்தார். §

அவர் பெரும்பாலும் தானாக பாடுவார். அவர் சில சமயங்களில், தனது உள்ளிருந்து தோன்றிய பாடலை எழுதிக்கொண்டு ஒரு அன்பரின் வீட்டிற்கு வருவார். சுவாமி பாடுவதை யாராவது ஒருவர் எழுதி, அவர் அதை அருகில் இருந்தவர்களுக்கு வழங்குவார். இறுதியில் பாடல்கள் மற்றும் உரைகளின் தொகுப்பு *நற்சிந்தனை* (“நல்ல சிந்தனை") என்ற தலைப்பில் 1959 ஆம் ஆண்டிலும், இதன் இரண்டாவது மற்றும் விரிவாக்க பதிப்பு 1962 ஆம் ஆண்டிலும் வெளிவந்தன. §



ஞானோதயம் பெற்ற ஆன்மாக்கள் இலக்கிய பொக்கிஷங்கள் மற்றும் உட்பார்வைகளை பெரும்பாலும் விட்டு செல்வார்கள். யோக சுவாமி இந்த

*உலகிற்கு நூற்றுக்கணக்கான பாடல்களின் தொகுப்பான நற்சிந்தனையை வழங்கினார்.*

........................§

சுவாமியின் போதனைகள் நுணுக்கமான மற்றும் கடினமான தமிழ் மொழியை தவிர்த்து, அதற்கு பதிலாக அழகான மற்றும் எளிமையான சொல் வளம் மற்றும் சொற்றொடர்களை பயன்படுத்தி, யோகத்தின் மறைபொருள்களை ஆய்வு செய்து, பாதையில் இருக்கும் தெய்வீக அனுபவங்களை தெரியப்படுத்தி, செல்லப்பசுவாமி மற்றும் மகாதேவர்களில் குறிப்பாக சிவபெருமானை போற்றி பாடுகிறது. மொத்தத்தில், சுவாமியின் தொகுப்பில் 385 நற்சிந்தனை பாடல்கள், இருபது திருமுகங்கள், 1,500 அருள் வாசகங்கள் உள்ளன. நற்சிந்தனையில் வரும் முதல் பாடலான "எங்கள் குருநாதன்," செல்லப்பசுவாமியின் போதனைகள் பற்றி விவரித்து, ஆழமான உணர்தல்கள் மற்றும் ஞானஒளிக்குள் யோக சுவாமியை கொண்டு வந்த ஆன்மாவின் மீது யோக சுவாமிக்கு இருந்த அன்பின் ஆழத்தை, எல்லோருக்கும் பாட்டின் மூலம் தெரியப்படுத்துகிறது. இதோ அந்த பாடலின் தொடக்கம்: §

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்

இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்

அன்னைபிதாக் குருவானா னெங்கள்குரு நாதன்

அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்

முன்னைவினை நீக்கிட்டா னெங்கள்குரு நாதன்

மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்

நன்மைதீமை யறியாத னெங்கள்குரு நாதன்

நான்தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன். §

யோக சுவாமி இயலுணர்வுடன் வேலை செய்து, "ஆன்மீக ஆணைகளுக்கு" கீழ்படிந்து தன்னை நாடி வந்தவர்களுக்கு பதில் அளித்தார். அவர் இதைப்பற்றி விளக்கும் போது, ஒரு முறை, "நான் எதையும் செய்யவில்லை. என்னால் எதையும் செய்யமுடியாது. நீங்கள் பார்ப்பது அனைத்தும், உள்ளத்தில் இருந்து வரும் உத்தரவுகளால் செயல்படுத்தப்படுகின்றன." அவர் மேலும் இன்னொரு முறை, "நீங்கள் இங்கே வரும் போது, நடக்கவிருப்பது முன்பே நடந்து முடிந்துவிட்டது. நாம் அதை அனுபவிக்கிறோம்; நீங்கள் அதை கொண்டு வருகிறீர்கள், ஆனால் அவை நீண்டநாட்கள் முன்பே நடந்து முடிந்துவிட்டன. அமைதியாக அமர்ந்து இருந்து ஒரு சாட்சியாக இருங்கள்." "நீங்கள் சுத்தமாக இருக்கும் போது, ஒரு தாமரை இலையின் மீது இருக்கும்

நீர்த்துளி போல வாழுங்கள். எது தேவையோ அதை செய்யுங்கள், உங்களிடம் வருவதை செய்யுங்கள், அதன் பிறகு நீங்கள் பெறும் அடுத்த உத்தரவுக்கு செல்லுங்கள், அதன் பிறகு அடுத்து வருவது என்று தொடருங்கள்," என்று இந்த செயல்முறையை சுவாமி விளக்கினார். §

"உங்கள் உள்ளத்தில் இருந்து உத்தரவுகள் வரும் போது தைரியமாக செயல்படுங்கள். அந்த உத்தரவில் இருக்கும் தகவல்கள் அனைத்தும் முறையாக இருக்க வேண்டும் என்று காத்திருக்க வேண்டாம். முழுவதும் சரியாக வேண்டும் என்று காத்து இருந்தால், உங்களுக்கு கிடைத்த வாய்ப்பு கை நழுவி செல்லலாம். உள்ளத்தில் இருந்து வரும் உத்தரவுகள் மீது நம்பிக்கை வைத்து உங்கள் பணியை தொடருங்கள். நீங்கள் தெய்வீக உத்தரவுகளுக்கு அங்கீகாரம் அளித்தால், பணம் உங்களை பின்தொடர்ந்து வரும். உதவியாளர்கள் வருவார்கள். அனைத்தும் வரும். நீங்கள் உள்ளத்தில் இருந்து வரும் உத்தரவை மட்டும் பின்பற்றுவதில் கவனமாக இருக்கவேண்டும்," என்று அவர் அறிவுறுத்தினார். §

உள்ளத்தில் இருந்து வரும் குரல் என்பதை எவ்வாறு தெரிந்து கொள்வது என்று கேட்டபோது, "*சும்மா இரு*. சும்மா இரு! உனக்கு தேவையானது உன்னை தேடி வரும்," என்று கூறினார். *"சும்மா இரு!"* என்று அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். அவர் அதில் பயிற்சி மேற்கொண்டு, உள்ளத்தில் இருந்து வரும் பதில்கள் மீது கவனம் செலுத்தினார். §

ஒரு அன்பர் அவரிடம் கேள்வி கேட்டால், தனது உத்தரவுகளை உணர்வதற்காக காத்து இருப்பார். அவர் எந்த உத்தரவையும் உணரவில்லை என்றால், அவர் உத்தரவுகள் வரும் வரை சும்மா இருப்பார். ஒரு நாள் சுவாமி ஊர் வழியாக நடந்து சென்ற போது, வாகனத்தில் வந்த ஒருவர் அவரை எங்காவது அழைத்து செல்ல வேண்டுமா என்று சுவாமியிடம் கேட்டார். "எந்த உத்தரவும் வரவில்லை," என்று சுவாமி பதில் அளித்து, அவரை வழியனுப்பி வைத்தார். சில நிமிடங்கள் கழித்து, அதே நபர் சுவாமிக்கு அருகில் வந்து வாகனத்தை நிறுத்தினார். "இப்போது எனக்கு உத்தரவு வந்து விட்டது," என்று சுவாமி பதில் அளித்து, வாகனத்துக்குள் ஏறிக்கொண்டார். §

1930 களில் மெய்ப்பொருள், ஞானஒளி மற்றும் நல்ல பாதையை தேடி, இரண்டு மூத்த ஜெர்மன் நாட்டு பெண்கள் இந்தியாவை நோக்கி புறப்பட்டனர். அவர்கள் பல மாதங்களுக்கு வறண்ட வானிலையை தாங்கிக்கொண்டு,கொதிக்க வைத்த தண்ணீரை குடித்துக்கொண்டு, தங்களுக்கு தென்பட்ட ஒவ்வொரு சாது மற்றும் தெய்வீக புருஷருடன் பேசினார்கள். அவர்களது பயணத்தில் சாதகர்களின் பிரபல இலக்காகவும், பிரபல சூட்சும ஞானியாக அத்வைதத்தில் தேர்ச்சி பெற்று, புனிதமான அருணாச்சல மலையில் ஒரு எளிமையான ஆசிரமத்தில் பல ஆண்டுகள் ரமண மகரிஷி வாழ்ந்த இடமான திருவண்ணாமலையும் இருந்தது. §

அவர்கள் மேலும் தெற்கு நோக்கி பயணம் செய்து, பால்க் நீர்சந்தியை கடந்து இலங்கையில் நுழைந்தனர். அவர்கள் கொழும்பில் இருந்து வடக்கே, பல மகான்கள் வாழ்ந்ததாக கருதப்பட்ட யாழ்ப்பாணத்திற்கு பயணம்

செய்தனர். நீளமான, மடிப்புக்கள் நிறைந்த உடைகள், நூலுடன் இருந்த கையுறைகள் மற்றும் விசித்திரமான வடிவத்தில் சூரிய வெப்பத்தை தடுக்கும் குடைகளுடன், அவர்கள் இருவரும் புழுதி படிந்த சாலைகளில் நடந்து சென்றபோது, ஊர் மக்கள் அவர்களை கூச்சமின்றி பார்த்துக்கொண்டு இருந்தனர். அவர்கள் யோக சுவாமியை ஒரு சிறிய கூரை வெய்த குடிசையில் சந்தித்தனர். இரண்டு அன்பர்களும் சுவாமிக்கு தங்கள் வணக்கத்தை தெரிவித்து, அவர் வழங்கிய நெய்த பாயில் அமர்ந்து, முடிவான உண்மையின் இயல்பு பற்றிய அவர்களது கேள்விகள் மற்றும் அவர்களது யாத்திரை பற்றிய கதையை கேட்ட கருமை நிற குருவுடன் பால் கலக்காத இலங்கை தேநீரை குடித்தனர். §

"இதே கேள்விகளை தான் மற்றவர்களிடமும் கேட்டீர்களா?" என்று யோக சுவாமி விசாரித்தார். "ஆமாம், சுவாமி," என்று அவர்கள் பதில் அளித்தனர். "ரமண மகரிஷி என்ன பதில் அளித்தார்?" என்று சுவாமி விசாரித்தார். தங்களது பயணம் பற்றி சுவாமி அறிந்து இருந்ததை கண்டு, அந்த மூத்த பெண்மணி, "அவர் எங்களிடம் 'ஒரு கடவுள். ஒரு உலகம்' என்று கூறினார்." உடனே சுவாமி, "என்னால் இதை விட எதையும் சிறப்பாக சொல்ல முடியாது. நீங்கள் கிளம்பலாம்," என்று பதில் அளித்தார். அத்துடன் அவர்கள் இருவரும், தாங்கள் வாழ்ந்த நூற்றாண்டின் ஞானோதயம் பெற்ற ஆன்மாக்களில் ஒருவரை தரிசித்த பெருமிதப்புடன் கிளம்பினர். §

### யாழ்ப்பாண முனிவருடன்  நடந்த எனது சந்திப்பு

இலங்கைக்கான முன்னாள் கனடா நாட்டு உயர் ஆணையர் Dr. ஜேம்ஸ் ஜார்ஜ், சுவாமி மீது வலுவாக ஈர்க்கப்பட்டு இருந்தார். அவர் பின்வரும் தகவலை வழங்கினார். §

> அவரை இலங்கை தமிழர்கள் யாழ்ப்பாண முனிவர் என்று அழைத்தார்கள். சிங்கள பௌத்தர்கள் மற்றும் கிறுத்துவர்களை உள்ளடக்கிய அவரது ஆயிரக்கணக்கான சீடர்கள், அவரை ஒரு மகான் என்று அழைத்தனர். தான் அழையாமல் தன்னிடம் வந்து கெஞ்சுபவர்களை, தனது கையில் ஒரு தடியுடன் துரத்தும் அளவிற்கு மிகவும் தீவிரமாகவும் விசித்திரமாகவும் செயல்பட்டதால், அவருக்கு நெருக்கமானவர்கள் அவரை வயதான சிங்கம் அல்லது போதிதர்மரின் மறுபிறவி என்று குறிப்பிட்டார்கள். நான் அவரை  வெறும் சுவாமி என்று அழைத்தேன். அவர் இந்து சமயத்தை, அதன் புனிதமான வேதாந்த வடிவில் எனக்கு அறிமுகப்படுத்தினார். நான் அறுபதுகளின் தொடக்கத்தில், அப்போது சிலோன் என்ற பெயரிலேயே இருந்த இலங்கைக்கு, கனடா நாட்டு உயர் ஆணையராக இருந்த சுமார் நான்கு வருடங்களுக்கு, சுவாமி எனது ஆசிரியராகவும் இருந்தார். §
>
> நான் அதற்கு பத்து வருடங்களுக்கு முன்பாக, குருட்ஜீஃப் ஒர்க்கில் பயிற்சி பெற்று இருந்தேன். மற்றும் பி.டி. உஸ்பென்ஸ்கியின் முன்னாள்

மாணவன், ஜேம்ஸ் ராம்ஸ்போதம் (லார்டு சோல்புரி) மற்றும் அவரது சகோதரன் பீட்டரின் உதவியுடன், நாங்கள் சிலோனுக்கு வந்திறங்கிய சில நாட்களில், யோக சுவாமியுடன் எனது முதல் சந்திப்பை மேற்கொள்ள, கொளுத்தும் பிற்பகல் வெயிலில், சிலோனின் வடக்கு கரையோரத்தில், யாழ்ப்பாணத்தில் இருந்த ஒரு எளிமையான ஓலை வெய்த குடிசை முன்பாக நான் நின்றுக்கொண்டு இருந்தேன். §


நான் மெதுவாக கதவை தட்டிய போது, “கனடா நாட்டு உயர் ஆணையரா?” என்று ஒரு குரல் உள்ளிருந்து கர்ஜித்தது. நான் கதவை திறந்த போது, அவர் நீளமான நரைத்த தாடி மற்றும் தலையில் அதிகமான நரைத்த முடியுடன், ஒரு வெள்ளை ஆடையை உடுத்தி, நிமிர்ந்த தலையுடன், கம்பீரமாக சம்மணம் போட்டு தரையில் அமர்ந்து இருந்தார். “சுவாமி,” என்று நான் பேசத்தொடங்கி, “அது தான் என் வேலை, ஆனால் நான் அது இல்லை.” “சரி, அப்போது உள்ளே வந்து என்னுடன் சேர்ந்து உட்காருங்கள்,” என்று சொல்லி ஆரவாரத்துடன் சிரித்தார். §

அந்த தருணத்தில் இருந்து எனக்கு அவர் மீது வலுவான பிணைப்பு ஏற்பட்டது. நான் செய்யும் வேலையுடன் என்னை குறைவாக தொடர்புப்படுத்தி, நான் யார் என்று தெரிந்துகொள்வதை நோக்கி ஆழமாக செல்ல, அவர் எனக்கு உதவி செய்தார். தனது சமகாலத்தவராகவும், தென்னிந்தியாவின் அருணாச்சலத்தில் வாழ்ந்தவருமான, ரமண மகரிஷியை போல, ஒரு மந்திரமாகும் ஒரு இருத்தலியல் கேள்வியாகவும் விளங்கிய “நான் யார்?” என்ற கேள்வியை யோக சுவாமியும் பயன்படுத்தினார். ஒரு இடத்தில் அமைதியாக தியானத்தில் அமர்ந்து இருப்பதை தவிர்த்து, ஒரு நிகழ்ச்சிக்கு பிறகு இன்னொரு நிகழ்ச்சியில் பங்குபெறுவதற்கு, நான் நாடெங்கும் சுற்றித் திரிவதைப் பார்த்து, அவர் வழக்கமாக என்னை கோபித்துக்கொள்வார். கனடா நாட்டில் எனது விடுமுறை நாட்களை கழித்து பிரான்ஸ், கனடா, ஜப்பான், இந்தோனேசியா மற்றும் கம்போடியா என்று உலகையே சுற்றி வந்து, சிலோன் வந்தடைந்த போது, அவர் என்னை தனக்கு நெருக்கமாக அமர்த்திக்கொண்டு, உள்ளத்தில் மட்டுமே காண முடிந்ததை, தொடர்ந்து வெளியே தேடிக்கொண்டு, எனது உயிர் சக்தியை நான் தேவையின்றி விரயம் செய்வதாக அவர் கூறினார். §

“நீங்கள் ஓரிடத்தில் அமைதியாக சும்மா இருப்பதை தவிர்த்து, எப்போதும் ஏதாவது செய்துக்கொண்டும், ஓடிக்கொண்டும் இருக்கிறீர்கள். “நான் யார்? நான் யார்? நான் யார்? நான் யார்? நான் யார்? நான் யார்?” என்று என்னை கேட்பதை காட்டிலும், நீங்கள் வீட்டில் அமைதியாக உட்கார்ந்து கொண்டு, உங்களிடம் இயல்பாக கேட்டுக்கொள்ளுங்கள். அவர் அந்த கேள்வியை சொல்லிய ஒவ்வொரு முறையும், அவரது குரலின் தொனி, ஒலி அளவு மற்றும் ஒலியின் தீவிரம் அதிகரித்துக்கொண்டே சென்றது, மற்றும் அவர் இறுதியாக தனது முழு சக்தியையும் பயன்படுத்தி அலறினார். §

அதன் பிறகு அவர் திடீரென்று அமைதி அடைந்து, உறுதியாக அமைதி அடைந்தார் மற்றும் வாயால் பேசப்படாத அவரது போதனை அந்த அறை முழுவதும் நிரம்பி, அது சொற்களை காட்டிலும் ஆற்றல்மிக்கதாக இருந்து, அவர் தனது எளிமையான இருப்பின் மூலம் எனது அலைபாயும் எண்ணங்களை விரட்டி அடித்தார். அந்த தருணத்தில் நான் அந்த பரமாத்துமா என்பதை எந்தவித ஐயமும் இல்லாமல் அறிந்து கொண்டேன்; மற்றும் அதற்கு “யார்" என்ற விளக்கம் தேவையில்லாமல் போதுமானதாக இருந்தது. நான் அந்த பரமாத்துமாவாக மட்டும் இருக்கின்றேன். இந்த ஒரு பாடத்தை நான் மறந்தவுடன், “செய்வதும்" “சிந்திப்பதும்" என்னை மீண்டும் மீண்டும் கட்டுப்படுத்துவதால், மீண்டும் கற்பதற்காகவும் மீண்டும் அனுபவிப்பதற்காகவும், அதை மனதில் வைத்து இருந்தேன். §

இன்னொரு முறை நானும் எனது மனைவியும் யோக சுவாமியை பார்க்க வந்த போது, எங்களது மூன்று குழந்தைகளையும் அழைத்து சென்று இருந்தோம். அவர் எங்கள் குழந்தைகளிடம், “உங்கள் வயது என்ன?” என்று ஒவ்வொருவரிடமும் கேட்டார். எனது மகள் “ஒன்பது வயது” என்று கூறினாள், மற்றும் எனது மகன்கள் “பதினொன்று" மற்றும் “பதிமூன்று" என்று கூறினார்கள். யோக சுவாமி அவர்கள் ஒவ்வொருவரிடமும் உறுதியாக, “எனக்கும் உங்கள் வயது தான்,” என்று பதில் அளித்தார். அவருக்கு ஒரே சமயத்தில் மூன்று வெவ்வேறு வயது இருக்கமுடியாது என்றும், அவர் தங்களது பாட்டனாரை காட்டிலும் வயதானவராக இருக்க வேண்டும் என்று குழந்தைகள் பதில் அளித்த போது, யோக சுவாமி தனது முகத்தில் வெறும் புன்னகையை மட்டும் வெளிப்படுத்தி, எங்களுக்கு புரிந்ததா என்பதை தெரிந்துகொள்ள, எங்களை பார்த்து கண் சிமிட்டினார். §



*யோக சுவாமி மின்சாரம் அல்லது குழாய் தண்ணீர் இல்லாமல், ஒரு யோகியின் எளிமையான தேவைகளுக்கு பொருத்தமான, ஒரு எளிய குடிசையில்*

*வாழ்ந்துவந்தார். அவரைத் தேடி ஆயிரக்கண்கான சாதகர்கள் வந்தார்கள், மற்றும் அவர்கள் ஒவ்வொருவரும் வழக்கமாக வியக்கவைக்கும் வகையில், ஆன்மீக உட்பார்வை நிரம்பிய ஒரு நிறைவான தகவலை மனதில் சுமந்து சென்றனர்.*

........................§

அந்த சமயத்தில் அதை கேட்ட போது, அவர் குழந்தைகளுடன் நகைச்சுவையாக விளையாடுவது போல தோன்றியது, ஆனால் நாங்கள் புரிந்துகொள்வதற்கு, அவர் ஆழமான ஒரு தகவலை வழங்கி இருந்தார் என்பது எங்களுக்கு மெதுவாக புரிந்தது. பிறப்பில் இருந்து இறப்பு வரையிலான பாதையில் உடல் பல்வேறு வயதுகளுடன், உடலை போன்று உண்மையானதாக இருந்தாலும், அதற்கு உடல் ஒரு வாகனமாக இருக்கிறது, எப்போதும் இருந்துள்ளது மற்றும் எப்போதும் இருக்கப்போகிறது என்பதை மறைமுகமாக சொல்வதே அவரது வழக்கமாக இருந்துள்ளதாக எனக்கு இப்போது தோன்றுகிறது. அந்த வகையில் பார்த்தால், நாம் எல்லோரும் “ஒரே வயது" என்பதே அதன் சாரம் ஆகும். §

நான் யோக சுவாமியை பலமுறை சந்தித்த பிறகு, எனது கேள்விகளை மிகவும் கவனமாக தயார்செய்ய கற்றுக்கொண்டேன். ஒரு நாள், நான் அவ்வாறு என்னை தயார் செய்துக்கொண்டு, அவரது குடிசையை நெருங்கி, எனது காலணிகளை எடுத்துவிட்டு, மண் தரையில் இருந்த கோரை பாயில் அமர்ந்த போது, அவரை எப்போதும் கைவிடாத கூர்ந்து கவனிக்கும் திறனால் என்னை நோட்டமிட்டார். “ சுவாமி, நான் என்ன நினைக்கிறேன் என்றால்...” என்று தொடங்கினேன், “தொடக்கத்திலேயே தவறு!” என்று அவர் கர்ஜித்ததும், என் மனம் மீண்டும் கருத்து சாராத நிலைக்கு சென்றது. உயிர்சக்தியின் பாதையில் இருக்கும் தடைகளை விலக்கும் அந்த நிலையை, வரவழைப்பதில் அவர் தேர்ச்சி பெற்று இருந்தார். §

நாடிய நிலை சிந்தனையற்றதாக மற்றும் சொற்களால் விவரிக்க முடியாததாக இருந்தாலும், ஒரு சீடன் பின்னர் அமைதியாக அமர்ந்து ஆய்வு செய்ய, அவர் ஆற்றல்மிக்க வெளிப்பாடுகளின் மூலம் தனக்கு பிடித்தமான சூத்திரங்களை கற்றுத்தந்தார். அவர் வழங்கிய சூத்திரங்களில் மூன்றை உங்கள் முன் வைக்கிறேன்:*“சும்மா இரு”*. “ஒரு பொல்லாப்பும் இல்லை” “இது அப்படியே உள்ளது.” அவர் இந்த அறிக்கைகளை தனிநபருக்கும் அண்டத்துக்கும் பயன்படுத்தினார். ஒழுங்கின்மையை காட்டிலும் ஒழுங்குமுறை ஒரு ஆழமான உண்மையாக இருந்தது. நாம் தற்பொழுதில் இருக்கும் போது, நாம் நமது உயிர்சக்தியில் நிறைவான ஒழுங்கில் இருப்பதால், நாம் எதையும் உருவாக்கவோ அல்லது செய்யவோ தேவையில்லை. §

அவரது உயிர் பிரிந்து முப்பது வருடங்கள் கழித்து, தற்போதைய உலகை காணும் போது, அவரால் அதே சூத்திரங்களை அதே நம்பிக்கையுடன்

இன்று சொல்ல முடியுமா என்று நான் யோசிக்கிறேன். அவர் எதை தெரிவித்தார் என்பதை புரிந்துகொள்ள, நாம் இன்னும் ஆழமாக செல்லவேண்டும் என்று நம்மிடம் சவால்விடுவார் என்று எனக்கு தோன்றுகிறது. யதார்த்தம் நிறைவில்லாமல்  அல்லது தவறாக இருக்காது; நாம் மட்டும் தவறாகவும் நிறைவில்லாமலும் இருப்போம், நாம் உண்மையாக இல்லாத போது, நாம் தற்பொழுதில் இருப்பதில்லை!§

### குருவின் வழி

ஒரு அன்பருக்கு யோக சுவாமியின் உதவி தேவை முக்கியமாக தேவைப்பட்டது,  ஆனால்  சுவாமியிடம் சென்றால் தனது மனம் திறந்த புத்தமாகிவிடும் என்ற அச்சத்தில் இருந்தார். அவர் ஒரு தீவிரமான சீடனாக இருந்தாலும், தன்னை அடிக்கடி உருத்திய ஒழுங்கீன எண்ணங்களால் அவமானத்தில் இருந்தார். அவரால் இந்த இரண்டில் இருந்தும் விலகி இருக்க முடியவில்லை. தனக்கு வேலையில் இருந்து விடுப்பு வரும் போது, சுவாமியிடம் செல்லலாம் என்று அவர் முடிவு செய்தார். அவர் அதிகாலையில் எழுந்து, குளித்து முடித்து சுத்தமான ஆடைகளை அணிந்துகொண்டார், ஆனால் தனது மனமும் சுத்தமாக இல்லையே என்று நெஞ்சில் வருத்தத்துடன் இருந்தார். அவர் தனது மனதை கட்டுப்படுத்த முடியாமல், மேலும் தவறான வழிகளில் சென்றுகொண்டு இருந்தார், மற்றும் அவரது எண்ணங்கள் மிகவும் இழிவாக இருந்ததால், அதை தனது நண்பர்கள் மற்றும் குடும்பத்துடன் விவாதிக்கவும் முடியாமல் தவித்தார், மற்றும் அவர்களுக்கு இதைப்பற்றி தெரிந்தால், அவர்கள் இவரை கண்டிப்பாக வெறுப்பார்கள். அவர் சுவாமியிடம் சென்று தனது மனதில் இருப்பதை எல்லாம் கொட்டி தீர்த்துவிடவேண்டும் என்று முடிவு செய்தார். §

அவர் செல்லும் வழியில், தனது கொடூரமான கற்பனைகளை நன்றாக உணர்வதற்கு, சுவாமி தியானத்தில் ஈடுபடாமல் இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் சென்றார். அவர் ஆசிரமத்தில் நுழைந்ததும், சுவாமி சில சீடர்களிடம் மகிழ்ச்சியாக பேசுவதை கண்டார். அவர் சற்குருவை தரையில் விழுந்து வணங்கி வழிபட்ட போது, “நான் தப்பித்தேன்,” என்று எண்ணினார். சுவாமி ஒரு ஏளன சிரிப்புடன், அவரை நேருக்கு நேராகப் பார்த்து, “உங்கள் தலையில் இருந்து கால்விரல் வரை எனக்கு அனைத்தும் தெரியும். எனக்கு உங்கள் எண்ணங்கள் மட்டும் இல்லை, எல்லோரது எண்ணங்களுக்கும் தெரியும். நான் எல்லோருக்குள்ளும் இருக்கிறேன். நீங்கள் உங்களை மற்றவர்களிடம் இருந்து பிரித்து பார்ப்பதால், உங்களுக்கு இதைப்பற்றி தெரியாது. உங்களை மற்றவர்களிடம் இருந்து பிரித்து பார்க்காமல், மற்றவர்களை உங்களைப் போல எண்ண பழகிக்கொள்ளுங்கள்,” என்று கூறினார். அதன் பிறகு, தனக்கு முன்பாக எரிந்துக்கொண்டு இருந்த கற்பூரத் தட்டை எடுத்து, அந்த சீடனிடம் வழங்கி, “இந்த ஆரத்தியை ஏற்றுக்கொண்டு, இங்கிருக்கும் அனைவரையும் சிவபெருமானாக நினைத்து, அவர்களை வணங்குங்கள்,” என்றார். §

ஒரு முன்னறிவப்பின்றி, தனக்கு நெருக்கமான சீடர்களின் வீடுகளுக்கு செல்வது சிவயோக சுவாமியின் வழக்கமாக இருந்தாலும், அந்த குடும்பத்தினர் அவரை மகிழ்ச்சியுடன் உபசரித்தனர். அவர் குறுகிய காலம் தங்களுடன் தங்கினாலும், அது தங்கள் வாழ்நாளில் கிடைத்த பாக்கியமாக அந்த குடும்பத்தினர் கருதினார்கள். அவர் வழக்கமாக மதிய உணவிற்கு முன்பாக வந்து, சில சமயங்களில் இரவிலும் தங்கிவிட்டு செல்வார். சில அன்பர்கள், உறுதியாக இல்லாவிட்டாலும், சுவாமி தங்கள் வீட்டிற்கு வருவார் என்ற நம்பிக்கையில் தினமும் உணவை சமைத்து வைப்பார்கள். தனது குடும்பத்துடன் யோக சுவாமிக்கு இருந்த தோழமையை பற்றி, ரத்னா மா நவரத்தினம் தனது புத்தகம், *சேயின்ட் யோக சுவாமி அண்ட் தி டெஸ்ட்டமெண்ட் ஆஃப் ட்ருத்* என்ற புத்தகத்தில் விளக்கியுள்ளார். §

குருவிடம் இருந்த ஒளியின் வட்டப்பாதையில் எங்கள் பெற்றோர்கள் சுற்றிக்கொண்டு இருந்ததை நாங்கள் பார்த்த போது—“என்னிடம் நீ உன்னையே கொடுத்து, என்னை கடவுளிடம் அழைத்து சென்றாய். சங்கரா, இதில் யாருக்கு ஆதாயம் அதிகம்?”—சைவ சமய குருவரான மாணிக்கவாசகரின் பிரபலமான வேண்டுதலின் பொருள், எங்களுக்குள் லேசாக தோன்றியது. முப்பதுகளின் ஆரம்பத்தில், எங்கள் தகப்பனாரின் வற்புறுத்தலின் பேரில், நாங்கள் தீவிரமாக வாசிக்க ஆரம்பித்த *திருவாசகம்*, எங்களது ஆன்மீக வேட்கையில், கடவுள்-குருவின் வலுவான முக்கியத்துவத்தை தெளிவுபடுத்த உதவியது. §

மே 1939, கடைசி வாரத்தில் சுவாமி ஒரு மிகப்பெரிய ஒளிக்கதிராக பிரகாசிக்கும் வரை, எங்களது இந்த நட்புறவுகளில், அவர் எங்களது வாழ்க்கையை தூரத்தில் இருந்து தொடர்ந்து வலுவாக்கி வந்தார். எங்களது தகப்பனார், “செல்லியம் பதி" என்ற அவரது புதிய வீட்டின் கதவிற்கு முன்பாக இருந்த ஒரு கற்களின் குவியலின் மீது தடுக்கி கீழே விழுந்தார். அதனால் அவர் கணுக்காலில் சுளுக்கு மற்றும் உடல் சோர்வைத் தவிர, பலத்த காயம் ஏதும் இல்லாமல் தப்பித்தார். ஆனால் அவர் இந்த சிறிய விபத்தால் ஏப்ரல், 1939 வீட்டுக்குள்ளேயே அடைபட்டு இருந்தார். சித்திரா-பௌர்ணமி விரதத்தை மேற்கொண்ட பிறகு, அவருக்கு காய்ச்சலுடன் சிறிது வயிறு கோளாறும் இருந்தது, மற்றும் பதினைந்து நாட்களுக்கு பிறகு அவரது உடல்நிலை எந்த முன்னேற்றமும் இல்லாமல், மோசமும் அடையாமல் நிலையாக இருந்தது. §

மே 28, மாலை நேரத்தில், எங்கள் தகப்பனார் தாயையும் குழந்தைகளையும் அழைத்து, அனைத்து மின் விளக்குகளும் எரிய வேண்டும் என்றும் அவருக்கு அருகில் இருந்த ஒரு நாற்காலியில் ஒரு வெள்ளை நிறத்துணியை போர்த்தி வைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, நாங்கள் பாடவேண்டும் என்று உத்தரவிட்டார். சிறிது நேரத்தில் வரவிருப்பவரின் காலில் விழுந்து நாங்கள் வணங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். எங்களுக்கு அவரது பேச்சின் அர்த்தம் புரியவில்லை. அதை புரிந்துகொள்வதற்கு கடினமாக இருந்தாலும்,

நாங்கள் அவரது உத்தரவை அதிகம் யோசிக்காமல் ஏற்றுக்கொண்டு காத்து இருந்தோம்.§


*சந்தியா* [அந்தி நேரம்] நேரத்தில், வைகாசி மாதத்தின் வளர்பிறை நிலவு தனது தெளிவான ஒளியை வீசிய போது, அவர் தனது அக்குளில் தனது குடையை மடித்து வைத்துக்கொண்டு, தோட்டத்து கதவை திறந்தார். சின்னதம்பி என்று சுவாமி எனது தகப்பனாரின் செல்லப்பெயரை அழைத்த போது, அவரது குரல் எதிரொலித்தது, மற்றும் கண்களில் கண்ணீருடன் எனது தாய் அவரை தரையில் விழுந்து வணங்குவதை பொருட்படுத்தாமல், சுவாமி நேராக எனது தகப்பனாரின் படுக்கையறைக்கு சென்றார். அதன் பிறகு நடந்த ஒரு இனிமையான இணக்கம் மிகவும் புனிதமாக இருந்ததால், அதை முழுமையாக விளக்குவது மிகவும் கடினமாக இருக்கிறது. §

எனது தகப்பனார் சுவாமியை பார்த்ததும், படுக்கையில் இருந்து எழுவதற்கு முற்பட்டார், ஆனால் குரு சோர்வாக வணங்கிக்கொண்டு இருந்த இரு கைகளையும், தனது நெஞ்சில் வைத்துக்கொண்டு பாட ஆரம்பித்தார். அது சிவபெருமானிடம் ஐக்கியமாகும் நபர்களுக்காக காத்து இருக்கும் பேரானந்தத்தை தெரிவிக்கும் பாட்டாக இருந்தது. அவரது குரல் காலத்தை கடந்து அநாதியாக எதிரொலித்தது. அதன் பிறகு அவர் படுக்கைக்கு அருகில் இருந்த மேசையில் இருந்த சங்கில் இருந்து விபூதியை எடுத்து, எனது தகப்பனாரின் நெற்றியில் மென்மையாக பூசினார். இந்த இனிமையான இணக்கத்தால், எங்களது தகப்பனாரின் முகம் பிரகாசித்ததை எங்களால் பார்க்க முடிந்தது:§

அது ஒரு பிரிவாக இல்லை. அது ஒரு வாக்குறுதியின் நிறைவேற்றமாக, சிவபெருமானின் ஆழகான பேரின்பத்தில் இருந்த உறுதிப்பாட்டிற்கு உத்தரவாதம் தருவதாக இருந்தது! அவர் படுக்கையில் இருந்து எழுந்திருத்து, எங்களை வியக்க வைத்தார். நோயால் படுத்த படுக்கையாக இருந்த எந்த ஒரு நபர் உயிர் துறக்கும் போதும், ஒரு வார்த்தை கூட ஆறுதலாக சொல்லாதது எங்களுக்கு விசித்திரமாக இருந்தது. அது அவரது வழக்கமாக இருந்தது. *ஒரு பொல்லாபும் இல்லை!* [“தவறாக ஒன்றும் இல்லை!”] நாம் சும்மா இருக்கவேண்டும் என்பது அவரது விருப்பமாக இருந்தது. குருவின் அருள் வழங்கிய இந்த அற்புதமான நாடகக் காட்சியில் நாங்கள் வெறும் பார்வையாளர்களாக இருந்தோம்! எனது தகப்பனார் 30 மே 1939 அன்று இரவு சமாதி அடைந்தார். §

மர்மத்தின் மூலமாகவும், தொடர் ஈர்ப்பாக விளங்கிய சிவ ஞானம் என்கிற கடவுளின் அருளுடன் இருந்த குருவைப்பற்றிய, நமது சந்தேகங்கள் அனைத்தையும் தெளிவுபடுத்தி, நமது நம்பிக்கையை அதிகரிப்பதற்கு, அது ஒரு அறிமுகமாக விளங்கியது. ஒரு புதிய தொடக்கமாக விளங்கிய அந்த காலகட்டத்தில், குருவின் அருள் குவியலில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு, நாங்கள் மெதுவாக

கற்றுக்கொண்டோம். அனைத்து தடைகளும் விலகின. அந்த காந்த ஈர்ப்பு சக்தி தடுக்க முடியாமல் வலுவாக இருந்தது; மற்றும் எங்களது வாழ்க்கையின் மதிக்க முடியாத பொக்கிஷத்தின் வேதனை அளிக்கும் பிரிவுக்கு பிறகு, அனைத்திலும் குரு இருக்கிறார் என்ற உணர்தல் எங்களுக்குள் உதயமானது. §




*தனது பரமகுருவான கடையிற்சுவாமி, சந்தை வழியாக நடந்து செல்வதை விரும்பியதை போல, யோக சுவாமியும் 1940 களில் தயாரிக்கப்பட்ட கருப்பு அம்பாசடரில் அடிக்கடி பயணம் செய்தார். அவர் அதை தீபகற்பம்*

*முழுவதையும் சுற்றி வருவதற்கு அல்லது வெகு தொலைவில் இருந்த ஒரு நெருக்கமான அன்பரின் வீட்டிற்கு முன்னறிவப்பின்றி செல்வதற்கு பயன்படுத்தினார்.*

........................§

அதன் பிறகு ரத்னா மா நவரத்தினம் மற்றும் அவரது கணவர் திருநாவுக்கரசுவும், சுவாமியின் நெருக்கமான சீடர்களாக இருந்தனர். அவர்களது வீடு யோக சுவாமியின் ஆசிரமத்திற்கு அருகாமையில் இருந்தது, மற்றும் அவர் அதற்கு தினமும் சென்று வந்தார். திரு வழக்கமாக யோக சுவாமியின் வாகன ஓட்டியாக இருந்தார். அவர் தனது கருப்பு அம்பாஸடரை, சுவாமிக்கு தேவைப்படும் போது எடுத்து செல்ல, தனது சிறிய வாகனக்கூடத்தில், மெருகூட்டி எப்போதும் தயார் நிலையில் வைத்து இருந்தார். ஒரு சிறந்த எழுத்தாளராகவும் கல்வியாளராகவும் இருந்த ரத்னா மா நவரத்தினம், சுவாமியுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், அவர் பேசுவதை தன் காதால் கேட்ட ஒவ்வொரு சொல்லையும் எழுத, மொழியில் இருந்த தனது புலமையை பயன்படுத்திக் கொண்டார். அன்றாட நிகழ்வுகள் அவரை சுற்றி நடந்து கொண்டிருக்க, அவர் அந்த குடிசைக்கு காலையிலும் மாலையிலும் சென்று பின்புறத்தில் அமைதியாக அமர்ந்து கொள்வார். அவர் தன் வீட்டிற்கு திரும்பியதும், சுவாமியை தரிசிக்க வந்தவர்களின் பெயர்களுடன், நடந்த உரையாடல்களை மற்றும் குறிப்பாக யோக சுவாமியின் *உபதேசங்களை,* மிகவும் நுணுக்கமாக பதிவு செய்துகொள்வார். §

புகைவண்டி நிலையப் பொறுப்பாளர் எஸ்.வினாசித்தம்பி தனது அனுபவங்களை விளக்குகிறார்.§

சுவாமி எங்கள் வீட்டிற்கு வந்து தங்கியிருந்த போது, அவர் சிலசமங்களில் நீண்ட நேரத்திற்கு ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்து இருப்பார். நான் வீட்டிற்கு வேலையில் இருந்து திரும்பி வரும் போது, தியானத்தின் தலைவனைப் போல பத்மாசனந்தில் அமர்ந்து இருந்த அவரை கண்டதும் நான் பரவசமடைவேன். அதிகாலையில் நாங்கள் எழுந்ததும், சுவாமி படுக்கையில் படுத்து இருப்பதை பார்க்கும் போது, அவர் அமைதியின் தலைவனாக தோன்றினார். அந்த உருவத்தை பார்க்கும் போது, நாங்கள் கடவுளை பார்த்துக்கொண்டு இருப்பதைப் போன்ற ஒரு உணர்வை என்னால் உணர முடிந்தது, மற்றும் அது “நான் கடவுள்" என்ற அபூர்வமான மந்திரத்தை நிரூபிப்பதாக இருந்தது. §

சுவாமி எங்கள் வீட்டில் இல்லாத போதும், அவரது தெய்வீக உருவம் மற்றும் முனிவரின் வார்த்தைகளை நினைவுகூர்வது எங்கள் வழக்கமாக இருந்தது. “கடவுளை கடவுளின் மூலமாக தான் பார்க்க முடியும்,” என்று அவர் ஒரு முறை கூறியதை, நான் நினைவுகூர்ந்தேன். நான் இதை நினைவுகூர்ந்த போது, உள்ளேயும் வெளியேயும் மற்றும் எங்கும்

தொடர்ந்து கடவுளை கண்ட யோக சுவாமியை விட சிறந்த கடவுள் இல்லை என்ற நம்பிக்கை மனதில் தோன்றியது. §

நான் இந்த மனநிலையுடன், சுவாமியை கொழும்புத்துறை ஆசிரமத்தில் சென்று சந்தித்த போது, அவர் சில சீடர்களுக்கு மத்தியில் அமர்ந்து இருந்தார். எந்த வித முன்யோசனையும் இல்லாமல், நான் அவரது காலடியில் விழுந்து வணங்கினேன். “மக்கள் முன்னிலையில் வணங்குவது முக்கியமில்லை. தரையில் விழுந்து வணங்குவது முக்கியமில்லை. மனதளவில் வழிபடுவதே போதுமானது,” என்று அவர் கூறியிருந்தாலும், அந்த தினத்தில் இருந்து, அவர் மகாசமாதி அடைந்த நாள் வரை, சுவாமியை தரிசிக்க சென்ற போதெல்லாம், அவரை வழிபடவும் செய்தேன். §

ஒரு நாள் சுவாமி என்னை அழைத்து, “எந்த செயலை கடவுளால் செய்ய முடியாது?” என்று கேட்டார். அந்த கேள்வியை கேட்டதும், எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. கடவுள் சர்வவல்லமை படைத்தவராக இருக்கிறார் என்றால், அவரால் முடியாதது என்று ஏதாவது இருக்கிறதா என்ன? “நீங்கள் இப்போது பதில் அளிக்க வேண்டாம். இரண்டு நாட்கள் கழித்து வரும் போது, பதில் அளித்தால் போதும்,” என்று அமைதியாக கூறினார். நான் வீடு திரும்பிய போது, அந்த கேள்வி எனது மனதில் எதிரொலித்துக்கொண்டு இருந்தது. என்னால் வேறு எதையும் சிந்திக்க முடியவில்லை. அப்போது மகாபாரதத்தில் படித்த ஒரு பகுதி, என் நினைவுக்கு வந்தது. போரை எப்படி தவிர்ப்பது என்று கிருஷ்ணர் கேட்ட போது, “நான் உங்களை கட்டி வைத்தால், இந்த போரை தவிர்க்க முடியும்,” என்று சகாதேவன் பதில் அளித்தான். “என்னை கட்டி வைப்பதா? அது எப்படி சாத்தியமாகும்?” என்று கிருஷ்ணர் கேள்வி கேட்டார். அதற்கு சகாதேவன், “அன்பின் சங்கிலியால், எனது இறைவனை என்னால் கட்டி வைக்கமுடியும்,” என்று பதில் அளித்தான். இது சுவாமியின் கேள்விக்கு பொருத்தமான பதிலாக இருக்கும் போல் தோன்றியது. §

இரண்டு நாட்கள் கழித்து, நான் யோக சுவாமியை பார்க்க சென்றபோது, “ஒரு பக்தனின் அன்பில் கடவுள் சிறைப்பட்டு இருக்கும் போது, அவரால் தன்னை விடுவித்துக் கொள்ள முடியாது,” என்று பதில் அளித்தேன். அதைக்கேட்ட சுவாமி, “அது எப்படி சாத்தியம் ஆகும். அன்பும் கடவுளும் வெவ்வேறாக இருந்தால் தான் உங்களால் கடவுளை கட்டி வைக்க முடியும். கடவுளை அன்பில் இருந்து பிரிக்க முடியாது. அன்பு தான் கடவுள்,” என்று கூறினார். அவர் மேலும், “நம்மிடம் இருந்து கடவுளால் தம்மை பிரித்துக்கொள்வது இயலாத காரியம். அவரால் ஒரு கணத்திற்கும் நம்மை விட்டு பிரிந்து இருக்க முடியாது,” என்று கூறினார். இந்த உத்தியின் மூலம் எனது குரு, கடவுளால் நம்மை விட்டு ஒரு நொடியும் பிரிந்து இருக்க முடியாது என்றும், அவர் நமக்குள் ஆன்மாக்களின் பரமாத்துமாவாக எப்போதும் இருக்கிறார் என்பதையும், என் மனதில் பதிய வைத்தார். அதன் பிறகு சுவாமி எனது கடவுளாக

இருந்ததால், என்னிடம் இருந்து பிரிக்க முடியாத கடவுளாக அவர் இருக்கிறார் என்ற உண்மையின் மீது தியானம் செய்ய தொடங்கினேன். சுவாமியின் ஆசியை பெறும் நாட்டத்தில், ஒருவன் அவருக்கு முன்பாக மாட்டு சாணம் மொழுகிய தரையில் விழுந்தது வணங்கும் போது, "பார், நான் வணங்குவதை பார்," என்று அவர் அடிக்கடி சொல்வார். §

இரண்டாம் உலகப்போரின் தொடக்கத்தில், ஒரு சிறுவனாக இருந்த நாகேந்திரன் என்ற அன்பர், கொழும்பிற்கு அருகில் இருந்த தனது மாமனின் வீட்டிற்கு, சிவயோக சுவாமி மதிய உணவு சாப்பிடுவதற்காக வந்த அனுபவத்தை பற்றி இங்கே விளக்குகிறார். அவர் உலகமே போரில் மூழ்கி இருந்த அந்த கடினமான காலத்தில் இருந்த சூழ்நிலையை பற்றிய ஒரு விளக்கத்துடன் தொடங்குகிறார். §

இங்கிலாந்து மற்றும் ஜெர்மனிக்கு இடையேயான பெரும் போர் 1938 ஆம் ஆண்டில் தொடங்கி இருந்தது. ஜெர்மனிக்கு எதிரான போரில் இங்கிலாந்துடன் பிரான்ஸ் மற்றும் ரஷ்யா சேர்ந்துக்கொண்டது. செக்கோஸ்லோவாக்கியா, போலந்து, ஹாலந்து, நார்வே, சுவீடன் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் மீது ஜெர்மனி மற்றும் இத்தாலி படை எடுத்தது. இங்கிலாந்தும் அதன் நேச நாடுகளும், தங்களையும் மற்ற ஐரோப்பிய நாடுகளையும் காப்பாற்றிக்கொள்ள, ஒரு கடினமான தற்காப்பு போரில் சண்டையிட்டு கொண்டிருந்தன. §

இங்கிலாந்து மற்றும் அதன் நேச நாடுகளுடன் சேர்ந்து போரிடுவதற்கு, ஆஸ்திரேலியா மற்றும் கனடா தனது படைகளை அனுப்பியிருந்தது. இந்த போரில் உதவி செய்ய, இங்கிலாந்தின் குடியிருப்பாக இருந்த இந்தியா, இலங்கை, மடகாஸ்கர் மற்றும் ஆப்ரிக்காவில் இருந்த மற்ற குடியிருப்புக்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டன. முரட்டுத்தனமாக நடந்த போர்கள் மற்றும் நேச நாடுகள் படைகளின் முறியடிப்புக்கள், சிலோனின் தினசரிகளில் தலைப்புச் செய்திகளாக இருந்தன. எனக்கு தெரிந்த வரை, சிலோனில் இங்கிலாந்திற்கு முழுமையான ஆதரவு இருந்தது. ஹிட்லர் மற்றும் முசோலினி எல்லோராலும் வெறுக்கப்பட்ட பெயர்களாக இருந்தன. போர்களை பற்றி கலந்துரையாடி ஆய்வு செய்ய, கொழும்பிற்கு அருகில் கொல்பெட்டியில் இருந்த எங்கள் வீட்டு திண்ணையில், தினமும் மாலை நேரத்தில், என் தந்தையும் அவரது நண்பர்களும் சந்தித்து வந்தனர். அப்போது தான் ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் மீது அமெரிக்கா போர் அறிவித்து இருந்தது மற்றும் அது இங்கிலாந்து மற்றும் அதன் நேசநாடுகளுடன் சேர்ந்து போரிடுவதற்காக, ஐரோப்பாவிற்கு ஜெனரல் ஐசனாவரின் தலைமையில் படைகளை அனுப்பி இருந்தது. §

எனது தந்தை நண்பர்களிடம், "அமெரிக்கா போரில் நுழைந்து விட்டது. இனி அதன் ஆற்றல்மிக்க படைகள், ஜெர்மனி மற்றும் அச்சு நாடுகளின் கூட்டணியை வீழ்த்தி விடும்," என்று கூற, அதை அவர் நண்பர்களும்

ஆமோதித்தனர். ஆனால் அந்த போரால் சிலோன் பெருமளவு பாதிக்கப்படவில்லை. ஏழு-எட்டு வயது சிறுவர்களாக இருந்த நாங்கள், பின்னால்  திரைமறைவில் இருந்துக்கொண்டு, பெரியவர்கள் பேசும் இந்த விவாதங்களை, மிகவும் கவனமாக கேட்டுக்கொண்டு இருந்தோம். §

எனது மாமா இராமநாதன் சைவ உணவு உண்ணும் பழக்கமுடையவர். அவர் வீட்டு வரவேற்பறையில் இந்து துறவிகளின் சுருக்கமான மற்றும் ஆற்றல்மிக்க வாசகங்களை அடக்கிய பெரிய, பச்சை நிற தமிழ் எழுத்து பிரதிகள் சட்டகம் செய்ப்பட்டு தொங்கிக்கொண்டு இருந்தன. “இறைவனிடம்  தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள், அவரிடம் இருந்து என்றுமே விலகி செல்லக்கூடாது,” என்று அதில் ஒரு எழுத்துப்பிரதி குறிப்பிட்டது. நான் அங்கே சென்ற போது, எனது மாமாவும் மற்ற பெரியவர்களும், யோக சுவாமியை பற்றி அமைதி மற்றும் மரியாதை கலந்த குரல்களில் பேசினார்கள். §

நான் என் மாமா வீட்டிற்கு சென்றிருந்த போது, யோக சுவாமியை முதல் முறையாக பார்த்தேன். யோகர் சராசரி உயரம் மற்றும் நல்ல உடல் வாகுடன் இருந்தார். அகன்ற நெற்றியில் இருந்து, பின்னோக்கி சென்ற நீளமான நரைத்த முடி, அவரது தலைக்கு பின்னால் முடிந்து விடப்பட்டு இருந்தது. அவர் கழன்று கொள்ளும் தனது தலைமுடியை எப்போதாவது அவிழ்த்து, மீண்டும் உறுதியாக கட்டி வைப்பார். வழக்கமாக தெய்வீக புருஷர்கள் பூசி இருக்கும் திருநீறு, அவரது நெற்றியிலோ அல்லது உடலிலோ தென்படவில்லை. அவரது கழுத்தை உருத்திராட்ச மாலை அல்லது மலர்மாலைகள் அலங்கரிக்கவில்லை. அவர் எளிமையாகவும் அலங்காரம் இல்லாமலும் இருந்தார். இந்த எளிமையின் முக்கியத்துவம் எனக்கு  பிற்காலத்தில் தெரிய வந்தது. §

அவர் வருகை தரும் போது, அவருக்கும் எனது மாமா அழைப்பு விடுத்திருந்த அன்பர்களுக்கும் மதிய உணவு பரிமாறப்படும். பெரிய வரவேற்பறையின் தரையில் கோரை பாய்கள் சதுர வடிவில் விரிக்கப்பட்டு இருக்கும். முதலில் சுவாமிக்கு ஒரு வாழை இலை வைக்கப்பட்டு, பின்னர் அன்பர்களுக்கு வைக்கப்படும். அந்த இலைகளில், மிளகாய் அல்லது மற்ற காரமான சுவையூட்டிகள் இல்லாத சுத்தமான காய்கறிகளுடன், வெள்ளை நிறத்தில் ஆவி பறக்கும் சாதம் பரிமாறப்பட்டன. யோகர் முதலில் தனது இலையில் சில தண்ணீர் துளிகளை தெளித்து, முறைப்படி மந்திரங்கள் ஓதி உணவை சாப்பிட ஆரம்பிப்பார். அவர் சாப்பிட்ட ஆரம்பித்த பிறகே, மற்ற அன்பர்கள் சாப்பிட ஆரம்பிப்பார்கள். §

அவர் விரைவாக ஒரு சில நிமிடங்களில் சாப்பிட்டு முடித்து விடுவார். அவர் அதன் பிறகு அந்த இடத்தில் இருந்து எழுந்து, வெளியே இருந்த தோட்டத்திற்கு, ஒரு *வெங்கல* பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து சென்று, கையை அலம்பிக்கொள்வார். இதற்கிடையில் அன்பர்களும் சாப்பிட்டு முடித்து தங்கள் கைகளை அலம்பிக்கொள்வார்கள். நாங்கள் எப்போதும்

கைகளை அலம்பிக்கொண்டு, பாரம்பரிய முறைப்படி, கைகளை கொண்டு சாப்பிட்டோம். நாங்கள் உணவு சாப்பிடுவதற்கு எப்போதும் கரண்டி மற்றும் முள்கரண்டியை பயன்படுத்தியது இல்லை. §

அந்த பிறகு அந்த அறையில் சுத்தம் செய்யப்பட்டு நன்றாக பெருக்கப்படும். யோகர் ஒரு பாயில் அமர்ந்து கொள்வார் மற்றும் அவரது மெய்யறிவு போதனைகளை கேட்க, அவரை சுற்றி அன்பர்கள் அமர்ந்து கொள்வார்கள். அத்தகைய பிரசங்கங்கள் சுருக்கமாக இருந்தன, மற்றும் அவர் சிறிது நேரம் கழித்து திடீரென்று கிளம்பி சென்று விடுவார். அத்தகைய ஒரு வருகையின் போது, சிறுவர்களாக இருந்த நாங்கள் மாடியில் இருந்தோம். நாங்கள் கீழே வந்தால், அவர்களுக்கு தொல்லையாக இருப்போம் என்பதை நாங்கள் அறிந்து இருந்தோம். நாங்கள் மாடியில் இருந்தால், எங்களை ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் இருக்காது. எங்களுக்கு இந்த நடவடிக்கை தான் பொருத்தமானது மற்றும் தேவையானது என்பதை நாங்கள் அறியும் அளவிற்கு, அந்த சூழ்நிலை விஷேசமானதாக இருந்தது. §

யோக சுவாமி அனைத்து மதங்களையும் மதித்து, மற்ற நம்பிக்கைகளை பற்றி விமர்சிக்காவிட்டாலும், தமிழ் சைவர்களுக்கு மத்தியில் சைவ சமய கோட்பாடுகளை காப்பாற்றி ஊக்குவிப்பதில் உறுதியாக இருந்தார். இது தொடர்பாக Dr. எஸ். இராமநாதனின் கருத்து: §

சைவ சமயத்தின் சடங்குகள் மற்றும் அதன் வழிபாட்டு முறைகளை சுவாமி தீவிரமாக கடைப்பிடித்து வந்தார். கோயில்கள் மற்றும் வீடுகளில் முறையாக பூஜைகளை செய்து, திருவிழாக்களில் பக்தி மற்றும் சிரத்தையுடன் கலந்து கொண்டால், அந்த செயல்கள் அந்த தனிநபர் மற்றும் உலகம் முழுவதற்கும் நன்மைகளை செய்கின்றன என்று அவர் கற்றுத்தந்தார். இது தொடர்பாக சுவாமி பின்வரும் சம்பவத்தை நினைவுகூர்ந்தார். யாழ்ப்பாணத்தில் டைக் என்ற ஒரு அரசாங்க பிரதிநித இருந்தார். அவர் வறட்சி காலத்தில், பூநகரி சென்றார். அங்கே நீர்பாசன வசதிகள் எதுவும் இல்லை. அவர் ஊர் மக்களிடம், “நீர்பாசனம் இல்லாமல், நீங்கள் எவ்வாறு சாகுபடி செய்கிறீர்கள்?” என்று கேட்டார். கூட்டத்தில் ஒருவர், பிள்ளையார் கோயிலை காண்பித்து, “நாங்கள் பிள்ளையாரை வணங்கினால், மழை வரும்,” என்று கூறினார். அந்த கோயில் பூசாரி குளித்து விட்டு, சடங்கு சார்ந்த அனைத்தையும் பின்பற்றி, கோயிலுக்கு சென்று மழையை வேண்டி வழிபட்டார். அதன் பிறகு பெய்த பெரிய மழையில், அந்த ஊரே வெள்ளக்காடனது. டைக் தண்ணீர் வடிவதற்கு மூன்று நாட்கள் காத்து இருந்தார். அதன் பின்னரே அவரால் யாழ்ப்பாணம் திரும்ப முடிந்தது. §

## சைவ சமயத்தை வலுப்படுத்துதல்

சுவாமி பாரம்பரிய பழக்கங்களை முறையாக கடைபிடிப்பதை ஊக்குவித்து புத்துணர்வு வழங்க  கடுமையாக உழைத்தார். அவரது ஆசிரமத்தில், அந்தி சாயும் நேரத்தில் பெரும்பாலும், மங்களகரமான குத்து விளக்கு ஏற்றப்பட்டு இருக்கும் மற்றும் அவருக்கு முன்பாக மாட்டு சாணம் மொழுகிய தரையில் அரைவட்ட வடிவில் அன்பர்கள் அவரை பார்த்து உட்கார்ந்து, சில சமயங்களில் *திருமுறை* போன்ற உரைகளில் இருந்தும், மற்றும் வேறு சில சமயங்களில் அவரது நற்சிந்தனை பாடல்களில் இருந்தும் தெய்வீக பாடல்களை சத்தமாக பாடுவார்கள். எல்லா குழந்தைகளும், குறிப்பாக இசையை கற்கும் அனைவரும், பழங்கால பாடல்களை கற்கவேண்டும் என்று சுவாமி வலியுறுத்தினார். “ஆற்றல்மிக்க *திருமுறையை* படித்து பாடாமல், மற்ற சாதாரண பாடல்களை பாடுவதில் என்ன பயன்?” என்று அவர் சவால் விட்டார். ச. அம்பிகைபாகன் வழங்கும் குறிப்பு: §

> சைவ சமயத்தை ஊக்குவிக்க சுவாமி தனிப்பட்ட முறையில் மேற்கொண்ட பல நடவடிக்கைகளில், சைவ சித்தாந்த தத்துவ வகுப்புகள் நடத்துவது மற்றும் *திருமுறையை* முறையாக பாராயணம் செய்வதற்கு பயிற்சி வகுப்புகள் நடத்துவது மற்றும் புராண காலத்து பாடல்கள் மற்றும் கதை சொல்லுதலை கற்றுத்தந்து, அதற்கு புத்துயிரை வழங்குவதும் அடங்கும். சுவாமி கோயில்கள் மற்றும் ஆசிரமங்களில் *புராணங்களை* தொடர்ந்து படித்து வரவேண்டும் என்று விரும்பினார். *கந்தபுராணம்* மற்றும் *பெரியபுராணத்தை* வாசிப்பதால், தமிழ் சமூகத்தை வருத்தும் இன்னல்கள் அனைத்தும் மறைந்துவிடும் என்று சுவாமிகள் கூறி வந்தார். §

எல்லோரும் சைவத்துறவிகளை பின்பற்றுவதை ஊக்குவிக்க, சுவாமி மேற்கொண்ட இன்னொரு வழியைப் பற்றி வி. முத்துகுமாரசுவாமி நினைவுக்கூர்கிறார்: §

> 1945 வருடம் வாக்கில், வண்ணார்பண்ணையின் வைத்தீஸ்வர வித்தியாலயத்தை, சுவாமி விபுலானந்தா உயிர்ப்பிக்க விரும்பிய போது, முதல் நன்கொடையாக யோக சுவாமி ஒரு ரூபாயை வழங்கி, அந்த திட்டத்திற்கு தனது ஆசிகளையும் வழங்கினார். ஒரு பெரிய ஆலமரமாக வளர்ந்துள்ள இந்த கல்வி நிறுவனத்தின் நிழலில், பல மாணவர்கள் வலுவான சமய அடிப்படையுடன் ஒரு முழுமையான கல்வியை கற்று வருகிறார்கள். மக்களை நான்கு சைவ சமய குரவர்களின் நேர்மையான நோக்கங்களை பின்பற்ற ஊக்குவித்து, அதன் மூலம் இந்து சமயத்திற்கு புத்துயிர் அளிக்க வேண்டும் என்று சுவாமி விரும்பினார். மேலும் அவர் வண்ணார்பண்ணை சிவன் கோயிலின் கதவுகள் மிகவும் தாழ்ந்தப்பட்ட சமுதாயத்திற்கு திறக்கப்பட்டதை கேள்விப்பட்டதும் பெருமகிழ்ச்சி அடைந்தார். §

கொழும்பில் எஸ். சண்முகசுந்தரம் தனது அனுபவத்தை பகிர்கிறார்:§

ஒவ்வொரு இந்துவின் வீட்டிலும் ஒரு முறையான பூஜை அறை இருப்பது முக்கியம் என்று சுவாமி வலியுறுத்தினார். புதிதாக கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு புதிய மற்றும் பிரத்யேகமான பூஜை அறையை சேர்க்க வேண்டும் என்று அவர் பரிந்துரைத்தார். இந்த சிறிய அறிவுரை திரு. வைரமுத்து மனதில் நன்றாக பதிந்து இருந்தது. 1932 ஆம் ஆண்டில், கொழும்பில் தனக்கும் தனது குடும்பத்திற்கும் புதிய வீட்டை கட்டும் போது, தனது வீட்டின் மத்தியில் ஒரு பெரிய அழகான பூஜை அறையை சேர்க்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். §

அந்த வீடு காலப்போக்கில் கட்டி முடிக்கப்பட்டது, மற்றும் அவர் அந்த புதிய வீட்டிற்கு ஒரு குறிப்பிட்ட தேதியில் குடிபுக இருந்தார். அவர் அந்த தேதியில் மாலை 6 மணியளவில் நடக்கவிருந்த வரவேற்பு நிகழ்ச்சிக்கு பல நண்பர்கள் மற்றும் சொந்தங்களை அழைத்து இருந்தார். சுமார் 3 மணியளவில் அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்து இருந்தன மற்றும் திரு. வைரமுத்து தனது வீட்டின் முன்பாக அமர்ந்து கொண்டு, “தற்போது சிவயோக சுவாமி இங்கே வந்து, வீட்டை ஆசிர்வதித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்,” என்று மனதில் நினைத்துக்கொண்டு இருந்தார். §

என்ன அதிசயம்! அவர் அவ்வாறு நினைத்துக்கொண்டு இருக்கும் போது, வீட்டின் முன்பாக ஒரு வாகனம் வந்து நின்றது மற்றும் அதில் இருந்து யோக சுவாமி வெளிவந்தார். திரு. வைரமுத்து வாகனத்தை நோக்கி ஓடி சென்று, சுவாமியை வரவேற்று தனது வீட்டிற்குள் அழைத்து சென்றார். “என்னிடம் அதிக நேரம் இல்லை. நான் இந்த வழியாக சென்று கொண்டு இருந்த போது, வீட்டை சில நிமிடங்கள் பார்த்துவிட்டு செல்லலாம் என்று மனதில் தோன்றியது. வீட்டின் பூஜை அறையை நான் பார்க்க வேண்டும், அது எங்கே இருக்கிறது?” என்று சுவாமி கேட்டார். அவர் பூஜை அறைக்கு அழைத்து செல்லப்பட்டார், மற்றும் அங்கிருந்து அவர் வீடு முழுவதற்கும் தனது நல்லாசிகளை வழங்கினார். அவர் விநாயகர், முருகன் மற்றும் சிவபெருமானுக்கு கற்பூர ஆரத்தியை காண்பித்து, தனக்கு வழங்குவதற்கு பிரசாதம் ஏதாவது இருக்கிறதா என்று திரு. வைரமுத்துவிடம் கேட்டார். திரு. வைரமுத்து தன்னிடம் இருந்த அனைத்தையும் வழங்கினார், ஆனால் சுவாமி ஒவ்வொரு பண்டத்தில் இருந்தும் ஒன்றை மட்டும் எடுத்துக்கொண்டு, “நான் வந்த வேலை முடிந்தது,” என்று கூறி பூஜை அறையையும் வீட்டியையும் விட்டு கிளம்பி, வாகனத்தில் ஏறி புறப்பட்டார்.§

விலங்குகளை பலி கொடுக்கும் சடங்கை சுவாமி எதிர்த்தார். இந்த சடங்கு கிராமத்தில் இருந்த சிறிய கோயிலில் அன்றைய வழக்கமாக இருந்தது. அவர் அதற்கு எதிராக வாதாடி, எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்தினார் என்பதையும் Dr. இராமநாதன் நினைவுக்கூர்கிறார். §

எங்கள் கிராமத்து நெல் வயல்களுக்கு மத்தியில் ஒரு பழைய ஐயனார் கோயில் இருந்தது. அந்த கோயிலில் ஒவ்வொரு வருடமும் பொங்கல்

பண்டிகையின் போது, மக்கள் அதிக அளவில் விலங்குகளை பலியிடுவார்கள். ஆடுகளையும்  சேவல்களையும் கொன்று, இந்த கிராமத்து காவல் தெய்வத்திற்கு காணிக்கையாக கொடுக்கப்பட்டன. ஒரு நாள் அனுநாகத்தில் இருந்து திரும்பிய சுவாமி, கோயிலில் பலியாக பெருமளவில் ஆடுகளும் சேவல்களும் வழங்கப்பட்டிருப்பதை குறிப்பிட்டு, “நான் உங்கள் கிராமத்தில் நிறைய சடலங்களை பார்த்தேன்,” என்று என்னை பார்த்து கூறினார். அந்த விலங்குகள் மற்றும் பறவைகள் மீது சுவாமிக்கு இருந்த இரக்கத்தின் சக்தி, இறுதியாக இந்த பலி வழங்கும் பழக்கத்தை நிறுத்தியது. அந்த பகுதியை சேர்ந்த மக்கள் தீவிரமாக எதிர்த்த பின்னரும், இந்த பழக்கத்தை நிறுத்த மறுத்த கோயில் நிர்வாகிகள், இப்போது தானாக முன்வந்து நிறுத்தியுள்ளனர். §

### சகிப்புத்தன்மை மற்றும் இரக்கம்

சுவாமிக்கு முதுமையில் சுருட்டு புகைக்கும் பழக்கம் இருந்தாலும், அவருக்கு மது அருந்தும் பழக்கம் இருந்ததில்லை மற்றும் அவர் சைவ உணவை மட்டுமே சாப்பிட்டு வந்தார். இருந்தாலும், அவர் வாழ்க்கையின் மீது தார்மீக அணுகுமுறையை பயன்படுத்தவில்லை. இது தொடர்பாக ஒரு அன்பர் சில சம்பங்களை நினைவுக்கூர்கிறார்: §

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மதுவிலக்கு போராட்டத்தில் பல அன்பர்கள் தீவிரமாக பங்குபெற்றார்கள். அதில் ஒரு அன்பர் ஒரு பெரிய மதுபானக் கடையை வைத்து இருந்து, அதில் வியாபாரமும் நடத்தி வந்தார். சுவாமி யாரையும் பாவம் செய்பவராக என்றுமே கருதவில்லை என்பதால், அவருக்கு இதில் தவறு எதுவும் தெரியவில்லை. சிவபெருமான் என்கிற சங்கிலியில் ஒன்றாக கட்டப்பட்டு இருக்கும் முத்துக்களாக சுவாமி அனைவரையும் கருதினார். இதைப்போல குடி பழக்கம் இருப்பவர்களையும் பிரித்து பார்க்கக்கூடாது என்பதை சுவாமிக்கு நெருக்கமான சீடர்களில் ஒருவர் தெரிந்துகொண்டார். §

அந்த நபர் ஒரு பள்ளி முதல்வராக இருந்தார் மற்றும் அந்த பள்ளியின் வளர்ச்சிக்கு தாராளமாக உதவியவர்களுடன் மிகவும் நட்புடன் பழகினார். ஆனால் ஒரு தீவிரமான ஒழுக்கசீலராக இருந்ததால், தனது நண்பருக்கு  அதிகமாக மதுபானம் குடிக்கும் பழக்கம் இருக்கிறது என்பதை அறிந்ததும், அவருடனான உறவுகளை துண்டித்துக்கொண்டார். ஆனால் தனது முன்னாள் நண்பர் பெருமளவு நன்கொடைகளை கொடுத்து கட்டிய ஒரு பள்ளிக்கு திறப்புவிழா ஏற்பாடு செய்யவேண்டிய தருணம் வந்த போது, அவர் செய்வதறியாது தவித்தார். தனது நண்பரை பற்றிய சிந்தனை தன்னை வருத்திக்கொண்டு இருக்க, அவர் சுவாமியை நாடி சென்றார். அவர் அந்த பள்ளி முதல்வரை வரவேற்று, “சரி நான் சொல்வதை கேளுங்கள். நமக்கு குடிகாரர்கள் சகவாசமும் தேவை. கெட்டவனாக கருதப்படும் ஒரு மனிதன் இடத்திலும், மகாத்மா

> காந்தியிடம் இல்லாத சில நற்குணங்கள் இருக்க வாய்ப்பு இருக்கிறது. அதனால் நாம் அத்தகைய நபர்களை நிராகரிக்காமல், அவர்களுடன் சகவாசம் வைத்துக்கொண்டு, யதார்த்தமாக பழக வேண்டும்," என்று கூறினார். §

மக்களை நல்லவர் அல்லது தீயவர் என்று பாகுபடுத்தக் கூடாது என்று சுவாமி தனது சீடர்களிடம் வேண்டிக்கொண்டார்: §

> எல்லோரையும் கடவுளாக பாருங்கள். "இவர் ஒரு திருடன். அவருக்கு பெண் ஆசை இருக்கிறது. அங்கிருப்பவருக்கு குடிப்பழக்கம் இருக்கிறது,"என்று சொல்லாதீர்கள். இவரும் கடவுள், அவரும் கடவுள் மற்றும் கடவுள் எல்லோரின் உள்ளும் விதையாக இருக்கிறார். அதை மட்டும் பார்த்து, மற்றத்தை பொருட்படுத்தாதீர்கள். நீங்கள் நல்லவரா கெட்டவரா? இந்த உலகில் யார் கெட்டவர்? இங்கே யாரும் கெட்டவர் இல்லை. எல்லோரும் நல்லவரும் இல்லாமல், கெட்டவரும் இல்லாமல் இருக்கிறார்கள். §

யோக சுவாமி மக்களை எந்த வித பாகுபாடு இல்லாமல் ஏற்றுக்கொண்டாலும், சமூகத்தில் மதுபானத்தினால் ஏற்படும் தீமைக்கு எதிராக குரல் கொடுக்காமல் இல்லை. 1950 களில், சுவாமி மதுவிலக்கு சட்டங்களுக்கு ஆதரவாக தனது அன்பர்களை ஒன்று சேர்த்தார். §

சுவாமியின் சகிப்புத்தன்மை மற்றும் கருணை நிறைந்த அணுகுமுறையை விளக்கும் வண்ணம், எஸ். சண்முகசந்தரம் இன்னொரு சம்பவத்தை பதிவு செய்கிறார். §

> ஒரு சுவாமியின் ஆசிரமத்தில் சுமார் இருபத்தி ஐந்து அன்பர்கள் கூடியிருந்தார்கள், மற்றும் அவர்கள் எல்லோரும் சுவாமி கூறிய கதைகளை கேட்டுக்கொண்டு இருந்தார்கள். அந்த கதைகள் ஆன்மீக ஞானத்தின் முத்துக்களை உள்ளடக்கி இருந்தன. அப்போது சுவாமி தனது அன்பர்களில் ஒருவர் சிறிது பதட்டத்துடன் இருப்பதை கண்டார். அவர் உடனே அந்த அன்பரை அழைத்து, கையில் எதையோ கொடுத்து, அங்கிருந்து  கிளம்பலாம் என்று கூறினார். அந்த நபர் ஆனந்தமாக சிறிது கூச்சத்துடன் அங்கிருந்து கிளம்பினார். §
>
> "அவர் ஒரு சட்ட வழக்கறிஞர் மற்றும் ஒரு நல்ல சீடரும் கூட. அவர் துரதிஷ்டசமாக மதுபானத்திற்கு அடிமையாகிவிட்டதால், தினமும் மாலையில் மதுபானம் குடிக்கும் பழக்கம் அவருக்கு இருக்கிறது. மதுபானக்கடை ஆறு மணிக்கு மூடிவிடும் என்பதாலும், அவர் தனது வீட்டிற்கு சென்று பணத்தை எடுத்துக்கொண்டு, அந்த கடை மூடுவதற்கு முன்பாக திரும்புவது கடினம் என்பதாலும் பதட்டத்தில் இருந்தார். அதனால் நான் அந்த நபருக்கு தேவையான பணத்தை கொடுத்து, சரியான நேரத்தில் அனுப்பி வைத்தேன். அவர் மதுபானம் குடிக்கவில்லை

என்றால், அவரால் சாப்பிடவோ உறங்கோ முடியாது,” என்று மீதம் இருந்த சீடர்களிடம் சுவாமி கூறினார். §

தனது சீடர்கள் மீது சுவாமிக்கு இருந்த அன்பு மற்றும் அக்கறைக்கு இது ஒரு உதாரணமாக விளங்குகிறது. அவருக்கு ஒரு இரக்க குணமுள்ள இதயம் இருந்தது மற்றும் அவர் ஒருவரை திருத்துவதற்கு முன்பாக, தனது மென்மையான கவனம் மற்றும் அக்கறையின் மூலம் அவர்களின் அன்பு மற்றும் மரியாதைக்கு பாத்திரமாகி விடுவார். அவர் அன்பர்களை மந்திரம் மற்றும் லௌகீக பரிசுகளால் ஈர்க்காமல், அன்பு மட்டும் இரக்கத்தால் ஈர்த்தார். §

சுவாமி தனது நற்சிந்தனையில் “யாரையும் ஒரு பாவி என்று அழைக்காதே" என்ற பாட்டிலில் தனது கண்ணோட்டத்தை தெரிவிக்கிறார்:§

யாரையும் ஒரு பாவி என்று அழைக்காதே!

அந்த பரம்பொருள் நீ காணும் இடமெல்லாம் இருக்கிறார்.

அவரை வரவழைக்க தொடர்ந்து பாடிக்கொண்டும் வணங்கிக்கொண்டும் இரு.


ஒரு குழந்தை போல உனது வழிபாட்டை வழங்கு.

கோபம் மற்றும் பொறாமை அனைத்தையும் கைவிடு;

காமம் மற்றும் சபிக்கப்பட்ட மதுவை தவிர்த்திடு.

தவம் செய்வோருடன் இணைந்திருந்து,

ஆன்மாவின் மூலம் ஆத்ம ஞானம் பெற்ற சிறந்த ஆன்மாக்களுடன் ஒன்று சேர்ந்திடு.§



பக்தி நிறைந்த ஒவ்வொரு இந்து குடும்பமும் தங்கள் வீட்டிற்கு சற்குரு ஒரு நாள் வந்து சாப்பிடுவார் என்று நம்பி இருக்கிறார்கள் மற்றும் தங்கள் வீட்டிற்கு

*சுவாமி எந்த சமயமும் வரலாம் என்று யோக சுவாமியின் சீடர்கள் எப்போதும் தயாராக இருந்தனர். மிகவும் நன்றாக சமையல் செய்த ஒரு சில தாய்மார்களின் வீட்டிற்கு, அடிக்கடி செல்வதை அவர் வழக்கமாக கொண்டிருந்தார்.*

……………………..§

எஸ். சண்முகசுந்தரம் வழங்கும் கதையில் இருந்து, யாழ்ப்பாண மக்களிடம் அவருக்கு இருந்த பரிச்சயம் மற்றும் மனிதநேயம் முழுவதையும் அவர் ஏற்றுக்கொண்டதையும் பற்றி விவரிக்கிறது. §

யோக சுவாமிக்கு நெருக்கமான ஒரு அன்பர், சுவாமியை தரிசிக்க அவரது குடிசைக்கு சென்றார். சுவாமி அவரை உள்ளே அழைத்து உட்கார வைத்து, அவர் வாகனத்தில் வந்து இருக்கிறாரா என்று கேட்டார். அந்த அன்பர் தான் வாகனத்தில் தான் வந்துள்ளதாக கூறியதும், யோக சுவாமி, "சரி, உங்கள் வாகனத்தில் ஒரு சிறு பயணம் சென்று வரலாம்," என்றார். அவர் வாகனத்தில் ஏறி, அந்த அன்பரிடம் தெற்கு நோக்கி செல்லுமாறு கூறினார். பத்து மைல் தூரம் சென்ற பிறகு, சுவாமி அந்த அன்பரை ஒரு குறிப்பிட்ட தெருவில் செல்லுமாறு கூறினார். நான்கு மைல் தூரம் சென்ற பிறகு, சுவாமி, "உங்கள் வீடு இங்கே தான் இருக்கிறது. நாம் உங்கள் வீட்டிற்கு சென்று, நோயுற்று இருக்கும் உங்கள் மனைவியை பார்க்கலாம்," என்று கூறினார். §

அந்த அன்பர் ஆச்சரியம் அடைந்தார். அந்த அன்பரின் வீட்டிற்கு சுவாமி எப்போதும் வந்தது இல்லை, மற்றும் அவரும் தான் இங்கே வசிக்கிறார் என்பதை சுவாமியிடம் தெரிவிக்கவில்லை. அவர் மனைவிக்கு உடல் நலம் சரியில்லை என்பது சுவாமிக்கும் தெரியாது. என்ன அதிசயம், சுவாமி வாகனம் நிறுத்த சொல்லிய இடம், அவரது வீடாக இருந்தது. பிரமிப்பு மற்றும் மரியாதையுடன், அந்த அன்பர் வாகனத்தில் இருந்து கீழே இறங்கி சுவாமியை வீட்டிற்குள் அழைத்து சென்றார். அவர் மனைவி படுத்த படுக்கையாக இருந்தார், அதனால் சுவாமி அவள் அறைக்குள் சென்று, நோயாளியை கூர்ந்து கவனித்து, அவளுடன் சில நிமிடங்கள் பேசினார். சுவாமி வெளியே வந்ததும், ஒரு வார்த்தையும் பேசவில்லை, மற்றும் அன்பரும் எந்த கேள்வியும் கேட்கவில்லை. §

அந்த சமயத்தில், வீட்டின் பின்புற தோட்டத்தில் இருந்து ஒருவர் ஏதோ கூச்சலிட்டார். சுவாமி அவர் யார் என்று கேட்டார். "அது என் மாமனாரின் குரல், சுவாமி. அவர் ஒரு விசித்திரமான மனிதன். அவருக்கு மதத்திலும் தர்மத்திலும் ஈடுபாடு இல்லை. அவர் சுயநலத்துடன் செயல்பட்டு, எப்போதும் பொருள் ஈட்டுவதில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறார்," என்று அந்த அன்பர் பதில் அளித்தார். §

அதை கேட்ட சுவாமி, "இந்த உலகம் சிவபெருமான் தனது நெஞ்சில் அணிந்து இருக்கும் ஒரு ஆபரணத்தை போன்றது. அந்த ஆபரணம் மாணிக்கம், வைரம், நீலக்கல் மற்றும் பச்சைக்கல் போன்ற பல்வேறு

கற்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அதில் சில வெள்ளையாகவும் சில வேறுசில நிறங்களிலும் இருக்கலாம். சில கற்கள் பிரகாசமாக இருக்கும் மற்றும் சில அவ்வளவு பிரகாசமாக இருக்காது. ஆனால் அனைத்து கற்களும் ஒன்றாக சேர்ந்து ஒரு அழகான ஆபரணமாக உருவாகிறது. அதைப்போன்று, ஆபரணத்தில் இருக்கும் கற்களை போல, பூமியில் இருக்கும் மக்களும் ஒன்று போல இருக்க முடியாது. அனைவரும் நல்லவர்களாக இருந்தால், உலகத்தால் இயங்க முடியாது. அதனால் உங்கள் மாமனாரின் அணுகுமுறையில் தவறு ஒன்றும் இல்லை," என்று குறிப்பிட்டார். அவர்கள் திரும்பி செல்லும் போது, சுவாமி அந்த அன்பரிடம், அவர் மனைவியின் உயிர் மூன்று வருடம் கழித்து பிரியும் வரை, அவள் படுத்த படுக்கையாகவே இருப்பாள் என்று குறிப்பிட்டார். §

**"நான் யோக சுவாமியை சந்தித்த அந்த நாள்"**

1950 களின் இறுதியில், கொழும்புவை சேர்ந்த சிங்கள பௌத்த சமயத்தை சேர்ந்த சாம் விக்ரமசிங்கே, யாழ்ப்பாணத்தில் இருந்த, ஒரு மூத்த தமிழ் நண்பருடன் யோக சுவாமியை சந்திக்க வந்தார். ஒரு உண்மையான சாதகராக இருந்த சாம், யோக சுவாமியை பற்றி நிறைய அறிந்து இருந்தாலும், அவரை சந்தித்தது இல்லை. கொழும்பில் கடற்கரை ஓரமாக நடந்து சென்ற போது, சாம் தனது புதிய நண்பரை சந்தித்தார். அவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதும், அந்த பெரியவர் யோக சுவாமியை பற்றி அதிக உற்சாகத்துடன் பேச ஆரம்பித்து, "இந்த தீவில் வசிக்கும் எங்கள் முனிவரை பார்க்க முயலாதது அதிர்ச்சி தருவதாக இருக்கிறது" என்று யோக சுவாமியை சந்திக்காததற்காக கடிந்து கொண்டார். அவர் சாம் யாழ்ப்பாணம் வருவதற்கான இரயில் செலவை ஏற்பதாக கூறி, தெல்லிப்பழையில் இருந்த தனது வீட்டில் தாராளமாக தங்கலாம் என்று அழைப்பு விடுத்தார். சாம் 1970 ஆம் வருடத்தில், சுசுநாக வீரபெறுமா என்ற புனைப்பெயரில் *ஹோமேஜ் டூ யோக சுவாமி* என்ற தலைப்பில் எழுதிய ஒரு சிறிய புத்தகத்தில், இந்த அனுபவத்தை பற்றி விவரிக்கிறார். §

இந்து சமயத்தில் அதிக பற்றுடன் இருந்த எனது நண்பர், யோக சுவாமியை சந்திப்பதற்கு முன்பாக, நான் என்னை சுத்தப்படுத்திக் கொள்வது அவசியம் என்று முழுமையாக நம்பி இருந்தார். சூரிய உதயத்திற்கு முன்பாக காலை வேளையில், அவர் மனைவி இந்து சாஸ்திரங்களில் இருந்து சில கீர்த்தனைகளை பாடுவார். சில கோயில்களில் நுழைவதற்காக எனது உடலில் சந்தனமும் திருநீறும் தாராளமாக பூசப்பட்டன மற்றும் நான் அடிக்கடி ஒரு வெள்ளை வேட்டியை அணியவேண்டி இருந்தது. இந்த சடங்குகளில் எனக்கு சமய அல்லது ஆன்மீக முக்கியத்துவம் எதுவும் தெரியவில்லை, ஆனால் இந்த மந்தமான மற்றும் புனிதமான நிகழ்வுகளுக்கு, அவை ஒரு தெளிவை வழங்குவதாக எனக்கு தோன்றுகிறது. §

பல வாரங்கள் கழிந்தன, எனது நண்பர் வழங்கிய தாராள உபசரிப்பில் நான் ஆனந்தமாக இருந்தாலும், பல நாட்களாகியும் யோக சுவாமியை சந்திக்க முடியாததால், பதட்டத்தை உணர தொடங்கினேன். யோக சுவாமியிடம் ஒரு நேர்காணலை நடத்துவதற்கு, ஒருவர் தன்னை தயார்படுத்திக் கொள்வது மிகவும் அவசியம் என்ற தனது உறுதிப்பாட்டில் எனது நண்பர் சிரத்தையுடன் இருந்தது எனக்கு பின்னர் தெரிய வந்தது. சுமார் ஒரு மாதம் முடிவடைந்து இருந்தது, மற்றும் எப்போது கொழும்பு செல்வது என்ற ஏக்கத்தில் நான் இருந்தேன். §

யோக சுவாமியை பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு விரைவாக குறைந்து கொண்டு இருந்தது, மற்றும் அவரை சந்திக்காமல் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளம்பலாம் என்று இறுதியாக முடிவு செய்தேன். நான் எடுத்த முடிவை பற்றி எனது நண்பரிடம் சொன்ன போது, அவர் வெற்றி களைப்புடன் புன்னகைத்தார். “சரி, சரியான தருணம் வந்துவிட்டது. நீங்கள் அவரை சந்திக்கும் ஆர்வத்தை இழந்து கொண்டு இருப்பதால், நீங்கள் அவரை தரிசிக்க தகுந்த நிலையில் இருக்கிறீர்கள். நாம் நாளை  செல்லலாம்.” எங்கள் சந்திப்பிற்கு காலை நேரம் உகந்ததாக இருந்ததால், அடுத்த நாள் விடியற்காலையில் யோக சுவாமியை சந்திக்கலாம் என்று நாங்கள் முடிவு செய்தோம். §

உயரமான மற்றும் அழகான பனைமரங்களை அசைத்த மென்மையான காற்றினால் உருவான சலசலப்பு சத்தங்களை தவிர, அன்றைய காலை பொழுது குளுமையாகவும் அமைதியாகவும் இருந்தது. நாங்கள் குறுகலான புழுதி படிந்த சாலைகள் வழியாக அமைதியாக நடந்து சென்றோம். அந்த நகரம் இன்னும் உறக்கத்தில் இருந்தது. யாழ்ப்பாணத்திற்கு வெளியே சுவாமிக்காக பிரத்யேகமாக ஒரு வீட்டின் தோட்டத்தில், சிறியதாக ஓலை வெய்த கூரையுடன் கட்டப்பட்ட குடிசையை நாங்கள் நெருங்கினோம்.  நான் கற்பனை செய்ததை போலவே யோக சுவாமி இருந்தார். அவர் 83 வயதில், அதிக வயதானவராகவும் மெலிந்தும் காணப்பட்டார். அவர் சராசரி உயரத்துடன் இருந்தார், மற்றும் நீளமான நரைத்த முடி, அவரது தோளின் மீது பரவியிருந்தது. நாங்கள் அவரை முதல் முறையாக பார்த்த போது, அவர் தோட்டத்தை ஒரு பெரிய துடப்பம் கொண்டு பெருக்கிகொண்டு இருந்தார். அவர் எங்களை நோக்கி மெதுவாக நடந்து வந்து கதவுகளை திறந்தார். §

“நான் ஒரு கூலியின் வேலையை செய்துக்கொண்டு இருக்கிறேன், நீங்கள் எதற்காக ஒரு கூலியை பார்க்க வந்து இருக்கிறீர்கள்?” என்று கூறிய சுவாமி, குறும்புத்தனமாக தனது கண்களை சிமிட்டிக்கொண்டு அமைதியாக சிரித்தார். அவர் ஒரு அருமையான உச்சரிப்புடன் ஆங்கிலத்தில் நன்றாக பேசியதை கவனித்தேன். அவரது அறிக்கைகளில் வழக்கமாக ஒரு மறைஞான பொருள் இருக்கும் என்பதால், “நான் மனிதர்களை ஆன்மீக ரீதியாக சுத்தம் செய்பவன். நீங்கள் எதை சுத்தம்

செய்துக்கொள்ள விரும்புகிறீர்கள்?” என்று அவர் குறிப்பிட்டதாக எனக்கு தோன்றியது. §

அவர் உள்ளே வருமாறு மெதுவாக சைகை காண்பித்து, அவர்களை தனது குடிசைக்குள் அழைத்து சென்றார். சிறிது உயர்த்தப்பட்ட வேப்ப மர விசைப்பலகையின் மீது யோக சுவாமி சம்மணம் போட்டு அமர்ந்தார். அந்த பலகை அவரது எளிமையான படுக்கையாகவும் விளங்கியது. நாங்கள் அவரைப் பார்த்துக்கொண்டு தரையில் உட்கார்ந்தோம். அன்று காலையில் நாங்கள் இருவரும் எதையும் பேசவில்லை; சுவாமி மட்டுமே பேசினார். §

சுவாமி தன் கண்களை மூடிக்கொண்டு, அசையாமல் சுமார் அரை மணிநேரம் அமர்ந்து இருந்தார். அவர் அந்த நேரத்தில் தனது உயிர்சக்தியின் இன்னொரு பரிணாமத்தில் இருந்தது போல தோன்றியது. அவரது முகபாவத்தில் தென்பட்ட அமைதிக்கு, அவரது உட்புற தியானத்தின் ஆனந்தம் தான் காரணமா என்று யோசிக்க வைத்தது. அவர் உறங்குகிறாரா  அல்லது இளைப்பாறுகிறாரா? அவர் எங்கள் மனங்களை ஆய்வு செய்ய முயற்சி செய்கிறாரா? அவரது வரவேற்பை பெறுவதற்கு நாங்கள் இருவரும் பெரும் பாக்கியம் செய்திருக்க வேண்டும் என்று என் நபர் குறிப்பிட்டார். யோக சுவாமி திடீரென்று தன் கண்களை திறந்தார். அந்த பிரகாசமான கண்கள், குடிசை முழுவதையும் பிரகாசிக்க செய்தன. இரக்கத்தால்  மென்மையாக இருந்த அவரது கண்கள் அந்த மென்மைக்கு ஈடாக  பிரகாசத்தையும் கொண்டு இருந்தன. §

எனக்கு பசியெடுத்தது மற்றும் உடல் சோர்வடையவும் ஆரம்பித்தது. அப்போது யோக சுவாமி, “காலை சிற்றுண்டிக்கு என்ன சாப்பிட விரும்புகிறீர்கள்?” என்று கேட்டார். எனக்கு இருந்த பசிக்கு, எதை கொடுத்தாலும் வாங்கி சாப்பிட்டு இருப்பேன், ஆனால் யாழ்ப்பாணத்தில் பிரபலமான உணவு வகைகளான இட்லி மற்றும் வாழைப்பழங்களை சாப்பிட விரும்பினேன். உடனே அந்த குடிசையில் ஒரு பரிச்சயம் இல்லாத நபர் நுழைந்து, நான் நினைத்த உணவு வகைகளை ஒரு தட்டில் வழங்கினார்.  சிறிது நேரம் கழித்து, என் நண்பர் காபி குடிக்க விரும்பினார். அவர் அதை கேட்பதற்கு முன்பாகவே, அதே மீண்டும் நபர் மீண்டும் குடிசையில் தோன்றி, எங்களுக்கு காபி வழங்கினார். §

காலை சிற்றுண்டியை சாப்பிட்ட பிறகு, வாழைப்பழ தோல்களை தூக்கி எறிய வேண்டாம் என்றும், அவற்றை தனது குடிசையில் இருக்கும் பசு மாடு சாப்பிடும் என்றும் யோக சுவாமி குறிப்பிட்டார். அவர் அந்த பசு மாட்டை  உரக்க  கத்தி அழைத்த போது, அது நேரடியாக குடிசைக்குள் வந்துவிட்டது. அவர் அதற்கு வாழைப்பழத் தோல்களை தந்தார். அது பாசத்துடன் அவர் கைகளை நக்கி, தரையில் உட்கார முயற்சி செய்தது. சுவாமி பசு மாட்டிற்கு கடைசி தோலை வழங்கிக்கொண்டு, “சில விருந்தாளிகள் வந்து இருக்கிறார்கள். எங்களுக்கு தொல்லை தரக்கூடாது,

வள்ளி. இப்போது நீ போகலாம்," என்று உத்தரவிட்டார். அந்த மாடு மரியாதையுடன் தலை அசைத்து விட்டு, அவர் கூறிய அறிவுறுத்தல்களை கடைப்பிடித்தது. §

யோக சுவாமி மீண்டும் தன் கண்களை மூடிக்கொண்டார். அதை பார்ப்பதற்கு, அவர் மீண்டும் தனது உலகில் தொலைந்து விட்டது போல தோன்றியது. அந்த சமயத்தில், அவர் என்ன செய்தார் என்பதை தெரிந்துகொள்வதில் நான் மிகவும் ஆர்வமாக இருந்தேன். அவர் தியானம் செய்தாரா என்பதை நான் தெரிந்துக்கொள்ள ஆர்வமாக இருந்தேன். இந்த கேள்வியை ஆய்வு செய்ய ஒரு சரியான தருணம் வந்தது, ஆனால் கேள்விகள் கேட்பதற்கு முன்பாகவே அவர் பேச தொடங்கிவிட்டார். §

"அந்த மரங்களை பாருங்கள். அந்த மரங்கள் தியானம் செய்து கொண்டிருக்கின்றன. தியானம் என்பது அமைதி. உங்களுக்கு முழுமையாக எதுவும் புலனாகவில்லை என்பதை நீங்கள் உணர்ந்தால், நீங்கள் அப்போது உண்மையில் தியானத்தில் இருக்கிறீர்கள். அத்தகைய ஒரு உண்மை நிலை, அமைதிக்கு நல்லோதொரு நிலம் போல விளங்குகிறது. அமைதியே தியானம் ஆகும்," என்று அவர் சொல்லிக்கொண்டு, ஆர்வத்துடன் முன் பக்கமாக சாய்ந்து, "நீங்கள் உங்கள் மெய்யுணர்வில் முற்றிலும் உடுப்பில்லாமல் எளிமையாக இருப்பீர்கள். உங்கள் ஆன்மா மறைந்து, நீங்கள் உங்களை எதுவுமற்ற வெறுமையாக்கிக் கொண்ட நிலையில், நீங்களே கடவுளாக இருப்பீர்கள். இறைவன் என்பது எதுவுமற்ற வெறுமை என்பதால், வெறுமையாக இருப்பவன் இறைவனை அறிந்து இருக்கிறான். வெறுமை எங்கும் நிறைந்து எல்லாமாக இருக்கிறது. நான் வெறுமையாக இருப்பதால், நான் ஒரு யாசகனாக இருப்பதால், எல்லாம் என்னுடையதாக இருக்கின்றன. அதனால் வெறுமை என்பது அனைத்தையும் குறிக்கிறது. புரிந்ததா?" §

எனது நண்பர் ஆர்வத்துடன், "வெறுமை நிலையை பற்றி எங்களுக்கு விளக்குங்கள்," என்று கேட்டார். "அது உண்மையில் எதையும் விரும்பாமல் இருப்பது ஆகும். உங்களுக்கு எதுவும் புலனாகவில்லை என்று நீங்கள் நேர்மையாக சொல்வதை அது குறிப்பிடுகிறது. இந்த வெறுமை நிலையில் எதையும் செய்ய உங்களுக்கு ஆர்வம் இல்லை என்பதையும் இது குறிப்பிடுகிறது." "எதுவும் புலனாகாத நிலை?" என்று அவர் எதை குறிப்பிட்டார் என்று நான் யூகிக்க ஆரம்பித்தேன். "புனிதமான சக்தியாக மாற்றம் பெறுவதை" குறிக்காமல் "புனிதமான சக்தியாக இருக்கும்" நிலையை குறிப்பிடுகிறதா? "உங்களுக்கு புரிவதாக தோன்றுகிறது. ஆனால் அது உண்மையில் அறியாமை. உங்களுக்கு உங்களை பற்றி எப்போது புலனாகவில்லையோ, அப்போது நீங்களே கடவுளாக இருக்கிறீர்கள்," என்று எனது சிந்தனைக்கு பதில் அளித்தார். §

Page 30: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/30_yoga04_02.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## பதினைந்தாவது அத்தியாயம்

## “யாம் அறியோம்”


வெறுமை மற்றும் அறியாமல் இருப்பதை பற்றிய மறைஞான உட்பார்வை நிறைந்த சிவயோக சுவாமியின் உபதேசங்கள், அவரது சீடராக அல்லாத பலரை குழப்பியது. வாழ்க்கையில் வழக்கமாக, அறிவை பெறுவதற்கு அல்லது ஒரு விஷயத்தின் மீது நமது அறிவின்மையை அறிவின் மூலம் நிரப்புவதற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. நாம் ஒரு கணினியை விலைகொடுத்து வாங்குகிறோம். நாம் அதைப்பற்றி குறைவாக அறிந்து இருப்பதால், நாம் கையேடுகளை படித்து, வல்லுநர்களிடம் ஆலோசித்து, இறுதியாக கணினியை பயன்படுத்துவதற்கு தேவையான தகவல்களை பெறுகிறோம். நாம் அறிவின்மையை அறிவை கொண்டு நிரப்புகிரோம். §

ஆன்மீக விஷயங்களுக்கு தேவைப்படுவதை போல, யோக சுவாமியின் அணுகுமுறை இதற்கு நேர்மாறாக இருந்தது. நாம் இறைவனை பற்றிய அறிவுணர்வு தகவலுடன் தொடங்கி, அந்த தகவலில் இருந்து நம்மை விடுவித்துக்கொள்ள முயல்கிறோம். நாம் அதில் வெற்றி பெறும் போது, இறைவனை உணர தொடங்குகிறோம். ஏன் இப்படி நடக்கிறது? ஏனென்றால் அறிவுணர்வால் இறைவனை  உணர முடியாது. இறைவனின் தனிப்பட்ட உருவம் மற்றும் அனைத்திலும் வியாபித்து இருக்கும் அவரது சுயநினைவின் அனுபவம், மெய்ஞ்ஞான அல்லது இயலுணர்வு மனதில் இருக்கிறது. முழுமுதற்பொருளாக இருக்கும் இறைவனின் அனுபவம், மெய்ஞ்ஞான மனதையும் கடந்து இருக்கிறது என்பது மேலும் மறைபுதிராக இருக்கிறது. §

இறைவனின் பண்புகளை பற்றிய தெளிவான அறிவுணர்வு கோட்பாடுகளை பெறுவது நல்லது என்றாலும், இறைவனை உண்மையில் உணர்வதற்கு, இந்த கோட்பாடுகள் இறுதியாக வரம்புகளை கடந்து செல்ல

வேண்டும். இந்த உண்மையை யோக சுவாமி, ஒரு மனிதனின் இதயத்திற்குள் எவ்வாறு அனுப்பினார் என்பதை சாம் விக்கிரமசிங்கே நினைவுக்கூர்கிறார்:§

> சுவாமி கௌரிபாலா இலங்கைக்கு திரும்பி, யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்தது, அவரது வாழ்க்கையின் திருப்புமுனையாக இருந்தது. வாழ்நாள் முழுவதும் அவருக்கு புத்தகத்தின் மீது அதீத ஆர்வம் இருந்தது. ஒரு நாள் அவர் யாழ்ப்பாண நகரத்தின்  கே கே எஸ் சாலையில் இருந்த ஸ்ரீ லங்கா புத்தகசாலையில் ஆன்மீக பிரிவில் புத்தகங்களை பார்த்துக்கொண்டு இருந்த போது நரைத்த முடியுடன், கோபமாக முறைத்துக்கொண்டு, ஒரு பரிச்சயம் இல்லாத முதியவர், அங்கே திடீரென்று தோன்றி அவரது கைகளில் இருந்து புத்தகத்தை பறித்து, “முட்டாள், அது புத்தகத்தில் கிடைப்பது இல்லை! நீ சும்மா இரு!” என்றார். இதுவே நல்லூரின் யோக சுவாமியுடன் அவரது முதல் சந்திப்பாக விளங்கியது. அவரது தேடல் நிறைவடைந்தது, மற்றும் பல சோதனைகள் மற்றும் தண்டனைகளுக்கு பிறகு அவர் யோக சுவாமியை தனது குருவாக ஏற்றுக்கொண்டார். §




*இந்த சித்திரத்தில் யோக சுவாமி தன் முதுகை காட்டிக்கொண்டு உட்கார்ந்து இருக்கிறார், மற்றும் (இடமிருந்து வலமாக) மார்கண்டுசுவாமியுடன் ஒரு*

*பிரிட்டன் நாட்டவர் (யானைக்குட்டி), ஒரு கொழும்பு வாழ் தமிழர் (பன்றிகுட்டி), ஒரு சிங்களர் (புலிக்குட்டி), ஒரு ஆஸ்திரேலியா நாட்டவர் (நரிக்குட்டி) மற்றும் ஒரு ஜெர்மன் நாட்டவர் (நாய்குட்டி) என்று குட்டி கூட்டத்தின் ஆறு அங்கத்தினர்களில் ஐந்து அங்கத்தினர்கள் காண்கிறோம்.*

........................§

அவர் கூறிய "*யாம் அறியோம்,*" என்ற வாசகத்தை "நமக்கு தெரியாது" என்று பொருள்படுத்திக் கொள்ளலாம். யோக சுவாமியின் குருவான செல்லப்பசுவாமி வழங்கிய மகாவாக்கியங்களில் ஒன்று இதே கருத்தை உபதேசிக்கிறது. சிறிது காலம் கழித்து, யோக சுவாமியின் சீடரான சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி: "கருத்தறிவால் வலுப்படுத்தப்பட்ட அறிவுணர்வு, மெய்ஞ்ஞானத்திற்கு ஒரே தடையாக விளங்குகிறது," என்ற சூத்திரத்தில் தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். ஒரு சூட்சும ஞானியின் இயலுணர்வு காரணத்தை அடிப்படையாக கொண்டு செயல்பட்டாலும், அது காரணத்தின் செயல்முறைகளை பயன்படுத்துவது இல்லை என்பதால், அவர் பொதுவாக அதிகம் பேசுவது இல்லை. எந்த ஒரு இயலுணர்வு வெற்றியும் மிகவும் யதார்த்தமாக இருக்கும், ஆனால் அது காரணத்தின் செயல்முறையை பயன்படுத்துவது இல்லை. காரணத்திற்கு நேரம் தேவைப்படும். மெய்ஞ்ஞான நிலை தற்பொழுதில் செயல்படுகிறது. அனைத்து மெய்ஞ்ஞான அறிதலும், எதிர்பாராத விதமாக திடீரென்று தோன்றுகின்றன. காரணத்தை காட்டிலும் இயலுணர்வு நேரடியாகவும், அதிக துல்லியமாகவும் இருக்கிறது," என்று விளக்கம் அளித்தார். ஒரு நாள் யோக சுவாமி வெற்றி களிப்புடன்: §

நான் இறைவனை எங்கும் காண்கிறேன். நான் எங்கும் வழிபடுகிறேன். எல்லோரும் இறைவனாக இருக்கிறார்கள்! நான் அறியவில்லை என்பதால் என்னால் அதை சொல்ல முடியும். யார் அறியவில்லையோ, அவர் எல்லாம் அறிந்து இருக்கிறார். நீங்கள் அறியவில்லை என்றால், நீங்கள் புனிதமாக இருக்கிறீர்கள். அறியாமல் இருப்பது தூய்மை ஆகும். அப்போது நீங்கள் பணிவோடு இருக்கிறீர்கள். நீங்கள் அறிந்து இருந்தால், நீங்கள் தூய்மையாக இருப்பதில்லை. மக்கள் தங்களுக்கு தெரியும் என்று சொல்லி, பல்வேறு விஷயங்களை சொல்வார்கள். அவர்கள் அறியவில்லை. எல்லோரும் அறியவில்லை. நீங்கள் அறிய விரும்பவில்லை. நான் அறியவில்லை. நீங்கள் ஏன் அறிய விரும்புகிறீர்கள்? நீங்கள் இயல்பாக இருங்கள். நீங்கள் அறிய விரும்பவில்லை. இறைவன் உங்கள் வாயிலாக செயல்படட்டும். "நான் அறிந்துகொள்ள வேண்டும்" என்ற எண்ணத்தை கைவிடுங்கள். இறைவன் பேசட்டும். அறிந்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை துறக்க வேண்டும். யோசியுங்கள், யோசியுங்கள், யோசியுங்கள். "நான் அறியவில்லை" என்பது உங்களுக்கு அப்போது புலப்படும். நான் அறியவில்லை. நீங்கள் அறியவில்லை. யாரும் அறியவில்லை.

> அப்படித்தான் இருக்கிறது. யார் அறிவார்கள்? “நான் அறியவில்லை" என்ற என்னால் சொல்ல முடிந்தால், நான் இறைவன் ஆகிறேன். §

“புத்தகங்கள் படிப்பதை நிறுத்து,” என்று அவர் சீடர்களில் ஒருவரிடம் கூறினார். “மிகப்பெரிய புத்தகம் உனக்குள் இருக்கிறது. அதை மட்டும் தான் நீ படிக்க வேண்டும். மற்றவைகள் அனைத்தும் வெறும் குப்பைகள். உங்களுக்குள் இருக்கும் புத்தகத்தை திறந்து, அதை படிக்க தொடங்குங்கள். மிகவும் அமைதியாக இருங்கள், அது உங்களை தேடி வரும்.” சாதகர்கள் தொடர்ந்து ஆன்மீக பாதை கடினமானதாக, சிக்கல் நிறைந்ததாக மற்றும் தங்கள் தகுதிக்கு அப்பாற்பட்டதாக மாற்றிக்கொள்கிறார்கள், ஆனால் அது அப்படியில்லை என்று யோக சுவாமி தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.§

> பாதை மிகவும் எளிமையானதாக இருந்தாலும், மனதில் நீ வேறு நான் வேறு என்ற எண்ணத்தை தக்க வைத்துக் கொள்வதால், நீங்கள் அதை கடினமாக்கிக் கொள்கிறீர்கள். நாம் எல்லோரும் ஒன்று. நாம் சூரியனை பார்த்து அதன் ஒளிக்கதிர்களை உணர்கிறோம். அதே சூரியனின் அதே ஒளிக்கதிர்களை, அதே நரம்புகள் உணர்கின்றன. நாம் அகத்தை பார்க்கும் போதும், இப்படியே நடக்கிறது. நாம் பிரபஞ்சத்தின் கடவுளாக இருக்கும் பண்புகள் இல்லாத நிற்குண சிவபெருமானை உணர்கிறோம். நீங்களும் நானும் ஒன்று போலவே தரிசிக்கும் சிவபெருமான் உங்களுடையதாகவும் இல்லாமல், என்னுடையதாகவும் இல்லாமல், சிவபெருமான் எல்லாமாக இருக்கிறார். எல்லாம் சிவமயம் மற்றும் சிவபெருமான் எல்லாமாக இருக்கிறார் என்ற அறிதலில் நாம் ஆசையை எரித்து, தன்முனைப்பை உருக்க வேண்டும். உங்களுக்கு உதவி செய்ய பல லட்சக்கணக்கான தேவர்கள் இருக்கிறார்கள். நீங்கள் அவர்களை வேண்டிக்கொண்டு, சாதனாவின் மூலம் உங்களை நிலைப்படுத்தி கொண்டால் போதும். அதன் மூலம் உங்களால் அனைவரையும் ஒன்றாக பார்க்க முடிந்து, தெய்வீக அமுத்தை ருசிக்க முடியும். §

யோக சுவாமியின் அணுகுமுறையை செல்லத்துரை சுவாமி பின்வருமாறு தொகுத்துரைத்தார்: §

> ஆன்மீகம் என்பது இறைவன் அல்லது ஒருவரது தனிப்பட்ட பரமாத்துமா மீது தொடர்ந்து சாட்சியை நிலை நிறுத்தி வைப்பது ஆகும். *சகஜ* நிலை என்பது, ஒருவர் தனது பரமாத்துமா மீது எந்த வித முயற்சியும் இல்லாமல் நிரந்தரமாக விழிப்புடன் இருப்பது ஆகும். ஆனால் இந்த நிலையை அடைவதற்கு, மிகப்பெரிய முயற்சிகளை தேவைப்படும். நமது செயல்கள் அனைத்திலும் இறைவனை நினைக்க முயற்சிப்பதன் மூலம், இந்த நிலையை அடையலாம் என்று யோகர் சுவாமிகள் கற்றுத்தந்தார். ஒவ்வொரு செயலையும் சிவத்தொண்டாக நினைத்து செய்யவேண்டும் என்று அனைவரிடமும் அவர் உபதேசித்தார். இந்த சிவத்தொண்டால், ஒருவர் அடையும் நிலையில், விழிப்புணர்வு இயல்பாக வருகிறது

என்பதை அவர் அறிந்து இருந்தார். இது ஆன்மீக அனுபவங்களின் உச்சமாக கருதப்படுகிறது. பரமாத்துமாவை வழிகாட்டியாக கொண்டு, மேற்கொள்ளும் சாதனா அல்லது பயிற்சியின் மூலம் ஒருவர் அடையும் நிலையில், “எல்லாம் அந்த மாபெரும் அமைதியில் இருந்து வெளிவருகிறது” என்றும் “எல்லாம் அந்த மாபெரும் அமைதியின் முழுமை” என்பதையும் உண்மையில் உணர்கிறார் என்பதை யோக சுவாமிகள் அறிந்து இருந்ததால், அவர் உறுதியான அன்பர்களிடம், “உபதேசிப்பதை காட்டிலும் பயிற்சி சிறந்தது;” மற்றும் “உங்கள் பரமாத்துமா உங்களை வழிநடத்தி செல்லட்டும்,” என்று கூறினார். யாழ்ப்பாணத்தில் இருக்கும் சிவதொண்டன் நிலையத்தின் தியான மண்டபத்திற்கு வழிநடத்தி செல்லும் படிகளில் ஏறும் போது, இந்த வாசகங்கள் வருவோரை வரவேற்கின்றன. §

### சிவபெருமானை நினைத்து தியானம்

இதனால் ஆத்ம ஞானத்தை பெறுவதற்கு, அறிவுணர்வு மற்றும் அதன் கோட்பாடுகளின் வரையறைகளை கடந்து செல்ல வேண்டும் என்று கைலாச பரம்பரையின் குருமார்கள் வலியுறுத்துகிறார்கள். இந்த அனுபவத்தை வழங்கும் பாதைக்கு சாதகர்களை வழிநடத்துவதற்கு, யோக சுவாமி தியானத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி “*தன்னை அறி*" என்று மகாவாக்கியத்தை உருவாக்கினார். இது அவரது போதனைகளில் இரண்டாவது முக்கிய கருப்பொருளாக விளங்கியது. “உங்கள் ஆன்மாவின் மூலம் பரமாத்துமாவை அறிந்துக்கொள்ள வேண்டும். இதற்கு மனதை ஒருமுகப்படுத்த வேண்டும்....உங்களிடம் எந்த குறைபாடும் இல்லை. நீங்கள் யார் என்று உங்களுக்கு தெரியாதது தான் உங்களது ஒரே குறைபாடு....நீங்கள் உங்களை உங்களின் மூலமாக தெரிந்துகொள்ள வேண்டும். வேறு எதுவும் செய்யவேண்டியது இல்லை,” என்று அவர் அறிவித்தார். பிற்காலத்தில் அவருக்கு நெருக்கமான சீடர்களில் ஒருவரான மார்கண்டுசுவாமி, தனது குடிசைக்கு வந்த அன்பர்களிடம் இவ்வாறு கூறினார்: §

> நமக்கு யோக சுவாமி நூறு வேலைகளை வழங்கவில்லை. ஒரே ஒரு வேலை தான்: நீங்களே ஆத்ம ஞானத்தை பெறுங்கள், அல்லது உங்கள் பரமாத்துமாவை அறிந்து கொள்ளுங்கள், அல்லது நீங்கள் யார் என்று கண்டு கொள்ளுங்கள். உங்களது பரமாத்துமாவை அறிந்துக்கொள்ளுங்கள் என்றால் என்ன? யோக சுவாமி தனது பிரசுரிக்கப்பட்ட ஒரு கடிதத்தில், அழகாக விளக்கியுள்ளார் : “நீங்கள் உடல் இல்லை; நீங்கள் மனதும் இல்லை, அறிவும் இல்லை, அல்லது விருப்பமும் இல்லை. நீங்கள் *ஆன்மா*. ஆன்மா நிரந்தரமாக இருக்கிறது. மிகப்பெரிய ஆன்மாக்கள் தங்கள் அனுபவத்தின் மூலம், இதையே முடிவு செய்துள்ளார்கள். இந்த உண்மை உங்கள் மனதில் நன்றாக பதியட்டும்.” §

பெரும்பாலான மக்கள் ஆழமாக தியானம் செய்து, தங்களது ஆழத்தில் இருக்கும் பரமாத்துமாவுக்குள் நுழைவதற்கு பயப்படுகிறார்கள் என்பதை அறிந்திருந்த யோக சுவாமி, ஆன்மீக வாழ்க்கையும் வெளிப்புற வாழ்க்கையும் இணக்கத்தில் இருப்பதாக உறுதி அளித்தார். “உங்கள் உறவுகள், உங்கள் விருப்பம், உங்கள் அறிவு, உங்கள் புலன்களை கீழ்தளத்தில் விட்டு செல்லுங்கள். இந்த சகாக்களிடம் இருந்து விடைபெற்று, நீங்களே சொந்த முயற்சியில் மேல்தளத்திற்கு சென்று, நீங்கள் யார் என்று தெரிந்து கொள்ளுங்கள். அதன் பிறகு நீங்கள் கீழ்தளத்திற்கு சென்று, அந்த சகாக்களுடன் சேர்ந்து இருக்கலாம்,” என்று ஆலோசனை வழங்கினார். §

சுவாமி தனக்கு தந்த உபதேசங்கள் புரியாமல், ஒரு அன்பர் போராடிக்கொண்டு இருந்தார். அவர் குருவின் அறிவுரை பற்றிய விளக்கத்தை பெறுவதற்கு, பல நபர்களை சந்தித்தார். இதை சுவாமி அறிந்ததும், அவரை அழைத்து, “செம்மறி ஆட்டுக்குட்டி போல அங்கும் இங்கும் சுற்றிக்கொண்டு இருக்காதே. அமைதியாக ஓரிடத்தில் உட்கார்ந்து, உனக்குள் செல். தியானம் செய். அதன் பிறகு சிங்கம் போல கர்ஜனை செய்.”§

### அமெரிக்க பிராமணர்


யோக சுவாமி தனது வாழ்நாளில் சில அமெரிக்கர்களை சந்தித்து இருந்தாலும்,  விரைவில் ஒரு விசேஷமான நபர் அவரது எளிமையான குடிசைக்கு வரவிருந்தார். 1947 ஆம் ஆண்டில், அமெரிக்க-ஆசிய கலாச்சாரப்பணி என்ற பெயரில் ஒரு பாரம்பரிய நடனக்குழுவுடன் பயணம் செய்த, 20 வயது நிரம்பிய ராபர்ட் ஹான்சென், இலங்கையில் கரை இறங்கினார். ஹான்சென் இந்த தீவிற்கு வந்து தொடக்கத்தில் சில மாதங்களுக்கு, டஜன் கணக்கில் நடன நிகழ்ச்சிகளை வழங்கினார். இங்கே அவர் பிணி நீக்கும் பண்புகளை கொண்ட பழங்கால மணிப்புரி நடனத்தை கற்றுக்கொண்டார் மற்றும் கண்டியை சுற்றியுள்ள பகுதியில் தோன்றி உற்சாகம் நிறைந்து, தைரியமான மற்றும் நுணுக்கமான கலை வடிவமாக இருந்த ஒரு உள்நாட்டு நாட்டிய வடிவத்திற்கு புத்துயிர் அளித்தார். ஆனால் நடனத்தில் தேர்ச்சி பெற்ற அந்த கலைஞர், தனது குருவை சந்தித்து ஆத்ம ஞானம் பெறுவதற்காக இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு இருந்தார். §

லௌகீக உலகம் மற்றும் தியானத்தின் சக்திகளை கட்டுப்படுத்தும் இந்து சூட்சும ஞானமாக, உடலின் நரம்பு ஓட்டங்களில் இணக்கத்தை ஏற்படத்தும் அறிவியலாக விளங்கும், மூன்றாவது கண்ணை பயன்படுத்துவதில் திறமைசாலிகளாக, பல்வேறு யோக பயிற்சிகளில் நிபுணர்களாக இருந்த மகான்கள்  மற்றும் முனிவர்களை, அவர் விரைவில் சந்திக்க தொடங்கினார். அவருக்கு ஒவ்வொரு தூண்டுகோலும் சரியான தருணத்தில் வந்தடைந்தனர். ராபர்ட்டிற்கு ஒவ்வொரு சந்திப்பும் மங்களகரமானதாக தோன்றியது. அவர் ஒவ்வொரு கருத்து பரிவர்த்தனையிலும், அவர் தனது குருவின் ஈர்ப்பை உணர்ந்தார். ஒவ்வொரு வல்லுநரும், தான் தரவேண்டியதை முறையாக வழங்கினார்கள். ஒரு தூண்டுகோலிடம் இருந்து விடுதலை கிடைக்கும் வரை,

ராபர்ட் தனக்கு கிடைத்த அறிவுறுத்தலை பணிவாக பின்பற்றி வந்தார். அதன் பிறகு அடுத்த ஆசிரியர், அடுத்த சுவாமி, அடுத்த இசுலாம் மதத்தலைவர் தோன்றி, அவரது மெய்யுணர்வை இன்னொரு உலகிற்கு திறந்து வைக்க அவரை வந்தடைந்தனர். இது நடந்துகொண்டு இருக்கும் போது, யோக சுவாமி திரை மறைவில் இருந்துக்கொண்டு, இன்னொரு நபர் மூலமாக செயல்பட்டு வந்தார். §

ஜலானி குகைகளுக்கு ராபர்ட் சென்று, ஆத்ம ஞானம் பெறும் வரையில் தியானம் செய்து வந்தார். அவர் ஒரு ஒழுக்கம் நிறைந்த சாதனாவை தொடர்ந்து பின்பற்றி வந்தார். அமெரிக்காவில் இருந்து வந்த பிராமணர் என்று அழைக்கப்பட்ட ராபர்ட், 1949 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இந்து சமய சான்றோராக விளங்கிய சி. கந்தையா செட்டியாரை சந்தித்தார். அவர் பிற்காலத்தில் யோக சுவாமியிடம் ராபர்ட்டை அறிமுகம் செய்து வைத்தார். கந்தையா வாழ்ந்த அளவெட்டி கிராமம், யாழ்ப்பாணம் நகரத்திற்கு அருகாமையில் இருந்தது; அவர் யோக சுவாமியுடன் நெருக்கமாக பல வருடங்கள் பழகி இருந்ததால், அவர் சுவாமியை நன்றாக அறிந்து இருந்தார். அவர்கள் யாழ்ப்பாண தெருக்களிலும் கடைகளிலும் அடிக்கடி சந்தித்து பேசி இருந்தார்கள், மற்றும் செல்லாச்சி அம்மையாரின் ஆசிரம வீட்டில் பல முறை ஒன்றாக அமர்ந்து தியானமும் செய்து இருந்தார்கள். §

கொழும்பில் பல வாரங்கள் ஒன்றாக இருந்த பிறகு, செட்டியார் அந்த இளைஞனை தன்னுடன் யாழ்ப்பாணம் பயணம் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அங்கே ராபர்ட் கந்தையாவுடன், அவரது குடும்ப வீட்டில் தங்கினார். யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபலமாக இருந்த அந்த “முதிய யாசகரை" சந்திக்க, அமெரிக்க பிராமணர் அமைதியான ஆர்வத்துடன் இருந்தார். இறுதியாக, அந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. §



*இறுதியாக 22 வயது நிரம்பிய அமெரிக்க சாதகர் யோக சுவாமியை சந்தித்த போது, அவர்கள் இருவரையும் பார்ப்பதற்கு, "பாலுக்குள் பாலை ஊற்றியதை போல" என்ற பிரபல யாழ்ப்பாண பழமொழியை போல இருந்தார்கள். அவர்கள் ஆழமான தத்துவ விவாதங்களில் ஈடுபட்டனர், மற்றும் யோக சுவாமி தனது  விருந்தாளிக்கு சுத்தமான திரட்சைப்பழ சாறு தருமாறு தனது சிப்பந்தியிடம்  கேட்டுக்கொண்டார்.*

........................§

சிவயோக சுவாமி அந்த அமெரிக்கா சாதகரை தனது ஆசிரமத்திற்கு பல முறை வரவழைத்து, அவருடன் யோகம் மற்றும் தத்துவ விஷயங்களை பற்றி பேசி, அவருக்கு சுப்பிரமுனிய என்ற இந்து பெயரையும் ஆன்மீக அறிவுறுத்தல்களையும் வழங்கி, அவரது முதுகில் வலுவாக அடித்து, "இது அமெரிக்கா வரை கேட்கும்!" என்றார். முதுகில் அறையும் சத்தத்தை கேட்டதும், நடந்தது என்னவென்று கந்தையாவிற்கு தெரிந்துவிட்டது. அவர் தனக்கு நெருக்கமான நண்பர்களிடம், "சுவாமி முடி சூட்டு விழாவை நடத்தி

முடித்துவிட்டார்," என்று குறிப்பிட்டார். அந்த குடிசைக்கு சுப்பிரமுனிய கடைசியாக சென்ற போது, "போய் விடு. நான் வீட்டில் இல்லை," என்று யோக சுவாமி திட்டி அனுப்பினார். யோக சுவாமி அதன் பிறகு தனது அமெரிக்கா சீடரை பற்றி, ஒரு சில முறை மட்டுமே குறிப்பிட்டு பேசினார். §

1956 ஆம் ஆண்டில், கொலராடோவில் இருந்த டென்வரில், சுப்பிரமுனிய ஒரு உச்சகட்ட சூட்சும ஞான அனுபவத்தை பெற்ற போது, கந்தையா செட்டியாரின் மகன் விநாயகமூர்த்தியிடம் யோக சுவாமி, "ஹான்சென் செத்துவிட்டான். ஹான்சென் செத்துவிட்டான்," என்று கூறினார். மேற்கத்திய நாடுகளில் தான் உபதேசிக்கும் பணியை தொடங்கியுள்ளதாக சுப்பிரமுனிய எழுதிய கடிதம் தங்களுக்கு கிடைக்கும் வரை, எல்லோரும் சோகத்தில் ஆழ்ந்து இருந்தார்கள். அந்த செய்தியை கேள்விப்பட்டதும், யோக சுவாமி சொல்ல வந்ததை யாழ்ப்பாணத்தை சேர்ந்த சைவர்கள் புரிந்துகொண்டார்கள். பல வருடங்களுக்கு முன்பு, யோக சுவாமியை பற்றி செல்லப்பசுவாமி இதே அறிக்கையை விடுத்து இருந்தார். §

ஒருமுறை யோக சுவாமியிடம், அவருக்கு பிறகு அவரது சமயப்பணியை தொடர்வதற்கு ஒரு குருவை உருவாக்கி இருக்கிறாரா என்று கேள்வி வந்த போது, "சுப்பிரமுனிய அமெரிக்காவில் இருக்கிறார்," என்று அவர் பதில் அளித்தார். அவர் இன்னொரு முறை, "எனக்கு ஒருவர் உதவியாக அமெரிக்காவில் இருக்கிறார்," என்று குறிப்பிட்டார். ஒரு நாள் சுவாமி விநாயகமூர்த்தியிடம், இனி அவர் வாழ்க்கையில் செய்யவேண்டிய பணிகள் பற்றி, சில அறிவுறுத்தல்களை வழங்கிக்கொண்டு இருந்தார். அப்போது விநாயகமூர்த்தி தான் அளவெட்டியில் இருக்கும் சப்பிரமுனியாவின் ஆசிரமத்தை கவனித்து வருவதாக சுவாமிக்கு நினைவூட்டினார். உடனே யோக சுவாமி, "ஓ, உனது தந்தையின் நண்பரை பற்றியா குறிப்பிடுகிறாய்?" என்று கேட்டார். ஆனால் பின்னர் விநாயகமூர்த்தியிடம் ஆர்வம் இல்லாமல், "சரி, நீ நமக்காக, அந்த பாலம் கட்ட உதவி செய்துக்கொண்டு இருக்கிறாய்," என்று குறிப்பிட்டார். "கிழக்கிற்கும் மேற்கிற்கும் பாலம் அமைக்கவேண்டும் என்று யோக சுவாமி என்னிடம் அறிவுறுத்தினார்," என்று பின்னர் சுப்பிரமுனியா இதைப்பற்றி குறிப்பிட்டார். இந்த வாசகத்தை சுப்பிரமுனியா அடிக்கடி குறிப்பிட்டார், மற்றும் இந்த இலக்கை அவர் என்றுமே மறக்கவில்லை. §

இந்த காலகட்டத்தில், யோக சுவாமி மேற்கத்திய நாடுகளுக்கு பாலங்களை அமைக்க மக்களை தூண்டிவிட்டார். அவர் தனது நெருக்கமான சீடர்களை சந்திக்க சிலரை இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவிற்கு அனுப்பினார். அவர் அவ்வாறு பயணம் மேற்கொள்வோருக்கு அவர்களது சமயப்பணியின் முக்கியத்துவத்தை கூறி, பல்வேறு மேற்கத்திய நாடுகளுக்கு சைவ சமயத்தை கொண்டு செல்தற்கு அவர்கள் மக்களிடம் சொல்லவேண்டிய தகவல்களையும் வழங்கினார். அவர் அமெரிக்காவில் ஆன்மீக சக்தி எழுச்சி பெறுவதை பற்றி அடிக்கடி பேசியதோடு, அங்கே அவர் பிரபலமாகும் நாளையும் ஊகித்தார்.§

**குட்டி கூட்டம்**

1950 களின் இறுதியில், நரைத்த முடியுடன் இருந்த குருவை சுற்றி, இலங்கையில் இருந்து ஒருவர் மற்றும் உலகெங்கிலும் இருந்து ஐந்து பேர் என்று ஒரு சாதகர்ளின் குழு கூடியது. சிவனொளி பாதமாலைக்கு அருகில் இருந்த ஒரு தேயிலை தோட்டத்தில் வாழ்ந்த ஹரோ ஹர அம்மா என்கிற ஒரு சூட்சும ஞான முருக பக்தர், ஒவ்வொருவருக்கும் ஒரு பிரத்யேக விலங்கு குட்டியின் பெயரை வழங்கினார், மற்றும் அதனால் அந்த கூட்டம் *குட்டி கூட்டம்* என்று அழைக்கப்பட்டது. எல்லோரும் சுவாமி என்று அழைக்கப்பட்டாலும், எல்லோரும் தீட்சை பெறவில்லை. அவர்கள் இயல்பாக மற்றும் பலவிதமாக, திறந்த மனப்பான்மையுள்ள குழுவாக இருந்தார்கள், மற்றும் தாங்கள் அனைவரும் யோக சுவாமியின் சீடர்கள் என்பதில் மட்டும் கருத்து ஒற்றுமையுடன் இருந்தார்கள். 1956 ஆம் ஆண்டில், பெரும்பாலும் யோக சுவாமியின் ஆசிகளுடன், இந்த ஆறு பேரும் காவடி சுமப்பதற்கு, கதிர்காமம் சென்றார்கள். §

அந்த குழுவினரின் பெயர்கள்: கௌரிபாலா சுவாமி (பீட்டர் ஜோச்சிம் ஸ்கொன்ஃபெல்ட் என்ற பெயருடன் ஜெர்மனியில் 1907 ஆம் ஆண்டு பிறந்தவர்), நாய்க்குட்டி என்று அழைக்கப்பட்டார்; சாம் விக்கிரமசிங்கே, பௌத்த சமயத்தை சார்ந்த இலங்கையின் சிங்களர், புலிக்குட்டி என்று அழைக்கப்பட்டார்; ஆஸ்திரேலியாவின் பாரி வின்ட்சர், சங்கரப்பிள்ளை சுவாமி அல்லது நரிக்குட்டி என்று அழைக்கப்பட்டார்; இலங்கை தலைநகர் கொழும்புவை சேர்ந்த திரு. பாலசிங்கம், முதலியார் சுவாமி அல்லது பன்றிக்குட்டி என்று அழைக்கப்பட்டார்; இங்கிலாந்தின் ஜேம்ஸ் ஹெர்வால்ட் ராம்ஸ்போதம் என்கிற 2 ஆவது விஸ்கவுண்ட் சொல்புறி (இவரது தந்தை சிலோனுக்கான பிரிட்டனின் இறுதி தலைமை ஆளுநராக இருந்தவர்), சந்த சுவாமி அல்லது யானைக்குட்டி என்று அழைக்கப்பட்டார்; மற்றும் அமெரிக்காவின் அட்ரியன் ஸ்னோட்கிராஸ், பூனைக்குட்டி என்று அழைக்கப்பட்டார். இந்த குழுவில் மூத்தவராக இருந்த கௌரிபாலா சுவாமி (ஜெர்மன் சுவாமி என்று அழைக்கப்பட்டவர்) மட்டுமே முறையாக தீட்சை பெற்ற சந்நியாசியாக இருந்தார். அவர் அந்த தீட்சையை  யோக சுவாமியை சந்திப்பதற்கு முன்பாக, வட இந்தியாவின் கிரி தஷநாமி  சமூகத்தில் பெற்றார். §

நல்லூரில் ஒவ்வொரு வருடமும் நடைபெற்ற கோயில் திருவிழாவின் போது, யோக சுவாமி தனது சற்குரு வாழ்ந்து ஆதிக்கம் செலுத்திய தேரடியில், தனது வண்ணமயமான குட்டி குழுவுடன் அமர்ந்து இருப்பார். அந்த குழுவினர் பல நாடுகளில் இருந்து வந்து இருந்தாலும், அவர்கள் எல்லோரும் குருவின் முக்கியத்துவத்தை புரிந்து இருந்தார்கள் மற்றும் அவரது ஒவ்வொரு வார்த்தைக்கும் கட்டுப்பட்டு இருந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் உயிர்சக்தியின் உயர்ந்த நிலைகளை அடைய தீவிரமாக முயற்சி மேற்கொண்டதால், சுவாமி சில சமயம் அவர்களிடம் கடுமையான கோரிக்கைகளை விடுத்து, அவர்களை திட்டி அச்சுறுத்தினாலும்,

அவர்களுக்கு ஆதரவை வழங்கி, தன்முனைப்பின் கட்டுப்பாடுகளை கடந்து ஒருவர் தனது சமய வாழ்க்கையில் முன்னேறுவதற்கு தேவையான நுணுக்கமான உந்துதலையும் வழங்கி வந்தார். §

" 'வாழ்க்கை என்கிற பாடமே படிக்கவேண்டிய மிகப்பெரிய சாத்திர புத்தகமாக விளங்குகிறது. வாழ்க்கையின் புத்தகத்தை படியுங்கள். வெளியுலக வாழ்க்கையில் உங்களையும் உங்கள் எதிர்வினைகளையும் கண்காணியுங்கள். எதையும் கட்டுப்படுத்தாமல், உங்கள் பாதையில் திடீரென்று தோன்றும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் சுகமாக அல்லது துக்கமாக, கோபத்துடன் அல்லது பாசத்துடன் சென்று, அக்கறையுடன் கண்காணித்தால் ஒரு நாள், இவை அனைத்தையும் கவனித்து, தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் பார்வையாளர், திடீரென்று எதிர்பாராத விதமாக காட்சி அளிப்பார்!" என்று அவர் என்னிடம் கூறினார்," என்று சாம் (புலிக்குட்டி) நினைவுகூர்ந்தார். §

யோக சுவாமியின் பிரதான பிரம்மச்சாரி சீடர்களில் ஒருவராக கருதப்படும் சந்தசுவாமியின் வாழ்க்கை பற்றிய சில நுணுக்கங்களை தி. சிவயோகபதி பகிர்கிறார். §

ஜெர்மன் சுவாமி 1940 களின் தொடக்கத்தில் இருந்து யாழ்ப்பாணத்தில், பெரும்பாலும் அந்த தீவின் வடக்கு மூலையில் இருக்கும் செல்வசந்நிதி முருகன் கோயிலில் வாழ்ந்ததாக கூறப்படுகிறது. அவர் யோக சுவாமியை 1947 ஆம் ஆண்டில் சந்தித்தார், மற்றும் யோக சுவாமியிடம் சந்தசுவாமியை 1953 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார். மூன்று வருடங்கள் கழித்து, யோக சுவாமி சந்தசாமிக்கு தீட்சையை வழங்கி, கேகேஎஸ் ரோடு சிவத்தொண்டன் நிலையத்தில் வசித்து, தியானம் மற்றும் சேவை செய்யும் பொறுப்பை வழங்கினார். யோக சுவாமி நிலைய மேலாளர் செல்லத்துரையிடம், "ஜெர்மன் சுவாமி சந்தசுவாமியை தவறான வழியில் அழைத்து செல்லாமல் இருக்க, நீ அவர்கள் மீது கவனமாக இரு,"என்று அறிவுறுத்தினார். தீவிரமாக, சிரத்தையுள்ள பிரம்மச்சாரியாக இருந்த அந்த ஆங்கிலேய சாதகர், பெரும்பாலும் சைவ சித்தாந்தம் தொடர்பான புத்தகங்களை ஆர்வத்துடன் படித்து வந்ததாக பக்தர்கள் நினைவுகூர்ந்தார்கள். அதன்பின்னர் யோக சுவாமியின் *மகாசமாதிக்கு* பிறகு, அவர் மட்டக்களப்பின், செங்கலடியில் இருந்த சிவதொண்டன் நிலையத்தை, பன்னிரண்டு வருடங்கள் நிர்வகித்து வந்தார். லௌன்சவர் பிற்காலத்தில் யாழ்ப்பாணம் திரும்பி, மார்கண்டு சுவாமியின் எளிமையான குடிசையில் சில வருடங்கள் தங்கி, இறுதியில் தனது அரசக்குடும்பத்துடன் இருக்க இங்கிலாந்து திரும்பினார். அவர் டிசம்பர் 13, 2004 அன்று தனது 92 ஆவது வயதில் *மகாசமாதி* அடைந்தார். §

**அனைவருக்கும் ஆதரவு**

அவரை சந்திக்க, காலப்போக்கில் உலகின் மூலை முடுக்குகளில் இருந்து, பல்வேறு தரப்புக்களில் இருந்து பல்லாயிரககணக்கான மக்கள் அணுகினார்கள். சிலர் முற்றிலும் லௌகீக காரணங்களுக்காகவும், சிலர் ஆன்மீக ஆசிகளை பெறுவதற்காகவும், சிலர் அவரை சோதனை செய்யவும், சிலர் தங்கள் நோய் குணமடையவும், சிலர் தங்கள் எதிர்காலத்தை பற்றி தெரிந்துகொள்ளவும், மற்றவர்கள் தங்கள் புதிய பொறுப்பில் ஆசிகளை பெறுவதற்காகவும் வந்தனர். “தூல உடலில் தவிப்பவர்கள் அல்லது வேதனையால் தத்தளிப்பவர்களுக்கு, அவரிடத்தில் ஒரு ஆறுதலான வார்த்தை மற்றும் ஆசிகள் காத்து இருந்தன,” என்று ஸ்ரீ திகிரி பண்ட திசனாயகே குறிப்பிட்டார். இது தொடர்பாக ரத்னா மா நவரத்தினம் வழங்கும் குறிப்பு: §


> கிழக்கு மற்றும் மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு என்று உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து உதவியை நாடி வந்த அனைத்து மதத்தை சார்ந்த மக்கள், பல்வேறு தரப்பு ஆண்கள் மற்றும் பெண்கள், பணக்காரர் மற்றும் ஏழையுடன் பெரியவரும் சிறியவரும் அவரை சூழ்ந்து கொண்டனர், ஏனென்றால் தாங்கள் மோதல்களும் முரண்பாடுகளும் இல்லாமல், *சாந்தம் உபஸ்தானம்* என்கிற அகத்தே வாசம் செய்யும் அமைதியை வெளிப்படுத்தும் ஒரு மிகப்பெரிய குருவின் இருப்பில் இருக்கிறோம் என்பதை அவர்கள் உணர்ந்து இருந்தார்கள். §
>
> அவரது பிரகாசமான முகம், கூர்மையான கண்கள், நரைத்த நீளமான தாடி, பளிச்சென்ற விபூதியுடன் இருந்த அவரது பரந்த நெற்றி, இடுப்பில் உடுத்தியிருந்த வெள்ளை நிற பருத்தி துணி, அரசருக்குரிய கம்பீரத்துடன் தோற்றமளித்த அவரது உச்சந்தலையில் முடிந்து விடப்பட்டிருந்த தலை முடி ஆகியவை மொத்தத்தில் எல்லையற்ற மதிப்பு மற்றும் பணிவுடன் சுவாமியை அணுகியவர்களின் இதயங்களில் பிரமிப்பையும் கம்பீரத்தையும் ஏற்படுத்தியது. §

இந்த சிறுகதையை எஸ். நைஜல் சுப்ரமணியம் சிவா பெருமதிப்புடன் பகிர்கிறார்: §

> ஒரு நாள் என் தந்தை சுப்ரமணியம் எப்போதும் போல, சிவயோக சுவாமியை பார்க்க சென்றார். யோக சுவாமி எனது தந்தையிடம், “நான் உன்னிடம் ஒரு செய்தியை சொல்ல வேண்டும்,” என்றார். சுவாமி அடுத்ததாக என்ன சொல்லப் போகிறார் என்பதில் என்தந்தை மிகவும் கவனமாக இருந்தார். அப்போது யோக சுவாமி, “சிவபெருமான் உண்மையில் இருக்கிறார். இதைத்தவிர என்னிடம் வேறு எந்த தகவலும் இல்லை,” என்று அறிவித்தார்.§

ஒரு நாள் காலையில் ஒருவர் தனது வாழ்க்கையில் இருக்கும் வேதனைகளை சுவாமியிடம் சொல்ல வந்தார். அவர் சுவாமியிடம் தனக்கு திருமண வயதில் பெண்கள் இருப்பதாகவும், அனைவருக்கும் திருமணம் செய்து வைக்க

தேவைப்படும் வரதட்சணையை தன்னால் கொடுக்க முடியாது நிலையில் இருப்பதாக தனது மனக்குறையை தெரிவித்தார். மேலும் ஒரு மகளுக்கு தற்போது வரன் வந்து இருப்பதாகவும் அவர் கூறினார். யோக சுவாமி எதுவும் பேசாமல், தனது வேட்டி மடிப்பில் கைவிட்டு, அவரிடம் வரதட்னைக்காக பத்தாயிரம் ரூபாயை வழங்கினார். பொதுவாக தந்தைகள் இதைப்பற்றி கவலைப்படவேண்டாம் என்றும், அவர்களின் பெண்களுக்கு தகுதிக்கேற்ப வரன் அமையும் என்றும் கூறினார். அவ்வாறே தொடர்ந்து நடைப்பெற்றும் வந்தது. தனது பெண்ணின் திருமணத்திற்கு வரதட்சணை தரமுடியாமல் தவித்த முதியவருக்கு உதவிய செய்ய, சுவாமி மற்றவர்களை எவ்வாறு பயன்படுத்திக்கொண்டார் என்பதை பற்றி எஸ். சண்முகசுந்தரம் விவரிக்கிறார்: §



*யோக சுவாமி பெரும்பாலும் அழைப்பு இல்லாமல், ஒரு அன்பரின் வீட்டிற்கு சென்று, தியானம் செய்வார், மற்றும் ஒரு வேளை உணவு சாப்பிட்டு, ஒரு பக்திப் பாடலை பாடுவார். அவர் அவ்வபோது இரவுநேரத்தில் தங்கிவிட்டு செல்வார். அவருக்கு நெருக்கமான அன்பர்கள், அத்தகைய ஒரு விசேஷமான வருகைக்காக ஒரு பிரத்யேக அறையை ஒதுக்கி இருந்தார்கள்.*

……………………§

யோக சுவாமியின் இதயத்தில் ஒவ்வொருவருக்கும் அன்பும் கருணையும் நிறைந்து இருந்தது. அவர் ஒருவரை பார்த்து சிரித்தாலும் அல்லது

இகழ்ந்தாலும், அவரை அரவணைத்தாலும் அல்லது உதைத்தாலும், அவரது ஒவ்வொரு நடவடிக்கையும் அன்பு மற்றும் அருளின் செயலாக இருந்தது. அவர் எந்த வித வெளிப்புற ஆரவாரமும் இல்லாமல், அனைத்து உயிரினங்கள் மீதும் அளவுக்கு அதிகமான கருணையை பொழிவார். அவர் ஏழைகள் மீது செலுத்தும் கவனம் மற்றும் அக்கறையை அளவிடமுடியாது. ஒரு பிரச்சனையுடன் தன்னை நாடி வந்த, ஒரு நேர்மையான அன்பரை அவர் எப்போதும் ஏமாற்றியது இல்லை. ஒரு நாள் காலையில், யோக சுவாமி தனது குடிசையில் அமர்ந்து இருந்தார். அவர் முன்பாக இரண்டு சீடர்கள் அமர்ந்து இருந்தார். சுவாமி அவர்களிடம் பல விஷயங்களைப் பற்றி பேசிக்கொண்டு இருந்தார். அப்போது அங்கே வந்த ஒரு முதியவர், குடிசைக்கு வெளியே நின்று கொண்டார். சுவாமி அவரை உள்ளே வரவழைத்து அவரிடம் நலம் விசாரித்தார். அந்த முதியவர் பதில் ஏதும் பேசவில்லை. அவரது கண்களில் கண்ணீர் வரத்தொடங்கி, இரண்டு மூன்று நிமிடங்களுக்கு தேம்பி தேம்பி அழுதார். §

அப்போது சுவாமி, “கவலை வேண்டாம். உங்கள் வேதனைகளில் இருந்து வெளிவருவதற்கு சிவபெருமான் வழிவகுப்பார். நீங்கள் அமைதியாக வீடு திரும்புங்கள்,” என்று கூறினார். சுவாமி உத்தரவிட்டபடியே அந்த முதியவர் அங்கிருந்து கிளம்பியதும், சுவாமி தனக்கு முன்பாக அமர்ந்து இருந்த இரண்டு சீடர்களை பார்த்து, “அவர் ஒரு நல்ல மனிதர். அவர் தனது பெண்ணை திருமணம் செய்து வைப்பதில் சில இடையூறுகளை சந்தித்து வருகிறார். அந்த பெண்ணுக்கு 26 வயது. அவளது தந்தை திருமணத்தில் சீதனமாக சிறிதளவு நகையை வழங்கினால், திருமணம் செய்துகொள்ள ஒரு உறவுக்கார பையன் தயாராக இருக்கிறான். உங்களில் யாராவது அவருக்கு உதவி செய்ய முடியுமா?” என்று கேட்டார். உடனே அ. தில்லையம்பதி தான் உதவி செய்ய தயாராக இருப்பதாக கூறினார். அவர் அங்கிருந்து விடைபெற்று, அந்த முதியவருக்கு பின்னால் ஓடி சென்று, அவரது பெயரையும் விலாசத்தையும் பெற்றுக்கொண்டார். அடுத்த நாள் அவர் அந்த முதியவரின் வீட்டிற்கு சென்று, ஐயாயிரம் ரூபாயை பரிசாக வழங்கினார். அவர் காலம் தாழ்த்தாமல், தேவையான நகைகளை வாங்கி, தனது மகளுக்கு மணமுடித்து வைத்தார்.§

சுவாமியை தரிசிக்க பெருந்திரளான மக்கள் வருவதை பார்த்த சிலர், சுவாமி எதற்காக எல்லோரையும் அனுமதிக்கிறார் என்றும் சுவாமியுடன் சிறிது நேரம் இருந்தால், தனக்கு பலன் தருவதாக இருக்கும் என்பதை அறிந்திருந்த சிலர், குறிப்பாக ஒரு வழக்கை வாதாடுவதற்கு முன்பாக அவரை நாடி வரும் வழக்கறிஞர் போன்றவர்களை அவர் ஏன் தடுக்கவில்லை என்றும் யோசித்தனர். “நான் எல்லோரையும் சந்திக்கிறேன், மற்றும் எல்லோரும் என்னிடமிருந்து தன்னால் கிரகிக்க முடிந்ததை சுமந்து செல்கிறார்கள். என்னை நாடி வருவோரிடம் நீ வா அல்லது நீ போ என்று தேர்ந்தெடுக்கும் பணி என்னுடையது இல்லை, “ என்று அவர் ஒருமுறை விளக்கினார்.

சுவாமியை நாடி வந்தவர்கள் மூன்று பிரிவுகளை சார்ந்து இருந்ததாக ஒண்டாரியோவை சேர்ந்த எஸ். கந்தையாவிற்கு தோன்றியது. §

> முதல் வகையை சார்ந்தவர்கள் அதிக ஆன்மீக நாட்டத்துடன், துறவியை போன்று வாழ்ந்தவர்கள். இந்த வகையைச் சார்ந்தவர்கள் மிகவும் சிறிய எண்ணிக்கையில் இருந்தார்கள். சுவாமி இவர்களை மற்றவர்களிடம் இருந்து விலக்கி வைத்திருந்தார், மற்றும் அவர்கள் தன்னை வந்து சந்திப்பதை காட்டிலும் அவரே அவர்களை நாடி செல்வார். இரண்டாவது வகையை சார்ந்தவர்கள் லௌகீக சுகங்களை அனுபவித்து வந்தாலும், சிறிதளவு ஆன்மீக நாட்டத்துடன் இருந்தவர்கள். மூன்றாவது வகையை சார்ந்தவர்கள் லௌகீக சுகங்கள், பதவிகள், சொத்துக்களை தங்கள் பிரதான நாட்டமாக கொண்டிருந்தார்கள். §
>
> நான் சுவாமியிடம் நெருங்கி பழக தொடங்கியதால், என்னிடம் இருந்த அச்சம் மற்றும் பதட்டம் குறைந்து இருந்த சமயத்தில், மூன்றாவதாக குறிப்பிட்ட போலி சீடர்களுக்கு அவர் ஏன் அனுமதி அளிக்கிறார் என்று நான் கேட்டேன். அவர் மனமுவந்து உற்சாகமாக சிரித்த சிரிப்பொலி நூறு மீட்டர் தூரத்திற்கு கேட்டிருக்கக்கூடும். அவர் என்னிடம், “நான் நல்லவனை நல்லவனாக மாற்ற வேண்டுமா, அல்லது தீயவனை நல்லவனாக மாற்ற வேண்டுமா?” என்று கேட்டார். அவரது ஆதரவு தீங்கிழைப்பவர்களும் ஆன்மீக சாதகர்களும் கிடைத்தது என்று சொல்லலாம். §

ஆனால் அவர் சில சீடர்களை வலுவாக மற்றும் தெளிவாக, கடுமையான முறையில் திட்டி அனுப்பியதால், அது அவர்கள் மீது உடனடி தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்கள் மீண்டும் சுவாமியிடம் வருவதை தவிர்த்தது. மேலும் சிலரை அவர் பார்க்க மறுத்தார். ஒருவரை துரத்துவதால் அல்லது பார்க்க மறுப்பதால், அவர் அவர்களுக்கு தரிசனம் தருவதாக விளக்கம் அளித்தார். §

ஒருமுறை சுவாமியின் பழைய மற்றும் நாணயமான அன்பர், மறுநாள் திருமணம் நடக்கவிருந்த தனது சிறிய மகளுடன் வந்து இருந்தார். அவர்கள் சுவாமியிடம் ஆசிகளை பெறுவதற்காக வந்து இருந்தார்கள். கதவு திறக்கும் சத்தம் கேட்டது, சுவாமி, “யார் அங்கே?” என்று கேட்டார். குடிசையில் அமர்ந்து இருந்த ஒரு அன்பர், வெளியே வந்தவர்களை பார்க்க சென்றார். அவர் திரும்பி வந்து, சுவாமியிடம் வந்தவர்களை பற்றிய தகவலை வழங்கியதும், “யார் அவர்?” என்று கேள்வி கேட்டார். சுவாமிக்கு அந்த நபரை நன்றாக தெரியும், என்று எல்லோரும் அறிந்து இருந்தார்கள். அந்த நபர் எதற்காக வந்து இருந்தார் என்பதையும் அவர்கள் அறிந்து இருந்தார்கள். §

சுவாமி சிறிது நேரம் அமைதி காத்து, “நாம் இப்போது பரிச்சயம் இல்லாத நபரை சந்திக்க விரும்பவில்லை. நாம் அவரை சந்திக்க முடியாது என்று சொல்லுங்கள்.” ஒரு அன்பர் வெளியே சென்று, அந்த நபரிடம் தகவலை வழங்கினார். அவர்கள் வந்த வாகனம் கிளம்பியதும், அது சென்றுவிட்டதா என்று ஒரு அன்பரை அனுப்பி பார்க்க சொன்னார். அந்த வாகனம்

சென்றுவிட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். அது கிளம்பும் சத்தத்தை எல்லோரும் கேட்டு இருந்தனர். ஆனாலும் சுவாமி ஒருவரை அனுப்பி பார்க்க சொன்னார். அந்த அன்பர் குடிசைக்கு திரும்பியதும், சுவாமி கலகலவென சிரிக்க ஆரம்பித்தார். அதன் பிறகு சுவாமி தனது நடவடிக்கையை குழப்பத்துடன் பார்த்துக்கொண்டு இருந்த அன்பர்களிடம், "அது எப்போவோ முடிந்த காரியம். நீண்டகாலம் முன்பே முடிந்து விட்டது," என்று கூறினார். அந்த அன்பரையும் அவரது மகளையும் சுவாமி ஏன் பார்க்க மறுத்தார் என்பது யாருக்கும் புரியவில்லை, ஆனால் தாங்கள் பார்த்த காட்சியின் பின்னணியில் ஒரு ஆன்மீக காரணம் இருந்துள்ளதை எல்லோரும் உணர்ந்தார்கள். §

ஆசிரமத்திற்கு தொடர்ந்து வந்துகொண்டிருந்த விசுவாசமான பெண் அன்பர் ஒருவர், ஒரு முறை சுவாமி தன்னை திருப்பி அனுப்பிய சம்பவம் பற்றி எடுத்துரைக்கிறார். §

> வழக்கமாக அக்டோபர் மாதத்தில் வரும் தீபத் திருவிழாவான தீபாவளிக்கு, நமது சொந்தங்கள் அல்லது நமக்கு விருப்பமான நபருக்கு புத்தாடைகளை வழங்குவோம். அதனால் நான் அவருக்கு ஒரு அருமையான வேட்டியை வாங்கி, அவரது ஆசிரமத்திற்கு சென்று எனக்கு அழைப்பு வரும் என்று நீண்டநேரம் காத்து இருந்தேன். இறுதியாக அவர், "யாரும் உள்ளே வரவேண்டாம்; எல்லோரும் சென்று விடுங்கள்," என்றார். நான் சோகமடைந்து அழத்தொடங்கிவிட்டேன். அதன் பிறகு அவர், "சரி, அந்த வேட்டியை உள்ளே கொண்டு வரவேண்டாம். நீங்கள் மட்டும் உள்ளே வரலாம்." நான் வாங்கிய வேட்டியை சுவாமி வாங்க மறுத்ததால், நான் சோகமடைந்தேன். அதைப் பார்த்ததும் சுவாமி, ஒரு அரசராகவும் ஒரு மிகப்பெரிய மகானாகவும் இருந்த, ஜனகரின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டார். "ஜனகரின் குரு அவரை நாற்பது நாட்கள் காத்திருக்க செய்தார். ஆனால் அவர் கலங்காமல் ஒரே இடத்தில் நகராமல் காத்து இருந்தார். நீங்கள் ஒரு குழந்தை போல, இந்த சிறிய விஷயத்திற்கு அழ ஆரம்பித்து விட்டீர்கள்," என்று கூறி என்னை அனுப்பிவிட்டார். "முதலில் அடிபணிந்து நட, பிறகு ஆணை யிடலாம்," என்று அவர் வழக்கமாக சொல்லிக்கொண்டிருப்பார். §

ஒரு முறை ஒரு நபர் தன்னிடம் சேர்ந்திருந்த புத்தக தொகுப்புக்களை கொண்டு, ஒரு புத்தகக்கடையை திறக்கலாம் என்று எண்ணினார். அவர் தனது கடைக்கு சுவாமி வந்து ஆசிகளை வழங்கவேண்டும் என்று விரும்பினார், ஆனால் அவர் சுவாமியை பார்த்த ஒவ்வொரு முறையும், தனது வேண்டுகோளை மறந்துவிட்டார். இருந்தாலும், சுவாமியிடம் அதைப்பற்றி குறிப்பிடுவது, அவ்வளவு முக்கியமானதாக அவருக்கு தோன்றவில்லை. அவர் அந்த கடையை திறக்க ஒரு மங்களகரமான தருணத்தில் ஒரு சிறிய விழாவிற்கு ஏற்பாடு செய்து இருந்தார். விழாவின் நேரம் நெருங்கி இருந்தது. இருந்தும், அதுவரை அவர் சுவாமிக்கு அழைப்பு விடுக்கவில்லை. ஆனால், பூஜை தொடங்குவதற்கு சோதிடர் குறித்து இருந்த நேரத்தில் சரியாக சுவாமி

வந்தடைந்தார். காலப்போக்கில், அந்த கடை யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல கடையாக மாறியது. அன்றைய தினம் சுவாமி வந்து தனது கடைக்கு ஆசிகளை வழங்கியதன் விளைவாக, அது வெற்றி அடைந்ததாக அந்த கடை உரிமையாளர் கருதினார். §

கேட்கப்படாத கேள்விகள் மற்றும் அறியமுடியாத தேவைகளின் நிறைவேற்றங்களுக்கு சுவாமியின் பதில்களை பற்றி நூற்றுக்கணக்கான கதைகள் மக்கள் மத்தியில் உள்ளன. சுவாமியை காண வந்த ஒரு நபருக்கு, சுவாமியின் மூலம் ஒரு குறிப்பிட்டதக்க அனுபவத்தை பெற்று இருந்தால், அல்லது ஒரு முக்கிய உதவியை பெற்று இருந்தால், அந்த நபர் அதைப்பற்றி பேசுவதை தடுத்து, “புனிதம் இரகசியமானது, மற்றும் இரகசியம் புனிதமானது,” என்று எச்சரிப்பார். அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் சுவாமியை சென்று பார்த்து இருந்தாலும், இருவரும் தங்களுக்குள் அதைப்பற்றி பேசிக்கொள்ளாத அளவிற்கு, மக்கள் அவரது அறிவுரையை பாதுகாத்து வந்தனர். காற்றின் மூலம் செய்திகள் பரவும் யாழ்ப்பாணத்தில், அத்தகைய ஒரு இரகசியம் பாதுகாக்கப்பட்டதை பலர் ஒரு அதிசயமாக கருதினார்கள். §

சுவாமியை தரிசிக்க அன்பர்கள் அதிகாலையில் அல்லது மாலையில் வந்தார்கள். அவர் விடிவதற்கு முன்பாக விழித்துக்கொண்டு, தனது குடிசையில் தியானம் செய்து கொண்டிருப்பார். பக்திமான்கள் அவருடன் சேர்ந்து உட்கார்ந்து கொள்வார்கள். சிறிது நேரம் அமைதியாக இருந்த பிறகு, சுவாமி பாடத்தொடங்கி விடுவார். முழுமையாக இருந்த அவரது குரல் வளத்தில் பாடல்கள் இனிமையாக இருந்தன. ஒரு முறை ஒரு அன்பர் சுவாமியிடம், ஒரு குறிப்பிட்ட பாடலுக்கு என்ன பொருள் என்று கேட்டார். அதற்கு சுவாமி, “அந்த பாடலை நான் எழுதவில்லை; அது உள்ளிருந்து வந்தது,” என்று பதில் அளித்தார். அவர் மற்ற மகான்கள் இயற்றிய பாடல்கள் மற்றும் சாஸ்திரங்களை பாடுவார். அந்த பாடல்களும் தனது உள்ளிருந்து வந்ததாக குறிப்பிட்டு, “அவற்றை நான் ஞாபகப்படுத்திப் பாடியதாக தோன்றினாலும், நான் அவ்வாறு செய்யவில்லை. அவை எனது உள்ளிருந்து வந்தன.” §

அவர் தன்னுடன் அமர்ந்து இருக்கும் ஒரு அன்பரிடம் ஒரு *தைத்ரிய உபநிடதம்*, மிகப்பெரிய *திருமுறையில்* இருந்து ஒரு பகுதி, சுவாமி விவகானந்தரின் படைப்புக்கள் அல்லது ஏதாவது ஒரு புனிதமான புத்தகத்தை தந்து, அதை வாசிக்க சொல்வார். §

அன்பர்கள் தனக்காக பாடும் போது அல்லது வாசிக்கும் போது, தங்கள் கவனத்தை சிதறவிட்டு, ஏதோ ஒரு காலத்தில் ஒரு தொலை தூர இடத்தை பற்றி வாசிப்பதாக நினைக்காமல், அந்த தருணத்தில் தாங்கள் சிவபெருமானாக அல்லது மாணிக்கவாசகராக நினைத்துக்கொண்டு வாசிக்க வேண்டும் என்று அவர்களிடம் கேட்டுக்கொள்வார் அல்லது கடிந்தும் கொள்வார். “இந்த வார்த்தைகளை புரிந்துகொள்வதற்கு, இது தான் ஒரே வழி,”

என்று அவர் வலியுறுத்தினார். சுவாமி தன்னை அணுகும் ஒவ்வோரிடமும் சவால் விடுவார். §

> உங்களுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் என்றால், நான் யார் என்று எனக்கு தெரியும். நீங்கள் யார் என்று தெரிந்துகொள்வதற்கு நான் உதவி செய்யலாமா? என்னால் உங்களுக்கு வழியையும் ஒளியையும் காண்பிக்க முடியும், ஆனால் நீங்கள் உங்கள் சொந்த கால்களில் நின்று முயற்சி செய்து முன்னேற வேண்டும். எல்லாம் உட்புறத்தில் இருக்கிறது. நீங்கள் அதை தேடிப்பிடித்து, அதை உறுதி செய்யவேண்டும். என்னால் உங்களுக்கு கீரிமலை அல்லது நல்லூருக்கு செல்ல வழியை காண்பிக்க முடியும். நான் அங்கே பலமுறை சென்றுள்ளதால், எனக்கு அந்த வழி தெரியும். ஆனால் நீங்கள் அங்கே செல்லவேண்டும் என்றால், நீங்கள் நடந்து செல்லவேண்டும். உங்களுக்காக என்னால் நடந்து செல்ல முடியாது. ஆன்மீக பாதையிலும் அதே நிலை தான். §

காலப்போக்கில் சுவாமி தான் சந்திக்கும் ஒவ்வொரு நபரையும் மேம்படுத்தி, ஊக்கமளித்து, உதவி செய்ய மேற்கொண்ட தொடர் முயற்சிகளின் மூலம், அவர் அன்பர்களின் ஒரு வலுவான குழுவை உருவாக்கி இருந்தார். இதைப்பற்றி இந்துமதி அம்மா வழங்கும் குறிப்பு: §

> கொழும்புத்துறை ஆசிரமத்தில் தங்கியிருப்பதன் மூலமாகவும், அன்பர்களின் வீடுகளுக்கு செல்வதன் மூலமாகவும், சுவாமி ஒரு மிகப்பெரிய சீடர்களின் குழுவை உருவாக்கி இருந்தார். அவர்களில் சிலர் மற்றவர்களுக்கு சேவை செய்வதன் மூலம், மற்றவர்களிடம் இருந்து நன்கொடைகளை வாங்கி மற்றும் வழங்குவதன் மூலம், இறைவனின் சேவையில் நிலைமாற்றம் பெற்று இருந்தார்கள். இருந்தாலும் மற்றவர்கள், “என்னை யார் தொடர்ந்து நினைக்கிறார்களோ, அவர்கள் எனது உண்மையான சீடர்கள்,” என்ற வாக்கிற்கு ஏற்ப, அவரை தொடர்ந்து நினைத்துக்கொண்டு இருந்தவர்கள் அவரது சீடர்களாக மாறினர். சில குடும்பங்களில் கணவன், மனைவி, பெற்றோர்கள், குழந்தைகள், மாமன்மார்கள் மற்றும் அத்தைமார்கள் என்று எல்லோரும் ஒரு சீடர்களின்  குழுவாக இருந்தனர். இவற்றில் சில குடும்பங்கள், தங்களை ஒரு விசரனாக மற்றவர்கள் பேசுவதை பொருட்படுத்தாமல், சுவாமியை பற்றி நினைவு தங்களுக்கு எப்போதும் இருக்க வேண்டும் என்பதற்காக சிவன்செயல், சிவதொண்டன், யோகரானந்தன், யோகர் அன்பன் என்று பெயரிட்டனர்.  மற்றும் சிலர் கர்ம யோகிகளாக மாறினார்கள். §
>
> சிலர் லௌகீக வாழ்க்கையை துறந்து, சுவாமிக்கு அருகில் வாழும் சிப்பந்திகளாக மாறினார்கள். இங்கிலாந்தின் அரச குடும்பத்தை சார்ந்த ஒருவரும் துறவறம் மேற்கொண்டு, சுவாமியின் சீடர் ஆனார். மார்கண்டுசுவாமி மற்றும் மற்ற பிரம்மச்சாரிகள் சுவாமியின் “தன்னை அறி" பாதையை பின்பற்றி, பக்குவம் அடைந்து, அனைத்து சிவ

பக்தர்களுக்கும் வழிகாட்டும் விளக்குகளாக மாறினார்கள். சமய அறிவு மற்றும் தார்மீக ஒழுக்கத்தால் கிடைக்கும் அனுபவத்தின் மூலம், சுவாமியின் தெய்வீக குழந்தைகள், ஒழுங்குமுறையான வாழ்க்கையால் வலுப்படுத்தப்பட்டு மற்றும் மனத்துறவின் விதிகளை கடைப்பிடித்துக்கொண்டு, அவரது பாதையை பின்பற்றினார்கள். §

சிவயோகர் சுவாமியின் சில சீடர்கள் அரசாங்க வேலையில் இருந்தார்கள். நாடு முழுவதிலும் வேலை செய்த அன்பர்களால், ஆசிரமத்திற்கு தொடர்ந்து வர முடியவில்லை. அதனால் சுவாமி அவர்களை தேடி அவர்களின் வீட்டிற்கு சென்றார். குறிப்பாக அவர்கள் தீவிர வேதனையில் இருந்து, மனம் உடைந்த நிலையில் தன்னை வேண்டிக்கொள்ளும் போது, சுவாமி அவர்கள் முன்பாக தோன்றி அவர்களுக்கு தெய்வீக அருளுடன் ஆசிகளை வழங்குவார். அவர் மாபலேவை சேர்ந்த அஞ்சல் நிலைய அதிகாரியை சந்திக்க, மற்றும் திரு. கந்தசுவாமி வீடு, பேராதனையில் இருந்த திரு. வேலுப்பிள்ளையின் பண்ணை வீடு, கம்பளையில் வேலை செய்த Dr. இராமநாதன் வீடு மற்றும் மற்ற இடங்களுக்கு செல்வதை தனது வழக்கமாக கொண்டிருந்தார். அவர் ரத்னபுராவில் இருந்த திரு. அ. தில்லையம்பதியின் வீடு மற்றும் நாவலப்பிட்டியில் இருந்த மற்ற சீடர்களின் வீட்டிற்கும் சென்றார். இவ்வாறு சுவாமி, இலங்கை தீவில் இருந்த பல சீடர்களின் வீட்டிற்கு சென்றார். அந்த சீடர்கள் தங்கள் பூஜை அறையை, சுவாமியின் சொந்த அறையை கவனிப்பது போல, அதிக அக்கறையுடன் கவனித்து வந்தனர். சுவாமி ஒரு வீட்டிற்கு வந்துள்ளார் என்பதை அவர்கள் தெரிந்துகொண்டதும், எல்லோரும் சுவாமியை தரிசனம் செய்ய அந்த வீட்டில் கூடி விடுவார்கள். §

சுமார் இருபது ஆண்டுகளுக்கு, மாதம் ஒரு முறை மலை பிரதேசத்திற்கு, கொழும்பிற்கு, திரிகோணமலைக்கு, மட்டக்களப்பிற்கு சென்றதன் மூலம் தனது சீடர்களை கவனித்து கொண்டார். சுவாமி சென்ற வீடுகள் அனைத்தும், கோயில்களை போல செழிப்படைய தொடங்கின. அதன் பிறகு, 1942 ஆம் ஆண்டு, தனது 70 ஆவது வயதில், “இனி வெளியூர்களுக்கு செல்வதில்லை. விரும்பியவர்கள் இங்கே வரட்டும்,” என்று ஆணையிட்டார். §

ஒரு அன்பர் பின்வரும் சிறுகதைகளை பகிர்ந்து கொண்டார்.§

ஒரு நாள் மாலையில், ஆசிரமத்தில் சுமார் பதினைந்து அன்பர்கள் கூடியிருந்த நிலையில், சுவாமி எங்கள் எல்லோரிடமும் இங்கே எத்தனை அன்பர்கள் இருக்கிறார்கள் என்று கேட்டார். யாரும் எதுவும் பேசவில்லை. அப்போது சுவாமி, “இங்கே ஒருவர் மட்டுமே உள்ளார்,” என்று கூறினார். §

“நீங்கள் உண்மையை பேசக்கூடாது, ஒரு பொய்யை பேசவேண்டும் என்று உங்களிடம் கூறப்பட்டால், நீங்கள் என்ன செய்யவேண்டும்?” என்று சுவாமி வழக்கமாக எல்லோரிடமும் விசாரிப்பார். ஒரு நாள் சுவாமி,

சந்தசுவாமியிடம் அந்த கேள்வியை கேட்டார். உடனே சந்தசுவாமி தன் கைகளால் வாயை மூடிக்கொண்டு, எதையும் பேசாமல் இருந்தார். பின்னர் சுவாமி எங்களிடம், “அவர் ஒரு மகான். யாழ்ப்பாணத்தை சேர்ந்த பலர் எனக்கு பலவிதமான விளக்கங்களை வழங்கினார்கள்; ஆனால் அவை அனைத்தையும் அவர் அமைதியில் காண்பித்து விட்டார்,” என்று கூறினார். §

ஒரு நாள் காலையில் சுமார் 5:30 மணிக்கு, நான் சுவாமியை சந்திக்க சென்றேன். அவர் எப்போதும் போல தனது குடிசைக்கு முன்பக்க வளாகத்தை பெருக்கிக்கொண்டு இருந்தார். அவர் தனது வளாகத்தை தினமும் காலையில் பெருக்கி, தூசியை ஒரு புறமும், மாட்டு சாணத்தை ஒரு புறமும் குவித்து வைப்பார். நான் நுழைந்ததும் அவர் தன் வேலையை நிறுத்தி, “யார் அங்கே? வந்து இருப்பது யார்?” என்று திட்டமிட்டு கத்தினார். அதன் பிறகு அவர் என்னிடம், “நான் இதுவரை ஒரு கழிவறை கூலியாக இருந்தேன்; இப்போது நான் ஒரு சுவாமியாக இருக்கிறேன்,” என்று கூறினார். அதன் பிறகு அவர் குடிசைக்குள் சென்று, ஒரு சிறிய செம்பு பத்திரத்தை எடுத்துக்கொண்டார். அதில் தண்ணீரை நிரப்பி, அதன் மீது ஒரு குவளையை வைத்து மற்றும் சில மலர்களை தூவி, ஒரு கும்பத்தை உருவாக்கினார். தான் மக்களின் இதயங்களை சுத்தம் செய்வது பற்றி சுவாமி குறிப்பிடுவதாக எனக்கு தோன்றியது. “மக்களை சரியான பாதையில் அழைத்து செல்வதற்கு, யாராவது ஒருவர் இருக்க வேண்டும். அவ்வாறு கிறுத்து மக்களை வழிநடத்தினார், அவ்வாறு புத்தரும் செய்தார். நானும் அதை செய்கிறேன்,” என்று அவர் கூறினார்.§

ஒரு நாள் சுவாமி தனது ஆசிரமத்தில் சந்தசுவாமியுடன் இருந்த போது, நான் சுவாமிக்கு தேநீர் எடுத்து சென்றேன். அவர் அந்த கோப்பையை சந்தசுவாமிக்கு வழங்கவிருந்தார். அதனால் நான், “சற்று பொறுங்கள் சுவாமி, நான் அவருக்கு இன்னொரு கோப்பையை கொண்டு வருகிறேன்,” என்றேன். உடனே சுவாமி, “நீங்கள் உங்கள் வேலையை கவனியுங்கள்; நான் என்ன செய்யவேண்டும் என்று எனக்கு தெரியும்,” என்று பதில் அளித்து, அந்த கோப்பையை சந்தசுவாமிக்கு வழங்கினார். §

மக்கள் எப்போதும் வேலை செய்துக்கொண்டு இருக்கவேண்டும் என்று யோக சுவாமி விரும்பினார். அவர் வேலைக்கு முக்கியத்துவம் அளித்தார். அவர் ஒரு நாள் பெருக்கி முடித்து விட்டு, “இறுதி இரத்தம் சிந்தும் வரை வேலை செய்யவேண்டும்,” என்றார். “உனது வேலையை செய். உனது கர்மாவை செய். எந்த பலனையும் எதிர்பார்க்காதே. அது தான் யோகம். அது தான் சந்நியாசம்.” அதாவது, லௌகீக விஷயங்கள் மீது பற்றுடன் இருக்கக்கூடாது என்பதை குறிப்பிட்டார். §

ஒரு முறை நாங்கள் எல்லோரும் சுவாமியின் இருப்பிடத்தில் வாழையிலையில் சாப்பிட்டோம். எல்லோரும் தங்கள் இரவு விருந்தை சாப்பிட்டு முடித்த பிறகு, அங்கே வந்திருந்த ஒரு பெண் மருத்துவர், சுவாமியின் இலையை எடுப்பதற்கு முன் வந்தார். சுவாமி அவரிடம்,

> “என்னால் என் வேலையை செய்ய முடியும். நீங்கள் உங்கள் வேலையை கவனியுங்கள்,” என்றார். §

சுவாமி தன் சீடர்களுக்கு சேவை செய்யும் பாதையை திறந்து வைத்தார். “வேலை, வேலை, வேலை, சேவை, சேவை, சேவை.” அவரிடம் எப்போதும் ஏதாவது ஒரு பணி இருந்துகொண்டே இருந்தது, மற்றும் அந்த பணி எந்த ஒரு நபராலும் குழுவாலும் சாதிக்க முடியாததாக இருந்தது. அந்த பணிகளில் சுவாமி இரண்டாம் தர செயல்பாடுகளுக்கு எப்போதும் அனுமதி அளிக்காமல், முழுமையான செயல்பாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஒரு இந்து திருவிழாவிற்கான நாடகம் என்றால், சுவாமி அதன் தயாரிப்பில் நேர்மறையான அறிவுரைகளை வழங்குவார். சுவாமி அந்த நாடக தயாரிப்பில் இயக்குனர், ஒத்திகை காட்சிகள், நாடக நடிகரை ஊக்குவித்து அவரது திறமையை முழுமையாக பயன்படுத்துதலைப் போன்ற பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டார். “நீங்கள் நினைப்பதை காட்டிலும், உங்களிடம் அதிகமான திறமை அடங்கியுள்ளது,” என்று அவர் கோபித்து கொள்வார். அவரது எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் போது, ஒவ்வொருவரும் தன்னிடம் இருக்கும் ஒரு புதிய பலத்தை தேடிக்கொண்டனர். இது தொடர்பாக ஒரு அன்பர் சில சம்பவங்களை நினைவு கூர்கிறார்:§

> நீங்கள் நல்லூர் கோயிலில் ஆயிரம் நபர்களுக்கு அன்ன தானம் வழங்க திட்டமிட்டு இருந்தால், அந்த நிகழ்ச்சி சுமூகமாக நடந்து முடிய, நீங்கள் அனைத்தையும் நன்றாக திட்டமிட்டு இருக்கிறீர்களா என்பதை அவர் உறுதி செய்து கொள்வார். அந்த அன்னதானத்தில் என்ன காய்கறிகள் பரிமாறப்படவிருக்கின்றன என்பதை அவர் தெரிந்துக்கொள்ள விரும்புவார், மற்றும் அவர் மாற்று காய்கறிகளை அல்லது எண்ணிக்கையை குறைக்க பரிந்துரைப்பார். “மூன்று காய்கறிகள் போதும்,” என்று அவர் பரிந்துரைப்பார். §
>
> நீங்களும் மற்ற அன்பர்களும் சேர்ந்து ஒரு பாழடைந்த கோயிலை புனர்நிர்மாணம் செய்கிறீர்கள் என்றால், அவர் அதில் அக்கறை செலுத்தி, அதை முறையாக மீண்டும் கட்டுவதையும், அதன் குடமுழுக்கு விழாவிற்கு தேவையான சடங்குகளை செய்வதையும், அவர் உறுதி செய்து கொள்வார். அந்த கோயில் எதிர்காலத்தில் தொடர்ந்து செயல்படுவதற்கு, போதுமான நன்கொடை நிறுவலை வழங்கி இருக்கிறீர்களா என்பதையும் விசாரிப்பார்.§
>
> தன் வாழ்க்கையில் ஒரு சாதனை செய்திருந்த ஒரு அன்பர், சுவாமியிடம் பாராட்டை பெறுவதற்காக வந்தால், அவர் அன்பரின் தற்பெருமையை உடனே முடிவுக்கு கொண்டு வந்துவிடுவார். சில சமயம் அவர் அன்பரின் சாதனையை உடனே புறக்கணித்து, கவனம் செலுத்த வேண்டிய இன்னொரு பணியின் மீது தன்னை ஈடுபடுத்திக் கொள்வார். அப்படி இல்லையென்றால், “இந்த செயலால் நீ பலருக்கு நல்ல உணவை வழங்கியுள்ளதாக கருதுகிறாயா? நீ தான் உணவிற்கு உயிரை

> வழங்கினாயா? அல்லது அந்த காய்கறிகளை சமைத்தவர்களுக்கு உயிரை வழங்கினாயா? யார் பசியை உருவாக்கியது? நீ தான் பசியாறுவதற்கு வழியை தேடி தந்தாயா? தம்பி, நீ எதையும் சாதித்து விட்டதாக கருதக்கூடாது. இவை அனைத்தும் இறைவனின் செயல். நீ அதை புரிந்துகொண்டதும், நீ எதையும் செய்யவில்லை என்பது உனக்கு புரியும், " என்று அதட்டுவார். §

"நீ தாமரை இதழின் மீதிருக்கும் நீர் துளி போல இரு," என்று அவர் வற்புறுத்தினார். அதாவது பற்றுடன் இருக்காதே; எதுவும் நடைபெறவில்லை என்ற நினைப்பில் சுதந்திரமாக சுற்றி திரி. ஒரு முறை தனக்கு ஒரு விசேஷமான ஆன்மீக அனுபவம் நடந்துள்ளதாக, சுவாமியின் நெருக்கமான சீடருக்கு தோன்றியது. அவர் தனது தியானத்தில் எதிர்கொண்ட மெய்யுணர்வின் பரிணாமங்கள், அவருக்கு முற்றிலும் புதிதாக இருந்தன. அடுத்த நாள் காலையில் அவர் சாலையில் நடந்து செல்லும் போது, சுவாமி எதிரில் வந்து, என்ன நடந்தது என்று கேட்டார். அவர் எதையும் யோசிக்காமல், "ஒன்றுமில்லை, சுவாமி," என்று பதில் அளித்தார். "சரியாக சொன்னாய், ஒன்றும் நடக்கவில்லை," என்று சுவாமி வலியுறுத்தினார்.

தன்னை நாடி வந்தவர்களுக்கு என்ன தேவை என்பதை யோக சுவாமி நன்றாக அறிந்து இருந்தார். அவரது முன்னிலையில் மக்கள் குறைவாகவே பேசினார்கள். குரு பேச்சு வார்த்தையை தொடங்காமல், சீடர்கள் தொடங்குவது குரு நெறிமுறைக்கு எதிராக இருந்தது. பெரும்பாலும் அன்பர்கள் கேள்வி கேட்கமுடியாமல் தவித்தனர். அப்படி அவர்கள் கேள்வி கேட்டால், " உங்கள் அறியாமை, கேள்வி கேட்கிறது! அதை அதன் வீட்டிற்கு அனுப்பு!" என்று கூறுவார். பெரும்பாலும் கேள்விகள் கேட்கப்படுவதற்கு முன்பே, சுவாமி அவற்றை தெளிவு படுத்திவிடுவார். ஒரு அன்பர் தனது மனதில், "அர்ஜுனனுக்கு கிருஷ்ணர் தனது தெய்வீக உருவத்தை காண்பித்தார். சுவாமி நீங்கள், உங்களது தெய்வீக மற்றும் பிரகாசமான ஆன்மாவை எனக்கு காண்பிக்க வேண்டும் என்று அவரிடம் கேட்கவேண்டும் போல தோன்றுகிறது. ஆனால் நான் அவரிடம் இதை எப்படி கேட்பது? அவர் என்னை கடிந்து கொள்வாரே?" என்று நினைத்துக்கொண்டார். அப்போது சுவாமி, §

> அர்ஜுனனுக்கு கிருஷ்ணர் தனது பிரகாசமான சக்தியை கண்பித்ததை போல, என்னாலும் எனது பிரகாசமான உருவத்தை காண்பிக்க முடியுமா என்று யோசிக்கிறீர்கள். அது மிகவும் சுலபம். நேரம் அனுகூலமாக இருக்கும் போது, அது ஒவ்வொருவருக்கும் நடைபெறும். ஆனால் உங்கள் மனதின் எந்த ஒரு மூலையிலும் ஆசை குடிக்கொண்டு இருக்கக்கூடாது. நீங்கள் உங்கள் ஆசைகளை நீக்கி சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். தெய்வீக பாடல்களை பாடுங்கள், " ஓம் நமச்சிவாய, சிவாய நம ஓம்," பாராயணம் செய்யுங்கள், நெற்றியில் விபூதி பூசிக்கொண்டு, ஆசைகளை தணிய செய்யும் சாதனாக்களை செய்யுங்கள். மனதில்

ஆசை தோன்றினால், உங்கள் மனதை ஈமச்சடங்கு தீயாக மாற்றி, அந்த ஆசையை எரித்து விடுங்கள். அதை எரித்து விடுங்கள்! தியானம் செய்து, அந்த ஆசை எரிவதை கவனியுங்கள். அந்த சுடர்களை உணருங்கள். அதன் பிறகு இருப்பிடத்தில் இருந்து எழுந்து, குளித்துவிட்டு நெற்றியில் விபூதியை பூசிக்கொள்ளுங்கள். நெற்றியில் பூசிக்கொண்டு அந்த சாம்பல், உங்கள் ஆசையின் சாம்பல் என்பதை புரிந்துகொள்ளுங்கள். §

### ஆசீர்வதிக்கப்பட்ட கண்டிப்புக்கள்

தனக்கு மரியாதை அளித்தவர்களை யோக சுவாமி கூர்ந்து கவனித்தார். அவர் எதுவாக அன்பர்களின் மனதில் தோற்றம் அளிக்கிறாரோ, அதை அவர்கள் தங்களுக்குள் உணரவேண்டும் என்பது அவரது மிகப்பெரிய போதனைகளில் ஒன்றாக விளங்கியது. ஒரு நபர் அவரை “நான் மிகவும் சிறியவனாக வலுவில்லாமல் இருக்கிறேன். நீங்கள் மிகவும் சிறந்தவராக ஆற்றல்மிக்கவராக இருக்கிறீர்கள். என்னை உங்கள் நற்பண்புகளில் நுழைய அனுமதியுங்கள். அதன் பயனால், என் மீது ஒரு நாள் எதிர்வினை வழங்கவிருக்கும், என்னால் இயக்கப்பட்ட தீமைகள் அனைத்தும், நடைபெறாமல் இருக்கட்டும்,” என்ற உணர்வுடன் வழிபடக்கூடும். இதைப்போன்ற எண்ணங்களுடன் யோக சுவாமியை பார்க்க வருவோர், கண்டிக்கப்பட்டு வந்த வழியில் திருப்பி அனுப்பப்படுவார்கள். “நீங்கள் எதற்காக என்னை வழிபடுகிறீர்கள். எனக்கும் உங்களைப் போன்று இரு கண்கள், இரு காதுகள், ஒரு வாய் மற்றும் ஒரு மூக்கு உள்ளது. நீங்கள் உங்கள் வேலையை சென்று பாருங்கள். உங்கள் சொந்த கால்களில் நில்லுங்கள்!” §

யோக சுவாமியின் கண்டிப்பு, மிகவும் வலுவாக இருந்து, அது தீயை விட அதிக ஆழமாக ஊடுருவியது. சுவாமி *மகாசமாதி* நிலையை அடைந்து சில வருடங்கள் கழித்து, அவரது ஜெர்மன் நாட்டு சீடரான கௌரிபாலா சுவாமி சிறிது முரட்டுத்தனமாகவும் தீவிரமாகவும் இருப்பதாக, அவரது சீடர்களில் ஒருவர் அவரிடமே குறிப்பிட்டார். “அப்படியா! நான் முரட்டுத்தனமாக இருக்கிறேனா? அப்படியென்றால, உங்களால் எனது குருவை முப்பது வினாடிகளுக்கு மேல் எதிர்கொண்டு நிற்கமுடியாது,” என்று கோபித்து கொள்வார். சுவாமியின் தரக்குறைவான பேச்சை குறிப்பிடும் சம்பவங்கள் பல இருந்தாலும், அவர் அவற்றை சீடர்களுடன் அரிய தருணங்களுக்காகவும், பரிச்சயம் இல்லாத கீழ்த்தரமான நபர்களை தவிர்க்க ஒரு பயனுள்ள வழியாகவும் பயன்படுத்திக்கொண்டார். §

ஒரு அன்பர் உண்மையை போன்று காட்சி அளித்த பக்தியுடன், சுவாமிக்கு சேவை செய்வதற்கும், வழிபடுவதற்கும் அவரை தொடர்ந்து சுற்றிக்கொண்டு இருந்தார். ஒரு நாள் யோக சுவாமி அவரை எல்லோருக்கும் முன்பாக, ஒரு மாலுமியும் அதிர்ச்சி அடையும் அளவிற்கு, மிகவும் மோசமான தமிழ் வார்த்தைகளால் திட்ட ஆரம்பித்தார். அவர் அந்த அன்பரை ஒரு மணி நேரத்திற்கும் மேலாக, தனக்கு என்ன நடந்து விடுமோ, தான் எதை எதிர்கொள்ள வேண்டியிருக்குமோ என்ற அச்சத்தில் கட்டுப்படுத்தி வைத்து

இருந்தார். அந்த அன்பர் பயந்து இருந்த எல்லா விஷயங்களும், சிந்திக்காத சில விஷயங்களையும் பற்றி யோக சுவாமி பேசியதோடு மட்டும் அல்லாமல், ஒவ்வொருவராக பெயர் சொல்லி அழைத்து திட்டியது கேட்போரை அச்சுறுத்துவதாக இருந்தது. அவர் இறுதியாக, “நான் உன்னை இந்த விஷயங்களில் ஏதாவது ஒன்றில் இருந்து பாதுகாப்பேன் என்று நீ நினைத்தால், அது தவறு. எனக்கு அவை உண்மையாகவும் தோன்றவில்லை. நீங்கள் அவற்றிற்கு ஆற்றலை வழங்கி, அவற்றிடம் இருந்து விடுதலை பெற முயற்சி செய். இதில் பயப்படுதுவதற்கு ஒன்றும் இல்லை. அதனால் இனி நீ உன் சொந்த கால்களில் நின்று, உனது கவலைகள் மற்றும் அச்சங்களால் என்னை தொந்தரவு செய்வதை நிறுத்தி, நீ மீண்டும் என்னை சந்திக்க வருவதற்கு முன்பாக, அவற்றை விட்டொழிக்க வேண்டும்,” என்று கூறி நிறைவு செய்தார். §

*ஹோமேஜ் டூ யோக சுவாமியில்*, யோக சுவாமி தன்னை சந்திக்க வந்தவர்களுக்கு வழங்கிய பதில்களுக்கு, சாம் விக்ரமசிங்கே ஒரு சூட்சுமமான விளக்கத்தை வழங்கினார்.§

ஒரு விடுதலை பெற்ற மனம் ஒரு கண்ணாடியின் பண்பை கொண்டு இருப்பதால், அதில் விடுதலை பெறாத மனதால் தனது உண்மை நிலையை பார்க்க முடிகிறது. சுவாமியின் “ஆளுமை", சந்திக்க வருபவர்களின் பண்புகளை தற்காலிகமாக பெற்றுவிடுவதால், யோக சுவாமியிடம் ஒரு மாற்றமில்லாத ஆளுமை இல்லாததாக தென்பட்டது. அதனால் எதிர்பார்த்ததை போல, தற்பெருமையுள்ள நபர்களுக்கு யோக சுவாமி எப்போதும் தங்களிடம் முரட்டுததனமாக நடந்துக்கொண்டதாக தோன்றியது. பயத்தால் நடுங்கிக்கொண்டு இருந்தவர்களின் கண்களுக்கு, யோக சுவாமியின் அணுகுமுறையில் கோழைத்தனம் தெரிந்தது. §

ஒரு தென்னிந்தியாவின் சந்நியாசி, யோக சுவாமியிடம் பகவத் கீதையில் ஒரு பாடலை பாடிக்கண்பித்தார். அதன் பிறகு, யோக சுவாமி அந்த பாட்டில் சில மாற்றங்களையும், சில வார்த்தைகளுடன் புத்திசாலித்தனமான சிலேடைகளை சேர்த்துக்கொண்டதால், அந்த புனிதமான வரிகள் ஒரு பாலியல் அர்த்தத்தை பெற்றது. யோக சுவாமி அந்த சந்நியாசியின் அடிமனதில் மறைந்து இருந்த சிற்றின்ப உருவங்களுக்கு எதிர்செயலாற்றி கொண்டு இருந்ததால், அவரால் அதை தவிர்க்க முடியவில்லை. இதனால் அந்த சந்நியாசி, யோக சுவாமியை காணவந்த பலரை போல, பதட்டத்துடன் சங்கடத்தையும் அனுபவித்தார். §

ஒரு வகையில், யோக சுவாமி விருப்பப்பட்டு செய்யாவிட்டாலும், மக்களை அதிர்ச்சியின் மூலம் அவர்களின் உள உறக்கத்தில் இருந்து விழிக்க வைக்கும் ஒரு ஜென் குருவாக விளங்கினார். யாழ்ப்பாண மக்கள் யோக சுவாமியை மரியாதை, பாசம் மற்றும் அச்சத்தின் ஒரு கலவையாக பார்த்தனர். அவரது தீவிரமான அன்பர்களில் சிலர், அவர் மீது பாசத்துடன்

இருந்ததை காட்டிலும், அச்சத்துடன் இருந்தனர். யோக சுவாமியிடம் முறையான வரவேற்பை பெறுவதற்கு, அவரை எந்த ஒரு உள்நோக்கத்துடன் அணுகாமல் இருப்பது மிகவும் முக்கியமானதாக இருந்தது. §

யோக சுவாமி தன்னை சந்திக்க வந்த பெரும்பாலானோரை துரத்தி அனுப்பினார். பலர் யோக சுவாமியை, எதிர்காலத்தை துல்லியமாக கணிக்கும் ஒரு சோதிடராகவே கருதினார்கள். ஒரு சமயத்தில், யோக சுவாமியை காண்பதற்கு, அதிகாலையில் இருந்து அந்தி மாலை வரை மக்கள் கூட்டம் தொடர்ந்து வந்துக்கொண்டு இருந்தது. அவர்கள் பல்வேறு சொந்த மற்றும் மற்ற காரணங்களுடன் சுவாமியை காண வந்தனர். அவரிடம் வரவேற்பை பெற்ற பாக்கியசாலிகள், தாங்கள் இருமடங்கு ஆசிகளை பெற்றதாக கருதினார்கள். யோக சுவாமியால் கண்டிக்கப்பட்ட சிலர், தாங்கள் ஆன்மீக ரீதியாக தண்டிக்கப்பட்டதாக கருதினார்கள்.§

மக்கள் தன்னிடம் காண்பித்த தோற்றத்தின் மூலமாக, யோக சுவாமி அவர்களது மனதில் உண்மையில் என்ன இருந்தது என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தினார். திரு. நாகேந்திரன் தனது அனுபவத்தை பகிர்கிறார். §

1940 களின் தொடக்கத்தில், நான் வழக்கறிஞர்களின் இறுதி பரீட்சையில் தேர்ச்சி பெற்று, வழக்குரைஞர் கழகத்தில் உறுதிமொழி எடுக்கவிருந்த சமயத்தில், சில வாரங்கள் தங்குவதற்காக யாழ்ப்பாணம் திரும்பினேன். நான் தங்கியிருந்த எனது மாமா தாத்தா செல்லமுத்துவின் வீட்டிற்கு, மானிப்பாய் இந்துக் கல்லூரியின ஓய்வுபெற்ற முதல்வர் திரு. வீரசிங்கம் வந்து, யோகரை சந்திக்க தன்னுடன் கொழும்புத்துறை வரை வருமாறு என்னிடம் கேட்டுக்கொண்டார். §

நாங்கள் சுவாமியின் குடிசையை அடைவதற்கு முன்பாக, திரு. வீரசிங்கம் என்னிடம், “ஒரு மகானை சந்திக்க செல்லும் போது, வெறும் கையுடன் செல்லக்கூடாது. ஏதாவது அன்பளிப்புகள் வாங்கி செல்லவேண்டும்,” என்று கூறினார். அவர் தன் வாகனத்தை நிறுத்தி வாழைப்பழங்கள், ஆப்பிள்கள் மற்றும் மற்ற பழங்களை வாங்கி, அவற்றை சுருட்டி பொட்டலமாக மடித்து வைத்துக்கொண்டார். நாங்கள் மாலையில் யோகரின் ஆசிரமத்திற்கு வந்த போது, தரையின் மீதிருந்த ஒரு மெல்லிய மெத்தையின் மீது ஒரு பாயில் அவர் அமர்ந்து இருந்தார். §

யோகருக்கு முன்பாக, என் தந்தை வேலை செய்த இடத்தில் மூத்த அதிகாரியாகவும், கூட்டுறவு வளர்ச்சித்துறையின் ஆணையராகவும் இருந்த திரு. வீரன் அவர்களுடன் மற்ற முக்கிய பெரியவர்களும் அமர்ந்து இருந்தார்கள். நாங்கள் ஆசிரமத்தில் நுழைவதை பார்த்ததும், யோகர், “முனிவர்கள் இறைவனை பல்வேறு பெயர்களுடன் அழைத்தாலும், அவர் ஒருவர் தான்,” என்று கூறினார். நான் அந்த சமயத்தில் வழக்கமாக சென்ற, வெள்ளவத்தையின் மிஷன் மண்டபத்தில், ராமகிருஷ்ணரின்


சந்நிதி சுவரில், இந்த வார்த்தைகள் சாயம் பூசப்பட்டு இருந்ததால், இந்த வாசகம் என் மீது தீவிர தாக்கத்தை ஏற்படுத்தியது. நான் ராமகிருஷ்ண மிஷனுக்கு பயணம் மேற்கொண்டதை, அவர் ஊகித்து இருந்தாரா? §

யோகர் வழக்கம் போல, திரு. வீரசிங்கம் வழங்கிய பொட்டலத்தை பிரித்து, தனக்கு முன்பாக அமர்ந்து இருந்த முதியவர்களுக்கு பழங்களை வழங்க தொடங்கினார். ஒவ்வொரு முதியவருக்கும் எத்தனை பழங்களை சுவாமி வழங்கினார் என்பதை பின்னால் அமர்ந்து பார்த்துக்கொண்டிருந்த நான், முதியவராக இல்லாத எனக்கு சுவாமி எத்தனை பழங்களை வழங்குவார் என்று யோசித்துக்கொண்டு இருந்தேன். யோகர் எனக்கு பழங்களை வழங்கும் போது, "இங்கே எல்லோருக்கும் பழங்கள் சமமாக பிரித்து தரப்படுகின்றன. இதில் உனக்கு சந்தேகம் இருந்ததால், நான் உனக்கு தரவிருந்த பழங்களில் ஒன்று கீழே விழுந்துவிட்டது," என்று குறிப்பிட்டார். யோகர் என் மனதை புரிந்துக்கொண்டு இருந்தார். நான் எனது தவறை உணர்ந்துகொண்டேன்.§

டிவைன் லைஃப் சொசைட்டியின் (தெய்வீக வாழ்க்கையின் சமூகம்) சுவாமி சிவானந்தா, கண்டியின் மலை வாழிடத்தில் ஒரு சிறிய யோக மையத்தை அமைக்க, 1953 ஆம் ஆண்டில் இலங்கைக்கு சுவாமி சச்சிதானந்தா என்கிற ஒரு இளவயது சந்நியாசியை அனுப்பினார். வசீகரமும் நகைச்சுவையும் நிறைந்து, கருத்த முடியுடன் இருந்த அந்த தென்னிந்திய சுவாமி நடத்திய ஹட யோக வகுப்புக்களில் மக்கள் பெருமளவில் பங்கு பெற்றனர். அவர் ஒரு நாள் யோக சுவாமியிடம் ஆசிகளை பெறுவதற்காக கொழும்புத்துறை சென்றார். அவர் அந்த சந்திப்பு தொடர்பாக வழங்கிய விளக்கம்: "நான் ஆசிரமத்தில் நுழைந்து, சுவாமியை தரையில் விழுந்து வணங்கினேன். உடனே யோக சுவாமி என்னிடம், "சுவாமி, நீங்கள் இன்று எத்தனை அன்பர்களுக்கு சிரசாசனம் கற்று தந்து (அவர்களது வாழ்க்கையை மேம்படுத்தி) இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். இந்த கேள்வியின் மூலம், பொதுமக்களுக்கு யோக அப்பியாசங்களை கற்று தருவதில், தன்னிடம் இருந்த எண்ணற்ற மற்ற திறமைகளை பயன்படுத்த யோக சுவாமி தனக்கு ஊக்கம் அளித்ததாக சச்சிதானந்தா புரிந்துகொண்டார். பல வருடங்கள் கழித்து, நியூ யார்க்கின் உட்ஸ்டாக் பெஸ்டிவலில் வழங்கிய உரையின் மூலம் சுவாமி சச்சிதானந்தா புகழின் உச்சத்திற்கு சென்றார், மற்றும் அவர் பின்னர் அமெரிக்காவில் இண்டெகிரல் யோக இன்ஸ்டிட்யூட்டை (Integral Yoga Institute) நிறுவினார். §

சிவயோக சுவாமிக்கு நெருக்கமான சீடர்கள், சுவாமி தங்களை கடிந்துக்கொள்ள வேண்டும் என்று ஏங்கினார்கள் மற்றும் அது தங்களுக்கு கிடைத்த ஆசியாக கருதினார்கள். ஒரு நாள் யோக சுவாமி கந்தன் என்ற தனது சீடனின் வீட்டிற்கு, ஆறுமுகம் என்று இன்னொரு சீடரையும் தன்னுடன் அழைத்து சென்றார். சுவாமி தன் வீட்டிற்கு வந்த போது, கந்தன் தோட்டத்தில் காத்து இருந்தான். சுவாமி திடீரென்று, கந்தனின் இரு தோள்களிலும், தனது இரு கை முட்டிகளை கொண்டு முழு பலத்துடன் குத்த தொடங்கினார். கந்தன்

அதை தாங்கிக்கொண்டு நின்றான். சுவாமி குத்தி முடித்ததும், நடந்தது அனைத்தையும் பார்த்த திகைப்பில் இருந்த ஆறுமுகத்திற்கு, கந்தனின் முகத்தில் வேதனையை காட்டிலும் மகிழ்ச்சியே அதிகமாக தென்பட்டது. கந்தன் தனது நண்பனின் குழப்பத்தை உணர்ந்து, நிம்மதி பெருமூச்சுடன், “நான் அந்த ஆசியை பெறுவதற்காக வருடம் முழுவதும் காத்து இருந்தேன். மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு ஒரு முறை, நான் சுவாமியிடம் இருந்து வலுவாக அடி வாங்க வாங்கினால் தான் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும்,” என்று தனது அந்தரங்க விஷயத்தை தெரியப்படுத்தினார். §



*இன்று வரை சிவபெருமான் பற்றிய தமிழ் துதிப்பாடல்களை பாடுவது, இலங்கை ஆன்மீக கலாச்சாரத்தின் ஒரு வலுவான பகுதியாக இருந்து வருகிறது. தனது ஆசிரமத்திற்கு அன்பர்கள் எப்போது வந்தாலும், யோக சுவாமி அவர்களை தேவாரம் மற்றும் நற்சிந்தனை பாடல்களை நன்றாக சத்தமாக, உற்சாகத்துடன் பாடும்படி கேட்டுக்கொள்வார்.*

……………………..§

### அனைத்தும் அறிந்தவர்

யோக சுவாமி தனக்கு வெளிப்படுத்திய தனது குணத்தை சரி செய்ய வேண்டும் என்று சுவாமியை ஒரு அன்பர் வழிபட வரும் போது, அவருக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு, வேண்டியது வழங்கப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டார். அத்தகைய அன்பர்கள் சுவாமிடம் தங்கள் குறைகளை சுவாமியிடம் சொல்லவேண்டிய அவசியம் இல்லாமல், அவரே அவர்களது கேள்விகளுக்கு பதில் அளிப்பார் அல்லது அவர்கள் எடுக்க வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி கூறுவார். அன்பர்கள் எதைப்பற்றி யோசித்தார்கள் என்றும், அவர்கள் தங்கள் மனதில் எந்த எதிர்பார்ப்புடன் சுவாமியை நாடி வந்தார்கள் என்பதையும் அவர் அறிந்து இருந்தார். யார் எப்போது எதற்காக வருகிறார்கள் என்பதையும் அவர் முன்பே அறிந்து இருந்தார். அவர் சிலசமயம், “நாம் இப்போது இங்கிருந்து புறப்படவேண்டும். அந்த நபர் அடுத்த பதினைந்து நிமிடங்களில் இங்கே வந்து விடுவார். அப்போது நாம் இங்கே இருக்கக்கூடாது,” அல்லது, “அங்கே ஒரு பாயை விரித்து தேநீரை தயார் செய்து வைத்திருங்கள். அவர் அடுத்த ஒரு மணி நேரத்தில் இங்கே வந்துவிடுவார் மற்றும் அவருக்காக நாம் முற்றிலும் தயார்நிலையில் இருக்கவேண்டும்,” என்று கூறுவார். §

பலர் குடும்பம், பணம் அல்லது மற்ற பிரச்சனைகளுடன் வந்தார்கள். சிலசமயங்களில் அவர், “இந்த குழப்பத்தில் எவ்வாறு சிக்கிக்கொள்வது என்பதை நீங்கள் அறிந்து இருந்தீர்கள், அதனால் இதில் இருந்து எப்படி வெளிவருவது என்பதை நீங்களே அறிந்து கொள்ளவேண்டும்,” என்று அவர்களது பிரச்சனைகளுக்கு அவர்களே தீர்வு காணவேண்டும் என்று திட்டி அனுப்பிவிடுவார். சிலசமயம் சுவாமி அவர்களை கோயிலுக்கு சென்று பூஜை செய்து வருமாறு அனுப்பி விடுவார். “அருகில் இருக்கும் விநாயகர் கோயிலில் *அபிஷேகம்* செய்தால், உங்கள் பிரச்சனைக்கான தீர்வு தானாக வரும்.” சிலசமயங்களில் அவர் வேறொரு அன்பரை உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்வார். அவர் மூன்றாம் தரப்பினரை அழைத்து, “இவரிடம் இருந்து ஐநூறு ரூபாயை பெற்று அந்த நபரிடம் கொடு. அந்த நபரின் மனைவிக்கு உடல்நலம் சரியில்லை மற்றும் அவருக்கு உதவி தேவைப்படுகிறது.” பண உதவி தொடர்ந்து வந்துக்கொண்டு இருந்தது. §

ஒரு தீவிர முருக பக்தையாக மாறி, நியூயார்க் நகரத்தின் ஃப்ளஷிங் பகுதியில் போன் ஸ்ட்ரீட்டில் விநாயகர் கோயிலை நிறுவுவதற்கு உதவி செய்த ஹில்டா சார்ல்டன், யோக சுவாமியை தான் பலமுறை சென்று சந்தித்த பிறகு தனது பணப்பிரச்சனைகள் முடிவு வந்ததாக குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் பகிரும் அனுபவம்: §

> யோகி என்றால் நமது கற்பனைகளில் தோன்றுவதை போலவே, அவர் மென்மையான நரைத்த முடி மற்றும் நரைத்த தாடியுடன் முதியவராக,

அற்புதமாக காட்சி அளித்தார். நான் அவரை பார்க்க சென்ற போது, இலங்கையில் தற்போது போர் நடந்துகொண்டு இருக்கும், யாழ்ப்பாணத்திற்கு இரவு முழுவதும் ஒரு பழைய இரயிலில் பயணம் செய்வேன். நான் ஒரு முறை என்னுடன் கற்பூரம் எடுத்து சென்றேன். எனது நண்பர், ஒரு நாள் முன்னதாக சுவாமியிடம் இன்னொரு நபரை அழைத்து சென்று இருந்தார். அந்த நபர் பல லௌகீக விஷயங்களை பற்றி தெரிந்துகொள்ள விரும்பினார். அந்த நபர் ஆசிரமத்திற்கு சென்றதும், யோகி அவரிடம், “உன் முதுகு பின்னால் என்ன இருக்கிறது?” என்று கேட்டார். அவர், “கற்பூரம் இருக்கிறது, சுவாமி,” என்று கூறி இருக்கிறார். உடனே சுவாமி, “அதை உனது நாக்கில் வைத்து எரித்துவிடு,” என்று கூறினார்.§

யோகிகளை எதிர்கொள்வது கடினமாக இருக்கக்கூடும். பிறகு அவர் என் நண்பரிடம், “இதைப்போன்ற நபர்களை என்னிடம் எதற்காக அழைத்து வருகிறாய்?” என்று கேட்டார். நான் அடுத்த நாள் அங்கே சென்றேன். நான் எனது முதுகிற்கு பின்னால் சில கற்பூர வில்லைகளை வைத்து இருந்தேன். நான் நேற்று நடந்த சம்பவத்தை பற்றியும் அப்போது தான் கேள்விப்பட்டு இருந்தேன். சுவாமி என்னிடம், “உன் முதுகிற்கு பின்னால் என்ன வைத்து இருக்கிறாய்?” என்று கேட்டார். நான் “கற்பூரம் வைத்திருக்கிறேன்,” என்று கூறியபோது, “சரி, நீங்கள் உள்ளே வரலாம்,” என்று கூறினார். பார்த்தீர்களா? §

நான் ஒவ்வொரு முறை அங்கே சென்ற போதும், “உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது?” என்று கேட்பார். அது சிறுவனாக யோகானந்தன் கேட்பது போல இருந்தது. “இவர் எதற்காக இந்த கேள்வியை கேட்கிறார்?” என்று எனக்கு தோன்றியது. நான் பதில் அளிக்க மாட்டேன். என்னிடம் பணம் இல்லை என்பது அவருக்கும் தெரியும். அவர் என்னிடம், “உங்கள் மாத வருமானம் எவ்வளவு?” என்று கேட்பார். அப்போது, எனக்கு வருமானம் என்று எதுவும் இல்லை. அதனால் நான் ஒரு நாள் நேர்மையாக, “என்னிடம் பணம் ஏதும் இல்லை, சுவாமி,” என்றேன். அவர் உடனே, “அப்படியா?” என்றார். அவருக்கு தனக்கு அருகில் இருந்த ஒரு சிறுவனிடம் ஒரு புத்தகத்தை கொடுத்து வாசிக்க சொன்னார், மற்றும் யோகி தன் கையை ஒரு குறிப்பிட்ட முறையில் இயக்க ஆரம்பித்தார். §

“ஒரு மேல் தாடை மற்றும் ஒரு கீழ் தாடை இருக்கிறது. நாக்கு இணைப்பாக இருக்கிறது. நாக்கு ஒலியை ஏற்படுத்துகிறது. அந்த ஒலி செழிப்பை குறிப்பிடுகிறது,” என்று அந்த சிறுவன் வாசித்தான். யோகி இடையே குறிக்கிட்டு, “அது என்ன வார்த்தை? நீ அதை தவறாக உச்சரிக்கிறாய்? செழிப்பை எவ்வாறு உச்சரிப்பது?” என்று கேட்டார். அந்த சிறுவன் உச்சரித்து காட்டினான். யோகி இந்த கேள்வியை கேட்டுக்கொண்டு இருக்கையில், தனது கைகளை இயக்கிக்கொண்டு, ஏதோ செய்துக்கொண்டு இருந்தார். உங்களுக்கு புரிந்ததா? அதன் பிறகு பணம் எனக்கு தொந்தரவாக இருந்தது இல்லை. §

சுவாமி இன்னொரு முறை சந்திக்க சென்ற சம்பவத்தை பற்றி ஹில்டா சார்ல்டன்  விவரிக்கிறார்: §

> ஒரு நாள் அதிகாலை நான்கு மணி அளவில், நாங்கள் யோக சுவாமியை காண பயணம் செய்த போது, விடியாமல் இருள் சூழ்ந்து இருந்தது. நிலையில்லாமல் ஊசலாடிக்கொண்டு இருந்த தேங்காய் எண்ணெய் விளக்கின் வெளிச்சத்தில், அவரது உரையை கேட்க உட்கார்ந்தோம். அவர் மேரி எலென் போலவே பேசினார் அல்லது அவர் ரூபத்தில் மேரி எலேன் பேசி இருக்கலாம். அவர் மிகவும் இனிமையாக, எளிமையாக, குழந்தையை போன்று, “எல்லோரும் சுத்தமாகவும் முழுமையாகவும் இருக்கிறார்கள், அதைப்பற்றி அவர்களுக்கு மட்டும் புரியவில்லை. உலகில் இருக்கும் அனைத்து விஷயங்களுக்கும் அன்பு செலுத்துவது மட்டுமே தீர்வாக விளங்குகிறது,” என்று அவர் வழங்கிய தகவல் மேரி எலென் வழங்கியதாக இருந்தது. நான் ஆன்மீக ரீதியாக வலுப்படுதப்பட்டு, அங்கிருந்து கிளம்பினேன். அது ஒரு அருமையான அனுபவமாக இருந்தது. அவர் அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ளவில்லை. “நான் எதையும் வாங்குவதும் இல்லை வழங்குவதும் இல்லை,” என்று அவர் கூறினார். ஆனால் அவர் உண்மையில் பெரிய அளவில் வழங்குகிறார். அவர் சிலரை மட்டும் சந்தித்தாலும், எங்களுடன் சுமார் ஒரு மணி நேரம் பேசினார். §

காலையில் சுவாமிக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புகள் அனைத்தும், இரவில் எல்லோரும் கிளம்புவதற்கு முன்பாக பகிர்ந்து அளிக்கப்பட்டு விடும். அவர் தனக்கு வழங்கப்பட்ட பழங்கள் மற்றும் பூக்களை அன்பர்களுக்கு பகிர்ந்து அளித்து, அவர்களை வழியனுப்ப ஆரம்பித்து விடுவார். அவரது உத்தரவு இல்லாமல் யாரும் அவரது இருப்பிடத்தில் இருந்து கிளம்ப மாட்டார்கள், மற்றும் யாரும் உத்தரவு கிடைத்த பிறகு தங்கியதும் கிடையாது. பொதுவாக சுவாமியின் உதவியை நாடி வந்தவர்கள் இறுதியாக செல்பவர்களாக இருப்பார்கள். அதன் பிறகு அவர் தனக்கு வழங்கப்பட்ட பணம், உணவு அல்லது துணியை அவர்களுக்கு வழங்குவார். §

அவர் தனக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டது இல்லை. “எங்கள் மீது ஆதிக்கம் செலுத்த விரும்புகிறவர்களுக்கு அல்லது உலகில் முன்னேற விரும்புகிறவர்களுக்கு அல்லது ஒரு நல்ல மனசாட்சியை பணம் கொடுத்து வாங்க முயல்பவர்களிடம் இருந்து நாங்கள் எதையும் எப்போதும் ஏற்றுக்கொண்டது இல்லை,” என்று அவர் விளக்கம் அளித்தார். அவர் அத்தகைய அன்பளிப்பை தொடமாட்டார் அல்லது அதை விலக்கி வைத்து விடுவார். அவர் சிலசமயம், தனக்கு நெருக்கமான சீடர்கள் வழங்கிய அன்பளிப்புக்களை தொடாமல், “எனக்கு உத்தரவுகள் வரவில்லை,” என்று கூறிவிடுவார். §

ஒரு முறை சுவாமியின் சீடர்களைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு அதிஷ்ட தேவதை கதவை தட்டியதால் செல்வம் குவிந்தது. அவர்கள் இதற்கு

சுவாமியின் அருள் தான் காரணம் என்று நினைத்ததால், அவர்கள் தங்கள் கையில் ஒரு தட்டு நிறைய தங்கம் நாணயங்களுடன் ஆசிரமத்திற்கு வந்தனர். அந்த தட்டில் மொத்தம் நூறு நாணயங்கள் இருந்திருக்க வேண்டும். "எங்களால் இவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நாணயங்களை நீங்கள் எடுத்து சென்று, ஏதாவது ஒரு நல்ல வழியில் செலவழியுங்கள்," என்று சுவாமி அவர்களிடம் கூறி, அதில் இருந்து மூன்று அல்லது நான்கு நாணயங்களை மட்டும் எடுத்துக்கொண்டார். பொழுது சாய்வதற்குள் அந்த நாணயங்களும் மாயமாக மறைந்து விட்டன. அவை சில அதிஷ்டசாலி அன்பர்களுக்கு, ஒரு பூக்கொத்து அல்லது இனிப்புக்களுடன் சேர்த்து வழங்கப்பட்டு இருக்கவேண்டும். §


பொது வாழ்க்கை அல்லது அரசியலில் பெரிய பதவிகளில் இருக்கும் பிரபலங்கள் மற்றும் செல்வந்தர்களுக்கு யோக சுவாமி முன்னுரிமை வழங்குவதாக, மக்களிடம் ஒரு பரவலான கருத்து இருந்தது. இந்த விமர்சனத்திற்கு சுவாமி வழங்கிய கருத்துகளை எஸ். சண்முகசுந்தரம் பதிவு செய்துள்ளார்.§

ஆசிரமத்தில் அமர்ந்து இருந்த ஒரு இளவயது அன்பர், நன்றாக தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "சுவாமி, நீங்கள் பணக்காரர்களுடன் மட்டும் நட்புறவு வைத்திருப்பதாகவும், அவர்கள் வீட்டிற்கு மட்டுமே செல்வதாகவும், ஏழைகளைப் பற்றி கவலைப்படுவது இல்லை என்றும் நம் மக்களிடம் ஒரு கருத்து வேறுபாடு நிலவுகிறது. இது உண்மையா?" என்று சுவாமியிடம் கேள்வி கேட்டார். §

சுவாமி சிரித்துக்கொண்டே, "செல்வம், பதவி மற்றும் ஆடம்பர வாழ்க்கையை பார்த்திராத மக்கள் பொதுவாக நல்லவர்களாக இருப்பார்கள். அவர்களால் உலகிற்கு எந்த பாதகமும் இல்லை. ஆனால் செல்வந்தர்கள் மற்றும் உயர்ந்த சமூகத்தை சார்ந்த மக்களிடம் தீய பண்புகள் நிறைந்து இருப்பதோடு சுயநலம், பொறாமை, பேராசை, தீய பழக்கங்கள் போன்ற பண்புகளும் இருக்கின்றன. அதனால் ஒரு நல்ல விதமான வாழ்க்கையை வாழ்வதற்கு, இந்த இரண்டாவது பிரிவு மக்களை நல்வழிப்படுத்தினால், அவர்கள் தங்களது மக்களுக்கும் உலகிற்கும் அதிகம் பயன் தருபவர்களாக இருப்பார்கள். அதிஷ்டவமாக, அந்த பிரிவு மக்களே என்னை அதிகம் காண வருகிறார்கள். நான் அந்த பிரிவு மக்களை மேம்படுத்தி, அவர்கள் மூலம் நூற்றுக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த முயற்சிப்பதில் என்ன தவறு இருக்கிறது? இந்த பதிலால் அந்த கேள்வியை கேட்ட இளைஞன் மட்டுமல்லாது, சுவாமிக்கு முன்பாக அமர்ந்திருந்த அன்பர்கள் அனைவரும் திருப்தி அடைந்தனர். §

சமூகத்தில் தங்கள் அந்தஸ்தை அதிகரிக்கும் பொருட்டு, பல செல்வந்தர்களும் பிரபலங்களும் சுவாமிகள், அரசியல்வாதிகள், தொழில் அதிபர்கள் மற்றும் பிரபல திரைப்பட நடிகர் நடிகைகளுடன் நட்புறவை வைத்துக்கொள்ள முயற்சிப்பார்கள். அத்தகைய நோக்கத்துடன் பலர்

யோக சுவாமியை அணுகி இருந்தாலும், அவர்களில் பெரும்பாலான நபர்களால் சுவாமியின் வசவு மற்றும் கண்டிப்புக்களை எதிர்கொள்ள முடியவில்லை. ஆனால் அதில் சிலர் யோக சுவாமியுடன் இணைந்து தங்களை சீர் செய்து, நல்ல சிரத்தையுள்ள இந்துக்களாக மாறி, பயனுள்ள வாழ்க்கையை வாழ்ந்தனர். அதில் பலர் மிகப்பெரிய சிவத்தொண்டர்களாகி, ஒரு நல்லொழுக்கமுள்ள வாழ்க்கையை வாழ்ந்து, தங்கள் வாழ்வில் சமய ஈடுபாடுகளை புகுத்தி, சுவாமியின் தீவிரமான சீடர்களாக தங்கள் வாழ்க்கையை தொடர்ந்தனர். §



சிவபெருமானின் பாரம்பரிய மூர்த்திகளில் ஆண் பாதி பெண் பாதியாக இருக்கும் அர்த்தநாரீஸ்வரர் மூர்த்தியும் ஒன்றாக விளங்குகிறது.

*இலங்கையை சேர்ந்த சைவர்கள், இந்த வடிவத்தை சிவன் மற்றும் சக்தியின் ஐக்கியமாக வணங்குகிறார்கள். “ஆணுமாகி பெண்ணுமாகி இருப்பவரை, பரமனாக இருப்பவரை, சாஸ்திரத்தின் பொருளை விரிவாக விளக்கம் அளித்து வழங்கியவரை, தனது இடது புறத்தில் மெல்லிய இடையுடைய அம்மனுடன் இருப்பவரை, பக்தர்கள் போற்றி பாடுகிறார்கள்!” என்று யோக சுவாமி பாடினார்.*

……………………..§

“மனிதனும் இறைவனும் ஒன்று" என்பது சிவயோக சுவாமியின் கருத்துரையாக இருந்தது. அதனால் அவர் அனைத்து உயிரினங்கள் மீதும் அன்பு செலுத்தினார். ஒரு விலங்கு கொடியதாக இருந்தால், அது கொடியது என்று மக்கள் தெரிந்து கொண்டு, அதிலிருந்து தங்களை பாதுகாத்து கொள்வதால், அந்த விலங்கால் உலகிற்கு அதிகம் தீங்கு நேரிடுவது இல்லை. ஆனால் ஒரு மனிதன் கொடியவனாக இருந்தால், அவனால் சமூகத்தையே அழித்து விடமுடியும் என்று சுவாமி கூறுவார். அதனால் தங்களது மனசாட்சிக்கு உண்மையாக நடந்துக்கொள்ளாத மனிதர்களை, நற்பண்புகளுடன் வாழாதவர்களை, சுயநல நோக்கங்களுக்காக அவருக்கு வணக்கம் செலுத்துபவர்களை சுவாமி குறுக்கிட்டால், அவர் அவர்களை முறையாக கண்டித்து, அவர்களை திட்டி தனது இருப்பிடத்தில் இருந்து துரத்தி விடுவார். அவரது கண்டிப்பால் பல அன்பர்கள் தங்களை சீர் செய்துக்கொண்டதால், இதுவும் சுவாமி வழங்கிய அருளின் ஒரு அங்கமாக விளங்கியது. ஆனால இவ்வாறு அச்சுறுத்தும் வகையில் சுவாமி அருளை வழங்கியதால், பலர் சுவாமியை தரிசிக்கவே அஞ்சினார்கள். §

எஸ். சண்முகசுந்தரம் இந்த விரிவுரையில் குறிப்பிடுவதை போல, ஆசிரமத்திற்கு வந்த அனைவரும் கல்வி கற்றவர்களாக, செல்வாக்குள்ளவர்களாக இருந்ததில்லை:§

ஒரு நாள் மதியம் பன்னிரண்டு மணிக்கு, வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்த போது, ஒரு வயதான பெண்மணி ஆசிரமத்திற்கு வியர்த்து விருவிருத்து வந்தார். அவரை பார்த்தால் வெகு தொலைவில் இருந்து வந்தது போல தோன்றியது. சுவாமிக்கு மிகவும் பிடித்தமான பழங்களில் பலா பழமும் ஒன்று என்பதால், அவர் ஒரு பெரிய பலா பழத்தையும் சுமந்து வந்து இருந்தார். அவர் தனது சுமையை சுவாமிக்கு முன்பாக இறக்கி வைத்துவிட்டு, ஒரு நிம்மதி பெருமூச்சுடன் அமர்ந்து கொண்டார். இதை எல்லாம் பார்த்துக்கொண்டு இருந்த சுவாமி அந்த பெண்ணிடம், “நீங்கள் எதற்காக கொளுத்தும் வெயிலில், இந்த பெரிய பலா பழத்தை சுமந்துகொண்டு, நெடுந்தூரம் நடந்து வந்து இருக்கிறீர்கள்?” என்று கேட்டார். §

அந்த பெண்மணி இரண்டு நிமிடங்கள் காத்திருந்து, “உங்களுக்கு வழங்குவதற்காக, அந்த பழத்தை நெடுந்தூரம் சுமந்து வருவது, எனக்கு சந்தோஷத்தை தருகிறது. அதற்கு நீங்கள் என்னை ஏன் கடிந்து கொள்கிறீர்கள்? அதற்கு பதிலாக நான் உங்களிடம் இருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை. நான் அதை கொண்டு வரவேண்டும் என்று நினைத்தேன், கொண்டு வந்து விட்டேன். நான் இனி சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு வீடு திரும்புகிறேன். நீங்கள் பேசாமல் இருங்கள்,” என்று பதில் அளித்தார். அந்த பெண் தவறில்லாமல் திட்டி முடித்ததும், “நீங்கள் இங்கே நன்றாக இளைப்பாறலாம் மற்றும் நீங்கள் அமைதியான ஆனந்தம் பொருந்திய வாழ்க்கையை வாழவேண்டும்,” என்று சுவாமி அவரிடம் கூறினார். சுவாமி அவர் குடிப்பதற்கு ஒரு குவளை காபி வாங்கிக்கொடுத்து, தனது சீடர்களிடம், “அவர் ஒரு வாக்கியத்தின் மூலம் என் வாயை அடைத்து விட்டார். நான் அவரை கண்டித்தது தான் தவறு,” என்று கூறி, அந்த பெண்ணுக்கு ஒரு ஆரஞ்சு பழத்தை கொடுத்து அனுப்பி வைத்தார். §

Page 31: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/31_yoga04_03.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## பதினாறாவது அத்தியாயம்


## அற்புத செயல்கள்

சுவாமியின் *மகாசமாதிக்கு* பிறகு, அவர் மக்களை வேதனைகள் மற்றும் நோய்களில் இருந்து எவ்வாறு குணப்படுத்தினார் என்பதைப் பற்றி பல கருத்துக்கள் நிலவுகின்றன. அவர் வாழ்ந்துகொண்டு இருக்கும் போது, இதைப் பற்றி பேசுவதற்கு யாருக்கும் தைரியம் இருந்ததில்லை. சுவாமி தன் வேலையை அமைதியாக எந்த வித ஆர்பாட்டமும் இல்லாமல் செய்தார். ஒரு அன்பருக்கு உடல் நலம் சரியில்லை என்றால், அவர் அவரை வழக்கமாக மருத்துவரிடம் மாத்திரைகளை வாங்க அனுப்பி வைப்பார். அவர் பெரும்பாலும், நோயாளி வரும் அதே நேரத்தில் தானும் மருத்துவரின் அலுவலுக்கு வருவார். அவர் வழக்கமாக மருத்துவரிடம் எந்த மருந்தை வழங்கவேண்டும் என்பதை பரிந்துரைத்து, அதை நோயாளி எடுத்துக்கொண்டதையும் உறுதி செய்து கொள்வார். அவர் சிலசமங்களில் அன்பரிடம் இருந்து மருந்தை தனது குடிசைக்கு எடுத்து சென்று, தனது தலையணைக்கு அடியில் வைத்துக்கொள்வார். அடுத்த நாள் காலையில் அந்த மருந்தை அந்த அன்பரிடம் தரும் போது, “இது தான், உனக்கு சரியாக இருக்கும்," என்று கூறுவார். 1936 ஆம் ஆண்டு நடந்த அத்தகைய சம்பவம் பற்றி ச. அம்பிகைபாகன் குறிப்பிடுகிறார். §

> கிங் ஜார்ஜ் VI முடிசூட்டு விழா மற்றும் சர் பட்டம் பெறுவதற்காக, இலங்கையின் ஆளும்கட்சி தலைவராக இருந்த திரு. வி. துரைசுவாமிக்கு அழைப்பு வந்தது. லண்டன் செல்ல பயண ஏற்பாடுகள் நடைபெற்று வந்த போது, அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டது மற்றும் மருத்துவர்கள் பயணம் மேற்கொள்ளவேண்டாம் என்று அறிவுறுத்தினர். §
>
> அந்த சமயத்தில், சுவாமிகள் பேராதனையில் சோமசுந்தரப் புலவரின் தம்பி வேலுப்பிள்ளையுடன் தங்கி இருந்தார். சர் துரைசுவாமிக்கு வந்திருந்த வியாதியை பற்றி, சுவாமிகள் பேராதனையில் இருந்தபடியே

உணர்ந்துகொண்டு, ஒரு மருந்துகளின் பட்டியலை வேலுப்பிள்ளையிடம் கொடுத்தார். அந்த பட்டியலை திரு. வேலுப்பிள்ளை கடைக்கு எடுத்து சென்றபோது, அந்த மருத்துகள் அதிக நச்சுத்தன்மை வாய்ந்தவை என்று கடைக்காரர் எச்சரித்தார். அவர் அந்த விஷயத்தை சுவாமிகளிடம் தெரிவித்தார், ஆனால்  அவர் அதைப்பற்றி கவலை வேண்டாம் என்று கூறி, அந்த மருந்துகளை கொதிக்க வைக்குமாறு கேட்டுக்கொண்டார். அந்த மருந்துகளை கொண்டு திரு. வேலுப்பிள்ளை ஒரு கஷாயம் செய்து, சுவாமிகளுக்கு வழங்கினார். §

அந்த கஷாயத்தை சுவாமிகள் குடித்தார் மற்றும் சிறிது நேரம் கழித்து கடுமையாக வாந்தி எடுக்கத் தொடங்கி, தீவிர வயிற்றுப்போக்காலும் பாதிக்கப்பட்டார். இவற்றை கண்ட திரு. வேலுப்பிள்ளை அழத்தொடங்கிவிட்டார். சிறிது நேரம் கழித்து, சுவாமிகள் எலுமிச்சை பழமும் உப்புச் சோடாவும் கொண்டு வரச்சொல்லி, அதை குடித்தார். சில மணி நேரங்கள் கழித்து, அவர் குணமாகிவிட்டார். §



*வாழ்க்கையில் வேதனைகள் நிறைந்து இருந்த போதும் அல்லது மரணம் நெருங்குவதை உணர்ந்த போதும், அன்பர்கள் யோக சுவாமியிடம் செல்வது வழக்கமாக இருந்தது. சிவபெருமான் அனைத்தையும் பார்த்துக்கொண்டு இருப்பதாகவும், அச்சபடுவதற்கு ஒன்றும் இல்லை என்றும் அவர் எல்லோருக்கும் நம்பிக்கை அளித்தார். ஒரு ஆன்மா எப்போது கிளம்பவிருக்கிறது என்பதை எவ்வாரேனும் அறிந்து இருந்த சுவாமி, அந்த வீட்டிற்கு சென்று, நெற்றியில் விபூதியை பூசி, அது செல்லவிருந்த பயணத்திற்கு தனது ஆசிகளை வழங்குவார்.*

……………………..§

அடுத்த நாள் காலையில் சுவாமிகள், “துரைசுவாமி இனி லண்டனுக்கு போகலாம். அவருக்கு வைத்தியம் செய்தாகிவிட்டது. அவர் சென்றால் அவருக்கும் தமிழ் சமூகத்திற்கும் நல்லது, “ என்று அறிவித்தார். துரைசுவாமி குணமடைந்து, லண்டன் சென்று அரசரிடம் இருந்து பட்டத்தையும் பெற்றார்.§

இந்த குறிப்பிடத்தக்க செயலுக்கு பிறகு, சுவாமிகள் ஒன்றும் நடக்காததைப் போல இருந்தார். இந்த விஷயத்தை திரு. வேலுப்பிள்ளை இரகசியமாக வைத்து இருந்து, சுவாமிகள் *மகாசமாதி* அடைந்த பின்னர் என்னிடம் இதைப்பற்றி கூறினார். விளம்பர உலகில் வாழ்ந்துகொண்டு ஒவ்வொரு சிறிய செயலையும் பெரிதுபடுத்துபவர்களுக்கும் நமது சுவாமிகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை பாருங்கள்.§

சுவாமி திரு. வேலுப்பிள்ளையையும் நோயில் இருந்து குணப்படுத்தி இருந்தார். இந்த சம்பவத்தை ச. அம்பிகைபாகன் தனது சுயசரிதையில் பதிவு செய்து இருந்தார். §

ஒரு நாள் மதியம் சுமார் 3 மணி அளவில், எனக்கு தலைசுற்றி மயக்கமடைந்து விட்டேன். என்னை குணப்படுத்த துரையின் மகன் அனுப்பிய இரண்டு மருத்துவர்கள், சில மருந்துகளை தந்தனர். எனக்கு நினைவு திரும்பினாலும், என்னால் எழுந்திருக்க முடியவில்லை, மற்றும் எனக்கு என்ன நடக்கிறது என்று தெளிவாக தெரியவில்லை. காலை 8 மணிக்கு சுவாமிகள் எனது இருப்பிடத்திற்கு வந்து, “நான் உனக்காக மூன்று மருந்துகளை கொண்டு வந்துள்ளேன்,” என்றார். அவர் அருகில் வந்து, கருணை நிறைந்த தனது கைகளால் எனது தலையை தொட்டு, “சிவாயநம” என்று மெதுவாக உச்சரித்தார். மீண்டும் அடுத்த நாள் காலையில் வந்த சுவாமிகள், “நான் உனக்கு சிதம்பர தரிசனத்தை காண்பிக்கப்போகிறேன், பார்,” என்றார். அவர் தனது தலைமுடியை பறக்கவிட்டு, சுமார் ஐந்து நிமிடங்களுக்கு நடராஜரை போல நடனமாடினார். மூன்றாவது நாள், அவர் தன்னுடன் கொண்டு வந்திருந்த ஒரு மருந்தை, வெந்நீரில் கலந்து கொடுத்தார். நான் நான்காவது நாள் குணமடைந்து விட்டேன். நான் இந்த அற்புதத்தை பற்றி கம்பாலா மருத்துவமனையின் தலைவர் Dr. இராமநாதனிடம் கூறிய போது அவர்,

> “அந்த அற்புதமான நடனத்திற்கு மிருத்யுஞ்ஜய [மரணத்தை வெற்றிகொள்ளும்] என்று பெயர். அது சிறந்த முறையில் குணப்படுத்தும் தன்மையையும் கொண்டுள்ளது.” §

மேற்கத்திய நாடுகளில் இருப்பதை போல, கிழக்கு நாடுகளை சேர்ந்த தெய்வீக புருஷர்களும், தாங்கள் அன்பர்களை குணப்படுத்தியதாக அறிவிப்பார்கள். அத்தகைய அற்புத செயல்களின் மீது நம்பிக்கை வைத்திருக்கும் மக்களை பயன்படுத்தி, ஒரு மிகப்பெரிய ஆதரவாளர் குழுவை உருவாக்க, இது காலங்காலமாக பயன்பாட்டில் இருக்கும் ஒரு வழியாக இருந்தது. யோக சுவாமி அத்தகைய வெளிப்படையான, ஆடம்பரமான சக்திகளின் வெளிப்பாடுகளை அலட்சியம் செய்து, குணப்படுத்துவதற்கும் ஆறுதல் அளிப்பதற்கும், தனது சக்திகளை அமைதியாக தேவைப்படும் போது பயன்படுத்தினார். பின்வரும் கதையை தாத்தா சின்னையாவின் சொந்தங்கள் கூறினார்கள்.§

> யாழ்ப்பாணத்தில் இருந்து யோக சுவாமி கொழும்பிற்கு வந்து இருந்தார். இதைப் பற்றி கொழும்பில் இருந்த பல அன்பர்கள் தெரிந்துகொண்டு, அவரை தரிசிக்க சென்றவர்களில் தாத்தா சின்னையாவும் ஒருவர். அவரது குடும்பம் ஊருக்கு வெளியே வாழ்ந்ததால், அவர் ஒரு இரயிலில் கொழும்பு செல்ல வேண்டியிருந்தது. அவரது மகன்களில் ஒருவர் இரட்டை நுரையீரல் காய்ச்சலால் தீவிர அவதியில் இருந்தார். அந்த மகன் சார்பாக, தாத்தா சுவாமியை காண சென்றார். சுவாமிக்கு முன்பாக சுமார் முப்பது அன்பர்கள் அமர்ந்து இருந்தார்கள், மற்றும் சுவாமி ஒவ்வொருவராக சந்தித்து அனுப்பிய பிறகு, தாத்தா சின்னையா மட்டும் மீதம் இருந்தார். தாத்தா தனது மகனின் நோயை பற்றி சொல்ல, சுவாமி அவரிடம் ஒரு பெரிய திராட்சை கொத்தை தந்து, அவற்றை வீட்டிற்கு எடுத்து சென்று மகனுக்கு தருமாறு கூறினார். §
>
> அதிக நேரமாகி இருந்ததால், வீடு திரும்புவதற்கு தனக்கு இரயில் கிடைக்குமா என்ற சந்தேகத்துடன் தாத்தா அங்கிருந்து கிளம்பினார். ஆனால் அவர் இரயில் நிலையம் வந்த நேரம் பார்த்து, இரயிலும் நிலையத்தில் வந்து நின்றது. அவர் வீடு திரும்பிய போது, அவர் மகனுக்கு காய்ச்சல் தீவிரமாகி அதிக வேதனையில் இருந்தார். அவர் தன் மகனுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு, ஒவ்வொரு திராட்சையாக கொடுக்க ஆரம்பித்தார். அவற்றில் மகன் பாதி திராட்சைகளை சாப்பிட்டு உறங்கிவிட்டார். அடுத்த நாள் மகனுக்கு காய்ச்சல் குணமாகிவிட்டது. தனது மகன் குணமடைந்ததற்கு யோக சுவாமியின் ஆசிகள் தான் காரணம் என்பதை தாத்தா அறிந்து இருந்தார். §

ஒண்டாரியோவை சேர்ந்த எஸ். கந்தையா வழங்கும் பகிர்வு: §

1949 ஆம் ஆண்டில், என் மாமனார் யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையில் டெட்டனஸ் நோயால் தீவிர வேதனையில் இருந்த போது, சுவாமியின்  குணப்படுத்தும் சக்தியை முதல் முறையாக அனுபவித்தேன். மருத்துவர்கள் அவர் உயிர் பிழைப்பார்  என்ற நம்பிக்கையை இழந்து இருந்தார்கள். சுவாமி அனந்தபுராவில் இருந்த என் மாமனாரின் குடும்ப வீட்டில் தொடர்ந்து பத்து நாட்கள் தங்கி, அமைதியாக தியானம் செய்ததால், என் மாமனார் சிறு வயதில் இருந்தே சுவாமியின் சீடனாக இருந்தார். §

எதிர்பாராத விதமாக, சுவாமி மருத்துவ மேலதிகாரியுடன், மருத்துவமனை கூடத்திற்கு வந்து விட்டார். அவர் வந்தவுடன், என் மாமியார் அவர் கால்களில் விழுந்து அழ ஆரம்பித்துவிட்டார். சுவாமி மாமியாரை சமாதானப்படுத்தி, “நாளை நல்லூர் கோயிலுக்கு சென்று, காலை ஐந்து மணி பூஜையின் போது அர்ச்சனை செய்யுங்கள்,” என்றார். என் மாமனார் அது வரை உயிருடன் இருப்பது சந்தேகம் என்று மருத்துவர்கள் கூறினர். ஆனால் அவர் உயிருடன் இருந்தார், மற்றும் அர்ச்சனை நடத்தப்பட்டது, மற்றும் அவரது நெற்றியில் விபூதியை பூசியவுடன், பூட்டுத்தாடையுடன் மூடியிருந்த தாடை திறந்துக்கொண்டது மற்றும் மூன்று நாட்கள் பேசாமல் இருந்த அவர் உடனே பேச தொடங்கினார். பத்து நாட்களுக்கு பிறகு, அவர் முழுமையாக குணமடைந்த நிலையில் வீட்டிற்கு திரும்பினார். §

சுவாமி பெரும்பாலும் ஒரே சமயத்தில் பல இடங்களில் தென்பட்டார். இவர் இந்த சக்தியை பற்றி யாரிடமும் தெரிவிக்கவில்லை, ஆனால் ஒரு இடத்தில் சுவாமியை பார்த்தவர்கள், வேறொரு இடத்தில் அதே சமயத்தில் பார்த்தவர்களுடன் கூடி ஆலோசித்தார்கள். அவர்கள் யார் உண்மையான சுவாமியை தரிசித்தது என்று தங்களுக்குள் அன்பாக பேசிக்கொள்வார்கள். கருத்து வேறுபாடு இருந்ததாக தெரியவந்தால், சுவாமி புன்னகைப்பார். பின்வரும் கதையை Dr. நித்தியானந்தன்  விவரிக்கிறார்:§

எனது மூத்த சகோதரர் 1938 மற்றும் 1939 வருடத்தின் தொடக்கத்தில், தனது மேற்படிப்பிற்காக இங்கிலாந்தில் தங்கி இருந்தார். அந்த சமயத்தில் மேற்கத்திய நாடுகளில் இரண்டாம் உலகப்போர் தொடங்கி இருந்தது. நேச நாடுகளுக்கு ஹிட்லரின் நடவடிக்கைகள் பெரும் அச்சுறுத்தலாக இருந்தன. ஹிட்லரின் தாக்குதலுக்கு இங்கிலாந்தின் தொழில் நகரங்கள் முக்கிய இலக்காக இருந்தன. அதனால் என் தந்தை அண்ணனை பற்றிய கவலையில் இருந்தார். ஒரு நாள் அவர், இந்த கவலைகள் பற்றிய சிந்தனையுடன் சுவாமியை காண சென்றார். சுவாமி அவரை பார்த்து, “எதைப் பற்றியும் கவலை வேண்டாம்,” என்றார். என் தந்தை செய்தித்தாள்களில் தோன்றிய மிகைப்படுத்தப்பட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக பயந்து இருந்தார். ஆனால் என் சகோதரனை எதிர்கொள்ள, தந்தை எதிர்பாராத மற்ற அபாயங்கள் காத்து இருந்தன. §

> சுவாமியின் கருணை நிறைந்த அந்த வார்த்தைகள், அந்த அபாயங்களில் இருந்து எனது சகோதரனை காப்பாற்றும் நம்பகமான வார்த்தைகளாக விளங்கின. ஒரு நாள், என் சகோதரனின் அறையில் இருந்த சூடேற்றும் கருவி வெடித்து புகைய ஆரம்பித்தது. தீடிரென்று நடந்த இந்த சம்பவத்தால், என் சகோதரன் அதிர்ச்சிக்கு உள்ளாகி, என்ன செய்வது என்று தெரியாது, திகைப்பில் அதே இடத்தில் அமர்ந்து இருந்தார். அதனால் அவர் தன் சுயநினைவை இழந்தார். அப்போது அவரிடம் சுவாமியின் குரல், "தம்பி, ஜன்னல்களை உடைத்துக்கொண்டு, வெளியே செல்," என்று கூறியது. சத்தமாகவும் தெளிவாகவும் இருந்த சுவாமியின் வார்த்தைகள், என் சகோதரனுக்கு புதிய வாழ்க்கையை வழங்கியது. அவர் சன்னல்களை உடைத்துக்கொண்டு வெளியேறி, தனக்கு வந்த பேராபத்தில் இருந்து தப்பினார். அடுத்த நாள் விடியற்காலையில், என் தந்தை சுவாமியை சந்திக்க சென்ற போது, "நான் நேற்று உங்கள் மகனை பார்த்தேன்," என்று கூறினார். §

*தமிழ் சேஜஸ் அண்ட் சீர்ஸ் ஆஃப் சிலோனில்,* Dr. பிரான்சிஸ் பிள்ளை தன்னிடம் விவரித்த ஒரு விசித்திரமான சம்பவத்தை, வி. முத்துக்குமாரசுவாமி பதிவு செய்துள்ளார். §

> கிறுத்துவராக இருந்த ஒரு தாய், ஒரு பொறியாளராக ஐக்கிய இராச்சியத்தில் பணியாற்றிய தனது மகன் நீண்டநாட்களாக தனக்கு கடிதம் எழுதாததால், மிகுந்த வருத்தத்தில் இருந்தார். தன் மகனை பற்றிய தகவல்களை தேடித்தருமாறு, அவர் யோகர் சுவாமியிடம் மன்றாடினார். அவர் மனதை மாற்ற யோகர் சுவாமி முயற்சி செய்தார், ஆனால் அந்த தாய் உறுதியாக இருந்ததால், யோகர் சுவாமி ஒரு மெய்மறதி நிலைக்கு சென்று, அந்த பொறியாளர் என்ன செய்துக்கொண்டு இருக்கிறார் என்பதை பதிவு செய்துக்கொண்டார். அந்த பொறியாளர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் உற்சாகமாக இருந்ததை தெரிந்துகொண்டார். அதன் பிறகு சுவாமி தனது மெய்மறதி நிலையில் இருந்து வெளிவந்து அவர் மகன், அவரது நண்பர்கள், அவர்கள் இருந்த அறை மற்றும் அவர்கள் என்ன செய்துக்கொண்டு இருந்தார்கள் என்பதை பற்றி ஒரு தெளிவான விளக்கத்தை வழங்கினார். இதை விவரித்து தாய் மகனுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதற்கு பதிலாக மகன் அனுப்பிய கடிதம், தாயிடம் யோகர் சுவாமி கூறியதை உறுதி செய்வதாக இருந்தது. §

தன்னை சுற்றி இருந்த சூழலில் ஒரு சிறிய மாற்றத்தை ஏற்படுத்தி, ஒரு பெரிய சூழலில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துபவராக இருந்தார். ஒரு முறை யோக சுவாமி தனது கொழும்புத்துறை ஆசிரமத்தில், சில சீடர்களுடன் வழக்கம் போல் வடக்கு நோக்கி அமர்ந்து இருந்தார். ஒரு அன்பர் கொண்டு வந்திருந்த ஆரஞ்சு பழங்கள் அவர் காலடியில் அடுக்கப்பட்டு இருந்தன. தனது சீடர்களுடன் ஆர்வத்துடன் பேசிக்கொண்டு இருந்த சுவாமி, திடீரென்று,

“பாவம் பிராமணன், ஆசிரமம்,” என்று கூறினார். அவர் அவ்வாறு பேசியதற்கும், அப்போது நடைபெற்ற உரையாடலுக்கு முற்றிலும் தொடர்பு இல்லாமல் இருந்தது. சுவாமி அதை சொல்லிக்கொண்டு, அந்த பழக்குவியலில் இருந்து கீழே விழுந்து இருந்த ஒரு ஆரஞ்சு பழத்தை, மீண்டும் பழைய இடத்தில் வைத்தார். அவர் தன் உரையாடலை தொடர்ந்தார், மற்றும் அன்பர்கள் அவர் மத்தியில் பேசிய வார்த்தைகள் மீது அதிக கவனம் செலுத்தவில்லை. ஆனால், அந்த முக்கியமான வார்த்தைகள், மரியாதைக்குரிய அறிஞராகவும் சிறந்த பேச்சளராகவும் இருந்த இராஜயோகி சங்கர சுப்பையருக்கு பாதுகாப்பாக விளங்கின. சுவாமி அந்த ஆரஞ்சு பழத்தை மீண்டும் பழக்குவியலில் வைத்த போது, அந்த பிராமணர் பயணம் செய்த வாகனம் ஒரு பெரிய விபத்தில் தப்பியது. இதைப்பற்றிய தகவல்களை இராஜ யோகியே விவரிக்கிறார். §

> நான் ஒரு முறை சித்தன்கேணி மகாகணபதி கோயிலில் ஒரு உரை நிகழ்த்தி, இரவு நேரத்தில் நல்லூருக்கு திரும்பிய போது கனமழை பெய்துக்கொண்டு இருந்தது. சீரணி கிராமத்து திருப்பத்தில், கால்வாய் நிரம்பி இருந்தது; வாகன ஓட்டியால் சாலையை சரியாக பார்க்க முடியவில்லை. திடீரென்று ஒரு வெளிச்சம் தோன்றி, சாலையை பிரகாசிக்க செய்ததால், நாங்கள் கால்வாயை தவிர்த்து பாதுகாப்பாக எங்கள் இலக்கை வந்து அடைந்தோம். அந்த வெளிச்சம் மட்டும் இல்லையென்றால், எங்களால் அந்த பாதாள குழியை பார்த்து இருக்க முடியாது, மற்றும் நாங்கள் அதற்குள் விழுந்து இருப்போம். அந்த வெளிச்சத்தால் பல உயிர்கள் தப்பின. நான் அன்பர்களிடம் இருந்து சுவாமி “பாவம் பிராமணன், ஆசிரமம்" என்று சொன்னதை பற்றியும், ஆரஞ்சு பழத்தை குவியலில் வைத்தது பற்றியும் தெரிந்து கொண்டேன். அன்பர்கள் மீது என்ன ஒரு பரிவு!§

கொழும்பில் சமயப்பற்றுடன் இருந்த ஒரு இசுலாமியர், யோக சுவாமியை பற்றி கேட்டறிந்ததும், தான் யாழ்ப்பாணம் சென்று சுவாமியை தரிசிக்க ஏற்பாடு செய்யுமாறு ஒரு யோக சுவாமியின் சீடரிடம் கேட்டுக்கொண்டார். அந்த நபர் அரசு தலைமை வழக்கறிஞராக இருந்தார், மற்றும் அது அமெரிக்காவின் அட்டர்னி ஜெனரல் பதவிக்கு நிகரானது. இருவரும் இரயில் மூலம் யாழ்ப்பாணத்திற்கு சென்று, ஒரு விடுதியில் தங்கினர். அவர்கள் அடுத்த நாள் காலையில் குளித்து விட்டு, கொழும்புத்துறையில் இருந்த சுவாமியின் குடிசையை நெருங்கினார்கள். §

அவர்கள் கதவை நெருங்கியதும், சுவாமி உரத்த குரலில், “யார் இங்கே? நான் இன்று யாரையும் பார்க்க விரும்பவில்லை. நீங்கள் போகலாம்,” என்று கத்தினார். இருவரும் அதே இடத்தில் நின்றுவிட்டனர். அவர்களுக்குள் பேசிய பிறகு, அன்பர் மட்டும் சுவாமியை சென்று சந்தித்து, சுவாமியை சந்திக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் இலங்கையின் அரசு தலைமை வழக்கறிஞர் வந்து இருப்பதாக விளக்கினார். “அவர் அரசு தலைமை வழக்கறிஞராக

அல்லது உச்சநீதிமன்ற நீதிபதியாக இருக்கலாம். அதைப்பற்றி எனக்கு கவலை இல்லை. நான் அவரை இன்று சந்திக்க விரும்பவில்லை. நீங்கள் போகலாம்," என்று சுவாமி கத்தினார். §

அந்த அன்பர் அதிக ஏமாற்றத்துடன் வெளியே வந்து, இனி முயற்சி செய்து பயனில்லை என்று தனது நண்பரிடம் கூறினார். அவர்கள் மனதில் துக்கத்துடன், கொழும்பிற்கு அன்றே திரும்பினார்கள். அரசு தலைமை வழக்கறிஞர் வீடு திரும்பியதும், அவருக்காக அரசாங்கத்திடம் இருந்து ஒரு கடிதம் காத்து இருந்தது. அவர் உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் அடுத்த நாள் பதவியேற்க வேண்டும் என்றும் அந்த கடிதம் கூறியது. அவர் தன் கண்களில் கண்ணீருடன் சுவாமியை கத்தியதை நினைவுகூர்ந்தார், மற்றும் சுவாமி தன்னை சந்தித்து இருந்தால், அவர் யாழ்ப்பாணத்தில் அதிக நேரம் தங்கவேண்டி இருந்திருக்கும், மற்றும் அதனால் இந்த கடிதத்திற்கு சரியான நேரத்தில் முறையாக செயல்பட்டு இருக்க முடியாது என்பதையும் உணர்ந்துகொண்டார். §

அவர் சுவாமியை சந்தித்து, மரியாதை செலுத்த அடுத்த வாரம் பயணம் மேற்கொண்டார். இந்த முறை, அவர் வாசற்படியில் கால் வைத்ததும், சுவாமி அவரை ஒரு பெரிய புன்னகையுடன் வரவழைத்து, "உச்சநீதிமன்ற நீதிபதிக்கு எனது பணிவான வணக்கங்கள். உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்," என்றார். காலப்போக்கில், சுவாமியை குறைந்தது மாதத்திற்கு ஒரு முறை சந்திக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அவர் இருபத்தி ஐந்து வருடங்களுக்கு உச்சநீதிமன்ற நீதிபதியின் பதவியை வகித்தார். §

தமிழ்நாட்டில் அறிஞராகவும் பேராசிரியராகவும் இருந்த அ. ச. ஞானசம்பந்தன் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் சொற்பொழிவு நடத்திய சமயத்தில், ஒரு நாள் காலையில் எழுந்த போது, தன்னால் வாய் பேச முடியவில்லை என்பதை உணர்ந்துக்கொண்டார். அவர் பணி ஓய்வு பெற்று இருந்த ஒரு காது-மூக்கு-தொண்டை அறுவை சிகிச்சை நிபுணரிடம் அழைத்து செல்லப்பட்டார். அவர் ஆய்வு செய்து, நோய் தீவிரமடைந்து இருப்பதால், பரிசோதனைகள செய்ய அவர் கொழும்பு மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்று கூறினார். அவர் தன் குடும்பத்தை காப்பாற்றுவதற்கு தன் குரலை மட்டுமே நம்பி இருந்ததால், ஞானசம்பந்தன் தன் உற்சாகத்தை இழந்து பயந்து இருந்தார். §

அவர் வாகனத்தில் ஏறிக்கொண்டு இருந்த போது, மருத்துவர் அவரிடம் விரைந்து வந்து, "நீங்கள் யோக சுவாமியின் சீடன் என்பது எனக்கு தெரியும். நீங்கள் கிளம்புவதற்கு முன்பாக அவரை பார்த்துவிட்டு செல்லுங்களேன்?" என்று கேட்டுக்கொண்டார். வழக்கமாக காலை நேரத்தில் யாரும் சுவாமியை சந்திப்பது இல்லை என்பதை அறிந்து இருந்தாலும், சுவாமியை சென்று பார்க்க வேண்டும் என்ற எண்ணம் தனக்கு ஏன் உதயமாகவில்லை என்று தன்னைத்தானே கடிந்துக்கொண்டு, ஞானசம்பந்தன் சுவாமியை நேரடியாக

சென்று சந்திக்க முடிவு செய்தார். சுவாமி அவரை வரவழைத்துக்கொண்டு, “மருத்துவரை முருகப்பெருமான் என்று நினைத்தீர்களா? நீங்கள் அங்கே ஏன் சென்றீர்கள்?” என்று கேட்டார். அவரை அறியாமையை விளக்கும் வண்ணம் ஒரு நீளமான வசவுறை தொடர்ந்தது. அதன் பிறகு சுவாமி அந்த விரிவுரையாளரை உட்கார சொன்னார். அரை மணி நேரத்திற்கு அமைதி நிலவியது. அதன் பிறகு சுவாமி, “இன்று இரவு உங்கள் சொற்பொழிவு நிகழட்டும். அதன் பிறகு என்னை வந்து பாருங்கள்,” என்றார். §

சுவாமி தனக்கு குரலை சரி செய்துவிட்டார் என்பதை உணர்ந்த ஞானசம்பந்தன் அழுதுக்கொண்டு, “நான் சுவாமிகள் சொல் படி நடப்பேன்,” என்று கூறினார். அவர் சொற்பொழிவை முடித்துக்கொண்டு திரும்பிய போது, எதிரே வந்த சுவாமி, “நாம் கம்பரையும் சேக்கிழாரையும் மிஞ்சி விடுவோம்,” என்று கூறினார். (கம்பர் இராமாயணத்தை தமிழில் மொழிபெயர்த்தார், சேக்கிழார் பெரியபுராணத்தை இயற்றினார். அதில் அவர் 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை பதிவு செய்தார்). §

அதன் பிறகு தான் பேசிய குரல் சுவாமிகளால் வழங்கப்பட்டது என்றும் ஞானசம்பந்தன் கூறினார், மற்றும் அதன் பிறகு சிலரால் மட்டுமே புரிந்துகொள்ளப்பட்ட மறைஞான விஷயத்தின் மீது வெற்றியும் அடைந்தார். காலப்போக்கில் இந்த பேராசிரியர் இயற்றிய உயர்தரமான முப்பது புத்தகங்களுக்கு, யோக சுவாமியின் அருள் மட்டுமே காரணம் என்று குறிப்பிட்டார்.§

பின்வரும் சம்பவத்தை சின்னப்பூ நவரத்னராஜா விவரிக்கிறார்.§

> மலேஷியாவில் வேலை செய்த எனது பெற்றோர்கள், என்னை எனது பாட்டன் பாட்டியின் கவனிப்பில் விட்டு சென்றார்கள். எனது நுனி நாக்கில் இருந்த ஒரு விசித்திரமான நோயினால், நான் சிறு வயதில் அவதிப்பட்டதாக கேள்விப்பட்டேன். நான் அவதிப்படுவதை தாங்க முடியாத பாட்டி, என்னை குணப்படுத்த மேற்கொண்ட மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய (ஆயுர்வேதம்) நாடுகளின் சிகிச்சைகள் பலனளிக்கவில்லை என்றும், எனக்கு இருந்த நோயினால் குடும்பம் அதிக கவலையில் இருப்பதாகவும் சுவாமியிடம் முறையிட்டார். சுவாமி விரிவாக எதையும் பேசாமல், எப்போதும் பேசுவதை போல, “இது தான் பிரச்சனையின் தற்போதைய நிலை” என்று அவர்களிடம் குறிப்பிட்டார். §
>
> சுவாமி தினமும் காலையில், என் வீட்டு வழியாக, தனது ஆசிரமத்தில் இருந்து இரண்டு மைல் தூரத்தில் இருந்து அரியாலைக்கு சிரமப்பட்டு நடந்து செல்வார். சுவாமி நல்ல உடல்வாகு மற்றும் நீண்ட தாடியுடன் அச்சுறுத்தும் படி இருந்ததால், நான் அவரை பார்த்ததும், அவர் கண்களுக்கு தென்படாமல் ஓடி ஒளிந்துக்கொள்வேன். நான் படித்த தமிழ் பள்ளிக்கூடம் எனது வீட்டில் இருந்து இருபத்தி ஐந்து கஜ தூரத்தில் இருந்தது. தெருவில் இருந்து ஐந்து கஜ தூரத்தில் இருந்த சுவாமியின் ஆசிரமம் வழியாக, நான் பள்ளிக்கு செல்ல வேண்டியிருந்தது. §

ஒரு நாள் நான் பள்ளிக்கு சென்றுகொண்டு இருந்த போது, சுவாமி தனது குடிசையின் கதவை திறந்து, தெருவின் நடுவில் எனக்கு நேருக்கு நேராக வந்து நின்றுவிட்டார். அதனால் என்னால் அவரது பார்வையில் இருந்து தப்பி ஓடமுடியவில்லை. நான் அமைதியாக நின்று இருந்தேன். சுவாமி எனது வாயை திறக்கும்படி ஆணையிட்டார். நான் வாயை திறந்ததும், என் வாயில் துப்பாலமா என்று கேட்டார். ஆனால் அவர் என் உதட்டில் பாதிக்க பகுதியின் மீது மூன்று முறை ஊதிவிட்டார், மற்றும் அந்த பகுதி முழுமையாக குணமடைந்துவிட்டது. §

இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளின் வெளித்தோற்றத்தை தவிர்க்க வேண்டும் என்று செல்லப்பசுவாமி அவருக்கு கற்றுத்தந்து இருந்ததால், அவர் அத்தகைய மர்மமான சம்பவங்களை பெரிதுபடுத்தவில்லை. ஒரு வேளை தான் நிகழ்த்திய அற்புதங்களை மக்கள் தெரிந்துகொண்டால், அவர் தனது பணியின் இப்பகுதியை தற்செயல் என்று கருதிக்கொண்டு, அற்புதங்கள் அனைத்தையும் சாதாரணமாக தோன்றச்செய்தார். §

**மரணத்தை வாழ்க்கையின் ஒரு அங்கமாக பார்த்தல்**

சோகமும் மரணமும் அச்சுறுத்திய ஒரு நோயாளிக்கு, நிலைமாற்றம் விரைவில் நடக்கப்போவதாக யோக சுவாமிக்கு தோன்றினால், அப்போது சுவாமி சிறப்பாக ஆறுதல் அளிக்கவும் செய்தார். அத்தகைய இக்கட்டான சூழ்நிலைகளில், சுவாமி வெளிப்படுத்திய ஆழமான இரக்க குணத்தைப் பற்றி Dr. இராமநாதன் எழுதியுள்ளார்.§

நாங்கள் துயரம் மற்றும் வேதனையில் இருக்கும் போது, பாசம் நிறைந்த சுவாமியின் தெய்வீக வார்த்தைகள், எங்களுக்கு மிகப்பெரிய ஆறுதலை வழங்கியது. “எதற்காக பயப்படுகிறார்கள்? நமக்கு மேலே இருக்கும் ஒருவன், இவற்றை எல்லாம் இயக்கிக்கொண்டு இருக்கிறான் அல்லவா? அவனிடம் சரணடைந்து சும்மா இருங்கள். யாரையும் பகைத்துக்கொள்ள தேவையில்லை. மற்றவர்கள் செய்யும் தீமையை மறந்து மன்னித்து விடுங்கள். இந்த உலகை நிர்வகிக்கும் இறைவன் எல்லாம் அறிந்து இருக்கிறான். சர்வவல்லமை படைத்த பரமாத்துமாவை காட்டிலும் நீங்கள் எந்த வகையில் சிறந்தவராக இருக்கிறீர்கள் அல்லது எதை சிறப்பாக செய்து விடமுடியும்?” என்ற வார்த்தைகளுடன், நாங்கள் எங்கள் கட்டுப்பாட்டை இழக்காமல் அமைதியாக வாழ்வதற்கு, அவர் எங்களுக்கு தனது கருணை மற்றும் ஆசீர்வாதத்தை வழங்கினார். §

எனது மனைவியின் சகோதரன் மரணப்படுக்கையில் இருந்த போது, சுவாமி வருகை தந்து, நெற்றியில் விபூதியை பூசி, அவரது இறுதி யாத்திரையில் அனுப்பி வைத்தார். சுவாமியின் ஆசியால் அவர் நல்ல நிலையை அடைந்தார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. §

இதற்கு இன்னொரு அன்பரும் சான்றளித்தார்:§

> என் மகள் நோய்வாய்ப்பட்டு இருந்த போது, ஒரு முறை யோக சுவாமி எங்கள் வீட்டிற்கு வந்தார். நாங்கள் அவரிடம் உதவியை நாடினோம். அவர், “கவலைப்படவேண்டாம். அவள் சிவபெருமானின் திருவடிகளை நோக்கி சென்றுகொண்டு இருக்கிறாள்,” என்று கூறினார். அன்று இரவு அவள் உயிர் பிரிந்தது. §

மரணம் பற்றி சுவாமிக்கு இருந்த அறிவைப்பற்றி சி.எஸ். தர்மராஜாவின் குறிப்பு:§

> ஒரு முறை சுகாதாரத்துறையில் உயர் பதவியில் இருந்த ஒரு மருத்துவர், வடமாகாணத்திற்கு பயணம் மேற்கொண்ட போது, அவர் வழக்கம் போல சுவாமியை தரிசிக்க வந்தார். அவரிடம் சுவாமி, “நீங்கள் உங்கள் மேலங்கியை மாற்றும் நேரம் வந்துவிட்டது,” என்று கூறினார். சில நாட்கள் கழித்து, நற்பண்புகள் நிறைந்த அந்த மருத்துவரின் உயிர் பிரிந்தது.§

சுவாமி நிகழ்த்திய பெரும்பாலான நிலைமாற்ற அற்புதம் பற்றி ரத்னா மா நவரத்தினம் பின்வரும் உட்பார்வையை பகிர்கிறார்.§

> சுவாமி பலதரப்பில் இருந்தும் பெருந்திரளான மக்களின் கவனத்தை கவர்ந்தார். அவர்களில் ஒவ்வொருவருக்கும், அவரது தனிப்பட்ட புரிந்துணர்வின் அளவிற்கு ஏற்ப, அந்த நபரின் எதிர்கால முடிவை வெளிப்படுத்தினார். அவர் ஒரு நபரின் எதிர்காலத்தை சொல்லும் மறைஞானியாக அல்லது கட்புலனுக்கு அகப்படாததை காணும் சித்தராகவும் இல்லை, சாதாரண சிந்தனையை கடந்து தனது ஆற்றல்களுடன் தனிமையில் வாழ்ந்த ஒரு உயிர்சக்தியாகவும் இல்லை. அவர் ஒரு தெய்வீக புருஷராக இருந்தார் மற்றும் அவரது யோக ஞானம், ஒவ்வோரிடமும் மறைந்து இருந்த ஒரு நாணை நெருங்க செய்ததால், அவர்களின் இதயங்களில் இருந்த இரகசிய இடங்களை மேற்பரப்பிற்கு கொண்டு வந்து, அவர்களது நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக விளங்கிய குழப்பமான எதிர்வினைகள் மற்றும் மறைவான நோக்கங்களை அவர்களது பார்வைக்கு வெளிப்படுத்தியதன் மூலம், சுவாமி மக்களின் உட்புற பண்புகளை மாற்றவதற்கு ஒரு அருமையான சக்தியை பிரயோகித்தார். §
>
> இதன் காரணமாகவே அவருக்கு முன்பாக பலர் நடுங்கிக்கொண்டு இருப்பார்கள் அல்லது அவரது கூர்மையான கண்களுக்கு தென்படாமல், பயந்து விலகி இருப்பார்கள். ஆனால் அவரது மனிதாபிமானம் எல்லோரையும் வலுவாக ஈர்த்ததால், அவரது கடுமையான கண்டிப்புக்களும் கருணையின் பருவமழையாக விளங்கியது மற்றும் அன்பர்கள் அவரை இன்னல்கள் மற்றும் பதட்டமான நேரங்களில்

நாடினார்கள். அவர் எண்ணற்ற வழிகளில் அவர்களது வலிகள் மற்றும் பிணிகளை தணித்ததால், அவருக்கு முன்பாக அமர்ந்து இருந்த எண்ணற்ற மக்களின் நம்பிக்கை கைலாய மலை உயரத்திற்கு உயர்ந்து இருந்தது. அவர் சிவபெருமான் அருளிய அந்த குணப்படுத்தும் தீர்த்தத்தை, அந்த கைலாய மலையில் இருந்து கொண்டு வந்து இருந்தார் மற்றும் அது உண்மையில் தெய்வீக கங்கை பூமிக்கு வந்து இறங்கியது போல இருந்தது!§

நன்மை மற்றும் தீமையின் உலகை கடந்து நோக்கி, நடப்பது அனைத்தும் ஆன்மாவின் பரிணாம வளர்ச்சியை மேம்படுத்த நடைபெறுவதாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சுவாமி தன் அன்பர்களுக்கு கற்றுத்தந்தார். அவர் அளித்த விளக்கம்:§

நாம் ஒருவிதமான பலனை அடைந்தால் நன்மை என்றும் வேறுவிதமான பலனை அடைந்தால் தீமை என்றும் நினைக்கக்கூடாது. இந்த செயல்கள் அனைத்தும் மாயையில் இருந்து தோன்றி, ஆத்ம ஞானம் பெறுவதற்கு உதவி செய்கின்றன என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இறைவன் மனிதனை உயர்த்தி மற்றும் தொடர்ந்து தாழ்த்துவதன் மூலம், அந்த மனிதனுக்கு அனுபவத்தை வழங்குகிறார். நீங்கள் மாயைகளில் இருந்து முழுமையாக விடுபடவேண்டும். எல்லா சோதனைகளும் நன்மைக்கே.§

### *சிவ தொண்டன்* பத்திரிகை

டிசம்பர் 1934 ஆம் ஆண்டில், *சிவ தொண்டன்* என்ற ஒரு மாதாந்திர பத்திரிகையை தொடங்க சுவாமி தனது சீடர்களை ஊக்குவித்தார். அந்த பத்திரிகை ஆங்கில வாசகர்களுக்கு ஒரு சிறிய பகுதியுடன், சமயம் தொடர்பான கட்டுரைகள் தமிழில் எழுதப்பட்டு வெளிவந்தது. சிவ தொண்டன் நிலையத்தை பற்றி இந்துமதி அம்மா விவரிக்கிறார்:§

சிவபெருமானை மறந்து விடுவதே துக்கங்கள் அனைத்திற்கும் காரணமாக இருப்பதாலும், சிவபெருமானின் நிலை மீது தொடர்ந்து ஆழ்ந்த சிந்தனை மேற்கொள்வதே அதற்கு தீர்வாக இருப்பதாலும், சிவபெருமான் மீது ஆழ்ந்த சிந்தனை செய்வதை ஊக்குவிப்பது அதன் நோக்கமாக விளங்கியது. பிரசுரிக்கும் பணி முதலில் கண்டிக்கு அருகில், கடுகண்ணாவ பிரதேசத்தில், கிராகம தோட்டத்தில், கமலாசினி அச்சு நிலையத்தில் நடந்தது. பின்னர் அது பேராதனியாவிற்கு மாற்றப்பட்டது. கண்களை கண் இமைகள் பாதுகாப்பதைப் போல, அந்த பத்திரிகையில் சுவாமி ஒரு ஆழமான மற்றும் நிலையான ஆர்வத்தை கொண்டு இருந்தார். அவர் பத்திரிகை ஆசிரியராகவும் பண்டிதராகவும் இருந்த கே. கே. நடராஜன் மற்றும் அச்சடிப்பவருடன் இணைந்து செயல்பட்டார் மற்றும் அறிஞர்களாக இருந்த தனது சீடர்களிடம் கட்டுரைகளை

வழங்குமாறு உத்தரவிட்டார், ஆனால் பத்திரிகையில் எந்த எழுத்தாளரின் பெயரும் எப்போதும் குறிப்பிடப்பட்டது இல்லை. சுவாமி அஞ்சலில் அனுப்புவதையும் பார்வையிட்டு, “நீங்கள் மேலுறையில் இருக்கும் சிவபெருமான் மறையாதவாறு அட்டையை ஒட்டவெண்டும். இந்த பத்திரிகையை பார்ப்பவர்கள் மனதில் சிவபெருமான் என்ற வார்த்தை மட்டும் நிலைத்து நின்றாலும், அது ஒரு மிகப்பெரிய சாதனையாக இருக்கும்,”என்று கூறுவார். §

சுவாமி இந்த வெளியீட்டிற்காக, “எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்” என்ற குறிக்கோளை வழங்கினார். ஒவ்வொரு வெளியீடும் அவர் வழங்கிய நற்சிந்தனை பாடல்களில் ஒன்றை கொண்டிருந்தது. யோக சுவாமி இந்த பத்திரிகைக்கு அதிக மதிப்பு அளித்ததால், அதிக தாக்கம் ஏற்படுத்திய அவரது பாடல்களில் ஒன்றான “சிவதொண்டனில்”, சுவாமி இந்த பத்திரிகையை ஒரு சிறுவனாக உருவகப்படுத்தி உள்ளார்: §

சிவபெருமானின் தொண்டர்களே!

சிவதொண் னென்னுந் திருநாமம் பூண்டே
சிவதொண்ட நுங்கடிரு முன்றிற்
சிவதொண்டு செய்ய வருஞ்சிறுவன்
சிந்தை களிகூரச் செய்தல் கடமை தெரி.

சிவனடி யாரைச் சிவனென வணங்கும்
சிவதொண் னென்னுஞ் செல்வச் சிறுவன்
பவவரு டத்துப் பன்னுமார் கழிமதி
எவரும் மகிழ இன்னிலம் போந்தான் இவனோ,
சிறுபிள்ளை யாயினுஞ் செய்தவப் பயனால்
அறிவு மிகுந்த ஆண்டகை யாவான்
தினைத்துணை நன்றி செய்யினு மதனைப்
பனைத்துணை யாக்கொள்ளும் பயனைத் தெரிபவன்
அனைத்துஞ் சிவன்செய லாமென அறிபவன்
சினத்தைச் செற்ற திருவினை யுடையான்
சத்தியம் பொறுமை சாந்தம் நிறைந்தவன்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணன்
அத்துவா மார்க்கம் ஆறையு மகற்றித்
தத்துவா தீதத் தன்மையை யுணர்ந்தோன்
வறுமையிற் கலங்கான் செல்வத்தின் மகிழான்
பொறுமை மிக்குடைப் புண்ணிய புருடன்
தருமநன் னெறியிற் சற்றும் வழுவான்
கருமத்திற் கையுங் கடவுளிற் கருத்துமா
யிருநிலம் மதிக்க வாழு மியல்பினன்
குருபரன் கூறிய நெறியே செல்பவன்

திங்க டோறும் திருவக லாத
உங்கள் மனைக்கே யுவப்புடன் போந்து
நற்சிந் தனையும் நல்ல சமயமும்
அற்புத மான போற்றித்திரு வகவலும்
விற்பன மாக விளங்கு யோகமும்
சொற்பொருட் சுவைசேர் சூடாலை சரிதமும்
இன்னும் பற்பல வினியகட் டுரைகளும்
கொண்டுடன் மகிழ்ந்து கும்பிடு மிவனை
வாரி யெடுமின் மடிமீது வைம்மின்
சீரிய வாயாற் செந்தமிழ் பாடுமின்
பாலுந் தேனும் பாகும் பருப்பும்
நாலுங் கலந்து நன்றா யுஞீட்டுமின்
பட்டாடை சுற்றுமின் பலபணி புனைமின்
மட்டார் நறுமலர் மாலை சூட்டுமின்
எட்டாப் பேரின்ப மெய்தி
இட்டார் பெர்யோர் எனவாழ் வீரே.§

சிவதொண்டன் பத்திரிகைக்கு “நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே" என்ற முதல் நற்சிந்தனை பாடலை சுவாமி எழுதினார். அது பின்னர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது:§

நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே. ஆகையால் நாம் அவருடைய உடைமை. அவருடைய அடிமை. நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே. நாம் ஒரு போதும் அவரை மறந்திருக்க முடியாது. நமக்கு ஒரு குறையுமில்லை. நாம் என்றும் உள்ளோம். எங்குமிருக்கிறோம். எல்லாம் அறிவோம். இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்து கீழ்மையான குணங்களை போக்கி, மேலான தெய்வ தத்துவங்களை அடைவோமாக! §

தன்னிடம் அதிகமான சீடர்கள் சேர்ந்ததும், சுவாமி அவர்களுக்கு சமஸ்கிருதம் அல்லது ஆங்கிலத்தில் இருக்கும் பல்வேறு படைப்புக்களை தமிழில் மொழிபெயர்ப்பது போன்ற பணிகளை வழங்கினார். §

### அருகில் இருந்தும் தூரத்தில் இருந்தும் எழுதிய கடிதங்கள்

யோக சுவாமியை பொறுத்தவரையில், அனைத்தும் நீங்கள் யார் என்பதை அறிதல் அல்லது அறியாமல் இருப்பது ஆகும். “தற்பொழுதில் தீவிரமாக இருக்கும் போது, நீங்கள் யார் என்பது உங்களுக்கு புரியவரும்.” அவர் எந்த இடத்தில் இருந்தாலும், இதை இடைவிடாது கற்றுத்தந்தார். அவர் இந்தியாவிற்கு பயணம் செய்த போது அல்லது இலங்கையின் தொலைதூர பகுதிக்கு பயணம் செய்யும் போது, சிலசமயங்களில் நுண்ணறிவு நிறைந்து கையால் எழுதப்பட்ட கடிதங்களை, தனக்கு நெருக்கமான சீடர்களுக்கு

அனுப்புவார். இவை தங்கம் போல கவனமாக பாதுகாக்கப்பட்டன. அதில் பல நற்சிந்தனை என்ற அவரது புத்தகத்தில், அவர் எழுதிய பாடல்களுடன் வெளியிடப்பட்டன. ஒவ்வொரு கடிதத்தின் மேற்பகுதியில் எப்போதும் “சிவமயம்" எழுதப்பட்டு இருக்கும். மலை ஊராக இருந்த கண்டியில் அவர் எழுதிய கடிதம்: §

*சிவமயம்*

> நான் இங்கே இருக்கிறேன். கொழும்பில் இருந்து வரும் இரயில் வந்துள்ளது மற்றும் அது தனது பயண இலக்கை நோக்கி செல்ல நிலையத்தில் காத்து இருக்கிறது. பாதுளையில் இருந்தும் இரயில் வந்துள்ளது மற்றும் அது தனது பயண இலக்கை நோக்கி செல்ல நிலையத்தில் காத்து இருக்கிறது. எங்கும் தேயிலை தோட்டங்கள் நிரம்பியுள்ளன. தோட்டக்காரன் தனது குதிரையில் அமர்ந்துகொண்டு தேயிலைகள் பரிக்கபடுவதை கண்காணிக்கிறான். பெரிய ஓடையுடன் சேரும் ஆவலுடன் அருகில் இருக்கும் சிறு ஓடை துளி துளியாய் சொட்டிக்கொண்டு இருக்கிறது. இந்த உலகம் அருமையான இடமாக இருக்கிறது. எல்லோரும் யோகா செய்கிறார்கள். நாம் [இலக்கினை] அடைய வேகமாக முயற்சி செய்து வருகிறோம். §

சுவாமி தனது கடிதங்களை சேகரிக்க விருப்பத்துடன் பயன்படுத்தியவர்களில், பிற்காலத்தில் இலங்கை தமிழர்களின் தலைவனாக விளங்கிய யோகேந்திர துரைசுவாமியும் ஒருவராக இருந்தார். அப்போது 9 வயது சிறுவனாக இருந்த யோகேந்திரனுக்கு எழுதப்பட்ட கடிதங்கள், சுவாமியின் வலுவான கண்ணோட்டம் பற்றி ஒரு அருமையான முழுமையை வழங்கியது. நல்ல அறிவுரைகள் நிரம்பிய ஒரு கடிதத்தை இங்கே காணலாம்.§

*சிவமயம்*

> *அன்புடன் நானாக இருக்கும் யோகேந்திரனுக்கு எழுதும் கடிதம்:*
>
> நான் உன்னுடன் இருக்கிறேன் மற்றும் நீ என்னுடன் இருக்கிறாய். நீ நானாகவும் நான் நீயாகவும் இருக்கிறோம். நீ எதற்காக பயப்படுகிறாய்? இங்கே பார்! நான் நீயாக இருக்கிறேன். அப்படியென்றால் நீ என்ன செய்ய வேண்டும்? நீ அன்பை உணர்ந்து அதை வெளிப்படுத்த வேண்டும். யாரிடம்  வெளிப்படுத்த வேண்டும்? எல்லோரிடமும். உண்மையில் உனது இயல்பு அன்பை தவிர வேறு எதுவும் இல்லை. நீ மட்டும் இல்லை, பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்தும் அன்பால் நிறைந்து இருக்கின்றன. மற்ற அனைத்தும் இல்லை, ஏனென்றால் நீ மட்டுமே உள்பொருளாக இருக்கிறாய். நீ எல்லாமாக இருக்கிறாய். நன்றாக படி. §
>
> *சிவபெருமான் எல்லாம் செய்கிறார். நான் நீயாக இருக்கிறேன்.*§

*சிவமயம்*

*யோகேந்திரா!*

இன்று புதுவருடப்பிறப்பு. உங்கள் வீட்டில் பல சிறப்பான இனிப்புக்களை தயார் செய்வார்கள். நீ பட்டு வேட்டியை அணிந்து கொள்வாய். உங்கள் வீட்டில் சுண்ணாம்பு பூசுவார்கள். நீ குடும்பத்துடன் கோயிலுக்கு செவ்வாய். நீ தெய்வத்தை வழிபட்டு காணிக்கைகளை வழங்குவாய். ஆனால் நான் அமைதியின் நீரில் குளித்து, எனது மனதை சுத்தப்படுத்த புனிதமான விபூதியை பூசி, மன நிறைவு என்கிற மிகப்பெரிய செல்வத்திற்காக எப்போதும் பிரார்த்தனை செய்து, அச்சமின்மையின் கேடயத்தை சுமந்துக்கொள்வேன் மற்றும் இவை அனைத்தையும் வைத்துக்கொண்டு, நான் சுப்ரமணியனின் மார்பில் நடனமாடுவேன். §

*எப்போதும் மறவாத,*

*உனது* ..........§

“சிறப்பாக பராமரிக்கப்பட்ட இரகசியம்" என்ற தலைப்பில் யோக சுவாமி பின்வரும் கடிதத்தை ஜூலை 2, 1934 அன்று எழுதினார். §

*சிவமயம்*

நாம் எல்லோரும் ஒரே சாதி மற்றும் மதத்தை சார்ந்தவர்கள். நமக்குள் எந்த வித்தியாசமும் இல்லை. நாம் தெய்வீகத் தன்மை மீதே நிலைகொண்டு இருக்கும் தெய்வீக சக்திகளாக இருக்கிறோம். பல்வேறு விதமான மாற்றங்கள் அனைத்தும் பரம்பொருளின் அழகான பண்பை சித்தரிக்கின்றன. இவற்றை மிகப்பெரிய ஆன்மாக்கள் மாயை என்று அழைப்பார்கள். இந்த உண்மையை ஒரு நேர்மையான வாழ்க்கை வழங்கும் அற்புதமான வசீகரத்தின் மூலம் கிரகித்துக்கொண்டவர்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும் மற்றவர்களால் முடியாது. இதன் காரணமாக, எல்லா உயிர்களையும் தனது சொந்த உயிரைப் போல அன்பு செலுத்துவது முக்கியம் என்பதை முனிவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அதனால் எல்லாம் நேர்மையான வழக்கத்தை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளது. நாம் புலன்களை நுகரும் சடபொருட்கள் இல்லை என்பதை புரிந்துகொள்ள, இந்த நேர்மையின் பாதையில் நம்மை நிலைநிறுத்திக்கொள்வதன் மூலமாகவும், எல்லோரும் நாமே என்பதை தொடர்ந்து கற்பனை செய்வதன் மூலமாகவும், நாம் அருமையான அனுபவங்களை பெறுகிறோம். §

*என்றுமே மறவாதவர்.*§

“நீங்கள் ஒரு அரசனாக இருந்தால், மனநிறைவுடன் இருப்பீர்களா? நீங்கள் ஒரு ஆண்டியாக இருந்தால், மனநிறைவுடன் இருப்பீர்களா? வாழ்க்கையில் உங்கள் சமுதாய படிநிலை எதுவாக இருந்தாலும், நீங்கள் உங்களை

அறிந்துக்கொள்வதால் மட்டுமே உங்களுக்கு மனநிறைவு கிடைக்கும்,” என்று யோக சுவாமி கூறுவார். §

ஒரு நாள் காலையில் யோக சுவாமியை சந்திக்க, சுவாமிக்கு ஒத்த வயதுடன், அவருக்கு நீண்டநாட்களாக பரிச்சயமான ஒரு முதியவர் வந்தார். அவர் அரசாங்கம் நடத்திய முதியோர் இல்லத்தில் வசித்து, தனக்கு கிடைத்த ஒரு சிறிய ஓய்வூதியத்தில் வாழ்ந்து வந்தார். அவர் ஆசிரமத்தில் நுழைந்ததும், சுவாமியின் பாதத்தில் ஒரு வாழைப்பழங்களின் சீப்பை வைத்து, தரையில் விழுந்தது வணங்கினார். அவரை பார்த்ததும் சுவாமியின் முகத்தில் மகிழ்ச்சி தெளிவாக தெரிந்தது. இந்த நண்பர் அடிக்கடி வந்துக்கொண்டு இருந்தார், மற்றும் சுவாமிக்கும் அவரது நட்புறவு பிடித்து இருந்தது. §

“வணக்கம். நண்பரே,” என்று சுவாமி அவரை வரவழைத்தார். அதன் பிறகு அவர்கள் அந்த நண்பரின் அன்றாட வாழ்க்கையை பற்றி பேசினார்கள். அவரது உடல்நிலை எப்படி இருந்தது? அவருக்கு நல்ல உணவு கிடைத்ததா? சுவாமி இறுதியாக அவரிடம் பயணத்தை பற்றி விசாரித்தார். “நான் இரயிலில் வந்தேன், சுவாமி,”என்று அவர் பதில் அளித்தார். §

“ஆனால் உங்களைப் போன்ற வயதானவர்களுக்கு, கூட்ட நெரிசல் அதிகமாக இருக்கும் இந்த காலத்தில், இரயிலில் ஏறி இறங்குவது கடினமாக இருக்கும். இரயிலில் பிரயாணம் செய்வது உங்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும்,” என்று சுவாமி பதில் அளித்தார். “சுவாமி, நான் உங்களை காண வரும் போது, மனதில் ஒன்றை மட்டும் சிந்தித்துக்கொண்டு இருப்பேன். அந்த சிந்தனை என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்து விடுகிறது. நான் இங்கே வருவதில் எந்த சிரமும் இல்லை.” §

“நீங்கள் சொல்வது எனக்கு புரிகிறது, ஆனால் பயணம் செய்வது உங்களுக்கு அதிக கடினமாக இருப்பதுடன், இக்காலத்தில் அதற்கான செலவும் அதிகமாக இருக்கிறது. நீங்கள் என்னை நாடி வரவேண்டாம். என்னை சந்திப்பதற்கு மற்ற வழிகள் இருக்கின்றன,” என்று சுவாமி பதில் அளித்தார். சுவாமி அமைதி அடைந்ததும் பேசத்தொடங்கிய அவரது நண்பர், “சுவாமி, சில மாதங்களுக்கு ஒரு முறை உங்களை சந்திக்க வருவது எனக்கு ஒரு அருமையான அமைதியை தருகிறது. அதற்காக எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் சமாளிக்க தயாராக இருக்கிறேன்” என்று குறிப்பிட்டார். §

அந்த உரையாடல் முழுமையாக நிறைவு பெறவேண்டும் என்று சுவாமி மௌனம் சாதித்து, பிறகு மீண்டும் பேச ஆரம்பித்தார். “நண்பரே, வாழ்க்கையில் உங்களுக்கு அனுபவ அறிவும் அதிகம், நீங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் வாழ்ந்தும் இருக்கிறீர்கள்; நீங்கள் நிம்மதியாக இருக்கிறீர்களா? உங்கள் மனதில் வாழ்க்கையின் முக்கியமான அங்கமாக இடம் பிடித்திருப்பது எது?” §

“சுவாமி, இப்போதெல்லாம் நான் அந்த கேள்வியை பற்றி பலமுறை விசாரம் செய்து இருக்கிறேன். எனக்கு முக்கியமாக தோன்றியது அனைத்தும் என்னை விட்டு பிரிந்துவிட்டன. என் குடும்பம் என்னை விட்டு பிரிந்து விட்டது. எனது நண்பர்கள் என்னை விட்டு பிரிந்து விட்டார்கள். எனது வீடு என்னிடம் இல்லை

மற்றும் நான் பணி ஓய்வு பெற்று விட்டேன். நான் முதியவனாகிவிட்டேன் மற்றும் என் உடல் வலுவிழந்துவிட்டது. இருந்தாலும் அந்த உடலில் எனது பயணத்தை தொடர்ந்துகொண்டு இருக்கிறேன். எனது இதயத்தில் எப்போதும் அன்பு நிரம்பி இருக்கிறது. வாழ்க்கையில் அன்பு தான் மிகவும் முக்கியம் என்று எனக்கு தோன்றுகிறது.” இதனால் சுவாமியின் இதயம் கனிந்தது மற்றும் அவர் ஆத்ம திருப்தியை பெற்றார். “நீங்களும் நானும் ஒன்று தான். அதவும் எனக்கு முக்கியமாக தோன்றுகிறது,” என்று கூறினார். §

அவர் கிளம்பியவுடன், சுவாமி தனக்கு முன்பாக கூடியிருந்த அன்பர்களை பார்த்து, அந்த நண்பரை போல ஒரு எளிமையான இதயத்துடன் இருப்பதைத் தவிர வேறு எதுவும் முக்கியமில்லை என்று கூறினார். “எல்லாம் எளிமையாக இருக்கிறது, ஆனால் மனிதனின் குரங்கு போன்ற மனம் “நான்” மற்றும் “எனது" எந்த சிந்தனையின் மூலம், அந்த எளிமையை ஒரு சிக்காலாக்கிக் கொள்வதால், அவனுக்கு உண்மை தெரிவதில்லை. அதனால் தன்னை சுற்றி இருப்பவர்கள் மீது குற்றம் சுமத்துகிறான். இன்னும் சில நாட்களில் இவர் உயிர் பிரியவிருக்கிறது. அது எளிமையாகவும் இயல்பாகவும் இருக்கும். மேலும் அவரிடம் இருக்கும் வாழ்க்கை பற்றிய எளிமையான மற்றும் அருமையான புரிந்துணர்வை, தனது அடுத்த பிறவிகளுக்கு அவர் எடுத்து செல்லவிருக்கிறார். அவருக்கு எல்லாம் எளிமையாக அமையும்.” அந்த நண்பர் சில நாட்கள் கழிந்து மரணமடைந்தார். §

சுவாமியை சந்திக்க வந்த ஒவ்வொருவரும் ஒரு நேர்மையான மற்றும் எளிமையான இதயத்துடன் இருந்ததோடு, நல்ல வரவேற்பையும் பெற்றார்கள். அவரை குழந்தைகள் சந்திக்க வந்த போது, அவர் அந்த குழந்தைகளை தனது தனது மடியில் வைத்துக்கொண்டு சுற்றி இருந்தவர்களிடம், “இந்த குழந்தைக்கும் எனக்கும் ஒரே வயது. நாங்கள் ஒரே மொழியை பேசுகிறோம். நீங்கள் எல்லோரும் மறந்த விஷயங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்.”§

அவர் சிலசமயங்களில் குழந்தைகளை பாடச் சொல்வார். அவர்கள் சுவாமி இயற்றிய நற்சிந்தனை பாடல்களை பாடுவார்கள், மற்றும் அவரும் குழந்தையின் மழலை குரலில் சேர்ந்து கொள்வார். அவர் குழந்தைகளிடம் பொம்மை அல்லது வேறு ஏதாவது விளையாட்டு பொருட்கள் வேண்டுமா என்று கேட்பார். குழந்தை விரும்பத்துடன் எதையாவது கேட்டால், அதை உடனே வாங்கி தந்து விடுவார். §

அவர் குழந்தைகளிடம் கண்டிப்பாகவும் நடந்துகொண்டார். கீழ்படிந்து நடப்பதை மிகவும் முக்கியமாக கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவரிடம் கூறினார். “கீழ்படிந்து நட. உங்கள் தந்தை, தாய், சகோதரிகள், சகோதரர்கள், மற்றும் சொந்த மாமன், அத்தை சொல்லும் அறிவுரைகளை கேட்டு நடக்கவேண்டும். எப்போதும் கீழ்படிந்து நடப்பதில் முன் உதாரணமாக இரு. சிவபெருமான் எல்லாம் செய்கிறார்.” “இதை கேட்பதற்கு கடினமாக தோன்றலாம்,” என்று தொடங்கி, “ஆனால் இதுவே வாழ்வதற்கான சிறந்த வழி. நானும் எனக்கு வரும் உத்தரவுகளை ஏற்றுக்கொள்கிறேன். எனக்கு

உத்தரவுகள் உள்ளிருந்து வருகின்றன. சிறிது காலம் கழித்து, உங்களுக்கும் உட்புறத்தில் இருந்து ஆணைகள் வரும்.” §

அவரிடம் பெரும்பாலானவர்கள் சிறு வயதிலேயே வந்து, அவருக்கு அடிபணிந்து நடந்தார்கள். அவர் தனது சீடர்களிடம் நெருக்கமாக பழகினதால், அவர்கள் வீட்டில் குழந்தை பிறந்தால், தங்கள் சொந்த குடும்பத்திற்கு செய்தியை தெரிவிப்பதற்கு முன்பாக, சுவாமியிடம் விரைந்து வந்து தெரிவிப்பார்கள். அவர்கள் சுவாமிக்கு வழங்க விசேடமான காணிக்கைகளை முன்பே வாங்கி தயாராக வைத்து இருப்பார்கள். இதனால் குழந்தை பிறந்தவுடன் கடைக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லாமல், சுவாமி குழந்தைக்கு தனது ஆசிகளை வழங்க, பெற்றோர்கள் அவரிடம் நேரடியாக சென்று விடுவார்கள். §

அவர் பெரும்பாலும் தனது ஆசிரம கதவிற்கு முன்பாக நின்றுக்கொண்டு, புதிதாக பிறந்த குழந்தைகளின் தந்தைகளை கண் சிமிட்டலுடன் வரவேற்று, “உங்களுக்காக நான் ஒரு நல்ல செய்தி சொல்ல இருக்கிறேன். இன்று காலையில் திரிபுரசுந்தரி என்ற ஒரு அழகான பெண் குழந்தை பிறந்துள்ளது. இந்த தருணத்தை நாம் எல்லோரும் மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டும்,” என்று உற்சாகத்துடன கூறுவார். அந்த செய்தியை தான் அந்த குழந்தையின் தந்தை சொல்ல வந்து இருந்தாலும், அவர் அந்த குழந்தைக்கு அப்போது பெயர் வைத்திருக்கவில்லை! யாழ்ப்பாணத்தில் இருந்த பலர், இவ்வகையில் சுவாமியால் பெயர் சூட்டப்பட்டனர். §

**ஒரு நாள்...**

யோக சுவாமி எல்லோரையும் கவனித்துக்கொண்டு இருந்தார், மற்றும் அவரது ஆன்மீக பார்வையில் இருந்து எதையும் மறைக்க முடியாது. அவருக்கு தனது கிராமத்திலும், யாழ்ப்பாணம் முழுவதிலும் என்ன நடக்கிறது என்று மிகவும் நன்றாக தெரிந்து இருந்தது. அவரது ஆன்மீக பார்வைக்கு தகுதியான எந்த ஒரு மிகவும் சிறிய விஷயமும், அவரது கவனத்தில் இருந்து என்றும் தப்பியது இல்லை. இந்த காலகட்டத்தில், யோக சுவாமியுடன் தனது அனுபவத்தை பற்றி ஒரு சீடன் பகிர்கிறார். §

> யோக சுவாமி ஒரு அரசரை போல சுற்றித்திரிந்தார். அவரை தங்கள் குருவாக ஏற்றுக்கொண்ட ஒரு குடும்பத்தில் மருமகளாக அடியெடுத்து வைத்த போது, நான் அவரைப்பற்றி தெரிந்துகொண்டேன். நான் அவரை திருமணத்திற்கு பிறகு முதன்முறையாக செப்டம்பர் 4, 1951 அன்று தரிசித்தேன். சுவாமி எங்கள் வீட்டிற்கு அருகில் வசித்து வந்தாலும், நான் அவரை அதுவரை சந்தித்திருக்கவில்லை. §
>
> நாங்கள் இரண்டாம் உலகப்போருக்கு பிறகு, மலேஷியாவில் இருந்து திரும்பி இருந்தோம். 1920 முதல் சுவாமியை அறிந்திருந்த, எனது மாமனார் சர் வைத்தியலிங்கம் துறைசுவாமி மற்றும் எனது கணவருடன் சுவாமியின் ஆசிரமம் சென்ற போது, நான் அவரை முதல் முறையாக

பார்த்தேன். நாங்கள் ஒரு குடுவையில் தேநீரையும், ஒரு தட்டில் பழங்களையும் எடுத்து சென்றோம். தென்னை மர ஓலைகளால் கூரை வெய்த, சிறிய மண்  குடிசைக்கு நாங்கள் வந்து சேர்ந்த போது, மாலை 7 மணியை நெருங்கியிருக்கும். குடிசைக்குள் இருள் சூழ்ந்து இருந்ததால், நான் என் கணவரையும் மாமனாரையும் பின்தொடர்ந்து சென்றேன். சுவாமிக்கு முன்பாக எரிந்துக்கொண்டு இருந்த கற்பூரத்தை தவிர, அங்கே வேறெந்த வெளிச்சமும் இல்லை. அவரது திருவடியில் விழுந்து வணங்குவதற்கு எனது முறை வந்த போது, எனக்குள் ஊடுருவி ஆழமாக பார்ப்பதை போன்று, மிகவும் வலுவான கண்களை பார்த்துக்கொண்டு இருந்தேன். §

நாங்கள் அவருக்கு எதிர்புறத்தில் அமர்ந்தோம். அவர் சிறிது நேரம் என் மாமனாருடன் பேசிய பிறகு, என் பக்கம் தனது பார்வையை திருப்பி, “உங்களுக்கு சமைக்க தெரியுமா?” என்று கேட்டார். “தெரியும்" என்று நான் பதில் அளித்தேன். அவர் எனக்கு திருஞானசம்பந்தர் பாடல்கள் அடங்கிய ஒரு தேவார புத்தகத்தையும் எனக்கு வழங்கினார். அதன் பிறகு, நான் சுவாமிக்கு உணவு சமைக்க பெரும்பாலும் தினமும் ஆசிரமம் வந்து கொண்டிருந்தேன். அவர் தேநீரை தேங்காய் சிரட்டையில் குடித்தார். அந்த சிரட்டை வெப்பத்தை தக்க வைக்க உதவியது, மற்றும் அதை யாழ்ப்பாணத்தில் பெரும்பாலனோர் தங்கள் வீடுகளில் வைத்து இருந்தார்கள். §

என் கணவர் யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்த போது, சுவாமி மூன்று வருடங்களுக்கு மதியம் சாப்பிடவும் வந்தார். என் கணவர் அவருக்காக சில நூல்களை வாசித்தார். “சொர்ணா வாசித்தால், எனக்கு நன்றாக புரியும்,” என்று அவர் கூறுவார். அவர் என் கணவரை சொர்ணா என்று பெயரிட்டு இருந்தார், மற்றும் அவரது சகோதர சகோதரிகளும் அவ்வாறே அழைக்கவேண்டும் அவரை என்றும் கேட்டுக்கொண்டார். §

சுவாமியை யாழ்ப்பாண மக்கள் தங்களது அரசாக கருதினார்கள். அவர் யாழ்ப்பாணத்தின் நெல் வயல்கள் மற்றும் பனை மரத்தோப்புக்கள் வழியாக பவனி வந்து, நல்வழிப் பாதையில் அழைத்து வரவேண்டிய மக்களின் வீடுகளுக்கு சென்று வசைமாரி பொழிந்தார். என் மாமனாரின் வீட்டில், சுவாமி சொல்வதே வேதவாக்காக இருந்தது. குடும்பத்தில் எடுக்கப்பட்ட பெரும்பாலான தீர்மானங்கள் சுவாமி முன்பாக வைக்கப்பட்டு, அவரது இறுதியான முடிவு செயல்படுத்தப்பட்டது. §

எல்லோரும் கோயிலுக்கு செல்வதை சுவாமி ஊக்குவித்தார். நல்லூர் கோயிலில் வருடம் ஒரு முறை நடைபெற்ற தேர்த்திருவிழா தொடங்கி இருந்தது. ஆனால் என் மாமனார் தூங்கிக்கொண்டு இருந்தார், மற்றும் நாங்கள் அவர் உத்தரவு இல்லாமல் எப்போதும் கிளம்பியது இல்லை. காலை 7 மணி ஆகியிருந்தது, மற்றும் 8 மணிக்கு உற்சவ மூர்த்தி கோயிலை விட்டு வெளியே வந்து விடுவார். திடீரென்று எங்கள் வீட்டிற்கு முன்பாக தோன்றிய சுவாமி, “நீ வீட்டில் என்ன செய்துக்கொண்டு

இருக்கிறாய்? வெளியே வந்து கோயிலுக்கு புறப்படு! ஆறுமுகம் வருடத்திற்கு ஒரு முறை வந்து எல்லோருக்கும் தனது ஆசிகளை வழங்குகிறார். கிளம்பு!" என்று கத்த ஆரம்பித்துவிட்டார். அவர் மக்கள் மீது ஆட்சி செய்யும் நல்லூரான் போலவே இருந்தார். அவர் எல்லோரையும் பெயர் சொல்லி அழைத்தார். §

என் தாயார் நல்லூரானின் மிகப்பெரிய பக்தையாக இருந்தார். நாங்கள் நல்லூருக்கு அருகில் வாழ்ந்த போது, அவர் கோயில் மணியின் ஓசைக்கு ஏற்ப தனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டு இருந்தார். காலை 4 மணிக்கு எழுந்து, "என் நல்லூரான் எழுந்து விட்டான்," என்று கூறுவார். சுவாமி பெரும்பாலும் ஏதாவது திண்ணை நாற்காலிகளில் அமர்ந்து இருப்பார். சுவாமி என் தாயாரை பார்க்கும் போது, "என்னை தெரிகிறதா? நான் தான் உன் நல்லூரான்," என்று சொல்வது போல் இருந்தது. அவர் யாழ்ப்பாண மக்களுக்கு பக்கபலமாக, நல்லூரானாக இருந்தார். §

விதானையார் யோக சுவாமியின் குடிசைக்கு அருகே வாழ்ந்தார் மற்றும் அவர் சுவாமியின் வாழ்நாள் நண்பனாக இருந்தார். எப்போதும் உற்சாகமாக இருந்த அவர், யோக சுவாமியுடன் நகைச்சுவையாக பேசிக்கொண்டு இருப்பார். "நான் அப்போது செல்லப்பசுவாமியுடன் இருந்தேன். அவர் யோகநாதனை தள்ளிவிட்டு, துரத்தி அனுப்பியதை பார்த்து இருக்கிறேன். ஆனால் இப்போது அவரிடம் பேரும் புகழும் இருக்கிறது, மற்றும் நான் அவரை நாடி வரவேண்டி இருக்கிறது!" என்று கூறினார். யோக சுவாமிக்கு விதானையார் பிடித்து இருந்தது மற்றும் அவரது விசித்திரமான வழிகளை பொறுத்துக்கொண்டார். §

அவர் எப்போதாவது தனக்கு வழங்கப்பட்ட காணிக்கைகளை வாங்க மறுப்பார், மற்றும் சிலசமயங்களில் அந்த உணவு பதார்த்தங்களை தோட்டத்தில் சென்று புதைக்குமாறு கேட்டுக்கொள்வார். "இந்த உணவை காகங்களும் சாப்பிடக்கூடாது. இது காகங்கள் சாப்பிடுவதற்கும் உகந்ததாக இல்லை!" என்று கடிந்து கொள்வார். ஒரு நாள் அன்பர் ஒருவர் ஒரு தட்டு நிறைய காணிக்கைகளுடன் ஆசிரமத்திற்கு வந்தார். அந்த தட்டின் மத்தியில் ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. அந்த காலத்தில் ஐநூறு ரூபாய்க்கு அதிக மதிப்பு இருந்தது. அந்த பணம் சுவாமிக்கு பிடிக்காத ஒரு வியாபாரத்தில் இருந்து வந்து இருந்தது. அதனால் அன்பர் அந்த காணிக்கையை வழங்கிக்கொண்டு இருந்த போது, சுற்றி இருந்த மக்கள் எல்லோரும் சுவாமி என்ன செய்யவிருக்கிறார் என்று தெரிந்துகொள்ளும் ஆவலுடன் அமர்ந்து இருந்தனர். §

சுவாமி வழக்கமாக, அத்தகைய காணிக்கைகளை ஏற்றுக்கொள்ளமாட்டார். தனது நிராகரிப்பை வலுப்படுத்த, அந்த தட்டு மற்றும் அதில் இருக்கும் பொருட்களை வலுவாக வீசி எரியவும் செய்வார். ஆனால் இந்த முறை எல்லோருக்கும் ஆச்சரியப்படும் வண்ணம், அவர் அந்த காணிக்கையை வந்திருந்தவர்களுக்கு பகிர்ந்து அளிக்குமாறு ஒரு அன்பரிடம் கேட்டுக்கொண்டார். "அதில் ஒரு பகுதி திருமண ஏற்பாடுகள்

செய்வதற்காக, தனது மகளுக்கு திருமணம் நிச்சயித்திருக்கும் ஒரு ஏழை குடும்பத்திற்கு வழங்க வேண்டும். அதில் ஒரு பகுதி தேநீர் கடையை நடத்தி வரும் ஒரு நேர்மையான அன்பருக்கு வழங்கவேண்டும். அவர் அதை பயன்படுத்தி தனது கடையில் மோர் வியாபாரத்தை தொடங்கி, தனது வருமானத்தை அதிகரித்து கொள்வார்."(அவர் அவ்வாறே செய்து, தனது வியாபாரத்தை கணிசமாக அபிவிருத்தி செய்துக்கொண்டார்). மேலும் சுவாமி, "அதில் நூறு ரூபாயை தனியாக வைத்திருந்து, விதானையாரை மருத்துவரிடம் அழைத்துச் செல்ல பயன்படுத்திக்கொள்ளுங்கள். அவருக்கு உடல்நலம் சரியில்லை என்று கேள்விப்பட்டேன். அவர் பணத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பார், அதனால் பணத்தை பிறகு திருப்பித்தந்தால் போதும் என்று அவரிடம் சொல்லுங்கள். அப்படி சொன்னால் அவர் ஏற்றுக்கொள்வார்." §

அவர் வீட்டிற்குள் நுழையும் போது, விதானையார் தன் வீட்டு வாசலில் அமர்ந்து இருந்தார். அவர் உடலுறுதியுடன் அமர்ந்து இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்த அன்பர், அவர் உடல்நலம் பற்றி விசாரித்தார். விதானையார் தான் நன்றாக இருப்பதாக பதில் அளித்தார். அதனால் அந்த அன்பர் சுவாமி வழங்கச் சொல்லிய பணத்தை வழங்கினார். சுவாமி சொன்னதை போலவே, முதலில் மறுத்த விதானையார், அதை பின்னார் திருப்பித் தரலாம் என்ற நிபந்தனையின் பேரில் ஏற்றுக்கொண்டார். §

அடுத்ததாக என்ன செய்வது என்று தெரியாமல் தவித்த அன்பர் ஆசிரமத்திற்கு திரும்ப முடிவு செய்து கிளம்பிய போது, விதானையாரின் மகள் அவரிடம் தனியாக பேசவேண்டும் என்று சைகை காண்பித்து, தன் தந்தை தீவிர காய்ச்சலால் அவதிப்படுகிறார் என்றும், ஆனால் அதற்கு தகுந்த நடவடிக்கையை எடுக்க அனுமதிக்காமல் மிகவும் பிடிவாதமாக இருக்கிறார் என்றும் கூறினார். அந்த அன்பர் இதை புரிந்துக்கொண்டு, அவரை மருத்துவரிடம் அழைத்து செல்லுமாறு சுவாமி தனக்கு உத்தரவிட்டுள்ளதாக விதானையாரிடம் குறிப்பிட்டார். "நீங்கள் வரவில்லை என்றால், சுவாமி என்னை கடிந்து கொள்வார். அவரது கண்டிப்பு பற்றி உங்களுக்கு தெரியும்," என்று கெஞ்சினார். "தயவு செய்து என்னுடன் வாருங்கள். சுவாமியை திருப்தி படுத்துவதற்காக மட்டுமாவது நீங்கள் என்னுடன் வரவேண்டும்" என்று மேலும் மன்றாடினார். §

விதானையார் சம்மதித்தார், மற்றும் யோக சுவாமியை குறிப்பிட்ட மருத்துவரை சந்திக்க, அவர்கள் கிளம்பினார்கள். விதானையாரை பரிசோதித்த வைத்தியர், நோயாளி ஒரு வாகனத்தில் வந்து இருந்தாலும், "இவருக்கு இரட்டை நுரையீரல் காய்ச்சல் தாக்கியுள்ளது, இவரை இந்த நிலையில் இங்கே அழைத்து வந்ததே தவறு" என்று வசைமாரி பொழிந்தார். ஆனால் அன்பர் நடந்தது அனைத்தையும் விவரித்தவுடன், மருத்துவர் புரிந்துகொண்டார். அவர் சில மருந்துகளை வழங்கிய பிறகு, விதானையார் வீட்டிற்கு சென்று ஓய்வு எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தி, அடுத்த நாள் காலையில் தான் வந்து அவரை பரிசோதிப்பதாகவும் குறிப்பிட்டார். ஒரு

விலையுர்ந்த புதிய நுண்ணுயிர்க் கொல்லியாக இருந்த அந்த மருந்தின் விலை, மருத்துவரை சந்திப்பதற்காக சுவாமி ஒதுக்கிய தொகைக்கு நிகராக இருந்தது. §

சுவாமி திருமணங்களை நிச்சயம் செய்தார், குழந்தைகளுக்கு பெயரிட்டார், அன்பர்கள் புதுமனை வாங்குவதற்கு உதவி செய்தார், அவர்களுக்கு வேலைகளை வாங்கித் தந்தார் மற்றும் பொதுவாக எல்லோரையும் கவனித்து வந்தார். அவர் யாழ்ப்பாணம் முழுவதிலும் தனது கவனத்தை செலுத்தி, மக்களுக்கு தேவையானது மற்றும் தகுதியானது சென்று சேர்வதை உறுதி செய்துக்கொண்டார். அவர் தொடர்ந்து வழங்கிகொண்டு இருந்தார். அவர், “நாம் கொடுத்து வாழ்ந்த பரம்பரையை சேர்ந்தவர்கள். நாம் எதற்கும் தகுதி இல்லாமல், சுயநலமாக மற்றும் பொறாமையுடன் இருப்பவர்களுக்கும் நன்கொடைகளை வழங்குகிறோம்.” §

பல வருடங்களாக யோக சுவாமியை தரிசித்து வந்ததால், தான் பெற்ற பலன்களை பற்றி அரியாலை பள்ளி ஆசிரியர் பஞ்சாட்சரம் வழங்கிய தகவலை இந்துமதி அம்மா பதிவு செய்துள்ளார். §

> திருமணமாகி ஒரு வருடமாகியும் எங்களுக்கு குழந்தை பிறக்கவில்லை. நிதி நெருக்கடி இருந்ததால், நாங்கள் அதை நினைத்து வருந்தவில்லை. இரண்டு வருடங்கள் கழிந்தும், எங்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லை. இந்த முறை நாங்கள் குருதேவாவை தரிசிக்க சென்ற போது, “இன்னும் குழந்தை பிறக்கவில்லை என்பது தானே உங்களுக்கு இருக்கும் கவலை?” என்று அவர் கேட்டார். “ஆம், குருவே,” என்று நாங்கள் பதில் அளித்தோம். அதன் பிறகு அவர் ஒரு கொத்தில் இருந்து ஒரு பெரிய திராட்சையை பறித்து, என் மனைவியிடம் கொடுத்து, “இதை நீ மட்டுமே சாப்பிடவேண்டும். வேறு யாரிடமும் கொடுக்ககூடாது,” என்று கூறினார். என் மனைவியும் சுவாமி அறிவுறுத்திய படியே செய்தாள். அவள் கருவுற்று இருக்கிறாள் என்பது ஒரு மாதம் கழிந்து எங்களுக்கு தெரியவந்தது. எங்களுக்கு இரண்டு வருடங்களாக குழந்தை இல்லை என்பதால், எங்களுக்கு மலட்டுத்தன்மை இருப்பதாக கிராமத்தில் ஒரு வதந்தி இருந்தது. இதை அறிந்து இருந்த குருதேவா, எங்களுக்கு ஒரு பரிகாரத்தை வழங்கினார்.§
>
> நேரம் கிடைக்கும் போதெல்லாம், நாங்கள் குருதேவாவை தரிசிக்க சென்றோம். அந்த காலத்தில், அவர் எங்கள் வேதனைகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பதில் அளித்தார். மற்ற விஷயங்களை பற்றி பேசிய போது, எங்களுக்கு மறைமுக பதில்கள் வந்தன. ஆனால் எங்களது பிரார்த்தனைகளுக்கு எப்போதும் ஒரு பதில் இருந்தது. குருதேவாவின் தரிசனம் எங்களது பாதையை மெதுவாக திசை மாற்றியது. பிறப்பு மற்றும் இறப்பின் பாதளத்தை கடப்பதற்கு மற்றும் மனதின் மீது தேவையான கட்டுப்பாட்டை நாடி அமைதியை பெறும் ஆசையுடன், நாங்கள் அவரிடம் செல்ல ஆரம்பித்தோம். §

1963 ஆம் ஆண்டில், எங்களால் குருதேவாவை இரண்டு முறை மட்டுமே சந்திக்க முடிந்தது. நாங்கள் முதல் முறையாக ஏப்ரல் மாதத்தில் சென்றோம். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் இருந்தன மற்றும் மூன்றாவது குழந்தையை எதிர்பார்த்து இருந்தோம். நாங்கள் அவரது அனுமதியுடன் ஆசிரமத்தில் நுழைந்து, தாமரை மலர் போன்ற அவரது பாதங்களில் விழுந்து வணங்கினோம். அவர் எங்களை வரவேற்று உட்கார வைத்து, இரண்டு குழந்தைகளின் பெயரை கேட்டார். அதன் பிறகு அவர், “மூன்றாவது குழந்தை எங்கே?” என்று கேட்டார். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் தான் என்று பதில் அளித்தோம். சுவாமி முகத்தில் புன்னகையுடன், “இன்னொரு சிறுவனும் இங்கே தான் இருக்கிறான்,” என்று கூறினார். ஆமாம், எங்களுக்கு மூன்றாவதாக ஒரு ஆண் குழந்தை பிறந்தான். §

மருத்துவர் கே. நித்தியானந்தன் தனது அனுபவத்தை கூறுகிறார்:§

சுவாமியின் சீடர்களாக இருந்த தம்பதிக்கு, பத்து வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்தது. ஒரு சிவராத்திரி அன்று அவர்கள் சுவாமியின் முன்பாக அமர்ந்து உபவாசம் இருந்தார்கள். சுவாமி தாயின் முகத்தை பார்த்து ஒரு சிறுவனின் பெயரை குறிப்பிட்டார். ஒரு வருடத்திற்குள், அந்த பெண்மணிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது மற்றும் அவர்கள் அந்த குழந்தைக்கு சுவாமி குறிப்பிட்ட பெயரை சூட்டினார்கள். §

ஒரு முறை ஒரு நபர் பண மோசடி செய்த குற்றத்தில் சிக்கி இருந்தார். அவர் மீது நடந்த விசாரணையில், அவர் செய்யாத குற்றங்களும் சுமத்தப்பட்டு இருந்தன. அவர் தன்னிடம் இருந்த பணத்தை எல்லாம், சட்ட நடவடிக்கைக்கு முன்னேற்பாடாக வழங்கவேண்டிய கட்டணங்களுக்கு செலுத்தி இருந்ததால், அடுத்த நாள் நடக்கவிருந்த தனது வழக்கிற்கு வழக்கறிஞர் வாதாட போதுமான பணம் இல்லாமல் இருந்தார். இலங்கையில், வழக்கை வாதாடுவதற்கு முன்பாக, வழக்கறிஞர்களுக்கு கட்டணங்களை செலுத்தி விடவேண்டும். இல்லையென்றால், அவர்களால் தனது கட்சிக்காரர் சார்பாக நீதிமன்றத்திற்குள் நுழைய முடியாது. §

அவர் மனைவி விசாரணை முழுவதும் அவருக்கு விசுவாசமாக இருந்து கையில் பணம் ஏதும் இல்லாமல் குடும்பத்தை நிர்வகித்து வந்தாள். ஆனால், அவளால் சமாளிக்க முடியாத நிலை வந்த போது, சுவாமியை தரிசித்து வரலாம் என்று அவள் பரிந்துரைத்தாள். அவர்கள் கிளம்பி, சுவாமியின் அறைக்குள் நுழைந்ததும், சுவாமி அவர் மீது அக்கறை செலுத்தவில்லை. அந்தி சாய்ந்து இருந்தது மற்றும் அந்த தம்பதிக்கு சுவாமியிடம் இருந்து அழைப்பு ஏதும் வரவில்லை. அவர்களுக்கு கவலை அதிகரித்தது, ஆனாலும் அவர்கள் அமைதியாக இருந்தார்கள். §

இறுதியாக, சுவாமி அன்பர்களை கிளம்புமாறு உத்தரவு வழங்க ஆரம்பித்தார். அவர் ஒவ்வொரு அன்பராக தன்னிடம் அழைத்தார் அல்லது

நீங்கள் கிளம்பலாம் என்று நேரடியாக கூறி அனுப்பி வைத்தார். அந்த அறையில் இறுதியாக அந்த தம்பதிகள் மட்டுமே அமர்ந்து இருந்தார்கள். சுவாமி நடந்தது அனைத்தையும் அறிந்து இருந்தார். ஒரு தீவிர பக்தையாக இருந்த மனைவி, இந்து பாரம்பரியத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக, தனது கணவனுக்கு இறுதி வரை துணை நின்றாள். அவளை முன்னுக்கு வருமாறு அழைத்தார் சுவாமி, ஒரு வாழை இலையில் மடித்து வைத்திருந்த ரூபாய் நோட்டுக்களை அவளிடம் வழங்கினார். அது வழக்கறிஞர்கள் கட்டணத்திற்கு போதுமானதாக இருந்தது. விசாரணை நடந்தது, மற்றும் அந்த அன்பருக்கு வழக்கில் வெற்றியும் கிடைத்தது. இந்த சம்பவங்கள் மற்றும் அவர் மனைவியின் நற்பண்புகள் ஏற்படுத்திய தாக்கம் காரணமாக, அவர் தன்னிடம் இருந்த பல தவறான வழிகளை சரி செய்துக்கொண்டார். §

வழக்கமாக சுவாமி வழங்கிய ஆறுதல் நுணுக்கமாகவும் மறைமுகமாகவும் இருந்தது. ஒரு விபத்திற்கு தான் செய்த தவறு தான் காரணம் என்று பழி சுமத்தப்பட்டதால், வாடிய தனது மனதை சுவாமி எப்படி அமைதிப்படுத்தினார் என்பதை பற்றி ஸ்ரீ எம். பிரசாத் கூறுகிறார். இந்த கதை *சிவ தொண்டன்* பத்திரிகையில் வந்துள்ளது. §

> சுமார் 1952 வாக்கில், நான் அரசு அலுவலராக யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்த போது, காயலின் மறுபுறத்தில் ஒரு மிகப்பெரிய சமயத்திருவிழா நடந்துகொண்டு இருந்தது. மக்கள் அந்த திருவிழாவில் கலந்து கொள்வதற்காக, ஒரு விசைப்படகில் கூட்டம் கூட்டமாக சென்றுக்கொண்டு இருந்தனர். திருவிழாவில் இருந்து திரும்பும் போது, அந்த படகின் கொள்ளளவை காட்டிலும் அதிகமான மக்கள் ஏறிக்கொண்டார்கள். படகோட்டியால் மக்களை கட்டுப்படுத்த முடியவில்லை. துரதிஷ்டவசமாக படகு கரையில் இருந்து சிறிது தூரம் சென்று இருக்கையில் மூழ்கியது, மற்றும் இதன் காரணமாக பலர் உயிர் இழந்தனர். காயமடைந்தவர்களுக்கு என்னால் இயன்ற உதவியையும், உயிர் இழந்தவர்கள் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்தேன். §
>
> எனது கவனக்குறைவுக் காரணமாக இந்த விபத்து நடந்தது என்றும் பலர் என் மீது குற்றம் சுமத்தினார்கள். என் மனம் பெரும் வேதனையை அனுபவித்தது. யோக சுவாமியிடம் சென்று, அவரை வணங்கி ஆசிகளை பெற்று வருமாறு எனது நண்பன் அறிவுறுத்தினான். நான் விபத்து நடந்து ஒரு வாரத்திற்கு பிறகு, அவன் சொன்ன அறிவுரையை கடைப்பிடித்தேன். நான் எதற்காக வந்தேன் என்பதை சுவாமி அறிந்து இருக்கவேண்டும், ஆனால் இருபது நிமிடங்கள் கடந்தும் சுவாமி எதையும் பேசாததால் நான் கிளம்ப தயாரானேன். அப்போது சுவாமி என்னிடம், “எந்த கவலையும் வேண்டாம். நான் உனது சாட்சியாக இருக்கிறேன்,” என்றார். அவர் கூறிய வார்த்தைகள் எனக்கு அளித்த ஆறுதல் மற்றும் மன அமைதியை என்னால் விவரிக்க முடியவில்லை. §

யோக சுவாமியின் அற்புத வழிகளை தனது வாழ்நாளில் பலமுறை சந்தித்து இருந்த ஐக்கிய இராச்சியத்தின் ஜனநாயகம் என்பவர், தனது அனுபவத்தை இங்கே பகிர்கிறார்: §

தெளிவு குருவின் திருமேனி காண்டல்

தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்

தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே”

என்று திருமூலர் அருளிய மந்திரத்திற்கு ஏற்ப, நான் மற்றும் எனது சந்ததியர்கள் அறிந்திருந்த ஒரு ஆன்மீக வழிகாட்டியாக குரு யோகர்சுவாமி நான்கு தலைமுறைகளுக்கு நிலைத்து இருந்தார். அவரது கண்காணிப்பில் நாங்கள் இருந்ததை எங்களது பாக்கியமாக கருதினோம் மற்றும் அந்த உணர்வை எங்களால் வார்த்தைகளை கொண்டு விவரிக்க முடியவில்லை. §

சுவாமி சைவ சமயம் சார்ந்த தனது சிவ தொண்டன் பத்திரிகையை வெளியிடும் போது, என் தாயிடம் ஆய்வுரைகள் மற்றும் கட்டுரைகளை எழுதுமாறு கேட்டுக்கொண்டார். இந்த கட்டுரைகளுக்கு தலைப்புக்களை சுவாமி தேர்வு செய்து இருந்தாலும், அவை எழுத்தாளனுக்கு நுணுக்கமாக பொருந்தி இருந்தது. அதில் ஒரு கட்டுரை, “நதி கரைபுரண்டு ஓடத்தொடங்கினால், யார் அழுதாலும் நிற்காது,” என்ற தலைப்பில் இருந்தது. என் தாயார் ஒரு கட்டுரையை எழுதி, சுவாமியிடம் சமர்ப்பித்தார். அவர் அதை தனக்கு வாசித்துக் காட்டுமாறு கேட்டுக்கொள்ள, எனது தாயும் உடனடியாக வாசித்துக் காண்பித்தார். ஒரு சில நாட்களில், எனது தாயார் கருவுற்றார். இந்த செய்தியை கேட்டு குடும்பமே மகிழ்ச்சியில் மூழ்கி, சுமார் பன்னிரண்டு வருடங்கள் கழித்து வீட்டில் ஒரு குழந்தையின் அழுகுரலைக் கேட்க காத்து இருந்தது.§

குழந்தை பிறந்ததும் எங்கள் குல வழக்கப்படி, சுவாமிகளின் ஆசிகளை பெற அந்த குழந்தையை அவரது ஆசிரமத்திற்கு அழைத்து சென்றோம். சுவாமி தனது ஆசிரம வளாகத்தில் ஒரு பேயை போல சுற்றிக்கொண்டு, எல்லோரையும் அதிர்ச்சியால் நடுங்க செய்தார். “சுவாமி எங்கள் வீட்டில் ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளது. நாங்கள் உங்களுக்கு இனிப்புகளை கொண்டு வந்துள்ளோம்,” என்று நாங்கள் அவரிடம் கேட்டுக்கொண்டோம். சுவாமி உடனே, “நான் அதை தொட மாட்டேன். வேண்டுமானால் அதை உன் தாயிடம் கொடு,” என்று சுவாமி உடனே மறுத்துவிட்டார். நாங்கள் அதிர்ச்சி, வேதனை மற்றும் ஏமாற்றம் கலந்த அச்சத்துடன் வீடு திரும்பினோம். மூன்று வாரத்தில் அந்த குழந்தை வயிற்றுப்போக்கால் இறந்து விட்டது. எதிர்காலத்தில் நடக்கவிருந்ததை

பற்றி எச்சரிக்கவே, என் தாயிடம் அந்த கட்டுரையை எழுத சுவாமி கேட்டுக்கொண்டார் என்பதை நாங்கள் பின்னர் புரிந்துகொண்டோம்.§

சிலமயங்களில் சுவாமி அன்பர்களுக்கு உதவி செய்ய மறுத்து, அவர்களுக்கு தரிசனம் தராமல் திருப்பி அனுப்பியிருக்கிறார். இனி கட்டுறுதியான உடலுடன் காவல்துறை அலுவலராக இருந்த இரயில் நிலையத் தலைவர் ராசையா, சுவாமியின் தீவிர சீடனாக மாறிய கதையை பார்க்கலாம். தலைநகரில் வேலை செய்த யோக சுவாமியின் சீடர்கள் வழக்கமாக நீண்ட பயணம் மேற்கொள்வதை போல, தான் கொழும்புவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இரயிலில் பயணம் செய்த நாளை பற்றி ராசையா குறிப்பிட்டார். அவர் தனது பயணம் முழுவதும் தோள்பட்டை பையில் பழங்களை சுமந்து கொண்டு, கொழும்புத்துறையில் இறங்கி சுவாமியின் ஆசிரமத்தை நோக்கி முன்னேறினார். அவர் ஆசிரமத்தில் நுழைந்ததும், தனது குருவிற்கு வணக்கம் செலுத்தி, அவரது காலடியில் பழங்களை வைத்து வணங்கினார். சுவாமி அவரிடம் கீழே உட்காரும் படி கேட்டுக்கொண்டார். அதன் பிறகு சிறிது நேரத்திற்கு எதுவும் நடைபெறவில்லை, ஆனால் சுவாமி திடீரென்று, “நீங்கள் போகலாம்! கிளம்புங்கள்!”என்று உத்தரவிட்டார். §

இந்த உத்தரவை கேட்ட ராசையா, தன்னை சுவாமி எதற்காக திருப்பி அனுப்புகிறார் என்பது தெரியாமல் அதிர்ச்சி அடைந்து  செயலற்று நின்றார். தனது உத்தரவிற்கு மதிப்பு அளிக்காததால், இலங்கை காவல்துறையினர் தீவிர இராணுவ பயிற்சி மேற்கொண்டு இருப்பார்கள் என்பதை அறிந்திருந்த யோக சுவாமி ஒரு தேகப்பயிற்சி அளிக்கும் ஒரு சார்ஜன்ட் போல, “ஸ்டான்ட் அப் (எழுந்து நில்)!” என்று கூச்சலிட்டார். ராசையா எழுந்து நின்றார். “அபவுட் பேஸ் (திரும்பி நில்)!” என்றதும் ராசையா நன்றாக பயிற்சி பெற்ற நுணுக்கத்துடன் திரும்பினார். “லெஃப்ட், ரைட், லெஃப்ட், ரைட்" என்று யோக சுவாமி குரலில் ஏற்ற இரக்கத்துடன் ஆணையிட, ராசையா கதவிற்கு வெளியே சென்று ஆசிரம வளாகத்திற்குள் நுழைந்தார். “லெஃப்ட் ஃபேஸ் (இடப்பக்கம் திரும்பு),” என்று ஆணை வந்தது, “லெஃப்ட், ரைட், லெஃப்ட்,” என்றதும் அவர் வாசல் கதவை அடைந்தார். “ நில்! கதவை திற! லெஃப்ட், ரைட். நில்! கதவை மூடு! ரைட் பேஸ் (வலப்பக்கம் திரும்பு)! லெஃப்ட், ரைட்...” மற்றும் யோக சுவாமியின் குரலின் ஒலி மங்கியதும், ராசையா தான் தெருவில் முன்னேறி செல்வதை கண்டார். குரு அவரை திருப்பி அனுப்பிய முறை, அவரது வாழ்நாள் முழுவதும் ஒரு புதிராகவே இருந்தது. இந்த கதையை கேட்ட மற்றவர்கள், இதன் சம்பவத்தின் மூலம், காவல்துறையினருக்கு அவ்வளவாக பழக்கம் இல்லாத பணிவை, யோக சுவாமி தனது சீடனுக்கு கற்றுத்தந்ததாக கருதினார்கள். §

பல வருடங்களாக எஸ். சண்முகசுந்தரம் யோக சுவாமிக்கு நெருக்கமாக இருந்தார், மற்றும் அவர் ஒரு கண்காணிப்பாளராக ஆசிரமத்திற்கு பலர் வந்து போவதை கவனித்து இருந்தார். பல வருடங்களுக்கு பிறகு, கலிபோர்நியாவில் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமியின் அமெரிக்க சீடர்களுடன், அந்த அனுபவங்களை அவர் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். §

சிவயோக சுவாமி பணக்காரர் மற்றும் ஏழை என்ற பாகுபாடு பார்த்தது இல்லை. தனது சீடர்கள் எந்த சாதி அல்லது மதத்தை சார்ந்தவர்கள் என்பதை அவர்கள் பொருட்படுத்தியது இல்லை. அவரை எப்போது சந்திக்க சென்றாலும், அவர் ஆணாக இருக்கட்டும் அல்லது பெண்ணாக இருக்கட்டும், சுவாமியிடம் தங்களுக்கு வரவேற்பு கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்பதை யாராலும் யூகிக்க முடியாமல், ஒரு மர்மமாகவே இருந்தது. சுவாமியின் மனநிலையை பொறுத்து, ஒருவரை அன்புடன் வரவேற்பதும் அல்லது “என்னால் இன்று உங்களை பார்க்க முடியாது,” என்று சொல்லி அவரை துரத்தி அனுப்புவதும் ஒரு தினசரி நிகழ்வாக இருந்தது. அந்த மனநிலை ஒரு நபர் எந்த நோக்கத்துடன் சுவாமியை தரிசிக்க வந்தார் என்பதை பொறுத்து மாறியது. பூமியில் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தவர்கள் மற்றும் செல்வந்தர்கள் மற்றும் அதே சமயத்தில மிகவும் அடிமட்டத்தில் இருந்தவர்கள் மற்றும் ஏழை எளிய மக்களும் சுவாமியின் ஆசிரமத்தில் தென்பட்டனர். சிலசமயங்களில் இரண்டு சாராரும், அவர்கள் வெகு தொலைவில் இருந்து வந்து இருந்தாலும், துரத்தி அனுப்பப்பட்டனர். ஆனால் சிலசமயங்களில் அவருக்கு நல்ல வரவேற்பும் கிடைத்தது. §


சுமார் 200 மைல் தூரத்தில் ஒரு செழிப்பான மலைப்பிரதேசத்தில், ஒரு உயர்ந்த சமூக அந்தஸ்துடன் வாழ்ந்த நபர், சுவாமியை ஒரு நாள் சந்திக்க வந்தார். அவர் கற்றறிந்தவராகவும் செல்வந்தராகவும் இருந்தார். அவர் தன் செல்வம் மற்றும் அந்தஸ்து காரணமாக, மற்றவர்களுடன் இயல்பாக பழகவில்லை. ஆனால் அவர் யோக சுவாமியின் சீடராக இருந்தார் மற்றும் அவர் அதற்கு முன்பு பலமுறை சுவாமியை சந்தித்து இருந்தார், மற்றும் சுவாமியும் அவரது வீட்டிற்கு சென்று ஒன்று அல்லது இரண்டு நாட்கள் தங்கி இருந்தார். §

அன்றைய தினம் அவரும் அவரது மனைவியும், சுவாமிக்கு வழங்க ஒரு வெள்ளி தட்டு நிறைய பலவிதமான பழங்கள் மற்றும் இனிப்புக்களுடன், யாழ்ப்பாணம் வரை வாகனத்தை ஓட்டிக்கொண்டு வந்தனர். சுவாமி அவர்களை வரவேற்பதற்கு முன்பாக, அவர்கள் குடிசைக்குள் நுழைந்து, சுவாமிக்கு முன்பாக குனிந்து அவரது காலடியில் அந்த தட்டை வைத்தார்கள். அப்போது அந்த தம்பதியர் காதில் இடி இடிப்பது போல சத்தம் கேட்டது. §

ஆமாம், சுவாமி பேசியது தான் அப்படி கேட்டது. அவர் கண்களில் கோபம் வெளிப்படையாக தெரிய, சுவாமி உரத்த குரலில், “இதை எடுத்து செல்லுங்கள். இவை எதுவும் எங்களுக்கு வேண்டாம். நீங்கள் அவற்றை எடுத்து செல்லலாம். உங்களை சந்திப்பதற்கு என்னிடம் இப்போது நேரம் இல்லை. எதற்காக காத்து இருக்கிறீர்கள்? அதை எடுத்து செல்லுங்கள் என்று என்னால் ஒரு முறை தான் சொல்ல முடியும். புரிந்துகொள்ளுங்கள்,” என்று கத்த ஆரம்பித்தார். §

பாவம் அவர்கள். அவர்கள் அத்தகைய நடவடிக்கையை எதிர்பார்க்கவில்லை. அவர்கள் அச்சத்தில் நடுங்கிக்கொண்டு பேசமுடியாமல் இருந்தார்கள். அவர்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த வெள்ளி தட்டை எடுத்துக்கொண்டு, அதிக அவமானத்துடன் அமைதியாக அந்த குடிசையை விட்டு கிளம்பினார்கள். குடிசையில் இருந்த சீடர்கள் அவர்களை நினைத்து பரிதாபப்பட்டார்கள். §

அந்த தம்பதி கிளம்பியதும், சுவாமி சத்தகமாகவும் உற்சாகமாகவும் சிரித்து மகிழ்ந்தார். சிரித்து முடித்ததும், சுவாமி அன்பர்களிடம், "நான் அவர்கள் மகளுக்கு திருமணம் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் இங்கே வந்து இருந்தார்கள். அவர்கள் ஒரு இளைஞனை மனதில் முடிவு செய்து இருக்கிறார்கள், ஆனால் அவன் திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை. அதனால் நான் தலையிட்டு அவன் சம்மதத்தை பெறவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். என்ன ஒரு வேடிக்கை. நான் ஒன்றும் திருமண தர்கர் இல்லை! எனக்கு லஞ்சம் கொடுக்க எதையெல்லாம் கொண்டு வந்தார்கள் என்று பாருங்கள். இவர்கள் படித்த முட்டாள்கள்," என்று கூறினார். §




*யோக சுவாமி இந்தியாவிற்கு யாத்திரை மேற்கொண்ட போது, சிவபெருமானின் அருணாச்சல மலையில் ஒரு பிரபலமான முனிவராக இருந்த ரமண மகரிஷியை சந்தித்தார். அந்த சந்திப்பு தனது எளிமையால் எல்லோர் கவனைத்தையும் கவர்ந்தது. அறிந்துக்கொள்ள முடியாததை அறிந்து இருந்த இருவரும் ஒரு முழுமையான ஆன்மீக கூட்டுறவில் ஒரு வார்த்தையும் பேசாமல் அமர்ந்து இருந்தனர்.*

……………………§

சிலர் அந்த முனிவரிடம் ஒன்று அல்லது இரண்டு முறை மட்டுமே சென்றிருந்தனர். அந்த குறுகிய சந்திப்புக்களின் போது, அவர்களின் வாழ்நாளுக்கு தேவையானதை சுவாமி வழங்கி இருந்ததால், அவர்களுக்கு அதுவே போதுமானதாக இருந்தது. ஒரு நாள் யோக சுவாமியை பார்க்க சென்றுகொண்டிருந்த ஒரு இளைஞன், நல்லூர் கோயிலுக்கு அருகில் வந்து நின்றான். அவன் முருகப்பெருமானின் சந்நிதியில் வழிபாடு நடத்திய பிறகு, சுவாமியின் ஆசிரமத்திற்கு எப்படி செல்வது என்று யோசித்துக்கொண்டு இருக்கும் போது, ஒரு வாகனத்தில் சென்றுகொண்டு இருந்த சுவாமி, அவனுக்கு அருகில் வாகனத்தை நிறுத்தி, வண்டிக்குள் ஏறுமாறு உத்தரவிட்டு, வாகனத்தை ஆசிரமத்திற்கு ஓட்டிச் செல்லுமாறு வாகன ஓட்டியிடம் கூறினார். அன்று சுவாமி அவனது கடந்தகாலம் மற்றும் நிகழ்காலத்தை பற்றி அவனிடம் வெளிப்படுத்தி, இனி தனக்கு சிறந்த கர்மவினைகளை உருவாக்கிக்கொள்ள எப்படி வாழ்க்கையை வாழவேண்டும் என்பதையும் குறிப்பிட்டார். அன்று நடைபெற்ற வலுவான சந்திப்பு, அந்த சீடனின் தேவைகளை பூர்த்தி செய்வதாக இருந்தது. அவன் தன் வாழ்நாள் முழுவதும் அந்த தரிசனத்தை மனதில் பாதுகாப்பாக வைத்திருந்து, சுவாமியின் அறிவுரையை நுணுக்கமாக பின்பற்றினார். §

ஆனால் மற்றவர்கள் முடிந்தவரை சுவாமியுடன் சுற்றிக்கொண்டு இருந்தார். அவர் அவர்களது வாழ்க்கையில் ஒரு அங்கமாக இருந்தார். அவர் கவனம் செலுத்தியவர்களில் விதானையாரும் ஒருவராக இருந்தார். அவரது உடல் நலம் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளது மற்றும் இனி அவர் குணமடைவதற்கு உடலில் போதுமான வலிமை இல்லை என்ற செய்தி சுவாமி காதுகளுக்கு எட்டியது. சுவாமி விதானையர் வீட்டிற்கு சென்று, ஒரு மங்களகரமான பாடலை பாடி, அவரது நெஞ்சில் விபூதியை பூசி, தன் ஆசிரமத்திற்கு திரும்பினார். சிறிது நேரம் கழித்து விதானையார் காலமானார் என்ற செய்தி வந்தது. §




*இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு யோக சுவாமி மூன்று முறை பயணம் மேற்கொண்டார். அவர் புனிதமான பாரதத்தைப பற்றி தெரிந்துகொள்ள வடக்கே வாரணாசி சிவன் கோயிலில் இருந்து தெற்கில் திருவண்ணாமலை மற்றும் மதராஸ் வரை பயணம் மேற்கொண்டார்.*

........................§

ஒரு முறை சுவாமி இந்தியாவின் புனித யாத்திரையில் இருந்து இலங்கை திரும்பிய போது, செல்லையாபிள்ளை என்ற செல்லப்பசுவாமிக்கு நெருக்கமான சீடரை காண சென்றார். செல்லப்பசுவாமி உணவு அருந்துவதற்காக அந்த சீடரின் வீட்டிற்கு பலமுறை சென்று இருந்தார். அந்த சீடர் இறக்கும் தருவாயில் இருந்தார். சுவாமி அவரிடம், “சின்னதம்பி, நீ நீண்டகாலத்திற்கு முன்பே சென்று இருக்க வேண்டுமே, இன்னும் எதற்காக காத்து இருக்கிறாய்?” என்று கேலிக்கூத்தாக கேட்டார். செல்லையா சிரித்துக்கொண்டு, “என்னிடம் பயணச்சீட்டு இருக்கிறது மற்றும் பெட்டி படுக்கையும் தயாராக இருக்கிறது, ஆனால் இரயில் நகராமல் நிலையத்தில் உட்கார்ந்து இருக்கிறது. நீங்கள் என்னை வழியனுப்ப வேண்டும் என்பதற்காகத்தான் நான் காத்து இருந்தேன்,” என்று கூறினார். சுவாமி அவர் நெற்றியில் விபூதியை பூசி, அவருக்காக ஒரு பாட்டை பாடிவிட்டு, அங்கிருந்து கிளம்பினார். அன்று இரவு அந்த முதியவர் உயிர் பிரிந்தது. §

**பயணம் செய்தல்**

சுவாமி தனது பிற்கால வாழ்க்கை முழுவதும் கால்நடையாக, வாகனம் அல்லது இரயில் மூலம் பயணம் செய்துக்கொண்டு இருந்தார். அவர் சீடர்களை சந்திக்க கொழும்பிற்கு செல்வார், கிழக்கு பிராந்தியத்திற்கு செல்வார் அல்லது உள்நாட்டிற்குள் பயணம் செய்வார். அவர் எங்கே சென்றாலும், அவரது தரிசனத்தை பெற்று மகிழ்வதற்கு பல அன்பர்கள் அவரை நாடி வந்தார்கள். அவர் ஏதாவது ஒரு அன்பரின் வீட்டில் இருக்கிறார் என்பதை அறிந்த மக்கள், அவருக்கு திருப்தி அளிக்கும் அல்லது அவருக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று அவர்கள் மனதிற்கு தோன்றிய காணிக்கைகளுடன் அந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தனர். தேங்காய்கள், பூக்கள், மலர்கள், பணம், புத்தகங்கள், ஆடை ஆகியவை அந்த காணிக்கைகளாக இருக்கும். “சுவாமிகள் ஒரு இடத்திற்கு வந்த போது, அருகில் இருந்தவர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் அவரை காண வந்தார்கள். வழக்கமாக சுவாமிகள் தங்கிய இடத்தில் ஒரு மிகப்பெரிய ஹோமம் நடத்தப்படும்,” என்று ச. அம்பிகைபாகன் குறிப்பிட்டார். §

இலங்கையில் செழுமையான மலைப்பிரதேசத்தில் இருந்த தேயிலை தோட்டத்தில் ஒரு மேற்பார்வையாளராக இருந்த ஒரு அன்பரின் வீட்டிற்கு அவர் ஒரு முறை சென்று இருந்தார். இந்த அன்பரின் வீட்டு உரிமையாளர் அவரது குடும்பத்திற்கு ஒரு வீட்டை வழங்கி இருந்தார். அது வசதியாக இருந்தாலும், அந்த வீட்டிற்கு என்று தனியாக ஒரு கழிவறை இல்லை. அவர்கள் கழிவறையை பயன்படுத்த சிறிது தூரம் செல்ல வேண்டியிருந்தது. அந்த மேற்பார்வையாளர் தனது வீட்டிற்கு பின்புறத்தில் ஒரு கழிவறை கட்டித்தரவேண்டி, அந்த தேயிலை தோட்ட மேலாளராக இருந்த ஒரு ஆங்கிலேயருக்கு ஒரு மனு வழங்கி இருந்தார். ஆனால் அவரது மனு நிராகரிக்கப்பட்டது. அந்த அன்பர் இதைப்பற்றி சுவாமியிடம் கூறியதும், சுவாமி அந்த மேலாளர் மறுத்த காரணத்தை அறிந்துகொண்டார். இந்த பணி நடைபெற்றால், மேற்பார்வையாளரின் நேரம் மற்றும் கவனம் தேயிலை தோட்டத்து நடவடிக்கைகளில் குறைந்துவிடும் என்று அவர் அஞ்சி அந்த மனுவை நிராகரித்ததை சுவாமி தெரிந்துகொண்டார். ஆனால் அந்த மேலாளர் அவர்களது வசதியை கவனத்தில் கொள்ளவில்லை. §

இந்த சங்கடமான சூழ்நிலையை பற்றி அவர்கள் விவாதிக்கும் போது, சுவாமியின் சீடனாக இருந்த சாலை கட்டுமான குழுவின் தலைவரும் அருகில் இருந்தார். அந்த இடத்தில் ஒரே நாளில் ஒரு கழிவறையை கட்டித்தரமுடியுமா என்று சுவாமி அவரிடம் கேட்டார். தாம் மற்றவர்களுக்கு உதவிகரமாக இருக்கிறோம் என்பதை நினைத்து அவர் மகிழ்ச்சி அடைந்து, தன்னிடம் பல கூலித்தொழிலாளிகள் வேலை செய்வதாகவும், தேவையான பொருட்கள் அனைத்தையும் தன்னால் ஏற்பாடு செய்யமுடியும் என்றும் கூறினார். மேற்பார்வையாளர் கட்டுமானப்பொருட்கள் மற்றும் தொழிலாளிகள் செலவை ஏற்க சம்மதித்தால், தன்னால் ஒரே நாளில் கழிவறையை கட்டித்தர முடியும் என்று அவர் கூறினார். சுவாமி கழிவறை கட்டவேண்டிய இடத்தை தேர்ந்தெடுத்து, அடுத்த நாள் பணியை தொடங்க வேண்டும் என்று


கேட்டுக்கொண்டார். அன்று மாலை அந்த வேலை முடிவடைந்தது. தேயிலை தோட்ட மேலாளர் சிறிய கழிவறை இருப்பதை கவனிக்கவே இல்லை, மற்றும் அதைப்பற்றி யாரும் பேசிக்கொள்ளவில்லை. §

வழக்கமாக சுவாமி இரயில் மூலமாக பயணம் செய்வார். இரயில் பெட்டியில், அவர் பல சக பணியாளர்களை சந்திப்பார். இரயில் பெட்டிகள் வழியாக சென்று  பயணியர்களை சந்தித்து பேசும் போது, அவர் சிறப்பான உதவிகளை செய்ததாக அவரது சீடர்கள் உறுதியாக கூறுகிறார்கள். §

ஒரு நாள் அவர் கொழும்பு நோக்கி இரயிலில் சென்றுகொண்டு இருந்தார். அவரது இரயில் பாதி தூரம் சென்று ஒரு நிலையத்தில் நின்றுக்கொண்டு இருக்கும் போது, வடக்கு நோக்கி செல்லும் இரயில் அங்கு வந்து சேர்ந்தது. காரணம் எதுவும் சொல்லாமல், சுவாமி தெற்குநோக்கி செல்லும் இரயிலில் இருந்து இறங்கி, யாழ்ப்பாணம் நோக்கி செல்லும் இரயிலில் ஏறினார். பின்பு அவர் தன்னை பலமுறை சந்திக்க வந்திருந்த ஒரு அன்பரிடம் நேராக சென்று, “நீ அதிருப்தியுடன் இருப்பது எனக்கு நன்றாக தெரிகிறது. இன்னொரு இரயிலில் இருக்கும்போது என்னால் உனது பயங்கரமான எண்ணங்களை உணர முடிந்தது,” என்று கூறினார். தனது உயிரை மாய்த்துக்கொள்வதைப் பற்றி சிந்தித்ததாக அந்த அன்பர் ஒப்புக்கொண்டார். அவர் மனதை பல பிரச்சனைகள் ஆட்க்கொண்டு இருந்தன, மற்றும் அதிலிருந்து விடுபெற தற்கொலையை தவிர அவருக்கு வேறெந்த வழியும் தென்படவில்லை. §

சுவாமி சிரித்துக்கொண்டே, “உனக்கு தெரிந்தது அவ்வளவு தான். ஆனால் அது பல பிரச்சனைகளுக்கு தற்கொலை, ஒரு தொடக்கமாக தான் இருக்கும்,” என்று கூறினார். அதன் பிறகு அவர் அந்த அன்பரிடம் பேசி, வாழ்வை சரி செய்வது குறித்து சில வலுவான அறிவுறுத்தல்களை வழங்கினார். சுவாமியின் அறிவுரை மிகவும் வலுவாக இருந்து, நல்ல எதிர்காலத்திற்கும் உத்தரவாதம் அளித்ததால், அந்த அன்பரின் மனநிலை நேர்மறையாக மாறியது. கொழும்பு நோக்கி செல்லும் இரயிலில் ஏறுவதற்காக, சுவாமி அடுத்த இரயில் நிலையத்தில் இறங்கிக்கொண்டார். மீண்டும் அந்த நபர் மன அழுத்தத்தால் பாதிக்கப்படாமல், இயல்பாக இருக்கிறாரா என்பதை தெரிந்துகொள்ள, யோக சுவாமி அவரை பலமுறை சோதித்துக்கொண்டு இருந்தார். §

*சிவ தொடண்டன்* பத்திரிகையில் அறிஞர் பத்மாசனி இராசேந்திரம் பின்வரும் அனுபவத்தை பகிர்கிறார். பிற்காலத்தில் இன்னர்சேர்ச் என்ற பெயரில் சிவாய சுப்பிரமுனியசுவாமி நடத்தியதை போல, யோக சுவாமியும் குறைந்தபட்சம் ஒரு பயணக்கல்வி திட்டத்தை நடத்தியிருப்பார் போல தோன்றுகிறது. §



*தனது குடிசைக்கு வந்த விருந்தாளிகள், கோயிலில் இருந்த சாதுக்கள், ஒரு திருவிழாவை கொண்டாடும் அன்பர்கள் என்று யோக சுவாமி எல்லோருக்கும் உணவு அளிப்பதை விரும்பினார். அவர் கடைக்கு சென்று பொருட்களை வாங்கி தானே சமைப்பார் அல்லது உள்ளூர் விவசாயிகள் உற்பத்தி செய்த பச்சை காய்கறிகள் நிரம்பிய சந்தையில் எதை வாங்கவேண்டும் என்று தெளிவான அறிவுறுத்தல்களை வழங்குவார்.*

........................§

நாங்கள் ஒரு முறை இந்தியா செல்ல விரும்பினோம், மற்றும் அந்த விருப்பத்துடன் நாங்கள் சுவாமிகளை பார்க்க விரும்பினோம். சுவாமிகள் எங்களிடம், “இந்தியாவை மறந்துவிடுங்கள். நாம் வேறொரு இடத்திற்கு பத்து நாட்களுக்கு சென்று வரலாம்,” என்றார். அன்று மாலையில் நாங்கள் மீண்டும் சுவாமியை சந்திக்க சென்றோம். நாம் ஒரு இடத்திற்கு சென்று, ஒரு வசதியான இடத்தில் தங்கலாம் என்று சுவாமிகள் கூறினார். நாங்கள் இரத்தினபுரம் கிளம்பினோம் மற்றும் வழியில் சுமார் பத்து நிமிடங்களுக்கு ஒரு அன்பரின் வீட்டிற்கு சென்றோம். நாங்கள் அங்கே நீண்டநேரம் தங்கவில்லை. சுவாமி தேநீர் அருந்தியதும் கிளம்ப விரும்பினார். அங்கிருந்து நாங்கள் நேராக பெலிஹுலோயா சென்றோம். அங்கே எங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் எல்லா ஏற்பாடுகளையும் செய்து இருந்தார். நாங்கள் கிராமப்புற கூட்டமைப்பு கட்டடத்தில் தங்கினோம். அங்கே கொழும்பு, பலாங்கொடை மற்றும் இரத்தினபுரத்தில் இருந்து அன்பர்கள் கூடியிருந்தார்கள். காலையிலும்

மாலையிலும் நாங்கள் *சிவ புராணம், தேவாரப் பாடல்கள்* மற்றும் *திருவாசகம்* பாடினோம் மற்றும் மற்ற நேரங்களில் நாங்கள் சுவாமிகளின் சொற்பொழிவுகளை கேட்டோம். அந்த பத்து நாட்கள் சந்தோஷம் பொருந்தியதாக இருந்தன. சுவாமிகள் எல்லோருக்கும் அவர்களது தேவை மற்றும் பக்குவத்திற்கு ஏற்ப அறிவுரைகளை வழங்கினார்.” §

1932 ஆம் ஆண்டு அறுபதாவது வயதில், யோக சுவாமியின் கன்னத்தில் ஒரு சிறிய கட்டி உருவாகி இருந்தது. மருத்துவர்கள் அதை நீக்கவேண்டும் என்றார்கள், ஆனால் சுவாமி மறுத்துவிட்டார். பல வருடங்கள் கழித்து, அவர் அதை சோதிக்க சம்மதித்தார். சோதனையில் அது புற்றுநோய் கட்டி என்பது தெரியவந்தது. ஊடுகதிர் சிகிச்சை மற்றும் மற்ற சோதனைகளை செய்ய கொழும்பு மருத்துவமனைக்கு செல்லுமாறு மருத்துவர்கள் அவருக்கு பரிந்துரை செய்தார்கள். இதற்கு சுவாமி மறுப்புத் தெரிவித்தார். அதற்கு பதிலாக சுவாமி பருத்தி விதை எண்ணெயை பூசிக்கொண்டார். இதைப்பார்த்து கொண்டு இருந்த Dr. எஸ். இராமநாதன் திகைப்புடன், “சுவாமி! சுவாமி! இது நச்சுத்தன்மை கொண்டது. இதை எதற்காக கன்னத்தில் பூசுகிறீர்கள்?” என்று கேட்டார். சுவாமி சிரித்துக்கொண்டு, “மருத்துவர் ஐயா! சிகிச்சை முடிந்துவிட்டது. நான் இப்போது நலமாக இருக்கிறேன்,” என்று கூறினார். யோக சுவாமி பாலும் அரிசியும் கலந்த ஒரு விரதத்தை மேற்கொண்டார். இதன் கலவை அவரது வீக்கத்தை குணப்படுத்தியது. §


அவருக்கு வேறு சில நோய்களும் இருந்தன. சுவாமி அவ்வபோது சுருட்டு (இதை பிரெஞ்சு மொழியில் *செரூட்* என்று அழைப்பார்கள்) பிடிப்பதை விரும்புவார். 1940 களின் தொடக்கத்தில் இருந்து, காலையில் கழிவறை செல்லும் போது ஒரு சுருட்டு பிடிக்கும் பழக்கம் ஏற்பட்டது. அடுத்த பத்து வருடங்களில் அவருக்கு நீரழிவு நோயும் தொற்றிக்கொண்டது. அவர் தொடக்கத்தில், மூலிகைள மருந்துகளை மட்டுமே எடுத்துக்கொண்டார். 1950களின் தொடக்கத்தில் இருந்து, அவர் தினமும் இன்சுலின் ஊசி போட்டுக்கொண்டார். அதை அவரது சீடனாக இருந்த மருத்துவர்களே ஆசிரமத்திற்கு வந்து அவருக்கு போட்டு விட்டனர். §

1934, 1940 மற்றும் 1946 என்று மூன்று முறை யோக சுவாமி இந்தியாவிற்கு யாத்திரை மேற்கொண்டார். அவர் ஒவ்வொரு முறை சென்ற போதும், தன்னுடன் சில சீடர்களை அழைத்து சென்றார். அவர்கள் தென்னிந்தியாவில் இருந்த ஆறுபடை வீடுகளுக்கும், மதுரை மற்றும் சிதம்பரத்தின் மிகப்பெரிய மற்றும் பிரபல சிவன் கோயில்களுக்கும் சென்றார்கள். அவர்கள் நீண்டதூரம் நடந்து சென்றார்கள் மற்றும் பல ஆன்மீக வழிகாட்டிகளையும் சந்தித்தார்கள். §

ஒரு யாத்திரையின் போது, யோக சுவாமி மற்றுமொரு மிகப்பெரிய குருவான ஸ்ரீ ரமண மகரிஷியை சந்திக்க, திருவண்ணாமலையின் ஸ்ரீ ரமணாசிரமம் சென்றார். 1879 ஆம் ஆண்டு பிறந்த அவர், யோக சுவாமியை விட ஏழு வயது இளையவராக இருந்தார். 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்து

சமய போதகர்களில், இவர்கள் இருவரும் மிகவும் புனிதமாக தலைசிறந்து விளங்கியதாக பலர் கருதுகிறார்கள். புனிதமான மலைக்கு அருகில் இருந்த ஸ்ரீ ரமணரின் எளிமையான அறையில், அவர்கள் இருவரும் அமைதியாக ஒரு மணிநேரம் அமர்ந்து இருந்தார்கள். அவர்கள் சந்தித்த போதும் அல்லது பிரியும் போதும், தங்களுக்குள் ஒரு வார்த்தையையும் பேசிக்கொள்ளவில்லை. §

யோக சுவாமி ஸ்ரீ ரமண மகரிஷியை சென்று பார்த்து இருக்கிறார் என்பதை அறிந்த மக்கள், என்ன நடந்தது என்பதை தெரிந்துகொள்ள மக்கள் ஆர்வத்துடன் இருந்தனர். சுவாமி அவர்களிடம், "நாங்கள் பேசவேண்டியது அனைத்தையும் பேசினோம். நாங்கள் எந்த ஆசையுடனும செல்லவில்லை. நாங்கள் *சும்மா இருக்க* சென்றோம். நாங்கள் ஒரு மணி நேரம் அங்கே தங்கி இருந்தோம். அவர் பேசவே இல்லை. அவர் ஒரு *மாவீரன்*," என்று கூறினார். சுவாமி "*சும்மா*" என்பதன் மூலம், "முழுமையான நிசப்தத்தில் அமைதியான ஆன்மீக கூட்டுறவில் இருந்தார்கள்" என்பதை குறிப்பிட்டார். §



*யோக சுவாமி வழக்கமாக தங்களது ஆன்மீக வழிகாட்டலுக்காகவே ஒரு ஆன்மீக பாடலை இயற்றி தங்களுக்கு வழங்கிய அபூர்வமான தருணங்களை, தங்களுக்கு கிடைத்த ஆசியாக அந்த குடும்பங்கள கருதினார்கள். இவை பல வருடங்களுக்கு மிகவும் அக்கறையுடன் பாதுகாக்கப்பட்டன. அதன் பிறகு அவை ஒன்று சேர்க்கப்பட்டு நற்சிந்தனை என்ற புத்தகமாக வெளியிடப்பட்டது.*

........................§

ஒவ்வொரு பயணத்தின் போதும், சக பயணிகள் தன்னுடன் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் இருந்த பிறகு, அவர்களை யாழ்ப்பாணம் அனுப்பிவிட்டு, தான் தனியாக இந்தியா முழுவதும் பயணம் மேற்கொள்வார். 1940 வருட பயணத்தின் போது, நுவாரா எலியா ரயில் நிலையத்தலைவர் ராசய்யாவின் துணையுடன் மதராஸ், கல்கத்தா, பம்பாய், வாரணாசி மற்றும் மற்ற இடங்களுக்கு சென்றார். சிவபெருமானின் புனித தலமாக விளங்கும் பெனராஸ் அல்லது வாரணாசி என்று அழைக்கப்படும் காசி, கங்கை நதிக்கரையில் அமைந்துள்ளது. இங்கே இந்துக்கள் உயிர் நீத்து, தகனம் செய்யப்பட்டு, சிவபெருமானின் உச்சந்தலையில் பாய்ந்து வரும் இந்த புனிதமான நதியில் தங்கள் அஸ்தி கரைக்கப்படுவதற்காக வருவார்கள். நவம்பர் 3, காசியில் இருந்து யோக சுவாமி பின்வரும் கடிதத்தை எழுதினார். §


தேடித் திரிந்து காசிக்கு வந்து கண்டேன் விசுவநாதனை என்னுள். வாடித் திரிந்து வருந்த வேண்டாம். தேடிய பூண்டு காலுக்குள்ளே என்ற தெவிட்டாத வாசகமொன்றுண்டு. இவ்விடத்திலும் மனிதர்களேல்லாம் எங்களைப் போல தானிருக்கிறார்கள். நூதனமான காரணமொன்றும் பூதலமீதில்லவே இல்லை. இருந்த, இருக்கிற, இருக்கும் யாழ்ப்பாணத்தாரெல்லாருக்குமாகக் கருமாதிகளெல்லாஞ் செய்து முடிந்து விட்டன. இனிமேல் உங்களுக்கியைந்தபடி அன்பாக உலகில் நடந்து ஆண்டவன் அடிக்கீழ் அமர்ந்து வாழ்க. §

அந்த யாத்திரைக்கு பிறகு, சி. எஸ். தர்மராஜா சுவாமியை பற்றி *சண்டே அப்சர்வரில்* (பிப்ரவரி 20,1983) எழுதினார். §

அந்த யாத்திரையில் இருந்து திரும்பியதும், சுவாமி தனது பிரகாசமான முகம், கூர்மையான கண்கள், வெள்ளி நிறத்தில் நீளமான தாடி, நெற்றியில் விபூதி, இடுப்பில் வெள்ளை நிற பருத்தித் துணி, முடிந்து விடப்பட்ட தலைமுடி மற்றும் கையில் ஒரு குடையுடன், ஆசிரமத்தில் இருந்து விடியற்காலையில் கிளம்பி பல மைல் தூரம் நடந்து, செல்லும் வழியில் வாகன சவாரியை தொடர்ந்து நிராகரித்து, மாலையில் தனது இருப்பிடம் வந்து சேர்வார். §

அங்கே அவர் ஒரு மரப்பலகையில், சம்மணங்கால் போட்டு அமர்ந்துக்கொள்ள, ஒரு சமயத்தில் சிலர் மட்டுமே அமரக்கூடிய அந்த அறையில், தனியாக அல்லது குழுவாக கூடியிருந்த அன்பர்கள்

ஒவ்வொருவரின் தேவை மற்றும் புரிதலுக்கு ஏற்ப, தனது தெய்வீகத்தன்மையை மறைத்த எளிமையான சொற்பொழிவுகளுடன் சுத்தப்படுத்தும் தனது அருளை வழங்கிக்கொண்டு, சிலசமயங்களில் தன் குருவை புகழ்ந்து பாடுவார். §



யோக சுவாமியின் படைப்புக்கள் எளிமை மற்றும் ஆழமான உட்பார்வையின் ஒரு அபூர்வமான கலவையை கொண்டிருந்தது, மற்றும் அதில்

*உண்மைப்பொருள் அதன் தெளிவான மற்றும் மிகவும் சுலபமான வடிவில் விளக்கப்பட்டு இருந்தது. தனது உச்சரிப்புக்களின் மகத்துவத்தை உணர்ந்திருந்த அக்கறையுள்ள சீடர்கள் கிரகித்துக்கொள்ள, அந்த படைப்புக்களைப் பற்றி பேசுவார் அல்லது பாடி காண்பிப்பார்.*

........................§

சுவாமி தன் வீட்டிற்கு அருகில் தங்கி இருந்தாலும், பயணம் செல்வதை எப்போதும் நிறுத்தவில்லை. அவர் அடிக்கடி யாழ்ப்பாணம் தீபகற்பத்தை சுற்றி வலம் வந்தார். அவர் இருந்தது வறண்ட பூமி என்பதால், நீண்டநாட்களாக மழை பொழியவில்லை என்றால், பயிர்கள் வாடத்தொடங்கி, மக்கள் அவரை நாடி வர ஆரம்பித்து விடுவார்கள். “சுவாமி, பல மாதங்களாக மழை பொழியவில்லை. என் வயல்கள் தயாராக இருக்கின்றன, ஆனால் மழை பொழிந்தால் தான் என்னால் நெல் பயிரிட முடியும். இப்பொழுதே தாமதமாகி விட்டது.” §


இதை கேட்டவுடன் சுவாமி தீபகற்பத்தில் விரைந்து சென்று, வறண்ட நெல் வயல்கள் வழியாக நீண்ட அடிவைத்து நடந்து, மேகங்கள் மீது தனது கோபத்தை வெளிப்படுத்தி, அவை மக்களுக்கு பரிசாக வழங்கும் மழையை எதற்காக வழங்கவில்லை என்று அவற்றை கடிந்துக்கொண்டார். “நீ மழை பொழியாமல் என்ன செய்துக்கொண்டு இருக்கிறாய்? இங்கே என் நாட்டு மக்கள் பசியால் வாடுகிறார்கள், நீ அங்கே ஏதும் செய்யாமல் அமைதியாக உட்கார்ந்து இருக்கிறாய். என் நாட்டு மக்கள் சாப்பிடவேண்டும், அதற்கு நீ உதவவேண்டும் என்று உன்னை ஆணையிடுகிறேன்.” உடனே வானத்தில் இருள் சூழ்ந்து, பயிர்களுக்கு உயிரளிக்கும் மழையை வழங்க தொடங்கிவிடும். இது ஒரு அபூர்வமான நிகழ்வாக இல்லாமல் அடிக்கடி நிகழ்ந்தது, மற்றும் சுவாமி தன்னிடம் இருந்த விநோதமான திறமைகள் மூலம் இயற்கை சக்திகள் மீது இவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறார் என்று அவரது புகழ் மீது ஒரு களங்கத்தை ஏற்படுத்தி இருந்தது. §

சுவாமி மட்டக்களப்பில் மழையை உருவாக்கியது பற்றி, பின்வரும் விளக்கத்தில் எஸ். சண்முகசுந்தரம் விவரிக்கிறார். §

ஒரு நாள் சுவாமி யாழ்ப்பாணத்தில் இருந்து தெற்கே 90 மைல் தொலைவில் இருந்த வவுனியா என்ற ஊருக்கு வாகனத்தில் சென்றார். அவர் அந்த ஊரை சென்றடைந்ததும், தேநீர் அருந்த ஒரு உணவகத்தில் வாகனத்தை நிறுத்திக்கொண்டார். அங்கிருந்த எல்லோரும் அவரை அடையாளம் கண்டுகொண்டனர், மற்றும் யோக சுவாமி ஊருக்கு வந்துள்ளார் என்ற செய்தி ஊரெங்கும் பரவியது. அரை மணி நேரத்தில், அவரை சுற்றி சுமார் நூறு கிராமவாசிகள் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் எல்லோரும் விவசாயிகளாக இருந்தார்கள். ஊரில் வழக்கமான பருவமழை பொழியாமல், வயல்களில் பயிர்கள் வாடுவதாகவும், இன்னும் ஒன்று இரண்டு நாட்களில் நல்ல மழை பொழியவில்லை என்றால்

பயிர்கள் அழிந்து விடும் என்றும் அவர்கள் தங்கள் மனக்குறையை சுவாமியிடம் தெரிவித்தார்கள். §

இந்த பரிதாபகரமான கதையை சுவாமி கேட்டதும், ஒரு சில நிமிடங்களுக்கு தியானம் செய்தார். அதன் பிறகு அவர் “நல்ல மழை பெய்யாதோ, நாடு சிறவாதோ, எல்லோரும் இன்புற்று வாழாரோ,” என்று தொடங்கும் நற்சிந்தனை பாடலின் ஒரு தொகுப்பை பாட ஆரம்பித்தார். பத்தாவது செய்யுளின் முடிவில், வானத்தில் மேகங்கள் கூடி மழை பொழிய ஆரம்பித்தது. அரை மணி நேரத்திற்கு, நன்றாக மழை பொழிந்ததால், எல்லோரும் மகிழ்ச்சியுடன் மன நிம்மதியை பெற்றனர். §



*யோக சுவாமி சென்ற வழக்கமான யாழ்ப்பாண வீடுகள் தென்னை மர உத்திரம், கூரை ஓடுகள், சானம் மொழுகிய அல்லது கற்காரை தரைகள், விரகு அடுப்பு மற்றும் வீட்டில் தண்ணீர் தேவைக்காக பின்புறத்தில் ஒரு திறந்த கினற்றுடன் வெப்பமண்டலத்திற்கு ஏற்றார் போல் கட்டப்பட்டு இருந்தது. அந்த வீடுகளுக்கு விருந்தாளிகள் அடிக்கடி, எந்தவித முன்னறிவிப்பின்றி வந்துக்கொண்டு இருந்தார்கள் மற்றும் அவர்கள் எப்போதும் சிறந்த முறையில் உபசரிக்கப்பட்டனர்.*

........................§

Page 32: https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/32_yoga04_04.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் பதினேழு

## சாதனா செய்ய பரிந்துரைகள்

சுவாமி வலுவாக மற்றும் கலைநயத்துடன் பேசினாலும், அது அன்றாட வாழ்க்கையுடன் பொருந்தி இருந்தது. அவர் பயன்படுத்திய மொழி உண்மையில் மிகவும் எளிமையாக இருந்தது, மற்றும் ஆழமான அர்த்தம் கொண்ட அவரது நற்சிந்தனையும், *திருமுறை* அல்லது முற்கால முனிவர்கள் எழுதிய பழங்கால பாடல்களை போல அல்லாமல், எளிமையான நடையை கொண்டிருந்தது. நற்சிந்தனை ஒரு தனிப்பட்ட நாட்குறிப்பை போல, சுவாமியின் அனுபவங்கள், அவர் பெற்ற உணர்தல்கள், அவரது வேதனை மற்றும் அவரது நம்பிக்கைகளை பதிவு செய்து இருந்தது. அதன் மொழியும் நடையும் வெளிப்படையாக இருந்தது. முருகப்பெருமான் மற்றும் சிவபெருமான் பற்றி அவர் எழுதிய கவிதைகளின் பக்கங்களை புரட்டி, தொட்டுணரும் அளவிற்கு அவை நமக்கு பரிச்சயமானதாக தோன்றுகிறது. தனது வேட்கையில் உதவி செய்ய, அவர் நம்பிக்கையுடன பல்லி மற்றும் மயிலுடன் பேசுகிறார். அவர் சாதாரண மக்களுடன் தொடர்புகொள்வதை குறிப்பிடும் வண்ணம் நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் நடனங்களை பயன்படுத்தியுள்ளார். அவர் சன்மார்கத்தில் இருக்கும் குருவின் பாதங்களை நோக்கி நம்மை தூண்டிவிட்டு, மனித பிறவி எடுத்ததே அதற்காகத் தான் என்று அடிக்கடி ஞாபகப்படுத்துகிறார். §


ஒருமுறை சித்தாந்த ஞானம் மற்றும் தத்துவத்தில் நன்கு தேர்ச்சி பெற்று இருந்த ஒருவர், தன்னிடம் இருந்த புலமையை அனைத்தையும் பயன்படுத்தி, தத்துவ ஞானம் கலந்த ஒரு விவாதத்தை மேற்கொள்ளும் ஆர்வத்துடன் அவரை சந்திக்க வந்து இருந்தார். அதே சமயம் எளிமையான ஒரு நபரும் வந்து இருந்தார். அவர்கள் இருவரும் சுவாமிக்கு பூக்கள் மற்றும் பழங்களை வழங்கிவிட்டு தரையில் விழுந்து வணங்கினர். §

சுவாமி தத்துவ ஞானிக்கு அருகில் அமர்ந்து இருந்த எளிமையான மனிதரை பார்த்து, “நீ எப்படி இருக்கிறாய்?” என்று கேட்டார். “நான் நன்றாக

இருக்கிறேன், சுவாமி. எனக்கும் எனது குடும்பத்திற்கும் தேவையானது அனைத்தும் நல்ல முறையில் கிடைத்துக்கொண்டு இருக்கின்றன," என்றார். "நீயும் உனது குடும்பமும் நன்றாக இருக்கிறீர்கள் என்பதை கேட்பதற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. உனக்கு எத்தனை குழந்தைகள்?" என்று சுவாமி கேட்டார். "மூன்று குழந்தைகள், சுவாமி. இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள்." "உன் மாத வருமானம் எவ்வளவு?" "மாதம் இருநூறு ரூபாய் சம்பாதிக்கிறேன், சுவாமி." "வருமானம் அதிகமாக இல்லையே, இந்த வருமானம் உன் குடும்ப தேவைகளை பூர்த்தி செய்வதாக இருக்கிறதா?" "எந்த பிரச்சனையும் இல்லை, சுவாமி. எங்களுக்கு இந்த வருமானம் போதுமானதாக இருக்கிறது. மேலும் எங்களிடம் இரண்டு பசு மாடுகள் இருக்கின்றன. எங்களுக்கு தேவையான உணவை வீட்டிலேயே வளர்த்துக் கொள்கிறோம்." "அது சரி, உனது உழைப்பிற்கு உனக்கு இன்னும் அதிகமான சம்பளம் கிடைக்கவேண்டும்." "எனக்கு தெரியும், சுவாமி. ஆனால் என்னால் என்ன செய்ய முடியும்?" "உன்னைப் போன்று கடுமையாக உழைத்து நன்றாக செயல்படுகிறவர்கள், அதிகம் சம்பளத்தை பெறவேண்டும். நீ இதற்காக ஏதாவது செய்தாக வேண்டும்." "சரி, சுவாமி." §

பொறுமையை இழந்துக்கொண்டு இருந்த தத்துவ ஞானி, "சுவாமி எப்போது இந்த நீளமான அரட்டையை நிறைவு செய்து, தன்னிடம் அவரது உலகை அதிகம் சார்ந்து இருந்த விஷயங்களைப் பற்றி எப்போது பேசப்போகிறார்?" என்று யோசித்துக்கொண்டு இருந்தார். சுவாமி உடனே அவர் பக்கம் திரும்பி, "நாங்கள் பேசுவதை நீ நன்றாக கவனிக்க வேண்டும். நாங்கள் ஆழமான ஆன்மீக விஷயங்களைப் பற்றி விவாதித்துக்கொண்டு இருக்கிறோம்," என்று ஏளனமாக பதில் அளித்தார். §

சுவாமிகளின் முன்னிலையில், அத்தகைய நிகழ்வுகள் மறைமுக குறிப்புக்கள் மற்றும் கம்பீரம் நிறைந்து இருப்பதாக காட்சி அளித்தன, மற்றும் சிறிய அற்புதங்கள் சாதாரணமாகவும் இயல்பாகவும் காட்சி அளித்தன. வழக்கமாக தினமும் யாராவது ஒரு அன்பர் உணவை கொண்டு வருவார், மற்றும் அந்த உணவு ஆறு அல்லது ஏழு அன்பர்களுக்கு போதுமானதாக இருந்தது. தனது இருப்பிடத்தில் இருபது அல்லது முப்பது அன்பர்கள் கூடியிருந்தாலும், உணவை எல்லோருக்கும் வழங்கவேண்டும் என்று சுவாமி கேட்டுக்கொள்வார். சிலருக்காக தயார் செய்த உணவு பலருக்கு எவ்வாறு போதுமானதாக இருக்கும் என்ற கேள்வி கேட்கப்படாமல், அந்த உணவு போதுமான அளவு எல்லோரையும் சென்று அடைந்தது. §




*சிவ தொண்டன் நிலையத்திற்கு யோக சுவாமி எப்போதாவது வருகை தந்தாலும், அது ஒரு தியானம் மற்றும் சேவை செய்யும் மையமாக அவரது*

*கவனமான வழிகாட்டலுடன் கட்டப்பட்டது. இங்கிருந்து சிவ தொண்டன் என்ற அவரது மாதாந்திர பத்திரிகை வெளிவந்தது, மற்றும் இன்று அன்பர்கள் செய்துக்கொண்டு இருப்பதை போல, திருவிழாக்கள் கொண்டாடுவதற்கும் தங்கள் குருவிற்கு பூஜைகளை செய்வதற்கும் இந்த இடத்தில் அன்பர்கள் கூடினார்கள்.*

……………………..§

**“பூமாதேவி பசியோடு இருக்கிறாள்”**

சுவாமி அன்பர்களுக்கு உணவளிப்பதை பெருமகிழ்ச்சியுடன் செய்து வந்தார். பெரும்பாலும் அவர் ஆசிரமத்தில் இருக்கும் போது, அங்கே வருகை தந்த எந்த அன்பரும் உணவு அருந்தாமல் செல்வதை அவர் அனுமதித்தது இல்லை. சிலசமங்களில் மதிய நேரத்தில், அக்கம்பக்கத்து அன்பர்களிடம் பச்சை காய்கறிகளை வாங்கி வருமாறும், பெரிய சமையல் பாத்திரங்களை கொண்டு வருமாறும் கேட்டுக்கொண்டு, பெரிய அளவிலான விருந்திற்கு ஏற்பாடு செய்துக்கொண்டு இருப்பார். அவர் தனது குடிசைக்கு மிகப்பெரிய மண் அடுப்புக்களை தயார் செய்து வைப்பார். §

சிலருக்கு இந்த நடவடிக்கை விசித்திரமாக தோன்றியது. விஷேசம் என்று எதுவும் இல்லை, யாரும் வரவேற்கப்படவும் இல்லை. அப்படியிருக்கும் போது, சுவாமி எதற்காக மிகப்பெரிய விருந்திற்கு திட்டமிடுகிறார்? ஆனால் சுவாமி உணவு சுவையாகவும் தரமாகவும் இருப்பதில் கவனம் செலுத்தி தொடர்ந்து சமைத்துக்கொண்டு இருந்தார். “பலர் பசியோடு இருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு அளிப்பது நமது கடமை,” என்று அவர் கூறினார். “ஆனால் சுவாமி, அவர்களுக்கு இங்கே விருந்து நடக்கிறது என்பது எப்படி தெரியும்? இப்போது விசேஷம் எதுவும் இல்லையே?” என்று யாராவது கேள்வி எழுப்பினால், “கவலை வேண்டாம். அவர்கள் வருவார்கள்,” என்று சுவாமி கூறுவார். §

ஆனால் உணவு தயாரானதும், அன்பர்கள் கூட்டம் அங்கே வந்து சேர்ந்தது. அவர்களுக்கு சுவாமி பாடிக்கொண்டு உணவு அளிப்பார். அவர்கள் சிலசமயம் அவர் நடத்தும் *யாகத்தில்* கலந்துக்கொண்டு, அந்தி சாயும் நேரம் வரை இருந்துவிட்டு செல்வார்கள். §

சுவாமி கோயிலுக்கும் உணவை வழங்கினார். அவர் மிகப்பெரிய அரிசி மூட்டைகளை வாங்கி, சீடர்களின் மூலம் அதை நல்லூர் கோயிலுக்கு அனுப்பி, அங்கே வரும் பக்தர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு படி அரிசி என்று பகிர்ந்து அளிப்பார். அந்த பக்தர்களுக்கு கைப்பிடியளவு காய்கறிகள் மற்றும் சில நாணயங்களை கொடுத்து அனுப்புவதையும் உறுதி செய்துக்கொண்டார். பூமியில் உணவு தட்டுப்பாடு காரணமாக எதிர்காலத்தில் மக்கள் அவதிப்படுவது தனது ஞானதிருஷ்டிக்கு தெரிவதாகவும், அண்டத்தில் ஒரு சிறிய பகுதியாக இருந்தாலும், அந்த பிரச்சனையை தணிக்கும் பொருட்டு தான் இதை செய்வதாகவும் அவர் குறிப்பிட்டார். §

வழக்கமாக கோயில்களில் ஏழை எளிய மக்களுக்கு மிகப்பெரிய விருந்துகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன, மற்றும் இது புண்ணியம் சேர்க்கும் வழியாக கருதப்படுகிறது. இதை யோக சுவாமி தான் மட்டும் ஏற்பாடு செய்யாமல், தனது சீடர்களும் தன்னை உதாரணமாக பின்பற்றுமாறு கேட்டுக்கொண்டார். §

மண்ணில் அடுப்புகள் தயார் செய்யப்பட்டு, அரிசி மற்றும் பருப்பை வேக வைக்க, ஒரு மீட்டர் உயரம் மற்றும் 1.5 மீட்டர் அகலத்தில் இருந்த கனமான உலோக பானைகள், ‘ப’ வடிவில் அமையப்பெற்ற மூன்று சுட்ட செங்கற்கள் மீது வைக்கப்பட்டன. எல்லோரும் நற்சிந்தனை பாடலை பாடிக்கொண்டு இருக்க, ஏழையாக இருந்த தெய்வீக புருஷர்கள் மற்றும் பெண்மணிகள் உட்பட ஆர்வத்துடன் இருந்த விருந்தாளிகள் அனைவரும், சுமார் ஒரு வாரம் அல்லது அதற்கும் அதிகமான நாட்களுக்கு ஒரு முறை வயிறார சாப்பிடுவதற்காக மெதுவாக கூடினார்கள். §

உணவு சமைக்கப்பட்டதும், கையில் நான்கு அடி உயர மரக்கரண்டிகளுடன் இருந்த ஆண்கள் சாதத்தை மிகப்பெரிய பாய்களில் வைத்து, அதை விரைவாக ஒரு ஆள் உயரத்திற்கு ஒரு மென்மையான, வெள்ளை குன்றாக மாற்றினார்கள். நெய்த கோரைப்பாய்களின் மீது ஆயிரக்கணக்கான சாதுக்கள் மற்றும் ஏழை எளிய மக்கள் சம்மணம் போட்டு அமர்ந்து கொண்டார்கள். அங்கே டஜன் கணக்கில் இருந்த ஒவ்வொரு வரிசையிலும் ஐம்பது அன்பர்கள் வரை அமர்ந்து இருந்தார்கள். அந்த வரிசை நீளமாக, ஜோடி கோடுகளைப் போன்று நேருக்கு நேராக இரண்டு மீட்டர் இடைவெளியில் அமைந்து இருந்தன. அங்கே கூடியிருந்த அன்பர்கள் எல்லோருக்கும் ஒரே சமயத்தில், 20 முதல் 30 ஆண்கள் வரிசைகளுக்கு இடையில் இருந்த பாதைகள் வழியாக விரைவாக செயல்பட்டு ஆவி பறக்கும் சாதம், பருப்பு மற்றும் காய்கறிகளை மிகவும் சாமர்த்தியமாக திறந்திருந்த வாழை இலைகளில் வியக்கும் வகையில் பரிமாறினார்கள். முதல் அமர்வு பூர்த்தி அடைந்ததும், இரண்டாவது அமர்வு அதே இடத்தில் தொடங்கிவிடும். §

அதன் பிறகு அந்த வாழை இலைகள் பசுமாடுகளுக்கு வைக்கப்படும், மற்றும் பசுமாடு இலைகளை கடிக்கும் போது இடையிடையே காகங்களின் கூட்டம் தனது பங்கை பறித்து சாப்பிடும். இந்த உணவு அளிக்கும் பயிற்சியின் மூலம், சுவாமி தங்களுக்காக உருவாக்கி இருந்த ஒரு சாதனாவை அவரது சீடர்கள் உணர்ந்து கொண்டார்கள். அவர் *மகாசமாதி* அடைந்து பல வருடங்கள் கழித்து, அவரது சீடர்கள் ஆயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு நல்லூர் கோயில் மற்றும் யாழ்ப்பாணத்தின் மற்ற இடங்களில் அன்னதானம் வழங்கினார்கள், மற்றும் இந்த ஒழுக்கத்தை அவர்கள் பல வருடங்களாக தொடர்ந்து செய்து வருகிறார்கள். §

ஒருமுறை சுவாமி தனது ஆசிரம வளாகத்தில் ஒரு விருந்திற்கு ஏற்பாடு செய்து இருந்தார். சமையல் செய்ய சீடர்கள் விடியற்காலையில் வந்து விட்டனர். மற்றவர்கள் சுவாமியுடன் அமர்ந்து பாடுவதற்காக வந்து இருந்தார்கள். மதியஉணவு நேரம் வந்துவிட்டது, ஆனால் அவர் அதிக

ஈடுபாட்டுடன் மனமுவந்து பாடிக்கொண்டு இருந்ததால், அவரை யாரும் நிறுத்த விரும்பவில்லை. எல்லோரும் பாடிக்கொண்டு இருந்தனர். வெளியில் அமர்ந்து இருந்தவர்கள் அதை கேட்டுக்கொண்டு இருந்தனர். எல்லோரும் திருப்தியாக இருந்தார்கள். எல்லோரும் அவரது தரிசனத்தில் ஆனந்தமாக இருந்ததால், அதை மதியஉணவு போன்ற சாதாரணமான விஷயங்களுக்காக யாரும் தடுக்க விரும்பவில்லை. §

மதியஉணவு நேரம் முடிந்து பலமணி நேரங்கள் கழித்து, சுவாமி பாடுவதை நிறுத்தி சிறிது நேரம் அமைதியாக இருப்பார். அந்த மௌனத்திற்கு பிறகு சுவாமி சாப்பிட விரும்புவார் என்று சிலர் நினைத்துக்கொண்டு இருக்கும் போது, உபநிடதங்களை கணீரென்று சமஸ்கிருத மொழியில் உச்சரிக்க வேண்டும் என்று பரிந்தரைப்பார். அவர்கள் காலத்தை கடந்த பரமாத்துமாவின் போதனைகளை ஏற்ற இறக்கத்துடன் தொடர்ந்து உச்சரித்துக்கொண்டு இருந்தார்கள். சுவாமி அமைதியாக அமர்ந்து, அந்த உச்சரிப்பின் தீவிர உணர்ச்சி மற்றும் அமைதியை ஆனந்தமாக அனுபவித்துக்கொண்டு, தான் ரிஷிகளின் காலத்திற்கு சென்று விட்டதாக கூறுவார். எல்லோரும் அவரது சமாதி நிலையை உணர்ந்து, உட்புறமாக தனது கவனத்தை திருப்பி, அந்த இனிமையான உலகங்களை சுயமாக தொடர்பு கொண்டார்கள். §

மதியம் நான்கு மணி அளவில், கூடியிருந்த மக்கள் பசியால் அவதிப்படுவதை உபநிடதங்கள் உச்சரிப்பவர்கள் உணர்ந்து, சிறிது நேரம் அமைதியாக இருந்தார்கள். சுவாமியின் கோபத்திற்கு ஆளாக விரும்பாத அன்பர்கள், கூடியிருந்தவர்களில் பலருக்கு சம்ஸ்கிருதம் தெரியாது என்பதால் உபநிடதங்கள் உச்சரிப்பதை நிறுத்தலாமா என்று மெதுவாக கேட்டார்கள். வார்த்தைகளை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. கேட்போர் தனது அறிவுணர்வுடன் கேட்டாலும் கேட்காவிட்டாலும், வார்த்தைகளின் தொனி மற்றும் உச்சரிப்பில் இருக்கும் உணர்வு, போதனைகளை எல்லோருக்கும் எடுத்து சென்றுவிடும் என்று கூறினார். மந்திரங்கள் ஓதுவது தொடர்ந்தது. §

இறுதியாக சுவாமி மாலை 5 மணி அளவில், “நாம் நமது பிரசாதத்தை பகிர்ந்து கொள்வதற்கு முன்பாக, இந்த தரையில் சதுர வடிவில் ஒரு ஆழமான குழியை தோண்டுவதற்கு, பலசாலிகளாக பதினொன்று ஆண்கள் முன்வர வேண்டும்,” என்று கேட்டுக்கொண்டார். பதினொரு ஆண்கள் முன்வந்தவுடன், சுவாமி எங்கே குழி தோண்டவேண்டுமென்று குறிப்பிட்டார். அருகில் இருந்த வீடுகளில் இருந்து மண்வெட்டிகள் கொண்டு வரப்பட்டு, குழி தோண்டும் பணி தொடங்கியது. சூடான ரசம் மற்றும் ஆவி பறக்கும் சாதம், ஐந்து வாசனை திரவியங்கள் நிறைந்த காய்கறிகள், சட்னிகள், குழம்பு, தயிர் மற்றும் இனிமையான பாயாசத்தின் நறுமண வாசனையால் எல்லோர் வாயிலும் எச்சில் ஊற, பசி வயிற்றை கிள்ள, அவர்கள் சுவாமியின் உத்தரவு நிறைவேறுவதற்காக காத்து இருந்தனர். அது உண்மையில் ஒரு பெரிய விருந்தாக இருந்தது. §

இறுதியாக அந்தி சாயும் நேரத்தில், குழி தயாராகி இருந்தது, மற்றும் உணவை பரிமாறலாம் என்று அந்த மிகப்பெரிய துறவி குறிப்பிட்டார். “வாருங்கள், குழந்தைகளே. இந்த குழியை சுற்றி நில்லுங்கள்,” என்றார். அந்த பத்துக்கு பத்து அளவுள்ள குழியை சுற்றி இருநூறு அல்லது முன்னூறு அன்பர்கள் நின்று கொண்டார்கள். பெண்களும் குழந்தைகளும் முன் வரிசையில் அமர்ந்து கொள்ள, ஆண்கள் பின்வரிசையில் நின்று கொண்டார்கள். அவர்கள் எல்லோரும் சுவாமி இனி என்ன சொல்ல போகிறார் என்ற சிந்தனை மற்றும் விருந்தை இனி தாமதிக்கமாட்டார் என்ற நம்பிக்கையுடன் இருந்தனர். §

“நாம் இனி நமது பிரசாதத்தை பரிமாறலாம்,” என்று அவர் அறிவித்தார். அந்த பதினொரு ஆண்களில், வலுவாகவும் உயரமாகவும் இருந்த இரண்டு பேரை முன் வருமாறு அழைத்து, “அரிசியை பரிமாறுங்கள். அந்த பெரிய பானையை கொண்டு வாருங்கள்,” என்று கட்டளையிட்டார். அது ஒரு பெரிய பித்தளை பானையாக இருந்தது மற்றும் அதில் சுமார் 400 பவுண்ட் (180 கிலோ) சாதம் இருந்திருக்கும். அப்போது காலையில் சமையல் வேலைகளை செய்து, மாலையில் பாட்டு பாடியவர்களில் பலர் கிளம்பி இருந்தார்கள். மிகவும் சிரத்தையுடன் இருந்தவர்கள் மட்டுமே, நடப்பதை காண காத்து இருந்தார்கள். காலையில் 1,000 அன்பர்கள் இருந்தார்கள். ஒரு பெரிய மக்கள் கூட்டத்திற்கு உணவு தயார் செய்யப்பட்டு இருந்தது. §

பெரிய பானை வந்ததும், “அந்த குழியின் நடுவில் அந்த சாதத்தை கொட்டுங்கள்,” என்று சுவாமி கூறினார். அந்த குழியின் அடியில் ஒரு மிகப்பெரிய உணவுத்தட்டுப் போல, வாழை இலைகள் கவனமாக வைக்கப்பட்டு இருந்தன. “குழியில் கொட்டவெண்டுமா?” என்று மக்கள் கூட்டம் வியப்பில் இருந்தது. “தயக்கம் வேண்டாம், வேலை நடக்கட்டும்,” என்று அவர் உத்தரவிட்டார். அந்த இரு ஆண்கள் வியப்பில் இருந்தாலும், எந்த கேள்வியும் கேட்காமல் யோக சுவாமி சொன்ன வார்த்தைக்கு கட்டுப்பட்டு, வாழை இலையின் மத்தியில் ஆவி பறக்கும் சாதத்தின் குவியலை கொட்டிக்கொண்டு இருந்தனர். சுவாமி ஒருவரிடம், “நீ சென்று கத்திரிக்காய் கொண்டு வா!” என்றார். இன்னொருவரிடம், “நீ சென்று உருளைக்கிழங்கு கொண்டு வா! நாம் ஒரு இதை முழுமையான மற்றும் மங்களகரமான காணிக்கையாக படைக்க வேண்டும்.” §

எல்லா காய்கறிகளும் சாதத்தை சுற்றி முறையாக வைக்கப்பட்ட பிறகு, “நாம் எல்லோரும் குழியில் இருந்து சாப்பிட வேண்டுமா? இதைத்தான் சுவாமி நினைத்துக்கொண்டு இருக்கிறாரா?” என்று எல்லோரும் யோசித்துக்கொண்டு இருந்தனர். அதன் பிறகு சாதத்தின் மத்தியில் குழம்பு ஊற்றப்பட்டது. ஐந்து பவுண்ட் உப்பு இலையின் ஓரமாக சேர்க்கப்பட்டது. மாம்பழம் மற்றும் இஞ்சி சட்னிகள் முறையாக வைக்கப்பட்டன. கூடியிருந்தவர்கள் ஏமாற்றத்துடன் பார்த்துக்கொண்டு இருக்க, வாயில் எச்சில் ஊறச் செய்த ஒவ்வொரு உணவுப்பொருளும் குழியில் ஒவ்வொன்றாக வைக்கப்பட்டன. §

உணவுகள் அனைத்தும் பரிமாறிய பிறகு, சுவாமி எழுந்து நின்று, “மக்களே, இதில் கலந்து கொள்ளுங்கள். இப்போது எல்லோரும் முன் வந்து...” என்று கூறிய போது, கூடியிருந்த மக்கள் எல்லோரும் “நாள் முழுவதும், ஒரு சீடர்களின் குடும்பமாக காத்து இருந்த எல்லோரும், இந்த உணவை சாப்பிட வாருங்கள்,” என்று சுவாமி கூறுவார் என்று நினைத்தார்கள். ஆனால் வேறொன்றை நினைத்து இருந்த அவர், “பதினொரு மண்வெட்டிகளை எடுத்துக்கொண்டு, இந்த ருசியான உணவின் மீது சிறிதளவு மண்ணை தூவிவிடுங்கள். அதன் பிறகு அந்த மண்வெட்டியை அடுத்த நபரிடம் கொடுங்கள். இந்த மிகப்பெரிய சைவ சமூகத்திற்கு இத்தனை ஆண்டுகளாக, தனது வளத்தில் நமக்கு தாராளமாக வழங்கி வந்த நமது பூமாதேவிக்கு நாம் உணவு அளித்து விட்டோம். இப்போது நாம் தயார் செய்த *பிரசாதத்தை* ஒரு விலைமதிப்பற்ற, மனப்பூர்வமான பரிசாக அவளுக்கு காணிக்கை செலுத்த போகிறோம். பூமாதேவி பசியுடன் இருக்கிறாள். நாம் அவளிடம் இருந்து எல்லாம் எடுத்துக்கொள்கிறோம், அதற்கு பதிலாக இந்த சிறிய விருந்தை அவளுக்கு திரும்பித் தருகிறோம். தனக்கு மிகவும் தேவையானதை இந்த உலகமும் நாம் ஒவ்வொருவரும் தியாகம் செய்யவேண்டும் என்பதற்கு இது ஒரு அடையாள சின்னமாக விளங்கட்டும்.” §

இவ்வாறு சற்குரு யோக சுவாமி, வடக்கு இலங்கையில் பூமி வழிபாட்டு சடங்கை துவக்கி வைத்தார். அவர் விரதம் இருந்து நன்கொடை வழங்குதல் மற்றும் நன்கொடை வழங்கி விரதம் இருக்கும் *தவம்* மற்றும் தியாகம் பற்றிய ஒரு பாடத்தை கற்றுத் தந்தார். இவை அனைத்தும் முடிவதற்குள் இரவு வெகுநேரமாகி விட்டது. சீடர்கள் அவரது காலடியை தொட்டு வணங்கிவிட்டு, தங்கள் நெற்றியில் சிவபெருமானின் அறிகுறியாக விபூதியை அவரிடம் இருந்து பெற்ற பிறகு தங்கள் வீடுகளுக்கு திரும்பினார்கள். அதன் பிறகு வீட்டில் சுடச்சுட சமைப்பதற்கு நேரமில்லை, அப்படி சமைத்தாலும் சமையலின் வாசனையால் அக்கம்பக்கத்து வீட்டில் இருப்பவர்களுக்கு குறும்பு நடந்துகொண்டு இருக்கிறது என்பது தெரிந்துவிடும். சற்குரு தங்களுக்கு கற்றுத்தந்த ஒரு குறிப்பித்தக்க பாடத்தை நினைத்துக்கொண்டு, சில அன்பர்கள் அல்லது பல அன்பர்கள், அன்று இரவு ஒரு சில வாழைப்பழங்களுடன் தங்கள் வயிற்றை நிரப்பிக் கொண்டிருக்க வேண்டும். §

### சொற்கள் எல்லாம் மௌனமாக இருக்கும் இடம்

மே 1953, சங்கரத்தை வட்டுக்கோட்டையை சேர்ந்த திரு. அ. தில்லையம்பலம் தனது இளைய மகளுக்கு திருமணம் முடிந்து வைத்தார். தனது குடும்ப பொறுப்புக்களை நிறைவு செய்து இருந்ததால், திருமணம் முடிந்து நான்கு நாட்கள் கழித்து, அரசாங்க வேலையில் இருந்து விருப்ப ஓய்வு பெறுவதற்கு தேவையான ஆவணங்களை சமர்பித்து இருந்தார். அடுத்த நாள், சுவாமி அவரது வீட்டிற்கு சென்று, “தில்லையம்பலம், நீங்கள் இன்னும் பணி ஓய்வு பெறவில்லை, நீங்கள் செய்யவேண்டிய ஒரு முக்கிய காரியம் மீதம் உள்ளது!

நாளை யாழ்ப்பாணம் சென்று, சிவ தொண்டன் நிலையத்தின் மாடியில் ஒரு முறையான தியான அறையுடன், கட்டிட பணியை திட்டமிட்டு மேற்பார்வையிடுவதை தொடங்குங்கள்.” §

அந்த வருடத்தின் தொடக்கத்தில், சிவ தொண்டன் நிலையம் என்ற பெயரில் ஒரு முறையான சமய அமைப்பை உருவாக்கி, நிலையத்தின் நிர்வாகத்தை கவனிக்க, அவர் நியமனம் செய்த ஒரு நிர்வாக குழுவை உருவாக்க முதல் பொதுக்குழு கூட்டத்தை நடத்தினார். அந்த கூட்டத்தில் “முரடர்கள் குழுவில்" இருந்த பலர் கலந்து கொண்டனர். ஒவ்வொரு மாதமும் பூஜை மற்றும் பஜனை நடத்தப்பட்டு, வந்திருந்த எல்லோருக்கும் இரவு உணவு வழங்குவது வழக்கமாகிவிட்டது. §

1954 ஆம் ஆண்டு, அந்த கட்டிடம் நிறைவடைந்து முறையாக தொடங்கி வைக்கப்பட்டது. பக்தர்களுக்கு ஆசிகளை வழங்குவதற்காக, சந்தன மரத்தால் செய்யப்பட்ட அவரது *திருவடி,* ஆசிரமத்தில் இரண்டு வாரங்கள் வைக்கப்பட்ட பிறகு, தியான மண்டபத்தில் வைக்கப்பட்டது. இது தொடர்பாக நூல் ஆசிரியர் ச. அம்பிகைபாகன் வழங்கும் குறிப்பு: §

> சைவ சமய இயக்கங்களுக்கு எல்லாம் கேந்திரமாக விளங்கும் வண்ணார்பண்ணையில் சிவ தொண்டன் நிலையம் அமைந்து இருப்பது மிகப் பொருத்தமானதே. சிவதொண்டன் நிலைய அமைப்பை அறிந்தால் அதன் நோக்கங்கள் தெளிவாகும். நிலையத்தில் புராண மண்டபம், தியான மண்டபம், அன்பர்கள் தங்குவதற்கு அறைகள், சமையற்கட்டு, சுகாதார வசதிகள் எல்லாமுண்டு. புராண மண்டபத்தில் புராண படனம், திருமுறை ஓதுதல், நற்சிந்தனை பாராயணம் முதலியன இடம்பெறும். மேல்மாடியிலுள்ள தியான மண்டபத்தில், திருவடி பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அங்கு மௌனமே நிலவும். பூசை நேரத்தில் மணி அடித்தால் திருமுறை ஓதுதல் முதலியன இடம்பெறா. புஷ்பாஞ்சலியும் தீபாராதனையுமே இடம்பெறும். இந்த சமயத்தில் முழுமையான அமைதி நிலவும். §

இந்த நிலையத்தை, சுவாமி தியானம் மற்றும் வழிபாட்டிற்காக பிரத்யேகமாக ஒதுக்கி இருந்தார். தியான மண்டபத்திற்கு படியில் ஏறும் அன்பர்கள் படிக்க, சுவாமி சுவரில் பின்வரும் மூன்று வாசகங்களை காட்சிக்கு வைத்து இருந்தார். §

> *சொலெல்லாம் மோனம்.* (சொற்கள் எல்லாம் மௌனத்தில் இருக்கின்றன.)
>
> *செயலெல்லாம் மோனம்.* (செயல்கள் எல்லாம் மௌனத்தில் இருக்கின்றன.)
>
> *எல்லாம் நன்மோன நிறைவே.* (எல்லாம் மௌன நிறைவுக்குள் இருக்கின்றன.) §


மேலும் அவர் ஐந்து நடத்தை விதிகளையும் (தமிழில்) காட்சிக்கு வைத்து இருந்தார்:§

1. உள்ளிருக்கும் வாசலில் அன்பர்கள் தங்கள் முகம், கைகள் மற்றும் கால்களை கழுவவேண்டும் மற்றும் நிலையத்தின் பிரார்த்தனை கூடங்களில் நுழையும் போது நெற்றியில் விபூதி பூசிக்கொண்டு நுழைய வேண்டும். §
2. அன்பர்கள் நிலையத்தில் மற்ற அன்பர்களின் பொறுப்புக்களில் தலையிடாமல், தங்களுக்கு வழங்கபட்ட பொறுப்புக்களுடன் தங்களை உறுதியாக கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். §
3. அன்பர்கள் உடல்ரீதியாக முழுமையான புனிதத்தன்மையையும், தங்களுக்குள் முழுமனதுடன் ஆன்மீக சுத்தத்தையும் கடைப்பிடிக்கவேண்டும். §
4. நிலையத்தில் திருமுறை மற்றும் புராணங்கள் பாடப்படும் போது, அன்பர்கள் மற்றவர்களுக்கு எந்தவித இடைஞ்சலும் இல்லாமல் உயர்ந்த ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும். §
5. சிவதியானம் மற்றும் பாடல்கள், சைவ சமயம் மற்றும் நற்சிந்தனை பற்றிய விவாதங்கள் மட்டுமே, சிவ தொண்டன் நிலையத்தின் முக்கிய கடைப்பிடித்தல்களாக விளங்குகின்றன. சமயம் சாராத விஷயங்கள் மற்றும் மற்ற லௌகீக விஷயங்கள் பற்றிய விவாதம் உறுதியாக தடை செய்யப்பட்டுள்ளது. §

இதைப்பற்றி இந்துமதி அம்மா வழங்கும் குறிப்பு:§

> நிலையத்தின் புனிதத்தன்மையை பாதுகாக்க விதிகளை தவறாமல் கடைக்கப்பிடிக்க வேண்டும் என்பதில் சுவாமி உறுதியாக இருந்தார். “இந்த நிலையம் இந்த ஆசிகளை வழங்காமல் சீர்குலைந்துவிட்டால், இதன் செயல்பாட்டை நிறுத்தி விடுங்கள், இதனால் எந்த இழப்பும் ஏற்படாது.” புராண மண்டபத்தில் பூஜை மற்றும் சமயப்பாடல்களை, தியானம் செய்ய தூண்டுவதாக அவர் குறிப்பிட்டு: “ஒருவரால் சும்மா இருக்க முடியாது என்பதால் பாடல்கள் பாடி பாராயணம் மந்திரங்கள் ஓதப்படுகிறது.” §

நிலையத்தின் அன்றாட நிர்வாகத்தில் யோக சுவாமியின் ஈடுபாட்டை பற்றி தி. சிவயோகபதி பின்வரும் வர்ணனையை வழங்குகிறார். §



*யோக சுவாமியிடம் அதிக உடலுறுதி இருந்ததால், சுட்டெரிக்கும் வெயிலில் அவரால் நாள் முழுவதும் நடந்து செல்ல முடிந்தது. யாழ்ப்பாண மக்கள் அவரைப் பற்றி அறிந்து இருந்தார்கள் மற்றும் தங்களது இதயத்தில் இருப்பதை அவர் அறிந்து இருந்ததால், அவரைக் கண்டு அஞ்சினார்கள். அவர் அன்பர்களை தவிர்க்க விடியற்காலையில் எழுந்துவிடுவார், மற்றும் வெயிலில் இருந்து தன்னை பாதுகாத்துக்கொள்ள கையில் ஒரு குடையுடன் நடந்து செல்வார்.*

........................§

சிவ தொண்டன் நிலையத்தில் சந்தசுவாமி தங்கியிருந்தபோது, ஜெர்மன்சுவாமி மற்றும் இன்னொரு ஐரோப்பிய சுவாமி சில நாட்களுக்கு தங்கி இருந்தார். பின்னர் குறிப்பிட்ட இரண்டு சுவாமிகளும் நிலையத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடக்கவில்லை. மேலும் அவர்களது தோழமை, சந்தசுவாமியின் சமய நடவடிக்கைகளுக்கு தீங்கு விளைவிப்பதாக இருந்தது. அதனால் யோக சுவாமி அவர்களை

நிலையத்தில் இருந்து வெளியேற்றுவதில் உறுதியாக இருந்தார். சிவ தொண்டன் நிலையத்தின் கண்காணிப்பாளர் என்று சுவாமி தன்னை குறிப்பிட்டுக்கொண்டார். இதன் பொருள் இந்த சம்பவம் மற்றும் மேலும் பல சம்பவங்களின் மூலம் தெளிவாகிறது. §

யாழ்ப்பாணத்தின் நாவற்குழியில் இயங்கிய, மத்திய மகாவித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராக இருந்த திரு. செல்லத்துரையிடம் நிலையத்தை நிர்வகிக்கும் பொறுப்பை யோக சுவாமி வழங்கினார். 1956 ஆம் ஆண்டில் ஒரு நாள், சுவாமி பள்ளிக்கு அருகில் தனது வாகனத்தை நிறுத்தி, செல்லத்துரையிடம் வாகனத்தில் ஏறுமாறு கேட்டுக்கொண்டார். அதன் பிறகு அவர், "நான் உங்களை சிவ தொண்டன் நிலையத்தில் பணியில் அமர்த்த போகிறேன். நீங்கள் இப்போதிலிருந்து அங்கே நிரந்தரமாக தங்கி, நிர்வாகத்தை கவனிக்க வேண்டும்," என்று அறிவித்தார். §

அன்றிலிருந்து, செல்லத்துரை அந்த நிலையத்திற்கு மட்டுமில்லாமல், அந்த சமூகம் மட்டக்களப்பில் இரண்டாவதாக தொடங்கிய நிலையத்திற்கும் நிர்வாக பொறுப்பை ஏற்றுக்கொண்டு, யோக சுவாமிக்கு தனது சேவையை வழங்கினார். அவர் பின்னர் துறவற வாழ்க்கையை மேற்கொண்டு, செல்லத்துரை சுவாமியாக  மாறினார். அவர் 2006 ஆம் ஆண்டு தனது 92 ஆவது வயதில் காலமானார். §

ஒரு நாள் சுவாமி செல்லத்துரையிடம் பேசிக்கொண்டு இருந்த போது, பின்புறத்தில் இருந்து வந்த ஒரு சத்தம், அவர்கள் பேச்சுக்கு இடையூறாக இருந்தது. ஒரு சிவ தொண்டன் கழிவறையை சுத்தம் செய்துகொண்டு இருக்கிறான் என்பதை உணர்ந்த சுவாமி உற்சாகமாக சிரித்துக்கொண்டு, "அங்கே சிவ பூஜை நடந்துகொண்டு இருக்கிறது! சிவ தொண்டன் நிலையத்தில் இருக்கும் அன்பர்களின வசதிக்காக கழிவறையை சுத்தம் செய்யும் அவன் மிகவும் உயர்வான சிவ தொண்டன்!" §

வழக்கமாக சுவாமி சில உத்தரவுகளை வழங்க நிலையத்தில் சிறிது நேரம் தங்கிவிட்டு செல்வார். தனது அக்குளில் ஒரு குடை மற்றும் சூரிய கிரணங்களில் இருந்து தன்னை காப்பாற்றிக்கொள்ள தலையில் ஒரு துண்டை சுற்றிக்கொண்டு, முன்னறிவிப்பு இல்லாமல் நுழைந்து, செல்லத்துரை அல்லது மற்றவர்களை வெளியே வருமாறு அழைத்து, "இதை கட்டவேண்டும். அதை பொருத்த வேண்டும். இதை அச்சிட வேண்டும். இந்தியாவில் இருந்து வரும் விருந்தாளிகளுக்கு அந்த அறையை தயார் செய்யுங்கள்," என்று உத்தரவிடுவார்.  தனது உத்தரவுகளை வழங்கியதும், தான் கூறியது அனைத்தும் அக்கறையுடன் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையுடன், அவர் அங்கிருந்து கிளம்பிவிடுவார். §

சுவாமி நிலையத்திற்குள் நுழைவது மிகவும் அபூர்வம், ஆனால் சிலசமயங்களில் நிலையத்தில் அமைதி நிலவிய போது, அவர் உள்ளே செல்வார்.  ஒரு முறை 1961 ஆம் ஆண்டு அவருக்கு ஏற்பட்ட விபத்திற்கு பிறகு, அங்கே மூன்று வாரங்கள் தங்கி இருந்தார். அங்கே அவர் பயன்படுத்திய படுக்கை இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. §

அவர் தன்னை சந்திக்க வந்தவர்களிடம் வழக்கமாக, சிவ தொண்டன் நிலையத்திற்கு சென்று துதிப்பாடல்களை பாடுங்கள் அல்லது வேதங்களை ஓதுங்கள், அல்லது மேல்மாடியில் அமைதியாக இருந்த தியான மண்டபத்திற்கு செல்லுங்கள் என்று அறிவுரை வழங்குவார். இன்றும் தியான மண்டபத்தில் அமைதி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. “அமைதியாக அமருங்கள். சிறிது நேரம் கழித்து நீங்கள் என்னை தேடி எதற்காக வந்தீர்களோ, அது உங்களை தேடி வரும்,” என்று அவர் உத்தரவிடுவார். “சும்மா இரு,” என்று மையத்தின் சுவரில் தொங்கிய ஒரு பலகை இவற்றை தெளிவாக விளக்கியது. §

சிவ தொண்டன் நிலையத்தை நிறுவிய பிறகு, சுவாமி சீடர்களிடம், “நீங்கள் என்னை சந்திக்க எதற்காக வருகிறீர்கள்? சிவ தொண்டன் நிலையத்திற்கு சென்று தியானம் செய்யுங்கள்,” என்று கூறுவார். இவர் இந்த தகவலை “உறுதி மொழி யிதனை அறிவீரே,” என்ற தலைப்புள்ள பாட்டில் புகழ்ந்து பாடியுள்ளார். §

சிவ தொண்ட நிலையத்திற் சேரீர்

தியானஞ் செய்து கடை தேறீர்

மவுனமா யிருந்து இளைப் பாறீர்

மந்திர மிது வெனக் குறியீர்

அவனிவ னாரென அறிவீரோ

ஆன்மா நித்தியம் தெரியீரோ

உவமை கடந்த வின்பம் உள்ளீரோ

உண்மை முழுது மெனக் கொள்ளீரோ

ஐம் பொறி வழியினிற் செல்லாதீர்

ஐம் புலன் தன்னை வெல்வீரே

வெம்பகை தன்னை விடுவீரே

வேதாந்த சித்தாந்தந் தொடு வீரே

ஒரு பொல்லாப்பு மில்லை யுணர்வீரே

ஓம் சிவாய நமவெனத் தொழுவீரே

உருகி யுருகி இன்பம் பெறு வீரே

உறுதி மொழி யிதனை அறிவீரே. §

நிலையத்தில் பூஜைகள் மிகவும் எளிமையாக நடைப்பெற வேண்டும் என்று சுவாமி வலியுறுத்தினார். அவை எந்தவித பாராயணமும் இல்லை, முழுமையான அமைதியில் அன்றும் இன்றும் நடைபெற்று வருகின்றன. தினமும் எளிமையான முறையிலும், ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றக்கிழமைகளில் விமர்சியாக நடைப்பெற்ற திருவடி பூஜையை தவிர, அவர் டிசம்பர் மாதத்தில் சிவபெருமானும் ஆன்மாவும் ஒன்றாக காணப்படும் ஆருத்ரா தரிசனம் மற்றும் வருடந்தோறும் தெய்வீக திருவடிகளை மிகவும் சிறந்த முறையில் பூஜிக்கப்படும் மகாசிவராத்திரி பண்டிகைகளை மட்டுமே அனுமதித்தார். மற்ற நாட்களில் பூஜை செய்ய வேண்டாம் என்று சுவாமி அறிவுறுத்தினார். §

சிவ தொண்டன் குழுவில் இருந்த ஒரு அங்கத்தினர், இன்னொரு பண்டிகையை கொண்டாட தாம் விரும்புவதாக கூறிய போது, “இதற்கெல்லாம் அனுமதி கிடையாது,” என்று சுவாமி அந்த யோசனைக்கு முடிவு கட்டினார். சுவாமி மகாசமாதி அடைந்த பிறகு, இரண்டு நிலையங்கள் மற்றும் அவரது கொழும்புத்துறை ஆசிரமத்தில், மாதம் ஒருமுறை ஆயில்யம் (ஆஷ்லேஷா) நட்சத்திரத்தன்று திருவடி பூஜையும் நடைப்பெற்றது. 1920 களில் அதே நட்சத்திரத்தில், அவர் தனது ஆசிரமத்தில் செல்லப்பசுவாமியின் திருவடியை நிறுவினார், மற்றும் அது யோக சுவாமி மகாசமாதி அடைந்த நட்சத்திரமாகவும் அமைந்தது. §

சுவாமி வண்ணார்பண்ணை நிலையத்தை, யாழ்ப்பாணத்திற்கு வெளியில் இருந்து வந்த முக்கிய விருந்தாளிகளுக்கு தங்கும் இடமாக ஏற்பாடு செய்தார். தமிழ்நாட்டை தங்கள் இருப்பிடமாக கொண்டு தமிழ் மொழி, ஆங்கில மொழி மற்றும் சைவ சித்தாந்த தத்துவத்தில் பிரபல அறிஞர்களாக விளங்கிய முனைவர் டி.எம்.பி. மகாதேவன், முனைவர் தெ. பொ. மீனாட்சசுந்தரம் மற்றும் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் ஆகியோர், 30 நிமிட திருச்சி-பலாலி வான்வழி பயணம் மூலமாக, யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி வந்துக்கொண்டு இருந்தனர். அவர்கள் முக்கியமாக சுவாமியின் ஆசிரமத்தில் தத்துவத்தைப் பற்றி விவாதிக்கவும், யாழ்ப்பாண தீபகற்பத்தின் பள்ளிகளில் பொதுமக்களுக்கு உரை நிகழ்த்தவும் வருகை தந்தார்கள். அவர்கள் எப்போதும் யாழ்ப்பாண சிவ தொண்டன் நிலையத்தில், சுவாமியின் விருந்தாளிகளாக தங்கி அவரது அறிவுறுத்தல்களை பின்பற்றினர். §

தான் மகாசமாதி அடைவதற்கு சில வருடங்களுக்க முன்பாக, சுவாமி அன்பர்களிடம், “நாம் பெரும் பஞ்சத்தை எதிர்கொள்ளவிருக்கிறோம். அந்த சமயத்தில் நீர் ஆகாரம் கிடைப்பதும் கடினமாக இருக்கும். உணவை சாகுபடி செய்வதில் கவனம் செலுத்தி, எல்லோருக்கும் உணவை தானமாக

வழங்குங்கள்,” என்று கூறினார். சிவ தொண்டன் பத்திரிகையின் பல இதழ்களில், அன்னதானத்தின் மகத்துவத்தை குறிப்பிட்டு கட்டுரைகள் வந்துள்ளன மற்றும் அன்னதானம் வழங்கும் பணி தொடர்வதை உறுதி செய்ய, விவசாயத்திற்கு நல்ல வயல்களை வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த சாகுபடியில் இருந்து வரும் உற்பத்தியை எல்லோருக்கும் விநியோகம் செய்து, எல்லோருக்கும் உணவு அளிக்கவேண்டிய தேவையை சுவாமி குறிப்பிட்டார். §

சுவாமியின் நிர்வாகத்தின் கீழ், சமயம் தொடர்பான ஆய்வுகளுக்கு நிலையம் ஆதரவு அளித்ததைப் பற்றி இந்துமதி அம்மா ஒரு சிறிய கண்ணோட்டத்தை வழங்குகிறார். §

> சிவ தொண்டன் நிலையம் தொடங்கி மூன்று வருடங்கள் கழித்து, சிவ தொண்டன் பத்திரிகையில் இரண்டு விளம்பரங்கள் தோன்றின. அதில் ஒன்று சிவ தொண்டன் கல்வி நிதி பற்றியது மற்றும் இன்னொன்று அந்த நிதியில் இருந்து உதவிகளை பெற்றவர்கள் பற்றியதாக இருந்தது. இந்த நிதியுதவியை பெற்றவர்கள் (தேவாரம், இசை, சமயக்கல்விகள் போன்றவற்றை படிக்க இந்திய பல்கலைக்கழகங்களுக்கு சென்றவர்கள்) தங்கள் படிப்பை முடித்த பிறகு சிவ தொண்டன் நிலையத்தில் ஐந்து வருடங்கள் சேவை செய்ய வேண்டும் அல்லது அவர்களுக்கு விருப்பம் இருந்தால் அதிக வருடங்கள் சேவை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. இது சமய அறிவின் உயர்ந்த இலட்சியங்களை நோக்கி மக்களை இயக்கும் சிவ தொண்ட நிலையத்தின் குறிக்கோளை விவரிக்கிறது. சுவாமி கற்றுத்தந்த சைவ சித்தாந்தம், அவரது சீடர்கள் கோயில்களில் நடத்திய பெரியபுராணம் பற்றிய சொற்பொழிவுகள், சர் ஜான் வுட்ரப் எழுதிய *தி செற்பெண்ட் பவர்* என்ற புத்தகத்தின் அறிமுக அத்தியாயத்திற்கு வழக்கறிஞர் சுப்பையா வழங்கிய மொழிப்பெயர்ப்பு, *விவேகசூடாமணி* ( ஆதிசங்கரர் அருளிய அத்வைத உரை) மற்றும் *இன் தி ஹர்ஸ் ஆஃப் மெடிடேஷன்* ஆகியவை சிவ தொண்டன் நிலையத்தின் ஆன்மீக நோக்கங்களை வெளிப்படுத்துகின்றன. §

யோக சுவாமி வாழ்ந்த காலத்தில் இந்திய மடங்களை சேர்ந்த சில ஆன்மீக தலைவர்கள் மற்றும் பிரபல சமய அறிஞர்கள் மீது அவர் ஏற்படுத்திய தாக்கத்தை பற்றி தி. சிவயோகபதி சில தகவல்களை வழங்குகிறார். §

> சைவ சித்தாந்தத்தின் கோட்டைகளில் ஒன்றாக விளங்கி ஒரு பழங்கால மடலாய-கோயில் வளாகமாக தமிழ்நாட்டில் இருக்கும், குன்றக்குடி ஆதீனத்தின் ஆன்மீகத் தலைவராக தெய்வசிகாமணி அருணாச்சல தேசிகர் அடிகள் (குன்றக்குடி அடிகளார்) இருந்தார். அவர் 1950 மற்றும் 1960 களில் பலமுறை யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பிற்கு பயணம் செய்து, சைவ கோயில்கள் மற்றும் மண்டபங்களில் சொற்பொழிவுகளை வழங்கியுள்ளார். 1950 களின் இறுதியில் ஒரு நாள், அந்த இளவயது

அடிகளார் யாழ்ப்பாணத்தில் இருந்த போது, அவரை எனது தந்தை திரு. அ. தில்லையம்பலம் மற்றும் முதலியார் சின்னதம்பி யோக சுவாமியின் ஆசிரமத்திற்கு அழைத்து சென்றனர். அங்கே அடிகளார் சுவாமிகளுடன் ஒரு அரிய விவாதத்தில் ஆர்வத்துடன் ஈடுபட்டு இருந்தார். அவருக்கு சுவாமி ஒரு நற்சிந்தனை புத்தகத்தை பரிசாக வழங்கினார். ஆசிரமத்தில் இருந்து கிளம்பிய பிறகு, அந்த அடிகளார் பெரும் விருப்பத்துடன் அந்த புத்தகத்தை முழுவதுமாக படித்து முடித்தார். அவர் அன்றிலிருந்து, சுவாமிகளின் பாடல்கள் அத்வைத சைவ சித்தாந்த தத்துவத்தில் தலைசிறந்து விளங்குகிறது என்று தனது சொற்பொழிவுகள் அனைத்திலும் பாராட்டி பேசினார். §

சென்னை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருந்த முனைவர் அ. லக்ஷ்மண சுவாமி முதலியார், 1955 ஆம் ஆண்டு சுவாமியை சந்தித்த போது, சிக்கலான கோட்பாடுகளை ஒரு எளிமையான நடையில் வெளிப்படுத்தும் அவரது விசித்திரமான திறமையால் ஈர்க்கப்பட்டார். அந்த பிரபல கல்வியாளர் “இந்த உலகில் மனித நேயத்தின் பொக்கிஷமாக” மதித்த சுவாமியின் பண்புகளுடைய ஒரு மகானை, தான் இந்தியாவிலும் பார்த்தது இல்லை என்று அவர் தில்லையம்பலத்திடம் கூறினார். §

இராமகிருஷ்ணா மிஷனுடன் சுவாமி ஒரு நெருக்கமான உறவை வளர்த்துக்கொண்டு இருந்தார். அந்த உறவு 1897 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தரை அவர் எதிர்கொண்டதில் இருந்து தொடங்கி இருந்தது. கொழும்பு கிளையை சேர்ந்த சுவாமி அசங்கானந்தர் யோக சுவாமியை தரிசிக்க, அடிக்கடி யாழ்ப்பாணம் வந்துக்கொண்டு இருந்தார். வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் ஒரு குருகுலம் கட்டுவதற்கு, இராமகிருஷ்ணா மிஷனின் மட்டக்களப்புப் பிரிவு நிதி திரட்டிய போது, யோக சுவாமி முதல் நன்கொடையை வழங்கினார். அவர் தனது ஆசிகளுடன் வழங்கிய நன்கொடையை இராமகிருஷ்ணா மிஷன் இன்றும் பாதுகாத்து வருகிறது. அதன் பிறகு, சுவாமி துறவறத்தை மேற்கொள்ள விரும்பிய பல அன்பர்களிடம், இராமகிருஷ்ணா மிஷனில் சேருமாறு தொடர்ந்து ஊக்குவித்து வந்தார். அதில் பண்டிதர் தி. மயில்வாகனம் மற்றும் சுவாமி பிரேமாத்மானந்தர் அடங்குவர். காவி உடை அணிந்தவர்களை சில இரகசிய காரணங்களுக்காக, சுவாமி தனது சிவ தொண்டன் நிலையத்தில் தங்க அனுமதிக்காவிட்டாலும், இராமகிருஷ்ணா மிஷனை சேர்ந்த சுவாமிகளுக்கு நிரந்தரமான அனுமதியை வழங்கினார். §

### செய்யவேண்டிய ஒரே வேலை

“நாம் செய்வதற்கு ஒரு வேலை தான் இருக்கிறது: ஆத்ம ஞானத்தை சுயமாக பெறவேண்டும். அதாவது, நீங்கள் யாரென்று நீங்களே தெரிந்துகொள்ளுங்கள். அல்லது தன்னை அறி. நீங்கள் இதை எப்படி

செய்வீர்கள்? ஆயிரம் புத்தகங்களை படிப்பதன் மூலம் அல்லது மக்கள் பேசுவதை கேட்பதன் மூலம், உங்களால் இந்த முடிவான உண்மையை தேடிப்பிடிக்க முடியாது. நீங்கள் ஆத்ம ஞானத்தை சுயமாக உணரவேண்டும். உள்ளே சென்று அங்கே நிலைத்து இருங்கள். அதன் பிறகு வெளியே வந்து, இந்த உலகை பாருங்கள்," என்று யோக சுவாமி வழக்கமாக கூறுவார். யோக சுவாமி சாதகர்களிடம்: §

> மேலே உங்களுக்காக ஒரு நாற்காலி ஒதுக்கப்பட்டுள்ளது. நீங்கள் அங்கே சென்று அந்த நாற்காலியில் உட்கார வேண்டும். அங்கிருந்து பார்த்தால், உங்களுக்கு எல்லாம் ஒன்றாக தெரியும். இரண்டாவதாக எதுவும் தெரியாது. அந்த நிலையை சில மகான்கள் மற்றும் தேவர்களும் அறியாமல் இருக்கிறார்கள். அந்த நிலையை புத்தர் அடைந்தார் மற்றும் அதன் பிறகு கீழே இறங்கி வந்து மற்றவர்களுக்கு உதவி செய்தார். ஏசு கிறுத்து அதை அறிந்து இருந்தார் மற்றும் அந்த நிலைக்கு மற்றவர்களை கொண்டு வர முயற்சியும் மேற்கொண்டார். அந்த நிலையை பற்றி பலர் கேட்டிருக்கவும் இல்லை அல்லது அறிந்திருக்கவும் இல்லை. அந்த நாற்காலி உங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் சென்று அமர்வது உங்கள் வேலை. நீங்கள் அதை இந்த பிறவியில் செய்யவில்லை என்றால், நீங்கள் அடுத்த பிறவியில் செய்யலாம் அல்லது அதற்கு அடுத்த பிறவியில் செய்யலாம். நீங்கள் அந்த ஒரு வேலையை மட்டும் செய்தால் போதும். மேலே அந்த நாற்காலியை நோக்கி விரைவாக பறவைகளை போல பறந்து செல்பவர்களும் இருக்கிறார்கள். §


தன்னை காண வரும் அன்பருக்கு, சுவாமி ஒரு பிரதிபலிக்கும் குளமாக விளங்கினார். ஒரு எளிமையான மனிதருக்கு, அவர் எளிமையாக மற்றும் வெளிப்படையாக பேசினார். கற்றறிந்தவர்கள் தன்னை நாடி வந்தபோது, அவர்கள் ஒரு இந்து, கிறுத்துவர் அல்லது இசுலாமியராக இருந்தாலும், அவர்களுக்கு பரிச்சயமான மொழியில் பேசுவார். அவர் ஒவ்வொரு அன்பரின் வசதிக்காக, அவரது சூழ்நிலை மற்றும் அவரது மதத்தில் பயன்படுத்தப்படும் சொற்களை பயன்படுத்தி பேசினார். அவர் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் நன்றாக தேர்ச்சி பெற்று இருந்தார். §

தன்னை நாடி ஒரு கிறுத்துவர் வந்தால், சுவாமி அவரை விவிலியத்தில் இருந்து ஏதாவது ஒரு பக்கத்தை உரக்க படிக்க சொல்வார். சுவாமி இடையில் குறுக்கிட்டு, ஒரு பத்தியை பற்றி விளக்கம் அளிப்பார். அவர் அளித்த விளக்கம், அந்த அன்பரின் வாழ்க்கைக்கு தொடர்புள்ளதாக, அவரது கடந்தகாலம் மற்றும் எதிர்காலம் பற்றிய தகவலுடன் அவரை திகைக்க வைப்பதாக இருந்தது. யோவானின் நற்செய்தியில் தொடக்கத்தில் வரும்: "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது," அவருக்கு பிடித்தமான பகுதியாக இருந்தது. இந்த போதனை கேட்பவருக்கு முழுமையாக விளங்கும் வரை, சுவாமி அதைப்பற்றி தொடர்ந்து பேசிக்கொண்டு இருப்பார். §

அவர் பௌத்த மதத்தை சேர்ந்தவர்களிடம், புத்தர் வழங்கிய போதனைகளை மேற்கோள் காட்டி, நிர்வாணாவின் பாதையை விரிவாக்கம் செய்யும் புத்தரை போல விளக்கம் அளிப்பார். இந்துக்களிடம், அவர்கள் எந்த பிரிவை சார்ந்தவராக இருந்தாலும், அவர்களுக்கு பழக்கமான பாரம்பரியத்தில் அவர்களை வேரூன்றி இருக்க செய்வார். ஆனால் அவர் வழக்கமாக ஒன்று அல்லது இன்னொன்றை செய்வார் என்று சொல்வது சரியாக இருக்காது. யோக சுவாமியிடம் “வழக்கமாக" என்று சொல்ல எதுவும் இருந்ததில்லை. அவரிடம் முன்பே தயார் செய்த பதில்கள் அல்லது கேள்விகள், பிரச்சனைகள் அல்லது சூழ்நிலைகளுக்கு உடனடி கையிருப்பு பதில்கள் இருந்ததில்லை. §

அவரது வரையறைகள் மற்றும் கருவிகளாக ஞானமும் தெய்வீக பார்வையும் விளங்கின. அவர் உங்களை ஒரு முறை அறிந்து இருந்தால், இன்னொரு முறை உங்களை புறக்கணிப்பார் அல்லது உங்களை மறந்திருந்து, உங்கள் பெயரையும் அல்லது தோற்றத்தையும் மறந்து இருப்பார். அவரை சந்தித்த ஒவ்வொருவரும், அவரிடம் எதற்காக வந்தார்களோ அதை பெற்றனர். சிலசமயம் யோக சுவாமி அமைதியாக அமர்ந்து இருப்பார், அதன் பிறகு, “எந்த உத்தரவும் வரவில்லை,” என்பார். அதாவது அந்த தருணத்தில் அவருக்கு உட்புற ஆணைகள், உட்புற ஆன்மீக வழிகாட்டல்கள் எதுவும் வரவில்லை என்பதை குறிப்பிட்டார். §

1961 ஆம் ஆண்டில் ஒரு நாள், யோக சுவாமி தனது குடிசையில் தனியாக இருந்த போது, அவருக்கு நெருக்கமான சீடராக இருந்த எஸ். சண்முகசுந்தரம் கொழும்பு வந்தார். அவர் நுழைந்த போது, குடிசை காலியாக இருந்ததால், சுவாமி வெளியே சென்று இருக்கலாம் என்று யோசித்துக்கொண்டு இருந்த போது, திடீரென்று சுவாமி திரைமறைவில் இருந்து, எப்போதும் நன்றாக முடிந்து வைத்து இருந்த நீளமான தலைமுடியை விரித்த வண்ணம் தோன்றினார். வார்த்தை எதுவும் பேசாமல், யோக சுவாமி நடனமாட தொடங்கினார், மற்றும் அவர் தன் உடலை உற்சாகத்துடன் இயக்கியதால், அவரது தலைமுடி அங்குமிங்குமாக அசைந்தது. சண்முகசுந்தரம் பிரமித்து நின்றார். சுவாமிகள் தனக்கு ஒரு விசேஷமான ஆசியை வழங்குகிறார் என்பதை அவர் அறிந்து இருந்தார். அவர் அந்த ஆசியை என்றுமே மறக்கவில்லை, மற்றும் அவர் அதைப்பற்றி பல வருடங்கள் கழித்து பேசியபோது, பிற்காலத்தில் தான் சுப்பிரமுனியசுவாமியின் சீடான அமெரிக்கா மற்றும் மொரிஷியஸ் பயணம் செய்து, அந்த பயணத்தின் போது யோக சுவாமியின் வாழ்க்கை மற்றும் போதனைகளை பகிர்ந்து கொண்டதால், யோக சுவாமி தனது நடனத்தின் மூலம் சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமியிடம் செல்லுமாறு தனக்கு நுணுக்கமாக வழிகாட்டியதாக சண்முகசுந்தரம் ஊகித்தார். §



*மார்கண்டுசுவாமி துறவறத்தை மேற்கொள்ள, யோக சுவாமியின் ஆசிகளுடன் தனது 60 ஆவது வயதில் பணி ஓய்வு பெற்றார். அவருக்காக யோக சுவாமி மண் மற்றும் கூரை வெய்த எளிமையான குடிசையை கட்டித்தந்து, அவர் அங்கே தனிமையில் வசிக்க அனுமதித்தார். யோக சுவாமி மார்கண்டுசுவாமிக்கு உணவை தயார் செய்து, அதை ஏழு கிலோமீட்டர் தொலைவில் இருந்த கைதடி வரை சுமந்து சென்று, தன் சீடனுக்கு சொந்த கைகளால் பரிமாறும் அளவிற்கு, சுவாமி தனது சீடனிடம் அதிக பாசத்துடன் இருந்தார்.*


........................§

**“சும்மா இரு”**

“நான் இறைவனை தேடி நல்லூருக்கு சென்றேன்,” என்று விளக்க தொடங்கிய யோக சுவாமி, “இறைவனை அறியவேண்டும் என்ற ஆசைமட்டும் என்னிடம் இருந்தது. அங்கே நான் எனது செல்லப்பனை சந்தித்தேன், மக்கள் அவரை விசரன் என்று அழைத்தார்கள். அவர் நான் நீ என்ற வேறுபாட்டை அனுமதிக்கவில்லை. அவரது அருளால், நானும் அவரும் ஒன்று என்பதை நான் தெரிந்துகொண்டேன், மற்றும் நான் நீ என்ற வேறுபாடு இல்லாதவனாக நானும் மாறினேன்.” §

செல்லப்பகுரு தன்னிடம் இருந்து ஆசைகள்,பற்றுகள் மற்றும் ஆணவம் அனைத்தையும் எடுத்துக்கொண்டதாகவும், அதன் பிறகு தான் *சும்மா* என்ற நிலைக்கு வந்ததாகவும் யோக சுவாமி கூறினார். இந்த சொல் அமைதியாக, எந்த கவலையும் இல்லாமல், அறியாமல் இருப்பதை குறிக்கிறது. அவர் அதை

“ஆக்டிவ் அவேர்னஸ்” (active awareness) என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். ஆன்மீக வாழ்க்கையின் தொடக்கமாக *சும்மா* இருக்கும் நிலை விளங்குகிறது. ஆசைகளும் பற்றுகளும் இருந்தால், *சும்மா* இருக்கும் நிலையை சில நொடிகளுக்கு மேல் தக்கவைத்துக் கொள்ள முடியாது, ஆனால் அதை நெருங்கியதும் ஆசைகள் மற்றும் பற்றுகள் கரைய தொடங்கி, இந்த நிலையை தக்க வைத்துக்கொள்வது மிகவும் எளிதாகி, சாட்சி அமைதியில் நன்றாக நிலைகொள்கிறது. சும்மா இருக்கும் நிலையை நீண்ட நேரம் தக்கவைத்துக் கொண்டதும், உயர்நிலை அனுபவங்கள் வரத்தொடங்கி, பரமாத்துமா மட்டும் எஞ்சும் வரை, அவை தங்களை சுத்தப்படுத்திக் கொள்கின்றன. அதே பலனை அடைய யோக சுவாமி இன்னொரு வழியை குறிப்பிட்டார்: “ ‘நான் சிவன்’ என்று தியானம் செய்தால், நிற்குண சிவபெருமானின் பண்புகள் தோன்றும்.” §



*ஒரு ஆசிரமமாகவும் இல்லாமல் ஒரு மடமாக இல்லாமல், வாழ்க்கையில் மனத்துறவை கடைப்பிடித்து, வயல்களில் இயற்கையுடன் வேலை செய்து, தீவிரமாக ஆன்மீக ஒழுக்கங்களை பின்பற்றி யாத்ரீகர்களுக்கு உணவுப்பொருட்களை வளர்க்கும் விவசாய சமூகத்தின் இளைஞர்களைக் கொண்டு ஒரு ஆன்மீக மையத்தை தொடங்கவேண்டும் என்று யோக*

*சுவாமிக்கு ஒரு கனவு இருந்தது. சுவாமி வாழ்ந்துகொண்டு இருக்கும் போதே நிலத்தை வாங்கி இருந்தாலும், 1965 ஆம் ஆண்டு, அவர் மறைவுக்கு பிறகு அந்த மையம் முழுமை பெற்றது.*

........................§

*சும்மா* இருக்கும் நிலையை அடைய விரும்பும் பல்வேறு அன்பர்கள் பின்பற்றுவதற்கு, சுவாமி பல்வேறு சாதனாக்கள், ஆன்மீக பயிற்சிகளை வழங்கினார். 1970 களின் தொடக்கத்தில் அளவெட்டியில் சிவாய சுப்பிரமுனியசுவாமியின் ஆசிரம திண்ணையில் கௌரிபாலாசுவாமி (ஜெர்மன்சுவாமி) அமர்ந்து கொண்டு, யாழ்ப்பாணம் வந்திருந்த இளம் அமெரிக்க சாதகர்களுக்கு இந்த கதையை கூறினார். இயல்பாக கதை சொல்லும் திறன் மற்றும் ஒரு வெள்ளை தாடியுடன், அவர் சுருட்டு புகைக்கும் முதியவராக கற்காரை தரையில் சம்மணம் போட்டு அமர்ந்துக்கொண்டு, அறிவுணர்வுடன் தான் நடத்திய போராட்டங்கள், தனது மனதை தானே அமைதிப்படுத்திக் கொள்ள மற்றும் தன்னை ஆன்மீக அனுபவத்தின் ஆழங்களுக்கு கொண்டு செல்வதற்கு, யோக சுவாமி மேற்கொண்ட தொடர் முயற்சிகளைப் பற்றி கூறினார். ஆனால் மனம் தனக்கென்று ஒரு வழியை வகுத்துக்கொண்டு இயங்கும் என்று அவர் கூறினார். “என் குரு குறிப்பிட்ட எண்ணங்கள் இல்லாத நிலையை என்னால் அடைய முடியவில்லை; என்னால் எனது மனதின் இயக்கங்களை குறைக்க முடியவில்லை.” §

அவர் இதை சொல்லிக்கொண்டு, தனது இளவயது பார்வையாளர்கள் பார்ப்பதற்காக, தனது வலது கையை தோள்பட்டை உயரத்திற்கு உயர்த்தினார். அவரது முன்னங்கையில், தெளிவற்ற முறையில் “சும்மா இரு" என்ற வாசகம் தமிழில் ஒரு அங்குல நீளத்திற்கு பச்சை குத்தப்பட்டு இருந்தது. ஆங்கிலம் பேசும் தாய்மார்கள், “பி ஸ்டில்” என்று பரிந்து பேசுவதை போல, தங்கள் சுட்டி குழந்தையை அமைதிப்படுத்த தாய்மார்கள் தமிழில் *“சும்மா இரு”* என்று கூறுவார்கள். “எனது குரு எனக்கு வழங்கிய சாதனாவை நான் தினமும் ஞாபகப்படுத்திக் கொள்ள, எனது கையில் இதை பச்சை குத்திக்கொண்டேன். நீங்கள் பின்பற்றுவதற்கு இரண்டு வார்த்தைகளை வழங்கிய குருவின் சக்தியையும், நீங்கள் அவற்றை நிறைவேற்ற உங்கள் வாழ்க்கை முழுவதையும் பயன்படுத்திக் கொள்வதைவும் கற்பனை செய்து பாருங்கள். அது தான் யோகசமையின் மகிமை.” §

“இறைவனின் இராச்சியம் உன்னிடத்தில் இருக்கிறது. அதன் மீது தியானம் செய்து மேலே செல்ல முயற்சி செய்,” என்று ஒருவருக்கு பரிந்துரைத்தார். இன்னொருவரிடம், “வேலையை செய்யாமல் வேலையை செய். வழிபடாமல் வழிபடு. சாப்பிடாமல் சாப்பிடு. சுத்தம் செய்யாமல் சுத்தம் செய். நடக்காமல் நட. இதை உன்னால் செய்ய முடியும் போது, நீ சும்மா இருக்கும் நிலையை அறிந்துக்கொள்வாய், மற்றும் மற்றவை அனைத்தும் உன்னை வந்து சேரும்.” §

ஒருவர் தனது வேலைகள் அனைத்தையும் இறைவனுக்கு செய்யும் சேவையின் வெளிப்பாடாக  செய்யவேண்டிய முக்கியத்துவத்தைப் பற்றி அவர் வழக்கமாக பேசுவார் மற்றும் அதற்கு சிவதொண்டு என்று பெயரும்

வழங்கினார். “மகனே, நீ எந்த பணியை செய்தாலும், அதை இறைவனுக்கு வழங்கும் ஒரு காணிக்கையாக இருக்கட்டும்.” அவர் வழக்கமாக ஒரு அன்பர் அல்லது குடும்பத்துடன் நடத்தும் தரிசன அமர்வுகளின் முடிவில், “இனி உங்கள் வேலைக்கு செல்லுங்கள்!” என்று அறிவுரை வழங்குவார். இது தொடர்பாக அவர் வழங்கிய குறிப்பு: §

> நாங்கள் சிவனடியார்கள். எங்களுக்கு ஒரு குறையுமில்லை. சிவதொண்டு செய்வதே எங்கள் தொழில். அதற்காகவே நாங்கள் பூமியில் வாழுகிறோம். சந்திரன் சிவதொண்டு ஆற்றுகின்றது. சூரியனும் ஏனைய கிரகங்களும் அத்திருப்பணியையே செய்கின்றன. தேவர்களும், அசுரர்களும், கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர்களும் அப்படியே தொண்டாற்றி வருகின்றனர். §
>
> அனைத்துஞ் சிவன் செயல். அவனன்றி அணுவும் அசையாது. நாம் இழந்து போவதுமொன்றுமில்லை. ஆதாயமாக்கிக் கொள்வதும் ஒன்றுமில்லை. இருந்த படியே இருக்கின்றோம். நமக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமில்லை. நமக்கு இதம் அகிதம் இல்லை. மரணம் பிறப்பில்லை. வேண்டுதல் வேண்டாமை இல்லை. மண்ணாதி ஆசையில்லை. மனமான பேய் இல்லை. காலதேச வர்த்தமானம் நமக்கில்லை. நாம் அனைத்துக்கும் சாட்சியாக விளங்குகின்றோம். ஓம் தத் சத் ஓம்.§

அவர் அடிக்கடி வழங்கிய இரண்டு “மருந்துகளில்" சிவ தொண்டு ஒன்றாக இருந்தது. இன்னொன்று சிவன் மீது தியானம் செய்யும், சிவ தியானமாக இருந்தது. “தவம்" என்ற பெயரில் பின்வரும் சிறிய உபதேசத்தில், யோக சுவாமி அதன் முக்கியத்துவத்தை விளக்குகிறார். §

> தவத்திலே மேம்பட்டவர்களைக்கூட இந்திரியங்கள் வரம்பு கடந்து இழுத்துச் செல்கின்றன. ஆதலால் அவற்றை வெல்வதற்குச் சிவதியானஞ் செய்க. அதனால் மாத்திரந்தான் புலன்களை தன் வசப்படுத்தத்தக்கது. ஆகவே இடைவிடாமற் தியானஞ் செய். §
>
> மனிதன் விடயங்களைக் கருதும் போதெல்லாம் பற்றுண்டாகிறது. பற்றுதலால் விருப்பம் உண்டாகிறது. விருப்பத்தாற் சினம் பிறக்கிறது. சினத்தால் மயக்கம். அம்மயக்கத்தால் தவறுதல் உண்டாகும். ஆதலால் உன்னைச் சிவத்தியானத்தால் காத்துக்கொள். §
>
> நாங்கள் எங்கள் சிறுமைக் குணத்தினால் இயல்பழிந்து தரும வழியினின்று தவறுகிறோம். தவறுதல் நீங்கித் திடமுண்டாகச் சிவத்தியானமே சிறந்த கருவியாகும். இந்த உலகத்தில் மிகுந்த செல்வமிருப்பினும், வானொரை ஏவல் கொள்ளக் கூடிய வல்லமையிருப்பினும் நாங்கள் புலன்களை அடக்கி யாளுதல் முடியாது. ஆதலால் திருவருளை முன்னிட்டு மனத்தைப் புலன்வழிச் செல்லாமல் அடக்கியாள். §

இது தான் தவமென்று பெரியோர் சொல்வர், அதைவிடுத்து இடம்பமான வேள்வி முதலியவை செய்வதால் திடமுண்டாக மாட்டாது. §

யோக சுவாமி ஒரு ஒழுங்குமுறையுடன் வகுப்புகள், உரைகள் அல்லது கருத்தரங்குகளை நடத்தியது இல்லை, ஆனால் அவர் தினமும் தனிச்சையுடன் காலையில் தனது குடிசையில், மாலையில் பஜார் அல்லது தெருக்களில், அல்லது அவர் எதிர்பாராமல் வருகை தரும் ஒரு அன்பரின் வீட்டில் கற்றுத் தருவார். அவர் சொன்ன சொற்கள் வழக்கமாக ஒருவரின் தேவைகள் மற்றும் பிரச்சனைகள் பற்றியதாக இருந்தாலும், அங்கிருந்த எல்லோரும் அதனால் பயன் அடைந்தனர். §

பலர் உலக வாழ்க்கையை துறந்து, வனத்தில் சென்று தியானம் செய்யும் விருப்பத்துடன் யோக சுவாமியிடம் வருவார்கள். சுவாமி அவர்களில் ஒன்று அல்லது இரண்டு அன்பர்களுக்கு மட்டும் ஆசிகளை வழங்கி, மற்றவர்களிடம் உலகில் அவர்களது *ஸ்வதர்மத்தை* நிறைவேற்ற ஆணையிட்டு, அவர்களுக்கு நன்றாக தெரிந்ததை பற்றின்றி செய்ய உத்தரவிடுவார். ஒருவர் தனது நடவடிக்கைகளை புனிதமானதாகவும் லௌகீக சார்ந்ததாகவும் பிரித்து பார்ப்பது தவறு என்று புரிந்துக்கொண்டு, வாழ்க்கை முழுவதையும் ஆன்மீகமாக கருதுவதே அவரது அணுகுமுறையாக இருந்தது. அவர் இந்த தகவலை, ஆன்மீக வாழ்க்கையில் அதிகமாக ஈடுபடவேண்டும் என்று தங்கள் வேலைகளை துறக்கும் நோக்கத்துடன் தன்னை நாடிவரும் பல ஆன்மாக்களிடம் உறுதியாக தெரிவிப்பார். §

அவரிடம் ஒரு முறை ஒரு இளைஞன் உலக வாழ்க்கையை துறந்து, ஆத்ம ஞானம் பெறும் முயற்சிக்கு அனுமதி கோரும் நோக்கத்துடன் வந்தான். யோக சுவாமி எதுவும் பேசாமல் அமர்ந்து இருந்தார். இந்த உலகில் தான் அதை மட்டுமே அடைய விரும்புவதாகவும், இந்த பணியை தொடங்கும் முன்பாக தனது குருவிடம் ஆசியை பெற விரும்பி வந்ததாக, அவன் தொடர்ந்து குருவிடம் மன்றாடினான். யோக சுவாமி அமைதியாக அமர்ந்து இருந்தார். அவன் சற்குருவின் அருள் இல்லாமல் தன்னால் வாழமுடியாது என்று தொடர்ந்து கெஞ்சிக்கொண்டு, தீவிரமாக மன்றாடிக்கொண்டு இருந்தான். சுவாமி தனக்கு ஒப்புதல் வழங்கவில்லை என்றால் அவன் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்தில் இருந்தான். அவன் நீண்டநேரம் மன்றாடிக்கொண்டும் கெஞ்சிக்கொண்டும் இருந்தான். அந்த அறையில் சுவாமி தான் மட்டுமே தனியாக இருந்ததைப் போல, பதில் ஏதும் அளிக்காமல் இருந்தார். இறுதியாக அந்த இளைஞன் கிளம்பினான். §

அந்த இளைஞனின் மனைவி இன்னொருவருடன் சென்று விட்டதால், காட்டில் சென்று சென்று தனிமையில் வாழ்ந்தால் அவமானத்தில் இருந்து தப்பிக்கலாம் என்ற அவன் எண்ணத்தில் இருந்ததாகவும், யோக சுவாமி மற்ற சீடர்களிடம் விளக்கம் அளித்தார். “ அவன் இயல்பாக வளர்ச்சி பெற்று இருந்தால், ஆசிகளை வழங்குவதைத் தவிர எனக்கு வேறெந்த வழியும் இருந்திருக்காது.” §

அன்பர்கள் மிகவும் தீவிரமான விரதங்களை மேற்கொண்டு தங்கள் உடலை வருத்திக்கொண்டு இருந்தால், சுவாமி அந்த விரதத்தை நிறுத்துமாறு வலியுறுத்துவார். “உடல் கோயிலை போன்றது, மனம் கருவறை போன்றது. நீங்கள் அவற்றை சுத்தமாகவும் தெளிவாகவும் வைத்து இருக்கவேண்டும். உங்கள் வேலையை செய்ய அவை உங்களுக்கு தேவைப்படுகின்றன. அவற்றை அழிக்கவோ துன்புறுத்தவோ வேண்டாம்.” அவர் தனது காலடியில் அமர்ந்து இருந்த ஒரு சீடனிடம் திரும்பி, இவ்வாறு கூறினார்:§

நீ ஆன்மீக பாதையில் இருப்பதாலும், ஆன்மா இருப்பதை உணர தொடங்கி இருப்பதாலும், நீ இந்த அறையில் நுழைந்ததும், நான் குளிர்ச்சி மற்றும் புத்துணர்ச்சியை உணர்ந்தேன். சிலர் வந்ததும் நான் வெப்பத்தை உணர்கிறேன், மற்றும் அறையில் காற்றோட்டம் இல்லாத உணர்வு எனக்கு ஏற்படுகிறது. ஏனென்றால் அவர்கள் இங்கே வஞ்சனை செய்யும் எண்ணத்துடன் வந்திருந்து, என்னை ஏதாவது ஒரு வகையில் ஏமாற்ற முயற்சி செய்கிறார்கள். நீ ஆன்மீக வேட்கையுடன் எந்த வித சுயநலமும் இல்லாமல் வந்திருக்கிறாய். நீ இங்கே அமைதியாக அமர்வதற்காக வந்து இருக்கிறாய். என்னிடம் இருக்கும் அமைதியை உன்னால் உணரமுடிகிறது. அதற்காகத்தான் நீ இங்கே வந்து இருக்கிறாய். ஆன்மீக பாதையில் இருப்பவர், அவரைப் போன்று இன்னொருவருடன் அமர்வது இருவருக்கும் நல்லது. §

இறைவனுக்கு முன்பாக இருக்கும் உணர்வை, நான் பெரும்பாலான சமயங்களில் உணர்ந்து இருக்கிறேன். நீ இறைவனுக்கு முன்பாக இருக்கும் உணர்வை, ஒரு குழந்தையை போல கருதி, அதற்கு தேவையானது அனைத்தையும் வழங்கி பேணி வளர்க்க வேண்டும். நீ அதை ஒரு குழந்தையை போல கருதினால், அதன் ஒவ்வொரு ஆசையையும் நிறைவேற்றி, அதன் விருப்பப்படி செய்வதைத் தவிர உன்னிடம் வேறு வழி ஏதும் இருக்காது. தாய் தன் குழந்தைக்கு ஒவ்வொரு நொடியும் என்ன தேவை என்பதை அறிந்து இருப்பதை போல, அது அழும் காரணத்தை அறிந்து அதற்கு தேவையானதை தருவதைப் போல, இறைவனின் இருப்பும் தன்னைப்பற்றி பக்தனுக்கு உணர்த்துகிறது. உனக்குள் வளர்ந்துக்கொண்டு இருக்கும் இறைவனின் விழிப்புணர்வை, நீ கவனமாக பேணி வளர்க்க வேண்டும். நீ அதை தொடர்ந்து செய்து வந்தால், உனக்கும் தெரியாமல், நீ மறைந்துவிடுவாய், இறுதியில் எஞ்சுவது பரமாத்துமா மட்டுமே. §

யோக சுவாமி அடிக்கடி சிவபெருமானை பற்றி, திருவடிகளை வணங்குவதை பற்றி, ஆன்மீக ஒழுக்கம் மற்றும் அன்பைப் பற்றி பேசிக்கொண்டு இருப்பார். இதனை “ ஈசனின் திருவடியை வழிபடுங்கள்,” என்ற தலைப்புடைய பாடலில் காணலாம். §

நீங்கள் ஈசனின் திருவடிகளை தொடர்ந்து வழிபட்டு வந்தால், உங்களுக்கு அமைதி கிடைக்கும். அதனால் நீங்கள் காண்பது அனைத்தும் நிலையற்றது என்பதை உணர்ந்துக்கொள்வீர்கள். அது உடலை அடக்கும் வழியை காண்பிக்கும். நீங்கள் ஈசனின் திருவடிகளை தொடர்ந்து வழிபட்டு வந்தால், உங்களுக்கு அமைதி கிடைக்கும். §

அது புலன்வழி பாதையில் செல்லும் மனதின் மீது ஆட்சி செய்ய, உங்களுக்கு துணையாக இருக்கும். அது மீண்டும் மீண்டும் ஐந்து எழுத்துகளை உங்கள் இதயத்தில் ஒலிக்கச் செய்யும். நீங்கள் ஈசனின் திருவடிகளை தொடர்ந்து வழிபட்டு வந்தால், உங்களுக்கு அமைதி கிடைக்கும்.§

அது உறுதியாகவும் மெதுவாகவும் சினத்தை அழித்து விடும். அது தவறுகள் அனைத்தையும், தனக்கு கிடைத்த வரங்களாக ஏற்றுக்கொள்ளும். நீங்கள் ஈசனின் திருவடிகளை தொடர்ந்து வழிபட்டு வந்தால், உங்களுக்கு அமைதி கிடைக்கும்.§

அது மூன்று ஆசைகளையும் நீக்கி விரட்டி விடும். அது என்றுமே வராமலும் செல்லாமலும் இருக்கும் திருவடியை வெளிப்படுத்துகிறது. நீங்கள் ஈசனின் திருவடிகளை தொடர்ந்து வழிபட்டு வந்தால், உங்களுக்கு அமைதி கிடைக்கும்.§

அது உங்களை நிரந்தரமாக சும்மா இருக்கும் நிலையில் நிலைக்க செய்கிறது. அது ஏழைகள் மீது பரிவை உணர, உங்களுக்கு உதவி செய்கிறது. நீங்கள் ஈசனின் திருவடிகளை தொடர்ந்து வழிபட்டு வந்தால், உங்களுக்கு அமைதி கிடைக்கும்.§

அது உங்களை வெளிப்படையான வெறுமையில் அமர்த்தி, வேதனைகள் அனைத்தையும் நீக்குகிறது. அது வேதாந்தம் மற்றும் சித்தாந்தத்தை ஒன்றாக பார்க்கிறது. நீங்கள் ஈசனின் திருவடிகளை தொடர்ந்து வழிபட்டு வந்தால், உங்களுக்கு அமைதி கிடைக்கும்.§

அது கட்டுப்படுத்த முடியாத நிலையற்ற மனதை கட்டுப்படுத்துகிறது. அது இரவு அல்லது பகல் இல்லாத ஒரு இடத்தில் உங்களுக்கு பார்வையை வழங்கும். நீங்கள் ஈசனின் திருவடிகளை தொடர்ந்து வழிபட்டு வந்தால், உங்களுக்கு அமைதி கிடைக்கும்.§

யோகநாதன் எழுதிய இந்த பாடல் நேர்மையான வழியை காண்பிக்கும். அது உங்கள் வாழ்நாள் முழுவதும் தேனமுதத்தை வழங்கிக் கொண்டு இருக்கும். அது "*அஹம் பிரம்மாஸ்மி*" என்ற கிரிடத்தையும் வழங்கும் என்பது உங்களுக்கு தெரியும். நீங்கள் ஈசனின் திருவடிகளை தொடர்ந்து வழிபட்டு வந்தால், உங்களுக்கு அமைதி கிடைக்கும்.§

யோக சுவாமிக்கு ஒரு நெருக்கமான சீடனாக இருந்த மார்கண்டுசுவாமி இருந்தார். அவர்கள் இருவரும் முதல் முறையாக 1931 ஆம் ஆண்டு சந்தித்தனர். வாழ்நாள் பிரம்மச்சாரியாக இருந்த மார்கண்டுசுவாமி, தனது தொழில் வாழ்க்கையின் மத்தியில் துறவறம் மேற்கொள்ள விரும்பினார். ஆனால் அவரது நில அளவாய்வாளர் வேலையை தொடருமாறு யோக சுவாமி கூறினார். இறுதியாக மார்கண்டுசுவாமி 60 வயதை எட்டிய போது, கைதடி கிராமத்தில் ஒரு சிறிய தென்னந்தோப்புக்கு மத்தியில், கற்காரை தரை மற்றும் சுவர்கள் மற்றும் பனை ஓலைகளில் பின்னிய கூரையுடன் ஒரு அறை மற்றும் ஒரு திறந்த திண்ணையுடன் ஒரு *குடிரை* (குடிசையை) யோக சுவாமி ஏற்பாடு செய்து, மார்கண்டுசுவாமியை வியக்க வைத்தார். சுவாமி தனது சீடனை அங்கே வசிக்க செய்து, பல ஆண்டுகள் கவனித்தும் வந்தார். §

தனது குரு சொன்ன வார்த்தைகளை மட்டுமே சொல்வது, அந்த சீடனின் முக்கியமான சாதனாவாக இருந்தது. அது மிகவும் கடினமான சாதனாவாக கருதப்பட்டது. அதனால் அவருடன் ஒரு மணி நேரம் இருந்தவர்கள், "யோக சுவாமி இவ்வாறு கூறினார்..." "எங்களுக்கு யோக சுவாமி கற்றுத்தந்த..." போன்ற வாக்கியங்களை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டு இருந்தார்கள். அவருக்கு ஆழமான ஞானம் வழங்கப்பட்டு இருந்தாலும், அவர் தனது சொந்த ஞானத்தை வெளிப்படுத்தாமல் இருக்கும் ஒழுக்கத்தின் மீது மிகவும் விசுவாசமாக இருந்தார். அவர் தனது திண்ணையில் நின்றுக்கொண்டு அல்லது விதானம் மற்றும் நான்கு கால்களுடன் சிறிது உயர்வாக இருந்த வேப்பமர பலகையில் அமர்ந்துகொண்டு, யோக சுவாமி தனக்கு வழங்கிய பின்வரும் சாதனாவைப் பற்றி உற்சாகமாக விளக்குவார். அது அன்பர்கள் மத்தியில் மனக்கட்டுப்பாட்டை ஊக்குவிக்க, அவர் பயன்படுத்திய மறைமுக வழியாக இருந்தது.: §

> ஒரு இடத்தில் உட்கார். அசையாதே. உன் மனம் எங்கே செல்கிறது என்று கவனி; அந்த நபரை கவனி. அவர் முதலில் கண்டிக்கு, பின்னர் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் செல்வார். அவர் எல்லா இடத்திற்கும் ஒரு நொடிப்பொழுதில் சென்று வந்து விடுவார். அவர் செல்லும் ஒவ்வொரு இடத்தையும் கவனத்தில் வைத்துக்கொள். அவர் நூறு இடங்களுக்கு சென்று, அதில் உனக்கு தொண்ணூற்று ஒன்பது மட்டுமே நினைவில் இருந்தால், நீ தோற்று விட்டாய். நீ இந்த சாதனாவில் முன்னேறும் போது, உனக்கு உட்புறத்தில் இருந்து வரும் தகவல்களை கிரகித்துக் கொள்வாய். உனக்கு உட்புறத்தில் இருந்து தகவல்கள் வரும் போது, அறியவேண்டிய நபர்களுக்கு நீ அவற்றை வழங்க வேண்டும். அது அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். §

ஒரு மகாசிவராத்திரி மாலை பொழுதில், மார்கண்டுசுவாமியின் குடிசைக்கு யோக சுவாமி திடீரென்று வருகை தந்து, வயதான சாதுவிடம், "நாம் தியானம் மட்டுமே செய்து, மகாசிவராத்திரி விரதத்தை அனுசரிப்போம்." அன்று இரவு அவர்கள் பூஜை எதையும் செய்யாமல் நற்சிந்தனை, ஆகமங்கள் மற்றும்

புராணங்களை பாராயணம் செய்யாமல் முழுமையான அமைதியில் கழித்தனர். இதைப்பற்றி தி. சிவயோகபதி வழங்கும் பகிர்வு:§

> மார்கண்டுசுவாமி மிகவும் குறைவாக பேசி, சமூக வாழ்க்கையை தவிர்த்தார். அவர் நற்சிந்தனை பாடல்களின் தொகுப்பு முழுவதையும் மனப்பாடமாக அறிந்து இருந்தார். மேலும் இந்து சமயம் மற்றும் ஆன்மீகத்தை பற்றி பேசும் போது, எப்போதும் நற்சிந்தனையை மேற்கோள்காட்டி பேசுவார். “உங்கள் எல்லோருக்கும் மார்கண்டுசுவாமி நான் நியமித்த திசைகாட்டியாக விளங்கி, எல்லோருக்கும் ஆன்மீக பாதைகளை காட்டுவார்,” என்று யோக சுவாமி தனது சீடர்களிடம் கூறியதாகவும், அது மார்கண்டுசுவாமியின் நில அளவாய்வாளர் பணியை மறைமுகமாக குறிப்பிடுவதாகவும் இருந்தது. மே 29, 1984 அன்று மார்கண்டுசுவாமி மகாசமாதி அடைந்தார். §

சந்தையில் சுத்தமான உணவுப்பொருட்களை வாங்குவது, அன்பர்களின் வீடுகளுக்கு செல்வது, அவர்கள் வாழ்க்கையில் கலந்து கொண்டு தனது ஆசிகளின் மூலம் அவர்களை மேம்படுத்துவது என்று யோக சுவாமி கருனையுள்ளம் படைத்த முனிவராக இருந்தார். 1950 மற்றும் 60 களில் தான் பெற்ற அனுபவத்தை பற்றி தி. சிவயோகபதி இங்கே விளக்குகிறார்: §

> சுவாமி சங்கரத்தையில் இருந்த “தில்லை வாசா" என்று எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து, ஒரு நாள் முழுவதும் தங்கி விட்டு செல்வார். அவர் சந்தையில் காய்கறிகளை வாங்கிவிட்டு, எங்கள் வீட்டிற்கு காலை 8 மணி அளவில் வருவார். 8:30 மணி அளவில், எங்கள் ரோவர் வாகனத்தில் சுவாமி எனதருமை தந்தை மற்றும் நான் திருவடி நிலை என்ற பெயரில் அருகில் இருந்த கடற்கரைக்கு செல்வோம். எல்லோரும் கடலில் குளித்துவிட்டு வீடு திரும்புவோம். வீடு திரும்பியதும் நாங்கள் மீண்டும் கிணற்று தண்ணீரில் குளிப்போம். அதன் பின்னர் நாங்கள் எங்கள் பூஜை அறையில் கூடுவோம். சுவாமி அறையின் மத்தியில் அமர்ந்து இருக்க, சுவாமி வழங்கிய அறிவுறுத்தலின் படி, எல்லோரும் சிவபுராணங்களில் இருந்து பாடல்களை பாடிக்கொண்டு பிரார்த்தனை செய்வோம். இதற்கிடையில், சுவாமி காலையில் கொண்டு வந்திருந்த பச்சை காய்கறிகளை பயன்படுத்தி, எனது தாயார் தையல்நாயகி, எங்களுக்காக மதிய உணவை தயார் செய்துக்கொண்டு இருப்பார். உணவு சாப்பிடுவதற்கு முன்பாக, சுவாமி உணவை ஆசிர்வதிக்கும் (போஜன) பாடலை பாடுவார், அதன் பிறகு நாங்கள் எல்லோரும் அவருடன் அமர்ந்து உணவு சாப்பிடுவோம். உணவு அருந்திய பிறகு, “தில்லைநாயகி தாயே! நீ இந்த யாசகனுக்கு வயிறார ருசியான உணவை வழங்கி இருக்கிறாய். வாழ்க வளமுடன்!” என்று சுவாமி என் தாயாரை பாராட்டி ஆசிகளையும் வழங்குவார். §

பக்திமான்கள் தங்கள் இடத்திற்கு சுவாமி வரவேண்டும் என்பதற்காக, தங்களால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டனர். கே.கே.எஸ். சாலையின் தொடக்கத்தில் இருந்து சுமார் 200 கஜ தூரத்தில் பிரபல வி.எஸ்.எஸ்.கே. சைவ உணவகம் இருந்தது. அந்த கடையில் காபி குடிக்க அல்லது மதிய உணவு சாப்பிட வந்த சுவாமி மீது, அதன் முதலாளி திரு. வி.எஸ்.எஸ். குமாரசாமிக்கு ஒரு விசேஷ மரியாதை இருந்தது. கே.கே.எஸ். சாலையின் வடக்கில் சுப்ரமணியம் மருத்துவ கடையைப் (வி.எஸ்.எஸ்.கே. கஃபேக்கு அடுத்த கடை) போன்ற மூலிகை மருந்துப்பொருட்கள் நிரம்பிய கடைகள் இருந்தன. அந்த கடைகளில் சுவாமி சிறிது நேரம் தங்கி அன்பாக சில வார்த்தைகளை பேசிவிட்டு செல்வார். §

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன்-தையல்நாயகி சிவன்கோயிலுக்கு செல்லும் முன்பாக, தெருவின் அதே வரிசையில், தாமோதர விலாஸ் என்ற பிரபல சைவ உணவகம் இருந்தது. அதன் நிறுவுனராக தாமோதர ஐயர் இருந்தார். அவரது உணவகத்தில் யோக சுவாமி மதிய உணவு சாப்பிடுவதை ஊக்குவித்தார். அவர் தனது அணுகுமுறையில் சாமர்த்தியாக இருந்தார். அவர் உணவகத்திற்கு அருகில் இருந்த ஒரு காலியான கடை, யோக சுவாமியின் சீடர் திரு. எஸ். அர். கந்தையாவிற்கு சொந்தமாக இருந்தது. யோக சுவாமி தினமும் மேற்கொண்ட நடைப்பயணங்களின் போது தங்கி ஓய்வெடுக்க, மற்றும் குறிப்பாக அந்த உணவகத்தில் இலவச மதியஉணவை உண்ட பிறகு இளைப்பாறுவதற்காக, அந்த இடம் எப்போதும் தயார் நிலையில் ஒரு எளிமையான படுக்கையுடன் இருந்தது. §

**பூமிக்கு அருகாமையில்**

சிவ தொண்டன் நிலையத்தின் இரண்டாவது கிளையை, மட்டக்களப்பு மாவட்ட சித்தாண்டிக்கு அருகில் செங்கலடியில் நிறுவவேண்டும் என்று யோக சுவாமி 1960 ஆம் ஆண்டு, தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார். 1910 ஆம் ஆண்டு, அவர் மேற்கொண்ட கதிர்காம யாத்திரையின் போது, அந்த ஊரில் திரு. வேலுப்பிள்ளையின் வீட்டில் அவர் இரண்டு-மூன்று நாட்கள் தங்கி இருந்ததால், அந்த ஊர் அவருக்கு விசேட முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. சுவாமி மட்டக்களப்பில் இருந்த போது, சித்தாண்டி முருகன் கோயிலுக்கு செல்வதை வழக்காக கொண்டிருந்தார். அவரது விருப்பத்திற்கு ஏற்ப, அந்த இடத்தில் 1965 ஆம் ஆண்டில் அந்த சமூகம் ஒரு நிலையத்தை அமைத்தது. அது தொடங்கப்பட்ட நாளில், அவரது திருவடிகளை அவரது சீடர்கள் கே.கே.எஸ். சாலையில் இருந்த நிலையத்தில் இருந்து 300 கிலோமீட்டர் தூரம் ஊர்வலமாக எடுத்து சென்றார்கள். நிலையத்தில் நடந்த நடவடிக்கைகள் பற்றிய ஒரு குறுகிய பார்வையை தி. சிவயோகபதி வழங்குகிறார். §

செங்கலடியில் ஒரு நிலையத்தை கட்டவேண்டும் என்று சுவாமி முடிவு செய்த போது, அதற்கு சுவாமியின் சில சீடர்கள் நிலத்தை தானமாக

வழங்கினார்கள். நிலையத்தை கட்டி முடித்த பிறகு, நெல் சாகுபடி செய்வதற்கு நெல்வயல்களும் தானமாக வழங்கப்பட்டன. சந்தசுவாமி நிலையத்தை நிர்வகித்துக்கொண்டு, நெல்வயல்களிலும் வேலை செய்தார். அவர் நெல்வயல்களை உழுவதற்கு, நான்கு சக்கர டிராக்டரை பயன்படுத்துவார். 1967 ஆம் ஆண்டில், என் தந்தை அ. தில்லையபலத்துடன் அந்த நிலையத்தை சென்று பார்க்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்த போது, சந்தசுவாமி தனது தினசரி சிவதொண்டில் தீவிரமாக இருந்ததை கவனித்தேன். 1910 ஆம் ஆண்டு, காட்டில் ஒதுக்குபுறமாக இருந்த கதிர்காம சந்நிதிக்கு தான் பயணம் மேற்கொண்ட போது சுவாமி பல வேதனைகளை சந்தித்து இருந்ததால், அங்கே பயணம் மேற்கொள்ளும் யாத்ரீகர்கள் மீது அவர் ஆழ்ந்த அனுதாபத்துடன் இருந்தார். அதனால் கதிர்காமம் கோயிலுக்கு யாத்திரை செல்பவர்களுக்கு, நிலையம் உணவு மற்றும் தங்கும் இடத்தை வழங்கவேண்டும் என்பது யோக சுவாமியின் நோக்கமாக இருந்தது. யோக சுவாமியின் கனவை நனவாக்க ஸ்ரீமத் சந்தசுவாமி (சோல்பரி சுவாமி) கடினமாக முயற்சி செய்தார், ஆனால் மக்களிடம் இருந்து போதிய வரவேற்பு கிடைக்காததால் அவரது முயற்சியில் வெற்றி கிடைக்கவில்லை. ஆனால் அந்த நிலையத்தில் 1965 முதல் 1977 வரை, சந்தசுவாமி சேவை செய்த போது, நெல்பயிர் சாகுபடி மற்றும் நடந்தது. §

யாழ்ப்பாண மையத்தைப் போல, செங்கலடியில் இருந்த நிலையமும் கடினமான விதிமுறைகளுடன் தியான மண்டபம் மற்றும் பிரார்த்தனை கூடத்துடன் அமைக்கப்பட்டது. ஆனால் மட்டக்களப்பு மையம் நன்றாக சேவை செய்து, ஏழை எளிய மக்களுக்கு உணவு அளிக்க பயிர் சாகுபடி செய்யவேண்டும் என்று யோக சுவாமி வலியுறுத்தி இருந்தார். இந்த இடத்தின் மீது யோக சுவாமிக்கு இருந்த விசேஷ கனவைப் பற்றி இந்துமதி அம்மா விளக்குகிறார். §

யாழ்ப்பாண சிவ தொண்டன் நிலையம் தியானம் செய்வதற்கு உகந்ததாக இருந்ததை போல, செங்கலடி சிவ தொண்டன் நிலையம் சேவை செய்யும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. யோக சுவாமியின் விருப்பப்படி தயார் செய்யப்பட்ட கட்டிட வரைபடைத்தில், மேற்கே கோயிலைப் போன்ற இன்னொரு கட்டிடம் இருந்தது. அது மனத்துறவுடன் வாழும் பிரம்மச்சாரிகள் மற்றும் சந்நியாசிகள் தங்குவதற்காக கட்டப்படவிருந்தது. சமய அறிவு மற்றும் மற்ற கலைகளில் தேர்ச்சி பெற்று இருந்து, நல்ல நடத்தை மற்றும் நல்ல அனுபவத்துடன் இருந்த சந்நியாசிகள், இங்கே தங்கியிருந்து அவர்களது அனுபவத்தை மற்றவர்களுக்கு கற்று தர திட்டமிடப்பட்டிருந்தது.§

மக்களிடம் இருந்து பெறப்பட்ட செழிப்பான நிலங்களில், சிப்பந்திகள் தங்கள் கடினமான உழைப்பினால் உணவு சாகுபடி செய்து, மற்றவர்களுக்கு பயனுள்ள வாழ்க்கையை வாழ்வதே நோக்கமாக

இருந்தது. இந்த சிவ தொண்டு அவர்களது ஆணவத்தை அழிக்க உதவி செய்து, “நான்" என்பதை மறக்க செய்து “நாங்கள்" என்பதில் இணக்கத்துடன் வாழ உதவி செய்தது. §

இந்த சூழ்நிலையில் வளர்பவர்கள் நல்ல சமய ஒழுக்கம் மற்றும் மன அமைதியின் வலிமையை வெளிப்படுத்தும் தோற்றத்துடன் இருப்பார்கள் என்று சுவாமி கூறினார். அவர்கள் மண்டபத்தில், மரத்தடியில் மற்றும் வயல்களுக்கு மத்தியில் அமர்ந்து தியானம் செய்து, தாங்கள் அமரும் போதும், நடக்கும் போதும் வேலை செய்யும் போதும் தங்களிடம் இருக்கும் அமைதியின் மூலம் உலகை வழிகாட்ட வேண்டும் என்று அவர் கனவாக இருந்தது. ஆத்ம ஞான வேட்கையில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள தயாராக இருப்பவர்களை பொறுத்து, யோக சுவாமிக்கு தோன்றிய இந்த சிந்தனையின் நிறைவேற்றம் அடங்கி இருக்கிறது. பிரச்சாரத்தில் ஈடுபடுவது, மக்களை வற்புறுத்துவது அல்லது சொற்பொழிவுகள் நிகழ்த்துவது, சிவ தொண்டனின் நோக்கமல்ல என்று யோக சுவாமி தெரிவித்தார். §

Page 33 URL:
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/33_yoga04_05.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## பதினெட்டாவது அத்தியாயம்

# யோக சுவாமியின் கடைசி காலம்


1960 களில், சுவாமியின் கடைசி காலத்தில், இலங்கையில் இருந்த தமிழர்கள் மற்றும் சிங்களர்களுக்கு இடையே இனப்பிரச்சனை நடந்துகொண்டு இருந்தது. அந்த பகை உணர்ச்சி பல நூற்றாண்டுகளாக இருந்து வந்தது. அந்த நாட்டில் சிங்கள புத்தர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள். அந்த சமயத்தில் அவர்கள், சிங்கள மொழியை நாட்டின் ஆட்சி மொழியாக மாற்ற முயற்சி செய்தனர். இந்த முயற்சி மற்றும் அதன் விளைவுகளால், நாட்டின் பல்வேறு பகுதிகளில் கலவரம் மூண்டது. இந்த மோதல்கள் பல வருடங்களுக்கு தொடர்ந்துக்கொண்டு இருந்தன. §

பிப்ரவரி 21, 1961 அன்று யோக சுவாமி வழக்கம் போல, காலையில் ஆசிரமத்தில் இருந்து கிளம்பி வண்ணார்பண்ணைக்கு நடந்து சென்றார். அவர் டச்சு கோட்டையை கடந்து செல்லும் போது, அங்கே மக்கள் தெருக்களில் சண்டையிட்டுக்கொண்டு இருந்தார்கள், மற்றும் அவர் தன் கண் முன்னே வன்முறையையும் இரத்தம் சிந்துவதையும் கண்டார். அவர் கம்பீரமாக அந்த சண்டையில் தலையிடாமல் திரும்பி, தனது ஆசிரமத்தை நோக்கி நடக்குத் தொடங்கி, மதியம் சென்றடைந்தார். §

அவர் வழக்கமாக தனது குடிசைக்கு வந்ததும், சாலையின் மறுபுறத்தில் இருந்த கிணற்றில் தன் கால்களை கழுவி, கைகள் மற்றும் முகத்தை அழுத்தி தேய்த்துவிட்டு வருவார். அந்த கிணற்றில் தான் ஆசிரம வளாகத்தில் நுழையும் எல்லா அன்பர்களும் தங்களை சுத்தப்படுத்திக்கொள்வார்கள். ஆனால் அன்று, அவர் வாகனத்தில் இருந்து இறங்கி, தனது குடிசையின் வாசலை தாண்டி இருந்த புல்வெளியில் சுமார் 60 கஜ தூரம் நடந்து சென்று, மாட்டு கொட்டகைக்குள் நுழைந்தார். அங்கே அவரது மாடு வள்ளி கட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்த மாடு கடந்த சில நாட்களாக முரட்டுத்தனமாக நடந்துகொள்வதால், அதற்கு அருகில் செல்ல வேண்டாம் என்று திருநாவுக்கரசுவின் மகள் எச்சரித்து இருந்தாலும், அவர் வழக்கமாக செய்வதை போல, அதை அன்பாக தடவிக்கொடுத்து, அதற்கு சில

வாழைப்பழங்களை வழங்கினார். விளையாடிக்கொண்டு இருக்கும் கால்நடைகள் வழக்கமாக செய்வதை போல, வள்ளி தன் முகத்தை சுவாமியை நோக்கி திருப்பி, தனது ஆயிரம் பவுண்ட் உடலமைப்பின் எடையுடன் அவரை தாக்கியது. எண்பது வயது நிரம்பி பலவீனமான உடலுடன் இருந்த சுவாமி தூக்கி எறியப்பட்டார். அவரால் எழுந்திருக்க முடியவில்லை. தான் தரையில் விழுந்ததால், தனது இடது இடுப்பு எலும்பு முறிந்ததுவிட்டது என்பதை அவர் பின்னர் தெரிந்துகொண்டார். §

அதிஷ்டவசமாக, சுவாமியை காண்பதற்காக ஆசிரமத்தில் காத்திருந்த திரு. பாலகுமார் மற்றும் அவரது மனைவி, விபத்தை பார்த்ததும் சுவாமியை நோக்கி விரைந்து வந்தனர். அவர்கள் பக்கத்து வீட்டில் இருந்தவரை அழைத்து, வங்கியில் செய்துக்கொண்டு இருந்த திரு. திருநாவுக்கரசு மற்றும் புத்தகக்கடையில் வேலை செய்த திரு. திருவேந்திரத்திற்கும், இந்த செய்தியை அவசரமாக தெரிவிக்குமாறு கூறினார்கள். திருவேந்திரம் திரு. கே. பிரம்மாநந்தாவிற்கு தகவல் தெரிவித்தார். எல்லோரும் ஆசிரமத்திற்கு விரைந்தனர். §




*யோக சுவாமி விபத்தை சந்திக்கும் வரை, தனது வாழ்நாளில் பெரும்பாலும் சுதந்திரமாக சுற்றித் திருந்து, அவருக்கு பிடித்தமான இலங்கையின் வீதிகளில் நாள்முழுவதும் நடந்துகொண்டு இருப்பார். ஆனால் அவர் கீழே விழுந்ததால், 88 வயதில் அவரது இடுப்பு எலும்பு முறிந்தது மற்றும் அவர் சக்கர நாற்காலியை பயன்படுத்த வேண்டியதாயிற்று. இதன் காரணமாக, அன்பர்கள் அவரை எந்த தயக்கமும் இன்றி சந்திக்க முடிந்தது.*

••••••••••••••••••••••••§

அவர்கள் சுவாமியை ஒரு தற்காலிக தூக்குப் படுக்கையில் வைத்து, திரு. பிரம்மாநந்தாவின் வேன் வரை சுமந்து சென்று, பின்னர் யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு விரைந்தனர். முன்பே தகவலை பெற்ற திரு. அ. தில்லையம்பலம் மருத்துவமனைக்கு வந்திருந்தார். மேலும் அவர் தொலைபேசி மூலம் கொழும்பு அன்பர்களுக்கு தகவலை தெரிவித்தார். அடுத்த நாள் காலையில் இருபது சீடர்கள் கொழும்பில் இருந்து விமானம் மூலம் வந்தனர். அதில் Dr. வி. இராசநாயகம் மற்றும் Dr. ஏ. ஜே. அந்தோனிஸ் என்ற இரண்டு அறுவை சிகிச்சை நிபுணர்களும் இருந்தனர். யோக சுவாமிக்கு ஒரு தனி அறை ஒதுக்கப்பட்டு, சிறப்பான கவனிப்பு வழங்கப்பட்டது. §

அவர் மருத்துவமனையில் நுழைந்ததும், அது கோயிலாக மாறிவிட்டது. அங்கே கூடியிருந்த அன்பர்கள் அவரது உடல்நிலை பற்றிய தகவலை பெறுவதற்காக காத்து இருக்கும் போதும், சுவாமிக்கு பிடித்தமான நற்சிந்தனை மற்றும் சிவபுராண பாடல்களை அமைதியாக பாடிக்கொண்டு இருந்தனர். அன்று மாலையில், எலும்பியல் சிகிச்சை நிபுணராக இருந்த Dr. வி. இராசநாயகம், சுவாமியின் இடுப்பிற்கு சிகிச்சை வழங்கினார். சுவாமியின் இடுப்பு குணமடைந்து விட்டாலும், அவரால் எழுந்து நடக்க முடியாது என்று அவர் சிகிச்சைக்கு பிறகு தெரிவித்தார். அங்கே சுவாமி தங்கியிருந்த போது Dr. சி. குருசாமி, Dr. எஸ். இராமநாதன், Dr. வி.டி. பசுதி, Dr. எஸ். ஏ. வெட்டிவெலு மற்றும் Dr. என். வாலூபிள்ளை என்று ஐந்து மருத்துவர்கள் ஒரு சுழற்சியில் அவரை கவனித்துக்கொண்டனர். §



*தூல உடலின் மீது அதிக கவலையுடன் இருக்க வேண்டாம், ஆனால் அதை நன்றாக பயன்படுத்துங்கள் என்று குறிப்பிடும் வண்ணம், யோக சுவாமி தனது சீடர்களிடம், “உடலை ஒரு சந்தனத்தை போல அணிந்து கொள்ளுங்கள்,” என்று கேட்டுக்கொண்டார். ஒரு நாள் சுவாமி தான் வளர்த்த வள்ளி என்ற பசுமாட்டிற்கு வாழைப்பழங்களை வழங்கிக்கொண்டு இருக்கும் போது, அது அவரை தனது தலையால் முட்டி, தரையில் தள்ளியது. அதன் பிறகு அவர் வாழ்க்கை மாறியது, ஆனால் அவரது பற்றின்மை என்றும் தடுமாறவில்லை.*

........................§

**“என்றாவது ஒரு நாள் நீங்கள் புரிந்துகொள்வீர்கள்”**

சுவாமி இரவு நேரங்களில் அசையாமல் நன்றாக உறங்கவெண்டுமே என்ற கவலை மருத்துவர்களுக்கு தோன்றியது. அவர்கள் சுவாமியை சூழ்ந்து கொண்டு, விரைவாக குணமடைய அசையாமல் இருப்பது ஏன் முக்கியம் என்று விளக்கம் அளித்தனர். சுவாமி தனக்கு ஏற்பட்ட காயத்தை மருத்துவர்களை போல அல்லாமல் வித்தியாசமாக கருதி, “இது முக்கியமாக உங்களுக்கு தோன்றுகிறதா. எனக்கு இது ஒன்றுமில்லை,” என்று கூறினார். ஆனால் அவர்ககளின் கவலை மற்றும் வற்புறுத்தலின் காரணமாக, அவர் தூக்க மருந்துக்கு சம்மதம் தெரிவித்தார். அவர்கள் வழங்கும் மருந்து காரணமாக அவருக்கு காலை எட்டு மணி வரை சோர்வாக இருக்கும் என்று கூறி மருத்துவர்கள் அவருக்கு ஊசி போட்டனர். யோக சுவாமி உடனடியாக நன்றாக உறங்கிவிட்டார், மற்றும் தங்கள் திட்டம் நிறைவேறுவதாக

மருத்துவர்களுக்கு தோன்றியது. ஆனால் அதிகாலை நான்கு மணி அளவில் அவர் விழித்துக்கொண்டார். §

அவர் தினமும் விரைவாக விழித்துக்கொண்டார். நான்கு மணி அளவில் அவர் அமைதியாக உட்கார்ந்து இருப்பார், மற்றும் மக்கள் மெதுவாக ஒன்று சேர ஆரம்பித்தனர். மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சீடர்கள் என்று எல்லோரும் கூடினார்கள். அவர்கள் 4:30 மணி முதல் துதிப்பாடல்களை பாடவும் பாராயணம் செய்யவும் ஆரம்பித்தனர். அன்பர்கள் தூபம் மற்றும் கற்பூரத்தை ஏற்றினார்கள். சிலசமயங்களில் யோக சுவாமி அவர்களிடம் பேசுவார். அவர் வழக்கமாக தன்னை சந்திக்க வந்தவர்களிடம் ஒரு குறிப்பிட்ட சாஸ்திரத்தில் இருந்து பாடவோ அல்லது ஓதவோ கேட்டுக்கொள்வார். §

அவர் 5:45 மணி அளவில் தங்கள் வேலைகளுக்கு செல்லுமாறு எல்லோரிடமும் கேட்டுக்கொண்டு, தனது சிப்பந்திகளிடம் அறையை சுத்தம் செய்து விரிப்புக்களை சரி செய்யுமாறு கூறுவார். தினமும் காலை ஆறு மணிக்கு அவரது மருத்துவ தேவைகளை கவனித்துக்கொள்ள ஒரு ஆங்கிலேய கன்னியாஸ்திரி வருவார். அந்த கன்னியாஸ்திரியின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப, எல்லாம் அமைந்திருக்க வேண்டும் என்பதை சுவாமி வலியுறுத்துவார். அவர் தூபத்தில் இருந்து விழுந்த சாம்பல் சுத்தம் செய்யப்பட்டு, படுக்கை விரிப்புகள் சரியாக இருப்பதை உறுதி செய்துக்கொள்வார். அந்த கன்னியாஸ்திரி சுவாமியை வணங்கி, “வணக்கம், தந்தையே. எப்படி இருக்கிறீர்கள்?” என்று கேட்பார். அதற்கு சுவாமி, “வணக்கம் அன்னையே,” என்பார். §

ஒரு நாள் சுவாமி அந்த பெண் துறவியிடம், தினமும் எப்போது பிரார்த்தனை செய்கிறார் என்று கேட்டார். அதற்கு அந்த பெண் துறவி, “நான் செய்யும் வேலையே என் பிரார்த்தனை. தந்தையே, கைகளால் செய்யும் வேலையே, நான் செய்யும் பிரார்த்தனை.” “நாங்களும் அப்படித்தான்,” என்று சுவாமி பதில் அளித்தார். “அந்த வகை பிரார்த்தனையால், எங்களுக்குள் இருக்கும் இறைவன், எங்கள் வாயிலாக வேலை செய்வதற்காக, நாங்கள் சுத்தமாக இருக்கிறோம்.” சுவாமி உள்ளிருக்கும் இறைவனை பற்றிப் பேசியதும் பெண் துறவி தனது காதுகளை மூடிக்கொண்டு, தனது கண்களுக்கு உள்ளிருக்கும் இறைவன்  தெரியவில்லை என்றும், அத்தகைய ஒரு கருத்தை தன்னால் ஏற்றுக்கொள்ளவும் முடியாது என்பதையும் குறிப்பிட்டார். யோக சுவாமி சிரித்துக்கொண்டு, “சரி, பரவாயில்லை. என்றாவது ஒரு நாள் நீங்கள் புரிந்துகொள்வீர்கள்,” என்றார். §

மாலை நேரத்தில், மருத்துவமனையில் முக்கியமான வேலைகள் முடிந்தவுடன், அவரது தரிசனத்துடன் பாடல்களை பாடி அருகில் அமர்ந்து இருக்க, மக்கள் சுவாமியின் அறையில் மீண்டும் கூடினார்கள். அவர்கள் விளக்குகளுடன் மீண்டும் தூபம் மற்றும் கற்பூரத்தை ஏற்றினார்கள். §

தன்னை நாடி வந்த அன்பர்களுக்கு எல்லாம் யோக சுவாமி என்றுமே ஒரு வலுவான இருப்பாக, அருகாமையில் துடிப்புணர்வுடன் இருந்தார். சிலர்

வியக்க வைத்த அந்த இருப்பைக் கண்டு பயந்தனர். அது சிலருக்கு ஒரு தாயின் இரக்கத்தைப் போல தோன்றியது. அவர்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் அவர் அறிந்து இருந்தார். தனக்கு ஏற்பட்ட விபத்துக்கு பிறகு, அதிக நேரம் தனக்கு உட்புறமாக செலவழித்து, வெளிப்புறத்தில் அதிக மென்மையாக மற்றும் தனிமையில் இருந்தார். அவரை சுற்றி ஒரு ஒளியை பார்த்தவர்களுக்கு, அவர் சொர்க்க லோகத்தில் இருப்பது போல தோன்றியது. அவர் முன்பு கடுமையாக நடந்துக்கொண்டு இருந்தவர்களிடமும், அந்த விபத்துக்கு பிறகு மென்மையான வரவேற்பை வழங்கினார். §

சிலசமயங்களில் யோக சுவாமி ஆழ்ந்த தியானத்தில் நுழைந்து, தனது உடலை முழுவதுமாக மறந்து விட்ட போது, செல்லப்பகுரு தனது இருப்பை முழுமையாகவும் வெற்றிகரமாகவும் மறைத்து இருந்தார் என்று அவர் கூறியதைப் போல, அவரும் தனது இருப்பை மறைத்துள்ளார் என்பது அப்போது தான் மக்கள் உணர தொடங்கினார்கள். இந்த காலகட்டத்தில் அவர் எப்படி இருந்தார் என்பதன் மூலம், குருவின் உண்மையான இயல்பை அன்பர்களால் சிறிதளவு உணர முடிந்தது. அவர் தனது உடலை சுட்டிக்காட்டி, “நீங்கள் இந்த நபரை குருவாக நினைக்ககூடாது. இதிலிருந்து குரு முற்றிலும் மாறுபட்டவர். ”§


ஒரு அன்பர் மருத்துவமனையில் சுவாமியை சென்று பார்த்தது பற்றியும், தனது காயத்தைப் பற்றி சுவாமி தந்த விவரத்தைக் பற்றியும் எழுதியுள்ளார்.§

> நான் அவரை பார்க்க என் மாமனாருடன் மருத்துவமனைக்கு சென்றேன். நாங்கள் வாகனத்தில் சென்றுகொண்டு இருக்கும் போது, யோக சுவாமியின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாக என் மாமனார் என்னிடம் கூறினார். “அவர் ஒரு தெய்வீக புருஷர், வாழ்க்கையில் நடக்கும் வேதனைகளை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதை உலக மக்களுக்கு தெரிவிக்கவே, அத்தகைய சம்பவங்கள் நடக்கின்றன,” என்று பதில் அளித்தேன். நாங்கள் நுழையும் போது, யோக சுவாமி மருத்துவரின் கைகளை பிடித்துக்கொண்டு, “இராசா? எனக்கு நடந்த விபத்தால், நான் அதிக வேதனையை அனுபவிப்பதாக, உங்களுக்கு தோன்றுகிறது அல்லவா? எனக்கு எந்த குறையும் இல்லை. தவறான செயலை செய்த உடல், அதற்கான பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறது,” என்று கூறிய போது அவர் கால்களில் கட்டு போடப்பட்டு இருந்தது, மற்றும் அவரது மனம் அதிக பற்றின்றி இருந்ததால், அவர் முகம் ஒரு புதிய ரோசாவைப் போல வாடாமல் இருந்தது! §

மேலே குறிப்பிட்ட கருத்தை, *இன் வர்டுஸ் ஆஃப் அவர் மாஸ்டர்* என்ற புத்தகத்தில் சுவாமி விரிவாக விளக்கியுள்ளார்: §

> இது [நோய்] ஒரு வரப்பிரசாதம். நாம் கர்மவினையை முழுமையாக அனுபவித்தாக வேண்டும். எனக்கும் இந்த உடலுக்கும் எந்த விதத்திலும் தொடர்பு இல்லை. இந்த உடம்பு தோன்றிய போது அதோடு சம்பந்தப்பட்ட எல்லா விதைகளையும் தன்னுடன் கொண்டு வந்துள்ளது. அதில் நோயும் ஒன்றாகும். இதன் காரணத்தை அறிந்தவர்கள், இதை வேதனைகளின் முடிவாக கருதி மனம் தளராமல் இருப்பார்கள். அறியாமையில் இருப்பவர்கள் சோகமாக பதட்டத்துடன் இருப்பார்கள்.”§

அவரது உடல்நிலை குறித்து அன்பர்கள் தங்கள் மனவேதனையை கூச்சலுடன் வெளிப்படுத்திய போது, யோக சுவாமி, “உங்களால் என் கர்மவினையை நிறுத்த முடியுமா?” என்று அவர்களை சமாதானப்படுத்தினார். அவருடைய கண்ணோட்டத்தில் எல்லாம் முழுமையான ஒழுங்கில் இருக்கிறது என்பதையும், அவரது உடல்நிலைக்கு ஒரு அன்புள்ளம் கொண்ட சாட்சியாக இருப்பதே அவருக்கு செய்யும் சிறந்த உதவியாக இருக்கும் என்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். §



*யோக சுவாமி உடலுறுதியுடன் இருந்தாலும், அவர் நீரழிவு நோயால் அவதிப்பட்டார். 50 களின் தொடக்கத்தில் இருந்து, அவரது சீடனாக இருந்த ஒரு மருத்துவரால் அவருக்கு தினமும் இன்சுலின் ஊசி போடப்பட்டு வந்தது.*

.........................§

அந்த மாட்டை மக்கள் திட்டத்தொடங்கிய போது, யோக சுவாமி அவர்களை நிறுத்தி, “நாம் வள்ளியின் வழியில் குறிக்கிட்டோம். எப்போவோ முடிந்த காரியத்தை அந்த மாடு செய்யவில்லை,” என்று கூறினார். எதிர்காலத்தில் தமிழ் சமூகம் பல பிரச்சனைகள் மற்றும் இன்னல்களை சந்திக்க உள்ளது என்பது சுவாமி முன்பே அறிந்து இருந்தார் மற்றும் அவர் எதிர்பார்த்த பயங்கரமான கர்மவினைகளை தணிக்கும் முயற்சியாக, தனக்கு ஏற்பட்ட காயத்தின் மூலம் அவர்களது வேதனைகளில் சிலவற்றை தானே தாங்கிக்கொண்டதாக பல சீடர்கள் நம்புகிறார்கள். §

இது தொடர்பாக எஸ். சண்முகசுந்தரம் தனது அனுபவத்தை பகிர்கிறார். பல வருடங்களுக்கு முன்பு, ஒரு அன்பர் சுவாமியிடம் எதற்காக தனது வியாதிகளுக்கு மருந்துகளை எடுத்துக்கொள்ளவில்லை என்றும், எதற்காக நோயை வரவழைத்துக் கொண்டார் என்றும் கேட்டபோது, யோக சுவாமி, “நான் இறக்கவேண்டும் என்று நினைத்தால், இப்போதே என் கண்களை மூடி படுக்கையில் படுத்து சிறிது நேரத்தில் இறந்து விடமுடியும். ஆனால் நான் இன்னும் சில வேலைகளை செய்யவேண்டி இருக்கின்றன. எனது கோபத்தை சிறிது குறைக்க வேண்டும்,” என்று பதில் அளித்தார். தான் உயிர் துறக்கும் போது, திரும்பி வராமல் நிரந்தரமாக செல்ல விரும்பியதால், எல்லாம் முழுமையாக முடித்துவிட்டு கிளம்ப விரும்பினார். §

சுவாமி மெதுவாக தனது உடல் வலிமையை பெற்று, மரத்தால் செய்த ஒரு வசதியான சக்கர நாற்காலி மற்றும் ஒரு நடக்கும் கருவியை பயன்படுத்தி நடக்க ஆரம்பித்தார். சந்தசுவாமி ஐக்கிய இராச்சியத்தில் இருந்து சுவாமிக்காக வானூர்தி மூலம், துருவுறா எஃகில் தயாரித்த ஒரு நவீன நாற்காலியை கொண்டு வந்தார், ஆனால் அவர் தனது பழைய நாற்காலியையே விரும்பிப் பயன்படுத்தினார். §

அவர் மருத்துவமனையில் குணமடைந்து வந்த போது, அவரது ஆசிரமத்திற்கு வடக்கே ஒரு புதிய ஆசிரமத்தை அவரது சீடர்கள் இரவு பகலாக கட்டி வந்தார்கள். அது பழைய ஓலைக்குடிசையின் அளவுடன், கற்காரை சுவர்கள் மற்றும் தரை, களிமண் ஓடு பயன்படுத்திய கூரை, சக்கர நாற்காலிக்கு தேவையான வசதி, உட்புறத்தில் குழாய் வசதி, மின்சார வசதி, ஒரு வசதியான படுக்கை மற்றும் சுவாமி மருத்துவமனையில் இருந்து திரும்பியதும் அவருக்கு தேவையான மற்ற வசதிகளுடன் நிரம்பி இருந்தது. அந்த கட்டிடம் நிறைவேறும் வரை, மருத்துவர்கள் வெளியே செல்ல அவருக்கு அனுமதி வழங்கவில்லை. §

### “அவரது இருப்பில் நாங்கள் அமைதியை கற்றுக்கொண்டோம்”

யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையில் மூன்று மாதங்கள் இருந்த பிறகு, ஜூன் 1961, கொழும்புத்துறை திரும்பி தனது புதிய ஆசிரமத்தில் வசிக்க ஆரம்பித்தார். அவரை கவனித்துக்கொள்ள, அன்பர்கள் தங்களுக்குள் ஒரு சுழற்சியை அமைத்துக்கொண்டனர். அவரது தேவைகளை கவனித்துக்கொள்ள எப்போதும் ஒரு அன்பர் அவருக்கு அருகில் இருந்தார், மற்றும் தினமும் காலையில் சுவாமிக்கு உடலியக்க சிகிச்சையை வழங்க Dr. ராசகருணா  வந்துக்கொண்டு இருந்தார். ஆனாலும் அவரால் எழுந்து நடக்க முடியவில்லை. §

அவருக்கு உடலில் வலிமை திரும்பியதும், சுவாமி தனது சக்கர நாற்காலியில் சிறு பயணங்களை மேற்கொண்டார். திரு. திருநாவுக்கரசுவின் மருமகன் சிவயோகேஸ்வரன் சுவாமியின் நாற்காலியை தள்ளிக்கொண்டு இருக்க, அவர் பெரும்பாலும் ஆசிரமத்தில் இருந்து சில கிலோமீட்டர் தூரத்திற்கு பயணம் செல்வார். அவர் காலையில் வாகனத்திலும் நகரத்தை சுற்றி வந்தார். அவர் மதியம் உணவு சாப்பிட்ட பிறகு, மாலை 4 மணி வரை ஒரு குட்டித்தூக்கம் போடுவார். அவர் மாலையில் தனது ஆசிரமத்தில் அன்பர்களை சந்திப்பார். §

ஒவ்வொரு வாரக்கடைசியிலும் கடற்கரையோரம் வாகனத்தில் செல்வது அவரது விசேட நடவடிக்கையாக இருந்தது. குறிப்பாக அந்த நாட்களின் போது கடற்கரையோரம் செல்வதை அவர் விரும்பினார் மற்றும் அது அவர் உடலுக்கு ஆறுதல் தருவதாக இருந்தது. 4:30 மணி அளவில் அ. தில்லையம்பலம் மற்றும் அவரது பதின்ம வயது மகன் தி. சிவயோகபதி, தங்கள் வாகன ஓட்டியுடன் தங்கள் ரோவர் வாகனத்தில் வந்து சேர்வார்கள். சுவாமியை சிறிது தூரம் தெருவில் அழைத்து செல்ல அவரது உடலை பஞ்சு கொண்டு துடைத்து, வெளியே செல்வதற்கான உடை அணிவித்து, அவரை மிகவும் மெதுவாக சக்கர நாற்காலிக்கு அழைத்து செல்வதை மகன் கவனித்துக்கொண்டான். §

அவர்கள் கடற்கரை நோக்கி சென்ற போது, சுவாமி முன்பக்க இருக்கையில் அமர்ந்து கொள்வார். அவர்கள் அங்கே சென்றதும், அவர் கடல் காற்றை அனுபவிப்பதற்காக, வாகனத்தின் கதவுகளை திறந்து வைத்து, மேல் கூரை பின்னே தள்ளப்பட்ட நிலையில் நிறுத்தி இருந்தனர். கடற்கரை ஓரமாக சுவாமியும் அவர்களை உபசரித்த இருவரும் சிவதொண்டன் நிலையத்திற்கு சென்றனர். அங்கே சென்றதும், சுவாமி வாகனத்தில் இருந்துக்கொண்டு செல்லத்துரையை வெளியே அழைத்து, அவருடன் சிறிது நேரம் பேசுவார். §

அவர்கள் வழக்கமாக நல்லூர் கோயிலுக்கு செல்வார்கள். வாகனம் தேரடிக்கு முன்பாக நிறுத்தப்படும், மற்றும் சுவாமி சிவபுராணம் பாடி இறைவனை வணங்குவார். தெய்வத்தின் ஆசிகளை வேண்டி ஒரு விசேட அர்ச்சனை செய்வதற்கு பணம், தேங்காய்கள் மற்றும் கற்பூரம் அடங்கிய ஒரு கூடை கோயிலுக்குள் அனுப்பப்படும். §

வழக்கமாக சாதுக்களும் மற்றவர்களும் அந்த வாகனத்தை நெருங்கியதும், சுவாமி ஒவ்வொருவருக்கும் தன் கைப்பட ஒரு வாழைப்பழத்தை வழங்க,

இன்னொருபுறம் அமர்ந்து இருந்த தில்லையம்பலம், இந்த தருணத்திற்காக தயார் நிலையில் வைத்திருந்த தனது சில்லறை பணப்பையில் இருந்து ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய் நாணயம், பத்து அல்லது ஐம்பது ரூபாயை தருவார். அந்த காலத்தில் ஒரு ரூபாய் மூன்று வேளை உணவிற்கும் போதுமானதாக இருந்ததால், அது ஒரு தாராளமான நன்கொடையாக இருந்தது. இது ஜனவரி 1964 வரை தொடர்ந்தது. §

ஒரு காலத்தில் அச்சுறுத்திய முனிவரைக் கண்டு மக்கள் இனி அஞ்சவில்லை, மற்றும் அவரை நெருங்க பயந்தவர்கள் அவரை நாடி வரத்தொடங்கினார்கள். அவர் வழக்கமாக அவர்களை சிவ தொண்டன் நிலையத்திற்கு அனுப்பிவிடுவார். §

சுவாமிக்கு வேதனையில் இருந்து நிவாரணம் அளிக்க அதிகமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவர் கால்களில் அதிகமான நீர் தேங்கி இருந்ததால் ஏற்பட்ட வீக்கம், யாராவது தேய்த்து விட்டால் சற்று குறைந்தது. தனது கால்களை தேய்த்து விடுவதற்கு சுவாமி சில ஆண் அன்பர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கினார், மற்றும் தங்களுக்கு ஏற்பட்ட சோர்வை சுவாமி உணர்ந்து, தன் உடலை தேய்த்து விடுவதை நிறுத்த சொல்லவில்லை என்றால், அவர்கள் அந்த பணியை தங்களுக்கு கிடைத்த பாக்கியமாக கருதி தொடர்ந்து தேய்த்துக் கொண்டு இருப்பார்கள். §

இந்த இறுதி வருடங்களைப் பற்றி ரத்னா மா நவரத்தினம் ஒரு சிறிய கண்ணோட்டத்தை வழங்குகிறார். §

> அவரை 1961 முதல் 1964 வரையில் வருத்திய தியாக உணர்வு நிரம்பிய காயம், அவரது சீடர்களின் இதயங்களில் தணிக்க முடியாத பக்தியின் சுடரை ஏற்றி இருந்தது, மற்றும் அது கர்மவினை அல்லது தியானத்தைப் போன்று பக்தியும் நிறைவில்லாதது என்ற உணர்தலை வெளிப்படுத்தியது. நாங்கள் அவரது இருப்பில் அமைதியாக இருந்தோம் மற்றும் அவரது உதட்டில் இருந்து உதிரும் அமுதத்திற்கு காத்து இருந்தோம். பகலும் இரவும் ஒன்றாக இருந்தது, மற்றும் சாந்தமான அமைதிக்கு தன்னை விடுவித்துக் கொண்டிருந்த எங்களது சிறைப்பட்ட மனங்கள் மீது எதிர்மறைகளின் தாக்கம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டு சென்றது. சுவாமி எங்களை பின்னோக்கியும் முன்னோக்கியும் அழைத்து சென்றார். ஈடு இணையற்ற தனது குருநாதன், செல்லப்பசுவாமி பற்றிய பல தெளிவுபடுத்தும் நினைவுகளை நினைவுக்கூர்ந்தார்.§
>
> எப்போதும் எதிரொலித்துக் கொண்டிருந்த குருவின் குரல், பூமியில் அவர் வாழ்ந்த இறுதி நாட்களின் போது பாசத்துடன் மென்மையாக ஒலித்தது. அவர் தெய்வீகத் தாயான, தையல்நாயகி தேவியை பிரார்த்தனை செய்து, அவள் ஒவ்வொருவரின் மனதிலும் குடிகொண்டு, ஒவ்வொருவரின் வேதனை மற்றும் மகிழ்ச்சியை உறுதியாக அறிந்து இருப்பதால், அவள் மனதில் தடுமாற்றம் இல்லாத தனது குழந்தைகளின்

அழைப்பிற்கு விரைவில் பதில் அளிப்பவள் என்று அறிவிப்பார். அவர் எங்களிடம், தையல்நாயகி பற்றிய பாடலில் இருந்து நான்கு வரிகளை பல மணிநேரங்களுக்கு பாடச் சொல்வார். நாம் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் அனைத்து நோய்கள் மற்றும் எச்சரிக்கைகளில் இருந்து நம்மை காப்பாற்றும் அன்புள்ளம் கொண்ட குருவின் வடிவமாக அந்த தாய் இருக்கிறாளா? அது புனிதமான சாஸ்திரங்கள் போற்றிப் பாடும் தெய்வீக சக்தியாக இருக்குமா?§

அவர் ஆசிரமத்தில் இருந்த இறுதி மூன்று வருடங்களின் போது வழக்கமாக நல்லூர் கோயில் மற்றும் வைத்தீஸ்வரன்-தையல்நாயகி சிவன் கோயிலில் பூஜைகள் மற்றும் அபிஷேகங்கள் செய்ய பரிந்துரைப்பார். பாத யாத்திரியாக சிவ தொண்டன் நிலையத்தில் இருந்து நல்லூர் கோயிலுக்கு சென்று, பிறகு தனது ஆசிரமத்திற்கு திரும்புவது, அவர் வழங்கிய இன்னொரு பரிந்துரையாக இருந்தது. §

அவர் கந்தபுராணத்தை வீட்டிலும் கோயிலிலும் படிக்கவேண்டும் என்று தனது சீடர்களிடம் கேட்டுக்கொண்டார். அவர் தனது மகாசமாதி நாளை நெருங்கிக்கொண்டு இருந்த போது, கந்த புராணத்தில் ஒரு அத்தியாயமாக இருந்த மார்கண்டேய படலத்தை, அன்பர்களுக்கு கற்பிக்க ஏற்பாடு செய்து இருந்த பாணியில், கவிஞரின் பாடல்களை ஒருவர் பாடுவார் மற்றும் இன்னொருவர் தனது சொந்த வார்த்தைகளில் அதற்கான விளக்கத்தை பாடுவார். அந்த அமர்வில், ஒரு ஆசிரியராக இருந்த தம்பையா விளக்கங்களை வழங்கினார். இத்தகைய ஆன்மீக சொற்பொழிவில் சுவாமி அடிக்கடி பங்குபெற்று, மற்றவர்களும் இதைப்போன்று நடத்த ஊக்குவித்தார். §

அவரது மகாசமாதிக்கு ஒரு மாதம் முன்பாக, வரவிருந்த இன்னல்களை அறிந்திருந்த யோக சுவாமி உரத்த குரலில், “தையல்நாயகி அம்மா! தமிழ் மக்கள் எதிர்காலத்தில் சந்திக்க இருக்கும் வேதனைகளில் இருந்து காப்பாற்றி அருள் புரிந்திடு. அவர்களுக்கு எதிர்காலத்தில் தினமும் ஒரு குவளை அரிசி கஞ்சி கிடைப்பதே கடினமாக இருக்கும்!” அவர் மேலும், “எல்லா தமிழர்களும், எதிர்காலத்தில் வரும் இன்னல்களை எதிர்கொள்ள, நெல்பயிர் சாகுபடியுடன் பல்வேறு தானியங்களையும் சாகுபடி செய்ய வேண்டும்!” என்று உத்தரவிட்டார். §

இனப்போர் வெடித்து, அதனுடன் முப்பது வருடங்களுக்கு சண்டை, பசி மற்றும் வேதனைகளை கொண்டு வந்த போது, சுவாமி எதிர்காலம் பற்றி வழங்கிய தீர்க்க தரிசனம் துல்லியமானது என்பதை, இலங்கை தமிழ் சமூகம் முழுவதும் இருபது வருடங்கள் கழித்து புரிந்துகொண்டனர். §

யோக சுவாமி மருத்துவமனையில் இருந்து திரும்பிய போது, அவர் இனி நீண்டநாட்கள் உயிர் வாழப்போவது இல்லை என்பதை அறிந்திருந்த ஒரு அன்பர், அவரை வைத்து மூன்று புகைப்படங்களை எடுத்தார். சுவாமி வழக்கமாக தன்னை வைத்து புகைப்படம் எடுப்பதை அனுமதித்ததில்லை என்பதால், அந்த புகைப்படங்கள் அவரது வாழ்நாள் முழுவதிலும்

எடுக்கப்பட்ட சில அரிய புகைப்படங்களில் ஒன்றாக விளங்கின. பலர் சுவாமியை படம்பிடித்து விட்டதாக நினைத்தனர், ஆனால் உருத்துலக்கல் அறையில் (developing room) இருந்து வெளிவந்த புகைப்பட எதிர்மறை எந்த உருவமும் இல்லாமல் காலியாக இருந்தது. அவர் படுக்கையில் அமர்ந்த போது எடுத்த இவையும், 1951 ஆம் ஆண்டு 19 வயது சாமி பசுபதி எடுத்த இரண்டு புகைப்படங்கள் மட்டுமே, அவரது ஆசியை பெற்று இருந்தன. இந்த ஐந்து புகைப்படங்கள் மற்றும் அவர் தனது கையில் ஒரு குடையுடன் புகைப்படக்கருவியில் இருந்து விலகி, தெருவில் நடந்து சென்ற போது எடுத்த இன்னொரு புகைப்படம் மட்டுமே, அவர் வாழ்நாளில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகும். 2006 ஆம் ஆண்டு, சுவாமியின் புகைப்படங்களை எடுத்த அனுபவம் பற்றி சாமி பசுபதி விளக்குகிறார். §

அந்த சமயத்தில் சுவாமிஜியை வணங்குவதற்கு எங்களிடம் எந்த புகைப்படம் எதுவும் இல்லை. ஒரு புகைப்படம் எடுக்க பலர் முயற்சி செய்து இருந்தாலும், யாருக்கும் அதில் வெற்றி கிடைக்கவில்லை. ஒரு நாள், யோக சுவாமி எங்கள் வீட்டில் தங்கி இருந்த போது, எனது தாய், தமிழ் அம்மையார் என்னிடம், “நாளை காலையில், சுவாமிஜி பிரார்த்தனை செய்துக்கொண்டு இருக்கும் போது, நீ ஒரு புகைப்படம் எடு,” என்றார். அப்படி புகைப்படம் எடுத்தால் அவர் என்னை திட்டுவார் என்று நான் பயந்தேன். அப்போது என் தாயார், “கவலைப்படாதே, அவர் திட்டினால், அதற்கு நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன்,” என்றார். §

அடுத்த நாள் காலையில் 6:30 மணிக்கு, என் தாயார் என்னை எழுப்பி, “சுவாமிஜி இப்போது பிரார்த்தனை செய்துக்கொண்டு இருக்கிறார். நீ அவர் தியானம் செய்யும் அறைக்குள் செல்லக்கூடாது, ஆனால் நீ வெளியில் நின்று புகைப்படம் எடுக்கலாம்.” நான் ஒரு புகைப்படம் எடுத்தேன். அதன் பிறகு சுவாமிஜி காலை சிற்றுண்டியை சாப்பிடும் போது, “யாராவது என் அறைக்குள் நுழைந்தீர்களா?” என்று கேட்டார். “யாரும் உள்ளே வரவில்லை,” என்று எனது தாயார் பதில் அளித்தார். பின்னர் நாங்கள் அவருடன் வெளியே அமர்ந்து இருந்த போது, “நாங்கள் ஒரு பெரிய தவறு செய்துவிட்டோம்,” என்ற என் தாயார் கூறினார். சுவாமி என் தாயாரை ஒரு சிறுமியாக இருந்ததில் இருந்தே அறிந்து இருந்ததால், “நீ தவறு செய்திருக்க வாய்ப்பில்லை,” என்று கூறினார். “உங்கள் அனுமதி இல்லாமல், உங்களை ஒரு முறை புகைப்படம் எடுத்துவிட்டோம்,” என்று செய்த தவறை என் தாயார் ஒப்புக்கொண்டார். அப்போது சுவாமி அமைதியாக இருந்ததால், அவர் என்ன சொல்லப்போகிறாரோ என்று நாங்கள் பயந்து இருந்தோம். அதன் பிறகு அவர் உற்சாகமாக சிரித்த போது, எங்களுக்கு பெரிதும் நிம்மதியாக இருந்தது. அதன் பிறகு நான், “சுவாமிஜி, நான் இன்னொரு புகைப்படம் எடுக்காலாமா?” என்று கேட்டேன். “நீ முன்பே ஒன்றை எடுத்துவிட்டாய், இன்னொன்று எடுக்கவேண்டிய அவசியம் இல்லை, “ என்று கூறி, சுவாமி சிறிதுநேரம் கழித்து தானே முன் வந்து, “சரி, நீ ஒரு புகைப்படம் எடுத்து விட்டாய்.

இன்னொன்று எடுப்பதில் எந்த தீங்குமில்லை," என்று கூறினார். அதனால் அவர் திண்ணையில் ஒரு நாற்காலியில் அமர்ந்து இருக்கும் போது, இன்னொரு புகைப்படத்தை எடுத்தேன். §

அவர் குரலை பதிவு செய்ய மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு முயற்சியும் தோல்வியைத் தழுவின. அன்பர்கள் அவர் தலைமை தாங்கிய பாடலை பதிவு செய்ய அவரிடம் இருந்து ஆசிகளை பெற்று இருப்பார்கள். சுவாமி அந்த குழுவில் உரக்க பாடி இருந்தாலும், ஒலிப்பதிவில் அவர் குரலைத் தவிர மற்ற அனைத்தும் நன்றாக  பதிவாகி இருந்தது. §

**"நான் இதை என்றுமே மறந்தது இல்லை, மற்றும் என்றுமே மறக்கமாட்டேன்"**

டிசம்பர் 1963 தொடங்கி, அடிக்கடி விசேடமான எச்சரிக்கைகள் வந்துக்கொண்டு இருந்தன. தனது உடலை விட்டு உயிர் பிரிய வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று சுவாமி ஒரு முறை கூறினார். அவர் தனக்கு நெருக்கமான சீடர்களிடம் மற்ற சீடர்களை அழைக்குமாறு கேட்டுக்கொண்டார். குருவின் மகாசமாதியின் போது அவருடன் இருப்பதற்காக, கொழும்பு மற்றும் கிழக்கு மாகாணம் என்று வெகு தொலைவில் இருந்து அன்பர்கள் வந்தார்கள். §

ஒரு குரு அல்லது ஒரு மகான் உயிர் துறக்கும் தருணத்தில், அவரது வாழ்நாளில் என்றுமே இல்லாத அளவிற்கு மிகப்பெரிய சக்தியை வெளிப்படுத்துகிறார் என்று சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன. அதனால் அன்பர்கள் அந்த விசேடமான ஆசிகளை எதிர்பார்த்து இருந்தனர். மேலும் அவர்கள் அவர் மீது வலுவான பற்றுடன் இருந்ததால், சோகமான முகத்துடன் அவரை பார்க்க வந்தனர். ஒரு பெரிய கூட்டம் கூடிய போது, சுவாமி அவரைப் பார்த்து தொடர்ந்து சிரித்துக்கொண்டு இருந்து, பின்னர் அவர்களை அனுப்பி வைத்தார். §

அதன் பிறகு அவர் ஒரே சமயத்தில் பல நாட்கள் அல்லது பல வாரங்களுக்கு நன்றாக இருந்து, வாகனங்களில் நீண்ட பயணங்களை மேற்கொள்வார். சுவாமியை நீண்டதூரம் தங்கள் வாகனங்களில் அழைத்துச் செல்ல, கொழும்புத்துறைக்கு தங்கள் குடும்பங்களுடன் திரு. திருவேந்திரம், திரு. காசிப்பிள்ளை நவரத்தினம், திரு. கதிர்கேசன் மற்றும் திரு. ராசேந்திரம் ஆகியோர் தொடர்ந்து வந்துக்கொண்டு இருந்தனர். §

அன்பர்கள் அவரை பார்க்க ஆசிரமத்திற்கு வந்த போது, சுவாமி அவர்களிடம் பாடுமாறு  கேட்டுக்கொள்வார் மற்றும் அவரும் வழக்கமாக அவர்களுடன் சேர்ந்து பாடுவார். அவர் குரல் அப்போது கணீரென்று இருந்தது. சிலசமயங்களில் அவர்கள் இரண்டு அல்லது மூன்று மணிநேரங்கள் வரை பாடினார்கள். ஒரு அன்பரின் வீட்டிற்கு வந்து சேர்ந்ததும், சிவ புராணத்தில் இருந்து சில பகுதிகளை பாடுமாறு  அவர் கேட்டுக்கொண்டார். அவர்கள் குருவின் முன்பாக பாடிக்கொண்டு, மகிழ்ச்சியாக அமர்ந்து இருந்தனர். §

யோக சுவாமி வாழ்ந்த இறுதி மாதங்களின் போது, அவரை சந்தித்த நாகேந்திரன் என்ற ஒரு சீடன் பின்வரும் வர்ணனையை வழங்கினார். §


> சுவாமி மகாசமாதி அடைவதற்கு சில மாதங்கள் முன்பு, எனது மாமா சிவநாதனும் நானும் கொழும்புத்துறை சென்றோம். அப்போது இரவு 8 மணியாகி இருந்தது மற்றும் யோகர் படுக்கையில் அமர்ந்து இருந்தார். அவரது இடுப்புப் பகுதியில் ஒரு வெள்ளை நிற சால்வை போர்த்தி இருந்தது. அவர் மேலங்கி எதுவும் இல்லாமல் இருந்தார். அவர் தலையில் நரைந்த முடி சிறிது கலைந்து இருந்தது. அவர் வாடிய முகம், குடிதாழ்ந்த கண்களுடன் இருந்தார். சாய்ந்து இருந்த அவரது முதுகை தாங்கிக்கொள்ள, அவரது இரு கைகளும் பின்னால் வைக்கப்பட்டு இருந்தன. அந்த அறையில் மின்சார ஒளி நிரம்பியிருந்தது. அன்றிலிருந்து எனது பூஜை அறையில் யோகரின் படத்தை வைத்து இருக்கிறேன். என் மாமா சிவாவும் நானும் அவருக்கு எங்கள் மரியாதையை செலுத்திக்கொண்டு இருக்கும் போது, அவர் தெய்வீக பாடல்களை பாடத் தொடங்கினார். சத்தமாகவும் தெளிவாகவும் இருந்த அந்த பாடல்கள், அறையில் எதிரொலித்துக் கொண்டிருந்தன. அவர் சுமார் பத்து நிமிடங்களுக்கு பாடினார். அவர் கண்கள் பிரகாசித்தன, மற்றும் அவற்றில் இருந்து அன்பு வெளிவந்து அவரது முகத்தில் பரவியது. நான் இதை என்றுமே மறந்தது இல்லை, மற்றும் என்றுமே மறக்கமாட்டேன். §

### "எல்லாம் தங்கமயமாக இருக்கிறது"

ஜனவரி மாதத்தின் இறுதியில் இருந்து, சுவாமி கடற்கரை செல்வதற்கு அல்லது வெளியே மற்ற இடங்களுக்கு செல்வதை விரும்பாமல், சக்கர நாற்காலியில் அருகில் மட்டும் சென்று வந்தார். இதைப் பற்றி ரத்னா மா நவரத்தினம் வழங்கும் பகிர்வு: §

> அவர் இந்த காலகட்டத்தில் ஆசிரமத்தை விட்டு வெளியே செல்லாமல் இருந்ததால், எல்லோரும் அவரை எளிதாக சந்திக்க முடிந்தது. அன்பர்கள் பெருமளவில் அவரை நாடி வந்தனர், மற்றும் அவர் சுத்தப்படுத்தும் தனது அருளை யார் கண்களுக்கும் தெரியாமல் எல்லையற்ற பொறுமை மற்றும் அன்புடன் வழங்கினார். அவர் தனது விசித்திரமான வெப்பம் மற்றும் குளிர்ச்சி கலந்த சிகிச்சையின் மூலம் மக்கள் மனதிற்கு ஆறுதல் அளித்து, சோககீதம் இசைத்துக்கொண்டு இருந்த மனிதநேயத்தை தாங்கிக்கொண்டார். அவர் உருவாக்கிய சக்திக்கு இணையான ஒரு சக்தி கடலிலும் நிலத்திலும் இருந்ததில்லை, மற்றும் உற்சாகத்தை தூண்டிவிடும் நற்சிந்தனை பாடல்கள் மற்றும் வீட்டில் வழங்கிய சொற்பொழிவுகள் மூலம் ஈர்க்கப்பட்டு அவரை சுற்றி நின்றிருந்த அனைவரையும் அந்த சக்தி ஊக்குவித்தது. அதனால் அவருக்கு ஏற்பட்ட விபத்து, இறையருளை வெளிக்கொண்டு வரும் வடிகாலாக அவரது சீடர்கள் கருதினார்கள். சுவாமி தனது லௌகீக வாழ்க்கையின்

இறுதிக்கட்டத்தில், இறை விருப்பத்தின் மிகவும் உயர்வான இறையாண்மையைப் பற்றி கற்றுத் தந்தார். “அவர் உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் வியாபித்து இருக்கிறார். அவரது விருப்பத்தில் வாசம் செய்யுங்கள்,” என்பது அவர் வலியுறுத்திய வேண்டுகோளாக இருந்தது.



*யோக சுவாமிக்கு ஏற்பட்ட காயம் காரணமாக, தங்களுக்கு பிடித்தமான சற்குருவை தங்குதடையின்றி அணுக முடிந்ததால், அன்பர்கள் அதை தியாக*

*உணர்வு நிரம்பிய காயமாக கருதினார்கள். அவர்கள் தினமும் பக்தியுடன் ஆசிரமத்தில் ஒன்று கூடி பாடினார்கள், தியானம் செய்தார்கள் மற்றும் அவரது ஞான மொழிகளை கேட்டறிந்து, முன்பு எப்போதும் அறிந்திராத நெருக்கத்தில் மகிழ்ச்சியாக இருந்தனர்.*

……………………….§

அவர் மனரீதியாக முழு கவனத்துடன் இருந்தார். அவரது மகாபயணத்திற்கு ஒரு மாதம் முன்பாக, திரு. அம்பிகைபாகனை சந்தித்து இருந்தார். வைத்தீஸ்வரன் கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஆசிரம வளாகத்தில் நுழையும் போது, சுவாமியின் ஞாபக சக்தி குறைந்து இருக்கும் மற்றும் அவருடன் தான் எப்படி பேசுவது என்ற சிந்தனையுடன் நுழைந்தார். அவர் ஆசிரமத்தில் நுழைந்த போது, சுவாமியின் சிரிப்பொலி அவரது காதில் விழுந்தது. அதன் பிறகு சுவாமி, "அம்பிகைபாகன், பதினைந்து வருடங்களுக்கு முன், வைத்தீஸ்வரன் கோயிலுக்கு எதிர்புறத்தில் நீங்கள் என்னுடன் இருந்த போது, நான் அந்த அன்பரை திட்டியது உங்களுக்கு நினைவு இருக்கிறதா?" என்று கேள்வி கேட்டார். சுவாமி எப்போதும் போல ஆர்வத்துடன் இருப்பதை பார்த்ததும் கல்லூரியின் முன்னாள் முதல்வர் மகிழ்ச்சி அடைந்தார். §

இந்த காலகட்டத்தில், சுவாமியிடம் தனது தந்தை ஆசிகள் பெற்ற சம்பவத்தை பற்றி தி. சிவயோகபதி தெரிவிக்கிறார். §

சுவாமியின் மகாசமாதிக்கு ஒரு சில வாரங்கள் முன்பாக, அவரது சீடராகவும் நம்பிக்கைக்கு பாத்திரமானவராகவும் இருந்த திரு. அ. தில்லையம்பலம் வழக்கம் போல சுவாமியின் ஆசிரமத்திற்கு சென்றார். அவர்கள் பேசிக்கொண்டிருந்த போது, சுவாமியின் குரல் உறுதியடைந்து: " தில்லையம்பலம்! இந்த உலகில் பலர் இரவு பகலாக தங்களிடம் இருக்கும் பணத்தை எண்ணிக்கொண்டு, தங்களது வங்கி இருப்புத் தொகையை கணக்கிட்டுக்கொண்டு ஒரு மகிழ்ச்சியில்லாத வாழ்க்கையை வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர். ஆனால் நீங்கள் வழங்கும் நன்கொடை மற்றும் சமூகத்திற்கு பரந்த மனப்பான்மையுடன் செய்யும் சேவையின் மதிப்பாக இருக்கும் உங்கள் வங்கியின் இருப்புத் தொகையை யாராலும் தொடவும் முடியாது அல்லது கணக்கிடவும் முடியாது, ஏனென்றால் அது தனித்தன்மை வாய்ந்தது. தேவையானவர்களுக்கு வழங்கும் நன்கொடை ஒரு உன்னதமான சிவ தொண்டு ஆகும்!" அவ்வாறு சொல்லிக்கொண்டு, சுவாமி தனது சீடனுக்கு பாசம் நிறைந்த சிரிப்புடன் ஆசிகளை வழங்கினார். §

சுவாமி தான் இருந்த உலகில் எல்லோரும் இருக்கிறார்கள் என்று நினைத்ததாக தோன்றுகிறது. அது ஒருவரின் இறுதி நாட்களில் நடைபெறும் விந்தையாக இருக்கிறது. எல்லோரும் ஒரே உலகில் வாழ்வதைப் போல அவர் தனது சீடர்கள் மற்றும் கண்ணுக்கு தென்படாத சக்திகள், தேவர்கள் அல்லது

தெய்வங்களுடன் பேசுவார். அவர் ஒரு  அன்பரை அழைத்து, கண்ணுக்கு தென்படாத ஒருவரை அவரது வாகனத்தில் ஊர் சுற்றி காண்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். அது வரை சுவாமி கூறியதை தவறாமல் செய்து வந்த அன்பருக்கு, அப்போது என்ன செய்வது என்று புரியவில்லை. அவர் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக்கொண்டு, “சுவாமி, என் கண்ணுக்கு யாரும் தெரியவில்லை,” என்று முணுமுணுப்பார். அதற்கு சுவாமி, “அவர் இங்கே உனக்கு அருகிலேயே இருக்கிறார். நீ அவருக்கு நகரத்தை சுற்றி காண்பித்து அழைத்து வா,” என்று பதில் அளிப்பார். §

அதனால் அந்த அன்பர், தனக்கு ஒரு கற்பனை சக்தியாக தோன்றிய ஒரு நபருக்காக கதவை திறந்து, கதவை மூடி, சுற்றி வந்து, வாகனத்தில் ஏறி ஊரை சுற்ற கிளம்புவதைத் தவிர, அவருக்கு வேறு எந்த வழியும தெரியவில்லை. அவர் தனது பணியில், அந்த உயிர்சக்திக்காக கதவை திறக்கவில்லை என்றால், “நீ கதவை திறக்கவில்லை! அவர் தெருவில் நின்றுக்கொண்டு இருக்கிறார்! உன் வாகனத்தை பின்னே கொண்டு வந்து, அவரை ஏற்றிக்கொள்!” என்று கத்துவார்.§

இந்த உயிர்சக்திகளுடன் சுவாமி பல சீடர்களை அனுப்பி வைத்தார். ஒரு முறை ஒரு கண்ணுக்கு தெரியாத விருந்தாளியுடன் ஒரு சீடனை சுடுகாட்டிற்கு அனுப்பினார். அந்த அன்பருக்கு சுவாமியின் உத்தரவை பின்பற்றுவதைத் தவிர வேறு எந்த வழியும் தெரியவில்லை. அவர் தன் பணியை சரியாக செய்யவில்லை என்றால், சுவாமிக்கு தெரிந்து விடும் மற்றும் சுவாமி மீண்டும் அதே பணியை மீண்டும் செய்ய உத்தரவிடுவார். §

அவர் ஒரு முறை ஒரு அன்பரிடம், அவரது வீட்டிற்கு ஒரு தேவரை அழைத்து சென்று தேநீர் வழங்கி உபசரிக்குமாறு கேட்டுக்கொண்டார். அந்த அன்பர் கடமையுணர்வுடன் தனது வீட்டிற்கு சென்று, மனதில் அவமானத்துடன், “என்னுடன் ஒரு நண்பர் தேநீர் அருந்த வந்துள்ளார். எங்களுக்காக தேநீரை தயார் செய்,” என்று தன் மனைவியிடம் அறிவித்தார். சிலசமயம் அன்பர்கள் சுவாமி தங்களுக்கு வழங்கிய பணியை முழுமையாக செய்யாமல், வாகனத்தில் சிறிது நேரம் சுற்றிவிட்டு திரும்பி விடுவார்கள். இவ்வாறு ஒரு அன்பர் பாதியில் வந்ததும், சுவாமி, “நீ அவரை வீட்டிற்கு அழைத்து சென்று, தேநீர் வழங்கவில்லை என்று கூறுகிறார். நீ மீண்டும் அவரை அழைத்து சென்று தேநீர் வழங்கிவிட்டு திரும்பி வா.” அந்த மகிழ்ச்சிகரமான தருணங்கள், குழப்புவதாக இருந்தாலும், எல்லோரும் அவற்றை விரும்பினார்கள். §

அந்த காலகட்டத்தில் சுவாமிக்கு துணையாக எப்போதும், கண்ணுக்கு தென்படாத ஒரு குழந்தை இருந்ததாக தோன்றுகிறது. அவர் ஒரு அன்பரிடம் அந்த குழந்தைக்கு நடைப்பயிற்சி வழங்குமாறு கேட்டுக்கொள்வார். “இப்போது அந்த குழந்தை உறங்கவேண்டும். தம்பி இங்கே வா. இந்த குழந்தையை சிறிது நடக்கவைத்து உறங்க வை,” என்று ஒரு அன்பரிடம் கூறுவார்.  அந்த அன்பர் தனது கைகளை விரித்துக்கொள்ள, சுவாமி அவரிடம் அந்த குழந்தையை கவனமாக ஒப்படைப்பார். “மிகவும் கவனா இரு, அந்த

குழந்தை நன்றாக உறங்கவேண்டும்," என்று கேட்டுக்கொள்வார். அல்லது சுவாமி, "அவனுக்கு பசிக்கிறது. அவனுக்கு ஒரு குவளையில் பாலை கொடுங்கள்," என்று அந்த குழந்தைக்கு உணவு அளிக்க சொல்வார். "சுவாமி, அது ஒரு குழந்தை ரூபத்தில் இருக்கும் ஆன்மா தானே?" அல்லது "சுவாமி, அந்த குழந்தை பாலமுருகன் தானே?" என்று யாராவது கேள்வி கேட்டால், அதற்கு பதில் அளிக்கமாட்டார். §

சுவாமி தனது இறுதி நாட்களில் ஒரு கடை தொடங்க திட்டமிட்டு வந்தார். "நாம் ஒரு கடையை தொடங்கலாம். நாம் அதில் மக்களுக்கு தேவையான அனைத்தையும் வழங்கலாம், சரியா? நாம் அதில் ஒரு பைசா லாபமும் எதிர்பார்க்கக்கூடாது, சரியா? இந்த கடையை திட்டமிடுவதற்கு, அவர் பல நாட்கள் திட்டமிட்டார். "சுவாமி, இது மெய்ப்பொருளை விற்கும் கடையா?" என்று ஒரு அன்பர் கேள்வி கேட்ட போது, அதற்கு பதில் அளிக்கவில்லை. அவரது திட்டங்கள் அன்பர்களுக்கு விசித்திரமாக இருந்ததைப் போல, அவர்களது கேள்விகள் அவருக்கு விசித்திரமாக இருந்திருக்க வேண்டும். மனதின் பல்வேறு உலகங்களுக்கு இடையே இருந்த மாறுபாடுகள், அவருக்கு மங்கியிருக்க வேண்டும். உட்புற மற்றும் வெளிப்புற உலகங்களுக்கு மத்தியில் இருந்த திரையை அவரால் உணர முடியவில்லை. எல்லாம் அந்த நொடிப்பொழுதில் ஒன்றாகவும் முழுமையாகவும் இருந்தன. §

ஒரு எண்ணெய் விளக்கு மட்டும் எரிந்துக்கொண்டு இருந்த அந்த அறை, ஒரு உட்புற ஒளியால் பிரகாசித்தது போல தோன்றியது. மேலும் அந்த அறையில் இருந்த காற்றில் விவரிக்க முடியாத குளுமை நிரம்பி இருந்தது. அவர் எந்த ஒரு தருணத்திலும், தன்னை சுற்றி இருப்பவர்களுக்கு வெளிப்படையாக தெரியாமல், மெய்மறந்த நிலைக்கு சென்று விடுவார். §

அவர் ஒரு முறை இந்த நிலையில் இருந்த போது, தையல்நாயகி அம்மனிடம் உரக்க பேசினார். அம்மனின் சக்தியில் இருந்து வெளிவந்த அன்பினால், அவர் முகம் ஒரு சிறுவனின் தோற்றத்துடன் பிரகாசமாக இருந்தது. அவர் அந்த அன்பை மெல்லிய குரலில் பாராட்டி, அவளது இருப்பில் தான் உணர்ந்த சக்தியை பற்றியும் உயர்வாக பேசினார். அதன் பிறகு அவர் செல்லப்பசுவாமியுடன் இருந்தார். அவர் தனது குருவிடம் பணி தொடர்பான முக்கிய தகவல்களைச் சொல்லி, தான் அவருடன் வருவதற்கு இன்னும் தயாராக இல்லை என்றும் கூறினார். இந்த சமயத்தில் சுவாமியை பார்த்த மக்கள், அவர் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் திறந்த மனதுடன், செல்லப்பகுருவுக்கு அவர் இன்னும் சீடனாக இருந்ததை, அவர் முகம் வெளிப்படுத்தியதாக கூறினார்கள். அவர் நீண்டநேரம் அசையாமல் அமர்ந்து இருந்தார், மற்றும் அவரது உணர்ச்சி வெளிப்பாடு பேரானந்தத்தில் பிரகாசமாக இருந்தது. ஒவ்வொருவரின் காதுகளின் உள்ளும் மிகவும் உயர்வான உட்புற சப்தங்கள் ஒலித்தாலும், அவை மெதுவாக ஊடுருவின. §

அவர் சிறிதுநேரம் கழித்து, தனக்கு முன்பாக அமர்ந்து இருந்தவர்களின் நிலைக்கு திரும்பி, அவர்கள் தன்னுடன் இருந்தார்களா என்று கேட்பார். தான் பார்த்ததை அவர்களும் பார்த்தார்களா என்று கேட்பார். அதன் பிறகு அவர்

அந்த அற்புதமான உலகைப்பற்றி விவரித்தார்: “எல்லாம் தங்கமயமாக இருந்தது. அங்கே நமது கற்பனை சக்தியை கடந்த, ஒரு மென்மையான மற்றும் சுயமாக-பிரகாசிக்கும் ஒளி இருந்தது.” §


சுவாமி மகாசமாதி அடைவதற்கு சில நாட்கள் முன்பாக, ஒரு அன்பர் அவரது திருவடிகளில் பழம் மற்றும் பூக்களை காணிக்கையாக வைத்து வணங்கினார். சுவாமி அந்த காணிக்கையை இன்னொரு அன்பரிடம் வழங்கி, “இதை எடுத்து சென்று நல்லூர் கோயிலில் அபிஷேகம் செய்யுங்கள்,” என்று அறிவுறுத்தினார்.§

**யோக சுவாமியின் உயிர் பிரிந்தது**

சுவாமி மார்ச் 20, 1964 அன்று படுத்த படுக்கையாகி, சாப்பிடுவதையும் குடிப்பதையும் தவிர்த்து, மருத்துவர்களை விலகி இருக்குமாறு கேட்டுக்கொண்டார். அவர் உடல்நலம் மோசமடைந்து வருகிறது என்ற எச்சரிக்கை ஒலி ஊரெங்கும் பரவியது. அவர் நாள் முழுவதும் அசையாமல் இருந்தார் மற்றும் விழித்து இருக்கும் போது ஒரு குழந்தையின் குரலில் பேசினார். அவரை காண பலர் கூடியிருந்தனர். அவர்கள் சோகமாக இருந்தாலும், அமைதியாக பாடினார்கள் அல்லது சுலோகம் சொல்லிக்கொண்டு இருந்தார்கள். சுவாமி விரைவில் தங்களை விட்டு பிரியவிருப்பதை நினைத்து எல்லோரும் சோகமாக இருப்பது நன்றாக தெரிந்தது. எந்த நேரமும் அவர் உயிர் பிரியலாம் என்பதை அறிந்த அன்பர்கள் கூட்டம், அவரை தரிசிக்க மற்றும் தங்களுக்கு பிரியமான குருவுக்காக பிரார்த்தனை செய்ய மற்றும் அவரிடம் இருந்து ஆசிகளை பெறுவதற்காக, அடுத்த மூன்று நாட்களுக்கு தொடர்ந்து வந்துக்கொண்டு இருந்தது. §

சுவாமி எப்போதாவது தனது உட்புற உலகில் முழுமையாக ஒதுங்கிக்கொள்வார். அவருடைய உடல் வெப்பநிலை இறங்கி, நாடித்துடிப்பு குறைந்தது, மற்றும் சில சமயங்களில் முற்றிலும் நின்று மருத்துவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவர் இந்த நிலையில், தன் உடலின் மீது ஒரு மெல்லிய பிடிப்பை மட்டுமே வைத்து இருந்தார். §

மார்ச் 23 அன்று இரவு நேரத்தில், சுமார் பதினைந்து அன்பர்கள் சுவாமியின் படுக்கைக்கு அருகில் அமர்ந்துகொண்டு, ஒருவர் மாறி ஒருவர் பாடிக்கொண்டு இருந்தனர். இரவு 10 மணிக்கு, ஒரு சீடர் வந்தார். அவருக்கு சுவாமியிடம் நேரடி தொடர்பு இருந்தது. அவர் பெயர் Dr. எஸ். ஏ. வெட்டிவேலு. அவர் தினமும் சுவாமியின் இரத்த அழுத்தம் மற்றும் இரத்தத்தில் சர்க்கரை அளவை பரிசோதிக்க, இன்சுலின் ஊசியை வழங்க வந்துக்கொண்டு இருந்தார். அவர் எந்தவித தயக்கமும் இன்றி, அவரிடம் வந்து, “எப்படி இருக்கிறீர்கள், சுவாமி?” என்று கேட்டார். “எல்லாம் சரி," என்று சத்தமாக கூறினார். இந்த வார்த்தைகளை கேட்டதும், பெரும்பாலான அன்பர்கள் அவர் குணமடைந்து விட்டார் என்று நினைத்து கிளம்பினார்கள். §



*யோக சுவாமி இறந்த போது, அவரை சுடுகாட்டிற்கு கிராமங்கள் வழியாக ஒரு மூடு பல்லக்கில் மக்கள் சுமந்து சென்றார்கள். பல இதயங்களை தொட்டு, இலங்கையின் மாமனிதராக இருந்த அவருக்கு நாடு முழுவதும் இரங்கல் தெரிவித்தது மற்றும் அவருக்கு மரியாதை செலுத்த பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.*

........................§

இரவு 11:30 மணி அளவில், ஐந்து அன்பர்கள் மீதம் இருந்தனர்: Dr. எஸ். ஏ. வெட்டிவேலு, திரு. அ. தில்லையம்பலம், திரு. காசிப்பிள்ளை நவரத்தினம், திரு. பிரம்மாநந்தா மற்றும் திரு. திருநாவுக்கரசு. மக்கள் கூட்டம் கிளம்பி இருந்ததால், அறையில் இருந்தவர்களின் மனநிலை உணர்ச்சிப்பூர்வமான பதட்டத்தில் இருந்து விளக்க முடியாத அமைதியாக மாறி இருந்தது. சுவாமி அமைதியாக இருந்தார். ஒரு சமயத்தில் அவர் அமைதியாக பேசி, தன்னை சுற்றி இருந்தவர்களிடம் பாட்டு பாடுமாறு கேட்டுக்கொண்டார். அவர்கள் எப்போதும் முக்கியமான தருணங்களில் பாடிய இரண்டு பாடல்களை பாடினார்கள்: சுவாமி எழுதிய “எங்கள் குருநாதன்" மற்றும் மாணிக்கவாசகர் எழுதிய பழங்கால பாடல் “நமச்சிவாயம் வாழ்க." §

மார்ச் 24, 1964 திங்கட்கிழமை காலை 3:18 மணிக்கு, யோக சுவாமி உயிர் துறந்தார். அங்கே இருந்தவர்களின் வாழ்க்கையில் இருந்த மற்ற அனுபவங்களை மறைக்கும் அளவிற்கு, அவர்கள் மிகவும் தீவிரமாக பரவிய

சக்தியின் ஆதிக்கத்தில் இருந்ததால், தாங்கள் எல்லா உணர்வுகளையும் இழந்ததாக அவர்கள் தெரிவித்தார்கள். §

மரணத்தின் அணுகுமுறை நமக்கு உலக வாழ்க்கை நிலையற்றது என்பதை தெரிவிக்கிறது. இத்துடன் நமது உடைமைகள், பதவி மற்றும் ஆணவம் முடிவுக்கு வருகிறது. இந்த உண்மையை அறிந்து இறைவனை நோக்கி, வாழ்க்கையின் முடிவான குறிக்கோளான முக்தியை நோக்கி மற்றும் அந்த முக்தியை பெறுவதற்கு ஆன்மாவை அழைத்து செல்லும் அறவழியை நோக்கி, தங்கள் மனதை செலுத்த யாழ்ப்பாண சைவ இந்துக்களுக்கு கற்றுத்தரப்பட்டது. அவர்கள் இதை அச்சத்துடன் மேற்கொள்ளாமல், இந்த தூல பிறவியில் தாங்கள் ஆன்மீக முன்னேற்றம் பெறுவதற்கு கிடைத்த வாய்ப்பாக கருத்தி உறுதியாக, நம்பிக்கை மற்றும் நன்றி உணர்வுடன் மேற்கொண்டனர்.§

மக்கள் தங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை பொறுத்து மரணம் பல்வேறு வகையில் விளக்கப்பட்டுள்ளது. அவர்கள் வெறும் உடல் மற்றும் மூளையாக மட்டும் இருந்தால் (மனித நலக்கோட்பாடுகளை பின்பற்றுபவர் மற்றும் நாத்தீகர்கள் கருதுவதை போல), மரணம் என்பது புலனுணர்வு அனுபவம் மற்றும் ஆன்மாவின் முடிவாக விளங்குகிறது. நாம் ஒரு முறை வாழ்ந்தால், பூமியில் நமது வாசம் மரணத்துடன் முடிவுக்கு வருகிறது மற்றும் அதனால் அது இயல்பாக அச்சம் தருவதாக இருக்கிறது. நாம் மீண்டும் மீண்டும் பிறந்தால், நித்தியத்தை நோக்கி ஆன்மா மேற்கொள்ளும் யாத்திரையின் பின்னணியில் அது தனது அச்சத்தை மறக்கிறது. §

நமது நோய் எவ்வளவு தீவிரமாக இருந்தாலும், நமது உடல்நிலை எவ்வளவு மோசமாக இருந்தாலும், நமது உயிர்சக்தியில் ஒரு அமைதியான ஆறுதல் அளிக்கும் மையமாக நமக்குள் இருக்கும் மூலத்தில் நாம் ஒதுங்கிக்கொள்ளலாம். அது நமது உடல், நமது மனம் மற்றும் உணர்ச்சியை காட்டிலும் அதிகமாக நமது பண்பை குறிப்பிடுகிறது. அதற்கு மரணம் இல்லை. அதற்கு தீங்கு விளைவிக்க முடியாது மற்றும் அதை பயமுறுத்த முடியாது. உடல் ரீதியான சோர்வு மற்றும் மரணம் நெருங்கும் போது, நாம் இந்த மையத்தை நாடுகிறோம். நாம் இதை பரமாத்மன், இறைவன், பரமாத்துமா அல்லது தெய்வீக உணர்வு என்று பல்வேறு பெயர்களுடன் அழைக்கிறோம். “முழுமுதற்பொருளை கிரகித்துக்கொள்ள முடியாதவர்களுக்கு மரணம் ஒரு மாயையாக மட்டுமே காட்சி அளிக்கிறது. ஆன்மா அழிவில்லாமல், சுயமாக இயங்கி, சுயமாக பிரகாசித்து என்றும் இறக்காமல் இருக்கிறது,” என்று மரணத்தை கட்டுப்படுத்தும் கடவுளாக விளங்கும் எமன் கதா உபநிடதத்தில் விளக்குகிறார். §

பிற்காலத்தில் இந்த செயல்முறையை பற்றி சிவாய சுப்பிரமுனியசுவாமி தரும் விளக்கம்: §

> சைவ சித்தாந்த தத்துவத்தில், *சம்ஸ்காரங்கள்* என்று அழைக்கப்படும், வாழ்க்கையின் “சிந்தனை-சக்தி" அனுபவ பதிவுகளை *லிங்க ஷரீர*

என்கிற ஆன்மாவின் சூட்சும உடல் சேமிக்கிறது. தூல உடல் இறந்ததும், தூல பண்புடன் இல்லாத இந்த கோசம் மனநிலைகள், ஞாபகங்கள், ஆசைகள் போன்ற சூட்சுமமான பிரிவுகளின் குழுவாக இருந்து வருகிறது. இந்த சூட்சும உடலுக்குள், தேவையிருந்தால், ஆன்மா மறுபிறவி எடுக்கிறது. இந்து சமயத்தில், மரணம் என்பது உயிருக்கு முரணாக இருப்பதில்லை. உயிரின் பிரபஞ்ச சுழற்சியில் மரணமும் பிறப்பும் இரண்டு பக்கங்களாக விளங்குகின்றன. அந்த சுழற்சியின் முடிவாக முக்தி விளங்குகிறது. "ஆசையை கைவிடுவதன் மூலம், மனிதன் பிறப்பை முழுவதுமாக முடிவு கொண்டு வந்துவிடலாம்," என்று யோக சுவாமி கற்றுத் தந்தார். §

மரண அனுபவத்தை நெருங்கிய பலர் தங்கள் குழந்தைகள், பெற்றோர்கள் அல்லது நண்பர்களுக்கு தாங்கள் நிறைவேற்றாத பொறுப்புக்களை முடிப்பதற்கு திரும்பியதாக கூறியுள்ளார்கள். ஒருவருக்கு விரைவில் நிலைமாற்றம் ஏற்படவிருக்கிறது என்பதை தெரிந்துகொள்வது ஒரு மிகப்பெரிய வரம் ஆகும். மரணத்தை நெருங்கும் ஒரு இந்து, தனது மொத்த கர்மவினைகளில், இந்த பிறவிக்கு ஒதுக்கப்பட்ட கர்மவினைகள் அனைத்தையும் எதிர்கொண்டு கரைக்கும், தனது வாழ்நாள் "பணியை" முடிவுக்கு கொண்டு வர கடுமையாக உழைக்கிறார். தீர்வு காணப்படாத மனவேற்றுமைகள், பரிகாரம் செய்யாத பாவங்கள் அல்லது நிறைவேறாத பொறுப்புக்கள் என்று முடிவுறாத பணிகள் இருக்கும் போது மரணம் நேர்ந்தால், அந்த கர்மவினையை கரைப்பதற்கு இன்னொரு பிறவி தேவைப்படும். அதனால் வயதான அல்லது நோயால் வாடும் இந்துக்கள், தங்களது கடைசி காலத்தில் நண்பர்கள் மற்றும் எதிரிகளை சந்தித்து அன்பு, உதவி மற்றும் ஆசிகளை வழங்கி, சண்டைகள் மற்றும் கருத்து வேறுபாடுகளை சரிசெய்ய முயற்சி செய்து, மன்னிப்புக்களை வழங்கி, அறிந்த கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றுவது வழக்கமாக இருந்தது. நவீன காலத்தில் அந்த இந்து மற்றவர்களுக்கு எந்த பணியையும் மீதம் வைக்காமல், தனது உயிலை எழுதி, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை தனது வாரிசுகள், நன்கொடைகள் மற்றும் அறக்கட்டளைக்கு பகிர்ந்து வழங்கி விடுவார். §

அதை செய்து முடித்தவுடன், விரைவில் நிலைமாறவிருக்கும் ஆன்மா இறைவனாக மாறி, சாஸ்திரங்களை படித்து, கோயில் விழாக்களில் பங்குபெற்று, தியானம் மற்றும் பக்தியை விரிவுபடுத்துகிறது. அவர் புனிதத் தலங்களுக்கு பயணம் மேற்கொள்வார் அல்லது தனிமையான இடத்திற்கு சென்று ஜபம் மற்றும் யோக சாதனாக்களை அப்பியாசம் செய்வார். அவர் வாழ்க்கையின் இறுதி நிலையான, சந்நியாசம் என்கிற துறவறத்தில் நுழைந்து விட்டார் என்பதை உணர்ந்த அவரது குடும்பத்தினர், அவரது இந்த முயற்சிகள் அல்லது சமூக கடமை அல்லது தொடர்பில் இருந்து, அவர் பெற்ற ஓய்வை தடை செய்யாமல் இருப்பார்கள். §

சுவாமி தான் உயிர் துறக்கும் நேரம் பற்றி சில குறிப்புக்கள் மற்றும் இந்த உலகை விட்டு கிளம்புவது பற்றி தனது சிந்தனைகளை ஒரு அன்பரிடம் பகிர்ந்துகொண்டார். அந்த அன்பர் இதனை நினைவுக் கூர்கிறார்: §

> சுவாமியின் மகாசமாதிக்கு மூன்று மாதங்கள் முன்பு, நாங்கள் அவரை சந்திக்க அடிக்கடி சென்றுகொண்டு இருந்தோம். அப்போது அவர் எங்களிடம், "மூன்று மணி ஆகிவிட்டதா? மூன்று மணி ஆனதும், நான் கிளம்ப வேண்டும், அதனால் மூன்று மணி ஆனதும் என்னிடம் சொல்லுங்கள்," என்று கேட்டுக்கொள்வார். அவர் வழக்கமாக மூன்று மணிக்கு வெளியே கிளம்பி விடுவார். அந்த சமயத்தில் ஒரு அன்பரின் வாகனம் அவருக்காக காத்துக்கொண்டு இருக்கும், மற்றும் அதில் அவர் சென்று விடுவார். ஒரு நாள் சுவாமி, "நான் எல்லாம் செய்து முடித்துவிட்டேன். என் மீது யாராலும் குற்றம் சுமத்த முடியாது. நான் எல்லோருக்கும் எல்லாம் செய்துவிட்டேன். நான் உங்களுக்காக ஏற்பாடுகளை செய்து விட்டேன்," என்று கூறி, தான் பிரியப்போவதை குறிப்பிடும் வண்ணம் தலை வணங்கினார். இறுதியாக, அவர் காலை 3 மணிக்கு உயிர் துறந்தார். அதன் பின்னர் நாங்கள் நடந்த சம்பவங்களை தொடர்புப்படுத்தி பார்க்கும் போது, அவர் தொடர்ந்து நேரத்தை கேட்டுக்கொண்டு, தனது இறுதி பயணத்திற்கு தயாராகிக் கொண்டு இருந்தார் என்பது எங்களுக்கு புரிய வந்தது. §

சுவாமி தூல உடல் தனக்கு முக்கியம் இல்லை என்று சொல்லி, தனது இறுதி மகாபயணத்திற்கு எல்லோரையும் தயார் செய்தார். "நான் உயிர் துறந்தவுடன், அந்த உடலை வீசி எரித்துவிடுங்கள். நான் செய்யவேண்டியது அனைத்தையும் எல்லோருக்கும் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக செய்துவிட்டேன். நான் சொல்லவேண்டியது அனைத்தையும் சொல்லி விட்டேன். எனக்கு எந்த குறையும் இல்லை," என்று அவர் ஒரு அன்பரிடம் கூறினார். அவர் தனது பணியை செய்ய அல்லது தனது இருப்பை வெளிப்படுத்த, தனக்கு தனது தூல உடல் தேவையில்லை என்று கூறி, உலகமெங்கும் இருக்கும் மக்கள் தன்னைப்பற்றி அறிந்து, குருவின் ஆசிகளை உணரும் காலத்தைப் பற்றியும் குறிப்பிட்டார். §

இந்து சாதனம் என்ற பத்திரிகையில் "யாழ்ப்பாணத்தின் ஒளி" என்ற தலைப்பில், அவரது இறுதிச்சடங்கு பற்றிய பின்வரும் விவரம் பிரசுரிக்கப்பட்டு இருந்தது. §

> கொழும்புத்துறை ஆசிரமத்தில் 24-3-1964 செவ்வாய்க்கிழமையன்று, அவரது புனித உடலுக்கு அன்பர்கள், பள்ளி சிறுவர்கள் மற்றும் பலர் அஞ்சலி செலுத்தினார்கள். அன்பர்கள் குழுவாக *திருமுறை*, தமிழில் துதிப்பாடல்கள் மற்றும் இனிமையான இசையுடன் நற்சிந்தனை பாடல்களை பாடினார்கள். 25-3-1964, புதன்கிழமை அதிகாலை சுமார் 5

மணி அளவில், சுவாமிகளின் உடலுக்கு அவர்கள் சிரத்தையுடன் *அபிஷேகம்* செய்தார்கள். §

சுவாமிகளின் உடல் சுத்தமான வெள்ளை துணியால் மூடப்பட்டு இருந்தது மற்றும் அதன் மீது மலர் மாலைகள் இருந்தன. மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட ஒரு சதுர வடிவ பெட்டியில் அவரது உடல் சுமந்து செல்லப்பட்டது. அதை அன்பர்கள் துண்டி சுடுகாட்டிற்கு கொழும்புத்துறை சாலை வழியாக சுமந்து சென்றார்கள். ஊர்வலம் சென்ற வழி எல்லாம் இலைகள் மற்றும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அந்த தெருக்களில் வசித்த மக்கள், எண்ணெய் விளக்குகளை ஏற்றி, தங்கள் வீடுகளுக்கு முன்பாக தண்ணீர் பானைகளை வைத்து, பஜனை செய்து மரியாதை செலுத்தினார்கள். §

சுமார் 9 மணி அளவில் ஊர்வலம் இறுதி சடங்கு நடக்கும் மைதானத்தை வந்து அடைந்தது. தகனத்தை பார்க்க ஆயிரக்கண்கானோர் கூடியிருந்தனர். ஆண்களையும் பெண்களையும் தனித்தனி வரிசைகளில் தன்னார்வத் தொண்டர்கள் அமர்த்திக்கொண்டு இருந்தார்கள். மயானத்தில் அமைதி நிலவியது. உடல் ஒரு விறகு அடுக்கு மீது வைக்கப்பட்டு இருந்தது. அதில் கால் டன் எடையுள்ள சந்தனமரமும் சேர்க்கப்பட்ட இருந்தது. எல்லோரும் யோக சுவாமிகளின் அருள் மற்றும் இந்த உலகில் மிகப்பெரிய சித்தர் வாழ்ந்த காலத்தில் தாங்களும் வாழ்ந்ததை நினைத்து தியானம் செய்துக்கொண்டு இருந்தனர். கொக்குவில் திரு. தி. குமாரசுவாமி புலவர் பக்தியுடன் திருவாசகம் பாடங்கள் மற்றும் ஒரு புராணத்தையும் பாராயணம் செய்துக்கொண்டு இருந்தார். அதன் பிறகு செய்து அந்த உடல் சடங்களுடன் தீ மூட்டப்பட்டது. எல்லோரும் சத்தமாக “அரோகரா" என்று சொல்லிக்கொண்டு, அந்த ஒளியை வழிபட்டனர். §

சிங்கள சகோதரர்கள், இசுலாமியர்கள் மற்றும் கிறுத்துவர்களும் அஞ்சலி செலுத்த வந்திருந்தனர். இதைப்போன்று, ஒவ்வொருவரும் ஒளியுடன் சுவாமி ஐக்கியமாவதை கவனித்தார்கள். அந்த இடம் பூமிக்கு வந்த கைலாயம் போன்று இருந்தது. §

பின்வரும் விளக்கத்தை வி. முத்துகுமாரசுவாமி வழங்கினார்.§

கொழும்புத்துறையை சேர்ந்த மகானுக்கு தங்கள் இறுதி அஞ்சலியை செலுத்த, பெருமளவில் வந்திருந்த பல்வேறு மதங்களை சேர்ந்த அன்பர்களின் கூட்டத்தை, யாழ்ப்பாணம் அதற்கு முன்னர் சந்தித்திருக்கவில்லை. நூற்றுக்கணக்கான அன்பர்கள் வந்து இருந்தார்கள். யாழ்ப்பாணமே அங்கே கூடியிருந்தது போல தோன்றியது. அவர் தங்களது குறைகளை தங்களுக்கு வெளிப்படுத்தி விடுவார் என்ற அச்சத்தில், தங்கள் வாழ்நாள் முழுவதும் அவரைக் கண்டு அஞ்சி இருந்தவர்கள், ஒரு தியாக வாழ்க்கையை வாழ்ந்த இந்த மகானுக்கு அங்கே அஞ்சலி செலுத்தினார்கள். அது ஒரு புனிதமான நிகழ்வாக

இருந்தது. ஆன்மா அழிவில்லாதது என்று அறிந்து இருந்தாலும், பலரால் தங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியவில்லை. உண்மையான மரணம் என்று ஒன்றும் இல்லை என்றும் இறைவனை சென்று அடைவதற்காக தான் மேற்கொள்ளும் யாத்திரையில் ஆன்மா ஒரு உடலில் இருந்து இன்னொரு உடலுக்கு செல்கிறது என்றும் சிறுவயது முதல் அவர்களது சாஸ்திரங்கள் மற்றும் போதனைகள் கற்றுத் தந்துள்ளது. மேலும் சுவாமி சம்சாரத்தில் இருந்து முக்தி பெற்று பேரானந்தத்தை உறுதியாக அனுபவித்துக் கொண்டிருப்பார் என்பதை அவர்களும் அறிந்து இருந்தார்கள். அவர்கள் சுவாமியை இழந்து தாங்கள் உணர்ந்த வெறுமையை நினைத்து அழுதுகொண்டு இருந்தனர். §

*தி சிவ தொண்டன்* பத்திரிக்கையில் ஸ்ரீ ஆனந்த பெரேரா பின்வரும் புகழஞ்சலியை வழங்கியுள்ளார்*:*§

பலர் பெறுவதில் ஆர்வம் காட்டினாலும், வெகு சிலரே வழங்குவதில் ஆர்வம் காட்டுகிறார்கள். யோக சுவாமி ஒரு ஈடு இணையற்ற வள்ளலாக இருந்தார். அவர் தன் வாழ்க்கை முழுவதும் மக்களுக்கு வழங்கிக்கொண்டு இருந்தார். §

அவரை 1952 மற்றும் 1963 ஆண்டுகளில் சந்திக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. இந்த இரண்டு சந்திப்பிற்கு இடையில், காலம் மற்றும் ஒரு துக்ககரமான விபத்து தவிர்க்க முடியாத மாற்றத்தை ஏற்படுத்தி இருந்தது. நான் அவரை முதல் முறை சந்தித்த போது, அவர் உடலுறுதியுடன் இருந்தார். ஆனால் இந்த முறை அவர் சோர்வாக கிட்டத்தட்ட படுத்த படுக்கையாக, தனது அடிப்படை தேவைகளுக்கு மற்றவர்களை நம்பி இருந்தார். மிகவும் பிரகாசமாகவும் கூர்மையாகவும் இருந்த அவரது கண்கள், தற்போது சோர்ந்து இருந்தன. அவர் குரல் தனது எதிரொலிக்கும் தன்மையை இழந்து இருந்தது. உறுதியாக இருந்த கைகள் தற்போது நடுங்கின, மற்றும் மரியாதைக்குரிய முகத்தில் வலி தன் சுவடுகளை உருவாக்கி இருந்தது. சமூகத்தில் மிகவும் உயர்வானவர்களும், மாற்றத்தின் விதியை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதற்கு அவர் ஒரு சான்றாக விளங்கினார். §

ஆனால் அவரிடம் இருந்த அந்த தலைமை பண்பின் சுடர் எப்போதும் போல பிரகாசமாக இருப்பதை கவனித்தேன். அந்த மங்கலான கண்கள், இன்னும் மனித இதயத்தின் ஆழத்திற்குள் ஊடுருவி சென்றுகொண்டு இருந்தன. அவரது குரலில் அதிகாரத்தின் சாயல் இன்னும் இருந்தது. அந்த நடுங்கும் கைகள், இன்னும் உண்மையான அரசரின் செங்கோலை பிடித்துக்கொண்டு இருந்தது. அவர் இன்னும் வழங்கிக்கொண்டு இருந்தார், மற்றும் நான் பெறுபவனாக இருந்தேன். §

அவர் எதை வழங்கினார்? அமைதி, வலிமை, நம்பிக்கை, தைரியம் என்று அவர் வழங்கிய பரிசுகள் ஏராளம். ஆனால் அவர் மிகவும் முக்கியமாக அன்பை வழங்கினார். சூரியனிடம் இருந்து ஒளியும்

வெப்பமும் வெளிப்பட்டதைப் போல, அவரிடம் இருந்து அந்த அன்பு வெளிப்பட்டது. §

நான் எதை பெற்றேன்? எனது திறமைக்கு ஏற்ப பெற்றுக்கொண்டேன். ஒரு குவளையுடன் நீர்வீழ்ச்சிக்கு அடியில் நில்லுங்கள். அந்த நீர்வீழ்ச்சியின் ஆற்றல் உங்களை வியக்க வைத்தாலும், உங்களால் ஒரு குவளை அளவு தண்ணீரை மட்டுமே பிடிக்க முடியும்.§

ரத்னா மா நவரத்தினம் தனது கருத்தை தெரிவிக்கிறார்:§

சுமார் தொண்ணூற்று இரண்டு வருடங்களுக்கு, பழங்கால சைவத் துறவிகளின் பிரகாசத்தை பிரதிபலிக்கும் ஒளிக்கதிராக விளங்கினார். அவர் வாழ்ந்து செயல்பட்டுக் கொண்டிருந்த யாழ்ப்பாண மக்கள் மெதுவாக வளர்ச்சி அடைந்து, அவரது இருப்பை நன்மை தரும் சூரிய ஒளி போன்று இயல்பானதாக ஏற்றுக்கொண்டதால், மார்ச் 24 1964 அன்று நடைபெற்ற அவரது மகாசமாதி, பல தலைமுறைகளுக்கு அவரது பிரகாசத்தில் மகிழ்ச்சியாக இருந்த பல தரப்பு மக்களின் மத்தியில் ஒரு அசாதாரண கலக்கம் மற்றும் வேதனையை ஏற்படுத்தியது. இருபதாம் நூற்றாண்டில்  ஞானோதயம் பெற்ற தீர்க்கதரிசியாக மரியாதை செலுத்தப்பட்ட சுவாமி, பூமியில் இறைவனின் சாட்சியாக, புனிதத்தை இரகசியமாக வைத்திருந்த ஒரு மகானாக இருந்தார். அவர் கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தின் திரிவேணி சங்கமமாக விளங்கினார். அவர் உலகம் முழுவதையும், சிவபெருமானின் ஒப்புயர்வற்ற விருப்பத்துடன் தொடர்பில் வைத்து இருந்ததாக தோன்றுகிறது. பிரதான சிவதொண்டன், சிவபெருமானுக்கு வழங்கும் சேவையான, சிவ தொண்டு என்கிற தனது பொதுவான போதனை மூலமாக, சேவை மற்றும் துறவறத்தின் பாதையை தெளிவாக வெளிப்படுத்தினார். ஒவ்வொரு நொடியும் சிவபெருமானின் சேவகர்களாக வாழவேண்டும் என்பது இக்காலத்து மனிதனுக்கு அவர் வழங்கிய தெளிவான வேண்டுகோளாக இருந்தது. §


தகனத்திற்கு பிறகு, சுவாமியின் அஸ்தி புதிய ஆசிரமத்தில் வைக்கப்பட்டு இருந்தது. ஆசிரம நிலத்தின் உரிமையாளராக இருந்த திரு. திருநாவுக்கரசு ஒரு முறையான சமாதி அமைக்க வேண்டிய தேவையை உணர்ந்து, சுவாமியின் மூன்று மூத்த சீடர்களாக இருந்த Dr. சி. குருசாமி, திரு. அ. தில்லையம்பலம் மற்றும் திரு. ஸ்ரீகந்தாவுடன் ஆலோசித்தார். அவர்கள் பழைய குடிசையை இடித்து, அந்த இடத்தில் சமாதி அமைக்கவேண்டும் என்று ஒருமனதுடன் முடிவு செய்தனர். சிவ தொண்டன் சமூகம் மூலம் நிதி திரட்டப்பட்டது, மற்றும் அடுத்த சில மாதங்களில் பழைய கற்காரை தரையின் மீது ஒரு புதிய கட்டுமானப் பணி தொடங்கியது. கட்டிடத்தின் மேற்கில் இருந்த சுற்றுப்புற சுவரின் மீது ஒரு பெரிய உள்ளறை கட்டப்பட்டது. அதன் மீது சுவாமியின் அஸ்தி, நிலத்திற்கு அடியில் இருந்த ஒரு சிறு

பள்ளத்தில் வைக்கப்பட்டு, அதன் மீது கிழக்கு பார்த்தபடி ஒரு முறையான சந்நிதி அமைக்கப்பட்டது. அந்த சந்நிதி ஒரு சில மாதங்களில் நிறைவுற்றது, மற்றும் ஒரு சிறிய எளிமையான சடங்கின் போது அஸ்தி அந்த சிறு பள்ளத்தில் வைக்கப்பட்டது. §

அங்கே வைக்கப்பட்டுள்ள அவரது திருவடிகளுக்கு, ஒரு பூசாரி தினமும் பூஜை செய்கிறார். சுவாமி உட்கார்ந்த, தியானம் செய்த மற்றும் உறங்கிய இடமும் ஒரு வழிபாட்டு இடமாக இருக்கிறது. அதற்கு பின்புறம் இருந்த சுவற்றில், சுவாமி தியானம் செய்யும் போது எடுக்கப்பட்ட புகைப்படம் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இதற்கும் பூசாரி பூஜை செய்கிறார். அவர் அமர்ந்த இடத்தில், தனித்து தெரியும் வண்ணம் வெள்ளை நிற பீங்கான் ஓடு பதிக்கப்பட்டுள்ளது. இங்கே தினமும் மலர்கள் தூவப்பட்டு, படையல்கள் வைக்கப்படுகின்றன. §

### சுவாமி தொடர்ந்து வாழ்ந்துகொண்டு இருக்கிறார்

உணர்தலையும் முக்தியையும் பெற்ற ஒரு ஆன்மா தன் உயிரை துறக்கும் போது, அவர் பூமியில் மேலும் மறுபிறவி எடுப்பதில் இருந்து தானாக விடுவிக்கப்படுவதாக சிலர் கருதுகிறார்கள். இது பெரும்பாலானோருக்கு உண்மையாக இருந்தாலும், முக்தி பெற்றவர்கள் மீண்டும் திரும்பி வந்து சேவை செய்ய ஒரு வாய்ப்பு அளிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. அதற்கான வாய்ப்பு இருப்பதாக, யோக சுவாமி ஒரு சீடனிடம் கூறிய பின்வரும் கதை பரிந்துரைக்கிறது. §



*சுத்தமான சந்தனமரமும் சேர்க்கப்பட்டிருந்த ஒரு சிதையில் யோக சுவாமியின் உடல் தீ மூடப்பட்டது. அதற்கு பிந்தைய வருடங்களில், அவர் தங்கள் வாழ்க்கையில் தொடர்ந்து இருக்கிறார் என்பதை உணர்ந்ததன் மூலமாகவும், அவரது மரணம் அவருக்கு முடிவாக இருக்கவில்லை என்பதை அறிந்ததன் மூலமாகவும், பலர் அவரை அவரது சூட்சும உடலில் எதிர்கொண்டனர்.*

……………………..§

நல்லூரில் பல வருடங்களுக்கு முன்பாக, செல்லப்பகுருவின் ஜென்ம நட்சத்திரம் முகமதுவின் பிறந்தநாளுக்கு ஒரு நாள் முன்பாக வந்து இருந்தது, மற்றும் செல்லப்பர் நல்லூர் கோயிலுக்கு சுவாமியை அழைத்து சென்று, போர்த்துகீசியர்கள் மூலம் கோயில் அழிக்கப்பட்ட சமயத்தில் புதைக்கப்பட்ட ஒரு மிகப்பெரிய இசுலாமிய குருவின் கல்லறைக்கு அழைத்து சென்றார். அவர் புதைக்கப்பட்ட இடத்தை சுற்றி ஒரு கல்லறை கட்டப்பட்டது; அந்த சமாதி பின்னர் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. அங்கே புதையுண்டு இருந்த இசுலாமிய மகான் நான் தான் என்று செல்லப்பர் கூறியதாக யோக சுவாமி கூறினார். அதாவது செல்லப்பகுரு முந்தைய பிறவியில், அந்த முக்தி பெற்ற குருவின் உடலில் இருந்துள்ளார் மற்றும் அவர் மீண்டும் பூமிக்கு செல்லப்பராக திரும்பியுள்ளார் என்பதை அவர் குறிப்பிட்டார். யோக சுவாமி இந்த கதையை சொல்லிக்கொண்டு இருக்கும் போது, தனது சீடனை நேருக்கு நேராக பார்த்து, “அதைப்போன்று தான் நாமும்,” என்று கூறினார். §

யோக சுவாமி லௌகீக உலகில் வாழ்ந்த போதும், அவர் தனது சூட்சும உடலில் தோன்றியதை பல அன்பர்கள் பார்த்துள்ளனர். அதே போன்ற அனுபவத்தை, அவர் மகாசமாதி அடைந்த பிறகு இந்தியா, மலேஷியா, இலங்கை மற்றும் அமெரிக்காவில் இருந்த மக்கள் பெற்றுள்ளனர். அதன் பிறகு அவர் பூமியில் நடந்து சென்றதை போல, பலர் அவரை ஆகாய வடிவில் பார்த்துள்ளனர். அவரது உருவத்தை பார்க்காதவர்களும், அவர் உருவத்தை தரிசித்து இருக்கிறார்கள். அவருக்கு நெருக்கமான சீடர்கள் அமைதியான தருணங்களில் பார்த்து இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஆன்மீக பணியில் முழு கவனத்தை செலுத்த, சுவாமி அவர்களது தியானங்களில் வெளிப்பட்டு, அவர்களுக்கு தேவையானதை வழங்கியுள்ளார். §

சுவாமி மகாசமாதி அடைந்து பல மாதங்களுக்கு பிறகு, யாழ்ப்பாணத்தை சேர்ந்த அன்பர், இரவு நேரத்தில் தனது வீட்டில் ஒரு நுணுக்கமான, விளக்கமுடியாத மாற்றத்தை உணர்ந்தார். அந்த உணர்வு மிகவும் வலுவாக இருந்ததால், அவரால் அதை புறக்கணிக்க முடியவில்லை. அவர் அதை தெரிந்துக்கொள்ள தன் படுக்கையில் இருந்து எழுந்து, பல இடங்களுக்கு சென்று, இறுதியாக பூஜை அறையில் நுழைந்தார். அங்கே யோக சுவாமி, அந்த பிரபல புகைப்படத்தில் இருந்ததைப் போல, பிரகாசமாக பகலைப் போன்று தெளிவாக, தரையில் இருந்து ஒரு மீட்டர் உயரத்தில் அமர்ந்து

தியானம் செய்துக்கொண்டு இருந்தார். அந்த அன்பர் அவரை வழிபட்டு, தன் மனைவி மற்றும் குழந்தைகளை வந்து பார்க்குமாறு அழைத்தார். அவர்கள் வந்த போது, அந்த உருவம் சுவரில் மறையத்தொடங்கியது. ஆனால் அவர்களுக்கும் அதை தரிசித்தனர். அதே அனுபவத்தை மற்ற குடும்பங்களும் பெற்றன. §

யோக சுவாமியை நன்கு அறிந்த சீடர்கள், அவர் தங்களுக்கு அருகில் தூல உடலுடன் இருந்ததைப் போன்று, அவரது குரல் தெளிவாக கேட்டதாக பலர் கூறியுள்ளனர். அவர் உயிர் நீத்த சில நாட்கள் கழித்து, சுவாமிக்கு நெருக்கமான சீடராக இருந்த ஒரு பெண்மணி, அவரது ஆசிரம வளாகத்திற்கு சென்று எளிமையான குடிசையில் அமர்ந்து கொண்டாள். சுவாமியின் நினைவாகவே அவள், அவரது பிரிவால் சோகமாக இருந்தாள். சுவாமி தனக்கு எதிரில் இருந்த போது தான் பெற்ற மனநிறைவை பெறுவதற்காக, அவருக்கு முன்பாக தான் பலமுறை பாடிய பாடலை பாடத் தொடங்கினாள். அவள் பாட்டை பாதியில் நிறுத்தி அமைதியாக அமர்ந்து கொண்டாள். அப்போது சுவாமி தன்னிடம், “நான் எப்போதும் போலவே இருக்கிறேன். நான் இங்கே, அங்கே மற்றும் எங்கும் இருக்கிறேன். உனக்கு சோகமான சிந்தனை வேண்டாம்,” என்று முன்பைப் போல தெளிவாக பேசுவதை கேட்டாள். §

இந்த காலகட்டத்தில் சுவாமி அன்பர்களின் கனவுகளில் அடிக்கடி வந்துக்கொண்டு இருந்தார். வழக்கமாக சுவாமியிடம் சென்று ஆலோசனை பெற்ற அன்பர்களில் சிலர் பிரச்சனைகளை சந்தித்த போது, அவர் அவர்களது கனவுகளில் தோன்றி ஆலோசனைகளை வழங்கினார். அன்பர்களுக்கு தோன்றிய சில கனவுகளில், அவர் தங்களுக்கு அருகில் அமர்ந்து இருப்பதைப் போன்று, அவர்கள் அவரது சக்தியின் தீவிரத்தை தெளிவாக உணர்ந்தனர். சக்தி வாய்ந்த இந்த சந்திப்புக்கள் அவர்களை ஊக்குவித்து புதிய திசையையும் வழங்கியது. §

இதைப்போன்ற அனுபவங்கள் மெதுவாக குறைந்தன. 1968 வருடத்திற்கு பிறகு அவரது நெருக்கமும் தீவிரமும் குறைந்தது. அவர் தற்போது சக்தியை வெளிப்படுத்திக் கொண்டு மனதின் சூட்சும உலகங்களில் முழுமையாக வாழ்ந்து வருகிறார். அவருடன் இருக்க விரும்பும் அன்பர், தற்போது ஒரு ஆழமான யாத்திரையை மேற்கொள்ளவேண்டும். §

1972 ஆம் ஆண்டு, சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி சைவ சாஸ்திரங்களில் இருந்த தனது சூட்சும ஞான கண்ணோட்டத்தின் மூலம், இலங்கையில் யோக சுவாமி தனது ஆசிரமத்தின் ஒரு சிறிய அறையில் வாழ்ந்ததை போல, அவர் எவ்வாறு ஒரு சிறிய குகையில் வாழ்கிறார் என்பதை தெளிவுப்படுத்தினார். “அவர் தன் கண்களை சிமிட்டி அதை பெரிதுபடுத்தி விடலாம். ஆனால் அவர் ஒரு ஆழமான சமாதியில் அமர்ந்துகொண்டு, அவரது பெயரில் பூஜை நடைபெறும் புனிதமான இடங்களுக்கு தனது தரிசனத்தை வழங்குகிறார். அவரை வேண்டிக்கொண்டு பூஜை நடைபெறும் போது, அவரது சுவர்கள் திறந்துக் கொள்கின்றன மற்றும் அவர் பூஜை நடைபெறும் இடத்தில் இருக்கிறார். அவர் அங்கே செல்வது

இல்லை; பூஜை நடைபெறும் சூழல் வலுவாக ஊடுருவினால் அது அவரிடம் வருகிறது.” அன்பர்கள் தனது பாடல்களை பாடும் போது, யோக சுவாமி அந்தர்லோகத்தில் பங்குபெறுகிறார் என்பதை அறிந்து இருந்த சுப்பிரமுனியசுவாமி, நற்சிந்தனை பாடல்களை கற்றுக்கொண்டு பாடுவதற்கு தனது சீடர்களையும் ஊக்குவித்தார். §

மேற்கத்திய நாடுகளில், குறிப்பாக அமெரிக்காவில் அத்வைத சைவ சித்தாந்தத்தின் தோற்றத்தை யோக சுவாமி வாழ்நாள் முழுவதும் அறிந்து இருந்தார். அமெரிக்க  கண்டத்தில் சிவ வழிபாடு, எப்போதும் இருந்து வந்துள்ளதாக அவர் தனது நெருக்கமான சீடர்களிடம் குறிப்பிட்டார். கிராண்ட் கேனியனுக்கு அருகிலுள்ள கொலராடோ நதி படுகையில் வாழ்ந்த ஒரு பழங்கால குழுவினர், இந்தியாவின் பழங்கால முனிவர்களின் புரிதலுடன் சிவபெருமானை வழிபட்டதாக அவர் ஒரு முறை விளக்கினார். பூமியில் பழங்கால சைவ வழிபாட்டின் புனிதத்தை மீட்க, நன்றாக பக்குவமடைந்த பல இந்துக்கள் அமெரிக்காவில் வரவிருக்கும் காலத்தில் பிறக்க இருப்பதாகவும், இதன் மூலம் பூமியில் வலுவான ஆன்மீக வாழ்க்கையின் ஒரு புதிய யுகம் தொடங்கும் என்றும் சுவாமி அறிவித்தார். §

யோக சுவாமி தனது வாழ்நாளில், அத்வைத சைவ சித்தாந்தம் அல்லது ஒருமைவாத சைவ சித்தாந்தம் என்ற பாதையை நெறிமுறைப்படுத்தினார். அவர் சிறிய தடைகளை நீக்கி, அந்த பாதையை தெளிவாக்கினார். அவர் சிவபெருமானின் அழகு மற்றும் ஆழம் மற்றும் யாவும் கடந்த நிலையின் உருவமாக விளங்கினார். நிகழ்காலத்திற்கும் பழங்கால சைவ வழிபாட்டின் யதார்த்தத்திற்கும் இடையே இணக்கத்தை ஏற்படுத்த தனது வாழ்நாளை அர்பணித்த சைவ சித்தாந்தத்தின் நவீன யுக மகானாக, யோக சுவாமி இன்று யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் நினைவுக்கூரப்படுகிறார். §

சுவாமியின் தெய்வீக திட்டம் அவருக்கு முன்பாக அமர்ந்து பார்த்துக்கொண்டு இருந்தவர்கள் மத்தியில் தன்னை வெளிப்படுத்திக்கொண்டு, அவர்களது அங்கங்களை செயல்படுத்திக்கொண்டு இருக்கும் போது, அவர் தேவையில்லாத ஆரவாரத்தை அனுமதிக்க மாட்டார். அது முற்றிலும் இயல்பானது என்றும், அதன் மீது விசேட கவனம் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் கருதினார். தங்களுக்கு முன்பாக விரிவாக்கம் பெறுவதை பார்த்து வியந்து இருக்கும் மக்களிடம் சுவாமி, “இந்த உலகில் அற்புதம் என்று ஒன்றும் இல்லை. இது உங்களுக்கு அற்புதமாக தோன்றும் போது, உங்களது அறியாமை வெளிப்படுகிறது. இது எப்போவோ முடிந்த காரியம்.” “எது அற்புதமாக இருக்கக்கூடும்?”  என்று கேள்வி கேட்டு, “நான் நீயாகவும் நீங்கள் நானாகவும் இருக்கிறோம். நான் நித்தியமாக, பிறப்பு இல்லாமல், இறப்பு இல்லாமல், மரணம் இல்லாமல், மாற்றம் இல்லாமல், இரண்டாவது இல்லாமல் இருக்கிறேன்.”§

ஒரு நாள் ஒரு பெண்மணி, “சுவாமி, உங்களுக்கு வயதாகிக்கொண்டு இருக்கிறது.  உங்கள் இடத்தை நிரப்ப ஒரு குருவை தயார் செய்ய

போகிறீர்களா?” என்று கேட்டார். “அவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் இல்லை. எனக்கு அமெரிக்காவில் ஒருவர் இருக்கிறார்,” என்று யோக சுவாமி பதில் அளித்தார். §

Page 34: URL https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/34_guru05_01.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் பத்தொன்பது


# சுப்பிரமுனியசுவாமியின் இளமைப்பருவம்

எனக்கு தெரிந்து எனது முதல் சூட்சும ஞான அனுபவத்தை, நான் குழந்தையாக எனது தொட்டிலில் படுத்து இருந்த போது பெற்றேன். நான் விழாமல் இருக்க, அதில் சிறிய கம்பிகள் இருந்தன. எனக்கு முன்பாக திடீரென்று, உயரமாக முழுமையாக வளர்ச்சி அடைந்த ஒரு மனிதர், அமைதியாக வெளிர் மஞ்சள் நிற உடையில் நின்றுக்கொண்டு இருந்ததை உணர்ந்தேன். அதன் பிறகு இந்த முழுமையாக வளர்ச்சி அடைந்த மனிதராக இருந்து கொண்டு, இந்த குழந்தையை பார்க்கும் முழுமையான உணர்வை பெற்றேன். பிறகு நான் மீண்டும் குழந்தையின் உணர்வை பெற்று, இந்த மிகப்பெரிய ஆன்மாவை பார்த்துக்கொண்டு இருந்தேன். பிறகு நான் அந்த உயர்ந்த மனிதராக இருந்தேன். அதன் பிறகு நான் மீண்டும் குழந்தையாக இருந்துக்கொண்டு அந்த உயர்ந்த மனிதரை பார்த்துக்கொண்டு இருந்தேன்.  இவ்வாறு என் உணர்வு இந்த இருவருக்கும் இடையே மாறிக்கொண்டு இருந்தது. உயரமாக வெளிர் மஞ்சள் நிற உடையில் இருந்தவர் ஆனந்தமய கோசம்  என்பதை நான் உணர்ந்தேன். நான் தொடர்ந்து ஆன்மீக பக்குவத்தை பெறும் போது, இறுதியாக தூல உடலில் ஆனந்தமய கோசம் முழுமையாக வாசம் செய்யும் என்பதை உணர்ந்தேன். §

அந்த குழந்தைக்கு ராபர்ட் வால்டர் ஹான்சென் என்ற பெயர் சூட்டப்பட்டது. அவர் பிற்காலத்தில் சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமியாக மாறினார். அந்த குழந்தை வால்டர் மற்றும் ஆல்பர்ட்டா நீல்டு ஹான்செனுக்கு ஜனவரி 5, 1927, கலிபோர்னியாவின் ஓக்லாந்தில் இருந்த ஃபேபியோலா மருத்துவமனையில் பிறந்தது. அவர் தன் தங்கை கரோல்லுடன், கலிபோர்னியாவில் தஹோா ஏரிக்கு அருகே, ஃபாலன் லீப் ஏரியின் காடுகள் நிரம்பிய கடற்கரைகளில், தனிமையான ஒரு சிறிய குடிசையில் வளர்க்கப்பட்டார். அதிகம் பேசாத வால்டர், கலிபோர்னியாவை சேர்ந்தவர் மற்றும் அவர் பெற்றோர்கள் இருவரும்  டென்மார்க் நாட்டை சேர்ந்தவர்கள். கன்சாசில் பிறந்த ஆல்பர்ட்டாவின் தந்தை இங்கிலாந்தில் பிறந்தவர். §

அவரது தாயும் தந்தையும் ஸ்டான்போர்ட் பல்கலைகழகத்தின் மருத்துவ பள்ளியுடன் ஒரு இரகசிய பணியில் ஈடுபட்டு இருந்தனர். ஆனால் ஒதுக்குப்புறமாக மரக்கட்டையில் கட்டப்பட்ட விடுதிக்கு, அவர் பெற்றோர்கள் எதற்காக காப்பாளர்களாக இருந்தார்கள் என்பதை பற்றி எந்த தகவலும் இல்லை. அவர் தாய் இறந்த போது, ஈமச்சடங்கு செலவுகளை  விசித்திரமான முறையில் அந்த மருத்துவ பள்ளி ஏற்றுக்கொண்டது. ஸ்டான்போர்டில் நடந்த சம்பவங்கள் பற்றி ராபர்ட் அறிந்திருக்கவில்லை என்பதை, அந்த காலகட்டத்தைப் பற்றி அவர் அளித்த விளக்கம் தெரியப்படுத்துகிறது. §

இதை உறுதிப்படுத்த உண்மையில் சான்று எதுவும் இல்லை என்றாலும், நான் ஒரு சோதனை குழாய் குழந்தை என்பதை பல்வேறு குறிப்புக்கள் மற்றும் தகவல்களின் மூலம் நான் உணர்ந்துள்ளேன். அந்த குழந்தையை அவர்கள் “டெஸ்ட் ட்யூப் பேபி" என்று அழைப்பார்கள். நான் என் மனதில் அந்த எண்ணங்களுடன் வளர்ந்தேன். எனக்கு நடனத்தை கற்றுத்தந்து தனது மகனாக தத்து எடுத்துக்கொண்ட கிரேஸ் பர்ரோஸ், ஸ்டான்போர்ட பல்கலைகழக மருத்துவ மையத்தின் ஆராய்ச்சி துறைக்கு என் தாயார் வழங்கிய ஒத்துழைப்பை அறிந்து இருந்தார் என்று நினைக்கிறேன். அந்த காலகட்டத்தில் செயற்கை கருவூட்டல் அல்லது சோதனை குழாய் குழந்தைகள் ஒரு கருத்து வடிவமாகவும், சோதனை நிலையில் மட்டுமே இருந்தது. நான் பிறந்த போது, எங்கள் வீட்டிற்கு அருகில் வசித்து வந்த பிரெஞ்சு நாட்டுக்காரர், Dr. சபோவை பார்த்தது எனக்கு நினைவு இருக்கிறது, மற்றும் நான் அவரிடம், இன்று வரை ஒரு தந்தையை போன்ற நெருக்கத்தை உணர்கிறேன். §



*பிறந்து ஒரு சில நாட்களில், குழந்தையாக தொட்டிலில் இருந்த ராபர்ட் ஹான்சென் தனது முதல் காட்சியை கண்டான். அவன் தலை நிமிர்ந்து மேலே பார்த்த போது, அவர் உயரமாக நரைத்த தாடியுடன் இருந்த ஒரு மனிதரின் ஆனந்தமய கோசத்தை கண்டான். உடனே அவன், முழுமையாக பக்குவமடைந்த நிலையில் இருப்பது தானே என்பதை அறிந்துகொண்டான். திடீரென்று, அவர் அந்த மனிதனாக அந்த குழந்தையை பார்த்துக்கொண்டு இருந்தார், அதன் பிறகு மீண்டும் குழந்தை தன்னை பார்த்துக்கொண்டு இருந்தது. பார்வையாளர் நான்கு முறை மாறினார்கள்.*

**……………………..**§

அவர் தன் வாழ்க்கை முழுவதும் உணர்ச்சிவசப்படாமல், ஆன்மீக பற்றின்மையின் வலுவான உணர்வுடன் இருந்ததற்கு, தனது கருத்தரிப்பு மற்றும் பிறப்பில் உணர்ச்சிகள் இல்லாத அணுகுமுறை காரணமாக இருக்கலாம் என்று அவர் பிற்காலத்தில் தோன்றியது. §

அந்த சிறிய குடும்பத்தின் வாழ்க்கை கிராமத்தில் கழிந்தது. காடுகளில் தொலை தூரத்தில் இருந்த தஹோ ஏரிப் பகுதி, அமெரிக்காவில் மிகவும் அழகான இடங்களில் ஒன்றாக விளங்கியது, மற்றும் கோடைகாலத்தில்

கரடுமுரடாக கட்டப்பட்டிருந்த விடுதியில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அலை மோதியது. விருந்தாளிகளை உபசரித்து விடுதியின் பராமரிப்பை கவனித்த வால்டர் மற்றும் ஆல்பர்ட்டா, அந்த விடுதியின் காப்பாளர்களாக இருந்தார்கள். ஆனால் 6,377 அடி உயரத்தில் குளிர் காலம் கடுமையாக இருந்தது; ஹான்சென் குடும்பத்தினர் வழக்கமாக வருடத்திற்கு ஒரு முறை, மிகவும் பழமையான ஃபிர் மற்றும் தேவதாரு மரங்கள் மற்றும் நான்கு முதல் பத்து அடி வரை ஆழமான பனி மழையால் சூழப்பட்டு இருந்தனர். அவர்கள் இவ்வாறு பல பருவங்களை அக்கம் பக்கத்து வீடுகளில் இருந்து விலகி, குளிர் காலம் வருவதற்கு முன்பாக கவனமாக சேர்த்து வைக்கப்பட்ட டின் உணவுகள் மற்றும் விறகுகளை நம்பி வாழ்ந்து வந்தனர். §

ஒதுக்குபுறமான இடமாக இருந்தாலும், குழந்தைகளுக்கு அதிகமான கவனத்துடன், பரிசுகள் மற்றும் பொம்மைகளும் கிடைத்தன. கிறிஸ்துமஸ் மரத்திற்கு அடியில் எப்போதும் பரிசுகளின் குவியல் இருந்துக்கொண்டு இருக்கும். குடும்ப சந்திப்புக்களின் போது, அவர்களை சுற்றி இருபது-முப்பது உற்சாகமான சொந்தங்கள் சூழ்ந்து இருப்பார்கள், மற்றும் இருவரின் குழந்தை பருவத்திலும், பெரும்பாலும் ஒவ்வொரு வாரமும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. §

தன் தங்கை கரோலை விட ராபர்ட் மூன்று வயது மூத்தவனாக இருந்தான், மற்றும் அவன் அவளுக்கு தோழனாக, காப்பாளனாக மற்றும் குழந்தை பராமரிப்பாளராகவும் இருந்தான். அவன் அவளுக்காக பனிமனித பொம்மைகளை உருவாக்குவான், தங்கள் விடுதிக்கு பின்புறம் இருந்த சிறிய சரிவுகளில், ஸ்கூடாபோக் என்ற பெயருடன், மரக்கட்டையில் செய்யப்பட்ட ஒரு பனிச்சறுக்குக் கலத்தை பயன்படுத்தி, அவளுக்கு பனியில் பயணம் செய்யும் நுண்கலையை அறிவுறுத்தி, அவன் சமீபத்தில் தெரிந்துகொண்ட காட்டுவழி பாதையையும் கற்றுத்தந்தான். சகோதரனும் சகோதரியும் சென்ற பள்ளி, ஒரு அறையுடன் மரக்கட்டையில் கட்டப்பட்டு இருந்தது. அந்த பள்ளியில் ஆறு முதல் பதினாறு வரை, ஒவ்வொரு வயதிலும் இருந்த 23 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் மட்டுமே இருந்தார். எப்போதாவது வந்த கடிதமும் பழைய வானொலி மட்டுமே, குளிர்காலத்தில் அவர்களது வெளியுலக தொடர்பாக இருந்தன. அந்த வானொலி அவர்களுக்கு செய்திகளுடன், எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் ஓவால்டின் விளம்பரதாரர்களாக இருந்த ஒலித்தாக்கம் நிரம்பிய நாடகங்களையும் வழங்கின. §

ராபர்ட் விளையாட்டில் ஆர்வம் காட்டினான். அவர் தந்தை அவனுக்கு தச்சு வேலை, மேசையை உருவாக்குவது, கருவிகளை தயாரிப்பதில் ஊக்குவிக்க விரும்பினார், ஆனால் அவனுக்கு அவற்றில் ஆர்வம் இல்லை. அவனுக்கு குளிர்காலத்தில் பனியில் வெறுங்காலுடன் நடப்பது, படகு சவாரி, பனிச் சறுக்குதல் மற்றும் பனியில் நடந்து செல்வது பிடிக்கும். அவன் பெரும்பாலும் வழித்தடங்கள் மற்றும் பாதைகள் அல்லது மரங்கள் படர்ந்த பகுதியில் விளையாடினான். கோடை காலத்தில், அவன் ஏரியில் இருந்த ஒரு பாறைக்கு

நீந்தி சென்று தியானம் செய்வான். அவன் நீட்டமாக படுத்துக்கொண்டு, தனக்கு பாறையின்  உணர்வு வரும் வரை உட்புறமாக சென்றுகொண்டு இருப்பான். அவன் மேல்நோக்கி பார்த்து வானம் மற்றும் பாறை மற்றும் தன்னை சுற்றி இருக்கும் அனைத்திலும் இறைவன் வியாபிப்பதை உணர்வான். §

**“நான் தற்போது நன்றாக இருக்கிறேன்”**

ராபர்ட்டுக்கு மிகவும் பிடித்தமான வானொலி நிகழ்ச்சியாக “தி லோன் ரெஞ்சேர்" விளங்கியது. துணிச்சலான சம்பவங்கள் நிரம்பிய, இந்த தொடர் நாடகம் 1933 முதல் 1954 வரை ஒலிபரப்பப்பட்டது. இந்த கதையின் கதாநாயகனாக இருந்த டெக்ஸாஸ் ரெஞ்சேர் முகத்தில் முகமுடி  இருக்கும். அவன் தன்னுடன் டோண்டோ என்ற புத்திசாலி இந்திய கூட்டாளியுடன், அநீதிகளை சீர் செய்ய தனது குதிரை சில்வரின் மீது ஏறி விரைந்து செல்வான். வாரத்திற்கு அரை மணிநேரம் ஒலிபரப்பப்பட்ட இந்த நிகழ்ச்சி, ஆர்வத்துடன் இருந்த சிறுவர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாக இருந்தது. அவர்களில் ஹான்சென் சகோதர-சகோதரி ஜோடி, எந்த ஒரு தொடரையும் தவறவிட்டது இல்லை. §

1930 களின் தொடக்கத்தில், குளுமையாக இருந்த ஒரு டிசம்பர் மாத காலைப்பொழுதில், வீட்டிற்கு தேவையான மளிகைப்  பொருட்களை வாங்க மற்றும் தங்களுக்கு வந்த கடிதத்தை பெறுவதற்கு, வீட்டில் இருந்து மூன்று மைல் தூரத்தில், சவுத் லேக் தஹோவில் இருந்த ஒரு கிராமத்திற்கு ராபர்ட் தனது தந்தையுடன் சென்றார். அந்த காலத்தில் இருந்த வாகனங்களைப் போல, தங்கள் தேவைக்கேற்ப ஒரு சரக்கு வண்டியை தயார் செய்தனர். பனிக்காலங்களில் நல்ல சாலைகளை தேடும் அவசியம் இல்லாமல், அந்த வண்டியில் முன்பக்க சக்கரங்களுக்கு பதிலாக இரண்டு பெரிய பனிநடை கட்டைகள் பொருத்தப்பட்டு இருந்தன. மற்றும் மேலோட்டமாக நிரம்பியிருந்த பனிகள் மீது பயணம் செய்ய, வாகனத்தின் பின்புறத்தில் இரட்டை சக்கரம் கொண்ட இரும்பு ஸ்னோ டிராக்ஸ் பொருத்தப்பட்டு இருந்தன. அதன் மேற்புறம் துணியால் மூடப்பட்டு இருந்தது, சன்னல்கள் எதுவும் இல்லை மற்றும் பின்புறம் தேவையான பொருட்களை சுமந்து செல்ல ஒரு நீளமான திறந்த வெளிப்பகுதி இருந்தது. அன்று தந்தையும் மகனும் மெதுவாக சென்றுகொண்டு இருந்தார்கள், மற்றும் அது அவனுக்கு வேதனையாக இருந்தது. அன்று மாலையில் “தி லாங் ரேஞ்சர்” தொடர் ஒலிபரப்பாக இருந்தது, மற்றும் அந்த ஒரு தொடரை கேட்காமல் இருப்பதைப் பற்றி அவனால் கற்பனை செய்ய முடியவில்லை. ஆனால் ஒரு விநோதம் நடக்கவிருந்தது. அந்த தருணத்தை அந்த சிறுவன் வாழ்க்கை முழுவதும் மறக்கவில்லை. §

> பனியில்  பயணம் செய்யும் எங்கள் வாகனம் அடிக்கடி பனியில் நின்றுவிடும். நாங்கள் முன்னேறுவதற்கு தடையாக இருந்த

பனிக்கட்டிகளை என் தந்தை இறங்கி நகர்த்துவதற்கு, ஒன்று அல்லது இரண்டு மணிநேரம் ஆகும். நாங்கள் ஒவ்வொரு முறை அந்த கிராமத்திற்கு சென்று வீடு திரும்பும் போதும், எனக்கு பிடித்தமான வானொலி நிகழ்ச்சியை பார்க்க சரியான நேரத்தில் வீடு திரும்ப வேண்டுமே என்ற கவலை, என் சிந்தனை சக்தியை வருத்துவதை கவனித்தேன். “கேப்டன் மிட்நைட்,” “தி லோன் ரேஞ்சர்” மற்றும் “ஜாக் ஆர்ம்ஸ்டிராங், தி ஆல் அமெரிக்கன் பாய்” போன்ற நிகழ்ச்சிகளின் தொடரை தவறவிடுவது எனக்கு பிடிக்கவில்லை. §

எப்போதும் கவலையில் இருக்கும் மனதின் பகுதி மீது, எனக்கு அப்போது முதல் முறையாக விழிப்புணர்வு கிடைத்திருந்தது. நான் அந்த பகுதியில் விழிப்புடன் இருந்தாலும், எனக்கு அது பிடிக்கவில்லை. “நீ இப்போது நன்றாக இருக்கிறாய். நாம் இன்னும் பனியில் சிக்கிக்கொள்ளவில்லையே?” என்று மனதுக்குள் பேசிக்கொண்டது எனக்கு தெளிவாக நினைவில் இருக்கிறது. அந்த சிறு வயதில், எப்போதும் கவலையில் இருந்த மனதின் பகுதியை விட்டு சாட்சி வெளியே வந்து, இங்கே மற்றும் இப்பொழுதின் முழுமையான சுயநினைவுக்குள் நுழைவதை நான் உண்மையில் உணர்ந்தேன். அதன் பிறகு சாட்சி தற்பொழுதில் இருந்து கடந்த காலத்திற்கு சென்று, “நான்கு நாட்களுக்கு முன்பாக, நாங்கள் பனியில் சிக்கியிருந்த போது, என் தந்தை சிக்கியிருந்த வாகனத்தை மீட்க கடுமையாக போராடினார். நாங்கள் அன்று ஒரு மணி நேரம் தாமதமாக வீடு திரும்பினோம்,” என்று சிந்திக்க தொடங்குவேன். அப்போது என் சாட்சி கடந்தகாலத்திற்கு பயணம் செய்ததை பார்த்தேன். அதன் பிறகு நான் என்னிடம் அதிக உறுதியாக, “நான் தற்போது நன்றாக இருக்கிறேன். நமது பயணத்தில் தாமதம் ஏற்படவில்லை,” என்று சொல்லிக்கொள்வேன். அப்போதும், சாட்சி தற்பொழுதை நோக்கி சாட்சி பயணம் செய்வதை உண்மையில் உணர்ந்தேன். §

இது எனது பொழுதுபோக்குகளில் ஒன்றாக மாறிவிட்டது. அந்த சமயத்தில் இருந்து, எனது நுண்ணறிவை எதிர்காலத்திற்கு செல்ல அனுமதித்து, அந்த கண்ணோட்டத்தில் செயல்பட முற்படுவது அல்லது கடந்தகாலத்தில் பின்னோக்கி சென்று அங்கே ஒரு தீர்வு காண முற்படுவதை தவிர்த்து, மனதின் சாரத்திற்குள் ஏதாவது தோன்றும் போது, நான் அந்த கணத்தில் இருந்துக்கொண்டு அதை சமாளித்து சரி செய்யும் திறமையை பெறும் வரை, எனக்குள் நொடிப்பொழுதின் நித்தியசக்தியில் இருந்த முழுமை வலுவடைந்து கொண்டிருந்தது. அந்த சிறிய வயதில், இத்தகைய ஒரு அழகான மற்றும் எளிமையான வகையில், இவையும் மேலும் பல விஷயங்களும் எனக்குள் விரிவாக்கம் பெற்றது. §

ராபர்ட் சிறுவனாக இருந்த போதும், அவன் மனம் ஒவ்வொரு அனுபவத்தில் இருந்தும் சிறந்ததை எடுத்துக்கொண்டதாக தோன்றியது. ஆனால் அந்த

சிறுவயது அனுபவங்கள் அனைத்தும் அவனது திறமைக்கு இணங்கியதாக இருக்கவில்லை. §

அந்த காலத்தில் கிறுத்துவ தேவாலயத்திற்கு செல்வது கட்டாயமாக இருந்தது மற்றும் குழந்தைகளும் அதற்கு விதிவிலக்கு இல்லை. அவன் பாதிரியாரிடம் சில கேள்விகளை கேட்பான், ஆனால் அவர் சிறுவனின் கேள்விக்கு பதில் அளிக்கமாட்டார். “அதனால், நான் எதற்காக செல்ல வேண்டும்?” என்று அவன் தாயிடம் கேள்வி கேட்பான். அவள் பாதிரியாரிடம், “தயவு செய்து அவனை வற்புறுத்த வேண்டாம்,” என்று கேட்டுக்கொள்ள, அவரும் கனிவாக ஏற்றுக்கொண்டார். அவனுக்கு வழங்கப்பட்ட விதிவிலக்கு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தோன்றுகிறது, மற்றும் ராபர்ட் கிறுத்துவ தேவாலயம் மற்றும் ஞாயிற்றுகிழமைகளில் பள்ளி செல்வது திடீரென்று நின்று விட்டது. §

**ராபர்ட் அனாதை ஆனான்**

ராபர்ட்டுக்கு ஒன்பது வயதாக இருந்த போது, தனது வாழ்நாள் முழுவதும் சுறுசுறுப்பாகவும் துணிகரமான பெண்மணியாகவும் இருந்து, இயற்கை மீது அன்பு செலுத்தி, தனது சொந்த தோட்டத்தில் மூலிகைகளை பறித்து வந்த, அவன் தாயின் உடல்நலம் குன்றியது. அவளுக்கு சித்தபிரமை ஏற்பட்ட சமயத்திலும், அந்த சிறுவன் தன் தாயை கவனித்துக்கொண்டான். ஜூலை 1937 முதல், அவள் பெர்க்லியை சேர்ந்த Dr. மல்கம் ஹாட்டனின் கவனிப்பைப் பெற்றாள். மாதங்கள் செல்ல செல்ல அவள் நிலைமை மோசமாகியது. நவம்பர் மாத தொடக்கத்தில் அவள் ஒக்லாண்ட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். நவம்பர் 11, 1937, பெருமூளை நாடிகளின் இறுக்கம் மற்றும் நீடித்த இதயத் தசை வீக்கம் காரணமாக ஆல்பர்ட்டா இறந்து, 10 மற்றும் 7 வயதான குழந்தைகளை தனது கணவனின் பொறுப்பில் விட்டு சென்றாள். அவள் உடல் தகனம் செய்யப்பட்டது. §

ஹான்சென் குடும்பத்திற்கு நெருக்கமான தோழியாக, அவர்கள் வீட்டிற்கு அருகில் தனது கணவருடன் வசித்து வந்த கிரேஸ் பர்ரோஸ், அந்த குழந்தைகளுக்கு ஒரு தாயைப் போன்ற கவனிப்பை வழங்கினாள். தனது மனைவியின் மரணத்தால் தனியாக அதிக சுமையுடன் இருந்த வால்டர், இறைவனின் கருணையால் ராபர்ட் மற்றும் கரோலை வளர்த்து வந்தார். அந்த ஒதுக்குப்புற காட்டில், தேக ஆரோக்கியத்துடன் இருக்கும் தம்பதிகள் ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசையாக இருந்து வாழ்வதே கடினமாக இருக்கும், ஆனால் ஒருவர் எல்லா பொறுப்பையும் ஏற்றுக்கொள்வது மிகவும் கடுமையாக இருக்கும். §


அந்த குடும்பம் எதிர்பார்த்ததைப் போலவே அதிக இன்னல்களுடன் குளிர்காலத்தை எதிர்கொண்டது, ஆனால் வாழ்க்கை முன்பு போல இருக்கவில்லை. எந்த ஒரு தகப்பனும் தனது குழந்தைகளின் தேவைகளை உணர்ந்து முகம் சுழிப்பதைப் போல, வால்டரும் நடந்துகொண்டார். அவர் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு, நேவெடா கேசினோ மதுபான

கூடங்களுக்கு சென்று, அதிகமாக குடிக்க ஆரம்பித்தார். இதுவே வேதனையின் தாக்கம் பற்றி, ராபர்ட் பெற்ற முதல் பாடமாக இருந்தது. §

மனைவியின் மரணத்திற்கு சில மாதங்கள் பிறகு, இனம் புரியாத காரணத்தினால் தூண்டப்பட்ட வால்டர், தன் மகனை பெல்ட்டினால் அடிக்க ஆரம்பித்தார். இரக்கமற்ற முறையில் தன் தந்தை அடித்ததால், தீவிரமான அதிர்ச்சிக்கு ஆளான ராபர்ட், அந்த அடியை மறக்கவில்லை. அவர்கள் இருவரும் அதன் பிறகு பேசிக்கொள்ளவும் இல்லை. §

டிசம்பர் 9, 1938, பில் பர்க் என்று உள்ளூரில் கல் உடைக்கும் தொழிலாளியுடன், வால்டர் வீட்டில் இருந்து நகரத்தை நோக்கி வாகனத்தில் கிளம்பினார். வெளியே வானிலை மோசமாக இருந்தது. அவர்கள் சென்ற வாகனத்தின் மீது இன்னொரு வாகனம் மோதி, இவர்கள் சென்ற வாகனம் சாலையில் தூக்கி எறியப்பட்டு, ஒரு மரத்தின் மீது மோதியது. பர்க் சம்பவ இடத்திலேயே இறந்தார், ஆனால் வால்டர் உடலின் மேற்பகுதி சிதைந்து இருந்தது மற்றும் இரண்டு கால் எலும்புகளும் உடைந்து இருந்தன. வால்டரின் பக்கத்து வீட்டில் இருந்த நண்பர் அவரை அவரது வீட்டிற்கு அழைத்து சென்றார், மற்றும் அன்று இரவு அவர்கள் அவரை ரெனோவில் இருந்த ஒரு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். எலும்பு முறிவுகள் ஏற்பட்டு இருந்த அவரது கால்கள் மற்றும் விலா எலும்புகளை குணப்படுத்த மருத்துவர்கள் முயற்சிகளை மேற்கொண்டனர், ஆனால் நாட்கள் செல்ல செல்ல அவரது நிலைமை மோசமாகி, அவர் டிசம்பர் 14 அன்று தனது 50 ஆவது வயதில், நிமோனியா காய்ச்சலுக்கு இரையானார். §

வால்டரின் சொத்து குழந்தைகள் நலன் கருதி ஒரு அறக்கட்டளையிடம் ஒப்படைக்கப்பட்டது. இறுதிச்சடங்கு வால்டரின் பெற்றோர்கள் புதைக்கப்பட்ட, கலிபோர்னியாவின் அபர்ன் நகரில் நடைபெற்றது. குடும்பத்தினர் ராபர்ட்டிடம் எவ்வளவு கெஞ்சினாலும், அவன் அந்த சடங்கில் கலந்துகொள்ள மறுத்துவிட்டான். தனது 12 ஆவது பிறந்தநாளுக்கு சில நாட்கள் இருக்கையில், அவன் அனாதை ஆனான். §



*ஒதுக்குப்புறமான காடுகளில் வளர்ந்த ராபர்ட், சிறுவயதில் பனிக்கட்டியில் மனித பொம்மைகளை உருவாக்குவான். அவன் தனது ஒன்பதாவது வயதில்,*

*தனது தந்தையுடன் பயணம் செய்த போது, பனியில் அவர்கள் சங்கிலி இழுவை வாகனத்தில் சிக்கி, தனக்கு பிடித்தமான வானொலி நிகழ்ச்சியை கேட்க முடியாது என்ற கவலையில் இருந்த போது, அவன் நிரந்தரமான தற்பொழுதைப் பற்றி தெரிந்துகொண்டான். "நான் தற்பொழுது நன்றாக இருக்கிறேன். அந்த சம்பவம் இது வரை நடக்கவில்லை," என்று தனக்கு உறுதியளித்துக் கொண்டு, அச்சத்தில் இருந்து விடுதலை பெற்றான்.*

.......................§

என் வாழ்க்கையில் நான் இரண்டு முறை அடி வாங்கினேன். ஒரு முறை, திறந்த உள்ளங்கையில் இரண்டு அடிகளை வாங்கினேன். அதன் பிறகு என் தந்தை என்னை பெல்ட் மூலம் அடித்தார். அதன் பிறகு நான் அவருடன் பேசவில்லை. நான் அவரது இறுதிச்சடங்கிற்கு செல்ல மறுத்துவிட்டேன். §


பிற்காலத்தில், அவரது சிறுவயது பற்றி அவரது மடவாசிகள் கேள்வி கேட்டபோது, அவர் பின்வரும் பகிர்வை வழங்கினார்: §

நான் சிறுவனாக இருந்த போது, பெரியவர்களால் ஏமாற்றம் அடைந்து, "என்னை விட வயதில் மூத்தவர்கள் சொல்வதை, இனி கேட்கப்போவது இல்லை," என்று முடிவு செய்தேன். அந்த சமயத்தில், நான் அனாதையாக இருந்ததால், என்னால் என் விருப்பப்படி நடந்துக்கொள்ள முடிந்தது. யாருடைய பேச்சையும் கேட்கவேண்டிய அவசியமில்லை. அதனால் நான் என்னுடைய உட்புற ஆன்மா சொல்வதை கேட்டு, நடனமாடத் தொடங்கினேன். எதற்காக? ஏனென்றால் இறைவன் நடனமாடியதாக கேள்விப்பட்டேன். நடராஜர் நடமாடி இருந்தார். எனக்கு எட்டு-ஒன்பது வயதாகி இருந்த போது எனக்கு பிராணாயாமம், அடிப்படை ஹட யோகம் கற்றுத்தரப்பட்டு இருந்தது. அதன் பிறகு எனது பதின்ம வயதின் போது கவனம் செலுத்துவது, கவனத்தை ஒருங்கிணைப்பது மற்றும் தியானம் செய்வது பற்றி கற்றுக்கொண்டேன். §

ஃபாலன் லீப் ஏறியில் கிரேஸ் பர்ரோஸ் நடத்திய நடனப்பள்ளிக்கு, அவன் கோடைகாலத்தில் சென்றதைப் பற்றி குறிப்பிட்டுக் கொண்டிருந்தான். ஆல்பர்ட்டாவின் மரணத்திற்கு பிறகு வந்த கோடைகாலத்தில், அவன் தந்தை அந்த பள்ளியில் அவன் பெயரை பதிவு செய்து இருந்தார். தனது இருபது வயதுகளின் மத்தியில், அழகான வட்டவடிவ முகம் மற்றும் கிழக்கத்திய நாடுகளின் தோற்றத்துடன், நெப்ராஸ்காவில் 1895 ஆம் ஆண்டு பிறந்த கிரேஸ், டெனிஷான் நடனக்குழுவுடன் மூன்று வருடங்கள் உலகப்பயணம் மேற்கொண்டார் மற்றும் சுமார் ஒரு வருடத்திற்கு மைசூர் மகாராஜாவின் அரண்மனையில் விருந்தாளியாக இருந்துக்கொண்டு இந்திய நடனம், கலாச்சாரம், கலை மற்றும் தத்துவத்தை கற்று இருந்தார். §

**"நான் நடனமாட விரும்புகிறேன்"**

கிரேஸ் இந்திய மற்றும் ஐரோப்பிய நடனம், இந்திய கலாச்சாரம் மற்றும் தியானம் செய்யும் நுணுக்கமான கலையில் ராபர்ட்டுக்கு பயிற்சி அளித்தார். இந்த கலாச்சார அறிமுகம் ராபர்ட்டை உற்சாகப்படுத்தியது, மற்றும் நடனத்தில் இருந்த கலைத்திறன் மற்றும் ஒழுக்கம் அவன் கவனத்தை முழுமையாக  கவர்ந்தது. இது பதின்ம வயதை கடந்த இருந்த அவனுக்கு, அவனது முதல் குறிக்கோள் மற்றும் இலக்கை வழங்கியது. இதைப்பற்றி அவன் பலவருடம் கழித்து நினைவுக்கூர்ந்தான்:§



*ராபர்ட் என்ற சிறுவனுக்கு, சிவபெருமான் நடனத்தின் அரசரான விளங்கும் நடராஜர் மூலம் அறிமுகமானார். ஆசிரியர் அவனுக்கு வழங்கிய ஒரு சிறிய*

*நடராஜர் சிலையை, ஒரு பாறையில் தயாரித்த பெரிய பீடத்தில் மெழுகுவர்த்திகளுடன்  வைத்து இருந்தான்.*

……………………..§


> எனக்கு சுமார் பத்து வயது இருந்த போது, நான் பெரியவன் ஆனதும் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி தெரிந்துகொண்டேன். “நான் நடனமாட வேண்டும்,” என்று என்னிடம் கூறிக்கொண்டேன். அது எனது உட்புற ஆழத்தில் இருந்து வந்து இருந்தது. இசை எப்போதும் உட்புற உடலின் உட்புற சக்தியை இயக்கி, இறுதியாக தசைகள் நகர்ந்து உடல் நடனமாடத் தொடங்கும். இந்து சமயத்தில், உணர்ச்சி வெளிப்பாட்டின் மிகவும் உயரிய வடிவமாக நடனம் கருதப்படுகிறது. அதன் காரணமாக, பழங்கால கலாச்சாரம் தழுவிய கோயில்களில் வழிபடுவதற்கு நடனம் பயன்படுத்தப்படுகிறது. நடனத்தின் மறைஞான வடிவங்கள் மூலமாக தூல உடலில் இருக்கும் ஓட்டங்கள், மனோமய கோசம் மற்றும் ஆனந்தமய கோசத்தின் இயக்கங்களை பற்றி தெரிந்துகொள்கிறோம். தியானம் செய்யும் நாட்டியக்காரர், இசையால் ஊக்குவிக்கப்பட்டு, முதலில் உட்புற ஓட்டங்கள் இயங்குவதையும், இறுதியாக தூல உடல் இயங்குவதையும் தெரிந்துக்கொள்கிறார். இது சாட்சியை சீரான, விரைவான மற்றும் முறையான பாதையில் மனதின் உட்புற, மெய்ஞ்ஞான உலகங்களுக்குள் வெளியிடுகிறது. நான் எனது நடன வாழ்க்கையை ஒரு நடனத்தைப் போல தொடங்கி, நடனமாக மாற்றமும் பெற்றேன். §

அந்த இளவயது கலைஞன் கற்பதில் ஆர்வத்துடன் இருந்தான், மற்றும் ஒருமுக கவனத்துடன் இருந்த ஒரு மாணவனை பெற்றதில் திருமதி. பர்ரோஸ் உற்சாகத்துடன் இருந்தார். அவர் அவனுக்கு, இயல்பான உலகின் சக்திகளை ஒரு பாரம்பரிய முறையில் வெளிப்படுத்தும், இந்தியாவின் மணிப்புரி நடனத்தை கற்றுத்தர முடிவு செய்தார். §

> எனக்கு முதல் தூண்டுகோலாக விளங்கிய கிரேஸ் பர்ரோஸ், இந்தியாவின் நடனம் மற்றும் அனைத்து கலாச்சார கலைகளிலும் ஆர்வத்துடன் இருந்தார். அவர் மேற்கத்திய நாடுகளில், குறிப்பாக ஒரு முழுமையான கலாச்சார மையமாக அப்போது விளங்கிய சான் பிரான்சிஸ்கோவில், இந்தியா தொடர்பான கலைகளில் ஆர்வத்தை தூண்டுவதில் முதலாவதாக விளங்கினார். அவர் இசை நிகழ்ச்சிகளுக்கு கலைஞர்களை அழைத்து வந்தார். அவருக்கு இந்தியாவில் அரண்மனையை போன்ற சூழலில், இந்து தர்மத்தின் பாரம்பரிய இசை தொடர்ந்து வாசிக்கப்பட்ட நிலையில், பெண்கள் புடவையை அணிந்து இருக்க, தட்டுகளில் உணவு வழங்கப்பட்டு, இராஜ மரியாதையுடன் ஆடம்பரமாக மைசூர் பாரம்பரியத்தை வளர்த்து, ஊக்குவித்து கற்றுத் தரப்பட்ட யோக மற்றும் கலாச்சார பயிற்சிகளை எனக்கு கற்றுத்தந்தார். §

எனக்கு பன்னிரண்டு வயதாக இருந்த போது, கைகளை கொண்டு சாப்பிடுவது, தலைப்பாகை அணிவதைப் பற்றிக் கற்றுக்கொண்டேன். அதுவே எனக்கு அடுத்த வருட உடையாக இருந்தது. எப்படி நடனமாட வேண்டும் என்று எனக்கு கற்றுத் தரப்பட்டது; எனக்கு அப்போது மணிப்புரி நடனம் கற்றுத்தரப்பட்டது. அவர் எனக்கு ஒருமுக சிந்தனை மற்றும் தியானத்திலும் கவனமாக பயிற்சி வழங்கினார். நாங்கள் அவரது மரக்குடிசையில் அமர்ந்துகொண்டு, கண்ணாடி போன்று காட்சி அளித்த ஏரியை பார்த்து, அதை சிந்தனை இல்லாத மனதின் அமைதியுடன் ஒப்பிட வேண்டும். காற்று மற்றும் மூச்சு நெருப்பை இயக்கும் போது, இசைக்கு நெருப்பு தானும் நடனமாடுவதை போல தோன்ற, நான் எந்த ஹோம குண்டத்திற்கு முன்பாக நடனமாட கற்றுக்கொண்டேன், அதை சுற்றி விளக்குகளை ஏற்றும் சடங்கு முடிந்ததும் நாங்கள் தியானமும் செய்வோம். பிரபஞ்சம் (அந்த காலத்தில் அது எனக்கு ஒரு பெரிய வார்த்தையாக தோன்றியது), நட்சத்திரங்கள், விண்மீன் மண்டலம் மற்றும் மனிதநேயம் மற்றும் மற்ற அனைத்தையும் உருவாக்கி, பாதுகாத்து மற்றும் அழிக்கும் கடவுளான சிவபெருமானை நினைத்து எப்படி தியானம் செய்வது என்று கற்றுத்தரப்பட்டது. உடுக்கை ஒலிக்கு ஏற்ப சிவபெருமான் தனது கால்களை உயர்த்தி ஆடும் தாண்டவத்தை, நான் ஒரு வருடம் முன்பாக கற்று இருந்தேன். §

நடராஜ மூர்த்தியின் மூலம் நான் சிவபெருமானின் அறிமுகத்தை பெற்றேன். அந்த சிறு வயது நினைவுகள், இந்தியா மற்றும் இந்திய கலாச்சாரம் பற்றிய நீளமான கதைகள் மற்றும் உரையாடல்களுடன் மனதில் நிலைத்து இருக்கும். அந்த பள்ளியில் எனக்கு தெரிந்த வரை இந்திய துணிகள், புடவைகள், வேட்டிகள் மற்றும் கலைப்பொருட்கள் நிரம்பி இருந்தன. §



*தலைப்பாகை கட்டுவது மற்றும் கைகளால் சாப்பிடுவது பற்றி, ராபர்ட்டின் சிறு வயது வழிகாட்டிகள் கற்றுத்தந்தார்கள். அவனது அத்தை அவனை, அழைத்து சென்ற நவீன மற்றும் பாரம்பரிய மேடை நிகழ்ச்சிகளில், எக்டோபிளாசம் என்ற பொருளால் சூட்சும சக்திகளை வெளிப்படுத்திய மனோஉணர்வு கண்காட்சிகளும் அடங்கும்.*

........................§

அவனுக்கு கிரேஸ் பல விஷயங்களை கற்றுத் தந்தார். அவர் அந்த சிறுவனிடம் திருத்தும் தேவையை உணர்ந்த போது, மென்மையான ஒழுங்குப்படுத்தும் முறையை கையாண்டார். அந்த செயல்முறை நேரடியாக இல்லை. ஆனால் பாறையில் தயாரிக்கப்பட்ட பீடத்தின் மீது, இருவரும் ஏற்றுக்கொண்டு இடத்தில் தனது கைப்பட சில திருத்தங்களை கிரேஸ் எழுதி வைப்பார். ராபர்ட் அடிக்கடி அந்த இடத்திற்கு சென்று, அவர் எழுதிய குறிப்பை படித்து தன்னை திருத்திக்கொள்வான். எல்லாம் மிகவும் பண்பட்ட முறையில் நடந்தது.§

நாங்கள் திருத்தங்களை பற்றி என்றுமே நேருக்கு நேராக பேசிக்கொள்ளவில்லை. நான் படிப்பதற்காக ஒரு புனிதமான இடத்தில் ஒரு குறிப்பை எழுதி வைத்து, அவர் எனக்கு தண்டனை வழங்கினார். நான் அதை சிறிது அவமானத்துடன் படித்து, முழுமையாக புரிந்துக்கொண்டு என்னை திருத்திக் கொண்டேன்.§

தந்தையின் மரணத்திற்கு பிறகு, ராபர்ட் முழுமையாக கிரேஸின் உலகிற்குள் சென்று விட்டான். ரோசிக்ரூசிய சமூகம் மூலம் தீட்சை பெற்று, மறைபொருள் ஆய்வு பற்றி அதிகம் அறிந்து இருந்த கிரேஸ், அந்த சிறுவனின் நடனத்தில் இருந்த ஆன்மீக பண்பை உணர்ந்து இருந்தார். அவரது முன்னிலையில் ராபர்ட்டின் ஆன்மீக விரிவாக்கம் தொடங்கியது. அது அவனது தொடக்க காலங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டு இருந்தது. அவர்களுக்குள் ஒரு நல்ல புரிந்துணர்வு இருந்தது. அவர் மிகவும் சிறப்பான முறையில் விநோதமாக, ஒரு நிஜ வாழ்க்கை ஆன்டி மமே (ஒரு பிரபல ஆங்கில நாவலின் கதாநாயகி) போன்று இருந்தார். §

ஹான்சென் குழந்தைகளுக்கு கிரேஸ் பாதுகாவலராக இருக்க விரும்பினார், ஆனால் அந்த கலைஞரின் விசித்திரமான நடவடிக்கைகளை அறிந்திருந்த சொந்தங்கள், அதற்கு மதிப்பு அளிக்கவில்லை. ஆனால் அதற்கு பதிலாக, ராபர்ட்டிற்கு பிடித்த அவனது அத்தை ஹெலனை, அவர்களுக்கு பாதுகாவலராக நியமித்தார்கள். அவர் ஒரு சுத்தமான பெண்மணியாகவும், ஒரு கிறிஸ்டியன் சைந்டிஸ்ட் என்ற சமூகத்தின் அங்கத்தினராக இருந்தார். குழந்தைகளை வளர்க்க தன்னிடம் பணவசதி இல்லை என்பதை ஹெலன் உணர்ந்ததும், தனது கிறுத்துவ தேவாலயத்தில் குழந்தைகளை தத்து எடுத்துக்கொள்ள ஒரு குடும்பத்தை தேடிப்பிடித்தார். 1939 ஆம் ஆண்டு முதல், மெல்வில் மற்றும் புளோரா ஹாமில்டன் தம்பதியர், அழகான தோட்டங்கள் மற்றும் ஒரு குலத்துடன் இருந்த, தங்களது ஓக்லாண்டு ஹில்ஸ் வீட்டில், இந்த

குழந்தைகள் பராமரிப்பை தொடர்ந்தனர். குழந்தைகளுக்கு கிறிஸ்டியன் சயன்ஸ் சமூகத்தின் பின்னணி தெரிவிக்கப்பட்டது, மற்றும் அதில் இருந்து ராபர்ட் மனதை குணப்படுத்தும் சக்திகள், ஆன்மீக பாதை மற்றும் சமய சகிப்புத்தன்மையின் மனநிலையை கற்றுக்கொண்டார். §

இது ஒரு புறம் இருக்க, தந்தையின் மரணத்திற்கு பிறகு, இளம் ராபர்ட்டின் வாழ்க்கையில் கிரேஸ் பர்ரோஸ் மிகவும் முக்கியமான சக்தியாக இருந்தார். அவர் அவனை கோடைகாலத்தில், பாலன் லீப் ஏரியில், “அழகான கனவு" என்று பொருள்படும், போ ரெவ் என்று அவர் பெயரிட்டிருந்த ஒரு மரக்குடிசையில் தான் நடத்திய பள்ளிக்கு அழைத்து சென்று விடுவார். வருடத்தில் மீதமிருந்த நாட்களில், பெர்க்லியில் அவன் அடிக்கடி தென்பட்டான். அவர் ராபர்ட்டிற்கு, அவனது ஒன்பதாவது வயதில் இருந்து பதினான்காவது வயது வரை, கிழக்கத்திய உடை மற்றும் கலாச்சாரம், மணிப்புரி நடனம் மற்றும் பாலே கற்றுத்தந்தார். §

> கிரேஸ் எனக்கு, நான்கு முதல் ஏழு வயது வரை இருந்த சிறு குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியராக இருந்து கண்காணிக்கவும் பயிற்சி அளித்தார்! நான் கிரேஸ் பரோஸின் நடனப்பள்ளியில் ஆசிரியராக இருந்தேன்! அந்த சிறிய வயதில் நான் நன்றாக பாடம் நடத்தினேன் என்று சொல்லியாக வேண்டும். அவர்கள் தாங்கள் கற்றத்தை அழகாக வெளிப்படுத்தினார்கள், மற்றும் அவர்களுக்கு கற்றுக்கொடுப்பதால் நானும் கற்றுக்கொண்டேன். §
>
> இறுதியாக, முதல் தூண்டுகோலிடம் இருந்து கற்கவேண்டியதை நான் முழுமையாக கிரகித்துக்கொண்டதும், அவர் என்னை இரண்டாவது தூண்டுகோலாக இருந்த ஹில்டா சார்ல்டனிடம் அறிமுகப்படுத்தினார். உட்புற ஒளி தோன்ற தொடங்குவதற்காக தூல உடல், உணர்ச்சிகளின் உடல் மற்றும் ஆன்மீக உடலைக் கொண்ட, இந்த முழு உயிர்சக்தியையும் எப்படி மையப்படுத்துவது என்று அவர் எனக்கு பொறுமையாக கற்றுத்தந்தார். இந்த தூண்டுகோலின் துணையுடன், நான் கலிபோர்னியாவின் பெர்க்லியில், நான் எனது முதல் உட்புற ஒளி அனுபவத்தை பெற்றேன். §

**“அப்படி என்றால் நான் தான் கடவுள்”**

ஹில்டா சார்ல்டன் அதிக பக்தியுடன் தொடர்ந்து தியானம் செய்து வந்தார். அவர் மனோஉணர்வு செயல்முறைகள் மீது விழிப்புணர்வை பெற்று இருந்தார் மற்றும் ராபர்ட் தனக்கு வழங்கப்பட்ட போதனைகளில் ஆழமாக சென்றுகொண்டு இருக்கிறார் என்பதை முன்னுணர்வின் மூலம் அறிந்து இருந்தார். §

அவர்கள் முதன்முதலில் சந்திந்த சில நாட்களில், அவர் அந்த பதின்ம சிறுவனிடம், “நீ யார் என்று உனக்கு தெரியுமா?” என்று கேட்டார். அந்த கேள்வி அவனை திகைக்க வைத்தது, மற்றும் சிறிது நேரம் கழித்து அந்த கேள்விக்கு

தனக்கு பதில் தெரியாது என்று கூறினான். அதன் பிறகு அவர், “நாம் அடுத்த முறை சந்திக்கும் போது, நீ அதற்கு பதில் சொல்லவேண்டும்,” என்று கூறி அனுப்பினார். §

அதைப்பற்றி ஒரு சில நாட்களுக்கு யோசித்த பிறகு, அவன் கிறிஸ்டியன் சயன்ஸில் கேட்டிருந்த தகவலில் இருந்து எடுக்கப்பட்ட, ஒரு அறிப்பூர்வமான பதிலை சொல்ல முடிவு செய்து இருந்தான். அடுத்த சந்திப்பின் போது, “நான் கடவுளின் அங்கமாக இருக்கிறேன்,” என்று பதில் சொன்னான். அவர் சிறிது நேரம் அமைதியாக இருந்த பிறகு மிகவும் மெதுவாக, “நீ கடவுளின் அங்கமாக இருப்பதை சித்தரிக்கும் வண்ணம், நீ கடலில் இருக்கும் ஒரு நீர்க்குமுழியாக இருந்து, அந்த நீர்க்குமுழி உடைந்தால், நீ என்னவாக இருப்பாய்?” என்று கேட்டார். தான் “கடலாக" இருப்பேன் என்ற பதிலை அவன் அறிந்து இருந்தாலும், உட்புறத்தில் இருந்து திடீரென்று தோன்றிய விழிப்புணர்வில் இருந்து, அதன் உண்மையான அர்த்தம் வெளிவந்தது. அவன் சிறிது வியப்புடன், “அப்படி என்றால் நான் தான் கடவுள்,” என்றான். §

நான் எனது இரண்டாவது தூண்டுகோலுடன் இருந்த இரண்டு மிகவும் அற்புதமான வருடங்களின் போது, அவரிடம் இருந்து வாரம் இரண்டு முறை அறிவுறுத்தல்களை பெற்றேன். எந்த கேள்விகளையும் கேட்காமல், எனக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு முடிந்த வரை சிறப்பான முறையில் அடிபணிந்து நடந்தேன். மிகவும் சிறிய வயதில் கேள்விகள் எதுவும் கேட்கக்கூடாது என்று எனக்கு கற்றுத்தரப்பட்டது. உட்புற போதனைகளை கிரகித்துக் கொள்ளவேண்டும் என்றும் எனக்கு கற்றுத்தரப்பட்டது. ஒருவர் தனக்குள் ஆசிரியர் எங்கே இருக்கிறார் என்பதை அறிந்து, அந்த கண்ணோட்டத்தில் இருந்து அவர் என்ன கூறுகிறார் என்பதை கவனிக்க வேண்டும். இவ்வாறு அந்த மாணவன், உட்புற போதனைகளை கிரகிக்க கற்றுக்கொள்கிறார். அவை அதன் பிறகு அவருக்குள் விழித்துக் கொள்கின்றன மற்றும் அவர் தனது சொந்த ஆன்மீக அறிதலின் மூலம் அவற்றை மேம்படுத்துகிறார். எனது இரண்டாவது தூண்டுகோல் எனக்கு ஆகாசத்தை பார்த்து மிகச்சிறந்த கதிரியக்க, அந்தர்லோக சக்திகளை பார்க்கவும் கற்றுத்தந்தார். §

எனது இரண்டாவது தூண்டுகோலும் பலவிதமான சூட்சும ஞானம், மறை ஞானம் மற்றும் தியானத்தில் தேர்ச்சி பெற்று இருந்தார். உடலை உறங்க வைத்த பிறகு, ஒருவர் எவ்வாறு தூல உடலை விட்டு வெளியேறுகிறார் என்பதைப் பற்றி துல்லியமாக அவர் கற்றுத்தந்தார். நான் சூட்சும உடலை பற்றியும், அதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கி, எவ்வாறு சூட்சும உடலில் தூல உடலை விட்டு செல்லும் அனுபவத்தை வளர்த்துக் கொள்வது என்பதையும், அதே சமயத்தில் என்ன நடக்கிறது என்பதில் முழு கவனத்துடன் தூல உடலை சுற்றி வந்து, அதனுடன் சூட்சும உடலை தொடர்புபடுத்தும் வெள்ளி நாணை கவனித்து, எவ்வாறு சூட்சும உலகில் பயணிப்பது என்பதையும் கற்றுக்கொண்டேன். §

தூல உடல் இயங்கும் போது, ஏழு சக்கரங்களின் ஆன்மீக சக்திகள் எவ்வாறு செயல்படுகின்றன மற்றும் பல்வேறு விதமான இசைகளால் ஊக்குவிக்கப்படுகின்றன என்பதையும் இந்த தூண்டுகோல் எனக்கு கற்றுத்தந்தார். அவர் எனக்கு தனிச்சையாக ஆடும் நடனத்தில் தீவிரமான அறிவுறுத்தல் மற்றும் பயிற்சியை வழங்கினார். இந்த நடனத்தில் ஒருவர் எந்த விதமான தடையையும் அனுபவிப்பது இல்லை. இந்த நடனம் உணர்ச்சிப் பகுதியின் சக்திகளை கட்டுப்படுத்தி உருமாற்றம் செய்ததால், அது எனது பதினான்கு மற்றும் பதினான்காவது வயதில், எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. §

ராபர்ட் 14 வயது சிறுவனாக இருந்த போது, அவரது வாழ்க்கையில் நுழைந்த ஹில்டா சார்ல்டன், அவனை சூட்சும ஞான போதனைகளின் ஆழத்திற்குள் அழைத்து சென்றார். அவர் இயல்பான சூட்சும ஞான சக்திகள் மற்றும் முன்னுணர்வுகளுடன் ஒரு தீவிர பக்திமானாக இருந்தார். ஒரு சிறந்த ஆசிரியராக இருந்த அவர் அந்த இளம் சாதகரை ஏழு வருடங்களுக்கு ஒருமுகச்சிந்தனை மற்றும் தியானத்தின் பிரிவுகள், பக்தி யோகம் மற்றும் மனமுவந்து மற்றவர்களுக்கு வழங்கும் கலையின் அழத்திற்கு அழைத்து சென்றார். பின்னர் அவர் அந்த சாதகருடன் சிலோன் பயணம் செய்தார். §

1945 ஆம் ஆண்டு, ராபர்ட் 18 வயதை எட்டியவுடன், தனது வளர்ப்பு வீட்டில் இருந்து சான் பிரான்சிஸ்கோ நகர்ந்தான். 2007 ஆம் ஆண்டு மரணமடைந்த கரோல், அந்த வீட்டில் 1948 ஆம் ஆண்டு வரை இருந்தார். அதன் பிறகு அண்ணனும் தங்கையும் பல வருடங்களுக்கு சந்திக்காமல், 2000 ஆம் ஆண்டு சந்தித்தனர். அப்போது இருவரும் கலிபோர்னியா, ரெட்வுட் சிட்டியில் இருந்த போர்டர்ஸ் ஸ்டோரில் ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் சந்தித்து ஒரு சில வார்த்தைகளை பேசிக்கொண்டனர். அந்த அளவிற்கு ராபர்ட்டின் துறவறம் முழுமையாக இருந்தது. §

**“தெய்வங்களும் கீழ்படிவார்கள்”**

ஹில்டா சார்ல்டன் அந்த சாதகனை, தனது நெருங்கிய தோழியாக இருந்த கோரா என்ரைட் என்ற ஒரு ஆன்மீகவாதிக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவர் மதர் கிறிஸ்டினி என்று அழைக்கப்பட்டார். அவர் ராபர்ட்டுக்கு மூன்றாவது தூண்டுகோலாக விளங்கி, இந்த இளைஞனின் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான ஆசிரியராக விளங்கினார். அதைத் தொடர்ந்து வந்த வருடங்களில், அவர் அவனை கர்ம, இராஜ மற்றும் ஞான யோகங்களுக்குள் அழைத்து வந்து, அவனுக்கு மற்றவர்களுக்கு கீழ்படிந்து நடத்தல் மற்றும் சேவை செய்தல், சுயநலமின்மை மற்றும் ஞான ஒளியைப் பற்றி கற்றுத்தந்தார். §

அவரது உயரம் 5' 2". அவர் ராபர்ட்டின் தோள்பட்டையை காட்டிலும் குள்ளமானவர். ஆனால் அவர் அனைவரின் கவனத்தையும் கவர்ந்து, கண்ணியமான மற்றும் வெளிப்படையாக பேசும் பண்புடன் இருந்தார்.

பனிக்கட்டி நிறத்தில் வெள்ளை முடி, குழந்தை போன்ற அப்பாவி முகம் மற்றும் நீளமாக தரையில் பரவியிருந்த உடையுடன், அவரை பார்ப்பதற்கு ஒரு தேவதை அல்லது அந்த தேவதையின் ஞானமாதாவைப் போன்று இருந்தார். §

அவர் அன்புள்ளம் படைத்த பெண்மணியாகவும், ஒரு கண்டிப்பான ஆசிரியராகவும் இருந்து, வேண்டுகோள் விடுத்து சிலசமயங்களில் ஆதிக்கமும் செலுத்தினார். அவர் ராபர்ட்டை தீவிரமாக சோதனை செய்து, அவனை உறுதியாக திருத்தி, அவன் ஒவ்வொரு நிலையிலும் தனது திறமைகளை வெளிப்படுத்த துணை புரிந்தார். அவன் அவரது வழிமுறைகளை கற்றுக்கொண்டான், மற்றும் அவர் தனக்கு ஆசிரியராக இருந்த காலத்தில், ராபர்ட் தனது ஆன்மீக நடவடிக்கைகளில் வலுவடைந்தான். அவர் தனது சிறு வயது சீடனிடம், “ஆன்மா ஆதிக்கம் செலுத்தும் போது, தெய்வங்களும் கீழ்படிவார்கள்,” என்று கூறினார். மேலும் அவர் ஆன்மீக தலைமைத்துவத்தின் மர்மமான கலைகளிலும், அவனுக்கு பாடம் புகட்டினார். ராபர்ட் தனது ஆசிரியரின் பாணியை பற்றி இங்கே விளக்குகிறார்:§

> மதர் கிறிஸ்டினி தன்னிடம் வருபவர்களின் நேர்மையை அறிந்துக்கொள்ள, எல்லோருக்கும் சோதனைகளை வழங்குவார். அவரிடம் ஒருவன் மாணவனாக படிக்கும் விருப்பத்துடன் வந்தால், அவர் முதலில் எந்த ஒரு விளக்கமும் அளிக்காமல் அவனிடம் ஒரு கடன் அட்டையை வழங்குவார். அவன் அதை சிறிது நேரம் வைத்துக்கொண்டு, அவரிடம் மீண்டும் திருப்பி தந்துவிட்டால், அவனை தனது மாணவனாக ஏற்றுக்கொள்வார். ஆனால் அவன் அந்த அட்டையை எடுத்துக்கொண்டு, அதைதிருப்பி பின்புறத்தில் இருப்பதை நோட்டமிட்டால், அவர் எதுவும் பேசமாட்டார், மற்றும் அவனுக்கு மறு அழைப்பு வராது. உலக வாழ்க்கையின் நடைமுறைகளை கற்றுத்தந்த மதர் கிறிஸ்டினி, எனது *விஷ்வ குருவைப்* போன்று இருந்தார். §

அவரது கத்தோலிக்க பின்னணி முற்றிலும் வழக்கத்திற்கு மாறாக இருந்தது; அவர் தனது இதயத்தில் ஒரு ஆன்மீகவாதியாக, வலுவான மனோஉணர்வு திறமைகளுடன் இருந்தார். அவர் கிறுத்துவ தேவாலயங்கள் செல்வதை நிறுத்தி இருந்தாலும், அவருக்கு அடிக்கடி மகான்கள் காட்சி அளித்தனர் மற்றும் அவர் வழக்கமாக மற்ற உலகங்களுடன் தான் நடத்திய உரையாடல்களை பகிர்ந்துக் கொள்வார். அவர் சைக்கோமெட்ரி தொடர்பான கதைகள், மனித ஒளி உடல் ஆய்வுகள், சூரிய ஒளி சார்ந்த உயிரியல், எக்டோபிளாசத்தின் வெளிப்பாடுகள் மற்றும் கிறுத்து உணர்வு பற்றி பேசி, பிரார்த்தனை கூட்டங்களில் இருப்பவர்கள்  மற்றும் தனிநபர்களை மகிழ்ச்சிவிப்பார். §

கிறுத்துவ மதத்தின் ஒரு சூட்சும வடிவத்தை மதர் கிறிஸ்டினி பின்பற்றினார். அது தங்கள் மத நம்பிக்கைகளுக்கு புறம்பானதாக பல கிறுத்துவர்கள் கருதினார்கள். அது வழக்கமாக கிழக்கத்திய நாடுகளில்

பின்பற்றப்பட்ட மதங்களில் காணப்படும் சூட்சும உண்மைகளை, மிகவும் குறுகிய கிறுத்துவ மதத்தின் அமைப்பிற்குள் நுழைக்கும் முயற்சியாக இருந்தது. இத்தகைய சூட்சும ஞானம், 3 ஆம் நூற்றாண்டை சேர்ந்த ஓரிகன் என்ற தத்துவ ஞானியின் முயற்சியால், கத்தோலிக்க தேவாலய சரித்திரத்தின் தொடக்க காலத்தில் துடிப்புணர்வுடன் இருந்தது. மேலும் இது சமீபகாலத்தில் ரோசிக்ரூசியன்ஸ், பிரம்மஞான மதத்தை சேர்ந்தவர்கள் மற்றும் ஃப்ரீமேசான்ஸ் சமூகங்களில் பிரதிபலித்தது.§

மதர் கிறிஸ்டினி வாழ்ந்த காலத்திற்கு ஒரு நூற்றாண்டு முன்பு, அமெரிக்காவில் கிறுத்துவ மதம் மெதுவாக உருமாறி, 1830 ஆண்டில் மோர்மொன்ஸ், 1863 ஆண்டில் செவந்த் டே அட்வெண்டிஸ்டிஸ், 1866 ஆம் ஆண்டில் கிறிஸ்டியன் சயன்ஸ், 1880 ஆம் ஆண்டில் சர்ச் ஆஃப் டிவைன் சயன்ஸ், 1889 ஆம் ஆண்டில் யுநிடி சர்ச் மற்றும் 1927ஆம் ஆண்டில் ரிலிஜியஸ் சயன்ஸ் (சயன்ஸ் ஆஃப் மைண்ட் என்றும் அழைக்கப்பட்டது) என்று பல புதிய கிறுத்துவ தேவாலயங்களை தோற்றுவித்தது. இந்த பட்டியலில் இடம்பெற்ற இறுதி மூன்றும் நியூ தாட் மூவ்மெண்டின் அங்கமாக விளங்கி ஈர்க்கும் விதிகள், குணப்படுத்துதல், உயிர் சக்தி, ஆக்கப்பூர்வ கற்பனை, தனிப்பட்ட சக்தி தொடர்பான மீமெய்யியல் நம்பிக்கைகள் மற்றும் எல்லையற்ற நுண்ணறிவு அல்லது இறைவன் எங்கும் நிறைந்து இருக்கிறார், ஆன்மா என்பது உண்மை பொருட்களின் முழுமை, ஆன்மா தெய்வீகமானது, ஒரு உயர்ந்த சிந்தனை நன்மை பயக்கும் சக்தி, அனைத்து நோய்களும் மனதில் தோன்றுகிறது மற்றும் நேர்மறை சிந்தனை ஒரு குணப்படுத்தும் பலனை வழங்குகிறது என்ற சிந்தனைகளை வலியுறுத்துகிறது. §

அவர் பின்பற்றிய கிறுத்துவ மதம் பாரம்பரியம் சார்ந்ததாக இல்லை. அவர் ராபர்ட்டை, இறந்தவர்களின் ஆவிகள் உயிருடன் வாழ்பவர்களுடன் பேசும் கூட்டங்கள் மற்றும் உடல் இல்லாத ஆன்மாக்களை மேடைக்கு அழைத்து வந்து, அந்த ஆவிகளுடன் உரையாடி நம்ப மறுத்த கூட்டத்தை வியக்க வைத்த மேடை நாடக ஆன்மீகவாதிகளின் அரங்குகளுக்கு அழைத்து சென்றார். இந்த ஆன்மீகவாதிகள் ரத்தினங்கள் மூலம் ஆசைகளை சீரமைத்தார்கள் அல்லது எதிர்காலத்தை கணித்தார்கள். மற்றவர்கள் கூம்பு வடிவ இசைக்கருவிகள் மூலம் ஆவி உலகின் மெல்லிய குரல்களின் ஒலியை பெருக்கி, அவை பார்வையாளர்களுக்கு உணர்த்தினார்கள். அது இன்னொரு உலகமாக இருந்தது, மற்றும் இளம் சாதகன் அவற்றை எல்லாம் பார்த்து அறியவேண்டும் என்ற அவர் விரும்பினார். அவன் அந்த காட்சிகளை மறக்காமல், பல வருடங்கள் கழித்து தனது சீடர்களுக்கு அந்த அனுபவத்தை வழங்கினார். §

அவர் தனது வாழ்நாளில் வாழ்ந்த ஆன்மீக பிரபலங்களுடன், வியக்க வைக்கும் வகையில் ஒரு நல்ல உறவை பரமாரித்தார். 1934 ஆம் ஆண்டு, அவரது வீடு தயானந்த பிரியதாசியின் (டாரல் பீரிஸ்) தற்காலிக ஆசிரமமாக இருந்தது. அவர் தன்னுடன் பௌத்த சமயத்தின் ஞானோதய பாதையை கொண்டு வந்தார். அவரது வழிமுறைகள் மதர் மதர் கிறிஸ்டினியை கவனத்தை ஈர்த்து, அவர் கிழக்கு நாடுகளின் பாதையை ஆய்வு செய்ய

மேலும் ஊக்குவித்தது. இந்த ஆய்வை அவர் தனக்கு விருப்பமான மாணவனுக்கு கற்றுத் தந்தார். §

அவர் அப்போது பிரபலமாக இருந்த யோகி ஹரி ராமாவையும் அறிந்து இருந்தார். அவர் 1924 ஆம் ஆண்டு சான் பிரான்சிஸ்கோவிற்கு வந்து அமெரிக்கா முழுவதும் பயணம் மேற்கொண்டு, அமெரிக்க நாட்டவர்கள் முன்பு பார்த்திராத, காற்றில் மிதத்தல் மற்றும் தொலைப்பெயர்ச்சியை செய்து காண்பித்தார். அவர் இவற்றை செய்து காண்பித்தாலும், இவை ஆழமான ஆன்மீக ஸித்திகளை பெறுவதற்கு தேவையில்லை என்றும் வலியுறுத்தினார். அந்த யோகி அவரது ஓக்லாண்டு வீட்டில் யோகத்தை கற்றுத்தந்து அவருக்கு குருவாகி, அவருக்கு மதர் கிறிஸ்டினி என்ற பெயரை வழங்கினார். §

பரமஹம்ச யோகானந்தாவுடன் மதர் கிறிஸ்டினி இணைந்து செயல்பட்டு, அவரது செல்ஃப் ரியலைசேஷன் பெல்லோஷிப்பின் இயக்குனர்கள் குழுவில் சேவை செய்தார். அவர் மான்லி பி. ஹால் மற்றும் எட்கர் கேய்ஸ் எழுதிய புத்தகங்களை படித்தார், மற்றும் 1930 களில் ஹாலிவுட்டிற்கு ஹட யோகத்தை கொண்டு வந்த இந்திரா தேவியை சந்தித்தார். பனாரஸில்  இருந்து அமெரிக்காவிற்கு அந்த சுவாமி பகவான் பிஸ்ஸஸ்ஸர் மீது மதர் கிறிஸ்டினி ஈர்க்கப்பட்டார். அந்த சுவாமி தனது சீடர்களுக்கு பின்வரும் உறுதிமொழியை வழங்கினார்:§

> முழுமுதற்பொருளாக, வரம்புகளை கடந்து ஒரே உண்மைப்பொருளாக இருப்பவரே, என்னிடம் இருக்கும் எல்லையற்ற சக்திகளுக்கு எனது கதவுகளை திறப்பதற்கு, எனக்கு ஞானத்தையும் நம்பிக்கையையும் தா. ஓம்  தத் சத் ஓம். ஆன்மீக அறிவு உள்ளே வருவதற்கு என் மனதின் கதவு திறந்து இருக்கிறது. நான் முழுமுதற்பொருளுடன் பிரிக்க முடியாமல் இணைந்து ஒன்றாகி இருக்கிறேன், மற்றும் மூத்த சகோதரர்களின் உதவியை நான் செய்கிறேன்.§

இந்த இந்திய யோகிகள் மற்றும் சுவாமிகள் மறுபிறவி, எங்கும் வியாபித்து இருக்கும் ஒரு தெய்வீகத்தன்மை, மனிதனுக்குள் இருக்கும் கடவுள் மற்றும் மனிதன் உடல் மற்றும் மனமாக இல்லாமல் ஆன்மாவாக இருப்பதைப் பற்றிய போதனைகளை தங்களுடன் கொண்டு வந்தனர். அவர்கள் பிராணயாமம் மற்றும் உறுதிமொழியின் சக்திகள், தியானத்தின் தீவிரம் மற்றும் உணர்வின் ஏற்றத்தை கற்றுத்தந்தார்கள். அவர்களுடன் மதர் கிறிஸ்டினி பழகி, இந்தியா மற்றும் சிலோனில் இருந்து அவர்கள் கொண்டு வந்த ஞானத்தை கிரகித்துக்கொண்டார். அந்த ஞானத்தை அவர், கிழக்கத்திய நாடுகளின் பாதையில் இருந்த நுணுக்கத்தில், தனது பதின்ம வயது மேதாவியை நிலைநிறுத்த பயன்படுத்திக் கொண்டார். §

அவர்களது உறவு அடுத்த 24 வருடங்களுக்கு ராபர்ட்டின் வாழ்க்கையில் பரவி இருந்தது. அந்த உறவின் தொடக்கம், சமயம் மற்றும் சூட்சும ஞான போதனைகளில் அவர் பெற்ற மிகபெரிய அனுபவங்களில் ஆரம்பித்து, ராபர்ட்

ஒரு பலவீனமான நண்பனை கவனித்துக்கொண்டு இருக்கும் போது முடிவடைந்தது. ராபர்ட் 1960 களின் மத்தியில், அவரது ஒக்லாண்டு வீட்டில் வாரநாட்களில் தங்கி, வீட்டை சுத்தம் செய்தல் மற்றும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் உதவி செய்து, வாரக்கடைசியில் சான் பிரான்சிஸ்கோ திரும்பி தனது கோயிலை கவனித்துக் கொள்வான். §

எனது மூன்றாவது தூண்டுகோல் விசேஷமானவராகவும் பொறுமையாகவும் இருந்தார். அவர் எனக்கு நிறங்களின் அதிர்வு விகிதத்தில் இருந்த உளவியல் மற்றும் ஒரு ஒளி உடலை ஆய்வு செய்வது பற்றியும், ஒளி உடலுக்குள் இருக்கும் ஒவ்வொரு நிறமும் நிறத்தின் கலவையும் வழங்கிய பொருளை புரிந்துக்கொண்டு, அதனை ஒரு நபரின் மனநிலைகள் மற்றும் உணர்ச்சிகள் மற்றும் சிந்தனை சக்தியுடன் தொடர்புபடுத்துவது பற்றியும் கற்றுத்தந்தார். அவர் எனக்கு மனிதனின் இயல்பு, மக்கள் எவ்வாறு சிந்திக்கிறார்கள், அவர்கள் எவ்வாறு செயல்படுகிறார்கள், மற்றும் அவர்களது உட்புற, அடியுணர்வு தூண்டுதலைப் பற்றி புரிந்துகொள்வதற்கு குணங்களை வர்ணிக்கும் முறையை கற்றுத்தந்தார். §

அவர் என் குருவைப் பற்றி கூறி, ஒரு நாள் என் குருவை சந்திப்பேன் என்று கூறினார். ஆனால் நான் என் குருவை சந்திப்பதற்கு முன்பாக, நான் ஆத்ம ஞானத்தை பெற்று இருக்க வேண்டும். நான் எனது குருவை சிலோனில் சந்திப்பேன் என்றும், நான் அங்கே சென்று மேலும் கற்பதே நான் செய்யவேண்டிய அடுத்த நடவடிக்கை என்றும் கூறினார். நான் அந்த சமயத்தில், கடிகாரத்தை பயன்படுத்தி, தினமும் இரண்டு மணி நேரம் ஒரே இடத்தில் அசராமல் அமர்ந்து தியானம் செய்து, உட்புறமாக தொடர்ந்து சென்றுகொண்டு, நான் கற்றதையும், பரமாத்துமாவின் புனிதம் மற்றும் எளிமையின் நுணுக்கங்களை புரிந்துகொள்ள முயற்சி செய்துக்கொண்டு இருந்தேன். §

எனது இரண்டாவது வருட பயிற்சியின் போது, மக்களின் வினைகள் மற்றும் எதிர்வினைகள், அவர்கள் எவ்வாறு இயங்கினார்கள், எவ்வாறு சிந்தித்தார்கள் மற்றும் எவ்வாறு செயல்பட்டார்கள் என்பதைப் பற்றி நுணுக்கமாக கற்றுக்கொடுக்கப்பட்டேன். ஒருவரது உட்புற பண்புகள் மற்றும் வீட்டில் அவர்களது வாழ்முறை பற்றிய தகவல்கள் அனைத்தையும், அவர்களது மனம் அல்லது உடலின் இயக்கத்தின் மூலம் நான் அறிந்துகொள்ளும் அளவிற்கு, மனதை ஒருமுகப்படுத்தும் சக்திகளுடன் கண்காணிப்பாளராக இருக்க எனக்கு கற்றுத்தரப்பட்டது. §

எனது மூன்றாவது வருட பயிற்சியின் போது, மாணவர்கள் உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் ஆன்மீக ஈடுபாட்டுடன் இருக்கிறார்களா அல்லது கற்பித்தலில் அறிவுப்பூர்வமான ஆர்வத்துடன் இருக்கிறார்களா என்பதை சோதனை செய்ய கற்றுத்தரப்பட்டது. அதன் பிறகு நாங்கள், ஒருவர் தியானம் செய்யும் போது, தனது உட்புற சக்தியின் மூலம் காணும் சிந்தனை வடிவங்கள் மற்றும் உணர்ச்சிகள் மற்றும்

பல்வேறு சிந்தனை வடிவங்களின் பொருளைப் பற்றி ஆய்வு செய்தோம். ஒரு நபர் எதைப்பற்றி சிந்திக்கிறார் மற்றும் அந்த கூட்டு சிந்தனை சாரம் தோன்றிய மனதின் பகுதிக்கு சாட்சி சென்ற நோக்கத்தையும் அறியத் தொடங்கினேன். §

மனதின் உட்புற பகுதிகளில் வாழும் தலைசிறந்த உயிர்சக்திகள் மற்றும் மனிதர்களுடன் செயல்படுவதற்கு மற்றும் தொடர்பு கொள்வதற்கு தூல உடலின் தேவை இல்லாமல், தங்கள் நரம்பியல் அமைப்பில் மேம்பட்டு இருக்கும் உயிர்சக்திகளின் ஆய்வின் மூலமாகவும், எனது மூன்றாவது தூண்டுகோல் என்னை மேம்படுத்தினார். அதைப் போல, தூல உடலுடன் இருந்தாலும் தியானத்தின் ஆழத்தில் செயல்பட்டு, பெற்றோர்கள் தங்கள் குழந்தையை உணர்ச்சிரீதியாகவும் தூல உடல்ரீதியாகவும் அவர்களது பக்குவத்தை கண்காணிப்பதைப் போல, தியானம் செய்பவர்களுக்கு ஒரு ஆன்மீகப்பணியாக உதவி செய்யும் தலைசிறந்த உயிர்சக்திகளைப் பற்றி படித்தேன். §

எனது பாதையில் இருந்த மூன்றாவது தூண்டுகோலுக்கு, அவரது சிறு வயதில் நேவெடாவில் இருந்த அமெரிக்க இந்தியர்கள், பின்பு இமயமலையில் இருந்து வந்த சுவாமி பகவான் பிஸ்ஸஸ்ஸர், மற்றும் பெனராஸ் சமூகத்தை சேர்ந்த யோகி ஹரி ராமாவிடம் இருந்து சூட்சும ஞானத்தில் முழுமையான பயிற்சி வழங்கப்பட்டது, மற்றும் அந்த அற்புதமான உயிர்சக்திக்கு பிறகு, நான் சிலோன் தீவில் எனது நான்காவது தூண்டுகோலை சந்திக்க விருந்தேன். §

நான் அவருடன் இருந்த காலத்தில், அவரிடம் பல கேள்விகளை கேட்டதாகவோ அல்லது விவாதத்தில் ஈடுப்பட்டதாக எனக்கு நினைவு இல்லை. ஆனால் நான் ஒரு முறை அதிக வெளிப்புறமாக இயங்கி, பாடம் எனக்கு தெளிவாக புரியாத போது, நான் அதைப்பற்றி விவாதிக்க விரும்பியது நினைவில் இருக்கிறது. ஆனால், “விவாதிக்க முடியாது,” என்ற அறிவுறுத்தலின் மூலம் அந்த விவாதம் உடனே துண்டிக்கப்பட்டது. நான் மீண்டும் அந்த முயற்சியை மேற்கொள்ளவில்லை. எனது ஆசிரியரை போன்று பாடம் நடத்துபவரிடம் இருந்து ஆன்மீக அறிவுறுத்தல்களை கேட்கும் போது, ஒரு வாக்கியத்தை கவனிக்க தவறிவிட்டால் அல்லது ஏதாவது தெளிவாக புரியவில்லை என்றால், சில நிமிடங்கள் காத்து இருங்கள். அதைப்பற்றி நினைவுக்கூரும் போது உங்கள் உட்புறத்தின் ஆழத்தில் இருந்து, அது தானாக தெளிவடையும். நான் இதை மிகவும் சிறிய வயதில் கற்றுக்கொண்டேன். இந்த வழியில் சூட்சும ஞானிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அதில் விவாதங்கள் அல்லது கேள்விகள் இருப்பதில்லை. இவ்வாறு செய்து முடிப்பதற்கு, விரிவாக்கம் பெற்ற தலைசிறந்த ஆன்மாக்கள் மற்றும் பாதையில் இருக்கும் உதவியாளர்களிடம் இருந்து பெருமளவிலான உதவி உட்புறத்தில் கிடைக்கிறது. §



*ராபர்ட் மேடையில் நடத்திய நடனங்களுக்கு நல்ல வரவேற்பும் பாராட்டு மழையும்  கிடைத்தது. அவன் கலை அறிவுடன் இருந்த அந்த உன்னதமான பார்வையாளர்களை பார்க்கும் போது, இருட்டில் வைரங்கள் மின்னுவதைப் போன்று தோன்றியதாக, தனது வாழ்நாளில் பின்னர் குறிப்பிட்டு இருந்தான்.*

……………………..§

**சான் பிரான்சிஸ்கோ பாலே**

பாரம்பரிய நடனத்தில் மேலும் தீவிர பயிற்சி பெறுவதற்காக, ராபர்ட் தனது பதினாறாவது வயதில் சான் பிரான்சிஸ்கோ பாலே பள்ளியில் சேர்ந்தான். அவன் இரண்டு வருடத்திற்குள் சான் பிரான்சிஸ்கோ பாலே நிறுவனத்தில், முன்னணி நடனக் கலைஞனாக தகுதிப் பெற்று, அந்த குழுவுடன் இரண்டு முறை அமெரிக்கா மற்றும் கனடா முழுவதும் பயணம் மேற்கொண்டான். யோகம் மற்றும் தியானத்தில் அவனது பயிற்சி இடைவிடாது தொடர்ந்தது. அவன் சான்  பிரான்சிஸ்கோவில் இருந்த போது, அந்த பாலே நிறுவனத்திற்கு அருகில் ஃபோல்சம் தெருவில் இருந்த பிரஸ்பைடிரியன் கிறுத்துவ தேவாலயத்தில் தினமும் இரண்டு மணி நேரங்களுக்கு தியானம் செய்வான். §

இது அமெரிக்காவின் மிகவும் புகழ்பெற்ற பாலே நிறுவனங்களில் ஒன்றாக இருந்ததால், அதில் போட்டி அதிகமாக இருந்தது. ராபர்ட் தனது கலையில் கடினமாக உழைத்து, தனது நிலையில் இருந்த ஒரு கலைஞனுக்கு தேவைப்பட்ட வலிமை மற்றும் உடலுறுதியை பெறுவதற்காக தினமும் பல மணி நேரங்கள் தனது உடலை இயக்கிக்கொண்டு இருந்தான். அவன் தனது சக கலைஞர்களை உயர தூக்குவதற்காக, தனது பதினேழாவது வயதில் பெஞ்ச் பிரெஸ்ஸில் 175 பவுண்ட் எடையை தூக்கும் வலிமையுடன் இருந்தான். ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு மாதமும் படிப்பது, நினைவுக்கூர்வது மற்றும் தொடர்ந்து பயிற்சி செய்வதே அவனது வழக்கமாக இருந்தது. §


தனது திறமைகளை மேலும் மேம்படுத்த, ஒரு பயிற்சியாளரை நியமித்து, தனது நடனத்தை விமர்சனம் செய்யுமாறு அவரிடம் கேட்டுக்கொண்டான். “நான் சரியாக செய்வதை எடுத்துக்கூறாமல், நான் தவறாக செய்வதை விமர்சனம் செய்வதற்கு, ஒரு மணி நேரத்திற்கு $20 ஊதியத்தை வழங்கி ஒரு

பயிற்சியாளரை நியமித்தேன்," என்று பல வருடங்கள் கழித்து அவன் பரிகாசமாக தெரிவித்தான். அந்த காலத்தில் $20 என்பது பெரிய தொகையாக இருந்தது. §

கலைஞர்கள் வழக்கமாக செய்வதைப் போல, அந்த நிறுவனம் பெரும்பாலும் பேருந்து மற்றும் இரயில் மூலம் பயணம் செய்தது. இதன் காரணமாக தனக்கு பயணம் செய்வதில் பிரியம் ஏற்பட்டது என்றும், சில நிமிடங்களில்  பயணத்திற்கு தேவையான பொருட்களை இராணுவ துல்லியமாக தயார் செய்துகொள்ளும் திறனை பெற்றதாகவும், அவர் பிற்காலத்தில் குறிப்பிட்டார். அவர் உள்ளூர் அரங்குகள் மற்றும் யுஎஸ்ஓ நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டார். இந்த காலக்கட்டத்தில் அமெரிக்கா இரண்டாம் உலகப்போரில் மும்முரமாக இருந்தது. §

விரைவாக வளர்ந்துக்கொண்டு இருந்த இந்த நட்சத்திரம், தலைசிறந்த கலைஞர்களுடன் பணி புரிந்தான்.  ருத் சைன்ட் டெனிஸ் மற்றும் வில்லியம் கிறிஸ்டன்சன் போன்ற பிரபலங்கள் அவனுக்கு நடன இயக்குனர்களாக இருந்தார்கள். அவன் மேடையில், இத்தாலிய நாடகங்களில் தலைமை நடிகை மற்றும் அமெரிக்க பிரபலங்களுடன் நடனமாடினான். அவன் சிறப்பான பாடகர்கள் மற்றும் இசைக்கலைஞர்களுடன் செயல்புரிந்து, ஓபரா பாடகர் அல்த்யா யங்மானுடன் கூட்டு சேர்ந்தான். §

தனது குழு தெற்கு கலிபோர்னியாவில் நிகழ்ச்சியை நடத்திய போது, ராபர்ட் இந்த வாய்ப்பை பயன்படுத்தி, அந்நாளில் அமெரிக்காவின் முன்னணி குருவாக விளங்கிய, பரமஹம்ச யோகானந்தாவை, செல்ஃப் ரியலைசேஷன் பெல்லோஷிப்பின் பசிபிக் பாலிசேட்ஸ் மையத்தில் சந்தித்தார். அவர் தனது *ஆட்டோபியோகிரபி ஆஃப் ய யோகி* என்ற புத்தகத்தை அச்சிட்ட சமயத்தில், ராபர்ட் அந்த ஆசிரியரை சந்தித்தார். யோகானந்தா அன்புள்ளம் படைத்தவராக இருந்தார், மற்றும் அந்த இளைஞன் தன்னை சந்திக்க வந்த மூன்று முறையும், அவன் கைநிறைய இலக்கிய புத்தகங்களை வழங்கினார். கிழக்கத்திய நாடுகளின் ஆன்மீக குருக்களை ராபர்ட் சந்திப்பது, இதுவே முதல் முறையாக இருந்தது. §




*ராபர்ட் தனது கலை வாழ்க்கையின் உச்சத்தில் இருந்த போது, அவனை ஆன்மீக வாழ்க்கை அழைத்தது. அவன் தனது பத்தொன்பதாவது வயதில், பாலே நிறுவனத்தை விட்டு விலகி, தனது குருவை தேடி இந்தியா மற்றும் இலங்கை செல்ல, ஒரு வணிக கப்பல் மூலம், கோல்டன் கேட் தொங்கு பாலத்திற்கு அடியில் இருக்கும், கடல் வழியாக பயணம் மேற்கொண்டான்.*

.......................§

நடனம் அவனது பெரும்பாலான நேரத்தை எடுத்துக்கொண்டாலும், இரவு நேரங்களில் அவன் தனக்கு உட்புறமாக கவனம் செலுத்துவான். உலக வாழ்க்கை பின்வாங்கியது மற்றும் அவன் தன்னிடம் இருந்த சில ஆன்மீக புத்தகங்களை படித்ததுடன் தியானமும் செய்தான். அவனுடைய இயல்பிற்கு படிப்பது மட்டுமே மனநிறைவை அளிக்கவில்லை. அவன் ஒவ்வொரு ஆசிரியரும் புகட்டிய பாடத்தை பயிற்சி மற்றும் ஆய்வு செய்து, தனக்குத்தானே நிரூபித்துக் கொள்ள வேண்டியிருந்தது. §

அவனுக்கு ஒருவர் பதஞ்சலியின் *தி யோக சூத்ராஸ்* என்ற ஒரு சிறிய புத்தகத்தின் நகலை வழங்கிய போது, இந்த செயல்முறையை பின்பற்றுவது சவால் விடுவதாக இருந்தது. அவன் நடனத்தில் செய்ததை போல, இந்திய யோகி மூலம் விளக்கப்பட்ட யோக சூத்திரங்களுக்குள் மூழ்கி, அதன் மர்மமான மொழியை வெளிப்படுத்தி, அதன் நுணுக்கமான வழிகாட்டல்களை பின்பற்றி தொடர்ந்து பயிற்சி செய்துக்கொண்டு இருந்தான். அது யோக பாதையில் அவனது தீட்சையாகவும், மெய்ஞ்ஞான நிலை மீது கிழக்கு நாட்டு குருமார்கள் வைத்திருந்த கண்ணோட்டம் பற்றிய முதல் புரிதலாகவும் இருந்தது. §

அந்த இளம் கலைஞனின் வாழ்க்கையில் நடனம் வளர்ச்சி அடைந்துக்கொண்டு இருந்தது. அவனுக்கு அதன் நாடகங்கள், நுட்பங்கள், சமூகத் தொடர்பு மற்றும் அதில் இருந்த பேரும் புகழும் ஆடம்பரமும் பிடித்து

இருந்தது. ஆனால் நடனம் அவனுக்கு மேலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அது ஆற்றல், உயிர் சக்தி மீது பெறும் தேர்ச்சி, ஆன்மா பொருட்களை எவ்வாறு இயக்குகிறது மற்றும் சிந்தனை எவ்வாறு செயல்களை வெளிப்படுத்துகிறது என்பதைப் பற்றி ஒரு ஆய்வாக இருந்தது. சூட்சும உடல் எவ்வாறு முதலில் இயங்கி, தூல உடல் அதற்கு எவ்வாறு எதிர்வினை வழங்குகிறது என்பதை அவன் ஆய்வு செய்தான். அவர் இயக்கத்தில் இருந்த உயிர் சக்தி, உடல் மற்றும் மனத்தின் தொடர்பை ஆய்வு செய்தார். இந்த ஆய்வு வெறும் ஒரு சிந்தனையாக இல்லாமல், அவரது கலைத்திறனுக்கு காரணமான விஞ்ஞானமாகவும் இருந்தது. ராபர்ட்டிற்கு நடனம் என்பது மனித உணர்ச்சி வெளிப்பாடுகளின் அதிக தெய்வீக வடிவமாகவும், படைப்பாற்றலின் உயரிய வடிவமாகவும் இருந்தது. இந்த ஒரு படைப்பில் மட்டுமே, படைத்தவரும் படைக்கப்பட்டவரும் ஒன்றாக இருக்கிறார்கள். யோகி பிரபஞ்சமாக இருந்ததைப் போன்று, நடனமாடுபவர் நடனமாக இருக்கிறார். மேடை விளக்குகளைக் காட்டிலும், நடனத்தின் இந்த ஆன்மீக அம்சம் அவன் மனதை கவர்ந்தது.§

அந்த மேடை விளக்கின் ஒளியில், அந்த இளம் கலைஞன் மக்களின் மனதை கவர்ந்தான். அவனிடம் மக்கள் கூட்டம் மீண்டும் நடனமாட கேட்டுக்கொண்ட போது, தனது ஒவ்வொரு உடல் அசைவும் பார்வையாளர் மத்தியில் தாக்கம் ஏற்படுத்தும் என்பதை அறிந்திருந்து, தனது அகலக்கால் நடை மற்றும் அழகான கை கால்களுடன் வெளியே வருவான். மேடைக்கு பூச்செண்டுகள் பறந்து வரும். அந்த அறை முழுவதும் வலுவான கரவொலி கர்ஜிக்கும். வைரங்கள் மற்றும் நீலமணிகள் மற்றும் ஆயிரம் டாலர் மதிப்புள்ள மேலங்கிகள் மற்றும் கைகளால் தைக்கப்பட்ட டக்ஸ் அங்கிகள் என்று தனக்கு முன்பாக அமர்ந்து இருந்த செல்வ வளத்தை பார்த்து, அவன் வியந்து நின்றான். அங்கே கிடைத்த பாராட்டு மழை, எளிமையான சூழலில் வளர்ந்திருந்த இளம் ஹான்செனின் வாழ்க்கையில் உச்சமாக விளங்கியது. ஆனால் அவன் அதன் பிறகு பல வருடங்கள் கழித்து இலங்கை, இந்தியா (குறிப்பாக தூத்துக்குடி), மலேஷியா, மொரிஷியஸ் மற்றும் மற்ற நாடுகளில் மேலும் அதிகமான வரவேற்பை பெற்றான். §

அவன் நடனத்தில் உயர்ந்த நிலையை எட்டி இருந்தான். அவன் பாரம்பரிய தனிநடனங்கள் மற்றும் ஐரோப்பா மற்றும் தென் அமெரிக்காவில் இருந்து வந்த பாலே நடன மங்கைகளுடன் முக்கிய நிகழ்ச்சிகளில் பங்குபெற்றான். கிரேஸ் பர்ரோஸ் தனக்கு தெரிவித்து இருந்த மற்றும் சுவாமி யோகானந்தாவிடம் கண்ட கிழக்கு நாடுகளுக்கு செல்வதைப் பற்றி அவன் பேச ஆரம்பித்து இருந்தான். §

அந்த உரையாடல்களில் மதர் கிறிஸ்டினியின் பெயரும் இடம்பெற்று இருந்தது. அவர் இலங்கையில் பலரை அறிந்து இருந்தார். ராபர்ட்டிற்கு தான் வழங்கிய வழிகாட்டலை காட்டிலும், அதிக மேம்பட்ட ஆன்மீக வழிகாட்டல் தேவை என்பதை அவர் உணர்ந்து இருந்தார். அதனால் இலங்கையில் பௌத்த

சமய துறவியாக இருந்த தயானந்தா, அவனது பாதையில் அடுத்த ஆலோசகராக இருக்கலாம் என்று அவருக்கு தோன்றியது. §

அவர் வழங்கிய உற்சாகத்தால் ராபர்ட் ஊக்கமடைந்து, அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்று சிந்திக்க ஆரம்பித்தான். அங்கே எப்படி செல்வது? அவன் அங்கே சென்றதும் என்ன செய்வது? அவனுக்கு அங்கே யாரையும் தெரியாது. பெற்றோர்கள் அவனுக்காக விட்டு சென்ற பணத்தில் இருந்து வருடம் ஒருமுறை பெற்ற $700 ஊக்கத்தொகையைத் தவிர, அவனிடம் கையிருப்பாக சிறிதளவு பணம் மட்டுமே இருந்தது. அதற்கான தீர்வு அவனுக்கு மெதுவாக கிடைத்தது. அவர்கள் அமெரிக்க-ஆசிய கலாச்சாரப் பணியை தொடங்கி, இந்தியா மற்றும் இலங்கை பயணம் மேற்கொண்டு, பாடல்கள் மற்றும் நடனங்கள் மற்றும் தங்கள் கலைகளை பகிர முடிவு செய்தனர். அவன் அந்த பட்டியலில் கிரேஸ் பர்ரோஸ், பாடகர் அல்த்யா யங்மேன், இசை அமைப்பாளர் மற்றும் பியானோ கலைஞராக இருந்த அல்வா காயில் மற்றும் நடன மங்கையாகவும் ஆன்மீகவாதியாகவும் இருந்த ஹில்டா சார்ல்டன் ஆகியோரை சேர்த்துக்கொண்டான். அந்த திட்டம் உறுதி பெற்றதும், அதில் வெற்றி பெறுவதற்கு அவன் அதிக நேரத்தை செலவழித்தான். அவன் தனது பத்தொன்பாவது வயதில் சான் பிரான்சிஸ்கோ பாலே நிறுவனத்தில் இருந்து வெளியேறினான். அதன் பிறகு அவன் அந்த நிறுவனத்திற்கு திரும்பவில்லை. §

நான் எனது நடன வாழ்க்கையின் உச்சத்தில் இருந்த போது, “நீ உனது தொழில் வாழ்க்கையின் உச்சத்தில் இருக்கும் போது, அதில் இருந்து வெளியேற வேண்டும்,” என்று கூறிய உண்மையான தொழில் நெறிஞர்களின் அறிவுரையை பின்பற்றினேன். நான் எனது குருவை சந்திக்க மிகவும் ஆவலுடன் இருந்ததால், என் ஆசிரியர்களில் ஒருவர் என்னை இலங்கைக்கு அனுப்பி வைத்தார். நான் விவேகானந்தர் வழங்கிய போதனைகளை மிகவும் ஆழமாக படித்துக்கொண்டு இருந்தேன். நான் வேதாந்த சமூகம் நடத்திய சொற்பொழிவுகளை கேட்டுக்கொண்டு, அங்கிருந்த சுவாமிகளையும், பரமஹம்ச யோகானந்தாவையும் சந்தித்தேன். நான் தேடிய குரு, அவர்களிடத்தில் எனக்கு தென்படவில்லை. §

Page 35  URL:
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/35_guru05_02.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் இருபது


# ஒரு குகையில் இறைவனை கண்டறிதல்

தனது குருவை தேடுவதற்காக ராபர்ட் மேற்கொண்ட பயணம், அவரை ஒரு வணிக கப்பலில் பல கடல்களை கடந்து இந்தியாவிற்கும், பிறகு இரயில் மூலம் தென்னிந்தியாவிற்கும் அழைத்து சென்றது. அங்கே அவர் சிலோன் செல்லும் பயணப்படகில் ஏறி, மார்ச் 1947 கொழும்பு வந்து சேர்ந்தார். கிரேஸ் பர்ரோஸ் ஏற்பாடு  செய்திருந்ததைப் போல, தியானம் மற்றும் மறைஞானத்தில் ஒரு சிங்கள பௌத்த ஆசிரியராக இருந்து, 1930 களின் மத்தியில் அமெரிக்காவிற்கு சென்று, அங்கிருந்த சாதகர்கள் மனதை கவர்ந்த தயானந்த பிரியதாசியிடம் பயின்றார். §

இளம் அமெரிக்கரை புதிய சிந்தனைகள் மற்றும் தனிப்பட்ட சோதனைகள் மூலம் எதிர்கொண்ட தயானந்தா, தனது மாணவனின் திறமைகளை சோதிக்கும் ஆசிரியராக இருந்தார். இதன் மூலம், இந்த உலகில் நல்ல செயல்களை செய்து முடிக்கும் கலையை ராபர்ட் தெரிந்துக்கொண்டு, ஒரு ஆன்மீக ஆசிரியர் வழங்கும் உத்தரவுகளைப் பற்றியும் தெரிந்து கொண்டார். தனது புதிய தூண்டுகோல், தனக்கு வழங்கிய பணி எவ்வளவு கடினமாக இருந்தாலும், அதை இளம் சாதகன் வெற்றிகரமாக நிறைவு செய்தார். அவர் சிலோன் வந்து சேர்ந்த சில மாதங்களில், கிராமத்து குழந்தைகளுக்கு இரண்டு பள்ளிகள் நிறுவ உதவி செய்து, மந்தமான நிலையில் இருந்த கண்டி நடனத்தை உயிர்ப்பித்து, தச்சர்கள் மின்சார ரம்பங்களை பயன்படுத்தவும் உதவி செய்தார். இதற்கு இடையில் அவர் தனது நடனக்குழுவுடன் பயணம் செய்து, தீவை சுற்றிப்பார்த்து வந்தார். §

புதிய நாடு வழங்கும் அறிமுகங்கள் மற்றும் ஆச்சரியங்கள், அவரை உற்சாகப்படுத்தின. அவர் அங்கிருந்த மக்களின் பணிவு மற்றும் உபசரிக்கும் முறைகளை ரசித்து, அவர்களது நுணுக்கமான கலாச்சார உள்ளுணர்வைக்

கற்றுக்கொண்டு, அவர்களை நேசிக்க ஆரம்பித்தார். அவருக்கு தயானந்தா தொடர்ச்சியாக வழங்கிய பணிகள் மற்றும் உத்தரவுகள், பெரும்பாலும் அரசியல் சார்ந்ததாக இருந்தன. ஆனால் இரண்டு வருடங்களுக்கு பிறகு, அந்த பணிகள் ராபர்ட்டுக்கு பாரமாக இருக்கத் தொடங்கின. அவர் தன் ஆசிரியருக்கு உதவுவதற்கும், தனது கலாச்சார பணியை நிறைவேற்றுவதற்கும் ஆர்வத்துடன் இருந்தார். ஆனால் தான் இறைவனை உணர்வதற்காக, சிலோன் வந்தார் என்பதை அவர் என்றுமே மறக்கவில்லை. ஒரு குகையில் தீவிரமாக சாதனா செய்யவேண்டும் என்ற விருப்பம் அவருக்கு எப்போதும் இருந்தது, மற்றும் இந்த விருப்பம் அவர் மனதில் எப்போதும் தீவிரமாக இருந்தது. §



*நான்கு-வார பயணத்தின் போது, அந்த கலாச்சாரக் குழு கப்பலின் மரக்கட்டை தளத்தில் பயிற்சி செய்தனர். ராபர்ட் தனது வாழ்க்கையில், உண்மையான முதல் தனிமையை ரசித்துக்கொண்டு இருந்தார். அவர்கள் பம்பாயில் இறங்கினார்கள்.* ••••••••••••••••••••••••§

எனது பயிற்சி இறுதியாக நிறைவுற்றது. எனது ஆசிரியர், தயானந்தா ஒரு கருத்தரங்கில் கலந்துக்கொள்ள சுவிட்சர்லாந்திற்கு பறந்து சென்றார். நான் சிலோனில் தனியாக இருந்தேன். நான் மீண்டும் குகைக்கு செல்வதைப் பற்றி சிந்தித்தேன். எனக்கு நெருக்கமான இசுலாமிய நண்பர்களில், அன்பகரா என்ற ஒரு ஆஞ்சநேய பக்தன் இருந்தார். அவர் என்னை தீவின் மத்திய வனங்களில் தொலை தூரத்தில், மலைகள்

> நிரம்பிய பள்ளத்தாக்கில், பலாங்கொடை நகரத்தின் குரகளா பகுதியில் இயற்கையாகவே பெரிய கல்லில் குகையாக அமைந்து இருந்த மறைவான ஜெய்லானி குகைகளுக்கு அழைத்து சென்றார். அங்கே நான் எனது ஞானோதய பாதையின் ஐந்தாவது தூண்டுகோலை சந்தித்தேன். அவர் பெயர் மஸ்தான். §

ஜெய்லானி குகைகள், கொழும்பில் இருந்து தென்கிழக்கே 150 கிலோமீட்டர் தூரத்தில், ஒதுக்குப்புறமான வனங்களில் அமைந்து இருந்தன. இது இன்றும் ஒரு புண்ணிய தளமாக, சூபி சூட்சும ஞானிகள் ஒன்று கூடும் இடமாக விளங்குகிறது. நாங்கள் பல நாட்கள் மேற்கொண்ட பயணம் சிறிய கிராமங்கள் மற்றும் புழுதி படிந்த சாலைகளுடன், பெரும்பாலும் மக்கள் குடியிருப்பு இல்லாத, சிலோனின் மத்திய மலைப்பிரதேசம் வழியாக சென்றது. ராபர்ட் யானைகள் நதிகளில் குளிப்பதையும், காடுகளில் இருந்து மிகபெரிய சங்கிலிகளில் மரக்கட்டைகளை இழுப்பதையும் கவனித்தான். இதைப் பார்த்த அந்த அமெரிக்க நாட்டவருக்கு, அந்த இடம் தான் புத்தகங்களில் படித்து இருந்த ஷாங்கிரி-லா போன்ற, ஒரு அதிசய உலகமாக தோன்றியிருக்கக்கூடும். அவர் மிகவும் தீவிரமாக மூழ்கி இருந்த வாழ்க்கையில் இருந்து மிகவும் மாறுபட்டு இருந்தது என்பது உறுதியாக தெரிந்தது. அவர் இந்த ஒரு தனிமைக்காக வெகு நாட்களாக ஏங்கி இருந்தார். §

மலையில் ஏறிய ராபர்ட் மற்றும் அன்பகரா, கல்தோட்டை சமவெளியைப் பார்த்த வண்ணம் அமைந்து இருந்த, மலைக்குகைகளின் தொடக்கம் வரை நடந்து சென்றார்கள். அவர்கள் பெற்ற அனுபவத்தை, 1929 ஆம் ஆண்டு அர். ஹெச். பாசெட் வெளியிட்ட *ரொமான்டிக் சிலோன், இட்ஸ் ஹிஸ்டரி, லெஜன்ட் அண்ட் ஸ்டோரியில்* விளக்கியுள்ளார்:§

> அந்த குகை மிகவும் சுவாரசியமான இடமாக இருந்தது. அது செயற்கை அகழ்வுகள் அல்லது சடங்குகள் தொடர்பான அலங்காரம் எதுவும் இல்லாமல் முற்றிலும் இயல்பாக இருந்தது. மலை உச்சியில் இருந்து சிறிது கீழே இறங்கியதும், ஒரு செங்குத்தான பாறையின் முகப்பில் நுழைவாயில் அமைந்து இருந்தது. உள்ளே நுழைந்ததும் ஒரு “பெரிய அறை” உள்ளது. அதன் இருபுறமும் பாதைகள் உள்ளன. வலது புறம் இருக்கும் பாதை, பூமியின் ஆழத்திற்குள் குறைந்தபட்சம் 50 கஜங்கள் சென்று, அறையில் எங்கும் பரவியிருந்த நிழலின் இருட்டுடன் ஐக்கியமாகி இருந்தது. §
>
> அந்த அறையின் நுழைவாயிலுக்கு எதிர்புறத்தில் அமைந்து இருந்த ஒரு குறுகிய பாதை, தியானம் செய்யும் “விளிம்பிற்கு" அழைத்து சென்றது. அது பாறையின் அதிக செங்குத்தான பகுதியின் மூலையில் 6 அடிக்கு 4 அடி அளவில் இருந்தது. அதன் மீது ஒரு பாறை கூரை போல நீட்டிக்கொண்டு இருந்தது. இங்கே ஐம்பது அடி உயர பெரும் பாறையின் அடியிலும், 600 அடி உயர செங்குத்தான பாறையின் விளிம்பிலும், அமர்ந்து இருக்கும் ஒரு துறவிக்கு, தனக்கு அடியில் உடையாமல் படர்ந்து

இருக்கும் மரங்களின் கடலுக்கு மத்தியில் உண்மையான அமைதியும், ஆழ்ந்த சிந்தனைக்கு தூண்டுதலும் கிடைக்கும். இந்த பாறையின் சிறிய துவாரத்தில் நுழைந்ததும், இந்த மெல்லிய விளிம்பில் அமர்ந்து இருப்பவருக்கு பின்புறத்தில் முழுமையான பற்றற்ற சூழல் வியாபிக்கிறது. இந்த பிரம்மாண்டமான நிலப்பரப்பின் சிக்கலற்ற மகத்துவம் மற்றும் செங்குத்தான பாதாளத்தின் அழிவுத்தன்மைக்கு முன்பாக, லௌகீக சிந்தனைகள் தங்கள் முக்கியத்துவத்தை இழக்கின்றன. §

ராபர்ட் வீடு திரும்பி இருந்தார். அவர் இங்கே ஆத்ம ஞானம் பெறும்  வரை தியானம் செய்வதற்கு வந்து இருந்தார். ஆனால் அவர் மனம், ஆன்மாவின் சக்தியின் மூலம், உலகத்தின் சூழ்நிலைகளை மேம்படுத்த வேண்டும் என்கிற தனது வாழ்நாள் குறிக்கோள்களைப் பற்றி சிந்தித்துக் கொண்டு இருந்தது. அது இரண்டாம் உலகப்போர் முடிந்ததிருந்த சமயம், மற்றும் அப்போது மனித நேயத்திற்கு அமைதியான புதிய யுகம் கிடைக்க அதிகமாக வாய்ப்பு இருந்ததாக அவருக்கு தோன்றியது. இதை அவர் டிசம்பர் 28, 1948 எழுதிய கடிதத்தில் வெளிப்படுத்தியுள்ளார். §

தீய சக்திகள் ஆதிக்கம் செலுத்திய காலத்தில், இந்த நாட்டில் ஒரு கூட்டுறவை உருவாக்கி, உலக கூட்டமைப்பின் மூலம், நாடுகளின் சுதந்திரத்திற்கு நாம் பிரார்த்தனை செய்தது நினைவில் இருக்கிறதா? §

தீய சக்திகள் மறைந்து விட்டன, நாம் தொடர்ந்து முன்னேறி சென்று, வகுப்புவாதம் இல்லாமல் மக்களின் மீது அன்பு செலுத்தும் வலையில் இந்த நாடுகள் அனைத்தையும் வழிநடத்தி சென்று, தளைகளில் இருந்து விடுதலை அளித்து, புதிய வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கலாம். §


இறைவன் பூமியில் யதார்த்தமான முறையில் இருக்கிறார்; தற்போது புதிய நிதித்துறை ஆதிக்கம் செலுத்துகிறது. எல்லா நாடுகளும் திரண்டு வந்து இன்றே விழிப்புணர்வை பெறுங்கள். இறைவன் மனிதனுக்குள் ஏற்றிவைத்த வாழ்க்கையின் சுடரை, எல்லா உயிர்சக்திகளும் ஒன்றாக விழிக்க செய்து, உற்சாகமாக செயல்படுங்கள். §

இன்று இரவில் இருந்து அடுத்த ஏழு வருடங்களுக்கு தெய்வீக ஒளி மிகவும் வலுவாக பிரகாசிக்க இருக்கிறது. அவரது பணி முடிவடைந்தது, திட்டங்கள் நிறைவடைந்தது, உலகம் இப்போது அவரது காலடியில் இருக்கிறது. ஒரு யதார்த்தமான முறையில் ஆன்மீக நாடாக, அந்த பாதையில் முன்னணியில் இருக்கும் சிலோனை எல்லோரும் பாருங்கள். §

நாடுகளுக்கான சுதந்திரம் வந்து கொண்டிருக்கிறது, இனி அவர் சீர்திருத்துவார். இறைவனின் விருப்பம் ஆதிக்கம் செலுத்தும். ஆன்மா எழுச்சி பெற்றுவிட்டது, தெய்வங்களும் கீழ்படிவார்கள். அவர்கள் வரவிருக்கும் பாதைகள் தயாராக இருக்கின்றன, பூமியை நோக்கி அவர்கள் வருகிறார்கள். ஓம்காரம்  கேட்டுக்கொண்டு இருக்கிறது. §

ஆன்மாக்கள் தாமதமின்றி முழுமை அடைகிறார்கள். இறுதியான போர் நிறைவடைந்தது; போரில் பின்னி இருந்த எல்லா இதயங்களையும் முடிவான உண்மையின் சக்தி திருத்தி அமைத்து, எல்லா உயிர்சக்திகளையும் பனியை போன்று தூய்மையாக்கியுள்ளது. பாதை தெளிவாக இருக்கிறது, புதிய யுகம் தற்போது இங்கே இருக்கிறது. §

ஜெய்லானி குகைகள் §



தென் சிலோனின் ஒரு ஒதுக்குப்புறமான காட்டில், ராபர்ட் உபவாசத்துடன் தியானமும் செய்து காலம், உருவம் மற்றும் காரணத்தை கடந்த

*பரமாத்துமாவை உணர்ந்தார். ஒரு நாள் ஒரு மலைப்பாம்பு அவர் மடி வழியாக ஊர்ந்து சென்றது, ஆனால் அவர் ஆழ்ந்த தியானத்தில் இருந்ததால், அவர் அதை பார்க்கவும் இல்லை உணரவும் இல்லை..*

........................§

ராபர்ட் தனது இருப்பிடத்தில் இருந்து அமெரிக்காவிற்கு எழுதிய இரண்டாவது கடிதத்தில், தனது ஆசைகளை எழுதி இருந்தார்: §

எனது இதயத்திற்கு மிகவும் பிடித்தமான வனத்தில் இருக்கிறேன்.

வலுவாக இருப்பவர் நீண்டகாலமாக பிடித்து வைத்திருந்த

புதிய யுகத்தின இயக்கங்களை நாம் தொடங்கி விட்டோம் என்பதால்

என்னால் இனி ஒரு நொடியும் வீணடிக்க முடியாது.

ஒரு அலறலுடன் திரும்பி ஓடிய அனைவருக்கும்

அவர் உதவி செய்ய வேண்டியிருந்தது.

அதிக அமைதியாக உட்கார்ந்து, கண்களை உட்புறமாகவும் மேல்நோக்கியும்  திருப்பி

நான் எனது மனஉறுதியை அதிகம் வளர்த்து, இந்த இயக்கங்களுக்கு ஒரு ஊக்கம் அளிக்கவேண்டும்.

இந்த பிரபஞ்சத்தில் நடுக்கம் மற்றும் அதிர்வை ஏற்படுத்தி, பின்பு அமைதியாக இருக்க

எனக்குள் தேவையான மனஉறுதி நிரம்ப வேண்டுகோள் விடுக்கிறேன்.

கடலின் மேல் இருக்கும் நிலங்களின் எதிர்கால தலைவர்கள்

இந்த இயக்கங்களை தங்கள் நாடு முழுவதும்

அவர்களிடம் மிகவும் வலுவான ஆற்றல், மிகவும் சிறப்பான அன்பின் மூலம்

நிரப்பி உற்சாகப்படுத்த

நான் தனியாக ஒரு மலையில் அமர்ந்து மனஉறுதியை வளர்த்துக்கொண்டு இருக்கிறேன்.

அவர்களின் நிறுவனர் வலுவாக, வாழ்க்கையின் முழுமையான தலைவனாக இருக்கிறார்.

அவருக்கு எவ்வாறு வாழ்வது என்று தெரியும். கொடுத்து வாழ்வதே வாழ்க்கை ஆகும்.


அதனால் அவர் வெறுப்புக்கள் அனைத்தையும் அழித்து ஒரு ஒழுங்கை கொண்டு வர

தன்னிடத்தில் இருந்து, ஒரு உலகை வழங்குகிறார்.§

எல்லோர் மீதும் அன்பு செலுத்துவதே
உலகத்தின் விதியாக இருக்கிறது.
எட். மங்கர், Esq. அவர்களுக்கு
ஜெய்லானி குகைகளில் இருந்து திரும்பும் பாப், ஜனவரி 9, 1949§

ஜெய்லானியில் மஸ்தான் என்ற ஒரு இசுலாமிய சூட்சும ஞானியும் வாழ்ந்து வந்தார். பல வருடங்கள் கழித்து, அவர் தனது மடவாசிகளிடம் அந்த சூட்சும ஞானியைப் பற்றி நினைவுகூர்ந்தார்:§

மஸ்தான் என்றுமே குளித்தது இல்லை என்று மக்கள் கூறினார்கள், ஆனால் அவர் மீது ஒரு பூவை போல வாசம் வீசியது. அவருக்கு அதிக வயதாகி இருந்தது, மற்றும் அவர் மிகவும் தூய்மையாக இருந்தார். எங்கள் சந்திப்பு சிறப்பாக அமைந்தது. அவர் என்னை பார்த்த போது, “எனக்கு உங்களைப் பற்றிய ஒரு கனவு வந்தது,” என்றார். அவர் அதன் பிறகு தனது பையில் இருந்து ஒரு சிறிய கையேட்டை எடுத்து, “நான் அதைப் பற்றி இதில் எழுதியுள்ளேன். நான் என்னுடைய கனவுகளை இதில் தான் எழுதுவேன்,” என்று கூறினார். “நானும் உங்களைப் பற்றி ஒரு கனவை கண்டேன்,” என்று அரேபிய மொழியில் இருந்து ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்த ஒரு நண்பரின் மூலம் அவரிடம் தெரிவித்தேன். நான் அந்த கனவை சில நாட்களுக்கு முன்பாக கண்டு இருந்தேன். நானும் அதைப் பற்றி எழுதி இருந்தேன். எனது கனவுகளை பற்றி குறிப்பு எழுதிக்கொள்ள எனக்கு அப்போது பயிற்சி அளிக்கப்பட்டு இருந்தது. “கடந்த பௌர்ணமி அன்று எனக்கு அந்த கனவு வந்தது,” என்று அவர் கூறினார். நாங்கள் தேதிகளை ஒப்பிட்டுப் பார்த்தோம். நாங்கள் இரவு நேரத்தில் உறங்கிக்கொண்டருந்த போது அந்தர்லோகத்தில் நடந்த எங்கள் சந்திப்பை பற்றி, இருவரும் ஒரே கனவு மற்றும் ஒரே நேரத்தை குறிப்பிட்டு இருந்தோம். §



*ஜெய்லானிக்கு அருகில் வாழ்ந்த மஸ்தான் என்ற சூட்சும ஞானி, அமெரிக்க சாதகரின் தீவிரத்தை பார்த்து, அவருடன் தியானம் செய்தார் மற்றும் கனவுகள் மற்றும் மூன்றாவது கண் பற்றி அரிய அறிவுறுத்தலை வழங்கினார்.*

........................§

அவர் எனக்கு மூன்றாவது கண்ணை மிகவும் கவனமாக பயன்படுத்துவதை மையமாக வைத்து, ஒரு வலுவான பயிற்சியை வழங்க ஆரம்பித்தார். இந்த சக்கரத்தின் புலன்களில் இருக்கும் நுணுக்கமான திறமைகள், வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் பற்றி அவர் எனக்கு தனது மனதின் சக்தி மூலம் விளக்கம் அளித்து எனக்கு தெரியப்படுத்தினார். மஸ்தான் வாழ்ந்த ஒரு சிறிய குகையில் ஒரு சிறிய கதவு இருந்தது. அங்கே செல்வதற்கு மலையில் பல படிகளை ஏற வேண்டியிருந்தது. அவர் குகைக்கு செல்லும் பாதையில், அடிவாரத்தில் இருந்த ஒரு மசூதியில் நான் வசித்து வந்தேன். §

இரவு நேரங்களில், காற்றோட்டம் அதிகமாக இருந்த மலைப்பகுதிகளுக்கு என்னை அழைத்து சென்று, என்னுடன் தியானம் செய்வார். அங்கே நூறு வருடங்கள் முன்பாக யோகிகள் தியானம் செய்ததாக கருதப்படுகிறது. அவர் என்னை ஒரே சமயத்தில், பல மணி நேரங்களுக்கு அசையாமல் நிமிர்ந்து அமர்ந்திருக்க செய்தார். காற்று என் மீது மிகவும் பலமாக வீசிக்கொண்டு இருந்தது. குளிர் அதிகமாக இருந்தது. அந்த நள்ளிரவில் அவர் என் மொழிபெயர்ப்பாளர் மூலமாக என்னிடம், “இதைப் பார்த்தீர்களா? அதைப் பார்த்தீர்களா? நான் பார்ப்பதை நீங்களும் பார்க்கிறீர்களா?” என்று கேட்பார். கொரான் கற்றுக்கொடுத்த ஒரு சூட்சும ஞான வடிவத்தை, அவர் எனக்கு வெளிப்படுத்திக் கொண்டு இருந்தார். அவர் அதைப்பற்றி அனைத்து தகவலையும் என்னுடன் பகிர்ந்துகொண்டார். நான் ஆன்மாவின் புலன்கள்  மூலமாக, மூன்றாவது கண்ணின் சில மிகவும் நுணுக்கமான செயல்பாடுகள் மற்றும் மனோஉணர்வு விரிவாக்கம் பற்றி கற்றுக்கொண்டேன். அந்த தகவல், எனது இன்றைய வாழ்க்கையில் ஒரு பயனுள்ள கருவியாக இருக்கிறது. எனது பாதையில் ஐந்தாவது தூண்டுகோலாக விளங்கிய மஸ்தானை நான் மிகவும் உயர்வாக மதிப்பிடுகிறேன். §

அவர் அந்த தொலைதூர காட்டில் மிகவும் வயதான ஆன்மாவாக, ஒரு வலுவான ஆன்மீக வாழ்க்கையை வாழ்ந்த ஒரு அரிய உயிர்சக்தியாக விளங்கினார். இந்த ஜெய்லானி குகைகளில் நூறு ஆண்டுகளுக்கு முன்பு வசித்து வந்த, அப்துல் காதிர் ஜெய்லானி என்ற ஒரு இசுலாமிய துறவி, இங்கே தியானம் செய்து ஒரு சூட்சும ஞான பள்ளியையும் நடத்தி வந்தார். இந்த குகைகள், நாங்கள் வசித்த மசூதியில் இருந்து ஒரு மைல் தூரத்தில், ஒரு மலை உச்சியில் அமைந்து இருந்தது. இந்த குகையில் ஆழமாக ஊடுருவி செல்லும் போது, மலையின் மத்தியில் இருந்த பிளவில் ஒரு ஒளியை காண முடியும். இசுலாம் சம்பந்தப்பட்ட ஆன்மீகத்தில், இது

மெக்காவின் அந்தர்லோகத்திற்கு செல்ல நேரடி வழியாக கருதப்படுகிறது. §

இந்த குகைகள் ஒரு செங்குத்தான பாறையின் மீது அமைந்து இருக்கிறது. அந்த பாறை அறநூறு அடி ஆழம் வரை இறங்குகிறது. அங்கே இருக்கும் ஒரு வெப்பமண்டல காட்டில் வழக்கமாக காட்டு யானைகள் தென்படுகின்றன. தியானம் செய்வதற்காக, என் நண்பர் என்னை அங்கே பலமுறை அழைத்து சென்று இருக்கிறார். அந்த கரடுமுரடான பாதை வழியாக நடந்து செல்லும் போது, அந்த இடத்தில் தான் நான் எதிர்காலத்தில் ஆத்ம ஞானம் பெறப்போகிறேன் என்பதை உணர்ந்தேன். அதற்கான காரணம் புரியவில்லை என்றாலும், அந்த இடத்தில் ஆத்ம ஞானம் கிடைக்கும் என்பதை மட்டும் உணர்ந்து கொண்டேன். உணர்தலை பெறுவதற்கு முன்பாக, செய்வதற்கு ஏதோ இருக்கிறது, பெறுவதற்கு அல்லது மாற்றம் பெறுவதற்கு ஏதோ இருக்கிறது என்ற உணர்வு இருந்துக்கொண்டு இருக்கும்.§

நாங்கள் சில நாட்களுக்கு ஒன்றாக தங்கி இருந்தோம். அன்பகராவும் நானும், இரவு நேரத்தில் குகைக்கு வெளியே இருந்த பாறைகள் வெதுவெதுப்பாக இருந்ததால், அதன் மீது உறங்கினோம். அங்கே மிகவும் அமைதியாக இருந்ததால், நாங்கள் அமைதியாக மனதின் ஆழத்திற்குள் ஊடுருவிக்கொண்டு, நீண்டநேரம் தியானம் செய்துக்கொண்டு இருந்தோம். நான் ஒரு நாள் மதியம், வழக்கம் போல பள்ளத்தாக்கின் மீது பத்மாசனத்தில் அமர்ந்து தியானம் செய்த போது, ஒரு பெரிய மலைப்பாம்பு என் கால்கள் மற்றும் என் மடி வழியாக ஊர்ந்து சென்று, பாறைகளுக்குள் மறைந்து விட்டதாக அவர் என்னிடம் கூறினார். நாட்கள் செல்ல செல்ல, ஒரு வலுவான காந்தம் இழுத்ததைப் போல, நான் எனது முழுமையான மையத்தை நோக்கி இழுக்கப்பட்டு, மிகவும் அதிகமான பேரானந்தத்தை உணர்ந்தேன். §

ஒரு நாள் காலையில் நான் விழித்த போது, நாங்கள் அந்த குகைகளை விட்டு வெளியேற வேண்டும் என்பதையும், எனது இறுதி நடவடிக்கைகளை மேற்கொள்ள நான் தனியாக திரும்ப வேண்டும் என்பதையும் நான் உணர்ந்தேன். நாங்கள் கொழும்புவிற்கு திரும்பினோம். நான் கொழும்பில் எனது முன்னாள் ஆசிரியர் வழங்கிய பல பணிகளை நிறைவு செய்தேன். அதனால் எனக்கு உட்புறத்தில் சற்று விடுதலை கிடைத்தது. நான் அவற்றை முடித்தவுடன், நான் தனியாக ஜெய்லானியின் குகைகளுக்கு திரும்பினேன். நான் மனஉறுதியுடன் திரும்பினேன். இந்த வாழ்க்கையின் முடிவான விரிவாக்கத்தை நான் பெறும் வரை, நான் இங்கிருந்து கிளம்பப் போவதில்லை என்று மனதில் உறுதி எடுத்துக்கொண்டேன். எனது பாதையில் இந்த தருணம் வரை, நான் பல சிறந்த பயிற்சிகளை பெற்று, பல விஷயங்களை கற்றுள்ளேன். எப்போதும் என் மனதில், *இம் கைஃப்* என்கிற ஆத்ம ஞானம் பெற வேண்டும் என்கிற ஆசை முக்கியமாக இருந்துள்ளது. §

ஆத்ம ஞானம் வழங்கும் எதிர்வினையை தாங்க போதுமான வலிமையை பெறுவதற்கு, மனதின் பல்வேறு உட்புற மற்றும் வெளிப்புற பகுதிகளின் அடிப்படை புரிதலை பெறவேண்டும் என்று எனது பாதையில் வந்த ஆசிரியர்கள் எனக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். இதுவரை நான் சந்தித்த ஒவ்வொரு தூண்டுகோலும், எனது பாதையின் அடுத்த ஆசிரியரை ஏதாவது ஒரு வகையில் அறிமுகப்படுத்தினார். இது திட்டமிட்டு நடக்கவில்லை. நான் இன்னொரு ஆசிரியரை தேடவில்லை. நான் எதிர்கொண்ட ஒவ்வொரு ஆசிரியரும் எனக்கு கடைசி ஆசிரியராக இருக்க வேண்டும் என்று தான் நான் விரும்பினேன். நான் அதைப்பற்றி சிந்திக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். எங்களது சந்திப்புக்கள் அனைத்தும் ஒரு எளிமையான, இயல்பான நிகழ்வுகளின் தொடர்ச்சியாக இருந்தன. §

ஒவ்வொரு ஆசிரியரும் எனது நினைவாற்றல், ஒருமுகச்சிந்தனை, ஒருமுக கவனம், மன உறுதி மற்றும் அறிவெழுச்சி சக்திகள் வளர்ப்பதில் ஒரு முக்கிய பங்கு வகித்து, அனைத்தையும் ஒரு உட்புற கண்ணோட்டத்துடன் பார்ப்பது மற்றும் ஒருவர் தன்னை பிரபஞ்சத்தின் மையமாக கருதி உலகை பார்ப்பது பற்றியும் எனக்கு கற்றுக்கொடுத்தனர். §

ஆத்ம ஞானம் பெறவேண்டும் என்கிற முடிவான குறிக்கோள் மட்டுமே ஒரு குறையாக இருந்தது, மற்றும் அதை நானே கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. நான் சாலையில் இருந்து ஜெய்லானி குகைகளுக்கு செல்லும் போது, மனதில் மகிழ்ச்சி மற்றும் தீராத ஆசையுடன் சென்றேன். என்னிடம் உடைமைகள் எதுவும் இல்லை. எனது உடைகள் மற்றும் பணத்தை எல்லாம் வழியில் சந்தித்த கிராம மக்களிடம் வழங்கி விட்டேன். என்னிடம் எதுவும் இல்லை. நான் அங்கே தனியாக இருப்பதற்கு சென்றேன். §


நான் என்னுடன் உணவுப்பொருட்களை எடுத்து செல்லாமல், “நான் நீண்டநாட்களாக விரும்பிய, இந்த உணர்தலை பெறும் வரை உபவாசம் இருக்கப்போகிறேன். இதுவே சரியான தருணம்,” என்று நான் எனக்கு மீண்டும் உறுதியளித்துக் கொண்டேன். நான் அன்று மதியம் தாமதமாக வந்து போது, மஸ்தான் அங்கில்லை. அவர் யாத்திரை சென்று இருந்தார். அங்கே யாரும் இல்லை. யாத்ரீகர்கள் யாரும் இல்லை. நான் தனியாக இருந்தேன். நான் குகைக்குள் நடந்து சென்று, உபவாசமும் தியானமும் செய்ய ஆரம்பித்தேன். நான் சாட்சி தன் மீதே முழுமையான விழிப்புணர்வை பெறும் *கைஃப் வரை,* மற்றும் சுவாசம் சுவாசிப்பதை நிறுத்தும் வரை சுவாசக் கட்டுப்பாட்டிற்குள், மற்றும் முழுமையின் விளிம்பை உணரும் மிகவும் தீவிரமான உணர்வான, *கைஃப்* நிலையில் இருந்து *ஈஈ கைஃப்* நிலைக்குள், மற்றும் இறுதியாக பரமாத்துமா என்கிற பரசிவத்திற்குள் செல்லும் வரை மீண்டும் மீண்டும் உட்புறமாக சென்றுகொண்டு இருந்தேன். §

> நான் உள்ளிருந்து மீண்டும் வெளிவந்தேன். கிராம மக்கள் என்னை அறநூறு அடி ஆழத்தில் இருந்து செங்குத்தான பாறையில் நான் அமர்ந்து இருப்பதை பார்த்து இருந்தார்கள். அவர்கள் என்னை ஒரு தெய்வீக புருஷனாக நினைத்துக்கொண்டு உணவு, பானங்கள் மற்றும் பலவிதமான இனிப்புக்களை கொண்டு வந்திருந்தார்கள். ஒரு பெரிய விருந்து நடைப்பெற்றது. நான் பசியோடு இருந்தேன். அவர்கள் பள்ளத்தாக்கில் இருந்து மேலே வந்து இருந்தார்கள். அவர்கள் என்னிடம் அதிக பாசமாக நடந்துக் கொண்டார்கள். §
>
> பல வாரங்களுக்கு பிறகு, என்னைப் போல ஒரு வெளிநாட்டில் இருந்து வந்திருந்த ஒரு இசுலாமிய யாத்திரியுடன், இலங்கையின் தலைநகரமான கொழும்புவிற்கு திரும்பினேன். அவர் வழியில் எனக்கு ஒரு இசுலாமிய பாடலை கற்றுத் தந்தார். நான் மஸ்தானை மீண்டும் சந்திக்கவில்லை. நான் முதல் முறையாக மேற்கொண்ட சந்திப்புக்களின் போது, அவர் எனது ஆத்ம ஞான பயிற்சிக்கு தேவையான அனைத்தையும் எனக்கு கற்றுத்தந்து இருந்தார். அது தீவிரமாகவும் வலுவாகவும் இருந்து. §

இந்த சூட்சும ஞானிகள் அந்தர்லோக சக்திகளையும் ராபர்ட்டுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அதிலும் ஒரு குறிப்பிட்ட ஜினி அவரது வாழ்க்கை முழுவதும் அவருடைய பணியில் துணை இருந்து, குருவிடம் எதிர்கால சீடர்களை வழிநடத்தி, வழக்கமாக தவறவிட்ட பொருட்களை கண்டுபிடித்துத் தரும் பணியை செய்து வந்தது. §

### இந்து கோயில்களை தெரிந்து கொள்ளுதல்

குகையில் தான் பெற்ற வெளிப்பாடுகளின் பிரகாசமான பின்விளைவில் மூழ்கி இருந்த ராபர்ட், நாகரிக வாழ்க்கையுடன் இருந்த கொழும்பு தலைநகர பாதையில் செல்ல ஆரம்பித்தார். அது அவர் முன்பு பெற்ற அனுபவத்தை விட தரக்குறைவான யதார்த்தமாக இருந்தது. இந்த முறை அவர் உள்ளூர் YMCA விடுதியில் தங்கினார். அங்கே தான் தங்கியிருந்த அறைக்கு வாடகை கொடுப்பதற்காக, ஹட யோக பாடத்தை நடத்தினார். அவர் இரு வெவ்வேறு உலகங்களுக்கு மத்தியில் இருந்தார். அவர் தயானந்தாவின் மேற்பார்வையில் இல்லை. அவரது நடனக்குழு பிரிந்து விட்டதால், அந்த பொறுப்பும் அவருக்கு இல்லை. இதனால் அவர் தொடங்கிய புதிய ஆய்வுப்பயணம், அவரை அந்த ஊரில் இருந்த பல்வேறு கோயில்களுக்கு அழைத்து சென்றது. §



அந்த அமெரிக்கா நாட்டவருக்கு கந்தையா செட்டியார் நண்பராகி,
கொழும்பில் இருந்த சிறிய பாரம்பரிய கோயில்களுக்கு அழைத்து சென்றார்.

*அங்கே ராபர்ட் விநாயகர் மற்றும் மற்ற இந்து தெய்வங்களைப் பற்றி தெரிந்துகொண்டார். அவர்கள் இருவரும் அந்த நகரத்தில் நீண்ட நாள் நண்பர்களைப் போல கோயில் கோயிலாக சென்றுகொண்டு இருந்தார்கள்.*

……………………..§

நான் இன்னொரு பரிணாமத்தில் இருந்ததால், நகரத்தில் இருந்த அனைத்தும் எனக்கு முன்பு போல காட்சி அளிக்கவில்லை. எல்லாம் மாறுபட்டு இருந்தது. நான் ஒன்றை இழந்து இருந்தேன்: ஆத்ம ஞானம் பெறவேண்டும் என்கிற ஆசையை இழந்து இருந்தேன். நான் மனநிறைவுடன் இருந்தேன். நான் தனியாக இருப்பது போன்று தோன்றியது. குகையில் எனக்கு ஏற்பட்ட தரிசனத்தை மற்றும் தாக்கத்தை கிரகித்துக் கொண்டு, நான் கொழும்பில் பல வாரங்கள் தங்கி இருந்தேன். அது புத்தியால் புரிந்துகொள்ள, கிரகித்துக்கொள்ள முடியாத அளவிற்கு மிகவும் பெரியதாக இருந்ததால், என்னால் என்றுமே தெளிவாக விளக்கமுடியாத ஒன்றை நான் அறிந்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் புரிந்துகொண்டேன். §

ஒரு நாள் இரவு தூங்கும் முன், ஒரு நீளமான தோகையுடன் ஒரு மயில் என் கண் முன்னே காட்சியாக தோன்றியது. அது தெளிவான நிறங்களில் தோகையை விரித்து, எனது பார்வையை முழுமையாக மறைத்துவிட்டது. இந்து சமய ஆன்மீகத்தில், மிகவும் புனிதமான அதிர்வுடன் இருக்கும் உயிர்சக்திகள் வாழும் அந்தர்லோகத்தின் உணர்வாக இருக்கும் ஆகாசம் வழியாக, மயில் வாகனத்தில் முருகப்பெருமான் பயணம் செய்வதைப் போல, மனதின் உட்புற பகுதியில் பயணம் செய்கிறார். §

கொழும்பில் இந்துக்கள் அதிகமாக வசித்த பேட்டா (புறக்கோட்டை) நகர்பகுதியில் இருந்த ஒரு பிள்ளையார் கோயில், ராபர்ட்டுக்கு மிகவும் பிடித்து இருந்தது. சிறியதாக, பாரம்பரிய முறையுடன் இருந்த அந்த கோயிலுக்கு, வெளியில் இருந்து வெகு சிலரே வந்தனர். ஆனால் அந்த கோயிலின் சுவர்களுக்குள் அது வரை யாரும் அறியாத, கற்பனையும் செய்யாத ஒரு அந்தர்லோகத்தை கண்டு கொண்டார். அது அவர் கவனத்தை உடனே கவர்ந்தது, மற்றும் அங்கே அவர் தினமும் வரத் தொடங்கினார். §

மயிலை காட்சியாக பார்த்த அடுத்த நாள், ராபர்ட் இலங்கை தீவில் இந்து சமூகம் அதிகமாக வாழ்ந்த, சிலோனின் வடக்கு முனையில் ஒரு வணிகராகவும் ஆங்கில ஆசிரியராகவும் இருந்த கந்தையா செட்டியாரை சந்தித்தார். நல்ல கல்வியறிவுடன், ஆங்கிலம் பேசி, ஆன்மீக விழிப்புணர்வுடன் தத்துவரீதியான விவேகத்துடன் தமிழ் சமூகத்தின் எடுத்துக்காட்டாக விளங்கினார். அவர் 5' 8" உயரத்துடன், வலுவான முதுகெலும்புடன் இருந்தார். மேலும் அவர் செல்லாச்சி அம்மையாரிடம் பல வருடங்கள் பயிற்சி பெற்று இருந்ததால், அவர் தியானம் செய்ய அமர்ந்த போது, ஒரு கல்லைப் போல அசையாமல் அமர்ந்து இருப்பார். சில நாட்களுக்கு முன் ஆத்ம ஞானம் பெற்று வந்திருந்த அமெரிக்க சூட்சும

ஞானியுடன் அவருக்கு ஏற்பட்ட சந்திப்பை, ஒரு தற்செயலான சந்திப்பு என்றே சொல்ல வேண்டும். ராபர்ட்டை அழைத்து வருவதற்கு யோக சுவாமி கந்தையாவை அனுப்பியதாக சிலர் கருதினாலும், அதற்கு தகுந்த ஆதாரங்கள் எதுவும் இல்லை.§

> அடுத்த நாள் காலையில், என் பாதையில் ஆறாவது தூண்டுகோலாகவும், எனது அடுத்த வலுவான ஆசிரியராகவும் இருந்த கந்தையா செட்டியாரை சந்தித்தேன். அந்த தீவின் வடக்கு தீபகற்பத்தை சேர்ந்த அந்த தமிழர் கருத்த மேனி மற்றும் நல்ல உடல்வாகுடன் இருந்தார். அவர் என்னை எனது குருவிடம் அழைத்து செல்ல வந்திருந்தார், ஆனால் அதற்கு முன்னர் நான் என்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டியிருந்து. அதற்கான உதவிகளை அவர் செய்து, என்னை இந்து சமயத்தின் ஆழத்திற்குள் அழைத்து சென்றார். §
>
> நான் அது வரை யோகத்தை கற்று, இலங்கையின் பௌத்த சமயத்திற்கு ஒரு நல்ல அறிமுகத்தை பெற்று இருந்தாலும், நான் ஆச்சாரமான இந்து சமயத்தைப் பற்றி அறிவுறுத்தப்படவில்லை. அவர் ஆழமான அந்தர்லோக கண்ணோட்டத்துடன் என்னை இந்து சமயத்திற்குள் அழைத்து வந்து, சூட்சும ஞானம் மற்றும் சடங்குகள் பற்றி கற்றுத்தந்தார். நான் மெய்ஞ்ஞான மனதின் உட்பகுதிகளின் உட்புறத்தில் இந்து சமயத்தின் மகாதேவர்கள், தெய்வங்களை சந்திக்க தொடங்கி, அவர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்வது என்பதை கற்றுக்கொண்டேன். அவர்கள் என்னுடன் அன்பாக பழகினார்கள். இந்து சமயத்தில் இருந்த மறைஞான தகவல்களை எல்லாம், செட்டியார் எனக்கு பொறுமையாக கற்றுக்கொடுத்தார். §

உயரமான வெளிநாட்டு இளைஞரும், பாரம்பரியத்தை நன்றாக கடைப்பிடித்த உள்ளூர் பெரியவரும் தங்களது முதல் சந்திப்பில் நன்றாக பழகி, ஒவ்வொருவரும் தனது பண்பை இன்னொருவருக்குள் பார்த்து, ஒருவர் இன்னொருவரின் திறமைகளை வியந்து பாராட்டினார்கள். அவர்கள் தங்களுக்குள் தொடக்கத்தில் இருந்தே ஒரு வலுவான நட்புறவை உருவாக்கிகொண்டனர். கந்தையா தனது சொந்த தூண்டுதல் மற்றும் மன நிறைவு பெறாத ராபர்ட்டின் ஆர்வம் காரணமாக, கோயில் வழிபாட்டில் இருந்த அருள்ஞானங்கள் மற்றும் பழக்கங்கள், சடங்குகளில் செயல்பட்ட பல இரகசிய விதிகளைப் பற்றி அவர் ராபர்ட்டிற்கு அறிவுறுத்த தொடங்கினார். ராபர்ட் இதைப்பற்றி பின்னர் விவரித்தார்:§

> நான் முதல் முறையாக, சைவர்கள் தெய்வங்களை வழிபடுவது, அவர்களது பூஜை மற்றும் பூசாரிகள், கோயிலில் இருந்த மர்மங்கள் மற்றும் அந்தர்லோகங்களுடன் அதன் தொடர்பைப் பற்றி தெரிந்துகொண்டேன். இப்போது அந்த மாதிரி முழுமை பெற்று இருந்தது. நான் தமிழ் இந்து சமூகத்திற்கு அழைத்து செல்லப்பட்டு, ஒரு

மங்களகரமான தருணத்தில் இந்து சமயத்தில் நுழைய நான் என்னை முறையாக தயார் செய்துக்கொண்டு இருந்தேன். §

வாழ்நாள் முழுவதும் நிலைத்து இருந்த அவர்களுடைய நட்புறவின் முதல் சில வாரங்களின் போது, சைவ இந்து சமயத்திற்குள் அழைத்து செல்லக்கூடிய “ஒரு சுத்தமான பூசாரிக்கு" தன்னை அறிமுகப்படுத்த வேண்டும் என்று ராபர்ட் தெரிவிக்க ஆரம்பித்தார். கந்தையாவிற்கு அவர் சொல்வது புரிந்து இருந்தாலும், திட்டமிட்ட நடவடிக்கைகள் அனைத்தும் முறையாக கையாளப்பட்டால், அந்த நாள் விரைவில் வரும் என்பதை அவர் அறிந்திருந்து, ராபர்ட் சொன்ன யோசனையை தொடர்ந்து மறுத்து வந்தார். §


இருவரும் கொழும்புவை சுற்றி இருந்த கோயில்களை ஆய்வு செய்ய தொடங்கினார்கள். கோயில் செல்லும் பெரும்பாலான பக்தர்களை போல அல்லாமல், அவர்கள் கோயில்களின் உட்புற செயல்பாடுகளை ஆய்வு செய்தனர். தங்களது வழிபாட்டின் உட்புற மற்றும் வெளிப்புற செயல்பாடுகளை தனது சீடனுக்கு கந்தையா அறிவுறுத்தினார். ஆன்மீக அதிர்வுகளுக்கு, இந்து கோயிலின் சாரமாக இருக்கும் ஆன்மீக சக்திகளுக்கு ராபர்ட் ஒரு நுண்ணுணர்வை விழிப்படைய செய்து இருந்தார். மேலும் அவற்றை புரிந்துகொள்ள, பூசாரிகள் அவற்றை எவ்வாறு உருவாக்குகிறார்கள் என்பதை அறிய, அவை வழிபடுவர்கள் மீது எவ்வாறு தாக்கம் ஏற்படுத்துகின்றன மற்றும் அதன் மூலம் என்ன என்பதை அறிய ராபர்ட் தூண்டப்பட்டார். இதைப்பற்றி கந்தையா செட்டியார் வழங்கிய குறிப்பு: §

அந்த இளைஞர் வேர்ல்டு பெல்லோஷிப் ஆஃப் யூத், வேர்ல்டு பெல்லோஷிப் ஆஃப் ஆர்டிஸ்ட்ஸ், பெல்லோஷிப் ஆஃப் மதர்ஸ் மற்றும் வேறு பல நடவடிக்கைகளில் உறுப்பினராக இருந்தாலும், அவர் நல்லொழுக்கம் நிறைந்தவராக, விரைவாகவும் எளிமையாகவும் மக்கள் மற்றும் விஷயங்களைப் பற்றி புரிந்துகொள்ளும் திறமையுடன், ஏதோ ஒரு ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனையுடன் தென்பட்டார். “காலங்காலமாக கலை என்பது மாமோனின் மிகப்பெரிய தங்கம், பழங்காலத்து பிரமிட் மம்மிகள் அல்லது ஐவரி டிரீமர்சின் நுணுக்கமான அலங்காரங்களாக இல்லாமல், கலையின் நிரந்தர ஆன்மாவின் பீடத்தின் மீது ஆர்வமுள்ள பக்தன் இருப்பதால் மட்டுமே நிலைத்து இருக்கிறது,” என்பது அவர் பொன்மொழியாக இருந்தது.§

அவர் தொடங்கிய ஒவ்வொரு நடவடிக்கையும் முன்னேறியது, ஆனால் அவருக்கு அதன் மீது பற்று இருக்கவில்லை மற்றும் அதை இயக்கத்தில் வைப்பது தனது கடமை என்று அவர் வழக்கமாக சொல்லிக்கொண்டு இருந்தார். அவரது பேச்சிலும் நடவடிக்கையிலும், தாமரை இதழின் மீது இருக்கும் நீர்த்துளி போல, ஒரு பற்றின்மை தென்பட்டது. §

இந்திய கோயில்களை ஒப்பிடும் போது இலங்கை கோயில்கள் அளவில் சிறியதாக இருந்தன. இந்தியாவில் இருந்த முக்கிய கோயில்கள் ஒரு சிறிய ஊரின் அளவில், டஜன் கணக்கில் பெரிய சந்நிதிகள் மற்றும் சிறிய கோயில்கள் மற்றும் 12 அடி உயர சுற்றுச்சுவருடன் அமைந்து இருக்கும். ஆனால் இலங்கை கோயில்கள் அளவில் சிறியதாக இருந்தாலும், அதன் தூய்மை மற்றும் சக்தியின் மூலம் அதனை ஈடு செய்கின்றன. பூஜைகள் நேரத்தோடு நடைபெறுகின்றன, மற்றும் கோயில் முழுவதும் வியக்கும் வண்ணம் சுத்தமாக இருக்கின்றன. அந்த இடத்தில் பௌத்த சமய மக்கள் பெரும்பான்மை வகித்தது மற்றும் அந்த பெரும்பான்மையுடன் உறவு எப்போதும் சுமூகமாக இருந்ததில்லை. அதனால் தமிழர்களுக்குள் உருவாகிய நெருக்கமான உணர்வு மற்றும் சமூக பகிர்வு, அவர்களை சுய பாதுகாப்பு நோக்கத்துடன் பிணைத்து வைத்து இருந்தது. அந்த ஒரு ஒற்றுமை வழக்கத்திற்கு மாறான உறுதியான ஒழுக்கம் மற்றும் உடை நெறிமுறைகளுடன் நன்றாக வரையறுக்கப்பட்ட விதிமுறைகளுக்கு கடைபிடிப்பதில் பிரதிபலித்தது. பெண்கள் தங்கள் மாதவிடாய் காலத்தில் கோயிலுக்குள் நுழைய மாட்டார்கள், மற்றும் இந்துக்கள் அல்லாதவர்கள் கோயிலை விட்டு விலகியே இருந்தார்கள். ஆண்கள் எப்போதும் பாரம்பரிய *வேட்டியுடன்* கோயிலுக்குள் நுழைவார்கள். இவற்றையெல்லாம் ராபர்ட் கவனித்து வந்தார். தனது உயரமும் வெள்ளை நிறமும் எல்லோர் கவனத்தையும் கவர்ந்தது என்பதை அவர் அறிந்திருந்தார், மற்றும் தான் அன்பு செலுத்த கற்றுக்கொண்டு இருக்கிறார் என்பதை அவர் மக்களுக்கு நிரூபிக்க விரும்பினார். §

ராபர்ட் அந்த ஊரில் இருந்த பௌத்த மடங்கள் மற்றும் ஸ்தூபிகளுக்கு சென்று இருந்தார், ஆனால் இந்து கோயில்கள் அவர் கவனத்தை கவர்ந்தன. மனித வரலாற்றின் ஆரம்பக்காலம் சார்ந்த சமஸ்கிருத உச்சாரணங்கள் மற்றும் சடங்குகள் மூலம் உயிரூட்டப்பட்ட, அந்த கோயில்களின் ஆழமான ஆன்மீகம் அவர் மீது உணர்வுப்பூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் தனது வாழ்க்கையில் முதல் முறையாக கோயில்களின் புனிதமான கூடங்களில், வலுவான பக்தியுடன் இருந்த தமிழர்களின் உண்மையான பக்தியை கவனித்தார். இதை ஒப்பிடும் போது மேற்கு நாடுகளில் வழிபாடு மேலோட்டமாக இருந்தது. இங்கே மக்கள் ஒன்றாக சென்றனர் மற்றும் திருவிழாக்கள் அந்த பகுதியில் இருந்த ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை ஈடுபடுத்திய ஒரு பெரிய கூட்டு கலவையாக இருந்தது. இங்கே பக்தி தடை செய்யப்படாமல் சுதந்திரமாக செயல்படுகிறது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒரு சந்நிதியில் இருந்து இன்னொரு சந்நிதிக்கு ஒன்றாக செல்லும் போது பாடிக்கொண்டு இருக்க, திடீரென்று எல்லோரும் ஒரே குரலில் பாறைகளை உலுக்கும் படியாக, “ஹரோ ஹரா!” என்று கோஷமிடுகிறார்கள். மகிழ்ச்சி அடைந்த ராபர்ட் மேலும் தெரிந்துக்கொள்ள விரும்புவோர். இதைப்பற்றி அவர் ஆசிரியர் வழங்கும் குறிப்பு:§



ராபர்ட் தொடர்ந்து கோயில் நிகழ்ச்சிகளில் பங்குபெற விரும்பிய போது, அவர் சைவ சமய சான்றோர்களின் குழுவிற்கு அழைக்கப்பட்டு, அவரது

*நோக்கங்கள் மற்றும் இந்து சமயம் பற்றி அவரது புரிதலை பற்றி ஒரு நேர்காணல் நடத்தப்பட்டது. அவர்கள் அவரது நேர்மையை புரிந்துக்கொண்டு, அவர் கோயிலுக்கு வருவதற்கு அனுமதி வழங்கினார்கள்.*

……………………..§

கோயில்களில் நடைபெறும் சமய சடங்குகள், பரமாத்துமா மீது ஒரு பக்தியை உருவாக்குகிறது என்பதை அவர் அறிந்ததால் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக, அவர் முதலில் கோயில் செல்ல விரும்பினார். அவர் தொடர்ந்து கோயில் செல்ல ஆரம்பித்ததும், அவர் ஒரு மன அமைதியை மற்றும் நிம்மதியை உணர்ந்ததால், அவர் அதிகம் திருப்தி அடைந்து தொடர்ந்து கோயில் செல்ல ஆரம்பித்தார். கோயிலில் அவர் தனது வழக்கமான மனநிலையை மறந்து விநாயகர், சிவபெருமான், உமாதேவி மற்றும் முருகனைப் போன்ற தெய்வங்களின் உருவப்படங்களுக்கு முன்பாக ஒரு விதமான மெய்மறதி நிலை மற்றும் அமைதியை அனுபவித்துக்கொண்டு இருந்ததை மக்கள் பார்த்தனர். அவருக்கு இந்து பஞ்சாங்கத்தில் மங்களகரமான நாட்களைப் பற்றி தெரியாது என்றாலும், அவர் விநாயகருக்கு ஒரு குறிப்பிட்ட நாள் உகந்ததாக இருக்குமா என்று கேட்பார். அது சரியாகவும் இருக்கும். §

சிலோனில் இருந்த கோயில்கள் மேற்கத்திய நாடுகளின் பார்வையாளர்களுக்கு பழக்கப்பட்டது இல்லை. ஆங்கிலேயர்கள் பெரும்பாலான சமயங்களில், இந்து சமயம் மற்றும் பௌத்த சமயத்தை மதிக்காமல், புனித தளங்களில் இருந்து விலகி இருந்தார்கள். இளம் அமெரிக்கரின் ஆர்வத்திற்கு வரவேற்பு இருந்தாலும், அது சிறிது குழப்பத்தையும் ஏற்படுத்தியது. கோயில் நிர்வாகத்தில் இருந்த பெரியவர்கள், தமிழ் சைவரும் அவரது சீடர்களும் அடிக்கடி வருவதை கவனித்து இருந்தார்கள். ஒரு நாள், அவர்கள் ராபர்ட்டை அழைத்து பேசினார்கள். சந்திப்பு ஒரு மணி நேரத்திற்கு மேல் நீடித்தது. அவர்கள் அவரது விருப்பம் மற்றும் அவரது அறிவின் ஆழத்தை பற்றி கேள்விகளை கேட்டு, கவனமாக விசாரணை செய்தார்கள். §

ராபர்ட் கோயிலுக்கு எந்த நேரத்திலும் வரலாம் என்று கந்தையா செட்டியாருக்கு ஒரு தகவல் அனுப்பப்பட்டது. மிகவும் கவனமாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு, அவர் கோயிலுக்குள் நுழைய வழங்கப்பட்ட சிறப்பு சலுகைகள் மற்றும் அந்த சமூகம் கோயிலுக்குள் வைத்திருந்த வலுவான பாதுகாப்பு பற்றியும் ராபர்ட்டிற்கு தெரியப்படுத்தியது. இவ்வாறு அவர்கள் கோயிலின் புனிதத்தை பாதுகாத்து வந்தனர் என்பதை அவர் அறிந்து இருந்தார், மற்றும் பிற்காலத்தில் அவர் தனது கோயில்களில் இதே மாதிரியான கவனத்தை கடைப்பிடித்தார். இது தொடர்பாக பல வருடங்கள் கழித்து அவர் வழங்கிய குறிப்பு:§

எனது ஆறாவது தூண்டுகோல், என்னை இந்து கோயிலுக்குள் நடைப்பெற்ற மறைஞான வழிபாட்டிற்கு அறிமுகம் செய்து வைத்தார். கோயிலில் மணி அடிப்பது, சங்குகள் முழங்குவது மற்றும் மிருதங்கம் வாசிக்கப்படுவது எதற்காக என்று என்னிடம் தெரிவித்தார். பூசாரிகளின் பங்கு என்ன என்பதையும், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையும், அவர்கள் எதற்காக நெற்றியில், கைகளில் மற்றும் நெஞ்சில் விபூதியை பூசிக்கொள்கிறார்கள் என்பதையும் அவர் நுணுக்கமாக விளக்கினார். நான் கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது. நான் அவற்றை எல்லாம் உட்புற கண்ணோட்டத்தில் இருந்து பார்த்தேன். எனக்கு கோயில்கள் பிடித்து இருந்தன. இந்த அனுபவம் எனது மனதில் கடவுள்களை உயிர்ப்பிக்க செய்தது, மற்றும் நாங்கள் தந்தையும் மகனையும் போல இருந்து, எங்கும் ஒன்றாக சென்றோம். §

நட்சத்திர ஜோதிட அமைப்புக்களின் அதிர்வு விகிதிகள் மற்றும் அவை ஒரு வருடத்தின் சில சமயங்களில் பூமி மீது ஏற்படுத்தும் தாக்கத்தின் மீது அதிக கூர் உணர்வுடன் இருந்ததால், ஒரு இந்து கோயிலில் எந்த கடவுளை வழிபடுவார்கள் மற்றும் அந்த சேவை எந்த நாள் நடைபெறும் என்பதை எனது தூண்டுகோலிடம் என்னால் துல்லியமாக சொல்ல முடிந்தது. “நாம் விரைவாக கோயிலுக்கு செல்ல வேண்டும். இன்று விநாயகருக்கு உகந்த நாள்,” என்று நான் அவரிடம் கூறுவேன். §

பூசாரிகள் பயன்படுத்திய பஞ்சாங்கங்கள் இல்லாமல், ஒரு நாளின் அதிர்வை துல்லியமாக உணரும் எனது திறமையை பார்த்து, எனது தூண்டுகோல் வியப்பில் மெய்மறந்து நின்றார். இதன் மூலம், பல்வேறு இந்து தெய்வங்களின் கோயில் வழிபாட்டை நிறுவிய பழங்கால பஞ்சாங்கங்கள், அயிரம் வருடங்களுக்கு முன்பாக மெய்ஞ்ஞான ரீதியாக கணக்கிடப்பட்டு இருக்கவேண்டும் என்பது நிரூபணாகிறது. §

இந்த குறிப்பிட்ட சக்திகளை ஒருவர் தனக்குள் தேடி தெரிந்துகொள்கிறார். அவை ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கின்றன. நான் அதை பயன்படுத்தவும், முன்பே இருந்த தகவல்களின் மீது கூர் உணர்வுடன் இருக்கவும் மட்டுமே கற்றுக்கொண்டேன். அது எனக்கு மிகவும் எளிதாக கிடைத்தது. ஜெய்லானி குகைகளில் நான் பெற்ற அனுபவத்தை போன்று அடுத்தடுத்த அனுபவங்களை நான் பெற்றதும், அது எனக்குள் வளர்ச்சி பெற்றது. §

எந்த புத்தகங்களிலும் தென்படாமல், தந்தையிடம் இருந்து மகனுக்கு, ஆசிரியரிடம் இருந்து சீடனுக்கு வழங்கப்படும் இந்து சமயத்தின் புனிதமான ஆன்மீகத்தை எனது தூண்டுகோல் எனக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்க, அவரும் நானும் உரையாடுவதில், தியானம் செய்வதில் மற்றும் ஒரு கோயிலில் இருந்து இன்னொரு கோயிலுக்கு பயணம் செய்வதில் நேரத்தை கழித்தோம். §


**யானை பாஸ்**

ராபர்ட் தனது வாழ்க்கை முழுவதும் யோகிகள் மற்றும் அவர்களது மந்திர சக்திகள், வேதாந்தம் மற்றும் அதன் அறிவுணர்வு சக்தியை பற்றி கேட்டிருந்தார். மேலும் அவர் கடந்த இரு வருடங்களாக, பரமாத்துமா அல்லது கடவுள் நம்பிக்கை  என்று எதுவும் இல்லாத, பௌத்த சமயத்தவர்களுடன் இருந்துள்ளார். யாவும் கடந்த நிலை பற்றி பௌத்த சமயத்தவர்கள் மற்றும் வேதாந்திகளின் குறிக்கோள்கள் அவரது  ஆன்மாவின் ஆழத்தை கவர்ந்து இருந்தாலும், அவற்றில் சிறிதளவு இருந்த தெய்வீக அன்பு, உயர்வான பக்தி மற்றும் உண்மையான சக்தியாக இறைவனுடன் ஒன்றி இருக்கும் உணர்வு, கோயில்கள் மற்றும் தமிழர்களிடம் தடையில்லாமல் வெளிப்பட்டன. இந்த கலவை அவருக்கு முறையானதாகவும், புனிதமான பிரபஞ்சம் பற்றிய முழுமையான கோட்பாடாகவும் இருந்து, தனது சொந்த தியானங்கள் இதனை வெளிப்படுத்தியதாகவும் தோன்றியது. அவர் சைவ மகான்கள் பேசிய மொழியை அதற்கு முன்பு கேட்டிருக்கவில்லை என்றாலும், அது அவருக்கு புரிந்தது. தனது படைப்புக்களில் உள்ளார்ந்து இருந்தாலும் காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்து இருக்கும் பரமாத்துமாவாக இறைவனின் கோட்பாட்டை தெளிவுபடுத்தும் சைவ சித்தாந்தம், ராபர்ட்டின் ஆழமான இயலுணர்வுகளை பிரதிபலித்தன. அவருக்கு இந்த முழுமை வேறு எங்கும் தென்படவில்லை மற்றும் சைவ சித்தாந்தத்தை “என் ஆன்மாவின் சமயமாக” உணர்ந்தார். §

> வேதாந்தத்தின் ஒருமைவாத அத்வைதத்தை ஏற்றுக்கொண்டாலும், வாழ்க்கையின் பல்வேறு பரிணாமங்களை பாதுகாத்து மற்றும் பயிற்சி செய்து, திருவிழாக்களை கொண்டாடி, பக்தி என்கிற மிகப்பெரிய யோகத்திற்கு மதிப்பு அளித்து, சாதனா செய்தவர்களை கௌரவித்து, குண்டலினி யோகத்தின் வழிமுறையை புரிந்துக்கொண்டு, சுட்டெரிக்கும் மத்திய வெயிலில் கோயிலில் அங்கப்பிரதட்சணம் செய்வது உட்பட, தவத்தில் இருந்த மர்மத்தை அறிந்து, சடங்கின் உச்சத்தில் கோயிலுக்குள் நுழைவதற்காக, மந்திரங்கள் ஓதும் பூசாரிகளால் வரவழைக்கப்படும் போது, தரிசனம் நாடப்பட்டு தெய்வங்கள் காட்சியளித்து உண்மை சக்திகளாக உணரப்படும் பிரதிஷ்டை செய்யப்பட்ட கோயில்களின் உள்ளறைகளில், தன்னை இழந்து இருந்த (அல்லது தன்னை தேடிக்கொண்ட என்று சொல்ல வேண்டுமா?) ஒரு முழுமையான கலாச்சாரத்தை தேடிப்பிடித்ததில் நான் மகிழ்ச்சி அடைந்தேன். §

ஒவ்வொரு நாளும் வடக்கு நோக்கி செல்லவேண்டும் என்ற ஆசை ராபர்ட்டிடம் அதிகரித்து வந்தது. கொழும்பில் தமிழர்கள் சிறிய அளவில் இருந்தார்கள், மற்றும் அவர்களின் கலாச்சார முழுமை, அதிக எண்ணிக்கையில் இருக்கும் வடக்கில் மட்டுமே வெளிப்படும் என்பதை அவர் அறிந்து இருந்தார். யாழ்ப்பாணம், அதன் உன்னதமான வரலாறு, அதன் செழிப்பான கலாச்சாரம் மற்றும் ஆன்மீக பெருமை, அதன் தெய்வீக புருஷர்கள் மற்றும் பென்மணிகளைப் பற்றி பல கதைகள் இருந்தன. அவர் தன்னை வீட்டிற்கு

அழைத்து செல்லுமாறு கந்தையா செட்டியாரிடம் கெஞ்சினார். இதைப்பற்றி செட்டியார் பின்னர் வழங்கிய குறிப்பு:§




*இறுதியாக கந்தையா செட்டியார், ராபர்ட்டை வடக்கில் இருந்த தனது வீட்டிற்கு வாகனத்தில் அழைத்து சென்றார். அவர்கள் தங்கள் பயணத்தின போது சிறிது நேரம் யானை பாஸில் (கணவாய்) நின்றனர். அங்கே சைவர்கள் மரத்தடி விநாயகரை வழிபடுவார்கள். இது யாழ்ப்பாணத்தின் ஆன்மீக நுழைவாயிலாக, சிலோனில் இருக்கும் சைவ சமூகத்தின் கோட்டையாக கருதப்படுகிறது.*

……………………..§

எங்கள் இருவருக்கும் இடையே இருந்த நெருக்கம் அதிக வலுவாக, நேர்மையாக மற்றும் உண்மையாக இருந்ததால் நாங்கள் இவரும் ஒன்றானோம். முதல் ஆசிரமம் தொடங்கப்பட்ட இடமாகவும், எனது சொந்த வீடு இருந்த இடமாகவும் விளங்கிய யாழ்ப்பாணத்திற்கு செல்லும் ஆசை அவருக்கு மிகவும் தீவிரமாக இருந்ததால், யாழ்ப்பாணம் செல்வதற்கு நான் ஒப்புதல் அளித்தேன். அவர் என் வீட்டிற்கு ஒரு முறையாவது வர விரும்பினார். நான் இரண்டு காரணங்களுக்காக அதற்கு ஒப்புதல் அளித்தேன். ஒன்று, அவர் ஆசையை நிறைவேற்றுவது, மற்றும் இரண்டாவது, நான் அன்பு செலுத்தி மதிப்பு அளித்து "பேசும் கடவுள்" என்று நான் அழைத்த ஆன்மாவை அவர் சந்திக்க ஏற்பாடு செய்ய வேண்டும். §

ஒரு பார்வை, தொடுதல் அல்லது ஒரு சொல்லால் புனிதத்தன்மையின் விதையை வழங்கும் யோகியை சந்திப்பதன் மூலம், சமய வாழ்க்கையின் உண்மையான தொடக்கம் ஆரம்பிக்கிறது. அப்போது சுப்பிரமுனிய என்று பெயர் சூட்டப்பட்டிருந்த எனது நண்பரிடம், இந்த உன்னதமான ஆன்மாவின் மகிமையை பற்றி பேசும் போது, “யோக சுவாமி, ஒரு சாதாரணமான யாசகர்,” என்று குறிப்பிடுவேன். நான் இந்த அறிக்கையை 250 மைல்  தூரத்தில் வழங்கி இருந்தாலும், ஞானியாக இருந்த அந்த உன்னதமான ஆன்மா, தனது முதல் சந்திப்பின் போது தன்னை ஒரு “சாதாரண யாசகர்" என்று அறிமுகப்படுத்திக்கொண்டார். §

செட்டியார் வடக்கே பயணம் செய்வதை வலியுறுத்தாமல், விவேகமாக நடந்துகொண்டார். அவர் அதற்கு பதிலாக, திருமூலர் மற்றும் திருவள்ளுவர், பழங்கால தமிழ் புலவர்கள் மற்றும் யோகிகள் பற்றிய கதைகளை சொல்லி, ராபர்ட்டை உற்சாகப்படுத்திக் கொண்டும், யோக சுவாமியின் மண் குடிசைக்கு, சாவகாசமாக ஒரு நாள் சென்று குருவின் ஆசிகளை பெறுவது எவ்வளவு விசேஷமாக இருக்கும் என்பதை பற்றி அவர் அடிக்கடி தெரிவித்துக்கொண்டும் இருந்தார். §

அந்த பகுதியில் “விசரன்" என்று அழைக்கப்பட்டு, மிகவும் வலுவான உடலுடன், மிகவும் விசித்திரமாக செயல்பட்டதால், மக்கள் நெருங்கவே பயந்த ஒரு குருவைப் பற்றி, எனது ஆசிரியர் மிகவும் கவனமாக சொல்ல ஆரம்பித்தார். என் ஆசிரியர் அந்த குருவின் இயல்பைப் பற்றியும், அவர் தலைசிறந்த செல்லப்பசுவாமியின் ஒரே சீடராக இருந்தது பற்றியும் விளக்கம் அளித்தார். யாழ்ப்பாணத்தில் அவரது பணியை பற்றியும் நான் அறிந்துகொண்டேன். அத்தகைய ஒரு உயிர்சக்தியை மக்கள் எவ்வாறு நெருங்கினார்கள் என்பது பற்றியும், அவர் நீண்டநாட்களாக முயற்சி மேற்கொண்டு தனது நாற்பதாவது வயதில் ஆத்ம ஞானம் பெற்றது பற்றியும், அவர் அந்த பலத்தில் இருபது மைல்  தூரம் ஓடியது பற்றியும், என் ஆசிரியர் எனக்கு கவனமாக விளக்கம் அளித்தார். அவர் இறுதியாக தனது நாற்பதாவது வயதில் தனது மாபெரும் குறிக்கோளை அடைந்ததும், அவர் பெருமகிழ்ச்சி அடைந்தார். நான் பொறுமையாக அமர்ந்து இருப்பேன், மற்றும் ஆசிரியரின் உரை எப்போதும் அந்த பகுதியின் குருவாக விளங்கிய யோக சுவாமியை சுற்றி வந்துக்கொண்டு இருக்கும். இவ்வாறு நான் அவரைப் பற்றியும், அவரது போதனைகளை பற்றியும் கற்றுக்கொண்டேன். ஒரு நாள், என் ஆசிரியர் என்னை வட இலங்கையில் யாழ்ப்பாண தீபகற்பத்தில் இருந்த தனது வீட்டிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார். §


ஒரு நாள் சரியான நேரம் வந்துவிட்டதை செட்டியார் உணர்ந்ததும், இருவரும் இலங்கை நாட்டிற்கு குறுக்கே 250 மைல் தூர பயணத்தை வாகனத்தில் தொடங்கி, சீரமைக்கப்படாத சாலைகள் வழியாக

> கண்டியின் மலைப்பகுதிகளுக்கு சென்று, பிறகு வறண்ட வடக்கு சமவெளிகள் வழியாக யானை பாஸ் என்ற இடத்திற்கு சென்றோம். இது சைவ தீபகற்பத்திற்கு செல்லும் பாதையாக கருதப்படுவதால், எல்லா இந்துக்களும் இங்கே சிறிது நேரம் தங்கிவிட்டு செல்வார்கள். அங்கே ஒரு மரத்தடியில் ஒரு சிறிய பிள்ளையார் சந்நிதி இருக்கிறது. யாழ்ப்பாணத்தை நிலப்பரப்புடன் சேர்க்கும் 3,000 அடி நீள குறுகலான நீர்சந்திக்கு செல்லும் முன்னர், தர்மத்தின் தெய்வமான விநாயகரின் ஆசிகளை பெறுவதற்கு, பக்தர்கள் இங்கே கற்பூரத்தை கொளுத்தி, தரையில் தேங்காயை உடைப்பார்கள். §

அவர்கள் வாகனத்தை நிறுத்தி, விநாயகரை வழிபட்டனர். அங்கே தியானம் செய்யும் போது, ராபர்ட் தனது தலையில் உட்புறமாக ஒரு சுடரை கண்டார். அது அவரது ஆன்மீக பார்வையில் இயல்பாக தோன்றி, மூன்று-நான்கு நாட்கள் நிலைத்து இருந்தது. அது சைவர்களின் உலகிற்குள் தான் நுழைவதற்கு, தனக்கு முறையான நுழைவாயிலாக விளங்கியது என்பதை ராபர்ட் தனது வாழ்நாள் முழுவதும் மறக்கவில்லை. அவர் நினைவில் யானை பாஸ் என்ற பெயர் நிரந்தரமாக பதிந்து விட்டது.§

கந்தன் கோயிலில் நடராஜரை தரிசித்த போது, நடராஜர் ஆடிய புனிதமான நடன வடிவத்தை சூட்சும ரீதியாக ராபர்ட் கிரகித்துக் கொண்டார். அவர் ஒரு வலுவான காட்சியில், சிவபெருமான் அனைத்து உள்பொருள்களையும் பிரபஞ்ச நாட்டியக்காரராக உயிரூட்டுவதை கண்டார். அது அவரை உருமாற்றியது. அவருக்கு அந்த புனிதமான தருணங்களில் விரிவாக்கம் பெற்ற உத்தி, ஏழு அசைவுகளை கொண்ட தொடர் வரிசைகளில், பாதங்கள் மற்றும் கால்களின் 49 அசைவுகள், உள்ளங்கை மற்றும் கைகளின் 49 அசைவுகள் மற்றும் தலைகள் மற்றும் கண்கள், தோள்பட்டைகள், உடலின் முண்டப்பகுதி மற்றும் உடலின் 49 அசைவுகளின் ஒரு குறிப்பிட்ட கூட்டமைப்பை பயன்படுத்தியது. முருகன் குறிவைத்து தனது *வேலை* வீசுவதைப் போல, தூரத்தில் இருக்கும் இடங்களுக்கு சக்தியை வீசுவதற்கு நடனம் ஒரு கருவியாக இருந்தது. இதுவே இந்த நடனத்தின் குறிக்கோளாக இருந்து, *"தைய தைய தைய தா — தைய தைய தைய தா"* என்ற லயத்துடன் தொடங்கியது. §

அவர்கள் அன்று கோயிலை விட்டு கிளம்பிய போது, "இதன் பிறகு நீங்கள் முன்பு போல இருக்க மாட்டீர்கள்," என்று கந்தையா செட்டியார் குறிப்பிட்டார். அவர் அமெரிக்காவிற்கு எழுதிய ஒரு கடிதத்தில் இந்த நாட்களை நினைவுகூர்ந்தார்:§



பல வாரங்களுக்கு செட்டியார் குடும்பத்துடன் தங்கியிருந்த ராபர்ட், அவர்கள் வழங்கிய உபசரிப்பில் தன்னை பறிகொடுத்து அவர்களின் பாரம்பரிய


*வாழ்முறையை அறிந்துகொண்டு, அங்கிருந்த இந்துக்கள் அனைவரும் உடுத்தியிருந்த பருத்தி வேட்டியை அணியும் நுணுக்கத்தை கற்றுக்கொண்டார்.*

........................§

சக்தி மற்றும் ஞானத்தை பரப்பும் வடிவத்தில், தங்கம் மற்றும் அழகான வைரங்களுடன் அலங்கரிக்கப்பட்ட மூர்த்திகளுக்கு முன்பாக நின்ற போது தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை, அந்த இளைஞர் பெரிதும் பாராட்டி ரசிக்கவும் செய்தார். ஒரு இளவரசரின் தோற்றத்துடன் இருந்த மேற்கத்திய நாட்டவரின் உண்மையான பக்தியின் மீது கோயில் பூசாரிகள் அதிகமாக ஈர்க்கப்பட்டு இருந்ததால், அவர்கள் விசேஷ கவனத்துடன் பூஜை செய்ய தொடங்கினார்கள். எனக்கு ஒரு திருக்கார்த்திகை தினம் நன்றாக நினைவில் இருக்கிறது. அன்று வைரங்கள் மற்றும் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட தங்கச்சிலை முருகனின் (சுப்பிரமணியர்) முன்பாக, எனதருமை நண்பர் நின்றிருந்த கோலத்தை என்னால் என்றுமே மறக்க முடியாது. நீயும் (இறைவன்) நானும் ஒன்று என்ற உணர்ச்சி வெளிப்பாட்டுடன், அவர் தனது கைகளை கூப்பிக்கொண்டு, கண்களில் இருந்து நீர் வழிய தன்னை மறந்த நிலையில் நின்று இருந்தார். கோட்பாடு அளவிலான தீட்சையின் தொடக்கம் அன்றைய தினம் தொடங்கிவிட்டதாக தோன்றுகிறது. §

### அவரை ஒரு இந்து குடும்பம் சுவீகாரம் எடுத்துக்கொள்ளுதல்

அதிகாலையில் அளவெட்டி கிராமத்தில் கந்தையாவின் வீட்டிற்கு முன்பாக, அந்த வாகனம் வந்து நின்றது. கந்தையாவுடன் ஒரு உயரமான மேற்கத்திய நாட்டு விருந்தாளி வந்துள்ளதை கண்டதும், கந்தையாவின் மனைவி, மகன் மற்றும் மருமகளுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அவர்கள் வீடு, மண் மற்றும் ஓலைக்குடிசையால் கட்டப்பட்ட, இரண்டு சிறிய அக்கம்பக்கத்து குடியிருப்புகளாக எளிமையாக இருந்தது. அவர் மரபுகள் தவறாத கிராம மக்கள் செய்வதைப் போல, தங்கள் உணவை தாங்களே வளர்த்துக்கொண்டு, தங்களுக்கு தேவையான மாவை தாங்களே அறைத்துக்கொண்டு, ஒரு எளிமையான கிணற்றில் இருந்து நீரை இறைத்துக்கொண்டு ஒரு சாதாரண வாழ்க்கையை வாழ்ந்தனர். அவர்கள் ஹான்செனை பார்த்ததும் வியந்து நின்றனர். அவர்கள் ராபர்ட்டைப் போன்ற ஒரு உயரமான மனிதரை என்றுமே பார்த்திருந்ததில்லை, மற்றும் தங்களது வீட்டில் ஒரு மேற்கு நாட்டவரை என்றுமே உபசரித்து இல்லை. ஆனால் அவரது கண்ணியம் மற்றும் எளிமை காரணமாக, அவருடன் விரைவில் சாதாரணமாக பழகத் தொடங்கினார்கள். இந்த உறவைப் பற்றி கந்தையா செட்டியார் அளிக்கும் விளக்கம்:§



*அவர் அதிக தனிமையை விரும்பிய போது, கந்தையாவின் குடும்பம் அவரை அருகில் முட்செடிகளுக்கு மத்தியில் இருந்த, ஒரு ஓலை குடிசைக்கு அழைத்து*

*சென்றனர். இங்கே அவர் இரவில் நீண்டநேரம் தியானமும், கிராம வாழ்க்கையில் இருந்த சலசலப்பில் இருந்து விலகிய இருக்கவும், தனக்கு என்று தனியான ஒரு கிணற்றில் குளிக்கவும் முடிந்தது.*

........................§

நாங்கள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு, ஒரு புதிய வசதியான ஆஸ்டின் 12 வாகனத்தில் பயணம் செய்தோம். நாங்கள் பல பழங்கால இந்து கோயில்களுக்கு சென்று, இந்து சமய அனுஷ்டானங்களை தீவிரமாக செய்ததால், அந்த பயணம் முழுவதும் மகிழ்ச்சிகரமாக இருந்தது. §

நாங்கள் காலை 5:30 மணிக்கு, எங்கள் எளிமையான மண் குடிசைக்கு வந்து சேர்ந்தோம். அந்த இளைஞரை என் குடும்பத்தினருக்கு அறிமுகம் செய்து வைத்தேன். அந்த இளைஞருக்கு தனது சொந்த வீட்டில் இருந்தது போன்ற உணர்வு தோன்றியது. கிழக்கத்திய நாடுகளின் பாணியில் உணவு தயாரிக்கப்பட்டு, அவருக்கு பரிமாறப்பட்டது. எங்கள் தோப்பில் இருந்த மாம்பழங்கள் மற்றும் மிகுதியாக இருந்த பலாப்பழங்களும் அவருக்கு மிகவும் பிடித்து இருந்தன. §

அவருக்கு என்னையும் எனது குடும்பத்தினரையும் பிடித்து இருந்தது மற்றும் அவர் என் மனைவியை “மதர் செட்டியார்" என்று அழைக்க ஆரம்பித்தார். அவருக்கு தமிழ் தெரியாது மற்றும் என் மனைவிக்கு ஆங்கிலம் தெரியாது என்பதால், தாய் மற்றும் செய்க்கு நடுவில் இருந்த அன்பின் அழகை, அவர்களது புன்னகை மற்றும் பார்வைகள் மட்டுமே வெளிப்படுத்தின. அவர் அமெரிக்காவில் இருந்து எழுதிய கடிதத்தில் வெளிப்படுத்திய தனது அன்பு மற்றும் நன்றியுணர்வையும், அதை கேட்டு என் மனைவி பெருமையுடன் பூரிப்பு அடைந்ததையும், இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.§

அந்த சமயத்தில் கந்தையாவின் மகனுக்கு திருமணமாகி இருந்தது, மற்றும் பதினெட்டு வயது நிரம்பிய மருமகள் அவர்களின் குடும்ப வீட்டிற்கு குடிபுகுந்து இருந்தார். பல வருடங்கள் கழித்து, அன்று மணப் பெண்ணாக இருந்த திருமதி. சிவயோகம் விநாயகமூர்த்தி, அந்த நாட்களைப் பற்றி நினைவுகூர்ந்தார்: §

என் மாமனார் கொழும்பு YMCA வில் ராபர்ட்டுடன் தங்கி இருந்தார். அவர் காலைநேரத்தில் ராபர்ட் மேற்கொண்ட சீரான பக்தியின் வெளிப்பாடுகளால் கவரப்பட்டார். என் மாமனார் எங்கள் வீட்டிற்கு அந்த இளம் அமெரிக்கரை அழைத்து வருவதாக குடும்பத்தாரிடம் தெரிவிக்குமாறு கடிதம் எழுதியதை கேட்டதும், எல்லோரும் அதிர்ச்சி அடைந்தனர். எங்கள் வீடு மிகவும் எளிமையாக இருந்தது. அந்த விருந்தாளியை உபசரிக்க, நாங்கள் எல்லோரும் வீட்டை விட்டு

வெளியேறி, வீடு முழுவதையும் ராபர்ட் தங்குவதற்கு தரலாம் என்று முடிவு செய்தோம். §

அவர் வீடு வந்ததும், அவரது உயரத்தைப் பார்த்து நாங்கள் திகைத்து நின்றோம். அவர் மிகவும் உயரமாக இருந்ததால், வீட்டின் நடுவில் இருந்த பகுதியைத் தவிர மற்ற இடங்களில் அவரால் தலை நிமிர்ந்து நிற்க முடியவில்லை! சில மணி நேரங்களுக்கு பிறகு, அவர் எங்களுக்கு நெருக்கமாகி, என் கணவரின் சகோதரரைப் போல பழக ஆரம்பித்தார். அன்று மாலை நேரத்தில், என் மாமனார் அவரை விநாயகர் கோயிலுக்கு அழைத்து சென்றார். பூசாரி அவர் பெயரைக் கேட்ட போது, என் மாமனார், “நாங்கள் இவரை தம்பி என்று அழைப்போம்,” என்று பதில் அளித்தார். அவர் எல்லோரையும் ஏற்றுக்கொண்டு மிகவும் சகஜமாக பழகி, எங்கள் குடும்பத்தில் ஒருவராக இருந்தார்; நாங்கள் எல்லோரும் அதே வீட்டில் தங்கி இருந்தோம். §



*மே 1949, அந்த அமெரிக்க சாதகர் யோக சுவாமியை முதல் முறையாக சந்திக்க அழைத்து செல்லப்பட்டார். மாபெரும் குருவின் ஆசிரமத்திற்கு பயணம் செல்ல, ஒரு மாட்டு வண்டி வாடகைக்கு எடுக்கப்பட்டது.*

........................§

அந்த வீடு அளவெட்டி கிராமத்தில், விவசாய வளத்திற்கு புகழ்பெற்ற ஒரு பகுதியில், ஒரு கரடுமுரடான சாலையில் அமைந்து இருந்தது. அங்கே அன்றும்

இன்றும் எந்த நகரமும் இருந்ததில்லை. 200 கஜ தூரத்தில் இருந்த விநாயகர் கோயிலை தவிர, தெருவின் எதிர்புறத்தில் இருந்த இரண்டு அடுக்கு கடை மிகவும் பெரிய கட்டிடமாக இருந்தது. அந்த கடை எதிர்காலத்தில் ராபர்ட்டின் ஆசிரமமாக மாறியது. பாலைவன பருவநிலையில் வழக்கமாக இருப்பதைப் போல, சுற்றியிருந்த பகுதியில் பெரும்பாலும் வெள்ளை நிற வெப்ப மண்டல வீடுகள் இருந்தன. அவை மண் சுவர்கள், பாதுகாப்பிற்காக சன்னல்களை மூடிய இரும்பு கம்பிகள் மற்றும் வீட்டினுள் திறந்தவெளியில் அமைந்திருந்த முற்றங்களுடன் அமைந்து இருந்தன. இந்த முற்றங்கள் எப்போதாவது பெய்த மழையை வீட்டினுள் நேரடியாக வரவழைத்தன. §

சில கடைகள் தெருவில் தங்கள் உற்பத்திப் பொருட்களை குவித்து வைத்து இருந்தன; ஒரு பேனா தொழிற்சாலை (குடிசை தொழில் அளவுள்ள ஒரு வியாபாரம்) அருகில் இருந்தது. அதற்கு அருகில் தொடர்ச்சியான கொட்டகைகளில் 15 நெசவாளர்கள் அதிகாலை முதல் பொழுது சாயும் வரை, தங்கள் கைத்தறிகளில் சத்தமாக நெய்த, 12 அடி நீள வெள்ளை காதி துணியை, பெரும்பாலான தமிழ் ஆண்கள் தங்கள் இடுப்பில் அணிந்து இருந்தனர். மேற்கத்திய நாடுகளை பார்க்கும் போது, அந்த வீடு எளிமையாக இருந்தாலும், தென்னை மரங்கள், வேப்பமரம், நெல்லிக்காய் மரங்கள் மற்றும் மற்ற சாப்பிடக்கூடிய மரங்கள் நிரம்பி இருந்த மூன்று ஏக்கர் வளாகத்தை சுற்றி, சில இடங்களில் இயற்கை வேலியாக இருந்த முட்செடிகளும், மற்ற இடங்களில் பின்னிய பனை ஓலைகளும் சூழ்ந்து சுத்தமாக காட்சி அளித்தது. §

சமையல் அறையில் இருந்து ஐம்பது அடி தூரத்தில், ஒரு திறந்த வெளி கிணறு இருந்தது. நிலத்திற்கு அடியில் எட்டு அடி அகலமான கிணற்றை செங்கல் சுவர்கள் வரையறுத்தன. நிலத்திற்கு மேலே எந்த சுவரும் இல்லை, மற்றும் குளிப்பவர் ஒரு வட்டவடிவ கற்காரை நடைப்பாதையில் நிற்கவேண்டும். மர வாளி பொருத்தப்பட்ட ஒரு கயிற்றை கொண்டு, தண்ணீர் கைகளால் இறைக்கப்பட்டது. அந்த கயிறு 18 அடி நீளம், 1 அடி அகலத்துடன் இருந்த தென்னைமரக்கட்டையின் சிறிய முனையில் பொருத்தப்பட்டு இருந்தது. அந்த கட்டை ஒரு நெம்புகோல் மீது பொருத்தப்பட்டு இருந்தது. அந்த கட்டையின் இன்னொரு முனையில் இருந்த கற்களின் வலை தேவையான சமநிலையை வழங்கியது. குளிக்கும் இடத்தை சுற்றி வேலி எதுவும் இல்லாததால், குளிப்பதற்கு ராபர்ட் தன் இடுப்பை சுற்றி ஒரு துண்டு கட்டிக்கொள்ள கற்றுக்கொண்டார். வீட்டில் இருந்த அனைவரும் ஒருவர் பின் ஒருவராக, தினமும் கிணற்றில் இரு வேளை குளித்தனர். பெண்கள் முழுமையாக ஆடை உடுத்திக்கொண்டு குளித்தனர். §

தினமும் நடைபெற்ற நடவடிக்கைகளில் சாப்பாடு முக்கிய அங்கம் வகித்தது, மற்றும் திறந்த விறகு அடுப்பில் பெண்கள் சமையல் செய்ததால், அவர்கள் சமைக்க அதிக முயற்சி மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஒரு விருந்தாளி உணவின் சுவையை உணர்ந்தாலும், அவரை சாப்பிட அழைப்பது அந்த குடும்பத்தின் கடமையாக இருந்தது. அந்த சமூகம் தீவிர சைவர்களாக இருந்தார்கள், மற்றும் அவர்களின் சமையற்கலை வியக்க வைக்கும்

வகைகளுடன் இருந்தது. கடந்த சில நூற்றாண்டுகளாக இலங்கையில், தென் இந்திய அரிசி மற்றும் காய்கறிகள் அதிக வளர்ச்சி அடைந்துள்ளன. அதில் வித்தியாசமான நறுமணம் மற்றும் மிகவும் லேசான தானியங்களுடன் இருக்கும் இலங்கையின் பிரத்யேகமான நாட்டு சிவப்பு அரிசியும் அடங்கும். §

குளிர்சாதன பெட்டி வசதி எதுவும் இல்லாமல், எல்லாம் நிலத்தில் இருந்து சுத்தமாக தயாரிக்கப்பட்ட  கடைகளில் வாங்கப்பட்டன. மீதம் இருந்த உணவுப்பொருட்கள் வாழை இலைகளுடன், வீட்டிற்கு வெளியே வீசப்பட்டன. அவற்றை மாடுகள் உண்டு மகிழ்ந்தன. இதனால் பாத்திரம் கழுவும் வேலை அதிக அளவு குறைந்தது. எதுவும் விரயமாகவில்லை. ஒரு குடும்பம் அன்றைய தேவைக்கு காய்கறிகள், பயறு வகைகள், தானியங்கள் மற்றும் பழங்களை வாங்க கடைக்கு செல்லும் போது, ஒரு கூடையை எடுத்து செல்லும்; உணவு பொதியல் போன்ற விவகாரங்கள் இல்லை. மாட்டில் இருந்து பால் நேரடியாக காய்ச்சும் பாத்திரத்திலேயே சுறக்கப்பட்டது. இந்த கலாச்சாரம் அதிக தன்னிறைவை வழங்கி, சுற்றுப்புறத்தை மாசுபடுத்தாமல் இருந்தது, வீட்டில் கழிவு பொருட்கள் எதுவும் இருக்கவில்லை, வாரம் ஒரு முறை குப்பை சேகரிக்கும் பணி அல்லது குப்பை சேகரித்து புதைக்கும் இடம் இல்லை. மிகவும் அரிய வெளிநாட்டு பேனா உடைந்துவிட்டால், அதை தனியாக வீட்டு வளாகத்தில் புதைக்க வேண்டும். §

ஒரு ஆச்சாரமான இந்து வீட்டில் நான் தங்கியது அதுவே முதல் முறை. எனக்கு அங்கே எனது சொந்த வீட்டில் இருந்த உணர்வு ஏற்பட்டது. அது அற்புதமாகவும் இருந்தது. இலங்கையின் வடக்கு பகுதி, தெற்கு பகுதியில் இருந்து முற்றிலும் மாறுபட்டு இருக்கிறது. அது வேறொரு நாட்டில் இருந்தது போல தோன்றியது. அங்கே இந்து மதம் பின்பற்றப்பட்டது. தெற்கு இலங்கையில், பௌத்த மதம் பின்பற்றப்பட்டது. வடக்கு பகுதி உலர்வாக, வறண்டு சமநிலமாக இருந்தது. அது இலங்கையின் தென் பகுதி மற்றும் மலை பிரதேசம் போல பசுமையான வெப்பமண்டல பகுதியாக இல்லை. எனக்கு உடனே வீட்டில் இருக்கும் உணர்வு ஏற்பட்டது. நாங்கள் கிணற்றில் குளித்து, அந்தி சாய்ந்ததும் கோல்மான் கூண்டு விளக்கை ஏற்றி மிகவும் எளிய வாழ்க்கையை வாழ்ந்தோம். நாங்கள் கோயில் அல்லது சந்தைகளுக்கு செல்லும் போது நடந்து சென்றோம் அல்லது ஒரு மாட்டு வண்டியில் சென்றோம். §

அங்கே எல்லோரும் எளிமையாக இருந்தார்கள். யார் வீட்டிலும் அறைகலன்கள் இல்லை. அனைத்தும் தரையிலேயே வைக்கப்பட்டு இருந்தன. அதை வாங்கும் வசதி படைத்தவர்களும், அறைகலன்களை வாங்கினால் அதை வாங்க வசதி இல்லாதவர்களை அவமதிப்பதாக இருக்கும் என்று கருதியதால், அவர்களும் அவற்றை வாங்க மாட்டார்கள். யாரும் அறைகலனை பயன்படுத்தவில்லை என்பதால், அவர்களுக்கு அந்த தேவையும் இருந்ததில்லை. அங்கே பெரும்பாலான வீடுகளில் மின்சார வசதியும் இல்லாமல் இருந்தது. அதனால் எல்லாம் மிகவும்

இயல்பாக இருந்தது. மேலும் ஒவ்வொரு சிறிய சமூகத்தின் மையமாக கோயில் அமைந்து இருந்தது. §

நாங்கள் சாவகாசமாக, அங்கே இருந்த பிள்ளையார் கோயில், நல்லூர் கந்தசுவாமி கோயில் மற்றும் மற்ற முக்கிய கோயில்களை சுற்றி பார்த்தோம். நான் இதற்கு இடையில் உட்புற சூழலை கிரகித்து கொண்டு இருந்தேன், மற்றும் கோயிலில் இருந்து வந்த உற்சாகம் தரும் அதிர்வுகள் எனது உடலில் பாய்ந்து சென்ற போது தெய்வங்களின் அருளையும் பெற்றேன். நான் அற்புதமான உணர்வை பெற்றேன். அது அற்புதமாக இருந்தது. நான் அங்கே தற்பொழுதில் நிலைத்து இருந்தேன். நான் எனது வாழ்நாளின் உயர்ந்த அனுபவமாக, ஒரு இந்துவாக மாறும் நாளை எதிர்பார்த்து இருந்தேன். §

தனியுரிமை அவருக்கும் ஒரு புதிய அனுபவமாக இருந்தது. அறைகளுக்கு மத்தியில் கதவுகள் இல்லாமல், வெறும் திரைகள் மட்டுமே இருந்தன. மேலும் யாரும் தட்டிக்கொண்டு உள்ளே வரவில்லை. மேற்கத்திய நாடுகளில் தனி நபருக்குரியதாக கருதப்பட்ட விஷயங்கள், இங்கே குடும்பத்தின் அங்கமாக விளங்கிய விதம், அவர் மனதை வலுவாக கவர்ந்தது. அவருக்கு வந்த தபால்களை மனதில் எந்த வித தலையீட்டையும் உணராமல் திறந்து படிக்க முடியும். அவருக்கு பகிர்ந்த இருப்பின் உணர்வு ஒரு வெளிப்பாடாக இருந்தது. §

அந்த குடும்பம் விருந்தாளி மீது அன்பு செலுத்தி, அவருக்கு மரியாதை செலுத்தியது. அவர்கள் தங்களைப் பற்றி கற்றுக்கொண்டு, தங்களது கலாச்சார வேறுபாடுகளை சமன் செய்தனர். ஒரு சமயத்தில், ராபர்ட்டுக்கு அதிக தனிமை தேவைப்பட்டது. அதனால் சுமார் கால் மைல் தூரத்தில் இருந்த ஒரு ஓலை குடிசையில், சில வாரங்கள் தங்க அந்த குடும்பம் அவருக்கு அனுமதி அளித்தது. மணல் நிரம்பிய நிலத்தில் அமைந்து இருந்த அந்த குடிசையை சுற்றி, நருமணமுள்ள ஒரு வகை புதர் செடி மற்றும் தென்னைமரங்கள் மட்டுமே இருந்தாலும், அதனுடன் ஒரு சிறிய கிணறும் இருந்தது. மேலும் அங்கிருந்த அமைதி அவரது சீடர்களுக்கு சாதகமாக இருந்தது. §

அவர் விடியற்காலையில் அந்த கிராமத்தை ஒன்று சேர்க்கும் புழுதி படிந்த பாதைகள் வழியாக நடந்து கும்பழாவளை பிள்ளையார் கோயிலுக்கு சென்று, பின்னர் தன் இருப்பிடத்திற்கு திரும்பி வந்து நாள் முழுவதும் அமைதியாக தியானம் செய்வார். அந்த வெளிநாட்டு இளைஞர் நாட்டிற்கும் அதன் பழக்க வழக்கங்களுக்கும் புதியவர் என்பதால், கந்தையா செட்டியார் மனதில் எப்போதும் கவலையுடன் அவரை கண்காணித்து வந்தார். அவர்கள் பெரும்பாலும் ஆன்மீக வாழ்க்கையை பற்றி பேசிக்கொண்டனர். அது ஒரு பாரம்பரிய உறவு என்பதால், அதை கந்தையா தனது குடும்பத்துடனும், தனது குருவுடனும் பகிர்ந்துக்கொள்ள முடியவில்லை. அவர் பேசுவதற்கு தோழராக ஒரு சாதகர் கிடைத்து இருந்தார், மற்றும் இருவரும் ஆன்மீகத்தை பற்றி மணிக்கணக்கில் உரையாடிக்கொண்டு இருப்பார்கள். §

**“வயதான யாசகரை” சந்தித்தல்**

இந்த சைவ சமூகத்தில் ராபர்ட்டு அதிக சுகத்தை உணர்ந்து அதன் கலாச்சாரம், அதன் மக்கள் மற்றும் அதன் வளமான ஆன்மீகத்துடன் ஒன்றி இருந்ததால், அவர் அதனுடன் முறையாக இணைய விரும்பினார். §

> ஒரு நாள் நான் கந்தையாவிடம், “நான் ஒரு இந்துவாக மாற விரும்புகிறேன். எனது சிறு வயதில் இருந்து இன்று வரை ஒரு இந்துவாக இருக்க பயிற்சி அளிக்கப்பட்டு இருப்பதால், நான் இப்பொழுதே அந்த உணர்வுடன் இருக்கிறேன், ஆனால் அதை எவ்வாறு முறைப்படுத்துவது? நீங்கள் என்னை ஆத்ம ஞானம் பெற்ற ஒரு மிகவும் புனிதமான பூசாரியிடம் அழைத்து செல்ல முடியுமா?” என்று கேட்டேன். “நீங்கள் பேசும் ஆத்ம ஞானத்தை பெற்ற பூசாரிகள் நமது கோயில்களில் இல்லை. சற்று பொறுங்கள். சரியான நேரம் விரைவில் வரும்,” என்று பதில் அளித்தார். அவர் என்னை எனது குருவிடம் அழைத்து செல்லவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார், ஆனால் நல்ல தருணம் வருவதற்காக, சமிக்ஞைகளை கவனித்து வந்தார். §

அந்த சந்திப்பை கந்தையா தொடர்ந்து புறக்கணித்து வந்தார். தனது அமெரிக்க மகன் (ராபர்ட்டை கந்தையா அப்படித்தான் அழைத்தார்) நேரடியாக சென்று சுவாமியை தரிக்க அனுமதி வழங்காமல், அவர் உரிய நேரம் வரும் வரை காலம் தாழ்த்தி வந்தார். இறுதியாக அவர் ஒரு நாள், “நீங்கள் யோக சுவாமியை சந்திப்பதற்கு, இன்று சரியான நாளாக தோன்றுகிறது,” என்று அறிவித்தார். அவர் தானே செல்லாமல், அவர்கள் எப்படி அங்கே செல்ல வேண்டும், அவர்களை யார் அழைத்து செல்ல வேண்டும் போன்ற அறிவுறுத்தல்களை வழங்கி, தனது மகன் விநாயகமூர்த்தியை அனுப்பி வைத்தார். §

மே 1949, யாழ்ப்பாணத்தில் திருவிழா காலமாக இருந்தது. அந்த மாதத்தில் யோக சுவாமியின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. அந்த சமயத்தில் முருகனுக்கு ஒரு விசேஷ திருவிழாவும் நடைபெறும். அந்த சமயத்தில் தெற்கில், புத்தர் பரிநிர்வாணம் பெற்றதை குறிப்பிடும் வெசாக் திருவிழாவும் கொண்டாடப்படுகிறது. மேலும் முருகனுக்கு உகந்த பழமாக விளங்கி, பலருக்கு பிடித்தமான மாம்பழங்கள் அதிகமாக தென்படும் பருவமும் அது தான். §

அவர்கள் மதியம் மூன்று மணிக்கு கிளம்பினார்கள். அவர்கள் யாழ்ப்பாணம் செல்லும் பேருந்தை பிடிக்க அருகில் இருந்த மல்லாகம் என்ற கிராமத்திற்கு நடந்து சென்ற போது வீசிய தென்றல் காற்று, அவர்களுக்கு குளுமையை வழங்கியது. அவர்கள் சுமார் 3:30 மணிக்கு அந்த கிராமத்தை அடைந்தார்கள். பதினைந்து நிமிடங்கள் கழித்து ஒரு பேருந்து வந்தது. அவர்கள் சுமார் ஐந்து மணிக்கு, யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் நேராக குமார் சூரியன் என்ற ஒரு வழக்கறிஞர் வீட்டிற்கு சென்றார்கள். அந்த

வழக்கறிஞர் அவர்களை சுவாமியிடம் அழைத்து செல்வார் என்று கந்தையா குறிப்பிட்டுக் இருந்தார். அவர்களுடன் செல்ல வழக்கறிஞர் மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவித்தார். ஆனால் முதலில் அவர்களுக்கு தேநீர் மற்றும் இடியாப்பம் வழங்கி உபசரித்தார். இதற்கிடையே அவர் வீட்டு பணியாளர் மாட்டு வண்டியை தயார் செய்துக்கொண்டு இருந்தார். பதினைந்து நிமிடங்கள் கழித்து, இரண்டு அழகான வெள்ளை நிற பிரம்மன் காளைமாடுகள் இழுத்த ஒரு பாரம் சுமக்கும் வண்டியில், அவர்கள் அங்கிருந்து கிளம்பினார்கள். §

அந்த வண்டி நிதானமாக முதலில் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு சென்றது. சுவாமியை பார்ப்பதற்கு முன்பாக, கோயிலுக்கு சென்று தெய்வத்தை வழிபட்ட பிறகு செல்லலாம் என்று குமார் பரிந்துரைத்தார். அப்போது மாலை 6 மணி, மற்றும் அது பூஜை தொடங்கும் நேரம். அவர்கள் வண்டியில் இருந்து கீழே இறங்கி முகம், கை மற்றும் கால்களை கழுவிக்கொண்டு, கோயிலுக்குள் சென்றனர். அந்த நாட்களில், இன்று போல் இல்லாமல், இறைவனை கருவறைக்கு அருகில் இருந்து தரிசிக்க அனுமதி இருந்தது. மூவரும் தீவிரமாக தரிசித்துக்கொண்டு, பூஜை தொடங்குவதற்காக கருவறை முன்பாக நின்றுக்கொண்டு இருந்தார்கள். §

அவர்கள் மாலை சுமார் 7 மணி அளவில் யோக சுவாமியின் ஆசிரமம் சென்றடைந்தார்கள். சூரியன் மறைந்து, நிலப்பரப்பில் பவுர்ணமி நிலவு பிரகாசித்துக் கொண்டிருந்தது. விளக்குகள் ஏற்றப்பட்டு இருந்தன, மாலைப்பொழுது சுவாமியை தரிசிக்க அன்பர்களை அழைத்து வந்து இருந்தது. அங்கிருந்த சூழல் சற்குருவின் இருப்பால் உற்சாகம் தருவதாக இருந்தது. அவருடன் சுமார் பதினைந்து அன்பர்கள் அமர்ந்து இருந்தார்கள். வண்டி சக்கரங்களின் கிரிச்சீடும் சத்தம் நின்றவுடன், குடிசையில் இருந்து சத்தமாகவும் தெளிவாகவும், “வாருங்கள். வாருங்கள். நான் உங்களுக்காக காத்து இருக்கிறேன்,” என்று சுவாமியின் குரல் கேட்டது. இதைப்பற்றி விநாயகமூர்த்தி நினைவுக்கூர்கிறார்: §


> நாங்கள் கதவை திறந்து ஆசிரமத்திற்குள் நுழைந்ததும், “நீ என்னை எங்காவது பார்த்து இருக்கிறாயா?” என்று யோக சுவாமி உரத்த குரலில் ராபர்ட்டிடம் கேட்டார். அதற்கு ராபர்ட், “ஆமாம். நல்லூர் கோயிலில் நான் உங்களை பார்த்தேன்,” என்று பதில் அளித்தார். அதன் பிறகு பின்வரும் உரையாடல் நடந்தது. யோக சுவாமி: “நீ எனக்குள் இருக்கிறாய்.” ராபர்ட்: “நீங்கள் எனக்குள் இருக்கிறீர்கள்.” யோக சுவாமி: “நான் உனக்குள் இருக்கிறேன்.” ராபர்ட்: “நான் உங்களுக்குள் இருக்கிறேன்.” §

அங்கிருந்த அன்பர்கள் ஆச்சரியத்தில் மூழ்கினர். செல்லப்பகுரு வாழ்ந்த காலத்திற்கு பிறகு, அவரிடம் யாரும் இதைப்போல பேசவில்லை. அவர் வழக்கமாக ஒரு அன்பரிடம், “நான் உனக்குள் இருக்கிறேன்,” என்று சொன்னதும், அந்த அன்பர் பணிவாக, “ஆமாம், சுவாமி,” என்று பதில் அளிப்பார். அல்லது சுவாமி இயற்றிய ஒரு பாடலைப் பாட ஆரம்பித்து

விடுவார். ராபர்ட்டைப் போல யாரும் பதில் அளித்தது இல்லை. அவர் சுவாமியை போல  நம்பிக்கையுடன் பேசி, அவர் சொன்ன வார்த்தைகளை எதிரொலித்தார். §

சிறிது நேரம் கழித்து சுவாமி சூழ்நிலையில் இருந்த தீவிரத்தை குறைத்து, உள்ளே வருமாறு விருந்தாளிகளிடம் சைகை காண்பித்து, “உள்ளே வந்து, யாழ்ப்பாணத்தின் முதிய யாசகருடன் உட்காருங்கள்,” என்று கூறினார். ராபர்ட் நெறிமுறையை அறிந்து இருந்தார் மற்றும் சுவாமி அமர்ந்ததும், தரையில் விழுந்தது வணங்க முன் வந்தார். ஆனால் சுவாமி அவர் செய்ய வேண்டாம் என்று சைகை செய்து, அருகில் இந்த விநோதமான விருந்தாளிக்காக பரப்பி வைக்கப்பட்டு இருந்த ஒரு பாயின் மீது உட்காருமாறு கேட்டுக்கொண்டார். §

அன்று இரவு யோக சுவாமி நல்ல மனநிலையுடன், தனக்கு முன்பாக வந்த அன்பர்களை பார்த்து சிரித்துக்கொண்டும் புன்னகைத்துக் கொண்டும் இருந்தார். அது ஒரு விஷேசமான விடுமுறை நாள் போல தோன்றியது. அவருக்கு முன்பாக இருந்த ஒரு பெரிய தட்டில் திராட்சையின் பெரிய கொத்துக்கள் இருந்தன. அவர் தனது சீடர்களில் ஒருவரான, பண்டிதர் அ. வி. மயில்வாகனத்தை அழைத்து, அந்த தட்டை எடுத்துச் சென்று, மூன்று விருந்தாளிகளுக்கு பழச்சாறு தயார் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். §




*யோக சுவாமியை சந்திப்பதற்கு முன்னேற்பாடாக, “வேல்” வடிவமாக பிரதிஷ்டை செய்யப்பட்ட முருகப்பெருமானின் ஆசிகளை பெறுவதற்கு ராபர்ட் நல்லூர் கோயிலுக்கு அழைத்து செல்லப்பட்டார். இருண்டு இருந்த*

*கருவறைக்கு முன்பாக நின்று இருந்த போது, அவரது எதிர்கால சற்குரு முதல் முறையாக காட்சி அளித்தார்.*

........................§

பழச்சாறு தயாராகிக் கொண்டிருந்த போது, பதஞ்சலியின் *யோக சூத்திரங்களை* படித்து இருக்கிறாரா என்று யோக சுவாமி தனது விருந்தாளியிடம் கேட்டார். அவரது அலமாரியில் இருந்த புத்தகத்தை எடுத்து, அந்த புத்தகம் மட்டுமே தான் வைத்து இருந்ததாக அவர் குறிப்பிட்டார். தான் அதை படித்து இருப்பதாக ராபர்ட் பதில் அளித்தார். அவருக்கு கிடைத்த ஆரம்பக்கால பயிற்சியின் போது, அவர் அந்த புத்தகத்தை மட்டுமே படித்து இருந்தார். அவர் அதை படித்து, பல வருடங்களுக்கு அதில் பயிற்சியும் செய்து இருந்தார். அந்த சுருக்கமான தலைசிறந்த பதிப்பை பற்றி யோக சுவாமி சில கேள்விகளை துருவி துருவி கேட்டார். ராபர்ட் விரைவாகவும் தெளிவாகவும் பதில் அளித்தார். அவர் அந்த அனுபவத்தைப் பற்றி பின்னர் குறிப்பிடும் போது, பதில்கள் அறிவுணர்வு நினைவாக வராமல், உள்ளிருந்து விரைவாக வந்ததாக கூறினார். §

பிறகு யோக சுவாமி த்வைதம் மற்றும் அத்வைததிற்கு இடையேயான வித்தியாசத்தைப் பற்றி கேட்டார். ஒருவரது கண்ணோட்டத்தை பொருத்து, இரண்டும் உண்மை தான் என்று ராபர்ட் பதில் அளித்தார். அது ஒருமையாகவும் இல்லை, இருமையாகவும் இல்லை அந்த சீடன் கிரகித்துக்கொண்டிருந்த முறையை ரசித்து, யோக சுவாமி சிரித்தார். தத்துவத்தின் இரண்டு கிளைகளுக்கும் இடையே இருந்த சர்ச்சையை நன்கு அறிந்து இருந்த சுவாமி, ராபர்ட் அளித்த பதில் மூலம் திருப்தி அடைந்தார். பிற்காலத்தில் Dr. எஸ். இராமநாதன இதைப்பற்றி பின்வரும் நுண்ணறிவுகளை வழங்கினார்: §




*அவர்களுக்கு இடையே நடந்த உரையாடலின் போது, ராபர்ட் தான் அளவெட்டியில் ஒரு சிறிய ஆசிரமம் அமைத்துள்ளதாக குறிப்பிட்டார். அது எதிர்காலத்தில் மூன்று அடுக்கு கட்டிடமாக மாறும் என்று யோக சுவாமி கணித்தார்.*

……………………….§

"அஹம் பிரம்மாஸ்மி" என்ற *மகாவாக்கியத்தை*, அத்வைத வேதாந்த விமர்சகர்கள் தவறாக புரிந்துக்கொண்டு இருப்பதாக, சுவாமி ஒரு முறை கூறினார். அவர் ஸ்ரீ சங்கராச்சாரியாரின் அத்வைத வேதாந்தம் மற்றும் *சிந்தாந்த சாஸ்திரங்களை* மிகவும் உயர்வானதாக கருதினார். ஒரு நாள் நான் கொழும்புத்துறை ஆசிரமத்திற்கு செல்லும் போது, வேதாந்தம் மற்றும் சிந்தாந்தத்திற்கும் இடையிலான விவாதத்தை பற்றி சிந்தித்துக் கொண்டு சென்றேன். நான் சுவாமி பார்த்த போது, அவர் தாயுமானவர் படைப்பில் இருந்து "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணமே" என்ற பாடல் வரியை பாட ஆரம்பித்தார். அது திடமான உண்மை என்பதை குறிப்பிடும் வண்ணம், அவர் தனது கைகளை தனது நெஞ்சில் வைத்துக்கொண்டார். §

தத்துவதைப் பற்றிய அவர்களது உரையாடல் சுமார் இருபது நிமிடங்கள் நீடித்தது. இறுதியாக திராட்சை பழரசம் வந்ததும், யோக சுவாமி அதை விருந்தாளிகளுக்கு வழங்கினார். அத்துடன் அன்றைய மாலை பொழுது

விவாதம் நிறைவு பெற்றது. நீண்டதூரம் செல்ல வேண்டி இருந்ததால், வீட்டிற்கு கிளம்புமாறு சுவாமி அவர்களிடம் கேட்டுக்கொண்டார். §

அவர்கள் சுவாமியிடம் இருந்து விடைபெற்று, காத்திருந்த மாட்டுவண்டியை நோக்கி நடந்தார்கள். இந்த மர்மமான சந்திப்பின் மூலம் வியப்பில் இருந்த சீடர்களும் தங்கள் வீட்டிற்கு திரும்பினர். ஒரு வழக்கறிஞராகவும் புத்திசாலியாகவும் இருந்த குமார் மகிழ்ச்சியாக இருந்தாலும், சற்று வருத்தத்துடனும் இருந்தார். “இன்று மாலை நல்லூர் கோயிலில் சுவாமியை பார்த்தேன் என்று எதற்காக சொன்னீர்கள்? நான் உங்களுடன் தான் இருந்தேன், ஆனால் நான் அவரை பாரக்கவில்லையே,” என்று தனது விருந்தாளியிடம் விசாரித்தார். “நான் அவரை பூஜையின் போது கருவறையின் உள்ளே பார்த்தேன். அவர் அந்த இடத்தில் எனக்கு முன்பாக நின்றுக்கொண்டு இருந்தார்,” என்று ராபர்ட் பதில் அளித்தார். இதன் மூலம், யோக சுவாமி மற்றும் ராபர்ட்டுக்கு இடையே இருந்த உறவின் ஆன்மீகப்பண்பைப் பற்றி அந்த வழக்கறிஞர் புரிந்துகொண்டார். §

பல வருடங்கள் கழித்து, அந்த அமெரிக்கர் யோக சுவாமியுடன் தான் மேற்கொண்ட சந்திப்புக்களைப் பற்றி விளக்கினார். §

ஒரு நாள், நான் யோக சுவாமியை தரிசனம் செய்ய அழைத்து செல்லப்பட்டேன். யோக சுவாமி என்று அன்புடன் உள்ளூர் மக்களால் அழைக்கப்பட்ட ஞானகுரு யோகநாதன், ஒரு அற்புதமான மனிதராக இருந்தார். நல்ல மனநிலையில் இல்லாதவர்கள், அவரை நெருங்கவே அஞ்சுவார்கள். அவருக்கு அருகில் இருக்கும் பொது, அங்கிருக்கும் சூழல் பிரகாசமாக இருப்பதை உணரமுடியும். அங்கிருக்கும் சூழலில் உற்சாக உணர்வை உணர முடிந்தது. இந்த குருவை சந்திக்கும் முன்பாக, சீடர்கள் தங்களை ஆன்மீக ரீதியாக தயார்ப்படுத்திக் கொள்வார்கள். ஒரு தட்டு நிறைய பழங்களை மட்டும் எடுத்து செல்ல, அவர்கள் சிலசமயங்களில் மூன்று அல்லது நான்கு நாட்கள் வரை தங்களை தயார்ப்படுத்திக் கொள்வார்கள். அவர்களிடம் நீங்கள் எப்போது குருவை தரிசிக்க செல்லப்போகிறீர்கள் என்று கேட்டால், “நான் யோக சுவாமியை தரிசிக்க இன்று தயாராக இல்லை, நாளை செல்ல வாய்ப்புள்ளது,” அல்லது, “நான் ஒரு மங்களகரமான நாளில் செல்லலாம் என்று இருக்கிறேன்,” என்று அவர்கள் பதில் அளிப்பார்கள். ஏனென்றால் தாங்கள் தங்களுக்குள் கண்டுகொண்டதை, அவர் தங்களுக்குள் கவனித்து சுட்டிக்காட்டுவதை அவர்கள் விரும்பவில்லை. மக்கள் தன்னை நாடி வரும் முன்னர், அவர்கள் எப்போது வருவார்கள் என்பதை அவர் அறிந்து இருந்தார். §


அவருடன் என்னுடைய சந்திப்பு விசித்திரமாக இருந்தது, ஏனென்றால் நான் அறிமுகப்படுத்தப்பட்டதும் அவர் என்னிடம், “உள்ளே வந்து, இங்கே உட்கார்,” என்று கூறினார். அவரை மற்ற எல்லோரும் நமஸ்காரம் செய்தார்கள். கிழக்கத்திய நாடுகளில், சீடர்கள் தங்கள் குருவின் முன்பாக, முகம் மற்றும் உடல் முழுவதும் தரையில் படும்படியாக

விழுந்து வணங்குவார்கள். அவர் என்னிடம், “நீ உள்ளே வந்து உட்கார். நீ அதை செய்யவேண்டாம். நீயும் நானும் ஒன்று.”§

அவர் அதன் பிறகு என்னிடம் மிகவும் ஆழமான தத்துவ கேள்விகளை கேட்க ஆரம்பித்தார். நான் ஒவ்வொரு கேள்விக்கும் சரியான பதிலை அளித்து இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அவர் அதிக திருப்தியுடன் தென்பட்டார். அவர் கேள்வி கேட்டவுடன், நான் எந்த வித தயக்கமும் இல்லாமல் பதில் அளித்தேன். அதன் பிறகு அவர் எனக்கு சுப்பிரமுனியா என்று பெயர் சூட்டினார். அதுவே என்னுடைய இன்றைய பெயர். “நீ வெள்ளை நிறத்தில் இருக்கிறாய்; சுப்பிரமுனியா வெள்ளை நிறமாக இருக்கிறார்,” என்று என்னிடம் நம்பிக்கையுடன் கூறினார். அவர் எனக்கு குருவாக, எனது ஆசானாக இருந்தார். *சுப்பிர* என்றால் “மத்திய மூலத்தில் இருந்து வெளிவரும் ஒளி” என்று பொருள். அது தடையில்லாமல் வெளிப்படுகிறது. *முனி* என்றால் ஒரு அமைதியான ஆசிரியர் என்று பொருள். *யா* என்றால் கட்டுப்பாடு. சுப்பிரமுனியா என்றால் அமைதியாக இருந்து அல்லது இயலுணர்வில் இருந்து பேசும், உட்புற ஆகாசத்தில் இருந்து பேசும் தன்னடக்கத்துடன் இருக்கும் ஆன்மா என்று பொருள். §

அவர் தன்னிடம் வைத்து இருந்த பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் பற்றிய புத்தகத்தை என்னிடம் காண்பித்தார். நான் பதஞ்சலி எழுதிய அந்த புத்தகத்தை படித்து இருந்தேன். எங்களது ஆன்மீக சந்திப்பு அற்புதமாகவும் ஆழமாகவும் இருந்தது. அவர் என்னை தனது சகோதரனை போல கவனித்துக் கொண்டார். இதனை கண்டு மற்ற எல்லோரும் வியந்தாலும், நான் ஆச்சரியப்படும் உணர்வில் இல்லாமல் அதிகம் உட்புறமாக இருந்ததால், அது என்னை வியப்பில் ஆழ்த்தவில்லை. நான் அவருடன் சேர்ந்து உணவு சாப்பிட்டேன், பின்னர் நாங்கள் அங்கிருந்து கிளம்பினோம். நான் கிளம்புவதற்கு முன்பாக, நான் அளவெட்டிக்கு அருகில் ஒரு ஆசிரமத்தை அமைத்துள்ளேன் என்று கூறி, அதற்கு அவரது ஆசிகளை வேண்டினேன். அவர் அதற்கு, “நல்லது, அது ஒரு நாள் மூன்று அடுக்கு கட்டிடமாக வளர்ச்சி பெறும். நீ உலகம் முழுவதும் சுற்றி வந்து, ஆயிரக்கண்கான மக்களுக்கு உணவு அளிப்பாய். நீ பல அரண்மனைகளை கட்டப்போகிறாய்,” என்று கூறினார். §

“நீ அமெரிக்கா திரும்பி கர்ஜிக்கப் போகிறாய். நீ மீண்டும் இங்கே திரும்பி வரும் போது, எந்த ஆதாயமும் இருக்காது, எந்த இழப்பும் இருக்காது,” போன்ற பல்வேறு விதமான அறிவுறுத்தல்களை அவர் எனக்கு வழங்க ஆரம்பித்தார். “இனி நீ பெற்ற உணர்தல்களை மற்றவர்களுக்கு கற்றுக் கொடு,” என்று அவர் கூறினார். எனது பாதையில் இருந்த ஆறு ஆசிரியர்களும் என்ன செய்யவேண்டும் என்று சொல்லி கேட்டிருந்தபடியால், இந்த நேர்மறையான அறிவுறுத்தலின் மூலம் நான் மகிழ்ச்சி அடைந்தேன். நான் குருவை சந்தித்து கிளம்பிய பிறகு, எல்லோரும் என்னை வேறுவிதமாக பார்க்க ஆரம்பித்தார்கள். §



*அவர்களது மூன்றாவது சந்திப்பின் முடிவில், யோக சுவாமி கதவு வரை தனது அமெரிக்க விருந்தாளியை பின் தொடர்ந்து சென்றார். அவர் பின்னால் இருந்து வந்து, சுப்பிரமுனியாவின் முதுகில் பலமாக அடித்ததால், அந்த உயரமான இளைஞர் தடுமாறி கீழே விழ இருந்தார். அதை கவனித்த பெரியோர்கள் குழம்பி நிற்க, அது ஒரு வலுவான ஆன்மீக தீட்சையாக இருந்தது.*

........................§

நான் எனது குருவை இரண்டாவது முறையாக சந்தித்த போது, சந்தோஷமாக நேரத்தை கழித்தோம். நாங்கள் தியானம் மட்டுமே செய்து, ஒரு அழகான ஓட்டத்தை ரசித்துக்கொண்டு இருந்தேன். பல அன்பர்கள் வந்து இருந்தார்கள். §

மூன்றாவது சந்திப்பின் போது, நாங்கள் ஆன்மீக பாதையை பற்றி ஒரு அழகான உரையாடலை மேற்கொண்டோம். அதன் பிறகு நான் ஆசிரமத்தை விட்டு கிளம்பும் போது, என்னை வழியனுப்ப வந்த அவர் என் முதுகில் பலமாக அடித்தார். அதற்கு முன்பு என்னை யாரும் அவ்வளவு பலமாக அடித்தது இல்லை. அவர் என்னை நெருங்கி, தோள்பட்டை எலும்புக்கு நடுவே முதுகுத்தண்டில் ஓங்கி அடித்தார். அந்த அடி பலமாக இருந்தது, நான் மட்டும் உயரமாக இல்லை என்றால், தரையில் விழுந்து இருப்பேன். அது மிகவும் பலமான தீட்சைகளில் ஒன்றாக இருந்ததால், அங்கே கூடியிருந்த இந்து அன்பர்களும் அதிர்ச்சி அடைந்தார்கள். இந்த தீட்சைக்கு பிறகு, அவர் எனக்கு சில வலுவான அறிவுறுத்தல்களை

> வழங்கினார்.... இந்த தீட்சையுடன், அவர் என்னை அமெரிக்காவிற்கு ஒரு சந்நியாசியாக அனுப்பினார். அப்போது எனக்கு 22 வயது, மற்றும் அவருக்கு 77 வயது. §

அந்த ஆசிரமத்தில் கூடியிருந்த டஜன் கணக்கான அன்பர்கள், இளம் அமெரிக்கரை ஒரு புதிய கண்ணோட்டத்துடன் பார்க்க ஆரம்பித்தனர். இதைப்பற்றி சுப்பிரமுனியா பின்னர் வழங்கிய ஆழமான கருத்து:§

> ஒரு குரு நான்கு வகைகளில் தீட்சை வழங்குவார். அதில் மிகவும் மென்மையான முறையாக, பேசுவதன் மூலம் வழங்குவார். இன்னொன்று தனது பார்வையின் மூலமாகவும், மற்றுமொன்று தனது சிந்தனை மூலமாகவும் வழங்குவார். உண்மையான ஆன்மீக பலத்துடன் கலந்த தொடுதல் மூலமாக அதிக ஆற்றல்மிக்க தீட்சை வழங்கப்படுகிறது. ஏனென்றால் குறிக்கோளுடன் தொடுவதன் மூலம், அவர் சீடனுக்கு தன்னிடம் இருக்கும் எல்லா ஆன்மீக புரிதல் மற்றும் ஆன்மீக சக்தியையும் வழங்க ஆரம்பிக்கிறார். இதன் மூலமாக யோக சுவாமி, எப்படி ஒரு குருவாக இருக்கவேண்டும் என்ற தனது புரிதல் அனைத்தையும் எனக்கு வழங்கினார். அது பின்னர் அவரிடம் இருந்து, அவரது குருவிடம் இருந்து மற்றும் அவரது குருவின் குருவிடம் இருந்து எனக்குள் விரிவாக்கம் பெற்றது. இந்த வழியில், ஆன்மீக சக்தி குருக்களின் பரம்பரையில் இடமாற்றம் பெற்று அதிகரிக்கிறது. §

இதைப்பற்றி, விநாயகமூர்த்தி வழங்கிய குறிப்பு:§

> ஒரு குரு தனது சீடனை சிந்தனை, சொல், பார்வை மற்றும் தொடுதல் என்று நான்கு வழிகளில் தீட்சை வழங்குவதாக கூறப்படுகிறது. ஆனால் சப்பிரமுனியாவின் விஷயத்தில், நல்லூர் கோயிலில் சுப்பிரமுனியா இருப்பதை அறிந்த யோக சுவாமி அங்கே தரிசனம் (சிந்தனை) வழங்கி, “நீ எனக்குள் இருக்கிறாய். நான் உனக்குள் இருக்கிறேன்,” என்று கூறி (சொல்), அவரை இயல்பாக பார்த்து (பார்வை), மற்றும் அவரது முதுகில் ஓங்கி அடித்து (தொடுதல்), ஒரு குரு தனது சீடனுக்கு வழங்க வேண்டிய சகலவிதமான ஆசிகளையும் சக்தியையும் வழங்கி கௌரவித்தார். §

ஸ்ரீ சுப்பிரமுனியாவின் முதுகில் பலமாக அடித்து, அங்கிருந்த எல்லோரையும் வியக்க வைத்தார். அவர்களுக்கு அதன் பொருள் புரியவில்லை. அதைக்கேட்டதும் கந்தையா சிரித்துக்கொண்டு, “அப்படியென்றால், யோக சுவாமி அவருக்கு முடிசூட்டிவிட்டார்,” என்று கூறினார். இது இளம் சீடருக்கு வழங்கப்பட்ட தீட்சையாக விளங்கியது. மேலும் இதன் மூலம் யோக சுவாமி தனக்கு ஒரு வாரிசை நியமித்ததாகவும் பிற்காலத்தில் புரிந்துகொள்ளப்பட்டது. இந்த சம்பவத்தின் சாட்சியாக, அமைதி காப்பு நடுவர் திரு. எஸ். சுப்ரமணியம் இருந்தார். அவர் பிற்காலத்தில் இந்த சம்பவத்தை பற்றி பிற்காலத்தில் விளக்கும் போது “அது யோக சுவாமியின்

சம்ஸ்காரங்கள் அல்லது முக்கிய தெய்வீக ஆன்மீக சக்திகளின் இடமாற்றம்" என்று குறிப்பிட்டார். §

"நீ குருவாக இருக்கும் போது, ஒரு அமெரிக்க தாயை போல இருக்காதே," என்று யோக சுவாமி தீட்சை பெற்ற இளம் சீடருக்கு அறிவுரை வழங்கினார். அவர் தனது அறிக்கையின் பொருள் புரிந்துகொள்ள முடியாமல் தவித்த தனது சீடனை பார்த்து, "அவர்கள் அங்கே இங்கே என்று சுற்றிக்கொண்டு இருப்பார்கள். அவர்கள் குழந்தைகளை இன்னொருவர் கவனித்துக்கொண்டு இருப்பார்கள். இதை நீ பார்த்து இருப்பாய். நீ ஆசிரமத்தில் இருந்து கொண்டு, உன் மாணவர்களுக்கு நெருக்கமாக இரு," என்று கூறினார். இந்த முறை அவர்கள் பிரியும் போது, யோக சுவாமி தனது சீடரிடம், "உனக்கு என் உதவி தேவைப்படும் போதெல்லாம், நான் உன்னுடன் இருப்பேன்," என்று சொல்வதை அருகில் இருந்த அன்பர்கள் கேட்டனர். §

சுப்பிரமுனியா அங்கிருந்து கிளம்பியதும், என்ன நடந்தது என்பதைப் பற்றி வியக்கவோ பேசவோ இடம் அளிக்காமல், யோக சுவாமி விரைவாக பேச்சை மாற்றி, "அவன் நாட்டியக்காரனாக இருக்க வேண்டும். அவன் ஒரு போர்சோய் போல நடக்கிறார்," என்று சிரித்துக்கொண்டே கூறினார். இதைப்பற்றி பின்னர் கந்தையா செட்டியார் "பேசும் கடவுளுடன் நடந்த சந்திப்பு," என்று கடிதத்தில் எழுதி இருந்தார். §

> அன்றிலிருந்து ஸ்ரீ சுப்பிரமுனியா மறுபிறவி எடுத்தது போல காட்சி அளித்தார். அவரிடத்தில் மன அமைதி மிகவும் தெளிவாக தென்பட்டது. அவர் தொடக்க நிலையில் இருந்தார் மற்றும் அவருக்கு கலை, நடனம், இசை மற்றும் மற்ற நடவடிக்கைகளில் ஆர்வம் இருந்ததாக தோன்றியது. பெண்களுடன் இணைந்து செயல்பட வேண்டிய இந்த லௌகீக நடவடிக்கைகளிலும், "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தை உச்சரிப்பது போன்ற நடவடிக்கைகளில் பங்குபெற, அந்த பெண்களுக்கு பயிற்சி அளித்தார். மனித நேயம் புலன்களை அடக்குவதற்கு இந்த மந்திரம் உதவிகரமாக இருக்கிறது. §

தான் நான்காவது முறையாக யோக சுவாமியை சந்திக்க சென்றபோது, அவர் தனியாக உட்கார்ந்து, ஆழமாக தியானம் செய்துக்கொண்டு இருந்ததாக, சுப்பிரமுனியா நினைவுகூர்ந்தார். அவர் கதவை நெருங்கியதும், யோக சுவாமி கண்களை திறந்து, "நான் வீட்டில் இல்லை," என்று கர்ஜித்தார். அதிர்ச்சி அடைந்த இளைஞர் மெதுவாக திரும்பிய போது, இந்த முறை உரத்த குரலில், "நான் வீட்டில் இல்லை!" என்று சுவாமி மீண்டும் கூறினார். தகவல் தெளிவாக இருந்தது; அவர்கள் ஒன்றாக இருக்கும் நேரம் முடிவுக்கு வந்து விட்டது; மற்றும் அந்த சீடன் ஆசிரமத்தில் இருந்து இறுதியாக கிளம்பினார் மற்றும் திரும்பி வரவில்லை.. §

**மீண்டும் கொழும்பு வருகை**

1949 ஆம் ஆண்டு, கந்தையா செட்டியாருடன் இணைந்து உலக விவகாரங்களின் சிலோன் அலுவலகத்தை அமைத்தார். "கிழக்கு நாடுகளின் கலாச்சாரம் மேற்கு நாடுகளின் கலாச்சாரத்துடன் இணக்கத்தை பெற்றுள்ளது, அனைத்தும் நன்மைக்கே நடந்துள்ளது," என்பது அவர்களின் குறிக்கோள் வாசகமாக இருந்தது. அவர்கள் ஆனந்த ஆசிரமத்தையும் நிறுவி இருந்தார்கள். மே 22 1949 அன்று, அத்தகைய முயற்சிகளை பற்றி ஒரு தமிழ் பத்திரிகை இந்த அறிக்கையை வெளியிட்டு இருந்தது. §

> யாழ்ப்பாணத்திற்கு ராபர்ட் ஹான்சென் வருகை. அமெரிக்க ஆசிய கலாச்சார பணியில் ஒரு அலுவலராக இருக்கும் இவர், கடந்த இரண்டு வருடங்களாக கொழும்பில் இருந்து வருகிறார். அவர் பெயர் ராபர்ட் ஹான்சென். அவர் சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்து இருந்தார். ஆன்மீக கலாச்சாரத்தில் அதிக ஆர்வத்துடன் இருக்கும் இந்த இளைஞர், இந்து சமய இரகசியங்கள் மற்றும் வழிபாட்டு முறைகளை அதிக ஆர்வத்துடன் கற்று வருகிறார். அவர் இங்கிருக்கும் கலையுணர்வு மிக்க நடவடிக்கைகள் மற்றும் கிழக்கு நாடுகளின் நடனங்களுக்கு அதிக மதிப்பு அளிக்கிறார். அமெரிக்க ஆசிய கலாச்சார பணியின் ஆதரவுடன் யாழ்ப்பாணத்தின் அளவெட்டியில், ஆனந்த ஆசிரமம் என்ற ஒரு மையம் நிறுவப்பட்டு உள்ளது. இந்த ஆசிரமம் ஆன்மீக மற்றும் சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தும். இந்த சங்கத்தில் சமய ஆர்வமுள்ள எவரும் அங்கத்தினர் ஆகலாம். ஒரு வியாபாரியாக இருக்கும் திரு. சி. கே. செட்டியார், இந்த சங்கத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்துள்ளார். அவர் மகன் திரு. விநாயகமூர்த்தி செட்டியார், இங்கே செயலாளராக பணி புரிகிறார். உலகெங்கும் அன்பை பரப்புவதே இந்த ஆசிரமத்தின் முதல் குறிக்கோள் ஆகும்."§

யாழ்ப்பாணத்தில் சுப்பிரமுனியா மேலும் சில வாரங்களுக்கு தங்கி இருந்தார், ஆனால் அவர் கொழும்பிற்கு திரும்பி வருவார் என்பது எல்லோருக்கும் தெரிந்து இருந்தது. செப்டம்பர் 1949, அவர் மீண்டும் தலைநகரத்தில் நடனமாடினார் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தும் நோக்கத்துடன் மீண்டும் இணைந்த குழுவை கண்டியின் மலைப்பகுதிகளுக்கு அழைத்து சென்றார். ஆனால் அவை அனைத்தும் முன்பு போல இருக்கவில்லை. அவர் யோக சுவாமி மற்றும் செட்டியார் குடும்பத்துடன் இருந்த காலம், அவருக்குள் நிலைமாற்றத்தை ஏற்படுத்தி இருந்தது. §

> யோக சுவாமியிடம் தீட்சையை பெற்று மற்றும் செட்டியார் குடும்பம் என்னை தத்து எடுத்துக்கொண்ட பிறகு, நான் இலங்கை குடியுரிமை பெறுவதற்காக ஆவணங்களை சமர்பித்தேன். நான் மீண்டும் ஒரு தொழில் வாழ்க்கைக்கு திரும்பும் சாத்தியக்கூறுகளை நீக்கி விட்டதால், அமெரிக்கா திரும்பவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. எனது விசா

காலாவதி ஆகும் நிலையில் இருந்தது. அதனால் நான் குடியுரிமைக்கு விண்ணப்பித்தேன். செட்டியார் என்னை அலுவலகத்திற்கு அழைத்து சென்றார். நான் பிரதம மந்திரியை சந்தித்து பேசினேன். நான்கு மாதங்கள் கடந்தன, ஆனால் எங்களுக்கு அலுவலகத்தில் இருந்து எந்த தகவலும் வரவில்லை. §

அந்த ஆவணங்களின் நிலையை கவனிக்க, அந்த அலுவலகத்திற்கு எங்களை செட்டியாரின் நண்பர் அழைத்து சென்றார். அங்கே ஆவணங்கள் எந்த முன்னேற்றமும் இல்லாமல், அலமாரியில் இருந்தன. அந்த தகவல் யோக சுவாமிக்கு எட்டிய போது, "(அமெரிக்கா) சென்று பாலத்தை  கட்டு," என்று கூறினார். அதனால் எனக்கு தேவையான உடைமைகளை மட்டும் எடுத்துக்கொண்டு, மற்ற அனைத்தையும் ஒரு பெரிய பயணப்பெட்டியில் வைத்து தயானந்தாவிடம் சாவியை கொடுத்து விட்டேன். நான் அமெரிக்கா செல்லும் கப்பலில் ஏறினேன். பயணமும் கடினமாக இருந்தது. நான் சூயஸ் கால்வாய் வழியாக சென்று போஸ்டனில்  இறங்கி, அங்கிருந்து ஒரு உந்துவிசை விமானத்தின் மூலம் சான் பிரான்சிஸ்கோ சென்றடைந்தேன். விமானச் செலவு $80. கப்பலில் பயணச் செலவு $400. இவை அனைத்தையும் எனது பரம்பரை சொத்தில் இருந்து செலவழித்தேன். §

அமெரிக்கா திரும்பிய சுப்பிரமுனியாவின் கப்பல் டிசம்பர் 14, 1949 அன்று செட் துறைமுகம் வழியாக பயணம் செய்து, அட்லாண்டிக் கடலுக்கு குறுக்கே பயணம் செய்து, டிசம்பர் 29 போஸ்டன் சென்றடைந்தது. §

Page 36: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/36_guru05_03.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் இருபத்தி இரண்டு

# அமெரிக்காவில் சாதனா மேற்கொண்ட வருடங்கள்

மார்ச் 1950, கலிபோர்னியாவின் சாண்டா க்ரூஸ் நகரத்தில் முருக ஆசிரமத்தை ஶ்ரீ சுப்பிரமுனியா நிறுவினார். அவர் மேற்கத்திய நாடுகளுக்கு இந்து தெய்வங்களை அழைத்து வரும் ஆர்வத்துடன் இருந்தார். ஶ்ரீ சுப்பிரமுனியா தனது சமயப்பணியை தொடங்குவதற்கு, முப்பதாவது வயது வரை காத்திருக்குமாறு அவரது குருவுக்கு அவருக்கு அறிவுறுத்தி இருந்ததால், தனது தீட்சை மற்றும் உணர்தல் பக்குவம் அடைவதற்கு அனுமதி வழங்கி, அடுத்த ஏழு வருடங்களுக்கு ஆழ்ந்த சிந்தனை மற்றும் ஆன்மீக நாட்டங்களின் மீது கவனம் செலுத்தினார். §


> நான் யோக சுவாமி வழங்கிய அறிவுறுத்தல்களை பின்பற்றி, மேலும் விரிவாக்கம் பெறுவதற்கு அமெரிக்காவிற்கு திரும்பி வசிக்க ஆரம்பித்தேன். அவர் மகாசமாதி அடையும் வரை, அவர் என்னிடம் ஒவ்வொரு வருடமும் கந்தையா செட்டியார் மூலம் தொடர்பில் இருந்தார். நான் அமெரிக்கா திரும்பியதும், முதல் வேலையாக எனது புதிய சைவ இந்து பெயரை [சுப்பிரமுனியா] சட்டப்பூர்வமாக்கினேன். நீதிபதி சாமர்த்தியமாக செயல்பட்டு, எனது வேண்டுகோளுக்கு விரைவாக தீர்வு வழங்கினார். யோக சுவாமி எனக்கு தீட்சையை வழங்கியதும், *காக்னிசண்டபிலிட்டி* (புலனால் அறியும் திறன்) எனக்குள் விரிவாக்கம் பெற தொடங்கியது. §

ஆழ்ந்த சிந்தனை மேற்கொண்ட இந்த வருடங்களில், வெளியுலக சம்பவங்கள் மிகவும் குறைவு. அதைப் பற்றி வேறு தகவல்கள் எதுவும் இல்லை. ஒக்லாண்டு திரும்பி, அவர் மீண்டும் மதர் கிறிஸ்டினியுடன் தொடர்பு கொண்டார். ஏப்ரல் மாதத்தில் இருந்து உறுதிமொழிகளின் முதல் தொகுப்பை

இயற்ற ஆரம்பித்தார். அது பிற்காலத்தில் *காக்னிசண்டபிலிட்டி* என்ற தலைப்பில் வெளிவந்தது. §

அவர் குறைந்தபட்சம் இரண்டு வருடங்களுக்கு நாட்டிய உலகிற்கு திரும்பி, போஸ்டனில் அரங்கேறிய “டை ஃப்ளெடர்மாஸ்” என்ற இசை நாடகத்தை தயாரித்த, நியூ யார்க் நகரத்தின் மெட்ரோபொலிட்டன் ஓபராவுடன் ஈஸ்ட் கோஸ்ட் மற்றும் கனடாவிற்குள் பயணம் செய்தார். அவர் ‘மெட்டுடன்’ இருக்கும் போது, வானொலி மற்றும் தொலைக்காட்சியில் முதல் முறையாக தோன்றி, சிறிய பாத்திரங்களில் நடித்து, ஸ்கிரீன் ஆக்டர்ஸ் கில்ட் மற்றும் அமெரிக்கன் கில்ட் ஆஃப் வரைட்டி ஆர்டிஸ்ட்ஸ்களில் அங்கத்தினராக இருந்தார். அவர் தான் பல மாதங்கள் தொடர்ந்து பயணத்தில் இருந்ததை, சிறிய பெட்டியுடன் ஒரு இடத்தில் தற்காலிகமாக தங்கியதை, கிராமப்புறம் வழியாக பல நாட்கள் நீண்டதூர பயணம் மெற்கொண்டதைப் பற்றி பேசிக்கொண்டு இருப்பார். அவர் கற்றுக்கொண்டு, பயிற்சி செய்துக்கொண்டு, நாடகங்களில் பங்கேற்று மாதம் $1,000 சம்பாதித்தார். அந்த குழு தென் அமெரிக்கா பயணம் செய்த போது, அதிலிருந்து விலகினார். §

அதன் பிறகு வந்த வருடங்கள், பெரும்பாலும் தென்கிழக்கு நாடுகளான நியூ மெக்சிகோ மற்றும் அரிசோனாவில் கழிந்தன. இதை அவர் “சாதனா செய்து தனிமையில் இருந்த வருடங்கள்" என்று குறிப்பிட்டார். இந்திய மற்றும் மேற்கத்திய நடனங்கள், ஹட யோகம் மற்றும் இந்து அத்வைத தத்துவம் பற்றி கற்றுத்தந்து தனது தேவைகளை பூர்த்தி செய்துக்கொண்டார்; ஆனால் ஆன்மீக வேலையே அவரது உண்மையான வேலையாக இருந்தது, மற்றும் அவருக்கு தனது தனிமை பிடித்து இருந்தது. §



சிலோனில் இருந்து திரும்பிய பிறகு, ஸ்ரீ சுப்பிரமுனியா இரண்டு
வருடங்களுக்கு, தனது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய, நடனத்திற்கு

*திரும்பினார். அவர் நியூ யார்க் மெட்ரோபொலிட்டன் ஓபரா நிறுவனத்துடன் அமெரிக்கா மற்றும் கனடாவிற்கு பயணம் செய்தாலும், அவரது இதயம் தனிமை மற்றும் சாதானாவில் அதிக ஆர்வத்துடன் இருந்தது.*


……………………..§

1956, அவர் வடக்கில் இருந்த கொலராடோவின் சுத்தமான மலைகளுக்கு இடம் பெயர்ந்தார். அந்த இடம் இன்று சாதகர்கள் மற்றும் நவீன யுக யாசகர்களின் சரணாலயமாக விளங்குகிறது. இங்கே அவரது தியானங்கள் ஆழமாக இருந்தன. அவர் டென்வர் நகரத்தில் ஆழ்ந்த தியானத்தில் இருந்த போது, ஒரு மிகப்பெரிய ஆன்மீக அனுபவத்தை பெற்றார். அந்த அனுபவத்தின் போது, வெளிப்புற ஆன்மாவின் இறுதி உறை இருக்கும் இடத்தை, பக்குவமடைந்த ஆன்மா பிடித்துக்கொண்டது. அவர் இந்த சம்பவத்தை பிற்காலத்தில் “வெளிப்புற ஆன்மாவை இடம் பெயர்க்கும் *ஸ்வர்ணசரீரத்தை* முழுமையாக உணரும் நிலை" என்று குறிப்பிட்டார். அந்த சமயத்தில், தூல உடல் இருக்கும் இடத்தில் ஆன்மாவின் பொன்னுடல் முழுமையாக வாசம் செய்து, அதன் நிரந்தர வீடாக இருக்கும் ஆக்ஞா சக்கரம் நோக்கி பெற்ற நீளமான எழுச்சியையும், உடலுக்குள் தெய்வீக சக்தி இறங்குவதைவும் நிறைவு செய்கிறது. அவர் அதைப்பற்றி பின்னர் குறிப்பிட்டார்:§

பொன்னுடலாக இருக்கும் *ஸ்வர்ணசரீரம்,* பொன்னிற ஒளியால் உருவான ஒரு உடலாக விளங்குகிறது. பல பரசிவ அனுபவங்களுக்கு பிறகு, அது *சஹஸ்ரஹார* சக்கரத்திற்கு மேலிருக்கும் ஏழு சக்கரங்களில் இருந்து மெதுவாக *ஆக்ஞா* சக்கரத்திற்குள் இறங்குகிறது. அது ஆன்மாவின் புதிய *மூலாதாரமாக* மாறுகிறது. அதன் பிறகு அது *விசுத்த* சக்கரத்திற்குள் நுழைகிறது, மற்றும் அது அதன் *மூலாதாரமாக* மாறுகிறது. அதன் பிறகு அது *அனாஹத* சக்கரத்திற்குள் நுழைகிறது, மற்றும் அது அதன் *மூலாதாரமாக* மாறுகிறது. §

மனோஉணர்வு பார்வையுள்ள சூட்சும ஞானிகளின் கண்களுக்கு, சூட்சும உடல் முழுவதும் ஒரு பொன்னிற உடலாக தெரியும் வரை, *சஹஸ்ரஹாரத்திற்கு* மேலிருக்கும் ஏழு சக்கரங்களும் மிகவும் மெதுவாக இறங்குகின்றன. சூட்சும உடல் மிகவும் மெதுவாக பொன்னிற உடலுக்குள் கரைகிறது. அவ்வாறு நடப்பதை நான் பார்த்திருக்கிறேன். அதைத்தான் நமது பரம்பரையும் சம்பிரதாயமும் அனுபவத்தின் மூலம் அறிந்துள்ளது. அனுபவம் மட்டுமே உண்மையான அறிதலாக விளங்குகிறது—அந்த ஒரு அனுபவத்தை புத்தகத்தில், அதே அறிதலை உடைய மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம், ஆனால் அதே அனுபவத்தை பெறாதவர்களுக்கு அந்த ஒரு அறிதல் புரியாமல் இருக்கிறது. அது அவர்களுக்கு ஒரு கோட்பாடாக, ஒரு நல்ல கோட்பாடாக இருந்தாலும், அது ஒரு கோட்பாடாக அல்லது எழுதப்பட்ட ஒரு கருத்தாக மட்டுமே இருக்கிறது. §

சூட்சும உடல் மீது பொன்னிற உடல் தனது கட்டுப்பாட்டை நிலைநிறுத்தி, தூல உடலுக்குள் நுழையும் போது, அறிந்த அறிதல் தடையில்லாமல் வெளி வருகிறது. அது காரணத்தை கடந்து இருந்தாலும், அதற்கு முரணாக இருப்பது இல்லை. அது ஒரு துடிப்புணர்வுள்ள சாஸ்திரமாக விளங்குகிறது. இதனை பார்த்து, சாஸ்திரமாக மாறிய பதிவுகளை எழுதிய பழங்கால தீர்க்கதரிசிகள் எழுதிய படைப்புகளுக்கு இந்த அறிதல் முரணாக இல்லை. தனது முடிவான உண்மையின் தனிப்பட்ட உணர்தலின் மூலம் அதை சந்தேகிப்பவர்களை, அதை அலட்சியம் செய்பவர்களை, அதை அவமதிப்பவர்களை, இழிவுப்படுத்துபவர்களை எதிர்க்கும் அளவிற்கு சனாதன தர்மம் மிகவும் தலைசிறந்ததாக இருக்கிறது. §



டென்வர் 1956, சுப்பிரமுனியா வாழ்க்கையை மாற்றும் ஒரு ஆன்மீக அனுபவத்தை பெற்றார். அந்த அனுபவத்தின் போது அவரது வெளிப்புற

*ஆன்மாவை  பொன்னிற ஆனந்தமய கோசம் இடம்பெயர்த்தது. உடனே ஆயிரம் கிலோமீட்டர் தொலைவில் இருந்த யோக சுவாமி, “ஹான்சென் இறந்துவிட்டான்,” என்று அறிவித்தார்.*

……………………..§

இந்த பொன்னிற உடல், நிர்விகல்ப சமாதி அனுபவத்திற்கு பிறகு ஒரு பொன்னிற உடலாக  உருவாகத் தொடங்கும் போது, அது *சஹஸ்ரஹார* சக்கரத்துடன் தொடர்பில் இருக்கிறது. அதாவது, தூல உடலில் *சஹஸ்ரஹார சக்கரம்* பொன்னிற உடலின் இருப்பிடமாக விளங்குகிறது. பொன்னிற உடல் வளர்ச்சி அடையும் போது, இந்த சக்கரத்திற்கு பன்னிரண்டு அடிப்படை விரிவாக்கங்கள் இருக்கின்றன. உணர்தலை பெற்ற சந்நியாசி ஆழ்ந்த சிந்தனையின்  உயர்நிலைகளில் பயணம் செய்யும் போது, அவர் தனது பொன்னிற உடலில் சுதந்திரமாக பயணம் செய்கிறார்,  மற்றும் அவரால் மனிதநேயத்திற்கு உதவி செய்து சேவை செய்யமுடிகிறது. காலப்போக்கில், ஒரு விசைப்பகுதியைப் போன்று அவர்  *சஹஸ்ரஹார* சக்கரத்தின் மீது ஒரு உணர்வுள்ள கட்டுப்பாட்டை பெறுகிறார், மற்றும் அது அவரை உட்புற ஆகாசத்திற்குள் இயக்கி செல்கிறது. §

கடலுக்குள் ஊற்றப்படும் ஒரு குவளை தண்ணீரைப் போல, முக்திக்கு பிறகு, சிவலோகத்திற்குள் இந்த பொன்னிற உடல் தொடர்ந்து தன்னை சுத்திகரித்துக் கொண்டு, இறுதியாக சிவபெருமானுடன் ஐக்கியமாகிறது. அதே தண்ணீரை மீண்டும் தேடிப்பிடித்து, மீண்டும் குவளைக்குள் ஊற்ற முடியாது. இது உண்மையில் *ஸ்வர்ணசரீர விஷ்வகிராசா* என்கிற சிவபெருமானுடன் ஐக்கியமாதல் ஆகும். §

### இரண்டு மெய்ஞ்ஞான அனுபவங்கள்

டென்வர் அனுபவத்திற்கு பிறகு, யாழ்ப்பாண மக்களிடம் சற்குரு யோக சுவாமி, “ஹான்சென் இறந்துவிட்டான்" என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார். சில மாதங்கள் கழித்து, அவர் அமெரிக்காவில் இருந்து தனது பணி தொடங்கிவிட்டது என்று எழுதும் வரை, அந்த ஊர் மக்கள் அவர் உண்மையில் இறந்துவிட்டார் என்றே நினைத்தனர். அதன் பிறகு இறந்தது அவரது வெளிப்புற ஆன்மா என்பதை யாழ்ப்பாண தமிழர்கள் புரிந்துகொண்டார்கள். ஸ்ரீ சுப்பிரமுனியா  உயிருடன் இருந்து, யோக சுவாமி யுகித்த பணியை நிறைவேற்றுவதில் மும்முரமாக இருந்தார். §



*1950 களின் இறுதியில், சுப்பிரமுனியா மெய்ஞ்ஞான மனதின் யதார்த்தத்தை அனுபவித்தார்: அவர் ஆன்மீக சூத்திரங்களை எழுதிய டஜன் கணக்கான காகிதத் துண்டுகளை ஒவ்வொன்றாக எடுத்து, அதன் பின்புறத்தில் அவர் ஒரு விளக்கவுரையை எழுதினார். அது சூத்திரத்துடன் முழுமையாக பொருந்தியது.*

........................§


சூத்திரங்கள் வெளிப்பட்டு ஏழு வருடங்கள் கழித்து, சராசரி கடல் மட்டத்தில் இருந்து ஒரு மைல் தூர உயரத்தில், ராக்கி மலைத்தொடரில் அமைந்து இருக்கும் டென்வர் நகரத்தில், இந்த [காக்னிசண்டபிலிட்டி] சூத்திரங்களுக்கு விளக்கவுரைகள் எழுதப்பட்டன. எனது வெளிப்புற மனம் மெய்ஞ்ஞான அறிதலை முழுமையாக ஏற்றுக்கொள்ள கற்றுக்கொண்டு இருந்தது, மற்றும் ஆழமான ஆன்மீக மனம் அறிந்ததை அறிந்தவராக தன்னை தீவிரமாக உருவாக்கிக்கொண்டு இருந்தது. §

ஒரு நாள் விசித்திரமாக ஆன்மீக மனம் வெளிப்புற மனதிடம், ஒவ்வொரு சூத்திரத்தையும் இலக்கமிட்டு, தரையில் தலைகீழாக வைக்குமாறு கேட்டுக்கொண்டது. அவை தற்போது காக்னிசண்டபிலிட்டியின் பாகம் ஒன்று மற்றும் இரண்டாக இருக்கின்றன. நான் அதை சிரத்தையுடன் செய்தேன். அதன் பின் விளக்கவுரைகள் ஒன்றன் பின் ஒன்றாக, ஒரு குறிப்பிடத்தக்க இடைவெளியுடன் ஒரு சமயத்தில் மூன்று வார்த்தைகளாக வெளியிடப்பட்டன. உணர்வுள்ள மனம் எழுதுவதற்காக, ஒவ்வொரு வார்த்தையாக மெய்ஞ்ஞான மனம் சொல்லிக்கொண்டு இருக்கும். அது விசித்திரமாக ஏழாவது சூத்திரம், பதினான்காவது சூத்திரம் என்ற வரிசையில் தொடர்ந்து விளக்கவுரைகளை சொல்லிக்கொண்டு இருந்தது. எல்லாம் முடிந்த பிறகு, பின்பக்கத்தில் இலக்கமிட்டு தலைகீழாக வைக்கப்பட்டிருந்த சூத்திரங்களை திருப்பி,

அந்த சூத்திரத்துடன் பின்புறம் இருந்த விளக்கவுரையின் பொருத்தத்தை சோதிக்கவேண்டும் என்று இயல்பான தூண்டுதல் கேட்டுக்கொண்டது. என்ன அதிசயம்! அவை அனைத்தும் நன்றாக பொருந்தின! எல்லாம் கடந்த அனுபவத்தின் பின்விளைவாக இருக்கும் *ஞான மார்கத்தின்* மீது அதிக அக்கறையுள்ள நம்பிக்கையை பெற தொடங்கியிருந்தேன். *யோக மார்கத்தின்* நிறைவேற்றமாக இருக்கும் அதை நாம் பரசிவ என்று அழைக்கிறோம். §

வருடங்கள் செல்ல செல்ல, மனதின் உயர்நிலையில் இருந்து வெளிப்புறத்திற்கு, இந்த ஒத்திகை பார்க்காத ஞானத்தை வெளிக்கொண்டு வரும் செயல்முறை, எனது தினசரி வாழ்க்கையின் அங்கமாகியது. நான் அதை "அன்றாட வாழ்க்கைக்கு தேவைப்படும் கருவிகளில் ஒன்று" என்று குறிப்பிடுவேன். இந்த மனோஉணர்வு சக்திகள் வளர்ச்சி அடைவதற்கு பல வருடங்கள் ஆகும். ஆனால் சரியான தருணங்களில், முந்தைய பிறவியில் இருந்து கொண்டு வந்த சக்திகள் உடனடியாக தோன்றுகிறது மற்றும் அவை பேசும், கேட்கும் மற்றும் உணரும் திறனை போல எளிதில் பயன்படுத்தக்கூடியதாக இருக்கிறது. §

சமய அமைப்புக்களை பற்றிய ஆய்வு ஸ்ரீ சுப்பிரமுனியாவின் தீவிர ஆர்வங்களில் ஒன்றாக விளங்கியது. மேற்கத்திய கலாச்சாரம் மற்றும் நவீன தொழில்நுட்ப யுகத்தில், சைவ இந்து சமயத்திற்கு மிகவும் நிலையான மற்றும் எதிர்பார்த்த பலனை தரத்தக்க வாகனத்தை கண்டுபிடிக்க, அந்த ஆய்வை மேற்கொண்டார். அவருக்கு இறுதியில் அமெரிக்க தேவாலய அமைப்பு பொருத்தமானதாக தோன்றியது. §



*ஒரு நாள் சுப்பிரமுனியா பீனிக்ஸ் நகரத்தில் பயணம் செய்த போது, அவரது ஆன்மீக குரல் அவரிடம் பேசியது. அந்த குரல் அவரிடம், பரந்து விரிந்த புறநகர் பகுதியில் திருப்பங்கள் நிறைந்த ஒரு சிக்கலான பாதை வழியாக செல்லுமாறு அறிவுறுத்தியது. அவர் அதை அக்கறையுடன் பின்பற்றினார். அது இரண்டு*

*மணி நேரங்கள் கழித்து, பயணத்தை தொடங்கிய இடத்திற்கே அழைத்து வந்தது.*

........................§

“உனக்கு முப்பது வயதாகும் வரை, நீ எதையும் தொடங்க வேண்டாம். நீ அதிகம் பக்குவமடைய வேண்டும்,” என்று யோக சுவாமி என்னிடம் கூறினார். அது வரை நான் கண்காணித்து, அனுபவங்களை பெற்று கற்றுக்கொள்ள வேண்டும். அதனால், நான் எனது முப்பதாவது வயது வரை பொறுமையாக காத்து இருந்தேன். இறுதியாக நான் ஒரு அமைப்பை தொடங்கி நடத்தவேண்டும் என்பதை கவனத்தில் கொண்டு, நான் அரிசோனா மாகாணத்தில் இருந்த பீனிக்ஸ் நகரத்திற்கு சென்றேன். அதை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பதை நான் தெரிந்துக்கொள்ள விரும்பினேன்! அதனால் நான் வேதாந்த சொசைட்டி, தி ரோசிக்ரூசியன் ஆர்டர், பரமஹம்ச யோகானந்தா அமைப்பு என்று மற்ற நிறுவனங்களை சுற்றிப்பர்த்து, அவர்கள் எதிர்கொண்ட பிரச்சனைகளை ஆய்வு செய்தேன். உங்களுக்கு பிரச்சனைகள் இல்லையென்றால், தானாக வெற்றி கிடைத்து விடும் என்பதால், நாம் வெற்றிகளை ஆய்வு செய்யவேண்டிய அவசியம் இல்லை. நான் அவர்கள் எதிர்கொண்ட பிரச்சனைகள் மற்றும் அவர்களின் தவறுகள் மற்றும் தோல்விகள் அனைத்தையும் ஆய்வு செய்தேன். §

எனது 23 ஆவது வயது முதல் 30 ஆவது வயது வரை, அமெரிக்கா முழுவதும் நான் மேற்கொண்ட பயணத்தின் போது பல்வேறு கிளைகள், தத்துவங்கள் மற்றும் மக்களுக்கு உதவி செய்வதற்காக தத்துவ மற்றும் மீமெய்யியல் சிந்தனைகளில் வழங்கப்பட்ட உத்திகளை கவனித்த போது, ஒருவர் தனது வாழ்க்கையில் ஆன்மீக விரிவாக்கம் பெறுவதற்காக அவற்றை எவ்வாறு  பயன்படுத்த வேண்டும் என்ற தெளிவான அறிவுறுத்தல்கள் இல்லாமல், தத்துவம் மற்றும் மீமெய்யியல் சார்ந்த தகவல்களே அதிகமாக இருப்பதை கவனித்தேன். அந்த தேவையை பூர்த்தி செய்யும் ஆசை எனக்குள் அதிகமாக வளர்ந்துக்கொண்டே சென்றது. மேற்கத்திய நாட்டவர்கள் கற்பதற்கு ஒரு விரிவான, படிப்படியான, நல்ல மேற்பார்வையுள்ள செய்முறை தேவை என்பதை நான் உணர்ந்தேன். அந்த செய்முறை அவர்களுக்கு அப்போது கிடைக்கவில்லை. மீமெய்யியலில் படிப்படியாக பயிற்சி அளித்தவர்கள், இறைவனையும் மனிதனையும் தனியாக பிரித்து, பிரித்ததை மீண்டும் ஒன்று சேர்க்கும் உத்திகளில் பயிற்சி அளித்தனர். இந்த தத்துவ பிரிவு, மனிதனின் உட்புற பாதுகாப்பை வெளிக்கொண்டு வராமல், நிலையற்ற பதட்டத்தை ஏற்படுத்தியது. நல்ல ஆசிரியர்கள் கிழக்கில் இருந்து வந்து கற்றுத்தந்தாலும், அவர்கள் ஒரு தனிப்பட்ட முறையில் அல்லது ஒரு அமைப்பாக ஒருவரின் விரிவாக்கத்தை நீடித்த, நேர்மறையான, நேரடியான கண்காணிப்பை வழங்க நீண்டகாலம் நிலைத்து இருக்கவில்லை. §

இறுதியாக, கற்பிக்கும் பணியை தொடங்குவதற்கு உரிய நேரம் வந்தது, மற்றும் நான் பீனிக்ஸ் நகரத்தில் ஒரு அமைப்பை தொடங்கலாம் என்று நினைத்தேன். அதனால் நான் அமைப்புக்களின் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று, “நான் ஒரு அமைப்பை தொடங்க இருக்கிறேன். அதற்கு என்ன செய்யவேண்டும்?” என்று கேட்டேன். “நீங்கள் சின்னம் தயாரிப்பவரிடம் சென்று, உங்கள் சங்கத்திற்கு அறிகுறியாக ஒரு சின்னத்தை தயார் செய்துகொள்ள வேண்டும்,” என்று அங்கிருந்த பணியாளர் தெரிவித்தார். “நான் ஏதாவது ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டுமா?” என்று கேட்டேன். அவர் அதற்கு, “இந்த மாகாணம் ஆன்மீக நடவடிக்கைகளை வரவேற்கிறது. நீங்கள் ஒரு சின்னத்தை தயார் செய்தால் போதும்,” என்று அவர் பதில் அளித்தார். §

நான் பொறுமையாக முடிவு செய்துக்கொண்டு, எனது சிறிய வாகனத்தில் பயணம் செய்த  சமயத்தில், இன்னொரு அனுபவத்தை பெற்றேன். எனது உட்புற ஆன்மா வெளிப்புற ஆன்மாவிடம், “அந்த அறிகுறியை பார்,” என்றது. நீங்கள் ஃபீனிக்ஸ் நகரத்திற்கு சென்று இருந்தால், அந்த நகரம் முழுவதும் ஒரு சமவெளி என்பது உங்களுக்கு தெரிந்திருக்கும். நான் அங்கே கட்டிடங்கள் மற்றும் வீடுகள் நிரம்பி இருந்த ஒரு மிகப்பெரிய சமவெளி வழியாக, வாகனத்தில் பயணம் செய்துக்கொண்டு இருந்தேன். “அந்த அறிகுறியை பார். அந்த அறிகுறி சின்னத்தை நினைவில் வைத்துக்கொள்.”  அது ஸ்பிருஸ் ஸ்ட்ரீட். நான் அந்த சின்னத்தை நினைவில் வைத்துக்கொண்டேன். அதன் பிறகு நான், “சரி, நான் எனது உட்புற ஆன்மா சொல்வதை மட்டும் செய்யப்போகிறேன்.” உட்புற ஆன்மா, “இருபது வீடுகள் முன்னே சென்று, இடது புறம் திரும்பி பத்து வீடுகள் முன்னே சென்று, வலது புறம் திரும்பி ஐந்து வீடுகள் முன்னே சென்று, இடது புறம் திரும்பி, இரண்டு வீடுகள் முன்னே சென்று, எதிர் திசையில் திரும்பி பத்து வீடு செல்லவும்,” என்று தொடர்ந்து இரண்டு மணி நேரத்திற்கு சொல்லிக்கொண்டு இருந்தது, நானும் அது சொல்லும் திசையில் வாகனத்தை இயக்கிக்கொண்டு இருந்தேன். அதன் பிறகு அது, “வாகனத்தை நிறுத்தி, அறிகுறி சின்னத்தைப் பார்!” என்றது. ஸ்பிருஸ் ஸ்ட்ரீட்! நான் என் மீது அளவுகடந்த நம்பிக்கை வைத்து இருந்தேன்.§

அதன் பிறகு நான் சான் பிரான்சிஸ்கோ சென்று, அங்கே ஒரு அமைப்பை உருவாக்கினேன். நான் அங்கே சிறிய உரையை நிகழ்த்தினேன், மற்றும் அங்கிருந்த சிலர் நான் நிகழ்த்திய உரையில் உண்மையில் ஆர்வத்துடன் இருந்தார்கள். கலிபோர்னியாவில் ஆவணங்களை சமர்ப்பித்தல், வரிவிலக்கு மற்றும் மேலும் பல விஷயங்கள் இருந்ததால், “நான் இந்த அமைப்பை எவ்வாறு திறம்பட இயக்குவது? எனக்கு ஒரு வழக்கறிஞர் இருந்தால் சரியாக இருக்கும்,” என்று சிந்தித்தேன். அப்படியென்றால் நான் வழக்கறிஞருக்கு எங்கே செல்வது? “எனக்கு தெரியும்" என்று எனக்கு நானே உறுதி

அளித்துக்கொண்டு, FBI கூட்டு புலனாய்வுக் குழுமத்தை நாடி சென்றேன். அந்த குழுமத்திற்குள் சென்று, “நான் இந்த அமைப்பை இயக்கி வருகிறேன். நீங்கள் என்னை ஒரு வழக்கறிஞருக்கு அறிமுகப்படுத்த முடியுமா?” என்று கேட்டேன். அவர் அறிமுகப்படுத்திய நபர், பல ஆண்டுகள் எங்களுக்கு வழக்கறிஞராக இருந்தார். எனக்கு FBI எப்போதும் தொல்லை தரமாட்டார்கள் என்று அவர் சொல்லி, அந்த குழுமத்திற்கு தேவையான ஆவணத்தை தயார் செய்ய எனக்கு உதவி செய்தார்.§

எனக்கு முப்பது வயது நிரம்பியதும், என்னை நாடி மாணவர்கள் வருவார்கள் என்று என்னிடம் கூறப்பட்டது, அதனால் நான் காத்து இருந்தேன். அவ்வாறே நிகழ்ந்தது. இவ்வாறு இமாலயன் அகாடமி 1957 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. §

**சான் பிரான்சிஸ்கோவில் குடிபுகுதல்**

பீனிக்ஸ் நகரத்தை விட்டு கிளம்பிய பிறகு, ஸ்ரீ சுப்பிரமுனியா சிறிது காலத்திற்கு லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் மாணவர்களுக்கு யோகப்பயிற்சியை கற்றுத்தந்தார். ஆனால் விரைவில் அவர் சான் பிரான்சிஸ்கோவிற்கு நகர்ந்தார். அவர் சான் பிரான்சிஸ்கோவின் மையப்பகுதியில் ஸ்மால் புஷ் ஸ்ட்ரீட் குடியிருப்பில் முதல் செய்முறை யோக வகுப்பை நடத்தினார். இரைச்சலான தெருவில் இருந்த தொடர்ச்சியான கூச்சலில் இருந்து விலகி சில மாடிகள் மேலே, சில ஆர்வமுள்ள மாணவர்களை கொண்ட முதல் குழு, தங்களை பற்றிய ஆய்வை தொடங்கி, சாட்சியின் புதிய உலகை விழிப்படைய செய்தார்கள். §


அவர் பெண்கள் அதிகமாக இருந்த, ஒரு முதியவர்களின் குழுவிற்கு, நகரத்தில் இருந்த ஒரு சிறிய ஆன்மீக தேவாலயத்தில் உரை வழங்கினார். அந்த காலத்தில், யோகம் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் மிகவும் குறைவு, மற்றும் அதைப்பற்றி பலர் அறிந்திருக்கவில்லை. அந்த சமயத்தில் மக்கள் தியாசோபி மீது அதிக ஆர்வத்துடன் இருந்தார்கள், மற்றும் கிறிஸ்டியன் சயன்ஸின் சுகமளிக்கும் பணி மீது மக்களின் ஆர்வம் அதிகரித்துக் கொண்டிருந்தது. §

அவரது பிறந்த நாளான ஜனவரி 5, 1957 அன்று, அவர் தங்களுக்கு எப்போதிலிருந்து கற்றுக்கொடுக்க ஆரம்பிக்கிறார் என்று ஆர்வத்துடன் கேட்டனர். “இப்பொழுதே ஆரம்பிக்கலாம்!” என்று அவர் பதில் அளித்தார். அவர் அவர்களுக்கு சில மாதங்கள பயிற்சி அளித்து, அவர்கள் எவ்வாறு பயிற்சி செய்கிறார்கள் என்று கவனிக்கப்போவதாக விளக்கம் அளித்தார். எல்லாம் திட்டப்படி நடந்து, அவர்கள் நன்றாக பயிற்சி செய்து பயன்பெற்றார்கள் என்றால், தான் தனது பணியை தொடரப்போவதாக அவர் கூறினார். §

அந்த முதல் மாணவ குழுவினரின் சராசரி வயது ஐம்பதாக இருந்தது. அவர்கள் பெரும்பாலும் மனோஉணர்வு சக்திகள் அல்லது ஆன்மீகத்தில் நாட்டத்துடன் இருந்தார்கள். அதில் சிலர் உருவமற்ற சக்திகளின்

வழிகாட்டலை பெற்று இருந்தார்கள். அவர்கள் இறந்தவர்களை தொடர்பு கொள்வது மற்றும் அதைப்போன்ற மற்ற நிகழ்வுகளில் ஆர்வம் காட்டினார்கள். அவர்கள் மனதை குணப்படுத்துதல், சைக்கோமெட்ரி, இரசவாதம் மற்றும் ஒளி உடல்களை கவனிப்பது பற்றி தெரிந்துகொள்ள ஆர்வத்துடன் இருந்தார்கள். தனது வாழ்நாள் முழுவதும் கற்று அனுபவித்த இந்த பகுதிகள், அவரது பல உரைகளின் தலைப்புக்களாக விளங்கின. அவர் *காக்னிசண்டபிலிட்டி* சூத்திரங்களைப் பற்றியும் பேசி, ஒருமுகச்சிந்தனை மற்றும் தியானம், நிற உளவியல், சுவாசித்தல் மற்றும் மனதின் ஐந்து நிலைகளின் அடிப்படைகளை கற்றுத் தந்து, ஹட யோகம் மற்றும் நடனத்தைப் பற்றி அறிவுறுத்தல்களை வழங்கினார். அவர் எப்போதும் ஆத்ம ஞானத்திற்கும், மனிதன் தனது சொந்த மெய்ஞ்ஞான மனநிலையை விழிக்கவைக்கும் சாத்தியகூறுகளுக்கும் முக்கியத்துவம் அளித்தார். அந்த நாட்களில், மெய்ஞ்ஞானம் என்ற சொல்லை யாரும் அறிந்திருக்கவில்லை. §

ஏப்ரல் மாதத்தில், ஸ்ரீ சுப்பிரமுனியா ஒரு நிரந்தர மையத்திற்கு தனது ஆசிகளை வழங்கினார். அந்த மாதம் சட்டர் ஸ்ட்ரீட்டில் இருந்த கோயில் திறக்கப்பட்டது. அதில் சிலோனின் விவசாயத்துறை அமைச்சர் ஸ்ரீ ஆறுமுகம், கௌரவ விருந்தினராக கலந்துகொண்டார். §



*சுப்பிரமுனியா தனது ஆன்மீக பணியை தொடங்குவதற்கு முன்பாக ஏழு வருடங்கள் சாதனா மேற்கொண்ட போது, அவர் ஹட யோகம் மற்றும் நடனத்தின் மூலம் சம்பாதித்துக் கொண்டிருந்தார்.*

........................§

நான் ஒரு குருவாக மாணவர்களின் தேவைகளுக்கு பதில் அளிக்கும் போது, “சும்மா இருப்பதே, இந்த பூமியில் தலைசிறந்த செயலாகும்" என்று எல்லா குருமார்களும் உபதேசித்த அடிப்படை தத்துவத்துடன் தொடங்கினேன். அப்போது விரிவாக்கம் பெற்றுக்கொண்டு


இருந்தவர்களின் சமய சக்திகளை கட்டுப்படுத்தி நல்ல முறையில் பயன்படுத்துவதற்காக, நான் ஒரு கோயிலை ஸ்தாபனம் செய்தேன். மாணவர்கள் உற்சாகமடைந்து, கோயிலுக்கு தங்கள் ஆதரவை வழங்கினர். அதன் பின்னர் அவர்கள், கோயிலுக்கு வரமுடியாதவர்கள் வசதிக்காக, நான் வழங்கிய ஊக்கமளிக்கும் உரைகள் மற்றும் போதனைகளை அடக்கிய வாராந்திர பாடங்களின் வகுப்பைப் போன்று எழுத்து பிரதிகளை கேட்டார்கள். நான் துறவற வாழ்க்கையை வாழ விரும்பியோரின் வேண்டுகோளுக்கு இணங்கி, ஒரு துறவற சமூகத்தையும் தொடங்கினேன். அந்த துறவிகள் பதிப்பிட்ட பாடங்கள், இன்று தி மாஸ்டர் கோர்ஸ் (பிரதான வகுப்பு) வடிவில் உள்ளது. §

முக்கியமான இந்த வருடங்களின் போது, மதர் கிறிஸ்டினியின் தாக்கம் அதிகமாக இருந்தது. அவர் ஒரு வலுவான மூதாய் சக்தியாக இருந்துக்கொண்டு, போதனைகளை கிறுத்துவ ஆன்மீக பின்னணிக்கு திருப்பிக்கொண்டு இருந்தார். அவரிடம் நீண்டநாள் மாணவனாக, 47 வருடங்கள் இளையவராக இருந்த ஸ்ரீ சுப்பிரமுனியா, அவருக்கு இந்த விஷயத்தில் ஆதரவு அளித்தார். மதர் கிறிஸ்டினிக்கு ஸ்ரீ சுப்பிரமுனியா ஆன்மீக தலைவரின் உதாரணமாக மாறினார் மற்றும் மதகுரு, ஆலோசகர், போதகர், பாவமன்னிப்பு கேட்கும் பாதிரியாராக இருந்த அவரது வளர்ப்புமுறையை தனக்கு இலட்சியமாக்கிக் கொண்டார். கிறிஸ்டினி தான் உருவாக்கிய அமைப்பிற்கு கிறிஸ்டியன் யோகா சர்ச் என்று பெயரிட்ட போது, அவர் அதன் காரணத்தை புரிந்துகொண்டார். §

அச்சகத்தின் இயல்பான சக்தியை அறிந்து, புத்தம்புதிய உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப கருவிகள் மீது வாழ்நாள் முழுவதும் ஆசை இருந்ததால், அவர் ஒரு மிமியோகிராஃப் இயந்திரத்தை வாங்கினார். அவர் அதனை நிகழ்ச்சி நிரல்கள், உரைகள் மற்றும் நிகழ்ச்சிகள் மற்றும் அந்த தேவாலயத்தின் முதல் வெளியீடுகளாகவும் தனது முதல் பதிப்புக்களாகவும் *இராஜ யோக* மற்றும் *ஜெம்ஸ் ஆஃப் விஸ்டம்* என்ற தனது புத்தகங்களை அச்சிடவும் பயன்படுத்திக் கொண்டார். அந்த இயந்திரத்தை பயன்படுத்துவது பற்றி ஸ்ரீ சுப்பிரமுனியா தானும் கற்றுக்கொண்டு தனது சமூகத்தில் இருந்த துறவிகளுக்கும் கற்றுக்கொடுத்தார். §

மிமியோகிராஃப் எனும் ஆபீஸ் பிரின்டிங் டெக்னாலஜி ஃபோட்டோகாபியர்சுக்கு முன்பாக வந்திருந்தது. ஸ்டேன்ஸில் மூலம் காகிதத்தில் நகல்செய்யும் இந்த கருவி பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கண்டுபிடிக்கப்பட்டு, 1980 களில் பயன்படுத்தப்பட்டது. அவர் பிற்காலத்தில், இந்த துர்நாற்றம் வீசும் அசுத்தமான தொழில்நுட்பத்தின் நீளம்-ஊதா நிறங்கள் கலந்த சாயங்களினால் கரை படிந்த கைகளுடன், நள்ளிரவு நேரத்தில் தனது மடவாசிகளிடம் அதிக எண்ணிக்கையில் சிறிய கட்டுரைகள் மற்றும் துண்டு பிரசுரங்களை அச்சிட சொல்வார். அது வாழ்நாள் முழுவதும் அவர் மேற்கொண்ட அச்சிடும் பணியின் தொடக்கமாக விளங்கி, அவர் பணியில் முக்கிய அங்கமும் வகித்தது. §

இரண்டு வருடங்கள் கழித்து, தொடர்ந்து வளர்ந்துக்கொண்டு இருந்த குழுவிற்கு சட்டர் ஸ்ட்ரீட் கட்டிடம் சிறியதாக இருந்ததால், அவர்கள் தங்கள் தேவாலயத்திற்கு நகரத்தில் ஒரு பெரிய இடத்தை தேடினார்கள்.§



*சிறந்த முறையில் தகவல் தெரிவிக்கும் திறனுடன் இருந்த ஸ்ரீ சுப்பிரமுனியா, தொடர்ந்து பதிவு செய்து, உரைகளை வழங்கி அச்சிட்டுக்கொண்டு இருந்தார். ஆரம்பக்காலத்தில் ஒரு சிக்கலான அச்சிடும் தொழில்நுட்பமாக இருந்த மிமியோகிராஃப் இயந்திரத்தை தானே இயக்கினார்.*

........................§

அப்போது ஒரு அனாமதேய நபர், சிறிய காணிக்கை பெட்டியில் ஆயிரம் ரூபாய் ரொக்கத்தை பொட்டுவிட்டு சென்றார். அந்நாளில் அது பெரிய தொகையாக இருந்தது. நான் வாடகைக்கு தங்கியிருந்த ஒரு சிறிய இடத்தில், என் தலை மீது சிவபெருமான் நடனமாடும் காட்சியை கண்டேன். எனக்கு உடுக்கை ஒலியுடன் மற்ற சத்தங்களும் கேட்டன. மேலும் அதே காட்சியில் நான் ஒரு பெரிய கதவையும் கண்டேன். நான் அதே கதவை சாக்ரமென்டோ ஸ்ட்ரீட் கோயிலில் பார்த்த போது, அந்த இடம் தான் எனக்கு காட்சியில் தோன்றியது என்பதை தெரிந்துகொண்டேன். அது பிற்காலத்தில் அமெரிக்காவின் முதல் இந்து கோயிலாக மாறியது. §

3575 சாக்ரமென்டோ ஸ்ட்ரீட்டில் ஒரு கட்டிடம் வாங்குவதற்கு, அவர் அந்த $1,000 நன்கொடையை முன்பணமாக செலுத்தினார். அது ஒரு குறுகலான, இரண்டு குடியிருப்பாக, பின்புறத்தில் ஒரு சிறிய தோட்டத்துடன் இருந்தது. அது பார்க் பிரஸிடியோவிற்கு அருகில் அமைந்து இருந்தது. அருகில் இருந்த குடியிருப்பு லாரெல் ஹைட்ஸ் என்று அழைக்கப்பட்டது. அங்கே குடியிருப்புக்கள், சிறிய வியாபாரங்கள், பூக்கடைகள், உணவகங்கள் மற்றும் சிறிய கடைகள் அமைந்து இருந்தன. அது ஒளிப்பட நிலையமாக பயன்படுத்தப்பட்டு, சீர்குலைந்த நிலையில் இருந்தது. தீயணைப்பு துறையின் நெறிமுறைகளை பின்பற்ற, அந்த கட்டிடத்தை முழுமையாக புதுப்பிக்க வேண்டியிருந்தது. அவரது மாணவர்கள் அந்த கட்டிடத்தில் அடுத்த ஒன்று-இரண்டு வருடங்களுக்கு, தினமும் தங்கள் வேலையில் இருந்து திரும்பி, பல மணி நேரங்களுக்கு கர்ம யோகப்பயிற்சி மேற்கொண்டு வந்தனர். முடிவில், அவர்கள் அமெரிக்காவில் பொதுமக்களுக்கு முதல் இந்து கோயிலை கட்டவிருந்தனர். 1959 ஆம் ஆண்டு அதன் திறப்பு விழாவின் போது, அமெரிக்காவில் பயணம் மேற்கொண்டு இருந்த, சிலோனின் உலகப்புகழ் பெற்ற கண்டி நடனக்குழுவின் நிகழ்ச்சியை நடத்தப்பட்டது. §

முக்கிய மண்டபத்தில் ஒரு பீடம் அமைக்கப்பட்டது, மற்றும் தோரணவாயில் வடிவில் இரண்டு மாபெரும் கதவுகள் தயாரிக்கப்பட்டன. ஒருவர் மாபெரும் கதவுகள் வழியாக நுழைந்து, இரண்டு ஊதா நிற திரைகளை கடந்ததும் மரத்தில் செய்த இருக்கைகள், கல்லில் செதுக்கிய ஒரு பீடம் மற்றும் நீர்வீழ்ச்சி மற்றும் ஒரே கல்லில் செய்த பிரசங்க மேடையுடன் முழுமையாக இருந்த ஒரு சிறிய பிரதான தேவாலயத்திற்குள் செல்கிறார். அவர் இந்த பிரசங்க மேடையில் இருந்து, ஃபாதர் சுப்பிரமுனியா என்று அழைக்கப்பட்டு, யோகம் மற்றும் மனநிலைகள் மற்றும் இந்து சிந்தனை

பற்றி மத போதனைகளை வழங்கினார். எப்படி சிறப்பாக வாழ்வது, ஆன்மீக ஒளியை எப்படி விழிக்க வைப்பது, உள்ளுணர்வுகள் மற்றும் பழக்கங்களை எப்படி வெற்றிக்கொள்வது மற்றும் ஆன்மீகத்தைப் பற்றி அவர் பேசினார். §

சேவைகள் பொதுமக்களுக்கு திறக்கப்பட்டு இருந்தாலும், மேல்மாடி ஃபாதர் சுப்பிரமுனியா வசிப்பதற்கும், தேவாலய அலுவல்களுக்கும் ஒதுக்கப்பட்டு இருந்தது. தோட்டத்துடன் முதல் தளத்தில் இருந்த அறைகள் அன்பர்களுக்கு தனிப்பட்ட ஆலோசனை, ஒரு சமையலறை, பதிவு செய்யும் அமர்வுகள் மற்றும் குழு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டது. §

இந்த சபை புதிய வீட்டில் குடிபுகுந்ததும், ஸ்ரீ சுப்பிரமுனியா முதல் புனித மதச்சடங்கு மற்றும் தீட்சைகளை வழங்கினார். அவர் முதல் யோக சமூகத்தை தொடங்கி, இந்த சபைக்கு சேவை செய்ய முதல் துறவிகளின் குழுவிற்கு தீட்சை வழங்கினார். எதிர்காலத்தில் இந்த பணியின் நடவடிக்கைகளில் ஒரு நிலையான ஒழுங்கை நிறுவினால், அது எல்லோருக்குள்ளும் நிலையான முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்று அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அந்த விதியை தொடர்ந்து கடைப்பிடித்து வந்தார். §




*சான் பிரான்சிஸ்கோவில் கோல்டன் கேட் பிரிட்ஜுக்கு அருகில், அமெரிக்காவின் முதல் இந்து கோயிலை ஸ்ரீ சுப்பிரமுனியா நிறுவினார். இங்கே அவர் பரமாத்துமாவை நோக்கி அழைத்து செல்லும் அத்வைத பாதையை கற்றுத்தந்தார்.*

……………………§

ஸ்ரீ சுப்பிரமுனியா தானே முன் உதாரணமாக இருக்கவேண்டும் என்பதற்காக, இலையுதிர் காலத்தில், மரின் கவுண்டியில் இருந்து வட சான் பிரான்சிஸ்கோ விரிகுடா பகுதியை நன்றாக பார்வையிட உதவும், 2,500 அடி உயர தமல்பைஸ் மலை உச்சியில் முதல் சூரியோதய சேவையை தொடங்கினார். தனது அமைப்பு நன்றாக செயல்படத் தொடங்கி, அதை ஸ்தாபனம் செய்து பன்னிரண்டு வருடங்கள் நிறைவடையும் வரை, இந்த

மாதாந்திர யாத்திரையை தொடரவேண்டும் என்று அவர் உறுதி எடுத்துக்கொண்டார். §

ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும், மற்ற மங்களகரமான நிகழ்வுகளின் போதும், விடியற்காலையில் ஆசிகளை பெறுவதற்கு மற்றும் 108 மெழுகுவர்த்திகளை ஏற்றுவதற்கு, அவரது சீடர்கள் அந்த கோயிலில் கூடினார்கள். கோல்டன் கேட் பிரிட்ஜை கடந்து, மலையில் சிறிது தூரம் கூட்டாக வாகனங்களில் சென்று, மலை உச்சியில் சூரியோத பிரசங்கம் மற்றும் தியானத்தை செய்வதற்கு, ஶ்ரீ சுப்பிரமுனியா நாற்பது நிமிட நடைப்பயணத்தை வழிநடத்தி சென்றார். அவர் வெளிநாடு செல்லாத சமயத்தில், மழை பெய்தாலும் வெயில் அதிகமாக இருந்தாலும், இந்த மாதாந்திர தீர்த்த யாத்திரையை அவர் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார். அவர் இவ்வாறு 154 யாத்திரைகளை மேற்கொண்டார். §

> நாங்கள் அங்கே ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் ஒரு யாத்திரை மேற்கொண்டோம். அந்த மலையில் இருந்த ஒரு பெரிய பாறையை, நாங்கள் சிவலிங்கமாக பாவனை செய்தோம். அது எங்களது வழக்கமாக இருந்தது. நான் சிறு வயது முதலே பாலே நடன பயிற்சியின் மூலம் ஒழுங்குமுறையுடன் வாழ்ந்ததால், ஒரு ஒழுங்குமுறையுடன் இயங்குவது எனக்கு சுலபமாக இருந்தது. நான் அந்த அமைப்பை நல்ல முறையில் நடத்தி வந்தேன். ஏதாவது ஒன்று எப்போதும் நடந்துகொண்டு இருந்தது, மற்றும் நான் அதை தொடர்ந்து கொண்டு இருந்தேன். §

வாரத்தின் முக்கிய நாளாக இருந்த ஞாயிறு காலையில், அரை டஜன் துறவிகள் கோயிலை சுத்தம் செய்து காலை 11 மணி சேவைக்கு தயார் செய்துக்கொண்டு இருப்பார்கள். அவர்கள் அலமாரிகளில் நிரப்பி வைத்த புத்தகங்கள், நறுமண பொருட்கள் மற்றும் மெழுகுவர்த்திகளை, அந்த சபையின் உறுப்பினர்கள் விரும்பி வீட்டிற்கு வாங்கி செல்வார்கள். அந்த கோயில் சுமார் 50 பக்தர்கள் கூடும் அளவிற்கு போதுமான இடவசதியுடன் இருந்தது. அந்த கோயிலின் நடைக்கூடங்களில் மக்கள் நின்றுக்கொண்டும் உட்கார்ந்துகொண்டும், அது பெரும்பாலும் நிரம்பி இருந்தது. ஞாயிற்றுகிழமை சேவை இரவு 8 மணிக்கு நடைபெற்றது. ஃபாதரின் வழிகாட்டலுடன் துறவிகள் எழுதிய ஆன்மீக பாடல்கள் பாடப்பட்டன.§

அவர் பீடத்திற்கு பின்னால் இருந்த கதவு வழியாக அறையில் நுழைவார். அந்த சிறிய அறையை அவரது உயரமான உருவமும் நல்ல குரல் வளமும் ஆதிக்கம் செலுத்தியது. அவர் எப்போதும் குறிப்பை எழுதிக்கொண்டு பேசியது இல்லை. அது சுத்தமாக இயல்பாக இருந்தது, மற்றும் அதை “உட்புற ஆகாசத்தில் இருந்து வருவதாக" குறிப்பிடுவார். எல்லோரும் பார்ப்பதற்கு கோயிலுக்கு வெளியே சுவரொட்டியில் ஒரு தலைப்பு சிரத்தையுடன் எழுதப்பட்டு இருக்கும், ஆனால் அன்று அவர் வழங்கவிருந்த பிரசங்கம் பற்றிய ஒரு சிறு தடயமாகவே இருக்கும். §


ஒரு முறை அவர் பிரசங்கத்தின் தலைப்பாக "இயேசு கிறுத்து ஒரு யோகியா?" என்று எழுதியிருந்தார். இதற்கு பதிலை அறிய விரும்பி, வழக்கத்தை விட அதிகமான மக்கள் கூட்டம் கூடியது. அவர் அன்றைய பிரசங்கத்தை, "நமது இன்றைய தலைப்பு 'இயேசு கிறுத்து ஒரு யோகியா?' ஆமாம், அவர் யோகி தான்," என்று தொடங்கி, "இனி ஆன்மீக ஒளிக்குள் உங்களை கொண்டு வரும் யோகத்தைப் பற்றி நான் சொல்ல இருக்கிறேன்," என்று உரையை தொடர்வார்.  அதில் கிறுத்துவை பற்றி ஒரு வார்த்தையும் இருக்காது. §

அவர் வழங்கிய போதனைகளை, கூடியிருந்த பெரும்பாலான கிறுத்துவ சமூகத்தினர் நன்றாக புரிந்துகொள்வதற்கு, அவர்களது பேச்சுமொழியின் தடைகளை கடந்து செல்லவேண்டி இருந்தது. பிரசங்கத்தை கேட்க வந்த பெரும்பாலானோர், தங்களை கிறுத்துவ யோகிகள் என்றே குறிப்பிட்டுக் கொண்டனர். அந்த காலத்தில் அமெரிக்கா ஒரு முழுமையான கிறுத்துவ நாடாக இருந்தது. அப்போது அந்த நாட்டில், இந்து சமயம் பிரபலமாக இல்லை மற்றும் அதைப்பற்றிய புரிதலும் குறைவாகவே இருந்தது. அதனால், தொடக்கத்தில் வந்த மாணவர்கள் மற்றும் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் வலுவான கிறுத்துவ பின்னணியுடன் இருந்தார்கள். அந்த ஆன்மீக கிறுத்துவர்களின் பிரிவு, எனது-பாதை-தான்-ஒரே-பாதை என்ற தத்துவத்தை பின்பற்றாமல், முழுமையாக சகிப்புத்தன்மையுடன் இருந்த ஒரு மிகப்பெரிய ஆன்மீக உண்மைப்பொருளை நம்பி இருந்தார்கள். அவர்கள் இந்த பண்புகளை சான் பிரான்சிஸ்கோ கோயிலில் கண்டு கொண்டார்கள். அவர்கள் இந்து சமயத்தைப் பற்றி மிகவும் எளிதாக கற்றுக்கொண்டார்கள். §

குழப்பத்தையும் எதிர்ப்பையும் தவிர்த்து, தனது மேற்கத்திய சீடர்கள் இந்து சமயத்திற்கு மெதுவாக பயனுள்ள வகையில் மாறுவதற்காக, ஶ்ரீ சுப்பிரமுனியா தனது போதனைகளை எளிமையாகவும் தெளிவாகவும் வழங்கினார். §

சபையின் அங்கத்தினர்களுக்கு கவனமாக கற்பிப்பதன் மூலமாகவே வளர்ச்சி அடையமுடியும் என்பதால், ஆரம்பத்தில் சில வருடங்களுக்கு தொடர்ந்து வகுப்புக்கள், சொற்பொழிவுகள் மற்றும் ஆலோசனைகள் நடந்தன. "கற்பவர்களின் தேவைகளுக்கு ஏற்ப கற்பிக்கப்படவில்லை என்றால் அதை கற்பித்தல் என்று கூற முடியாது," என்று இலங்கை பௌத்த சமயத்தவர்கள் மத்தியில் ஒரு பழமொழி இருக்கிறது. சபையின் ஆரம்ப காலத்தில், அத்தகைய ஒரு அணுகுமுறையின் விவேகம் தெளிவாக தெரிந்தது. அவர் யாழ்ப்பாணத்தின் ஆச்சாரமான சைவ சமூகத்தின் உறுப்பினராக இருந்தபோது, கிரகித்த சைவ தர்மத்தை அப்படியே மக்களிடம் வெளிப்படுத்த விரும்பினாலும், அத்வைத போதனைகள் மற்றும் யோக சாஸ்திரம் மற்றும் தனது சீடர்களை தொடர்ந்து பக்தியில் பயிற்சி மேற்கொள்ளவேண்டும் என்பதை ஊக்குவிப்பதன் மூலமாகவும், பல வருடங்களுக்கு இந்து சமயத்தின் பொதுவான கோட்பாடுகளை கவனமாக

வெளிப்படுத்துவதன் மூலமாகவும், ஸ்ரீ சுப்பிரமுனியா வலுக்கட்டாயமாக பொறுமையுடன் இருந்தார். §



*ஸ்ரீ சுப்பிரமுனியா பன்னிரண்டு வருடங்களுக்கு, தனது சீடர்களை 2,500 அடி உயர தமல்பைஸ் மலை உச்சிக்கு அழைத்து சென்றார். விடியற்காலையில் வந்து, ரெட்வுட் மற்றும் கருவாலி மரங்களுக்கு மத்தியில் அமர்ந்து தியானம் செய்து பெற்ற உணர்வை "ஒரு மலைஉச்சி உணர்வு" என்று அழைத்தார்கள்.*

……………………….§

இந்த ஆரம்ப காலத்தில், நான் *சிவபெருமானுடன் ஐக்கியமாதல்* புத்தகத்தில் இருக்கும் "வாழ்க்கை ஒரு சிறப்பான அனுபவம்," "அன்பு என்பது விதியின் கூட்டுத்தொகை," "உறுதிமொழியின் சக்தி" மற்றும்

“ஜீவநதி” என்கிற பாடங்களில் இருக்கும் போதனைகளை வழங்கினேன். நீங்கள் பலப்பல வருடங்களாக கேட்டுக்கொண்டு இருக்கும் அந்த உரைகள் அனைத்தும் அந்த காலகட்டத்தில் தொடங்கியவை. மக்கள் வெள்ளம் தொடர்ந்து வந்துகொண்டு இருந்தது. அமெரிக்காவில் ஒரு புதிய வாழ்முறையை நான் கவனித்துக்கொண்டு, அதற்கேற்ப என்னை மாற்றி அமைத்துக்கொண்டு இருந்தேன். §

ஸ்ரீ சுப்பிரமுனியா தனிப்பட்ட ஆலோசனை வழங்குவதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிக்கொண்டு, பல திட்டமிட்ட தொடர் நடவடிக்கைகளில் பங்குபெற்று, அறிவுறுத்துவதற்கும் கேள்விகளுக்கு பதில் அளிக்கவும் எப்போதும் தயாராக இருந்தார். §

அவருடைய போதனைகள் அடங்கிய *ஜெம்ஸ் ஆஃப் விஸ்டம்* என்கிற புத்தகம், மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றதால், 1958 வருடத்தின் மத்தியில் இரண்டாவது பதிப்பை அச்சிட வேண்டியிருந்தது. இதனை ஸ்ரீ சுப்பிரமுனியா கவனித்துக்கொண்டு, சபை மற்றும் துறவிகளின் ஆன்மீக வாழ்கையை வழிநடத்த உறுதிமொழிகள், விஷேச உடுப்புகள், புனித சடங்குகள், கட்டுப்பாடுகள் மற்றும் அட்டவணைகள் அடங்கிய ஒரு தொகுப்பாக, முதல் தேவாலய கையேட்டை தயார் செய்துக்கொண்டு இருந்தார். §

சீடர்கள் மற்றும் அங்கத்தினர்களின் வகுப்புக்கள் மற்றும் ஆய்வுகளின் பரபரப்பான நடைமுறை ஒழுங்கிற்கு ஒரு உருவத்தை வழங்க, அவர் யோகா நிறுவனத்தை நிறுவினார். அதற்கு சான் பிரான்சிஸ்கோ கோயிலில் பல அறைகளையும் வழங்கினார். அது இமாயலயன் அகாடமிக்கு முன்னோடியாக விளங்கியது. அவர் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை அன்று ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தார். அது பின்னர் பிரேக்பாஸ்ட் கிளப் என்ற பெயரை பெற்றது. அந்த கூட்டத்தின் போது சீடர்களும் உறுப்பினர்களும் அவருடன் இயல்பாக பேசி ஒருவர் மற்றொருவரின் நட்பை கொண்டாடுவதற்கு ஒரு எளிமையான சூழலில் கூடினார்கள். அது அதிக பிரபலமடைந்தது, மற்றும் அதிலிருந்து ஒரு ஆக்கப்பூர்வ சக்தி வெளிவந்தது. ஆனால் மிகவும் முக்கியமாக, ஸ்ரீ சுப்பிரமுனியா தனது சீடர்களின் பக்தி மற்றும் ஆன்மீக ஒழுக்கம் தொடர்பான விஷயங்களின் மீது கவனம் செலுத்தினார். “கர்மவினையை வெற்றி கொள்வதற்கு நிலையான தன்மை மிகவும் அவசியம்,” என்று அவர் தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருந்தார்.§

அவரது கோயிலும் நடவடிக்கைகளும் பெருகியதும், பல சிக்கல்கள் தோன்றின. பணத்தட்டுப்பாடு ஏற்பட்டது. பணம் எவ்வளவு இருந்தாலும் போதவில்லை. 1957 வருடத்தின் மொத்த வருமானம் சுமார் $3000 என்று கூட்டு நிதி அறிக்கைகள் தெரிவித்தன. அது வளர்ந்து வரும் நிறுவனத்தை நிர்வகிக்க போதவில்லை. இருந்தாலும் அவர் திறமையாக கையாண்டார். §

ஒரு சமயத்தில், ஒரு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட பணம் வேறொரு விஷயத்திற்கு செலவழிப்பதை பார்த்து அதிருப்தி அடைந்து, ஒரு காகிதப்பை

ஒழுங்குமுறையை உருவாக்கினார். ஒவ்வொரு மாதத்தின் தொடக்கத்திலும், அவர் மாடியில் இருந்த அலுவலங்களின் சுவர்களில் 20 காகிதப்பைகளை குண்டூசி கொண்டு குத்தி வைத்தார். அந்த பையின் மீது உணவு, மெழுகுவர்த்திகள், பயணம், வாடகை போன்று அவர் கைப்பட எழுதிய பிரிவுக்கு, அதில் அவர் வைத்த பணத்தை பயன்படுத்த வேண்டும். ஒரு காகிதப்பையில் இருந்து எடுக்கப்பட்ட பணத்தை, அந்த பிரிவு இல்லாமல் மற்ற பிரிவுகளுக்கு செலவழிக்க யாருக்கும் உரிமை இல்லை. இது செலவை கட்டுப்படுத்தும் பொறுப்பில் இருப்பவர்களுக்கு, சிக்கனத்தை கற்றுக்கொடுக்க ஒரு சிறந்த வழியாக விளங்கியது. 26 ஆம் தேதி உணவுப்பை காலியாகி, அடுத்த மாதம் முதல் தேதி வரை எல்லோரும் உண்ணாமல் விரதம் இருந்ததைப் பற்றி பல மடவாசிகள் நினைவு கூர்கிறார்கள். ஆனால் அது நீண்டநாள் நிலைத்து இருக்கும் தன்மையில்லாத ஒரு மிகவும் எளிமையான ஒழுங்குமுறையாக இருந்தது. §

ஒரு மாணவர் அடிப்படை கணக்கு வேலைகளுக்கு பொறுப்பேற்க ஒப்புக்கொண்டார். மற்ற தேவாலயங்கள், தங்களுக்கு தேவையான நிதியை எவ்வாறு திரட்டுகிறார்கள் என்பதை ஆய்வு செய்த ஸ்ரீ சுப்பிரமுனியா, தசமபாகம் அறிமுகப்படுத்துவதைப் பற்றி சிந்தித்தார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும், தட்டில் நன்கொடையாக பத்து அல்லது பதினைந்து சென்ட் நாணயங்களை வழங்கி பழக்கப்பட்டு இருந்த யோகம் பயிலும் மாணவர்களுக்கு, இது ஒரு புதிய அதிர்ச்சியாக இருந்தது. ஒரு நாள் அவர் கோயிலின் முன்பாக “ஒரு தசம்பாகம் கட்டணமாக வசூலிக்கப்படும்" என்று ஒரு பலகையில் எழுதி வைத்தார். அந்த காலத்தில் கடன் அட்டைகள் இருக்கவில்லை, மற்றும் இந்த சிந்தனை பத்திரிகையாளர் ஹேர்ப் கேனை மிகவும் கவர்ந்ததால், அவர் *சான் பிரான்சிஸ்கோ கிரோனிகில்* பத்திரிகையில் “இட்ஸ் நியூஸ் டு மீ” என்ற தனது கட்டுரையில், இதைப்பற்றி குறிப்பிட்டு இருந்தார். §

**துறவிகள் மற்றும் உபதேசங்கள் பற்றிய தகவல்**

கோயில் சாக்ரமென்டோ தெருவில் தொடங்கிய போது, ஒரு சில மடவாசிகள் ஆரம்பநிலை பிரமாணங்களை எடுத்துக்கொண்டனர். அவர்கள் சான் பிரான்சிஸ்கோவில் தங்கள் பணிகளை தொடர்ந்து செய்துக்கொண்டு, தங்கள் வருமானத்தில் 25 சதவீதத்தை தசபாகமாக வழங்கினார்கள். அவர்கள் தங்கள் பணியை நகரத்தில் முடித்ததும், அந்தி சாயும் வரை கோயிலில் இருக்கும் குருவுடன் இணைந்து, வகுப்புக்கள் நடத்துவது அல்லது கோயிலுக்கு வரும் அன்பர்களுக்கு உதவி செய்வது போன்று, தங்களை ஏதாவது ஒரு பணியில் ஈடுபடுத்திக் கொண்டனர். 1980 களில் சற்குரு வழங்கிய குறிப்பு:§

1949 ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து அமெரிக்கா திரும்பிய போது, ஆண் பிரம்மச்சாரிகள் மற்றும் பெண் பிரம்மச்சாரிகளின் முதல் குழுவில் மக்கள் சேர ஆரம்பித்தனர். ஆனால் 1957 ஆம் ஆண்டு வரை எந்த

பிரமாணமும் வழங்கப்படவில்லை. டிசம்பர் 1956, *மகா தசைகள்* இராகுவில் இருந்து குருவிற்கு இடம் பெயர்ந்தது. சமூகம் மிகவும் தீவிரமாக தொடங்க, இந்த இடப்பெயர்ச்சி வழிவகுத்தது. நாங்கள் அப்போது வாங்கிய நிலம், தற்போது பழனிசுவாமி கோயிலாக இருக்கிறது. இதற்கு முன்பாக நான் சிலசமயம் பயணம் செய்வது, உரைகள் வழங்குவது மற்றும் வேதாந்தம், சித்தாந்தங்களை கற்றுத்தருவது மற்றும் *இராஜ யோகம்* [*காக்னிசண்டபிலிடி* என்றும் அழைக்கப்பட்டது] எழுதுவது மற்றும் மற்ற வேலைகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். அந்த காலத்தில், நாட்டின் பெரும்பான்மை கத்தோலிக்க மற்றும் கிறுத்துவ சீர்த்திருத்த தேவாலயங்களின் நம்பிக்கை மாதிரிகளின் பிடியில் இருந்ததால், மேற்கத்திய நாடுகளில் கோயில் வழிபாடு பற்றி யாரும் அறிதிருக்கவில்லை. §

ஊக்கமளிக்கும் உரைகள் என்ற பெயரில், ஸ்ரீ சுப்பிரமுனியா ஞாயிற்றுக்கிழமைகளில் வழங்கிய உபதேசங்களை, ஒவ்வொரு வாரமும் மடவாசிகள் பொறுப்புடன் பதிவு செய்து, எழுத்து வடிவம் வழங்கி அச்சிட்டனர். இரண்டு வருடங்களுக்கு பிறகு எண்ணற்ற கையெழுத்து பிரதிகள் சேகரிக்கப்பட்டன, அடிப்படை தத்துவம் மற்றும் பயிற்சிகள் தெளிவாக இருந்தது  மற்றும் ஒரு பயிற்சி வகுப்புக்கான தேவை அதிகமாக இருந்தது. 1959 ஆம் ஆண்டில், அஞ்சல் அல்லது நேராக சென்று வழங்குவதற்கு, ஸ்ரீ சப்பிரமுனியாவும் மடவாசிகளும், அவர் வழங்கிய உரைகளை ஒரு தொடர்ச்சியான பாடங்களாக ஒன்று சேர்த்து தொகுத்து அமைத்தனர். இது தி மாஸ்டர் கோர்ஸ் என்ற பெயரில், அவர் வழங்கிய முறையான பயிற்சி வகுப்பின் முதல் பதிவாக விளங்கியது. சுமார் பத்து வருடங்கள் கழித்து, இந்த காலகட்டத்தில் தான் வழங்கிய போதனைகளை பற்றி அவர் இவ்வாறு குறிப்பிட்டார்:§

மனிதன் தான் என்னவாக இருக்கிறான் என்று நினைக்கிறானோ அதை கடந்து, அவன் உண்மையாக—பரமாத்துமாவை உணரும் வரை முதுகுத்தண்டில் இருக்கும் சக்தி மற்றும் அதற்குள் இருக்கும் சுத்தமான மற்றும் அதற்குள் ஆழமாக இருக்கும் சக்திகள் மீது உணர்வை பெறுவது—விளக்க முடியாமல், ஆற்றலை விட உயர்ந்த திசைவேகத்துடன் இருக்கும் அடிப்படை கோட்பாட்டிற்குள் அழைத்து செல்லும் வகையில், போதனைகள் மற்றும் பயிற்சிகளை வழங்குவதே, இந்த காலகட்டத்தின் நோக்கமாக இருந்துள்ளது. அத்வைத போதனைகளில் சொல்லப்பட்டு இருப்பதைப் போல, நானும் எனக்கு நெருக்கமான பல சீடர்கள் உணர்ந்ததை போல, ஆத்ம ஞானம் பற்றிய விளக்கத்தை வழங்க, அறிவியலில் பருப்பொருள்-எதிரியப் பருப்பொருள் கோட்ப்பாடு நெருங்கி வந்துள்ளது. §

இந்த சிந்தனை மேற்கத்திய நாட்டு மக்களின் மனதில் சரியாக பதியவில்லை என்பதை உணர்ந்து, அறிவுப்பூர்வமாக இல்லாமல் ஒரு

தனி மனித வாழ்க்கையில் இருக்கும் உண்மையான அனுபவ மாதிரிகளில் இந்த சிந்தனையை தெளிவாக மற்றும் நுணுக்கமாக கொண்டு வருவதற்கு, நான் பல வருடங்களாக ஒரு விரிவான பயிற்சி வகுப்பை தயார் செய்துக்கொண்டு இருந்தேன். §

அந்த ஆரம்ப பாடங்களின் தலைப்புக்களாக, மனித உடல்களில் இருக்கும் மறைஞான தகவல்கள், ஐந்து மனநிலைகள், ஹட யோகம், மந்திர யோகம், பிராண சக்தி, ஒருமுகச்சிந்தனை, தியானம் மற்றும் மேலும் பல தலைப்புக்கள் அங்கம் வகிக்கின்றன. இந்த பாடங்கள் *வேர்ல்ட் பெல்லோஷிப் ஆஃப் யோகா* என்ற தலைப்பில், கிழக்கத்திய நாடுகளின் பாரம்பரியத்தை பின்பற்றி இலவசமாக வழங்கப்பட்டது. இந்த பாடங்கள் அடிக்கடி கோயிலுக்கு வரமுடியாமல் தூரத்தில் இருந்த பல மாணவர்கள் மற்றும் உறுப்பினர்களை நெருக்கமாக வைத்து இருந்து, அவர்கள் முன்னேற்றத்தை கண்காணித்து அவர்களது பாதைக்கேற்ற வழிகாட்டலை வழங்க ஆசிரியருக்கு ஒரு வழியை வழங்கியது. “கிழக்கு நாடுகளின் சிறப்பும் மேற்கு நாடுகளின் சிறப்பும் இணக்கத்தை பெற்றுள்ளன,” என்று 1950 களில் தனது படைப்புக்களின் இயல்பை பற்றி விளக்கும் போது ஸ்ரீ சுப்பிரமுனியா அடிக்கடி குறிப்பிடுவார். 1971 ஆம் வருடத்தில், அவர் அளித்த விளக்கம்:§

மனிதனுக்குள் இருக்கும் பரமாத்துமாவின் தத்துவத்தை உறுதியாக கடைப்பிடிப்பது கிழக்கு நாடுகளின் சிறப்பு ஆகும். இந்த வாழ்நாளுக்குள் மனிதன் அதனை முழுமையாக உணர்ந்துகொள்ள முடியும். அது அடிப்படையில் *சஹஸ்ரஹார சக்கரத்தை* திறந்து, பிரம்மத்தின் கதவு வழியாக சாட்சியை விடுவித்து, பரமாத்துமாவுடன் ஐக்கியமாவதை குறிப்பிடுகிறது அல்லது பல்வேறு சக்கரங்கள் வழியாக முதுகுத்தண்டு, அடிமூளை மற்றும் கூம்பு சுரப்பி வழியாக குண்டலினி மேலே எழும்பி சக்தியில் ஐக்கியமாகிறது மற்றும் அதன் ஆழத்துள் சாட்சி இயங்குவதால் அது தெய்வீக பண்பின் மையத்திற்கு வந்து சேர்வதையும் குறிப்பிடுகிறது. இதுவே கிழக்கு நாடுகளை சேர்ந்த மிகப்பெரிய ரிஷிகளின் அடிப்படை கோட்பாடு ஆகும். நான் அங்கே இதைப்பற்றிய ஆய்வு மேற்கொண்ட காலத்தில் இருந்து இதனுடன் வாழ்ந்து வந்துள்ளேன் மற்றும் தற்போதும் வாழ்ந்து வருகிறேன். §

பாதையில் பல்வேறு நிலைகளில் இருக்கும் மக்களிடம் இந்த போதனையை, பாதையை பற்றி நிறுவனம் வழங்கும் அறிமுகத்தால் ஒருவரை திசைத்திருப்பாமல், அவரது முடிவான குறிக்கோளை நோக்கி மெதுவாக வழிநடத்தி செல்லும் இந்த அறிமுகத்தை பரப்ப உதவும் வசதிகள், மேற்கு நாடுகளின் சிறப்பாக இருக்கின்றன. §

ஸ்ரீ சுப்பிரமுனியா மற்றும் மடவாசிகள் கலிபோர்னியா முழுவதும் பயணம் மேற்கொண்டு ஹட யோகம் மற்றும் இராஜ யோகம், உபநிடதங்கள் மற்றும் மற்ற சாஸ்திரங்களை பற்றி சொற்பொழிவுகள் மற்றும் பாடங்களை நடத்தி,

நூற்றுக்கணக்கான மாணவர்கள் பதிவு செய்து தினமும் படித்து வந்த, அவரது *வேர்ல்ட் பெல்லோஷிப் ஆப் யோகா* பற்றிய பாடங்களை விளக்கியும் வந்தனர். அவர்கள் கல்லூரிகள், வீடுகள் மற்றும் எப்போதும் நல்ல வரவேற்பை வழங்கிய எபிஸ்கோப்பல் அல்லது யூனிடேரியன் தேவாலயங்களில் பெரும்பாலும் பேசினார்கள். அவர்கள் குடும்பங்கள் மற்றும் குழந்தைகளுக்கு கோடைகால முகாம்களை நடத்தினார்கள். 1961 ஆம் ஆண்டில், சிறையில் இருந்த கைதிகளை சந்தித்து அவர்களுக்கு கிழக்கத்திய இலட்சியங்கள் மற்றும் யோகத்தின் அடிப்படைகளை கற்றுத்தருவதற்கு, ஒரு வலுவான ப்ரிசன் அவுட்ரீச் திட்டத்தை  தயார் செய்தார்கள். இந்த முயற்சிகளின் மூலம் போல்சோம், சான் குவெண்டின், வாகாவீல் மற்றும் மற்ற இடங்களில் இருந்த சிறைவாசிகள் ஆறுதல் மற்றும் ஆன்மீக வாழ்க்கையின் மீது புதிய விழிப்புணர்வையும் பெற்றனர். §

1959 ஆம் ஆண்டு கிறுத்தவ யோக தேவாலயம் முறைப்படி தொடங்கப்பட்டது. இது தன் உறுப்பினர்களுக்கு இந்து மத நம்பிக்கைகள் மற்றும் வழக்கங்களை பற்றி படிப்படியாக வலுவடைந்த புரிதலை கற்றுத்தந்தது. அதே சமயத்தில, ஸ்ரீ சுப்பிரமுனியா மடவாசிகளுக்கு மேடை பேச்சில் பயிற்சி வழங்கி, அவர்கள் பிரமாணங்கள் எடுத்துக் கொண்டதும், அவர்கள் ஹட யோகம், தியானம் பற்றிய அடிப்படைகள் மற்றும் தத்துவத்தின் தொடக்கங்கள் பற்றிய மக்களுக்கு வகுப்புக்கள் நடத்த ஏற்பாடு செய்தார். அவர் அவர்களை அவ்வப்போது அருகில் இருந்த மருத்துவமனைகளுக்கு அனுப்பிதோடு, கோயிலில் இருந்து ஆசிகள் மற்றும் குணப்படுத்தும் சக்திகளை அங்கிருந்த நோயாளிகளிடம் உணர்வுடன் கொண்டு சென்று சுயநலமற்ற சேவையை செய்ய ஊக்கமும் அளித்தார். அதன் பின்னர் கலிபோர்னியா  முழுவதிலும் பல்வேறு வீடுகளில், தான் தொடங்கிய கிறுத்துவ யோக ஆய்வுக் குழுக்களுக்கு அவர்களை மேற்பார்வையாளர்களாக நியமித்தார். §

அக்டோபர் 4, 1959 அன்று, ஸ்ரீ  சுப்பிரமுனியா தனிமையாக இருக்கவும், பிற்காலத்தில் அவர் தொடங்கிய இன்னரசர்ச் டிராவல்-ஸ்டடி திட்டத்தின் முன்னோடியாகவும், ஹவாய் பறந்து சென்றார். அவர் ஒஹு  தீவுக்கு மட்டுமே சென்றார். அதன் முக்கிய நிலப்பரப்பில் அவரது ஆன்மீக பணியை பற்றி அந்நாட்டு பத்திரிகை ஒரு நேர்காணலை நடத்தினாலும், தனியாக இருந்த அந்த அரிய தருணம் ஹவாய் தீவு பற்றிய அறிமுகத்தை பெறுவதற்கு அவருக்கு பயனுள்ளதாக இருந்தது. §

சான் பிரான்சிஸ்கோவில் இருந்து கிளம்புவதற்கு முன்பாக, சமய சார்புள்ள வாழ்க்கையின் இலக்கு மற்றும் குறிக்கோளை விளக்கி, “பரமாத்துமா" என்ற பெயரில் கோயிலில் கூடியிருந்த மடவாசிகள் மற்றும் தேவாலய உறுப்பினர்களின் சிறு கூட்டத்திற்கு ஒரு ஊக்கமளிக்கும் உரையை வழங்கினார். இந்த ஆன்மீக பொக்கிஷத்தை மடவாசிகள் உடனே வெளியிட்டார்கள். அது இன்றுவரை முழுமுதற்பொருள் பற்றி வெளிவந்து, மிகவும் தெளிவாக ஊக்கமளிக்கும் *உபநிடதங்களாக* விளங்குகிறது. இந்த

ஒரு சிறிய படைப்பை இலங்கை மக்கள் “சிறிய மாணிக்கம்" என்று அன்புடன் அழைத்தனர். அதில் முதல் மூன்று பத்திகளை இங்கே காணலாம்:§

> பரமாத்துமா: அதை உங்களால் விளக்க முடியாது. அது இருப்பதை உங்கள் புலன்களின் புனிதமான நிலை மூலம் உணர முடியும், ஆனால் உங்களால் அதை விளக்க முடியாது. அதை பற்றி புரிந்துகொள்ள, நீங்கள் அதை அனுபவிக்க வேண்டும். அது உங்கள் தெய்வீக தன்மையின் ஆழமாக, உங்கள் மையமாக இருக்கிறது என்று மட்டும் உங்களால் சொல்ல முடியும். அது உங்களின் பண்பு. §
>
> நீங்கள் உங்களுக்கு மேலே, கீழே, வலது புறம், இடது புறம், முன்புறம் மற்றும் பின்புறம் வெறுமையை கற்பனை செய்து, அந்த வெறுமையில் நீங்கள் உங்களை கரைத்துக் கொண்டால், அதுவே ஆத்ம ஞானத்தை விளக்குவதற்கு மிகவும் சிறந்த முறையாக இருக்கும். ஒரு காலி பெட்டியில் இருக்கும் வெறுமை, ஒரு சூன்யமாக இருப்பதைப் போல, அந்த வெறுமை ஒன்றும் இல்லாத நிலையாக இருப்பது இல்லை. அந்த வெறுமை அனைத்தின் முழுமையாக இருக்கிறது: அனைத்துமாக தோன்றும் உள்பொருளின் சக்தி, தாங்கி பிடிக்கும் சக்தியாக இருக்கிறது. §
>
> ஆனால் நீங்கள் ஆத்ம ஞானத்தை பெற்ற பிறகு, நீங்கள் மனதை பற்றி அறிந்து கொள்வீர்கள். அது தொடர்ந்து தன்னை உருவாக்கிக்கொண்டு இருக்கிறது. மனம் என்கிற உருவம் தொடர்ந்து உருவத்தை உருவாக்கிக்கொண்டு, உருவத்தை பாதுகாத்துக்கொண்டு, புதிய உருவங்களை உருவாக்கி பழைய உருவங்களை அழித்துக்கொண்டு இருக்கிறது. அந்த மனமே மாயை என்றும், அந்த மிகப்பெரிய உண்மையின்மையை நீங்கள் உண்மை என்று நம்பி, நீங்கள் சிந்திக்கும் மனதின் அங்கமாக இருக்கிறது என்கிற சுயமாக உருவாக்கும் கோட்பாட்டை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். §


சுமார் நான்கு வருடங்களுக்கு 1,100 க்கும் மேலான உபதேசங்கள் மற்றும் நேர்காணல்களை, ஒரு பழைய வோலன்சாக் ரீல்-டு-ரீல் ஒலிப்பதிவு பெட்டியில், ஸ்ரீ சுப்பிரமுனியாவின் உரைகளை துறவிகள் பதிவு செய்தனர். §

அவர் 1960 ஆம் ஆண்டில், மேற்கு நாடுகளில் யோகம், நேர்மறை அணுகுமுறைகள் மற்றும் உட்புற மனிதனுக்கு பயிற்சிகள் மீது கவனம் செலுத்தி, வானொலியில் ஒரு விஷேச தொடரை தொடங்கினார். கேபிகோ 105.3 பண்பலை வரிசையிடம் ஒரு நேரத்தை விலைகொடுத்து வாங்கி, ஒவ்வொரு ஞாயிற்றுகிழமையும் காலை 10 மணிக்கு “டெம்பிள் ஆஃப் தி ஏர்” என்ற பெயரில் உரைகள் ஒலிபரப்பப்பட்டன. ஸ்ரீ சுப்பிரமுனியாவின் கடுமையான தொடர் முயற்சியால், சாக்ரமெண்டோ தெருவில் இருந்த இந்து கோயில் விரிகுடா பகுதி முழுவதும் பிரபலமானது. §

**சட்டத்தை வகுத்து அதை பின்பற்ற சீடர்களிடம் வலியுறுத்துதல்**

துறவிகள் கோயிலில் பூசாரியாக மற்றும் பொதுவாக சமூகத்தில் செய்த பல்வேறு பணிகள் மூலமாக பெற்ற சமநிலை மற்றும் ஸ்ரீ சுப்பிரமுனியா ஊக்குவித்த ஒழுக்கம், பற்றின்மை மற்றும் தொடர் ஆன்மீக முயற்சிகளால், அவர்களின் பயிற்சி மற்றும் சேவை நன்றாக முன்னேறியது. தனது சமூகத்தில் இருந்த துறவிகள் பாதையில் முன்னேறி, அதன் மூலம் அவர்களுக்குள் இணக்கம் ஏற்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர் ஒரு கண்டிப்பான ஆசிரியராக இருந்தார், மற்றும் அவர் வழங்கிய அறிவுறுத்தல்களை குழுவில் இருந்த எல்லோரும் கடைபிடிக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தது தெளிவாக எல்லோருக்கும் புரிந்தது. §

> ஒரு நாள் பூசாரிகள் குழுவின் சந்திப்புக் கூட்டம் நடந்துகொண்டு இருந்தது. அப்போது சில துறவிகள் தங்களுக்குள் காரசாரமாக வாதாடிக்கொண்டு இருந்தனர். அது போல் மீண்டும் நடக்கக்கூடாது என்று நான் அவர்களுக்கு எச்சரித்தேன். பிறகு சில நாட்கள் கழித்து, அவர்கள் மீண்டும் வாதாட தொடங்கினார்கள். நான் உடனே, “மீண்டும் இதைப் போல இன்னொரு முறை நடந்ததால், நான் இந்த சந்திப்புக் கூட்டங்களை நிறுத்தி விடுவேன்,” என்று கூறினேன். நான் வழங்கிய எச்சரிக்கையை அவர்கள் சரியாக புரிந்துகொள்ளவில்லை போல தோன்றுகிறது. அந்த சம்பவம் அடுத்த முறை மீண்டும் தோன்றிய போது, “சரி, அவ்வளவு தான்,” என்று கூறி பூசாரிகள் குழுவுடன் மீண்டும் இன்னொரு கூட்டத்தை, நான் அதன் பிறகு நடத்தவில்லை. §



*சாக்ரமெண்டோ ஸ்ட்ரீட் கோயிலில், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், ஸ்ரீ சுப்பிரமுனியா யோகம், பரமாத்துமா, மனநிலைகள் மற்றும் இந்து சூட்சும ஞானத்தின் நடைமுறை பயன்பாடுகள் பற்றி சொற்பொழிவுகளை*

*வழங்கினார். கத்தோலிக்க சமயத்தவர்கள் அதிகம் வசித்த அந்த நகரத்தில், கிழக்கு கலாச்சார பாதையை விளக்கிய முதல் ஆசிரியர்களில் ஒருவராக அவர் விளங்கினார்.*

.........................§

ஒரு நாள் கோயிலுக்கு வந்திருந்த காணிக்கைகளில் இருந்து சில டாலர்களை துறவிகளில் ஒருவர் எடுத்துக்கொண்டதாக தெரிய வந்தது. துறவிகளுக்கு வழங்கப்பட்ட உணவின் அளவு குறைவாக இருந்ததால், தனக்கு பசித்ததாகவும், அதனால் பணம் செலவழித்து தனக்கு கூடுதல் உணவை வாங்கியதாகவும், அந்த துறவி ஒப்புக்கொண்டார். இது ஸ்ரீ சுப்பிரமுனியாவிற்கு ஒரு சிறிய பின்னடைவாக இருந்தது, மற்றும் முப்பது வருடங்கள் கழித்து அதை மன்னிக்க முடியாத நடவடிக்கையாக குறிப்பிட்டார். அவர் அந்த துறவியை முதலில் தனிமையிலும், பின்னர் எல்லோர் முன்னிலையிலும் கடிந்து கொண்டு, பின்னர் தீவிர தவம் மேற்கொள்ள வேண்டும் என்று அவருக்கு அறிவுறுத்தினார். நம்பிக்கைகளின் தளைகள் உடைவதற்கு, சொந்த வேதனைகள் ஒரு காரணமாக இருக்கக்கூடாது என்பது இதன் மூலம் எல்லா துறவிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. அந்த சமூகம் வலிமை மற்றும் பக்குவத்தை பெற்று வளரும் போது, இதைப்போன்ற பல பாடங்களை கற்றுக்கொண்டது. §

சிலர் தங்களுக்கு விருப்பமான துறவற வாழ்கையை மேற்கொள்வதற்கு, தங்கள் குடும்பத்திடம் இருந்து ஆசிகள் அல்லது ஒப்புதலை பெறுவதில் சிக்கல்களை சந்தித்தனர். முற்றிலும் கேள்விப்படாமல், வெளிநாட்டு சமூகம் போல காட்சியளித்த ஒரு அமைப்பில், தங்கள் மகன் சேர்வதை ஒரு சில குடும்பங்கள் தீவிரமாக தடுத்தனர். ஒரு தந்தை சான் பிரான்சிஸ்கோ மடத்தின் கதவை தட்டி, நம்பிக்கை இழந்த குரலில் வீடு திரும்புமாறு தனது மகனிடம் சத்தமாக வற்புறுத்தினார். அத்தகைய சூழலை எதிர்கொண்ட போது ஸ்ரீ சுப்பிரமுனியா சில சமயங்களில், சிறிது காலம் குடும்பத்துடன் வாழ்வதற்கு அந்த துறவியை அனுப்பி வைப்பார், மற்றும் மற்றவர்களை “பாதையில்" தனியாக இருந்து தங்களது பொறுப்புக்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் பணியில் மற்றவர்களை அனுப்பி வைப்பார். தனது கர்மவினைகளை கரைப்பதற்காக, ஒரு இளைஞன் இரண்டு வருடங்களுக்கு ஆயுதப்படை சேவையில் சேரவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டார். §

அந்த சபையில் இருந்த மூன்று பெண்மணிகள், தங்கள் சகாக்கள் ஆன்மீக முன்னேற்றம் அடைவதை பார்த்து, தாங்களும் துறவற வாழ்கையை மேற்கொள்ள விரும்புவதாக வேண்டினார்கள். அந்த பெண்மணிகள் தங்கள் வேண்டுகோளில் கனிவாக நிலைத்து இருந்து, தங்களது தீவிர பக்தியின் மூலம் ஸ்ரீ சுப்பிரமுனியாவின் சம்மதத்தை பெற்றனர். 1960 வருடத்தின் இறுதியில், மடத்திற்குறிய உறுதிமொழிகளுக்குள் கட்டுப்பட்ட பிறகு, அவர் அவர்களுக்கு தீட்சையை வழங்கி, சிஸ்டர்ஸ் ஆஃப் டிவோஷன் (முழு ஈடுபாட்டுடன் இருக்கும் சகோதரிகள்) என்று பெயரிட்டார். §

துறவிகளை போல, கன்னியாஸ்திரிகளும் மேற்கத்திய உடைகளில் எளிமையாக, இடுப்பில் ஒரு வெள்ளை நிற கயிறு மற்றும் தலைப்பாகையுடன் பழுப்பு நிற உடைகளை அணிந்து இருந்தார்கள். அவர்கள் தங்கள் தலைகளில் மொட்டை அடித்துக்கொண்டு ஆண்களை போல காட்சி அளித்தார்கள் மற்றும் அவர்கள் தங்கள் பெண்பால் மற்றும் ஆண்பால் சக்திகளை சமன் செய்து, பாலினத்தை கடந்து, புனிதமான ஆன்மீக சக்திகளாக இருக்க முயற்சி செய்தார்கள். சிலர் அவர்களை ஆண்கள் என்றே கருதினார்கள். அவர்களது சேவைகள் இறைபக்தி சார்ந்த சேவைகள், குடும்பங்கள் மீது கவனம் செலுத்துதல் மற்றும் தங்கள் சொந்த ஆன்மீக பழக்கங்களை சுற்றி அமைந்து இருந்தன. அவர்கள் ஆண் துறவிகளிடம் இருந்து விலகி இருந்து, தினமும் கோயிலுக்கு வகுப்புகள் மற்றும் சேவை செய்வதற்கு வந்தனர். கோயிலை சுத்தம் செய்தல், சமைத்தல், பெண்களுக்கு ஆலோசனை வழங்குதல், கோயில் வரும் விருந்தினர்களுக்கு தேநீர் தயார் செய்தல், அஞ்சல்களை முறையாக கையாண்டு சிறிய அலமாரியில் அடுக்கி வைத்தல் போன்ற வேலைகளை செய்த இந்த சிஸ்டர்ஸ் ஆஃப் டிவோஷன், மற்றவர்கள் மீது அக்கறை செலுத்தும் ஒரு உறுதியான உணர்வை கொண்டு வந்தது. இந்த உணர்வு, ஸ்ரீ சுப்பிரமுனியாவின் ஆன்மீகப் பணியில் ஒரு அன்னையின் சக்தியாக அழைக்கப்பட்டது. §

1961 ஆம் ஆண்டு, அந்த தேவாலயம் லாஸ் ஏஞ்செல்ஸ் புறநகர் பகுதியில் இருந்த கிலெண்டெலில் ஒரு வீட்டை வாங்கி, அதை அந்த மூன்று அன்னை கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கியது. அவர்களுக்கு ஸ்ரீ சுப்பிரமுனியா மௌனமாக இருந்து சேவை செய்யும் பணியை வழங்கினார். §

குடும்ப உறவுகளை வலுப்படுத்த, சமயம் சார்ந்த வாழ்க்கையின் அடிப்படை கோட்பாடுகள் மற்றும் தேவாலயத்தின் தத்துவ மற்றும் இறையியல் கோட்பாடுகளை சுருக்கமாக குறிப்பிட்டு, *கேடிசிசம் ஆஃப் தி கிறிஸ்டியன் யோகா சர்ச்* என்ற பெயரில் ஒரு புத்தகத்தை ஸ்ரீ சுப்பிரமுனியா எழுதினார். அவர் வீட்டு சேவைகளையும், குடும்பங்கள் தங்கள் பூஜை அறைகளில் காலை மற்றும் மாலையில் கடைப்பிடிக்க தியான வகுப்புக்களையும் தொடங்கினார். விசேஷ சாதனா மற்றும் ஆன்மீக முயற்சிகள், விரதம் மற்றும் ஆன்மீக பாதை மீது இருக்கும் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதி செய்தல் என்று வருடம் முழுவதும் ஏழு காலங்களாக ஏழு புனித வாரங்கள் வரையறுக்கப்பட்டன. மனிதனின் சூட்சும உடலில் இருந்த ஏழு சக்கரங்களில் ஒன்றை குறிப்பிடும் வண்ணம் அமைந்து இருந்த, புனித வாரம் ஒவ்வொன்றும் ஒரு மிகப்பெரிய மகான் அல்லது முக்கிய சமய திருவிழாவிற்கு அர்ப்பணிப்பட்டு இருந்தது. இது பிற்காலத்தில், அவரது சீடர்கள் ஒவ்வொரு வருடமும் கவனம் செலுத்த வேண்டிய அதிக தீவிரமான ஆன்மீக பணியாக மாறியது. §

அமெரிக்கா தேவாலய அமைப்பு மற்றும் அமெரிக்காவில் இருந்த பல்வேறு சமய அமைப்புக்களை அவர் ஆய்வு செய்ததன் விளைவாக, 1961 ஆம் ஆண்டின் இறுதியில், ஸ்ரீ சுப்பிரமுனியா உள்நாட்டு வருவாய் சேவையின் கீழ்

தேவாலயம் என்ற அதிகாரப்பூர்வ பெயருக்கு ஆவணங்களை சமர்ப்பித்தார். பிப்ரவரி 12, 1962, அவரது தேவாலயத்திற்கு வரி விலக்கு சலுகை அளிக்கும், முறையான ஒப்புதலை ஐ.ஆர்.எஸ். அனுப்பியது. இந்து சமயத்தை கற்றுத்தரும் ஒரு அமெரிக்க தேவாலயம், இந்த அங்கீகாரத்தை பெறுவது அதுவே முதல் முறையாக இருந்தது. §

அந்த தேவாலயம் தனது பணியை பற்றி ஒரு செய்தி வெளியீட்டில் இவ்வாறு குறிப்பிட்டது: "பாதர் சுப்பிரமுனியாவின் அறிவுறுத்தல்கள் இந்தியா, சிலோன், இங்கிலாந்து, ஜெர்மனி, தென் அமெரிக்கா மற்றும் மேற்கு ஆப்பிரிக்காவில் இருக்கும் மாணவர்களை சென்று அடைந்துள்ளது. "நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? நான் எங்கே சென்றுகொண்டு இருக்கிறேன்?" போன்ற கேள்விகளுக்கு கிறிஸ்டியன் யோகம் பதில் அளிப்பதாக அவர் கூறுகிறார். ஒருமுகச்சிந்தனை மற்றும் தீவிரமான தியானத்தின் மூலம், தங்கள் ஆன்மீக சக்திகளின் ஆழங்களை ஆய்வு செய்வதைப் பற்றி தேவாலய அங்கத்தினர்கள் கற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.'"§

ஸ்ரீ சுப்பிரமுனியாவின் வெளிப்புற வாழ்க்கை தனது சமயப்பணியை தொடங்கி தனது குழுவில் இருந்த துறவிகளுக்கு பயிற்சி அளிப்பதில் இருந்தாலும், அவரது உட்புற வாழ்க்கை அதிக தீவிரமாக மற்றும் வலுவாக வளர்ச்சி அடைந்துக்கொண்டு இருந்தது. அந்த இரண்டையும் சமநிலையில் வைத்திருப்பது, அவருக்கு ஒரு சவாலாகவே இருந்தது. தான் ஆத்ம ஞானத்தின் உட்புற வேலையை செய்ய இந்த பூமியில் பிறவி எடுத்ததாகவும், அதே போல ஆன்மீக மறுமலர்ச்சியை வழிநடத்தி சென்று, தயார்நிலையில் இருப்பவர்களுக்கு சூட்சும ஞான உண்மைகளை கொண்டு வருவதற்காக தான் சிறுவயது முதல் தயாராக இருந்தாகவும் அவர் பிற்காலத்தில் குறிப்பிட்டார். ஆனால் அந்த இரண்டு விருப்பங்களும், மிகவும் பெரியதாக இருந்ததால், அவை எப்போதும் தங்களுக்குள் இணக்கம் இல்லாமல் இருந்தன. §

சில சமயங்களில், அவரது மெய்ஞ்ஞான மனம் இன்னொரு உலகில் உயர்வாக சென்றுகொண்டு இருக்க, ஒரு லௌகீக விஷயத்தைப் பற்றி உபதேசம் வழங்க வேண்டியிருந்தது. அவர் வெளிப்புற உலகில் செயல்பட்டு, மற்றவர்களுடன் பேசி, வழிகாட்டி மற்றும் அவர்களை ஊக்குவிக்க, அவர் லௌகீக வாழ்க்கைக்கு இறங்கி வந்து, வாழ்க்கை பற்றிய "வழக்கமான" கண்ணோட்டத்தை பெறுவதற்கு கடுமையாக முயற்சி செய்யவேண்டி இருந்தது. அவருக்குள் இருந்த தனிமையான, சூட்சும ஞான யோகி, சில சமயங்களில் ஆன்மீக அமைப்பின் நிறுவனருக்கு முரணாக செயல்பட்டார். ஆனால் அவர் இவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு, தனது வாழ்க்கையில் இந்த இரண்டு குறிக்கோள்களும் வெற்றி பெறுவதற்கு உறுதியாக முயற்சி மேற்கொண்டு வந்தார். §

லௌகீக வாழ்க்கை சூட்சும ஞானிகளுக்கு எப்போதும் எளிமையாக இருந்தது இல்லை. அவர்கள் வெளிப்படையாக கூர்உணர்வுடன்


இருந்தாலும், அவர்கள்  தங்களது மற்ற புலன்கள் அனைத்திலும் வலுவடைவதால், செயல்படுவது அவர்களுக்கு மிகவும் கடினமாக இருக்கிறது. கூர்உணர்வுடன் இருக்கும் பண்பை, பலவீனம் என்று சொல்ல முடியாது. ஆனால் சூட்சும ஞானிகள், மற்றவர்களை விட அதிக மாற்றமடைந்து இருக்கிறார்கள். §

1960 களின் தொடக்கத்தில், நான் அதிகமான மாணவர்களின் விரிவாக்கத்தின் மீது தீவிரமான கவனம் செலுத்தி வந்ததால், உலகில் செயல்புரிவது எனக்கு மிகவும் கடினமாக இருந்தது. ஒரு சிறிய காகிதத்தை  காட்டிலும் பாரமான ஒரு பொருளை நான் தூக்கிய ஒவ்வொரு முறையும், எனது உள்ளங்கைகள் மற்றும் கைகள் பிரகாசமாகியது, மற்றும் நான் தூல உடலை பார்க்காமல் எனது உட்புற உடலை பார்த்தேன். நான் ஒரு புத்தகம் அல்லது ஒரு நாற்காலியை சுமந்து சென்றால், முதலில் எனது கைகள் பிரகாசமடைந்து, பின்னர் அந்த ஒளி கையின் மேற்புறம் மற்றும் கீழே கால்களை நோக்கி பரவிய, ஒவ்வொரு முறையும் உடல் மறைய தொடங்கியது. இது எனது வாழ்க்கையில் சுமார் ஆறு வருடங்களுக்கு தொடர்ந்தது. இந்த காலகட்டத்தில், எனக்கு ஒரு சிறிய காகிதமும் பாரமாக தோன்றியது. கைக்கடிகாரம் கட்டினால், கையின் அந்த பகுதி பிரமாசமடைந்ததால், அதை அணிவதும் கடினமாக இருந்தது. என்னை சுற்றி இருந்த மற்ற விஷயங்களை காட்டிலும், படிகத்தால் உருவாக்கிய நெகிழி போல அழகாக காட்சி அளித்த பிரகாசமான உள்ளங்கை மீது நான் அதிக கவனத்துடன் இருந்தேன். பிரகாசமான சக்தியில் மின்னிய அவை அனைத்தையும், நான் விருப்பத்துடன் பார்த்துக்கொண்டு இருப்பேன். அது பார்பதற்கு அற்புதமாக இருந்தது. §

வாகனத்தை ஓட்டும் போது, அதிக வேடிக்கையாக இருந்தது. ஏனென்றால் நான் எனது கைகளை சக்கரத்திருப்பி மீது அழுத்தும் ஒவ்வொரு முறையும்,  எனது உடல் முழுவதும் எனது உடல் முழுவதும் பிரகாசிக்க தொடங்கி, எனக்கு முன்பாக வாகனத்தில் அடர்ந்த பகுதியாக இருந்த அடிச்சட்டத்தை பார்க்க ஆரம்பிப்பேன். வாகனத்தின் மேலிருந்த பகுதிகள் அனைத்தும், மக்களும் மெதுவாக மறைந்து விடுவார்கள். என் கண்களுக்கு அதிக எடையுள்ள உலோகங்கள் மட்டுமே தெரியும். §

ஒரு சூட்சும ஞானி விரும்பினால், உண்மையில் ஒரு அற்புதமான உலகில் வாழலாம். இனி நான் விரும்பினால் அந்த நிலையில் நிலைத்து இருக்கலாம். அது இனி ஒரு அனிச்சையான நிலையாக இல்லாமல், ஒரு தனிச்சையாக இருக்கிறது. நான் ஒரு முறை அந்த நிலையில் இருந்த போது, குப்பைத் தொட்டியை நடைபாதை வரை எடுத்து செல்லவேண்டி இருந்தது.  அப்போது எனக்கு உதவியாக யாரும் இல்லை. நான் அப்போது அதிக அவதிக்கு உள்ளானேன். நான் சிறிது தூரம் சென்றதும், உடல் முழுவதும் பிரகாசிக்க தொடங்கின மற்றும் நான் அதை மீண்டும் கீழே வைக்க வேண்டியிருந்தது. இறுதியாக, நான் அதிக முயற்சி

மேற்கொண்டு, அதை செய்து முடித்தேன். நான் நீண்ட தூரம் நடந்து சென்றது போல தோன்றியது. இதற்கிடையில் தொலைப்பேசி மணி அடிக்க தொடங்கினால், அதன் ஒலி மிகவும் பலமாக இருந்தது, மற்றும் தொலைப்பேசி அழைப்புக்கு பதில் சொல்ல எனது தூல அம்சங்களை மீண்டும் ஒன்று சேர்ப்பது மிகவும் கடினமாக இருந்தது. §



*1950 களின் இறுதியில், ஸ்ரீ சுப்பிரமுனியா தனது ஆன்மீக பணியை நிர்மாணம் செய்துக்கொண்டு இருந்த போது, தனது தலையில் சிவபெருமான் நடனமாடுவதாக ஒரு காட்சியை கண்டார். அவர் அந்த காட்சியுடன்*

*இசைக்கருவிகள் இசைக்கப்படுவதை கேட்டார் மற்றும் அதே சமயத்தில் இரண்டு விசித்திரமான கதவுகள் திறப்பதையும் கண்டார். அந்த கதவுகள் தனது எதிர்கால கோயிலின் நுழைவாயில் என்பதை அவர் பின்னர் தெரிந்துகொண்டார்.*

……………………§

**மார்க் டிவெயினுக்கு பிடித்தமான வடிப்பாலை**

1962 ஆம் ஆண்டு கோடைகாலத்தில், அங்கோரா ஏரியில் தனிமையாக இருந்த பிறகு, ஸ்ரீ சுப்பிரமுனியா தனிமை மற்றும் அமைதியை தரும் ஒரு நிரந்தர மையத்தை நாடி, அருகில் இருந்த நெவாடா மாநிலத்தின் விர்ஜினியா சிட்டிக்கு சென்றார். அவரது தேடுதல் வேட்டை விரைவில் முடிவடைந்தது. அமெரிக்க எல்லையில் பிரபலமாகவும் செழிப்பாகவும் இருந்த இந்த நகரத்தின் பள்ளத்தாக்கில் இருந்து சுமார் கால் மைல் தூரத்தில், அவர் ஒரு பெரிய ஒரு பாழடைந்த வடிப்பாலையை தேடிப்பிடித்தார். அது 1864 ஆம் ஆண்டு புகழ்பெற்ற காம்ஸ்டாக் லோட் கோல்ட் ரஷ் என்ற இடத்தில் கட்டப்பட்டு இருந்தது. அந்த வடிப்பாலை விற்பனைக்காக காத்து இருந்தது. §

சேஜ்பிரஷ் என்ற புதர்செடி மற்றும் பினியான் பைன் நிலபரப்புடன், மலைகள் நிரம்பியிருந்த அதன் எளிமையான சியரா நெவாடா நிலப்பரப்பு, மற்றவர்களுக்கு அச்சுறுத்துவதாக இருக்கும், ஆனால் அது அவரை வெகுவாக கவர்ந்தது. அது யோகிகளுக்கு  தேவையான தனிமை மற்றும் அமைதியுடன் இருந்தது. அந்த இடத்தில் வெளிப்புறத்தை விட உட்புறத்திற்கு அதிக முக்கியத்துவம் இருந்தது. அவர் அதற்குள் நுழையும் போது, “இங்கே ஆசிரமம் கட்டினால் மிகவும் அற்புதமாக இருக்கும்!” என்ற எண்ணம் அவருக்கு முதலில் உதித்தது. அவர் உட்புறத்தில் பெரிதாக இருந்த அறைகள் மற்றும் மூன்று தளங்களை சுற்றிப்பார்த்தார், மற்றும் அடையாள சின்னமாக விளங்கிய அந்த கட்டிடம் பாழடைந்த நிலையில் இருந்தாலும், அவர் அதை வாங்க ஏற்பாடு செய்தார். §

ஓல்ட் நெவாடா பிரீவரி என்று அழைக்கப்பட்ட அந்த கட்டிடம், அமெரிக்க நகைச்சுவை எழுத்தாளர் மார்க் டிவெயினுக்கு பிடித்த இடமாக இருந்தது. சாமுவேல் கிளமென்ஸ் (டிவெயினின் உண்மையான பெயர்) முதலில் ஒரு எழுத்தாளராக இருந்தார். அவர் அதன் பின்னர் 1862 முதல் 1864 வரை, விர்ஜினியா சிட்டியில் *டெர்ரிடோரியல் எண்டர்பிரைஸ்* என்ற பத்திரிகையில் இதழாசிரியராக இருந்தார். அவர் அந்த சமயத்தில் பிரபலமான *ரஃபிங் இட்* என்ற நாவலை எழுதினார். மிகவும் பெரிய மற்றும் பிரபலமான மதுபானக்கடையின் பீர் தோட்டங்களில், ஒவ்வொரு மதியமும் முரடர்களாக இருந்த சுரங்க தொழிலாளிகளுக்கு நீளமான வியக்கவைக்கும் கதைகளை சொன்னதாக கூறப்படுகிறது. மேலும் அங்கே பெரிய கூட்டம் கூடியிருந்தது. அந்த காலத்தில், புதர்கள் படர்ந்த குன்றுகளில் பள்ளம் தோண்டி தங்க வேட்டை நடத்த, உலகெங்கிலும் இருந்து வைல்ட் வெஸ்ட்டை நோக்கி வந்த மக்கள் வெள்ளம் காரணமாக, விர்ஜினியா சிட்டியில் 30,000 மக்கள்

இருந்தனர். அது சான் பிரான்சிஸ்கோ மக்கள் தொகையில் பாதியாக இருந்தது. §

அடையாள சின்னமாக விளங்கிய அந்த கட்டிடத்தின் செங்கல் மற்றும் ஆடரம்பர மரவேலைப்பாடுகள் நிரம்பிய அறைகளில், அதன் புதிய உரிமையாளர் ஸ்ரீ சுப்பிரமுனியா காலடி எடுத்து வைக்கும் போது, அது சுமார் அரை நூற்றாண்டு பழமையான ஒரு அமைதியான நினைவுச் சின்னமாக மாறி இருந்தது. நரைத்த முடியுடன் கனிவளம் தேடிய ஒரு முதியவர், அந்த கட்டிடத்தின் காப்பாளராக இருந்தார். அவர் தனது கோவேறு கழுதையை அடித்தளத்திலும், ஒரு பன்றியை குளியலறையிலும் வைத்து இருந்தார். அவருக்கு காது சரியாக கேட்கவில்லை மற்றும் அவரது குடியிருப்பின் முதலாளி மாறியுள்ளார் என்று சொல்லி, அவரை புரியவைப்பது மிகவும் கடினமாக இருந்தது. §

அந்த கட்டிடத்தை ஸ்ரீ சுப்பிரமுனியாவின் தரத்திற்கு கொண்டு வர, தேவாலய குடும்பங்கள் அந்த கோடைகாலத்தில் மீதம் இருந்த நாட்கள் முழுவதும், தங்களிடம் இருந்த சக்தி, ஆர்வம் மற்றும் பணத்தை பயன்படுத்தி, ஒரு அனாதை சிறுவனை பெற்றோர்கள் அரவணைப்பது போல, அவர்கள் அந்த ஆசிரமத்தை உடனே தத்து எடுத்துக்கொண்டனர். பனியால் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்ட நெவாடா குளிர் காலம் முழுவதும், சில துறவிகள் பொறுப்பாளர்களாக இருந்தார்கள் மற்றும் பெரிய அளவிலான சீரமைக்கும் பணி, வசந்த காலத்தில் செய்ய திட்டமிடப்பட்டு இருந்தன. அந்த ஆசிரமத்தில் தங்கவிருக்கும் துறவிகளின் கடவுளாக முருகன் என்கிற ஸ்கந்தன் விளங்குகிறான் என்கிற ஸ்ரீ சுப்பிரமுனியாவின் நுண்ணறிவை பிரதிபலிக்கும் வண்ணம், அது ஸ்கந்தமலை மடாலயமாக மாறியது (மவுன்ட்டன் டெசர்ட் மடம் என்றும் அழைக்கப்பட்டது). §

அது பிற்காலத்தில் ஒரு பிரதான வெளியீடு மற்றும் அச்சுக் கூடமாக, விரைவாக வளர்ச்சி அடையத்தொடங்கியிருந்த இமாலயன் அகாடெமியின் பயிற்சி வகுப்புக்கள் மற்றும் திட்டங்களின் புதிய மையமாக மாறிய காம்ஸ்டாக் ஹவுஸின் மன்றமாக மாறியது. கடல் மட்டத்திலிருந்து 6,500 அடிகள் உயரத்தில் இருந்த இந்த தனிமையான, அமைதியான மற்றும் காற்றோட்டமான மலைப்பகுதியில், ஸ்ரீ சுப்பிரமுனியா தனது துறவிகள் குழுவிற்கு வேதாந்தம், சித்தாந்தம் மற்றும் இலக்கியம், பயண திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி வகுப்புகள் மூலம் சைவ சமயத்தில் பல வருடங்களுக்கு பயிற்சி அளித்தார். §

### LSD என்கிற உளமாற்றி மருந்து ஏற்படுத்திய இரசாயன குழப்பம்

1964 ஆம் ஆண்டு, உளமாற்றி இயக்கம் மற்றும் போதை மருந்துகளின் காலம் உச்சத்தை அடைந்து இருந்த போது, ஹிப்பிக்கள் மற்றும் மலர் குழந்தைகளின் முதல் குழுவினரை, அமெரிக்க தொலைகாட்சி மற்றும் பத்திரிகைகள் உலகிற்கு முதலில் படம்பிடித்து காட்டின. அந்த இயக்கத்தின் தலைமை இடமாக இருந்த ஹைட்-ஆஷ்பரி என்ற குடியிருப்பு, சிறியதாக

மற்றும் சாதரணமாக சான் பிரான்சிஸ்கோவில் முன்பு அறியப்படாத பகுதியாக இருந்தது. அது சாக்ரமெண்டோ தெருவில் இருந்து ஒரு மைல் தூரத்தில் இருந்தது. ஹிப்பி இயக்கம் மற்றும் இந்த மாவட்டத்தைப் பற்றி, நாடு முழுவதும் செய்தி ஒலிபரப்பப்பட்டதால், இந்த இடத்திற்கு அமெரிக்கா முழுவதிலும் இருந்து இளைஞர்கள் வரத்தொடங்கினார்கள். §

அது அமெரிக்காவில் போதை மருந்து சகாப்த தொடக்கத்தின் ஒரு விசித்திரமான அம்சமாக விளங்கியது. மேலும் அது தீவிரமடையும் வரை, அதை யாரும் கண்டுகொள்ளவில்லை. அந்த நகரத்திற்கு பெருமளவில் மக்கள் வருவதையும், அதற்கு தேசிய செய்தி நிறுவனங்கள் வழங்கிய முக்கியத்துவத்தையும் கவனித்த ஸ்ரீ சுப்பிரமுனியா, மாநகராட்சி தலைவர் அலுவலக ஊழியர்கள் மற்றும் இந்த பிரச்சினையை கவனித்த பல்வேறு சமய மற்றும் சமூக சேவகர்களுக்கும் இடையே ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தார். இதன் விளைவாக, இந்த போதை மருந்து கலாச்சாரத்தில் இணைவதற்காக, இந்த நகரத்திற்கு வரவிரும்பிய இளைஞர்கள் வரவேண்டாம் என்று கடுமையாக எச்சரித்து, மாநகராட்சி தலைவர் மற்றும் மற்றவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொடரை *சான் பிரான்சிஸ்கோ கிரோனிக்ள்* வெளியிட்டது. §

ஹிப்பி இயக்கத்தின் தொடக்க காலத்தில், அமெரிக்காவில் இருந்தவர்களுக்கு அதைப்பற்றி ஒன்றும் புரியவில்லை. அது ஏற்படுத்தும் உடல் உபாதைகள் மற்றும் ஆபத்துக்களை பற்றி ஸ்ரீ சுப்பிரமுனியா அறிந்து இருந்து, அதற்கு எதிராக பேசவும் செய்தார். ஆனால் இந்த பிரச்சினை நாடு முழுவதும் தலைவிரித்து ஆடும் என்பதை அவரும் ஊகிக்கவில்லை. §

> பொழுதுபோக்கு பயனர்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட இந்த LSD பற்றி நான் முதல் முறையாக அறிந்த போது, அதைப்பற்றி தெரிந்துக்கொள்ள மென்லோ பார்க் கிளினிக் சென்றேன். நான் அங்கிருந்த ஒரு மனநல மருத்துவரிடம் பேசினேன். இந்த மருந்து வழங்கும் பல்வேறு அனுபவங்களை பற்றி அவர் என்னிடம் விளக்க ஆரம்பித்தார். “ஆன்மீக வெளிப்பாடுகள், விரிவாக்கம் பெற்ற சாட்சி, பேரானந்தம் மற்றும் பிரகாசமான உட்புற அனுபவங்களாக நீங்கள் விளக்கும் அனுபவங்களில் சிலவற்றை, நான் தியான சக்தியின் மூலம் கடந்த இருபது வருடங்களாக எனது வாழ்க்கையிலும் அனுபவித்து வருகிறேன்,” என்று நான் அவரிடம் கூறினேன். அதற்கு அவர், “அப்படியென்றால், நீங்கள் ஒரு அதிஷ்டசாலி என்று நினைக்கிறேன். சரி தானே?” என்று கேட்டார். §

இந்த சிக்கல் தேவாலயத்தின் மீதும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. நாட்கள் செல்ல செல்ல, வகுப்புக்கள் மற்றும் சேவைகளுக்கு விசித்திரமாக தென்பட்ட விருந்தாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. ஆயிரக்கணக்கான LSD பயனர்களுக்கு, அமெரிக்க குரு பல வருடங்களுக்கு ஆலோசனை வழங்கினார். அந்த மருந்துகள் தவறானவை இல்லை, ஆனால் சூட்சுமமான அனுபவங்களை பெறுவதற்கு ஒரு பழமையான, இயல்பான மற்றும் நிருபிக்கப்பட்ட வழி இருக்கிறது என்பதே அவரது மைய கருத்தாக இருந்தது. §


போதை மருந்துகளில் இருந்து விலகி இருக்கவேண்டும் என்றும், அதற்கு பதிலாக யோகப்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் இளைஞர்  சமுதாயத்தை கனிவாக ஊக்குவித்தார். அந்த மருந்துகள் அதைப்போன்ற அனுபவங்களை வழங்கினாலும், அவை அவற்றை பற்றிய அடிப்படை அல்லது புரிந்துணர்வை வழங்குவதில்லை, மற்றும் அதே அனுபவம் அல்லது பயனை மீண்டும் வழங்க வாய்ப்பில்லை என்று அவர் இளைஞர்களிடம் அந்த மருந்துகளில் இருந்த பிரச்சினைகளைப் பற்றி விளக்கினார். நரம்பு அமைப்பு மற்றும் மனதிற்கு ஏற்பட்ட பாதிப்பிற்கு ஆதாயமாக எதுவும் கிடைப்பதில்லை. அவர் சொன்ன வார்த்தைகள் எப்போதும் குற்றம் சுமத்துவதாக இருந்ததில்லை, ஆனால் அவர்கள் அனுபவித்த மற்றும் அவரிடம் தெரிவித்த ஆழமான மனதின் நிலைகளை பற்றி அவர் தனிப்பட்ட முறையில் அறிந்து இருந்ததால், அவர் சொன்ன வார்த்தைகள் விசேஷ சக்தியுடன் இருந்தன. அவர் அந்த ஆழமான மனநிலைகளுக்கு சென்று வந்ததை, அவர்கள் கவனித்து இருந்ததால், அவர் வழங்கிய ஆலோசனையை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். §

ஸ்ரீ சுப்பிரமுனியாவின் நகரத்தை மையமாக கொண்டிருந்த, இந்த சமூக இடையூறின் மீது அவர் மேற்கொண்ட தியானங்களின் மூலம், அவர் கோயிலில் “இரசாயன குழப்பம்" என்ற பெயரில் ஒரு உரை வழங்கினார். அது உளமாற்றி இயக்கம் மற்றும் அதன் தத்துவம் பற்றிய ஒரு விளக்கம் மற்றும் விமர்சனமாக இருந்தது. இந்த மருந்துகளை பயன்படுத்தியதால் வேதனையை அனுபவித்த நபர்களுக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யுமாறு துறவிகள் மற்றும் வயதுவந்தோருக்கு ஆலோசனை வழங்குபவர்களிடம் கேட்டுக்கொண்டார். அவர் நகரத்தின் மந்திரிகள் மற்றும் மற்றவர்கள் மத்தியில், இந்த பிரச்சினையின் இயல்பைப் பற்றிய புரிந்துணர்வை பரப்புவதற்கு பெருமளவு முயற்சியை மேற்கொண்டார். §

1960 களின் தொடக்கத்தில், உளமாற்றி அனுபவத்தின் மூலம் திறந்து கொண்ட மனதின் உயர்நிலைகளில், தாங்கள் பெற்ற அனுபவங்களின் அம்சங்கள் பற்றி, என்னிடம் ஆலோசனை பெறுவதற்கு நாளுக்கு நாள் அதிகமான  மக்கள் வருகிறார்கள் என்பதை நான் உணர்ந்துகொண்டேன். தாங்கள் பெற்ற இந்த அனுபவங்களுடன், யோகம் மற்றும் தியானத்தின் மூலம் கிடைக்கும் உணர்வை தொடர்புபடுத்துவதில் அவர்கள் ஆர்வத்துடன் இருந்தார்கள். ஒருவருக்குள் இருக்கும் உட்புறத்தின் மீது அந்த நபருக்கு அனுமதி வழங்க, சிலநேரங்களில் பல வருடங்கள் தேவைப்படும் கடினமான யோக பயிற்சிகளுக்கு செல்லாமல், அதே பலனை மிகவும் விரைவாக, அடக்கமாக தென்பட்ட இந்த தியானத்தின் மூலம் கிடைத்ததால், அவர்கள் தங்களது புதிய உலகை நினைத்து அதிக உற்சாகத்துடன் இருந்தார்கள். இப்போது நாடு முழுவதும் இருக்கும் மக்கள், தங்களுக்குள் இருந்த உலகின் மீது விழிப்புணர்வை பெற தொடங்கி இருக்கிறார்கள். §

சில உளமாற்றி அனுபவங்களை பெற்ற சாதகர்களுடன் நான் நேர்காணல் நடத்தி இருக்கிறேன். அதன் மூலம் ஒரு புதிய உலகில் அதிக ஆற்றல் மற்றும் அதிக துடிப்புணர்வுடன், எதிர்கொள்ள தயாராக இருக்கும் சவால்களை பற்றி நான் அறிந்து கொண்டேன். நான் அதைப்போன்று வேறு சிலரையும் சந்தித்து இருக்கிறேன். அவர்கள் வெற்றுப் பார்வையுடன், தங்கள் விருப்பங்களை மற்றும் தங்கள் சுய-மரியாதையையும் இழந்து இருப்பதையே என்னால் காண முடிகிறது. அதற்கு முன்பு அவர்களது மனதின் சக்தி பாய்ந்து சென்ற அமைப்பை அவர்கள் இழந்து இருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும், மற்றும் அந்த இழப்பு ஈடு செய்யப்படவில்லை. §

ஒரு நாடு அல்லது உலகம் முழுவதும், ஒரு சிறிய "அமிலத்தை" சுற்றி ஒரு இயக்கம் உருவாவதை நான் பார்க்க விரும்பவில்லை. இளம் ஆன்மாக்களிடத்தில், இது பேரழிவை ஏற்படுத்தும் என்பதால் நான் இதை பார்க்க விரும்பவில்லை. தன்னை தயார்படுத்திக் கொள்ளாமல் விரிவாக்கம் செய்துக்கொண்டு சில இளம் ஆன்மாக்கள், மனோஉணர்வு திறனால் சிக்கி தவிக்கிறார்கள். அவர்கள் சிந்தனை உருவங்களை ஆய்வு செய்யலாம், ஒளி உடல்களை பார்க்கலாம் அல்லது சூட்சும உலகில் பயணம் செய்யலாம். ஒருவர் ஆத்ம ஞானம் பெறும் வரை, இந்த மனோஉணர்வு பாதையை தவிர்க்க வேண்டும் என்று நாங்கள் யோகத்தில் குறிப்பிடுவோம். ஏனென்றால் நாம் உயர்ந்த சக்திகள் மற்றும் அழகான அனுபவங்களுக்கு மனதை திறந்து கொண்டால், நாம் முதுகுத்தண்டின் அடியில் மூலாதார மையத்திற்கு கீழே இருக்கும் நிழல் உலக சக்கரங்களின் வெறுக்கத்தக்க அனுபவங்களுக்கு நம்மை திறந்து கொள்கிறோம். அந்த உணர்வு பகுதிகளை பூர்வாங்க பயிற்சி இல்லாமல், நம்மால் கட்டுப்படுத்த முடியாது. §



*1960 மற்றும் 1970களில் தூண்டுதல், போதை மருந்து பரிசோதனை மற்றும் ஆன்மீக வேட்கை நிரம்பி இருந்த காலத்தில், ஸ்ரீ சுப்பிரமுனியா அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் இருந்த முக்கிய பல்கலைக்கழகங்களில்*

*தொடர்ச்சியாக சொற்பொழிவுகளை நடத்தி, ஆர்வமுள்ள மாணவர்களுக்கு அத்வைத பாதையை கற்றுத் தந்தார்.*

........................§

விரிவாக்க செயல்முறையில் இருக்கும் தனது மாணவர்களின் உயர்நிலை உலகங்கள் திறக்கும் போது, கீழ்நிலை உலகங்களை மூடி, அவர்களை எப்படி காப்பாற்றுவது என்பதை யோகம் கற்றுக்கொடுக்கும் குரு அறிந்து இருக்கிறார். இதை எப்படி செய்வது என்பதை அவர் அறிந்து இருக்கிறார், ஆனால் அதற்கு நிலையான பயிற்சி மற்றும் கால அவகாசம் தேவைப்படுகிறது. உளமாற்றி அனுபவத்தை பெற்று, சாலையில் சில வீடுகளை கடந்து செல்ல முடியாமல் தவிக்கும் சிலரை நான் சந்தித்து இருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட வீட்டில் நடைபெறும் வாக்குவாதத்தின் எதிர்மறை விசைப்பகுதியின் மீது அவர்கள் கூர்உணர்வுடன் இருப்பதால், அவர்களால் அந்த வீட்டை கடந்து நடக்க முடிவதில்லை. இதில் சிலர் தங்களது கீழ்நிலை மனதின் அதிக நுணுக்கமான சக்திகளை விரிவாக்கம் செய்துக்கொண்டு உள்ளனர். §

"தூண்டுதலை பெற்ற" மற்றும் "தூண்டுதலை பெறாத" மக்களுக்கு இடையே உருவாகி இருக்கும் இடைவெளியை, தியானம் செய்து மனதின் மீது கட்டுப்பாட்டை பெறுவதன் மூலம், ஒருவர் தனக்கு தலைவனாக இருக்கலாம் என்று எனக்கு தோன்றுகிறது. நீங்கள் உங்களுக்கு தலைவனாக இருக்கும் போது, நீங்கள் தனிமையில் இல்லாமல், முழுமையில் தனியாக நிற்கிறீர்கள். அவ்வாறு செய்யும் போது, தியானத்தின் செயல்முறை மூலமாகவும், ஒரு பிரச்சனையை பற்றி உட்கார்ந்து சிந்தித்து, இறுதியில் அதை முழுமையான மெய்ஞ்ஞான கண்ணோட்டத்துடன் பார்த்து, புத்துணர்வு நிரம்பிய பலன் தரக்கூடிய பதிலை வெளிக்கொண்டு வருவதன் மூலமாகவும், உங்களால் அறிவு மற்றும் ஞானத்தை வெளிக்கொண்டு வர முடிகிறது. தியானம் ஒரு வலுவான செய்முறை. அது ஓரிடத்தில் அமர்ந்து காத்து இருப்பதை விட உயர்வானதாக இருக்கிறது. அது ஒரு உயர்வான தனிப்பண்புடைய மனதை உருவாக்குகிறது. §

1967 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், அவர் Dr. ரிச்சர்ட் அல்பெர்ட்டுடன் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தார். அந்த நபர் Dr. டிமோதி லியரியுடன் சேர்ந்து, LSD பிரசாரகராக மாறி, "டியுன் இன், டர்ன் ஆன் மற்றும் ட்ராப் அவுட்" என்ற வாசகத்தின் மூலம் அமெரிக்க இளைஞர்களின் ஆர்வத்தை அவர்கள் தூண்டிவிட்டனர். அந்த சந்திப்பை ஒரு இளம் வயது துறவி ஏற்பாடு செய்து, ஸ்ரீ சப்பிரமுனியாவுடன் அந்த சந்திப்பில் கலந்து கொண்டார். ஒரு பெர்க்லி அபார்ட்மெண்ட்டில் நடந்த ஒரு ஸ்பகெட்டி விருந்தில், LSD தூண்டிய பிரகாசமான மற்றும் சில சமயங்களில் அழிவை ஏற்படுத்தும் மனநிலைகளை பற்றி விவாதித்தனர். §

ஸ்ரீ சுப்பிரமுனியா அவரிடம், இயல்பான வழியில் உயர்ந்த உலகங்களை அடைந்த ஆன்மாவிற்கு அந்த உலகம் திறந்து இருப்பதாகவும், ஆனால் போதை மருந்துகளை பயன்படுத்தி தகுதியற்ற மக்கள் சூட்சும ரீதியாக வரத் தொடங்கியதும், தேவர்கள் கதவுகள் அனைத்தையும் மூடி விட்டதாகவும் கூறினார். அவரும் டிமோதி லியரியும் இணைந்து செய்யும் நடவடிக்கையை உடனே நிறுத்த வேண்டும் என்று ஸ்ரீ சுப்பிரமுனியா அவரை எச்சரித்து, போதை மருந்துகளை பயன்படுத்தும் ஆன்மாக்கள், தங்கள் உணர்வை விரிவாக்கம் செய்ய இயலாமல் கீழ்நிலை உலகில் சிக்கிக்கொள்ளும் என்றும் கூறினார். §

அந்த அந்தி சாயும் நேரத்தில், எப்போதும் சுற்றிக்கொண்டு, நூறு முறை LSD எடுத்துக்கொண்டிருந்த, முன்னாள் ஹார்வர்ட் பேராசிரியர், இளைஞர்கள் வாழ்க்கையுடன் விளையாடுவதால், அவர் கர்மவினைகளை உருவாக்கிக்கொண்டு இருக்கிறார் என்று ஸ்ரீ சுப்பிரமுனியா கடுமையாக எச்சரித்த போது, அந்த பேராசிரியர் முன்பக்கமாக சாய்ந்து கவனமாக கேட்டுக்கொண்டு இருந்தார். அல்பெர்ட் இந்த நடவடிக்கையை தவிர்க்க வேண்டும் என்று திடமாக கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் அதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை என்றாலும், அதன் பின்னர் அவரது வாழ்க்கையின் போக்கை மாற்றிய இந்திய பயணத்திற்கு அந்த உரையாடல் ஒரு காரணமாக இருந்திருக்கக்கூடும். அவர் அதன் பிறகு விரைவில் தன் மனதை மாற்றிக்கொண்டு, LSDக்கு எதிராக மக்களிடம் பேசினார். அவர் இந்தியா சென்று நீம் கரோலி பாபாவின் சீடனாகி, ராம் தாஸ் என்ற பெயரையும் பெற்றார். §

மேலும் 1967 ஆம் ஆண்டு, ISKCON ஐ நிறுவிய, வைணவ குரு சுவாமி பிரபுபாதா, ஹைட்-ஆஷ்பரி மாவட்டத்தின் எல்லையில் இருந்த பிரெடெரக் ஸ்ட்ரீட்டில் ஒரு சிறிய கிருஷ்ணன் கோயிலை கட்டுவதற்காக, சான் பிரான்சிஸ்கோ நகரத்தில் குடிபுகுந்தார். இந்தியாவில் இருந்து வந்த குருவை, எப்போதும் போல ஸ்ரீ சுப்பிரமுனியா சந்தித்து வரவேற்பை வழங்கி, அமெரிக்காவில் அவர் கோயிலை நிறுவுவதற்கு வேண்டிய உதவிகளை செய்தார். சுவாமி பிரபுபாதாவின் சீடர்களுக்கு, ஸ்ரீ சுப்பிரமுனியாவின் குழுவில் இருந்த அங்கத்தினர்கள் அவ்வப்போது பழங்கள் மற்றும் தானியங்களை பெட்டிகளில் எடுத்து சென்று உதவி செய்தனர். அவர் சாஸ்திரங்களில் இருந்து நீளமான கதைகளை சொல்லி ஸ்ரீ சுப்பிரமுனியாவின் சீடர்களை மகிழ்விப்பார். ஒரு முறை அவர் சாக்ரமெண்டோ ஸ்ட்ரீட் கோயிலுக்கு வந்திருந்து, ஒரு உபதேசம் வழங்கி பஜனையையும் முன்னின்று நடத்தினார். §

அமெரிக்காவில் சின்மயா மிஷன் தொடங்க உதவி தேவைப்பட்ட போது, சுவாமி சின்மயானந்தாவிற்கு தனது வழக்கறிஞரின் சேவையை அனுமதித்தது போல, அமெரிக்காவில் சமயப்பணி நோக்கத்துடன் வந்த இந்து தலைவர்களுக்கு, ஸ்ரீ சுப்பிரமுனியா பல வருடங்களுக்கு வேறு பல வழிகளிலும் உதவி செய்து வந்தார். §

### பொறுப்பு ஏற்றல்

1950 களில் மற்றும் 60 களின் தொடக்கத்தில், தேவாலயத்தில் மதர் கிறிஸ்டினி முக்கிய பங்கு வகித்தார். அவர் சாக்ரமெண்டோ ஸ்ட்ரீட் கோயிலில் கன்னியாஸ்திரிகள் சமூகத்தின தலைவியாக இருந்தார், மற்றும் வயதில் மூத்தவராக, ஸ்ரீ சுப்பிரமுனியாவிற்கு தனது முழு ஆதரவையும் வழங்கினார். ஒரு அன்பர், அந்த சபையில் தனது ஆரம்ப நாட்களைப் பற்றி நினைவுக் கூர்கிறார்: §

> அப்போது மதர் கிறிஸ்டினிக்கு 83 வயது. அவர் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைப்பெற்ற தேவாலய நடவடிக்கைகளின் போது, பீடத்திற்கு பின்னால் இருந்த ஒரு சிறிய அறையில் அமர்ந்துகொண்டு, ஸ்ரீ சுப்பிரமுனியா வழங்கிய உபதேசங்களில் பங்குபெறுவார். அவர் சில சமயங்களில், தனது வாழ்க்கை மற்றும் அனுபவத்தைப் பற்றி எனக்கு மற்றும் மற்ற புதியவர்களுக்கு உரை நிகழ்த்துவார். “உங்கள் குருவிற்கு கீழ்படிந்து நடக்கவேண்டும், உங்கள் குருவிற்கு கீழ்படிந்து நடக்கவேண்டும்,” மற்றும் “உங்கள் ஆன்மீக விதியை நோக்கி உங்கள் குரு வழிநடத்தி செல்வார்” போன்ற அறிவுரைகளின் மூலம் அவர் எப்போதும் ஸ்ரீ சுப்பிரமுனியாவிற்கு ஆதரவாக இருந்தார். §

அதே சமயத்தில், மதர் கிறிஸ்டினி தொடர்ந்து கிறுத்துவ தாக்கத்திற்கு ஆதரவாக இருந்தார். அவருக்கு வயதாகியது, ஸ்ரீ சுப்பிமுனியா ஒரு இந்து குருவாக முழு அதிகாரத்தையும் பயன்படுத்தத் தொடங்கிய போது, அவர் தேவாலயத்தில் சில நிர்வாக மாற்றத்தை ஏற்படுத்த முயன்றார். அவரது முயற்சிகள் தோல்வி அடைந்தன; மற்றும் 1967 ஆம் ஆண்டில், முதுமை காரணமாக, சபையில் இருந்து விலகி, தனது மகனுடன் சேர்ந்து வாழ சென்றுவிட்டார். அதன் பிறகு தனிப்பொறுப்பு வகித்த ஸ்ரீ சுப்பிரமுனியா, தனது சமூகத்தின் போதனைகளில் இருந்து மதர் கிறிஸ்டினியின் ஆன்மீக கிறுத்தவ சமயத்தின் அடிச்சுவடுகள் அனைத்தையும் நீக்கி, தனது நிறுவனத்தை ஒரு முழுமையான இந்து அமைப்பாக புனர்நிர்மாணம் செய்தார். §

Page 37: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/37_guru05_04.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் இருபத்தி இரண்டு

# நெவாடாவில் குடியேறுதல்

மார்ச் 24, 1964, யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த சற்குரு யோக சுவாமி *மகாசமாதி* அடைந்தார். கந்தையா செட்டியார் இறுதிச் சடங்கின் புகைப்படங்களை, சில நாட்களுக்குள் அனுப்பி வைத்தார். அந்த சடங்கில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர். ஸ்ரீ சுப்பிரமுனியாவை யோக சுவாமி ஆன்மீக ரீதியாக சந்தித்தார். உடனே அமெரிக்க சீடரின் உடலுக்குள் ஒரு சக்தி பரவியது, மற்றும் அவர் ஆன்மீக அதிகாரத்தின் புதிய சக்தியை ஏற்றுக்கொண்டது போல் தோன்றியது. நடப்பதை கவனித்துக்கொண்டு இருந்த அவரது சீடர்கள், அவரை மாஸ்டர் (குரு) சுப்பிரமுனியா என்று அழைக்க ஆரம்பித்தனர். அந்த பெயர் சில வருடங்கள் கழித்து சட்டப்பூர்வமானது. அவர் அந்த காலகட்டத்தைப் நினைவுக் கூர்கிறார்: §

> யோக சுவாமி மார்ச் 1965 தனது தூல உடலை விட்டு பிரிந்தார். இது நடந்து முடிந்த பிறகு, “எங்களுக்கு இங்கே குரு தேவைப்படுவதால், நீங்கள் உடனே இங்கே திரும்பி வரவேண்டும்,” என்று சொல்லி சிலோனில் இருந்து வந்த கடிதங்கள், அவருக்கு நான் தான் வாரிசு என்பதை குறிப்பிடும் விதமாக இருந்தன. எனது சமயப்பணி மேற்கில் இருந்ததாக எனக்கு தோன்றியது. §


மாஸ்டர் 1965 வருடத்தை “அகாடமியின் வருடம்" என்று பெயரிட்டார். அவரது சமயப்பணி முன்னேற்றத்தில் இருந்தது, மற்றும் நெவாடாவில் இருந்த தனது சொத்தை, தனக்கும் தனது துறவிகளுக்கும் ஒரு தனிமையான மற்றும் அமைதியான மையமாக மாற்ற வெகு நாட்களாக யோசித்துக்கொண்டு இருந்தார். அவர் சான் பிரான்சிஸ்கோ கோயிலில் இருந்து ஆசிரமத்திற்கு அடிக்கடி பயணம் மேற்கொள்ள தொடங்கினார். சிலசமயம் வாரத்திற்கு ஒரு முறை சென்று வந்தார். குருவின் தேவையை அறிந்த உறுப்பினர்கள்,

அவர்களுக்கு ஒரு கருப்பு நிற காடிலாக் வாகனத்தை குத்தகைக்கு எடுத்தனர். அந்த காலத்தில் நெவாடாவில் வேகத் வரம்புகள் எதுவும் இல்லை, மற்றும் அந்த தொலை தூர சாலைகள் வழியாக அவரே வாகனத்தை ஓட்டிக்கொண்டு சென்றார். அவர் அதை ஒரு தியானமாக மேற்கொண்டு, எப்போதும் மணிக்கு 80 மைல் வேகத்தை கடக்காமல் வாகனத்தை ஓட்டினார். §

**வைல்ட், வைல்ட் வெஸ்ட்**

அந்த மவுன்ட்டன் டெசர்ட் மடம் (மலைகளுக்கு மத்தியில் இருந்த பாலைவனம்), குருவின் ஆன்மீக வீடாகவும் அவரது வெளியீட்டு மையமாகவும் மாற இருந்தது. சுமார் சிகப்பு-கழுத்துடன் இருந்த 600 மவுன்ட்டன் பாய்ஸ் மற்றும் அவர்கள் குடும்பங்கள் வசித்த கௌபாய் (மாட்டிடையன்) நகரத்தின் மையம், கால் மைல் தூரத்தில் இருந்தது. 100 ஆண்டுகள் பழமையான மரப்பலகை நடைப்பாதை இன்னும் பயன்பாட்டில் இருந்தன, புகழ்பெற்ற பக்கெட் ஆஃப் பிளட் சலூன் அதிகாலையில் திறந்தது. ஓபரா ஹவுஸ் பிரபலமாக இருந்த காலம் முடிவுக்கு வந்து, தற்போது அதன் அடிச்சுவடு மட்டுமே மீதம் இருந்தது; ஆனால் அந்த நகரம் ரெனோ நகரத்தில் இருந்து 24 மைல் தூரம் மலை ஏறி வந்த சிறிய சுற்றுலா பயணிகள் கூட்டத்தினர் வரவால் தன்னை தக்கவைத்துக் கொண்டு இருந்தது. அவர்கள் சிறிது நேரம் சூதாட்டத்தில் ஈடுபடுவார்கள், சில சிறிய நகைகளை வாங்குவார்கள், பீர் குடிப்பார்கள் மற்றும் வுட்டன் இந்தியன் பொம்மைக்கு முன்பாக நின்று புகைப்படம் எடுத்துக்கொள்வார்கள். §

புகழ்பெற்ற வடிப்பாலையை வாங்கிய மாஸ்டர் மற்றும் அவரது சான் பிரான்சிஸ்கோ யோகிகளை, உள்ளூர் மக்கள் புரிந்துகொள்ள முடியாமல் தவித்தனர். இரு குழுவினர் இடையே நட்புறவு ஏற்படுவதற்கு ஒரு வருடம் தேவைப்பட்டது. துறவிகள் தபால் நிலையத்திற்கு சென்று தபால் வாங்க நகரத்திற்கு வந்த போது, என்ன செய்வது என்று தெரியாத உள்ளூர் மக்கள் தெருவின் மறுபுறத்திற்கு சென்றனர். அதே போல அவர்கள் துறவிகளை அச்சுறுத்தும் நோக்கத்துடன், தங்கள் மிதியுந்து வாகனங்களில் வேகமாக ஆசிரமத்தை கடந்து சென்று, அவர்களை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். அது ஒரு கலாச்சார மோதலாக இருந்தது. இதை எப்படி சரி செய்வது என்று மாஸ்டர் தீவிரமாக சிந்தித்தார். முடிவில் உள்ளூர் மக்களின் நட்புறவை பெறும் நோக்கத்துடன், அவர் கௌபாய் காலணிகள், ஒரு தொப்பி மற்றும் போலோ கழுத்துப்பட்டையை வாங்கினார். அவர் அவர்கள் நடத்திய வியாபாரங்களுக்கு சென்று, அவர்கள் வழங்கிய சேவைகளை வாங்கி, அவர்களது மொழியில் பேசினார். இந்த முயற்சி பெரும்பாலும் நல்ல பலனை தந்தது. §




*கோடைகாலத்தில் அமைதியாக தனியாக இருப்பதற்கு, குரு நெவாடா விர்ஜினியா சிட்டியில் இருந்த ஒரு பாழடைந்த மூன்று அடுக்கு வடிப்பாலையை வாங்கினார். ஆனால் அவரது சமூகம் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வந்ததால், அது விரைவில் ஒரு மடமாக மாறியது. அவரது இளம் துறவிகள் பத்து வருடங்களுக்கு, புதர் படர்ந்து ஒதுக்குப்புறமாக இருந்த மலைகளில் சேவை செய்து பயிற்சியும் பெற்றனர்.*

........................§

இருந்தாலும், அவர்கள் முரட்டுத்தனமாக மிதியுந்து வாகனத்தில் வழங்கிய வரவேற்பு தொடர்ந்தது. அதனால் தனது துறவிகளில், துப்பாக்கி சுடுவதில் பயிற்சி பெற்று வான்குடை உபயோகிக்க தெரிந்த முன்னாள் ஒரு இராணுவ


வீரிடம், ஒரு வேட்டை துப்பாக்கி வாங்கி வர உத்தரவிட்டார். மிதியுந்து வாகன ஓட்டிகள் மீண்டும் சிக்ஸ் மைல் கானியன் ரோட்டில் வாகனத்தை வேகமாக ஓட்டி தூசியை கிளப்பிய போது, அந்த துறவி இரண்டாவது மாடி சன்னலை திறந்து, அவர்கள் தலைக்கு மேலாக செல்லுமாறு இரண்டு 12-கேஜ் அளவுள்ள தோட்டாக்களை சுட்டார். அந்த தகவல் அற்புதத்தை நிகழ்த்தியது. வேகமாக வாகனம் ஓட்டுவது நின்றது, மற்றும் துறவிகள் மீது புதிய மரியாதை தோன்றியது. §

அந்த மடம் உள்ளூர் கலாச்சாரத்தின் இன்னொரு முகத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. விபச்சாரம் நெவாடா பகுதியில் மட்டுமே சட்டப்பூர்வமாக இருக்கிறது, மற்றும் அந்த மாநிலத்தின் மிகவும் பிரபலமான விபச்சார விடுதி ஆசிரமத்தில் இருந்து சில மைல் தொலைவில் இருந்தது. மொட்டை அடித்த தலையுடன் துறவி கதவை திறந்த போது, அவரிடம் மிகவும் மோசமான கேள்விகள் கேட்கப்பட்டன. இந்த சம்பவம் பல முறை நடந்தது. “இந்த தெருவில் இன்னும் சிறிது தூரம் முன்னே சென்று விசாரியுங்கள்,” என்று விசாரிப்பவரை விவேகமாக திசைத்திருப்ப துறவிகள் விரைவில் கற்றுக்கொண்டனர். §

தாங்கள் கணநேர காட்சியாக பார்த்து இருந்த மெய்ஞ்ஞான மனநிலைகளை புரிந்துகொண்டு, உயிருடன் வாழ்ந்துக்கொண்டு யோகம் கற்றுத்தந்த இந்த குருவுக்கு சேவை செய்ய மற்றும் அவரிடம் இருந்து கற்றுக்கொள்ள, வாழ்க்கையில் பல நிலைகளில் இருந்த இளைஞர்கள், நாட்டின் பல பகுதிகளில் இருந்து வந்தார்கள். துறவற பாதையை பின்பற்ற அதிக ஆர்வத்துடன் நல்ல தகுதியுடன் வரத்தொடங்கியதால் மடம் வளர்ச்சி பெற்றது. அவர்களது எண்ணிக்கை இருபது, முப்பது என்று கூடிக்கொண்டே சென்றது. அவர்கள் உணவு அருந்தும் அறையில், கொட்டகைத் தரையில், நடைக்கூடங்களில், பரணில் மற்றும் பின்பக்க தாழ்வாரம் என்று ஒரு உறக்கப்பை இங்கே பொருந்தினாலும், அங்கே உறங்கிக் கொள்வார்கள். §

பெரும்பாலும் இருபது வயது நிரம்பியவர்களாக இருந்த இந்த இளைஞர்களை குரு நல்ல வரவேற்பு வழங்கினார் மற்றும் இவர்கள் கெட்ட பழக்கங்கள், வலுவான கர்மவினைகள், தனிப்பட்ட விருப்பங்கள், முரட்டுகுணம், பாலியல் ஏக்கங்கள், பூர்த்தி அடையாத ஆசைகள், வேதனை நிறைந்த அனுபவங்கள், ஒழுக்கமின்மை என்று பக்குவமடையாத ஆண்களிடம் இருக்கும் பண்புகளுடன் வந்ததால், குரு தனக்கு ஒரு மிகப்பெரிய வேலையை அமைத்துக்கொண்டார். அதனால் எப்படி உடை அணிவது, எப்படி நடப்பது மற்றும் பேசுவது, எப்படி மற்றவர்களுடன சேர்ந்து வேலை செய்வது, எப்படி மேசையில் சாப்பிடுவது மற்றும் எப்படி தொலைப்பேசியில் பேசுவது என்று அவர்களுக்கு குரு பயிற்சி அளிக்க ஆரம்பித்தார். அவர்களிடம் இருந்த இளவயது உற்சாகத்தை பயன்படுத்த, அவர் வழங்கிய சில திட்டப்பணிகளில் வெளியீட்டு பணி நல்ல பலனை தந்தது. §

மாஸ்டர் ஓக்லாண்டில் ஒரு அச்சிடும் வியாபாரத்தை விலைக்கு வாங்கி, முழு செயல்பாட்டில் இருந்த அந்த கடையின் உபகரணங்கள் முழுவதையும் விர்ஜினியா சிட்டிக்கு நகர்த்தினார். பழங்கால மேற்கு எல்லையில் அந்த நகரத்தின் போனி எக்ஸ்பிரஸ் ஸ்டேஷனாக இருந்து, செங்கல் சுவர்களால் கட்டப்பட்டிருந்த அறையில், அச்சு இயந்திரங்கள் மற்றும் காகிதம் வெட்டும் கருவிகளுடன், கட்டிடத்தின் தரைத் தளத்தில், துறவிகளின் மேற்பார்வையில் அந்த அச்சிடும் கருவிகள் நிறுவப்பட்டன. §


HEIDELBERG

*சமயப்பணியின் முக்கிய குறிக்கோளாக வெளியீடு தொடர்ந்து நிலைத்து இருந்தது. குரு அதிநவீன அச்சிடும் கருவியை விலைக்கு வாங்கி, தனது வெளியீட்டு பிரிவான, காம்ஸ்டாக் ஹவுஸை தொடங்கினார். அங்கே துறவிகள் பல ஆயிரக்கணக்கான ஆன்மீக புத்தகங்களை அச்சிட்டு அட்டையிடும் பணியை செய்தார்கள்.*

……………………§

துறவிகள் கலிபோர்னியாவின் ஆங்குயின் நகரத்தில் இருந்த அச்சிடும் பள்ளிக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு அங்கே அச்சிடும் பணியாளர்கள், அச்சுக்கலை வல்லுநர்கள் மற்றும் இருட்டறை புகைப்படக்காரர்கள் பணிகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. அந்த ஆசிரமம் 1968 ஆம் ஆண்டில், ஒரு விறுவிறுப்பான, ஆக்கப்பூர்வமான, தகுதி வாய்ந்த அச்சிடும் மற்றும் பதிப்படும் மையமாக மாறியது. மாஸ்டர் சுப்பிரமுனியா ஏதாவது ஒரு சிறிய புத்தகத்தை வழங்கிக்கொண்டு இருக்க, அவற்றை அச்சிட்டு அட்டையிடுவதற்கு துறவிகள் இரவு பகலாக பணியாற்றிக் கொண்டு இருந்தனர். அவர்கள் சோர்வடைந்ததும், ஹைடெல்பெர்க் அச்சிடும் கருவிக்கு அடியில் இருந்த உறக்கப்பைக்குள் சென்று உறங்கி, சிலமணி நேரங்களில் எழுந்து, ஒரு பாத்திரத்தில் காபி தயார் செய்து, சூரிய உதயம் வரை அச்சிட்டுக்கொண்டு இருப்பார்கள். §

காம்ஸ்டாக் ஹவுஸ் என்ற வெளியீட்டு நிறுவனத்தை மாஸ்டர் தொடங்கினார்; மற்றும் அது வெளியிட்ட புத்தகங்கள் நாடு முழுவதும் பரவி, அந்த காலத்தில் மிகவும் பிரபலமான ஆன்மீக படைப்புக்களாக விளங்கின. *தூய வெள்ளை ஒளி, தியானத்தில் இருக்கும் நுண்கலை, எல்லாம் உங்களுக்குள் இருக்கிறது, முழுமுதற்பொருளின் விளிம்பில், இதயக்கமலம்* என்று அந்த அச்சிடும் கருவிகளில் இருந்து ஒன்றன் பின் ஒன்றாக வெளிவந்தன. துறவிகளின் திறமைகளைப் பற்றி மக்கள் தெரிந்துகொண்டார்கள் மற்றும் விரைவில் நெவாடா கேசினோக்கள் தங்களுக்கு தேவையான கேனோ அட்டைகள், உணவகத்தில் உணவருந்தும் மேசையின் மீது வைக்கப்படும் சிறிய பாய், நிறுவனத்திற்கு தேவைப்படும் எழுதுபொருட்கள், மற்றும் மேலும் பலபொருட்களை இந்த மடத்திடம் இருந்து வாங்கினார்கள். இதன் மூலம் வந்த வருமானம் ஆசிரமத்திற்கு பயனுள்ளதாக இருந்தது. ஆனால் இந்த சேவைகள் சில காலத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டன. §

### துறவிகளிடம் பூரணத்துவத்தை வலியுறுத்துதல்

வெளியீட்டு நடவடிக்கைகள் இருந்தாலும், ஆன்மீக பணி மடத்தின் முக்கிய வேலையாக இருந்தது, மற்றும் மாஸ்டர் சுப்பிரமுனியா ஒரு கடினமான தியான அட்டவணையை தயார் செய்து இருந்தார். தினமும் காலையில் 6 மணி, மதியம் பன்னிரண்டு மணி, மாலை 6 மணி மற்றும் நள்ளிரவு பன்னிரண்டு மணி என்று நான்கு முறை, அவர் குறுகலான படிகள் வழியாக

ஏறி, மூன்றாவது தளத்தின் விசாலமான அறையில் இருந்த மடத்தின் கோயிலுக்கு செல்வார், மற்றும் அங்கே வழிகாட்டலுடன் ஒரு மணிநேரம் தியானம் செய்ய துறவிகள் எல்லோரும் தவறாமல் ஒன்று கூடுவார்கள். கோல்டன் ரெட்ரீவர் என்ற நாய் இனத்தை சேர்ந்த பாபாஜி, எல்லா அமர்விலும் தவறாமல் கலந்து கொண்டு, மாஸ்டரின் பாதங்களில் சுருண்டு இருக்கும். யாரும் தியான வகுப்பை தவற விடக்கூடாது என்று எல்லோருக்கும் தெளிவாக சொல்லப்பட்டு இருந்தது. மாஸ்டர் தவறாமல் வந்து விடுவார், மற்றும் ஒவ்வொரு துறவியும் தவறாமல் வந்து விடுவார்கள். தியான வகுப்புகள் முழு பத்மாசனத்தில் நடத்தப்பட்டன, மற்றும் யாரும் அசராமல் அமர்ந்து இருக்கவேண்டும் என்று வெளிப்படையாக சொல்லப்படவில்லை என்றாலும் எல்லோராலும் புரிந்துகொள்ளப்பட்டு இருந்தது. §

தினமும் இந்த யோகப்பயிற்சி வகுப்புக்களில் நீண்ட நேரம் பங்குபெறுவது ஒரு துறவிக்கு கடினமாக இருந்தது. அவரது கால்களில் தசைப்பிடிப்பு ஏற்பட்டு விடும், மற்றும் தியானத்தின் மீது கவனத்தை செலுத்துவது அவருக்கு கடினமாக இருக்கும். அதனால் ஒரு நாள் அன்றைய வகுப்பு முடிவதற்கு முன்பாக, தனது வலியை தணிப்பதற்கு கால்களை விரிக்க ஆரம்பித்தார். மாஸ்டர் அவரிடம், “வேண்டாம்,” என்று சொல்லி, வகுப்பு முடியும் வரை பத்மாசனத்தில் இருக்குமாறு அறிவுறுத்தினார். அடுத்த நாள் மற்றும் அதற்கு அடுத்த நாள் இதே நிலை தொடர்ந்தது, மற்றும் இறுதியில் அந்த இளம் துறவி தனது உடலை நிலையாக வைத்துக்கொள்ள போராடிக்கொண்டு இருக்கும் போது அழ ஆரம்பித்துவிட்டார். §

அவர் தனது வாழ்க்கை முழுவதையும் தியானத்தில் ஈடுபடுத்த வேண்டுமென்று தீவிரமாக இருந்தால், அவர் இந்த தடையை கடந்து வருவது மிகவும் முக்கியம் என்று மாஸ்டர் அவரை தனியாக அழைத்து விளக்கம் அளித்தார். அவர் வலியை உணரும் முறையை மாற்றி, அதை ஒரு வலியாக இல்லாமல் சக்தியாக, ஒலியாக பார்க்குமாறு அவரிடம் மாஸ்டர் கேட்டுக்கொண்டார். “நீங்கள் ஒரு சிம்பொனியில் உட்கார்ந்து இசை ஒலியை கேட்பதாக கற்பனை செய்துகொள்ளுங்கள். இதை பயிற்சியை முயற்சி செய்து பாருங்கள்,” என்று மாஸ்டர் கூறினார். அந்த ஆலோசனையை அந்த துறவி சில நாட்கள் பின்பற்றியதும் வலி தணிந்தது, உடல் தேவையான மாற்றங்களை செய்து கொண்டது, மற்றும் அவரால் எந்தவித அசௌகரியமும் இல்லாமல் உட்கார முடிந்தது. உடல், உணர்ச்சி, அறிவு அல்லது கர்மவினை சார்ந்த வேதனைகளை வெற்றிகொள்ளும் மனஉறுதியை கோரும் இத்தகைய வேண்டுகோள்கள் மாஸ்டரிடம் இருந்து அடிக்கடி வந்துக்கொண்டு இருந்தன. §

ஒருமுறை அவர் உடலின் வெப்பத்தை எப்படி கட்டுப்படுத்துவது என்று துறவிகளுக்கு கற்றுத்தந்தார். ஆனால் அவர்களுக்கு அது புரியவில்லை என்பதை மாஸ்டர் தெரிந்துகொண்டார். அதனால் அவர் காலை 6 மணி தியானத்தை ஆசிரமத்திற்கு வெளியே நடத்த முடிவு செய்தார். அது குளிர்காலமாக இருந்தது, மற்றும் உயரமான பனிமலைகள் மிகவும் ஆழமாக

குவிந்து இருந்தது. சில வருடங்களில், ஒருவர் தனது வீட்டின் இரண்டாவது மாடி கதவு வழியாக வெளியேறி நேராக நிலப்பரப்பிற்கு வரும் அளவிற்கு பனி ஆழமாக குவிந்து இருக்கும். அந்த வருடம் குளிர் சற்று அதிகமாக இருந்தது. தினமும் காலையில் எல்லோரும் ஒன்றாக ஒரு திறந்த வெளியில் அமர்ந்து தியானம் செய்ய, துறவிகள் தங்கள் மாஸ்டரை பின்தொடர்ந்து சென்றனர். அவர்கள் தங்களது வழக்கமான அங்கியுடன், தங்களை வெதுவெதுப்பாக வைத்திருக்க ஒரு கம்பளியை மட்டுமே வைத்து இருந்தார்கள். அதன் மூலம் குளிரை தணிப்பது மிகவும் கடினம். §

அவர்கள் அணிந்திருந்த பாதுகாப்பு கவசங்களை கடந்து காலையில் வீசிய தென்றல், பனி மற்றும் உறைந்த காற்றை சுமந்து சென்ற போது, அவர்கள் குளிரில் நடுங்கிக்கொண்டு, அமைதியாக முழுமையான பத்மாசனத்தில், உள்ளுக்குள் இருக்கும் அமைதியை நாடி அமர்ந்து இருந்தார்கள். அதன் பிறகு குரு, ஷூம் மொழியில் *அலிகைஷூம்* என்று அழைக்கப்படும் உடல் வெப்பத்தை மேலே கொண்டு வருவதற்காக, அவர்களது மனங்களின் மூலம் அவர்களது உடல் வெப்பத்தை அதிகரிப்பதை பற்றி கற்றுத் தருவார். குரு தங்களுக்கு கற்றுத்தந்த கலையை கற்பதற்கு, துறவிகள் தீவிரமாக முயற்சி மேற்கொண்டார்கள். அது ஒரு பயிற்சியாக இல்லாமல், நீடித்து இருப்பதற்கு தேவையான ஒரு விஷயமாக இருந்தது. சில வாரங்களுக்கு பிறகு, பெரும்பாலான துறவிகள் தங்கள் விருப்பத்தினால் இல்லாமல், தேவையினால் நிர்பந்திக்கப்பட்டு தங்கள் உடல் வெப்பத்தை மனோரீதியாக உயர்த்த கற்றுக்கொள்ளும் அளவிற்கு, அந்த காலத்தில் குருவின் கற்பிக்கும் முறை அமைந்து இருந்தது. §

அத்தகைய பயிற்சியின் போது குரு, துறவிகளுக்கு தேவையான தனிப்பட்ட நிலைமாற்றங்கள், அவர்களது அணுகுமுறைகள் மற்றும் உறவுமுறைகளில் மாற்றங்கள் வழியாக அவர்களை வழிநடத்தி சென்று, அவர்களது கடந்தகால சிக்கல்களை அகற்றுவதன் மூலம் தெளிவை வழங்கி, அவர்களது தொழில் பழக்கங்கள் மற்றும் தியான தீர்மானங்களை உறுதி செய்து எல்லோருக்கும் தீவிரமான பயிற்சியை வழங்கினார். அவர் அவர்களுக்கு மனஉறுதியுடன் எவ்வாறு தங்கள் குறிக்கோள்களை அடைவது, தடைகளை எவ்வாறு வெற்றி கொள்வது, எவ்வாறு துன்பங்கள் மற்றும் தடைகளை வெற்றிகளாக மாற்றுவது என்று கற்றுத் தந்தார்.§

அவர் அவர்களது நடவடிக்கைகளில் 108 சதவீத ஈடுபாட்டை எதிர்பார்த்தார். நூறு சதவீதம் போதாது என்றும், அது உங்கள் திறமையை பறைசாற்றவில்லை என்றும் அவர் அடிக்கடி கூறுவார். இந்த தீவிரமான கண்காணிப்பு மற்றும் வழிகாட்டலின் கீழ் அந்த துறவிகளின் முதல் குழு, தங்கள் உட்புற மற்றும் வெளிப்புற வாழ்க்கைகளில் பெற்ற அதே உறுதியான தன்மை மற்றும் வலிமையை வரவிருக்கும் தலைமுறைகள் அடையுமா என்று சற்குரு சந்தேகிக்கும் வகையில், அவர்களது வளர்ச்சி அமைந்து இருந்தது. §

விர்ஜினியா சிட்டியில் இருந்து, மாஸ்டர் ஒரு சாதகருக்கு இந்த பதிலை அனுப்பினார்:§


நமஸ்தே! நான் எங்களது இந்திய தீர்த்த யாத்திரையின் அங்கமாக இலங்கையில் இருக்கும் எனது அளவெட்டி ஆசிரமம் மற்றும் எட்டு மற்ற நாடுகளுக்கு சென்று இன்று திரும்பிய போது, நீங்கள் எழுதிய அற்புதமான கடிதம் வந்து சேர்ந்தது. நீங்கள் உங்கள் ஆன்மீக வேட்கையில் முன்பே மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக, நீங்கள் ஒரு ஆன்மீக ஒளியில் இருக்கிறீர்கள் என்பதை அந்த சமய பொருத்தம் குறிப்பிடுகிறது. பாதையில் இருந்த பல முட்டு சந்துகளை நீங்கள் கடந்து வந்துள்ளீர்கள் என்பது உங்கள் கடிதத்தில் இருந்து தெளிவாகிறது. துறவறம் வாழ்கையை மேற்கொள்வதாக நீங்கள் எடுத்துள்ள முடிவு ஒரு நல்ல மற்றும் முக்கிய முடிவாகும். அதைப்பற்றி நீங்கள் நன்றாக சிந்தித்து இருப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன். காலங்கள் மாறிக்கொண்டு இருக்கின்றன. உங்களைப் போன்ற அர்ப்பணிப்புள்ள ஆன்மாக்கள், எங்களது துறவற சமூகங்களில் சாதகர்களை நிலைநிறுத்தி கற்பிக்க, ஆன்மீக பாதையில் இருக்கும் உதவியாளர்களாக தேவைப்படுகிறார்கள். மேற்கத்திய நாட்டு மக்களின் மனம், சைவ சித்தாந்த இந்து சமயத்தின் விரிவான போதனைகளை மீண்டும் தெரிந்துக்கொள்ளும் காலம் விரைவில் வரவிருக்கிறது. §

நாம் இந்த வாழ்க்கையில் பகிரவிருக்கும் பல சோதனைகளில், நான் உங்களுக்கு வழங்கும் முதல் சோதனையாக, நான் எனது மடவாசிகளுக்கு ஆகஸ்ட் 28, 1960 அன்று சான் பிரான்சிஸ்கோ கோயிலில் வழங்கிய உரையின் மீது, ஒரு மாதம் முழுவதும் தினமும் ஆழமாக தியானம் செய்ய வேண்டும். உங்களைப் போல அவர்களும், தங்களது ஆன்மீக சக்தியின் பேரானந்தம் மற்றும் அமைதியான பகுதிகளை அனுபவிக்க தொடங்கி இருந்தார்கள் மற்றும் நாங்கள் முழுமுதற்பொருளின் விளிம்பில் பெறும் ஞானோதய நுண்ணறிவுகளைப் பற்றி பேசினோம். இந்த பணி உங்களுக்கு சவால் விடுவதாக இருக்கலாம். ஆனால் இதற்கு தேவைப்படும் முயற்சிகளை விட, கிடைக்கும் பலன்கள் ஏராளம். §

இந்த பாதையில் சோதனைகள் உறுதியாக இருக்கும் என்று சொல்வது ஆன்மீக ஆசிரியராக இருக்கும் எனது கடமையாகிறது. ஒரு சந்நியாசியின் வாழ்க்கை எளிதில்லை. அது நினைத்ததை காட்டிலும் உங்களிடம் இருந்து அதிகமாக எதிர்பார்க்கிறது. நீங்கள் சோர்வாக இருக்கும் போது சேவை செய்யவும், சிறிது கோபமாக இருக்கும் போது ஊக்குவிக்கவும், வழங்குவதற்கு எதுவுமில்லை என்று தோன்றும் போது வழங்க வேண்டிய நிலையையும், நீங்கள் நிச்சயமாக எதிர்கொள்வீர்கள். இந்த மிகப்பெரிய சமயப்பணியில் இருந்து விலகி செல்வது, உங்களுக்கும் உங்களை சார்ந்து இருக்க கற்றுக்கொண்டவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்காது. இந்து துறவற சமூகம் என்பது உலகியல் வாழ்க்கையில் இருந்து விலகி செல்வதில்லை. இருபது அல்லது முப்பது வருடங்கள் கழிந்து, இந்த வாழ்கையில் ஒரு ஆன்மீக தலைவராக உங்கள் கர்மவினை சார்ந்த விதியை நீங்கள் பூர்த்தி செய்யும் போது, மற்றவர்கள்

உங்களிடம் சக்தியை காண, நீங்கள் எங்களுக்கும் உங்களுக்கும் உங்களை சார்ந்து இருக்க கற்றுத் தரவேண்டும்.§

அதனால் இந்த வார்த்தைகளை கவனமாக படியுங்கள். உங்கள் வாழ்க்கைக்கு முக்கியத்துவம் அளித்து, உங்கள் சக்திகளை எங்கே இயக்க விரும்புகிறீர்கள் என்பதை நன்றாக யோசியுங்கள். ஆத்ம ஞானம் தான் இலக்கு. அது இயல்பாக வரும். அதற்கு அடிப்படை முதலில் முக்கியம். மெதுவான மற்றும் கடினமான ஆய்வு, மேற்கொண்ட சாதனாக்கள் மற்றும் சாதகருக்கு குரு வழங்கிய வேண்டுகோள்கள் மூலம் வளர்க்கப்பட்ட, ஒரு அடிப்படை முதலில் தேவைப்படுகிறது. இது உங்கள் வாழ்க்கையில் ஒரு அருமையான தருணமாக விளங்குகிறது. இந்த நிலையில் அவசரம் வேண்டாம். இந்த பணியை செய்யுங்கள், மற்றும் உங்களுக்கு அதிக ஒழுக்கம் மற்றும் தீவிரமான பயிற்சி தேவைப்பட்டால், சாதனா செய்யுங்கள். உலகியல் வாழ்க்கையில் உங்கள் கடமைகளை நிறைவேற்றுங்கள். அதன் பிறகு நாம் ஒன்றாக சேர்ந்து அமரலாம். அன்பு மற்றும் ஆசிகள், குரு. §



*மவுன்டன் டெசர்ட் மடத்திற்கு அருகில் கேட்பாரற்று ஒரு வெள்ளிச் சுரங்கம் இருந்தது. குரு எங்கும் பரவியிருந்த இருட்டில் ஆன்மீக ஒளியை எவ்வாறு*

*கண்டுகொள்வது என்பதை கற்பித்து, அங்கிருந்த ஆழமான குகைகளுக்குள் பல நாட்கள் தொடர்ந்து தங்கியிருக்க தனது இளம் துறவிகளை அனுப்பி வைப்பார்.*

........................§

மடத்தில் இருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில், சிக்ஸ் மைல் கானியான் ரோட்டில் குகை ஒன்று உள்ளது. இந்த பகுதியில் இருக்கும் குன்றுகளில் நிரம்பியுள்ள நூற்றுக்கணக்கான வெள்ளி சுரங்கங்களில்  இதுவும் ஒன்றாகும், ஆனால் அது பெரும்பாலான குகைகளை காட்டிலும் கிடைநிலையில் அதிக ஆழத்துடன் இருந்தது. அதன் அறைகளில் சுமார் அரை மைல் தூரம் நடந்து செல்லலாம். இதை ஒரு நாள் கண்டறிந்த மாஸ்டர் உற்சாகமடைந்து, தனது மடவாசிகளுக்கு உடனே ஒரு செய்முறை திட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். அந்த இருண்ட அறைகளில் தியானம் செய்ய,  அவர்களை பெரும்பாலும் தனியாகவும் சிலசமயங்களில் சோடியாகவும் அவர் அனுப்பி வைத்தார். அந்த மடவாசி கைகளில் உணவு எதுவும் எடுத்துக்கொள்ளாமல், வெறும் குடிக்கும் தண்ணீருடன், துளியும் வெளிச்சம் இல்லாத பகுதி வரும் வரை, அந்த நீளமான சுரங்கப்பாதை வழியாக, குகை உட்புறமாக வளைவதை தாங்கிப்பிடித்த மிகப்பெரிய மரக்கட்டைகளை தவிர்த்துக்கொண்டு முன்னேறி, மேலும் சிறிது தூரம் நடந்து சென்றார். இந்த இருண்ட பகுதிக்குள் ஒரு முறை நுழைந்ததும், அவர் குரு வழங்கிய அறிவுத்தலுக்கு ஏற்ப, பெரும்பாலும் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு தங்குவார். அவர் பாட்டு பாடிக்கொண்டு தியானம் மட்டுமே செய்யவேண்டும். இதைத்தவிர அவருக்கு சாதனாவாக, உட்புறமாக மனதில் இருக்கும் தூய வெள்ளை ஒளியை நாடவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருந்தது. §

சிலசமயம் ஒருவர் தியானம் செய்யும் போது, தான் பார்ப்பது உட்புற ஒளியா அல்லது தனது முடியுள்ள கண்களை கடந்து இருக்கும் ஒரு பிரகாசமான பகுதியா என்ற சந்தேகம் ஏற்படும். ஆனால் பூமியின் ஆழத்தில் இருக்கும் ஒரு குகையில் சுற்றுப்புறத்தில் எந்த ஒளியும் இருக்காது. அவரை சுற்றி இருளும் அமைதியும் மட்டுமே இருக்கும். அந்த குகையில் துறவிகள் தங்களுக்கு ஏற்பட்ட சமீபத்திய அனுபவம், மடத்தில் தாங்கள் மேற்கொண்ட பணிகள், குறைவான உணவு மற்றும் வேறு பல தொடர்பில்லாத தலையீடுகளால், தொடக்கத்தில் அவரது கவனம் சிதறினாலும், சிறிது நேரம் கழித்து அவர்கள் உற்சாகமாக ஈடுபடுகிறார்கள். ஆனால் சில மணி நேரங்களுக்கு பிறகு அமைதி அதிகரித்து, அவர்களை மனதின் ஒளிக்குள் கொண்டு வருவதற்கு நன்றாக துணை புரிகிறது. ஒரு இருண்ட குகையில் நீங்கள் ஒளியை காணும் போது, அது உங்களிடம் இருந்து தான் வருகிறது என்பதை நீங்கள் தெளிவாக தெரிந்துகொள்வீர்கள். §

சில துறவிகள் திருப்பி வந்து தங்களுக்கு ஏற்பட்ட விசேஷமான அனுபவங்களைப் பற்றி பேசுவார்கள். தங்களுக்குள் இருந்து வந்த ஒளி அந்த தளம் மற்றும் குகையின் சுவர்களில் அதிக பிரகாசத்தை ஏற்படுத்தியதால், அந்த சுரங்கப்பாதையில் இருந்த தகவல்களை உணர்ந்து, தங்கள் கை

மின்விளக்கை பயன்படுத்தாமல் தங்களால் வெளியே வர முடிந்ததாகவும் அவர்கள்  கூறும் அளவிற்கு, அந்த காலத்தில் குருவின் வழிமுறைகள் ஆற்றல்மிக்கதாக இருந்தன. குகையில் இந்த அனுபவங்கள் ஏற்பட்டதும், மாஸ்டர் இந்த ஆன்மீக ஒளியை பற்றி இவ்வாறு எழுதினார்: §

முத்திரை உடைந்து, மனம் முழுவதும் தூய வெள்ளை ஒளி நிரம்பியதும், உட்புறத்திற்கும் வெளிப்புறத்திற்கும் இடையே ஒரு இடைவெளி இருக்காது என்பதை நினைவில் வைத்து இருங்கள். தியானம் செய்து மீண்டும் ஒளியை நாடுவதன் மூலமாக, உணர்வின் எதிர்மறை நிலைகளையும் கரைத்து விடலாம். சாதகர் உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் புதிய விடுதலையை பெற்று இருப்பதால், அவர் தினசரி அனுபவங்களுக்கு மிகவும் வலுவான எதிர்வினைகளை வழங்குவதன் மூலம், மனம் ஒரு புதிய நெரிசலான அடியுணர்வை மீண்டும் உருவாக்க, ஒரு வலுவான தூண்டுதல் இருந்துக்கொண்டு இருக்கும் என்பதை அறிய வேண்டும். தாங்கள் முன்பு விளையாட்டாக பார்த்த ஒன்றை விளையாடினாலும், அந்த விளையாட்டில் நுழையும் போது, மெதுவாக ஒன்று சேர்ந்த எதிர்வினைகளுக்கு இயற்கையின் உள்ளுணர்வு பிரிவுகள் இரையாக வாய்ப்புள்ளது. §

அதனால் ஒரு ஆன்மீக ஒளியின் அனுபவம் ஒரு தீர்வாகாது; ஆழ்நிலை செல்லும் வாய்ப்புக்களுக்கு ஒன்று அல்லது இரண்டு முறை தூய வெள்ளை ஒளி பிரகாசித்த சம்பவங்கள் ஒரு திறவுகோலாக பயன்படலாம். இளம் சாதகன் அனுபவிப்பராக இருக்க வேண்டும். ஆனால் அவர் அந்த அனுபவத்தை பெற்று, அது ஏற்படுத்திய ஞாபக மாதிரிகளில் இளைப்பாறக்கூடாது. இந்த தருணத்தில் பலர் விரும்பாத 'ஒழுக்கம்' வாழ்க்கையிலும் மலர்ந்துக்கொண்டிருக்கும் இந்த சீடனின் சொல்லகராதியிலும் நுழைகிறது மற்றும், அதனால் தான் ஆசிரமங்கள் சிறிது காலத்திற்கு மாணவர்களை தனித்து வைத்து இருக்கிறார்கள். அவர்கள் ஒழுக்கத்துடன் இருப்பதால் அனுபவிப்பவர்களாக மாறி, தினமும் சாதாரண வேலைகளை செய்யும் முன்பாக, தாங்கள் எதிர்கொள்ளும்  சிக்கல்களை பிரித்து, தங்களுக்கு குரு வழங்கிய ஒவ்வொரு சோதனை மற்றும் பணியில் தேர்ச்சி பெறுகிறார்கள். தினமும் மாலைப் பொழுதில், தனது ஆழ்ந்த சிந்தனை நிலைகளில் தனது எதிர்வினை பழக்க மாதிரிகளை கரைப்பதற்கு *சேலா* (சீடன்) கற்றுத் தரப்படுகிறார். §

Page 38: URL

https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/38_guru06_01.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் இருபத்தி மூன்று

# ஐரோப்பாவிற்கு பயணம் செலுத்தல்

1967 வருடத்து வசந்த காலத்தில், பதினான்கு வாரங்கள் பயணமாக மாஸ்டர் சுப்பிரமுனியா ஐரோப்பா புறப்பட்டார். அவர் இதற்கு ஆக்டினிக்ஸ் வேர்ல்ட் டூர் (ஆன்மீக சக்திகளின் உலகப்பயணம்) என்று பெயரிட்டார். அவர் தன்னுடன் மூன்று துறவிகள் மற்றும் ஐந்து குடும்பத்தினருடன், பாரிஸ் பயணம் செய்தார். அங்கே வோக்ஸ்வேகன் வாகனத்தை வாங்கி, பதினான்கு நாடுகளுக்கு கிளம்பினார். அவர்கள் ஒவ்வொரு நாட்டிலும், ஆன்மீக தலைவர்களை சந்தித்தனர்; அவர்கள் சுவிஸ் நாட்டு மடங்கள் மற்றும் ரோமன் இறையியல் பாடசாலைகளின் மதகுருக்களை சந்தித்தனர். அந்த பயணத்திற்காக ஒதுக்கப்பட்ட பட்ஜெட் தொகை மிகவும் குறைவு. ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு $2 தான். அதனால் அந்த குழுவினர் ஃப்ரெஞ்ச் நாட்டு கோதுமை வயல்களில் தங்கள் உறக்கப்பைகளை விரித்து வெளியே தங்கி, ஜெர்மனியின் பிளாக் ஃபாரஸ்ட் ஓடைகளில் குளித்தனர். அந்த குழுவினர் இரு முறை ஒரு கிராமப்புற விடுதியில் தங்கி, வெந்நீரில் குளித்தனர். §

அது ஒரு குழப்பமான மற்றும் அற்புதமான பயணமாக இருந்தது. அவர்கள் துனிஸ் நகரத்தின் காஸ்பாவில் பாரசீக தரை விரிப்புகளை பேரம் பேசினார்கள். அப்போது அமெரிக்க-அல்ஜீரிய உறவுகளில் முறிவு ஏற்பட்டு இருந்ததால், அவர்கள் ஒரு விமானத்தில் ஏற்றிச் செல்லப்பட்டு, துப்பாக்கி முனையில் 36 மணி நேரங்களுக்கு ஒரு அல்ஜீரிய விமான நிலையத்தில் கைதிகளாக வைக்கப்பட்டு இருந்தனர். §

மாஸ்டர் வெனிஸ் நகரத்தில், தனது முந்தைய பிறவி அனுபவத்தை ஆய்வு செய்துக்கொண்டு மூன்று நாட்கள் சுற்றிக்கொண்டு இருந்தார். அவர் இரண்டு துறவிகளின் துணையுடன், அவ்வப்போது ஒரு கொண்டோலாவை (வெனிஸ்

நகர ஓடம்) வாடகைக்கு எடுத்துக்கொண்டு, நகரம் முழுவதும் சுற்றி வந்தார். தான் ஒரு அரங்கிற்கு வெளியே, ஒரு இடத்தை தேடி வருவதாக அவர் கூறிக்கொண்டு இருந்தார். அவர் பல மணி நேரங்களுக்கு தேடிக்கொண்டு இருந்தார். அவர் மூன்றாவது நாள் திடீரென்று, “இந்த இடம் தான்! இந்த இடத்தில் எனது முந்தைய பிறவியில் நான் கொல்லப்பட்டேன். நான் ஒரு ஓபரா நிகழ்ச்சியை முடித்து, அரங்கின் அந்த சிறிய கதவு வழியாக வெளியே வந்த போது, ஒருவர் என் பின்னாலிருந்து வந்து, என் தலையில் கத்தியால் குத்தி, என்னை கால்வாயில் வீசி எறிந்து மூழ்க செய்தார்.” §


நீண்ட நாட்கள் முன்பாக நடந்த அந்த கொடூர கொலை சம்பவத்தினால், தனக்கு இந்த பிறவியில் பாட்டு பாடுவதற்கு எப்போதும் ஆர்வம் இருந்ததில்லை என்றும் மாஸ்டர் குறிப்பிட்டார். அந்த ஓபரா பாடகரின் வாழ்க்கை அருமையாக இருந்ததால், அந்த உடலை விட்டு பிரிவது கடினமாக இருந்ததாக அவர் தெரிவித்தார். §

அவர் ஸ்விட்சர்லாந்தின் அஸ்கோனா சென்றிருந்த போது, இத்தாலி மற்றும் ஸ்விட்சர்லாந்து பகிர்ந்த, லாகோ மாகியோர் என்ற ஒரு மிகப்பெரிய ஏரியின் நதிக்கரையில் அமைந்து இருந்த காசா எரானோஸ் என்கிற கார்ல் ஜங்கின் அருமையான கோடைக்கால ஷாலே (ஆல்ப்ஸ் மலையில் இருக்கும் வீடு) வீட்டில் இரண்டு வாரங்கள் தங்கியிருந்தார். தியானம் செய்து *உபதேசங்களை* வழங்கிக்கொண்டு ஜங்கின் சொந்த நூலகத்தில் ஆய்வுசெய்த போது, அந்த புகழ்பெற்ற உளவியாளருக்கு இந்திய தத்துவத்தின் மீது இருந்த நாட்டம், மற்றும் குண்டலினி சக்தி மீது அவருக்கு இருந்த ஈடுபாட்டை பற்றி மாஸ்டர் தெரிந்துகொண்டார். §

ஒரு முறை ஒரு இளம் துறவி குருவிடம் ஆன்மீக ஒளி பற்றிய விளக்கத்தை கேட்டார். மாஸ்டர் சில வார்த்தைகள் பதில் அளித்து, திடீரென்று ஆழ்ந்து சிந்திக்க ஆரம்பித்தார், பிறகு கூடியிருந்தவர்களிடம் மன்னிப்பு கேட்டுக் தனது அறைக்கு திரும்பினார். சில மணி நேரங்கள் கழித்து, குருவை மதிய உணவிற்கு  அழைக்கும் பொருட்டு, துறவிகள் பூட்டியிருந்த கதவை தயக்கத்துடன தட்டினார்கள், ஆனால் தான் வேலையில் மும்முரமாக இருப்பதாக அவர் தெரிவித்தார். பல மணிநேரங்கள் கழிந்தன, அவர்கள் மீண்டும் கதவை தட்டினார்கள், ஆனால் எந்த பதிலும் இல்லை. அவருக்கு இடைஞ்சலாக இருக்க அவர்களுக்கு விருப்பம் இல்லை என்றாலும், இது அந்த குழுவிற்கு விசித்திரமாக தோன்றியது, மற்றும் அவர்கள் அவரது பணியில் தலையிட வேண்டுமா என்று யோசிக்க ஆரம்பித்தனர். §

இந்த உரையாடல்கள் நடந்துகொண்டு இருந்த போது, மாஸ்டர் தனது அறையின் கதவை திறந்து, வீட்டின் பின்புறத்தில் திறந்த வெளியில் ஏரியை பார்த்து அமைந்து இருந்த கற்கள் பதிந்த திண்ணைக்கு எல்லோரையும் வருமாறு அழைத்தார். அது மதிய நேரமாக இருந்தது. துறவிகள் சுற்றி அமர்ந்து இருக்க,  அவர் வழக்கறிஞர்கள் எழுத பயன்படுத்தும் மஞ்சள் நிற காகித அட்டைகளை போன்ற ஒன்றை கொண்டு வந்தார். அவரது முகத்தில் எதையோ சாதித்த மகிழ்ச்சி தெளிவாக தெரிய, காலையில் கேட்கப்பட்ட

கேள்வியை மீண்டும் சொல்லி, தனிமையாக இருந்த சில மணி நேரங்களில் தான் எழுதியிருந்த ஒரு சிறிய புத்தகத்தை பற்றி அவர் தெரியப்படுத்தினார். அவர் அதற்கு *தூய வெள்ளை ஒளி* என்ற தலைப்பை வழங்கி, ஆன்மீக அனுபவத்தின் ஒரு ஆழமான விளக்கமாக இருந்த அந்த எழுத்துப்பிரதியை வாசிக்க ஆரம்பித்தார். அவர் *காக்னிசண்டபிலிட்டியை* தவிர, இந்த முக்கிய படைப்பை மட்டுமே தன் கைகளால் எழுதி இருந்தார். மற்ற அனைத்தும் அவர் வழங்கிய ஊக்கமளிக்கும் உரைகள் மற்றும் மற்ற அறிவுறுத்தல்களின் எழுத்து வடிவங்களை தங்கள் மூலமாக கொண்டிருந்தன. அதில் இருந்து ஒரு தொகுப்பு.§



ஐரோப்பாவில் மேற்கொண்ட பயண-ஆய்வு திட்டங்கள், கிரேக்க நாட்டில் இருந்த பார்த்தீனான் போன்ற வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு


*இன்னர்சர்ச் உறுப்பினர்களை அழைத்து சென்றது. அவர்கள் எங்கே சென்றாலும், உட்புறமாக நித்தியமாக இருக்கும் பரமாத்துமாவைப் பற்றி மாஸ்டர் உரை நிகழ்த்தினார். அவர் அதில் உறுதியாக நிலைகொண்டு இருந்தார்.*

........................§

முதல் தூய வெள்ளை ஒளி உதித்து, ஒரு புதிய ஆன்மீக இனம் தொடங்கும் போது, அது மனதின் மாபெரும் புதிய உலகில் எடுத்து வைக்கும் முதல் அடியாக விளங்குகிறது. இதன் மூலம் அந்த நபர் தனது பெற்றோர்கள் மற்றும் மூதாதையர்களுக்கு முன்னோராக மாறுகிறார். அவர் ஒரு விரிவாக்கம் பெற்ற ஒரு உட்புற மனநிலையில் வாழும் போது, லௌகீக உணர்வுடன் இருப்பவர்கள் தங்களை புரிந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கக்கூடாது. இந்த “தனிமையான" புதிய பாதையில், அவர் இந்த உலகை உண்மை என்று நம்புவோர் கண்கள் வழியாக பார்த்து, அதன் லீலையை உண்மை என்று கருதி, அந்த வரையறுக்கப்பட்ட உலகை பார்த்து அதனுடன் தொடர்புபடுத்திக் கொள்வதன் மூலம், எதிர்கால விரிவாக்கங்களுக்கு தேவையான இணக்கத்தை பராமரிக்க, விவேகத்தை வரவழைத்துக் கொள்ள வேண்டும். லௌகீக உலகில் ஆழமாக மூழ்கி இருப்பவர்களிடம் ஆன்மீக யதார்த்தங்களுக்கு சம்மதத்தை பெற முயற்சி செய்தால், அது அவர்கள் பலகாலமாக கடினமாக உழைத்து பெற்ற பாதுகாப்பிற்கு, ஒரு நேர்மறை அச்சுறுத்தலை உருவாக்குவதால், அது உறவில் முறிவை மட்டுமே ஏற்படுத்தும். §

முதலில் நாம் உடல் வலிமை மற்றும் மனிதனின் சக்திக்கு மதிப்பு அளித்து உள்ளுணர்வு யுகத்தில் இருந்தோம். அதன் பிறகு தகவல்களை பெறுவதற்காக தகவலை நாடிச் சென்று, அறிவியலில் முன்னேற்றம் பெற்று அறிவுணர்வு யுகத்தில் இருந்தோம். இப்போது உலகம், மனம் மற்றும் மிகவும் முக்கியமாக பரமாத்துமாவின் புதிய புரிதலுடன், புதிய விதிகளை நிர்வகித்து, புதிய பண்புகளின் உலகில் இருக்கிறோம். இது மனதின் யுகமாக இருந்து, அந்த மனதில் ஒளியின் வேகத்தை காட்டிலும் மிகவும் தீவிரமாக இருக்கும் மண்டலங்களைப் பற்றி, அதைப்பற்றி கேட்பதற்குரிய உட்புற காதுடன் இருப்பவர்களுக்கு மட்டுமே தீர்க்கதரிசிகள் பேச விரும்புகிறார்கள் என்பதால், புரிதல் பயணத்தின் முன்னேற்பாடாக விளங்குகிறது. §

மனிதனின் மனம் வெளிச்சம் அல்லது இருளை நோக்கி, விரிவாக்கம் பெற்ற விழிப்புணர்வு அல்லது லௌகீக பண்புகளை நோக்கி செல்கிறது. மனம் தன்னை சுயமாக உருவாக்கிக்கொண்ட நிலையை பொறுத்து, மனம் உயர்ந்த உணர்வின் தூய வெள்ளை ஒளியில் வாழலாம் அல்லது அவரது உட்புற பார்வைக்கு அறியாமையை பிரதிபலிக்கும் வெளிப்புற மனதின் அமைப்பில் வாழலாம். §




*1967 ஆம் ஆண்டு, துறவிகள் மற்றும் குடும்பஸ்தர்ளாக இருந்த சீடர்களுடன் சுப்பிரமுனியாசுவாமி ஐரோப்பாவிற்கு பயணம் மேற்கொண்டார். அந்த குழு*

*ஒரு VW வாகனத்தில் பயணம் செய்து, இரவு நேரங்களில் வயல்களில் உறக்கப்பைகளில் உறங்கி, தினமும் இரண்டு டாலர்களுக்கு சாப்பிட்டு, அந்த கண்டத்திற்கு அத்வைத யோகத்தை கொண்டு வந்தார்கள். மாஸ்டர் முன்பக்க இருக்கையில் இருந்து "யோகம் பற்றிய கடிதங்களை" அறிவுறுத்த, பின்னால் அமர்ந்து இருந்த ஒரு துறவி அதை தட்டச்சு செய்தார்.*

.........................§

அந்த குழுவில் இருந்த ஒன்பது ஆடினிக்ஸ், ஸ்விட்சர்லாந்தில் இருந்து கிளம்பி மேற்கே பயணம் செய்து ஆஸ்திரியா, ஜெர்மனி, லக்சம்பர்க், பெல்ஜியம் மற்றும் டென்மார்க் வழியாக பயணம் மேற்கொண்டனர். ஐரோப்பா முழுவதும் அத்வைத யோக போதனைகளை பரப்புவதே மாஸ்டரின் குறிக்கோளாக இருந்தது; மற்றும் அந்த பயணத்தின் முடிவில் அவர் பாரிஸில் இருக்கும் சோர்போன் பல்கலைகழகத்தில் உரை நிகழ்த்தினார், மற்றும் அமஸ்டர்டாமில் முதல் யோக மாநாட்டிற்கு நிதியுதவி மூலம் ஊக்குவித்து, ஐரோப்பா முழுவதிலும் இருந்து நூற்றுக்கணக்கான யோகிகள் மற்றும் யோகம் கற்பிக்கும் ஆசிரியர்களை ஒன்று திரட்டினார். §

அவர்கள் பல வாரங்களுக்கு ஐரோப்பா வழியாக பயணம் செய்த போது, மாஸ்டர் வோக்ஸ்வேகன் வாகனத்தின முன்பக்க இருக்கையில் உட்கார்ந்துகொண்டு, பல்வேறு இடங்களுக்கு சுமந்து செல்லத்தக்க ஒரு தட்டச்சு பொறியுடன் பின்னால் அமர்ந்திருந்த ஒரு துறவிக்கு "யோகம் பற்றிய கடிதங்களை" அறிவுறுத்திக்கொண்டு இருந்தார். அந்த வாகனம் ஒரு நடமாடும் எழுத்தாளரின் கூடமாக மாறியது, மற்றும் எல்லோரும் அவரது வளமான குரலில் அன்றைய போதனையை சந்தோஷமாக கேட்டு ரசித்தனர். அதில் ஒரு பாகம் முடிந்ததும், அதை வெளியிடுவதற்காகவும், ஆசிரமத்தில் இருந்தவர்கள் மாஸ்டரின் பயணம் பற்றி தெரிந்துகொள்ளவும், அவர்கள் அந்த ஊர் தபால் நிலையத்தில் வாகனத்தை நிறுத்தி, தட்டச்சு செய்த காகிதங்களை, விர்ஜினியா சிட்டியில் இருந்த துறவிகளுக்கு அனுப்பி வைப்பார்கள். அதில் இருந்து ஒரு பகுதி.§

உட்புற நாடி ஓட்டங்களில் பயிற்சி மேற்கொள்ளும் இன்னொரு தலைசிறந்த பண்பின் பெயர் மனஉறுதி ஆகும். இதில் இருந்து உட்புற வலிமை என்ற சொல் வெளிவருகிறது. தொடங்கிய வேலையை முடிப்பது, ஒவ்வொரு வேலையையும் முழுமையாக செய்வது, கொடுத்த வாக்கை காப்பாற்றுவது மற்றும் ஒருவர் தனக்கு அமைத்துக்கொண்ட உயர்ந்த இலட்சியங்களை தழுவி வாழ்வது போன்ற பயிற்சிகளின் மூலம் இந்த உட்புற ஓட்டங்கள் வலுவடைகின்றன. ஒருவர் தனது உட்புற மனஉறுதியை பயன்படுத்தும் போது, அவரிடம் இருந்து வெளிப்படும் உட்புற சக்தியை நம்மால் உணர முடியும். அவர் தியானம் செய்ய அமரும் போது, தனது தியானத்தையும் அதே முறையில் மேற்கொண்டு, இந்த உட்புற ஓட்டங்களை மேலும் வலுப்படுத்துகிறார். §

தியானப்பயிற்சியின் மூலம் பெற்ற நேர்மறை சாதனைகளில் இருந்து தியானம் செய்யும் ஆசை தோன்றுகிறது. சில வெற்றிகரமான தியானங்களுக்கு  பிறகு, மனம் தியானத்தின் சூழலை தொடர்ந்து பராமரிக்க கற்றுக்கொள்ளும் வரை, அடியுணர்வு அடுத்த தியானத்தை எதிர்பார்த்து இருக்கிறது. இந்த தருணத்தில், தியானம் தானாக நடைப்பெற்று, அது வாழ்க்கையின் அங்கமாக மாறுகிறது. அதன் பிறகு, சக்திகள் மற்றும் நான்காவது பரிணாமம் பற்றிய புரிதல் எப்போதும் நிலைத்து இருந்து, ஒரு மனித வாழ்க்கையின் அங்கமாக தொடர்ந்து விளங்குகிறது. §

**“அதைப்பற்றி மொட்டை மாடிகளில் இருந்து கூச்சலிடுங்கள்”**

அமெரிக்காவிற்கு மாஸ்டர் திரும்பியதும் ஞாயிற்றுக்கிழமை உபதேசங்கள், துறவிகளின் பயிற்சி, வானொலி நேர்காணல்கள், தனது நெவாடா மடத்திற்கு பாலைவனம் வழியாக  நீண்ட பயணங்களை மேற்கொள்ளுதல் என்று அவர் தனக்கு மிகவும் பிடித்தமான ஆன்மீக வாழ்முறைகளில் தன்னை வலுவாக ஈடுபடுத்திக்கொண்டார். அவர் யோகம் கற்பிக்கும் ஆசிரியராக சிறிது புகழை  சம்பாதித்து இருந்ததால், அவரே வியக்கும் வண்ணம், தி மாஸ்டர் கோர்ஸ் பற்றி உரை நிகழ்த்த, ஒரு வாரத்திற்கு UCLA வில் வருகை தரும் பேராசிரியராக அழைக்கப்பட்டார். அவர் கலிபோர்னியா  பல்கலைகழகம், பெர்க்லி மாணவர்களுக்காக இன்டர்நேஷனல் ஹவுஸில், அதே போல ஒரு தொடரை நடத்தினார். மேலும் அவர் ஸ்டான்போர்ட் பல்கலைகழகத்தில் உரை நிகழ்த்தினார் மற்றும் தெற்கு கலிபோர்னியா, கொலராடோ, தி ஈஸ்ட் கோஸ்ட், பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் வாஷிங்டன் என்று விரிவான பயணம் மேற்கொண்டு விரிவுரைகளை வழங்கினார். சியாட்டிலில் மாஸ்டருக்கு நன்கு பரிச்சயமான ரெவ். கீத் ரைன்ஹார்ட் என்பவரால் 1955 ஆம் ஆண்டு அக்வாரியன் பவுண்டேஷன் என்ற ஆன்மீகம் மற்றும் மறைபொருள சார்ந்த தேவாலயம் தொடங்கப்பட்டது. இந்த தேவாலயத்தில் மாஸ்டர், இந்து சூட்சும ஞானம் மற்றும் அருள்ஞானங்கள் பற்றி சொற்பொழிவுகளை வழங்கினார். §

அமெரிக்காவில் இருந்த கல்லூரிகள் மற்றும் சமூகங்களுக்கு ஆழமான போதனைகளை எடுத்து செல்வதற்கான நேரம் வந்து இருந்தது. அது பரமாத்துமாவை பற்றி அமைதியாக இருக்கும் காலமாக இல்லாமல், “அதைப்பற்றி மொட்டை மாடிகளில் இருந்து கூச்சலிடுங்கள்" என்று அவர் கூறினார். அதற்கு முன்பு அல்லது பின்பு எப்போதும் இருந்திராத அளவிற்கு, அந்த காலத்தில் இருந்த அமெரிக்க இளைஞர்கள் சூட்சுமமான தகவலுக்கு அதிக தயார்நிலையில் இருந்தார்கள். §

1968 ஆம் ஆண்டில், மாஸ்டர் சுப்பிரமுனியா முதல் முறையாக அமெரிக்காவின் மத்திய மேற்கு மாநிலங்களில் சொற்பொழிவுகளை நிகழ்த்தி, சான் பிரான்சிஸ்கோ ஸ்டேட் காலேஜில் ஒரு தொலைகாட்சி தொடரில் பங்குபெற்றார். அந்த தொடர் ஜென் குரு ரோஷி சுசூகியுடன்

நடத்திய உரையாடல்களையும் ஒளிபரப்பிக்கொண்டு இருந்தது. வாரக்கடைசிகள் சான் பிரான்சிஸ்கோவில் கழிந்தாலும், அவர் வாரத்தின் பெரும்பாலான நாட்களை நெவாடா மடாலயத்தில் கழித்தார். அது அவரது பிரதான வீடாகவும் புதிய தலைமைச்செயலகமாகவும் மாறியது. அவர் தனது நேரத்தை அதிகமாக மடவாசிகளுடனும், தனது படைப்புக்களை வெளியிடுவதிலும் செலவிட்டார். §


மாஸ்டரின் அனைத்து சீடர்களுக்கும், யோகம் மற்றும் தியானம் சொந்த மற்றும் தனிநபருக்குரிய சாதனாவின் ஒரு முக்கிய அங்கமாக விளங்கியது. தினமும் காலையில் கண் விழித்ததும் மற்றும் உறங்குவதற்கு முன்பும், பதினைந்து அல்லது இருபது நிமிடங்கள் தியானம் செய்யவேண்டும் என்று ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்தப்பட்டது. இந்த ஆன்மீக ஆய்வுகள் அவர்கள் வாழ்க்கைக்கு ஆதரவாக விளங்கி, அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு மற்றும் ஆழமான புரிதலை வழங்கி, ஒவ்வொரு நாளையும் மகிழ்ச்சிகரமாக மாற்றி, ஒவ்வொரு அனுபவத்தையும் வரவேற்றது. அவர்களது கர்மவினைகள் அதிகம் தீவிரமடைந்து நிலையில் விமோசனத்தை தேடி அவர்கள் குருவிடம் வந்த போது, அவர்கள் தினமும் தியானம் செய்கிறார்களா என்று கேட்பார். வழக்கமாக சமநிலையை இழந்தவர்களின் பதில், இல்லை என்பதாக இருக்கும். §

1960 களின் தொடக்கத்தில் மாஸ்டர் வழங்கிய உரைகள், மெய்ஞ்ஞானத்தை விழிக்க வைப்பதையும், அடியுணர்வை சுத்தம் செய்வதன் மூலம் ஆத்ம ஞானம் பெறும் சாத்தியக்கூறுகளுக்கும் அதிக முக்கியத்துவம் அளித்தன. உளவியல் ரீதியான பயன்களை பெறுவதற்காக அமைக்கப்பட்ட ‘என்கவுன்டர் குரூப்ஸ்’ அதிக புகழ்பெற்று இருந்தன. இந்த பிணி நீக்கும் அமர்வுகளின் போது, அதுவரை தடை செய்யப்பட்டு பேசப்படாத விஷயங்களைப் பற்றி மக்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வார்கள். ‘என்டர்-இன்’ (உள்ளே நுழை) என்ற வாசகத்தை அமல்படுத்தி, மாஸ்டர் தனது துறவிகளுக்கு மட்டும், குழுவாக தங்கள் கருத்துக்களை பகிரும் செய்முறையை அமல்படுத்தினார். §

தனது குழுவில் இருந்த குடும்பத்தினரின் அடியுணர்வை சுத்தம் செய்ய, அவர் அக்னி யோகம் என்ற பெயரில், செய்த தவறை ஒப்புக்கொள்ளும் செய்முறையை தொடக்கி வைத்தார். இந்த செய்முறையின் போது, நமது கடந்தகாலம் மற்றும் பாதையில் நமக்கு பின்னடைவை ஏற்படுத்தும் மறைவான ஒடுக்கங்களைப் பற்றி, குருவிடம் தனிப்பட்ட முறையில் பகிர்ந்துக்கொள்ளப்பட்டது. ஆழமாக பதிந்த ஒடுக்கங்கள், வேதனை நிறைந்த நினைவுகள் மற்றும் அடக்கி வைக்கப்பட்ட குணாதிசயங்களை எதிர்கொள்ள அல்லது அதைப்பற்றி பேசமுடியாத மாணவர்கள், கவனமாக ஆய்வு செய்து தொடர்ச்சியாக குற்றங்களை ஒப்புக்கொண்ட பிறகு, அவர்கள் பெரும்பாலும் தங்களது முதல் உட்புற ஒளி அனுபவத்தை பெறுகிறார்கள். §

மாஸ்டரின் மேற்பார்வையில் நடந்த, இந்த நூற்றுக்கணக்கான மற்றும் சிலசமயங்களில் ஆயிரக்கணக்கான வாக்குமூலங்கள், ஆரம்ப நிலையில்

இருந்த துறவிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சியின் முக்கிய பகுதியாக விளங்கியது. அவர்கள் வழங்கிய அந்த தனிப்பட்ட வெளிப்பாடுகளின் சக்திகளை பயன்படுத்தி, அந்த வெளிப்பாடுகளை எவ்வாறு வெளிச்சத்தில் கொண்டு வந்து, ஆய்வினால் அல்லது பகுத்தறிவுள்ள ஆழமான புரிதலால் அல்லாமல், தூய வெள்ளை ஒளியின் இருப்பில் இருப்பதன் மூலமாக, அவற்றிற்கு எவ்வாறு தீர்வு காண்பது என்று அவர் கற்றுத் தந்தார். §



*சுவிட்சர்லாந்தின் லாகோ மாகியோரை பார்த்த வண்ணம், ஒரு சிறிய பின்புற திண்ணையில் நின்றுக்கொண்டு, மாஸ்டர் முதல் முறையாக தான் சூட்சுமமாக உருவாக்கிய ஷூம் மொழியை கற்றுத் தந்தார். மனதின் மறைஞான மற்றும் நுணுக்கமான மற்றும் ஊடுருவும் பண்புள்ள ஆழங்களை பற்றி பகிர்வதற்கு, அவர் இந்த முறையை விரும்பி பயன்படுத்தினார்.*

........................§

**ஒரு சூட்சுமமான மொழியின் பிறப்பு**

ஜூலை 1968, இன்னரசர்ச் ஸ்விட்சர்லாந்து என்ற பெயரில், மாஸ்டர் 32 மாணவர்களை ஒரு பயண-ஆய்வு திட்டத்தில் அழைத்து சென்றார். இந்து சமய கோட்பாடுகள் மற்றும் யோகத்தின் தத்துவம் மற்றும் கோட்பாடுகளை, ஆங்கில மொழியில் கற்றுத்தருவது அவருக்கு எப்போதும் பிடிக்கவில்லை. தியானத்தின் சூட்சும நிலைகள் மற்றும் நுணுக்கமான உட்புற பயிற்சிகளை, ஆங்கிலம் போன்று வெளிப்புறமாக இருக்கும் ஒரு மொழியின் மூலம் எளிதில் கற்றுத்தர முடியாது என்பதை அவர் தெரிந்து கொண்டார். காசா எரானோஸ் எனும் இடத்தில், இந்து சமயத்தின் புனித நூல்களில் கூறப்பட்டுள்ள உணர்வின் உட்புற நிலைகளை மனித நேயம் அணுக மற்றும் புரிந்துகொள்ள

அனுமதிக்கும் ஒரு தீர்வை நாடும் வேட்கையில், மாஸ்டர் தனக்குள் ஆழமாக கவனம் செலுத்தினார். §

தொடர்ச்சியான தியானங்களுக்கு பிறகு, ஜூலை 28 காலையில், அவர் தியானத்தில் அமர்ந்து கொண்டு, எழுத்துக்களின் வடிவம் மற்றும் ஒலியை, கட்புலனுக்கு அப்பாற்பட்ட சக்தியின் மூலம் பார்த்து மற்றும் கேட்டுக்கொண்டு இருந்த போது, ஷூம் மொழியின் முதல் எழுத்து மற்றும் சிறிது நேரம் கழித்து இரண்டு எழுத்து என்று எழுத்துக்கள் உட்புற மனதில் இருந்து வெளிவந்தன. அவர் அவற்றை எல்லாம் எழுதிக்கொண்ட பிறகு, அந்த காகிதத்தை உற்சாகமாக அசைத்துக்கொண்டு வெளியே ஓடி வந்தார். அவர் தன்னை கடந்து செல்லும் ஒரு துறவியிடம் "அது எனக்கு கிடைத்து விட்டது! அது எனக்கு கிடைத்து விட்டது!" என்று கூறினார். அவர் இது வரை தான் செய்து இருந்ததை காண்பித்து, தான் தனிமையாக மீதம் இருந்த நாட்களை அதை மேம்படுத்த பயன்படுத்திக் கொண்டார். அடிப்படை எழுத்து, எழுத்துப் பிரதி, சொற்றொடர் இலக்கணத்துடன் படங்கள் மற்றும் ஓவியங்கள் என்று அழைக்கப்பட்ட முதல் சொல்லகராதி வார்த்தைகள் கொண்ட தியானத்தின் புதிய மொழி, தனியாக தங்கி இருந்த போது உருவாக்கப்பட்டது. §

1968 வருடத்து கோடை காலத்தில், ஸ்விட்சர்லாந்து நாட்டின் அஸ்கோனா நகரம் சென்று இன்னரசர்ச் பயண-ஆய்வு திட்டத்தை இமாலயன் அகாடமி நடத்தியது. நான் *தி அத்வைதின்* என்ற ஒரு சிறிய புத்தகத்தை எழுதிக்கொண்டு இருந்தேன். அந்த புத்தகம் பரமாத்துமாவுடன் ஐக்கியமாகும் முன்பும், அந்த நிலையில் இருந்து வெளிவந்த பின்பும் நிலவும், தூய உணர்வின் உட்புற உலகங்களுக்குள் அனுபவிக்கும் புனிதமான நிலைகளை பற்றி இருந்தது. அந்த சிறிய புத்தகம் நன்றாக விரிவாக்கம் பெற்று வந்தது, ஆனால் நான் எழுதியதை மீண்டும் வாசிக்கும் போது, "இது எனக்கு புரிகிறது, ஆனால் தனது பாதையில் தொடக்க நிலையில் இருக்கும் ஒரு சாதகனுக்கு இது புரியுமா? ஆங்கிலத்தில் இல்லாத வார்த்தைகளை நான் எழுத்து வடிவம் தர விரும்புவதால், அது சிக்கல் நிறைந்ததாக, புரிந்துகொள்ள கடினமானதாக இருக்கும்," என்ற சிந்தனை எனக்கு தோன்றியது. ஆங்கிலத்தில் உணர்ச்சிகள், தூல பொருட்கள் பெயரை பெற்றுள்ளதைப் போல, மனதின் உட்புற மற்றும் புனிதமான பகுதிகளும் தங்களுக்கு என்று தனிப்பட்ட பெயரை பெறுவதற்கு, தேவையான மற்றும் போதுமான வார்த்தைகளை வழங்க சமஸ்கிருத மொழியை பயன்படுத்தலாம் என்று அதன் பிறகு நான் நினைக்கத் தொடங்கினேன். §

நாங்கள் கோடைகாலத்தில் அஸ்கோனா நகரத்தில் தனிமையாக இருந்த போது, எனது உட்புறத்தில் இருந்து விரிவாக்கம் பெற்றிருந்த இந்த கோட்பாட்டை, என் மனம் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தது மற்றும் நான் *தி அத்வைதின்* புத்தகத்தில் பயன்படுத்தும் நோக்கத்துடன், குறிப்பிட்ட சில வார்த்தைகளை பல்வேறு சமஸ்கிருத அகராதிகளில் தேடத் தொடங்கினேன். ஆனால் நான் பார்த்த மூன்று

சம்ஸ்கிருத/ஆங்கில அகராதிகளில், அதன் மொழிபெயர்ப்பாளர்கள் ஒவ்வொரு வார்த்தையையும் பல்வேறு விதமாக மொழிபெயர்த்து இருந்தார்கள். “இவ்வாறு செய்தால் ஆரம்ப நிலையில் இருக்கும் எனது மாணவர்களுக்கு அதிகம் குழப்பம் தருவதாக இருக்கும். இதற்கு நான் சமஸ்கிருதம் பயன்படுத்தாமல் இருப்பதே மேல்,” என்று கருதி நான் அந்த முயற்சியை கைவிட்டேன். §


நாம் பயன்படுத்துவதற்கு உணர்வின் உட்புற நிலைகளை துல்லியமாக விளக்கும் சொல்லகராதியுடன், மற்றுமொரு புதிய மொழி உண்மையில் தேவைப்படுகிறது என்பதை நான் உணர தொடங்கினேன். நாங்கள் சுற்றுப்பயணமாக இரண்டு-மூன்று நாட்களுக்கு வெனிஸ் நகரம் பயணம் செய்தோம். புதிய மொழி பற்றிய சிந்தனை, என் மனதில் தொடர்ந்து தீவிரமாக இருந்தது. ஒரு புதிய அருள்ஞான மொழியை வெளியிடவேண்டும் என்று வெனிஸ் நகரத்தில் தீவிரமாக முடிவு செய்தேன். அதனால் நான் எனக்குள் ஆழமாக சென்று, மகாதேவர்களில் ஒருவர் எனது வெளிப்புற ஆன்மாவிற்கு அறிவுறுத்திய தகவலை எழுதிக்கொண்டேன். இன்னொரு மொழியை விரிவாக்கம் செய்ய, நான் எனக்குள் எந்த இடத்திற்கு செல்ல வேண்டும் என்பதை அந்த மகாதேவர் விளக்கினார். “நீங்கள் *சுஷும்னா* நாடியில் இருக்கும் *உடா* ஓட்டத்திற்குள் செல்ல வேண்டும்,” என்று எனக்கு அறிவுறுத்தப்பட்டது. §

அந்த அறிவுறுத்தலை பின்பற்றிய போது, எனது முதுகுத்தண்டு ஒரு அழகான வெளிர் மஞ்சள் மற்றும் லாவெண்டர் நிற ஒளியில் பிரகாசித்தது. மஞ்சள் நிறமும் லாவெண்டர் நிறமும் ஒன்று சேர்ந்து, ஒரு நிறம் இன்னொரு நிறத்திற்குள் ஒரு புறமாக நுழைந்து மறுபுறமாக வெளிவந்தது. அது மிகவும் அருமையான காட்சியாக இருந்தது! ஆனால் எனக்கு *உடா* ஓட்டத்தின் ஒரு முனை மட்டுமே தென்பட்டது மற்றும் எனக்கு வெனிஸ் நகரத்தில் பலன்கள் எதுவும் கிடைக்கவில்லை. மூன்று நாட்கள் கழித்து, நான் சுவிட்சர்லாந்தின் அஸ்கோனா நகரம் திரும்பி எனது உட்புறமாக முயற்சி செய்துக்கொண்டு இருந்த போது, எனக்கு *உடா* ஓட்டத்தின் இரு முனைகளும் தென்பட்டன. அதன் பிறகு, நான் தியானத்தில் *நிர்விகல்ப சமாதியை* விட்டு வெளிவந்த போது *ஸ்வாதிஷ்டானா, அனாஹத* மற்றும் *ஆக்ஞா* சக்கரங்களின் ஓசைகளை கேட்டேன். இரண்டு மணி நேரத்திற்குள், எனது உட்புற மனதில் இருந்து எழுத்துப்படிவம், பதினெட்டு ஓசைகளின் அடிப்படை எழுத்துக்கள், சொற்றொடர் இலக்கணம் மற்றும் *சிம்ஷூம்பிசி, வும்டேயுடி, கரெஹனா* போன்று சொல்லகராதியின் சில அடிப்படை சொற்கள் தோன்றின. முதல் வார்த்தையாக *ஷூம்* உச்சரிக்கப்பட்டது. §

தற்போது ஷூம் தியானத்தின் சூட்சுமமான மொழியின் பெயராக இருக்கிறது. அவை அனைத்தையும் என்னால் முடிந்த வரை விரைவாக எழுதிக்கொண்டு, படிகட்டில் கீழே இறங்கி சென்று, எதிரே வந்த ஒரு

துறவியிடம், “அது எனக்கு கிடைத்து விட்டது! அது எனக்கு கிடைத்தது விட்டது! இதோ இது தான் நமது சூட்சுமமான மொழி!” என்று கத்தினேன்.§

இன்னரசர்ச் பயண-ஆய்வு திட்டத்தில் பயன்படுத்த எனக்கு ஐம்பது அல்லது நூறு வார்த்தைகள் அவசரமாக தேவைப்பட்டதால், அந்த புதிய மொழியை வெளியிடுவதில் நான் மிகவும் மும்முரமாக இருந்தேன். ஷூம் மிகவும் எளிமையாக தொடங்கியது. “சரி. நாம் கற்றுக்கொள்வதற்கு தற்போது பத்து முதல் இருபது வார்த்தைகளை பயன்படுத்துவோம். இறுதியில் மேலும் நூறு வார்த்தைகள் இருந்தால் மேலும் பயனுள்ளதாக விளங்கி, அவை ஆன்மீகத்தை கற்றுத்தரும் அற்புதமான கருவிகளாக இருக்கும்,” என்று நினைத்தேன். ஆனால் அதற்கு அடுத்த நாட்களில், இந்த *உடா* ஓட்டம் அதிக வலிமையையும் பிரகாசத்தையும் பெற்றது. நான் இதைப்பற்றி, சுவிட்சர்லாந்தில் அந்த சமயத்தில் இருந்த இரண்டு-மூன்று சைவத் துறவிகளை தவிர வேறு யாரிடமும் சொல்லவில்லை. §



*1968 வருடத்திற்கு அருகில், ஸ்ரீ சுப்பிரமுனியா பல வருடங்களாக மேற்கொண்ட சாதனாவின் காரணமாக, அவர் தனது உச்சந்தலையில் குண்டலினி நிரந்தரமாக சுருண்டு இருக்கும் அனுபவத்தை பெற்றார்.*

........................§


நான் தினமும் இரவு பகலாக வேலை செய்ய தொடங்கினேன், மற்றும் அந்த மொழியின் அமைப்பு மற்றும் எழுத்து வடிவம் எனக்குள் தெளிவடைய தொடங்கி, உட்புற ஒளியில் இருந்து சொல் அகராதி வர ஆரம்பித்தது. நான் எனது தலையில் ஒளியை கவனிக்கும் போது, ஷூம் லிபியின் சிறிய உருவங்கள் அல்லது எழுத்துக்கள் ஒவ்வொன்றாக கீழே இறங்கி வந்து வரிசையாக நிற்பதை பார்ப்பேன். அதன் பிறகு நான், *ஷூம்சிம்னிசி* போன்ற ஒரு சொல்லை படித்து, அந்த ஷூம் சொல் மற்றும் அதன் ஆங்கில பொருளையும் எழுதிக்கொள்வேன். இதைப்போன்று இரண்டு-மூன்று வாரங்களுக்கு, சொல் அகராதியில் சேர்ந்து கொண்டிருந்தன. தெற்கு பிரான்சின் நீஸ் நகரில், மனோஉணர்வு நரம்பு அமைப்பை குறிக்கும் *வியுனாசி* மற்றும் உடலின் வெதுவெதுப்பு மற்றும் மனோஉணர்வு வெப்பத்தை குறிக்கும் *அலிகைஷூம்* பற்றிய கோட்பாடு முழுவதும் வெளிவந்தது. §

அதன் பிறகு எங்கள் இன்னர்சர்ச் குழு பாரிஸில் இருந்த போது, ஷூம் மொழி மேலும் வளர்ச்சி பெற்றது. நான் அமெரிக்கா திரும்பிய போது, எனது சொல் அகராதியில் சுமார் 300 சொற்கள் இருந்தன, மற்றும் மேலும் பல சொற்கள் வந்துகொண்டு இருந்தன. இறுதியில் உட்புற ஒளியில் இருந்து உருவங்கள் வெளிவருவது நின்றது, மற்றும் கட்புலனுக்கு அப்பாற்பட்டதை கேட்கும் சக்தியின் மூலம், பெரும்பாலும் ஒருவர் பேசுவதைப் போல ஒரு சொல்லின் பொருளை கேட்டு தெரிந்துகொள்வேன். அவை சிலசமயங்களில் முதலில் ஆங்கிலத்திலும் பின்பு ஷூம் மொழியிலும் வரும். அந்த மொழியின் சொல் அகராதி மற்றும் அதன் அமைப்பு விரைவில் உருவாகியது, ஆனால் மிகவும் முக்கியமாக ஷூம் மொழியின் அணுகுமுறை தயாராக இருந்தது. §

ஷூம் மொழியில், அணுகுமுறை மனதில் ஆழமாக பதிந்து இருக்கிறது. அது *ஷூமிப்* என்று அழைக்கப்படுகிறது. இந்த அணுகுமுறையில், நாம் உலகின் மையத்தில் இருக்கும் உணர்வை பெறுகிறோம். நாம் முதுகுத்தண்டில் ஒரு மைய கம்பம் போல ஒளியை காண்கிறோம், மற்றும் அதன்பிறகு கண்களை திறக்கும் போது உலகை வேறுவிதமாக பார்க்கிறோம். §

அதற்கு பின்வந்த 1969 ஆம் ஆண்டில், நாங்கள் ஸ்விட்சர்லாந்து திரும்பி *மாம்பாஷூம்* பற்றிய மிகப்பெரிய அனுபவத்தை பெற்றோம். இவை தியானப் பகுதிகளின் ஷூம் வரைபடங்கள் ஆகும். இவை ஒரு அன்பர் தியானம் செய்ய தொடங்கும் முன்பாக, அந்த தியானத்தை வரையறுக்க உதவுவதுடன், அந்த தியானத்தில் முன்னேறும் போது அதைப்பற்றி தகவல்கள் எழுதிக்கொள்ளவும் பயன்படுகிறது. இதனால் அன்பர்கள்

மீண்டும் மீண்டும் அதே மனதின் பகுதிக்கு செல்ல முடிகிறது. அதே *மாம்பூஷத்தை* பின்தொடர்வதன் மூலம், மனதின் அதே பகுதிக்கு ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் மீண்டும் மீண்டும் செல்ல முடிகிறது. நானும் எனது சீடர்களும் ஒரே மனதின் பகுதிக்கு சென்று, ஒரே ஒலிகளை பார்த்து மற்றும் கேட்டு, ஒரே நிறங்களை பார்த்து அனுபவிக்கும் போது, எங்களுக்குள் ஆன்மீக அனுபவங்கள் உருவாக தொடங்கியது. சூட்சும மற்றும் மறைஞான இலக்கியத்தில், இத்தகைய ஒரு நிகழ்வு வெளிப்படுத்தப்படவில்லை. §



*1969 ஆம் ஆண்டில், மாஸ்டர் சுப்பிரமுனியா பதிமூன்று வார இந்திய தீர்த்த யாத்திரையை மேற்கொண்டார். இந்த யாத்திரையின் போது அவர் 65*

*சீடர்களை வழிநடத்தி சென்றார். 1949 ஆம் ஆண்டிற்கு பிறகு, அவர் இந்தியா மற்றும் இலங்கைக்கு முதல் முறையாக திரும்பி இருந்தார். அது அந்த இரு நாடுகளுடனும் பல வருட கருத்து பரிமாற்றத்தை தொடங்கி இருந்தது.*

........................§

**மலைகளில் நடந்த கிளர்ச்சி**

1968 இன்னர்சர்ச் திட்டத்தின் அங்கமாக நான்கு வாரங்கள் ஐரோப்பா பயணம் முடித்து வந்த போது, மாஸ்டர் வழக்கத்திற்கு மாறாக நீண்ட நாட்கள் வெளியே இருந்ததால், அவர் மோசமான விளைவுகளை சந்தித்தார். கலகம் செய்யும் எண்ணத்துடன் இருந்த ஒரு சிறிய துறவிகளின் குழு, வயதில் மூத்த துறவியின் தலைமையில், மாஸ்டரை அணுகி அவர் பதவியில் இருந்து விலக வேண்டும் மற்றும் இனி அவர்கள் சமயப்பணியை தொடர்வார்கள் என்று ஒரு மூர்க்கத்தனமான பரிந்துரையை வழங்கினார்கள். §

இந்த சவாலை எதிர்கொள்ளும் போது, மாஸ்டர் தனது சமநிலையை இழக்காமல், அந்த குழுவினரை, இரவு உணவு அருந்த ரெனோ நகரில் இருந்த மிகெல்ஸ் என்ற ஒரு மெக்சிகன் உணவகத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்தார். அவர் தன்னுடன் அதே எண்ணிக்கையில், செருக்குமிக்க இந்த கிளர்ச்சி அபத்தமானது என்று எண்ணிய துறவிகளை அழைத்து சென்றார். அவர் செல்லும் வழியில், தனக்கு ஆதரவாக இருந்தவர்களிடம் தனது திட்டத்தை பற்றி விளக்கம் அளித்தார். அவர்கள் கிளர்ச்சியாளர்களின் காரணங்கள் மற்றும் சிந்தனைகளை கேட்டு, அவர்கள் திட்டங்களைப் பற்றி மேலும் தெரிந்துக்கொண்டு எதிர்செயலாற்றாமல் இருக்க வேண்டும். §


இரவு விருந்தின் போது, எதிர்மறை பதில்கள் ஏதும் வராததால் கிளர்ச்சியாளர்கள் தங்கள் வலிமையை இழந்தார்கள். அவர் நீண்ட நாட்கள் மடத்திற்கு வெளியே இருப்பதாகவும், அவருக்கும் வயதாகிக் கொண்டு இருப்பதாகவும் (அப்போது 41) கிளர்ச்சியாளர்கள் மாஸ்டரிடம் கூறினார்கள். அவர்கள் எதிர்காலத்தை பற்றி தங்களது கருத்துக்களை திறந்த மனதுடன் பகிர்ந்து கொண்டனர். அதனால் அந்த மடத்தில் இருந்த கெடுபிடி சற்று தளர்ந்து புதிய யுகத்திற்கு ஏற்றார் போல ஒரு வெளிப்படையான அமைப்பாக மாறியது. §

மாஸ்டர் நேரடியாக பதில் ஏதும் சொல்லாமல் உணவகத்தை விட்டு கிளம்பினார், மற்றும் அவர் அந்த விஷயத்தைப் பற்றி அந்த குழுவுடன் எப்போதும் பேசவில்லை. அதற்கு பின் வந்த நாட்கள் மற்றும் வாரங்களில், அவர் துறவிகளை ஒன்றன் பின் ஒன்றாக, இன்னொரு மடத்திற்கு, இன்னொரு பணிக்கு நகர்த்தி, கிளர்ச்சியில் ஈடுப்பட்டு இருந்தவர்களின் பொறுப்பை குறைத்து எதிர்ப்பை அகற்றினார். வருடங்கள் செல்ல செல்ல, கிளர்ச்சியாளர்கள் ஒவ்வொருவரும் விளைவுகளை நினைத்து அஞ்சாமல் தைரியமாக மடத்தை விட்டு வெளியேறினார்கள். பல வருடங்கள் கழித்து சுவாமி சச்சிதானந்தாவும், இதைப்போன்று சதி திட்டத்தை அறங்காவலர்கள் குழுவிடம் இருந்து எதிர்கொண்டார். அப்போது சுவாமி தன்னை கவிழ்க்க

முயன்றவர்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள, மாஸ்டர் தனது மூத்த துறவிகளை உதவிக்கு அனுப்பினார். §

அதற்கு பிறகு வந்த மாதங்களில், மாஸ்டர் தனது தனிமையான நெவாடா ஆசிரமத்தில் அதிக நேரம் கழித்து, தினமும் நான்கு முறை ஒரு மணிநேர தியானம் என்று அந்த காலத்தில் பின்பற்றப்பட்ட துறவிகளின் வாழ்முறைக்கு தலைமை தாங்கினார். அவரது ஆன்மீக அனுபவங்களை ஷும் வெளிப்பாடுகள் வலுப்படுத்தி இருந்தன. அந்த காலத்தை பற்றி, அவர் வழங்கிய குறிப்பு:§

> கடும் முயற்சி செய்து உணர்தலை பெற்ற ஒரு சந்நியாசி, பிரம்மத்தின் கதவில் இருக்கும் முத்திரையை உடைத்துக்கொண்டு வரும் குண்டலினி சக்தியை பல பிறவிகளாக ஒன்று சேர்த்து வருகிறார். ஒரு முக்கியமான விஷயம். அது உடைந்தது என்றால், அதை என்றுமே சீர் செய்ய முடியாது. உடைந்ததை சரி செய்ய முடியாது. குண்டலினி திரும்பி வரும் போது, *உபதேசி* மற்றும் *நிர்வாணிக்கு* இடையே முடிவு செய்ய ஒரு வாய்ப்பை வழங்குகிறது. அந்த சக்தி திரும்பி வரும் போது *ஸ்வாதிஷ்டானா, மணிப்புரா மற்றும் அனாஹத* சக்கரங்களில் மெய்யுணர்வு வளர்ச்சி அடைந்த நிலையில், வசதியாக ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கும் ஏதாவது ஒரு சக்கரத்தில் அது சுருண்டு கொள்கிறது. ஒரு மிகப்பெரிய புத்திமான் அல்லது பரமாத்துமாவை கண்டறிந்த ஒரு சித்தர் அறிவெழுச்சி மையத்திற்கு திரும்புவார்; இன்னொருவர் *மணிப்புரா* சக்கரத்திற்கு திரும்பலாம். §



*1970 ஆம் ஆண்டு நடைபெற்ற டஹிடி-சிலோன் இன்னரசர்ச் பயணத்தின் போது, சிலோனில் இருந்த சைவ சமூகம் மாஸ்டருக்கு நல்ல வரவேற்பை*

*வழங்கினார்கள். அவரது வரவை தவில் மற்றும் நாதசுவரம் ஐம்பது கிராமங்களில் அறிவித்தது, மற்றும் மேற்கில் இருந்து வந்த தெய்வீக புருஷர் நடந்து செல்ல, பல மைல் தூரத்திற்கு கையால் நெய்த துணி தரையில் விரிக்கப்பட்டு இருந்தது.*

……………………….§

*சஹஸ்ரஹாரத்தில்* குண்டலினி சுறுண்டுக்கொள்வதே முடிவான அனுபவமாக விளங்குகிறது. நான் அந்த அனுபவத்தை 1968-69 வரை பெறவில்லை. ஆனால் அந்த வருடத்தில் *சஹஸ்ரஹார* சக்கரத்தில், குண்டலினி சக்தியின் வலுவான அனுபவங்களின் தொடர்ச்சியை பெற்றேன். அது தினமும் கடுமையான சாதனாக்கள் மற்றும் தவத்தை தொடர்ந்து இருபது வருடங்களுக்கு செய்தத்தால் கைக்கூடியது. இதற்கான பூர்வாங்க பயிற்சி முந்தைய பிறவியில் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன் காரணமாகவே இந்த பிறவியில் கிடைக்கும் உணர்தலின் மூலம், வருடங்கள் செல்ல செல்ல என்னை சுற்றியும் எனக்குள்ளும் வெளிப்பட்டதை என்னால் தக்க வைத்துக்கொள்ள முடியும் என்றும் நான் சில வருடங்கள் முன்பு கேள்விப்பட்டிருந்தேன். பலமுறை நான் மேற்கொண்ட ஒருமுகப்பபட்ட முயற்சிகளால் சாதனாக்களின் பலன்கள் என்னை வந்து அடைந்தன என்பதை உறுதியாக சொல்லலாம், ஆனால் அது கடினமாக இருக்கவில்லை என்பதால் முந்தைய பலன்கள் மீண்டும் தூண்டப்படுகின்றன என்று அது என்னை சிந்திக்க வைக்கிறது. §

**கார்டன் ஐலன்ட் (பூங்கா தீவு)**

ஆசிரம் கவாய் என்று அழைக்கப்பட்ட இரண்டாவது இன்னரசர்ச் டிசம்பர் 1968 நடைபெற்றது. கவாயில் இருந்த கார்டன் ஐலன்ட்டுக்கு 27 மாணவர்களை மாஸ்டர் அழைத்து சென்று, டிராபிகல் இன் என்ற பெயரில் ஒரு அமைதியான கிராமப்புற உல்லாச விடுதியில் மூன்று வாரங்கள் தங்கினார். அவர்கள் தங்களுக்கு அங்கே சகல வசதிகளையும் வரவழைத்துக் கொண்டு, அதை ஒரு ஆசிரமமாக மாற்றினார்கள். அந்த விடுதி 1929 ஆம் ஆண்டு கட்டப்பட்டு, வாய்லுவா நதியில் இருந்து நான்கு மைல் தூரத்தில், மேலிருந்து ஒரு பசுமையான ஆற்றுப் பள்ளத்தாக்கை பார்த்த வண்ணம் அமைந்து இருந்தது. அங்கிருந்து சில மைல் தூரத்தில், அந்த தீவின் எழுச்சி அடங்கிய எரிமலையை தத்ரூபமாக காண முடிந்தது. அது ஒரு விண்ணுலகம் போல காட்சி அளித்தது. §

நான் எனது கற்பிக்கும் நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்வதற்கு மற்றும் உலகெங்கும் இருக்கும் மக்கள் என்னை எளிதில் அடையும் வகையில் ஒரு புதிய சர்வதேச தலைமையகத்தை பலவருடங்களாக தேடிக்கொண்டு இருந்தேன். நான் முதல் இன்னரசர்ச் திட்டத்தை நடத்திய கோடைகாலத்தில், பதினொரு நாடுகளுக்கு பயணம் செய்தேன். அதன் பின்னர் தொடர்ந்து நடைப்பெற்ற இன்னரசர்ச் திட்டங்களின் போது,

மொத்தம் 27 நாடுகளுக்கு பயணம் செய்தேன். இறுதியில் நான் கவாய் தீவியில் எனது தலைமையகத்தை அமைக்கலாம் என்று முடிவு செய்தேன். §

அந்த இடத்தின் அழகு எல்லோர் கவனத்தையும் ஈர்த்ததால், அந்த இடத்தை விலைக்கு வாங்கி தேவாலயத்தை அமைக்கலாம் என்று பக்தர்கள் பரிந்துரைத்து, முன்பணம் செலுத்த தங்களுக்குள் பணத்தை திரட்ட ஆரம்பித்தார்கள். ஒரு நாள் அந்த சீடர்கள் அந்த அழகான இடத்தை தனது இருப்பிடமாக மாற்ற வேண்டும் என்று கூறி அவரது கையில் $480 வழங்கினார்கள். அது விற்பனைக்கு வரவில்லை, ஆனால் மாஸ்டர் அந்த பணத்தை அந்த குறிப்பிட்ட நோக்கத்திற்கு ஒதுக்கி வைத்தார். §

**உலகின் தலைசிறந்த மேசை பணியாளர்கள்**

1969 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், நெவாடா மற்றும் சான் பிரான்சிஸ்கோவில் இருந்து மாஸ்டர் திரும்பிய போது, தனது துறவற சமூகத்தின வளர்ச்சி அவருக்கு சவால் விடுவதாக இருந்தது. அவர் அவர்களுக்கு உணவு, இருப்பிடம் மற்றும் பயிற்சியை எப்படி வழங்குவது? அது வரை துறவிகள் அருகில் வாடகை குடியிருப்பில் அல்லது கோயில் வளாகத்தில் தங்கி இருந்தார்கள். அவர் துறவிகளுக்கு வாங்கிய ஒரு புதிய கட்டிடத்தில், தொடங்கப்பட்ட ஒரு புதிய பயிற்சி திட்டத்தின் கீழ், துறவிகள் சான் பிரான்சிஸ்கோ நகர உணவகங்களில் வேலை செய்தார்கள். துறவிகள் மத்தியில் விறுவிறுப்பான சூழ்நிலைகளில் மக்களை எதிர்கொள்ள தேவையான திறமைகளை வழங்க, மற்றவர்களுடன் பணியாற்றி பலவிதமான தகவல்களை கையாளும் திறமைகளை பக்குவப்படுத்த, துறவற வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக விளங்கும் பணிவான சேவையை வழங்கும் பண்புகளை ஊக்குவிக்க மற்றும் வருவாய் மிகவும் குறைவாக இருந்த சமயத்தில் தனது சமூகம் பொருளாதார தன்னிறைவை பெறும் நோக்கத்துடன், இந்த திட்டத்தை மாஸ்டர் உருவாக்கினார். §

“உலகின் தலைசிறந்த உணவகங்களில் தலைசிறந்த மேசை பணியாளர்களை உருவாக்குவதே” இதன் குறிக்கோளாக இருந்தது. இதற்காக துறவிகள் சுய ஒழுக்கம் மற்றும் நடத்தையில் சிறந்து விளங்க வேண்டியிருந்தது. மாஸ்டர் அவர்கள் பயிற்சியை மேலும் மேம்படுத்த, துறவிகளுக்கு நுணுக்கமான மேசை பணியை பற்றி ஒரு விரிவான பயிற்சி திட்டத்தை தொடங்கி, உரைகள் மற்றும் செயல் விளக்கங்களின் மூலம் துறவிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்க, நகரத்தின் பிரபலமான உணவக உரிமையாளர்கள், தலைமை சமையல்காரர்கள், உணவகத்தில் மதுபானம் வழங்கும் ஊழியர்கள் மற்றும் உணவக மேற்பார்வையாளர்களை நியமித்தார். §

துறவிகள் பல வருடங்களுக்கு மாற்றுப்பெயருடன் நகரத்தின் தலைசிறந்த உணவகங்களில் வேலை செய்து, ஒவ்வொரு இரவும் தாங்கள் பெற்ற

சம்பாத்தியத்தை கோயில் பீடத்தில் சமர்பிப்பார்கள் மற்றும் தங்களது விடுப்பு நேரங்கள் மற்றும் விடுப்பு நாட்களை குருவுடன் மடத்தில் கழிப்பார்கள். இந்த திட்டத்தை அமைதியான சமயப்பணி என்று மாஸ்டர் அழைத்தார். இந்த பணியின் போது துறவிகள் தாங்கள் சேவை செய்யும் மற்றும் இணைந்து பணி புரியும் மக்களுக்கு ஆசிகளை வழங்கி அவர்களை வாழ்க்கையில் மேம்படுத்த, கோயிலின் அதிர்வை சுமந்துக்கொண்டு மாறுவேடத்தில் சென்றனர். அது பொறுமையும் திறமையும் அதிகம் தேவைப்பட்ட சூழலில், நீண்ட நேரம் பணி புரியும் ஒரு கடுமையான சாதனாவாக இருந்தது. இதில் நிலைத்து இருந்தவர்களுக்கு இது ஒரு சிறந்த பயிற்சியாக விளங்கி, சகோதரத்துவத்தை வலுப்படுத்தி இளைஞர்களை பக்குவப்படுத்தியது. அவர்கள் இறுதியில், உலகின் தலைசிறந்த உணவகங்களில் சிறந்த மேசை பணியாளர்களாக மாறினார்கள். §

**ஒரு இந்திய யாத்திரை**

மாஸ்டர் சுப்பிரமுனியா மீண்டும் ஐரோப்பா பயணம் செய்தார். அவர் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் இன்னர்சர்ச் ஸ்விட்சர்லாந்து 1969 திட்டத்தின் அங்கமாக, இந்த முறை ஐந்து துறவிகள் மற்றும் இருபத்தி ஏழு மாணவர்களுடன் சென்றார். அந்த பயணத்தில் போர்ச்சுகல், பிரான்ஸ் மற்றும் ஸ்விட்சர்லாந்து முக்கிய நாடுகளாக விளங்கின. ஒரு மாதம் நீடித்த அந்த பயணத்தில் பாதி நாட்கள், காசா எரானோஸில் தனிமையில் கழிந்தன. அங்கே அவர் மீண்டும் ஷூம் மொழியை உருவாக்குவதில் ஈடுபட்டு, அத்வைத சித்தாந்த தத்துவத்தை விளக்குவதற்கு, கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட அதன் ஓவியங்களை பயன்படுத்தினார். அவர் ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஸ்விட்சர்லாந்தில் வசித்த ஐரோப்பிய யோக ஆசிரியர்களுக்கு, காசா எரானோஸில் ஒரு விசேஷ பயிற்சி வகுப்புபை நடத்த தேவையான நிதியுதவியை வழங்கினார். §

அக்டோபர் மாதத்தில், 12 துறவிகள் மற்றும் ஐம்பத்தி நான்கு மாணவர்களுடன், அவர் இந்தியா மற்றும் இலங்கைக்கு பதிமூன்று வார யாத்திரையை மேற்கொண்டார். அது இந்திய யாத்திரை என்று அழைக்கப்பட்டது, மற்றும் அதன் அங்கமாக பிரான்ஸ், கிரீஸ், இந்தியா, நேபால், சிலோன், சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு மேற்கொண்ட பயணத்தின் போது, இந்தியாவில் அதிக நாட்கள் பயணம் செய்தனர். மாஸ்டருடன் சென்ற குழுவின் எண்ணிக்கை, அதுவரை இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்ட மிகப்பெரிய குழுவாக இருந்தது. அது மிகவும் பெரிய குழுவாக இருந்ததால், அன்றைய விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கரண் சிங், அவர்களது பயணங்களில் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தினார். அவர் பிற்காலத்தில் கவாய் வந்து, மாஸ்டர் சுப்பிரமுனியாவை தனது “மேற்கு நாட்டு குருவாக" ஏற்றுக்கொண்டார். ஜப்பானில் ஒரு மாஸ்டர் காலிகிராபர் (கலை நயத்துடன் எழுதுவதில் தேர்ச்சி பெற்றவர்), தாய்லாந்தில் ஒரு பௌத்த

ரோஷி மற்றும் இந்தியாவில் யோகிகள் மற்றும் மிகப்பெரிய ஆன்மாக்களின் குழு என்று ஒவ்வொரு நாட்டிலும் ஆன்மீக தலைவர்கள் நாடப்பட்டனர். §

இது இருபது வருடங்கள் கழித்து மாஸ்டர் இந்தியா செல்லும் முதல் பயணமாகவும், அவருடன் பயணம் மேற்கொள்ளும் மாணவர்களுக்கு அவர்களது வாழ்நாளின் முதல் இந்திய பயணமாகவும் இருந்தது. அவர்களது மனதை இந்தியா கவர்ந்து, பிரமிக்க வைத்து, சவால் விட்டு இறுதியில் மேம்படுத்தவும் செய்தது. பூமியில் உள்ள நாடுகளில் தெருக்களில் அற்புதங்கள் நிகழ்ந்து, மக்களின் கண்களில் தெய்வீகம் வாழ்ந்துகொண்டு இருக்கும் ஒரே நாடாக இந்தியா விளங்குகிறது என்று அவர்கள் முடிவு செய்து கொண்டார்கள். §


அவர்கள் ஒரு வாரத்திற்கு தனிமையாக அமைதியை நாடி, வடக்கே இமாலய மலை அடிவாரங்களில் இருந்த டார்ஜீலிங் மற்றும் உதைப்பூர் மற்றும் தென் இந்தியாவில் நீலகிரி மலையில் இருந்த உதகமண்டலத்திற்கும் சென்றார்கள். அவர் ஒரு நாள் யாத்ரீகர்களை, அந்த ஊரில் புதிதாக திரையிடப்பட்ட, “2001: எ ஸ்பேஸ் ஒடிசி” என்ற திரைப்படத்திற்கு அழைத்து சென்றார். ஷூம் மொழி யாத்ரீகர்களுக்கு மீண்டும் ஒரு முக்கிய பாடமாக விளங்கியது, மற்றும் அவரது சீடர்கள் ஆச்சாரமான கோயில் வழிபாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டனர். அவர் மெட்ராஸில் சர்வதேச யோக மாநாட்டை நிகழ்த்தினார். §

இந்த மூன்று மாத யாத்திரையில், தனது சற்குரு யோக சுவாமி வசித்த சிலோனிற்கு திரும்புவது மாஸ்டருக்கு மிகவும் பிடித்து இருந்தது. அவர் அந்த நாட்டில் இருந்து கிளம்பி இருபது வருடங்கள் கழிந்து இருந்தன, மற்றும் அந்த நாட்டிற்கு செல்லவேண்டும் என்று அவர் பல வருடங்களாக ஏங்கிக்கொண்டு இருந்தார். அவரை யாழ்ப்பாண சைவர்கள் அதிக மரியாதை மற்றும் ஆரவாரத்துடன் வரவேற்றனர் மற்றும் நிகழ்ச்சி திட்டமிட்டபடி நடந்தேறியது. “எனக்கு துணையாக ஒருவர் அமெரிக்காவில் இருக்கிறார்” என்று யோக சுவாமி கூறியதை அவர்கள் நினைவுக் கூர்ந்தார்கள். அந்த அமெரிக்க குரு ஒரு தலைசிறந்த ஆன்மாவாக இருப்பது அவர்களுக்கு தெரிந்து இருந்தாலும், மேற்கத்திய மனிதரை ஒரு ஆன்மீக குருவாக எப்படி ஏற்றுக்கொள்வது என்று அவர்கள் மனதில் மறுப்பும் தயக்கமும் நிலவியது. அவ்வாறு அது வரை நடக்கவில்லை, மற்றும் அது இனி நடக்காது என்பதில் உறுதியாக இருந்தனர். ஆனால் மாஸ்டர் அவர்கள் மீது கவனம் செலுத்தவில்லை. அவருக்கு யோக சுவாமி ஒரு பணியை வழங்கி இருந்தார் மற்றும் அதை அவர்களின் துணையுடன் அல்லது துணை இல்லாமல் வழிநடத்தி செல்வது அவரது கடமையாக இருந்தது. §

அவர் சுப்பிரமுனிய ஆசிரமத்திற்கு அருகில் விஷேச விருந்துகள் மற்றும் திருவிழாக்களுக்கு ஏற்பாடு செய்தார். அவர் தனது மடவாசிகளுக்கு, மடத்திலேயே நீண்டநாட்கள் தங்கியிருந்து இந்து சமயம் பற்றி தங்களது தனிப்பட்ட விழிப்புணர்வை விரிவாக்கம் செய்து, மேற்கத்திய நாடுகளில் பதிப்பிடுவதற்கு சாஸ்திரங்களை சேகரிக்கும் திட்டத்தை தொடங்கி

வைத்தார். அவர்கள் தங்கியிருந்த நாட்களில், கோயிலில் பூஜைகள் மற்றும் உரைகள், கலாச்சார நிகழ்வுகள் மற்றும் கூட்டங்கள் நிரம்பி இருந்தன. அருகில் எந்த விடுதியும் இல்லாததால், இன்னர்சர்ச் குழுவினர் யோக சுவாமியின் சீடர்களின்  வீட்டில், இருவர் அல்லது மூவராக தங்கியிருந்து கதைகளில் கேட்டிருந்த சைவ கலாச்சாரத்தில் வாழ்ந்துகொண்டும், கிழக்கு கலாச்சாரத்தின் அழகு மற்றும் நுணுக்கங்களை கற்றுக்கொண்டும், பல வருடங்களுக்கு கிழக்கு மற்றும் மேற்கு கலாச்சாரத்தை இணைத்து வைக்கும் ஆழமான மனித உறவுகளை உருவாக்கிக்கொண்டும் இருந்தார்கள். §

மாஸ்டர் தனது வீட்டில் இருப்பதைப் போன்று இயல்பாகவும் அமைதியாகவும் இருப்பதை எல்லோராலும் உணர முடிந்தது. அவர் யோக சுவாமியிடம் தன்னை அறிமுகப்படுத்தி வைத்த கந்தையா செட்டியார் வீட்டில் தங்கி தனது உறவுகளை புதுப்பித்துக்கொண்டார். அவர் எங்கும் வெள்ளை வேட்டி அணிந்து சென்றார். அவரை அந்த உடையில் முன்பு பார்த்திராத மக்களுக்கு, அது வியப்பை வழங்கியது.  காலம் அனுகூலமாக இருப்பதை உணர்ந்து, அவர் துறவிகள் மற்றும் சீடர்களுக்கு உயர்ந்த *தீட்சைகளை* வழங்கி, தமிழ் சமூகத்திற்கு அளவெட்டி ஆசிரமத்தின் சேவையை விரிவாக்கம் செய்ய திட்டங்களை உருவாக்கினார். §



*1972 ஆம் ஆண்டு நடைப்பெற்ற இந்திய யாத்திரையின் போது, சற்குருவுடன் எழுபத்தி இரண்டு இன்னர்சர்ச் குழுவினர் உலகை சுற்றி வந்தனர். பழனி*

*மலை, மதுரை மீனாட்சி-சுந்தரேஸ்வரர் கோயில் மற்றும் மற்ற கோயில்களில், மக்கள் வெள்ளம் அவரை மலர் மாலைகளால் அலங்கரித்து, அவரை ஒரு உன்னதமான எதிர்காலத்திற்கு இந்து சமயத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக அறிவித்தது.*

……………………§

அவர் நல்லூர் மற்றும் கும்பழாவளை மற்றும் யோக சுவாமியின் குடிசையில் வழிபாடு நடத்தினார். அவர் இலங்கையில் இருந்த மூத்த சீடர்களை சந்தித்தார் மற்றும் மெலிந்து உருவம் மற்றும் நரைத்த முடியுடன் தனது ஓலை குடிசையில் தங்கியிருந்த வயது முதிர்ந்த மார்கண்டுசுவாமியை சென்று பார்த்தார். அவர் எல்லோரும் வியக்கும் வண்ணம் அந்த துறவியின் காலில் விழுந்து வணங்கினார். அவர்கள் இருவரும் பல வருடங்களாக பகிர்ந்த அந்த குருவிற்கு, அவர் வழங்கும் மரியாதையாக மக்களுக்கு தோன்றியது. தனது பங்கிற்கு மார்கண்டுசுவாமியும், கூடியிருந்த எல்லோரது கவனத்தையும் கவர்ந்தார். இன்னர்சர்ச் குழுவினர் உள்ளே நுழையும் போது, அவர் அந்த குழுவில் யாரையும் தவறவிடாமல், ஒவ்வொருவர் மீதும் கவனமாக தனது பார்வையை செலுத்தி, அவர்களது கண்கள், ஆன்மா சந்திக்கும் வரை, அடுத்தவர் மீது தனது பார்வையை செலுத்தவில்லை. அவர் ஒரு விசுப்பலகையில் சுத்தமான வெள்ளை ஆடையை தளர்வாக அணிந்து அமர்ந்து இருந்தார் மற்றும் அவரது தலைமுடியும் தாடியும் கட்டுப்பாடின்றி வளர்ந்து இருந்தது. அவர் ஐந்து வருடங்கள் முன்பாக இறந்திருந்த, ஞானோதயம் பெற்ற குருவின் மிகப்பெரிய போதனைகளை சொல்லி தனது விருந்தாளிகளை மகிழ்வித்தார். இந்த சந்தோஷமான நிகழ்ச்சிகளின் மூலம் இன்னர்சர்ச் குழுவினர் நிலைமாற்றத்தை பெற்றனர். §

அந்த சில வாரங்களில் இந்தியா மற்றும் இலங்கையில் நடைப்பெற்ற வலுவான சந்திப்புக்களின் மூலம் மாஸ்டரின் சமயப்பணி ஒரு முழுமையான மாற்றத்தை பெற்றது. அவர் அந்த பயணத்தின் போது இந்து சமயத்தின் மூலத்திற்கு சென்று, சிதம்பரம் கோயிலில் வழிபட்டு, பூமியின் மிகவும் பழமையான தர்மத்தில் தனது சீடர்களை ஈடுபடுத்தி இருந்தாலும், அவர் அதன் பிறகு பல முறை திரும்பி வந்து, தனது சிறு வயதில் இருந்து பார்த்த மற்றும் நினைவில் வைத்திருந்த விஷயங்களை தொடர்ந்து ஒரு நதியை போல வரவழைத்துக் கொண்டிருந்தார். அதன் பிறகு இந்தியாவும் சிலோனும் ஒரு மந்தமான நினைவாக இருக்கவில்லை. அது பரமாத்துமாவின் தகவலையும், இந்து கலாச்சாரத்தின் அழகான பண்புகளையும், மேற்கத்திய நாடுகளுக்கு கொண்டு வருவதற்கு அவர் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளின் மையமாகவும் விளங்கின. §


யாத்திரையின் போது, அமெரிக்க ஆசிரமத்தில் இருந்த அனைவரும் நிகழ்ச்சிகள் மற்றும் அனுபவங்களைப் பற்றி தெரிந்துகொள்ள ஒரு தினசரி குறிப்பும் வெளியிடப்பட்டது. இந்த யாத்திரை கடிதங்கள் விர்ஜினியா சிட்டிக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டன. ஆசிரமத்தில் இருந்தவர்கள் மற்றும்

வீடுகளில் இருந்த சீடர்கள் யாத்திரை அனுபவத்தை பெறுவதற்காக, அந்த கடிதங்கள் அச்சிடப்பட்டு விநியோகம் செய்யப்பட்டன. §

**கவாய் தீவு அழைப்பு விடுத்தது**

உலகை சுற்றி வந்த குழுவினர் சோர்வடைந்து இருப்பதை உணர்ந்த மாஸ்டர், சான் பிரான்சிஸ்கோ செல்வதை தாமதித்து, அவர்களுடன் கவாய் பயணம் மேற்கொண்டார். அவர் 1968 வருடத்தின் இறுதியில், ஆசிரம் கவாய் என்ற பெயரில் அங்கே ஒரு இன்னர்சர்ச் குழுவை அழைத்து சென்றிருந்தார். அவர்கள் அதிகம் தேவைப்பட்ட ஓய்வு எடுப்பதற்காக பொய்புவில் இருந்த ஒரு விடுதியில் தங்கினார்கள். ஆனால் மாஸ்டர் அதில் எப்போதும் சரியாக செயல்பட்டது இல்லை, மற்றும் அவர்கள் அதிகம் விரும்ப தொடங்கியிருந்த அந்த அழகான டிராபிகல் இன் விடுதியை விலைக்கு வாங்கும் திட்டப்பணியில் உடனே இறங்கினார். §

அதை விலைக்கு வாங்குவதைப் பற்றி விசாரிக்க மாஸ்டர் ஒரு துறவியை அனுப்பி வைத்தார். “அது தற்போது விற்பனைக்கு இல்லை,” என்று பதிலுடன் அவர் திரும்பினார். “பரவாயில்லை, நீங்கள் அந்த விடுதிக்கே சென்று விசாரித்து வாருங்கள்,” என்று மாஸ்டர் அவருக்கு ஆறுதல் அளித்து அனுப்பி வைத்தார். அந்த துறவி கடமையுணர்வுடன் அந்த இடத்திற்கு சென்று, “அதை விற்கும் எண்ணம் முதலாளிக்கு இல்லை,” என்ற பதிலுடன் திரும்பினார். “சரி. அவருக்கு ஒரு வேளை விற்கும் எண்ணம் தோன்றினால், எந்த விலைக்கு விற்பார் என்பதை மட்டும் கேட்டு வாருங்கள்.” §



*டிசம்பர் 1968, மூன்று வாரங்கள் அமைதியாக தியானம் செய்வதற்கு, மாஸ்டர் 27 ஆன்மீக சாதகர்களுடன், தனியாக இருந்த ஹவாய் தீவிற்கு சென்றார். கிழக்கிற்கும் மேற்கிற்கும் மத்தியில் இருந்த கவாய், அவர் கவனத்தை வலுவாக கவர்ந்ததால், அவர் 1970 ஆம் ஆண்டு அந்த கார்டன் ஐலண்டில் தனது தலைமையகத்தை நிறுவினார்.*

……………………§

அந்த துறவி மீண்டும் கடமையுணர்வுடன் டிராபிகல் இன் திரும்பினார். அந்த விடுதிக்கு பணி ஓய்வு பெற்ற Col. ஆல்பர்ட் ரோஷ் உரிமையாளராக இருந்தார். அவரிடம் துறவி விற்க விரும்பும் விலையை பற்றி விசாரித்தார். "எனது மேலாளர் உங்களிடம் இருமுறை சொல்லிவிட்டார். இதை தற்போது விற்கும் எண்ணம் எனக்கு இல்லை, தம்பி," என்று உரிமையாளர் கூறினார். "ஆமாம் எனக்கு தெரியும். ஆனால் ஒரு வேளை…" என்று துறவி தயக்கத்துடன கேட்டார். விலையாக ஒரு எண்ணிக்கையை குறிப்பிடவில்லை என்றால் தனக்கு நிம்மதி கிடைக்காது என்பதை உணர்ந்த Col. ரோஷ், சிறிது அச்சுறுத்தும் குரலில், "நான் விற்பேன் என்று சொல்லவில்லை. ஆனால் நான் ஒரு வேளை விற்றால், $300,000 குறைவாக விற்க மாட்டேன்,"என்று கர்ஜித்தார். இந்த தகவலை துறவி பொய்பு சென்று கூறிய போது, "நம்மால் அதிக விலை கொடுத்து வாங்க முடியாது என்றும், நம்மால் உடனடியாக $165,000 தரமுடியும் என்றும், ஆனால் அதற்கு மேல் தரமுடியாது என்றும் அவரிடம் சென்று சென்று சொல்லுங்கள்." "ஆனால்…" "என்னை நம்புங்கள். அவரிடம் சென்று நாம் வாங்க விரும்பும் விலையை மட்டும் தெரிவியுங்கள்." ஒரு மணிநேரம் கழித்து அந்த துறவி, அந்த உரிமையாளரிடம் சென்று தாங்கள் வாங்க விரும்பிய விலையை அதிக தயக்கம் இல்லாமல் தெரிவித்தார். "சரி! நான் என் மனைவியிடம் பேசிவிட்டு வருகிறேன்," என்ற எதிர்பாராத பதில் வந்தது. §

வியக்கும் வகையில், அந்த விலைக்கு விற்க உரிமையாளர் ஏற்றுக்கொண்டார் மற்றும் மாஸ்டர் பிப்ரவரி 5, 1970 புதிய குடியிருப்புக்கு இடம் பெயர்ந்தார். அந்த குடியிருப்பின் மீது மனோஉணர்வு கட்டுப்பாட்டை பெறுவதற்காக, மாஸ்டர் முதல் நாள் இரவு தனியாக இருந்து, அடுத்த நாள் தன்னுடன் வந்து இருக்குமாறு துறவிகளுக்கு அழைப்பு விடுத்தார். §

Page 39 URL: https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/39_guru06_02.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் இருபத்தி-நான்கு

# கவாயில் தனது வீட்டில்


மாஸ்டர் தான் வாங்கிய பசுமையான ஏழு ஏக்கர் சொத்தை சிவாசிரமம் என்று பெயரிட்டு அதில் வசிக்க ஆரம்பித்தார். ஒருவர் தனது கடந்த கால நினைவுகள் மற்றும் சொத்துக்களில் இருந்து ஆயிரக்கணக்கான மைல் தொலைவில், ஒரு புதிய பகுதி மற்றும் சிறிய தீவிற்கு குடிபோவது, அந்த காலத்தில் ஒரு தைரியமான முடிவாக இருந்தது. இதன் மூலம் அவர் நீண்ட நாட்களாக தனது ஆன்மீக தலைமையகத்திற்கு மேற்கொண்ட தேடுதல் வேட்டை நிறைவு பெற்றது. §

> பல வருடங்களுக்கு முன்பு, நாங்கள் கவாய் வந்து இருந்தோம். ஆனால் அதன் பிறகு நாங்கள் அதை விட்டு கிளம்பவில்லை. நான் கிழக்கு மற்றும் மேற்கில் இருந்த சீடர்களுக்கு அருகாமையில் இருந்து கொண்டு, பெரும்பாலான உலகில் இருந்து விலகி தனியாக இருக்க விரும்பியதால், நான் உலகில் அதிக ஒதுக்குப்புறமாக இருந்த கவாய் தீவை தேர்ந்து எடுத்தேன். ஆமாம், எங்களுக்கு வெளிப்புற வாழ்கையை விட உட்புற வாழ்க்கை மிகவும் முக்கியமாக இருந்தது. நாங்கள் சான் பிரான்சிஸ்கோ, நியூ யார்க், சிங்கப்பூர் அல்லது புது டில்லியில் இருந்தால், பெரும்பாலும் வெளியீடுகள் மற்றும் இணையம் மூலம் அதிக அளவு மக்களை சென்றடையும், தியானவான்கள் மற்றும் ஆசிரியர்களின் ஆழ்சிந்தனை சமூகமாக தற்போது செய்யும் வேலையை செய்ய முடியாது. கவாய் ஒரு ஆன்மீக இடமாக விளங்கி, அங்கிருக்கும் புனிதமான வையாலேலே மலை சிகரம், மாசுபடாத காற்று மற்றும் கடலில் இருந்து வெளிவரும் குணப்படுத்தும் சக்திகளின் சுழலாக இருக்கிறது. §

எதிர்காலத்தில் வரவிருந்த இன்னர்சர்ச் திட்டங்களுக்கு இணைந்து செயல்பட மற்றும் கவனமாக திட்டமிட்ட, அவர் விர்ஜினியா சிட்டி, சான் பிரான்சிஸ்கோ மற்றும் கவாய் தீவில் இருந்த மூன்று மையங்களுக்கு இடையே ஒரு தொலை தட்டெழுத்து அமைப்பை நிறுவினார். இந்த மாபெரும் உலோக தட்டச்சு

நிலையங்கள் யாத்திரை திட்டமிடுவதில் ஒரு பெரிய தெளிவை கொண்டு வந்து,  கடல் கடந்து தொடர்பு கொள்ள வழிவகுத்து, தேவாலயத்தின் பல நடவடிக்கைகளை எளிமையாக்கியது. அது அன்றைய மின்னஞ்சலாக விளங்கியது, மற்றும் ஒரே சமயத்தில் இருவர் அல்லது அதற்கு மேலானோர் ஆன்லைனில் இருந்தால், உடனடி தகவல் பரிமாற்றத்திற்கும் வழி வகுத்தது. §

ஷூம் மொழியில் மாமாடீ என்றும் சிலசமயங்களில் மதேரே (சற்குரு என்று பொருள்) அழைக்கப்பட்ட மாஸ்டர், தரையில் அமர்ந்துக்கொண்டு  நீளமான தகவல்களை (அப்போது ஆங்கில பெரிய எழுத்துக்கள் மட்டுமே இருந்தன), ஒரு பேப்பர் டிக்கர் டேப்பில் ஆஃப்லைன் முறையில் தட்டச்சு செய்வார். லட்சக்கணக்கான சின்னஞ்சிறிய வட்டவடிவ துளைகளால் துளைக்கப்பட்ட, பல நூறு அடிகள் நீளமான நாடாக்கள், பல நாற்பது கேலன் நெகிழி உருள்தொட்டிகளை நிரப்பி இருந்தன. இந்த நாடாக்கள், தொலைப்பேசி கட்டணம் மிகவும் குறைவாக இருந்த காலத்தில், மீண்டும் இயந்திரத்தில் நுழைக்கப்பட்டு 300 பாட் வேகத்தில், அவரது மடவாசிகளுக்கு பல மணி நேரங்கள் அனுப்பப்படும். இந்த தகவல்கள் மடத்தில், ஒரு இயந்திரத்தில் இருந்த டிராக்டர்-பீட் பேப்பர் வழியாக வெளிவந்தன. அவர் தனது மடவாசிகளுக்கு எழுதிய தகவல்களில், அவர்கள் தங்களது ஆத்ம ஞான குறிக்கோளை நோக்கி செயல்படுவதை ஷூம் மொழியில் அறிவுறுத்தும், அருள்ஞானம் நிரம்பிய ஒரு தகவலை இங்கே காணலாம். §



*1970 ஆம் ஆண்டு, மாஸ்டர் தனது வெப்பமண்டல கவாய் மடாலயத்தில், ஒரு பிரம்பு நாற்காலியில் பல வாரங்கள் அமர்ந்து, தன்னிச்சையாக பன்னிரண்டு*

*மணி நேரங்களுக்கு ஆன்மீக உபதேசங்களை அறிவுறுத்தினார். அதன் ஒலிப்பதிவு, பிற்காலத்தில் தி மாஸ்டர் கோர்ஸ் என்ற பெயரில், அவரது முக்கிய கற்பிக்கும் சாதனமாக மாறியது.*

........................§

கோயிலில் இருக்கும் *நாட்யாவிற்கு* வழங்கப்படும் தகவல்

செப்டம்ர் 6, 1970

அனுப்புநர் மதேரே §

நேற்று நமது நேரப்படி சுமார் ஒரு மணி அளவில் ஷூம்சிகா மற்றும் பாதுகாப்பாக லிஹுவுடன் (ஹவாய் மொழியில் உடல் சிலிர்ப்பு) நான் வந்து சேர்ந்தேன். நான் சான் பிரான்சிஸ்கோவில் இருந்து ஒரு 747 விமானத்தில் மேற்கொண்ட பயணம் அருமையாக இருந்தது. நாங்கள் எல்லோரும் சேர்ந்து சிறப்பாக ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபட்டோம். அவை நினைவில் இருந்து நீங்காமல் நிலைத்து இருக்கின்றன. மெர்சி (நன்றி).§

நாம் நமது வேலை தொடர்பாக வரும் பதினைந்தாம் தேதி, குடும்பங்களுடன் நடத்தும் சந்திப்புக்களை இப்பொழுதே திட்டமிடத்தொடங்குவது நல்லது. அடுத்த லூவாவ் மற்றும் இது போல மேலும் பல விஷயங்களை பற்றி இன்று விவாதிக்க வேண்டியுள்ளது. குடும்பங்களுடன் நடைபெறும் சந்திப்பும் லூவாவ் விருந்தும், இனிமேல் கோயிலில் நடைபெறும். அதனால் நாம் அதைப்பற்றி திட்டமிட ஆரம்பிக்கலாம். §

இந்த வாரம் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்கள் மற்றும் ஆசீர்வாதங்கள். மூலிங்ஷூம் பாடத்தில் கடினமாக பயிற்சி மேற்கொள்ளுங்கள். ஒவ்வோருவரும் சில வாக்கிய வரைபடங்களை உருவாக்கி எனக்கு அனுப்புங்கள். இதன் மூலம் உங்களுடன் நானும் கற்றுக்கொள்ளலாம். §

இங்கே இன்று வானிலை சிறப்பாக இருக்கிறது. சூரியன் நன்றாக பிரகாசிக்கிறது. நதி நிரம்பி ஓடுகிறது. இதை எல்லாம் பார்க்கும் போது, நம் எதிர்கால சந்ததிகள், எல்லா உலகங்களிலும் செழிப்பாக இருக்கப்போகும்  நாளை நான் நினைவுக்கூர்கிறேன். §

ஷூம்சிகா பீமா ஊ பசெனம் ஷூம்மாலே §

ஈகைஃப் ஊ எம்கைஃப் பெற முயற்சி செய்யுங்கள். உங்கள் குறிக்கோளை என்றுமே உங்களது தினசரி நிகழ்வுகளின் நினைவு அணுவின் மீது நிலைத்து வைத்திருங்கள். கைஃப் ஓ ஈகைஃப் ஊ எம்கைஃப்.§

என்றும் அன்புடன், உங்கள் மாமாடீ§

**உலகம் சுற்றும் குரு**

பெரும்பாலும் மாஸ்டரின் கவனம் நெவாடாவில் இருந்து ஹவாய் குடிபுகுவதில் இருந்தாலும், மாஸ்டர் தனது பயண-ஆய்வு திட்டங்களை தொடர்ந்து நடத்தி, ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் 25 மாணவர்களையும், நவம்பர் மாதத்தில் மேலும் 29 மாணவர்களை டஹிடி மற்றும் சிலோனிற்கும் அழைத்து சென்றார். அவர் இரண்டாவது முறையாக யாழ்ப்பாணம் மேற்கொண்ட பயணம், அவரது சைவ சமய அடிப்படைகள் மற்றும் யோக சுவாமியின் சீடர்களுடன் அவரது உறவை மேம்படுத்தியது, மற்றும் அவருடன் பயணம் செய்தவர்கள் சைவ கோயில் வழிபாடு மற்றும் திருவிழாக்களில் மூழ்கினார்கள். அவர் கொழும்பில் இருந்த போது,பௌத்த சமயத்தின் தியான மையம் வழங்கிய அழைப்பை ஏற்றுக்கொண்டு, அங்கே கூடியிருந்த பௌத்த சமயத்தவர்களுக்கு, ஷூம் மொழி மற்றும் ஆங்கில மொழி கலந்து உரை நிகழ்த்தினார். அது முழுவதும் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. §

டிசம்பர் மாதத்தில் தனிமையை நாடி, ஒன்பது நாட்கள் நடைபெற்ற மூன்றாவது யாத்திரையில் ஹவாய், மௌவி மற்றும் ஓஹு தீவுகளும் அடங்கி இருந்தன.  கவாய் தீவின் சிவாசிரமத்தில் இருந்த நாட்களில், அவர் தினமும் ஹைபிஸ்கஸ்  அறையில் சாதகர்களை ஒன்று திரட்டினார். அவர் சுத்தமான வெள்ளை உடையில், நன்றாக நெய்யப்பட்டிருந்த ஒரு மிகப்பெரிய பிரம்பு இருக்கையில் அமர்ந்துக்கொண்டு பதிவு செய்த, பல மணிநேர ஊக்கமளிக்கும் உரைகளை, பின்னர் நெவாடாவில் இருந்த அவரது மடவாசிகள் தி மாஸ்டர் கோர்ஸின் ஆறாவது பதிப்பாக, அவற்றை ஒன்று சேர்த்து, அச்சிட்டு தொகுத்து வழங்கினார்கள். ஒலி நாடாவில் பன்னிரண்டு ஒரு மணிநேர பாடங்களாக இருந்த அந்த பதிவு, பல வருடங்களுக்கு அவர் கற்பித்த பாடங்களுக்கு முக்கிய கருவியாக விளங்கியது. §

கவாய் தீவில் இருந்த தனது வீட்டில் மாஸ்டர் குடி புகுந்த பிறகு, அவர் தொடர்ந்து பயணம் மேற்கொண்டு, தனது மற்ற இரு மடங்களுக்கு மாதம் ஒரு முறையும், தியான  வகுப்புக்கள் மற்றும் பொது மக்களுக்கு சில வகுப்புக்களை நிகழ்த்த பெரும்பாலும் வாரம் ஒரு முறை ஹானோலுலு சென்றுகொண்டு இருந்தார். அந்த பழைய விடுதியை புனர்நிர்மாணம் செய்ய ஒரு பெரிய திட்டம் உருவாகியது, மற்றும் விரைவில் 1929 வருடத்து சொத்தை தீவிரமாக புதுப்பிக்கும் முயற்சியை மேற்கொள்ள, ஒரு சீடர்கள் குழு கவாய் தீவிற்கு விமானத்தில் வந்து இறங்கினார்கள். சுமார் மூன்று வருடங்களுக்கு ரம்பங்களின் கீச்சிடும் ஒலியும், சுத்தியலால் உடைக்கும்

சத்தமும் பழகிவிட்டன. அவர் புதிய அறைகளுக்கு தி பேலஸ் ஆஃப் தி நூன்டே சன், தி ரியோகன், பீகாக் கோர்ட் மற்றும் ஹைபிஸ்கஸ் ரூம் என்று அந்த நாட்டில் பரிச்சயம் இல்லாத பெயர்களை வழங்கினார். அவர் அந்த காலகட்டத்தில் பயணங்களுடன் புதிய மற்றும் தொடர் வெளியீடுகள் தொடர்பான பணிகள் மட்டுமில்லாமல் தனது வீட்டை சீரமைக்கும் பணியிலும் அதிக உற்சாகத்துடன் ஈடுபட்டு இருந்தார். அவர் எப்போதும் அதை ஒரு நிறுவனமாக கருதாமல், குருவின் வீடாக கருதினார். §

மடவாசிகள் வெப்பமண்டல செடிகளை தங்கள் தோட்டத்தில் பயிரிட்டனர். அவர்கள் மடத்தின் பால் தேவையை பூர்த்தி செய்ய, அந்த மாநிலத்தில் முதல் முறையாக டோகன்பர்க் ஆடுகளை இறக்குமதி செய்தனர். மாஸ்டர் குதிரைகளை வாங்கி, இந்த புத்திசாலி விலங்குகளுக்கு பயிற்சி அளித்து அவற்றை கவனிக்க இளம் துறவிகளுக்கு கற்றுக்கொடுத்து, குதிரை சவாரி மற்றும் குதிரைகளில் பீப்பாய்களை வேகமாக சுற்றி வரும் போட்டிகளையும் கற்றுத்தந்தார். பெண் குதிரைகளுக்கு ஏற்ற ஆண் குதிரைகளை வாங்கி கருத்தரிக்கும் சடங்கு மற்றும் பிறப்பை கவனிக்கவும், இயற்கையின் வழிகள் பற்றிய தங்கள் புரிதலை மேம்படுத்திக்கொள்ளவும் பிரம்மச்சாரிகள் நியமிக்கப்பட்டார்கள். அதைப்போல குருதேவா மடத்தில் சிறிதளவு இயற்கை சூழலை சேர்ப்பதற்காகவும், பால் மற்றும் மற்ற உபயோகமான பொருட்களுக்காகவும் மாடுகளை வாங்கினார். §

1972 ஆம் ஆண்டு இந்திய யாத்திரையின் போது மாஸ்டருடன் சேர்ந்து 75 சாதகர்கள் ஹவாய், ஜப்பான், தாய்லாந்து, இலங்கை (அது அப்போது குடியரசாக மாறி பெயர் மாற்றம் பெற்று இருந்தது), இந்தியா, இரான், ரஷ்யா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார்கள். அவர் அவர்களை சைவ சமய கோயில் வழிபாட்டின் மர்மங்களுக்குள் அதிகமாக ஈடுபடுத்தினார், மற்றும் அவர் பல்வேறு நாடுகளுக்கு செல்லும் போது வழக்கமாக செய்ததை போல, இந்த பயணத்தின் போது இந்தியாவின் மகான்கள் மற்றும் யோகிகள், தர்மஷாலாவில் தலாய் லாமா, நேபாளத்தில் பௌத்த சமய லாமாக்கள், மாஸ்கோவில் ஆச்சாரமான ரஷ்ய மதகுருமார்கள் என்று தனது சீடர்களை பல்வேறு நாடுகளின் ஆன்மீக தலைவர்களை சந்திக்க அழைத்து சென்றார். §

இதைப்போன்ற முக்கியமான சந்திப்புக்களுக்கு மத்தியில், மாஸ்டர் தனது எளிமையான நகைச்சுவை உணர்வை அவ்வப்போது வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். தலாய் லாமாவை காண தர்மஷாலாவிற்கு பேருந்து மூலம் பயணம் செய்த போது, அவர் தனது இன்னர்சர்ச் குழுவினருக்கு “ஹலோ, டாலி!” என்ற ஒரு நீளமான பாடலை பாடி உற்சாகப்படுத்தினார். சுவாமி முக்தானந்தாவுடன் கணேஷ் புரியில் ஒரு நாள் தங்கியிருந்த பிறகு, அவர்கள் பம்பாய் நோக்கி ஒரு பேருந்தில் திரும்பிக்கொண்டு இருந்த போது, அந்த பிரலமான சுவாமி ஞானோதயம் பெற்றவரா என்று மாஸ்டரிடம் ஒரு சீடன் கேட்டார். அன்று ஆசிரமத்தில் நடைபெற்ற தத்துவ ஞான கருத்துப் பரிமாற்றங்களை, வியக்கவைக்கும் சாமர்த்தியத்துடன் பேராசிரியர்

ஜிநேந்திர ஜெயின் மொழிபெயர்த்தார். மாஸ்டர் ஒரு நொடி யோசித்த பிறகு, “ஒன்று அவர் பெற்று இருக்கவேண்டும் அல்லது அவர் மொழிபெயர்ப்பாளர் பெற்று இருக்கவேண்டும்,” என்றார். இதைக்கேட்டு பேருந்தில் இருந்த எல்லோரும் வயிறு குலுங்க சிரித்தனர். §

மாஸ்டர் பாரிஸ் நகரத்தில், சுவாமி புவா என்ற நகைச்சுவை உணர்வு நிரம்பிய ஒரு யோகியை சந்தித்தார். அவர் மாஸ்டரின் மடத்திற்கு அடிக்கடி வருகை தந்தார் மற்றும் அவர் 120 வருடங்கள் வாழ்ந்ததாக கூறப்படுகிறது. ஆனந்தமயி மா, காஞ்சி மடத்தின் மூத்த பீடாதிபதி, மகரிஷி மகேஷ் யோகி, இந்திரா காந்தி, (பூண்டி கிராமத்தில் வாழ்ந்த) பூண்டிசுவாமி மற்றும் வேறு பலருடன் சிறப்பான சந்திப்புக்களும் நடந்தன. §

மேற்கில் ஒரு ஆச்சாரமான சைவ ஆதீனத்தை உருவாக்கும் முயற்சியின் அங்கமாக, அவர் கோயில் மற்றும் மடம் கலந்த ஒரு வளாகமாக இருந்த சைவ ஆதீனங்கள் எவ்வாறு செயல்படுகின்றன, எவ்வாறு தங்களுக்கு தேவையான நிதியை திரட்டி நிர்வாகம் செய்தன மற்றும் அதன் குருமார்கள் அணிந்த உடை, பேசிய முறை, வழிபட்ட மற்றும் வாழ்ந்த நுணுக்கங்கள், மற்றும் அவர்கள் விருந்தாளிகள் மற்றும் இளம் சுவாமிகளுடன் தொடர்புகொண்ட போது பயன்படுத்திய நெறிமுறைகள், சுற்றுப்புற சமூகத்துடன் பராமரித்த உறவு மற்றும் அன்பர்கள் பாரம்பரிய முறையில் எவ்வாறு சேவை செய்தனர் என்பதை பார்த்து புரிந்துகொண்டு அவற்றையெல்லாம் தனது கவாய் ஆசிரமத்தில் செயல்படுத்தும் ஆர்வத்துடன், அவர் தமிழ்நாடு முழுவதும் சென்று பார்த்தார். §

அதற்கு பின்வந்த இருபது வருடங்களில் *ஷிரோபாஷனம்* (ருத்ராட்ச மணிகளின் கிரீடம்), வெள்ளி *தண்டம்*, ஆதீனகர்த்தார் அமர்ந்த *சிம்மாசனம்*, அவர் தன் காதுகளில் அணிந்து இருந்த விசேஷமான *குண்டலங்கள்* (தங்க காதணிகள்) என்று ஆன்மீக அலுவலின் புனிதமான சின்னங்களை கொண்டு வந்த போது, இந்த பயணத்தின் போது பெற்ற அனுபவங்கள் பலன் அளித்தன. இதன் மூலம் அவர் இந்த சைவ சமய சின்னங்கள் அனைத்தையும் மேற்கத்திய நாடுகளுக்கும், கவாய் தீவிற்கும் கொண்டு வந்தார். §

ஒரு நாள் புது டில்லியில் அமைதியாக இருந்த ஒரு காலை பொழுதில் அவர் வெளியே நடந்து சென்றார். அது ஒரு மறக்க முடியாத அனுபவமாக மாறியது. இதைப்பற்றி அவர் அளித்த விளக்கம்:§

> நான் எழுபத்தி ஐந்து மடவாசிகள் மற்றும் சீடர்களுடன் இந்தியா மற்றும் இலங்கை முழுவதும் பயணம் மேற்கொண்டு மகான்கள் மற்றும் முனிவர்கள், பழங்கால கோயில்கள், தர்மசாலைகள், ஆதீனங்கள் மற்றும் நவீன ஆசிரமங்கள் என்று பயணம் செய்துவிட்டு, ஒரு நாள் காலையில் சற்று தாமதமாக நிர்மலா காப்பர் பஜார் வழியாக, எதையும் வாங்கும் திட்டம் இல்லாமல் நடந்து சென்றபோது, ஒரு விசேஷமான சிவ நடராஜரின் சிலையை பார்த்தேன். மக்கள் கூட்டம் அதிகமாக இருந்த நடைப்பாதையில், வைக்கப்பட்டிருந்த அந்த அற்புதமான ஆறு அடி

வெண்கல சிலையை சுற்றி வந்து, அமைதியாக “ஹலோ!” என்று கூறினேன். அது அந்த கடையின் சின்னமாகவும் காட்சிப் பொருளாகவும் இருந்ததால், அது விலை மதிப்பற்றது என்று கூறி அதை கடைக்காரர் விற்க மறுத்துவிட்டார். அவர் வழங்கிய தகவலை தைரியமாக புறக்கணித்து, அன்றைய காலைப் பொழுது முழுவதும் அவரிடம் பேரம் பேசி இறுதியில் அதை விலைக்கு வாங்கினோம், மற்றும் மாலை நேரம் நெருங்கியதும், அதை வெகுதொலைவில் கவாய் தீவில் இருந்த எங்கள் கார்டன் ஐலன்ட்டிற்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்தோம். §

ஒரு வருடம் கழித்து, 1973 ஆம் ஆண்டு மகாசிவராத்திரி சமயத்தில், கவாய் தீவின் காடுகளுக்கு, நடனத்தின் கடவுளான, எங்கள் கடவுள் நடராஜர் சிலை, சிவாசிரமம் வந்து சேர்ந்து, புனிதமான வாய்லுவா நதியை மேலிருந்து பார்த்த வண்ணம் தோட்டத்தில் வைக்கப்பட்டது. அங்கே அதற்கு நீராட்டி, அலங்கரித்து, பின்னர் வழிபாடு நடத்தப்பட்டது. அதிகாலை நேரத்தில் எனக்கு காட்சி அளித்த முருகப்பெருமான், ஆன்மீக அறிவுக்கூர்மையின் உருவமாகவும் அவரது செங்கோலாகவும் இருக்கும் அவரது பளபளக்கும் வேலை திருப்பி, மடத்தின் நுழைவாயிலில் இருந்த கற்காரை படிகளில் மூன்று முறை குத்தி, அந்த சிலை வைக்கவேண்டிய இடத்தை துல்லியமாக குறிப்பிட்டார். §

முருகப்பெருமான் வழங்கிய ஆணைகள் பின்பற்றப்பட்டன. மார்ச் 12 அன்று, அந்த சிலை அங்கே வைக்கப்பட்டு உடனே வழிபாடும் தொடங்கியது. சுழற்சி முறையில் 24-மணி நேர கண்காணிப்பு தொடங்கப்பட்டது, மற்றும் அது இன்று வரை ஒரு மணிநேர இடைவெளியும் இல்லாமல் பராமரிக்கப்பட்டு வருகிறது. மடத்தில் இருக்கும் இந்த உறுதியான ஒழுக்கத்தின் கீழ், துறவிகள் மூன்று மணிநேரத்திற்கு ஒரு முறை தங்களுக்குள் ஒரு சுழற்சியை ஏற்படுத்திக் கொண்டு, இரவு பகலாக, வருடத்திற்கு 365 நாட்களும் கோயிலை கண்காணித்து, தொடர்ந்து தியானம், பூஜை, யோகப்பயிற்சிகள் மற்றும் பாடல்கள் பாடி, மனதை அமைதிப்படுத்தி, இந்த அற்புதமான சிலையின் மீது *பிரபத்தி* எனப்படும், முழுமையான பக்தியை செலுத்துகிறார்கள். இதனால் சிவ நடராஜரின் சிலையின் வருகையால் எங்கள் வாழ்கையில் மாற்றம் ஏற்பட்டது, மற்றும் அன்றிலிருந்து அவரது தெய்வீக இருப்பை சுற்றியே மடத்தின் பணிகள் அனைத்தும் அமைந்து வந்துள்ளன. §

வையாலேலே மலை சிகரம் என்று அழைக்கப்படும், ஹவாயின் மிகவும் பழமையான மற்றும் எழுச்சியடங்கிய எரிமலையின் அடிவாரத்தில், உலகில் அதிக தொலை தூரத்தில் அமைந்துள்ள கவாய் தீவின் வெப்பமண்டல கார்டன் ஐலன்டின் பசுமையான சுற்றுச் சூழலில் அமைந்து இருக்கும் இந்த ‘கடவுள்’ இந்து கோயிலின் அமைப்பு, இறுதியாக ஹவாய் தீவின் முதல் இந்து கோயிலாக அரசு ஆவண காப்பகங்களில் ஆளுநர் மூலம் பதிவு செய்யப்பட்டது. §

நடராஜர் வருகையால், இலங்கையின் விசேஷமான கும்பழாவளை கோயில், சூட்சுமமான நல்லூர் மற்றும் வட மாகாண கடலோரத்தில் அமைந்து இருக்கும் சக்திவாய்ந்த திருகேத்தீஸ்வரம் கோயில் மற்றும் இந்தியாவின் மிகப்பெரிய சிதம்பரம், மற்றும் பல்வேறு நாடி சோதிடர்கள் கூறியதைப் போன்று, நான் ஒரு முற்பிறவியில் இராஜ இராஜ சோழனாக கட்டியதாக கூறப்படும் தஞ்சாவூர் பிரிஹதீஸ்வரர் கோயில், இருபத்தி இரண்டு தீர்த்த கிணறுகளுடன் பாவ விமோசனம் அளிக்கும் இராமேஸ்வரம் என்று பல்வேறு பழங்கால கோயில்களில் இருந்து, கவாயின் லெமூரிய மலை உச்சியில் இருக்கும் தீவின் ஆன்மீக சூழலுக்குள் பல்லாயிரக்கணக்கில் இரண்டாம் உலக தேவர்கள் மற்றும் மூன்றாம் உலக தேவர்கள் மற்றும் மகாதேவர்கள் ஊடுருவினார்கள். அந்த கணத்தில் மூன்று உலகங்களும் ஒன்றாகின, மற்றும் பூமியின் இந்த பகுதியில் சைவ இந்து சமயம் செழிக்க ஆரம்பித்தது. §

அதே சமயத்தில், வட இந்தியாவில் கார்த்திகேயா என்று அழைக்கப்படும் முருகப்பெருமான் மீண்டும் ஒரு முறை மாஸ்டருக்கு காட்சி அளித்தார். சான் பிரான்சிஸ்கோ நகரத்தின் சாக்ரமெண்டோ ஸ்ட்ரீட் கோயிலுக்கு அருகில், திருவடி மடத்திற்கு அருகில் அமைந்து இருந்த அவரது சிறிய குடியிருப்பில், அதிகாலை நேரத்தில், மாஸ்டருக்கு முருகப்பெருமான் காட்சி அளித்து, அவரது சந்நியாச சமூக வாழ்க்கையில் தனது முக்கியத்துவத்தை மேலும் வலுப்படுத்தினார். திடீரென்று அவர் ஒரு அழகான மற்றும் உறுதியான தசை கட்டுக்களுடன் இருந்த ஒரு உயிர்சக்தியுடன், தனது மடத்தின் அறையை சுற்றி பறந்து வருவதை கண்டார். மாஸ்டர் அந்த வலுவான உயிர்சக்தியிடம் அவர் யார் என்று விசாரித்த போது, “உனக்கு தெரியவில்லை என்றால், வேறு யாருக்கு தெரியும்?” என்று சொன்னதாக மாஸ்டர் தனது மடவாசிகளிடம் பின்னர் கூறினார். அது முருகப்பெருமான் தான் என்பதை அவர் அறிந்து இருந்தார். §

அந்த அனுபவத்தால் அதிக உத்வேகத்தை பெற்ற மாஸ்டர், *பிளையிங் வித் முருகன்* என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதலாம் என்று திட்டமிட்டிருந்தார். அந்த புத்தகம் வெளிவரவில்லை என்றாலும், அவரது சந்நியாச சமூகத்தின மீது வெளிப்புறமாகவும் உட்புறமாகவும் முருகபெருமானின் தாக்கம் வெளிப்பட்டது, மற்றும் சந்நியாசிகளின் முன்னோடியாகவும், சிவபெருமானின் மகனாகவும் இருந்த முருகப்பெருமானை, தனது துறவற சமூகத்தின் இஷ்ட தெய்வமாக மாஸ்டர் என்றென்றும் கருதி வந்தார். அவரது துறவிகளில் பெரும்பாலும் எல்லோருக்கும் முருகப்பெருமானின் பெயர் வழங்கப்பட்டு, இந்த ஆற்றல்மிக்க தெய்வத்தை ஒரு தனிப்பட்ட வழிகாட்டியாக மற்றும் புனிதம், பற்றின்மை, மனஉறுதி மற்றும் சாதிக்கும் வேகத்திற்கு முன் உதாரணமாக கருதுமாறு கற்றுக்கொடுக்கப்பட்டது. §

### அந்தர்லோகங்களில் இருந்து வந்த புத்தகங்கள்

துறவிகள் வாழ்கையின் மையமாக 'கடவுள்' இந்து கோயில் மாறியது, மற்றும் சமஸ்கிருத உச்சரிப்பு மற்றும் பூஜையின் தெய்வீக கலைகளில் பலவருட பயிற்சி தொடர்ந்தது. அவர்களுக்கு மாஸ்டரின் மூலம் மகாதேவர்களின் அறிமுகம் கிடைத்தது, மற்றும் அவர்கள் மகாதேவர்களை தங்கள் வாழ்க்கையின் மையமாக, தங்களது ஆதரவாக மற்றும் தங்களின் நண்பர்களாக மாற்றிக்கொள்ள கற்றுக்கொடுக்கப்பட்டார்கள். §


மாஸ்டர் துறவற குறிக்கோள் ஒவ்வொன்றையும், கோயில் நெறிமுறை ஒவ்வொன்றையும், யோகப்பயிற்சி ஒவ்வொன்றையும், மேற்கத்திய கலாச்சாரத்திற்குள் மெதுவாகவும் முறையாகவும் பெரிய அளவில் கொண்டு வந்து, அவை அனைத்தையும் ஹவாய் தீவின் செழிப்பான பூமியில் விதைத்துக்கொண்டு இருந்தார். §

அந்த காலத்தில் கிராமங்களுக்கு தபால் வசதி இல்லாததால், அவர் ஒவ்வொரு நாளும், ஒன்று அல்லது இரண்டு துறவிகளுடன் ஐந்து மைல் தொலைவில் இருந்த தபால் நிலையத்திற்கு வாகனத்தில் செல்வார். அவர் ஒரு நாளில் வந்த தபால்கள் அனைத்தையும் கோகோ பாம்ஸ் ஓட்டலின் மேசையில் வைத்து, காபியை வாங்கிக்கொண்டு, தனது பதில்களை அறிவுறுத்த, அவற்றை துறவிகள் தட்டச்சு செய்து மாலையில் தபாலில் அனுப்புவார்கள். §

அதைப்போன்ற ஒரு நாளில் விசேஷமான ஒரு சம்பவம் நடந்தது. அதைப்போல முன்பு நடந்திருக்கவில்லை. அது பல மாதங்களுக்கு நீடித்தது, மற்றும் அது மீண்டும் நடக்கவில்லை. அன்று காலையில் நடந்த சம்பவத்தைப் பற்றி மாஸ்டர் அளிக்கும் விளக்கம்:§

> நாங்கள் நடராஜர் சிலையை மடத்தில் வைத்தவுடன், தலைசிறந்த எழுத்துப்பிரதிகளின் ஒரு தொகுப்பின் மீது, *ஆக்ஞா* சக்கரத்தில இருக்கும் எனது ஆன்மீக கண் திறந்துகொண்டது மற்றும் முருகப்பெருமானின் ஆன்மீக நூலகம் காட்சி அளித்தது. அழகான உடையில் முகத்தில் தாடியுடன் உயரமாக இருந்த ஒரு நூலகர், ஒவ்வொரு ஆசை மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப, தனது உறுதியான கைகளுடன் ஏதாவது ஒரு அலமாரியில் இருந்து மிகப்பெரிய தொகுப்புக்களை எடுத்து, தேவையான பகுதியை படிப்பதற்காக நமக்கு சரியான பக்கத்தை திறந்து வைப்பார். இந்த ஸித்தி எனக்கு கைக்கூடிய பிறகு, நான் சிவாசிரமத்தில் இருந்த மடவாசிகளுக்கு இந்த தொகுப்புக்களை ஒன்றன் பின் ஒன்றாக படித்து காண்பித்தேன். அவர்கள் அதில் கேள்வி கேட்டார்கள். அந்த புத்தகங்கள் என் மனதின் உட்புற ஆகாசத்தில் வைக்கப்பட்டு, அதில் இருந்த பக்கங்களை திருப்பி வாசித்து ரசித்து புரிந்துகொள்ளப்பட்டது. இவ்வாறு வைர துகள்கள் போன்ற சிவபெருமானின் தரிசன வெளிப்பாட்டினால், நமது முருகப்பெருமான் இந்த பூமிக்கு வந்ததில் இருந்து சேர்த்து வைத்திருந்த பதிவுகளை சேமித்து இருந்த, அவரது சொந்த நூலகத்தின் உட்புற கதவு திறக்கப்பட்டது. தென்னிந்திய கடவுளான சுப்பிரமணியம் என்கிற

முருகன், கார்த்திகேயா, ஸ்கந்தன் மற்றும் சனத்குமாரா என்று அழைக்கப்பட்டு, எங்களுக்கு அருகாமையில் எப்போதும் இருந்துக்கொண்டு எங்கள் மீது அன்பை பொழிந்து வருகிறார். §



கோகோ பாம்ஸ் ஓட்டலில் மாஸ்டர் காலைநேர காபியை அருந்திக்கொண்டு இருந்த போது, திடீரென்று கையில் விசித்திரமான எழுத்து பிரதிகளுடன் ஒரு

*சூட்சும லோக நூலகரை சந்தித்தார். அதில் இருந்த ஒவ்வொரு பக்கத்தையும் அவரது ஆன்மீக கண் கவனமாக படித்து புரிந்துகொண்டது. அவர் பல மாதங்கள் கழித்து, அந்த புத்தகம் முழுவதையும் தனது துறவிகளுக்கு அறிவுறுத்தினார்.*


……………………§

கட்புலனிற்கு அப்பாற்பட்ட இந்த குறிப்பிடத்தக்க நிகழ்வு, கோகோ பாம்ஸ் ஓட்டலில் தோட்டங்கள் நிரம்பிய உணவகத்தில் நடந்தது. அந்த நூலகர் ஒவ்வொரு தொகுப்பாக எடுத்து அதில் ஒவ்வொரு பக்கமாக திருப்பிய போது, விசுவாசமான ஒரு துறவி எழுத்தருக்கு மெதுவாக நான் அறிவுறுத்த, அவர் ஒவ்வொரு வார்த்தையையும் பொறுமையாக பிழை இல்லாமல் எழுதிக்கொண்டார். அந்த காலத்தில் ஓட்டலுக்கு வந்த மேல் வர்க்க விருந்தாளிகள் புகைத்த சிகரெட் புகை அருகில் இருந்த மேசை மீது நிரம்பி, சுற்றுப்புறம் முழுவதும் பரவி ஆகாச லிபிகள் தெளிவாக தெரியும் ஒரு சூழலை உருவாக்கின. கட்புலனுக்கு அப்பாற்பட்ட இந்த ஸித்தியை யதார்த்தமாக மாற்றுவதற்கு, பின்னணியில் கேட்ட ஹவாய் இசையுடன், மக்கள் பேச்சில் இருந்த ஆரவாரம் மற்றும் லௌகீக உணர்வுகளின் கீழ்நிலை அதிர்வும், அடிமனதை வெளிப்படுத்த உதவியது. §

சில நாட்களில் பல பக்கங்கள் திருப்பப்பட்டு வாசிக்கப்பட்டன, மற்றும் சில நாட்களில் எந்த புத்தகமும் கண்ணுக்கு தெரியாது. அந்தர்லோக நூலகத்தின மீது எனது ஆன்மீக கண் திறந்து கொள்வதற்காக, நாங்கள் பல வாரங்களுக்கு மற்றும் பல மாதங்களுக்கு, காலையில் எழுந்து பழங்கள், தயிர் மற்றும் காபியை ருசித்துக்கொண்டு அமர்ந்து இருப்போம். அந்த உணவகம் ஒரு சாதாரண சூழலில் இல்லாமல், ஹவாய் தீவுக்குழுமத்தின் வடக்கு முனையில் அமைந்து இருந்த கவாய் தீவின் கிழக்கு திசையில் கடலுக்கு அருகில் இருந்த, தீவின் மிகப்பெரிய தென்னந்தோப்புக்கு மத்தியில் வெப்பண்டல குளங்களை பார்த்த வண்ணம் எங்கள் மேசை அமைந்து இருந்தது. பழங்காலத்தில் அரச குடும்ப குழந்தைகள் பிறந்த, பர்த்ஸ்டோன் ஹேஅவ் இடத்திற்கு அருகில் எனது சூட்சுமமான காட்சியால், ஒவ்வொரு நாளும் சேகரிக்கப்பட்ட படைப்புக்கள், எழுத்துமடல் வடிவில் இருந்த ஒரு சுருள் குறிப்பேட்டில் எழுதப்பட்டன. நண்பகலுக்கு முன்பாக, நாங்கள் புனிதமான வைலுவா நதியை ஒட்டி நான்கு மைல் தூரம் உள்நோக்கி எங்கள் ஆசிரமத்திற்கு வருவோம். அது தற்போது ‘கடவுள் இந்து கோயிலாக’ இருக்கிறது. §

அவர் திரும்பி வரும் போது தன்னுடன் எடுத்துவந்த படைப்புக்கள், *லெமூரிய மற்றும் திராவிடிய சாஸ்திரங்களில்* ஒரு புதிய அத்தியாயமாக விளங்கியது, மற்றும் அவற்றை இருபத்தி நான்கு வருடங்களுக்கு அவரது மடவாசிகள் மட்டுமே படித்தனர். அதன் பிறகு உலகம் அதை படிப்பதற்கு தயாராக இருப்பதை உணர்ந்த மாஸ்டர், அதை *லெமூரியன் ஸ்குரோல்ஸ்* என்ற

தலைப்பில் வெளியிட்டார். நாம் இந்த பூமிக்கு நான்கு மில்லியன் வருடங்களுக்கு முன்பு எவ்வாறு வந்தோம், ஆரம்பக்கால மனிதனின் ஆன்மீக கலாச்சாரம் மற்றும் நம்மிடம் அதிக தகவல்கள் இல்லாத அந்த யுகத்தில் நாம் வாழ்ந்த வாழ்க்கை  மற்றும் பழங்காலத்தில் தனிமையாக இருந்த சைவ மடங்களுக்குள் இருந்த வாழ்க்கைமுறை மீது கவனம் செலுத்தி குண்டலினி மற்றும் மைய சூரியனில்  (7 ஆவது சக்கரத்தை கடந்து இருப்பது) இருக்கும் மர்மங்கள் பற்றி மர்மமான தகவலுடன், அது மனிதனின் ஆரம்பக்கால வரலாறு பற்றிய ஒரு தெய்வீக வெளிப்பாடாக இருந்தது. §



*ஒரு நாள் காலையில் மாஸ்டர் உறக்கத்தில் இருந்த போது, அவரது மூன்றாவது கண்ணிற்கு காட்சி அளித்த முருகப்பெருமான், தனது வேலை உயர்த்தி மூன்று*


*முறை ஒரு படியின் மீது பலமாக அடித்து, இந்தியாவில் இருந்து வந்திருந்த சிவ நடராஜர் சிலை "அங்கே" வைக்கவேண்டும் என்பதை குறிப்பிட்டார்.*

……………………..§

மாஸ்டருக்கு வழங்கப்பட்ட பெரும்பாலான தகவல்கள், அவரது மடவாசிகளை பயனுள்ள வகையில் நிர்வகித்து வழிநடத்தி செல்ல, இந்து சந்நியாச வாழ்க்கைக்கு ஒரு பாரம்பரிய முறையை வழங்க, அவரது துறவிகளின் ஆன்மீக விரிவாக்கத்தை ஊக்குவிக்க தேவையாக இருந்த பாரம்பரிய கோட்பாடுகளை வழங்கியது. மாஸ்டரின் சந்நியாச சமூகத்திற்காக பிரத்யேகமாக தேவர்களின் குழு எழுதிய ஒரு இரகசிய வெளிப்பாடாக இருக்கும் இந்த *சாஸ்திரங்கள்*, சைவ *சாஸ்திரங்களுடன்* சேர்ந்து, ஒரு ஆன்மீக வழிகாட்டியாக மாறி, அவர்களின் நம்பிக்கையை வலுப்படுத்தி, அவர்களது உயிர்சக்தியின் ஒவ்வொரு பரிணாமத்தையும் விளக்கியது. மாஸ்டரிடம் இருந்து தினமும் இந்த மெய்ஞ்ஞான வெளிப்பாடுகளின் மூலம் பக்கம் பக்கமாக பல யுகங்களின் ஞானம் வந்துக்கொண்டிருக்க, அவருக்கு அருகில் இருப்பதை தங்களுக்கு கிடைத்த பாக்கியமாகவும் வரமாகவும் நினைத்து, பல யுகங்களுக்கு முன்னர் வாழ்ந்த ரிஷிகளுடன் தாங்கள் இருப்பதை போன்ற ஒரு உணர்வை பெற்றார்கள். அந்த நாட்களைப் பற்றி குருதேவா வழங்கும் குறிப்பு:§

தொடக்கத்தில் வந்த வெளிப்பாடுகள் சிவாசிரமத்தில் இருந்த *மடவாசிகளால்* அனுபவிக்கப்பட்டு, எங்கள் தியான மொழியான ஷூம் மொழியில் பினிபா என்று அழைக்கப்படும், எங்கள் அமைப்பிற்குள் இயங்கும் ஒரு தொலைத்தட்டெழுத்து பிணையம் மூலம் பகிரப்பட்டது. இந்த வெளிப்பாடுகளின் ஓட்டம் பல வாரங்களுக்கு தொடர்ந்துக்கொண்டு இருக்க, பியானோ வடிவில் இருந்த தொலைதொடர்பு சாதனங்களில் இருந்து தட்டெச்சு சத்தத்துடன் வெளிவந்த பிரமிக்க வைக்கும் தகவல்களை படிக்க, அந்த சாதனங்களை சுற்றி கலிபோர்னியாவின் சான் பிரான்சிஸ்கோ நகரம் மற்றும் நெவாடாவின் விர்ஜினியா சிட்டியில் *மடவாசிகள்* ஒன்று கூடினார்கள். மடவாசிகள் எனக்கு கேள்விகளை அனுப்பி, ஆயிரம் மைல் தொலைவில் இருந்த என்னிடம் உடனடியாக பதிலையும் பெற்றார்கள். நாங்கள் இந்த முறையில் பல தத்துவ விவாதங்களை நடத்தினோம். §

இறுதியில் ஒவ்வொரு புத்தகமாக நிறைவு பெற்றதும், அதை ஒரு மின்சக்தி ஐபிஎம் தட்டச்சு இயந்திரத்தில் ஒரு எழுத்தர் தட்டச்சு செய்தார். அதில் இருந்து சுமார் ஒரு டஜன் நகல்கள் தயார் செய்யப்பட்டு, ஒரு எளிமையான வெள்ளை நிற மென்னட்டை கட்டமைப்பாக அவை உறையிடப்பட்டன. எனது மடவாசிகளின் மத்தியில் சுயநலமற்ற வாழ்முறையின் புதிய தரத்தை உருவாக்குவதற்கு, தியான அமர்வுகளின் போது ஒரு அத்தியாயம் வாசிக்கப்பட்டது. §



*ஒரு நாள் காலை நேரத்தில், மாஸ்டர் சுப்பிரமுனியா தனது சான் பிரான்சிஸ்கோ மடத்தில் தியானம் செய்துக்கொண்டு இருந்த போது, திடீரென்று அந்த அறையில் பறந்துக்கொண்டு சுற்றி வரும் உணர்வை பெற்றார். அவருக்கு அருகில் முருகப்பெருமானும் பறந்துக்கொண்டு இருந்தார்.*

........................§

வாசிப்பதற்கு மேலும் பல புத்தகங்கள் இருப்பதாக தேவர்கள் இந்த படைப்புக்களில் குறிப்பிட்டு இருந்தார்கள்; ஆனால் இந்த *சைவ சாஸ்திரங்கள்* நிறைவு பெற்ற பிறகு, தனது ஆன்மீக பார்வையின் திரையில் முருகப்பெருமானின் நூலகத்தை அணுகுவது மாஸ்டருக்கு மிகவும் கடினமாக இருந்தது. வெளியுலக கவனச் சிதறல்கள் காரணமாக, இந்த அந்தர்லோகத்தை அணுக முடியாமல் அவர் போராடிக்கொண்டு இருந்தார். §

நாங்கள் தற்போது 1974 ஆம் ஆண்டில், எங்களது ஆன்மீக பணியை தொடங்கிக்கொண்டு இருக்கிறோம், மற்றும் திரையில் எனக்கு எதுவும்


தென்படவில்லை. தேவர்கள் வேறு எங்காவது சென்று இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. அவர்கள் விநாயகரை தரிசிக்கும் யாத்திரையின் அங்கமாக, சிவாசிரமம் வந்திருந்த சில அன்பர்கள் மற்றும் மாணவர்களுடன் தாங்கள் செய்யவேண்டிய பணியை நிறைவு செய்துக்கொண்டு இருந்தனர். எனது நெற்றிக்கு முன்பாக நீல நிற ஆகாசத்தின் மங்கலான ஒளி மற்றும் ஒன்றை மற்றொன்று பிரதிபலித்துக்கொண்டிருந்த மினுமினுக்கும் தங்கம் மற்றும் வெள்ளி ஒளிகள் நடனமாடுவதை, நான் எனது மூன்றாவது கண் வழியாக பார்க்க தொடங்கியிருந்தேன். மேலும் புதிய விருந்தாளிகள் மற்றும் அமைதியை நாடி வந்திருந்த சாதகர்கள் காரணமாக எனது பார்வையை மறைத்த உணர்வுகள், சிக்கல்கள் மற்றும் சிந்தனைகளையும் பார்த்துக்கொண்டு இருந்தேன். மங்கலான ஒளி வலுவடைந்ததும், அந்த நபர்கள் மெதுவாக மறைய ஆரம்பித்தார்கள். 1973 ஆம் ஆண்டில் பல மாதங்களுக்கு நன்றாக திறந்து இருந்தது, சாஸ்திர புத்தகங்கள் தென்பட்ட நிலைக்கு வருவதற்கு நான் தற்போது மூன்று நாட்களாக முயற்சி செய்து வருகிறேன். §

மாஸ்டரின் ஆன்மீக தேடல்கள் நிற்கவில்லை என்றாலும், அவை இந்த தருணத்தில் வியக்கவைக்கும் மாற்றத்தை பெற்றன. அவர் ஆகாசத்தில் இருந்த புத்தகங்களை கட்புலனுக்கு அப்பாற்பட்ட சக்தியால் படிக்காமல், தனக்கு சம்பந்தப்பட்ட அன்றாட நிகழ்வுகள் பற்றிய அறிவுரை மற்றும் ஆழமான புரிதலை பெறுவதற்கு, அவர் மூன்று அல்லது நான்கு தேவர்களுடன் கட்புலனுக்கு அப்பாற்பட்ட சக்தியின் மூலம் தொடர்பில் இருந்தார். இந்த தகவல்கள் கோயில் சூட்சும ஞானம் பற்றிய உயரிய ஆய்வுக்கட்டுரைகளில் இருந்து புதிய துறவற வேட்பாளரின் கர்மவினைகள் பற்றிய லௌகீக உட்பார்வைகள் வரை விரிவாக வேறுபட்டு இருந்தன. §

அந்த தகவல் தொடர்புகளில், பூமியில் 10,000 வருடங்களுக்கு முன்பாக வாழ்ந்திருந்த ஒரு உயர்குடி ஆட்சியாளருடன் நடைப்பெற்ற தொடர்பு மிகவும் முக்கியமானதாக விளங்கியது. அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதும், அவர் மாஸ்டர் ஈடுபட்டிருந்த பணியின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டு, குறிப்பாக எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய முக்கிய முடிவுகளை சுட்டிக்காட்டி, ஆழ்நிலை குரலில் வழிகாட்டலை வழங்குவார். பெருபாலும் ஆழமானதாக மற்றும் மிகவும் உயர்வானதகாக இருந்த இந்த ரிஷிகளின் தகவல்கள், ஒரு குறிப்பேட்டில் கவனமாக எழுதப்பட்டன அல்லது ஜப்பானில் ஒரு சிறிய தேனீர் கடை அல்லது மெட்ராஸில் இருந்த ஒரு உணவகத்தில காபி குடித்துக்கொண்டு ஒரு துடைப்புக்குட்டை மீது அவசரமாக எழுதப்பட்டன அல்லது மடத்தில் இருந்த மாஸ்டரின் அலுவலில் ஒரு வசதியான இடத்தில் அமர்ந்து எழுதப்பட்டன. §

செப்டம்பர் 14, 1983 கவாய் தீவில் நடந்த ஒரு அமர்வின் போது, அஞ்சல் மூலம் பக்தர்களுக்கு மடம் அனுப்பும் 'கடவுள்' கோயிலின் விபூதி பிரசாதத்தின் மூலம், தேவர்கள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்று எழுத்தராக இருந்த துறவி கேள்வி கேட்டார். அதற்கு ரிஷி வழங்கிய பதில்:§

நாம் அங்கே பிரசாத வடிவாகவும் சக்தி வடிவாகவும் இருக்கிறோம். இந்த பிரசாதங்கள், ‘கடவுள்’ கோயிலில் இருக்கும் நமக்கும் பக்தர்களுக்கும் இடையே ஒரு நீடித்திருக்கும் பாதையை திறந்து வைக்கிறது. குறிப்பாக அந்த *விபூதி* அதிர்வை கொண்டுள்ளது. இந்தியாவில் இருக்கும் சில கோயில்களின் விபூதி நமது ஆதினத்தில் இருப்பதால், உங்களுக்கும் அந்த கோயில்களுக்கும் இடையே ஒரு தடையில்லாத பாதை உள்ளது. ‘கடவுள்’ கோயிலின் விபூதியை உங்கள் வீடுகளில் தாராளமாக நிரப்பி வைத்தால், அவை ‘கடவுள்’ நடராஜரிடம் இருந்து சக்தியை பெற்று திறந்து வைக்கும் பாதை, விரிவாகவும் தெளிவாகவும் நிலைத்து இருக்கும். பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட விபூதியை வாங்கி வையுங்கள். அந்த *விபூதி* கடவுளின் குரலாக விளங்குகிறது. உங்கள் பிரசாத பைகளில் சிக்கனமாக இருக்காமல், தாராளமாக நிரப்பி வையுங்கள். மேலும் குருவின் *விபூதி* பைகள் எப்போதும் நிரம்பி வழிய வேண்டும். §



*குருதேவா சில சந்தர்ப்பங்களில், சைவ சமய கடவுள்களான சிவபெருமான், அனுமார், முருகன் மற்றும் விநாயகரிடம் இருந்து கவிதையாகவும்*

*சிலசமயங்களில் மறைபுதிரான செய்யுள்ளாகவும் தகவல்களை பெற்றார். அவர் சிரத்தையுடன் எழுதிக்கொண்டு, விண்ணுலக ஆணைகள் அனைத்தையும் கடைப்பிடித்தார்.*


………………………§

மாஸ்டரின் குழுவில் இருந்த தலைசிறந்த தேவர்கள் பகிர்ந்த தகவலுக்கு, கேட்கப்பட்ட கேள்விகளின் தன்மை மற்றும் ஆழம் மட்டுமே ஒரு வரையறையாக விளங்கியது. ஒரு வலுவான தொடர்பு ஏற்பட்டதும், தேவர்கள் ஒரு மணிநேரம் அல்லது தேவைப்பட்டால் அதிக நேரம் தங்குவதும், மாஸ்டர் அவ்வப்போது, “வேறு ஏதாவது கேள்விகள் இருக்கிறதா?” என்று கேட்பதும் வழக்கமாகிவிட்டது. அன்றாட நிகழ்வுகள், பிரச்சனைகள், பொதுமக்கள், தத்துவம் சார்ந்த கேள்விகள் மற்றும் அன்றைய முக்கியமான பிரச்சனைகள் மீது கேள்விகள் கேட்கப்பட்டன. இந்த அமர்வுகளின் போது, அவர் தனது பணியின் ஒவ்வொரு அம்சத்தை பற்றி மதிக்க முடியாத, யதார்த்தமான வழிகாட்டலை பெற்றார் மற்றும் மாஸ்டருக்கு மிகவும் பரிச்சயமான மற்றும் இந்த உலகை காட்டிலும் அதிக உண்மையானதாக அவர் கருதும், இன்னொரு உலகின் அரிய மற்றும் குறுகியகால காட்சியை, அவருடன் இருந்த மடவாசிகள் அனுபவித்தார்கள். அந்தர்லோகத்தில் இருக்கும் இந்த உயிர்சக்திகள், தூல உடல்களில் உருவெடுத்த நேர்மையான சாதகர்களுக்கு எவ்வாறு உதவி செய்கிறார்கள் என்பதை அவர் விளக்கினார். §

பூமிக்கு அருகில் இருந்துக்கொண்டு, உலகெங்கும் இருக்கும் பக்தர்களின் தேவைகளை தொடர்ந்து கவனிக்க, நன்கு பயிற்சி பெற்ற தேவர்கள் அந்தர்லோகத்தில் இருக்கிறார்கள். கவாய் ஆதீனத்தின் ‘கடவுள்’ கோயிலில் குடியிருக்கும் தேவர்கள் சமயப்பணி நடைபெறும் வீடுகள், தர்மசாலைகள் மற்றும் கோயில்கள் மற்றும் நமது அங்கத்தினர்களின் மடங்களில் நடைபெறும் சத்சங்க *ஹோமத்தில்* பங்குபெறுவார்கள். மகாதேவர்கள் மற்றும் தேவர்கள், சுவாமிகள், யோகிகள், *நாட்யாக்கள்*, சாதகர்கள், பிரம்மச்சாரிகள், பிரம்மச்சாரினிகள், தாய்மார்கள், தந்தைகள், குழந்தைகளின் இந்த ஆன்மீக கூட்டமைப்பில், எல்லோரும் தெய்வீக வழியில் ஒன்றாக செயல்பட்டனர். இதுவே சைவ சமயம். இதுவே சைவ சித்தாந்தம். இதுவே செயல்பாட்டில் இருக்கும் நாத சம்பிரதாயம். பழங்காலத்தில் சைவ சமயம் பூமி எங்கும் செழிப்பாக இருந்த போது, இப்படித்தான் இருந்துள்ளது. இப்போது இப்படித்தான் இருக்கிறது மற்றும் எதிர்காலத்தில் இப்படித்தான் இருக்கும். §

மனதின் மறுபுறத்தில் இருந்த மாஸ்டரின் உதவியாளர்களால் உற்சாகம் அடைந்த மடவாசிகள், தங்களுக்கு அறிவுறுத்தலை வழங்கிய ரிஷி எப்படி இருந்தார் என்பதை தெரிந்துகொள்ள விரும்பினார்கள். 1996 ஆம் ஆண்டில் ஒரு நாள், “ரிஷி சற்று முன் தோன்றினார். அங்கே அவர் வெள்ளை உடையணிந்து அமர்ந்து இருப்பதை பார்த்தேன். அவர் மிகவும் நேர்த்தியாக

இருந்தார். அவர் கையை அசைத்துக்கொண்டு “வாழ்த்துக்களை,” தெரிவித்தார். அவர் வழங்கிய தகவல்:”§



*அந்தர்லோகத்தில் இருக்கும் தேவர்கள் குருதேவாவிற்கு வழிகாட்டி, அவரது மற்றும் துறவிகளின் கேள்விகளுக்கு பதில் அளித்து, யதார்த்தமான ஆலோசனையை வழங்கி, தொலைந்து போன பொருட்களை தேடவும் உதவி செய்தார்கள். அவர் அந்த தகவல்களை கடுபுலனுக்கு அப்பாற்பட்ட சக்தியால் அல்லது சிந்தனை பரிமாற்றத்தால் பெற்றார்.*

........................§

இது ஒருமுகச்சிந்தனையுடன், துல்லியமாக மற்றும் திடமாக இருக்கும் நேரம். நாம் எதிர்காலத்திற்கும் எல்லா காலத்திற்கும் தேவையான தகவலை, அதிகமாக சேகரித்துள்ளோம். அதை மீண்டும் தொகுத்து, தேவைப்படும் போது மீண்டும் விளக்கம் அளித்து வாழவேண்டும். (மாஸ்டர்: “பலர் [பேசுவதற்கு] தயாராக இருக்கிறார்கள். கேள்விகள் ஏதாவது இருக்கிறதா?” “அவர் வயதில் மிகவும் சிரியவராக தென்படுகிறார்,” என்று மாஸ்டர் கூறியதற்கு ரிஷி வழங்கிய பதில்:)§

நீங்கள் என்னை பதில் அளிக்க வைத்து எனது வயதை மேலும் குறைக்கிறீர்கள். சிலசமயங்களில் நாங்கள் பேரின்பத்தில் தனிமையை உணர்கிறோம். எங்கள் பரமாத்துமாவின் முழுமை, எங்களது புலனுணர்வுகள் மட்டுமே எங்களுக்கு துணையாக இருக்கின்றன.

பேரின்பத்தில் இருப்பவர்கள், தங்களுக்குள் பேசிக்கொள்ள மாட்டார்கள். இங்கே தகவல் தொடர்பு என்று எதுவும் இருப்பதில்லை. எங்களில் ஒவ்வொருவருக்கும் மற்றொருவர் என்ன நினைக்கிறார் என்று தெரிந்து இருப்பதால், பேசுவதற்கு என்ன இருக்கிறது? அதனால் அறியாமையை நீக்குவது ஒரு வரவேற்கத்தக்க நிகழ்வாக தோன்றுகிறது. (இதன் பிறகு தன் முகத்தில் பெரிய புன்னகையுடன், “நீங்கள் எதை தெரிந்துக்கொள்ள விரும்புகிறீர்கள்?” என்று கேட்கும் வண்ணம் சற்று தளர்வாக அமர்ந்து கொள்கிறார். “நீங்கள் எந்த *லோகத்தில்* இருக்கிறீர்கள்?” என்று ஒரு மடவாசி கேட்கிறார்.) பிரம்ம லோகத்தில் இருக்கிறேன். அது ஒரு அருமையான இடம். அது அதிக துடிப்புணர்வு மற்றும் இணக்கத்துடன் ஆக்கப்பூர்வமாக இருக்கிறது. இங்கே உங்களிடம் இருக்கும் மற்றும் நீங்கள் பயன்படுத்தும் அனைத்தும் திட்டமிடப்படுகின்றன. அது திட்டமிடும் உலகமாக விளங்குகிறது. §

துறவற வாழ்கையில் உறுதியான மனத்துறவு மற்றும் பிரம்மச்சரியத்தின் மதிப்பு, பொருள் மற்றும் அத்தியாவசியம் ஆகியவை துறவிகளுக்கு *சாஸ்திரங்கள்* வழங்கிய மிகவும் வலுவான தகவல்களில் ஒன்றாக விளங்கியது. பெண்களுடன் வாழ்ந்தவர்களுக்கு விசேஷ சாதனாக்களுடன், தேவர்கள் விரிவான அறிவுறுத்தல்களை வழங்கினார்கள். வாழ்க்கையில் அதிக ஒழுங்குமுறையுடன் வாழ்ந்தவர்கள் மட்டுமே சுவாமியின் சமூகத்தில் நுழைய முடியும். குருதேவா அந்த கருப்பொருளை, கட்புலனுக்கு அப்பாற்பட்ட சக்தியால் படித்த சாஸ்திர புத்தகங்களின் அங்கமாக விளங்கிய *தி புக் ஆஃப் வர்ச்சியு* என்ற புத்தகத்தில் இருந்து ஒரு பத்தியை எடுத்து, தனது மாஸ்டர் கோர்ஸ் ட்ரைலாஜி (பிரதான பயிற்சி வகுப்பின் முத்தொகுப்பு) பயிற்சி வகுப்பில் குறிப்பிட்டார். §

பிரம்மச்சரியம் அந்த தனிநபரின் முதுகுத்தண்டின் மையத்தில் தெய்வீகத்தன்மையின் சக்தியை கொண்டிருப்பதால், தூல உடலுக்குள் இருக்கும் சூட்சும உடலின் பஞ்ச பிராண சக்திகள் வழியாக சிவபெருமான் தனது சக்தியை அனுப்பும் போது, அந்த பிராண சக்திகள் தங்களை சீர்செய்து கொண்டு வெளிப்படுத்தும் சக்தி, அவரை சுற்றியிருக்கும் எல்லோருக்குள்ளும் இருக்கும் ஐந்து மாபெரும் மனோஉணர்வு திரவங்களை மாற்றி அமைக்க தேவையான வலிமையை பெற்று இருக்கிறது. இந்த பிரம்மச்சரிய சக்தி திரட்டப்பட்டு, சுத்திகரிப்பின் மூலம் பரவ செய்த பிறகு பாலியல் சக்தியின் உருமாற்றம் நடைபெறுகிறது. தினமும் தொடர்ந்து செய்யும் சாதனா, நேர்மறை வாழ்முறையின் உறுதி மற்றும் நமது சமயத்தின் சடங்குகளை கடைப்பிடிப்பதன் மூலம் உருமாற்றம் தானாக நடைபெறுகிறது. உடல் உறவில் ஈடுபடாதவர்களுக்கு பிரம்மச்சரியம் என்பது, அவர்கள் பருவமடைவதில் இருந்து தொடங்கி திருமணம் வரை தொடர்கிறது. அப்படி இல்லையென்றால், பிரம்மச்சரிய சாதனா என்பது எதிர்பாலின

உறுப்பினருடன் ஏற்பட்ட  கடைசி பாலியல் உறவுக்கு பிறகு மற்றும் பிரம்மச்சரிய பயிற்சியை ஆரம்பிக்க வேண்டும் என்று உணர்வுடன் முடிவு எடுக்கும் போது தொடங்குகிறது. §

ஒரு துறவி இது வரை வாழ்ந்த பிறவிகளின் தொடர்ச்சி, செய்த சாதனைகள் மற்றும் இந்த பிறவியில் மாஸ்டரின் சமயப்பணியில் ஆற்றவேண்டிய தொண்டுகள் பற்றி தேவர்கள் அற்புதமான முறையில் விவரித்துக்கொண்டு இருக்க, மாஸ்டர் அவர்களுடன் தனியாக பலமணி நேரங்கள் தனியாக அமர்ந்து, சில சமயங்களில் தனது துறவிகளுக்கு அவர்களது முற்பிறவிவைப் பற்றி நுண்ணறிவுகளை பல வருடங்களுக்கு வழங்கி ஆசீர்வதித்து வந்தார். ஒருவர் தான் முற்பிறவியில் சீன நாட்டில் அச்சுத்துறையில் இருந்ததை, ஒரு முன்னாள் அமெரிக்க தலைவராக மற்றும் ஒரு ஆய்வுப்பணியாளராக இருந்ததை பற்றி தெரிந்துகொண்டார். §

1982 ஆம் ஆண்டு இந்தியாவில் ஒரு சுவாமியுடன் ஒரு மாத காலம் பயணம் செய்த போது, மாஸ்டர் புது டில்லியில் அதைப்போன்ற ஒரு தகவலை வெளிக்கொண்டு வந்தார். ஒரு தேவர் உணவு அருந்தும் மேசையில் மாஸ்டரை தொடர்பு கொண்டு, தன்னை அந்த உணவக சோதிடரின் தூண்டுதல் சக்தி என்று அறிமுகப்படுத்திக்கொண்டு, தன்னிடம் சந்தேகங்கள் கேட்குமாறு கேட்டுக்கொண்டார். அடுத்த ஒரு மணி நேரத்திற்கு, மாஸ்டர் அந்த துறவியின் மூன்று பிறவிகளை பற்றிய தகவல்களை தெரிவித்து, துறவி தனது கேள்விகளை எழுதிக்கொள்ள வேண்டும் என்று அந்த தேவர் விரும்புவதாக கூறி அந்த அமர்வை தொடங்கி வைத்தார். அதன் பிறகு அந்த தேவர் துறவிக்கு பின்னால் நின்றுக்கொண்டு, அந்த கேள்விகளை படித்து அவற்றிற்கு பதில் அளித்து, அவர் இந்தியாவில் ஒரு சாதுவாக, ஐரோப்பாவில் வணிகராக வாழ்ந்த முற்பிறவிகள் மற்றும் இந்த துறவற சமூகத்தில் அவரது எதிர்காலம் பற்றி குறிப்பிட்டார். இந்த தேவர் மற்ற சில தேவர்கள் செய்வதை போல எதையும் பேசாமல், தனது கருத்துக்களை சிந்தனை வடிவங்களாக வெளிப்படுத்துவதை  மாஸ்டர் தெரிந்துகொண்டார். அந்த உணவக சோதிடர் கதவு வழியாக பல முறை சென்று இருந்த அந்த ஹவாய் பயணிகள், அந்த கதவில் இருந்த சின்னத்தின் மீது விவரிக்க முடியாத ஈர்ப்பை பெற்றனர். அன்று மாலை நேர முடிவில், கருத்து பரிமாற்றங்களால் ஏற்பட்ட கர்மவினைகளை சரியாக சமநிலைப்படுத்தும்  நோக்கத்துடன், மாஸ்டர் துறவியிடம் ஐம்பது ரூபாயை வழங்கி, அவர் பெற்ற சோதிட கணிப்பிற்கு வழங்கும் கட்டணமாக அந்த பணத்தை, சோதிடர் அலுவலக கதவின் அடிப்பகுதி வழியாக உள்ளே நுழைக்குமாறு கேட்டுக்கொண்டார். மாஸ்டரை பொறுத்தவரையில், அவர் பணத்தை பயனுள்ள வகையில் செலவழித்து இருந்தார். §

தேவர்களுடன் ஏற்பட்ட இந்த அனுபவங்கள் துறவிகளின் நம்பிக்கையை வலுப்படுத்தி, அவர்கள் உட்புறமாக திடமான மற்றும் ஆற்றல்மிக்க போராளிகளாக மாற உதவி செய்தன. அவர்களின் துறவற பாதையில் உதவி

செய்து ஊக்குவிப்பதற்காகவே தாங்கள் அங்கே இருப்பதாக, தேவர்களே தங்கள் தகவல்களில் உறுதி அளித்தனர். §

> ஒரு புதிய *நாட்யம்* அல்லது சாதகர் எங்களது மடங்களில் ஒன்றில் நுழையும் போது, அவரது வாழ்முறையை உணர்ந்து, புரிந்து கிரகித்துக் கொள்ளப்படுகிறது. அந்த *நாட்யம்* அல்லது சாதகரின் கர்மவினை, எல்லா மடங்கள், பணிகள் மற்றும் தனிப்பட்ட சீடர்களின் மொத்த கர்மவினையில் கிரகித்துக்கொள்ளப்படுகிறது. அவர் நமது சைவ சமயத்தின் மகாதேவர்களுக்கு ஒரு சிவனடியாராக, ஒரு அடிமையாக, ஒரு சேவகனாக தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் உயரிய செயலை செய்வதால், அவர் தனது பிரமாணங்களை எடுத்துக்கொண்டு, சந்தன மணி மாலைகளை  பெற்ற பிறகு, பீடத்தின் மீது வைக்கப்படும் ஒவ்வொரு மலர், ஒவ்வொரு கற்பூர தீபம், உலகில் ஏதாவது ஒரு மூலையில் இருக்கும் மடம் அல்லது ஒரு பணியில் இருப்பவர் செய்யும் சமயம் சார்ந்த ஒவ்வொரு நடவடிக்கையும், அந்த *நாட்யம்* அல்லது சாதகரின் கர்மவினையில் சிலவற்றை கரைக்கிறது.  அவர் தனது வாழ்க்கையில் சீர் செய்துக்கொள்ள சில விஷயங்கள் இருத்தாலும், அவருக்கு இந்த குழப்பத்தில் உதவி செய்ய சிவலோகம், தேவலோகம், கவாய் ஆதீனம், கடவுள் கோயில் மற்றும் அவர் தங்கியிருக்கும் மடம் மற்றும் அவரை சுற்றி இயங்கும் பணிகளில் இருந்து பல உதவிக்கரங்கள் அவரை நாடி வரும். §

ஒரு நாள் மடத்தின் தோட்டத்தில் உணவுப் பொருட்களை வளர்த்த துறவிகள், “தோட்ட தேவர்களுடன்" ஆலோசிக்க அழைக்கப்பட்டனர். அதில் இருந்து ஒரு பகுதி: §

> நாங்கள் கேளிக்கையுடன் இருக்கிறோம். நீங்கள் எங்களுடன் வேலை செய்ய விரும்பினால், மகிழ்ச்சியாக செயல்பட்டால் போதும். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க விரும்பினால், எங்களுடன் சேர்ந்து செயல்பட்டால் போதும். அற்புதங்களை நிகழ்த்துங்கள்; அவை எங்களுக்கு பிடிக்கும். முட்டைக்கோஸ் இருக்கும் பகுதியில் வெண்டைக்காய் விதையை மறைப்பது வேடிக்கையாக இருக்கும். தோட்டத்தில் ஒரு வகையை மட்டும் வளர்க்காதீர்கள்; எப்போதும் ஒரே மாதிரியான உணவை சாப்பிடாதீர்கள். மக்கள் எல்லோரும் ஒரே மாதிரியாக இருந்ததால், அதில் வேடிக்கை எதுவும் இருக்காது. எங்கள் எல்லோரையும் ஒரே நேர்கோட்டில் வளர்க்காமல், சில பகுதிகளாக பிரித்து, நடுநடுவே வித்தியாசமாக ஒன்றை பயிரிட்டால் பார்ப்பதற்கு சந்தோஷமாக இருக்கும். நீங்கள் தினமும் பல விதமான மனிதர்களை பார்ப்பதைப் போல, தோட்டத்திலும் பலவிதமான தாவரங்களை பார்ப்பீர்கள். §
>
> இப்போது கீரை வகைகளை பார்ப்போம். அதை எப்போதும் முட்டைக்கோசுக்கு அருகே வளர்க்கக்கூடாது. முட்டைக்கோசில் பல

வகைகள் உள்ளன, அவை அனைத்தையும் தோட்டத்தின் ஒரு மூலையில், கீரைச் செடியில் இருந்து விலக்கி வைக்க வேண்டும். §

கீரைச் செடியை பயிரிடும் பகுதியில், அந்த செடியுடன் நன்றாக ருசிக்கும் முள்ளங்கி, வெங்காயம் மற்றும் கீரைச் செடி போன்றவற்றை பயிரிட்டு மகிழுங்கள், ஆனால் முட்டைக்கோசை கீரையிடம் இருந்து விலக்கி வையுங்கள். கீரைக்கு என்று ஒரு ருசி கிடையாது, அதனால் அது நன்றாக ருசிக்க வைக்கும் செடியை அருகில் பயிரிடுங்கள். §

ஒரு தலைசிறந்த கலைஞருக்கு அவரது கலைத்திறன் சாதரணமாக தோன்றுவதைப் போல, தேவர்களுடன் பேசும் திறமை அவருக்கு சாதரணமாக சிறப்பில்லாததாக தோன்றியதாலும், அன்பர்கள் தங்களுக்குள் இருக்கும் பரமாத்துமாவை நினைத்து சாதனா செய்து தங்கள் சொந்த ஆன்மீக முன்னேற்றத்தை பெறுவதில் கவனம் செலுத்தாமல், இந்த அற்புதங்கள் மீது கவனம் செலுத்துவார்கள் என்பதாலும் துறவிகள் தனது வாழ்க்கையின் இந்த பகுதியை அதிகமாக பயன்படுத்திக் கொள்வதை, மாஸ்டர் விரும்பவில்லை. அதனால் இந்த சிறிய நிகழ்வுகள், அவரது மடத்தில் வழக்கமாக நடப்பது என்பதால், இவை எப்போதும் வெளியிடப்படவில்லை, மற்றும் இணையதளத்திலும் அறிவிக்கப்படவில்லை. §

அதே சமயத்தில் தனது அந்தர்லோகம் துறவிகளுக்கு உத்வேகம் அளித்து, திரையை சிறிது உயர்த்தி, பாதையில் இருக்கும் சாதாரண யாத்திரிகள் சென்று பார்க்காத, மனிதன் அடையக்கூடிய இன்னொரு பிரஞ்சத்தை வெளிப்படுத்தும் என்பதை அறிந்து இருந்து, அதைப்பற்றி தனக்கு பிரியமான துறவிகளிடம் வெளிப்படையாக மற்றும் அதே சமயத்தில மிகவும் குறைவாக பகிர்ந்துகொண்டார். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இயல்பாக இருக்கும் இந்த புலன்கள், விரிவாக்கம் பெறுவதற்காக காத்து இருப்பதாக அவர் குறிப்பிடுவார். இத்தகைய விஷயங்கள் நமது இயல்பான பாரம்பரியமாகவும் ஆத்ம ஞானம் பெறவேண்டிய உண்மையான பணியில் தொல்லை தரும் கவனச்சிதறலாகவும் விளங்குகிறது என்றும், அதை குறைவான உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டால் அது நம்மை உள்ளே இழுத்துக் கொள்ளும் அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி மற்றும் மறைஞானத்தின் மீது மயங்கி அத்துடன் நமது தன்னுணர்வை ஈடுபடுத்தினால், அது நம்மை நமது குறிக்கோளில் இருந்து முற்றிலுமாக திசை திருப்பிவிடும், இருபக்க வாளைப் போன்றது என்றும் அவர் குறிப்பிடுவார். அதனால் அவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியுடன் தொடக்கத்தில் இருந்து இருந்ததாலும், தன் மீதும் தனது பணியின் மீதும் அது தாக்கம் ஏற்படுத்தாமல் இருக்க அவர் கடினமாக உழைத்ததால், இந்த சமநிலை அவருக்கு முக்கியமாக தேவைப்பட்டது. §

Page 40: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/40_guru06_03.html


# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் இருப்பத்தி-ஐந்து

# ஒரு சைவ சமயக்கோட்டையை நிறுவுதல்

1973 ஆம் ஆண்டு நடராஜர் சிலையை ஸ்தாபனம் செய்த பிறகு, 'கடவுள்'

சிவன் கோயிலின் சக்தி ஒப்புயர்வற்ற நிலையை பெற்றது. சிவபெருமானின் மிகவும் பழமையான பெயர்களில் ஒன்றாக விளங்கும் *கடவுள்* என்ற தமிழ் சொல், "உள்ளார்ந்து மற்றும் யாவும் கடந்த நிலையில் இருப்பவர்" அல்லது "உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் இருப்பவர்" என்ற பொருளை தருகிறது. மாஸ்டரின் தொலைநோக்கு பார்வை, சிவபெருமானின் இருப்பு மற்றும் யோகத்திற்கு முருகப்பெருமான் வழங்கிய உந்துதலின் இயல்பான சந்திப்பாக, பார்த்தற்கு எளிமையாக இருந்த இந்த கோயில், தொடக்கத்தில் இருந்து வாழ்க்கையை மாற்றி அமைக்கும் சக்தியுடன் இருந்தது. மாற்றம், புணர்நிர்மாணம் மற்றும் அழிவின் பிரிவாக பஞ்ச பூதங்களில் ஒன்றாக இருக்கும் அக்னி இருப்பதால், மாஸ்டர் அந்த கோயிலை அக்னி தலம் என்று குறிப்பிட்டார். இந்த கோயிலுக்குள் வந்த சிலர் கட்டுப்படுத்த முடியாமல் அழ ஆரம்பித்தனர். அவர்கள் ஒரு நிலையில் கோயிலுக்குள் நுழைந்து, தங்கள் வாழ்க்கையில் பெரிய மற்றும் சிறிய மாற்றங்களுடன் இன்னொரு நிலையில் வெளியேறினார்கள். பக்தர்கள் கோயிலின் பேராற்றல் நிறைந்த நிலைமாற்ற சக்தியின் மூலம் முறியடிக்கப்பட்ட ஆற்றலினால் அதிக குழப்பமடையும் அளவிற்கு, கோயில் அதிக வலிமை வாய்ந்ததாக இருப்பதை கவனித்த மாஸ்டர், சிறிது காலத்திற்கு சைவ உணவு உண்பவர்களை மட்டுமே அனுமதித்தார். §



*ஆறு அடி உயர விநாயகர் மற்றும் முருகனின் கருங்கல் சிலைகள், ஒரு வெண்கல நடராஜர் சிலை, 16-டன் எடையுள்ள ஒரு நந்தி மற்றும் உலகின் மிகப்பெரிய படிக சிவலிங்கத்தை கப்பலில் வரவழைத்து, "தண்ணீரால் முழுமையாக சூழப்பட்ட" என்று அவர் நகைச்சுவையாக அழைத்த கவாய் தீவில் 'கடவுள்' கோயிலை ஸ்தாபனம் செய்தார்.*

........................§

இந்த புதிய சக்தியில் மூழ்கி இருப்பதை துறவிகள் உணர்ந்து கொண்டார்கள். ஒழுக்கம், மாற்றம், ஆன்மீக சுத்திகரிப்பு மற்றும் தவத்தின் கடினமான பல மாற்றங்கள் நிறைந்த சூழலை எதிர்கொள்ள பலர் நிர்பந்திக்கப்பட்டார்கள், அவர்கள் கண்களில் இருந்து வடிந்த கண்ணீர் குரு அவர்களுக்கு வழங்கியிருந்த சோதனைகளுக்கு சான்றாக விளங்கியது. இந்த தீவிரமான நடவடிக்கைகள், ஒரு நிலைமாற்ற காலத்தை மற்றும் சைவ துறவிகளாக அவர்கள் வழங்கியிருந்த உறுதிமொழிகள் மீது பொறுப்புணர்வை உறுதிப்படுத்தும் காலத்தை, அந்த சமூகம் முழுவதற்கும் ஒரு கடினமான காலத்தை துவக்கி வைத்தது. இது *சாஸ்திரங்கள்* வழங்கிய வழிகாட்டுதல்கள் மற்றும் மாஸ்டர் சுப்பிரமுனியாவின் திடமான கோரிக்கைகள், அவர் அவர்களது இலட்சிய வாழ்க்கை மீது வைத்திருந்த எதிர்பார்ப்புக்கள், அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முழு நிறைவான தர்மம் ஆகியவற்றை சீர்படுத்திக் கொள்ளும் காலமாகவும் இருந்தது. “துறவற வாழ்க்கை எளிமையானது என்று யாரும் கூறியிருக்க மாட்டார்கள்,” என்று அவர் ஆறுதலாக கூறுவார்.§

அவர் புளோ புக் (flow book) என்கிற ஒரு வழிகாட்டும் கையேட்டை உருவாக்கினார். அந்த கையேடு ஒரு சைவ துறவி எப்படி வாழ்வது, பதில் சொல்வது, கற்பது, பேசுவது, சமைப்பது, சுத்தம் செய்வது, அத்தியாவசிய கடமைகளை செய்வது, உத்தரவுகளை ஏற்றுக்கொள்வது, ஆடை அணிவது,


சாப்பிடுவது, உறங்குவது, தியானம் செய்வது, வழிபடுவது, அர்பணித்துக் கொள்வது மற்றும் மற்றவர்களுடன் இணங்கி வாழ்வதைப் பற்றி நுணுக்கமாக விவரித்தது. அதில் இடம்பெறும் ஒவ்வொரு பதிவிற்கும், அவர் தனது ஒப்புதலை வழங்கும் வண்ணம் கையொப்பமிடுவார். வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் அந்த புளோ புக்கில் விவரிக்கப்பட்டு இருந்தது. சற்குருவின் ஒவ்வொரு அறிவுறுத்தலும் புளோ என்று அழைக்கப்பட்டு, எந்த விதிவிலக்கும் இல்லாமலும், காரணம் எதுவும் சொல்லாமலும் தொடர்ந்து பின்பற்ற வேண்டியிருந்தது. §

‘கடவுள்’ கோயிலின் தீவிரமான சக்தி, ஒரு சைவத்துறவியிடம் ஏற்றுக்கொள்ள முடியாத பழக்கங்கள் மற்றும் அணுகுமுறைகளை நீக்குவதற்காக சற்குரு வழங்கிய புதுப்பிக்கப்பட்ட ஆணை மற்றும் சமூகத்தில் இருந்த அனைவரும் முழுமையான, முறையான, திருப்தியான இந்துவாக இருக்கவேண்டும் என்ற புதிய தேவை ஆகிய அனைத்தும் ஒன்று சேர்ந்து, துறவிகள் மத்தியில் அபூர்வமான சந்தேகங்களை ஏற்படுத்தியது. முன்பு பின்பற்றிய சமயத்தின் தொடர்புகளை முழுமையாக துண்டிக்க வேண்டும் என்று மாஸ்டர் தெளிவாக குறிப்பிட்டார். முழுமையான சைவத்துறவிகள் கடைப்பிடிக்க வேண்டிய இந்த ஆணை, அசாதாரண தைரியத்துடன் சவால்விடும் தேவையாக இருந்தது. §

சில துறவிகள் கிழக்கத்திய மேசியா (உலகை காக்க வந்த தேவதூதர்) போன்று இருந்த ஒருவருடன் சேர்ந்து இருக்க வந்தனர். சிலர் தங்களை எந்த சமயத்தையும் ஏற்றுக்கொள்ளாத சமத்துவவாதிகளாக நினைத்து இருக்கலாம். சிலர் மாற்றம் பெறுவதில் மனநிறைவை அடைந்து இருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும், பலர் சமூகத்தை விட்டு ஒன்றன் பின் ஒன்றாக கிளம்பினார்கள். அவர்கள் மீண்டும் தங்கள் குடும்பங்களை நோக்கி, மீண்டும் தங்கள் தனிப்பட்ட கர்மவினைகளை நோக்கி, துறவற பாதைக்கு வரும் முன்னர் இருந்த இடத்தை நோக்கி இருவராக மூவராக தொடர்ந்து வெளியேறிக்கொண்டு இருந்தனர். “நீங்கள் எந்த மதத்தை சார்ந்தவர்கள்?” மற்றும் “மாஸ்டர் எந்த மதத்தை போதிப்பதாக நினைக்கிறீர்கள்?” போன்ற கேள்விகள் முதலில் துறவிகளிடமும்  பிறகு உறுப்பினர்களிடமும் கேட்கப்பட்ட போது, இந்த வெளியேற்றங்கள் நடைப்பெற்றன. துறவற சமூகம் மற்றும் சாதாரண அங்கத்தினர்களில் இருந்து ஐம்பது சதவீதம் வெளியேறியதால், இது ஒரு மிகப்பெரிய எழுச்சியாக இருந்தது. §

அந்த வெளியேற்றங்களை லௌகீக கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, ஒரு நிலப்பகுதி வழியாக பாய்ந்து செல்லும் சூறாவளி, அங்கிருக்கும் பாதி கட்டிடங்களை நிலத்தில் சாய்ப்பதைப் போல, அந்த வெளியேற்றங்கள் அதிக பாதிப்பை ஏற்படுத்தின. அவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள், அர்ப்பணிப்புகள் அனைத்தும் வீணாகின. அதை மாஸ்டர் எவ்வாறு எதிர்கொண்டார்? அவர் மகிழ்ச்சியடைந்தார். தங்களது சந்தேகங்களின் மூலம், எதிர்காலத்தில் தனது சந்நியாச சமூகத்திற்கு கடினமான கர்மவினைகளை கொண்டு வரவிருந்த நபர்களை வெளியேற்றிய

சிவபெருமானுக்கு அவர் நன்றி தெரிவித்தார். அதற்கு வாய்ப்பு இனி இல்லை என்பதால், அவர் ஒரு விருந்திற்கு ஏற்பாடு செய்தார்! §




*பிப்ரவரி 15, 1975 மாஸ்டருக்கு மூன்று பாகமாக தோன்றிய காட்சி, அவர் தனது இறைவன் சிவன் கோயிலை கட்டுவதற்கு காரணமாக அமைந்தது. அந்த காட்சியில் சிவபெருமான் பக்தர்களுடன் ஒரு பள்ளத்தாக்கு வழியாக நடந்து செல்வதையும், அதன் பிறகு சிவபெருமானின் திருமுகத்தை நெருக்கமாக பார்ப்பதையும், பிறகு ஒரு சுயம்பு சிவலிங்கத்தின் மீது அமர்ந்து இருப்பதையும் கண்டார்.*

........................§

### அமெரிக்காவின் முதல் ஆதீனம்

பிப்ரவரி 15, 1975 அன்று விடியற்காலையில், மாஸ்டர் தனது ரியோகன் அறையில் ஒரு டாடாமி பாயில் படுத்து இருந்தபோது, விழித்தும் இருக்காமல் கனவுகளும் இல்லாத ஆழமான உறக்கத்தில் இருந்தார். தூல உணர்வை கடந்து இருந்த அந்த தெளிவான பரவெளியில், 48 வயதான சற்குரு அனுபவித்த மூன்று காட்சிகள், இறைவன் கோயில் என்று அழைக்கப்படும் சிவபெருமானின் கோட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள சன் மார்க சரணாலயத்திற்கு ஆன்மீக தொடக்கமாக அமைந்தது. §

நான் வைலுவா நதிக்கு அருகில் இருந்த புல்வெளி வழியாக சிவபெருமான் நடந்து செல்வதை பார்த்தேன். அவரது திருமுகம் என்னை பார்த்துக்கொண்டு இருந்தது. அதன் பிறகு அவர் ஒரு பெரிய பாறை மீது அமர்ந்து இருந்தார். நான் அவருக்கு இடதுபுறமாக அமர்ந்து இருந்தேன். இது தான் நான் கண்ட காட்சி. அது வருடங்கள் செல்ல செல்ல அதிக தெளிவடைந்தது. நான் மீண்டும் லௌகீக உணர்வை பெற்றதும், அந்த பெரிய பாறை எங்கள் மடத்தின் நிலப்பகுதியில் எங்காவது இருக்கவேண்டும் என்பதை உணர்ந்து அதை தேடத் தொடங்கினேன். §

எனது சற்குருவின் வழிகாட்டலுடன், நான் நிலத்தை சமன் செய்யும் ஒரு புல்டோசர் இயந்திரத்தை வாடகைக்கு எடுத்து, அந்த காலத்தில் எங்கள் நிலப்பகுதியின் வடக்கே நிரம்பி இருந்த எருமைப்புல் மற்றும் காட்டு கொய்யா மரங்கள் வழியாக நான் நடந்து செல்ல, என்னை பின்தொடர்ந்து வருமாறு அதன் வாகன ஓட்டியிடம் அறிவுறுத்தினேன். நான் காட்டின் தென்பகுதி வழியாக முன்னேறி செல்ல, அந்த இயந்திரம் என் பின்னால் ஒரு பாதையை அமைத்துக்கொண்டு வந்தது. சுமார் அரை மைல் தூரம் சென்ற பிறகு, நான் இளைப்பாற ஒரு சிறிய மரத்தின் அருகில் அமர்ந்து கொண்டேன். அப்போது காற்றோட்டம் இல்லை என்றாலும், திடீரென்று மரத்தின் இலைகள் உற்சாகமாக எதையோ தெரிவிப்பதைப் போல மினுமினுத்தன. நான் அந்த மரத்திடம், “என்ன சொல்ல வருகிறாய்?” என்று கேட்டேன். அதற்கு பதிலாக, எனது கவனம் நான் அமர்ந்து இருந்த இடத்திற்கு வலது புறம் திரும்பியது. §

நான் உயரமாக வளர்ந்திருந்த புல்லை சிறிது வளைத்த போது, அங்கே சுயம்பு லிங்கம் போல ஒரு பெரிய பாறையை பார்த்தேன். எனக்கு தோன்றிய காட்சியில் இந்த பாறையின் மீது சிவபெருமான் அமர்ந்து இருந்தார். நான் வியக்கவைக்கும் வகையில் ஒரு வலுவான அதிர்வை உணர்ந்தேன். புல்டோசர் இயந்திரத்தின் பாதை நேராக அந்த புனிதமான பாறைக்கு அழைத்து சென்றது. அந்த பாறையை சுற்றி ஐந்து சிறிய பாறாங்கற்கள் இருந்தன. இறைவனை சென்றடையும் “நேரான அல்லது புனிதமான பாதை” என்பதை குறிப்பிடும் சன் மார்கம் உருவாக்கப்பட்டு இருந்தது. “எதிர்காலத்தில் இந்த இடத்திற்கு உலகமே வந்து வழிபடப்போகிறது,” என்று உட்புறமாக ஒரு குரல் கூறியது. இறைவனுடன் ஐக்கியமாவதன் மூலம் ஒவ்வொரு ஆன்மாவும் முக்தி பெறும் பாதையை சன் மார்கம் குறிப்பிடுகிறது.§

அந்த காட்சி வெளி உலகில் ஏற்படுத்திய வலுவான மாற்றங்களுக்கு விதையாக இருந்ததால், அது மாஸ்டரின் உட்புற உலகில் வலுவான மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கவேண்டும். அவர் உடனடியாக தொடங்கிய ஒரு நீளமான பயணம் அவரது சீடர்கள் வாழ்க்கையில் சைவசமயம் ஆழமாக வேரூன்ற உதவியதோடு, வாழ்கையை மாற்றி அமைத்த அவரது கற்பனையை கௌரவிக்கும் வகையில் ஒரு கோயிலை கட்டுவதற்கு மட்டுமல்லாமல், மூன்று வருடங்களுக்கு முன்பாக அவர் தென்னிந்தியாவிற்கு


சென்று பார்த்திருந்த மிகப்பெரிய கோயில்களைப் போல ஒரு பாரம்பரிய *ஆதீனத்தை* கட்டவும் வழிவகுத்தது. §

அதைப்போன்று கோயில் மற்றும் மடம் ஒன்றாக சேர்ந்த வளாகம், மேற்கத்திய நாடுகளில் இருக்கும் இந்துக்களுக்கு இல்லாததை உணர்ந்த மாஸ்டர், அதை கட்டுவதற்காக தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். வழிகாட்டுவதற்கு நிர்வாகங்கள் எதுவும் இல்லாததால், அவர் ஆன்மீக மற்றும் லௌகீக நிர்வாக அமைப்புக்களை தனக்குள் ஆய்வு செய்து, தான் நிர்வகித்த பல நிறுவனங்களின் ஒவ்வொரு அம்சத்தையும் வழிநடத்த, துறவிகளின் வாழ்க்கை மற்றும் உறவுகளை பற்றி தெரிவிக்க, அவர் செயல்முறைகள் மற்றும் வழிகாட்டல்களின் ஒரு அற்புத தொகுப்பை உருவாக்கினார். இந்த தருணத்தில் மாஸ்டர் தனது தலைமையகத்தின் பெயரை சிவாசிரமத்தில் இருந்து கவாய் ஆதீனம் என்று மாற்றினார். அதன் பெயர் அந்த தீவில் இருந்த மக்களுக்கு பரிச்சயமானதாக இருக்க வேண்டும் என்பதற்காக ‘கவாய் இந்து மோனாஸ்ட்ரீ’ என்றும் அழைத்தார். §

கவாய் மண்ணில் தன்னை வலுவாக அமைத்துக்கொள்ள தொடங்கியதும், அவரது பயணங்கள் குறைந்தன. மூத்த துறவிகள் அவரது அறிவுறுத்தலின் பேரில், சைவ சித்தாந்தத்திற்கும் ஆதி சங்கரர் எழுதிய அத்வைத வேதாந்தத்திற்கும் இடையே இருந்த தொடர்பு மற்றும் வேற்றுமை பற்றிய முழுமையான ஆய்வை மேற்கொண்டனர். ரிஷி திருமூலரின் *திருமந்திரம்* மற்றும் திருவள்ளுவரின் *திருக்குறள்*, சைவ சித்தாந்தத்தில் ஆக்கபூர்வமான ஆன்மீக உரைகள் மொழிபெயர்க்கப்பட்டு, மனப்பாடம் செய்யப்பட்டு, அதைப்பற்றி அவரது ஊக்கமளிக்கும் உரைகளில் கருத்தும் தெரிவிக்கப்பட்டன. அவர் தென்னிந்தியாவில் செதுக்கிய திருமூலர் மற்றும் திருவள்ளுவரின் ஆளுயுயர கருங்கல் மூர்த்திகளை பிரதிஷ்டை செய்து, அவற்றை தனது மடத்திற்கு கொண்டு வந்து, அவர்களது மனோஉணர்வு மற்றும் இறையியல் இருப்பிற்கு கண்களால் பார்க்கக்கூடிய வடிவத்தை வழங்கினார். §

1970 களின் இறுதியில், மகாபலிபுரத்தை சேர்ந்த நீலமேகம் ஸ்தாபதி என்கிற பிரபல சிற்பியின் மூலம் செதுக்கப்பட்ட தொந்தி கணபதி மற்றும் தனது மயில் வாகனத்தில் கம்பீரமாக அமர்ந்து இருந்த முருகப்பெருமானின் அருமையான ஆறு அடி உயர சிலைகளை மாஸ்டர் வாங்கினார். 1979 பிப்ரவரி மாதம், அவை இந்தியாவில் இருந்து வந்து இறங்கின மற்றும் மாஸ்டர் அவற்றை ஜூன் 1 ஆம் தேதி, ‘கடவுள்’ இந்து கோயிலில் ஸ்தாபனம் செய்து வைத்தார். மேற்கே வெகு தொலைவில் இருந்த ஒரு அமெரிக்க தீவில், சைவ சமய இந்து மதம் முழுமையாக வேரூன்றிக்கொண்டு இருந்தது, மற்றும் அதன் ஒவ்வொரு அம்சமும் யதார்த்தமானது, தவிர்க்க முடியாதது, பரிணாம வளர்ச்சி என்று சிலரால் கருதப்பட்ட இந்து சமயத்தின அமெரிக்க வடிவமாக இருக்காமல், பல்லாயிரம் ஆண்டுகளாக பின்பற்றப்படும் முழுமையான மற்றும் தொகுக்கப்படாத இந்து சமயமாக இருந்தது. §

‘கடவுள்’ கோயிலுக்கு வெளியே, சிவபெருமானுக்கு நிரந்தர காவலாக அமர்ந்திருக்க, ஒரு 32,000 பவுண்டு எடையுள்ள கருப்பு கல் நந்தியும் கொண்டு வரப்பட்டது. அதைப்பற்றிய செய்தி, சேனல் நைன் தொலைக்காட்சி செய்திகளில் “16 டன் எடையுள்ள ஒரு காளைமாடு” என்ற வேடிக்கையான தலைப்புடன் தொடங்கியது. 1976 ஆணை வழங்கப்பட்ட அந்த மாபெரும் சிற்பத்தை, நீலமேகம் ஸ்தாபதி நிறைவு செய்ய நான்கு வருடங்கள் ஆனது, மற்றும் அது இறுதியாக ஆகஸ்ட் 16, 1980 ஆம் ஆண்டு வந்து இறங்கியது. “மகிழ்ச்சியை தரும் தெய்வமான" அந்த நந்தி பகவானை, தனது வாழ்நாளின் தலைசிறந்த படைப்புக்களில் ஒன்றாக கருதுவதாக அந்த சிற்பி குறிப்பிட்டார். ஆறு அடி உயரம், ஒன்பது அடி நீளம் மற்றும் ஐந்து அடி அகலத்தில் இருந்த அந்த மிகப்பெரிய கருங்கல் காளை மாடு, இந்தியாவில் 20 ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டதில் மிகவும் பெரியதாகவும், பழங்காலத்துடன் ஒப்பிடும் போது மிகப்பெரிய ஐந்து சிற்பங்களில் ஒன்றாகவும் இருந்தது. §



தனக்கு காட்சி அளித்த சிவலிங்கத்தை தன்னால் நிச்சியமாக கண்டுபிடிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன், மாஸ்டர் ஒரு புல்டோசர் இயந்திரத்தை

*வாடகைக்கு எடுத்து, அதன் வாகன ஓட்டியிடம் அடர்த்தியான புதர் வழியாக தன்னை பின்தொடர்ந்து வருமாறு அறிவுறுத்தி, மரங்களுக்கு மத்தியில் உருவாக்கப்பட்ட பாதை, சன் மார்க பாதையாக மாறியது.*

……………………§


'கடவுள்' கோயில் அடுத்த பத்து வருடங்களுக்கு, எளிதில் உணரக்கூடிய சக்தியால் அதிர்ந்துக்கொண்டு இருந்தது மற்றும் அந்த சக்தி மடத்தை நிலை நிறுத்தி, வந்து தரிசித்தவர்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்தது. கோயிலில் அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்ட நிலையில், 1984 வருடத்து இலையுதிர் காலம் வரை மேலும் கட்டுமான பணிகள் நடத்துவதற்கு தடை விதித்தார். அதன் பிறகு அவர் கோயிலை சுற்றி செடிகளை பயிரிட்டு அதன் நிலத்தோற்றத்தை அழகுப்படுத்தி, பல நூறு அடிகளுக்கு கற்காரை பாதைகளை அமைத்து, 'கடவுள்' கோயிலின் உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் சாயம் பூசப்படாத வெற்று கற்காரை சுவர்களை எரிமலை பாறையினால் அகஉறை வழங்கியதோடு சுவர்கள், தரைகள் மற்றும் உட்கூரையில் ஓடுகளை பதித்து, அவர் தென்னிந்தியாவில் விசேஷமாக அச்சில் வார்த்து எடுத்த, சிவபெருமானின் 108 நடன தாண்டவங்களை சித்தரிக்கும், 108 வெண்கல *தாண்டவ* மூர்த்திகளை வைக்க 108 அலமாரிகளை அமைத்து, 1970 களின் தொடக்கத்தை நினைவூட்டும் ஒரு மிகப்பெரிய கட்டுமான பணியை முன்னின்று நடத்தினார். §

மார்ச் 1985 'கடவுள்' கோயில் ஸ்தாபனம் செய்து பன்னிரண்டு வருடங்கள் பூர்த்தி அடைந்தது. இந்து கோயில்களின் வாழ்நாளில் பாரம்பரிய முறைப்படி பன்னிரண்டு வருட நிறைவை குறிப்பிடும் மாபெரும் குடமுழுக்கு விழாவிற்கு முன்பு, கோயிலை புதுபித்து சீரமைக்கும் பணி அனுமதிக்கப்படுகிறது. இதை கோயிலின் அமைப்புமுறையை முழுமையாக மறுதொடக்கம் செய்வது என்றே குறிப்பிடலாம். இந்த சடங்கின் போது விரிவான *ஹோமங்களின்* மூலம் கோயிலில் இருந்து தெய்வீக சக்தி நீக்கப்பட்டு, தூல சீர்திருத்தங்கள் முடிவடைந்ததும் மீண்டும் வழங்கப்படுகிறது. இதை மாஸ்டர் ஒரு முறை முயற்சி செய்து பார்த்தார். §

இந்த விரிவான சடங்குகளை நடத்த மதுரையில் இருந்து ஒருவரும், பெங்களூரில் இருந்து இன்னொரு ஆசாரியரும் வரவழைக்கப்பட்டனர். இவர்கள் நடத்திய சடங்குகளின் போது கோயிலில் இருக்கும் தெய்வீக சக்தியை விசேஷ கும்பங்களில் எழுந்தருள செய்து, அதை அதன் பிறகு அருகில் இருந்த ஒரு ஆலமரத்திற்கு அடியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த யாகசாலையில் எழுந்தருள செய்தார்கள். §

மூன்று நாட்கள் நடந்த விழாவின் தாக்கம் நுட்பமாக இல்லாமல், தீவிர விளைவுகளை ஏற்படுத்தியது. அப்போது பூமி தனது அச்சில் இருந்து விலகியது போல தோன்றியது. அது விநோதமாக, பதட்டம் நிறைந்த மற்றும் வெளிப்படையான அச்ச உணர்வை ஏற்படுத்தியது. ஆன்மீக சக்தியை இழந்திருந்த அந்த கோயில், ஆளில்லாத கிடங்கு போல ஏற்படுத்திய உணர்வு குருவிற்கும் மடவாசிகளுக்கும் பிடிக்கவில்லை. பூமியில் சமாந்தரமாக பெய்த

மழை, இடி, மின்னல் மற்றும் ஊளையிடும் காற்று என்று பருவநிலை விசித்திரமாக மாறியது. மடம் அதிக வேதனையை அனுபவித்தது. அந்த சடங்கு பாரம்பரிய முறைப்படி பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தவேண்டியிருந்தாலும், அதை மீண்டும் நடத்தபோவது இல்லை என்று மாஸ்டர் உறுதி எடுத்துக்கொண்டார். பல மாதங்களுக்கு பிறகு *சான்னித்ய* திரும்பியது. §




*ஒரு கிறுத்துவர் அவரிடம் சீடராக விரும்பினால், அவரது தேவாலய மதகுருக்களிடம் ஆசிகளை பெற்று, முறையாக விடுதலை பெற்று வருமாறு அவர் அனுப்பி வைப்பார். அவர் மற்ற சமயம் சார்ந்தவர்களை வஞ்சகமாக கவர்வதை தீவிரமாக வெறுத்ததால், அவர் ஒரு ஒழுங்குமுறையான மத மாற்றத்தை உருவாக்கினார்.*

……………………§

**ஒரு யோக சமூகத்தை உருவாக்குதல்**

ஒவ்வொருவருக்கும் ஒரு திசையை வழங்கும் நோக்கத்துடன், ஒவ்வொரு வருடத்திற்கும் பெயரை வைப்பது வெகு நாட்களாக மாஸ்டரின் வழக்கமாக இருந்தது. எல்லோரும் குரு-சீடன் உறவை மேம்படுத்தும் நோக்கத்துடன்

செயல்படவேண்டும் என்பதை குறிப்பிடும் வண்ணம், அவர் 1974 ஆம் ஆண்டை “குருவின் வருடம்" என்றும் 1975 ஆம் ஆண்டை “மடவாசிகளின் வருடம்" என்றும் பெயரிட்டார். மடவாசிகளுக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டது. இன்று மடத்தின் பெரும்பாலான வேலைகளை மேற்பார்வையாளர்கள், சமையல்காரர்கள், சுத்தம் செய்பவர்கள், தச்சர்கள் மற்றும் கணக்கர்கள் கவனிப்பதை போல அல்லாமல், இந்தியாவில் பழங்காலத்தில் நடந்ததை போல கவாய் *ஆதீனத்தின்* மடவாசிகள் அனைத்து வேலைகளையும் தாங்களே செய்துகொண்டனர். ஒவ்வொரு பணியும் கடினமாக இருந்தாலும், மடவாசிகளே செய்தார்கள். அவர்கள் தன்னிறைவு இலட்சியங்கள் மற்றும் அதனால் வெளிவந்த பல்வேறு திறமைகளால் அதிக மகிழ்ச்சி அடைந்தனர். §

மடவாசிகள் நடவடிக்கைகளுக்கு எதிராக கேள்விகள் கேட்கப்பட்டு திருத்தப்பட்டார்கள். அந்த செய்முறை பெரும்பாலும் மென்மையாக இருந்ததில்லை. அவர்கள் மனதில் எந்தவித தற்காப்பு உணர்வும் இல்லாமல், வழங்கப்பட்ட திருத்தங்களுக்கு எதிர்செயலாற்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை அலட்சியப்படுத்தியவர்கள், “நியாயமில்லை" என்று கதரியவர்கள், அந்த வித்தைகள் பயனற்றவை என்றும், குருவை கீழ்படிந்து நடப்பது மட்டுமே பலன் தரும் என்பதை கற்றுக்கொண்டார்கள். தற்காப்பை தவிர்த்து, மற்றவர்களை பழிக்காமல் இருப்பது நல்ல பலனை வழங்கியது. மற்றவர்களிடம் மாற்றத்தை எதிர்பார்க்காமல், தானே மாறிகொள்வதும் நல்ல பலனை வழங்கியது. §

பல வருடங்கள் கழித்து மடவாசிகள் மென்மையாக மற்றும் கண்ணியமாக, இணக்கமாக மற்றும் அன்பாக பழகுவதை முகத்தில் புன்னகையுடன் விளக்கும் போது, ஒரு நகை வியாபாரி இரத்தினங்களை மெருகூட்டுவதைப் போல அவர்களும் இந்த நிலையை அடைந்துள்ளதாக மாஸ்டர் குறிப்பிடுவார். ஒரு சுற்றும் தொட்டியில் சொரசொரப்பான இரத்தினங்கள் வீசப்பட்டதும், அவை  அங்கே பல நாட்களுக்கு ஒன்றன் மீது ஒன்று மோதிக்கொண்டு, ஒவ்வொரு கல்லும் மற்ற கற்களுக்கு ஒரு உராயும் கருவியாக இருப்பதால், ஒவ்வொன்றும் தொடர் மோதல்கள் மூலம் கூர்மையான முனைகளை இழக்கின்றன. அதைப்போலவே குருவின் வழிகாட்டலின் கீழ் ஒன்றாக வாழ்ந்து, ஒன்றாக பணி புரிந்து, போராடிக்கொண்டு ஒன்றாக கற்றுக்கொண்டு, ஒன்றாக தியானம் மற்றும் வழிபாடு நடத்திய மடவாசிகளில் ஒவ்வொருவரும், மெதுவாக ஒரு மெருகூட்டப்பட்ட இரத்தினத்தை போல பிரகாசிக்கிறார்கள். பல்வேறு முகப்புக்கள், மற்றும் பல்வேறு நிறங்களுடன் இருந்தாலும் அனைத்தும் இரத்தினங்களே. தாங்கள் பெற்ற பண்புகளுக்கு மாஸ்டரின் அருளே காரணம் என்பதை அவர்கள் அறிந்து இருந்தார்கள். §

பல வருடங்களாக துறவிகளுடன் இணைந்து செயல்பட்டதன் விளைவாக, கைவினைஞர்-தொழில் பழகுநர் அமைப்பு பயிற்சிக்கு மாஸ்டர் வலியுறுத்த காரணமாக விளங்கியது. மூத்த துறவிகள் தாங்கள் பெற்ற திறமைகளை

இளைய துறவிகளுக்கு கற்றுத்தரவும், இளையவர்கள் தங்கள் மூத்த துறவிகளுக்கு சேவை செய்து கற்றுக்கொள்ளவும் நியமிக்கப்பட்டார்கள். காலப்போக்கில் மட நிர்வாகத்தின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களின் ஒட்டுமொத்த அமைப்பாக மாறிய இதற்கு, அவர் *குலம்* என்று பெயர் வைத்தார். *குலம்* என்றால் தமிழில் குடும்பம் என்று பொருள், மற்றும் விரிவுபடுத்துவதன் மூலம் அது ஒரே நிபுணத்தவம் மற்றும் சேவையில் இருக்கும் துறவிகளின் குழுவை  குறிப்பிடுகிறது. இதன் விளைவாக விநாயகரின் பெயர்களுடன் ஐந்து *குலங்கள்* தோன்றின. கோயில்/சமையல் அறை (லம்போதரா); குழுவினரின் வளர்ச்சி/பயிற்சி (ஏகதந்தா); நிர்வாகம்/நிதித்துறை (பிள்ளையார்); கட்டிடங்கள்/நிலங்கள் (சித்திதாதா); மற்றும் வெளியீடுகள் (கணபதி) என்று மடத்தின் தினசரி நடவடிக்கைகளின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் ஒரு தனிப்பட்ட குழு பொறுப்பு வகித்தது. §

இந்த காலகட்டத்தில் சைவ சமயத்தை கிரகித்து மற்றும் கற்றுக்கொண்டு தங்களை அதில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள, இந்தியா மற்றும் இலங்கையில் இருந்த சிவபெருமானின் தலைசிறந்த கோயில்களுக்கு துறவிகள் அனுப்பப்பட்டனர். மாஸ்டர் அவர்களை சாஸ்திரங்களை படிக்க, சிவாச்சாரியார்களிடம் இருந்து சிவப்பூஜைகளை கற்க மற்றும் அவர் உலகில் மிகவும் உயர்வானதாக கருதும் இந்திய கலாச்சாரம் மற்றும் இந்திய நாட்டை தெரிந்துக்கொள்ள ஊக்குவித்தார். துறவிகள் கடவுள் நம்பிக்கையில் வலுவடைந்ததும், அவர் அடுத்த முக்கிய நடவடிக்கையை மேற்கொண்டார். §

**மதம் மாறும் புதிரால் ஏற்பட்ட குழப்பம்**

“நான் எனது நாட்டு மக்களுக்கு செய்யவேண்டிய கடமையை செய்து விட்டேன். இனி, உலகம் முழுவதும் இருக்கும் தமிழ் சைவர்களுக்கு சேவை செய்யவிருக்கிறேன்.” ஜனவரி 5, 1977 (தனது 50 ஆவது ஜெயந்தி) அன்று சான் பிரான்சிஸ்கோ கோயிலில் கூடியிருந்தவர்களுக்கு இந்த செய்தியை தெரிவித்துக்கொண்டு, மாஸ்டர் சுப்பிரமுனியா மேற்கு நாடுகளில் தனது பொது அமைச்சக தலைவர் பதவியில் இருந்து முறையாக மற்றும் இறுதியாக விலகினார். வாழ்க்கையில் அதிக ஆழமான குறிக்கோள்களுக்கு ஒரு ஆன்மீக பாதை மீது அர்ப்பணிப்புடன் இருப்பது முக்கியம் என்பதையும், பிதற்றிக்கொண்டு அல்லது நிலையாக இல்லாமல் அல்லது மழுப்பிக்கொண்டு இருப்பவர்களால் முன்னேற முடியாது என்பதையும் அவர் தனது அனுபவத்தின் மூலம் அறிந்து இருந்தார். அதனால் அவர் ஆர்வத்துடன் ஆனால் அர்ப்பணிப்பு இல்லாமல் இருப்பவர்களுக்கு குருவாக இருக்கப்போவது இல்லை என்பதை தீர்மானித்து, தனது மீதி வாழ்க்கையை சைவ சமயம் மற்றும் சிவபெருமானின் மாபெரும் மகிமை, மகாதேவர்கள் மற்றும் தனது சற்குரு சிவயோக சுவாமிக்கு அர்ப்பணிக்கவும், அதற்கு மேல் பொதுமக்களுக்கு சொற்பொழிவுகள் தான் நடத்தபோவதில்லை, யோகத்தின் பொருளை இனிமேலும் விளக்கப்போவது இல்லை என்றும் முடிவு செய்தார். §

மாஸ்டர் தங்களை எங்கே வழிநடத்தி செல்கிறார் என்பது புரியாமல், மீண்டும் சில துறவிகள் அந்த சமூகத்தை விட்டு வெளியேறினார்கள். பல வருடங்களாக நெருக்கமாக இருந்தவர்களும், அந்த வெளியேறிய குழுவில் இருந்தனர். தொடக்கத்தில் இந்த சம்பவம், அவருக்கு ஏற்பட்ட அபூர்வ ஏமாற்றங்களில் ஒன்றாக இருந்தாலும், இந்த வடிகட்டும் செய்முறை ஒரு பெரிய திட்டத்தின் அங்கமாக விளங்கியது. அவருடன் நிலைத்து இருந்தவர்கள், அவரது சமயப்பணி பூர்த்தி அடைவதற்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்கள். இதனால் முன் எப்போதும் இருந்திராத அல்லது கற்பனை செய்யவும் முடியாத ஒரு இணக்கம் மற்றும் ஒருமுகச் சிந்தனையை உருவாக்கியது. துறவிகளுக்கு கற்பிக்கப்பட்ட பாடம் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது: ஒரு நிறுவனத்தின் வலிமை அதன் உறுப்பினர்களின் அர்ப்பணிப்பின் அளவை பொறுத்து அமையும்; மேலும் அது பொதுவாக எண்ணிக்கையின் அடிப்படையில் இல்லாமல் தரத்தின் அடிப்படையில் அமைந்தது இருக்கும். §

மாஸ்டர் கடைசி இருபது ஆண்டுகளுக்கு, இந்து சமயத்தில் பிறக்காத மாணவர்களுக்கு, அத்வைத்தின் மிகவும் உயர்வான உண்மையாக விளங்கும் பரமாத்துமாவைப் பற்றி கற்றுத்தந்தார். இந்த உயரிய போதனைகள் மாணவர்களுக்கு நல்ல பலனை வழங்க, அவர்கள் மற்ற அனைத்தையும் தவிர்த்து, இந்து சமயம் மற்றும் கலாச்சாரத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை மாஸ்டருக்கு அவர் பல வருடங்களாக எதிர்கொண்ட யதார்த்தமான உலக சோதனைகள் மற்றும் வேதனைகள் புரியவைத்தன. ஒருமனதாக ஒரு பாதையில் அர்ப்பணிப்புடன் இருப்பதன் சக்தி, மற்றும் அத்தகைய கவனம் இல்லையென்றால் ஒருவர் எதிர்கொள்ளும் எண்ணற்ற கவனச் சிதறல்கள் பற்றி அவர் உணர்ந்துக்கொண்டார். மனிதன் அடைந்த ஆன்மீக உச்சங்களில் மிகவும் உயர்வான நிலையை வலுவாக மற்றும் உறுதியாக இருப்பவர்கள் மட்டுமே அடைகிறார்கள். §

ஒரு இந்து வாழ்முறை மற்றும் மாற்று பெயரை ஏற்றுக்கொண்டாலும், தங்களது கிறுத்துவ பெயர்கள் மற்றும் சில மத நம்பிக்கைகளை தக்க வைத்து, இரு மதத்தின் மீதும் விசுவாசமாக இருந்தவர்கள் சந்தித்த விளைவுகளை, மாஸ்டர் பல வருடங்களாக கவனித்து வந்தார். அது நல்ல பலனை அழிக்காமல், அந்த நபரிடத்தில் ஒரு பிளவை ஏற்படுத்தி, சமயம் சார்ந்த மனக் கோளாறை  தூண்டுகிறது. மாஸ்டர் முடிவு செய்திருந்ததைப் போல குடும்பம் அல்லது சமூகம் என்ன சிந்திக்கும் என்று கருதாமல், ஒருவர் தான் யார் என்பதை முழுமையாகவும் முடிவாகவும் முடிவு செய்ய வேண்டும். §

இவ்வாறு 1997 ஆம் ஆண்டில், மாஸ்டர் மேற்கத்திய சீடர்களிடம் தனது எதிர்பார்ப்பை வலுப்படுத்தி, அவர்கள் தங்களது முந்தைய சமய, தத்துவ நம்பிக்கைகளை துண்டித்து, தங்களது இந்து பெயர்களை சட்டப்பூர்வமாக்கி, முறையாக நாமகரணம் செய்துக்கொண்டு இந்து சமயத்தில் நுழையவேண்டும் என்று வலியுறுத்தி, தனது துறவிகளிடம் எதிர்பார்த்த அதே தரநிலைகளை நிலை நிறுத்தினார். அவர் அவர்களிடம் எதிர்பார்த்த

இலட்சியத்திற்கு எடுத்துக்காட்டாக இருப்பதற்கு, மாஸ்டர் என்கிற தனது பெயரை கைவிட்டு, குருதேவா என்கிற ஒரு ஆன்மீக சற்குருவின் ஒரு பாரம்பரிய இந்து பெயரை ஏற்றுக்கொண்டார். §

மதமாற்றம் என்ற பெயரை கேட்டாலே பயந்து ஒதுங்கிய பல இந்துக்களுக்கு இதை ஏற்றுக்கொள்வது கடினமாக இருந்தது. ஆனால் இந்து சமயத்திற்கு மதமாற்றம் புதிதில்லை என்று அவர் விளக்கினார். இந்தியாவில் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் சமணம் மற்றும் பௌத்த சமயம் தொடங்கிய போது, பல லட்சக்கணக்கான இந்துக்கள் மாதம் மாறினார்கள். பல நூற்றாண்டுகள் கழிந்து,  மறுமலர்ச்சி தொடங்கி மீண்டும் லட்சக்கணக்கான சமணர்கள் மற்றும் பௌத்த சமயத்தவர்கள் மீண்டும் இந்து சமயத்திற்கு மதமாற்றம் பெற்றனர். இக்காலத்தில், இந்து சமயத்திற்கு அல்லது இந்து சமயத்தில் இருந்து வேறொரு சமயத்திற்கு மதமாற்றம் பெறுவது ஒரு பெரிய பிரச்சனையாக இருந்து, பெரும்பாலும் குடும்பங்கள் மற்றும் ஊர்களுக்கு இடையே ஒரு மிகப்பெரிய வேற்றுமை உணர்வை ஏற்படுத்துகிறது. மருட்சி அல்லது வஞ்சனையால் மதம் மாறிய இந்துக்கள் இருக்கிறார்கள். இந்து சமயத்திற்கு திரும்ப வேண்டும் என்று மதம் மாறிய இந்துக்களும் இருக்கிறார்கள். ஒரு இந்துவை திருமணம் செய்து கொண்டவர்கள் உட்பட, இந்தியாவிற்கு வெளியே வாழும் இந்து அல்லாதவர்கள் இந்த சமயத்தில் முறையாக நுழைய காத்து இருக்கிறார்கள். §

குருதேவா இந்த சிக்கல்கள் ஒவ்வொன்றையும் எதிர்கொண்டு, இறுதியாக *ஹவ் டூ பிகம் எ இந்து* என்ற புத்தகத்தில் “முறையான மதமாற்றத்திற்கு" தனது பரிந்துரைகள் மற்றும் அனுபவத்தை முறைப்படுத்தி வெளியிட்டார். பெரும்பாலான மதமாற்றங்கள் வற்புறுத்தலாலும் தவறான தூண்டுதலாலும் நடைபெறுகின்றன. யூதர்களை கத்தோலிக்கர்கள் வஞ்சகமாக மதமாற்றுவது, மற்றும் இசுலாமியர்கள் பாப்டிஸ்ட்களை மதமாற்றுவது, மற்றும் இவர்களில் மிகவும் தீவிரமாக மோர்மொன் மற்றும் பெண்டகோஸ்டல் பிரிவினர் (ஹார்வெஸ்டிங் சோல்ஸ் என்ற வெறுப்பூட்டும் சொற்றொடர்கள் மூலம்) மதமாற்ற நடவடிக்கையில் ஈடுபட்டனர். மதங்கள் ஒன்றை ஒன்று மதிக்க வேண்டும் என்று குருதேவா கருதினார். யூதனாக இருக்கும் ஒரு சிறுவன் மதமாற்றம் செய்துக்கொள்ள விரும்பினால், அவன் யூதர் திருக்கோயிலில் இருந்து ஓடி ஒளியாமல், அவன் தனது ரபையின் ஆசிகளை பெற்று வருவதற்கு புதிய ஆன்மீக ஆலோசகர்கள் ஊக்குவிக்க வேண்டும். §


அவர் தான் வழக்கமாக செய்வதை போல, இந்த விஷயத்தில் ஒரு ஆழமான ஆன்மீக புரிதலுடன் தொடங்கினார். பழங்காலத்தில், மக்கள் ஒரே கிராமம் மற்றும் சமயத்தில் தொடர்ந்து பிறவி எடுத்துக்கொண்டு இருந்தார்கள். “ஆனால், இப்போது இருக்கும் நவீன யுக பயணம் மற்றும் உலகளாவிய தகவல் தொடர்பு காரணமாக, மிகவும் நெருக்கமாக இருந்த மறுபிறவியின் மாதிரி சிதறி விட்டது,  மற்றும் ஆன்மாக்கள் பிறவி எடுக்கும் புதிய தூல உடல்கள் வேற்று நாடுகள், குடும்பங்கள் மற்றும் மதங்களில் இருப்பதால்,

அந்த சூழ்நிலை அவர்களுக்கு சிலசமயங்களில் புதியதாக இருக்கின்றன," என்று அவர் கூறினார். §

"மேற்கத்திய நாட்டு உடலில் ஒரு கிழக்கு தேச ஆன்மாவாக," இருப்பவருக்கு, அவர் சுயமாக மதம் மாறுவதற்கு சிந்தனை நிறைந்த, ஒரு அமைதியான வழியை பரிந்துரைத்தார். அவர் மதம் மாறவிரும்பும் சீடர்களிடம், அவர்களது முந்தைய சமயத்தை நன்றாக ஆய்வு செய்து, தாங்கள் அதன் நம்பிக்கைகளை ஏன் தக்க வைத்துக்கொள்ளவில்லை என்பதை உறுதியாக, நுணுக்கமாக விளக்க வேண்டும் என்று கூறுவார். அவர் அவர்களது கிறுத்துவ தேவாலயங்கள், யூத திருக்கோயில்கள், சிலருக்கு அவர்களின் முந்தைய இந்து குருக்களிடம் மீண்டும் சென்று, அங்கே சிறிது காலம் தங்கியிருந்து, அதன் மதகுருமார்களிடம் ஆலோசிக்கவேண்டும் என்று கூறுவார். அவர் தங்கள் மனதை மாற்றிக்கொள்வதற்கும், அல்லது இன்னொருவர் அவர்களின் மனதை மாற்றுவதற்கும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. §

அவர்கள் இந்த சோதனையில் வெற்றி பெற்றால், தொடர்ச்சியான பரீட்சைகள் மூலம் தங்கள் இந்து சமய அறிவை நிரூபித்து, தங்களது இந்து பெயரை சட்டப்பூர்வமாக்கி, ஒரு பிரபலமான கோயிலில் *நாமகரணம்* என்கிற பெயர் சூட்டு சடங்கின் மூலம் மதத்தில் முறையாக நுழைய வேண்டியிருந்தது. குருதேவா பெயருக்கு முக்கியத்துவம் அளித்து, தனது சீடர்கள் தங்கள் கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமம், வங்கி கணக்குகள் மற்றும் மற்ற அனைத்து ஆவணங்களிலும் தங்களது சட்டப்பூர்வமான பெயரை சேர்த்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அது இன்றும் தேவாலயத்தில் உறுப்பினராவதற்கு தேவைப்படுகிறது. தங்களது முந்தைய பெயரை மாற்றாமல், ஒரு சைவ இந்து பெயரை முறையின்றி ஏற்றுக்கொண்டு இரண்டிற்கும் இடையே ஊசலாடிக்கொண்டு இருப்பதால் உருவாகும் இரட்டை அடையாளங்களுடன் இருக்கும் பல குழுக்களை பார்த்து இருந்ததால், அவர் முறையான மற்றும் சட்டப்பூர்வமான ஒரு சைவ பெயர் நிச்சயமாக வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆரம்பகாலத்தில் தன்னிடம் புதிதாக சேர்பவர்களுக்கு நீண்ட நாள் சீடர்கள் மூலம் உதவி அளித்து வந்தார், ஆனால் இறுதியில் தனது போதனைகளில் விருப்பம் இருந்தவர்கள், அந்த செயல்முறைகள் அனைத்தையும் தங்கள் சொந்த வலிமை மற்றும் உத்வேகத்தின் மூலம் செய்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். §

அவர்களது சீடர்களில் பலர் மேற்கத்திய நாடுகளில் பிறந்து இருந்தாலும், எந்த மதத்தையும் சாராமல் இருந்தார்கள். இந்த சீடர்கள் மதம் மாறவேண்டிய அவசியம் இல்லாமல், இந்து சமயத்தைப் பற்றி படித்து தெரிந்துகொண்டு, ஒரு பெயர் சூட்டு விழாவின் மூலம் இந்து சமயத்தை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். இந்து சமயத்திற்கு மாறி அதை தனதாக ஏற்றுக்கொண்ட நேர்மையான மேற்கு நாட்டவர்களை, வழக்கம் போல் தவிர்க்காமல் அல்லது புறக்கணிக்காமல் வரவேற்கவேண்டும் என்று இந்துக்களிடம் குருதேவா தீவிரமாக அறிவுறுத்தினார். §



*சைவ சித்தாந்தத்தின் இரு கிளைகளை பற்றி, 80 களில் நடைப்பெற்ற மிகப்பெரும் விவாதம் நடைப்பெற்றது. குருதேவாவின் தனிப்பட்ட*

*உணர்தல்கள், சிவபெருமான் மற்றும் ஆன்மாவின் அத்வைத ஐக்கியத்தை பற்றி பேசிய திருமூலருடன் இணக்கத்துடன் இருந்தது, ஆனால் பல சைவர்கள் கடவுள் மற்றும் ஆன்மா நிரந்தரமாக பிரிந்து இருக்கிறது என்று பன்மைவாத போதனைகளை அறிவுறுத்திய மெய்கண்டாரை பின்பற்றினார்கள்.*

........................§

கவனமாக சிந்தித்து இந்து சமயத்திற்கு மதம் மாறியவர்கள், எதிர்கொண்ட மாபெரும் இன்னல்கள் காரணமாக, அவர்கள் நிரந்தர மாற்றத்தை பெற்று, தங்களது அர்ப்பணிப்புக்களை வலுப்படுத்தி, தங்கள் விசுவாசங்களை சுத்தப்படுத்திக் கொண்டதால், அவர்கள் உலகில் மிகவும் வலுவான இந்துக்களில் ஒருவராக மாற்றம் பெற்றார்கள். இந்த தீவிரம் மற்ற இந்து குழுக்கள் மற்றும் இந்து சமயம் போன்ற குழுக்களின் அணுகுமுறையில் இருந்து முற்றிலும் மாறுபட்டு இருந்தது. அதில் பெரும்பாலான குழுக்களுக்கு மிகவும் சிறிய மாற்றம் மட்டுமே தேவைப்பட்டது. அந்த குழுக்கள் அர்ப்பணிப்பு என்ற சொல்லை வெறுத்ததாகவும், இந்த காலத்து சாதகர்கள் அர்ப்பணிப்பு இல்லாமல் இருப்பதில் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் குருதேவா வேடிக்கையாக குறிப்பிடுவார். இந்த தீவிரம் அவரது சீடர்களை மேம்படுத்தி, அவர்களை தலைவர்களாக மாற்றியது. இந்து தத்துவஞானி மற்றும் எழுத்தாளராகவும் இருந்து, குருதேவா மற்றும் அவரது சீடர்களை சந்தித்து இந்துயிசம் டுடே பத்திரிகைக்கு கட்டுரைகள் எழுதிய ராம் ஸ்வரூப், பல வருடங்கள் கழித்து, அவர்களை பற்றி *தி அப்சர்வர்,* புது டில்லி 1998 இதழில் எழுதினார்:§

> அவர்கள் NRI பிரிவை சேர்ந்தவர்கள் இல்லை. தன்னிச்சையுடன் இந்துக்களாக மதம் மாறிய அவர்களில் பெரும்பாலானோர் வெள்ளை நிற அமெரிக்கர்கள். மேலும் அவர்களில் சிலர் சந்நியாசிகளாக இருக்கிறார்கள். இந்து குடும்பத்தில் பிறந்தவர்கள், இந்து சமயம் மீது கவனம் செலுத்தாமல் அதன் ஆழமான ஆன்மீக பிரிவுகளை புறக்கணிக்கிறார்கள். ஆனால் அந்த சமயத்தை ஆழ்ந்த சிந்தனை மற்றும் தன் உளஆய்வு மூலம் ஏற்றுக்கொள்பவர்கள் அவ்வாறு செய்வதில்லை. சாதகர்களாக இருக்கும் அவர்கள் இறைவன், பரமாத்துமா, ஆன்மீக வாழ்க்கை, தர்மம் மற்றும் முக்தி பற்றிய ஆய்வுகளில் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். §

1979 ஆம் ஆண்டின் தொடக்கம், 'கடவுள்' இந்து கோயிலில் குரு ஜெயந்தி கொண்டாட்டங்களுடன் இருபதுக்கும் மேற்பட்ட *நாமகரண* சடங்குகளுடன் விறுவிறுப்பாக தொடங்கியது. சைவ இந்து சமயத்திற்குள் அடியெடுத்து வைப்பதை குறிப்பிடும் இந்த பெயர் சூட்டு விழாவை பெற்ற சீடர்கள், பல ஆண்டுகளாக இமாலயன் அகாடமியில் இந்து சமயம் பற்றி படித்து இருந்தார்கள். அதில் பலர் தங்களது முந்தைய மதத்தில் தங்களை துண்டித்துக்கொள்ள தீவிரமான செய்முறைகள் நிறைவு செய்து இருந்தனர். அது அமெரிக்க வரலாற்றில் ஒரு மைல்கல்லாக விளங்கியது. §

அதற்கு பின்னர், சுய விருப்பத்துடன் நடைப்பெற்ற நூற்றுக்கணக்கான மத மாற்றங்கள் மற்றும் நாமகரண சடங்குகளுக்கு பிறகு, குருதேவா தனது சமூகம் தர்மத்தை தீவிரமாக கடைப்பிடித்ததால் திருப்தியும், பெருமையும் அடைந்தார். அவர் அதன் பிறகு வந்தவர்களை தயக்கத்துடன் மதத்தில் சேர்த்துக்கொண்டார் மற்றும் அவர்கள் தீவிரமாக மற்றும் நேர்மையான நாட்டத்துடன் தன்னை நாடி வந்தால் மட்டுமே சேர்த்துக்கொண்டார். அவர் மேற்கில் ஒரு இந்து சமூகத்தை தொடக்க நிலையில் இருந்து உருவாக்கினார், மற்றும் அவர் தனது மீதி வாழ்க்கையை வெறும் ஆர்வம் மட்டுமே இருப்பவர்களிடம் இருந்து விலகி இருந்து, இந்து தர்மத்தின் முழு அர்ப்பணிப்புடன் இருப்பவர்களுக்கு தனது சக்திகளை வழங்கிக்கொண்டு, இந்து சமயத்தின் கட்டுப்பாடுகளுக்குள் வாழ்ந்து வந்தார். §

குருதேவாவின் மனதில் எதிர்கால சிந்தனை தெளிவாக இருந்தது. அதில் சைவ இந்து சமயம் மற்ற சமயங்களுடன் ஒரு கௌரவமான இடத்தில் வைக்கப்பட்டு இருந்தது. மேற்கில் இருந்த இந்து குடும்பங்கள் வலுவாக ஒற்றுமையுடன், ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக மற்றும் தங்கள் ஆன்மீக பொறுப்புக்களில் தீவிரமாக இருந்தனர். அந்த எதிர்காலத்தை நோக்கி செயல்பட்டுக் கொண்டு, அவர் அனைத்து அம்சங்களையும் ஒவ்வொன்றாக சேர்த்து, தனது துறவிகளுக்கு மிகப்பெரிய பணிகளை வழங்கினார். §

அவரது வழிகாட்டலின் கீழ், அவர்கள் குடும்பத்திற்கு தேவையான நன்னடத்தை கோட்பாடுகள் மற்றும் ஒழுக்கங்கள், சமயகுருவின் அறிவுறுத்தல்கள், குழந்தைகளுக்கான தொடர் பயிற்சி வகுப்புக்கள், இந்து சமய துதிப்பாடல்கள் மற்றும் இந்துக்களை பிறப்பில் இருந்து மரணம் வரை வழிநடத்துவதற்கு, வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் நடத்தவேண்டிய சடங்குகள் பற்றிய விளக்கங்களை உருவாக்கினார்கள். அவர் மதகுரு மற்றும் பள்ளி ஆசிரியர்களாக தகுதி பெற சான்றிதழ்களை உருவாக்கி, பதின்ம வயதில் இருப்பவர்களுக்கு அந்த கடினமான பருவத்தில் வழிநடத்த, அவர்கள் வீட்டில் இருந்தே பயிலும் சைவ பாடத்திட்டத்தை உருவாக்கி அதற்கு பாடங்களை எழுதினார். இந்து தொழில் முனைவர்களுக்கு உறுதித்தன்மையை வழங்க இந்து வியாபாரிகள் கூட்டமைப்பும், பெண்கள் தங்கள் கருத்துக்களை பரிமாறிக் கொள்ள இந்து பெண்கள் விடுதலை மன்றத்தையும் உருவாக்கப்பட்டன. §

அவரது தொலைநோக்கு பார்வையில் கிழக்கு நாடுகளும் அடங்கி இருந்தன. அந்த நாடுகளில், அவர் குறிப்பாக குழந்தைகள் பயிற்சியில் பாற்றாக்குறையை கவனித்தார். இலங்கையின் அளவெட்டியில், அவர் தனது சுப்பிரமுனியா ஆசிரமத்தில் இசை, நடனம், ஓவியம், *திருமந்திரம்* மற்றும் *தேவார* பாடல்களுடன், குழந்தைகள் ஆங்கிலம் பேச பயிற்சி அளித்த வகுப்புக்கள் நல்ல வரவேற்பை பெற்றன. §

அப்போதிருந்த ஆயிரக்கணக்கான இந்து பேரவைகள், எதிர்காலத்தில் அமெரிக்கா, கனடா, பிரிட்டன், தென் ஆப்பிரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியாவில் பரவும் என்றும், அவற்றிற்கு இடையில் அனுபவ அறிவை

மேம்படுத்தி அதை பகிர்வதற்கு உதவி செய்ய, இந்து அமைப்புக்களின் தேசிய மற்றும் சர்வதேச மன்றங்களின் தேவையை அவர் எடுத்துரைத்தார். அப்போது அத்தகைய சமூகங்கள் எதுவும் இல்லை என்றாலும், அவர் கனவு வெறும் முப்பது வருடங்களில் மெய்ப்பட்டது. தொலை தூரத்தில் இருக்கும் குழுக்களை ஒன்று சேர்க்க, மடத்தில் அச்சிடும் கருவிகளை மீண்டும் அமைக்க குருதேவா கடும் முயற்சிகள் மேற்கொண்டு, நெவாடாவிலிருந்து கவாய் தீவிற்கு அந்த கருவியை கொண்டு வந்து, உலகெங்கும் சைவ சமய செய்திகளை வழங்க, *தி நியூ சைவைட் வேர்ல்ட்* என்கிற ஒரு புதிய செய்தித்தாளை தொடங்கினார். §

இந்த பணியை செய்வதற்கு, குருதேவாவிற்கு கிடைத்த உதவிகள் மிகவும் குறைவு. பாரம்பரியம் தெரிந்தவர்கள், இணையதளம் இல்லாத உலகின் இன்னோரு இடத்தில் இருந்ததால், அவர்களிடம் இருந்து அதிக உதவி கிடைக்கவில்லை. அதனால் அவர் தனக்குள் கவனம் செலுத்தி, யோக சுவாமியின் வழிகாட்டலை நாடினார் மற்றும் பல முக்கிய தருணங்களில், அந்த வழிகாட்டல் வேகமாக பாய்ந்து வந்தது. யோக சுவாமி ஒரு காட்சி அல்லது தியானத்தில் தோன்றி எதை செய்யவேண்டும், எதை செய்யக்கூடாது, ஒரு பணியை தொடங்க வேண்டுமா அல்லது கைவிட வேண்டுமா என்று தைரியமான அறிவுறுத்தல்களை வழங்கியதாக குருதேவா தனது மடவாசிகளிடம் அடிக்கடி சொல்லிக்கொண்டு இருப்பார். அவருக்கு உண்மையான சைவப்பாதையின் தொடர்பாக யோக சுவாமி விளங்கினார், மற்றும் குருதேவா தனது குருவிடம் இருந்து வந்த ஒவ்வொரு அறிவுறுத்தலையும், அது எவ்வளவு நுணுக்கமாக இருந்தாலும், மிகவும் கவனமாக பின்பற்றினார். §

ஒரு நாள் யோக சுவாமி தனக்கு எந்த விளக்கமும் அளிக்காமல், “இரு பொருளுடன் பேச வேண்டாம்" என்று கூறியதாக குருதேவா கூறினார். “இரு பொருளுடன் பேச வேண்டாம் என்றால் என்ன பொருள்?” என்று குருதேவா தனது துறவிகளிடம் கேட்டார். தெளிவில்லாமல் குழப்பம் நிறைந்து இருப்பது என்பதை தெரிந்துகொண்டதும், அவர் தனது பாணியில் நேரடியான, உறுதியான மற்றும் தெளிவான, மற்றும் தவறாக புரிந்துகொள்ள அல்லது தெளிவின்மைக்கு வாய்ப்பில்லாத ஒரு முறையை கையாண்டார். சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு முக்தி பெற்றிருந்த தனது குருவுடன் அவருக்கு இருந்த நெருக்கம், அவரது துறவிகள் குழுவிற்கு ஒரு பாடமாகவும் ஒரு தூண்டுதலாகவும் இருந்தது. §

## இரண்டு தமிழ் புதையல்கள்

1970 களின் இறுதியில், நரைத்த முடியுடன் அமெரிக்க இந்து சூட்சும ஞானியாக இருந்த குருதேவா, மேற்கு நாடுகளில் முதல் முறையாக, *ஆதீனம்* என்கிற பாரம்பரிய தமிழ் சைவ மடம்-கோயில் வளாகத்தை சிறந்த முறையில் அமைத்து இருந்தார். அவர் அதிகாரபூர்வமாக கவாய் ஆதீனத்தின் முதல் *மகாசன்னிதானமாக* இருந்துக்கொண்டு, ஒரு புதிய யுகத்திற்கு

ஆங்கில மொழியில், சைவ சித்தாந்தத்திற்கு புதிய தெளிவான விளக்கத்தை அளிக்க பொறுப்பேற்றுக்கொண்டார். அவ்வாறு செய்யும் போது, அவர் புராண கதைகள் மற்றும் இதிகாசங்களை புறக்கணித்தார். அவை தத்துவ ரீதியாக பொருத்தமில்லாமல், தவறுதலாக சாஸ்திரத்தின் அந்தஸ்த்தை பெற்றுள்ளதாக தைரியமாக இகழ்ந்துரைத்த இந்து தலைவர், அவராகத் தான் இருக்கவேண்டும்.§

அவர் கம்பீரமான உறுதிப்பாட்டுடன் பேசியதாலும், அவர் வழங்கிய ஒவ்வொரு அறிவிப்புகளும் கட்டளைகளும் அவருடன் இருந்தவர்களுக்கு உண்மையாக தோன்றியதாலும், அவர் இந்த ஆன்மீக இருப்பிடத்தின் அதிகாரத்தை உணர்ந்து இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இந்த காலத்தில் அவர் உருவாக்கிய படைப்புக்களில் துண்டுதல் மற்றும் சக்தி, தூய விளக்கங்கள் மற்றும் அவர் குரு பின்பற்றிய சமயத்தின் ஆன்மீக மற்றும் அதிகாரப்பூர்வ வெளிப்பாடுகள் நிறைந்து இருந்தன. நவீன யுகத்தில் சைவ சித்தாந்ததிற்கு இதைப்போன்ற தெளிவான விளக்கம் எந்த மொழியிலும் வழங்கப்பட்டதில்லை என்ற புகழ்ச்சி கலந்த பரிந்துரையுடன், தமிழ் சைவ சான்றோர் குழுவில் இருந்த ஆர்வமுள்ள நண்பர்கள் அவரது படைப்புக்களை தேடி வந்து, அவற்றை தமிழில் மொழிபெயர்க்கவும் செய்தார்கள். அதை Dr. பி. நடராஜன், எஸ். ராமசேஷன், எஸ். சண்முகசுந்தம் மற்றும் பலர் மொழிபெயர்த்தனர். §

குருதேவா அத்வைத ஈஸ்வரவாதம் என்ற மத சாஸ்திரத்தின் யோக அணுகுமுறையை ஊக்குவித்தார். இது சில சமயம் ஒன்றுக்கொன்று எதிரானதாகவும் ஒன்றை ஒன்று சார்ந்து இருப்பதாகவும் கருதப்படும் அத்வைதம் மற்றும் ஈஸ்வரவாதத்தை சார்ந்துள்ளது. அவர் கர்மவினை மற்றும் மறுபிறப்பு பற்றிய இந்து சமயத்தின முக்கிய கோட்பாடுகளுக்கு புதிய தெளிவை கொண்டு வந்து, அனைத்து ஆன்மாக்களும் இயல்பாக நற்பண்புடன் இருக்கிறது என்றும், அனைத்து கர்மவினைகளையும் கரைக்கலாம் என்றும், தன்னைப்போல ஆத்ம ஞானத்தை பெற முடியும் என்றும், பிறப்பு மற்றும் இறப்பு சுழற்சியில் இருந்து முக்தி பெறுவது உண்மையில் சாத்தியம் என்றும் அவர் உறுதி அளித்தார். §

அவர் சரியை (சேவை), கிரியை (வழிபாடு), யோகம் (தியானம்) மற்றும் ஞானம் (விவேகம்) என்று இறைவனை சென்றடையும் சைவ சித்தாந்தத்தின் நான்கு நிலை பாதையை பரிந்துரைத்தார். இந்த நிலைகள் தொடர்ச்சியாக வளர்ச்சி அடைபவை என்றும், ஒரு நிலை அடுத்த நிலைக்கு பூர்வாங்கமாக விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார். அவர் கோயில்களை உற்சாகமாக புகழ்ந்து, முறையான வழிபாட்டு முறைகளை தெளிவாக விளக்கினார். அவர் பாலியல் சக்தி கட்டுப்பாட்டை பற்றி வழங்கிய பிரத்யேக அறிவுறுத்தல்களுடன், துறவற மற்றும் குடும்ப வாழ்க்கையின் ஒழுக்கங்களையும் விளக்கமாக எடுத்துரைத்தார். உலகின் மிகவும் பழமையான சமயத்தை பற்றி மக்கள் “மேலோட்டமாக தெரிந்துக்கொள்ள", அவர் இந்து சமயத்தை ஒன்பது நம்பிக்கைகள் மற்றும் சைவ சமயத்தை

பன்னிரண்டு நம்பிக்கைகளாக சுருக்கிக் கூறினார். அவர் இந்து சமயத்தின் முதன்மையான ஸ்ருதிகளாக *வேதங்கள்* மற்றும் *ஆகமங்களை* பரிந்துரைத்தார், அவர் அத்துடன் திருமூலர் எழுதிய *திருமந்திரம்* மற்றும் திருவள்ளுவர் எழுதிய *திருக்குறள்* (இரண்டும் சுமார் கி.மு. 200) போன்ற இரண்டாம் நிலை சாஸ்திரங்களையும் ஏற்றுக்கொண்டார். §

> திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் இந்தியாவில் காகிதங்கள் அல்லது எழுதுகோல்கள் இல்லை, அதனால் விசேஷமாக தயாரிக்கப்பட்ட *ஓலை* இலைகளில் ஒரு எழுத்தாணி கொண்டு அழுத்தி அல்லது கீறி எழுத்துக்கள் எழுதப்பட்டன. இந்த முறையையில் பழங்கால சாஸ்திரங்கள் மற்றும் இலக்கியங்கள் உருவாக்கப்பட்டன, மற்றும் அந்த பழங்கால மூல படைப்புக்களில் சில இன்றும் அழியாமல் இருந்து நம்மை வியக்க வைக்கின்றன. நவீன கால காகிதம் எதுவும் பல நூற்றாண்டுகள் அழியாமல் இருக்காது என்பதில் சந்தேகம் இல்லை! §

அவர் மீண்டும் மீண்டும் சைவ சமயத்தின் பாரம்பரிய பாதையை பரிந்துரைத்து, அந்த பாதையின் நுணுக்கங்கள், அதன் சொல்லகராதி மற்றும் இறையியலை தனது மடவாசிகள், மற்றும் பின்னர் சம்சாரிகளுக்கு கற்றுத் தந்தார். யோக சுவாமி வகுத்த பாதை தனது சீடர்கள் மனதில் ஆழமாக பதிய வேண்டும் என்பதில் அவர் தெளிவாக இருந்தார். அவர் தனது மடத்தில் நிறுவிய இரண்டு ஆளுயர சிலைகளை அறிமுகப்படுத்தும் போது, குருதேவா உற்சாகமாக புகழ்ந்துக்கொண்டு இரண்டு முக்கியமான சாஸ்திரங்களை பற்றி தனது கண்ணோட்டத்தை விளக்கினார்.§

> திருமூலர் பத்மாசனத்தில் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்து இருப்பதாகவும், திருவள்ளுவர் தனது மடியில் ஒரு சிறிய எழுதும் மேசையுடன் தரையில் அமர்ந்து கைகளில் எழுத்தாணி கொண்டு புனிதமான செய்யுட்களை இயற்றுவதாகவும் சிலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவர் எழுதிய *திருக்குறள்* ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்வது பற்றி எடுத்துரைக்கிறது. அது இந்த உலகில் சந்தோஷமான மற்றும் இணக்கமான வாழ்கையை வாழ்வதற்கு தேவையான முக்கிய கருவிகளை தந்தாலும், அது இறைவனின் இயல்பு பற்றிய உட்பார்வைகள் எதையும் வழங்குவதில்லை. ஆனால் *திருமந்திரம்* இறைவன், மனிதன் மற்றும் பிரபஞ்சத்தின இயல்புகளை மிகவும் ஆழமாக ஆராய்கிறது. இரண்டையும் ஒன்றாக ஏற்றுக்கொள்ளும் போது, அவை இந்துக்கள் அனைவருக்கும் தங்கள் கருத்தை தெரிவித்து, சமய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் தங்கள் வழிகாட்டலை வழங்குகின்றன. ஒழுக்கம், செல்வம் மற்றும் அன்பை பெறுவது பற்றி திருக்குறளும், மோக்ஷம் அல்லது முக்தியை அடைவது பற்றி திருமந்திரமும் குறிப்பிடுகின்றன. §

> *திருமந்திரம்* ஒரு சூட்சுமமான மற்றும் கடினமான புத்தகமாக இருக்கிறது. இதன் மூல பாடல்கள், பழங்கால தமிழ் மொழியில் ஒரு அடிப்படை சீருடன் எழுதப்பட்டு இருக்கும். சைவ சித்தாந்தத்தை முதல் முறையாக திருமூலர் தொகுத்து, அதற்கு “சைவ சித்தாந்தம்" என்ற பெயரை முதலில் வழங்கியதும் அவர் தான். தேவை ஏற்பட்டால், ஒரு மதம் முழுவதும் சார்ந்து இருக்கக்கூடிய ஒரு ஆவணமாக இது விளங்குகிறது. இது மனிதனுக்கு தெரிந்த மிகவும் பழமையான சாஸ்திரங்களில் ஒன்றாக இருக்கிறது. எனது உணர்தலின் மூலம் பெற்ற எனது அனுமானங்கள் அனைத்தும், இந்த மாபெரும் படைப்புடன் இணங்கி இருப்பது எனக்கு அதிக திருப்தி அளிப்பதாக இருக்கிறது. இந்த புத்தகம் தனிப்பட்ட அனுபவத்தின் அங்கீகாரமாகவும், எனது குரு பரம்பரை உருவாக்கி பாதுகாத்த தத்துவ கோட்டையின் ஒரு முழுமையான அறிக்கையாகவும் இருப்பதால், இது எனக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. §


அவர் 1978 ஆம் ஆண்டு, “*திருமந்திரம்*, பவுண்ட்டன்ஹெட் ஆஃப் சைவ சித்தாந்தம்,” (திருமூலம், சைவ சித்தாந்தத்தின் மூலம்) என்ற தலைப்பில் வழங்கிய உரையின் ஒரு பகுதியை இங்கே காணலாம். அது இந்த புனிதமான உரைக்கு அவர் வழங்கிய முக்கியத்துவத்தை குறிப்பிடும் விதமாக இருந்தது. §

> நம்மிடையே இன்று பாதுகாப்பாக இருக்கும் சைவ சமய சாஸ்திரங்களில் மிகவும் பழமையான ஒன்றாக திருமூலரின் படைப்பு விளங்குகிறது. இறையியல் சார்ந்த படைப்புக்களில், அவர் படைப்பு முதலாவதாக இல்லாவிட்டாலும், பாதுகாக்கப்பட்ட படைப்புக்களில் மிகவும் பழமையான ஒன்றாக இருக்கிறது. அவர் புதிதாக எதையும் தொடங்கவில்லை. அவர் இயற்றிய *திருமந்திரம்*, நியூ டெஸ்டமெண்ட் என்கிற விவிலிய உரைகளின் இரண்டாம் பகுதியை காட்டிலும் வெறும் நூறு வருடங்கள் பழமையானதாக இருக்கிறது. அவர் தான் அறிந்து இருந்த தகவல்களின் அடிப்படையில், சைவ சமயத்தை தொகுத்து இருந்தார். அதன் கோட்பாடுகள் உள்ளடக்கியிருந்த உண்மைகள் பற்றி தனது சொந்த உணர்தல்களின் அடிப்படையில், அவற்றை அவர் சுருக்கமான மற்றும் நுணுக்கமான பாடல் வடிவில் பதிவு செய்து இருந்தார். அவரது படைப்பு அறிவு சார்ந்து அல்லது பக்தியை மட்டும் சார்ந்து இருக்கும் உரையாக குறிப்பிடமுடியாது. அது யோகத்தை அடிப்படையாக கொண்டுள்ளது. மனிதனுக்கு தன்னைப் பற்றிய அறிவை வழங்கும் இராஜ அறிவியலாக, அது யோகத்தை புகழ்ந்து விவரித்தாலும், அதில் இறையியல் கோட்பாடு மற்றும் பக்தி பாடல்களும் உள்ளன. அது ஆன்மா, புத்தி மற்றும் உணர்ச்சிகளை அடக்கிய மனித தேடலின் முழு வெளிப்பாடாக இருக்கிறது. §

ஒரு சித்தராகவும், இமயமலையில் ரிஷியாகவும் இருந்த திருமூலர், தென்னிந்தியாவில் இருக்கும் மக்களுக்கு சைவ சமயத்தின் மிகவும் புனிதமான போதனைகளை பரப்புவதற்கு அங்கே அனுப்பப்பட்டார். இந்து சமயம் சமயப்பணிகளின் மதமாக இருக்கிறது. என்னையும் சேர்த்து, அந்த மதத்தில் இருக்கும் ஒவ்வொருவரும், பரமாத்துமாவாக இருக்கும் இறைவனிடம் இருந்து ஒரு சமயப்பணியை எதிர்பார்த்துக்கொண்டு, ஒரு பணியில் ஈடுபட்டு இருக்கிறார் அல்லது சாதனா மூலம் தன்னை போதுமான அளவு சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார். இதுவே சைவ சமயத்தின் மாதிரியாக இருக்கிறது, மற்றும் மிகவும் புனிதமான சைவ பாதையாக சைவ சித்தாந்தமாக இருக்கும் சனாதன தர்மத்தின் முடிவான உண்மைகளை சுருக்கி புதுப்பித்து மீண்டும் உறுதிப்படுத்துவதே ஒரே சமயத்தில் திருமூலரின் பணியாக இருந்தது. §

இன்று சித்தாந்தம் என்ற சொல்லை கேட்கும் போது, அந்த சொல்லுக்கு பல அர்த்தங்கள் நம் மனதில் தோன்றுகின்றன. சிலருக்கு, மெய்கண்ட தேவர் மற்றும் அவர் வழங்கிய சைவ சித்தாந்த விளக்கம் உடனடியாக நினைவில் வரலாம். சிலருக்கு அத்வைத-வேதாந்தம் மற்றும் த்வைதத்திற்கும் மத்தியில் இருக்கும் தத்துவத்தில் இருந்து ஏதாவது ஒரு கோட்பாடு தெளிவில்லாமல் தோன்றலாம், மற்றும் சிலருக்கு “உண்மையான முடிவு,” “முடிவான முடிவு" அல்லது “உண்மையான தீர்மானம்" போன்ற பல்வேறு மொழிபெயர்ப்புக்கள் நினைவில் தோன்றலாம். §

*திருமந்திரத்தில்* முதல் முறையாக *சித்தாந்தம்* என்ற சொல் தோன்றுகிறது. *அந்த* என்ற சொல், ஆங்கிலத்தில் வரும் *எண்ட்* சொல்லை போல, குறிக்கோள்/முடிவின் பொருளை கொண்டுள்ளது. திருமூலர் அந்த சொல்லை “*சைவ ஆகமங்களின்* போதனைகள் மற்றும் உண்மையான முடிவுகளை,” குறிப்பிடவே பயன்படுத்தி இருந்தார். மேலும் இவை வேதாந்தம் அல்லது “*உபநிடதங்களின்* முடிவுகளுடன்” ஒத்து இருப்பதாக கருதினார். சைவ சித்தாந்தம் வேதாந்தத்தை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும் என்பதை அவர் மிகவும் தெளிவாக குறிப்பிடுகிறார். சித்தாந்தம் என்பது குறிப்பாக, முடிவான உண்மையை நோக்கி ஒருவரை கொண்டு வருவதற்கு தேவையான சாதனாக்கள் மற்றும் பயிற்சிக்குரிய கட்டுப்பாடுகளை வழங்குகிறது. வேதாந்தம் என்பது பொதுவாக, அனைத்து பாதைகளின் குறிக்கோளாக இருக்கும் முடிவான உண்மையை மேலோட்டமாக மட்டுமே அறிவிக்கிறது. §



*இந்த சித்திரத்தில் சைவர்கள், வைணவர்கள், பௌத்த சமயத்தவர்கள், சீக்கியர்கள், கிறுத்துவர்கள், இசுலாமியர்கள், யூதர்கள், சமணர்கள், தாவ்*

*நெறி சார்ந்தவர்கள் மனிதனின் ஆன்மீக பாதையில் சித்தரிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவற்றுடன் மேலும் பல மதங்களுக்கு மதிப்பு அளிக்கும் சைவ சமயம், எல்லையற்ற சகிப்புத்தன்மையுடன் இருக்கிறது.*

……………………….§


சித்தாந்தம் மற்றும் வேதாந்தத்தை அறிவுப்பூர்வமாக பிரிப்பவர்கள், குறிக்கோளில் இருந்து குறிக்கோளை அடையும் பாதையை பிரித்து விடுகிறார்கள். ஆனால் நமது குரு பரம்பரை அவற்றை வேறுபடுத்தி பார்ப்பது இல்லை. மலை உச்சிக்கு அதிக மதிப்பு அளித்து, அதற்கு செல்லும் பாதையை நாம் குறைவாக மதிப்பிட முடியுமா? இரண்டும் ஒன்று தான். சித்தாந்தமும் வேதாந்தமும் ஒன்றாக இருந்து, சைவ சித்தாந்தத்தில் அடங்கி உள்ளது. அதுவே சாஸ்திரங்களின் முடிவாகவும், எனது சொந்த அனுபவங்களின் மூலம் பெற்ற முடிவாகவும் இருக்கிறது. சைவ சித்தாந்தத்தின் சுத்த சித்தாந்தமாக வேதாந்தம் விளங்குகிறது. §

வழிபாடு மற்றும் சமய பாரம்பரியம் இல்லாமல் வேதாந்தம் என்றுமே தனித்து இயங்கியது இல்லை. ஆனால் வேதாந்தத்தை விவேகானந்தர் மேற்கு நாடுகளுக்கு கொண்டு வந்ததில் இருந்து, அது அவ்வாறே தனித்து விடப்பட்டுள்ளது. பாரம்பரியமிக்க சனாதன தர்மத்தை மதசார்பற்றதாக்க, இந்து சமயத்தில் இருக்கும் தத்துவ முடிவுகளை எடுத்துக்கொண்டு, அவற்றை சமயம், மற்றும் சரியை, கிரியை, சேவை மற்றும் பக்தியில் இருந்து தனித்து வைக்க, மேற்கத்திய மக்கள் மேற்கில் படித்த கிழக்கு நாடுகளை சேர்ந்த மக்கள் நவீன வேதாந்தத்தில் முயற்சி செய்து இருக்கிறார்கள். இந்து சமயத்தின் சிறந்த பழக்கங்கள், சடங்குகள் மற்றும் கோயில் வழிபாட்டை தவிர்த்து, அதன் உன்னதமான தத்துவத்தை மட்டுமே ஏற்றுக்கொள்ள, மற்ற மதங்களை சார்ந்த வேதாந்திகள் எந்தவித நோக்கமும் இல்லாமல் முயற்சி செய்துள்ளார்கள். இவற்றை எல்லாம் யோகத்திற்கு முன்பாக மேற்கொண்டால் தான், உண்மையில் யோகம் நல்ல பலனை வழங்கும் என்பதை அவர்கள் முழுமையாக உணர்ந்துகொள்ளவில்லை. இந்த விஷயங்களின் நுணுக்கங்களை ஆச்சாரமான இந்துக்கள் புரிந்துகொள்வார்கள். இத்தகைய தவறான விளக்கங்களின் பிரச்சனை திருமூலர் காலத்திலேயே இருந்திருக்க வேண்டும், அதனால் தான் அவர் “வேதாந்தம் சுத்தம் விளங்கிய சித்தாந்தம் (வேதாந்தம் என்பது சுத்தமான சைவ சித்தாந்தம்)” (பாடல் 1422) என்றும்

“கேடறு ஞானி கிளர்ஞான பூபதி
பாடறு வேதாந்த சித்தாந்த பாகத்தின்
ஊடுறு ஞானோ தயனுண்மை முத்தியோன்
பாடுறு சத்தசை வப்பத்த நித்தனே” (பாடல் 1428) என்றும்

குறிப்பிட்டுள்ளார்.§

வேதாந்தம் மற்றும் சித்தாந்தத்திற்கு இடையே இணக்கத்தை ஏற்படுத்துவதில் திருமூலர் முன்னோடியாக இருந்திருக்கலாம். ஆனால் திருமூலர் வேதாந்தம் என்று எதை குறிப்பிடுகிறார்? ஆதி சங்கரர் வேதாந்தம் பற்றிய தனது விளக்கங்களை, சில நூற்றாண்டுகள் கழித்து வழங்கினார். அதைப் போலவே ஒரு ஆழ்நிலை/உள்ளார்ந்த கடவுளாக இல்லாமல் இரண்டு தனித்தனி உண்மைப்பொருள்களாக இருக்கும் நிர்குண மற்றும் சகுண பிரம்மன், உலகின் முழுமையான யதார்த்தமின்மை மற்றும் ஞான பாதை மற்றும் அதற்கு முந்தைய நிலைகளில் இருப்பதாக கூறப்படும் வித்தியாசங்கள் போன்ற கோட்பாடுகள், அப்போது வேதாந்தத்திற்குள் சேர்க்கப்படவில்லை. *உபநிடதங்கள்* வழங்கிய நேரடி கோட்பாடுகளையே, திருமூலர் வேதாந்தமாக அறிந்து இருந்தார். உபநிடதங்கள் தெளிவாக "தத் துவம் அசி—அது நீயாக இருக்கிறாய்," "*அஹம் பிரம்மாஸ்மி*—நான் பிரம்மம்" என்று அத்வைதத்தை தெளிவாக தெரிவிக்கிறது. மேலும் சித்தாந்தம் வேதாந்தத்தை அடிப்படையாக கொண்டுள்ளது என்று திருமூலர் குறிப்பிடும் போது, இந்த அத்வைதத்தை குறிப்பிட அவர் வேதாந்தத்தை பயன்படுத்துகிறார், மற்றும் அது அவரை பொறுத்தவரையில் சித்தாந்தத்தின் அடிப்படையாக இருக்க வேண்டும். இது ரிஷியின் போதனைகளில் இருந்து விலகி செல்வதால், இது இன்றைய சித்தாந்தத்திற்குள் கொண்டு வரவேண்டிய மிகவும் முக்கியமான தேவைகளில் ஒன்றாக இருக்கவேண்டும். §



*கவாய் தீவில் இருந்த தனது மடத்திற்கு சைவ சித்தாந்தத்தின் புனிதமான பாதையை கொண்டு வந்து, தனது மடவாசிகள் மற்றும் சீடர்கள் மத்தியில்*

*திருவள்ளுவரின் திருக்குறள் மற்றும் திருமூலரின் திருமந்திரத்தை அறிமுகப்படுத்த, குருதேவா அந்த இரண்டு தமிழ் மகான்களின் ஆளுயர கருங்கல் சிலையை திறந்து வைத்தார்.*

........................§

அதனால் தான் நாங்கள் அவ்வப்போது “அத்வைத சைவ சித்தாந்தம்" என்ற சொல்லை பயன்படுத்துகிறோம். அது வேதாந்தத்தை தனது முடிவான குறிக்கோளாக கொண்டுள்ள சித்தாந்தத்தின் மீது எங்களுக்கு இருக்கும் நம்பிக்கையை வெளிப்படுகிறது. எப்போதும் முழுமையான ஐக்கியத்தை பெறாமல், கடவுள் மற்றும் ஆன்மா நிரந்தரமாக பிரிந்து இருப்பதாக கருதும், மெய்கண்ட தேவர் தொடங்கிய த்வைத சைவ சித்தாந்த பிரிவின் விளக்கத்தில் இருந்து, இது எங்களை வேறுபடுத்தி காண்பிக்கிறது. இரண்டு பிரிவுகள், பெரும்பாலான வழிகளில் ஒன்றாக இருந்து, இறையியல் விஷயங்களில் மாறுபட்டு இருப்பது வழக்கமான ஒன்று தான். வரலாறு முழுவதும் இதைப்போன்ற வேறுபாடுகள் நிரம்பியுள்ளன. இறைவனை அடையும் வழியில் இருக்கும் வேறுபாடு, இரண்டு கிளைகள் உருவாக காரணமாக இருக்கிறது. §

ஒரு புறம் யோகத்தின் ஆழத்திற்கு சென்று, சாதனாவில் மூழ்கி இருக்கும் ரிஷி, யோகி, முனிவர் அல்லது சித்தர் நேரடி அனுபவத்தை உருவாக்குகிறார். அவரது முடிவுகள் எப்போதும் அத்வைதம், ஒரு முழுமையான அத்வைத உணர்வை சார்ந்தே இருக்கின்றன. அது ஒரு நம்பிக்கையாகவும் இருப்பதில்லை. அது அனுபவத்தின் தத்துவ பின்விளைவாக இருக்கிறது. பெரும்பாலான சற்குருக்கள் மற்றும் அத்வைத பாதையை பின்பற்றும் பெரும்பாலானோர், அத்வைத சைவ சித்தாந்தத்தின் கோட்பாடுகளின் மீது உறுதியான நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள். §

இன்னொரு புறம் தத்துவவாதிகள், அறிஞர்கள் மற்றும் பண்டிதர்கள் அனுபவத்தை சார்ந்து இருக்காமல், யோகத்தை புறக்கணித்து, இறைவன் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை புரிந்துகொள்ளும் முயற்சியில் ஒரு நுணுக்கமான அறிவுணர்வு செய்முறை மூலமாக, அவர்கள் கோட்பாடுகளை ஊகித்து, பரிந்துரைத்து, சீர்செய்து மீண்டும் சீர் செய்ய வேண்டும். இவர்கள் பெரும்பாலும் சம்சாரிகளாக இருக்கிறார்கள் மற்றும் அவர்களின் சிந்தனை த்வைத சைவ சித்தாந்தத்தின் ஏதாவது ஒரு வடிவத்தை நோக்கி வழிநடத்தி செல்கிறது. இரண்டும் யதார்த்தமான பிரிவுகள் தான். இரண்டும் பாரம்பரிய பிரிவுகள் தான், மற்றும் அவற்றை ஒப்பிடுவது வெறுக்கத்தக்க விளைவுகளை ஏற்படுத்தும். ஆனால் அவை முற்றிலும் மாறுபட்டு இருக்கின்றன, மற்றும் அந்த வித்தியாசங்களை புரிந்துகொள்வது நல்லது.§

நீங்கள் பரமாத்துமா, பரசிவ மற்றும் ஆன்மாவிற்கு இடையிலான வித்தியாசத்தை புரிந்துகொள்ள வேண்டும். பரமாத்துமா என்பது உலகில் நாம் வழக்கமாக அடையும் பொருளை போல, அதை நாடிச் சென்று

பெறவேண்டும் என்று பலர் கருதுகிறார்கள். ஆனால் உங்களிடம் இருந்து பரமாத்துமாவை இம்மியளவும் பிரிக்க முடியாது. நீங்கள் ஏதாவது ஒரு இடத்திற்கு சென்று, வாங்கிக்கொண்டு வர முடியாது. ஆனால் உருவமற்ற, ஆழ்நிலை பரமாத்துமா உங்களை விட்டு என்றுமே பிரிவது இல்லை. அது உங்கள் இதயத்துடிப்பைக் காட்டிலும் அதிக அருகாமையில் இருக்கிறது. §

சிவபெருமான் தனிப்பட்ட ஆன்மாக்களை உருவாக்கி, முழுமையான வடிவமாக, முதன்மையான ஆன்மாவாக இருப்பதால், அவர் ஆதி ஆன்மா என்று அழைக்கப்படுகிறார். தனிப்பட்ட ஆன்மாவிற்கு ஒரு தொடக்கம் இருக்கிறது, மற்றும் இறைவனுடன் ஐக்கியமாவது அதன் முடிவாக விளங்குகிறது. அதற்கு உருவமும் இருக்கிறது. எல்லா உருவத்திற்கும், ஒரு தொடக்கமும் ஒரு முடிவும் இருக்கிறது. முழுமையான பரமாத்துமாவாக இருக்கும் பரசிவத்திற்கு உருவம் இல்லை, காலமில்லை, முடிவுமில்லை மற்றும் தொடக்கமும் இல்லை. எல்லா வஸ்துக்களும் பரமாத்துமாவில் இருக்கின்றன, மற்றும் பரமாத்துமா எல்லா வஸ்துக்களிலும் இருக்கிறார். பலர் பரமாத்துமாவை ஒரு நாடவேண்டிய பொருளாக கருதுகிறார்கள். நீங்கள் ஒரு இடத்தில் இருந்து கிளம்பி, வேறொரு இடத்திற்கு சென்று பரமாத்துமாவை வாங்க, இன்று முயற்சி செய்வீர்கள். இன்று கிடைக்கவில்லை என்றால் மீண்டும் நாளை முயற்சி செய்வீர்கள். அது வெளியே நாடும் பொருள் இல்லை. அது வெளியுலகில் தேடி அடையும் ஒரு பொருளாக இல்லாமல், முழுமையான  உயிர்சக்தியாக நீங்கள் பெறும் மாற்றமாக உங்களுக்குள் இருந்து வருகிறது. இருந்தாலும் நீங்கள் அதை நாடி அதை அடைகிறீர்கள் என்பதால் அதை விளக்குவது மிகவும் கடினம். §

தனிப்பட்ட ஆன்மா மாறுபட்டது. அதற்கு ஒரு உருவம் இருக்கிறது. ஆன்மா மிகவும் புனிதமான மற்றும் நுணுக்கமான உருவமாக இருந்தாலும், அந்த உருவம் உருவத்தின் விதிகளை மதிக்கிறது. அந்த ஆன்மா சிவபெருமானிடத்தில் தொடங்கி, அவருடன் நடைபெறும் சங்கமத்தின்  மூலம் முடிவையும் பெறுகிறது. கடவுளை, உங்களது பரமாத்துமாவை புரிந்துகொள்வதே வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும். இது எல்லா சமயங்கள், சமயங்கள் மேற்கொண்ட முயற்சிகளின் முடிவாக விளங்குகிறது. அதனால் தான் நாம் வலுவான மற்றும் அதிக பக்குவமடைந்த சக்திகளாக மாறுவதற்கு, இயற்கையின் விதிகளுடன் நமது மனதில் இணக்கத்தை ஏற்படுத்தி, நம்மை மேம்படுத்தும் செய்முறையை சமயம் என்று அழைக்கிறோம். நாம் உயர் சக்திகளாக மாறி, உயர்ந்த சக்கரங்களில் வாழ்ந்து, கடவுளை அதிகமாக நெருங்குகிறோம். கடவுள் நம்மை நெருங்குவது இல்லை. இதற்கு மேல் கடவுளால் எவ்வாறு நெருங்க முடியும்? அவர் தற்போது உங்களது சிந்தனைகள், சுவாசம், கால்கள் மற்றும் கைகளை காட்டிலும் அதிக நெருக்கமாக இருக்கிறார். §

உங்களில் சிலருக்கு புரிந்துகொள்வது கடினமாக இருப்பதை நான் உணர்வதால், நான் இதை வேறு விதமாக விளக்க முயற்சி செய்கிறேன். மனிதனுக்கு ஐந்து உடல்கள் இருக்கின்றன. அதில் ஒவ்வொன்றும் முந்தைய உடலை காட்டிலும் அதிக நுணுக்கமாக இருக்கிறது. மனிதனின் ஆன்மாவை ஒரு ஒளி விளக்கு போலவும், அவரது பல்வேறு உடல்கள் அல்லது உரைகள் பல்வேறு நிறங்களில், தூய வெள்ளை ஒளியை துணிப்போல மூடி இருப்பதாகவும் கற்பனை செய்துகொள்ளுங்கள். இவற்றில் தூல உடல் அதிக வெளிப்புறமாக இருக்கிறது. அதன் பிறகு பிராண உடல் இருக்கிறது, மற்றும் தூல உடலின் நகலாக இருக்கும் சூட்சும உடல் இருக்கிறது. அதன் பிறகு மனோமய உடல் இருக்கிறது. அதில் ஒருவர் உடனடியாக எந்த இடத்திற்கும் பயணம் செய்யலாம். §

அதன் பிறகு ஆனந்தமய கோசம் இருக்கிறது, அதை நான் (ஆங்கிலத்தில்) *ஆக்டிநோடிக் பாடி* என்று குறிப்பிடுகிறேன். இந்த உடல் ஒவ்வொரு பிறவியிலும் வளர்ச்சி பெற்று, புதிய வெளிப்புற கோசங்களுடன் மறுபிறவி எடுக்கிறது மற்றும் தூல உடல் பூமியோடு சேரும் போது, இறக்காமல் இருக்கிறது. இந்த உடலே இறுதியில் ஒளி உடலாக, ஆன்மாவின் பொன்னிற உடலாக வளர்ச்சி பெறுகிறது. இந்த ஆனந்தமய கோசம் தனது முடிவான பரிணாம வளர்ச்சியில் அதிக முழுமையான வடிவமாக, மனித வடிவத்தின் நகலாக விளங்குகிறது. தூல பிறவிகள் நின்றதும், உள்பொருளின் நுணுக்கமான உலகங்களில் இந்த ஆனந்தமய கோசம் வளர்ச்சி பெறுகிறது. நிர்விகல்ப சமாதி, இறைவனின் உணர்தலுக்கு பிறகும், ஞானோதயம் பெற்ற ஆன்மாவின் பிரகாசமான ஆன்மீக உடல், சிவபெருமானுடன் இறுதியான ஐக்கியம் நடைபெறும் வரை அந்தர்லோகங்களில் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருகிறது. §

“இறைவன், இறைவன், இறைவன்,” என்று எங்கும் இறைவன் இருக்கிறார் என்று நான் சொல்ல விரும்புகிறேன். எங்கும் ஒரு இறைவன் மட்டுமே இருக்கிறான், ஆனால் முழுமுதற்பொருள், தூய உணர்வு அல்லது எல்லா வடிவங்கள் வழியாக பாய்ந்து செல்லும் பரமாத்துமா, மற்றும் எல்லா இருப்புக்களின் சிருஷ்டிகர்த்தா என்று தெய்வீக சக்தியின் மூன்று அம்சங்களை மனிதன் கவனமாக ஆய்வு செய்வதன் மூலம், அவனுக்கு அந்த பரமாத்துமா பற்றிய புரிதல் வலுவடைகிறது. §

மனதை, உருவத்தை மற்றும் நுணுக்கமான புரிதலை கடந்த முழுமையான பரமாத்துமாவாக, பரசிவமாக காலம் மற்றும் உருவத்தை கடந்து, பரவெளியற்ற பரம்பொருளாக சிவபெருமான் இருக்கிறார். பரசிவத்தை அறிந்துக்கொள்வதற்கு அனுபவிக்க மட்டுமே முடியும், ஆனால் அதன் பிறகு அதை விளக்க முடியாது. சிவபெருமான் எல்லா இருப்புக்களின் தூய உணர்வாக, துணைப்பகுதியாக அல்லது மூலாதாரப் பொருளாக இருக்கிறார். அவர் சச்சிதானந்தமாக அல்லது முடிவான

உண்மையாக, தூய உணர்வாக அல்லது பேரின்பமாக, எல்லா வடிவங்கள் வழியாக பாய்ந்து செல்லும் பரமாத்துமாவாக இருக்கிறார். ஆதி ஆன்மாவாக, மகேஸ்வரனாக மற்றும் முதன்மையான மற்றும் மிகவும் நிறைவான உயிர்சக்தியாக சிவபெருமான் இருக்கிறார். அவர் என்றுமே சிருஷ்டிக்கப்படாமல், மூலாதாரமாக சிருஷ்டக்கர்தாவாக இருக்கிறார். அவர் எல்லா உயிர்சக்திகளின் கடவுளாக இருக்கிறார். அவர் எல்லா ஆன்மாக்களையும் தனக்குள்ளிருந்து உருவாக்குகிறார், மற்றும் அவர் தனது நிரந்தர திருநடனத்தில் வடிவங்களை தொடர்ந்து உருவாக்கி, காத்து அழித்து வருகிறார். சிவபெருமான் ஆக்கும் கடவுள், காக்கும் கடவுள் மற்றும் அழிக்கும் கடவுளாக இருக்கிறார் என்று எனக்கு எனது ஒன்பதாவது வயதில் கற்றுத் தரப்பட்டது. பிரம்மா, விஷ்ணு மற்றும் ருத்ரன் என்று மூவராகவும் சிவபெருமான் இருக்கிறார் என்பதை அறிந்து இன்றுவரை நம்பி வருகிறேன். இதுவே சனாதன தர்மத்தின் சைவ சமயத்தின் சித்தாந்தங்கள் ஆகும். §

நீங்கள் எல்லோரும் நமது சமயத்தின் தலைசிறந்த சாஸ்திரங்களை படிக்க வேண்டும். இந்த சித்தர்கள் வழங்கிய தெய்வீக அறிவுறுத்தல்கள், உங்களது சொந்த ஆன்மீக அறிதலை விழிக்க வைக்கும். *திருமந்திரம்* பெரும்பாலும் *திருக்குறளை* போன்றே அமைந்துள்ளது. நீங்கள் அவை இரண்டையும் குழந்தைகளுக்கு கற்றுத்தந்து, அது வழங்கும் ஞானத்தை தினசரி வாழ்க்கையில் பயன்படுத்தலாம். சிக்கல்கள் மற்றும் குழப்பங்கள் நிறைந்த காலத்தில் நீங்கள் அவற்றை வழிகாட்டியாக பயன்படுத்தலாம், மற்றும் அவை உங்களை சரியான பாதையில் உறுதியாக அழைத்து செல்லும். நீங்கள் அவற்றை உங்கள் வீட்டில் புனிதமான பூஜை முடிந்த பிறகு அல்லது கோயில் பிரகாரங்களில் துதிப்பாடல்களைப் போல பாடலாம். ஒவ்வொரு செய்யுளையும் ஒரு பிரார்த்தனையாக, ஒரு தியானமாக மற்றும் நமக்கு முன்பாக இருக்கும் சிறந்த பாதையை பற்றிய ஒரு புனிதமான நினைவூட்டலாக பயன்படுத்தலாம். §

இதை புரிந்துகொள்வது கடினம் என்றாலும், நீங்கள் அதற்காக உற்சாகத்தை இழக்க வேண்டாம். அதில் இருப்பது அனைத்தையும் புரிந்துகொள்வதற்கு இந்த பிறவி அல்லது பல பிறவிகள் தேவைப்படும் என்பதையும், அது தங்களது தனிப்பட்ட சாதனாக்களில் ஆழமாக செல்பவர்களின் பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டது என்பதையும் மட்டும் புரிந்துகொள்ளுங்கள். இது *வேதங்கள்* மற்றும் *ஆகமங்களை* முழுமையாக அறிந்திருந்த ஒரு மகானால் வழங்கப்பட்டது, மற்றும் அதை புரிந்துகொள்வதற்கு, நீங்களும் இந்த மற்ற சாஸ்திரங்களில் அதிக தேர்ச்சி பெற்று, ஒரு மிகப்பெரிய தகுதியை மெதுவாக பெறலாம். §

திருமூலர் வாழ்ந்த காலத்து தலைமுறைக்கு சைவ சித்தாந்தத்தை தெற்கில் பரப்பும் நோக்கத்துடன் அவரது இமாலய குருவால் அவர் அனுப்பப்பட்டதும், கிழக்கு மற்றும் மேற்கிற்கு இடையே பாலத்தை அமைக்க யோக சுவாமி

குருதேவாவை அமெரிக்காவிற்கு திருப்பி அனுப்பியதையும் ஒப்பிட்டு பார்ப்பது சுவாரசியமாக இருக்கும். உலகெங்கும் இருக்கும் இன்றைய சைவ சாதகர்களுக்கு திருமூலர் செய்தது போன்ற சமயப்பணியை குருதேவாவும் செய்தார். இருவரும் தங்களது ஆழமான உணர்தல்களை ஆய்வு செய்து, சுருக்கி மற்றும் விளக்க பயன்படுத்தி, சைவ சமய கலாச்சாரம் மற்றும் ஆன்மீக பொக்கிஷங்களை ஒரு கலாச்சாரம் மற்றும் ஒரு மொழியில் இருந்து இன்னொன்றுக்கு எடுத்து சென்று, சைவ சமயத்தை ஒரு புதிய யுகத்திற்கு வழங்கினார்கள். §

திருமூலரின் உறுதியான அத்வைத தத்துவம் மற்றும் வலுவாக சைவ சமய வெளிப்படுத்திய முறையின் காரணமாக, அவர் மீதும் அவரது ஆழமான ஆன்மீக பாடல்கள் மீதும் குருதேவாவிற்கு காதல் ஏற்பட்டு இருந்தது. அவர் வழங்கிய ஒவ்வொரு உரையிலும் திருமூலர் எழுதிய படைப்பை குறிப்பிட்டு, முகத்தில் புன்னகையுடன், தனது சொந்த உணர்தல்களுடன் முழுமையான இணக்கம் மற்றும் உடன்பாட்டுடன் இருந்த ஒரு சாஸ்திரத்தை தேடிப்பிடித்த திருப்தியை வெளிப்படுத்துவார். *திருமந்திரத்தில்* இருந்து சில பாடல்களை இங்கே காணலாம். §

கடலிடை வாழ்கின்ற கௌவை உலகத்து

உடலிடை வாழ்வுகொண்டு உள்ளொளி நாடின்

உடலிடை வைகின்ற உள்ளுறு தேவனைக்

கடலின் மலிதிரைக் காணலும் ஆமே. 3028§

பெருஞ்சுடர் மூன்றினும் உள்ளொளி யாகித்

தெரிந்துட லாய் நிற்கும் தேவர் பிரானும்

இருஞ்சுடர் விட்டிட்டு இகலிடம் எல்லாம்

பரிந்துடன் போகின்ற பல்கோரை யாமே. 3029§

உணர்வும் அவனே உயிரும் அவனே

புணரும் அவனே புலவி அவனே

இணரும் அவன்தன்னை எண்ணலும் ஆகான்

துணரின் மலர்க்கந்தம் துன்னிநின் றானே. 2857§

இருக்கின்ற எண்டிசை அண்டம்பா தாளம்

உருக்கொடு தன்னடு ஒங்கஇவ்வண்ணம்

கருக்கொடு எங்கும் கலந்துநின் றானே

திருக்கொன்றை வைத்த செழுஞ்சடை யானே. 3042§

1977 ஆம் ஆண்டு ஒரு நாள், அவர் தனது மூத்த சுவாமிகள் சிலரை தனது அலுவலகத்திற்கு அழைத்து, அவர்களை இன்னொரு தென்னிந்திய புனித நூலான *திருக்குறளை* வாசிக்க சொன்னார். மைலாப்பூரில் வாழ்ந்த நெசவாளர் சமூகத்தை சேர்ந்த இந்த மகான் எழுதிய செய்யுட்களுக்கு, யோக சுவாமி அதிக முக்கியத்துவம் அளித்து இருந்ததை அவர் அறிந்து இருந்தார். மூன்று பிரிவுகளுடன், வாழ்வியல் கோட்பாடுகள் மற்றும் மனிதன் எதிர்கொள்ளும் சூழ்நிலைகள் பற்றிய உட்பார்வைகள் நிறைந்து இருக்கும், இந்த உலகப்புகழ் பெற்ற தமிழ் இலக்கியத்தை தினமும் பள்ளிச்சிறுவர்கள் படிக்கிறார்கள்; ஆனால் அந்த நூலின் கருத்து ஆங்கிலத்தில் பிரபலமாக இல்லை. அந்த உலகப் பொதுமறையின் பிரிட்டிஷ் ஆங்கில மொழிபெயர்ப்பை சுவாமிகள் குருவிடம் காண்பித்தார்கள். அது அவர் காதுகளுக்கு விசித்திரமாக மற்றும் செயற்கையாக ஒலித்தது. அவர் அந்த புத்தகத்தை எடுத்து, அதில் பல குறள்களை உரக்க படித்து, ஓரிடத்தில் படிப்பதை நிறுத்தி, “இது நன்றாக இருக்கிறது, ஆனால் அதற்கு என்ன பொருள்?” என்று கேட்டார். அதன் பொருள் விவாதிக்கப்பட்டது. தமிழ் அகராதிகள் அலசப்பட்டன, மற்றும் அரை மணிநேரம் கழித்து, மிகவும் பகட்டாக இருந்த அந்த உரைநடை மொழிபெயர்ப்பு புதிய வார்த்தைகளின் மூலம் அழகாக மாற்றியமைக்கப்பட்டது. §

மிகவும் சுருக்கமான பொருளை பெற்றதும் மிகவும் மகிழ்ச்சியடைந்த குருதேவா, முழுமையான மற்றும் தெளிவான விளக்கத்தை வலியுறுத்தி, திருக்குறள் முழுவதையும் தமிழில் இருந்து நவீன அமெரிக்க பயன்பாட்டிற்கு பொருந்தும் படியாக மொழிபெயர்க்கும் பணியை தனது சுவாமிகளுக்கு வழங்கினார். அவர்கள் குருதேவாவின் பாணியை கடைபிடித்து, அன்றே பணியை தொடங்கினார்கள். 1,080 குறட்பாக்களுடன் (அந்த துறவிகள் இறுதியான 250 செய்யுள் பகுதியை மொழிபெயர்க்க வில்லை. புலனுணர்வை அடிப்படையாக கொண்ட அந்த மென்மையான காதல் செய்யுளை, இன்னொரு எழுத்தாளர் எழுதியதாக கருதப்படுகிறது) அது சிறிய வேலையாக இருந்தாலும், அந்த பழங்கால உரை குறள் வெண்பாவை சார்ந்து இருந்தது, தமிழ் மொழியின் நுணுக்கங்களுடன் இருந்தது; மற்றும் நீண்ட இடைவெளிகளுடன், இருபத்தி இரண்டு வருடங்கள் கழித்து, அந்த படைப்பு நிறைவு செய்து வெளியிடப்பட்டது. 1999 ஆம் ஆண்டு *வீவர்ஸ் விஸ்டம்* இறுதியாக, தெளிவான அமெரிக்க ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. “திருவள்ளுவர் தனது படைப்பில் குறிப்பிட்டு இருந்த அனைத்து விஷயங்களுடனும் நாம் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். அவரது குறிக்கோள்கள் நமது வாழ்க்கையில் அங்கமாக இருக்கின்றன,” என்று குருதேவா முடிவில் தனது சுருக்கத்தை வழங்கினார். §

அவர் அந்த மொழிபெயர்ப்பை முந்தைய மொழிபெயர்ப்புக்களுடன் ஒப்பிட்டு பார்க்க விரும்பினார். அவர் இரண்டையும் அருகில் வைத்து, சிரித்துக்கொண்டு, “நாம் சிறப்பாக செய்துள்ளோம்,” என்று கூறினார். உதாரணத்திற்கு, குறள் 15 மழையின் முக்கியத்துவத்தை விளக்குகிறது. 1886 ஆம் ஆண்டு Rev. G. U. போப் வழங்கிய மொழிப்: “மழை அனைத்து வேலைகளையும் செய்கிறது: அது பரவலாக அழிவை ஏற்படுத்துகிறது, பிறகு சரியான நேரத்தில் உதவிகளை வழங்குகிறது; முன்பு இருந்த சந்தோஷமான காலத்தை போல, அது அழிவை சந்தித்த மக்களை மேம்படுத்துகிறது.” குருதேவாவின் சுவாமிகள், சாரத்தையும் நேரடியாக தமிழ் மொழியையும் பின்பற்றி எழுதியது: “மழை அழிவை ஏற்படுத்துகிறது, மற்றும் அந்த மழை அழிவை ஏற்படுத்தியவர்களை மேம்படுத்தவும் செய்கிறது.” இதற்கு இன்னொரு எடுத்துக்காட்டாக, புலான்மறுத்தல் அதிகாரத்தில் வரும் திருக்குறளைப் பார்க்கலாம். 1962 ஆம் ஆண்டு, அந்த குறளை கே. எம். பாலசுப்ரணியம் “காப்பாற்ற தெரியாதவர்களுக்கு செல்வத்தின் ஆசிகள் கிடைக்காது. இறைச்சி உண்பவர்களுக்கு இரக்கத்தின் ஆசிகள் கிடைக்காது,” என்று மொழிபெயர்த்தார். “ஊதாரித்தனமாக இருப்பவர்களிடம் செல்வம் இருக்காது, இறைச்சி உண்பவர்கள் இதயங்களில் இரக்கத்தை பார்க்க முடியாது,” என்று சுவாமிகள் மொழிப்பெயர்த்தார்கள். §

**சைவ சமயம் ஒரு நவீன குரலை பெறுகிறது**

தனது கவாய் தலைமையகத்தை நிறுவுவதில் அவர் மும்முரமாக இருந்ததால், அவருடைய அதிகமான நேரத்தை பயன்படுத்திக் கொண்டு குறைவான பலனை வழங்கிய வெளிப்புற தாக்கங்களில் இருந்து, பல வருட இடைவெளிக்கு பிறகு 1978 ஆம் ஆண்டு விடுதலை பெற்று இருந்ததால், குருதேவா மீண்டும் ஆக்கப்பூர்வமான வெளியீட்டில் ஈடுபட்டார். அது ஒரு எளிமையான துண்டு பிரசுரங்களின் தொடர்ச்சியுடன் தொடங்கியது. அதற்கு அவர் பிரசாத என்று பெயரிட்டார், அதாவது அருள் நிறைந்த பரிசுகள் என்று பொருள். அதன் பிறகு இன்ஸ்பயர்ட் டாக்ஸ் என்று தலைப்பில், விர்ஜினியா சிட்டியில் வெளியிட்ட அதே பாணியை பயன்படுத்தி சிறிய புத்தகங்கள் வெளிவந்தன. அவர் தன் வாழ்நாள் முழுவதும் தனது போதனைகளை வழங்க பயன்படுத்திய *உபதேச* முறையில் இருந்து, இந்த 16-24 பக்க சிறிய புத்தகங்களை துறவிகள் அச்சிட்டு இருந்தாலும், அவை நேர்த்தியாக இருக்கவேண்டும் என்று அவர் விரும்பியதால், அவை ஹானலுலுவில் திறமைமிக்க முறையில் டைப்செட் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். §

அது ஃபோட்டோ டைப்செட்டிங் விலைப்பட்டியல் வரும் வரை தொடர்ந்தது. $700 கோரி ரசீது வந்ததும் அதிர்ச்சி அடைந்த குருதேவா, இதற்காக மேலும் செலவு செய்ய மறுத்துவிட்டார். அதற்கு பதிலாக, மடத்திலேயே சொந்தமாக டைப்செட்டிங் செய்ய வழிகளை தேடுமாறு, தனது வெளியீட்டு குழுவிடம் கேட்டுக்கொண்டார். அதைப்போன்ற ஒரு கருவி அப்போது தான் சந்தைக்கு வந்து இருந்ததால், நேரப்பொருத்தம் சரியாக இருந்தது, மற்றும் குருதேவா

ஒரு குவாட்ரிடெக் 1200 ஃபோட்டோடைப்செட்டிங் இயந்திரத்தை வாங்க, தனது துறவிகளுடன் ஒஹு பறந்து சென்றார். எதிர்காலத்தில் இந்த துறவிகள் இந்த கருவியை பயன்படுத்தி ஒரு நியாயமான விலையில், தங்கள் தனிப்பட்ட திறமையால் எழுத்துரு (font) மற்றும் வடிவத்தை (style) மாற்றி அமைத்து, அவர்கள் வெளியீடு செய்த முறையையே மாற்றி அமைத்தது. §

இந்த விளைவு அதிக உற்சாகம் தருவதாக இருந்தது. அச்சுப்பணி சிறிய ஓடைகளாக தொடங்கி, பெரிய நதிகளாக வெளிவந்தன. அந்த கருவியின் வேகம் குருதேவாவை உற்சாகப்படுத்தியது. அவர் தான் முன்பு வழங்கிய உரையை பார்த்ததும், அதை ஒரு நாள் முழுவதும் கவனமாக பார்த்தார். அதன் பிறகு அந்த உரையை அடுத்த நாள் டைப்செட் செய்வார். அவர் அதிக உற்சாகத்துடன் இருந்ததால், ஒரு விரைவான முறையில் இந்த பணியை தொடர்ந்து செய்துக்கொண்டு இருந்தார். இந்த முறை சுழற்சி முன்பு போல இல்லாமல், வெளிவந்த போதனைகள் சுத்த சைவ சமயம் சார்ந்ததாக இருந்தன. 1969, 1970 மற்றும் 1972 ஆம் ஆண்டு அவர் இலங்கையில் இருந்து வந்த பிறகு, அவர் சைவ சித்தாந்தத்தின் மீது தியானம் செய்து, சைவ சித்தாந்தம் பற்றி பேசி, சைவ சித்தாந்தத்தை பின்பற்றி வாழ்ந்தார். அதன் பிறகு அவருக்குள் அடங்கி இருந்த அனைத்தும் நூறு வழிகளில் வெளிவந்தன. §

*ஃப்ரீ வில் அண்ட் தி டெய்டீஸ் இன் இந்துயிசம் (Free Will and the Deities in Hinduism); தி ஹாண்ட் தட் ராக்ஸ் தி கிரேடில் ரூல்ஸ் தி வேர்ல்ட் (The Hand That Rocks the Cradle Rules the World); புரோடெக்ட், பிரசர்வ் அண்ட் பிரமோட் தி சைவ தர்மா (Protect, Preserve and Promote the Saiva Dharma); தி டூ பெர்பெக்சன்ஸ் ஆஃப் அவர் சோல் (The Two Perfections of our Soul); தி மெடிடேடர் (The Meditator),* மற்றும் மேலும் பல தலைப்புகளில் வெளிவந்தன. அந்த புத்தகங்களில் *இந்துயிசம், தி கிரேட்டெஸ்ட் ரெளிஜியன் இன் தி வேர்ல்ட் (Hinduism, the Greatest Religion in the World)* மிகவும் பிரபலமாகவும் சர்ச்சைக்குரியதாகவும் இருந்தது. அந்த தலைப்பை பார்க்கும் போது, ஆர்வத்துடன் சமயத்தை பின்பற்றும் ஒருவர், தனது சமயத்தின் மேன்மையை வலியுறுத்தி எழுதிய ஒரு மதவெறி பழியுரையாக நினைத்து சிலர் பயந்தார்கள். ஆனால் அந்த புத்தகத்தில் சனாதன தர்மம் பற்றிய ஒரு சமநிலையான சுருக்கம் இருந்தது மற்றும் அதனுடன் மற்ற மதங்கள் மீது இந்து சமயத்தின் உள்ளார்ந்த மற்றும் பிரத்யேக சகிப்புத்தன்மை பற்றிய இதயத்தை தொடும் ஒரு அறிக்கையும் இருந்தது. அது மதத்தின் பெருமையாக குறிப்பிடப்பட்டிருந்த அம்சங்களின் பட்டியலில் இடம்பெற்று இருந்தது. அதில் இருந்து ஒரு பகுதி:§

> இந்து சமயம் ஒவ்வொரு முக்கிய சமயத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதாலும், அதனால் மற்ற சமயங்கள் அனைத்தையும் கிரகித்து, கௌரவித்து அதன் சாஸ்திரங்கள், அதன் மகான்கள் மற்றும் அதன் தத்துவங்களை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதாலும், இந்து சமயம் “ஆன்மீகத்தின் தொடக்கம்" மற்றும் “எல்லா சமயங்களின் தாயாகவும்" என்று அழைக்கப்பட்டது. இது உண்மையான எல்லா ஆன்மீக

முயற்சிகளின் மீது இந்து சமயம் பரிவுடன் இருப்பதாலும், தெய்வத்துடன் ஐக்கியமாகும் பாதையில் எல்லா ஆன்மாக்களும் வளர்ச்சி அடைகின்றன என்பதையும், அவை அனைத்தும் இந்த பிறவி அல்லது அடுத்த பிறவியில், எந்த விதிவிலக்கும் இல்லாமல், ஆன்மீக ஞானோதயம் மற்றும் முக்தியை அடைவார்கள் என்பதை தவறாமல் அறிந்து இருப்பதாலும் சாத்தியமாகிறது.§

தனது சமயம் அதிகம் பரந்து விரிந்து, ஆன்மீக விரிவாக்கத்திற்கு மிகவும் யதார்த்தமான மற்றும் பயனுள்ள கருவி என்பதை ஒரு இந்து இயல்பாக உணர்வது மட்டுமில்லாமல், உலகில் இருக்கும் எல்லா சமயங்களும் சாசுவதமான ஒரே பாதையின் வெளிப்பாடுகள் என்பதை அவர் தனது மனதில் பதியவைத்து, அதில் ஒவ்வொன்றையும் தனது கோட்பாடுகள் மற்றும் சமயக்கொள்கையின் அடிப்படையில் புரிந்துக்கொள்கிறார். சில நம்பிக்கைகள் மற்றும் உட்புற அணுகுமுறைகள் மற்றவைகளை காட்டிலும் அதிக அனுகூலமானவை என்பதையும், அதனால் எல்லா மதங்களும் ஒன்றல்ல என்பதையும் அவர் அறிந்து இருக்கிறார். அவை பல வழிகளில் மாறுபடுகின்றன. ஆனால், இந்து சமயத்தில் தங்கள் பாதையே "ஒரே பாதை" என்ற உணர்வு எதுவும் இல்லை. ஒரு சுத்தமான மற்றும் ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கைக்கு வழிவகுக்கும் எல்லா முயற்சிகளுக்கும், ஒரு கடவுள் பற்றுள்ள இந்து ஆதரவாக இருப்பார் மற்றும் ஒரு சிரத்தையுள்ள  பக்தனை அவர் தேர்ந்தெடுத்த பாதையில் இருந்து திசைத்திருப்ப நினைப்பதே தவறு என்று கருதுவார். இந்த இந்து மனதைத்தான் நாங்கள் கற்றுத்தந்து, பயிற்சி செய்து, பாதையில் இருக்கும் சாதகர்களுக்கு வழங்கவும் செய்கிறோம். §

குருதேவா *எ காடேகிசம் பார் சைவைட் இந்துஸ்* (*A Catechism for Saivite Hindus*) மற்றும் *எ க்ரீட் பார் சைவைட் இந்துஸ்* (*A Creed for Saivite Hindus*) என்று இரண்டு படைப்புக்களை உருவாக்கி, தனது படைப்புக்களில் மிகவும் முக்கியமானதாக கருதிய மதத்தின் அறிக்கைகளை சுருக்கினார். அந்த *காடேகிசம்* சைவ சமயத்தை பின்பற்றி வாழ்வது பற்றிய கேள்விகள் மற்றும் சுருக்கமான பதில்களை கொண்டிருந்தது, மற்றும் *க்ரீட்* தத்துவத்தை சுருக்கமாக விளக்கிய பன்னிரண்டு நம்பிக்கைகளை கொண்டிருந்தது. எதிர்கால சந்ததிகளின் எண்ணங்களுக்குள் சைவ சமயத்தின் ஆற்றல் மற்றும் சக்தியை சுமந்து செல்ல, ஒவ்வொரு வார்த்தையும் கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டு, சமூகத்தில் இருந்த மூத்த சுவாமிகளுடன் விவாதிக்கப்பட்டு, ஆய்வு செய்து வடிவமைக்கப்பட்டன. இந்த பணி மார்ச் 7, 1978 மகாசிவாத்திரிக்கு சில நாட்கள் முன்பாக பூர்த்தி அடைந்தது. அவர் அதன் பிறகு தினமும் தனது சீடர்கள் தொடர்ந்து சொல்வதற்கு, அந்த சுருக்கமான பன்னிரண்டு நம்பிக்கைகளின் சாரத்தை ஒரு கூட்டு சொற்றொடராக வடிவமைத்தார். அது சைவ சித்தாந்த நம்பிக்கைகளின் மிகவும் குறுகிய சுருக்கமாக இருந்தது. “உள்ளார்ந்த அன்பாகவும் யாவும்

கடந்த யதார்த்தமாகவும் சிவபெருமான் இருக்கிறார்," என்பதே அவர் வடிவமைத்த சொற்றொடர். §

இந்த காலகட்டத்தில் துறவற வாழ்க்கையின் பல நிலைகள் பதிவு செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட்டன. இது குருதேவாவுடன் இணைந்து செயல்பட்ட, இறையியல் பாடசாலையின் மூத்த துறவிகளுக்கு ஒரு தொடர் வேலையாக இருந்தது. இந்த பணியில் இருந்து தேவாலயத்திற்கு சாதகர், கெஞ்சி வேண்டுபவர் மற்றும் சமய அமைப்பில் சேர விண்ணப்பிப்பவரின் உறுதிமொழி புத்தகங்கள் வெளிவந்தன. ஒரு சைவ சந்நியாசி தனது வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்க வேண்டிய உறுதிமொழிகளுக்கு ஒரு முழுமையான ஆவணத்திற்கு முன்னேற்பாடு நடவடிக்கைகளை, குருதேவா ஏப்ரல் மாதத்தில் தொடங்கி இருந்தார். அது பின்னர் *தி ஹோலி ஆர்டர்ஸ் ஆஃப் சந்நியாஸ்* (சந்நியாச வாழ்க்கையின் புனித ஆணைகள்) என்ற பெயரில் வெளிவர இருந்தது. அதுவரை வாய்மொழியாக வழங்கப்பட்ட சைவ துறவியின் தர்மம் முதல்முறையாக ஒன்று திரட்டப்பட்டது. அது துறவியின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்து அவர்களது இலட்சியங்கள், ஒழுக்கங்கள் மற்றும் வாழ்முறை தெளிவாக வரையறுத்த ஒரு சுருக்கமான மற்றும் விரிவான ஆவணமாக இருந்தது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி குருதேவா தனது சைவ சித்தாந்த யோக சமூகத்தில் நுழைய ஒரு முறையான பிரமாணத்துடன், தனது சந்நியாசிகள் அனைவரையும் மீண்டும் தங்கள் உறுதிமொழிகளை எடுக்க செய்து, அந்த புதிய கையேட்டில் அவர்கள் கையொப்பத்தையும் பெற்றார். அவர் 1950 களின் இறுதியில் யோக சமூகத்தை முதல் முறையாக தொடங்கி இருந்தார், மற்றும் அது தற்போது அவரது வேலை மற்றும் பணியின் மையமாக மாறிக்கொண்டு இருந்தது. §

1970 முதல் 1980 வரை, பத்து வருடங்களுக்கு, அங்கத்தினர்கள், மாணவர்கள் மற்றும் விருந்தாளிகள் இல்லாமல் நாங்கள் இந்த கவாய் தீவில் வாழ்ந்து வந்தோம். எங்களுக்கு விருந்தாளிகளாக யாத்திரை மேற்கொண்ட எனது சீடர்கள் மற்றும் சுவாமிகள், பண்டிதர்கள், அறிஞர்களைப் போன்ற இளம் துறவிகளின் ஆன்மீக வாழ்க்கைகளை மேம்படுத்த அதிக தேர்ச்சி பெற்ற விசேஷ விருந்தினர்கள் மட்டுமே வருகை தந்தனர். இந்த காலகட்டத்தில், சைவ சித்தாந்தத்தின் இரண்டு பிரிவுகள், சைவ சமயத்தின் ஆறு பிரிவுகள், இந்து சமயத்தின நான்கு பிரிவுகள் மற்றும் உலகின் எல்லா முக்கிய மதங்களையும் ஆழமாக ஆய்வு செய்வது உட்பட, எங்களது பதிப்புக்களில் சாஸ்திர ஆராய்ச்சி செய்வதில் மடவாசிகள் ஈடுபட்டு இருந்தனர். அவர்கள் அழிந்து இருந்த தேனீ வளர்ப்புத்துறையை மீட்டு, அதனால் வருமானத்தை ஈட்டனர். அவர் தீவு முழுவதிலும் தேனீக் கூட்டங்களை 300 யில் இருந்து 3,000 வரை பெருக்கி, அந்த துறைக்கு புத்துயிர் வழங்கினார்கள். இது அந்த தீவில் அடிமட்ட நிலையில் இருந்த மக்களுடன் உருவங்களை வளர்த்துக்கொள்ள நல்ல வழிகளை ஏற்படுத்தி தந்தது. §

குருதேவாவின் போதனைகள் சிக்கலான சிந்தனை மற்றும் சூட்சுமமான மறைபொருள்கள் நிறைந்து இருந்தாலும், அவை மிகவும் எளிமையாக இருந்தன. மனிதன் உடலாக, மனமாக அல்லது உணர்ச்சியாக இல்லை என்று அவர் பேசினார். மேலும் யோக சுவாமி முன்னர் குறிப்பிட்டதை போல, மனிதன் மனிதனாக இல்லை, இறைவனாக இருக்கிறான் என்று அவர் தைரியமாக அறிவித்தார். ஆன்மாவின் இயல்பான தன்மை தெய்வீகமாக, இறைவனுடன் முழுமையான ஒருமையில் இருக்கிறது ஆர்வமுள்ளவர்களுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருந்தார். ஆன்மா இறைவனுடன் ஒன்றாக எப்போதும் இருந்துள்ளது, மற்றும் அது மனிதனின் விழிப்புணர்வு உணர்தலாக மாறுவதற்காக காத்து இருக்கிறது. ஒரு முழுமையான பிரபஞ்சத்தில் வாழும் நாம் ஒவ்வொருவரும் ஒரு முழுமையாக ஆன்மாவாக இருக்கிறோம் என்று அவர் உறுதி அளித்தார். தற்போது சைவ சித்தாந்தத்தின் ஒழுங்குபடுத்தப்பட்ட மொழியில் தெளிவாக விளக்கப்பட இவை அனைத்தும், பல வருடங்களுக்கு முன்பு 1959 ஆம் ஆண்டு *பரமாத்துமா* (*The Self God*) என்ற தலைப்பில் அவர் வழங்கிய உரையில் குறிப்பிட்டு இருந்தார். அந்த உரை பெற்ற வரவேற்பை, குருதேவா விளக்குகிறார். §

> அதன் பின்னர் பல வருடங்கள் கழித்து, *பரமாத்துமா* (*The Self God)* என்ற பெயரில் அந்த சிறிய புத்தகத்தின் பல ஆயிரக்கணக்கான நகல்கள் அமெரிக்கா மற்றும் ஆசியாவில் அச்சிடப்பட்டு பரவலாக விநியோகம் செய்யப்பட்டன. அது பெற்ற பிரபலத்தை பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள, நான் ஒரு சம்பவத்தை விவரிக்க உள்ளேன். நாங்கள் தென்னிந்தியாவில் இருந்த ஒரு தொலைதூர கிராமம் வழியாக சென்ற போது, எங்கள் வாகனத்தின் சக்கரம் பழுதடைந்து விட்டது. அதை வாகன ஓட்டி சீர் செய்ய ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்த போது, நாங்கள் அந்த இடத்தை சிறிது சுற்றிப்பார்த்தோம். எங்களை கடந்து பலர் அவ்வப்போது சென்று கொண்டிருந்தனர். சிறிது நேரம் கழித்து, அந்த கிராமத்தை சேர்ந்த முதியவர் ஒருவர் எங்களிடம் எங்கள் “சொந்த ஊர்" பற்றி விசாரித்தார். நான் அவரிடம் அடக்கமாக என்னிடம் இருந்த ஒரு துண்டு பிரசுரத்தை வழங்கினேன். அவர் எங்களை எங்களை ஒரு முறை நோட்டமிட்டார், அதன் பின்னர் அதை ஏற்க மறுத்து, தனது சட்டை பையில் இருந்து ஒரு சிறிய புத்தகத்தை எடுத்து, “எனக்கு இதற்கு மேல் எதுவும் தேவையில்லை. எனக்கு தேவையானது அனைத்தும் இதில் இருக்கிறது,” என்று அவர் கூறினார். அவர் என்னிடம் நான் எழுதிய *பரமாத்துமா* புத்தகத்தை காண்பித்தார். அது இந்தியா மற்றும் இலங்கையில், பெரும்பாலும் “சிறிய பொக்கிஷம்" என்று அழைக்கப்பட்டு, விளக்க முடியாத நிர்விகல்ப சமாதியின் விளக்கமாக கருதப்படுகிறது. §

Page 41: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/41_guru06_04.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் இருபத்தி-ஆறு

# இந்து சமயத்தை வலுவாக ஆதரித்தல்


ஒரு பிரபஞ்ச நாடகத்தில் கண்ணுக்கு தெரியாத சக்தி காட்சிகளை மாற்றி அமைப்பதை போல, குருதேவாவின் சமயப்பணி அமெரிக்கா கரைகளை கடந்து வலுவாக விரிவாக்கம் பெறுவதற்கு, 1980 களின் தொடக்கத்தில் வாய்ப்புக்கள் வரத் தொடங்கின. அவர் தொடக்கத்தில் ஒரு முறை இரண்டு சுவாமிகளுடன் மலேசியா சென்று வந்த பிறகு, கோலாலம்பூரில் வசித்து அவரிடம் மாஸ்டர் கோர்ஸ் படித்த சுமார் இருபது மாணவர்களின் குழு, அவர் தங்கள் நாட்டிற்கு மீண்டும் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். மலேசியா, இலங்கை மற்றும் இந்தியாவிற்கு 1981 ஆம் ஆண்டு மேற்கொண்ட இந்திய யாத்திரையின் அங்கமாக இந்த பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. குருதேவாவுடன் இன்னர்சர்ச் குழுவினர்களாக சென்ற முப்பத்தி இரண்டு சீடர்கள், மலேசியாவில் நடந்த ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வுக்கு சாட்சிகளாக விளங்கினார்கள். சுமார் இருபது மில்லயன் இசுலாமியர்களுக்கு மத்தியில், தீவிரமாக ஆன்மீக வழிகாட்டலை நாடிய ஒரு மில்லியனுக்கும் மேலான இந்துக்கள் வாழ்ந்த நாட்டிற்கு ஒரு அமெரிக்க குரு அறிமுகப்படுத்தப்பட்டார். §

கோலாலம்பூரை சுற்றி இருந்த டஜன் கணக்கான கோயில்களில் அந்த நாட்டின் இந்து தலைவர்களை சந்தித்து, பல ஆயிரக்கணக்கான இந்துக்களுடன் பேசிய இந்த குருதேவாவின் பயணம் பரவலாக விளம்பரப்படுத்தப்பட்டது. மலேசிய இந்துக்களில் பெரும்பாலானோர் பின்பற்றிய சைவ சமயத்தின சைவ சித்தாந்தத்தை குருதேவா வெளிப்படுத்திய முறையும், மேற்கத்திய நாடுகளில் அவர் பிறந்து இருந்ததாலும், அந்நாட்டு மக்களுக்கு அவரை புரிந்துகொள்வது மிகவும் எளிமையாக இருந்தது. அது குறிப்பாக அந்நாட்டு இளைஞர்களை

உற்சாகப்படுத்தி, ஒரு ஒடுங்கிய நிலையில் இருந்து அவர்களை விழிக்க செய்து, சைவ சமயம் அவர்கள் நாட்டில் அடுத்த சில வருடங்களில் வளர்ச்சி பெறுவதற்கு உதவியாக ஒரு ஆன்மீக கூட்டுறவுக்குள் அவர்களை ஒன்று சேர்த்தது. அதற்கு அடுத்த சில வருடங்களுக்கு, அவர்களது ஆன்மீக முன்னேற்றத்தை தனிப்பட்ட முறையில் இயக்கும் பொருட்டு, குருதேவா மீண்டும் மீண்டும் அந்த நாட்டிற்கு வந்து கொண்டிருந்தார். §

குருதேவா சென்ற இடமெல்லாம், உள்ளூர் சமய குழுக்கள் மற்றும் சமூகங்களிடம் இருந்து நல்ல வரவேற்பையும் மரியாதையையும் பெற்றார். அவர் பொதுமக்கள் கூட்டங்களில், உற்சாகமாக கூடியிருந்த மக்களுக்கு *காடேகிசம்* மற்றும் *கிரீட்* தலைப்புக்களில் இருந்த தனது படைப்புக்களை அறிமுகப்படுத்துவார். அவர் சைவ சமயத்தை பற்றி பெருமையாக பேசி, அவர்கள் பூமியின் மாபெரும் சமயத்தின் வாரிசுகளாக இருந்ததாகவும், அவர்கள் தங்களது மூதாதையர் நம்பிக்கையின் மதிப்பை குறைத்து சிறுமைபடுத்தும் ஒரு வித்தியாசமான சூழ்நிலைக்கு பழகி விட்டதாகவும் கூறினார். உயரமாக, சிங்கத்தைப் போல, பழுப்பு நிற கண்களுடன் கையால் நெய்த சுவாமியின் ஆடையை உடுத்தியிருந்த ஒரு அமெரிக்க குரு, தங்கள் சமயத்தை பற்றி பெருமையாக நினைத்து, அதன் நற்பண்புகளைப் பற்றி தங்கள் வீட்டு மாடியில் இருந்து உரக்க (கத்தவேண்டும் என்று கூறாமல்) கத்தலாம் என்று கூறினார். குருதேவா பொதுக்கூட்டங்களில் அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத நம்பிக்கையையும், அவர்களுக்கு அவர்களை பற்றி ஒரு புதிய கண்ணோட்டத்தையும், அந்த கண்ணோட்டத்தை வெளிப்படுத்த புதிய தைரியத்தையும் வழங்கினார். §

இது இசுலாமிய மற்றும் கிறுத்துவ கட்டுப்பாட்டில் வாழ்ந்த மலேசியர்களுக்கு திடுக்கிடும் செய்தியாக இருந்ததா என்பது புரிந்துகொள்வது கடினமாக இருந்தது, ஆனால் அவர்கள் அவர் சொல்ல வந்த கருத்தை புரிந்துக்கொண்டார்கள் மற்றும் அவர்கள் தங்கள் வாழ்க்கை மற்றும் தங்களை சுற்றி இருப்பவர்களின் வாழ்க்கையை நிரந்தரமாக மாற்றிக்கொண்டார்கள். §



குருதேவா மீண்டும் மீண்டும் இந்தியா, இலங்கை மற்றும் மலேசியா பயணம் செய்து, அங்கிருந்த நூற்றுக்கணக்கான கோயில்களில் வெளிப்படையான

*பிரசங்கங்களை வழங்கினார். அவர் சைவர்களுக்கு வழங்கிய ஒவ்வொரு உரையிலும், அவர்கள் தங்கள் புராதன கடவுள் நம்பிக்கையை தேடிக்கொண்டு, எதிர்ப்பை வலுவாக எதிர்கொண்டு, முக்தியை நோக்கி செல்லும் சிவனின் பாதையின் ஆழத்தை உணர்வதற்கு அழைப்பு விடுத்தார்.*

........................§

1981, 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில், குருதேவா தொடர்ச்சியாக இந்தியா, இலங்கை மற்றும் மலேசியா நாடுகளுக்கு மேற்கொண்ட யாத்திரைகளின் போது, ஒவ்வொரு மேடையிலும் “உலகின் மாபெரும் சமயமாக இந்து சமயம் விளங்குகிறது!” என்று கர்ஜித்தார். அவர் அரங்கில் கைதட்டி ஆரவாரம் செய்த மக்களிடம், “இந்து சமயத்தில் வலுவாக நிலைத்து இருங்கள்! ஒரு இந்துவாக இருப்பதில் பெருமை கொள்ளுங்கள்!” என்று உத்தரவிட்டார். அவர் தான் மேற்கொண்ட ஒவ்வொரு யாத்திரையின் போதும் கோயில்கள், ஆசிரமங்கள் மற்றும் மண்டபங்களில் நின்றுக்கொண்டு இருந்த மக்கள் கூட்டத்தில் பேசுவதற்கு ஒரு குறிப்பிட்ட தகவலுடன் செல்வார். அது “இந்துக்களை இந்து சமயத்திற்கு மதம் மாற்றம்" செய்யும் பணியாக, குருதேவாவின் ஆன்மீக சகோதரனாகவும் இந்து சமய மறுமலர்ச்சியில் சக பணியாளராகவும் இருந்த சுவாமி சின்மயானந்தா, தனது சொந்த குறிக்கோள்களை விளக்கிய வண்ணம் அமைந்து இருந்தது. §

**ஒரு இந்து சமய மறுமலர்ச்சி**

வரலாற்றை திருப்பிப் பார்க்கும் போது 1800 களில், ஆர்ய சமாஜை தொடங்கிய தயானந்த சரஸ்வதி, இராம கிருஷ்ணா மிஷனை தொடங்கிய இராமகிருஷ்ணர் மற்றும் அவரது சீடர் விவேகானந்தர்; குருதேவாவின் நாதபரம்பரையை சேர்ந்த யாழ்ப்பாணத்தின் கடையிற்சுவாமி ; ராதாசுவாமி வைஷ்ணவ பிரிவின் சிவதயால்; யாழ்ப்பாணத்தின் ஆறுமுக நாவலர் மற்றும் தமிழ்நாட்டின் இராமலிங்க அடிகளின் பணிகளுடன் இந்து சமய மறுமலர்ச்சி தொடங்கியது. இந்த பணியில் மகாத்மா காந்திக்கு தனது சமூக சீர்திருத்த சிந்தனையால் ஊக்கத்தை வழங்கிய ஏக்நாத் ரானடே; மனித உணர்வின் வளர்ச்சியை மேம்படுத்த விரும்பிய ஸ்ரீ ஆரோபிந்தோ; அமெரிக்காவில் அதிகமாக உரை நிகழ்த்திய சுவாமி ராம தீர்த்தா, சாது வாஸ்வாணி மற்றும் இரமணமகரிஷி மற்றும் பலரும் இடம்பெற்று இருந்தனர். அவர்கள் பல நூற்றாண்டுகளாக ஒடுங்கி இருந்த இந்து சமயத்தை, நவீன யுகத்தில் அதற்கு பொருத்தமான இடத்திற்கு கொண்டு வர தங்களை அர்பணித்துக் கொண்டார்கள். §

இந்த மகான்கள் மற்றும் அவர்களுக்கு பின்னர் வந்த சிலர் பல முன்னேற்றங்களை செய்து இருந்தாலும், 1980 களில் ஒரு உண்மையான இந்து மறுமலர்ச்சிக்கு தீவிர தடைகள் மீதம் இருந்தன. “மூளை வடிகால்" (brain drain) மூலம் இந்தியாவில் அறிவுக்கூர்மையுடன் தங்கள் துறைகளில் சிறந்து விளங்கியவர்கள் அமெரிக்காவிற்கு பயணம் செய்த போது, அமெரிக்காவில்

அறிவுக்கூர்மையுடன் சிறந்து விளங்கியவர்களில் ஒருவரான குருதேவா வேறு திசையில் பயணம் செய்து, உலகின் தலைசிறந்த இந்து சமயம் அவர்களிடம் இருப்பதாகவும், அதை பணத்தால் சம்பாதிக்க முடியாது என்றும் அவர் இந்தியர்களுக்கு நினைவூட்டினார். முதலில் பல இந்துக்கள் தங்களை இந்துக்களாக ஏற்றுக்கொள்ளாததால், அது மிகவும் கடினமான பணியாக இருந்தது. இலங்கையில் அவர் வழங்கிய உரையில், அவர் இந்த பிரச்சனையை விளக்கினார்:§

> "நீங்கள் இந்து சமயத்தை சேர்ந்தவரா?" என்று பல இந்துக்களிடம் கேட்டால், "இல்லை. நான் இந்து சமயத்தை பின்பற்றுவது இல்லை. நான் எந்த பிரிவையும் சாராமல், சமத்துவாதியாக, எல்லா மதங்களையும் பின்பற்றி, எல்லோரையும் போல இருக்கிறேன். தயவு செய்து என்னை தனிப்பட்ட முறையில் பிரித்து பார்க்கவேண்டாம்," என்று அவர்களிடம் இருந்து பதில் வரும். இந்த பதில் ஒரு உறுதியான மனிதனிடம் இருந்து வருமா? இல்லை வராது. இதைப்போன்ற பதில்கள் பலவீனமான மனதை உடையவர்களிடம் இருந்து வரும். அவர்கள் பணத்திற்காகவும், சமூகத்திடம் அல்லது தங்களது புத்திசாலித்தனத்திற்கு அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், தங்களது புனிதமான சொந்த பாரம்பரியத்தை கைவிடுகிறார்கள். அவர்களது சமய நம்பிக்கை எவ்வளவு தவறானதாக மேலோட்டமாக இருக்கிறது என்பதை பாருங்கள்! "இந்து சமயத்தில் வலுவாக நிலைத்து இருங்கள். அவ்வாறு நிலைத்து இருந்தால், நீங்கள் சுயமாக வலிமையை பெறுவீர்கள்," என்ற அறிவிப்பு எல்லோரும் கேட்கும் படியாக வலுவாக பரவ வேண்டும். §

இந்து என்ற தனது தனித்தன்மையை மறைத்து இருப்பதைப் போலவே, "எல்லா மதங்களும் ஒன்று" என்ற பிரபலமான கருத்தும் இருக்கிறது. எல்லா மதங்களும் ஒன்றாக கருதப்பட்டு, எந்த மதத்தை பின்பற்றுகிறோம் என்பது முக்கியம் இல்லாமல் இருந்ததால், இந்துக்கள் தாங்கள் இந்து மதத்தை சேர்ந்தவர்கள் என்று கோரிக்கொள்ளும் தேவை மறைந்து விட்டது. இந்த சமத்துவவாதம் தலைவிரித்து ஆடியது, மற்றும் பாரம்பரிய இந்து சமயம் தேவையில்லாமல் குறுகிய பாதையாக இருக்கிறது என்று நிராகரிக்க, அந்த சமயத்தை சார்ந்தவர்கள் தங்களுக்கு கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டார்கள். மேலும் இந்து சமயம் ஒரு மதமாக இல்லாமல் அதிகம் வாழ்முறை சார்ந்ததாக இருக்கிறது என்று அவர்கள் வாதாடினார்கள். இதற்கு எதிராக குருதேவா வழங்கிய கருத்து:§

> எல்லா மதங்களும் ஒன்றல்ல. அவை அதிக வேறுபாடுகளுடன் இருக்கின்றன. அவை அனைத்தும் கடவுளை பற்றி விவாதிக்கின்றன என்பதில் எந்த சந்தேகமும் இல்லை, ஆனால் அவை அனைத்தும் அதை பின்பற்றுபவர்களை ஒரே ஆன்மீக குறிக்கோளை நோக்கி வழிநடத்தி செல்வது இல்லை. தங்களுக்குள் இருக்கும் இறைவனை கிறுத்துவர்கள் நாடுவது இல்லை. அவர்கள் இறைவன் எங்கும் வியாபித்து இருப்பதாக

> கருதுவது இல்லை. பல பிறவிகள் இருப்பதையோ அல்லது கர்மவினை இருப்பதையோ யூதர்கள், கிறுத்துவர்கள் மற்றும் இசுலாமியர்கள் நம்புவது இல்லை. அவர்கள் இந்த நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. அவை தங்களது மதக்கோட்பாடுகளுக்கு எதிரானதாக கருதினார்கள்.§

அவர் அப்போதிருந்த வழக்கத்திற்கு மாறாக மதத்தில் அதிக பற்றுடன் இருப்பதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் சைவம், வைணவம், சாக்தம் மற்றும் ஸ்மார்த்தம் என்று இந்து சமயத்தின் தலைசிறந்த பாரம்பரியங்கள் ஒவ்வொன்றையும் தக்கவைத்து, அதன் விசேஷமான அம்சங்களுக்கு மதிப்பு அளித்து, அவற்றை பற்றிய போதனைகளையும் வழங்கினார். இந்து சமயத்தின முக்கிய சக்திகளாக இருக்கும் தனிப்பட்ட சம்பிரதாயங்கள், ஆன்மீகத்தை கற்பிக்கும் பாரம்பரியங்கள் ஆகியவை, சிலர் பரிந்துரைக்கும் வலிமை குறைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட இந்து சமயத்தால் நிலை நிறுத்த முடியாது என்று அவர் எச்சரித்தார். §

“ஒரு அருவருப்பான வார்த்தையாக இருந்த இந்து சமயத்தை காப்பாற்றி, அதை அதன் பழங்கால புகழுக்கு மீண்டும் நிலை நிறுத்தியதில், குருதேவா மிகப்பெரிய பங்கு வகித்துள்ளார். அவர் இந்துக்கள் அனைவரும்  தங்களை உலகின் முக்கிய சமூகத்தை சார்ந்தவர்களாக, மிகப்பெரிய நாகரிகம் மற்றும் கலாச்சாரத்தின் வாரிசுகளாக உணர்வதற்கு துணை புரிந்தார்,” என்று இந்தியாவின் முன்னணி சிந்தனையாளர்களின் ஒருவரான சீதாராம் கோயல்  எழுதினார். இந்தியாவின் பிரம்ம வித்யா ஆசிரமத்தின் சுவாமி அத்வைதானந்தா வழங்கிய கருத்து: “தங்களை இந்துக்களாக அழைக்கப்படுவதையே அவமானமாக கருதும் இந்நாளில், குருதேவா என்று அவரை அழைக்கும் பல லட்சக்கணக்கான மக்களுக்கு வலிமையை வழங்கி, அவர்கள் உள்ளத்தில் சமய நம்பிக்கையை தூண்டி விடுவதற்கு அவரது போதனைகள் மற்றும் சமயப்பணிகள் முக்கிய காரணமாக இருந்துள்ளன.” §

குருதேவா சைவ சமயத்தவர்களிடம் பேசும் போது, அவர் அவர்களது சமயப்பிரிவின் மகிமையை புகழ்ந்துரைத்து, சைவ சமயத்தை புதிய யுகத்தின் மதமாக அறிவித்தார்: §

> நாம் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு மற்றும் நாம் தொழில்நுட்ப யுகத்தில் அடியெடுத்து வைப்பதற்கு, நாம் நமது சமயம் மற்றும் கலாச்சாரத்தை துறக்க வேண்டும் என்று இலங்கை மற்றும் இந்தியாவில் சில தவறான கருத்து நிலவுகிறது. இது ஒரு தவறான கோட்பாடு ஆகும். சமயம் எப்போதும் தொழில்நுட்பத்திற்கு முரணாக இருந்தது இல்லை. அது அதை வலுப்படுத்தி, அதற்கு ஸ்திரத்தன்மையையும் நோக்கத்தையும் வழங்குகிறது. சைவ சமயம் முக்கியமான இந்த யுகத்திற்கு, மிகவும் பொருத்தமான ஒரு சமயமாக பூமியில் விளங்குகிறது என்ற உண்மையை நமது மத போதகர்கள் கற்பிக்க தொடங்கி இருக்கிறார்கள். இது நவீன அறிவியலின் மிகவும் உயர்வான அனுமானக்

கோட்பாடுகளுடன் முழுமையாக பொருந்தி இருந்தாலும், அதுவே தனிப்பட்ட முறையில் அதிக உயர்வான நிலையிலும் இருக்கிறது. §

மலேசியா, இந்தியா மற்றும் இலங்கை முழுவதும் இருந்த புகழ்பெற்ற கோயில்களில், மண்டபங்களில் மற்றும் கிராமப்புற மேடைகளில் வழங்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சிகளில் குருதேவா பேசும் போது, அவர் தனது சைவ சமய சகாக்கள் முயற்சிகளை மேற்கொள்ள தூண்டிவிட்டார். இந்த பயணத்திற்கு செய்தித்தாள்கள் விரிவான அறிக்கைகளை வெளியிட்டன, மற்றும் ஆல் இந்தியா ரேடியோவின் தென் இந்திய பிரிவில், அவரது உரைகளின் ஒலிப்பதிவு ஒரு வானொலி நிகழ்ச்சியாக ஒலிபரப்பப்பட்டது. §

### கிறுத்தவ ஊடுருவலை எப்படி தடுப்பது?

இந்திய மக்கள் தொகையில் வெறும் இரண்டு சதவீதம் மட்டுமே கிறுத்துவர்களாக இருந்தாலும், ஆங்கிலேயர்கள் ஐம்பது வருடங்களுக்கு முன்பு நாட்டை விட்டு வெளியேறி இருந்தாலும், இந்தியாவில் பரவிய கிறுத்துவ மதத்தின் தாக்கம் குருதேவாவை வியக்க வைத்தது. இந்தியாவில் கிறுத்துவ பள்ளிகளில் படித்தவர்கள், ஒரு வெளிநாட்டு சமயத்தை பரிந்துரைத்த கன்னியாஸ்திரிகள் மற்றும் ஆசிரியர்களிடம் பல வருடங்கள் படித்ததால் அவர்களது சமய உணர்வின் அடிப்படை தகர்ந்து, அவர்கள் பலவீனமான இந்துக்களாக மாறியதை குருதேவா கவனித்தார். கொழும்பில் குருதேவாவிடம் ஒரு கத்தோலிக்க பாதிரியார், “எனது பள்ளியில் இருந்து தேர்ச்சி பெறும் இந்து குழந்தைகள் கத்தோலிக்கர்களாக மாறாமல் இருக்கலாம், ஆனால் அவர்கள் நிச்சயமாக நல்ல இந்துக்களாக இருக்க மாட்டார்கள்,” என்று வெளிப்படையாக கூறினார். §

குருதேவா கிறுத்துவ மதம் அல்லது வேறு எந்த மதத்திற்கும் எதிராக இருந்தது இல்லை. அவர் கிறுத்துவ பெரும்பான்மை இருந்த நாட்டில் இருந்து வந்தவர். அமெரிக்காவில் சமயப்பணிகளில் இருந்த வருடங்களில், அவர் மிகவும் அபூர்வமாக கிறுத்துவ தலையீட்டை எதிர்கொண்டார். அவர் தனது இளமை பருவத்தில் பௌத்தர்கள், இசுலாமியர்கள் மற்றும் கிறுத்துவர்கள் என்று பல்வேறு சமயத்தை சேர்ந்த வலுவான ஆன்மீக ஆசிரியர்களிடம் பயின்றார். அவர் ஒவ்வொரு மதத்திலும் இருந்த சிறப்பான அம்சங்களை அறிந்து இருந்தார். §

கிறுத்துவ பள்ளிகள் மோசமாக இருப்பதை அவர் அறிந்து இருந்தாலும், வஞ்சனையால் கவர்ந்து இழுத்து நிர்பந்திக்கும் கிறுத்துவ மத பிரச்சாரகர்களின் நடவடிக்கைகள், அவரை ஆத்திரமூட்டியது. அவர் கிறுத்துவ சமயத்தின் தவறான வழிகளை எங்கே கவனித்தாலும் அதை எதிர்த்தார் மற்றும் உலகெங்கும் இருக்கும் இந்துக்களிடம் அவர்கள் தங்கள் சமய உரிமைகளை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். “யானைப்பாகன் ஒரு இளம்வயது யானையை ஒரு சிறிய கைத்தடியை பயன்படுத்தி கட்டுப்படுத்துகிறார். ஆனால் அந்த யானை முதிர்ந்து பெரிய

உருவத்தை பெற்றதும், அதனால் அந்த கைத்தடி மற்றும் அந்த யானைப் பாகனையும் தூக்கி எரியமுடியும் என்றாலும், அது அந்த கைத்தடியை பார்த்தால் பயப்படுகிறது," என்று அவர் அடிக்கடி சொல்லிக்கொண்டு இருப்பார். §

குருதேவா அதே உளவியலை பயன்படுத்தி, இந்துக்கள் கிறுத்துவ ஆட்சி இருந்த காலத்தில் சாதுவாக அடிபணிந்து நடக்க ஆரம்பித்தார்கள் மற்றும் கிறுத்துவ அநீதிக்கு முதன்மையான காரணமாக விளங்கிய அரசியல் சக்தி நாட்டை விட்டு கிளம்பி இருந்தாலும், அந்த அநீதியின் தொடர்ச்சிக்கு எதிராக தீவிரமான எதிர்ப்பு தெரிவிக்க விருப்பமில்லாமல் இருக்கிறார்கள் என்று கூறினார். அவர் கிறுத்துவர்களை தாக்கவேண்டும் என்று அறிவுறுத்தவில்லை, ஆனால் அவர்களிடம் இருந்து விலகி அவர்களை புறக்கணிக்க வேண்டும் என்று கூறினார். கிறுத்துவ பள்ளிகளில் இருந்து தங்கள் குழந்தைகளை வெளியேற்ற வேண்டும் என்று அவர் ஆயிரக்கணக்கான இந்துக்களிடம் கூறியதோடு, மதமாற்றம் செய்யும் நோக்கத்துடன், கிறுத்துவ மத பிரச்சாரகர்கள் அவர்கள் வீடுகளுக்கு வரும் போது அவர்கள் தங்கள் வீட்டு கதவை மூடி விடவேண்டும் என்றும் கூறினார். §

> ஒரு மத பிரச்சாரகர் உங்கள் வீடு வரும் போது, இதை தவறாமல் செய்யுங்கள். அவரை "நமஸ்தே" சொல்லி வரவேற்று, உங்களுக்கு எந்த ஒரு சொந்தமான ஒரு காடேகிசம் (சமய கேள்வி பதில்) இருக்கிறது என்றும், எங்கள் சமயத்தில க்ரீட் என்ற பன்னிரண்டு சுருக்கமான நம்பிக்கைகள மற்றும் அந்த நம்பிக்கைகளின் சாரத்தை உள்ளடக்கிய ஒரு கூட்டு சொற்றொடரும் உள்ளது என்று அவர்களிடம் சொல்லுங்கள். எங்கள் சைவ இந்து சமயத்திற்கு புனித நூல்களாக *வேதங்கள், ஆகமங்கள், திருக்குறள்* மற்றும் *திருமந்திரம்* மற்றும் மேலும் பல நூல்களும் இருக்கின்றன என்று சொல்லுங்கள். எங்களுக்கு சமயகுருமார்கள் இருக்கிறார்கள் மற்றும் எங்களுக்கென்று மிகவும் பழமையான ஒரு பாரம்பரியம் இருக்கிறது. எங்களுக்கென்று புனிதமான கோயில்கள் மற்றும் மகாதேவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் மகாதேவர்கள் மற்றும் தேவர்களை வழிபடுவதில் பெருமை அடைகிறோம். எங்களிடம் இதுவும் மேலும் பல சிறப்பு அம்சங்களும் உள்ளன. மிக்க நன்றி என்று சொல்லி உங்கள் வீட்டு கதவை மூடி விடுங்கள்!§

கூடியிருந்த மக்கள் கூட்டத்திற்கு முன்பாக குருதேவா தனது உரையின் ஒவ்வொரு பாகத்தை பேசி முடித்ததும், பல பகுதிகளாக இருந்த அவரது சிந்தனைகளை அறிந்துகொண்ட ஆங்கிலம் சரளமாக பேசத் தெரிந்தவர்கள் மத்தியில், அந்த உரையை அங்கீகரிக்கும் வகையில் ஒரு மென்மையான சலசலப்பு ஏற்படும். அதன் பிறகு ஒரு மொழபெயர்ப்பாளர் ஒலிபெருக்கி முன்பாக வந்து, அவர் பேசியது அனைத்தையும் மீண்டும் தமிழில் மொழிபெயர்ப்பு செய்து முடித்ததும், பொதுமக்கள் கூட்டத்தில் என்றுமே

எதிர்த்து பேசப்படாமல் பெரும்பாலும் முணுமுணுக்கப்பட்ட, மதமாற்றம் மற்றும் இந்துக்களுக்கு எதிரான பிரசாரங்களை பற்றி தைரியமாக மற்றும் சரளமாக பேசிய ஒரு ஆன்மீக தலைவர் இருப்பதை உணர்ந்த மக்கள் கூட்டத்தின் பாராட்டு மழை மற்றும் மகிழ்ச்சியான கரகோஷ ஒலி, அந்த கோயில் அல்லது மண்டபங்களில் நிரம்பியது. §

அவர் வழங்கிய அறிவுரையை பின்பற்றும் தைரியம் சிலருக்கே இருந்தது. அவர் சொல்வதை புரிந்துகொள்ள முடியாமல் அல்லது தங்கள் சொந்த மண்ணில் ஒரு வெளிநாட்டவர் ஊடுருவதாக நினைத்த சிலர், அவரை எதிர்த்தனர். 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற அலாஸ்கா இன்னரசர்ச் திட்டத்தின் போது, அவர் ஒரு சுற்றுலா கப்பலில் தனது துறவிகளிடம் இந்த காலத்தை பற்றி நினைவுக் கூர்ந்தார்: "அவர்களும் நாமும் ஒன்று. நாம் அவர்களுடன் சண்டையிடவில்லை, ஆனால் நாம் எல்லோரும் ஒன்றாக, இந்து சமயத்தின் மேம்பாட்டிற்கு முயற்சி செய்து வருகிறோம் என்பதை அவர்கள் தெரிந்துக் கொள்ளட்டும்." அவர்கள் காலப்போக்கில் குருதேவாவை புரிந்துக்கொண்டதால், அவர் பரிகாசமாக, "நான் எனது எதிரிகளை அதிகம் ஏமாற்றி விட்டேன். என் மீது யாராலும் அதிக நாட்கள் கோபத்துடன் இருக்க முடியாது," என்று கூறினார். §

மலேசியா, இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்த சைவர்களுக்கு குருதேவா வழங்கிய மறுமலர்ச்சி செய்தியில் இந்து சமயத்தின் பெருமை, பொது வாழ்க்கையில் ஒரு தெளிவான சமய அடையாளம், சமயம் தொடர்பாக சரியான புரிதல், சாஸ்திரத்திற்கு மற்றும் மதகுருக்களுக்கு மரியாதை செலுத்துதல், வீட்டில் வழிபாடு, மதமாற்றத்தை எதிர்த்தல், பாரம்பரியங்களை பராமரித்தல், இணக்கத்துடன் செயல்படுதல், மதங்களிடையே ஒற்றுமை, அன்பின் வடிவமாக சிவபெருமான் மற்றும் உலகில் நவீன தொழில்நுட்ப யுகத்திற்கு மிகவும் பொருத்தமான மதமாக இருக்கும் இந்து சமயம் என்று பல தகவல்கள் அடங்கிய இருந்தன. அவர் இந்துக்களைப் பற்றி, ஒரே மாதிரியாக இந்துக்களிடமும் மற்ற மதத்தவர்களிடமும் நிலவிய, மர்மங்கள் மற்றும் தவறான கருத்துக்களை அகற்றினார். அவர் வலுவான பாசம் நிறைந்த இந்து வீட்டை பரிந்துரைத்து, தாய்மார்கள் வேலை செய்யாமல் தங்கள் குழந்தைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பெற்றோர்கள் கசையடி மற்றும் தடியடி மூலம் குழந்தைகளுக்கு தண்டனை வழங்கக்கூடாது என்றும் பரிந்துரைத்தார். அவர் இந்த தகவலை தெளிவாக, தைரியமாக, அன்பாக நகைச்சுவையுடன் வழங்கினார் மற்றும் நமது இந்து உலகிற்கு அவர் அளித்த புதிய விளக்கத்தின் மூலம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினார். அந்த உரைகளில் இருந்து ஒரு பகுதியை இங்கே காணலாம்:§

> இந்த அழகான இலங்கை தீவில் இன்று இரவு பேசப்பட்ட இந்து சமயத்தின் அருமையான அம்சங்களை நினைத்து பார்க்கும் போது, இந்த பூமியில் எதிர்கால சந்ததியர்களுக்கு இந்து சமயம் ஒரு தீர்வாக விளங்குவது தெளிவாகிறது. அது புது யுகம், சத் யுகத்தின் தொடக்கத்திற்கு தீர்வாக

விளங்குகிறது. தெய்வீக அருளை பெற்று நமது மாபெரும் மதமாக விளங்கும் சனாதன தர்மம் எல்லா தீர்வுகளையும் கொண்டுள்ளது. அது எல்லா யுகத்திலும் நிலைத்து இருந்துள்ளதால், அது ஒவ்வொரு யுகத்திற்கும் தேவையான தீர்வுகள் அனைத்தையும் எப்போதும் கொண்டுள்ளது. தங்கள் இந்து பாரம்பரியத்தை மறுப்பதற்கு, இந்து சமயத்தில் தங்கள் நம்பிக்கையை அல்லது நான் ஒரு இந்து என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள தயங்குவதற்கான நேரம் பலருக்கு முடிந்து விட்டது மற்றும் எல்லோருக்கும் விரைவில் முடியவிருக்கிறது. எல்லா இனங்கள், எல்லா நாடுகள், எல்லா கலாச்சாரங்கள் மற்றும் எல்லா பிரிவுகளை சேர்ந்த இந்துக்களும் எழுந்து நின்று, தாங்கள் தீவிரமாக பின்பற்றும் மாபெரும் சமயத்தைப் பற்றி உலகம் தெரிந்துக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. உங்களுக்குள் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தன்னம்பிக்கையுடன் முன்னேறுங்கள். இந்து சமயத்திற்கு வலுவாக நிலைத்து இருங்கள். §

இந்துக்கள் அல்லாதவர்களுக்கு அத்வைத உண்மைகளை கற்றுத்தந்ததன் மூலம் தனது நாட்டு மக்களுக்கு தான் ஆற்றவேண்டிய கடமையை நிறைவு செய்து விட்டதாகவும், உலகின் மிகவும் பழமையான மதத்தின் கடினமான சூழ்நிலைகளுக்குள் தன்னை பின்தொடர்ந்து வர விரும்பும் இந்துக்கள் மற்றும் இந்துக்கள் அல்லாத மற்றவர்கள் மீதும், இனி அவர் கவனம் செலுத்தப்போவதாகவும் குருதேவா அறிவித்து நான்கு வருடங்கள் நிறைவடைந்து இருந்தன. அவர் தென் இந்தியா மற்றும் இலங்கையின் மேடைகளில் பேசும் போது, அவர் வீட்டு பூஜை அறைகளிலும் புதிதாக நிறுவப்பட்ட கோயில்களிலும் எதிர்கொண்ட விநோதமான சம்பவத்தை போன்று, தங்கள் பீடத்தில் மற்ற சமயத்து சிலைகளை வைத்து தங்கள் பழக்கத்தின் வலிமையை குறைக்க வேண்டாம் என்று அன்பர்களிடம் அவர் கேட்டுக்கொண்டார். §

உங்கள் மனம் மற்றும் உணர்ச்சியை கட்டுப்படுத்தி சிறிது அமைதியை மட்டும் நாடாமல், சிந்தனையின் ஆழம் வரை சென்று உண்மையில் தியானம் செய்வதற்கு, இறைவனுடன் அத்வைத ஐக்கியத்திற்கு நம்பிக்கை அளித்து, ஆத்ம ஞானம் பெறுவதற்காகவே மனிதனுக்குள் இறைவன் இருக்கிறான் என்று போதிக்கும் சமயத்தில் ஒருவர் உறுப்பினராக இருக்க வேண்டும். தியானம் ஞானத்திற்கு வழிநடத்தி செல்லவேண்டும் என்றால், அது இயல்பான தீய பண்புடன் எதுவும் இல்லை என்ற நம்பிக்கையுடன் தொடங்கி, நாம் செய்த செயல்களுக்கு நாமே பொறுப்பாகிறோம் என்ற கர்மவினையின் உண்மையை உள்ளடக்கி இருக்க வேண்டும். ஒருவர் அத்தகைய தியானத்தை மேற்கொள்ள, மறுபிறவி இருக்கிறது என்ற நம்பிக்கையை வழங்கி, தோல்வி ஏற்பட்டால் நிரந்தர வேதனைக்கு ஆளாக வேண்டும் என்று அச்சுறுத்தாத ஒரு சமயத்தில் உறுப்பினராக இருக்கவேண்டும்.

அத்தகைய தியானம் சாத்தியமாக இருப்பதுடன், இந்து தர்மத்தை பின்பற்றுவோருக்கு தேவையாகவும் இருக்கிறது. இதன் காரணமாகவே, அதிக பழமையான நமது சமயத்தின் உச்சநிலையாக யோகப்பயிற்சி விளங்குகிறது.§

நீங்கள் நமது சைவ சமய சாஸ்திரங்கள் அனைத்தையும் வாசித்தீர்கள் என்றால், நமது மகான்கள் அடோனை-யாவே, புத்தர் அல்லது இயேசுவை புகழ்ந்து பாடுவது இல்லை என்பதை தெரிந்துகொள்வீர்கள். மகேஸ்வரனாக இருக்கும் சிவபெருமானை வழிபட வேண்டும் என்றும், சிவபெருமானை வழிபடுவதற்கு முன்பாக முதலில் விநாயகரை வழிபடவேண்டும் என்றும், முருகப்பெருமானை வழிபடவேண்டும் என்றும் நமது மகான்கள் நமக்கு அறிவுறுத்தினார்கள். பழங்காலத்தில் நேபாலின் இமயமலையில் தொடங்கி வட இந்தியா, தென் இந்தியா மற்றும் இலங்கை முழுவதும் மற்றும் தற்போதுள்ள மலேசியா மற்றும் இந்தோனேசியா வரை பல லட்சக்கணக்கான சிவன் கோயில்கள் இருந்தன. எல்லோரும் ஒரு மனதாக சிவபெருமானை வழிபட்டு, ஒன்றாக அவரது துதிப்பாடல்களை பாடினார்கள். இதன் காரணமாக, இந்தியா ஆன்மீக ரீதியாக ஒன்றுப்பட்டு இருந்தது. அது அன்று செல்வ செழிப்புமிக்க நாடாக இருந்தது. சிவனை வழிபடுவதால் நீங்கள் செல்வதையும், உடல்நலத்தையும், அறிவையும் பெறுகிறீர்கள். உங்கள் இதயத்தில் சிவ வழிபாடு பாசத்தையும் இரக்கத்தையும் நிரப்புகிறது. §

சைவ சமயம் உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் பழமையான சமயமாக விளங்குகிறது. சைவ சமயத்தில் யோகம், மிகப்பெரிய கோயில்கள், தலைசிறந்த பண்டிதர்கள், ரிஷிகள் மற்றும் சாஸ்திரங்கள் இருக்கின்றன. சிவபெருமானை போற்றி பாடிய மகான்கள் அனைவரும், நாம் எவ்வாறு சிவபெருமானை வழிபட வேண்டும் மற்றும் நாம் எவ்வாறு சைவ வாழ்கையை வாழவேண்டும் என்று வழங்கிய அறிவுறுத்தல்களை நாம் பின்பற்றி வாழ வேண்டும். சிவபெருமானை நினைத்து அந்த பாடல்களை பாடும் போது, அவர் நீங்கள் கேட்பது அனைத்தும் தருவார். சிவபெருமான் அன்பின் கடவுளாக இருப்பதால், அவர் நீங்கள் கேட்பது அனைத்தும் தருவார். சிவபெருமான் நமக்குள் இருப்பதாகவும், நாம் சிவபெருமானுக்குள் இருப்பதாகவும் நமது மகான்கள் பாடியுள்ளனர். இதை அறிந்ததும் நமது மனதில் இருந்து அச்சம், கவலை மற்றும் சந்தேகம் நிரந்தரமாக மறைகிறது.§

மனம் தனக்குள் இருக்கும் வேற்றுமைகளுக்கு வழிபாடு, தவம், *தாரனா,* தியானம் மூலம் தீர்வு காணும் போது, உட்புறமாக இருக்கும் அமைதி தெரிய வருகிறது. அப்போது உட்புறம் வெளிப்புறத்தை காட்டிலும் வலுவாக இருக்கிறது. அப்போது எதிர்கொள்ளும் ஒவ்வொருவரும் தனது பாதையில் ஒரு குறிப்பிட்ட நிலையில் அனுபவிக்க வேண்டியதை அனுபவித்துக் கொண்டிருப்பதை எளிதில் காணமுடியும். வேற்றுமைகள் இருக்கும், ஆனால் வேற்றுமைகள் எதுவும் தென்படாது. அதனால் தான்

ஆன்மீக விரிவாக்கம் மூலம் விவேகத்தை பெற்றவர்கள், “உலகில் அநீதி என்று எதுவும் இல்லை. தீய பண்புடன் எதுவும் இல்லை. பாவம் என்று எதுவும் இல்லை,” என்று எளிதாக கூறு முடிகிறது. §

நமது பார்வை வரையறுக்கப்பட்ட நிலையில் இருக்கும்போதும், நாம் அதை முழுமையாக அனுபவத்தை பெறாத போதும், வேற்றுமைகள் மட்டுமே நமக்கு தெரிகின்றன. எல்லா முரண்பாடுகளுக்கும் தீர்வு கண்டு, எல்லா கேள்விகளுக்கும் பதில் வழங்கும் ஒரு கண்ணோட்டம் இருக்கிறது. அனுபவிக்காமல் இருப்பது புரிந்துகொள்ளப்படாமல் இருக்கிறது. அனுபவித்து புரிந்துகொள்ளப்பட்டதும், அமைதி தோன்றுகிறது. கர்மவினைகள் அமைதியாக இருக்கின்றன. சரியை, கிரியை மற்றும் யோகத்தின் இந்த பாதையின் பலனாக ஞானம் கிடைக்கிறது. இது உயர்ந்த பண்புகளை விரிவாக்கம் செய்ய மேற்கொள்ளும் முயற்சியின் பாதையாக இருந்துக்கொண்டு, கீழ்நிலை பண்புகளின் மிச்சங்களை நேர்மறையாகவும் உணர்வுடனும் எதிர்கொள்ளும் பாதையாகவும் இருக்கிறது. நாம் இந்த பாதையை பின்பற்றும் போது, பேராசைக்கு பதிலாக தர்ம காரியங்களில் சுலபமாக நம்மை ஈடுபடுத்திக்கொண்டு பொறாமை, வெறுப்பு, ஆசை மற்றும் கோபத்தின் உள்ளுணர்வு உணர்வுகளை ஒடுக்காமல் எதிர்கொள்ளவும் செய்கிறோம். §

### தீட்சையின் முக்கியத்துவம்


சைவ சமயத்திற்குள் ஆன்மாக்களை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும் என்று தான் வழங்கிய வலியுறுத்தலின் தொடர்ச்சியாக, குருதேவா சிதம்பரம் கோயிலின் ஆயிரம் கால் மண்டபத்தில் சைவ தீட்சை வழங்க ஏற்பாடு செய்து, சைவ சித்தாந்த தேவாலயத்தின் அங்கத்தினர்களாக பதினைந்து ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தீட்சையை வழங்கினார். அவருக்கு முன்பிருந்த சைவ குருமார்கள் செய்து இருந்ததை போல, அவர் தீட்சைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தார். இது தொடர்பாக அவர் வழங்கும் குறிப்பு:§

> தீட்சை இந்துக்கள் அனைவருக்கும் குறிக்கோளாகவும், சைவ ஆன்மாக்கள் அனைவருக்கும் மிகவும் அத்தியாவசியமானதாகவும் விளங்குகிறது. அதனால் தான் அவர்கள் ஒரு குருவை நாடி, அவர் அங்கீகரித்த நன்மைகள் அனைத்தையும் தங்கள் வாழ்வில் வெளிப்படுத்துகிறார்கள். அதனால் தான் அவர்கள் குருவின் எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் பூர்த்தி செய்ய தொடர்ந்து முயற்சி செய்வது மட்டுமல்லாமல், அவரது எதிர்பார்ப்பையும் மிஞ்சுகிறார்கள். ஒரு சற்குருவிடம் பெறும் *தீட்சையை* அழிக்க முடியாது, மாற்ற முடியாது, மற்றும் அதைப்பற்றி விவரிக்கும் முடியாது. இதன் காரணமாகத்தான், *தீட்சை* ஒரு மங்களகரமான நேரத்தில், ஒரு ஆன்மீக மனநிலையில் சிவபெருமானின் எங்கும் வியாபித்து இருக்கும் சக்தியில் கருத்தரிப்பில் தொடங்கி இந்த பிறவியில் வெளிப்படும் வரை ஆன்மா மேற்கொள்ளும்

நீண்ட பயணத்தில் கர்மவினையின் சரியான தருணத்தில் தரப்படுகிறது. இந்த பிறவி அல்லது ஒரு வருங்கால பிறவியில், முக்தி அடையும் பாதையாக *தீட்சை* விளங்குகிறது. இதற்கு மாற்று வழியாக வேறு எதுவும் இல்லை. §

தடைகளை விலக்குவதற்கு *தீட்சை* தூண்டுதலை வழங்குகிறது. இது சற்குருவின் ஆசியாகவும், மேலும் சாதனா செய்ய ஆன்மீக அனுமதியாகவும் விளங்குகிறது. *தீட்சை* பெறுவதை விதை விதைப்பதற்கு ஒப்பிடலாம். பலன் பெறுதல், வளர்ச்சி அடைதல் மற்றும் பக்குவமடையும் செய்முறை காலப்போக்கில் நடைபெறுகிறது மற்றும் அது இயல்பாக தீட்சையுடன் வழங்கப்பட்ட சாதனாவை செய்ய அல்லது வழங்கப்பட்ட *பிராயச்சித்தத்தை* நிறைவேற்ற, அந்த சாதனாவை செய்யவில்லை என்றால் அதை ஈடு செய்ய சீடன் மேற்கொள்ளும் தனிப்பட்ட முயற்சி மற்றும் அவரது நேர்மையை பொருத்து அமைகிறது. உன்னதமான கைலாச பரம்பரையை சேர்ந்த இந்து தேவாலயத்தின் மையமாக தீட்சை பெற்றவர்களின் தோழமை விளங்குகிறது. பல பிறவிகளாக தர்மத்தை தொடர்ந்து கடைபிடித்து வந்துள்ளதால், அவர்கள் உண்மையான விசுவாசிகளாக அர்ப்பணிப்புடன் இருக்கிறார்கள். §

*சமய தீட்சை* எனப்படும் மந்திர *தீட்சை,* சைவ சமய தீட்சை அடிப்படையாக விளங்குகிறது, ஏனென்றால் அதன் விளைவாக அந்த சீடன் சற்குருவின் ஆன்மீக சக்தி மற்றும் அதிகாரத்தால், ஒரு குறிப்பிட்ட பரம்பரையுடன் ஒரு முறையான தொடர்பை பெறுகிறார். தீட்சை பெற்ற எல்லோரும் அறிவுப்பூரவமாக இல்லாமல் முன் உதாரணமாக இருந்து, புதியவர்களுக்கு அறிவுறுத்துகிறார்கள். தினசரி பூஜை, கோயில் வழிபாடு, திருவிழாக்களில் பங்குபெறுதல், தசமபாகம், சைவ உணவு, யாத்திரை, சாஸ்திரம் படித்தல், கங்கா சாதனா மற்றும் மேலும் பல செய்முறைகளின் மூலம் சுயமாக தங்களுக்குள் மாற்றம் ஏற்படுத்திக்கொள்வதைப் பற்றி புதிதாக தீட்சை பெற்றவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். *சமய தீட்சை* என்பது, *கிரியை* மார்கத்தில் நுழைந்து தினமும் ருத்திராட்ச ஜப மாலையில் “ஓம் நமச்சிவாய” என்ற பஞ்சாட்சர மந்திரத்தை குறைந்தது 108 முறை ஜபம் செய்வது உட்பட, சில சாதனாக்களை செய்ய ஆசியாகவும் அங்கீகாரமாகவும் விளங்குகிறது.§



குருவிடம் இருந்து சீடனுக்கு சக்தி வழங்கப்படும் சடங்காக விளங்கும் தீட்சையை விட முக்கியமானது எதுவும் இல்லை. இந்த சித்திரத்தில் ஒரு குரு

*இளம் சாதகர்களை நதிக்கரைக்கு அழைத்து வந்து, தனது இரு கைகளையும் ஒரு சாதகன் மீது வைத்துக்கொண்டு அவனுக்கு தனது ஆசிகளை வழங்குகிறார். வைதீக ஹோமம் நிறைவடைந்து விட்டது, மற்றும் சந்நியாச தீட்சைக்கு பிறகு புதிய சுவாமிக்கு வழங்கப்படும் காவித்துண்டு மற்றும் ருத்ராட்ச மாலையுடன் இரண்டு சீடர்கள் நின்றுக்கொண்டு இருக்கிறார்கள்.*

........................§


இந்த மந்திரம் மனதை அமைதிப்படுத்தி, நரம்பு மண்டலத்தில் இணக்கத்தை ஏற்படுத்தி, உள்ளிருந்து அறிவை வெளியே கொண்டுவந்து, சீடனுக்கு அவனது வாழ்க்கையின் குறிக்கோளையும், சிவபெருமானுடன் அவனது தொடர்பையும் நினைவூட்டுகிறது. நமச்சிவாயம் என்றால் “சிவபெருமானை போற்றுதல்" என்று பொருள். ஐந்து எழுத்துக்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளை உடையவை. *சி* என்பது சிவபெருமானையும், *வா* என்பது அவரது வெளிப்படுத்தும் சக்தியையும், *யா* என்பது ஆன்மாவையும், *ந* என்பது அவரது மறைக்கும் சக்தியையும், *ம* என்பது உலகையும் குறிப்பிடுகின்றன. நமச்சிவாய என்பது யோகத்தின் நுழைவாயிலாக விளங்குகிறது. நமச்சிவாயத்தின் மறைபொருள் என்னவென்றால், அதை சரியான நேரத்தில் சரியான ஒருவரிடம் இருந்து கேட்க வேண்டும். அப்போது தான், அது சைவ சமயத்தின் அதிக ஆற்றல்மிக்க மந்திரமாக உங்களுக்கு பலனை வழங்கும். §

சிதம்பரம் கோயிலில் ஒரு மூத்த பூசாரியாகவும், குருதேவாவிற்கு பல வருடங்கள் நெருக்கமாக இருந்த, Dr. ஆனந்தநடராஜ தீட்சிதர், பின்வரும் சம்பவத்தை விரிவரிக்கிறார்:§

ஒரு சமயம் குருதேவா யாத்திரிகர்கள் குழுவுடன் சிதம்பரம் வந்து இருந்தார். நான் விடுதியின் நுழைவாயிலில் ஒரு செல்வந்தருடன் நின்றுக்கொண்டு இருந்தேன். குருதேவா பேருந்தில் இருந்து இறங்கினார் மற்றும் நாங்கள் அவரை வரவேற்று அவருடன் பேசிக்கொண்டு இருந்தோம். சில நிமிடங்கள் கழித்து, ஒரு வயதான பிச்சைக்காரி எங்களிடம் பிச்சை கேட்டு வந்தாள். குருதேவா தன் கவனத்தை அவள் மீது திருப்பி, அவளுக்கு கொஞ்சம் பணத்தை வழங்கி, அவளுடன் பேச ஆரம்பித்து விட்டார். அவர் அவளை துரத்தி அனுப்பாமல், அவளுக்கு மதிப்பு அளித்து மகிழ்வித்தார். வழக்கமாக அந்த வயதான பெண்மணியை புறக்கணித்து, செல்வந்தருக்கு மதிப்பு அளிக்கும் பல சுவாமிகள் மற்றும் மற்ற மனிதர்களை நான் பார்த்து இருக்கிறேன். எனக்கு தெரிந்த வரை, குருதேவா மட்டுமே எல்லோருக்குள்ளும் உண்மையாக சிவபெருமானை கண்டார். அவர் எல்லோரையும் சமமாக கருதினார். §

வேறுபாடு பார்க்காமலும், ஓரவஞ்சனை செய்யாமலும் விசுவாசமாக நாத பரம்பரையின் வழியை பின்பற்றிய குருதேவா எல்லா ஜாதி, சமூக அந்தஸ்து மற்றும் இனத்தை சேர்ந்த மக்களுடன் இயல்பாக பழகினார். §

தீட்சிதர் குருதேவாவிற்கு தேநீர் அல்லது உணவு வழங்க, அவரை தனது எளிமையான வீட்டிற்கு பல முறை அழைத்து வந்திருந்தார், மற்றும் இவருக்கும் இடையில் நல்ல பரிச்சயம் இருந்தது. அந்த பூசாரி குருதேவாவின் துறவிகளுடன் இன்னொரு சம்பவத்தை பகிர்ந்தார்:§



*குருதேவா தான் சென்ற ஒவ்வொரு நாடு, நகரம் மற்றும் கிராமத்தில் பூஜாரிகள், பண்டிதர்கள், ஆதீனகர்த்தாக்கள், யோகிகள், தத்துவ ஞானிகள் மற்றும் இறையியல் வல்லுனர்களை சந்தித்து, அவர்களிடம் அத்வைத சித்தாந்த தத்துவங்களை பகிர்ந்து, ஒரு ஆன்மீக குடும்பமாக செயல்படவேண்டும் என்று அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.*

........................§

சிதம்பரம் நடராஜர் கோயிலில் நடராஜருக்கு பூஜை செய்யும் போது, வழக்கமாக சிவபெருமானுக்கு பூஜை செய்பவரே *நெய்வேத்தியமும்* செய்வார், மற்றும் அவரே அதை சந்நிதிக்கு எடுத்தக்கொண்டும் வருவார். நான் எப்போதும் எனது வீட்டில் *நெய்வேத்தியத்தை* உரிய நேரத்தில் தயார் செய்து, அதை நான் பூஜை தொடங்குவதற்கு முன்பாக சந்நிதிக்கு

கொண்டு வந்து விடுவேன். ஆனால் ஒரு முறை, என் பிறந்த நாளன்று, அதை தயார் செய்வதில் தாமதமாகிவிட்டது. நான் *நெய்வேத்தியத்தை* தயார் செய்ய தொடங்கினேன், ஆனால் பூஜைக்கு முன்பாக என்னால் அதை தயார் செய்ய முடியவில்லை. நான் பூஜையை தொடங்க வேண்டியிருந்தது; அதன் பிறகு *நெய்வேத்தியத்தை* கொண்டு வருவதற்கு என்று அதை பாதியில் நிறுத்த வேண்டியதாயிற்று. எனக்கு இது மன வேதனையை வழங்கினாலும், அதை பற்றி நான் யாரிடமும் சொல்லவில்லை. §

சில வருடங்கள் கழித்து, குருதேவா சிதம்பரம் வந்து இருந்த போது, நான் அவருடன் பேசிக்கொண்டு இருந்தேன், மற்றும் அவர் திடீரென்று என்னிடம், "அப்படியென்றால், உன் பிறந்தநாளன்று நீங்கள் செய்த சிவ பூஜைக்கு சரியான நேரத்தில் *நெய்வேத்தியத்தை* தயார் செய்யவில்லை," என்று கூறினார். நான் அதைப்பற்றி யாரிடமும் சொல்லாத போது, அவர் அறிந்துக்கொண்டது எனக்கு இன்னும் வியப்பாகவே இருக்கிறது. §

### ஊக்கமளிக்கும் உரைகளின் வெள்ளம்

குருதேவா 1970 களின் இறுதியில் மற்றும் 80 களின் தொடக்கத்தில், தங்கள் சமயத்தில் உறுதியாக நிலைத்து இருக்கவேண்டும் என்று இந்துக்களிடம் கேட்டுக்கொண்டும், இந்து கலாச்சாரத்தின் பெருமைகளை விவரித்துக்கொண்டும், சைவ சித்தாந்த தத்துவத்தின் நுணுக்கங்களை தெளிவுபடுத்திக் கொண்டும் தொடர்ச்சியாக உரைகளை வழங்கிக்கொண்டு இருந்தார். உட்புறமாக இருக்கும் சூட்சும ஞானத்தை பற்றி பேசும் போது, குருதேவா துல்லியமாகவும் தெளிவாகவும் இருந்துக்கொண்டு, மற்றவர்கள் ஆழமான உண்மைகளை புரிந்து கொள்வதற்கு, விவரிக்க முடியாததைப் பற்றி பேசவும் செய்தார். மே 18, 1981, ஒவ்வொரு ஆன்மாவின் மையத்திலும் இருக்கும் இரண்டு முழுமையான நிலைகளை பற்றி தனது துறவிகளிடம் விளக்கினார்:§



*தூத்துக்குடியில் நடந்ததைப் போன்ற பிரம்மாண்டமான ஊர்வலங்கள், குருதேவாவிற்கு பிடித்து இருந்தது. ஹவாய் நாட்டு சற்குரு மற்றும் அவருடைய 70 சீடர்களை 300,000 மேலான மக்கள் வரவேற்று, சாலைகள் வழியாக சுமார் மூன்று மணிநேரத்திற்கு ஊர்வலமாக அழைத்து சென்ற போது, அவர்கள் சென்ற பாதையில் மேலிருந்து மலர்கள் தூவப்பட்டன.*

........................§

பரசிவ என்கிற பரமாத்துமா, மனித இருப்பின் மையத்தில், உணர்வின் வெளிப்புற நிலைகளை கடந்து வாசம் செய்கிறது; இருந்தாலும் மனதை கடந்த நிலையில் அந்த பரமாத்துமா காலம், காரணம், பரவெளியை கடந்து இருப்பதன் விளைவாகவே இந்த வெளிப்புற மனநிலைகள் இருக்கின்றன. §

மனித ஆன்மாவின் இன்னொரு உள்ளார்ந்த முழுமையாக சச்சிதானந்தம் என்கிற தூய இருப்பு, தூய உணர்வு மற்றும் பேரின்பம் விளங்குகிறது. மனதின் சக்தி, சிந்தனை சக்தி மற்றும் *விருத்திகள்* என்கிற மனதின் அலைகள் அமைதி அடையும் போது, வெளிப்புற மனம் அடங்குகிறது மற்றும் ஆன்மாவின் மனம் ஒளி வீசுகிறது. நமது உயிர்சக்தியின் இந்த மெய்ஞ்ஞான ஆழத்தில் நாம் சிவபெருமானின் மனதை பகிர்கிறோம். இந்த அமைதி நிலையில் நுழையும் போது, ஒருவர் தனது உடலுக்குள் ஒரு தூய வெள்ளை ஒளியை முதலில் எதிர்கொள்கிறார், ஆனால் இது ஒழுக்கத்துடன் நீண்டகாலம் யோகப்பயிற்சியை மேற்கொள்வதன் மூலம், மனதின் மீது போதுமான கட்டுப்பாட்டை பெற்ற பிறகே கைக்கூடுகிறது. §

வீணை, மிருதங்கம், தம்புரா மற்றும் மற்ற மனோஉணர்வு ஓசைகளை காதில் கேட்பது ஆன்மீக உடல் விழித்துக்கொள்வதை குறிப்பிடுகிறது, மற்றும் இந்நிலையில் சாதனாவை தொடர்ந்தால், இறுதியாக வளர்ச்சி பெற்று உறுதி அடைந்து, சிவபெருமானின் புனிதமான உட்புற மனமும் நமது ஆன்மாவும் ஒன்றாக இருக்கும், சச்சிதானந்தம் என்கிற மாற்றம் இல்லாத நிலைக்கு மனம் திறந்து கொள்கிறது. உருவத்திற்குள் தொடர்ந்து ஒளி மற்றும் உணர்வு வியாபித்துக்கொண்டு, எங்கும் எதிலும் இருக்கும் கடவுளாக இருக்கும் சச்சிதானந்தம் ஒரு உருவமாக, புனிதமான உருவமாக இருக்கிறது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். சச்சிதானந்தம் என்பது தூய உருவம், தூய உணர்வு, பேரின்பம் மற்றும் உருவமாக இருக்கும் நமது ஆன்மாவின் முழுமையான நிலை ஆகும். பரசிவம் என்பது உருவம், காரணம், பரவெளி இல்லாமல் நமது ஆன்மாவின் உருவத்தை கடந்த முழுமையான நிலை ஆகும். §

இது உன்னதமான உணர்வாக இருந்தாலும், உணர்வு அல்லது மனதை கடந்து இருக்கும் சச்சிதானந்தம் முடிவான உணர்தல் இல்லை. இது இரண்டு முழுமைகளையும் ஒன்றாக கருதும் இக்கால வேதாந்தத்தின் பிரபலமான விளக்கங்களில் இருந்து மாறுபடுகிறது. நவீன யுகத்தை சேர்ந்த வேதாந்த பண்டிதர்கள் முழுமையான அறிவாற்றலை போல

சச்சிதானந்தத்தை பெரும்பாலும் அறிவாற்றலின் நிலையாக, இந்த ஆழங்கள் ஒரு தத்துவ அனுமானம் அல்லது நம்பிக்கைகள் மற்றும் உட்பார்வைகளின் தொகுப்பாக இருப்பதை போன்று, இந்த ஆழங்களை விழிப்புணர்வின் மூலம் அடையலாம் என்று அவ்வப்போது விளக்குகிறார்கள். இதைத்தான் நான் “எளிமையான வேதாந்தம்" என்று அழைக்கிறேன். §

இந்த இரண்டு முழுமையான நிலைகளில் இருக்கும் மாறுபாட்டை புரிந்துகொள்ள, நம்மை சுற்றி இருக்கும் இந்த மடம் மற்றும் நகர்ப்புறத்தின் சுவர்களில் மிகப்பெரிய ஒளியின் உறை பரவி, அனைத்து பொருட்களின் துகள்கள் வழியாக ஊடுருவதாக கற்பனை செய்துகொள்ளுங்கள். ஒளி தொடர்ந்து மாறிக்கொண்டு, நிலை இல்லாமல், புரிந்துகொள்ளக்கூடிய எல்லா உருவங்கள் வழியாக ஊடுருவதால், அதை உருவமற்றது என்று அழைக்கலாம். இதைப்பற்றி மேலும் விளக்குவதற்கு, இந்த ஒளி மற்றும் அது ஊடுருவும் உருவங்களை விழுங்கும் அளவிற்கு வலுவான அதிர்வுடன் மிகவும் பெரியதாக “ஒன்று" இருக்கிறது என்று நினைத்துக் கொள்வோம். இதை விவரிக்க முடியாது, ஆனால் பரசிவ என்று அழைக்கலாம். இது உணர்தலை பெறவேண்டிய, சிவபெருமானின் முழுமையான நிலைகள் அனைத்திலும் சிறந்ததாக விளங்குகிறது. இதையும் ஒரு யோகியால் நிர்விகல்ப சமாதியில் அனுபவிக்க முடியும். §

இதன் மூலம், பரசிவம் என்பது நிர்விகல்ப சமாதியில் அறியும் முழுமை என்றும், சச்சிதானந்தம் என்பது சவிகல்ப சமாதியில் அறியும் முழுமை என்றும் நமக்கு தெரிகிறது. உருவமற்ற என்ற சொல்லின் மூலம், அது எந்த உருவத்தையும் எடுக்காது அல்லது ஒரு குறிப்பிட்ட வடிவம் அல்லது அளவில் இருக்காது என்று நான் அதை விளக்கவில்லை. மனமும் உணர்வும் உருவமாக இருப்பதால், உருவம் மற்றும் பரவெளியை உணரும் மனதை கடந்து, உருவத்தை கடந்து உருவமே இல்லாது இருப்பதை நான் குறிப்பிடுகிறேன். §

### இலங்கை மற்றும் தென் இந்தியா வழியாக பயணம் செலுத்தல்

குருதேவா 1982 ஆம் ஆண்டு மேற்கொண்ட இந்திய யாத்திரை மற்றும் இலங்கை சுற்றுப் பயணத்திற்கு வரலாறு காணாத வரவேற்பு கிடைத்தது. குருதேவாவிற்காக காத்து இருந்த ஆடம்பர வரவேற்பை பற்றி இலங்கையின் தேவாலயத்திற்கு தொடர்பு அதிகாரியாக இருந்து, இந்த பயணத்திற்கு முன்னேற்பாடுகளை செய்த எஸ். சண்முகசுந்தரமும் எதிர்பார்க்கவில்லை. §

ஆசியாவில் சமயம் தொடர்பான நிகழ்வுகளுக்கு சீடர்கள் ஒருவரை மட்டுமே நாடியதாலும், ஒரு ஆசிரியரின் அல்லது குருவின் சீடர்கள் இன்னொரு குரு வழங்கிய உரையில் பங்கேற்காமல் இருந்ததாலும், இது எதிர்பாராத நிகழ்வாக இருந்தது. உதாரணத்திற்கு இராமகிருஷ்ண மடத்தின் ஒரு சுவாமி பயணம் மேற்கொண்டால், அவரது நிகழ்ச்சிகளின்

பார்வையாளர்களாக இராமகிருஷ்ண மிஷன் உறுப்பினர்கள் மற்றும் அர்ப்பணிப்பு இல்லாத சில சாதகர்கள் மட்டுமே கூடுவார்கள். ஆனால் இலங்கைக்கு வந்த இந்த குரு இந்தியாவில் இருந்து வராமல், அமெரிக்காவின் மேற்கு எல்லைப்பகுயில் இருந்து வந்த ஒரு அபூர்வமான ஆன்மாவாக இருந்தார். அவருக்கு உள்ளூரில் சீடர்கள் யாரும் இல்லாததால், அவர் எந்த இயக்கத்திற்கும் அச்சுறுத்தலாக விளங்கவில்லை. அவர் விரைவில் தனது நாட்டிற்கு திரும்பிவிடுவார் மற்றும் உள்ளூர் ஆசிரமங்களில் இருந்து சீடர்களை தன் பக்கம் இழுத்துக்கொள்ள மாட்டார் என்ற கருத்து நிலவி, எல்லோரும் அவரது உரைகளில் சுதந்திரமாக பங்கு பெற்றதால் அங்கே திரண்ட மக்கள் கூட்டத்தை, அதே சிந்தனையை பற்றி தங்கள் சீடர்களிடம் பேச, அதே பாதைகள் வழியாக பழங்கால மகான்கள் பல நூற்றாண்டுகள் முன்பு நடந்து சென்ற பிறகு, அதுவரை யாரும் பார்த்திருக்கவில்லை. §

உலகின் ஒதுக்குபுறமாக இருந்த ஒரு பகுதியில், கிராமம் வாழ்க்கையின் மையமாக இருந்தது; மற்றும் அது வழியாக குருதேவா வாகனம் அல்லது பல்லக்கில் பயணம் செய்த போது, அந்த பகுதி துடிப்புணர்வை பெற்றது. சற்குருவை கௌரவித்து மரியாதை செலுத்தவும், மேற்கில் இருந்து வந்த சைவ யாத்திரைகளுக்கு அன்புடன் வரவேற்பு வழங்கவும், ஆயிரக்கணக்கான சைவர்கள் அளவெட்டி, கோப்பாய், காரைநகர், மட்டக்களப்பு, ஹட்டன் மற்றும் வேறு சில ஊர்களின் தெருக்களில் கூடி இருந்தார்கள். ஒரு நாள் முழுவதும் அந்த பகுதியில் மொத்தம் பதினாறு மைல் தூரம் நீளமாக சென்ற அந்த ஊர்வலத்தில் கிளிநொச்சி மாவட்ட பள்ளிசிறுவர்கள் அனைவரும் பங்குபெறுவதற்கு, அந்த மாவட்டம் முழுவதும் விடுமுறை அறிவிக்கப்பட்டு இருந்தது. §

காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, இந்த ஊர்வலத்திற்கு என்று தயார் செய்யப்பட்ட ஒரு உயரமான தேரை, மக்கள் கூட்டம் அதிகமாக இருந்த தெருக்கள் வழியாக, நூற்றுக்கணக்கான ஆண்கள் இரண்டு நீளமான மற்றும் திடமான கயிறுகளின் மூலம் இழுத்து சென்றனர். வழக்கமாக சாலையில் இருந்து சற்று விலகி, ஒவ்வொரு வீட்டு சுற்றுச்சுவரின் நுழைவாயிலில், பெரும்பாலும் ஒவ்வொரு குடும்பமும் ஆடம்பரமாக அலங்கரித்த வரவேற்பு மேடையில், பித்தளை *குத்துவிளக்குகளும்* ஒரு *கும்பமும்* வைக்கப்பட்டு இருந்தன. அந்த மேடையை சுற்றி குடும்பத்தின் மூன்று தலைமுறைகளும் நின்றுக்கொண்டு உயரமாக, நரைத்த முடியுடன், காவி உடை உடுத்தி, ருத்திராட்ச மாலைகள் அணிந்து இருந்த சற்குருவிற்கு மலர்கள், பன்னீர், விபூதி மற்றும் ஆரத்தியுடன் வரவேற்றனர். §

அவர் பெரும்பாலான வீடுகள் வழியாக கடந்து சென்ற போது, அந்த குடும்பத்தினர் விரைந்து வந்து தாங்கள் தொடுத்த மாலைகளை அவர் கைகளில் வீசினார்கள். அவ்வப்போது ஊர்வலம் நின்றது மற்றும் குருதேவா தேரில் இருந்து இறங்கி, அங்கே குடும்பம் அமைத்திருந்த மேடையை நெருங்கியதும், அந்த குடும்பம் அவருக்கு ஆரத்தி எடுத்து, தூசி படிந்து அவர் கால்களில் தண்ணீர் ஊற்றி, அவர் நெற்றியில் குங்கும பொட்டு வைத்து

மாலையிட்டினர். தெய்வீகத்தன்மையுடன் பிரகாசமும் அன்பும் நிறைந்த அவர் முகத்தை பார்ப்பதற்கு சிவபெருமானை பார்த்ததைப் போலவே இருக்கிறது என்று அவர்கள் தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டனர். இந்த குடும்பங்களில், இந்த நிகழ்வுகள் பல தலைமுறைகளுக்கு எதிரொலிக்கவிருந்தன.§

இந்த ஊர்வலம் உச்சி வெய்யிலில் பல மைல் தூரம் பயணம் செய்து பல கிராமங்கள் வழியாக சென்றது. அவர் ஒரு கிராமத்தின் எல்லையை நெருங்கியதும், தூரத்தில் பயபக்தியுடன் “ஓம் நமச்சிவாய" மந்திரத்தை நூற்றுக்கணக்கான குரல்கள் ஓதிக்கொண்டு வரவேற்பு வழங்குவதை நம்மால் கேட்க முடிந்தது. சிறுவர்கள் வெடி வெடித்து மத்தாப்புக்களை கொளுத்தினர். கற்பனா சக்தி அதிகம் இருந்தவர்கள், மர உச்சியில் அமைத்து இருந்த வலைகளில் மலர்களை சேகரித்த வைத்து இருந்தனர் மற்றும் குருதேவா அதற்கு அடியில் நடந்து செல்லும் போது, அவர்கள் கயிற்றை இழுக்க அவர் மீது மலர்கள் மழை போல பொழிந்தன. சைவர்கள் மற்றும் மகான்கள் ஒன்று கூடும் இடமாக கோயில் இருந்ததால், ஒவ்வொரு ஊர்வலமும் வழக்கமாக கோயிலில் முடிந்தது, ஆனால் சில சமயங்களில் அது ஒரு மண்டபம் அல்லது ஒரு பள்ளி வளாகத்தில் முடிவுபெற்றது. §

குருதேவாவின் பாதம் கோயிலை நெருங்கும் போது பூமியில் படாமல் இருக்க, கடைசி நூறு மீட்டர் தூரத்திற்கு, அல்லது சிலசமயங்களில் கடைசி ஒரு மைல் தூரத்திற்கு, புதிதாக நெய்த பத்து மீட்டர் நீள வெள்ளை *வேஷ்டியை* தரையில் விரிப்பதற்காக, எட்டு ஆண்களை கொண்ட குழுக்கள், அவர் முன்பாக வேகமாக ஓடி வருவார்கள். நாதசுவரம் மற்றும் *தவில்* கலைஞர்களின் குழு மற்றும் வெள்ளை உடையணிந்து அவரது பாதங்களில் ரோஜா மலர்களை தூவிய இளம்பெண்களின் கூட்டம் எப்போதும் சற்குருவிற்கு முன்பாக நடந்து சென்றன.§

குருதேவா ஒரு கோயிலுக்கு வந்து அடைந்ததும், ஒரு சிறிய பூஜையில் பங்குபெற அந்த தெய்வத்தின் சந்நிதிக்கு அழைத்து செல்லப்படுவார், மற்றும் அதன் பிறகு வழக்கமாக உள்ளூர் அரசியல்வாதிகள் மற்றும் கிராமத்து பெரியவர்கள் வழங்கும் அறிமுக உரைக்காக அரங்கத்திற்கு அழைத்து செல்லப்படுவார். அந்த உரைகள் அனுமதிக்கப்பட்டால், அந்த கூட்டத்தின் முக்கிய நோக்கத்தையே மறக்க செய்துவிடும். இதை கவனித்து வந்த குருதேவா, தனது சொற்பொழிவு முதலில் இடம்பெற்று, அறிமுக உரைகள் பின்னர் நடைபெறவேண்டும் என்று பயணத்தின் பிற்பகுதியில் ஆணையிட்டார். மற்றவர்களின் மந்தமான ஒரு மணிநேர சொற்பொழிவுகள் இல்லாததால், அது வியக்கும் வண்ணம் நல்ல பலனை வழங்கி, கூட்டத்தில் இருந்த மக்களுடன் அவரது தொடர்பை வலுப்படுத்தியது. §

குருதேவாவைப் போன்ற முக்கிய விருந்தாளிகளுக்கு, ஒரு பாராட்டு சான்றிதழை போன்று, அழகாக இயற்றப்பட்டு சட்டகம் செய்யப்பட்ட ஒரு ஆவணத்தை தயார் செய்து, அதை அந்த கூட்டத்தில் படித்து காண்பித்து விருந்தாளிக்கு பரிசாக வழங்குவது சமூகத்தின் வழக்கமாக இருந்தது.

இதைப்போன்று குருதேவாவிற்கு நூற்றுக்கணக்கான பரிசுகள் வழங்கப்பட்டன, மற்றும் அதில் ஒவ்வொன்றும் ஒரு கலைஞர் பல நாட்கள் கடினமாக யோசித்து  எழுதி டைப்செட் செய்த ஒரு கலை வடிவமாக இருந்தது. அதில் சில தமிழ் மற்றும் ஆங்கில கவிதைகளாகவும், சில ஆன்மீக அறிக்கைகளாகவும், மற்றவை கடந்த காலத்தை போல சைவ சமயத்தின் எதிர்காலமும் வளமாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்தும் சுவாமியின் உன்னதமான இருப்பின் மீது அன்பின் வெளிப்பாடுகளாக அமைந்து இருந்தன. §

1982 இன்னரசர்ச் யாத்திரையின் போது மலேசியா, இலங்கை மற்றும் இந்தியாவில் சைவ சமய சங்கங்களின் பிரதிநிதிகள் மூலம், குருதேவாவிற்கு அன்புடன் வழங்கப்பட்ட டஜன் கணக்கான வரவேற்புரைகளில் இரண்டு உரைகளில் இருந்து ஒரு சிறிய பகுதியை இங்கே காணலாம். இந்தியாவின் ஆறுமுகநேரியில் இருக்கும் ஸ்ரீ சோமநாத சுவாமி கோயிலின் சைவர்கள் சபை வழங்கிய வரவேற்புரையில் இருந்து ஒரு சிறிய பகுதி:§

ஆறுமுகநேரியில் அமைந்து இருக்கும் ஸ்ரீ சோமநாத சுவாமி கோயிலின் பக்தர்களாகிய நாங்கள், குருதேவாவையும் அவருடன் இந்த யாத்திரையில் துணையாக வந்துள்ள ஞானோதயம் பெற்ற சீடர்களையும் வரவேற்பதில் பெருமை அடைகிறோம். எங்கள் கிராமத்தில் சற்குரு முதல் முறையாக வருகை தந்தது, பக்தியுள்ள சைவர்களுக்கு உண்மையில் ஒரு பிணி நீக்கும் மருந்தாக விளங்குகிறது. சைவ தத்துவம் மற்றும் கடவுள் நம்பிக்கைக்கு சற்குரு தன்னை அர்பணித்துக் கொண்டுள்ளதால், ஒரு ஆன்மீக செய்திக்காக ஏங்கிக்கொண்டு இருந்த இந்த கிராமத்து அன்பர்களுக்கு, அவர் ஒரு முன் உதாரணமாக விளங்குகிறார். சற்குரு கிழக்கு நாடுகளில் ஒரு முனிவரான பிறகு, சரியான நேரத்தில் சைவ சித்தாந்தத்தைப் பற்றி மேலும் பல தகவல்களை வழங்கி தெளிவை வழங்குவதால், நம் மனதிற்கு ஆறுதல் அளிப்பதாக இருக்கிறது. மாறும் பழக்கங்கள் மற்றும் கலாச்சாரத்தின் காரணமாக, கிழக்கில் இருக்கும் பெரும்பாலான மக்கள் நெற்றியில் சைவ சமயத்தின் அடையாளங்களை வைத்துக்கொள்வதை நிறுத்தி விட்ட இக்காலத்தில், சரியான நேரத்தில் சற்குரு வருகை தந்து அவற்றை நெற்றியில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறியதை நாங்கள் வரவேற்று போற்றுகிறோம். §

சற்குரு மற்றும் அவரது சீடர்கள் மேற்கொண்ட யாத்திரை, மக்களுக்கு ஞானோதயம் வழங்கி, அவர்கள் காலத்தால் அழியாத சைவ சமய குழுவிற்குள் நிலைத்து இருக்க உதவியாக இருக்கட்டும். நாங்கள் சற்குருவின் ஆசிகளுக்காக சிரத்தையுடன் வேண்டிக் கொண்டு, சைவ சமயத்திற்கு புத்துயிர் வழங்க சற்குரு எடுத்துக்கொண்ட முயற்சிகள், இந்து சமய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்கி வைக்க பிரார்த்திக்கிறோம். உலகெங்கும் சைவ கோட்பாடு நன்றாக செழிக்கட்டும்! §

ஸ்ரீ சுப்பிரமுனியா ஆசிரமம், அளவெட்டி, ஜனவரி 14, 1982: §

சைவ சமயத்தில் மிகவும் பழமையான நம்பிக்கையின் நிலைபேருடைய தகவலை அறிவித்து வலுவாக உறுதி செய்த‌தன் மூலம், பரந்து விரிந்த இந்த உலகில் தீவிரமான லௌகீகத்தால் பரவும் இருளை வெளியேற்ற நீங்கள் மேற்கொண்ட இந்த யாத்திரை தெய்வீக தூண்டுதலை பெற்றது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. சைவ சமயம் வரலாற்று ஆராய்ச்சியின் வரம்பை கடந்து, குறிப்புக்கள் ஏதும் இல்லாத புராண காலத்தில் தோன்றியுள்ளது. நீக்கமற நிறைந்து எல்லாம் அறிந்திருக்கும் கடவுள், மனதை கவரும் பரமகுரு தட்சிணாமூர்த்தியின் வடிவத்தைப் பெற்று, சனாதன தர்மத்தின் நிலையான உண்மைகள் மற்றும் சைவ சித்தாந்த தத்துவத்தில் தெளிவாக விளக்கியுள்ளதைப் போல பரம்பொருளின் பிரகாசமான பாதையை, நான்கு சனகாதி முனிவர்களுக்கு வெளிப்படுத்தினார் அல்லவா? தர்மங்கள் குறைந்து அதர்மம் தலை தூக்கும் போது மனித நேயத்தை மீட்க, அவர் தன் எல்லையற்ற அருளுடன், மகான்கள் மற்றும் முனிவர்களை தூதர்களாக பூமிக்கு அனுப்பினார் அல்லவா? இந்த மகான்கள் மற்றும் முனிவர்களின் தோற்றமே, வழக்கமாக மனிதநேய வரலாற்றில் பரவி இருக்கும் அறியாமை என்ற இருளை நீக்கி வெளிச்சத்தை வழங்கியுள்ளது. §

இன்று மனிதநேயம் தர்மம் மற்றும் கடவுள் நம்பிக்கையை கைவிட்டு விட்டதால், போரினால் பேரழிவை சந்திக்கும் அபாயத்தில் இருக்கிறது. மதிப்பிற்குரிய குருதேவா அவர்களே, இந்த முக்கியமான தருணத்தில், பேரின்பம் மற்றும் முக்திக்கு உறுதியான வழிகளாக சைவம் மற்றும் வைதீக சமயத்தின் எல்லையற்ற மகிமைகளை அறிவுறுத்தி பிரச்சாரம் செய்வதற்கு, கடவுள் உங்களை தேர்ந்தெடுத்து இருக்கிறார். நீங்கள் சைவ சமயத்தின் எல்லா அம்சங்களையும் பற்றி வழங்கும் தெளிவான விளக்கங்கள் காரணமாக, தங்கள் சமயத்தின் மீது சைவர்களுக்கு மீண்டும் நம்பிக்கையை விழிப்படைய செய்து, அவர்களது இதயங்களில் தீவிரமாக சைவ வாழ்முறையை கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை மீண்டும் தூண்டிவிட்டுள்ளது. நீங்கள் உலகெங்கும் இருக்கும் இந்துக்கள் மத்தியில் ஒரு அற்புதமான ஒற்றுமையை உருவாக்கியது மட்டுமல்லாமல்,  ஆயிரக்கணக்கான புத்திசாலி அமெரிக்கர்கள் அடங்கிய உறுதியான சீடர்கள் குழுவின் இதயங்களை வெற்றிக்கொண்டு, கறைபடாத புனிதத்துடன் இருக்கும் அமெரிக்க துறவிகளைக் கொண்டு ஒரு அழகான குழுவை தொடங்கியும் உள்ளீர்கள். நீங்கள் இவ்வாறு, இந்த பூமியில் நிரந்தர அமைதியையும் தர்மத்தையும் நிலைநாட்டி, லௌகீக சக்திகளை கரைக்கும் எல்லையற்ற ஆன்மீக சக்தியை உருவாக்கி இருக்கிறீர்கள். §

தென் இந்தியா மற்றும் இலங்கையில் இருக்கும் மாபெரும் கோயில்களில் இறைவனுடன் ஒன்றி இருப்பதால் ஏற்படும் அமைதியில் மெய்மறந்து இருக்கவும், உங்களது சமயப்பணி நிறைவடைய அவரது

நிலையான அருளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளவும், சிவபெருமானை சுற்றி அவரது *கணங்கள்* இருப்பதை போல, நீங்கள் இங்கே ஒரு கம்பீரமான குழுவுடன் வந்து இருக்கிறீர்கள். குருதேவா, உங்களுக்குள் எதிரொலிக்கும் இறைவனின் குரலை கேட்டு, இந்த உலகம் முழுவதும் விழித்துக்கொள்ளட்டும், மற்றும் அவர்களுக்கு வாழ்க்கையின் நான்கு *புருஷார்த்தங்கள்* ஸித்திக்கட்டும். ஓம்  சாந்தி, சாந்தி, சாந்தி. §


ஒவ்வொரு இடத்திலும், பாட்டுப்பாடி நடனமாடி தங்கள் விருந்தாளியை மகிழ்விக்க பள்ளிக்குழந்தைகள் முதலில் முன்வந்தார்கள், அதன் பிறகு மலர் மாலைகளுடன் சங்கங்கள் ஒவ்வொன்றாக மேடைக்கு வந்து சேர்ந்தார்கள். சில சமயம் ஒரு அடி விட்டம் மற்றும் ஒன்பது அடி நீளத்துடன் இருந்த, அந்த மிகப்பெரிய மாலைகளை, மேடைக்கு இருவர் சுமந்து வந்தனர். அவை நறுமணம் நிறைந்த மாலைகள், எளிமையான மாலைகள் மற்றும் ஆடம்பரமான மாலைகள் என்று மொத்தம் நூறு மாலைகள் குருதேவாவிற்கு அணிவிக்கப்பட்டன. குருதேவா வசதியாக கூட்டத்தை பார்க்கும் வண்ணம், அவர் கழுத்தில் ஒருசில மாலைகளை மட்டும் மீதம் வைத்து, மற்ற மாலைகளை சுமார் முப்பது நிமிடங்களுக்கு இருவர் தொடர்ந்து நீக்கிக்கொண்டு இருந்தார்கள். அந்த மாலைகளில் இருந்து வெளிப்பட்ட வெப்பத்தை, குருதேவாவிற்கு அருகில் இருந்தவர்களால் மட்டுமே உணர முடிந்தது, மற்றும் அவருக்கு வியர்க்கும் போது துறவிகள் மாறி மாறி விசிறி வீசுவார்கள். §

இறுதியில் நான்கு அடி உயர மாலைகளின் அடுக்கினால், அரங்கம் சிறிது வளைந்து கொண்டது. முடிவில், குருதேவா உரை வழங்க பிரசங்க மேடைக்கு சென்றார். இதைப்போன்று காலை, மதியம் மற்றும் மாலை நேரங்களில் ஊர்வலங்கள் மற்றும் உரைகள் என்று பல நாட்களுக்கு தொடர்ந்தது. கிராமப்புற பாதைகள் வழியாக யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கு, கண்டியில் இருந்து மட்டக்களப்பிற்கு, கொழும்புவில் இருந்து தேயிலை தோட்டங்கள் நிறைந்த மலைப்பிரதேசங்களுக்கு பயணம் செய்து, குருதேவா 25,000 சதுர மைல் பரப்புள்ள நாட்டில் பெரும்பாலான பகுதிகளுக்கு சென்று இருந்தார். §

இந்த நிகழ்ச்சிக்காக கூடியிருந்த மக்கள் கூட்டத்துடன், இலங்கை சைவர்களின் இதயங்களில் எழுச்சி பெற்ற வலுவான தெய்வீக சக்தியும் இணைந்து கொண்டு, மக்களுக்கு சற்குரு மீது இருந்த நிலையான மரியாதையை எடுத்துரைத்தன. இந்த மூன்று வாரங்களின் போது, குருதேவா இலங்கையில் இருந்த ஒவ்வொரு முக்கிய சைவ மையத்திற்கு பயணம் செய்தார் மற்றும் அவரை தரிசித்து, சொற்பொழிவை கேட்டு, பாதத்தை தொட்டு வணங்கி அவரது ஆசிகளை பெறுவதற்கு 300,000 மேலான மக்கள் வந்ததாக மதிப்பிடப்படுகிறது. எஸ். சண்முகசுந்தரத்தின் கருத்து:§

முக்தி பெற்ற ஆன்மாவாக இருக்கும் ஒரு *ஜீவன்முக்தாவிற்கு* ஆயிரக்கணக்கான  மக்கள் வரவேற்பு வழங்கி, அவரை பின்தொடர்ந்து

சென்று அவரது சொற்பொழிவுகளில் பக்தியுடன் கலந்து கொண்டனர். 1,200 வருடங்களுக்கு முன்பு திருஞானசம்பந்தர் வாழ்ந்த காலத்திற்கு பிறகு, இத்தகைய ஒரு பக்தியை யாரும் பார்த்திருக்கவில்லை. §



*குருதேவா இந்தியா மற்றும் இலங்கைக்கு மேற்கொண்ட பல பயணங்களின் போது, அவரிடம் ஆசிகளை பெறுவதற்கு பல ஆயிரககணக்கான அன்பர்கள்*

*அவரை நாடி வந்தார்கள். ஒரு கோயிலில் சொற்பொழிவு வழங்கிய பிறகு, அவர் பல மணி நேரங்கள் ஓரிடத்தில் அமர்ந்து இருக்க, மக்கள் ஒவ்வொருவராக அவருக்கு வாழ்த்துக்கள் சொல்ல முன் வருவார்கள். அவர் அவர்களை முகத்தில் புன்னகையுடன் வரவேற்று, தனது வலது கட்டைவிரலால் அவர்களது நெற்றியில் விபூதியை பூசிவிடுவார்.*

……………………§

தேவாலயத்தில் மூத்த சுவாமியாக இருந்த ஒருவர் வழங்கிய குறிப்பு:§

> இலங்கையில் ஒரு காலத்தில் பிரகாசமாக கொழுந்து விட்டு எரிந்த சைவ சமயத்தின் நிலை, தற்போது வலுவிழந்து புகைத்துக்கொண்டு தணியும் நெருப்பைப் போல உள்ளது. இந்த தணியும் நெருப்பை சிறிது விசிறி விட்டு, சில விறகுகளை அதன் மீது வைத்தால், அங்கே மீண்டும் நெருப்பு கொழுந்து விட்டு எரியும். குருதேவா இந்த தணியும் நெருப்புக்களை விசிற மட்டுமே செய்கிறார், இதனால் தீ பிரகாசமாக எரிகிறது. §

இந்த பயணத்தின் போது குருதேவா நானூறு அல்லது ஐநூறு முறை தனது வாகனத்தை நிறுத்தி இருக்கவேண்டும். அவர் ஒரு நிகழ்ச்சிக்கு கிளம்பிய ஒவ்வொரு முறையும், தங்கள் இடத்தில் நிற்கவேண்டும் என்று குடும்பங்கள் மற்றும் சங்கங்கள் தங்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டு முன் வந்தார்கள். மேலும் அவரை அழைத்துக்கொண்டு செல்லும் வழியில், “ஐந்து நிமிடங்கள் இருந்தால் போதும், குருதேவா. நான் உறுதி அளிக்கிறேன். உங்களிடம் ஆசிகளை பெறுவதற்காக மக்கள் நாள் முழுவதும் காத்து இருக்கிறார்கள். அவர்களுக்காக நீங்கள் ஐந்து நிமிடங்கள் ஒதுக்க முடியும் என்று நினைக்கிறோம்,” என்று கூறுவார்கள். இந்த சம்பவம் அடிக்கடி நடைபெற்றதால், துறவிகள் எப்.எம்.எஸ். (FMS) கோட்பாடு என்கிற “ஐந்து-நிமிட-நிறுத்தம் கோட்பாட்டை" உருவாக்கினார்கள். §




*குருதேவா 1980 களில் தென்னிந்தியாவின் அனைத்து மடங்களையும் சென்று பார்த்து, அதன் மடாதிபதிகளுடன் தனது தொடர்பை வளர்த்துக்கொண்டார். இந்த பழங்கால மடம்-கோயில் வளாகங்களில் அவர் கவனித்த பாரம்பரிய கலாச்சாரம், கவாய் ஆதீனம் உருவாவதற்கு வழிகாட்டியாக விளங்கியது.*

……………………§

குருதேவாவின் குழு, “சரி, தரிசனத்திற்காக நாம் இங்கே சிறிது நேரம் நிற்கலாம்,” என்று தங்கள் மனதை மாற்றிக்கொண்டதும், வழக்கம் போல் ஒரு எப்.எம்.எஸ். தொடங்கும். அவர்கள் சாலைகளின் சந்திப்பை வந்து அடைந்ததும் உற்சாகமாக, அவரை தரிசிப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் முட்டி மோதிக்கொண்டு, வீட்டில் தயார் செய்த பதாகைகளை உயர பிடித்துக்கொண்டு, “சைவ சமயத்தின் மகானை” வரவேற்று, அவருக்கு ஆரத்தி எடுத்தார்கள். திடீரென்று அந்த மக்கள் கூட்டம், குருதேவாவை முன்னே தள்ளிக்கொண்டு, அவரை ஒரு மண்டபத்திற்கு அழைத்து செல்வார்கள். அங்கே மேலும் ஆயிரத்து இருநூறு நபர்கள் காத்து இருந்தார்கள். பாடிக்கொண்டு, சுலோகம் சொல்லிக்கொண்டிருந்த அவர்கள், சில வார்த்தை பேசவேண்டும் என்று குருதேவாவிடம் மன்றாடினார்கள். ஆனால் முதலில், அந்த கிராமத்தை சேர்ந்த பெரியோர்கள் ஒரு சிறிய அறிமுகத்தை வழங்கினார்கள்! சரியாக நாற்பத்தி ஐந்து நிமிடங்கள் கழித்து, அவரையும் அவரது ஐந்து நபர் (அவரது இரண்டு சுவாமிகள், ஒரு சாதகர், தேவாலயத்தை சேர்ந்த மதகுரு மற்றும் வாகன ஓட்டி) கொண்ட சிப்பந்திகளையும் அவர்கள் பயணம் செய்த வெள்ளை வாகனத்திற்கு, அந்த குழு வலுக்கட்டாயமாக இழுத்து சென்று, அடுத்த எப்.எம்.எஸ். நிறுத்தம் வரும் வரை அங்கிருந்து தப்பித்து தனது பயணத்தை தொடர்ந்தது. இதே முறையில், இருபது மைல்கள் பயணம் செல்ல மூன்று-நான்கு மணி நேரம் ஆனது. அதனால் நடக்கவிருந்த அதிகாரப்பூர்வ நிகழ்ச்சியில் காத்து இருந்தவர்கள் நிலைமை வேதனை தருவதாக இருந்தது. §

ஒரு இடத்தில் குருதேவா நிற்காமல் சென்றதால், அந்த கிராமத்து மக்கள் ஒரு பெரிய மரத்தை சாய்த்து சாலையில் குறுக்காக வைத்து வழியை மறைத்தனர். அவர்கள் பக்தி அதிக நேர்மையாகவும், அவர்கள் பயன்படுத்திய உத்திகளில் அதிக ஆர்வம் இருந்ததாலும், அவர் அங்கே இறங்கிக்கொண்டார். §

இதைப்போன்ற வரவேற்புக்கள், இன்னர்சர்ச் குழு இந்தியா சென்ற போதும் கிடைத்தன. 1981 ஆம் ஆண்டு, தமிழ்நாட்டு தூத்துக்குடியின் பிரதான சாலையில் இரண்டு மணிநேரம் நடைபெற்ற வரவேற்பு அணிவகுப்பில் 80,000 மக்கள் கூடியிருந்தனர். அந்த அணிவகுப்பின் போது, நன்றாக அலங்கரிக்கப்பட்ட ரிக்ஷா வண்டிகள் மற்றும் குதிரை வண்டிகளில் குருதேவாவும் அவரது சீடர்களும் பயணம் செய்ய, மேலே வீட்டு கூரைகளில் அமர்ந்து இருந்த உற்சாகமான மக்கள், அவர் மீது கூடை கூடையாய் பூவிதழ்களை பொழிந்தார்கள். *தவில்* மற்றும் *நாதவஸ்ர* கலைஞர்களுக்கு பின்னால், மேற்கத்திய இசைக்குழுவின் அணிவகுப்பு சென்ற காட்சி கலாச்சார கூட்டுறவை தெளிப்படுத்தியது. இந்த அணிவகுப்பை பார்ப்பதற்கு, நியூ யார்க்கின் ஐந்தாவது அவெனியூவில் பூமிக்கு திரும்பும் விண்வெளி வீரர்களுக்கு, உயர்ந்த கட்டிடங்களில் இருந்து காகிதங்களை தூவி மரியாதை செலுத்தும் டிக்கர்-டேப் அணிவகுப்புக்கு இணையாக இருந்ததாக, ஒரு இன்னர்சர்ச் குழு உறுப்பினர் கருத்து தெரிவித்தார்.

மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய சைவர்களுக்கு இடையே கோலாலம்பூரின் மையப்பகுதியில் இருந்த கோயில்களில் இருந்து, யாழ்ப்பாண பள்ளிகளின் பொதுக்கூட்ட அரங்குகள் மற்றும் தென் இந்தியாவின் *ஆதீனங்கள்* வரை நடைபெற்ற இந்த சந்திப்புக்கள், புதிய முன்உதாரணங்களை அமைத்து தந்து, பல தலைமுறைகளுக்கு நிலைத்து இருக்கக்கூடிய தொடர்புகளை உருவாக்கின. §

அடுத்த வருடம் இலங்கையில் ஒரு இனப்போராட்டம் வெடிக்கும் என்று குருதேவாவிற்கு எச்சரிக்கை கிடைத்து இருந்தது. அந்த போராட்டம் 2009 ஆம் ஆண்டு வரை நீடித்து 100,000 மக்களை கொன்று, பல ஆயிரக்கணக்கான தமிழர்களை அவர்களுக்கு பிடித்தமான தாய்நாட்டில் இருந்து வெளியேற்றியது. “சிவபெருமானின் திருவடிகளை வலுவாக பிடித்துக்கொண்டு பயப்படாமல் இருங்கள்,” என்று இலங்கை மக்களுக்கு அவர் வழங்கிய தகவல் மோசமான சூழ்நிலைக்கு தயாராக இருங்கள் என்பதை குறிப்பிடுவதாக இருந்தது. அந்த காலத்தில் யாழ்ப்பாணப் பகுதியில் இரண்டரை மில்லியன் தமிழர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் எதிர்காலத்தை நினைத்து அச்சத்தில் இருந்தனர். தைரியமாக இருந்துக்கொண்டு இறைவனையும் குருவையும் மறக்காமல் இருக்க வேண்டும் என்று குருதேவா அவர்களுக்கு அறிவுறுத்திக்கொண்டு, அவர்கள் அச்சங்களை தணிக்க கடுமையாக முயற்சி செய்துக்கொண்டு இருந்தார். §

தங்கள் ஆன்மாவை காப்பாற்ற, அவர்கள் கிறுத்துவ மதமாற்ற இயக்கங்களுக்கு எதிராக, அப்போது நடத்திய போராட்டத்தைப் பற்றியும் அவர் தைரியமாக பேசினார்:§


> நீங்கள் சிவபெருமானை நேசித்தால், மரணத்தை நினைத்து பயப்படவேண்டாம். ஒரு கிறுத்துவ சமயப்பார்ப்பாளர் அல்லது அதைப்போன்று அச்சத்தில் வாழ்பவர்களை நினைத்து நீங்கள் பயப்படவேண்டாம். நான் ஹட்டன் சென்றிருந்த போது, ஒரு இந்துவை கிறுத்துவ மதத்திற்கு மாற்றுபவருக்கு நூறு ரூபாய் தரப்படுவதாக சில சுவரொட்டிகளை பார்த்தேன். தமிழர்களை பிடித்துத் தந்தால் வெகுமதி என்பதை கேட்பதற்கு அருவருப்பாக இருக்கிறது. நீங்கள் யாரையாவது மதம் மாற்றினால் உங்களுக்கு கிறுத்துவர்கள் நூறு ரூபாய் தருவதை பார்க்கும் போது, பழங்கால அமெரிக்காவில், வைல்ட் வெஸ்ட் பகுதியின் ஷெரீஃப் (ஊர்த்தலைவர்) வங்கியை சூறையாடிய கொள்ளையனை பிடித்து தருபவருக்கு வெகுமதியாக பணத்தை கொடுத்தது போல இருக்கிறது. §
>
> இந்த மதமாற்றாங்கள் அனைத்தும் மிகவும் மேலோட்டமானவை. அவை ஒருவரின் அடிப்படை நம்பிக்கையை அல்லது அதைப்போன்ற ஒரு இயல்பை மாற்றி விடுவதில்லை. “நீங்கள் மதம் மாறினால் உங்களுக்கு மருத்துவ வசதிகள் கிடைக்கும்; இல்லையென்றால் நீங்கள் அதே மதத்தில் வேதனையால் இறக்க நேரிடும்,” என்று அவர்கள் லௌகீக பயன்களை மட்டுமே உறுதி அளிக்கிறார்கள். கிறுத்துவ மதத்திற்கு

> மாற்றும் நோக்கத்துடன் இத்தகைய கொடுமையான உத்திகளை தமிழர்களே கையாள்வதால், இது பெரும்பாலும் அமெரிக்காவில் இருக்கும் தலைமையகத்திற்கு தெரிய வாய்ப்பில்லை. இவற்றை ஒழுங்குபடுத்துவதற்கு சட்டங்கள் எதுவும் இல்லை என்பதால், “காப்பாற்றபப்பட்டவர்களின்" பெயர் பட்டியலை வழங்கி, அமெரிக்காவிடம் இருந்து உள்ளூர் சமயப்பரப்பாளர்கள் பணத்தை பெறுகிறார்கள். §

**சைவ சித்தாந்தம் ஒரு தலைவனை தேடிக்கொள்கிறது**

மிகவும் பிரபலமான ஆதி சங்கரரின் அத்வைதத்தில் இருந்து சைவ சித்தாந்தம் மாறுபட்டு இருந்தாலும், அது அடிப்படையில் அத்வைதம் சார்ந்தது என்பதை சற்குரு யோக சுவாமி வாழ்ந்த காலத்தில் இருந்து, குருதேவா ஆதரித்து அறிவுறுத்தியும் வந்தார். ஆனால் அவர் மிகவும் முக்கியமான இன்னொரு சைவ சித்தாந்த கருத்தை 40 களின் இறுதியில் கற்று இருந்தார் மற்றும் அதை தற்போது தனிப்பட்ட முறையில் எதிர்கொள்ளவும் இருந்தார். §

> எனது சற்குரு சிவயோக சுவாமியிடம் இருந்து தீட்சை பெறும் முன்னர், இலங்கையின் யாழ்ப்பாணத்தில் மாட்டு சாணத்தால் மொழுகிய தரையுடன் இருந்த சிறிய மண் குடிசைகளில் வாழ்ந்துகொண்டு, சாதனா செய்த போது, முடிவுக்கு வராத இந்த பிரச்சினையைப் பற்றி 1948 ஆம் ஆண்டு நான் தெரிந்துகொண்டேன். இந்த நவீன சூட்சும ஞான அறிக்கைகள் மற்றும் சித்தாந்தங்கள், அந்த பகுதியில் இருந்த பல்வேறு பன்மைவாத ஆதரவாளர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது என்பதை நான் தெரிந்துக்கொண்டேன். §




*சிவபெருமானைப் போல காட்சி அளித்து, அவரைப் போல பேசி, தங்கள் வாழ்க்கையை உருமாற்றும் சக்தியுடன் ஒரு தீவிரமான அன்பை வெளிப்படுத்திய, ஒரு உயரமான சற்குருவை மலேசியா, பிஜி, டிரினிடாட், ஐரோப்பா, இலங்கை, இந்தியா, மொரிஷியஸ் மற்றும் வேறு பல நாட்டு மக்கள் விஷேசமான மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அவர்கள் மிகவும் பெரிய ஊர்வலங்களில், அவர் நடந்து செல்வதற்கு தரையில் வெள்ளை நிற பருத்தி துணியை விரித்தார்கள்.*

........................§

இந்த இரண்டு சிந்தனை பிரிவுகளில் எது சரியானது என்று சிவயோக சுவாமி என்னிடம் கேட்டார். அது நீங்கள் மலை உச்சியில் இருந்து பார்க்கிறீர்களா அல்லது மலை அடிவாரத்தில் இருந்து பார்க்கிறீர்களா என்பதை பொறுத்து இருக்கிறது என்று கூறி அதற்குரிய பாணியில்

பார்க்கும் போது இரண்டும் சரியானது என்று நான் தெரிவித்தேன். அவர் சிரித்துக்கொண்டு தலையை அசைத்தார். அத்வைத ஈஸ்வரவாதம் உண்மைப்பொருளின் உயர்வான காட்சி என்று ஞானகுரு யோக சுவாமி எனக்கு கற்றுத்தந்தார்.

நான் கவாய் ஆதீனத்தின் மகாசன்னிதானம் மற்றும் நாத பரம்பரையை சேர்ந்த கைலாச பரம்பரையின் ஜகதாச்சாரியராக சர்வதேச சைவ சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட போது, எனது வாழ்க்கையில் அந்த பிரச்சனையை நான் மீண்டும் எதிர்கொண்டேன். §



*குருதேவா பல நூற்றாண்டுகள் பழமையான தர்மபுர ஆதீனத்திற்கு சென்று இருந்த போது, அதன் மடாதிபதி அணிந்து இருந்த மாபெரும் காதணிகளை கவனித்தார். மடாதிபதி இரண்டு தங்க காதணிகளை வரவழைத்து, அவற்றை தனது விருந்தாளிக்கு சம்பிரதாய முறைப்படி அணிவித்தார்.*

……………………….§

1980 களின் தொடக்கத்தில், ஒருமை பண்புடன் இறைவன் மற்றும் ஆன்மாவிற்கு இடையில் முடிவான ஒற்றுமையை வலியுறுத்தி குருதேவா அச்சிட்ட பல ஆயிரக்கணக்கான துண்டு பிரசுரங்கள் உலகை சுற்றி வலம் வந்தன. இவை இறைவனும் ஆன்மாவும் நிரந்தரமாக தனித்து இருக்கும்

கருத்துக்கு ஆதரவு அளித்து, தங்களை பன்மைவாதிகள் என்று குறிப்பிட்டுக்கொண்டவர்களிடம் இருந்து சில சுவாரஸ்யமான பதில்களை தூண்டுவிட்டன. இரு கருத்துக்களுக்கும் இடையே இருந்த அடிப்படை வித்தியாசத்தை அவர் விளக்கினார்:§

> அத்வைத கண்ணோட்டத்தில், சிவபெருமான் எல்லாமாக இருக்கிறார்; இந்த தூல பிரபஞ்சத்தில் அவர் வியாபித்து இருந்தாலும், இதுவும் அவரது அங்கமாக விளங்குகிறது. பன்மைவாத கண்ணோட்டத்தில், சிவபெருமான் பிரபஞ்சத்திற்கு உயிரோட்டம் வழங்கி அதை வழிநடத்தி செல்கிறார், ஆனால் அது அவரது அங்கமாக இருப்பதில்லை. இந்த பிரபஞ்சத்தில் முடிவான உள்பொருள் ஒன்றா அல்லது மூன்றா, ஆன்மா நிரந்தரமாக தனித்து இருக்கிறதா அல்லது இயல்பாக சிவபெருமானுடன் ஒன்றி இருக்கிறதா என்பதே வேறுபாட்டின் மையமாக விளங்குகிறது. §
>
> பெரும்பாலும், ஒருமைவாதிகள் (அத்வைதம் பின்பற்றுவோர்) மற்றும் பன்மைவாதிகள் ஒரே எண்ணத்துடன் இருக்கிறார்கள். அவை முற்றிலும் முரணான தத்துவங்கள் இல்லை. இரண்டிற்கும் இடையே வேற்றுமைகளை காட்டிலும் ஒற்றுமை அதிகமாக இருக்கிறது. இரண்டு பிரிவுகளுக்கும் இடையே தொண்ணொற்றி ஐந்து சதவீத ஒற்றுமையும் ஐந்து சதவீத வேறுபாடும் இருக்கிறது. §

பன்மைவாதிகளிடம் இருந்து முதலில் வந்த கடிதங்கள், அவர்கள் கருத்துக்கு ஆதரவாக இருந்தாலும் மென்மையாகவும் பணிவாகவும் இருந்தன. ஏதும் அறியாத குழந்தைக்கு பெரியவர் ஒருவர் புத்தி புகட்டுவது போல, அவை மென்மையாக ஹவாயின் சற்குருவிடம் இறைவன், ஆன்மா மற்றும் உலகம் நிரந்தரமாக தனித்து இருப்பதைப் பற்றி நினைவூட்டி, அவர் இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள, தனது புத்தகங்கள் மற்றும் தனது சமய கோட்பாடுகளை மாற்றி அமைத்துக்கொள்ளலாம் என்று குறிப்பிட்டன. தனது கருத்துக்கள் சரியானதே என்றும், தனது போதனைகள் யோக சுவாமி மற்றும் திருமூலரின் போதனைகளுடன் இணக்கத்தில் இருப்பதாகவும், அந்த பாரம்பரியத்தின் நவீன வேறுபாடு சைவ சித்தாந்தத்தின் இன்னொரு வடிவமாக இருக்கிறது என்று கவலையுடன் இருந்த பெரியவர்களுக்கு உறுதி அளிக்கும் பதில்களை அவர் அனுப்பி வைத்தார். §

அது சண்டையின் தொடக்கமாக விளங்கியது. பல நாடுகளை சேர்ந்த சுவாமிகள் மற்றும் பண்டிதர்கள் சிறிய கவாய் மடத்தின் மீது தத்துவ சாஸ்திர வாதங்கள், பாரபட்சமான விவாதங்கள் மற்றும் அற்பமான விமர்சனங்கள் மூலம் தொடர்ந்து தாக்குதல் நடத்தினார்கள். அவருக்கு உலக அரங்கில் இருந்த மதிப்பை அவர்கள் விரும்பவில்லை என்பதால், ஹவாய் குருவை கட்டுப்படுத்துவது அவர்களுக்கு முக்கியமாக இருந்தது; மற்றும் அவர்கள் நவீன யுகத்தில் சைவ சமயத்தின் மறுமலர்ச்சிக்கு அவரை அணைத்துக்கொண்டதைப் போல, அவரது முரணான நம்பிக்கைகளில்

இருந்து தங்களை விலகிக்கொள்ள அவர்கள் தற்போது நிர்பந்திக்கப்பட்டார்கள். §

குருதேவாவின் மனதை மாற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அவரிடம் இருந்து அன்பையும், நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து அவரது அணுகுமுறைக்கு ஆதரவை மட்டுமே வெளிப்படுத்தின. அதில் மிகவும் முக்கியமாக, உலகில் *திருமந்திரத்தில்* தேர்ச்சி பெற்ற மேதைகளில் முக்கியமானவராக கருதப்பட்ட, மெட்ராஸின் நீதிபதி மகாராஜன் குருதேவாவின் கருத்துக்களுக்கு தீவிர ஆதரவாளராக விளங்கினார். §

பன்மைவாதிகள் இழிவாகவும் கீழ்த்தரமாகவும் செயல்படத்துவங்கி, புத்தக புழுக்களால் மட்டுமே பேச முடிந்த நுணுக்கமான நிந்தனைகளில் அந்த பண்புகளை வெளிப்படுத்தி, தரக்குறைவான மற்றும் பழித்துரைக்கும் பிரச்சாரத்தை தொடங்கினார்கள். குருதேவா தவறான, தற்கால சித்தாந்தத்தை உருவாக்கி உள்ளார் என்று பரிந்துரைத்து, அவரை சைவ சித்தாந்த நடவடிக்கைகளில் இருந்து விலக்கிவைக்க யோசித்தனர். அவர்கள் “ஹவாய் சைவ சமயம்" என்று அதை இழிவுபடுத்தினார்கள். §

குருதேவா வளைந்து கொடுக்காததால், அவர்களுக்கு வேண்டிய பலன் கிடைக்கவில்லை. அவர் அவர்களை அணுகி அஞ்சல் மூலம் விவாதம் நடத்த அழைப்பு விடுத்தார். அவர் சைவ மையங்களுக்கு பயணம் செய்து, பல நூற்றாண்டுகளாக சைவ சூட்சும ஞானத்தை நிலை நிறுத்தி, தமிழ் சாஸ்திரத்தின் ஆன்மீக களஞ்சியமாக இருக்கும் *திருமந்திரத்தில்* இருந்து வலுவான கருத்துக்களை எடுத்து, அந்த மையங்களில் அத்வைத சைவ சித்தாந்தம் தான் சிறந்தது என்று வாதாடினார். குருதேவா தனது மொழிபெயர்ப்பாளர்களின் மூலம், தனது விளக்கத்திற்கு சாதகமாக ஆங்கில வார்த்தைகளை மாற்றுகிறார் என்று பண்டிதர்கள் அவர் மீது குற்றம் சுமத்தி, வலுவாக எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் நல்ல தகுதி வாய்ந்த தமிழ் மொழிபெயர்ப்பாளர்களை இந்த பணியில் ஈடுபடுத்தியதும், குருதேவா கூறியது சரி என்றும், திருமந்திரம் தைரியமாக அத்வைத கருத்தை தெரிவித்ததையும் பன்மைவாதிகள் தெரிந்துகொண்டார்கள். விவாதத்தில் நம்பிக்கை இழந்தவர்கள் செய்வதை போல, அவர்கள் தங்கள் புனிதமான நூலை தூக்கி எரிந்து, “நாம் இது வரை நச்சு கலந்த கிணற்றில் இருந்து தண்ணீரை குடித்துள்ளோம்,” என்று அறிவித்தனர். அவர்கள் சாஸ்திரத்தை புறக்கணித்தது அதிர்ச்சி தருவதாக இருக்கலாம், ஆனால் அவர்கள் அதை பின்பற்றினால் குற்றம் சுமத்தப்படுவார்கள் என்பதால், அவர்களுக்கு இதைத்தவிர வேறெந்த வழியும் தெரியவில்லை. §

உலகில் இருக்கும் ஒவ்வொரு சித்தாந்தியும் அறிந்து இருந்த இந்த சர்ச்சையின் மீது ஜூலை 1983, கொலாலம்பூரில் ஒரு மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அறநூறு அறிஞர்கள் பங்குபெற்ற இரண்டு நாள் நிகழ்ச்சியில், இரண்டு தரப்பினரும் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். மாநாட்டில் விவாதங்கள் ஒருபுறம் நடந்துகொண்டு இருக்க, கடவுள் நம்பிக்கை பற்றிய விவாத மேடைக்கு நூல்களை கொண்டு

வருவதற்காக  நூலகத்தில் நீண்ட அமர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. வரலாற்று சிறப்புமிக்க இந்த இரண்டு நாள் மாநாட்டின் முடிவில் குருதேவா மட்டுமே ஒற்றை சிந்தனையுடன் வெளிவந்தார். அவர் அத்வைத சைவ சித்தாந்தத்தை தீவிரமாக ஆதரித்தார், மற்றும் அவர் மனதை யாராலும் மாற்ற முடியவில்லை.§

இதை கவனித்ததாலும், குருதேவா மற்றும் அவரது துறவிகள் தொடர்ச்சியாக மலை போல வழங்கிய ஆதாரங்கள் காரணமாகவும், எதிர்கட்சியினர் மனம் மாறி அமைதி அடைந்து, ரிஷி திருமூலர் முதலில் தோற்றுவித்த அத்வைத பிரிவு மற்றும் அதன் பின்னர் தோன்றிய மெய்கண்டாரின் பன்மைவாத  பிரிவு என்று உண்மையில் சைவ சித்தாந்தத்தில் இரண்டு பிரிவுகள் இருக்கிறது என்று சில மாதங்கள் முன்பு குருதேவா வழங்கிய தீர்வே சரியானது என்ற முடிவுக்கு வந்தனர். இதன் மூலம் பதட்டமான சூழ்நிலையில் அமைதி ஏற்பட்டு, சைவ சமயத்தின் எதிர்காலம் சிறப்பாக அமைய இருதரப்பும் சேர்ந்து பணியாற்ற வழிவகுத்தது. இந்த தீர்மானம் பற்றி குருதேவா பின்னர் நினைவுகூர்ந்தார்:§

ஒருமைவாத/பன்மைவாத சர்ச்சை, ஒரு முடிவான தீர்மானம் மட்டுமே இருக்க முடியும் என்ற எங்கள் அறிக்கையை மீண்டும் தூண்டிவிட்டு, சைவ சித்தாந்த்திற்குள் பன்மைவாதிகளுக்கு ஒரு முடிவான தீர்மானமும், அத்வைத ஈஸ்வரவாதத்தை பின்பற்றுவோருக்கு ஒரு முடிவான தீர்மானமும் மட்டுமே இருக்க முடியும் என்ற புரிதலுடன் முடிவுக்கு வந்தது. இது தர்மபுர ஆதீனத்தின் 26 ஆவது மகாசன்னிதானமாக இருந்த ஸ்ரீ ல ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியா சுவாமிகளின் தென்னிந்திய மடத்தில் பிப்ரவரி 1984  நடைப்பெற்றது. இந்த கூட்டத்தில் பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், வேத சாஸ்திர வல்லுனர்கள், கலைத்துறை உறுப்பினர்கள் மற்றும் வாக்குவாதத்தில் ஈடுப்படிருந்த பண்டிதர்கள் கலந்து கொண்டார்கள். §

இதனால் நவீன இந்து சமயமாக இருக்கும் சனாதன தர்மத்தின் கோட்பாடுகள், எல்லோருக்கும் நல்லதை செய்வதற்காக ஒரு ஆக்கப்பூர்வமான கூட்டுறவில் அத்வைத பிரிவு மற்றும் பன்மைவாத பிரிவை கட்டுப்படுத்தி, உலகெங்கும் இந்து வம்சாவளியினர் பரவி இருந்ததால் முன்னேறிக்கொண்டு, தவிர்க்க முடியாத இந்து சமய தன்னம்பிக்கையை தூண்டிக்கொண்டு, மாபெரும் இந்து மறுமலர்ச்சியில் இணைந்து செயல்படுகின்றன. இந்த இரண்டு பிரிவுகளுக்கும் இடையே தற்போது அமைதி, சகிப்புத்தன்மை மற்றும் பரஸ்பர மரியாதை நிலவுகிறது என்று சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.§

அன்பு மற்றும் நம்பிக்கை கலந்த இந்த இணக்கத்திற்கு, நாங்கள் தர்மபுர ஆதீனத்தின் பரமாச்சாரிய குருவை முதன் முறையாக ஜனவரி 30, 1981 சந்தித்த போது அடிக்கல் நாட்டப்பட்டதாக எங்களுக்கு தோன்றுகிறது. நான் நாற்பது கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளை சேர்ந்த

சீடர்களுடன் சைவ சமயத்தின மிகவும் புனிதமான தலங்களுக்கு புனித யாத்திரை சென்ற போது, பரமாச்சாரிய குருவின் பழமையான தர்மபுர ஆதீனத்திற்கு வருகை தருமாறு அவரது தூதர்கள் எங்களுக்கு அழைப்பு விடுத்தனர். §

பதினாறாம் நூற்றாண்டின் மகாராஜாக்களால் கட்டப்பட்ட அரண்மனையின் ஆன்மீக புகலிடத்தில் உட்புறமாக இருந்த அறைகளில் நாங்கள் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து கொண்டோம். தங்கள் குருவுடன் அமர்ந்து இருந்த கிழக்கு நாட்டு பண்டிதர்களுடன், தங்கள் குருவுடன் அமர்ந்து இருந்த மேற்கு நாட்டு பண்டிதர்கள், வரலாற்று தொடக்கத்தில் இருந்து மனிதனின் மனதை குழப்பும் தத்துவ புதிர்களை பற்றி விவாதித்தது, ஒரு கண்ணைக் கவரும் காட்சியாக இருந்தது. நாங்கள் மொழிபெயர்ப்பாளர்கள் உதவியுடன் இறைவன், ஆன்மா மற்றும் உலகம் பற்றியும், இந்த தலைசிறந்த தகவலை அடுத்த தலைமுறைக்கு வழங்க, தென் இந்தியா மற்றும் உலகமெங்கும் சைவ சமய பள்ளிகளின் உடனடி தேவையைப் பற்றியும் நாங்கள் பேசினோம். §

உற்சாகமான  விவாதத்திற்கு பிறகு, ஒரு விசேஷ விருந்து பரிமாறப்பட்டது. அதன் பின்னர், எங்கள் சுவாமிகளில் ஒருவர் பரமாச்சாரியார் அணிந்து இருந்த மிகப்பெரிய காதணிகளை பற்றி விசாரித்து, அதைப்போன்று எனக்கும் கிடைக்குமா என்று சகஜமாக கேட்டார். குரு எந்த தயக்கமும் இன்றி ஒரு சிப்பந்தியை அழைத்து, சில அறிவுறுத்தல்களை முணுமுணுத்தார். சிறிது நேரம் கழித்து, அவர் அணிந்து இருந்ததைப் போன்ற ஒரு காதணி ஜோடி அவர் கைக்களுக்கு வந்து சேர்ந்தன. இது எனக்காக கொண்டு வரப்பட்டவை என்று பரமாச்சாரியார் குறிப்பிட்டார். அவர் தாராள மனதுடன் எங்கள் மறுப்புக்களை புறக்கணித்து, *பரமாச்சாரிய குரு மகாசன்னிதானம் ஆதீனக்கர்த்தாரின்* பாரம்பரிய சின்னமான அந்த பெரிய தங்க காதணிகளுக்கு ஏற்றார் போல், என் காதில் இருந்த துவாரங்களை பெரிதுபடுத்தி அவரே பொருத்த ஆரம்பித்துவிட்டார். அவர் அதன் பிறகு எனக்கு மற்றும் என்னுடன் வந்திருந்த சுவாமிகளுக்கு புதிய காவித்துணியை அன்பளிப்பாக வழங்கினார். §

நாங்கள் மேற்கொண்ட சைவ சித்தாந்த செய்தியை பரப்பும் பணிக்கு உதவிகரமாக, *சன்னிதானம்* பெருந்தன்மையுடன் வழங்கிய எதிர்பாராத பரிசை நல்லெண்ண நடவடிக்கையாக ஏற்றுக்கொண்டோம். ஆனால் மிகவும் முக்கியமாக, கிழக்கில் பன்மைவாத சைவ சித்தாந்தத்தை உறுதியாக போதித்த ஒரு மடத்திற்கும், மேற்கில் அத்வைத சைவ சித்தாந்தத்தை தைரியமாக பிரகடனம் செய்த இன்னொரு மடத்திற்கும் இடையே நாங்கள் மேற்கொண்ட கூட்டுறவு முயற்சிகளின் ஒரு சின்னமாக விளங்கியது. நடந்தவை அனைத்தும் நல்லதுக்கே என்று நாங்கள் எண்ணிக்கொண்டோம். எதிர்காலத்தில் சைவ சித்தாந்தத்தின் வளர்ச்சிக்கு தர்மபுர ஆதீனத்தின் குரு மகாசன்னிதானம் மற்றும் கவாய்

ஆதீனத்தின் குரு மகாசன்னிதானமும் இணைந்து செயல்படுவார்கள் என்பதை அறிவுள்ள எல்லா இந்துக்களும் அறிந்துக்கொள்வார்கள் என்பதை, பரமாச்சாரியார் காதணியை பரிசாக அணிவித்த காட்சியை பார்த்துக்கொண்டு இருந்த பண்டிதர்கள் தெரிந்துகொண்டார்கள். §

அன்று மாலை நேரத்தில், பெரிதாக இருந்த கோயில் குளத்தை பார்த்த வண்ணம் உட்புறமாக அமைந்த ஒரு மிகப்பெரிய மண்டபத்தில் அமர்ந்து இருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு, நான் சொற்பொழிவு நடத்த வேண்டும் என்று மகாசன்னிதானம் என்னிடம் கேட்டுக்கொண்டார். நான் சைவ சமயம் மற்றும் சைவ சித்தாந்தத்தின் பெருமை மற்றும் அவை மேற்கத்திய நாடுகளில் பரவுவதால் ஏற்படும் நன்மைகளை பற்றியும் பேசினேன். சைவ சித்தாந்தத்தை பரப்புவதற்கு நான் மேற்கொண்ட பணியை கௌரவிக்கும் காகித சுருளுடன், ஒரு அலங்கார வெள்ளி பெட்டகத்தை பரமாச்சாரியார் எனக்கு வழங்கியவுடன் அன்றைய நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன. §

அதன் பின்னர் வாழ்த்துக்களை பொறித்த பிறகு, அந்த பெட்டகம் எனக்கு அதிகாரப்பூர்வமாக சிதம்பரம் கோயிலில் ஆயிரம் கால் மண்டபத்தில், தமிழ்நாட்டின் பொக்கிஷமாக விளங்கிய குமாரி ஸ்வர்ணமுகியின் புனிதமான பரதநாட்டிய நிகழ்ச்சிக்கு முன்பாக வழங்கப்பட்டது. எங்கள் இன்னர்சர்ச் பயண-ஆய்வு திட்டத்தின் அங்கமாக, அந்த நாட்டிய நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. கோயில்களில் தேவதாசிகள் நடனமாடுவதை ஆங்கிலேய அரசு தடை செய்ததால், அது ஐம்பது ஆண்டுகளுக்கு பிறகு கோயிலில் நடைபெற்ற முதல் நடன நிகழ்ச்சியாக இருந்தது. அந்த மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சிகளை காணும் தூரத்தில் 15,000 க்கும் மேலான பக்தர்கள் இருந்ததாகவும், 40 ஏக்கர் கோயில் வளாகத்தில் 300,000 க்கும் மேலானோர் கூடியதாகவும் எங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சிதம்பரம் கோயிலில் மீண்டும் நடன நிகழ்ச்சி நடைபெறலாம் என்பதையும், அந்த கோயிலில் மாலை  நேரத்தில் நடைப்பெற்ற மிகவும் பிரபலமான மற்றும் அற்புதமான நிகழ்ச்சியின் போது, 108 கரணங்களை  வெளிப்படுத்தும் இந்த விசேஷமான நடனத்தை காண சிதம்பரம் நகரம்  முழுவதில் இருந்தும் மற்றும் அருகில் இருந்த கிராமத்தில் இருந்தும் மக்கள்  வந்து இருந்தார்கள். தடை செய்யப்பட்டு இருந்த இந்த பாரம்பரியம், சிவபெருமானின் மிகவும் புனிதமான கோயிலில் இன்றும் தொடர்கிறது. §

அதனால் அந்த விசேஷமான நாளில், மீண்டும் தொடங்கிய சிவபெருமானுடன் திருநடனம், என்றுமே முடிவு பெறுவது இல்லை. தென் இந்தியா மற்றும் உலகெங்கும் இருக்கும் ஒவ்வொரு சைவ கோயிலிலும், வழிபாட்டின் முக்கிய அம்சமாக நடனம் இடம்பெறும் நாளுக்காக நாங்கள் காத்து இருக்கிறோம். தங்கள் சிறுவர்கள் மற்றும் சிறுமியர் மகாதேவர் மற்றும் தேவர்களை நினைத்து ஆடும் போது ஐரோப்பா, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் அமெரிக்காவில் இருக்கும் கோயில்

சமாஜங்கள் அதிக மகிழ்ச்சி அடைய ஆரம்பித்து விட்டதால், அந்த நாள் வெகு தொலைவில் இல்லை. அந்த நடனம் சிவபெருமான் உருவாக்கிய உலகில் அவரது கருணை இருப்பிற்கு முழுமையான உருவகமாக விளங்குகிறது!§

Page 42: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/42_guru07_00.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் இருபத்தி-ஏழு


# சமயப்பணி உலகமயமாகிறது

இந்து சமயத்தின் ஒவ்வொரு பிரிவும் மற்ற பிரிவுகளில் இருந்து தனித்து துண்டு, துண்டாக உடைந்த ஒரு மதமாக இருக்கிறது என்ற உண்மையை குருதேவா உலகெங்கும் மேற்கொண்ட பயணங்களின் மூலம் தெளிவாக தெரிந்து கொண்டார். இது தனது இயல்பான வலிமையை இந்து சமயம் உணர்துக்கொள்ள முடியாமல் தடுக்கிறது என்பதை அவர் அறிந்துகொண்டார். அவர் வழக்கமாக செய்ததை போல, ஒரு தேவையை கண்டுக்கொண்டதும், அதை பூர்த்தி செய்ய நன்றாக திட்டமிட ஆரம்பித்து விட்டார். 1995 ஆம் ஆண்டு அவர் வழங்கிய குறிப்பு: §

> நான் சிங்கப்பூர், மலேசியா, மொரிஷியஸ், ரியூனியன், ஆப்பிரிக்கா, நேபால், இலங்கை, ஐரோப்பா மற்றும் மற்ற நாடுகளுக்கு பயணம் செய்த போது, இந்து சமயத்திற்கு என்று சர்வதேச அளவில் ஒரு பிரதிநிதி இல்லை என்பதையும், அவர்களுக்குள் தகவல் தொடர்பு இல்லை என்பதையும் நான் உணர்ந்துகொண்டேன். கொழும்புவில் இருக்கும் இந்துக்களின் நிலை என்ன என்பதை டர்பனில் இருக்கும் இந்துக்களுக்கு தெரிவதில்லை. லண்டனில் இருந்த இந்துக்களுக்கு கனடாவில் இருந்தவர்களுடன் எந்த தொடர்பும் இல்லை. எல்லா இந்துக்களையும் ஒரு வெல்ல முடியாத தன்னம்பிக்கைக்குள் இணைக்கும் ஒரு சர்வதேச குழுவை உருவாக்க வேண்டும் என்கிற அத்தியாவசிய தேவையை பூர்த்தி செய்ய, இந்த பிறவியில் எனது சற்குருவாக விளங்கிய கைலாச பரம்பரையின் யோக சுவாமி வழங்கிய உட்புற ஆணைகளின் தெய்வீக சக்தியால் நான் இயக்கப்பட்டேன். §
>
> நான் 1979 ஆம் ஆண்டு இந்துயிசம் டுட என்ற பத்திரிகையை தொடங்கிய போது சைவ சமயத்தை வலுப்படுத்த வேண்டும், மூன்று முக்கிய பிரிவுகளை வலுப்படுத்த வேண்டும் என்பதில் கவனமாக

இருந்தேன். எங்கள் தத்துவம் சிவபெருமான் எல்லோருக்குள்ளும் இருக்கிறார் என்பதற்கு அர்ப்பணிக்கப்பட்டு இருப்பதால், நாங்கள் இந்து சமயத்தில் இருக்கும் ஒவ்வொரு பிரிவையும் சமமாக மதிக்கிறோம். எங்களது தத்துவம், கோட்பாடு மற்றும் கலாச்சார அணுகுமுறைகளில் சில மாற்றங்கள் இருந்தாலும், உலகெங்கும் இருக்கும் இந்துக்களுடன் ஒற்றுமையுடன் இருப்பதில் நமது வலிமை அடங்கி இருக்கிறது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வலிமை பெற்று வரும், இது ஒட்டுமொத்த இந்து மறுமலர்ச்சிக்கு அனுகூலமாக இருக்கும். ஏனென்றால் இந்து சமயத்தில் ஒவ்வொரு பிரிவும் வலுவடையும் போது, அது ஒட்டுமொத்த இந்து சமயத்திற்கு நன்மைகளை செய்து, நம்பிக்கையுடன் முன்னேறி செல்ல பெருமை, ஸ்திரத்தன்மை மற்றும் தைரியத்தை வழங்குகிறது. இந்த இந்து சமய ஒற்றுமை, நாங்கள் மனப்பூர்வமாக ஏற்ற பொறுப்புக்களில் ஒன்றாக விளங்குகிறது. இதில் இன்னோன்றாக சைவ சித்தாந்தத்தின் அத்வைத ஈஸ்வரவாதம் விளங்குகிறது. §

ஜூன் 1980, குருதேவா மற்றும் இரண்டு சுவாமிகள் முதல் முறையாக மலேசியா வந்து இருந்தார்கள். அவர்கள் தங்கி இருந்த போது, “சுப்பிரமணியம்” என்ற பெயரில் ஒரு அமெரிக்க சுவாமி மலேசியா வந்து சைவம் மற்றும் இந்து சமயத்தை பரப்புவார் என்று 30 வருடங்களுக்கு முன்பு ஜெகநாதசுவாமி என்று ஒரு மலேசியா சாது தீர்க்கதரிசனத்துடன் கூறியதாக பல பெரியவர்கள் அவர்களிடம் தெரிவித்தனர். குருதேவா திடீரென்று மலேசியாவில் பிரபலமாக வில்லை. அவர் எந்த இடத்திலும் திடீரென்று பிரபலமாகவில்லை. அவர் சுய விளம்பரத்தை நாடாமல், தனது குறிக்கோள்கள்களுக்கு முக்கியத்துவம் அளிக்காமல், அந்த நாட்டு சமயத்தலைவர்கள் மற்றும் சமய சங்கங்களின் தேவைக்கு ஏற்ப ஆதரவு அளித்து வலுப்படுத்தினார். §



*குருதேவா சைவர்களின் ஒரு சர்வதேச கூட்டமைப்பை உருவாக்க தொடங்கிய போது,  மலேசியா இந்துக்கள் உற்சாகத்துடன் முன் வந்தார்கள். அவர் அந்த நாட்டிற்கு அவ்வப்போது வருகை தந்து, அவர்களது ஆன்மீக கல்வி மற்றும் பயிற்சியில் வழிகாட்டியாக இருந்து, தகுதி பெற்றவர்களுக்கு தீட்சையை வழங்கினார்.*

........................§

மலேசிய இந்து தலைவர்கள் இரண்டு பெரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இசுலாமிய பெரும்பான்மையுடன் இருந்த அந்த நாட்டு அரசு அவர்கள் சமயத்தின் மீது அதிக கட்டுப்பாடுகளை விதித்துக்கொண்டு இருந்தது, மற்றும் இளைஞர்கள் மேற்கத்திய பழக்கங்கள் மீது ஈர்க்கப்பட்டனர். ஒட்டுமொத்த இந்து சமூகத்திடம் தங்கள் அடையாளங்கள் மற்றும் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தல்களாக இருந்த இவற்றைப் பற்றி

தலைவர்கள் விழிப்புணர்வு வழங்க தொடங்கி இருந்தார்கள். குருதேவா நாடு முழுவதும் பயணம் செய்து, மக்களின் அறிமுகத்தை பெறுவதற்கு மலேசிய இந்து சங்கம், கோலாலம்பூர் மகாமாரியம்மன் கோயில், சிலோன் சைவர்கள் சங்கம், இராமகிருஷ்ணா மிஷன், தி டிவைன் லைஃப் சொசைட்டி மற்றும் பல முக்கியமான இந்து சங்கங்களுக்கு சென்ற, அவர் இந்த விழிப்புணர்வுக்கு உருவம், பாணி மற்றும் தூண்டுதலை வழங்கினார். குறிப்பாக அவர் மீது தமிழ் சமூகத்தினர் ஈர்க்கப்பட்டனர். யோக சுவாமியை அறிந்து இருந்த இலங்கை வம்சாவளியினர், அவருடன் எளிதில் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். சைவ பாரம்பரியத்தில் வலுவாக நிலைகொண்டு இருந்தாலும், மேற்கத்திய முறைகள் மற்றும் பழமொழிகளுடன் தங்களுக்கு பரிச்சயமான பண்புகளுடன், அவர்கள் வெகு நாட்களாக காத்திருந்த குருவாக அவர் விளங்கினார். §

அந்த நாட்டு மக்கள் தொகையில் எட்டு சதவீதம் அங்கம் வகித்த மலேசிய இந்துக்களின் நிலை, இந்தியாவில் இருந்த இந்துக்களின் நிலையில் இருந்து மாறுபட்டு இருந்தது. அரசின் கொள்கைகள் இந்தியர்கள் மற்றும் சீனர்களை காட்டிலும் இசுலாம் மற்றும் *பூமிபுத்திரர்கள்*, இசுலாம் மதத்தை பின்பற்றிய மலாய் மக்களுக்கு ஆதரவாக இருந்தன. இந்த பாரபட்சம் காரணமாக, பல இந்துக்கள், அதிலும் குறிப்பாக இளைஞர்கள் தங்கள் தனித்தன்மையை வலுப்படுத்த, தங்கள் மதத்தில் இருந்து விலகி சென்று இருந்தனர். §

மலேசியா பல தனித்தன்மைகளை கொண்டு இருந்தது. உதாரணத்திற்கு குருதேவா சென்ற நாடுகளில், ஒரு கோயிலுடன் ஒரு இளைஞர் குழு இயங்கி வந்ததை அந்த நாட்டில் முதல் முறையாக எதிர்கொண்டார். அந்த அபூர்வமான இளைஞர்கள் எல்லோரும் “சித்தி விநாயகர் கோயில்” என்று பின்புறத்தில் அச்சிட்ட சட்டைகளை அணிந்துகொண்டு, கோயில் பராமரிப்பு மற்றும் நிர்வாகத்தில் ஒரு குழுவாக செயல்பட்டு சுயநலமற்ற சேவையை செய்து வந்தனர். இளைய தலைமுறையினர் மூலம் தனக்கு வழங்கப்பட்ட உற்சாக வரவேற்பு, குருதேவாவிற்கு நல்ல சகுனமாக தோன்றியது. அறிவுறுத்தல்களை பின்பற்ற அவர்கள் தயாராக இருந்தனர். அந்த பண்பு இக்கால இளைஞர்கள் மத்தியில் அபூர்வமாக தென்படுவதால், அது அவரை வியக்க வைத்தது. அந்த குழுவில் பலர் ஆன்மீக முன்னேற்றம் பெறுவதில் தீவிரமாக இருந்தார்கள். §

குருதேவாவின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட இந்துக்கள், அடுத்த சில வருடங்களுக்கு, அந்த நாட்டு அரசு பள்ளிகளில் சிறப்பு வகுப்புக்களை நடத்தினார்கள். மலேசிய இந்துக்கள் மீது, இந்த பிரபலமான கருத்தரங்குகள் மற்றும் இந்துயிசம் டுடேயின் பரவலான விநியோகம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அதில் பலர் சிரத்தையுள்ள அங்கத்தினர்களாக மாறி, இளைஞர்கள் மத்தியில் குருதேவாவின் தெளிவான இந்து போதனைகளை பரப்பினார்கள். அவர் புதுமையான முறையில் அவர்களின் ஆன்மாக்களுடன், சமய வாழ்க்கை மற்றும் சேவை பற்றி அவர்களது தற்கால குறிக்கோள்களைப் பற்றி பேசினார். அவர்களின் கட்டுப்பாடான மற்றும்

வெற்றிகரமான வாழ்க்கைகள் மற்றவர்களுக்கு ஒரு முன் மாதிரியாக விளங்கின; மற்றும் இதனால் இந்து சமயத்தின் பெருமையை மனதில் மெதுவாக பதிவாக வைத்த, ஒரு வலுவான சங்கத்தில் மகிழ்ச்சியுடன் மேலும் பலர் உறுப்பினர்களாக சேர்ந்தார்கள். §

அந்த தேசம் முழுவதும் பாடம் நடத்துவதற்கு என்று, அவர் தனது துறவிகளில் ஒருவரை சுமார் ஒரு வருடத்திற்கு அனுப்பி வைத்தார். 1986 ஆம் ஆண்டு, அவரது சீடர்கள் மலேசியாவில் இளைஞர்களுக்கு வெற்றிகரமான சிறப்பு முகாம்களை நடத்தி, மற்ற இந்து சங்கங்களும் அதைப்போன்ற முகாம்களை இளைஞர்களுக்கு நடத்த ஊக்குவித்தனர். 1990 களில் குருதேவா மலேசியா திரும்பிய போது அவர் தொடர்ச்சியாக பல சொற்பொழிவுகளை நடத்தினார். அவர் இறுதியாக 2000 ஆம் ஆண்டில், தனது கடைசி புத்தகத்தில் கையொப்பமிட்ட நிகழ்ச்சிக்கு, 800 க்கும் மேலானோர் கூடியிருந்து, அரங்கமே நிரம்பி வழிந்தது. அதைப்பற்றி அப்பாசாமி குப்புசுவாமி வழங்கும் குறிப்பு:§

> குருதேவா ஒரு வெள்ளையராக இருந்ததால், அவரை மலேசியாவில் இருந்த பல இந்துக்கள் புறக்கணித்தனர். ஆனால் அவரை புரிந்துகொண்டதும், அதே மக்கள் உலகெங்கும் இந்து சமயத்திற்கு அவர் செய்த சேவையை புகழ்ந்து பேசினார்கள். அவரது பணியின் கூட்டு விளைவு காரணமாக, தேசிய அளவில் இந்துக்களின் தன்மானத்தில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காண முடிந்தது. §

மலேசியாவில் குருதேவாவின் வெளியீடுகள் எப்போதும் பிரபலமாக இருந்துள்ளன. 1980 களில், யானை முகக்கடவுளைப் பற்றி இந்துக்களுக்கு விளக்க, விநாயகரை பற்றி ஒரு புத்தகம் எழுதுமாறு அந்த நாட்டு சீடர்கள் குருதேவாவிடம் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் சில நாட்களில் வரவிருந்த ஒரு திருவிழாவில் அந்த புத்தகத்தை வெளியிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டதால், குருதேவாவும் அவரது துறவிகள் குழுவும் எட்டு நாட்களில் முழுமையான புத்தகத்தை தயார் செய்தார்கள். பன்னிரண்டு துறவிகள் தினமும் பன்னிரண்டு மணிநேரம் முயற்சி செய்ததன் விளைவாக வெளிவந்த *லார்ட் கணேஷா, பெனேவோலெண்ட் டெய்ட்டி ஃபார் ய மார்டன் இந்து வேர்ல்ட்* புத்தகம் (*Lord Ganesha, Benevolent Deity for a Modern Hindu World)*, அமோக வெற்றியை பெற்றது. அதன் தலைப்பு மட்டுமே மக்களுக்கு ஊக்கம் அளிப்பதாக இருந்தது. அதன் பின்னர் அந்த புத்தகம் விரிவாக்கம் செய்யப்பட்டு, *லவிங் கணேஷா* என்ற பெயரில் மேலும் புகழை பெற்றது. §

குருதேவா மலேசியா சென்ற ஒவ்வொரு முறையும், சிங்கப்பூரில் தங்கி விட்டு செல்வார். அவர் அங்கே சீடர்களின் ஒரு சிறிய குழுவிற்கு உத்வேகம் அளித்து, இந்து கோயில்கள் மற்றும் சங்கங்களை ஊக்குவித்தார். மலேசிய மற்றும் சிங்கப்பூரை சேர்ந்த அவரது சீடர்கள் அதிக விசுவாசமாகவும் தீவிரமாகவும் இருந்தார்கள். தனது வாழ்க்கையில் குருதேவா ஏற்படுத்திய தாக்கத்தை பற்றி திரு. குப்புசாமி தனது சான்றுரையை வழங்குகிறார்: §

நான் தொடக்கத்தில் சாதனாக்கள் மற்றும் மதத்தில் இருந்த பழக்கங்களில் அதிக ஆர்வத்துடன் இருந்ததில்லை. ஆனால் பின்னர், நான் அதில் என்னை அதிகமாக ஈடுபடுத்திக் கொண்டேன். நான் வீட்டில் வழிபடுவதற்கு, ஆத்மார்த்த பூஜையை கற்றுக்கொண்டு, அதை மற்றவர்களுக்கும் கற்றுத் தந்தேன். நான் என் மனைவி, பத்து வயது மகன் மற்றும் இருபத்தி இரண்டு வயது மகள், எந்த வித தயக்கமும் இன்றி சைவ உணவை உண்ண ஆரம்பித்தோம். எனது தவறுகளையும், எனது முந்தைய பிறவியில் நான் செய்த தீய கர்மவினைகளையும் குருதேவா எனக்கு தெரியப்படுத்தி, அதை *பிராயச்சித்தம்* என்ற தவத்தின் மூலம் என்னை திருத்திக்கொள்ளவும் உதவினார். அந்த கடினமான தவத்தை மேற்கொண்ட பிறகு, கர்மவினை கரைந்து விட்டதால் நான் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறேன். §

எங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்ததற்காக நான் குருதேவாவிற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர் எங்களுக்கு இந்து சமயத்தை கற்றுத்தந்தார். அவர் எங்களுக்கு ஒழுக்கத்தை கற்றுத் தந்தார். அவர் எங்கும் எதிலும் உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் இருக்கும் கடவுளை பார்க்க கற்றுத் தந்தார். அவர் எங்களுக்கு சமயத் தொண்டு செய்ய கற்றுத்தந்தார். நான் இவை அனைத்தையும் என்னால் முடிந்த வரை சிறப்பான முறையில் பின்பற்ற முயற்சி செய்து வருகிறேன். §

குருதேவா பெரும்பாலும் பின்வரும் தலைப்புக்களில் பேசி, வாழ்க்கையில் இருக்கும் பல பிரச்சனைகளுக்கு முதல் தீர்வாக எங்கும் இறைவனை காணவேண்டும் என்று மக்களிடம் கேட்டுக்கொண்டார்:§

இறைவனுக்கு பெயர் எதுவும் இல்லை, ஆனால் அனைத்து பெயர்களும் இறைவனின் பெயர்களே. நீங்கள் அவரை எந்த பெயரைக் கொண்டு அழைத்தாலும், அவர் இயல்பாகவே இருக்கிறார். இறைவன் நமக்கு உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் இருக்கிறார். ஆசை, ஆசையின் நிறைவேற்றம், மகிழ்ச்சி, வலி, வேதனை, பிறப்பு மற்றும் இறப்பு ஆகிய அனைத்தும் இறைவனே, இறைவனை தவிர வேறு எதுவும் இல்லை. நாம் இவ்வாறு இறைவனை எல்லா இடத்திலும் எல்லோரிடத்திலும் காண முடியும். அவர் ஒவ்வொரு ஆத்மாவின் பரமாத்துமாவாக இருக்கிறார். நீங்கள் உங்கள் ஆன்மீக கண்ணை திறந்து அவரை மற்றவர்களிடம் காணலாம் மற்றும் அவரை உலகில் உலகமாக காணலாம். தினமும் ஒரே சமயத்தில் தியானம் செய்ய உங்களை மெதுவாக ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். தியானம் செய்து, உங்களுக்குள் அமைதியாக இருக்கும் மையத்தை தெரிந்துகொண்டு, உங்களின் உண்மையான தெய்வீக தன்மையின் மையத்தில் ஆழமாக செல்லுங்கள். மெதுவாக புனிதத்தன்மை வருகிறது. மெதுவாக விழிப்புணர்வு தோன்றுகிறது. §

குடும்பம் அல்லது பணியிடத்தில் பிரச்சனைகள் தோன்றி உணர்ச்சிகள் எழுச்சி பெறும் போது, இறைவனை மறப்பது இயல்பு. ஒருமையை

காட்டிலும் இருமையில் ஈடுபட்டு இருப்பது மிகவும் எளிது. எப்போதும் இறைவனை நினைத்துக்கொண்டு, எப்போதும் இறைவன் மீது அன்பை செலுத்திக் கொண்டு இருப்பதற்கு அதிகமான உட்புற வலிமை தேவைப்படும். நாம் இறைவனை மறந்து, நம்மை பற்றியும் மற்றவர்களை பற்றிய விஷயங்களிலும் நம்மை ஈடுபடுத்திக்கொள்கிறோம். நமது தன்னுணர்வு தாக்கப்படும் போது அல்லது நமது உணர்ச்சிகள் பாதிக்கப்படும் போது அது சாத்தியமற்றதாகிறது. அதனால் நாம் நமது சொந்த உள்ளுணர்வு மனம் மற்றும் முன்பே-நிரலாக்கம் செய்யப்பட்ட சமயம் சாராத புத்தியை நினைத்து பயப்படாமல், இறைவனை மறந்து, அவரை பயப்பட வேண்டிய இறைவனாகவும் கருதுவதும் மிகவும் எளிதாகிறது. நமது வீட்டில் இருந்துக்கொண்டு தவறுகள் செய்யும் அந்த அரக்கன், எல்லா பிரச்சனைகளுக்கும் காரணமாக இருக்கிறான். நீங்கள் இறைவனை நினைக்க வேண்டும் என்று விரும்பினால், உங்களை சிறிதளவு மறக்க கற்றுக்கொள்ளுங்கள். §

இறைவனை மறப்பது இயல்பானது என்றாலும், கவனச் சிதறலை தவிர்க்க, எங்கும் இறைவனை காண்பதை நினைவில் வைத்துக்கொள்ள பல பயனுள்ள வழிகள் இருக்கின்றன. இவை அனைத்திற்கும் நடுவில், அவரின் நாமத்தை தொடர்ந்து சொல்வது யதார்த்தமான வழிகளில் ஒன்றாக இருக்கிறது. நீங்கள் மறப்பதை உணரும் போதும், இறைவனை எங்கும் பார்ப்பது ஒரு புறம் இருக்கட்டும், இறைவனை முற்றிலும் பார்க்க முடியவில்லை என்றால் ஜபம் செய்யுங்கள். வாழ்க்கை கடினமாகி அதிக முயற்சிகள் தேவைப்படும் போது, அவை அனைத்தையும் மனப்பூர்வமாக அவரது திருவடியில் சமர்பித்து விடுங்கள். §

சூழ்நிலைகளை பொருட்படுத்தாமல், நீங்கள் சந்திக்கும் அல்லது எதிர்கொள்ளும் ஒவ்வொருவரின் இடத்திலும் அவரை காணுங்கள். அவர் அங்கே அவர்களின் உயிர்சக்தியாக இருக்கிறார், ஆனால் அதை காண்பதற்கு உங்கள் மனதை அமைதிப்படுத்த வேண்டும். நீங்கள் ஒருவர் மீது அதிருப்தியுடன் இருக்கும் போது முகத்தில் புன்னகையுடன், “இறைவனே, உங்களை இந்த வடிவில் காண்பது எவ்வளவு அருமையாக இருக்கிறது,” என்று மனதுக்குள் சொல்லிக்கொள்ளுங்கள். இறைவனை விரும்பும் ஆன்மாவிற்கு விலங்குகள், யாசகர்கள், இளவரசர்கள், அரசியல்வாதிகள், நண்பர்கள் மற்றும் எதிரிகள், தெய்வீக புருஷர்கள், மகான்கள் மற்றும் முனிவர்களாக இருக்கும் அனைவரும் இறைவனாக காட்சி அளிக்கிறார்கள். அவர் சிரித்துக்கொண்டே, “இறைவனே, உமக்கு இருக்கும் பல வடிவங்களில், இன்னொரு வடிவமாக உம்மை காண்பதற்கு எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது,” என்று சிந்திக்கிறார். §

இறைவன் அன்பின் வடிவமாக இருக்கிறார். அவர் அன்பைத் தவிர வேறு எந்த வடிவத்திலும் இல்லை. அவர் இந்த பிரபஞ்சத்தில் அன்பை நிரப்பி இருக்கிறார். அவர் உங்களுக்குள் அன்பை நிரப்பி உள்ளார். இறைவன் நெருப்பாக, நிலமாக, காற்றாக, நீராக மற்றும் வானமாக இருக்கிறார்.

இறைவனின் பிரபஞ்ச சக்தி ஒவ்வொன்றிலும் வியாபித்து, உங்கள் மனதிற்கு ஒளி மற்றும் உயிரை தருகிறது. இறைவன் எங்கும் எதிலும் இருக்கிறார். இறைவன், நீங்கள் உங்கள் மனதில் பல வருடங்களாக தக்க வைத்துள்ள சிறிய மற்றும் முக்கியமற்ற கவலையாக இருக்கிறார். §

அவர் தனது சொந்த பாணியில், உங்களை உணர்தலுக்குள், உங்களை மற்றும் அவரைப் பற்றிய விழிப்புணர்வுக்குள் அழைத்து வருகிறார். அவர் உங்களுக்கு மாபெரும் அனுபவத்தை வழங்கி உள்ளார். உங்கள் அனுபவத்தை ஆய்வு செய்யுங்கள். உங்கள் அனுபவத்தில் இருந்து கற்றுக் கொள்ளுங்கள். அது துன்பம் தருவதாக இருந்தால், அதுவும் நல்லதுக்கே என்று நினைத்துக்கொள்ளுங்கள். துன்பமும் இன்பமும் இருக்கும் அனுபவத்தின் நெருப்பில் நீங்கள் சுத்திகரிக்கப்படுகிறீர்கள். அதே சமயத்தில், நீங்கள் அதிக துன்பம் மற்றும் அதிக இன்பத்தை அனுபவிக்க வேண்டியிருக்கும். இரண்டும் ஒரே அளவு உணர்ச்சியை பதிவு செய்கின்றன. அது உருவாக எது காரணமாக இருந்ததோ அது அதிக ஆனந்தம் தருவதாக இருக்கிறது. இறைவனுடன் வாழ்வதற்கு பயப்படாமல், ஆனந்தமாக உங்கள் அனுபவத்தை அனுபவியுங்கள். அதை தைரியத்துடன் அனுபவியுங்கள். அதை தவிர்க்க முயற்சிக்க வேண்டாம்.§

மலேஷிய அருள் நெறி திருக்கூட்டத்தின் தலைவர் சைவ பெரிய சங்கரத்ன தன் ஸ்ரீ சோமசுந்தரம் வழங்கும் குறிப்பு: §

இந்து சமயத்தின பல்வேறு பிரிவுகளின் தத்துவங்களைப் பற்றி வாதாடுவதை குருதேவா தவிர்த்தார். அவர் விவாதங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காமல், சமயத்திற்கு முக்கியத்துவம் அளித்தார். அவர் சைவர்களின் ஒரு குறிப்பிட்ட குழுவிற்கு மட்டும் குருவாக இருக்காமல், அவர் எங்கள் எல்லோராலும் ஒரு குருவாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். நாம் அவருக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்றாலும் உலகில், வீட்டில், கணவன் மற்றும் மனைவி இடத்தில் மற்றும் எங்கும் அமைதி வேண்டும் என்றாலும் நாம் அவர் வழங்கிய போதனைகளை பின்பற்றி வாழவேண்டும்.§

### மொரீஷியஸ்: அணிகலன் போல அழகாக இருக்கும் தீவு

சில இனம் புரியாத காரணத்திற்காக, குருதேவாவின் தாக்கம் தீவுகள் மீது மிகவும் அதிகமாக இருந்தது. அது இலங்கையில் தொடங்கி, பின்னர் கவாய், பிஜி மற்றும் டிரினிடாட் வரை நீண்டு சென்றது. அரசாங்கத்தில் உயர்பதவிகளில் இருந்தவர்களையும் சேர்த்து, மக்கள் தொகையில் ஐம்பத்தி இரண்டு சதவீதத்தை இந்துக்களாக கொண்டு, ஒன்றரை மில்லியன் மக்கள் தொகையுடன் இருக்கும் மொரீஷியஸ் தீவு, அவரது புனித பாதங்களின் அருளுக்கு மரியாதை செலுத்துகிறது. §

தனது நாட்டிற்கு வருமாறு அந்த நாட்டின் மூத்த தமிழ் குடிமகன், பிரபல எழுத்தாளர் மற்றும் சிந்தனையாளரான, ரெட்னான் வேல்வின்ந்தரன் குருதேவாவிற்கு அழைப்பு விடுத்தார். தான் இந்து இளைஞர்களின் எதிர்காலத்தை நினைத்து அச்சப்படுவதாக, அவர் 1981 ஆம் ஆண்டு குருதேவாவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார். அவர்கள் மற்ற இரண்டு மதங்களுக்கு தொடர்ந்து மாற்றப்பட்டார்கள், மற்றும் அவர்களின் எண்ணிக்கை அச்சுறுத்தும் வகையில் குறைந்துகொண்டு வந்தது. ஏழையாக இருந்தவர்கள், வேலை இல்லாமல் தவித்தவர்கள், வீட்டுக்கடன் சுமையால் தவித்தவர்களுக்கு இசுலாமியர்கள் பணம் கொடுத்து உதவி செய்து, அவர்களை மதம் மாற்றிக்கொண்டு இருந்தார்கள். அசெம்பிளி ஆஃப் காட் (Assembly of God) மொரீஷியஸ் சமயப்பணி, சலூட் எட் காரிசொன் ஆகியவை நோயால் அவதிப்பட்டவர்களுக்கு உதவி செய்தது. அவர்கள் நோயால் வாடிய மற்றும் மரணப்படுக்கையில் இருந்த இந்துக்களை அணுகி, அவர்களுக்கு ஆதரவு அளித்து, அவர்கள் குணமடைய பிரார்த்திப்பதாக உறுதி அளித்தனர். அவர்கள் குணமடைந்தால், உறவுகள் மற்றும் நட்புறவுகள் உருவாகும், மற்றும் அதன் பின்னர் முறையான மத மாற்றம் தொடரும். குறிப்பாக அந்த நாட்டின் தமிழ் சமூகம் குறி வைக்கப்பட்டனர் மற்றும் ரெட்னான் வெல்விண்ட்ரான் சூழ்நிலையை மாற்றி அமைக்க குருதேவாவின் உதவியை நாடினார். §


1982 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இந்திய யாத்திரைக்கு பிறகு, குருதேவா இரண்டு சுவாமிகளுடன் அந்த தீவிற்கு விரைந்து சென்றார். இலங்கை மற்றும் தென் இந்தியாவில் அவர்களுக்கு வழங்கப்பட்ட வரவேற்பை ஒப்பிடும் போது, அங்கே வழங்கப்பட்ட வரவேற்புக்கள் சாதரணமாக இருந்தாலும் அவற்றில் இருந்த அன்பிற்கும், அவர்கள் வெளிப்படுத்திய நன்றியுணர்விலும் எந்த குறையும் இல்லை. உலகில் தலைசிறந்து மதமாக இந்து சமயம் விளங்குகிறது, கோயில்கள் கடவுள்களின் வீடுகளாக விளங்குகின்றன மற்றும் சமயப்பரப்பாளர்கள் உங்கள் வீடு தேடி வரும் போது, அவர்களை உள்ளே அனுமதிக்காமல் திருப்பி அனுப்புவதில் தவறு ஒன்றும் இல்லை என்று அவர் வழங்கிய தகவல் வழக்கமான மொரீஷிய சமய தற்காப்பு தகவல்களை காட்டிலும் அதிக வலுவாக இருந்தது. எல்லா நாடுகளிலும் இருந்த இந்துக்கள், தங்கள் குடும்பத்தை பிரிக்கும் நோக்கத்துடன் வருபவர்களுக்கும் உபசரிப்பு வழங்குவதில் பொறுப்புடன் நடந்துக்கொண்டார்கள். வேண்டாம் என்று சொல்வதில் தவறு ஒன்றும் இல்லை என்று உயரமாக, நரைத்த முடியுடன் இருந்த அமெரிக்க குரு தெரிவித்தார். §

1983 ஆம் ஆண்டு, அவர் மீண்டும் இரண்டு துறவிகளுடன் பறந்து சென்றார். இந்த முறை அவர் ஒரு மாதம் தங்கி இருந்தார். அவர் பெரும்பாலும் வேறெங்கும் இத்தனை நாட்கள் தங்கியது இல்லை. அவருக்கு என்று பிரத்யேகமாக, போர்ட் லூயிஸில் இருந்த ஸ்ரீ சொக்கலிங்கம் மீனாட்சி கோயிலில் ஒரு சிறிய விருந்தினர் இல்லம் கட்டப்பட்டது. பெரும்பாலும் குருதேவா அந்த தீவில் இருந்த ஒவ்வொரு முக்கிய இந்து சமூகத்திற்கும் சென்று, கோயில்களில் கூடிய பெரிய கூட்டங்களுக்கு சொற்பொழிவு

நிகழ்த்தி, மொரீஷிய இளைஞர்களுக்கு மகத்தான அவர்களது மதத்தின் மீது விழிப்புணர்வை வழங்கினார். அது அந்த நாட்டின் ஆன்மீக வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாக விளங்கியது. குருதேவா தனது துறவிகளின் ஃப்ரெஞ்ச் மொழி பேசத் தெரிந்த ஒருவரை எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைத்து, அவரை அதே ஊரில் தங்கவைத்து, ஆறு மாதங்களுக்கு சைவ சித்தாந்த பாடங்களை நடத்த ஏற்பாடு செய்தார். இந்த கருத்தரங்குகள் அமோக வரவேற்பை பெற்றதால் தேவாலய அங்கத்தினர்கள் எண்ணிக்கை அதிகரித்து, அந்த நாட்டில் ஏழு ஏக்கர் நிலப்பரப்பில் ஆன்மீக பூங்கா மற்றும் துறவற மையம் அமைய வழிவகுத்தது. §

மொரீஷியஸ் ஆன்மீக பூங்கா பற்றி தொடக்கத்தில் தான் கண்ட ஒரு காட்சியைப் பற்றி குருதேவா வழங்கிய விளக்கத்தை இங்கே காணலாம். §

> நான் 1986 ஆம் ஆண்டு, மொரீஷியஸ் நாட்டில் சைவ சித்தாந்த தேவாலயத்திற்கு ஒரு இடத்தை தேடிக்கொண்டு இருந்த போது, எனக்கு விநாயகர் ஒரு வலுவான காட்சியில் தோற்றம் அளித்தார். விநாயகர் தனது கோயிலில் இருந்து இரண்டு பூசாரிகளுடன் சென்றுகொண்டு இருந்தார். அவர் அழகான இந்திய பெருங்கடல் இருக்கும் மொரீஷியஸ் நாட்டில், அந்த கடலுடன் நதி சந்திக்கும் இடத்தில் குளிக்க தயாராகிக் கொண்டிருந்தார். நான் தண்ணீரில் நின்றுக்கொண்டு இருக்க, என்னை சுற்றி பல சுறாமீன்கள் நீந்திக்கொண்டு இருந்தன. இரண்டு பூசாரிகளுடன் இருந்த விநாயகர் என்னை பார்த்து, “அதன் மூக்குகளின் மீது எண்ணெயை தடவுங்கள். அவை உங்களை துன்புறுத்தாது,” என்று கூறினார். §
>
> அந்த காட்சி என்னை நேரடியாக ரெம்பார்ட் நதி மற்றும் அதன் கடற்கரை காயலுக்கு அருகில் இருக்கும் இந்த விசேஷ இடத்திற்கு அழைத்து சென்றது. அந்த காட்சியின் ஒரு நிறைவேற்றமாக ஆன்மீக பூங்கா விளங்குகிறது. இந்த இடம் சுற்றுச்சூழல் மற்றும் கட்டிடக்கலையின் அழகை ஒருங்கிணைத்து, எதிர்காலத்தில் பல தலைமுறைகளுக்கு இங்கே வரும் பார்வையாளர்களுக்கு ஆன்மீக அமைதி மற்றும் சூட்சும ஞான அறிவை வழங்கும் என்று எனக்கு தோன்றுகிறது. இது எதிர்காலத்தில் இந்திய பெருங்கடல் பகுதியில் ஒரு புகழ்பெற்ற புனித தலமாக மாற உள்ளது. இங்கே மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, ஆப்பிரிக்கா மற்றும் இந்தியாவில் இருந்து இந்துக்கள் வருவார்கள்.§



*குருதேவா மொரீஷியஸின் மையப்பகுதியில் ஒரு நிலத்தை வாங்கும் நோக்கத்துடன் தேடிக்கொண்டு இருந்த போது, விநாயகரும் சுறாமீனும் கடலுக்கு அருகில் இருந்த ஒரு நதியில் இருக்கும் காட்சியை கண்டார். அந்த காட்சி அவரை கடலுக்கு அருகில் இருந்த ஏழு ஏக்கர் நிலத்திற்கு அழைத்து சென்றது. அது எதிர்காலத்தில் ஆன்மீக பூங்காவாக மாறியது.*

……………………§

இன்று இந்த ஆன்மீக பூங்காவில் மாதம் தோறும் நடைபெறும் ஹோமத்தின் மந்திர சக்திகள் நிறைந்த அக்னியில், ஆயிரக்கணக்கான இந்துக்கள் தங்கள் பிரார்த்தனைகளை இறைவனிடம் சமர்பிக்கிறார்கள். அவர்கள் ஐந்து முகங்கள் மற்றும் பத்து கைகளுடன் இருக்கும், ஒன்பது அடி உயர கருங்கல் விநாயகரை வழிபடுவதற்கு, கேரள பாணியில் மரப்பலகையில் கட்டப்பட்ட வைக்கோல் கூடாரத்துக்கு வெளியே மாமரம் மற்றும் புனிதமான கொன்றை மரங்களின் நிழலில் ஒன்றாக நிற்பார்கள். இவ்வாறு குருதேவாவின் சமயப்பணி, 1896 ஆம் ஆண்டு மார்க் ட்வெயின் மேற்கொண்ட பயணத்தின் போது, “முதலில் மொரீஷியஸ் உருவாக்கப்பட்டது. பிறகு சொர்க்கம் உருவாக்கப்பட்டது. சொர்க்கம் மொரீஷியஸில் இருந்து நகல் செய்யப்பட்டது என்று கற்பனை செய்து பாருங்கள்,” என்று அதன் அழகில் மயங்கி குறிப்பிட்ட, இந்த வெப்பமண்டல தீவில் வேரூன்றியது. §

இந்திய பெருங்கடலில் அமைதியாக வீற்று இருக்கும் மொரீஷியஸ், இந்து மக்கள் பக்தியுடன் கோயிலில் வழிபடுவதற்கு பொருத்தமான இடமாக இருக்கிறது. அங்கிருக்கும் ஒவ்வொரு குடும்பமும், அந்த தீவில் இருக்கும் ஆயிரக்கணக்கான கோயில்களுடன் பல தலைமுறைகளாக தொடர்பில் இருக்கிறது. மகாசிவராத்திரி மற்றும் தைப்பூசம் போன்ற இந்து கொண்டாட்டங்களின் போது நடைபெறும் ஆயிரக்கணக்கான மக்களின்

அற்புதமான ஊர்வலங்கள் பெரும்பாலும் போக்குவரத்தை முடக்கிவிடும். ஒரு சராசரி இந்துவிற்கு, இந்த திருவிழாக்களில் பங்குபெறுவதன் மூலம், அவர்களது அடிப்படை சமய பொறுப்புகள் பூர்த்தி அடைகின்றன. §


1980 களில் மொரீஷியஸ் தீவில் குருதேவா முதல் முறையாக அடியெடுத்து வைக்கும் வரை, அந்த தீவில் இந்து குருவின் முக்கியத்துவம் அறியப்படாமல் இருந்தது. இந்த ஆன்மீக புதுமைப்பித்தன் அந்த தீவில் இருந்த பலருக்கு இந்து சமய கோட்பாட்டை புதிதாக எடுத்துரைத்தார். மொரீஷிய வழக்கத்தில் வட இந்தியர்களை குறிப்பிடுவதற்கு “இந்துக்கள்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டது; “தமிழர்கள்" இன்னொரு சமயப்பிரிவாக கருதப்பட்டது. அவர்கள் அனைவரும் இந்துக்கள் தான் என்றும், இவை அனைத்தும் இனம்/மொழிப் பிரிவுகள் என்றும் குருதேவா விளக்கினார். இந்த எளிமையான அடையாள மாற்றம், நேர்மையான சாதகர்களின் உத்வேகத்தை வலுப்படுத்தி, மொரீஷியஸ் தீவில் இந்து ஒற்றுமை மற்றும் கூட்டுறவின் ஒரு புதிய யுகத்தை தொடங்கியது. தனது குடும்பத்தின் மீது குருதேவா ஏற்படுத்திய தாக்கத்தை பற்றி ராஜன் மாணிக் தெரிவிக்கிறார்: §

> இந்த சமயத்தில் தான் குருதேவாவை முதல் முறையாக சந்தித்தேன். ஒரு தொலைதூர பயிற்சி வகுப்பு மற்றும் இந்துயிசம் டுடே பத்திரிகையில் வந்த கட்டுரையின் மூலம் நான் அவரது போதனைகளை படித்து வந்தாலும், அவரை நான் முதல் முறையாக சந்தித்த அனுபவத்தை என்னால் என்றுமே மறக்க முடியாது. அவர் ஒரு சாதாரண மனிதர் இல்லை என்பதை என்னால் உடனே உணர முடிந்தது.§
>
> அவர் என் வாழ்க்கையை மாற்றி அமைத்தார். நான் மணந்துக்கொண்ட பெண்ணும் அதிஷ்டவசமாக குருதேவாவின் மாணவர்களில் ஒருவராக இருந்தார். மொரீஷியஸ் தீவில் அவரது சீடர்களாக இருந்து திருமணம் செய்துகொண்ட முதல் தம்பதி என்ற பெருமை எங்களை சேரும். இது 1985 ஆம் ஆண்டு நடைபெற்றது. மொரீஷியஸ் தீவில் குருதேவாவின் போதனைகளை மக்களுக்கு வழங்கி அவருக்கு சேவை செய்ததில், நாங்கள் பெருமகிழ்ச்சி அடைந்தோம். நாங்கள் முதலில் உள்ளூர் கோயில்களில் வகுப்புகளை ஏற்பாடு செய்து, இந்த சேவையை வழங்கினோம். §
>
> திருமணம் முடிந்து பத்து வருடங்கள் ஆகியும், எங்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லை. எங்கள் கர்மவினைகளை சமநிலையுடன் எதிர்கொண்டு, கடினமான சூழ்நிலைகளில் பணிவாக இருக்க குருதேவா கற்றுத்தந்தார். அதன் பிறகு சிறிது காலம் கழித்து, குருதேவாவின் ஆசியுடன் எங்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன.§

இந்த காலகட்டத்தில் கவாய் ஆதீனத்தில் இருந்து மொரிஷியஸ் தீவிற்கு தொடர்ந்து மடவாசிகள் பயணம் செய்துக்கொண்டு இருந்தார்கள். அவர்கள் குருதேவாவின் வழிகாட்டலின் கீழ், ஆன்மீக பூங்காவை அமைத்து, தீவில்

இருந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு தனிமையான ஆன்மீக அமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தினார்கள்.§

இதற்கிடையில் தீவில் சம்சாரிகளாக இருந்த தனது சீடர்களிடம், ஆயுர்வேத மருந்துகளை பயன்படுத்த வேண்டும் என்றும் வெள்ளை சர்க்கரை, வெள்ளை அரிசி மற்றும் அரிசி மாவுக்கு பதிலாக பதப்படுத்தப்படாத சர்க்கரை, அரிசி மற்றும் முழுதானியத்தில் செய்த ரொட்டியுடன் ஒரு ஆரோக்கியமான உணவிற்கு மாறவேண்டும் என்றும் குருதேவா அறிவுறுத்தினார். வீட்டில், கோயிலில் மற்றும் திருவிழாக்களில் மற்றும் பணியிடத்தில் அனுமதி கிடைத்தால் இந்து சமய உடையை அணிய, அவர் தனது சீடர்களை ஊக்குவித்தார். §



*தான் பரவலாக மேற்கொண்ட பயணத்தின் மூலம் இந்து சமயபரப்பாளர்களுக்கு பஞ்சம் இருப்பதை உணர்ந்த குருதேவா, சைவ சமயத்தை அடுத்த தலைமுறைக்கு பரப்ப ஆசிரியர்கள் மற்றும் தலைவர்களுக்கு பயிற்சி அளித்தார். குறிப்பாக மலேசியா மற்றும் மொரீஷியஸில் இருந்த அவரது சீடர்கள் கோயில்கள், ஆசிரமங்கள் மற்றும் வீடுகளில் இருந்த குழுக்கள் மற்றும் குடும்பங்களுடன் தொடர்ந்து பேசி வந்தனர்.*

........................§


உணவக தலைமை சமையல்காரராக ஓய்வுபெற்று, தற்போது தனது சொந்த உணவளிப்பு நிறுவனத்தின் மேலாளராக இருக்கும் மௌகம் பரியதும்பீ, தனக்கு திருமணமான புதிதில், குழந்தைபேறுக்கு தனது மனைவியின் உடல்நிலை உகந்ததாக இல்லாமல், தனது வாழ்க்கை எவ்வளவு கடினமாக இருந்தது என்று நினைவுக்கூர்ந்தார். ஒரு நாள் குருதேவா ஹவாயில் இருந்து அவரை தொடர்பு கொண்டு, "நான் உன்னுடன் இருக்கிறேன். கவலைப்படாதே!" என்று கூறினார். விரைவில் அவர் மனைவி அமுதா, இரண்டு அழகான பெண் குழந்தைகளுக்கு தாயானார். §

குருதேவா மொரீஷியஸ் தீவிற்கு வருவதற்கு முன்பாக, வீட்டில் பூஜை மாடம் இருக்கவேண்டிய அவசியத்தை யாரும் முழுமையாக அறிந்திருக்கவில்லை கணக்காளராக பணிபுரியும் எஸ். கே. மூர்கென் நினைவுக் கூர்ந்தார். "ஆனால், இன்று குருதேவாவின் சீடர்களாக இல்லாதவர்களும், தங்கள் வீட்டில் உறுதியாக பூஜை மாடத்தை வைத்து இருக்கிறார்கள். அது அவர்களுக்கு பெருமை அளிப்பதாகவும் இருக்கிறது" என்று கூறுகிறார். §

போக்குவரத்துத்துறை அமைச்சர் அணில் பைச்சூ போன்ற அரசியல்வாதிகள், குருதேவா மொரீஷியஸில் வழங்கிய போதனைகள், அந்த தீவில் இருந்த பல்வேறு இனக்குழுக்களுக்கு இடையே இணக்கத்தை ஏற்படுத்த உதவியாக இருந்தது என்று உறுதி அளித்தனர்: §

> இந்து சமயம் மீது குருதேவா கொண்டுள்ள அணுகுமுறை இனம் அல்லது மொழியை சார்ந்து இல்லை. இது வட இந்தியா மற்றும் தென் இந்தியாவை மூலமாக கொண்டுள்ள இந்துக்கள் மத்தியில் வலுவான இந்து ஒற்றுமை உருவாக உதவியுள்ளது. மேலும் குருதேவா மற்றும் சாய் பாபா குழுக்களின் தாக்கத்தால், மொரீஷியஸ் தீவில் மதமாற்றம் ஒரு பிரச்சனையாக இருந்தது இல்லை.§

குருதேவா உலகெங்கும் இருக்கும் இந்துக்களை வலுப்படுத்த இந்த இருபது ஆண்டுகளில் மேற்கொண்ட முயற்சிகளின் போது, மொரீஷியஸ் தீவில் வாழ்ந்த தனிநபர்கள், தலைவர்கள் மற்றும் முழு சமூகங்கள் மீதும் தாக்கம் ஏற்படுத்திய சம்பவங்களை போன்று, மற்ற நாடுகளிலும் நடைபெற்றன. பிஜி மற்றும் ஜெர்மனி, டிரினிடாட் மற்றும் தென் ஆப்பிரிக்கா, கனடா மற்றும் ஆஸ்திரேலியா, மலேசியா மற்றும் அமெரிக்காவில் இருந்த இந்துக்களும், இதைப்போன்ற சம்பவங்களை பகிர்ந்துகொண்டனர். §



*குருதேவா அந்த ஆன்மீக பூங்காவிற்கு விநாயகர், முருகன் மற்றும் சிவபெருமானின் மிகப்பெரிய மூர்த்திகளை கொண்டு வந்து, தங்கள் சமயத்தை கற்றுக்கொண்டு விசுவாசத்துடன் பின்பற்ற மொரீஷிய இந்துக்களை ஊக்குவித்தார். அவர் மக்கள் மத்தியில் விழிப்படைய செய்த பெருமை, கிறுத்துவ மதமாற்றங்களை நிறுத்தி, அந்த தீவை முழுமையாக மாற்றிவிட்டது.*

........................§

**சர்வதேச சமாஜங்களை வழிநடத்துதல்**

இந்த உலகில் வாழ்ந்துகொண்டும் வேலை செய்து கொண்டும் ஆன்மீக மாற்றத்திற்கு முயற்சி செய்து, தேவாலயத்திற்கு உதவி செய்ய தங்கள் வருமானத்தில் இருந்து தசமக பாகத்தை வழங்கி, வழிபாடு நடத்தி கர்ம யோகத்தை செய்ய வீடுகளில் மற்றும் உள்ளூர் சமயப்பணி குழுக்களில் கூட்டத்தை கூட்டி, குருதேவா 1980 களின் மத்தியில் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களின் ஒரு வலுவான சர்வதேச சமாஜத்தை உருவாக்கி இருந்தார். §


குருதேவா ஆரம்ப காலத்தில் இருந்து தனது துறவிகள் குழு மற்றும் சீடர்களிடம் கண்டிப்பாக இருந்து, சங்கல்பம் செய்ய வேண்டும் என்று

வலியுறுத்தினார். அவரை பொறுத்தவரையில், சங்கல்பங்கள் என்பது ஒழுக்கம் மற்றும் நற்பண்பை உருவாக்குவது மற்றும் மனம், உடல் மற்றும் உணர்ச்சியின் சக்திகள் மீது ஆளுமை செய்து, எதிர்காலத்தை எதிர்கொள்ள வலிமையை வழங்கி, ஒருவரை சாதனாவின் பாதையில் உறுதியாக நிறுத்தி வைப்பது ஆகும். முதலில் தசமபாக சங்கல்பம் இருந்தது. 80 களில் சைவ உணவு உண்பது பற்றிய சங்கல்பம் தேவைப்பட்டது, மற்றும் 90 களின் தொடக்கத்தில் அவர் குரு பரம்பரை மீது விசுவாசத்துடன் இருக்கும் சங்கல்பத்தை சேர்த்துக்கொண்டார். அவர் தனது உயிரை துறப்பதற்கு சில வருடங்கள் முன்பு, தனது சீடர்களில் சிலர் தங்கள் குழந்தைகளை ஒழுங்குபடுத்த அவர்களை உடல்ரீதியாக துன்புறுத்தி வருகிறார்கள் என்பதை அறிந்ததும், அப்போதைய மற்றும் எதிர்கால உறுப்பினர்கள் அனைவரும் நான்காவது சங்கல்பமாக அகிம்சை விரதத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார். சங்கல்பம் எடுப்பதன் பயன் மற்றும் தேவையை பற்றி குருதேவா விளக்கினார்: §

> நான்கு சங்கல்பங்களாக இருக்கும் அகிம்சை, குரு பரம்பரை மீது விசுவாசம், சைவ உணவு மற்றும் தசமபாகம் ஆகியவை ஆர்வமுள்ள ஒவ்வொரு மாணவனுக்கும் முக்கியமானவை ஆகும். ஒரு சங்கல்பத்தை வாழ்க்கையின் ஒரு முக்கியமான தருணத்தில் எடுத்துக்கொண்டதும், அந்த சங்கல்பத்தை கடைப்பிடிக்கும் வரை, வரவிருக்கும் கர்மவினைகள் சிறிதளவு நல்ல பலன்களை வழங்கும் என்பதை, இந்த சங்கல்பங்களை ஆன்மீகத்தில் அதிக ஈடுபாட்டுடன் இருக்கும் நிபுணர்கள் அறிந்து இருப்பதால், அவர்கள் அந்த சங்கல்பங்களை தீவிரமாக கடைப்பிடிக்கிறார்கள். ஆனால் அந்த சங்கல்பங்களை கடைப்பிடிக்க தவறினால், குறிப்பாக கரைக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்ட தீய கர்மவினைகள் அந்த நபர், குடும்பம் மற்றும் நண்பர்கள் மீது முழு வீச்சில் தாக்கத்தை ஏற்படுத்தும். அதனால் அகிம்சை, குரு பரம்பரை மீது விசுவாசம், சைவ உணவு மற்றும் தசமபாகம் என்ற நான்கு சங்கல்பங்களை எடுத்துக்கொண்டவர்கள், அவற்றை கடைபிடிக்கும் போது தேவைப்பட்டால் நமது *மடவாசிகளின்* உதவியை நாடுவது முக்கியமாகிறது.§
>
> ஒரு இணக்கமான, ஆக்கப்பூர்வமான, வலுவான சர்வதேச கூட்டுறவை உருவாக்க வேண்டும் என்பது எங்கள் குறிக்கோளாக எப்போதும் இருந்துள்ளதால், தீட்சை பெற அல்லது அங்கத்தினராக விரும்பும் புதிய நபர்கள் கவனமாக ஆய்வு செய்யப்படுகிறார்கள் மற்றும் அவர்கள் நுழைய விரும்பும் தருணத்தில் இருக்கும் கலாச்சார தரநிலைகள், நம்பிக்கைகள் மற்றும் அணுகுமுறைகளுக்கு இணங்கி வாழ வேண்டும். அவர்கள் எங்கள் தத்துவம் மற்றும் குறிக்கோள்கள் மீது விசுவாசமாகவும் சிரத்தையுடனும் இருந்து, தங்களது சொந்த சமய வாழ்கையை மேம்படுத்தவும் கூட்டுறவு பணியை மேலும் விரிவுபடுத்தவும், தற்போது தீட்சை பெற்று இருக்கும் குழுவினருடன் தங்கள் சக்திகளை இணைத்துக்

கொள்ளும் விருப்பத்துடன் இருக்கவேண்டும். சமயப்பணிக்கு ஒரு தனிக்குழுவை உருவாக்கி பராமரிக்கும் நோக்கத்துடன், நாங்கள் உறுதியாக உரிமையுடன் கேட்டுக்கொண்டு இருப்போம். §

மேலும் காலப்போக்கில், ஒவ்வொரு உறுப்பினர் இடத்திலும் நிலையான வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. என்னிடம் சீடனாக விரும்பும் ஒவ்வொருவரும் சாதனா செய்யும் நோக்கத்துடன் மட்டும் வரவேண்டும். தங்களது முதன்மையான நோக்கத்தில் இருந்து விலகி செல்ல யாருக்கும் அனுமதி இல்லை. தங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்த தருணங்களை தீட்சை பெற்றவர்கள் மதிப்பு அளித்து, தங்கள் வளர்ச்சியை சீராக வைத்திருக்க கடுமையாக முயற்சி செய்வார்கள். §



*குருதேவாவிற்கு குழந்தைகள் மீது அதிக பிரீயம் இருந்தது, மற்றும் அவர் அவர்களின் வளர்ப்புமுறைக்கு வழிகாட்டி, அவர்களுக்கு சமயப் புத்தகங்களை வழங்கி, அவர்களை தீங்கில் இருந்து காப்பாற்ற அரும்பாடுபட்டார். ஆயிரக்கணக்கான குழந்தைகள் அவர் போதனைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வளர்ந்தனர்.*

........................§

இந்த நம்பத்தகுந்த ஆன்மாக்களை பற்றி குருதேவா சுருக்கமாக கூறுகிறார்:§

ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் ஆன்மீக பாதையில் இருந்தால், அந்த குடும்பம் அழகாகவும் வலுவாகவும் முன்னேறும். அவர்களுக்குள் இருக்கும் அன்பு மற்றும் தங்கள் குழந்தைகள் மீது இருக்கும் அன்பு, குடும்பத்தில் இணக்கத்தை பராமரிக்கிறது. இருந்தாலும், அவர்களது சாதனாவின் இயல்பு ஒரு சந்நியாசியின் இயல்பில் இருந்து மாறுபடுகிறது. வீடு மற்றும் குழந்தைகளை பராமரிக்க போராடிக்கொண்டு, ஆழ்சிந்தனை முறையையும் கடைபிடிக்கும் போது, அதுவே வலிமை மற்றும் ஸ்திரத்தன்மையை வழங்கி, காலப்போக்கில் உள்ளார்ந்த ஞானத்தை மெதுவாக பக்குவமடைய செய்கிறது. §

குருதேவா சம்சாரிகளுடன் உரையாடும் போதும் *லிவிங் வித் சிவா* (சிவபெருமானுடன் வாழ்தல்) புத்தகத்திலும், அவர்கள் இந்த ஸ்தித்தன்மையை  அடைய கற்றுத்தரும் போது, ஆன்மீகரீதியாக நுணுக்கமான விஷயங்களில் இருந்து லௌகீக விஷயங்கள் வரை, குடும்ப வாழ்க்கையில் தோன்றும் ஒவ்வொரு சிக்கலைப் பற்றியும் பேசினார். கவாய் மடத்திற்கு அருகில் வசிக்கும் தேவ சாயொன், வழங்கும் குறிப்பு: §

குருதேவா தீட்சை பெற்ற தனது சீடர்களுக்கு, வம்சத்தை குறிக்கும் *கோத்திரம்* என்ற சொல்லைப் பற்றி உண்மையான மற்றும் முடிவான பொருளை வழங்கினார். குருதேவா மாபெரும் துறவியாக இருந்தாலும் தீட்சை பெற்ற குடும்பங்களுக்கு தொழில், சமூக அல்லது தனிப்பட்ட, சொந்த பிரச்சனைகளுக்கு மிகவும் நுணுக்கமான தகவல் பற்றி அறிவுறுத்த எப்போதும் தடுமாறியது இல்லை. அவர் தனது ஒவ்வொரு சம்சாரி சீடரின் நம்பிக்கைகள் மற்றும் கனவுகள், அச்சங்கள் மற்றும் குறைகளைப் பற்றி ஆழமான மற்றும் தனிப்பட்ட முறையில் அறிந்து இருந்தார் மற்றும் தனது சீடர்கள் குழுவிற்கு வழிகாட்டி, உதவி செய்து சேவை செய்ய எப்போதும் யோசித்தது இல்லை. §

கலிபோர்னியாவை சேர்ந்த தேவராஜன் தனது சந்திப்பை நினைவுக்கூர்கிறார்:§

1990 களின் தொடக்கத்தில், நாங்கள் நடத்திய கான்யன் கன்ஸ்டிரக்ஷன் கம்பனியின் வியாபாரத்தில் சில பண நெருக்கடிகளை சந்தித்து கொண்டிருந்தோம். நான் குருதேவாவிடம் இதைப் பற்றி எடுத்துரைத்து, அறிவுரை வழங்குமாறு அவரிடம் கேட்டுக்கொண்டேன். “நாம் உங்கள் அலுவலகத்திற்கு செல்லலாம். நீங்கள் அங்கே அந்த பிரச்சனைகளை பற்றி விளக்குங்கள்,” என்று கூறினார். §

நாங்கள் என் அலுவலகத்திற்கு ஒரு ஞாயிற்றுக்கிழமையில் சென்றோம். அலுவலகத்தில் எங்களைத் தவிர வேறு யாரும் இல்லை. அவர் எனது அலுவலகத்தில் உயரமான சுழலும் நாற்காலியில் அமர்ந்து கொண்டார். நான் அவரிடம் என் தொழில் சம்பந்தமான கணக்குப் புத்தகங்களை வழங்கினேன் மற்றும் அவர் என்னிடம் சில முக்கியமான கேள்விகளை

கேட்டார். நான் என் வியாபாரத்திற்கு வாங்கிய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு பணத்தை செலுத்த, ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க மற்றும் வரிகளை செலுத்த எங்கள் கடனாளர்களிடம் இருந்து $140,000 கடன் வாங்கியதைப் பற்றி எடுத்துரைத்தேன். வியாபாரத்தில் இருந்த போட்டி காரணமாக எங்கள் இலாப வரம்பு குறைந்துவிட்டது, மற்றும் அந்த சமயத்தில் இருந்த பொருளாதார நெருக்கடிகள் வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கவில்லை. புதிய பணிகள் அபூர்வமாக கிடைத்தன. கடன் தொகையை எப்படி செலுத்துவது என்று தெரியாமல் தவித்தேன். §

குருதேவா எனது அலுவலில் இருந்த ஒவ்வொரு பொருளையும் கூர்ந்து கவனித்தார். பின்னர் அவர் தன் மடியில் எங்கள் வியாபார கணக்குப் புத்தகங்களை வைத்துக்கொண்டு, நம்பிக்கையுடன் சிரித்துக்கொண்டு, “சரி, நாம் இங்கே இருக்கும் பொருட்களை மாற்றி அமைக்கலாம்,” என்று கூறினார். அதன் பிறகு அவர் விரைவாக என் நாற்காலியை உதைத்து, அதை பலமுறை சுழல செய்தார். அவர் சிரித்துக்கொண்டு என் அலுவலகத்தை பல முறை சுற்றி வந்தார். இந்த அபூர்வமான காட்சிகளை காண்பதற்காக, நான் ஓரமாக தரையில் அமர்ந்துகொண்டேன். §

அவர் இறுதியாக ஓரிடத்தில் நின்றுக்கொண்டு, தன்னுடன் வந்த மடவாசியிடம் சிறிய பூஜை செய்து மற்றும் தீர்த்தம் தெளித்து தோஷங்களை நீக்குமாறு கேட்டுக்கொண்டார். மணியின் ஒலி, விளக்கு மற்றும் சாம்பிராணி மூலம் எங்கள் வணிக வளாகத்தில் இருந்த ஒவ்வொரு மூலை முடுக்கையும் அந்த பூசாரி தூய்மைப்படுத்தி கொண்டிருந்தார். அவர் ஒவ்வொரு சன்னலின் அடிக்கட்டையிலும் ஒரு சிறிய பழத்துண்டை வைத்து, அலுவலகத்தில் *அசுர* சக்திகள் ஏதேனும் இருந்தால், அந்த பழத்தை உண்டு நிரந்தரமாக அந்த இடத்தை விட்டு கிளம்புமாறு கேட்டுக்கொண்டார். §

இதற்கிடையில் குருதேவா எனது தொழில் சம்பந்தமான சில குறிப்பிட்ட அறிவுறுத்தல்களை வழங்கினார். அவர் இறுதியாக, “நம்பிக்கையுடன் செயல்பட்டு முன்னேறுங்கள்,” என்று அதிக ஊக்கமளிக்கும் வார்த்தைகளை சொல்லிக்கொண்டு கிளம்பினார். §

ஒரு சில மாதங்களில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் தென்பட்டது. புதிய பணிகள் வரத்தொடங்கின. எங்கள் வியாபாரம் வளர்ச்சி அடைந்ததால், அதிகமான ஊழியர்களை பணியில் சேர்த்தோம். கடன் சுமை விரைவில் நீங்கியது, மற்றும் எங்கள் லாபங்கள் தொடர்ந்து அதிகரித்ததால் எங்கள் வியாபாரம் தொடர்ந்து விரிவாக்கம் பெற்று வளர்ச்சியையும் பெற்றது. §

பல வருடங்கள் கழித்து, பல மில்லியன் டாலர்கள் மதிப்புள்ள பணிகள் எங்களை தேடி வந்தன. எங்கள் பணிகள் அனைத்தும் சீராக இயங்கின. ஒரு சமயத்தில், கலிபோர்னியாவின் ஓக்லாந்துக்கு அருகில் ஒரு நாற்பது ஏக்கர் மலை உச்சியில் இருந்த தனது $14 மில்லியன் பண்ணையை கட்டித்

தருமாறு ஒரு செல்வந்தர் எங்களுக்கு அழைப்பு விடுத்தார். அவ்வளவு பெரிய பணியை செய்வதற்கு எங்களிடம் போதுமான அனுபவம் இல்லை என்று சொல்லி நான் தொடக்கத்தில் அந்த பணியை மறுத்துவிட்டேன். ஆனால் தொடர்ந்து வற்புறுத்தியதால், நான் இதைப்பற்றி பேச குருதேவாவை நாடினேன். §

எங்கள் வியாபார வளர்ச்சியை பார்த்து மகிழ்ச்சி அடைந்த குருதேவா, நம்பிக்கையுடன் முன்னேறுமாறு எங்களை மீண்டும் ஊக்குவித்தார். நாங்கள் ஒப்பந்தங்களை கையெழுத்திட்ட பிறகு, நான் இந்த நற்செய்தியை அவரிடம் தெரிவித்து, “நான் ஒரு பெரிய செல்வந்தரிடம் வேலை செய்தது இல்லை. நான் என்ன செய்வது?” என்று கேட்டேன். “அவர் சொல்வதை மட்டும் செய்யுங்கள்,” என்று தெளிவாக மற்றும் நேரடியாக பதில் அளித்தார்.§

அந்த அறிவுறுத்தல்கள் மிகவும் எளிமையாக இருந்தாலும், வாழ்க்கையில் அதிக வெற்றிகளை கண்ட இந்த தொழிலதிபர் மற்றும் அதன் பிறகு எனது அனைத்து வாடிக்கையாளர்களுடனும் பணிபுரிவதற்கு அவை மிகவும் முக்கியம் என்பதை நான் தெரிந்துகொண்டேன். அவருடன் ஒவ்வொரு வாரமும் நடந்த சந்திப்பின் போதும், அவர் அல்லது அவரது மனைவி குறிப்பிடும் ஒவ்வொரு சிறிய தகவலையும் நான் இரகசியமாக குறித்துக்கொள்வேன். இந்த வேண்டுகோள்களை எங்கள் நிர்வாகம் உடனடியாக சரி செய்வதை நான் உறுதி செய்து கொண்டு, நாங்கள் மாற்றங்களை செய்துள்ளோம் அல்லது அவர்கள் வழங்கிய அறிவித்தல்களை பின்பற்றி உள்ளோம் என்று வாடிக்கையாளர்களுக்கு தகவல் தெரிவிப்பேன். அவர் நியமித்த கட்டிட கலைஞர்கள் அவருடன் கட்டிட வடிவமைப்பு பற்றி நான் கவனித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் அதன் பிறகு பணியில் இருந்து நீக்கப்பட்டார்கள். நமது வாடிக்கையாளரிடம் வாதாடுவது அல்லது அவர்கள் மனதை மாற்ற முயற்சி மேற்கொள்வது வேண்டாம் என்று, இந்த பணியில் ஈடுபட்டிருந்த எங்களது நிர்வாகக் குழு மற்றும் சுமார் எண்பது துணை ஒப்பந்தக்காரர்களுக்கு நான் அறிவுறுத்தினேன். “அவர்கள் சொல்வதை செய்தால் போதும்,” என்று நான் அவர்களிடம் கூறினேன்.§


முப்பது வருட காலத்தில், குருதேவா எங்களை பண இழப்பால் போராடிக்கொண்டு இருந்த ஒரு சிறிய நிறுவனத்தில் இருந்து சான் பிரான்சிஸ்கோ விரிகுடா பகுதியில் அதிக லாபகரமான மற்றும் அதிகம் மதிக்கப்பட்ட ஒப்பந்த வணிகங்களில் ஒன்றாக மாற்றி அமைத்தார். நாங்கள் அவரது வழிகாட்டல்களை தொடர்ந்து பெற்று, சில நேரங்களில் நிர்வாகம் மற்றும் திறமைகளில் புதிய நிலைகளை அடைந்து, அபரீத முன்னேற்றத்தை பெற்றோம். “உயர்ந்த இலக்குகளை வகுத்துக்கொள்ளுங்கள்,” என்று அவர் என்னை தொடர்ந்து ஊக்குவித்து, தன்னம்பிக்கையின்மை மற்றும் பதட்டத்தை அகற்றி வைத்தார்.

> இருந்தாலும், அவர் வழங்கிய அறிவுரைகள் மிகவும் எளிமையான அடிப்படைகளைக் கொண்டு உருவாகி இருந்தன. §

குருதேவாவின்  சீடர்கள் உலகெங்கும் பரவி இருந்தாலும், ஒரே சிறிய கிராமத்தில் வாழ்ந்தது போல தொடர்பில் இருந்தார்கள். இதற்கு உதாரணமாக, வெவ்வேறு நாடுகளில் வசித்த, கவாய் தீவின் தேவ சேயோன் குடும்பம் மற்றும் மொரீஷியஸ் தீவில் பிரபல வழக்கறிஞரான மனோன் மர்தமூத்து குடும்பத்திற்கும் இடையே நடைபெற்ற திருமணத்தை குறிப்பிடலாம். 1991 ஆம் ஆண்டு, தேவாவின் மகளான கவிதா மனோனின் மகனான சிவகுமாரெனை திருமணம் செய்து கொண்டாள். இரு குடும்பங்களும் வெகு தொலைவில் இருந்தாலும், பாலுடன் பால் கலப்பதை போல ஒன்று சேர்ந்தார்கள். இதைப் பற்றி தேவா நினைவுக் கூர்கிறார்: §

> எனது குடும்பத்தின் தேவைகளுக்கு குருதேவா வழங்கிய அன்பு கலந்த கவனிப்பு மற்றும் தொடர்ச்சியான ஆசிகள், அவர் மீது அன்பு செலுத்தியவர்கள் மீது அன்பு செலுத்தவும் நம்பிக்கை வைக்கவும் வழி வகுத்தது. அவரது சர்வதேச ஆன்மீக குடும்பமும் நாங்களும் ஒரே வாழ்க்கை இலக்குகள் மற்றும் முன்னுரிமைகளை பகிர்ந்து கொண்டதால், ஒரே குடும்பமாக மாறினோம். ஒரே *குலகுருவை* பகிர்ந்த இரு குடும்பங்களும் ஒன்று சேர்ந்ததால், எங்கள் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய முக்கிய கேள்விகளுக்கு விடை கிடைத்து இருந்தன.§

குருதேவா தனது தேவாலய அங்கத்தினர்களிடம் தனது *லிவிங் வித் சிவா* (சிவபெருமானுடன் வாழ்தல்) புத்தகத்தில் 365 நந்திநாத சூத்திரங்களில் விவரித்த, தமிழ் சைவ கலாச்சாரத்தின் பாரம்பரிய மற்றும் நிரூபிக்கப்பட்ட நெறிமுறைகளை உறுதியாக கடைப்பிடித்து வாழவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்தியா மற்றும் இலங்கையில் இருந்த ஆச்சாரமான சைவர்களுடன் தொடர்பில் இருந்ததால், இந்த புனிதமான கலாச்சாரத்தின் நுணுக்கங்கள் மற்றும் ஆழங்களை மேற்கு நாட்டு மக்களால் புரிந்துகொள்ள முடிந்தது மற்றும் குருதேவா வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அதை ஊக்குவித்து வந்தார். §



*தினமும் அதிகாலை நேர தியானம் முடிந்த பிறகு, குருதேவா கையில் காபி குவளையுடன், துறவிகள் மற்றும் விருந்தாளிகளை சமமாக வரவேற்று, எல்லோருக்கும் தங்களுக்குள் இருக்கும் பரமாத்துமாவைப் பற்றி நினைவூட்டிக்கொண்டு சிவபெருமானின் பூங்காவில் இருந்த பாதைகள் வழியாக நடந்து செல்வதை வழக்கமாக கொண்டிருந்தார்.*

........................§

இந்த நந்திநாத சூத்திரங்கள் வாழ்க்கை எளிமையாக இருந்த போது, குடும்பங்கள் மற்றும் கிராமங்கள் நெருக்கமாக இருந்த போது, அன்பு மற்றும் அமைதி, மரியாதை மற்றும் ஞானம் வலுவாக இருந்த போது மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் மற்றும் ஒருவரை ஒருவர் எவ்வாறு தொடர்பு கொண்டார்கள் என்று சுருக்கமாகவும் தைரியமாகவும் விளக்குகிறது. இதில் புதிய தகவல் எதுவும் அடங்கி இருக்கவில்லை. ஒவ்வொரு சூத்திரமும் அறிவிக்கும் பழங்கால ஞானம் மற்றும் நெறிமுறையை பின்பற்றினால், அது தினசரி வாழ்க்கைக்குள் அதே எளிமை, சமூக ஆதரவு, அமைதி, இணக்கம் மற்றும் நிரந்தர உறவுகளில் கண்ணியத்தை கொண்டு வருகிறது. இந்த 365 சூத்திரங்களில் ஒவ்வொன்றையும் தினமும் ஒவ்வொன்றாக படிக்க வேண்டும். இதில் பல வரலாற்று சிறப்புமிக்க கடந்த காலத்தில் இருந்து நிகழ்காலத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன மற்றும் சில தற்காலத்தை சேர்ந்த புனிதமான பாடங்களாக உள்ளன. இந்துக்களின் ஐம்பத்தி இரண்டாவது நூற்றாண்டில், இந்த

அறிவுறுத்தல்கள் நல்லொழுக்கத்துடன் நன்றாக வளர்க்கப்பட்ட பல லட்சக்கணக்கான ஆசிய நாடுகளில் இருப்பவர்களின் தினசரி வாழ்க்கையை இன்றும் நன்றாக விவரிக்கிறது. §


இந்த சூத்திரங்கள் விதிகளாக இருக்கின்றன, ஆனால் இவை கட்டளைகளாக இருப்பதில்லை. இவை பக்தியுள்ள இந்துக்கள் என்ன செய்யவேண்டும் என்பதை மட்டும் விவரிக்கின்றன. என்னை தீவிரமாக பின்பற்றும் சீடர்கள், இந்த 365 சூத்திரங்கள் மீது கவனம் செலுத்தி பயிற்சி செய்ய முயல்வார்கள் என்று நான் எதிர்ப்பார்க்கிறேன். இந்த சூத்திரங்களை வாசிக்கும் பலர், “எதற்காக இந்த கடுமையான பாரம்பரியங்கள் மற்றும் பயிற்சிகளை பின்பற்ற வேண்டும்? இவை பழைய பாணியாக தோன்றுகிறதே?” என்று நீங்கள் சிந்திந்துக்கொண்டு இருக்கலாம் அல்லது உங்கள் நண்பர்களிடம் பேசிக்கொண்டு இருக்கலாம். எனது பதில்: இரண்டு உலகப்போர்களுக்கு முன்பாக, குழந்தை வளர்ப்பு, ஆண்-பெண் உறவுகள், பெண்கள் வீட்டிலேயே இருந்து தங்கள் குழந்தைகளை கவனமாக வளர்ப்பது போன்ற பல பாரம்பரியங்கள் அமெரிக்காவிலும் இருந்துள்ளன. இரண்டாம் உலகப்போரின் போது பெண்கள் வெளியுலகில் வேலை செய்ய ஆரம்பித்ததால், அது பாரம்பரிய கலாச்சாரத்தின் சீர்குலைவை ஏற்படுத்தி உருவாக்கிய பாணியை, இன்று ஒவ்வொரு நாடும் பின்பற்றி வருகிறது. §

கலாச்சாரமின்மை அல்லது கலாச்சார அழிவாக இருக்கும் கலாச்சாரமின்மை, எல்லோரும் பின்பற்றும் “கலாச்சாரமாக" மாறிவிட்டது. அதனால் ஒழுக்கமின்மை, விவாகரத்து, தற்கொலை மட்டுமில்லாமல் கொலை, திருட்டு, மனைவியை துன்புறுத்துதல், போதை மருந்து பழக்கம், திருமணம் செய்துக்கொண்டு ஒரு துணையுடன் நிலையாக இல்லாமல் தொடர்ந்து மாற்றிக்கொண்டு இருத்தல் மற்றும் குழந்தைகள் வளர்ப்பில் கவனம் செலுத்தாமை போன்ற பல்வேறு தீவிர ஈடுபாடுகள் மற்றும் தவறான நடத்தைகளின் கட்டுப்படுத்த முடியாத நிலை தோன்றுகிறது. இதனால் எல்லோரது பாதுகாப்பும் கேள்விக்குறியாகிறது. §

நாம் எதற்காக பழங்கால மரபுகளை பின்பற்ற வேண்டும் என்று சுமார் அரை நூற்றாண்டிற்கு முன்பாக என் சற்குரு யோக சுவாமியிடம் கேட்கப்பட்ட போது அவர் மிகவும் எளிமையாக, “இரயில் வண்டி பல பெட்டிகளை இழுத்து செல்கிறது. ஆனால் தண்டவாளம் இல்லாமல், இரயில் வண்டியால் பல பெட்டிகளை இழுத்து செல்ல முடியுமா? கண்டிப்பாக முடியாது. சான்றோர்கள் நமக்கு பாதையை வகுத்துள்ளனர். நாம் அதை பின்பற்றி செல்ல வேண்டும்” என்று கூறினார். இந்த சூத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்கள் சவால் விடுவதாக இருந்தாலும், அவை சந்தோஷமான மனிதர்கள், ஒற்றுமையுடன் இருக்கும் குடும்பங்கள் மற்றும் பாதுகாப்பான நாடுகளை

உருவாக்குகின்றன. நீங்கள் அவற்றை முழுமையாக பார்க்கும் போது, உங்களால் ஒரு உயர்வான சமூகத்தை காண முடியும். அத்தகைய ஒரு சமூகத்தால் ஒன்றாக இணைந்து வேலை செய்து, ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி, ஒருவர் மற்றொருவர் மீது நம்பிக்கை வைக்க, ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, ஒன்றாக சிவபெருமானுக்கு சேவை செய்து வழிபட்டு, ஆக்கப்பூர்வமான ஒற்றுமையில் ஒன்றாக வாழ்ந்து பிறப்பு, வாழ்க்கை, மரணம் மற்றும் மீண்டும் பிறப்பு என்று அவர்கள் ஒவ்வொருவரும் அனுபவிப்பதை போல தொடர்ச்சியான படைப்பாற்றலை வெளிப்படுத்த முடிகிறது. §

வேலை வாய்ப்புக்கள் மற்றும் சொந்த நாடுகளில் இருந்த இன தகராறுகள், சண்டை மற்றும் பொருளாதார மந்தநிலை காரணமாக, குடிபெயர்ந்த இந்துக்கள் உலகமெங்கும் பரவி உள்ளனர். உலகெங்கும் புலம்பெயர்ந்த இந்துக்கள் காரணமாக, அவர்களின் மூதாதையர்கள் புரிந்துக்கொண்டு சிறப்பாக வாழ்ந்து இருந்த நடத்தை முறைகள் மற்றும் கலாச்சாரம் மற்றும் வரைமுறையின் விதிகளை மீண்டும் வலியுறுத்துவது முக்கியமாகிறது. §



குருதேவா தனது சீடர்களுடன் அவர்களது ஆரோக்கியம், குடும்பம், வேலை மற்றும் தியானங்களை பற்றி இரவு பகல் பார்க்காமல் தொலைபேசி மூலம் அறிவுரை வழங்கி வந்தார்.

.........................§

“குரு ஒரு மடத்திற்கு பணி புரிவதை போல குடும்பங்களுடனும் பணி புரிகிறார்,” என்று 1973 ஆம் ஆண்டு குருதேவாவிற்கு வெளியிடப்பட்ட *தி சைவைட் சாஸ்த்ராஸ்* (சைவ சாஸ்திரங்கள்) விளக்குகிறது. மடங்கள் மற்றும் குடும்பங்களுக்கு இடையே இருந்த அந்த உறவை பற்றி தேவ சேயோன் விரிவாக விளக்குகிறார்: §

> தேவாலய பணிகள் மற்றும் பெரும்பாலான மக்கள் பணிகளிலும், குருதேவாவின் பல்வேறு அறிவுறுத்தல்களை பல்வேறு நிலைகளில் பூர்த்தி செய்ய, சைவ சித்தாந்த தேவாலயத்தின் மடம் மற்றும் குடும்பங்கள் இணைந்து செயல்படுகின்றன. குடும்பங்கள் மடவாசிகளின் அணுகுமுறைகள், அவர்களது அர்ப்பணிப்பு மற்றும் சுயநலமற்ற சேவையை கவனித்து கற்றுக்கொள்கிறார்கள். §

இந்த உறவு தனது சீடர்கள் அனைவரிடத்திலும் குருதேவா கவனமாக வளர்த்து இருந்த தியானம் மற்றும் சாஸ்திர ஆய்வு போன்ற தினசரி சமய பயிற்சிகளினால் விருப்பத்துடன் கடுமுயற்சி செய்வதால் உருவாகியுள்ளது. §

எல்லோரும் ஒன்றாக வீட்டு பூஜை மாடத்தில் வழிபடுதல், இந்து ஆடைகளை அணிதல், குழந்தைகளை துன்புறுத்தாமல் வளர்த்தல், தினமும் குடும்பத்துடன் ஒன்று சேர்ந்து பேசுதல் மற்றும் மாலையில் வாரத்திற்கு ஒரு முறை எல்லோரும் ஒன்றாக கூடி வீட்டில் இருத்தல் போன்றவற்றால் இந்து சமயத்தின் பாரம்பரியங்களை பரப்பும் போது வரம்புகளை உருவாக்கிக் கொள்ளுமாறு, தேவாலய குடும்பங்களிடம் குருதேவா கேட்டுக்கொண்டார். தங்கள் குழந்தைகளுக்கு ஒன்றாக வீட்டிலேயே கல்வி கற்பித்தல், யாத்திரைகள் மற்றும் விஷேச விருந்தாளிகளை உபசரித்தல் மற்றும் தென் இந்தியா மற்றும் கவாய் ஆதீனத்திற்கு கூட்டாக யாத்திரை செல்லுதல் போன்ற பல வழிகளில் ஒரு அர்த்தமுள்ள இந்து வாழ்க்கையை வாழ்ந்து, ஒரே பகுதியில் இருக்கும் குடும்பங்களின் குழுக்கள் தங்களுக்குள் கூட்டு சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க கற்றுத்தந்தார். §

குருதேவா தீட்சை பெறாத தொண்டர்களின் குழுவை உருவாக்க அதிக முக்கியத்துவம் அளித்து, ஒவ்வொரு தேவாலய பணிக்கும் ஒரு *குலபதி* குடும்பம் என்று ஒருசில தம்பதிகளை நியமிப்பார். கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டு, களத்தில் மதப் பரப்பாளர்களாக, நன்றாக தேர்ச்சி பெற்ற இந்த குழுவின் வாயிலாக, அவர் தான் பெரும்பாலும் சமாஜங்களுடன் மேற்கொண்ட பணி, மற்றும் பல நாடுகளில் மேற்கொண்ட ஆன்மீக திட்டங்களை செயல்படுத்தினார். அவர் பெரும்பாலும் இந்த குழுவினரை தினமும் அழைத்து பேசுவார். §

சம்சாரிகளாக இருந்த சீடர்களின் வாழ்க்கை மீது குருதேவா ஏற்படுத்திய தாக்கத்தை பற்றி மனோன் மர்தமூத்து தெளிவாக எடுத்துரைத்தார்: §

வீட்டிலும் வெளியுலகிலும் அமைதி, அன்பு மற்றும் இணக்கத்திற்கு உகந்த ஒரு வாழ்முறையைப் பற்றி குருதேவா எங்களுக்கு தெரியப்படுத்தி உள்ளார். அவர் எங்களுக்கு அமைதியை நிலைநாட்ட, நல்ல குடும்ப மக்களாக மற்ற எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக இருக்க, விவேகமுள்ள  பெரியோர்களாக இருக்க, மிகவும் மோசமான சூழ்நிலைகளிலும் மரியாதையுள்ள தலைவர்களாக நிலைத்து இருக்க கருவிகளை வழங்கியுள்ளார். அவர் தனது சொந்த வாழ்க்கையின் மூலம், நமது நம்பிக்கைகள் மற்றும் பண்புகளில் வலுவாக இருந்து, கவனமாக திட்டமிட்டு வாழ்க்கையில் வெற்றி பெறுவது பற்றியும், நிகழ்காலத்தில் முழுமையாக இருப்பது பற்றியும் எங்களுக்கு கற்றுத் தந்தார். நாங்கள் தற்போது குடும்பங்கள் மற்றும் கூட்டு குடும்பங்களுடன் அற்புதமான அனுபவங்களை ரசித்துக்கொண்டு, எங்களால் எங்கள் கலாச்சாரம் மற்றும் சமயத்தை பாதுகாத்து தக்க வைத்துக்கொள்ள முடிகிறது என்றால், அதற்கு சற்குருவிற்கு தான் நன்றி சொல்லவேண்டும். §

**மகாதேவர்கள் சிவலோகத்தை விட்டு வெளியேறுதல்**

குருதேவா அதிக ஆழமான ஆன்மீக உலகம் பற்றிய விளக்கங்களில் இருந்து தொடங்கி, இந்துக்களுக்கு இந்து சமயத்தை பற்றி முழுமையாக கற்றுத் தந்தார்.§

மிகவும் உயர்வான சக்திகளான விநாயகர், முருகன் மற்றும் சிவபெருமான் போன்றோர், தங்க ஒளியில் மின்னும் தங்கள் உடல்களுடன் மூன்றாவது உலகில் வசிக்கின்றனர். இந்த மூன்றாவது லோகம் சிவலோகம் என்று அழைக்கப்படுகிறது. உள்பொருளின் இரண்டாவது உலகமாக விளங்கும் சூட்சும லோகம் தேவலோகம் என்று அழைக்கப்படுகிறது. தேவலோகத்தில் மகாதேவர்களுக்கு இருக்கும் லட்சக்கணக்கான உதவியாளர்கள் நம் ஒவ்வொருவருக்கும் உதவி செய்து வருகின்றனர். இந்த முதல் லோகத்தில் உங்களுக்கு தனிப்பட்ட முறையில் உதவி செய்ய ஒன்று அல்லது பலர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். லௌகீக அல்லது தூல உள்பொருளாக இருக்கும் இந்த லோகம், பூலோகம் என்று அழைக்கப்படுகிறது. §

ஒருவர் நெற்றியில் பூசியிருக்கும் விபூதியை தேவர்களால் எவ்வாறு காண முடிகிறது, கோயிலில் பூசாரி உச்சரிக்கும் சமஸ்கிருத மந்திரத்தை தேவர்களால் எவ்வாறு கேட்கமுடிகிறது மற்றும் கோயில் கருவறையில் கற்சிலையாக இருக்கும் தெய்வம் எவ்வாறு மூன்றாவது லோகத்தில் இருக்கும் மகாதேவர்களுக்கு ஒரு தொலைபேசி இணைப்பு போல விளங்குகிறது என்பதை பற்றி அவர் விளக்குவார். அவர் கூட்டத்தில் கூடியிருந்த தேர்ந்தெடுத்த சிலர், தங்கள் மூதாதையர்களிடம் இருந்து அத்தகைய விளக்கங்களை கேட்டு இருந்தாலும், தனது சொந்த உணர்தலை போதிக்கும் குருதேவா சொல்வதை கேட்பது மிகவும் விசேஷமானதாக இருந்தது. §

சிவபெருமானை வீட்டில் வழிபடக்கூடாது, மற்றும் அழிக்கும் கடவுளாக மட்டுமே பலரால் தவறாக கருதப்படும் சிவபெருமானை வழிபட்டால் வறுமை நிலை உண்டாகும் என்று மக்களிடம் நிலவும் பொதுவான தவறான கருத்துக்களை அகற்றுவதற்காக, அவர் தனது சக சைவர்களுக்கு வழங்கிய தகவலில் ஒரு விசேஷ பகுதியை ஒதுக்கியிருந்தார். “அபத்தமானது, சிவபெருமான் அன்பின் கடவுளாக இருக்கிறார்!” என்று அவர் பதில் அளித்தார். ஆக்கல், காத்தல் மற்றும் அழிக்கும் கடவுளாக இருக்கும் சிவபெருமானை வழிபடுவதால் செல்வத்துடன் எல்லா நன்மைகளையும் கிடைக்கும் என்று அவர் விளக்கினார். மக்களிடம் நிலவும் மூடநம்பிக்கைகளுக்கு இரையாகி, தங்கள் வீடுகளுக்கு எளிமையான நடராஜரை கொண்டு வர தயங்கிய ஆயிரக்கணக்கான சைவ குடும்பங்கள், தைரியமாக தங்கள் பூஜை அறைகளுக்கு அன்பின் வடிவமாக இருந்த கடவுளை கொண்டு வந்தனர். §

குருதேவா அனைத்து மகாதேவர்களையும் அவர்கள் லோகத்தில் இருந்து “வெளியே அழைத்து" வர விரும்பினார் மற்றும் வீட்டு பூஜை அறையை தங்கள் வீட்டில் இருக்கும் மிகவும் அழகான அறையாக மாற்ற இந்து சமயத்தின் ஒவ்வொரு பிரிவை சேர்ந்த மக்களையும் ஊக்குவிதார். தங்கள் வீட்டிற்கு வரும் விருந்தாளிக்கு தென்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காக, தங்கள் வீட்டு பூஜை அறையை இரகசியமாக வைத்திருந்த இந்துக்களுக்கு ஒரு பிரத்யேக கண்டனத்தை தயார் செய்து இருந்தார். அவர் அவர்களை “இரகசியமான இந்துக்கள்" என்று கடிந்துக்கொள்வார். அவரது சீடர்களின் வீடுகள், அதில் வசிப்பவர்களின் சமயம் மற்றும் கலாச்சாரத்தை அந்த வீடு அருமையாக மற்றும் தெளிவாக பிரதிபலிக்க வேண்டும் என்று அவர் விரும்புவார். “சிவலிங்கம், நடராஜர், முருகன், விநாயகர் மற்றும் சற்குருவின் *திருவடியை* வழிபடுவதற்கும், தியானம் செய்வதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு, முற்றிலும் திகைக்க வைக்கும் வீட்டு பூஜை அறையாக இருக்க வேண்டும். இது வீட்டில் இருக்கும் மிகவும் அழகான அறை,” என்று பூஜை அறையை பற்றி அவர் தனது கருத்தை தெரிவித்தார். §

அவர் பல வருடங்களாக ஆன்மீக வாழ்க்கைக்கு அடிப்படையாக பரிந்துரைத்த தியானத்துடன், ஒவ்வொரு வீட்டிலும் தினமும் பூஜை நடைபெற வேண்டும் என்று வலியுறுத்த தொடங்கினார். மேற்கில் இருந்தவர்களுக்கும் கிழக்கில் இருந்தவர்களுக்கும், 1970 களின் இறுதியில் தனது மடவாசிகள் கற்க ஏற்பாடு செய்திருந்த, பாரம்பரிய வீட்டு பூஜை செய்முறையை அவர்கள் மூலமே எழுதி, முதல் முறையாக எல்லோருக்கும் கிடைக்கும் படியாக சைவ ஆத்மார்த்த பூஜை என்ற பெயரில், பழங்கால சமஸ்கிருத சுலோகங்களுடன் வெளியிடவும் செய்தார். அதில் அவர் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புக்களுடன் ஒலிபெயர்ப்பையும் வழங்கி இருந்தார். §


அவர் தான் மேற்கொண்ட ஒவ்வொரு பணியிலும் தீவிரமாக இருந்ததை போல, சைவ வழிபாட்டு முறையின் அதிக ஆழமான மூலத்தில் இருந்து, 1982 ஆம் ஆண்டு குருதேவா தான் நிர்மாணித்த கோயில்களுக்கு பழங்கால

புரோகித அற்புதங்களை கொண்டு வந்தார். அது வரை கேட்டிராத, கோயில் பூஜையின் கலைகள், சைவ பரார்த்த பூஜையைப் பற்றி தனது மடவாசிகளுக்கு தெரிவிக்குமாறு குருதேவா சுப்பிரமணிய குருக்களிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அவர் அதைப்பற்றி அளவெட்டியின் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆசிரமத்தில் தனது கருத்துக்களை தெரிவித்தார். 1985 குருதேவா அந்த அறிவை பி. சண்முக சிவாச்சாரியார் மூலம் மேலும் வலுப்படுத்தினார். அவர் *ஹோம* சடங்குகளைப் பற்றி விளக்க தென் இந்தியாவில் இருந்து பறந்து வந்து, பரார்த்த பூஜையை தேவநாகரி லிபியில் தனது சொந்த கையால் எழுதி, அதை ஆங்கிலத்தில் ஒலிபெயர்க்கவும் செய்தார். இது அப்போதைய இந்திய அர்ச்சகர் சங்கத்தின் தலைவராக இருந்த சாம்பமூர்த்தி சிவாச்சாரியாரின் ஒப்புதலுடன் நடைபெற்றது. §

குருதேவா 1981 ஆம் ஆண்டு இந்திய யாத்திரை சென்ற போது, திருச்செந்தூரில் தமிழ் சான்றோர்களும் பேசும் போது, “நீங்கள் உங்கள் கோயில்கள் மற்றும் சமயத்தை புறக்கணிக்க ஆரம்பித்தால், 50 வருடங்களுக்குள் நீங்கள் உங்கள் இனத்தை இழக்க நேரிடும்” என்று கூறினார். அதே வருடம் நடைபெற்ற இன்னரசர்ச் திட்டத்தின் போது, ஈழத்து திருநெறி தமிழ் மன்றத்தின தலைவர் திரு. ஏ. குணநாயகம், சைவ சித்தாந்த தேவாலயத்தின் நடவடிக்கைகள் மற்றும் சாதனைகளை பட்டியலிட்டு, அதன் சைவ சமய சேவையை புகழ்ந்து, மன்றத்தின் சார்பாக கொழும்புவின் சரஸ்வதி மண்டபத்தில் வழங்கிய உரையின் தொகுப்பு: §

> 15 ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை, மேற்கில் இருந்து பல்வேறு சமயத்தை சேர்ந்த தூதர்கள் கிழக்கு கரைகளுக்கு வந்த போது, ஆன்மீக நதியின் உண்மையான பாதையை தாங்கள் பின்பற்றுவதாக அவர்கள் கருதினார்கள். அவர்கள் மனதை பொறுத்தவரை, அது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றுகொண்டு இருந்தது. ஆன்மீக ஞானோதயத்தின் வழிகாட்டலை தேவையானவர்களுக்கு வழங்கவே, தான் அதை கொண்டு வந்ததாக அவர்கள் உண்மையில் கருதினார்கள். ஆனால் சுவாமி விவேகானந்தரின் எழுச்சி, ஆன்மீக நதி உண்மையில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி அல்லவா சென்று கொண்டிருக்கிறது என்று அவர்களை சிந்திக்க வைத்தது. §
>
> ஹவாய் தீவில் சைவ சித்தாந்த தேவாலயம் தொடங்கியதன் மூலம், தற்போது ஒரு மூன்றாவது நிலை தோன்றியுள்ளது. நமக்கு முன்பாக ஒரு அற்புதம் நடந்துகொண்டு இருக்கிறதா? நதி பின்னோக்கி செல்ல ஆரம்பித்து விட்டதா? ஒரு காலத்தில் ஆன்மீகத்தில் சிறந்து விளங்கிய கிழக்கு நாடுகளில், ஆங்காங்கே இருக்கும் ஒரு சில பாலைவனச் சோலைகளைத் தவிர, பெரும்பாலான பகுதி வறண்டு பலரால் முக்கியத்துவம் அளிக்கப்படாமல் இருக்கிறது. கிழக்கு நாடுகள் மாறிக்கொண்டு இருக்கும் காலத்தின் மீது கவனம் செலுத்தாமல், தொழில்நுட்ப யுகத்துடன் முன்னேற தவறியுள்ளது. பொன்போன்ற தலைசிறந்த பாரம்பரியத்தின் மீது உரிமையுள்ள வாரிசுகளை

சோம்பேறித்தனமும் அக்கறையின்மையும் ஆட்க்கொண்டுள்ளது என்பதால், விதிகள் மற்றும் முன் உதாரண அடிப்படையில், பூமியில் இருக்கும் தலைசிறந்த மதத்திற்கு ஆதரவு வழங்குவது சைவ சித்தாந்தத்தின் பொறுப்பாகிறது. அது சைவ சமயத்தின் வழிகாட்டலுக்கு வலுவாக ஆதரவு அளித்து வருகிறது. §



*புதிய தொழில்நுட்பங்களை விரைவில் ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்ட குருதேவா, வசன குறிப்புக்களுக்கு சிறிய ஒலிப்பதிவுப் பெட்டி மற்றும் எழுத்து வடிவத்தை ஒலிப்பேழை நாடாவிற்கு பதிவு செய்த புதுமையான 1980 சோனி டைப்கார்டரை போல கைக்கு அடக்கமான கணினிகள் போன்று தனது சிந்தனைகள் மற்றும் படைப்புக்களை பதிவு செய்து மக்களுடன் தொடர்பு கொள்ள உதவிய கருவிகளை அதிக ஆர்வத்துடன் பயன்படுத்தினார்.*

.........................§

தேவாலயத்தில் அமர்ந்து இருக்கும் ஒரு ஆர்வமுள்ள சாதகன், புகழ்பெற்ற சைவ சமயத்தின் கடந்த காலத்தில் இருந்து சிலவற்றை மீண்டும் பெறும் அளவிற்கு, ஹவாய் தீவில் அமைதி புரட்சி நடந்துகொண்டு இருக்கிறது. இல்லையென்றால், ஹவாய் தீவில் சைவ சித்தாந்த தேவாலயத்தின் புனிதமான வளாகங்களில், எவ்வாறு

மகாபலிபுரத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட 16-டன் எடையுள்ள கருங்கல் நந்தியை அமர்த்த முடியும்? எவ்வாறு ‘கடவுள்’ கோயிலில் ஆறு அடி உயர நடராஜர் சிலை வாசம் செய்ய முடியும்?...§

இது சம்பந்தமான சடங்கு மற்றும் விழாக்கள் மட்டுமே நம்மை கவர்ந்து இழுக்காமல், அதிக கவனமாக தெரிவிக்கப்பட்டுள்ள தேவாலயத்தின் அடிப்படை கொள்கையும் அதிக ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. உங்கள் தேவாலயம் வழங்கும் தலைசிறந்த நற்பணி மனித நேயத்தை தொடர்ந்து ஒழுங்குபடுத்தி அறிவூட்டும் தலைசிறந்த நற்பணியை தொடர வேண்டும் என்று, மனதில் பிரார்த்தனையுடன், சைவ சமயத்தின் வலுவான தேவ தூதராக இருக்கும் குருதேவா உங்களுக்கும், அர்ப்பணிப்புடன் சுயநலமற்ற சேவையை செய்யும் சுவாமிகளின் குழு மற்றும் சைவ சித்தாந்த தேவாலயத்திற்கும் இருகரம் கூப்பி மரியாதை மற்றும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்!”§


**சர்ச் (தேவாலயம்) என்ற சொல்லை தற்காத்தல்**

1975 ஆம் ஆண்டு, அமெரிக்காவில் சமய அமைப்பின் சட்டப்பூர்வமான வடிவத்தின் முக்கியத்துவத்தை, பல ஆண்டுகளாக தான் மேற்கொண்ட ஆய்வால் உணர்ந்து இருந்த குருதேவா, தனது அமைப்பை சைவ சித்தாந்த தேவாலயம் என்று அதிகாரப்பூர்வமாக மாற்றினார். இந்த பெயர் பலருக்கு பிடிக்கவில்லை. இதற்கு பல தரப்புக்களில் இருந்து குறிப்பாக ஆசிய இந்துக்களிடம் இருந்து எதிர்ப்புக்கள் வந்தன. இந்து சமயம் விரோதியாக நினைத்த கத்தோலிக்க மற்றும் ஆங்கிலிக்க தேவாலயங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதை அவர்கள் விரும்பவில்லை. ஆனால் குருதேவா உறுதியாக இருந்து, தான் எடுத்த முடிவை பல வருடங்களுக்கு தற்காத்து வந்தார். §

இறுதியில் அவர் சரியென்று நிரூபிக்கப்பட்டார் என்றாலும் அது ஒரு சாதாரண போராட்டமாக இருக்கவில்லை. இந்த பிரச்சனையின் காரணமாக, சில அங்கத்தினர்கள் அவரை விட்டு விலகினர். ஆனால் அவரை விட்டு, புகைப்பதை நிறுத்த மறுத்தவர்கள் அல்லது வீட்டில் தங்கள் மனைவி தங்குவதை அல்லது குழந்தைகளை வளர்ப்பதை மறுத்தவர்கள் அல்லது அர்ப்பணிப்பிற்கு அவர் வழங்கிய ஏராளமான தேவைகளை மறுத்தவர்களும் விலகத் தான் செய்தார்கள். 1990களின் தொடக்கத்தில் அவர் இயற்றிய, *சைவ தர்ம சாஸ்திராஸ், தி புக் ஆஃப் டிஸ்சிப்ளின் ஆப் சைவ சித்தாந்த சர்ச்* என்ற புத்தகத்தில், குருதேவா பின்வரும் விளக்கத்தை வழங்குகிறார்:§

நமது இந்து தேவாலயத்தின் பெயர் சைவ சித்தாந்த தேவாலயம் ஆகும். “பரமனாக இருக்கும் சிவபெருமானின் வெளிப்படுத்தப்பட்ட முடிவான உண்மையின் புனிதமான சமாஜம்,” என்பது அதன் பொருள். இதில் இருக்கும் இரண்டு சமஸ்கிருத சொற்கள் மற்றும் ஒரு ஆங்கில சொல்லை, எங்களது சர்வதேச அடையாளமாக கருதுகிறோம். §

ஆங்கிலத்தில் எழுதும் போது அல்லது பேசும்போது, *சர்ச்* என்ற சொல்லுக்கு பதிலாக வேறு எந்த சொல்லையும் பயன்படுத்தக் கூடாது. அந்த சொல்லை உரையாடும் காரணத்திற்காக மற்ற மொழிகளில் மொழிப்பெயர்த்துக் கொள்ளலாம். பிரதான தேவாலயத்தின் விருப்பத்திற்கு ஏற்ப, அதை சமயப்பணி குழுக்களின் பதிவுகளைப் போன்ற சட்ட ஆவணங்களுக்கும் மொழிபெயர்க்கலாம். அத்தகைய மொழிப்பெயர்ப்புக்கள், எப்போதும் தேவாலயம் ஒப்புதல் வழங்கியது அதிகாரப்பூர்வமான சொற்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். அத்தகைய மொழிபெயர்ப்புக்களில், இந்த பகுதியில் இருக்கும் பாரம்பரிய தேவாலயங்களின் மாதிரியின் அடிப்படையில், பின்வரும் பொருளை மிகவும் வலுவாக தெரிவிக்கும் சொற்களை நாங்கள் தேர்வு செய்கிறோம்: ஒரு நம்பிக்கை கோட்பாட்டை பின்பற்றி, ஒரு மனதுடன் இருக்கும் பக்தர்களின் படிநிலை குழு, உறுதியான நடத்தை நெறிமுறைகளுடன், தீட்சை பெற்ற பூசாரி குழுவினர், ஆச்சாரியர்கள் மற்றும் சமய பரப்பாளர்கள், நன்றாக வரையறுக்கப்பட்ட சடங்குகள், சாஸ்திரத்தின் மீது பகிரப்பட்ட அதிகாரம் மற்றும் மற்ற தொடர்புகள் இல்லாமல் பிரத்யேக உறுப்பினராக இருத்தல். §



*1979 ஆம் ஆண்டு குருதேவா தொடங்கிய பத்திரிகை பின்னாளில்* இந்துயிசம் டுடே *என்று அழைக்கப்பட்டது. அந்த பத்திரிகையின் நோக்கம் தனது சமயப்பணியை ஊக்குவிப்பதற்காக அல்ல என்றும், உலகெங்கும் இருக்கும் இந்து சமூகங்களை இணைத்து தகவல்களை தெரிவிக்கவே தொடங்கப்பட்டுள்ளது என்று அவர் தனது துறவிகள் குழுவிடம் தெரிவித்தார். அவர் அதனை "கப்பலின் முன்பக்கத்துடன்" ஒப்பிட்டு பேசினார்.*

........................§

*சர்ச்* என்ற சொல் சில சமூகங்களில் நல்ல மரியாதை மற்றும் சக்தியை வெளிப்படுத்தும் என்றும், மற்ற சில சமூகங்களில் அது இழிவுபடுத்தப்பட்டு சிறுமைப்படுத்தப்படும் என்பது எங்களுக்கு தெரியும். தாங்கள் சார்ந்து இருப்பது உலகின் முதல் இந்து தேவாலயம் என்பதை அறிந்த எங்கள் உறுப்பினர்கள், சைவ சித்தாந்த சர்ச் (அல்லது அதை உலகின் பல மொழிகளில் பாரம்பரிய முறையில் சித்தரிக்கும் சமமான சொல்) என்று எல்லா சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தி, தேவைப்படும் போது அதன் பயன்பாட்டை ஆதரிக்கவும் செய்கின்றனர். நாங்கள் தேவாலயத்தின் நிறுவன அமைப்பை வலுவாக தக்க வைத்துக்கொண்டு இருக்கும் போது, நாங்கள் *வேதங்களில்* வெளிப்படுத்தப்பட்டுள்ளதை போல புனிதமான, பாரம்பரியம் சார்ந்த சனாதன தர்மத்தை அதிக பயனுள்ள வகையில் தெரிவிக்கிறோம் என்பதையும் வலியுறுத்த வேண்டும். உலகில் மிகவும் ஆச்சாரமான சமாஜங்களில் ஒன்றாக இருப்பதால், இந்த நிறுவன அமைப்பு கிறித்துவ அல்லது மேற்கத்திய சமய கருத்தை ஏற்றுக்கொள்வதாக அல்லது மறைமுகமாக குறிப்பிடுவதாக தவறான கருத்தை என்றுமே உருவாக்கக் கூடாது. §

கிரேக்க மொழியை அடிப்படையாக கொண்ட *சர்ச்* என்ற சொல் பொதுவாக ஒரு வழிபாட்டு இடம் என்று புரிந்துகொள்ளப்பட்டாலும், பல்வேறு நிலைகளில் நடவடிக்கைகளை கொண்ட ஒரு சமய பேரவை மற்றும் சங்கம் என்ற விரிவான பொருளையும் உள்ளடக்கியுள்ளது. தேவாலயம் மற்றும் அரசு தொடர்பான விவகாரங்கள் அதிகமாக கவனம் செலுத்தப்படும் சட்டம் மற்றும் அரசாங்க விவாதங்களில் *சர்ச்* ஒரு விசேஷ முக்கியத்துவத்தை பெறுகிறது. அதிகமான நாடுகளில், மத்திய மற்றும் மாநில அரசுகளில், மதம் தேவாலயமாக விளக்கப்பட்டு, தேவாலயம் மற்றும் அரசின் பிரிவினை மதிக்கப்பட்டு அரசியல் சாசனத்தில் அமல்படுத்தப்பட்டுள்ளது. தேவாலய கருத்துக்களின் அடிப்படையாக விளங்கும் அத்தகைய பாதுகாப்புகள், அனைத்து சமய குழுக்களின் உரிமைகளுக்கு மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றன. அரசாங்கத்திடம் இருந்தும், அரசியல் ஆதரவு குறைவாக இருக்கும் மதங்கள் மீது ஆதிக்கம் செலுத்த விரும்பும் மற்ற மதங்களிடம் இருந்து கிடைக்கும் பாதுகாப்பும் இவற்றில் அடங்கும். §

குருதேவா தனது சங்கத்தை நிர்வகிக்கும் முக்கியமான விதிகளை அமைப்பதில் தெளிவாக இருந்தார். முதல் விதி, சற்குரு மற்றும் அவரது மடவாசிகளிடம் முழு பொறுப்பும் இருக்கும்; தேவாலய நிர்வாகத்தில் எந்தவித குடும்ப தலையீட்டிற்கும் அனுமதி இல்லை. இரண்டாவது, குரு அல்லது துறவிகளின் சொந்தங்களுக்கு பிரத்யேக அனுமதி, சலுகை அல்லது நிர்வாகத்தில் பங்குபெற அனுமதி இல்லை. மூன்றாவது, தேவாலயம் தனது நிதி தேவைகளுக்கு வணிகங்களில் ஈடுபடாமல், தனக்கு வரும் நன்கொடைகளை சார்ந்து இருக்க வேண்டும். நான்காவது, அவரது மடவாசிகள் ஆண்கள் மட்டுமே வசிக்கும் மடங்களில் வாழ வேண்டும். §

### இலக்குமுறைக்கு மாறும் வெளியீட்டுப்பணி

1985 ஆம் ஆண்டு ஒரு நாள் மதிய நேரத்தில், குருதேவா வரலாற்று சிறப்புமிக்க காப்பா நகரத்தில் இருந்த ஒரு சிறிய கணினி கடைக்குள் நுழைந்தார். அவர் சிறிது நேரம் அதிநவீன மாக்கின்டோஷ் கணினியுடன் விளையாடிய பிறகு, அவர் தனக்காக ஒரு கணினியை வாங்கிக்கொண்டார். கணினிகள் மீது அவருக்கு அதிக ஈடுபாடு இருந்ததில்லை என்றாலும், இந்த கருவி மாறுபட்டு, பயனுள்ளதாகவும் பயன்படுத்த எளிதாகவும் இருந்தது. அவர் ஒரு வாரத்திற்கு அதில் சோதனை மேற்கொண்டு, அதில் அவர் ஒரு புதிய அம்சத்தை தெரிந்துகொண்டதும் துறவிகளை தனது அலுவலகத்திற்கு அழைத்து, அவர்களுக்கும் காண்பிப்பார். §


குரு மற்றும் அவரது சீடர்கள் அருகில் அமர்ந்துகொண்டு கணினியின் செயல்பாட்டை கற்றுக்கொண்டனர். அவர் அதில் மறைந்திருக்கும் ஆற்றலை புரிந்துக்கொண்டு, இந்த புதிய கருவிக்கு ஏற்ப தங்களது பல்வேறு சேவைகளை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவித்தி, தனது துறவிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு கணினியை ஆணையிட்டார். அவர்கள் குருதேவாவின் அறிவுறுத்தலை பின்பற்றினார்கள். அன்றிலிந்து சற்குருவிற்கு சந்தைக்கு வரும் புதிய, அதிவேகமான மற்றும் நேர்த்தியான மாக்கின்டோஷ் கிடைப்பதை அவர்கள் உறுதி செய்து கொண்டார்கள்; மேலும் ஆப்பிள் நிறுவனத்தின் முதல் பவர்புக் வெளியிடப்பட்ட போது, விமானத்தில் இருந்த சக பயணிகள் சந்நியாசியின் அழகான மடிக்கணினியை பொறாமையுடன் பார்த்துக்கொண்டு இருப்பார்கள். §

தர்மத்தின் பணியை செய்ய முழு வீச்சில் கணினி உலகை பயன்படுத்த ஆரம்பித்ததால், அது மாபெரும் விளைவுகளை ஏற்படுத்திய ஒரு முக்கிய முடிவாக விளங்கியது. இந்த புதிய தொழில்நுட்பத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ள, தனது துறவிகள் குழு 2,500 தேன்கூடுகளை விற்க வேண்டும் என்று அவர் முடிவு செய்தார். ஏனென்றால் இந்த இரண்டு பணிகளையும், ஆட்பலம் குறைவான அவரது சிறிய வெளியீட்டு குழு செய்துக்கொண்டு இருந்தது. இலங்கை மட்டக்களப்பில் தனது ஆண் சீடர்களுக்கு யோக சுவாமி தொடங்கிய விவசாய திட்டத்தை போல, துறவிகள் ஒரு விவசாய

அறக்கட்டளையாக கவாய் தீவு முழுவதிலும் பத்து வருடங்களுக்கு தேன்கூடுகளை நிர்வகித்து வந்தனர். §

இந்துயிசம் டுடே பத்திரிகையில் அவர் தனது ஆசிரியர் தலையங்கத்தில் எழுதிய கருத்துக்கள், மிகவும் முக்கியமான மற்றும் மக்களால் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட கடமைகளில் ஒன்றாக விளங்கியது. அது பல வருடங்களுக்கு மாதாந்திர பத்திரிகையாக இருந்தது. சீடர்கள், மாணவர்கள் மற்றும் உலகெங்கும் பரவியிருந்த அங்கத்தினர்களுடன் தான் மேற்கொண்ட தேவாலய பணிகளின் மூலம், தனது கவனத்தை பெற்ற விஷயங்களைப் பற்றி அவர் அடிக்கடி எழுதினார். §

1983 ஆம் ஆண்டு, கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது உலகெங்கும் பரவியிருந்த இந்துக்கள் சந்தித்த பிரச்சனைக்கு தற்செயலாக ஒரு தீர்வை தேடிப்பிடித்தார். அந்த சமயத்தில் இந்து குழந்தைகள் வருத்தத்தில் இருந்தனர், மற்றும் அவர்கள் பெற்றோர்கள் குழப்பத்தில் இருந்தனர். மேலும் வருடம் ஒருமுறை நடந்த இந்த சித்திரவதைக்கு, இந்து உலகில் இருந்து யாரும் ஒரு நல்ல தீர்வை வழங்கவில்லை. ஒரு ஆசிரியர் தலையங்கத்தில், பஞ்ச கணபதி என்ற பெயரில், அவர் ஒரு நவீன இந்து விடுமுறையை தொடங்கி வைத்தார். டிசம்பர் 21 முதல் 25 வரை, ஐந்து நாட்கள் நடைபெறும் இந்த வழிபாட்டின் போது, வாழ்த்து அட்டைகள் மற்றும் பரிசுகள் சொந்தங்கள் மற்றும் பந்தங்களுடன் பகிரப்பட்டு வீட்டில், நண்பர்களிடத்தில், பணியிடத்தில் மற்றும் சமூகத்தில் கொண்டும் வரும் இணக்கம் மற்றும் அந்த இணக்கத்தால் ஏற்படும் தீவிரமான சமயப்பற்று மற்றும் புனிதமான கலாச்சாரத்தை வரமாக வழங்கும், விநாயகரின் ஐந்து சக்திகள் மீது கவனம் செலுத்தப்படுகிறது. இனி குழந்தை மற்றும் பெற்றோர்களிடம், “எதற்காக கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு நமக்கு பரிசுகள் வருவதில்லை?” என்று கேட்கும் போது பெற்றோர்கள், “நமக்கும் வரும். ஆனால் ஒரு நாள் இல்லை, நாம் ஐந்து நாட்களுக்கு சொந்தங்கள் பந்தங்களுடன் பரிசுகளை பகிரலாம்,” என்று சொல்லலாம். இது பற்றி குருதேவா வழங்கும் குறிப்பு: §



*குருதேவா ஒவ்வொரு மாதமும் தனது இந்துயிசம் டுடே பத்திரிகையின் பதிப்பிக்கும் குழுவுடன் கலந்துரையாடுவார். அவர் ஒரு வெளியீட்டாளராக, அந்த பத்திரிகையின் உள்ளடக்கத்திற்கு வழிகாட்டி, அதன் குறிக்கோள்களை வரையறுத்து, கொள்கையை நிர்ணயித்து விநியோக யுத்திகளில் உதவி செய்தார்.*

……………………….§

“அப்பா, நாம் ஏன் கிறிஸ்துமஸ் கொண்டாடுவதில்லை?” இந்த கேள்வியை நாங்கள் சென்ற பல இந்துக்கள் வீடுகளில் கேட்டதால், பல சான்றோர்கள் மற்றும் பெரியோர்கள் ஒத்துழைப்புடன், கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு பதிலாக ஒன்று திட்டமிடப்பட்டது. ஆப்பிரிக்க-அமெரிக்க கருப்பர் சமுதாயம் 1966 ஆம் ஆண்டில் இருந்து, ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 26 முதல் ஜனவரி 1 வரை தங்கள் கலாச்சாரத்தை கௌரவிக்கும் வண்ணம் குவான்சா என்ற பண்டிகையை கொண்டாடுகின்றனர். நாம் உருவாக்கிய இந்த பஞ்ச கணபதி பண்டிகை, ஐந்து முகங்களை கொண்ட ஆனைமுக கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டது ஆகும். ஐந்து நாட்கள் நடைபெறும் இந்த பண்டிகையின் போது, குறிப்பாக குழந்தைகளுக்கு வீட்டில் அன்பளிப்புக்களும் இனிப்புக்களும் வழங்கப்படுகின்றன. மரத்தின்

தேவை இருப்பதில்லை (சுற்றுச்சூழல் வல்லுனர்கள் இதை ஆதரிக்கிறார்கள்), மலர் வளையங்கள் அல்லது ஒரு சாந்தாவின் தேவை இருப்பது இல்லை. அந்த ஐந்து நாட்களிலும் விநாயகர் மகிழ்ச்சி மற்றும் வேடிக்கையை வழங்குகிறார். §

இந்த பண்டிகையை வீட்டில் டிசம்பர் 21 முதல் 25 வரை கொண்டடியவர்கள், அதன் பிறகு ஒவ்வொரு வருடமும் கொண்டாடி வருகின்றனர். இந்த பண்டிகையின் போது வெளியூர் பயணம், சுற்றுலா மற்றும் விருந்துகளுடன் சொந்தங்கள், நண்பர்கள் மற்றும் அலுவலக நண்பர்களுடன் வாழ்த்து அட்டைகள் மற்றும் அன்பளிப்புக்கள் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் ஒரு தட்டில் இனிப்புக்கள், பழங்கள் மற்றும் தூபம் ஆகியவற்றை பெரும்பாலும், குழந்தைகளே தயார் செய்து விநாயகருக்கு படைக்கிறார்கள். அவரை புகழ்ந்து சுலோகங்கள், பாடல்கள் மற்றும் பஜன்கள் நடக்கின்றன. பூஜைக்கு பிறகு, இனிப்புக்கள் பிரசாதமாக வழங்கப்படுகின்றன. தினமும் குழந்தைகளுக்கு அன்பளிப்புக்கள் வழங்கப்படுகின்றன. ஐந்தாவது நாள் திறக்க வேண்டிய அந்த அன்பளிப்புக்களை, அவர்கள் பஞ்ச கணபதி முன்பாக வைக்கிறார்கள். பரிமாற்றிக் கொள்ளும் வாழ்ந்து அட்டைகளில், எப்போதும் இந்து ஞானம் அல்லது சாஸ்திரத்தில் இருந்து ஒரு செய்யுள் குறிப்பிடப்பட்டு இருக்கும்.§

பலரை சென்றடைய அவர் மேற்கொண்ட முயற்சியின் மையமாக *இந்துயிசம் டுடே* வளர்ச்சி பெற்ற போது, பெரும்பாலும் மெதுவாக பேசப்பட்ட பிரச்சனைகளை தனது தலையங்கத்தில் குருதேவா கவனம் செலுத்தினார், மற்றும் வாழ்க்கை துணையின் சித்ரவதை, தற்கொலை, கூடா ஒழுக்கம், ஆபாச படங்கள், கலப்புத் திருமணங்கள், உடல் உறுப்பு மாற்றுதல் மற்றும் மனித குளோனிங் போன்ற விஷயங்களை தார்மீக முறையில் எதிர்கொள்ள நவீன இந்துவிற்கு வழிகாட்ட தனது இதழை பயன்படுத்திக் கொண்டார். அவர் மனித குளோனிங் பற்றி தனது பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் காரணமாக, அந்த பிரச்சனைக்கு தங்கள் எதிர்ப்பை தெரிவித்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, மனித குளோனிங் பற்றிய இந்து கண்ணோட்டத்தை தெரிவிக்க வேண்டும் என்று அதிபர் கிளின்டனின் ப்ளூ ரிப்பன் கமிட்டி குருதேவாவிற்கு அழைப்பு விடுத்தது. பல வருடங்கள் கழித்து, தங்களது இந்து நோயாளிகள் மீது அமெரிக்க மருத்துவர்கள் முறையாக கவனம் செலுத்துவதற்கு வழிகாட்டியாக, தங்களது புத்தகத்தில் மருத்துவ நெறிமுறைகளை குறிப்பிட்டு ஒரு அத்தியாயம் எழுத வேண்டும் என்று டெக்சாஸ் மெடிகல் அசோசியேஷன் அந்த பத்திரிகையிடம் கேட்டுக்கொண்டது. §

இந்து சமயம் பற்றி கிறித்துவர்களுக்கு தெரிவிக்க, ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்று தங்கள் பத்திரிகை ஆசிரியர்களை *கிறிஸ்டியானிடி டுடே* ஆசிரியர் அணுகிய போது, குருதேவா பெருமகிழ்ச்சி அடைந்தார். தங்களது மதங்களை பற்றி நன்றாக புரிந்துகொள்ள *கிறிஸ்டியானிடி டுடே* பத்திரிகை

*இந்துயிசம் டுடே* பத்திரிகையுடன் இணைந்து செயல்படுவதை அவர் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. அந்த கட்டுரை எழுதப்பட்ட போது, அவர் தனது நுணுக்கமான வழிகாட்டலை வழங்கினார். அவர் அந்த கட்டுரைக்கு மட்டுமல்லாமல், பெரும்பாலும் ஒவ்வொரு கட்டுரை எழுதப்படும் போதும், தனது துறவிகளுடன் அடிக்கடி விரிவான விவாதங்களை நடத்தி வந்தார். §

1996 ஆம் ஆண்டின் இறுதியில், அவர் ஒரு செய்தித்தாள் வடிவில் இருந்த இந்துயிசம் டுடே பத்திரிகையை மாத இதழாக மாற்றினார். அது உலகின் மூலை முடுக்குகளை சென்றடைந்து, இந்து சமூகங்கள் மீது வலுவான தாக்கத்தை ஏற்படுத்த அவர் மேற்கொண்ட பணியில் ஒரு மாபெரும் முன்னேற்றமாக இருந்தது. இந்த விசேஷமான இதழ் தொடங்கப்பட்ட குறிக்கோளை பற்றி, 1999 ஆம் ஆண்டு அவர் வழங்கிய விளக்கம்:§

> ஒவ்வொருவருக்கும் உதவி செய்வதற்கு, ஒவ்வொரு பிரிவிற்கும் ஆதரவு தெரிவிப்பதற்கு ஒரு இதழை தொடங்கவேண்டும் என்று யார் சிந்திப்பார்கள்? இது நாங்கள் வழங்கும் சமூக சேவை என்று மக்கள் உணரும் வரை, இது நீண்டகாலமாக பலருக்கு ஒரு மர்மமாகவே இருந்துள்ளது. தாங்கள் லௌகீக உலகில் இருந்து தனித்து வாழ அனுமதி வழங்கப்பட்டதற்கு பரோபகாரமாக பல மடங்கள் ஏழை, அனாதைகள், பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு உணவு வழங்கும் மையங்களை தொடங்கியுள்ளனர். 21 ஆம் நூற்றாண்டில் தைரியமாக அடியெடுத்து வைக்கும் போது, எங்களது இந்துயிசம் டுடே ஒரு அத்தியாவசிய சேவையாக விளங்குகிறது. §

Page 42: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/43_guru07_01.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயமும் இருபத்தி-எட்டு

# காலத்தைக் கடந்த மரபுரிமைச் செல்வம்

1987 வருடத்து வசந்த காலத்தில் இறைவன் கோயில் பற்றிய குருதேவாவின் கற்பனை, சூட்சும வெளிப்பாட்டில் இருந்து யதார்த்தமான உலகின் திட்டமாக மாறியது. அவர் தென் இந்தியாவின் புனிதமான கட்டிட கலைஞர்களுடன் செயல்பட்டு, அவர் அதன் தூல வடிவத்தை வரையறுத்து, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தென் இந்தியாவில் சோழ சாம்ராஜ்யத்தில் கற்களால் உருவாக்கப்பட்ட மாபெரும் கட்டிடங்களின் பாணியை கவனத்தில் கொண்டு, அதன் படைப்பின் கொள்கைகளை நிறுவிக்கொண்டு இருந்தார். ஆனால் ஒரு பெரிய கேள்விக்கு விடை கிடைக்காமல் இருந்தது. சிவபெருமானின் எந்த வடிவம் கருவறையில் இருக்க வேண்டும்? அந்த முடிவின் முக்கியத்துவத்தை அவர் அறிந்து இருந்ததால், அதன் மீது பல மாதங்களுக்கு தொடர்ந்து தியானம் செய்துக்கொண்டு இருந்தார். அது வெளிப்புற தோற்றத்தை காட்டிலும் கோயிலைப் பற்றி அதிகமாக விவரிக்கும் தன்மையுடையது. அது மற்ற அனைத்திற்கும் மையமாக இருந்து, அதன் உயிர் மற்றும் சாரமாக, மிகவும் புனிதமான மற்றும் ஆற்றல்மிக்க சக்தியாக விளங்கும்.§


**ஒரு தெள்ளத் தெளிவான காட்சி**

குருதேவா ஒரு நாள் அதிகாலையில் தனது அறையில் எதிர்காலத்தை கண்டதாக குறிப்பிட்டார். நீங்கள் எதை செய்யவேண்டும் என்று தெரிந்துகொள்ள விரும்பினால், உங்கள் மனதில் எதிர்காலத்திற்குள் பயணம் செய்து, என்ன நடந்தது என்று திரும்பிப் பார்த்தால், உங்களுக்கு நிகழ்காலத்தில் எடுக்கவேண்டிய முடிவு தெளிவாக தெரியும் என்று அவர் அடிக்கடி குறிப்பிடுவார். §

குருதேவா கண்ட வருங்கால காட்சியில், ‘இறைவன்’ கோயிலின் கருவறையில் இருந்து ஒரு மாபெரும் படிக சிவலிங்கம் பிரகாசமாக ஒளி வீசி, அதன் பிரகாசம் உலகெங்கும் பரவுவதை கண்டார். அது படிகங்களில் பேராற்றல் படைத்த படிகமாக இருந்தது. அதை முதலில் பார்த்த போது அளவில் மிகவும் பெரியதாக, அற்புதமானதாக, யதார்த்தத்தை கடந்ததாக இருந்தது. அது சிவலிங்கத்தின் தூல வடிவமாக இல்லாமல் ஆன்மீக வடிவமாக இருக்கலாம் என்று அவர் நினைத்தார். §

அவர் சில மணிநேரங்கள் கழித்து கீழே இறங்கி வந்து, துறவிகளிடம் தான் கண்ட காட்சியை பகிர்ந்து, ‘இறைவன்’ கோயிலில் சிவபெருமான் எந்த ரூபத்தில் இருக்க வேண்டும் என்பதற்கு தனக்கு பதில் கிடைத்து விட்டதாக தெரிவித்தார். அது ஒரு படிக லிங்கமாக இருக்கும் என்று அவர் கூறினார். அது சமஸ்கிருதத்தில் *ஸ்படிக* சிவலிங்கம் என்று அழைக்கப்படுகிறது. பிரபஞ்சத்தை படைத்து-காத்து-அழிப்பவரின் அருவுருவமாக இருக்கும் லிங்கம், உருவ வழிபாட்டில் தலை சிறந்து விளங்குவதாக பழங்கால நூல்கள் குறிப்பிடுகின்றன. அது உருவமைப்பு, வடிவம் மற்றும் கற்பனையை கடந்த பரமாத்துமாவை குறிப்பிடுகிறது. அது காலம், வடிவம், பரவெளி மற்றும் காரணத்தை கடந்து, ஒட்டுமொத்த பரமாத்துமாவாக இருக்கிறது. §

மண் அல்லது மணல், மாட்டு சாணம் அல்லது மரம், வெண்கலம் அல்லது கருங்கல்லில் உருவாக்கப்பட்டு, லிங்க வடிவில் இருக்கும் சிவபெருமானை வழிபடலாம் என்று *ஆகமங்கள்* கூறுகின்றன. ஆனால் மனிதனால் செதுக்கப்படாமல் நூறு, ஆயிரம் அல்லது லட்சக்கணக்கான வருடங்களில் உடலைப் போல வளர்ந்தாலும், ஒவ்வோரு அணுவாக சேகரிக்கப்பட்டு மிகவும் மெதுவாக வளர்ந்து ஒரு இயற்கையான கல்லாக உருவாகும், பளிங்கு படிகம் பலரால் நாடப்படும் வடிவமாக இருக்கிறது. அத்தகைய ஒரு அற்புதமான இயற்கையின் படைப்பே வழிபடுவதற்கு தகுதி உடையதாக இருக்கிறது. §



ஒரு நாள் அதிகாலையில் குருதேவா கண்ட கனவில் தோன்றிய ஒரு நிறைவான படிக சிவலிங்கம், அவரை ஆறு பக்கங்கள் ஒரு கூர் முனையுடன் இருந்த மிகப்பெரிய ஸ்படிகத்திற்கு வழிநடத்தி சென்றது. இறைவனை பற்றி

*அவர் கண்ட காட்சி தோன்றிய 1975 ஆம் ஆண்டில், அந்த ஸ்படிகம் சுரங்கத் தொழிலாளிகளால் தோண்டி எடுக்கப்பட்டு, 1987 ஆம் ஆண்டு கவாய் வந்து சேர்ந்தது.*

……………………§

தங்கள் குரு வெளிப்படுத்திய தகவல் துறவிகளுக்கு மகிழ்ச்சியை வழங்கியது, மற்றும் அவர்கள் அதன் பொருளை கற்பனை செய்து பார்த்தார்கள். பிரபஞ்சத்தில் ஒவ்வொரு அணுவையும் உருவாக்கி அதில் வாசம் செய்யும் நடனத்தின் அரசனாக நடராஜர் வடிவில் 'கடவுள்' கோயிலில் ஏற்கனவே சிவபெருமான் குடியிருந்தார் மற்றும் தற்போது 'இறைவன்' கோயில் யாவும் கடந்த நிலையில், உள்ளார்ந்து மற்றும் ஆழ்நிலையில், அருவுருவமாக இருக்கும் சிவபெருமானை வரவேற்கவிருந்தது நல்லதொரு பொருத்தமாக தோன்றியது. ஆனால் அதற்கு அடுத்து நிகழவிருந்த சம்பவத்திற்கு துறவிகள் தயாராக இல்லை. §

அதற்கு அடுத்த நாள் குருதேவா கவாய் கிலோஹானாவில் இருந்த கிரிஸ்டல் ஜர்நி ஷாப்புக்கு சென்றார். அவர் அங்கிருந்த மண்பாண்ட பொருட்களை பார்த்துக் கொண்டு, தனது காட்சியில் தோன்றிய ஒரு பெரிய படிகத்தை பற்றி அந்த கடைக்கு உரிமையாளராக இருந்த ஒரு பெண்ணிடம் பேச ஆரம்பித்தார். அவள் தன்னிடம் அதைப்போன்ற ஒரு படிகம் இல்லை என்று கூறினாலும், அவர் கூறியதைப் போன்ற ஒரு பெரிய படிகத்தை தானும் ஒரு காட்சியில் கண்டதாக கூறினாள். §

சில வாரங்கள் கழித்து, அவள் மதிய நேரத்தில் மடத்திற்கு வந்து, குருதேவாவை சந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். புராணக்கதைகளில் வரும் தேவதைகளைப் போல காட்சியளித்த அவள், 70 களில் பிறந்து, சுமார் 40 வயது நிரம்பிய ஒரு புத்திசாலி பெண்ணாக இருந்தாள். ரோமா போன்று இருந்த நீளமான உடையில், சந்தோஷத்தால் சிவந்த கண்ணங்களுடன், தான் அவருக்கு ஒரு முக்கியமான செய்தி கொண்டு வந்திருப்பதாக தெரிவித்தாள். அவள் குருதேவாவின் அலுவலகத்திற்கு அழைத்து செல்லப்பட்டாள். அங்கே அவள் குருதேவாவிடம், "குருதேவா, நான் நேற்று இரவு ஒரு கனவு கண்டேன். அந்த கனவில் முன்பை விட தெளிவாக ஒரு மிகப்பெரிய படிகத்தை கண்டேன். அது நீங்கள் விளக்கியதைப் போலவே உயரமாக நிறைவாக வடிவமைக்கப்பட்டு இருந்தது. அது மட்டும் இல்லை, அது எங்கே இருக்கிறது என்பதையும் நான் தெரிந்துகொண்டேன். நீங்கள் எனக்கு அனுமதி வழங்கினால், நான் அங்கே செல்ல விரும்புகிறேன். நான் அந்த படிகத்தை தேடிப்பிடித்து, அதை உங்களுக்கு கொண்டுவந்து தர விரும்புகிறேன். நீங்கள் அதற்கான பயணச் செலவை ஏற்றுக்கொள்வீர்களா?" என்று கேட்டாள். §

கனவினால் தூண்டப்பட்ட ஒரு பணியில், ஒரு பரிச்சயமில்லாத நபருக்கு குருதேவா எப்போதும் பயணச் செலவை ஏற்றது இல்லை. ஆனால் இந்த பணி அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. குருதேவா அன்று காலையில் தானும் கண்ட மிகப்பெரிய படிகத்தை பற்றி தனது விருந்தாளியிடம்

தெரிவித்தார், ஆனால் கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் தான் கண்ட கனவு இன்னொருவருக்கும் தோன்றும் என்று அவர் நினைத்து பார்க்கவில்லை. அது அவருக்கு ஒரு நல்ல அறிகுறியாக தோன்றியது, மற்றும் அவர் எல்லோரும் வியக்கும் விதமாக, அவளுக்கு இயற்கை அழகு நிரம்பிய மாநிலமான ஆர்கன்சாசுக்கு இரு வழி பயணச்சீட்டை வாங்கித் தந்தார். §

அவள் விரைவில் படிக வேட்டையில் கிளம்பினாள். அவள் அதற்கு முன்பு ஆர்கன்சாஸ் சென்றிருக்கவில்லை என்பதால், அவள் வேறு வழியில்லாமல் அந்த பகுதியில் இருந்த பல்வேறு சுரங்கங்களுக்கு சென்று விசாரிக்க ஆரம்பித்தாள். பிரேசில் மட்டும் இல்லாமல், ஆர்கன்சாசும் உலகின் அதிக செழிப்பான படிக மூலமாக விளங்குகிறது. நீளமான செப்பனிடப்படாத பாதைகளின் முடிவில் தேடிப்பிடிப்பதற்கு பல டஜன் கணக்கான சுரங்கங்கள் இருந்தன. §

அவள் இறுதியாக தான் தேடிய படிவத்தை ஜேம்ஸ் கோல்மனின் சுரங்கங்களில் தேடிப்பிடித்தாள். அவர் தடித்த கைகள் மற்றும் அசுத்தமான தாடியுடன் டெனிம் உடை அணிந்த ஒரு கடின உழைப்பாளியாக இருந்தார். சுமார் இரண்டு தலைமுறையாக அவரது குடும்பம் சுரங்கங்களில் படிகங்களை தோண்டும் பணியில் ஈடுபட்டு இருந்ததால், அவருக்கு அந்த பணியில் நல்ல அனுபவ அறிவு இருந்தது. §

அதிகம் பேசாத அந்த சுரங்க தொழிலாளி மெதுவாக தனது ஜீப் வரை சென்று, அதில் ஏறிக்கொள்ளுமாறு அவளுக்கு கை அசைத்தான். ஒரு பழைய மரக்கிடங்குடன் முடிவடைந்து, சிலருக்கு ஒரு பாதையாக தென்பட்ட, அந்த குழிகள் நிரம்பிய பவளப்பாதையில் அவர்கள் சுமார் ஒரு மைல் தூரத்திற்கு பயணம் செய்தார்கள். அவன் கோல்மன் வண்டியில் இருந்து இறங்கி, சிறகுக்கதவு வழியாக நடந்து, திறந்தவெளியின் பின்புறத்திற்கு சென்று, ஒரு இருண்ட மூலையில் இருந்த ஒரு மேடைக்கு முன்பாக சென்று நின்றான். அதன் மீது ஒரு பூஞ்சைக்காளான் பிடித்த மெத்தை, கிழிந்து பயனற்ற நிலையில், நன்றாக சுறுட்டபட்டு ஒரு சணல் கயிற்றால் கட்டப்பட்டு இருந்தது. §

கோல்மன் அதிகம் எதுவும் பேசாமல், ஒரு சிறிய கத்தியை கொண்டு அந்த கயிற்றை அறுத்து, அந்த மெத்தையை திறந்து காண்பித்தார். அங்கே ஒரு மிகப்பெரிய அளவில், பாலைப் போல வெள்ளை நிறத்தில் ஒரு பளிங்கு படிகம் இருந்தது. அந்த அற்புதமான படிகம், ஒரு கலை அருங்காட்சியகத்தில் வைக்கக்கூடிய ஒரு கலைப்பொருளாக அல்லது ஒரு செல்வந்தரின் மாளிகையில் நுழைவாயிலில் காட்சிப்பொருளாக இருப்பதற்கு ஒரு பொருத்தமான பொருளாக இருந்தது. ஆனால் அது அங்கே அந்த மேடையின் மீது வைக்கப்பட்டு இருந்தது. §

அந்த படிகத்தைப் பற்றிய கதையை சொல்ல வேண்டிய நேரம் வந்த போது, அவரிடம் இருந்த வழக்கமான தயக்கம் மறைந்தது. கோல்மன் அந்த பெண்ணை நோக்கி திரும்பியபோது, அவளது கன்னங்களில் ஆனந்த கண்ணீர் வடிந்துக்கொண்டு இருந்தது. §

1975 ஆம் ஆண்டு என் சகோதரனும் நானும் படிகங்களைத் தேடி தோண்டிக்கொண்டு இருந்தோம். இந்த குன்றுகளின் கீழே நிரம்பியிருந்த குகைகளில் எங்கள் பாறைகளை ஒன்றாக பாதுகாத்து வருகிறோம். நாங்கள் அன்று 65 அடி ஆழத்தில் இருந்த போது, ஒரு புதிய குகைக்குள் நுழைந்தோம். இருபது அடி அகலம் மற்றும் ஐந்து அடி உயரத்துடன், இருள் சூழ்ந்து ஈரம் கசிந்து இருந்த அந்த குகையை முதலில் பார்த்த போது எதுவும் விநோதமாக தென்படவில்லை. ஆனால் சிறிது நேரம் கழித்து, என் மின்விளக்கின் வெளிச்சம் அந்த படிகத்தின் மீது பட்டது. அது குகையின் தரையில் இருந்து உடைந்து, ஒருபுறமாக சாய்ந்து, கீழே விழுந்து இருந்தது. அதனை சுற்றி மூன்று பக்கங்களிலும் இருந்த சுமார் பத்து சிறிய படிகங்களின் குழு உடையாமல் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வந்தன. ஆனால் இந்த படிகத்தின் வளர்ச்சி நின்று இருந்தது. இது கூர்முனையுடன் ஆறு பக்கங்களுடன இருப்பதை நீங்கள் பார்க்கலாம். மேலும் அதன் மேல்பரப்பு நாள் முழுவதும் குளிர்ச்சியான பனிக்கட்டி போன்ற ஒரு உணர்வை வழங்குகிறது. நாங்கள் ஒரு மெத்தையை கொண்டு வந்து, அதை அந்த பதிகத்தின் மீது சுற்றி, மிகவும் மெதுவாக மேற்பரப்பிற்கு கொண்டு வரும் போது, சூரியன் மறைத்துக்கொண்டு இருந்தது. §

அது நாங்கள் இருவரும் மேற்கொண்ட ஒரு அற்புதமான கண்டுபிடிப்பாக விளங்கியது. எங்கள் குடும்பம் மூன்று தலைமுறையாக சுரங்கத்தில் இருந்து படிகத்தை தோண்டி எடுத்து இருந்தாலும், யாரும் இதைப்போன்ற ஒரு தலைசிறந்த பொக்கிஷத்தை அடைந்தது இல்லை. அது விசேஷமானது என்பதை நானும் என் சகோதரனும் புரிந்துகொண்டோம். அதற்கு என்று ஒரு எதிர்காலம் இருப்பதை எங்களால் உணர முடிந்தாலும், அது என்னவாக இருக்கும் என்பதை எங்களால் அறிய முடியவில்லை. ஒரு வினோதமான படிகம். இதைப்பற்றி யாரிடமும் சொல்லக்கூடாது என்று எங்களுக்குள் பேசிக்கொண்டு, அதை அந்த மெத்தையிலேயே வைத்து, இங்கே கொண்டு வந்தோம். ஆனால் அது உங்கள் கனவில் தோன்றியுள்ளது. அதைப்பற்றி தெரிந்துக்கொள்ள வேறு எந்த வழியும் இல்லை. இந்த படிகத்தின் எதிர்காலம் என்னவென்று எங்களுக்கு ஒரு நாள் தெரியவரும் என்பதை நாங்கள் புரிந்துகொண்டோம். இது உங்களுடன் ஹவாய்க்கு சென்று, இதை கனவில் கண்ட அந்த தெய்வீக புருஷருடன் இருக்கவேண்டும் என்பது இதன் விதி என்று எனக்கு தோன்றுகிறது. இந்த படிகம் நீண்டநாட்களாக காத்துக்கொண்டு இருக்கிறது. இதை பெறுவதற்கு நீங்கள் இங்கே வந்தது, எனக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது. §

அந்த படிகத்தை நாடி வந்தவள் உற்சாகம் அடைந்து, இதைப்பற்றி குருதேவாவிடம் தெரிவித்தாள், அவர் அதன் புகைப்படங்களை அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். அவர் அதை பார்த்ததும், “ஆமாம், நான் இதைத்தான் குறிப்பிட்டேன்!” என்றார். அவள் அந்த படிகத்தை விலை கொடுத்து வாங்கி, அதை ஒரு பெட்டில் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு, அவள் தன் சொந்த நாட்டிற்கு புறப்பட்டாள். 700 பவுண்ட் எடையுடன், 39 அங்குல உயரத்துடன் இருந்த *ஸ்படிக* சிவலிங்கம் மடத்திற்கு ஆகஸ்ட் 14 ஆம் தேதி வந்து சேர்ந்தது

மற்றும் அது இரண்டு நாட்கள் கழிந்து ‘கடவுள்’ நடராஜருக்கு முன்பு ஸ்தாபனம் செய்யப்பட்டு, ‘இறைவன்’ கோயில் தொடங்குவதற்காக காத்து இருந்தது. குருதேவா அதிகாலையில் கண்ட கனவு அற்புதமான முறையில் வெளிப்பட்டு இருந்தது. §

பல வருடங்கள் கழித்து, ஒரு நாள் பிற்பகல் நேரத்தில், குருதேவா அடிக்கடி தொடர்பு கொண்ட தேவர் தான் வந்திருப்பதாக தகவல் தெரிவித்து, கேள்விகள் ஏதேனும் இருந்தால் கேட்கலாம் என்று கூறினார். குருதேவாவுடன் இருந்த ஒரு துறவி, அந்த மிகப்பெரிய படிகத்தின் முக்கியத்துவத்தை பற்றி கேட்டார். ஒரு நண்பன் பேசுவதை சாதாரண மக்கள் கேட்பதைப் போல, குருதேவா தனது கட்புலனுக்கு அப்பாற்பட்ட சக்தியால் அந்தர்லோகத்தின் தேவர் அளித்த பதிலை கேட்டு, அன்று படியெடுக்கும் பணியில் இருந்தவரிடம், இரண்டு மற்றும் மூன்று வார்த்தை கணைகளாக, அதை அறிவுறுத்த ஆரம்பித்தார். §

இப்போது நம்மிடம் இருக்கும் மாபெரும் படிகம் பூமியில் அமைதி, இணக்கம், திருப்தி, குணப்படுத்தும் தன்மை மற்றும் பொறுமை, சுதந்திரம் மற்றும் நல்லிணக்கம் மற்றும் இந்த கிரகத்தில் மனிதர்கள் மற்றும் எல்லா உயிரினங்களுக்கும் இடையே ஒரு நெருக்கமான ஒற்றுமையை உருவாக்கும் ஒரு அஞ்சல் நிலையமாக செயல்பட்டு, அதன் திட்டப்பணிக்கு பிரத்யேகமாக தயார் செய்யப்பட்ட, மிகவும் விசேஷமான படிகம் ஆகும். இது தற்போது இந்த கிரகத்தில் இருக்கும் ஒவ்வொரு படிகம் வழியாகவும் ட்ரில்லியன் கணக்கான தகவல்களை அஞ்சல் செய்து, மிகவும் சிறிய பூச்சிகளுக்கும் புத்துயிர் அளித்து அறிவுறுத்திக்கொண்டு இருக்கிறது. §




*1988 ஆம் ஆண்டில் ஐந்து நாட்களுக்கு ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தில் தலாய் லாமா, கேன்டர்பரி ஆர்ச்பிஷப், கார்டினல் கோனிக் மற்றும் பல்வேறு மதத்தலைவர்களுடன் உயர் பதவியில் இருந்த அரசியல்வாதிகள், ஊடகம் மற்றும் விஞ்ஞானிகள் பங்குபெற்ற ஒரு மாநாட்டில், குருதேவா ஆன்மீக மற்றும் அரசியல் தலைவர்களை சந்தித்து, இந்து சமயத்தின் விரிவான சகிப்புத்தன்மை பற்றிய தகவலை வழங்கினார்.*

........................§

## அமைதி மற்றும் நீடித்த மனித வாழ்க்கைக்கு நடத்திய போராட்டம்

உலகில் குருதேவாவின் புகழ் சீராக வளர்ந்தது. 1986 ஆம் ஆண்டு, இந்து சமய மறுமலர்ச்சிக்கு அவர் மேற்கொண்ட சர்வதேச முயற்சிகளை ஊக்குவிக்கும் வண்ணம், புது தில்லியில் நடைபெற்ற உலக மதங்களின் மாநாடு, நவீன யுகத்தின் ஐந்து *ஜகதாச்சாரியார்களில்* (உலகின் ஆசிரியர்கள்) ஒருவராக அவருக்கு பட்டம் சூட்டி கௌரவித்தது. அந்த பட்டம் மற்றும் அதனுடன் வந்த சில தகவல்கள், கிழக்கில் குருதேவாவிற்கு அங்கீகாரம் கிடைப்பதை தெளிவுபடுத்தியது. உண்மையில் அந்த கௌரவத்தின் மூலம், அவர் மிகவும் உயர்வான ஆன்மீக பதவியான, சற்குருவாக கருதப்படும் முதல் மேற்கு நாட்டவர் என்ற பெருமையை பெற்றார். அந்த பதவி இந்தியாவை சேர்ந்தவர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வந்தது. அது ஒரு கௌரவமாக இருந்தாலும், அவர் மிகவும் முக்கியமாக அந்த பொறுப்பிற்கு அதிக மதிப்பை வழங்கினார். ஒரு குருவின் பாதங்களை தொட்டு வணங்க வேண்டியிருக்கும் என்பதால், இந்தியர்களில் ஒரு

ஆச்சாரமான குழு இந்தியாவை சாராத ஒருவர் ஒரு குருவாக வளர்ச்சி அடைவதை என்றுமே ஏற்றுக்கொள்ளாது என்பதால், அதில் நேர்மறை அம்சங்களும் எதிர்மறை அம்சங்களும் இருந்தன. அவர்கள் விலகி நின்று, கூர்ந்து கவனித்து வந்தனர். §

குருதேவா பெரும்பாலான மாநாடுகளுக்கு அழைக்கப்பட்டாலும், அவர் அவற்றில் மிகவும் அபூர்வமாக கலந்து கொண்டார். நீடித்த மனித வாழ்க்கை பற்றி ஆன்மீக மற்றும் பாராளுமன்ற தலைவர்கள் இடையே ஆக்ஸ்போர்டு (1988), மாஸ்கோ (1990) மற்றும் ரியோ டி ஜெனிரோவில் (1992) நடைபெற்ற சர்வதேச கருத்தரங்குகள், சிகாகோவில் (1993) நடைபெற்ற உலக சமயங்களின் மாநாடு மற்றும் ஐக்கிய நாடுகளில் (2000) நடைப்பெற்ற சமய மற்றும் ஆன்மீக தலைவர்களின் மில்லினியம் உலக அமைதி மாநாடு என்று அவருக்கு குறிப்பிட்ட சில மாநாடுகளே முக்கியமானதாக தோன்றின. §

தனது மரணத்தை எதிர்கொள்வதே மனிதனுக்கு கடினமாக இருக்கும் போது, மனித இனமே நிரந்தரமாக அழியும் அபாயத்தில் இருப்பதை கற்பனை செய்து பாருங்கள். இத்தகைய ஒரு நிலைமையை பற்றி பேசுவதற்காக, 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 முதல் 15 வரை, இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழத்தில் அறுபது நாடுகளில் இருந்து அதிக செல்வாக்குள்ள சுமார் 140 ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டார்கள். வானியற்பியல் நிபுணராக இருந்த Dr. கார்ல் சாகன், உயிரியல் அறிஞராக இருந்த Dr. ஜேம்ஸ் லவ்லாக், சோவியத் நாட்டு விஞ்ஞானியாக இருந்த Dr. எவ்கெனி வெலிகோவ் மற்றும் மக்கள் தொகை, ஊடகம் மற்றும் கல்வித்துறையை சேர்ந்த மற்ற தலைசிறந்த வல்லுனர்கள் அச்சுறுத்தல்கள் பற்றிய கருத்துக்களை தொடர்ச்சியாக வழங்கினார்கள். பூமியும் அதில் சிறிய சுமையாக இருக்கும் உயிரினங்களும் ஆபத்தில் இருப்பதையும், விரைவில் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால், ஒவ்வொரு வருடமும் அழிந்துக்கொண்டு இருக்கும் பல ஆயிரக்கணக்கான  உயிரினங்களை போல, மனிதனும் அழிந்து விடுவான் என்கிற பயங்கரமான தகவலுக்கு மனித இனம் விழிப்புணர்வை பெற்று இருந்தது. §

ஐரோப்பிய இடைக்காலத்திற்கு பிறகு, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆன்மீக தலைவர்களின் ஒரு உயர்மட்டக்குழுவின் சந்திப்பு நடக்கவில்லை. அந்த காலத்தில் நடைபெற்ற சந்திப்பு ஐரோப்பிய அரசியல் அறிஞர்கள் மற்றும் கிறுத்துவ தலைவர்களுக்கு இடையே நடைபெற்றது. 1988 ஆம் ஆண்டு நடைப்பெற்ற சர்வதேச கருத்தரங்கு இந்து மதம், பௌத்த மதம், கிறுத்துவம், இசுலாம் மற்றும் யூத மதம் என்று ஐந்து முக்கிய மதங்களுடன் ஆப்பிரிக்க மற்றும் அமெரிக்க இந்திய மதங்கள், சமணம், சீக்கிய மதம் மற்றும் ஷின்டோயிசத்தை சேர்ந்த பிரதிநிதிகளை ஒன்று சேர்த்தது. §

நம்மை அச்சுறுத்தும் பிரச்சனைகள் என்ன? ஒரு குறிப்பிட்ட வரிசையில் இல்லாவிட்டாலும் போர், பசி, ஏழ்மை மற்றும் வளங்களில் ஏற்றத்தாழ்வு, கடன், பாலைநிலமாதல், படிப்பறிவின்மை,  மக்கள்தொகை பெருக்கம், சமய அடிப்படைவாதம், பூமி வெப்பமாதல், உயிரின வாழ்க்கைச் சூழலியலின்

சிதைவு, இனங்களின் அழிவு மற்றும் சமூக அநீதி ஆகியவை நம்மை அச்சுறுத்தும் பிரச்சனைகள் ஆகும். §

ஐந்து நாட்கள் நடைபெற்ற அந்த மாநாடு தொடங்கியதும், “நாம் இங்கே சிக்கலில் இருந்து விடுபடுவதற்கு வழிகளை தேடும் நோக்கத்துடன் கூடியுள்ளோம். நாம் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து வாழலாம் அல்லது ஒன்றாக சேர்ந்து மடியலாம். இதில் நம்மால் ஒன்றை மட்டுமே தேர்வு செய்ய முடியும், ” என்று ஆஸ்திரிய நாட்டை சேர்ந்த கார்டினல் கோனிக் பேசிய அவசரத் தேவையை கூடியிருந்த பிரதிநிதிகள் பகிர்ந்துகொண்டது தெளிவாக தெரிந்தது. இதனுடன் கேன்டர்பரியின் ஆர்ச்பிஷப்பாக இருந்த ராபர்ட் ரன்சி, “நீடித்து வாழ்வதற்கு மரியாதை மற்றும் கூட்டுறவு என்று இரண்டு பண்புகள் உள்ளன. நாம் நமது ஆன்மீக இறுமாப்பை கட்டுப்படுத்த வேண்டும். இந்த பிரபஞ்சத்தில் மனித உயிரைத் தவிர மற்ற அனைத்தும் அற்பமானது என்று உதறித்தள்ளும் எண்ணத்தை நாம் கைவிடவெண்டும்,” என்று தனது கருத்தை தெரிவித்தார். ஆப்பிரிக்க நாட்டவர்கள் பணக்கார மற்றும் ஏழை நாடுகளுக்கு இடையே இருக்கும் பரவலான வித்தியாசங்களை வலியுறுத்தி, “அதிகமான பொருள்முதல்வாதம் மற்றும் கட்டுப்பாடற்ற நுகர்வு,” என்று இகழ்ந்து உரைத்தனர். §

தலாய் லாமாவின் வருகை மிகப்பெரிய சலசலப்பை ஏற்படுத்தியது. அவர் மனித குழப்பத்தின் மையத்திற்கு சென்று, ஆன்மாவையும் உலகையும் உருமாற்றும் இடமாக இதயம் விளங்குகிறது என்று குறிப்பிட்டு, அன்பு மற்றும் பரிவு பற்றி அவர் வழங்கிய எளிமையான உரையும், அந்த சலசலப்புக்கு ஒரு காரணமாக விளங்கியது. பரஸ்பர மரியாதை மற்றும் புரிந்துணர்வு, ஒருவர் தனது சமயத்தை பிரச்சாரம் செய்வதை நிறுத்தி, அதற்கு பதிலாக ஒட்டுமொத்த மனித நேயத்திற்கு பயனுள்ள வகையில் பங்களிக்க வேண்டும் என்கிற ஒரு ஆசையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறியது கேட்பதற்கரிய ஒரு தகவலாக விளங்கியது. இதைப்பற்றி பேசுவதற்கு, நாடு கடத்தப்பட்ட அந்த பௌத்த சமய ஆன்மீக தலைவர் தலைசிறந்த பேச்சாளராக இருந்தார். §

மதத்தலைவர்களில் ஒருவர் தொடக்கத்தில் நடைபெறும் முழு அமர்வின் ஆரம்ப பிரார்த்தனையை முடித்ததும் அவமதிக்கப்பட்டபோது, குருதேவா ஒரு பெரிய அமளியை ஏற்படுத்திவிட்டார். ஆப்பிரிக்க நாட்டை சேர்ந்த பேச்சாற்றல் நிறைந்த ஒரு பெண் மதகுரு தனது பிரார்த்தனையை முடித்துக்கொண்ட போது, “இனி, நாம் இன்றைய முக்கிய நிகழ்ச்சிக்கு முன்னேறலாம்,” என்று அந்த குழுவின் ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார். அந்த கூட்டத்தில் குருதேவா தைரியமாக எழுந்து நின்று, தாங்கள் அரசியல் தலைவர்களுடன் இணைந்து செயல்படுவதற்காக அழைக்கப்பட்டதாகவும், தாங்கள் இங்கே வருகை தந்ததும் ஒரு சிரிய பிரார்த்தனை செய்து முடித்த பிறகு, தாங்கள் அவமதிக்கப்பட்டு தங்களது பங்களிப்பின் மதிப்பு குறைக்கப்படுகிறது என்று நிகழ்ச்சி அமைப்பாளர்களிடம் கூறி, அந்த குறிப்பிற்கு தனது எதிர்ப்பை தெரிவித்தார். “இன்றைய மற்ற நிகழ்ச்சிகளை


போல, இந்த பெண் மதகுரு நடத்திய பிரார்த்தனையும் முக்கியமான நிகழ்ச்சியே," என்று அவர்களை கடிந்துக்கொண்டு, தனது நீளமான கைகளை உயர்த்திக்கொண்டு, "இங்கே உங்கள் கூட்டத்திற்கு நாங்கள் வெறும் சுவரொட்டியாக இருக்கிறோம் என்று தெரிவித்து ஒவ்வொரு ஆன்மீக பாரம்பரியத்தையும் அவமதித்து இருக்கிறீர்கள். நாங்கள் இதற்காக இங்கே வரவில்லை," என்று கூறினார். அந்த நிகழ்ச்சியின் தலைவராக இருந்த ஒரு பெண்மணி முதலில் மேடையிலும், பின்னர் அடுத்த நாள் காலையில் நேராக சந்தித்தும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். குருதேவா சொல்வது சரியென்று அவளும் மற்றவர்களும் புரிந்துக்கொண்டு, கலந்து ஆலோசித்து தங்கள் பழக்கங்களை மாற்றிக் கொண்டார்கள். அது அந்த மாநாட்டில் ஒரு முக்கிய தருணமாக இருந்தது, மற்றும் மற்ற நிகழ்ச்சிகளில் ஆன்மீகத் தலைவர்கள் ஆர்வத்துடன் அழைத்து வரப்பட்டு முறையாக கௌரவிக்கப்பட்டார்கள். §

1990 ஆம் ஆண்டு, குருதேவா மீண்டும் உலகின் சமய மற்றும் அரசியல் தலைவர்கள் பங்குபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்த முறை ஏழு நாட்கள் நடைபெற்ற மாநாட்டின் போது, உணரக்கூடிய முக்கிய யதார்த்தமாக பனிக்கட்டி மற்றும் பனிமழை விளங்கியது மற்றும் சூரியன் என்றுமே கண்ணுக்கு தென்படவில்லை. ஒரு விமான கூடாரம் அளவுள்ள ஒரு அறையில் பூமியின் ஒவ்வொரு மூலை முடுக்கில் இருந்தும் அழகாக பல வண்ண உடைகளில் வந்திருந்த 1,400 ஆன்மாக்கள் நிரம்பி இருப்பதையும், எல்லோரும் தாங்கள் பகிர்ந்த அண்டவியல் பற்றி தெரிந்துகொள்வதையும், இந்த மென்மையான பூமியே நமக்கு இருக்கும் ஒரே உறைவிடம் என்பதை கருத்தில் கொண்டு, நமக்கு இருக்கும் ஒரே சரணாலயத்தை மூடத்தனமாக மாசுபடுத்தியதையும் தெரிந்துகொண்டு, அதை பாதுகாக்க எல்லோரும் உறுதியாக இருப்பதையும் கற்பனை செய்துகொள்ளுங்கள். அதை கற்பனை செய்ய முடிந்தால், மாஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச மாநாடு பற்றிய முழு அனுபவத்தையும் உங்களால் பெற முடியும். §

ஆக்ஸ்போர்டு, ரியோ டி ஜெனிரோ  மற்றும் மாஸ்கோவில் நடைபெற்ற அரசியல் மற்றும் மதத்தலைவர்களின் சர்வதேச கருத்தரங்கிற்கு எங்களுக்கு அழைப்புக்கள் வந்தன. "நாங்கள் வரவேண்டும் என்றால், நாங்கள் பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்யும் பயணிகள். நாங்கள் துறவிகள் மற்றும் எங்களது பயணத்திற்காக பணத்தை ஒதுக்குவது இல்லை. பயணச்சீட்டுக்களை அனுப்பினால், நாங்கள் அங்கே வந்து விடுவோம்," என்று எல்லா அழைப்புக்களுக்கும் பதில்கள் அனுப்பப்பட்டன. அவர்களுக்கு எங்களது வருகை மிகவும் அவசியமாக தேவைப்பட்டதால், பயணச்சீட்டுக்கள் வந்து சேர்ந்தன. அந்த பயணச்சீட்டுக்கள் முதல் வகுப்பு அல்லது வணிக வகுப்பில் இருக்க வேண்டும், ஏனென்றால் எனக்கு இப்போதெல்லாம் சிறிய இருக்கைகள் சரிபட்டு வரவில்லை. அவை ஒவ்வொரு வருடமும் சிரியதாகிக்கொண்டே இருக்கின்றன.§

ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, ஹவாய் மற்றும் மற்ற நாடுகளில் இருந்து வந்திருந்த பழங்குடி மக்களின் மிகப்பெரிய குழுக்கள், இந்த பாரம்பரியங்களின் மதிப்பையும், இவை இன்றும் புறக்கணிக்கப்பட்டு தவறாக பயன்படுத்தப்படுவதையும் குருதேவாவிற்கு நினைவூட்டின. ஒரு காலத்தில் மனிதநேயம் ஒன்று திரட்டி, விரயம் செய்த பழங்கால விவேகத்தின் பலவீனமான கலாச்சார கிடங்குகள் அல்லது விதைகள் போல இருக்கும் அவற்றை தற்போது மீண்டும் விதைக்க வேண்டியுள்ளது. நாம் எல்லோரும் பூமியின் பழங்குடி மக்கள் என்று ஒரு சான்றோர் சரியாக குறிப்பிட்டார். இந்த பாரம்பரியங்களுக்கு இந்துக்கள் இயல்பான நண்பர்கள் என்பதும், கட்டுப்பாடுகள் எதையும் விதிக்காமல், அவர்களுக்கு பயனுள்ள வளங்களை வழங்கி, அவர்களுக்கு ஆதரவாக பேச வேண்டும் என்பதில் குருதேவா தெளிவாக இருந்தார். §

மாஸ்கோவில் ரஷ்ய அரசின் நிதியுதவிடன் நடைபெற்ற இந்த சர்வதேச கருத்தரங்கு, மனிதன் ஒரு இயற்கைக்கு புறம்பாக கொடூரமான செய்முறையின் மூலமாக, தன் இனத்தையே வேட்டையாடும் அளவிற்கு, இந்த பூமியில் மிகப்பெரிய வேட்டைக்காரனாக மாறிவிட்டான் என்பதை பற்றி தெரிந்துகொள்ளவும் நடத்தப்பட்டது. தற்போதைய போக்கு மாற்றி அமைக்கப்படவில்லை என்றால், நாம் ஒரு வகையான தற்செயலான தற்கொலைக்கு பொறுப்பாக வேண்டியிருக்கும் என்று விஞ்ஞானிகள் வற்புறுத்தினர். மாஸ்கோவில் குருதேவா கேட்ட உரைகளின் சுருக்கம்: நாம் நமது அணுகுமுறைகளை மாற்றாமல், நமது தற்போதைய பழக்கங்கள் மற்றும் வழக்கங்களில் நிலைத்து இருந்தால், நம்மால் வளர்ச்சி அடைய முடியாது, நம்மால் நீண்ட நாள் வாழவும் முடியாது. மாறிக்கொள்ளுங்கள் அல்லது அழிவை சந்திக்க வேண்டியிருக்கும் என்று மிகவும் எளிமையாகவும் அதை குறிப்பிடலாம். நாம் பூமிக்கு தீங்கு விளைவிப்பதை நிறுத்தியதும், அது குணமடைய தொடங்கும். போர், தூய்மை கேடு, இனங்களின் அழிவு மற்றும் அடிப்படைவாதத்தை மனிதனின் மனசாட்சி ஏற்றுக்கொள்ளாத போது, அவை முடிவுபெறும். மேலும் அவற்றின் பயங்கரமான விளைவுகளை நாம் புரிந்துகொண்டதும், அவற்றை யாரும் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள். §



*1990 ஆம் ஆண்டு கடுமையான குளிர்காலத்தில், USSR உடைத்துக்கொண்டு இருந்த போது, மாஸ்கோவில் நடைபெற்ற ஒரு வார கருத்தரங்கிற்கு, மிகைல்*

*கோர்பச்சேவ் 700 அரசியல் தலைவர்கள் மற்றும் ஆன்மீக தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார். அதற்கு வருகை தந்த இந்து தலைவர்களில் குருதேவாவும் ஒருவராக இருந்தார்.*


……………………§

மாஸ்கோவில் தங்கியிருந்த நாட்கள் குருதேவாவிற்கு பிடித்து இருந்தன. விளக்குகளுடன் பிரகாசித்த 150 வருட பழமையான கிரெம்ளின் வரவேற்பு அறையில் நடைப்பெற்ற ஒரு இசை நிகழ்ச்சி மற்றும் காக்டெய்ல் விருந்தில், தானும் தன்னுடன் இருந்த சுவாமியும், எளிமையான மற்றும் தைக்கப்படாத தங்களது சந்நியாச ஆடையில் கலந்துகொண்டு, உலகத் தலைவர்களுடன் கூடிப்பழக வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்ட சங்கடமான மாலை நேரங்களும் அவருக்கு பிடித்து இருந்தன. §

அந்த மாநாட்டின் முடிவில் ஒரு மாலை நேரத்தில், கிரெம்ளின் மாளிகையில் ரஷ்ய அரசு ஒரு மிகப்பெரிய பால்ரூம் நடனத்திற்கு ஏற்பாடு செய்து, மனித நேயத்தின் எதிர்காலத்தை எதிர்கொள்ள மற்ற நாடுகளில் இருந்து வந்திருந்த ஆண்கள் மற்றும் பெண்களுடன் கலந்துக்கொள்ள வணிக மற்றும் கலாச்சார தலைவர்களுக்கு அழைப்பு விடுத்து இருந்தது. மதத்தலைவர்கள் ஒவ்வொரு நாளின் தொடக்கத்திலும், தாங்கள் பிரார்த்தனைகளை நடத்தி ஆசிகளை வழங்க தங்களுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்று போராடிக்கொண்டு, சில சமயம் தீவிரமாக சண்டையிட வேண்டியிருந்தது. எல்லோர் கவனத்தையும் பெறுவதற்காக நடைப்பெற்ற போராட்டத்தை இந்துக்கள் மட்டும் தனியாக நின்று பார்த்துக்கொண்டு இருந்தார்கள். ஐந்து-ஆறு நாட்களுக்கு பிறகு, இந்துக்களைத் தவிர மற்ற எல்லா முக்கிய மதங்களும் தங்களது வாய்ப்பை பெற்று இருந்தன. அதனால் அன்று இரவு, ஒரு இந்து தலைவர் தேர்வு செய்ப்பட்டார், மற்றும் அந்த தேர்வு அன்று நடந்த நிகழ்ச்சிகளில் மிகவும் முக்கியமானதாக விளங்கியது. §

அன்று சிருங்கேரி மடத்தின் துறவியாக இருந்த சுவாமி பரமானந்த பாரதி தேர்வு செய்யப்பட்டார். அவர் துறவறம் மேற்கொள்ளும் முன்பு இயற்பியல் வல்லுனராக இருந்தார். அவர் மதிய உணவு நேரத்தில் குருதேவாவை அணுகி, பல்வேறு சமூகங்களை சேர்ந்த இந்த குழு தான் வழங்கவிருக்கும் உரையை முழுமையாக புரிந்துகொள்ளுமா என்று தனது சந்தேகத்தை தெரிவித்தார். அவரது உரையை மாநாட்டில் கூடியிருக்கும் அனைவரும் தெளிவாக புரிந்துகொள்வார்கள் என்று குருதேவா அவருக்கு உறுதி அளித்து, கூட்டத்தில் தைரியமாக பேசுமாறு ஊக்கம் அளித்தார். §

அன்று மாலை நேரத்தில், உலகம் முழுவதிலும் இருந்து வந்த 300 தொலைக்காட்சி கேமராக்களின் கவனம் அவர் மீது திரும்ப, அவர் ஆதி சங்கரரைப் போன்று உடையணிந்து, கையில் *தண்டம்*, கைகள் மற்றும் நெற்றியில் மூன்று பட்டைகளாக *விபூதியை* பூசிக்கொண்டு, அழகாக அலங்கரிப்பட்ட அந்த அறையில் தூய்மை மற்றும் எளிமையின் சொரூபமாக காட்சி அளித்த சுவாமி, தனது காலணிகளை கழற்றி, மேடையில் ஏறி தனது பிரார்த்தனையை தொடங்கினார். §



*குருதேவாவின் இதயத்தில் பழங்குடி மக்களுக்கு ஒரு விசேஷ இடம் ஒதுக்கப்பட்டு இருந்தது. அவர் பிரேசில் மற்றும் ஆப்பிரிக்க பழங்குடி மக்களை சந்தித்து பேசினார், ஆங்கரேஜ் (அலாஸ்கா) நகரத்தில் தான் ஒரு கோயிலை ஸ்தாபனம் செய்ய உதவவேண்டும் என்று இன்யூட் சமூகத்தை சேர்ந்த பெரியவர்களிடம் கேட்டுக்கொண்டார், மற்றும் அரிசோனாவில் வாழும் ஹோபி சமூகத்தின் தலைவர்களிடம், மறைத்துக்கொண்டு இருந்த அவர்களது கலாச்சாரத்தை பாதுகாக்கும் பொருட்டு, அவர்களின் புனிதமான நூல்களை இணையத்தில் வெளியிடுவது பற்றி உரையாடிக்கொண்டு இருந்தார்.*

........................§

நாம் ஏமாற்றம், குழப்பம் மற்றும் பதட்டம் நிறைந்த யுகத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். நாம் ஞானோதயம் பெறுவதற்கு எந்த தருணத்தில், எந்த நோக்கத்துடன் மற்றும் எந்த வேகத்தில் தொடங்கவேண்டும் என்று நமக்கு தெரிவதில்லை. அதிஷ்டவசமாக, இந்த காரணிகள் அனைத்தையும் தீர்மானிக்கும் ஞானத்தின் பாதையை முடிவில்லாமல் இருக்கும் *வேதங்கள்* வழங்குகின்றன. இங்கே நான் இரண்டு *வேத* மந்திரங்களை குறிப்பிட விரும்புகிறேன். இவை சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் போன்ற வான்பொருட்களில் வியாபித்து இருக்கும், இல்லை இந்த பிரபஞ்சத்தில் இருக்கும் பஞ்ச பூதங்கள் அனைத்திலும் வியாபித்து இருக்கும் மகாதேவர்களை நினைத்து பிரார்த்தனை செய்வது ஆகும். இதில் நாம் சாந்தியை பிரார்த்தனை செய்கிறோம், அதாவது மாடுகளைப் போன்ற விலங்குகளின் சாம்ராஜ்யம் மற்றும் மனிதர்களின் சாம்ராஜ்யத்தில் அமைதியை வேண்டுகிறோம். இறைவனின் அருளில் இருந்து வரும் இந்த சாந்தி என்கிற அமைதி, நம் ஒவ்வொருவருக்கும் நிரந்தரமான பேரானந்தத்தை வழங்க, நமது இதயங்களின் ஆழங்களில் எதிரொலித்துக்கொண்டு இருக்கட்டும். இந்த சாந்தி எங்களை உபசரிக்கும் இந்த தலைசிறந்த நாட்டின் தலைவர்கள் மற்றும் மக்களுக்கு, உலகில் இருக்கும் மற்ற நாடுகளுக்கு மற்றும் இந்த சர்வதேச கருத்தரங்கிற்கு அமைதி மற்றும் செழிப்பை வழங்கட்டும். §

அதன் பிறகு சுவாமி உச்சரித்த இனிமையான சமஸ்கிருத மந்திரம், கிரெம்ளின் வரவேற்பு அறை முழுவதும் வியாபித்தது. அவர் முடிவில், அரங்கில் இருக்கும் எல்லோரும் தன்னுடன் சேர்ந்து பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்தையும் உள்ளடக்கிய “ஓம்” என்ற பிரணவ மந்திரத்தை மூன்று முறை சொல்லுமாறு கேட்டுக்கொண்டார். சுவாமி “ஓம்” என்று உச்சரித்து, தனது கைகளை உயர்த்தி எல்லோரும் சேர்ந்து சொல்லுமாறு கேட்டுக்கொண்டார். வலுவாக எதிரொலித்த அந்த ஓம்காரம், அரங்கம் முழுவதும் நிரம்பியது. ஓம் காரத்தை சுவாமி இரண்டாவது முறை மற்றும் மூன்றாவது முறை உச்சரித்த போது, அரங்கில் இருந்த மக்கள் கூட்டம் ஒவ்வொரு முறையும் அதிக வலுவாக உச்சரித்தது. அவர்களது அடிப்படை ஒருமையில் இருந்து தோன்றி, அவர்களது வேற்றுமைகளை கடந்து எல்லோரும் புரிந்துகொண்ட ஒரு மொழியை பகிர்ந்து, உலகமே ஒன்றாக சேர்ந்து உச்சரித்தைப் போல அது ஒரு சக்திவாய்ந்த தருணமாக இருந்தது. அங்கே கூடியிருந்த மக்களுக்கு தெரியாமல், USSR யில் விரைவில் வரவிருந்த குறிப்பிடுத்தக்க மாற்றங்களை ஏற்படுத்திய சூட்சும சக்தியாக “கிரெம்ளின் மாளிகையில் உச்சரிக்கபட்ட ஓம்காரம்” விளங்கியது என்று குருதேவா பின்னர் குறிப்பிட்டார். அவர் இந்த அனுபவத்தைப் பற்றி இந்துயிசம் டுடே பத்திரிகையில் விளக்கினார்:§

> ஒரு காலத்தில் லெனின் இருந்த கிரெம்ளின், குருசேவ் இருந்த கிரெம்ளின் மற்றும் தற்போது கோர்பச்சேவ் இருக்கும் கிரெம்ளின் மாளிகையில் அமர்ந்து இருக்கும், இரண்டாயிரத்திற்கும் மேலான ஆன்மீக மற்றும் அரசியல் தலைவர்கள் மற்றும் விருந்தினர்கள், இந்தியாவில் இருந்து வந்திருந்த ஒரு சுவாமியின் தலைமையில், வேதங்களில் இருந்து ஒரு சாந்தி மந்திரத்தை கேட்பார்கள் மற்றும் எல்லோரும் ஒன்றாக “ஓம்” என்ற பிரணவ மந்திரத்தை உச்சரிப்பார்கள் என்பதை யாரால் நம்பமுடியும்? அந்த ஓம்காரம் போரை நிறுத்தும் ஆற்றலுடன் அமைதியை வேண்டிய மக்களின் குரலாக விளங்கியது. ஆனால் துரதிஷ்டவசமாக *டைம்* பத்திரிக்கை வழங்கிய ஒரு சிறிய குறிப்பைத் தவிர, இதை அமெரிக்க பத்திரிகைத்துறை கவனிக்கத் தவறியது. அங்கே கோர்பச்சேவ் மற்றும் ஷெவர்ட்நாசி போன்ற பெருந்தலைவர்களுடன், உலகின் பிரபலமான யூதகுருமார்கள் மற்றும் இமாம்கள், துறவிகள் மற்றும் இறையியல் வல்லுனர்கள் மட்டுமில்லாமல் 57 நாடுகளின் பாராளுமன்றத்தில் இருந்து அரசியல்வாதிகள், விஞ்ஞானிகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள், கலைஞர்கள் மற்றும் ஊடக வல்லுனர்கள் என்று பல முக்கியமான மற்றும் தலைசிறந்த வல்லுனர்கள் கூடியிருந்தார்கள். எல்லோரும் ஒன்றாக அமைதிக்காக செயல்பட்டு, எல்லோரும் ஒன்று சேர்ந்து இனிமையான ஒற்றை குரலில், சர்வதேச ஒருமையின் புனிதமான ஓம்காரத்தை உச்சரித்து, மனித இனத்திற்காக நடைபெற்ற முதல் சர்வதேச கருத்தரங்கு இதுவாகத்தான் இருக்கவேண்டும்.§


முப்பது வயதுகளின் தொடக்கத்தில் மற்றும் தங்கள் பதின்ம வயதுகளில் இருந்த பல சோவியத் இளைஞர்களை சந்திக்க எங்களுக்கு

வாய்ப்பு கிடைத்த போது அவர்களிடம் யோகம், தியானம், மறைஞானம், சூட்சும ஞானம், படிகங்கள் பற்றிய ஆய்வு மற்றும் கட்புலனுக்கு அப்பாற்பட்டதை காணும் சக்தியைப் பற்றி தெரிந்துகொள்ள அவர்களிடம் தென்பட்ட பக்கவுமடைந்த ஆர்வம் எங்களை வியக்க வைத்தது. விண்வெளியில் மனிதன் அடியெடுத்து வைக்க தேவையான தகவல் தொடர்பு ஆற்றல்களை வலுப்படுத்த (மற்றும் சில சாதாரண நோக்கங்களுக்கும்), கடந்த இருபது ஆண்டுகளாக மனதை பயன்படுத்தி தொலை நுண்ணுணர்வு மற்றும் புவிக்கு அப்பாற்பட்ட விஞ்ஞானங்கள் மூலம் சோவியத் விஞ்ஞானிகள் மற்றும் இந்து யோக வல்லுனர்கள் இணைந்து செயல்பட்டு வந்தது பலருக்கு தெரியாது. §

நாங்கள் மாஸ்கோவில் -10°f குளிரை (அதற்கு கைகளால் தைக்கப்பட்ட எங்கள் பருத்தி உடைகள் உகந்ததாக இல்லை) எதிர்கொண்டாலும், அந்த நகரத்தில் எனது சொந்த அனுபவம் அன்பு மற்றும் உற்சாகத்துடன் நிறைவாக இருந்தது. எழுபது ஆண்டுகள் கழித்து நடைபெற்ற, ரஷ்யாவின் முதல் பொதுமக்கள் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை நான் பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன். ஏப்ரல் 1988 ஆக்ஸ்போர்டில் நடைப்பெற்ற சர்வதேச கருத்தரங்கில், நான் சந்தித்திருந்த பழைய ஆன்மீக நண்பர்களுடன் பேசி நினைவுகளை பகிர்ந்ததாலும் மகிழ்ச்சி அடைந்தேன். அந்த உணர்ச்சி எனக்கும் நம்பிக்கை மற்றும் ஆர்வத்தை வழங்கியது. §

நமக்கு ஏதாவது ஒரு இக்கட்டான நிலை தோன்றும் வரை, நாம் மற்றவர்கள் மீது அக்கறை செலுத்தாமலும் அன்றைய தேவைகள் மீது பொதுவாக கவனம் செலுத்தாமலும் மகிழ்ச்சியை நாடுவதில் அதிகம் தேர்ச்சி பெற்ற உயிரினங்கள் என்பதை வெளிப்படுத்தி உள்ளோம். இந்த இரண்டு சர்வதேச கருத்தரங்குகளும் பூமியில் மனித நேயம் எதிர்கொள்ளும் இக்கட்டான நிலை முழுவதையும், மிகைப்படுத்தாமல் யதார்த்தமாகவும் கவனமாகவும் எடுத்துரைத்தன. இது பிரச்சனைகளின் ஒரு துக்ககரமான பட்டியலாக இருந்தாலும், மனிதனிடம் இருக்கும் உற்சாக சக்தி அதை எதிர்கொள்ளும் சவால்களை விட வலுவானது. தங்களுக்கு இருந்த முக்கியமான பொறுப்புக்களில் இருந்து ஒதுங்கி, குளிர் காலத்தின் நடுவில் மாஸ்கோவிற்கு பறந்து வந்து, ஏழு நாட்கள் ஒன்றாக வாழ்ந்து, ஒன்றாக உணவு அருந்தி, ஒன்றாக கலந்து பேசி, ஒருவருக்கொருவர் அன்பு மற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்த விருப்பத்துடன் கற்றுக்கொண்டு, மற்றவர்கள் பேசுவதை கவனமாக கேட்டு, கேள்விகளை கேட்டு சந்தேகங்களை தெளிய செய்து, அறிவை பகிர்ந்த இந்த உலகின் தலைசிறந்த தலைவர்களை பார்க்கும் போது எனக்குள் நம்பிக்கை பிறந்தது. நாம் எதிர்கொண்ட நெருக்கடியின் தீவிரமும், பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஒன்று கூடிய மக்களின் நேர்மையும் வெளிப்பட்டன. இவர்கள் மனித நேயத்தின் தலைவர்களாக இருப்பதால், அவர்களின் கருத்துக்கள் அவர்கள் நாட்டில் இருக்கும் மக்களுக்கு சென்றடையும். இந்த தகவலை அவர்கள் பாராளுமன்றத்தில்

அல்லது அவர்கள் சமாஜங்களில் இருக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் அறிந்து புரிந்துக் கொள்வார்கள், மற்றும் இங்கே வருகை தந்த விஞ்ஞானிகள் இதை தங்கள் சகாக்கள் அனைவருடனும் பகிர்ந்துக் கொள்வார்கள். §



*ரியோ டி ஜெனிரோவில் 1992 ஆம் ஆண்டு நடைப்பெற்ற சர்வதேச கருத்தரங்கில் "எல்லாம் தெய்வீகமானது. நாம் எல்லோரும் ஒன்று," என்று உலகில் இருக்கும் அனைத்து மதங்களும் சொல்வதைத் கேட்டு குருதேவா*

*ஆச்சரியம் அடைந்தார். ஹவாயில் இருந்து வந்த உயரமான சுவாமியுடன் ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்ள பிரேசில் நாட்டு பழங்குடியினர் விரும்பினார்கள்.*

........................§

இறுதியில் மிகைப்படுத்தப்படாமல் உண்மை வெளியே வந்தது மற்றும் தீர்வு தெளிவாக இருந்தது. ஒரு பிரச்சனை நன்றாக விளக்கப்பட்டு புரிந்துகொள்ளப்பட்டால், தீர்வு தானாக தெளிவாகும் என்று மக்கள் நம்புகிறார்கள். எளிமையாக இருக்கும் இந்த தீர்வு, ஒவ்வொரு மனிதனின் பொறுப்பாகவும் இருக்கிறது. சுத்தமான மற்றும் நிலையான சுற்றுப்புற சூழலை பெறுவதற்கு தனது வீடு, தனது பண்புகள் மற்றும் இயற்கையுடன் தனது உறவை மாற்றி அமைக்க ஒருவன் உலக நலனை கருத்தில் கொண்டு தனது சமூகத்தில் செயல்பட வேண்டும். §

மாஸ்கோவில் நாங்களும் எங்கள் கருத்துக்களை தெரிவித்தோம். உலகம் மீண்டும் சமஸ்கிருதத்தில் *அஹிம்சா* என்று அழைக்கப்படும் அகிம்சை நெறிமுறையை கடைப்பிடிக்க தொடங்கவேண்டும் என்று உலக மக்களிடம் வேண்டிக்கொண்டோம். நாம் இதை வெறும் தத்துவமாக கருதாமல், மிகவும் யதார்த்தமாக இருக்கவேண்டும். உலக அமைதி வீட்டில் இருந்து தொடங்குகிறது. அமைதியை அடைய முடியும் மற்றும் அதை புத்தியை பயன்படுத்தி பராமரிக்கவும் முடியும் என்பதை குழந்தைகள் பார்த்து தெரிந்துக்கொள்ளும் பொருட்டு அமைதியாக இருக்கவும், மூன்று நாட்கள் தாமதமாக உறங்க சென்றாலும், இரவு உறங்குவதற்கு முன்பாக தங்கள் விவாதங்கள் மற்றும் வாக்குவாதங்களுக்கு சுமூகமாக தீர்வு காண குடும்பங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். எதிர்கால அமைதிக் காப்பாளர்களை உருவாக்கும் பொறுப்பு பெற்றோர்கள் கையில் இருக்கிறது. மேலும் குழந்தைகளுக்கு நாம் முன் உதாரணமாக இருப்பதால் மட்டுமே நம்மால் கற்றுத் தரமுடியும். §

வித்தியாசமாக இருப்பவர்களை, வித்தியாசமான நம்பிக்கையுடன் இருப்பவர்களை மதிக்க பெற்றோர்கள் குழந்தைகளுக்கு கற்றுத்தர வேண்டும். அவர்களுக்கு மனித வேற்றுமையின் மதிப்பைப் பற்றி கற்றுத்தர வேண்டும். பல வேற்றுமைகள் இருக்கும் இந்த உலகில் மனதில் அச்சமில்லாமல், மற்றவர்கள் மீது தங்கள் வழிமுறைகள் அல்லது விருப்பத்தை திணிக்காமல், அவர்கள் வாழ்வதற்கு தேவையான கருவிகளை கொடுக்க வேண்டும். இதுவே தர்மத்தின் பாதை ஆகும். §

தாய்மையின் சக்தியை வெளியே கொண்டு வந்து, நமது பெண்களின் வழிகாட்டல் மற்றும் இயலுணர்வு அறிவை நாடவேண்டியதைப் பற்றியும் நான் தெரிவித்தேன். ஹவாய் தீவில் இருக்கும் தாய்மார்கள், ஆப்பிரிக்க தாய்மார்கள் மற்றும் பூமியில் இருக்கும் தாய்மார்கள் அனைவரும் முன் வந்தால், நம்மால் உலக அமைதியை பெற முடியும். கலியுகம் முற்றி இருப்பதால், ஆண்களால் மாற்றம் ஏற்படுத்துவது கடினமாக இருக்கிறது.

அவர்கள் கடந்தகாலத்தில் முயற்சி செய்து இருக்கிறார்கள். திருத்தி அமைத்து, இணக்கம் மற்றும் தாக்கம் ஏற்படுத்தும் வலுவான திறமையுடன் இருக்கும் தாய்மார்கள், மகள்கள், சகோதரிகள் மற்றும் மனைவிமார்களிடம் அமைதிக்காக போராட அதிக சக்தியை வழங்கினால், அவர்கள் நம்மை பொற்காலத்திற்குள் அழைத்து செல்வார்கள். §

அகிம்சை என்பது கொல்லாமையை மட்டும் குறிக்காமல், மிகவும் நுணுக்கமான முறையில் உடல், மனம் மற்றும் உணர்வுப்பூர்வமாக புண்படுத்துவதையும் தவிர்ப்பதை குறிக்கவேண்டும். நாம் நம்மை, நமது சுற்றுப்புறத்தை, இயற்கையில் இருக்கும் மற்ற உயிரினங்களை துன்புறுத்துவதால், நாம் ஒரு வலி அல்லது வேதனையின் மூலமாக இருக்கலாம் அல்லது நாம் அகிம்சை வழியை பின்பற்றி குணப்படுத்தி மகிழ்ச்சி வழங்குவதில் மூலமாக இருக்கலாம். §




*குருதேவா பயணம் செய்த இடமெங்கும், தலாய் லாமாவில் இருந்து இசுலாமிய மதத் தலைவர்கள் வரை, ஆனந்தமயி மா முதல் பிரமுக் சுவாமி மற்றும் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் வரை, அனைத்து மதத்தலைவர்களை நாடி, சகிப்புத்தன்மை மற்றும் புரிந்துணர்வை வலுப்படுத்த தொடர்புகளை உருவாக்கிக் கொண்டார்.*

........................§

முனிவர்கள் மற்றும் ஞானோதயம் பெற்ற ஆன்மாக்கள் கர்மவினைகளைப் பற்றி முழுமையாக அறிந்து இருந்தார்கள். நாம் மற்றவர்களுக்கு செய்த செயல்கள், இந்த பிறவி அல்லது இன்னொரு பிறவியில் நம்மை வந்து சேரும் என்பதை அவர்கள் நன்றாக அறிந்து இருந்தார்கள். ஒருவர் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் வன்முறை செயல்கள், ஒரு பிரபஞ்ச செய்முறையின் மூலம் உறுதியாக அவரையே வந்து சேரும் என்பதை அவர்கள் அறிந்து இருந்தார்கள். §

மாஸ்கோவில் கிழக்கு நாட்டு சிந்தனை மற்றும் உணர்வுகள் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன. ஒரு சில செமிட்டிக் இனத்தலைவர்கள் மனிதன் இயற்கையின் தலைவனாக இருப்பதைப் பற்றி பேசினார்கள். வாழ்க்கையின் அங்கமாக இருக்கும் ஒருமைப் பற்றி பௌத்தர்கள், சமணர்கள், சீக்கியர்கள் மற்றும் இந்துக்கள் பேசினார்கள். ஆதிக்கம் செலுத்தும் உணர்வு ஒருமையை அவமதித்து, தவறான புண்படுத்தும் செயல்களை நீடிக்க செய்வதாகவும் அவர்கள் விளக்கினார்கள். கிழக்கத்திய நாடுகளின் கண்ணோட்டத்தில், பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்தும் ஒரு தெய்வீக விதி மற்றும் ஒழுங்கு முறையில் இருக்கின்றன மற்றும் எந்த ஒரு உயிரினத்திற்கும் வாழ்வதற்கு அதிக உரிமை இல்லை. வாழ்க்கையை நிலைத்திருக்க செய்து, நுணுக்கமாக பின்னிப் பிணைந்து மற்றும் ஒன்றோடு ஒன்று சார்ந்து இருக்கும் மிகப்பெரிய முழுமையின் அங்கமாக மனிதர்களாகிய நாம் நம்மை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். §




*சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிற்கு சென்று வலுவான தகவலை வழங்கி நூறு ஆண்டுகள் நிறைவை குறிப்பிடும் வண்ணம், 1993 ஆம் ஆண்டு சிகாகோவில் நடைபெற்ற உலக சமயங்களின் மாநாட்டில், இந்து சமயத்தின்*

*முக்கிய பிரதிநிதிகளாக சிவாய சுப்பிரமுனியசுவாமி சிதானந்தர் மற்றும் மாதா அம்ரிதானந்தமயி தேர்வு செய்யப்பட்டார்கள்.*

……………………§

மாநாட்டின் இறுதி நாளன்று, குருதேவா ரோசியா ஓட்டலில் இருந்த டஜன் கணக்கான உணவகங்களில் ஒன்றில் உணவு அருந்திக்கொண்டு இருந்தார். அங்கிருந்த பணியாளர்களுக்கு அன்று மாநாட்டின் இறுதி நாள் என்று தெரிந்து இருந்ததால், எல்லோரும் தங்கள் சொந்த ஊருக்கு திரும்பிக் கொண்டு இருந்தார்கள். குருதேவா கடுங்குளிரில் இருந்து தப்பிக்க வாங்கியிருந்த வெதுவெதுப்பான, சாம்பல் நிற காலணிகளை அந்த உணவகத்தின் மேசைப் பணிப்பெண் தொடர்ந்து பார்த்துக்கொண்டு இருந்தாள். உணவகத்தில் பணத்தை செலுத்தும் போது, தனது குடும்பம் வறுமையில் தவிப்பதாக அவள் தைரியமாக தெரிவித்தாள். அவள் தனக்கு தெரிந்த அறைக்குறை ஆங்கிலத்தில், குருதேவா அணிந்திருந்த காலணிகளை தனது கணவனுக்காக தரமுடியுமா என்று அடக்கத்துடன் கேட்டாள். அவளது உயர்வான வேதனையை கவனித்த குருதேவா, தனது காலணிகளை கழற்றியதோடு தன்னுடன் வந்திருந்த சுவாமியின் காலணிகளையும் கழற்றுமாறு கேட்டுக்கொண்டு, மகிழ்ச்சியடைந்த பணிப்பெண்ணுக்கு அந்த இரண்டு ஜோடிகளையும் வழங்கிவிட்டு, இருவரும் தங்கள் அறைக்கு காலுறைகளுடன் சென்றார்கள். §

குருதேவா இந்த முக்கிய கருத்தரங்குகளின் முக்கியத்துவத்தை தெரிந்துகொண்டாலும், அதில் நடைபெற்ற கூட்டங்கள் பயனற்றதாக, சோர்வடைய செய்வதாக, மந்தமானதாக மற்றும் பரிதாபகரமாக தொடர் நடவடிக்கை இல்லாமல் இருந்ததையும் தெரிந்துகொண்டார். அந்த கூட்டங்களில் தொடர்ந்து அதே மக்களை சந்தித்து, நல்ல நோக்கங்களுடன் அதே தீர்மானங்களை முடிவு செய்து, பின்னர் அதை மறந்து போவதாக அவர் குறை கூறினார். 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக சமயங்களின் சிகாகோ மாநாட்டிற்கு பிறகு, அவர் பல்வேறு மதங்களை சேர்ந்த இருபத்தி ஐந்து “தலைவர்களின்" குழு இயக்கத்தில் இருக்க முயற்சி செய்தார். அந்த குழுவில் இருந்த மூன்று இந்துக்களில் அவரும் ஒருவராக இருந்தார். இந்த குழு முக்கியமான விவகாரங்களில் அவ்வப்போது விவேகமான அறிக்கைகளை வழங்கலாம் என்று அவருக்கு தோன்றியது. ஆனால் அவர் மேற்கொண்ட முயற்சிகளைத் தவிர குழுவில் மற்றவர்களின் ஆர்வம் குறைவாக இருந்தது, மற்றும் அந்த குழு பயனுள்ளதாக அமையவில்லை. அதனால் அவர் எதிர்காலத்தில் இதைப்போன்ற ஈடுபடுகளில் மிகவும் எச்சரிக்கையாக இருந்தார். §

குரு ஸ்ரீ சின்மொய் அவர்களின் சீடராகவும், ஐ.நா. சபையில் சர்வதேச கருத்தரங்கு, பாராளுமன்றம் மற்றும் மில்லனியம் சம்மிட்டியில் பணிபுரிந்த Dr. குசுமிதா பெடர்சன், இந்த சர்வதேச மாநாடுகளில் குருதேவாவின் பங்கேற்பில் இருந்த அவரது வலுவான ஆன்மீக தோற்றம் மற்றும் சிக்கல்களை எதிர்கொள்வதில் அவரிடம் தென்பட்ட மிகப்பெரிய தெளிவு

மற்றும் அர்ப்பணிப்பை பாராட்டினார். மேலும் அவர் திரைக்கு பின்னால் இருந்து செய்த உதவிகள் பலருக்கு தெரியவில்லை என்றும் அவை கடந்த தலைமுறையில் மதங்களுக்கு இடையே நம்பிக்கையை வளர்க்கும் பணியில் வரலாறு காணாத மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளன என்றும் பாராட்டினார். §

மனித இனம் நீடித்து வாழ எதிர்கொள்ளும் சவால்களை பற்றி விவாதிக்க மூன்றாவது சர்வதேச கருத்தரங்கு பற்றிய அறிவிப்பு வெளிவந்த போது, தனது மதத்திற்கு பிரதிநிதித்துவம் இல்லை என்பதை உணர்ந்த ஒரு இந்து செல்வந்தர், 1992 ஆம் ஆண்டு குருதேவாவின் ரியோ டி ஜெனிரோ பயணத்திற்கான செலவை ஏற்றுக்கொண்டார். இந்த சிறிய நிகழ்ச்சியில் சுமார் எழுபத்தி ஐந்து சமய தலைவர்கள் முன்னூறு அரசியல்வாதிகளுடன் உரையாடினார்கள். அத்தகைய கூட்டங்களில் வழக்கமாக நடைபெறும் சம்பவங்கள் மட்டுமல்லாமல், மிகவும் விசித்திரமான மற்றும் விசேஷமான ஒன்று நடைபெற்றது. குருதேவா அதற்காக தயாராக இல்லை, மற்றும் அது யாருடைய நிகழ்ச்சி நிரலிலும் இல்லை என்றாலும் அது நடைபெற்றது. §

ஒரு அமெரிக்க செனட் உறுப்பினர் வழங்கிய தொடக்க உரையில் இருந்து, மூன்று நாட்கள் கழித்து மதத்தலைவர்கள் வழங்கிய இறுதி உரை வரை, பெரும்பாலும் எல்லோரும் வாழ்க்கையின் புனிதத்தன்மையை அங்கீகரித்தனர். அதை இந்துக்கள், சமணர்கள் மற்றும் சீக்கியர்கள் மட்டுமில்லாமல் எல்லோரும் கூறினார்கள். அதை அரசியல்வாதிகள் பரிந்துரைத்தார்கள். அதை வணிகர்கள் உறுதி செய்தார்கள். அதை பூசாரிகள் போதித்தார்கள். அதை இசைக் கவிஞர்கள்  பாராட்டினார்கள். அது ஒவ்வொரு சொற்பொழிவிலும், மனித பழக்கங்களில் மாற்றத்தை கோரிய ஒவ்வொரு அழைப்பிலும் இடம்பெற்று, அவற்றை ஒருங்கிணைத்து மதிப்பை வழங்கியது. §

இந்த பொதுவான மந்திரம் குருதேவாவை திகைக்க வைத்தது. அத்தகைய ஒரு சம்பவம் முந்தைய சர்வதேச கருத்தரங்குகளில் நடைபெறவில்லை. இயற்கை புனிதமானது மற்றும் வாழ்க்கை புனிதமானது என்று ரியோவில் சத்தகமாகவும் தெளிவாகவும் கூறப்பட்டது. இந்த அபூர்வமான மற்றும் புனிதமான படைப்பை அழிப்பது, அதன் புனிதத்தை அவமதிப்பது ஆகும். இந்த அவமதிப்பு தொடர்ந்தால், அது உறுதியாக நமது இனம் அழிவதற்கு காரணமாக அமையும். §

செனட் உறுப்பினர் அல் கோர், குருதேவாவை அணுகி அவருடன் கைக்குலுக்கி “நாம் ஏதாவது ஒரு வகையில் இயற்கையில் இருந்து மாறுபட்டு இருக்கிறோம்" என்ற தவறான ஊகத்தை பற்றி பேசினார். பிரேசில் நாட்டு ஆர்ச்பிஷப் காமரா அருமையான பின்வரும் அறிக்கையை வழங்கினார்: “நாம் இறைவனுக்குள் இருக்கிறோம். நான் இறைவனின் அங்கமாக இருந்தால் என்னால் எப்படி வெறுக்க முடியும்? இது வியக்கத்தக்கதாக இருந்தாலும், உண்மையாக இருக்கிறது. இறைவன் எங்கும் இருக்கிறான் என்றால், நாம் இறைவனுக்குள் இருக்கிறோம், மற்றும் நமக்குள் இறைவன் இருக்கிறார் என்று பொருள்.” இந்தியாவின் பிஷப் கிருகாரியஸ் “உள்ளார்ந்த

தன்மை மற்றும் யாவும் கடந்த பண்பை" பற்றி பேசினார். ஆப்பிரிக்க நாட்டை சேர்ந்த பெண் பூசாரி வாழ்க்கை புனிதமானது, தாவரங்கள் புனிதமானது மற்றும் விலங்குகள் புனிதமானது என்ற கண்ணோட்டத்தை பகிர்ந்து கொண்டார். வாழ்க்கையில் எல்லா வடிவங்களுக்கும் மதிப்பு அளிக்க வேண்டும் என்று சமண மதத்தலைவர்கள் கேட்டுக்கொண்டனர். "அதிக அளவிலான மதத்தலைவர்கள் தொடர்பில்லாமல் யாவும் கடந்த நிலையில் இறைவன் இருக்கிறார்," யூத இறையியல் வல்லுநர் Dr. சூசன்னா ஹெர்ஷல் குறிப்பிட்டார். "உங்களுக்குள் அதிக ஆழமாக சென்று, அனைத்து உயிரினங்களிடத்திலும் ஒருமையை உணருங்கள்," என்ற கருத்துடன் ஆச்சார்யா சுஷில் குமார் ஒரு தியானத்திற்கு தலைமை தாங்கினார். §

"இறைவன் எங்கும் இருக்கிறான். வாழ்க்கை புனிதமானது," என்ற ஒரு அனுமானம் ரியோவில் இருந்தது. இது நமது வாசகர்களுக்கு மற்றும் தனிப்பட்ட முறையிலும் ஒரு வழக்கமான உட்பார்வையாக தோன்றலாம். ஆனால் ரியோவின் ஒவ்வொரு மூலையில் இருந்தும் வெளிவந்த இந்த புதிய ஆன்மீக உடன்பாடு, எல்லோருக்கும் இறைவனின் போதனையாக விளங்கி, பூமி முழுவதற்கும் பொருந்தும் வெளிப்பாட்டின் ஒரு உன்னதமான தோற்றத்தை எடுத்துக்கொண்டது. இது மிகவும் தெளிவாக இருந்ததால், யாரும் இதைப்பற்றி எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை. அது காற்றை போல யாருக்கும் தென்படாமல் எங்கும் இருந்து, தனது மறைவான தோற்றத்தினால், தன்னைப் பற்றிய உரையாடலை தூண்டிவிட்டது.§

Page 44:
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/44_guru07_02.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் இருபத்தி ஒன்பது

# குருவின் ஊக்கமளிக்கும் பண்பு


1980 மற்றும் 1990 களில் இலங்கையில் வெடித்த ஈழப்போர் காரணமாக

அங்கிருந்து பல்லாயிரக்கணக்கான இலங்கைவாசிகள் வெளியேற்றப்பட்ட போது, அவர்கள் புதிய நாடுகளில் வாழ்க்கையை தொடங்க குருதேவா உதவி செய்து வழிகாட்டவும் செய்தார். இதற்கு முன்னர் நடைப்பெற்ற இனக்கலவரத்தின் போது, அவர்கள் யோக சுவாமியின் காலடியில் விழுந்ததை போல, இலங்கை தமிழர்கள் குருதேவாவிடம் தங்கள் வேதனைகளை பகிர்ந்து கொண்டனர். ஆயிரக்கணக்கான சோகக்கதைகளை கேட்டு, "இத்தகைய கொடூரமான சம்பவங்களுக்கு இறைவன் எவ்வாறு அனுமதி வழங்குகிறார்?" என்று கேள்விக்கு மீண்டும் மீண்டும் பதில் சொல்வது ஒரு கடினமான வேலையாக இருந்தது. §

அந்த காலகட்டம் முழுவதும், குருதேவா எந்த ஒரு அழைப்பையும் தவிர்க்கவில்லை, தங்கள் மகனை இழந்ததால் அல்லது தங்கள் வீடு எரிந்து சாம்பலாவதை பார்த்ததால் அல்லது தங்கள் தாய்நாட்டில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு ஒரு புதிய இடத்தில் புதிய வாழ்க்கையை தொடங்கியதால், ஆதரவற்ற நிலையில் இருந்த ஒரு குடும்பத்திற்கு தனது நேரத்தை ஒதுக்க என்றுமே தவறியது இல்லை. அவர்கள் குருதேவாவிற்கு செய்த தொலைப்பேசி அழைப்புக்கள் ஒரு உயிர்ப்பாதையாய் விளங்கியது என்பதை அவரும் அறிந்து இருந்தார். இருபது ஆண்டுகளுக்கு தொடர்ந்த இந்த அழைப்புக்கள் இந்தியா, கனடா, அமெரிக்கா, ஜெர்மனி, டென்மார்க், சுவீடன், நார்வே, பின்லாந்து, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து மற்றும் பிரான்சு நாடுகளில் இருந்து வந்தன. இலங்கை தமிழ் இந்துக்கள் மற்றும் சிங்கள பௌத்த சமயத்தவர்களுக்கும் இடையே நடைபெற்ற மிகப்பெரிய இனக்கலவரம் மற்றும் அதைத் தொடர்ந்த ஈழப்போர் காரணமாக 700,000 தமிழர்கள் வெளியேற்றப்பட்டார்கள். §

1983 ஆம் ஆண்டு படுகொலைகள் தொடங்குவதற்கு சில மாதங்கள் முன்பு, குருதேவா தெய்வீக அருளுடன் இலங்கையில் இருந்த இந்துக்கள் வசித்த பகுதி முழுவதும் பயணம் செய்தார். அவர் அனந்தபூராவில் இருந்த போது, யாழ்ப்பாண தீபகற்பம் மற்றும் இலங்கை நிலப்பகுதிக்கு இடையே குறுகலான தரைப்பாலமாக விளங்கிய யானை பாஸில் ஒரு வெடிகுண்டு வெடித்தது. அன்று காலையில் அவரும் துறவிகளும் கிளம்ப வேண்டும், ஆனால் குருதேவா கிளம்புவதை தாமதித்து வந்தார். அவர்கள் இறுதியில் மதிய வேளையில் கிளம்பி, தாமதமாக வெடிகுண்டு வெடித்த இடத்திற்கு வந்த போது, சிங்கள இராணுவத்தினரின் தீவிரமான சோதனையை எதிர்கொண்டனர். அவர்கள் திட்டமிட்டபடி காலையில் கிளம்பி இருந்தால், வெடித்த சமயத்தில் அவர்கள் சம்பவ இடத்தில் இருந்திருக்க வேண்டும். மேலும் அந்த வெடிகுண்டு தனது இலக்கை தாக்கி இருந்தால் (அந்த வெடிப்பில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை), சில மாதங்களுக்கு பிறகு நடந்த கலவரம் அங்கே அப்போதே தொடங்கி இருக்கும். “இந்து சமயத்தில் வலுவாக நிலைத்து இருங்கள்!” “மரணத்தை கண்டும் எப்போதும் அச்சத்தில் இருப்பவர்களை கண்டும் அஞ்சவேண்டாம்” என்று அவர் டஜன் கணக்கான கோயில்களில் வழங்கிய தகவல், எதிர்காலத்தில் வரவிருந்த கடினமான காலங்களில் இலங்கை இந்துக்களுக்கு பாதுகாப்பை வழங்கியது. §

1985 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணத்தை சுற்றியும் சில பயங்கரமான சம்பவங்கள் நடந்ததும், போரில் தங்கள் வீடுகளை இழந்து ஆதரவில்லாமல் தவித்தவர்களுக்கு, இலங்கை அகதிகள் நிவாரண நிதியை தொடங்கி மேற்கு நாடுகளில் இருந்த தமிழர்களிடம் இருந்து மிகவும் தேவையான நிதியுதவியை திரட்டும் பொருட்டு, குருதேவா தனது துறவிகள் குழுவை ஒன்று திரட்டினார். அவர் இந்த பணியில் பல மாதங்கள் ஈடுபட்டு இருந்தார். நிதியுதவிகள் குவிய தொடங்கியதும், அவை தேவையான மக்களுக்கு போய் சேர்கிறதா என்பதை உறுதி செய்ய, அவர் ஒவ்வொரு பரிவர்த்தனையையும் கவனமாக கண்காணித்தார். அவர் தொடங்கிய அந்த புது முயற்சி, மற்றவர்களும் அந்த தீவிற்கு நன்கொடைகளை திரட்டி நிதியுதவி அனுப்ப தூண்டுதலாக அமைந்தது.§



*பெரும்பாலும் கவாய் ஆதீனத்தில் தினமும், பார்வையாளர்கள் குரு பீடத்தில் குருதேவாவை சந்தித்து, தங்கள் வாழ்க்கையின் குறிக்கோள்கள் மற்றும் பிரச்சனைகளை தெரிவித்து, அதற்கு ஆன்மீக ஆலோசனையை பெற்று, வாழ்க்கைக்கு உறுதி அளிக்கும் ஆசிகளுடன் கையில் ஒரு புத்தகத்துடன் கிளம்பினார்கள்.*

……………………..§


கலவரம் தொடங்கியவுடன், குருதேவா அளவெட்டியில் இருந்த தனது ஆசிரமம் மற்றும் பள்ளியை மூடினார். பதினைந்து வருடங்கள் கழித்து அவர் வழங்கிய குறிப்பு:§



*ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் நடைபெற்ற குரு பூர்ணிமா விழாவில், துறவிகளும் சீடர்களும் குருதேவாவை ஊர்வலமாக, சுயம்பு லிங்கம் வரை சன் மார்க பாதையில் அழைத்து சென்று, அங்கே அவருக்கு பாத பூஜை செய்வார்கள்.*

........................§

ஊரில் இருந்த முதியோர்கள் கொடுத்த தகவலின் மூலம் விரைவில் போர் வரவிருக்கிறது என்பதை தெரிந்துகொண்டு, நாங்கள் இலங்கையில் எங்கள் நடவடிக்கைகளை நிறுத்தி, எங்கள் பணிகளை அமெரிக்காவிற்கு வெளியே மொரீஷியஸ் நாட்டில் கவனம் செலுத்தினோம். இலங்கை நாட்டை சேர்ந்தவர்கள் மொரீஷியஸ் நாட்டில் மறுபிறவி எடுக்க விரும்பியதாக முதியவர்களிடம் இருந்து தெரிந்து கொண்டோம். அதனால் இலங்கை நாட்டை சேர்ந்தவர்கள் மொரீஷியஸ் நாட்டில் மறுபிறவி எடுத்துக்கொண்டு இருக்கின்றனர். அவர்களுக்கு தற்போது பதினைந்து முதல் பதினெட்டு வயது வரை இருக்கலாம். நான் மொரீஷியஸ் நாட்டில் இளைஞர் முகாம்களை நடத்த இரண்டு சுவாமிகளை அனுப்பினேன். அந்த நாட்டில் இருக்கும் எங்கள் சமயப் பணியாளர்கள் சம்சாரிகளாக இருக்கிறார்கள், சமாஜத்தில் இருக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு சமயப் பணியாளர் குடும்பத்துடன் தொடர்பில் இருக்கிறார். ஒவ்வொருவரும் மற்றவர்கள் மீது கவனம் செலுத்துகின்றனர். §



*குருதேவா ஒவ்வொரு கண்டத்திலும், இந்து கோயில்களை நிர்மாணித்து, அதன் அறங்காவலர்களுக்கு வழிகாட்டி, அவர்களுக்கு நிதி திரட்டி உதவி செய்யவும் அங்கிருந்த சமூகங்களுடன் இணைந்து செயல்பட்டார். அவர் தனது வாழ்நாளில் 37 கோயில்களை நிர்மாணித்தார்.*

........................§

மேற்கு நாடுகளில் குடிபுகத் தொடங்கிய தமிழர்கள் குருதேவாவின் கம்பீரமான தோற்றம், பாரம்பரிய முறைகள் மற்றும் தெளிவான வழிகாட்டலின் மதிப்பை முழுமையாக புரிந்துக் கொண்டார்கள். அவர் அவர்களது இழப்புக்களை பற்றி புலம்பாமல், அவர்களுக்கு இருக்கும் வாய்ப்புக்களை காண்பித்து, தங்களது புதிய நாடுகளில் ஒரு அமைதியான வாழ்க்கையை வாழ ஆரம்பித்து அந்த சமூகத்தில் பங்குகொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டார். “உங்கள் பயணப்பெட்டிகளை திறந்து வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள்,” தனது கருத்தை தெளிவாக சுருக்கமாக கூறினார். பலர் தங்களது புதிய நாட்டில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாமல், இலங்கைக்கு அடுத்த விமானத்தை பிடிக்க காத்து இருப்பதை போல வாழ்ந்துக்கொண்டு இருந்தார்கள். அவர்கள் சென்ற புதிய நாட்டுடன் ஒன்று சேர்வது, குடியுரிமை பெறுவது, மக்கள் தொடர்புகள் பற்றி அவர் உட்பார்வைகளை வழங்கி, கலாச்சாரம் மற்றும் சமயம் வழிபாட்டில் இருந்து தோன்றும் என்றும், தங்கள் பாரம்பரியத்தை காப்பாற்றி அதை தங்கள் குழந்தைகளுக்கு வழங்க அவர்களுக்கு அருகில் கோயில்

இருக்கவேண்டும் என்று கூறி, ஒவ்வொரு குழுவும் ஒரு கோயிலை தொடங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவர் சிறிதும் தயங்காமல், தனக்கு பகல் அல்லது இரவு என்ற பாரபட்சம் இல்லாமல் எந்த நேரத்திலும் அழைப்பு வரும் என்பதை தெரிந்து, தனது சொந்த கைப்பேசி எண்ணை அவர்களுக்கு வழங்கினார். §

1995 ஆம் ஆண்டு, குருதேவா இரண்டு துறவிகளின் துணையுடன் 21 நாள் ஐரோப்பா பயணம் மேற்கொண்டு ஜெர்மனி, டென்மார்க், ஸ்விட்சர்லாந்து, ஆஸ்திரியா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளுக்கு சென்றார். அவர் அந்த நாடுகளில் இருந்து தமிழ் சமூகங்களை சென்று பார்த்து, ஹாம் நகரின் தெருவில் 11,000 மக்களின் அணிவகுப்பு மரியாதையை பெற்று, மதம் மாறியவர்களை மீண்டும் இந்து சமயத்திற்குள் அழைத்து வந்து, 1968 ஆம் ஆண்டு ஷும் மொழி வெளிவந்த அஸ்கோனா நகரத்திற்கு மீண்டும் சென்று, இந்த நாடுகளில் இருந்த ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகளின் வாழ்க்கையை மேம்படுத்தினார்.§

அவர் அவர்களிடம் “ஓம்காரத்தை" உச்சரித்து அமைதியை பிரார்த்தனை செய்து, இலங்கையில் இருந்து வெளியேறாமல் இருந்தவர்களுக்கு சக்திகளை அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். அவர் 1983 ஆம் ஆண்டில் இருந்து சொல்லி வந்த தகவலை மீண்டும் கூறி, உள்ளூர் சமூகத்துடன் அன்புடன் பழகும் வழிகளை அவர்களுக்கு கற்றுத் தந்தார்:§

> நீங்கள் இந்த நாட்டிற்கு உங்கள் கர்மவினைகளின் காரணமாக வந்து இருக்கிறீர்கள். உங்களுக்கு இங்கே கொழும்பு பல்கலைகழகத்தை காட்டிலும் அதிகமான வாய்ப்புக்கள் கிடைக்கும். உங்கள் குழந்தைகளுக்கு ஒரு பள்ளியில் சேர்த்து, நீங்கள் இருக்கும் நாட்டின் மொழியை தெரிந்துகொண்டு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள கற்றுக்கொள்ளுங்கள். இலங்கையில் நிரந்தர அமைதி திரும்பியதும், நீங்கள் அந்த நாட்டிற்கு திரும்பி செல்லலாம். §
>
> நாம் எல்லோரும் ஆதரவு அளித்த அரசுகளை மனமுவந்து பாராட்டுவோம் என்று நினைக்கிறேன். இதற்கு நாம் நன்றிகடனை பலவழிகளில் செலுத்தலாம். அதன் அங்கமாக, நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரையும் பார்த்து புன்னகைக்கலாம். நீங்கள் சிரித்ததால் அவர்கள் சிரிக்கிறார்கள் மற்றும் நீங்கள் சிரித்ததால் விரைவில் உலகமே சிரிக்கிறது. நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க, நீங்கள் மற்றவர்களை மகிழ்விக்க வேண்டும். §

திருமதி. புவனேசம் வீரகத்தியர் பின்வரும் குறிப்பை பகிர்கிறார்:§

> அவர் பெர்லின் நகரத்தில் இருந்த ஒரு சிறுவர்கள் அகதிகள் முகாமிற்கு சென்று, சிறுவர்களுக்கு தேவையான பொருட்களை ஏற்பாடு செய்து தருமாறு அங்கிருந்த அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார். அவர் அதன் பிறகு ஒரு தாய்மார் குழுவினரை சந்தித்து பேசினார். அவர் அங்கிருந்த

> எங்களிடம், இந்த சிறுவர்களின் வாழ்க்கைகள் ஒரு தாயின் அன்பிற்காக ஏங்குவதாக தெரிவித்தார். சிறுவர்கள் மற்றும் மற்ற அகதிகளை எங்கள் வீட்டிற்கு உணவு அருந்த அழைத்து, அவர்களை எங்கள் குடும்பத்தில் ஒருவராக ஏற்றுக்கொள்ள அவர் எங்களுக்கு உற்சாகமளித்தார். எங்களில் பலர் இந்த பழக்கத்தை இன்றும் கடைப்பிடித்து வருகிறோம். §

குருதேவா தனது பயணங்களின் போது வழங்கிய பல ஆயிரக்கணக்கான முகவரி அட்டைகள் மற்றும் புகைப்படங்களில் இருந்த விசேஷமான அற்புத சக்தியை பற்றி பலர் கூறுகிறார்கள். குருதேவாவின் புகைப்படத்தை காண்பித்ததும், தங்களால் இலங்கை இராணுவத்தின சோதனை சாவடிகளை சிக்கலில்லாமல் கடக்க முடியாததாக சிலர் குறிப்பிட்டனர். இது தொடர்பாக எம். இளங்கோவன் தனது அனுபவத்தை குறிப்பிடுகிறார்: §

> 1990 ஆம் ஆண்டில் எனக்கு 14 வயதாக இருந்த போது, நான் இந்தியாவிற்கு சென்ற ஒரு மீன்பிடி படகில் இலங்கையில் இருந்து கிளம்பினேன். எனது பணப்பையில் புகைப்படமாக குருதேவாவின் படம் மட்டுமே இருந்தது. அந்த புகைப்படம் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ள உதவிகரமாக இருந்தது. அந்த புகைப்படத்தை நான் இன்றும் எனது பணப்பையில் வைத்து இருக்கிறேன். குருதேவா என்னுடன் எப்போதும் இருந்து, உதவி செய்து வழிகாட்டி வருகிறார். §

இலங்கையில் நடந்த சண்டையின் போது இறந்த தமிழ் மக்களுக்காக அவர் அந்தர்லோகத்தில் இருந்தது மட்டுமல்லாமல், குருதேவா அவர்களுக்கு அதிக வலுவான சூட்சுமமான வழிகளில் காட்சியளித்தார். அவர் காலை நேரங்களில் உறங்குவதை கண்ட அவரது கவாய் மடத்தின் துறவிகள், அவரிடம் அவரது உடல்நலம் பற்றி விசாரித்தார்கள். அவர் தான் நன்றாக இருப்பதாக அவர்களுக்கு உறுதி அளித்தார்; அவர் தனக்கு கிடைத்த ஓய்வு நேரத்தில் அந்தர்லோகங்களில் சுறுசுறுப்பாக இயங்கி, தன்னை காண நீண்ட வரிசையில் காத்து இருந்த இலங்கையில் இறந்த ஆன்மாக்களுக்கு ஆசிகளை வழங்கி, அவர்கள் நெற்றியில் *விபூதியை* பூசிக்கொண்டு இருந்தார். அவர் தொலை தூரத்தில் இருந்த தனது சீடர்களை அந்தர்லோகத்தில் சந்தித்து, அவர்கள் வாழ்க்கை மற்றும் கர்மவினைகளில் உதவி செய்து ஆறுதல், வழிகாட்டல் மற்றும் பாதுகாப்பை வழங்கினார். §

கனடாவின் டொரன்டோவை சேர்ந்த திரு. சத்குநேந்திரன் தனது நினைவுகளை பகிர்கிறார்:§

> குருதேவா எங்களுக்கு ஒரு ஆன்மீக குருவாக மட்டும் இல்லாமல், கலாச்சார அதிர்ச்சியில் இருந்த இளையவர்கள் மற்றும் முதியவர்களுக்கு அதிக மரியாதைக்குரிய ஆலோசகராகவும் இருந்தார். நான் குருதேவாவை சந்தித்த ஒவ்வொரு முறையும், அவர் இலங்கை அமைதிப் பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தை பற்றி விசாரிப்பார். அவர் மத்தியஸ்தராக தனது சேவையை வழங்க எப்போதும் தயாராக இருக்கும்

அளவிற்கு, தனது சற்குரு யோக சுவாமியை கண்டுகொண்ட இந்த நாடு மற்றும் அதன் மக்களின் மீது, இந்த தலைசிறந்த குருவிற்கு அன்பு இருந்தது. அவர் இன்றும் அந்தர்லோகத்தில் இருந்துக்கொண்டு, அமைதிக்காக முயற்சி செய்து வருகிறார் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். §

அப்போது இருந்த சில சவால்களை பற்றி குருதேவா விளக்குகிறார்: §

அந்த காலகட்டத்தில், இலங்கை சீடர்கள் அமைதியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள எங்களால் முடிந்த முயற்சிகளை மேற்கொண்டோம். இலங்கை மக்கள் ஒருமுறையின்றி குடியேறிக்கொண்டு இருந்ததால், நாங்கள் கடுமையாக முயற்சிக்க வேண்டியிருந்தது. ஜெர்மனியில் இலங்கை சிறுவர்கள் “கன்டெய்னர் சிறுவர்கள்" என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள் ரஷ்யாவிற்கு கடத்தப்பட்டார்கள், மற்றும் அவர்கள் ரஷ்யாவில் கன்டெய்னர்களில் வைக்கப்பட்டு ஜெர்மனிக்கு கடத்தப்படுவார்கள். பலர் மூச்சடைப்பு ஏற்பட்டு இறந்தனர். ஆனால் பெரும்பாலானோர் நல்ல நிலையில் வந்து சேர்ந்தனர். அவர்களுக்கு ஆதரவு அளிக்குமாறு  நாங்கள் தமிழ் குடும்பங்களிடம் கேட்டுக்கொண்டோம். அகதிகளிடம் ஜெர்மன் அரசு கருணை மற்றும் அன்புடன் உதவி செய்தது. §




*இலங்கை, ஃபிஜி, டெக்சாஸ் மற்றும் மற்ற இடங்களில், கோயில் குடமுழுக்கு விழாவின் போது, குருதேவா கோயில் கோபுரத்தை புனிதமான கும்பத்தால் அபிஷேகம் செய்து வைத்தார்.*

........................§

**"கோயில்களை நிர்மாணம் செய்யுங்கள்!"**

குருதேவா பக்குவமாக வாழ தொடங்கியதில் இருந்து, மதம் மற்றும் கலாச்சாரத்தின் மையமாக இந்து கோயில் இருக்கவேண்டிய தேவையை உணர்ந்து கொண்டார். அவர் பல்வேறு கண்டங்களில் 37 கோயில்களை திட்டமிட்டு நிர்மாணம் செய்வதில் அல்லது குடமுழுக்கு நடத்துவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். இந்துக்கள் உலகின் எந்த நாட்டில் இருந்தாலும், அவர்கள் இயல்பான வசதியான உணர்வை பெறுவதற்கு, அவர்களுக்கு அருகில் கோயில்கள் இருக்கவேண்டும், குறிப்பாக மகாதேவர் மற்றும் தேவர்களை பக்தர்கள் அணுக உதவியாக இருக்கும் கோயில்களின் தேவையை அவர் அறிந்து இருந்தார். மேலும் தேவர்கள் சிலை வடிவங்களாக மட்டுமே இருக்கின்றன என்று சிலசமயம் குறிப்பிடப்படுவதைப் போல

இல்லாமல், உண்மையில் அவர்கள் அந்தர்லோகத்தில் வாழும் சக்திகள் என்று அவர் எல்லோருக்கும் உறுதி அளித்தார். சொர்க்க லோகத்தில் வாழும் சக்திகள் என்ன செய்கிறார்கள் மற்றும் தங்களிடம் உதவியை நாடும் பத்தர்களுக்கு அவர்கள் எவ்வாறு யதார்த்தமான ஆதரவை வழங்குவார்கள் என்று அவர் தனது சொந்த அனுபவத்தில் அதிக ஆர்வத்துடன் விளக்கினார். §



*‘கடவுள்’ இந்து கோயிலில் ஒவ்வொரு வாரமும் நடைபெற்ற ஹோமம், மடம் மற்றும் அன்பர்களின் ஒரு முக்கிய சடங்காக மாறியது. அதன் பிறகு அவர் ஒரு சிறிய சொற்பொழிவை வழங்கி, சைபர்கேடட்ஸ் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளித்து, வந்திருந்த அன்பர்களுக்கு தனது ஆசிகளை வழங்குவார்.*

........................§

எனது சீடர்கள் அடிக்கடி யாத்திரை மேற்கொண்டு, வழிபட்டு ஆன்மீக பாதுகாப்பை பெறுவதற்கு விநாயகர், முருகன் அல்லது சிவன் கோயில்கள் இருக்கும் இடத்தில் விவேகத்துடன் குடி புகுவார்கள்.

அத்தகைய புனிதமான கோயில்களுக்கு செல்ல, ஒரு நாளை விட அதிகமான பயணதூரத்தில்  யாரும் வாழக்கூடாது. மூன்று லோகங்களும் சந்திக்கும் இந்து கோயில்களில், பக்தர்கள் நமது சமயத்தை சேர்ந்த தேவர்களை ஆவாகனம் செய்கிறார்கள். மாளிகை போல கட்டப்படும் கோயிலில், தேவர்கள் வாசம் செய்கிறார்கள். அது பூமியில் இருக்கும் மற்ற இடங்களை போல இல்லாமல், அது கண்களுக்கு தென்படும் தேவர்களின் பிரத்யட்சமான வீடாக, ஒரு புனிதமான இடமாக இருக்கிறது. ஒரு இந்து கோயிலுக்குள் நுழையும் போது, மிகவும் நுணுக்கான முறையில் தன்னை இந்த தேவர்களுடன் தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டும். §

மூன்றாவது லோகத்தில் வாழ்ந்து, நமது பூசாரிகள் பூஜை செய்து கற்சிலைகளில் அவர்களின் சக்திகளை ஆவாகனம் செய்யும் போது அவர்கள் மூன்றாவது லோகத்தில் இருந்து பூமிக்கு வருவதால், நீங்கள் ஒரு கோயிலுக்குள் நுழையும் போது மனதில் கவலை, பொறாமை மற்றும் கோபத்துடன் நுழைந்து, மனச்சுமைகளில் இருந்து விடுபட்டு பாதுகாப்பு உணர்வுடன் வெளியே வரும் போது நான் எதை நினைத்து வருந்திக்கொண்டு இருந்தேன் என்று சிந்திக்கும் அளவிற்கு, தலைசிறந்தவர்களாக விளங்கும் தெய்வீக மனநல மருத்துவர்களாக இருக்கிறார்கள். §


பெரும்பாலான சுவாமிகள் கோயில்களை ஸ்தாபனம் செய்வதில் ஆர்வமாக இல்லாமல் சமூக மேம்பாடு, தத்துவ பாடங்களை கற்பித்தல் மற்றும் யோகத்தில் கவனம் செலுத்த விரும்பும் போது, குருதேவாவின் அணுகுமுறை மாறுபட்டு இருந்தது. அவர் தனது அணுகுமுறையை விளக்குகிறார்:§

1980 களில், நமது நாட்டின் பல்வேறு மாகாணங்களில், கோயில்களை ஸ்தாபனம் செய்வதில் தாங்கள் தீர்க்கமான முடிவை எடுக்க உதவி செய்யவேண்டும் என்று, புதிதாக உருவாகும் கோயில் மற்றும் கலாச்சார குழுக்களின் இந்து இந்திய சமூகத் தலைவர்கள் என்னை அணுகினார்கள். நாங்கள் அவர்களுக்கு உதவியாக முதன்மை கடவுளாக வழிபடும் விநாயகரின் பெரிய சிலையை பரிசாக வழங்கினோம். இந்த காலகட்டத்தில் வட அமெரிக்கா முழுவதும் கோயில் குழுக்களுக்கு ஊக்குவிப்பும் உத்வேகமும் வழங்கப்பட்டது. அதற்கு அடுத்த இரண்டு வருடங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளால், *தாதிக்கள்* மற்றும் *தாதாக்கள், அப்பாக்கள்* மற்றும் *அம்மாக்கள்* மற்றும் அவர்களது சந்ததிகள் திருப்தி அடைந்து நிதியுதவி வழங்கத் தொடங்கியதால் மற்ற தெய்வங்களை வைக்க பல மில்லியன் டாலர் செலவில் கோயில்கள் கட்டப்பட்டன. இதன் மூலம் நாங்கள் இந்து மக்களுக்கு புதிய சேவையை வழங்க ஆரம்பித்தோம். §

அதே சமயத்தில் நாங்கள் ஐரோப்பாவில் கோயில்களை தொடங்க ஊக்குவிக்க ஆரம்பித்தோம். நாங்கள் அடித்தளத்தில் பூஜையை

செய்துக்கொண்டு இருந்த ஒரு சிறிய குழுவை சந்தித்தோம். நான் அவர்களிடம் ஐம்பது டாலர்களை வழங்கி, "நாம் ஒரு கோயிலை தொடங்க இருக்கிறோம்," என்று கூறினேன். ஆறு மாதங்கள் கழித்து அவர்கள் ஒரு பெரிய கிடங்கை வாடகைக்கு எடுத்து, அதற்குள் மிகவும் அழகான கோயிலையும், பூஜை செய்வதற்கு இலங்கையில் இருந்து பூசாரியையும் ஏற்பாடு செய்து இருந்தனர். நான் மீண்டும் அந்த நாட்டிற்கு அழைக்கப்பட்டு, பத்தாயிரம் பக்தர்கள் பங்குபெற்ற அணிவகுப்பில் அந்த கோயில் பிரகாரத்தை சுற்றி அழைத்து செல்லப்பட்டேன். பக்தி பெருவெள்ளத்தை பார்த்த காவல்துறை, அந்த பகுதியில் போக்குவரத்தை முழுவதுமாக முடக்கி இருந்தது. §

அமெரிக்காவின் கேபிட்டோல் கட்டிடத்திற்கு அருகில், வட அமெரிக்காவின் மேரிலாந்தில் பல மில்லியன் டாலர் செலவில் கட்டப்பட்ட முருகன் கோயிலின் ஸ்தாபகர்களில் ஒருவரான ஆறுமுகம் சரவணபவன், குருதேவா கோயில் கட்டுவதற்கு அளித்த உத்வேகம் பற்றி தனது அனுபவத்தை பகிர்கிறார்:§



*குருதேவா தினமும் தனது துறவிகள் அனைவருடனும் சேர்ந்து அமர்ந்து மதிய உணவு உண்பார். அவரது இருக்கையின் இருபுறத்திலும் தேக்கு மரத்தில் தயாரிக்கப்பட்ட யானைகள் இருக்கும். கீழே செங்கல் தரையில் துறவிகள் அமர்ந்துகொண்டு, தங்கள் குரு மற்றும் சகோதரர்களுடன் செய்திகளை பகிர்ந்துகொண்டு, பாரம்பரிய முறையில் தங்கள் கைகளால் உணவு அருந்துவார்கள்.*

……………………§

எங்கள் பகுதியில் நாங்கள் ஒரு கோயில் கட்ட விரும்பினோம். நாங்கள் நிலமும் இல்லாமல், எப்படி தொடங்குவது என்று தெரியாமல் தவித்த போது, ஹவாய் தீவில் இருக்கும் சுப்பிரமுனியசுவாமியை சென்று பாருங்கள் என்று எனக்கு ஒருவர் 1982 ஆம் ஆண்டில் பரிந்துரைத்தார். அதற்கு அடுத்த வாரம் நானும் என் மனைவியும் அவரை சென்று பார்த்தோம். நான் பிரச்சனையை விளக்கிய போது, அவர் ஒரு மூன்று-அடி உயர விநாயகர் சிலையை எங்களுக்கு பரிசாக வழங்கினார். “உங்களுடன் இந்த பிள்ளையாரை எடுத்து செல்லுங்கள், கோயில் கட்டுவதற்கு அவர் உங்களுக்கு வழி காட்டுவார்,” என்று அவர் கூறினார். §

குருதேவா அறிவுறுத்தியபடி, அவர்கள் முதலில் தங்கள் வீட்டில் விநாயகர் பெருமானை வழிபட ஆரம்பித்தார்கள். அந்த சமூகத்தின பக்தி பக்குவம் அடைந்தது. குருதேவா பலமுறை வருகை தந்து, திட்டமிடுவதில் உதவி செய்து அவர்கள் வாங்கிய நிலத்திற்கும் தனது ஆசிகளை வழங்கினார். “ஆசிகளை வழங்கி குருதேவா வழங்கிய உரையால் குழந்தைகள் கவர்ந்து இழுக்கப்பட்டனர். அவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் அவர் நமது மதத்தைப் பற்றி தெளிவாக விளக்கினார்,” என்று கோயிலின் முதல் தலைவரின் மனைவி திருமதி. குருசுவாமி நினைவுக் கூர்ந்தார். 1999 ஆம் ஆண்டு கோயில் நடத்திய *மகாகும்பாபிஷேகத்தில்,* குருதேவா கௌரவ விருந்தினாரக கலந்துகொண்டார். அந்த கோயில் வெளியிட்ட ஒரு செய்தி அறிக்கை தனது நன்றியை தெரிவித்துக் கொண்டது: §

குருதேவா தனது துறவிகளின் துணையுடன், மக்கள் சமூகத்தை உருவாக்கி கட்டுமான பணி வரை, முருகன் கோயிலை கட்டுவதில் ஒவ்வொரு நிலையிலும் உதவி செய்தார். அவருக்கு மற்ற கடமைகள் இருந்தாலும், கோயில் பக்தர்களிடம் இருந்து வந்த தொலைபேசி அழைப்புக்களுக்கு  தனது நேரத்தை ஒதுக்கிக்கொண்டார். அவர் இளைஞர்களை ஊக்கமளித்து, எங்களில் பலரது இதயங்களில் இடம் பிடித்தார். §


1982 ஆம் ஆண்டு, அவர் சிகாகோ சென்ற போது, ஒரு கோயிலை தொடங்கும் ஆர்வத்துடன் இருந்த ஒரு குழுவை சந்தித்தார். அதற்கு முன்பு, அந்த குழுவில் அறங்காவலர்களில் ஒருவராக இருந்த Dr. N. ஜானகிராமன், கவாய் வந்து இருத்நார். அவர்கள் பல பிரச்சனைகளை சந்தித்ததால், அடுத்த என்ன

செய்வது என்று ஒரு தீர்மானத்திற்கு வரமுடியவில்லை என்று ஜானகிராமன் விளக்கினார். ஆனால் குருதேவா சொல்வதை கேட்டு செயல்படலாம் என்று எல்லோரும்  ஒப்புக்கொண்டனர். குருதேவா அவர்களிடம் விநாயகரை வழிபடத்  தொடங்குங்கள் என்று கூறினார். “குருதேவாவிடம் ஆசிகளை பெற்ற பிறகு, நாங்கள் எங்கள் வீடு திரும்பினோம். ஆனால் நாங்கள் வியக்கும் வண்ணம், விநாயகர் எங்களுக்கு முன்பாக ஓ’ ஹேர் விமான நிலையத்திற்கு வந்து இருந்தார். குருதேவா அதை பரிசாக அனுப்புவார் என்பதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை,” என்று ஜானகிராமன் கூறினார். §

2000 பவுண்ட் எடைக்கொண்ட அந்த சிலையை ஒரு சிறிய பக்தர்கள் குழு வரவேற்று, அதை திரு. ராஜகோபாலின் வீட்டில் வழிபடலாம் என்று முடிவு செய்தனர். பெருகிய மக்கள் வெள்ளத்தை அந்த சிறிய வீட்டில் சமாளிக்க முடியவில்லை, அதனால் அவர்கள் 1983 ஆம் ஆண்டு ஒரு தொழில்துறை வளாகத்திற்கு இடம் பெயர்ந்தனர். அந்த சமூகத்துடன் இணைந்து செயல்பட்டு, தனக்கு கோயில் பணியில் நடைபெறும் முன்னேற்றத்தைப் பற்றி தெரிவிக்க, குருதேவா அந்த ஊரில் வசித்த தனது சீடர்களில் ஒருவரான திரு. தேவானந்த தண்டவனை நியமித்தார். இவ்வாறு கிரேட்டர் சிகாகோவின் இந்து கோயில் உதயமானது.§

குருதேவா கோயில்களுக்கு அதிக அளவில் நிதியுதவிகளை திரட்டினார். அவர் சிகாகோவில் நடைபெற்ற ஒரு சில நிதி திரட்டும் கூட்டங்களில் கௌரவ விருந்தினராக பங்குபெற்று, ஒவ்வொரு முறையும் ஊக்கமளிக்கும் சொற்பொழிவை வழங்கி, கூட்டத்தில் திரண்டு இருந்த மக்கள் தங்கள் காசோலையை எடுத்து, அதில் ஒரு எண்ணுடன் தொடங்கி— “பின்னர் மேலும் சில பூஜ்ஜியங்களை சேர்க்குமாறு” கேட்டுக்கொண்டார்.§

அவர் சிங்கப்பூரில் புணர் நிர்மாணம் செய்யப்பட்டு வந்த ஒரு கோயிலுக்கு சென்ற போது, புதிய கோயிலின் ஒவ்வொரு சதுர அடிக்கும் $100 என்று நிதி திரட்ட (ஸ்பான்சர்) திட்டமிட்டுள்ளதாக அதன் அறங்காவலர்கள் விளக்கினார்கள். அவர் உடனே தனது பணப்பையை எடுத்து, $100 வழங்கி ஒரு ஸ்பான்சர்ஷிப்பை வாங்கினார். அறங்காவலர்களின் முகத்தில் அதிர்ச்சியை பார்க்கும் போது, அவர்கள் கோயிலுக்கு நிதியுதவி செய்த முதல் வெளிநாட்டு சுவாமியாக குருதேவா இருக்கலாம் என்று தோன்றியது. அதன் பிறகு அவர் வழங்கிய சொற்பொழிவில், கோயிலில் கூடியிருந்த மக்களிடம் நிதியுதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டார். “நான் $100 நிதியுதவி செய்தேன், ஏனென்றால் அந்த நல்ல கர்மவினையின் பலன் என்றாவது ஒரு நாள் $500 வடிவில் என்னை வந்து சேரவேண்டும்,” என்று கூறினார். §



தீட்சைகள் துறவற சமூகத்தில் முக்கிய மைல் கற்களாக விளங்குகின்றன. குருதேவா தனது பாரம்பரிய சிம்மாசனத்தில் இருந்து ஆசிகள், சந்தனம், விபூதி மற்றும் மடத்தில் தயாரித்த ருத்ராட்ச மாலைகளை வழங்குவார்.

........................§

உலகெங்கும் கோயிலுக்கு நிதி திரட்டும் பணியை வலுப்படுத்த அதே மாதிரியான ஊக்கமளிப்பு வழங்கப்பட்டது. தனது நிதி தேவைகளை பற்றி குறிப்பிடாமல், அவர் மற்றவர்களுக்காக நிதி திரட்டுவது மக்களின் மனதை கவர்ந்தது. மற்றவர்களை வலுப்படுத்துவதன் மூலம் தாங்களும் வலுவடைவார்கள் என்றும்; மற்றவர்கள் கோயில்களை கட்டுவதற்கு உதவி செய்வதன் மூலம், தனது கோயிலைப் பற்றி மற்றவர்கள் தெரிந்துக் கொள்வார்கள் என்றும் அவர் தனது துறவிகளிடம் அடிக்கடி சொல்லிக்கொண்டு இருந்தார். அதற்கு அடுத்த சில வருடங்களில், இக்கட்டான நிலைமையில் அவரிடம் இருந்து உதவியை பெற்ற பலர், அவருக்கு தங்கள் நன்றியுணர்வு வெளிப்படுத்த ஆரம்பித்து இருந்தார்கள். §

அதைப் போலவே, குருதேவா அமெரிக்கா, கனடா, குவாடலூப், டென்மார்க், இங்கிலாந்து, ஃபிஜி, ஜெர்மனி, மொரீஷியஸ், நியூசிலாந்து, ரியூனியன், ரஷ்யா, சுவீடன் மற்றும் இலங்கையில் இருந்த மற்ற முப்பத்தி ஆறு கோயில்களில் நேரடியாக ஈடுபட்டு, ஒவ்வொரு சமூகம் அல்லது கோயிலுக்கு தேவைப்படும் போது ஒரு கருங்கல் சிலை மற்றும் வழிகாட்டலை வழங்கினார். அவர் மேலும் பலருக்கு நேரடியாக அறிவுரை வழங்கி உதவி


செய்து, பெரும்பாலும் நிதி திரட்டுதல், கோயில் நிலத்தின் பயன்பாடு பற்றிய முடிவு, கோயிலுக்கு அருகில் இருக்கும் மக்கள் சமூகத்துடன் உறவை வலுப்படுத்துதல், பூசாரிகள், கடன் மேலாண்மை மற்றும் மேலும் பல விவகாரங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார். §

அவரது கவனமாக வழிகாட்டலைப் பெற்ற பல கோயில்களில் கனடாவின் எட்மன்டனில் இருக்கும் மகாகணபதி கோயிலும் ஒன்றாக இருந்தது. அவர் மேலும், இந்த கோயிலின் முதல் பூசாரியை இலங்கையில் இருந்து அழைத்து வந்து, அவர் கனடாவில் குடிபுகுவதற்கு தேவையான உதவிகளை செய்தார். அந்த இலங்கை பூசாரியின் பெயர் சுப்பிரமணிய குருக்கள். அவர் யோக சுவாமியை சிறுவயதில் இருந்தே அறிந்து இருந்தார். அந்த சமூகத்தில் ஒரு வழக்கறிஞராக இருந்த ஆரன் வேலன் தனது நினைவுகளை பகிர்கிறார்: §

> எட்மன்டனில் கோயில் கட்டவேண்டும் என்ற எண்ணம் குருதேவாவிடம் இருந்து வந்தது. இவ்வாறு குருதேவாவுடன் தொடர்பில் இருப்பதால், அது அந்த கோயிலுக்கு ஒரு விஷேச சக்தியை வழங்குகிறது. 70 களின் தொடக்கத்தில் தமிழர்கள், கிறுத்துவர்கள் மற்றும் இந்துக்கள் கலந்த ஒரு தமிழ் கலச்சார குழுவாக இருந்ததால், அவர் தமிழ் சமூகம் முழுவதையும் ஒன்று சேர்த்து “தமிழ் இந்துக்கள்" என்று அந்த சமூகத்திற்கு பெயர் வழங்கினார். இன்று அந்த சமூகம் தமிழ் சைவ சமூகம் என்று வளர்ச்சி அடைந்துள்ளது என்றால் அதற்கு, குருதேவாவின் செல்வாக்கு மட்டுமே ஒரே காரணமாக விளங்குகிறது. §

ஒருவர் அங்கத்தினர் உரிமை பெறுவதற்கு அவர் சைவ இந்துவாக இருக்க வேண்டும் என்று கோயிலின் அடிப்படை கொள்கைகளை உருவாக்கும் அளவிற்கு, அந்த சமூகம் வலுவடைந்து இருந்தது. இதன் காரணமாக, அந்த கோயில் தற்போது மிகவும் தெளிவாக வலுவான சக்தியுடன இருப்பதாக தொடக்ககால உறுப்பினர்களில் ஒருவரான டி. செல்வராஜா கருதுகிறார். இந்த கோயில் கனடாவின் சிறந்த கோயில் என்றும், இது மற்ற கோயில்களுக்கு சிறந்த முன் உதாரணமாக விளங்குகிறது என்றும், இங்கே கனடா முழுவதில் இருந்தும் வருகை தரும் மக்கள், செல்வராஜாவிடம் கூறியுள்ளனர். அதைப்பற்றி அவர் தனது அனுபவத்தை நினைவுக்கூர்கிறார்:§

> “நீங்கள் எல்லோரும் இலங்கையில் கோயிலை நிர்மாணித்து இருக்கிறீர்கள். இன்று உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, உங்களுக்கு தெரிந்ததை நீங்கள் அவர்களுக்கு கற்றுத்தர வேண்டும். குடும்பங்களை ஒன்று சேர்ப்பது மற்றும் குழந்தைகளை ஒன்று சேர்க்கும் பணியை கோயில்கள் நிறைவாக செய்கின்றன,” என்று குருதேவா எங்களிடம் தொடக்கத்தில் கூறினார். §



*மும்பையில் இருந்த 89 ஆதிசைவ பூசாரிகளின் எதிர்காலம் பற்றி அவர்களிடம் பேசி, அவர்களுக்கு தனது ஆதரவை வழங்கும் பொருட்டு 1995 ஆம் ஆண்டில், குருதேவா அவர்களை சந்தித்தார். அவர் தனது வாழ்க்கை முழுவதும் பூசாரிகளுக்கு முக்கியத்துவம் அளித்து, அவர்களது முக்கியத்துவத்தைப் பற்றி சமூகத்தில் மற்றவர்களுக்கு கற்றுத் தந்தார்.* §

குருதேவா டென்மார்க் நாட்டில், அபிராமி அம்மன் கோயிலை ஸ்தாபனம் செய்ய உதவி செய்தார். பெண் பூசாரியாக இருந்த ஸ்ரீ அபிராமி உபாசகி, ஆழமான மனோஉணர்வு சக்தியுடன் இருந்தார். அவர் நினைவு இழந்த நிலையில், அம்மனின் சக்தியை பக்தர்கள மீது இயக்கி, அவர்களின் வேதனைகளை குறைத்து ஆசிகளை வழங்குகிறார். இதற்காக அவர் தொடக்கத்தில் விமர்சிக்கப்பட்டார். அம்மனின் சக்திகளை பக்தர்களின் நன்மைக்காக இயக்குவதாகவும், அதனால் தீங்கு எதுவும் விளைவது இல்லை என்று அவர் கருதியதால், 1995 ஆம் ஆண்டு அவர் குருதேவாவின் உதவியை

நாடினார். குருதேவா உபாசகி செய்வது சரிதான் என்று அவருக்கு உறுதி அளித்து, அந்த உபாசகியை தனது மனோஉணர்வு பாதுகாப்பில் வைத்துக்கொள்ள ஒரு விநாயகர் சிலையை அவருக்கு வழங்கினார். அந்த சிலை ஆகஸ்ட் மாதம் விநாயகர் சதுர்த்தி அன்று வந்து சேர்ந்தது. அவர்கள் அன்றே அதை வழிபட ஆரம்பித்த போது, விநாயகரின் கண்களில் இருந்து பால் சொட்ட ஆரம்பித்தது. §

ஒரு மாதம் கழித்து, உலகெங்கும் பிரபலமான “பால் அதிசயம்" நடந்தது, மற்றும் இந்த சிறிய சிலைக்கு முன்பாக ஒரு சிறிய கரண்டியில் வழங்கப்பட்ட பாலை பல காலன் கணக்கில் குடிக்க ஆரம்பித்தது. அதன் பிறகு பல நாட்களுக்கு நூற்றுக்கணக்கான இந்துக்கள், டென்மார்க் நாட்டவர்கள் மற்றும் தொலைக்காட்சி நிருபர்கள் இந்த விநாயகருக்கு பாலை வழங்க வந்தனர். பலர் சாட்சியாக இருந்த இந்த சம்பவத்தை யாராலும் விளக்க முடியவில்லை.§

சில மாதங்கள் கழித்து, குருதேவா அந்த கோயிலுக்கு மூன்று அடி உயர அம்மன் சிலையை அனுப்பி வைத்தார். அந்த பெண் பூசாரி குருதேவாவின் ஆதரவுடன் ஒரு மதிப்பிற்குரிய ஆன்மீக தலைவியாக மாறினார். ஆகஸ்ட் 2001, குருதேவா வடக்கு ஐரோப்பா முழுவதும் மேற்கொண்ட பயண-ஆய்வு திட்டத்தின் போது, அந்த உபாசகியின் கோயிலுக்கு தனது சொந்த கைகளால் அடிக்கல் நாட்டி வைத்தார். §

உலகம் முழுவதும் நூறு கோயில்கள் கட்டப்பட்ட நிலையில், பல அறங்காவலர்கள் குருதேவாவிடம், “அடுத்த நடவடிக்கை என்ன?” என்று கேட்டார்கள். அதற்கு குருதேவா வழங்கிய பதில்:§

> ஒவ்வொரு கோயிலில் இருக்கும் மேற்பார்வையாளர்கள், தங்கள் பொறுப்புக்களில் அக்கறையுடன் செயல்படுவதை நான் காண விரும்புகிறேன். கோயில்கள் கட்டப்பட்டு பக்தர்களுக்கு அர்ப்பணிக்கப்படுள்ளன, சிலை வடிவமாக தெய்வங்கள் இருக்கின்றன, பூசாரிகள் இருக்கிறார்கள் மற்றும் பக்தர்கள் சமாஜங்களும் உள்ளன. முக்கியமான பதவிகளுக்கு தேர்வு செய்யப்பட்ட தலைமையும், கோயிலின் அறங்காவலர்களும் உண்மையில் முழுநேர ஆன்மீக தலைவர்களாக மாறி, பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி, தங்கள் சமூகத்தை ஒரு முன்மாதிரி சமூகமாக மாற்ற வேண்டும்.§

**“பூசாரிகளை தாக்குவதை நிறுத்துங்கள்!”**

உலகெங்கும் இருக்கும் இந்து கோயில்களில் சேவை செய்யும் பூசாரிகளுக்கு ஆதரவாக குரல் கொடுக்க குருதேவா தயாராக நின்றார். அவர் குறிப்பாக 90 களின் தொடக்கத்தில், கோயில் பூசாரிகளை நியாயமாக நடத்த வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார். பூசாரிக்கு ஆதரவாக வெகு சிலரே இருந்ததால், எதிர்பார்த்தவாறு அவர்கள் குருதேவாவிற்கு பெருமதிப்பு அளித்து, அவரை

எப்போதும் தங்கள் கோயில்களுக்கு வரவழைத்து அவ்வப்போது அவரை சென்று பார்த்தார்கள். §

"அவர் எங்களுக்கு பெரும் ஆதரவாக இருந்தார். பல அமைப்புக்கள் மற்றும் அரசாங்கமும் எங்களை அவமதித்த கடினமான தருணங்களில், அவர் எங்களுக்கு வழங்கிய ஆதரவை உலகெங்கும் தெளிவாக வெளிப்படுத்தினார்," என்று இதைப்பற்றி ஆதிசைவ பூசாரிகள் சமூகத்தின் தலைவராக இருந்த சிவஸ்ரீ Dr. டி. எஸ். சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் எழுதினார். குருதேவா தனது இந்துயிசம் டுடே பத்திரிகையின் ஆசிரியர் பக்கங்களில் வழங்கிய குறிப்பு:§

இந்து பூசாரிகள் என்கிற *பூஜாரிகள்* உடல், உணர்ச்சி மற்றும் மனம் ரீதியாக கோயில் மேலாளர்கள், அறங்காவலர்கள் மற்றும் சில சமயங்களில் பக்தர்களாலும் தாக்கப்படுகிறார்கள். நம் எல்லோருக்கும் இது தவறான நடத்தை என்று தெரிந்து இருந்தாலும், தங்களை தற்காக்கும் சில பூசாரிகளைத் தவிர, வெகு சிலரே இதை முன்வந்து எதிர்க்கிறார்கள். அர்த்தம் தெரியாமல் மனப்பாடம் செய்து சடங்குகளை செய்யும் படிப்பறிவு இல்லாத, எளிமையான மக்களாக அவர்களை நிர்வாகம் கருதுவதால், தங்கள் பாதுகாப்பிற்கு அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் மற்றும் எதிர்ப்புக்களை பெரும்பாலும் யாரும் கவனிப்பது இல்லை. §

இந்தியாவிற்கு வெளியே பூசாரியை தாக்குவது ஒரு பிரபலமான பொழுதுபோக்காக இருக்கிறது. பூசாரிகளுக்கு என்று ஒரு *சங்கம்* உள்ளது மற்றும் இந்தியாவில் இருக்கும் அதன் சங்கத் தலைவர்கள் பூசாரிகளுக்கு துணை நிற்கிறார்கள். ஒரு பூசாரி மீது வெறுப்பு ஏற்படும் போது, கோயில் காணிக்கையாக செலுத்தும் பணத்தை தவறாக பயன்படுத்துகிறார்கள் என்று சிறிய காரணங்களை பயன்படுத்தி அவர்கள் தாக்கப்படுவது மிகவும் பிரபலமான மற்றும் முதன்மையான உத்தியாக இருக்கிறது. மிகவும் நீளமாக இருக்கும் இந்த பட்டியல், அந்த பூசாரியை திட்டுவதற்கு, தள்ளி விடுவதற்கு, அவரது தேவைகளை புறக்கணிப்பதற்கு, அவரது சகாக்கள் மற்றும் சில சமயம் பொதுமக்கள் முன்னிலையிலும் அவரை அவமானப்படுத்த நிர்வாகத்திற்கு அனுமதி அளிக்கிறது. §

ஆம், இந்து கோயில் பூசாரியை தாக்குவது ஒரு சர்வதேச உத்தியாக இருக்கிறது, மற்றும் அந்த தவறை செய்பவர்கள் சனாதன தர்மத்தின் மீதும் தாக்குதல் நடத்துகிறார்கள். பூசாரிகளிடம் தவறாக நடந்துக்கொள்பவர்கள் மீது தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். மகாதேவர்களை வழிபட்டு அவர்களிடம் இருந்து ஆசிகளை வரவழைக்கும் திறமையுடைவர்கள் கோபப்படும் போது, அவமானப்படும் போது மற்றும் அவர்கள் மனம் வலுவாக புண்படுத்தப்படும் போது, அவர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள, இந்த கிரகத்தில் இருக்கும் *அசுர* சக்திகளிடம் இருந்து சாபங்களையும் வரவழைக்க முடியும். ஹவாய் தீவை சேர்ந்த வலுவான கஹூனா என்ற பூசாரி குழுவின்

சீடர்களை, கிறுத்துவர்கள் முழுமையாக மதம் மாற்றிய போது, இந்த அசம்பாவிதம் தான் நடந்தது. சிலர் கோபமுற்று, தலைசிறந்த கண்கட்டி வித்தைகாரர்களாக மாறினார்கள். அவர்களை கண்டு இன்றும் மக்கள் அஞ்சுகிறார்கள். அவர்கள் தற்போது பூமிக்கு அருகில் இருக்கும் சூட்சும லோகமான *பிரேதலோகத்தில்* வாழ்ந்துகொண்டு, தவறு செய்பவர்களை வருத்தி, விசுவாசமாக இருப்பவர்களுக்கு உதவி செய்கிறார்கள். இது இவ்வாறு நடக்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், இவ்வாறே நடந்தது. §

இந்து கோயில் பூசாரிகள் தங்களது புனிதமான தொழிலின் செழுமைக்கும், தங்கள் அலுவலகத்தின் மரியாதைக்கும் தகுதி உடையவர்கள் மற்றும் இதில் எந்த தலையீடும் இருக்கக்கூடாது. “உண்மையான உலகில்" மற்ற தொழில்கள் அனுபவிக்கும் அதே மரியாதையை, அவர்களும் பெற்று இருக்கிறார்கள். §

இந்துக்கள் கோயில் பூசாரிகள் மீது வைத்திருக்கும் அணுகுமுறையை மாற்றுவதற்கான நேரம் வந்து விட்டது. இதற்கு கோயில் நிர்வாகிகள் தங்கள் சிந்தனைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். இதற்கு சனாதன தர்மத்தின் சர்வதேச பூசாரிகள் குழுவும் தங்களை தாக்குபவர்களுக்கு எதிராக உறுதியாக இருந்து, தினமும் அவமதிப்பு அல்லது மராமத்து வேலைகளினால் ஏற்படும் அவமானத்திற்கு மற்றும் காலணிகளை சுத்தம் செய்வதற்கு மறுப்பு தெரிவிக்க வேண்டும். சிலர் தினமும் பதினான்கு மணி நேரம் அல்லது அதற்கும் மேல் பணி புரிகிறார்கள். அவர்கள் கோயில் தெய்வங்களின் சேவகர்களாக இல்லாமல், நிர்வாகிகளின் சேவகர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கான முடிவான தீர்வு மனிதன் இயற்றிய சட்டங்களில் இல்லாமல், அதிக சூட்சுமமாக இருக்கக்கூடும். அவர்கள் இறைவனின் நிலையான விதியை நோக்கி செல்ல அல்லது அவர்களுக்கு ஈடுபாடு இருந்தால், நிம்மதி பெறுவதற்கு இருண்ட உலகங்களுக்கு செல்ல முடிவு எடுக்கலாம். §

கவனமாக இருங்கள்! அவர்கள் சொல்லும் மந்திரங்கள் அதிக வலுவானவை. தங்கள் பூசாரி குழுக்களுடன் பல சமூகங்கள் அழிந்துள்ளதாக வரலாறு தெரிவிக்கிறது. அது மீண்டும் நடப்பதற்கு நாம் அனுமதிக்க வேண்டாம்.§

அவர் நியாயமான பூசாரிகளுக்கு ஆதரவு அளித்தாலும், பூசாரி குலத்தில் பிறந்ததை மட்டுமே பயன்படுத்தி, சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தை கோருவதை அவர் கண்டனம் செய்தார்: §

தங்கள் தந்தைகள் பிராமணர்களாக இருந்ததால், தாங்களும் பிராமணர்கள் என்று கோரிக்கொள்பவர்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்களுக்கு தங்கள் சமயத்தை பற்றி தெரிவதில்லை, மற்றும் அவர்களுக்கு வழிபடவும் தெரியவதில்லை. “என் தந்தை ஒரு மருத்துவர். அதனால் நானும் ஒரு மருத்துவர். நான் உங்களுக்கு சிகிச்சை

> அளிக்கிறேன்," என்று சொல்வது போல இருக்கிறது. அதை என்றுமே ஏற்றுக்கொள்ள முடியாது.§

ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் பூசாரிகள் முறையாக நடத்தப்படவேண்டும், அதிலும் குறிப்பாக நல்ல வருமானம், பணியிடத்தில் முறையான சூழ்நிலைகள், நியாயமான வேலை நேரங்கள் மற்றும் தரமான வீட்டு வசதிகளை செய்து தரவேண்டும் என்பதற்கு அவர் ஆதரித்து வாதாடினார். பூசாரிகள் கோயில் மன்றங்களில் அங்கம் வகிக்க வேண்டும் என்றும், ஒரு மருத்துவர் அல்லது ஒரு வழக்கறிஞரைப் போன்று, மற்ற மதங்களின் பூசாரிகள் மற்றும் மதகுருக்கள் அனுபவிப்பதைப் போன்ற அவர்களுக்கு மதிப்பு மற்றும் அந்தஸ்த்து வழங்கப்படவேண்டும் என்று அவர் விரும்பினார். மருத்துவர்கள் அல்லது பொறியாளர்களாக பணிபுரிந்த பிராமணர்கள் அங்கம் வகித்த கோயில் மன்றங்களில், அவரது இந்த பரிந்துர நல்ல வரவேற்பை பெறவில்லை. இதற்கு பதிலாக, பூசாரிகள் தங்கள் சொந்த கோயில்களை தொடங்க அவர் ஊக்குவித்தார். அதை சிலர் பின்பற்றியுள்ளனர் மற்றும் எதிர்காலத்தில் மேலும் சிலர் பின்பற்ற உள்ளனர். §


**மோதலை கூட்டுறவாக மாற்றுதல்**

குருதேவா இந்துக்களிடத்தில் கூட்டுறவை போதித்து பயிற்சி செய்து வந்தார். தலைவர்களை எதிர்ப்பது, எதிர்ப்பவர்களை பொறுத்துக்கொள்வது மற்றும் மன்றங்கள் மற்றும் குழுக்களுக்கு இடையே வேற்றுமை ஆகியவை அந்த பாதையில் தடையாக இருக்கும் மூன்று தீய பழக்கங்கள் என்று அவர் கூறினார். §

> சமூகத்தில் ஒரு நபர் வளர்ச்சி அடைந்தால், அதைக்கண்டு பொறாமைக் கொள்ளும் நபர்கள் அமைதி பெறும் வரை, அவர்கள் அவரை அவமானப்படுத்தி, அவரைப் பற்றி அவதூறாக பேசி, அவரை விமர்சிக்கும் பழக்கத்தை நிறுத்துவது முக்கியம் ஆகும். நவீன தொழில்துறை சமூகத்தில், ஒவ்வொருவரும் மற்ற எல்லோரையும் மேம்படுத்த முயற்சி செய்கிறார்கள். தங்கள் சமூகத்தில் வளர்ச்சி அடையும் ஒரு நபரை நினைத்து மக்கள் பெருமை அடைவதோடு, அவருக்கு அடுத்து வருபவரும் வெற்றி பெறுவதற்கு உதவி செய்கிறார்கள். அவர்கள் தங்கள் மதத்தலைவர்கள் மீதும் அபிமானமாக இருக்கிறார்கள். §
>
> ஆனால் இந்தியாவில் நிலைமை மாறுபட்டு இருக்கிறது, அதனால் ஒருவர் ஆன்மீக உதவியை வழங்க விரும்பினால், அவர்கள் அமைதியாக மறைவில் இருக்க வேண்டும், இல்லையென்றால் அவர்கள் இழிவாக பேசப்படுவார்கள். யாரும் மதத்தை காப்பாற்ற ஆதரவாக இருப்பதில்லை; மற்றவர்கள் ஆதரவாக இருப்பதையும் யாரும்

அனுமதிப்பது இல்லை. இந்த நிலை மாறவேண்டும், மற்றும் அது விரைவில் மாற்றத்தை பெறும். §

“சுவாமிகள் மீது நடத்தப்படும் தாக்குதல்" குருதேவாவிற்கு பிடிக்காத இன்னொரு பொழுதுபோக்காக இருந்தது. இந்த பிரச்சனைக்கு எளிதில் உணரக்கூடிய இரண்டு மூலங்களாக, தங்கள் சொந்த காரணங்களுக்காக சுவாமிகளை அவமதிக்க நினைத்த கிறுத்துவ மதப்பிரசாரக்கர்கள் மற்றும் கம்யூனிஸ்ட்கள் இருந்தனர். “பல வருடங்களுக்கு முன்பு, சுவாமிகளை தாக்குவது பழக்கத்தில் இருந்த போது, அவர்கள் அதை ஒரு விளையாட்டாக கருதவில்லை. அவர்கள் ஒருவரை ஒருவர் நன்றாக புரிந்துக்கொண்டு, ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருந்து, அந்த தவறான நடத்தைக்கு முடிவு கட்டினர்,” என்று குருதேவா பின்னர் குறிப்பிட்டார். இந்தியாவில் முடிந்தவரை அதிகமான சுவாமிகளை சந்திக்க வேண்டும் என்று குருதேவா முடிவு செய்துக்கொண்டார். அவர் குறிப்பாக இந்துயிசம் டுடே பத்திரிகை மூலம், அவர்களுடன் தொடர்பில் இருந்தார் மற்றும் இந்துக்கள் அனைவருக்கும் ஒரு அணுகுமுறையை உருவாக்குவதற்கும், ஆன்மீக தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கவும், பல டஜன் கணக்கான விஷயங்களில் அவர் அவர்களது கருத்துக்களை சேகரித்தார். §



தத்துவம், ஆன்மீக பயிற்சி மற்றும் துறவற வாழ்க்கை தொடர்பான
விவாதங்களின் போது, குருதேவா தனது ஆச்சாரியர்கள் குழுவினரை

*சந்தித்து, தனது கருத்துக்களை தெரிவித்து அவர்களது கருத்துக்களை நாடி, எந்த திசையில் முன்னேறுவது என்று ஒருமித்த முடிவு வரும் வரையில் காத்து இருப்பார்.*

........................§

இந்து சமயத்தில் தீவிரவாத நடவடிக்கைக்கு ஆதரவாக வாதாடிய சமயத்தில், குருதேவா அகிம்சையை முக்கிய கொள்கையாக கொண்டிருந்தாலும், அவர் அமைதிவாதியாக இல்லாமல், நாடுகளும் தனிநபர்களும் தங்களை தற்காக்கும் உரிமைக்கு தனது ஆதரவை தெரிவித்தார். ஆனால் தங்களது குறிக்கோள்களை அடைய அல்லது தவறை சரி செய்ய சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு, வன்முறையை வலியுறுத்துபவர்களுக்கு, எதிர்மறை கர்மவினை மற்றும் பழிதீர்க்கும் படலத்தின் முடிவுறாத சுழற்சி காத்திருப்பதை அவரால் காண முடிந்தது. இது எப்போதும் பிரபலமான அணுகுமுறையாக இருந்ததில்லை என்றாலும், சாஸ்திரம் மற்றும் பெரும்பாலான சுவாமிகள் அவருக்கு ஆதரவாக இருந்ததால், தீவிரவாத முடிவுகளை வற்புறுத்தும் இந்துக்களின் எண்ணிக்கை குறைந்துக்கொண்டு சென்றது. §

### இணக்கமின்மைக்கு முற்றிலும் சகிப்புத் தன்மையற்று இருத்தல்

முழுமையான இணக்கத்திற்கு ஆசைப்படும் மற்ற பெரிய தலைவர்களும், அதற்கு வாய்ப்பில்லை என்று ஏற்றுக்கொண்டு இருந்தாலும், அதை அடையமுடியும் என்று குருதேவா அறிந்து இருந்து, அந்த இலட்சியத்தை வலுவாக தக்க வைத்துக்கொண்டு இருந்ததால், அதை அடையமுடியும் என்று நம்ப துறவிகள் கற்றுக்கொண்டார்கள். “இணக்கம் இல்லாத சூழ்நிலைகளுக்கு முற்றிலும் சகிப்புத்தன்மையற்று இருத்தலை,” பற்றி அவர் அடிக்கடி பேசினார். §

அவர் வழக்கமாக செய்ததை போல, அந்த கருத்தோடு நின்றுவிடாமல், அதை சாதிக்க கருவிகளையும் வழங்கினார். அவர் பயன்படுத்திய விதி: ஒரு துறவி இன்னொருவருக்கு தற்செயலாக வேதனை அளித்தால், இருவரும் அன்று தூங்க செல்லாமல், அந்த விவகாரம் முடிவுக்கு வந்ததாக இருவரும் உணர்ந்து, இருவருக்கும் இடையே பிராண சக்தி முழுமையான இணக்கத்தை பெறும் வரையில், இருவரும் ஒன்றாக அமர்ந்து மன்னிப்புக்களின் மூலம் பரஸ்பர தீர்வு காணவேண்டும் என்று அவர்களிடம் எதிர்பார்க்கப்பட்டது. §

அதனால் அடிமனதில் சிறிய மனக்கசப்புக்கள் மற்றும் சிக்கல்கள் ஆழமாக பதிந்து தீவிரமடைவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இவ்வாறு இளம் துறவிகள் ஒரு சர்ச்சைக்குரிய விவகாரத்திற்கு தீர்வு காண பல மணிநேரங்கள் தேவைப்படும், ஆனால் முதியவர்கள் கருத்து வேறுபாடுகளுக்கு விரைவில் தீர்வு காணும் கலையை கற்றுக்கொண்டார்கள், மற்றும் மிகவும் முக்கியமாக சர்ச்சைக்குரிய விவகாரத்தை எப்படி தவிர்ப்பதும் என்றும் கற்றுக்கொண்டார்கள். இந்த அணுகுமுறையை பற்றி

குருதேவா *லிவிங் வித் சிவா* (சிவபெருமானுடன் வாழ்தல்) புத்தகத்தில் விளக்கி இருக்கிறார்:§

> எங்கள் கூட்டமைப்பில் எல்லா பணிகளும் நிறுத்தப்பட்டு, பிரச்சனை மீது உடனடியாக கவனம் செலுத்தப்படுகிறது. இந்த விவேகத்தை பின்பற்றுவது ஒவ்வொருவரின் பொறுப்பாக இருந்தது. குறிப்பாக சமயப்பணியில் மேற்கொள்ளும் எந்த ஒரு முயற்சியும், பலன் அளித்து நீடித்து இருக்க, சுதந்திரமாக விடப்பட்ட அசுர சக்திகளை அகற்ற வேண்டும். ஆனால் கருத்து வேறுபாடு நிலைத்து இருந்தால், அது அதிக எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் மதிகெட்ட செயலாக இருக்கும். வீடு, மடம் அல்லது பணியிடத்தில் தெய்வீக விசைப்பகுதிகளில் அத்துமீறல் ஏற்பட்டால், அதை விரைவாக நிறுத்த வேண்டும். §
>
> நமது அணுகுமுறை எளிமையானது. எல்லா கடினமான உணர்ச்சிகளும் உறங்குவதற்கு முன்னர் தீர்வு காணவேண்டும், இல்லையென்றால் அவை மனப்போராட்டங்களை ஏற்படுத்தி, விதைக்கு (பீஜம்) சென்று, தொல்லை தரும் தேவையற்ற *வாசனாக்கள்* என்கிற அடியுணர்வு பதிவுகளை முளைக்க செய்கிறது. அவற்றை முழுவதுமாக அழிக்க முடியாது. ஆனால் அவற்றை பரிகாரத்தின் சூட்சுமமான செய்முறைகளின் மூலம் தணியச்செய்து நடுநிலைப்படுத்த மட்டுமே முடியும். §

### பகிரப்பட்ட ஆன்மாவின் சக்தியுடன் (Consensualocracy) நிர்வாகம் செய்தல்

குருதேவா அதைப்போன்று நிறுவனத்தின் நிர்வாக நடவடிக்கைகளில் இருந்து விலகி, ஒருமித்த கருத்தின் சக்தியுடன் நிர்வாகம் செய்யும் பாணியை உருவாக்கினார். மடத்தில், இரண்டு விதமான நிர்வாகம் இருந்தன. சற்குரு சொல்வதே சட்டம் என்பதை ஒரு பாரம்பரியம் பின்பற்றியது. ஆனால் அவர் அந்த சக்தியை அபூர்வமாக பயன்படுத்தினார், மற்றும் அதை பயன்படுத்தும் இடமாக குரு பீடத்தை (அவர் குருவின் இருக்கை அமைத்திருந்த ஒரு தியான அறை) ஒதுக்கி இருந்தார்  கொடுத்து இருந்தார். அவர் பீடத்தில் குரு மகாசன்னிதனமாக அமரும் போது, அவரது உதிரும் சொற்கள் விவாதிக்க மற்றும் கலந்துரையாடுவதற்கு பரிந்துரைகள் அல்லது சிந்தனைகளைக் இல்லாமல் ஆணைகளாக இருந்தன. §

மற்ற இடங்களில், முடிவெடுக்கும் உரிமையை குழுவிற்கு வழங்க முடிவு செய்தார். ஆனால் அந்த உரிமை மடத்தில் இருக்கும் அனைவருக்கும் வழங்காமல் ஒரு திட்டப்பணி, ஒரு புதுமை அல்லது ஒரு கூட்டத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு மட்டும் வழங்கினார். அத்தகைய சூழலில் அவர் ஒரு வாக்கெடுப்பிற்கு எப்போதும் அனுமதி வழங்கவில்லை. அவரை பொறுத்தவரையில், அது சிலர் மீது பலர் நடத்தும் அடக்குமுறையாக இருந்தது. வாக்கெடுப்பு நடைபெறும் போது, அவர் ஒருமித்த உடன்பாட்டை வேண்டினார். ஒருவர் எதிர்ப்பு குரல் எழுப்பினாலும், எந்த முடிவும்

எடுக்கப்படாமல், விவாதத்தை தொடரவேண்டி இருந்தது. தான் மேற்கொள்ளும் தனிப்பட்ட முடிவு மிகவும் முக்கியமானது என்பதை எல்லோரும் அறிந்து இருந்தார்கள். ஒரு திட்டப்பணியை தொடர்வதற்கு குழுவில் பத்து நபர்கள் ஆதரவாக இருந்தாலும், தன்னால் அதை தடுத்து நிறுத்த முடியும் என்பதை எல்லோரும் அறிந்து இருந்தாலும், அந்த சலுகையை தவறாக பயன்படுத்தாமல் இருக்க ஒவ்வோருவரும் கற்றுக்கொண்டனர். §

இந்த அமைப்பில் இருந்த இரட்டை விவேகத்தை துறவிகள் விரைவில் புரிந்துகொண்டார்கள். அதில் முதலாவதாக, அந்த செய்முறை சிலசமயங்களில் மிகவும் மெதுவாக இருந்தாலும், எடுக்கப்பட்ட ஒவ்வொரு முடிவிற்கும் எதிராக யாரும் செயல்படாமல், முழு குழுவின் ஒட்டுமொத்த சக்தியின் ஆதரவை பெற்று இருந்தது. இது அதன் நிறைவேற்றத்தில் வழங்கிய சக்தி மற்றும் தெளிவை, ஒரு பணிக்குழுவில் பகிரப்பட்ட அர்ப்பணிப்பால் மட்டுமே வெளிப்படுத்த முடியும். இரண்டாவதாக, சிலசமயங்களில் குழுவில் இருக்கும் சிறுபான்மையினருக்கு சில விஷேச உட்பார்வைகள் இருக்கும். ஒரு விவகாரத்தில் பெரும்பாலானோர் விரைவாக செயல்படுவதில் ஆர்வமாக இருந்தாலும், இயலுணர்வு நன்றாக தீட்டப்படும் ஆன்மீக சமூகத்தின் வழக்கத்தைப் போல, ஒன்று அல்லது இரண்டு துறவிகளுக்கு அதிக வலுவான, நுணுக்கமான கருத்து இருக்கக்கூடும். மேலும், பகிரப்பட்ட ஆன்மாவின் சக்தி(consensualocracy) என்பது யாரையும் கைவிடாமல், ஒதுக்கி வைக்காமல், ஓட்டு எண்ணிக்கையில் தோற்கடிக்காமல் அல்லது புறக்கணிக்காமல் இருப்பதை உறுதி செய்கிறது. குருதேவா *லெமூரியன் ஸ்குரோல்ஸ்* புத்தகத்தின் முடிவுரை எழுதிய குறிப்பு:§

> நிர்வாகத்தில் இருக்கும் ஒரு உயர்ந்த வடிவத்தை, நாங்கள் ஒருமித்த கருத்துடன் செயல்படும் நிர்வாகம் என்று அழைக்கிறோம். இந்த விதி பயன்படுத்தும் பாணியில் கட்டுப்படுத்தும் சக்தியாக ஒரு தனிநபர் அல்லது ஒரு பெரும்பான்மை இல்லாமல், ஒவ்வொரு கூட்டத்திலும் ஒரு விசேஷமான முறையில் அதன் மக்கள், தேவைகள் மற்றும் அடிப்படைகளை தழுவி உள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால், அத்தகைய அமைப்பு சுயமாக வளர்ச்சி பெறாமல், இந்த ஸ்குரோல்ஸ் புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளதைப் போல, மூன்று உலகங்களின் மிகப்பெரிய சக்திகள் வழங்கும் ஒரு ஆன்மீக தலைமையின் பிரத்யேகமான சூழ்நிலைகளில் மட்டுமே வளர்ச்சி அடையும்.§
>
> இந்த அமைப்பில், மூத்த உறுப்பினர்களுக்கு மரியாதையும், இளையவர்கள் மீது விசேஷ கவனிப்பு மற்றும் ஊக்குவிப்பும் வழங்கப்படுகிறது. இந்த அமைப்பில், வாக்கெடுப்பு மற்றும் பெரும்பான்மை தொடர்பான விதிகள் இல்லை என்பதால், ஓட்டுரிமை இல்லாதவர்கள் அல்லது வாக்கெடுப்பில் தோற்றவர்கள் வெற்றிபெற்றவர்களுக்கு அடிபணிய வேண்டிய அவசியம் இருப்பதில்லை. எல்லோரிடமும் ஒரு கருத்து இருக்கிறது; மற்றவர்கள் நலன் கருதி தங்கள் நலனை தியாகம் செய்யும் தூண்டுதல்

எல்லோரிடமும் இருக்கிறது. இந்த அமைப்பில், முக்கிய முடிவுகள் வாக்கெடுப்பால் இல்லாமல், ஒத்திசைவான செய்முறை மூலம் உறுதி செய்யப்படுகிறது. இந்த செய்முறை எல்லோருக்கும் நன்மை செய்யும் சிறந்த தொடர் நடவடிக்கைக்கு, ஒரு ஒருங்கிணைந்த ஒப்பந்தத்தை தேடும் பொருட்டு அனைத்து குழுக்களையும் ஒன்று சேர்க்கிறது. இந்த செய்முறையில், இதன் நுணுக்கமான வழிகளை அறியாத புதிய உறுப்பினர்கள் இடம்பெறும் போது, இது மெதுவாக இயங்குவது போல தோன்றினாலும், இது நாளடைவில் எல்லா முடிவுகளிலும் எல்லா உறுப்பினர்களின் 100 சதவீத மனப்பூர்வமான ஆதரவின் மூலம் மாபெரும் சக்தியாக வளர்கிறது. உத்வேகம் செழிப்பை வழங்குகிறது. ஒருமித்த கருத்துடன் செயல்படும் நிர்வாகம் கடினமாக இருந்தாலும், அதை அடைவதால் நல்ல பலன்களை தரும். §

இவ்வாறு அரசாங்கங்களில் குழப்பத்துடன் செயல்படும் அரசாங்கம் (ஒழுங்கின்மை), கொரில்லா படைக்கு (பயங்கரவாதம்) அனுமதி அளிக்கும் அரசாங்கங்கள் இருக்கின்றன. இந்த அரசாங்கம் தனது குறிக்கோளை அடைவதற்கு பயங்கரவாதத்தின் கொடிய நடவடிக்கைகளை தூண்டிவிடுகிறது. அதன் பிறகு ஒரு தலைவரின் சக்தியில் (ஏகாதிபத்தியம்) இயங்கும் அரசாங்கம், இராணுவ சக்தியில் (சர்வாதிகாரம்) இயங்கும் அரசாங்கம், சமூக மற்றும் பணத்தின் சக்தியால் (தன்னலக்குழு நடத்தும் அரசாங்கம்) இயங்கும் அரசாங்கம், புள்ளிவிபர அடிப்படையில் (சமூகவுடைமை) இயங்கும் அரசாங்கம், எண்ணிக்கை மற்றும் உணர்ச்சியின் அடிப்படையில் செயல்படும் அரசாங்கம் (மக்களாட்சி), அரசர்கள் மற்றும் அரசியல் நடத்தும் அரசாங்கம் (அரசாட்சி), அந்தர்லோகங்களின் துணையுடன் மதத்தலைவர்கள் நடத்தும் அரசாங்கம் (இறையாட்சி), பகிரப்பட்ட ஆன்மாவின் சக்தியினால் நடைபெறும் அரசாங்கம் (கன்சென்சுவலோக்கிரேசி) என்று பலவிதமான அரசாங்கங்கள்/நிர்வாகங்கள் இருக்கின்றன. §

இறுதியாக குறிப்பிட்ட அமைப்பு சனாதன தர்மத்தை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளது. இந்த விதி புத்திசாலித்தனமான கூட்டுறவிற்கு மதிப்பு அளித்து, சம்பந்தப்பட்ட எல்லோரையும் பிராண சக்தியால் பிணைக்கிறது. இதே வழியை பயன்படுத்தி இரண்டாம் உலகின் தெய்வீக ஆன்மாக்கள் மற்றும் மூன்றாம் உலகில் இருக்கும் உயர்வான வளர்ச்சி பெற்ற சக்திகள், முதலில் தூண்டுதலுடன் தொடங்கி, ஒரு சிந்தனையின் பிறப்பு, பிறகு அதிர்வு, ஒட்டுமொத்த குழுவின் கண்ணோட்டம் மற்றும் முயற்சியின் மூலம் திட்டமிட்டு மற்றும் உருவாக்கி, சூட்சும அல்லது தூல யதார்த்தத்தில் அதன் வெளிப்பாட்டிற்கு வழிநடத்தி செல்வது என்று சரியான திசையில் ஆன்மீக பிராண சக்திகளை நிர்வாகம் செய்து, தங்கள் கருத்துக்களை செயல்படுத்துகின்றன. இதனால் பகிரப்பட்ட ஆன்மாவின் சக்தியை தான் *வேதங்கள்* பதிவு செய்துள்ளன. இந்த

முறையில் மாபெரும் கலாச்சாரங்கள் பழங்காலத்தில் இருந்துள்ளன. இந்த நிர்வாக முறையை பயன்படுத்தி மிகப்பெரிய கூட்டு குடும்பங்கள் பல தலைமுறைகளாக நீடித்து இருந்து, அதை இன்றும் பயன்படுத்தி வருகின்றன. §

அதிக இரக்க உணர்வுள்ள நிர்வாக வடிவமாக இருக்கும் பகிரப்பட்ட ஆன்மாவின் சக்தி, ஒற்றை கண்ணோட்டம் மற்றும் குறிக்கோளுடன் இருக்கும் ஆன்மீக ஈடுபாடுள்ள குழுக்கள், அதிக ஒழுங்குமுறையுடன் அர்ப்பணிப்புடன் இருக்கும் சமூகங்களுக்கு மிகவும் பொருத்தமாக விளங்குகிறது. இதில் இலக்குகள், அந்த இலக்குகளை அடைய உதவும் செயல்முறைகள் மற்றும் அந்த செயல்முறைகளை செயல்படுத்த தேவைப்படும் தினசரி நடவடிக்கைகள் உடன்பாட்டில் இருக்கின்றன. புத்திசாலித்தனமான கூட்டுறவுடன் நடைபெறும் நிர்வாகம் என்று அதை எளிமையாக குறிப்பிடலாம். §

Page 45: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/45_guru07_03.html

# குருமார்களின் சரித்திரங்கள்


## அத்தியாயம் முப்பது

# ஒரு சூறாவளியின் பாதிப்பை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துதல்

செப்டெம்பர் 11, 1992, கவாய் தீவின் மீது சூறாவளி இனிகி ஒரு நேரடி தாக்குதலை நிகழ்த்தியது. இந்த நான்காவது பிரிவு சூறாவளியின் கண் பகுதி மடத்தின் மீது மையம் கொண்டு இருந்தது. அந்த புயல் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. மடத்திற்கு சொந்தமான மூன்று கட்டிடங்களுடன் 10,000 மரங்கள் மற்றும் செடிகள் அழிந்தன. அந்த பகுதியில் மின்சாரம் மற்றும் தண்ணீர் வசதிகளை மீண்டும் சீரமைக்க பல மாதங்கள் ஆயின. அதனால் அந்த மாதங்கள் மடவாசிகளுக்கு சவால் நிறைந்ததாக இருந்தாலும், குருதேவா அந்த சூழ்நிலையை அமைதியாக எதிர்கொண்டார். இந்த பெருந்துயர சம்பவத்திலும் சிவபெருமான் தொடர்ந்து செயல்புரிவதை அவர் கண்டுகொண்டார். அந்த பகுதியில் இருந்த சாலைகள் அனைத்தும் சேதமடைந்து இருந்ததால், தினமும் சுத்தமான மாட்டுப்பாலுடன், ரொட்டிகளை சுட்டு மடத்திற்கு அருகில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தரும் பணியில் அவர் தனது மடவாசிகளை ஈடுபடுத்தினார். அந்த புயல் ஏற்படுத்திய அழிவும் பாதிப்பும் தீவிரமாக இருந்ததாலும், அவர் சிரித்துக்கொண்டு அதை ஒரு நேர்மறை அனுபவமாக மாற்றியது எல்லோரையும் வியக்க வைத்தது. வாழ்க்கையில் எது நடக்கிறது என்பது முக்கியமில்லை, ஆனால் அதற்கு நாம் எவ்வாறு எதிர்செயலாற்றுகிறோம் என்பது தான் முக்கியம் என்கிற குருதேவாவின் போதனைக்கு அது ஒரு முன் உதாரணம், ஒரு நினைவூட்டல் மற்றும் துறவிகள் எல்லோருக்கும் ஒரு பாடமாக விளங்கியது. அவர் பேரழிவை கண்ணியமாக எதிர்கொண்டு, தனது வாழ்நாள் முழுவதும் உழைத்து உருவாக்கிய மடத்தை நிரந்தரமாக பாதுகாக்கும் நோக்கத்துடன் ஒரு சாமர்த்தியமான வழியை உருவாக்க, அந்த பேரழிவை பயன்படுத்திக் கொண்டார். §

அதைப்பற்றிய குறிப்பை இங்கே காணலாம். பல மாதங்கள் கழித்து, மடத்திற்கு காப்பீட்டுத் தொகையாக, மிகவும் குறைவாக $300,000 காசோலை வந்த போது, அவர் அதை பணமாக மாற்ற மறுத்து, அதை தனது அறையில் வைத்துக்கொண்டு, சிறந்த முறையில் அதை எவ்வாறு பயன்படுத்துவது என்று தியானம் செய்ய ஆரம்பித்தார். சில நாட்கள் கழித்து, தான் அந்த தொகையில் செலவு எதுவும் செய்யாமல், அதை முழுமையாக வங்கியில் சேமிக்கப் போவதாகவும், அந்த நிதி ஈட்டும் வட்டியை பயன்படுத்தி சேதமடைந்த மடத்தின் பகுதியை சரி செய்ய பத்து வருடங்கள் தேவைப்படும் என்றும், அந்த பத்து வருடத்தின் முடிவில் வசதிகள் அனைத்தும் சீர் செய்யப்பட்டு, $300,000 மூல தனமும் தங்களிடம் இருக்கும் என்றும் அவர் தனது துறவிகள் குழுவிடம் கூறினார்.§

அது ஒரு அருமையான முடிவாக விளங்கி, அறக்கட்டளைகளின் சக்தியை பற்றி துறவிகளுக்கு கற்றுத் தந்தது. ஒரு பிரத்யேக நிதி நிறுவனத்தை உருவாக்க, குருதேவா தனது மூத்த சீடரான பரமாச்சாரியார் போதிநாதாவுடன் சேர்ந்து, 1994 ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வமாக இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவலை (HHE) உருவாக்கினார். 2011 ஆம் ஆண்டு கணக்குப்படி, HHE நிறுவலில் இருக்கும் 80 நிதிகள் மற்றும் $10 மில்லியன் சொத்துக்கள் உலகெங்கும் இருக்கும் அனாதை ஆசிரமங்கள், கோயில்கள், சுவாமிகள், ஆசிரமங்கள் மற்றும் வெளியீடுகளுக்கு உதவி செய்து வருகின்றன. குருதேவா ஒரு இயற்கை பேரிடரை ஒரு சர்வதேச சேவை நிறுவனமாக மாற்றி அமைத்ததன் மூலம், அவர் அந்த பேரிடரை ஒரு உயர்ந்த குறிக்கோளுக்காக உற்சாகமாக மாற்றி அமைக்கும் முறைக்கு உதாரணமாக விளங்கியது. §



*குருதேவா தான் மேற்கொண்ட பணியின் ஒவ்வொரு அம்சத்தையும் அறிந்து, ஒவ்வொரு விவரத்தையும் அறிந்து, ஒவ்வொரு வரவுசெலவு திட்டத்தையும் அங்கீகரித்தார். அவர் தனது சர்வதேச பணி பற்றிய ஒரு கண்ணோட்டத்தை பெறுவதற்கு, பெரும்பாலும் கடற்கரையோர விடுதிகளில், தனது மூத்த துறவிகளுடன் வாரந்தோறும் காரியதரிசிகள் கூட்டங்களை நடத்துவார்.*

.........................§

மணிக்கு 194 மைல்கள் வேகத்தில் வீசியதாக கவாய் நாசா நிலையத்தில் பதிவான அந்த சூறாவளி காற்றை எதிர்கொண்ட, வலுவானவை அனைத்தும் தப்பித்ததையும் பலவீனமானவை அனைத்தும் அழிந்ததையும் நான் தெரிந்துகொண்டேன். அந்த சூறாவளி தீவு முழுவதையும் சூழ்ந்து கொண்டது மற்றும் சில பகுதிகள் மட்டுமே பாதிப்பில் இருந்து தப்பியது.§

இந்த ஆற்றலை எப்படி பயன்படுத்துவது? சூட்சும ஞான கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, வெளிப்புற அல்லது உட்புற, எதிர்மறை அல்லது நேர்மறை, சக்தியை ஞானம் என்கிற மாற்றி வழியாக இயக்கி, ஒரு ஆக்கப்பூர்வ சக்தியாக மாற்றலாம். எங்கள் ஆன்மீக மையத்தில், எங்களது ஆற்றலை இந்துயிசம் டுடே உட்பட புதிய, பெரிய மற்றும் சிறந்த வெளியீடுகளில் இயக்கினோம். §

இன்னல்கள் வலுவான மனிதனை மேலும் வலுப்படுத்துவதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. இன்னல்கள் மற்றும் வெற்றிகளை சமமாக எதிர்கொள்வது சிறந்த அணுகுமுறை ஆகும். வாளிகளில் தண்ணீரை

> கிணற்றில் இருந்து இறைப்பது, நதிக்கு அருகில் இருக்கும் ஒரு கல்லில் துணியை அடித்து துவைப்பது மற்றும் திறந்த வெளியில் சமைப்பதை நாங்கள் ரசித்தோம் என்பதில் சந்தேகமில்லை. இந்த எளிய மகிழ்ச்சிகள் அனைத்தும், யாழ்ப்பாண தீபகற்பத்தில் தொடர்ந்து கிராம வாழ்க்கையை வாழ்ந்து வந்த, எங்கள் சுவாமிகளை நினைவூட்டியது. §

இந்து அமைப்புக்களுக்கு நன்கொடை நிறுவல்கள் மூலம் நிரந்தரமாக வளரும் வருமானத்தை வழங்க, ஒரு தனிப்பட்ட பொதுமக்கள் சேவை அறக்கட்டளையாக இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவலை குருதேவா தொடங்கினார். அவருக்கு கிடைத்த ஒரு விசேஷ IRS உத்தரவின் மூலம், அந்த நன்கொடை நிறுவலின் பயனாளிகள் உலகின் எந்த பகுதியிலும் இருக்கலாம் என்று அனுமதியை வழங்கியது. இதன் மூலம் அமெரிக்காவில் இருக்கும் இந்து செல்வந்தர்கள் இந்தியாவில் தங்கள் கிராமத்தில் இருக்கும் கோயிலுக்கு ஆதரவு வழங்கவும் முடியும், அமெரிக்காவில் அதற்கு வரி விலக்கும் பெறமுடியும். அவர் தனது சொந்த அமைப்பின் எதிர்காலத்திற்கு மட்டும் திட்டமிடாமல், உலகில் இருந்த ஒவ்வொரு இந்து அமைப்பிற்கும் திட்டமிட்டார். §

1994 முதல் 2001 வரை ஒவ்வொரு காலாண்டிலும், நிதி நிலையை கண்காணித்து, தங்கள் பணியை விரிவாக்கம் செய்து அதன் பயன்களை மேம்படுத்த குருதேவா ஆடம்பரமான பிரின்ஸ்வீல் ஹோட்டலில் ஒரு நாள் முழுவதும், தனது HHE நன்கொடை நிறுவலின் சந்நியாசி காரியதரிசிகளை சந்தித்து பேசினார். இறுதியில் HHE அவரது துறவற சமூகம் மற்றும் இறைவன் கோயிலின் ஒரு முக்கிய ஆதரவாக மாறி, தன்னிறைவு அடையவேண்டும் என்கிற குருதேவாவின் கற்பனையை பூர்த்தி செய்தது. §

> பயனாளி நிறுவனத்தின் அனைவரது மற்றும் நன்கொடை நிறுவலை தொடங்கிய அனைவரது காவல் தெய்வங்கள் HHE நிறுவனத்தில் ஈடுபட்டு இருந்தார்கள். அது எங்களால் தொடங்கப்படாத ஒரு தெய்வீக படைப்பு ஆகும். ஆனால் அது ஒரு தேவையை பூர்த்தி செய்ய தேவலோகம் மற்றும் சிவலோகத்தின் மூலம் எங்களுக்கு மரபுரிமையாக அளிக்கப்பட்டுள்ளது. இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவலில் ஒவ்வொரு அமைப்பின் காவல் தெய்வத்திற்கும் ஒரு தனிப்பட்ட ஆர்வம் இருக்கிறது, ஏனென்றால் அந்த அமைப்புக்களின் தலைமை தொடர்ந்து நிதி திரட்டுதல் மற்றும் பணம் பற்றிய அடிப்படை விசாரங்களில் இருக்காமல் தனது குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த, ஒவ்வொரு இந்து அமைப்பிற்கும் நிரந்தர செல்வ வளத்தை உருவாக்குவதில் அந்த தேவர்கள் தங்கள் கவனம் மற்றும் சிந்தனையை செலுத்துகிறார்கள். §

**அச்சகத்தின் வலிமை**

குருதேவாவின் ஆன்மீக பணியின் முக்கிய அம்சமாக தொடக்கத்தில் இருந்தே வெளியீடுகளுக்கு நூலை எழுதும் பணியும், வெளியீடும் இருந்துள்ளன. எழுதப்பட்ட சொல்லின் வலிமை மற்றும் ஒவ்வொரு ஆன்மீக பாரம்பரியமும் புனிதமான நூல்களை தங்களது அடித்தளமாக கொண்டு அமைத்துள்ளன என்பதை அவர் அறிந்து இருந்தார். ஆனால் அவர் 70 களின் இறுதியிலும் 80 களின் தொடக்கத்திலும் விரிவான பயணம் மேற்கொண்டதால், அவருக்கு மிகவும் பிடித்தமான தத்துவ ஞான படைப்புக்களில் இருந்து விலகி இருந்தார். இருந்தாலும் இந்துயிசம் டுடே பத்திரிகையில் அவரது பணி தொடர்ந்தது; மற்றும் இந்த இடைவெளியில் உலகெங்கும் அவர் வழங்கிய அருமையான *உபதேசங்கள்* எதிர்கால வெளியீட்டிற்கு பாதுகாப்பாக சேமிக்கப்பட்டன. §

அவர் கடந்தகாலத்தில் செய்ததைப் போல, 1980 களின் மற்றும் 90 களின் இறுதியில் மீண்டும் அதிக வலிமை மற்றும் ஆர்வத்துடன் வெளியீட்டு பணியில் ஈடுபட்டார். ஆனால் தொழில்நுட்பம் அதிக வளர்ச்சி அடைந்து இருந்தது; மற்றும் அவரது குழுவினர் மல்டிமீடியா CDக்கள், ஒலி, காணொளி மற்றும் கணினி வரைகலையை உள்ளடக்கிய அதிநவீன இலக்கமுறை வெளியீட்டில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள அவர் ஊக்குவித்தார். இந்துக்களை இணையதளம் மூலம் தொடர்பு கொண்டு தகவலை தெரிவிக்க, அவர் இந்து பிரஸ் இன்டர்நேஷனல் (HPI) என்ற பெயரில் அவர் தனது தினசரி இந்து செய்தி சேவையை அறிமுகப்படுத்தினார். அதற்கிடையில் அவர் இணையதளம் தூண்டிவிட்ட விரிவான கருத்தியல் மாற்றத்திற்கு பழக்கப்பட்டு இருந்தார். §


அந்த அற்புதமான தொழில்நுட்பத்தின் துணையுடனும், பிணையத்தில் இருந்த மேக்கின்டோஷ் கணினிகளை பயன்படுத்தியும், குருதேவா புதுமையாக மற்றும் பிரத்யேகமான கூட்டு முயற்சியுடன் தொகுக்கும் பாணியை உருவாக்கினார். அவர் பயணம் செல்லவில்லை என்றால், வருடத்தின் 365 நாட்களில், ஒவ்வொரு நாளும், மதியம் 3 மற்றும் மாலை 7 மணிக்கு இடையே, தொடக்கத்தில் இரு துறவிகளையும், பின்னர் மூன்று துறவிகளையும் சந்தித்து வந்தார். அந்த குழுவினரிடம் கைக்கு அடக்கமான மேக் கணினிகள் பிணையத்தில் இருந்ததால், உதாரணத்திற்கு *லவிங் கணேஷா* புத்தகத்தில் ஒரு அத்தியாயம் எல்லா கணினித்திரையிலும் ஒரே சமயத்தில் காட்சி அளிக்கும். குழுவில் ஒருவர் அந்த அத்தியாயத்தில் ஏதேனும் மாற்றம் செய்தால், அது உடனடியாக நிகழ்நேரத்தில் எல்லா கணினித்திரைகளிலும் புதுப்பிக்கப்பட்டது. ஒரு காகிதத்தில் அவசரமாக எழுதி, தட்டச்சு செய்து, அதை அடுத்த நாள் மறு ஆய்வு செய்யவேண்டிய வேலை இனி இல்லை. §

குருதேவா எப்போதும் வழக்கமான பாணியில் ஒரு புத்தகத்தை எழுதவில்லை. அவர் தான் வழங்கிய ஒரு உரையின் எழுத்துப்படியில் வேலை செய்யவில்லை என்றால், அவர் அன்றைய தினம் தியானம் செய்த ஒரு தலைப்புடன் விவாதிக்க வந்து, வழக்கமாக அவர் ஒன்று அல்லது இரண்டு

பக்கங்களை அறிவுறுத்த, துறவிகளில் ஒருவர் அதை திரையில் பதிவு செய்து கொள்வார். அவர் அதன் பிறகு அதிக உற்சாகத்துடன் பக்கங்களை திருத்தி அமைக்குமாறு அவர்களிடம் கேட்டுக்கொள்வார். “ஓபன் சீசன் (எல்லோரும் தொகுக்க ஆரம்பிக்கலாம்),” என்று அறிவித்து எல்லோரும் ஒன்றாக பணியில் ஈடுபடுவார்கள். இந்த தொகுக்கும் பணியின் போது, முதல் பதிவின் வலிமையை பாதுகாக்க அதிக கவனம் செலுத்தப்பட்டாலும், “உரையாடல் நடையில் இருந்து ஆங்கில மொழிக்கு" மாற்றி அமைக்கும் பணி என்று அவர் இதை அடிக்கடி குறிப்பிடுவார். மாஸ்டர் கோர்ஸ் ட்ரைலாஜியின் (முத்தொகுப்பின் பிரதான பயிற்சி வகுப்பு) பல அத்தியாங்களுக்கு மூலமாக விளங்கிய 50 கள், 60 கள் மற்றும் 70 களில் அவர் வழங்கிய உரைகளை தொகுக்கும் போது, சில நாட்களுக்கு முன்பாக அதில் நடைப்பெற்ற தேவையற்ற தொகுப்பை விலக்கி, முதலில் வழங்கப்பட்ட *உபதேசத்திற்கு* மாற்றி அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. §

சில வாக்கியங்களை தொகுக்க பல மணி நேரங்கள் தேவைப்பட்டன. ஆனால் குருதேவா எப்போதும் அவசரப்பட்டது இல்லை, மற்றும் அவர் எப்போதும் நேரத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல், தரத்திற்கு முக்கியத்துவம் அளித்ததால், ஒரு வாக்கியத்தை அமைக்க மூன்று மணிநேரங்கள் தேவைப்பட்டன. அவர் அதை உருவாக்கி முடித்ததும் மகிழ்ச்சி அடைவார். *லிவிங் வித் சிவா* (சிவபெருமானுடன் வாழ்தல்) புத்தகத்தில் வரும் 365 சூத்திரங்களை இயற்றும் போது, சராசரியாக ஒவ்வொரு மதியமும் இரண்டு அல்லது மூன்று சூத்திரங்கள் தொகுக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டன. முழு நிறைவாக வடிவமைக்கப்பட்டு இருந்தாலும், இவை ஒரு வாரம் கழித்து மற்றும் மீண்டும் ஒரு மாதம் கழித்து மீண்டும் தொகுக்கப்பட்டன. §

*டான்சிங் வித் சிவா* புத்தகத்தை எழுதும் போது, ஒவ்வொரு தலைப்பிலும் இருந்த எண்ணற்ற தகவல்களை ஒரு பக்கத்தில் சுறுக்குவது சவாலாக இருந்தது. இந்த புத்தகத்தின் பக்கங்களை வடிவமைக்கும் போது, அதில் அறிவுறுத்தப்பட்ட கேள்விகள் மற்றும் பதில்கள் ஒரே நீளத்தில் இருப்பதற்கு, *சுலோகம்* மற்றும் *பாஷ்யம்* சரியாக ஒரே அளவுடன் இருக்க, ஒவ்வொரு சொல்லில் இருக்கும் ஒவ்வொரு எழுத்திலும் மிகவும் நுணுக்கமான மாற்றங்களை செய்ய, குருதேவா தான் சுயமாக அமைத்துக்கொண்ட வழிமுறையை பின்பற்றுவதில் அதிக உற்சாகத்துடன் செயல்பட்டார். §



குருதேவா தனது மடத்தின் புனிதமான தோட்டங்களில் உலாவுவதை அதிகம் விரும்பினார். இந்த தனிமையான நடைகளுக்கு பெரும்பாலும் ஒரு

*குறிக்கோள் இருந்தது, மற்றும் அவர் திரும்பும் போது தனது துறவிகளுடன் பகிர்ந்துகொள்ள எதிர்காலம் பற்றிய புதிய உட்பார்வைகள், சிந்தனைகள் மற்றும் திட்டங்களுடன் வருவார்.*

……………………§

அந்த சவாலுடன் சேர்ந்து தோன்றிய ஒரு பணிப்போக்கில் அந்த குழு உரையை ஆய்வு செய்து, எழுதி சீர் செய்ததும், அது முழுமையாக மற்றும் நிறைவாக தென்பட்ட போது, “இங்கே மேலும் விளக்கம் தேவைப்படுமா?” என்ற கேள்வி கேட்கப்படும். அவர்களுக்கு ஒரு முக்கியமான கூடுதல் தகவல் கிடைத்தால், அதை நுழைப்பது கடினமாக இருந்தாலும், அவர்கள் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு சொற்களை நன்றாக சுருக்கி, வியக்கும் வகையில் முழுமைக்கு மேலும் முழுமையை சேர்த்தனர். அது சுலபமாக இல்லை என்றாலும், திறமையான சில கவிஞர்களுக்கு மட்டுமே கிடைத்த ஒரு அபூர்வமான தெளிவு மற்றும் வலுவான அர்த்தத்தை, இந்த தேவைகள் வழங்கின. §

தினசரி நடைபெற்ற இந்த அமர்வுகளுக்காக குருதேவா ஆர்வத்துடன் காத்து இருந்து, தனது சிந்தனை கருத்துக்களை தயார் செய்து ஆன்மீக சக்திகள், தனது தேவர்களின் குழுவிற்கு அழைப்பு விடுப்பார். வலுவான உட்பார்வையுடன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு நிலைத்து இருந்து, எதிர்காலத்திற்கு சீடர்களை அழைத்து செல்லும் படைப்புக்களை உருவாக்குவதற்கு உதவியாக, குருதேவா தனது ஆன்மீக சக்திகள் மற்றும் தனது தேவர்களின் குழுவிற்கு அழைப்பு விடுத்தார். §


அவர் ஒவ்வொரு சொல், ஒவ்வொரு தொடர் மற்றும் ஒவ்வொரு நிறுத்தக் குறியீட்டையும் கூர்ந்து கவனித்தார்; மற்றும் அவர் முழுமையாக திருப்தி அடைந்தால் மட்டுமே அந்த குழுவால் அடுத்த விவகாரத்திற்கு முன்னேற முடிந்தது. அவர் அந்த அமர்வுகளின் போது அபூர்வமாக தட்டச்சு செய்தாலும், அவர் தட்டச்சில் சுதந்திரமாக குறுக்கிடுவார் அல்லது ஒரு தெளிவை வழங்குவார் அல்லது ஒரு பத்தியில் இருந்த சில வார்த்தைகள் சம்பந்தமாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பார். இது பெரும்பாலும் எதிர்பார்க்க முடியாத புதிய உட்பார்வைகளுக்கு வழி வகுத்தது. அவ்வப்போது ஒரு விவகாரத்தில் ஆய்வு தேவைப்படும் போது, அவர் மதிய அமர்விற்கு தேவையான தகவலை அடுத்த நாள் சேகரிக்குமாறு சுவாமிகளுக்கு உத்தரவிடுவார். கூகிள் வருவதற்கு முந்தைய காலத்தில், தகவலை திரட்ட மடத்தின் நூலகம் அல்லது விவரமறிந்த இடங்களுக்கு மின்னஞ்சல்களை அனுப்பவது போன்ற பழைய பாணியை  கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. §

தங்கள் சற்குரு குழுவுடன் சேர்ந்து தொகுக்கும் அமர்வுகளுக்கு, ஒவ்வொரு நாள் மதியமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செல்வதை அக்கம்பக்கத்தில் இருந்த தேவாலய உறுப்பினர்கள் தங்கள் வீட்டு சன்னல்கள் வழியாக பார்க்கும் அளவிற்கு, குருதேவாவின் தொகுக்கும் செய்முறை ஒழுங்குமுறையுடன் இருந்தது. அவர் பல வருடங்களுக்கு, கடற்கரைக்கு அருகில் இருந்த பல்வேறு ஓட்டல் முகப்பு அறைகளில் தனது அமர்வுகளை

நடத்தினார். அந்த ஓட்டல் பணியாளர்களுக்கு அவரது வருகை பிடித்து இருந்தது மற்றும் அவர் தங்கள் இடத்திற்கு வருகை தந்தால் தங்களுக்கு அன்றைய மாலைப்பொழுது எப்போதும் நன்றாக இருப்பதை அவர்கள் உணர்ந்துக்கொண்டார்கள். அவர் கூட்டத்தை நடத்த கவாயில் இருந்த மிகவும் அழகான இடத்தை விட்டு, தங்கள் ஓட்டலுக்கு எதற்காக வந்தார் என்பது அவர்களுக்கு புரியவில்லை. அவர் தனது அலுவலகத்தில் தொகுப்புப் பணியை செய்ய முயற்சி செய்தார், ஆனால் மனம் அமைதி இல்லாமல் அலைந்தது, மற்றும் தொடர்ந்து தடங்கல் வந்துகொண்டு இருந்தது. §

பரபரப்பான உணவகப் பகுதியில் இருக்கும் பல்வேறு ஓசைகள் அவரது பணிக்கு பாதகமாக இல்லையா என்று கேட்கப்பட்டபோது, "ஒருபோதும் இல்லை; ஓசைகள் என்னை அமைதிப்படுத்துகின்றன!" என்று அவர் பதில் அளித்தார். பரபரப்பான ஓசைகள் ஒருவரை எப்படி அமைதிப்படுத்த முடியும் மற்றும் ஆக்கப்பூர்வமான ஆன்மீக படைப்புக்கு எப்படி ஒரு ஓட்டல் முகப்பு அறையின் லௌகீக அதிர்வுகள் ஒரு வினையூக்கியாக இருக்க முடியும் என்று சில துறவிகளை குழப்ப வைத்தது. ஆனால் அது அவர்களின் குருவிற்கு மர்மாக இருக்கவில்லை. மக்கள் கூட்டம் அதிகமாக இருந்த யாழ்ப்பாணத்தின் தெருக்கள் வழியாக சென்ற யோக சுவாமி மற்றும் ஆரவாரம் நிறைந்த கோயிலின் முன்புறத்தில் பல வருடங்கள் வாழ்ந்த செல்லப்பசுவாமியை போல, குருதேவா வேறுபாட்டின் விளைவை, உட்புற மற்றும் வெளிப்புற உணர்வுகளின் மோதலை அனுபவித்து இருந்தார், மற்றும் அது அவருக்கு பருமனாக இல்லாமல் நுணுக்கத்தை அறிமுகப்படுத்தி, சுற்றியிருந்த நிழல்கள் காரணமாக வெளிச்சத்தின் மீது வெளிச்சத்தை காண்பித்தன. ஓசைகள் மற்றும் மக்கள் மற்றும் சுழலும் கர்மவினைகள் வழங்கிய பிடிப்பு இல்லாமல், மனதின் ஆன்மீக நிலைகள் ஆதிக்கம் செலுத்தியது மற்றும், அவர் தனது போதனைகளை வெளிக்கொண்டு வரமுடியாத அளவிற்கு அவர் உணர்வுப்பூர்வமாக அதிகமாக ஒதுங்கி, தன்னை அதிகமாக மேம்படுத்தி இருந்தார். §

இந்த ஓட்டலில் கடலுக்கு அருகே அமர்ந்துகொண்டு, சற்குருவின் பல்வேறு பொறுப்புக்கள் மற்றும் நூற்றுக்கணக்கான சீடர்களின் மனங்கள் ஏற்படுத்தும் தடைகள் இல்லாமல், சிறிய இடையூறுகளுடன் பல மணிநேரங்கள் அவரால் பணிபுரிய முடிந்தது. மடத்தில் தோன்றும் ஐந்து நிமிட தீங்கற்ற தடையும், அந்த சிக்கலை பற்றிய ஒரு மணிநேர சிந்தனையை தூண்டிவிடும். கடற்கரையோரம் அவர் மேற்கொண்ட பணி முறையாக கவனச்செறிவுடன் சீராக இயங்கியது. மதியம் வரையில் அருந்திய ஒன்று அல்லது இரண்டு குவளை மதுபானம் (wine) ஒரு நிம்மதியான மற்றும் சந்தோஷமான அமர்வை வழங்கியது. அந்த பானம் உணர்வுள்ள மனதை அடக்கி, மெய்ஞ்ஞான மனம் பாய்ந்து செல்ல அனுமதித்து, தனது பணியில் வழிகாட்டியதாக குருதேவா குறிப்பிட்டார். அது ஜப்பான் நாட்டு கவிஞர்களுக்கு ஒரு மொழியியல் அமுதமாக விளங்கிய சாகே மதுபான வகையைப் போன்று இருந்ததாக அவர் குறிப்பிட்டார். §



*குருதேவா சில வருடங்களுக்கு, தனது தினசரி தொகுக்கும் பணியை கடலுக்கு அருகில், விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட ஒரு வின்னேபாகோ ரியல்டா வாகனத்தில் நடத்தினார். ஒரு மேசையில் அமர்ந்து பணிபுரிந்த தொகுக்கும் குழுவிற்கு பின்னால் காட்சியளித்த கடலில், கடல் ஆமைகள் மற்றும் திமிங்கிலங்கள் தென்பட்டன.*

........................§

1992 ஆம் ஆண்டு ஹவாய் தீவை இனிகி சூறாவளி தாக்கிய போது, அங்கிருந்த நாற்பத்தி எட்டு முக்கிய ஓட்டல்களில் இரண்டைத் தவிர மற்றவை மூடப்பட்டதால், குருதேவா தனது தொகுக்கும் குழுவுடன் கலிபோர்னியா பறந்து சென்று, தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு ஓட்டல்களில் இருந்துக்கொண்டு பணிபுரிந்தார். அவர் கவாய் திரும்புவதற்கு முன்பு, ஒரு நாள் பிற்பகல் ஒரு பழைய RV வாகனத்தை வாங்க கிளம்பினார். அவருக்கு ஒரு 1979 வின்னேபாகோ வாகனம் பிடித்து இருந்தது, மற்றும் அதை பிற்பகல் அமர்வுகளுக்கு பயன்படுத்திக்கொள்ள கவாய் தீவிற்கு அனுப்பி வைத்தார். துறவிகள் மூலம் புதுப்பிக்கப்பட்டு, கெலியா கடற்கரைக்கு அருகில் இருபது கஜ தூரத்தில் நிறுத்தப்பட்ட, அந்த வாகனம் பெரும்பாலான நாட்களுக்கு

அவரது படைப்பாற்றல் பணிக்கு தலைமையகமாக விளங்கியது. குளிர்கால மாதங்களில், கடல் பாறைகள் மீது திமிங்கிலங்கள் மற்றும் பச்சை நிற கடல் ஆமைகள் மகிழ்ச்சியுடன் விளையாடுவதை அவர் கண்டு ரசித்தார். அவர் *டான்சிங் வித் சிவா* (சிவபெருமானுடன் திருநடனம்) புத்தகத்தை நிறைவு செய்த அன்று, அந்த நிகழ்வை கொண்டாடுவதை போல, ஒரு மிகப்பெரிய ஆண் திமிங்கலம் கரையில் இருந்து நூறு அடி தூரத்தில் மேலெழும்பி, தனது பன்னிரண்டு அடி நீளமான துடுப்பை தண்ணீரில் இருபத்தி ஏழு முறை வலுவாக அடித்தது. இதை கவனித்த குருதேவா, இந்த புத்தகம் "திமிங்கில சக்தியால்" உருவாக்கப்பட்டது என்று குறிப்பிட்டார். §

தொடக்கத்திலேயே கைப்பேசியை பயன்படுத்த ஆரம்பித்த குருதேவா, ஒவ்வொரு தொகுக்கும் அமர்வின் போதும் தனது கைப்பேசியை மேசையில் வைத்து இருப்பார். அவரது சொந்த எண்ணை பல்வேறு நாடுகளில் இருந்த நெருக்கமான சீடர்கள் அறிந்து இருந்தார்கள். அந்த எண்ணை எளிதில் நினைவில் வைத்துக்கொள்ளும் விதமாக, விசைப்பலகையில் இருந்த ஆங்கில எழுத்துக்கள் "நியூ டெலி" என்ற சொல்லை குறிப்பிடும் விதமாக அமைந்து இருந்தன. ஒருவரது தந்தை இறந்துவிட்டார், ஒருவர் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் மற்றும் அன்று காலை ஒரு குழந்தை பிறந்துள்ளது என்று ஒரு தொலைதூர நாட்டில் இருந்து அழைப்பு வராத நாளில்லை என்று சொல்லலாம். குருதேவா ஒரு அழைப்பிற்கு பதில் சொல்ல, தனது அமர்வை பாதியில் நிறுத்த எப்போதும் தயங்கியது இல்லை. அது ஒரு முக்கியமான அழைப்பாக இருந்தால், அவர் ஓட்டல் தோட்டங்களில் நடந்துக்கொண்டு தனது சீடர்களுக்கு ஆலோசனை வழங்கி சமாதானப்படுத்தினார். அதன் பிறகு அவர் மீண்டும் திரும்பும் போது, திரையில் இருந்த அடுத்த வாக்கியத்தின் அடுத்த சொல்லை தவறாமல் நினைவில் வைத்து இருந்தார். §

அவர் மற்றவர்களுக்கு அறிவுறுத்தும் போதும், அவர் தானே தட்டச்சு செய்த போதும், அவர் ஒரு உட்புற குரலை கேட்டுக்கொண்டு இருந்ததைப் போலவே தோன்றியது. அந்த எழுச்சிகளின் போது தோன்றிய அருமையான வார்த்தைகளை துறவிகள் பாராட்டிய போது, "எனக்கு உதவியாக மேல் லோகத்தில் நல்ல எழுத்தாளர்கள் இருக்கிறார்கள்," என்று நகைச்சுவையாக பேசுவார். இருபது ஆண்டு காலமாக, கணினி துணையுடன் அதிக அளவில் ஆன்மீக உட்பார்வையை பரிமாற்றம் செய்த போது அவர் தனது தத்துவ ஞான, கலாச்சார மற்றும் ஆன்மீக மரபை உருவாக்குவதற்கு சாதனா மற்றும் சமயப்பணியின் ஐம்பது ஆண்டுகால பலன்களை முறையாக ஒன்று திரட்டினார்.§

அவர் எழுதிய புத்தகங்கள் விரிவாக, பல தலைப்புக்களில் அமைந்து இருந்தன, இந்து சமயம் பற்றிய ஒருவரது புரிதலை வலுப்படுத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்தி, எப்போதும் எளிமையான மற்றும் யதார்த்தமான மரபுத் தொடருடன் அமைந்து இருக்கும். அவரது இறுதி பத்து ஆண்டுகளின் போது, அவர் எழுதிய புத்தகங்களின் மகத்துவத்தை

அதிகமான மக்கள் அறிந்து கொண்டதால், அதில் அவர் மேற்கொண்ட முயற்சி புதிய உத்வேகத்தை பெற்றது. அவரது போதனைகளை பகிர்ந்துக்கொள்ள விரும்பிய எசுப்பானிய மொழி வாசகர்கள், அவரது படைப்புகளை மொழிப்பெயர்ப்பு செய்ய அனுமதி பெற்றனர். ரஷ்யாவில் இருந்த ஒரு குழு மற்றும் இலங்கை (தமிழ்), மும்பை (மராத்தி), கோலாலம்பூர் (பாஷ்ய மலாய்) மற்றும் வேறு பல நாடுகளை சேர்ந்தவர்கள் பதிப்புகளை வெளியீடு செய்தனர். டில்லியில் இருந்த மூன்று பிரபல பதிப்பாளர்களான மோதிலால் பனாரசிதாஸ், முன்ஷிராம் மனோர்லால் மற்றும் அபினவ் ஆகியோர் இந்தியாவில் அவரது புத்தகங்களை மறு பதிப்பீடு செய்ய தங்கள் ஆர்வத்தை தெரிவித்தனர். ஒவ்வொரு நிறுவனத்திற்கும் குறிப்பிட சில புத்தகங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது. §

### கலை மீது இருந்த அதீத விருப்பம்

கருத்துக்களை தெரிவிப்பதிலும் மனித பண்புகளை மேம்படுத்துவதிலும் ஓவியக் கலையின் முக்கியத்துவத்தை குருதேவா அறிந்து இருந்து, இந்து சமயத்தின ஓவியக் கலையை புனிதமானதாகக் கருதினார். அவர் சென்ற பயணங்களின் போது, அங்கீகாரம் கிடைக்காத கலைஞர்கள் தங்கள் குழந்தைகளை பொறியாளர்களாக்க விரும்பியதால், இந்து சமயத்தின் வேறுபல அம்சங்களைப் போன்று, ஓவியக் கலையும் மங்கி வருவதை கவனித்தார். இதன் காரணமாக, அவர் தலைசிறந்த ஓவியர்களை தேடிப்பிடித்து, பாரம்பரிய முறையில் செய்ய முக்கிய பணிகளில் அவர்களை நியமித்து, அவர்கள் வழங்கிய பரிசுக்கு தாராள பண உதவியையும் வழங்கினார். இந்தியா, பாலி மற்றும் வட அமெரிக்காவில் இருந்த ஓவியர்கள் ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபட்டனர். அதில் சிலர் ஒற்றை கித்தான் துணியில் பல வருடங்களுக்கு தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய கடினமான பணியிலும், வேறு சிலர் இந்து சின்னங்களை படங்கள் மூலம் தெரியப்படுத்தும் நூற்றுக்கணக்கான மிகப்பெரிய ஓவியங்களை வரைவதிலும் ஈடுபட்டு இருந்தனர். §

குருதேவா தனது கலை ஆர்வத்தை ஓவியத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் சைவ மகான்கள், சிவனின் 108 நடன கரணங்கள் மற்றும் 32,000 பவுண்டு எடையுள்ள நந்தி மற்றும் ஒரு 12 அடி உயர தட்சிணாமூர்த்தியை வடிவமைக்க வெண்கலம் மற்றும் கல் சிற்பிகளை தன்னுடன் தங்க வைத்துக்கொண்டார். தங்களது திரமைகளின் மீது ஹவாய் சுவாமி காண்பித்த ஆர்வத்தை கண்டு கலைஞர்கள் வியந்தனர். இந்த வெளியீடுகளை சித்திரங்கள் மூலம் விளக்கம் அளிக்கும் பணியில், பாரம்பரிய ஓவியர்களாக விளங்கிய ஏ. மணிவேலு மற்றும் எஸ். இராஜம் பல வருடங்களுக்கு ஈடுபட்டு இருந்தனர். மெட்ராஸ் நகரத்தில் இருந்த ஒரு சிறிய தனி அறையில் தூசிப்படிந்து வந்த தனது வாழ்நாள் சேகரிப்பை விலை கொடுத்து வாங்கிய போது, “அவர் ஹவாயில் இருந்த தனது ஆசிரமத்திற்கு, நான் வரைந்த 400 ஓவியங்களை எடுத்து சென்ற போது, எனது ஓவியங்களுக்கும் ஒரு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதை

நான் உணர்ந்து கொண்டேன். மிகவும் முக்கியமாக, அவரது கம்பீரமான தோற்றம், என்னைப்போன்ற கலைஞர்களுக்கு பழங்கால ரிஷிகள் மற்றும் சமயத் தலைவர்களை நினைவுப்படுத்துகிறது," என்று வயதில் மூத்தவராக இருந்த எஸ். இராஜம் குறிப்பிட்டார். §

**ஒரு நவீன சாஸ்திரத்தை எழுதுதல்**

வாழ்க்கையின் எண்ணற்ற சிக்கல்களுக்கு குருதேவாவின் கருத்துக்களை தெரிந்துக்கொள்ள விரும்பிய சீடர்கள், பல வருடங்களாக தொடர்ந்து கேட்டு வந்த கேள்விகளுக்கு, அவர் முழு நிறைவான பதில்களை எழுதி, தனது தொகுக்கும் குழுவுடன் இணைந்து, நந்திநாத சூத்திரங்களை நிறைவு செய்த பிறகு, "உலகில் அதிக சலிப்பை ஏற்படுத்தும் புத்தகமாக அல்லது தூக்கமின்மைக்கு சரியான தீர்வு," என்று நகைச்சுவை உணர்வுடன் குறிப்பிட்ட *சைவ தர்ம சாஸ்திராஸ், தி புக் ஆப் டிஸ்சிபிளின் ஆப் சைவ சித்தாந்த சர்ச்* என்ற புத்தகத்திற்கு 1994 ஆம் ஆண்டு முழுவதையும் அர்ப்பணித்தார். §

அவர் அதன் வெளியீட்டு தேதியை, தனது சமூகத்தை எதிர்காலத்தில் வழிநடத்தி செல்வதற்கு, மூன்று தேவர்கள் குழு எழுதிய வெள்ளை நிற அந்தர்லோக தடித்த புத்தகத்தை, அவர் 1973 ஆம் ஆண்டு மனோ உணர்வு சக்தியால் வாசித்த *தி சைவைட் சாஸ்திராஸ்* என்ற புத்தகத்தை தேவர்கள் எழுதிய போது, அவர்கள் கடந்தகால கண்ணோட்டத்துடன் கருத்தில் கொண்ட தேதிக்கு இணங்குமாறு கவனமாக பொருத்திக்கொண்டார். அவர்கள் அப்போது தங்களை எதிர்காலத்தில் 1995 ஆம் ஆண்டிற்கு அழைத்து சென்று, குருதேவா மற்றும் அவரது சமூகம் என்ன செய்தது அல்லது அது வரை எந்த நடவடிக்கையில் ஈடுபடும் என்பது பற்றிய தங்களது மெய்ஞ்ஞான வரலாற்றை எழுதி வழிகாட்டலை வழங்கி இருந்தனர். குறி சொல்பவர்கள் பேசுவதைப் போல, அவர்கள் எழுதிய புத்தகங்களின் பக்கங்கள் ஒரு பரிந்துரையை மட்டும் வழங்காமல், குருதேவா மற்றும் அவரது துறவிகள் வாழ்க்கையில் என்ன நிகழவிருக்கிறது, அவர்கள் என்ன செய்வார்கள் மற்றும் எப்படி செய்வார்கள் என்பதைப் பற்றிய தகவலுடன் ஒரு பாதையை அமைத்து கொடுத்தார்கள். அவர் சுமார் 25 வருடங்களுக்கு அந்த தெய்வீக முன்னறிவிப்பை பின்பற்றி வந்தார், மற்றும் அது தற்போது வெளியிடப்பட்டு இருந்தது. §

குருதேவா அந்த புத்தகம் பற்றிய அறிமுக உரையில் தனது கண்ணோட்டத்தை பகிர்ந்தார்:§

> 1995 ஆம் ஆண்டின் தொடக்கம், கடந்தகாலம் நிகழ்காலத்தை சந்திக்கும் ஒரு பிரகாசமான காலமாக இருக்கிறது, ஏனென்றால் நான் 1973 ஆம் ஆண்டு முதல் முறையாக வாசித்த தலைசிறந்த அந்தர்லோக கையெழுத்துப் பிரதிகளுடன், எங்களது தற்கால தேவாலய குறிக்கோள்கள், தினசரி பழக்கங்கள் மற்றும் செய்முறைகளின் பற்றிய

விவரணமாக இருக்கும் இந்த *சைவ தர்ம சாஸ்திரங்களை* என்னால் சேர்க்கமுடியும். *டான்சிங், லிவிங் மற்றும் மெர்ஜிங் வித் சிவாவின்* தொகுப்பாக விளங்கும் தி மாஸ்டர் கோர்ஸ் ட்ரைலாஜி (பிரதான பயிற்சி வகுப்பின் முத்தொகுப்பு) மற்றும் தியானத்தின் மொழியாக இருக்கும் ஷூம் மொழியுடன், *லெமூரியன் ஸ்குரோல்ஸ்* மற்றும் *சைவ தர்ம சாஸ்திரங்களின்* வழிகாட்டல்கள் மற்றும் உறுதியான விதிகள் மற்றும் அறிவுறுத்தலை எனக்கு பின்வரும் ஆச்சார்யர்கள் பின்பற்றுவதற்கும் நிறைவேற்றுவதற்கும், அவற்றை நான் மரபுரிமை செல்வமாக விட்டு செல்கிறேன். எங்கள் நிகழ்முறை நிறைவடைந்து இருந்தது, தீர்க்கதரிசனம் எங்கள் எதிர்பார்ப்புகளை கடந்து சிறப்பாக வெளிப்பட்டு இருந்தது. நிகழ்காலத்திற்கு தேவைப்படும் வலுவான கடந்தகால தகவலாக விளங்கி, தற்போது எதிர்காலத்திற்கு என்று பாதுகாக்கப்படும், *லார்டு சுப்பிரமணியம் சாஸ்திராஸ் (முருகப்பெருமானின் சாஸ்திரங்கள்)* வெளிப்பட்டதில் இருந்து மகாதேவர்கள், தேவர்கள் மற்றும் ரிஷிகள் தொடர்ந்து வழங்கிய உதவிக்கு நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டு இருக்கிறோம். §

அமெரிக்க தேவாலய அமைப்பின் அம்சங்களை உள்ளடக்கி, குருதேவா எழுதிய ஏழாவது அல்லது எட்டாவது தேவாலய கையேடாக விளங்கும், *சைவ தர்ம சாஸ்திரங்கள்,* அவரது அமைப்புக்கள் சமூகத்தில் வெற்றிகரமாக செயல்படும் தன்மை மற்றும் நிறுவன அமைப்பின் ஒருமைப்பாட்டை உறுதி செய்ய உருவாக்கப்பட்டவை. அந்த கையேட்டில் அவர் தனது சமயப்பணிகளுக்கு தேவையான விரிவான குடும்ப அமைப்புக்கள் உட்பட, எதிர்காலத்திற்கு மாதிரிகளையும் முடிவு செய்து இருந்தார், மற்றும் அவர் தனது சந்நியாச குழுவில் மூத்த மூன்று சந்நியாசிகளாக இருந்த ஆச்சார்யா போதிநாத வேலன்சுவாமி, அதன் பிறகு ஆச்சார்யா சதாசிவநாத பழனிசுவாமி மற்றும் அதன் பிறகு ஆச்சார்யா சிவநாத சியோன்சுவாமியை தனது வாரிசுகளாக நியமித்தார். §



*குருதேவா பல வருடங்களாக தனது மூத்த ஆச்சார்யாக்களுடன் இணைந்து செயல்பட்டு, தேவாலயத்தின் சர்வதேச பணிக்கு வழிகாட்டினார். அவர் 1995 ஆம் ஆண்டு, தனக்கு பிறகு வாரிசுகளாக வரவிருந்த ஆச்சார்யர்களின் வரிசையை அறிவித்தார்: போதிநாத வேலன்சுவாமி, சதாசிவநாத பழனிசுவாமி மற்றும் சிவநாத சியோன்சுவாமி.*

........................§


ஆச்சார்யர்களாக இருக்கும் என் வாரிசுகளுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்த பணி நிச்சயமாக இருக்கும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். சந்நியாசத்தின் புனிதமான ஆணைகளை பூர்த்தி செய்ய கடுமையாக உழைத்த இவர்களுக்கு நல்ல பழக்கமாக, அவர்களது சாதனாவாக மற்றும் சிலநேரங்களில் அவர்களின் *தவமாக* இந்த *சைவ தர்ம சாஸ்திராஸ், லார்டு சுப்பிரமணியம் சாஸ்திராஸ்* மற்றும் *மடவாசி சாஸ்திராஸ்* அமைந்து இருக்கும். கடந்தகாலத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலம் அமைவதால், இந்த *சாஸ்திரங்களில்* இருக்கும் பழங்கால பதிவுகள் புதிய சக்தியை வெளிப்படுத்துகின்றன. §

*சைவ சாஸ்திரங்களில்* கணிக்கப்பட்டுள்ளதைப் போல, நாம் தற்போது வாழ்ந்துகொண்டு இருக்கும் வருடமான 1995 ஆம் ஆண்டில், நமது நிகழ்முறை அமைக்கப்பட்டு விட்டது மற்றும் அதை நிரந்தரமாக எதிர்காலத்தில் ஆயிரம் வருடங்களுக்கும் மேலாக பல தலைமுறைகளுக்கு நிறைவேற்றும் பொருட்டு, தொடர் பாதுகாப்பு வழங்கி தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டும் என்று என்னாலும் அந்தர்லோகத்தாலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து வலிமை மற்றும் எண்ணிக்கையில் வளர்ந்து வரும் ஒரு ஆரோக்கியமான, மகிழ்ச்சியான மற்றும் ஆன்மீக ஆக்கத்திறனுடன் இருக்கும் சிறிய உட்புற குழு மற்றும் பெரிய வெளிப்புற குழுவால் வாழப்பட்ட மற்றும் வாழவேண்டிய வாழ்க்கை பற்றிய விளக்கத்தை இந்த *சாஸ்திரங்கள்* வழங்குவதால், இது மேலும் பல காலத்திற்கு நிலைத்து இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. §

## ஹவாய் தீவில் ஒரு தென்னிந்திய கோயில்

1991 ஆம் ஆண்டின் சிவாலய தீபம் ஒரு தீர்க்கதரிசனமாக விளங்கியது. டிசம்பர் மாத நண்பகல் நேரத்தில், மழை பெய்துக்கொண்டு இருந்த வேளையில், அக்னி மண்டபத்தில் துறவிகளும் இருப்பத்தி நான்கு உறுப்பினர்களும் ஒரு *ஹோமம்* நடத்திக்கொண்டு இருந்தார்கள். அருகில் இருந்த ஒரு நிலத்தில் பாரம்பரிய முறைப்படி, சிவபெருமானை உருகப்படுத்தும் உயரமான ஜவாலைகள் சுதந்திரமாக மற்றும் பாதுகாப்பாக சுழல்வதற்கு, மூங்கில் மற்றும் மற்ற விறகுகளால் அமைக்கப்பட்ட ஒரு மாபெரும் ஹோமகுண்டம் உருவாக்கப்பட்டது. குருதேவா தனது நண்பகல் தொகுக்கும் பணியை முடித்து விட்டு, தனது வின்னேபாகோ ரியால்டாவில்

இரவு நேரத்தில் வந்து இறங்கினார். பல நாட்கள் பெய்த மழையால், பூமியில் அதிகம் மழைநீர் ஊறி இருந்ததால், அதனால் மேலும் நீரை உள்வாங்க முடியவில்லை. §



*1990 களில் குருதேவா இந்தியாவிற்கு அடிக்கடி சென்று, தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வந்த ‘இறைவன்’ கோயிலின் பாகங்களை கண்காணித்து வந்தார். அவர் டிசம்பர் 21, 1990 பெங்களூர் கைலாஷ் ஆசிரமத்தில் நடைபெற்ற ஒரு விமர்சியான விழாவில் ஒரு கல்லை உடைத்து பணிகளை தொடக்கி வைத்தார்.*

.......................§

குருதேவா வாகனத்தில் இருந்து தனது எடுப்பான காவி நிறத்தில் இருந்த, இந்திய குர்த்தாவில் இறங்கி போது, குடைகளை பிடித்துக்கொண்டு இருந்த துறவிகளும் பக்தர்களும், அவரை அன்புடன் வரவேற்றனர். ஆனால் அவர் ஒவ்வொரு வருடமும் செய்ததைப் போல அன்று சடங்குகளில் உட்காராமல், தன்னையே மறந்த நிலையில் மெதுவாக ஹோமகுண்டத்தை சுற்றி வந்து, ஓரிடத்தில் திடீரென்று நின்று, எல்லையற்ற ஆற்றலுடன் இருக்கும் சிவபெருமானை உருவகப்படுத்தும் அக்னியை வழிபட்டு சேற்றில் விழுந்து வணங்கினார். ஒரு சேற்று நிலத்தில் சற்குரு தனது அங்கங்கள் படுமாறு நமஸ்காரம் செய்வது ஒரு அபூர்வமான நிகழ்வாக இருந்தது. எதிர்காலத்தில் அந்த இடத்தில் ‘இறைவன்’ கோயில் தோன்றவிருந்தது என்று அந்த சமயத்தில் யாரும் அறிந்திருக்கவில்லை. மெய்ஞ்ஞான ரீதியாக, குருதேவா அதை அறிந்திருக்க வாய்ப்பு  இருந்தாலும், அவர் அதைப்பற்றி எப்போதும் பேசவில்லை. §

இதைப்போன்ற சம்பவம் மீண்டும் நடந்தது. 1994 ஆம் ஆண்டு, கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தின் எட்மன்டன் நகரத்தில், தொடக்க நிலையில் இருந்த ஒரு விநாயகர் கோயிலின் நிர்வாக குழுவை குருதேவா சந்தித்தார். “ஒரு சிறிய குன்று மற்றும் அதில் ஒரு சிறிய ஓடையுடன், குறைந்தது ஐந்து ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு நிலத்தை விலைக்கு வாங்குங்கள்,” என்று நான்கு வருடங்களுக்கு முன்னர் அவர் அந்த குழுவிற்கு அறிவுறுத்தி இருந்தார். அவர் அப்போது ஒரு நிலத்தை வாங்கி இருந்தார்கள், மற்றும் குருதேவா அந்த இடத்தில் முதல் முறையாக அடியெடுத்து வைத்துக்கொண்டு இருந்தார். §

அவர் விநாயகர் தற்காலிகமாக பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டு இருந்த ஒரு சிறிய வீட்டிற்குள் நுழையாமல், அவர் அந்த கட்டிடத்தை சுற்றி வந்து, அவரை உபசரித்தவர்கள் வியக்கும் வண்ணம்,  பாதையில்லாத புதருக்குள் நுழைந்தார். அவரை சிறிய அன்பர்கள் குழு பின்தொடர்ந்து செல்ல, அவர் அடிமரங்கள் மற்றும் முட்புதர்கள் வழியாக தைரியமான நோக்கத்துடன் நடந்து சென்றார். அவர் திடீரென்று ஒரு இடத்தில் நின்றார். அப்போது உபசரிக்க பயன்படுத்திய பூக்களை, அவர் தனது கூப்பிய கைகளில் வைத்துக்கொண்டு பிரார்த்தனை செய்ததை அவர்கள் அதிக ஆர்வத்துடன் கவனித்தார்கள். அவர் தான் நின்ற இடத்தில் பூக்களை வைத்து விட்டு, சற்குரு மரத்தூசி படிந்த தரையில் விழுந்து வணங்கினார். §

அதன் முக்கியத்துவத்தை அறிந்துகொண்ட கோயில் நிர்வாகிகள், குருதேவா பூக்களை வைத்த பகுதியை ஒரு நில அளவாய்வாளரின் துணையுடன் குறித்துக்கொண்டனர். எதிர்காலத்தில் அந்த புனிதமான

இடத்தில், எட்மன்டன் மகாகணபதி ஆலயம் கட்டப்பட்டது. அந்த பச்சை பூமியில் குருதேவா இரண்டு முறை நமஸ்காரம் செய்தார், மற்றும் அந்த இடத்தில் இரண்டு முறை கோயில்கள் எழுப்பப்பட்டன. §

குருதேவா 1975 மற்றும் 1990 வருடங்களுக்கு இடையே, பூலோகத்தில் ‘இறைவன்’ கோயிலை கட்டுவதற்கு சாலைகளை உருவாக்கி, நிலத்தை சுத்தம் செய்து, அடமானங்களுக்கு வட்டியை செலுத்தி, படிக சுயம்பு லிங்கத்தை விலைக்கு வாங்கி, கட்டிடக்கலை நிறுவனங்களின் உதவியுடன் பெரிய திட்டங்களை தீட்டி கடுமையாக உழைத்து வந்தார். 1982 ஆம் ஆண்டு, குருதேவா புகழ்பெற்ற மாமல்லபுரம் அரசினர் கட்டிடக்கலை  மற்றும் சிற்பக்கலை கல்லூரிக்கு சென்று, அப்போது வளரும் கலைஞராக இருந்த ஸ்ரீ வி. கணபதி ஸ்தாபதியை சந்தித்தார். அந்த கலைஞர், பாரத நாட்டில் தலைசிறந்த கோயில் கட்டிடக்கலைஞராக விரைவில் புகழ்பெற்றார். நாட்டில் பொதுத்துறையில் செய்த சிறந்த சேவையை அங்கீகரிக்கும் வண்ணம், 2009 ஆம் ஆண்டு பலரது கனவாக விளங்கும் பத்ம பூஷன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இந்த திறமையான கட்டிக்கலை வல்லுநர், தனது மூதாதையர்கள் பாணியில் ‘இறைவனை’ வடிவமைக்க இருந்தார். §

தங்களது நேர்த்தியான அழகு மற்றும் பிரசித்தமான சிற்பக்கலைக்கு புகழ்பெற்ற, தமிழ்நாட்டு சோழ சாம்ராஜ்யத்தின் பழங்கால கோட்டைகளின் பாரம்பரியத்துடன், அது ஒரு கருங்கல் மாளிகையாக இருக்கவிருந்தது. அதன் பெயரும் அந்த யுகத்தின் பெயரைப் போல ஒலிக்கிறது. கடவுளை குறிப்பிடும் இன்னொரு பழங்கால சொல்லாக இருக்கும் ‘*இறைவன்*’ என்ற சொல், “வழிபடப்படுபவர்” என்று சிவபெருமானை அன்புடன் அழைக்கும் பெயராகவும் விளங்குகிறது. சிவபெருமானின் இந்த ஹவாய் இருப்பிடத்தில், ஒவ்வொரு கல்லும் புனிதமாக இருந்து, இறைவனின் உடலின் ஒவ்வொரு அங்கமும், நமது நவீன யுகத்தில் அழியும் தருவாயில் இருக்கும் ஒரு கலையில் தேர்ச்சிபெற்ற  கைவினைஞர்களால் பழமையான முறையில் கைகளால் செதுக்கப்படவிருந்தது. §


மின்சாரம் அல்லது நீராற்றலால் இயங்கும் கருவிகளின் ஆற்றல்களை பயன்படுத்தக்கூடாது என்று அறிவித்ததன் மூலம், குருதேவா இரண்டு விஷயங்களை உறுதி செய்தார்: முதலாவதாக, நவீன இயந்திரங்களை காட்டிலும் கைகளால் செதுக்குவது அதிக செம்மையாகவும் நுணுக்கமாகவும் இருப்பதால், அது மனிதனின் திறமையை சிறப்பான முறையில் பிரதிபலிப்பதாக இருக்கும்; மற்றும் இரண்டாவதாக, ஒரு தேர்ச்சி பெற்ற கைவினைஞரிடம் இருந்து மாணவனுக்கு கற்றுத் தரப்படுவதை போல, தகப்பன் தன் மகனுக்கு கற்றுத்தரும் இந்த கலை, குறைந்தபட்சம் மேலும் ஒரு தலைமுறைக்கு நிலைத்து இருக்கும். §

இன்றைய காலத்தில் இந்திய கோயில்கள் கற்களை மட்டுமே பயன்படுத்தி அபூர்வமாக கட்டப்படுகின்றன, மற்றும் அதிக செலவழித்து, அதிக நாட்கள் தேவைப்படும் பாரம்பரிய முறையில் கட்டுவது அதை விட அபூர்வமாக இருக்கிறது. நவீன ஒப்பந்தக்காரர்கள் கட்டிட வேலைக்கு கற்காரை மற்றும்

செங்கலையும், கற்களை வடிவமைக்க மின்சார சக்தியால் இயங்கும் கருவிகளை பயன்படுத்துகிறார்கள், மற்றும் இதன் தரத்தை செதுக்கும் வேலையுடன் ஒப்பிட முடியாது. இந்தியாவின் பெங்களூரில் 1991 மட்டும் 2017 வருடத்திற்கு இடையில், மூங்கில் கைப்பிடியுடன் இருக்கும் ஒரு சுத்தியல் மற்றும் மென்மையான இரும்பில் கைகளால் உருக்கப்பட்ட உளி என்று இரண்டு எளிமையான செதுக்கும் கருவிகள் மற்றும் கற்கரியின் மூலம் உலோகங்களை உருக்கும் பழமையான உலையை மட்டுமே பயன்படுத்தி, இந்தியாவில் கைகளால் கட்டுப்பட்ட இறுதியான கோயில் இதுவாகத்தான் இருக்கவேண்டும். §

தினமும் குருதேவா கோயில் தொடர்பான தகவல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இந்த மாபெரும் பணி அவர்கள் பகிர்ந்துகொண்ட குறிக்கோள்களை எடுத்துரைத்து, அவர்களை ஒன்று சேர்க்கும் என்பதை அறிந்திருந்தது, அதன் படைப்பில் அவர் துறவிகள் மற்றும் தனது சீடர்களையும் ஈடுபடுத்தினார். அவர் அடிக்கடி அதன் முக்கியத்துவத்தை விளக்குவார்:§

> எதிர்காலத்தில் ‘இறைவன்’ கோயில், முற்றிலும் நிறைவடைந்து, சீடர்கள் தங்கள் மையத்தை தெரிந்துக்கொள்ள வருகை தரும் மையமாக இருக்கப் போவதாக எனக்கு தோன்றுகிறது. மக்கள் யோகத்தை பயிற்சி செய்து தங்களுக்குள் ஆழமாக செல்ல வருகை தந்த ரிஷிகேஷ் ஒரு முறையான, தூய்மையான மற்றும் அமைதியான இடமாக இருந்ததைப் போல, நாம் அதை பாதுகாத்து பராமரிப்போம். அதைப்போன்று இன்று பூமியில் ஒரு சில இடங்களே மீதம் உள்ளன. அதில் கவாய் இந்து மடம் ஒன்றாக விளங்குகிறது. எனக்கு ‘இறைவன்’ கோயில் யோகத்தின் கோட்டையாகவும் சிரத்தை, நேர்மை மற்றும் பக்தியுடன் இருப்பவர்களுக்கு ஒரு புண்ணிய தலமாகவும் தென்படுகிறது. இந்துக்களும் இந்துக்கள் அல்லாதவர்களும் ஒன்றாக விருந்தாளிகள் தினத்தன்று, சிற்பக்கலையில் இருக்கும் மிகப்பெரிய கலைத்திறனை ரசிக்க வரும் போது, உலகிற்கு இந்தியாவின் தகவலாக ‘இறைவன்’ விளங்கும் என்று எனக்கு தோன்றுகிறது. நமது பரம்பரை, நமது சாஸ்திரங்கள் மற்றும் நமது மடத்தின் முழுமையாக ‘இறைவன்’ விளங்குவதை நான் காண்கிறேன். இந்த இடத்தில் இறைவன் இருப்பதாலும், இங்கே சொர்க்கம் பூமியை சந்திப்பதாலும், இங்கே இறைவனை ஆவாகனம் செய்யவேண்டிய அவசியமில்லை. §



*‘இறைவன்’ கோயிலின் குடமுழுக்க விழாவிற்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் கவாயில் கூடவிருக்கும் மங்களகரமான நாளை ஓவியர் எஸ். இராஜம்*

*சித்தரித்து உள்ளார். விமானங்கள் மீது புனிதமான நீரை ஊற்றும் போது, கைலாச பரம்பரையின் குருமார்கள் சூழ்ந்து இருக்க, குருதேவா தனது ஒளி உலகில் இருந்து ஆசிகளை வழங்குகிறார்.*

........................§

### அவரது இந்திய சகோதரர்களிடம் இருந்து உதவி பெறுதல்


இந்தியாவில் ஒரு கருங்கல் கோயிலை கட்டி, அதை ஒவ்வொரு பாகமாக கப்பலில் அனுப்பும் மாபெரும் பணியை செய்ய ஒப்பந்தம் செய்வது என்பது பேச்சுவார்த்தையின் முடிவாக இல்லாமல் தொடக்கமாக இருக்கும் என்று அவர் கருதிய அந்த புண்ணிய பூமியில் 8,000 மைல் தொலைவில் தான் மேற்கொண்ட முயற்சிக்கு யார் உதவியாக இருப்பார் என்று விசாரிக்க ஆரம்பித்தார். இந்த பணிக்கு தேவையான அனுபவம், திறமை மற்றும் அடிமட்ட மக்கள் தொடர்புகள் யாரிடம் இருக்கும்? அவருக்கு திருச்சி சுவாமியை பற்றிய தகவல் கிடைத்தது. அந்த சுவாமி குருதேவாவை சந்திக்க ஒப்புக்கொண்டதோடு, குருதேவாவுடன் 1990 ஆம் ஆண்டு இந்திய இன்னரசர்ச் திட்டத்தில் பயணம் செய்த முப்பது யாத்திரிகர்களும் தனது ஆசிரமத்தில் இரண்டு நாட்கள் தங்குமாறு கேட்டுக்கொண்டார். §

குருதேவாவை விட இரண்டு வயது இளையவராக, 1929 ஆம் ஆண்டு பிறந்து, பெங்களூரில் வெள்ளை உடையணிந்து வசித்து வந்த திருச்சி சுவாமி, ஒரு அபூர்வமான சூட்சும ஞானியாக இருந்தார். அவரது பெற்றோர்கள் தென் இந்தியாவின் கன்னியாகுமரியில் பயணம் செய்த போது, முன்பின் அறிமுகம் இல்லாத நபர் ஒருவர் அம்மன் கோயிலுக்கு அருகில், "அம்மன் மற்றும் முருகப்பெருமானின் அருளால் உங்களுக்கு பிறக்கும் மேன்மை பொருந்திய மகன் மனிதநேயத்திற்கு உபதேசம் வழங்கி, கொடைவள்ளலாக இருப்பார்," என்று கூறினார். அவர் தீர்க்கதரிசனம் பலித்தது. குருதேவா இலங்கையில் தீட்சை பெற்ற அதே சமயத்தில், இந்த இளம் சாதகர் நேபால் பயணம் செய்து அங்கே தனது இருபது வயதில் தீட்சை பெற்றார். ஶ்ரீ திருச்சி மகாசுவாமிகள் (1929–2005), என்கிற திருச்சி சுவாமி இந்தியாவிற்கு திரும்பி தர்மத்தை பிரச்சாரம் செய்து ஒரு கோயிலை கட்டவேண்டும் என்று அவருக்கு அவரது குரு சிவபுரி பாபா அறிவுறுத்தினார். சுவாமிஜி திரும்புவதற்கு முன்பாக கைலாய மலைக்கு சென்று வந்தார். அப்போது துர்காதேவி, லட்சுமி மற்றும் சரஸ்வதி ஒரு காட்சியில் தோன்றி, அவர் தெற்கே கர்நாடகம் செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். §

குருதேவா சான் பிரான்சிஸ்கோ நகரில் தனது ஆசிரமத்தை தொடங்கி மூன்று வருடங்கள் கழித்து, 1960 ஆம் ஆண்டு, சுவாமிஜி பயணம் செய்த போது அவருக்கு தோன்றிய காட்சி, அவர் பெங்களூருக்கு அருகில் ஒரு ஆசிரமத்தை தொடங்க ஊக்குவித்தது. அந்த ஆன்மீக ஆணைகளின் நிறைவேற்றமாக, குருதேவா பலமுறை தங்கிய சுவாமிஜியின் கைலாச ஆசிரமம் மற்றும் ராஜராஜேஸ்வரி ஆலயம் விளங்கியது. எதிர்காலத்தில் இந்த தலைசிறந்த

இரண்டு குருமார்கள் மற்றும் அவர்களின் வாரிசுகள், வலுவான உறவுடன் தங்கள் வாழ்வில் ஒன்றாக கலந்து செயல்படவிருந்தார்கள். §

ஸ்ரீ திருச்சி சுவாமிகளின் வழிகாட்டல் மற்றும் யதார்த்தமான ஈடுபாட்டுடன், அந்த திட்டம் வலுவடைந்து, தடைகள் நீங்கியது மற்றும் ராஜராஜேஸ்வரி கோயிலில் நடைபெற்ற ஒரு ஆடம்பர விழாவில் 'இறைவன்' கோயிலின் முதல் கல் செதுக்கப்பட்டது. அத்துடன் குருதேவா கணபதி ஸ்தாபதியுடன் நீண்டகால ஒப்பந்த வேலைகளை நிறைவு செய்வதற்கு, இரண்டு சுவாமிகளை இந்தியாவில் தங்க வைத்து, கவாய் தீவிற்கு பறந்து சென்றார். §



*வாய்லூவா நதிக்கரையில் அமைந்த இருக்கும் 'இறைவன்' கோயிலின் தங்க கோபுரங்களை நாடி, எதிர்காலத்தில் உலகெங்கிலும் இருந்து பக்தர்கள் வந்துகொண்டு இருப்பார்கள். மேளதாளங்கள் மற்றும் சங்கொலிகளுடன் துறவிகள் நெருங்கிக்கொண்டு இருக்க, கற்சிலை வடிவில் இருக்கும் 12 அடி உயர தட்சிணாமூர்த்தி அமைதியாக அமர்ந்து இருக்கிறார்.*

……………………§

அதற்கு முன்னர், இன்னர்சர்ச் யாத்திரிகள் மெட்ராஸ் நகரில் இருந்த போது, குருதேவா ஒரு வாகனத்தில் தனது மூன்று துறவிகளுடன், இந்தியாவின்

இன்னொரு தலைசிறந்த மகானிடம் ஆசிகளை பெறுவதற்காக ‘இறைவன்’ கோயிலின் வரைபடத்தை எடுத்து சென்றார். அவர்கள் காஞ்சிபுரம் வந்து சேர்ந்ததும், 97 வயது நிரம்பிய, காஞ்சி காமகோடி பீடத்தின் மூத்த மடாதிபதியாக இருந்த பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் தரிசனத்திற்காக நின்று இருந்தவரிசையில் அவர்களும் காத்து இருந்தனர். பக்தர்கள் வரிசையில் நடந்து சென்று, ஒரு எளிமையான வெள்ளை நிற துணி விரித்த கட்டிலில், நிலையில்லாத சுயநினைவுடன் படுத்திருந்த மெலிந்த முனிவரிடம் ஆசிகளை பெற்றனர். அவருக்கு அருகில், தலையை சவரம் செய்து, நரைத்த முடியுடன் இருந்த ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மூத்த சுவாமிகளின் இந்த புனிதமான சந்நியாச வாழ்க்கையில், தீவிரமாக மற்றும் உறுதியாக உதவி செய்து வந்தார். அவருக்கு குருதேவா வந்து இருப்பது தெரிவிக்கப்பட்டதும், உயரமாக காவி உடை அணிந்து இருந்த அமெரிக்கா துறவிக்கு அவர் வணக்கம் தெரிவித்து, கோயில் வரைபடத்தை காண்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். அவை விரைவில், பக்தர்கள் வரிசை மற்றும் வேதாந்தத்தில் தேர்ச்சி பெற்ற துறவிகளுக்கு மத்தியில் இருந்த ஒரு மேசையில் விரிக்கப்பட்டன. அதன் பிறகு ஜெயேந்திர சரஸ்வதி மூத்த சுவாமியின் காதுகளில், “ஹவாயில் இருந்து சுவாமி வந்து இருக்கிறார்,” என்று முணுமுணுத்தார். §

திடீரென்று காஞ்சி பெயரிவருக்கு சுயநினைவு திரும்பி, நன்றாக விழித்துக்கொண்டு, தான் படுக்கையில் சாய்ந்து உட்கார உதவி செய்யுமாறு சிப்பந்திகளிடம் கேட்டுக்கொண்டார். அவருடைய பெரிய கருவிழிகள் குருதேவாவை கவனித்தன. சில நொடிகள் கழித்து, அவர் வரைபடங்களை பார்த்து, அவற்றின் மீது தனது கைகளை வைத்து, மீண்டும் கட்டிலில் படுத்து தன் கண்களை மூடிக்கொண்டார். ஜெயேந்திர சரஸ்வதி கோயிலை பற்றி விசாரித்தார். குருதேவாவின் துறவிகளில் ஒருவர் கோயில் பணியைப் பற்றிய விவரத்தை தமிழில் விளக்கிய போது, அவர் கூர்ந்து கவனித்துக்கொண்டு இருந்தார். ஜெயந்திர சரஸ்வதியும் அந்த வரைபடத்திற்கு தனது ஆசிகளை வழங்கி, அதற்கு முன்பு இரு முறை சந்தித்து இருந்த குருதேவாவுடன் ஒரு புகைப்படம் எடுத்துக்கொண்டார். அவர்கள் கல்லில் கட்டப்பட்ட சிறிய அறையை விட்டு வெளியேறி மீண்டும் சாலைக்கு வந்து சேர்ந்ததும், “வந்த வேலை நல்லபடியாக முடிந்தது,” என்று குறிப்பிட்டார். §


கல்லில் கட்டப்படும் இந்து கோயில் ஒரு விசேஷமான மற்றும் விசித்திரமான முறையில் உருவாக்கப்படவிருந்ததால், பெங்களூர் நகரில் நடந்த விவாதங்கள் ஒரு செதுக்கும் இடத்தை மையமாக கொண்டு அமைந்து இருந்தன. 75 சிற்பிகள் மற்றும் அவர்கள் குடும்பங்கள், அவர்களின் உணவு பொருட்களுக்கு தோட்டங்கள், தண்ணீருக்கு கிணறுகள், கொல்லன் பயன்படுத்தும் உலைகள் மற்றும் செதுக்கும் குடிசைகள் மற்றும் நிர்வாகிகளுக்கு தேவையான வசதிகளுடன் ஒரு முழுமையான கிராமத்தை உருவாக்க வேண்டியிருந்தது. இவை அனைத்தும் சாத்தியமா? §

அதிஷ்டவசமாக, இந்த பணியின் தேவைகள் பற்றி கைலாச ஆசிரமத்தில் பயிற்சி பெற்று இருந்த, ஆதி சுஞ்சனகிரி மகா சமஸ்தானம் மடத்தின் ஸ்ரீ பாலகங்காதரநாத சுவாமிஜிக்கு தெரியவந்ததும், அவர் இந்த பணிக்காக இலவசமாக பதினொரு ஏக்கர் வறண்ட நிலத்தை வழங்கினார். அது ஒரு மிகப்பெரிய வரமாக அமைந்து, சிற்பிகள் தங்கள் வேலைகளை பல வருடங்களுக்கு தொடர்ந்து செய்யவிருந்த பணியிடம், சில மாதங்களில் நிறைவடைந்தது. இந்திய சுவாமிகள் குருதேவாவின் பிரதிநிதிகளாக இருந்துக்கொண்டு கட்டுமான பணியை கண்காணிப்பதற்கு வசதியாக, பெங்களூருக்கு அருகில் செதுக்கும் இடம் அமைக்கப்பட்டது. அவர்கள் அவரது பணியை கவனித்துக்கொண்டு, தடையில்லாத அன்பு மற்றும் எல்லையற்ற உதவியின் மூலம் அவரை கவனித்துக்கொண்டார்கள். ‘இறைவன்’ கோயில் உருவாவதற்கு அவர்கள் முக்கிய காரணமாக இருந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. §

### ஐந்து புனித செங்கற்கள்

மேற்கு நாடுகளுக்கு இந்தியா அளிக்கும் பரிசாக ‘இறைவன்’ கோயில் இருக்கும் குருதேவா அறிவித்தார். அவர் 1995 ஆம் ஆண்டை ‘இறைவன்’ கோயிலுக்கு அர்பணித்தார். இந்த மாபெரும் முயற்சிக்கு தேவையான சக்திகளை ஒன்று திரட்டுவதற்காக, மற்ற மடங்களில் இருந்து துறவிகளை கவாய் தீவிற்கு அழைத்து வந்து, நாற்பது வருட காலத்தில் முதல் முறையாக தனது துறவிகள் சமூகம் முழுவதையும் ஒன்று திரட்டினார். §

கோயில் அடித்தளத்தை புனிதப்படுத்தும் அஸ்திவார பூஜை மற்றும் ‘இறைவன்’ கோயில் கட்டிடத்தை தொடங்குவதை குறிப்பிடும் விதமாக, இரண்டு நாட்கள் விரிவாக நடைபெறும் பஞ்ச சீலான்யாச பூஜைக்காக துறவிகள் தங்கள் தலைமையகத்திற்கு அழைக்கப்பட்டனர். அந்த அஸ்திவார பரப்பிற்குள் தோண்டப்பட்ட குழியில் நவ இரத்தினங்கள் மற்றும் நவ தானியங்கள் மற்றும் வேறு சில பொருட்களுடன், சந்தன குங்குமமிட்ட ஐந்து செங்கற்களை ஊன்றி, கட்டிட வேலைகளை தொடங்கும் விழாவை காண உலகெங்கிலும் இருந்து சுமார் 200 அன்பர்கள் வந்து இருந்தார்கள். வெதுவெதுப்பான ஹவாய் தீவின் காற்று, அங்கே கூடியிருந்த விசுவாசிகளை மென்மையாக தழுவியது. கற்பூரம், தூபம் மற்றும் பூக்கங்களின் நறுமணங்கள் மட்டுமில்லாமல், மணி ஓசைகள் மற்றும் விபூதி பூசிய பூசாரிகள் உரக்க உச்சரித்த சமஸ்கிருத மந்திரங்களும் அவர்கள் புலன்களுடன் பேசின. இந்த பூஜையை பற்றி தேவராஜன் தனது அனுபவத்தை பகிர்ந்து கொள்கிறார்:§



*மடத்திற்கு ஒரு வட இந்திய நர்மதா லிங்கம் பரிசாக வழங்கப்பட்ட போது, அந்த புனிதமான லிங்கத்திற்கு அபிஷேகம் செய்ய யாத்திரிகளை குருதேவா வரவேற்றதோடு, தானும் அவ்வப்போது ஓடை தண்ணீரால் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து வைத்தார்.*

……………………..§


கட்டிட கலைஞராக இருந்த வி. கணபதி ஸ்தாபதியுடன், இந்து சமய சடங்குகளை முன்னின்று நடத்திய, மதிப்பிற்குரிய சிவஶ்ரீ சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் உட்பட, *ஹோமத்தில்* கலந்து கொள்ள சென்னையில் இருந்து பல புரோகிதர்கள் வந்து இருந்தார்கள். 'இறைவன்' கோயில் கருவறையின் வடகிழக்கு மூலையில், நான்கு அடி அகலம் மற்றும் நான்கு அடி நீளத்துடன் சதுர வடிவில் ஒரு குழி தோண்டப்பட்டது. பொழுது விடிவதற்கு முன்பாக வானத்தில் இருள் சூழ்ந்து இருந்த நேரத்தில், தாங்கள் இருந்தது இந்திய நாடா அல்லது ஹவாய் தீவா என்று யாருக்கும் வித்தியாசம் தெரியவில்லை. அந்த மாபெரும் பூஜையின் போது அந்த குழியில் நவ இரத்தினங்கள், தங்கம், வெள்ளி, பல அரிய மூலிகைகள் மற்றும் மற்ற புனிதமான பொருட்களை எனது குருதேவா, இந்து புரோகிதர்கள், கட்டிட வடிவமைப்பாளர் மற்றும் கூடியிருந்த மற்றவர்கள் சமர்பித்துக் கொண்டிருந்தார்கள். துறவிகள் தொடர்ந்து பல தட்டுக்களை கொண்டு வந்து குழியில் வைத்தார்கள். ஒரு சமயத்தில் ஒரு பெரிய பானையில் கொண்டு வந்த விபூதி அந்த குழியில் கொட்டப்பட்டதால், அதன் பிறகு எந்த படையலை சமர்ப்பித்தாலும், அது அந்த குழியில் இருந்து விபூதி மேகமாக மேலெழுந்து, எங்கள் எல்லோரையும் ஆசிர்வதித்து. §

அமைதியான நிலவொளியில் அமர்ந்து கொண்டு, சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் மற்றும் குருதேவா, அடிக்கடி எரிந்துக்கொண்டு இருந்த கற்பூர சுடருக்கு காற்று வீசிக்கொண்டு இருந்தனர். வலுவான மற்றும் புனிதமான வேத கோஷங்களுடன் பிரதிஷ்டை செய்யப்பட்ட அந்த குழியில், தமிழில் ந ம சி வா ய என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஐந்து புனிதமான செங்கற்களை, கட்டிட வடிவமைப்பாளர் வைத்தார். §

இந்த படையல்கள் மற்றும் பிரதிஷ்டைகளுக்கு பிறகு, அந்த குழியை கற்காரை கொண்டு மூடவேண்டும் என்று குருதேவா எங்களுக்கு உத்தரவிட்டார். கூட்டம் கலைந்த பிறகு, நாங்கள் பல வண்டிகளில் கற்காரைகளை கலந்து, அந்த குழியை நிரப்பினோம். அந்த பணி நிறைவடைந்த பிறகு, எங்கள் மனதில் என்றென்றும் நிலைத்து இருக்கும் இந்த அபூர்வமான நிகழ்வில் பங்குபெற்றோம் என்பதை அறிந்துகொண்டு, மனதில் மகிழ்ச்சியுடன் கிளம்பினோம். §

அதற்கு அடுத்த சில வருடங்களில், கோயில் கட்டும் பணியில் இருந்த பல்வேறு குழுக்களை, குருதேவா பல முறை சந்தித்து, ஒவ்வொரு

தகவலையும் பின்பற்றி வந்தார். அவரால் கருவறையில் முதல் மூன்று அடுக்குகள் வைப்பதை மட்டுமே காண முடிந்தது. §



*“பல சூட்சும ஞானிகளுக்கு காட்சி அளித்து, காணக்கூடிய ஒரு அழகான மனித உருவுடன் பிரபஞ்சத்தின் சிற்பியாக,” சிவபெருமான் இருப்பதாக குருதேவா விவரித்தார்.*


……………………§

**ஒரு வைணவ சமூகத்துடன் தொடர்பு**

1995 ஆம் ஆண்டு, தனது இரண்டு சுவாமிகளுடன் இந்தியாவில் மூன்று மாதங்கள் பயணம் செய்த போது, குஜராத்தை தலைமையகமாக கொண்ட போச்சாசன்வாசி அக்ஷர் புருஷோத்தம் ஸ்வாமிநாராயண் சன்ஸ்தா (BAPS) என்கிற ஒரு மாபெரும் வைணவ அமைப்பின் சற்குருவான பிரமுக் சுவாமி மகாராஜின் 75 ஆவது பிறந்த நாள் கொண்டாட்டத்தை ஒட்டி, மும்பையில் கூடிய 50,000 அன்பர்களுக்கு ஒரு முக்கிய உரையை வழங்க குருதேவா அழைக்கப்பட்டார். §

இரண்டு குருமார்கள் அமைதியான ஆன்மீக கூட்டுறவில் அமர்ந்து இருப்பதைக் காண கூடியிருந்த பல டஜன் கணக்கான காவி உடை சாதுக்களை காண்பதற்கு, வேத காலத்தில் காணும் காட்சியை போன்று இருந்தது. இருவரும் போதித்த பாதை பக்தி மற்றும் தியானத்தை உள்ளடக்கி, துறவற வாழ்க்கையின்  உறுதியான மற்றும் பாரம்பரிய விதிகளை வலியுறுத்தி, ஆன்மீக முன்னேற்றத்திற்கு குருவின் பங்கு முக்கியம் என்ற கருத்திற்கு ஆதரவு தெரிவித்தது. இரண்டு சமூகங்களும் பழங்கால செய்முறைகள் மற்றும் உயர் தொழில்நுட்பம் கலந்து, ஒரே குறிக்கோளுக்காக குருவை மையமாக வைத்து துறவிகள் மற்றும் சம்சாரிகள் முயற்சி செய்த நெறிமுறையின் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடு மற்றும் முன்னேற்றத்தின் ஒரு வேறுபட்ட கலவையை பகிர்ந்துகொண்டன. அந்த துறவிகள் வழங்கிய அன்பான வரவேற்பின் மூலம் அவர்கள் தங்கள் குருவிற்கு  வழங்கிய ஆழமான மரியாதையை குருதேவா உடனே புரிந்துகொண்டார். §

குருதேவா BAPS துறவிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சியை பற்றி தெரிந்துகொள்ள விரும்பி, அவர்கள் தன்னிடம் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளித்தார் மற்றும் மிகவும் முக்கியமாக, அவர்கள் தேர்ந்தெடுத்த பாதையில் முன்னேற அவர்களுக்கு ஊக்கமும் உத்வேகமும் அளித்தார். அவ்வாறு செய்வதை அவர் அதிகம் விரும்பி செய்தார். அதனால் அவர் பல மணிநேரம் பயணம் செய்து, சாரங்பூரில் இருந்த அவர்களின் சாது பயிற்சி மையத்திற்கு விரைந்து சென்றார். அந்த கிராமம் பண்ணையின் மத்தியில் சமவெளி மீது அமைந்து இருந்தது. இந்த மையம் ஒரு நவீன வளாகமாக, தனது இரண்டு அடுக்கு கட்டிடத்தில் பயிற்சி பெறும் நூற்றுக்கும் அதிகமான துறவிகளுக்கு குடியிருப்பு வசதியை வழங்குகிறது. அந்த துறவிகள் ஒவ்வொருவரும் இந்துயிசம் டுடே பத்திரிகையின் ஆர்வமுள்ள வாசகர்களாக இருக்கிறார்கள். §



*பத்திரிகை வெளியீட்டு வளாகத்திற்கு வெளியே இருந்த ஒரு மிகப்பெரிய மாமரத்திற்கு அடியில் அமைந்து இருந்த ஆறு பக்க கூடாரத்தில் குருதேவா பார்வையாளர்களை சந்தித்து அவர்கள் கேள்விகளுக்கு பதில் அளித்து புத்தகங்களில் கையொப்பமிட்டார்.*

•••••••••••••••••••••••••§

BAPS துறவிகளில் ஒருவர், “குருதேவா, மக்கள் எங்களை வெறி பிடித்தவர்கள் என்று அழைக்கிறார்கள். நாங்கள் இதை எப்படி எதிர்கொள்வது?” என்று கேட்டார். “அதை ஒரு பாராட்டாக எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் உற்சாகம் அவர்களிடத்தில் பொறாமை உணர்வை ஏற்படுத்துவதால், அவர்கள் அவ்வாறு பேசுகிறார்கள்,” என்று குருதேவா அந்த விமர்சனம் பற்றி தனது நேர்மறையான கருத்தை தெரிவித்தார். §

அவர்கள் எடுத்துக்கொண்ட சங்கல்பங்களை கடைப்பிடித்து, கனவிலும் பெண்களைப் பற்றி நினைக்காமல் இருக்கவேண்டும் என்று குருதேவா துறவிகளிடம் கேட்டுக்கொண்டு, "சீடனுக்கு ஒரு கடமை மட்டுமே உள்ளது. உங்கள் குரு சொல்படி கேட்டு நடக்க வேண்டும்! உங்கள் குரு சொல்படி கேட்டு நடக்க வேண்டும்! உங்கள் குரு சொல்படி கேட்டு நடக்க வேண்டும்!" என்று கூறினார். இந்த அறிவுரை அவர்கள் இதயங்களுக்கு தெரிந்து இருந்தாலும், நவீன இந்திய கூர் உணர்வுகள் காரணமாக அவர்கள் என்றுமே கேட்காத அறிவுரையை அவர் தைரியமாக வழங்கினார். அவர் இதை கூறியதும், மகிழ்ச்சியடைந்த 250 சாதுக்களின் கரவொலி அந்த அறையில் நிரம்பியது. §

அந்த சந்திப்பிற்கு பிறகு, ஒவ்வொரு துறவியும் முன்வந்து குருதேவாவிடம் இருந்து கைநிறைய பூக்களை பெற்றுக்கொண்டனர். அது ஒரு மறக்கமுடியாத பயணமாக அமைந்து, இரண்டு சமூகங்களையும் மேம்படுத்தியது. "இந்து துறவிகளுக்கு இதைப்போன்ற ஒரு பயிற்சி மையத்தை, நான் உலகில் எங்கும் பார்த்தது இல்லை," என்று அவர் பின்னர் குறிப்பிட்டார். §

பல வருடங்கள் கழித்து, 2001 ஆம் ஆண்டு 50,000 மக்களை பலிகொண்ட குஜராத் நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக உதவி செய்யும் பணியில், BAPS மூத்த துறவிகளில் ஒருவரை, பிரமுக் சுவாமி அனுப்பி வைத்தார். இந்துயிசம் டுடே பத்திரிகைக்கு BAPS பற்றி ஒரு கட்டுரை எழுதிய ராஜீவ் மாலிக்கிடம் அந்த துறவி, "நோயால் வாடிய 400 மாடுகளுடன் காட்டுக்குள் அனுப்பப்பட்டு, மந்தையின் எண்ணிக்கை 1,000 வரும் வரை திரும்ப வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்ட சீடனைப் பற்றி *உபநிடதங்களில்* வரும் கதையை போன்று அது மிகவும் கடினமானதாக தோன்றியது. அப்போது நான், 'உங்கள் குரு சொல்படி கேட்டு நடக்க வேண்டும்! உங்கள் குரு சொல்படி கேட்டு நடக்க வேண்டும்! உங்கள் குரு சொல்படி கேட்டு நடக்க வேண்டும், என்று குருதேவா கூறிய அறிவுரையை நினைவுகூர்ந்து, பணியில் நம்பிக்கையுடன் முன்னேறினேன்," என்று கூறினார். கவாய் மடத்தின் துறவிகளை BAPS துறவிகள் இன்று சந்தித்தாலும், தங்கள் சமூகத்தின் மீது குருதேவாவின் வலுவான அறிவுறுத்தல் ஏற்படுத்திய தாக்கத்தை பற்றியும், தங்களுக்கு பிரியமான குருவின் பாதங்களை எப்போதும் பற்றியிருக்க அனுமதி வழங்கியதை பற்றியும் அவர்கள் நினைவுக்கூர்வார்கள். §

குருதேவா மனித நேயத்திற்கு ஞானோதயம் வழங்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டிருந்த எல்லா சம்பிரதாய துறவிகளையும் தனது சகோதரர்களாக கருதி, அவர்களுடன் இயல்பாக பழகினார். ஒரு மடம் அல்லது ஆசிரமத்திற்கு மேற்கொண்ட ஒவ்வொரு பயணமும், ஊக்கமளிக்க ஒரு வாய்ப்பாக பயன்படுத்தப்பட்டது. இதைப்பற்றி பெங்களூரின் ஸ்ரீ பாலகங்காதரநாத சுவாமி வழங்கும் குறிப்பு: §

> ஒரு தனிநபராகவும் ஒரு அமைப்பாகவும், குருதேவா என் மீது பலவழிகளில் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார். அவர்

எங்கள் கல்வி நிறுவனங்களுக்கு வருகை தந்த போது, ஒரு அரசு பாடத் திட்டத்தைப் போன்று கல்வி வரையறைகளுடன் இருக்கக் கூடாது என்று என்னிடம் கூறினார். நமது சாஸ்திரங்கள், நமது பாரம்பரியங்கள் மற்றும் பண்புகளையும் கற்றுத் தரவேண்டும் என்று அவர் கூறினார். அவரது அறிவுறுத்தலின் பேரில், நாங்கள் எங்கள் பள்ளிப்பாடதிட்டத்தில் ஆன்மீகம் தொடர்பான பாடங்களை கற்றுத்தர நாங்கள் தனியாக நேரத்தை ஒதுக்கியுள்ளோம். §

எங்களது மருத்துவமனைகளில பெண் சிசுக்கொலை மற்றும் கருக்கலைப்பு நடைப்பெறுவதை கேட்டதும் சிவாய சுப்பிரமுனியசுவாமி வருத்தம் அடைந்து, நாம் இந்த பழக்கத்தை தடுத்து நிறுத்த முயற்சி செய்ய வேண்டும் என்று அவர் என்னிடம் கூறினார். அவர் உண்மையில் ஒரு அமைதி தூதுவராக இருந்தார். வெளிப்படையாக பேசும் பண்பு எனக்கு சிவாய சுப்பிரமுனியசுவாமியிடம் பிடித்து இருந்தது. அவர் தர்மம் மற்றும் சமயம் பற்றிய பிரச்சனைகளை அவர் நேரடியாக பேசுவார். அவருக்கு சமூகத்தின மீது இருந்த அக்கறை, அதிலும் குறிப்பாக குடும்பம் மற்றும் குழந்தைகள் மீது இருந்த அக்கறை என்னை வெகுவாக கவர்ந்தது. §

பெரும்பாலும் மற்ற சகோதர துறவிகளை அவர் சென்று பார்க்கும் போது, அதை புதிய செய்முறைகளை பின்பற்றுவதற்கு தனக்கு கிடைத்த வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டார். ஒரு தென் இந்திய *ஆதீனக்கர்த்தாரிடம்* அவரது சுவாமி அணிந்திருந்த காதணிகளின் பாணி மற்றும் அவர்களது உடையின் நிறத்தை பின்பற்றினார், மற்றும் இன்னொருவர் மூலம் அவருக்கு *திருமந்திரம்* பற்றிய அறிமுகம் கிடைத்தது. இதற்கு முன்னர் அவர் BAPS சாதுக்களை சந்திக்க வந்திருந்த போது, வாழ்க்கையை வாழ்வது பற்றி குறிப்பிடும், அவர்களது வழிகாட்டு கோட்பாடுகளுக்குள் தன்னை ஆர்வத்துடன் ஈடுபடுத்தி கொண்டார். அந்த 212 ஈரடி செய்யுட்கள் விதிவிலக்கிற்கு இடந்தராத கோட்பாடுகளாக இருக்கின்றன. இதனை பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பின்பற்றி வருகின்றனர். குருதேவா தனது 365 நந்திநாத சூத்திரங்களை எழுதும் போது, *ஷிக்ஷபத்ரி* என்று அழைக்கப்படும் இந்த படைப்பில் இருந்த சில தகவல்களை பயன்படுத்திக் கொண்டார். §

### ஆன்மீக கருவிப்பெட்டி

ஆயிரக்கணக்கான அன்பர்கள் ஆன்மீக உணர்தலை பெறுவதற்காக, ஞானோதயம் பெறுவதற்கு சில அபூர்வமான மாத்திரைகள் பெறும் நம்பிக்கையில் மற்றும் தங்களை உருத்திக்கொண்டு இருந்த பிரச்சனைகளுக்கு தீர்வுகளை பெறுவதற்கு குருதேவாவை நாடி வந்தனர். ஒரு வழிப்போக்கன் ஒரு மயில் இறகை தொட்டதால் சிவபெருமானின் திருவடிகளுக்கு அழைத்து செல்லப்பட்டது பற்றி அவர்கள் நன்றாக அறிந்து

இருந்தார்கள், மற்றும் பிரகாசமான ஒளியின் இடத்திற்கு தங்களாலும் விரைவில் பயணம் செல்ல முடியும் என்ற நம்பிக்கையுடன் இருந்தனர். §

சாத்தியமில்லை என்று சொல்ல முடியாவிட்டாலும், மிகவும் அபூர்வமான அத்தகைய சம்பவங்களை பற்றி குருதேவா அறிந்து இருந்தார். அவர் பக்குவமடைந்ததும், சீடர்கள் யோகம் பயிற்சி செய்யும் தகுதியுடன் ஒரு சுத்தமான வாழ்கையை வாழ்ந்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பது தெரியவரும் வரை, அவர் ஆழமான பயிற்சிகளை அதிகமாக தவிர்த்து, சில சமயங்களில் தியானம் செய்வதையும் தடை செய்து வந்தார். அவர்களின் தூய்மையற்ற வாழ்முறை மற்றும் ஆரோக்கியமற்ற கர்மவினை, புலால் உண்ணும் பழக்கம், அவர்களின் சிற்றின்ப சிந்தனைகள், ஆழமாக பதிந்த ஆத்திரங்கள் மற்றும் தீர்வு காணப்படாத வேதனைகள் மற்றும் அச்சங்களின் காரணமாக, தவிர்க்க முடியாமல் தியானங்களின் மூலம் பலன்கள் கிடைக்காத போது, அவர்கள் ஏமாறாமல் இருக்க வேண்டும் என்பதை அவர் உறுதி செய்துக்கொள்ள விரும்பினார். அவரது அமைப்பில் பயன்படுத்தப்பட்ட தளர்வுகள் இல்லாத விதிகள், அவரது முக்கிய தற்காப்பு முறையாக விளங்கியது. §


தங்களை மாற்றிக்கொள்ளாதவர்கள் தானாகவே தனித்து விடப்பட்டார்கள். அவர் நிலைத்து இருந்தவர்களுக்கு, ஒரு அபூர்வ மந்திரம் அல்லது காவி உடையை வழங்காமல், ஒரு நல்ல மனிதனாக இருப்பது எப்படி என்ற அறிதலில் இருந்து தொடங்கி, தனிப்பட்ட வாழ்க்கையின் மிகவும் அடிப்படையான நிலைகள் மீது கவனம் செலுத்தி சுய மாற்றங்களை ஏற்படுத்தும் கருவிகளை வழங்கினார். ஆன்மீக ஸித்தியை அடைவது கடினம் என்பதை அவர் அறிந்து இருந்தார், மற்றும் ஆத்ம ஞானத்தின் உச்சத்தை அடைவதற்கு, எவரெஸ்ட் சிகரத்தை ஏறுவதை காட்டிலும், வாழ்முறை மற்றும் அணுகுமுறையில் அதிக ஒழுக்கம், அதிக அர்ப்பணிப்பு மற்றும் பயிற்சி தேவைப்படும் என்பதையும் அறிந்து இருந்தார். இந்த பண்புகளை உடையவர்களால் மட்டுமே வெற்றி அடைய முடியும். இதை எல்லோரும் புரிந்துகொள்ளவில்லை என்றாலும், அவர்கள் தங்களை மாற்றிக்கொள்வார்கள் என்றும், தாங்கள் நாடியதை எப்படி அடைவது என்று அவர்கள் தெரியாமல் இருந்த போது, அந்த மாற்றம் அவர்களுக்குள் ஆன்மீக ஞானோதயத்தை ஏற்படுத்தும் என்ற தனது அடிப்படை நம்பிக்கையுடன், அவர் தனது சீடர்களை அனைத்து நடவடிக்கைகளிலும் தொடர்ந்து ஊக்குவித்து வந்தார். §

அவர் தனது சமயப்பணியில் எப்போதும் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களுடன் ஒரு இயக்கத்தை தொடங்குவதில் ஆர்வத்துடன் இல்லாமல், எண்ணிக்கையை விட தரத்திற்கு அதிக மதிப்பு அளித்தார். அன்பர்கள் தன்னிடம் கொண்டு வந்த பிரச்சனைகள், தனது அறிவுரைக்கு மதிப்பு அளிக்காமல் அல்லது சாதனா செய்வதை புறக்கணிப்பதால் விளைந்தது என்று தெளிவாக தெரிந்தால், “நான் உங்களுக்கு சுவரில் இருக்கும் சித்திரமாக தெரிகிறேனா?” என்று கோபித்துக் கொள்ளும்

அளவிற்கு, அவர் மனம் மற்றும் உணர்ச்சி ரீதியாக தங்களை தயார்படுத்திக் கொள்ள ஆர்வத்துடன் இருப்பவர்களுடன் மட்டுமே செயல்படுவதில் அதிக ஆர்வத்துடன் இருந்தார். §

ஆனால் நேர்மையான மற்றும் தீவிரமான சீடர்களும், தங்களுடன் சில சந்தேகங்கள் மற்றும் தங்கள் வாழ்க்கை பிரச்சனைகளுக்கு தேவைப்படும் சில தீர்வுகளுக்காக, அவரை நாடி வந்தார்கள். குருதேவா பிற்காலத்தில், ஒரே மாதிரியான கேள்விகளை கேட்டு, அதற்கு தான் ஒரே மாதிரியான அறிவுரைகளை வழங்கி சோர்வடைந்து இருந்தார். அவர் வழங்கிய அறிவுரை பெரும்பாலும் பின்பற்றப்பட்டன. கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு குற்றம், ஒவ்வொரு இக்கட்டான நிலை மற்றும் சிக்கல் பற்றிய வாக்குமூலத்தை அவர் கேட்டு இருந்ததால், தற்போது அவருக்கு மனிதனின் நிலை ஒரு திறந்த புத்தகமாக மாறி இருந்தது. இவற்றை எல்லாம் கவனமாக கேட்பதும், கர்மவினையை எதிர்கொள்ளும் சுமையும் வலுவாக இருந்தது, மற்றும் அது தனது திசையை திருப்பி அவரது நரம்பியல் அமைப்பை தொந்தரவு செய்யாமல் இருக்க, தினமும் அதை கிரகித்துக் கொள்ள அமைதியான தருணங்கள் தேவைப்பட்டன. அவற்றில் தனது உச்சந்தலை வழியாக செலுத்தி, அவற்றை உட்புற ஒளியில் கரைக்க வேண்டி இருந்தது என்று அவர் விளக்கினார். §

*பிராயச்சித்தம்* என்று அவர் அழைத்த  தவத்தை, ஒரு தீர்வாக சீடனுக்கே வழங்குவதால் பிரச்சனைகள் குறைவாக இருப்பதுடன், அதிக பயனுள்ளதாகவும் இருப்பதை அவர் தெரிந்து கொண்டார். அடிமனதில் இருந்து தீர்வு காணப்படாத துன்புறுத்தல்கள் மற்றும் ஆத்திரங்கள், அச்சங்கள் மற்றும் ஒடுக்கங்கள் மற்றும் பழைய குற்றங்களின் குற்ற உணர்வின் சுமைகளை குறைப்பதே நோக்கம் மற்றும் குறிக்கோளாக விளங்கியது. அவர் தவத்தை பற்றி ஒரு சூட்சுமமான விளக்கத்தை வழங்கினார்:§



*அவர் கவாய் தீவின் தனிமைக்காக அதை தேர்ந்தெடுத்து இருந்தாலும், பார்வையாளர்கள் மடத்தைப் பற்றி தெரிந்துகொண்டு, சற்குருவுடன் இருக்க மற்றும் அவரது உரைகளை கேட்க, மிகப்பெரிய சிலைகள் மற்றும் படிக*

*சிவலிங்கத்துடன் இருந்த 'கடவுள்' கோயிலில் வழிபடுவதற்கு உலகெங்கிலும் இருந்து மக்கள் வந்தனர்.*

……………………§

பின்வரும் வரிசையில் தேவையற்ற கர்மவினை சுமைகளை விடுவிக்கும் உட்புற செய்முறை நடைபெறுகிறது: கடுங்கழிவிரக்கம் மற்றும் அவமானம்; குற்ற ஏற்புரை (அதில் ஒரு வடிவமாக மன்னிப்பு கோருதல் விளங்குகிறது); வருத்தம்; மற்றும் இறுதியாக சமரசம் வந்து, எங்கும் நல்ல உணர்வுகள் வாசம் செய்யும் பொருட்டு, சூழ்நிலையை சீர் செய்கிறது. அதனால் அறிவு மற்றும் தெளிவற்ற ஆன்மீக பண்புகளை தடை செய்யும் கீழ்நிலை உள்ளுணர்வு மனதின் குழப்பங்களில் இருந்து விடுபடும் போது ஏற்படும் போராட்டங்களை சீடன் தாங்கிக்கொள்ள வேண்டும் என்பதால், உட்புற ஒளி உடலில் இருந்து எதிர்மறை சம்ஸ்காரங்கள் மற்றும் வாசனாக்களை நீக்குவதற்கு, சுமந்து செல்வதற்கு கடினமான ஒரு அடியுணர்வு சுமையில் இருக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட ஏற்புரையும் தனக்கென்று ஒரு சமரசத்தை கொண்டிருக்க வேண்டும். ஆன்மாவிற்கு அறியாமையின் பாதுகாப்பு கிடைக்காத போது, அது விடுதலை பெறுவதற்கு ஏங்கிக்கொண்டு ஆறுதலை நாடுகிறது. அப்போது வேதனையை கரைத்து சாந்தியை கொண்டு வருவதற்கு, *பிராயஸ்சித்த* என்கிற தவம் தீர்வாக விளங்குகிறது.§

தவறுகளுக்கு மன்னிப்பு கேட்டு அவமானத்தை வெளிப்படுத்தி விநாயகர், முருகன் அல்லது பரமனாக இருக்கும் சிவபெருமானுக்கு 1,008 முறை தரையில் விழுந்து வணங்குதல்; புனிதமான ருத்ராட்ச மணிகளை பயன்படுத்தி மெதுவாக 1,008 முறை ஜபம் செய்தல்; கோயிலுக்கு 108 கைவினை பொருட்களை நன்கொடையாக வழங்குதல்; தன் கைகளால் சுத்தம் செய்தல், மாலைகளை தொடுத்தல் மற்றும் பூக்களை ஒழுங்காக அடுக்குதலைப் போன்று 108 மணி நேரங்களுக்கு கோயிலில் சேவை செய்தல்; படையல்களாக சமைத்த உணவை கொண்டு வருதல்; *காவடி* எடுத்தல் மற்றும் உடல் தசையில் ஏதாவது ஒரு பகுதியில் சிறிய வேலை குத்தி நேர்த்திக்கடன் செலுத்துதல்; தொடர்ந்து அஷ்டாங்க நமஸ்காரம் செய்துக்கொண்டு ஒரு யாத்திரை செல்லுதல் அல்லது கோயிலை சுற்றி அங்கப்பிரதட்சணம் செய்தல் என்று *பிராயஸ்சித்தம்* என்கிற தவத்திற்கு பல வடிவங்கள் உள்ளன. ஒவ்வொரு குற்றமாக ஏற்றுக்கொண்ட பிறகு, மேலே குறிப்பிட்ட பிராயஸ்சித்தங்களுடன் மேலும் பல முக்கிய பரிகார முறைகள் உள்ளன. §

மறைபொருளாக இருக்கும் தத்துவ கோட்பாடுகளை எளிமையான நடையில் மாற்றி வழங்கியதோடு நிற்காமல், அந்த கோட்பாடுகளை பழக்கத்தில் கொண்டு வருவதற்கு குறிப்பிட்ட சாதனாக்களை சிந்திக்கும் குருதேவாவின் திறமையை பார்த்து சீடர்கள் வியந்தனர். யோகத்தில் மிகவும் முக்கியமாக

விளங்கும், “அடியுணர்வை சுத்தம் செய்தல்" என்கிற ஆன்மீக கோட்பாடு, ஒரு உதாரணத்தை வழங்குகிறது. §

> உணர்வுள்ள மனதின் சேமிப்புக் கிடங்காக அடிமனம் விளங்குகிறது. தினசரி நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தும் மற்றும் எதிர்வினைகள் அனைத்தும் அதில் சேமிக்கப்படுகின்றன. அடியுணர்வு கட்டுப்பாட்டில் இருக்கும் போது,  அது ஒரு அதிர்வு விகிதத்தில் இருக்கிறது. அடியுணர்வை புரிந்துக்கொண்டு, ஒருமுகப்படுத்தி, குழப்பங்களை நீக்கி துணை மெய்ஞ்ஞான மனம் கட்டுப்பாட்டில் இருக்கும் போது, அதிர்வு விகிதம் அதிகமாக இருக்கிறது.§

விடுவிப்பதற்கு தீர்வு காணப்படாத நினைவுகள், உணர்வுகள் மற்றும் அனுபவங்கள் இருக்கிறது என்பதை தெரிந்துகொள்வதைக் காட்டிலும், அதை சாதிக்க வழிகளை பெறுவது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. தங்கள் கடந்தகாலத்தில் இருந்து விடுதலை பெற விரும்பிய பல அன்பர்களை அவர் சந்தித்ததால், எல்லோரும் பயன்படுத்தக்கூடிய ஒரு எளிமையான ஆனால் வலுவான மற்றும் பயனுள்ள யுத்தியை தியானத்தின் மூலம் உருவாக்கினார். இதை பலர் பின்பற்றினர் மற்றும் அது அவர்கள் ஆன்மீக முன்னேற்றத்தில் முக்கியமானதாக விளங்கியுள்ளது. குருதேவா இதை வாசன *தாஹ* தந்திரம் (அக்னியால் அடியுணர்வை சுத்தம் செய்தல்) என்று அழைத்தார். §

தங்கள் விரோதங்கள் மற்றும் வேதனைகள், தங்கள் குழப்பங்கள் மற்றும் எதிர்மறை அனுபவங்களை எழுதிக்கொண்டு, அவற்றை திட்டமிட்டு விழிப்புணர்வுடன் அடியுணர்வு ஆழத்தில் இருந்து உணர்வுள்ள மனதிற்கு கொண்டு வந்து, காகிதம் நெருப்பாகவும் சாம்பலாகவும் மாறும் போது தூல வடிவிலும், பிரச்சனையின் தூல வெளிப்பாடு எரிக்கப்படும் போது மனோஉணர்வு வடிவிலும், அவற்றை எரித்து விடுங்கள் என்று அவர் தனது அன்பர்களுக்கு அறிவுறுத்தினார். §

> மனதில் இருக்கும் பதிவுகள் நேர்மறையாக அல்லது எதிர்மறையாக இருக்கலாம். நடைமுறையில், நாம் வேதனைகளை விளக்கி, குழப்பங்களை வெளிப்படுத்தி, மனக்குறைகள் மற்றும் நீண்டநாளாக மனதில் இருந்த பதிவாகிய துன்புறுத்தல்கள் பற்றிய குற்ற ஏற்புரைகள், அல்லது பிரியமானவர்கள் மற்றும் தோழர்களுக்கு எழுதிய நீளமான கடிதங்களை எரிக்கிறோம். பிரச்சனைகளை எழுதி, அதை ஒரு சாதாரண நெருப்பில் எரிப்பதால், அவை அடியுணர்வில் இருந்து வெளிப்புற மனதிற்கு கொண்டு வரப்பட்டு, நெருப்பு அந்த காகிதத்தை எரிக்கும் போது ஒடுக்கப்பட்ட உணர்ச்சிகள் விடுதலை பெறுகின்றன. §

புனிதமான ஹோமங்களை நடத்தி பிரார்த்தனை செய்வது மற்றும் தினமும் குப்பையை எரிக்கும் ஒரு பெரிய சட்டியில் இருந்து வேறுபடுத்த வேண்டும் என்பதற்காக, இந்த தந்திரத்தை பயிற்சி செய்பவர்கள் தங்கள் பிரச்சனைகளை ஒரு சாதாரண நெருப்பில் எரிக்க வேண்டும் என்று அவர்


அறிவுறுத்தினார். இவ்வாறு ஒருவர் தனது வாழ்க்கையில் நடந்த அனைத்தையும் அவ்வப்போது திரும்பிப்பார்ப்பதற்கு உதவியாக, குருதேவா ஒரு அமைப்பை உருவாக்கும் அளவிற்கு, இந்த செய்முறை மிகவும் பயனுள்ளதாக இருந்தது. §

**மறந்துவிட்ட யோக அடிப்படை**

குருதேவா எழுதிய முத்தொகுப்பில் மூன்றாவது புத்தகத்தின் மூன்றில் ஒரு பங்கு, பழங்கால *இயமங்கள்* மற்றும் *நியமங்களை* குறிப்பிடுகிறது. இதை அவர் இந்து சமயத்தின் முக்கிய பண்புகள் என்று அழைத்தார். இந்த இருபது செய்யக்கூடாதவைகள் மற்றும் செய்ய வேண்டியவைகள் யோகப்பயிற்சிக்கு தேவையான அடிப்படை என்றும் இவை இல்லாமல், ஆன்மீக வேட்கை எதுவும் நீடித்த பலன்களை வழங்காது என்றும் அவர் குறிப்பிட்டார். §

*ஆகம* உரைகளை படிக்காமல் அல்லது அதைப்பற்றி அறியாமல், அதன் ஞானத்தை குருதேவா வெளிக்கொண்டு வந்துள்ளதால், அவர் ஒரு உண்மையான ரிஷியை போன்று இருக்கிறார் என்பதற்கு ஒரு சான்றாக விளங்குகிறது என்று *சைவ ஆகம* வித்வான் Dr. எஸ். பி. சபாரத்தினம் சிவாச்சாரியார் தனது கருத்தை தெரிவித்தார். இயமங்கள் மற்றும் நியமங்கள் பற்றி குருதேவா அளித்த விளக்கத்திற்கு, “இந்த உண்மையான ஆச்சார்யர், குருத்துவத்தின் உண்மையான பண்புடன் இணங்கி இருப்பதால், அவரால் நவீன சமூகத்தை நன்றாக வடிவமைத்து, மனித நேயத்தை நன்றாக வழிநடத்தி செல்ல முடியும் என்று எண்ணம் என் மனதில் உடனே உதித்தது,” என்று சபாரத்தினம் குறிப்பிட்டார். §

“இயமங்கள் மற்றும் நியமங்களை பின்பற்றாத யோக அமைப்பு, அடித்தளம் இல்லாத மாளிகை போல வலுவற்று, நறுமணம் இல்லாத பூவைப் போன்று பயனற்று, சிவபெருமான் மற்றும் ஆன்மாவின் ஒருமையில் இருந்து விலகி இருக்கும் அறிவைப் போன்று முழுமை இல்லாது இருக்கிறது,” என்று குறிப்பிடும் *சூட்சும ஆகம* செய்யுளுடன், குருதேவாவின் விளக்கங்கள் விநோதமாக பொருந்தி இருப்பதை அவர் குறிப்பிட்டார். சபாரத்தினம் மேலும் வழங்கிய குறிப்பு:§




*ஜூலை மாதம் வரும் ஒவ்வொரு பௌர்ணமியிலும், கவாய் மடம் சற்குரு பௌர்ணமியை கொண்டாடி, சுயம்பு லிங்கத்திற்கு அருகில் இருக்கும் குருவின் திருவடிகளை வழிபடுகிறது. ஒருவர் தனது குருவை வழிபடும் போது, எல்லா சற்குருமார்களும் கௌரவிக்கப்படுகிறார்கள்.*

........................§

மூன்றாவது உலகின் உட்புறத்தில் வாழும் மகாதேவர்கள் சக்திகளின் உண்மையான இயல்பு, வெல்ல முடியாத கந்தனின் *வேல்*, ஐந்து மனநிலைகள், தலைக்கு மேலிருக்கும் உலகில் ஏழு சக்கரங்கள் மற்றும் மத்திய உலகில் ஏழு சக்கரங்கள் மற்றும் நரகலோகத்தில் இருக்கும் ஏழு சக்கரங்கள் என்று மொத்தம் இருபத்தி ஒன்று சக்கரங்களின் இயல்பு, கோயில் மற்றும் கோயில் சடங்குகள் மற்றும் மந்திரங்களின் முக்கியத்துவம், நிறங்களின் பங்கு மற்றும் முக்கியத்துவம் மற்றும் அதைப்போன்ற மற்ற தெளிவுரை பற்றி குருதேவா அளித்த விளக்கங்கள், *சைவ ஆகம* செய்யுட்களின் நேர்மையான மற்றும் தெளிவான பிரதிபலிப்புக்கள் ஆகும். §

எனக்கு தெரிந்தவரை, *சூட்சும ஆகமத்தின்* யோக பிரிவில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ள *மூலாதாரத்திற்கு* கீழிருக்கும் சக்கரங்களை பற்றி விவாதித்த முதல் யோகி, குருதேவாவாக இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. §

குருதேவா உருவாக்கிய ஷூம் என்ற தியான மொழி அவரது படைப்புக்களின் மகுடமாக விளங்குகிறது. சதாசிவன் *சூட்சும ஆகமத்தில்*, மிகவும் உயர்வான நிலைகளில் இருக்கும் சிவயோகிகளுக்கு சிவயோகத்தின் அருமையான மற்றும் அதிக ஆழ்நிலையில் இருக்கும் சீடர்களை பற்றி தெரியப்படுத்துகிறார். அவர் ஒரு சமயத்தில் தனது அறிவுறுத்தல்களை நிறுத்தி, “இந்த அறிவுறுத்தல்கள் போதும். இந்த *சர்வாத்ம-நாத* யோகத்தில் அதிக நுணுக்கமான மற்றும் ஆழ்நிலை அம்சங்கள் உள்ளன. இவை திறமையான மகாயோகிக்களுக்கு காலப்போக்கில் கற்றுத்தரப்படும். ஆனால் இப்போது இல்லை,” என்று கூறினார். 1968 ஆம் ஆண்டு, ஸ்விட்சர்லாந்தின் அஸ்கோனா நகரத்தில் ஷூம் என்கிற தியான மொழி உருவாக்கப்பட்டதை நான் அறிந்த போது, எனக்கு அவர் விடுத்த இந்த அறிக்கை தான் நினைவுக்கு வந்தது. §

### “குழந்தைகளை துன்புறுத்துவதை நிறுத்துங்கள்”

1990 களின் இறுதியில், நீண்ட நாட்களாக தன்னிடம் சீடர்களாய் இருந்தவர்கள் உட்பட, பல சீடர்கள் தங்கள் குழந்தைகளை உடல் ரீதியாக துன்புறுத்துவதாக தெரிந்துகொண்டதும் அதிர்ச்சியும் மனவேதனையும் அடைந்த குருதேவா, இந்த நிலை உடனடியாக மாற வேண்டும் என்று அறிவுறுத்தினார். இனி குழந்தைகளை அடிப்பது, கிள்ளுவது, காதை திருகுவது, அறைவது, தாக்குவது அல்லது குத்துவது வேண்டாம். இனி திட்டுவது, இழிவுபடுத்துவது, குற்றம் சுமத்தி அவமானப்படுவது வேண்டாம். §

அவர்கள் கடந்த காலத்தில் செய்த தவறான நடவடிக்கைக்கு பரிகாரமாக, தவம் செய்யவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். முதலில் அவர்கள் தங்கள் குழந்தைகளிடம் முழுமனதுடன் மன்னிப்பு கேட்கவேண்டும் மற்றும் அவர்கள் ஒரு குழந்தையை அடிக்கும் ஒவ்வொரு முறையும், அவர்கள் கண்ணாடி முன்பாக நின்றுக்கொண்டு தங்களை ஐந்து முறை அடித்துக்கொள்ள வேண்டும் என்பதை போல குறிப்பிட சில வழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும். இரண்டாவதாக, தங்கள் சமூகத்தில் நேர்மறை ஒழுக்கத்தைப் (Positive Discipline) பற்றி வகுப்புக்களை நடத்த வேண்டும் என்று அவர் அவர்களிடம் அறிவுறுத்தினார். நேர்மறை ஒழுக்கம் என்கிற அமைப்பு கலிபோர்னியாவை சேர்ந்த ஆசிரியர் Dr. ஜேன் நெல்சன் என்பவரால் உருவாக்கப்பட்டது. அவர் தான் எழுதிய புத்தகங்கள் மற்றும் சொற்பொழிவுகளின் தொடரில் குழந்தைகளை குற்றம் சுமத்தி, அவமானப்படுத்தி அல்லது துன்புறுத்தாமல், அவர்களுக்கு ஊக்கம், பாசம் மற்றும் மரியாதை அளித்து வளர்ப்பதைப் பற்றி குறிப்பிட்டு இருந்தார். §

குருதேவாவின் நீண்டநாள் சீடனாகவும் பிரபல வழக்கறிஞராகவும் இருந்த மனோன் மர்தமூத்து, மொரீஷியஸ் தீவில் இந்த பணியில் தீவிரமாக ஈடுபட்டார். “இந்த போதனைகளை மக்களிடம் எடுத்து சென்று, அதை அன்றாட வாழ்க்கையின் யதார்த்தமாக மாற்றுவது, குருதேவாவின் மொரீஷியஸ் நாட்டு சீடர்களின் இன்றைய சாதனாவாக இருக்கிறது,” என்று அவர் குறிப்பிட்டார். இவ்வாறு 1998 ஆம் ஆண்டு, பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் குழந்தைகளை துன்புறுத்தக்கூடாது என்கிற குழந்தைகளின் உரிமைக்கு ஆதரவாக குருதேவா ஒரு தீவிர பிரச்சாரத்தை தொடங்கி, பெற்றோர்கள் குழந்தைகளை அன்புடன் வளர்க்க, அவர்களுக்கு நேர்மறை ஒழுக்க வகுப்புக்களை தன்னிடம் சம்சாரியாக இருந்த சீடர்கள் மூலம் அவர்களின் முக்கிய சமூக சேவையாக வழங்கி உதவி செய்தார். இதைப்பற்றி சிங்கப்பூரில் ஒரு சீடர் விளக்கினார்:§

> குருதேவா வீடுகள் மற்றும் பள்ளிகளில் உடல்ரீதியாக தண்டனை வழங்குவதை ஒழிப்பதற்கு ஆதரவாக வாதாடி, மற்ற இந்து பெற்றோர்கள் அகிம்சை வழியில் குழந்தை வளர்ப்பபதற்கு பாடங்கள் நடத்துமாறும், மாணவர்களுக்கு உடல்ரீதியாக தண்டனை வழங்குவது தொடர்பாக பள்ளிக் கொள்கைகளை மாற்று மாறும், தனது சீடர்களை அறிவுத்தினார். §
>
> குருதேவாவின் சீடர்கள் கடந்த சில வருடங்களாக, சிங்கப்பூர் வீடுகள் மற்றும் பள்ளிகளில் உடல்ரீதியான தண்டனைகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்து வருகின்றனர். அவர் உள்ளூர் பள்ளிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பெற்றுள்ளனர். உடல்ரீதியாக தண்டனை வழங்கிக்கொண்டு இருந்த ஆசிரியர்களுக்கு கண்டனம் செய்ததோடு சிறந்த செய்முறைகளில் புதிதாக பயிற்சி அளிப்பது என்று, அந்த பள்ளிகள் முன்கூட்டியே இந்த பிரச்சனையை சமாளிக்க முயற்சிகள் செய்து வந்தன. §


### எப்பொழுதும் தற்பொழுதில் இருத்தல்

குருதேவாவின் நடவடிக்கைகள், மற்றவர்களுக்கு செய்த உதவிகள் மற்றும் மற்றவர்கள் அவரை அறிந்திருந்த தகவல்கள் மட்டுமில்லாமல், அவரிடம் ஒரு உணர முடியாத அபூர்வ சக்தி இருந்தது. அவர் தனது மையத்தில், எல்லோருடைய பரமாத்துமாவின் மையத்தில் இருந்ததால், எல்லோரும் அவரை தங்களுக்கு நெருக்கமாக கருதி, அவர் மீது அதிக அன்பு செலுத்தினார்கள். அவர்களை பொறுத்தவரையில், அவரது வாழ்க்கை தங்களது அன்றாட சோகங்களை கடந்த ஒரு அற்புதமான வானவில் போன்று இருந்தது. குருதேவா எப்போதும் இளமையுடன், தடைகளில்லாமல், களங்கமில்லாமல், திறந்த மனதோடு எப்போதும் தற்பொழுதில் இருக்கும் ஒரு உணர்வு வெளிப்பட்டது. §

மே தின கொண்டாட்டத்தின் போது எழுப்பப்படும் கம்பத்தை போன்று, ஓரிடத்தில் இருப்பது போலவும், என்னை சுற்றி எல்லாம் நடப்பதைப் போன்ற உணர்வும், எனக்கு சில நாட்களாக தோன்ற ஆரம்பித்துள்ளது. நான்  உயிரின் சுழற்சிகள் ஒன்று இன்னொன்றுக்குள் பாய்ந்து செல்வதை கவனித்துக்கொண்டு இருக்கிறேன். பாதையில் இருக்கும் ஆண்களும் பெண்களும் விரிவாக்கம் பெறும் போது, தூல உலக சுழற்சிகள் சூட்சும உலக சுழற்சிகளுக்குள் பாய்ந்து செல்கின்றன. அந்த சூட்சும உலக சுழற்சிகள் மெய்ஞ்ஞான சுழற்சிகளுக்குள் பாய்ந்து சென்று மீண்டும் தூல உலக சுழற்சிகளுக்கு திரும்புகின்றன. நான் வெறும் பார்த்துக்கொண்டு இருக்கும், இந்த நிலையை “சும்மா இருக்கும் நிலை" என்று குறிப்பிடுகிறேன். §

அவர் மிகவும் தீவிரமான சவால் அல்லது பேரிடரிலும் அமைதியாக, நடுநிலையுடன் பற்றின்றி இருந்தார். அவர் காசா எரானோஸில் ஷூம் மொழியை கண்டுபிடிக்கும் சமயமாக இருக்கட்டும், இறைவன் கோயிலில் அடிக்கல் நாட்டும் சமயமாக இருக்கட்டும், அவர் எந்த செயலில் ஈடுபட்டு இருந்தாலும், அவர் தன்னை சுற்றி இருந்தவர்கள் விஷேசமானதாக கருதிய எல்லையற்ற அன்பு மற்றும் ஒடுக்கம் இல்லாத பிரகாசமான மகிழ்ச்சியை தன்னிடம் தக்க வைத்து இருந்தார். §

அவர் இந்த அபூர்வமான பண்பின் மூலம் தனது துறவிகளை ஊக்குவித்தார். அவர்கள் பலவருடங்களாக பின்பற்றிய பிரம்மச்சரிய வாழ்க்கையின் படிப்படியான வளர்ச்சியின் துணையுடன், அது அவர்களுக்கு ஒரு வழங்கிய நிலையான மகிழ்ச்சியை பார்த்த்து, “இங்கே இருக்கும் எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பது போல தோன்றுகிறது!” என்று வருகை தந்த பார்வையாளர்கள் தெரிவித்தனர். அது உண்மை தான். அவர் தனது தூல உடலை விட்டு பிரிந்த பிறகும் இந்த சமூகத்தில் மகிழ்ச்சியாக, உத்வேகத்துடன் சாதனா மற்றும் சேவை செய்ய ஊக்கமளிக்கும் கட்டுப்படுத்த முடியாத பண்புகள் வாசம் செய்து வருகின்றன. §



*“தியானத்தின் அடிப்படையாக குரு விளங்குகிறார். பூஜையின் அடிப்படையாக குருவின் திருவடி விளங்குகிறது. மந்திரத்தின் அடிப்படையாக குருவின் போதனை விளங்குகிறது மற்றும் முக்தியின் அடிப்படையாக குருவின் அருள் விளங்குகிறது,” என்று குளார்ணவ தந்திரம் அறிவிக்கிறது.*

……………………§

யதார்த்தத்தைப் பற்றி தனது ஆன்மீக மற்றும் மற்ற லௌகீக உட்பார்வைகளின் துணையுடன், அவர் தன்னை சுற்றி இருந்த துறவிகள் மற்றும் சம்சாரிகளின் ஒரு வலுவான குழுவின் கவனத்தை ஈர்த்து, தொடர்ந்து பயிற்சி அளித்து, ஆர்வத்தை தூண்டும் ஒரு வினோதமான சக்தியை பெற்று இருந்தார். அவர் இந்த சிரத்தையுள்ள ஆன்மாக்களுக்கு அதிகமான பொறுப்புக்களை ஒப்படைக்க, அவர்களுக்கு கவனமாக பயிற்சி அளித்து, அவர்களின் திறமைகளை வளர்த்து வந்தார். இது ஒரு தனிநபர் தனது ஒரு வாழ்நாளில் நிறைவேற்ற முடியாததை சாதிக்க அவருக்கு உதவியாக இருந்தது. அவரை பின்பற்ற அவரது சீடர்களாக இருந்த சில துறவிகள் மற்றும் சாதாரண உறுப்பினர்களுக்கு அவர்களின் கர்மவினைகள் அனுமதிக்க வில்லை என்றாலும், அவரும் மீதம் இருந்த சீடர்களும் தாங்கள் பிறவி எடுத்த பணியை பூர்த்தி செய்ய தொடர்ந்து பணிபுரிந்து வந்தனர். அவர் ஆரம்ப

காலத்தில், தனது ஆன்மீக பணியில் தன்னுடன் சேர்ந்து பணிபுரிந்தோரை குறிப்பிடுவதற்கு *சோல்ஜர்ஸ் ஆஃப் தி வித்தின்* என்ற வாசகத்தை உருவாக்கி, "ஆன்மீக பணியை செய்வதற்காக பிறந்தவர்கள்," என்று அவர் அடிக்கடி குறிப்பிடுவார். §

குருதேவா தீவிரமான ஸ்திரத்தன்மையுடன் செயல்பட்டதால், அவரது முயற்சிகள் அனைத்தும் வெற்றியை தேடித்தந்தன என்பதில் சந்தேகமில்லை. அவர் ஒவ்வொரு திட்டப்பணியையும் அணுகும் போது தீவிர கவனத்துடன் ஒவ்வொரு தேவை மற்றும் பிரச்சனையை எதிர்கொண்டு, தனது திட்டத்தை தினமும் ஆய்வு செய்து, தனது மூத்த துறவிகளுடன் ஆலோசித்து, ஒவ்வொரு நாள் முடிவிலும் தாங்கள் பெற்ற முன்னேற்றத்தை ஆய்வு செய்து கவனம் செலுத்தவேண்டிய இடங்களை குறித்துக்கொண்டார். போர்க்களத்தில் வீரர்கள் மடிவதை ஒரு நல்ல படைத்தலைவர் பார்க்கும் போது வேதனை அளிப்பதாக இருந்தாலும், சமீபத்தில் நடைப்பெற்ற பேரிழப்பில் சிக்கிக்கொள்ளாமல், அவர் தனது எதிர்கால கண்ணோட்டத்தில் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்தார். குருதேவாவால் எப்போதும் ஒரு மிகப்பெரிய கண்ணோட்டத்துடன், ஒரு நீண்ட காலகட்டத்தின் மீது கவனம் செலுத்தி, தினசரி நிகழ்வுகளில் அற்புதமான முறையில் பற்றின்றி இருக்க முடிந்தது. §

**"இது சட்டப்பூர்வமானதா?"**

1990 களின் மத்தியில், இந்த பிரபலமான மனது உலகளாவிய வலையை (World Wide Web) ஏற்றுக்கொண்டது. தங்கள் மடம் மற்றும் உலகம் செயல்படும் விதத்தை இந்த வலை மாற்றி அமைத்து விடும் என்பதை சிறிதும் அறியாமல், துறவிகள் இந்த அற்புதமான நிகழ்வின் தொடக்கத்தை கண்காணித்து வந்தனர். அது புதிதாக, உற்சாகம் மற்றும் குழப்பம் அளிப்பதாக மற்றும் பயனருக்கு சிறிதும் வசதியாக இல்லை என்றாலும், துறவிகள் அதன் தொடக்கநிலை பயன்களை ஒன்றுதிரட்டி குருதேவாவிடம் காண்பித்தனர். விரைவில் அவரது முக்கிய வெளியீடுகள் எல்லோரும் படிப்பதற்காக இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது, மற்றும் அது வரலாறு அதுவரை அறிந்து இருந்த விநியோக அமைப்பு போல இல்லாமல், இலவசம் போல தோன்றியது. §

ஒரு நாள் காலையில், துறவிகள் ஒரு டயல்-அப் மோடம் துணையுடன் குருதேவாவின் கணினியை இணையத்துடன் இணைத்தனர். அவர் இணையதளத்தில் சிறிது நேரம் உலாவிய பிறகு, "இதற்கு கட்டணம் யார் செலுத்துகிறார்கள்? இது சட்டப்பூர்வமானதா?" என்று அவர் அக்கறையுடன் கேள்வி கேட்டார். அங்கிருந்த யாராலும் சரியாக விளக்க முடியவில்லை என்றாலும், அது சட்டப்பூர்வமானதாக இருந்தது. அது ஒரு சில மாதங்களில், இந்துயிசம் டுடே, *டான்சிங் வித் சிவா*, ஓம் கிராபிக்ஸில் இருந்து ஒரு பக்கம் மற்றும் அவரது வேறு சில படைப்புக்களையும் வெளியிடுவதற்கு ஒரு முக்கிய தளமாக அமைந்தது. §

துறவிகளின் திறமைகள் பக்குவமடைந்ததும், ஹோபி இந்தியர்கள் தங்கள் கலாச்சாரத்தை பதிவு செய்து பாதுகாக்க ஒரு இணையதளத்தை வடிவமைத்து உதவி செய்வதைப் போன்று, அவர் துறவிகளின் திறமைகளை மற்றவர்களுடன் தாராளமாக பகிர்ந்துகொண்டார். இந்த புதிய ஊடக பயன்பாட்டில் கவாய் மேயரின் அலுவலகமும் உதவியை நாடி மடத்திற்கு வந்தது. §

1998 ஆம் ஆண்டின் கோடைக்காலத்தில் ஒரு நாள், வெளியீட்டு மையத்தில் இருந்த கலந்தாய்வு அறையான செடார் ரூமில், தனது நிபுணர்கள் குழுவை ஒன்று திரட்டி, மடத்தில் நடைபெறும் தினசரி நிகழ்வுகளை உலக மக்களுடன் பகிர்ந்துக்கொண்டு, டிஜிட்டல் முறையில் தினமும் உலகெங்கும் இருக்கும் தனது ஆன்மீக கூட்டமைப்பை ஒன்று சேர்க்க முடியுமா என்று கேள்வி கேட்டார். அந்த வேண்டுகோள் காரணமாக செய்திகளின் கலவை, ஒலிப்பதிவு செய்யப்பட்ட உரைகள், புகைப்படங்கள், ஆன்மீக குறிப்புக்கள் மற்றும் மடத்தில் தான் மேற்கொண்ட பணி மற்றும் உலகெங்கும் இருந்த உறுப்பினர்களின் நடவடிக்கைகள் பற்றிய துணுக்குகளுடன் வெளிவந்த "டுடே அட் கவாய் ஆதீனம்," (சுருக்கமாக டாகா), உலகின் முதல் வலைப்பதிவாக (blog) இருக்கலாம் என்று தோன்றுகிறது. §

அவர் மூன்று வருடங்களுக்கு பெரும்பாலும் தினமும், யாத்திரிகள் மற்றும் சாதகர்களை இணையத்தில் தொடர்பு கொண்டு, அவர்களின் ஆன்மீக கேள்விகளுக்கு பதில் அளித்தார் அல்லது தார்மீக விஷயங்களைப் பற்றி பேசினார். இணையம் மூலம் தன்னை தொடர்புகொண்ட பார்வையாளர்களை, *சைபர்காடெட்ஸ்* (இணைய மாணவர்கள்) என்று பெயரிட்டு, மின்னஞ்சல் மூலம் தனது கேள்விகளை அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். அவரது பதில்கள் பதிவு செய்யப்பட்டு, பெரும்பாலும் அதே நாள் டாகாவில் இடுகை (post) செய்யப்பட்டன. இவை உலகின் முதல் வலையொலிகளில் ஒன்றாக இருக்கக்கூடும். இதைப்போன்று நூற்றுக்கணக்கான சைபர்டாக்ஸ் தோன்றின, மற்றும் வரலாற்றில் முதல் முறையாக, இணையதளம் மற்றும் கணினி இருக்கும் ஒருவர், இலவசமாக கிட்டத்தட்ட நிகழ் நேரத்தில், வாழ்க்கையின் யதார்த்தமான பிரச்சனைகளைப் பற்றி, உண்மையான மக்களுக்கு சற்குரு அறிவுரை வழங்குவதை கேட்க முடிந்தது. §

டாகாவில் ஒரு சிறிய குறை இருப்பதை, குருதேவா தெரிந்து கொண்டார். அவர் பயணம் செய்த போது, ஒவ்வொரு நகரத்திலும் கடந்த சில நாட்களில் தான் எதிர்கொண்ட அனுபவங்களைப் பற்றி விளக்குவது அவரது வழக்கமாக இருந்தது. அவர் மலேசியாவிற்கு வந்த போது, கடந்த வாரம் இந்தியா மற்றும் மொரீஷியஸ் தீவில் நடைப்பெற்ற சம்பவங்களைப் பற்றிய தகவல்களை வழங்குவார். 1999 ஆம் ஆண்டில், தனது கூட்டங்களில் கூடியிருந்த பார்வையாளர்கள் கவனம் செலுத்தாமல் பெரும்பாலும் ஆர்வமின்றி இருப்பதை உணர்ந்து கொண்டார். அவர் இதைப்பற்றி விசாரித்த போது, "குருதேவா, இவற்றை எல்லாம் நாங்கள் நேற்று டாகாவில் பார்த்து விட்டோம்,"

என்று பதில் அவரது சீடர்கள் அளித்தார்கள். தனது சீடர்களை டாகா ஒன்றாக பிணைத்து இருக்கிறது என்பதை அவர் உணர்ந்ததும், தனது பயணங்களின் போது பேசுவதற்கு புதிய விஷயங்களை தேடவேண்டும் என்பதை அவர் தெரிந்துகொண்டார்.§

இணையதளம் தொடர்ந்து வளர்ச்சி அடைந்தது, மற்றும் எதிர்காலத்தில் அவரது மடம் இந்து உலகில் ஒரு முன்னணி இணைய களஞ்சியமாக மாறவிருந்தது. குருதேவா சில இந்து சடங்கு அல்லது தகவலை தேடிய போது, அவருக்கு அவர் எழுதிய படைப்புக்களே இணைப்பாக (link) தேடல் பொறி (search engine) வழங்கியது. பல வருடங்கள் கழித்தும், "இந்து சமயம்" தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கூகிள் தேடல் முடிவுகளில் தங்கள் மடத்து படைப்புகள் தொடர்ந்து மேலிடத்தில் இருப்பதைக் கண்டு துறவிகள் வியந்தனர். §

**1995 ஆம் ஆண்டு மேற்கொண்ட இந்திய பயணம்**

டிசம்பர் 1995 முதல் பிப்ரவரி 1996 வரை, குருதேவா ஆறு நாடுகள் மற்றும் இந்தியா முழுவதும் பயணம் செய்த போது, ஒவ்வொரு ஊரிலும் அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த பயணத்தின் போது அவர் மேற்கொண்ட பல முயற்சிகள் உயர்வானதாக இருந்தாலும், அது வேறுவழியில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தன. அந்த பயணத்தின் முடிவில் ஒரு நாள் மதியம், தெற்கில் இருந்து மேற்கு நோக்கி பயணம் செய்த ஒரு விமானத்தில் எதிர்பாராத ஒரு சம்பவம் நடைபெற்றது. §

உஜ்ஜைனில் இருந்த ஒரு வரலாற்று சிறப்புமிக்க சைவ சித்தாந்த மையத்தில் 5,000 அன்பர்கள் காத்து இருந்தார்கள். ஹவாய் மடத்தில் இருந்து வரவிருந்த உலகப்புகழ் பெற்ற சற்குருவை, புகழ்பெற்ற மகாகலேஷ்வர் சிவன் கோயில் உட்பட, நகரத்தில் இருந்த புனிதமான மையங்களுக்கு வழிநடத்தி செல்ல, விமான நிலையத்தில் யானைகள் தயாராக இருந்தன. ஆனால் மும்பை நோக்கி சென்றுக்கொண்டு இருந்த விமானத்தில் குருதேவாவிற்கு ஒரு முறை வலிப்பு ஏற்பட்டு, தனது இருக்கையில் சுமார் இரண்டு நிமிடங்களுக்கு சுயநினைவை இழந்தார். அவருக்கு உதவி செய்ய விமான பணிப்பெண்கள் விரைந்து வந்தனர் மற்றும் அவருக்கு முன்பாக அமர்ந்து இருந்த ஒரு மருத்துவர் சில ஆலோசனைகளை வழங்கி, அவரது நாடித் துடிப்பை பரிசோதித்து அந்த சம்பவம் சாதாரணமானது என்றும் அதை பொருட்படுத்த வேண்டாம் என்றும் தெரிவித்தார். குருதேவா மனம் தளராது அந்த கடினமான பயணத்தை தொடரவேண்டும் என்று வற்புறுத்தி, அடுத்த நாள் உஜ்ஜைன் நகரத்தில் ஒரு முக்கிய சொற்பொழிவை வழங்கி, அதன் பிறகு மலேசியா மற்றும் சிங்கப்பூருக்கு பயணம் செய்தார். §

சில நாட்கள் கழிந்து, குருதேவாவிற்கு மேலும் சில முறை வலிப்புக்கள் வந்தன. அவருடன் இருந்த இரண்டு சுவாமிகள், இந்த வலுவான வலிப்புக்களை பார்த்து அதிர்ச்சி அடைந்து, அவர் உயிருக்கு ஆபத்தாக முடியுமோ என்றும் பயந்தனர், ஆனால் அது அவருக்கு இயல்பாக உறக்கத்தில

இருந்து எழுவது போன்ற அனுபவமாக இருந்தது. அவர் அந்த சம்பவத்திற்கு பிறகு, “உங்களால் அந்த அருமையான வாசனையை நுகர முடிந்ததா? நான் எவ்வளவு நேரம் சுயநினைவின்றி இருந்தேன்?” என்று கேட்பார். அது ஒரு சில நிமிடங்கள் நீடித்தது என்பதை தெரிந்துகொண்டாலும், அந்த பயணம் தொடரவேண்டும் என்று வற்புறுத்துவார். காலப்போக்கில் இந்த சம்பவங்களின் வீரியம் குறைந்தது என்றாலும், 2001 ஆம் ஆண்டு அவரது உயிர் பிரியும் வரை அவை தொடர்ந்து தோன்றிக்கொண்டு இருந்தன. §

அவர் கவாய் திரும்பியதும், வலிப்பு ஏற்படுவதற்கான காரணத்தை தெரிந்துக்கொள்ளும் நோக்கத்துடன், ஒரு MRI எடுக்கவேண்டும் என்று அவரது மருத்துவர்கள் வலியுறுத்தினார்கள். துறவிகள் இந்த கருத்தை பற்றி விவாதித்த போது, “தேவையில்லை. நான் மருத்துவர்களின் கட்டுப்பாட்டில் இருக்க விரும்பவில்லை. அவர்கள் உங்களை பயமுறுத்தி, உங்கள் உயிர் மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து, உங்களிடம் இருக்கும் பணத்தை எல்லாம் சுரண்ட ஆரம்பித்து விடுவார்கள். அது தொடங்கினால் என்றும் முடிவுக்கு வருவதில்லை. அது வாழ்வதற்கான வழிமுறை இல்லை,” என்று அவர் கூறினார். எந்த சோதனையும் அனுமதிக்கப்படவில்லை.§

தனக்கு தோன்றியிருந்த நோயின் தீவிரத்தை முழுமையாக அறிந்து இருந்த குருதேவா, தனது அடுத்தக்கட்ட நடவடிக்கைப் பற்றி பல நாட்களுக்கு தியானம் செய்தார். தான் மூன்று வருடங்கள் ஓய்வு எடுக்கப்போவதாகவும், இனி பயணம் செய்யாமல் கவாயில் தங்கியிருக்கப்போவதாகவும் தனது துறவிகளிடம் ஒரு நாள் தெரிவித்தார். அவர் மிகவும் கவனமாக திட்டமிட்டு மேற்கொண்ட உற்சாகம் நிரம்பிய பயணங்களில் இருந்து, அந்த அறிவிப்பு முற்றிலும் மாறுபட்டு இருந்தது. *சிவபெருமானுடன் திருநடனம், சிவபெருமானுடன் வாழ்தல்* மற்றும் *சிவபெருமானுடன் ஐக்கியமாதல்* என்ற தலைப்பில் தான் எழுதிய மூன்று புத்தகங்களில் இருந்து 1,000 பக்கங்களை உள்ளடக்கிய தி மாஸ்டர் கோர்ஸ் ட்ரைலாஜியை (பிரதான பயிற்சி வகுப்பு - முத்தொகுப்பு), மரபுரிமை செல்வமாக உலகிற்கு வழங்கும் பொருட்டு, தான் கவாய் தீவில் தனிமையில் இருக்க முடிவு செய்துள்ளதாக, தனது துறவிகள் எல்லோரிடமும் சில நாட்கள் கழித்து அறிவித்தார். அவர் எந்த ஒரு சூழ்நிலையையும், ஒரு நேர்மறை சக்தியாக உருமாற்றி, ஒரு பின்னடைவை சாதகமாக பயன்படுத்தி எவ்வாறு விசேஷமான ஒன்றை உருவாக்கினார் என்பதற்கு அது ஒரு அருமையான உதாரணமாக இருந்தது. ஒரு இயல்பான சூழ்நிலையில் அந்த விசேஷமான படைப்பு உருவாகி இருக்குமா என்பது சந்தேகம் தான். §

Page 46: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/46_guru07_04.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அத்தியாயம் முப்பத்தி-ஒன்று

# உயர்ந்த நிலையை அடைதல்


1996 முதல் 1999 வரை, குருதேவா தனது வாழ்க்கையை மடத்தில் மையப்படுத்தி, துறவற *குலங்களில்* முன்பை காட்டிலும் அதிக கவனம் செலுத்தி, சமயப்பணிகளை ஊக்குவித்து வந்தார். ஒரு சிறிய உயர்மட்ட குழு தாங்கள் நடத்திய ஒரு விசேஷ கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்தது. விஷன் கவாய் 2020 என்ற பெயருடன் இருந்த அந்த குழுவில், அந்த தீவில் இருந்த அரசியல், வணிக, கல்வித்துறை மற்றும் விவசாயத்துறை தலைவர்கள் இடம்பெற்று இருந்தார்கள். இந்த ஆலோசனை சபையில் குருதேவா மட்டுமே ஆன்மீகத் தலைவராக இருந்தார், மற்றும் அவர் அவர்களுக்கு பரிசுகளை கொண்டு வந்தார். ஒவ்வொரு மாதமும் தாங்கள் வசிக்கும் தீவு மற்றும் அதன் மக்களின் எதிர்காலம் பற்றி திட்டமிட்டு விவாதிக்கவும், குருதேவா வழங்கவிருக்கும் உபதேசத்தை கேட்கவும், மேயர்கள் மற்றும் முன்னாள் மேயர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் குழு ஒன்று கூடியது. இந்த குழுவிற்கு அவரும் அவரது துறவிகளும் ஊக்கமளிக்கும் சக்தியாக விளங்கினர், மற்றும் இந்த காலகட்டத்தில் அந்த குழுவில் குறிப்பிடத்தக்க சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. கவுண்டி கவுன்சில் தலைரவராக இருந்த ரோன் கவுசி, “குருதேவாவின் அடுத்தகட்ட நடவடிக்கையை தெரிந்துக்கொள்ளவே நான் இந்த கூட்டத்தில் கலந்து கொள்கிறேன்! நான் எனது வாழ்நாளில், இதுவரை அவரைப்போன்ற ஒரு அற்புதமான மனிதரை சந்திக்கவில்லை,” என்று துறவிகளிடம் தெரிவித்தார். §

முத்தொகுப்பில் முன்னேற்றம் மும்முரமாக இருந்தது. குருதேவா ஒவ்வொரு நாளும் தவறாமல், தனது தொகுக்கும் குழுவுடன் தனது RV வாகனத்தில் ஏறி கடற்கரையோரமாக செல்வார். அவர் விடுப்பு நாட்கள் மற்றும் பண்டிகை நாட்களிலும், இந்த சந்திப்பில் தவறாமல் கலந்துகொண்டார். அது கவாய் தீவில் தங்கியிருக்க வேண்டும் என்ற அவரது விரதத்திற்கு காரணமாக

இருந்தது, மற்றும் அவர் தனது பணியை பூர்த்தி செய்வதில் உறுதியாக இருந்தார். §

அவரும் அவரது தொகுக்கும் குழுவும் *டான்சிங் வித் சிவாவின்* ஐந்தாவது பதிப்பை 1997 ஆம் ஆண்டு நிறைவு செய்ததும், *மெர்ஜிங் வித் சிவா* புத்தகத்தில் தங்கள் பணியை தொடங்கினார்களா. இந்த புத்தகம் அவர் தனது வாழ்நாளில் பெற்ற உட்பார்வைகள், நிகழ்த்திய பாடங்கள், உரைகள் மற்றும் பதிவு செய்ப்பட்ட தருணங்களை உள்ளடக்கி பாதுகாப்பு அளிக்கும் ஒரு ஆக்கப்பூர்வ படைப்பாக, அவரது ஆன்மீக மற்றும் மீமெய்யியல் சுருக்கமாக விளங்கியதால், இதில் குருதேவா அதிக ஆர்வத்துடன இருந்தார். அவரைப் பொறுத்தவரையில், மீமெய்யியல் வாழ்க்கைக்கு எலும்பு போல விளங்கி, மற்ற அனைத்திற்கும் ஆதரவு தருவதாக கருதியதால், “இந்து சமயத்தின் தற்கால மீமெய்யியல்" என்று அவர் அதற்கு பெயரிட்டார். §

அவர் ஆம் 1998 ஆம் ஆண்டை “மெர்ஜிங் வித் சிவாவின் ஆண்டாக" பெயரிட்டார். அவர் தினமும் RV வாகனத்தின் நெரிசலான மூலையில் அமர்ந்து கொள்வார். அதன் சன்னல்கள் பசிபிக் கடலை பார்த்த வண்ணம் திறந்து இருக்க, அந்த கடலின் அலைகள் வாகனத்தில் இருந்து சில கஜ தூரத்தில் இருந்த பாறைகள் மீது மோதிக்கொண்டு இருந்தன. அவர் தினமும் அத்தியாயங்களை சிறப்பாக வடிவமைத்து, மொழியின் நடையை மாற்றி அமைத்து, தான் தெரிந்துகொண்ட ஒரு குறையை சரி செய்ய புதிய படைப்புக்களை வழங்கினார். ஒவ்வொரு மாதமும் புத்தகத்தின் ஒவ்வொரு பிரிவாக மறு ஆய்வுக்கு வந்த போது, அவர் ஒவ்வொரு பத்தியாக கூர்ந்து கவனித்து, அந்த படைப்பை வலுவாக வழிநடத்தி சென்றார். அத்தியாயங்கள் முடிவடைந்ததும், அவற்றை துறவிகளுடன்  பேரானந்தத்துடன் பகிர்ந்து கொண்டார். ஒரு வருடம் தகவல்களை ஒன்று சேர்த்து, தொகுத்து, சித்திரங்களின் துணையுடன் எடுத்துரைத்து மெருகேற்றிய பிறகு, *மெர்ஜிங் வித் சிவா* வெளியிடப்பட்டது. சில மாதங்கள கழித்து, குருதேவா உலக மக்களிடம் அதைப்பற்றி அளித்த விளக்க உரை: §




*குருதேவா தனது தொகுக்கும் மேசையில், ஒவ்வொரு புத்தகத்தின் ஒவ்வொரு சொல்லையும் மிகவும் கவனமாக மறு ஆய்வு செய்தார். அவர் ஒன்றாக சேர்ந்து அமர்ந்து பணியாற்றுவதை வலியுறுத்தியதோடு, ஒரே ஆவணத்தை நான்கு வெவ்வேறு கணினிகளில் இருந்து பணிபுரிய அனுமதித்த தொழில்நுட்பமும் அவருக்கு பிடித்து இருந்தது. அந்த காலத்தில் அத்தகைய தொழில்நுட்பம் புதுமையாக இருந்தது.*

........................§

*மெர்ஜிங் வித் சிவா மற்ற புத்தகங்களைப் போல அல்லாமல், விசேஷமானதாக இருக்கிறது.* உங்களைப்பற்றி எடுத்துரைக்கும் இந்த புத்தகம், உங்களுக்கு உட்புறமாக உங்கள் மனம் உங்கள் உணர்ச்சிகளுடன் செயல்புரிவதைப் பற்றி, உங்கள் உணர்ச்சிகள் உங்கள் தூல உடலுடன் மற்றும் வாழ்க்கையின் உண்மையான குறிக்கோளாக விளங்கும் ஆத்ம ஞானத்துடன் செயல்புரிவதைப் பற்றி விளக்குகிறது. கனடா, இலங்கை, ஐரோப்பா மற்றும் போர் காரணமாக உலகின் பல நாடுகளுக்கு இடம்பெயர்ந்த எனது இலங்கை சீடர்களுக்கு,

நாம் தூல உடலில் மற்றும் சூட்சும உடலில், அறிவுணர்வுடன் வாழும் ஒரு ஆன்மா என்றாலும், நாம் களங்கமில்லாமல், மாசற்று இருக்கும் ஒரு தூய ஆன்மாவாவாக இந்த வாழ்க்கையின் கர்மவினைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்கிற ஒரு புதிய சுய கோட்பாட்டுடன், வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தை தொடங்க இந்த புத்தகம் உதவியாக இருந்ததாக அவர்கள் குறிப்பிட்டனர்.§

பொதுவாக மீமெய்யியல் புத்தகங்கள், உங்களை இந்த உலகை கடந்த ஒரு உயர்ந்த தத்துவத்தை நோக்கி அழைத்து செல்லும். *மெர்ஜிங் வித் சிவா* புத்தகத்திலும் இந்த அம்சம் இருந்தாலும், இந்த புத்தகம் வழங்கும் உத்திகள் மற்றும் சாதனாக்கள் உலகில் உங்களுக்கு வெற்றிகளை தேடித் தருகின்றன. இதன் மூலம் ஒரு நகரத்தில் இருந்து இன்னொரு நகரத்திற்கு, ஒரு மாநிலத்தில் இருந்து இன்னொரு மாநிலத்திற்கு, ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு என்று உலகம் முழுவதும் பயணம் செய்யும் ஒரு பயணியைப் போல உங்கள் மனதில் பயணம் செய்யும் சாட்சியின் இயக்கத்தை நீங்கள் கட்டுப்படுத்துவதால், நீங்கள் உலக சக்திகளை இயக்குகிறீர்கள். *மெர்ஜிங் வித் சிவா* புத்தகத்தை ஐந்து நாடுகளில் வெளியிட்டு, நாங்கள் சமயப்பணி மற்றும் தத்துவ பாடங்கள் மற்றும் மீமெய்யியல் சாதனாக்களின் உபதேசங்களை தொடங்கி ஐம்பது ஆண்டுகள் நிறைவையும் கொண்டாடினோம். §



குருதேவா ஐந்து ஆண்டுகளுக்கு வியாபாரம், கல்வித்துறை, ஊடகம் மற்றும் அரசியல் தலைவர்களை சந்தித்து வந்தார். கவாய் தீவின் எதிர்காலத்திற்கு

*ஒரு ஆன்மீக திட்டத்தை உருவாக்குவது மட்டுமே அவர்களின் குறிக்கோளாக இருந்தது.*

……………………§

ஒரு நாள் குருதேவா கடலை நோக்கி பயணம் செய்த போது, கடலுக்கு அருகே அவருக்கு பிடித்தமான வாகனம் நிறுத்தும் இடம், அந்த தீவில் கிழக்கு கடற்கரையோரமாக மிதிவண்டிகள் மற்றும் நடக்கும் பாதையை உருவாக்க, மிகப்பெரிய கற்பாறைகளால் தடுக்கப்பட்டு இருந்தது. அவரால் அந்த விசேஷமான இடத்திற்கு மீண்டும் திரும்ப முடியாததால், அவர் 1998 ஆம் ஆண்டு தனது தொகுக்கும் பணிக்கு தலைமையகமாக பயன்படுத்திய இடத்திற்கு அருகில், கடலுக்கு மத்தியில் வாடகைக்கு ஒரு குடியிருப்பை விரைவில் வாங்கினார். இந்த விசாலமான குடியிருப்பு, ஒவ்வொரு அமர்வுக்கு முன்னரும் கடலில் நீச்சலடிக்கும் வசதியை வழங்கியதுடன், அவர் அதிக ஈர்க்கப்பட்டு இருந்தால் இரவு தங்குவதற்கும் அனுமதி வழங்கியது. அவர் அதை ஹாலே மகாய் என்று அழைத்தார், அதாவது “கடலுக்கு அருகில் இருக்கும் அவரது வீடு.” யோக சுவாமியை போல அவருக்கும் தினமும் கடலுக்கு சென்று வருவது பிடித்து இருந்தது. பாதுகாப்பு காரணத்திற்காக, வெதுவெதுப்பான தண்ணீரில் நுழைவதற்காக, அபாயகரமான பவளம் வழியாக நடந்து சென்ற போது, அவரும் அவரது மூன்று தொகுப்பு ஆசிரியர்களும் ஒருவருக்கொருவர் கைகளை பிடித்துக்கொண்டு சென்றனர். அலைகள் மெதுவாக அவர் மீது மோதிக்கொண்டு இருக்க, தான் முதுகுப்புறமாக நீந்திக்கொண்டு வெப்பமண்டல மீன்களை பார்ப்பது குருதேவாவிற்கு பிடித்து இருந்தது. §

அவர் ஒரே இடத்தில் அடைந்து இருந்ததால் ராக் பீவர் என்ற மந்தநிலையை தணிப்பதற்காகவும், அவர் பிறந்த நாளை அந்த தீவு மக்களால் அதுவரை கொண்டாடப்படவில்லை என்பதாலும், ஜனவரி 5, 1998 அன்று துறவிகள் குருதேவாவின் பிறந்தநாள் விழாவை கொண்டாடி அவரை வியக்க வைத்தனர். பல மாதங்களுக்கு இரகசியமாக திட்டமிட்ட பிறகு (அவருக்கு தெரியும் என்பதை துறவிகள் அறிந்து இருந்தாலும், இரு சாராரும் இதைப்பற்றி ஒரு வார்த்தையும் பேசிக்கொள்ளவில்லை), எங்கே செல்கிறோம் என்பது அவருக்கு தெரியாவிட்டாலும், மடத்தின் நிலப்பரப்பில் அமைந்து இருந்த ஒரு திறந்த புல்வெளியில் காத்து இருந்த ஒரு ஹெலிகாப்டரில் ஏறி செல்வதற்கு அவரது சம்மதத்தை பெற்றனர். §

மூன்று நிமிடங்கள் கழித்து அந்த வானூர்தி கவாய் தீவில் பிரபலமான பண்ணையாக விளங்கிய கிலோஹனா மான்ஷனை சுற்றிய பிறகு, பாராட்டுதல்களும் மகிழ்ச்சியும் நிரம்பிய அந்த அற்புதமான இரவை தொடங்குவதற்கு, அது ஒரு உற்சாகமான மக்கள் கூட்டத்திற்கு மத்தியில் இறங்கியது. குருதேவாவின் மகத்துவத்தை மெதுவாக புரிந்துக்கொண்டிருந்த அந்த தீவின் நானூறு மக்கள், அவரை கோலாகலமாக வரவேற்றனர். சற்குருவை ஹவாய் நடனக்கலைஞர்கள் மற்றும் பாடகர்கள் ஒரு

மண்டபத்திற்கு அழைத்து சென்றனர். அங்கே கூடியிருந்த மக்கள் கூட்டத்தை பார்த்து அவர் வியந்து நின்றார். §

அன்று இரவு அந்த அரங்கில், அவரும் மேயர் மேரியன் குசாகாவும் ஹூலா மற்றும் மணிப்புரி நடனமாடினார்கள். அன்று இரவு அவரது தேவாலய அங்கத்தினர்கள் அவரை ஒரு தற்காலிக தராசில் வைத்து, இன்னொரு புறம் அவரது எடையை சமன் செய்ய தங்க முலாம் பூசிய செங்கற்களை வைத்து, அதன் மீது $900,000 (அவர் எடைக்கு சமமான தங்கத்தின் விலை) காசோலையை வைத்து, அவரது 'இறைவன்' கோயிலுக்கு அந்த தொகையை திரட்டுவதாக வாக்குறுதி எடுத்துக்கொண்டனர். அவர்கள் தாங்கள் கொடுத்த வாக்குறுதியை சில மாதங்களில் பூர்த்தி செய்தனர். அன்று இரவு வாழ்க்கையில் அவர் செய்த சாதனைகள் பற்றி பேசப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டு, நினைவுகள் பகிர்ந்துக்கொள்ளப்பட்டு, அந்த தீவின் முன்னேற்றத்திற்கு அவர் அளித்த பங்களிப்பு பாராட்டப்பட்டது. மற்றவர்கள் நலனுக்காக அர்பணித்துக் கொண்ட அவரது வாழ்க்கைக்கு மக்கள் அன்பையும் நன்றியுணர்வையும் தெரிவிக்க, அன்று இரவு அவர் ஒரு அரசரின் உணர்வுடன் தென்பட்டார். §

குருதேவா எல்லா தரப்பு மக்கள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார் என்பதை அறிந்துகொண்டு, தீவில் இருந்த பல்வேறு பிரிவை சேர்ந்த மக்கள் அன்று இரவு கூடியதைப் போல பின்பு எப்போதும் ஒன்று சேரவில்லை என்று பலர் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர். அது அதிகாரப்பூர்வமாக அவரது 71 ஆவது பிறந்தநாளாக இருந்தாலும், கருத்தரிப்பு காலத்தை வாழ்க்கையின் தொடக்கமாக கருதும் இந்திய முறைப்படி, அது தனது 72 ஆவது பிறந்த நாளாக அவர் கருதினார். வாழ்க்கையில் நான்காவது நிலையாக கருதப்படும் சந்நியாச ஆசிரமத்தின் தொடக்கமாக விளங்கும் 72 ஆவது வயது, இந்து சமயத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக கருதப்படுகிறது மற்றும் அது குருதேவாவிற்கு முக்கியமானதாக விளங்கியது. §

### ஷூம் மொழி மூலம் அந்தர்லோகத்தை ஆராய்ச்சி செய்தல்

குருதேவா தனது வாழ்நாள் முழுவதும், முற்றிலும் தொடர்பில்லாத ஒரு உட்புற மற்றும் ஒரு வெளிப்புற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார். அவர் ஒரு இன்னர்சர்ச் பயண திட்டத்தில் இருந்த போது, தனக்கு எப்போதாவது ஓய்வு நேரம் கிடைக்கும் போது, அவர் தியானம் செய்ய தொடங்கிவிடுவார். அவர் வழக்கமாக தினமும் மனோஉணர்வுடன் செயல்பட்டு, வெளிப்புற மனம் அழைக்கும் போது உணவு அருந்த செல்வதற்கு, தனது தொகுக்கும் குழுவுடன் இணைவதற்கு அல்லது ஒரு யாத்திரியை சந்திப்பதற்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டியிருந்தது. §

1990 களில், அவரது ஆன்மீக பணியின் முக்கியமான தருணங்கள் அவர் உருவாக்கிய ஷூம் என்கிற தியான மொழியை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவர் பல வருடங்களாக தனது ஆன்மீக ஆய்வுகளின் மூலம் உருவாக்கிய விரிவான ஷூம் தரவுத்தளம் மற்றும் அகராதியை சுத்தப்படுத்தி

ஒழுங்குபடுத்துவதற்காக, அவர் விடிவதற்கு முன்பாக காலை இரண்டு அல்லது மூன்று மணிக்கு எழுந்து விடுவார். அவரது முயற்சிகளுக்கு உதவி செய்யும் பொருட்டு, பல துறவிகளுக்கு பல்வேறு பணிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால் குருதேவா, சூட்சும உலகை விளக்குவதில் மட்டும் கவனம் செலுத்தி, அது இந்த உலகை காட்டிலும் உறுதியானது என்று உறுதி அளித்தார். §

அவர் யாரும் பார்க்காத ஒரு பகுதிக்கு தினமும் சென்று வந்த ஒரு ஆய்வு பணியாளர் போல, மீண்டும் மீண்டும் திரும்பி வந்து தான் கண்ட அற்புதமான பகுதியை பற்றி மற்றவர்களுக்கு விரிவாக விளக்கியதோடு, அவர்களும் அந்த பகுதியை ஒரு நாள் சென்று பார்க்கலாம் என்று உற்சாகமாக எடுத்துரைக்கவும் செய்தார். அவர் பிற்காலத்தில் மனதின் பல்வேறு பரிணாமங்களை ஆய்வு செய்து, பதினான்கு லோகங்கள் உள்ளடக்கிய அல்லது இயற்கைக்கு புறம்பான நிறங்கள் மற்றும் உருவங்கள் மற்றும் ஒலிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டதைப் பற்றி விளக்கினார். இங்கே அவர் இயலுணர்வு பிரபஞ்சம் அல்லது நான்காவது பரிணாமம் பற்றி விளக்குகிறார். §

நான்காவது பரிணாமமாக மனிதனின் துணை மெய்ஞ்ஞான புலன் விளங்குகிறது. இது வாசம் செய்வதற்கு ஒரு அழகான இடமாக விளங்குகிறது, மற்றும் உங்கள் முதுகுத்தண்டின் சக்தியை உணர்ந்துகொண்டு நீங்கள் அதில் தொடர்ந்து வாசம் செய்யலாம். உங்களுக்கு முதுகுத்தண்டில் இருக்கும் பிரகாசமான சக்தியைப் பற்றி தெரிந்தவுடன், நீங்கள் மூன்றாவது பரிணாமத்தில் இருந்து துண்டிக்கப்பட்டு, நான்காவது பரிணாமத்தில் வேகமாக எழுச்சி பெறுகிறீர்கள். §


கலைஞர்கள் நான்காவது பரிணாமத்தில் இருக்கிறார்கள். நீங்கள் புதிதாக ஒன்றை வடிவமைத்து அல்லது உருவாக்கியதும், நீங்கள் உங்கள் நரம்பு அமைப்பின் மூலம் உள்ளிருக்கும் அழகை வெளிப்படுத்துகிறீர்கள். உங்கள் நரம்பு அமைப்பு முழுவதிலும் ஒரு நேர்மறை உணர்வு பரவுவதை உங்களால் உணர முடிகிறதா? அது உங்களது நான்காவது பரிணாமமாக இருக்கும் துணை மெய்ஞ்ஞானம் ஆகும். மற்றவரின் நலனுக்காக அறிய விரும்பும் நாட்டம், ஆக்கப்பூர்வமான அறிவுணர்வு மூலம் அறியப்படுகிறது. §

வேடிக்கையாக பேசி தங்கள் கருத்துக்களை கேட்பவர் மனதில் புகுத்த விரும்பாமல், கவனமாக மற்றவர் கருத்துக்களை கேட்பதில் அதிக கவனம் செலுத்துபவரை நாம் திறந்த மனதுடன் இருப்பவர் என்று குறிப்பிடுகிறோம். அவர் நான்காவது பரிணாமத்தில் உணர்வுடன் இருக்கிறார். அவர் ஒரு புது யுக மனிதராக இருக்கிறார். தன்னை சுற்றி இருக்கும் மக்களின் லௌகீக அணுகுமுறைகளில் இருந்து தனது அணுகுமுறை அதிகம் மாறுபட்டு இருப்பதன் காரணமாக, அவர் பேச வேண்டியிருப்பதால், அவர் தன் கருத்தை தெரிவிக்கிறார். அவரால் ஒரே சமயத்தில் ஒரு விஷயத்தின் நான்கு கோணங்களையும் பார்க்கவும்,

மற்றவர்களின் கருத்து தனது கருத்தில் இருந்து மாறுபட்டு இருந்தாலும், அதனை புரிந்துகொள்ளவும் முடிகிறது. அவர் மற்றவர்களுக்கு ஊக்கமளிப்பவராக இருந்தார். அவர் மகிழ்ச்சியாக இருப்பதுடன் மகிழ்ச்சியை அனுபவிக்கவும் செய்கிறார். அவர் ஆக்கப்பூர்வமாகவும், விசேஷமாகவும், புதுமையான முறையிலும் செயல்படுகிறார். அவர் தனித்து இயங்கி, தன்னையும் தனது முதுகுத்தண்டின் சக்தியை மட்டுமே சார்ந்து இருக்கிறார். அவர் மற்றவர்களுக்கு விரைந்து உதவி செய்தாலும், அவர்களின் முப்பரிணாம சக்தியில் சிக்காமல் இருப்பதில் கவனமாக இருக்கிறார். அவர் நன்றாக வடிவமைக்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுடன் அதிக உற்சாகத்துடன் இருந்தார். அவரை உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் இயக்கும் சக்தியை விரயம் அல்லது வெளியேற்றம் செய்யாமல், நல்ல முறையில் பயன்படுத்துகிறார். அவர் வாழ்க்கையின் மீது உற்சாகமாகவும் திருப்தியாகவும் இருப்பதுடன், ஆன்மீக பாதையை பின்பற்றுவதற்கு தீவிர ஆசையுடன் இருக்கிறார். §

உங்களுக்கு மனதின் நான்காவது பரிணாமத்தில் தொடர்ச்சியாக ஆக்கப்பூர்வமான சிந்தனை இருப்பதால், அது வாழ்வதற்கும் உட்புற விரிவாக்கத்தை தாங்கிக் கொள்வதற்கும் ஒரு அற்புதமான இடமாக விளங்குகிறது. வாழ்க்கைப் பற்றிய பரந்த பார்வை, தினமும் நான்காவது பரிணாமத்தில் இருந்து தடையில்லாமல் விரிவாக்கம் பெறுவதை உங்களால் காண முடிகிறது. அடியுணர்வை கூர்ந்து கவனித்து உணர்ச்சி, சிந்தனை மற்றும் எதிர்வினைக்கு இடையே இருக்கும் தொடர்பை அறிந்து புரிந்துகொள்ள முடிகிறது. நீங்கள் மூன்றாவது பரிணாமத்தின் காந்த விசைப்பகுதியை ஆய்வு செய்து, பல்வேறு மக்கள் தங்களுக்குள் தொடர்புகொள்ளும் செய்முறைகளை புரிந்துகொள்ள முடிகிறது. §

நான்காவது பரிணாமத்திற்குள் நுழைவது மிகவும் சுலபமாக இருக்கிறது. நாம் நினைப்பதை போல சூழ்நிலை அமையாத போது பற்றின்றி இருப்பது சிறிது சவால் விடுவதாக இருந்தாலும், சக்திகள் சீரடையும் போது மீண்டும் பழைய நிலைக்கு திரும்புவது சுலபமாக இருக்கும். §



தினமும் காலையில் விடிவதற்கு முன்பாக, குரு பீடத்தில் தனது
சிம்மாசனத்தில்  குருதேவா அமர்ந்து இருப்பார். அவரை பார்த்த வண்ணம்

*துறவிகள் அமர்ந்து இருக்க, அவர்களை ஒரு மணி நேரத்திற்கு, யோக பயிற்சிகள் கலந்த தியானத்தில் ஷும் மொழி மூலம் வழிநடத்தி செல்வார்.*

……………………§

**மடத்தில் அவரது அன்றாட நிகழ்வுகள்**

குருதேவாவிற்கு பயணம் செய்வது பிடித்து இருந்தது. மூன்று வருடங்கள் தனிமையில் இருந்த காலத்தைத் தவிர கோயில் திறப்பு விழாவிற்கு தலைமை தாங்க, தன்னிடம் தீட்சை பெற்ற உறுப்பினர்களை சந்திக்க, ஒரு மாநாட்டில் பங்குபெற என்று அவர் ஒரு வருடத்தில் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு மடத்திற்கு வெளியே இருப்பார். அவர் தனது மடத்தில் இருந்த காலத்தில், அவர் பூர்த்தி செய்யவேண்டிய பணிகளின் சலிப்பூட்டும் பட்டியல் நிரம்பி இருந்தது. அவர் அதை நல்ல ஒழுக்கங்களின் மூலம் கட்டுப்படுத்தி, உற்சாகத்துடன் எதிர்கொண்டார். §

அவர் பெரும்பாலான நாட்களில் துறவிகளுக்கு முன்பாக எழுந்து, குளித்துவிட்டு படிகட்டில் கீழிறங்கி தனது மஹோகனி அறைக்கு நடந்து செல்வார். பழைய பண்ணை வீடு புதுப்பிக்கப்பட்ட போது, அவருக்கு அந்த அலுவலகம் வன்மரத்தில் மெருகூட்டப்பட்டது. அவர் தனது அலுவலகத்தில் அமர்ந்து சிறிது நேரம் வேலை செய்த பிறகு, சூடான தேநீர் அல்லது காபியுடன் ஒரு துறவி அங்கே வருவார். அதிகாலையில் தன்னை தேடி வந்த ஒரு அன்பருடன் சிறிது நேரம் ஆன்மீக விஷயங்கள் அல்லது முந்தைய இரவு தான் கண்ட ஒரு கனவு பற்றி சிறிது நேரம் பேசி அவரை வழியனுப்பிய பிறகு, அவர் தனது கணினி பக்கம் திரும்பி அன்றைய தினம் வந்த மின்னஞ்சல்களை பார்வையிட்டு அதை ஒழுங்குப்படுத்தி, வாரம் இரு முறை நாட்காட்டியை நோட்டமிட்டு, தனது கோயில் சொற்பொழிவுகளை தயார் செய்து கொள்வார். தினமும் அன்றாட நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்பாக, அவர் தனது ஷும் பணிக்காக ஒதுக்கிய அந்த அமைதியான தருணங்கள் அவருக்கு பிடித்து இருந்தன. அவருக்கு அது ஒரு வேலையாக இல்லாமல், அதி முக்கியமான பணியாக இருந்தது, மற்றும் அதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட பல மணி நேரங்கள் அவருக்கு சில நொடிகளாக தோன்றின. §


தினமும் சிவ பூஜைக்காக துறவிகள் கூடியிருந்த ‘கடவுள்’ கோயிலுக்கு, அவர் சரியாக 5:15 மணிக்கு நடந்து செல்வார். அவர் சிவபெருமானை கைகூப்பி வணங்கிவிட்டு, முதுகை சாய்த்து அமரும் வசதியுடன் பின்புறத்தில் ஓரமாக இருந்த ஒரு உயரமான பிரம்பு நாற்காலியில் அமர்வதற்கு, அவர் கோயிலின் பிரதான மண்டபம் வழியாக நடந்து செல்வார். §

பூஜைக்காக ஒவ்வொரு துறவியாக அங்கே கூடும் பொது, அவரிடம் அன்புடன் ஒரு பூவை வழங்கி அவரது பாதங்களை தொட்டு, நமஸ்காரம் செய்து விட்டு, தங்கள் குருவுக்கு அருகில் அமர்ந்து இயல்பாக பேசி மகிழ்ந்தார்கள். 5:30 மணிக்கு, உட்புறமாக இருந்த கருவறைக்கு நடந்து சென்று, சிவ நடராஜருக்கு அருகில் தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த விசேஷ

இருக்கையில் அமரும் முன்பாக, விநாயகர் மற்றும் முருகனுக்கு காண்பிக்கப்பட்ட ஆரத்தியை பார்த்து விட்டு செல்வார். அங்கே அவர் நேராக நிமிர்ந்து அமர்ந்துகொண்டு, அவர் குறிப்பிடும் "வெளிப்புற வழிபாட்டில்" தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். இறைவன் மனிதனுக்குள் இருப்பதாகவும், மனிதன் இறைவனின் சக்தியில் உலகமாக இருப்பதாகவும் கருதும் உண்மையான சைவ சித்தாந்தத்தில், ஆணவத்தை வெறுமையாக்கும் ஈடுபாட்டை பெறுவதற்கு "முதலில் வெளிப்புற வழிபாடும், பிறகு உட்புற வழிபாடும்" அவசியம் என்று சிரித்துக்கொண்டே குறிப்பிட்டார். §

6:00 மணி அளவில் பூஜை முடிந்ததும், அவர் எழுந்து நின்று அருகில் இருந்த குரு பீடத்திற்கு கோயில் சுரங்கங்கள் வழியாக மெதுவாக நடந்து செல்வார். யோக சுவாமி தனது குருவான செல்லப்பசுவாமியை அவரது பாதுகைகளின் வடிவில் வழிபட்டதைப் போல, துறவிகள் ஒன்று சேர்வதற்கு முன்பாக, அவர் தினமும் காலையில் தனியாக தனது குருவான யோக சுவாமியின் சிறிய மாடத்தில் வைத்து வழிபடுவதற்கு சிவபெருமானின் கருவறையில் இருந்து ஒரு மலரை கொண்டு வருவார். §

அவர் பாரம்பரிய முறையில் வடிவமைக்கப்பட்ட *சிம்மாசனத்தில்* சம்மணமிட்டு அமர்ந்ததும், தனது துறவிகளில் ஒருவர் அவருக்காக சிறிய குவளையில் கொண்டு வந்த காபியை ருசித்துக்கொண்டு இருக்க, மற்ற துறவிகள் அங்கே வந்து அவருக்கு முன்பாக தரையில் நான்கு அழகான வரிசையில் அமர்ந்து கொண்டனர். குருதேவா "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தை சொல்லி அன்றைய நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்ததும், அதன் பிறகு துறவிகள் குரு மந்திரத்தை பாடி, அவர்கள் தங்களுக்குள் பகிர்ந்துகொண்ட குறிக்கோள் மற்றும் இலக்குகளை வெளிப்படுத்தும் துறவிகளின் சமயப்பணி அறிக்கையாக, ஒரு தாளத்துடன் அவர் உருவாக்கிய உறுதிமொழியை இரண்டு முறை பாராயணம் செய்தனர். §



*தேவர்களுக்கு புனிதமான வேள்வியின் மூலம் எழுதப்பட்ட பிரார்த்தனைகளை அனுப்புவதற்கு, குருதேவா அந்த தேவர்களுடன் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கிக்கொண்டார். அவர் ஒவ்வொரு வாரமும், உலகெங்கிலும் இருக்கும் அவரது சீடர்கள் அனுப்பிய பிரார்த்தனைகளை ஒரு கூடையில் வைத்து, அதை அந்த அக்னியில் சமர்ப்பித்தார். இவற்றின் சூட்சும வடிவம் தேவர்கள் வாசிப்பதற்காக இரண்டாம் உலகில் தோன்றும் என்றும், அவர்கள் அதைப்படித்து ஒவ்வொரு பிரார்த்தனைக்கும் பதில் அளிப்பார்கள் என்றும் அவர் விளக்கம் அளித்தார்.*

……………………§

ஒரு ஆச்சார்யர் தியானத்திற்கு பூர்வாங்க வேலையாக, மனதை 15 நிமிடத்திற்கு அமைதிப்படுத்தி, முறையாக உள்நோக்கி செல்லும் செய்முறையை வழிநடத்தினார். அது ஒரு உயர்ந்த நிலையை அடைந்ததும், இறுதியான ஏற்றத்தை அடைவதற்கு, குருதேவா ஷூம் மொழியில் தலைமை தாங்கி துறவிகளை மலையின் உச்சத்திற்கு அழைத்து சென்றார். குரு மற்றும் அவரது ஷூம் மொழியால் வழிநடத்தப்பட்டு, எல்லோரும் ஒரே ஆன்மீக பாதையை பின்பற்றி, இந்த பூமியில் முழுமையான ஒத்திசைவுடன் நடைபெறும் தியானம் இதுவாகத்தான் இருக்கவேண்டும். §

“ஸ்நோர்மாதி" (குறட்டை சமாதி) என்று வேடிக்கையாக அழைக்கப்பட்ட நிலையை தவிர்க்க சில துறவிகள் போராடிக்கொண்டு இருக்க, இதில் நன்றாக பக்குவமடைந்த துறவிகளில் சிலர் ஞானஒளி மற்றும் பரமாத்துமாவிற்குள் ஆழமாக சென்றார்கள். மற்றவர்களுக்கு சவால் விடுவதாக இருந்த பயிற்சியில் குருதேவா நிம்மதியாக, அமைதியாக மற்றும் நன்றாக கவனத்தை உட்புறமாக திருப்பிக்கொண்டு, நேராக நிமிர்ந்து அமர்ந்து இருந்தார். தெய்வீக மாற்றத்தின் சான்றாகவும், தனது துறவிகள் அனைவரும் குண்டிலினி சக்தியை பெறுவது சாத்தியம் என்று தொடர்ந்து ஊக்கம் அளிக்கும் விதமாக, இந்த அமர்வுகளின் போது அவரது உடல் தேஜசுடன் பிரகாசமாக மின்னியது. தினமும் நடைப்பெற்ற இந்த தெய்வீக தியானங்களில் பங்குபெறுவதற்கு அவரது துறவிகள் குழுவிற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. ஒரு மணி நேரத்திற்கு பிறகு, தியானம் நிறைவு செய்யப்பட்டது. §

குருதேவா வழக்கமாக தியானத்திற்கு பிறகு பேசுவார். அவர் சில சமயம் அன்றைய தினம் பற்றி ஒரு சில வார்த்தைகளை கூறி, காலையில் இருந்து மாலை வரை நடைபெறவிருந்த நடவடிக்கைகளுக்கு தனது துருப்புக்களை தயார் செய்து, வரவிருந்த விருந்தாளிகள் அல்லது எல்லோரும் ஈடுபடவேண்டிய ஒரு திட்டப்பணியை பற்றி குறிப்பிடுவார். அவர் சில சமயங்களில் ஆன்மீக முயற்சி அல்லது சாதனா பற்றி பேசுவார். இந்த சமயத்தில் அவர் துறவிகள் மற்றும் அவர்களின் வாழ்க்கை மீது கவனம் செலுத்தும் நீண்ட *உபதேசங்களை* வழங்கத் தொடங்கினார். அவர் இந்த உரைகளை தனது *மடவாசி சாஸ்திரங்கள்* என்று அழைத்தார். அவை இரண்டு நிமிடங்கள் முதல் நாற்பத்தி ஐந்து நிமிடங்கள் வரை நீடித்தன, மற்றும் அதில் ஒவ்வொன்றும் ஒரு மடவாசியின் இலட்சியங்கள் மற்றும் தனது மடத்தில் வாழ்பவர்கள் செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை மீது தீவிரமாக கவனம் செலுத்தின. “கீழ்படிதல் மற்றும் ஒற்றை மனது:” (Obedience and the One Mind) என்று தலைப்பில் அவர் அறிவுறுத்திய உரையை இங்கே காணலாம்: §

கவாய் ஆதீனத்தில் எல்லோரும் தாங்கள் எடுத்துக்கொண்ட உறுதிமொழிகளுக்கு கீழ்படிந்து நடக்கிறார்கள்; அதனால் அவர்கள் மற்ற எல்லோருக்கும் கீழ்படிந்து நடக்கிறார்கள். இங்கே நம்மிடம் ஒரு சிறந்த நுண்ணறிவு இருக்கிறது; இங்கே அதிக மக்களும் இல்லை. இங்கே ஒரு தனிநபரும் இல்லை, ஆனால் ஒரு நுண்ணறிவு மட்டுமே உள்ளது. ஒரு எண்ணற்ற மக்களின் குழு தங்கள் மனங்களை இன்னொரு எண்ணற்ற மக்களின் குழுவுடன் சேர்க்கும் போது ஒரு பெரிய மனம் உருவாகிறது. இதன் காரணமாகத்தான் இந்துயிசம் டுடே மற்றும் எங்களது மற்ற பதிப்புகள் மூலம் மக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடிகிறது, ஏனென்றால் எங்கள் பதிப்புக்களை வாசிப்பவர் இந்த மிகப்பெரிய மனதுடன் இணக்கத்தை பெறுகிறார். உலக மக்களின் நலனுக்காக தனது சொந்த ஆன்மாவிற்கு கீழ்படிந்து ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு

வழங்கிக்கொண்டு பிணைந்து ஐக்கியமாகிய நிலையில் இருபத்தி ஐந்து ஆன்மாக்கள் இருக்கின்றன. §

"நான் இதை செய்ய விரும்புகிறேன், நான் அதை செய்ய விரும்புகிறேன்" என்றும், "நான் வேறு எதையாவது செய்துக்கொண்டு இருக்க வேண்டும். ஆனால் நான் இதை செய்ய வேண்டியிருக்கிறது," என்று எல்லோரும் தங்களது சொந்த விருப்பங்களுடன் இருக்கும் போது, நமது பதிப்புக்களை படித்து, "அவர்களின் வெளியீட்டு பணி மிகவும் நன்றாக இருக்கிறது. படங்கள் மிகவும் அருமையாக இருக்கின்றன," என்று பலர் கூறலாம். இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள காந்தசக்தி எதுவும் இருக்காது. ஆனால் நாம் நம்மை லௌகீகம் மற்றும் சம்சார சமூகத்தில் இருந்து நம்மை தனிமைப்படுத்திக் கொண்டுள்ளதால், நாம் நமது மனங்களை ஒன்றாக ஒரு குழுவாக ஐக்கியமாக்கி தனிமைப்படுத்திக் கொண்டுள்ளதால் (நாம் நமது மனங்களை சம்சாரி குழுவுடன் ஒன்று சேர்க்கவில்லை, நாம் நமது மனங்களை நமது சொந்த குழுவுடன் ஒன்று சேர்க்கிறோம்), நாம் ஒரு மிகப்பெரிய மனிதனாக, எண்ணற்ற உடல்களை கொண்ட ஒரு பெரிய மனமாக மாறியுள்ளோம். §

அதனால் *டான்சிங் வித் சிவா*, இந்துயிசம் டுடே பத்திரிகையை படிக்கும் ஒருவர், இந்த பெரிய நுண்ணறிவுடன் இணக்கத்தை பெற்று, இந்த பெரிய நுண்ணறிவில் நாம் வழங்கியதை படிக்கும் குறுகிய காலம் வரை அதில் அங்கம் வகிக்கிறார். இத்துடன் கீழ்படிதல் பற்றிய உறுதிமொழியை நிறைவு செய்கிறேன். §

அவர் இந்த தருணங்களில், அத்தகைய பொதுவான சூழலில் வழக்கமாக சத்தமாக விவாதிக்கப்படாத சிக்கல்களைப் பற்றி தைரியமாக சொற்பொழிவு நடத்தினார். இந்த உரைகள் அனைத்தும் நிறைவுபெற்றதும், முறையாக பேசப்பட்டு எதிர்கால சந்ததியினருக்கு கவனமாக பதிவு செய்யப்பட்ட இந்த உரைகள், ஆன்மீக உட்பார்வை மற்றும் கோட்பாட்டின் ஒரு அற்புதமான பாகமாக தனித்து நின்றன. அது அவருடன் ஆன்மீக பணியில் ஈடுபட்டு இருந்த (சோல்ஜர்ஸ் ஆஃப் வித்தின்) மற்றும் அறையில் இருந்தவர்கள் மற்றும் எதிர்காலத்தில் வரவிருந்தவர்களுக்கு இறுதி அழைப்பாக, பாதையில் பலவீனமாக இருப்பதால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றிய அவரது எச்சரிக்கையாக, ஒரு வலுவான துறவற வாழ்க்கையை வாழ்வதால் உண்டாகும் சக்திகள் பற்றிய அவரது புகழ்ச்சியாக, நேர்மறை எண்ணத்துடன் எல்லோருடனும் இணக்கத்துடன் வாழ்வது எப்படி என்பதை பற்றிய அவரது அறிவுறுத்தல்களாக விளங்கின. அவர் இந்த அமர்வுகளின் போது சில சமயங்களில் மென்மையாக கடிந்துக்கொண்டு, அவர்கள் சிறப்பாக செய்யவேண்டிய சிறிய விஷயங்களை சுட்டிக்காட்டியதோடு, பாதையில் முன்னேற்ற அறிகுறிகளாக தனக்கு தோன்றிய சிறிய சாதனைகளை புகழ்ந்து பேசவும் செய்தார். §

அதன் பிறகு ஒரு உயர்ந்த நிலையை எட்டியதும், அவர் முகத்தில் புன்னகை பளிச்சிடும். அதன் பிறகு அவர் அந்த நாள் இனிய நாளாக அமைய

எல்லோருக்கும் வாழ்த்துக்களை சொல்லிய பிறகு, “ஓம் நமச்சிவாய” மந்திரத்தை பாடத் தொடங்குவார். துறவிகள் தங்கள் படிநிலையின் வரிசையில் ஒவ்வொருவராக முன் வரும் போது, அந்த மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு இருப்பார்கள். அதன் பிறகு அவர்கள், அவர் முன்பாக மண்டியிட்டு அவர் பாதத்தை தொட்டு வணங்கும் போது, குருதேவா தனது வலது கை கட்டைவிரலால் அவர்கள் நெற்றியில் விபூதி பூசுவார் மற்றும் அவர்கள் குரு பீடத்தில் இருந்து வெளியேறி முழுமை பெறும் பாதையை நோக்கி செல்வார்கள்.§

குருதேவா தினாயத்திற்கு எப்போதும் முதலாவதாக வந்து, அங்கிருந்து இறுதியாக கிளம்புவதற்கு முன்பாக, பெரும்பாலும் கூடுதலாக சிறிது நேரம் தியானம் செய்வதற்காக அல்லது தனது மனதில் இருந்ததை பகிர்ந்துக்கொள்ள விரும்பிய துறவியுடன் பேசுவதற்காக சில நிமிடங்கள் தங்கிவிட்டு செல்வார். §

காலையில் தோட்டத்தில் சிறிது நேரம் நடந்த பிறகு, அவருக்காக அவரது மஹோகனி அறையில் காலை சிற்றுண்டி வைக்கப்பட்டு இருக்கும். அந்த சிற்றுண்டியில் பழங்கள் மற்றும் தயிர் (யோகர்ட்) இருக்கும் அல்லது அவருக்கு பிடித்தமான பாசிப்பயிறு மற்றும் யாழ்ப்பாண முறையில் தயார் செய்யப்பட்ட காரமான தேங்காய் சட்னி வைக்கப்பட்டு இருக்கும். பெரும்பாலான நாட்களில், அவர் காலை சிற்றுண்டியை முடித்ததும், உடனடியாக தனக்கு பிடித்தமான பல்வேறு பணிகளில் ஈடுபடுவார். அந்த பணிகளில் ஒவ்வொன்றும் அவர் தனது வாழ்க்கையை அர்பணித்துக் கொண்ட சமயப்பணியின் சிறிய அங்கமாக இருந்தன. அவர் மனதில் பெரிய குழப்பங்கள் இருந்தால், அதனுடன் சம்பந்தப்பட்ட துறவிகளுடன் பேசுவதற்காக, அவர் ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுப்பார். அவர் பிரச்சனைகளை எப்போதும் தாமதமாக கையாளாமல், அவற்றை உடனடியாக எதிர்கொண்டு தீர்வு காண்பதை விரும்புவார். §

அதைப்போன்று கூட்டம் எதுவும் இல்லாத போது, அன்று தான் செய்யவேண்டிய பணிகளின் பட்டியலை பார்வையிட்டு, ஆசிரியர் தலையங்கத்தை திருத்தி அமைப்பது, உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து தங்கள் குழந்தைக்கு பெயர் சூட்டவெண்டும் என்று, வியாபாரத்தில் முடிவு எடுக்க அவரது அறிவுரை வேண்டும் என்று, பாட்டியின் அஸ்தியை என்ன செய்வது என்று அல்லது விவகாரத்தை எவ்வாறு தவிர்ப்பது என்று தனது சீடர்கள் தன்னிடம் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பதில் கவனம் செலுத்துவது அவரது வழக்கமாக இருந்தது. பணியாளர்களின் கூட்டங்களுக்கு முன்னேற்பாடுகளை செய்வது, துறவிகளுக்கு மத்தியில் இருக்கும் சாதாரண கருத்து வேறுபாடுகளை சரிசெய்வது, தொலைப்பேசி மற்றும் மின்னஞ்சல் மூலம் சீடர்கள், சத்சங் குழுக்கள் மற்றும் மடத்தின் கிளைகளுடன் தொடர்பு கொள்வது மற்றும் பல்வேறு நாடுகளில் இருந்த முப்பதுக்கும் மேற்பட்ட *குலபதி* குடும்பங்கள் மற்றும் அரை டஜன் தேவாலய

சமயப்பணிகளுக்கு வழிகாட்டுவது என்று இந்த பட்டியல் பல மணி நேரங்களுக்கு நீடித்தது. §

இந்த பட்டியல் நிறைவு பெற்றதும், நிதி மற்றும் சட்டம் தொடர்பான சிக்கல்களுக்கு தீர்வு காண்பது, கோயில் அறங்காவலர்கள் குழுக்களுக்கு வழிகாட்டுவது, சமயப்பணிகளை கையாளும் துறவிகள் குழுக்களுடன் கூட்டங்கள் நடத்துவது மட்டுமில்லாமல் பதிப்பித்தல் சம்பந்தமான கேள்விகள், வெளியீடு சம்பந்தமான கேள்விகள், மக்கள் தொடர்பு சம்பந்தமான கேள்விகளை எதிர்கொள்வது என்று மேலும் பல பணிகள் இருந்தன. அவர் ஒப்பந்தங்கள் மற்றும் வங்கி கடன்கள் அனைத்திலும் மற்றும் ஒவ்வொரு காசோலையிலும் கையப்போமிடுவது என்று மடத்தின் நடவடிக்கைகள் மீது தீவிர கவனம் செலுத்தினார். இதற்கு மத்தியில், நாள் முழுவதும் துறவிகளுடன் திட்டமிடப்படாத கூட்டங்களும் நடைபெற்றன. “குருவை சந்திக்க யாருக்கும் முன்பதிவு செய்யவேண்டிய அவசியம் இல்லை” என்ற வாசகத்துடன் அவரது அலுவலக கதவு எப்போதும் திறந்து இருந்தது. §

அவரது தரிசனத்தை பெறுவதற்காக யாத்திரிகள் காத்து இருக்கும் போது, இந்த நடவடிக்கைகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. அவருக்கு பார்வையாளர்களை சந்திப்பது பிடித்து இருந்தது மற்றும் அவர்கள் வருகை தருவதை சிவபெருமான் தன்னை காண வருவதாகவே கருதினார். யாத்திரிகளை வரவேற்பது ஒரு முக்கிய பணியாக இருந்தது. அவர் தனது துறவிகளிடம், “ஒருவர் சற்குருவை தரிசிப்பதற்காகவே மடத்திற்கு வருகை தருகிறார்,” என்று தெரிவித்தார். யாத்திரிகள் வந்து இருப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டதும், அவர் பதட்டமோ தயக்கமோ இல்லாமல், விரைவாக குரு பீடம் வரை ஐம்பது மீட்டர் நடந்து சென்று, வந்திருந்த குடும்பத்திற்கு தேவைப்படும் வரை அங்கே அமர்ந்து இருந்து, அறிவுரைகள் மற்றும் ஆசிகளை வழங்கி, சில சமயங்களில் அவர்கள் பாதைக்கு தொடர்புடைய தனது புத்தகங்களில் ஒன்றை அவர்களுக்கு பரிசாக வழங்குவார் அல்லது புதுமண தம்பதிகளை அல்லது தங்களது திருமண நாளை கொண்டாடும் தம்பதிகளை ஆசிர்வதிக்கும் விதமாக ஒரு சால்வையை வழங்குவார். §

அது நிறைவு பெற்றதும், அவர் ஐந்து நிமிடங்களுக்கு தோட்டங்களுக்குள் தனியாக சென்று, ஆர்கிட் மண்டபம் வரை விரைவாக நடந்து சென்று திரும்பி வருவார். அவர் சில உடற்பயிற்சிகள் செய்வார். மற்றும் அவர் தான் கட்டிய மடத்தின் அழகையும் ரசித்துக் கொண்டிருப்பார். வழக்கமாக அவர் நடந்து செல்வதை ஒரு துறவி பார்த்ததும், ஒரு முக்கிய பணியை பற்றி சந்தேகங்களை கேட்க அல்லது வெறும் அவரது தரிசனத்தை பெற்று, அவருடன் இயல்பாக சில நிமிடங்கள் இருக்க அவரது நடையில் சேர்ந்து கொள்வார். §

அவர் மஹோகனி அறைக்கு திரும்பியதும் *குலம்* தொடர்பாக திட்டமிடுதல், துறவிகள் கேட்ட தத்துவம் மற்றும் தியானம் தொடர்பான கேள்விகளுக்கு பதில் அளித்தல், பயணம் செய்வதற்கு திட்டமிடுதல், கொள்முதல் ஆணை வேண்டுகோள்களை அங்கீகரித்தல் (அல்லது நிராகரித்தல்) உட்பட

கடினமான வரவுசெலவு கணக்கு சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் என்று குருதேவா அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை ஆராய ஆரம்பித்தார். அவர் நண்பகல் நேரத்தில், தான் மட்டும் தனியாக இருந்து ஒரு “யோகா பிரேக்” (யோக இடைநிறுத்தம்) எடுத்துக்கொள்ள, தனது குடியிருப்பிற்கு செல்வார். §

அவர் பெரும்பாலும் இந்த இடைநிறுத்தத்தின் போது உலகெங்கும் இருக்கும் தனது சீடர்களை பற்றி தெரிந்துகொள்ள பயன்படுத்திக் கொண்டார். ஒரு முறை ஒரு துறவி சூடான தேநீரை கொண்டு வந்த போது, குருதேவா தனது படுக்கையில் படுத்து இருப்பதை கண்டார். அவர் அமைதியாக தேநீரை வைத்து விட்டு கிளம்பிய போது, “போகாதீர்கள். நான் தூங்கவில்லை. *மஹா ஸ்படிக* லிங்கம் வழியாக நோட்டமிட்டு, ‘கடவுள்’ கோயிலில் அன்பர்கள் இருப்பதை பார்ப்பதற்கு பயிற்சி செய்துக்கொண்டு இருக்கிறேன்,” என்று அவரிடம் குருதேவா கூறினார். அதன் பிறகு குருதேவா, விநாயகருக்கு அருகில் இருந்த படிகட்டிற்கு அருகில், சிகப்பு நிற ஆடை அணிந்து அமர்ந்து இருந்த ஒரு பெண்ணை பற்றி விளக்கி, அவள் அங்கே உண்மையில் இருக்கிறாளா என்று பார்க்குமாறு அந்த துறவியிடம் கேட்டுக்கொண்டார். அவர் விளக்கியதைப் போலவே அந்த பெண் அங்கே இருந்தாள். §

குருதேவா தனது படுக்கையில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த மற்ற வேளைகளில், தனக்கு உணவு அளிக்க பல்வேறு தேவர்கள் வந்தது பற்றியும், சில சமயங்களில் அவர்கள் நேராக தனக்கு உணவை ஊட்டிவிட்டதைப் பற்றியும் விளக்கினார். §

அவர் அரை மணி நேரத்தில் தனது அலுவலகத்திற்கு திரும்பி உள்நாட்டு அரசியல், ‘இறைவன்’ கோயில் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம், கொள்கை பற்றி விவாதங்கள், பூனைகள் மற்றும் மாடுகள் மற்றும் பறவைகள் மற்றும் மீன்கள், காட்டு பன்றிகள் மற்றும் மக்காச்சோளம், உணவு மற்றும் அருகில் வசிப்பவர்கள், கலை மற்றும் கட்டிடக்கலை, சாஸ்திரங்கள், அழையாத விருந்தாளிகள் மற்றும் முக்கியமான விருந்தாளிகள், ஒரு புதிய வாகனத்தை வாங்குவது, ஒரு புதிய கணினியை வாங்குவது, விரைவில் வரவிருக்கும் இன்னர்சர்ச் பாடத்திட்டம், இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவலின் அடுத்த கூட்டம், சீரமைப்புப்பணிகள், பழுது பார்த்தல், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், துறவியாக மாற விருப்பம் தெரிவித்தவர்கள், மடத்தில் தங்கியிருக்கும் விருந்தாளிகள், விவசாயம் மற்றும் தோட்டம் தொடர்பான பிரச்சனைகள், மூன்று வருட திட்டத்தை புதுப்பித்தல், கோயில் கடமைகளை ஒதுக்குதல், திருவிழாக்களை திட்டமிடுதல், வெளியீடுகளின் தோற்றத்தை திட்டமிடுதல், இந்துயிசம் டுடே திட்டமிடும் கூட்டங்கள், காணொளிப் பதிவு மற்றும் ஒலிப்பதிவு அமர்வுகள், திருமண ஏற்பாடுகள், உறுப்பினர்களுக்கு *தீட்சை* வழங்க ஏற்பாடு செய்தல், சாதனாக்கள் மற்றும் *பிராயஸ்சித்தங்களை* வழங்குதல், இன்னொரு சுவாமி வழங்கும் வாழ்த்துரைக்கு பதில் அளித்தல், ஒரு சிறிய சிக்கலில் இருக்கும் ஒரு துறவிக்கு உதவி செய்தல் என்று பல்வேறு கேள்விகளை எதிர்கொண்டார். §

சரியாக மதியம் 12:30 மணிக்கு அவர் பீகாக் கோர்ட் சென்று விடுவார். அங்கே மதிய உணவிற்கு கூடியிருந்த துறவிகள், செங்கற்களின் மீது பரவியிருந்த எளிமையான பாய்களில் அமர்ந்து இருப்பார்கள். அவர் பாரம்பரிய முறைப்படி சமஸ்கிருத மொழியில் அன்னபூரணியை வணங்கும் பாடலுக்கு தலைமை தாங்கி, கடந்த வாரத்தில் தனது குழு அடைந்த முன்னேற்றங்களைப் பற்றி பகிர்ந்துக்கொள்ள தினமும் ஒரு *குலத்தை* வரவழைப்பார். இது மடத்தில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தையும் பற்றி எல்லோரும் தெரிந்து கொள்ள குருதேவா பயன்படுத்திய வழிமுறையாக இருந்தது. §

அது முடிந்ததும், உலகெங்கும் தனது சமயப்பணியின் தினசரி தகவலை துறவிகள் எப்போதும் தெரிந்துக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்துடன், எதிர்காலத்தில் வரவிருக்கும் பயணங்கள் அல்லது மலேசியா, மொரீஷியஸ் அல்லது மற்ற இடங்களில் இருக்கும் உறுப்பினர்கள் செய்த சாதனைகளைப் பற்றி அவர் தனது சிறிய அறிக்கையை தருவார். மதிய உணவு நிறைவு பெற்றதை குறிப்பிடும் வண்ணம், அவர் மரம் மற்றும் துணியில் செய்த ஒரு பெரிய சுத்திலை எடுத்து, தனக்கு பின்னால் இருந்த 36 அங்குல பாலி நாட்டு இரும்பு சேகண்டியை அடிக்க, அதன் எதிரொலிக்கும் ஒலி எல்லோரையும் அவர்களின் மலை *குகைகளுக்கு* ஒரு சிறிய நண்பகல் உறக்கத்திற்கும், அவரை மேல் மாடியில் இருந்த ரியோகன் குடியிருப்பிற்கும் அனுப்பியது. §

நண்பகலின் தொடக்கத்தில் அவர் மீண்டும் தனது அலுவலகத்திற்கு திரும்பி ஒன்று அல்லது இரண்டு தொலைப்பேசி அழைப்புகளுக்கு பதில் அளிப்பார்; அதன் பிறகு சரியாக மதியம் 3 மணிக்கு அவர் தனது தொகுக்கும் குழுவை சந்தித்து, மலை அடிவாரத்தில் இருந்த கடலுக்கு செல்ல 14 நிமிடம் பயணம் மேற்கொள்வார். இந்த தகவல் தொடர்பையும் உபதேசிக்கும் சமயப்பணியையும் அவர் தனது வாழ்நாள் பணியின் மையமாக கருதியதால், ஒவ்வொரு மதியமும் தவறாமல், அவரது புத்தகங்கள் மற்றும் பதிப்புக்களுக்கு  ஒதுக்கப்பட்டன. நடைபெற்ற அமர்வின் தீவிரத்தை பொறுத்து, அவர் மாலை 7 அல்லது 8 மணிக்கு அமர்வை நிறைவு செய்து, தனது வாகனத்தில் குன்றின் மீது இருந்த மடத்திற்கு திரும்பி, நிலவறையில் எல்லோரும் கூடும் இரண்டு அடுக்கு சன் பேலஸ் அறையில், “மோசமான தொலைகாட்சிக்கு முன்னால் சில நிமிடங்கள்” இருக்க தனது துறவிகள் சமூகத்துடன் ஒன்று சேர்வார். ஆனால் குருதேவா அந்த சந்தர்ப்பத்திலும், அந்த  மந்தமான லௌகீக நடவடிக்கையை அனுபவித்து பயன் பெறுவது பற்றி  துறவிகளுக்கு ஒரு ஆன்மீக கண்ணோட்டத்தை வழங்கினார்:§

> நாம் நமது கர்மவினைகளுக்கு, விவசாயத்தை சார்ந்து இருந்த யுகத்தை காட்டிலும் விரைவாக தீர்வு காண தேவையான வழிகளை தொலைகாட்சி நமக்கு வழங்கியுள்ளது. தொலைக்காட்சியில் வரும் நடிகர்கள் மற்றும் நடிகைகள், மற்றும் அதில் ஒளிபரப்படும் செய்திகளை வாசிப்பவர்கள் மற்றும் செய்திகளில் வரும் “மற்றவர்கள்" நமது கடந்த கால அனுபவங்களை நமக்கு நிகழ்த்திக் காட்டுகிறார்கள் என்பதை நாம்

புரிந்துக்கொள்ள வேண்டும். உடல், மனம் அல்லது உணர்வு ரீதியாக எதுவும் நடைபெறாது, ஆனால் அது இந்த பிறவியில் நாம் நம்முடன் கொண்டு வந்த செயல்-எதிர்செயல் மாதிரிகளாக இருக்கும் *பிராரப்த கர்மவினைகளில்* விதைகளாக இருக்கின்றன என்பதை சைவர்கள் அறிந்து இருக்கிறார்கள். அதனால் நாம் தொலைக்காட்சியை நேர்மறையாக பார்க்கும் போது, அதை கர்மவினைகளை சுத்தம் செய்யும் கருவியாக கருதுகிறோம். §

ஒரு நாளின் முடிவில் துறவிகளுடன் இயல்பாக கழித்த தருணம், அவருக்கு முக்கியமானதாக இருந்தது மற்றும் அதை அவர் எப்போதும் தவறவிட்டது இல்லை. அவருக்கு இளம் துறவிகள் *தோசை* மற்றும் *சாம்பார்*, சூப் அல்லது சாலட் என்று எளிதில் செரிமானாகம் ஆகும் உணவை இரவு சாப்பிடுவதற்கு கொண்டு வருவார்கள். சரியாக 9:00 மணிக்கு இல்லாமல், 9:01 மணிக்கு எழுந்து நின்று, முகத்தில் பெரிய புன்னகையுடன், ஒவ்வொருவராக எல்லோரையும் கட்டி அணைத்து, "குட்நைட்" என்று சொல்லி தனது குடியிருப்பின் ரெட்வுட் கதவை மூடி, மற்றவர்கள் கண் பார்வையில் இருந்து மறைந்து, இன்றும் துறவிகள் உறங்குவதற்கு பயன்படுத்தும், ஒரு பூட்டன் படுக்கையை தரையில் விரித்து உறங்கிவிடுவார். §

### எந்த நாட்டின் கட்டுப்பாட்டிலும் இல்லாத கடல் பகுதிக்கு செலுத்தல்

1999 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், கவாய் தீவில் மூன்று வருடங்கள் ஒதுங்கி இருக்க வேண்டும் என்று சுயமாக விதித்துக்கொண்ட நிபந்தனை நிறைவடைய இருந்தது மற்றும் குருதேவாவிற்கு உளவியல் வேதனை அதிகரித்து வருவதை உணர்ந்த துறவிகள், இந்த சிறைவாசத்தை நிறைவு செய்ய ஒரு திட்டம் தீட்டினர். அவர்கள் ஒரு புதுமையான முறையில், அலாஸ்காவிற்கு ஒரு உல்லாசப் பயணக் கப்பலில் பயணம் செய்துக்கொண்டு இன்னர்சர்ச் திட்டத்தை நடத்தலாம் என்று பரிந்துரைத்தார்கள். குருதேவா இந்த திட்டத்திற்கு தனது திருப்தியை தெரிவித்து, 1964 ஆண்டில் தோன்றிய கிரேட் அலாஸ்கா நிலநடுக்கத்தின் காரணமாக லாண்ட் ஆஃப் மிட்நைட் சன் (நள்ளிரவு நேரத்தில் சூரிய வெளிச்சம் இருக்கும் வட ஆர்க்டிக் வட்டத்தின் நிலப்பகுதிக்கு) பகுதிக்கு செல்ல ஏற்பாடு செய்யப்பட்ட திட்டத்தில் தடை ஏற்பட்டதில் இருந்து, அங்கே செல்ல வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இருந்த வந்ததாக அவர் தெரிவித்தது மட்டுமில்லாமல், அங்கே செல்லவும் செய்தார். §

1999 ஆம் ஆண்டு ஜூன் 18 முதல் 25 வரை, அவருடன் நான்கு துறவிகள் மற்றும் முப்பத்தி எட்டு யாத்திரிகள், ஹாலந்து அமெரிக்கா லைன் நிறுவனத்தின் MS நூர்டாம் கப்பலில் ஒரு வாரம் தங்கி இருந்து, வான்கூவரில் இருந்து வால்டேசுக்கு பயணம் செய்தனர். அவர் ஏழு தசாப்தங்கள் வாழ்ந்து இருந்தார்; அதனால் அவர் அந்த உல்லாச கப்பலில் ஒவ்வொரு நாளும், ஸ்டார்போர்டை பார்த்த வண்ணம் அமைந்து இருந்த ஹட்சன் அறையில்

இன்னர்சர்ச் குழுவினரை சந்தித்து தனது வாழ்க்கையில் ஒரு தசாப்தம் பற்றிய தகவலை பகிர்ந்துகொண்டு, தனது ஆன்மீக வேட்கையை அவர்களுடைய வேட்கையுடன் தொடர்புப்படுத்தி, அவர்களை சைவ இந்து சமயத்தின் ஆழத்திற்குள் கொண்டு வந்தார். §

ஜூன் 25 ஆங்கரேஜ் நகரத்தில், குருதேவா அந்த நாட்டின் முதல் இந்து கோயிலாக ஒரு விநாயகர் கோயிலை திறந்து வைத்தார். இந்து வம்சாவளியினரின் கோயில்களை உள்ளூர் மக்கள், குறிப்பாக அந்த பகுதியை சேர்ந்த இன்யூட் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று குருதேவா விரும்பியதால், அலாஸ்கா நாட்டு ஆன்மீகத் தலைவர்கள் மற்றும் சான்றோர்களிடம் இருந்து ஆசிகளை பெறவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். பைப் காரியர்ஸ் என்று அழைக்கப்பட்ட அதன் தலைவர்கள் கலந்து கொண்ட சடங்குகளில், ஆங்கரேஜ் இந்து சமூகம் பாடல்கள் மற்றும் இன்னிசை நிகழ்ச்சிகள் மூலம் கௌரவிக்கப்பட்டனர். அவர்கள் குருதேவாவுடன் அமைதி குழாயை (peace pipe) பகிர்ந்து கொண்டு, அவருக்கு புனிதமான முரசு ஒன்றை வழங்கினார்கள். அதைப்போல கவாய் ஆதீனத்தில் இருக்கும் 'இறைவன்' கோயிலுக்கு தங்கள் ஆசிகளை வழங்குமாறு ஹவாய் நாட்டு பூசாரிகளுக்கு குருதேவா அழைப்பு விடுத்தார். §

இந்த பயணத்தின் மத்தியில், புத்தகக்கடைக்கு செல்லும் பழக்கம் தொடங்கியது. அந்த பழக்கம் மூன்று வருடங்களுக்கு நீடித்து இருந்தது. அவர் அந்த புத்தகக் கடைகளில் ஐம்பது முதல் எண்பது வாசகர்களுடன் பேசி, அவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்து புத்தகங்களில் கையெழுத்திடுவார். அவர் எழுதிய புத்தகங்களின் விற்பனை அமோகமாக இருந்தது என்றாலும், அங்கே புதிய சாதகர்களை சந்திக்க அவருக்கு வாய்ப்பு கிடைத்த காரணத்தால், புத்தகக்கடைக்கு சென்று கையெழுத்திடுவது குருதேவாவிற்கு பிடித்து இருந்தது. ஒரு எளிமையான சூழலில் ஒரு சாதாரண வாசகரும் எழுத்தாளருடன் தொடர்பு கொள்ள முடிந்தது, மற்றும் இந்த தொடர்பில் இருந்து சிலர் சீடர்களாக மாறினார்கள். §


இது அவரது பயணத்தில் ஒரு புதிய அடையாளமாக மாறி, அவர் எங்கே சென்றாலும் அவரது பரிசாக, அவரது ஆலோசனையாக, தன்னிடம் மக்கள் கொண்டு வந்த எல்லா பிரச்சனைகளுக்கும் அவர் வழங்கும் மருந்தாக புத்தகங்கள் விளங்கின. "அது ஒரு நல்ல கேள்வி. அந்த கேள்விக்கான பதில் இந்த புத்தகத்தில் இருக்கிறது," என்று அவர் சிரித்துக்கொண்டு கூறுவார். "முட்டாள், இந்த விஷயங்கள் புத்தகங்களில் இருக்காது," என்று அவருடைய குரு யோக சுவாமி பரிகாசம் செய்வார். ஆனால் அவர் அந்த காலத்தில், இந்த புத்தகங்களை பார்த்திருக்கவில்லை!§

பயணத்தின் மீதும் இன்னர்சர்ச் திட்டத்தின் மீதும், அவருக்கு இருந்த ஆர்வத்தை தொடர்புப்படுத்திய இந்த உல்லாச கப்பல் பயணத்தின் போது, தான் நடனமாடிய காலத்தை நினைவுக்கூரும் விதமாக, மாலை நேரத்தில் நடன நிகழ்ச்சிகளை நடத்தியவர்களை ஒப்பனை அறைகளில் சென்று

சந்திக்கும் வாய்ப்பு மற்றும் புதிய கோயில்களின் திறப்பு விழா என்று ஒரு மாபெரும் வெற்றியை பெற்றது. §

கடல் அவரை மீண்டும் அழைத்ததால், குருதேவா அடுத்த வருடமும் கடலில் பயணம் செய்தார். மார்ச் 25 முதல் ஏப்ரல் 4, 2000 வரை அவருடன் ஐந்து துறவிகள் மற்றும் நாற்பத்தி ஒன்பது இன்னர்சர்ச் குழுவினர்கள் போர்ட் லாடர்டேல், புளோரிடா சவுத்தில் இருந்து செயின்ட் கிட்ஸ், மார்டினிக், டிரினிடாட், செயின்ட் தாமஸ், டொமினிகா மற்றும் ஹாஃப் மூன் கே ஆகிய இடங்களுக்கு பயணம் செய்தனர். கரீபியன் தீவுகள் அவரை பல முறை அழைத்து இருந்தது. அங்கிருக்கும் இந்துக்கள் உலகின் மற்ற நாடுகளில் இருந்து விலகி இருக்கிறார்கள், மற்றும் சுவாமிகள் எப்போதும் அதிக தூரம் பயணம் செய்வது இல்லை. §

தான் அங்கே சென்றால், தனது வருகை அந்த பகுதி முழுவதும் எதிரொலிக்கும் என்பதை அவர் அறிந்து இருந்ததால், இந்த முறை MS வோலன்டாம் கப்பலில் கிளம்பினார்கள். அந்த புதிய கப்பல் நிறுத்தப்பட்டதும், தீவுகள் சிறியதாக தென்படும் அளவிற்கு மிகவும் பெரியதாக இருந்தது. அங்கிருந்த தீவுகளில் அதிக தொலைவில் இருந்த டிரினிடாட் & டொபாகோவில் வசித்த 4,500 இந்துக்களின் பிரத்யேகமான சவால்களை, எந்த குருவும் எதிர் கொள்ளவில்லை என்பதால் குருதேவா அவர்களை சந்தித்து, அவர்களுக்கு ஊக்கமளித்தார். §



*1999 ஆம் ஆண்டு நடைபெற்ற இன்னர்சர்ச் உல்லாச கப்பல் பயணத்தின் போது, குருதேவா அலாஸ்காவின் முதல் இந்து கோயிலை தொடங்கி வைத்து, அங்கே நடந்த ஹோமத்தில்  கலந்துக்கொள்ள அந்நாட்டை சேர்ந்த இன்யூட் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார். 2000 ஆம் ஆண்டில் 54 சீடர்கள் பயணம் செய்த உல்லாச கப்பல், கரீபியன் தீவுகள் முழுவதும் பயணம் செய்து, குறிப்பாக டிரினிடாட் தீவில் இருந்த இந்துக்களுக்கு பாதுகாப்பு வழங்க அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.*

........................§

**“அது ஆயிரம் வருடங்கள் நீடித்த இருக்குமாறு கட்டுங்கள்”**

‘இறைவன்’ கோயில் மிகவும் கடினமான திட்டமாக இருந்தது. உலகில் ஏற்பாட்டியலில் இருந்த அச்சுறுத்தல்கள், அந்த கோயில் கட்டுமானத்திற்கு திட்டமிடப்பட்ட மாபெரும் பட்ஜெட்டை அதைப்போன்ற ஒரு சிறிய துறவிகள் குழு தனிச்சையாக ஏற்றுக்கொள்வது அபூர்வம், அதற்கு அத்தியாவசியமான சாஸ்தீரிய புலமைக்கு அதிக பயிற்சி மற்றும் வழிகாட்டலின் தேவை, அது முழுவதும் கைகளால் செதுக்கப்பட வேண்டி இருந்ததால் கட்டுமானத்தில் தேவைப்பட்ட கடினமான விதிகள் என்று அதில் இருந்த கஷ்டங்கள் காரணமாக, அதைப்பற்றி கற்பனை செய்வதே கடினமாக இருந்தது.

குருதேவா தனது துறவிகள் சமூகத்திடம் இந்த பொறுப்புக்களை வழங்கும் போது, இந்த பணியை பூர்த்தி செய்வதற்கு இந்த துறவிகளின் தலைமுறை ஒரு குழுவாக செயல்படவேண்டும், இதற்காக அவர்கள் தியாகம் செய்ய வேண்டும், எல்லோரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும், கடினமாக முயற்சி செய்து வளர்ச்சி அடைய வேண்டும் என்பதை அறிந்து இருந்தாரா? இந்த கோயிலுக்காக குருதேவா அதிக முயற்சிகளை மேற்கொண்டு இருந்தாலும், இதன் லௌகீக வெளிபாட்டில் மிகவும் முக்கியமான அடித்தளம் அமைத்தலைப் போன்ற தொடக்க நிலைகளை மட்டுமே அவரால் காண முடிந்தது. §

பழமையான இந்தியா மற்றும் ஒரு இளமையான ஹவாய் தீவிற்கும் இடையே இருந்த நிலவியல் வேறுபாடுகளுடன் தொடங்கி பல நீளமான மற்றும் முக்கியமான விவாதங்கள் நடைப்பெற்றன. இந்தியாவின் நிலப்பகுதி எழுபது மில்லியன் ஆண்டுகளை எதிர்கொண்டதால், அதன் மேற்பரப்பில் இருந்து பல மீட்டர்கள் ஆழத்திற்கு மண் படிப்படியாக அழிந்து, அடிநிலப்பாறையை வெளிப்படுத்தியுள்ளது. பூமி, மிகப்பெரிய கற்கள், குன்றுகள் முழுவதிலும் மற்றும் மலைத்தொடர்களில் இருந்து வெற்றுப் பாறைகள் வெளிவந்து இருப்பதை எங்கும் காண முடிகிறது. இந்தியா பல பருவங்களை தாங்கி தன்னை சீரமைத்துக் கொண்டுள்ளது. சுமார் ஐந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த அடிநிலைப்பாறை மீது இந்திய கோயில்கள் கட்டப்பட்டுள்ளன, மற்றும் அசையாத மற்றும் அசைக்க முடியாத பாறையின் மீதுள்ள அதன் அடித்தளம் காரணமாகவே, பூகம்பம் அல்லது வெள்ளத்தால் பாதிப்பு அடையாமல், காலத்தைக் கண்டு அஞ்சாமல் அவை நிலைத்து இருக்கின்றன. §

களிமண் தோல் மற்றும் தளர்வான பாறை அதிகமாக பரவி, இளமையாகவும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கும் ஹவாய் தீவில், இந்தியாவில் இல்லாத அனைத்தும் இருக்கின்றன. வெறும் ஐந்து மில்லியன் வருடங்கள் பழமையானதாக இருப்பதால், இந்த தீவின் அடிநிலப்பாறை மேற்பரப்பில் இருந்து 80 முதல் 120 அடிகள் வரை கீழே இருக்கிறது. மேற்பரப்பிற்கு கீழிருக்கும் அடுக்கு மென்மையாக இருப்பதால், இங்கே வலுவான கோயில் கட்ட முடியாது, அதிலும் குறிப்பாக பூவியீர்ப்பு சக்தியின் துணையுடன் நிற்கும் சோழர்கள் வடிவமைத்த கோயில்களை நிச்சயமாக கட்ட முடியாது. படிகம் நிரம்பி, அடர்த்தியாக மிகவும் கடினமான பாறையாக இருந்து, அதன் உறுதி மற்றும் வலிமை காரணமாக கட்டிடம் கட்டுபவர்கள் விரும்பும் கருங்கல்லில் ஒரு குறை இருக்கிறது. அதற்கு குறைவான விறைப்பு வலிமை இருப்பதால், நொறுங்காமல் அதை சிறிதளவு வளைக்கவும் முறுக்கவும் முடியாது. அது தன் அமைப்பு முறையில் உடையக்கூடியதாக இருக்கிறது. 12 அடி நீளத்துடன் இருக்கும் கூரை உத்தரம், தனது நீளத்தில் 1/8 அங்குலம் வளையும் போது, அது உடைந்து கூரையை சாய்த்துவிடுகிறது. §

கோயில் அஸ்திவாரம் சிறிதும் அசையாமல் அமைப்பது ஒரு பெரிய சவாலாக தொடக்கத்தில் இருந்தது. பூமிக்குள் ஆழமான கடைக்கால்களை அமைக்கும் சிந்தனையை கைவிட்டு, பொறியாளர்கள் இறுதியாக ஒரு விவேகமான வழியை தேடிக்கொண்டனர். அவர்கள் ஒற்றை கல்லில் தயார் செய்த கற்காரை தீவாக (monolithic concrete island) அஸ்திவாரத்தை வடிவமைத்தார்கள். இதை பொறியாளர்கள் ராப்ட் என்று அழைப்பார்கள். மனிதனால் வடிவமைக்கப்பட்ட இந்த கல், இந்தியாவின் அடிநிலைப்பாறையின் நகலாக இருந்தது. பூகம்பம் அல்லது மற்ற இயற்கையின் சக்தியால் கோயில் அரை அங்குலம் கீழே இறங்கினாலும், ராப்ட் முழுமையாக நகர்ந்து, தூண்கள் மற்றும் உத்தரங்களுக்கு இடையே பழைய தொடர்பை தக்க வைத்துக்கொண்டு, பேரழிவை தவிர்க்கிறது. இந்த கற்காரை தீவு, கீழிருக்கும் களிமண் மீது உண்மையில் மிதக்கிறது. §

ரோமர்கள் காலத்து எரிமலை சாம்பல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, அதிக அடர்த்தியான நிலக்கரி சாம்பலில் தயாரித்த கற்காரையில் ஒரு புதிய ஆர்வத்தை அறிவிக்கும் அளவிற்கு, ராப்ட் அடித்தளத்தை உருவாக்கும் வடிவமைப்புக்கள் வளர்ச்சி அடைந்து இருந்தன. இந்த தொழில்நுட்பத்தின் குருவாக, பெர்க்லி கலிபோர்னியா பல்கலைக்கழத்தை சேர்ந்த ஒரு சைவ இந்து பொறியாளர் விளங்கினார். 1999 ஆம் ஆண்டு, நவீன யுகத்தில் மிகப்பெரிய நிலக்கரி சாம்பல் கலவையாக விளங்கி, *கான்கிரீட் டுடே* பத்திரிகையின் அட்டையில் 'இறைவன்' கோயிலை வெளிப்படுத்திய நிகழ்வுக்கு தேவையான தகவல் மற்றும் பொருட்களை Dr. குமார் மேத்தா என்ற புதுமையான சிந்தனைகள் நிரம்பிய ஒரு ஆன்மா கொண்டு வந்தார். §

குருதேவா தனக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் 'இறைவன்' கோயில் நீண்டகாலம் நிலைத்து இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். கட்டுமான பணி தொடங்குவதற்கு முன்பாகவே, அது 1,000 வருடங்களுக்கு மேல் நிலைக்க வேண்டும் என்று வற்புறுத்த ஆரம்பித்தார். அந்த கோயில் தொடர்பான ஒவ்வொரு தகவல், ஒவ்வொரு திட்டம் மற்றும் ஒவ்வொரு முடிவும் குருதேவா வழங்கிய அந்த அளவுகோலை ஆலோசித்தது. அந்த அளவுகோல் அவரது பணியும், அவரது சமூகத்தின் பணியும் ஒரு வாழ்நாள் அல்லது இரண்டு வாழ்நாள் நீடித்து இருக்கும் என்பதை அவர் குறிப்பிடும் முறையாகவும், உங்களது வாழ்நாளை கடந்த குறிக்கோளை வைத்துக்கொள்ளுங்கள் என்று துறவிகளுக்கு அவர் வழங்கும் ஆணையாகவும் இருந்திருக்கலாம். §

அந்த ஒரு ஆணை மடத்தில் ஒரு வலுவான தாக்கத்தை ஏற்படுத்தி, துறவிகளின் மனங்கள் மற்றும் திட்டங்களின் நோக்கத்தை விரிவுப்படுத்தி, தங்களுக்காக இல்லாமல் மற்றவர்களின் எதிர்காலத்திற்காக தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். இந்த ஆயிரம் வருடங்கள் விதி நன்கொடை நிறுவல்களுக்கு, வெளியீடுகளுக்கு மற்றும் மேலும் பல விஷயங்களுக்கு பயன்படுத்தப்பட்டது. §

குருதேவா இந்தியாவிற்கு பயணங்கள் மேற்கொண்ட போது, பல பிரம்மாண்டமான கோயில்கள் கேட்பாரற்று இருப்பதையும், பராமரிக்க போதிய நிதியுதவி இல்லாமல் தவிப்பதையும், போதிய வருமானம் இல்லாமல் பணிபுரிந்த சிறிய பூசாரிகள் குழுவதையும் கவனித்து இருந்தார். இதைப்போன்ற ஒரு நிலை 'இறைவன்' கோயிலுக்கு வரக்கூடாது என்று உறுதியுடன் செயல்பட்ட குருதேவா ஒரு நிரந்தர பராமரிப்பு நன்கொடை நிறுவலை ஸ்தாபனம் செய்து, கோயிலுக்கு நன்கொடையாக வரும் ஒவ்வொரு டாலரில் அரை டாலர் அந்த நிறுவலுக்கு செல்ல வேண்டும் என்று நிர்ணயித்தார். இதன் மூலம் 'இறைவன்' கோயில் எதிர்காலத்தில் பல வருடங்களுக்கு தொடர்ந்து செழிப்புடன் இருப்பதை உறுதி செய்தார். அவரது திட்டத்தில் இந்த கருத்து மையமாக விளங்கியதால், இந்த கோயில் கட்டுமான பணிக்கு திட்டமிடப்பட்டிருந்த $7.2 மில்லியன் செலவுக்கு ஈடாக நிறுவலில் நிதி சேர்ந்ததால் மட்டுமே கோயிலுக்கு பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று ஆணையிட்டார். கோயிலுக்காக துறவிகள் மீண்டும் நிதி திரட்ட வேண்டிய அவசியம் இல்லாமல், போதுமான வருமானம் வரும்படியாக இந்த நிறுவல் வடிவமைக்கப்பட்டு இருந்தது.§

சிவபெருமானின் மூன்று பாகக்காட்சி குருதேவாவிற்கு தோன்றி 24 வருடங்கள் கழித்து, ஆகஸ்ட் 21, 1999 அன்று தனது கோயில் அஸ்திவாரத்தின் மீது கற்காரை ஊற்றப்படுவதை கண்டார். நாற்பது பணியாளர்களின் ஒரு நாள் முழுவதும் பணிபுரிந்து, அடித்தளத்தில் இரண்டு அடி உயர கற்காரையை ஊற்றினார்கள். ஒரு வாரம் கழித்து, அதன் மீது இரண்டாவது இரண்டு அடி உயர அடுக்கு சேர்க்கப்பட்டது. 20 கனரக வாகனங்கள் 108 முறை சுழற்சி பயணங்களை செய்து, 4 அடி ஆழத்துடன் 56 அடிக்கு 117 அடி அளவில் 'இறைவன்' கோயிலுக்கு அதிக கனமான அடித்தளத்தை வைக்கும் அற்புதமான காட்சியை காண குருதேவாவுடன் அந்த தீவில் இருந்து பார்வையாளர்களும் கலந்து கொண்டனர். §

அந்த காலத்தில் குருதேவா அஸ்திவாரத்தின் ஒரு முனையில் கைகளை உற்சாகத்துடன் விரித்துக் கொண்டு, முகத்தில் ஒரு அற்புதமான செயலை செய்த பூரிப்புடன் இருக்கும் ஒருவரிடம் தென்படும் புன்னகையுடன் நின்றுக்கொண்டு இருந்தார். அந்த வருடத்தின் நவம்பர் மாதத் தொடக்கத்தில், தேவர்களிடம் இருந்து தான் பெற்ற இந்த ஊக்கமளிக்கும் தகவலை மின்னஞ்சல் மூலம் துறவிகள் அனைவருடனும் பகிர்ந்து கொண்டார்:§

> 'இறைவன்' கோயிலின் அஸ்திவாரத்தில் உற்சாகமாக நடவடிக்கைகள் நடந்துக்கொண்டு இருக்கின்றன. அதன் வழியாக ஒளி அதிர்ந்துக்கொண்டு இருக்கிறது. அது பார்ப்பதற்கு ஒரு அற்புதமான காட்சியாக இருக்கிறது. இதை நாங்கள் எப்போதும் எதிர்பார்க்கவில்லை. இப்போது நடப்பது ஒரு அபூர்வமான நிகழ்வாக இருக்கிறது. அதுவே கடவுளின் ஒரு தெய்வீக பண்பைப் போல தோன்றி, பார்ப்பதற்கு அழகாக இருப்பதால், நெருங்கும் போது பிரமிப்பை ஏற்படுத்துகிறது. இருந்தாலும்,

அதற்கு இயல்பாக இருக்கும் வடிவமே அதன் வடிவமாக இருந்து, பல வண்ணங்களை கொண்ட வானவில் போன்று, பெரிய அலைகளாகவும் கதிர்களாகவும் ஒளி வீசுகிறது.§

அஸ்திவாரத்தை பதப்படுத்திய பிறகு, அது ஆய்வு செய்யப்பட்டது மற்றும் Dr. மேத்தாவின் சர்ச்சைக்குரிய உத்தி உண்மை என்று நிரூபிக்கப்பட்டது. 2000 வருடங்களில் முதல் முறையாக, ஒரு மிகப்பெரிய கற்காரை பலகை ரீபார் இல்லாமல் வைக்கப்பட்டது, மற்றும் ஒரு சிறிய விரிசல் அல்லது ஒரு சிறிய பிளவும் இருக்கவில்லை! §




*1980 கள் மற்றும் 1990 களில், குருதேவா உலகின் எல்லா திசைகளுக்கும் தொடர்ந்து பயணம் செய்த போது, ஒவ்வோரு நாட்டில் இருந்த இந்து சமூகத்தின் வரவேற்பை பெற்று, கோயில்களில் உரை நிகழ்த்தி மாணவர்கள் மற்றும் உறுப்பினர்களை ஊக்குவித்தார்.*

……………………..§

அஸ்திவாரம் அமைக்கப்பட்ட பிறகு, குருதேவா ஒரு புதிய வழக்கத்தை தொடங்கினார். ஒவ்வொரு வாரமும் ‘கடவுள்’ கோயிலில் நடைபெற்ற *ஹோமத்திற்கு* பிறகு, அவர் அங்கே மடவாசியாக இருந்த புரோகிதரை ஹோமகுண்ட அக்னியில் இருந்து ஒரு கற்பூரத்தை ஏற்ற சொல்வார். அதன்பிறகு எல்லோரும் ‘இறைவன்’ கோயிலுக்கு ஒரு பெரிய அணிவகுப்பாக நடந்து வருவார்கள். ‘இறைவன்’ அஸ்திவாரத்திற்கு வடக்கே இருந்த *யாகசாலையில்,* அந்த கற்பூரத்தைக் கொண்டு குருதேவா ஒரு சிறிய *ஹோமத்தை* நடத்துவார். அதன் பிறகு, *ஹோமத்தில்* தெய்வீக ஆற்றலை ஆவாகனம் செய்த *கும்பத்துடன்,* எதிர்காலத்தில் அந்த இடத்தில் தோன்றவிருந்த ‘இறைவன்’ கோயிலை கற்பனை செய்துகொண்டு,


*கும்பத்தில்* இருக்கும் புனிதமான நீரை ஆங்காங்கே தெளித்துக்கொண்டு, குருதேவா தலைமையில் எல்லோரும் கோயில் அஸ்திவாரத்தை மூன்று முறை பிரதட்சணம் செய்து வந்தனர். ஒரு சிறிய செடியை கவனமாக வளர்ப்பதைப் போன்று, அவர் தன் சூட்சுமமான சக்திகளை பயன்படுத்தி வளர்ச்சி அடைந்து வந்த அந்த கோயிலுக்கு ஊட்டம் அளித்து வந்தார். §

அஸ்திவாரம் அமைப்பதற்கு முன்பாக அவர் நான்கு வருடங்களுக்கு பின்பற்றி வந்த பழக்கத்துடன், இது புதிய இணைப்பாக சேர்ந்து கொண்டது. 'கடவுள்' கோயிலில் அதிகாலை பூஜை நடந்துமுடிந்த பிறகு, அவர் அவ்வப்போது துறவிகள் மற்றும் உறுப்பினர்களை 'இறைவன்' கோயிலுக்கு வழிநடத்தி சென்று, கோயிலுக்கு வடக்கே தற்போது தட்சிணாமூர்த்தி அமைந்து இருக்கும் ஆலமரத்திற்கு பின்னால் பதிக்கப்பட்ட சிறிய விநாயகருக்கு ஆரத்தி எடுத்ததும், 'இறைவன்' கோயிலின் இதயமாக, நிலத்திற்கு கீழே எதிர்காலத்தில் சிவலிங்கம் வைக்கப்படவிருந்த இடத்தை குறித்துக் காட்டிய சிறிய பள்ளத்தை சுற்றி, அவர் ஒரு ஊர்வலத்தை வழிநடத்தி சென்றார். இந்த சிறிய புனிதமான பயணங்களின் போது, அவர் பலவருடம் முன்பாக ஸ்தாபனம் செய்யப்பட்ட 'கடவுள்' கோயிலில் இருந்து ஆன்மீக சக்தியை எதிர்கால 'இறைவன்' கோயிலுக்கு உணர்வுடன் அனுப்பி, எதிர்காலத்தில் அந்த இடத்தில் கம்பீரமாக நிற்கவிருந்த கோயிலை கற்பனை செய்து பார்க்க அவர் தனது சீடர்களுக்கு பயிற்சி அளித்தார். "கற்பனை செய்து, அதை நிகழ்த்திக் காட்டுங்கள்," என்றும் அவர் எல்லோரிடமும் விருப்பத்துடன் கூறுவார். ஒரு நாள் தூல உலகில் உண்மையாக இருக்கப்போவதைப் போன்று, அந்த கோயில் தன் ஆரம்பக்கட்ட நிலையிலும் அவருக்கு காட்சி அளித்தது. §

மே 2001, குருதேவா அடிக்கல் நாட்டு விழாவில் பங்குபெற்றார். இந்த நிகழ்ச்சியை நிர்வகிக்க இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட, பிரதான கட்டிட கலைஞர் வி. கணபதி ஸ்தாபதி சடங்குகள் முடிந்த பிறகு, அங்கே கூடியிருந்த அன்பர்கள் கூட்டத்தில் பேசினார்:§

> குருதேவா பல வருடங்களுக்கு முன்பாக, அமெரிக்கா வருமாறு எனக்கு அழைப்பு விடுத்தார். இதற்கு முன்பு நான் இங்கே வந்ததில்லை.... நான் இங்கே வந்து வட அமெரிக்காவில் இருந்து கோயில்களை ஸ்தாபனம் செய்ய உதவி செய்யவேண்டும் என்று என்னிடம் கேட்டுக்கொண்டார். §
>
> நான் இங்கே ஒரு உண்மை சம்பவத்தை தெரிவிக்க விரும்புகிறேன். இந்தியாவில் இருக்கும் பிரபலமான *நாடி சாஸ்திர ஜோதிடர்களைப்* பற்றி நீங்கள் அறிந்து இருப்பீர்கள். அவர்களிடம் தீர்க்கதரிசனத்துடன் கூடிய *ஓலை* சுவடிகளின் மிகப்பெரிய தொகுப்பு இருக்கும். நான் குருதேவாவை சந்திப்பதற்கு முன்பாக நான் ஒரு நாடி ஜோதிடரை சந்தித்தேன். அவர் எனது *நாடி* சுவடிகளை படித்து: "புகழ்பெற்ற சோழ பேரரசரான இராஜராஜ சோழர் மீண்டும் பிறவி எடுத்துள்ளார். அவர் உயரமாக நரைத்த முடியுடன் இருப்பார். அவர் விரைவில் உங்களை வந்து சந்தித்து, மேற்கு நாடுகளுக்கு சென்று அங்கே கோயில்களை கட்டுமாறு

உங்களிடம் கேட்டுக்கொள்வார்,” என்று கூறினார். அதன் பின்னர் நான் குருதேவாவை சந்தித்து, அவர் இராஜராஜ சோழனின் மறுபிறவி என்பதை தெரிந்துகொண்டேன். அதனால் இந்த கோயில் ஒரு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. தெற்கு திசையை நோக்கி அமைந்து இருக்கும் புனிதமான மூன்று கோயில்களில் இதுவும் ஒன்றாக இருப்பதால், இந்த கோயில் முக்தி வழங்கும் சக்தியுடன் இருக்கிறது. §



*ஐக்கிய நாடுகள் சபையில் 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற மில்லினியம் சம்மிட்டில் உலகத் தலைவர்களின் மாபெரும் கூட்டம் கூடியிருந்தது, மற்றும்*

*பொதுசபையில் முதல் முறையாக  மதத்தலைவர்கள் பங்குபெற்றார்கள். குருதேவா 1,200 தலைவர்கள் முன்பாக அமைதிப் பற்றி உரை நிகழ்த்தி, ஸ்ரீ சின்மோய் அவர்களிடம் இருந்து மதிப்புமிக்க உ தன்ட் பரிசைப் பெற்றார்.*

........................§

**உள்நாட்டிலும் உலக அளவிலும் கிடைத்த அங்கீகாரம்**

செப்டம்பர் 1999 மொரீஷியஸ், மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு குருதேவா பயணம் செய்து, எட்டு வருடங்களாக அவரை தரிசிக்காத உறுப்பினர்களை சந்தித்தார். அவர் தேசிய தலைவர்கள், அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களை சந்தித்து, மொரீஷியஸ் நாட்டில் எதிர்காலத்தில் பிரதான ஆன்மீக தொடர்பாக வளர்ச்சி பெறவிருந்த தனது ஆன்மீக பூங்காவின் அலங்கார பொருளாக, புதிய பஞ்சமுக கணபதி மண்டபத்தை திறந்து வைத்தார். §

ஒரு வருடம் கழித்து, ஆகஸ்ட் மாத இறுதியில், ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் டாக் ஹம்மர்ஸ்க்ஜோல்ட் அரங்கத்தில், ஸ்ரீ சின்மொய் அவர்களிடம் இருந்து உ தன்ட் அமைதிப்பரிசைப் பெற்றார். இந்த பரிசை அதற்கு முன்னர் தலாய் லாமா, நெல்சன் மண்டேலா, மிக்கைல் கோர்பச்சேவ், போப் ஜான் பால் II மற்றும் அன்னை தெரேசா ஆகியோர் பெற்று இருந்தனர். §

சில நாட்கள் கழித்து, குருதேவாவும் அவருடன் பயணம் செய்த மூன்று துறவிகளும், ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் நடைபெற்ற சமய மற்றும் ஆன்மீக தலைவர்களின் மில்லினியம் வேர்ல்ட் பீஸ் சம்மிட்டில் கலந்து கொண்டனர். குருதேவா அருகில் இருந்த வால்டோர்ஃப்-அஸ்டோரியா ஹோட்டலில், எல்லா மதங்களில் இருந்தும் வந்திருந்த 1,200 வலுவான ஆன்மீக குழுவில் உரை நிகழ்த்தி, “மன்னிப்பு மற்றும் சமரசம்" பற்றி பேசினார் மற்றும் “உலக அமைதிக்கு, முதலில் உள்நாட்டுப் போரை நிறுத்துங்கள்,” என்ற தலைப்பில் தனது ஐ.நா. உரையின் சுருக்கத்தை வழங்கினார். §

அவர் அக்டோபர் 18 அன்று கவாய் திரும்பிய போது, அந்த தீவிலும் உலகின் மற்ற பகுதிகளிலும் அவர் செய்த சாதனையை அறிவிக்க 350 குடிமக்கள், மாவட்ட மற்றும் அரசு அலுவலர்கள் கூடியிருந்தார்கள். மாரியட்  ஓடட்டலில் இருந்த டெர்ரஸ் ரெஸ்டாரன்ட்டில், மேயர் மேரியன் குசாகா மற்றும் மாவட்டக்குழு  தலைவர் ரொன் கவுச்சி ஒரு விருந்தை ஏற்பாடு செய்து இருந்தனர். தங்கள் வாழ்க்கை மற்றும் தங்கள் தீவின் மீது குருதேவா ஏற்படுத்திய குறிப்பிட்டத்தக்க மாற்றங்கள் மற்றும் அவர் பல வழிகளில் தங்கள் மீது ஏற்படுத்திய தாக்கத்தை பற்றியும், அந்த தீவின் முக்கிய தலைவர்கள் மற்றும் ஹவாய் ஆளுநர் கயீடானோவின் பிரதிநிதி ராய் நிஷிடா சிறப்பாக உரையாடினார்கள். “விநோதமான உடைகள் மற்றும் நீளமான தாடிகளுடன் இருந்த இந்த துறவிகளை சந்தித்த போது, அவர்கள் யார் என்று அல்லது அவர்கள் எதற்காக இங்கே இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. மேலும் தகவலை நான் அறியவும் விரும்பவில்லை. அதன் பிறகு தீவில் நடைப்பெற்ற “விஷன் குரூப்" கூட்டத்தின் நான் அவர்களைப்

பற்றி, குருதேவா எவ்வாறு செயல்படுகிறார், நாம் எல்லோரும் “கவாயினன்ஸ்" என்ற சிந்தனையை நமக்குள் தூண்டிவிட்டதை பற்றி நான் தெரிந்துகொண்டேன். நான்கு வருடங்கள் பிறகு, அவர் என் வாழ்க்கையை மாற்றி அமைத்தது மட்டுமில்லாமல், முதிர்ச்சி பெற்ற எனது இன்றைய வாழ்க்கையில் மிகவும் முக்கியமான மனிதராக இருக்கிறார் என்பதை என்னால் உறுதியாக சொல்ல முடிகிறது,” என்று தனக்கு முன்பு இருந்த தவறான எண்ணத்தைப் பற்றி ரான் கவுச்சி ஒரு அற்புதமான உரை நிகழ்த்தினார். §

அரசியலில் நடுநிலைமையுடன் (அவரது துறவிகள் என்றுமே வாக்கு அளித்தது இல்லை, ஆனால் யார் தேர்ந்து எடுக்கப்பட்டாலும் அவருக்கு ஆதரவு அளித்தனர்) இருக்கும் குருதேவாவின் உறுதியான கொள்கையை, அரசிடமிருந்து விசேஷமான சலுகைகளை எதிர்பார்க்காமல், எப்போதும் எதையும் பெறாமல் தொடர்ந்து வழங்கவேண்டும் என்று தனது துறவிகள் மற்றும் சம்சாரி உறுப்பினர்களுக்கு அவர் வழங்கிய அறிவுரைகளை கவாய் தீவின் தலைவர்கள் பாராட்டினார்கள். §

பழுப்பு நிறக்கண்களைக் கொண்ட அமெரிக்க குரு ஹவாயில் ஸ்தாபனம் செய்யும் பாரம்பரிய இந்து மடம் அறிவு, அதிகாரம், செல்வாக்கு மற்றும் உத்வேகத்தின் மூலமாக இந்து உலகம் முழுவதும் திரும்பிப் பார்க்கும் அளவிற்கு வளர்ச்சி பெறும் என்று யார் எதிர்பார்த்து இருப்பார்கள்? கவாயின் இந்து மடாலயத்திற்கு இருந்த ஒரு சாத்தியமில்லாத தோற்றம் மற்றும் அதன் தூய்மை மற்றும் நம்பகத்தன்மையால் ஈர்க்கப்பட்ட இந்து சுவாமிகள், தலைவர்கள் மற்றும் சிந்தனையாளர்களின் பாராட்டுதலை பெற்று அது ஒரு புகழ்பெற்ற புண்ணிய தலமாக மாறியது. கடந்தகால வேதனைகளை இந்து சமயத்தால் எவ்வாறு தாங்கிக்கொள்ள முடியும் என்பதற்கு குருதேவாவின் மடம் மற்றும் சமூகம் ஒரு முன் உதாரணமாக விளங்கியது. ஹவாய் தீவில் சனாதன தர்மம் செழிப்பாக இருந்தால், அதனால் இந்தியாவிலும் செழித்து இருக்க முடியுமா? அவர் தனது முற்பிறவியில் சுவாமி விவேகானந்தராக அல்லது இராஜராஜ சோழராக இருந்ததாக கற்பனை கதைகள் ஒருபுறம் இருக்க, அவர் சைவ சமயத்தை காக்க வந்த சிவபெருமானின் அவதாரம் என்ற குறிப்புக்களும் உள்ளன. அத்தகைய பாராட்டைக் கேட்கும் போது, குருதேவா முகத்தில் புன்னகையுடன் அமைதியாக இருப்பார். §

இதைப்பற்றி பெங்களூரில் இருக்கும் ஸ்ரீ கைலாஷ் ஆசிரம மகாசமஸ்தான மடத்தின் தலைவர் ஜெயேந்திர புரி சுவாமி வழங்கும் குறிப்பு: §

> சிவாய சுப்பிரமுனியசுவாமி ஒரு அபூர்வமான பிறவியாக இருக்கிறார். ஒருவர் தான் பிறந்த நாட்டிற்கு தொடர்பில்லாத ஒரு சமயத்தைப் பற்றி கற்றுக்கொண்டு அதை பின்பற்றுவது மட்டுமல்லாமல் ஒரு அயலாராக இருந்துக்கொண்டு இந்து சமய முன்னேற்றத்தில் அதிகம் பங்களிப்பது வியக்க வைப்பதாக இருக்கிறது. ஒரு இந்து எப்படி ஒரு இந்துவாக இருக்கவேண்டும் என்று அவர் கற்றுத் தருகிறார். தேவர்களின் படைத்தலைவராக இருக்கும் முருகப்பெருமான், சிவாய


> சுப்பிரமுனியசுவாமியாக அவதாரம் எடுத்து இருப்பதாக ஞானோதயம் பெற்ற எனது குரு திருச்சி சுவாமி நூறு முறைக்கு மேல் சொல்லியிருக்கிறார். “இதைப்போன்ற ஒரு சிறப்பான படைப்பை இந்தியாவில் இருக்கும் யாராலும் வழங்க முடியவில்லை,” என்று குருதேவா எழுதிய புத்தகங்கள் பற்றி திருச்சி சுவாமி தனது கருத்தை தெரிவித்தார். §

மாஸ்கோ சர்வதேச மாநாட்டின் போது கிரெம்ளின் மாளிகையில் ஓம் என்ற பிரணவ மந்திரத்தை ஓதி புகழ்பெற்ற சிருங்கேரி பீடத்தின் சுவாமி பரமானந்த பாரதி, அதே கருத்தை எதிரொலித்தார்: §

> உலகெங்கும் இருக்கும் இந்துக்களை ஊக்குவிப்பதில் குருதேவாவிற்கு ஈடு இணையாக யாரும் இல்லை. அவர் ஒரு முழுமையான சிவபக்தராக இருந்தார், ஆனால் அவர் அதில் சிறிதளவும் வெறியுடன் இருந்ததில்லை. இந்து சமயத்தைப் பற்றிய அவரது கண்ணோட்டம் முழுமையாக, அவரது அணுகுமுறை யதார்த்தமாக, அவரது அன்பு எல்லோருக்கும் பொதுவாக, புனிதமாக, ஆறுதல் அளிப்பதாக மற்றும் தடுக்க முடியாததாக இருந்தது. இவ்வளவு ஒரு முழுமையான மனிதரை நான் பார்த்ததில்லை. §

நியூயார்க்கின் சுவாமி புவா ஜி மகாராஜ் வழங்கும் குறிப்பு:§

> இந்த மகான் உலகெங்கும் சைவ சித்தாந்தத்தின் உயர்வான சாரத்தை மிகவும் சுருக்கமாக பரப்பியுள்ளார். இது முற்றிலும் மாறுபட்ட கலாச்சாரத்தில் பிறந்து வளர்ந்த ஒருவருக்கு எப்படி சாத்தியமாகும்? இதற்கு *பூர்வ ஜென்ம பந்தம்* மட்டுமே காரணமாக இருக்க முடியும். மேற்கத்திய நாடுகளில் இருக்கும் இந்துக்களின் மத்தியில் அவர் ஏற்படுத்திய ஆன்மீக விழிப்புணர்வு வியக்க வைப்பதாக இருக்கிறது. மிகவும் எளிமையான முறையில் அதிக சிக்கலான கொள்கைகளை விளக்க குருதேவா பயன்படுத்திய பிரத்யேகமான முறைகள் திகைக்க வைப்பதாக இருந்தது. மிகவும் சிக்கலான கோட்பாடுகள் அவருக்கு மிகவும் எளிமையான மற்றும் மிகவும் சுலபமான தகவல்களாக தோன்றியது என்றாலும், அவை அதே வலிமை மற்றும் சாரத்துடன் இருந்தன. §



*குருதேவா தனது புத்தகங்களை எழுதுவதில் அதிக முயற்சி மேற்கொண்டார் மற்றும் தனது படைப்புக்கள் ஈடு இணையற்றது என்பதை அவர் அறிந்து*

*இருந்தார். உலகெங்கும் புத்தகங்களில் கையெழுத்திடும் நிகழ்ச்சிகளை நடத்தி வாசகர்களிடம் புத்தகங்களை அறிமுகப்படுத்த, பார்டர்ஸ் மற்றும் பார்ன்ஸ் & நோபல் போன்ற புத்தகக்கடைகளும் அவருக்கு அழைப்பு விடுத்தன.*

........................§

**வேதனை நிறைந்த கர்மவினை**

டிசம்பர் 5, 2000 அன்று, நதிக்கு அப்பால் மடம் வாங்கிய புதிய நிலத்தை காண குருதேவா, தனது மூன்று மூத்த துறவிகளுடன் நீண்ட தூரம் நடந்து சென்று அருகில் இருந்த ஒரு சிறிய குன்றின் உச்சிக்கு ஏறினார். அந்த குன்று செங்குத்தாக இருந்தது, மற்றும் திரும்பும் போது குருதேவாவிற்கு சறுக்கியது. அவர் கீழே விழவில்லை என்றாலும், அந்த அதிர்வு அவருடைய பின் முதுகில் காயத்தை ஏற்படுத்தியது. அவர் தீவிர வேதனையில் இருந்ததால், காப்பாவில் கடற்கரைக்கு அருகில் மடத்திற்கு சொந்தமாக இருந்த ஹாலே மகாய் என்ற ஒரு ஒதுக்குபுறமான பண்ணையில் தங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். அது கடலில் இருந்து 150 அடிகள் தூரத்தில் மற்றும் மடத்தில் இருந்து ஐந்து மைல் தூரத்தில் அமைந்து இருந்தது. அவர் அந்த இடத்தில், தனக்கு சிகிச்சை அளித்து வந்த மருத்துவர்கள் மற்றும் பிணி நீக்கும் மருத்துவர்களுக்கு அருகில் இருக்கும் நோக்கத்துடன், அடுத்த நான்கு மாதங்களுக்கு தனது வழக்கமான பொறுப்புக்களில் இருந்து விலகி இருந்தார். தினமும் அவருக்காக மதியம் மற்றும் இரவு வேளைகளில், மடத்தில் இருந்து இரண்டு அல்லது மூன்று துறவிகள் வாகனத்தில் சூடான உணவை கொண்டு வருவார்கள் மற்றும் அவருக்கு சேவை செய்யும் விருப்பத்துடன் மூன்று துறவிகள் அவருடன் தங்கி இருந்தார்கள். அவர்கள் சற்குருவுடன் தங்களுக்கு கிடைத்த தனிப்பட்ட நேரத்தில் கதைகள் கூறி மகிழ்ச்சியாக இருந்தார்கள். §


ஐரோப்பிய இன்னர்சர்ச் பயணம் செல்ல சில மாதங்களே மீதம் இருந்த நிலையில், அவர் தனக்கு என்று ஒரு குணமடையும் திட்டத்தை வகுத்துக்கொண்டு, தனது உடலை குணப்படுத்த தினமும் கடுமையாக உழைத்தார். குருதேவா 73 வயது நிரம்பிய முதியவர் என்பது ஒரு புறமிருக்க, தான் சிகிச்சை அளித்த பெரும்பாலான மக்களுக்கும் சில விளையாட்டு வீரர்களுக்கும், பல வருடங்களுக்கு உடல்சோர்வை ஏற்படுத்தும் ஒரு காயம், சில மாதங்களில் குணமடைவதை தான் முன்னெப்போதும் பார்த்தது இல்லை என்று அவரது சிகிச்சை அளித்த பிலாடிஸ் தெரபிஸ்த் பிற்காலத்தில் தெரிவித்தார். குணமடைவதற்கு முன்னரும் பின்னரும் எடுக்கப்பட்ட ஊடுகதிர் அறிக்கைகள் நம்பமுடியாத அற்புதத்தை எடுத்துரைத்தன. §

அந்த சில மாதங்களின் போது குருதேவா அந்த காயத்தில் இருந்து மட்டும் குணமடையாமல், தனது மனதை துடிப்புணர்வுடன் வைத்துக்கொண்டு, தொகுக்கும் பணியில் ஈடுபட்டு இருந்த தனது குழுவினருடன் செயல்பட்டு வந்தார். ஆகஸ்ட் மாதம் இன்னர்சர்ச் குழுவுடன் பயணம் செல்லும் முன்னர், தனது பிரதான பயிற்சி வகுப்பின் முத்தொகுப்பில் மூன்றாவது மற்றும்

இறுதியான புத்தகமான, *லிவிங் வித் சிவா* புத்தகத்தை ஒரு சிறிய மென்னட்டையாக (பேப்பர் பேக்) இல்லாமல், 1000 பக்கங்களுடன் இன்னொரு தலைசிறந்த படைப்பாக நிறைவு செய்யவேண்டும் என்பதை அவர் தனது குறிக்கோளாக அமைத்துக் கொண்டார். அவர் தனது மனம் மற்றும் தனது உடலை வலுவாக இயக்க ஆரம்பித்ததும், குறிக்கோள்களை அடைவது எளிதானதால், அந்த புத்தகம் ஜூலை மாதம் அச்சகத்திற்கு சென்றது மற்றும் ஆகஸ்ட் மாதம் பயணம் செல்ல அவருடைய உடல் தயாரானது. §

**வட ஐரோப்பிய கடல்களில் பயணம்**

அந்த சமயத்தில் கப்பல்கள் குழுவில் புதிதாக 780 அடி நீளத்துடன் 2,000 பயணிகள் செல்லும் அளவிற்கு பெரிதாக இருந்த, புதிய MS ஆம்ஸ்டர்டாம் என்ற இன்னொரு மிகப்பெரிய கப்பலில் எழுபத்தி இரண்டு இன்னர்சர்ச் குழுவினருடன், ஆகஸ்ட் 10-22, 2001 இன்னர்சர்ச் ஐரோப்பா பயணம் தொடங்கியது. அந்த கடல் பயணத்திற்கு முன்னர், குருதேவா லண்டன் மற்றும் ஜெர்மனி நாடுகளுக்கு பயணம் செய்து, அங்கிருந்த தமிழ் சமூகங்களை சந்தித்துப் பேசினார். தொலைதூரத்தில் இருந்து வந்திருந்த குருவை வரவேற்க ஹெல்சின்கி, St. பீட்டர்ஸ்பர்க் மற்றும் வார்ன்முண்டே என்று ஒவ்வொரு துறைமுகத்திலும் சாதகர்களின் குழுவினர் காத்து இருந்தனர். ஒஸ்லோ மற்றும் ஸ்டாக்ஹோம் நகரங்களில் இருந்த சிறிய தமிழ் சமூகங்கள், தங்கள் கோயில்களில் உரை நிகழ்த்த குருதேவாவை அழைத்து வந்தனர். குருதேவா கப்பலுக்குள் ரஷ்ய சீடர்களை அழைத்து வந்து, நெப்டியூன் லவுஞ்சில் ஒரு சீடருக்கு *நாமகரண* சம்ஸ்காரத்தை நடத்தி வைத்தார். §



*குருதேவா தனது இறுதியான மற்றும் நீளமான இன்னர்சர்ச் கடல் பயணத்தின் போது, எழுபத்தி இரண்டு சீடர்களுடன், வடக்கு ஐரோப்பா மற்றும் ரஷ்யா பயணம் செய்து, இந்து சமூகங்களுக்கு சொற்பொழிவு நிகழ்த்தி டென்மார்க் நாட்டில் ஒரு பெரிய கோயிலுக்கு அடிக்கல் நாட்டினார்.*

........................§

இந்த பயணத்திற்கு கப்பலில் கூடியிருந்த இந்துக்கள் மற்றும் *அர்த்த*-இந்து சாதகர்களின் சர்வதேச குழு தனியாக தென்பட்டு, அழகான புடவைகள் மற்றும் *வேஷ்டிகளில்* தியான மண்டபத்தை நோக்கி நடந்து செல்ல, மற்ற எல்லோரும் உணவு அருந்துவது, சூதாடுவது, நீந்துவது பொருட்களை வாங்குவது மற்றும் பல மணிநேரத்திற்கு சூரிய ஒளியில் அமர்ந்து இருப்பது என்று தங்கள் பொழுதை போக்கிக்கொண்டு இருந்தனர். குறிப்பாக இரவு நேரத்தில் எல்லோரது கவனமும் குருதேவாவின் மீது அமைந்து இருந்தது. துறவிகள் குழு தன்னை பின்தொடர, ஐந்து நட்சத்திர உணவு அறைக்குள் நுழைந்து, இரண்டு அடுக்கு படிக்கட்டு வழியாக இறங்கி செல்வது அவருக்கு பிடித்து இருந்தது. தினமும் இரவு நேரத்தில் நேர்த்தியாக காவி உடை அணிந்த குரு தங்களுக்கு மத்தியில் வந்து அமர்வதை பார்த்த ஆயிரக்கணக்கான பயணிகள், உணவு அருந்துவதை நிறுத்தி, தனக்கு அருகில் இருந்தவரிடம், “யார் இவர்?” என்று ஜாடையாக பேசிய போது, அந்த அறையில் நிலவிய கூச்சல் மறைந்து திடீரென்று மயான அமைதி நிலவியது. அவர் ஒரு இருக்கையில் அமர்ந்ததும், விலையுயர்ந்த பீங்கான் மீது ஒரே சமயத்தில் கத்திகள் மற்றும் முள்கரண்டிகள் தங்களது வேலையை தொடங்கியதும் ஏற்பட்ட கடகட ஒலியால், அறையில் இருந்த அமைதி குலைந்தது. “நீங்கள்

இந்த ஐந்து நட்சத்திர கப்பல்களில் எதற்காக பயணம் செய்கிறீர்கள்?” என்று அவரிடம் கேள்வி கேட்கப்பட்ட போது, “இதுவரை ஆறு நட்சத்திர கப்பல்கள் அறிமுகமாகவில்லை,” என்று அவர் அமைதியாக பதில் அளித்தார். §

கடல் பயணம் கோபேன்ஹேகனில் நிறைவடைந்த பிறகு, குருதேவா சுழல்விசிறி மூலம் இயங்கிய ஒரு விமானத்தில் தனது மடவாசியுடன் டென்மார்க்கின் வடக்கு முனைக்கு சென்று, பிராண்டே நகரத்தில் ஒரு அம்மன் கோயிலுக்கு அடிக்கல் நாட்டி, ஹெர்நிங் நகரத்தில் தனியாக இருந்த விநாயகர் கோயிலில் நடைபெற்ற ஒரு திருவிழாவில் அந்த ஊர் இந்துக்களுடன் கலந்து கொண்டார். அவரை பலவீனப்படுத்திய முதுகுக் காயம் மற்றும் அவர் அறியாமல் அவருக்கு தோற்றி இருந்த நோயின் காரணமாக, குருதேவாவிற்கு அந்த பயணம் ஒரு சவாலாக இருந்தது. இருந்தாலும், அவர் எப்போதும் புகார் கூறாமல், உற்சாகமாக அடுத்த அனுபவத்தை பெறுவதற்கு தயார் நிலையில், ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கு பயணம் செய்தார். அவர் இன்னும் சில மாதங்கள் தான் வாழப் போகிறார் என்பது அவருக்கும் தெரியாது, வேறு யாருக்கும் தெரியாது. §

குருதேவா ஹட்சன் அறையில் நடத்திய தினசரி வகுப்புகளில் நன்றியுணர்வு பற்றிய பாடங்கள்  உட்பட, எங்கும் இறைவனை காணுதல், *இயமங்கள்* மற்றும் *நியமங்கள்*, சாதனா, குடும்பத்துடன் சேர்ந்து இருத்தல், குருவின் சக்தி,  நந்திநாத சூத்திரங்கள், இணக்கமின்மை மீது முற்றிலும் சகிப்புத்தன்மையற்று இருத்தல், மதத்தின் தேவை, தவத்தின் வலிமை மற்றும் இந்து சமயத்திற்கு வலுவாக ஆதரவு அளித்தல் என்று பலவிதமான தொகுப்புக்களில் பாடம் நடத்தினார். அவருக்கு கேள்வி-பதில் நேரம் பிடித்து இருந்தது மற்றும் அவர் எல்லோரது சந்தேகங்கள் மற்றும் கவலைகளை அமைதியாக எதிர்கொண்டார். அவர் தனது சிற்றறையில், துறவிகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து துறவிகளுக்குள் வலுவான தொடர்பை ஏற்படுத்தியதோடு தினசரி நிகழ்வுகளை, விநோதமான நிகழ்வுகளை, திட்டங்களில் உள்ள மாற்றங்களை, ஒருங்கிணைத்தார் மற்றும் சோர்வாக இருந்த கால்களை ஒரு துறவி முன்வந்து தேய்த்து விடுவதற்காக அமைதியாக காத்து இருந்தார். §

### வாழ்க்கையில் மிகவும் உயர்வான தருணம்

வடக்கு ஐரோப்பாவில் பல நாடுகளுக்கு மேற்கொண்ட கடினமான பயணத்தில் இருந்து குருதேவா திரும்பிய சில வாரங்களில், அக்டோபர் 6, 2001 அன்று அவருக்கு தீவிர இரத்த சோகை ஏற்பட்டதால், அவர் வில்காக்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் மூன்று நாட்கள் தங்கியிருந்த போது, அவரது பெருங்குடல், சிறு குடல் மற்றும் மூளையில் முத்திய நிலையில் புற்றுநோய் இருப்பதை மருத்துவர்கள் தெரிந்துகொண்டார்கள். அதன் பிறகு குருதேவா ஹாலே மகாய் திரும்பினார் மற்றும் அடுத்த வாரத்தில் கவாய், கலிபோர்னியா மற்றும் சியாட்டிலில் இருந்த மருத்துவர்கள் குழு,

பரிசோதனை முடிவுகளை ஆய்வு செய்து, அவர் இனி அதிக நாட்கள் உயிருடன் இருக்கப்போவதில்லை என்பதை தெரிவித்தனர். §

அவர் சில நாட்கள் சிந்தனை செய்த பிறகு, அக்டோபர் 16 அன்று, தனது மூத்த துறவிகளை அழைத்து தான் இறக்கும் வரை விரதம் இருக்கப்போவதாக தெரிவித்தார். அவர் பாரம்பரிய முறைப்படி உயிர் துறக்கும் *பிரயோபவேஷத்தை* முன்பு தனது சீடர்களுக்கு பாடம் புகட்டி இருந்தார். பல வாரங்கள் மற்றும் மாதங்களுக்கு மருத்துவ உதவிகளை தவிர்த்து, யோகியின் உயிர் உணர்வுடன் பிரிந்து, திட்டமிட்ட சீர் குலைவின் மூலம் சுயநினைவை இழக்கும் அந்த கடினமான ஒழுங்குமுறையை, அவர் தற்போது பின்பற்றவிருந்தார். அவர் வாழ்க்கையின் முக்கியமான தருணமாக மரணத்தை தொடர்ந்து குறிப்பிட்டு வந்தார் என்பதால் துறவிகள் அவரது முடிவை கண்டு அதிர்ச்சி அடையவில்லை. புற்றுநோயால் அவதிப்பட்ட ரமண மகரிஷியைப் போன்ற மற்ற சிறந்த ஆன்மாக்களும், இந்த வழியில் உணர்வுடன் தனது உயிரை துறந்ததை அவர்கள் நினைவுகூர்ந்தார்கள். §

குருதேவா தான் எடுத்த முடிவு உணர்ச்சிவசப்படாமல் பின்பற்றினார். இந்த முறையில் உபவாசம் இருந்தவர்கள் எத்தனை மணிநேரங்கள் உயிருடன் இருந்தார்கள் என்பதை அவர் தெரிந்துகொண்டு, “அப்படியென்றால், இருபத்தி நான்கு நாட்களில் எல்லாம் முடிந்துவிடும். அதனால் நான் இனி உங்களுக்கு இருபத்தி நான்கு மணி நேரமும் சேவை செய்ய தயாராக இருக்கிறேன்,” என்று கூறினார். தினமும் இருபத்தி நான்கு மணி நேரம் மட்டும் விழித்து இருக்காமல், இனி துறவிகளுடன் இருபத்தி நான்கு மணி நேரமும் இருப்பேன் என்று சொல்லி அவர்களை அவர் சமாதானம் படுத்த முயற்சி செய்து கொண்டு, மற்றவர்கள் செய்த உபவசாத்தை அவரும் தொடர்ந்தார். “நீங்கள் இப்போது இளமையாக இருப்பதால், இது வாழ்க்கையில் ஒரு அற்புதமான தருணம் ஆகும்,” என்று அவர் குறிப்பிட்டார். இருந்தாலும் அந்த முக்கியமான ஒரு சில நாட்களின் போது, அவர்களின் உலகம் தலைகீழாக மாறி, அவர்களின் வாழ்க்கையும் மிகப்பெரிய மாற்றத்தை பெற்றது. §

16 ஆம் தேதி மாலை நேரத்தில் அவர் மடத்திற்கு திரும்பிய போது, துறவிகள் அவரது மஹோகனி அறையில் ஒரு விசேஷமான படுக்கையை விரித்து இருந்தார்கள். வரவிருந்த வாரங்களில், அவருடைய சொந்த இறுதி மகாபயணம் மிகவும் கடினமான பணியாக இல்லை, அது மடவாசிகள் மனதில் வேதனையாக இருந்தது. அவர்கள் வேதனைக்கு ஆறுதல் அளிக்கும் பொருட்டு, அவர் அவர்களுக்கு உறுதி அளித்து, அரவணைத்து, ஊக்கம் மற்றும் ஆறுதலை வழங்கினார். யாரும் எந்த குறையும் கூறவில்லை. “நடப்பது அனைத்தும் நன்மைக்கே. நடப்பது அனைத்திற்கும் காரணம் இருக்கிறது,” என்று அவர் ஒரு சமயத்தில் மெதுவாக பேசினார். §

அவர் தனது உபவாச படுக்கையில் இருந்துக்கொண்டு, தனது மூன்று வாரிசுகளுக்கு குரு தீட்சை வழங்கி, அத்தகைய சூழ்நிலைகளுக்கு தேவையான முக்கியமான ஆவணங்களில் கையொப்பமிட்டார் என்றாலும், வெளியில் இருந்து பார்ப்பதற்கு எளிமையாக தோன்றும், உடலை விட்டு

பிரியும் கடினமான பணிக்கு அவர் தயாராகிக் கொண்டிருந்தார். அவர் தனது மாபெரும் இறுதி சாதனாவை தொடங்கி, தான் செய்த பணிகள் அனைத்திலும் இருந்த அதே வீரியத்துடன் நிலை மாற்றதிற்குள் ஈடுபட்டதால், நெருங்கி வந்த மரணம் அவரிடத்தில் அச்சத்தை ஏற்படுத்தாமல் கவனத்தை அதிகரித்தது. எல்லோரும் செய்யவேண்டிய பணிகள் தெளிவாக இருந்தன, மற்றும் அது கடந்தகாலம் அல்லது எதிர்காலம் பற்றிய பயனற்ற பேச்சால் தடைப்படாமல் இருக்க, துறவிகள் தன்னிடம் தொடர்புகொள்ள வந்த போது, “அமைதியாக அமர்ந்து இருந்து, என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்,” என்று அவர் மென்மையாக அறிவுறுத்துவார். அவரது வேலை: தனது கர்மவினைகளுக்கு தீர்வு கண்டு சஹஸ்ரஹார சக்கரம் வழியாக வெளியேறுவது, மற்றும் துறவிகளின் பணி: அவரது நிலைமாற்றத்தில் உதவியாக இருந்து, அவர் இல்லாத வாழ்க்கைக்கு தயார் செய்து கொள்வது. §


ஒரு நாள் மாலை நேரத்தில், துறவிகள் உணவு அருந்தி விட்டார்களா என்று விசாரித்த பிறகு, குருதேவா எழுந்து அமர்ந்து, இரு கரங்களையும் கூப்பி பலவீனமான குரலில் பின்வரும் தகவலை வழங்கினார்:§

> “நான் எட்டு மணி நேரம் உறங்குகிறேன். இது வாழ்க்கையில் ஒரு உண்மை நிலை,” என்று மக்கள் கூறுவார்கள். “நான் மூன்று முறை சாப்பிடுகிறேன். இது வாழ்க்கையில் ஒரு உண்மை நிலை,” என்றும் சொல்வார்கள். நீங்கள் அவர்களிடம், “நீங்கள் பரமாத்துமா,” என்று கூறினால், “அது வாழ்க்கையில் ஒரு உண்மை நிலை இல்லை,” என்று அவர்கள் பதில் கூறுவார்கள். இந்த அறியாமை கலந்த தவறான சிந்தனை பரமாத்துமா பற்றி நீங்கள் அறிந்து கொள்வதை தடுக்கிறது. அந்த தடைகள் மேற்கத்திய கோட்பாடுகளில் இருந்து வருகின்றன. §

ஒரு துறவி குருதேவாவிடம் ஆத்ம ஞானம் பெறுவதை பற்றி அறிவுரை கேட்ட போது, அவர் வழங்கிய பதில்: §

> அது உங்களுடன் தொடக்கத்தில் இருந்தே இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். அது நீங்கள் வாங்கும் ஒரு பொருளோ அல்லது காலப்போக்கில் அடையும் நிலையோ இல்லை. அது உங்களிடம் தொடக்கத்தில் இருந்தே இருக்கிறது. அதனால் நீங்கள் அதைப்பற்றி சிந்தியுங்கள். முதலில் உங்களுக்குள் பரமாத்துமா இருக்கிறார் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். ஒளி முடியும் நிலை *இம் கைஃப்* ஆகும். பரமாத்துமா உங்களுக்கு வேறாக இல்லை என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். அது அனைத்திலும் வியாபித்து, அனைத்தையும் உருவாக்கி அனைத்தையும் அழிக்கவும் செய்கிறது. நீங்கள் தற்போது பரமாத்துமாவாக இருக்கிறீர்கள். அதை உங்கள் மனதில் வலுவாக புகுத்திக்கொண்டு, மற்ற அனைத்தையும் எரித்துவிட்டால், நீங்கள் எப்போதும் பரமாத்துமாவாக இருப்பீர்கள். §

நீங்கள் தொடக்கத்தில் இருந்தே பரமாத்துமாவாக இருப்பதை முதலில் ஏற்றுக்கொள்ளுங்கள். அதன் பிறகு “ஈஈஈ” ஒலியின் முடிவு *இம் கைஃப்* ஆகும். ஆத்ம ஞானத்தை பெறுங்கள். பரமாத்துமாவிற்கு வேறாக மனதில் தோன்றுவது அனைத்தையும் எழுதி எரித்துவிடுங்கள். நீங்கள் அதை மட்டும் செய்தால் போதும். இது மிகவும் எளிமையானது. உங்களிடம் அதற்கான கருவிகள் அனைத்தும் உள்ளன. அதன் பிறகு மீண்டும் ஆத்ம ஞானத்தை பெறுவது மட்டுமே ஒரே வேலையாக இருக்கிறது. §



*தனக்கு குணப்படுத்த முடியாத புற்றுநோய் இருப்பதை அறிந்துகொண்ட குருதேவா, தான் உயிர் துறக்கும் வரை உபவாசம் இருக்கப்போவதாக*

*அறிவித்தார். அவருக்கு அருகில் இருந்து 32 நாட்களுக்கு கவனித்து வந்த அவரது துறவிகள், இறுதியாக அவரது உடலை ஒரு பல்லக்கில் சுடுகாட்டிற்கு சுமந்து சென்றனர். அவரை சிவலோகத்திற்கு அழைத்து செல்ல அவருடைய குருமார்கள் அனைவரையும் வரவழைக்கும் ஒரு சூட்சுமமான பூஜை நடத்தப்பட்டது.*


……………………§

குருதேவா தனது கைகளால் எழுதிய செல்ஃப் காட் (பரமாத்துமா) பற்றிய உரையை ஒரு துறவி அவர் கைகளில் வைத்து, அதை துறவிகள் சத்தமாக படிக்கலாமா என்று கேட்டார். "படிக்கலாம்" என்று அவர் சுருக்கமாக பதில் அளித்தார். ஒவ்வொரு துறவியும் சுழற்சி முறையில், ஒரு சில வரிகளை படித்தனர். மங்கலான ஒளியுடன் இருந்த அந்த அறையில் சக்தி நிரம்பியது. காலவரம்பை கடந்த அந்த முக்கியமான தருணத்தில், பல்வேறு குரல்களுடன் வெளிவந்த அந்த ஆழமான சொற்கள் மனதை மயக்குவதாக இருந்தன. துறவிகள் அதை வாசித்து முடித்த பிறகு, "அப்படியென்றால் பரமாத்துமா 1950களில் உண்மையாக இருந்தது மற்றும் அது தற்போது 2000 ஆண்டிலும் உண்மையாக இருக்கிறது," என்று குருதேவா குறிப்பிட்டார். முழுமையான மற்றும் முடிவான உண்மை எப்போதும் ஒரே மாதிரியாக, எப்போதும் உண்மையாக வாழ்க்கை மற்றும் மரணத்தை கடந்து இருக்கிறது என்பதை அங்கீகரிக்கும் விதமாக அங்கிருந்த எல்லோரும் சிரித்தனர்.§

ஒரு நாள் குருதேவா சூட்சும விருந்தாளிகளை உபசரித்துக்கொண்டு இருந்தார். அவர் படுக்கையில் அமர்ந்து கொண்டு, கைகளை நன்றாக உயர்த்தி வணக்கம் தெரிவித்து, ஒவ்வொருவருக்கும் மரியாதை செலுத்தினார். நள்ளிரவு நேரத்தில் ஒரு சமயத்தில், யோக சுவாமி தன்னிடம் வந்து, "எல்லாம் முடிந்துவிட்டது. எல்லாம் முழுமையாக இருக்கிறது. நான் திரும்பி வருவேன்," என்று யோக சுவாமி தன்னிடம் கூறியதாக அவர் தனது துறவிகளிடம் கூறினார்.§

தங்கள் சற்குரு உயிர் துறக்கும் போது அவருக்கு அருகில் இருக்க வேண்டும் என்பதற்காக உலகெங்கிலும் இருந்து சீடர்கள் குவிந்தனர் என்றாலும், தனது அறைக்குள் நுழைவதற்கு அல்லது தன்னை பார்ப்பதற்கு தனது துறவிகள் மட்டுமே வரவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். ஆனால் நற்குணம் நிறைந்த சீடர்கள் அவர் மீது இருந்த பாசத்தாலும், தங்களுக்கு அவர் வழங்கிய பரிசுகள் மற்றும் வழிகாட்டலுக்கு நன்றி செலுத்தும் வகையிலும் அங்கேயே காத்து இருந்தார்கள். அவர் அவர்களின் வாழ்க்கைகளை மாற்றி அமைத்து இருந்தார் மற்றும் *மகாசமாதியின்* போது சற்குருவிற்கு அருகில் இருக்கவேண்டிய அவசியத்தைப் பற்றி அவர் அவர்களுக்கு அறிவுறுத்தி இருந்தார். அந்த சமயத்தில் வெளிப்படும் சக்தி கங்கை நதியில் ஆயிரம் முறை குளிப்பது, கைலாய மலைக்கு ஆயிரம் முறை யாத்திரை செல்வது, ஆயிரம் மிகப்பெரிய யாகங்களை செல்வதைக் காட்டிலும் சிறந்தது என்று பாரம்பரியம் குறிப்பிடுகிறது. §

இந்துக்களின் தீபத்திருநாளான தீபாவளி பண்டிகை தொடங்குவதற்கு சில நிமிடங்கள் முன்பு, நள்ளிரவு 11:54 மணிக்கு, சித்ரா *நட்சத்திரத்தில்,* நவம்பர் 12, 2001, 32 நாட்கள் உபவாசம் இருந்த பிறகு, குருதேவா *மகாசமாதி* அடைந்தார். தைரியமாகவும் மனஉறுதியுடனும் வாழ்ந்த ஒரு வாழ்க்கைக்கு மகுடமாக அமைந்த அந்த உன்னதமான மகாபயணம், பழங்கால முறையில் மரணத்தை அணுகுவது தொடர்ந்து உசிதமாக இருப்பதை உலகிற்கும், மரணப்படுக்கையில் இருந்தவர்களுக்கும் தெரியப்படுத்தியது. அவர் ஆணையிட்டப்படி, ஒரு மணி நேரம் கழித்து, சமூகத்தின் மூத்த துறவியாகவும் அவர் நியமித்த வாரிசாகவும் இருந்த, சற்குரு போதிநாத வேலன்சுவாமியை பதவியில் அமர்த்தி, அவரை முதல் முறையாக நமஸ்காரம் செய்து, பழங்கால கைலாச பரம்பரையின் அடுத்த சற்குரு தலைமையில் புதிய யுகத்தின் தொடக்கத்தை அறிவிக்க மடத்தின் குரு பீடத்தில் எல்லோரும் கூடினார்கள். §



கவாய் ஆதீனத்தின் குரு மகாசன்னிதானமாக நவம்பர் 31, 2001 அன்று சற்குரு போதிநாத வேலன்சுவாமி நியமிக்கப்பட்டார். தேவாலயத்தை பிரதிநிதித்துவம் செய்யவும் குருதேவா தனது வாழ்நாள் முழுவதும் செய்த

*பணியை நிலைநிறுத்துவதற்கு முன்பாக மடத்தில் ஒரு ஆசிரியராக, கணக்காளராக மற்றும் தியானம் செய்யும் சாதுவாக இருந்த இவரது வாழ்க்கை ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை பெற்றது.*

……………………§

போதிநாதா 21 வயது இளைஞனாக, பெர்க்லி கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டு இருந்த போது, நெவாடாவின் மவுன்ட்டன் டெசர்ட் மடத்தில் செங்கற்களில் கட்டப்பட்டிருந்த ஒரு அறையில் குருதேவாவை அவர் முதல் முறையாக சந்தித்தார். 1965 ஆம் ஆண்டு அவர் குருதேவாவின் சமூகத்தில் சேர்ந்து, பல வருடங்களுக்கு குருதேவா நடத்திய அமைப்புக்களுக்கு வழிகாட்டும் நிர்வாகியாக இருந்து, சட்டம் மற்றும் அலுவல் தொடர்பான விவகாரங்களை கண்கணித்தார். 1970 களில், கடல் மணலில் அமைந்து இருந்த ஒரு எளிமையான ஓலை குடிசையில் ஒன்பது மாதங்கள் தங்குவதற்காக, குருதேவா அவரை ஹவாய் தீவின் பிக் ஐலன்ட்டிற்கு அனுப்பி வைத்தார். போதிநாதாவை சந்திப்பதற்காகவும் அவரது சாதனா மற்றும் தியானங்களை வழிநடத்துவதற்காகவும் குருதேவா விமானம் மூலம் கோனாவிற்கு செல்வார். அத்தகைய சேவை மற்றும் சாதனா, போதிநாதா தனது தோள்களில் முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்புக்களை சுமக்க, அவரை தயார் செய்தது. குருதேவா அவரை 1972 ஆம் ஆண்டு இலங்கையில் ஆறு மாதங்கள் தங்க வைத்த போது, யோக சுவாமி அவரது வலது காதில், "நான் உன்னை உனது/எனது பணிக்காக தயார் செய்துக்கொண்டு இருக்கிறேன்," என்று கூறினார். அவரது துறவற வாழ்க்கையை எடுத்துரைத்த கண்ணியத்துடன், அவர் *பீடத்தில்* அமர்ந்து நந்திநாத சற்குருமார்களின் நீளமான தொடர்ச்சியில் அடுத்த சற்குருவாக பதவியேற்றார். §

அடுத்த நாள் மதியம் துறவிகள் மற்றும் சீடர்கள், குருதேவாவின் உடலை ஊர்வலமாக மடத்தின் நுழைவாயில் வரை சுமந்து சென்றார்கள். அவர் மீது அதிக அன்பு செலுத்திய மேயர், எதிர்பாராத விதமாக ஒரு காவல்துறை பாதுகாப்பை வழங்கி, கவாய்க்கு மிகவும் பிடித்தமான ஆன்மீக தலைவர் சிவபெருமானின் திருவடியை மேலும் ஒரு தருணமும் தாமதிக்காமல் செல்ல வேண்டும் என்பதைப் போல, வழியில் இருந்த போக்குவரத்தை முழுவதுமாக நிறுத்தி, 20 மைல் பயணத்தில் ஒவ்வொரு சந்திப்பிலும் காவல்துறை வாகனத்தை நிறுத்தி, சுடுகாடு செல்லும் மக்கள் கூட்டத்தை விரைவுப்படுத்தினார். அவரை வழியனுப்ப நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருந்த ஒரு உணர்ச்சிப்பூர்வமான நினைவேந்தல் சேவையில், "ஓம் நமச்சிவாய" என்று உச்சரித்துக் கொண்டு அவரது உடலை சுமந்து சென்ற மூத்த துறவிகள் நவீன சிதைக்கு அருகில் செல்லும் வரை, அன்பின் உற்சாகமான வெளிப்பாடு நிரம்பியிருந்த ஹலா ஹலாவ் பள்ளியின் ஆன்மீக பாடல்கள் மற்றும் ஆடல்கள் தொடர்ந்தன. அவரது மறைவு பற்றிய செய்தியை *தி நியூ யார்க் டைம்ஸ்*, CNN மற்றும் மற்ற செய்தி நிறுவனங்கள் அறிவித்தன. §

அடுத்த நாள் விடிந்ததும், அவரது அஸ்தியை துறவிகள் மடத்திற்கு கொண்டு வந்து, அவர் அறிவுறுத்திய படி, அதை குரு பீடத்திற்கு பின்னால் இருந்த ஒரு நிலத்தடி குகையின் சுவற்றில் வைத்தனர். அன்றைய தினத்தில் இருந்து, மாதந்தோறும் சித்ரா நட்சத்திரத்தன்று நடைபெறும் குரு பூஜையின் போது, அவர் காலை நேரத்தில் தனது சீடர்களுக்கு ஆன்மீக உபதேசத்தை வழங்க நூற்றுக்கணக்கான முறை அமர்ந்த 'கடவுள்' கோயிலின் பிரதான *மண்டபத்தில்* துறவிகள் கட்டிய ஒரு மாடத்தில், அவரது வாழ்க்கையும் பரம்பரையும் கௌரவிக்கப்படுகின்றன. ஜெய் குருதேவா!§

Page 48: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/48_conclusion.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## முடிவுரை

ஒரு பரம்பரை என்பது மிகப்பெரிய நதியைப் போல, எப்போதும் தூய்மையாக இருந்து, வற்றாத ஆற்றலுடன் இருக்கிறது. பல நூற்றாண்டுகளுக்கு பல நாடுகள் மற்றும் கலாச்சாரங்கள் வழியாக பல கிளைகளுடன் விரிவடைந்து வந்துள்ள, கைலாச பரம்பரை முடிவான உண்மையை தெரிந்துக்கொள்ள ஆர்வத்துடன் இருக்கும் எல்லோருக்கும் உயிரூட்டம் அளிக்கும் நீரை கொண்டு வருகிறது. §

இந்த பூமியில் மகாபுருஷர்களாக வலம் வந்து, மனிதன் மற்றும் இறைவனை பிரிக்க முடியாது என்பதைப் பற்றியும், பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவிலும் பரவியிருக்கும் ஒற்றுமை மற்றும் முழுமை பற்றியும் பேசி, தங்கள் வாழ்நாளில் இறைவனை உணர்ந்து, ஒரு அரிய எடுத்துக்காட்டாக விளங்கிய ஆன்மீக வாழ்க்கையை வாழ்ந்த ஏழு சற்குருமார்களின் வாழ்க்கை வரலாற்றை நாம் இந்த புத்தகத்தில் தெரிந்துகொண்டோம். இந்த ஏழு சற்குருமார்கள் அறியாத சில விவேகமான சவால்களை வரவிருக்கும் காலங்களில் எதிர்கொள்ளவிருக்கும் ஞானோதயம் பெற்ற சற்குருமார்கள் மற்றும், அத்வைத சைவ சித்தாந்தத்தை எதிர்கொண்டதும் தாங்கள் நாடிய முடிவான உண்மை தாங்கள் தான் என்பதை அறிந்ததும் இந்த ஏழு சற்குருமார்களின் பாதங்களில் சரணடையும் மற்றவர்களாலும் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும், இது வரை அறியப்படாத விளைவுகளை நாம் இன்னும் பார்க்கவில்லை. §

ஒரு குரு இன்னொருவரை எந்த முறையில் தீட்சை வழங்குவார் என்பது யாருக்கும் தெரியாது. தஷனாமி சமூகங்கள் போன்ற சில பாரம்பரியங்களில், சம்பிரதாய முறைப்படி நடக்கும் சந்நியாச *தீட்சையில்* உறுதியான நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. ஆனால் நாத சமூகங்கள் போன்ற மற்ற சமூகங்களில் அது வழக்கமாக ஒரு சிந்தனை, ஒரு சொல் அல்லது தொடுதல் மூலம் வழங்கப்படும், ஒரு வலுவான விழிப்புணர்வாக அதிக தனிச்சையாகவும் ஒழுங்குமுறை இல்லாமலும் இருக்கிறது. கைலாச பரம்பரையில் குருமார்கள் வழக்கமாக தங்களது ஆன்மீக சக்தியை

தொடுதல் மூலம் வழங்குகிறார்கள். கடையிற்சுவாமிக்கு இமயமலையில் இருந்து ரிஷி தொட்டு வழங்கிய சக்தியை, அவர் தன்னிடம் சீடனாக இருந்த செல்லப்பகுருவின் திறந்த உள்ளங்கையில் ஒரு பெரிய ரூபாய் நாணயத்தை வைத்த வழங்கினார். செல்லப்பகுரு ஒரு மங்களகரமான தருணத்தில், யோகசுவாமியின் கைகளில் இருந்த சாப்பாட்டு தட்டு மற்றும் குவளையை தட்டிவிட்டார். யோகசுவாமி தனது  ஆசிரம வளாகக் கதவிற்கு அருகில், குருதேவாவின் முதுகில் ஓங்கி அடித்து அவரை தடுமாற செய்தார். அதைப்போன்ற சாதாரண சைகைகள் மூலம், ஆன்மீக சக்தி ஒரு தலைமுறையில் இருந்து இன்னொரு தலைமுறைக்கு வழங்கப்படுகிறது. §

ஒரு தந்தை தனது குடும்ப தொழிலை தனது தகுதி வாய்ந்த மகனுக்கு தருவதைப் போல, குறிக்கோள் மீது அதிக கவனத்துடன் இருக்கும் அந்த சிறப்பான தொடுதல், சீடனிடத்தில் விரிவாக்கம் பெற்று இருந்த உணர்தல் மற்றும் பக்குவத்தை அங்கீகரித்து, அவருக்கு அந்த முக்கியமான தருணத்தில் பரம்பரையின் ஆன்மீக அதிகார பொறுப்பை வழங்குகிறது. தீட்சையை வழங்கும் குரு தனது தூல உடலை துறந்தால் மட்டுமே, இந்த பொறுப்பின் முழு சக்தியும் தீட்சை பெற்றவருக்கு கிடைக்கப்பெறுகிறது. §

இந்த பரம்பரையின் தொடர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு வாரிசும் பரம்பரையின் பொறுப்பை ஞானோதயம் பெற்ற அடுத்த வாரிசிடம் வழங்கி, முழுமுதற் பொருளை உணர வேண்டும் என்று மனிதன் நாட்டம் கொண்டதில் இருந்து தொடங்கி காலத்தின் முடிவையும் கடந்து மேலும் சில நாட்களுக்கு தவிர்க்க முடியாமல் தொடர உள்ள ஒரு சங்கிலியில், அவர் தனது பங்கை பூர்த்தி செய்கிறார். §

Page 49: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/49_param08_01.html

# குருமார்களின் சரித்திரங்கள்

§





Page 50: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/50_param08_02.html

# குருமார்களின் சரித்திரங்கள்

# கடையிற்சுவாமி மற்றும் செல்லப்பசுவாமியின் இராச்சியங்கள்



புகைப்படத்தில் இருக்கும் நல்லூர் கோயிலின் *தேரடியில்*, உயரமான தேர் நிறுத்தப்பட்டு இருக்கும் மற்றும் இங்கே பெரும்பாலும் செல்லப்பசுவாமி வசித்து வந்தார். உள்ளிருக்கும் படம்: இந்த *தேரடியின்* மூடிய அறையில், யோக சுவாமி முதல் முறையாக ஞான ஒளியில் மூழ்கிய போது, செல்லப்பசுவாமி இங்கே நின்றுக்கொண்டு கம்பிகளை உலுக்கினார். செல்லப்பசுவாமி உணவு அருந்தி தியானம் செய்த *வில்வ* மரத்திற்கு அடியில் ஒரு பெண் வழிபடுகிறாள். சீடர்கள் மூலம் வரையப்பட்ட செல்லப்பசுவாமி மற்றும் கடையிற்சுவாமியின் சித்திரங்கள். உள்ளிருக்கும் படங்கள்: கோயிலுக்குள் சிவலிங்கத்துடன் இருக்கும் மஞ்சள் நிற தூண்களை காணலாம். இதற்கு அடியில் கடையிற்சுவாமியின் உடல் ஒரு குழியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது; இன்னொரு படத்தில் கடையிற்சுவாமியின் வெண்கல சிலையுடன் அவரது அடையாள சின்னமான குடையும் காட்சி அளிக்கிறது.§



Page 51: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/51_param08_03.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## யாழ்ப்பாணம்



வழக்கமான யாழ்ப்பாண சந்தை. யாழ்ப்பாண பாதையில் பரவலாக தென்படும் பனை ஓலை வேலி. பருத்தித்துறைக்கு அருகில் நெல் வயல்கள், வாழை மற்றும் பனை மரங்கள். செல்லப்பசுவாமியும் யோக சுவாமியும் அவ்வப்போது குளிக்கச் சென்ற கீரிமலை புண்ணிய தீர்த்தக்குளம். புதுப்பிப்பதற்கு முன்பாக நல்லூர் கோயிலின் தோற்றம். சீடர்களுக்காக யோக சுவாமி கே.கே.எஸ். சாலையில் கட்டிய சிவதொண்டன் நிலைய கட்டிடம். நல்லூரில் செல்லப்பசுவாமிகளின் நினைவாலயம். உள்ளிருக்கும் புகைப்படம்: ஒருவர் அந்த நினைவாலயத்தில் செல்லப்பசுவாமியை வழிபடுகிறார். §





Page 52: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/52_param08_04.html

# குருமார்களின் சரித்திரங்கள்

# சிவயோக சுவாமி




1950 களில் ஒரு அன்பரின் வீட்டில் யோக சுவாமி தியானம் செய்யும் புகைப்படம். கொழும்புத்துறையில் யோகசுவாமியின் குடிசை. உள்ளிருக்கும் புகைப்படம்: கொளுத்தும் வெய்யிலில் இருந்து தன்னை பாதுகாக்க யோக சுவாமி ஒரு குடையுடன் நடந்து செல்கிறார். கைதடியில் இருந்த மார்கண்டுசுவாமியின் குடிசை. உள்ளிருக்கும் படம்: வலது புறத்தில் ஓரமாக ஜெர்மன்சுவாமி (கௌரிபாலா), அவருடன் ஐக்கிய இராச்சியத்தை சேர்ந்த சந்தசுவாமி, ஆஸ்திரேலியாவின் நரிகுட்டிசுவாமி மற்றும் இன்னொரு அன்பரும் இருக்கும் 1960 வருடத்து புகைப்படம். 1969 ஆம் ஆண்டு மார்கண்டுசுவாமி விருந்தாளிகளிடம் பேசுகிறார். விபத்துக்கு பிறகு யோகசுவாமி படுக்கையில் அமர்ந்து இருக்க, அவரை சுற்றி அன்பர்கள் கூடியுள்ளனர். அவரது குடிசையை சுற்றி இருக்கும் சுவர். அவர் இந்த இடத்தில் சுப்பிரமுனியசுவாமியின் முதுகில் அடித்து அவருக்கு தீட்சை வழங்கினார். §






Page 53: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/53_param08_05.html

# குருமார்களின் சரித்திரங்கள்



1950 வருடத்திற்கு அருகில் ஒரு அன்பரின் வீட்டு திண்ணையில் யோகசுவாமி அமர்ந்து இருக்கிறார். யோகசுவாமியின் குடிசையில், அவரது அஸ்தி (அவை

பல்வேறு இடங்களுக்கு பிரித்து அனுப்பப்பட்டன) வைக்கப்பட்டுள்ள சந்நிதிக்கு முன்பாக அன்பர்கள் தரையில் விழுந்தது வணங்குகிறார்கள். யோக சுவாமியின் இடுப்பு எலும்பில் முறிவு ஏற்பட்டதால் மருத்துவமனை படுக்கையில் அமர்ந்து இருக்கும் காட்சி. இறுதி சடங்கிற்கு முன்பாக யோக சுவாமி படுக்கையில் இருக்கும் காட்சி. மார்ச் 24, 1964 அன்று, அவரது உடல் ஒரு பல்லக்கில் சுடுகாட்டிற்கு சுமந்து செல்லப்படுகிறது.§


Page 54: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/54_param08_06.html


# குருமார்களின் சரித்திரங்கள்

## சுப்பிரமுனியசுவாமியின் குழந்தைப்பருவம்



பாலன் லீப் ஏரிக்கு அருகில் பாப் ஹான்சென் தனது குழந்தை பருவத்தை கழித்த மரப்பலகை விடுதி. மூன்று மாத பாப் ஹான்சென். குடும்பத்துடன் நகரத்திற்கு செல்ல பனிநடை கட்டைகள் மற்றும் இரும்பு ஸ்னோ ட்ராக்ஸ் பொருத்தப்பட்டு பனிக்காலத்தில் பயன்படுத்துவதற்கான பிரத்யேக வாகனம். ஆறு வயது சிறுவனாக ராபர்ட். தாஹோ ஏரிக்கு தெற்கே, கலிபோர்னியாவின் பாலன் லீப் ஏரியின் ஒரு காட்சி. தனது தாய் ஆல்பர்ட்டாவின் மடியில் அமர்ந்து இருக்கும் சிறுவன் ராபர்ட்.§


FALLEN LEAF LODGE





Page 55: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/55_param08_07.html

# குருமார்களின் சரித்திரங்கள்



ஒரு அறை மட்டுமே இருந்தே சிறிய பள்ளியில் ராபர்ட் (பின்வரிசையில் கைகளை கட்டிக்கொண்டு, இடப்புறத்தில் இருந்து இரண்டாவதாக). தனது தந்தை, தாய் மற்றும் தங்கை கரோலுடன். அவர் வாழ்க்கையின் ஆரம்பக்காலத்தில் மிகவும் முக்கியமான தூண்டுகோலாக இருந்த மதர் கிறிஸ்டினி. கிரேஸ் பர்ரோஸின்  ஸ்டுடியோவாக இருந்த ஏரிக்கரை வீடு. சாலட் போ ரெவ், என்று அழைக்கப்பட்ட இந்த இடத்தில், ராபர்ட் கோடைக்காலத்தில் நடனம் பயின்றார். மேடையில் நடனமாடுகிறார். ராபர்ட்டின் பதின்ம வயது புகைப்படம். §






Page 56:  URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/56_param08_09.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## சிலோன் அழைக்கிறது





இந்த புகைப்படம் மார்ச் 26, 1947 அன்று கொழும்பு பத்திரிகையில் வெளிவந்தது. அவர் கொழும்பு வந்திறங்கி, ஒரு நாள் கழித்து எடுக்கப்பட்ட புகைப்படத்தில், அவருடைய இடது புறத்தில் அல்வா காயில் மற்றும் ஹில்டா சார்ல்டன். அவர் ஜெய்லானி குகைகளில் இருந்து திரும்பி தனிமையில் இருந்த கொழும்பு YMCA. அவர் தவம் இருந்து முடிவான உண்மையை உணர்ந்த ஜெய்லானி குகைகளுக்கு செல்லும் நுழைவாயிலின் ஒரு காட்சி. அவர் கொழும்பில் முழுவதும் கல்லால் கட்டப்பட்ட ஒரு சிவன் கோயிலுக்கு சென்ற

போது எடுக்கப்பட்ட படம். 1969 ஆம் ஆண்டு அவர் முதல் முறையாக இலங்கை திரும்பிய போது, செட்டியார் வீட்டு நுழைவாயிலில் இடது புறமாக விநாயகமூர்த்தி மற்றும் அவருடைய மனைவி. பாஸ்டன் வழியாக ராபர்ட் அமெரிக்கா திரும்பியதை தெரியப்படுத்தும் அவருடைய 1947 வருடத்து கடவுச்சீட்டு. §










Page 57: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/57_param08_10.html

# குருமார்களின் சரித்திரங்கள்







ஈஸ்ட்-மீட்ஸ்-வெஸ்ட் என்ற தலைப்பில் நாடு முழுவதும் நடத்திய நடனம் மற்றும் இசை நிகழ்ச்சியை அறிவித்த ஒரு இலங்கை சுவரொட்டியில், அவர் தலைப்பாகையுடன் தென்படுகிறார். அரங்கில் வெள்ளை குர்தாவுடன் இருக்கும் ராபர்ட். அவர் யோக சுவாமியை சந்திக்க ஏற்பாடு செய்த கந்தையா


செட்டியார் என்ற ஆங்கில ஆசிரியர். இந்தியாவின் வடமேற்கு மாநிலம் மணிப்பூரின் பாரம்பரிய நடனமான மணிப்புரியை ராபர்ட் கற்றுக்கொண்டார். அம்மா விநாயகமூர்த்தி தனது வீட்டிற்கு அருகில் ஒரு குடிசையில் குருதேவா தனியாக அமர்ந்து சாதனா செய்த காட்டுப்பகுதியை காண்பிக்கிறார். ஒரு ஆன்மீகவாதியாகவும் ஆலோசகராகவும் இருந்த தயானந்த பிரியதாசி (டார்ரெல் பெய்ரிஸ்), அவருக்கு பௌத்த சமய வழிகளை கற்றுத் தந்தார். §




Page 58: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/58_param08_11.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## சான் பிரான்சிஸ்கோ மற்றும் விர்ஜினியா சிட்டி



டிசம்பர் 1959, ஹவாய் தீவிற்கு முதல் முறையாக பயணம் செய்த போது விமானநிலையத்தில் எடுக்கப்பட்ட படம். சாக்ரமெண்டோ தெருவில் இருந்த சான் பிரான்சிஸ்கோ கோயிலில் வில்போன்று வளைந்து இருந்த கதவுகள். சிலோனில் இருந்து நாடு திரும்பிய போது அவர் தனது குர்தாவில் காட்சி அளிக்கிறார். 1950 களில் சண்டே பிரன்ச் (ஞாயிற்றுக்கிழமைகளில் முற்பகல் உணவு) பிரபலமான நிகழ்வாக இருந்தது. ஸ்ரீ சுப்பிரமுனியா ஒவ்வொரு ஞாயிறும் பரமாத்துமாவை சென்றடையும் வழி, எல்லோரிடமும் இருக்கும் தெய்வீகத் தன்மை, தர்மத்தை கடைப்பிடிக்கும் வாழ்க்கையை பற்றி தவறாமல் பேசினார். 60 கள் மற்றும் 70 களில் நெவாடா விர்ஜினியா சிட்டியில் அவருடைய இளம் துறவிகள் பயிற்சி பெற்ற மவுன்ட்டன் டெசேர்ட் மடம்.§



Page 59: URL

https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/59_param08_12.html

# குருமார்களின் சரித்திரங்கள்

# இன்னர்சர்ச்




உலகம் முழுவதும் 13 வாரங்கள் பயணம் செய்த, 1969 இந்திய தீர்த்த யாத்திரையின் போது எடுக்கப்பட்ட படம். ஜூலை, 1968 ஸ்விசர்லாந்தின் லாகோ மாகியோர் கரையில் அவர் ஷூம் மொழியை கற்றுத் தருகிறார். உள்ளிருக்கும் புகைப்படம்t: ஏரிக்கு அருகில் இருந்த அஸ்கொனா நகரம். மார்ச்-ஏப்ரல் 2000 இன்னரசர்ச் உல்லாச கப்பலில் கரீபியன் சென்ற போது கப்பல்துறையில் எடுக்கப்பட்ட படம். ஆசியாவில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் குருதேவாவை தங்கள் வீட்டிற்கு அழைத்து விருந்து அளித்தனர். 1970 ஹவாய் தீவில் நடைப்பெற்ற, மாஸ்டர் கோர்ஸ் (பிரதான பயிற்சி வகுப்பு) ஒலிப்பதிவு.§



Page 60: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/60_param08_13.html

# குருமார்களின் சரித்திரங்கள்

1982 ஆம் ஆண்டு அமெரிக்க சற்குரு மற்றும் அவரது சீடர்களை, யாழ்ப்பாண இசைக்கலைஞர்கள் இரயில் நிலையத்தில் இருந்து வழிநடத்தி செல்கிறார்கள். 1972 ஆம் நடைப்பெற்ற இந்திய தீர்த்த யாத்திரையின் போது குழுவினர் மாஸ்கோ நகரில் சில நாட்கள் தங்கினார்கள். கணேஷ்புரியில் சுவாமி முக்தாநந்தாவுடன் எடுக்கப்பட்ட படம். நேபாளத்தின் இமயமலையில் 13,600 அடி உயரத்தில் இருக்கும் சண்டக்பு சிகரத்தில் ஒரு தியான வகுப்பிற்கு தலைமை தாங்குகிறார். 1982 ஆம் ஆண்டு இலங்கையின் கோப்பாய் நகரில், ஒரு மோரிஸ் மைனரில் கயிறுகள் கட்டப்பட்டு, சுப்பிரமுனியசுவாமி கிராமங்கள் வழியாக அழைத்து செல்லப்படுகிறார். 1969 ஆம் ஆண்டு அவர் சீடர்களுடன் மகரிஷி மகேஷ் யோகியை சந்திக்கிறார். §

Page 61: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/61_param08_14.html

# குருமார்களின் சரித்திரங்கள்

# இந்தியா மற்றும் இலங்கை

இந்தியாவில் ஒரு கோயிலில் குருதேவா வழங்கிய உரையை என். கே. மூர்த்தி மொழிபெயர்ப்பு செய்கிறார்; மேலும் குருதேவா இதைப்போன்று வழங்கிய ஆயிரக்கணக்கான உரைகளின் மூலம் சிவபெருமானை வழிபட்டு, மனதில் உறுதியுடன் வாழ்ந்து தங்கள் மதத்தை நினைத்து பெருமைப்படவேண்டும் என்று இந்துக்களிடம் கேட்டுக்கொண்டார். அவர் தமிழ்நாட்டில் ஒரு கோயிலை தரிசிக்க செல்கிறார். இலங்கையின் நல்லூர் கோயிலில் இருந்து அடுத்தடுத்த இடங்களில் உரை நிகழ்த்த ஊர்வலமாக செல்கிறார். கொழும்பின் சரஸ்வதி மண்டப மேடையில் தனது துறவிகளுடன் அமர்ந்து கொண்டு பொதுமக்களுக்கு உரை நிகழ்த்துகிறார். அவர் ஒரு முறை இலங்கையின் நல்லை ஆதீனத்திற்கு சென்று இருந்த போது அங்கே ஆரத்தி எடுக்கிறார். அளவெட்டியில் தனது ஆசிரமத்திற்கு முன்பாக தமிழ் அறிஞர்களுடன். ஹவாய் தீவில் இருந்து வந்திருந்த உயரமான துறவி எல்லோர் கவனத்தையும் கவர்ந்தார் மற்றும் அவர் என்றுமே தனது உரையை தயார் செய்யாமல், தெளிவாக பேசி தொடர்ந்து மக்களை ஊக்குவித்த விவேகமான சொற்பொழிவை கேட்க எல்லோரும் ஆர்வத்துடன் இருந்தனர். §



Page 62: URL https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/62_param08_15.html

# குருமார்களின் சரித்திரங்கள்

# உலகெங்கும் இருக்கும் இந்துக்களுக்கு ஒரு நண்பராக இருத்தல்



1995 ஆம் ஆண்டு 89 கோயில் பூசாரிகளுடன் நடந்த சந்திப்பு; அவர் பூசாரிகளுக்கு உற்ற தோழனாக இருந்தார். அவர் ஒரு தேரில் மலேசியா நாட்டு சாலைகள் வழியாக அழைத்து செல்லப்படுகிறார். அவர் முன்பாக பள்ளிச் சிறுமிகள் பூத்தூவிச் செல்ல, அவர் அளவெட்டி சாலைகள் வழியாக அழைத்து செல்லப்பட்டார்; அவரால் ஒவ்வொரு தலைமுறையுடனும் சமமாக பழக முடிந்தது. படத்தில் இருக்கும் இந்த குடும்பத்தைப் போன்று, காலப்போக்கில் பல்லாயிரக்கணக்கான இந்துக்கள், அவரது தரிசனம் மற்றும் ஆலோசனையை பெறுவதற்கு கவாய் தீவிற்கு விமானம் மூலம் வந்தனர். அவர் இணைந்து செயல்பட்ட பல மடங்களில் ஒன்றான மதுரை ஆதீனத்தின் ஆன்மீகத் தலைவரை சந்தித்து பேசுகிறார்.§



Page 63: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/63_param08_16.html

# குருமார்களின் சரித்திரங்கள்

# மனித வாழ்க்கை நீடித்து இருப்பது பற்றி விவாதித்த சர்வதேச கருத்தரங்குகள்



ஆக்ஸ்போர்டில் ஏப்ரல் 1998 மனித வாழ்க்கை நீடித்து இருப்பதை பற்றி விவாதிக்க ஐந்து நாட்கள் நடைப்பெற்ற மிகவும் முக்கியமான சர்வதேச மாநாட்டில் பல்வேறு நாட்டு ஆன்மீக மற்றும் அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர். ஒரு ஆக்ஸ்போர்டு குழுவில். 2000 ஆம் ஆண்டு ஐ.நா. சபையில், “உள்நாட்டில் போரை நிறுத்துங்கள்" என்ற தலைப்பில் 1,200 மதத் தலைவர்கள் முன்பாக பேசுகிறார். நியூயார்க் நகரத்தில் ஐ.நா. சபையில் 2000 ஆண்டுக்கான ‘உ தண்ட்’ அமைதி பரிசை பெற்ற பிறகு எடுக்கப்பட்ட படம். 1992 ஆம் ரியோ டி ஜெனிரோவில் கூடியிருந்த தலைவர்களுக்கு முன்பாக சொற்பொழிவாற்றுகிறார். டிசம்பர் 1990, மாஸ்கோவில் மனித வாழ்க்கை நீடித்து இருப்பதை பற்றி விவாதித்த சர்வதேச மாநாட்டின் போது குளிர்கால ஆடைகளுடன் காட்சி அளிக்கிறார்.§












https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/64_param08_17.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## ‘இறைவன்’ கோயிலின் தொடக்கம்



அமெரிக்காவில் முதல் முறையாக ஆகம முறைப்படி முழுமையாக கைகளால் செதுக்கப்பட்ட கோயிலாக ‘இறைவன்’ கோயில் இருக்கவேண்டும் என்று குருதேவா கற்பனை செய்து இருந்தார். அவர் தலைசிறந்த கட்டிடக்கலைஞர்கள் மற்றும் சிற்பிகளுடன் நடத்திய கூட்டம். ஹவாய் கோயிலில் அடிக்கல் நாட்டு விழாவின் போது எடுக்கப்பட்ட படம். பெங்களூரு, இந்தியாவில் வடிவைப்பாளர்களுடன் கட்டிட வரைபடங்களை ஆய்வு செய்கிறார். கிராமத்தில் அமைக்கப்பட்ட பணியிடத்தில், இரண்டு முடிவு பெறாத தூண்களுக்கு மத்தியில் நின்றுக்கொண்டு இருக்கிறார். டிசம்பர் 1990, கோயில் கட்டுமானப் பணியை அதிகாரப்பூர்வமாக தொடங்குவதை குறிப்பிடும் வண்ணம் கைலாஷ் ஆசிரமத்தில் முதல் கல்லை செதுக்குகிறார். ஆகஸ்ட் 21, 1999 குருதேவா கோயில் அஸ்திவாரத்திற்கு முன்பாக நின்றுகொண்டு இருக்கிறார்.§





Page 65: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/65_param08_18.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## அச்சகத்தின் சக்தி



1985 ஆம் ஆண்டு குருதேவா தனது முதல் மாகின்டோஷ் கணினியில் தொகுக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கிறார். 2000 ஆம் ஆண்டு, மலேசியா கோலாலம்பூரில் தனது இரண்டு புதிய புத்தகங்களை வெளியிடுகிறார். 2000 ஆம் ஆண்டு கடலுக்கு அருகில் தொகுக்கும் மேசையில் குழுவுடன் அமர்ந்து இருக்கிறார்; கம்பியற்ற இணைப்பில் இருந்த நான்கு மடிக்கணினிகள், ஒரே ஆவணத்தை ஒரே சமயத்தில் திருத்தியமைக்க பயனுள்ளதாக இருந்தன. ஃபிஜி தீவில் ஒரு பள்ளியில், சமயம் பற்றிய பாடத்தை சிறுவர்களுக்கு வழங்குகிறார். தனது முக்கிய வெளியீடான, இந்துயிசம் டுடே பத்திரிகையின் ஒரு இதழை கையில் பிடித்துக்கொண்டு இருக்கிறார். அவர் இதை “கப்பலின் முன்பக்கம்" என்று அழைத்தார். பல வருடங்கள் சிரத்தையுடன் உருவாக்கிய தலைசிறந்த படைப்பு ஒவ்வொன்றிலும், குருதேவா பேரானந்தத்துடன் கையொப்பமிட்டார். §


Page 66:  URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/66_param08_19.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## கவாயில் தனது வீட்டில்





குருதேவா ஹவாயில் இருக்கும் தீவான கவாயில் முப்பது வருடங்களுக்கும் மேலாக தங்கி இருந்தார். குருதேவா ஒவ்வொரு வாரமும் நடைபெற்ற புனிதமான *ஹோமங்களில்* தலைமைத்தாங்கி, அக்னி மூலம் தனது வேண்டுதல்களை  தேவர்களிடம் சமர்ப்பித்தார். ஒவ்வொரு வாரமும் 'கடவுள்' கோயிலில் *ஹோமம்* நடைபெற்ற பிறகு துறவிகள், குடும்பங்கள் மற்றும் யாத்திரிகளுக்கு குருதேவா உரை நிகழ்த்தி, அவர்களின் ஆன்மீக வாழ்க்கைக்கு தேவையான ஊக்கம்  மற்றும் வழிகாட்டுதலை வழங்கினார். காலை நேரத்தில் குருதேவா ஒரு கையில் *தண்டத்தையும்* இன்னொரு கையில் காபியையும் எடுத்துக்கொண்டு நடந்து செல்கிறார்.  தினமும் அதிகாலையில் துறவிகள் குரு பீடத்தில் ஒன்று சேர்ந்ததும், குருதேவா அவர்களுக்கு ஷூம் மொழியில் தியான வகுப்பை வழிநடத்திவிட்டு, முன்னேற்பாடின்றி பேசுவார்.

அவர் தனது வாரிசு, சற்குரு போதிநாத வேலன்சுவாமியுடன் நின்றுகொண்டு இருக்கிறார். §







Page 68: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/68_glossary_09.html

# சற்குருமார்களின் சரித்திரங்கள்

# சொற்களஞ்சியம்

**ஆதீனம் (adheenam):** தென்னிந்தியாவின் சைவ சித்தாந்த முறைப்படி அமைந்து இருக்கும் ஒரு சைவ இந்து மடம் மற்றும் கோயில் வளாகம். குரு *மகாசன்னிதானம்* அல்லது *ஆதீனகர்த்தார்* என்று ஆதீனத்தின் தலைவர் அழைக்கப்படுகிறார். §

**abhisheka(m):** अभिषेक "Sprinkling; ablution." **அபிஷேகம்:** "புரோக்ஷனம்; நீராட்டுதல்." நீர், தயிர், தேன், நெய், பன்னீர் போன்றவற்றால் தெய்வ விக்ரகங்களுக்கு சடங்குகளுடன் நீராட்டுவதை குறிக்கிறது. ஆகம சாசனத்தில் பரிந்துரைக்கப்பட்ட ஒரு விசேஷமான பூஜையின் வடிவம். மேலும் சமய மற்றும் அரசியல் விழாக்களின் தொடக்கம் மற்றும் மற்ற சுப நிகழ்ச்சிகளிலும் அபிஷேகம் நடைபெறுகிறது. §

**முழுமை (Absolute)**: ஆங்கில சிற்றெழுத்து (absolute): உண்மையாக, எதையும் சாராத, இன்னொன்றுடன் ஒப்பீடாக இல்லாத நிலை. ஆங்கில பெரிய எழுத்து (Absolute): முடிவான பரம்பொருள், வெளிப்படாமல், மாறாமல் எல்லாம் கடந்து இருக்கும் பரசிவம். மேலும் தகவலுக்கு: பரசிவம். §

**ஆச்சார்யர் (āchārya):** आचार्य *அதிக மதிப்பிற்குரிய ஆசிரியர்.* §

**ஆன்மீகம் சார்ந்தது (actinic):** ஒளியை உருவாக்கக்கூடியது. புனிதமான, மாசற்ற நிலையில் இருக்கும் உணர்வை சார்ந்தது. ஒளி முதல் முறையாக தோற்றமளிக்கும் *சுத்த மாயா* என்கிற உணர்வின் அடிப்பகுதி, சக்தியின் அடிப்படை அளவுகள், புனிதமான *பிந்துவின்* மிகவும் தூய்மையான மெய்ஞ்ஞான உலகை விவரிக்கிறது. மெய்ஞ்ஞான மனதில் இருந்து வரும் ஒரு சக்தியாக ஆன்மீக சக்தி இல்லாமல், மெய்ஞ்ஞான மனமாக இருக்கிறது. இது பொதுவாக உயிர், ஆன்மா என்று அழைக்கப்படுகிறது, மற்றும் இதை மனிதனின் கண்களில் காணலாம்; மனிதன் காந்தத்தன்மை கொண்ட தனது தூல உடலை விட்டு விலகி செல்லும் போது, இந்த சக்தி மனிதனை விட்டு செல்கிறது. ஒளி தண்ணீரில் இருந்து மாறுபட்டு, அதன்

வழியாக பிரகாசிப்பதை போல, ஆன்மீக சக்தி காந்த சக்தியின் எதிர்மறையாக இல்லாமல், அதிலிருந்து மாறுபட்டு இருக்கிறது. காந்த சக்தி வழியாக ஆன்மீக சக்தி சுதந்திரமாக பாய்ந்து செல்கிறது. மேலும் தகவலுக்கு: *கோசம்.* §

**ஆனந்தமய கோசம் (actinic body):** ஆன்மாவின் உடல் அல்லது *காரண சரீரம்.* மேலும் தகவலுக்கு: *ஆன்மா.* §

**ஆன்மீக காந்த சக்தி (actinodic):** இது காந்த மற்றும் ஆன்மீக சக்தி கலந்து, *அனாஹாத* சக்கரத்தின் தொடர்ச்சி, மற்றும் ஓரளவிற்கு *விசுத்த* சக்கரத்தின் தொடர்ச்சியாக இருக்கும் *சுத்தசுத்த மாயாவின்* உணர்வை விளக்குகிறது. மேலும் தகவலுக்கு: *ஆன்மீக சக்தி, காந்த சக்தி, தத்துவம்.*§

**advaita:** अद्वैत "Non-dual; not twofold." **அத்வைதம்:** இருமை அல்லாதது அல்லது ஒருமைவாதம். முடிவான பரம்பொருள் ஒரு அடிப்படை சாரம் அல்லது இறைவனை கொண்டுள்ளது என்ற கோட்பாடு. இது *துவைதம்*, இருமை வாதத்தின் எதிர்பதம் ஆகும். மேலும் தகவலுக்கு: துவைதம்-அத்வைதம், *வேதாந்தம்.*§

**Advaita Ishvaravada (Advaita Īśvaravāda):** अद्वैत इश्वरवाद "Nondual and Personal-God-as-Ruler doctrine;" monistic theism. அத்வைத ஈஸ்வரவாதம்**:** ஒருமைவாத கடவுள் நம்பிக்கை. எல்லா பொருட்கள் மற்றும் தனிப்பட்ட தெய்வத்தின் யதார்த்தத்தில் இருக்கும் முடிவான ஒற்றுமை பற்றி எடுத்துரைக்கும் *வேதங்கள்* மற்றும் *சைவ ஆகமங்களின்* கோட்பாடு ஆகும்.§

**Advaita Siddhanta (Advaita Siddhānta):** अद्वैत सिद्धन्त "Nondual perfect conclusions." அத்வைத சித்தாந்தம்: *ஆகமங்களில்* தொகுக்கப்பட்டுள்ள இந்த சைவ தத்துவம் உட்புற மற்றும் வெளிப்புற வழிபாடு, யோக சாதனாக்கள் மற்றும் *தபஸ்* ஆகியவற்றிற்கு வலுவான முக்கியத்துவம் வழங்கி இறைவன், ஆன்மா மற்றும் உலகின் அத்வைத அடையாளத்தை தனது மையமாக கொண்டுள்ளது. மெய்கண்டார் மற்றும் அகோரசிவாவின் பன்மைவாத சித்தாந்தத்தில் திருமூலரின் சிந்தனையை பிரித்து காட்டுவதற்கு தென் இந்தியாவில் *அத்வைத சிந்தாந்தம்* என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. §

**Advaita Vedanta (Advaita Vedānta):** अद्वैत वेदान्त "Nondual end (or essence) of the *Vedas.*" அத்வைத வேதாந்தம்: "வேதங்கள் குறிப்பிடும் இருமை அல்லாத முடிவு (அல்லது சாரம்)." இது பொதுவாக இந்தியாவின் பல்வேறு அத்வைத தத்துவங்களையும், மிகவும் முக்கியமாக *உபநிடங்கள்* மற்றும் அதனுடன் தொடர்புடைய உரைகளில் இருந்து தோன்றிய ஆதி சங்கரரின் அத்வைத தத்துவப் பிரிவையும் குறிப்பிடுகிறது. §

***Agama (Āgama):*** आगम The tradition; ஆகமம்: "தொன்றுதொட்டு" வந்த பாரம்பரியம். ஒரு மிகப்பெரிய சமஸ்கிருத சாஸ்திரங்களின் தொகுப்பாக விளங்கும் இதுவும், *வேதங்களும்* ஸ்ருதி (வெளிப்படுத்தப்பட்ட சாஸ்திரம்) என்று போற்றப்படுகின்றன. இது

சடங்கு, யோகம் மற்றும் கோயில் கட்டுமானத்திற்கு ஒரு முக்கிய மூலமாகவும் ஆணையாகவும் விளங்குகிறது. §

**Agastya:** अगस्त्य அகத்திய முனிவர். பதினெட்டு புகழ்பெற்ற சைவ சித்தர்களில் ஒருவர். இவர் தமிழ் மொழியின் முதல் இலக்கண நூலான அகத்தியத்தை இயற்றியவர். அவர் வட இந்தியாவில் இருந்து தென் இந்தியாவிற்கு வந்ததாக வரலாறு கூறுகிறது. அவருடைய பெயர் மகாபாரதம், இராமாயணம் மற்றும் *புராணங்களில்* தோன்றுகிறது மற்றும் பழங்கால இந்தோனேசியர்களும் அவரை அறிந்து இருந்தார்கள். §

***agni:*** अग्नि "Fire." அக்னி. 1) பஞ்சாபூதங்களில் ஒன்று. 2) யாகம், *அக்னிகரக*, *ஹோமம்* மற்றும் *ஹவனம்* என்று அழைக்கப்படும் வைதீக சடங்கு மூலம் அக்னி பகவான் ஆவாகனம் செய்யப்படுகிறார்; இந்த பிரார்த்தனைகள் மற்றும் படையல்களை ஏற்றுக்கொள்ளும் தெய்வ தூதுவர், அதனை சொர்க்கலோகத்திற்கு தெரிவிக்கிறார். §

**ahimsa (ahiṁsā):** अहिंसा "Noninjury," nonviolence or nonhurtfulness. அகிம்சை: துன்புறுத்தாமல் இருத்தல் அல்லது இம்சை செய்யாமல் இருத்தல். மற்றவர்களுக்கு உடல், மனம் அல்லது உணர்ச்சி ரீதியாக துன்புறுத்தாமல் இருத்தல். மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்.*§

***ajna* chakra (*ājñā* chakra):** आज्ञाचक्र "Command wheel." *ஆக்ஞா சக்கரம்*: மூன்றாவது கண்ணின் மையம். மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*§

**akasha (ākāśa):** आकाश "Space." The sky. ஆகாசம்: தடையில்லாத திறந்தவெளி. பஞ்ச பூதங்களாக இருக்கும் நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாசத்தில் மிகவும் நுணுக்கமானதாக இருக்கிறது. அனுபவ ரீதியாக, இது உட்புற மற்றும் வெளிப்புற பிரபஞ்சங்களில் வியாபித்து இருக்கும் புனிதமான பரவெளி அல்லது சூட்சுமமான பிளாஸ்மா (plasma) வாயுவாக இருக்கிறது. எல்லா நிகழ்வுகளும் பதிவு செய்யப்பட்டு தீர்க்கதரிசிகளால் தெரிந்துக்கொள்ளும் வகையில் தற்போது உள்பொருளாக இருப்பது அனைத்தையும், எதிர்காலத்தில் இருக்கப்போகும் அனைத்தையும், அருள்ஞான ரீதியாக மனம், மெய்ஞ்ஞான நிலைகள் தக்க வைத்து இருக்கின்றன. §

**எங்கும் வியாபித்து இருக்கின்ற (all-pervasive):** எங்கும் வியாபித்து இருப்பது அல்லது பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் இருப்பது. §

***anahata* chakra (*anāhata* chakra):** अनाहतचक्र "Wheel of unstruck [sound]." அனாஹத சக்கரம். "ஒலிக்கப்படாத சக்கரம்." இதயத்தின் மையம். மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*§

**ananda (ānanda): आनन्द** "Bliss." ஆனந்தம். உணர்ச்சிகளை பரவசமாக வெளிப்படுத்தி அல்லது உணர்ச்சிகளை தனக்குள் கட்டுப்படுத்தி,

இறைவனின் உணர்வு அல்லது ஆன்மீக அனுபவத்தால் கிடைக்கும் தூய மகிழ்ச்சி. §

**aniconic:** "Without likeness; without image." அருவுருவம்: ஒரு தெய்வத்தின் சிலையை குறிப்பிடும் போது, அருவுருவம் என்பது மனிதனை போன்ற வடிவம் இல்லாமல் அல்லது உருவ ஒற்றுமையை முயற்சிக்க முடியாத ஒரு சின்னத்தை குறிப்பிடுகிறது. இதற்கு "இறைவனின் வடிவமாக இருக்கும்" சிவலிங்கத்தை ஒரு உதாரணமாக குறிப்பிடலாம். மேலும் தகவலுக்கு: *மூர்த்தி, சிவலிங்கம்.*§

***anjali* mudra (*añjali* mudrā):** अञ्जलिमुद्रा "Reverence gesture." அஞ்சலி முத்திரை. இது *பிரணாம அஞ்சலி* என்றும் அழைக்கப்படுகிறது. மரியாதை மற்றும் வாழ்த்துக்களை தெரிவிக்கும் இந்த முத்திரையில், இரண்டு கைகளும் சிறிது குவித்து ஒன்று சேர்த்து வைக்கப்பட்டு, வழக்கமாக "நமஸ்காரம்" என்றும் வணக்கம் தெரிவிக்கப்படுகிறது. *அஞ்சலி* முத்திரையில் ஒருவர் தனக்கு சமமானவர்களுக்கு நெஞ்சின் அருகில் வைத்துக்கொண்டும், குருவிற்கு கண்களுக்கு அருகில் வைத்துக்கொண்டும், இறைவனுக்கு தலைக்கு மேல் வைத்துக்கொண்டும் பல்வேறு வடிவங்களில் வணக்கம் செலுத்துகிறார். ஒரு யாசகன் உணவை யாசிப்பதைப் போல, அல்லது கோயிலில் ஒரு பக்தன் இறைவனின் அருளை வேண்டுவதை போல, இரண்டு கைகளையும் அருகில் விரித்து வைத்து இருப்பது, இந்த முத்திரையில் ஒரு வடிவமாக விளங்குகிறது.§

***antyeshti (antyeshṭi):*** अन्त्येष्टि "Last rites." *அந்த்யேஸ்டி*. "இறுதி சடங்குகள்." ஈமச்சடங்கு. §

***anugraha shakti (anugraha śakti):*** अनुग्रहशक्ति "Graceful or favoring power." அனுகிரக சக்தி. வெளிப்படுத்தும் அருள். இது *ஆணவம்*, கர்மவினை மற்றும் மாயை என்று மும்மலங்களில் இருந்து ஆன்மாவை விடுவித்து, இறுதியாக முக்தியை வழங்கும் சிவபெருமானின் ஞானோதய சக்தியை குறிப்பிடுகிறது. அதில் குறிப்பாக, ஒரு சற்குருவிடம் இருந்து கிடைக்கும் *தீட்சையாக, சக்திநிபாதமாக* ஆன்மாவிற்குள் *அனுகிரகம்* இறக்கம் பெறுகிறது. §

***arati (āratī):*** आरती "Light." ஆரத்தி. "ஒளி." ஒரு தெய்வீக புருஷர் அல்லது கோயிலில் இருக்கும் தெய்வத்திற்கு பூஜையின் போது ஒரு தட்டில் நெய், எண்ணெய் அல்லது கற்பூரத்தினால் ஏற்றிய விளக்கை காண்பிப்பது ஆரத்தி என்று அழைக்கப்படுகிறது. அது அதன் பிறகு பக்தர்களுக்கு வழங்கப்படும் போது, அவர்கள் அதை கைகளால் தொட்டு தங்கள் கண்களில் மூன்று முறை வைத்துக் கொண்டு, இறைவனின் ஆசியை பெறுகிறார்கள். ஒரு மிகவும் சிறிய பூஜை வடிவிலும் *ஆரத்தி* காண்பிக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *பூஜை.*§

***archana:*** अर्चन அர்ச்சனை: கோயில் பூசாரிகள் செய்யும் இந்த விசேஷமான, தனிப்பட்ட, சுருக்கமான பூஜையில் ஒரு பக்தருக்கு தனிப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் ஆசிகளை பெறுவதற்கு அவரது பெயர், நட்சத்திரம் மற்றும் கோத்திரம் உச்சரிக்கப்படுகின்றன. மேலும் தகவலுக்கு: *பூஜை.* §

***ardha*-Hindu:** अर्धहिन्दु "Half-Hindu." அர்த்த-இந்து: இந்து சமய நம்பிக்கை மற்றும் கலாச்சாரத்தை ஏற்றுக்கொண்டாலும், ஒரு இந்து சடங்கின் மூலம் முறையாக நாமகரணம் செய்துக்கொள்ளாத ஒரு சீடன். இது கிழக்கு நாடுகளில் இந்து  சமயத்தில் பிறந்து இருந்தாலும், இந்து சமயம் சாராத பெயர்களை கொண்டிருப்பவர்களையும் குறிப்பிடுகிறது. §

**ashrama (āśrama):** आश्रम "Place of striving." ஆசிரமம்: "முயற்சி மேற்கொள்ளும் இடம்." துறவி வசிக்கும் இடம்; வாழ்க்கையில் ஒரு நிலை. புனிதமான புகலிடம்; ஒரு சாது, மகான், சுவாமி, துறவி அல்லது குருவின் இருப்பிடம் மற்றும் அவர் சீடர்களுக்கு கல்வி கற்பிக்கும் இடம்; இங்கே வழக்கமாக மாணவர்களுக்கு தங்கும் வசதியும் வழங்கப்படும். இது வாழ்க்கையின்  நான்கு நிலைகளையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆசிரம தர்மம்.* §

**ashrama dharma (āśrama dharma):** आश्रमधर्म "Laws of life development." ஆசிரம தர்மம்: "வாழ்க்கையின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் விதிகள்." நான்கு தொடர்ச்சியான நிலைகளில் (ஆசிரமங்கள்) ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான போற்றத்தக்க வாழ்முறையில், இயற்கை மற்றும் வாழ்க்கைக்கு இடையே எந்த நிலை இணக்கத்துடன் இருக்கிறது என்பதை கண்டறிந்து உடல், உணர்ச்சி மற்றும் மனதை ஒரு மிகவும் நேர்மறையான வழியில் அவற்றின் இயல்பான சுழற்சிகளில் வளர்ச்சி அடைய அனுமதிப்பது ஆகும். பிரம்மச்சரியம், சம்சாரி 24 முதல் 48 வயது வரை, மூத்த ஆலோசகர் என்பதை குறிக்கும் *வானப்பிரஸ்தம்*: 48 முதல் 72 வரை; சந்நியாசம்: துறவற வாழ்க்கையை மேற்கொண்டு தனியாக ஆன்மீக நாட்டத்துடன் இருத்தல், 72 வயது முதல். §

**ஆசிரமங்கள் (ashramas (āśramas)):** மேலும்: *ஆசிரம தர்ம.* §

**ashtanga yoga (ashṭāṅga yoga):** अष्टाङ्गयोग "Eight-limbed union." அஷ்டாங்கயோகம்: "எட்டு அங்கங்களைக் கொண்ட யோகம்." ஞானோதயம் நோக்கி செல்வதற்கு பாரம்பரிய முறைப்படி இராஜ யோகம் எட்டு முற்போக்கான நிலைகளை கொண்டுள்ளது: 1) இயமம்: "கட்டுப்பாடுகள்." நற்பண்பு மற்றும் ஒழுக்கத்துடன் வாழ்தல். 2) நியமம்: "கடைப்பிடித்தல்கள்." உயர்ந்த பண்புகளை ஊக்குவிக்கும் சமய பயிற்சிகள். 3) ஆசனம்:

“அமரும் இடம் அல்லது தோரணை.” 4) பிராணாயாமம்: “உயிர்சக்தியை கட்டுப்படுத்துதல்.” சுவாசக் கட்டுப்பாடு. 5) *பிரத்யாஹார:* “உள்நோக்கி திரும்புதல்.” ஒருவர் தனது உணர்வை தூல புலன்களில் இருந்து விடுவித்துக் கொள்வது. 6) *தாரணா:* “ஒருமுகச்சிந்தனை.” ஒருவர் தனது உணர்வின் ஓட்டத்தை வழிநடத்துதல். 7) தியானம்: “தியானம் செய்தல்.” 8) சமாதி: “உட்புறமாக கவனம் செலுத்துதல்,” “சமத்துவம், ஆழ்ந்த சிந்தனை/உணர்தல்.”§

**சூட்சும உடல் (astral body):** ஆன்மா அந்தர்லோகம் என்று அழைக்கப்படும், சூட்சும லோகத்தில் செயல்படும் தூல உடல் அல்லாத சூட்சும உடலை (*சூட்சும சரீரம்*) குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *ஆன்மா.*§

**சூட்சும லோகம் (astral plane (or world)):** தொண்டையில் இருக்கும் *விசுத்த* சக்கரத்தில் இருந்து உள்ளங்கால்களில் இருக்கும் *பாதாள சக்கரம்* வரைக்கும் பரவியிருக்கும் உணர்வின் தொடர்ச்சி சூட்சும லோகம் அல்லது அந்தர்லோகம் என்று அழைக்கப்படுகிறது. சூட்சும லோகத்தில், ஆன்மா *சூட்சும சரீரம்* என்கிற சூட்சும உடலில் முழுவதுமாக மறைந்து இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *லோகம், மூன்று லோகங்கள்.*§

**asura:** असुर “Evil spirit; demon.” (Opposite of *sura:* “deva; God.”) அசுரன். “தீய சக்தி; அரக்கன்.” (“தேவர்கள்; இறைவனை" குறிக்கும் *சுர* என்ற சொல்லுக்கு எதிர்ப்பதம்) கீழ்நிலை சூட்சும லோகமான நரகத்தில் இருக்கும் ஒரு உயிர்சக்தி. அசுரர்கள் தூல உலகுடன் தொடர்பு கொண்டு, மக்களின் வாழ்க்கையில் பெரிய மற்றும் சிறிய சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும். அசுரர்கள் எப்போதும் இந்த நிலையில் இருக்காமல் பரிணாம வளர்ச்சி அடைகிறார்கள். §

**அசுர குணம் (asuric):** ஒரு அசுரனிடம் இருக்கும் பண்பு, “ஆன்மீகம் அல்லாதது.”§

**atma(n) (ātman):** आत्मन् “The soul; the breath; the principle of life and sensation.”

ஆத்மன்: “ஆன்மா; உயிர்மூச்சு; வாழ்க்கை மற்றும் தூல உணர்வின் கோட்பாடு.” *ஆனந்தமய கோசம்* மற்றும் அதன் சாரமாக (பராசக்தி மற்றும் பரசிவம்) இருக்கும் ஆன்மாவின் முழுமையை குறிக்கிறது. நாம் ஆத்மனாக இருக்கிறோம் ஆனால் நாம் தூல உடல், உணர்ச்சிகள், வெளிப்புற மனம் அல்லது ஆளுமையாக இல்லை என்பது இந்து சமயத்தில் மிகவும் அடிப்படை கோட்பாடுகளில் ஒன்றாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *பரமாத்துமன், ஆன்மா.*§

**ஆத்மார்த்த பூஜை (Atmartha Puja):** மேலும் தகவலுக்கு: *சைவ ஆத்மார்த்த பூஜை.*§

**Aum:** ॐ or औम् Often spelled *Om*. ஓம். இந்து சமயத்தில் சூட்சுமமான சொல்லாக இருக்கும் ஓம், சமய நூல்களின் தொடக்கங்களில் பயன்படுத்தப்படுகிறது. இதன் தொடக்க ஒலி *மூலாதார சக்கரத்தில்* அதிர்வை ஏற்படுத்துவதால்,

இது விநாயகருடன் தொடர்புடையதாக இருக்கிறது. ஓம் எனும் சொல் பல்வேறு இந்திய மொழிகளில், “ஆமாம், மிகவும்" அல்லது “வாழ்க" என்பதையும் குறிப்பிடுகிறது. §

**ஒளி உடல் (aura):** இது நுணுக்கமான சக்தியின் வண்ணமயமாக ஒளிரும் புலமாக, மனித உடலுக்குள்ளும் வெளிப்புறத்திலும் பிரகாசிக்கிறது. ஒருவரது உணர்வு, எண்ணங்கள், மனநிலைகள் மற்றும் உணர்ச்சிகளின் நிலைக்கு ஏற்ப ஒலி உடலின் நிறங்கள் மாறுகின்றன. §

**Auvaiyar:** ஔவையார். வரலாற்றை புரட்டிப்பார்த்தால் ஔவையார் என்பவர் ஒருவரல்ல ஆனால் பல்வேறு காலங்களில் ஒன்றும் மேற்பட்ட ஔவைகள் வாழ்ந்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளனர் என்பது தெரியவரும். அத்தகைய பெண் புலவர்களில் ஒருவர் எழுதிய ஆத்திச்சூடியை இன்றும் பள்ளிச்சிறுவர்கள் பயின்று வருகின்றனர். ஒரு ஔவை தமிழ்ச்சங்கத்தில் திருவள்ளுவரின் திருக்குறளை அரங்கேற்றம் செய்ய துணை புரிந்ததாக கூறப்படுகிறது. §

**சாட்சி, விழிப்புணர்வு (awareness):** தனிப்பட்ட விழிப்புணர்வு, விழிப்புணர்வு, அறிதல்; சாட்சி, “ஆன்மாவின் உட்புற கண்.” இது சமஸ்கிருதத்தில் *சாக்ஷின்* அல்லது *சித்* என்று அழைக்கப்படுகிறது. §

**ayurveda (āyurveda):** आयुर्वेद “Science of life.” ஆயுர்வேதம். “உயிரில் இருக்கும் விஞ்ஞானம்.” இது பழங்கால இந்தியாவை சார்ந்த மருத்துவம் மற்றும் ஆரோக்கியத்தின் ஒரு முழுமையான அமைப்பாக விளங்கி, ஆன்மீக முன்னேற்றத்தை பெறுவதற்கு நீண்ட ஆயுள் மற்றும் உடல் ஆரோக்கியம் பெறுவதை தனது இலக்காக கொண்டுள்ளது. ஒருவரது உடல் ஆரோக்கியம், வாழ்முறை மற்றும் இயல்புக்கு பொருத்தும் செய்முறைகளின் மூலம் சக்திகளை சமன் செய்வதில் கவனம் செலுத்தப்படுகிறது. §

**ஆயுர்வேதம் சார்ந்த (ayurvedic)**.§

# B

**Bhairava:** भैरव “Terrifying.” பைரவர். இவர் காவல் தெய்வமாக கருதப்படுகிறார். அனைத்து சிவாலயங்களிலும் வடகிழக்கு திசையில் இவருக்கு தனியாக சன்னிதி இருக்கும். திரிசூலத்தை கையில் ஏந்திய படியும், நாய் வாகனத்துடனும் இவர் காணப்படுவார். மேலும் தகவலுக்கு: *சிவபெருமான்.* §

**bhajana:** भजन Spiritual song. பஜனை. தெய்வீக பாடல். தெய்வீக பாடல், ஸ்தோத்திரங்கள் மற்றும் ஸ்லோகங்களை தனியாக அல்லது குழுவினருடன் பாடுதல். §

**bhakta:** भक्त (Tamil: *bhaktar*) "Devotee." பக்தர். வழிபாடு நடத்துபவர். தெய்வத்திடம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். §

**bhakti:** भक्ति "Devotion." பக்தி. "அர்ப்பணிப்பு." இறைவன், மகாதேவர்கள் அல்லது குருவிடம் சரண் அடைதல். பக்தி என்பது எளிமையான வழிபாட்டில் இருந்து தொடங்கி, ஆணவத்தை அழிக்கும் *பிரபத்தி* என்கிற முழுமையான சரணாகதி வரை பல்வேறு வடிவங்களில் இருக்கிறது. பக்தி என்பது இந்து சமயத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் உலகெங்கும் இருக்கும் யோக பள்ளிகளுக்கும் அடிப்படையாக விளங்குகிறது. §

**bhakti *yoga:*** भक्तियोग "Union through devotion." பக்தி யோகம். ஒருவர் தனது இதயத்தில் அன்பை விழிப்படைய செய்து கடவுளின் அருளுக்கு தன்னை திறந்து கொள்ளும் நோக்கத்துடன் தெய்வீக கட்டுப்பாடுகள், வழிபாடு, பிரார்த்தனை, சுலோகங்கள் மற்றும் பாடல்களின் வழக்கம் பக்தி யோகம் என்று அழைக்கப்படுகிறது. பக்தியை இறைவன், மகாதேவர்கள் அல்லது ஒரு சற்குரு மீதும் செலுத்தலாம். பதஞ்சலியின் யோக தரிசனத்தில் (கோட்பாடு) இரண்டாவது அங்கமாக இருக்கும் நியமங்களில் (கடைப்பிடித்தல்கள்) பக்தியாக (ஈஸ்வரபிரணிதானா) சேர்க்கப்பட்டுள்ளது. §

***bhashya (bhāshya):*** भाष्य "Talking over, discussion." பாஷ்யம். ஒரு உரையின் மீதான கருத்து. இந்து தத்துவங்களில் பெரும்பாலானவை அடிப்படை சாஸ்திரத்தின் விளக்கங்கள் அல்லது பாஷ்யங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. §

**Bodhinatha Veylanswami (Bodhinātha Veylanswāmī):** போதிநாத வேலன்சுவாமி "Lord of Wisdom, Holder of the Vel." "ஞானத்தின் தலைவர், கையில் வேலை ஏந்தி இருப்பவர்." தற்போது நந்திநாத சம்பிரதாயத்தின் சற்குருவாகவும், கவாய் ஆதீனத்தின் குரு மகாசன்னிதானமாக இருக்கும் இவர், 2001 ஆம் ஆண்டு சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமியால் நியமிக்கப்பட்டார். §

**Brahma (Brahmā):** ब्रह्मा பிரம்மா. படைப்புக் கடவுளின் பெயர். சைவர்கள் சிவபெருமானின் ஐந்து அம்சங்களில் மூன்று அம்சங்களாக பிரம்மா, விஷ்ணு மற்றும் ருத்ரனை கருதுகிறார்கள். ஸ்மார்த்த சம்பிரதாயத்தை சேர்ந்தவர்கள் பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவபெருமானை முப்பெரும் தெய்வகளாக கருதுகிறார்கள் மற்றும் அதில் சிவபெருமான் அழிப்பவராக இருக்கிறார். இவரை பிரம்மம் (பிரம்மன்) உடன் குழப்பிக்கொள்ள வேண்டாம். மேலும் தகவலுக்கு: *பிரம்மம், பரமேஸ்வரன்.*§

**brahmachari (brahmachārī):** ब्रह्मचारी பிரம்மச்சாரி: பிரம்மச்சரியம் என்பது தன்னடக்கத்துடன் இருந்து சாதனா, பக்தி மற்றும் சேவை உட்பட சமய அறிவுறுத்தல்களை

கடைப்பிடிப்பது மட்டுமல்லாமல், சில சமயங்களில் எளிமையான விரதங்களை மேற்கொள்ளும் ஆன்மீக நாட்டமுள்ள ஒரு இளைஞரை குறிப்பிடுகிறது. இது மாணவ பருவத்தில் இருப்பவரை, 12 இருந்து 24 வயது வரை இருப்பவரை அல்லது அவருக்கு திருமணமாகும் வரை குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது. §

**brahmacharini (brahmachāriṇī):** ब्रह्मचारिणी பிரம்மச்சாரினி: *பிரம்மச்சாரியின்* பண்புகளுடன் இருக்கும் ஒரு பெண். §

**brahmacharya:** ब्रह्मचर्य "Divine conduct." பிரம்மச்சரியம். திருமணத்தின் பிறகு விசுவாசமாக வாழ்வதற்கு, திருமணத்திற்கு முன்பு தனியாக இருக்கும் போது மனத்துறவுடன் காமத்தை கட்டுப்படுத்தி வாழ்வதை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்.*§

**Brahmaloka:** ब्रह्मलोक பிரம்மலோகம். *சஹஸ்ரஹார* சக்கரத்தின் லோகம், மேலிருக்கும் லோகங்களில் மிகவும் உயர்வானது. மேலும் தகவலுக்கு: *லோகம்.* §

**Brahman:** ब्रह्मन् "Supreme Being; Expansive Spirit." பிரம்மம், பிரம்மன். "பரமாத்துமா; விசாலமான ஆன்மா." இது "வளர்தல், அதிகரித்தல். விரிவாக்குதல்," என்று குறிக்கும் *ப்ரிஹ்* என்ற வேர்ச்சொல்லில் இருந்து உருவானது. இது வேதங்களில் கடவுளின் பெயர் அல்லது மகாதேவரை குறிக்கிறது, மற்றும் அதில் அவர் 1) யாவும் கடந்த முழுமையாக, 2) எங்கும் வியாபித்து இருக்கும் சக்தியாக மற்றும் 3) பரமாத்துமாவாக அல்லது ஆதி ஆன்மாவாக விவரிக்கப்பட்டு இருக்கிறார். இந்த மூன்றும் சிவபெருமானின் மூன்று முழுமைகளுடன் தொடர்புடையதாக இருக்கின்றன. அதனால் சைவர்கள் பிரம்மன் மற்றும் சிவனை ஒரே கடவுளாக நிற்குண மற்றும் சகுண பிரம்மமாக இருப்பதாக அறிகிறார்கள். நிற்குண பிரம்மம் எனும் கடவுள் "பண்புகள் இல்லாமல்" (குணம்), உருவமில்லாமல், உணரக்கூடிய பண்புகளை அனைத்தையும் வெளிப்படுத்தும் உள்பொருள்கள் மற்றும் பராசக்தியையும் கடந்து பரபிரம்மமாக பரசிவமாக, குணங்களை முழுமையாக கடந்து இருக்கிறார். சகுண பிரம்மம், "பண்புகளுடன் இருக்கும்" கடவுள்; சிவபெருமான் தனது முழுமைகளாக இருக்கும் பராசக்தி மற்றும் பரமேஸ்வவரனாவும் மெய்ஞ்ஞானமாக, எங்கும் வியாபித்து, எல்லாம் அறிந்து, முழுமையான கருணையுடன் ஆற்றல் நிறைந்து இருக்கும் நிலை. பிரம்மம் என்கிற சொல்லை 1) *பிரம்மா*, படைக்கும் கடவுள்; 2) *வேத* நூல்களின் வர்ணனைகளைக் குறிப்பிடும் *பிராமண* அல்லது 3) இந்துசமயத்தின் *பிராமண* குலத்துடன் குழப்பிக்கொள்ளக் கூடாது. மேலும் தகவலுக்கு: *பிரம்மா.* §

**Chakra:** चक्र "Wheel." சக்கரம். இது மனிதனின் ஆன்மீக உடலில் இருக்கும் நரம்பு பின்னல்கள் அல்லது விசை மையங்கள் மற்றும் உணர்வை குறிக்கிறது. தூல உடலில் அதற்கு தொடர்புடைய நரம்பு பின்னல்கள், முடிச்சுகள் மற்றும் சுரப்பிகள் உள்ளன. முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் இருந்து மண்டை ஓடு வரையும் ஏழு அடிப்படை சக்கரங்கள் அமைந்துள்ளன. முதுகுத்தண்டிற்கு அடிப்பகுதியில் மேலும் ஏழு சக்கரங்கள் உள்ளன. அவை பொறாமை, வெறுப்பு, வயிற்றெரிச்சல், குற்ற உணர்ச்சி, வேதனை மற்றும் உள்ளுணர்வின் இருப்பிடங்களாக இருக்கின்றன. அவை கீழ்நிலை லோகம் அல்லது *நரகம்* அல்லது *பாதாளத்தில்* அங்கம் வகிக்கின்றன. இவ்வாறு மொத்தம் பதினான்கு பிரதான சக்கரங்கள் உள்ளன. மேலிருக்கும் ஏழு சக்கரங்கள் பற்றிய விவரம்: 1) *மூலாதாரம்* (முதுகுத்தண்டின் அடிப்பகுதி): நினைவாற்றல், காலம் மற்றும் பரவெளி; 2) *ஸ்வாதிஷ்டானா* (தொப்புளுக்கு கீழே): காரணம்; 3) *மணிப்புரா* (சூரிய பின்னல்): மனோபலம்; 4) *அனாஹத* (இதயத்தின் மையம்): நேரடி அறிவெழுச்சி; 5) *விசுத்த* (தொண்டை): தெய்வீக அன்பு; 6) *ஆக்ஞா* (மூன்றாவது கண்): தெய்வீகப் பார்வை; 7) *சஹஸ்ரஹார* (உச்சந்தலை): ஞான திருஷ்டி, தெய்வ பக்தி. கீழிருக்கும் ஏழு சக்கரங்கள் பற்றிய விவரம் 1) *அதள* (இடுப்பு): பயம் மற்றும் காமம்; 2) *விதள* (தொடை): பொங்கி எழும் கோபம்; 3) *சுதள* (முழங்கால் முட்டிகள்): பழிவாங்கும் பொறாமை; 4) *தளாதள* (காலின் பின்பகுதி): நீடித்த மனக்குழப்பம்; 5) *ரசாதள* (கணுக்கால்): சுயநலம்; 6) *மஹாதளம்* (கால்கள்): மனசாட்சி இல்லாத நிலை; 7) *பாதாள* (உள்ளங்கால்கள்): கொலை மற்றும் தீய எண்ணம். மேலும் தகவலுக்கு: *நரகலோகம்.*§

**charya (*charyā*):** चर्या "Conduct." சரியை. தொண்டு மற்றும் நல்லொழுக்கம். மேலும் தகவலுக்கு: *பாதம், சைவ சித்தாந்தம்.*§

**charya *marga* (charyā *mārga*):** चर्यामार्ग சரியை *மார்கம்*: சரியை *பாதத்தை* குறிக்கும் இன்னொரு சொல். மேலும் தகவலுக்கு: *சரியை பாதம்.*§

**charya *pada* (charyā *pāda*):** चर्यापाद "Conduct stage." *சரியை பாதம்*: தொண்டு செய்து நல்லொழுக்கத்தை வளர்த்துக் கொள்ளும் நிலை. எதிர்கால ஆன்மீக முன்னேற்றம் அனைத்திற்கும் அடிப்படையாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *பாதம்.*§

**Chellappaswami (Chellappaswāmī):** செல்லப்பசுவாமி "Wealthy father." தனிமையில் வாழ்ந்த சித்தர் மற்றும் நந்திநாத சம்பிரதாயத்தை சேர்ந்த கைலாச பரம்பரையின் 160 ஆவது சற்குரு. அவர் இலங்கையின் யாழ்ப்பாண தீபகற்பத்தில் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அருகே ஒரு சிறிய குடிசையில் வாழ்ந்தார். அவர் வாழ்ந்த இடத்தில் தற்போது ஒரு சிறிய

சமாதி இருக்கிறது. அவரது சீடர்களில் ஒருவரான சிவயோக சுவாமிக்கு அவர் ஐந்து வருடங்கள் தீவிரமாக பயிற்சி அளித்து, தனது வாரிசாக நியமித்தார். மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை, நாத சம்பிரதாயம்.*§

**Chettiar:** செட்டியார். தென்னிந்தியாவை சேர்ந்த செட்டியார் சமூகம், பெரும்பாலும் வணிகம் மற்றும் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். வர்ண தர்மத்தில், அவர்கள் வைஷ்ய குலத்தை சேர்ந்தவர்கள். தமிழ்நாட்டில 14 % மக்கள் செட்டியார் சமூகத்தை சேர்ந்தவர்கள். அதில் நாட்டுக்கோட்டை நகரத்தார் மற்றும் சேனைத்தலைவர் செட்டியார்களைப் போன்று பல உட்பிரிவுகள் உள்ளன. தமிழ்நாட்டில் *செட்டியார்* சமூகம் முக்கிய சமூகங்களில் ஒன்றாக விளங்குகிறது. §

**கட்புலனுக்கு அப்பாற்பட்டதை கேட்டல் (clairaudience):** "Clear-hearing." இது *திவ்யஷ்ரவன* எனப்படும், மனோஉணர்வு அல்லது தெய்வீக சக்தியால் கேட்பதை குறிக்கிறது. இது நரம்பு மண்டலங்களில் இருக்கும் உட்புற ஒட்டங்கள், ஓம்காரம் மற்றும் மற்ற சூட்சும ஒலிகளை கேட்கும் திறமை ஆகும். ஒருவர் தனது மனதில் அந்தர்லோக சக்திகள் அல்லது வேறொரு இடத்தில் இருக்கும் லௌகீக சக்திகள் பேசுவதை காதால் கேட்கும் சக்தியையும், நாள் முழுவதும் அல்லது தியானத்தில் இருக்கும் போது *நாதநாடி* சக்தி எனப்படும் "ஈஈஈ" ஒலியை சத்தமாக கேட்பதையும் குறிக்கிறது. §

**உணர்வுள்ள மனம் (conscious mind):** நமக்கு தினமும் வெளிப்புறமாக இருக்கும் உணர்வு. மேலும் தகவலுக்கு: *மனம்.*§

**உணர்வு (consciousness):** *சித்த* அல்லது *சைதன்ய*. 1) இது *சித்த* மற்றும் மனதின் சாரத்தை குறிப்பிடும் வேறொரு சொல்; அல்லது 2) புலனுணர்வு, விழிப்புணர்வு, அச்சத்தின் சக்தி அல்லது நிலை. §

**ஆழ்ந்த சிந்தனை (contemplation):** தியானத்தை கடந்து சமயம் அல்லது ஆன்மீக விவகாரங்களில் மூழ்கி இருக்கும் நிலை. §

**அண்டம் (cosmos):** பிரபஞ்சம் அல்லது படைப்புக்கள் முழுவதையும் குறிப்பிடுவதோடு அதில் இருக்கும் ஒழுங்கு, இணக்கம் மற்றும் முழுமையையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *லோகம், மூன்று லோகங்கள்.*§

**சஹஸ்ரஹார சக்கரம் (crown chakra):** உச்சந்தலையில் ஆயிரம் இதழ்களுடன் தெய்வீக உணர்வுடன் மண்டை ஓட்டின் மையமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*§

**Dakshinamurti (Dakshiṇāmūrti):** दक्षिणामूर्ति "South-facing form." தட்சிணாமூர்த்தி: "தெற்கு நோக்கி இருக்கும் மூர்த்தி." சிவபெருமான் ஒரு ஆலமரத்திற்கு அடியில் அமர்ந்துகொண்டு, அமைதியாக தனது காலடியில் அமர்ந்து இருக்கும் நான்கு ரிஷிகளுக்கு கற்றுத்தருவதாக அமைந்து இருக்கும். மேலும் தகவலுக்கு: *சிவபெருமான்.*§

***danda* (*daṇḍa*):** दण्ड "Staff of support." தண்டம்: "ஊன்றுகோல்." தனக்கு ஆதரவாக *தபஸ்* மட்டுமே இருப்பதையும், *சுஷும்னா* நாடியை உயிர்ப்பித்து, அதன் விளைவாக தான் நாடும் உணர்தலுக்கு உயிரூட்டம் அளிப்பதை குறிப்பிடும் விதமாக ஒரு சாது அல்லது சந்நியாசி தண்டத்தை பிடித்துக்கொண்டு இருப்பார். *தண்டம்* என்பது "அபராதம்" அல்லது "தண்டனையை" குறிப்பிடவும் பயன்படுகிறது.§

**darshan(a) (darśana):** दर्षन "Vision, sight." தரிசனம். தெய்வீக சக்தியை காணுதல். பூஜிக்கக்கூடிய சக்தி அல்லது சக்திகளுடன் ஆன்மீக தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு, அதன் அருளையும் ஆசிகளையும் பெறும் நோக்கத்துடன், கோயிலில் இருக்கும் ஒரு மூர்த்தி, தெய்வம், தெய்வீக புருஷர் அல்லது புண்ணிய தலத்தின் காட்சியை உட்புறமாக அல்லது வெளிப்புறமாக தக்க வைத்துக்கொள்வது. ஒரு புகைப்படத்தை ஒரு முறையான மனநிலையில் காண்பதும் தரிசனத்தில் ஒரு வடிவமாக கருதப்படுகிறது. ஒரு நெரிசலான கோயிலில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் விரைவாக சந்நிதியில் இருக்கும் தெய்வத்தை கடந்து செல்லும் போது, ஒரு பக்தன் அந்த புனிதமான தெய்வத்தின் விழிப்படைந்த பார்வைக்கு முன்பாக ஒரு நொடியாவது பொறுமையுடன் நின்று தானும் அந்த தெய்வத்தை காணவேண்டும், அந்த தெய்வத்தின் பார்வையும் தன் மீது விழவேண்டும் என்ற நாட்டத்துடன் இருக்கிறார். இவ்வாறு சக்தியின் பரிமாற்றம் நடைபெறும் ஒரு சூட்சும இடமாக கண்கள் விளங்க, தெய்வங்கள் மற்றும் குருமார்கள் தரிசனத்தை "வழங்குவதாகவும்" பக்தர்கள் தரிசனத்தை "பெறுவதாகவும்" கருதப்படுகிறது. இந்த நேரடியான மற்றும் தனிப்பட்ட இருதரப்பு புரிதல், இந்து தர்மத்தின் மையமாகவும் அதிகம் நாடப்படும் அனுபவமாகவும் கருதப்படுகிறது. மேலும் தகவலுக்கு: "கண்ணோட்டம்," கோட்பாடு அல்லது தத்துவம். §

***dashama bhaga (daśama bhāga):*** दशमभाग "One-tenth-part." தசமபாகம். இது இந்து பாரம்பரிய முறைப்படி, ஒருவர் தனது வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை ஒரு சமய அமைப்பிற்கு வழங்குவதை குறிக்கிறது. இது பழங்கால இந்தியாவில் பரவலாக பின்பற்றப்பட்டு வந்தது. §

**தெய்வம் (Deity):** "God." "இறைவன்." இது ஒரு வரைபடத்தை அல்லது கோயிலில் ஸ்தாபனம் செய்யப்பட்ட சிலையை அல்லது மகாதேவரை பிரதிநிதித்துவம் செய்யும் மூர்த்தியை குறிப்பிடுகிறது. §

**deva:** देव "Shining one." "பிரகாசமான ஒன்று." உயர்ந்த சூட்சும லோகத்தில் ஒரு நுணுக்கமான, புலனாகாத உடலில் வாழும் ஒரு உயிர்சக்தி. சமஸ்கிருத சாஸ்திரத்தில் *தேவ* என்ற சொல் "கடவுள் அல்லது தெய்வத்தை" குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது. §

**Devaloka:** देवलोक "Plane of radiant beings." தேவலோகம். இது *அனாஹத* சக்கரத்தின் உலகமாகவும், உயர்ந்த சூட்சும லோகமாகவும் இருக்கும் மகரலோகத்தை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *லோகம்.* §

***Devaram:*** தேவாரம். இது சிவபெருமான் மீது பாடப்பட்டுள்ள பன்னிரண்டு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளை குறிப்பிடுகிறது. இவற்றை திருஞான சம்பந்தர் (கி.பி. ஆறாம் நூற்றாண்டு), திருநாவுக்கரசர் (கி.பி. ஆறாம் நூற்றாண்டு) மற்றும் சுந்தரமூர்த்தி (கி.பி. எட்டாம் நூற்றாண்டு) இயற்றியுள்ளார்கள். மேலும் தகவலுக்கு: *திருமுறை.*§

***devasthanam (devasthānam):*** देवस्थानम् தேவஸ்தானம். தீர்த்த யாத்திரை செல்லும் பயணிகளுக்கு உணவு மற்றும் தங்கும் வசதியை குறைவான கட்டணத்தில் அல்லது இலவசமாக வழங்கும் இடம். §

**தெய்வீகமான (devonic):** தேவர்கள் அல்லது அவர்கள் உலகம் சார்ந்த. §

***dharana (dhāraṇā):*** धारणा "Concentration." தாரணை. "ஒருமுகச் சிந்தனை." இது "தக்க வைத்துக்கொள்ளுதல்," என்பதை குறிப்பிடும் *த்ரி* சொல்லில் இருந்து உருவானது. மேலும் தகவலுக்கு: *அஷ்டாங்கயோகம்.* §

**dharma:** धर्म தர்மம். இது "நிலை நிறுத்துதல்; தக்க வைத்துக் கொள்ளுதல்," என்பதை குறிப்பிடும் *த்ரி* என்கிற சொல்லில் இருந்து உருவானது. அதனால் "பிரபஞ்சத்தை உள்ளடக்கியது அல்லது அதை தக்க வைத்திருப்பது," தர்மம் ஆகும். தெய்வீக விதி, ஒழுங்குநெறி, உயிர்சக்தியின் விதி, நேர்மையின் பாதை, சமயம், கடமை, நல்லொழுக்கம், நீதி, நன்மை மற்றும் உண்மை என்று *தர்மம்* என்ற சொல்லுக்கு பல அர்த்தங்கள் உள்ளன. அடிப்படையில் தர்மம் என்பது, உள்ளார்ந்த இயல்பு அல்லது விதியின் முறையான நிறைவேற்றம் ஆகும். இது ஆன்மாவை பொறுத்தவரையில், ஆன்மீக மேம்பாட்டிற்கு சரியான மற்றும் நேர்மையான பாதைக்கு அதிக பயனுள்ள நடத்தை ஆகும். தர்மத்தில் நான்கு அடிப்படை வகைகள் உள்ளன, அவை கூட்டாக *சதுர்தர்ம* (நான்கு தர்மங்கள்) என்று அழைக்கப்படுகின்றன. 1) *ரித தர்ம*: "எல்லோருக்கும் பொதுவான விதி." விண்மீன் கூட்டங்கள் முதல் சிந்தனை மற்றும் புலனுணர்வு சக்தி வரை அனைத்து உருவங்கள்,

செயல்பாடுகள் மற்றும் செய்முறைகளை உள்ளடக்கி நிர்வகிக்கும் இருப்பு மற்றும் இயற்கையின் விதிகள். 2) வர்ண தர்மம்: “ஒருவர் தனது சமூக பிரிவுகளுக்கு ஏற்ப தர்மத்தை கடைப்பிடிப்பது.” வர்ணம் என்பது “இனம், குலம், தோற்றம், பண்பு, நிறம், சமூக அந்தஸ்து போன்றவற்றை" குறிக்கிறது. ஒருவரது நாடு, சமூகம், பிரிவு, தொழில் குழு மற்றும் குடும்பத்தில் இருக்கும் கடமைகள் மற்றும் பொறுப்புகள். 3) ஆசிரம தர்மம்: “வாழ்க்கையின் பல்வேறு படிநிலைகளில் இருக்கும் கடமைகள்.” பிரம்மசரியம் (மாணவன்), கிரிஹஸ்தன் (சம்சாரி), *வானப்பிரஸ்தம்* (மூத்த ஆலோசகர்) மற்றும் சந்நியாசி (ஆன்மீக நாட்டத்துடன் தனியாக இருப்பவர்) என்று மனித வாழ்க்கையின் நான்கு கட்டங்களில் பூர்த்தி செய்யவேண்டிய கடமைகள். 4) *ஸ்வதர்மம்:* “ஒருவரது தனிப்பட்ட கடமைகள் அல்லது பொறுப்புக்கள்.” ஒருவரின் தனிப்பட்ட உடல், மனம் மற்றும் உணர்ச்சியின் இயல்பை பொறுத்து, வாழ்க்கை முழுவதும் அவரது முழுமையான தனிப்பட்ட மாதிரி; (தனிப்பட்ட கர்மவினை பொறுத்து) ஒருவரது தார்மீக பழக்கங்கள் அவரது இனம், சமூகம், தோற்றம், ஆரோக்கியம், அறிவு, திறமைகள் மற்றும் தகுதிகள், ஆசைகள் மற்றும் மனப்பாங்குகள், சமயம், சம்பிரதாயம், குடும்பம் மற்றும் குருவிடம் பிரதிபலிக்கும். §

***dharmashala (dharmaśāla):*** धर्मशाल “Abode of righteousness.” தர்மசாலை. துறவிகள் மற்றும் சில நேரங்களில் யாத்திரை செல்லும் அல்லது தனியாக ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபட்டு இருக்கும் சாதாரண மக்களுக்கு மதம் தொடர்பான பயிற்சிகளை அளிக்கும் மடம் அல்லது ஆசிரமம். இது சைவ சித்தாந்த தேவாலயத்தில், கவாய் ஆதீனத்தின் கிளை மடாலயங்களை குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது. §

**dhoti (dhotī):** धोती (Hindi). வேட்டி (தமிழ்). உடலில் இடுப்புக்கு கீழே உடுத்திக்கொள்ளப்படும் தைக்கப்படாத நீளமான துணி. மேலும் இது சில சமயங்களில், அந்த துணியை கால்களுக்கு நடுப்பகுதி வழியாக வெளியே இழுத்து, இடுப்பில் செருகும் பஞ்சகச்ச முறையிலும் உடுத்திக்கொள்வதுண்டு. இது ஆண்கள் உடுத்தும் ஒரு இந்து பாரம்பரிய உடை ஆகும். மேலும் தகவலுக்கு: *வேஷ்டி.*§

**dhyana (dhyāna):** ध्यान “Meditation.” தியானம். மேலும் தகவலுக்கு: *அஷ்டாங்க யோகம்.*§

***diksha (dīkshā):*** दीक्षा “Initiation.” தீட்சை. இது ஒரு ஆசான் அல்லது குரு தனது ஆசிகளை வழங்கி, ஒரு சாதகரை ஆன்மீக விழிப்புணர்வு மற்றும் பயிற்சியின் ஒரு புதிய உலகில் அழைத்து செல்லும் புனிதமான அறிமுகம் ஆகும். இது ஆசான் மற்றும் அவரது பரம்பரையுடன் இருக்கும் தொடக்கநிலை அல்லது ஆழமான உறவை குறிப்பிடுகிறது மற்றும் இதனுடன் வழக்கமாக ஒரு சடங்கும் நடைபெறுகிறது. விழிப்புணர்வை பெறும்

தருணமாக மதிக்கப்படும் தீட்சை ஒரு தொடுதல், ஒரு சொல், ஒரு பார்வை அல்லது ஒரு சிந்தனை மூலம் வழங்கப்படுகிறது. பெரும்பாலான இந்து பிரிவுகள், அதிலும் குறிப்பாக சைவ சமய பிரிவுகள், ஒரு சற்குருவிடம் இருந்து தீட்சை பெற்றால் மட்டுமே ஞானோதயத்தை அடைய முடியும் என்று அறிவுறுத்துகிறார்கள். §

**Dipavali (Dīpāvalī):** दीपावली "Row of Lights." *தீபாவளி.* வருடந்தோறும் அக்டோபர்/நவம்பர் மாதங்களில் உலகெங்கும் இருக்கும் இந்துக்களின் எல்லா பிரிவினரும் தங்கள் வீட்டிலும் வெளியிலும், தீய சக்திகள் மீது நேர்மறை சக்திகள் வெற்றி பெறுவதால், வாழ்க்கையில் இருக்கும் இருள் அகன்று வெளிச்சம் அடைவதை கொண்டாடும் விதமாக, அவர்கள் விளக்குகளை ஏற்றி பட்டாசுகள் மற்றும் மத்தாப்புக்களை வெடித்து மகிழ்ச்சியாக கொண்டாடும் ஒரு மிகவும் பிரபலமான பண்டிகை ஆகும். §

**இருமைவாதம் (dualism):** மேலும் தகவலுக்கு: *துவைதம்-அத்வைதம்.*§

**dvaita-advaita:** द्वैत अद्वैत "Dual-nondual; twoness-not twoness." துவைதம்-அத்வைதம்: "இருமை-இருமையற்ற தன்மை." இது இந்து சமயத்தில் மிகவும் முக்கியமான தத்துவப் பிரிவுகளில் ஒன்றாக விளங்குகிறது. ஒரு விரிவான வகைப்பாட்டின் இரண்டு முனைகளாக துவைதம் மற்றும் அத்வைதம் விளங்குகின்றன. —**துவைத்தம்:** இந்த இருமைவாத கோட்பாட்டின் படி உண்மைப்பொருள் என்பது இரண்டு குறைக்க முடியாத கோட்பாடுகள், பிரிவுகள், உண்மைகள் போன்றவற்றை கொண்டுள்ளது. உதாரணத்திற்கு இறைவனும ஆன்மாவும் நிரந்தரமாக பிரிந்து இருப்பதாக கருதப்படுகிறது. அதனோடு தொடர்புடைய நான்கு சொற்களை இங்கே காணலாம். —**இருமைவாதம் சார்ந்த (dualistic) :** இருமையை (நன்மை-மற்றும்-தீமை, உயர்ந்த-மற்றும்-தாழ்ந்த, அவர்கள்-மற்றும்-நாங்கள்) வரம்பு மீறியதாக கருதாமல் நிரந்தரமானவை என்று கருதும் கோட்பாடுகள், படைப்புக்கள், தத்துவங்கள் சார்ந்தது. —**பன்மைவாதம்:** இது ஒருமைவாதம் சாராமல் இருக்கிறது, மற்றும் இது மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட நிரந்தரமான தனித்த உண்மைப்பொருட்களை வலியுறுத்துகிறது. உதாரணத்திற்கு கடவுள், ஆன்மா மற்றும் உலகம். —**அத்வைதம்:** இந்த இருமைவாதம் அல்லாத அல்லது ஒருமைவாத கோட்பாட்டில், உண்மைப்பொருள் என்பது இறுதியில் தனித்த பாகங்கள் எதுவும் இல்லாமல் கொள்கை, சாரம் அல்லது கடவுளாக ஒரு முழுமையான அடிப்படையை கொண்டுள்ளது. சுருக்கமாக சொன்னால், இறைவன் எங்கும் இருக்கிறார். —**ஒருமைவாத மதநம்பிக்கை:** இது ஒருமைவாதம் மற்றும் இருமைவாதத்தை உள்ளடக்கிய ஒரு இருதுறவ கண்ணோட்டம். §

**ஞானோதயம் (Enlightenment):** இது அத்வைத சைவர்களுக்கு ஆத்மஞானம், நிர்விகல்ப சமாதியாகவும்; முடிவான ஸித்தியாகவும், சில சமயங்களில் பரமாத்தும தரிசனம் அல்லது ஆத்ம தரிசனம் என்றும் குறிப்பிடப்படுகிறது. §

**தனக்குள் நிலைத்து இருத்தல், சமாதி (enstasy):** பரவசநிலை (ecstasy) என்று "தன்னைவிட்டு விலகி வெளியே இருத்தலை" குறிப்பிடும் மேற்கத்திய கண்ணோட்டத்திற்கு எதிர்பதமாக, மிர்சியா எலியட் கிழக்கத்திய உருவாக்கிய "தனக்குள் இருத்தல்" (entasy) என்ற ஒரு சொல்லை உருவாக்கினார். இது *சமாதி* என்ற சொல்லுக்கு, ஆங்கிலத்தில் சரி நிகரான சொல்லாக தேர்ந்தெடுக்கப்பட்டது. §

**ஆன்மாவின் பரிணாம வளர்ச்சி (evolution of the soul):** *அத்யாத்ம பிரசார.* சைவ சித்தாந்தத்தில், ஆன்மாவின் பரிணாம வளர்ச்சி என்பது ஒரு முன்னேற்றம் பொருந்திய விரிவாக்கம், வளர்ச்சி மற்றும் தனது உள்ளார்ந்த, தெய்வீக விதியை நோக்கி பக்குவமடைவதை குறிப்பிடுகிறது. மேலும் இது சிவபெருமானுடன் நடைபெறும் முழுமையான ஐக்கியம் ஆகும். ஒவ்வொரு ஆன்மாவும் இயல்பாக எப்போதும் முழுமையாக இருக்கிறது. ஆனால் அது சிவபெருமான் மூலம் வெளியிடப்பட்ட ஒரு தனிப்பட்ட ஆனந்தமய கோசமாக, வளர்ச்சி அடையாமல் ஒரு சிறிய விதை போல இருக்கிறது. ஒரு கருவாலிக்கொட்டை ஒரு மாபெரும் கருவாலி மரமாக வளர்வதற்கு அதை ஒரு இருண்ட நிலத்தடியில் புதைக்க வேண்டியிருப்பதை போல, ஆன்மா முழு முதிர்ச்சியை பெற்று இறைவனுடன் இயல்பான ஒருமையை உணர்வதற்கு, அது *மலங்களின்* இருளில் இருந்து வெளிவந்து விரிவாக்கம் பெறவேண்டும். தூல உடலின் கருத்தரிப்பின் போது ஆன்மா உருவாக்கப்படுவது இல்லை. ஆனால் அது சிவலோகத்தில் உருவாக்கப்படுகிறது. அது பூலோகத்தில் இறுதியாக பிறவி எடுக்கும் வரை விஞ்ஞானமய, மனோமய மற்றும் பிராணமய என்று அதிக அடர்த்தியான கோசங்களாக தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருகிறது. அதன் பிறகு பல பிறவி அனுபவங்களைப் பெற்று, மறுபிறவி மூலம் பக்குவம் அடைகிறது. இவ்வாறு ஆன்மாக்கள் ஒவ்வொரு பிறவியிலும் கற்றுக்கொண்டு பக்குவம் அடைகின்றன. ¶ அதில் இருந்து கிடைக்கும் அனுபவமும் பாடங்களின் விளைவாக பரிணாம வளர்ச்சி தோன்றுகிறது. அதில் பரிணாம வளர்ச்சி தொடங்கவிருக்கும் இளம் ஆன்மாக்களும் இருக்கிறார்கள், தற்காலிகமான தங்களது லௌகீக வாழ்க்கையை நிறைவு செய்யவிருக்கும் முதிர்ந்த ஆன்மாக்களும் இருக்கிறார்கள். சைவ சித்தாந்தத்தில், பரிணாம வளர்ச்சி தடைகளின் நீக்கமாக அறியப்படுகிறது, மற்றும் அது ஒரு இயல்பான விரிவாக்கம், உணர்தல்

மற்றும் ஒருவரது உண்மையான மற்றும் சுயமாக பிரகாசிக்கும் இயல்பால் தோன்றுகிறது. ஆன்மாவின் *மலங்கள்* முதிர்வதை அல்லது விலகுவதை *மலபரிபாகம்* என்று அழைக்கப்படுகிறது. ஆன்மாவின் இயல்பின் மீது பெறும் உணர்தல் ஸ்வானுபூதி (பரமாத்துமாவை அறிதல்) என்று அழைக்கப்படுகிறது. ¶ஆத்ம ஞானம் மூன்று *மலங்கள்* மற்றும் மறுபிறவியில் இருந்து விடுவிக்கும் மோக்ஷத்திற்கு வழிவகுக்கிறது. அதன் பிறகு இறுதியில் ஆன்மா மகாதேவரான சிவபெருமான், ஆதி ஆன்மா, பரமேஸ்வரனுக்குள் முழுமையாக மற்றும் பிரித்தறிய முடியாத அளவிற்கு ஐக்கியமாகும் வரை, அது தேவலோகத்தில் தனது வளர்ச்சியை தொடர்கிறது. இதனை ரிஷி திருமூலர் தனது *திருமந்திரத்தில்* இந்த ஐக்கியத்தை *விஷ்வகிராசா* (“முழுமையான ஒடுக்கம்") என்று அழைக்கிறார். ஆன்மாவின் பரிணாம வளர்ச்சி ஒரு நேரியல் முன்னேற்றமாக இல்லாமல் ஒரு நுணுக்கமான, வட்ட வடிவில் பன்முகப்பு மர்மமாக இருக்கிறது. இந்த பரிணாம வளர்ச்சி, ஆரம்பகால பிரைமேட்களில் இருந்து தோன்றிய மனித உருவத்தின் தொடக்கத்தை விளக்கும் டார்வினின் பரிணாம வளர்ச்சி கோட்பாட்டில் இடம்பெறவில்லை. §

**Ganesha (Gaṇeśa):** गणेश “Lord of Categories.” Or: “Lord of attendants *(gana),*” synonymous with *Ganapati*. விநாயகர் “கணங்களின் கடவுள்.” இவர் கணபதி என்றும் அழைக்கப்படுகிறார். இந்து சமயத்தின் ஒவ்வொரு பிரிவு மக்களும் ஆனைமுகத்துடன் மகாதேவர்களில் ஒருவராக இருக்கும் விநாயகரை அன்புடன் வழிபடுகின்றனர். §

**Ganesha Chaturthi (Gaṇeśa Chaturthī):** गणेश चतुर्थी. விநாயகர் சதுர்த்தி. விநாயகர் ஒரு ஆவணி மாத சதுர்த்தி அன்று யானை முகத்தோடும், மனித உடலோடும் கஜமுகாசுரனை அழித்து தேவர்களை மீட்டார். அதனால் அன்று முதல் இந்த தினம் விநாயகர் சதுர்த்தியாக பல்வேறு நாடுகளில் பத்து நாட்கள் வரை கொண்டாடப்பட்டு, இறுதி நாளன்று கடலில் சென்று விநாயகரை கரைக்கும் விநாயகர் விசர்ஜனம் ஒரு பெரிய அணிவகுப்பாக நடைபெறுகிறது. இந்த சந்தோஷமான தருணத்தில் இந்துக்கள் அனைவரும் ஒன்றாக வழிபடுகின்றனர். §

**Ganga sadhana (Gaṅgā sādhana):** गंगासाधन. கங்கா சாதனா. இது தேவையில்லாத சிந்தனைகளில் இருந்து விடுதலை பெறுவதன் மூலம், மனதின் சுமையை குறைக்கும் பயிற்சி ஆகும். ஒரு நதிக்கரையில் அமைதியாக அமர்ந்து, பாறைகள் மீது நதிநீர் பாய்ந்து செல்லும் போது எழும் ஓம்காரத்தை கேட்பதன் மூலம், உள்ளத்தை சுத்தம் செய்யும் சாதனா

ஆகும். ஒரு எண்ணம் தோன்றும் போது, அது மானசீகமாக வலது கையில் இருக்கும் இலையில் வைத்து, ஓடும் நதிநீரில் மெதுவாக வைக்கப்படுகிறது. அதன் பிறகு அந்த எண்ணத்தை சுமந்து செல்ல உதவியாக இருந்த நதிநீருக்கு நன்றி செலுத்தும் வண்ணம் ஒரு பூ வழங்கப்படுகிறது. இது அடியுணர்வை சுத்தம் செய்யும் செயல்முறை ஆகும், மற்றும் இதில் மனக்கசப்புகள், கோபம், பிரச்சனைகள் அல்லது தியானத்தை குலைக்க மனதில் தோன்றும் அனைத்தையும் கைவிடுவதை குறிப்பிடுகிறது. §

**இறைவன், கடவுள் (God):** வானுலக சக்தி. இது பரமாத்துமாவான சிவபெருமானை, அல்லது அவரது படைப்புகளில் ஒருவராக இருக்கும் மகாதேவர்கள் என்கிற தலைசிறந்த ஆன்மாக்களையும் குறிப்பிடுகிறது. §

**பெண் தெய்வம், அம்மன் (Goddess):** தெய்வீக சக்தியின் பெண் வடிவம்; சக்தி அல்லது தேவி. *அம்மன்* என்பது பாலின வேற்றுமையின்றி தனது இயல்பான நிலையில் சிவலோகத்தில் இருக்கும் சக்தியின் (மகாதேவர்) ஒரு பெண் புலனுணர்வு அல்லது சித்தரிப்பை குறிப்பிடலாம் அல்லது ஒரு சூட்சும பெண் உடலில் வாசம் செய்யும் ஒரு சூட்சும லோக சக்தியை குறிப்பிடலாம். §

**கடவுளை உணர்தல் (God Realization):** தனக்குள் இருக்கும் தெய்வீகத்தன்மையை நேரடியாக அல்லது தனிப்பட்ட முறையில் அறிதல். அந்த அறிதல் 1) உட்புற ஒளியின் அனுபவத்தில் தொடங்கி சச்சிதானந்தத்தை உணர்தல் என்கிற தூய உணர்வு வரை பல்வேறு நிலைகளில் இருக்கும் சவிகல்ப சமாதி (“உருவத்துடன் இருக்கும் சமாதி”) அல்லது 2) காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்த பரமாத்துமா மற்றும் யாவும் கடந்த முடிவான பரம்பொருள், பரசிவத்துடன் நடைபெறும் ஐக்கியத்தை குறிப்பிடும் நிர்விகல்ப சமாதியாக (“உருவம் இல்லாத சமாதி") இருக்கலாம். இங்கே இந்த புத்தகத்தில், *கடவுளை உணர்தல்* எனும் சொல் இரண்டு சமாதிகளையும் குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது, ஆனால் *ஆத்ம ஞானம்* எனும் சொல் நிர்விகல்ப சமாதியை மட்டுமே குறிப்பிடுகிறது. §

**கடவுள்கள், மகாதேவர்கள் (Gods):** “சுயமாக பிரகாசிக்கும் உயர்வான சக்திகள்.” இந்த புத்தகத்தில், கடவுள்கள் எனும் சொல் சிவலோகத்தில் சுயமாக பிரகாசித்து தங்களது ஆனந்தமய கோசத்தில் வாசம் செய்யும் மிகவும் உயர்வான சக்திகளை குறிப்பிடுகிறது. §

**Gorakshanatha (Gorakshanātha):** गोरक्षनाथ கோரக்ஷனாதர் (கோரக்கநாதர்). இவர் ஆதிநாத சம்பிரதாயத்தின் (கி.பி. 950) வலுவான சித்த யோக குருவாக இருந்தார். இவர் சித்த சித்தாந்த சைவ சமயத்தை விவரித்து, அதன் முதல் குருவாக இருந்தார். இவர் நேபால் மற்றும் வட இந்தியாவிலும் பயணம் செய்து சிவபெருமானின் மகிமை பற்றி புகழ்ந்து

*பேசினார்*. இன்றும் இந்த பகுதிகளில், இவரும் இவரது குருவான மத்ஸ்யேந்திரநாதரும் உயர்வாக மதிக்கப்படுகின்றனர். §

**அருள் (grace):** இது இறைவனின் அனுக்கிரக சக்தியை ("இரக்கம், ஆதரவு வழங்குதல்") குறிப்பிடுகிறது, மற்றும் இதன் மூலம் ஆன்மாக்கள் தங்களது உண்மையான தெய்வீக பண்பின் மீது விழிப்புணர்வை பெறுகிறார்கள். ஒரு பக்தன் தனது ஆன்மீக பயணத்தில் பக்குவமடையாத நிலையில் இருக்கும் போது, இறைவனிடம் இருந்து தனக்கு பரிசுகள் அல்லது வரங்கள் பெரும்பாலும் எந்த தடையும் இல்லாமல் கிடைப்பதை உணர்கிறான். பக்குவமடைந்த ஆன்மாவிற்கு தன்னை சுற்றி அருள் நிறைந்து இருப்பது தெரிகிறது. அவருக்கு இறைவனின் செயல்கள் அனைத்தும் நன்மை செய்து பயன் தருவதாக தோன்றினாலும் தோன்றாவிட்டாலும், அவர் அவற்றை இறைவனது அருளாக காண்கிறார். அருள் என்பது ஞானோதய சக்தியாக அல்லது அனுக்கிரக சக்தியாக மட்டும் இல்லாமல், ஆன்மா பரிணாம வளர்ச்சி அடைவதற்காக சிவபெருமான் உலக அனுபவத்தை வழங்கி, ஆன்மாவின் உணர்வை கட்டுப்படுத்த பயன்படுத்தும் ஆக்கல், காத்தல், அழித்தல் மற்றும் மறைத்தல் என்ற அவரது மற்ற நான்கு சக்திகளையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் பொதுவாக பார்க்கும் போது, அருள் என்பது இறைவனிடம் இருந்து நிரந்தரமாக பாய்ந்து செல்லும் அன்பு மற்றும் இரக்கம், *கருணை* என்கிற *கிருபை* ("மென்மை, இரக்கம்") மற்றும் பிரசாதமாக ("தெளிவு, தூய்மை") இருக்கிறது. ஆன்மாவின் தெய்வீக பண்பை மறைக்கும் சக்தியாக இருக்கும் *திரோதான சக்தியின்* மூலம் ஆணவம், கர்மவினை மற்றும் மாயையின் மூன்று மலங்களையும் சிவபெருமான் ஆன்மாவுடன் கட்டி வைக்கிறார். உலக அனுபவத்தின் மூலம் ஆன்மா வளர்ச்சி அடைந்து பக்குவமடைய வாய்ப்பு வழங்கும் நோக்கத்துடன் உணர்வு கட்டுப்படுத்தப்படுகிறது. §

**grihastha (gṛihastha):** गृहस्थ "Householder." கிருகஸ்தன்: குடும்ப வாழ்க்கையை வாழும் ஆண் அல்லது பெண். திருமணமான தம்பதிகளும் அவர்களின் சொந்தங்களும். குடும்ப வாழ்க்கையை சார்ந்தது. சாம்சாரிகளாக இருக்கும் ஆண்களை மட்டும் குறிப்பிடுவதற்கு *கிருகஸ்தின்* என்றும் பெண்களை குறிப்பிடுவதற்கு *கிருகஸ்தி* என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகின்றன. *கிருகஸ்தி* வீட்டை குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது. §

**guha (guhā):** गुहा "Cave." குகை. §

**guna (guṇa):** गुण "Strand; quality." குணம். இயற்கையில் இருக்கும் மூன்று கொள்கைகள். மூன்று குணங்களின் விவரம்: 1) சத்துவ: அமைதியாக, அரிதாக, ஒளி ஊடுருவும் தன்மையுடன், நீக்கமற நிறைந்து, தூய உணர்வின் ஒளியை பிரதிபலிக்கிறது. 2) ரஜஸ்: சக்தி, இயக்கம், செயல், உணர்ச்சி மற்றும் வாழ்க்கையில் உள்ளார்ந்து இருக்கும்

"பேரார்வம்." 3) தமஸ்: "இருள்," ஜடத்துவம், அடர்த்தி மற்றும் ஒடுக்கும், தடுக்கும் மற்றும் கலைக்கும் சக்தி. §

**guru:** गुरु "Weighty one," குரு. சிறந்த புலமை அல்லது திறமை மீது இருக்கும் நிபுணத்துவத்தை குறிப்பிடுவது. குறிப்பாக சமயம் சார்ந்த இசை, நடனம், சிற்பக்கலை போன்ற ஏதேனும் ஒரு துறையில் ஒரு ஆசிரியர் அல்லது வழிகாட்டியாக இருப்பவர். வழக்கமாக குரு என்ற சொல்லுக்கு முன்பாக அவரது தகுதியும் சேர்க்கப்பட்டு இருக்கும். அதனால் *குலகுரு* (குடும்பத்தின் ஆசிரியர்), *வீணாகுரு* (*வீணை* கற்பிக்கும் ஆசிரியர்) மற்றும் சற்குரு (ஜீவன்முக்தாவாக இருக்கும் ஒரு ஆன்மீக குரு). ஜோதிடத்தில், *குரு* எனும் சொல் பிரிஹஸ்பதி எனப்படும் வியாழன் கிரகத்தை குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது. *அத்வயதாரக* உபநிடதம் (14-18), *குரு* என்ற சொல்லுக்கு "இருளை (*கு*) அகற்றுபவர் (*ரு*)" என்று குறிப்பிடுகிறது. §

**guru jayanti (guru jayantī):** गुरु जयन्ती குரு ஜெயந்தி. சீடர்கள் வருடந்தோறும் கொண்டாடும் சற்குருவின் பிறந்தநாள். அப்போது வழக்கமாக அந்த குருவிற்கு *பாதபூஜை* நடைபெறுகிறது. குரு பூஜை நடைபெறும் இடத்தில் இல்லை என்றால், அவரை பிரதிநிதித்துவம் செய்து அவருடைய அதிர்வை தக்க வைத்துள்ள ஸ்ரீ *பாதுகைகளுக்கு* பூஜை செய்யப்படுகிறது. §

**guru mahasannidhanam (guru mahāsannidhānam):** गुरु महासन्निधानम् குரு மகாசன்னிதானம். ஒரு பாரம்பரிய *ஆதீனத்தின்* ஆன்மீக தலைவர். மேலும் தகவலுக்கு: *ஆதீனகர்தார்.* §

**guru parampara (guru paramparā):** गुरुपरंपरा "Preceptorial succession" (literally, "from one to another"). குரு பரம்பரை. ஆன்மீக குருமார்களின் அதிகாரப்பூர்வ வாரிசுகளின் தொடர்ச்சி; ஒரு குரு இன்னொரு குருவிற்கு வழங்கும் சூட்சும சக்தி மற்றும் அதிகாரப்பூர்வ தொடர்ச்சியின் சங்கிலி. *மேலும் தகவலுக்கு: சம்பிரதாயம்.*§

**guru pitham (guru pīṭha):** गुरुपीठ"Seat; pedestal; foundation." குருபீடம். 1) அரியணை போன்று ஒரு மடாதிபதி அமரும் ஒரு புனிதமான இருக்கை. 2) அத்தகைய ஒரு ஆன்மீக ஆணையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு *ஆதீனம்*, ஆசிரமம் அல்லது மடம். §

**guru-shishya system (guru-śishya system):** गुरुशिष्य "Master-disciple system." குரு-சீடன் அமைப்பு. இந்து சமயத்தில் இருக்கும் இந்த முக்கியமான கல்விமுறையில், ஆசிரியர் தனது அறிவு மற்றும் பாரம்பரியத்தை ஒரு மாணவனுக்கு கற்றுத் தருகிறார். அத்தகைய அறிவு வேத-ஆகம கலை, கட்டிடக்கலை அல்லது ஆன்மீகம் என்று எதை சார்ந்து

இருந்தாலும், அது குரு மற்றும் சீடனுக்கு இடையே உறவை வளர்ப்பதன் மூலம் வழங்கப்படுகிறது. §

**Hanuman (Hanumān):** हनुमान् (Hindi) அனுமார். இது சமஸ்கிரதத்தில் *அனுமத்* என்ற சொல்லில் இருந்து தோன்றியது மற்றும் "பெரிய தாடையை உடையவர்" என்பது இதன் பொருள். இவர் *இராமாயணத்தில்* வலுவான வானரக் கடவுளாகவும், பிரபலமான *அனுமான்-நாடகாவில்* கதாநாயகனாகவும் இருக்கிறார். அவர் தனது எஜமானர் ராமருக்கு முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட சேவகராக இருந்தார். இந்த பிரபலமான தெய்வம் *தாஸ்ய* பக்திக்கு முன் உதாரணமாகவும் விளங்கினார். §

**hatha yoga (hatˑa yoga):** हठयोग "Forceful yoga." ஹட யோகம். இது உடலுக்கு புத்துணர்ச்சி வழங்குவதற்காக, பழங்காலத்தில் ரிஷிகள் மற்றும் *தபஸ்விக்கள்* மூலம் உருவாக்கப்பட்ட உடல் மற்றும் மனம் சார்ந்த பயிற்சிகளின் அமைப்பு ஆகும். இந்த அமைப்பு தற்போது தியானம் செய்ய உடல் மற்றும் மனதை தயார் செய்ய பயன்படுகிறது. §

***Hatha Yoga Pradipika (Haṭha Yoga Pradīpikā):*** हठयोगप्रदीपिका "Elucidation of hatha yoga." ஹட யோக பிரதீபிகா. "ஹட யோகம் பற்றிய விளக்கம்." 14 ஆம் நூற்றாண்டில் 389 செய்யுள்களுடன் ஸ்வாத்மாராம யோகி இயற்றிய இந்த நூல், ஹட யோகத்தின் தத்துவம் மற்றும் பயிற்சிகளை விளக்குகிறது. §

**Hindu:** हिन्दु இந்து சமயத்தை பின்பற்றுபவர். மேலும் தகவலுக்கு: *இந்து சமயம்.* §

**Hinduism (Hindu Dharma):** हिन्दुधर्म இந்து தர்மம். இது இந்தியாவில் தோன்றிய சமய மற்றும் கலாச்சார அமைப்பு ஆகும். இது தற்போது சுமார் ஒரு பில்லியன் மக்களால் பின்பற்றப்படுகிறது. அதில் பெரும்பாலானோர் இந்தியாவில் இருந்தாலும், மற்ற நாடுகளிலும் இந்திய வம்சாவளியினர் பெருமளவில் இருக்கிறார்கள். இது சனாதன தர்மம், "நிலையான சமயம்" மற்றும் வைதீக தர்மம், "வேதங்களின் சமயம்"என்றும் அழைக்கப்படுகிறது. இது எண்ணற்ற நம்பிக்கைகளின் குடும்பமாக இருக்கிறது. இதன் நான்கு முக்கிய பிரிவுகளாக சைவ சமயம், வைணவ சமயம், சாக்த சமயம் மற்றும் ஸ்மார்த்த சமயம் விளங்குகின்றன. §

***homa:*** होम "Fire-offering." ஹோமம். இது வழக்கமாக செங்கற்களால் உருவாக்கப்பட்ட ஒரு *ஹோம குண்டத்தில்,* அக்னியை மாத்தியமாக வைத்து தெய்வத்திற்கு

நைவேத்தியங்களை வழங்கும் ஒரு புனிதமான சடங்காக விளங்குகிறது. *ஹோமத்தில்* இருக்கும் சடங்குகள் *வேதங்கள், ஆகமங்கள்* மற்றும் *தர்ம* மற்றும் *க்ரிஹ்ய சாஸ்திரங்களில்* அறிவுறுத்தப்பட்டுள்ளன. §

**Iccha shakti (icçhā śakti):** इच्छाशक्ति "Desire, will." இச்சா சக்தி. "ஆசை, விருப்பம்."

சிவபெருமானின் மூன்று முக்கிய சக்திகளில் ஒன்றாக விளங்குகிறது. §

***ida nadi (iḍā nāḍī):*** इडानाडी "Soothing channel." "அமைதியான பாதை." இடா நாடி.

பெண்மை பண்புடன் முதுகுத்தண்டு வழியாக செல்லும் மனோஉணர்வு ஓட்டம். §

**இம்கைப் (im kaif) (īm» kaīf»):**  (Shum) ஷூம். சாட்சியை கடந்து இருக்கும் நிலை. இது ஆத்ம ஞானத்தை விளக்கும் சொல்லாக இல்லாவிட்டாலும், அந்த அனுபவமற்ற நிலைக்குள் நுழைவதை குறிக்கிறது. *ஈம்-கா-ஈப்* என்று உச்சரிக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *ஷூம்.*§

**உள்ளுணர்வு சார்ந்த (instinctive):** "Natural" or "innate." "உள்ளார்ந்த" அல்லது "இயல்பான." விலங்குகள் உலகம் மனிதர்களின் தூல மற்றும் கீழ்நிலை சூட்சும அம்சங்களை ஆணையிடும் இயக்கங்கள் மற்றும் உத்வேகங்கள். உ.தா. சுய-பாதுகாப்பு, இனப்பெருக்கம், பசி மற்றும் தாகம், மற்றும் பேராசை, வெறுப்பு, கோபம், அச்சம், காமம் மற்றும் பொறாமையின் உணர்ச்சிகள். §

**உள்ளுணர்வு மனம் (instinctive mind):** Manas *chitta*. மனஸ் *சித்த*. புலனுணர்வு, உடலின் இயக்கம் மற்றும் சாதாரண சிந்தனை மற்றும் உணர்ச்சியை கட்டுப்படுத்தும் கீழ்நிலை மனம். §

**உட்புறமாக வழிபாடு (internalized worship):** Yoga. யோகம். வெளிப்புற சடங்குகள் இல்லாமல், தியானம் அல்லது ஆழ்ந்த சிந்தனை வழியாக கடவுள் அல்லது மகாதேவர்களை வழிபடுதல் அல்லது தொடர்பு கொள்ளுதல்.§

**Iraivan:** இறைவன் "Worshipful one; divine one." கடவுளை அழைக்கப் பயன்படும் மிகவும் பழமையான தமிழ் சொற்களில் ஒன்று. மேலும் தகவலுக்கு: *சன் மார்க சரணாலயம்.*§

**'இறைவன்' கோயில் (Iraivan Temple):** மேலும் தகவலுக்கு: *சன் மார்க சரணாலயம்.* §

**Jagadacharya (jagadāchārya):** जगदाचार्य "World teacher." ஜகதாச்சார்யா. " உலகிற்கு ஆசிரியராக இருப்பவர்." §

***japa:*** जप "Recitation." ஜெபம். ஒரு மந்திரத்தை அமைதியாகவோ அல்லது சத்தமாகவோ ஒருமுகச்சிந்தனையுடன் தொடர்ந்து உச்சரிக்கும் போது, ஒரு மணிமாலையைக் கொண்டு அதை எண்ணும் பயிற்சி. கர்வம் மற்றும் அகந்தை, பொறாமை, அச்சம் மற்றும் குழப்பத்தை தணிப்பதற்கு இது ஒரு தீர்வாக இருக்கிறது. §

***jayanti (jayantī):*** जयन्ती "Birthday." ஜெயந்தி. "பிறந்தநாள்." மேலும் தகவலுக்கு: *குரு ஜெயந்தி.* §

***jiva (jīva):*** जीव "Living, existing." From *jiv,* "to live." ஜீவன். "வாழ்ந்துகொண்டு இருக்கிற." தனிப்பட்ட ஆன்மா, ஆத்மன் ஒரு உடலுக்குள் இருக்கும் நிலை. §

***jivanmukta (jīvanmukta):*** जीवन्मुक्त "Liberated soul." *ஜீவன்முக்தா.* "முக்தி பெற்ற ஆன்மா." ஆத்ம ஞானம், பரசிவத்தை குறிப்பிடும் நிர்விகல்ப சமாதியை அடைந்து, ஒரு மனித உடலில் வாழும் போதே மறுபிறவியில் இருந்து முக்தி பெற்றவர். (இது உடலை விட்டு உயிர் பிரியும் போது முக்தி பெறுகிற, *விதேகமுக்தாவில்* இருந்து மாறுபட்டு இருக்கிறது.) இந்த ஸித்தி பல பிறவிகளில் செய்த தீவிர முயற்சி, சாதனா மற்றும் தவத்தின் முடிவாக அமைகிறது, மற்றும் இதற்கு இந்த பிறவியில் முழுமையான துறவறம் என்கிற சந்நியாசம் (இவர் லௌகீக உலகிற்கு இறந்துவிட்டதால், அவர் தனது இறுதி சடங்கை தானே செய்து கொள்கிறார்) தேவைப்படுகிறது. இந்த தூல உடலில் *ஜீவன்முக்தா* தனது வாழ்க்கையை பூர்த்தி செய்துக்கொண்டு இருக்கும் போது, அவர் நிர்விகல்ப சமாதிக்குள் மீண்டும் மீண்டும் சென்று வரும் திறமையை பெற்று இருக்கிறார். §

**jnana (jñāna):** ज्ञान "Knowledge; wisdom." ஞானம். "அறிவு; விவேகம்." இது ஆன்மாவின் முதிர்ந்த நிலை ஆகும். இது குண்டலினி சக்தி பிரம்மனின் கதவை உடைத்துக்கொண்டு பரசிவம், பரப்பிரம்மத்தை உணரும் போது கிடைக்கும் மெய்யறிவை குறிப்பிடுகிறது. ஞானம் என்பது அன்றாட வாழ்க்கையில் பாய்ந்து செல்லும் விழிப்படைந்த, மெய்ஞ்ஞான நிலை (*காரண சித்த*) ஆகும். §

**jnana shakti (jñāna śakti):** ज्ञानशक्ति "Power of wisdom." ஞான சக்தி. "விவேகத்தின் சக்தி." சிவபெருமானின் மூன்று முக்கிய சக்திகளில் ஒன்று. கார்த்திகேயனின் *வேலை* குறிப்பிடும் இன்னொரு சொல். §

**jnana pada (jñāna pāda):** ज्ञानपाद "Stage of wisdom." ஞான பாதம். சைவ சித்தாந்த ரிஷிகளை பொறுத்தவரையில், ஞானம் என்பது ஆன்மீக விரிவக்கத்தில் நான்கு தொடர்ச்சியான *பாதங்களில்* இறுதியானது ஆகும். இது மூன்றாவது நிலையாக விளங்கும், யோக *பாதத்தின்* நிறைவேற்றம் ஆகும். இது ஒவ்வொரு *ஆகமத்தில்* இருக்கும் ஞானப் பிரிவையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *பாதம்.*§

**jnani (jñānī):** ज्ञानी "Sage." ஞானி. ஞானம் பெற்றவர். மேலும் தகவலுக்கு: *ஞானம்.*§

***jyoti:*** ज्योति "Light." ஜோதி. "ஒளி." இந்த உரையில், ஞானோதயம் பெற்ற சக்தியை குறிப்பிடுகிறது.§

***jyotisha:*** ज्योतिष From *jyoti*, "light." ஜோதிடம். இது "ஒளியை" குறிப்பிடும் *ஜோதி* என்ற சொல்லில் இருந்து உருவானது. "ஒளிகளின் (அல்லது நட்சத்திரங்கள்) அறிவியல்." இந்து சமய ஜோதிடம் கிரகங்களின் இயக்கங்கள் மற்றும் நிலைகளின் அடிப்படையில், நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை ஆய்வு செய்து, பண்புகளை வரையறுத்து மங்களகரமான நேரங்களை தீர்மானிக்கிறது. §

# K

**Kadaitswami (Kadaitswāmī):** கடையிற்சுவாமி "Marketplace swami." நந்திநாத சம்பிரதாயத்தை சேர்ந்த கைலாச பரம்பரையின் 159 ஆவது சற்குரு. இவர் 1810 ஆம் ஆண்டு பிறந்து, அக்டோபர் 13 1891 அன்று மகாசமாதி அடைந்தார். கடையிற்சுவாமி தென் இந்தியாவின் பெங்களூரில் தான் வேலை செய்த நீதிபதி பணியை துறந்து ஒரு சந்நியாசியாக மாறி, இமய மலையில் இருந்து வந்த ரிஷியிடம் பயிற்சி பெற்றார். அந்த ரிஷி கடையிற்சுவாமியை இலங்கையில் சமயப்பணியை செய்ய அனுப்பி வைத்தார். அவர் பல வருடங்கள் ஊக்கமளிக்கும் உரைகள் வழங்கி மற்றும் ஸித்திகளை வெளிப்படுத்தி, இலங்கை சைவர்களை உயர்ந்த ஆன்மீக நிலைக்கு கொண்டு வந்தார். அவர் தனது பரம்பரையையில் அடுத்த சற்குருவாக செல்லப்பசுவாமியை நியமித்தார். கடையிற்சுவாமிக்கு தீட்சையின் போது முக்தியானந்தசுவாமி என்ற பெயர் வழங்கப்பட்டது. மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை, நாத சம்பிரதாயம்.* §

**Kadavul:** கடவுள் "Beyond and within." "உள்ளார்ந்தும் யாவும் கடந்த நிலையிலும்" இருக்கும் சிவபெருமானை குறிப்பிடும் ஒரு பழங்கால தமிழ் பெயர். மேலும் தகவலுக்கு: *சிவா.*§

***kaif (kaīf»):*** [illegible] கைஃப். சுத்தமான சாட்சி தன் மீது மட்டுமே கவனம் செலுத்தும் நிலை. கவனம் செலுத்துகிறோம் என்பதில் கவனமாக

இருப்பதற்கு ஒரு சில நொடிகள் தேவைப்படும்; ஆனால் அதை நீண்டநேரம் தக்க வைத்துக் கொள்வதற்கு, பூர்வாங்கமாக சில வேலைகள் செய்யவேண்டி இருக்கும். §

**Kailasa (Kailāsa):** कैलास “Crystalline” or “abode of bliss.” கைலாயம், கைலாசம். இது மேற்கு திபெத்தில் இருக்கும் இமயமலை சிகரம்; சிவபெருமானின் பூலோக வாசஸ்தலமாக கருதப்படும் இந்த இடத்திற்கு, இந்துக்கள் மற்றும் திபெத் நாட்டு பௌத்தர்கள் யாத்திரை செல்கிறார்கள். §

**Kailasa Parampara (Kailāsa Paramparā):** कैलासपरंपरा கைலாச பரம்பரை. இது 163 சித்தர்களின் ஒரு ஆன்மீக பரம்பரையாக, நந்திநாத சம்பிரதாயத்தின் ஒரு முக்கிய பிரிவாக, அத்வைத சைவ சித்தாந்தத்தின் பழங்கால தத்துவத்தை பின்பற்றி வருகிறது. வரலாற்று குறிப்பின் படி, சுமார் 2,250 வருடங்களுக்கு முன்பாக, இந்த குருமார்களில் முதன்மையானவராக மகரிஷி நந்திநாதா (அல்லது நந்திகேஸ்வர) விளங்குகிறார். இவர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டை சேர்ந்த திருமூலர் மற்றும் ஏழு மற்ற சீடர்களுக்கு சற்குருவாக இருந்தார் என்று *திருமந்திரம்* குறிப்பிடுகிறது. இந்த பரம்பரை பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து இயங்கி, இன்றும் நிலைத்து இருக்கிறது. இவர்களில் சமீபகாலத்தில் வாழ்ந்த மூத்த சித்தர் “இமய மலைகளில் இருந்து வந்த ரிஷி" என்று அழைக்கப்படுகிறார். அவர் அந்த புனிதமான மலைகளில் இருந்து வந்ததால், அவ்வாறு அழைக்கப்படுகிறார். இவர் தென் இந்தியாவில் வாழ்ந்த கடையிற்சுவாமிக்கு (சுமார் 1810–1875) பரம்பரையின் பொறுப்பை வழங்கினார். அந்த பொறுப்பை கடையிற்சுவாமி செல்லப்பசுவாமிக்கு (1840–1915) வழங்கினார். செல்லப்பசுவாமி அந்த பொறுப்பை சிவயோக சுவாமிக்கு (1872–1964) வழங்கினார். அவர் சிவாய சுப்பிரமுனியசுவாமிக்கு (1927–2001) பொறுப்பை வழங்கினார், மற்றும் அவர் 2001 ஆம் ஆண்டு தற்போது சற்குருவாக இருக்கும் சற்குரு போதிநாத வேலன்சுவாமிக்கு (1942–) பொறுப்பை வழங்கினார். மேலும் தகவலுக்கு: *நாத சம்பிரதாய.* §

**Kali Yuga:** कलियुग “Dark Age.” கலியுகம். பிரபஞ்சம் கடந்து செல்லும் நான்கு கட்டங்களின் தொடர் சுழற்சியில், கலியுகம் கடைசி யுகம் ஆகும். இந்த யுகத்தில் அறியாமை சக்தி முழு வீச்சில் இயங்கி, ஆன்மாவின் பல நுணுக்கமான புலன்கள் தெளிவற்று இருப்பதால், இதை இரவின் அதிக இருண்ட பகுதியுடன் ஒப்பிடலாம். மேலும் தகவலுக்கு: *யுகம்.*§

***karehana (ka-reh-ā-na):***  கரேஹானா. இது சமஸ்கிருதத்தில் *இடா* என்று அழைக்கப்படும் மனோஉணர்வு ஓட்டத்தை குறிப்பிடுகிறது. இது இளஞ்சிவப்பு நிறத்தில் முதுகுத்தண்டில் கீழ்நோக்கி உடலின் இடது புறம் வரை செல்கிறது. பெண்மை குணத்துடன் அடங்கி இருக்கும் *கரேஹானா,* உயிர்சக்தியில் இருக்கும் தூல-உணர்ச்சியின் சக்தி ஆகும். §

**karma:** कर्म "Action," "deed." கர்மா, கர்மவினை. கர்மவினை என்பது 1) ஒரு செயல் அல்லது நடவடிக்கை; 2) காரண காரியத்தின் அடிப்படை; 3) ஒரு விளைவு அல்லது "செயலின் விளைவு" (*கர்மபல*) அல்லது விரைவில் செய்தவரையே வந்து சேரும் "பின்விளைவு" (*உத்தரபல*) ஆகியவற்றை குறிப்பிடுகிறது. வினை விதைத்தவன் வினை அறுப்பான். நாம் இந்த பிறவியில் செய்த செயல்களுக்கு, இந்த பிறவி அல்லது வரும் பிறவிகளில் பலனை அனுபவிப்போம். சுயநலம், வெறுப்பு நிறைந்த செயல்கள் (பாபகர்மா அல்லது *குகர்மா*) வேதனையை விளைவிக்கும். நல்ல செயல்கள் (*புண்ணியகர்மா* அல்லது *சுகர்மா*) அன்பு கலந்த எதிர்வினைகளை கொண்டு வரும். கர்மவினை மூன்று வகைப்படும்: *சஞ்சித, பிராரப்த* மற்றும் *க்ரியாமன.* **—சஞ்சித கர்மா:** "சேகரிக்கப்பட்ட செயல்கள்." இந்த பிறவி மற்றும் முற்பிறவிகளில் செய்த கர்மவினைகளின் கூட்டுத்தொகை. **—பிராரப்த கர்மா:** "தொடங்கப்பட்ட செயல்கள்; இயக்கத்தில் இருக்கும் செயல்கள்." பலன்களை வழங்கிக்கொண்டு ஒருவரின் உடற்பண்புகள், தனிப்பட்ட மனநிலைகள் மற்றும் நட்புறவுகள் உட்பட இந்த பிறவியில் நடைபெறும் சம்பவங்கள் மற்றும் சூழ்நிலைகளை உருவாக்கும் *சஞ்சித* கர்மவினையின் பகுதி. **—க்ரியாமன கர்மா:** "உருவாக்கிக்கொண்டு இருக்கும் கர்மவினை." §

**karma yoga:** कर्मयोग "Union through action." கர்மயோகம். சுயநலமற்ற சேவை. §

**கவாய் ஆதீனம் (Kauai Aadheenam):** 1970 ஆம் ஆண்டு சிவாய சுப்பிரமுனியசுவாமி ஸ்தாபனம் செய்த மடம் மற்றும் கோயில் கலந்த வளாகம். இது சைவ சித்தாந்த தேவாலயத்தின் சர்வதேச தலைமையகமாக விளங்குகிறது. §

***kavadi (kāvadi):*** காவடி. குறிப்பாக தை பூசத்திருவிழாவின் போது பக்தர்கள் முருகப்பெருமான் கோயிலுக்கு சென்று காவடி எடுப்பதாக வேண்டிக்கொள்வார்கள். இந்த காவடியில் முருகப்பெருமானுக்கு *அபிஷேகம்* செய்ய ஒரு நீளமான தடியின் இரு முனைகளிலும் பால், தேன், இளநீர் குடங்கள் தொங்க விடப்பட்டு, மேலே அழகாக அலங்கரிக்கப்பட்டு இருக்கும். திருவிழாவின் போது இந்த காவடிகளின் பெரிய அணிவகுப்பு நடைபெறும். வழக்கமாக தெய்வத்திடம் வேண்டிக்கொள்பவரின் நாக்கு அல்லது உடலின் மற்ற பகுதிகள் ஒரு சிறிய வெள்ளி வேல் அல்லது வளைந்த வெள்ளி ஊசிகளால் குத்தப்பட்டு இருக்கும். §

***kavi (kāvi):*** காவி "Ocher-saffron color." கங்கை நதிக்கரையில் அமர்ந்து தியானம் செய்யும் அல்லது வாழும் சாதுக்கள் அணியும் உடையின் பெயர். இதன் காரணமாக சந்நியாசி அணியும் உடையும் காவி நிறத்தில் இருக்கிறது. இதற்கு சமஸ்கிருதத்தில் *கஷாய* என்று பெயர். §

**khadi (khādī):** खादी "Cotton." காதி, கதர். இந்தியாவில் கைகளால் நூற்க்கப்பட்டு கைகளால் நெய்த துணி. இன்றைய பயன்பாட்டிற்கு காதியின் மூலப்பொருள்களாக பருத்தி, பட்டு அல்லது கம்பளி பயன்படுத்தப்படுகின்றன. அவை ஒரு கைராட்டினத்தில் நூற்க்கப்படும். §

**kirtana (kīrtana):** कीर्तन "Praising." *கீர்த்தனை.* இறைவன், மகாதேவர்கள் மற்றும் குருவை போற்றும் தெய்வீக பாடல்கள் மற்றும் ஆடல்கள். இது பல இந்து சமய பிரிவுகளில் கூட்டு வழிபாட்டில் ஒரு முக்கிய வடிவமாக இருக்கிறது. §

**kosha (kośa):** कोश "Sheath; vessel, container; layer." கோஷம், கோசம். ஆன்மா தத்துவரீதியாக, ஐந்து கோசங்கள் மூலம் பல்வேறு லோகங்கள் அல்லது இருப்பின் பல்வேறு நிலைகளில் ஒரே சமயத்தில செயல்படுகிறது. அவை சில சமயங்களில், ஒரு வெங்காயத்தில் இருக்கும் தோள்களுடன் ஒப்பிடப்படுகின்றன. கோசங்களில் அதிகரிக்கும் நுணுக்கங்களின் தன்மையை அடிப்படையாக கொண்டு, அவை பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளன. —**அன்னமய கோசம்** ("உணவால் உருவான கோசம்"): ஆன்மாவின் புலன்களை ஒப்பிடும் போது, தூல அல்லது காந்த உடல் மிகவும் அடர்த்தியாக இருந்தாலும், பதினான்கு சக்கரங்களால் அதில் மட்டுமே செயல்பட முடியும் என்பதால், அது ஆத்ம ஞானம் மற்றும் பரிணாம வளர்ச்சிக்கு அத்தியாவசியமாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம்.* —**பிராணமய கோசம்** ("பிராணனை உள்ளடக்கிய கோசம்"): இது பிராணன் அல்லது ஆரோக்கிய உடல், அல்லது ஆகாச உடல் அல்லது ஆகாச நகல் என்றும் அழைக்கப்படுகிறது. இது உயிர், சுவாசம் மற்றும் உடல் ஆற்றலின் மூலமாக இருப்பதால், இது தூல உடலுடன் இணைந்து இருந்து, தூல உடல் மற்றும் சூட்சும உடலுக்கு இடையே தொடர்பாக விளங்குகிறது. பிராணமய கோசத்தில் "அத்தியாவசிய காற்றுகளாக" இருக்கும் ஐந்து அடிப்படை ஓட்டங்கள் அல்லது வாயுக்களாக பிராணன் இயங்குகிறது. மரணத்தின் போது தூல உடலில் இருந்து *பிராணமய கோசம்* பிரிகிறது. மேலும் தகவலுக்கு: *பிராணன்.* —**மனோமய கோசம்** ("மனதால் உருவான கோசம்"): கீழ்நிலை சூட்சும உடலை சார்ந்த *மனஸில்* இருந்து தோன்றும் "சிந்தனை, விருப்பம், ஆசை." சாதாரண சிந்தனை, ஆசை மற்றும் உணர்ச்சியின் உள்ளுணர்வு-அறிவுணர்வு கோசம். இது புலனுணர்வு உறுப்புக்களாக இருக்கும் *ஜிதேந்திரியங்கள்* மற்றும் செயற்கருவிகளாக இருக்கும் *கர்மேந்திரியங்களின்* இருப்பிடமாக விளங்குகிறது. தூல உடலின் வடிவத்தை எடுத்துக்கொண்டு *மனோமய கோசம்* வளர்கிறது மற்றும் அது மறுபிறவிக்கு முன்பாக அந்தர்லோகங்களில் அந்த வடிவத்தை கைவிடுகிறது. இது 1) காந்த சக்தி-காரண கோசம் (புத்தி) மற்றும் 2) காந்த சக்தி-சூட்சும கோசம் (மனஸ்) என்ற இரண்டு அடுக்குகளுடன் அறியப்படுகிறது. —**விஞ்ஞானமய கோசம்** ("அறிவெழுச்சியின் கோசம்"):

இது மனம் அல்லது அறிவாற்றலுடைய இயலுணர்வு கோசம், மற்றும் இது ஆன்மீக காந்த கோசம் என்றும் அழைக்கப்படுகிறது. இது புரிந்துணர்வு, அறிந்த நிலை, நேரடி அறிவெழுச்சி, ஞானம், இயலுணர்வு மற்றும் ஆக்கத்திறனை உள்ளடக்கிய விஞ்ஞானமாக இருக்கும் உயர்ந்த சிந்தனையின் வாகனமாக இருக்கிறது. —**ஆனந்தமய கோசம்** ("பேரின்ப உடல்"): இயலுணர்வு-மெய்ஞ்ஞான கோசம் அல்லது ஆன்மீக-காரண உடல். அதிக உட்புறமாக இருக்கும் இந்த ஆன்மாவின் வடிவம் (*ஸ்வரூப*) எல்லா உயிர், நுண்ணறிவு மற்றும் உயர்ந்த புலன்களின் முடிவான அடிப்படையாக விளங்குகிறது. இது பரசக்தி (தூய உணர்வு) மற்றும் பரசிவத்தின் (பரப்பிரம்மம்) சாரமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *ஆன்மா.*§

***kovil:*** கோவில்.§

***koyil:*** கோயில். ஆலயத்தை குறிப்பிடும் இன்னொரு சொல். மேலும் தகவலுக்கு: *கோவில்.*§

***kriya pada (kriyā pāda):*** क्रियापाद "Stage of religious action; worship." *கிரியா பாதம்.*

*வழிபாடு மற்றும் பக்தியின் நிலை*, சைவ சித்தாந்தத்தில் ஸித்தி அடையும் பாதையில் இருக்கும் நான்கு முற்போக்கான நிலைகளில் இரண்டாவதாக இருக்கும் நிலை. மேலும் தகவலுக்கு: பாதம். §

***kriya shakti (kriyā śakti):*** क्रियाशक्ति "Action power." *கிரியா சக்தி. செயலில் இருக்கும்*

*பிரபஞ்ச சக்தி. சிவபெருமானின் மூன்று அடிப்படை சக்திகளில் ஒன்று.* §

***kulaguru:*** कुलगुरु "Family preceptor" or "family teacher." *குலகுரு. குலகுரு* என்பவர் குடும்பத் தலைவர்கள் மூலமாக கூட்டு குடும்பங்களை வழிநடத்தி ஆன்மீக பாடத்தை வழங்குகிறார். அவர் ஒரு சற்குருவாக இருக்கவேண்டும் என்று அவசியம் இல்லை.§

***kulam:*** குலம் "Family" or "clan." *குலம்.* இந்த புத்தகத்தில், இந்த சொல் கவாய் ஆதீனத்தில் இருக்கும் ஐந்து துறவற குழுக்களை குறிப்பிடுகிறது. ஒவ்வொரு குழுவும் ஆற்றவேண்டிய குறிப்பிட்ட சில தொண்டுகள் மற்றும் பொறுப்புக்கள் இருக்கின்றன, மற்றும் இவை அனைத்தும் ஒன்றாக சேர்ந்து மடத்தின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன. §

***kulapati:*** कुलपति"Family head." *குலபதி.* இது குடும்பத் தலைவர் அல்லது சைவ சித்தாந்த தேவாலயத்தில் அங்கத்தினரகளாக இருக்கும் கூட்டு குடும்பம் மற்றும் தனது மேற்பார்வையில் இருக்கும் மாணவர்களின் தலைவராக இருக்கும் சமயப்பணியாளரை குறிக்கிறது. அவருடைய மனைவி *குலமாதா* என்று அழைக்கப்படுகிறார்.§

***குலபதி குடும்பம் (kulapati family):*** சைவ சித்தாந்த தேவாலயத்தில் இருக்கும் ஒரு குறிப்பிட்ட *குலபதி* அல்லது சமயப்பணியாளரின் தலைமையில் இருக்கும் மாணவர்கள் மற்றும் தேவாலய உறுப்பினர்களின் கூட்டு குடும்பம்.§

***kumbha(m):*** **कुम्भ** "Jar or pot; water vessel." கும்பம். வழக்கமாக உலோகம் அல்லது களிமண்ணில் தயாரிக்கப்படும் *கும்பங்கள்*, கோயில் பூஜைகள் மற்றும் *ஹோமங்களில்* பயன்படுத்தப்படுகின்றன. §

***kumbhabhisheka(m) (kumbhābhisheka):*** कुम्भाभिषेक "Water pot ablution." *கும்பாபிஷேகம்*. ஒரு புதிய கோயிலில் நடைபெறும் முறையான பிரதிஷ்டை மற்றும் (பன்னிரண்டு வருட இடைவெளியில்) புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகளுக்கு பிறகு நடைபெறும் குடமுழுக்கு விழா. தலைகீழான குடம் அல்லது *கும்பம்* போல காட்சியளிக்கும் கோயில் கோபுர கலசங்கள் மீது புரோகிதர்கள் புனிதமான கலச நீரை ஊற்றி சடங்குகளை நிறைவு செய்கின்றனர். §

**kundalini (kuṇḍalinī):** कुण्डलिनी "She who is coiled; serpent power." குண்டலினி சக்தி. "சுருண்டு இருப்பவள்; பாம்பின் சக்தி." நாம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் இந்த பழங்கால பிரபஞ்ச சக்தி, முதுகுத்தண்டின் அடியில் முதலில் ஒரு பாம்பைப் போல சுருண்டு இருக்கிறது, மற்றும் இது யோகசக்தியின் பயிற்சியின மூலம், இறுதியாக *சுஷும்னா நாடி* வழியாக எழுச்சி பெறுகிறது. குண்டலினி எழுச்சி பெறும் போது, அது வரிசையாக ஒவ்வொரு சக்கரத்தையும் விழிப்படைய செய்கிறது. அந்த சக்தி *சஹஸ்ரஹாரத்தின்* மத்தியில், பிரம்ம துவாரம் வழியாக துளைத்துக்கொண்டு நுழையும் போது, நிர்விகல்ப சமாதி என்கிற ஞானோதயம் தோன்றுகிறது. அதன் பிறகு *குண்டலினி சக்தி*, ஏழு சக்கரங்களில் ஏதாவது ஒரு சக்கரத்திற்கு திரும்பி ஓய்வெடுக்கிறது. குண்டலினி மீண்டும் *சஹஸ்ரஹாரத்திற்கு* திரும்பி இந்த சக்கரத்தில் தன்னை சுருட்டிக்கொள்ளும் போது, சிவசாயுஜ்ய நிறைவடைகிறது. §

**kundalini yoga (kuṇḍalinī *yoga*):** कुण्डलिनीयोग "Uniting the serpent power." குண்டலினி யோகம். திட்டமிட்டு குண்டலினி சக்தியை விழிப்படைய செய்து அதை *சஹஸ்ரஹார* சக்கரத்திற்கு வழிநடத்தி செல்ல, இராஜ யோகத்தின் அங்கமாக விளங்கும் மேம்பட்ட தியான பயிற்சிகள் மற்றும் சாதனா உத்திகளை பூர்த்தி செய்தல். இந்த யோகம் தனது உயர்வான நிலையில், தனது சொந்த தகுதியின் காரணமாக முயற்சி செய்தல் மற்றும் கற்பித்தலின் ஒரு பிரத்யேக அமைப்பாக இல்லாமல், சிறப்பாக செய்த சாதனாக்கள் மற்றும் தவத்தின் இயல்பான விளைவாக இருக்கிறது. §

***kutir (kuṭīr):*** कुटीर् "Cottage" or "hut." குடில். "குடிசை." §

***kuttuvilakku:*** குத்துவிளக்கு. ஒரு கோவில், பூஜையறை அல்லது வீட்டில் நிலைகுத்தாக இருக்கும் ஒரு பஞ்சலோக விளக்கின் மேற்பகுதியில் நெய் அல்லது நல்லெண்ணெயை தாங்குவதற்கு ஒரு குழிவான பகுதி அமைந்திருக்கும். இந்த வட்ட வடிவ விளிம்பில் சமமான இடைவெளியில் திரிகளை வைக்க நீட்சியான அமைப்புக்கள் இருக்கும். §

**ஸ்மார்த்த இந்து சமயம் (Liberal Hinduism):** நியோ இந்திய மதத்திற்கு நெருக்கமான தொடர்புடையது. மேலும் தகவலுக்கு: *நியோ-இந்திய மதம், ஸ்மார்த்த இந்து சமயம்.*§

**முக்தி (liberation):** *பாசத்தின்* பிடியில் இருந்து விடுபடும் மோக்ஷத்தை குறிக்கிறது. இதன் பிறகு ஆன்மா சம்சாரத்தில் இருந்து முக்தி (பிறப்பு இறப்பின் சுழற்சி) பெறுகிறது. சைவ சித்தாந்தத்தில் *பாசம்* என்பது, ஆன்மா பரிணாம வளர்ச்சி அடைவதற்காக அதை மறுபிறவியின் சுழற்சியில் வரையறுத்து கட்டுப்படுத்தும் *ஆணவம்*, கர்மவினை மற்றும் மாயை என்ற மும்மலங்கள் ஆகும். மோக்ஷம் என்பது இந்த மலங்களின் தடை செய்யும் சக்தியில் இருந்து ஆன்மா விடுதலை பெறுவதை குறிக்கிறது. அவை இந்த நிலையில் முற்றிலும் மறையாவிட்டாலும், ஆன்மாவிற்கு தடை விளைவிக்கும்  அல்லது கட்டுப்படுத்தும் சக்தி இல்லாமல் இருக்கிறது. §

**Linga(m) (Liṅga):** लिङ्ग "Mark." லிங்கம். மேலும் தகவலுக்கு: *சிவலிங்கம், சுயம்பு லிங்கம்.* §

***liunasi (līūnasī):*** (Shum) *லியுநாசி* (ஷூம்): தூல உடல் மற்றும் சூட்சும உடலுக்குள் இருக்கும் ஒருவரது நாடியில் ஓடும் உயிர்சக்தியை உணர்தல்; உடலுக்குள்ளும் அதனை சுற்றியும் ஓடும் சக்தியின் மீது விழிப்புணர்வை பெறுதல்.§

**லோகோவோர் (locavore):** தான் வாழும் பகுதிக்கு அருகாமையில் (அந்த இடத்தை பொறுத்து, 100 முதல் 250 மைல்கள் வரை) விளையும் உணவை (முழுமையாக இல்லாவிட்டாலும் முக்கிய உணவை) மட்டுமே சாப்பிடுபவர். உள்ளூரில் விளைந்த உணவை அருந்துவதால், பெரும்பாலான லோகோவோர்கள் தங்களுக்கும் தங்களுக்கு உணவு வழங்கும் இடங்களுடன் வலுவான தொடர்பை ஏற்படுத்தி, தொழில்மயமாக்கம் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை தவிர்த்து, தங்களது உள்ளூர் பொருளாதாரம் மேம்படுத்துவதற்கு ஆதரவு அளிக்கிறார்கள். §

***loka:* लोक** "World, habitat, realm, or plane of existence." From *loc*, "to shine, be bright, visible." லோகம். "உலகம், வாழ்விடம், பிரபஞ்சம் அல்லது உள்பொருள் இருக்கும் பகுதி." இந்த சொல் "பிரகாசிக்க, கண்ணுக்கு தென்படுகிற" என்பதை குறிக்கும் *லோச் (लोच्)* என்ற சொல்லில் இருந்து உருவானது. வெளிப்பட்ட உள்பொருளின் ஒரு பரிணாமம்; பிரபஞ்சத்தில் ஒரு பகுதி. ஒவ்வொரு *லோகமும்* ஒரு குறிப்பிட்ட உணர்வின் தொடர்ச்சியை பிரதிபலிக்கிறது அல்லது உள்ளடக்கியுள்ளது. மூன்று அடிப்படை லோகங்கள்: 1) பூலோகம்: "லௌகீக உலகம்." ஐம்புலன்களுக்கு புலப்படும்

உலகம், இது உலகங்களில் மிகவும் பருமனாக இருப்பதால், இது பரு உலகம் என்றும் அழைக்கப்படுகிறது. 2) அந்தர்லோகம்: “உட்புறமாக இருக்கும் உலகம் அல்லது மத்தியில் இருக்கும் உலகம்.” இது நுணுக்கமான அல்லது சூட்சும லோகம் என்று அழைக்கப்படுகிறது. இது தூல மற்றும் காரண லோகங்களுக்கு மத்தியில் இருக்கும் பரிணாமமமாகவும், ஆன்மாக்களின் சூட்சும உடல்கள் மறுபிறவிகளுக்கு மத்தியில் அல்லது உறங்கும் போது தற்காலிகமாக தங்கும் இடமாகவும் இருக்கிறது. 3) சிவலோகம்: “சிவபெருமான்,” மற்றும் மகாதேவர்கள் மற்றும் உயர்வாக வளர்ச்சி அடைந்த ஆன்மாக்களின் லோகம். அந்தர்லோகத்தின் ஆழத்தில் இருக்கும் காரண லோகம் ஒரு உயர்நிலை அதிர்வுடன் இருக்கிறது, மற்றும் இது மெய்ஞ்ஞான நிலை மற்றும் மிகவும் தூய்மையான சக்திகளின் உலகமாக இருக்கிறது. ஒளியின் ஆன்மீக துகள்களால் சுயமாக பிரகாசிக்கும் உடல்களுடைய ஆன்மாக்கள் வாசம் செய்யும் இந்த லோகம், ஆக்கத்திறன் மற்றும் இயலுணர்வின் லோகமாகவும், பிரபஞ்சம் நுணுக்கமான நிலையில் இருக்கும் லோகமாகவும் இருக்கிறது. இந்த லோகத்தில் சிவபெருமானும் மகாதேவர்களும் இயங்கி, அனைத்து லோகங்களின் பரிணாம வளர்ச்சிக்கு அன்புடன் வழிகாட்டி, நிரந்தரமாக பாய்ந்து செல்லும் அருளை வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். §

M***ahabharata (Mahābhārata):*** महाभारत “Great Epic of India.” மகாபாரதம். உலகின் மிகவும் நீளமான காவியம். பாண்டு, திருதராட்டிரன் என்னும் இரு சகோதரர்களின் பிள்ளைகளான பாண்டவர்கள் மற்றும் கௌரவர்களுக்கு இடையே நடைபெற்ற பெரிய போரை மையமாக வைத்து உருவாக்கப்பட்டதே இந்தக் காவியம் ஆகும். இந்த போர் தற்போதைய தில்லிக்கு அருகில் குருக்ஷேத்திரத்தில் சுமார் கி.மு. 1424 ஆம் ஆண்டு நடைப்பெற்றதாக ஒரு கருத்து நிலவுகிறது. இந்த *மகாபாரதக் காவியம்* வைணவர்கள் மற்றும் ஸ்மர்த்த சமயத்தை சேர்ந்தவர்களால் ஒரு சாஸ்திரமாக மதிக்கப்படுகிறது. §

**Mahadeva (Mahādeva):** महादेव “Great shining one;” “God.” மகாதேவர். சிவலோகத்தில் தங்களது இயல்பான, சுயமாக பிரகாசிக்கும் ஆன்மாவின் உடல்களில் வாழும் சிவபெருமான் அல்லது உயரிய பரிணாம வளர்ச்சியுடன் இருக்கும் உயிர்சக்திகளை குறிப்பிடுகிறது. சிவபெருமான் தனது முழு நிறைவான நிலையில் ஆதி ஆன்மாவாக, அந்த மகாதேவர்களில் ஒருவராக இருந்தாலும், அவர் மட்டுமே படைக்கப்படாமல், மற்ற மகாதேவர்களின் தாய்-தந்தை மற்றும் விதியாக இருக்கிறார். அவர் பரமேஸ்வரன் என்று அழைக்கப்படுகிறார். அவர் ஆதி ஆன்மாவாக இருக்க, மற்ற மகாதேவர்கள் தனிப்பட்ட ஆன்மாக்களாக இருக்கிறார்கள். §

**maharishi (maharshi):** महर्षि "Great seer." மகரிஷி. தலைசிறந்த மற்றும் அதிக செல்வாக்கு நிறைந்த சித்தர்களுக்கு வழங்கப்படும் பட்டம்.§

***mahasamadhi (mahāsamādhi):*** महासमाधि "Great enstasy." மகாசமாதி. ஒரு மகான் தூல உடலை விட்டு வெளியேறுவதை அல்லது அவரது மரணத்தை குறிக்கும் நிகழ்வு. இந்த நிகழ்வில் பங்குபெறுவது மிகப்பெரிய வரமாக கருதப்படுகிறது. மேலும் இந்த சொல், ஒரு மகானின் உடல் கல்லறையில் வைக்கப்படும் புனிதமான இடத்தையும் குறிப்பிடுகிறது. §

**Mahasivaratri (Mahāśivarātri):** महाशिवरात्रि "Siva's great night." மகாசிவராத்திரி. சைவ சமயத்தை சேர்ந்தவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும் இந்த விரதம், பிப்ரவரி-மார்ச் மாதத்தில் பௌர்ணமிக்கு முந்தைய நாள் இரவு கொண்டாடப்படுகிறது. அன்று இரவு முழுவதும் விழித்து இருந்து விரதம் இருப்பது மட்டுமில்லாமல் சுலோகம் சொல்வது, பிரார்த்தனை மற்றும் தியானம் செய்வது மற்றும் சிவபெருமானை எல்லா இருப்புக்களின் மூலமாகவும் பரமாத்துமாவாகவும் வழிபடும் மற்ற பழக்கங்களும் கடைப்பிடிக்கப்படுகின்றன. §

***mahavakya(m) (mahāvākya):*** महावाक्य "Great saying." மகாவாக்கியம். சாஸ்திரம் அல்லது ஒரு தெய்வீக புருஷர் வழங்கிய ஒரு வலுவான சூத்திரம். நான்கு மிகவும் பிரபலமான உபநிடத மகாவாக்கியங்கள் பின்வருமாறு: *பிரக்ஞானம் பிரம்ம* ("தூய உணர்வே பிரம்மம்"–*ஐத்ரேய உபநிடதம்*), *அஹம் பிரம்மாஸ்மி* ("நான் பிரம்மமாக இருக்கிறேன்"—*பிரகதாரண்க உபநிடதம்*), *தத் த்வம் அஸி* ("அந்த பிரம்மமாக நீ இருக்கிறாய்"—*சாந்தோக்ய உபநிடதம்*) மற்றும் *அயம் ஆத்மா பிரம்ம* ("இந்த ஆன்மா பிரம்மம்"—*மாண்டூக்ய உபநிடதம்*).§

**Maheshvara (Maheśvara):** महेश्वर "Great Lord." மகேஸ்வரன். சைவ சித்தாந்தத்தில், பரமேஸ்வரனிற்கு (ஆதி ஆன்மா) ஐந்து அம்சங்கள் அல்லது உருவங்கள் உள்ளன. அதில் ஒவ்வொரு அம்சமும் இறைவனின் ஐந்து சக்திகளில் ஒன்றுடன் தொடர்பில் இருக்கிறது. ஆதி ஆன்மாவாக மற்றும் தனிப்பட்ட கடவுளாக இருக்கும் சிவபெருமானுக்கு மகேஸ்வரன் ஒரு பிரபல பெயராகவும் இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *பரமேஸ்வரன்.*§

***mala:*** मल "Impurity." மலம். "அசுத்தம்." சைவ சமயத்தில் பாசம் என்று அழைக்கப்படும் *ஆணவம்*, கர்மவினை மற்றும் மாயை என்ற மூன்று மலங்களை குறிப்பிடப் பயன்படும் ஒரு முக்கியமான சொல். இந்த மலங்கள் ஆன்மாவை கட்டுப்படுத்தி, அது தனது உண்மையான தெய்வீகத் தன்மையை அறிந்து கொள்வதில் இருந்து தடை செய்கிறது. §

**mala (mālā):** माला “Garland.” மாலை. இந்த சொல் வழக்கமாக ருத்திரட்சம், *துளசி*, சந்தனம் அல்லது படிகத்தில் செய்த ஜெப மாலையை குறிப்பிடுகிறது. மேலும் இது பூமாலையை குறிப்பிடவும் பயன்படுகிறது. §

**mambashum (mambashūm):**  (Shum) மாம்பாஷூம் (ஷூம்): தியானம் செய்யும் போது ஆய்வு செய்ய குறிப்பிட்ட மனதின் பகுதிகளை வரையறுக்கும், ஒரு ஷூம் மொழி வரைபடம் அல்லது சித்திரம். §

**mandapa(m) (maṇḍapa):** मण्डप மண்டபம். இது “அலங்கரி” என்பதை குறிக்கும் *மண்ட்* என்ற சொல்லில் இருந்து உருவானது. கோயில் சுற்றுச்சுவர்; கோயில் வளாகம், திறந்த கூடம் அல்லது அறை. ஒரு பெரிய கோயிலில் நுழையும் போது, தொடர்ச்சியான *மண்டபங்களை* கடந்து செல்கிறோம். அதில் ஒவ்வொன்றும் ஒரு பெயரை கொண்டு அமைந்துள்ளது. உ.தா. *முகமண்டபம்*, “கோயிலுக்கு முன்னிருக்கும் மண்டபம்.” §

**mantra(m):** मन्त्र “Mystic formula.” மந்திரம். “சூட்சும சூத்திரம். வழக்கமாக சாஸ்திரத்தில் இருந்து பெறப்பட்டு, விஷேச சக்தியுடன் இருக்கும் ஒரு சப்தம், எழுத்து, சொல் அல்லது சொற்றொடர். §

**matha (maṭha):** मठ “Monastery.” மடம். “மடாலயம்.” மேலும் தகவலுக்கு: *மடாலயம்.*§

***mathavasi (maṭhavāsi):*** मठवासि “Monastic; monastery dweller.” *மடவாசி*. “துறவி; மடத்தில் வாழ்பவர்.” மேலும் தகவலுக்கு: *துறவி.*§

**maya (māyā):** माया “She who measures;” or “mirific energy.” மாயை. “மருட்சி;" அல்லது “அற்புதங்களை விளைவிக்கும் ஆற்றல்.” சைவ சித்தாந்தத்தில், சிவபெருமானிடம் இருந்து வெளிவந்த சாரத்தில் இருந்து உருவத்தின் உலகம் வெளிப்பட்டுள்ளது. இதனால் எல்லா படைப்புகளும் மாயை என்றும் அழைக்கப்படுகிறது. இது பிரபஞ்சத்தின் ஆக்கப்பூர்வ சக்தியாக, வெளிப்பாட்டின் கோட்பாடாக இருந்து தொடர்ந்து ஆக்கல், காத்தல் மற்றும் அழித்தல் என்கிற செயல்முறையில் இருக்கிறது. §

**தியானம் (meditation):** நீடித்த ஒருமுகச் சிந்தனை. தியானம் என்பது அமைதியான, கவனமான, ஆற்றல்நிறைந்த ஒருமுகச்சிந்தனையுடன் இருக்கும் நிலையை குறிப்பிடுகிறது. இந்த நிலையில் சாட்சி ஒரு பொருளின் மீது கவனம் செலுத்துவதால் அல்லது ஒரு குறிப்பிட்ட சிந்தனையுடன் இருப்பதால், உள்ளத்தில் புதிய அறிவு மற்றும் நுண்ணறிவுகள் விழிப்படைகின்றன. §

**ஆண்டி (mendicant):** ஒரு பிச்சைக்காரன்; ஒரு இடத்தில் நிரந்தரமாக இல்லாமல் யாசகம் செய்து வாழும் துறவி.§

**தேவலோகம், மகரலோகம் (mental plane):** சூட்சும உலகில் இருக்கும் புனிதமான நிலைகளை குறிப்பிடுகிறது. இது அனாஹத *சக்கரத்தின்*

லோகம் ஆகும். இந்த லோகத்தில் ஆன்மா, *விஞ்ஞானமய கோசம்* எனப்படும் அறிவெழுச்சி கோசத்தில் மூடி மறைக்கப்பட்டு இருக்கிறது. §

**மீமெய்யியல் (metaphysics):** 1) முதன்மையான காரணங்கள் மற்றும் யதார்த்தத்தின் இயல்பை ஆய்வு செய்யும் தத்துவம் ஆகும். 2) சூட்சும ஞானத்தை சார்ந்த அறிவியல். §

**Meykandar:** மெய்கண்டார் "Truth seer." 13 ஆம் நூற்றாண்டை சேர்ந்த தமிழ் இறையியல் வல்லுநர். இவர் *சிவஞானபோதம்* என்கிற தத்துவ நூலின் ஆசிரியர் (அல்லது *ரௌரவ ஆகமத்தை* மொழிபெயர்த்தவர்). இவர் பன்மைவாத சைவ சித்தாந்தத்தின் மெய்கண்டார் சம்பிரதாயத்தை தோற்றுவித்தார். §

**மனம் (ஐந்து நிலைகள் ) (mind (five states)):** ஐந்து பாகங்களாக இருக்கும் மனதைப் பற்றிய ஒரு கண்ணோட்டம். —**உணர்வுள்ள மனம் (conscious mind)** *(ஜாக்ரத் சித்த*, "விழிப்புடன் இருக்கும் உணர்வு"): சாதரணமாக, விழித்திருந்து சிந்திக்கும் மனநிலை. —**அடிமனம்** (*சம்ஸ்கார சித்த*, "பதிவு செய்யும் மனம்"): உணர்வுள்ள மனதிற்கு "அடியில்" இருக்கும் மனதின் பகுதி; (உணர்வுடன் நினைவுக் கூர்ந்தாலும் அல்லது நினைவுக்கூராவிட்டாலும்) இது அனுபவங்கள் அனைத்தையும் பதிவு செய்யும் இடமாக சேமிப்புக் கிடங்காக இருக்கிறது. இது கடந்தகால பதிவுகள், எதிர்வினைகள் மாற்றும் ஆசைகளை தக்க வைத்து இருக்கிறது. இது மேலும் தனிச்சையான உடலியக்க செய்முறைகளின் இருப்பிடமாகவும் விளங்குகிறது. —**மறைந்துள்ள பண்புகளின் மனம் (subsubconscious mind)** (*வாசன சித்த*): ஒரே அதிர்வு விகிதத்துடன் இருக்கும் இரண்டு சிந்தனைகள் அல்லது அனுபவங்கள் வெவ்வேறு சமயங்களில் அடியுணர்வுக்குள் அனுப்பப்பட்டு, ஒன்றாக கலந்து, புதிய மற்றும் முற்றிலும் மாறுபட்ட அதிர்வுடன் தோன்றும் ஒரு அடிமனதின் பகுதி. —**மெய்ஞ்ஞான மனம் (superconscious mind)** *(காரண சித்த):* மனதின் ஒளி; ஆன்மாவிடம் இருக்கும் எல்லாம் அறிந்த நுண்ணறிவு. மெய்ஞ்ஞானம் தனது அதிக ஆழமான நிலையில் பராசக்தியாக, அல்லது சச்சிதானந்தமாக, சிவபெருமானின் தெய்வீக மனமாக இருக்கிறது. —**துணைமெய்ஞ்ஞான மனம் (subsuperconscious mind)** *(அனுகரண சித்த*): இந்த மெய்ஞ்ஞான மனம் உணர்வுள்ள மற்றும் அடியுணர்வு நிலைகளில் செயல்பட்டு இயலுணர்வு, தெளிவு மற்றும் நுண்ணறிவை கொண்டு வருகிறது. §

**மனம் (மூன்று அம்சங்கள்) (mind (three phases)):** மனம் உள்ளுணர்வு, அறிவுணர்வு மற்றும் மெய்ஞ்ஞானமாக இருக்கிறது என்கிற கண்ணோட்டம். —**உள்ளுணர்வு மனம் (instinctive mind)** (*மனஸ் சித்த*): ஆசையின் இருப்பிடமாக இருந்து ஞானேந்திரியங்கள் மற்றும் கர்மேந்திரியங்களை நிர்வகிக்கிறது. —**அறிவுணர்வு மனம் (intellectual mind)** (*புத்தி சித்த*): சிந்தனை மற்றும் நுண்ணறிவும் புலன். —**மெய்ஞ்ஞான**

**மனம் (superconscious mind)** (*காரண சித்த*): இது இயலுணர்வு, இரக்க எண்ணம் மற்றும் ஆன்மீக ஆதாரத்தின் நிலை ஆகும். இதன் மிகவும் புனிதமான சாரமாக எல்லாம் அறிந்து, நீக்கமற இருக்கும் உணர்வாக, யாவும் கடந்து, சுயமாக பிரகாசித்து, எல்லா ஆன்மாக்களுக்கும் தெய்வீக மனமாக இருக்கும் பராசக்தி என்கிற சச்சிதானந்தம் விளங்குகிறது. §

**moksha:** मोक्ष "Liberation." முக்தி, மோக்ஷம். கர்மவினையை கரைத்து, ஆத்ம ஞானம் என்கிற பரசிவத்தை குறிக்கும் நிர்விகல்ப சமாதியை அடைந்ததும், சம்சார என்கிற பிறப்பு இறப்பின் சுழற்சியில் இருந்து பெறும் விடுதலையை குறிக்கிறது. §

**மடம் (monastery):** "Place of solitariness." "தனியாக இருக்கும் இடம்." இது லெமூரியா கண்டத்தில் இருந்து இந்தியாவின் இந்து கலாச்சாரத்திற்கு கொண்டு வரப்பட்ட பழங்கால பாரம்பரியம் ஆகும். இந்த பாரம்பரியத்தில், ஒரு புனிதமான இடத்தில் ஒரே பாலினத்தை சேர்ந்தவர்கள், தீவிரமான விரதங்களுடன் இருந்து, ஆத்ம ஞானம் பெறுவதற்காக ஒரு சமூகமாக தங்கள் பிறவி கர்மவினைகளை அனுஷ்டானம் செய்கிறார்கள். அவர்கள் கடினமான விரதங்களுடன் முயற்சி செய்கிறார்கள். பெரும்பாலான மடங்கள் ஆண்களின் குழுக்களாக இருந்தாலும், இந்திய பாரம்பரியத்தில் பெண்களை தலைவிகளாக கொண்ட பெண் துறவிகளின் மடங்களும் உள்ளன. ஆண்கள் மற்றும் பெண்களின் மடங்கள் பல மைல்கள் இடைவெளியில் அமைந்து இருக்கும். மடவாசிகள் எனும் சொல், தங்களது ஞானோதய பாதையில் ஒரு குறிப்பிட்ட துணை மெய்ஞ்ஞான நிலையை அடைந்து, அந்த நிலையை தக்க வைத்துக்கொள்ள விரும்பும் தனிநபர்களை குறிக்கிறது. அதனால் அவர்கள் உடல் மற்றும் உணர்ச்சி ரீதியாக உலகில் இருக்கும் பல்வேறு தொடர்புகளை துண்டித்து, ஆழ்சிந்தனையுடன் துறவற வாழ்க்கையில் நிலைத்து இருக்க முடிகிறது. சம்சாரி வாழ்க்கை அல்லது இரு பாலினத்தார் ஒன்றாக சேர்ந்து வாழும் ஆசிரம வாழ்முறையை காட்டிலும், ஒருவர் தனது ஆன்மாவை அதிக விரைவாகவும் முழுமையாகவும் விரிவாக்கம் செய்ய சுயமாக வகுத்துக்கொண்ட கட்டுப்பாடுகளில் நிலைத்து இருப்பது மடவாசி வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும். மடத்தில் வசிப்பவர்கள், பாலியல் சக்திகளை உருமாற்றம் செய்ய தங்களை அர்ப்பணித்துக் கொள்கிறார்கள், அதனால் மனத்துறவு வலுவாக கடைப்பிடிக்கப்படுகிறது மற்றும் எதிர்பாலினத்தாருடன் எந்த தொடர்பும் இருப்பது இல்லை. §

**அத்வைதம் (monism):** "Doctrine of oneness." "ஒருமைவாதக் கோட்பாடு." 1) ஒரே ஒரு முடிவான சாரம் அல்லது அடிப்படை மட்டுமே இருக்கிறது என்கிற தத்துவ ஞான கண்ணோட்டம். 2) உண்மைப்பொருள் என்பது தனித்தனி பாகங்கள் இல்லாத ஒரு ஒருங்கிணைந்த முழுமை என்கிற கண்ணோட்டம். மேலும் தகவலுக்கு: *துவைதம்-அத்வைதம்*. §

**அத்வைத ஈஸ்வரவாதாம் (monistic theism):** உண்மைப்பொருள் என்பது தனிப்பட்ட பாகங்கள் இல்லாத ஒரு முழுமையாக அல்லது உள்பொருளாக இருக்கிறது என்ற கோட்பாட்டுடன், இறைவன் உண்மையாக, உணர்வுடன், தனிப்பட்ட பரமாத்துமாவாக இருக்கிறார் என்ற ஈஸ்வரவாதம் சேர்கிறது. ஈஸ்வரவாதம் என்பது துவைதத்தை குறிப்பதால், இவை இரண்டும் வழக்கமாக நேர்மாறான அல்லது ஒன்றையொன்று விலக்கும் பண்பை உடையது இரண்டு கண்ணோட்டங்களாக இருக்கின்றன. §

**துறவி (monk):** மடவாசி. ஒரு ஆச்சாரமான வாழ்க்கையை வாழும் நோக்கத்துடன், ஒரு மடத்தில் மற்றவர்களுடன் சேர்ந்து மடத்துறவியாக அல்லது தனியாக ஒரு துறவியாக அல்லது ஆண்டியாக மனத்துறுவுடன் வாழும் ஒரு ஆணை குறிக்கிறது. யோகப்பயிற்சி, தனக்குள் இருக்கும் ஆண்மை மற்றும் பெண்மை சக்திகளை கட்டுப்படுத்தி உருமாற்றம் செய்வதன் மூலம் அந்த துறவி முழுமையான சக்தியாக மாறி, தனக்குள் ஆத்ம ஞானத்தை நோக்கி ஆழ்ந்த சிந்தனை மற்றும் ஆன்மீகம் கலந்த வாழ்க்கையை சுதந்திரமாக பின்பற்றுகிறார். இந்த துறவிகள் தயாள குணத்துடன் மனவலிமையுடன், தைரியமாக, அச்சமின்றி மற்றவர்களின் சிந்தனைகள் மற்றும் உணர்ச்சிகளில் சிக்காமல் இருப்பதுடன் சமூகம், சமயத்தின் ஆதரவாளர்களிடம் பிரியமான பற்றின்மையுடன் இருந்து, மற்றவர்களிடம்  அன்பாகவும் பாசமகவும் இருந்து, எப்போதும் சமயோசித புத்தியுடன் செயல்படுகிறார். மேலும் தகவலுக்கு: *சந்நியாசம்.*§

**mridanga(m) (mṛidaṅga):** मृदङ्ग மிருதங்கம். இந்த தென்னிந்திய இசைக்கருவி உருளை வடிவில், இருபுறமும் தோலினால் மூடப்பட்டு இருக்கும். §

**mudra (mudrā):** मुद्रा “Seal.” முத்திரை. இது விரல்கள் மூலம் குறிப்பிட்ட ஆற்றல்கள் அல்லது சக்திகளை வெளிப்படுத்தும் அருள்ஞான நிலைகள் ஆகும். வழக்கமாக நுணுக்கமாக அமைந்திருக்கும் இந்த முத்திரைகள் வழிபாடு (பூஜை), நடனம் மற்றும் யோகத்தில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. §

**mukti:** मुक्ति “Release,” “liberation.” முக்தி, *மோக்ஷம்.* §

***muladhara* chakra (*mūlādhāra* chakra):** मूलाधारचक्र “Root-support wheel.” *மூலாதார சக்கரம்.* இது நான்கு இதழ்களுடன் முதுகுத்தண்டின் மனோஉணர்வு அமைந்து நினைவாற்றலை நிர்வகிக்கிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*§

**murti (mūrti):** मूर्ति “Form; manifestation, embodiment, personification.” மூர்த்தி. “உருவம்; வெளிப்பாடு, உருவகம், ஆளுருவகம்.” வழிபாட்டின் போது தெய்வத்தின் இருப்பை ஆவாகனம் செய்யும் இறைவனின் சிலை, விக்ரகம். §

**Murugan:** முருகன் “அழகானவர்.” கார்த்திகேயன் தென்னிந்தியாவின் தமிழ்நாடு, இலங்கை மற்றும் வேறு பல இடங்களில் முருகன் என்று அழைக்கப்படுகிறார். §

N***ada (nāda):*** नाद “Sound; tone, vibration.” *நாதம்*. மீமெய்யியல் அடிப்படையில், இது நிரந்தரமான சூட்சும ஒலிகள் ஆகும். இதில் மிகவும் உயர்வானதாக ஆழ்ந்த நிலையில் இருக்கும், ஒலியில்லாத ஒலியான பரநாதம் விளங்குகிறது. இதன் முதல் அதிர்வில் இருந்து படைப்பு வெளிப்படுகிறது. பரநாதத்தில் இருந்து ஓம் என்ற பிரவணவ மந்திரமும் *நாதத்தின்* மேலும் பல பரிணாமங்கள் தோன்றுகின்றன. இவற்றை தியானம் செய்பவர் *நாதநாடி* சக்தியாக அனுபவிக்கிறார். மேலும் இவற்றை ஸ்திரமாக உயர்ந்த தொனியுடன் இருக்கும் முரல் ஒலியாக, ஒரு தம்புரா, ஒரு மின்சார மின்மாற்றி, ஒரு தேனீக்களின் திரள் அல்லது ஒரு ஸ்ருதி பெட்டியை போன்று நரம்பு மண்டலத்தில் துடிப்பதை கேட்கலாம். உட்புற ஒலிகளை கேட்பது “ஒலி மூலம் வழிபடும்" *நாத உபாசனா*, “உட்புற ஒலியை பண்படுத்தும்" *நாத அனுசந்தான*, அல்லது “ஒலி மூலம் ஐக்கியமாகும்" *நாத யோகம்* என்று அழைக்கப்படும் ஒரு ஆழ்நிலை தியான பயிற்சி ஆகும். *நாதநாடி சக்தியில்* இருக்கும் நுணுக்கமான வேறுபாடுகள், பல இந்திய சமயங்களின் குரு பரம்பரையில் நிறுவப்பட்ட மனோஉணர்வு அலைநீளங்களை பிரதிபலிக்கிறது. *நாதம்* என்பது ஆழ்ந்த தியானத்தின் போது கேட்கும் மனோஉணர்வு ஒலிகளுடன், பல்வேறு இசைக்கருவிகளைப் போன்ற ஒலிகளையும் குறிப்பிடுகிறது. *நாதம்* என்பது சாதாரண ஒலியையும் குறிப்பிடுகிறது. §

***nadanadi shakti (nādanāḍī śakti):*** नादनाडीशक्ति “Energy current of sound.” நாத நாடி சக்தி. மேலும் தகவலுக்கு: *நாதம்*.§

***nadi (nāḍī):*** नाडी “Conduit; river.” *நாடி*. இது மனித உடலில் இருக்கும் ஒரு நரம்பு இழை அல்லது நுணுக்கமான (உட்புற) உடல்களில் இருக்கும் சக்தியின் பாதை ஆகும். 72,000 *நாடிகள்* இருப்பதாக கருதப்படுகிறது. இவை சக்கரங்களை ஒன்றோடு ஒன்று தொடர்புப்படுத்துகின்றன. *இடா, பிங்களா* மற்றும் *சுஷும்னா* ஆகியவை மூன்று முக்கிய *நாடிகள்* ஆகும். 1) *இடா நாடி,* இது *சந்திர நாடி* என்றும் அழைக்கப்படுகிறது. இது இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கிறது. இது கீழ்நோக்கி பாய்ந்து சென்று, உடலின் இடது பகுதியில் நிறைவடைகிறது. இந்த ஓட்டம் பெண்மையின் பண்புடன் இருக்கிறது மற்றும் இது தூல உணர்ச்சி சக்தியின் பாதையாக இருக்கிறது. 2) *பிங்களா நாடி,* இது *சூரிய நாடி* என்றும் அழைக்கப்படுகிறது. இது நீல நிறத்தில் இருக்கிறது. இது மேல் நோக்கி சென்று, உடலின் வலது புறத்தில் நிறைவடைகிறது. இந்த ஓட்டம் ஆணின் இயல்புடன் அறிவுணர்வு மற்றும் மனதின் பாதையாக இருக்கிறது. 3) *சுஷும்னா நாடி*, இது வெளிர் மஞ்சள்

நிறத்தில் இருக்கிறது. இது முக்கிய நரம்பு ஓட்டமாக விளங்கி, அடிப்பகுதியில் இருக்கும் *மூலாதார சக்கரத்தில்* இருந்து உச்சந்தலையில் இருக்கும் *சஹஸ்ரஹார சக்கரம்* வரை முதுகுத்தண்டு வழியாக பாய்ந்து செல்கிறது. இது குண்டலினி சக்தியின் பாதையாக விளங்குகிறது. §

***nadi jyotisha:*** நாடி ஜோதிடம். எல்லோருடைய கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை பழங்கால ரிஷிகள் தீர்க்கதரிசனத்துடன் ஓலைச்சுவடிகளில் (*நாடி சாஸ்திரம்* அல்லது *நாடி கிரந்தம்*) பழங்கால தமிழ் லிபியில் பதிவு செய்ததை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாட்டில் பழக்கத்தில் இருக்கும் ஒரு ஜோதிட முறை. ஒரு நாடி ஜோதிடர் அல்லது சாஸ்திரி, ஒருவரது வாழ்க்கையைப் பற்றி அறிந்துகொள்ள, அவரது கட்டைவிரல் ரேகை மற்றும் மேலும் பல காரணிகளை அடிப்படையாக கொண்டு பொருத்தமான ஓலைச்சுவடியை தேர்ந்து எடுக்கிறார். அதன் பிறகு அவர் ஓலையில் பொறிக்கப்பட்ட தகவலை விவரிக்கிறார். இந்த தெய்வீகக் கலையை சிதம்பரத்திற்கு அருகில் இருக்கும் வைத்தீஸ்வரன் கோயிலை சுற்றி இருக்கும் *நாடி* சாஸ்திரிகள் பிரபலப்படுத்தினார்கள்; இந்த ஜோதிடம் இன்று வரை அங்கே மையமாக இருந்து வருகிறது மற்றும் அவர்களின் வாரிசுகள் இந்த தொழிலை தொடர்ந்து செய்து வருகிறார்கள். §

***nadi shastra:*** நாடி சாஸ்திரம் மேலும் தகவலுக்கு: *நாடி ஜோதிடம்.*§

***nadi shastri:*** நாடி சாஸ்திரி மேலும் தகவலுக்கு: *நாடி ஜோதிடம்.*§

***naga (nāga):*** नाग "Serpent," நாகம். பெரும்பாலும் நாகப்பாம்பை குறிப்பிடுகிறது; *மூலாதார சக்கரத்தின்* நான்கு இதழ்களில் சுருண்டு இருக்கும் குண்டலினியின் சின்னமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *குண்டலினி, மூலாதார சக்கரம்.* §

***nagasvara (nāgasvara):*** नागस्वर "Snake note." நாகஸ்வரம், நாதஸ்வரம். இந்த காற்றிசை கருவி, ஆச்சா மரம் கொண்டு தயார் செய்யப்பட்டு, நீண்ட மரக்குழலுடன் சுமார் மூன்று அடி நீளத்திற்கு இருக்கும். இது ஒபோ இசைக்கருவியை போன்று இருந்தாலும், அதிக கீரிச்சிடும் ஒலியுடன் காதில் ஊடுருவதாக இருக்கும். இது வழக்கமாக தென்னிந்தியாவில் இந்து சமய பூஜைகள் மற்றும் திருவிழாக்களில் *தவில்* என்கிற தாள வாத்தியத்துடன் வாசிக்கப்படும். §

***naivedya(m):*** नैवेद्य நெய்வெத்தியம். கோயில் அல்லது வீட்டுப் பூஜையில் தெய்வத்திற்கு வழங்கப்படும் படையல். இது பூஜையில் முக்கிய அங்கம் வகிக்கிறது. மேலும் தகவலுக்கு: *பிராசதம், பூஜை.*§

***nakshatra:*** नक्षत्र "Star cluster." நட்சத்திரம். ஜோதிட கணிப்புக்களுக்கு மையமாக இருக்கும் நட்சத்திரங்கள் 27 விண்மீன் குழுக்களாக, பெருவட்டம் அல்லது சூரிய பாதையில்

அமைந்து இருக்கின்றன. ஒருவரின் ஜென்ம நட்சத்திரம், அவர் பிறந்த சமயத்தில் சந்திரனுடன் பொருந்தி இருந்த விண்மீன் குழுவை குறிப்பிடுகிறது. §

***namakarana (nāmakaraṇa):*** नामकरण "Name giving." நாமகரணம். §

***namakarana samskara (nāmakaraṇa saṁskāra):*** नामकरण संस्कार. நாமகரண சம்ஸ்கராம். "பெயர் சூட்டு விழாவின்" மூலம் இந்து சமயத்தில் ஏதாவது ஒரு பிரிவில் முறையாக நுழையும் சம்ஸ்காரம். இந்த சம்ஸ்காரம் ஒரு குழந்தை பிறந்து 11 முதல் 41 நாட்களுக்குள் நடத்தப்படுகிறது. ஜோதிட முறைப்படி தேர்ந்து எடுக்கப்படும் பெயர், பெரும்பாலும் ஒரு இந்து தெய்வத்தின் பெயராக இருக்கும். இந்த சமயத்தில், வாழ்க்கை முழுவதும் அந்த குழந்தைக்கு பாதுகாப்பாக இருக்க தேவதூதர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஒருவர் பிற்காலத்தில் இந்து சமயத்திற்கு மதம் மாற்றம் பெறும் போதும், இதே சடங்கு நடத்தப்படுகிறது. §

**Namasivaya (Nama˙ Śivāya):** नमः शिवाय "Adoration (homage) to Siva." நமச்சிவாய. இது சைவ சமயத்தில் முக்கிய மந்திரமாக விளங்குகிறது. இது பஞ்சாட்சரம் என்றும் அழைக்கப்படுகிறது. §

***namaskara (namaskāra):*** नमस्कार "Reverent salutations." நமஸ்காரம். இது பாரம்பரிய முறைப்படி கைகளை ஒன்றாக குவிக்கும் *அஞ்சலி* முத்திரையுடன், வாழ்த்துக்களை தெரிவிப்பது ஆகும். அவ்வாறு வணக்கம் செலுத்தும் போது, கைகள் இதயத்தின் அருகே அல்லது நெற்றி உயரத்திற்கு உயர்த்தப்பட்டு இருக்கும். இந்த தெய்வீக முத்திரை கோயிலில் இருக்கும் தெய்வம், தெய்வீக புருஷர், நண்பர் அல்லது தற்காலிக தொடர்புக்கு முன்பாகவும் தெரிவிக்கப்படுகிறது. §

***Nandikeshvara Kashika (Nandikeśvara Kāśikā):*** नन्दिकेश्वरकाशिका. நந்திகேஷ்வரகாஷிகா. நந்திகேஷ்வரரின் (சுமார் கி.மு. 250) படைப்புக்களில் இது மட்டுமே மிஞ்சியுள்ளது. *சைவ ஆகமங்கள்* இல்லாமல், அத்வைத சைவ சமயம் பற்றி தற்போது நிலைத்து இருக்கும் மிகவும் பழமையான விளக்கமாக, இதன் 26 செய்யுள்கள் விளங்குகின்றன. §

**Nandinatha Sampradaya (Nandinātha Saṁpradāya):** नन्दिनाथसंप्रदाय நந்திநாத சம்பிரதாயம். மேலும் தகவலுக்கு: *நாத சம்பிரதாயம்.*§

**Narakaloka:** नरकलोक Abode of darkness. நரகலோகம்: இருண்ட உலகம். நர என்ற சொல்லுக்கு "மனிதன் சம்பந்தப்பட்ட என்று பொருள்." நரக லோகங்கள்; அந்தர்லோகத்தில் இருக்கும் ஒரு பருமனான, புனிதமற்ற உலகம். அரக்கர்கள் மற்றும் இளம் ஆன்மாக்கள்

தாங்கள் உருவாக்கிய இருண்ட கர்மவினைகளுக்கு தீர்வு காணும் வரை, அவர்கள் தற்காலிகமாக தங்கும் இடமாக விளங்கும் நரகலோகம், நெரிசலான மற்றும் வேதனைகள் நிறைந்த இடமாக விளங்குகிறது. இங்கே உயிர்சக்திகள் தங்கள் முற்பிறவிகளில் செய்த தவறுகளுக்கு வேதனையை அனுபவிக்கிறார்கள். நரகம் என்பது *தளங்கள்* எனப்படும் ஏழு பகுதிகளுடன் இருப்பதாகவும், அவை ஏழு கீழ்நிலை சக்கரங்களின் உணர்வு நிலைகளுடன் தொடர்பில் இருப்பதாக அறியப்படுகிறது. §

**Nataraja (Naṭarāja):** नटराज "King of Dance" or "King of Dancers." நடராஜர். "நடனத்தின் அரசன்." பிரபஞ்ச நாட்டியக்காரனாக இருக்கும் கடவுள். இந்து சமயத்தில் அதிக செழுமையான மற்றும் அதிக ஆற்றல்மிக்க சிலையாக இருக்கும் நடராஜர், உள்பொருள் அனைத்திலும் ஆற்றல், சக்தி மற்றும் உயிராக உள்ள ஆதி ஆன்மா, பரமேஸ்வரனாக இருக்கும் சிவபெருமானை வெளிப்படுத்துகிறார். கண்களுக்கு வெளிப்பட்டு இருக்கும் தெய்வீக சக்தியில், இது சிவபெருமானுக்கு நுணுக்கமான நிலையாக இருக்கிறது. நடனம் ஆடுபவர்களின் தலைவனாக விளங்கும் நடேசனாக, சிவபெருமான் ஆடும் நடனம், முழு பிரபஞ்சத்தின் நிலையான இயக்கமாக இருக்கிறது. உயிருள்ளதாக மற்றும் உயிரற்றதாக இருக்கும் அனைத்தும் அவருக்குள் துடிக்கிறது, மற்றும் அவர் அதனுள் வாசம் செய்கிறார். சிவன்-சக்தியின் பிரிக்க முடியாத இயல்பின் சின்னமாக, "பாதி-பெண் கடவுளாக," இருக்கும் அர்த்தநாரீஸ்வரரைப் போல, இந்த சிலையில் ஆண் மற்றும் பெண்ணின் பண்புகள் அடங்கியுள்ளன. §

***Natchintanai:*** நற்சிந்தனை. சற்குருவின் சக்தி, சிவபெருமானின் வழிபாடு, தார்மீக பாதையை கடைப்பிடிப்பது மற்றும் ஆத்ம ஞானத்தை அடைவதை பற்றி இலங்கை, யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிவயோக சுவாமி (1872-1964) இயற்றிய கீர்த்தனைகளின் தொகுப்பு. §

**Natha (Nātha):** नाथ "Master, lord; adept." நாதன். "இறைவன்; வல்லுநர்." இது சைவ யோக சூட்சும ஞானத்தின் ஒரு பழங்கால இமாலய பரம்பரை ஆகும். வரலாற்று குறிப்பின் படி, இதன் முதல் பிரதிநிதியாக நந்திகேசவர் (சுமார் கி.மு. 250) விளங்கினார். ஆத்ம ஞானத்தில் தேர்ச்சி பெற்ற *நாதன்,* இந்த பிரிவில் விசேஷமான சந்நியாச ஆசிரியர்கள் (அல்லது சீடர்களை) நியமித்தார். §

**Natha Sampradaya (Nātha Saṁpradāya):** नाथसंप्रदाय நாத சம்பிரதாயம். சைவ சமயத்தை சார்ந்த ஒரு தத்துவ மற்றும் யோக பாரம்பரியமாக நாத சம்பிரதாயம் விளங்குகிறது. இது பதிவு செய்யப்பட்ட வரலாற்றுக்கு முன்பு தோன்றியிருக்கும் என்று கருதப்படுகிறது. இன்று நிலைத்து இருக்கும் மிகவும் பழமையான சைவ சம்பிரதாயங்கள், நந்திநாத மற்றும் ஆதிநாத என்ற இரண்டு முக்கிய பிறவுகளை கொண்டுள்ளன. நந்திநாத

சம்பிரதாயத்தில் மகரிஷி நந்திநாதா மற்றும் அவரது சீடர்களான பதஞ்சலி (*யோக சூத்திரங்களை* இயற்றியவர்) மற்றும் திருமூலர் (*திருமந்திரத்தை* இயற்றியவர்) போன்ற முன்மாதிரிகள் இருந்துள்ளனர். கைலாச பரம்பரையில் வந்த சித்தர்கள், அதன் இன்றைய பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். ஆதிநாத பரம்பரையில் மிகவும் பிரபலமான முன்மாதிரிகளாக ஆதிநாதா, மத்ஸ்யேந்திரநாதாவுடன் மிகவும் பிரபலமான யோகிகளின் சமூகத்தை உருவாக்கிய கோரக்ஷநாதரும் முன்மாதிரியாக இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை*. §

***natyam (nāṭyam):*** नाट्यम् Literally, "divine dancer." *நாட்டியம்*. "தெய்வீக நாட்டியக்காரர்." சந்நியாசியாக இருப்பவர் அல்லது சந்நியாசியாக மாறுவதற்கு பயிற்சி பெறுபவரை குறிக்கும் சமஸ்கிருதம் மற்றும் ஷூம் மொழியில் பயன்படுத்தப்படும் ஒரு சொல். §

***ஜல நேத்தி* குடுவை (*neti* pot):** நாசிகளில் இருக்கும் பாதைகளை சுத்தம் செய்ய மூக்கில் உப்பு கரைசலை ஊற்றுவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு சிறிய குடுவை. இதன் கீழ்பகுதியில் வழக்கமாக ஒரு மூக்குக் குழாய் பொருத்தப்பட்டு இருக்கும், மற்றும் சில சமயங்களில் மறுமுனையில் ஒரு கைப்பிடி இருக்கும். காலங்காலமாக நேத்தி குடுவைகள் உலோகம், கண்ணாடி அல்லது பீங்கானில் தயார் செய்யப்படும். "நாசியை சுத்தம் செய்யும்," பழங்கால ஜலநேத்தி செய்முறை ஆயுர்வேதம் மற்றும் யோகத்தில் இணைந்துள்ள ஆரோக்கியமான பழக்கம் ஆகும். §

**புதிய யுகம் என்றும் பொருள்படும் நியூ ஏஜ் (New Age):** இதைப்பற்றி *வெப்ஸ்டர்ஸ் நியூ வேர்ல்ட் டிக்சனரி* வழங்கும் குறிப்பு: "ஆன்மீக உணர்வின் மீது அக்கறை மற்றும் தியானம், சைவ உணவு மற்றும் புனிதமான மருத்துவத்தை போன்ற பழக்கங்களுடன் மறுபிறவி மற்றும் ஜோதிடத்தில் நம்பிக்கை கலந்த பல்வேறு பண்புகளுடன் 1980 களில் இருந்து பிரபலமாக இருந்துள்ள ஒரு கலாச்சார அமைப்பு சார்ந்தது." §

***nirvani & upadeshi (nirvāṇī & upadeśī):*** निर्वाणी उपदेशी *நிர்வாணி & உபதேசி*. *நிர்வாணி* என்றால் "தனது ஆசைகள் மற்றும் பாசங்களை அழித்தவர்," மற்றும் *உபதேசி* என்றால் "ஆசிரியர்" என்று பொருள். பொதுவாக, *நிர்வாணி* என்பது ஒரு முக்தி பெற்ற ஆன்மாவை, அல்லது துறவிகளின் ஒரு பிரிவை குறிக்கிறது. *உபதேசி* என்பது பொதுவாக ஆசிரியராக இருக்கும் ஒரு துறவியை குறிக்கிறது. உணர்தலை பெற்று, முக்தி பெற்ற ஆன்மாக்களின் லௌகீக அமைப்புக்களை, பௌத்த மதம் *அரஹத்* மற்றும் *போதிசாத்வா* என்று அழைப்பதை போல, இங்கே இந்த சொற்கள் விசேஷ அர்த்தத்தை கொண்டுள்ளன. ஒரு *ஜீவன்முக்தா* முழுமையான ஞானோதயம் பெற்ற பிறகு, பூலோகத்திற்கு திரும்பி பாதையில் இருக்கும் மற்றவர்களுக்கு உதவி செய்ய வாய்ப்பு கிடைக்கிறது. இது *உபதேசியின்* (*போதிசாத்வா*) பாதையாக விளங்குகிறது, மற்றும் இறைவனை உணரும் குறிக்கோளை நோக்கி சாதகனை வழிநடத்தி செல்வதற்கு இரக்க

குணமுள்ள சற்குரு எடுத்துக்காட்டாக விளங்குகிறார். அவர் எதிர்காலத்தில் சமய அமைப்புக்கள் மற்றும் துறவற பரம்பரைகளை தொடங்கி இயக்கவும் செய்யலாம். *நிர்வாணி* (*அரஹத்*) தனது லௌகீக ஈடுபாடுகள் அனைத்தையும் கைவிட்டு, உணர்வின் உச்சத்தில் வாசம் செய்கிறார். இவருக்கு அமைதியான துறவி, தனியாக இருக்கும் மகான் முன் உதாரணமாக இருக்கிறார்கள். §

***nirvikalpa samadhi (nirvikalpa samādhi):*** निर्विकल्पसमाधि "Undifferentiated trance, enstasy (samadhi) without form or seed." நிர்விகல்ப சமாதி. "வேறுபாடு இல்லாத மெய்மறதி நிலை, உருவம் அல்லது விதை இல்லாத சமாதி." ஆத்ம ஞானம், பரசிவம், எல்லா மாற்றம் அல்லது வேறுபாட்டை கடந்து இருக்கும் ஒருமையின் நிலை; காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்து இருப்பது. மேலும் தகவலுக்கு: *சமாதி*.§

**niyama:** नियम "Restraint." கட்டுப்பாடு. மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்*.§

கா**ந்த சக்தி (Odic force):** இது தூல மற்றும் கீழ்நிலை சூட்சும லோகங்களின் *அசுத்த மாயாவின்* உணர்வு சார்ந்த ஆன்மீக காந்த சக்தி ஆகும். காந்த சக்தி தனது புனிதமான நிலையில் சத்வ, ரஜஸ் மற்றும் தமஸ் என்று மூன்று குணங்களாக வெளிப்பட்டு, இயற்கையின் முக்கிய பருமனான சக்தியாக இருக்கும் பிரகிருதியாக இருக்கிறது. நிலம், நீர், நெருப்பு மற்றும் காற்று மற்றும் சிந்தனையுடன் எல்லா பருப்பொருட்களும் காந்த சக்தியை கொண்டு அமைந்துள்ளது. இது மனிதர்களுக்கு இடையே மற்றும் மனிதர்கள் மற்றும் அவர்களுடைய பொருட்களுக்கும் இடையே ஈர்க்கும் சக்தி அல்லது வெறுத்து ஒதுக்கும் சக்தியாக இருந்து, *பிங்களா* மற்றும் *இடா* நாடி ஓட்டங்களில் இருந்து ஆண்மை (தீவிரமாக) மற்றும் பெண்மை (மந்தமாக) பண்பாக வெளிப்படுகிறது. இந்த *நாடி* ஓட்டங்கள் இரண்டும், முதுகுத்தண்டின் சூட்சும உடலுக்குள் காணப்படுகின்றன. காந்த சக்தி என்பது காந்தத்தன்மையுடன, ஒட்டக்கூடியதாக, பிணைக்கும் பொருளாக இருக்கிறது மற்றும் கூட்டுத்தொழில்கள், திருமணங்கள், குரு-சீடன் உறவுகள் மற்றும் நட்புறவுகளில் மனிதர்கள் தங்களை பிணைத்துக்கொள்ள முற்படும் போது, இந்த சக்தியைத் தான் அவர்கள் மேம்படுத்த விரும்புகிறார்கள். இது இயல்பாக மந்தமாக செயலற்று இருக்கிறது. *பிராணமய* மற்றும் *ஆனந்தமய* கோசங்களின் கூட்டு வெளிப்பாடாக காந்த சக்தி விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *ஆன்மீகம் சார்ந்த, கோசம், நுணுக்கமான உடல், தத்துவம்*.§

**P** ***ada:*** पद "Step, pace, stride; footstep, trace." பதம்: "அடி, வேகம், நடை; காலடி, சுவடு."

§

***pada (pāda):*** पाद "The foot (of men and animals); quarter-part, section; stage; path." பாதம். "மனிதர்கள் மற்றும் விலங்குகளின்" காலடி, கால் பாகம், பிரிவு; நிலை, பாதை." இது ஆகம உரைகளில் இருக்கும் முக்கிய பிரிவுகள் மற்றும் முக்தியை நோக்கி செல்லும் பாதையில் அதனுடன் தொடர்புடைய நிலைகளின் பயிற்சி மற்றும் விரிவாக்கத்தை குறிப்பிடுகிறது. சைவ சித்தாந்தத்தில், நான்கு பாதைகள் (சரியை, கிரியை, யோகம் மற்றும் ஞானம்) உள்ளன. அவை தொடர்ச்சியாக மற்றும் படிப்படியாக திரண்டு வரும் தன்மையுடன இருக்கின்றன. அதாவது ஆன்மா ஒவ்வொரு பணியையும் நிறைவு செய்து தன்னை அடுத்த நிலைக்கு தயார்படுத்திக் கொள்கிறது. **—சரியை பாதம்:** "நன்னடத்தையின் நிலை." இந்த நிலையில் ஒருவர் நேர்மையுடன் வாழ்ந்து, சுயநலமின்றி சேவை செய்து, கர்மயோகம் செய்ய கற்றுக்கொள்கிறார். —**கிரியை பாதம்:** "சமயப்பணி; வழிபாட்டு நிலை." இது பக்தி யோகத்தின் நிலை ஆகும். இந்நிலையில் பூஜை மற்றும் தொடர்ந்து தினசரி சாதனா செய்வதன் மூலம் பக்தி வளர்க்கப்படுகிறது. **—யோக பாதம்:** ஆன்மா சரியை மற்றும் கிரியை *பாதங்களில்* பக்குவம் அடைந்த பிறகு, அது ஒரு சற்குருவின் வழிகாட்டலின் கீழ் ஆன்மீக வழிபாடு மற்றும் இராஜ யோகத்தின் மீது தனது கவனத்தை திருப்பிக் கொள்கிறது. **—ஞான பாதம்:** "மெய்யறிவு பெறும் நிலை." ஆன்மா ஆத்ம ஞானம் பெற்றதும், தனது மீதி வாழ்க்கையை, மற்றவர்களுக்கு ஆசிகளை வழங்கி நல்வழிப்படுத்துவதில் செலவழிக்கிறது. §

***pādapūjā:*** पादपूजा "Foot worship." பாத பூஜை. இது பாரம்பரிய முறைப்படி குருவின் பாதுகை அல்லது திருவடி வழிபாட்டை குறிப்பிடுகிறது. இந்த வழிபாட்டின் போது திருவடிகளை நீராட்டி மஞ்சள் குங்குமமிட்டு பழங்கள் மற்றும் பூக்கள் நெய்வெத்தியம் செய்யப்படுகின்றன. பூஜை முடிந்த பிறகு, அவருடைய பாதங்களை கழுவிய நீர் மற்றும் நெய்வெத்திய பொருட்கள் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகின்றன. §

***padmasana (padmāsana):*** पद्मासन "Lotus posture." பத்மாசனம். ஹட யோகத்தில் மிகவும் பிரபலமான ஆசனம். ஸ்திரமாக தியானம் செய்வதற்கு உகந்த அங்கஸ்த்தியாக இருக்கிறது. இதில் கால்கள் குறுக்காக மடக்கி உடலுக்கு அருகில் வைக்கப்பட்டு, உள்ளங்கால்கள் மேல் நோக்கி அமைந்து இருந்து, ஒரு தாமரை மலர் போல காட்சி

அளிக்கும். இந்த அங்கஸ்த்தியில் அறிவுணர்வு-மனவெழுச்சி சக்திகள் சமநிலை பெற்று அமைதியாக இருக்கின்றன. §

***paduka (pādukā):*** पादुका "Sandals." பாதுகை. ஶ்ரீ *பாதுகை* என்பது சற்குருவின் திருவடிகளாகவும் குருவின் பாரம்பரிய சின்னமாகவும் விளங்கி மரியாதைக்குரிய அவரது பாதங்களை பிரதிநிதித்துவம் செய்து, அருளின் மூலமாக வழிபடப்படுகிறது. §

**அத்வைத ஈஸ்வரவாதம் (panentheism):** "All-in-God doctrine." "எல்லாம் இறைவனுக்ககுள் அடங்கிருக்கிறது என்ற கோட்பாடு." இறைவனின் இருப்பின் அங்கமாக பிரபஞ்சம் இருக்கிறது என்ற கண்ணோட்டம். இது "எல்லாம் இறைவனாக இருக்கிறது" என்ற கோட்பாட்டில் (pantheism) இருந்து மாறுபட்டு இருக்கிறது. இந்த கோட்பாடு இறைவனை முழு யதார்த்தத்துடன் அடையாளம் காண்கிறது. இதற்கு மாறாக, அத்வைத ஈஸ்வரவாதம் (panentheism), இறைவன் உலகெங்கும் வியாபித்து, அதை கடந்தும் இருப்பதாக கருதுகிறது. அவர் உள்ளார்ந்தும் யாவும் கடந்த நிலையிலும், ஒப்பீட்டு அளவிலும் முழுமையாகவும் இருக்கிறார். இவ்வாறு எதிர்ப்பதங்களை தழுவி இருப்பதை (dipolar) இருதுருவம் என்று அழைக்கப்படுகிறது. இதைப் பின்பற்றுபவருக்கு, இறைவன் அனைத்திலும் இருக்கிறார் மற்றும் எல்லாம் இறைவனுக்குள் இருக்கிறது. மேலும் தகவலுக்கு: துவதைம்-அத்வைதம்.§

***papa (pāpa):*** पाप "Wickedness or sin;" "crime." பாவம். 1) தீய அல்லது கொடிய. 2) தவறான நடவடிக்கை. 3) தவறு செய்ததால் உருவான குறை. *பாவம்* என்பது சாதாரண சட்ட மீறலில் இருந்து திட்டமிட்ட கொலை போன்ற மிகவும் கொடிய குற்றங்கள் வரை, சகலவிதமான தவறுகளையும் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு பாவமும் தனது *கர்ம பலன்* என்கிற "செயலின் விளைவை" கொண்டுள்ளது, மற்றும் அந்த பாவத்திற்கு பரிகாரம் செய்ய சாஸ்திரங்கள் குறிப்பிட்ட விரதங்களை விளக்கிக் கூறியுள்ளது. ஒருவரின் உட்புற அடியுணர்வு ஒளி உடலில் ஒரு வண்ணமயமான, பிசுபிசுப்பான சூட்சும பொருளாக பாவம் இருப்பதை மனோஉணர்வு சக்தியை தங்களுக்குள் விழிக்க செய்தவர்களால் தெளிவாக காணமுடிகிறது. *பாவம்* இருண்ட மற்றும் தொடர்பில்லாத நிறங்களுடன் காணப்படுகிறது, ஆனால் அதற்கு எதிர்பதமாக இருக்கும் புண்ணியம் மென்மையான நிறங்களாக இருக்கின்றன. அதில் இருக்கும் நிறங்களின் அமைப்புக்கள் நவீன சுவர் சித்திரங்களை போன்று இருக்கின்றன. பாவத்தின் நிறங்கள் நோய், மனச்சோர்வு, தனிமை மற்றும் அதைப்போன்ற நிறங்களை உருவாக்குகின்றன மற்றும் அவற்றை *பிராயஸ்சித்தம்*, *தபஸ்* மற்றும் நல்ல செயல்களின் (*சுக்ரித்திய*) மூலம் கரைக்க முடியும். §

**Paramatman (Paramātman):** परमात्मन् "Supreme Self," or "transcendent soul." பரமாத்துமா. பரசிவம், பரப்பிரம்மம், ஒவ்வொரு ஆன்மாவிலும் யாவும் கடந்து இருக்கும் பரமாத்துமா. பரசிவம், பராசக்தி மற்றும் *ஆனந்தமய கோசம்* என்று ஆன்மாவின் மூன்று அம்சங்களையும் அடக்கிய ஆத்மன் என்ற சொல்லில் இருந்து இது மாறுபட்டு இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *பரசிவம், பரமாத்துமா, ஆன்மா.*§

**Parameshvara (Parameśvara):** परमेश्वर "Supreme Lord or Ruler." பரமேஸ்வரன். இவர் சிவபெருமானின் மூன்றாவது முழுமையாக, உயர்ந்த மகாதேவராக, சிவ-சக்தியாக, பிரபஞ்சத்தின் அன்னையாக இருக்கிறார். இந்த முழுமையை தனிப்பட்ட பண்புடன், தந்தை-தாயாக ஒரு உடல், தலை, கை-கால்கள் போன்ற உடல் உறுப்புக்களுடன் இருக்கும் சிவபெருமான் ஒரு தனிநபராக செயல்பட்டு, ஆணையிட்டு, ஆசிர்வதித்து, தரிசனம் வழங்கி, வழிகாட்டி, உருவாக்கி, பாதுகாத்து, மீண்டும் ஒடுக்கிகொண்டு, மறைக்கவும் ஞானோதயம் வழங்கவும் செய்கிறார். செய்வது அனைத்தும் சிவ-சக்தி என்பதே முடிவான உண்மையாக இருக்கிறது. ஆதி ஆன்மா என்கிற பரமபுருஷர் எனும் சொல் முதன்மையாக, படைக்கப்படாத ஆன்மாவாக, மற்ற எல்லா ஆன்மாக்களையும் படைப்பவராக இருக்கும் பரமேஸ்வரனை குறிப்பிடுகிறது. பரமேஸ்வரனுக்கு மற்ற பெயர்களும் உள்ளன, அதில் வெளிப்படுத்துபவராக இருக்கும் சதாசிவம்; மறைப்பவராக இருக்கும் மகேஸ்வரன்; படைப்பவராக இருக்கும் பிரம்மா; பாதுகாப்பவராக இருக்கும் விஷ்ணு; அழிப்பவராக இருக்கும் ருத்திரன் என்று அவருடைய ஐந்து தெய்வீக நடவடிக்கைகள் அடங்கும். §

**parampara (paraṁparā):** परंपरा "Uninterrupted succession." ஒரு பரம்பரை. §

**Parasiva (Paraśiva):** परशिव "Transcendent Siva." பரசிவம். பரமாத்துமா, சிவபெருமானின் முதல் முழுமை, பரப்பிரம்மம். விளக்க முடியாமல் காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்து உணர்வையும் கடந்து இருக்கும் அந்த முடிவான பரம்பொருளாக பரசிவம் விளங்குகிறது. பிறவி எடுத்து எல்லா ஆன்மாக்களின் முடிவான குறிக்கோளாக, அவர்கள் இந்த பூமியில் வாழ்வதற்கான காரணமாக, அவர்கள் அனுபவங்களின் ஆழமான அர்த்தமாக முடிவான பரம்பொருளுடன் நடைபெறும் ஐக்கியம் விளங்குகிறது. இதன் ஸித்தி ஆத்ம ஞானம் அல்லது நிர்விகல்ப சமாதி என்று அழைக்கப்படுகிறது. §

***parivrajaka (parivrājaka):*** परिव्राजक "Spiritual wanderer." *பரிவ்ராஜக.* இது ஊர் ஊராக சுற்றும் ஒரு இந்து துறவியை குறிக்கிறது.§

**Parvati (Pārvatī):** पार्वती "Mountain's daughter." பார்வதி. "மலை அரசனின் மகள்." சிவபெருமானின் துணைவியார். வலிமை, ஆரோக்கியம் மற்றும் மாசுகளை நீக்கி தூய்மை

பெறுவதற்கு, பார்வதியை வேண்டி பிரார்த்திக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: அம்மன், சக்தி. §

**Patanjali (Patañjali):** पतञ्जलि பதஞ்சலி. இவர் சைவ சமயத்தை சேர்ந்த நாத சித்தர் (சுமார் கி.மு. 200). இவர் தொகுத்துத்துள்ள பழங்கால யோக தரிசனம் (தத்துவம்) எனும் நூல் மனதை சுத்தப்படுத்தி, கட்டுப்படுத்தி ஆழ்நிலைக்கு சென்று ஞானோதயம் பெறும் பாதையை விவரிக்கிறது. §

***pathashala (pāṭhaśāla):*** पाठशाल "Place of lessons." பாடசாலை. கோயில் புரோகிதர்களுக்கு பயிற்சி அளிக்கும் ஒரு பள்ளி. §

**Pati:** पति "Master; lord; owner." பதி. "தலைவன்; கடவுள்." அக்கறை செலுத்தும் அரசனாக மற்றும் உதவி செய்யும் வழிகாட்டியாக, சிவபெருமானுக்கு ஆன்மாக்களுடன் இருக்கும் வலுவான உறவை இந்த பெயர் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *பதி-பசு-பாசம்.* §

**Pati-*pashu-pasha* (Pati-*paśu-pāśa*):** पति पशु पाश Literally, "Master, cow and tether." *பதி-பசு-பாசம்.* "தலைவன், மாடு மற்றும் கயிறு." தெய்வீகத் தன்மை, மனிதன் மற்றும் பிரபஞ்சமாக இருக்கும் இறைவன், ஆன்மா மற்றும் உலகம் ஆகியவை சைவ சித்தாந்த தத்துவத்தின் மூன்று அடிப்படை பிரிவுகள் *(பதார்த்த, தத்வத்ராயி)* ஆகும். இந்த பிரிவுகள் சூட்சும ரீதியாகவும் நுணுக்கமாகவும் ஒன்றோடு ஒன்று தொடர்பில் இருப்பதாக தென்படுகிறது. *பதி* என்பது கடவுளை குறிப்பிட்டு, ஒரு மாட்டு இடையனாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. *பசு* என்பது ஆன்மாவை குறிப்பிட்டு, ஒரு பசுமாடாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. மிகவும் முக்கியமான சக்தி அல்லது பிடியாக இருக்கும் *பாசத்தின்* மூலம் இறைவன் ஆன்மாக்களை முடிவான உண்மையின் பாதையில் அழைத்து வருகிறார். இந்த மூன்றுக்கும் இடையே இருக்கும் இணக்கத்தை, இந்து சமயத்தின பல்வேறு பிரிவுகள் மாறுபட்ட வழிகளில் விளக்குகின்றன. அவை பன்மைவாத சித்தாந்திகளுக்கு, மூன்று தொடக்கம் இல்லாத நம்பிக்கைகள் மற்றும் சுயமாக இயங்கும் அனாதி பிரிவுகளாக விளங்குகின்றன. அத்வைத சைவ சித்தாந்திகளுக்கு, கடல் அலைகள் கடலுக்குள் மீண்டும் வந்து சேர்வதைப் போல, *பதியாக* இருக்கும் சிவபெருமானிடம் எதிர்காலத்தில் ஒடுங்குவதற்காக, அவருடைய தற்காலிக படைப்பாக *பசு* மற்றும் *பாசம்* விளங்குகின்றன; அவர் மட்டுமே நிரந்தர யதார்த்தமாக விளங்குகிறார். மேலும் தகவலுக்கு: *சைவ சித்தாந்தம், ஆன்மா.*§

**தவம் (penance):** *Prayashchitta.* Atonement, expiation. கடந்தகாலத்தில் செய்த ஒரு செயலுக்கு எதிர்பார்க்கப்படும் எதிர்வினையை தணிக்க அல்லது பயனற்றதாக்க பக்தி, *தபஸ்* அல்லது நல்ல ஒழுக்கத்துடன் மேற்கொள்ளப்படும் ஒரு கிரியை (நடவடிக்கை). §

**தீர்த்த யாத்திரை (pilgrimage):** *Tirthayatra*. வருடத்திற்கு ஒரு முறை இந்துக்கள் அனைவரும் அருகில் அல்லது தொலைவில் இருக்கும் ஒரு புண்ணிய க்ஷேத்திரத்திற்கு மேற்கொள்ளும் பயணம். §

**Pillaiyar:** பிள்ளையார். விநாயகரின் இன்னொரு பெயர். §

***pingala (piṅgalā):*** पिंगला "Tawny channel." பிங்களா. முதுகுத்தண்டு வழியாக ஆண்மையின் பண்புடன் பாய்ந்து செல்லும் மனோஉணர்வு ஓட்டம். மேலும் தகவலுக்கு: *நாடி*.§

***pitham (pīṭha):*** पीठ "Seat; pedestal; foundation." *பீடம்.* 1) சிவலிங்கம் அல்லது ஒரு விக்ரகத்தின் அடிப்பகுதி. 2) ஒரு மடத்தின் மடாதிபதி அமரும் இருக்கை. 3) அத்தகைய ஒரு ஆன்மீக அதிகாரத்தை சுற்றி அமைந்துள்ள *ஆதீனம்*, ஆசிரமம் அல்லது மடம். §

**பொங்கல் திருவிழா (Pongal festival):** மேலும் தகவலுக்கு*:* தைப்பொங்கல்.§

***pottu:*** பொட்டு "A drop, small particle, dot." குங்குமம், சந்தனம், அழகு பூச்சுகள் மற்றும் மற்ற பொருட்களால் நெற்றியின் மத்தியில் அல்லது கண் புருவங்களுக்கு மத்தியில் வைத்துக்கொள்ளும் ஒரு சிறிய திலகம். சமஸ்கிருத மொழியில் பொட்டு *பிந்து* என்றும், ஹிந்தி மொழியில் *பிந்தி* என்றும் அழைக்கப்படுகிறது. §

**prana (prāṇa):** प्राण பிராணன். முக்கிய சக்தி அல்லது உயிரின் அடிப்படை. இதற்கு "முக்கிய காற்று என்று பொருள். மனித உடலில் இருக்கும் பிராணன், பிராணமய கோசத்தில் "அத்தியாவசிய காற்றுகள் அல்லது வாயுக்கள்" என்று அழைக்கப்படும் ஐந்து அடிப்படை ஓட்டங்களாக பாய்ந்து செல்கின்றன. பிராணன் என்பது சிலசமயங்களில் பிரபஞ்சத்திற்கு உயிரூட்டம் அளிக்கும் விசை அல்லது சக்தி, எல்லா ஆற்றல்கள் மற்றும் விசைகளின் கூட்டுத் தொகையை குறிப்பிடுகிறது. §

**pranam(a) (praṇāma):** प्रणाम "Obeisance; bowing down." நமஸ்காரம், வந்தனம் செய்தல், தலை வணங்குதல். இந்த வணக்கமுறையில் தலை அல்லது உடல் வளைந்து வணக்கம் செலுத்தப்படுகிறது. தரையில் விழுந்து இரண்டு விதமாக வணக்கம் செலுத்தப்படுகிறது. 1) *அஷ்டாங்க நமஸ்காரம்*: ஆண்களுக்கு உரிய இந்த வணக்கமுறையில் ஒரு ஆணின் கைகள், மார்பு, நெற்றி, முழங்கால்கள் மற்றும் பாதங்கள் தரையில் படுமாறு நமஸ்காரம் செய்தல் (இது சாஷ்டாங்க நமஸ்காரத்தை போன்றது); மற்றும் 2) *பஞ்சாங்க நமஸ்காரம்*: பெண்களுக்கு உரிய இந்த வணக்கமுறையில் ஒரு பெண்ணின் கைகள், தலை மற்றும் முழங்கால்கள் தரையில் படுமாறு (கணுக்கால்களை மடக்கி வலது காலை இடது காலின் மீது வைத்து) நமஸ்காரம் செய்தல். இதற்கு அதிக பொருத்தமான சொல்லாக "தரையில் விழுந்து வணங்குதல்" என்பதை குறிக்கும் *பிரணிபாத* எனும் சொல் விளங்குகிறது. §

**pranayama (prāṇāyāma):** प्राणायाम "Breath control." பிராணயாமம். "சுவாசக் கட்டுப்பாடு." சுவாசிக்கும் உத்திகள் மூலம் பிராணனை கட்டுப்படுத்தும் இந்த செய்முறையில் மூச்சை உள்ளிழுத்தல் (பூரகம்), மூச்சை உள் நிறுத்துதல் (கும்பகம்) மற்றும் மூச்சை வெளிவிடும் (ரேசகம்) அளவுகளை மாற்றி அமைக்கப்படுகிறது. தியானம் செய்ய மனதை பிராணாயாமம் தயார் செய்கிறது. மேலும் தகவலுக்கு: *அஷ்டாங்க யோகம்.*§

**பிராண சக்தி சார்ந்த (pranic (prāṇic))** மேலும் தகவலுக்கு: *பிராணன்.*§

**பிராணாயாம கோசம் (pranic body (prāṇic body)):** உடலுக்குள் மூச்சுக்காற்றின் இயக்கத்தினால் உடலின் எல்லா உறுப்புக்களும் இயங்குகின்றன. இதனால் செயல்படும் புலன்கள், உயிர் வாழ்வதற்கு அவசியமான உள் உறுப்புக்கள் மற்றும் அவற்றின் இயக்கங்கள் *பிராணமய கோசம்* என்று அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *கோசம்.*§

**prapatti:** प्रपत्ति "Throwing oneself down." பிரபத்தி. "ஒருவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்தல்." இந்த பக்தியில் முழுமையாக நிபந்தனையின்றி இறைவனிடம் சரணடைதலுடன் வழக்கமாக தனிப்பட்ட நிராதரவு, அடக்கம் மற்றும் ஒப்புவிப்பும் சேர்ந்து கொள்கிறது. கிட்டத்தட்ட எல்லா இந்து சமய பிரிவுகளுக்கும் மிகவும் மையமாக விளங்கும் கோட்பாட்டை குறிக்கும் இந்த சொல், குறிப்பாக வைணவ சமயத்தில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *அருள்.*§

***prarabdha* karma (*prārabdha* karma):** प्रारब्धकर्म பிராரப்த கர்மவினை. "தொடங்கி வைக்கப்பட்டுள்ள செயல்." மேலும் தகவலுக்கு: *கர்மவினை.* §

**prasada(m) (prasāda):** प्रसाद "Clarity, brightness; grace." *பிரசாத.* "தெளிவு, பிரகாசம்; அருள்." 1) அமைதியாகவும் பணிவாகவும் இருக்கும் நற்குணம். 2) தெய்வம் அல்லது குருவிற்கு நெய்வெத்தியம் செய்யப்படும் உணவு, அல்லது அவ்வாறு நெய்வெத்தியம் செய்த உணவில் பக்தர்களுக்கு வழங்க மீதம் இருக்கும் உணவு. 3) ஒரு தோஷத்தை நீக்க வழங்கப்படும் படையல். §

***pratyahara (pratyāhāra):*** प्रत्याहार "Withdrawal." *பிரத்யாஹார, பிரளயம்.* சக்திகளை உள்வாங்குதல். யோகத்தில், இந்த சொல் வெளிப்புற உணர்வு உள்வாங்குவதை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *அஷ்டாங்க யோகம்.*§

***prayashchitta (prāyaśchitta):*** प्रायश्चित्त "Predominant thought or aim." பிராயச்சித்தம், தவம். பரிகாரங்கள். கடந்த காலத்தில் செய்த ஒரு செயலுக்கு எதிர்பார்க்கப்படும் எதிர்வினையை தணிக்க அல்லது முழுமையாக நீக்க பக்தி, தபஸ் அல்லது நல்லொழுக்கத்துடன் மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கை. *குகர்மாக்கள்* எனப்படும்

தவறான செயல்கள் மூலம் உருவான ஒருவரின் கர்மவினை சுமையை தணிக்க, ஒருவர் தனக்குத்தானே வழங்கிக்கொள்ளும் அசௌகரியமான கர்மவினையை தவம் என்று அழைக்கிறோம். இதில் 108முறை நமஸ்காரம் செய்வது, விரதம் இருப்பது, சுய-கட்டுப்பாடுகள் அல்லது *காவடி* எடுத்தல் மற்றும் மிகவும் கடுமையான விரதங்கள் அல்லது *தபஸ்* அடங்கும். வழக்கமாக ஆன்மீக தலைவர்கள் மற்றும் சான்றோர்கள் மூலம் பிராயச்சித்தம் பரிந்துரைக்கப்படுகிறது. §

***prayopavesha (prāyopaveśa):*** प्रायोपवेश "Resolving to die through fasting." *பிரயோபவேஷ.* சுய விருப்பத்துடன் விரதம் இருந்து உயிர் நீத்தல். §

**Pretaloka:** प्रेतलोक "World of the departed." பிரேதலோகம். பூமியுடன் பிணைந்து இருக்கும் ஆன்மாக்கள். புவர்லோகத்தின் கீழ் பகுதி தூல உலகின் நகலாக இருக்கிறது. பூலோகம், புவர்லோகம், ஸ்வர்லோகம், மகர்லோகம், ஜனலோகம், தபலோகம் மற்றும் சத்யலோகம் என்று ஏழு மேல் லோகங்களில் ஒன்றாக புவர்லோகம் விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *லோகம்.*§

**ஆதி ஆன்மா (Primal Soul):** இது படைக்கப்படாத, முதன்மையான, முழுநிறைவான ஆன்மாவாக இருக்கும் சிவா பரமேஸ்வரனை குறிப்பிடுகிறது. இவர் தனது உள்ளத்தில் இருந்து உட்புற மற்றும் வெளிப்புற பிரபஞ்சகளையும், தனது சாரத்தை போன்ற சாரத்துடன் இருக்கும் பெருந்திரளான ஆன்மாக்களையும் வெளிப்படுத்துகிறார். தனது தனிப்பட்ட அம்சத்தில் தலைவனாகவும் ஸ்ருஷ்டிகர்த்தாவாகவும் இருக்கும் இறைவனை, சைவர்கள் நடராஜர் என்றும், வைணவர்கள் விஷ்ணு என்றும், சாக்த சமயத்தை சேர்ந்தவர்கள் தேவி என்று பல வடிவங்களில் சித்தரிக்கிறார்கள். §

**puja (pūjā):** पूजा "Worship, adoration." பூஜை. "வழிபாடு, ஆராதனை." ஒரு தெய்வீக சிலை (மூர்த்தி), ஒரு குருவின் புனிதமான பாதுகைகள் (*ஶ்ரீ பாதுகா*) அல்லது மற்ற பிரதிஷ்டை செய்த பொருட்கள், அல்லது சற்குருவைப் போன்ற ஒருவருக்கு வீட்டில், கோயிலில் அல்லது ஒரு புனிதமான இடத்தில் நடைபெறும் வழிபாட்டில் இடம்பெறும் ஒரு ஆகம சடங்கு. வழிபடும் பொருளை சுற்றி இருக்கும் சூழலை புனிதமாக்கி, அந்தர்லோகங்களுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்தி கடவுள், தெய்வங்கள் அல்லது ஒரு குருவை ஆவாகனம் செய்வதே இதன் ஆன்மீக குறிக்கோளாகும். வழக்கமாக *ஆத்மார்த்த பூஜை* என்பது ஒருவர் தனது வீட்டில் அல்லது ஒரு தனிமையான பூஜை அறையில் தனக்கும் தனக்கு நெருக்கமான குடும்பத்தாருக்கும் செய்யும் பூஜை ஆகும். பொதுவாக நடத்தப்படும் *பரார்த்த பூஜை,* கோயில் அல்லது பொதுமக்கள் கூடும் ஒரு சிறிய பிரார்த்தனை கூடத்தில் தீட்சை பெற்ற புரோகிதர்களால் நடத்தப்படும் பூஜை. §

**pujari (pujārī):** पुजारी "Worshiper." பூசாரி. பூஜை செய்பவர் மற்றும் இந்து கோயிலில் பூஜை செய்பவரை குறிப்பிடும் ஒரு பொதுவான சொல். §

**pandit (paṇḍita):** पण्डित "Learned one." பண்டிதர். தத்துவம், வழிபாட்டு முறை, சமயம் தொடர்பான விதிகள் மற்றும் புனிதமான சாஸ்திரங்களில் நன்கு தேர்ச்சி பெற்ற ஒரு இந்து சமய அறிஞர் அல்லது இறையியல் வல்லுநர். §

**பண்டிதர் (pundit).**§

**punya (puṇya):** पुण्य "Holy; virtuous; auspicious." புண்ணியம். "புனிதமான; நற்குணமுள்ள; மங்களகரமான." 1) நல்ல அல்லது நேர்மையான. 2) பாராட்டுக்குரிய செயல். 3) முறையான சிந்தனை, சொல் மற்றும் செயல் மூலம் கிடைக்கும் நன்மதிப்பு. ஒரு எளிய உதவியில் இருந்து வாழ்நாள் முழுவதும் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் செய்யும் நன்மை வரை, புண்ணியம் நற்செயலின் அனைத்து வடிவங்களையும் கொண்டுள்ளது. ஆன்மீக திருப்தி, பேரானந்தம், பாதுகாப்பு மற்றும் அச்சமின்மையை புண்ணியம் உருவாக்குகிறது. மேலும் தகவலுக்கு: *பாவம்.*§

***Purana (Purāṇa):*** पुराण "Ancient (lore)." புராணம். "பழங்கால கதை." புராணம் என்பது தெய்வங்கள், மனிதன் மற்றும் உலகம் தொடர்பாக நெறிமுறை மற்றும் அண்டவியல் போதனைகளை உள்ளடக்கிய இந்து சமய கதைகள் ஆகும். அவை முதன்மையான படைப்பு, இரண்டாம் தர படைப்பு, மரபு வழி ஆய்வு, காலம் மற்றும் வரலாற்றின் சுழற்சி என்று ஐந்து கருப்பொருளை சுற்றி அமைந்துள்ளன. 18 முக்கிய *புராணங்கள்* இருக்கின்றன. அவை சைவ சமயம், வைணவ சமயம் அல்லது சாக்த சமயம் என்று பிரிக்கப்பட்டுள்ளன. §

**புராணங்கள் சார்ந்த (Puranic (Purāṇic).**§

***purushartha (purushārtha):*** पुरुषार्थ "Human wealth or purpose." புருஷார்த்தம். "மனித செல்வம் அல்லது குறிக்கோள்." மனிதர்கள் தார்மீக ரீதியாக தர்மம், அர்த்தம், காமம் மற்றும் மோட்சம் என்று நான்கு வேட்கைகளில் ஈடுபடுகிறார்கள். இது *சதுர்வர்க* என்று அழைக்கப்பட்டு, இந்து தர்ம சாஸ்திரத்தின் அடிப்படை கோட்பாடாக விளங்குகிறது. 1) தர்மம் ("நேர்மையான வாழ்க்கை"): இது சமூக சேவை மற்றும் அதன் மேம்பாட்டிற்கு ஒருவர் தனது பங்கிற்கு கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள், செய்யவேண்டிய நற்செயல்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள், கட்டுப்பாடுகள் மற்றும் கடைப்பிடித்தல்களை குறிப்பிடுகிறது. இதில் ஒரு குறிப்பிட்ட பரம்பரை மற்றும் சம்பிரதாயத்தை சார்ந்த ஒரு குருவின் வழிகாட்டலுடன் மேற்கொள்ளும் உண்மைப்பொருளின் வேட்கையும் அடங்கும். மேலும் தகவலுக்கு: *தர்மம்.* 2) அர்த்தம் ("செல்வம்"): லௌகீக நன்மை மற்றும் செழிப்பு, பணம், சொத்து,

உடைமைகள். அர்த்தம் என்பது தர்மத்தின் வழிகாட்டலுடன் மேற்கொள்ளப்படும் செல்வத்தின் வேட்கை ஆகும். இதில் உணவு, பணம், உடை மற்றும் தங்கும் இடம் என்கிற அடிப்படை தேவைகளோடு ஒரு வசதியான வீட்டை பராமரிக்க, ஒரு குடும்பத்தை பேணி பாதுகாக்க, ஒரு வெற்றிகரமான தொழில் வாழ்க்கையை பூர்த்தி செய்ய மற்றும் மதம் சார்ந்த கடமைகளை செய்ய தேவைப்படும் செல்வமும் அடங்கும். மேலும் தகவலுக்கு: *யாகம்.* 3) காமம் ("இன்பம், அன்பு; மகிழ்ச்சி"): லௌகீக அன்பு, அழகியல் மற்றும் கலாச்சார நிறைவேற்றம், லௌகீக சுகங்கள் (பாலியல் இன்பங்கள் உட்பட), குடும்பம் வழங்கும் மகிழ்ச்சிகள், சிந்தனை செய்து புரிந்துகொள்ளும் திறமையால் ஏற்படும் திருப்தி. மகிழ்ச்சி, பாதுகாப்பு, ஆக்கத்திறன், பயனுள்ள தன்மை மற்றும் உத்வேகத்தை அனுபவித்தல். 4) மோக்ஷம் ("முக்தி"): முடிவான ஸித்தியாக இருக்கும் ஆத்ம ஞானம், பரசிவம் மூலம் மறுபிறவியில் இருந்து பெறும் விடுதலை. ஆன்மீக ஸித்திகள் மற்றும் மெய்ஞ்ஞான சந்தோஷங்கள், ஆத்ம ஞானம் நோக்கி வழிநடத்தி செல்லும் துறவறம் மற்றும் யோகத்தில் பங்கு பெறுதல். இந்த பிறவி மற்றும் முற்பிறவிகளில் தர்மம், அர்த்த மற்றும் காமத்தை நிறைவேற்றுவதால் மோஷம் கிடைக்கிறது. இதன் மூலம் ஒருவர் உலக சுக துக்கங்களில் இருந்து நிரந்தர விடுதலையை பெறுகிறார். மேலும் தகவலுக்கு: *முக்தி.*§

R***ajagopura(m) (rājagopura):*** राजगोपुर "Royal gateway." *இராஜகோபுரம்.*

தென்னிந்திய கட்டிடக்கலையில் *கோபுரம்* என்பது ஒரு கோயிலின் நுழைவாயிலை குறிப்பிடுகிறது. பெரிய கோயில்களில் பல கோபுரங்கள் அமைந்து இருக்கும். இவற்றுள் பிரதான கோபுரம் *இராஜகோபுரம்* என்று அழைக்கப்படுகிறது. §

**rajas:** रजस् "Passion; activity." ரஜஸ். "பேரார்வம்; நடவடிக்கை." மேலும் தகவலுக்கு: *குணம்.*§

***rasatala* chakra (*rasātala* chakra):** रसातलचक्र "Subterranean region." *ரசாதள சக்கரம்.* இது *மூலாதாரத்திற்கு* கீழிருக்கும் ஐந்தாவது சக்கரம். இது கணுக்கால்களின் மத்தியில் அமைந்து இருக்கும். சுயநலம், தன்னலம் மற்றும் சொந்தம் கொண்டாடும் பண்பு குடிகொண்டு இருக்கும் பகுதி ஆகும். *ரசம்* என்றால் "பூமி, நிலம்; ஈரப்பதம்." மேலும் தகவலுக்கு: *சக்கரம், நரகலோகம்.*§

**மறுபிறவி (reincarnation):** "Re-entering the flesh." *புணர்ஜென்மம்.* ஆன்மாக்கள் பிறப்பின் மூலம் ஒரு தூல உடலுக்குள் நுழையும் செய்முறை. §

**சந்நியாசம் (renunciation).**§

**கட்டுப்பாடுகள் (restraints)** மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்.* §

**அனுகிரக சக்தி (revealing grace)** மேலும் தகவலுக்கு: *அருள்.* §

**rishi (ṛishi):** ऋषि "Seer." ரிஷி. மனோஉணர்வு மற்றும் தொலைநோக்கு மெய்யறிவுடன் இருக்கும் ஒரு ஞானோதயம் பெற்ற உயிர்சக்தியை குறிப்பிடும் சொல். §

**Rudra:** रुद्र "Controller of terrific powers;" or "red, shining one." ருத்ரம். அழிக்கும் கடவுளாக, மீண்டும் ஒடுக்கிக்கொள்ளும் கடவுளாக இருக்கும் சிவபெருமானின் பெயர். ருத்திரனாக இருக்கும் சிவபெருமான், மனிதர்களிடம் புலம்பலை ஏற்படுத்தும் அச்சுறுத்தும் சக்திகளை பிரயோகித்து அவற்றை கட்டுப்படுத்தவும் செய்வதால், அவர் "அச்சுறுத்துபவராகவும்" "கண்ணீரின் கடவுளாகவும்" இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *நடராஜர், சிவபெருமான்.*§

***rudraksha (rudrākṣha):*** रुद्राक्ष "Eye of Rudra; or red-eyed." ருத்ராட்சம்: இது மூன்றாவது கண் அல்லது *ஆக்ஞா* சக்கரத்தை குறிப்பிடுகிறது. ஒரு கோலிகுண்டு வடிவில், பல்வேறு முகங்களுடன், எலியோகார்பஸ் கேனிட்ரஸ் மரத்தின் செம்பழுப்பு நிற விதைகளாக இருக்கும் ருத்திராட்சம் சிவபெருமானின் கண்ணீரில் இருந்து வந்ததாகவும், மனித நேயத்தின் மீது அவர் வெளிப்படுத்தும் இரக்கத்தின் சின்னமாக இருப்பதாகவும் கருதப்படுகிறது. §

# பு

**புனிதமான மதசடங்கு (Sacrament):** 1) சடங்குகளை செய்து பயன்பெறுபவர் மற்றும் மகாதேவர், தெய்வங்கள் அல்லது குருவிற்கு இடையே ஒரு முறையாக விளங்கும் இந்த புனித சடங்கு, முறையாக மற்றும் ஆச்சாரமாக நடத்தப்படுகிறது. இதில் வாழ்க்கையின் முக்கியமான நிலைகள் அல்லது நிகழ்வுகளை குறிக்கும் மத சடங்குகளும் (சம்ஸ்காரம்) அடங்கும். 2) பிரசாதம். ஒரு புனிதமான சடங்கில் அல்லது ஒரு புனிதமான நபரால் ஆசிகள் வழங்கப்பட்ட புனிதமான பொருட்கள், அருள் நிறைந்த பரிசுகள். §

***sadhaka (sādhaka):*** साधक "Accomplished one; a devotee who performs sadhana." சாதகன். தீவிரமான நாட்டத்துடன் ஆன்மீக பயிற்சிகளை மேற்கொள்பவர், மற்றும் இவர் வழக்கமாக மனத்துறவுடன் ஒரு குருவின் வழிகாட்டலுடன் செயல்படுபவர். அவர் வெள்ளை உடை அணிந்து எளிய விரதங்களுடன் இருப்பார், ஆனால் அவர் ஒரு சந்நியாசியாக இருப்பதில்லை. §

**sadhana (sādhana):** साधन "Effective means of attainment." சாதனா. பூஜை, யோகம், தியானம், ஜெபம், உபவாசம் மற்றும் தபஸ் போன்ற மதம் சார்ந்த அல்லது ஆன்மீக பழக்கங்கள். §

**sadhu (sādhu):** साधु "Virtuous one; straight, unerring." சாது. "நற்பண்புடன் இருப்பவர்; தவறு செய்யாது நேர்மையாக இருப்பவர்." இறைவனை தேடும் வேட்கையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு மகான். ஒரு சாது என்பவர் ஒரு யோகி அல்லது சந்நியாசி அல்லது ஒரு குருவின் கீழ் சீடனாகவோ அல்லது முறையான பரம்பரையை சார்ந்து இருக்கவேண்டிய அவசியம் இல்லை. சாதுக்களுக்கு வழக்கமாக ஒரு குறிப்பிட்ட இடம் என்று எதுவும் இருப்பதில்லை மற்றும் அவர்கள் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு பயணம் செய்து, யாசகம் செய்து வாழ்வார்கள். §

***sahaja:*** **सहज சகஜம்.** "தன்னிச்சையாக, இயல்பாக." முடிவான உண்மையை அறிந்தவரின் நிலையை குறிப்பிடுவதற்கு சற்குரு யோகசுவாமி இந்த சொல்லை பயன்படுத்தினார். "ஆன்மா மற்றும் இருப்பு, கண்காணிப்பாளர் மற்றும் கண்காணிக்கப்படும் பொருளின் ஒருமையின் அங்கீகாரம்," என்று ஆனந்த கொமாரசுவாமி அதை விளக்கினார். §

***sahasrara*** **chakra (*sahasrāra* chakra):** सहस्रारचक्र "Thousand-spoked wheel." சகஸ்ர சக்கரம். "ஆயிரம் இதழ்களுடன் இருக்கும் சக்கரம்." மண்டை ஓட்டில் இருக்கும் மனோஉணர்வு விசை மையம். மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*§

**Saiva (Śaiva):** शैव சைவம். சைவ சமயம் அல்லது அதை பின்பற்றுபவர்கள் சார்ந்தது. இன்றும் உலகெங்கும் 400 மில்லியன் சைவர்கள் இருக்கிறார்கள். மேலும் தகவலுக்கு: *சைவ சமயம்.*§

***Saiva Agamas (Śaiva Āgamas):*** शैव आगम சைவ ஆகமங்கள். இவை சைவர்கள் பின்பற்றும் ஸ்ருதிகள் ஆகும். இவை தீவிரமான கடவுள் நம்பிக்கையை போதித்து, சிவபெருமானை பரமேஸ்வரனாக, உள்ளார்ந்து எல்லாம் கடந்து இருப்பவராக குறிப்பிடுகின்றன. 64 *காஷ்மீர் சைவ ஆகமங்கள்* மற்றும் 28 சைவ சித்தாந்த ஆகமங்கள் என்று அவை இரண்டு முக்கிய பிரிவுகளாக உள்ளன. அதில் இரண்டாவது பிரிவு, சைவ சித்தாந்தத்தின் அடிப்படை சாஸ்திரங்களாக விளங்குகின்றன. §

**Saiva Atmartha Puja (Śaiva Ātmārtha Pūjā):** शैव आत्मार्थ पूजा "Saivite personal worship rite." *சைவ ஆத்மார்த்த பூஜை.* வீட்டு பூஜை அறையில் சமஸ்கிருத வழிபாட்டு முறையுடன் நடைபெறும் பூஜை. மேலும் தகவலுக்கு: *பூஜை.* §

**Saiva Parartha Puja (Śaiva Parārtha Pūjā):** शैव परार्थपूजा “Saivite public worship rite.” *சைவ பரார்த்த பூஜை.* ஆகம ஐதீக முறைப்படி கோயிலில் நடைபெறும் பூஜை. மேலும் தகவலுக்கு: *பூஜை.* §

**Saiva Samayam:** சைவசமயம் “Saiva religion.” மேலும் தகவலுக்கு: *சைவ சமயம்.*§

**Saiva Siddhanta (Śaiva Siddhānta):** शैवसिद्धान्त “Final conclusions of Saivism.” சைவ சித்தாந்தம். இன்று உலகெங்கும் அதிகமாக பரவி வலுவாக இருக்கும் சைவப்பிரிவு, குறிப்பாக இலங்கை மற்றும் தென் இந்தியாவை சேர்ந்த தமிழ் மக்களிடம் ஆதிக்கம் செலுத்துகிறது. தெய்வீக வெளிப்பாடுகளின் முறைப்படுத்தப்பட்ட இறையியலாக இருக்கும் சைவ சித்தாந்தம், இருபத்தி எட்டு *சைவ ஆகமங்களை* கொண்டுள்ளது. சைவ சித்தாந்திகளுக்கு, எல்லா உள்பொருள்களின் கூட்டுத் தொகையாக விளங்கும் சிவபெருமான் பரமேஸ்வரன் (தனிப்பெரும் உருவாய் இருக்கும் ஸ்ருஷ்டிகர்த்தா), பராசக்தி (உருவத்தின் ஆதாரத்தளம்) மற்றும் பரசிவம் (எல்லாம் கடந்து இருக்கும் பரப்பிரம்மம்) என்று மூன்று முழுமைகளாக அறியப்படுகிறார். சிவபெருமானுடன் ஆன்மாக்களும் உலகமும் சாரத்தில் ஒன்றாக இருந்தாலும், அவை மாறுபாடு இருப்பதால் பரிணாம வளர்ச்சி பெறுகின்றன. அகோரசிவா மற்றும் மெய்கண்டார் போதனைகளில் இருந்து இடைக்காலங்களில் ஒரு பன்மைவாத பிரிவு தோன்றியது. மேலும் தகவலுக்கு: *சைவ சமயம்.* §

**Saivism (Śaivism, Śaiva):** शैव சைவ சமயம். சிவபெருமானை பரமாத்துமாவாக வழிபடுபவர்கள் பின்பற்றும் சமயம். இது இந்து சமய பிரிவுகளில் மிகவும் பழமையானதாக விளங்குகிறது. சைவ சமயத்தின முதல் சான்றாக, ஒரு யோகியின் தோரணையில் பசுபதியாக அமர்ந்திருக்கும் சிவபெருமான் முத்திரை, 8000 வருடங்களுக்கு முந்தைய சிந்து சமவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்டது. சைவ சமயத்தில் பல பிரிவுகள் உள்ளன. அதில் சைவ சித்தாந்தம், பாசுபத சைவ சமயம், காஷ்மீர் சைவ சமயம், வீர சைவம், சித்த சித்தாந்தம் மற்றும் சைவ அத்வைதம் என்று ஆறு பிரிவுகள் உள்ளன. அவை வேதங்கள் மற்றும் சைவ ஆகமங்களில் வலுவாக ஊன்றி இருப்பதால், பின்வரும் முக்கிய கோட்பாடுகளுடன் பல ஒற்றுமைகளை கொண்டுள்ளன: 1) படைக்கும், காக்கும், அழிக்கும், வெளிப்படுத்தும் மற்றும் மறைக்கும் அருள்சக்திகள் என்று சிவபெருமானின் ஐந்து சக்திகள்; 2) பதி, *பசு* மற்றும் *பாசம்* (“இறைவன், ஆன்மாக்கள் மற்றும் பந்தங்கள்") என்ற மூன்று பிரிவுகள்; 3) *ஆணவம்*, கர்மவினை மற்றும் மாயை என்று மூன்று மலங்கள்; 4) *இச்சா* சக்தி (“ஆசை; விருப்பம்"), கிரியை சக்தி (“செயல்படும் சக்தி”) மற்றும் ஞான சக்தி என்று சிவபெருமானின் மூன்று சக்திகள்; 5) முப்பத்தி ஆறு தத்துவங்கள், அல்லது உள்பொருளின் பிரிவுகள்; 6) ஒரு சற்குருவிடம் இருந்து தீட்சை பெறவேண்டிய தேவை; 7) மந்திரத்தின்

சக்தி; 8) நான்கு *பாதங்கள்* (ஆன்மீக முன்னேற்றத்தின் நிலைகள்): சரியை (சுயநலமற்ற சேவை), கிரியை (பக்தி), யோகம் (தியானம்) மற்றும் ஞானம் (ஞானோதயம்); 9) பஞ்சாட்சர மந்திரம் முதன்மையானது என்றும் மதத்தின் புனிதமான கருவிகளாக ருத்ராட்சம் மற்றும் *விபூதி* விளங்குகின்றன என்ற நம்பிக்கை; 10) சற்குரு, சிவலிங்கம் மற்றும் மகான்களின் நட்புறவை குறிப்பிடும் *சங்கமம்*. §

**Saivite (Śaivite, Śaiva):** शैव சைவ சமயம் சார்ந்ததை குறிப்பிடுவதற்கு அல்லது அதை பின்பற்றுபவருக்கு குறிப்பிடும் சொல். இன்று உலகில் சுமார் 400 மில்லியன் சைவர்கள் இருக்கிறார்கள். மேலும் தகவலுக்கு: *சைவ சமயம்.*§

***Saivite Shastras (Śaivite Śāstras):*** शैव शास्त्र சைவ சமய சாஸ்திரங்கள். இந்த அந்தர்லோக தீர்க்க தரிசனத்தை 1973 ஆம் ஆண்டு முதல் முறையாக, ஆகாசத்தில் இருந்து சிவாய சுப்பிரமுனியசுவாமி படித்ததில் இருந்து, சைவ சித்தாந்த தேவாலயத்தை வழிநடத்தி வந்துள்ளது. சைவ சித்தாந்த யோக சமூகத்திற்காக இந்த *சைவ சாஸ்திரங்களை,* அந்தர்லோகத்தை சேர்ந்த ஒரு தேவர்களின் குழு ஆங்கிலத்தில் எழுதியுள்ளனர். லெமூரிய மற்றும் திராவிட மடங்களின் பொருத்தமான பழக்கங்களை பரிந்துரைத்து, குரு-சீடன் உறவுகள், அணுகுமுறைகள் மற்றும் மடவாசி வாழ்க்கைக்கு வழிகாட்டல்கள் உட்பட, அதில் வெளிப்படுத்தப்பட்டிருந்த கலாச்சாரம் மற்றும் இலட்சியங்களுக்குள் துறவிகளை மாற்றி அமைப்பது அதன் குறிக்கோள் ஆகும். §

**samadhi (samādhi):** समाधि “Enstasy,” “standing within one’s Self.” “Sameness; contemplation; union, wholeness; completion, accomplishment.” சமாதி: “ஒருவர் தனது பரமாத்துமாவிற்குள் நிலைத்து இருத்தல்.” “ஒற்றுமை; ஆழ்ந்த சிந்தனை; ஐக்கியம், முழுமை; நிறைவு, ஸித்தி.” சமாதி எனும் உண்மையான யோக நிலையில், தியானம் செய்பவர் மற்றும் தியானம் செய்யும் பொருள் ஒன்றாக இருக்கிறது. சமாதியில் இரண்டு நிலைகள் உள்ளன. இதில் முதலாவதாக இருக்கும் சவிகல்ப சமாதி (“உருவத்துடன் அல்லது விதையுடன் இருக்கும் சமாதி"), ஒரு பொருளின் சாரத்துடன் அடையாளம் அல்லது ஒருமையை காண்பது ஆகும். இதன் மிகவும் உயர்வான நிலையாக முதன்மை ஆதாரத்தளம் அல்லது தூய உணர்வாக இருக்கும் சச்சிதானந்தம் விளங்குகிறது. இரண்டாவதாக பரமாத்துமாவுடன் அடையாளம் காணும் நிர்விகல்ப சமாதியில் (“உருவம் அல்லது விதை இல்லாத சமாதி"), உணர்வின் எல்லா வகைகளையும் கடந்து காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்து இருக்கும் பரப்பிரம்மம், பரசிவம் அனுபவிக்கப்படுகிறது.§

***samayam:*** சமயம் “Religion.”§

**sampradaya (saṁpradāya):** संप्रदाय "Tradition," "transmission;" சம்பிரதாயம். இது தத்துவம் அல்லது சமய கோட்பாடு அல்லது பரம்பரையை குறிப்பிடுகிறது. இது இந்து சமயத்தில் துடிப்புடன் இருக்கும் ஒரு பாரம்பரியம் அல்லது இறையியலாக இருந்து, வாய்மொழி பயிற்சி மற்றும் தீட்சை மூலம் வழங்கப்படுகிறது. வழக்கமாக ஒரு சம்பிரதாயத்தில் பல பரம்பரைகள் இருக்கும். §

**samsara (saṁsāra):** संसार "Flow." சம்சாரம். விந்தையான உலகம். பிறப்பு, இறப்பு மற்றும் மறுபிறப்பின் சுழற்சி; ஒரு ஆன்மா அனுபவிக்கும் தொடர்ச்சியான லௌகீக வாழ்க்கைகளின் முழுமையான மாதிரி. §

**samskara (saṁskāra):** संस्कार "Impression, activator; sanctification, preparation." சம்ஸ்காரம். "பதிவு, வினையூக்கி; புனிதப்படுத்துதல், முன்னேற்பாடு." 1) (இந்த அல்லது இதற்கு முந்தைய பிறவிகளின்) அனுபவத்தின் மூலம் அடிமனதில் பதியும் பதிவுகள் ஒருவரின் வாழ்க்கை, குணம், எதிர்வினைகள், மனநிலைகள் போன்றவற்றில் தாக்கம் ஏற்படுத்துகின்றன. 2) வாழ்க்கையில்  நடைபெறும் முக்கியமான மாற்றங்களை குறிப்பிடும் சடங்கு. §

**Sanatana Dharma (Sanātana Dharma):** सनातनधर्म "Eternal religion" or "Everlasting path." சனாதன தர்மம். "அநாதி சமயம்" அல்லது "நீடித்து இருக்கும் பாதை." இது இந்து தர்மத்திற்கு வழங்கப்படும் ஒரு பாரம்பரிய பெயர். மேலும் தகவலுக்கு: *இந்து சமயம்.* §

***sanga(m) (saṅga):*** सङ्ग "Association," "fellowship." சங்கம்: சமயம் தொடர்பான குறிக்கோள்களுக்காக ஒரு குழுவாக ஒன்று சேர்தல். §

**ஆதி சங்கரா (Sankara, Adi):** மேலும் தகவலுக்கு: *சங்கரா.*§

**San Marga (San Mārga):** सन्मार्ग "True path." சன்மார்கம் என்பது தேவையில்லாத மனோஉணர்வு ஆய்வு அல்லது ஸித்திகளை பயனற்ற முறையில் வளர்க்க முயற்சி செய்யாது, இறுதி இலக்கான ஆத்ம ஞானத்தை நோக்கி செல்லும் நேரடியான ஆன்மீக பாதை ஆகும். சன் மார்கம் என்பது *ஞானப் பாதையையும்* குறிப்பிடுகிறது. §

**சன் மார்க சரணாலயம் (San Marga Sanctuary):** ஹவாயின் கார்டன் ஐலாண்டு,  கவாயில் எழுச்சியடங்கிய எரிமலை, வயலீலே சிகரத்தின் அடிவாரத்தில் இருக்கும் ஒரு தியான *தீர்த்தம்.* 1970 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இந்த ஸ்தாபனம், சைவ சித்தாந்த தேவாலயத்தின் பல சமூக சேவைகளில் ஒன்றாக விளங்கி, அமெரிக்காவில் இருக்கும் இந்து சமய ஸ்தாபனங்களில்  பழமையான ஒன்றாக விளங்குகிறது. §

***sannidhana(m) (sannidhāna):*** सन्निधान “Nearness; proximity; provost; taking charge of.” சன்னிதானம். “அருகாமை; அண்மை; தலைமை பொறுப்பு; பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல்.” மடங்களின் தலைவர் குரு மகாசன்னிதானம் என்று அழைக்கப்படுகிறார். மேலும் தகவலுக்கு: *சான்னித்திய.* §

***sannidhya (sānnidhya):*** सान्निध्य “(Divine) presence; nearness, indwelling.” *சான்னித்திய. “தெய்வீக இருப்பு;* அருகாமை, நிரந்தரமாக வாசம் செய்கிற.” ஒரு கோயில் அல்லது தெய்வீக புருஷரை சுற்றி அல்லது அவற்றுள் இருக்கும் சக்தியின் பிரகாசமான மற்றும் புனிதமான இருப்பு. §

**sannyasa (sannyāsa):** संयास “Renunciation.” “Throwing down or abandoning.” சந்நியாசம். “துறவறம்.” சந்நியாசம் என்பது சம்சாரியின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை உள்ளடக்கிய தர்மத்தை நிராகரித்து, அதை காட்டிலும் அதிக நிபந்தனைகளுடன் இருக்கும் சந்நியாச தர்மத்தை ஏற்றுக் கொள்வது ஆகும். §

**sannyasin (sannyāsin):** संयासिन् “Renouncer.” சந்நியாசி. சந்நியாச *தீட்சையை* பெற்றவர். ஒரு இந்து துறவி, சுவாமி மற்றும் சந்நியாசிகள் சமூகத்தை சேர்ந்தவர். அவர்களில் சிலர் நாடோடிகளாக இருப்பார்கள் மற்றும் சிலர் மடத்தில் வாழ்ந்து வருவார்கள். §

**Sanskrit (Saṁskṛita):** संस्कृत “Well-made,” “refined,” “perfected.” சமஸ்கிருதம். “நன்றாக,” “புனிதமான,” “முழுமையான.” பழங்கால இந்தியாவின் பாரம்பரிய சமயகுருமார்களின் மொழியாக இருக்கும் சமஸ்கிருதம், விண்ணுலகத்துடன் தொடர்பு கொள்வதற்கு ஒரு புனிதமான வாகனமாகவும் கருதப்படுகிறது. இது *வேதங்கள்* மற்றும் *ஆகமங்கள்* உட்பட, இந்து சாஸ்திரங்கள் எழுதப்பட்ட முதன்மையான மொழி ஆகும். இன்று இந்த மொழி பேச்சு வழக்கில் இல்லாவிட்டாலும் வழிபாட்டு முறை, இலக்கியம் மற்றும் கல்வியில் தீவிரமாக ஆய்வு மேற்கொள்ளும் மொழியாக இருக்கிறது. §

***santosha:*** सन्तोष “Contentment.” சந்தோஷம். “திருப்தி.” மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்.*§

***sapta* rishis (*sapta* ṛishis):** सप्तऋषि *சப்த ரிஷிகள்.* அந்தர்லோகத்தில் இருக்கும் இந்த ரிஷிகள், மனித நேயத்தின் கர்மவினைகளில் வழிகாட்டி உதவி செய்கிறார்கள். §

**sari (sārī):** (Hindi, साई) புடவை. இந்து பெண்மணிகள் அணியும் பாரம்பரிய உடை. §

**Satchidananda (Sacchidānanda):** सच्चिदानन्द “Existence-consciousness-bliss.” சச்சிதானந்தம். “தூய இருப்பு-தூய உணர்வு-பேரின்பம்.” இது சிவபெருமானின் தெய்வீக மனதையும், அதே சமயத்தில் ஒவ்வொரு ஆன்மாவின் தூய மெய்ஞ்ஞான மனதையும்

குறிப்பிடுகிறது. இது முழுமையான அன்பாக, எல்லாம் அறிந்த சர்வவல்லமை படைத்த உணர்வாக, எல்லா உள்பொருளின் முதன்மையான மூலமாக இருந்தாலும், எல்லா உள்பொருளையும் உள்ளடக்கி ஊடுருவியும் உள்ளது. இது தூய உணர்வு, தூய உருவம், இருப்பின் ஆதாரத்தளம் என்றும் அழைக்கப்படுகிறது. இது *பராசக்தியை* குறிப்பிடும் இன்னொரு சொல். மேலும் தகவலுக்கு: *சிவபெருமான்.* §

**satguru (sadguru):** सद्गुरु "True weighty one." சற்குரு. நிர்விகல்ப சமாதியின் மூலம் பரசிவம் என்கிற முடிவான புரிதலை உணர்ந்து, மிகவும் உயர்ந்த ஸித்தி மற்றும் ஆற்றலை பெற்ற ஒரு ஆன்மீக குருவாகவும் ஒரு *ஜீவன்முக்தாவாகவும்* இருக்கும் இவர், மற்றவர்களை ஆன்மீக பாதையில் வழிநடத்தி செல்கிறார். அவர் எப்போதும் ஒரு சந்நியாசியாக, திருமணமாகாத ஒரு துறவியாக இருக்கிறார். இவர் அருள் மற்றும் முக்தியின் மூலமாக இருக்கும் சதாசிவன், இறைவனின் ரூபமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வணங்கப்படுகிறார். §

***satsanga (satsaṅga):*** सत्सङ्ग "Association with the good." சத்சங்கம். "நல்லவர்கள் சேர்க்கை." நல்ல ஆன்மாக்களின் குழுவுடன் சேர்தல்.§

**sattva guna (sattva guṇa):** सत्त्वगुण "Perfection of Being." சத்வ குணம். நன்மை மற்றும் தூய்மையின் பண்பு. மேலும் தகவலுக்கு: *குணம்.*§

***satya:*** सत्य "Truthfulness." சத்தியம். பொய்யாமை. மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்.*§

**Sat Yuga:** सत्युग (Also Satya) "Age of Truth," also called Krita, "accomplished, good, cultivated, kind action; the winning die of four dots." சத்யுகம். கிருத யுகம் என்றும் அழைக்கப்படுகிறது. "இந்த யுகத்தில் மக்கள் எல்லோரும் அறநெறியுடன் வாழ்வார்கள்." இந்த யுகம் 1,728,000 வருடங்களுக்கு நீடித்து, நான்கு யுகங்களின் வழக்கமான சுழற்சியில் முதலாவதாக இருக்கிறது. மிகவும் பிரகாசமாக இருக்கும் இந்த யுகத்தில், மையத்தில் இருக்கும் சூரிய வெளிச்சம் முழுவதும் பூமியில் ஊடுருவுகிறது. மேலும் தகவலுக்கு: *யுகங்களுக்கு மத்தியில் இருக்கும் சூரியன், பிரபஞ்ச சுழற்சி, யுகம்.* §

***sayuja (sāyujya):*** सायुज्य "Intimate union." சாயுஜ்யம். நிரந்தர இறையுணர்வு. இது வழக்கமாக *சாயுஜ்ய சமாதி* என்று அழைக்கப்படும். §

**பரமாத்துமா (Self (Self God)):** ஒவ்வொரு ஆன்மாவின் மையத்திலும் வாசம் செய்யும் அந்த பரசிவம், பரப்பிரம்மம் என்கிற சிவபெருமானின் முழுமையை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *பரசிவம்.* §

**ஆத்ம ஞானம் (Self Realization):** பரமாத்துமா, பரசிவத்தை நேரடியாக அறிதல். ஆத்ம ஞானம் என்பது சமஸ்கிருதத்தில் நிர்விகல்ப சமாதி என்று

அறியப்படுகிறது; "உருவம் அல்லது விதை இல்லாத சமாதி;" முடிவான ஆன்மீக ஸித்தி (அசம்பிரஞாத சமாதி என்றும் அழைக்கப்படுகிறது). மேலும் தகவலுக்கு: *கடவுளை உணர்தல்.*§

***seva (sevā):*** सेवा "Service," சேவை, கர்ம யோகம். விருப்பம் அல்லது வெகுமதி பற்றிய சிந்தனை அல்லது சொந்த லாபம் எதுவும் இல்லாது ஒரு கோயிலில் செய்யும் ஒரு தனிச்சையான சேவையை போன்று, ஆன்மீக பாதையின் அங்கமாக, மற்றவர்களுக்கு சுயநலமற்ற மற்றும் பயனுள்ள சேவையை செய்வது ஆகும். *சேவை,* சிவத்தொண்டு என்றும் அழைக்கப்படுகிறது. இது *சரியை பாதையில்* முக்கிய பயிற்சியாக விளங்குகிறது. §

***shakahara (śākāhāra):*** शाकाहार "Vegetarian diet." சைவ உணவு. மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்.* §

**Shakta (Śākta):** शाक्त சாக்த சமயம் சார்ந்த. மேலும் தகவலுக்கு: *சாக்த சமயம்.*§

**Shakti (Śakti):** शक्ति "Power, energy." சக்தி. "ஆற்றல், சக்தி." உள்பொருள் அனைத்திலும் வியாபித்து இருக்கும் சிவபெருமானின் இயங்கும் சக்தி அல்லது வெளிப்படையான சக்தி. இதன் மிகவும் புனிதமான அம்சமாக, எல்லா வடிவத்தின் தூய உணர்வு மற்றும் முதன்மை ஆதாரத்தளமாக இருக்கும் பராசக்தி என்கிற சச்சிதானந்தம் விளங்குகிறது. *இச்சா* சக்தி (ஆசை, விருப்பம், அன்பின் சக்தி), கிரியா சக்தி (செயல்பாட்டில் இருக்கும் சக்தி) மற்றும் ஞான சக்தியாக (விவேகம், அறிதலில் இருக்கும் சக்தி) வெளிப்படும் இந்த தூய்மையான, தெய்வீக சக்தி சிவபெருமானின் திருசூலத்தில் மூன்று கூரிய முனைகள் மூலம் உருவகம் செய்யப்பட்டுள்ளன. மறைக்கும், ஒடுக்கும், காக்கும் மற்றும் படைக்கும் என்று இதில் இருந்து ஐந்து சக்திகள் தோன்றுகின்றன. சைவ சித்தாந்தத்தில், எல்லாமாக இருக்கும் சிவபெருமானின் தெய்வீக ஆற்றலாக இருக்கும் சக்தி, அவரிடம் இருந்து பிரிக்க முடியாததாக இருக்கிறது. இந்த ஒற்றுமை, ஆண் உருவம் பாதியும் பெண் உருவம் பாதியுமாக இருக்கும் அர்த்தநாரீஸ்வரர் விக்ரகத்தில் உருவகம் செய்யப்பட்டுள்ளது. இந்து சமயத்தின் வேறு சில பிரிவுகளில் சிவபெருமானும் சக்தியும் தனித்தனி தெய்வங்களாக வழிபடுவது பிரபலமாக இருக்கிறது. இந்த வழிபாட்டில் சக்தி பெண் வடிவிலும், சிவபெருமான் ஆண் வடிவிலும் இருக்கிறார். இந்து கோயில்கள், கலை மற்றும் புராணங்களில், இவர்கள் தெய்வீக தம்பதிகளாக தென்படுகிறார்கள். சாக்த சமயத்தில், அம்மன் மற்றும் அவளது பல்வேறு கோரமான மற்றும் கருணையுள்ளம் கொண்ட வடிவங்கள் மீது வழிபாடு நடத்தப்படுகின்றன. சக்தி என்பது ஒரு தெய்வீகப் புருஷர் அல்லது பிரதிஷ்டை செய்யப்பட்ட கோயிலில் இருந்து வெளிப்படும் உன்னதமான,

ஆனந்தத்தை ஊக்குவிக்கும் சக்தியாக பக்தர்களால் எளிதில் உணர முடிகிறது. மேலும் தகவலுக்கு: *சாக்த சமயம்.*§

***shaktinipata (śaktinipāṭa):*** शक्तिनिपाट *சக்திநிபாத.* இது ஆன்மாவின் பரிணாம வளர்ச்சியில் *சகல அவத்தையில், அருள்* என்று அழைக்கப்படும் உயர்வான நிலையில் "அருளின் இறக்கத்தை," குறிப்பிடுகிறது. *சக்திநிபாத* இரண்டு பிரிவாக இருக்கிறது: அது உட்புறமாக இறங்குவதை சிவபெருமான் மீது ஏற்படும் ஒரு மிகப்பெரிய ஏக்கத்தின் மூலமாகவும், அதன் வெளிப்புற இறக்கத்தை ஒரு சற்குரு தோற்றத்தில் இருந்தும் உணர முடியும். இந்த நிலையில், ஒரு பக்தன் ஆன்மீகம் மற்றும் புனிதமாக இருக்கும் விஷயங்கள் அனைத்திலும் தன்னை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்ள விரும்புகிறான். இதே பொருளுடன் *சக்திபாத* என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. §

***shaktipata (śaktipāṭa):*** शक्तिपाट *சக்திபாத.* இதே பொருளுடன் *சக்திநிபாத* என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *சக்திநிபாத.*§

**Shaktism (Śāktism, Śākta):** शाक्ति "Doctrine of power." சாக்த சமயம். மென்மையாக அல்லது கோரமாக பல உருவங்களில இருக்கும் சக்தி அல்லது தேவியை வணங்கும் சமயப் பிரிவு. இந்து சமயத்தின் நான்கு முக்கிய பிரிவுகளில் ஒன்றாக சாக்த சமயம் விளங்குகிறது. சாக்த சமயத்தின் முதல் அறிகுறிகளாக கி.மு. 5500 காலத்தை சேர்ந்த ஆயிரக்கணக்கான பெண் சிலைகள், இந்தியாவின் மெஹர்கர் கிராமத்திற்கு அருகில் கண்டு எடுக்கப்பட்டன. தத்துவம் மற்றும் பழக்கங்களை பொறுத்தவரையில், சைவ சமயம் போலவே பெரும்பாலும் சாக்த சமயம் தென்படுகிறது. உதாரணத்திற்கு அவை இரண்டும், சிவபெருமானுடன் நடைபெறும் அத்வைத ஐக்கியம் மற்றும் மோக்ஷத்தை முடிவான குறிக்கோள்களாக குறிப்பிடுகின்றன. ஆனால் சாக்த சமயத்தை சேர்ந்தவர்கள் தெய்வீக அம்சத்தின் வலுவான அம்சமாக இருக்கும் சக்தியை பரமாத்துமாவாக தனித்து வழிபடுகிறார்கள் மற்றும் சிவபெருமான் தனியாக யாவும் கடந்த நிலையில் இருப்பதாக கருதினாலும், அவரை வழிபடுவது இல்லை. மேலும் தகவலுக்கு: *சக்தி.* §

**Shankara (Śaṅkara):** शङ्कर "Conferring happiness;" "propitious." சங்கரா. "மகிழ்ச்சியை வழங்குவது;" "அனுகூலமான." சிவபெருமானை குறிப்பிடும் பெயர். மேலும் இந்த சொல், ஸ்மார்த்த சம்பிரதாயத்தின் முதன்மையான குருவாக, தனது அத்வைத வேதாந்தம் மற்றும் சாஸ்திரங்களுக்கு வழங்கிய விளக்க உரைகள் மூலம் புகழ்பெற்று, இந்தியாவின் முக்கிய பகுதிகளில் நான்கு மடங்களை ஸ்தாபனம் செய்து அதற்கு தனது சீடர்களை மடாதிபதிகளாக நியமித்த இந்து சமயத்தின் மிகவும் பிரசித்தமான துறவிகளில் ஒருவராக விளங்கிய ஆதி சங்கரரையும் (788-820) குறிப்பிடுகிறது. அவர் 32 வருடங்கள் மட்டுமே

வாழ்ந்தாலும், இந்தியா முழுவதும் பயணம் செய்து, அந்த காலகட்டத்தில் இந்து சமூகத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தினார். §

**Sharavanabhava (Śaravaṇabhava):** शरवणभव "Thicket of reeds." சரவண பவ. முதன்மையான உணர்வின் புனிதமான சரவண பொய்கையில் தோன்றி, ஆன்மீக வேட்கையின் தலைவனாக இருக்கும், சிவபெருமானின் மகன் கார்த்திகேயனை அழைக்கும் மந்திரம். அந்த பொய்கையின் கண்ணாடி போன்ற மேற்பரப்பு அமைதியான, நிம்மதியான மனதை குறிப்பிடுகிறது. ஒரு சற்குருவால் நமச்சிவாய மந்திரத்தில் தீட்சை பெறாத சைவர்களுக்கு இந்த மந்திரம் பரிந்துரைக்கப்படுகிறது. §

**shastra (śāstra):** शास्त्र "Sacred text; teaching." சாஸ்திரம்: "புனிதமான உரை; போதனை." சமயம் அல்லது தத்துவம் சார்ந்த ஒரு நூல் அல்லது ஆகமங்களை போன்ற படைப்புக்கள். அரசாட்சி முறையை பற்றி குறிப்பிடும் அர்த்த சாஸ்திரங்களை போல ஏதாவது ஒரு துறையை சேர்ந்த அறிவு அல்லது அறிவியல்.§

**shastri (śāstrī):** शास्त्री சாஸ்திரி. (சாஸ்திரங்கள் அல்லது சட்ட நூல்கள்) சாஸ்திரத்தில் தேர்ச்சி இருப்பவர். §

***shaucha (śaucha):*** शौच "Purity." சவுச்சம். "புனிதம்." மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்.*§

**shishya (śishya):** शिष्य சீடன். "ஒரு மாணவன் அல்லது சீடன்," இது குறிப்பாக தனது திறமைகளை நிரூபித்து ஒரு குருவால் ஏற்றுக்கொண்ட ஒருவரை குறிப்பிடுகிறது. §


***shloka (śloka):*** श्लोक சுலோகம். குறிப்பாக ஒரு குறிப்பிட்ட அளவில் இயற்றப்பட்ட ஒரு செய்யுள், சொற்றொடர், பழமொழி அல்லது கீர்த்தனை. இது குறிப்பாக இரண்டு வரிகளுடன், ஒவ்வொரு வரியிலும் பதினாறு எழுத்துக்களுடன் அமைந்து இருக்கும். §

***Shri Rudram (Śrī Rudram):*** श्रीरुद्रम् "Hymn to the wielder of terrific powers." ஶ்ரீருத்ரம். சிவபெருமானின் அழிக்கும் சக்தியை பிரார்த்திக்கும் இந்த முதன்மையான வேத மந்திரம், தினமும் இந்தியா முழுவதிலும் இருக்கும் சைவ கோயில்களில் ஓதப்படுகின்றன. மூன்று வேதங்களின் மத்தியில், *யஜுர் வேத தைத்திரீய சம்ஹிதையின்* அமைந்து இருக்கும் இந்த நீளமான பிரார்த்தனையின் மத்தியில் சிவாயநம எனும் பஞ்சாட்சர மந்திரம் முதல் முறையாக தோன்றுகிறது. §

**ஷூம் (Shum (Shūm)):** 1968 ஆம் ஆண்டு சிவாய சுப்பிரமுனியசுவாமி நாத பரம்பரையின் சூட்சுமமான தியான மொழியை வெளியிட்டார். இந்த மொழியின் முக்கிய எழுத்துக்களின் தோற்றம்:§

 §

***ஷுமீப் (shumif (shūmīf)):***  ஷும் மொழி மற்றும் தத்துவத்தில் வரையறுக்கப்பட்ட நான்கு கண்ணோட்டங்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்த கண்ணோட்டத்தில் மனம் நிலையாக இருந்து, சாட்சி மனதின் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு பயணம் செய்கிறது. மேலும் இந்த சொல் ஷும் கண்ணோட்டத்தை குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது. இது சைவ சித்தாந்தத்தில் ஆழமான தியான பயிற்சிகளை உள்ளடக்கியுள்ளது. இது ஒரு அத்வைத அல்லது ஒருமைவாத கண்ணோட்டம்.§


***shumsimnisi (shūmsimnīsī):***  *ஷும்சிம்நிசி*. தீவிர உணர்விற்கு வழி வகுக்கும் உற்சாகமான சிந்தனைகள். §

***siddha:*** सिद्ध சித்தர். “பூரணமானவர்” அல்லது மிகப்பெரிய ஆன்மீக அல்லது சக்திகளை பெற்ற யோகி. மேலும் தகவலுக்கு: *ஸித்தி*. §

***siddhanta (siddhānta):*** **सिद्धान्त** “Final attainments;” “final conclusions.” சித்தாந்தம். ஒரு துறையில் சிந்தித்து கண்டறிந்த முடிவான உண்மை. §

***siddhanta shravana (siddhānta śravaṇa):*** सिद्धान्तश्रवण “Scriptural listening.” *சித்தாந்த ஸ்ரவணம்*. “சாஸ்திரங்களை கேட்டல்.” மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்*.§

**ஸித்தி (siddhi):** “Power, accomplishment; perfection.” “ஆற்றல், சாதனை; முழுமை.” உறுதியான தியானம் மற்றும் ஒரு நோக்கத்துடன் உடலை வருத்தும் *தபஸ்* மூலம் வளர்ச்சி அடைந்த அல்லது ஆன்மீக பக்குவம் மற்றும் யோக சாதனா மூலம் இயல்பாக விழிப்படைந்த ஆன்மாவின் விசேஷமான சக்திகள். ஆத்ம ஞான அனுபவத்தை தொடர்ந்து பெறும் போது, ஒரு தனிநபரின் தேவைக்கு ஏற்ப ஸித்திகள் இயல்பாக விரிவாக்கம் பெறுகின்றன. ஸித்திகள் அகங்காரம் என்கிற தன்உணர்வை வளர்ச்சி அடைய செய்து இறைவன், மகாதேவர்கள் மற்றும் குருவின் விருப்பத்திற்கு முழுமையாக சமர்பித்துக்கொள்ளும் *பிரபத்தி* நிலையை அடைவதற்கு எதிராக போராடுவதால், ஆத்ம ஞானத்திற்கு முன்பாக ஸித்திகளின் பயன்பாடு அல்லது வளர்ச்சி ஒருவரின் பாதையில் மிகப்பெரிய தடைகளில் ஒன்றாக விளங்குகிறது. §

***simshumbisi (simshūmbīsī»):***  சிம்ஷும்பிசி. முதுகுத்தண்டில் இருக்கும் ஆன்மீக சக்தி; மஞ்சள் நிறத்தில் முதுகுத்தண்டில் இருந்து நரம்பு மண்டலம் வழியாக பாய்ந்து செல்லும் சுத்தமான உயிர் சக்தி. துணை மெய்ஞ்ஞான நிலையின் பதினான்கு வலுவான மனோஉணர்வு நரம்பு ஓட்டங்களின் பகுதியாக *சிம்ஷும்பிசி* விளங்குகிறது. இந்த பதினான்கு ஓட்டங்கள் அல்லது நாடிகள் *வும்டேயுடி* மற்றும் *கரேஹனா* என்கிற *இடா* மற்றும் *பிங்களா* நாடிகளுடன் நடுவில் இருக்கும் *சுஷும்னா* நாடியையும்

உள்ளடக்கியுள்ளது. ஒரு யோகி *சிம்ஷும்பிசியில்* வாழும் போது, அவர் ஆண் (தீவிரமான) அல்லது பெண்ணின் (செயலற்ற) இயல்பு இல்லாத உணர்வுடைய உயிர்சக்தியாக இருக்கிறார். §

**Siva (Śiva):** शिव The "Auspicious," "Gracious," or "Kindly one." சிவபெருமான். சைவ சமயத்தின் பரமாத்துமா. சிவபெருமான் ஒரே சமயத்தில் படைப்பவராகவும் படைப்பாகவும், உள்ளார்ந்தும் யாவும் கடந்த நிலையில் இருப்பதாலும், அவர் நீக்கமற நிறைந்து இருக்கிறார். அவர் தனிப்பட்ட கடவுளாக, படைப்பவர், காப்பவர் மற்றும் அழிப்பவராக இருக்கிறார். ஒரு தெய்வீக சக்தியாக இருக்கும் அவர், பரமேஸ்வரன் (ஆதி ஆன்மா), பராசக்தி (தூய உணர்வு) மற்றும் பரசிவம் (பரப்பிரம்மம்) என்று மூன்று முழுமைகளில் பரவலாக புரிந்துகொள்ளப்படுகிறார். மேலும் தகவலுக்கு: *பரமேஸ்வரன்.*§

**Sivadhyana (Śivadhyāna):** शिवध्यान "Meditation on Siva." சிவ தியானம். "தியானத்தில் இருக்கும் சிவன்." மேலும் தகவலுக்கு: *அஷ்டாங்க யோகம்.*§

**Sivalinga(m) (Śivaliṅga):** शिवलिङ्ग "Mark (or sign) of Siva." சிவலிங்கம். இது பெரும்பாலும் எல்லா சிவன் கோயில்களிலும், சிவபெருமானின் மிகவும் பிரபலமான வடிவமாக இருக்கிறது. சிவபெருமானின் மிகவும் பழமையான மற்றும் எளிமையான உருவமாக விளங்குகிறது. ஒரு உருண்டையாக, நீள்வட்டமாக, அருவுருவமாக இருக்கும் லிங்கம் வழக்கமாக ஒரு வட்டவடிவ *பீடத்துடன்* அமைந்து இருக்கும். சிவலிங்கத்தை *பீடம்* மற்றும் லிங்கம் என்று இரண்டாக பிரிக்கலாம். இதில் மேல் புறத்தில் இருக்கும் உருளை லிங்கம் என்று அழைக்கப்பட்டு, எல்லா உருவங்கள் மற்றும் பண்புகளை கடந்து இருக்கும் பரசிவத்தை குறிப்பிடுகிறது. லிங்கத்தில் கீழிருந்து மேலே எழும்பி இருக்கும் பகுதி *பீடம்* என்று அழைக்கப்பட்டு, இறைவனின் ஆற்றலை வெளிப்படுத்தும் பராசக்தியை குறிப்பிடுகிறது. லிங்கம் வழக்கமாக கல்லில் (செதுக்கப்பட்டு இருக்கும் அல்லது விரைந்து ஓடும் ஆற்றை போன்ற இயற்கை செயல்களால் தோன்றும் சுயம்புலிங்கம்) உருவாக்கப்பட்டாலும் உலோகம், ரத்தினம், படிகம், மரம், மண் மற்றும் உருகும் தன்மையுள்ள பனிக்கட்டியாலும் உருவாக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: மூர்த்தி, சைவ சமயம். §

**Sivaloka (Śivaloka):** शिवलोक "Realm of Siva." சிவலோகம். மேலும் தகவலுக்கு: *லோகம்.*§

***Siva Purana(m) (Śiva Purāṇa):*** शिवपुराण "Ancient [lore] of Siva." சிவபுராணம். சைவர்கள் புனிதமாக கருதும் ஆறு முக்கிய சாஸ்திரங்களின் தொகுப்பு. மேலும் இந்த ஆறு நூல்களில் பழமையான நூலின் பெயராகவும் இருக்கிறது. ஆனால் சிலர் அதை *வாயு*

*புராணத்தின்* ஒரு பதிப்பாக கருதுகிறார்கள். மேலும் தகவலுக்கு: *இந்து சமயம், புராணங்கள்.*§

**Sivaratri (Śivarātri):** शिवरात्रि "Night of Siva." சிவராத்திரி. மேலும் தகவலுக்கு: *மகாசிவராத்திரி.*§

**Sivathondu:** சிவதொண்டு "Service to Siva." இது கர்ம யோகம் கோட்பாட்டை போன்றது. §

**Skanda:** स्कन्द "Quicksilver;" "leaping one." ஸ்கந்தன், கந்தன். கார்த்திகேயனை குறிப்பிடும் மிகவும் பழமையான பெயர்களில் ஒன்று. இவர் ஒண்சிவப்பு சாயலுடன் தேவர்கள் படைத்தலைவராக இருக்கிறார். §

**Skanda Shashthi (Skanda Shashṭhī):** स्कन्दषष्ठी கந்த சஷ்டி. அசுர சக்திகள் மீது கந்தன் எனும் கார்த்திகேயன் வெற்றிபெற்றதை கொண்டாடுவதற்கு அக்டோபர்-நவம்பர் மாதத்தில் நடைபெறும் ஆறு நாள் திருவிழா. §

**Smarta (Smārta):** स्मार्त "Of or related to smriti," the secondary Hindu scriptures. இந்துக்களின் துணை சாஸ்திரங்களான "ஸ்ம்ருதி சார்ந்தது," மேலும் தகவலுக்கு: *ஸ்மர்த்த சமயம்.*§

**Smartism (Smārtism):** स्मार्त् ஸ்மர்த்த சமயம். இவர்கள் ஸ்ம்ருதியை தங்களது அடிப்படையாக கொண்டவர்கள். நான்கு இந்து பிரிவுகளில் ஸ்மர்த்த சமயத்தை சேர்ந்தவர்கள் அதிக தாராள மனப்பான்மையுடன் ஆறு கடவுளையும் முழுமுதற் கடவுளாக வணங்குகிறார்கள். இவர்கள் பழங்கால வைதீக பிராமண பாரம்பரியத்தை சேர்ந்தவர்கள் (சுமார் கி.மு. 700). 9 ஆம் நூற்றாண்டில் இருந்து இந்த சமயத்தின் மீது, ஆதி சங்கரரின் அத்வைத வேதாந்த போதனைகள் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தி வழிநடத்தி வருகிறது. §

**ஆன்மா (soul):** மனம் மற்றும் உணர்ச்சிகளாக இல்லாமல் மனிதனின் உண்மையான உயிர்சக்தி. ஆத்மன் அல்லது "புருஷனாக" இருக்கும் ஆத்மா, தனது சாரம் மற்றும் உருவம் அல்லது உடல் என்கிற இரண்டு அம்சங்களை கொண்டுள்ளது. மனிதனுக்குள் அதிக உட்புறமாக மாறாத சக்தியாக இருக்கும் ஆன்மாவின் சாரம் அல்லது மையம், நிரந்தரமாக பரசிவம் (பரப்பிரம்மம்) மற்றும் பராசக்தி (சச்சிதானந்தம், தூய உணர்வு) என்ற சிவபெருமானின் முதல் இரண்டு முழுமைகளைப் போல இருக்கிறது. ஆன்மாவின் உடல், *காரண சரீரம்*, அதிக உட்புறமாக இருக்கும் கோசம், ஆன்மீக உடல் மற்றும் ஒளியின் உடல் என்று *ஆனந்தமய கோசம்* அழைக்கப்படுகிறது. இந்த பெயர்கள், ஒளியினால் உருவாகி (குவாண்டம்) சுயமாக பிரகாசிக்கும் மனித உருவைப் போன்ற ஒரு தனிப்பட்ட சக்தியாக வெளிப்பட்டு இருக்கும் ஆன்மாவை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: ஆன்மாவின் பரிணாம வளர்ச்சி. §

***sphatika (sphaṭika):*** स्फटिक "Quartz crystal." *ஸ்படிகம்*, படிகம். *ஸ்பட்* என்றால், "விரிவடைதல்; மலர்தல்; கண் முன்னே திடீரென்று தோன்றுதல்." மேலும் தகவலுக்கு: *ஸ்படிக சிவலிங்கம்.*§

***sphatika* Sivalinga(m) (*sphaṭika* Śivaliṅga):** स्फटिकशिवलिङ्ग "Crystal mark of God." *ஸ்படிக சிவலிங்கம்.* பளிங்கு படிகத்தில் ஒரு சிவலிங்கம். மேலும் தகவலுக்கு: *சன் மார்க சரணாலயம், சிவலிங்கம் சுயம்பு லிங்கம்.* §

**ஆன்மீக விரிவாக்கம் (spiritual unfoldment):** மனிதனுக்குள் உள்ளார்ந்து இருக்கும் தெய்வீக ஆன்மாவின் விரிவாக்கம். *சுஷும்னா நாடி* வழியாக குண்டலினி சக்தி மெதுவாக எழுச்சி பெறும் போது, உணர்வில் ஏற்படும் மெதுவான விரிவாக்கம். ஒரு மொட்டில் இருந்து அழகான மற்றும் பிரகாசமான தாமரை மலர் மலர்வதைப் போல, ஆன்மீக விரிவாக்கம் என்பது இந்த மெதுவான மற்றும் மிகவும் நுட்பமான செய்முறையை குறிப்பிடுகிறது. §

**அடிமனம் (subconscious mind):** Samskara *chitta*. இது கடந்தகால பதிவுகள், எதிர்வினைகள் மற்றும் ஆசைகளின் சேமிப்புக் கிடங்காகவும், தனிச்சையான உடலியக்க செய்முறைகளின் இருப்பிடமாகவும் இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *மனம்.*§

**Subramaniam:** சுப்பிரமணியம். இதற்கு சமஸ்கிருதத்தில் "அதிக கடவுள் பக்தியுள்ள; தெய்வீக புருஷருக்கு பிரியமான" என்று பொருள். முருகப்பெருமானை குறிப்பிடும் இன்னொரு பெயர். §

**Subramuniyaswami:** சுப்பிரமுனியசுவாமி. நந்திநாத சம்பிரதாயத்தை சேர்ந்த கைலாச பரம்பரையின் 162 ஆவது சற்குரு (1927–2001). அவர் இன்றைய காலகட்டத்தில் மிகவும் முக்கியமான இந்து குருவாகவும், இந்து சமயத்தின் மறுமலர்ச்சிக்கு எண்ணற்ற முயற்சிகள் மேற்கொண்டதற்காகவும் உலகெங்கும் போற்றப்படுகிறார். அதே சமயத்தில், பாரம்பரியங்கள் என்பது கடந்தகாலத்தில் முயற்சி செய்து நிரூபிக்கப்பட்ட பாதைகள் என்ற கருத்தை தீவிரமாக ஆதரித்து, தற்கால மனித நேயத்தின் வாழ்க்கைக்கு புதிய மாதிரிகளை அமைத்து தருவதில் தைரியமாக புதிய சிந்தனைகளை அறிமுகப்படுத்தினார். §

**மறைந்திருக்கும் பண்புகளின் மனம் (sub-subconscious mind):** *வாசன சித்த*. மேலும் தகவலுக்கு: *மனம் (ஐந்து நிலைகள்).*§

**துணை மெய்ஞ்ஞான மனம் (subsuperconscious mind):** *அனுகரண சித்த*. உணர்வுள்ள மற்றும் அடியுணர்வு நிலைகள் வழியாக மெய்ஞ்ஞான மனம் செயல்படுவதை குறிப்பிடுகிறது. இது இயலுணர்வு, தெளிவு மற்றும் நுண்ணறிவை தோற்றுவிக்கிறது. §

**சூட்சும உடல், நுணுக்கமான உடல் (subtle body):** *சூட்சும சரீரம்*. ஆன்மா அந்தர்லோகத்தில் செயல்படுவதற்கு, ஆன்மா தன்னை உறையிட்டுக் கொள்ளும் தூல பண்பில்லாத உடல், சூட்சும உடல் அல்லது வாகனம்.

சூட்சும உடல் *விஞ்ஞானமய கோசம்* (மனம், அறிவெழுச்சி-இயலுணர்வு கோசம்), *மனோமய கோசத்தை* (உள்ளுணர்வு-அறிவுணர்வு கோசம்) கொண்டுள்ளது. மேலும் ஆன்மா தூல உடலில் இருக்கும் வரை, சூட்சும உடலில் *பிராணமய கோசமும்* (உயிர் சக்தியின் கோசம்) இருக்கிறது. மரணத்திற்கு பிறகு, *பிராணமய கோசம்* பிரிவதால், சூட்சும உடலில் *மனோமய* மற்றும் *விஞ்ஞானமய* கோசம் மட்டுமே இருக்கின்றன. முறுபிறவிக்கு முன்பு அல்லது உயர் பரிணாம வளர்ச்சி லோகங்களில் நுழையும் போது, *மனோமய கோசமும்* விலக்கிகொள்வதால், அந்த சமயத்தில் சூட்சும உடலில் *விஞ்ஞானமய கோசம்* மட்டுமே இருக்கிறது. மேலும் இந்த சூட்சும உடலில் *அந்தகரணம்* (புத்தி, மனஸ் மற்றும் தன்னுணர்வு என்ற மனதின் புலன்கள்) மற்றும் தூல உடலுடன் இருக்கும் போது ஐந்து ஞானேந்திரியங்கள் (புலனுணர்வு கருவிகள்: கேளுணர்வு, தொட்டுணர்வு, பார்வை, சுவை மற்றும் வாசனை) மற்றும் ஐந்து *கர்மேந்திரியங்கள்* (செயற்கருவிகள்: வாக்கு, கைகள், கால்கள், உடற்கழிவுகளை வெளியேற்றும் உறுப்புக்கள் மற்றும் பிறப்புறுப்புக்கள்) இருக்கின்றன. இது உள்பொருளின் 36 பிரிவுகளில், 6 ஆவது தத்துவத்தில் இருந்து 36 ஆவது தத்துவம் வரை இடம் பிடிக்கிறது. §

***summa:*** சும்மா "Stillness." §

**மெய்ஞ்ஞான மனம் (superconscious mind):** *காரண சித்த*. மேலும் தகவலுக்கு: *மனம் (ஐந்து நிலைகள்), மனம் (மூன்று கட்டங்கள்).*§

**sutra (sūtra):** सुत्र "Thread." சூத்திரம். ஒரு முதுமொழி போன்ற செய்யுள் அல்லது அத்தகைய முதுமொழிகளைக் கொண்ட இலக்கிய நடையை இது குறிப்பிடுகிறது. கி.பி. 500 ஆம் ஆண்டில் இருந்து இந்த நடையை இந்திய தத்துவ ஞான அமைப்புக்கள் பரவலாக ஏற்றுக்கொண்டு இறுதியில் சட்டம், இலக்கணம், மருத்துவம், கவிதை, கைவினைகள் தொடர்பான படைப்புக்களில் பயன்படுத்தவும் தொடங்கின. §

***svadharma:*** स्वधर्म "One's own way." ஸ்வதர்மம். "ஒருவரது தனிப்பட்ட தார்மீக வழி." மேலும் தகவலுக்கு: *தர்மம்.* §

***svarnasharira vishvagrasa (svarṇaśarīra viśvagrāsa):*** स्वर्णशरीरविश्वग्रास *ஸ்வர்ணசரீர விஷ்வகிராசா*. சிவபெருமானுடன் நடைபெறும் இறுதியான இந்த ஐக்கியத்தின் போது தனிப்பட்ட ஆன்மா எதுவும் இல்லாமல், சிவபெருமான் மட்டுமே நிலைத்து இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *விஷ்வகிராசா.*§

***svayambhu* Linga(m) (*svayambhū* Liṅga):** स्वयम्भूलिङ्ग சுயம்பு சிவலிங்கம். மேலும் தகவலுக்கு: *சுயம்பு சிவலிங்கம்.*§

**svayambhu Sivalinga(m) (svayambhū Śivaliṅga):** स्फटिकशिवलिङ्ग "Self-existent mark or sign of God." சுயம்பு சிவலிங்கம். இது மனிதனின் கைகளால் வடிவமைக்கப்படாமல் இயற்கையாக கண்டு எடுக்கப்பட்ட ஒரு சிவலிங்கத்தை குறிப்பிடுகிறது. இது பெரும்பாலும் ஒரு வழுவழுப்பான உருளை வடிவில் *பானலிங்கம்* என்று அழைக்கப்படுகிறது. இதைப்போன்ற கற்கள் இந்தியாவின் நர்மதா நதியில் காணப்படுகின்றன. மேலும் தகவலுக்கு: *சிவலிங்கம்.*§

**swami (svāmī):** स्वामी "Lord; owner; self-possessed." சுவாமி. "கடவுள்; எஜமான்; சுய கட்டுப்பாட்டுடன் அமைதியாக இருப்பவர்." எல்லாம் அறிந்தவராக அல்லது தனக்குத்தானே ஆசிரியராக இருப்பவர். தனது வாழ்க்கையை முழுமையாக சமயப்பணியில் ஈடுபடுத்திக் கொண்ட ஒரு துறவி, தீட்சை பெற்றவர், காவி உடை அணிந்த துறவி மற்றும் வழக்கமாக ஒரு சந்நியாசிக்கு வழங்கப்படும் பெயர். *சுவாமி* எனும் சொல் மரியாதையின் சின்னமாக விளங்குவதோடு, சிலமயங்களில் துறவறம் மேற்கொள்ளாமல் ஆன்மீக பணிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்களை குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது. §

# T

**Tai Pongal:** தைப்பொங்கல். ஒவ்வொரு வருடமும் பருவத்தின் முதல் அறுவடையை கொண்டாடும் விதமாக, தை மாதத்தில் நான்கு நாட்கள் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்த சமயத்தில் எல்லா செல்வ வளங்களையும் உழைக்கும் மக்களுக்கு வழங்கிய சூரிய பகவானுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் நன்றி செலுத்தும் விதமாக பொங்கல் கொண்டாடப்படுகிறது. புதிதாக அறுவடை செய்த அரிசி அலங்கரிக்கப்பட்ட ஒரு பெரிய பானையில் சமைக்கப்படுகிறது. நமது முன்னோர்கள் பொங்கல் பொங்கும் திசையை வைத்து, இந்த வருடம் முழுவதும் எப்படி இருக்கும் என்பதையும் கணித்துள்ளனர். §

**Tai Pusam:** தைப்பூசம். இது ஒவ்வொரு வருடமும் தை மாதத்தில் (ஜனவரி-பிப்ரவரி மாதத்தில்) பூச நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடி வரும் நன்நாளில், இந்த திருவிழா நடைபெறும் இடத்திற்கு ஏற்ப சிவபெருமான் அல்லது முருகப்பெருமானுக்கு பிரார்த்தனை நடைபெறுகிறது. மொரீஷியஸ் மற்றும் சிங்கப்பூரில், இந்த திருவிழாவையொட்டி அரசு விடுமுறையும் அறிவிக்கப்படுகிறது. இந்தியா, இலங்கை, மலேசியா, பிஜி, தென் ஆப்ரிக்கா மற்றும் ரியூனியன் ஆகிய நாடுகளில் இருக்கும் தமிழர்களால் இந்த திருவிழா வெகு கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. இந்த திருவிழாவின் போது பக்தர்கள் வழக்கமாக *காவடி* எடுக்கிறார்கள். §

**tali:** தாலி Wedding pendant. தாலி, திருமாங்கல்யம். இதை இந்து பெண்கள் தங்களது திருமண பந்தத்தின் அடையாளமாக தங்களது கழுத்தில் அணிந்து கொள்கிறார்கள். இது வழக்கமாக பருத்தி அல்லது பட்டு நூலில் இருக்கவேண்டும். ஆனால் இன்று பெரும்பாலானோர் தங்கத்தில் திருமாங்கல்யத்தை அணிந்து கொள்கிறார்கள். இது சமஸ்கிருதத்தில் *மங்களசூத்திரம்* என்று அழைக்கப்படுகிறது. அவள் அதை தனது கணவனின் பிம்பமாக மதிக்கிறாள் மற்றும் அவள் காலை இறைவனை வணங்கும் போது தனது தாலியையும் தொட்டு வணங்குகிறாள். §

**tamas(ic):** तमस् "Force of inertia." *தமஸ்,* தமோ குணம் சார்ந்த. மேலும் தகவலுக்கு: *குணம்.*§

**tambura (taṁbūrā):** तंबूरा (Hindi) தம்புரா. இந்த தந்தி வாத்தியம், நான்கு கம்பிகளை கொண்டு, குடம் போன்ற அடிப்பகுதியும் நீண்ட கழுத்தையும் கொண்டு இருக்கும். இது செங்குத்தாக நிறுத்தி வைத்து விரல்களால் மீட்கப்படுகிறது. இது பாடகர் அல்லது இசைக்கருவி வாசிப்பவருக்கு பின்னிசையாக இசைக்கப்படுகிறது. §

**Tamil:** தமிழ். தென்னிந்தியா மற்றும் வடக்கு இலங்கையில் இருக்கும் தமிழர்களின் மொழி. இது தமிழ்நாட்டில் ஆட்சி மொழியாக இருக்கிறது, மற்றும் இது 60 மில்லியன் மக்கள் பேசும் மொழியாக இருக்கிறது. §

***tandava (tāṇḍava):*** ताण्डव "Violent dance." தாண்டவம். "பரவச தண்டனம்." ஆண்களால் உக்கிரமாக ஆடப்படும் இந்த நடனம் 108 கரணங்களை கொண்டது. இந்த தாண்டவங்களில், சிவபெருமானின் ஆனந்த *தாண்டவம்,* முதன்மையானதாக விளங்குகிறது. அதிக மென்மையான நடனம் *லாஸ்யம்* என்று அழைக்கப்படுகிறது. இது "துடிப்புணர்வுள்ள" என்பதை குறிக்கும் *லச* என்ற சொல்லில் இருந்து உருவானது. நடனம் பொதுவாக *நர்த்தனம்* என்று அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *நடராஜர்.*§

**tantra:** तन्त्र "Loom, methodology." தாந்திரீகம்: 1) இது பொதுவாக, "சாஸ்திரம்" என்ற சொல்லுக்கு ஒத்த பொருள் சொல்லாக கருதப்படுகிறது. 2) சமயம், சூட்சும ஞானம் மற்றும் அறிவியல் தொடர்பான எல்லா அம்சங்கள் பற்றியும் விரிவான விளக்கத்தை வழங்கும் சாக்த சமய பிரிவை பெரும்பாலும் சார்ந்து இருக்கும் ஆகம உரைகளை குறிப்பிடும் இன்னொரு சொல். *தாந்தரீகங்கள்* சைவ பாரம்பரியத்துடனும் தொடர்புடையதாக இருக்கின்றன. 3) சைவ மற்றும் சாக்த பாரம்பரியங்களில் இது குறிப்பிட்ட செய்முறை, உத்தி அல்லது ஆன்மீக பயிற்சியை குறிப்பிடுகிறது. 4) சாக்த சமயத்தில் *தாந்தரீகம்* என்பது, உருமாற்றம் மற்றும் தெய்வத்துடன் ஐக்கியம் என்று புனையப்பட்ட நோக்கத்துடன், பெரும்பாலும் உடலுறவுகள் உட்பட, பெண் சக்தியின் வழிபாட்டை வலுவாக வலியுறுத்தும் கட்டுப்பாடுகள் மற்றும் உத்திகள். §

***tapas:*** तपस् “Heat, fire; ardor.” *தபஸ்*. “வெப்பம், நெருப்பு; ஆர்வம்.” ஒருவர் தன்னை சுத்தப்படுத்திக்கொள்ளும் ஆன்மீக பழக்கங்கள், தீவிர தவம், பிராயச்சித்தம் மற்றும் தியாகம். இது தீவிர பிராயச்சித்தம், சமயம் சார்ந்த தவம் மற்றும் விரதங்கள் மூலம் வலி மற்றும் வேதனையை தாங்கிக்கொள்வதை குறிப்பிடுகிறது. §

***tapasvin:*** तपस्विन् *தபஸ்வின்.* இது வழக்கமாக *தபஸ்* கொண்டிருக்கும் ஒருவரை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *தபஸ்.*§

***tattva:*** तत्त्व “That-ness” or “essential nature.” தத்துவம்: “முக்கிய இயல்பு.” தத்துவங்கள் என்பது பிரபஞ்சத்தின் முக்கிய கோட்பாடுகள், பாகங்கள், உட்பொருளின் நிலைகள் அல்லது பிரிவுகள், அடிப்படை அலகுகளாக இருக்கின்றன. சிவபெருமான் தொடர்ந்து படைத்துக்கொண்டு, தனது படைப்புக்களுக்கு பாதுகாப்பு வழங்கிக்கொண்டு, தனக்குள் தனது படைப்புக்களை மீண்டும் ஒடுக்கிக்கொள்கிறார். இந்த படைக்கும் செய்முறை தத்துவங்களின் விரிவாக்கமாக, வெளிப்பாட்டு நிலைகளாக இருக்கின்றன என்றும் ரிஷிகள் விளக்குகிறார்கள். மேலும் இந்த தத்துவங்களின் மூலம் நுணுக்கமாக தொடங்கி பருமனாக மாறுவதாகவும் ரிஷிகள் கூறுகிறார்கள். *மகாபிரளயத்தின்* போது, அவை தனது மூலங்களில் அடைந்து கொள்வதால், அந்த *மகாபிரளயத்திற்கு* பிறகு முதல் இரண்டு தத்துவங்கள் மட்டுமே நிலைத்து இருக்கின்றன. தூய உணர்வாகவும், மற்ற வெளிப்பட்ட நிலைகளின் மூலமாகவும் இருக்கும் முதல் மற்றும் நுணுக்கமான உருவம் சிவ தத்துவம் அல்லது பராசக்தி-நாதம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால் சிவ தத்துவத்தை கடந்து, *அதத்துவம்* என்று அழைக்கப்பட்டு யாவும் கடந்த நிலையில் இருக்கும் பரப்பிரம்மம் என்கிற பரசிவம் இருக்கிறது. இது சிவபெருமானின் முதல் முழுமையாக இருக்கிறது. சங்கியா அமைப்பு 25 தத்துவங்களை குறிப்பிடுகிறது. சைவ சமயம் அந்த 25 தத்துவங்களுடன் அதை கடந்து இருக்கும் 11 தத்துவங்களையும் சேர்த்து, மொத்தம் 36 தத்துவங்களை அங்கீகரிக்கிறது. §

***tavil:*** தவில். தென் இந்தியாவில் தோன்றியதாக கருதப்படும் தவில், இந்து பூஜைகளில் நாதஸ்வரத்துடன் சேர்ந்து இசைக்கப்படும் இசைக்கருவி ஆகும். §

**Tayumanavar:** தாயுமானவர். இவர் தமிழ்நாட்டின் வேதாரண்யத்தில் 17 ஆம் நூற்றாண்டில் பிறந்ததாக கருதப்படுகிறது. இந்த சைவ சமய யோகி, தெய்வ பக்தி நிறைந்த பாடல்களை இயற்றினார். அந்த பாடல்கள் தத்துவம் மற்றும் பக்தியின் அற்புத கலவையாக இருந்தன. தாயுமானவர் “சின்மயானந்த குரு: என்ற தனது கவிதையில், தன்னை திருமூலரின் வம்சாவளியை சேர்ந்தவராக பாடியுள்ளார். மேலும் தகவலுக்கு: *திருமூலர்.* §

***teradi:*** தேரடி "Chariot shed." திருவிழாக்களின் போது *உற்சவ மூர்த்தியை* ஊர்வலமாக அழைத்து செல்லும் தேர் நிறுத்தும் இடம். §

**அந்த முடிவான பரம்பொருள் (That)**: முடிவாக, விளக்க முடியாமல் அல்லது பெயர் இல்லாத முழுமையாக இருக்கும் பரமாத்துமா, பரசிவத்தை குறிப்பிடும் பிரதி பெயர். §

**ஈஸ்வரவாதம் (theism):** இது இறைவன் ஒரு உண்மையான, உணர்வுள்ள, தனிப்பட்ட பரமாத்துமாவாக, ஸ்ருஷ்டிகர்த்தாவாக பிரபஞ்சத்தில் ஆட்சி செய்கிறார் என்ற நம்பிக்கை மற்றும் பரமாத்துமாவால் படைக்கப்பட்ட மகாதேவர்களின் மீது இருக்கும் நம்பிக்கையையும் குறிப்பிடுகிறது. §

**சிவலோகம் (Third World):** சிவலோகம் அல்லது கரணலோகம். மகாதேவர்கள் மற்றும் மிகவும் உயர்வான நிலையில் இருக்கும் ஆன்மாக்கள், சுயமாக பிரகாசிக்கும் தங்கள் உருவங்களுடன் வாழும் ஆன்மீக லோகம் அல்லது உள்பொருளின் காரண லோகம். மேலும் தகவலுக்கு: *லோகம், மூன்று லோகங்கள்.* §

**மூன்று லோகங்கள் (three worlds):** உள்பொருளின் மூன்று லோகங்களை குறிப்பிடும் *த்ரிலோகம்*, பிரபஞ்சத்தின் அடிப்படை படிநிலை பிரிவுகள் ஆகும். 1) பூலோகம்: தூல உலகம். 2) அந்தர்லோகம்: "மத்தியில் இருக்கும் லோகம்," நுணுக்கமான அல்லது சூட்சும லோகம். 3) சிவலோகம்: சிவன் மற்றும் உயர்ந்த பரிணாம வளர்ச்சி பெற்ற ஆன்மாக்களின் உலகம்; காரண லோகம்.§

***tirtha (tīrtha):*** तीर्थ "Passageway; ford." *தீர்த்தம். குறிப்பாக புனிதமான நதிக்கரையில் அமைந்து இருக்கும் புண்ணிய க்ஷேத்திரம் அல்லது நீராடும் துறை. இது பூஜையில் பயன்படுத்தப்படும் நீரையும் குறிப்பிடுகிறது.* §

***tirthayatra (tīrthayātrā):*** तीर्थयात्रा "Journey to a holy place." *தீர்த்த யாத்திரை.* §

***Tirukural:*** திருக்குறள் "Holy couplets." இது தமிழ்மொழியின் மாபெரும் இலக்கிய படைப்பு மற்றும் இந்து சமய நன்னெறி பற்றிய நுணுக்கங்களை வழங்கும் பொக்கிஷமாகவும் விளங்குகிறது. உலகின் முதன்மையான அறநூலாக விளங்கும் *திருக்குறள்*, மனித நேயத்திற்கு வாழ்வியல் பற்றி விளக்குகிறது. §

***Tirumantiram:*** திருமந்திரம் "Holy incantation." நந்திநாத சம்பிரதாயத்தின் மிகவும் பழமையான தமிழ் சாஸ்திரம். இதை திருமூலர் சுமார் கி.மு. 200 ஆம் ஆண்டில் இயற்றினார். இது *திருமுறைகளில்* பத்தாவதாக சேர்க்கப்பட்டு மறைபொருள், யோகம் மற்றும் தாந்தரீகம் சார்ந்த அறிவின் ஒரு பெரிய சேமிப்புக் கிடங்காக இருக்கிறது. இது இராஜ யோகம் மற்றும் சித்த யோகம் பற்றிய ஆன்மீக சாரம் மற்றும் பண்டையகால சைவ சமய பாரம்பரியமாக இருக்கும் 28 *சைவ சித்தாந்த ஆகமங்களின்* அடிப்படை கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. *ஆகமங்களில்* பல தற்போது அழிந்து

விட்டதால், 3,000 செய்யுட்களை கொண்ட திருமந்திரம் ஆகம தொகுப்பின் ஒரு அரிய பொக்கிஷமாக விளங்குகிறது. §

**Tirumular:** திருமூலர். நந்திநாத சம்பிரதாயத்தை சேர்ந்த கைலாச பரம்பரையின் ஒரு புகழ்பெற்ற சித்த யோகி மற்றும் ரிஷி. இவர் தமிழில் *திருமந்திரத்தை* இயற்றுவதற்கு (சுமார் கி.மு. 200) இமயமலையில் இருந்து வந்தார். அவர் இந்த சாஸ்திரத்தில் தனது சொந்த உணர்தலுடன் சைவ ஆகமங்கள் மற்றும் வேதங்களில் இருக்கும் தனது புலமையின் மூலம், துல்லியமான மற்றும் நுணுக்கமான பாடல் வடிவில் சைவ சமய கோட்பாடுகளை பதிவு செய்துள்ளார். மகரிஷி நந்திநாதாவின் சீடர்களில் ஒருவராக திருமூலர் இருந்தார். §

***Tirumurai:*** திருமுறை “Holy book.” தென்னிந்திய நாயன்மார்கள் சிவபெருமானை போற்றிப் பாடிய பாடல்கள் மற்றும் இலக்கியங்களின் தொகுப்பு. இதை சைவ மகான்களின் ஒருவரான நம்பியாண்டார் நம்பி (சுமார் கி.பி. 1000) தொகுத்து அமைத்தார். முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் என்று அழைக்கப்படுகின்றன. §

***tiruvadi:*** திருவடி. இது சற்குருவின் பாதங்களை குறிப்பிடுகிறது. இது சமஸ்கிருதத்தில் ஸ்ரீ *பாதுகை* அழைக்கப்படுகிறது. இது அருளின் மூலமாக வணங்கப்படுகிறது. குருவின் திருவடி குறிப்பாக தெய்வீக மற்றும் தூல லோகங்களுடன் தொடர்பில் இருப்பதால், அவை புனிதமாக விளங்குகின்றன.§

***tiruvadi*** puja: திருவடி பூஜை. ஒரு குருவின் பாதங்கள் அல்லது அவரது திருவடிகளை வைத்து நடத்தப்படும் ஒரு பூஜை. மேலும் தகவலுக்கு: *பூஜை*.§

**Tiruvalluvar:** திருவள்ளுவர் “Holy weaver.” இவர் தென்னிந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்து வந்தார். சைவ சமயத்தை சார்ந்த இவர், நெசவுத்தொழில் செய்து வந்தார். இவர் உலகப்பொதுமறை, பொய்யாமொழி மற்றும் வேறு பல பெயர்களுடன் அழைக்கப்படும் திருக்குறளை இயற்றினார். அவர் நற்பண்புகளும், விசுவாசத்திற்கும் புகழ்பெற்ற தனது மனைவி வாசுகியுடன், இன்றைய திருமயிலையில் வாழ்ந்து வந்தார். §

***Tiruvasagam:*** திருவாசகம் “Holy Utterances.” மாணிக்க வாசகர் (கி.பி. 850) அருளிய தமிழ் சாஸ்திர நூல். மிகவும் அழகிய பக்திப் பரவசப் பாடல்களைக் கொண்ட இத்தமிழ் நூல், மிகவும் உன்னதமான படைப்பாக கருதப்படுகிறது. இந்த நூலில் ஆன்மீக வாழ்வின் எல்லா படிநிலைகளும் விவாதிக்கப்பட்டுள்ளன. சந்தேகம் மற்றும் கடுந்துயரத்தில் இருந்து சிவபெருமான் மீது முழு நம்பிக்கை வைப்பது வரை, லௌகீக அனுபவத்தில் இருந்து குரு-சீடன் உறவு மற்றும் மறுபிறவியில் இருந்து விடுதலை வரை, ஆன்மீக பாதையில் இருக்கும் ஒவ்வொரு கட்டத்தையும் திருவாசகம் விவாதிக்கிறது. §

**தசமபாகம் (tithe (tithing)):** இது ஒரு ஆன்மீக பழக்கமாக, ஒரு *விரதமாக* விளங்குகிறது. இதன் மூலம் ஒருவர் தனக்கு விருப்பமான சமய அமைப்பிற்கு நன்கொடை வழங்குவதால், பூமியில் ஆன்மீக கல்வி மற்றும் முன்னேற்றம் நிலைநிறுத்தப்படுகிறது. இது சமஸ்கிருதத்தில் *தசமாம்சா* என்றும் தமிழில் *பதின்மை* என்றும் அழைக்கப்படுகிறது. §

***trishula (triśūla):*** त्रिशूल திரிசூலம். சிவபெருமான் மற்றும் சில சைவத் துறவிகள் பிரயோகம் செய்யும் முத்தலைச் சூலம். இது *இச்சா சக்தி* (ஆசை, விருப்பம், அன்பு), கிரியா (செயல்) சக்தி மற்றும் ஞான சக்தி என்று இறைவனின் மூன்று அடிப்படை சக்திகள் அல்லது ஆற்றல்களை குறிப்பிடுகிறது. §

# வி

**விரிவாக்கம் (Unfoldment).** மேலும் தகவலுக்கு: *ஆன்மீக விரிவாக்கம்.*§

***upadesha (upadeśa):*** ऊपदेश "Advice; religious instruction." உபதேசம். இது வழக்கமாக குரு தனது சீடனுக்கு கேள்வி பதில் வடிவில் வழங்குவார். இது சற்குருவின் ஆன்மீக சொற்பொழிவுகளையும் குறிப்பிடுகிறது. §

***upadeshi (upadeśī):*** उपदेशी உபதேசி. மற்றவர்கள் முக்தி அடைவதற்கு தீவிரமாக உதவி செய்ய மற்றும் உபதேசிக்க முடிவு செய்யும் ஒரு முக்தி பெற்ற ஆன்மா. இது நிர்வாணியில் இருந்து மாறுபட்டு இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *நிர்வாணி* மற்றும் *உபதேசி*. §

***Upanishad:*** उपनिषद् "Sitting near devotedly." உபநிடதம். "அருகில் பக்தியுடன் அமர்தல்." இது வேதங்களின் நான்காவது இறுதி பகுதியாக விளங்கி, வேத மந்திரங்களின் இரகசிய, தத்துவ பொருளை விளக்குகிறது. *உபநிடதங்கள்* என்பது வலுவான உரைகளின் தொகுப்பு ஆகும் மற்றும் அவை வேதாந்தத்தின் மூலமாக விளங்கி, ஆயிரம் ஆண்டுகளுக்கு இந்திய சிந்தனை மீது ஆதிக்கம் செலுத்தியுள்ளது. அவை கடவுள், ஆன்மா மற்றும் அண்டத்தின் இயல்பு மற்றும் மிகவும் ஆழமான இந்து சிந்தனையின் பிரத்யேக வெளிப்பாடுகளை விளக்கும் ரிஷிகளின் தத்துவ பதிவுகளாக விளங்குகின்றன. §

# V

**Vaishnava (Vaishṇava):** वैष्णव. வைணவம், வைணவர். விஷ்ணுவை சார்ந்த. விஷ்ணு மற்றும் அவருடைய அவதாரங்களை வழிபடுவர். மேலும் தகவலுக்கு: *வைணவம், விஷ்ணு*. §

**Vaishnavism (Vaishṇava):** वैष्णव வைணவம். இந்து தர்மத்தில் இருக்கும் நான்கு முக்கிய சமயங்கள் அல்லது பிரிவுகளில் ஒன்று. உலகில் இருக்கும் ஒரு பில்லியன் இந்துக்களில் ஐம்பது சதவீதம் வைணவர்களாக இருக்கிறார்கள். இது தனிப்பட்ட கடவுளாக விஷ்ணுவை, அவரது அவதாரங்கள் மற்றும் அந்த அவதாரங்களின் துணைவிகளை வழிபடுவதை மையமாக கொண்டு அமைந்துள்ளது. வைணவம் பண்புகள் இல்லாத இறைவனை காட்டிலும் பண்புகளுடன் இருக்கும் இறைவனுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, முக்தி பெறுவதற்கு பக்தியை உண்மையான பாதையாக வலியுறுத்துகிறது. §

**வைணவர் (Vaishnavite):** வைணவம் அல்லது விஷ்ணுவை சார்ந்தது. விஷ்ணு அல்லது அவருடைய அவதாரங்களை வழிபடுவர். மேலும் தகவலுக்கு: *வைணவ சமயம், விஷ்ணு.* §

**vasana (vāsanā):** वासना "Abode." அடியுணர்வு ஈடுபாடுகள். "வாசம் செய்யும், மீதம், மிகுதி" என்பதை குறிக்கும் *வாஸ்* என்ற சொல்லில் இருந்து உருவானது. இயக்கும் சக்திகள், தாக்கங்களாக இருக்கும் இந்த அடியுணர்வு ஈடுபாடுகள் மற்றும் பழக்க மாதிரிகள் ஒருவரின் அணுகுமுறைகள் மற்றும் எதிர்கால செயல்களை ஊக்குவிக்கின்றன. §

**vasana *daha* tantra (vāsanā *daha* tantra):** वासनादहतन्त्र. "Purification of the subconscious by fire." *வாசன தாக தந்திரம். தாக* என்றால் எரிகிற, *தந்திரம்* என்றால் செயல்முறை மற்றும் *வாசனா* என்றால் ஒருவரது தூண்டுதல்கள் மற்றும் அணுகுமுறைகளை உருவாக்கும், ஆழப்பதிந்த அடியுணர்வு பண்புகள் அல்லது மனநிலைகள் என்று பொருள். வாசனாக்கள் நேர்மறை அல்லது எதிர்மறையாக இருக்கலாம். வாசன தாக தந்திரம் என்பது குற்றத்தை ஏற்றுக்கொள்ளும் அறிக்கைகள், பிடித்தமானவர்கள் அல்லது நெருக்கமானவர்களுக்கு எழுதிய நீண்ட கடிதங்கள் உட்பட வேதனையின் விளக்கங்கள், குழப்பங்களின் வெளிப்பாடுகள், மனக்குறை மற்றும் நீண்டநாளாக இருக்கும் வருத்தங்களின் பதிவுகளை எரிக்கும் பயிற்சி ஆகும். இது பிரச்சனைக்குரிய வாசனாக்களை அழிக்கவும் வாழ்க்கையில் இருக்கும் சிக்கல்களுக்கு தீர்வு காணவும் மிகவும் சிறந்த முறைகளில் ஒன்றாக இருக்கிறது. பிரச்சனைகளை ஒரு காகிதத்தில் எழுதி, அதை சாதாரண நெருப்பில் எரிக்கும் போது, அவை அடியுணர்வில் இருந்து வெளிப்புற மனதிற்கு கொண்டு வரப்படுகிறது மற்றும் நெருப்பு காகிகத்தை எரிக்கும் போது, ஒடுக்கப்பட்ட உணர்ச்சிகள் வெளிப்படுகின்றன. இவ்வாறு எழுதுவதை ஆங்கிலத்தில் ஸ்பிரிச்சுவல் ஜர்ணலிங (spiritual journaling) என்பார்கள், அதாவது ஒருவர் தனது ஆன்மீக பயணத்தைப் பற்றி எழுதுதல் என்று பொருள்.

இந்த பழக்கத்தின் விசேஷ வடிவமாக மகா வாசன தாக தந்திரம் விளங்குகிறது. வழக்கமாக செய்யும் வாசனா தாக தந்திரத்தில் செய்வதைப் போல, ஒருவர் தனது அடியுணர்வில் சேகரித்த சுமைகளை நீக்குவதற்கு, தனது கடந்தகாலத்தை நினைவுக்கூர்ந்து வாழ்நாளின் பல்வேறு அம்சங்களை காகிதத்தில் எழுதி, அதை எரிப்பதே இந்த சாதனா ஆகும். ஒவ்வொரு வருடமும் பத்து பக்கங்கள் எழுத வேண்டும். இந்த தந்திரத்தின் மற்ற அம்சங்களாக ஒருவர் தனக்கு தெரிந்த மனிதர்களை பற்றி மற்றும் தனது பாலியல் அனுபவங்கள் அனைத்தையும் பற்றி எழுதுவதும் அடங்கியுள்ளது. §

***Veda:*** वेद "Wisdom." வேதம். இது ரிஷிகளால் அருளப்பட்ட இந்து தர்மத்தின் அதிகாரப்பூர்வ சாஸ்திரமாக விளங்குகிறது. வேதங்களும் *ஆகமங்களும்* ஸ்ருதி என்று அழைக்கப்படுகின்றன. ஸ்ருதி என்றால் காதால் கேட்கப்பட்டவை என்று பொருள். பல புனிதமான சாஸ்திரங்களின் தொகுப்பாக வேதங்கள் விளங்குகின்றன. வேதங்கள் *ரிக், யஜூர், சாம* மற்றும் *அதர்வணம்* என்று நான்கு வகைப்படும். இவை கூட்டாக 100,000 மந்திரங்கள் மற்றும் கூடுதலாக உரைகள் மற்றும் விளக்கங்களை உள்ளடக்கியுள்ளன. வேதங்கள் வழங்கும் அறிவு லௌகீக பக்தியில் இருந்து உயர்ந்த தத்துவம் வரை பரவியுள்ளது. §

**Vedanta (Vedānta):** वेदान्त "Ultimate wisdom" or "final conclusions of the *Vedas*." வேதாந்தம். வேதாந்தம் என்பது வேதங்களின் இறுதியான முடிவுகளை வெளிப்படுத்தும் *உபநிடதங்களில்* (சுமார் கி.மு. 1500-1600) உள்ள சிந்தனை முறை ஆகும். சுத்த துவைதத்தில் தொடங்கி முழுமையான அத்வைதம் வரை, வரலாறு முழுவதும் பல்வேறு வேதாந்த பிரிவுகள் உருவாகியுள்ளன. §

**வேதம் மற்றும் ஆகமம் சார்ந்த (Vedic-Agamic (Vedic-Āgamic)):** வரலாறு மற்றும் பாரம்பரியத்தில் ஒன்றுக்கு ஒன்று ஆதரவாக இருந்து பின்னிப்பிணைந்த இரண்டு பிரிவுகளை பிரதிபலித்து, இந்து சமய ஸ்ருதிகளாக விளங்கும் *வேதங்கள்* மற்றும் *ஆகமங்களில்* இருந்து கிரகித்து அவற்றுடன் இணங்கி இருத்தல். §

***vel:*** **வேல்** "Spear, lance." வேல். யோகத்தின் தலைவனாகவும் தேவர்கள் படைத்தலைவனாகவும் இருக்கும் முருகப்பெருமானின் தெய்வீக அதிகாரத்தை தெரியப்படுத்தும் சின்னம். (இது சமஸ்கிருதத்தில் சூல என்று அழைக்கப்படுகிறது)§

***veshti:*** **வேஷ்டி.** நீளமாக தைக்கப்படாத துணியாக வெள்ளை நிறத்தில் இருக்கும் வேஷ்டி, இந்து சமயத்தை சேர்ந்த ஆண்கள் இடுப்புப் பகுதியில் அணியும் உடை ஆகும். இது பல்வேறு விதமாக அணியலாம். "சுற்றுதல்" என்பதை குறிப்பிடும் "வேஷ்டனா" என்ற சம்ஸ்கிருத சொல்லில் இருந்து உருவான ஒரு தமிழ் சொல். இது *வேட்டி* (தமிழ்) அல்லது *தோத்தி* (இந்தி) என்றும் அழைக்கப்படுகிறது. §

***vibhuti (vibhūti):*** विभूति “Resplendent, powerful.” விபூதி, திருநீறு. பால், நெய், தேன் போன்ற விசேஷமான பொருட்களுடன் மாட்டு சாணத்தை எரித்து வெள்ளை நிறத்தில் திருநீறு தயாரிக்கப்படுகிறது. இது தூய்மையை குறிப்பிட்டு, எல்லா சிவாலயங்கள் மற்றும் சிறிய கோயில்களில் பூஜைக்கு பிறகு பக்தர்களுக்கு வழங்கப்படும் முக்கிய பிரசாதங்களில் ஒன்றாக விளங்குகிறது. §

**Vishnu (Vishṇu):** विष्णु “All-pervasive.” விஷ்ணு. “எங்கும் வியாபித்து இருக்கிற.” சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள். தனிப்பட்ட தலைவனாக, ஸ்ருஷ்டிகர்த்தாவாக, சர்வவல்லமையுடன் எல்லாம் அறிந்த உதார குணமுள்ள தெய்வமாக, தர்மத்தை நிலைநிறுத்த வேண்டிய போது அவதரிக்கும் இறைவனாக இருக்கிறார். சைவ சமயத்தில், சிவபெருமானின் காக்கும் அம்சமாக விஷ்ணு இருக்கிறார். §

***vishuddha* chakra (*viśuddha* chakra):** विशुद्धचक्र “Wheel of purity.” விசுத்த சக்கரம். “தூய்மையான சக்கரம்.” ஐந்தாவது சக்கரம். தெய்வீக அன்பின் மையம். மேலும் தகவலுக்கு: *சக்கரம்.* §

***vishvagrasa (viśvagrāsa):*** विश्वग्रास “Total absorption.” *விஷ்வகிராசா.* “முழுமையான ஒடுக்கம்.” ஆன்மாவின் பரிணாம வளர்ச்சி நிறைவு பெற்றதும், சிவபெருமானுடன் நடைபெறும் ஆன்மாவின் முடிவான ஐக்கியம். ஆன்மா முதல் முறையாக தோற்றம் அளித்த சிவலோகத்தில், சிவபெருமானின் உடலான பரமேஸ்வரனுடன் தனியான ஆனந்தமய கோசத்தின் முடிவான ஐக்கியத்தை இது குறிப்பிடுகிறது. §

***vitala* chakra:** वितलचक्र “Region of negation.” *விதள சக்கரம்.* மூலாதாரத்திற்கு கீழிருக்கும் இரண்டாவது சக்கரம். இது தொடைகளில் மையம் கொண்டு இருக்கிறது. சீற்றம் மற்றும் வன்முறை குடியிருக்கும் பகுதி. மேலும் தகவலுக்கு: *சக்கரம், நரகலோகம்.* §

***vrata:*** व्रत “Vow, religious oath.” விரதம். இது தவம், உபவாசம், குறிப்பிட்ட மந்திரத்தை ஜெபம் செய்தல், வழிபாடு அல்லது தியானத்தை போன்று சில பழக்கங்களை செய்யவேண்டும் என்ற உறுதிமொழியை பெரும்பாலும் குறிப்பிடுகிறது. §

***vritti (vṛitti):*** वृत्ति “Whirlpool, vortex.” விருத்தி. இது யோக உளவியலில், உணர்வில் இருக்கும் ஏற்ற இறக்கங்கள், மனதின் செயல்பாடுகள் (*சித்த விருத்தி*) மற்றும் சிந்தனை மற்றும் புலனுணர்வின் அலைகளை குறிப்பிடுகிறது. “யோகம் என்பது மனதின் செயல்பாடுகளை (*சித்த விருத்தி*) கட்டுப்படுத்துவது (*நிரோதா*) ஆகும். பொதுவாக *விருத்தி* என்றால்: 1) பாதை, வாழ்முறை; ஒழுக்கம், நடத்தை; ஒரு செயலை செய்யும் முறை; 2) இயல்பு, பண்பு, வகை. §

***vumtyeudi (vūmtyēūdī):*** ꯑꯨꯃꯇꯤ *உம்தியுடி.* நீல நிறத்தில் இருக்கும் இந்த நாடி ஓட்டம், மேல்நோக்கி பாய்ந்து சேர்ந்து, உடலின் வலது புறமாக முடிகிறது. இது சமஸ்கிருதத்தில் *பிங்களா* என்று அழைக்கப்படுகிறது. இந்த ஓட்டம் ஆண்மையின் பண்புடன் தீவிர இயல்புடன் இருக்கிறது. இது உயிர்சக்தியில் அறிவுணர்வு-மனம் சார்ந்த சக்தியாக இருக்கிறது. அந்த அறிவுணர்வு சக்தி ஒருவருக்கு தனது அறிவுணர்வு மனதின் மீது விழிப்புணர்வு ஏற்பட்டு சிந்திப்பதற்கு காரணமாக இருக்கிறது. *உம்தியுடி* நாடி *சிம்ஷூம்பிசியில்* இருக்கும் ஓட்டங்களில் ஒன்றாக விளங்குகிறது. §

Y

**agam:** யாகம் "Worship; sacrifice." "வழிபாடு; தியாகம்." மேலும் தகவலுக்கு: *யக்ஞ.*§

**yajna (yajña):** यज्ञ "Worship; sacrifice." யாகம். "வழிபாடு; தியாகம்." உட்புற மற்றும் வெளிப்புற வழிபாட்டின் மூலம் தியாகம் செய்து சரண் அடைவதை குறிப்பிடும் யாகம், இந்து தர்மத்தின் மிகவும் முக்கிய கோட்பாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. 1) வைதீக காலங்களில் இருந்து நடைபெற்று வரும் இந்த வழிபாட்டில் வேத மந்திரங்களின் உச்சரிப்புடன் நெய், தானியங்கள், நறுமணப் பொருட்கள் மற்றும் மூலிகை சுள்ளிகள் அக்னி பகவானுக்கு சாஸ்திர முறைப்படி வழங்கப்படுகின்றன. தேவ தூதராக கருதப்படும் அக்னி பகவான், படையல்கள் மற்றும் பிரார்த்தனைகளை மகாதேவர்களிடம் கொண்டு சேர்க்கிறார். யாகத்திற்கு நான்கு பொருட்கள் தேவைப்படுகின்றன, அவற்றில் எதையும் தவிர்க்க முடியாது: *திரவியம்,* அர்ப்பணிக்கும் பொருட்கள்; *தியாகம்,* அனைத்து பொருட்களையும் இறைவனுக்கு படைக்க வேண்டும் என்ற எண்ணம்; *தேவதா,* படையலை பெறும் விண்ணுலக சக்திகள்; மற்றும் மந்திரம், சக்தியை வழங்கும் சொல் அல்லது சுலோகம். 2) *மனுஷ்ய யக்ஞம்* அல்லது வெறும் *யக்ஞம்,* "மனிதர்களுக்கு மரியாதை செய்தல்," ஏழை, ஆதரவற்றோர் மற்றும் மாணவர்களுக்கு அன்னதானம். தசமபாகம் மற்றும் ஈகை போன்ற பரோபகார செயல்களை *மனுஷ்ய யக்ஞம்* உள்ளடக்கியுள்ளது. இலங்கையில் யாகம் என்ற சொல் மிகப்பெரிய அன்னதானங்களை குறிப்பிடுகிறது. §

***yagasala:*** யாகசாலை (Sanskrit—*yajñaśālā:* यज्ञशाला) "Place of worship." "வழிபடும் இடம்." மிகப்பெரிய *ஹோமங்கள்* அல்லது ஒரு கோயில் புனருத்தாரணப் பணி (திருப்பணி) போன்று இந்து சடங்குகள் நடத்த அமைக்கப்படும் ஒரு தற்காலிக அமைப்பு.§

**yama-niyama:** यम नियम. இயமம்-நியமம். இயமங்கள் மற்றும் நியமங்கள் இராஜ யோகத்தின் எட்டு அங்கங்களில் முதல் இரண்டு அங்கங்களாக விளங்கி, இந்து சமயத்தின அடிப்படை நெறிமுறைகளை உள்ளடக்கி, ஆன்மீக முன்னேற்றம் அனைத்திற்கும் அத்தியாவசிய அடிப்படையாக விளங்குகிறது. பாரம்பரிய பத்து இயமங்கள் மற்றும் பது நியமங்களை இங்கே காணலாம். இயமங்கள்: 1) அகிம்சை: "கொல்லாமை." மற்றவர்களை சிந்தனை, சொல் அல்லது செயலால் துன்புறுத்தாமல் இருத்தல். 2) *சத்தியம்:* "வாய்மை." பொய் சொல்லாமல் மற்றும் வாக்கு தவறாமல் இருத்தல். 3) *அஸ்தேயம்:* "கள்ளாமை." திருடாமல், பேராசை இல்லாமல், கடன் பெறாமல் இருத்தல். 4) பிரம்மச்சரியம்: "எப்போதும் பரமாத்துமாவின் நினைவாக இருத்தல் ." திருமணத்திற்கு பின் விசுவாசமாக நடந்துகொள்ள, பிரம்மச்சாரியாக இருக்கும் போது மனத்துறவுடன் இருத்தல். 5) *ஷமை:* "பொறுமையுடமை." மன்னிக்கும் தன்மை. 7) *தயா:* "கருணை." மற்ற உயிரினங்கள் இடத்தில் இரக்கமற்ற, கொடூரமான மற்றும் கருணையில்லாத உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமல் இருத்தல். 8) *ஆர்ஜவ:* "நேர்மை, பாசாங்கு இல்லாமை." வஞ்சகம் மற்றும் தவறான செயல்களை கைவிடுதல். 9) *மிதஹாரா:* "அளவுணவு." அதிகம் சாப்பிடாமல் இருத்தல். மாமிசம், மீன், கோழி அல்லது முட்டைகள் சாப்பிடாமல் இருத்தல். 10) *சௌச்சம்:* "தூய்மை." உடல், மனம் மற்றும் பேச்சில் அசுத்ததை தவிர்த்தல். நியமங்கள்: 1) *ஹ்ரி:* "கழிவிரக்கம்." அடக்கமாக இருந்து செய்த தவறுக்கு வருந்துதல். 2) *சந்தோஷம்:* "திருப்தி." வாழ்க்கையில் சந்தோஷம் மற்றும் அமைதியை நாடுதல். 3) *தானம்:* "நன்கொடை வழங்குதல்." தசமபாகம் மற்றும் பலனை எதிர்பார்க்காமல் தாராளமாக வழங்குதல். 4) *ஆஸ்திக்ய:* "கடவுள் நம்பிக்கை." 5) *ஈஸ்வரபுஜன*: "இறைவனை வழிபடுதல்." தினசரி வழிபாடு மற்றும் தியானம் மூலம் பக்தியை வளர்த்தல். 6) *சித்தாந்த ஸ்ரவண:* "சாஸ்திரங்களை கேட்டறிதல்." ஒருவர் தனது பரம்பரையின் ஞானிகள் வழங்கிய போதனைகளை கேட்டல் மற்றும் அவர்களின் உபதேசங்களை படித்தல். 7) *மதி:* "அறிவெழுச்சி." குருவின் வழிகாட்டுதலுடன் ஒரு ஆன்மீக விருப்பத்தை வளர்த்தல். 8) *விரதம்:* "புனிதமான உறுதிமொழிகள்." ஒருவர் தனது மதம் தொடர்பான உறுதிமொழிகள், விதிகள் மற்றும் கடைப்பிடித்தல்களை விசுவாசத்துடன் பூர்த்தி செய்தல். 9) ஜெபம்: தினமும் மந்திரங்களை ஜெபித்தல். 10) *தபஸ்:* "தவம்." சாதனா, பிராயச்சித்தம், *தபஸ்* மற்றும் வேள்விகள் நடத்துதல். இயமங்கள் என்று பதஞ்சலி வழங்கிய பட்டியல்: *அகிம்சை, சத்யம், அஸ்தேயம், பிரம்மச்சரியம்* மற்றும் *அபரிகிரஹ* (பேராசை இல்லாமல் இருத்தல்); அவர் வழங்கிய நியமங்களின் பட்டியல்: *சௌச்ச, சந்தோஷ, தபஸ், ஸ்வாதியாய* (ஆத்ம விசாரம், தனியாக சாஸ்திரங்களை படித்தல்) மற்றும் *ஈஸ்வரபிரணிதான* (வழிபாடு). மேலும் தகவலுக்கு: *அஷ்டாங்க யோகம்.* §

**Yama(n) (Yama):** यम "The restrainer." யமன். இந்து சமயத்தில் மரணத்தை நிர்வகிக்கும் இறைவன்; இவர் மரணத்தின் போது நடைபெறும் நிலைமாற்றி செயல்பாடுகளை கண்காணித்து, உயிர் பிரிந்த உடலில் இருந்து ஆன்மா வெளியேறுவதற்கு வழிகாட்டியாக இருக்கிறார். §

**yatra (yātrā):** यात्रा "Journey." யாத்திரை. வழக்கமாக "ஒரு புனிதமான இடத்திற்கு பயணம் செல்லும்," *தீர்த்த யாத்திரையை* குறிப்பிடுகிறது. §

***yoga:*** योग "Union." From *yuj,* "to yoke, harness, unite." யோகம். "கட்டுப்படுத்துதல், இணைதல்" என்பதை குறிக்கும் *யுஜ்* என்ற சொல்லில் இருந்து தோன்றியது. தனிப்பட்ட உணர்வை யாவும் கடந்த அல்லது தெய்வீக உணர்வுடன் கட்டுப்படுத்துவதே தத்துவம், செய்முறை, பயிற்சிகள் மற்றும் கட்டுப்பாடுகளாக இருக்கும் யோகத்தின் நோக்கம் ஆகும். §

**yoga *pada* (yoga *pāda*):** योगपाद. யோக பாதம். சைவ சித்தாந்தத்தில் இருக்கும் அடுத்தடுத்த நிலைகளில் மூன்றாவது நிலை ஆகும். இதன் குறிக்கோள் ஆத்ம ஞானம் பெறுவது ஆகும். மேலும் தகவலுக்கு: *பாதம்.* §

**Yogaswami (Yogaswāmī):** யோகசுவாமி "Master of yoga." சமீபகாலத்தில் இலங்கையில் மிகவும் பிரபலமாக இருந்த ஒரு ஆன்மீக குரு (1872–1964). இந்துக்கள் மற்றும் பௌத்த சமயத்தை சேர்ந்தவர்களால் மதிக்கப்படும் ஒரு சிவஞானி மற்றும் நாத சித்தர். இவர் சற்குரு செல்லப்பசுவாமியிடம் பயிற்சி பெற்று, அவரிடம் இருந்து குரு *தீட்சை* பெற்றார். இவர் சிவாய சுப்பிரமுனியசுவாமியின் சற்குருவாக இருந்தார். யோகசுவாமி தனது உபதேசங்களை பாடல்கள் வடிவில் வழங்கினார். அவை *நற்சிந்தனை* என்ற புத்தகமாக வெளியிடப்பட்டது. மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை.* §

**yogi (yogī):** योगी யோகி. யோக பயிற்சி மேற்கொள்பவர். §

**yogini (yoginī):** योगिनी யோகினி. யோக பயிற்சி மேற்கொள்ளும் ஒரு பெண்ணின் பெயர்.§

**yuga:** युग "Eon," "age." யுகம். இந்து சமய கால கணிப்பு முறையில், காலத்தை அளக்கும் அலகுகளில் ஒன்று. சத்திய அல்லது கிருதா, திரேதா, த்வாபர மற்றும் கலி என்பவை அந்த நான்கு யுகங்கள் ஆகும். முதல் யுகத்தில் தர்மம் மேலோங்கி இருக்கிறது, ஆனால் யுகங்களின் சுழற்சியில், நற்பண்பு குறைந்து அறியாமை மற்றும் அநீதி ஆதிக்கம் செலுத்துகிறது. நாம் தற்போது இருக்கும் கலியுகத்தின் முடிவில், இந்த சுழற்சி மீண்டும் தொடங்கி ஒரு புதிய கிருதா யுகம் தோன்றுகிறது. §

Page 70 URL:
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/70_bk12_02.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## நூற்பட்டியல்

Dr. திருமதி. விமலா கிருஷ்ணபிள்ளை எழுதிய *செல்லப்ப சுவாமி ஆப் நல்லூர் (Chellappa Swami of Nallur);* இது கே.சி. குலரத்தினம் எழுதிய *யாழ்ப்பாண நல்லூர் தேரடி செல்லப்ப சுவாமிகள்* புத்தகத்தின் (யாழ்ப்பாணம், இலங்கை, 1984, தமிழ்) ஆங்கில மொழிபெயர்ப்பு. §

கே.சி. குலரத்தினம் எழுதிய *குருவும் சீடரும்* (யாழ்ப்பாணம், இலங்கை, 2005, தமிழ்§

சுசுநாகா வீரபெருமா எழுதிய *ஹோமேஜ் டு யோகசுவாமி* (Homage to Yogaswami) (போயேட்ஸ் அண்ட் பைன்டர்ஸ் பிரஸ், லண்டன், 1972, ஆங்கிலம்)§

Dr. எஸ். பி. சபாரத்தினம் சிவாச்சாரியார் மொழிபெயர்த்த *நந்திகேஷ்வர கஷிகா (கையெழுத்து பிரதி),* (இமாலயன் அகாடமி, காபா, ஹவாய், அமெரிக்கா, 2011, ஆங்கிலம்)§

*நற்சிந்தனை, சாங்ஸ் அண்ட் சேயிங்ஸ் ஆஃப் யோகசுவாமி* (*Natchintanai, Songs and Sayings of Yogaswami* ) (சிவதொண்டன் நிலையம், யாழ்ப்பாணம், இலங்கை, 1974, ஆங்கிலம்)§

*ஆத்மஜோதி* பத்திரிகை ஆசிரியர் ஆத்மஜோதி என்கிற என். முத்தையா எழுதிய *ஈழத்து சித்தர்கள்* (யாழ்ப்பாணம், இலங்கை, 1980 & 1994, தமிழ்)§

ரத்னா மா செல்லையா நவரத்தினம் எழுதிய *சைன்ட் யோகசுவாமி அண்ட் தி டெஸ்டமண்ட் ஆப் ட்ருத்* (*Saint Yogaswami and the Testament of Truth)* (சிவதொண்டன் நிலையம், யாழ்ப்பாணம், இலங்கை, 1972, ஆங்கிலம்) §

*வி. முத்துக்குமாரசுவாமி எழுதிய தமிழ் சேஜஸ் அண்ட் சீர்ஸ் ஆப் சிலோன் (Tamil Sages and Seers of Ceylon)* (யாழ்ப்பாணம், இலங்கை, 1972, ஆங்கிலம்)§

*சிவதொண்டன்* பத்திரிகை (சிவதொண்டன் நிலையம், யாழ்ப்பாணம், இலங்கை, தமிழ்)§

*தி திருமந்திரம்,* டி. என். கணபதி, பொதுக்கல்வி (சைன்ட்-எதியேன்-டி-போல்டன், கியூபெக், கனடா: பாபாஜிஸ் கிரியா யோகா அண்ட்

பப்ளிகேஷன்ஸ் மற்றும் வர்த்தமான் பாப்ளிகேஷன்ஸ், தியாகராய நகர், சென்னை, இந்தியா கூட்டாக வெளியிட்ட புத்தகம். வருடம்: 2010, மொழி: ஆங்கிலம்)§

எம். அருணாசலம் எழுதிய *வரலாறும் சாதனைகளும்* (யாழ்ப்பாணம், இலங்கை, 1985, தமிழ்)§

மார்கண்டுசுவாமி, ஏ. செல்லதுரை, சந்தசுவாமி மற்றும் எம். ஸ்ரீகாந்தா எழுதிய *வேர்ட்ஸ் ஆப் அவர் மாஸ்டர் (Words of Our Master)* (யாழ்ப்பாண கூட்டுறவு தமிழ் புத்தகங்கள், பதிப்பகம் மற்றும் விற்பனை நிலையம், யாழ்ப்பாணம், இலங்கை, 1972, ஆங்கிலம்)§

எஸ். அம்பிகைப்பாகன் எழுதிய *யோகசுவாமிகள்* (சிவயோக சுவாமிகள் அறக்கட்டளை, கொழும்பு, இலங்கை, இரண்டாம் பதிப்பு 1972, தமிழ்)§

திருமதி. இந்துமதி நவரத்னராஜா எழுதிய *யோகசுவாமி, லைஃப் அண்ட் டீசிங்ஸ் (Yogaswami, Life and Teachings) (கையெழுத்து பிரதி),* (சிவதொண்டன் நிலையம், செங்கலடி, இலங்கை). இந்த புத்தகம், அன்பர்கள் நினைவுக்கூர்ந்த சம்பவங்கள் மற்றும் கூடுதல் வாழ்க்கை வரலாறு தகவல்களுடன் செல்லதுரை சுவாமி எழுதிய *யோகசுவாமிகள்: வாழ்க்கையும் வழிகாட்டலும்* புத்தகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு (சிவதொண்டன் நிலையம், யாழ்ப்பாணம், இலங்கை, தமிழ்).§

# குருமார்களின் சரித்திரங்கள்

## வெளியீட்டாளர் குறிப்பு

இந்த புத்தகத்தை ஹவாய் கார்டன் ஐலன்ட்டில் இருக்கும் கவாய் இந்து மடத்தின், கவாய் ஆதீனத்தின் சைவ சித்தாந்த சமூகத்தை சேர்ந்த ஆச்சாரியர்கள் மற்றும் சுவாமிகளால் வடிவைக்கப்பட்டுள்ளது. இது இன்டிசைன் (InDesign), ஃபோட்டோஷாப் (Photoshop) மற்றும் இல்லஸ்டிரேட்டர் (Illustrator) உட்பட, அடோப கிரியேட்டிவ் சூட் (Adobe's Creative Suite) பயன்படுத்தி ஆப்பிள் மாக்பூக் புரோ (Apple MacBook Pro) மற்றும் மாக் புரோ (Mac Pro) கணினிகளில் தயாரிக்கப்பட்டது. இதன் எழுத்து வடிவம் ஸ்பெயின் நாட்டை சேர்ந்த வடிவமைப்பாளர் எட்வர்டோ மான்சோ மூலம் உருவாக்கப்பட்ட ரிலாடோ ஃபேமிலி ஆஃப் பாண்ட்ஸ் (Relato family of fonts) மூலம் அமைக்கப்பட்டுள்ளது. புத்தகத்தின் பிரதான அங்கம் 14.25-பாய்ண்ட் லைன்ஸ்பேசிங் மீது 11.5-பாயிண்ட் ரெகுலரில் அமைக்கப்பட்டுள்ளது. சொற்களஞ்சியம் மற்றும் அட்டவணைக்கு 11 மீது 8.25 என்று அமைக்கப்பட்டுள்ளது. சமஸ்கிருத மற்றும் தமிழ் எழுத்து வடிவங்களை எகோலாஜிகள் லிங்விஸ்டிக்ஸ் மற்றும் ஸ்ரீகிருஷ்ண பாடில் வடிவமைத்துள்ளனர். மேலுறை ஓவியம் மற்றும் புத்தகத்தின் முக்கிய கதை விளக்கப்படங்கள், சென்னையின் டி. எஸ். ராஜம் (1919-2009) கடைசியாக நீர் வண்ணங்களில் வரைந்த ஐம்பத்து ஆறு ஓவியங்களில் இருந்து எடுக்கப்பட்டவை. அவருடைய மற்ற ஓவியங்களில் இருந்து துணை விளக்கப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இந்திய துணை கண்டம், இலங்கை மற்றும் யாழ்ப்பாண தீபகற்பத்தின் வரைபட விளக்கங்களை மிட்வேல், உட்டாவை சேர்ந்த மைக்கேல் கிப்பன்ஸ் வரைந்துள்ளார். பழங்கால குருமார்களின் ஒரு சில கதைகளுக்கு தேவையான அலங்காரங்களை சான் லூயிஸ் ஒபிஸ்போ, கலிபோர்னியாவை சேர்ந்த தர்ஷக் ஜெயநந்தராஜன் வழங்கியுள்ளார். சான் அன்செல்மோ, கலிபோர்னியாவில் புத்தகம் பதிப்பிக்கும் ஆலோசகராக இருக்கும் ஜான் லவுடன் விரிவாக ஆய்வு செய்து புத்தகத்தை வடிவமைக்க உதவினார். தனக்கு மற்றும் தனது நண்பர்களுக்கு நினைவில் இருந்த மற்றும் பல்வேறு தமிழ் வாழ்க்கை வரலாறுகளில் இருந்து பெறப்பட்ட தகவல்கள், பெயர்கள் மற்றும் கதைகளின் பிழையின்மையை

உறுதி செய்து, பல சம்பவங்களுக்கு ஒரு உயிருள்ள தொடர்பை வழங்கிய டொரன்டோவை சேர்ந்த, தி. சிவயோகபதிக்கு விசேஷமான நன்றியை தெரிவித்து கொள்கிறோம். இவருக்கு சிறு வயதில் இருந்தே யோகசுவாமியிடம் நல்ல பரிச்சயம் இருந்தது, மற்றும் அவருடைய குடும்பம் யோகசுவாமிக்கு மிகவும் நெருக்கமான சீடர்களாக இருந்தார்கள். புத்தகத்தின் அட்டவணையை அடோப் இன்டிசைன் (Adobe InDesign) பயன்படுத்தி காபா, ஹவாய் சேர்ந்த சாமுண்டி சபநாதன் உருவாக்கினார். தமிழ் மொழி மற்றும் கலாச்சார விஷயங்கள் பற்றி ஆலோசனையை சென்னை, இந்தியாவை சேர்ந்த ஷீலா வெங்கடகிருஷ்ணன் வழங்கினார். 1972 ஆம் ஆண்டு முதன் முதலாக தான் கண்ட கனவு இந்த புத்தக வடிவில் நிறைவு பெற்றதை, அங்கர்லோகங்களில் இருந்து பார்த்துக்கொண்டிருக்கும் குருதேவா திருப்தி அடைந்து, இதை படிக்கும் வாசகர்களுக்கும், முன் உதாரணமாக இருக்கும் கைலாச பரம்பரையின் ஞானத்தை தங்களது தினசரி வாழ்க்கையில் பயன்படுத்த முயற்சி செய்பவர்களுக்கும் தனது ஆசிகளை வழங்குவார் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். ஓம்.§

Page 73: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/73_bk12_05.html

# The Guru Chronicles

## இந்த புத்தகத்தில் நாம் கண்ட தலைசிறந்த மகான்களைப் போல, இந்த லௌகீக உலகில் மனநிறைவு அடைந்து இந்து துறவிகளாக சேவை செய்து வாழும் விருப்பத்துடன் சில அபூர்வமான இளைஞர்கள் இருக்கிறார்கள். §

இந்த அபூர்வமான ஆன்மாக்கள் பாரம்பரிய இந்து சந்நியாச பாதையை பின்பற்றி ஏழ்மை, பணிவு, கீழ்ப்படிதல், தூய்மைக்கு கட்டுப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் ஆத்மஞானத்தை நோக்கி அழைத்து செல்லும் சரியை, கிரியை, யோகம் மற்றும் ஞானத்தின் கட்டுப்பாடுகளை பின்பற்றுகிறார்கள். இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாரம்பரியங்களை இந்த பழங்கால மதநம்பிக்கை முழுமையாக வழிநடத்தி செல்கிறது. இந்த பூமியில் இன்று ஒரு பில்லியனுக்கும் அதிகமான இந்துக்கள் இருக்கிறார்கள், மற்றும் இந்தியாவில் மட்டும் மூன்று மில்லியன் சுவாமிகள், சாதுக்கள் மற்றும் சற்குருமார்கள் இருப்பதாக நம்பப்படுகிறது. BAPS

சுவாமிநாராயண் சமூகத்தில் சுமார் 800; உலகெங்கும் ராமகிருஷ்ணா மிஷனில் சுமார் 700. பாரத் சேவாசிரம் சங்கத்தில் 500க்கும் மேலானோர் உள்ளனர். ஜுனா அகாராவின் தலைவர் ஒரே நாளில் 25,000 பேருக்கு தீட்சை வழங்கியதாக கூறப்படுகிறது. மற்ற முறைப்படுத்தப்பட்ட இந்து சமூகங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. சனாதன தர்ம தெய்வங்களுக்கு இருக்கும் 500,000 கோயில்களில் 1,000 கோயில்கள் அமெரிக்காவில் உள்ளன. உலகில் இருக்கும் மற்ற மிகப்பெரிய சமயங்களில் இருக்கும் பூசாரிகளை காட்டிலும், இந்த இந்து கோயில்களில் சேவை செய்யும் பூசாரிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கிறது. உங்களுக்குள் வலுவான தூண்டுதல் இருந்து, 25 வயதிற்கு உட்பட்டவராக இருந்து, எங்கள் சைவ சித்தாந்த யோக சமூகத்தில் சேர விரும்பினால், நாங்கள் உங்களை அன்புடன் வரவேற்கிறோம். சிவபெருமானை அறிவதும் மற்றவர்களுக்கு சேவை செய்வது மட்டுமே வாழ்க்கையில் நமது குறிக்கோள் ஆகும். நாங்கள் வழிபடுவதற்கு, தியானம் மற்றும் சேவை செய்வதற்கு, *வேதங்கள்* மற்றும் *ஆகமங்கள்* குறிப்பிடும் முடிவான உண்மையை உணர்வதற்கு உலகில் இருந்து விலகி மடங்களில் வாழ்ந்து, முன் உதாரணமாக விளங்கி உலகை மேம்படுத்தி, முழுமையான அமைதியில் இருக்கும் மனதின் மையத்தில் ஆத்ம ஞானம் பெறுவதன் மூலம் மனிதனின் முடிவான குறிக்கோளை பூர்த்தி செய்கிறோம். எங்களுடைய சற்குருவாக இருக்கும் போதிநாத வேலன்சுவாமியின் வழிகாட்டலுடன், ஹவாய் தீவில் கவாய் ஆதீனத்தை தலைமையகமாக கொண்டு, இந்து சமயத்தில் பாரம்பரிய முறைப்படி இயங்கும் முதன்மையான துறவற சமூகங்களில் அங்கம் வகிக்கும் எங்கள் சமூகம், பூமியில் இருக்கும் எல்லா நாடுகளில் இருந்தும் விண்ணப்பங்களை வரவேற்கிறது. வாழ்க்கையில் துறவற பாதையை ஏற்றுக்கொள்ள விரும்பி, போதிநாதாவை தங்களது ஆன்மீக குருவாக கண்டுகொண்ட இளைஞர்கள், அவரிடம் தங்களது சொந்த தகவல்கள், ஆன்மீக விருப்பங்கள், சிந்தனைகள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளவும், எங்கள் மடத்திற்கு வந்து பூமியில் இந்த உயர்ந்த பாதையை பின்பற்றும் மற்றவர்களை சந்திக்கவும் வரவேற்கிறோம். போதிநாதா அப்படிப்பட்ட இளைஞர்களை சந்திக்க காத்து இருக்கிறார். சமூகத்தில் நுழையும் செய்முறை மெதுவாக நடைபெறும். இதில் முதல் கட்டமாக ஆறு மாத காலத்திற்கு கவாய் தீவில் ஒரு திட்டப்பணியில் ஈடுபடவேண்டும். பிறகு சொந்த வீட்டிற்கு திரும்பி இந்த அனுபவத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். அதன் பிறகு முதல் ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்கு, தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு கடைப்பிடிக்க வேண்டிய விரதங்கள் வழங்கப்படுகின்றன. பத்து அல்லது பன்னிரண்டு வருட பயிற்சிக்கு பிறகு வழங்க வாய்ப்புள்ள வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்க வேண்டிய விரதங்கள், சந்நியாசத்தின் புனிதமான ஆணைகள் கிடைக்கும் வரை இரண்டு வருட விரதங்கள் தொடர்ந்து புதுப்பிக்கப்படுகின்றன. எங்கள் சமூகத்தை பற்றி மேலும் தகவல்களை அறிய அணுகவேண்டிய மின்னஞ்சல்: www.himalayanacademy.com/monks/§

கவாய் இந்து மடம்

107 கஹோலலேலே சாலை, காபா, ஹவாய் 96746-9304 அமெரிக்கா


மின்னஞ்சல்: bodhi@hindu.org§

Page 75: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/75_bk12_07.html

# குருமார்களின் சரித்திரங்கள்

# எங்களிடம் பல்வேறு தலைப்புக்களில இருக்கும் இந்து வளங்கள்

இந்துக்கள் மற்றும் இந்து சமயத்தை கற்றுத்தருபவர்களுக்கு இமாலயன் அகாடமி அறிவுக்கூர்மையுடன் நன்றாக வடிவமைக்கப்பட்ட வளங்களை வழங்குகிறது. உங்களது சொந்த தார்மீக வேட்கைக்கு அல்லது மற்றவர்களுடன் வகுப்புக்கள் அல்லது கருத்தரங்குகளில் பகிர்ந்து கொள்வதற்கு, எங்களது படைப்புகள் தெளிவான விளக்கங்களுடன், தற்காலத்திற்கு ஏற்ப பாரம்பரியத்தில் நன்றாக ஊன்றி இருக்கும் எங்கள் வளங்கள் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். எங்களுடைய புத்தகங்கள், துண்டு பிரசுரங்கள், குழந்தைகள் பயிற்சி வகுப்புக்கள் மற்றும் மேலும் பல வளங்களுக்கான லிங்க்ஸ் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. §


 §

## இந்து சமயத்தின் அடிப்படைகளை தெரிந்து கொள்ளுங்கள் §

www.himalayanacademy.com/basics/

www.himalayanacademy.com/teaching/

www.himalayanacademy.com/basics/nineb/§


 §

## ஊக்கமளிக்கும் உரைகளை கேட்டு இந்து சமய பாதையை ஆய்வு செய்யுங்கள் §

www.himalayanacademy.com/audio/

www.himalayanacademy.com/study/mc/

www.himalayanacademy.com/innersearch/§




§

## எங்களது புத்தகங்கள் மற்றும் சர்வதேச பத்திரிகையை பற்றி தெரிந்துகொள்ளுங்கள் §

www.himalayanacademy.com/books/

www.hinduismtoday.com

www.minimela.com§

 §

## கவாய் இந்து மடம் மற்றும் துறவியின் வாழ்க்கையை பற்றி தெரிந்துகொள்ளுங்கள் §

www.himalayanacademy.com

www.himalayanacademy.com/monks/

www.himalayanacademy.com/visitors/§

# கவாய் இந்து மடம்

ஹவாய் தீவில் 363-ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த மடம் தனது பதிப்புக்கள், இந்து சமய நன்கொடை நிதி நிறுவல்கள் மற்றும் சைவ சித்தாந்த தேவாலய கூட்டுறவு மூலம் உலகெங்கும் இந்து சமயத்தை வலுப்படுத்த தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. §

Page 74: URL
https://www.himalayanacademy.com/media/books/the-guru-chronicles/web/74_bk12_06.html

# குருமார்களின் சரித்திரங்கள்

## இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல் §

தென்னிந்தியாவில் ஆன்மீக மையங்களாக இருக்கும் *ஆதீனங்கள்* காலங்காலமாக கோயில்கள், அனாதை ஆசிரமங்கள் மற்றும் பூசாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் பள்ளிகளுக்கு ஆதரவு அளித்து வருகின்றன. பழங்காலத்தில் உள்ளூர் சமய மற்றும் சமூக நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து நன்கொடை வழங்குவதற்கு தேவையான நிதியை, இந்த மடத்தை நிர்வகித்த அமைப்புக்களுக்கு சொந்தமான வயல்கள் அல்லது கடைகள் வழங்கின. இன்றைய காலகட்டத்தில், *ஆதீனத்திடம்* இருக்கும் நன்கொடை நிறுவல்களில் பங்குகள் மற்றும் பத்திரங்களும் இடம்பெற்றுள்ளன. கவாய் இந்து மடத்தின் நன்கொடை நடவடிக்கைகள் அதிகமாக வெளிநாடுகள் சார்ந்து இருக்கின்றன. மேலும் அந்த நடவடிக்கைகள், இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல் (HHE) என்ற தனிப்பட்ட நிறுவனம் பொறுப்பேற்கும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. இதனை 1994 ஆம் ஆண்டு குருதேவா ஸ்தாபனம் செய்து வைத்தார். HHE மூலம் கோயில்கள், திருவிழாக்கள் மற்றும் அன்னதானங்கள், அனாதை ஆசிரமங்கள், குழந்தைகள் முகாம்கள், இளைஞர்கள் கல்வி, ஆசிரமங்கள் மற்றும் மடங்கள், மதம் சம்பந்தமான பதிப்புக்கள், புண்ணிய தலங்கள், பூசாரிகள் பயிற்சி மையங்கள், பண்டிதர்களுக்கு உதவி, சாதுக்களுக்கு தங்கும் இடங்கள், முதியோர் இல்லங்கள், தத்துவம் அல்லது சாஸ்திர ஆராய்ச்சி மையங்கள், ஆயுர்வேதம் மற்றும் ஜோதிட சேவைகள், பல்வேறு சுவாமிகளின் சமயப்பணிகள் மற்றும் இசை, கலை, நாடகம், நடனம் மற்றும் யோகம் சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் போன்ற பல்வேறு விதமான நடவடிக்கைகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. ஒரு நிறுவனம் தனது சமயப்பணியை நிலைநிறுத்த சுலபமாக ஒரு HHE நிதியை உருவாக்கிக்கொள்ளலாம். தனிநபர்கள் தங்களுக்கு விருப்பமான இந்து சமய தர்ம காரியங்கள் அல்லது கொள்கைகளுக்காக தற்போது செயல்பாட்டில் இருக்கும் நிதிக்கு நன்கொடை வழங்கலாம் அல்லது புதிய நிதியை உருவாக்கலாம். HHE நன்கொடை நிறுவலில் நிதி செலுத்திய பிறகு, அதை நீக்கவோ அல்லது முன்பு குறிப்பிட்ட காரணங்கள் இல்லாமல் மற்ற விஷயங்களுக்கு பயன்படுத்தவோ கூடாது.

உதவித் தொகைகள், முதலீடுகளில் இருந்து பெறும் இலாபங்கள், பயனர்களின் திட்டங்கள் மற்றும் குறிக்கோள்களை மேம்படுத்த தொடர்ந்து பகிர்ந்து கொடுக்கப்படுகின்றன. நன்கொடைகளுக்கு அமெரிக்காவில் (US) வரி விலக்கு கிடைக்கும். 2011 ஆம் ஆண்டில் HHE யிடம் 80 தனிப்பட்ட நிதிகள் இருந்தன, மற்றும் அவற்றின் கூட்டுத்தொகை $10 மில்லியன் கடந்து இருந்தது. பல்வேறு பரஸ்பர நிதிகளை சிறந்த முறையில் நிர்வகிக்கும் முதலீட்டு ஆலோசகராக லாங் பீச், கலிபோர்னியாவில் இருக்கும் ஹால்பர்ட் ஹார்குரோவ் LLC மூலம் இந்த சொத்துக்கள் நேர்த்தியாக கண்காணிக்கப்படுகின்றன. ரொக்க பணம், பத்திரங்கள் அல்லது நிலங்கள், உயில் அல்லது லிவிங் டிரஸ்ட் (living trust), ஆயுள் காப்பீடு அல்லது சாரிடபில் ரிமைந்டர் டிரஸ்ட் (charitable remainder trust), கிப்ட் அன்யுட்டி (gift annuity) அல்லது பூல்ட் இன்கம் பண்ட் (pooled income fund) போன்று வாழ்நாள் முழுவதும் வருமானம் அளிக்கும் திட்டங்கள் என்று பல்வேறு வழிகளில் HHE நிதிக்கு நிதியுதவி வழங்கலாம். §

§

இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல்

கவாய் இந்து மடம்

107 கஹோலலேலே சாலை

காபா, ஹவாய், 96746-9304 அமெரிக்கா (USA)

தொலைப்பேசி: (800) 890–1008, Ext. 244

அமெரிக்காவிற்கு(US) வெளியே: (808) 822–3152, Ext. 244

தொலைநகலி: (808) 822-4351

www.hheonline.org

மின்னஞ்சல்: hhe@hindu.org §